பாபாசாகேப்
டாக்டர் அம்பேத்கர்
நூல் தொகுப்பு :
தொகுதி 31



டாக்டர் பாபாசாகேப்

அம்பேத்கர்:

பேச்சும் எழுத்தும்

நூல் தொகுப்பு:

தொகுதி 31

முதல் பாகம்

(பிரிவுகள் I - III)

டாக்டர் பாபாசாகேப் அம்பேத்கர்

தோற்றம்: ஏப்ரல் 14, 1891 பரிநிர்வாணம் : டிசம்பர் 6, 1956

இந்து சட்டத் தொகுப்பின் முக்கியத்துவம்

இந்து சட்டத் தொகுப்பு ஈடுஇணையற்றது; கடந்த காலத்தில் இந்திய சட்டப் பேரவையில் நிறைவேற்றப்பட்ட எந்த சட்டமும் அல்லது இனி நிறைவேற்றப்படவிருக்கும் எந்த சட்டமும் முக்கியத்துவத்தில் இதற்கு (இந்து சட்டத் தொகுப்பு) இணையாக முடியாது. இந்து சமுதாயத்தைப் பீடித்துள்ள வர்க்கத்துக்கும் வர்க்கத்துக்கும் இடையேயும் ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையேயும் நிலவிவரும் ஏற்றத்தாழ்வைப் பற்றிக் கவலைப் படாமல் பொருளாதாரப் பிரச்சினைகள் குறித்து மேலும் மேலும் சட்டங்களை இயற்றிக் கொண்டு செல்லுவது நமது அரசியல் சாசனத்தையே கேலிக்கூத்தாக்குவதாகும்; சாணக் குவியல் மீது மாடமாளிகையைக் கட்டியெழுப்புவது போன்றதாகும்.

— "இந்து சட்டத் தொகுப்பு" பற்றி
டாக்டர் பாபாசாகேப் அம்பேத்கர்.

This Volume XXXI in Tamil forms the Part One (Sections I - III) of the English Edition Volume 14 of **Dr. Babasaheb Ambedkar - Writings and Speeches - Published by the Education Department, Government of Maharashtra,** 1992.

Dr. BABASAHEB AMBEDKAR
SPEECHES AND WRITINGS

Copy rights (c)

Year : December, 2002

Language : Tamil

Volume No : 31

Price : Paperback - **Rs. 40/-**
Cloth bound - **Rs. 100/-**

Publishers : **Dr. AMBEDKAR FOUNDATION,**
Ministry of Social Justice and Empowerment,
Govt. of India,
15, Janpath, New Delhi - 110 001.

Distributors : **NEW CENTURY BOOK HOUSE (P) LTD.,**
41-B, SIDCO Industrial Estate,
Ambattur, Chennai - 600 098.

Printers : **PAVAI PRINTERS (P) LTD.**
142, Jani Jan Khan Road,
Royapettah, Chennai - 600 014.
Ph: 8482441, 8482973.

This Volume XXXI in Tamil forms the Part One (Sections I - III) of the English Edition Volume 14 of **Dr. Babasaheb Ambedkar - Writings and Speeches - Published by the Education Department, Government of Maharashtra,** 1992.

முதற் பதிப்பு: டிசம்பர், 2002
சித்திரபானு ஆண்டு, மார்கழி

© உரிமைப் பதிவு

விலை : ரூ. 40/-

நூலகப் பதிப்பு : ரூ. 100/-

வெளியீட்டாளர்:
டாக்டர் அம்பேத்கர் பவுண்டேஷன்
சமூக நீதி மற்றும் உரிமையளிப்பு அமைச்சகம்,
இந்திய அரசு,
15, ஜன்பத் சாலை,
புதுடில்லி.

விற்பனை நிலையம்:
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிமிடெட்.,
41B, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்,
அம்பத்தூர், சென்னை - 98.

அச்சிட்டோர்:
பாவை பிரிண்டர்ஸ் (பி) லிமிடெட்.,
142, ஜானி ஜான் கான் ரோடு,
ராயப்பேட்டை, சென்னை - 600 014.
தொலைபேசி: 28482441, 28482973

ஆலோசனைக்குழு

மாண்புமிகு டாக்டர் சத்தியநாராயண ஜாட்டியா,
சமூக நீதி மற்றும் உரிமையளிப்புத்துறை அமைச்சர்,
இந்திய அரசு

உறுப்பினர் - செயலாளர்
சமூக நீதி மற்றும் உரிமையளிப்புத்துறை அமைச்சகம்
இந்திய அரசு

இயக்குநர்,
டாக்டர் அம்பேத்கர் பவுண்டேஷன்,
புதுடில்லி.

நிர்வாக ஆசிரியர் (தமிழ்):
ரா. ரங்கசாமி (மாஜினி)
சென்னை, தமிழ்நாடு.

ஆங்கில நூல் வெளியீடு:

கல்வித்துறை,
மகாராஷ்டிர மாநில அரசு, 1992.

ஆங்கில நூல் தொகுப்பாளர்:

திரு. வஸந்த் மூன்
மும்பை

தமிழ் நூல் நிர்வாக ஆசிரியர்:

ரா. ரங்கசாமி (மாஜினி)

மொழிபெயர்ப்பாளர்கள்:

திரு. கே.எம். நடராஜன் (சென்னை சட்டக் கல்லூரிப் பேராசிரியர் (ஓய்வு)
திரு. வி. இராதாகிருஷ்ணன்
திரு. ஏ.எஸ். மணி
திரு. கே. நீலகண்டன்

ஒப்புநோக்கியோர்:

திரு. ரா. ரங்கசாமி (மாஜினி)

பிழைதிருத்த உதவி:

திரு. கே. நீலகண்டன்
திரு. வி. இராதாகிருஷ்ணன்

அணிந்துரை

பாரத ரத்னா டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் ஒரு சகலகலா வல்லவர்; பல அரிய திறமைகளின் பெட்டகமாகத் திகழ்ந்தவர்; சீரிய பண்புகளின் சுரங்கமாக விளங்கியவர்; நேரிய செயற்பாடுகளின் கருவூலமாக மிளிர்ந்தவர். சுருங்கச் சொன்னால் அவரை ஒரு நடமாடும் பல்கலைக் கழகம் என்று கூறினால் அது மிகையாகாது.

இவையெல்லாவற்றையும் விட முக்கியமாக டாக்டர் அம்பேத்கரை இந்திய அரசியல் சாசனத்தின், அரசமைப்புச் சட்டத்தின் பிதாமகர் எனக் கூறலாம். அவரது அற்புத சட்டப் புலமையை, உலகிலுள்ள பல்வேறு அரசியல் சாசனங்கள் குறித்து அவருக்கிருந்த ஆழ்ந்த, தேர்ந்த, தெளிந்த ஞானத்தை இது விகசிதமாகப் புலப்படுத்துகிறது. மகாராஷ்டிர மாநில அரசு ஆங்கிலத்தில் வெளியிட்டுள்ள டாக்டர் பாபாசாகேப் அம்பேத்கர் பேச்சும் எழுத்தும் தொகுப்பு வரிசை 14 ஆவது தொகுதி தமிழில் 31 ஆவது தொகுதியாக வெளியிடப்படுகிறது. இவை அனைத்தும் டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் அரசியல் நிர்ணயசபையில் சமர்ப்பித்த இந்து சட்டத் தொகுப்பு மசோதா குறித்த விவாதங்களாகும். இந்த விவாதங்களுக்கு டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் அளித்த பதில்கள் படிப்போர் உள்ளத்தைப் பிணைத்து ஈர்ப்பதாக உள்ளன. எத்தகைய சிக்கலான விஷயமாக இருந்தாலும் புள்ளிவிவர ஆதாரங்களோடு, தகுந்த விவரங்களோடு, அலசி ஆராய்ந்து, அசைக்க மறுக்க முடியாதபடி அவர் பதிலளித்திருப்பதைக் காணலாம்.

இந்தத் தொகுதி பலரால் மொழிபெயர்க்கப்பட்டிருப்பதால் மொழி நடையும், சொல்லாக்கமும், பதப் பிரயோகங்களும் வேறுபட்டிருப்பது தவிர்க்க முடியாததாகி விட்டன. இதனை வாசகர்கள் பொறுத்தருள்வார்கள் என்று நம்புகிறோம். இதுவரை வெளிவந்துள்ள தொகுதிகளுக்குப் பேராதரவு அளித்து வந்துள்ளதைப் போன்றே இந்தத் தொகுதியும் வாசகர்களால் பெரிதும் வரவேற்கப்படும் என்று நம்புகிறோம்.

நல்வாழ்த்துக்கள்!

(ஒப்பம்) டாக்டர் சத்திய நாராயண ஜாட்டியா
சமூக நீதி மற்றும் உரிமையளிப்புத்துறை அமைச்சர்,
இந்திய அரசு.

புதுடில்லி

பதிப்புரை

மகாராஷ்டிர மாநில அரசு ஆங்கில மொழியில் வெளியிட்டு வரும் டாக்டர் பாபாசாகேப் அம்பேத்கர் அவர்களின் நூல் தொகுப்புகளை இந்தியிலும் ஏனைய இந்திய மொழிகளிலும் மொழிபெயர்த்து வெளியிடும் பணியை இந்திய அரசின் சமூக நீதி மற்றும் உரிமையளிப்பு அமைச்சகத்தைச் சார்ந்த டாக்டர் அம்பேத்கர் பவுண்டேஷன் மேற்கொண்டு நிறைவேற்றி வருகின்றது. இந்தப் பணி மக்களிடையே மிகுந்த வரவேற்பைப் பெற்றிருப்பது மகிழ்ச்சி அளிப்பதாகும்.

டாக்டர் அம்பேத்கர் அவர்களின் நூல் தொகுப்பு வரிசை யில் 31-வது தொகுதியை நாட்டு மக்களுக்கு அளிப்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறோம். உயர்ந்ததோர் இலட்சியத்தை நோக்கி நம் நாடு செல்லும் பயணத்தில் டாக்டர் அம்பேத்கர் அவர்களின் நூல்கள் வழிகாட்டியாகவும் உறுதுணையாகவும் பயன்படும் என்பதில் ஐயமில்லை.

ஆங்கில நூல்களை இந்திய மொழிகளில் பெயர்த்து வெளியிடுவதில் முனைந்து பணியாற்றும் பதிப்பாசிரியர்கள், மொழிபெயர்ப்பாளர்கள், ஒப்புநோக்குவோர், அச்சகத்தார் ஆகிய அனைவரும் நமது பாராட்டுதலுக்கு உரியவர்கள். இந்த அரிய பணியில் ஒத்துழைப்பு நல்கும் அனைவர்க்கும் நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

ஏனைய தொகுதிகளைப் போலவே இந்தத் தொகுதி யையும் மக்கள் வரவேற்று ஆதரிப்பார்கள் என நம்புகின்றோம்.

புதுடில்லி

இயக்குநர்
டாக்டர் அம்பேத்கர் பவுண்டேஷன்

தமிழ் நூல் நிர்வாக ஆசிரியர் உரை

இந்து சமுதாயத்தை சீர்திருத்துவதிலும், அதிலும் முக்கியமாக அந்த சமுதாயத்தில் ஆண்களுக்கு நிகராக பெண் களுக்குள்ள உரிமையை நிலைநாட்டுவதிலும் எல்லையற்ற ஆர்வம் காட்டியவர் டாக்டர் அம்பேத்கர். இந்த முயற்சியின் ஒரு பகுதியாகவே இந்து சட்டத் தொகுப்பு மசோதாவை 1947 ஏப்ரல் 11 ஆம் தேதி இந்திய அரசியல் நிர்ணயசபையில் கொண்டு வந்தார். இந்த மசோதாவுக்கு ஒருபுறம் தீவிர ஆதரவும் இன்னொருபுறம் கடும் எதிர்ப்பும் இருந்தது. இந்த மசோதா மீது நான்காண்டுகளுக்கும் மேலாக விவாதம் நடைபெற்றது; எனினும் ஒரு முடிவுக்கு வந்தபாடில்லை. சுதந்திர இந்தியாவின் நாடாளுமன்றத்தில் வேறு எந்த மசோதா மீதும் இவ்வளவு நீண்டகாலம் விவாதம் நடைபெற்ற தில்லை எனலாம். இந்த மிக முக்கிய மசோதாவுக்கு முன்னுரிமை தந்து, 1951 செப்டம்பர் 1 ஆம் தேதிக்குள் அதனை சட்டமாக்க வேண்டும் என்று டாக்டர் அம்பேத்கர் வலியுறுத் தினார். ஆனால் இந்த மசோதாவை எதிர்த்தவர்கள் தொடர்ந்து முட்டுக்கட்டைப் போட்டு, மசோதா நிறைவேறுவதை வேண்டுமென்றே தாமதப்படுத்தினர். இதனால் வெறுத்துப் போன டாக்டர் அம்பேத்கர் 1951 அக்டோபர் 10 ஆம் தேதி தமது பதவி விலகல் கடிதத்தைச் சமர்ப்பித்துவிட்டு அவையை விட்டு மிகுந்த வேதனையோடு வெளியேறினார்.

இந்த இந்து சட்டத் தொகுப்பு மசோதா அரசியல் நிர்ணயசபையில் கொண்டுவரப்பட்டதிலிருந்து 1951 அக்டோபர் 10 ஆம் தேதி வரை நடைபெற்ற முழு விவாதமும் இந்த நூலில் நான்கு பகுதிகளாகத் தரப்பட்டுள்ளது. மசோதாவை பொறுக்குக் குழுவுக்கு அனுப்பும் விவரம் முதல் பகுதியில் தரப்பட்டுள்ளது. டாக்டர் அம்பேத்கர் தயாரித்த வரைவு இந்து தொகுப்பும், அப்போது நடைமுறையிலிருந்த இந்து சட்டத் தொகுப்பும் இரண்டாவது பகுதியிலும், இந்த சட்டத் தொகுப்பு பற்றி நடைபெற்ற பொது விவாதம் மூன்றாவது பகுதியிலும், இந்து சட்டத் தொகுப்பு மசோதா பற்றிய ஷரத்து வாரியான விவாதம் நான்காவது பகுதியிலும் இடம்பெற்றுள்ளன. டாக்டர் அம்பேத்கரது அறிவும் செறிவும், ஆழ்ந்த சட்டப் புலமையும், குதர்க்க வாதங்களுக்கு சாட்டையடி கொடுக்கும் வேகமும் விவேகமும், சிந்தனையைத் தூண்டும் நகைச்சுவை உணர்வும், பகைவர்களையும் வியக்க வைக்கும் வாதத் திறமையும் இந்தத் தொகுதியில் தெள்ளத் தெளிவாகப் பிரதிபலிக்கக் காணலாம்.

ரா. ரங்கசாமி (மாஜினி)
தமிழ் நூல் நிர்வாக ஆசிரியர்

பொருளடக்கம்

பாகம் ஒன்று

பிரிவு I

*இந்து சட்டத் தொகுப்பு மசோதா
பொறுக்குக் குழுவுக்குச் சமர்ப்பித்தபடி
(1947 நவம்பர் 17 முதல் 1948 ஏப்ரல் 9 வரை)* 1

பிரிவு II

*டாக்டர் பி.ஆர். அம்பேத்கரின் வரைவு இந்துச்
சட்டத் தொகுப்பு மசோதாவும் பொறுக்குக் குழு
ஏற்படுத்திய மாற்றங்களுடன் அப்போதிருந்த
இந்துச் சட்டத் தொகுப்பும்* 53

பிரிவு III

*பொறுக்குக் குழுவிலிருந்து திருப்பி
அனுப்பப்பட்டதற்குப் பின்னர் இந்து
சட்டத் தொகுப்பு மசோதாவின் மீது
நடைபெற்ற விவாதம்
(1949 பிப்ரவரி 11 முதல்
1950 டிசம்பர் 14 வரையில்)* 321

*இந்து சட்டத் தொகுப்பு

மாண்புமிகு டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் *(சட்ட அமைச்சர்) : ஐயா, பின்வருமாறு நான் முன்மொழிகிறேன்:*

தற்போதுள்ள இந்து சட்டத்தின் சில பிரிவுகளை மாற்றி அமைக்கவும், உள்ள சட்டங்களை தொகுத்து வழங்கவுமான இந்த மசோதாவை தற்போது பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளலாம்.

சபாநாயகர் : பின்வரும் தீர்மானம் முன்மொழியப்படுகிறது:

''தற்போதுள்ள இந்து சட்டங்களில் சில பிரிவுகளை மாற்றி அமைக்கவும், உள்ள சட்டங்களைத் தொகுத்து வழங்கவுமான இந்த மசோதாவை தற்போது பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளலாம்.''

திரு. நசிருத்தீன் அகமது *(மேற்கு வங்காளம்: முஸ்லீம்) : இந்த முக்கியமான மசோதாவின் தற்போதைய நிலை என்ன என்பதை நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். இந்து நண்பர்களிடையே இம்மசோதாவைப் பற்றி பல்வேறு கருத்துக்கள் நிலவுவதாகவும், அது குறித்து அவர்கள் மிகுந்த பரபரப்பு அடைந்திருப்பதாகவும் அறிகிறேன். ஆகையால் இம்மசோதாவின் தற்போதைய நிலை என்ன என்பதை தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.*

மாண்புமிகு டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் : *இம் மசோதா தற்போது அறிமுகப்படுத்தப்பட்டு உள்ளது. அவ்வளவுதான். மேற்கொண்டு வேறு எந்தக் கட்டத்தையும் அது எட்டவில்லை.*

திரு. ஆர்.வி. துலேகர் *(உத்திரப்பிரதேசம் - பொது) : இப்போது மாறி உள்ள சூழ்நிலையில் இந்து சட்டம் என்றோ, முஸ்லீம் சட்டம் என்றோ எதுவும் தேவையில்லை. நமக்கு ஒரு பொதுவான சட்டம் இருக்க வேண்டும். ஆகவே....*

திரு. சபாநாயகர் : *இந்த மசோதாவின் தராதரங்கள் பற்றி மதிப்பிற்குரிய உறுப்பினர் பேசுகிறார். இது குறித்து தமது கருத்துக்களைக் கூறுவதற்கு அவருக்குத் தகுந்த வாய்ப்பு கிடைக்கும்.*

---

* *அரசியல் நிர்ணய சபை (சட்டமன்ற) விவாதங்கள், இனி அ.நி. (சட்.) வி. எனக் குறிப்பிடப்படும், தொகுதி 1, நவம்பர் 17, 1947, பக்கம் 41.*

இப்போதுள்ள நிலை இந்த மசோதாவைப் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளலாமா வேண்டாமா என்பதுதான்.

திரு. ஆர்.வி. துலேகர் : அப்படியானால் நான் இந்த மசோதாவை எதிர்க்கிறேன். அது பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப் படலாகாது.

திரு. சபாநாயகர் : விஷயம் இதுதான்:

''தற்போதுள்ள இந்து சட்டத்தின் சில பிரிவுகளை மாற்றி அமைக்கவும், உள்ள சட்டங்களைத் தொகுத்து வழங்கவுமான இந்த மசோதாவை தற்போது பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளலாம்.''

தீர்மானம் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

---

*இந்து கலப்புத் திருமணங்களை ஒழுங்குபடுத்துவதற்கும் அவற்றை சட்ட ரீதியாக செல்லுபடியாக்குவதற்குமான மசோதா

திரு. மோகன்லால் சாக்சேனா (உத்திரப்பிரதேசம் - பொது) : மாண்புமிகு சட்ட அமைச்சர் இந்து சட்டத் தொகுப்பு மசோதாவை பொறுக்குக் குழுவிற்கு அனுப்ப இந்த அமர்வில் ஒரு தீர்மானம் கொண்டு வரப் போவதாக என்னிடம் சொல்லிய காரணத்தினால் எனது தீர்மானத்தை நான் அறிமுகப் படுத்த விரும்பவில்லை.

திரு. சபாநாயகர் : மாண்புமிகு உறுப்பினர் இப்போது ஒரு தீர்மானம் கொண்டுவர விரும்பவில்லை என்றும், ஆனால் அதே நேரத்தில் அவசியப்படும்போது தீர்மானம் கொண்டுவர விரும்புகிறார் என்றும் நான் எடுத்துக் கொள்ளலாமா?

திரு. மோகன்லால் சாக்சேனா : ஆம், ஐயா, நீங்கள் சொல்வது சரிதான். மாண்புமிகு சட்ட அமைச்சர் தமது தீர்மானத்தை அறிமுகப்படுத்தவில்லை என்றால் நான் அறிமுகப்படுத்த இருக்கிறேன்.

★ அ.நி.வி. (சட்.) விவாதங்கள், தொகுதி I, பிப்ரவரி 11, 1948, பக். 599

*இந்து திருமணத்தை அங்கீகரிக்கும் மசோதா

பண்டிட் தாகூர்தாஸ் பர்கவா *(கிழக்கு பஞ்சாப், பொது) : இந்துக்கள், சீக்கியர்கள், ஜைனர்கள் மற்றும் அவர்களின் பல்வேறு உட்பிரிவுகளிடையே நடைபெறும் திருமணங்கள் முறையான திருமணங்கள் என அறிவிக்கும் மசோதாவை அறிமுகப்படுத்த விரும்புகிறேன்; அதற்கான அனுமதியைக் கோருகிறேன்.*

திரு. சபாநாயகர் : *தீர்மானம் வருமாறு:*

''இந்துக்கள், சீக்கியர்கள், ஜைனர்கள் மற்றும் அவர்களின் பல்வேறு உட்பிரிவினருக்கிடையே நடைபெறும் திருமணங்கள் செல்லத்தக்கவை என்பதை அறிவிக்கும் மசோதாவை அறிமுகப் படுத்த அனுமதி கோரப்படுகிறது.''

தீர்மானம் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

பண்டிட் தாகூர்தாஸ் பர்கவா: *ஐயா, நான் அந்த மசோதாவை முன்மொழிகிறேன்.*

இந்து சட்டத் தொகுப்பு

+மாண்புமிகு டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் *(சட்ட அமைச்சர்) : ஐயா, நான் பின்வருமாறு முன்மொழிகிறேன்:*

''இந்து சட்டத்தின் சில பிரிவுகளை மாற்றி அமைப்பதற்கும், மற்ற பிரிவுகளைத் தொகுத்து வழங்குவதற்குமான மசோதா ஒரு பொறுக்குக் குழுவின் பரிசீலனைக்கு அனுப்பப்படுகிறது. அந்தக் குழுவில் பின்வரும் நபர்கள் உறுப்பினர்களாக இருப்பார்கள்: திரு. அல்லாடி கிருஷ்ணசாமி அய்யர், டாக்டர் பக்ஷி தேக் சந்த், திரு. எம். அனந்தசயனம் அய்யங்கார், திருமதி ஜி. துர்க்காபாய், திரு. எல். கிருஷ்ணசாமி பாரதி, திரு. யு. சீனிவாச மல்லையா, திரு. மிகிர் லால் சட்டோபாத்யாயா, டாக்டர் பி.எஸ். தேஷ்முக், திருமதி ரேணுகா ரே, டாக்டர் பி.கே. சென், பாபு ராம்நாராயண் சிங், திரு. கிஷோரி மோகன் திரிபாதி, திருமதி அம்மு சுவாமிநாதன், பண்டிட் பாலகிருஷ்ண சர்மா, திரு. குர்ஷீத் லால்,

---

★ *அ.நி.வி. (சட்.) விவாதங்கள், தொகுதி II, பிப்ரவரி 26, 1948, பக். 1288.*

\+ *அ.நி.வி. (சட்.) விவாதங்கள், தொகுதி II, பிப்ரவரி 9, 1948, பக். 3628-33*

திரு. பிரஜேஷ்வர் பிரசாத், திரு. பி. சிவராவ், திரு. பல்தேவ் சுவரூப், திரு. வி.சி. கேசவராவ் மற்றும் மசோதா அறிமுகப்படுத்துபவர். சட்டப்பேரவையின் அடுத்த அமர்வு ஆரம்பித்த முதல் வாரத்தின் கடைசி நாளிற்குள் தனது அறிக்கையை இக்குழு அளிக்க வேண்டும். ஐந்து உறுப்பினர்கள் கலந்து கொண்டாலே இக்குழு தன் பணியை கவனிக்கலாம்.''

மாலை 4 மணி

ஐயா, இவ்வளவு முக்கியமான மசோதா இந்த அமர்வின் இறுதி நாளின் கடைசி நேரத்தில் எடுத்துக் கொள்ளப் படுவது மிக பரிதாபகரமான ஒரு சூழ்நிலையாகும். இதை அறியும்போது எனக்கும் மற்ற உறுப்பினர்களுக்கும் தீராத மனவேதனையாக இருக்கிறது. அரைமணி இடை வேளையுடன் இந்தத் தீர்மானம் குறித்த விவர்தத்தை மாலை 7 மணிக்குள் முடித்துக் கொள்வதற்கு சபாநாயகரும் மற்றவர் களும் ஒத்துக் கொண்டிருக்கிறார்கள். இந்த மசோதாவைப் பற்றி முழுமையாக விளக்க வேண்டுமென்றால் குறைந்தது நான்கு அல்லது ஐந்து மணி நேரம் தேவைப்படும். ஆனால் இப்போது நம் முன்னுள்ள கால அளவைக் கருத்தில் கொண்டு, மற்ற உறுப் பினர்கள் பேச அதிக நேரம் ஒதுக்கி, நான் எந்த அளவிற்கு குறைவான நேரம் எடுத்துக் கொள்ள முடியுமோ அந்த அளவிற்கு எடுத்துக் கொள்ளலாம் என நினைக்கிறேன். தற்போது நடைமுறையில் உள்ள சட்டத்திலிருந்து என்னென்ன வகையில் மாற்றங்கள் கொண்டு வரப்பட உள்ளன என்பதை மட்டும் என் தொடக்க உரையில் விளக்கிச் சொல்ல முற்படுகிறேன். இதற்காக அவை என்னை மன்னிக்கும் என்று நம்புகிறேன்.

ஐயா, இப்போதுள்ள இந்து சட்டத்தின் விதிகளை உயர்நீதிமன்றம் மற்றும் பிரிவி கவுன்சில் அளித்துள்ள பல்வேறு தீர்ப்புகளிலிருந்து திரட்டப்பட வேண்டி உள்ளன. அவை சாதாரண மனிதனுக்கு எளிதில் விளங்கக் கூடியவை அன்று. மேலும் அவை அடிக்கடி வழக்காடு தலுக்கும் இட்டுச் செல்லுகின்றன. மொத்தத்தில் அவை திகைப் பூட்டும் ஒரு கதம்பத் திரளாக அமைந்துள்ளன. தற்போதுள்ள சட்டங்களிலிருந்து இனி வரப்போகும் சட்டத் தொகுப்பு ஏழு தலைப்புகளில், மாறுபட்டுள்ளதாக நாம் கருதலாம். அவை ஒவ் வொன்றையும் நான் விளக்க முற்படுகிறேன்.

முதலாவதாக இந்து ஆணோ அல்லது பெண்ணோ உயில் எழுதாமல் இறந்துவிட்டால் அவர்களுடைய சொத்துக்கள் யாருக்குப் போக வேண்டும் என அறிவிக்கும் சட்டத் தொகுப்பாகும்.

அடுத்ததாக, உயில் எழுதாமல் இறந்துவிடும் நபரின் வாரிசுகளை மாற்றி அமைக்கும் தொகுப்பாகும். அடுத்ததாக ஜீவனாம்சம், திருமணம், மணமுறிவு, தத்தெடுப்பு, வயது வராதோர் மற்றும் காப்பாளர்கள் பற்றியதாகும். முதலாவதாக வாரிசுரிமையைப் பற்றிய தொகுப்பாகும்.

முதல் முயற்சியாக வாரிசுரிமையைப் பற்றி சில மாற்றங்களை செய்ய முற்படுகிறோம். இந்த அவையிலுள்ள பல்வேறு வழக்கறிஞர் உறுப்பினர்களுக்குத் தெரிந்த ஒன்றை நான் ஞாபகப் படுத்த விரும்புகிறேன். பொதுவாக இந்துக்கள் மிதாக்ஷரா மற்றும் தயபாகா ஆகிய இரு பிரிவுகளின் கீழ் கொண்டுவரப்பட்டு அதன் அடிப்படையில் வாரிசுரிமை நிர்ணயிக்கப்படுகிறது. இரண்டு பிரிவுகளுக்கும் இடையே அடிப்படையான வேறுபாடுகள் உள்ளன.

மிதாக்ஷரா பிரிவின்படி ஒரு குடும்பத்தின் சொத்து அந்த நபரின் தனி சொத்து அல்ல. அது கூட்டுடைமையாகும். கூட்டுடைமை என்பதில் தந்தை, மகன், பேரன் மற்றும் பேரனின் மகன் ஆகியோர் அடங்குவர். மேலே கூறியுள்ள எல்லோருக்கும் குடும்பச் சொத்தில் உரிமை உண்டு. அதில் ஒருவர் இறந்துவிட்டால் அவருடைய பங்கு உயிரோடு உள்ள மற்றவர்களுக்குப் போய்ச் சேரும்; இறந்து போனவரின் வாரிசுதாரர்களுக்கு அல்ல.

இந்த மசோதாவில் அடங்கியுள்ள இந்துச் சட்டத் தொகுப்பில் தயபாகா சட்டத்தைப் பின்பற்றி வாரிசுரிமை நிர்ணயிக்கப்படுகிறது. இதன்படி குடும்ப வாரிசு தன் பங்கை முழு சுதந்திரத்துடன், மற்றவர்களுக்கு உயில் மூலம் கொடுக்கவோ, அல்லது விற்கவோ உரிமையுடையவராகின்றார். இது இந்த மசோதா கொண்டுவர முயலும் ஓர் அடிப்படை மாற்றமாகும். இம் மாற்றத்தின் மூலம் இந்தியா முழுமைக்கும் ஒரே மாதிரியாக தயபாகா சட்ட முறையை பின்பற்ற வழி செய்கின்றது; தற்போது மிதாக்ஷரா முறை அமலிலுள்ள பகுதிகளுக்கு இதனை விஸ்தரிக்க வழிவகை செய்கிறது.

வாரிசுரிமையைப் பொறுத்தவரை மிதாக்ஷரா மற்றும் தயபாகா அமைப்பில் அடிப்படை வித்தியாசங்கள் இருக்கின்றன. மிதாக்ஷரா சட்டப்படி பெண்வழி வாரிசுகளைவிட ஆண்வழி வாரிசுகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படுகிறது. ஆனால் தயபாகா முறையில் உறவுமுறை ஆண் வழியாக இருந்தாலும் அல்லது பெண் வழியாக இருந்தாலும் ஒரே முறையைப் பின்பற்றி இரண்டு முறை உறவுகளும் சமமாகக் கருதப்படுகின்றன. ஆகையால் புதிய சட்டத் தொகுப்பில் மிதாக்ஷரா முறையைத் தவிர்த்து தயபாகா முறை பின்பற்றப்படுகிறது.

மேற்கூறிய மாற்றத்துடன் வாரிசுரிமையைப் பொறுத்து மேலும் நான்கு மாற்றங்களை புதிய சட்டத்தொகுப்பு அறிமுகப் படுத்துகிறது.

முதலாவதாக விதவை, மகள், இறந்து விட்ட மகனின் மனைவி ஆகியோர் வாரிசு உரிமை விஷயத்தில் மகனுடன் சமமாகப் பாவிக்கப் படுவார்கள். அத்துடன் மகளுக்கும் தனது தந்தையின் சொத்தில் உரிமை வழங்கப்பட்டுள்ளது. மகனின் பங்கில் பாதி மகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. பெண் வாரிசுதாரர்களைப் பொறுத்தவரையில் மகளின் உரிமைக்காக மட்டுமே இந்த மாற்றம் செய்யப்பட்டுள்ளது. குடும்பத்தில் உள்ள மற்ற பெண்களின் உரிமைகள் 1937ல் இயற்றப் பட்ட பெண்களின் சொத்துரிமைச் சட்டத்தில் கூறப்பட்டுள்ளது. அதைப் பொறுத்து இந்த சட்டத்தொகுப்பில் எந்த மாற்றமும், செய்யப் படவில்லை. ஆனால் 1937-ம் ஆண்டு சட்டத்தில் சொல்லப்பட்ட உரிமைகள் இச்சட்டத்திலும் சேர்க்கப்பட்டுள்ளன.

மிதாக்ஷரா அல்லது தயபாகா பிரிவுகளில் சொல்லப் பட்டுள்ளதை விட இந்தப் புதிய தொகுப்பில் பல்வேறு நிலையி லுள்ள பெண்களும் வாரிசுகளாக சேர்க்கப்பட்டுள்ளனர். இது இந்த தொகுப்பில் இடம்பெற்றுள்ள இரண்டாவது மாற்றமாகும்.

மிதாக்ஷரா அல்லது தயபாகா சட்டப் பிரிவுகளில் பெண் களின் உரிமையை தீர்மானிக்க பல்வேறு அளவுகோல்கள் கையாளப் பட்டன. உயில் எழுதி வைப்பவர் இறக்கும் சமயத்தில் ஒரு பெண் செல்வந்தரா அல்லது ஏழையா, திருமணமானவளா, விதவையா, குழந்தை உள்ளவளா, அல்லது குழந்தை இல்லாதவளா என்பதைப் பொறுத்து அவளது உரிமை நிர்ணயிக்கப்பட்டது. ஆனால் அந்த

வித்தியாசங்கள் எல்லாம் இந்தப் புது சட்டத்தொகுப்பில் பின்பற்றப் படவில்லை. எல்லாப் பெண்களும் ஒரே மாதிரியாகப் பாவிக்கப் படுவார்கள். இது இந்த சட்டத் தொகுப்பின் மூன்றாவது மாற்ற மாகும்.

ஒரு பெண்ணின் வாரிசு உரிமை அவள் வாரிசாக சேர்க்கப் பட்டாளா இல்லையா என்பதைப் பொறுத்தே அமையும். வேறு எந்த அளவுகோலும் கிடையாது.

தயபாகா சட்டப்படி தந்தைக்கு வாரிசுரிமையில் முன்னுரிமை அளிக்கப்பட்டது. ஆனால் புதிய சட்டத் தொகுப்பில் தாய்க்கு முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளது. இது தயபாகா சட்டத்தில் செய்யப் பட்டுள்ள கடைசி மாற்றமாகும்.

ஓர் ஆண் உயில் எழுதாமல் இறந்துவிட்டால் அவரின் வாரிசுகள் யார் யார் என்பதை இதுவரை கவனித்தோம். உயில் எழு தாமல் இறந்து விடும் ஒரு பெண்ணின் சொத்திற்கு யார் யார் வாரிசாக முடியும் என்பதை இனி பார்ப்போம். ஒரு பெண்ணின் சொத்து பொதுவாக இரண்டு வகைப்படும். ஒன்று அவளின் சீதனச் சொத்து. இரண்டு பெண்ணின் சொத்து. இந்த இரண்டு பிரிவுகளும் இங்குள்ள உறுப்பினர்களுக்கு நன்கு அறிமுகமான ஒன்றுதான்.

சீதனச் சொத்து என்பது பல்வேறு வகையான பிரிவுகளை உள்ளடக்கியது. ஒவ்வொரு பிரிவைப் பொறுத்து அதனுடைய வாரிசுகள் நிர்ணயிக்கப்படுகிறார்கள். மிதாக்ஷரா மற்றும் தயபாகா வில் இதே முறை பின்பற்றப்படுகிறது. சீதனச் சொத்தைப் பொறுத்து இரண்டு மாற்றங்களைப் புது சட்டத் தொகுப்பு அறிமுகப்படுத்து கிறது. பல்வேறு பிரிவுகளான சீதனச் சொத்தை ஒரே பிரிவின் கீழ் கொண்டுவருகிறது. சீதனச் சொத்தில் மகளுக்கு மட்டும் இருந்த உரிமையை விரிவுபடுத்தி மகனுக்கும் பங்கு அளிக்கப்பட் டுள்ளது. மகளுக்குக் கிடைக்கும் பங்கில் பாதி மகனுக்கு வழங்கப் பட்டுள்ளது.

தந்தையின் சொத்தில் மகனுக்கு கிடைக்கும் பங்கில் பாதியை மகளுக்கும் அதேமுறையில் தாயின் சொத்தில் மகளுக்குக் கிடைக்கும் பங்கில் பாதியை மகனுக்கும் அளித்து இருவரை யும் சமமாகப் பாவிக்கும் ஒரு நிலைமையை இந்தப் புதிய சட்டத்

தொகுப்பு ஏற்படுத்தி உள்ளது. இதை உறுப்பினர்கள் உணர வேண்டும்.

''பெண்ணின் சொத்து'' என்ற அமைப்பில் பெண்ணிற்கு அவள் உயிருள்ளவரை அனுபவிக்கும் உரிமை மட்டுமே இந்துச் சட்டத்தில் வழங்கப்பட்டது என்பதை உறுப்பினர்கள் அனைவரும் அறிவர். அந்த முறையில் அவள் சட்ட ரீதியாக அவசியம் ஏற்பட்டால் மட்டுமே அந்தச் சொத்தை விற்க முடியும். மற்ற நிலைகளில் அவள் அனுபவிக்க மட்டுமே முடியும். அவள் இறந்த பிறகு அந்தச் சொத்து அவள் கணவனின் வாரிசுகளுக்குப் போய்ச் சேரும்.

இந்தப் புதிய சட்டத்தொகுப்பில் இரண்டு மாற்றங்கள் செய்யப் பட்டுள்ளன. ஒன்று ஒரு பெண்ணிற்கு முழுமையான உரிமை அளிக்கப்பட்டுள்ளது. இரண்டாவதாக, அவள் இறந்த பிறகு அவள் கணவனின் வாரிசுகள் யாரும் அச் சொத்தில் உரிமை கொண்டாட முடியாது.

சொத்துரிமை பெறுவதற்குப் பெண்களுக்குள்ள உரிமைகளுக்கு உறுதுணையாக இருக்கும் மற்றொரு முக்கியமான வகையுரை (ஷரத்து) இந்த மசோதாவில் இடம் பெற்றுள்ளது; அது வரதட்சிணை அல்லது சீதனம் சம்பந்தப்பட்டதாகும். வரதட்சிணை கொடுமை குறித்து இந்த அவை உறுப்பினர்கள் அனைவரும் நன்கு அறிவர். இளம் பெண்கள் தங்கள் பெற்றோர்களிடமிருந்து வரதட்சிணையாகவோ, சீதனமாகவோ அல்லது பரிசுப் பொருள்களாகவோ ஏராளமான சொத்துக்களைக் கொண்டுவருகின்றனர். அப்படியிருந்தும் அவர்கள் எவ்விதம் குரூரமாக, ஈவு இரக்கமின்றி, மிருகத்தனமாக, மிலேச்சத்தனமாக நடத்தப்படுகின்றனர், ஒருத்தப் படுகின்றனர், ஒடுக்கப்படுகின்றனர் என்பதைப் பார்க்கிறோம். இத்தகைய நிலைமையில் இந்த அப்பாவிகளைப் பாதுகாப்பதற்கு ஓர் உறுதியான ஏற்பாடு இந்த மசோதாவில் செய்யப்பட்டுள்ளது; அதற்கு இந்த மசோதா வழிவகை செய்துள்ளது. திருமண நேரத்தில் ஒரு பெண்ணிற்கு அளிக்கப்படும் சீதனம், வரதட்சிணை ஆகிய எல்லாச் சொத்துக்களும் அவளுடைய நன்மைக்காக பாதுகாக்கப் பட்டு அவளுக்கு 18 வயது முடிந்தவுடன் அவளிடம் ஒப்படைக்கப் பட வேண்டும்.

அதில் அவளது கணவரோ அல்லது அவளுடைய உறவினர்களோ எந்த உரிமையும் கோர முடியாது. அவளது சொத்தை தங்கள் இஷ்டம் போல் ஊதாரித்தனமாக செலவிட்டு, எஞ்சிய வாழ்நாள் காலத்தில் அவளை நிராதரவானவளாக, துன்புற்றவளாக, துயருறுவளாக விட அவர்களுக்கு எந்த உரிமையும் கிடையாது. இந்து சட்டத் தொகுப்பில் செய்யப்பட்டுள்ள இந்த மாற்றம் மிக முக்கியமான ஒன்றாக கருதப்பட வேண்டும்.

அடுத்தது ஜீவனாம்சம் பற்றிய ஒன்றாகும். இறந்துவிட்ட நபரின் சார்ந்திருப்போர்கள், அவரின் சொத்தை வாரிசுரிமை மூலமாகவோ, அல்லது உயில் மூலமாகவோ பெற்றிருந்தால் அவரிடமிருந்து ஜீவனாம்சம் பெற உரிமையுள்ளவர்களாகிறார்கள். அவர்களைக் காப்பாற்ற வேண்டியது சொத்தை அடைந்தவரின் கடமையாகும். இறந்தவரினால் பராமரிக்கப்பட்ட அவரது வைப்பாட்டியும்கூட அவரைச் சார்ந்திருப்போரில் சேர்க்கப்பட்டுள்ளது துரதிர்ஷ்டவசமான ஒன்றாகும். எனினும் இவ்விஷயம் மசோதாவில் சேர்க்கப்பட்டிருப்பதால் அது குறித்துப் பரிசீலனை செய்ய வேண்டும். இதில் உறவினர்கள் சார்ந்திருப்போராக சேர்க்கப்பட்டுள்ளனர். இதில் பெரிய மாற்றம் ஒன்றும் இல்லை.

பொதுவாக ஒரு பெண் கணவனுடன் வாழ்ந்தால் மட்டுமே அவள் அவனால் பராமரிக்கப்படவேண்டும். ஆனால் சில குறிப்பிட்ட காரணங்களுக்கு அவள் பிரிந்து வாழ நேரிட்டால், அப்பொழுதும் அவள் அவனால் பராமரிக்கப்பட வேண்டியுள்ளது. அவள் தனக்கான ஜீவனாம்சம் பெற உரிமை பெறுகிறாள். கீழ்க்காணும் சூழ்நிலைகளை அதற்கான காரணங்களாகக் கருதலாம்: 1) கணவன் சில கொடுமையான வியாதிகளால் பாதிக்கப்பட்டிருக்கும்போது; 2) அவன் மற்ற பெண்ணுடன் வாழும்போது; 3) அவன் அவளை கொடுமைப்படுத்தும்போது; 4) அவன் அவளை இரண்டாண்டுக் காலமாக கவனிக்காமல் விடும்போது; 5) அவன் வேறு மதத்திற்கு மாறிய பொழுது மற்றும் அவள் தனியாக இருப்பதற்கான சரியான காரணங்கள் இருக்கும்போது.

அடுத்து திருமணத்தைப் பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன். இந்த சட்டத் தொகுப்பு இரண்டு வகையான திருமணங்களை ஏற்றுக் கொள்கிறது. ஒன்று காலம் காலமாக நடைமுறையிலிருந்துவரும் பழக்கத்திலுள்ள இந்துத் திருமண முறையில், அதாவது சடங்கு ரீதியான திருமண முறையில் செய்துகொள்ளும் திருமணங்கள்.

இன்னொன்று பதிவு முறையில் செய்து கொள்ளும் சிவில் திருமணங்கள். இப்போதுள்ள இந்துச் சட்டம் ''சடங்கு முறை'' திருமணத்தையே அங்கீகரிக்கிறது; ''சிவில்'' திருமணம் என்று அழைக்கப்படுவதை அங்கீகரிப்பதில்லை. தற்போதைய இந்து சட்டத் தொகுப்பு மசோதாவின் கீழ் செல்லுடைமையுள்ள சடங்கு ரீதியான திருமணத்திற்கும் செல்லுடைமையுள்ள பதிவுத் திருமணத்திற்குமான நிபந்தனைகளைக் கருதிப் பார்க்கும் போது அவற்றிடையே உண்மையில் அதிக வேறுபாடு ஏதுமில்லை.

சடங்கு ரீதியாக இந்து முறையில் செய்து கொள்ளும் திருமணங்களுக்கு ஐந்து விதிமுறைகள் உண்டு. முதலாவதாக, மணமகன் 18 வயது பூர்த்தியானவராக இருக்க வேண்டும். இரண்டாவதாக, மணமகள் 14 வயது பூர்த்தியானவளாக இருக்க வேண்டும். கல்யாணத்தின் போது இருவரில் எவரும் ஏற்கனவே மணமானவராக இருக்கக் கூடாது. மூன்றாவதாக, தடை செய்யப்பட்ட உறவினர்களாக இருக்கக்கூடாது. நான்காவதாக, ஒரே கோத்திரம் உள்ளவர்களாக இருக்கக் கூடாது. ஐந்தாவதாக, புத்திசுவாதீனம் இல்லாதவராகவோ அல்லது மடையராகவோ இருக்கக்கூடாது. ஒரே கோத்திரத்தைச் சேர்ந்தவர்கள் பதிவு முறையில் திருமணம் செய்து கொள்ளலாம். பதிவு முறையில் திருமணம் செய்வோர் அதில் கூறப்பட்டுள்ள விதிமுறைகளின்படி திருமணம் செய்துகொள்ள வேண்டும். தற்போதுள்ள சட்டப்படி மணமக்கள் இருவரும் ஒரே ஜாதியை அல்லது ஏற்றுக் கொள்ளப்பட்ட உட் ஜாதியை சேர்ந்தவராக இருக்க வேண்டும் என்ற விதிமுறை புதிய சட்டத் தொகுப்பில் நீக்கப்பட்டுள்ளது.

பண்டிட் தாகூர்தாஸ் பர்கவா (கிழக்கு பஞ்சாப், பொது) : இரு வேறு ஜாதியினருக்கு இடையே நடைபெறும் திருமணம் செல்லத்தக்கதா?

மாண்புமிகு டாக்டர் பி.ஆர். அம்பேத்கர்: நான் என்னுடைய பேச்சைத் தொடர விடுங்கள். மதிப்பிற்குரிய உறுப்பினர் தமது பேச்சின் நடுவே கேள்வி கேட்டால் அதற்கான பதிலை அளிக்கிறேன்.

ஒரே கோத்திரத்தைச் சேர்ந்தவர்கள்- கோத்ரபிரவாரா - திருமணம் செய்துகொள்ளக்கூடாது என்பது இப்போதுள்ள முறை. ஆனால் புதிய சட்டத் தொகுப்பில் அதற்கு தடையேதும் இல்லை.

இது இரண்டாவது ஷரத்தாகும். மூன்றாவதாக பழைய முறையில் ஒன்றுக்கு மேற்பட்ட திருமணம் அதாவது பலதார மணம் ஏற்றுக் கொள்ளப்பட்டது. ஆனால் புதிய சட்டத் தொகுப்பில் ஒரு தார மணம் அதாவது ஒரு துணை மணம் வலியுறுத்தப்பட்டுள்ளது. பழைய முறையில் சடங்கு ரீதியில் நடைபெற்ற திருமணம் எந்த சூழ்நிலையிலும் ரத்து செய்யப்பட முடியாதது; அதேபோல் விவாகரத்தும் செய்ய முடியாது. ஆனால் புதிய சட்டத் தொகுப்பில் சில குறிப்பிட்ட காரணங்களுக்காக திருமணத்தை முடிவுக்குக் கொண்டு வரவும் பிரிந்து வாழவும், திருமண முறிவு ஏற்படவும் வழி வகை செய்யப்பட்டுள்ளது. இது முற்றிலும் புதியதொரு மாற்றமாகும். புதிய சட்டத் தொகுப்பின் அடிப்படையில் திருமணம் செய்துகொள்வோர் மூன்று வழிகளில் திருமண உறவை முடிவுக்குக் கொண்டுவரலாம். முதலாவதாக, திருமணமே செல்லாது எனக் கோரலாம்; இரண்டாவதாக, திருமணம் தற்போது செல்லத்தக்கது அல்ல எனக் கோரலாம்; மூன்றாவதாக, திருமணத்தை ரத்து செய்யக் கோரலாம்.

திருமணம் செல்லத்தக்கது அல்ல என அறிவிக்க இரண்டு காரணங்கள் உள்ளன. ஒன்று, திருமணம் நடந்தபோது ஒருவருடைய கணவனோ மனைவியோ உயிருடன் இருத்தல், அல்லது இருவரும் தடை செய்யப்பட்ட உறவினராக இருத்தல்.

திருமணம் செல்லத்தக்கது அல்ல என அறிவிக்க நான்கு காரணங்கள் உள்ளன. ஒன்று, ஆண்மை அற்றவர் அல்லது திருமண வாழ்க்கை நடத்துவதற்குத் தகுதி இல்லாதவராக இருத்தல்; இரண்டு, இருவரும் ஒரே கோத்திரத்தைச் சேர்ந்தவர்களாக இருத்தல்; மூன்று இருவரில் ஒருவர் மனநிலை சரியில்லாதவராக அல்லது மடையராக இருத்தல்; நான்கு, பாதுகாவலரின் ஒப்புதலை ஏமாற்றியோ அல்லது வன்முறை மூலமோ பெறுதல்.

திருமண ரத்து என்னும் வாள் சர்வசதாவும் தலைக்குமேல் தொங்கிக்கொண்டிருக்காதபடி அதற்கு ஒரு வரம்பு கட்ட இந்த மசோதா விவேகமான முறையில் வழிவகை செய்துள்ளது. இம்மாதிரியான விவாகரத்து வழக்கை திருமணம் நடந்த மூன்றாண்டுகளுக்குள் தொடர வேண்டும். இல்லையென்றால் பிறகு வழக்கு தொடர முடியாது, மேலும் திருமண முறிவுக்கு ஆதாரம் ஏதும் இல்லை என்பதுபோல் திருமணம் தொடர்ந்து நடைமுறையில் இருக்கும், அதே சமயம் திருமணம் செல்லத்தக்கதல்ல என்ற சூழ்நிலை

ஏற்பட்டாலும், இத்திருமணம் செல்லத்தக்கதல்ல என்று நீதிமன்றம் அறிவித்தாலும்கூட இத்திருமணத்தின் மூலம் பிறந்த குழந்தைகளை அது பாதிக்காது, அவர்கள் சட்ட ரீதியான குழந்தைகளாகவே கருதப் படுவார்கள். அடுத்து மண முறிவை அல்லது விவாகரத்தை எடுத்துக் கொண்டால் மணமுறிவுக்கு ஏழு காரணங்கள் சொல்லப்பட்டுள்ளன. 1) புறக்கணித்தல், 2) மற்ற மதத்திற்கு மாறிக் கொள்ளல், 3) வேறு பெண்ணுடன் வாழ்தல் அல்லது மனைவியாக இருப்பவள் வேறு ஆணின் காமக்கிழத்தியாக இருத்தல் 4) குணப்படுத்த முடியாத மனச் சிதைவு 5) தீர்க்க முடியாத குஷ்ட ரோகம் 6) பால்வினை நோய் மற்ற வருக்கு தொற்றக் கூடிய அளவில் இருத்தல், மற்றும் 7) கொடுமைப் படுத்தல்.

அடுத்து, தத்து எடுப்பதைப் பற்றி அதாவது சுவீகாரம் பற்றிப் பார்ப்போம். புதிய சட்டத் தொகுப்பில் சொல்லப்பட்டுள்ளவை ஏற்கனவே உள்ள சட்டத்தில் இருப்பவைதான். இரண்டு புதிய வகை யங்கள் அதாவது ஷரத்துகள் சேர்க்கப்பட்டுள்ளன. இந்தப் புதிய ஷரத்தின்படி, தத்து எடுக்க விரும்பும் ஆண் தன் மனைவியின் ஒப்புதலைப் பெற வேண்டும். ஒன்றுக்கு மேற்பட்ட மனைவியர் இருந்தால், குறைந்தது ஒருவரிடமாவது ஒப்புதல் பெறவேண்டும்.

ஒரு விதவை தத்து எடுக்க விரும்பினால் அவளுடைய கணவன் அம்மாதிரி தத்து எடுக்கும் உரிமையை அவளுக்கு அளித்திருக்க வேண்டும். அம்மாதிரி, கணவனால் ஒப்புதல்அளிக்கப்பட்டதா என்பதை உறுதிப்படுத்த அந்த ஒப்புதல் உயில் போன்றவற்றில் எழுத்து மூலமாக இருக்க வேண்டும் என வலியுறுத்தி சொல்லப் பட்டுள்ளது. அதுவும் பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும். வாய்மொழி ஒப்புதல் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. ஏராளமான வழக்குகள் நடைபெறுவதற்குரிய பிரச்சினைகளில் ஒன்றாக தத்தெடுக்கும் பிரச்சினை இருந்து வந்திருக்கிறது. இதில் எல்லா விதமான ஏமாற்று வித்தைகளும் நடைபெறுகின்றன. சாட்சிகள் மிரட்டப்படுகின்றனர்; பலவிதமான வாய்மொழிச் சாட்சிகள் உருவாக்கப்படுகின்றனர்; விதவைகள் ஏமாற்றப்படுகின்றனர்; தாங்கள் தத்தெடுத்தது உண்மை தான் என்று ஒரு சமயம் கூறுகின்றனர்; இன்னொரு சமயமோ, இல்லை, நாங்கள் தத்தெடுக்கவே இல்லை என்று கூறி வழக்குக்கு முற்றுப்புள்ளி வைக்கக் கோருகின்றனர். இம்மாதிரியான சூழ்நிலைகளை மாற்றி அமைக்கும் நோக்கத்துடன் ஒப்புதல் பதிவு செய்யப்பட வேண்டும்

என சொல்லப்பட்டுள்ளது. மற்றவர்களுடைய தூண்டுதலால் தத்து எடுத்ததாகவோ அல்லது இல்லை என்றோ மாற்றி மாற்றி சொல்லக் கூடிய கொடுமையிலிருந்து இதன் மூலம் விதவைகள் மீட்கப்படு கின்றனர்.

அடுத்ததாக, உரிய வயது வராதோர் மற்றும் காப்பாளர் பற்றியும் புதிய சட்டத் தொகுப்பில் கருதப்பட்டது. இந்தத் துறை யில் எந்த மாற்றமும் செய்யப்படாததால் அதைப் பற்றி சொல்வ தற்கு ஒன்றுமில்லை.

இந்தப் புதிய தொகுப்பினால் ஏற்பட்டுள்ள மாற்றங்களை உறுப்பினர்கள் கவனத்தில் கொள்ள வேண்டும். முதலாவதாக, ஒரு குடும்பத்தில் பிறந்த காரணத்திற்காக மட்டும் சொத்தில் உரிமை கொண்டாடுவதையும், குடும்பத்தில் ஒருவர் இறந்துவிட்டால் அவர் பங்கு உயிருடன் உள்ள மற்றவர்களுக்கு போகவேண்டும் என்ற நிலைமையையும் இது மாற்றி அமைத்துள்ளது. இரண்டாவதாக, மகளுக்கு பாதி அளவிற்கு சொத்துரிமை அளிக்க வேண்டும் என்பதை இது வலியுறுத்தியுள்ளது. மூன்றாவதாக பெண்ணிற்கு ஓரளவுக்குக் கொடுக்கப்பட்டிருந்த அனுபவிக்கும் உரிமை முழு உரிமையாக மாற்றப்பட்டதாகும். நான்காவதாக, திருமணத்திலும் தத்து எடுப் பதிலும் கடைப்பிடிக்கப்பட்ட ஜாதி முறைகள் இந்தப் புது சட்டத் தொகுப்பில் விடப்பட்டுள்ளன. ஐந்தாவதாக, ஒருதார திருமணக் கோட்பாடு, ஆறாவதாக, விவாகரத்துக் கோட்பாடு. நமக்கு அளிக்கப் பட்டுள்ள குறைவான காலஅவகாசத்தைக் கருத்தில் கொண்டு என்னென்ன பிரச்சினைகளை நாம் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ள லாம் என்பதை நான் சொல்ல விரும்புகிறேன். இந்தப் புதிய சட்டத் தொகுப்பில் ஏற்படுத்தப்பட்டுள்ள மாற்றங்கள் யாவும் நியாயப் படுத்தப்பட வேண்டியவையாகும். ஆனால் இப்போதுள்ள குறைந்த கால அவகாசத்தில் இதை எல்லாம் விவாதித்தால் அதனால் கால விரையம் ஆகுமே தவிர வேறு அல்ல. உறுப்பினர்கள் யாவரும் தங்களுடைய கருத்துக்களை இப்போது சொல்லலாம். அவர்கள் கருத்தைக் கேட்டபின் அவசியம் ஏற்படின் என்னுடைய விளக் கத்தை அப்போது சொல்கிறேன். நான் தற்போது இந்த சட்டத் தொகுப்பு மசோதாவை அறிமுகப்படுத்துகிறேன்.

திரு. அவைத் தலைவர் : மசோதா அறிமுகப்படுத்தப்படுகிறது:

''இந்து சட்டத்தின் சில பிரிவுகளை மாற்றி அமைப்பதற்கும், மற்ற பிரிவுகளைத் தொகுத்து வழங்குவதற்குமான மசோதா ஒரு பொறுக்குக் குழுவின் பரிசீலனைக்கு அனுப்பப்படுகிறது, அந்தக் குழுவில் பின்வரும் நபர்கள் உறுப்பினர்களாக இருப்பார்கள்: டாக்டர் அல்லாடி கிருஷ்ணசாமி அய்யர், டாக்டர் பக்ஷிதேக் சந்த், திரு. எம். அனந்தசயனம் அய்யங்கார், திருமதி ஜி. துர்க்காபாய் திரு. யு. சீனிவாச மல்லையா, திரு மிகிர்லால் சட்டோபாத்தியாயா, டாக்டர் பி.எஸ். தேஷ்முக், திருமதி ரேணுகா ரே, டாக்டர் பி.கே. சென், பாபு ராம் நாராயண் சிங், திரு. கிஷோரி மோகன் திரிபாதி, திருமதி அம்மு சுவாமிநாதன், பண்டிட் பாலகிருஷ்ண சர்மா, திரு. குர்ஷீத் லால், திரு மிரஜேஸ்வர் பிரசாத், திரு. பி. சிவராவ், திரு. பால்தேவ் சுவரூப், திரு. வி.சி. கேசவ ராவ் மற்றும் மசோதா அறிமுகப்படுத்துபவர்.

அடுத்த அமர்வு ஆரம்பித்த முதல் வாரத்தின் கடைசி நாளிற்குள் இக் குழு அறிக்கையை அளிக்க வேண்டும். ஐந்து உறுப்பினர்கள் கலந்து கொண்டாலே இக்குழு தனது பணியை கவனிக்கலாம்.

***டாக்டர் பி. பட்டாபி சீதாராமய்யா:** (பொது) ஐயா, உங்கள் பார்வையில் படுவதற்காகவும் அவையினர் என் பேச்சைக் கேட்பார்கள் என்ற நம்பிக்கையிலும் நான் முதலாவதாக எழுந்துள்ளேன். இந்த நாடு நீண்ட காலமாக எதிர்பார்த்துக் கொண்டிருந்த மிக முக்கியமான இந்த மசோதா இந்த அவையில் அறிமுகப் படுத்தப்பட்டுள்ளது அறிய மிக்க மகிழ்ச்சி அடைகிறேன். ஆயிரம் ஆண்டுகளாக அந்நிய ஆதிக்கத்திலிருந்த நம் நாட்டில் நீண்ட காலமாக எந்த சமுதாய முன்னேற்றமும் இன்றி நாடு போய்க் கொண்டிருந்தது. மரபு வழக்கு முறை என்பது ஆட்சி செய்பவர்களின் பாதுகாப்பிலும் அவர்கள் தரும் ஊக்கத்திலும்தான் வளர்ந்து வளம்பெற முடியும். ஆனால் நம் நாட்டில் நீண்டநாளாக மன்னராட்சி இல்லாத காரணத்தால், வழிகாட்டுபவர்களும் இல்லை.

இன்றும்கூட மேல்நாட்டில் ஒரு பழக்கத்தை ஏற்படுத்த வேண்டுமானால், அரசர் அதை ஆரம்பித்து வைக்க வேண்டும். உடனடியாக அது மக்களால் பின்பற்றப்படுகிறது. எட்டாம் எட்வர்டு என்ற மன்னரின் வாழ்வில் நடந்த ஒரு சம்பவத்தை நீங்கள்

* அ.நி.ச. (சட்ட) விவாதங்கள், டி, தொகுப்பு 4, ஏப்ரல் 9, 1948, பக்கங்கள் 3633-39.

கேள்விப்பட்டிருக்கலாம். அவர் ஒரு விழாவிற்குச் சென்றிருந்த பொழுது மக்கள் அவரிடம் தங்கள் குறையை முறையிட்டார்கள். உங்கள் குறை என்ன என்று அவர் கேட்டார். முன்பெல்லாம் மக்கள் வைக்கோலினால் செய்த தொப்பியை அணிந்து வந்தார்கள், இவ்வகை தொப்பியை தயார் செய்வது எங்கள் தொழில், இப்போது மக்கள் கம்பளியினாலான வேறுவகை தொப்பி அணிய முற்பட்டதால் எங்கள் தொழில் பெரிதும் பாதிக்கப்பட்டுவிட்டது என்று அவர்கள் கூறினார்கள்.

அவர்கள் குறையை நிவர்த்தி செய்யும் எண்ணத்துடன் மறுநாள் நடைபெற்ற ஒரு விழாவில் மன்னர் வைக்கோலினால் ஆன தொப்பி அணிந்து கொண்டு வந்தார். இதனைக் கண்ணுற்ற மக்களும் உடனே அதைப் பின்பற்றினார்கள். அத்தொழிலில் ஈடுபட்டிருந்தோர்களது குறையும் நீங்கியது. அதுதான் மன்னருடைய செல்வாக்கு.

அரசர் என்பவர் நாட்டின் தலைவர் மட்டுமல்ல. சமுதாயத்தின் தலைவரும் அவர்தான். மக்களுடைய கருத்தை உருவாக்குபவரும், வழிகாட்டுபவரும், அவர்களை கண்காணிப்பவரும் மன்னர்தான். எனவே, பண்டைப் பாரம்பரியமான, தொன்மையான, காலத்தால் புடமிடப்பட்ட பழக்க வழக்கங்களை அவர் கணித்து மதிப்பிடுகிறார்; அந்தப் பழக்க வழக்கங்களில் அவசியமான மாற்றங்கள் செய்ய அவருக்கு அதிகாரம் உண்டு. ஆனால் ஆங்கிலேயர்கள் நம்மை ஆள ஆரம்பித்த பிறகு நம் நிலை என்ன?

முகலாயர்கள் நம்மை ஆண்ட போது நம்முடைய பழக்க வழக்கங்களை அவர்கள் பின்பற்றினார்கள். அவர்களுடைய பழக்கவழக்கங்களை நாம் பின்பற்றினோம். இரண்டுகலாசாரங்களும் ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்தன; இதனால் சமூகத்தில் சில முன்னேற்றங்கள் ஏற்பட்டன. ஆனால் இந்த நாட்டின் அதிகார பீடத்தில் ஆங்கிலேயர்கள் அமர்ந்த பிறகு இந்நாட்டின் மிகப் பெரும்பாலான மக்களால் நெருங்க முடியாதவர்களாக, அணுக இயலாதவர்களாக அவர்கள் கருதப்பட்டார்கள்.

பிரிட்டிஷார் இந்த நாட்டின் எந்தப் பழக்க வழக்கத்தையும் மாற்ற அஞ்சினார்கள். ஆகையால் அவர்கள் எல்லாவிதமான பழக்க வழக்கங்களையும் இருந்த படியே அனுமதித்து மக்கள் அவரவர்கள் நிலையில் வாழ அனுமதித்தார்கள். அதில் இடையூறு செய்தால் தங்களுடைய ஆட்சிக்கு அது பாதகமாக அமையும்

எனக் கருதினார்கள். எனவே, இந்த நாட்டின் சமயத் துறையிலோ பழக்க வழக்கங்களிலோ தடையிடுவதில்லை என்ற நிலையை மேற்கொண்டார்கள். தாங்கள் மேற்கொள்ளும் இந்த நிலை சரியானது எனவும், நியாயமானது எனவும் கூடக் கருதினார்கள். இதுபோன்றே சமுதாய முன்னேற்றத்துக்கான மாற்றங்களை உயர் நீதிமன்ற நீதிபதிகளும் அனுமதிக்கவில்லை. நடைமுறையில் இருந்த பழக்க வழக்கங்களை ஏற்றுக் கொள்வதிலேயே அவர்கள் எப்போதும் கவனமாக இருந்தார்கள். இவ்வாறாக பழக்க வழக்கங்கள் எத்தகைய மாற்றமும் இல்லாமல் கல் போல் இறுகித் தொடர்ந்த காரணத்தால் 150 வருடக் காலத்திற்கு எந்த சமுதாய மாற்றமும் ஏற்படவில்லை.

சில நேரங்களில் சில பழக்கங்களின் குறைகளை சுட்டிக் காட்டிய மேல்நாட்டு மதவாதிகள் எந்த முன்னேற்ற நோக்கத்துடனும் அதைக் கூறவில்லை. மாறாக, குற்றம் காணும் நோக்கிலேயே, போக்கிலேயே அவ்வாறு செய்தார்கள்.

ஆனால் காலம் மாற மாற, ஜனநாயகப் பண்புகள் நிலைத்து நிற்க ஆரம்பித்தவுடன் வேறு வகையான மாற்றங்கள் தோன்ற ஆரம்பித்தன. இதற்கு ஆங்கிலக் கல்வியும் பெரிதும் துணை புரிந்தது.

ஆங்கிலம் படித்த இந்தியர்கள் மிக வேகமாக தங்கள் கலாசாரத்தை விடுத்து ஆங்கில கலாசாரத்தைப் பின்பற்றியதை ஆங்கில மதவாதிகள் ஏற்றுக்கொள்ளவில்லை. இம்மக்கள் உண்மையிலேயே புதிய கலாசாரத்தை ஏற்றுக்கொண்டார்களா அல்லது இது ஒரு பொய்மையான தோற்றமா என அவர்கள் ஐய முற்றார்கள். தங்களுடைய அதிகாரத்திற்கு அது பாதகமாக முடியும் என அவர்கள் நம்பினார்கள்.

இம்மாதிரியான மாற்றங்களினால் சமுதாயத்தில் ஒரு பெரிய மனமாற்றம் ஏற்படும் என அவர்கள் அஞ்சினார்கள். பிரம்மோ தத்துவம் பெரிதும் எதிர்க்கப்பட்டது. அது ஆங்கில அரசிற்கு அபாயமாக முடியும் என கருதப்பட்டது. இதன் காரணமாக ஆங்கிலேயர்கள் மிகவும் பழமைவாதியாக மாறினார்கள். சமுதாயத்தில் எந்த முன்னேற்றமும் ஏற்படாமல் இருக்கும்

வழக்கமே தொடர்ந்தது. பெண் வயது வந்த பின் திருமணம் செய்வது சட்டத்திற்கு புறம்பானது என பஞ்சாப் உயர்நீதிமன்றம் அறிவித்தது. இம்மாதிரியான தீர்ப்பு சமுதாய முன்னேற்றத்திற்கு எல்லாவிதமான தடையையும் ஏற்படுத்தியது.

இந்த நிலைமையை மாற்ற 1870ஆம் வருட சட்டம் 3 இயற்றப் பட்டது. இது பிரம்ம திருமணச் சட்டம் என வழங்கப்பட்டது. இந்தச் சட்டத்தின்படி திருமணம் செய்ய விரும்புவோர் தாங்கள் ''நான் இந்துவோ, முஸ்லீமோ, கிருத்துவனோ, பார்சியோ அல்லது யூதனோ அல்ல'' என அறிவிக்க வேண்டும். இம்மாதிரியான ஷரத்தின் காரணமாக அச்சட்டம் மக்களால் ஏற்றுக் கொள்ளப்பட வில்லை. அதற்கு அடுத்து சாரதா சட்டம் அமுலுக்கு வந்தது. அந்தச் சட்டத்தனால் சமுதாயத்தில் நல்ல முன்னேற்றவும் ஏற்பட்டது. ஒரு புதிய சகாப்தம் ஆரம்பமாயிற்று. 1885ல் இந்திய தேசிய காங்கிரஸ் தோன்றிற்று. 1919 வரை அது ஒரு துணை சமூக சீர்திருத்த அமைப்பாக விளங்கிவந்தது. நாட்டைப் பீடித்துள்ள சமூகத் தீமைகளை அது சுட்டிக்காட்டி வந்ததோடு, இத்தீமைகளைக் களைவதற்கான பல்வேறு சட்ட நடவடிக்கைகளையும் அது பரிந்துரைத்தது. ஆனால் இந்த சட்ட மாற்றங்களைச் செயல்படுத்த பிரிட்டிஷ் அரசாங்கம் தயாராக இல்லை. மேலும் அந்நியர்களிடமிருந்து இம்மாதிரியான சட்ட மாற்றங்களை ஏற்றுக் கொள்ள சமுதாயமும்தயாராக இல்லை. அந்நிய ஆதிக்கம் கொடுக்கும் சமூக மாற்றத்தையும் ஏற்றுக் கொள்ளும் மனநிலை மக்களுக்கு இல்லை.

அதிர்ஷ்டவசமாக அந்தக் காலகட்டத்தை தாண்டி இப்போது நாம் வந்துள்ளோம். நம் தேசிய அரசில் முன்னேற் றதிற்கு வழி வகுக்கும் இம் மாதிரியான சட்டங்கள் உருவாகும் காலத்தில் நான் வாழ்ந்து வருவது குறித்து மகிழ்ச்சி அடைகிறேன். நோக்கிலும் போக்கிலும் விரிவானதும், மிகுந்த பலனளிக்கக் கூடியதும், நம் சமூகப் பிரச்சினைகளுக்கு சிறந்த மருந்தாக இருக்கக் கூடியதுமான ஒரு முற்போக்கான சீர்திருத்தத்தை மேற்கொள்ள தேசிய அரசு முன்வந்துள்ளது. இவ்வகையில் பெண்களின் சொத்துரிமை, திருமணம், விவாகரத்து ஆகிய அனைத்துத் துறைகளையும் உள்ளடக்கிய ஒரு சிறந்த சட்டம் வருவது மிகவும் விரும்பத்தக்க ஒன்றாகும். காலம் செல்லச் செல்ல இன்னும் அதிக முன்னேற்றமான சட்டங்களை நாம் உருவாக்க முடியும்.

கணவன் இறந்த பின் மனைவிக்கு அளிக்கப்படும் உரிமைகளைப் பற்றி முதலில் கவனிப்போம். நம்முடைய சாத்திரங்களில் பெண்ணின் நிலை இவ்வாறு கூறப்பட்டுள்ளது; அவள் இளமையில் தந்தைக்கும், நடுத்தர வயதில் கணவனுக்கும், முதுமையில் மகனுக்கும் அடிமையாக இருக்கிறாள். இம்மாதிரி சொல்லப்படுவது பாதி அளவிற்குத்தான் உண்மை. ஆனால் அக்கூற்றில் உண்மை உண்டு. இவ்வாறெல்லாம் கூறுவது சில சமயங்களில் பயனுள்ளதாக இருப்பதாக நாம் கண்டாலும் அவற்றில் பொதிந்துள்ள உண்மை நிலையை நாம் உணர வேண்டும்; இவையாவற்றின் முழு முக்கியத்துவத்தை நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

நம் முன்னுள்ள சட்டத் தொகுப்பின்படி ஒரு பெண்ணிற்கு சொத்து முழுமையாக கொடுக்கப்பட்டு அதை விற்பதற்கும் அவளுக்கு உரிமை அளிக்கப்பட்டுள்ளது. இவை எப்போது அமலுக்கு வரும் என்பதை சட்ட அமைச்சர் விளக்கினால் நன்றாக இருக்கும். இந்தச் சட்டத்தொகுப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டதற்குப் பிறகு ஒரு கணவன் இறந்துவிட்டால் அந்த மனைவிக்கு என்ன வகையான உரிமைகள் கிடைக்கும்? இந்த காலகட்டத்திற்கு ஓர் ஆண்டுக்குமுன் இறந்துவிட்ட கணவனின் மனைவிக்குள்ள உரிமைகளுடன் ஒப்பிடும்போது இவளுடைய உரிமைகள் யாவை? பின்னால் சொல்லப்பட்டவளுக்கு அனுபோக உரிமை மட்டும்தான் உள்ளது. இதற்கு எந்த வகையான மாற்றம் சொல்லப்பட்டுள்ளது? அனுபோக உரிமை மட்டும் உள்ள விதவை அந்த சொத்தை அடமானம் வைக்கவும் அல்லது விற்கவும் அவளுக்கு உரிமை வழங்கப்பட்டுள்ளதா? இந்த கேள்விக்கான விடையை என்னால் கண்டுபிடிக்க முடியவில்லை. தம்முடைய பதிலில் சட்ட அமைச்சர் இதற்கான விளக்கம் அளிப்பார் என எதிர்பார்க்கிறேன். ஒரு மகளின் ''உரிமைகள்'' யாவை? இதைத் தெரிந்து கொள்வதில் மிகவும் ஆவலாக உள்ளேன். மற்ற வெளிநாட்டு பிரமுகர்களுடன் விவாதிக்கும்போது நம் நாட்டு நிலையை நாம் பெருமையாகத்தான் சொல்வேன்.

ஒரு பழக்கத்தின் அல்லது ஒரு கோட்பாட்டின் உண்மை நிலையை அறிய தற்போதைய அதன் சீர்கெட்ட நிலைமையை மட்டும் ஆராயாமல், அதனுடைய அடிப்படை தத்துவத்தையும், அதன் பெருமையையும் நாம் அறிந்து கொள்ள வேண்டும். சாதாரண மக்கள் வாழ்வு சிறப்பாக அமையத்தான் அக்காலத்தில் நம் முன்னோர்கள் குழந்தைத் திருமணத்தை பின்பற்றினார்கள்.

இம்மாதிரியான திருமணத்தினால் ஒரு பெண் மிக இளம் வயதிலேயே வேறு ஒரு குடும்பத்தில் வாழத் தலைப்பட்டு அங்குள்ள நிலைமைக்கு தன்னைத் தயார் படுத்திக் கொள்ளும் வாய்ப்பு ஏற்படுகிறது. ஆனால் அந்த சூழ்நிலை இப்போது மாறிவிட்டது. தற்போது திருமணம் செய்து கொள்ளாமலும் பிள்ளைப் பேறுகள் இல்லாமலும் பிரமச்சாரிகளாக வாழ்ந்து, மற்றவர் மனைவியரை விமர்சிப்பதில் பெரும் இன்பம் காணவோர் எண்ணிக்கை அதிகரித்தவரும் ஒரு காலகட்டத்தில் நாம் வாழ்ந்து வருகிறோம். திருமணம் செய்து கொண்டு பிள்ளைகள் பெற்றுக் கொள்வதைவிட அது சிறந்ததாக அவர்களுக்குத் தோன்றுகிறது. எனவே,மாறியுள்ள சூழ்நிலையில் குழந்தைத் திருமணம் எனும் கோட்பாடு ஏற்றுக் கொள்ளக் கூடியது அல்ல.

ஒவ்வொருவரும் அவரவர்கள் விருப்பப்படி தங்கள் வாழ்வை அமைத்துக் கொள்ள அவர்களுக்கு பூரண உரிமை உள்ளது. இதற்கான கட்டுப்பாட்டை விதிக்க சமூகத்திற்கு எந்த உரிமையும் இல்லை. சமூக நிலைமைகளும் பெரிதும் மாறிவிட்டன. எனவே, பழைமைக்கும் கடந்தகாலக் கட்டுதிட்டங்களுக்கும், வழக்கு முறைக்கும் நாம் அடிமையாகி விடக்கூடாது.

ஆனால் தற்போதுள்ள நிலைமையை நாம் எவ்வாறு சமாளிப்பது? எத்தனை எத்தனையோ புதல்வியர்களும், தங்கைகளும் பல்வேறு குடும்பங்களில் அல்லலுற்றுக் கொண்டிருக்கிறார்கள்; அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்; வாதனையும் வேதனையும் பட்டுக் கொண்டிருக்கிறார்கள், நமது அருமை பெருமைகளை நாம் மற்றவர்களுக்கு சொல்லிக் கொண்டிருக்கும் அதே நேரத்தில் நம் பெண்களின் இழிவினும் இழிவான நிலைமையை நம்மால் மறக்க முடியாது; தங்கள் குடும்பங்களிலேயே அவர்கள் வேறு வழி எதுவும் தெரியாது வதைபட்டுக் கொண்டிருக்கிறார்கள். இந்த அவலங்களில் இருந்த எல்லாம் விடுபட காதல் பாணம் தான் சிறந்த வழி என நான் கருதுகிறேன்; அழுகி நாற்றமெடுத்துப் போன நமது பழைய பழக்க வழக்கங்களுக்கு இதுதான் சரியான பரிகாரமாக இருக்க முடியும் என்று நினைக்கிறேன்.

ஆமதாபாத் சிறையில் இருந்த போது நான் ஓர் ஆங்கிலப் புதினம் படித்தேன். ''வெல்லற்கரிய பெண்கள்'' என்பது அந்தப் புதினத்தின் தலைப்பு. அச்சமயம் இங்கிலாந்தில் ஒரு போர் மூளும்

சூழ்நிலை உருவாகி இருந்தது. எப்படியும் போரைத் தடுத்து நிறுத்த வேண்டும் என்று எல்லாப் பெண்களும் விரும்பினார்கள். ஆனால் ஆண்களோ இவர்களுக்கு எதிர் துருவமாக இருந்தார்கள். அவர்கள் கொலைவெறிப் பிடித்து அலைந்தார்கள். போரில் தங்கள் வீரதீரத்தைக் காட்ட வேண்டும் என்று துடித்தார்கள். அவர்களை எப்படித் தடுத்து நிறுத்துவது? இதற்குப் பெண்கள் ஒரு வழி கண்டு பிடித்தார்கள். அந்த வழி என்ன? அவர்கள் சொன்னார்கள்: வாருங்கள், நாம் காதல் வேலை நிறுத்தம் செய்வோம். எந்தக் கன்னிப் பெண்ணும் தன் காதலனுடன் பேசக் கூடாது; எந்த மனைவியும் தன் கணவனுடன் பேசக் கூடாது; எந்தத் தாயும் தன் மகனுடன் பேசக் கூடாது. ஆண்கள் இவ்வாறு பகிஷ்கரிக்கப்பட்டார்கள். போர் ரத்து செய்யப்பட்டது என்று அறிவிக்கப்படும் வரை ஆண்களுக்கும் பெண்களுக்கும் இடையே எத்தகைய சமூக வாழ்க்கையும் நிலவவில்லை. இவர்களுடன் நாங்கள் சேர்ந்து இணைந்திருக்க மாட்டோம் என்று பெண்கள் சூளுரைத்தார்கள்.

இதேப் போன்று நம்முடைய கிராமங்களிலோ அல்லது நகரங்களிலோ ஏதோ ஒரு பெண்ணுக்கு அவள் கணவனால் தீங்கு ஏற்பட்டால் அதை எதிர்க்க மற்ற மனைவிமார்கள் முன்வர வேண்டும். அவர்கள் அனைவரும் ஒன்று கூடி ஒரு மன்றம் அமைத்து அதில் 24 மணி நேரம் தங்கியிருக்க வேண்டும். அப்போது நல்ல விளைவுகள் ஏற்படும். தீங்கு செய்யும் கணவனை மற்ற ஆண்கள் வழிக்குக் கொண்டுவருவார்கள். அவர்கள் அவனிடம் பின்வருமாறு கூறுவார்கள்: ''என்ன காரியம் செய்துவிட்டாய்? நம் குடும்பங்கள் எல்லாம் சிதைந்து போய்விட்டன. நீ உன் மனைவியைத் திரும்ப அழைத்து வந்தாலொழிய நமது வீடுகளெல்லாம் வெறிச்சோடிக் கிடக்கும்.''

இம்மாதிரி நான் சொல்வது இப்போது உங்களுக்கு நகைப் பாக இருக்கும். நம்முடைய குடும்பங்களில் நடக்கும் கணவன் - மனைவி பிரச்சினைகளுக்காக அவர்களுக்கு எதிராக வழக்குப் போட முடியுமா? கணவனும் மனைவியும் ஒருவருக்கு எதிராக ஒருவர் மலைமலையாகக் குற்றச் சாட்டுகளை அடுக்கிக் கொண்டே போவார்கள். இதனால் எந்தப் பயனும் விளையாது. ஒரு சமயம், கணவனுக்கும் மனைவிக்கு நடந்த சச்சரவில் நான் தலையிட்டு ஏன் அவளை அடிக்கிறாய் எனக் கணவனைக் கேட்டேன். அவ்வளவுதான் அந்த மனைவி பத்திரகாளியாகி விட்டாள்! என்மீது சீறிவிழுந்தாள்: ''என்னை அடிக்க என் கணவ

னுக்கு எல்லா உரிமையும் இருக்கிறது. அதைக் கேட்க நீ யார்?'' எனப் பொரிந்து தள்ளினாள். குடும்ப விவகாரங்களில் மூன்றாவது மனிதர் தலையீட்டை அவர்கள் எளிதில் ஏற்றுக் கொள்வதில்லை. கவுரவர்களும் பாண்டவர்களும் சண்டையிட்டுக் கொண்டபோது அவர்கள் பின்வருமாறு கூறுவது உண்டு: ''5 பேருக்கு எதிராக நாங்கள் 100 பேர் இருக்கிறோம். ஆனால் மூன்றாவது நபருக்கு எதிராக நாங்கள் 100 மற்றும் 5 பேர் இருக்கிறோம்.'' ஆக நாம் குடும்ப சண்டைகளில் தலையிடும்போது இரு சாராருமே நமக்கு எதிராகக் கச்சை கட்டுகிறார்கள்.

மனைவிக்கு என்று தனியாக சொத்து இருப்பது மிக அவசியம். ஒரு மனைவியின் நிலை மிகவும் இரங்கத்தக்கதாக இருப்பதைக் காண்கிறேன். அவளுடைய சகோதரி மகன் வருகிறான். அவளுடைய சகோதரிகள் வருகிறார்கள். அவர்கள் வரும்போது அவர்களுக்கு அன்பளிப்பு அளிக்க விரும்புகிறாள். ஆனால் இதற்காக கேவலம் ரூ. 5 க்குக் கூட அவள் தன் கணவனது நல்லெண்ணத்தை எதிர்பார்க்கும் சூழ்நிலை உள்ளது. அச்சமயம் கணவன்மார்கள் எத்தகைய மனநிலையில் இருப்பார்கள் என்று சொல்ல முடியாது. சிலர் நல்ல மன நிலைமையில் இருப்பார்கள். சிலர் நல்ல மன நிலைமையில் இல்லாதிருப்பார்கள். எனவே மனைவிக்கு அவளுக்கென்று ஏதாவது சொத்து இருக்க வேண்டும். இதற்காக அவள் தன் நகையை விற்கமுடியுமா? எந்தப் பெண்ணும் தன் நகையை விற்கமாட்டாள். தன் கணவன் இறந்த பிறகும் நகைகளை விற்க விரும்பமாட்டாள். தனக்கும் தன் கணவனுக்கும் இடையே உள்ள பாலமாக அதை அவள் கருதுவாள். இது எனக்கு நன்றாகத் தெரியும். பலபெண்களிடம் நான் இதைப் பற்றிப் பேசி இருக்கிறேன்.

திரு. அவைத் தலைவர் : மதிப்பிற்குரிய உறுப்பினர் நீண்ட நேரம் பேச விரும்புகிறாரா?

டாக்டர் பி. பட்டாபி சீதாராமைய்யா : என்னை மன்னியுங்கள். நான் நேரத்தைக் கவனிக்கவில்லை. என் பேச்சைத் தொடர விரும்புகிறேன்.

திரு. அவைத் தலைவர் : இப்போது இந்த அவை அரை மணி நேரம் ஒத்திவைக்கப்படுகிறது. 5.30க்கு மீண்டும் கூடும்.

பிற்பகல் 5.30 மணி வரை அவை ஒத்திவைக்கப்பட்டது.

5.30 மணிக்கு மீண்டும் அவை கூடியது. சபாநாயகர் மாண்புமிகு மாவலங்கர் அவைக்கு தலைமை தாங்கினார்.

டாக்டர் பி. பட்டாபி சீதாராமையா : சபாநாயகர் அவர்களே, ஒரு பெண்ணிற்கு அவள் தந்தையிடமிருந்து கிடைக்கும் சொத்துரிமை பற்றிக் கூறிக்கொண்டிருந்தேன். நான் எனது சில சிநேகிதிகளிடம் பின்வருமாறு கேட்டேன்: ''நீங்கள் வேறு ஒரு குடும்பத்திற்குச் சென்று அங்கு ராணியாக இருக்கப் போகிறீர்கள். என்னுடைய மனைவிதான் என் வீட்டின் ராணியாக இருக்கிறாள். அவளிடம்தான் வீட்டு இரும்புப் பெட்டிச் சாவிகள் இருக்கின்றன. அதேபோல் நீங்களும் இன்னொரு வீட்டின் இரும்புப் பெட்டிச் சாவியை வைத்திருக்கப் போகிறீர்கள். அப்படியிருக்கும்போது நீங்கள் ஏன் சொத்துரிமை கேட்கிறீர்கள்?'' இவ்விதம் வீட்டு ராணியாக இருப்பது மட்டும் போதுமானது அல்ல. கணவன் எவ்வளவு தான் நல்லவனாக இருந்தாலும் எப்போதும் அவன் தயவில் இருப்பது சரியானதன்று. அவளுக்கென்று தனியான உரிமை இருப்பதுதான் முக்கியமானது.

பெண்களுக்கு தந்தையின் சொத்தில் உரிமை கொடுப்பது மூலம், மகன்களின் உரிமையில் தலையீடாகாதா என நினைத்தேன். ஆனால் சீதனச் சொத்தில் மகனுக்கு உரிமை கொடுத்திருப்பதன் மூலம் இருவரும் சமமாக பாவிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. ஆகையால் மகனும் மகளும் சம அளவிற்கு இருக்கும் வகையில் ஒவ்வொருவரும் பார்த்துக் கொள்ள வேண்டும்.

இனி வருங்காலத்தில் என்னுடைய பெண்ணை இன்னாருக்குத் திருமணம் செய்து கொடுக்கிறேன் என்றில்லாமல் வேறு வகையாக திருமணப் பத்திரிகைகள் அச்சிடப்பட வேண்டும். என்னுடைய மகளும் இன்னாரும் திருமணம் செய்துகொள்ள இருக்கிறார்கள் என அச்சிடவேண்டும். ஆனால் மலபார் பகுதியைத் தவிர மற்ற இடங்களில் திருமணத்திற்குப் பின் பெண்தான் கணவர் இல்லத்திற்குப் போகிறாள். மலபாரில்தான் திருமணத்திற்குப் பின் கணவன் மனைவியின் வீட்டிற்குப் போகிறான்.

ஒரு பெண் திருமணத்திற்குப் பின் கணவர் வீட்டிற்கு போனவுடன் அவளுக்கு அளிக்கப்பட்ட பொருட்களை அவள் அனுபவிக்க முடியுமா என்பது சந்தேகத்திற்கு உரியதாகும். நான் என்னுடைய முகமதிய நண்பர்களிடம் முஸ்லீம் சட்டப்படி

பெண்ணிற்கு வழங்கப்படும் சொத்தை அவள் அனுபவிக்கிறாளா எனக் கேட்டபோது பழக்கத்தில் அது இல்லை என்ற பதில்தான் கிடைத்தது.

80 விழுக்காடு நிலச் சுவான்தார்கள் வரியாக 21/2 ஏக்கர் நஞ்சை அல்லது 5 ஏக்கர் புஞ்சை நிலத்திற்கு ரூ. 10 மட்டும்தான் செலுத்துகிறார்கள். அவர்களா தங்கள் பெண்களுக்கு சொத்தில் உரிமை அளிக்கப்போகிறார்கள். இது சட்டரீதியாக கொடுக்கப் பட்டாலும் நடைமுறையில் சொத்தை அனுபவிக்கும் சூழ்நிலை இல்லை என்றே நான் கருதுகிறேன் சமுதாயத்தில் பெண்ணின் தகுதியை உயர்த்தியதின் மூலம் முழு உரிமையாக அவளுக் கென்று சொத்துரிமை அளித்து அவளுடைய தன்மானம் உயரு வதற்கு வழி செய்ய வேண்டும். திருமண உறவு என்பது அடிமை சாசனமல்ல - ஒரு முறை திருமணம் நடந்தால் அந்த கணவன் எப்போதும் கணவனே என்றும் அதே முறையில் ஒரு மனைவி எப்போதும் மனைவியே என்றும் சொல்லி, திருமணம் சொர்க்கத் தில் நிச்சயிக்கப்பட்டது என்று சொல்வது எப்போதும் சரியானதாக இருக்க முடியாது.

மேற்சொன்ன கொள்கை சரியானது என்று மேலெழுந்த வாரியாக தோன்றினாலும், கணவனுடைய முறைகேடான வாழ்க்கை குஷ்டரோகம் போன்ற வியாதி, ஆண் மலட்டுத்தன்மை மற்றும், சட்ட அமைச்சர் சொல்லிய பல்வேறு காரணங்கள், கணவனிட மிருந்து பிரிந்து வாழ மனைவிக்கு உரிமை உண்டு. தான் எந்த முறையில் வேண்டுமானாலும் வாழும் உரிமையும் அவன் விரும்பினால் முதல் மனைவி இருக்கும்போதே, இரண்டாவது திருமணம் செய்துக் கொள்ளலாம் என்ற உரிமையும் கணவனுக்கு இருந்தால், அதே உரிமை தன்னுடைய கணவன் உயிருடன் இருக்கும்போது, மனைவி இரண்டாவது கணவனை திருமணம் செய்ய முடியுமா? அந்த சூழ்நிலையை எண்ணிப் பாருங்கள்.

ஒரு கணவன் ஐரோப்பிய முறையில் உடை உடுத்திக் கொண்டு தன்னுடன் வரும் மனைவி, இந்து முறைப்படி சேலை அணிந்து வரவேண்டும் என்று நினைக்கிறான். இதை மாற்றி அமைத்து கணவன் வேட்டியுடனும், மனைவி ஐரோப்பிய உடை யிலும் சென்றால் அது நன்றாகவா இருக்கும்? அது மிக அபத்தமாக இருக்கும்.

ஆங்கிலத்தில் தயார் செய்த பத்திரத்தில், தமிழில் கையெழுத்திட்டால் அது எப்படி இருக்குமோ, அப்படிதான் இது இருக்கும். ஆங்கிலத்தில் தயார் செய்த பத்திரத்தில் தெலுங்கில் கையெழுத்திடக்கூடாது என ஓர் அதிகாரி கூறினார். நான் அதற்கு தெலுங்கில் தயார் செய்த பத்திரத்தில் ஆங்கிலத்தில் கையெழுத்திடுவதும் அபத்தமானது என்று கூறினேன். ஆகையால் நம்முடைய தமக்கை, தங்கை, அன்னை மற்றும் பெண்களுக்கு எல்லா உரிமைகளையும் அளித்து, குறிப்பாக கணவனிடமிருந்து தகுந்த காரணங்களுக்காக, பிரிந்து வாழ்வதற்கும், திருமண உறவை முறித்துக் கொள்வதற்கும் உரிமை இருக்க வேண்டும்.

பெண்களின் உரிமைக்காக போராடும் பல பெண் உறுப்பினர்கள் இந்த அவையில் இருக்கிறார்கள். நான் அவர்களுக்கு ஒன்றை கூற விரும்புகிறேன்: மண முறிவு என்பது ஒரு கடைசி ஆயுதமாகவே இருக்க வேண்டும். வேறு எந்த முறையிலும் கணவன் மனைவியருக்கு இடையே உள்ள பிரச்சினை தீர்க்கப் பட முடியாத ஒன்றாக இருக்கும்போதுதான் அந்த உரிமையை பயன்படுத்த வேண்டும். அற்பக் காரணங்களுக்காக, கடைசி ஆயுதத்தைப் பயன்படுத்தக் கூடாது. சமுதாயக் கருத்து, தனியாக அவர்களிடம் பேசுவது, குடும்ப உறுப்பினர்களிடம் பேசுவது போன்ற பல்வேறு வழிகள் இருக்கின்றன. கணவன் மனைவிக்கிடையே ஏற்படும் பிரச்சினை மிகவும் சாதாரணமானது. பெரும்பாலான பிரச்சினை பகலில் தோன்றி இரவில் முடிந்துவிடும். இம்மாதிரியான பிரச்சினைகள் தொடர்வதில்லை. அவற்றை நாம் பெரிது படுத்தக்கூடாது.

அமெரிக்காவில், ''இன்டியோனோபோலிஸ்'' என்ற பெயரில் ஒரு மாகாணம் இருக்கிறது. அங்குள்ள ரயில் நிலையத்தில் உள்ள சுமையாட்கள் ''இன்டியோனோபோலிஸ், இருபது நிமிடங்களில் விவாகரத்து'' என்று கூச்சலிடுவார்கள். மணமுறிவு நீதிமன்றம் அந்த ரயில் நிலையத்திலேயே இருக்கிறது. ரயிலில் வந்து கொண்டிருக்கும்போது, கணவன், மனைவி இடையே ஏதேனும் பிரச்சினை எழுமானால் அந்த ரயில் நிலையத்தில் இறங்கி, மண முறிவு உத்திரவைப் பெற்றுக் கொண்டு மீண்டும் அதே ரயிலில் தங்கள் பயணத்தைத் தொடரலாம். நம்முடைய நிலைமை இவ்வாறு இருக்கக்கூடாது. ஒரு பெண் அணிந்திருக்கும் நகையை எவ்வாறு மிகவும் தவிர்க்க முடியாத நிலைமையில் அடகுவைப்போமோ அவ்வாறே நமது மண முறிவு என்பது கடைசி ஆயுதமாக இருக்க

வேண்டுமே தவிர, எடுத்தோம் கவிழ்த்தோம் என்ற முறையில் அதைப் பயன்படுத்தக்கூடாது.

அடுத்ததாக, தத்து எடுப்பதை பற்றிப் பார்ப்போம். இது மிகக் கடினமான பிரச்சினை, மாண்புமிகு சட்ட அமைச்சர் மிதாக்ஷரா, தயபாகா ஆகிய இரண்டு சட்டங்களையும் ஒன்றாக்கியுள்ளார். தயபாகா சட்டம் வங்காளத்திலும், மிதாக்ஷரா சட்டம் தென்னிந்தியாவிலும் பின்பற்றப்படுகிறது. மாயுகா என்ற சட்டம் பம்பாயில் பின்பற்றப்படுகின்றது. இந்தச் சட்டத்தின்படி பிராமணரால்லாத சமூகத்தில் ஒரு குழந்தையைத் தத்தெடுக்க விதவைக்கு கணவனுடைய அனுமதி தேவையில்லை; விதவை தன் விருப்பம்போல் ஒரு குழந்தையைத் தத்து எடுக்க முடியும்.

பத்து பனிரெண்டு ஆண்டுகளுக்கு முன்பு பிரிவி கவுன்சில் அளித்த ஒரு தீர்ப்பைப் படித்தேன். மிதாக்ஷரா சட்டப்படி இத்தகைய தத்தெடுப்பு சாத்தியமில்லாத இதர இடங்களிலும் பம்பாயில் நடைமுறையிலுள்ள சட்டம் பின்பற்றப்பட வேண்டும் என்று விரும்புகிறேன். எதற்காக தத்து எடுக்கிறார்கள்? குடும்பத்தினுடைய தொடர்ச்சிக்காகத்தான் தத்து எடுக்குகிறார்கள். காலமான கணவனுக்குள்ள உரிமை, மனைவிக்கும் இருக்க வேண்டாமா? ஆணுக்கு மட்டும் உள்ள உரிமையாக இதைக் கருத முடியுமா? ஒரு தாய்க்கு தத்து எடுக்கும் உரிமை இருக்க வேண்டும். கணவனுடைய அனுமதி எழுத்து மூலமாகவோ அல்லது உயில் மூலமாகவோ இருக்க வேண்டும் என்பது சரியல்ல. ஆங்கில சட்டப்படி உயில் என்பது வாய் மூலமாகக்கூட இருக்கலாம். அது எழுதப்பட்டால் இரண்டு சாட்சிகள் இருக்க வேண்டும். வாய் மொழி உயில் மூலமாக லட்சக்கணக்கான, கோடிக்கணக்கான சொத்துக்கள் மாற்றப்பட்டுள்ளன. ''எல்லாம் என் மனைவிக்கே'' என ஒரு துண்டு காகிதத்தில் எழுதியது செல்லத்தக்க ஒன்றாக கருதப்பட்டது. அப்படி இருக்கும் போது மனைவி தத்து எடுக்க கணவன் வாய்மொழியாக அனுமதி கொடுத்தால் அது செல்லாது என சொல்வது சரியல்ல. இந்த முக்கியமான கருத்தை இந்தப் புதுச் சட்டத் தொகுப்பைப் பரிசீலித்து வரும் பொறுக்குக் குழு கவனிக்க வேண்டும். *(ஓர் உறுப்பினர்: எதற்காக அனுமதி?)* அனுமதி தேவை என்றால் ஏன் அது வாய் மொழியாக இருக்கக் கூடாது? தத்து எடுக்கும் சட்டத்தை எந்த அளவிற்கு சுலபமாக மாற்ற முடியுமோ, அந்த அளவுக்கு மாற்ற வேண்டும். அடுத்ததாக ஒருதார திருமண முறையைப் பற்றிக் கவனிப்போம்.

திருமணத்திற்காக கணவனைத் தேர்ந்தெடுக்கும்போது என்னென்ன விஷயங்களை கவனிக்க வேண்டும் என்பதை தெரிந்துக் கொள்ள முடியாத நிலையில் நம் இளம் பெண்கள் இருக்கிறார்கள். இது துரதிர்ஷ்டவசமானது. பழங்கால வழக்கு ஒன்று உள்ளது. அதன்படி கணவன் வீட்டாரின் செழிப்பு, அவனது தோற்றம், குடும்பப் பாரம்பரியம், குடும்பக் கலாசாரம் முதலியவற்றைக் கவனிக்க வேண்டும். ஆனால் தற்போதுள்ள நிலைமை வேறுவிதமாக இருக்கிறது.

சில படித்த பெண்கள், எதைப் பற்றியும் கருத்தில் கொள்ளாமல் தங்களுடைய கணவன்மார்களைத் தேர்ந்தெடுக்கிறார்கள். அப்படித் தேர்ந்தெடுக்கப்பட்டவர், ஏற்கனவே திருமணமாகி மனைவி மற்றும் ஐந்தாறு குழந்தைகளுடன் வசிப்பவராக இருக்கிறார். அவர்களது கல்லூரி நாட்களில் எப்படிக் கணவரை தேர்ந்தெடுக்க வேண்டும் என்ற விவரம் தெரியாத காரணத்தினால்தான் இந்த சூழ்நிலை ஏற்படுகிறது. இதைப்பற்றி வெளிப்படையாகப் பேச எல்லோரும் அச்சப்பட்டாலும் தனிப்பட்ட முறையில் பேசும்போது, இது குறித்து மிக விரிவாக பேசுகிறார்கள். விலக்கப்பட்ட கனியை யாரும் சுவைத்துப் பார்க்காமல் இருப்பதில்லை. ஆகையால் பெண்கள் படிக்கும்போது இதைப் பற்றிய கல்வியை அவர்களுக்கு அளிக்க வேண்டும். ஒரு சமயம் என்னுடைய நண்பர் ஒருவருடன் உரையாடிக்கொண்டிருந்தேன். தனது கணவனைத் தேர்ந்தெடுக்கும் உரிமையை அவர் தமது மகளுக்கு அளித்திருந்தார். அவர் தான் தேர்ந்தெடுத்த ஒரு மணமகனைப் பற்றிய விவரத்தை தன்னுடைய மகளிடம் கூறிய விவரத்தைச் சொன்னார். தான் தேர்ந்தெடுத்துள்ள நபர் பார்ப்பதற்கு நன்றாக இருப்பதாகவும், சட்டம் பயின்று வழக்கறிஞராகப் பணியாற்றுவதாகவும், பெரிய பணக்காரருடைய புதல்வராக இருப்பதாகவும், பெரிய வீட்டின் அதிபதியாக இருப்பதாகவும் கூறினார். அதற்கு அந்த மகள் நீங்கள் சொல்லும் நபருக்கு மோட்டார் கார் போன்ற வசதிகள் இல்லை என்று, சொல்லி மறுத்துவிட்டாள். மோட்டார் கார் முதலான வசதிகள் உள்ள நபரைத் தான் நான் மணந்து கொள்வேன் என்று அவள் கூறினாள். இதுதான் சரியானபடி போதனை அளிக்கப்படாத இளம் மக்களின் மனோபாவம், மனப்போக்கு, மனநிலை என்று கூறலாம். எனவே இதுபோன்ற விஷயங்களைப் பற்றி எல்லாம் அவர்களுக்குப் போதிப்பது அவசியம். திருமணத்தைப்பற்றிச் சட்டம் இயற்றினால் மட்டும் போதாது. ஒரு தார திருமண முறையைப் பற்றியும், திருமணம்

செய்யும்போது கடைப்பிடிக்க வேண்டிய நெறிமுறைகளைப் பற்றியும் எல்லோரும் முழுமையாகத் தெரிந்து கொள்ளும் வகையில் எடுத்துரைக்க வேண்டும். இது மிக மிக முக்கியமான ஒன்றாகும்.

இந்த மசோதாவின் ஒவ்வொரு அம்சத்தையும் நான் வரவேற்கிறேன். இதில் அங்கொன்றும் இங்கொன்றுமாக சில குறைபாடுகள் இருந்தால், குழுவின் உறுப்பினர்கள் அதைச் சரிசெய் வார்கள் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு. எனக்கு 68 ஆண்டு அனுபவமுள்ளது. இன்னும் பல மணி நேரம் விரிவாக பேச முடியும். ஆனால் இந்த அவை ஏழு மணிக்குள் முடிக்கப்பட வேண்டும் என்ற கட்டாயம் இருக்கின்ற காரணத்தினால், என்னுடைய பேச்சை இத்துடன் முடித்துக் கொள்கிறேன். என்னுடைய சகோதர, சகோதரிகள் பேச மிகுந்த ஆர்வமுடன் இருக்கிறார்கள். நானும் அவர்களுடைய பேச்சைக் கேட்க விரும்புகிறேன்.

***திரு. நசிருத்தீன் அகமது** (மேற்கு வங்காளம் முஸ்லீம்) : அய்யா, என்னுடைய நண்பர்கள் சொல்லிய சில கருத்துக்களை நான் அப்படியே சொல்கிறேன் என்ற குற்றச்சாட்டுக்கு உள்ளான துர்ப்பாக்கியமான நிலையில் நான் இருக்கிறேன். இந்த மசோதா வுக்குப் பல எதிர்ப்புகள் இருக்கின்றன. ஆனால் என்னை பொறுத்த வரையில் இந்த மசோதாவை நான் ஆதரிக்கிறேன். இதனுடைய பல பிரிவுகள் எங்கள் சமூகத்திலுள்ள அநேக சட்டங்களுக்குப் பெரும்பாலும் ஏற்புடையவையாக இருக்கின்றன. நடைமுறை விளைவுகளைப் பொருட்படுத்தாமல் எல்லோருக்கும் நன்மை செய்ய இந்த மசோதா முற்படுகிறது. ஓரளவு அச்ச உணர்வுடன் பேச முற்படுகிறேன். இந்த மசோதாவை எதிர்த்து சிம்ம கர்ஜனை செய்யக்கூடிய ஜாம்பவான்களே உறுதி வாய்ந்த ஐந்து பெண் உறுப்பினர்களைச் சமாளிக்க இயலாமல் அடக்கி வாசிக்க வேண்டியவர்களாக இருப்பதைக் காணும் சூழ்நிலையில் நான் எடுத்துரைக்க ஏற்றுக் கொண்டுள்ள கருத்துக்களைச் சற்று அச்சத்துடனேயே சொல்ல முற்படுகிறேன்.

ஐயா, மாண்புமிகு சட்ட அமைச்சர் எங்களுக்குச் சில வெளி யீடுகளை கொடுத்துள்ளார். அவ்வாறு கொடுக்கப்பட்ட வெளியீடுகளில் தொகுத்துரைக்கப்பட்டுள்ள கருத்துக்களைப் பற்றி எங்களுக்கு ஏதும் சொல்லவில்லை. இந்த வெளியீடுகள் இப்போதுதான்

* *அ.நி.ச. (சட்ட) விவாதங்கள், டி, தொகுப்பு 4, ஏப்ரல் 9, 1948, பக்கங்கள் 3639-42.*

எங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. இந்த வெளியீடுகளை படித்து, விரிவாக ஆராய்ந்து பார்த்து உறுப்பினர்கள் தங்கள் கருத்துக் களைச் சொல்ல வேண்டுமென்று எதிர்பார்த்தால் அதற்கு போதிய கால அவகாசம் இல்லை. இந்து சட்டக் குழுவின் அறிக்கை ஒன்று உள்ளது. அதில் பல்வேறு கருத்துக்கள் சொல்லப்பட்டுள்ளன. அந்த அறிக்கை உறுப்பினர்களுக்கு விநியோகிக்கப்படவில்லை. *(ஓர் உறுப்பினர்: ''அது விநியோகிக்கப்பட்டுள்ளது'')* இல்லை, விநியோகிக்கப்படவில்லை. இந்தப் புத்தகம் கொடுக்கப்பட வில்லை.

மாண்புமிகு டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் : நூலகத்தில் அது நீண்டகாலமாக வைக்கப்பட்டிருந்தது.

திரு. நசிருத்தீன் அகமது : அது நீண்டகாலமாக வைக்கப் படவில்லை. மிக சமீப காலமாகத்தான் அது நூலகத்தில் வைக்கப் பட்டது. நான் புத்தகக் கடையிலிருந்து அதை வாங்கினேன். மிக சமீபமாகத்தான் சில பிரதிகள் நூலகத்தில் வைக்கப்பட்டுள்ளன.

பேராசிரியர் என்.ஜி. ரங்கா: (சென்னை - பொது) விஷயம் என்ன?

திரு. நசிருத்தீன் அகமது : ரங்காவைப் போன்ற மதிப் பிற்குரிய உறுப்பினர் 'விஷயம் என்ன?' என்று கேட்பதிலிருந்து, ஒன்று தெளிவாகிறது....

பேராசிரியர் என்.ஜி. ரங்கா : நீங்கள் எதைப் பற்றிக் குறிப்பிடுகிறீர்கள் என்றுதான் கேட்டேன்.

திரு. நசிருத்தீன் அகமது: இந்து சட்டக் குழுவின் அறிக்கை.

பேராசிரியர் என்.ஜி. ரங்கா : அது ராவ் குழுவின் அறிக்கை. பொது மக்கள் பார்வைக்கு அது ஓராண்டுக் காலமாகவே வைக்கப் பட்டு இருக்கிறது.

திரு. சபாநாயகர் : அது எதுவாக வேண்டுமானாலும் இருக்கட்டும். மதிப்பிற்குரிய உறுப்பினர் தமது பேச்சைத் தொடர லாம்.

திரு. நசிருத்தீன் அகமது : அந்த அறிக்கை சமீபத்தில் தான் வெளியிடப்பட்டது. காலஞ்சென்ற நீதிபதி டி.என். மிட்டரின் மாறுபட்ட கருத்து அந்த அறிக்கையில் இடம்பெற்றுள் ளது. இந்த மசோதாவிற்கு எதிரான பல்வேறு கருத்துக்களைச் சேகரித்து அதில் அவர் குறிப்பிட்டிருக்கிறார். அவற்றை நான் படிக்க விரும்பவில்லை. அந்தக் கருத்துகளை அவர் பிராந்திய வாரியாகவும், தலைப்பு வாரியாகவும் பிரித்து அதில் விவரமாக குறிப்பிட்டிருக்கிறார். அவற்றைப் பற்றி எல்லாம் கவனிக்க இப்போது நேரமில்லை. ஆனால் இந்த மசோதாவின் கோட்பாடு கள் முழு இந்து சமுதாயத்தில் அதாவது இந்து சமுதாயத்தின் வைதிகப் பிரிவால் ஏற்றுக் கொள்ளப்படவில்லை என்று அவர் கூறியிருக்கிறார்.

அரசாங்கம் இந்த மசோதாவைப் பற்றி கொடுத்துள்ள பல்வேறு தரப்பினருடைய கருத்துக்களையும் எனக்குக் கொடுக்கப்பட் டுள்ள மிகக் குறைந்த கால அவகாசத்தில் மிக கவனமாகப் படித்துப் பார்த்தேன். இந்த மசோதாவுக்கு எதிராக மிகப் பெருமள வில் கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன. இந்தக் குழு வங்கா ளத்தில் பல்வேறு தரப்பினரின் கருத்தை கேட்டபோது அங்கு கருத்து ஒரே மாதிரியாக இருந்தது. இப்போது கொடுக்கப்பட்டுள்ள அறிக்கையிலும் வங்காளத்தின் கருத்து ஒரே மாதிரியாக இருக்கிறது. அந்தக் கருத்து இந்த மசோதாவிற்கு எதிராக உள்ளது. வங்காள அரசின் சட்டச் செயலர் தமது கருத்தை சொல்லியிருக்கிறார். அறிக்கை எண். 4-ல் கருத்து 17-ல் அவரது இந்தக் கருத்து இடம் பெற்றிருக்கிறது. அவரது கருத்தும் இந்த மசோதாக்கு எதிராக இருப்பதைப் பார்க்கிறோம். இந்த மசோதாவை பரி சீலனைக்கு எடுத்துக்கொள்ள இது தகுந்த நேரமல்ல என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஓர் உறுப்பினர்: அது எப்போது?'') அதில் எந்தத் தேதியும் போடவில்லை. ஐந்தாறு நாட்களுக்கு முன்புதான் அது உறுப்பினர்களுக்கு விநியோகிக்கப் பட்டுள்ளது. இந்த மசோதா மிகப் பெரிய மாற்றத்தை உண்டு பண்ணக் கூடிய ஒன்றாகும். ஆனால் அப்படியிருக்கும்போது இந்த மசோதாவைப்பற்றிய கருத்துக்கள் சரியான முறையில் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்படவில்லை. இந்த மசோதா சம்பந்தமாக தெரிவிக்கப்பட்டுள்ள பல்வேறு எதிர்ப்புக்களையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். பலதரப்பட்ட சமூகத் தினரைக் கொண்டுள்ள இந்த அவை இம் மசோதாவைப் சீலனைக்கு எடுத்துக்கொள்ளக் கூடாது; அப்படி எடுத்துக் கொண்டால்

பல்வேறு சமூகங்களாகச் சேர்ந்தவர்கள் இம் மசோதாவுக்குத் தங்கள் ஆதரவைத் தெரிவித்து வைதிக இந்து சமயத்தின் இலட்சியத்தைப் பாழ்ப்படுத்தி விடுவார்கள் என்ற அச்சம் நிலவுகிறது. இந்தக் காரணத்தினால், இந்து சமூகம் இம்மசோதாவை கடுமையாக எதிர்க்கும் நிலையில் இந்த மசோதாவை நான் ஆதரிக்கவில்லை என்று கூறிக்கொள்ள விழைகிறேன்.

பெண்களுக்குச் சொத்தில் பங்கு கொடுத்துள்ளதின் காரணமாக பல்வேறு வழக்குகள் வர வாய்ப்புள்ளது. இந்த முறையில் சொத்துக்களை சிறு சிறு அளவாகப் பிரிப்பதால், கூட்டுக் குடும்ப அமைப்பு தகர்ந்து விடும். முகமதியர்களுக்கிடையே சொத்துக்கள் சிறு சிறு அளவில் பிரிக்கப்பட்ட காரணத்தினால் முகமதியர்கள் எப்படி பாதிக்கப்பட்டார்களோ, அதே நிலைமை இந்துக்களுக்கும் ஏற்படும். சுருதி, ஸ்மிருதி ஆகியவை கடவுளால் வழங்கப் பட்டவை என இந்துக்கள் கருதுகிறார்கள். இவற்றில் சொல்லப் பட்டுள்ள கருத்துக்களுக்கு எதிராக இப்போது அறிமுகப்படுத்தப் பட்டுள்ள மசோதாவில் பல பிரிவுகள் இருக்கின்றன. இந்த காரணத்திற்காக இந்த மசோதா கடுமையாக எதிர்க்கப்படுகின்றது. மத நம்பிக்கையின் அடிப்படையிலுள்ள இந்தக் கருத்துக்கள் அனைத்தையும் மூட நம்பிக்கை என நாம் தள்ளி விடமுடியாது. சமூகம் எப்போதும் ஒரே நிலையில் இருக்க முடியாது என்றாலும் காலம் காலமாக இந்தக் கருத்துக்கள்தான் இந்துக்களைக் கட்டுப்படுத்தி வந்துள்ளன. சமூகம் மாறித்தான் ஆகவேண்டும். ஆனால் அந்த மாற்றம் நம்முடைய அனுபவத்தின் அடிப்படையில், முன்னெச் சரிக்கையோடு ஏற்பட வேண்டும்.

இந்த மசோதா ஒரே அடியில் ஒரு பெரிய மாற்றத்தை உண்டு பண்ண முயற்சிக்கிறது. நாடு சுதந்திரம் அடைய வேண்டும் என்ற ஒரே இலட்சியத்திற்காகத்தான் இந்த அவை தேர்ந்தெடுக்கப் பட்டது. உண்மையிலேயே மிகப் பரந்த வீச்சும் சிக்கலும் கொண்ட இந்த மசோதாவும் அதன் கோட்பாடுகளும் இதன் முன்னர் மக்கள் அறியாதவை. ஆகையால் சுதந்திரத்துக்குப் பிறகு, அரசியல் சட்டம் இயற்றப்பட்ட பிறகு, அதன் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்ப டும் அவையினால் இந்த மசோதா பரிசீலிக்கப்பட வேண்டும்; பல்வேறு மக்களின் கருத்துக்களையும் தெரிந்து அது அறிமுகப் படுத்தப்பட வேண்டும். அப்போதுதான் பெரும்பாலான மக்கள் இதை விரும்புகிறார்களா என்று தெரியவரும். உண்மையில் இந்த

மசோதா சரியான முறையில் வீநியோகிக்கப்படவில்லை. சில அமைப்புகளுக்கு சில நாட்களும், வேறு சில அமைப்புகளுக்கு ஒரு சில மணி நேரம் மட்டுமே கொடுத்து அவற்றின் கருத்தைக் கேட்டிருக்கிறார்கள், இந்தக் காரணங்களினால் இந்த மசோதாவை இப்போது பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளக் கூடாது என்று வாதிக்கப்படுகிறது.

இன்னொரு முக்கியப் பிரச்சினையும் இருக்கிறது. இந்துக்களுக்கு இந்தியா முழுமைக்கும் ஒரே வகையான சட்டத்தை அமுல்படுத்த இந்த மசோதா முயற்சிக்கிறது. ஆனால் குறுகியகால அளவில் இந்த முயற்சி வெற்றி பெறுவது சாத்தியமல்ல.

விவசாய நிலம் இந்த அவையின் அதிகார எல்லைக்குட்பட்டது அல்ல. அது பிராந்திய அவைகளின் அதிகாரத்திற்கு உட்பட்டதாகும். நாம் இயற்றும் சட்டம் விவசாய நிலத்தைத் தவிர்த்து மற்ற சொத்துக்களைத்தான் கட்டுப்படுத்தும். வருமான வரி சட்டத்திலும், வேறு சில சட்டங்களிலும் இந்தக் கருத்து சொல்லப்பட்டுள்ளது. விவசாய நிலம், மற்றும் விவசாயம் அல்லாத நிலம் என்று பிரித்தாலும் இரண்டிற்குமிடையே உள்ள நிலங்களும் இருக்கின்றன. இதல்லாமல் நமது சொத்தின் பெரும் பகுதி - சுமார் 80 சதவீதம் - வேளாண் நிலங்களாக அமைந்துள்ளது. இம்மாதிரியான நிலங்களைக் குறித்தெல்லாம் வெவ்வேறு மாகாணங்கள் வெவ்வேறு முறையில் சட்டம் இயற்ற முற்படலாம். சில மாகாணங்கள் எந்தச் சட்டமும் இயற்றாமலும் இருக்கலாம். மேலும் இந்திய ஒன்றியத்தில் தம்மை இணைத்துக் கொள்ளும்சமஸ்தானங்களும் இருக்கின்றன. இந்துச் சட்டம் என்பது ஒரேபோல் இருந்தாலும், இந்தியா முழுமைக்கும் ஒரே முறையில் இருக்க வேண்டும் என நினைத்தாலும், ஒவ்வொரு மாநிலமும் வெவ்வேறு முறையில் சட்டங்களை இயற்றலாம். ஒவ்வொரு மாகாண அரசாங்கமும் சமஸ்தான அரசாங்கமும் பெரும்பாலும் அந்தந்தப் பகுதியில் வழக்கிலுள்ள பழக்க வழக்கங்களுக்குஏற்பவும் அங்குள்ள மக்களின் கருத்துக் கேற்பவும் சட்டங்கள்இயற்றும். உதாரணமாக மேற்கு வங்கத்தை எடுத்துக் கொள்வோம். அந்த மாகாணத்தின் அபிப்பிராயத்துக்கு எதிரான ஒரு சட்டத்தை மேற்கு வங்க சட்டமன்றத்தால் இயற்றுவது என்பது மிகவும் கடினம். ஒரு பிராந்தியத்திலுள்ள சட்டம் மற்ற மாநிலத்திற்குப் பொருத்தமாக அமையாது.

இந்தக் காரணங்களினால் ஒரு மனிதனுக்கு வீடும், விவசாய நிலமும் இருந்தால் இரண்டு வகையான சட்டங்கள் அவனைக் கட்டுப்படுத்தும். ஒரு சட்டம் விவசாயமல்லாத நிலத்தையும் இன்னொரு சட்டம் விவசாய நிலத்தையும் கட்டுப்படுத்தும். நாம் எத்தகைய சட்டத்தை இயற்றினாலும் அது ஒரே மாதிரியானதாக இருக்க வேண்டும். எனவே அந்தந்த மாகாணங்களினுடைய கருத்தைக் கேட்டு அவற்றின் ஒப்புதலுடன் இம்மாதிரியான சட்டங்களை இயற்றினால் அது பொருத்தமாக இருக்கும். சில சட்டங்கள் விஷயத்தில் இந்த முறையை நாம் கடைபிடித்திருக் கிறோம். மாநிலங்களுடைய ஒப்புதல் பெற்று எல்லோருக்கும் பொதுவான சட்டத்தை இயற்றினால்தான் அது சிறப்பாக அமையும். மாநிலங்களுடைய ஒப்புதல் இன்றி எதுவும் சிறப்பாக செய்ய முடியாது. இது நமக்குள்ள சில சிரமங்கள்.

கால அவகாசம் குறைவாக உள்ளது என்பதை சட்ட அமைச்சர் கூறியுள்ளதால், இந்த மசோதாவின் முக்கிய அம்சங் களைக்கூட நாம் கவனிக்க இயலாது. பல்வேறு தரப்பினர் சொல்லிய கருத்துக்களை சரியான முறையில் கவனிக்கப்பட வில்லை. ஒவ்வொருவருடைய கருத்தையும் அலசி ஆராய்ந்து உறுப்பினர்களுக்குத் தொகுத்து வழங்கப்படாத காரணத்தினால் எதைப்பற்றியும் நாம் விரிவாக கவனிக்க முடியாது. இங்கு தெரி விக்கப்பட்டுள்ள கருத்துகளை தனிப்பட்ட உறுப்பினர்கள் மிக வேகமாக படிப்பதும், அவற்றை ஆராய்வதும் தங்களுடைய மூளையின் பல்வேறு பகுதிகளில் அவற்றை இருத்தி, ஒருமுகப் படுத்தப்பட்ட முறையில் அவற்றைப் பயன்படுத்துவதும் மிகவும் கடினம். இத்தகைய முக்கியத்துவம் வாய்ந்த ஒரு விஷயத்தில் மாண்புமிகு அமைச்சரின் இலாகா ஒவ்வொரு கருத்தையும் அதன் பல்வேறு கோணங்களில் அலசி ஆராய்ந்து சரியான முறையில் அவற்றை தொகுத்து அளித்தால்தான் உறுப்பினர்களுக்கு அது உதவும். இந்தக் கருத்துக்களுக்குள்ள ஆதரவு மற்றும் எதிர்ப்பின் பகைப்புலனில் அவற்றை வகைப்படுத்திக் கூறும் பொறுப்பை அமைச்சகம் ஏற்றுக் கொள்ள வேண்டும். இந்த முறையை வேறு சில சூழ்நிலைகளில் அவர்கள் பின்பற்றி இருப்பதைப் பார்க் கிறோம். அதேமுறை இங்கும் பின்பற்றப்பட வேண்டும்.

திரு. எல். கிருஷ்ணசாமி பாரதி (சென்னை: பொது): நீங்கள் கூறியவை எல்லாம் சட்டக் குழு அறிக்கையில் தொகுத்து, வகுத்து, பகுத்து வழங்கப்பட்டுள்ளன.

திரு. நசிருத்தீன் அகமது : உங்கள் தகவலுக்கு நன்றி. ஆனால் நான் குறிப்பிடும் கருத்துகள் அறிக்கைக்கு பின்னால்தான் எங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. சட்ட அமைச்சகத்தால் மிக சமீப காலத்தில்தான் அவை எங்களுக்கு விநியோகிக்கப்பட்டன. மசோதாவில் அவை அப்படியே இருக்கின்றன.

ஆனால் இந்து சட்டக் குழுவின் அறிக்கையில் சேகரித்துக் கொடுக்கப்பட்டுள்ள கருத்துகள் இந்த மசோதா தயாரிக்கப்படு வதற்கு முன்பு பெறப்பட்டவை அதாவது விசாரணைக் கட்டத் தின்போது பெறப்பட்டவை. நான் இங்கு குறிப்பிடும் கருத்துகள் அறிக்கையில் பிரசுரிக்கப்பட்டவை அல்ல என்பதை மதிப்பிற்குரிய உறுப்பினர் கவனிக்கத் தவறிவிட்டார். அந்தக் கருத்துகள் தனியாக அச்சடிக்கப்பட்டு கொடுக்கப்பட்டுள்ளன. இந்தக்கருத்துக்களைத் தான் நான் இங்கு குறிப்பிடுகிறேன். இந்தக் கருத்துக்களின் பல்வேறு அம்சங்களையும் அலசி ஆராய்ந்து அவை கொடுக்கப்பட்டிருக்க வேண்டும். இதைப்பற்றி மேலும் நான் பேச விரும்பவில்லை. தனிப்பட்ட முறையில் இந்த மசோதாவிற்கு என்னுடைய ஆதரவை தெரிவிக்கிறேன். ஆனால் இங்கு நான் குறிப்பிட்டிருப்பவை என் நண்பர்கள் சிலர் தெரிவித்த கருத்துக்களேயாகும். இன்னும் வேறு சில கருத்துக்களும் இருக்கின்றன. அவை அவ்வளவு முக்கியமானவை அல்ல. அவகாசம் குறைவாக இருப்பதால் என்னுடைய பேச்சை சுருக்கிக்கொள்ள விரும்புகிறேன்.

பொதுமக்களின் கருத்திற்கு ஏற்ப சட்டம் அமைய வேண்டுமே தவிர, எந்தக் கருத்தையும் பொது மக்களின் மேல் திணிக்கக் கூடாது. அரசியலுக்கு தந்தை எனக் கருதப்படும் எட்மண்ட் பர்க் என்ற அறிஞரின் கருத்தை நான் இங்கு மேற் கோள் காட்ட விரும்புகிறேன். ஒரு சமயம் அவர் பின்வருமாறு கூறினார்:

> ''சட்டம் என்பது பொதுமக்களின் கருத்தை பிரதிபலித்து அதற்கு ஒரு வடிவம் கொடுத்து அமுல்படுத்துவதுதானே தவிர கருத்துக்களை திணிப்பதல்ல.''

பொதுமக்களின் ஆதரவு இந்த மசோதாவிற்கு இல்லை என்பது பொதுவான எதிர்ப்புகளிலிருந்து தெரிகிறது. படித்த மேல் மட்டத்திலுள்ள சிலரும், நவ நவீன நாகரிகம் பெற்ற சில பேரும் தான் இந்த மசோதாவிற்கு ஆதரவாக இருக்கிறார்கள். ஆனால்

பெரும்பாலான மக்கள் இதைப்பற்றி எதையும் தெரிந்துக் கொள்ளக் கூடிய நிலையில்லை. இந்த மசோதாவின் கருத்துக்கள் அவர்களைச் சென்று அடையவில்லை; இவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்த இந்த விஷயம் முழு அளவுக்கு அவர்களிடையே விநியோகிக்கப் படவில்லை. இந்த அவை தகுந்த வழிகாட்டுதலுடன் இந்த மசோதாவை பொறுக்குக் குழுவிற்கு அனுப்ப வேண்டும். ஆனால் எந்த வழிகாட்டுதலுமின்றி நாம் அனுப்புகிறோம். நான் சில விளக்கங்களை சட்ட அமைச்சரிடம் இருந்து எதிர்பார்க்கிறேன். நான் எழுப்பிய சந்தேகங்களுக்கு தகுந்த விடை கிடைக்கும் என நம்புகிறேன். பொறுக்குக் குழுவைப் பற்றிச் சொல்ல வேண்டியதில்லை. மிகவும் திறமையான, பெரிதும் தகுதிவாய்ந்த, நன்கு விவரம் தெரிந்த உறுப்பினர்கள் அதில் இடம்பெற்றுள்ளனர். அவர்கள் எல்லா எதிர்ப்புகளையும் கருத்தில் கொண்டு நல்ல முடிவு எடுப்பார்கள், நியாயம் வழங்குவார்கள் என்று நம்புவோம்.

***திருமதி ஹன்சாமேதா** (பம்பாய் பொது) : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, இந்த அமர்வு முடிவடையும் தறுவாயில் கூட இந்த மசோதாவை கொண்டுவந்த, மாண்புமிகு சட்ட அமைச்சரைப் பாராட்டுகிறேன். இந்தப் பரிந்துரைகளுக்கு ஆதாரமாக அமைந்துள்ள அறிக்கையைத் தயாரிப்பதில் பெரும்பங்கு கொண்ட திரு. பி.என். ராவுக்கும் அவருடைய சகாக்களுக்கும் என்னுடைய நன்றியையும் பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறேன். இந்து சட்டத்தைத் தொகுத்து அளிக்கும் இந்த மசோதா புரட்சிகரமான மசோதாவாகும்; இது விஷயத்தில் நாம் அதிகம் திருப்தியடையவில்லை என்றாலும் இந்துக்களின் சமுதாய வரலாற்றில் இது ஒரு முக்கிய இடத்தைப் பெறும் என்பதில் ஐயமில்லை. இந்த மசோதா தயாரிக்கப்பட்டதற்குப் பிறகு பல மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. நம்முடைய அரசியல் சுதந்திரம் இவ்வகையில் மிக மிக முக்கியமான மாற்றமாகும்.

மாலை 6 மணி

நமது புதிய அரசியல் அமைப்புச் சட்டம் உருவாகிக் கொண்டிருக்கிறது. அது எந்த முறையில் உருவாக்கப்பட வேண்டும் என்பதற்கான அடிப்படைக் கோட்பாடுகளை நாம் ஏற்றுக் கொண்டுள்ளோம். இனி உருவாக இருப்பது ஒரு ஜனநாயக

---

* அரசியல் நிர்ணய சபை (சட்டமன்ற) விவாதங்கள், ஏப்ரல் 9, 1948, பக்கங்கள் 3642-44.

நாடாகும். எல்லோரும் சமம் என்ற அடிப்படையில் அது உருவாக்கப்படஉள்ளது. நம்முன்னுள்ள வாரிசுரிமை மற்றும் திருமணம் பற்றிய பிரச்சினைகளை இந்தக் கருத்துக்களின் அடிப்படையில் நாம் அணுக வேண்டும். எனவே, பொறுக்குக் குழு இந்தக் கோட்பாடுகளின் அடிப்படையில் இந்தப் புதிய மசோதா தயாரிக்கப்படும்படியாகப் பார்த்துக் கொள்ள வேண்டும்.

வாரிசுரிமையைப் பொறுத்தவரையில் இந்தச் சட்டத் தொகுப்பு ஆறு பாரபட்சங்களை ரத்து செய்துள்ளது. ஆண் பெண் என்ற பேதம் இந்த சட்டத் தொகுப்பில் நீக்கப்பட்டுள்ளது. ஒரு பெண்ணும் வாரிசாகக் கருதப்பட்டு, முழு உரிமையுடன் சொத்தை அனுபவிக்கும் சூழ்நிலை உருவாக்கப்பட்டுள்ளது. அவளுக்கு இதுவரை ஓரளவு மட்டுமே இருந்த அனுபோக உரிமை நீக்கப்பட்டுள்ளது. ஆனால் இது போதுமானதல்ல. மகனுக்கு அளிக்கும் பங்கில் பாதிதான் மகளுக்கு கொடுக்கப்பட்டுள்ளது. நம்முடைய மக்களுக்கு அரசியல் சட்டத்தின் வழியாக கொடுக்கப் பட உள்ள நீதி, சமூக, அரசியல் மற்றும் பொருளாதார சமத்துவத் திற்கு இது எதிரானதாகும். இந்த முறையில் ஒரு தந்தையின் சொத்தில் மகனுக்கு கொடுக்கும் அதே பங்கு மகளுக்கும் கொடுக்கப்பட வேண்டும். தாயின் சொத்தில் மகளுக்கு அளிக்கப் படும் அதே பங்கு மகனுக்கும் அளிக்கப்பட வேண்டும்.

ஒரு பெண் தன்னுடைய தந்தையிடமிருந்தும் கணவனிட மிருந்தும் சொத்தில் பங்கு பெறுகிறாள். ஆனால் ஓர் ஆண் தன் மனைவியிடமிருந்து எந்தச் சொத்தையும் பெறுவதில்லை. பெண்கள் சங்கங்கள், கணவனும், தங்கள் மனைவியரின் சொத்திலிருந்து உரிமை கோரலாமென சொல்லியிருக்கின்றன. இந்திய வாரிசு உரிமை சட்டத்தில் கணவன் மனைவியினுடைய சொத்திலிருந்து உரிமை கோர ஏற்கனவே வகை செய்யப்பட்டுள்ளது. அதே முறையை இங்கு நாம் பின்பற்றலாம்.

பெண்களுக்கு குறிப்பாக நிலத்தில் சொத்துரிமை கொடுத் தால் நிலங்கள் பல துண்டுகளாக பிரிந்துவிடும் என மதிப்பிற்குரிய உறுப்பினர் குறிப்பிட்டார். பெண் வாரிசுகளுக்கு மட்டும் இது ஏன் சொல்லப்படுகின்றது? ஓர் ஆணுக்கு 4 அல்லது 5 மகன்கள் இருந்தால் அந்த நிலம் அவர்களுக்கிடையே பிரிக்கப்படுகின்றது. அவர்களுக்கெதிராக ஏன் இந்த வாதம் முன்வைக்கப்படுவதில்லை? மகள் சொத்தை பெறும்போது மட்டும் இந்த வாதம் எடுத்து

வைக்கப்படுகிறது. நிலத்தை துண்டு போடக் கூடாது என்று ஒரு சட்டம் இருக்கலாம். நிர்ணயிக்கப்பட்ட வரம்பிற்கும் கீழே இருந்தால் அதனை விற்றுவிடலாம் அல்லது நிலத்தை எல்லோரும் ஒன்றாக அனுபவிக்க வேண்டும் என்று சொல்லலாம்.

அடுத்ததாக திருமணத்தைப் பற்றிப் பார்ப்போம். ஒருதார திருமணமுறை கொண்டு வரப்படுவதை இந்தியப் பெண்கள் அனைவரும் வரவேற்பார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தப் பொது சட்டம் அமுலுக்கு வந்தஉடன் ஒருதார திருமண முறை நன்கு வேர் ஊன்றிவிடும்.

உலகிலுள்ள முன்னேற்றமடைந்த, நாகரிகமான அத்தனை நாடுகளும், சமூகங்களும் ஒருதார திருமண முறையைத்தான் பின்பற்றுகின்றன. இந்தத் திருமண முறை நம் நாட்டிலும் இருந் திருந்தால் பெண்ணைக் கடத்திச் சென்று அவளைக் கட்டாயத் திருமணம் செய்யும் சூழ்நிலை தடுக்கப்பட்டு இருக்கும். இது எல்லாவற்றையும் உள்ளடக்கிய மிக முக்கிய கருத்தாகும். இந்த அவை இதை வரவேற்கும் என நம்புகிறேன்.

திருமணத்திற்காக விதிக்கப்பட்டுள்ள சில நிபந்தனை களைப் பற்றி நான் என்னுடைய கருத்தை சொல்ல விரும்புகிறேன். நெருங்கிய உறவினர்களுக்கிடையேயான திருமணத்தைப் பற்றி சொல்லும்போது, அதாவது ஒரே கோத்திரத்திற்குள் (சபிண்டா) திருமணம் செய்துகொள்வது பற்றிக் கூறும்போது நெருங்கிய உறவினர்கள் யார் யார் என்பதை சற்று விரிவாகச் சொல்ல வேண்டும். இது சம்பந்தமாக இந்தத் தொகுப்பில் சொல்லியுள்ள விளக்கம் போதுமானதாக இல்லை. திருமணம் செய்து கொள்வ தற்கு வயது வரம்பு நிர்ணயிக்கப்பட வேண்டும். இதற்காக உள்ள சாரதா சட்டம் திருப்தி அளிக்கவில்லை. ஏனென்றால் அந்தச் சட்டத்தினால் குழந்தைத் திருமணத்தை தடுக்க முடியவில்லை. அந்தச் சட்டத்தை சரியான முறையில் அமுல்படுத்த முடிய வில்லை. ஆகையால் கடுமையான சட்டம் கொண்டுவரப்பட வேண்டும். 16-வயது திருமண வயது என்று நினைத்தால் அது சட்டத்தில் சேர்க்கப்பட வேண்டும். பொறுக்குக் குழு இந்த மாற்றத்தைச் செய்ய வேண்டும்.

அடுத்ததாக, விவாகரத்து பிரச்சினையை எடுத்துக் கொண்டால், அதுவும் முழுமையாக இல்லை. கணவன் மனைவி மண முறிவு பெற அவர்கள் ஐந்தாண்டு பிரிந்து இருக்க வேண்டும்

என்று சொல்லப்படுகிறது. நாரத ஸ்மிருதியில் குழந்தையில்லாத பெண் மூன்று ஆண்டு பொறுத்திருந்து பிறகு திருமணம் செய்துக் கொள்ளலாம் என்று சொல்லப்பட்டுள்ளது. அதே முறையை இந்த சட்டத் தொகுப்பிலும் பின்பற்றலாம். அவளுக்குக் குழந்தைகள் இல்லையென்றால் ஐந்தாண்டுக்காலம் காத்திருக்க வேண்டிய அவசியமில்லை. மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு தனது கணவனை அவள் விவாகரத்து செய்யலாம். அதேசமயம் அந்தப் பெண்ணிற்கு குழந்தைகள் இருந்தால் ஐந்தாண்டுக் காலம் காத்திருக்கலாம்; இது நியாயமான கால அளவாகும்.

காப்பாண்மை பற்றி இப்போதுள்ள சட்டத்தில் எந்த மாற்றத்தையும் இந்தச் சட்டத் தொகுப்பு கொண்டுவரவில்லை. தந்தைதான் குழந்தையின் பாதுகாவலன்; தாய்க்கு இதில் எந்தப் பொறுப்பும் கிடையாது. தாயையும் தந்தையுடன் பாதுகாவலராகச் சேர்க்கப் பட வேண்டும்.

தத்து எடுப்பதைப் பற்றிய வரையில் இப்போது உள்ள அத்தனைப் பிரிவுகளும் ரத்து செய்யப்பட வேண்டும். நாம் ஒரு மத சார்பற்ற நாடு. இந்து சட்டத்தில் தத்து எடுப்பது மத காரணங் களுக்காக உள்ளது. மத அடிப்படையிலான ஒரு பிரிவு மத சார்பற்ற நாட்டில் அவசியமில்லை. மத அடிப்படையில் ஏற்படும் தத்து எடுப்பை வாரிசு உரிமைக்கும் பின்பற்ற வேண்டுமா என்பதை கவனிக்க வேண்டும். அம்மாதிரி கூடாது என நாம் சொல்ல வேண்டும். மத காரணங்களுக்கு அல்லாமல் வேறு காரணங்களுக் காக பெண்ணையும் தத்தெடுக்கும் பிரிவு சேர்க்கப்படவேண்டும். ஒருவனுக்கு பிறந்த குழந்தைக்குள்ள அத்தனை உரிமையும் தத்து எடுத்த குழந்தைக்கும் இருக்க வேண்டும். மத காரணங் களுக்காக தத்து எடுக்கப்பட்டிருந்தால் அதில் வாரிசுரிமையைச் சேர்க்கக்கூடாது.

பொறுக்குக் குழு வேறு சில முக்கிய கருத்துக்களையும் கவனிக்க வேண்டும் என விரும்புகிறேன். பல்வேறு பேச்சுக்கள் இங்கு பேசப்பட்டன. முக்கியமாக மதிப்பிற்குரிய உறுப்பினர் டாக்டர் பட்டாபி மிக நீண்டதோர் உரை ஆற்றினார். பழங் காலத்தில் வழக்கத்திலிருந்த எல்லாவற்றையும் அவர் பாராட்டிப் பேசினார். நாம் மிக அதிகமாக பழங்காலத்தின்மீது கவனம் செலுத்தி விட்டோம். எதிர்காலத்தை நாம் பார்க்க வேண்டும். எதிர்கால சந்ததியினருக்காகத்தான் நாம் இந்த சட்டத்தை இயற்று

கிறோம். இது நமக்காக அல்ல; இது நமக்குப் பின்னால் வரும் சந்ததியினருக்காகத்தான். எதிர்கால நிலமை என்ன என்பதை நாம் கவனிக்க வேண்டும். சூழ்நிலைகள்தான் சட்டத்தை முடிவு செய்கின்றன. சமூகத்தின் பிரதிபலிப்பாகத்தான் சட்டம் இருக்கிறது. சமூகத்தைப் பிரதிபலிப்பதாக, மக்கள் எந்தச் சூழ்நிலையில் வாழ்கிறார்கள் என்பதைச் சட்டம் சொல்கிறது. நம்முடைய கருத்துக்களை எதிர்கால சந்ததியினர் மீது நாம் திணிக்கக் கூடாது. திருமணம், மண முறிவு மற்றும் வேறு எதுவாக இருந்தாலும் அவற்றை அவர்கள் மீது நாம் திணிக்கக் கூடாது. இவற்றை எல்லாம் கருத்தில் கொண்டு ஒரு நல்ல மசோதாவை இந்து சமுதாயத்துக்காக இந்த பொறுக்குக் குழு அளிக்கும் என நம்புகிறேன்.

*திரு. ராம் சகாய் (குவாலியர்) : இந்த மசோதாவைப் பற்றி குறிப்பாக நான் எதுவும் சொல்வதற்கில்லை. தற்போதுள்ள இந்து சமுதாயத்தைக் கருத்தில் கொண்டு இந்த மசோதா தயாரிக்கப்பட்டிருக்கும் விதத்தைப் பாராட்டுகிறேன். இதில் ஓரிரு தவறுகள் இருப்பதாக நான் உணருகிறேன். அதை பொறுக்குக் குழு சரி செய்ய வேண்டும். மசோதாவின் பாகம் IV பிரிவு 3(6)ல் வயது வராதப் பெண்களுக்குத் திருமணம் செய்யும்போது பாதுகாவலருடைய ஒப்புதல் பெற வேண்டும் என்று சொல்லப்பட்டுள்ளது: ஆனால் அம்மாதிரி ஒப்புதல் பெறாமல் திருமணம் நடந்தாலும் திருமணம் செல்லத்தக்கது அல்ல என்று சொல்ல முடியாது என்று பிரிவு 5-ல் கூறப்பட்டுள்ளது. ஒரு பிரிவில் ஒப்புதல் பெற வேண்டும் என்பதைக் கட்டாயமாக்கி, இன்னொரு பிரிவில் ஒப்புதல் பெறாவிட்டாலும் திருமணம் செல்லத்தக்கது என்று சொல்வது சரியானதல்ல. ஒப்புதல் ஏமாற்றியோ அல்லது கட்டாயப்படுத்தியோ பெறப்பட்டால் திருமணம் செல்லத் தக்கது அல்ல என்று சொல்லிவிட்டு ஒப்புதலே பெறாமல் செய்த திருமணம் செல்லத்தக்கது என்று கூறுவது சரியானதல்ல. இது முக்கியமான தவறாகும். இதைப் பொறுக்குக் குழு கவனிக்க வேண்டும்.

அடுத்து வாரிசு உரிமை பற்றியது. இதைப்பற்றி திருமதி ஹன்சா மேத்தா தம்முடைய பேச்சில் குறிப்பிட்டார். அவருடைய கருத்துகளை நான் முழுமையாக ஏற்றுக் கொள்ளவில்லை. இந்து தர்மங்களுக்கெதிராக இந்தப் புதிய இந்து சட்டத் தொகுப்பில் வாரிசு உரிமைகள் பற்றிச் சொல்லப்பட்டுள்ளன. பெண்களுக்கு உரிமைக் கொடுக்கக் கூடாது என்று நான் சொல்லவில்லை. ஆண்களைவிட பெண்களுக்கு அதிக உரிமை கொடுத்துள்ளதாக நான்

கருதுகிறேன். ஒரு பெண் தன்னுடைய தந்தையிடமிருந்தும் தன்னுடைய கணவன் குடும்பத்திலிருந்தும் உரிமை பெற அனுமதிக்கப் பட்டிருக்கிறாள். ஆனால் ஓர் ஆண் தான் பிறந்தக்குடும்பத்திலிருந்து மட்டும்தான் உரிமை பெற முடியும். தன்னுடைய மாமனார் குடும்பத்திலிருந்து எந்த உரிமையும் பெற முடியாது. இது வரை பெண்களுக்கு இழைக்கப்பட்டுள்ள அநீதி இப்போது ஆண்களுக்கு இழைக்கப்பட்டுள்ளது. ஒரு பெண் தன்னுடைய குடும்பத்தில் பெற்ற உரிமை இந்தக் குறைப்பாட்டை சரி செய்துவிடும் எனக் கருதலாம். இந்த மசோதாவின் நோக்கங்களையும் தற்போதுள்ள சூழ்நிலை களையும் வைத்துப்பார்க்கும்போது உண்மையான பிரச்சினைகளுக்கு எந்தத் தீர்வும் காணப்பட்டதாகத் தெரியவில்லை.

ஒரு பெண் தன்னுடைய குடும்பத்திலிருந்து பெறும் சொத்து அவளுடைய சீதனமாகக் கருதப்படுகிறது. அந்தச் சொத்தில் கணவ னுக்கு எந்த உரிமையும் கிடையாது. ஆகையால் முக்கியமான இந்த இரண்டாவது குறைப்பாட்டை பொறுக்குக்குழு கவனிக்க வேண்டும்.

இன்னொரு முக்கிய விஷயம், தர்ம சாஸ்திரங்களுக்கும் தற்போதுள்ள சமூக நிலைக்கும் எவ்வளவு வேறுபாடுகள் இருந் தாலும் நாம் தர்ம சாஸ்திரங்களைத்தான் பின்பற்றவேண்டும். உணர்ச்சி வசப்பட்டும், மேல்நாட்டுப் பாணியைப் பின்பற்றியும் நம்முடைய அடிப்படை பழக்க வழக்கங்களை மாற்றக் கூடாது. இம்மாதிரி மாற்றி னால் அது பல்வேறு பிரச்சினைகளை உருவாக்கி நம்முடைய சமுதாய முன்னேற்றத்திற்கு அது இடையூறை ஏற்படுத்தும். இது விரும்பத் தக்கதல்ல. இதை எல்லாம் கருத்தில் கொண்டு பொறுக்குக் குழு உறுப் பினர்கள் தகுந்த மாற்றம் செய்ய வேண்டும்.

டாக்டர் பி.வி. கேஸ்கர் (உத்திரப்பிரதேசம், பொது) : ஐயா, இம்மாதிரியான ஒரு புதிய சட்டத் தொகுப்பைக் கொண்டுவர வேண்டும் என்ற எண்ணம் மிக நீண்ட காலத்திற்கு முன்பே இருந்தது. ஆனால் காலம் தாழ்த்தியாவது இம்மாதிரியான புது சட்டத் தொகுப்பை கொண்டுவந்த மாண்புமிகு சட்ட அமைச்சரைப் பாராட்டு கிறேன். என்னுடைய நண்பர் டாக்டர் பட்டாபி கூறியதுபோல் இது ஒரு புரட்சிகரமான சட்டத் தொகுப்பாகும். இந்து சமூகத்தின் அடிப் படையையே இது மாற்றி அமைக்கக் கூடியது. ஆயிரம் வருடங் களாக இந்து சமூகத்தில் எவ்வித மாற்றமும் இல்லாமல் இருந்தது. இவ்வாறு மாற்றமே இல்லாத இந்து சமுதாயத்தை மாற்றி அமைக்க

முயற்சிக்கும் போது அதற்கு எல்லாவிதமான எதிர்ப்பும் தடைகளும் ஏற்படுவது இயல்பே. இந்த எதிர்ப்புகளையும் தடைகளையும் மீறி பொறுக்குக்குழு உறுப்பினர்களும் மாண்புமிகு சட்ட அமைச்சரும் இந்தப் புதிய சட்டத் தொகுப்பு சட்டமாக வர எல்லா முயற்சிகளிலும் ஈடுபட வேண்டும். இந்து சமூகத்தின் அடிப்படையையே மாற்றக் கூடிய வகையில் புதிய மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. இம் மசோதாவின் புரட்சிகரமான தன்மை பற்றி சமுதாயத்தின் சில வைதிகப் பிரிவினர் கிலியும் பீதியும் அடைந்திருப்பதாக என்னுடைய நண்பர் திரு. நசிருத்தீன் அகமது வாதித்தார். சில மாற்றங்கள் புரட்சி கரமாகத் தோன்றுகின்றன என்பதில் ஐயமில்லை. ஆனால் டாக்டர் பட்டாபி கூறியதுபோல் உண்மையில் அவை புரட்சிகரமானவை அல்ல. பல நூற்றாண்டுகளாக இந்து சமுதாயம் எந்த மாற்றமும் ஏற்படாமல் அப்படியே சென்றுகொண்டிருந்தது. இந்து சமுதாயம் வளர்ச்சியடைய எந்த வாய்ப்பும் அளிக்கப்படவில்லை. பல நூற் றாண்டுகளில் தொடர்ந்து ஏற்பட வேண்டிய மாற்றம் ஏற்படாத காரணத்தினால், நாம் ஒரு சில நாட்களில் அந்த மாற்றத்தை ஏற்படுத்த முயற்சி செய்ய வேண்டியவர்களாக உள்ளோம்.

எத்தகைய மாற்றத்தையும் விரும்பாத அடிப்படைவாதி களுடைய எதிர்ப்பிற்கு பலியாகாமல், பொறுக்குக் குழு உறுப்பினர் கள் தக்க மாற்றங்களைக் கொண்டு வந்து இந்து சமுதாயம் முன்னேற வழி காண வேண்டும். பல அடிப்படையான மாற்றங்களைச் செய்வ துடன் நில்லாமல் இந்து சட்டங்களை தொகுத்து வழங்குவது மிக முக்கியமான பணியாகும். இப்போதுள்ள இந்து சட்டம் திக்கு தெரியாத ஒரு கானகமாகக் காட்சியளிக்கிறது. பல்வேறு இடங்களில் பல்வேறு விதமான சட்டங்கள் நடைமுறையில் இருக்கின்றன. ஒவ்வொரு ஜாதிக்கும் அதன் பல்வேறு உட்பிரிவுகளுக்கும் பலவிதமான சட்டங் கள் இருக்கின்றன. இவையாவும் வழக்கறிஞர்களுக்கு ஒரு சொர்க்க புரியாக உள்ளன. இவை எல்லா சூழ்நிலைகளிலும் விரும்பத்தக்கவை என்று சொல்ல முடியாது. ஆனால் இவற்றை எல்லாம் ஒழுங்குபடுத்தி ஒரு கட்டுக்குள் கொண்டு வருவது மிக அவசியமாகும். இந்து சட்டத்தை மாற்றுவதிலிருந்து இது வேறுபட்டது. இந்த இரண்டு கருத்துகளின் அடிப்படையில் பார்க்கும்போது இந்த மசோதா காலந் தாழ்த்தி வருவதாகவே கருதுகிறேன். இந்தத் தொகுப்பைப் பரிசீலிப் பதற்கான முதல் குழு 1944-ல் அமைக்கப்பட்டுள்ளது. ஆகையால் இதை மேலும் தாமதமாக்கக் கூடாது எனப் பொறுக்குக் குழு உறுப் பினர்களைக் கேட்டுக் கொள்கிறேன். இந்த மசோதாவை குறித்துள்ள சில கருத்துக்கள் பல வருடங்களாக மக்கள் முன் இருக்கின்றன.

இப்போதும் அவை எல்லோருடைய கவனத்தையும் ஈர்த்துள்ளன. ஆகையால் இது குறித்து விவாதிப்பதற்கான நேரத்தைச் சுருக்கி விரைவாக முடிந்த அளவிற்கு அவையின் அடுத்த அமர்விலாவது இந்த மசோதாவை அறிமுகப்படுத்த வேண்டும் எனக் கேட்டுக் கொள் கிறேன். நான் இந்த மசோதாவை வரவேற்கிறேன்.

***பேகம் அய்ஸாஸ் ரசூல்** (உத்திரப்பிரதேசம்: முஸ்லீம்) : ஐயா, நான் நீண்ட நேரம் எடுத்துக் கொள்ள விரும்பவில்லை. நேரம் மிகக் குறைவாகவே இருக்கிறது என்பது எனக்குத் தெரியும். எனினும் மாண்புமிகு சட்ட அமைச்சர் கொண்டு வந்துள்ள இந்த மசோதாவை வரவேற்கவில்லை என்றால் நான் என்னுடைய கடமையிலிருந்து தவறியதாக ஆகிவிடும். நாம் சுதந்திரமடைந்து ஒரு தேசிய அரசாங்கம் உள்ள நிலைமையில் இம்மாதிரியான மசோதா கொண்டு வரப்படுவது சரியான அணுகுமுறையேயாகும். பொறுக்குக் குழு இனியும் தாமதிக்காமல் தன்னுடைய அறிக்கையை விரைவாக அளித்து இந்த மசோதாவை சட்டமாக்க முயற்சிக்க வேண்டும்.

இந்த மசோதாவில் கூறியுள்ள கருத்துக்கள் பெரும்பாலானவை அடிப்படை மாற்றங்களை உண்டாக்கக் கூடியவையாகும். குறிப்பாக திருமணம், மணம் முறிவு, வாரிசுரிமை மற்றும் தத்து எடுத்தல் முதலியவை அடிப்படையான மாற்றங்களை ஏற்படுத்தும். இது மிக முக்கியமான விஷயமாகும். இந்து சட்டங்களை தொகுத்து வழங்கக் கூடிய இந்த மசோதா ஒரு சிறப்பான நிகழ்ச்சியாகும். இம்மாதிரியான ஒரு மசோதா இதுவரை இந்த அவையில் கொண்டுவரப்பட்டதில்லை எனலாம்.

இந்த மசோதாவின் பல்வேறு பிரிவுகளைப்பற்றிக் கருதாமல் இந்த மசோதாவை வரவேற்கிறேன். ஒரு நாட்டிலுள்ள பெண்களின் நிலைமையைப் பொறுத்துத்தான் அந்த நாட்டின் சமூக நிலைமை நிர்ணயிக்கப்படுகிறது. இந்திய நாட்டில் இந்துப் பெண்களின் நிலைமை மிகமிகப் பின்தங்கியுள்ளது. ஷரியத் சட்டம் முஸ்லீம் பெண் களுக்கு நிறைய உரிமைகளை வழங்குகிறது. நான் அதில் பெருமைப் படுகிறேன். ஷரியத் சட்டம் பெண்களுக்குப் பல உரிமைகளை அளித்தா லும், நடைமுறையில் இந்தியாவின் பல பகுதிகளில் அவை சரியான முறையில் கடைப்பிடிக்கப்படுவதில்லை என்பதை நான் அறிவேன். இதை டாக்டர் பட்டாபியும் குறிப்பிட்டார்கள்.

---

* அரசியல் நிர்ணய சபை (சட்டமன்ற) விவாதங்கள், ஏப்ரல் 9, 1948, பக்கங்கள் 3648.

பஞ்சாப் மாநிலத்திலுள்ள வழக்கப்படி, தந்தையின் சொத்தில் பெண்களுக்கு உரிமை அளிப்பதில்லை. அதே முறையில் உத்திரப் பிரதேசத்தில் முஸ்லீம் பெண்களுக்கு சில உரிமைகள் மறுக்கப்படு கின்றன. இப்போது கொண்டுவரப்பட்டுள்ள மசோதாவின்படி முஸ்லீம் பெண்களுக்குள்ளதுபோல் இந்து பெண்களுக்கும் சில உரிமைகள் வழங்கப்படுவதை அறிய மகிழ்ச்சியடைகிறேன். இதை சமுதாயத்தின் எந்தப் பிரிவினரும் எதிர்ப்பார்கள் என நான் கருத வில்லை. எனினும் இது மதக் கோட்பாடுகளை உள்ளடக்கியுள்ள காரணத்தினால் மாற்றத்தை விரும்பாத சில சமுதாயப் பிரிவினர் இந்த முயற்சிக்கு எதிர்ப்பு தெரிவிக்கலாம். அவர்களுடைய எதிர்ப்பு எவ்வகையிலும் இந்த முயற்சிக்கு இடையூறாக இல்லாமலிருக்கும் படிப் பொறுக்குக் குழு உறுப்பினர்கள் பார்த்துக் கொள்ள வேண்டும். இந்த மசோதாவை விரைவாக சட்டமாக்க முயற்சிக்க வேண்டும். சமுதாயம் ஸ்தம்பித்துப் போய் ஒரே நிலையில் இருக்கக் கூடாது; அது முன்னேற்றப் பாதையில் சென்றுகொண்டிருக்க வேண்டும். இந்தியப் பெண்கள் பொருளாதார ரீதியில் சுதந்திரமாக இயங்கக் கூடிய சூழ்நிலை உருவாக வேண்டும். அப்போதுதான் நாடு முன்னேற்ற பாதையில் தாண்டுகால் போட்டுச் செல்லும். எனது இந்தக் கருத் துக்களைக் கூறி இந்த முயற்சிக்கு என் முழு ஆதரவு அளிக்கிறேன்.

திரு. ரோகிணி குமார் சௌதுரி (அசாம் பொது) : ஐயா, இந்த மசோதா கொண்டுவந்ததற்காக மாண்புமிகு சட்ட அமைச்சரவைப் பாராட்டுகிறேன். மாண்புமிகு சட்ட அமைச்சர் பலர் அவரைப் பாராட்டும் இந்த சூழ்நிலையை விரும்புவார் என நினைக்கிறேன். இது இந்து சட்டத் தொகுப்பு மசோதா என்று பெயரிடப்பட்டிருப்பதை விட, இந்துப் பெண்கள் சட்டத் தொகுப்பு மசோதா என்று குறிப்பிட்டிருக் கலாம். இவ்வாறு கூறுவதால் நான் இந்த மசோதாவை விமர்சிப்பதாக கருத வேண்டாம்.

மத சார்பற்ற ஓர் அரசை நாம் அமைக்கப் போகிறோம் என்று தீர்மானம் நிறைவேற்றி, வகுப்புவாத இயக்கங்களுக்கு முட்டுக்கட்டை போட்ட மூன்று நான்கு தினங்களுக்குள்ளேயே இவ்வளவு அவசர அவசரமாக, ஒரு குறிப்பிட்ட சமூகத்தைச் சார்ந்தவர்களுக்காக இந்த மசோதாவை ஏன் கொண்டு வருகிறோம் என்பது எனக்குப் புரிய வில்லை. எல்லா வகுப்புவாத இயக்கங்களையும் தவிர்க்க வேண்டும் என்று முடிவு செய்துவிட்ட பிறகு, இந்து, முஸ்லீம், கிருத்தவர்கள்

* அரசியல் நிர்ணய சபை (சட்டமன்ற) விவாதங்கள், ஏப்ரல் 9, 1948, பக்கங்கள் 3648 - 50.

முதலான நாட்டின் சகல பிரஜைகளுக்கும் பலனளிக்கக் கூடிய ஒரு பொதுவான மசோதாவை ஏன் கொண்டு வரக்கூடாது என்று அறிய விரும்புகிறேன். அம்மாதிரியான ஒரு மசோதாவை கொண்டு வருவதற்காக மாண்புமிகு சட்ட அமைச்சர் இப்போதுள்ள இந்த மசோதாவை திரும்பப் பெற்றால் அது சிறப்பானதாக இருக்கும்; சில நிமிடங்களுக்கு முன் அவர் திரும்ப பெற்றதைவிட இன்னும் அது சிறப்பாக இருக்கும்.

தங்கள் சகோதரர்களுடைய உரிமைகளிலிருந்து, தங்களுக்கு சில உரிமைகளைப் பெற்றுக் கொள்ள சில பெண்கள் ஆவலாக உள்ளார்கள் என்பது எனக்குத் தெரியும். அதே போல் தங்களுக்கு விருப்பமில்லாத திருமண உறவில் தள்ளப்பட்ட சில பெண்கள், அந்த உறவிலிருந்து விடுபட விரும்புகிறார்கள் என்பதையும் நான் அறிவேன். அதே முறையில் சமுதாயத்தின் மேல் மட்டத்திலுள்ள சில பெண்கள் பலதார திருமண தடை சட்டத்தைப்பற்றி யோசிக் கிறார்கள். இந்து சட்டத் தொகுப்பின் மூலமாக, இந்து சட்டத்தை யும் வழக்கத்தையும் மாற்றி அமைக்க அவர்கள் முயற்சிக்கிறார்கள்! இதை யாருக்காக செய்கிறீர்கள்? யார் இதனால் பயன் பெறப் போகிறார்கள்? பெரும்பாலான மக்கள் விவசாயத்தையும் விவசாய நிலங்களையும் நம்பி உள்ள போது, இதில் சேராத மற்ற சொத்துக் களைப் பற்றி சட்டம் இயற்றுவதால் என்ன பயன்? நம்முடைய கிரா மங்களில் உள்ள ஏழை இந்துக்கள் மண முறிவை விரும்புகிறார்களா? தங்களுடைய தந்தையிடமிருந்து சொத்துக்களைப் பெற விரும்பு கிறார்களா? இல்லவே இல்லை. சமுதாயத்தின் மேல் மட்டத்தி லுள்ள ஆண்களுக்கும் பெண்களுக்கும் உதவி செய்யவே இந்தச் சட்டத்தை கொண்டு வருகிறீர்கள். இது பணக்கார ஆணுக்காக, குறிப்பாக ஒரு ஏழைக்கு தன்னுடைய பெண்ணை திருமணம் செய்து வைத்து அந்தப் பெண்ணை, அவள் விருப்பப்படி வாழ வைக்காத சூழ்நிலையில், இந்தச் சட்டம் அவளுக்கு உதவும். இந்த சூழ்நிலை யில் இந்த திருமணத்தை ரத்து செய்ய அவன் விரும்புகிறான். அம்மாதிரி யான ஆணுக்குத்தான் இந்த சட்டம் உதவி செய்யும். பழக்க வழக் கங்கள் ஒவ்வொரு பிராந்தியத்திலும் வேறுபடுகின்றன. என்னுடைய பிராந்தியத்தைச் சேர்ந்த யாரும் இந்தப் பொறுக்குக் குழுவில் இடம்பெறவில்லை. அஸாம் மாநிலத்தில் இந்து சட்டத்தின் இடத்தைப் பெற்றுள்ள பழக்க வழக்க மரபுகள் எவ்வளவு விசித்திரமானவை என்பதை எல்லா வழக்கறிஞர்களும் அறிவர். *மனிராம் காட்டியா - எதிர் - கொிதலிட்டானி* என்ற வழக்கில் பிரிவிக் கவுன்சில் அளித்துள்ள தீர்ப்பை இவ்வகையில் முக்கியமாகக் குறிப்பிடலாம். இந்துக்களிடையே

செயல்படுத்தப்படும் சட்டத்தை இது அநேகமாக புரட்சிகரமான தாக்கியுள்ளது எனலாம்.

அடுத்து, ஆதிவாசிகளை எடுத்துக்கொள்வோம். அவர்கள் இஸ்லாம், கிருத்துவம் அல்லது புத்தமதம் ஆகிய ஏதாவது ஒன்றுக்கு மாறி இருக்கவில்லை என்றால் அவர்கள் இந்துக்களாகவே கருதப் படுவார்கள் என்று இந்த மசோதா சொல்கிறது. அவர்கள் மீது இந்த மசோதாவைத் திணிக்கப் போகிறீர்களா? இந்த மசோதாவின்படி வாரிசுரிமையை அவர்கள் மீது திணித்தால் அவர்கள் நிச்சயம் உங்க ளுக்கு எதிராகக் கலகக் கொடி தூக்குவார்கள். காசியா என்ற அசாம் பிரிவைச் சேர்ந்தவர்கள் தங்களுடைய இளைய மகளுக்கு சொத்தை அளிக்கிறார்கள். ஆனால் இந்தப் புதிய மசோதாவின்படி சொத்து விதவை, மகனின் விதவை, விதவையான மகள், மகனுடைய மருமகள் ஆகியோருக்கு வழங்கப்பட்டுள்ளது. இம்மாதிரியான சட்டத்தை அவர்கள் மீது திணித்தால் அவர்கள் ஏற்றுக் கொள்வார்கள் என நினைக்கிறீர்களா?

சாஸ்திர முறை ரீதியான திருமணம் என்றும் சட்டப்படியான திருமணம் என்றும் இரு வகையான திருமணங்களை நீங்கள் அறிமுகப் படுத்தியுள்ளீர்கள். சாச்சாரீஸ் என்ற பிரிவினர் எப்படித் திருமணம் செய்து கொள்கிறார்கள் என்பதைச் சொல்கிறேன். ஓர் ஆணும் பெண்ணும் ஒருவரை ஒருவர் அறிந்து கொள்கிறார்கள். பிறகு அந்தப் பெண் அவர்களுடைய பெற்றோர்களிடமிருந்து, நிர்ப்பந்தத்தின் பேரில் பிரிக்கப்பட்டு, இருவரும் திருமணம் செய்து கொள்கிறார்கள். நீங்கள் இருவரும் பதிவு அலுவலகத்திற்குச் சென்று திருமணம் செய்துக்கொள்ளுங்கள் என்று அவர்களிடம் கூறுவீர்களா?

வரதட்சிணையை நாம் கடுமையாக எதிர்க்கிறோம். பணக் காரர்கள் தங்களுடைய பெண்களுக்கு வரதட்சிணை கொடுத்து மிக விரைவாகத் திருமணத்தை முடித்து விடுகிறார்கள். அந்த பெண்கள் அழகற்றவர்களாகவும் குருடர்களாகவும் இருந்தாலும்கூட அவர் களுக்கு வரதட்சிணை கொடுத்துத் திருமணம் செய்துவைக்க முடிகிறது. என்னிடம் பணம் இல்லை என்றால் என்னுடைய வீடு மற்றுப் சொத்துக் களை அடகு வைத்தாவது திருமணம் செய்து வைத்து எனது மகள் பிரச்சினைக்கு ஒரு தீர்வு கண்டுவிடுவேன். ஆனால் இப்போது என்ன நடக்கும்? தற்போது பெண்கள் குடும்பச் சொத்தில் ஒரு பங்கை வாரிசுரிமையாகப் பெறுவார்கள். என்னுடைய மகன்களுக்கு பெண் பார்க்கும்போது அதிர்ஷ்டவசமாக - எனக்கு ஐந்து மகன்கள்

இருக்கிறார்கள் - நான் ஒரு சாதாரண குடும்பத்தை, சொத்தை அடகு வைத்தோ கடன் வாங்கியோ திருமணம் செய்யும் நிலையில் உள்ள குடும்பத்தை நாடமாட்டேன்; மாறாக சொத்தில் பங்குபெறும் நிலையில் உள்ள குடும்பத்தைத்தான் நாடுவேன். இம்மாதிரியான முறையில் நீங்கள் ஏழைகளுக்குச் சட்டம் இயற்றப் போகிறீர்களா? ஏழைகளை எடுத்துக் கொண்டால் அவர்களுக்கு விவசாய நிலம் மட்டுந்தான் சொத்தாக இருக்கிறது. தேயிலைத் தோட்டத்தை அதில் சேர்த்தால் பரவாயில்லை. அவர்களுக்கு வேறு விவசாய நிலம் இல்லை. ஓர் ஏழையின் மகள் எவ்வளவுதான் அழகாக இருந்தாலும், திறமையானவளாக இருந்தாலும் சொத்து இல்லாத காரணத்தினால் அவள் திருமணம் தடைபட்டு விடும். வழக்கு முறைக்கு எதிராக அவசர அவசரமாக இம்மாதிரியான சட்டத்தை இயற்றுவது சரியல்ல. இன்னும் நான் அதிகமாகக் கூட சொல்ல முடியும். ஆனால் இந்த அவையில் திருமணம் ஆகாத பல உறுப்பினர்கள் இருக்கிறார்கள். ஆகையால் இந்த மசோதா குறித்து என்னுடைய எல்லா எதிர்ப்புகளையும் சொல்ல விரும்பவில்லை.

*மாண்புமிகு டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, இந்த மசோதாவிற்கு இவ்வளவு அமோக ஆதரவு கிடைத்திருப்பது என்னுடைய பணியை மிகச் சுலபமாக்கி விட்டது. இந்த மசோதா குறித்த விவாதத்தில் பங்கு கொண்டு தங்கள் கருத்துக்களைத் தெரிவித்த உறுப்பினர்களுக்குப் பதில் சொல்லும் வகையில் என்னுடைய பேச்சை அமைக்கிறேன்.

திரு. நசிருத்தீன் அகமது தெரிவித்த கருத்தை முதலில் எடுத்துக் கொள்கிறேன். ஐயா, சட்டமன்றம் என்பது ஒரு நீதிமன்றம் அல்ல. இந்த அவைக்கு வரும் ஒரு வழக்கறிஞர் தம்முடைய தொழிலை செய்யவோ, அல்லது தம்முடைய கட்சிக்காரருக்கு வாதாடவோ இங்கு வரவில்லை என்றுதான் நினைத்தேன். ஆனால் என்னுடைய நண்பர் அவருக்கு உண்டான தொகையை பெற்றுக் கொண்டோ, அல்லது தம்முடைய பெருந்தன்மையின் காரணமாகவோ, அவருடைய கட்சிக்காரருடைய கருத்தைச் சொல்ல முற்பட்டார்: அந்தக் கட்சிக் காரர்கள் தாங்கள் என்ன நினைக்கிறோம் என்பதை சொல்லுவதற் கான தைரியமில்லாதவர்களாக இருக்கிறார்கள். ஆனால் நுணுக்கமான சட்டப் பிரச்சினைகளை நான் இங்கு எழுப்ப விரும்பவில்லை.

---

* அரசியல் நிர்ணய சபை (சட்டமன்ற) விவாதங்கள், ஏப்ரல் 9, 1948, பக்கங்கள் 3650-53.

அவர்கள் சொல்லிய கருத்துக்களுக்கு பதிலளிக்க மட்டுமே விரும்பு கிறேன். அவருடைய முதல் வாதம் இந்த மசோதா சரியான முறை யில் விளம்பரப்படுத்தப்படவில்லை என்பதும், தங்கள் கருத்துக் களைச் சொல்ல பொதுமக்களுக்கு போதிய வாய்ப்பு அளிக்கப்பட வில்லை என்பதும்தான். அவருடைய கட்சிக்காரர்கள் அவருக்கு தவறான தகவல்களைக் கொடுத்துள்ளார்கள் என்றே நினைக்கிறேன்.

1937-ல் இயற்றப்பட்ட சட்டத்திலேயே இந்த மசோதாவிற் கான வித்து விதைக்கப்பட்டுவிட்டது. அந்த ஆண்டிலிருந்தே இந்த மசோதாவில் சொல்லியுள்ள பல்வேறு விதி முறைகளைப் பற்றி ஆராய பல்வேறு குழுக்கள் நியமிக்கப்பட்டன. அவை ஒரு குழுவி லிருந்து இன்னொரு குழுவிற்கு அனுப்பப்பட்டு, பல்வேறு மட்டங் களில் ஆராயப்பட்டன.

உதாரணத்திற்கு சொல்ல வேண்டும் என்றால் 1937-ல் இயற்றப் பட்ட பெண்ணுரிமைச் சட்டத்தில் உள்ள குறைபாடுகளைக் களைய 1941-ல் உள் துறையினால் ஒரு குழு அமைக்கப்பட்டது. ராவ் குழு என்று அழைக்கப்படும் அந்தக் குழு 1941- ஜூன் 19-ஆம் தேதி தன் னுடைய அறிக்கையை அளித்தது. இந்த அறிக்கையை என்னுடைய நண்பர் பார்த்திருந்தால் இந்தக் குழு அந்த அறிக்கைக்கு எவ்வளவு பிரதானம் கொடுத்தது என்பதையும், என்னென்ன முறையில் மக்க ளுடைய கருத்தை அறிந்தது என்பதையும், என்னென்ன பிராந்தியங் களுக்குச் சென்று வந்தது என்பதையும் விரிவாக அறியலாம்.

இதே குழு 1942-ல் வாரிசுரிமை மற்றும் திருமணம் குறித்த மசோதாக்களை வழங்கியது. அந்த மசோதாக்கள் இரு அவைகளின் கூட்டுக் குழுவிற்கு அனுப்பப்பட்டது. 1943-ம் ஆண்டு இந்து வாரி சுரிமை மசோதா அறிமுகப்படுத்தப்பட்டது. இந்தக் கூட்டுக் குழு, பொது மக்களின் கருத்துக்களை வரவேற்றது. அக்கருத்துக்களை அவை உறுப்பினர்களுக்கு வழங்கியது. இவற்றை எல்லாம் பார்க்கும்போது அரசாங்கம் தகுந்த விளம்பரம் கொடுக்கவில்லை என்ற என் நண்பரின் கருத்து ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல என்பது தெள்ளத் தெளிவு.

அடுத்ததாக, நீதிபதி மிட்டர் அளித்த சிறுபான்மை அறிக்கையை அவர் குறிப்பிட்டிருக்கிறார். இந்த மசோதாவில் அடங்கியுள்ள விஷ யங்களின் பல்வேறு சாதக பாதகங்களை நீதிபதி தமது அறிக்கை யில் அலசி ஆராய்ந்து இருக்கிறார். ஒரு குழுவினுடைய உறுப்பினரைப்

பற்றி நான் எதையும் குறையாகச் சொல்லவில்லை. அவர் பயனுள்ள பணி செய்துள்ளார் என்பதில் ஐயமில்லை. ஆனால் அதே உறுப்பினர் தம்முடைய கருத்திலிருந்து மாறுபட்டு விட்டார் என்பதை இங்கு என்னால் குறிப்பிடாமல் இருக்க முடியவில்லை. குழுவின் பெரும்பாலான உறுப்பினர்கள் தெரிவித்த கருத்தை என்னுடைய நண்பர் திரு. நசிருத்தீன் அகமது படித்தால், அந்த மசோதாவில் சொல்லப்பட்ட அத்தனை கருத்துக்களும், குறிப்பாக பெண்களுக்கு உரிமை அளிக்கும் கருத்துகள் 1930-ல் கொடுக்கப்பட்ட அறிக்கையில் அந்த உறுப்பினரே தெரிவித்த கருத்தை அடிப்படையாகக் கொண்டவையே யாகும் என்பதைத் தெரிந்து கொள்வார். பெண்ணினுடைய உரிமைகளைக் கட்டுப்படுத்தும் தீர்ப்பு வழிச் சட்டத்துக்கு எந்த அடிப்படையும் இல்லை என அவர் தமது அறிக்கையில் கூறி இருக்கிறார். ஆனால் அவரே தற்போதுள்ள விவாதத்திற்கு பொருள் இல்லை எனக் குறிப்பிடுகிறார்.

இந்த மசோதா விவசாய நிலங்களைத் தவிர்த்து மற்ற சொத்துக்களைபற்றிக் குறிப்பிடுவதால் இது ஒரு முழுமையான தொகுப்பு அல்ல என்று மதிப்பிற்குரிய என்னுடைய நண்பர் கருதுகிறார். வாரிசு உரிமைக்குள்ள பெரும்பாலான சொத்துக்கள் இந்த மசோதாவிற்கு உட்படவில்லை என்று அவர் கருத்துத் தெரிவிக்கிறார். விவசாய நிலங்களை இந்த மசோதாவில் சேர்க்காததற்கு இரண்டு விளக்கங்கள் அளிக்கலாம்.*

இந்திய அரசாங்க சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணைகளைக் கவனித்தால் என்னுடைய நண்பருக்கு ஒன்று நன்றாக விளங்கும். அதாவது அந்த சட்டத்தில் மத்திய அரசு சட்டம் இயற்றுவதற்கான அதிகாரம் பெற்றுள்ள சில துறைகளும், மாகாண அரசுக்கென்று சில தனியான துறைகளும் ஒதுக்கப்பட்டிருப்பது தெரிய வரும். சமஷ்டி நீதிமன்றத்தின் விளக்கப்படி மாகாணப்பட்டியலில் குறிப்பிடப்பட்டிருக்கும் நிலம் என்ற வார்த்தை நில குத்தகை மற்றும் வாரிசுரிமை ஆகியவற்றையும் குறிக்கும். ஆகையால் அந்த நிலத்திற்கு உண்டான வாரிசுரிமைப் பற்றி மத்திய அரசு சட்டம் இயற்றினால் அது செல்லத்தக்கது அல்ல. ஆனால் நான் சொல்ல விரும்புவது வேறு விதமானது. அதாவது இந்த மசோதாவில் வேறு எந்தக் குறைபாடும் இருப்பதாக நான் கருதவில்லை. எல்லாச் சொத்துக்களுக்குமான வாரிசுரிமை ஒரே முறையில் இருக்க வேண்டிய அவசியமில்லை.

* 'விவசாய நிலமல்லாத சொத்து' என்று விவாதங்களில் பக்கம் 3651-ல் தவறாகக் குறிப்பிடப்பட்டுள்ளது

தற்போதுள்ள சூழ்நிலைகளை சரியான முறையில் கணக்கிலெடுத்துக் கொண்டு இந்திய அல்லது இந்து சமுதாயம் நிலத்தின் வாரிசாக முதல் மகன் மட்டும் இருக்க வேண்டும் என்றும், மற்ற மகன்களுக்கும் பெண்களுக்கும் எந்த உரிமையும் வேண்டாம் என்றும் நினைக்கலாம். அதைப்பற்றி நாம் எதுவும் சொல்லாத சூழ்நிலையில் இனி வரும் காலத்தில் புதிதாக அந்தப் பிரச்சினையை கருதலாம். ஆகையால் என்னுடைய நண்பர் சொல்லிய கருத்திற்காக எந்தவிதமான வருத்தமும் பட வேண்டிய அவசியமில்லை.

என்னுடைய நண்பர் சௌதுரி இது ஒரு மதவாத சட்டம் என நினைக்கிறார். பல மதங்கள் உள்ள இந்திய நாட்டில், இந்து மக்களுக்காக மட்டும் அறிமுகப்படுத்தியுள்ள இந்தச் சட்டத்தொகுப்பு மதவாத சட்டம் எனக் கருதலாம். ஆனால் இதற்கு மாற்று என்ன? என்னுடைய நண்பர் சொல்லக்கூடிய மாற்று, அந்தந்த மதங்களை அடிப்படையைக் கொண்டு, வாரிசுரிமை மற்றும் திருமண சட்டங்களை இயற்றாமல், மதம் இனம் மற்றும் ஜாதி, அடிப்படையிலன்றி எல்லோருக்கும் பொதுவான சட்டம் இயற்ற வேண்டும் என்று அவர் கூறினால், நிச்சயமாக நான் அவர் கருத்துக்கு ஒத்துப் போவேன். ஆனால் அது அவருடைய முடிவு அல்ல.

இனி வரப்போவது மதசார்பற்ற அரசாங்கம் என்பதால் மத அடிப்படையிலான சட்டம் சரியல்ல என்று சொல்வது நிச்சயமற்ற தன்மையை உண்டாக்கும். இந்த நாடு பல சமூகத்தினரைக் கொண்டுள்ளது. ஒவ்வொரு சமூகமும் தனக்கென்று தனித்தனியாக சட்டங்களை வைத்துக் கொண்டு இருக்கின்றன. மதசார்பு அற்ற அரசாங்கத்தை நாம் ஏற்படுத்தப் போவதால் அவரவர்களுக்கென்று தனித் தனியாக உள்ள சட்டங்களை எல்லாம் மறந்துவிட்டு எல்லோருக்கும் பொதுவான ஒரு சட்டம் இயற்ற வேண்டும் என்ற கருத்து எனக்கு உடன்பாடானதல்ல. அம்மாதிரி செய்தால் அது குழப்பத்திற்கும் எதேச்சை அதிகாரத்திற்கும் வழிவகுக்கும்.

அடுத்தபடியாக, வழக்கியல் சட்டத்தை இந்த மசோதா கணக்கிலெடுத்துக் கொள்ளவில்லை என்ற குற்றச்சாட்டை அவர் கூறுகிறார். தமக்கு ஆதரவாகப் பிரிவு கவுன்சில் தீர்ப்பை எடுத்துக் காட்டுகிறார். ஆனால் நாம் எல்லோரும் ஒத்துக் கொள்ளக் கூடிய நிலை என்னவென்றால் இந்துக்களை பொறுத்தவரை ஸ்மிருதியில் சொல்லப்பட்டுள்ள கருத்தைவிட வழக்கு முறையில் உள்ளவைதான் பின்பற்றப்படும் என்பதுதான். இது நாம் எல்லோருக்கும் தெரிந்த ஒன்று. ஆனால் நாம்

என்ன செய்கிறோம்? நம் புதிய வழக்கு முறைக்கு எதிராக இருக்கிறோம். நடைமுறையில் உள்ள வழக்கத்தை நாம் குலைக்கவில்லை. இந்து சட்டம் என்பது வழக்கு முறையை அடிப்படையாகக் கொண்டுள்ளதால், நாம் இப்போதுள்ள வழக்கு முறையை பின்பற்றுகிறோம். அந்த வழக்கு முறைக்குத்தான் நாம் இப்போது உயிர் கொடுத்து சட்ட வடிவு தருகிறோம்.

வழக்கு முறையை மிக அதிகமாக பின்பற்றும் ஆதிவாசிகளை நாம் கருத்தில் கொள்ளவில்லை என்ற கருத்தையும் அவர் சொல்கிறார். இந்தச் சட்டத் தொகுப்பில் யார் இந்து, யார் இந்து அல்லதாவன், யாருக்கு இந்தத் தொகுப்பு அமுல்படுத்தப்படும் என்பதை எல்லாம் கவனித்தால் பிரச்சினை நன்கு விளங்கும். முஸ்லீம்கள், பார்சிகள் அல்லது கிறித்தவர்கள் ஆகியவர்களாக மாறாவிட்டால் அவர்கள் இந்துக்களாக கருதப்படுவார்கள் என்று சொல்லப்பட்டுள்ளது. அவர்கள் இந்துக்கள் என்று சொல்லவில்லை. ஆதிவாசியான ஒரு நபர், தான் இந்து அல்ல என்று சொன்னால், அதை நீதி மன்றத்தில் நிரூபித்து தனக்கு இந்த தொகுப்பு பொருந்தாது என்பதை நிரூபிக்க முடியும். அந்த சூழ்நிலையில் இந்தத் தொகுப்பு அவரை கட்டுப்படுத்தாது.

திரு. ரோகிணி குமார் சௌதுரி : என்னுடைய கருத்து என்னவென்றால் அவர் தன்னை இந்து என்று சொல்லிக்கொள்ள விரும்பவில்லை. ஆனால் அதே நேரத்தில் இந்துக்களுடைய எல்லாப் பழக்க வழக்கங்களையும் பின்பற்ற விரும்புகிறார்.

மாண்புமிகு டாக்டர் பி.ஆர். அம்பேத்கர்: உள்ள நிலைமை இதுதான். ஒரு நபர் தன்னை இந்து என்று சொல்லிக் கொண்டால் அவர் இந்துக்களுக்கான அத்தனை சட்டங்களையும் ஏற்றுக் கொள்ள வேண்டும். இதில் குழப்பம் ஏதும் கூடாது. ஓர் இந்து எல்லாவகைகளிலும் ஓர் இந்துவாகத்தான் இருக்க வேண்டும். ஓர் ஆதிவாசி தன்னை இந்து என்று சொல்லிக்கொள்ள விரும்பவில்லை என்றால் அதை அவர் நிரூபிக்கும்போது இந்த சட்டம் அவரைக் கட்டுப்படுத்தாது.

என்னுடைய நண்பர் டாக்டர் சீதாராமையா ஒரு கேள்வி கேட்டார். இந்தச் சட்டம் அமுலுக்கு வருவதற்கு முன்பாக, ஒரு விதவை பெற்ற அனுபோக உரிமை, முழு உரிமை பெற்ற சொத்தாக மாறுமா என்பதுதான் அந்தக் கேள்வி. இந்தச் சட்டத் தொகுப்பில் தான் அனுபோக உரிமை முழு உரிமையாக மாற்றப்பட்டுள்ளது. இது

இனிமேல் தான் அமுலுக்கு வரவேண்டும். இது ஏற்கனவே அமுலுக்கு வந்ததாகக் கருதப்படும் என்று எங்கும் சொல்லப்படவில்லை. அம்மாதிரி சொல்லவும் முடியாது. ஏற்கனவே, அனுபோக பாத்திய மாக விதவைகளால் அனுபவிக்கப் பட்ட சொத்து அவர்கள் காலத் திற்குப்பின் மற்ற எத்தனையோ நபர்களுக்கு கைமாறியிருக்கும். அதை எல்லாம் குலைக்கும் வகையில் இந்தச் சட்டம் முன் தேதி யிட்டு அமுலுக்கு வந்ததாக கருத முடியாது.

திருமதி ஹன்சா மேதா தானும் மற்ற பெண்களும் இந்தத் தொகுப்பில் பெண் உரிமைகளைப் பற்றி இடம்பெற்றுள்ள விதி களின்பால் அதிருப்தி அடைந்திருப்பதாகச் சொன்னார். அவரவர்கள் எதிர்பார்ப்புக்கு ஏற்ப இந்த மசோதா அமையாதிருக்கலாம். ஆனால் ஒன்றை அவர் உணர வேண்டும்: இது ஒரு எழுச்சியற்ற, மந்தமான சமுதாயம். இந்து சமுதாயம் கடவுளோ அல்லது ஸ்மிருதியோ தான் சட்டம் இயற்ற முடியும் என்ற ஆழ்ந்த நம்பிக்கை கொண்டது. இருக்கும் சட்டத்தை மாற்றும் அதிகாரம் இந்து சமுதாயத்திற்கு கிடையாது என்பதும் அதன் கருத்து. இந்தக் காரணங்களினால் பல நூற் றாண்டுகளாக, தலைமுறை தலைமுறையாக இந்து சமுதாயத்தில் சட்டம் ஒரே மாதிரியாக இருந்து வருகிறது. இந்து சமுதாயம் தன் னுடைய அதிகாரத்தையும் பொறுப்பையும் உணரவில்லை. சமுதாய, பொருளாதார மற்றும் சட்ட ரீதியான மாற்றங்களை நாம்தான் உரு வாக்க வேண்டும் என்ற பொறுப்பு இந்த சமுதாயத்திற்கு இல்லாமல் இருந்தது. முதல் முறையாக நாம்தான் இத்தகைய ஒரு பெரிய பொறுப்பை நடைமுறைப்படுத்தும் எண்ணத்தில் துணிச்சலாக இந்த இந்து சட்ட தொகுப்பைக் கொண்டு வந்திருக்கிறோம், இதற்கு மக்கள் ஒத்துழைப்பு அளித்து ஒரு பெரிய மாற்றத்திற்கு உதவுவார்கள் என்று நம்புகிறோம்.

ஐயா , இந்த மசோதாவிற்கு எதிராக பொதுமக்கள் கருத்துக் கொண்டுள்ளார்கள் என்று பேசப்பட்டுள்ளது. இங்கு சொல்லப்பட் டுள்ள பல்வேறு கருத்துக்களை நாம் பரிசீலித்ததில் பின்வரும் கருத்தை நான் சொல்ல விரும்புகிறேன். இந்தப் பிரச்சினை பெரும் பாலோரின் கருத்துப்படி முடிவு செய்யப்பட வேண்டிய விஷயமல்ல. மாற வேண்டிய கட்டாயத்தில் உள்ள ஒரு சமுதாயம் பழையவற்றை மறந்து புதியவற்றை நோக்கி முன்னேறும் போது, ஒரு சாரார் பழமைக் கும், ஒரு சாரார் புதியவற்றிற்கும் ஆதரவு கொடுப்பார்கள். ஆனால் நாம் கடைப்பிடிக்க வேண்டிய பாதை நம்முடைய மனச்சாட்சி சொல்லும் பாதை மட்டும்தான். சமுதாயத்தின் மனசாட்சிக்கேற்ப தான் இந்த மசோதா அமைந்துள்ளது. ஆகையால் நான் இந்த

மசோதாவை எந்த விதமான தடையுமின்றி அறிமுகப்படுத்துகிறேன். பெரும்பாலான மக்கள் அதை எதிர்த்தாலும் இந்த மசோதா ஏற்றுக் கொள்ளப்பட வேண்டிய ஒன்றாகும்.

திரு. சபாநாயகர் : விஷயம் இதுதான் : தற்போதுள்ள இந்து சட்டத்தின் சில பிரிவுகளை மாற்றி அமைக்கவும், மற்ற பிரிவுகளை தொகுத்து வழங்குவதுமான பொறுக்குக் குழுவிற்குக் கீழ்க்காணும் நபர்கள் உறுப்பினர்களாக இருப்பார்கள்: திரு. அல்லாடி கிருஷ்ண சாமி அய்யர், டாக்டர் பக்ஷி தேக் சந்த், திரு. எம். அனந்தசயனம் அய்யங்கார், திருமதி. ஜி. துர்காபாய், திரு. எல். கிருஷ்ணசாமி பாரதி, திரு. யு. சீனிவாச மல்லையா, திரு. மிகிர் லால் சட்டோபாத்யாயா, டாக்டர் பி.எஸ். தேஷ்முக், திருமதி ரேணுகா ரே, டாக்டர் பி.கே. சென், பாபு ராம்நாராயண் சிங், திரு. கிஷோரி மோகன், திருமதி அம்மு சுவாமிநாதன், பண்டிட் பால கிருஷ்ண சர்மா, திரு. குர்ஷித் லால், திரு. பிரகேஸ்வர் பிரசாத், திரு. பி. சிவராவ், திரு. பல்தேவ் சுவரூப், திரு. வி.இ. கேசவராவ் மற்றும் மசோதாவை அறிமுகப் படுத்துபவர். அடுத்தக் கூட்டம் ஆரம்பித்த முதல் வாரத்தின் கடைசி நாளுக்குள் இக்குழு அறிக்கையை அளிக்க வேண்டும். ஐந்து உறுப் பினர்கள் கலந்துகொண்டாலே இக்குழு தனது பணியைக் கவனிக் கலாம்.

இந்தத் தீர்மானம் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

திரு. சபாநாயகர் : இத்துடன் இந்த அவை முடிவிற்கு வருகிறது. ஜனவரி 28-ந்தேதி ஆரம்பித்த இந்த அவை எல்லோருடைய ஒத் துழைப்புடன் முடிவிற்கு வருகிறது.

எல்லா உறுப்பினருடைய ஒத்துழைப்பும் எப்போதும் எனக்கு கிடைத்தது. நான் அவர்களுக்கு நன்றி கூறி இந்தக் கூட்டத்தை முடிக் கிறேன்.

(இந்த அவை மறு தேதி குறிப்பிடப்படாமல் ஒத்தி வைக்கப் பட்டது.)

□□

பிரிவு II

டாக்டர் பி.ஆர். அம்பேத்கரின் வரைவு இந்து சட்டத் தொகுப்பு மசோதா பொறுக்குக் குழு ஏற்படுத்திய மாற்றங்களுடன் அப்போதிருந்த இந்து சட்டத் தொகுப்பு

இந்து சட்டத் தொகுப்பு

டாக்டர் பி.ஆர். அம்பேத்கர்

குறிப்பு

அரசு அறிமுகப்படுத்தவுள்ள திருத்தங்களுக்கு மேற்கொண்டு சரியான விளக்கம் கொடுக்கும் எண்ணத்துடன், இந்தத் தொகுப்பு என்ன முறையில் மாற்றப்படப் போகிறது என்பது இப்புத்தகத்தின் 58-174ஆவது பக்கங்களில் கொடுக்கப்பட்டுள்ளது.

பொறுக்குக் குழு ஏற்படுத்திய மாற்றங்களுடன் இப்போதைய வரைவு தொகுப்பின் வகையங்கள் 175-247ஆவது பக்கங்களில் கொடுக்கப்பட்டுள்ளன. என்ன மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்பதும், இனி அறிமுகப்படுத்தவுள்ளதுமான பிரிவும் 58-174ஆவது பக்கங்களில் அடிக்கோடிட்டு அல்லது பக்கக் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ளது.

விடுபட்ட பிரிவுகள் நட்சத்திரக் குறிகளுடன் குறிக்கப்பட்டுள்ளன. ஏதாவது காலியான பக்கம் இருப்பின், அது பொறுக்குக் குழுவின் சிபாரிசில் அதற்கு ஈடான எதுவும் இல்லை என்பதையோ அல்லது பொறுக்குக் குழுத் தொகுப்பின் ஒரு பகுதி விட்டுவிடப் பட்டது என்பதையோ குறிக்கும்.

(மேலும் திருத்துவதற்குப் பரிந்துரைத்தபடி)

A

மசோதா

(இந்து சட்டத்தின் சில பிரிவுகளை மாற்றி அமைக்கவும், தொகுத்து அளிக்கவுமான அறிமுகப்படுத்தவுமான மசோதா.

* * *

கீழ்க்கண்ட முறையில் நாடாளுமன்றத்தால் சட்டமாக்கப் படுகிறது:

பகுதி I - முதல் நிலை

1. தலைப்புபும் மற்றும் அமுல்படுத்தப்பட உள்ள இடமும்

* * * இந்தச் சட்டம் இந்து சட்டத் தொகுப்பு, 1950 என அழைக்கப்படும்.

2. இது ஜம்மு காஷ்மீர் தவிர இந்தியா முழுமைக்கும் பொருந்தும்.

* * * * *

*(2)

2. தொகுப்பின் பிரயோகம் - (1) இந்தத் தொகுப்பு கீழ்க்கண்டவர்களுக்குப் பொருந்தும்-

அ) மத ரீதியில் இந்துக்களாக உள்ளவர்கள், இந்து மதத்தின் பல்வேறு பிரிவுகளைப் பின்பற்றுவோர், வீர சைவர்கள் அல்லது லிங்காயத்துகள் மற்றும் பிரம்மோ, பிரார்த்தனாக்கள் அல்லது ஆரிய சமாஜிகள்.

ஆ) புத்த மதம், ஜைன மதம் மற்றும் சீக்கிய மதத்தைப் பின்பற்றுபவர்கள்.

இ) i) இந்தப் பிரிவில் செய்யப்பட்டுள்ள வியாக்கியானத்துக்கு உட்பட்டு பெற்றோர்களில் ஒருவர் இந்துவாக இருந்தால் அவர்களுக்குப் பிறக்கும் சட்டப்படியான மற்றும் சட்டத்திற்கு புறம்பான குழந்தைகள்;

ii) சட்டரீதியான மற்றும் சட்டத்திற்குப் புறம்பான குழந்தையின் பெற்றோரில் ஒருவர், இந்தப் பிரிவின்படி இந்துவாக இருக்கவேண்டும்; ஆனால் அதே சமயம் இத்தகைய இந்துக் குழந்தை சம்பந்தப்பட்ட பெற்றோர் சார்ந்த சமூகத்தின், குழுவின், அல்லதுகுடும்பத்தின் ஓர் உறுப்பினராக வளர்க்கப் பட்டிருக்க வேண்டும்.

ஈ) **பௌத்த, ஜைன மற்றும் சீக்கிய,** மதத்திலிருந்து இந்து மதத்திற்கு மாறியவர்.

2) மத ரீதியில் முஸ்லீம், கிருத்துவர், மற்றும் பார்சி, யூதர் அல்லாத எவருக்கும் இத்தொகுப்பு பொருந்தும்.

ஆனால் இந்தத் தொகுப்பு ஏற்கப்பட்டிருக்கவில்லை என்றால் இங்கு குறிப்பிடப்பட்டிருக்கும் எந்த ஒரு விஷயம் சம்பந்தமாகவும் ஒருவர் இந்து சட்டத்துக்கோ அல்லது அதன் எந்த ஒரு பழக்கவழக்கத்துக்கோ, வழக்காறு மரபுக்கோ உள்ளாகி இருக்கமாட்டார் என்னும் பட்சத்தில் அப்போது இவ்விஷயங்கள் சம்பந்தமாக இந்தச் சட்டத் தொகுப்பு அவருக்குப் பொருந்தாது.

3) இந்தத் தொகுப்பின் எந்தப் பகுதியிலாவது ''இந்து'' என்று சொல்லப்பட்டால், ஒரு நபர் இந்து மதத்தில் பிறக்காதவராக இருந்தாலும், இந்த தொகுப்பு அவருக்குப் பொருந்தும் என்று பொருள் கொள்ள வேண்டும்.

★ ★ ★ ★ ★ ★

(3)

3. பொருள்வரையறைகள் : இந்தத் தொகுப்பில் **சந்தர்ப்ப சூழ்நிலை வேறு விதமாக இருந்தாலன்றி**

i) "அலிய சந்தானச் சட்டம்" என்பது இந்தச் சட்டம் இயற்றப்படாமலிருந்து எவர்கள் 1949 - மதராஸ் அலிய சந்தான சட்டத்துக்கு (மதராஸ் சட்டம் IX 1949) உட்பட்டவர்களாக இருக்கிறார்களோ அவர்களுக்குப் பொருந்தக் கூடிய சட்ட முறைமையைக் குறிக்கும்;

ii) "வழக்காறு" மற்றும் நெடுநாளைய "நிலைத்த நடைமுறை" என்றால் நீண்ட காலமாக எந்தவித தடையுமின்றித் தொடர்ந்து பின்பற்றப் பட்டு வரும் முறை எனக் கருதப்படும். எந்த ஒரு பகுதியிலும் இந்துக்கள் மத்தியில் சில குறிப்பிட்ட குடும்பம், பழங்குடியினர் அல்லது குழு அல்லது சமூகத்தால் தங்களைக் கட்டுப்படுத்தக் கூடிய ஒன்றாக பின்பற்றப்படுபவையாகும். இம்மாதிரியான பழக்கம் பொதுவான விதிமுறைக்கு எதிரானதாகவோ தர்க்கரீதியாக ஏற்றுக் கொள்ளக்கூடியதற்கு மாறுபட்டதாகவோ இருக்கக் கூடாது.

(iii) ஒரு குடும்பத்திற்கு மட்டும் அமுல்படுத்தப்பட வேண்டிய விதி முறை அந்த குடும்பத்தினரால் கைவிடப்படாத ஒன்றாக இருக்க வேண்டும்;

(iv) ஒரே பெற்றோர் வழியாக பிறந்த நபர், அந்த பெற்றோருக்கு முழு இரத்த உறவு முறை கொண்ட உறவினராகக் கருதப்படுவார். ஒருவருடைய இரு வேறு மனைவிகள் வழியாக பிறந்த நபர்கள் பாதி ரத்த உறவு முறை கொண்டவர்களாகக் கருதப்படுவார்கள்;

(v) இரு தகப்பன் வழியாக ஒரே தாயின் வயிற்றில் பிறந்த நபர்கள் "கர்ப்ப ரத்த உறவினர்கள்" என்று கருதப்படுவார்கள்.

விளக்கம் IV & V - பிரிவுகளில் சொல்லப்பட்டவைகளில், 'மூதாதையர்" என்பதில் தந்தையும், பெண் மூதாதையர் என்பதில் தாயும் அடங்குவர்.

(vi) ''மறுமக்கதாயம்'' சட்டம் என்பது கீழ்க்கண்டவர்களுக்கு அமுல்படுத்தப்படும்:

(அ) எவர் இந்தச் சட்டத் தொகுப்பு இயற்றப்படாவிட்டால் பின்வரும் சட்டங்களுக்குக் கட்டுப்படக்கூடியவர்களோ அவர்கள் மதராஸ் மருமக்கதாயம் சட்டம் 1932 (மதராஸ் சட்டம் XXII, 1933) திருவாங்கூர் நாயர் சட்டம் - 1100, திருவாங்கூர் ஈழவர்சட்டம் - III-1100, நாஞ்சில் நாடு வெள்ளாளர் சட்டம் - 1101, திருவாங்கூர் கூத்திரிய சட்டம் - 1108, திருவாங்கூர் கிருஷ்ண வக்கா - மருமக்க தாயி சட்டம் - 1115, கொச்சி தியா சட்டம் VIII - 1107, கொச்சி நாயர் சட்டம் XXIX - 1113, கொச்சி மருமக்க தாயச்சட்டம் XXXIII - 1113; அல்லது

ஆ) எந்தச் சமூகத்தை சேர்ந்த நபரும், திருவாங்கூர் கொச்சி அல்லது மதராஸில் பெரும்பாலும் வசிப்பவராக இருந்து, பெண் வழியாக வாரிசுரிமை பெறுபவர்களாயிருப்பவர்கள், ஆனால் இதில் அலிய சந்தான சட்டம் சேர்க்கப்படமாட்டாது;

(vii) ''நம்பூதிரி சட்டம்'' என்று சொன்னால் இந்தத் தொகுப்பு இயற்றப்படா விட்டால் கீழ்க்காணும் ஏதாவது ஒரு சட்டத்துக்கு உட்பட்டவர்கள்: மதராஸ் நம்பூதிரி சட்டம் - 1932 (மதராஸ் சட்டம் XXI - 1931) கொச்சி நம்பூதிரி சட்டம் - XVII 1114 அல்லது திருவாங்கூர் மலயாள பிராமணர் சட்டம் - 1106 (ஒழுங்கு முறைச் சட்டம் III 1106);

(viii) ''பகுதி'' என்றால் இந்தத் தொகுப்பின் ஒரு பகுதி என்று பொருள்;

(ix) ''வகுத்தமைக்கப்பட்டது'' என்றால் இந்த தொகுப்பின் விதிகளின்படி வகுத்தமைக்கப்பட்டது என்று பொருள்படும்.,

(x) ''உறவு முறை'' என்றால் சட்டரீதியான உறவு முறை என்று பொருள்.

சட்டத்திற்கு புறம்பாக பிறந்த குழந்தைகள் அவர்களுடைய தாய்க்கு உறவினர்களாக கருதப்படுவார்கள். அவர்களுக்குச் சட்டரீதியாக பிறக்கும் குழந்தைகள் அதே முறையில், ஒருவருக்கொருவர் உறவினர்களாக கருதப்படுவர்.

''உறவு முறை'' என்று சொன்னால் அல்லது எங்காவது குறிப்பிடப்பட்டால் இதே முறையில் புரிந்துக் கொள்ள வேண்டும்.

(xi) ''மகன்'' என்ற சொல் தத்து எடுத்த மகனையும் உள்ளடக்கும். இந்தத் தொகுப்பிற்கு முன்போ, பின்போ தத்து எடுத்த நபரையும் உள்ளடக்கும். ஆனால் சட்டத்திற்கு புறம்பான மகனை உள்ளடக்காது.

(4)

4, இந்தத் தொகுப்பின் ஒட்டுமொத்த விளைவு : இந்தத் தொகுப்பில் திட்டவட்டமாக வேறுவிதமாகக் குறிப்பிடப்பட்டிருந்தாலொழிய :-

(அ) இந்தத் தொகுப்பு தொடங்குவதற்கு முன்னர், அதில் இடம் பெற்றிருக்கும் எந்த விஷயங்கள் சம்பந்தமாகவும் நடைமுறையிலிருந்து வரும் இந்து சட்டத்தையோ, பழக்கவழக்கத்தையோ, வழக்காறையோ பற்றிய எந்த வாசகமும், விதியும் பொருள் விளக்கமும் செயலிழந்துவிடும்; மற்றும்

(ஆ) இந்தத் தொகுப்பிற்கு எதிராக உள்ள எந்தச் சட்டமும்; தொகுப்பிற்கு முன்பு அமுலில் இருந்தாலும் இப்போது அது செயலிழந்துவிடும்.

(5)

பகுதி II - திருமணம் மற்றும் திருமணத்தை செல்லாமல் ஆக்குதல்

அத்தியாயம் 1

திருமணம்

5. பொருள் விளக்கம்: இந்தப் பகுதியில் சந்தர்ப்ப சூழ்நிலை வேறு விதமாக இருந்தாலன்றி கீழ்க்காணும் முறையைப் புரிந்துக் -கொள்ள வேண்டும்.

அ) ''மாவட்ட நீதிமன்றம்'' என்பதில் மாவட்ட நீதிமன்றத் துக்கு உட்பட்டு மாநில அரசால் அரசாங்க பதிவேட்டில் அறி விக்கப்பட்டுள்ள எந்த நீதிமன்றமும் அடங்கும்.

ஆ) ''சபிண்டா உறவு முறை'' என்பது எந்த ஆணும் மூன் றாவது அட்டவணையில் முதல் பிரிவில் முதல் பத்தியில் சொல்லப்பட்டுள்ள நபருக்கு உறவினராக இருந்தால் அவர் அவருக்கு சபிண்டா உறவு எனக் கருதப்படுவார். ஒரு பெண் சபிண்டா உறவு முறை என்று சொன்னால், அதே பகுதியில் உள்ள இரண்டாவது பத்தியிலுள்ள நபருக்கு உறவாக இருந்தால் அவர் அந்த நபருக்கு சபிண்டா உறவு முறை என்று சொல்லப் படும்.

இ) ''தடுக்கப்பட்ட உறவு முறை'' என்பது - மூன்றாவது அட்ட வணையில் இரண்டாவது பிரிவில் முதல் பத்தியில் குறிக்கப் பட்டுள்ள நபரும், வேறு நபர்களும் தடுக்கப்பட்ட உறவு முறை யைச் சேர்ந்தவர்கள் என்று கொள்ளவேண்டும். அதே போல் அதே பிரிவில் இரண்டாவது பத்தியிலுள்ள பெண்ணும் வேறு நபர்களும் தடுக்கப்பட்ட உறவு முறை என்ற வட்டத்திற்குள் வருவர்.

*விளக்கம் :- **ஆ, இ** என்ற பகுதியில் சொல்லியுள்ள உறவு முறை கீழ்க்காணுபவற்றை உள்ளடக்கும்-*

(i) *பாதி ரத்த உறவு, கர்ப்ப ரத்த உறவு, முழு ரத்த உறவு சம்பந்தப்பட்ட உறவு முறை;*

(ii) *சட்டத்திற்கு புறம்பான ரத்த உறவு முறை மற்றும் சட்டத்திற்குட்பட்ட உறவு முறை;*

(iii) *ரத்த ரீதியான உறவு முறை மற்றும் தத்து எடுப்பதால் வரும் உறவு முறை.*

உறவு முறை என்று வரும் இடங்களில் எல்லாம் இந்தப் பொருளில் புரிந்துக் கொள்ள வேண்டும்.

★ ★ ★

(6)

6. இந்து திருமண முறைகள் : இங்கு வேறு விதமாக வெளிப்படையாகக் கூறாதவரையில், இந்துக்களிடையிலான எந்தத் திருமணமும் சடங்கு முறைப்படி நடத்தப்பட்டாலொழிய அது அங்கீகரிக்கப்பட மாட்டாது -

அ) **ஒரு தார்மிகத் திருமணம் அல்லது,**

ஆ) **சிவில் (பதிவு) திருமணம் அல்லது**

இ) **பிரிவு 24 (அ)வின் ஷரத்துகளின்படி - அந்தப் பிரிவு பொருந்துகின்ற திருமணங்கள்;**

(7)

ஒரு தார்மிகத் திருமணத்திற்குப் பொதுவான வகையங்கள்

7. ஒரு செல்லுபடியாகும் தார்மிகத் திருமணத்திற்கான அத்தியாவசிய நிலைமைகள் - தார்மிக முறையில் சடங்குகளின்படி எந்த இரு இந்துக்களிடையில் நடைபெறும் ஒரு திருமணமும், கீழ்வரும் நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்பட்டால் அது ஒரு செல்லுபடியாகும் திருமணமாகும். அந்த நிபந்தனைகளாவன:

i) திருமணத்தின்போது எந்தத் தரப்புக்கும் கணவனோ அல்லது மனைவியோ இருக்கக் கூடாது;

ii) திருமணத்தின்போது எந்தத் தரப்பும் முட்டாளாகவோ, பைத்தியமாகவோ இருக்கக்கூடாது;

iii) திருமணத்தின்போது மணமகன் பதினெட்டு வயது பூர்த்தியடைந்தவனாக இருக்கவேண்டும்; மணமகள் பதினைந்து வயது பூர்த்தியடைந்தவளாக இருக்கவேண்டும்;

iv) மணமக்கள் தடை செய்யப்பட்ட உறவுமுறைக்கு உட்பட்டவராக இருக்கக்கூடாது;

v) தரப்புகள், இருவருக்கும் இடையில் ஒரு தார்மிகத் திருமணத்தை அனுமதிக்கிற அவர்கள் இருவரின் வழக்கம் அல்லது மரபுக்கு இசைவாக இருந்தாலொழிய அவர்கள் ஒருவருக்கு மற்றொருவர் சபிண்டாக்கள் அல்ல.

vi) மணமகள் தனது பதினாறாவது வயதைப் பூர்த்தி செய்யாமலிருக்கும் நிலைமையில் அவள் தமது திருமணத்திற்கு கார்டியனின் (பாதுகாவலரின்) சம்மதம் பெற்றிருக்க வேண்டும்.

(8)

ஒரு சிவில் (பதிவுத்) திருமணத்திற்கான பொதுவான ஷரத்துக்கள்

8. ஒரு செல்லுபடியாகும் சிவில் திருமணத்திற்கு அத்தியாவசியமானவை: பதிவு முறையில் நிறைவேற்றப்பட்ட எந்த இரு இந்துக்களுக்கும் இடையிலான திருமணம், பின்வரும் நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்பட்டால் அது செல்லத்தக்க திருமணமாகும். அவையாவன:

i) திருமணத்தின்போது யாரும் கணவனையோ, மனைவியையோ கொண்டிருப்பவராக இருக்கக்கூடாது;

ii) திருமணத்தின்போது யாரும் முட்டாளாகவோ, மனநிலை சரியில்லாதவராகவோ இருக்கக்கூடாது;

iii) திருமணத்தின்போது மணமகன் 18 வயதையும், மணமகள் **பதினைந்து** வயதையும் பூர்த்தி செய்தவர்களாக இருக்கவேண்டும்.

iv) தரப்புகள் தடைசெய்யப்பட்ட உறவுமுறையின் எல்லைகளுக்குள் இருக்கக்கூடாது.

v) திருமண சந்தர்ப்பத்தில் மணமகனும் மணமகளும் 21 வயதைப் பூர்த்தி செய்யாதவர்களாயிருந்தால், அவர்கள் தமது பாதுகாவலரின் (கார்டியன்) சம்மதத்தைப் பெற்றிருக்கவேண்டும்.

மணமகள் ஒரு விதவையாக இருந்தால் அத்தகைய சம்மதம் தேவையில்லை.

(9)

ஒரு தார்மிகத் திருமணத்தின் சம்பிரதாயங்கள்

9. சடங்குகள் - (1) ஒரு தார்மிகத் திருமணமானது, அத்தகைய திருமணத்திற்கு அத்தியாவசியமான, இருதரப்புகளுக்கு மரபான சடங்குகள் மற்றும் சம்பிரதாயங்களுக்கு ஏற்ப நிறைவேற்றப்பட்டாலொழிய அது பூர்த்தியடையாது; இரு தரப்புகளையும் கட்டுப்படுத்தாது.

2) அத்தகைய சடங்குகளிலும் சம்பிரதாயங்களிலும் சப்தபதி உள்ளடங்கியிருந்தால் (அதாவது, புனிதமான அக்னியின் முன்னால் மணமகனும் மணமகளும் கூட்டாக ஏழு அடிகளை எடுத்துவைத்தல்) ஏழாவது அடி எடுத்து வைத்தபோது அந்தத் திருமணம் நிறைவு பெறுகிறது. இரு தரப்பினரையும் கட்டுப்படுத்துகிறது.

3) இந்தப் பிரிவில் என்ன கூறப்பட்டிருந்த போதிலும்,

தார்மிக முறையில் நிறைவு பெற்ற எந்தத் திருமணமும், சடங்கு ரீதியாக அது நிறைவு செய்யப்பட்ட பின்னர், எந்த ஒரு தரப்பினரின் மரபான சடங்குகள் மற்றும் சம்பிரதாயங்களில் ஏதாவது குறைபாடுகளைக் காரணம் காட்டி, செல்லாததாக்கப்பட முடியாது.

(10)

10. **தார்மிகத் திருமணத்தின் பதிவு :** (1) எந்த ***தார்மிகத்*** திருமணத்தின் சான்றை நிறுவும் நோக்கத்திற்காக, ***மாநில அரசு,*** விதிகளின்படி கீழ்வருவனவற்றை ஏற்பாடு செய்யலாம்:-

அ) அத்தகைய திருமணத்தின் விவரங்களை, அது பொருத்தமானது என்று கருதும் முறையிலும், சூழ்நிலைகளிலும், இதற்காக வைக்கப்பட்டிருக்கும் ***தார்மிகத்*** திருமணப் பதிவேட்டில் பதிவு செய்யப்படும்; மற்றும்

ஆ) **மாநிலத்தில்,** அல்லது விதிகளில் நிர்ணயித்துக் கூறப்படும் **பிரதேசங்களில்** அத்தகைய விவரங்கள் பதிவு செய்யப்படுவது கட்டாயமாகும்.

2) துணைப் பிரிவு (1)ன் கீழ் எந்த விதிகளையும் உருவாக்குவதில், ***மாநில அரசு,*** அந்த விதிகளை மீறுவதை, அபராதத்துடன் தண்டிப்பதற்கு வகை செய்யலாம்; அது நூறு ரூபாய்கள் வரை செல்லக் கூடும்.

(11)

ஒரு பதிவுத் திருமணத்தின் சம்பிரதாயங்கள்

11. திருமணப் பதிவாளர்கள்: *மாநில அரசு, இந்து திருமணங்களுக்கு ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட நபர் களைப் பதிவாளர்களாக நியமிக்கலாம்; இந்த பாகத்தில், ''ரிஜிஸ்ட்ரார்'' (பதிவாளர்) என்று குறிக்கப்படும். இவர்கள் மாநிலத் திற்கு, அல்லது அதனுடைய எந்தப் பகுதிக்காவது நியமிக்கப் படலாம்; அத்தகைய எந்தப் பதிவாளராவது நியமிக்கப்படும் பிரதேசம், அவருடைய மாவட்டம் என்று அழைக்கப்படும்.*

(12)

12. திருமணம் பற்றி பதிவாளருக்கு அறிவிப்பு :- *இந்த பாகத்தின் கீழ் ஒரு பதிவுத் திருமணம் செய்து கொள்ளப்படுவதற்கு விரும்பினால், திருமணத்தின் தரப்புகள், நான்காவது அட்டவணையில் குறிப்பிட்டுள்ள படிவத்தில் எழுத்து மூலமாக மாவட்டப் பதிவாளருக்கு அறிவிப்புக் கொடுக்க வேண்டும். குறைந்தபட்சம் திருமணத்தின் தரப்புகளில் ஒருவர், அந்த அறிவிப்புக் கொடுக்கும் தேதிக்கு முன்னதாக முப்பது நாட் களுக்குக் குறையாமல் அங்கு வசித்திருக்க வேண்டும்.*

(13)

13. திருமண அறிவிப்பு புத்தகம் மற்றும் வெளியிடுதல்:- பதிவாளர் (1) 12-வது பிரிவின்படித் தமக்கு அளிக்கப்பட்டுள்ள அத்தனை அறிவிப்புகளையும் இத்தகைய அறிவிப்பு ஒவ்வொன்றின் நகலையும் மாநில அரசால் தமக்கு வழங்கப்பட்டுள்ள இந்து சிவில் திருமணப் புத்தகம் என்ற புத்தகத்தில் எழுதி வைக்க வேண்டும். அம்மாதிரியான புத்தகம் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் எந்தக் கட்டணமுமின்றிப் பொது மக்கள் பார்வையிட வைக்கப்பட வேண்டும்.

2) பதிவாளர் தமக்குக் கொடுக்கப்பட்டுள்ள அத்தனை அறிவிப்புகளையும் அதற்கென்று ஏற்படுத்தப்பட்டுள்ள முறைகளின் படி வெளியிட வேண்டும்.

(14)

14. திருமணத்திற்கு எதிர்ப்பு : (1) 12-வது பிரிவின்படி திருமண அறிவிப்பு கொடுக்கப்பட்ட 30- நாட்களுக்குப் பின் உட்பிரிவு 2-ன்படி எதிர்ப்பு இருந்தால் தவிர அந்தத் திருமணத்தை நடத்தலாம்.

2) திருமண அறிவிப்பு கொடுத்த 30- நாட்களுக்குள் விதி 8-க்கு இந்த திருமண அறிவிப்பு முரணாக இருக்கிறது என்று சொல்லி எந்த நபரும் எதிர்ப்பு தெரிவிக்கலாம்;

3) இம்மாதிரி தெரிவிக்கும் எதிர்ப்பை இந்து சிவில் திருமண புத்தகத்தில் பதிவாளர் பதிவு செய்ய வேண்டும்; மேலும் இந்த எதிர்ப்பை அவசியம் ஏற்பட்டால் எதிர்ப்புத் தெரிவித்தவருக்கு விளக்கிச் சொல்லி இந்தப் புத்தகத்தில் அவரையோ அவர் சார்பாக வேறு எவரையுமோ கையெழுத்து இடச் செய்ய வேண்டும்.

(15)

15. எதிர்ப்பு மனு கிடைத்தவுடன் கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறையில் (1) 14-வது பிரிவின்படி திருமணத்திற்கு எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டிருந்தால் எதிர்ப்பு மனு கிடைத்த 30-நாட்கள் முடிவதற்குள் திருமணத்தை நடத்தப் பதிவாளர் அனுமதிக்கக் கூடாது. தகுந்த அதிகாரம் பெற்றுள்ள நீதிமன்றம் திறந்திருந்தால் அல்லது அந்த நீதிமன்றம் விடுமுறையில் இருந்தால், நீதிமன்றம் திறந்து 30- நாட்களுக்குள் திருமணம் நடைபெற அனுமதிக்கக் கூடாது.

2) இந்தத் திருமணத்திற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் நபர், அதற்கென்று அதிகாரம் பெற்றுள்ள மாவட்ட நீதிமன்றத்தில் * * எட்டாவது விதியில் சொல்லப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு மொத்தமாகவோ அல்லது ஏதாவது ஒரு நிபந்தனைக்கு எதிராகவோ இத்திருமணம் நடந்துள்ளது எனக் கூறி அதற்காக வழக்கு போட முடியும். அம்மாதிரி வழக்குப் போட்டால் வழக்குப் போட்ட நபருக்கு வழக்குப் போட்டதற்காக சான்றிதழ் அந்த நீதிமன்றத் தால் வழங்கப்படும்.*

3) விதி 2-ன்படி சான்றிதழ் பெற்ற நபர் சான்றிதழ் பெற்ற 30-நாட்களுக்குள் அதனைப் பதிவாளரிடம் ஒப்படைக்க வேண்டும். நீதிமன்றம் விடுமுறையானால், நீதிமன்றம் திறந்து 30 - நாட்களுக்குள் ஒப்படைக்க வேண்டும்.

4) அத்தகைய சான்றிதழ், துணைப் பகுதி (3)ல் வரையறுத்துக் கூறியுள்ள முறையிலும், அந்தக் காலவரம்புக்குள்ளும் சமர்ப்பிக்கப்படாவிட்டால், அல்லது நீதிமன்றத்தின் முடிவு, பகுதி 8ல் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகள் எதையும் அந்தத் திருமணம் மீறாத நிலையில், திருமண அறிவிப்புக் கொடுக்கப் பட்டுள்ள பதிவாளர், அந்தத் திருமணத்தை நடத்தி வைக்கலாம்.

5) பகுதி 8ல் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகள் எதையாவது அந்தத் திருமணம் மீறுகிறதென்று நீதிமன்றம் முடிவு செய்தால், திருமணம் நடத்தப்பட முடியாது.

(16)

16. ஆட்சேபனை நியாயமானதாக இல்லாவிட்டால், அபராதம் விதிப்பதற்கு நீதிமன்றத்தின் அதிகாரம் :- வழக்குத் தொடுக்கப்பட்டுள்ள நீதிமன்றத்தில், ஆட்சேபனை நியாயமானதல்ல, உண்மையானதல்ல என்று தோன்றினால், ஆட்சேபம் செய்துள்ள நபருக்கு ரூபாய் ஆயிரத்திற்கு மேற்படாத அபராதத்தை நீதிமன்றம் விதிக்கலாம்; மேலும், அத்தொகை முழுவதையோ, அல்லது அதன் ஒரு பகுதியையோ திருமணம் செய்து கொள்ள விருக்கும் மணமக்களுக்கு வழங்கலாம்.

(17)

17. மணமக்களும் சாட்சிகளும் செய்யவேண்டிய பிரகடனம் :- *(1) திருமணம் செய்துகொள்வதற்கு முன்னால், மணமக்களும், மூன்று சாட்சிகளும் பதிவாளரின் முன்னிலையில், ஐந்தாவது அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள படிவத்தில் கையெழுத்திட வேண்டும். மற்றும், மணமக்களில் யாராவது 21 வயதைப் பூர்த்தி செய்யாமலிருந்தால், (மண மகள் விதவையாக இல்லாத பட்சத்தில்) அவரது கார்டியனும் அந்தப் பிரகடனத்தில் கையெழுத்திட வேண்டும்.*

2) துணைப் பிரிவு (1)ன் கீழ் செய்யப்படும் எந்தப் பிரகடனத்திலும் பதிவாளரும் எதிர் - கையெழுத்து இடவேண்டும்.

(18)

18. திருமணம் நடைபெறும் இடமும் முறையும் : 1) திருமணம் கீழ்வரும் இடங்களில் முறைப்படி நடைபெறலாம்:

அ) பதிவாளரின் அலுவலகத்தில், அல்லது,

ஆ) பதிவாளரின் அலுவலகத்திலிருந்து நியாயமான அளவு தூரத்தில், இருதரப்பினரின் விருப்பத்திற்கேற்ப வேறு இடத்தில், நிர்ணயிக்கப்படும் நிபந்தனைகளின் பேரிலும், நிர்ணயிக்கப் படும் கூடுதல் கட்டணம் செலுத்தப்படுவதன் பேரிலும் நடைபெறலாம்.

2) திருமணம் எந்த முறையிலும் நடைபெறலாம்: ஆனால், பதிவாளரின் முன்னிலையிலும், மூன்று சாட்சிகளின் முன்னிலையிலும் மணமகனும், மணமகளும் ஒருவருக்கொருவர் நான் (அ) உங்களை (ஆ) என்னுடைய சட்டப்படியான மனைவியாக (அல்லது கணவனாக) ஏற்றுக் கொள்கிறேன் என்று கூறினால் தான் திருமணம் நிறைவுபெறும், இருதரப்பினரையும் கட்டுப்படுத்தும்.

3) திருமணம் பதிவாளர் மற்றும் மூன்று சாட்சிகளின் முன்னிலையில் நடைபெறவேண்டும்.

(19)

19. திருமணச் சான்றிதழ் - (1) திருமணம் நடத்தப்பட்டவுடனே, பதிவாளர், ஆறாவது அட்டவணையில் குறிப்பிடப் பட்டுள்ள படிவத்தில் அந்தத் திருமணம் சம்பந்தமான ஒரு சான்றிதழை எழுதி, அவரால் அதற்காக வைக்கப்பட்டுள்ள புத்தகத்தில் அதைச் சேர்க்க வேண்டும்; அந்தப் புத்தகத்திற்கு ''இந்து சிவில் திருமண சான்றிதழ் புத்தகம்'' என்று பெயர். அந்த சான்றிதழில் மணமக்களும், மூன்று சாட்சிகளும் கையெழுத்திட வேண்டும்.

2) இந்து சிவில் திருமண சான்றிதழ் புத்தகத்தில் பதிவாளர் சான்றிதழைப் பதிவு செய்ததும், அந்த சான்றிதழ், ஒரு சிவில் திருமணம் நடத்தப்பட்டது என்ற உண்மைக்கு முடிவான சாட்சியமாகக் கருதப்பட வேண்டும். திருமணத்திற்கு சாட்சிகளின் கையெழுத்துக்கள் முதலிய எல்லா சம்பிரதாயங்களும் கடைப் பிடிக்கப்பட்டன.*

* இந்தப் பிரிவில் டாக்டர் அம்பேத்கர் தமது சொந்தப் பிரதியில் பின் கண்டவாறு பென்சிலால் எழுதியுள்ளார். 'எல்லா சம்பிரதாயங்கள் கடைப்பிடிக்கப்பட்டு திருமணம் நடைபெற்றது என்பதற்கான உறுதியான சான்றும் தேவை - ஆசிரியர்.

(20)

20. அறிவிப்புக் கொடுத்தபின் மூன்று மாதங்களுக்குள் திருமணம் நடத்தப்படாவிட்டால், புதிய அறிவிப்பு தேவை- பிரிவு 12-ன்படி, பதிவாளருக்கு அறிவிப்புக் கொடுத்ததிலிருந்து மூன்று மாதங்களுக்குள் ஒரு திருமணம் நடத்தப்படாவிட்டால், அல்லது உத்தேசத் திருமணத்தை ஆட்சேபிக்கும் நபர், தகுதியுள்ள அதிகார வரம்புள்ள ஒரு நீதிமன்றத்தில் ஒரு வழக்குப் பதிவு செய்து, அந்த நீதிமன்றத்தின் முடிவும் (தீர்ப்பும்)வழங்கப்பட்டிருந்தால், அத்தகைய முடிவுக்கு எதிராக மேல் முறையீடு செய்வதற்கு சட்டப்படி அனுமதிக்கப்பட்டுள்ள மூன்று மாத காலம் முடிவடைந்து விட்டால், அல்லது, அத்தகைய முடிவுக்கு எதிராக மேல் முறையீடு செய்யப்பட்டிருந்தால், அப்பீல் நீதிமன்றத்தின் முடிவு வழங்கப் பட்டதிலிருந்து மூன்று மாதங்களுக்குள், திருமண அறிவிப்பும், அது சம்பந்தமான எல்லா நடைமுறைகளும் (விசாரணைகளும்) காலாவதியாகிவிட்டதாகக் கருதப்பட வேண்டும்; மேலும், இந்த அத்தியாயத்தில் வரையறுத்துக் கூறப்பட்டுள்ள முறையில் ஒரு புதிய அறிவிப்புக் கொடுக்கப்படுகின்ற வரையில் திருமணம் நடத்தப்படு வதற்கு எந்தப் பதிவாளரும் அனுமதிக்கக் கூடாது.

(21)

தார்மிகத் ***திருமணங்களை சிவில் திருமணங்களாகப் பதிவு செய்தல்***

21. சில தார்மிகத் திருமணங்களைப் பதிவு செய்வதற்கான நடைமுறை: 1) எந்த இரு இந்துக்களாவது *தார்மிக* முறைப்படியான திருமணம் செய்து கொண்டுள்ள நிலையில்:-

அ) இந்த சட்டத்தொகுப்பு தொடங்கப்படுவதற்கு முன்னால், எந்த வாசகம், விதி அல்லது இந்து சட்டத்தின் வியாக்கியானப்படி, அல்லது திருமணத்தின்போது அமலிலிருந்த எந்த வழக்கம் அல்லது மரபின்படி நடத்தப்பெற்ற அத்தகைய எந்தத் திருமணத்தின் செல்லத்தக்க தன்மை குறித்து சந்தேகங்கள் (ஐயப்பாடுகள்) எழுப்பப்பட்டால், அல்லது,

ஆ) இந்த சட்டத் தொகுதி தொடங்கப்பட்டதற்குப் பின்னர், **7-வது பிரிவின் (v)-வது ஷரத்தில்** அடங்கியுள்ள விவரங்களுக்கு முரணாயிருக்கிறது என்ற காரணத்தினால் அத்தகைய திருமணம் செல்லத்தகாததாக்கப்பட்டால்: அத்தகைய நபர்கள், எந்த சமயத்திலாவது, மணமக்களில் யாராவது ஒருவர், தமது திருமணத்தைப் பதிவு செய்வதற்காக விண்ணப்பம் கொடுத்த தேதிக்கு முன்னால் முப்பது நாட்களுக்குக் குறைவில்லாமல் வசித்துள்ள மாவட்டத்தின் பதிவாளருக்கு - அந்தப் பதிவாளரின் முன்னால் நடத்தப்பட்ட சிவில் திருமணம் என்ற வகையில், விண்ணப்பித்துக் கொள்ளலாம்.

2) அத்தகைய எந்த விண்ணப்பமும் கிடைக்கப் பெற்றதன் பேரில், பதிவாளர், வரையறுக்கப்பட்டுள்ள முறையில் பொது அறிவிப்புக் கொடுக்க வேண்டும்; அதற்குப் பிறகு, ஆட்சேபத்திற்கு முப்பது நாட்களை அனுமதித்த பின்னர், மற்றும் அந்தக் காலகட்டத்தினுள் பெறப்படும் எந்த ஆட்சேபங்களையும் விசாரித்த பின்னர்; பதிவாளர் பின்வருமாறு திருப்தியடைந்தால்:

அ) விண்ணப்பத்தில் குறிக்கப்பட்டுள்ள தேதியில் திருமணச் சடங்கு நடைபெற்றது, மற்றும் அந்தத் தேதியிலிருந்து அவர்கள் கணவனும் மனைவியுமாக வாழ்ந்து வருகிறார்கள் என்றும்,

ஆ) **பிரிவு 8-ன் (i), (ii), (iii) மற்றும் (iv)-வது ஷரத்துகளில் குறிப்பிடப்பட்டுள்ள** நிபந்தனைகள், விண்ணப்பம் கொடுக்கப்பட்டுள்ள தேதியில் திருமணத்தின் தரப்புகளிடையில் (மணமக்களிடையில்) பூர்த்தி செய்யப்பட்டுள்ளன என்றும்; மற்றும்

இ) திருமண சந்தர்ப்பத்தில் மணமகள் விதவையாக இல்லாத நிலையில், மனுக் கொடுத்த தேதியில் 21-வயதைப் பூர்த்தி செய்யாத நிலையில், ஒரு சிவில் திருமணமாக அவர்களது திருமணம் பதிவு செய்யப்படுவதற்கு அவருடைய அல்லது அவளுடைய கார்டியனின் சம்மதம் பெறப்பட்டுள்ளது என்பது குறித்துப் பதிவாளர் திருப்தியடைந்தால், ஏழாவது அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள படிவத்தில், இந்து தார்மிகத் திருமணப் பதிவேட்டில் ஒரு சான்றிதழைப் பதிவு செய்யலாம்; அந்த சான்றிதழில் மணமக்களும் மூன்று சாட்சிகளும் கையொப்பமிட வேண்டும்.

3) துணைப்பிரிவு (2)ல் குறிப்பிடப்பட்டுள்ள அத்தகைய சான்றிதழ் எதுவும் பதிவு செய்யப்பட்ட பின், அந்தத் திருமணம் எல்லா நோக்கங்களுக்கும் செல்லத்தக்கதாக கருதப்பட வேண்டும்; மணமக்கள் தார்மிகத் திருமணம் செய்து கொண்டதற்குப் பின்னர் பிறந்த எல்லாக் குழந்தைகளும் (அவர்களின் பெயர்களும் சான்றிதழிலும் இந்து **தார்மிகத்** திருமணப் பதிவேட்டிலும் பதிவு செய்யப்பட வேண்டும்) எல்லா அம்சங்களிலும், அவர்களது பெற்றோர்களின் சட்டப்படியான குழந்தைகளாகவே கருதப் படுவார்கள், எப்பொழுதும் அப்படியே கருதப்படுவார்கள்.

4) அத்தகைய திருமணத்தின் எந்தத் தரப்பும், இந்தப் பிரிவின் கீழ் வெளியிடப்படும் எந்த உத்தரவினாலாவது பாதிக்கப் பட்டால், அந்த உத்தரவுக்கு எதிராக, 3-வது பிரிவில் விளக்கியுள்ளபடி, மாவட்ட நீதிமன்றத்திற்கு மேல் முறையீடு செய்து கொள்ளலாம்; அந்தப் பதிவாளர் தமது அதிகார எல்லையின் ஸ்தல வரம்புகளுக்குள், தமது அதிகாரத்தை செலுத்துகிறார், மேலும், அத்தகைய மேல் முறையீட்டின் பேரில், மாவட்ட நீதிமன்றத்தின் முடிவு இறுதியானதாகும்.

(22)

திருமண ஆவணங்களைப் பயன்படுத்துதல்

22. திருமண ஆவணங்கள் ஆய்வு முதலியவற்றுக்குத் திறந்திருக்க வேண்டும்:- இந்து தார்மிகத் திருமணப் பதிவேடும், இந்து சிவில் திருமண சான்றிதழ் புத்தகமும் எல்லா நியாயமான காலங்களிலும் ஆய்வுக்குத் திறந்திருக்க வேண்டும்; மற்றும் அவற்றில் அடங்கியுள்ள விவரங்களின் உண்மைக்கு சான்றாகவும் அனுமதிக்கப்பட வேண்டும்.

விண்ணப்பத்தின் பேரில், அவற்றின் சான்றளிக்கப்பட்ட பகுதிகள், நிர்ணயிக்கப்பட்ட கட்டணம் செலுத்தப்பட்டதன் பேரில் பதிவாளரால் வழங்கப்பட வேண்டும்.

(23)

23. திருமணப் பதிவேடுகளில் அடங்கியுள்ள விவரங்களின் நகல்கள் பிறப்பு, மரணம், மற்றும் திருமணப் பதிவாளர் ஜெனரலுக்கு அனுப்பி வைக்கப்படுதல் - அவருடைய (பதிவாளரின்) மாவட்டம் அமைந்துள்ள மாநிலத்திற்கான பிறப்பு, மரணம் மற்றும் திருமணங்களின் பதிவாளர் ஜெனரலுக்கு நிர்ணயிக்கப்படும் கால இடைவெளிகளில், இந்து **தார்மிகத்** திருமணப் பதிவேட்டிலும் இந்து சிவில் திருமண சான்றிதழ் புத்தகத்திலும் - அத்தகைய இடைவெளிக்குப்பின்னர் அவரால் எழுதப்பட்ட அனைத்துப் பதிவுகளின் ஒரு மெய்யான நகலை, சான்று அளித்து, நிர்ணயிக்கப்பட்ட படிவத்தில் பதிவாளர் அனுப்பி வைக்கவேண்டும்.

(24)

திருமணத்தில் கார்டியன் முறை

24. திருமணத்தில் கார்டியன்களிடையில் முன்னுரிமை: 1) நான்காவது (IV) பாகத்தின் ஷரத்துகளுக்கு உட்பட்டு, இந்த பாகத்தின் கீழ் திருமணத்தில் ஒரு கார்டியனின் (பாதுகாவலர்) சம்மதம் எங்கெங்கு அவசியமோ, அத்தகைய சம்மதத்தை வழங்குவதற்கு உரிமையுள்ள நபர்கள் பின்வரும் வரிசைப்படி உள்ளவர்களாவர், அவர்களாவன:

1) தந்தை;

2) தாய்;

3) சகோதரர்

* * * * *

* * * * *

4) மிகவும் நெருக்கமான வேறு எந்த உறவினரும்

* * * * *

விளக்கம் :- மேலே (4) வதாகக் கூறப்பட்டுள்ளதற்கான பதிவிற்கு எந்த இரு உறவினர்களில் மிகவும் நெருக்கமானவர் என்பதை நிர்ணயிப்பதற்கான சோதனை, பாகம் VII-ல் உயில் எழுதாமல் இறப்பவரின் வாரிசுரிமை பற்றிய விதிகளுக்கு ஏற்ப குழந்தையின் பிதிரார்ஜிதமான சொத்தை வாரிசுரிமையாகப் பெறுவதற்கு யார் முதலில் உரிமையுள்ளவர்கள் என்பதேயாகும்.

2) இந்தப் பிரிவின் ஷரத்துகளின் கீழ் திருமணத்தில் கார்டியனாகச் செயல்படுவதற்குத் தகுதி பெறுவதற்குக் குறிப்பிட்ட நபர் 21 வயதைத் தாண்டியவராக இருக்க வேண்டும்.

3) மேலே கூறப்பட்ட ஷரத்துகளின் கீழ் திருமணத்தில் கார்டியனாக இருப்பதற்குத் தகுதியுள்ள எந்த நபரும் மறுத்தால், அல்லது அவர் பிரசன்னமாயில்லாவிட்டால் இயலாமை அல்லது வேறு காரணத்தினால், செயல்பட முடியாமல் அல்லது தகுதியற்றவராக இருந்தால், அடுத்து இரண்டாவது நிலையிலுள்ள நபர் திருமணத்தில் கார்டியனாக இருப்பதற்கு தகுதியுடையவராவார்.

4) வயதுக்கு வராதவரின் (மைனர்) நலனுக்காக, திருமணத்தின் கார்டியன் ஏற்பாடு செய்த உத்தேசத்திருமணத்தைத் தடையாணையின் மூலம் தடுப்பது அவசியம் என்று நீதிமன்றம் நினைத்தால், அவ்வாறு தடை செய்வதற்கு நீதிமன்றத்திற்குள்ள அதிகாரவரம்பை இந்த பாகத்திலுள்ள எதுவும் பாதிக்காது.

(25)

மருமக்கத்தாயர்களிடையிலான செல்லத்தக்கத் திருமணத்திற்கான சிறப்பு ஷரத்துக்கள், முதலியன

24-அ. மருமக்கத்தாயத் திருமணம் அல்லது அலிய சந்தானப் பெண் சம்பந்தமான நிபந்தனைகள்: *(1) இந்த சட்டத் தொகுதி அமலுக்கு வந்ததற்குப்பின்னர் ஒரு பெண்ணுக்கும் - இந்த சட்டத் தொகுதி நிறைவேற்றப்படவில்லையென்றால் மருமக்கத்தாயம் அல்லது அலிய சந்தானம் சட்டத்தின்படி நடைபெற்றிருக்கும் - ஓர் இந்து ஆணுக்கும் இடையில் நடைபெற்றிருக்கும் திருமணம் 7-வது பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்தால் அது செல்லத்தக்க திருமணமாகும்.*

ஆனால் மேலே கூறப்பட்ட பிரிவின் (V)-வது ஷரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனை அத்தகைய திருமணம் எதற்கும் பொருந்தாததாக இருக்க வேண்டும்.

2) இந்தப் பிரிவின் கீழான ஒவ்வொரு திருமணமும், மணமக்கள் சார்ந்த அல்லது அவர்களில் ஒருவர் சார்ந்த சமூகத்தில் மரபாக உள்ள சடங்குகள் மற்றும் சம்பிரதாயங்களின்படி வெளிப்படையாக நடத்தப்படவேண்டும்;

ஆனால், அத்தகைய திருமணம் எதுவும் மேலே கூறப்பட்ட சடங்குகள் மற்றும் சம்பிரதாயங்கள் எதுவும் நடத்தப்பட்டதில் ஏதாவது குறைபாடு காரணமாக செல்லத்தக்கதல்ல என்று கருதப்படக்கூடாது.

3) இந்தப் பிரிவின் கீழான ஒவ்வொரு திருமணத்திற்கும், நிர்ணயிக்கப்படும் குறிப்பிட்ட காலத்திற்குள் சம்பந்தப்பட்ட நபர், சம்பந்தப்பட்ட அதிகாரிக்கும், சம்பந்தப்பட்ட முறையில் (படிவத்தில்) அறிவிப்புக் கொடுக்க வேண்டும்.

4) இந்தப் பிரிவின் ஷரத்துகளின்கீழ் ஒரு திருமணம் ஒரு பெண்ணுக்கும் - இந்த சட்டத் தொகுப்பு நிறைவேற்றப்படாமலிருந்தால் மருமக்கத்தாயம் அல்லது அலிய சந்தானச் சட்டத்தின்படி திருமணம் நடைபெற்றிருக்கும் - அத்தகைய சட்டத்தின்படியல்லாத ஓர் இந்து ஆணுக்கும் இடையில் நடைபெற்றால் துணைப்

பிரிவு (3)ன் கீழ் அவர்கள் அறிவிப்புக் கொடுப்பது சட்டப்பூர்வமான தாகும்; அதில் அவர்கள், இந்த பாகத்தில் மருமக்கத்தாயம் அல்லது அலியசந்தானத் திருமணங்களை ரத்து செய்வது சம்பந்த மாக அடங்கியுள்ள சிறப்பு ஷரத்துக்களின் ஆளுகைக்கு உட் படுவதாக அவர்கள் விருப்பம் தெரிவிக்க வேண்டும். இப்படிப்பட்ட பிரகடனம் எதுவும் செய்யாத வரையில்:-

அ) அத்தகைய சிறப்பு ஷரத்தில் அடங்கியுள்ள எதுவும் (இந்தப் பிரிவு நீங்கலாக), மண மக்களில் யாருக்கும் பொருந்தாது; மற்றும்,

ஆ) இந்த பாகத்தின் அத்தியாயங்கள் II-ம் III-ம் ஒரு தார்மிகத் திருமணத்திற்கு, அல்லது ஒரு ***தார்மிகத் திருமணம்*** சம்பந்தமாகப் பொருந்துவதைப் போல, இத்தகைய திருமணத்திற்கும் பொருந்தும்.

5) துணைப் பிரிவு (3)-ன்படி தேவைப்படுவது போல், திருமணம் பற்றி அறிவிப்புக் கொடுப்பதற்கு எந்த நபரும் தவறி னால், அவருக்கு ஐம்பது ரூபாய் வரையில் அபராதம் விதித்துத் தண்டனை வழங்கப்படவேண்டும்.

ஆனால், அத்தகைய அறிவிப்புக் கொடுப்பதற்குத் தவறி யதன் காரணமாக அத்திருமணம் செல்லாததாக்கப்படக் கூடாது; அல்லது மணமக்களின் சட்டபூர்வமான உரிமைகள், அல்லது அத்தகைய திருமணமே கூட பாதிக்கப்படக்கூடாது.

(26)

தண்டனைகள் முதலியன

***25. இரு மனைவிகளை மணம் செய்து கொள்வதும் அதற்கான தண்டனையும்:-** தனது மனைவி அல்லது கணவன் உயிருடன் இருக்கும் போது - **இந்த சட்டத் தொகுப்பின் விதிகளின்படி அல்லது: இந்த சட்டம் அமலாவதற்கு முன்னால், சட்டத்தின் படி, அல்லது அந்த சமயத்தில் அமலிலுள்ள மரபு அல்லது வழக்கத்தின்படி திருமணம் ரத்து செய்யப்படாத வரையில், இந்த சட்டம் அமலாக்கப்பட்டதற்குப் பின்னர் வேறு எந்தத் திருமணம் செய்துகொண்டாலோ, கணவன் அல்லது மனைவி உயிருடனிருக்கும் காலத்தில் மீண்டும் திருமணம் செய்து கொண்ட குற்றத்திற்காக** இந்திய தண்டனைச் சட்டம் (1860-ம் வருடத்திய XLV-வது சட்டம்) 494, 495 பிரிவுகளில் நிர்ணயிக்கப் பட்டுள்ள தண்டனைகளுக்கு உள்ளாவார்கள்.

*　　　*　　　*

(27)

26. பொய்யான பிரகடனம் அல்லது சான்றிதழில் கையெழுத் திட்டதற்காக தண்டனை: இந்த பாகத்தின் கீழ் தேவைப்படுகின்ற பொய்யான கூற்றைக் கொண்ட, மற்றும் பொய்யானதென்று அவர் அறிந்துள்ள, அல்லது பொய்யானதென்று நம்புகிற அல்லது உண்மை யானதென்று நம்பாத எந்தப் பிரகடனம் அல்லது சான்றிதழை வழங்கு கின்ற, கையெழுத்திடுகின்ற அல்லது சான்றொப்பமிடும் ஒவ்வொரு நபரும், இந்திய தண்டனைச் சட்டத்தின் (1860-ன் XLV-வது சட்டம்) 199-வது பிரிவில் விவரிக்கப்பட்டுள்ள குற்றம் செய்தவராகிறார்.

*　　　*　　　*

---

* டாக்டர் அம்பேத்கர், தமது சொந்தப் பிரதியில் பென்சிலால் 'விஷயத்தைத் தெளிவாக்குவதற்காக, மரபையும் அங்கீகரிக்கிறது' என்று குறிப்பிட்டுள்ளார். - ஆர்)

(28)

அத்தியாயம் II

மணவாழ்க்கைக்குரிய உரிமைகளை மீட்டெடுத்தலும் நீதிமன்றம் மூலமாகப் பிரிந்து வாழ்தலும்

27. மணவாழ்க்கைக்குரிய உரிமைகளை மீட்டெடுப்பதற்கான விண்ணப்பம் : கணவன், அல்லது மனைவி ஆகிய இருவரில் ஒருவர், நியாயமான காரணமின்றி, மற்றவரின் தொடர்பிலிருந்து விலகிச் சென்று விட்டால், பாதிக்கப்பட்ட நபர், மாவட்ட நீதிமன்றத்திற்கு, மண வாழ்க்கைக்குரிய உரிமைகள் தனக்கு மீட்டு அளிக்கப்பட வேண்டுமென்று மனுச் செய்து கொள்ளலாம்; அந்த நீதிமன்றம், அத்தகைய மனுவில் கூறப்பட்டுள்ள விவரங்களின் உண்மைத் தன்மை குறித்து திருப்தியடையும் பட்சத்தில், அந்த மனு அனுமதிக்கப்படாதிருப்பதற்கு சட்டப்படியான காரணங்கள் எதுவும் இல்லாதபட்சத்தில், மணவாழ்க்கை உரிமைகள் மீட்டு அளிக்கப்பட வேண்டுமென்று நீதிமன்றம் ஆணையிடலாம்.

(29)

28. மண வாழ்க்கை உரிமைகள் மீட்டு அளிக்கப்பட வேண்டுமென்ற மனுவுக்கு பதில் : மண வாழ்க்கை உரிமைகள் மீட்டு அளிக்கப்பட வேண்டுமென்ற மனுவுக்கு பதிலாக எதுவும் வாதாடப்பட முடியாது. - நீதிமன்றம் மூலமாகப் பிரிந்து வாழ்வதற்கான அல்லது திருமணம் ரத்து செய்யப்படுவதற்கான ஓர் ஆணைக்கான காரணமாக அது அமைய முடியாது.

(30)

29. நீதிமன்றம் மூலமாகப் பிரிந்து வாழ்தல் : இந்த சட்டத் தொகுப்பு அமலுக்கு வருவதற்கு முன்னால், அல்லது அதற்குப் பின்னர் செய்துகொள்ளப்பட்ட ஒரு திருமணத்தின் கணவனோ அல்லது மனைவியோ, பின்வரும் காரணங்களினால் பிரிந்து வாழ்வதற்கு நீதிமன்றத்தின் ஆணையைக் கோரி மாவட்ட நீதிமன்றத்திற்கு மனுச்செய்து கொள்ளலாம். அந்தக் காரணங்களாவன:

அ) **இந்த மனுக் கொடுப்பதற்கு முன்னால்** இரண்டு ஆண்டுகளுக்குக் குறைவில்லாத காலத்திற்கு, **காரணமில்லாமல்** மனுதாரரை மற்றைய தரப்பு கைவிட்டு விலகிச் சென்றது;

ஆ) மற்றைய தரப்புடன் மனுதாரர் சேர்ந்து வாழ்வது பாது காப்பற்றதாக்கும் கொடுமை புரிந்த குற்றத்திற்காக, அல்லது

இ) மனுக் கொடுப்பதற்கு முன்னதாக ஓராண்டுக்குக் குறை வில்லாத காலத்தில் பால்வினை நோயினால் - பிறருக்குப் பரப்பத் தக்க வகையில் - மனு தாரரிடமிருந்து பெறப்படாததால் - பாதிக்கப்பட்டி ருத்தல்;

ஈ) கடுமையான தொழுநோயால் பாதிக்கப்பட்டிருத்தல், அல்லது

உ) திருமணம் நடைபெற்ற தேதியிலிருந்து வழக்கமாக மனநிலை சரியில்லாதிருத்தல்; அல்லது,

ஊ) திருமணத்தின்போது, ஒழுக்கக்கேடு புரிந்திருத்தல்;

விளக்கம் :- இந்தப் பிரிவில் ''பொறுப்பை விட்டுச் செல் லுதல்'' என்ற சொற்றொடரின் பொருள், நியாயமான காரணமின்றி, மற்றையத் தரப்பின் சம்மதமில்லாமல், அல்லது அத்தகைய தரப்பின் விருப்பத்திற்கு எதிராக, திருமணத்தின் மற்றைய தரப்பைக் கைவிட்டுச் செல்லுதல் என்று பொருளாகும்.

(30)

(31)

அத்தியாயம் III

திருமணத்தை ரத்து செய்வது சம்பந்தமான பொதுவான விதிகள்

30. நீதிமன்றத்தின் ஆணையின் பேரில் அல்லாமல் எந்தத் திருமணமும் ரத்து செய்யப்பட முடியாது- *இந்த பாகத்தில் என்ன கூறப்பட்டுள்ள போதிலும், இந்த சட்டத் தொகுப்பு அமலுக்கு வருவதற்கு முன்னால் அல்லது அமலுக்கு வந்ததற்குப் பின்னால் செய்துகொள்ளப்பட்ட எந்தத் திருமணமும், ஒரு தகுதி வாய்ந்த* ***நீதிமன்றத்தின் ஓர் ஆணையின் மூலமாக அல்லாது, சட்டப்படி ரத்து செய்யப்பட்டதாகக் கருத முடியாது.***

(32)

30. அ. திருமணத்தை ரத்து செய்யும் முறைகள் : *ஒரு திருமணமானது ரத்து செய்வதற்கான ஓர் ஆணையின் மூலம் ரத்து செய்யப்படலாம், 31-வது பிரிவில் கூறப்பட்டுள்ள எந்தக் காரணத்தினாலாவது செல்லுபடியாகாமற் போனால், அல்லது ரத்து செய்யப்படுவதற்கான ஓர் ஆணையின் மூலம், 32-வது பிரிவில் வரையறுத்துக் கூறப்பட்டுள்ள ஏதாவது ஒரு காரணத்தினால் செல்லத்தகாததாகிவிட்டால், அல்லது 33-வது பிரிவில் கூறப்பட்டுள்ள ஏதாவது ஒரு காரணத்தினால் விவாகரத்துக்கான ஓர் ஆணையின் வாயிலாக - ஒரு திருமணம் ரத்து செய்யப்படலாம்.*

திருமணங்களின் செல்லாத் தன்மை

31. செல்லாத் தன்மைக்கான ஆணையைப் பெறுவதற்கான காரணங்கள்: *1) இந்த சட்டத் தொகுப்பு அமலாவதற்கு முன்னால் செய்து கொள்ளப்பட்ட எந்தத் திருமணமும் கீழ்வரும் காரணங்களால் செயல்லத்தக்கதல்ல என்ற ஓர் ஆணையின் மூலம் ரத்து செய்யப்படலாம்:*

அ) திருமணத்தின்போது, அமலிலிருந்த எந்த ஒரு சட்டத்தின் ஷரத்துகளின் காரணமாக, திருமணத்தின் போது எந்த ஒரு தரப்பின் கணவன் அல்லது மனைவி ஒரு வாழ்க்கை துணையுடன் வாழ்ந்து கொண்டிருக்கிறார் என்ற காரணத்தினால் அத்திருமணம் செல்லத்தகாததாக இருந்தால்; அல்லது,

ஆ) திருமணத்தின்போது, தரப்புகள், பிரிவு 5-ன் இ) ஷரத்தில் விளக்கப்பட்டுள்ள தடை செய்யப்பட்டுள்ள உறவு முறையின் எல்லைகளுக்குள் இருந்தால்;

அதேபொழுதில், திருமணத்தின்போது அமலிலிருந்த எந்த ஒரு சட்டத்தின் ஷரத்துகளின் கீழ் அது செல்லத்தக்கதாயிருந்தால், இந்தத் துணைப் பிரிவின் (ஆ) ஷரத்தின் விதிகளின் கீழ் அத்தகைய திருமணம் எதுவும் ரத்து செய்யப்படக்கூடாது.

2) இந்த சட்டத் தொகுப்பு அமலுக்கு வந்ததற்குப் பின்னர் செய்து கொள்ளப்பட்ட எந்தத் திருமணமும் கீழ்வரும் காரணங்களினால் செல்லத்தக்கதல்ல என்ற ஓர் ஆணையின் கீழ் ரத்து செய்யப் படலாம்:

அ) ஒரு ***தார்மிகத் திருமணமாக*** *இருந்தால், 7-வது பிரிவின் (i), (iv) மற்றும் (v)-வது ஷரத்துகளில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளில் எதையாவது மீறுமேயானால்,*

ஆ) ஒரு சிவில் திருமணமாக இருந்தால், 8-வது பிரிவின் (i) மற்றும் (iv)-வது ஷரத்துகளில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளில் எதையாவது மீறினால்:

அதேபொழுதில், 7-வது பிரிவின் (ஙு)-வது ஷரத்தில் அடங்கியுள்ள தடையின் கீழ் வருகின்ற எதற்கும், திருமணத்தை ரத்து செய்வதற்கான எந்த நடைமுறைகளும் தொடங்கப்படு வதற்கு முன்னால், 21-வது பிரிவின் கீழ் திருமணம் ஒரு சிவில் திருமணமாகப் பதிவு செய்யப்பட்டிருந்தால், இந்தப் பிரிவில் அடங்கியுள்ள எதுவும் பொருந்தாது.

(34)

திருமணத்தைக் கலைத்தல்

32. கலைப்பதற்கான ஆணைக்கான காரணங்கள் : 1) இந்த சட்டத் தொகுப்பு அமலுக்கு வருவதற்கு முன்னால், செய்து கொள்ளப்பட்ட எந்தத் திருமணமும், திருமணத்தின் எந்தத் தரப்பாவது திருமணத்தின்போது முட்டாளாகவோ, அல்லது பைத்திய மாகவோ இருக்கிறார் என்ற காரணத்தின் பேரில், கலைப்பதற்கான ஆணையின் பேரில் ரத்து செய்யப்படலாம்.

2) இந்த சட்டத் தொகுப்பு அமலுக்கு வந்ததற்குப் பின்னர் செய்துகொள்ளப்பட்ட எந்தத் திருமணமும், பின்வரும் காரணங்களினால் கலைப்பதற்கான ஓர் ஆணையின் பேரில் ரத்து செய்யப் படலாம். அதாவது :-

அ) ஒரு தார்மிகத் திருமணமாயிருந்து 7-வது பிரிவின் (ii), (iii) மற்றும் (iv)-வது ஷரத்துகளில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளில் எதையாவது மீறுவதாயிருந்தால்....

ஆ) ஒரு சிவில் திருமணமாக இருந்து, 8-வது பிரிவின் (ii), (iii) மற்றும் (v)-வது ஷரத்துகளில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளை மீறினால்...

ஆனால், அதே சமயத்தில் ஒரு நிர்ப்பந்தமோ மோசடியோ இருந்தாலொழிய, ஒரு தார்மிகத் திருமணம் அது நிறைவு செய்யப் பட்டதற்குப் பின்னர், திருமணத்திற்கான கார்டியனின் சம்மதம் பெறப்படவில்லை என்ற காரணத்தினாலேயே செல்லத்தகாததாகாது, அல்லது அவ்வாறு கருதப்பட மாட்டாது.

* * * * *

(35)

விவாக ரத்து

33. விவாக ரத்து ஆணைக்கான காரணங்கள் : இந்த சட்டத் தொகுப்பு அமலுக்கு வருவதற்கு முன்னர், அல்லது அமலுக்கு வந்ததற்குப்பின்னர் செய்து கொள்ளப்பட்ட எந்தத் திருமணமும், கீழ்வரும் காரணங்களில் எதன் பேரிலாவது விவாகரத்து ஆணையின் பேரில் ரத்து செய்யப்படலாம். அவை யாவன:-

i) திருமணத்தின் போது, திருமணத்தின் எந்தத் தரப்பாவது ஆண்மை (ஆற்றல்) அற்று இருத்தல், மேலும் வழக்குத் தொடரப்படும் வரையிலும் தொடர்ந்து அவ்வாறே இருத்தல்;

ii) கணவன் ஒரு * * * வைப்பாட்டியை வைத்திருத்தல், அல்லது மனைவி வேறொருவரின் வைப்பாட்டியாகி இருத்தல், அல்லது ஒரு விலைமாதர் வாழ்க்கையை நடத்துதல்;

iii) திருமணத்தின் எந்தத் தரப்பாவது வேறு மதத்திற்கு மாறிச் சென்றதன் மூலம் இந்துவாக இல்லாமற் போதல்;

iv) எந்தத் தரப்பாவது குணப்படுத்த முடியாத அளவிற்கு மனநிலை சரியில்லாதவராக இருத்தல், மனுக் கொடுக்கப்படுவதற்கு முன் ஐந்தாண்டுகளுக்குக் குறைவில்லாத காலத்திற்குத் தொடர்ந்து சிகிச்சை பெற்றுக் கொண்டிருத்தல்; மற்றும்

v) எந்தத் தரப்பாவது ஒரு கடுமையான * * * வகைப்பட்ட தொழுநோயால் பாதிக்கப்பட்டிருத்தல்.

vi) **எந்தத் தரப்பாவது, மற்றையத் தரப்புக்கு எதிராக நீதிமன்றம் மூலமாகப் பிரிந்து வாழ்வதற்கான ஆணை அல்லது உத்தரவு பெறப்பட்டதற்குப்பின் இரண்டு ஆண்டுகள் அல்லது அதற்கு மேலாக மண வாழ்க்கை உடலுறவை மீண்டும் தொடங்காதிருத்தல்;**

vii) **மணவாழ்க்கை உரிமைகளை இரண்டு ஆண்டுகளுக்கு அல்லது அதற்கு மேலாக மீட்டெடுப்பதற்கான ஆணைக்கு இணங்குவதற்கு எந்தத் தரப்பாவது தவறியிருப்பது.**

(36)

34. திருமணம் ரத்து செய்யப்படுவதற்கான உரிமை: 1) திருமணத்தை ரத்து செய்வதற்கான ஓர் ஆணையை, ரத்து செய்வதற்கான ஆணைக்கான ஒரு மனுவின் மூலமாகவோ, அல்லது வேறு எந்த வழக்கிலும் ஒரு கோரிக்கையை எழுப்புவதன் மூலமாகவோ திருமணத்தின் ஒரு தரப்பினாலோ, அல்லது ஒரு வழக்குரைஞராலோ, அல்லது பாதிக்கப்பட்ட எந்த நபராலோ, அல்லது அக்கறையுள்ள எந்த நபராலோ பெறலாம்.

2) திருமணத்தைக் கலைப்பதற்கான அல்லது விவாகரத்துக்கான ஆணைக்கான ஒரு மனு, திருமணத்தின் ஒரு தரப்பின் வேண்டுகோளின் பேரில் மட்டுமே சமர்ப்பிக்கப்பட முடியும்.

ஆனால் அதே சமயத்தில், நிவாரணம் பெறுவதற்காக, எந்தத் தரப்பும் மற்றையத் தரப்பின் தவறை அல்லது இயலாமையை சாதகமாகப் பயன்படுத்திக் கொள்வதற்கு உரிமையில்லை.

(37)

35. வழக்குரைஞர்களை நியமித்தல் : 1) மாநில அரசானது ஒரு வழக்குரைஞரையோ அல்லது கூடுதலானவர்களையோ அரசுக்காக வாதாடுவதற்கு நியமிக்கலாம். அவர்களுக்குப் பின்வரும் உரிமைகள் இருக்கும் :-

i) பொது நலனை முன்னிட்டோ அல்லது எந்த நீதிமன்றத்தின் வேண்டுகோளின் பேரிலோ வாதாடுவது உசிதமானது என்று வழக்குரைஞர் கருதினால், அவர் எந்தத் திருமணத்தையும் ரத்து செய்வதற்கான எந்த வழக்கிலும் ஆஜராகலாம் அல்லது தலையிடலாம்;

ii) ரத்து செய்வதற்கான ஓர் ஆணையின் மூலம் ரத்து செய்வதுதான் பொருத்தமான நிவாரணமாக இருக்கும்போது, எந்தத் திருமணத்தையும் ரத்து செய்வதற்கான வழக்கைத் தொடரலாம்.

2) வழக்குரைஞரின் உரிமை செயல்படுத்தப்படுவது சம்பந்தமான, அல்லது அதன் விளைவான எல்லா விஷயங்களையும் முறைப்படுத்துவதற்கான விதிகளை மாநில அரசு உருவாக்கலாம்.

(38)

36. திருமணம் செய்துகொள்ளப்பட்ட மூன்று ஆண்டுகளுக்குள் விவாகரத்துக்கான எந்த மனுவும் சமர்ப்பிக்கப்படக் கூடாது: *1) இந்தப் பாகத்தில் என்ன கூறப்பட்டிருந்தபோதிலும், விவாகரத்துக்கான ஓர் ஆணைக்கான எந்த மனுவையும் - திருமணம் நடைபெற்ற தேதியிலிருந்து மூன்றாண்டுகள் முடிவடைந்திருந்தாலொழிய எந்த நீதிமன்றமும் ஏற்றுக் கொள்வது தகுதியுடையதல்ல;*

அதே சமயத்தில், நீதிமன்றம், உயர்நீதிமன்றத்தினால் உருவாக்கப்படும் எந்த விதிகளுக்கும் ஏற்ப செய்து கொள்ளப்படும் மனுவின் பேரில், மனுதாரருக்கு அசாதாரணமான இடர்ப்பாடு ஏற்பட்ட காரணத்தினாலும், அல்லது எதிர்வாதியின் அசாதாரணமான ஒழுக்கக்கேட்டின் காரணமாகவும், திருமணம் நடைபெற்ற தேதியிலிருந்து மூன்றாண்டுகள் முடிவதற்கு முன்னாலே கூட அந்த மனுவை அனுமதிக்கலாம். ஆனால், மனுவை விசாரிக்கும் போது, எந்தத் தவறான முறையிலோ அல்லது வழக்கின் தன்மையை மறைத்தோ மனுவைப் பெறுவதற்கு அனுமதி பெற்றதாகத் தோன்றினால், திருமணம் நடைபெற்று மூன்றாண்டுகள் முடிவடைவதற்கு முன்னால், நீதிமன்றம் வெளியிடும் ஆணை பயனளிக்காது என்று நிபந்தனை விதிக்கவேண்டும்; அல்லது அந்த மனுவைத் தள்ளுபடி செய்து விடலாம்; அதேபொழுதில் மூன்றாண்டுகள் முடிவடைந்த பிறகு அதே மனுவை அல்லது இவ்வாறு தள்ளுபடி செய்யப்பட்ட மனுவுக்கு ஆதாரமாக உள்ள சாராம்சத்தில் அதே விவரங்களுடன் கூடிய மனுவை மீண்டும் சமர்ப்பிப்பதை இது பாதிக்காது.

2) திருமணம் செய்து கொள்ளப்பட்ட தேதியிலிருந்து மூன்றாண்டுகள் முடிவடைவதற்கு முன்னால், விவாகரத்துக்காக ஒரு மனு சமர்ப்பிப்பதற்கு அனுமதி கோரி இந்தப் பிரிவின் கீழ் செய்துகொள்ளப்படும் விண்ணப்பம் சம்பந்தமாகத் தீர்ப்புக் கூறுகையில் நீதிமன்றம், மேற்படி திருமணத்தின் மூலமான குழந்தைகளின் நலன்களையும், மேலே கூறப்பட்ட மூன்றாண்டுகள் முடிவடைவதற்கு முன்னால் தரப்புகளிடையில் சமரசம் ஏற்படுவதற்கான நியாயமான சாத்தியப்பாடு இருக்கிறதா என்ற பிரச்சினையையும் கவனத்தில் எடுத்துக் கொள்ளும்.

(39)

திருமணம் ரத்து செய்யப்படுவதன் விளைவு

37. மீண்டும் திருமணம் செய்து கொள்வதற்குத் தரப்புகளுக்கு சுதந்திரம்: தகுதி வாய்ந்த ஒரு நீதிமன்றத்தின் ஓர் ஆணையின் மூலம் ஒரு திருமணம் ரத்து செய்யப்பட்டிருந்தால், அந்த ஆணைக்கு எதிராக மேல் முறையீடு எதுவும் செய்து கொள்ளப்படாத நிலையில், அல்லது அத்தகைய மேல்முறையீடு எதுவும் தள்ளுபடி செய்யப்பட்டிருந்தால், திருமணத்தின் சம்பந்தப்பட்ட தரப்புகள், முந்திய திருமணம் மரணத்தினால் இல்லாமல் செய்யப்பட்டது போன்று, மீண்டும் திருமணம் செய்து கொள்வது சட்டப்படியானதேயாகும்.

(40)

38. திருமணம் ரத்து செய்யப்பட்டதன் விளைவுகள் :

1) ஒரு திருமணம், செல்லாததாக்கப்படும் ஓர் ஆணையின் வாயிலாக ரத்து செய்யப்பட்டால், xxx சம்பந்தப்பட்ட தரப்புகள் ஏற்கனவே திருமணம் செய்து கொள்ளாதவர்களாகவே கருதப் பட வேண்டும் அல்லது அவர்கள் கணவன் - மனைவி உறவுடன் இருக்கவில்லை என்று கருதப்பட வேண்டும்.

ஆனால் அதேபொழுதில், ஒரு முன்னாள் கணவர் அல்லது மனைவி உயிருடனிருக்கிறார் என்ற காரணத்தினால் ஒரு திருமணம் செல்லத்தக்கதல்ல என்ற ஆணையின் பேரில் ரத்து செய்யப்பட்ட நிலையில், அதற்குப் பிந்திய திருமணம் நல்ல நோக்கத்தில் செய்து கொள்ளப்பட்டதாக மதிப்பிடப்பட்ட நிலை யில், மற்றும் ஒரு தரப்போ அல்லது இரு தரப்புகளோ, முந்திய கணவர் அல்லது மனைவி இறந்து விட்டதாகப் பூரணமாக நம்பி யிருந்த நிலையில், ஆணை பிறப்பிக்கப்படுவதற்கு முன்னால் பிறந்த குழந்தைகளைப் பற்றி ஆணையில் குறிப்பிடப்பட வேண்டும்; மற்றும் எல்லா அம்சங்களிலும் அவர்களது பெற்றோர் களின் சட்டப்படியான குழந்தைகளாகக் கருதப்பட வேண்டும், அவ்வாறே எப்பொழுதும் இருந்ததாகக் கருதப்படவேண்டும்.

2) ஒரு திருமணம், கலைக்கப்படுவதற்கான ஓர் ஆணையின் வாயிலாக, அல்லது விவாக ரத்துக்கான ஓர் ஆணையின் வாயிலாக ரத்து செய்யப்பட்டால் அந்த ஆணை வெளியிடப்பட்ட தேதியி லிருந்து தரப்புகள் மனைவி மற்றும் கணவன் என்ற உறவு அற்றுப் போனவர்களாவர். அந்தத் திருமணத்தின் மூலமாக ஏதாவது குழந்தைகள் பெறப்பட்டிருந்தால், எல்லா அம்சங்களிலும் அவர்கள் அவர்களது பெற்றோர்களின் சட்டப்பூர்வமான குழந்தைகளாகவே கருதப்பட வேண்டும், எப்போதும் அவ்வாறே இருந்ததாகவும் கருதப்படவேண்டும். அவர்களின் பெயர்கள் ஆணையில் குறிப் பிடப்படவேண்டும்.

(41)

அதிகார எல்லை வரம்பும் நடைமுறையும்

39. இந்த பாகத்தின் கீழ் நிவாரணம் வழங்கப்படுவதற்கான அதிகார எல்லை வரம்பு :- இந்த பாகத்தில் அடங்கியுள்ள எதுவும் எந்த நீதிமன்றத்திற்கும் கீழ்வருவனவற்றிற்கு அதிகாரம் அளிக்காது: அதாவது:

அ) திருமணம் இந்தியாவில் நடைபெற்றிருந்து, மற்றும் மனுதாரர் மனுவை சமர்ப்பிக்கும் சமயத்தில் இந்தியாவில் வசித்துக் கொண்டிருந்தார் என்ற நிலைமையில் அல்லாது, திருமணத்தை ரத்து செய்வதற்கான ஆணைகளைப் பிறப்பித்தல்.

ஆ) திருமணத் தரப்புகள், மனு கொடுக்கும் சமயத்தில் இந்தியாவில் வாழ்ந்து வந்தார்கள் என்ற நிலைமையில் அல்லாது, திருமணத்தைக் கலைத்தல் அல்லது விவாக ரத்துக்கான ஆணை பிறப்பித்தல். அல்லது,

இ) இந்த பாகத்தின் கீழ், மனுக் கொடுக்கும் சமயத்தில் மனுதாரர் இந்தியாவில் வசித்துக் கொண்டிருந்த நிலைமையில், அல்லாது திருமணத்தை செல்லாததாக்கும் ஓர் ஆணை அல்லது திருமணத்தைக் கலைக்கின்ற அல்லது விவாகரத்துக்கான ஆணையைத் தவிர வேறு எந்த நிவாரணமும் வழங்குவது.

(42)

40. <u>எந்த நீதிமன்றத்திற்கு மனு செய்ய வேண்டும் என்பது பற்றியும், இரகசியமாக தனி அறையில் விசாரிப்பது பற்றியும்;</u>
(1) இந்தப் பகுதியின் கீழ் எந்த மனுவையும் தரப்புகள்திருமணம் செய்து கொண்ட இடம் கணவன் மனைவி இருவரும் சேர்ந்து வாழும் இடம் அல்லது கடைசியாக அவர்கள் சேர்ந்து வாழ்ந்த இடம் ஆகியவற்றின் எல்லைக்குட்பட்ட மாவட்ட நீதிமன்றத்துக்குச்சமர்ப்பிக்க வேண்டும்.

2) இந்தப் பிரிவின்படியான வழக்கு நெறிமுறைகள் அத்தனையும் தனிமை அறையில் நடத்த நீதிமன்றம் முடிவு செய்யலாம்; வழக்குக்கு சம்மந்தப்பட்டவர்கள் <u>இருவரில் ஒருவர் விரும்பினாலும்</u> நீதிமன்றம் இவ்வாறு முடிவு செய்யலாம்.

(43)

41. மனுக்களின் உள்ளடக்கங்களும் சான்றாதாரங்களும்:-
1) இந்தப் பிரிவின்படி போடப்படும் எந்த மனுவிலும், எந்த அடிப்படையில் நிவாரணம் கோருகிறார்கள் என்பதை தெளிவாகவும் விளக்கமாகவும் சொல்ல வேண்டும். திருமணத்தை ரத்து செய்யக் கோரும் மனுவாகவோ அல்லது தீர்ப்புவழி பிரிவுக்கான மனுவாகவோ இருந்தால் இது விஷயத்தில் கணவன் மனைவிக்கிடையே எந்தவிதமான கூட்டுச்சதியும் இல்லை என்று உறுதி கூற வேண்டும்.

(44)

42. <u>சிவில் நடைமுறைச் சட்டத்தை அமல்படுத்துவது :-</u>
இந்தப் பகுதியில் சொல்லப்பட்டுள்ள இதர விதி முறைகளுக்குட்பட்டு இந்தப் பகுதியின் கீழ் ஒருதரப்புக்கும் இன்னொரு தரப்புக்கும் இடையே நடைபெறும் எல்லாவிதமான சட்ட நடவடிக்கைகளும் சிவில் நடைமுறைச் சட்டம் 1908ன்படி (சட்டம் V 1908) முறைப்படுத்தப்பட வேண்டும்.

43. நீதிமன்ற நடவடிக்கை குறித்த தீர்ப்பாணை: இந்தப் பகுதியின்கீழ் போடப்பட்ட எந்த மனுவும், அதை எதிர்த்து வழக் காடப்பட்டாலும் அல்லது வழக்காடப்படாவிட்டாலும், நீதிமன்றம் திருப்தி அடைந்தால் நிவாரணம் கொடுப்பதற்கு தகுந்த அடிப்படை இருக்கும்போது நிவாரணம் கொடுக்கலாம். இந்த மனு, மனுதாரரும் எதிர்மனுதாரரும் சேர்ந்து, வஞ்சகமான உடன்பாடு செய்து கொள்ள வில்லை என்பதை உறுதி செய்துகொள்ள வேண்டும். அதே முறையில் பிறர் மனை புணர்தல் என்ற குற்றச்சாட்டு இருந்தால், அதை ஏற்றுக் கொள்ளவோ, அல்லது மன்னிக்கப்படவோ இல்லை என்பதை உறுதி செய்ய வேண்டும்.

(45)

(46)

44. திருமணத்தை ரத்து செய்யும் நடவடிக்கையில் பிறப்பிக்கும் மற்ற உத்திரவுகள்:- இந்தப் பிரிவின் கீழ்போடப்படும் எந்த மனுவிலும், மனைவிக்கு தனிப்பட்ட முறையில் எந்த வருமானமும் இல்லாத சூழ்நிலையில் தன்னைக் காப்பாற்றிக் கொள்ளவோ அல்லது நீதிமன்ற நடவடிக்கையை நடத்துவதற்கோ மனைவி போடும் மனுவை பரிசீலித்து மனைவிக்கு இந்த நீதிமன்ற நடவடிக்கை முடியும்வரை அதை நடத்துவதற்கான பணமும், மாதாந்திர பிரிமனை பணமும் கணவனுடைய நிகர வருமானத்தில் ஐந்தில் ஒரு பங்குக்கு மேற்படாமல் அளித்து நீதிமன்றம் உத்திரவு போடலாம்.

(47)

45. நிரந்தர ஜீவனாம்சம்: 1)இந்தப் பிரிவின் கீழ் அதிகாரம் செலுத்தும் எந்த நீதிமன்றமும் தீர்ப்பாணை வழங்கும் போதோ அல்லது அதற்குப் பிறகோ, அதற்கேற்ற மனு மனைவியினால் போடப்பட்டால், மனைவி நன்நடத்தை உள்ளவராகவும், மீண்டும் திருமணம் செய்து கொள்ளாமலும் இருந்தால், கணவனுடைய சொத்தை ஜீவனாம்சத்துக்காகப் பிணையாக வைத்து உத்திரவிட முடியும். இம்மாதிரி பிணையாக வைத்து உத்திரவிடும்போது மொத்தமாக ஒரு குறிப்பிட்டத் தொகைக்காக பிணையாக வைத்தோ அல்லது மாதாந்திரத்திற்கு குறிப்பிட்ட பணம் இவ்வளவு என்று சொல்லியோ உத்திரவிட முடியும். மனைவி உயிருள்ள வரை ஜீவனாம்சம் பெற உத்திரவிட முடியும். இம்மாதிரி உத்திரவிடும்போது கணவன் மனைவி ஆகியோருடைய நன்னடத்தையை கருத்தில் கொள்ள வேண்டும்.

2) உட்பிரிவு (1)-ன் கீழ் போடப்பட்ட உத்திரவிற்குப் பிறகு நிலைமை மாறிவிட்டால் எந்த நபரும் அதற்கான மனு போட்டால் அதை விசாரித்து மாறியுள்ள சூழ்நிலைக்கேற்ப முதலில் போட்ட உத்திரவை மாற்றி அமைத்தோ, அல்லது முழுமையாக ரத்து செய்தோ நீதிமன்றம் உத்திரவிட முடியும். மாறியுள்ள நிலைமைகளை நன்கு கவனித்து எது சரியோ அத்தகைய உத்திரவை நீதிமன்றம் அளிக்கலாம்.

3) உட்பிரிவு (1) அல்லது (2) ஆகியவற்றின் கீழ் மனைவிக்கு சாதகமாக போடப்பட்ட உத்திரவை, மனைவி மறுமுறை திருமணம் செய்துக் கொண்டாலோ அல்லது நன்நடத்தை இல்லாமல் இருந்தாலோ அந்த உத்திரவை நீதிமன்றம் ரத்து செய்ய முடியும்.

(48)

46. குழந்தைகள் பாதுகாப்பு: *இந்தப் பகுதியின் கீழ் நடைபெறும் எந்த நீதிமன்ற நடவடிக்கையிலும் அவ்வப்போது நிலைமைக்கேற்றவாறு குழந்தைகளுடைய பாதுகாப்பு, அவர்களுடைய பராமரிப்பு, கல்வி ஆகியவற்றிற்காக நீதிமன்றம் தகுந்த உத்திரவைப் போடலாம். அம்மாதிரி உத்திரவு போடும்போது குழந்தைகளுடைய விருப்பத்தையும் கருத்தில் கொள்ள வேண்டும்.*

இந்த நீதிமன்ற நடவடிக்கையில் தீர்ப்பாணை வழங்கிய பிறகோ அல்லது அது நிலுவையிலிருக்கும்போதோ போடப்பட்ட இடைக்கால உத்திரவை, நிலைமைக்கேற்றவாறு குழந்தைகளுடைய பாதுகாப்பு, அவர்களுடைய பராமரிப்பு, கல்வி ஆகியவற்றிற்காக நீதிமன்றம் அவ்வப்போது உள்ள நிலைமைக்கேற்ப தகுந்த உத்திரவை போடலாம்.

(49)

47. சொத்தைப் பற்றி கருத்து: இந்தப் பிரிவின்கீழ் நடைபெறும் நீதிமன்ற நடவடிக்கையை கவனிக்கும் எந்த நீதிமன்றமும்; தீர்ப்பாணையில் கீழ்க்காணும் சொத்தை குறித்து உத்திரவிடலாம்:

i) தீர்ப்பாணை போடுவதற்கு முன்பு கணவனுக்கும் மனைவிக்கும் சேர்ந்து உரிமையுள்ள சொத்து;

ii) பிரிவு 93-ல் சொல்லியுள்ள வரதட்சிணை சொத்து அல்லது மனைவிக்கு மட்டும் உரிமையுள்ள கணவன் பொறுப்பிலுள்ள ஏனைய சொத்துக்கள்.

(50)

தீர்ப்பாணை மற்றும் உத்திரவுக்கெதிரான மேல் முறையீட்டை அமுல்படுத்தல்:-

48. தீர்ப்பாணை மற்றும் உத்திரவுகளை அமல்படுத்துவதும் அதற்கான மேல்முறையீடும்: *நீதிமன்றத்தினால் போடப்பட்ட உத்திரவுகளும், தீர்ப்பாணைகளும் சிவில் அசல் அதிகார வரம்பிற்கு உட்பட்ட நீதிமன்றங்களால் போடப்பட்ட உத்திரவுகளைப்போல் அமுல்படுத்தப்படும். இந்த உத்திரவிற்கு எதிராக அவ்வப்போதுள்ள விதிமுறைகளுக்கேற்ப மேல் முறையீடு செய்யலாம்.*

* * * *

செலவு தொகைக்கான விஷயத்தில் மட்டும் மேல்முறையீடு செய்ய முடியாது.

(51)

பாகம் IV

மருமக்கத்தாயம், மற்றும் அலிய சந்தான முறை திருமணங்களை ரத்து செய்ய உள்ள சிறப்பு விதிமுறைகள்

49. மருமக்கத்தாயம் அல்லது அலியசந்தான முறை திருமணத்தை ரத்து செய்தல்:-

1) பிரிவு 24 அ உட்பிரிவு (4)ல் சொல்லப்பட்டவைகளுக்குட் பட்டு அந்தப் பிரிவின்படி செய்யப்பட்டுள்ள திருமணங்கள் கீழ்க்காணும் முறையில் ரத்து செய்யப்படலாம் -

அ) பிரிவு 49அ-வின்படி திருமணம் செல்லாதது என்று உத்திர விடலாம்;

ஆ) பிரிவு 49ஆ-வின்படி மணமுறிவு உத்திரவு போடலாம்.

இ) தாங்கள் திருமணத்தை ரத்து செய்வதாக ஆவணத்தை பதிவு செய்யலாம்.

ஆனால் பெண் 18 வயதிற்குட்பட்டவளாக இருந்தால் அவளுக்கு 18-வயது முடியும்வரை திருமணத்தை மணமுறிவு செய்ததாக உத்திரவு போட முடியாது.

2) பதிவு ஆவண மூலம் திருமணம் ரத்து செய்யப்பட்டால் பதிவு செய்த தேதியிலிருந்து அது அமுலுக்கு வரும்.

(52)

49.அ. மருமக்கத்தாயம் மற்றும் அலியசந்தான திருமணத்தை செல்லாததெனத் தீர்ப்பாணை வழங்க தேவைப்படும் ஆதாரங்கள் :-

1) இந்தத் தொகுப்பு அமுலுக்கு வருமுன் நடைபெற்ற மருமக்கத்தாய திருமணம், மற்றும் அலியசந்தான சட்டப்படி நடைபெற்ற திருமணம் கீழ்க்காணும் காரணங்களுக்காக செல்லத்தக்கதல்ல என்று தீர்ப்பாணை வழங்கி ரத்து செய்யலாம்.

அ) திருமணம் நடைபெற்றபோது அமுலிலிருந்த சட்ட விதிகளின்படி கணவனோ மனைவியோ உயிருடன் இருத்தல்; அல்லது

ஆ) திருமணம் செய்து கொண்டவர்கள் பிரிவு 5 உட்பிரிவு (இ)-ன்படி தடுக்கப்பட்ட உறவினர்களாக இருத்தல்;

ஆனால் திருமணம் நடைபெற்றபோது அமுலில் இருந்த சட்டப் படி அத்திருமணம் செல்லத்தக்கதாக இருந்தால் உட்பிரிவு (அ)-ல் சொல்லியுள்ளபடி ரத்து செய்ய முடியாது.

2) பிரிவு 24அ- உட்பிரிவு 4-ன்படி செய்யப்பட்ட திருமணம், பிரிவு 7 உட்பிரிவு (IV) ல் (1)-ல் சொல்லியுள்ள நிபந்தனைகளுக்கு எதிராக இருந்தால் அது செல்லத்தக்கதல்ல என்று கூறி உத்திரவிடலாம்.

3) இந்தப் பிரிவின்படி திருமணம் செல்லத்தக்கதல்ல எனத் தீர்ப்பாணை வழங்கினால், அவ்வாறு திருமணம் செய்துக் கொண்டவர்கள் எந்தக் காலத்திலும் கணவன் மனைவியாக வாழ்ந்தார்கள் என்றோ அத்திருமணம் நடைபெற்றதாகவோ எடுத்துக் கொள்ள முடியாது.

ஆனால் முன்னாள் கணவனோ அல்லது மனைவியோ உயிருடன் இருந்தார்கள் என்ற காரணத்திற்காக திருமணம் செல்லத் தக்கதல்ல என்று தீர்மானிக்கப்பட்டாலும் முன்னாள் கணவனோ மனைவியோ இறந்து விட்டார்கள் என்ற நல்லெண்ணத்தில் மறுமுறையும் அவர்கள் திருமணம் செய்துக் கொண்டால் திருமண ரத்து தீர்ப்பாணை வழங்குமுன் பிறந்த குழந்தைகள் அவர்களுடைய பெற்றோருக்கு சட்டரீதியாக பிறந்த குழந்தைகள் என கருதப்படுவார்கள்.

(53)

49. ஆ) மருமக்கத்தாயம் மற்றும் அலிய சந்தான சட்ட முறை திருமணத்தை ரத்து செய்வதற்கான மனுவும் அதன் நடைமுறையும் *: 1) பிரிவு 24அ உட்பிரிவு 4-ல் சொல்லப்பட்டவைகளுக்குட்பட்டு இந்தப் பிரிவின்படி திருமணம் செய்து கொண்ட எந்த நபரும் மண முறிவு உத்தரவிற்காக மாவட்ட நீதிமன்றத்திற்கு மனு செய்யலாம்.*

2) இந்த மனுவில் எந்த இடம், எந்தத் தேதி, மற்றும் ஒப்புதல் கொடுத்த பாதுகாவலருடைய பெயர் மற்றும் விலாசம் ஆகியவற்றை விரிவாக கொடுக்க வேண்டும்; திருமணம் நடைபெற்ற விவரத்தையும் தரவேண்டும்.

3) இந்த மனுவினுடைய நகல் மனுதாரருடைய செலவில் எதிர் மனுதாரருக்கு கொடுக்கப்பட வேண்டும்.

4) பிரிவு 24அ-வின்படி செய்யப்பட்ட திருமணம் பிரிவு 7 - உட்பிரிவு (i) - (iv)-ல் சொல்லப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு உட்பட்டிருந்தால், திருமணம் நடந்து 6 மாதத்திற்கு பின்பு, அதை ரத்து செய்யவேண்டும் என்று மனு செய்தால், எதிர்மனுதாரருக்கு இந்த மனுவின் நகல் கொடுக்கப்பட்டு ஓராண்டானதும், நீதிமன்றம் தகுந்த விசாரணைக்குப் பிறகு திருப்தி அடைந்தால், அந்தத் திருமணத்தை ரத்து செய்து உத்திரவிடலாம்.

5) இந்தத் திருமண ரத்து உத்திரவு, உத்திரவு போட்ட தேதியிலிருந்து அமுலுக்கு வரும்; இந்தப் பகுதியில் சொல்லப்பட்டுள்ள விதிமுறைகளுக்கு உட்பட்டு, மறுபடியும் திருமணம் செய்து கொள்ள உரிமை உண்டு.

6) இந்தப் பிரிவின்படி திருமணத்தை மணமுறிவு செய்து தீர்ப்பாணை வழங்கப்பட்டால், தீர்ப்பாணை வழங்கப்பட்ட தேதியிலிருந்து அவர்களிடையே உள்ள கணவன் மனைவி உறவு முடிவுக்கு வரும். தீர்ப்பாணை வழங்குவதற்கு முன்பு பிறந்த குழந்தைகள் எல்லாக் காலத்திற்கும் எல்லாச் சூழ்நிலைகளுக்கும், சட்ட ரீதியான குழந்தைகள் என கருதப்படுவார்கள்.

(54)

50. மருமக்கதாயம் அல்லது அலியசந்தான திருமணங்களுக்குரிய சில விதிமுறைகள்: *1) பிரிவு 24அ-ன் படி செய்யப்பட்ட திருமணங்களுக்கு பிரிவு 39 முதல் 48 வரை உள்ள விதிமுறைகள் பொருந்தும். இந்தப் பகுதியின்படி அந்தத் திருமணங்களை ரத்து செய்ய மேற்படி பிரிவுகளை அமுல்படுத்த வேண்டும்.*

பாகம் II மற்றும் III ஆகியவற்றில் சொல்லப்பட்டுள்ளவை இந்தப் பிரிவின்படி செய்த திருமணங்களுக்குப் பொருந்தாது. பிரிவு 24அ உட்பிரிவு (4) ல் சொல்லப்பட்டுள்ளவைகளை இந்தப் பிரிவு கட்டுப்படுத்தாது. ஆனால் உட்பிரிவு (1)க்கு உட்பட்டு அது இயங்க வேண்டும்.

(55)

பாகம் V

பாதுகாப்பு

51. முந்தையத் திருமணங்களின் பாதுகாப்பும் அதற்கான சிறப்பு விதிமுறைகளும்: 1) இந்தத் தொகுப்பு வருவதற்கு முன் செய்யப்பட்ட செல்லத்தக்க திருமணங்கள் திருமணம் செய்து கொண்டவர்கள் ஒரே கோத்திரத்தை சேர்ந்தவர்கள் என்பதற்காகவோ அல்லது, வெவ்வேறு ஜாதிகளை சேர்ந்தவர்கள் என்பதற்காகவோ ஒரே ஜாதியின் வெவ்வேறு உட்பிரிவுகளைச் சேர்ந்தவர்கள் என்பதற்காகவோ செல்லத்தகாதது என்ற நிலை வராது. எப்போதும் அது செல்லத்தக்கது என்றும் சொல்ல முடியாது.

2) இந்தத் தொகுப்பு அமுலுக்கு வருமுன், மருமக்கதாயம், மற்றும் அலியசந்தான சட்டத்தைப் பின்பற்றும் பெண்ணுக்கும், இந்து ஆணுக்கும் நடைபெற்ற திருமணம், இந்தத் தொகுப்பு அமுலுக்கு வந்தபின் செல்லத்தக்க ஒன்றாகும். அது தொடர்ந்து செல்லத்தக்க திருமணமாகும். மருமக்கதாயம், மற்றும் அலிய சந்தான திருமணங்களை ரத்துச் செய்ய இந்தத் தொகுப்பில் சொல்லப்பட்டுள்ள சிறப்பு விதிமுறைகள், திருமணம் செய்து கொண்டவர்கள் மேற்படி சட்டங்களுக்குட்பட்டவர்கள் என்று கருதி அந்த விதிமுறைகளை பின்பற்ற வேண்டும்.

மருமக்கதாயம் சட்டத்தில், பிரிவு (3) உட்பிரிவு (ஆ) விளக்கப்பட்டுள்ள இனத்தைச் சேர்ந்த பெண் அந்த சட்டத்தினால் உட்படுத்தப்பட்ட அல்லது உட்படுத்தப்படாத இந்து ஆணை, அப்போதுள்ள வழக்கத்திலிருந்த சடங்குகள்படி, இந்தத் தொகுப்பு வருவதற்குமுன் திருமணம் செய்துக் கொண்டால் உட்பிரிவு (2) உள்ளடக்கி, அது செல்லத்தக்க ஒன்றாக அமையும். இருவரும் கணவன் மனைவியாக உறவு வைத்துக்கொள்ள எந்தத் தடையும் இருக்கக் கூடாது.

இந்தத் தொகுப்பு அமுலுக்கு வருமுன் திருமணம் செய்துக் கொண்ட இருவர்களின் வழக்கப்படியோ, அல்லது ஒருவரின் வழக்கப் படியோ, திருமணம் ரத்து செய்யப்பட்டிருந்தால் இந்த உட்பிரிவில் சொல்லப்பட்ட எதுவும் அந்த ரத்தை பாதிக்காது.

51-அ இந்தத் தொகுப்பு வருவதற்கு முன்போ, பின்போ ரத்து செய்யப்பட்ட, சில செல்லத்தக்கத் திருமணங்கள் மூலமாக பிறந்த குழந்தைகளை இது பாதிக்காது. இந்தத் தொகுப்பு

வருவதற்கு முன்பு, மருமக்கதாயம் அல்லது அலியசந்தான சட்டத்திற்கு உட்பட்ட ஒரு பெண்ணுக்கும் ஓர் இந்திய ஆணுக்கும் நடைபெற்றத் திருமணம் அப்போதுள்ள சட்டப்படியோ, அல்லது அதற்குப் பின் ஏற்பட்ட சட்டப்படியோ, அல்லது பிரிவு 51 உட்பிரிவு (3)-ன் படியோ நடந்த திருமணம் ரத்து செய்யப்பட்டாலோ, அல்லது திருமணமானவரில் ஒருவர் இறந்துவிட்டாலோ அல்லது வேறு காரணங்களாலோ, அந்தத் திருமணத்தின் மூலமாகப் பிறந்த குழந்தைகளின் சட்ட உரிமைகளை அந்த ரத்து பாதிக்காது. அவர்களுடைய உரிமைகள் அவர்களுடைய வாரிசுகளுக்கும் கிடைக்கும்.

(2) இந்தத் தொகுப்பு அமுலுக்கு வருவதற்கு முன்பு நிலுவையிலுள்ள வழக்கில் ரத்து செய்யக் கோரும் மனு, இல்லா நிலையது திருமணம் மனுவாகவோ அல்லது தீர்ப்பு வழி பிரிவுரைக்கான மனுவாகவோ இருந்தால் இதில் எதுவாக இருந்தாலும் அப்போதுள்ள விதிமுறைகளின் படி தீர்ப்பாணை வழங்கப்படும். இந்த தீர்ப்பாணை வழங்குவதற்கு முன்பாகவே, இந்தத் தொகுப்பு அமுலுக்கு வந்துவிட்டாலும், அது அமுலுக்கு வராததாகக் கருதி தீர்ப்பாணை வழங்கப்படும்.

51. ஆ. நிலுவையிலுள்ள நடவடிக்கைகளைப் பாதுகாத்தல். விவாக ரத்திற்காகவோ, அல்லது தீர்ப்பு வழி பிரிவுரைக்காகவோ, போடப்பட்ட மனு, *மனுபோட்ட தேதியிலிருந்த சட்டத்தின் படி தீர்ப்பாணை வழங்கப்படும்; அது நிலுவையில் இருக்கும் போது இந்தத் தொகுப்பு அமுலுக்கு வந்தாலும், இந்தத் தொகுப்பு அமுலுக்கு வந்ததாகக் கருதாமல் தீர்ப்பாணை வழங்கப்படும்.*

(56)

பகுதி III - தத்து எடுப்பு

பாகம் 1

தத்து எடுப்பு அல்லது சுவீகாரம் பொது

52. இந்தப் பகுதிக்கு எதிராக தத்து எடுத்தல் தடுக்கப்பட்டுள்ளது. 1) இந்தப் பகுதிக்கு சொல்லப்பட்டுள்ள விதிமுறைகளுக்கெதிராக, இந்தத் தொகுப்பு அமுலுக்கு வந்த பிறகு எந்த இந்து ஆணும் தத்து எடுக்கக் கூடாது.

2) பிரிவு 66 உட்பிரிவு (2)ல் சொல்லப்பட்டுள்ளவைகளுக்குத் தவிர, இந்தப் பகுதியில் சொல்லப்பட்டவைகளுக்கு எதிராக எடுக்கும் எந்தத் தத்து எடுப்பும் செல்லாது.

3) சட்ட ரீதியாக சரியில்லாத எந்தத் தத்து எடுப்பும், தத்து எடுக்கப்பட்டவரின் குடும்பத்தில் எந்த உரிமையும் கொண்டாட முடியாது. அதே முறையில் அவர் பிறந்த குடும்பத்தில் அவருக்கிருந்த எந்த உரிமையும் பாதிக்கப்படாது.

(57)

53. தத்து எடுப்பதற்கான அடிப்படைத் தேவைகள்: கீழ்க்காணும் சூழ்நிலைகளைத் திருப்தி செய்தால் தவிர எந்தத் தத்து எடுப்பும் செல்லாது:

i) தத்து எடுப்பவர் அதற்கான தகுதியையும் உரிமையையும் பெற்றிருக்க வேண்டும்.

ii) தத்து கொடுப்பவர் அதற்கான தகுதியைப் பெற்றிருக்க வேண்டும்.

iii) தத்து எடுத்துக் கொள்ளப்பட்டவர் அதற்கான தகுதியைப் பெற்றிருக்க வேண்டும்;

iv) தத்து கொடுப்பதும் எடுப்பதும் நேரடியாக நடைபெற்றால் தான் அது முழுமை பெறும்;

v) இந்தப் பகுதியில் சொல்லப்பட்டுள்ள மற்ற நிபந்தனைகளைப் பூர்த்தி செய்ய வேண்டும்.

(58)

தத்து எடுப்பதற்கான தகுதிகள்

54. ஓர் இந்து ஆணுக்கு தத்து எடுப்பதற்கான தகுதிகள்: பதினெட்டு வயது முடிந்து நல்ல மன நிலையிலுள்ள எந்த இந்து ஆணும் தத்து எடுத்துக் கொள்ளும் தகுதி உடையவராவார். தத்து எடுத்துக்கொள்ளும் ஓர் ஆணுக்கு **மனைவி உயிருடன் இருந்தால்** அவருடைய ஒப்புதல் இல்லாமல் தத்து எடுக்கக்கூடாது. ஒன்றுக்கு மேற்பட்ட மனைவியர் இருந்தால் ஏதாவது ஒரு மனைவியிடம் ஒப்புதல் பெற வேண்டும். ஒப்புதல் கொடுப்பதற்கான தகுதி யாருக்கும் இல்லை என்றால் அம்மாதிரி ஒப்புதல் பெற வேண்டியதில்லை.

விளக்கம் : மனைவிக்கு 18-வயது முடியாமலிருந்தால் அல்லது, மனநிலை பாதிக்கப்பட்டவராக இருந்தால் அவருக்கு அந்தத் தகுதி இல்லை.

(59)

55. தத்து எடுக்க விதவைக்குள்ள தகுதிகள்:- *(1) ஓர் இந்து விதவை நல்ல மனநிலை உடையவராக இருந்து 18-வயது முடிந்தவராக இருந்தால் தன்னுடைய கணவனுக்காக ஒரு மகனை தத்து எடுக்க முடியும். கீழ்க்காணும் நிபந்தனையை அவள் பூர்த்தி செய்ய வேண்டும்:*

அ) தத்து எடுப்பதற்கு அவளுடைய கணவன் எந்தத் தடையையும் விதித்திருக்கக் கூடாது.

ஆ) அவளுடைய தத்து எடுக்கும் அதிகாரம் முடிவிற்கு வந்து இருக்கக்கூடாது.

(2) உட்பிரிவு (1)-ல் சொல்லப்பட்டுள்ள எதுவும் 18 வயது பூர்த்தியடையாத ஓர் இந்து விதவையினுடைய தத்து எடுக்கும் உரிமையை பாதிக்காது. ஒரு குறிப்பிட்ட மகனை தத்து எடுத்துக் கொள்ளும் உரிமை அவளுடைய கணவனால் கொடுக்கப்பட்டு இருக்க வேண்டும்.

(60)

56. தத்து எடுப்பதைக் குறித்துள்ள அதிகாரமும் தடையும்: *1) எந்த இந்து ஆண்மகனும், தனக்கு ஒரு மகனை தத்து எடுக்கும் அதிகாரம் இருந்தால், தன்னுடைய மறைவிற்கு பிறகு ஒரு மகனை தத்து எடுக்கும் அதிகாரத்தை மனைவிக்கு அளிக்கலாம். அதே முறையில் தத்து எடுக்கக்கூடாது என்றும் தடுக்கலாம்.*

2) ஒன்றுக்கு மேற்பட்ட மனைவியர் இருக்கும் போது, ஒருவருக்கோ அல்லது எல்லோருக்குமோ தத்து எடுக்கும் உரிமையை கொடுக்கலாம். அதே முறையில் அவர்களை தத்து எடுக்கக் கூடாது என்றும் தடுக்கலாம்.

3) ஓர் இந்து ஒன்றுக்கு மேற்பட்ட விதவைகளை விட்டு இறந்துவிட்டால் ஒரு குறிப்பிட்ட விதவைக்கு மட்டும், அவரது விதவைகளுக்கு மட்டும் தத்து எடுக்கும் அதிகாரத்தை தான் இறப்பதற்கு முன் அளித்திருந்தால், அம்மாதிரி குறிப்பிடப்படாத மற்ற விதவைகளுக்கு அந்த அதிகாரம் வழங்கப்படவில்லை என்று பொருள் படும்.

(61)

57. அதிகாரம், தடை மற்றும் ரத்து ஆகியவை குறித்த முறைகள்: *1) தத்து எடுக்கும் அதிகாரத்தையோ அல்லது தத்து எடுக்ககூடாது என்ற தடையையோ சட்ட ரீதியாக அளிக்க பதிவுச் சட்டம் 1908 (XVI - 1908)-ன் படி தகுந்த ஆவணத்தின் மூலமாக பதிவு செய்ய வேண்டும். அல்லது இந்திய வாரிசுரிமைச் சட்டம் 1925 (XXXIX 1925) பிரிவு 63-ன்படி உயில் எழுதப்பட்டிருக்க வேண்டும்.*

2) தத்து எடுக்கும் அதிகாரமோ, அல்லது தடையோ ஏற்கனவே வழங்கப்பட்டிருந்தால், தகுந்த ஆவணங்கள் மூலம் அல்லது உயில் மூலம் அதை ரத்து செய்து விடலாம்.

3) உயில் மூலமாக அந்த தத்து எடுக்கும் அதிகாரமோ அல்லது தடையோ விதிக்கப்பட்டிருந்தால் இந்திய வாரிசுரிமைச் சட்டம் 1925 (XXXIX 1925) அட்டவணை III பிரிவு 70-ல் சொல்லியுள்ளபடி அதை ரத்து செய்யலாம்.

(62)

58. இரண்டுக்கும் அல்லது அதற்கும் மேற்பட்ட விதவைகளின் தத்து எடுக்கும் உரிமை: ஓர் இந்து இரண்டும் அல்லது அதற்கும் மேற்பட்ட விதவைகளை விட்டு விட்டு இறந்து விட்டால், ஒரு மகனை தத்து எடுக்கும் தகுதி எல்லோருக்கும் இருந்தால் அவர்களுக்கிடையே கீழ்க்காணும் முறையில் தத்து எடுக்கும் தகுதி நிர்ணயிக்கப்படும்:-

அ) ஒன்றுக்கு மேற்பட்டவருக்கு முன்னுரிமை அளிக்கப் பட்டிருந்தால் அதன்படி தத்து எடுக்கப்பட வேண்டும்.

ஆ) அம்மாதிரி முன்னுரிமை அளிக்கப்படாமல் இருக்கும் போது பிரிவு 59-ல் சொல்லப்பட்டுள்ள வரிசைப்படி தத்து எடுக்கப்படும் உரிமை நிர்ணயிக்கப்படும்.

இ) தத்து எடுக்க உரிமை அளித்தோ, அல்லது தத்து எடுப்பதை தடுத்தோ அவர் எந்த ஏற்பாடும் செய்யவில்லை என்றால் பிரிவு 59-ல் சொல்லியுள்ளபடி, விதவைகளின் வரிசை முறை நிர்ணயிக்கப்படும்.

ஈ) உட்பிரிவு (அ) மற்றும் (இ)-ன் படி உரிமை பெற்ற விதவை தனக்குள்ள உரிமையை தனக்கடுத்துள்ள விதவைக்கு பதிவு ஆவணம் மூலம் கொடுத்துவிடலாம். அம்மாதிரி எதுவும் கொடுக்கப்படவில்லை என்றாலோ அல்லது ஒரு நியாயமான காலத்திற்குள் தத்து எடுக்காவிட்டாலோ, அவருக்குள்ள உரிமை அடுத்தடுத்துள்ள விதவைகளுக்கு மாறி, கடைசி விதவைகளுக்கு வந்து சேரும்.

(63)

59. மனைவிகள் மற்றும் விதவைகளுக்கிடையே உள்ள முந்துரிமைத் தகுதி : மனைவிகள் மற்றும் விதவைகளுக்கிடையேயுள்ள முந்துரிமைத் தகுதி அவர்கள் அவரைத் திருமணம் செய்துக் கொண்ட தேதியைப் பொறுத்து நிர்ணயிக்கப்படும்.

(64)

60. விதவையினுடைய தத்து எடுக்கும் உரிமை முன்னர் தத்து எடுத்த காரணத்தினால் மறைந்து விடாது. இந்தப் பகுதியில் சொல்லப்பட்டவைகளுக்குட்பட்டு, ஒரு விதவைக்கு கொடுக்கப் பட்ட அதிகாரத்தில் கணவன் வேறு வகையாக சொல்லியிருந்தால் தவிர, பல மகன்களை ஒருவனுக்குப்பின் ஒருவனாக அவர்கள் இறந்த பிறகு தத்து எடுத்துக் கொள்ளலாம்.

(65)

61. விதவையின் உரிமைக்கு முடிவு :- (1) ஒரு விதவையின் தத்து எடுக்கும் உரிமை கீழ்க்காணும் காரணங்களினால் முடிவுக்கு வரும்:

(அ) அவள் மறுமுறை திருமணம் செய்துகொண்டாலோ அல்லது,

(ஆ) அவள் கணவனின் இந்து மகன் இறந்த பிறகு அவனுக்கு வாரிசாக ஓர் இந்து மகனையோ, விதவையையோ, அல்லது மகனின் விதவையையோ விட்டுச் சென்றாலோ அல்லது,

(இ) அவள் இந்துவாகத் தொடராமலிருந்தாலோ அல்லது இந்துவாக இல்லாமலிருந்தாலோ.

விளக்கம் : இதன் உட்பிரிவில் மகன் என்றால் மகன், மகனின் மகன், மகனின் மகனின் மகன், சட்ட ரீதியாக பிறந்தவரோ அல்லது தத்து எடுக்கப்பட்டவரோ.

(2) ஒரு முறை விதவையின் உரிமை முடிவுக்கு வந்தால் அது மறுபடியும் அவளுக்குக் கிடைக்காது.

(66)

தத்து கொடுக்க தகுதியுடையவர்கள்

62. தத்து கொடுப்பதற்கு தகுதியுள்ளவர்கள்: 1) ஒரு பையனின் தந்தையோ அல்லது தாயோ மட்டும்தான் அப்பையனை தத்து கொடுக்க முடியும்.

2) பிரிவு (3) உட்பிரிவு (அ) மற்றும் (இ) ஆகியவற்றில் கூறப் பட்டுள்ளவற்றுக்கு உட்பட்டு, தந்தை உயிரோடிருந்தால் அவர் ஒப்புதளித்தால் மட்டும்தான் தத்து கொடுக்க உரிமை உள்ளவர். தாய், தத்து கொடுக்க தகுதியுள்ளவராக இருந்தால், அவரின் ஒப்புதல் இல்லாமல் தத்து கொடுக்க முடியாது.

3) ஒருதாய் தன் மகனை பின் கண்ட சூழ்நிலையில் தத்து கொடுக்கலாம்.

அ) தந்தை உயிருடன் இல்லாது போது, அல்லது

ஆ) பகுதி VII பிரிவு 110-ன் உட்பிரிவு (1)ல் சொல்லியுள்ளபடி அவர் முழுமையாகவும் இறுதியாகவும் உலகைத் துறந்திருந்திருந்தால்,

இ) அவர் இந்துவாக தொடர்ந்து இல்லாவிட்டால்,

ஈ) அவர் ஒப்புதல் கொடுக்கும் தகுதியை இழந்துவிட்டிருந்தால், தந்தை தாயை தத்து கொடுக்க தடை செய்து, அதற்கான ஆவணத்தை இந்திய பதிவுச் சட்டம் 1908 (XVII 1908) படி பதிவு செய்திருந்தால், அல்லது இந்திய வாரிசுரிமைச் சட்டம் 1925 (XXXIX 1925)யில் சொல்லியுள்ளபடி உயில் எழுதியிருந்தால்,

4) ஒரு மகனைத் தத்து கொடுக்கும் தந்தையும், தாயும் 18 வயது நிரம்பியவர்களாகவும், நல்ல மனநிலை உள்ளவர்களாகவும் இருக்க வேண்டும்.

விளக்கம் :- இந்தப் பிரிவுக்காக -

i) "தந்தை", "தாய்" என்று சொல்லப்பட்டுள்ளது தத்து எடுத்த தந்தையையும், தாயையும் குறிக்காது.

ii) தந்தையும், தாயும், 18 வயதிற்கு உட்பட்டவர்களாகவும், மனநிலை சரியில்லாதவர்களாகவும் இருந்தால், அவர்கள் தத்து கொடுக்கும் தகுதி இல்லாதவர்களாக கருதப்படுவார்கள்.

(67)

தத்து எடுத்துக் கொள்ளப்படுவதற்கான தகுதிகள்

63. யாரை தத்து எடுக்கலாம்: 1) எந்த ஒரு பெண்ணையும் ஓர் இந்து ஆணோ பெண்ணோ தத்து எடுத்துக் கொள்ளக் கூடாது.

2) எந்தப் பையனையும், கீழ்க்காணும் நிபந்தனைகளை திருப்தி செய்தால் தவிர, தத்து எடுத்துக் கொள்ளக் கூடாது:

i) அவன் ஒரு இந்துவாக இருக்க வேண்டும்;

ii) அவன் திருமணமானவனாக இருக்கக்கூடாது;

iii) அவன் ஏற்கனவே தத்து எடுக்கப்பட்டவனாக இருக்கக் கூடாது;

iv) அவன் 15 வயது பூர்த்தியாகதவனாக இருக்கக் கூடாது.

(68)

64) சில நபர்கள் தத்து எடுத்துக் கொள்வதற்கு தகுதி இல்லாதவர்களாக இருப்பார்கள்: சில சந்தேகங்களை நிவர்த்திக்க, கீழ்க்காணும் நபர்களை தத்து எடுக்க முடியாது என அறிவிக்கப் படுகிறது.

i) மூத்த அல்லது தந்தையின் ஒரே மகன்

ii) ஒரு தாயின் மகன், அவனைத் தத்து எடுக்கும் தந்தை சட்ட ரீதியாக அந்தத் தாயை திருமணம் செய்து கொள்ள முடியாத நிலை, குறிப்பாக, தன் மகனின் மகன், சகோதரியின் மகன், அல்லது தாயின் சகோதரியின் மகன், மேலும்

iii) தத்து எடுக்கும் தந்தைக்கு நெருங்கிய உறவினர் இருக்கும் போது, அதைவிட ஒரு புதியவனை தத்து எடுப்பது.

(69)

அவசியமான சடங்குகள்

65. தத்து எடுப்பதின் முழுமை:- தத்து எடுக்கும் சடங்கின் போது தத்து கொடுக்கும் பெற்றோர், தத்து எடுக்கும் பெற்றோரிடம் மகனை ஒப்படைக்க வேண்டும்; அவர்கள் இல்லாதபோது அவர்களால்அங்கீகரிக்கப்பட்டவர்கள் அங்கு இருக்க வேண்டும். இல்லை என்றால் அந்தத் தத்து எடுப்பு சட்டப்படி செல்லாது.

விளக்கம்: தத்து ஹோமம் செய்யும் சடங்கு, தத்து எடுப்பது சட்டரீதியாக இருக்க அவசியமான சடங்கு அல்ல.

(70)

தத்து எடுக்க உள்ள மற்ற நிபந்தனைகள்

66. மற்ற நிபந்தனைகள்: 1) எல்லாத் தத்து எடுப்பு நடவடிக்கைகளிலும் கீழ்க்காணும் நிபந்தனைகள் நிறைவேற்றப்பட வேண்டும்:-

i) தத்து எடுக்கும்போது, தத்து எடுக்கும் தந்தைக்கு ஓர் இந்து மகன், மகனின் மகன், மகனின் மகனின் மகன் (இரத்த உறவு முறையிலோ அல்லது தத்து எடுத்த முறையிலோ) உயிருடன் இருக்கக் கூடாது.

ii) சேர்ந்தார்ப்போல் ஒரே பையனை இரண்டு பேரோ அல்லது அதற்கு மேற்பட்டோரோ ஒரே நேரத்தில் தத்து எடுக்கக் கூடாது. அதே முறையில் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட பையன்களை ஒரே நபர் ஒரே நேரத்தில் தத்து எடுத்துக் கொள்ளக் கூடாது.

விளக்கம் - ஒரு பையன் தாயின் கருவில் இருக்கக்கூடும், பின்னர் உயிரோடு பிறக்கக்கூடும். எனினும் தத்து எடுக்கும் சமயத்தில் அவன் பிறக்கவில்லை என்றால் தத்தெடுக்கும் போது அந்த நோக்கத்துக்காக அவன் உயிரோடிருப்பவனாகக் கருதப்பட மாட்டான்.

iii) தத்து கொடுப்பவர் மற்றும் தத்து எடுப்பவர் இருவரும் மனமுவந்து ஒப்புதலுடன் இக்காரியத்தில் ஈடுபட வேண்டும்.

2) தத்து எடுக்க தத்து கொடுப்பவரிடமிருந்தோ, அல்லது தத்து எடுப்பவரிடமிருந்தோகட்டாயப்படுத்தல், தகா நிலைவற்புறுத்தல், ஏமாற்று, பொய்யாகத் திரித்திக் கூறுதல், அல்லது தவறான முறை ஆகிய எவற்றினாலும் ஒப்புதலைப் பெற்றாலும் இக்காரியத்தில் ஈடுபட்ட எவரும் தத்து எடுத்தது செல்லாது என்று வழக்குப் போடலாம்.

கீழ்க்காணும் காரணங்களுக்காக அந்த வழக்கை நீதிமன்றம் தள்ளுபடி செய்யலாம்:

அ) கட்டாயப்படுத்தல் மற்றும் தகாநிலை வற்புறுத்தல் நடந்து இரண்டாண்டுகள் முடிந்து விட்டாலோ, அல்லது பொய்யாகத் திரித்திக் கூறுவது, அல்லது ஏமாற்றுவது ஆகியவை நடந்து இரண்டாண்டுகள் முடிந்து விட்டாலோ,

ஆ) ஒரு நபரின் ஒப்புதலை கட்டாயப்படுத்தியோ தகாநிலை வற்புறுத்தியோ, ஏமாற்றியோ, பொய்யாகத் திரித்திக் கூறியோ பெற்றால், அந்த நபர் தன்னுடைய ஒப்புதலை உறுதி செய்தால், அது யாருடைய உரிமையையும் பாதிக்காது.

3) உட்பிரிவு (2) பிரிவு (அ)-ன் படி குறிப்பிட்ட காலத்திற்குள் வழக்கு போடாவிட்டால் அல்லது உட்பிரிவு (2) பிரிவு (ஆ) படி தத்து எடுத்தல் உறுதி செய்யப்பட்டால் அது சட்ட ரீதியான தத்து என்று கருதப்பட்டு, தத்து எடுத்த தேதியிலிருந்து எல்லா காரணங்களுக்காகவும் அது அமுலுக்கு வந்ததாகக் கருதப்படும்.

(71)

பாகம் II

தத்து எடுப்பதின் விளைவுகள்

67. தத்து எடுப்பதின் விளைவுகள் : தத்து எடுக்கப்பட்ட மகன், எல்லாக் காரணங்களுக்காகவும் தத்து எடுத்தத் தேதியிலிருந்து தத்து எடுக்கப்பட்டவருக்கு மகனாகக் கருதப்படுவான். அந்தத் தேதியிலிருந்து அவன் பிறந்த குடும்பத்தில் உள்ள அத்தனை உறவுகளும் அவனை விட்டு நீங்கும். பிறகு அவனுக்கும் அவன் பிறந்த குடும்பத்துக்கும் எந்தத் தொடர்பும் கிடையாது :

ஆனால் -

அ) தான் பிறந்த குடும்பத்தில் தொடர்ந்திருந்தால் யாரை திருமணம் செய்து கொள்ள முடியாதோ அவளை தத்து போன பிறகும் திருமணம் செய்து கொள்ளக் கூடாது;

ஆ) அவனுக்கென்று, அவன் பிறந்த குடும்பத்தில் கொடுக்கப்பட்ட சொத்து, தத்து போன பின்பும் அவனிடமே இருக்கும். அந்தச் சொத்துக்கு சில நிபந்தனைகளோ, பிணையோ இருந்தால் அது தொடர்ந்து இருக்கும். அந்தச் சொத்தின் வருமானத்தில் யாரை யாவது பாதுகாக்க வேண்டும் என்றாலும் அதையும் அவன் செய்து வரவேண்டும்;

இ) பிரிவு 68-ல் சொல்லப்பட்டுள்ள நிலைமைகளுக்கு உட்பட்டு அவன் தத்து போவதற்கு முன்பு அந்தக் குடும்பத்தைச் சேர்ந்த பிறருக்குக் கொடுக்கப்பட்டுள்ள சொத்து தொடர்ந்து அவர்களிடமே இருக்கும். அது எந்த பாதிப்புக்கும் உள்ளாகாது.

(72)

68. தத்து எடுத்த பிறகு சொத்து ஒருவரிடமிருந்து எடுக்கப்படுதல்:- இந்தத் தொகுப்பு அமுலுக்கு வந்தபின், ஒரு விதவை ஒரு மகனைத் தத்து எடுத்துக் கொண்டால், அந்த மகன் கீழ்க்காணுபவற்றை எடுத்துக் கொள்வான் :-

அ) அந்த விதவையின், அவளுடன் உள்ள மற்ற விதவைகளின் சொத்தில் பாதி அளவிற்கு, தத்து எடுப்பதற்கு முன்பு இருந்ததை அவன் எடுத்துக் கொள்வான்.* * * * *,

ஆ) ஒரு மகன், மகனின் மகன், அல்லது மகனின் மகனின் மகன் ஆகிய தத்து எடுக்கும் தந்தையின் உறவினர்கள் இறந்த

பிறகு தத்து எடுக்கப்பட்டால், பாதி சொத்து, விதவை மற்றும் அவருடன் இருக்கும் மற்ற விதவைகள் சொத்தில், அவர்களால் தத்து எடுத்த தந்தையின் சொத்தில் பெறப்பட்டது, மற்றும் இறந்து விட்ட மகன், மகனின் மகன், மகனின் மகனின் மகன் ஆகியோருடைய வாரிசாக சொத்தில் பாதியை எடுத்துக் கொள்வான். தத்து எடுப்பதற்கு முன்பு இருந்த சொத்தைக் கணக்கிட்டு இந்தப் பாகம் முடிவு செய்யப்படும்.

* * * * *

(73)

69. தத்து எடுப்பவர் அவரின் சொத்தை நிர்வகிக்கும் உரிமை: தத்து எடுக்கும்போது செய்துகொண்ட ஒப்பந்தங்களுக்கு உட்பட்டு, தத்து எடுத்த பிறகும், தத்து எடுத்த தந்தை மற்றும் தாய் அவர்களுடைய சொத்தை பரிமாற்றம் செய்து கொள்வதோ, அல்லது உயில் மூலம் மற்றவர்களுக்கு மாற்றவோ செய்யலாம்.

(74)

70. மனைவி இழந்தவர் தத்து எடுத்துக் கொண்டால் தாயை முடிவு செய்வது சம்மந்தமாக:- (1) ஓர் இந்து, மனைவி உயிருடன் இருக்கும்போது, ஒரு மகனை தத்து எடுத்துக் கொண் டால், அவள் அந்த மகனின் தத்துத் தாய் எனக் கருதப்படுவாள்.

2) ஓர் இந்துவிற்கு ஒன்றுக்கு மேற்பட்ட மனைவியர் இருந்தால் -

i) எந்த மனைவியினுடன் வசிக்கிறாரோ அல்லது எந்த மனைவியின் ஒப்புதலுடன் தத்து எடுத்துக் கொண்டாரோ, அல்லது

ii) ஒன்றுக்கு மேற்பட்ட மனைவியுடன் வசித்துவந்தாலோ அல் லது அவர்களுடைய ஒப்புதலைப் பெற்றாலோ, அந்த மனைவிகளில் யார் அவரை முதலில் திருமணம் செய்து கொண்டாரோ அவர், அம்மகனின் தத்துத் தாய் என்றும் மற்றவர்கள் மாற்றாந் தாய்கள் என்றும் கருதப்படுவார்கள்.

3) மனைவி இழந்தவர், மனைவி இறந்த பிறகு தத்து எடுத் தால், தத்து எடுப்பதற்கு முன்பு இறந்துவிட்ட மனைவி தத்து எடுத்த மகனின் தத்துத் தாய் என கருதப்படுவார். அதற்கு முன்பு இறந்த மனைவியோ அல்லது தத்து எடுத்த பிறகு அவர் திருமணம் செய்து கொண்ட மனைவியோ, தத்து எடுக்கப்பட்ட மகனின் மாற்றாந் தாய்மார்கள் எனக் கருதப்படுவர்.

ஆனால் தத்து எடுக்கும் தந்தை, யாரை தத்துத் தாய் எனக் கருதவேண்டும் என்று அதற்கான ஏற்பாடு செய்திருந்தால் அவரை தத்துத் தாயாகக் கருதி மற்றவர்களை மாற்றாந்தாய்களாகக் கருத வேண்டும்.

4) திருமணமாகாத ஒருவர், தத்து எடுத்தால், பிறகு அவர் திருமணம் செய்து கொள்ளும் மனைவி தத்து எடுத்த மகனின் மாற்றாந்தாய் எனக் கருதப்படுவார்.

(75)

71. ஒரு விதவை தத்து எடுத்தால் தத்துத் தாயை முடிவு செய்வது சம்மந்தமாக : *1) இறந்துவிட்ட ஓர் இந்துக் கணவர் ஒன்றுக்க மேற்பட்ட விதவைகளை விட்டுச் சென்றிருக்கும்போது, எந்த விதவை தத்து எடுக்கிறாரோ அவர் அந்தத் தத்து எடுத்த மகனின் தத்துத் தாய் என்றும், மற்ற விதவைகள் மாற்றாந்தாய்கள் என்றும் கருதப்படுவார்கள்.*

2) ஒன்றுக்கு மேற்பட்ட விதவைகள் கூட்டாகத் தத்து எடுக்கும்போது, முதலில் திருமணம் செய்து கொண்டவர் தத்துத் தாய் என்றும் மற்றவர்கள் மாற்றாந்தாய்கள் என்றும் கருதப் படுவார்கள்.

(76)

72. சட்ட ரீதியான தத்து எடுப்பை ரத்து செய்ய முடியாது : *சட்ட ரீதியாக தத்து எடுக்கப்பட்டால், அதை தத்து எடுத்த தந்தையோ, தாயோ, அல்லது வேறு நபரோ ரத்து செய்ய முடியாது. அதே முறையில், தத்து எடுக்கப்பட்ட மகனும், தான் தத்து எடுக்கப்பட்டதை துறந்துவிட்டு, அந்தத் தகுதியை விட்டு விட்டு தான் பிறந்த குடும்பத்திற்கு போக முடியாது.*

73. சில ஒப்பந்தங்கள் செல்லத்தக்கவை அல்ல :- *தத்து எடுக்கக்கூடாது என ஒப்பந்தம் செய்து கொண்டால் அது செல்லத்தக்கதல்ல. அதே முறையில் தத்து எடுக்கப்பட்ட மகனின் உரிமைகளைக் குறைக்கும் வகையில் செய்து கொள்ளும் ஒப்பந்தம் செல்லத்தக்கது அல்ல.*

(78)

பாகம் III

பதிவு அல்லது தத்து எடுப்பதன் ஆவணம்

74. தத்து எடுத்தலின் பதிவும் சான்றுறுதியும்: (1) ஒரு மாநில அரசு, அரசு பதிவேட்டில் தகுந்த முறையில் வெளியிட்டு, இந்த மாநில முழுமைக்கோ, அல்லது ஏதாவது ஒரு பகுதிக்கு பொருந்தும் வகையிலோ, தத்து எடுப்பது முறையாக அதற்காக ஏற்படுத்தப்பட்டுள்ள விதிமுறைகளின்படி, பதிவு செய்வதற்காக உள்ள விதிகளின்படி பதிவு செய்யப்பட்டால்தான் செல்லத் தக்கதாகும் என அறிவிக்கலாம்.

2) தத்து எடுப்பு உட்பிரிவு (1)ன் படி பதிவு ஆவணம் மூலம்தான் நடைபெற வேண்டும் என்றால், அந்த ஆவணத்தைத் தவிர வேறு எந்த முறையிலும் அதை நிரூபிக்க முடியாது.

74. அ) பிரிவு 74 பொருந்தாத தத்து எடுப்பிற்கு பின்பற்ற வேண்டிய முறை : பிரிவு 74-ல் சொல்லியுள்ளபடி எந்த அறிவிப்பும் மாநில அரசால் வெளியிடப்படவில்லை என்றால், தத்து எடுப்பை நிரூபிக்க, மாநில அரசு தத்து எடுப்புப்பதிவுப் புத்தகம் ஒன்றை ஏற்படுத்தி அதைப் பாதுகாக்க அதற்கான அதிகாரிகளையும் நியமித்து பிரிவு 75-ல் சொல்லியுள்ளபடி தத்து எடுப்பை பதிவு செய்ய ஏற்பாடு செய்யலாம்.

(79)

75. மனு போடும் முறையும், அதில் குறிக்கப்பட வேண்டிய விபரங்களும்: பிரிவு 74அ-ன்படி போடப்படும் மனுவில், தத்து எடுத்தவரும், தத்து கொடுத்தவரும் கையெழுத்திட்டு, தத்து எடுத்த 90 நாட்களுக்குள் மனுவை கீழ்க்காணும் விபரங்களுடன் அனுப்பி வைக்க வேண்டும்:-

i) தத்து எடுத்த தேதி;

ii) தத்து எடுத்த முறை;

iii) தத்து எடுக்கப்பட்டவர், அல்லது எடுக்கப்பட்டவர்களின், வயது அல்லது வயதுகள், நபர் அல்லது நபர்களின் பெயர்கள்;

iv) தத்து எடுக்கும் தந்தை, திருமணமானவராக இருந்தால், அவர் மனைவியின் பெயர், அவருடைய மனைவி ஏற்கனவே இறந்துவிட்டிருந்தால் அந்த மனைவியின் பெயர், ஒன்றுக்கு மேற்பட்ட மனைவியர் இருந்தால், அல்லது மனைவியர் ஏற்கனவே இறந்து விட்டால், அவர்கள் பெயர், அவர்களை அவர் எந்த வரிசையில் திருமணம் செய்து கொண்டார் என்பதையும், மனைவி அல்லது முன்பே இறந்த மனைவியின் பெயர், அவர்தத்துத் தாயாக இருந்தால்;

v) ஒரு பெண் தத்து எடுத்தால், அவளுடைய கணவன் பெயர், மற்ற மனைவியர் அல்லது அவளுடன் வாழும் மற்ற விதவைகளின் பெயர்;

vi) தத்து கொடுக்கும் நபரின் பெயர் மற்றும் வயது;

vii) தத்து எடுக்கப்படும் மகனின் பிறந்த வீட்டில் அவருக்கு வைத்த பெயர்;

viii) தத்து எடுக்கப்பட்ட பையனின் வயது;

ix) தத்து எடுக்கப்பட்ட மகனுக்கு தத்து எடுக்கும் வீட்டில் வைத்த பெயர்.

(80)

76. தத்து எடுப்பதை எழுதிவைப்பது:- பிரிவு 74-அ-ன் படி நியமிக்கப்பட்டுள்ள அதிகாரி, தத்து எடுத்தவரும், தத்து கொடுத்தவரும் கையொப்பமிட்டிருக்கிறார்கள் என்பதையும், அதில் சொல்லியுள்ளபடி தத்து எடுக்கப்பட்டுள்ளது என்பதையும் பற்றி திருப்தி அடைந்தால், தத்து எடுப்புப் புத்தகத்தில், தத்து எடுத்ததை குறிக்க வேண்டும்.

(81)

பகுதி IV - *உரிய வயது வராதோர் மற்றும் காப்பாளர் ஆகியோரைப் பற்றி:-*

77. விளக்கம் : *இந்தப் பகுதியில் -*

அ) உரிய வயது வராதோர் என்றால் 18-வயதிற்கு உட்பட்டோர் என்று பொருள்;

ஆ) ''இயல்பான காப்பாளர்'' என்றால் பிரிவு 78-ல் சொல்லப் பட்டுள்ள நபரைக் குறிக்கும். ஆனால் அது கீழ்க்காணும் நபர்களை உள்ளடக்காது:

i) *உரிய வயதுவராத நபரின் தந்தை எழுதிய உயிலின்படி நியமிக்கப்பட்ட காப்பாளர், அல்லது*

ii) *நீதி மன்ற உத்திரவால் நியமிக்கப்பட்ட நபர், அல்லது*

iii) *காப்பாளராக பணி புரிய, காப்பாளருக்கான நீதிமன்றத் தால் நியமிக்கப்பட்ட நபர்*

(82)

78. உரிய வயதுவராத ஓர் இந்துவின் இயல்பான பாதுகாவலர்:- *உரிய வயதுவராத இந்து நபரின் பொருளுக்கும், அவரை பாதுகாக்கவும் கீழ்க் காணுபவர்கள் இயல்பான பாது காவலர் என கருதப்படுவார்கள்-*

அ) ஒரு திருமணமாகாத பெண்ணிற்கும், அல்லது பையனுக்கும் தந்தை பாதுகாவலராகக் கருதப்படுவார். அவருக்குப் பின் தாய் பாதுகாவலராக இருப்பார். ஆனால் உரிய வயது வராத நபர், 3-வயதிற்குட்பட்டவராக இருந்தால் தாய் பாதுகாவலராக இருப்பார்.

ஆ) முறையற்ற திருமணத்தில் பிறந்த பையனுக்கும் அதே உறவு முறையில் பிறந்த திருமணமாகாத பெண்ணிற்கும் தாயும், அவருக்குப் பிறகு தந்தையும் இயல்பான பாதுகாவலராக இருப்பர்.

இ) திருமணம் ஆன பெண்ணிற்கு கணவர் இயல்பான பாதுகாவலராக இருப்பார்.

கீழ்க்காணும் சூழ்நிலையில் ஏதாவது ஒன்று இருந்தால் உரிய வயது வராத நபரின் இயல்பான பாதுகாவலராக ஒருவர் நீடிக்க முடியாது -

அ) அவர் இந்துவாக நீடிக்காவிட்டால், அல்லது

ஆ) பிரிவு 110- உட்பிரிவு (1)-ல் சொல்லியுள்ளபடி முழுமையாகவும் இறுதியாகவும் உலகப் பந்தத்தை துறந்து விட்டவராக இருந்தால்.

(83)

79. தத்து எடுக்கப்பட்ட நபரின் இயல்பான பாதுகாப்புரிமை:- *தத்து எடுக்கப்பட்ட நபரின் பாதுகாப்புரிமை தத்து எடுக்கப்பட்டபின் அவர் பிறந்த குடும்பத்திலிருந்து தத்து எடுக்கப் பட்ட குடும்பத்திற்கு மாறிவிடும்.*

(84)

80. இயல்பான பாதுகாவலரின் அதிகாரங்கள்: 1) உரிய வயது வராத இந்துவின் பாதுகாவலர் இந்தப் பிரிவிற் குட்பட்டு அந்த நபரின் நன்மைக்காகவும், அந்த நபரின் சொத்தை அடை வதற்காகவும் பாதுகாக்கவும், எல்லா விதமான அவசியமான, நியாயமான நடவடிக்கைகளில் ஈடுபடலாம். ஆனால் எந்தச் சூழ்நிலையிலும் அந்த நபரின் உரிமையை பாதிக்கும் வகையில் எதுவும் செய்யக்கூடாது.

2) நீதிமன்றத்தின் முன் அனுமதி பெறாமல் இயல்பான பாதுகாவலவர் கீழ்க்காணும் எந்தக் காரியத்தையும் செய்யக் கூடாது-

அ) அடமானம் அல்லது பொருட்பிணைப்பொறுப்பு, விற்பனை, இனாமாக அளித்தல், அல்லது உரிய வயது வராத நபரின் அசையா சொத்துக்களின் பரிமாற்றம்; அல்லது

ஆ) எந்தச் சொத்தையும், 5 வருடத்திற்குமேல் குத்தகைக்கு விடுவதோ, அல்லது அந்த நபர் வயது வந்த காலத்திற்குப் பின் ஓர் ஆண்டிற்கு மேல் குத்தகைக்கு விடுவதோ கூடாது.

3) உட்பிரிவு (1) அல்லது (2) - க்கு எதிராக இயல்பான பாதுகாவலர் அந்த நபரின் அசையாச் சொத்துக்களை எவ்விதத் திலும் ஏதாவது செய்ய முயற்சித்தல் அந்த நபரோ அல்லது அதனால் பாதிக்கப்பட்டவரோ, அந்த முயற்சியைத் தவிர்க்க நடவடிக்கை எடுக்கலாம்.

4) உட்பிரிவு (2)-ல் சொல்லப்பட்டுள்ள எந்தக் காரியங் களைச் செய்யவும் இயல்பான பாதுகாவலர் மனு செய்தால் அது மிக அவசியமான ஒன்றாக இருந்தாலோ, அல்லது உரிய வயது வராத நபரின் நலனுக்காக இருந்தாலோ மட்டுமே நீதிமன்றம் தகுந்த அனுமதியை அவருக்கு அளிக்க வேண்டும்.

5) பாதுகாவலர் மற்றும் பாதுகாப்பிலுள்ளவர் சட்டம் 1890 (VIII of 1890) பிரிவு 29 படியும் உட்பிரிவு (2) - படியும் அனுமதி கோரும் மனுவிற்கு உத்திரவு வழங்க பின்கண்ட நடைமுறை கடைப்பிடிக்கப்பட வேண்டும். குறிப்பாக-

அ) மனு சம்பந்தப்பட்ட நடவடிக்கைகள் பிரிவு IV- அ-வின் படியான நடவடிக்கைகளாகக் கருதப்பட்டு இந்த அனுமதி மனு கவனிக்கப்பட வேண்டும்;

ஆ) அந்தச் சட்டத்தின் பிரிவு 31 உட்பிரிவு (2) (3) (4) ஆகியவற்றில் சொல்லியுள்ள நடைமுறைகளை நீதிமன்றம் பின்பற்ற வேண்டும்; மற்றும்

இ) இயல்பான பாதுகாவலருக்கு உட்பிரிவு (2)ன் கீழ் சொல்லப் பட்டுள்ள எதையும் செய்ய அனுமதி மறுக்கப்பட்டால், அவர் உயர் நீதிமன்றத்திற்கு மேல் முறையீடு செய்யலாம்.

6) இந்தப் பிரிவில் ''நீதிமன்றம்'' என்று சொன்னால் அசையாச் சொத்துக்கள் உள்ள இடத்திற்கு முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ அதிகார வரம்பு பெற்றுள்ள, மாவட்ட நீதிமன்றம் என்று பொருளாகும் அல்லது பிரிவு (4) அ - பாது காவலர் மற்றும் பாதுகாப்பில் உள்ளவர் சட்டம் 1890 (VIII of 1890) படி அதிகாரம் அளிக்கப்பட்டுள்ள நீதிமன்றம் என்று பொருள் படும்.

(85)

81. இயல்பான பாதுகாவலரின் மாற்றி அமைக்கும் உரிமை: *உரிய வயது வராத ஓர் இந்துவின் பொறுப்பை ஏற்றுக் கொள்ளும்படி இயல்பான பாதுகாவலர் மற்றொருவருக்குப் பொறுப்பு அளித்தால் அந்தப் பொறுப்பை கீழ்க்காணும் காரணங்கள் தவிர்த்து, மற்ற சூழ்நிலைகளில் மாற்றி அமைக்கலாம்-*

அ) மாற்ற அனுமதிப்பது வயது வராதவரின் நலனுக்கு எதிராக அமைந்திருத்தல்; அல்லது

ஆ) இயல்பான பாதுகாவலர் தொடர்ந்து இந்துவாக நீடிக்காமல் இருத்தல் அல்லது

இ) வேறு தகுந்த காரணங்களுக்காக மாற்றி அமைக்கும் உரிமையை அளிப்பது உசிதமில்லாதிருத்தல்

(86)

82. உயில்வழி பாதுகாவலரின் அதிகாரங்கள் : *1) ஓர் இந்து தந்தை உரிய வயது வராத தன்னுடைய சட்டரீதியான குழந்தைகளில் ஏதேனும் ஒன்றைப் பார்த்துக் கொள்வதற்காகவோ அல்லது வயதுவராத குழந்தையின் சொத்துக்களை பாதுகாத்து கொள்வதற்காகவோ அல்லது இரண்டிற்குமாகவோ உயில் மூலமாக ஒரு பாதுகாவலரை நியமிக்கலாம்; ஆனால் வயது வராத இந்த நபரின் தாய் உயிருடன் இருந்து அந்த நபரின் பாதுகாவல ராக இருக்கத் தகுதி உள்ளவராக இருக்கும்போது, வேறு எந்த நபரும் பாதுகாவலராக இருக்க இந்தப் பிரிவு அனுமதிப்பதாகக் கொள்ள முடியாது.*

2) தந்தையின் மரணத்திற்குப் பிறகு உயிலில் சொல்லப் பட்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு, பாதுகாவலராக நியமிக்கப்பட்ட நபர் இயல்பான பாதுகாவலருடைய எல்லா உரிமைகளை யும் பெற்று அதற்கேற்ற முறையில் செயல்பட முடியும்.

3) இந்தப் பகுதியில் சொல்லப்பட்டுள்ளவைகளுக்கு உட்பட்டு, ஓர் இந்து விதவை உயில் மூலமாக தன்னுடைய வயது வராத குழந்தைகள் எது ஒன்றையும் கவனித்துக் கொள்ளப் பாது காவலரை நியமிக்க முடியும்;

ஆனால் அவருடைய கணவர் ஏற்கனவே உயில் மூலமாக குழந்தைக்குப் பாதுகாவலரை நியமிக்காமல் இருந்தால் மட்டுமே அவர் இவ்வாறு செயல்பட முடியும்.

4) அவ்வாறு பாதுகாவலராக நியமிக்கப்பட்டவரின் உரிமை, உரிய வயது வராத நபர் பெண்ணாக இருந்தால், அவளுக்குத் திருமணம் ஆன உடன் அது முடிவிற்கு வந்துவிடும்.

(87)

***83. உரிய வயது வராத நபரை மத ரீதியாக வளர்ப்பது பாதுகாவலரின் கடமை:** *உரிய வயது வராத ஓர் இந்து நபரின் பாதுகாவலர் அந்த நபரை, அந்த நபரது தந்தையின் மத வழக்கப் படி வளர்க்க வேண்டும்.*

(88)

84. பாதுகாவலராக செயல்படும் நிலையிலுள்ள ஒருவர், *உரிய வயது வராத நபரின் சொத்தை எதுவும் செய்யக் கூடாது: இந்தத் தொகுப்பு அமலுக்கு வந்த பிறகு பாதுகாவலராக செயல்படும் நிலையிலுள்ள ஒருவர், உரிய வயது வராதவரின் சொத்தை விற்பதோ, அல்லது வேறு எவ்விதத்திலும் பாதிக்கும் வகையில் செயல்படவோ கூடாது.*

---

* டாக்டர் அம்பேத்கர் தமது பிரதியில் 'பிரரேபிக்க வேண்டியதில்லை' என்று குறிப்பிட்டிருக்கிறார் - ஆசிரியர்.

(89)

85. உரிய வயது வராதவரின் நலன்தான் முக்கியமானது. ஒரு பாதுகாவலரை நியமிக்கும்போதோ அல்லது அறிவிக்கும் போதோ அந்த நபரின் நலனை நீதிமன்றம் முக்கியமாகக் கருத வேண்டும். இந்தப் பகுதியில் சொல்லப்பட்டவைகளின் காரணமாகவோ அல்லது பிரிவு 24-ல் சொல்லப்பட்டவைகளுக்காகவோ, ஒரு நபர் பாதுகாவலராக இருந்தால் அது உரிய வயது வராத அந்த நபரின் நலனுக்கு ஏற்றதல்ல என நீதிமன்றம் கருதினால் அந்த உரிய வயது வராத அந்த ஆணுக்கோ பெண்ணுக்கோ தான் பாதுகாவலராக இருப்பேன் என்று ஒருவர் உரிமை கோர முடியாது.

(90)

பகுதி V கூட்டுக் குடும்பம் மற்றும் அதன் கூட்டு உரிமையாளர்கள்:

பாகம் 1

பொது

86. பிறப்பினால் உரிமை பறி போவதும் உரிமை கிடைப்பதும் :இந்தப் பகுதியில் விவரமாகவும் வெளிப்படையாகவும் சொல்லப்பட்டவைகளுக்கு மாறாக, ஓர் இந்து இந்தத் தொகுப்பு அமுலுக்கு வந்த பிறகு ஒரு சொத்தில் உரிமையோ அல்லது எந்த ஒரு நலனையோ எதிர்பார்க்க முடியாது-

அ) தன்னுடைய முன்னோர் உயிருடன் இருக்கும்போது அவருடைய சொத்தில், அந்தக் குடும்பத்தில் பிறந்த ஒரே காரணத்திற்காக எந்த உரிமையும் கோர முடியாது, அல்லது

ஆ) எஞ்சுநர் உரிமை முறையைப் பின்பற்றி அமைக்கப் பட்டுள்ள ஒரு கூட்டுக் குடும்ப சொத்தின் மீதும் உரிமை கோர முடியாது.

(91)

87. <u>கூட்டு நிலச் சொத்துரிமையை பொது நிலச் சொத்துரிமையாக மாற்றுவது : இந்தத் தொகுப்பு அமுலுக்கு வந்தபோது,</u> இந்தப் பகுதியில் * * * சொல்லப்பட்டவைகளுக்கு உட்பட்டு, ஒரு கூட்டுக் குடும்பத்தின் உறுப்பினர்கள், பொதுவாக சொத்தை அனுபவித்துக் கொண்டிருந்தால் அது, இந்த தொகுப்பு அமுலுக்கு வந்த பிறகு பொது நிலச் சொத்து உரிமையாக மாறியதாகக் கருதப்பட்டு ஒவ்வொரு நபரும் அவளோ அவனோ முழு உரிமை யாளராக, அவர்களுக்கிடையே பிரிவினை ஏற்பட்டு தனித்தனி யாக அனுபவிப்பதாகக் கருதப்படும்.

இந்தப் பிரிவில் சொல்லப்பட்டுள்ள எதுவும் அந்தச் சொத்தில் வாழும் உரிமை பெற்றவரை, அல்லது அதிலிருந்து ஜீவனாம்சம் பெற உரிமை பெற்றுள்ள நபரை எந்தவிதத்திலும் பாதிக்காது. முழு உரிமைப் பெற்ற நபராக இருந்தால் இந்தத் தொகுப்பு அமுலுக்கு வராததாகக் கருதி, நீதிமன்றத்தில் தன்னுடைய நிலைமையை நிலை நாட்ட முடியும்.

* * *

(92)

88. தர்ம ரீதியான கடமை விதி ★ ★ ★ அகற்றப் பட்டது: *(1)* இந்தத் தொகுப்பு அமுலுக்கு வந்த பிறகு பிரிவு (2)-ல் சொல்லப்பட்டவைகளுக்குட்பட்டு, ஒருவருடைய முன்னோர் பட்ட கடனுக்காக, அல்லது விற்பனை செய்த சொத்துக்காக அல்லது வேறு எந்தக் கடனுக்காகவும் ஆண் வாரிசுதாரர் தர்ம ரீதியாகக் கொடுக்க கடமைப்பட்டிருக்கிறார் என்று கருதி எந்த நீதிமன்றமும் நடவடிக்கை எடுக்கக்கூடாது.

(2) இந்தத் தொகுப்பு அமுலுக்கு வருமுன் ஏற்பட்ட கடனாக இருந்தால் பிரிவு (1)-ல் சொல்லியுள்ள எதுவும் கீழ்க் கண்டவற்றைப் பாதிக்காது:-

அ) அத்தகைய வாரிசுதாரருக்கு எதிராக நடவடிக்கை எடுக்க பணம் கொடுத்தோருக்குள்ள உரிமை அல்லது

ஆ) அந்தக் கடனுக்காக அல்லது வேறு கடனுக்காக சொத்தைப் பராதீனமாக்குதல்.

இந்தத் தொகுப்பு அமுலுக்கு வராததாகக் கருதி வாரிசின் தர்ம ரீதியான கடமை என்ற முறையில் அவருக்கு எதிராக நடவடிக்கை எடுக்க முடியும்.

விளக்கம் : உட்பிரிவு (2)-ல் சொல்லியுள்ள "அத்தகைய வாரிசுதாரர்" என்பது இறந்தவரின் ஆண் வழி வாரிசை மட்டும் குறிக்கும். அவர் அந்தக் குடும்பத்தில் பிறந்தவராகவோ, தத்து எடுக்கப்பட்டவராகவோ இருக்கலாம். பிறப்பு அல்லது தத்து எடுப்பு, இந்தத் தொகுப்பு அமுலுக்கு வருவதற்கு முன்பு நடை பெற்றிருக்க வேண்டும்.

(93)

89. இந்தத் தொகுப்பு அமுலுக்கு வருவதற்கு முன் கூட்டு குடும்ப உறுப்பினர்கள் பட்ட கடனுக்குள்ள பொறுப்பு: இந்தத் தொகுப்பு அமுலுக்கு வருவதற்கு முன்பு அந்தக் குடும்பத் தலைவர் கடன்பட்டிருந்தால், அது குடும்ப நலனுக்காக இருந் தால், அந்தக் குடும்ப நபர்கள் அந்தக் கடனைத் திருப்பித் தர கடமைப்பட்டுள்ளார்கள். அந்தக் குடும்ப உறுப்பினர்கள் எல்லோ ருக்கும் எதிராகவோ, அல்லது திருப்பித் தர கடமைப்பட்டுள்ளவ ருக்கு எதிராகவோ, இந்தத் தொகுப்பு அமுலுக்கு வரவில்லை எனக் கருதி நடவடிக்கை எடுக்க முடியும்.

(94)

பாகம் II

மிதாக்ஷரா - கூட்டுக் குடும்ப உறுப்பினர்கள்

90. இந்தப் பகுதியை அமுல்படுத்தல்: இந்தத் தொகுப்பு அமுல் படுத்தப்படாதிருந்தால் மிதாக்ஷரா முறை பின்பற்றப்படும் இந்துக்களுக்கு இந்தப் பிரிவு அமுல்படுத்தப்படும்.

90. அ) விளக்கம் : இந்தப் பகுதியில் ''முன்னோர் சொத்து'' என்றால் ஓர் இந்து ஆண் தன் தந்தை, தந்தையின் தந்தை அல்லது தந்தையின் தந்தையின் தந்தை ஆகியோரிடமிருந்து வாரிசுரிமை யாகப் பெற்ற சொத்தைக் குறிக்கும். அது, கீழ் காண்பவற்றையும் உள்ளடக்கும்:

அ) பாகப் பிரிவினையின் போது மேற் சொன்ன மூதாதை யரின் சொத்திலிருந்து அவர் பாகத்திற்கு வந்த சொத்து;

ஆ) அந்த மூதாதையர் சொத்துடன் இணைந்தது; ஆனால் கீழ்காண்பவற்றை அது உள்ளடக்காது:-

i) இந்து படிப்பினால் பெறப்பட்ட சட்டம் 1930 (XXX of 1930) சட்டத்தின்படி ஒருவன் சம்பாதித்த சொத்து;

ii) வாரிசுரிமை இல்லாமல் மற்ற வகையில் சேர்த்த சொத்து;

iii) வாரிசுரிமையில் மேற்கூறிய தந்தை வழி மூதாதையர்களைத் தவிர்த்து மற்றவர்களிடமிருந்து பெறப்பட்ட சொத்து;

iv) அவர் பொறுப்பிலுள்ள மற்ற தனிச் சொத்துக்கள்.

இம்மாதிரியான சொத்துக்கள் சிலவற்றை முழுமையாகவோ சிலவற்றையோ மற்ற கூட்டுக் குடும்ப உறுப்பினர்களுடன் பகிர்ந்து கொள்ளப்படலாம்.

விளக்கம் : மூதாதையர் சொத்தினுடைய சேர்ப்பு என்பது இந்தச் சொத்துடைய வருமானம்., அந்த வருமானத்திலிருந்து வாங்கப்பட்ட சொத்து, அந்த சொத்தினுடைய உதவியுடன் பெறப்பட்ட சொத்து, அந்த சொத்து விற்பனையில் கிடைத்த பணம், அந்தப் பணத்தைக் கொண்டு பெறப்பட்ட சொத்து முதலியவற்றைக் குறிக்கும்.

90. ஆ) கூட்டுக் குடும்ப உறுப்பினர்கள்: *(1) ஒரு நபர் கூட்டுக் குடும்ப உறுப்பினராகக் கருதப்பட கீழ்க்காணும் நிபந்தனைகளைப் பூர்த்தி செய்ய வேண்டும்.:-*

i) அ) அவர் மூதாதையர் சொத்திலிருந்து வாரிசுரிமை பெற்றவராக இருக்க வேண்டும், அல்லது

ஆ) அவர் அந்தக் குடும்பத்தினுடைய ஆண் வாரிசு வாயிலாகப் பிறந்தவராக இருந்து அந்தப் பெற்றோர் அந்த குடும்பத்தின் சொத்தை வாரிசுரிமையாக பெற்றவராக இருக்க வேண்டும்.

ii) உட்பிரிவு (அ) பகுதி (1)ல் - சொல்லப்பட்டுள்ள நபர் பின்கண்டவரிடமிருந்துநான்கு தலைமுறைக்கு மேற்பட்டவராக இருக்கக்கூடாது-

அ) மேற்குறிப்பிட்ட சொத்தை வாரிசுரிமையாக பெற்ற நபர், அல்லது

ஆ) ஏற்கனவே சொத்தை வாரிசுரிமையாகப் பெற்று அவர் உயிருடன் உள்ள மூத்த ஆண் வாரிசு.

2) உட்பிரிவு (1)-ன் படி எந்த முறையில் உறவு கொண்டுள்ளார்கள் என்பதைக் கணக்கிட ஒவ்வொரு தலைமுறையும் ஒரு கட்டமாகக் கருதப்படும்.

3) கூட்டுக் குடும்ப உறவினர்களிடையே பிரிவினை ஏற்பட்ட பிறகு அவர்கள் கூட்டுக் குடும்ப உறவினர் என்ற நிலையிலிருந்து விடுபடுவார்கள்; மாறுபட்ட நிலையை நிரூபித்தால் தவிர-

அ) தன்னுடைய ஆண்வழி வாரிசுகள் வகையில் அவர்கள் பிரிந்த ஒரே காரணத்திற்காக கூட்டுக் குடும்ப உறுப்பினர்கள் இல்லை என்று சொல்லமுடியாது; அல்லது

ஆ) ஒரே ஓர் உறுப்பினர் மட்டும் பிரிந்துவிட்டால், மற்ற கூட்டுக்குடும்ப உறுப்பினர்கள், அவர்களிடையே பிரிவினை ஏற்பட்ட ஒரே காரணத்திற்காக அந்தத் தகுதியை அவர்கள் இழக்க மாட்டார்கள்.

4) ''கூட்டுக் குடும்ப உறுப்பினர்கள்'' என்பது இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட ஆண்கள் சில காலத்திற்கு ஒரே குடும்ப உறுப்பினர்களாக இருப்பதைக் குறிக்கும்.

(95)

90. இ) கூட்டுக் குடும்ப சொத்தைக் குறித்த நிலைமைகள்: ஒரு கூட்டுக் குடும்பத்தைச் சேர்ந்த உறுப்பினர் இந்தத் தொகுப்பு அமுலுக்கு வருவதற்கு முன்போ பின்போ சம்பாதித்த சொத்திற்கு கீழ்க்காணும் விதிமுறைகள் பொருந்தும்:-

அ) கூட்டுக் குடும்ப உறுப்பினர் ஒவ்வொருவரும் அந்தக் குடும்பத்தில் பிறந்த காரணத்திற்காக தன் தந்தைக்கு சமமாக அந்தக் குடும்பச் சொத்தில் உரிமை உடையவராவார்;

ஆ) கூட்டுக் குடும்ப உறுப்பினர் அனைவரும் அந்தச் சொத்தை கூட்டு நிலச் சொத்துரிமை முறையில் வைத்திருப்பார்கள்;

இ) ஒரே எஞ்சுநர் உரிமை உள்ள நபர் இருந்தால் தவிர கூட்டுக் குடும்பத்தைச் சேர்ந்த ஒருவர் இறந்துவிட்டால் சொத்தில் அவருக்கு இருந்த உரிமை உயிருடன் உள்ள மற்ற உறுப்பினர்களுக்குப் போகுமே தவிர வாரிசுரிமை முறையில் அவர்களுடைய வாரிசுகளுக்குப் போகாது;

ஈ) உட்பிரிவு இ-ல் என்ன சொல்லப்பட்டிருந்தாலும், கூட்டுக் குடும்ப உறுப்பினர் ஒருவர் இறந்துவிட்டால் அவருடைய விதவையும் மகளும் மற்றவர்களுடன் சேர்ந்து அவருடைய சொத்தில் -

i) விதவைக்கு மகனுக்குள்ள உரிமைக்கு சமமாகவும்,

ii) திருமணமாகாத மகளைப் பொறுத்தவரை மகனுக்கு கிடைக்கும் உரிமையில் பாதியும், திருமணமான மகளானால், மகனுக்கு கிடைக்கும் பங்கில் கால் பாகமும் பெறுவார்கள்.

(97)

90. ஈ) கூட்டுக் குடும்ப உறுப்பினர்களுக்கு கூட்டு குடும்பரீதியில் சொத்தை விற்பதற்கான உரிமை : 90-இ உட்பிரிவு (ஈ)யில் சொல்லியுள்ளபடி உரிமை பெற்ற எந்தப் பெண்ணும் அல்லது கூட்டுக் குடும்ப உறுப்பினரும், அந்தக் கூட்டுக் குடும்ப உறுப்பினர் என்ற முறையில் மேற்கண்ட முறையில் உரிமை பெற்றிருந்தாலோ, அந்தச் சொத்தை மாற்றவோ அல்லது பிணையாக வைக்கவோ தங்களுக்குள்ள பாக அளவிற்கு மேல் செய்ய முடியாது. எந்த நீதி மன்றமும், அந்தக் கூட்டுக் குடும்ப உறுப்பினர் அல்லது அந்தப் பெண்ணிற்கு எதிராக, அவர்களுக்குள்ள உரிமைகளுக்கு அதிகமாக எந்த நடவடிக்கையும் எடுக்க முடியாது.

90. உ) கூட்டுக் குடும்பச் சொத்தில் பாகப் பிரிவினை கேட்கும் உரிமை:- (1) பிரிவு 90-இ உட்பிரிவு (ஈ)யின்படி கூட்டுக் குடும்பச் சொத்தில் உரிமை பெற்ற கூட்டுக் குடும்ப உறுப்பினர் எவரும் எந்தப் பெண்ணும் தங்கள் பகுதி சொத்தைத் தனியாக தன் பொறுப்பில் வைத்து அனுபவிப்பதற்காக, மற்ற உறுப்பினர்கள் ஒத்துக் கொள்ளாவிட்டாலும் அதற்கான நடவடிக்கை எடுக்கலாம்.

2) உட்பிரிவு (1)ன்படி உரிமை பெற்ற ஒரு பெண் பாகப் பிரிவினை பெறாமல் இறந்துவிட்டால், அவர் இறந்த பின் அவருடைய பாகம் கூட்டுக் குடும்ப மற்ற உறுப்பினர்களுக்குப் போகும்.

(99)

90. ஊ) கூட்டுக் குடும்ப உறுப்பினர் மற்ற உறுப்பினரின் பாகத்தை வாங்கும் உரிமை : பிரிவு 90-ஈ-யில் என்ன சொல்லப்பட்டிருந்தாலும், வேறு ஓர் உறுப்பினர் இந்துவாக தொடர்ந்து நீடிக்காமல் மற்ற மதத்திற்கு மாறிவிட்டாலோ, அல்லது 90-இ உட்பிரிவு (ஈ)யின் படி உரிமை பெற்ற பெண் அதற்குப் பிறகு பாகப்பிரிவினைச் சட்டம் 1983 ((IV of 1983)ஐ அமுல் படுத்தி இந்துவாக நீடிக்காத ஆணும், உரிமை பெற்ற பெண்ணும், கூட்டுக் குடும்பத்திற்கு சொந்தமான வசிக்கும் இடத்தையும் தங்களுக்கு மாற்ற மற்ற உறுப்பினர் கோரலாம்.

(99)

90. எ) பாகப்பிரிவினையில் சொத்தை ஒதுக்கீடு செய்தல் : ஒரு கூட்டுக் குடும்பச் சொத்தில் பாகப் பிரிவினை நடந்தபின் கீழ்க்காணும் முறைகளைப் பின்பற்றி உறுப்பினர் களுக்கு அவர்களுக்குண்டான பாகத்தை அளிக்க வேண்டும்:

அ) தந்தைக்கும், மகன்களுக்கும் இடையே பாகப்பிரிவினை ஏற்பட்டால் ஒவ்வொரு மகனும் தந்தைக்குச் சமமாக எடுத்துக் கொள்ள வேண்டும்;

ஆ) பாகப்பிரிவினை சகோதரர்களுக்கிடையே ஏற்பட்டால், எல்லோரும் சமமாக எடுத்துக் கொள்ள வேண்டும்;

இ) குடும்பத்தைச் சேர்ந்த பல்வேறு குழுவினரிடையே கூட்டுக் குடும்பச் சொத்து பாகப் பிரிவினை செய்யப்பட்டால், ஒவ்வொரு குழுவும் சமமாக எடுத்துக் கொள்ள வேண்டும்;

ஈ) ஒரே குழுவைச் சேர்ந்த கூட்டுக் குடும்ப உறுப்பினர் களுக்கிடையே பாகப்பிரிவினை ஏற்பட்டால் எல்லோரும் சமமாக பங்கிட்டுக் கொள்ள வேண்டும்.

(100)

90. ஏ) கூட்டுக் குடும்பத்திற்கு முற்றுப்புள்ளி: வேறு எந்தக் கூட்டுக் குடும்ப உறுப்பினரும் இல்லை என்ற சூழ்நிலையில், மூதாதையர் சொத்தைப் பெற்ற ஓர் உறுப்பினரின் சொத்து, அவருக்குப் பின் அவருடைய வாரிசுகளுக்குப் போகும். அதற்கு எஞ்சுநர் உரிமை முறை பொருந்தாது.

(101)

பாகம் III

மருமக்கதாய, அலியசந்தான மற்றும் நம்பூதிரி கூட்டுக் குடும்பங்கள்

90. ஐ) மருமக்கதாய, அலியசந்தான மற்றும் நம்பூதிரி கூட்டுக் குடும்பங்களுக்கான விசேட வகையங்கள்: இந்தத் தொகுதி இயற்றப்படாமலிருந்தால் மருமக்கதாய, அலிய சந்தான அல்லது நம்பூதிரி சட்டம் பயன்படுத்தப்பட்டிருக்கக் கூடிய இந்தப் பகுதியில் சொல்லப்பட்டுள்ள எதுவும், தார்வாட், தவசி மற்றும் குடும்பா, கவரு மற்றும் இல்லோம் ஆகியவற்றுக்கு பொருந்தாது; மருமக்கதாய, அலியசந்தான மற்றும் நம்பூதிரி சட்டம் இந்த தொகுப்பு இயற்றப்படுவதற்கு முன்புள்ள முறையே பின்பற்றப்படும். அவற்றை இந்தத் தொகுப்பு எடுத்து விட்டதாகக் கொள்ள முடியாது. அவர்களுடைய சொத்து குறித்துள்ள எல்லா முறைகளும் (வாரிசுரிமையோ அல்லது மற்ற முறையோ) அல்லது பாகப் பிரிவினை அல்லது சொத்தை நிர்வகித்தல் ஆகிய யாவும் ***தார்வாட், தவசி, குடும்பா, கவரு*** அல்லது ***இல்லோம்*** ஆகியோர் பழைய முறையைத் தொடர்ந்து பின்பற்றலாம்.

(102)

பாகம் IV

பலதரப்பட்டது

90.ஒ) விலக்கு : இந்தப் பாகத்தில் சொல்லியுள்ள எதுவும் கீழ்காண்பவற்றிற்கு பொருந்தாது :

அ) எந்தச் சொத்தும், வழக்கமுறைப்படி ஒரு தனி வாரிசுக்குப் போகும்போது, அல்லது விரும்பி அளிக்கும்போது, அல்லது சட்ட மூலமாக கொடுக்கப்படும்போது; அல்லது

ஆ) திருவாங்கூர் - கொச்சி அரசில், அல்லது சென்னை மாநிலத்தைச் சேர்ந்த மலபார், தெற்குக் கனரா அல்லது நீலகிரி மாவட்டத்தில் அவ்வப்பொழுதுள்ள சட்டத்திற்கேற்ப, அல்லது வழக்கு முறைக்கு ஏற்ப எந்த ஒரு சிறப்புத் தகுதியும், ஒரு தனி மனிதனால் அனுபவிக்கும்போது; அல்லது

இ) கீழ்க்காணும் சொத்துக்கள் - இவை திருவாங்கூர் - கொச்சி அரசைச் சேர்ந்தவை :-

இடப்பல்லி, பூஞ்சார் மற்றும் கிளிமனூர் சொத்துக்கள் மற்றும் வலியம்மா தம்புரான் கோவிலகம் சொத்து, இவற்றுள் உள்ளடங்கிய அரண்மனைப் பணம்.

(103)

பாகம் VI பெண்ணின் சொத்து

91. பெண்ணின் சொத்தின் நிலை: (1) இந்தத் தொகுப்பு அமுலுக்கு வந்தபின் ஒரு பெண் எந்த சொத்தைப் பெற்றாலும் அது அவளின் முழுமையான சொத்தாகும்.

(2) உட்பிரிவு (1)ல் சொல்லப்பட்டுள்ள எதுவும், அன்பளிப்பு அல்லது உயில் மூலம் பெறப்பட்டிருந்தால், அவற்றில் சொல்லப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு உட்பட்டுத்தான் அவற்றை அவள் அனுபவிக்க முடியும்.

ஆனால் அவள் பெண் என்பதற்காக மட்டும் அந்த நிபந்தனைகளை விதிக்க முடியாது.

விளக்கம் : ''சொத்து'' என்றால் அது அசையும் மற்றும் அசையாச் சொத்துக்களைக் குறிக்கும். அந்தச் சொத்து அப்பெண்ணால், அவள் திருமணத்திற்கு முன்போ அல்லது பின்போ பெறப்பட்டிருக்கலாம். அவள் விதவையாக இருக்கும்போதோ, அல்லது வாரிசுரிமையாகவோ அல்லது பாகப் பிரிவினையிலோ, அல்லது அவளது ஜீவனாம்சத்திற்காகவோ, ஜீவனாம்சத்திற்கு ஏற்கனவே வரவேண்டியவையாகவோ, அல்லது உறவினர் அல்லது மற்றவரால் அன்பளிக்கப்பட்டதாகவோ, அவளது திறமையால் பெறப்பட்டதாகவோ அல்லது வாங்கியதாகவோ அல்லது வேறு முறையிலோ இருக்கலாம்.

(104)

92. பெண்ணின் சொத்து கைமாறும் நிலை: 1) இந்தத் தொகுப்பு அமலுக்கு வந்தபின் ஒரு பெண் இறந்துவிட்டால் அவள் அந்தச் சொத்தை இந்தத் தொகுப்பு வருவதற்கு முன்போ அல்லது பின்போ எப்போது பெற்றிருந்தாலும் அவளுக்குப் பிறகு பாகம் VII-ல் சொல்லியுள்ளபடி அவளுடைய வாரிசுக்குப் போகும்.

2) அவள் இறக்கும்போது இந்து பெண் சொத்து என அழைக்கப்படுவதை அனுபவிக்கும் உரிமை மட்டும் பெற்றிருந்தால் உட்பிரிவு (1)-ல் சொல்லியுள்ளவை, அந்தச் சொத்திற்குப் பொருந்தா. அம்மாதிரியான சொத்து கீழ்க்காணும் முறையில் கை மாறும்:

i) வாரிசுரிமை முறையில் அவள் அச்சொத்தைப் பெற்றிருந்தால், பகுதி VII-ல் சொல்லப்பட்டுள்ள கடைசியாக இருந்த முழு அதிகாரம் பெற்ற உரிமையாளரின் வாரிசுகளுக்குப் போகும்;

ii) பாகப் பிரிவினை மூலம் அச் சொத்து பெறப்பட்டிருந்தால் அல்லது வேறு முறையில் பெறப்பட்டிருந்தால், இந்தத் தொகுப்பு இயற்றப்படாமல் இருந்தால் யாருக்குப் போகுமோஅவர்களுக்குப் போகும்.

(105)

93) சீதனம் மனைவியின் நலனுக்காகப் பாதுகாக்கப் பட வேண்டும்: *(1) இந்தத் தொகுப்பு அமுலுக்கு வந்த பிறகு, எந்த சீதனமும், திருமணத்தன்றோ, திருமணத்திற்கு நிபந்தனையாகவோ அல்லது திருமணத்திற்கு பிரதிபலனாகவோ அளிக்கப்பட்டிருந்தால், திருமணமான அந்தப் பெண்ணின் சொத்தாகக் கருதப்படும்.*

(2) அப்பெண்ணிற்காக சீதனத்தைப் பெற்ற ஒருவர் அவள் நன்மைக்காக அதை பாதுகாக்க வேண்டும். அவளுக்கு 18 வயது முடிந்தவுடன் அதை அவளிடம் கொடுக்க வேண்டும். அவள் அதற்குள் இறந்துவிட்டால் பாகம் VII-ல் சொல்லப்பட்டுள்ள வாரிசுகளுக்குக் கொடுக்க வேண்டும்.

விளக்கம் :- இந்தப் பகுதியில் ''சீதனம்'' என்று சொன்னால் எந்த சொத்தும் ஒருவரால், திருமணத்தின்போது, அதற்கு பிரதி பலனாகவோ, அல்லது நிபந்தனையாக அளித்ததோ அல்லது அளிப்பதாக வாக்குறுதி கொடுக்கப்பட்டதாகவோ இருக்கலாம். ஆனால் திருமணத்தின் போது மணமகனுக்கோ அல்லது வேறு நபருக்கோ அளிக்கப்பட்ட சிறு அன்பளிப்பு இதில் சேராது.

(106)

பகுதி VII - வாரிசு உரிமை

பாகம் I

அமுல்படுத்துதல்

94. இந்தப் பகுதியிலிருந்து சில சொத்துக்களுக்கு விதி விலக்கு - பின்கண்ட சொத்துக்களுக்கு இந்தப் பகுதி - பொருந்தாது -

i) வழக்க முறைப்படியான வாரிசு உரிமையின் பிரகாரம் ஒரு நபருக்கு வரும் சொத்து அல்லது அன்பளிப்பாக கிடைக்கும் சொத்து அல்லது **சட்ட ரீதியாகக் கிடைக்கும் சொத்து அல்லது பிரிவு 90 - J - படி கிடைக்கும் மற்ற எந்த சொத்து, அல்லது**

ii) **பகுதி V-ல் சொல்லியுள்ளபடி கூட்டுக் குடும்பச் சொத்து ஓர் உறுப்பினர் இறந்தவுடன் அவருடைய பங்கு, மற்ற உறுப்பினர் களுக்கு எஞ்சுநர் உரிமை முறையில் போவது, அல்லது**

iii) **90-I-ல் சொல்லப்பட்டுள்ளவைகளைப் பின்பற்றும் தார் வாடு, தவசி, குடும்பா, கவரு, அல்லது இல்லோம் சொத் துக்கள்.**

(107)

95. இந்தப் பகுதியை அமுல்படுத்தல்: பிரிவு 94-ல் வேறுவிதமாகச் சொல்லப்பட்டிருந்தாலொழிய உயில் எழுதாமல், இந்தத் தொகுப்பு அமுலுக்கு வந்த பிறகு இறந்துவிடும் ஒரு இந்துவின் சொத்துக்கு கீழ்க்காணும் முறையில் வாரிசு உரிமை முடிவு செய்யப்படும்:-

(அ) அசையும் சொத்தாக இருந்தால் உயில் எழுதாமல் இறந்து விட்டவர் அவர் மரணமடைந்தபோது, இந்தச் சட்டம் அமுல்படுத்தப் படும் இடங்களில் வசிக்கவில்லை என்பது நிரூபணமாக வேண்டும்;

(ஆ) அசையா சொத்தாக இருந்தால் மேலே கூறிய எல்லைக் குள் அது இருந்தால் உயில் எழுதாமல் இறந்துபோனவர் அவர் இறந்த போது அந்தக் குறிப்பிட்ட எல்லைக்குள் வசித்தாரா இல்லையா என்பது தெரிய வேண்டும்.

விளக்கம் :- இந்தப் பகுதியை பொறுத்தவரை ஓர் இந்து வின் வாழ்விடம் என்பது பிரிவு 6 முதல் 18 வரை இரண்டையும் சேர்த்து இந்திய வாரிசுரிமைச் சட்டம் 1925 (XXXIX of 1925)-ல் சொல்லப்பட்டுள்ளவற்றின் அடிப்படையில் தீர்மானிக்கப்பட வேண்டும்.

(108)

96. <u>வாரிசு உரிமை விஷயத்தில் பிரிந்த மற்றும் பிரியாத மகன்களுக்கிடையே வேற்றுமை கிடையாது-</u> *உயில் முறை அல்லாத வாரிசுரிமை விஷயத்தில் பின்கண்டவாறு வேற்றுமை பாராட்டக்கூடாது:-*

1) உயில் எழுதாமல் இறந்துபோனவரிடமிருந்து பிரிந்த ஒரு மகனுக்கும் பிரியாத ஒரு மகனுக்கும் இடையே அல்லது, பிரிந்த ஒரு மகனுடன் மறுபடியும் சேர்ந்துக் கொண்ட ஒரு மகனுக்கும் இடையே;

2) விதவையான ஒரு பெண் வாரிசு மற்றும் விதவை அல்லாத ஒரு பெண் வாரிசு அல்லது ஏழ்மையான ஒரு பெண் வாரிசு, மற்றும் பணக்கார பெண் வாரிசு, குழந்தை உள்ள அல்லது குழந்தை இல்லாத ஒரு பெண் வாரிசு, அல்லது குழந்தை பிறக்க வாய்ப்புள்ள ஒரு பெண் வாரிசு ஆகியோருக்கு இடையே.

(109)

பாகம் II

உயில் முறை அற்ற வாரிசுரிமை

ஆண்கள் சொத்து விஷயத்தில் பொது விதிமுறைகள்

97. 1) விளக்கம் : இந்தப் பகுதியில் குறிப்பிட்ட சூழ்நிலை வேறு பொருளைக் குறித்தால் தவிர -

(அ) ''ஆண் வழி உறவு'' - ஒரு நபர் அடுத்தவருக்கு ஆண் வழியினர் (கோத்ரஜா) என்றால் இரண்டு பேரும் இரத்த வழி உறவிலோ அல்லது தத்து எடுத்த வகையிலோ ஆண்கள் மூலமாக மட்டுமே உறவினராவார்கள்;

(ஆ) ''பெண் வழி உறவு'' - ஒரு நபர் அடுத்த நபருக்கு பெண்வழி உறவினர் என்றால் (பந்து) இரண்டு பேரும் இரத்த வழி முறையிலோ அல்லது தத்து எடுத்த முறையிலோ பெண்கள் மூலமாக மட்டுமே உறவினராவார்கள்.

(இ) ''வாரிசு'' என்றால் உயில் எழுதாமல் இறந்து போன வரது சொத்தில் இந்தப் பகுதியின் கீழ் பங்கு பெற உரிமை பெற்ற ஆணோ பெண்ணோ ஆவார்.

(ஈ) ''உயில் முறை அற்ற வாரிசுரிமை'' என்றால் ஒரு நபர், தான் இறக்கும் முன் அமுல்படுத்த தகுதியுள்ள உயிலை எழுதாமல் இறந்துவிட்டால், அவர் தனது சொத்துக்கு உயில் முறை அற்ற வாரிசை விட்டுவிட்டு இறந்தார் என்று பொருள்.

(2) இந்தப் பகுதியில் குறிப்பிட்ட சூழ்நிலை வேறு பொருளைக் குறித்தால் தவிர, ஆண்களைக் குறிக்கும் சொல் பெண்களையும் உள்ளடக்கியதாகக் கொள்ள முடியாது.

(110)

98. இங்கு ஆண் விஷயத்தில் வாரிசு உரிமை சம்பந்தமான பொது விதிமுறைகள் : பிரிவு 105அ 105 ஒ இரண்டும் உள்ளடக்கி குறிப்பிட்டு சொல்லப்பட்டுள்ளவைகளைத் தவிர, உயில் எழுதாமல் இறந்து விடும் ஓர் இந்து ஆணின் சொத்து, கீழ்க் காணும் விதிமுறைகளுக்குட்பட்டு வழங்கப்படும்:-

அ) முதலாவதாக எட்டாவது அட்டவணை பிரிவு 1-ல் சொல்லப்பட்டுள்ள உறவினர்களான முன்னுரிமை பெற்ற வாரிசுகள்;

ஆ) இரண்டாவதாக எட்டாவது அட்டவணையில் பிரிவு I-ல் சொல்லப்பட்டுள்ள முன்னுரிமை பெற்ற வாரிசு இல்லாவிட்டால் எட்டாவது அட்டவணை பிரிவு II-ல் சொல்லப்பட்டுள்ள உறவினர்களான முன்னுரிமை பெற்ற வாரிசுகள்;

இ) மூன்றாவதாக, மேலே குறிப்பிடப்பட்ட இரண்டு பிரிவுகளையும் சேர்ந்த முன்னுரிமை பெற்ற வாரிசு எவரும் இல்லை என்றால் பிரிவு 102-ல் சொல்லப்பட்டுள்ள அவரது ஆண்வழி உறவினர்கள்;

ஈ) கடைசியாக, ஆண்வழி உறவு முறைகள் இல்லாவிட்டால், பிரிவு 103ல் சொல்லப்பட்டுள்ள பெண்வழி உறவினர்கள்.

(111)

99. முன்னுரிமை பெற்ற வாரிசுகளிடையே வாரிசுரிமையை நிர்ணயிக்கும் முறை : *எட்டாவது அட்டவணையில் பிரிவு 1-ல் உள்ள வாரிசுகள் ஒன்றாக எடுத்துக் கொள்ளப்படுவார்கள். பிரிவு II-ல் முதல் வரிசையில் குறிக்கப்பட்டுள்ளவர்கள் இரண்டாவது வரிசையில் குறிக்கப்பட்டுள்ளவர்களை விட முன்னுரிமை பெறுவார்கள். அதே முறையில் மூன்றாவது வரிசையில் குறிக்கப்பட்டுள்ளவர்களை விட இரண்டாவது வரிசையில்குறிக்கப்பட்டுள்ளவர்கள் முன்னுரிமை பெறுவார்கள். இதே முறையில் அடுத்தடுத்து வரிசைகளில் உள்ளவர்களைவிட முன் வரிசையில் உள்ளவர்கள் முன்னுரிமை பெறுவார்கள்.*

(112)

100. பிரிவு I-ல் உள்ள முன்னுரிமை பெற்ற வாரிசுகளுக்கிடையே சொத்தைப் பகிர்ந்தளித்தல் : *(1) உயில் எழுதாமல் இறந்துவிட்ட ஒருவரது சொத்து **எட்டாவது** அட்டவணை பிரிவு I-ல் சொல்லப்பட்டுள்ள முன்னுரிமை பெற்ற வாரிசுகளிடையே பிரித்தளிக்கப்படும். இதன்படி ஒரு விதவையின் பங்கு ஒவ்வொரு மகனின் பங்கிற்கு சமமாக இருக்கும்; ஒரு மகனை விட்டு இறந்து விட்ட மகன் அல்லது உயில் எழுதாமல் இறந்துவிட்டவர் உயிரோடிருந்தபோது வாழ்ந்த மகனின் மகன் ஆகியோர் இதில் அடங்குவர். திருமணமாகாத ஒவ்வொரு மகளின் பங்கு ஒவ்வொரு மகனின் பங்கில் பாதியும் அதேபோல் திருமணமான மகளின் பங்கு ஒவ்வொரு மகனின் பங்கில் காலபாகமும் இருக்கும்.*

முன்னால் இறந்துவிட்ட மகன் ஒரு மகனையோ அல்லது மகனின் மகனையோ விட்டுச் செல்லாமல் தனது விதவையையோ அல்லது உயில் எழுதாமல் இறந்துவிட்டவர் காலத்தில் வாழ்ந்த தனது மகனின் விதவையையோ விட்டுவிட்டு இறந்துவிட்டால், உயில் எழுதாமல் இறந்துவிட்ட மகனின் பங்கில் பாதி முன்னால் இறந்த மகனுக்குக் கிடைக்கும்.

2) உட்பிரிவு I-ல் சொல்லப்பட்டுள்ள உயில் எழுதாமல் இறந்துவிட்ட நபரின் மகன் அவருக்கு முன் இறந்துவிட்டிருந்தால் சொத்து கீழ்க்காணும் முறையில் பகிர்ந்தளிக்கப்படும்:-

அ) அவ்வாறு முதலில் இறந்துவிட்ட மகன் ஒரு மகனையோ அல்லது மகனின் மகனையோ விட்டுவிட்டு இறந்துவிட்டிருந்தால், அவ்வாறு உயில் எழுதாமல் இறந்து விட்டவரின் சொத்து பங்கு பிரிக்கப்படவேண்டும். அப்போதுதான் முதலில் இறந்த மகனின் விதவையின் பங்கு அவன் பங்கிற்கு சமமாக இருக்கும். அப்போதுதான் இன்னொரு மகன் ஒரு மகனை விட்டுவிட்டு முதலில் இறந்து விட்டிருந்தால் அவன் பங்கிற்கு சமமாக சொத்து இருக்கும்.

முதலில் இறந்துவிட்ட மகனின் மகன் உயில் எழுதாமல் இறந்துவிட்டவருக்கு முன்பாக ஒரு விதவையை விட்டுவிட்டு இறந்துவிட்டால், ஆனால் அவருக்கு மகன் இல்லாதிருக்கும்போது, மகனின் மகனின் பங்கு, இறந்துவிட்டவரின் மகனின் பங்கில் பாதியாக இருக்கும்.

ஆ) முதலில் இறந்துவிட்ட மகனின் மகனுடைய பங்கை, உயில் எழுதாமல் இறந்துவிட்டவருக்கு முன்பாக அவன் இறந்து விட்டால், அவனுடைய விதவை மற்றும் மகன்கள் சமமாகப் பங்கிட்டுக் கொள்வார்கள்.

இ) முதலில் இறந்துவிட்ட மகன், தன் விதவையை விட்டு விட்டு இறந்தாலோ, அல்லது மகனின் விதவை அல்லது இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மகன்களின் விதவைகளை விட்டு விட்டு இறந்தாலோ, ஆனால் மகனையோ மகனின் மகனையோ விடாமலிருந்தால், அது உயில் எழுதாமல் இறந்தவர் இறக்கும் போது உள்ள நிலையாக இருந்தால், முதலில் இறந்த மகனின் சொத்து அவனின் விதவை மற்றும் மகனின் விதவை ஆகியோருக்கிடையே பங்கிடப்படும். அப்போதுதான் முதலில் இறந்த மகனின் விதவையின் சொத்து, முதலில் இறந்த மகனுடைய விதவையின் சொத்தைவிட இரண்டு மடங்காக இருக்கும்.

3) இந்தப் பிரிவிற்காக, ஒரு நபர் ஒன்றுக்கு மேற்பட்ட விதவைகளை விட்டுவிட்டுச் சென்றால் அவர்கள் யாவரும் சொத்தைத் தங்களுக்குள் சமமாக பங்கிட்டுக் கொள்வார்கள். ஒரு விதவை இருந்தால் அவளுக்கு என்ன பங்கு கிடைக்குமோ அதை அவர்கள் யாவரும் சமமாக பங்கிட்டுக் கொள்வார்கள்.

* * * *

* * * *

(114)

101. பிரிவு II-ல் சொல்லப்பட்டுள்ள முன்னுரிமை வாரிசுகளுக்கிடையே சொத்தைப் பகிர்ந்து அளிக்கும் முறை: *8-வது அட்டவணை II-வது பிரிவில் சொல்லப்பட்டுள்ள முன்னுரிமை வாரிசுகளுக்கிடையே பகிர்ந்து அளிக்கும்போது போட்டியிடுவோர் வரிசையில் இடம் பெற்றுள்ளவர்களுக்குச் சமமாக அளிக்க வேண்டும். உயில் எழுதாமல் இறந்துவிட்ட நபரின் சொத்துக்களை இந்த முறையில்தான் பிரிக்க வேண்டும்.*

(115)

102. பெண்வழி உறவின் வாரிசுகள் : *8-வது அட்டவணை பிரிவு I அல்லது II-ல் சொல்லப்பட்டுள்ள முன்னுரிமை பெற்ற வாரிசுகள் எவரும் இல்லை என்றால், உயில் எழுதாமல் இறந்துவிட்ட நபரின் சொத்துக்களை இந்தப் பிரிவில் சொல்லப் பட்டுள்ள முறையில் ஐந்து தலைமுறைகளுக்குட்பட்டுள்ள பெண் வழி உறவினர்களுக்கு கொடுக்க வேண்டும்.*

(116)

103. பெண் வழியில் யார் வாரிசுகள் : முன்னுரிமை வாரிசுகள் மற்றும் ஆண் வழி வாரிசுகள் இல்லை என்றால் இறந்துபட்ட நபரின் ஐந்து தலைமுறைக்கு உட்பட்ட பெண்வழி உறவினர்கள், இந்தப் பகுதியில் சொல்லிய விதிமுறைகளுக்குட் பட்டு சொத்து எடுத்துக் கொள்வார்கள்.

(117)

104. ஆண் வழி உறவினர்கள் மற்றும் பெண் வழி உறவினர் களுக்கிடையே வாரிசுரிமையை நிர்ணயிக்கும் முறை :-ஆண் வழி அல்லது பெண்வழி உறவினர்களுக்கிடையே வாரிசுகளை நிர்ணயிக்க கீழ்க்கண்ட விதிமுறைகளை பின்பற்ற வேண்டும்:-

விதி 1 - இரண்டு வாரிசுகளில் குறைந்த முன் தலைமுறைகள் உள்ள அல்லது முன் தலைமுறைகள் இல்லாத வாரிசுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

விதி 2 - முன் தலைமுறைகள் எண்ணிக்கை சமமாக இருந்தால் அல்லது இல்லாமல் இருந்தால், முன்தலைமுறை இல்லாத அல்லது குறைவான தலைமுறைகள் உள்ள வாரிசுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

விதி 3 - பின்தலைமுறைகள் எண்ணிக்கை சமமாக இருந் தால், அல்லது இல்லாது இருந்தால் ஆண் தலைமுறையி லுள்ள வாரிசுக்கு பெண்தலைமுறை வாரிசை விட முன் னுரிமை அளிக்கப்படும். உயில் எழுதாமல் இறந்துவிட்ட நபரின் தலைமுறையிலிருந்து இது கணக்கிடப்பட வேண்டும். இந்த இரு வாரிசுகளின் தலைமுறைகள் தனித்தனியாக கணக்கிடப்பட வேண்டும்.

விதி 4 - இரண்டு தலைமுறைகள் தனித்தனியே பிரிக்கப் படமுடியாத சூழ்நிலை இருந்தால் பெண் வாரிசை விட ஆண் வாரிசுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டும்.

விதி 5 - இரண்டு வாரிசுகளுக்குமிடையே யாரை தேர்ந் தெடுப்பது என்ற பிரச்சினை இருந்தால் இருவருக்கும் சமமாக கொடுக்க வேண்டும்.

*   *   *   *   *

*   *   *   *   *

(117A)

105. தலைமுறைகளைக் கணக்கிடுதல் : (1) ஆண் வழி மற்றும் பெண்வழி உறவு முறையில், உறவு முறையை நிர்ணயிக்க மேல்வழி அல்லது கீழ்வழி அல்லது இரண்டும், உயில் எழுதாமல் இருந்த நபரின் தலைமுறையிலிருந்து கணக்கிட வேண்டும்.

2) உயில் எழுதாமல் இறந்துவிட்ட நபரைக் கொண்டு தான் மேல் மற்றும் கீழ் தலைமுறை நிர்ணயிக்கப்பட வேண்டும்.

3) ஒவ்வொரு தலைமுறையும் ஒரு கட்டமாக மேலோ கீழோ கணக்கிடப்படும்.

(118)

ஆண் மருமக்கதாய சொத்திற்கு வாரிசுரிமை

105A . **மருமக்கதாயத்தைச் சேர்ந்த ஆண் உயில் எழுதாமல் இறந்துவிட்டால் அவருடைய சொத்திற்கு வாரிசு உரிமையை நிர்ணயிக்கும் விதிமுறைகள்:-** இந்தப் பகுதியில் என்ன சொல்லப்பட்டிருந்தாலும், ஓர் இந்து ஆணின் தனிப்பட்ட அல்லது சுயசம்பாத்திய சொத்தை, அவர் உயில் எழுதாமல் இறந்து விட்டால் கீழ்க்காணும் முறையில் நிர்ணயித்து மாற்றம் ஏற்படும்:-

அ) மருமக்கதாயம் மற்றும் அலிய சந்தான சட்டம், இந்தத் தொகுப்பு அமுலுக்கு வருவதற்கு முன் பின்பற்றப்பட்டிருந்தால், அது பிரிவு 105C முதல் 105 T வரை இரண்டும் சேர்ந்து உள்ள விதிமுறைகளின்படி நிர்ணயிக்கப்படும்.

ஆ) இந்தத் தொகுப்பு அமுலுக்கு வருவதற்கு முன், ஒருவருக்கு நம்பூதிரி சட்டம் பின்பற்றப்பட்டிருந்தால், அது பிரிவு 105J -யில் சொல்லப்பட்டுள்ள விதிமுறைகளுக்கு உட்பட்டு நிர்ணயிக்கப் படும்.

(119)

105B. **நேர்வழி இறங்குறவு விளக்கம் :-** பிரிவு 105C முதல் 105J இரண்டும் சேர்க்கப்பட்டு பிரிவு 109A மற்றும் 109Bயில் நேர்வழி இறங்குறவு சொல்லப்பட்டிருந்தால், அது அவரின் வழித் தோன்றலைக் குறிக்கும். அது ஆண் வழி அல்லது பெண்வழி, அல்லது பகுதி ஆண்வழியாகவோ பகுதி பெண்வழியாகவோ இருக்கலாம். மேலும் அவரின் எந்தக் குழந்தையையும் இதில் உள்ளடக்கும்.

(120)

105C. **நேர்வழி இறங்குறவு இருந்தால், அந்தச் சொத்தை மாற்றுவது பற்றி:** 1) உயில் எழுதாமல் இறந்துவிட்ட ஒரு நபர், அவருக்குப்பின் நேர்வழி இறங்குறவு வழித்தோன்றலையோ அல்லது வழித் தோன்றல்களையோ, மேலும் அவருடைய தாய் அல்லது விதவை, அல்லது விதவைகள் அல்லது அவருடைய தாய் மற்றும் விதவை அல்லது விதவைகளையோ விட்டுவிட்டுச் சென்றிருந்தால், உயில் எழுதாமல் இறந்து விட்ட நபரின் எல்லாச் சொத்துக்களும் அவர்களுக்குப் போகும்.

2) தாய் அல்லது விதவை இல்லை என்றால் எல்லாச் சொத்துக் களும் நேர்வழி இறங்குறவு வழித்தோன்றலுக்கோ அல்லது வழித்தோன் றல்களுக்கோ போகும்.

(121)

105D. பகிர்ந்தளிக்கும் விதிமுறைகள் : நேர்வழி இறங்குறவு வழித் தோன்றல்கள் இருந்தால், பிரிவு 105Cயில் சொல்லப்பட்டுள்ள வாரிசுகளுக்கு கீழ்க்காணும் விதிமுறை களைப் பின்பற்றி அந்தச் சொத்து பகிர்ந்தளிக்கப்படும்:-

அ) ஒவ்வொரு குழந்தையும் (மகன் அல்லது மகள்) சம பங்குக்கு உரியவர்களாவார்கள்;

ஆ) உயில் எழுதாமல் இறந்துவிட்ட நபரின் குழந்தை அவருக்கு முன் இறந்துவிட்டால், அந்தக் குழந்தையின் நேர்வழி இறங்குறவு வழித் தோன்றல்கள் உட்பிரிவு (C)யில் சொல்லப்பட்டவைகளுக்கு உட்பட்டு, அந்தக் குழந்தை உயில் எழுதாமல் இறந்து விட்ட நபர் இறக்கும்போது, உயிருடனிருந்தால் என்ன பங்கைப் பெறுமோ அந்தப் பங்கு அந்தக் குழந்தைகளுக்குக் கிடைக்கும்.

இ) உயில் எழுதாமல் இறந்துவிட்ட நபரின் பேரப்பிள்ளைகள், அவரின் குழந்தை இறக்காமல் இருந்தால் என்ன பங்கைப் பெற்றிருக்குமோ, அந்தப் பங்கைப் பெறுவார்கள்;

அந்த பேரக்குழந்தை, உயில் எழுதாமல் இறந்த நபருக்கு முன்பாகவே இறந்து விட்டிருந்தால், அதனுடைய நேர்வழி இறங் குறவு வழித்தோன்றல்கள் உட்பிரிவு (E)யில் சொல்லியுள்ள வற்றிற்கு உட்பட்டு, அந்தப் பேரக்குழந்தை எந்த அளவிற்கு பங்கு பெற்றிருக்கிறதோ அந்தப் பங்கைப் பெறுவார்கள்;

ஈ) உயில் எழுதாமல் இறந்துவிட்ட நபரின் நேர்வழி இறங்குறவு வழித்தோன்றலில் கடைசி வழித் தோன்றலை அந்தச் சொத்து அதே முறையில் சென்றடையும்.

உ) உயில் எழுதாமல் இறந்த நபரின் குழந்தையின் வழித் தோன்றல்கள், பேரக்குழந்தை அல்லது மற்ற நேர்வழி இறங்குறவு வழித் தோன்றல்கள் அவரின் சொத்தில், குழந்தை, பேரக்குழந்தை அல்லது மற்ற வழித் தோன்றல்கள் அவர் இறக்கும் போது உயிருடன் இருந்தால், பங்கு பெற முடியாது.

ஊ) விதவை அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட விதவைகள் இருந்தால், எல்லா விதவைகளும் ஒன்றாக, குழந்தைக்குக் கிடைக் கும் பங்கிற்குச் சமமாக அந்தச் சொத்தைப் பெறமுடியும். ஒன்றுக்கு மேற் பட்ட விதவைகள் இருந்தால் அவர்கள் யாவரும் சொத்தை சமமாகப் பகிர்ந்து கொள்ள வேண்டும்.

எ) குழந்தைக்குச் சமமாக, தாயும் சம பங்கு பெற உரிமை உண்டு.

(122)

105E. நேர்வழி இறங்குறவு வழித்தோன்றல்கள் இல்லாமல், விதவை மற்றும் தாய் இருந்தால் அந்தச் சொத்து மாறும் முறை - 1) உயில் எழுதாமல் இறந்துவிட்ட நபர், தனக்குப் பிறகு நேர்வழி வழித் தோன்றல்கள் யாரையும் விட்டுச் செல்லாமல், தாய் மற்றும் விதவை அல்லது விதவைகளை விட்டு இறந்து விட்டால், பாதி சொத்து அவருடைய தாய்க்கும், மற்றபாதி அவருடைய விதவைக்கும் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட விதவைகள் இருந்தால் அவர்கள் எல்லோருக்கும் சமமாகக் கிடைக்கும்.

(123)

105F. தாய் இல்லாமல் இருந்து, விதவை அல்லது நேர்வழி இறங்குறவு வழித்தோன்றல்கள் இருந்தால் அந்தச் சொத்து மாறும் முறை: 1) உயில் எழுதாமல் இறந்துவிட்ட நபர் அவருக்குப் பின் நேர்வழி இறங்குறவு வழித் தோன்றல்கள், அல்லது அவருடைய தாய் ஆகியோரை விட்டுச் செல்லாமல், விதவை மற்றும் விதவைகளையும் மற்றும் அவரது தாயின் நேர்வழி இறங்குறவு வழித்தோன்றல், அல்லது வழித் தோன்றல்களையும் விட்டுச் சென்றால் பாதி சொத்து அவருடைய விதவை அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட விதவைகள் இருந்தால் அவர்களுக்குச் சமமாகவும், மற்ற பாதி சொத்து அப்போதுள்ள நேர்வழி இறங்குறவுவழித் தோன்றல் அல்லது வழித் தோன்றல்களுக்கும் போகும்.

2) உயில் எழுதாமல் இறந்த நபரின் தாய்க்கு எந்த நேர்வழி இறங்குமுறை வழித் தோன்றல்களும் இல்லாவிட்டால், எல்லாச் சொத்துக்களும், விதவைக்கோ அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட விதவைகள் இருந்தால் அவர்களுக்கோ சமமாகப் போகும். விதவை இல்லாதபோது, எல்லாச் சொத்துக்களும் தாயின் நேர்வழி இறங்குறவு வழித்தோன்றல்களுக்குப் போகும்.

(124)

105G. தாய்வழி பாட்டி அல்லது அவளுடைய நேர்வழி இறங்குமுறை வழித் தோன்றல்கள் அல்லது தந்தை இருந்தால் சொத்து மாறும் முறை (1) உயில் எழுதாமல் இறந்துவிட்ட நபர் பிரிவு 105C, 105E, மற்றும் 105F ஆகியவற்றில் சொல்லப்பட்டுள்ள வாரிசுகளை விட்டுச் செல்லாமல் தம்முடைய தந்தை மற்றும் தாய் வழிப்பாட்டி அல்லது நேர்வழி இறங்குமுறை வழித் தோன்றல் அல்லது வழித் தோன்றல்களை விட்டுச் சென்றிருந்தால் அவருடைய

தந்தைக்குப் பாதி சொத்தும், மற்ற பாதி அவளுடைய தாய்வழிப் பாட்டி அல்லது அவள் இல்லை என்றால் அவளது நேர்வழி இறங்குமுறை வழித்தோன்றல் அல்லது வழித்தோன்றல்களுக்குச் செல்லும்.

2) தாய்வழிப் பாட்டியின் நேர்வழி இறங்குமுறை வழித் தோன்றல் இல்லை என்றாலும், மேலும் தந்தை இல்லை என்றாலும், மொத்த சொத்தும் தாய்வழி பாட்டிக்குப் போகும். அவள் இல்லை என்றால் அவள் நேர்வழி இறங்குமுறை வழித் தோன்றல் அல்லது வழித் தோன்றல்களுக்குப் போகும்.

(125)

105H. மற்ற சந்தர்ப்பங்களில் சொத்து மாற்ற முறை: 1) உயில் எழுதாமல் இறந்து விட்ட நபர், பிரிவு 105C, 105E, 105F மற்றும் 105G ஆகியவற்றில் சொல்லியுள்ள எந்த வாரிசுகளையும் விட்டுச் செல்லாமல் இருந்தால் அந்தச் சொத்து அவருடைய தாயின் தாய் வழிப்பாட்டிக்கும், அவள் இல்லாவிட்டால் அவளுடைய நேர்வழி இறங்குமுறை வழித் தோன்றல் அல்லது வழித் தோன்றல்களுக்கும் போகும்.

2) அம்மாதிரி எந்த நேர்வழி இறங்குமுறை உறவு இல்லை என்றால், உயில் எழுதாமல் இறந்த நபரின் சொத்து மிகத் தூர பெண் உறவினருக்கும், அவள் இல்லாதபோது, அவளுடைய நேர்முறை இறங்குறவு வழித் தோன்றல் அல்லது வழித் தோன்றல்களுக்கும், நெருங்கிய முன்தலைமுறை மற்றும் அவளின் வழித் தோன்றல் களுக்கும் போகும். மிகத்தூர முன்தலைமுறை உறவினர் அல்லது அவர் வழித் தோன்றல்கள் இதில் இடம்பெற மாட்டார்கள்.

(126)

105.I. தாயின் நேர்வழி இறங்குமுறை வழித் தோன்றல்கள் அல்லது மற்ற முன்தலைமுறையினரிடையே சொத்தை பங்கிடுவதற்கான விதிமுறைகள்: உயில் இல்லாமல் இறந்த நபரின் சொத்து அல்லது மற்ற எந்த பங்கும் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நேர்வழி இறங்குமுறை வழித் தோன்றல்கள் அவருடைய தாய்க்கு இருந்தால் அவர்களுக்கோ அல்லது மற்ற முன்தலைமுறையினருக்கோ பங்கு பிரிவு 105C உட்பிரிவு (A) முதல் (C) வரை உள்ள பிரிவுகளுக்கு உட்பட்டு கொடுக்கப்படும். தாய் மற்றும் மற்ற முன் தலைமுறையினர் உயில் எழுதாமல் இறந்து விட்டதாகக் கருதி உயிருடன் உள்ள வழித் தோன்றல்களுக்கு மட்டும் சொத்தை விட்டு விட்டுச் சென்றதாகக் கருதப்படும்.

(127)

105J. நம்பூதிரி ஆண்களுக்குள்ள சிறப்பு வாரிசுரிமை விதிமுறைகள் : இந்தப் பாகத்தில் என்ன சொல்லப்பட்டிருந்தாலும், தனியாக மற்றும் சுயமாகச் சம்பாதித்த ஓர் இந்து ஆண் இந்தத் தொகுதி இயற்றப்படாதிருந்தால் நம்பூதிரி சட்டத்துக்கு உட்பட வேண்டியிருப்பவர் உயில் எழுதாமல் இறந்துவிட்டால் அச்சொத்து குறித்துக் கீழ்க்கண்ட விதி முறைகள் பின்பற்றப்பட வேண்டும் -

அ) உயில் எழுதாமல் இறந்துவிட்ட நபர், தனக்குப்பின், நேர்வழி இறங்குமுறை வழித் தோன்றல் அல்லது வழித் தோன்றல் களையோ, அல்லது விதவை மற்றும் விதவைகளையோ அல்லது அந்த வழித் தோன்றல் அல்லது வழித் தோன்றல்களையோ மற்றும் விதவை அல்லது விதவைகளோ விட்டுச் சென்றிருந்தால், அந்த முழுசொத்தும் உட்பிரிவு (a) முதல் (i) வரை உள்ள முறைப்படி அவர்களுக்குப் போகும்.

ஆ) உட்பிரிவு (a)வில் சொல்லியுள்ள எந்த உறவினரையும் அவர் விட்டுச் செல்லாதிருந்தால் பிரிவு 97 முதல் 108 வரை உள்ளவற்றில் சொல்லியுள்ள விதி முறைகளின்படி அச்சொத்து முறைப்படி உரிமை மாற்றித் தரப்படும்.

(128)

உயில்வழி அல்லாத முறையில் ஒரு பெண்ணின் சொத்திற்குள்ள வாரிசுரிமை

பொது விதிமுறைகள்

106. **ஓர் இந்து பெண்ணின் வாரிசுகள் :** பிரிவு 109A மற்றும் 109B யில் சொல்லப்பட்டுள்ளவைகளைத் தவிர்த்து உயில் எழுதாமல் இறந்துவிடும் ஓர் இந்துப் பெண்ணின் சொத்தை கீழ்க் காணும் முறையில் மாற்ற வேண்டும்:-

அ) முதலாவதாக கணவன் மற்றும் குழந்தைகள், முதலில் இறந்துவிட்ட குழந்தையின் குழந்தைகள்;

ஆ) இரண்டாவதாக, உட்பிரிவு (அ) யில் சொல்லப்பட்டுள்ள வாரிசுகள் இல்லை என்றால் பிரிவு 109-ல் சொல்லப்பட்டுள்ள வாரிசுகளின் வரிசைப்படி.

(129)

107. **வாரிசுகளுக்கிடையே பங்கைப் பிரிப்பது:** 1) ஓர் இந்துப் பெண் கணவனையும் குழந்தைகளையும் விட்டுவிட்டு இறந்து விட்டால், உயில் எழுதாமல் அவள் விட்டுச் சென்ற சொத்துகள் யாவும் அவள் கணவன் மற்றும் குழந்தைகளால் சமமாக பங்கிட்டுக் கொள்ளப்படும்.

2) ஓர் இந்துப் பெண் உயில் எழுதாமல் இறந்துவிட்டால், அவளுடைய சொத்து கணவன் இல்லாமல் குழந்தைகள் மட்டும் இருக்கும்போது, அவள் உயில் எழுதாமல் விட்டுச் சென்ற சொத்து அவள் குழந்தைகளால் சமமாகப் பங்கிட்டுக் கொள்ளப்படும்.

3) ஓர் இந்துப் பெண் உயில் எழுதாமல் இறந்துவிட்டால், அவள் உயிருடன் இருக்கும்போது அவளுடைய எந்த ஒரு பிள்ளையும் குழந்தைகளை விட்டுவிட்டு இறந்துவிட்டிருந்தால் அந்தப் பிள்ளைக்கு என்ன பங்கு கிடைத்திருக்குமோ அந்தப் பங்கை அந்தக் குழந்தைகள் எடுத்துக் கொள்வார்கள்.

(130)

108. **குழந்தைகள் இல்லை என்றால் சொத்து கணவனுக்குக் கிடைக்கும்:** ஓர் இந்துப் பெண் உயில் எழுதாமல் இறந்து விட்டால், அவளுக்குக் குழந்தைகள் இல்லை என்னும்போது அவளுடைய கணவனுக்கு அந்தச் சொத்து கிடைக்கும். அவள் உயிருடன் இருக்கும்போது அவள் பிள்ளை குழந்தைகளை விட்டு விட்டு இறந்தால் அவர்களுக்குப் பிரிவு 107ன் படி அவள் உயில் எழுதாத சொத்து கிடைக்கும். அந்தக் குழந்தைகளும் இல்லாத போது அந்த உயில் எழுதாத சொத்து அவள் கணவனுக்குப் போகும்.

(131)

109. பெண்ணின் சொத்துக்கு மற்ற வாரிசுகள்: *ஓர் இந்துப் பெண் பிரிவு 107 அல்லது 108-ல் சொல்லப்பட்டுள்ள வாரிசுகள் யாரும் இல்லாமல் இறந்து விட்டால், உயில் எழுதப் படாத அவளுடைய சொத்துக்கள் பின்கண்ட வாரிசுகளுக்குக் கீழ்க் காணும் முறையில் போகும்:-*

1) தாய், தந்தை;

2) கணவனுடைய வாரிசுகள் - கணவர் உயில் எழுதாமல் இறந்துவிட்டால் அவருடைய சொத்துக்கள் யாருக்கு போகுமோ, அந்த வாரிசுகளுக்கு அவருடைய சொத்தாக அவர் உயில் எழு தாமல் மனைவிக்குப் பிறகு இறந்துவிட்டதாகக் கருதிப் போகும்.

3) தாயின் வாரிசுகள் - தன் மகள் இறந்த உடன் அந்தத் தாய் இறந்ததாகக் கருதி, அவள் உயில் எழுதாமல் போனால், அவள் சொத்து யாருக்குப் போகுமோ, அந்த வாரிசுகளுக்கு அதற் குண்டான விதிமுறைகளின் படி போகும்.

4) தந்தையின் வாரிசுகள் - மகள் இறந்தபிறகு அந்தத் தந்தை இறந்ததாகக் கருதி அவர் உயில் எழுதாமல் போனால், அவர் சொத்து யாருக்குப் போகுமோ அந்த வாரிசுகளுக்கு அதற் குண்டான விதி முறைகளின்படி போகும்.

(132)

பெண் மருமக்கதாயம் சொத்துக்கு வாரிசுகள்

109 A. மருமக்கதாயம் அல்லது அலியசந்தான முறை களைப் பின்பற்றும் பெண்கள் உயில் எழுதாமல் இறந்து விட்டால் அவர்களுடைய சொத்துக்களுக்கு வாரிசுகள்: *இந்தப் பகுதியில் என்ன சொல்லப்பட்டிருந்தாலும், இந்தத் தொகுப்பு இயற்றப்படாமல் இருந்தபோது, மருமக்கதாயம் அல்லது அலியசந்தான முறையைப் பின்பற்றிய பெண்ணின் தனிப்பட்ட அல்லது சுய சம்பாத்திய சொத்து, அவள் உயில் எழுதாமல் இறந்து விட்டால் கீழ்க்காணும் முறைப்படி வாரிசு அல்லது வாரிசு களுக்குப் போகும்:-*

அ) உயில் எழுதாமல் இறந்துவிட்டப் பெண் தனக்குப் பின் நேர் வழி இறங்குறவு வழித் தோன்றல் அல்லது வழித் தோன்றல்களை விட்டு விட்டு இறந்துவிட்டால் பிரிவு 105D உட்பிரிவு (a) முதல் (e)-ல் சொல்லியுள்ளது போல் அவளது சொத்து முழுவதும் பகிர்ந்து கொள்ளப்படும்.

ஆ) உயில் எழுதாமல் இறந்துவிட்ட பெண்ணிற்கு நேர்வழி இறங்குறவு வழித் தோன்றல் யாரும் இல்லை என்றால் அவளது சொத்து முழுவதும் உயில் எழுதாமல் இறந்துவிட்ட அந்தப் பெண்ணின் தாய்க்கோ, அவள் இல்லை என்றால் அவளுடைய நேர்வழி இறங்குறவு வழித் தோன்றல் அல்லது வழித் தோன்றல்களுக்கோ போகும்.

இ) உயில் எழுதாமல் இறந்துவிட்ட பெண்ணிற்கு நேர்வழி இறங்குறவு வழித்தோன்றல் அவளுக்கோ அல்லது அவள் தாய்க்கோ இல்லாமல் கணவன் மற்றும் அவளின் தாய்வழி பாட்டி அல்லது பாட்டியினுடைய நேர்வழி இறங்குறவு வழித் தோன்றல் அல்லது வழித் தோன்றல்கள் இருந்தால், பாதி சொத்து அவளுடைய பாட்டிக்கும் அல்லது அவள் இல்லாத போது அவளுடைய நேர்வழி இறங்குறவு வழித் தோன்றல் அல்லது வழித்தோன்றல்களுக்கும் போகும்.

ஈ) உயில் எழுதாமல் இறந்துவிட்ட பெண்ணின் தாய் வழி பாட்டியோ அல்லது அவளுடைய இறங்குறவு வழித் தோன்றல் களோ இல்லாவிட்டால், அவளுடைய சொத்துக்கள் யாவும் அவளுடைய கணவனுக்குப் போகும். அவள் கணவன் இல்லை என்றால் அவளுடைய எல்லாச் சொத்துக்களும் அவ ளுடைய தாய்வழி பாட்டிக்கும் அல்லது அவளுடைய வழித்தோன் றல் அல்லது வழித்தோன்றல்களுக்கும் போகும்.

உ) உயில் எழுதாமல் இறந்துவிட்டப் பெண்ணுக்கு மேற் கூறிய எந்த வாரிசுகளும் இல்லை என்றால் எல்லாச் சொத்துக் களும், அவளுடைய தாய் வழி பாட்டிக்கும் அல்லது அவள் இல்லை என்றால் அவளுடைய நேர்வழி இறங்குறவு வழித்தோன் றல் அல்லது வழித் தோன்றல்களுக்கும் போகும்.

(133)

109 B. உயில் எழுதாமல் இறக்கும் நம்பூதிரி பெண்ணின் சொத்துக்கு வாரிசுதாரர்கள் : இந்தப் பாகத்தில் என்ன சொல்லப்பட்டிருந்தாலும், தனியாக மற்றும் சுயமாகச் சம்பாதித்த ஓர் இந்துப் பெண் இந்தத் தொகுதி இயற்றப்படாதிருந்தால் நம்பூதிரி சட்டத்துக்கு உட்பட வேண்டியிருப்பவர் உயில் எழுதாமல் இறந்துவிட்டால் அவளது சொத்து குறித்துக் கீழ்க்கண்ட விதிமுறைகள் பின்பற்றப்பட வேண்டும்:-

அ) உயில் எழுதாமல் இறந்துவிட்ட நம்பூதிரி பெண் தனக்குப் பின் நேர்வழி இறங்குமுறை வழித் தோன்றலை அல்லது வழித் தோன்றல்களை விட்டுச் சென்றிருந்தால் அவளது சொத்து முழுவதும் 105D பிரிவு (a) முதல் (e) வரையுள்ள உப பிரிவுகளில் கூறியுள்ளபடி இத்தகைய வழித் தோன்றலுக்கு அல்லது வழித் தோன்றல்களுக்கு பகிர்ந்தளிக்கப்படும்.

ஆ) இறங்கு முறை வழித் தோன்றல் எவரும் இல்லையென்றால் அவளது சொத்து கணவனுக்குப் போகும்.

இ) கணவன் இல்லையென்றால் 109 ஆவது பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகளின்படி அவளது சொத்து வாரிசுதாரர்களுக்குப் பிரித்துத் தரப்படும்.

(134)

துறவியின் சொத்துக்கு வாரிசுதாரர்கள்

110. துறவிகளுக்கான விதிகள்: (1)ஒருவர் முற்றிலுமாகவும் முழுவதுமாகவும் துறவு வாழ்க்கை மேற்கொண்டு ஒரு துறவியாகவோ, தவசியாகவோ, நிரந்தர சமய சீடராகவோ மாறினால் இத்தகைய துறவு வாழ்க்கையை மேற்கொண்டபோது உயில் எழுதிவைக்காமல் இறந்தால் எப்படியோ அப்படி அவரது சொத்து அவருடைய வாரிசுதாரர்களுக்கு உரிமை மாற்றிக் கொடுக்கப்படும்.

2) இத்தகையவர் துறவியானபிறகு வாங்கும் சொத்து அவரது மரணத்திற்குப் பிறகு அவரது உறவினர்களுக்குப் போய்ச் சேராது; மாறாக பின்கண்டபடி உரிமை மாற்றம் செய்யப்படும்:

அ) துறவியானால் அதே துறவி வகையைச் சேர்ந்த ஓர் ஆன்மீக சகோதரருக்குப் போய்ச் சேரும்;

ஆ) தவசியானால் நடைமுறையிலுள்ள வழக்காற்றின்படி அவரது நல்லொழுக்கமுள்ள சீடரைப் போய்ச் சேரும்;

இ) நிரந்தர சமய சீடரானால் அவரது ஆசானைப் போய்ச் சேரும்.

(135)

வாரிசுரிமைகள் பற்றி பொதுவான விதிமுறைகள்

111. முழு ரத்த உறவு பாதி ரத்த உறவைவிட முன்னுரிமை பெறுகிறது: உயில் எழுதாமல் இறந்துவிட்ட நபருக்கு இரண்டு வகையான வாரிசுகள் இருந்து அவர்கள் இருவரும் எல்லா வகையிலும் சம அளவில் இருந்தால், முழு ரத்த உறவு வாரிசுகள் பாதி ரத்த உறவு வாரிசுகளை விட முன்னுரிமை பெறுவார்கள்.

* * * * * *

(136)

112. இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட வாரிசுகள் இருக்கும் போது வாரிசுரிமையை வகைப்படுத்தல்: இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட வாரிசுகள் உயில் எழுதாமல் இறந்து விட்ட நபருக்கு சமவாரிசாக இருந்து ஒன்றாக சொத்தை அடையும் நிலை இருந்தால் -

அ) வேறுவகையாக வெளிப்படையாக சொல்லியிருந்தால் தவிர அவர்கள் ஒவ்வொருவரும் தனித்தனியாகத் தான் அதை எடுத்துக் கொள்வார்கள், குழுவாக எடுத்துக் கொள்ள மாட்டார்கள்;

ஆ) பொது நிலச் சொத்துரிமையாக எடுத்துக் கொள்வார்களே தவிர கூட்டு நிலச் சொத்துரிமையாக எடுத்துக் கொள்ள மாட்டார்கள்.

(137)

113. கருவில் உள்ள குழந்தையின் உரிமை: உயில் எழுதாமல் இறந்துவிட்ட நபரின் கருவில் இருந்த குழந்தை பிறகு உயிருடன் பிறந்தால், உயில் எழுதாமல் இறந்தவர் இறப்பதற்கு முன்பாகவே அக்குழந்தை பிறந்ததாகக் கருதி அது உரிய பங்கைப் பெற முடியும். உயில் எழுதாமல் இறந்தவர், இறந்த தேதியிலிருந்தே அந்த குழந்தைக்கு அந்த சொத்தில் உரிமை இருந்ததாகக் கருதப்படும்.

(138)

114. வாரிசுரிமையை ஊகிப்பது: இரண்டு நபர்கள் ஒரே நேரத்தில் இறந்து, யார் முதலில் இறந்தார் என்பதைத் தெளிவாக கண்டுபிடிக்க முடியாத சூழ்நிலை இருந்தால், அதற்கு மாறாக நிரூபிக்கப்பட்டாலன்றி, வயதானவர் முதலில் இறந்ததாகக் கருதப்படும்.

(139)

115. சில சூழ்நிலைகளில் பிரிவினைச் சட்டம் 1893ஐ அமுல்படுத்தல்: இந்தத் தொகுப்பு அமுலுக்கு வந்த பிறகு உயில் எழுதாமல் இறந்துவிட்ட நபரின் எந்த அசையாச் சொத்துக்களில் உள்ள பங்கு சம்பந்தமாகவும் அல்லது அவர் தனியாக அல்லது கூட்டாக நடத்திக் கொண்டிருந்த வியாபாரத்தின் பங்கு சம்பந்தமாகவும்:

அ) ஒன்று அல்லது மேற்பட்ட உயில் எழுதாமல் இறந்துவிட்ட நபரின் மகன், மகனின் மகன், மகனின் மகனின் மகன், மற்ற உறவினர்களுடன் சேர்ந்து ஒரு வாரிசுப் பாகப் பிரிவினைக்கு வழக்குப் போடலாம்; அல்லது

ஆ) 8-வது அட்டவணை பிரிவு I-ல் சொல்லப்பட்டுள்ள ஆண் வாரிசுகளில் யாராவது ஒருவர் உயில் எழுதாமல் இறந்துவிட்டவரின் மகளைக் கட்டாயப்படுத்தி இறந்துவிட்ட நபரின் சொத்தில் அவளுடைய பங்கை தனியாக அனுபவிக்க எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கூறலாம். (அவர் அம்மாதிரி செய்ய உரிமை உள்ளது).

சொத்துப் பிரிவினை நடந்திருக்கிறது, அவளோ அல்லது அவனோ குடியிருப்பு வீட்டில் தனக்குரிய பங்கை பெற்றிருக்கிறார்கள், உயில் எழுதாமல் இறந்துவிட்டவரின் குடும்பம் பிரியாமல் இருக்கிறது என்று கருதப்படும்போது பிரிவினைச் சட்டம் 1893-ன் (IV of 1893) ஷரத்துகளைப் பயன்படுத்தலாம்.

(140)

வாரிசுகளை தகுதியின்மை ஆக்குதல்

116. உலகைத் துறந்தவர் போன்றோர் தகுதி இழக்கின்றனர்: ஒரு நபர் முழுமையாகவும் இறுதியாகவும் பிரிவு 110 உட்பிரிவு (1)-ன் படி உலகைத் துறந்து விட்டால் அவர் தன் ரத்த வழி உறவு, திருமண உறவு மற்றும் தத்து எடுத்த உறவு ஆகியவற்றின் மூலம் எந்த உறவினரிடமிருந்தும் சொத்தை வாரிசாகப் பெறும் தகுதியை இழக்கிறார்.

(141)

117. கற்பிழந்த மனைவி தகுதி இழக்கிறாள்: *ஒரு பெண் திருமணத்திற்குப் பிறகு அவளுடைய கணவன் உயிருடன் இருந்தபோது கற்பு இழந்திருந்தால், அதை அவன் மன்னித்திருந் தால் தவிர, அவனுடைய சொத்துக்கு வாரிசாக முடியாது. ஆனால் கணவனுடைய சொத்தை வாரிசுரிமையாகப் பெற இதனைக் காரணமாகக் காட்ட முடியாது. ஒரு நீதிமன்ற வழக்கில் அவள் கற்பிழந்தவள் என்பது நிரூபிக்கப்பட்டு, அந்தக் கணவனும் அந்த வழக்கில் சேர்க்கப்பட்டிருந்து, அந்தப் பிரச்சினை குறித்து நீதி மன்றம் தீர்ப்பு அளித்து, அது பின்னால் மாற்றாமல் இருந் தால்தான் அதனைக் காரணமாகக் காட்டி அவளுக்கு சொத்துரி மையை மறுக்க முடியும்.*

(142)

118. மறுதிருமணம் செய்துகொண்ட விதவைகள் தகுதி இழக்கிறார்கள்: *முன்னால் இறந்துவிட்ட மகனின் விதவை முன்னால் இறந்துவிட்ட மகனின் மகனின் விதவை தந்தையின் விதவை ஆகியோரின் வாரிசுரிமைப் பற்றி தீர்மானிக் கும்போது அவர்களில் எவரேனும் ஏற்கனவே மறுமணம் செய்துக் கொண்டிருந்தால் அத்தகையவர்கள் தகுதியிழக்கிறார்கள்.*

(143)

119. கொலையாளி தகுதியிழக்கிறான் : ஒரு நபர் ஒரு கொலை செய்தாலோ, அல்லது கொலை செய்ய உடந்தையாக இருந்தாலோ, அவ்வாறு கொலை செய்யப்பட்ட நபரின் சொத்துக்கு வாரிசாக முடியாது; அல்லது வேறு எந்த சொத்துக்கும் வாரிசானாலும் அந்த நபரையும் கொலை செய்தாலோ கொலைக்கு உடந்தையாக இருந்தாலோ வாரிசாக முடியாது.

(144)

120. மதமாற்றம் செய்துக் கொண்டவரின் வாரிசுகள் தகுதியிழக்கிறார்கள்: இந்தத் தொகுப்பு வருவதற்கு முன்போ பின்போ ஓர் இந்து வேறு மதத்திற்கு மாறிவிட்ட காரணத்தால் இந்துவாக நீடிக்காதபோது, அம்மாதிரி மதமாற்றம் செய்து கொண்ட பிறகு பிறந்த குழந்தைகள், அவர்களுடைய இந்து சொந்தக்காரர்களிடமிருந்து வாரிசாக சொத்துரிமை பெற முடியாது. அந்தக் குழந்தைகளோ அல்லது வழித் தோன்றல்களோ வாரிசு உரிமை பற்றிப் பரிசீலிக்கப்படும்போது இந்துக்களாக இருந்தால் அப்போது அவர்கள் வாரிசு உரிமை பெறுவார்கள்.

(145)

121. வாரிசுதார் தகுதி இழக்கும் போது வாரிசுரிமை: இந்தப் பகுதியின் கீழ் யாராவது ஒரு நபர் வாரிசாவதற்கு தகுதி இழந்து விட்டால், உயில் எழுதாமல் இறந்துவிட்ட நபருக்கு முன்பாகவே அவர் இறந்து விட்டதாகக் கருதப்படும்.

(146)

122. நோய் மற்றும் குறைபாடுகள் தகுதி நீக்கம் செய்யாது: எந்த நபரும் அவருக்குள்ள வியாதி, குறைபாடு மற்றும் ஊனம் ஆகியவற்றிற்காக வாரிசாகும் உரிமையை இழக்க மாட்டார். இந்தப் பகுதியில் சொல்லப்பட்டவைகளுக்குட்பட்டு, வேறு எந்த காரணத்திற்காகவும் அவர் வாரிசு உரிமையை இழக்கமாட்டார்.

(147)

அரசு உறுபொருள்

123. வாரிசுகள் இல்லாத நிலை: உயில் எழுதாமல் இறந்துவிட்ட ஒருவர் இந்தப் பகுதியில் சொல்லப்பட்டுள்ள எந்த ஒரு வாரிசும் இல்லாமல் இறந்துவிட்டால் அவன் அல்லது அவளுடைய சொத்து அரசாங்கத்திற்குப் போகும். ஒரு வாரிசுக்கு என்னென்ன பொறுப்புகளும் கடமைகளும் இருக்கின்றனவோ, அவைகளுக்குட்பட்டு அரசாங்கம் அந்தச் சொத்தை எடுத்துக் கொள்ளும்.

(148)

பாகம் III

உயில்வழி வாரிசுரிமை

124. உயில் வழி வாரிசுரிமை : *1) இந்திய வாரிசுரிமைச் சட்டம் 1925* (XXXIX of 1925) *படியும் இந்துக்களை கட்டுப்படுத்தும் வேறு சட்டப்படியும் அவற்றின் விதிமுறைகளில் சொல்லியுள்ள படி, ஓர் இந்து தன்னுடைய எந்தச் சொத்தையும் உயில் மூலமாகவோ அல்லது வேறு முறையிலோ மாற்றலாம்.*

2) பின்கண்டவை எதுவும் ஓர் இந்துவை அனுமதிக்காது:-

அ) ஜீவனாம்சம் பெற, இந்தத் தொகுதியிலுள்ள விதிமுறைகள்படியோ, அல்லது அமுலிலுள்ள வேறு சட்டத்தின்படியோ, உரிமைப் பெற்றுள்ளவரை அந்த உரிமை பாதிக்கக்கூடாது;

ஆ) சட்ட ரீதியாக மாற்றக் கூடியவை தவிர அவனோ அவளோ அந்தச் சொத்தில் எந்த மாற்றமும் செய்யக்கூடாது.

(149)

பாகம் VIII ஜீவனாம்சம்

125. ஜீவனாம்சம் விளக்கப்படுகின்றது: இந்தப் பகுதியில் ஜீவனாம்சம் என்பதில் பின்கண்டவை அடங்கும்:

i) எல்லாச் சூழ்நிலைகளிலும், உணவு, உடை, இடம், கல்வி, மருத்துவச் செலவு மற்றும் கவனிப்பு ஆகியவற்றிற்கு ஏற்பாடு செய்தல்; மேலும்

ii) திருமணமாகாத பெண் இருந்தால், அவளின் திருமணத்திற்காக நியாயமான செலவு மற்றும் அதைச் சார்ந்த இதர செலவுகள் செய்தல்.

குடும்ப உறுப்பினர்களைக் காப்பாற்றும் சொந்த பொறுப்பு

126. மனைவியைப் பாதுகாத்தல்: 1) இந்தத் தொகுப்பு அமுலுக்கு வருவதற்கு முன்போ அல்லது பின்போ, இந்தப் பிரிவில் சொல்லப்பட்டுள்ள விதிமுறைகளுக்கு உட்பட்டு ஓர் இந்து மனைவி, தன் கணவனால் அவன் உயிருள்ள வரை பராமரிக்க உரிமைப் பெற்றுள்ளாள். அவன் காலமான பிறகு அவனுடைய தந்தை அவளைப் பராமரிக்க வேண்டும்.

2) தன் கணவனுடன் சேர்ந்து வாழ்ந்தால் மட்டுமே அவள் அம்மாதிரி பராமரிப்பை எதிர்பார்க்க வேண்டும்.

எனினும் பின்கண்ட காரணங்களுக்காக அவள் தனித்து வாழ்ந்தாலும், தன்னுடைய உரிமையைப் பறிகொடுக்க வேண்டியதில்லை:-

அ) **அவன் மிகத் தீவிரமான குஷ்டரோகத்தினால் பாதிக்கப்பட்டிருந்தால் அல்லது தொற்றக்கூடிய பாலியல் நோயினால் பாதிக்கப்பட்டிருந்தால், ஆனால் அந்த நோய் அவனுக்கு அவளிடமிருந்து தொத்திக் கொள்ளாததாக இருந்தால்;**

ஆ) தன் மனைவி வாழும் வீட்டிலேயே ஒரு காமக்கிழத்தியை வைத்திருந்தால்;

இ) அவள் அவனுடன் வாழ்வது பாதுகாப்பற்றது என்னும் ரீதியில் அவளுக்கு அவன் மிகவும் கொடூரமானவனாக இருந்தால்;

ஈ) எந்தக் காரணமும் இன்றி, அவளுடைய ஒப்புதலின்றி, அல்லது அவளது விருப்பத்திற்கு எதிராக அவன் அவளைக் கைவிட்டிருந்தால்;

உ)அவன் வேறு மதத்திற்கு மாறி அதனால் தொடர்ந்து இந்துவாக இல்லாமலிருந்தால்;

ஊ) அவள் அவனிடமிருந்து தனித்து வாழ வேறு எதாவது தகுந்த காரணமிருந்தால்,

3) ஓர் இந்து மனைவி, அவள் கற்பிழந்து வாழ்ந்தாலும் அல்லது வேறு மதத்திற்கு மாறி இந்துவாக தொடர்ந்து நீடிக்காவிட்டாலும், அவள் கணவனிடமிருந்து பிரிந்து வாழவும் ஜீவனாம்சம் பெறவும் உரிமை இல்லை.

(150)

***127. விதவையான மருமகளைக் காப்பாற்றும் கடமை:- பிரிவு** 126ன்படி ஒரு மாமனாருக்கு தன் மருமகளைக் காப்பாற்றும் கடமை உள்ளது. ஆனால் அந்த அளவிற்கு அவருக்கு வசதி இருந்தால் மட்டுமே இது நீடிக்கும். மேலும் விதவை மருமகள் தன்னைக் காப்பாற்றிக் கொள்ள தகுந்த சொத்து இல்லை என்ற சூழ்நிலையிலும், கணவனுடைய சொத்திலிருந்து தகுந்த ஜீவனாம்சம் பெறக் கூடிய நிலை இல்லை என்றாலும், அல்லது தன் மகனிடமிருந்து அல்லது அவனுடைய சொத்திலிருந்து பெற முடியாவிட்டாலும் மட்டுமே மாமனார் காப்பாற்ற வேண்டும். அவள் மறுமணம் செய்து கொண்டால் மாமனாருக்குள்ள அத்தகைய கடமை முடிவுக்கு வந்து விடும்.*

(151)

128. குழந்தைகள் மற்றும் வயதான பெற்றோர் பராமரிப்பு: *1) இந்தப் பிரிவில் சொல்லப்பட்டுள்ளவைகளுக்கு உட்பட்டு, ஓர் இந்து தன் சட்ட ரீதியான குழந்தைகளையும் அல்லது முறையற்ற திருமணத்தில் பிறந்த குழந்தைகளையும், வயதான பெற்றோர்களையும் பராமரிக்கக் கடமைப்பட்டுள்ளார்.*

2) தான் உரிய வயது வராதவரை, சட்டரீதியாகப் பிறந்த குழந்தையும், முறையற்ற திருமணத்தில் பிறந்த குழந்தையும்அவன் அல்லது அவளது தந்தையிடமிருந்து ஜீவனாம்சம் பெறமுடியும்.

3) தகுந்த வசதி இன்றி, இருக்கும் வயதான தந்தை தன் மகனிடமிருந்து ஜீவனாம்சம் பெற முடியும்.

(152)

129. குழந்தைகளைத் தாய் பராமரித்தல்: *ஓர் இந்துப் பெண் தன் சட்டரீதியான குழந்தைகளையும் மற்றும் முறையற்ற திருமணத்தில் பிறந்த குழந்தைகளையும், தன் கணவனுக்கு தகுந்த வசதியில்லாமல் தனக்கு நல்ல வசதி இருந்தால் தன் வாழ்நாள் முழுதும் பராமரிக்கக் கடமைப்பட்டுள்ளாள்.*

(153)

தங்களைச் சார்ந்திருப்பவர்களைப் பராமரிப்பது வாரிசுகளின் கடமை

130. தங்களைச் சார்ந்துள்ளவர்களைப் பராமரிக்கும் கடமை வாரிசுகளுக்குண்டு: *1) பிரிவு 131-ல் சொல்லப்பட்டுள்ளவைகளுக்கு உட்பட்டு, இறந்துவிட்ட ஓர் இந்துவின் வாரிசுகள், அவரிடமிருந்து பெற்ற சொத்துக்களைக் கொண்டு அவரைச் சார்ந்துள்ளவர்களை பராமரிக்க வேண்டும்.*

2) இந்தப் பகுதிக்காக, இறந்துவிட்டவரின் கீழ்க்காணும் உறவினர்கள் அவரைச் சார்ந்துள்ளவர்களாகக் கருதப்படுவார்கள்:-

i) *அவரின் தந்தை,*

ii) *அவரின் தாய்,*

iii) *அவரின் விதவை, அவள் மறுமணம் செய்து கொள்ளாமல் இருக்கும் வரை,*

iv) *அவரின் மகன், முன்னால் இறந்துவிட்டவரது மகனின் மகன், முன்னால் இறந்துவிட்ட மகனின் முன்னால் இறந்துவிட்ட மகன், அவன் உரிய வயது வராத நிலையில், ஜீவனாம்சம் பெறமுடியாத நிலையில், பேரனைப் பொறுத்து தன்னுடைய அப்பாவின் சொத்திலிருந்து, பேரனின் பேரனைப் பொறுத்து, அவருடைய தந்தையின் சொத்திலிருந்து அல்லது தந்தையின் தந்தையின் சொத்திலிருந்து;*

v) *அவரின் திருமணமாகாத மகள், அவள் திருமணமாகாமல் இருக்கும் வரை;*

vi) *அவரின் திருமணமான மகள்; அவள் தன் கணவனிடமிருந்து ஜீவனாம்சம் பெற முடியாத நிலையில் இருந்தால், அல்லது மகன் இருந்தால் மகனிடமிருந்து அல்லது அவனுடைய சொத்திலிருந்து ஜீவனாம்சம் பெற முடியாத நிலையில் இருந்தால்;*

vii) *அவருடைய விதவை மகள்;*

கீழ்க்கண்டவர்களிடமிருந்து அவள் ஜீவனாம்சம் பெற முடியாத நிலையில் இருத்தல்:

அ) தன்னுடைய கணவனுடைய சொத்திலிருந்து அல்லது

ஆ) மகன் இருந்தால் மகனிடமிருந்து அல்லது அவன் சொத்திலிருந்து அல்லது

இ) அவளுடைய மாமனாரிடமிருந்து அல்லது அவளுடைய தந்தையிடமிருந்து அல்லது அவர்கள் இருவருடைய சொத்திலிருந்து

viii) *அவருடைய மகனின் விதவை அல்லது முன்னால் இறந்து விட்ட மகனின் விதவை, அவள் மறு திருமணம் செய்யாதவரை.*

அவள் தன் கணவனுடைய சொத்திலிருந்து ஜீவனாம்சம் பெறமுடியாமல் இருந்து, அல்லது அவளுடைய மகன் இருந்தால் அவனிடமிருந்து அல்லது அவனுடைய சொத்திலிருந்து பேரனின் விதவையைப் பொறுத்து, மாமனாரின் சொத்திலிருந்து;

ix) *அவனுடைய உரிய வயது வராத முறையற்ற திருமணத்தில் பிறந்த குழந்தை, அவன் உரிய வயது வராத நிலையிலுள்ளவரை;*

x) *அவனின் திருமணமாகாத, முறையற்ற திருமணத்தில் பிறந்த மகள், அவள் திருமணமாகாமல் இருக்கும் வரை.*

(154)

131. தங்களைச் சார்ந்துள்ளவர்களைப் பாதுகாக்க வாரிசுகளின் கடமைக்குள்ள வரம்பு: *சார்ந்துள்ள ஒருவர், உயில் வழியோ அல்லது உயில் வழி அல்லாத முறையிலோ இந்தத் தொகுப்பு அமுலுக்கு வந்தபின் ஓர் இந்துவின் சொத்தில் எந்த ஒரு பாகத்தையும் பெறவில்லை என்றால் உயில்வழிமுறையில் பெற்ற சொத்து, இந்தப் பகுதியின் கீழ் அவருக்கோ அல்லது அவளுக்கோ அளிக்கப் பட்டிருக்கக் கூடிய ஜீவனாம்சத்தைவிட சார்ந்துள்ளவர் குறைவாகப் பெற்றால்,*

அவன் அல்லது அவள், இந்தப் பகுதியில் சொல்லப்பட்டுள்ளவைகளுக்கு உட்பட்டு சொத்தை எடுத்துக் கொண்டவர்களிடமிருந்து ஜீவனாம்சம் பெற உரிமையுண்டு.

ஒவ்வொரு வாரிசுகளின் கடமை அவன் அல்லது அவள் பெற்ற சொத்தின் அளவிற்கு ஏற்ற முறையில் அமையும்.

தானே சார்ந்துள்ளவராக இருக்கும் அவனோ அல்லது அவளோ மற்ற யாருக்கும் தங்கள் பங்கை அளிக்க வேண்டிய அவசியமில்லை. அவனோ, அவளோ, மற்றவர்களுக்கு பங்களிப்பு அளிப்பதன் காரணமாக அவர்களுடைய பங்கு குறைந்துவிடும் போது அவர்களுக்குக் கிடைக்கும் ஜீவனாம்சம் குறைந்துவிடும்,

(155)

ஜீவனாம்சத் தொகை

132. ஜீவனாம்சத் தொகை: *1) மனைவி, குழந்தைகள் அல்லது வயதான பெற்றோர்களுக்கு எந்த அளவிற்கு ஜீவனாம்சத் தொகை கொடுக்க வேண்டும் என்பதை இந்தப் பகுதியின்படி முடிவு செய்வதற்கு முன் பின்கண்டவற்றைக் கவனத்தில் கொள்ள வேண்டும்:-*

அ) அந்த நபர்களின் வாழ்க்கை முறை மற்றும் அந்தஸ்து;
ஆ) ஜீவனாம்சம் கேட்கும் நபர்களின் நியாயமான தேவைகள்;
இ) தந்தையிடமிருந்து பிரிந்து வாழ்ந்தால், அவன் அல்லது அவள் அவ்வாறு பிரிந்து வாழ்வதற்குத் தகுந்த காரணங்கள் இருக்கின்றனவா;
ஈ) ஜீவனாம்சம் கோரும் நபரின் சொத்து மதிப்பு, அதிலிருந்து வரக்கூடிய வருமானம், ஜீவனாம்சம் கோருபவரின் சொந்த வருமானம், அல்லது மற்ற துறைகளிலிருந்து கிடைக்கும் வருமானம்;

உ) இந்தப் பகுதியின்படி எத்தனை நபர் ஜீவனாம்சம் பெற தகுதியுள்ளவர்கள்.

2) இந்தப் பகுதியின்படி என்ன தொகை ஜீவனாம்சமாக கொடுக்கலாம் என்பதை முடிவு செய்ய, கீழ்க்காணுபவற்றை கவனத்தில் கொள்ள வேண்டும்:-

அ) இறந்தவருடைய கடனைக் கொடுத்த பிறகு, அவர் சொத்தின் நிகர மதிப்பு;

ஆ) சார்ந்துள்ளவர்களுக்கு, இறந்தவரின் உயிலில் செய்யப் பட்டுள்ள ஏற்பாடுகள்;

இ) இறந்தவரின் வாழ்க்கை நிலை மற்றும் அந்தஸ்து, மற்றும் சார்ந்துள்ளவரின் வாழ்க்கை நிலை மற்றும் அந்தஸ்து;

ஈ) அவர்களுக்கிடையே உள்ள தலைமுறை உறவுமுறை;

உ) சார்ந்துள்ளவரின் நியாயமான தேவைகள்;

ஊ) இறந்தவர் மற்றும் சார்ந்துள்ளவரின் முற்கால உறவு முறை;

எ) அவன் அல்லது அவளின் சொத்து மதிப்பு, அதிலிருந்து வரக்கூடிய வருமானம்; அவன் அல்லது அவளின் சொந்த வருமானங்கள் அல்லது மற்ற துறை வருமானங்கள்;

ஏ) இந்தப் பகுதியின் கீழ் ஜீவனாம்சம் பெற தகுதியுள்ள சார்ந்துள்ளவர்களின் எண்ணிக்கை;

ஐ) விதவையாக இருந்தால் அவளுடைய நடத்தை.

(156)

133. எவ்வளவு தொகை ஜீவனாம்சமாக அளிப்பது என்பது நீதிமன்றத்தின் விருப்புரிமையைப் பொறுத்தது: 1) பிரிவு 132 உட்பிரிவு (1) அல்லது உட்பிரிவு (2) ஆகியவற்றில் சொல்லப்பட்டுள்ளவைகளில் எது பொருந்துமோ அதைக் கருத்தில் கொண்டு, இந்தப் பாகத்தின் கீழ் ஜீவனாம்சம் ஏதாவது கொடுக்க வேண்டுமா, அப்படி கொடுக்க வேண்டும் என்றால் எவ்வளவு கொடுக்க வேண்டும் என்பதை நீதிமன்றம் முடிவு செய்ய வேண்டும்.

2) திருமணமாகாதப் பெண்ணிற்கு அளிக்கப்படும் தொகை, இறந்தவர் உயில் எழுதாமல் இறந்துவிட்டால் அவளுக்கு என்ன கிடைத்திருக்குமோ அதில் பாதி அளவாக இருக்கும்.

(157)

134. சூழ்நிலை மாற்றங்களுக்கு ஏற்ப ஜீவனாம்சத் தொகையின் அளவு மாற்றப்படலாம்:- இந்தத் தொகுப்பு அமுலுக்கு வருவதற்கு முன்போ பின்போ, நீதிமன்றத் தீர்ப்பால் நிர்ணயிக்கப்பட்ட ஜீவனாம்சம் அல்லது ஒப்பந்தத்தால் நிர்ணயிக்கப்பட்ட ஜீவனாம்சம் எதுவாக இருந்தாலும், மாறியுள்ள சூழ்நிலைகளுக்கேற்ப அந்த மாற்றத்தை நியாயப்படுத்துவதாக இருக்க வேண்டும்.

(158)

135. கடனுக்கு முன்னுரிமை: இந்தப் பாகத்தில் சொல்லப்பட்டுள்ளவைகளுக்கு உட்பட்டு, எந்த வகையானக் கடனாக இருந்தாலும் சார்ந்துள்ளவர்களின் ஜீவனாம்சக் கோரிக்கையைவிட அதற்கு முன்னுரிமை அளிக்க வேண்டும்.

(159)

136. சார்ந்துள்ளவர்கள் ஜீவனாம்சம் கோரும்போது அதை, இறந்தவரின் சொத்திற்கு முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ அதை பொருட்பிணை பொறுப்பாக்க முடியாது. ஆனால் உயில் மூலமாகவோ, நீதிமன்ற உத்தரவினாலோ, அல்லது சார்ந்துள்ளவர் சொத்தின் முழு உரிமையாளர் அல்லது பகுதி உரிமையாளருடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தின் மூலமாகவோ அல்லது வேறு வகையிலோ அம்மாதிரி பொருட்பிணைப் பொறுப்பு ஏற்படுத்தலாம்.

(160)

137. மூன்றாம் நபர் ஜீவனாம்சம் பெற தகுதியுள்ளபோது சொத்தை மாற்றுவது: மூன்றாம் நபர் ஒரு சொத்திலிருந்து ஜீவனாம்சம் பெற உரிமையுள்ளவராக இருக்கும்போது, அந்தச் சொத்து முழுமையாகவோ அல்லது அதன் பகுதியோ மாற்றப்பட்டால், மாற்றம் பெற்றவர் அம்மாதிரியான ஜீவனாம்சத்தைப் பற்றித் தெரிந்திருந்தால், அவருக்கு எதிராக, இந்தத் தொகுப்பு இயற்றப்படாமல் இருந்தால், எந்த அளவிற்கு அந்தச் சொத்திற்கெதிராக கோர முடியுமோ அந்த அளவிற்குக் கோரலாம்.

பாகம் IX - பலதரப்பட்டவைகள்

138. விதிமுறைகள் இயற்றும் அதிகாரம் : (1) இந்தத் தொகுப்பின் நோக்கத்தை நிறைவேற்ற மாநில அரசு விதி முறைகள் இயற்றலாம்.

2) குறிப்பாக, மேலே சொல்லப்பட்டுள்ள பொதுவான அதிகாரத்திற்குட்பட்டு விதிமுறைகளை நிர்ணயிக்கலாம்.

i) தார்மிகத் திருமணங்கள் குறித்து அவற்றின் என்னென்ன விவரங்கள் தார்மிகத் திருமண பதிவு புத்தகத்தில் குறிக்கலாம் என்பதையும், அவற்றை குறிக்கும் முறை மற்றும் சூழ்நிலை ஆகியவற்றை நிர்ணயிக்கலாம்.

ii) எந்த இடங்கள் மற்றும் எந்த வகை தார்மிகத் திருமணங்களைப் பற்றிய விவரங்கள் கட்டாயமாக குறிக்கலாம் என்பதையும் அவ்வாறு குறிக்கத் தவறும்போது அவற்றிற்கான தண்டனையும்.

iii) எந்த இடங்களுக்கு திருமணப் பதிவாளர்கள் நியமிக்கப்பட வேண்டும் என்பதையும் அவருடைய கடமை மற்றும் பணிகள்;

iv) இந்து தார்மிகத் திருமணப் புத்தகம் மற்றும் இந்து சிவில் திருமண அறிவிப்பு புத்தகம் ஆகியவற்றை என்ன முறையில் வைக்க வேண்டும் என்பதையும் பிரிவு 12-ன் கீழ் திருமண அறிவிப்பு எவ்வாறு வெளியிடப்பட வேண்டும் என்பதையும்;

v) பிரிவு 21-ன்படி எந்த முறை மனு அறிவிப்பு செய்ய வேண்டும் என்பதையும்;

vi) சிவில் திருமணங்களை நடத்த எவ்வளவு கட்டணம் என்பதையும் திருமண பதிவாளர் செய்யும் மற்ற கடமைகளுக்கு என்ன கட்டணம் என்பதையும்;

vii) இந்து தார்மிகத் திருமணப் புத்தகம் இந்து சிவில் திருமண புத்தகம் ஆகியவற்றை பார்வையிடுவதற்கும் அதன் நகல்கள் பெறுவதற்கும் என்ன கட்டணம் என்பதுப்பற்றி

viii) பிறப்பு இறப்பு மற்றும் திருமண பதிவாளர் ஜெனரலுக்கு இந்து தார்மிகத் திருமண புத்தகம் மற்றும் இந்து சிவில் திருமண புத்தகம் ஆகியவற்றை என்ன முறையில் எந்த இடைவெளியில் அனுப்ப வேண்டும் என்பதையும்

ix) பிரிவு 24-A-ன்படி எந்த நபருக்கு, என்ன முறையில் எந்த அதிகாரிக்கு அறிவிப்புக் கொடுக்க வேண்டும் என்பது பற்றி;

x) தத்து எடுப்பதன் மனுவில் குறிக்க வேண்டிய தகவல்கள்;

xi) தத்து எடுப்பதைக் குறிக்கக் கட்டணம் எவ்வளவு;

xii) எந்த முறையில் தத்து எடுக்கும் புத்தகம் வைக்கப்பட வேண்டும்;

xiii) தத்து எடுப்பு புத்தகத்தில் உள்ள தகவல்களை எந்த முறையில் அங்கீகரிப்பது.

139. திருத்தங்களும், சட்ட நீக்கமும்: *முதல் அட்டவணையில் 3-வது பத்தியில் சொல்லியுள்ள சட்டங்கள், 4-வது பத்தியில் சொல்லியுள்ள அளவிற்கு திருத்தப்படும். இரண்டாவது அட்டவணையின் 3-வது பத்தியில் சொல்லியுள்ள சட்டங்கள் அதன் 4-வது பத்தியில் சொல்லியுள்ள அளவிற்கு சட்ட நீக்கம் செய்யப்படும்.*

(பொறுக்குக் குழுவிற்கு பரிந்துரைத்தபடி)

A

மசோதா

(இந்து சட்டத்தின் சில பிரிவுகளை மாற்றி அமைக்கவும், தொகுத்து அளிக்கவுமான அறிமுகப்படுத்தவுமான மசோதா.

இந்தியாவின் பல பகுதிகளிலுள்ள இந்து சட்டத்தின் சில பிரிவுகளை மாற்றி அமைக்க வேண்டியதும், சிலவற்றை தொகுக்க வேண்டியதும் அவசியம் எனக் கருதப்பட்டு :

கீழ்க்காணும் முறையில் சட்டமாக்கப்படுகிறது:

பகுதி I முதல் நிலை

1. தலைப்பு, அமுல் படுத்தப்பட உள்ள இடம், ஆரம்பம் -

(1) இந்தச் சட்டம் இந்து சட்டத் தொகுப்பு - 1948 - என்று அழைக்கப்படும்.

பகுதி 1, பிரிவு 1, பக்கம் 1

(2) இந்தச் சட்டத் தொகுப்பு இந்தியாவின் எல்லா மாகாணங்களுக்கும் பொருந்தும்.

(3) இது 1951-வது வருடம் ஜனவரி முதல் தேதி முதல் அமுலுக்கு வரும்.

2. இந்தத் தொகுப்பின் அமுல் - (1) இந்தத் தொகுப்பு கீழ்க்கண்டவர்களுக்கு அமுல் படுத்தப்படும்: *பகுதி 1 பிரிவு 2 பக்கம் 1*

அ) வீர சைவர்கள், லிங்காயத்துகள், பிரம்மோக்கள், பிரார்த்தனாக்கள், ஆர்ய சமாஜிகள் உட்பட இந்து மதத்தின் எந்தப் பிரிவையும் சேர்ந்தவர்கள்;

ஆ) புத்த, ஜைன மற்றும் சீக்கிய மதத்தைச் சார்ந்தவர்;

இ) i) இந்தப் பிரிவின்படி இந்துக்கள் என்று கருதப் படக்கூடிய பெற்றோர்களுக்குச் சட்டரீதியாகவோ அல்லது சட்டத்திற்குப் புறம்பாகவோ பிறந்த குழந்தை;

ii) பெற்றோரில் ஒருவர் இந்துவாக இருந்து, அவர்களுக்குச் சட்ட ரீதியாகவோ, சட்டத்திற்குப் புரம்பாகவோ பிறக்கும் குழந்தை; ஆனால் அந்தக் குழந்தை அவர்கள் சார்ந்துள்ள குழு, குடும்ப, சமூக வழக்கப்படி வளர்க்கப்பட்டதாக இருக்க வேண்டும்.

ஈ) இந்து மதத்திற்கு மத மாற்றம் செய்துக்கொண்ட நபர்,

2) முஸ்லீம், கிருத்துவர், பார்சி அல்லது யூத மதத்தைச் சேராத மற்ற எவருக்கும் இது பொருந்தும்;

பகுதி 1 பிரிவு 2 பக்கம் 1

ஆனால் இந்தத் தொகுப்பு ஏற்பட்டிருக்கவில்லை என்றால் இங்கு குறிப்பிடப்பட்டிருக்கும் எந்த ஒரு விஷயம் சம்பந்தமாகவும் ஒருவர் இந்து சட்டத்துக்கோ அல்லது அதன் எந்த ஒரு பழக்க வழக்கத்துக்கோ, வழக்காறு மரபுக்கோ உள்ளாகி இருக்க மாட்டார் என்னும் பட்சத்தில் அப்போது இவ்விஷயங்கள் சம்பந்தமாக இந்தச் சட்டத் தொகுப்பு அவருக்குப் பொருந்தாது.

3) ''இந்து'' என்று இந்த தொகுப்பில் எங்கு சொல்லி இருந்தாலும், மதரீதியில் இந்துவாக இல்லாவிட்டாலும் இந்தத் தொகுப்பின் படி இந்துவாக அவர் கருதப்படுவார்.

4) 1872 சிறப்பு திருமணச் சட்டத்தில் என்ன கூறப்பட்டிருந்த போதிலும் இந்தத் தொகுப்பின் பல்வேறு பிரிவுகள், இந்தத் தொகுப்பு அமுலுக்கு வருவதற்கு முன்பு மேற்படி சட்டத்தின்படி திருமணம் செய்துக் கொண்ட எல்லா இந்துக்களுக்கும் பொருந்தும். *பகுதி 1 பிரிவு 6 பக்கம் 2 மற்றும் அட்டவணை 1, பக்கம் 30*

(2)

3. பொருள் வரையறைகள்: இந்தத் தொகுப்பில் இதற்கு மாறாக சொல்லப்பட்டிருந்தால் தவிர, மற்றும் வேறு சூழ்நிலை இருந்தால் தவிர கீழ்க்காணும் பொருள் கொள்ள வேண்டும்:

பகுதி - 1
பிரிவு - 4 & 5
பக்கம் - 2

(i) ''வழக்காறு'' மற்றும் ''நெடுநாளைய நிலைத்த நடைமுறை'' என்பவை நீண்டகாலமாக எந்த விதத் தடையுமின்றித் தொடர்ந்து பின்பற்றப்பட்டு வரும் முறைகள் எனக் கருதப்படும்; இவை இந்துக்கள் மத்தியில் சில குறிப்பிட்ட குடும்பம் அல்லது குழு, அல்லது சமூகத்தால், தங்களைக் கட்டுப்படுத்தக் கூடியவையாகும்; பின்பற்றப் படுபவையாகும்.

ஆனால் இம்மாதிரியான பழக்கம் பொதுவான விதிமுறைக்கு எதிரானதாகவோ, தர்க்க ரீதியாக ஏற்றுக்கொள்ளக் கூடியதற்கு மாறுபட்டதாகவோ இருக்கக் கூடாது.

மேலும், ஒரு குடும்பத்தினரால் மட்டும் பின்பற்றப்படக் கூடிய வழக்கமாக இருந்தால் அக்குடும்பத்தால் அது கைவிடப்பட்ட ஒன்றாக இருக்கக்கூடாது.

ii) ''மாவட்ட நீதிமன்றம்'' என்றால் பிரதான உரிமை இயல் நீதிமன்றம் என்று பொருள்படும். பிரிவு 44, மற்றும் 49 தவிர்த்து இந்தப் பொருள்படும் பிரிவு உயர்நீதிமன்றத்தின் உரிமையியல் அசல் அதிகார வரம்புக்குட்பட்டதையும் சேர்க்கும்.

பகுதி - 1
பிரிவு - 5(d)
பக்கம் - 2

(iii) ''முழு ரத்த உறவு'' - ''பாதி ரத்த உறவு'' **பகுதி - 5 (e)**

ஒரு பெற்றோருக்கு பிறந்த நபர்கள் முழு ரத்த உறவினர் எனக் கருதப்படுவார்கள். தந்தை ஒருவராக இருந்து தாய் வேறாக இருந்தால் அவர்கள் பாதி ரத்த உறவு எனக் கருதப்படுவார்கள்.

(iv) இரு தகப்பன் வழியாக ஒரே தாயின் வயிற்றில் பிறந்த நபர்கள் கர்ப்ப ரத்த உறவினர்கள் என்று கருதப்படுவார்கள். **பகுதி - 5 (f)**

பொருள்வரையறை : இந்தப் பிரிவில் மூதாதையர் என்பது தந்தையையும் பெண் மூதாதையர் என்பது தாயையும் உள்ளடக்கும்.

(v) ''பகுதி'' என்றால் இந்தத் தொகுப்பின் எந்தப் பகுதியையும் குறிக்கும். **பகுதி - 5 (h)**

(vi) ''நிர்ணயிக்கப்பட்டது'' என்றால் இந்தத் தொகுப்பின் கீழ் ஏற்படுத்திய விதிமுறைகளின்படி நிர்ணயிக்கப்பட்டது என்று பொருளாகும்.

(vii) ''உறவினர்'' என்றால் சட்டரீதியான உறவினரைக் குறிக்கும்.

சட்டத்திற்கு புறம்பாக பிறந்த குழந்தைகள் அவர்களுடைய தாய்க்கு உறவினர்களாக கருதப்படுவார்கள். அவர்களுக்கு சட்ட ரீதியாக பிறக்கும் குழந்தைகள் ஒருவருக்கொருவர் உறவினர்களாக கருதப்படுவார்கள். உறவினர்கள், மற்றும் உறவு முறை என்றால் இந்தப் பொருளில் புரிந்துக் கொள்ள வேண்டும்.

(viii) ''மகன்'' என்பது இந்தத் தொகுப்பிற்கு முன்போ பின்போ தத்து எடுத்தவரையும் உள்ளடக்கும். ஆனால் சட்டத்திற்குப் புறம்பாக பிறந்த மகனை உள்ளடக்காது.

பகுதி - 2
பிரிவு - 2 (c)
பக்கம் - 3

(3)

4. இந்தத் தொகுப்பின் ஒட்டுமொத்த விளைவு: இந்தத் தொகுப்பில் திட்டவட்டமாக வேறுவிதமாகக் குறிப்பிடப்பட்டிருந்தாலொழிய இந்தத் தொகுப்பு தொடங்குவதற்கு முன்னர் அதில் இடம் பெற்றிருக்கும் எந்த விஷயங்கள் சம்பந்தமாகவும் நடைமுறையிலிருந்து வரும் இந்து சட்டத்தையோ, பழக்க வழக்கத்தையோ, வழக்காறையோ பற்றிய எந்த வாசகமும், விதியும், பொருள் விளக்கமும் செயலிழந்துவிடும்.

பகுதி - 1
பிரிவு - 3
பக்கம் - 1

(4)

பாகம் II - திருமணமும் மணவிலக்கும்

அத்தியாயம் 1

திருமணம்

5. விளக்கம் : இந்த பாகத்தில், பொருளில் அல்லது சந்தர்ப்பத்தில் பொருந்தாதது ஏதும் இல்லாத நிலையில்:

பகுதி VI
பிரிவு 1
பக்கம் 14

அ) i) எந்த நபர் சம்பந்தமாகவும் ''சபிண்டா உறவுமுறை'' யானது மூன்றாவது தலைமுறை (உள்ளிட்டு) வரையிலும் வம்சாவளியில் தாய் வழியாகவும், வம்சாவளியில் தந்தைவழி யாகவும் ஐந்தாவது தலைமுறை (உள்ளிட்டு) விரிவுபடுகிறது. ஒவ்வொருவர் விஷயத்திலும் முதல் தலைமுறை என்று கருதப் படுகிற சம்பந்தப்பட்ட நபரிலிருந்து வம்சாவளி மேல்நோக்கிக் கண்டறியப்படுகிறது;

ii) இரண்டு நபர்கள் - அவர்களில் ஒருவர் மற்றொருவரின் சபிண்டா உறவு எல்லைகளுக்குள் ஏறுவரிசையிலான வம்சா வளியைச் சேர்ந்தவராக இருந்தாலும், அல்லது அவர்கள் ஒவ் வொருவர் சம்பந்தமாகவும் சபிண்டா எல்லை வரம்புக்குள் ஒரு பொதுவான ஏறுவரிசை வம்சாவளியைக் கொண்டிருந் தாலும் அவர்கள் ஒருவர் மற்றொருவரின் ''சபிண்டாக்கள்'' ஆவார்.

ஆ) ''தடைசெய்யப்பட்ட உறவுமுறையின் எல்லைகள்'' - இரு நபர்கள் - அவர்களில் ஒருவர் மற்றொருவரின் ஏறுவரிசை வம் சாவளியினராக இருந்தால், அல்லது மற்றவரின் ஏறுவரிசை அல்லது இறங்குவரிசை வம்சாவளி மனைவி அல்லது கணவ ராக இருந்தால், அல்லது அந்த இருவரும் சகோதரர், சகோதரி யாக இருந்தால், தாயுடன் பிறந்தவர், உடன் பிறந்தார் மகள், உடன்பிறந்தார் சகோதரி, உடன்பிறந்தார் மகன் அல்லது இரு சகோதரர்களின் அல்லது இரு சகோதரிகளின் குழந்தைகளாக இருந்தால் அவர்கள் ''தடை செய்யப்பட்ட உறவுமுறையின் எல்லைகளுக்கு'' உட்பட்டவராகக் கருதப்படுவர்.

விளக்கம்: ஷரத்துகள் (அ) மற்றும் (ஆ)வின் நோக்கங் களுக்காக, உறவுமுறையில் பின்வருவன அடங்கும்:-

i) அரை அல்லது கர்ப்ப ரத்தம் மற்றும் முழு ரத்தம் வகையிலான உறவுமுறை;

ii) தகாத ரத்த உறவு மற்றும் முறையான ரத்த உறவு மூலமான உறவு முறை;

iii) சுவீகாரம் எடுத்துக் கொள்வது மற்றும் ரத்த சம்பந்தமான உறவுமுறை; மற்றும்

இந்த ஷரத்துகளில் உள்ள எல்லா வகையான உறவுமுறையும் அதற்கேற்ப அர்த்தப்படுத்திக்கொள்ளப்படவேண்டும்.

உதாரணங்கள்

i) இ, பொதுவான மூதாதையர் 'அ'வின் தந்தையின் தாயின் தந்தையினுடைய தந்தை; மற்றும் 'ஆ'வின் தாயின் தந்தை. 'இ' ஆனவர் 'அ'வின் தந்தை வழியில் 'அ'விலிருந்து ஐந்தாவது தலைமுறையும், 'ஆ'வின் தாய்வழியில் 'ஆ'விலிருந்து மூன்றாவது தலைமுறையுமாகும். 'அ'வும் 'ஆ'வும் ஒருவர் மற்றொருவரின் சபிண்டாக்கள் ஆவர்.

ii) 'அ'வும் 'ஆ'வும் ரத்த சம்பந்தமுள்ள சகோதரனும் சகோதரியுமாவர். அவர்களது சந்ததிகள் சபிண்டா உறவு முறையின் எல்லைகளுக்குள் ஒருவர் மற்றொருவரின் சபிண்டாக்கள் ஆவர். அவர்களது தந்தையின் சந்ததிகளும் அவருடைய மூதாதையரும்கூட 'அ' மற்றும் 'ஆ'வின் சபிண்டாக்களாவார்; அவர்களின் சந்ததிகள் சபிண்டா உறவுமுறையின் எல்லைகளுக்கு உட்பட்டவர்களாவர். ஆனால் 'அ'வின் தாய்வழிப் பாட்டனார், 'ஆ'வின் தாய்வழிப் பாட்டனாரின் சபிண்டாவாக இருக்க வேண்டிய அவசியமில்லை அல்லது முன்னால் கூறப்பட்ட தாய்வழிப் பாட்டனாரின் ஒரு மகனும் பிந்தியவரின் ஒரு மகனும் சபிண்டாவாக இருக்கவேண்டிய அவசியமில்லை

iii) 'அ'வும், 'ஆ'வும் கருப்பிறப்பான சகோதரனும் சகோதரியும் ஆவர். அவர்களின் வழித்தோன்றல்கள் 'சபிண்டா' உறவுமுறையின் எல்லைகளுக்குள் ஒருவர் மற்றொருவரின் 'சபிண்டா' ஆவர். அவர்களது தாயின் வழித்தோன்றல்களும், அவருடைய மூதாதையரும் சபிண்டா உறவுமுறையின் எல்லைகளுக்குள் 'அ' மற்றும் 'ஆ'வினுடைய மற்றும் அவர்களது வழித்தோன்றல்களுடைய சபிண்டாக்களாவர்.

ஆனால் 'அ'வின் தந்தைவழிப் பாட்டனார், 'ஆ'வின் தந்தைவழிப் பாட்டனாரின் சபிண்டாவாக இருக்க வேண்டிய அவசியமில்லை. அதுபோன்றே, முந்திய தந்தைவழிப் பாட்டனாரின் ஒரு மகன் பிந்தியவரின் ஒரு மகனின் சபிண்டாவாக இருக்க வேண்டிய அவசியமில்லை.

6. இந்து திருமணமுறைகள் : இங்கு வேறு விதமாக வெளிப்படையாகக் கூறப்படாத வரையில், இந்துக்களிடையிலான எந்தத் திருமணமும் - அது சமயச் சடங்கு ரீதியிலோ அல்லது இந்தப் பாகத்தின் ஷரத்துகளுக்கு இசைவான முறையில் ஒரு பதிவுத் திருமணமாகவோ நடைபெற்றிருந்தால் அல்லாது அது செல்லத்தக்க திருமணமாக அங்கீகரிக்கப்பட மாட்டாது.

பாகம் IV
பிரிவு 1
பக்கம் 15

(6)

சமயச்சடங்கு ரீதியான திருமணம்

7. சமயச்சடங்கு ரீதியான திருமணம் சம்பந்தப் பட்ட நிபந்தனைகள்:-

பாகம் IV
பகுதி 3
பக்கம் 15

எந்த இரு இந்துக்களுக்கு இடையிலான திருமணமும் சமயச் சடங்கு ரீதியில் செய்துகொள்ளப்படலாம்; அதற்குக் கீழ்க் கண்ட நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்படவேண்டும். அவை யாவன:

1) திருமணத்தின்போது மணமக்கள் ஒரு கணவனையோ அல்லது மனைவியையோ கொண்டவராக இருக்கக்கூடாது;

2) திருமண சந்தர்ப்பத்தில் மணமக்களில் யாரும் முட்டாளாகவோ அல்லது மனநிலை சரியில்லாதவராகவோ இருக்கக் கூடாது;

3) திருமணத்தின்போது மணமகன் பதினெட்டு வயதைப் பூர்த்தி செய்தவனாகவும், மணமகள் பதினான்கு வயதைப் பூர்த்திசெய்த வளாகவும் இருக்க வேண்டும்;

4) தரப்புகள் தடை செய்யப்பட்ட உறவு முறையின் எல்லை களுக்குள் இருக்கக்கூடாது;

5) மணமக்கள் ஒவ்வொருவரின் மரபோ அல்லது வழக்கமோ அவர்களுக்கு இடையில் ஒரு சமயச் சடங்கு ரீதியிலான திருமணத்தை அனுமதித்தாலொழிய தரப்புகள் ஒருவர் மற்றொரு வரின் *சபிண்டா* அல்ல.

6) மணமகள் தனது பதினாறாவது வயதைப் பூர்த்தி செய்யாத நிலையில், திருமணத்திற்கு அவளுடைய கார்டிய னுடைய சம்மதத்தைப் பெற்றிருக்க வேண்டும்.

(7)

10. ஒரு பதிவுத் திருமணம் சம்பந்தப்பட்ட நிபந்தனைகள்:-

பாகம் IV
பகுதி 7
பக்கம் 16

1) திருமணத்தின்போது மணமக்கள் ஏற்கனவே ஒரு கணவனையோ அல்லது மனைவியையோ கொண்டவராக இருக்கக் கூடாது;

2) திருமணத்தின்போது மணமக்கள் யாரும் முட்டாளாகவோ, அல்லது மனநிலை சரியில்லாதவராகவோ இருக்கக்கூடாது;

3) திருமணத்தின்போது மணமகன் பதினெட்டு வயதைப் பூர்த்தி செய்தவனாகவும் மணமகள் பதினான்கு வயதைப் பூர்த்தி செய்தவளாகவும் இருக்கவேண்டும்;

4) தரப்புகள் தடை செய்யப்பட்ட உறவுமுறையின் எல்லைகளுக்குள் இருக்கக்கூடாது.

5) ஒவ்வொரு தரப்பும் இருபத்தியோரு வயதைப் பூர்த்தி செய்யாதவராக இருந்தால், திருமணத்திற்குத் தமது கார்டியனுடைய சம்மதத்தைப் பெற்றிருக்கவேண்டும்;

ஒரு விதவையின் விஷயத்தில் அத்தகைய சம்மதம் தேவையில்லை.

(8)

8. தேவைப்படும் சடங்குகள் : *(1) சமயச் சடங்கு ரீதியான ஒரு திருமணமானது, அத்தகைய திருமணத்திற்கு அத்தியாவசியமான யாராவது ஒரு தரப்பினரின் வழக்கமான சடங்குகள் மற்றும் சம்பிரதாயங்களுக்கு ஏற்ப நடைபெற்றாலொழிய, நிறைவு பெற்ற தாகாது, தரப்பினரைக் கட்டுப்படுத்தாது.* **பாகம் IV, பகுதி 4 பக்கம் 15**

2) அத்தகைய சடங்குகளிலும் சம்பிரதாயங்களிலும் சப்தபடி உள்ளடங்கியிருக்கும் நிலைமையில் (அதாவது, புனித அக்னி யின் முன்னால், மணமகனும் மணமகளும் கூட்டாக ஏழு அடிகளை எடுத்துவைத்தல்) திருமணம் நிறைவு பெற்றதாகிறது, இரு தரப்பினரையும் கட்டுப்படுத்தும்.

3) இந்தப்பகுதியில் என்ன கூறப்பட்டிருந்த போதிலும் சமயச் சடங்கு ரீதியாக நிறைவு செய்யப்பட்ட எந்தத் திருமணமும், அவ்வாறு நிறைவடைந்ததற்குப்பின், யாராவது ஒரு தரப்பின் மரபான சடங்குகள், சம்பிரதாயங்களில் ஏதாவது சரியாக நடை பெறவில்லை என்ற காரணத்தின் பேரில் செல்லாததாகக் கருதப் பட முடியாது.

(9)

9. சமயச் சடங்கு ரீதியான திருமணங்களைப் பதிவு செய்தல்:-

1) எந்த சமயச் சடங்கு ரீதியான திருமணத் தின் சான்று பெறும் நோக்கத்திற்காக, மாகாண அரசு, விதிகளின் படி கீழ்வருவனவற்றுக்கு ஏற்பாடு செய்யலாம்:- **பாகம் IV பகுதி 6 பக்கம் 15**

அ) அத்தகைய திருமணத்தின் விவரங்கள், அரசு பொருத்த மானதெனக் கருதும் முறையிலும், சூழ்நிலைமைகளிலும், இந்த நோக்கத்திற்காக வைக்கப்பட்டுள்ள இந்து சமயச் சடங்கு ரீதி யிலான திருமணப் பதிவேட்டில் பதிவு செய்யப்பட வேண்டும்; மற்றும்

ஆ) இத்தகைய பதிவுகள் கட்டாயமாகும்; விதிகளில் குறிப் பிட்டுக் கூறப்பட்டுள்ள வகைகளில் அல்லது அத்தகைய பிரதே சங்களில் அவை செய்யப்பட வேண்டும்.

2) துணைப் பிரிவு (1)ன் கீழ் எந்த விதிகளையும் உருவாக்கு வதில், மாகாண அரசு, அந்த விதிகள் மீறப்பட்டால், அதற்கு அபராத தண்டனை விதிக்கப்படுவதற்கு வகை செய்யலாம்; அது நூறு ரூபாய் வரையிலும் விரிவுபடலாம்.

(10)

11. திருமணப் பதிவாளர்கள்: மாகாண அரசு, இந்துத் திருமணங்களின் பதிவாளர்களாக ஒருவர், அல்லது அதற்கு அதிகமானவர்களை நியமிக்கக் கூடும்; இந்த பாகத்தில், ''பதிவாளர்கள்'' என்று அவர்கள் குறிப்பிடப்படுவார்கள்; மாகாணத்திற்கு அல்லது அதனுடைய எந்தப் பகுதிக்கோ, பிரதேசத்திற்கோ அவர்கள் நியமிக்கப்படுவார்கள். அத்தகைய பதிவாளர் நியமிக்கப்படும் பிரதேசம் அவருடைய மாவட்டம் என்று அழைக்கப்படும்.

பாகம் IV பகுதி 8, பக்கம் 16

(11)

12. திருமணத்தைப்பற்றிப் பதிவாளருக்கு அறிவிப்புக் கொடுத்தல் : இந்த பாகத்தின் கீழ் ஒரு பதிவுத் திருமணம் நடத்தப்படுவதற்கு எண்ணப் பட்டிருந்தால், திருமணத்தின் தரப்புகள், மூன்றாவது அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள படிவத்தில் மாவட்டப் பதிவாளருக்கு எழுத்து மூலமாக அறிவிப்புக் கொடுக்க வேண்டும்; அதில் குறைந்தபட்சம் திருமணத்தின் ஒரு தரப்பினர், அத்தகைய அறிவிப்புக் கொடுப்பதற்கு முப்பது நாட்களுக்குக் குறையாமல் அந்த இடத்தில் வசித்திருக்க வேண்டும்.

பாகம் IV பகுதி 9, பக்கம் 16

(12)

13. திருமண அறிவிப்புப் புத்தகமும், வெளியீடும்:- 1) 12-வது பிரிவின் கீழ் கொடுக்கப் பட்டுள்ள எல்லா அறிவிப்புகளையும் அவருடைய அலுவலகத்தின் ஆவணங்களோடுகூட பதிவாளர் வைத்திருக்க வேண்டும்; மற்றும் அத்தகைய அறிவிப்பு ஒவ்வொன்றின் ஓர் உண்மையான நகலையும், அந்த நோக்கத்திற்காக மாநில அரசினால் அவருக்குக் கொடுக்கப்பட்டுள்ள நோட்டுப் புத்தகத்தில் பதிவு செய்து வைத்திருக்க வேண்டும். அந்தப் புத்தகத்திற்கு "இந்து சிவில் திருமண அறிவிப்புப் புத்தகம்" என்று பெயர்;அந்தப் புத்தகம் எல்லா நியாயமான சமயங்களிலும், அதை ஆய்வு செய்ய விருப்பமுள்ள ஒவ்வொரு நபருக்கும், கட்டணமின்றி, ஆய்வு செய்வதற்குத் திறந்திருக்க வேண்டும்.

பாகம் IV
பிரிவு 10
பக்கம் 16

2) பதிவாளர் அத்தகைய அறிவிப்பு ஒவ்வொன்றையும் நிர்ணயிக்கப்பட்ட முறையில் வெளியிடவும் வேண்டும்.

(13)

14. திருமணத்திற்கு ஆட்சேபம் : (1)செய்து கொள்ளப்படவிருக்கும் ஒரு திருமணத்திற்கு, 12-வது பிரிவின் கீழ் கொடுக்கப்பட்டுள்ள அறிவிப்புத் தேதிக்குப் பின் முப்பது நாட்கள் கழிந்ததற்குப் பின்னர், துணைப் பிரிவு (2)ன் கீழ் ஆட்சேபனை தெரிவிக்கப் பட்டிருந்தாலொழிய, அந்தத் திருமணம் நடத்தப்படலாம்.

பாகம் IV
பிரிவு 10
பக்கம் 16

2) எந்த நபரும், செய்துகொள்ளப்படவிருக்கும் திருமணத் திற்கான அறிவிப்புக் கொடுத்த தேதியிலிருந்து முப்பது நாட் களுக்குள், 10-வது பிரிவின் (1), (2), (3), (4) மற்றும் (5)-வது ஷரத்து களில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளில் ஒன்றையோ, அல்லது அதிகமானவற்றையோ அது மீறுகிறது என்ற காரணத்தின் பேரில் ஆட்சேபிக்கலாம்.

3) செய்யப்பட்ட ஆட்சேபத்தின் தன்மையைப் பதிவாளர், இந்து சிவில் திருமண அறிவிப்புப் புத்தகத்தில் எழுத்து மூலம் பதிவு செய்யவேண்டும், தேவைப்பட்டால், அவர் ஆட்சேபம் தெரி விக்கும் நபருக்கு அதை வாசித்துக் காட்டி, விளக்கி, அவருடைய கையெ ழுத்தைப் பெற வேண்டும், அல்லது அவருடைய சார்பில் வருகின்ற நபரின் கையெழுத்தைப் பெற வேண்டும்.

15. ஆட்சேபனை கிடைக்கப்பெற்றதும் கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறை :-

பாகம் IV
பிரிவு 12
பக்கம் 17

(1) நடத்தப்படவுள்ள ஒரு திருமணத்திற்கு, 14 வது பிரிவின் கீழ் ஓர் ஆட்சேபனை செய்யப்பட்டால், அந்த ஆட்சேபனை கிடைக்கப் பெற்றதிலிருந்து முப்பது நாட்கள் முடிவடைகின்ற வரையில், அந்தத் திருமணம் நடைபெறுவதற்குப் பதிவாளர் அனுமதிக்கக்கூடாது. தகுதியான அதிகார எல்லை வரம்புள்ள நீதிமன்றம் அந்த சமயத்தில் திறந்திருந்தாலும், அல்லது, அத்தகைய நீதிமன்றம் எதுவும் அந்த சமயத்தில் திறக்கப் படாமலிருந்தாலும், அத்தகைய நீதிமன்றம் திறக்கப்பட்டதிலிருந்து முப்பது நாட்கள் கழியும்வரையிலும் அந்தத் திருமணம் நடைபெறுவதற்குப் பதிவாளர் அனுமதிக்கக்கூடாது.

2) நடத்தப்படவுள்ள திருமணத்தை ஆட்சேபிக்கும் நபர், ஸ்தல அதிகார வரம்புள்ள மாவட்ட நீதிமன்றத்தில் (அல்லது மாகாண அரசினால் அதிகாரமளிக்கப்பட்ட, அத்தகைய அதிகார வரம்புள்ள வேறு எந்த நீதிமன்றத்திலும்)* ஆசிரியர் அந்த உத்தேசத் திருமணம் 10-வது பிரிவின் (1) (2) (3) (4) மற்றும் (5)வது ஷரத்துகளில் குறிப்பிடப்பட்டுள்ள ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட நிபந்தனைகளை மீறுகிறதென்று ஓர் அறிக்கை வெளியிடும்படிக் கோரலாம்; அதன்படி அத்தகைய வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ள நீதிமன்றம், அந்த வழக்கு தொடுத்துள்ள நபருக்கு, அத்தகைய வழக்குத் தொடுக்கப் பட்டுள்ளதாக ஒரு சான்றிதழ் கொடுக்கலாம்.

3) துணைப் பிரிவு (2)ல் குறிப்பிடப்பட்டுள்ள சான்றிதழ், பதிவாளரிடம், ஆட்சேபனையை அவர் பெற்றுக்கொண்ட தேதியிலிருந்து முப்பது நாட்களுக்குள் சமர்ப்பிக்கப்பட்டால், அந்த சமயத்தில் தகுதி வாய்ந்த அதிகார வரம்புள்ள ஒரு நீதிமன்றம் திறந்திருந்தாலும் அல்லது அத்தகைய நீதிமன்றம் எதுவும்திறக்கப்படாமல் இருந்தாலும், அத்தகைய நீதிமன்றம் திறக்கப்பட்ட நாளிலிருந்து முப்பது நாட்களுக்குள், அத்தகைய நீதிமன்றத்தின் முடிவு வழங்கப்படுகின்ற வரையில், அந்தத் திருமணம் நடத்தப்படக் கூடாது. அத்தகைய முடிவுக்கு எதிராக

* டாக்டர் அம்பேத்கர் தமது சொந்தப் பிரதியில் ஊதாப் பென்சிலில் பின்வருமாறு எழுதியுள்ளார் - விடப்பட்டது. அவசியமில்லாதது. மாவட்ட நீதிமன்றம் பற்றிய புதிய வரையுறையைக் காண்க

மேல்முறையீடு செய்வதற்கு சட்டத்தில் அனுமதிக்கப்பட்டுள்ள காலம் முடியும் வரையிலும், அல்லது, அந்த முடிவுக்கு எதிராக ஒரு மேல் முறையீடு இருந்தால், மேல் முறையீட்டு நீதிமன்றத்தின் முடிவு வழங்கப்படும் வரையிலும், அந்தத் திருமணம் நடைபெறுவதற்கு அனுமதிக்கப்படக்கூடாது.

4) அத்தகைய சான்றிதழ் துணைப்பிரிவு (3)ல் வரையறுக்கப் பட்டுள்ள முறையிலும், காலகட்டத்தினுள்ளும், அல்லது நீதி மன்றத்தின் முடிவு, அந்தத் திருமணம் 10-வது பிரிவின் (1), (2), (3), (4) மற்றும் 5-வது ஷரத்துகளில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகள் எதையும் மீறாததாக இருந்தால், திருமண அறிவிப்புக் கொடுக்கப் பட்டுள்ள பதிவாளர் அந்தத் திருமணத்தை நடத்தி வைக்கலாம்.

5) அந்தத் திருமணம், 10-ஆவது பிரிவின் (1), (2), (3), (4), மற்றும் (5)-வது ஷரத்துகளில் நிர்ணயித்துக் கூறப்பட்டுள்ள நிபந்தனைகள் எதையாவது மீறுவதாக நீதிமன்றத்தின் முடிவு இருந்தால், அந்தத் திருமணம் நடத்தப்படக்கூடாது.

(15)

16. ஆட்சேபம் நியாயமானதாக இல்லாவிட்டால் அபராதம் விதிப்பதற்கு நீதிமன்றத்திற்கு அதிகாரம் : வழக்குத் தொடுக்கப்பட்டுள்ள நீதிமன்றத்திற்கு, ஆட்சேபம் நியாயமானதல்ல என்றும் உண்மையான தல்ல என்றும் தோன்றினால், ஆட்சேபம் தெரிவித்த நபருக்கு ஆயிரம் ரூபாய் வரையில் அபராதம் விதித்து,அதை அல்லது அதன் ஒரு பகுதியை உத்தேசத் திருமண தம்பதிகளுக்கு வழங்கலாம்.

பாகம் IV
பகுதி 13
பக்கம் 17

(16)

17. மணமக்களும், சாட்சிகளும் கையெழுத்திடும் பிரகடனம்: 1) திருமணம் நடத்தப் பெறுவதற்கு முன்னால், மணமக்களும் மூன்று சாட்சிகளும் பதிவாளரின் முன்னிலையில் நான்காவது அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரகடனத்தில்

பாகம் IV
பகுதி 14
பக்கம் 17

கையெழுத்திட வேண்டும். மணமக்களில் யாரும் 21-வயதைப் பூர்த்தி செய்யவில்லை என்றால் அந்தப் பிரகடனத்தில் (விதவை மணமகளாக இருந்தால் அன்று) அவர்களுடைய பாதுகாவலரும் (கார்டியன்) கையெழுத்திட வேண்டும்.

2) துணைப் பிரிவு (1)ன் கீழ் செய்யப்படும் ஒவ்வொரு பிரகடனத்திலும் பதிவாளர் எதிர்-கையெழுத்துப் போடவேண்டும்.

(17)

(18)

18. திருமணம் நடைபெறும் இடமும் முறையும் : 1) திருமணம் கீழ்வரும் இடங்களில் முறைப்படி நடைபெறலாம்:

பாகம் IV
பகுதி 15
பக்கம் 17

அ) பதிவாளரின் அலுவலகத்தில், அல்லது,

ஆ) பதிவாளரின் அலுவலகத்திலிருந்து நியாயமான அளவு தூரத்தில், இருதரப்பினரின் விருப்பத்திற்கேற்ப வேறு இடத்தில், நிர்ணயிக்கப்படும் நிபந்தனைகளின் பேரிலும், நிர்ணயிக்கப் படும் கூடுதல் கட்டணம் செலுத்தப்படுவதன் பேரிலும் நடை பெறலாம்.

2) திருமணம் எந்த முறையிலும் நடைபெறலாம்: ஆனால், பதிவாளரின் முன்னிலையிலும், மூன்று சாட்சிகளின் முன்னிலை யிலும் மணமகனும், மணமகளும் ஒருவருக்கொருவர் நான் (அ) உங்களை (ஆ) என்னுடைய சட்டப்படியான மனைவியாக (அல்லது கணவனாக) ஏற்றுக் கொள்கிறேன் என்று கூறினால்தான் திருமணம் நிறைவுபெறும், இருதரப்பினரையும் கட்டுப்படுத்தும்.

3) திருமணம் பதிவாளர் மற்றும் மூன்று சாட்சிகளின் முன்னிலையில் நடைபெறவேண்டும்.

(18)

19. திருமணச் சான்றிதழ் - (1) திருமணம் நடத்தப்பட்டவுடனே, பதிவாளர், ஆறாவது அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள படிவத்தில் அந்தத் திருமணம் சம்பந்தமான ஒரு சான்றிதழை எழுதி, அவரால் அதற்காக வைக்கப்பட்டுள்ள புத்தகத்தில் அதைச் சேர்க்க வேண்டும்; அந்தப் புத்தகத்திற்கு ''இந்து சிவில் திருமண சான்றிதழ் புத்தகம்'' என்று பெயர். அந்த சான்றிதழில் மணமக்களும், மூன்று சாட்சிகளும் கையெழுத்திட வேண்டும். **பாகம் IV பகுதி 17 பக்கம் 18**

2) இந்து சிவில் திருமண சான்றிதழ் புத்தகத்தில் பதிவாளர் சான்றிதழைப் பதிவு செய்ததும், அந்த சான்றிதழ், ஒரு சிவில் திருமணம் நடத்தப்பட்டது என்ற உண்மைக்கு முடிவான சாட்சியமாகக் கருதப்பட வேண்டும். திருமணத்திற்கு சாட்சிகளின் கையெழுத்துக்கள் முதலிய எல்லா சம்பிரதாயங்களும் கடைப்பிடிக்கப்பட வேண்டும்.

(19)

20. அறிவிப்புக் கொடுத்தபின் மூன்று மாதங்களுக்குள் திருமணம் நடத்தப்படாவிட்டால், புதிய அறிவிப்பு தேவை - பிரிவு 12-ன்படி, பதிவாளருக்கு அறிவிப்புக் கொடுத்ததிலிருந்து மூன்று மாதங்களுக்குள் ஒரு திருமணம் நடத்தப்படாவிட்டால், அல்லது உத்தேசத் திருமணத்தை ஆட்சேபிக்கும் நபர், தகுதியுள்ள அதிகார வரம்புள்ள ஒரு நீதிமன்றத்தில் ஒரு வழக்குப் பதிவு செய்து, அந்த நீதிமன்றத்தின் முடிவும் (தீர்ப்பும்) வழங்கப்பட்டிருந்தால், அத்தகைய முடிவுக்கு எதிராக மேல் முறையீடு செய்வதற்கு சட்டப்படி அனுமதிக்கப்பட்டுள்ள மூன்று மாத காலம் முடிவடைந்து விட்டால், அல்லது, அத்தகைய முடிவுக்கு எதிராக மேல் முறையீடு செய்யப்பட்டிருந்தால், அப்பீல் நீதிமன்றத்தின் முடிவு வழங்கப்பட்டதிலிருந்து மூன்று மாதங்களுக்குள், திருமண அறிவிப்பும், அது சம்பந்தமான எல்லா நடைமுறைகளும் (விசாரணைகளும்) காலாவதியாகிவிட்டதாகக் **புதிது**

கருதப்பட வேண்டும்; மேலும், இந்த அத்தியாயத்தில் வரையறுத்துக் கூறப்பட்டுள்ள முறையில் ஒரு புதிய அறிவிப்புக் கொடுக்கப்படுகின்ற வரையில் திருமணம் நடத்தப்படுவதற்கு எந்தப் பதிவாளரும் அனுமதிக்கக் கூடாது.

(20)

21. சமயச் சடங்கு ரீதியான சில திருமணங்களைப் பதிவு செய்வதற்கான நடைமுறை : 1) எந்த இரு இந்துக்களாவது சமயச் சடங்கு ரீதியிலான திருமணத்தைச் செய்துகொண்டுள்ள நிலையில் :-

பாகம் IV
பிரிவு 18
பக்கம் 18

அ) இந்த சட்டத் தொகுப்பு அமலுக்கு வருவதற்கு முன்னால், இந்து சட்டத்தின் எந்த வாசகம், விதி, அல்லது வியாக்கியானத்தின் ஷரத்துகளின் காரணமாக, அல்லது திருமணத்தின் போது, அமலிலிருந்த எந்த வழக்கம் அல்லது மரபின் காரணமாக அத்தகைய எந்தத் திருமணத்தின் செல்லத்தக்க தன்மை குறித்து ஐயப்பாடுகள் தெரிவிக்கப்பட்டால், அல்லது

ஆ) இந்த சட்டத் தொகுப்பு அமலுக்கு வந்ததற்குப்பின்னர், ஏழாவது பிரிவின் (5)வது ஷரத்தில் அடங்கியுள்ள விதிகளுக்கு முரணானதாக இருந்ததன் விளைவாக, அத்தகைய திருமணம் செல்லத்தகாததாயின்,

அத்தகைய நபர்கள், அவர்களில் யாராவது ஒருவர், மனுக் கொடுப்பதற்கு முன்னால், முப்பது நாட்களுக்குக் குறைவில்லாமல் வசித்துள்ள மாவட்டத்தின் பதிவாளருக்கு, பதிவாளரின் முன்னால் செய்துகொள்ளப்பட்ட ஒரு சிவில் திருமணம் என்பதைப் போன்று தங்களது திருமணத்தைப் பதிவு செய்யும்படி விண்ணப்பித்துக் கொள்ளலாம்.

2) அத்தகைய விண்ணப்பம் எதுவும் பெறப்பட்டதன் பேரில், வரையறுக்கப்பட்ட முறையில் பதிவாளர் அது பற்றி பகிரங்கமாக அறிவிப்புச் செய்யவேண்டும்; பின்னர், ஆட்சேபனைக்கு முப்பது நாட்கள் அவகாசம் கொடுத்தபின்னரும், அந்தக் கால அவகாசத்தினுள் ஏதாவது ஆட்சேபனைகள் வந்தால் அவற்றை விசாரித்த பின்னர் பதிவாளர் கீழ்வருவது பற்றி அவர் திருப்தியடைந்தால், அதாவது:

அ) விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தேதியில் திருமணச் சடங்கு நடைபெற்றது; அது முதலாக மணமக்கள் கணவனும் மனைவியுமாக ஒன்றாக வாழ்ந்து வருகிறார்கள்;

ஆ) பத்தாவது பிரிவின் (1) முதல் (4) வரையிலான ஷரத்துகளிலுள்ள நிபந்தனைகள், விண்ணப்பத் தேதியில் மணமக்களிடையில் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன; மற்றும் (இ) திருமணத்தின் போது மணமகள் விதவையாக இல்லாத நிலையில், விண்ணப்பத் தேதியில் 21 வயதைப் பூர்த்தி செய்யாததால், திருமணத்தை ஒரு சிவில் திருமணமாகப் பதிவு செய்வதற்கு அவருடைய, அல்லது அவருடைய கார்டியனின் சம்மதம் பெறப்பட்டுள்ளது என்று

பதிவாளர் திருப்தி அடைந்தால், இந்து சமயச் சடங்கு ரீதியிலான திருமணப் பதிவேட்டில் ஆறாவது அட்டவணையில் குறிப்பிடப் பட்டுள்ள படிவத்தில் திருமணத்தின் ஒரு சான்றிதழை அவர் பதிவு செய்ய வேண்டும்: அந்த சான்றிதழில் மணமக்களும், மூன்று சாட்சிகளும் கூடக் கையெழுத்திட வேண்டும்.

3) துணைப் பிரிவு (2)ல் குறிப்பிட்டுள்ளபடி அத்தகைய எந்த சான்றிதழும் பதிவு செய்யப்பட்டதன் பேரில், திருமணம் எல்லா நோக்கங்களுக்கும் செல்லத்தக்கதாகக் கருதப்பட வேண்டும்; மற்றும் சமயச் சடங்கு ரீதியிலான திருமணம் செய்துகொண்ட பின்னர் மணமக்களுக்குப் பிறந்த எல்லாக் குழந்தைகளும் (அவர்களின் பெயர்கள் சான்றிதழிலும் இந்து சமயச் சடங்கு முறைப்படியான திருமணப் பதிவேட்டிலும் எழுதப்படவேண்டும்) எல்லா அம்சங்களிலும் தமது பெற்றோர்களின் சட்டப்படியான குழந்தைகளாகக் கருதப்படுவர், எப்போதும் அவ்வாறே கருதப் படுவர்.

4) அத்தகைய திருமணத்தின் எந்தத் தரப்பும், இந்தப் பிரிவின் கீழ் வெளியிடப்படும் எந்த உத்தரவினாலும் பாதிக்கப் பட்டால், அந்த உத்தரவுக்கு எதிராக, மாவட்ட நீதிமன்றத்திற்கு மேல் முறையீடு செய்யலாம்; அதன் பேரில் பதிவாளர் தமது அதிகார எல்லையின் ஸ்தல வரம்புக்குள் செயல்படுகிறார்; அத்தகைய மேல் முறையீட்டின் பேரில் மாவட்ட நீதிமன்றத்தின் முடிவு இறுதியானதாகும்.

(21)

22. திருமண ஆவணங்கள் ஆய்வு முதலியவற்றுக்குத் திறந்திருத்தல்: இந்து சமயச் சடங்கு ரீதியிலான திருமணப்பதிவேடும், இந்து சிவில் திருமண சான்றிதழ் புத்தகமும் எல்லா நியாயமான சமயங்களிலும் ஆய்வுக்குத் திறந்திருக்க வேண்டும்; மற்றும் அவற்றில் அடங்கியுள்ள விவரங்களின் மெய்மைக்குச் சான்றாக அவை அனுமதிக்கப்பட வேண்டும்.

பாகம் IV
பிரிவு 19
பக்கம் 18

விண்ணப்பத்தின் பேரிலும், நிர்ணயிக்கப்பட்ட கட்டணத்தைப் பதிவாளருக்குச் செலுத்துவதன் பேரிலும் அவற்றிலிருந்து சான்றளிக்கப்பட்ட பகுதிகள், பதிவாளரால் வழங்கப்பட வேண்டும்.

(22)

23. திருமண ஆவணங்களில் உள்ள பதிவுகளின் நகல்களைப் பிறப்பு, மரணம் மற்றும் திருமணப் பதிவாளர் - ஜெனரலுக்கு அனுப்பி வைத்தல் :- பதிவாளர், தனது மாவட்டம் அமைந்துள்ள மாகாணத்தின் பிறப்பு, மரணம் மற்றும் திருமணங்களின்பதிவாளர் - ஜெனரலுக்கு, நிர்ணயிக்கப்படும் கால இடைவெளிகளில் - இந்து சமயச் சடங்கு ரீதியிலான திருமணப்பதிவேட்டிலும், இந்து சிவில் திருமணச் சான்றிதழ் புத்தகத்திலும், அத்தகைய கடைசி இடைவெளிக்குப்பின் அவரால் வரையப்பட்ட அனைத்துப் பதிவுகளின் ஓர் உண்மை நகலை, நிர்ணயிக்கப்பட்ட முறையிலும், அவரால் சான்றளித்தும் பதிவாளர் அனுப்ப வேண்டும்.

பாகம் IV
பிரிவு 20
பக்கம் 18

(23)

24. திருமணத்தில் கார்டியன் முறை :- 1) (IV)ம் பகுதியின் ஷரத்துகளுக்கு உட்பட்டு, இந்த பாகத்தின் கீழ் திருமணத்தில் கார்டியனின் சம்மதம் எங்கெங்கு தேவைப்படுகிறதோ, அத்தகைய சம்மதம் அளிப்பதற்கு உரிமையுள்ள நபர்கள், கீழ்வரும் வரிசைப்படி வருபவர்களாவர். அதாவது :-

பாகம் IV
பகுதி 22
பக்கம் 19

1) தந்தை;

2) தாய்;

3) தந்தைவழிப் பாட்டனார்;

4) சொந்த சகோதரர் அல்லது ஒன்றுவிட்ட சகோதரர்; முழுரத்த சம்பந்தமுள்ள சகோதரர் விரும்பத்தக்கவர்; முழுரத்த சம்பந்தமுள்ள அல்லது ஒன்றுவிட்ட சகோதரரில் மூத்தவர் விரும்பத்தக்கவர்;

5) முழு ரத்த சம்பந்தமுள்ள சிற்றப்பா அல்லது ஒன்று விட்ட சிற்றப்பா ஆகியவர்களில் (4)-வதாகக் கூறப்பட்டுள்ள விரும்பத்தக்கவர் விதிகளின்படி அமையும்;

6) தாய்வழிப் பாட்டனார்;

7) தாய்வழி மாமா விஷயத்தில், மேலே (4)-வதாகக் குறிப்பிட்டுள்ளவாறு விரும்பத்தக்கவர் விதிகளின் படி அமையும்;

8) வேறு எந்த உறவினராவது; தூரத்து உறவினருக்கு மாறாக, மிகவும் நெருக்கமான உறவினர் விரும்பப்படுகிறார்; அதே வழியில் உறவுள்ள உறவினர்களிடையில், மேலே (4)-வதாகக் கூறப்பட்டுள்ளபடி விரும்பத்தக்கவர் பற்றிய விதிகளின்படி அமையும்.

விளக்கம் : (8)-வதாகக் கூறப்பட்டுள்ளதன் நோக்கத்திற்கு இரு உறவினர்களில் யார் மிகவும் நெருக்கமானவர் என்பது பாகம் VII-ல் உயில் எழுதி வைக்காமல் இறந்துபோனவரின் சொத்தின் வாரிசுரிமை உடையவர் பற்றிய விதிகளுக்கு ஏற்ப, முதலில் அதைப் பெறக் கூடிய தகுதியுள்ளவர் யார் என்ற அடிப்படையில் தீர்மானிக்கப்படும்.

2) இந்தப் பகுதியின் ஷரத்துகளின் கீழ், திருமணத்தில் கார்டியனாக செயல்படுவதற்குத் தகுதியுடையவர் இருபத்தி ஒன்றாவது வயதைப் பூர்த்தி செய்தவராக இருக்க வேண்டும்.

3) மேலே கூறப்பட்ட ஷரத்துகளின் கீழ் திருமணத்தில் கார்டியனாக இருப்பதற்குத் தகுதியுடையவர் மறுத்தாலோ அல்லது பிரசன்னமாயில்லாததாலோ இயலாமை அல்லது வேறு காரணத்தினால் செயல்பட முடியாமை அல்லது அவ்வாறு செயல்படுவதற்குப் பொருத்தமில்லாதவர் என்றால், வரிசைப்படி அடுத்துள்ள நபர் கார்டியனாக இருப்பதற்குத் தகுதியுடையவராவார்.

4) கார்டியனால் ஏற்பாடு செய்யப்பட்ட உத்தேசத் திருமணத்தை பருவமடையாதவரின் (மைனர்) நலனுக்காகத் தடையாணையின் மூலம் தடை செய்வது அவசியம் என்று நீதிமன்றம் கருதினால், அவ்வாறு தடை செய்வதற்கு அந்த நீதிமன்றத்திற்குள்ள அதிகார வரம்பை இந்த பாகத்திலுள்ள எதுவும் பாதிக்காது.

(24)

25. இருதார மணமும் அதற்கான தண்டனையும் : எந்த நபரும் - அவருடைய அல்லது அவளுடைய வாழ்நாளில் - அத்தகைய நபரின் திருமணம், தகுதியான அதிகார வரம்புள்ள ஒரு நீதிமன்றத்தினால் ரத்து செய்யப் படாதவரையில், இந்த சட்டத் தொகுப்பு அமலுக்கு வந்ததற்குப் பின்னர், வேறு திருமணம் செய்து கொண்டால், ஒரு கணவன் அல்லது மனைவி உயிருடன் இருக்கும் காலத்தில் மீண்டும் திருமணம் செய்துகொண்ட குற்றத் திற்காக, 1860-ம் வருட இந்திய தண்டனைச் சட்டத்தின் (1860-ன் XLV) 494, 495-ம் பிரிவுகளில் விதிக்கப்பட்டுள்ள தண்டனைக்கு உள்ளாவார்கள்.

பாகம் V
பகுதி 24
பக்கம் 19

(26)

26. பொய்யான பிரகடனம் அல்லது சான்றிதழில் கையொப்பமிட்டதற்கு தண்டனை: இந்த பாகத்தின் கீழ் தேவைப்படும் எந்தப் பிரகடனம் அல்லது சான்றிதழை உருவாக்குகின்ற, கையெழுத்திடுகின்ற அல்லது சான்றொப்பம் அளிக்கும் ஒவ்வொரு நபரும் - அது பொய்யானதாக இருந்தால், மற்றும் அது அவருக்குத் தெரிந்திருந்தால், அல்லது அது பொய்யென்று நம்புகிறாரென்றால், அல்லது அது உண்மையென்று நம்பாதவராக இருந்தாலும், 1860-ம் வருட (1860-ன் XLV) இந்திய தண்டனைச் சட்டத்தின் 199-வது பிரிவில் விவரித்துள்ள குற்றம் புரிந்தவராகக் கருதப்பட வேண்டும்.

பாகம் IV
பகுதி 22
பக்கம் 18

(27)

31. மணவாழ்க்கை உரிமைகளை மீட்டெடுப்பதற்கான மனு : கணவனோ, மனைவியோ நியாயமான காரணமின்றி, ஒருவர் மற்றொருவருடனான தொடர்பிலிருந்து விலகிச் சென்றுவிட்டால், பாதிக்கப்பட்ட நபர், மண வாழ்க்கை உரிமைகளை மீட்டெடுப்பதற்காக மாவட்ட நீதிமன்றத்திற்கு மனுச் செய்து கொள்ளலாம். அத்தகைய மனுவிலுள்ள விவரங்களின் உண்மைத் தன்மை குறித்து நீதிமன்றம் திருப்தியடையும் பட்சத்தில், அந்த மனு அனுமதிக்கப்படக் கூடாதென்பதற்கு எத்தகைய சட்டபூர்வமான காரணமும் இல்லாத நிலையில், நீதிமன்றம் அதற்கேற்ப, மணவாழ்க்கை உரிமைகளை மீட்டு அளிப்பதற்கான ஆணை பிறப்பிக்கலாம். (புதிது)

(28)

32. மண வாழ்க்கை உரிமைகள் மீட்டு அளிக்கப்பட வேண்டுமென்பதற்கான மனுவுக்கு பதில்: நீதிமன்றம் மூலமாகப் பிரிந்து செல்வதற்கோ, அல்லது திருமணத்தை ரத்து செய்ய வேண்டுமென்பதற்கான ஓர் ஆணைக்கோ ஒரு காரணமாக இருக்க முடியாத, மணவாழ்க்கை உரிமைகளை மீட்டு அளிக்க வேண்டுமென்பதற்கான ஒரு மனுவுக்கு பதிலாக எதையும் கூற முடியாது. (புதிது)

(29)

நீதிமன்றம் மூலமாகப் பிரிந்து செல்லுதல்

33. நீதிமன்றம் மூலமாகப் பிரிந்து செல்லுதல்: இந்த சட்டத் தொகுப்பு அமலுக்கு வருவதற்கு முன்னால் அல்லது பின்னால் நடைபெற்ற ஒரு திருமணத்தின் இருதரப்புகளில் ஒருவர், பின்வரும் காரணத்திற்காக, நீதிமன்றம் மூலமாகப் பிரிந்து செல்வதற்கான அனுமதி கோரி மாவட்ட நீதிமன்றத்தில் ஒரு மனுக் கொடுக்கலாம். அதாவது:- (பாகம் IV பிரிவு 30 பக்கம் 21)

அ) இரண்டு ஆண்டுகளுக்குக் குறைவில்லாத காலத்திற்கு மனுதாரரைக் கைவிட்டுச் சென்றதற்காக; அல்லது

ஆ) மனுதாரர் மற்றையத் தரப்புடன் வாழ்வதைப் பாதுகாப் பற்றதாகச் செய்யும் கொடுமை செய்த குற்றம் புரிந்ததற்காக;

இ) மனுதாரரிடமிருந்து பெற்றிராத பிறருக்குப் பரப்பக் கூடிய, மனுக் கொடுப்பதற்கு முந்திய ஓராண்டுக்குக் குறைவில்லாத காலத்திற்கு ஒரு பால் வினைநோயினால் பாதிக்கப்பட்டிருந்தால் அல்லது

ஈ) ஒரு கடுமையான தொழுநோயினால் பாதிக்கப்பட்டிருந் தால் அல்லது

உ) திருமணமான நாளிலிருந்து வழக்கமாக மனநிலை சரி யில்லாதவராக இருந்திருந்தால், அல்லது

ஊ) திருமணத்தின்போது ஒழுக்கக் கேடான செயல் புரிந்திருந்தால்.

விளக்கம் : இந்தப் பகுதியில் ''கைவிட்டுச் செல்லுதல்'' என்ற சொற்றொடருக்கு (அவற்றின் இலக்கண ரீதியான மாறுபாடு களும் தொடர்பான பிரயோகங்களும் எப்படியிருந்தபோதிலும்) திருமணத்தின் மற்றையத் தரப்பை, நியாயமான காரணமின்றி யும், அத்தகைய தரப்பின் சம்மதமின்றியோ அல்லது அதனுடைய விருப்பத்திற்கு எதிராகவோ கைவிட்டுச் செல்லுதல் என்று பொருள்.

(30)

34. எந்தத் திருமணமும் நீதிமன்றத்தின் உத்திரவில்லாமல் தவிர்க்கப்படக் கூடாது. இந்த பாகத்தில் என்ன கூறப்பட்டிருந்த போதிலும், இந்த சட்டத் தொகுப்பு நடைமுறைக்கு வருவதற்கு முன்னாலோ, அல்லது பின்னாலோ செய்து கொள்ளப்பட்ட எந்தத் திருமணமும், அத்தகைய திருமணம் செல்லத் தகாததாக, அல்லது செல்லத் தகாததாகிவிடக் கூடியதாக இருந்தாலும், கலைக்கப்படு வதற்கான ஒரு மனுவின் மீதோ அல்லது, அந்தத் திருமணத்தின் செல்லத்தக்க தன்மை ஒரு பிரச்சினையாக இருக்கிற வேறு எந்த நீதிமன்ற வழக்கிலோ திருமணம் கலைக்கப்பட்டதாக அறிவிக்கப் பட்டாலொழிய (எந்தத் திருமணமும்) சட்டப்படி ரத்து செய்யப் பட்டதாகக் கருதப்பட முடியாது.

(31)

(32)

***28. செல்லாத திருமணம் :-** 1) இந்த சட்டத்தொகுப்பு அமலுக்கு வருவதற்கு முன்னால்செய்து கொள்ளப்பட்ட எந்தத் திருமணமும் பின்வரும் காரணங்களால் செல்லாததாகிவிடும். அதாவது -*

***பாகம்** IV*
பகுதி 29
***(2)** (ii)*
பக்கம் 2

அ) அந்தத் திருமணத்தின்போது அமலிலுள்ள எந்த ஒரு சட்டத்தின் விதிகளின் காரணமாக, திருமணத்தின் போது எந்த ஒரு தரப்புக்கும் ஒரு கணவனோ அல்லது மனைவியோ உயிருடன் வாழ்ந்து வருகிறார் என்ற காரணத்தினால் அந்தத் திருமணம் செல்லத்தக்கதல்ல என்றாகிவிடும்; அல்லது,

ஆ) திருமணத்தின்போது தரப்புகள், 5-ம் பிரிவின் (ஆ) ஷரத்தினால் விளக்கியுள்ளபடி தடை செய்யப்பட்ட உறவுமுறை யின் எல்லைகளுக்குள் இருந்தால் அத்திருமணம் செல்லாததாகி விடும்.

அதேசமயத்தில், ஒரு திருமணம், திருமணம் நடைபெற்ற சமயத்தில் அமலிலுள்ள எந்த சட்டத்தின் விதிகளின் கீழ் செல்லத் தக்கதாக இருந்தால், அத்தகைய திருமணம் எதுவும் துணைப் பிரிவு (1)-ன் (ஆ) ஷரத்தின் விதிகளின் கீழ் செல்லாததாகக் கருதப் பட முடியாது.

2) இந்த சட்டத் தொகுப்பு அமலுக்கு வந்ததற்குப் பின்னர் செய்து கொள்ளப்பட்ட எந்தத் திருமணமும் பின்வரும் காரணங்களால் செல்லாததாகிவிடும்: அதாவது

அ) சமயச் சடங்கு ரீதியில் நடத்தப்பட்ட எந்தத் திருமணமும் பிரிவு 7-ன் (1), (4) மற்றும் (5)-வது ஷரத்துகளில் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளை மீறினால் (செல்லாததாகிவிடும்).

ஆ) ஒரு சிவில் திருமணமாக நடத்தப்பட்ட எந்தத் திருமணமும் 10-வது பிரிவின் (1) மற்றும் (4)-வது ஷரத்துகளில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளை மீறினால் அது செல்லாததாகிவிடும்.

ஆனால், அதே சமயத்தில், துணைப் பிரிவு (2)-ன் (அ) ஷரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வழக்கில், திருமணம், அதன்பின்னர் எந்த சமயத்திலாவது, அந்தத் திருமணத்தைக் கலைப்பதற்கான மனு எந்த நீதிமன்றத்திலாவது கொடுப்பதற்கு முன்னர், 21-வது பிரிவின் கீழ் ஒரு சிவில் திருமணமாகப் பதிவு செய்து கொள்ளப் பட்டிருந்தால், 7-வது பிரிவின் (5)வது ஷரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனை பொருந்தாது.

(33)

பாகம் IV
பிரிவு 5
பக்கம் 15

29. செல்லாததாகக் கூடிய திருமணங்கள் : 1) இந்த சட்டத் தொகுப்பு அமலுக்கு வருவதற்கு முன்னால் செய்து கொள்ளப்பட்ட எந்தத் திருமணமும், திருமணத்தின்போது திருமணத்தின் எந்தத் தரப்பும் ஒரு முட்டாளாகவோ அல்லது மனநிலை சரியில்லாதவராகவோ இருந்தால் அது செல்லத்தக்கதல்ல.

2) இந்த சட்டத் தொகுப்பு அமலுக்கு வந்ததற்குப் பின்னர் நடத்தப்பட்ட எந்தத் திருமணமும் பின்வரும் காரணங்களால் செல்லத்தகாததாகும்:

அ) சமயச் சடங்கு ரீதியாக நடத்தப்பட்ட திருமணமாக இருந்து, 7-வது பிரிவின் (2), (3) மற்றும் (6)-வது ஷரத்துகளில் குறிப்பிடப் பட்டுள்ள நிபந்தனைகளில் எதையாவது மீறினால்;

ஆ) ஒரு சிவில் திருமணமாக இருந்து, 10-வது பிரிவின் (2), (3) மற்றும் 5-வது ஷரத்துகளில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளில் எதையாவது மீறினால்;

ஆனால், அதேபொழுதில், நிர்ப்பந்தமோ மோசடியோ இருந்தாலன்றி, சமயச் சடங்கு ரீதியில் நடத்தப்பட்ட ஒரு திருமணம், அது நிறைவு அடைந்ததற்குப் பின்னர், திருமணத்திற்கான மணப்பெண்ணின் கார்டியனுடைய சம்மதம் பெறப்படவில்லை அல்லது முன்கூட்டியே பெறப்படவில்லை என்ற காரணத்தினாலேயே செல்லாததாகிவிட்டதாகக் கருத முடியாது அல்லது எப்பொழுதும் செல்லாததாகாது.

3) இந்த சட்டத் தொகுப்பு அமலுக்கு வருவதற்கு முன்னரோ அல்லது வந்ததற்குப் பின்னரோ செய்து கொள்ளப்பட்ட எந்தத் திருமணமும் 30-வது பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள காரணங்களில் எதன் காரணமாகவாவது செல்லத்தகாததாகும்.

4) இந்த பாகத்தின் கீழ் எந்த மனுவாவது சமர்ப்பிப்பதற்குக் கால வரம்பு நிர்ணயிக்கப்பட்டுள்ள நிலையில், அந்தக் கால வரம்புக்குள் எந்த மனுவும் சமர்ப்பிக்கப்படாவிட்டால் அந்தத் திருமணம் செல்லத்தக்கது என்று கருதப்படும், எல்லா நோக்கங்களுக்கும் அது செல்லத்தக்கதாக இருக்கும்.

36. திருமணத்தைக் கலைப்பது : (1) 35-வது பிரிவின் ஷரத்துக்களுக்கு உட்பட்டு, ஒரு திருமணத்தின் எந்தத் தரப்பாவது, ஒரு திருமணத்தை செல்லாததாக்கும் அல்லது செல்லுபடியாகாததாக்கும் எந்தக் காரணங்களின் பேரிலாவது, மாவட்ட நீதிமன்றத்தில் திருமணத்தைக் கலைப்பதற்கான மனு சமர்ப்பிக்கலாம்.

2) துணைப் பிரிவு (1)ல் கூறப்பட்டுள்ள எதுவும் கீழ் வரும் காரணங்களால் ஒரு நீதிமன்றம் ஆணை பிறப்பிப்பதற்கு அதற்கு அதிகாரமளிக்காது:-

i) இந்த சட்டத் தொகுப்பு அமலுக்கு வருவதற்கு முன்னர் செய்து கொள்ளப்பட்ட திருமணம், அந்தத் திருமணம் நடைபெற்ற சமயத்தில் பின்வரும் காரணங்களால் செல்லத்தக்கதாக இருந்தால்:-

அ) ஓர் ஆணின் முன்னாள் மனைவி, திருமணத்தின்போது வாழ்ந்து வந்தால், அல்லது

ஆ)திருமணத் தரப்புகள், 5-வது பிரிவின் (ஆ) ஷரத்தில் விளக்கியுள்ளபடி தடை செய்யப்பட்ட உறவுமுறையின் எல்லைகளுக்குள் இருந்தால்; ...

ii) செல்லத்தகாததாகும் ஒரு திருமணத்தின் விஷயத்தில், இந்த சட்டத் தொகுப்பு அமலுக்கு வருவதற்கு முன்னரோ அல்லது அமலுக்கு வந்ததற்குப் பின்னரோ, எந்தத் தரப்பாவது திருமணத்தின் போது ஒரு முட்டாளாகவோ அல்லது மனநிலை சரியில்லாதவராகவோ இருந்தால், அல்லது திருமணத்தின்போது எதிர்வாதி ஆண்மையற்றவராக இருந்தால், வழக்கு நடைமுறை தொடுக்கப்படுகின்றவரையிலும் கூட தொடர்ந்து அவ்வாறே இருந்தால் -திருமணம் நடைபெற்றதற்குப் பிறகு மூன்று ஆண்டுகளுக்குள்ளே இத்தகைய திருமணத்தை ரத்து செய்யும்படி மனு கொடுக்கப்பட வேண்டும்; அல்லது

iii) செல்லத்தகாததாகும் ஒரு திருமணம் சம்பந்தமாக, இந்த சட்டத் தொகுப்பு அமலுக்கு வருவதற்கு முன்னதாக, அல்லது அமலுக்கு வந்ததற்குப்பின் செய்து கொள்ளப்பட்ட திருமணமாக இருந்த போதிலும் - மனுதாரரின் சம்மதம் அல்லது மணமகன் அல்லது மணமகளின் கார்டியனின் சம்மதம் தேவையாயிருக்கும்போது, அத்தகைய கார்டியனின் சம்மதம் நிர்ப்பந்தம் மூலமாகவோ அல்லது மோசடியின் மூலமாகவோ பெறப்பட்டிருந்தால், அந்த நிர்ப்பந்தம் செல்லப்படுவது நின்றுபோய், அல்லது அந்த மோசடி கண்டு பிடிக்கப்பட்டதற்கு ஓராண்டுக்குள் திருமணக் கலைப்புக்கான மனு கொடுக்கப்பட்டிருந்தாலொழிய, அத்தகைய மனுவைப் பின்வரும் காரணத்தினால் நீதிமன்றம் நிராகரிக்க வேண்டும் (தள்ளுபடி செய்ய வேண்டும்):

அ) மனுதாரர், அவருடைய அல்லது அவளுடைய சுதந்திரமான சம்மதத்துடன் திருமணத்தின் மற்றைய தரப்புடன், நிர்ப்பந்தம் மேற்கொண்டு செயல்படாமல் போன பின்னர், அல்லது மோசடி கண்டு பிடிக்கப்பட்டதற்குப் பின்னர் - நிலைமைக்கு ஏற்ப கணவன் மனைவியாக வாழ்ந்து வந்துள்ளனர்.

(34)

30. திருமணத்தைக் கலைப்பதற்கான பிற காரணங்கள்

பாகம் IV பிரிவுகள் 29 - 30, பக்கம் 2

இந்த சட்டத் தொகுப்பு அமலுக்கு வருவதற்கு முன்னரோ, அல்லது அமலுக்கு வந்ததற்குப் பின்னரோ நடத்தப்பட்டுள்ள ஒரு திருமணம், பின்வரும் எந்தக் காரணத்தின் பேரிலாவது கலைக்கப்படலாம். அதாவது;

i) திருமணத்தின் எந்தத் தரப்பாவது, திருமண சமயத்தில் ஆண்மையற்றவராக இருந்தால், மற்றும் வழக்குத் தொடரப்படும் வரையிலும் அது நீடித்திருந்தால்,

ii) கணவர் வேறு ஒரு பெண்ணை வைப்பாட்டியாக வைத்துக் கொண்டிருந்தால், அல்லது மனைவி வேறு எந்த நபரின் வைப்பாட்டியாகி இருந்தால், அல்லது ஒரு விலைமாதின் வாழ்க்கையை நடத்திக் கொண்டிருந்தால்;

iii) திருமணத்தின் எந்தத் தரப்பாவது வேறு மதத்திற்கு மாறிச் சென்றதன் மூலம் இந்துவாக இல்லாமற் போய்விட்டால்,

iv) எந்தத் தரப்பாவது குணப்படுத்த முடியாதவாறு மனநிலை சரியில்லாதவராக இருந்து, மனுக் கொடுப்பதற்கு ஐந்தாண்டுகளுக்குக் குறைவில்லாத காலத்திற்குத் தொடர்ந்து சிகிச்சை பெற்று வந்தால்; மற்றும்,

v) எந்தத் தரப்பாவது கடுமையான, மற்றும் குணப்படுத்த முடியாத தொழுநோயால் பாதிக்கப்பட்டிருந்தால்.

38. திருமணம் கலைக்கப்படுவதற்கான வேறு காரணங்கள்: இந்த சட்டத் தொகுப்பு அமலுக்கு வருவதற்கு முன்னால் அல்லது அமலுக்கு வந்ததற்குப் பின்னால், நடத்தப்பட்டுள்ள திருமணத்தின் எந்தத் தரப்பும், பின்வரும் காரணங்களால் தமது திருமணம் கலைக்கப் பட வேண்டுமென்று கோரி மாவட்ட நீதிமன்றத்திற்கு மனுக் கொடுக்கலாம்:-

(புதிது)

அ) எதிர்வாதிக்கு எதிராக, நீதிமன்றம் மூலமாகப் பிரிந்து வாழ்வதற்கான ஓர் ஆணை அல்லது உத்தரவு வெளியிடப்பட்ட பின்னர், இரண்டு ஆண்டுகள், அல்லது அதற்கு மேற்பட்ட காலத்திற்கு மண வாழ்க்கையில் உடலுறவு கொள்ளாதிருத்தல்; அல்லது,

ஆ) மண வாழ்க்கை உறவுகளை மீட்டெடுப்பதற்கான ஓர் ஆணையை இரண்டு ஆண்டுகள் அல்லது அதற்கு மேற்பட்ட காலத்திற்குக் கடைப்பிடிப்பதற்கு எதிர்வாதி தவறியிருத்தல்.

35. திருமணக் கலைப்புக்கு மனுச் செய்து கொள்வதற்குத் தகுதியுடைய நபர்கள்: 1)இந்த சட்டத் தொகுப்பு அமலுக்கு வருவதற்கு முன்னால் அல்லது அமலுக்கு வந்ததற்குப் பின்னர் செய்து கொள்ளப்பட்ட திருமணமாக இருந்தாலும் சரி, அது செல்லுபடியாகாத திருமணம் என்ற காரணத்தினால் தவறானதாக இருந்தால், பின்வரும் முறைகளில் அதற்கு எதிரான மனுவை நீதிமன்றம் அனுமதிக்கலாம். அதாவது;

i) திருமணத்தின் எந்தத் தரப்பாவது திருமணக் கலைப்புக்காக சமர்ப்பிக்கும் மனுவின் பேரில்; அல்லது,

ii) பாதிக்கப்பட்ட எந்த நபராவது, அல்லது இந்தத் திருமணத்தில் அக்கறை உடைய எந்த நபராவது எந்த வழக்கிலாவது எழுப்பப்படும் ஒரு பிரச்சினையின் பேரில்.

2) இந்த சட்டத் தொகுப்பு அமலுக்கு வருவதற்கு முன்னரோ அல்லது அமலுக்கு வந்ததற்குப் பின்னரோ செய்து கொள்ளப் பட்ட எந்தத் திருமணமாவது, அது செல்லுபடியாகாத திருமணம் என்ற காரணத்தினால் தவறானதாக இருந்தால், திருமணத்தின் எந்த ஒரு தரப்பின் வேண்டுகோளின் பேரில் அல்லாது, அத்தகைய முறையீடு எதையும் நீதிமன்றம் அனுமதிக்கக் கூடாது.

ஆனால், அதே சமயத்தில், நிவாரணம் பெறும் நோக்கத்திற்காக, எந்தத் தரப்பும் மற்றைய தரப்பின் குறைபாடு (தவறு) அல்லது இயலாமையைப் பயன்படுத்திக் கொள்வதற்குத் தகுதியுடையவரல்ல.

(38)

50. மீண்டும் திருமணம் செய்துகொள்வதற்குத் தரப்புகளுக்கு சுதந்திரம் : ஒருமாவட்ட நீதிபதி, திருமணத்தைக் கலைப்பதற்காக வெளியிட்ட ஆணையை ஊர்ஜிதம் செய்து உயர் நீதிமன்ற உத்தரவு வெளியிட்ட தேதியிலிருந்து ஆறு மாதங்கள் முடிவடைந்த பிறகு,

அல்லது, ஒரு திருமணத்தைக் கலைக்கும் ஆணையை ஓர் உயர்நீதிமன்றம் வெளியிட்டதற்குப் பின்னால் ஆறு மாதங்கள் முடிவடைந்தபோது, அத்தகைய ஆணைக்கு எதிராக மேல் முறையீடு எதுவும் செய்யப்படாதபோது, **(புதிது)**

அல்லது, அத்தகைய மேல் முறையீடு எதுவும் தள்ளுபடி செய்யப்பட்டிருந்தால், அல்லது, அத்தகைய மேல் முறையீட்டின் விளைவாக, எந்தத் திருமணமாவது கலைக்கப்பட்டிருந்தால், திருமணத்தின் சம்பந்தப்பட்ட தரப்புகள், முந்திய திருமணம் மரணத்தினால் கலைக்கப்பட்டது போன்று, மீண்டும் திருமணம் செய்து கொள்வது சட்டப்படியானதேயாகும்.

(39)

37. திருமணத்தை செல்லாது என்று அறிவிப்பதன் விளைவு : (1) செல்லத்தக்கதல்ல என்ற காரணத்தின் பேரில் ஒரு திருமணம் கலைக்கப்பட்டதாக அறிவிக்கும் பொழுது, அல்லது, ஒரு திருமணம் செல்லத்தக்கதல்ல என்று அறிவிக்கப்படும் நிலைமையில், அந்தத் திருமணம் செல்லுபடியாகாது என்று கருதப்படுகிறது. அந்தத் திருமணத்தின் வாயிலாகப் பெறப்பட்ட குழந்தைகள் சட்டப்படியானவையல்ல என்று கருதப்படுவார்கள், எப்பொழுதும் அவ்வாறே கருதப் படுவார்கள்.

ஆனால் அதே சமயத்தில், ஒரு முன்னாள் கணவர் அல்லது மனைவி வாழ்ந்து வருகிறார் என்ற காரணத்தின் பேரில் ஒரு திருமணம் கலைக்கப்படுகிறது அல்லது செல்லத்தக்கதல்ல என்று அறிவிக்கப்படும் நிலைமையில், மேலும், அதைத் தொடர்ந்த திருமணம் நல்ல எண்ணத்துடன் புரியப்பட்டது, அதன் தரப்புகளில் ஒருவரோ அல்லது இருவருமோ முன்னாள் கணவர் அல்லது மனைவி இறந்துவிட்டதாகப் பூரணமாக நம்பிய நிலையில், மேற்படி ஆணை வெளியிடப்படுவதற்கு முன்னால் பெறப்பட்ட குழந்தைகள் அந்த ஆணையில் குறிப்பிட்டுக் கூறப்பட வேண்டும். எல்லா அம்சங்களிலும், அவர்களது பெற்றோர்களின் சட்டப்பூர்வமான குழந்தைகள் என்று கருதப்படவேண்டும், எப்பொழுதும் அவ்வாறே இருந்தார்கள் என்று கருதப்பட வேண்டும்.

2) பிரிவு 29 மற்றும் 30-ல் குறிப்பிடப்பட்டுள்ள எந்தக் காரணத்தின் பேரிலாவது ஒரு திருமணம் கலைக்கப்படும் நிலைமையில், அந்தத் திருமணத்தின் வாயிலாகப் பெறப்பட்ட குழந்தைகள் எல்லா அம்சங்களிலும் அவர்களது பெற்றோர்களின் சட்டப்படியான குழந்தைகள் என்று கருதப்படுவார்கள், எப்போதும்அவ்வாறே இருந்ததாகக் கருதப்படுவார்கள், மற்றும் அவர்களின் பெயர்கள் அந்த ஆணையில் குறிப்பிடப்பட வேண்டும்.

பாகம் IV
பிரிவு 29(1)
பக்கம் 21

(40)

அதிகார எல்லை வரம்பும் நடைமுறையும்

39. இந்த பாகத்தின் கீழ் நிவாரணம் வழங்குவதற்கான அதிகார எல்லை வரம்பு :-

இந்த பாகத்தில் அடங்கியுள்ள எதுவும் எந்த நீதிமன்றத்திற்கும் பின்வருவனவற்றைச் செய்வதற்கு அதிகாரம் அளிக்காது:- அவை யாவன:

புதிது

அ) திருமணத்தைக் கலைப்பதற்கான ஆணைகளைப் பிறப்பிப்பதற்கு-

i) செல்லுபடியாகாத ஒரு திருமணத்தின் விஷயத்தில், 2)-வது ஷரத்து அல்லது 10-வது பிரிவின் (2) வது ஷரத்தின் விதிகளை மீறுகின்ற செல்லத்தகாததாகும் ஒரு திருமணத்தின் விஷயத்தில், அல்லது திருமணத்தின் சமயத்தில் திருமணத்தின் எந்தத் தரப்பாவது ஆண்மையற்று இருந்தால், வழக்குத் தொடுக்கப்படும் வரையிலும் தொடர்ந்து அவ்வாறே இருந்தால், அந்தத் திருமணம் ஒரு மாகாணத்தில் நடத்தப்பட்டு இருந்து, மனு கொடுக்கும் சமயத்தில் மனுதாரர் அந்த மாகாணத்திலேயே வாழ்ந்துகொண்டிருப்பவராக இருந்தால் அல்லாது அது தவிர்க்கப்பட முடியும். அல்லது,

ii) செல்லத்தகாததாகும் ஒரு திருமணத்தின் விஷயத்தில், இந்தப் பிரிவின் (அ) ஷரத்தின் (i) துணை ஷரத்திற்குள் அடங்காத திருமணத்தின் விஷயத்தில், திருமணத்தின் தரப்புகள், திருமணத்தைக் கலைப்பதற்கான மனுக் கொடுக்கும் போது ஒரு மாகாணத்தில் வந்து குடியேறியவர்களாக இருந்தால் அன்றி, அல்லது

ஆ) இந்த பாகத்தின் கீழ் திருமணத்தைக் கலைப்பதற்கான ஆணை அல்லது எந்த நிவாரணமாவது வழங்கப்படுவதற்கு மனுக் கொடுக்கும் சமயத்தில் மனுதாரர் ஒரு மாகாணத்தில் வசித்துக் கொண்டிருப்பவராக இருந்தால் அல்லாது.

(41)

40. எந்த நீதிமன்றத்திற்கு மனு செய்ய வேண்டும்: *இந்தப் பகுதியின்கீழ் எந்த மனுவையும் கணவன் மனைவி இருவரும் சேர்ந்து வாழும் இடம், அல்லது கடைசியாக அவர்கள் சேர்ந்து வாழ்ந்த இடம் ஆகியவற்றின் எல்லைக்குட்பட்ட மாவட்ட நீதிமன்றத்திற்குச் சமர்ப்பிக்க வேண்டும்.* ***பிரிவு 3(2) தனிப்பிரிவு சட்டம்.***

48. தனி அறையில் இரகசியமாக வழக்கு விசாரிக்கப்படலாம்: *நீதிமன்றம் கருதினாலோ, அல்லது வழக்கிற்கு சம்மந்தப்பட்டவர்கள் விரும்பினாலோ, வழக்கை இரகசியமாக தனி அறையில் நடத்தலாம்.*

(42)

41. மனுக்களின் உள்ளடக்கங்களும் சான்றாதாரங்களும் :- *1) இந்தப் பிரிவின்படி போடப்படும் எந்த மனுவிலும் எந்த அடிப்படையில் நிவாரணம் கோருகிறார்கள் என்பதை தெளிவாகவும் விளக்கமாகவும், சொல்ல வேண்டும். திருமணத்தை ரத்து செய்யக்கோரும் மனுவாகவோ அல்லது தீர்ப்புவழி பிரிந்து வாழும் மனுவாகவோ இருந்தால் இது விஷயத்தில் கணவன் மனைவியருக்கிடையே எந்தவிதமாகன கூட்டுச் சதியும் இல்லை என்று உறுதி கூற வேண்டும்.* ***பிரிவு 10 தனிப்பிரிவு சட்டம்.***

2) இந்த மனுவில் கூறியவை யாவும் மனுதாரரினாலோ அல்லது தகுதி பெற்ற வேறு யாராலோ உண்மை என உறுதி செய்யப்பட வேண்டும். அவை நீதிமன்ற விசாரணையின்போது சாட்சியமாக ஏற்றுக்கொள்ளத் தக்கவையாக இருக்க வேண்டும்.

(43)

42. சிவில் நடைமுறைச் சட்டத்தை அமுல் படுத்துவது: *இந்தப் பகுதியில் சொல்லப்பட்டுள்ள இதர விதிமுறைகளுக்கு உட்பட்டு, இந்தப் பகுதியின் கீழ், ஒருதரப்புக்கும் இன்னொரு தரப்புக்கும் இடையே நடைபெறும் எல்லாவிதமான சட்ட நடவடிக்கைகளும், சிவில் நடைமுறை சட்டம் 1908 (V 1908) படி முறைப் படுத்தப்படும்.* ***பிரிவு 15 தனிப்பிரிவு சட்டம்.***

(44)

(45)

43. நீதிமன்ற நடவடிக்கைகள் குறித்த தீர்ப்பாணை:- இந்தப் பகுதியின் கீழ் போடப்பட்ட எந்த மனுவும் அதை எதிர்த்து வழக்காடப்பட்டாலும் அல்லது வழக்காடப்படா விட்டாலும் நீதிமன்றம் திருப்தி அடைந்தால், நிவாரணம் கொடுப்பதற்கு அடிப்படை இருக்கும்போது நிவாரணம் கொடுக்கலாம். இந்த மனுதாரரும் எதிர்மனுதாரரும் சேர்ந்து வஞ்சகமாக உடன்பாடு செய்து கொள்ளவில்லை என்பதை உறுதி செய்துகொள்ளவேண்டும். அதே முறையில் பிறர் மனை புணர்தல் என்ற குற்றச்சாட்டு இருந்தால் அதை ஏற்றுக் கொள்ளவோ அல்லது மன்னிக்கப்படவோ இல்லை என்பதை உறுதி செய்ய வேண்டும்.

45. வழக்கு நிலுவையிலிருக்கும்போது கொடுக்கப்படும் ஜீவனாம்சம்:-இந்தப் பிரிவின்கீழ் போடப்படும் எந்த மனுவிலும் மனைவிக்கு தனிப்பட்ட முறையில் எந்த வருமானமும் இல்லாத சூழ்நிலையில், தன்னைக் காப்பாற்றிக்கொள்ளவோ அல்லது, நீதிமன்ற நடவடிக்கையை நடத்துவதற்கோ, மனைவி போடும் மனுவை பரிசீலித்து மனைவிக்கு இந்த நீதிமன்ற நடவடிக்கை முடியும்வரை, அதை நடத்துவதற்கான பணமும், மாதாந்திர ஜீவனாம்சமும் கணவனுடைய நிகர வருமானத்தில் 1/5-க்கு மேற்படாமல் அளிக்கும்படி நீதிமன்றம் உத்திரவிடலாம்.

பிரிவு 6 பம்பாய்ச் சட்டம்

(46)

46. நிரந்தர ஜீவனாம்சப் பணம்:- (1) இந்தப் பிரிவின் கீழ் அதிகாரம் செலுத்தும் எந்த நீதிமன்றமும் தீர்ப்பாணை வழங்கும்போதோ அல்லது அதற்கு பிறகோ, அதற்கேற்ற மனு மனைவியினால் போடப்பட்டால், மனைவி நன்நடத்தை உள்ளவராகவும், மீண்டும் திருமணம் செய்து கொள்ளாதவராகவும் இருந்தால், கணவனுடைய சொத்தை ஜீவனாம்சப் பணத்திற்குப் பிணையாக வைத்து உத்திரவிட முடியும். இம்மாதிரி பிணையாக வைத்து உத்திரவிடும்போது ஒரு குறிப்பிட்ட தொகையை பிணையாக வைத்தோ, அல்லது மாதாந்திரம் குறிப்பிட்ட பணம் இவ்வளவு என்று சொல்லியோ உத்திரவிட முடியும். மனைவி உயிரோடிருக்கும்வரை ஜீவனாம்சப் பணம் பெற உத்திரவிட முடியும். இம்மாதிரி உத்திரவிடும்போது கணவன் மனைவி ஆகியோருடைய நன்நடத்தையை கருத்தில் கொள்ள வேண்டும்.

பிரிவு 6 பம்பாய்ச் சட்டம்

2) உட்பிரிவு (1)ன் கீழ் போடப்பட்ட உத்திரவிற்கு பிறகு நிலைமை மாறிவிட்டால், எந்த நபரும் அதற்கான மனு போட்டால் அதை விசாரித்து மாறியுள்ள சூழ்நிலைக்கேற்ப முதலில் போட்ட உத்திரவை மாற்றி அமைத்தோ அல்லது முழுமையாக ரத்து செய்தோ உத்திரவிட முடியும். மாறியுள்ள நிலைமைகளை நன்கு கவனித்து எது சரியோ அந்த உத்திரவை நீதிமன்றம் அளிக்கலாம்.

3) உட்பிரிவு (1) அல்லது (2) ஆகியவற்றின்கீழ் மனைவிக்கு சாதகமாக போடப்பட்ட உத்திரவை மனைவி மறுமுறை திருமணம் செய்து கொண்டாலோ, அல்லது நன்நடத்தை இல்லாமல் இருந்தாலோ ரத்து செய்ய முடியும்.

(47)

47. குழந்தைகள் பாதுகாப்பு: இந்தப் பகுதியின் கீழ் நடைபெறும் எந்த நீதிமன்ற நடவடிக்கையிலும் அவ்வப்போது நிலைமைக்கேற்றவாறு குழந்தைகளுடைய பாதுகாப்பு, அவர்களுடைய பராமரிப்பு, கல்வி ஆகியவற்றிற்காக நீதிமன்றம் தகுந்த உத்திரவை போடலாம். அம்மாதிரி உத்திரவு போடும்போது குழந்தைகளின் விருப்பத்தையும் கருத்தில் கொள்ள வேண்டும். **பிரிவு 15 பம்பாய்ச் சட்டம்**

இந்த நீதிமன்ற நடவடிக்கையில் தீர்ப்பாணை வழங்கியபிறகோ அல்லது அது நிலுவையிலிருக்கும் போதோ, போடப்பட்டு இடைக்கால உத்திரவை, நிலைமைக் கேற்றவாறு குழந்தைகளுடைய பாதுகாப்பு, அவர்களுடைய பராமரிப்பு கல்வி ஆகியவற்றிற்காக நீதிமன்றம் அவ்வப்போதுள்ள நிலைமைக்கேற்ப தகுந்த உத்திரவை போடலாம்.

(48)

(49)

49. தீர்ப்பாணை மற்றும் உத்திரவுகளை அமுல்படுத்துவதும், அதற்கான மேல் முறையீடும்: *எல்லாவிதமான தீர்ப்பாணைகளும் மற்றும் உத்திரவுகளும் அசல் சிவில் நீதிமன்ற அதிகாரத்துக்கு உட்பட்ட உத்திரவுகளைப் போல அமுல் படுத்தப்படும். அவ்வப்போது உள்ள விதிமுறைகளுக்கேற்ப மேல்முறையீடும் செய்யலாம்.* **(புதிது)**

அ) ஆனால் மாவட்ட நீதிமன்றமளித்த திருமண ரத்து தீர்ப்பாணைக்கு எதிராகவோ அல்லது, அந்த உத்திரவை ரத்து செய்தோ அல்லது உறுதி செய்தோ, உயர் நீதி மன்றம் போட்ட உத்திரவிற்கெதிராகவோ மேல் முறையீடு செய்ய முடியாது. **(புதிது)**

ஆ) செலவுத் தொகைக்காக மட்டும் மேல்முறையீடு செய்ய முடியாது.

(50)

27. முன்பு நடைபெற்ற திருமணங்களுக்குப் பாது காப்பு: இந்தத் தொகுப்பு அமுலுக்கு வருவதற்கு முன்பு இந்துக்களுக்கிடையே நடந்த திருமணம் செல்லத்தக்க தாக இருந்தால், அந்த இருவரும், ஒரே **கோத்திரத்தை** சேர்ந்தவர்கள் என்ற காரணத்திற்காகவோ, அல்லது, வெவ்வேறு ஜாதிகளைச் சேர்ந்தவர்கள் என்பதற்காகவோ, ஒரே ஜாதியின் உட்பிரிவுகளை சேர்ந்தவர்கள் என்பதற் காகவோ அத்திருமணம் செல்லத்தகாதது என்ற நிலை உருவாகாது.

பகுதி IV
பிரிவு 3
பக்கம் 15
(விளக்கம்)

51. பாதுகாப்புகள் (1) இந்தத் தொகுப்பு வருவதற்கு முன்போ பின்போ செய்யப்பட்ட புனித வினைமு மறைத் திருமணத்தை ரத்து செய்ய மதராஸ் மருமக்கதாய சட்டம் - 1932-ல் (மதராஸ் சட்டம் XXII - 1932) சொல்லிப்பட் டுள்ள உரிமைகளை இந்தப் பகுதியில் சொல்லப்பட் டுள்ள எதுவும் கட்டுப்படுத்தாது.

பகுதி IV
பிரிவு 34,
பக்கம் 22
பிரிவு 17
பம்பாய்
சட்டப்
பிரிவு

2) இந்தத் தொகுப்பு அமுலுக்கு வருவதற்கு முன்பு நிலுவையிலுள்ள வழக்கில் ரத்து செய்யக்கோரும் மனு, இல்லா நிலையது திருமணம் மனுவாகவோ அல்லது தீர்ப்பு வழி பிரிவுரைக்கான மனுவாகவோ இருந்தால் இதில் எதுவாக இருந்தாலும் அப்போதுள்ள விதிமுறை களின்படி தீர்ப்பாணை வழங்கப்படும். இந்தத் தீர்ப்பாணை வழங்குவதற்கு முன்பாகவே, இந்தத் தொகுப்பு அமுலுக்கு வந்துவிட்டாலும், அது அமுலுக்கு வராததாகக் கருதி தீர்ப்பாணை வழங்கப்படும்.

பகுதி III - தத்து எடுத்தல்

பாகம் 1

தத்து எடுத்தல் - பொது

52. (1) இந்தப் பகுதிக்கு எதிராகத் தத்து எடுத்தல் தடுக்கப்பட்டுள்ளது. இந்தத் தொகுப்பு அமுலுக்கு வந்த பிறகு ஓர் இந்து ஆண் தத்து எடுக்கும்போது இந்தப் பகுதியில் சொல்லப்பட்டுள்ள விதிமுறைகளின்படி தான் எடுக்க வேண்டும்.

பகுதி VI
பிரிவு 1, 17, 27
பக்கம் 24, 27, 28

2) பிரிவு 66 உட்பிரிவு (2)-ல் சொல்லப்பட்டவைக்குட்பட்டு, இந்தப் பகுதியில் சொல்லப்பட்டவைக்கு எதிராக, தத்து எடுத்தால் அது செல்லாது.

3) சட்டப்படி சரியில்லாத தத்து எடுப்பு தத்து எடுக்கும் குடும்பத்தில், தத்து எடுத்தவர் எந்த உரிமையும் கோர முடியாது. அதே முறையில் அவர் பிறந்த குடும்பத்தில் அவருக்குள்ள உரிமை எதுவும் பாதிக்கப்படாது.

(56)

53. **சட்ட ரீதியான தத்து எடுப்பதற்கான அடிப்படைத் தேவைகள்:** கீழ்க்காணும் சூழ்நிலைகளை திருப்தி செய்தால் தவிர எந்தத் தத்து எடுப்பும் செல்லாது.

பகுதி VI
பிரிவு 4
பக்கம் 24

i) தத்து எடுப்பவர் அதற்கான தகுதியையும் உரிமையையும் பெற்றிருக்க வேண்டும்;

ii) தத்து கொடுப்பவர் அதற்கான தகுதியை பெற்றிருக்க வேண்டும்;

iii) தத்து எடுத்துக் கொள்ளப்பட்டவர் அதற்கான தகுதியை பெற்றிருக்க வேண்டும்;

iv) தத்து எடுப்பதும் கொடுப்பதும் நேரடியாக நடைபெற்றால் தான் அது முழுமை பெறும்;

v)) இந்தப் பகுதியில் சொல்லப்பட்டுள்ள மற்ற நிபந்தனைகளைப் பூர்த்தி செய்ய வேண்டும்.

தத்து எடுப்பதற்கான தகுதிகள்

54. ஓர் இந்து ஆணுக்கு தத்து எடுப்பதற்கான தகுதிகள்: *18 வயது முடிந்து நல்ல மன நிலையிலுள்ள எந்த இந்து ஆணும் தத்து எடுத்துக் கொள்ளும் தகுதியுடையவர் ஆவார். தத்து எடுத்துக் கொள்ளும் ஓர் ஆணுக்கு மனைவி உயிருடன் இருந்தால் அவளுடைய ஒப்புதல் இல்லாமல் தத்து எடுக்கக்கூடாது. ஒன்றுக்கு மேற்பட்ட மனைவியர் இருந்தால் ஒரு மனைவியிடம் ஒப்புதல் பெற வேண்டும். ஒப்புதல் கொடுப்பதற்கான தகுதி யாருக்கும் இல்லை என்றால், அம்மாதிரி ஒப்புதல் பெற வேண்டியதில்லை.*

பகுதி VI
பிரிவு 5(1)
பக்கம் 24

விளக்கம்:- மனைவிக்கு 18-வயது முடியாமல் இருந்தால் அல்லது மன நிலை பாதிக்கப்பட்டவராக இருந்தால் அவருக்கு அந்தத் தகுதி இல்லை.

(58)

55. விதவையின் தத்து எடுக்கும் தகுதி: (1) கீழ்க் காணும் நிபந்தனைகளுக்குட்பட்டு ஓர் இந்து விதவை 18-வயது முடிந்து, நல்ல மன நிலையுடன் இருந்தால் தன்னுடைய கணவனுக்காக ஒரு மகனை தத்து எடுக்க முடியும்.

பகுதி VI
பிரிவு 5(2)
பக்கம் 24

அ) நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ அவருடைய கணவனால் தத்து எடுக்க தடை செய்யப்படாமல் இருக்க வேண்டும்.

ஆ) தத்து எடுக்கும் அவளுடைய அதிகாரம் முடிவிற்கு வராமல் இருக்க வேண்டும்.

2) உட்பிரிவு 1-ல் சொல்லப்பட்டுள்ள எதுவும் 18-வயது முடியாத ஓர் இந்து விதவை தன் கணவனுக்காக ஒரு மகனை தத்து எடுத்துக் கொள்வதற்கு அவளுக்குள்ள அதிகாரத்தை தடுக்க முடியாது. இப்பகுதியில் சொல்லியுள்ளபடி அந்த அதிகாரம் அளிக்கப்பட்டு இருக்க வேண்டும்.

(59)

56. தத்து எடுப்பதற்கான அதிகாரம் மற்றும் தடை: 1) மேலே சொல்லப்பட்டுள்ள விதிமுறைகளுக்குட்பட்டு ஒரு மகனை தத்து எடுக்கும் அதிகாரம் பெற்றுள்ள ஓர் இந்து ஆண், அதே முறையில் ஒரு மகனை தத்து எடுத்துக் கொள்ள தன்னுடைய மனைவிக்கு அதிகாரம் அளிக்கலாம், தத்து எடுக்கக் கூடாது என்ற தடையும் விதிக்கலாம்.

பகுதி VI
பிரிவு 6
பக்கம் 24

2) ஒன்றுக்கு மேற்பட்ட மனைவிகள் இருந்தால் அதில் ஒருவருக்கோ அல்லது எல்லோருக்குமோ, தத்து எடுக்கும் உரிமையை அளிக்கலாம். அதேமுறையில் தடையும் விதிக்கலாம்.

3) ஓர் இந்து ஒன்றுக்கு மேற்பட்ட விதவைகளை விட்டுச் சென்றால், குறிப்பிட்ட ஒரு நபருக்கோ, அல்லது சிலருக்கோ, ஒரு மகனை தத்து எடுக்கும் அதிகாரமோ அல்லது தடையோ விதித்திருந்தால், அவர் குறிப்பிடப்படாத விதவைகளுக்கு அதிகாரம் இல்லை என்று கருத வேண்டும்.

(60)

பகுதி VI
பிரிவு 7
பக்கம் 24

57. தத்தெடுப்பதற்கான அதிகாரம், தடை மற்றும் ரத்து ஆகியவை குறித்துள்ள முறைகள்:-
1) தத்து எடுக்கும் அதிகாரத்தையோ அல்லது தத்து எடுக்கக்கூடாது என்ற தடையையோ சட்ட ரீதியாக அளிக்க பதிவுச் சட்டம் 1908 - XVI - 1908)-ன் படி தகுந்த ஆவணத்தின் மூலமாக பதிவு செய்ய வேண்டும். அல்லது இந்திய வாரிசுரிமை சட்டம் 1925 (XXXIX 1925) பிரிவு 63-ன்படி உயில் எழுதப் பட்டிருக்க வேண்டும்.

2) தத்து எடுக்கும் அதிகாரமோ அல்லது தடையோ ஏற்கனவே வழங்கப்பட்டிருந்தால், தகுந்த ஆவணங்கள் மூலம் அல்லது உயில் மூலம் அதை ரத்து செய்து விடலாம்.

3) உயில் மூலமாகத் தத்து எடுக்கும் அதிகாரமோ அல்லது தடையோ விதிக்கப்பட்டிருந்தால், இந்திய வாரிசுரிமைச் சட்டம் 1925 (XXXIX 1925) அட்டவணை III பிரிவு 70-ல் கூறியுள்ளபடி அதை ரத்து செய்யலாம்.

(61)

58. இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட விதவைகளுக்கு உள்ள தத்து எடுக்கும் உரிமை: ஓர் இந்து ஆண் ஒன்றுக்கு மேற்பட்ட விதவைகளை விட்டுவிட்டு இறந்துவிட்டால், அவர்களுக்கு தத்து எடுக்கும் தகுதி இருந்தால், தன் கணவனுக்கு ஒரு மகனை தத்து எடுக்க கீழே சொல்லப்பட்டுள்ள முறைகளின்படி தத்து எடுக்க வேண்டும்.

பகுதி VI
பிரிவு 8
பக்கம் 25

அ) அவர் விதவைகள் எல்லோருக்குமோ, அல்லது அதில் ஒருவருக்கோ தத்து எடுக்கும் உரிமையை கொடுத்திருந்தால், அதில் முன்னுரிமை அளிக்கப்பட்டிருந்தால், தத்து எடுக்கும் உரிமை அதில் சொல்லப்பட்டுள்ள முறையில் நடைபெற வேண்டும்.

ஆ) அவர் அந்த முறையில் முன்னுரிமை எதுவும் அளிக்காதபோது, பிரிவு 59ல் சொல்லியுள்ள வரிசைப்படி தத்து எடுக்கும் உரிமையைப் பின்பற்ற வேண்டும்.

இ) அவர் அனுமதி வழங்காவிட்டாலோ, அல்லது தடை விதித்திருந்தாலோ, பிரிவு 59-ல் சொல்லப்பட்டுள்ள வரிசை முறையைப் பின்பற்றி தத்து எடுக்க வேண்டும்.

ஈ) உட்பிரிவு (ஆ) மற்றும் (இ)யின்படி தத்து எடுக்கும் உரிமை பெற்ற விதவை, தன்னுடைய உரிமையை தனக்கு அடுத்தவருக்கு வழங்கலாம். அவ்வாறு வழங்க பதிவு செய்வதன் மூலம் ஆவணத்தை எழுத வேண்டும். அவர் அவ்வாறு எழுதாவிட்டாலோ அல்லது ஒரு நியாயமான காலத்திற்குள் தத்து எடுக்காவிட்டாலோ அவருடைய உரிமை அடுத்தடுத்த விதவைகளுக்கு வந்து கடைசியாக உள்ள விதவைக்கு வந்து சேரும்.

(62)

59. மனைவிகள் மற்றும் விதவைகளுக்கிடையே உள்ள முந்துரிமை தகுதி :- இந்தப் பகுதிக்காக, முந்துரிமை முறை ஒருவரை அவர்கள் திருமணம் செய்துகொண்ட தேதியை வைத்து நிர்ணயிக்கப்படும். முதலில் திருமணம் செய்துகொண்டவரை மூத்தவர் என்றும் அதற்கு அடுத்ததாக மற்றவர்களையும் கணக்கிடுவார்கள்.

பகுதி VI
பிரிவு 9
பக்கம் 25

(63)

60. விதவையினுடைய தத்து எடுக்கும் உரிமை முன்னர் தத்து எடுத்த காரணத்தினால் மறைந்துவிடாது:- இந்தப் பகுதியில் சொல்லப்பட்டவைகளுக்கு உட்பட்டு, ஒரு விதவைக்கு கொடுக்கப்பட்ட அதிகாரத்தில் கணவன் வேறுவகையாக சொல்லியிருந்தால் தவிர பல புதல்வர்களை ஒருவனுக்குப் பின் ஒருவனாக அவர்கள் இறந்த பிறகு தத்து எடுத்துக் கொள்ளலாம்.

பகுதி VI
பிரிவு 10
பக்கம் 25

(64)

61. விதவையின் உரிமைக்கு முடிவு : 1) ஒரு விதவையின் தத்து எடுக்கும் உரிமை கீழ்க்காணும் காரணங்களினால் முடிவுக்கு வரும் :- **பகுதி V பிரிவு 10 பக்கம் 25**

அ) அவள் மறுமணம் செய்துகொண்டால் அல்லது,

ஆ) அவள் கணவனின் இந்து மகன், ஓர் இந்து மகனையோ, விதவையையோ, அல்லது மகனின் விதவையையோ விட்டுவிட்டு இறந்துவிட்டால் அல்லது,

இ) அவள் இந்துவாக தொடர்ந்து நீடிக்காவிட்டால்,

விளக்கம் :- இந்த உட்பிரிவில் மகன் என்றால் மகன் மகனின் மகன், மகனின் மகனின் மகன், சட்டரீதியாகப் பிறந்த மகனோ அல்லது தத்து எடுக்கப்பட்டவனோ.

2) விதவையின் தத்து எடுக்கும் உரிமை ஒருமுறை முடிவுக்கு வந்தால் மறுமுறை அது அவளுக்குக் கிடைக்காது.

(65)

62. தத்து கொடுக்க தகுதியுடையவர்கள் **பகுதி V பிரிவு 12 பக்கம் 25**

1) ஒரு பையனின் தந்தையோ அல்லது தாயோ மட்டும்தான் அவனை தத்து கொடுக்க உரிமை உடையவர்கள். வேறு யாருக்கும் அந்தத் தகுதி கிடையாது.

2) பிரிவு (3) உட்பிரிவு (ஆ) மற்றும் (இ) ஆகியவற்றில் கூறப்பட்டுள்ளவற்றுக்கு உட்பட்டு, தந்தை மட்டும்தான் தத்து கொடுக்க உரிமையுள்ளவர். தாய், தத்து கொடுக்க தகுதியுள்ளவராக இருந்தால், அவரின் ஒப்புதல் இல்லாமல் தத்து கொடுக்க முடியாது.

3) ஒரு தாய் தன் மகனை தத்து கொடுக்க-

அ) தந்தை உயிருடன் இருக்கக்கூடாது அல்லது

ஆ) பகுதி VII பிரிவு 110-ன் உட்பிரிவு (1)ல் சொல்லியுள்ளபடி அவர் முழுமையாகவும் இறுதியாகவும் உலகைத் துறந்திருக்க வேண்டும்.

இ) அவர் இந்துவாக தொடர்ந்து இல்லாவிட்டால்

ஈ) அவர் ஒப்புதல் கொடுக்கும் தகுதியை இழந்துவிட்டிருந்தால், தந்தை தாயை தத்து கொடுக்க தடை செய்து, அதற்கான ஆவணத்தை இந்திய பதிவுச்சட்டம் 1908 (XVII 1908) படி பதிவு செய்திருந்தால், அல்லது இந்திய வாரிசுரிமைச் சட்டம் 1925 (XXXIX - 1925) யில் சொல்லியுள்ளபடி உயில் எழுதியிருந்தால்.

4) ஒருமகனை தத்து கொடுக்கும் தந்தையும் தாயும் 18 வயது நிரம்பியவர்களாகவும், நல்ல மனநிலை உள்ளவர்களாகவும் இருக்க வேண்டும்.

விளக்கம் :- இந்தப் பிரிவுக்காக -

(i) ''தந்தை'', ''தாய்'' என்று சொல்லப்பட்டுள்ளது தத்து எடுத்த தந்தையையும், தாயையும் குறிக்காது.

(ii) தந்தையும், தாயும் 18 வயதிற்கு உட்பட்டவர்களாகவும், மனநிலை சரி இல்லாதவர்களாகவும் இருந்தால், அவர் தத்து கொடுக்கும் தகுதி இல்லாதவர்களாக கருதப்படுவார்கள்.

(66)

தத்து எடுத்துக் கொள்ளப்படுவதற்கான தகுதிகள்

63. யாரை தத்து எடுக்கலாம்: 1) எந்த ஒரு பெண்ணையும் ஓர் இந்து ஆணோ, பெண்ணோ தத்து எடுத்துக் கொள்ள கூடாது. பகுதி VI பிரிவு 3 பக்கம் 24

2) எந்தப் பையனையும் கீழ்க்காணும் நிபந்தனைகளை திருப்தி செய்தால் தவிர, தத்து எடுத்துக் கொள்ளக் கூடாது. பகுதி VI பிரிவு 13 பக்கம் 26

i) அவன் ஒரு இந்துவாக இருக்க வேண்டும்.

ii) அவன் திருமணமானவனாக இருக்கக்கூடாது.

iii) அவன் ஏற்கனவே தத்து எடுத்துக் கொள்ளப்பட்டவனாக இருக்கக் கூடாது.

iv) அவன் 15 வயது பூர்த்தியாகதவனாக இருக்கக்கூடாது.

(67)

64. சில நபர்கள் தத்து எடுத்துக் கொள்வதற்கு தகுதி இல்லாதவர்களாக இருப்பார்கள்:- சில சந்தேகங்களை நிவர்த்திக்க, கீழ்க்காணும் நபர்களை தத்து எடுக்க முடியாது என அறிவிக்கப்படுகிறது: பகுதி VI பிரிவு 14 பக்கம் 16

i) மூத்த மகன் அல்லது தந்தையின் ஒரே மகன்

ii) ஒரு தாயின் மகன், அவனை தத்து எடுக்கும் தந்தை சட்ட ரீதியாக அந்தத் தாயைத் திருமணம் செய்து கொள்ள முடியாத நிலை, குறிப்பாக தன் மகளின் மகன், சகோதரியின் மகன், அல்லது தாயின் சகோதரியின் மகன்; மேலும்

iii) தத்து எடுக்கும் தந்தைக்கு நெருங்கிய உறவினர் இருக்கும் போது, அதைவிட்டு ஒரு புதியவரை தத்து எடுப்பது.

(68)

அவசியமான சடங்குகள்

65. தத்து எடுப்பதின் முழுமை: தத்து எடுக்கும் சடங்கின் போது தத்து கொடுக்கும் பெற்றோர், தத்து எடுக்கும் பெற்றோரிடம் மகனை ஒப்படைக்க வேண்டும்; அவர்கள் இல்லாத போது அவர்களால் அங்கீகரிக்கப்பட்டவர்கள் அங்கு இருக்க வேண்டும். இல்லை என்றால் அந்தத் தத்து எடுப்பு சட்டப்படி செல்லாது.

விளக்கம் :- தத்து ஹோமம் செய்யும் சடங்கு, தத்து எடுப்பது சட்ட ரீதியாக இருக்க அவசியமான சடங்கு அல்ல.

(69)

தத்து எடுக்க உள்ள மற்ற நிபந்தனைகள்

பகுதி VI
பிரிவு 15
பக்கம் 26

66. **மற்ற நிபந்தனைகள்:** (1) எல்லாத் தத்து எடுப்பு நடவடிக்கைகளிலும் கீழ்க்காணும் நிபந்தனைகள் நிறைவேற்றப்பட வேண்டும்:-

i) தத்து எடுக்கும்போது, தத்து எடுக்கும் தந்தைக்கு ஓர் இந்து மகன், மகனின் மகன், மகனின் மகனின் மகன், (இரத்த உறவு முறையிலோ, தத்து எடுத்த உறவு முறையிலோ) உயிருடன் இருக்கக் கூடாது.

விளக்கம் :- ஒரு பையன் தாயின் கருவில் இருக்கக்கூடும். பின்னர் உயிரோடு பிறக்கக்கூடும், எனினும் தத்து எடுக்கும் சமயத்தில் அவன் பிறக்கவில்லை என்றால் தத்தெடுக்கும் போது அந்த நோக்கத்திற்காக அவன் உயிரோடிருப்பவனாக கருதப்பட மாட்டான்.

ii) சேர்ந்தார் போல் ஒரே பையனை இரண்டு பேரோ அல்லது அதற்கு மேற்பட்டோரோ, ஒரே நேரத்தில் தத்து எடுக்கக் கூடாது. அதே முறையில் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட பையன்களை ஒரே நபர் ஒரே நேரத்தில் தத்து எடுக்கக்கூடாது.

iii) தத்து கொடுப்பவர், மற்றும் தத்து எடுப்பவர் இருவரும் மனமுவந்து ஒப்புதலுடன் இக்காரியத்தில் ஈடுபட வேண்டும்.

2) தத்து எடுக்க தத்து கொடுப்பவரிடமிருந்தோ, அல்லது தத்து எடுப்பவரிடமிருந்தோ கட்டாயப்படுத்தல், தகா நிலை வற்புறுத்தல் ஏமாற்று, பொய்யாகத் திரித்திக் கூறுதல், அல்லது தவறான முறை ஆகிய எவற்றினாலும் ஒப்புதலைப் பெற்றாலும் இக்காரியத்தில் ஈடுபட்ட எவரும் தத்து எடுத்தது செல்லாது என்று வழக்குப் போடலாம்.

கீழ்க்காணும் காரணங்களுக்காக அந்த வழக்கை நீதிமன்றம் தள்ளுபடி செய்யலாம்:-

அ) கட்டாயப்படுத்தல், மற்றும் தகாநிலை வற்புறுத்தல் நடந்து இரண்டாண்டுகள் முடிந்து விட்டாலோ, அல்லது பொய்யாக திரித்து கூறுவது, அல்லது ஏமாற்றுவது ஆகியவை நடந்து இரண்டாண்டுகள் முடிந்து விட்டாலோ,

ஆ) ஒரு நபரின் ஒப்புதலை கட்டாயப்படுத்தியோ, தகாநிலை வற்புறுத்தியோ, ஏமாற்றியோ, பொய்யாக திரித்திக் கூறியோ பெற்றால், அந்த நபர் தன்னுடைய ஒப்புதலை உறுதி செய்தால் அது யாருடைய உரிமையையும் பாதிக்காது.

3) உட்பிரிவு (2) பிரிவு (அ)-ன் படி குறிப்பிட்ட காலத்திற்குள் வழக்கு போடாவிட்டால் அல்லது உட்பிரிவு (2) பிரிவு (ஆ)-படி தத்து எடுத்தல் உறுதி செய்யப்பட்டால் அது சட்ட ரீதியான தத்து என்று கருதப்பட்டு, தத்து எடுத்த தேதியிலிருந்து எல்லாக் காரணங்களுக்காகவும், அது அமுலுக்கு வந்ததாகக் கருதப்படும்.

(70)

பாகம் II

தத்து எடுப்பதன் விளைவுகள்

67. தத்து எடுப்பதன் விளைவுகள்: தத்து எடுக்கப்பட்ட மகன், எல்லாக் காரணங்களுக்காகவும் தத்து எடுத்தத் தேதியிலிருந்து தத்து எடுக்கப்பட்டவருக்கு மகனாகக் கருதப்படுவான். அந்தத் தேதியிலிருந்து அவன் பிறந்த குடும்பத்தில் உள்ள அத்தனை உறவுகளும் அவனை விட்டு நீங்கும்: பிறகு அவனுக்கும் அவன் பிறந்த குடும்பத்துக்கும் எந்தத் தொடர்பும் கிடையாது;

பாகம் VI பிரிவு 18 பக்கம் 23

ஆனால் -

அ) தான் பிறந்த குடும்பத்தில் தொடர்ந்திருந்தால் யாரைத் திருமணம் செய்து கொள்ள முடியாதோ அவளைத் தத்து போன பிறகும் திருமணம் செய்து கொள்ளக் கூடாது;

ஆ) அவனுக்கென்று அவன் பிறந்த கொடுக்கப்பட்ட சொத்து, தத்துபோன பின்பும் அவனிடமே இருக்கும். அந்தச் சொத்துக்கு சில நிபந்தனைகளோ, பிணையோ இருந்தால் அது தொடர்ந்து இருக்கும். அந்தச் சொத்தின் வருமானத்தில் யாரையாவது பாதுகாக்க வேண்டும்;

இ) பிரிவு 68-ல் சொல்லப்பட்டுள்ள நிலைமைகளுக்க உட்பட்டு, அவன் தத்து போவதற்கு முன்பு அந்தக் குடும்பத்தைச் சேர்ந்த பிறருக்குக் கொடுக்கப்பட்டுள்ள சொத்து தொடர்ந்து அவர்களிடமே இருக்கும். அது எந்தப் பாதிப்புக்கும் உள்ளாகாது.

(71)

68. தத்து எடுத்த பிறகு சொத்து ஒருவரிடமிருந்து எடுக்கப்படுதல்- (1) இந்தத் தொகுப்பு அமுலுக்கு வந்தபின் ஒரு விதவை ஒரு மகனைத் தத்து எடுத்துக் கொண்டால், அந்த மகன் கீழ்க் காணுபவற்றை எடுத்துக் கொள்வான் -

பாகம் VI பிரிவு 18 பக்கம் 23

அ) அந்த விதவையின், அவளுடன் உள்ள மற்ற விதவைகளின் சொத்தில் பாதி அளவிற்கு, தத்து எடுப்பதற்கு முன்பு இருந்ததை எடுத்துக் கொள்வான்

ஆ) ஒரு மகன், மகனின் மகன் மகனின் மகனின் மகன் ஆகிய தத்து எடுக்கும் தந்தையின் உறவினர்கள் இறந்த பிறகு தத்து எடுக்கப்பட்டால், பாதி சொத்து, விதவை மற்றும் அவருடன் இருக்கும் மற்ற விதவைகள் சொத்தில், அவர்களால் தத்து எடுத்த இறந்து விட்ட மகன், மகனின் மகன், மகனின் மகனின் மகன் ஆகியோருடைய வாரிசாக சொத்தில் பாதியை எடுத்துக் கொள்வான். தத்து எடுப்பதற்கு முன்பு இருந்த சொத்தைக் கணக்கிட்டு இந்தப் பாகம் முடிவு செய்யப்படும்.

விதவையும், மற்றும் மற்ற விதவைகளும் பெற்ற சொத்து வழக்கம், மற்றும் நெறிமுறை அல்லது சொத்து அவர்களுக்கு கொடுக்கப்பட்டபோது சொல்லப்பட்ட நிபந்தனைகள் ஆகிய வற்றின் காரணமாக பிரிக்க முடியாத சொத்தாக இருந்தால், தத்து எடுக்கப்பட்ட மகன், தத்து எடுப்பதற்கு முன்பு இருந்த சொத்தை முழுமையாக எடுத்துக் கொள்வான். இது உட்பிரிவு (அ) மற்றும் (ஆ) வின் படி எடுத்துக் கொள்ளும் சொத்துக்களுக்குக் கூடுதலாகும்.

2) உட்பிரிவு (1) பிராந்தியத்தின் எந்தப் பகுதியிலும் உள்ள விவசாய நிலங்களுக்கும் பொருந்தும்.

(72)

69. தத்து எடுத்தப் பெற்றோர்களுக்கு அவர்கள் சொத்து குறித்துள்ள உரிமைகள் :- அவர்கள் எந்த ஒப்பந்தமும் செய்து கொண்டிருக்கவில்லை என்றால் தத்து எடுப்பு எந்த வகையிலும், தத்து எடுத்த தந்தை அல்லது தாய் ஆகியோரின் சொத்து உரிமைகளை எவ்விதத்திலும் பாதிக்காது. அவர்கள் ஒருவருக்கொருவரோ அல்லது உயில் மூலமாகவோ தங்கள் சொத்தை என்ன வேண்டுமானாலும் செய்யலாம். **பாகம் VI பிரிவு 2(2), பக்கம் 27**

(73)

70. மனைவி இல்லாதவர் தத்து எடுக்கும்போது தத்துத் தாயை முடிவு செய்வது சம்பந்தமாக :- **பாகம் VI பிரிவு 22, பக்கம் 27, 28**

1) ஓர் இந்து தன் மனைவி உயிருடன் இருக்கும் போது ஒரு மகனைத் தத்து எடுத்தால், அந்த மனைவி தத்து எடுத்த மகனுக்குத் தத்துத் தாயாகக் கருதப்படுவாள்.

2) ஓர் இந்துவிற்கு ஒன்றுக்கு மேற்பட்ட மனைவியர் இருந்தால் - i) எந்த மனைவியுடன் அல்லது எந்த மனைவியின் ஒப்புதலுடன் தத்து எடுத்துக் கொண்டாரோ அவர் அல்லது

ii) ஒன்றுக்கு மேற்பட்ட மனைவியருடன் வசித்து வந்தாலோ அல்லது அவர்களது ஒப்புதலைப் பெற்றாலோ, அந்த மனைவிகளில் யாரை அவர் முதலில் திருமணம் செய்து கொண்டாரோ அவர், அம்மகனின் தத்துத் தாய் என்றும், மற்றவர்கள் மாற்றாந்தாய்கள் என்றும் கருதப்படுவார்கள்.

3) மனைவி இழந்தவர் மனைவி இறந்த பிறகு தத்து எடுத்தால், தத்து எடுப்பதற்கு முன்பு இறந்து விட்ட மனைவி தத்து எடுத்த மகனின் தத்துத் தாய் எனக் கருதப்படுவார். அதற்குப் பிறகு இறந்த மனைவியோ அல்லது தத்து எடுத்த பிறகு அவர் திருமணம் செய்து கொண்ட மனைவியோ தத்து எடுக்கப்பட்ட மகனின் மாற்றாந்தாய் எனக் கருதப்படுவார். ஆனால் தத்து எடுக்கும் தந்தை யாரைத் தத்துத் தாய் எனக் கருத வேண்டும் என்று அதற்கான ஏற்பாடு செய்திருந்தால் அவரைத் தத்துத் தாயாகவும் மற்றவர்களை மாற்றாந்தாயாகவும் கருத வேண்டும். **பாகம் VI பிரிவு 2(3), பக்கம் 28**

4) திருமணம் ஆகாத ஒருவர் தத்து எடுத்தப் பிறகு அவர் திருமணம் செய்து கொள்ளும் மனைவி தத்து எடுத்த மகனின் மாற்றாந்தாய் எனக் கருதப்படுவார்.

(74)

71. ஒரு விதவை தத்து எடுத்தால் தத்துத் தாயை முடிவு செய்வது சம்பந்தமாக : (1) இறந்து விட்ட ஓர் இந்துக் கணவர் ஒன்றுக்கு மேற்பட்ட விதவைகளை விட்டுச் சென்றிருக்கும்போது, எந்த விதவை தத்து எடுக்கிறாரோ, அவர் அந்தத் தத்து எடுத்த மகனின் தத்துத்தாய் என்றும், மற்ற விதவைகள் மாற்றாந்தாய்கள் என்றும் கருதப்படுவார்கள்.

பாகம் VI பிரிவு 23, பக்கம் 28

2) ஒன்றுக்கு மேற்பட்ட விதவைகள் தத்து எடுக்கும்போது, முதலில் திருமணம் செய்து கொண்டவர் தத்துத் தாய் என்றும், மற்றவர்கள் மாற்றாந்தாய்கள் என்றும் கருதப்படுவார்கள்.

(75)

72. சட்ட ரீதியான தத்து எடுப்பை ரத்து செய்ய முடியாது : சட்ட ரீதியாக தத்து எடுக்கப்பட்டால், அதை தத்து எடுத்த தந்தையோ, தாயோ, அல்லது வேறு நபரோ ரத்து செய்ய முடியாது. அதே முறையில், தத்து எடுக்கப்பட்ட மகனும், தான் தத்து எடுக்கப்பட்டதை துறந்துவிட்டு, அந்தத் தகுதியை விட்டு விட்டு தான் பிறந்த குடும்பத்திற்கு போக முடியாது.

(76)

73. சில ஒப்பந்தங்கள் செல்லத்தக்கவை அல்ல: தத்து எடுக்கக் கூடாது என ஒப்பந்தம் செய்து கொண்டால் அது செல்லத்தக்கது அல்ல. அதே முறையில் தத்து எடுக்கப்பட்ட மகனின் உரிமைகளைக் குறைக்கும் வகையில் செய்து கொள்ளும் ஒப்பந்தமும் செல்லத்தக்கது அல்ல.

பாகம் VI பிரிவு 20, பக்கம் 27

(77)

பாகம் III
தத்து எடுப்பை எழுதி வைப்பது

74. தத்து எடுக்கப்பட்டதை எழுதி வைக்க வேண்டும்:- அதற்கு சம்மந்தப்பட்டவர்கள் விரும்பினால், மாநில அரசால், அரசு பதிவேட்டில் அறிவிக்கப்பட்டுள்ள முறையில், தத்து எடுக்கப்பட்ட இடத்திற்கான அதிகாரம் பெற்றுள்ள அதிகாரிகளுக்கு, அதற்கென்று விதிக்கப்பட்டுள்ள முறைகளின்படி, உரிய முறையில், விண்ணப்பம் செய்து, தத்து எடுப்பு பற்றிய புத்தகத்தில் பதிவு செய்யக் கோரலாம்.

பகுதி VI
பிரிவு 30
பக்கம் 29

(78)

75. மனு எப்போது போட வேண்டும் என்பது பற்றியும், அதில் குறிக்கப்பட வேண்டிய விபரங்களும்: தத்து எடுப்பவர், மற்றும் தத்து கொடுத்தவர், கையெழுத்திட்டு, தத்து எடுத்த 90 நாட்களுக்குள் மனு செய்ய வேண்டும். அந்த மனுவில் கீழ்க்காணும் விபரங்கள் கொடுக்கப்படவேண்டும்.

பகுதி VI
பிரிவு 31
பக்கம் 29

i) தத்து எடுத்த தேதி;

ii) தத்து எடுத்த முறை;

iii) தத்து எடுக்கப்பட்ட நபர் அல்லது நபர்களின் பெயர் அல்லது பெயர்கள், வயது அல்லது வயதுகள்;

iv) தத்து எடுத்தவர் திருமணமானவராக இருந்தால், அவர் மனைவியின் பெயர், அவர் மனைவி இல்லாதவராக

இருந்தால், ஏற்கனவே இறந்துவிட்ட மனைவியின் பெயர், ஒன்றுக்கு மேற்பட்ட மனைவியரோ, அல்லது இறந்துவிட்ட மனைவியரோ இருந்தால் அவர்களுடைய பெயர், அவர் எந்த வரிசையில் அவர்களை திருமணம் செய்து கொண்டார், தத்துத் தாயாகக் கருதப்பட வேண்டிய மனைவி அல்லது இறந்த மனைவியின் பெயர்;

v) ஒரு பெண் தத்து எடுத்தால், அவள் கணவன் பெயர், மற்றும் தன்னுடன் வாழும் மனைவியர் அல்லது விதவைகளின் பெயர்,

vi) தத்து கொடுக்கும் நபரின் வயது மற்றும் பெயர்;

vii) தத்து எடுக்கப்பட்ட பையனின், பிறந்த வீட்டில் வைத்த பெயர்;

viii) தத்து எடுக்கப்பட்ட பையனின் வயது;

ix) தத்து எடுக்கப்பட்ட பையனின், தத்து எடுத்த வீட்டில் வைத்த பெயர்;

(79)

76. தத்து எடுப்பதை பதிவு செய்தல்:- *பிரிவு 74-அ-வின் கீழ் நியமிக்கப்பட்ட அதிகாரி, தத்து எடுத்தவர் மற்றும் தத்து கொடுத்தவர் ஆகிய இருவரும் கையெழுத்திட்டு முறையாக தத்து எடுக்கப்பட்டது எனத் திருப்தி அடைந்தால் அதற்காக உள்ள புத்தகத்தில் தத்து எடுக்கப்பட்ட விவரங்களை அந்தப் புத்தகத்தில் எழுத வேண்டும்.*

(80)

பகுதி IV உரிய வயது வராதோர் மற்றும் காப்பாளர் ஆகியோரைப் பற்றி

77. விளக்கம் : இந்தப் பகுதியில்

பகுதி V
பிரிவு 1
பக்கம் 22

அ) உரிய வயது வராதோர் என்றால் 18-வயதிற்கு உட்பட்டோர் என்று பொருள்.

ஆ) ''இயல்பான காப்பாளர்'' என்றால் பிரிவு 78-ல் சொல்லப்பட்டுள்ள நபரைக் குறிக்கும். ஆனால் அது கீழ்க் காணும் நபர்களை உள்ளடக்காது:

i) உரிய வயதுவராத நபரின் தந்தை எழுதிய உயிலின்படி நியமிக்கப்பட்ட காப்பாளர், அல்லது

ii) நீதி மன்ற உத்திரவால் நியமிக்கப்பட்ட நபர், அல்லது

iii) காப்பாளராக பணி புரிய, காப்பாளருக்கான நீதிமன்றத் தால் நியமிக்கப்பட்ட நபர்

(81)

78. உரிய வயதுவராத ஓர் இந்துவின் இயல்பான பாதுகாவலர்:- உரிய வயதுவராத இந்து நபரின் பொருளுக்கும், அவரை பாதுகாக்கவும் கீழ்க் காணுபவர்கள் இயல்பான பாதுகாவலர் என கருதப்படுவார்கள்-

பகுதி V
பிரிவு 4
பக்கம் 22

அ) ஒரு திருமணமாகாத பெண்ணிற்கும், அல்லது பைய னுக்கும் தந்தை பாதுகாவலராகக் கருதப்படுவார். அவருக்குப் பின் தாய் பாதுகாவலராக இருப்பார். ஆனால் உரிய வயது வராத நபர், 3-வயதிற்குட்பட்டவராக இருந்தால் தாய் பாதுகாவலராக இருப்பார்.

ஆ) முறையற்ற திருமணத்தில் பிறந்த பையனுக்கும் அதே உறவு முறையில் பிறந்த திருமணமாகாத பெண்ணிற்கும், தாயும், அவருக்குப் பிறகு தந்தையும் இயல்பான பாதுகாவலராக இருப்பர்.

இ) திருமணம் ஆன பெண்ணிற்கு கணவர் இயல்பான பாதுகாவ லராக இருப்பார்.

கீழ்க்காணும் சூழ்நிலையில் ஏதாவது ஒன்று இருந்தால் உரிய வயது வராத நபரின் இயல்பான பாதுகாவலராக ஒருவர் நீடிக்க முடியாது -

அ) அவர் இந்துவாக நீடிக்காவிட்டால், அல்லது

ஆ) பிரிவு 110- உட்பிரிவு (1)-ல் சொல்லியுள்ளபடி முழுமையாக வும் இறுதியாகவும் உலகப் பந்தத்தை துறந்து விட்டவராக இருந்தால்.

(82)

(83)

79. தத்து எடுக்கப்பட்ட நபரின் இயல்பான பாதுகாப்புரிமை:- தத்து எடுக்கப்பட்ட நபரின் பாதுகாப்புரிமை தத்து எடுக்கப்பட்டபின் அவர் பிறந்த குடும்பத்திலிருந்து தத்து எடுக்கப்பட்ட குடும்பத்திற்கு மாறிவிடும்.

பகுதி V
பிரிவு 5
பக்கம் 22

80. இயல்பான பாதுகாவலரின் அதிகாரங்கள்: 1) உரிய வயது வராத இந்துவின் பாதுகாவலர் இந்தப் பிரிவிற்குட்பட்டு அந்த நபரின் நன்மைக்காகவும் அந்த நபரின் சொத்தை அடைவதற்கும், பாதுகாக்கவும் எல்லா விதமான அவசியமான மற்றும் நியாயமான நடவடிக்கைகளில் ஈடுபடலாம். ஆனால் எந்தச் சூழ்நிலையிலும் அந்த நபரின் உரிமையை பாதிக்கும் வகையில் எதுவும் செய்யக்கூடாது.

2) நீதிமன்றத்தின் முன் அனுமதிபெறாமல் இயல்பான பாதுகாவலர் கீழ்க்காணும் எந்தக் காரியத்தையும் செய்யக்கூடாது:-

அ) அடமானம்; அல்லது பொருட்பிணைப் பொறுப்பு, விற்பனை, இனாமாக அளித்தல், அல்லது உரிய வயது வராத நபரின் அசையாச் சொத்துகளின் பரிமாற்றம் அல்லது;

ஆ) எந்தச் சொத்தையும் 5-வருடத்திற்கு மேல் குத்தகைக்கு விடுவதோ, அல்லது அந்த நபர் வயது வந்த காலத்திற்குப் பின் ஓர் ஆண்டிற்கு மேல் குத்தகைக்கு விடுவதோ கூடாது.

3) உட்பிரிவு (1) அல்லது (2)-க்கு எதிராக இயல்பான பாதுகாவலர் அந்த நபரின் அசையாச் சொத்துக்களை எவ்விதத்திலும் ஏதாவது செய்ய முயற்சித்தால், அந்த நபரோ அல்லது அதனால் பாதிக்கப்பட்டவரோ அந்த முயற்சியைத் தடுக்க நடவடிக்கை எடுக்கலாம்.

4) உட்பிரிவு (2)-ல் சொல்லப்பட்டுள்ள எந்த காரியங்களைச் செய்யவும் இயல்பான பாதுகாவலர் மனு செய்தால் அது மிக அவசியமான ஒன்றாக இருந்தாலோ அல்லது உரிய வயது வராத நபரின் நலனுக்காக இருந்தாலோ மட்டுமே நீதிமன்றம் தகுந்த அனுமதியை அவருக்கு அளிக்க வேண்டும்.

பகுதி V
பிரிவு 6
பக்கம் 23

5) பாதுகாவலர் மற்றும் பாதுகாப்பிலுள்ளவர் சட்டம் 1890 (VIII of 1890) பிரிவு 29-ன் படியும் உட்பிரிவு (2)ன் படியும் அனுமதி கோரும் மனுவிற்கு உத்திரவு வழங்க பின்கண்ட நடைமுறை கடைப்பிடிக்கப்பட வேண்டும்.

குறிப்பாக -

அ) மனு சம்பந்தப்பட்ட நடவடிக்கைகள் பிரிவு IV-அ-ன் படியான நடவடிக்கைகளாகக் கருதப்பட்டு இந்த அனுமதி மனு கவனிக்கப்பட வேண்டும்;

ஆ) அந்தச் சட்டத்தின் பிரிவு 31 உட்பிரிவு (1) (2) (3) (4) - ஆகியவற்றில் சொல்லியுள்ள நடைமுறைகளை நீதிமன்றம் பின்பற்ற வேண்டும்; மற்றும்

இ) இயல்பான பாதுகாவலருக்கு உட்பிரிவு (2)-ன் கீழ் சொல்லப் பட்டுள்ள எதையும் செய்ய அனுமதி மறுக்கப்பட்டால் அவர் உயர்நீதிமன்றத்திற்கு மேல் முறையீடு செய்யலாம்.

6) இந்தப் பிரிவில் ''நீதிமன்றம்'' என்று சொன்னால் அசையாச் சொத்துக்கள் உள்ள இடத்திற்கு முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ அதிகார வரம்பு பெற்றுள்ள மாவட்ட நீதிமன்றம் என்று பொருளாகும் அல்லது பிரிவு (4) - அ - பாதுகாவலர் மற்றும் பாதுகாப்பிலுள்ளவர் சட்டம் 1890 (VIII of 1890) படி அதிகாரம் அளிக்கப்பட்டுள்ள நீதி மன்றம் என்று பொருள்படும்.

(84)

(85)

81. இயல்பான பாதுகாவலரின் மாற்றி அமைக்கும் உரிமை: உரிய வயது வராத ஓர் இந்து பொறுப்பை ஏற்றுக் கொள்ளும்படி இயல்பான பாதுகாவலர் மற்றொருவருக்குப் பொறுப்பு அளித்தால் அந்தப் பொறுப்பை கீழ்க்காணும் காரணங்கள் தவிர்த்து, மற்ற சூழ்நிலைகளில் மாற்றி அமைக்கலாம்.

பகுதி V
பிரிவு 7
பக்கம் 23

அ) மாற்ற அனுமதிப்பது வயது வராதவரின் நலனுக்கு எதிராக அமைந்திருத்தல்; அல்லது

ஆ) இயல்பான பாதுகாவலர் தொடர்ந்து இந்துவாக நீடிக்காமல் இருத்தல் அல்லது

இ) வேறு தகுந்த காரணங்களுக்காக மாற்றி அமைக்கும் உரிமையை அளிப்பது உசிதமில்லாதிருத்தல்.

(85)

82. உயில்வழி பாதுகாவலரின் அதிகாரங்கள் : 1) ஓர் இந்து தந்தை உரிய வயது வராத தன்னுடைய சட்டரீதியான குழந்தைகளில் ஏதேனும், ஒன்றைப் பார்த்துக் கொள்வதற்காகவோ அல்லது வயதுவராத குழந்தையின் சொத்துக்களை பாதுகாத்து கொள்வதற்காகவோ அல்லது இரண்டிற்குமாகவோ உயிலின் மூலமாக ஒரு பாதுகாவலரை நியமிக்கலாம்; ஆனால் வயது வராத இந்த நபரின் தாய் உயிருடன் இருந்து அந்த நபரின் பாதுகாவலராக இருக்கத் தகுதி உள்ளவராக இருக்கும்போது, வேறு எந்த நபரும் பாதுகாவலராக இருக்க இந்தப் பிரிவு அனுமதிப்பதாகக் கொள்ள முடியாது.

பகுதி V
பிரிவு 1
பக்கம் 23

2) தந்தையின் மரணத்திற்குப் பிறகு உயிலில் சொல்லப்பட்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு, பாதுகாவலராக நியமிக்கப்பட்ட நபர் இயல்பான பாதுகாவலருடைய எல்லா உரிமைகளையும் பெற்று அதற்கேற்ற முறையில் செயல்பட முடியும்.

3) இந்தப் பகுதியில் சொல்லப்பட்டுள்ளவைகளுக்கு உட்பட்டு, ஓர் இந்து விதவை உயில் மூலமாக தன்னுடைய வயது வராத குழந்தைகள் எது ஒன்றையும் கவனித்துக் கொள்ளப் பாது காவலரை நியமிக்க முடியும்;

ஆனால் அவருடைய கணவர் ஏற்கனவே உயில் மூலமாக குழந்தைக்குப் பாதுகாவலரை நியமிக்காமல் இருந்தால் மட்டுமே அவர் இவ்வாறு செயல்பட முடியும்.

4) அவ்வாறு பாதுகாவலராக நியமிக்கப்பட்டவரின் உரிமை, உரிய வயது வராத நபர் பெண்ணாக இருந்தால், அவளுக்குத் திருமணம் ஆன உடன் அது முடிவிற்கு வந்துவிடும்.

(86)

83. உரிய வயது வராத நபரை இந்துவாக வளர்ப்பது பாதுகாவலரின் கடமை: உரிய வயது வராத ஓர் இந்து நபரின் பாதுகாவலர் அந்த நபரை, ஓர் இந்துவாக வளர்ப்பது அவரது கடமை.

பகுதி V
பிரிவு 9
பக்கம் 23

(87)

84. பாதுகாவலராக செயல்படும் நிலையிலுள்ள ஒருவர், உரிய வயது வராத நபரின் சொத்தை எதுவும் செய்யக்கூடாது: இந்தத் தொகுப்பு அமலுக்கு வந்த பிறகு பாதுகாவலராக செயல்படும் நிலையிலுள்ள ஒருவர், உரிய வயது வராதவரின் சொத்தை விற்பதோ, அல்லது வேறு எவ்விதத்திலும் பாதிக்கும் வகையில் செயல்படவோகூடாது.

பகுதி V
பிரிவு 10
பக்கம் 23

(88)

(89)

85. உரிய வயது வராதவரின் நலன்தான் முக்கியமானது. ஒரு பாதுகாவலரை நியமிக்கும்போதோ அல்லது அறிவிக்கும்போதோ அந்த நபரின் நலனை நீதி மன்றம் முக்கியமாகக் கருத வேண்டும். இந்தப் பகுதியில் சொல்லப்பட்டவைகளின் காரணமாகவோ அல்லது பிரிவு 24-ல் சொல்லப்பட்டவைகளுக்காகவோ, ஒரு நபர் பாதுகாவலராக இருந்தால் அது உரிய வயது வராத அந்த நபரின் நலனுக்கு ஏற்றதல்ல என நீதிமன்றம் கருதினால் அந்த உரிய வயது வராத அந்த ஆணுக்கோ பெண்ணுக்கோ தான் பாதுகாவலராக இருப்பேன் என்று ஒருவர் உரிமை கோர முடியாது.

பகுதி V
பிரிவு 12
பக்கம் 22

பாகம் V - கூட்டுக் குடும்ப சொத்து

86. ஒரு குடும்பத்தில் பிறப்பதினால் மட்டும் சொத்தில் எந்த உரிமையும் கிட்டிவிடாது : இந்தத் தொகுப்பு அமுலுக்கு வந்த பிறகு, முன்னோரின் சொத்தில் அவர் உயிருடன் இருக்கும்போது எந்த உரிமையும் கோர முடியாது என்று சொல்லப்பட்டுள்ளதை எந்த நீதிமன்றமும் அங்கீகரிக்க வேண்டியதில்லை. *பகுதி III- அ பிரிவு 2 பக்கம் 12*

விளக்கம் : இந்தப் பிரிவில் வரும் ''சொத்து'', என்பதில் அசையும் மற்றும் அசையா சொத்துக்கள் - அவை முன்னோர் சொத்தோ அல்லது இல்லையோ, எல்லோரும் சேர்ந்து சம்பாதித்ததோ, அல்லது மூதாதையர் சொத்தின் விளைவாக கிடைத்ததோ அல்லது வேறு எந்த முறையில் பெறப்பட்டதோ அடங்கும்.

(90)

87. கூட்டு நிலைச் சொத்துரிமை பொது நிலச் சொத்துரிமையாக மாறுவது: இந்தத் தொகுப்பு அமுலுக்கு வந்த பிறகு எஞ்சிய உரிமை முறையில் அமைந்த சொத்தில் ஒருவருடைய உரிமையை அங்கீகரிக்கக் கூடாது. இந்தத் தொகுப்பு அமுலுக்கு வந்தபோது, கூட்டுக் குடும்ப சொத்தை, அனுபவிக்கும் யாவரும், இந்தத் தொகுப்பு அமுலுக்கு வந்த அன்று, அவர்களுக்கிடையே பிரிவினை ஏற்பட்டு, ஒவ்வொருவரும் தனித்தனியாக முழு உரிமைப் பெற்று அனுபவிப்பதாகக் கருதப்படும். *பகுதி III- அ பிரிவு 2 பக்கம் 11*

இந்தப் பிரிவில் சொல்லப்பட்டுள்ள எதுவும் இந்தச் சொத்தில் வாழும் உரிமை பெற்ற மற்றும் ஜீவனாம்சம் பெற்ற எவரையும் பாதிக்காது. மற்ற நபர்கள் இந்தச் சொத்தில் தனியாக உரிமை பெற்றவர்களாக இருப்பதால், அவர்கள் தங்கள் உரிமையை நிலைநாட்ட, இந்தத் தொகுப்பு நிறைவேற்றப்படவில்லை என்று கருதி நீதிமன்றத்தில் தங்கள் உரிமையை நிலை நாட்ட முடியும்.

இந்த வரையரையின்படி தனியாகச் சொத்தை வைத்துக் கொள்ள உரிமைப் பெற்ற எந்தப் பெண்ணும் இந்தப் பிரிவின்படி அனுபவிக்கும் உரிமை மட்டுமே பெற முடியும். அவள் இறந்த பிறகு, இந்தத் தொகுப்பு அமுலுக்கு வருவதற்குமுன்; உரிமை பெற்றிருந்த மற்ற நபர்களுக்கு அந்த சொத்து போய்ச்சேரும். *பகுதி II பிரிவு 3 வரையரை பக்கம் 3*

(91)

88. இந்து மகனின் தர்ம ரீதியான கடமை விதி அகற்றப்பட்டது: (1) இந்தத் தொகுப்பு அமுலுக்கு வந்தபிறகு உட்பிரிவு (2)-க்கு உட்பட்டு தர்ம ரீதியான கடமையை அமுல் படுத்த ஒரு மகன், பேரன், கொள்ளுப் பேரன் ஆகியோருக்கெதி ராக, அவருடைய தந்தை, தாத்தா மற்றும் தாத்தாவின் அப்பா பட்ட கடனுக்காக எந்தவித நடவடிக்கையும் எடுக்க முடியாது.

2) உட்பிரிவு - (1)-ல் சொல்லப்பட்டுள்ள எதுவும் இந்தத் தொகுப்பு அமுலுக்கு வருவதற்கு முன்பு பட்ட கடனாக இருந்தால் கீழ்க்காணும் நடவடிக்கையைப் பாதிக்காது:-

அ) மகன், பேரன், கொள்ளுப்பேரன் ஆகியோருக்கு எதிராக கடன் கொடுத்தவர் நடவடிக்கை எடுக்கும் உரிமை,. அல்லது

ஆ) அந்தக் கடனுக்காக எந்த சொத்தையும் விற்றது **இந்தத் தொகுப்பு இயற்றப்பட்டதாகக் கருதாமல்,** தர்ம ரீதியான கடமையின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்க முடியும்.

விளக்கம் : உட்பிரிவு (2)-ல் மகன் பேரன், கொள்ளுப் பேரன் என்று சொல்லப்பட்டுள்ளது, இந்தத் தொகுப்பு அமுலுக்கு வருமுன் பிறந்தவரையோ அல்லது தத்து எடுக்கப்பட்டவரையோ குறிக்கும்.

(92)

89. இந்தத் தொகுப்பு அமுலுக்கு வருமுன் பட்ட கடனுக்காக கூட்டுக் குடும்ப உறுப்பினர்களின் பொறுப்பு பாதுகாக்கப்படாது- கூட்டுக் குடும்பத்தின் தலைவரால் இந்தத் தொகுப்பு அமுலுக்கு வருமுன், குடும்ப நன்மைக்காக கடன் வாங்கப்பட்டிருந்தால் அந்தக் கடனை திருப்பிக் கொடுக்கும். அவருடைய பொறுப்பு மாறாது, இந்தத் தொகுப்பு இயற்றப் படவில்லை என்று கருதி கூட்டக் குடும்ப உறுப்பினர்கள் எல்லோ ருக்கும் எதிராகவோ அல்லது கடனை திருப்பிக் கொடுக்க கடமைப் பட்டுள்ளவருக்கு எதிராகவோ நடவடிக்கை எடுக்க முடியும்.

(93)

90. விலக்கு அளிக்கப்பட்ட பிரிக்கப்பட முடியாத சொத்துக்கள்: இந்தப் பகுதியில் சொல்லப்பட்டுள்ள எதுவும், தனி நபருக்குக் கிடைக்கும் சொத்திற்குப் பொருந்தாது. அது வழக்குமுறையின் வழி வாரிசுரிமையாகவோ, அல்லது அன்பளிப் பாகவோ, அல்லது சட்ட முறையிலோ கிடைக்கலாம்.

(102)

பாகம் VI பெண்ணின் சொத்து

91. பெண் சொத்தின் நிலை: *(1)* இந்தத் தொகுப்பு அமுலுக்கு வந்தபின் ஒரு பெண் எந்த சொத்தைப் பெற்றாலும் அது அவளின் முழுமையான சொத்தாகும்.

பகுதி II
பிரிவு 13
பக்கம் 9

(2) உட்பிரிவு (1)ல் சொல்லப்பட்டுள்ள எதுவும், அன்பளிப்பு அல்லது உயில் மூலம் பெறப்பட்டிருந்தால், அவற்றில் சொல்லப் பட்டுள்ள நிபந்தனைகளுக்கு உட்பட்டுத்தான் அவற்றை அவள் அனுபவிக்க முடியும்.

ஆனால் அவள் பெண் என்பதற்காக மட்டும் அந்த நிபந் தனைகளை விதிக்க முடியாது.

விளக்கம் : ''சொத்து'' என்றால் அது அசையும் மற்றும் அசையாச் சொத்துக்களைக் குறிக்கும். அந்தச் சொத்து அப்பெண்ணால், அவள் திருமணத்திற்கு முன்போ அல்லது பின்போ பெறப் பட்டிருக்கலாம். அவள் விதவையாக இருக்கும்போதோ, அல்லது வாரிசுரிமையாகவோ அல்லது பாகப் பிரிவினையிலோ, அல்லது அவளது ஜீவனாம்சத்திற்காகவோ, ஜீவனாம்சத்திற்கு ஏற்கனவே வரவேண்டியவையாகவோ, அல்லது உறவினர் அல்லது மற்ற வரால் அன்பளிக்கப்பட்டதாகவோ, அவளது திறமையால் பெறப் பட்டதாகவோ அல்லது வாங்கியதாகவோ அல்லது வேறு முறை யிலோ இருக்கலாம்.

(103)

92. பெண் சொத்து கைமாறும் நிலை: *1)* இந்தத் தொகுப்பு அமலுக்கு வந்தபின் ஒரு பெண் இறந்துவிட்டால் அவள் அந்தச் சொத்தை இந்தத் தொகுப்பு வருவதற்கு முன்போ அல்லது பின்போ எப்போது பெற்றிருந்தாலும் அவளுக்குப் பிறகு பாகம் VII-ல் சொல்லியுள்ளபடி அவளுடைய வாரிசுக்குப் போகும்.

பகுதி II
பிரிவு 3
பக்கம் 3

2) அவள் இறக்கும்போது இந்து பெண் சொத்து என அழைக்கப்படுவதை அனுபவிக்கும் உரிமை மட்டும் பெற்றிருந் தால் உட்பிரிவு (1)-ல் சொல்லியுள்ளவை, அந்தச் சொத்திற்குப் பொருந்தா. அம்மாதிரியான சொத்து கீழ்க்காணும் முறையில் கை மாறும்:

(104)

i) வாரிசுரிமை முறையில் அவள் அச்சொத்தைப் பெற்றிருந்தால், பகுதி VII-ல் சொல்லப்பட்டுள்ள கடைசியாக இருந்த முழு அதிகாரம் பெற்ற உரிமையாளரின் வாரிசுகளுக்குப் போகும்;

ii) பாகப் பிரிவினை மூலம் அச் சொத்து பெறப்பட்டிருந்தால் அல்லது வேறு முறையில் பெறப்பட்டிருந்தால், இந்தத் தொகுப்பு இயற்றப்படாமல் இருந்தால் யாருக்குப் போகுமோ அவர்களுக்குப் போகும்.

(104)

93) சீதனம் மனைவியின் நலனுக்காகப் பாது காக்கப்பட வேண்டும்: *(1) இந்தத் தொகுப்பு அமுலுக்கு வந்த பிறகு, எந்த சீதனமும், திருமணத்தன்றோ, திருமணத்திற்கு நிபந்தனையாகவோ அல்லது திருமணத்திற்கு பிரதி பலனாகவோ அளிக்கப்பட்டிருந்தால், திருமணமான அந்தப் பெண்ணின் சொத்தாகக் கருதப்படும்.*

பகுதி IV
பிரிவு 28
பக்கம் 20

(2) அப்பெண்ணிற்காக சீதனத்தைப் பெற்ற ஒருவர் அவள் நன்மைக்காக அதை பாதுகாக்க வேண்டும். அவளுக்கு 18 வயது முடிந்தவுடன் அதை அவளிடம் கொடுக்க வேண்டும். அவள் அதற்குள் இறந்துவிட்டால் பாகம் VII-ல் சொல்லப்பட்டுள்ள வாரிசுகளுக்குக் கொடுக்க வேண்டும்.

விளக்கம் :- இந்தப் பகுதியில் ''சீதனம்'' என்று சொன்னால் எந்த சொத்தும் ஒருவரால், திருமணத்தின்போது, அதற்கு பிரதி பலனாகவோ, அல்லது நிபந்தனையாக அளித்ததோ அல்லது அளிப்பதாக வாக்குறுதி கொடுக்கப்பட்டதாகவோ இருக்கலாம். ஆனால் திருமணத்தின் போது மணமகனுக்கோ அல்லது வேறு நபருக்கோ அளிக்கப்பட்ட சிறு அன்பளிப்பு இதில் சேராது.

(105)

பகுதி VII - வாரிசு உரிமை

பாகம் I

பொது

94. இந்தப் பகுதியில் சொல்லப்பட்டுள்ள சில சொத்துக்களுக்கு விதி விலக்கு :- இந்தப் பகுதி பின்கண்டவற்றுக்குப் பொருந்தாது:

பகுதி II
பிரிவு 1
பக்கம் 2

i) ஆளுநர் அதிகாரத்திற்குட்பட்ட எல்லைக்குள் உள்ள விவசாய நிலம்; அல்லது

ii) வழக்கமான விதிமுறையின்படி ஒரு தனி வாரிசுக்கு கிடைக்கும் அல்லது அன்பளிப்பாக அளிக்கப்படும் அல்லது சட்ட ரீதியாக கிட்டும் சொத்து.

(106)

95. இந்தப் பகுதியின் அமுலாக்கம்: பிரிவு 94-ல் சொல்லப்பட்டவைகளுக்கு உட்பட்டு உயில் எழுதாமல், இந்த தொகுப்பு அமுலுக்கு வந்தபின் இறந்துவிடும் ஓர் இந்துவின் சொத்துக்கு கீழ்க்காணும் முறையில் வாரிசு உரிமை முடிவு செய்யப்படும்:-

பகுதி II
பிரிவு 3
பக்கம் 3

(அ) அசையும் சொத்தாக இருந்தால் உயில் எழுதாமல் இறந்துவிட்டவர் அவர் மரணமடைந்தபோது, இந்தச் சட்டம் அமுல் படுத்தப்படும் இடங்களில் வசிக்கவில்லை என்பது நிரூபணமாக வேண்டும்;

(ஆ) அசையா சொத்தாக இருந்தால் மேலே கூறிய எல்லைக்குள் அது இருந்தால் உயில் எழுதாமல் இறந்துபோனவர் அவர் இறந்த போது அந்தக் குறிப்பிட்ட எல்லைக்குள் வசித்தாரா இல்லையா என்பது தெரிய வேண்டும்.

விளக்கம் :- இந்தப் பகுதியை பொறுத்தவரை ஓர் இந்துவின் வாழ்விடம் என்பது பிரிவு 6 முதல் 18 வரை இரண்டையும் சேர்த்து இந்திய வாரிசுரிமைச் சட்டம் 1925 (XXXIX of 1925)-ல் சொல்லப்பட்டுள்ளவற்றின் அடிப்படையில் தீர்மானிக்கப்பட வேண்டும்.

(107)

96. வாரிசு உரிமை விஷயத்தில் பிரிந்த மற்றும் பிரியாத மகன்களுக்கிடையே வேற்றுமை கிடையாது- உயில் முறை அல்லாத வாரிசுரிமை விஷயத்தில் பின்கண்டவாறு வேற்றுமை பாராட்டக்கூடாது:-

பகுதி II
பிரிவு 7
விதிகள் 2,4
பக்கம் 3

1) உயில் எழுதாமல் இறந்துபோனவரிடமிருந்து பிரிந்த ஒரு மகனுக்கும் பிரியாத ஒரு மகனுக்கும் இடையே அல்லது, பிரிந்த ஒரு மகனுடன் மறுபடியும் சேர்ந்துக் கொண்ட ஒரு மகனுக்கும் இடையே;

2) விதவையான ஒரு பெண் வாரிசு மற்றும் விதவை அல்லாத ஒரு பெண் வாரிசு அல்லது ஏழ்மையான ஒரு பெண் வாரிசு, மற்றும் பணக்கார பெண் வாரிசு, குழந்தை உள்ள அல்லது குழந்தை இல்லாத ஒரு பெண் வாரிசு, அல்லது குழந்தை பிறக்க வாய்ப்புள்ள ஒரு பெண் வாரிசு ஆகியோருக்கு இடையே.

பகுதி II
பிரிவு 14 (4)
பக்கம் 10

(108)

பாகம் II

உயில் முறை அற்ற வாரிசு உரிமை

97. விளக்கம் : இந்தப் பகுதியில் குறிப்பிட்ட சூழ்நிலை இதற்கு முரணாக இருந்தால் தவிர — பாகம் II பிரிவு 2 பக்கம் 2

அ) *''ஆண் வழி உறவு'' :* ஒரு நபர் அடுத்தவருக்கு ஆண்வழியினர் (கோத்ரஜா) என்றால் இரண்டு பேரும் இரத்தவழி உறவிலோ அல்லது தத்து எடுத்தவகையிலோ ஆண்கள் மூலமாக மட்டுமே உறவானவர்கள். — பாகம் II பிரிவு 5 பக்கம் 2

ஆ) *''பெண் வழி உறவு'' :* ஒரு நபர் அடுத்த நபருக்கு பெண் வழி உறவினர் என்றால் (பந்து) இரண்டு பேரும் இரத்த - மிமுறையிலோ அல்லது தத்து எடுத்த முறையிலோ பெண்கள் மூலமாக மட்டுமே உறவானவர்கள்.

இ) ''வாரிசு'' என்றால் உயில் எழுதாமல் இறந்து போனவரது சொத்தில் இந்தப் பகுதியின் கீழ் பங்கு பெற உரிமை பெற்ற ஆணோ, பெண்ணோ ஆவார்.

ஈ) ''உயில் முறையற்ற வாரிசு'' என்றால் ஒரு நபர் தான் இறக்கும் முன் அமுல் படுத்த தகுதியுள்ள உயிலை எழுதாமல் இறந்து விட்டால், அவர் தனது சொத்துக்கு உயில் முறையற்ற வாரிசை விட்டு விட்டு இறந்தார் என்று பொருள்.

2) இந்தப் பகுதியில் குறிப்பிட்ட சூழ்நிலை வேறு பொருளைக் குறித்தால் தவிர, ஆண்களைக் குறிக்கும் சொல் பெண்களையும் உள்ளடக்கியதாகக் கொள்ள முடியாது.

(100)

98. இந்து ஆண் விஷயத்தில் வாரிசுரிமை சம்பந்தமான விதிமுறைகள்: இந்தப் பகுதியில் சொல்லப்பட்டவைகளுக்கு உட்பட்டு, உயில் எழுதாமல் இறந்துவிடும் ஓர் இந்து ஆணினுடைய சொத்துக்களுக்கு கீழ்க்காணும் விதிமுறைகளின்படி வாரிசுகள் நிர்ணயிக்கப்படும்: — பாகம் II பிரிவு 4 பக்கம் 4

அ) முதலாவதாக, அட்டவணை VII பிரிவு 1-ல் சொல்லப்பட்டுள்ள உறவினர்களான முன்னுரிமை பெற்ற வாரிசுகள்;

ஆ) இரண்டாவதாக, அட்டவணை VII பிரிவு II-ல் சொல்லப்பட்டுள்ள உறவினர்களான முன்னுரிமை பெற்ற வாரிசு இல்லாவிட்டால் ஏழாவது அட்டவணை பிரிவு II-ல் சொல்லப்பட்டுள்ள உறவினர்களான முன்னுரிமை பெற்ற வாரிசுகள்;

இ) மூன்றாவதாக இரண்டு வகைகளையும் சேர்ந்த முன்னுரிமை பெற்ற வாரிசுகள் இல்லை என்றால் பிரிவு 102-ல் சொல்லப்பட்டுள்ள அவரது ஆண்வழி உறவின வாரிசுகள். இவை பிரிவு 102-ன் படி இருக்க வேண்டும்.

ஈ) கடைசியாக ஆண்வழி உறவினர் இல்லை என்றால், பிரிவு 103-ல் சொல்லப்பட்டுள்ள பெண்வழி உறவினர்கள்.

(110)

99. முன்னுரிமை பெற்ற வாரிசுகளிடையே வாரிசுரிமையை நிர்ணயிக்கும் முறை: *அட்டவணை VII பிரிவு 1-ல் சொல்லப்பட்டுள்ள வாரிசுகள்ஒன்றாக எடுத்துக் கொள்வார்கள். பிரிவு II-ல் முதல் வரிசையில் குறிக்கப்பட்டு உள்ளவர்கள் இரண்டாவது வரிசையில் குறிக்கப்பட்டு உள்ளவர்களை விட முன்னுரிமை பெறுவார்கள். இரண்டாவது வரிசையில் குறிக்கப்பட்டு உள்ளவர்கள் மூன்றாவது வரிசையில் உள்ளவர்களை விட முன்னுரிமை பெறுவார்கள். இதே முறையில் அடுத்தடுத்து உள்ள வரிசைகளில் உள்ளவர்களைவிட முன் வரிசையில் உள்ளவர்கள் முன்னுரிமை பெறுவார்கள்.*

பாகம் II பிரிவு 6 பக்கம் 6

(111)

பகுதி IV
பிரிவு 7
பக்கம் 6

100. பிரிவு I-ல் சொல்லப்பட்டுள்ள முன்னுரிமை வாரிசுகளுக்கிடையே சொத்துப் பங்கீடு: *(1) உயில் எழுதாமல் இறந்துவிட்டவரின் சொத்து பிரிவு I-ல் சொல்லப்பட்டுள்ள முன்னுரிமை வாரிசுகளுக்கிடையே பங்கிடப்படும். அப்போதுதான் விதவையின் பங்கு மற்ற மகன்களுக்குச் சமமாக இருக்கும். அது முதலில் இறந்துவிட்ட மகனையும்; மகனின் மகனையும் உள்ளடக்கும். ஒவ்வொரு மகளின் பங்கும் ஒவ்வொரு மகனின் பங்கிற்கு சமமாக இருக்கும். இவ்விதம் முதலில் இறந்துவிட்ட மகன், எந்த மகனையோ அல்லது மகனின் மகனையோ விட்டுச் செல்லாமல், விதவையை மட்டும் விட்டுவிட்டு இறந்தால், அல்லது மகனின் விதவை விட்டுவிட்டு இறந்தால், முன்னால் இறந்த மகனின் பங்கு இறந்தவர் மகனின் பங்கில் பாதியாக இருக்கும்.*

(2) உட்பிரிவு (I)-ல் சொல்லப்பட்டுள்ள உயில் எழுதாமல் இறந்தவரின் மகன் அவருக்கு முன் இறந்த விட்டிருந்தால் சொத்து கீழ்க்காணும் முறையில் பிரிக்கப்படும்:-

அ) முன்னால் இறந்த அந்த மகன், தான் இறந்தபிறகு மகனையோ அல்லது மகனின் மகனையோ விட்டு விட்டு இறந்தால், அவன் பங்கும் அவன் விதவையின் பங்கும், இறந்த மகனின் பங்கும் சமமாக இருக்கும் வகையில் பிரிக்கப்படும். உயில் எழுதாமல் இறந்தவர் ஒரு மகனை விட்டு விட்டு இறந்திருந்தால் அவனுடைய பங்கும் சமமாக இருக்கும்.

ஆ) முதலில் இறந்துவிட்ட மகனின் மகனுடைய பங்கை உயில் எழுதாமல் இறந்துவிட்டவருக்கு முன்பாக அவன் இறந்துவிட்டால், அவனுடைய விதவை மற்றும் மகன்கள் சமமாகப் பங்கிட்டுக் கொள்வார்கள்.

இ) முதலில் இறந்து விட்ட மகன், தன் விதவையை விட்டு விட்டு இறந்தாலோ, அல்லது மகனின் விதவை அல்லது இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மகன்களின் விதவைகளை விட்டு விட்டு இறந்தாலோ, ஆனால் அவன் ஒரு மகனையோ, மகனின் மகனையோ விட்டுச் செல்லாமலிருந்தால், அது உயில் எழுதாமல் இறந்தவர் இறக்கும்போது உள்ள நிலையாக இருந்தால், முதலில் இறந்த மகனின் சொத்து அவனது விதவை மற்றும் அவனது மகனின் விதவை ஆகியோருக்கிடையே பங்கிடப்படும். அப்போது தான் முதலில் இறந்த மகனின் விதவையின் சொத்து, முதலில் இறந்த மகனின் விதவையின் சொத்தை விட இரண்டு மடங்காக இருக்கும்.

3) இந்த பிரிவிற்காக, ஒரு நபர் ஒன்றுக்கு மேற்பட்ட விதவைகளை விட்டுவிட்டுச் சென்றால் அவர்கள் யாவரும் சொத்தை தங்களுக்குள் சமமாக பங்கிட்டுக் கொள்வார்கள். ஒரு விதவை மட்டும் இருந்தால் அவளுக்கு என்ன பங்கு கிடைக்குமோ அதை அவர்கள் யாவரும் சமமாக பங்கிட்டுக் கொள்வார்கள்.

உதாரணம்

i) உயில் எழுதாமல் இறந்துவிட்டவருக்கு A, B, C, என மூன்று மகன்கள் உயிருடன் இருக்கின்றனர். முதலில் இறந்துவிட்ட D-என்ற மகன் மூலம் 5 பேரன்கள். முதலில் இறந்த உ என்ற மற்றொரு மகன் மூலம் 2 கொள்ளுப் பேரன்கள். A, B, C ஆளுக்கு ஒரு பாகம் எடுத்துக் கொள்வார்கள். D, மற்றும் E-ன் குடும்பம் ஆளுக்கு ஒரு பங்'' எடுத்துக் கொள்ளும். D-யின் பேரன்களும், Eயின் கொள்ளுப் பேரன்களும் அவர்கள் குடும்பத்திற்கு ஒதுக்கிய பங்கில் சமமாக எடுத்துக் கொள்வார்கள். இறந்துவிட்டவரின் ஒவ்வொரு மகனும் ஐந்தில் ஒரு பங்கையும், ஒவ்வொரு பேரனும் 20-ல் ஒரு பங்கையும், கொள்ளுப்பேரன்கள் 10-ல் ஒரு பங்கையும் எடுத்துக் கொள்வார்கள்.

ii) ஒரு விதவையோ அல்லது மகளோ மட்டும்தான் உயில் எழுதாமல் இறந்தவருக்கு ''ாரிசாக உள்ளார்கள் என்று வைத்துக் கொள்வோம். அப்போது அவள் அவருடைய எல்லாச் சொத்தையும் எடுத்துக் கொள்வாள்.

iii) முன்னால் இறந்துவிட்ட மகனின் உயிருடன் உள்ள வாரிசுகள் விதவையும் இரண்டு பேரப் பிள்ளைகளுமாகும். விதவை ஒரு பாகமும், இரண்டு பேரப்பிள்ளைகளும் சேர்ந்து ஒரு பாகமும் எடுத்துக்கொள்கிறார்கள். ஆகையால் பங்கு பெறக்கூடிய சொத்தில் விதவைக்கு பாதியும் ஒவ்வொரு பேரனுக்கும் 1/4 பாகமும் கொடுக்கப்படுகிறது.

iv) உயிருடன் இருக்கும் வாரிசுகள் ஒரு மகளும், விதவையுமாகும். ஆகையால் முன்னால் இறந்துவிட்ட மகனின் சொத்தில் மகளுக்கு ஒரு பாகமும் விதவைக்கு பாதிபாகமும் கிடைக்கும்.

v) உயிருடன் இருக்கும் வாரிசுகள் மகன், மகள் மற்றும் முன்னால் இறந்துவிட்ட மகனின் விதவை. மகனுக்கு ஒரு பாகமும் மகளுக்கு ஒரு பாகமும், முன்னால் இறந்து விட்ட மகனின் விதவை பாதி பாகமும் எடுத்துக் கொள்ளலாம்.

vi) உயிருடன் உள்ள வாரிசுகள் ஒரு மகன், மகள், விதவை, மற்றும் முன்னால் இறந்துவிட்ட மகனின் மகன். மகனுக்கு ஒரு பாகமும், மகளுக்கு ஒரு பாகமும், விதவை மற்றும் முன்னால் இறந்துவிட்ட மகனின் மகனும் சேர்ந்து ஒரு பாகமும் எடுத்து அவர்களுக்கிடையே சமமாகப் பங்கிட வேண்டும்.

vii) உயிருடன் உள்ள வாரிசுகள் :

அ) விதவை ஆ) மகன்

இ) மகள் ஈ) முன்னால் இறந்துவிட்ட மகனின் விதவை,

உ) விதவை மற்றும் முன்னால் இறந்துவிட்ட மற்றொரு மகனின் இரண்டு மகன்கள்.

விதவைக்கு ஒரு பாகம், மகனுக்கு ஒரு பாகம்; மகளுக்கு ஒரு பாகம்; முன்னால் இறந்த மகனின் விதவை (ஈ) பாதி பாகம். அ-வில் குறிக்கப்பட்டுள்ள வாரிசுகளில் அவர் எல்லோருக்கும் சேர்ந்து ஒரு பாகம். பிறகு அவர்களுக்கிடையே அது சமமாகப் பங்கிடப்பட வேண்டும்.

viii) உயிருடன் உள்ள வாரிசுகள் :-

அ) மகன்,

ஆ) முன்னால் இறந்துவிட்ட மகனின் விதவை மற்றும் மூன்று மகன்கள்,

இ) (ஆ)-ல் சொல்லப்பட்டுள்ள முன்னால் இறந்த மகனின் மகனின் விதவை.

மகனுக்கு ஒரு பாகமும், ஆ - இ குறிக்கப்பட்டுள்ள வாரிசுகள் சேர்ந்து ஒரு பாகமும் எடுத்துக் கொள்வார்கள். பின்னால் சொன்ன பாகம் பகிர்ந்து அளிக்கப்பட்டால்தான், விதவை மற்றும் ஆ-ல் சொல்லப்பட்டுள்ள ஒவ்வொரு மகனும், ஒரு பகுதி எடுத்துக் கொண்டு, இ -ல் சொல்லப்பட்டுள்ள விதவை அந்தப் பகுதியில் பாதியும் எடுத்துக் கொள்வார்கள்.

இதன் விளைவாக முன்னால் இறந்து விட்ட மகன் பகிர்ந்து அளிக்கக் கூடிய சொத்தில் பாதி பாகமும், அவரின் முன்னால் இறந்துவிட்ட மகனின் விதவை 9-ல் ஒரு பாகமும், முன்னால் இறந்துவிட்ட மகனின் மூன்ற மகன்கள் 9-ல் ஒரு பாகமும் இறந்துவிட்ட நபரின் பேரில் விதவை 8-ல் ஒரு பாகமும் எடுத்துக் கொள்வார்கள்.

101. பிரிவு II-ல் சொல்லப்பட்டுள்ள முன்னுரிமை வாரிசுகளுக்கிடையே பகிர்ந்து அளிக்கும் முறை : உயில் எழுதாமல் இறந்துவிட்ட நபரின் சொத்துக்கள், 'அட்டவணை VII பிரிவு II-ல் சொல்லப்பட்டுள்ள வரிசையில் உள்ள வாரிசுகள் சமமாக எடுத்துக் கொள்வார்கள்.

(114)

102. பெண் வழியில் யார் வாரிசுகள் : அட்டவணை 7-ல் பிரிவு I அல்லது II-ல் சொல்லப்பட்டுள்ள முன்னுரிமை வாரிசுகள் இல்லை என்றால், இறந்து விட்ட நபரின் ஐந்துதலைமுறைகளுக்கு உட்பட்டபெண் வாரிசுகள் இந்தப் பகுதியில் சொல்லப்பட்டுள்ள விதிமுறை களுக்குட்பட்டு சொத்தை எடுத்துக் கொள்வார்கள்.

பகுதி I
பிரிவு 8
பக்கம் 7

(115)

103. பெண்வழி உறவு வாரிசுகள்: முன்னுரிமை வாரிசுகள் மற்றும் ஆண் வழி வாரிசுகள் இல்லை என்றால் இறந்துவிட்ட நபரின் ஐந்து தலைமுறைக்கு உட்பட்ட பெண்வழி உறவினர்களை இந்தப் பகுதியில் சொல்லியுள்ள விதிமுறைகளுக்குட்பட்டு எடுத்துக் கொள்ளலாம். *பாகம் I பிரிவு 8 பக்கம் 7*

(116)

104. ஆண்வழி உறவுகள் மற்றும் பெண்வழி உறவினர்களுக்கிடையே வாரிசுரிமையை நிர்ணயிக்கும் முறை: ஆண்வழி அல்லது பெண் வழி உறவுகளுக்கிடையே வாரிசுகளை நிர்ணயிக்கக் கீழ்கண்ட விதிமுறைகளைப் பின்பற்ற வேண்டும்:- *பாகம் II பிரிவு 9 பக்கம் 7, 8*

விதி 1: இரண்டு வாரிசுகளில் குறைந்த அல்லது முன் தலைமுறையில்லாத வாரிசுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

விதி 2 : முன்தலைமுறைகள் எண்ணிக்கை சமமாக இருந்தால் அல்லது இல்லாமல் இருந்தால் முன்தலைமுறையில்லாத அல்லது குறைவான முன்தலைமுறைகள் உள்ள வாரிசுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

விதி 3 : பின் தலைமுறைகள் எண்ணிக்கை சமமாக இருந்தால், அல்லது இல்லாதிருந்தால் ஆண் தலைமுறையிலுள்ள வாரிசுக்கு பெண் தலைமுறை வாரிசைவிட முன்னுரிமை அளிக்கப்படும். உயில் எழுதாமல் இறந்துவிட்ட நபரின் தலைமுறையிலிருந்து இது கணக்கிட படவேண்டும். இந்த இரு வாரிசுகளின் தலைமுறைகள் தனித்தனியாகக் கணக்கிடப்பட வேண்டும்.

விதி 4 : இரண்டு தலைமுறைகள் தனித்தனியே பிரிக்கப் பட முடியாத சூழ்நிலை இருந்தால் பெண் வாரிசை விட ஆண் வாரிசுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டும்.

விதி 5 : இரண்டு வாரிசுகளுக்குமிடையே யாரை தேர்ந்தெடுப்பது என்ற பிரச்சினை இருந்தால் இருவருக்கும் சமமாக கொடுக்க வேண்டும்.

உதாரணங்கள்

கீழ்க்காணும் உதாரணங்களில் F மற்றும் M என்பது F- தந்தையையும் M-தாயையும் குறிக்கும். உயில் எழுதாமல் இறந்த நபரின் முன்னோர்களைப் பற்றி குறிப்பிடும்போது இது பொருந்தும். கு மற்றும் ஈ ஆகியவை மகனையும் மகளையும் பொது தலைமுறையிலிருந்து கீழ்நோக்கி வரும்போது மகனையும்

மகளையும் குறிக்கும். MFSS என்பது உயில் எழுதாமல் இறந்து விட்ட நபரின் தாயின் தந்தையின் மகனின் மகனையும் (தாயின் சகோதரரின் மகன்) FDS என்பது தந்தையின் மகளின் மகனையும் (சகோதரியின் மகன்) குறிக்கும்.

i) இங்கு போட்டியிடும் உறவினர்கள் யார் என்றால் (1) SDSS - மகனின் மகளின் மகனின் மகன். 2) FDDS (சகோதரியின் மகளின் மகன்). எண் (1) மேல் தலைமுறை இல்லாத காரணத்தால் எண் (2) விட முன்னுரிமை அளிக்கப்படுகிறது.

ii) போட்டி போடும் வாரிசுகள் யார் என்றால், 1) FDDD - சகோதரியின் மகளின் மகள். 2) MFSSD தாய்வழி மாமாவின் மகனின் மகள். முன்னால் சொல்லப்பட்டுள்ளவர் ஒரே ஒரு தலைமுறையைக் கொண்டு இருப்பதால், பின்னால் சொல்லப்பட்டுள்ளவர் இரண்டு தலைமுறைகளை கொண்டுள்ளதால் முன்னால் சொல்லப்பட்டவருக்கு முன்னுரிமை அளிக்கப்படுகிறது.

iii) போட்டி போடும் உறவினர்கள் யார் என்றால், (1) FDSS சகோதரியின் மகனின் மகன். 2) MFSSD தாய்வழி மாமாவின் மகனின் மகள். முதல் சொன்னவருக்கு ஒரு முன் தலைமுறை இருப்பதால் இரண்டு தலைமுறையுள்ள பின்னால் சொல்லப்பட்டவரைவிட முன்னுரிமை அளிக்கப்படுகிறது.

iv) போட்டி போடும் உறவினர்கள் யார் என்றால் - 1) MFDSS அம்மாவின் சகோதரியின் மகனின் மகன், 2) MFFDS அம்மாவினது அப்பாவின் சகோதரியின் மகன். முன்னால் சொல்லப்பட்டுள்ளவர் இரண்டு முன் தலைமுறைகளைக் கொண்டிருப்பதால் பின்னால் சொல்லப்பட்டுள்ள மூன்று தலைமுறைகளைக் கொண்டுள்ளவரை விட முன்னுரிமை அளிக்கப்படுகிறது.

v) போட்டி போடும் உறவினர்கள் யார் என்றால், (1) MFM - தாயின் தந்தையின் தாய் 2) FFFDSS - தந்தையின் தந்தையின் சகோதரியின் மகனின் மகன். இரண்டு வகையிலும் முன்தலைமுறை சமமாக இருக்கிறது. அதாவது மூன்று; ஆனால் முதலாவதன் கீழ் தலைமுறை கிடையாது. ஆனால் இரண்டாவதன்கீழ் மூன்று கீழ் தலைமுறைகள் இருக்கின்றன. ஆகவே முதலாவது (1) முன்னுரிமை பெறுகிறது.

vi) போட்டிபோடும் உறவினர்கள் யார் என்றால் 1) FMF (தந்தையின் தாயின் தந்தை) 2) MFF (தாயின் தந்தையின் தந்தை). இரண்டிலும் முன் தலைமுறை சமம். பின் தலைமுறை கிடையாது. முதல் நிலையிலேயே இரு வாரிசுகளுக்கும் வித்தியாசம் இருக்கிறது. எண் (1) ஆண் வழி வாரிசு எண் (2) பெண் வழி வாரிசு. ஆகையால் எண் (1)-ற்கு எண் (2) ஐ விட முன்னுரிமை அளிக்கப்படுகிறது.

vii) போட்டி போடும் உறவினர்கள் யார் என்றால் (1) FDSS (சகோதரியின் மகனின் மகன்), 2) FDDS - (சகோதரியின் மகளின் மகன்). இரண்டு பேரும் முன் தலைமுறையிலும் பின் தலைமுறையிலும் சமமாக இருக்கிறார்கள். மூன்றாவது நிலையில் இரண்டு பேருக்கும் வேற்றுமை இருக்கிறது. இந்த நிலையில் எண் (1) - ஆண்வழி வாரிசு, எண் (2) - தந்தையின் தாயின் சகோதரி மகன். முதலில் சொன்னதற்கு முன்னுரிமை அளிக்கப்படுகிறது.

viii) போட்டியிடும் உறவினர்கள் யார் என்றால் :- (1) FMFSS -(தந்தையின் தாயின் சகோதரனின் மகன்), 2) FMFDS - (தந்தையின் தாயின் சகோதரியின் மகன்) . முன்னால் சொல்லப்பட்டதற்கு முன்னுரிமை அளிக்கப்படுகிறது.

ix) போட்டி போடும் உறவினர்கள் யார் என்றால்:- (1) FDDS (சகோதரியின் மகளின் மகன்), 2) FDDD-(சகோதரியின் மகளின் மகன்). முன்னால்சொல்லப் பட்டதற்கு முன்னுரிமை அளிக்கப்படுகிறது.

(117)

105. தலைமுறைகளைக் கணக்கிடுதல் : (1) ஆண் வழி மற்றும் பெண்வழி உறவு முறையில், உறவு முறையை நிர்ணயிக்க மேல்வழி அல்லது கீழ்வழி அல்லது இரண்டும், உயில் எழுதாமல் இருந்த நபரின் தலைமுறையிலிருந்து கணக்கிட வேண்டும்.

பகுதி II
பிரிவு 8
பக்கம் 7

2) உயில் எழுதாமல் இறந்துவிட்ட நபரைக் கொண்டு தான் மேல் மற்றும் கீழ் தலைமுறை நிர்ணயிக்கப்பட வேண்டும்.

3) ஒவ்வொரு தலைமுறையும் ஒரு கட்டமாக மேலோ கீழோ கணக்கிடப்படும்.

* * * * *

உதாரணங்கள்

i) உயில் எழுதாமல் இறந்துவிட்ட நபரின் தந்தையின் தாயின் தந்தை - வாரிசாகக் கருதப்பட இருக்கிறார். அவருக்கு கீழ்வழி தலைமுறை இல்லை. ஆனால் மூன்று முன் தலைமுறைகள் இருக்கின்றன. அவை:- 1) உயில் எழுதாமல் இறந்துவிட்ட நபரின்தந்தை, 2) தந்தையின் தாய், 3) அவளின் தந்தை (வாரிசு).

ii) உயில் எழுதாமல் இறந்துவிட்ட நபரின் தந்தையின் தாயின் தந்தையின் தாய் வாரிசாகக் கருதப்பட இருக்கிறார். அவளுக்குக் கீழ் தலைமுறை கிடையாது. ஆனால் 4-முன் தலைமுறைகள் உண்டு. அவை வரிசைப்படி: 1) உயில் எழுதாமல் இறந்துவிட்ட நபரின் தந்தை, 2) அந்தத் தந்தையின் தாய், 3) அவளின் தந்தை மேலும், 4) அவர் தாய் (வாரிசு).

iii) உயில் எழுதாமல் இறந்துவிட்ட நபரின், மகனின் மகளின் மகனின் புதல்விகள் வாரிசாகக் கருதப்பட இருக்கிறார்கள். அவளுக்கு முன் தலைமுறை கிடையாது. ஆனால் கீழ்க்காணும் வரிசைப்படி நான்கு கீழ் தலைமுறைகள் உண்டு: 1) உயில் எழுதாமல் இறந்துவிட்ட நபரின் மகன், 2) அந்த மகனின் மகள், 3) அவளின் மகன், மற்றும் 4) அவனின் மகள் (வாரிசு).

iv) உயில் எழுதாமல் இறந்துவிட்ட நபரின் தாயின், தந்தையின் தந்தையின் மகளின் மகன் வாரிசாகக் கருதப்பட இருக்கிறார். அவருக்கு மூன்று முன் தலைமுறைகள் உண்டு. முன் தலைமுறை கீழ்க்கண்ட வரிசைமுறையில் கணக்கிடப்படுகிறது. 1) உயில் எழுதாமல் இறந்துவிட்ட நபரின் தாய், 2) அவளின் தந்தை, 3) தந்தையின் தந்தை, மற்றும் 4) இரண்டு பெண்கள் .

கீழ்க்காணும் வரிசைப்படி அவர்கள் கீழ்தலைமுறையைச் சேர்ந்தவர்கள்: 1) பொது தலைமுறையுடைய பெண் - அதாவது தாயின் தந்தையின் தந்தையின், மேலும் 2) அவரின் மகன் (வாரிசு).

(117A)

உயில்வழி அல்லாத முறையில் ஒரு இந்து பெண்ணின் சொத்திற்குள்ள வாரிசுரிமை

பகுதி II
பிரிவு 14
பக்கம் 9

பொது விதிமுறைகள்

106. **ஓர் இந்து பெண்ணின் வாரிசுகள் :** பிரிவு 109A மற்றும் 109Bயில் சொல்லப்பட்டுள்ளவைகளைத் தவிர்த்து உயில் எழுதாமல் இறந்துவிடும் ஓர் இந்துப் பெண்ணின் சொத்து கீழ்க் காணும் முறையில் மாற்ற வேண்டும்.

அ) முதலாவதாக கணவன் மற்றும் குழந்தைகள், முதலில் இறந்துவிட்ட குழந்தையின் குழந்தைகள்;

ஆ) இரண்டாவதாக, உட்பிரிவு (a)யில் சொல்லப்பட்டுள்ள வாரிசுகள் இல்லை என்றால் பிரிவு 109-ல் சொல்லப்பட்டுள்ள வாரிசுகளின் வரிசைப்படி.

(128)

107. **வாரிசுகளுக்கிடையே பங்கைப் பிரிப்பது:** 1) ஓர் இந்துப் பெண் கணவனையும் குழந்தைகளையும் விட்டுவிட்டு இறந்து விட்டால், உயில் எழுதாமல் அவள் விட்ட சொத்துகள் யாவும் அவள் கணவன் மற்றும் குழந்தைகளால் சமமாக பங்கிட்டுக் கொள்ளப்படும்.

பகுதி II
பிரிவு 14
பக்கம் 9

2) ஓர் இந்துப் பெண் உயில் எழுதாமல் இறந்து விட்டால், அவளுடைய சொத்து கணவன் இல்லாமல் குழந்தைகள் மட்டும் இருக்கும்போது, அவள் உயில் எழுதாமல் விட்ட சொத்து அவள் குழந்தைகளால் சமமாகப் பங்கிட்டுக் கொள்ளப்படும்.

பகுதி II
பிரிவு 14
பக்கம் 9

3) ஓர் இந்துப் பெண் உயில் எழுதாமல் இறந்துவிட்டால், அவள் உயிருடன் இருக்கும்போது அவளுடைய எந்த ஒரு பிள்ளையும் குழந்தைகளை விட்டுவிட்டு இறந்துவிட்டிருந்தால் அந்தப் பிள்ளைக்கு என்ன பங்கு கிடைத்திருக்குமோ அந்தப் பங்கை அந்தக் குழந்தைகள் எடுத்துக் கொள்வார்கள்.

(129)

108. **குழந்தைகள் இல்லை என்றால் சொத்து கணவனுக்குக் கிடைக்கும்:** ஓர் இந்துப் பெண் உயில் எழுதாமல் இறந்து விட்டால், அவளுக்குக் குழந்தைகள் இல்லை என்னும் போது அவளுடைய கணவனுக்கு அந்தச் சொத்து கிடைக்கும். அவள் உயிருடன் இருக்கும்போது அவள் பிள்ளை குழந்தைகளை விட்டுவிட்டு இறந்தால் அவர்களுக்குப் பிரிவு 107ன் படி அவள் உயில் எழுதாத சொத்து கிடைக்கும். அந்தக் குழந்தைகளும் இல்லாதபோது அந்த உயில் எழுதாத சொத்து அவள் கணவனுக்குப் போகும்.

(130)

109. பெண்ணின் சொத்துக்கு மற்ற வாரிசுகள்: ஓர் இந்துப் பெண் பிரிவு 107 அல்லது 108-ல் சொல்லப்பட்டுள்ள வாரிசுகள் யாரும் இல்லாமல் இறந்து விட்டால், உயில் எழுதப்படாத அவளுடைய சொத்துக்கள் பின்கண்ட வாரிசுகளுக்குக் கீழ்க்காணும் முறையில் போகும்:-

பகுதி II
பிரிவு 14
பக்கம் 9

1) தாய், தந்தை;

2) கணவனுடைய வாரிசுகள் - கணவர் உயில் எழுதாமல் இறந்துவிட்டால் அவருடைய சொத்துக்கள் யாருக்கு போகுமோ, அந்த வாரிசுகளுக்கு அவருடைய சொத்தாக அவர் உயில் எழுதாமல், மனைவிக்குப் பிறகு இறந்துவிட்டதாகக் கருதிப்போகும்.

3) தாயின் வாரிசுகள் - தன் மகள் இறந்த உடன் அந்தத் தாய் இறந்ததாகக் கருதி, அவர் உயில் எழுதாமல் போனால், அவள் சொத்து யாருக்குப் போகுமோ, அந்த வாரிசுகளுக்கு அதற்குண்டான விதிமுறைகளின் படி போகும்.

4) தந்தையின் வாரிசுகள் - மகள் இறந்தபிறகு அந்தத் தந்தை இறந்ததாகக் கருதி அவன் உயில் எழுதாமல் போனால், அவர் சொத்து யாருக்குப் போகுமோ அந்த வாரிசுகளுக்கு அதற்குண்டான விதி முறைகளின்படி போகும்.

(131)

துறவியின் சொத்துக்கு வாரிசுதாரர்கள்

110. துறவிகளுக்கான விதிகள்: (1) ஒருவர் முற்றிலுமாகவும் முழுவதுமாகவும் துறவு வாழ்க்கை மேற்கொண்டு ஒரு துறவியாகவோ, தவசியாகவோ, நிரந்தர சமய சீடராகவோ மாறினால் இத்தகைய துறவு வாழ்க்கையை மேற்கொண்டபோது உயில் எழுதிவைக்காமல் இறந்தால் எப்படியோ அப்படி அவரது சொத்து அவருடைய வாரிசுதாரர்களுக்கு உரிமை மாற்றிக் கொடுக்கப்படும்.

பகுதி I
பிரிவு 11
பக்கம் 9

2) இத்தகையவர் துறவியானபிறகு வாங்கும் சொத்து அவரது மரணத்திற்குப் பிறகு அவரது உறவினர்களுக்குப் போய்ச் சேராது; மாறாக பின்கண்டபடி உரிமை மாற்றம் செய்யப்படும்:

அ) துறவியானால் அதே துறவி வகையைச் சேர்ந்த ஓர் ஆன்மீக சகோதரருக்குப் போய்ச் சேரும்;

ஆ) தவசியானால் நடைமுறையிலுள்ள வழக்காற்றின்படி அவரது நல்லொழுக்கமுள்ள சீடரைப் போய்ச் சேரும்;

இ) நிரந்தர சமய சீடரானால் அவரது ஆசானைப் போய்ச் சேரும்.

வாரிசுரிமைகள் பற்றிப் பொதுவான விதிமுறைகள்

பாகம் II
பிரிவு 15
பக்கம் 10

111. பாதி ரத்த உறவைவிட முழு ரத்த உறவு முன்னுரிமை பெறுகிறது: உயில் எழுதாமல் இறந்து விட்ட நபருக்கு முழு ரத்த உறவுள்ள உறவினர்கள், பாதி ரத்த உறவுள்ள உறவினர்களைவிட முன்னுரிமை பெறுவார்கள். அவர்களுடைய மற்ற உறவுமுறை சமமாக இருக்கும் போது இது பின்பற்றப்படும்.

உதாரணங்கள்

i) முழு ரத்த உறவுள்ள சகோதரர், பாதி ரத்த உறவுள்ள சகோதரரைவிட முன்னுரிமை பெறுகிறார். ஆனால் பாதி ரத்த உறவுள்ள சகோதரர், முழு ரத்த உறவுள்ள சகோதரரின் மகனைவிட முன்னுரிமை பெறுகிறார். ஏனெனில் சகோதரர், சகோதரரின் மகனை விட நெருங்கிய உறவினர்.

ii) தந்தைவழி பாதி ரத்த உறவு மாமா, தந்தைவழி மாமா வின் மகன் முழு ரத்த உறவாக இருந்தாலும் முன்னுரிமை பெறு கிறார். ஏனெனில் மாமா, மாமன் மகனைவிட நெருங்கிய உறவினர்.

iii) முழு ரத்த உறவுள்ள சகோதரரின் மகள் பாதிரத்த உறவுள்ள சகோதரரின் மகளின் மகளைவிட முன்னுரிமை பெறுகிறாள். ஆனால் பாதி ரத்த உறவுள்ள சகோதரன் மகனின் மகனை அவர் முன்னுரிமை கொள்ள முடியாது, ஏனெனில், பின்னால் சொல்லப்பட்டவர் பிரிவு 104 விதி 4-ன் படி நெருங்கிய உறவின ராக இருப்பதால், அவர் பாதி ரத்த உறவு முறையில் உறவினராக இருந்தாலும் முன்னுரிமை பெறுகிறார்.

(135)

பாகம் II
பிரிவு 24
பக்கம் 11

112. இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட வாரிசுகளிடையே வாரிசுரிமையை வகைப்படுத்தல்

ஒன்றுக்கு மேற்பட்ட வாரிசுகள் உயில் எழுதாமல் இறந்துவிட்ட நபருக்கு ஒன்றாக வாரிசானால் அவர்கள் அந்த சொத்தை -

அ) வேறு வகையாக வெளிப்படையாக சொல்லியிருந் தால் தவிர அவர்கள் ஒவ்வொருவரும் தனித்தனியாகத்தான் எடுத்துக் கொள்வார்கள், குழுவாக எடுத்துக் கொள்ள மாட்டார்கள்.

ஆ) பொது நிலச் சொத்துரிமையாக எடுத்துக் கொள்வார் களே தவிர கூட்டு நிலச் சொத்துரிமையாக எடுத்துக் கொள்ள மாட்டார்கள்.

(136)

113. கருவில் உள்ள குழந்தையின் உரிமை :- உயில் எழுதாமல் இறந்துவிட்ட நபரின் கருவில் இருந்த குழந்தை, பிறகு உயிருடன் பிறந்தால், உயில் எழுதாமல் இறந்தவர் இறப்பதற்கு முன்பாகவே அது பிறந்ததாகக் கருதி உரிய பங்கைப் பெற முடியும். உயில் எழுதாமல் இறந்தவர் இறந்த தேதியிலிருந்தே அந்தக் குழந்தைக்கு அந்த சொத்தில் உரிமை இருந்ததாகக் கருதப்படும்.

(137)

பாகம் III-A
பகுதி III
பிரிவு 16
பக்கம் 14

114. வாரிசுரிமையை ஊகிப்பது: இரண்டு நபர்கள் ஒரே நேரத்தில் இறந்து, யார் முதலில் இறந்தார் என்பதைத் தெளிவாக கண்டுபிடிக்க முடியாத சூழ்நிலை இருந்தால், அதற்கு மாறாக நிரூபிக்கப்பட்டாலன்றி, வயதானவர் முதலில் இறந்ததாகக் கருதப்படும்.

(138)

115. சிலசூழ்நிலைகளில் பிரிவினைச் சட்டம் 1893ஐ அமுல்படுத்தல்: இந்தத் தொகுப்பு அமுலுக்கு வந்த பிறகு உயில் எழுதாமல் இறந்துவிட்ட நபரின் எந்த அசையா சொத்துகளில் உள்ள பங்கு சம்பந்தமாகவும் அல்லது அவர் தனியாக அல்லது கூட்டாக நடத்திக் கொண்டிருந்த வியாபாரத்தில் பங்கு சம்பந்தமாகவும் உயில் எழுதாமல் இறந்துவிட்ட நபரின் மகன், மகனின் மகன் அல்லது மகனின் மகனின் மகன், மற்ற உறவினர்களுடன் சேர்ந்து ஒரு வாரிசுப் பாகப்பிரிவினைக்கு வழக்குப் போட்டால் பிரிவினைச் சட்டம் 1893 (IV of 1893) சட்டத்தை அமுல் படுத்தி ஏற்கனவே பாகப்பிரிவினை நடந்ததாகக் கருதி அவனோ அவளோ குடியிருக்கும் வீட்டுப் பங்கு மாற்றப்பட்டவராகக் கருதி உயில் எழுதாமல் இறந்துவிட்ட நபர் குடும்பம் பிரிக்கப்படாத குடும்பம் எனக் கருதப்படும்.

பாகம் II
பிரிவு 12
பக்கம் 9

(139)

வாரிசுகளைத் தகுதியின்மை ஆக்குதல்

116. உலகைத் துறந்தவர் போன்றோர் தகுதி இழக்கின்றனர்: ஒரு நபர் முழுமையாகவும் இறுதியாகவும் பிரிவு 110 உட்பிரிவு (I)-ன் படி உலகைத் துறந்துவிட்டால் அவர் தன் ரத்த வழி உறவு, திருமண உறவு, மற்றும் தத்து எடுத்த உறவு ஆகியவற்றின்மூலம் எந்த உறவினரிடமிருந்தும் சொத்தை வாரிசாகப் பெறும் தகுதியை இழக்கிறார்.

பாகம் II
பிரிவு 18
பக்கம் 11

(140)

117. கற்பிழந்த மனைவி தகுதியிழக்கிறார்: ஒரு பெண் திருமணத்திற்குப் பிறகு அவளுடைய கணவன் உயிருடன் இருந்தபோது கற்பிழந்திருந்தால், அதை அவன் மன்னித்திருந்தால் தவிர, அவனுடைய சொத்துக்கு வாரிசாக முடியாது. ஆனால் கணவனுடைய சொத்தை வாரிசுரிமையாகப் பெற இதனைக் காரணமாகக் காட்ட முடியாது, ஒரு நீதிமன்ற வழக்கில் அவள் கற்பிழந்தவள் என்பது நிரூபிக்கப்பட்டு, அந்தக் கணவனும் அந்த வழக்கில் சேர்க்கப் பட்டிருந்து, அந்தப் பிரச்சினை குறித்து நீதிமன்றம் தீர்ப்பளித்து, அது பின்னால் மாற்றாமல் இருந்தால்தான் அதனைக் காரணம் காட்டி அவளுக்குச் சொத்துரிமையை மறுக்க முடியும்.

பாகம் II
பிரிவு 19
பக்கம் 1

(141)

118. மறு மணம் செய்துகொள்ளும் சில விதவைகள் தகுதி இழக்கிறார்கள்: முன்னால் இறந்து விட்ட மகனின் விதவை முன்னால் இறந்துவிட்ட மகனின் மகனின் விதவை, தந்தையின் விதவை, சகோதரரின் விதவை, ஆகியோரின் வாரிசுரிமைப் பற்றி தீர்மானிக்கும்போது அவர்களில் எவரேனும் ஏற்கனவே மறுமணம் செய்துக் கொண்டிருந்தால் அத்தகையவர்கள் தகுதியை இழக்கிறார்கள்.

(புதிது)

(142)

119. கொலையாளி தகுதியிழக்கிறான்: ஒரு நபர் ஒரு கொலையை செய்தாலோ அல்லது கொலை செய்ய உடந்தையாக இருந்தாலோ, அவ்வாறு கொலை செய்யப்பட்ட நபரின் சொத்துக்கு வாரிசாக முடியாது அல்லது வேறு எந்த சொத்துக்கும் வாரிசானாலும் அந்த நபரையும் கொலை செய்தாலோ அல்லது கொலைக்கு உடந்தையாக இருந்தாலோ வாரிசாக முடியாது.

பகுதி II
பிரிவு 20
பக்கம் 11

(143)

120. மதமாற்றம் செய்துகொண்டவர்கள் தகுதியிழக்கிறார்கள்: இந்தத் தொகுப்பு வருவதற்கு முன்போ, பின்போ ஓர் இந்து வேறுமதத்திற்கு மாறி விட்ட காரணத்தினால், இந்துவாக நீடிக்காத போது அம்மாதிரி மதமாற்றம் செய்து கொண்ட பிறகு, பிறந்த குழந்தைகள் அவர்களுடைய இந்து சொந்தக்காரர் களிடமிருந்து வாரிசாக சொத்துரிமை பெறமுடியாது. அந்தக் குழந்தைகளோ அல்லது வழித் தோன்றல்களோ வாரிசுரிமையைப் பற்றிப் பரிசீலிக்கப்படும்போது இந்துக்களாக இருந்தால் அப்போது கிடைக்கும்.

பகுதி II
பிரிவு 20
பக்கம் 11

(144)

121. வாரிசுதார் தகுதியிழக்கும்போது வாரிசு உரிமை: இந்தப் பகுதியின் கீழ் யாராவது ஒரு நபர் வாரிசாவ தற்கு தகுதி இழந்துவிட்டால், உயில் எழுதாமல் இறந்து விட்ட நபருக்கு முன்பாகேவ அவர் இறந்துவிட்டதாகக் கரு தப்படும்.

பகுதி II
பிரிவு 22
பக்கம் 11

(145)

122. நோய் மற்றும் குறைபாடுகள் தகுதி நீக்கம் செய்யாது: எந்த நபரும் அவருக்குள்ள வியாதி, குறைபாட, மற்றும் ஊனம், ஆகியவற்றிற்காக வாரிசு உரிமையை இழக்கமாட்டார், இந்தப் பகுதியில் சொல்லப்பட்டுள்ளவைகளுக்குட்பட்டு வேறு எந்த காரணத்திற்காகவும் அவர் வாரிசு உரிமையை இழக்க மாட்டார்.

பகுதி II
பிரிவு 23
பக்கம் 11

(146)

அரசு உறுபொருள்

123. வாரிசுகள் இல்லாத நிலை: உயில் எழுதாமல் இறந்துவிட்ட ஒருவர் இந்தப் பகுதியில் சொல்லப் பட்டுள்ள எந்த ஒரு வாரிசும் இல்லாமல் இறந்துவிட்டால் அவன் அல்லது அவளுடைய சொத்து அரசாங்கத்திற்குப் போகும். ஒரு வாரிசுக்கு என்னென்ன பொறுப்புகளும் கடமைகளும் இருக்கின்றதோ அவைகளுக்குட்பட்டு அரசாங்கம் அந்தச் சொத்தை எடுத்துக் கொள்ளும். பகுதி II பிரிவு 25 பக்கம் 11

(147)

பாகம் III

உயில்வழி வாரிசுரிமை

124. உயில் வழி வாரிசுரிமை : *1)* இந்திய வாரிசுரிமைச் சட்டம் 1925 (XXXIX of 1925) படியும் இந்துக்களை கட்டுப்படுத்தும் வேறு சட்டப்படியும் அவற்றின் விதி முறைகளில் சொல்லியுள்ளபடி ஓர் இந்து தன்னுடைய எந்த சொத்தையும் உயில் மூலமாகவோ, அல்லது வேறு முறையிலோ மாற்றலாம்.

பகுதி III
பிரிவு 1
பக்கம் 12

2) பின்கண்டவை எதுவும் ஓர் இந்துவை அனுமதிக்காது:-

அ) ஜீவனாம்சம் பெற, இந்தத் தொகுதியிலுள்ள விதிமுறைகள் படியோ, அல்லது அமுலிலுள்ள வேறு சட்டத்தின்படியோ, உரிமை பெற்றுள்ளவரை அந்த உரிமை பாதிக்கக்கூடாது.

ஆ) சட்ட ரீதியாக மாற்றக் கூடியவை தவிர, அவனோ அவறோ அந்தச் சொத்தில் எந்த மாற்றமும் செய்யக் கூடாது.

(148)

பாகம் VIII ஜீவனாம்சம்

125. ஜீவனாம்சம் விளக்கப்படுகிறது: இந்தப் பகுதியில் ஜீவனாம்சம் என்பதில் பின்கண்டவை அடங்கும்.

i) எல்லாச் சூழ்நிலைகளிலும், உணவு, உடை, இடம், கல்வி, மருத்துவச் செலவு மற்றும் கவனிப்பு ஆகியவற்றிற்கு ஏற்பாடு செய்தல், மேலும். பாகம் III-A பிரிவு - 3 பக்கம் 2

ii) திருமணமாகாத பெண்ணிருந்தால் அவளின் திருமணத்திற்காக நியாயமான செலவு மற்றும் அதைச் சார்ந்த செலவுகள் செய்தல்.

குடும்ப உறுப்பினர்களைக் காப்பாற்றும் சொந்தப் பொறுப்பு

126. மனைவியைப் பாதுகாத்தல்: (1) இந்தத் தொகுப்பு அமுலுக்கு வருவதற்கு முன்போ அல்லது பின்போ, இந்தப் பிரிவில் சொல்லப்பட்டுள்ள விதிமுறைகளுக்குட்பட்டு, ஓர் இந்து மனைவி தன் கணவனால் அவன் உயிருள்ள வரை பராமரிக்க உரிமை பெற்றுள்ளாள். அவன் காலமான பிறகு அவனுடைய தந்தை அவளைப் பராமரிக்க வேண்டும். பகுதி IV பிரிவு 26 பக்கம் 19, 20

2) தன் கணவனுடன் சேர்ந்து வாழ்ந்தால் மட்டுமே அவள் அம்மாதிரி பராமரிப்பை எதிர்பார்க்க வேண்டும்.

எனினும் பின்கண்ட காரணங்களுக்காக அவள் தனித்து வாழ்ந்தாலும், தன்னுடைய உரிமையைப் பறிகொடுக்க வேண்டியதில்லை:-

அ) அவன் வெறுக்கத்தக்கதொரு நோயினால் பாதிக்கப்பட்டிருத்தல்;

ஆ) தன் மனைவி வாழும் வீட்டிலேயே ஒரு காமக்கிழத்தியை வைத்திருத்தல்;

இ) மிகக் கொடூரக்காரனாக இருந்து அதனால் அவள் அவனுடன் வாழ்வதற்கு தகுந்த பாதுகாப்பு இல்லாதிருத்தல்;

ஈ) அவன் அவளை எந்தக் காரணமுமின்றி, அவளுடைய ஒப்புதலின்றி அல்லது அவளது விருப்பத்திற்கெதிராக அவளைக் கைவிட்டு விடுதல்;

உ) அவன் வேறு மதத்திற்கு மாறி அதனால் தொடர்ந்து இந்துவாக இல்லாமல் இருத்தல்;

ஊ) அவள் தனித்து வாழ வேறு ஏதாவது நியாயமான காரணம் இருத்தல்.

3) ஓர் இந்து மனைவி, அவள் கற்பிழந்து வாழ்ந்தாலும், அல்லது வேறு மதத்திற்கு மாறி இந்துவாக தொடர்ந்து நீடிக்கா விட்டாலும், அவள் கணவனிடமிருந்து பிரிந்து வாழவும், ஜீவனாம்சம் பெறவும் உரிமை இல்லை.

(149)

127. விதவை மருமகளைக் காப்பாற்றும் கடமை: *பிரிவு 126-ன்படி ஒரு மாமனாருக்கு தன் மருமகளைக் காப்பாற்றும் கடமை உள்ளது. ஆனால் அந்த அளவிற்கு அவருக்கு வசதி இருந்தால் மட்டுமே இது நீடிக்கும். மேலும் விதவை மருமகள் தன்னைக் காப்பாற்றிக் கொள்ள தகுந்த சொத்தில்லை என்ற சூழ்நிலையிலும், கணவனுடைய சொத்திலிருந்து தகுந்த ஜீவனாம்சம் பெறக்கூடிய நிலை இல்லை என்றாலும், அல்லது தன் மகனிடமிருந்து அல்லது அவனுடைய சொத்திலிருந்து பெற முடியா விட்டாலும் மட்டுமே மாமனார் காப்பாற்ற வேண்டும். அவள் மறுமணம் செய்துக் கொண்டால் மாமனாருக்குள்ள அத்தகைய கடமை முடிவிற்கு வந்துவிடும்.*

பகுதி III-A பிரிவு 8 பக்கம் 13

(150)

128. குழந்தைகள் மற்றும் வயதான பெற்றோர் பராமரிப்பு: 1)இந்தப் பிரிவில் சொல்லப்பட்டவை களுக்குட்பட்டு ஓர் இந்து தன் சட்ட ரீதியான குழந்தை களையும் அல்லது முறையற்ற திருமணத்தில் பிறந்த குழந்தை களையும் வயதான பெற்றோர்களையும் பராமரிக்கக் கடமைப் பட்டுள்ளார். **புதிது**

2) தான் உரிய வயது வராதவரை, சட்டரீதியாக பிறந்த குழந்தை யும் முறையற்ற திருமணத்தில் பிறந்த குழந்தையும் அவன் அல்லது அவளது தந்தையிடமிருந்து ஜீவனாம்சம் பெற முடியும்.

3) தகுந்த வசதியின்றி இருக்கும் வயதான தந்தை தன் மகனிட மிருந்து ஜீவனாம்சம் பெற முடியும்.

(151)

129. குழந்தைகளைத் தாய் பராமரித்தல்:- ஒரு இந்துப் பெண் தன் சட்ட ரீதியான குழந்தைகளையும் மற்றும் முறையற்ற திருமணத்தில் பிறந்த குழந்தைகளையும் தன் கணவனுக்கு தகுந்த வசதி இல்லாமல், தனக்கு நல்ல வசதி இருந்தால் தன் வாழ்நாள் முழுதும் பராமரிக்கக் கடமைப்பட்டுள்ளாள். **புதிது**

(152)

பகுதி III-A
பிரிவு 5
பக்கம் 12

*130. **தங்களைச் சார்ந்துள்ளவர்களைப் பராமரிக்கும் கடமை வாரிசுகளுக்குண்டு:** 1) பிரிவு 131-ல் சொல்லப்பட்டுள்ளவைகளுக்கு உட்பட்டு, இறந்துவிட்ட ஓர் இந்துவின் வாரிசுகள், அவரிடமிருந்து பெற்ற சொத்துக்களைக் கொண்டு அவரைச் சார்ந்துள்ளவர்களைப் பராமரிக்க வேண்டும்.*

2) இந்தப் பகுதிக்காக, இறந்துவிட்டவரின் கீழ்க்காணும் உறவினர்கள் அவரைச் சார்ந்துள்ளவர்களாகக் கருதப்படுவார்கள்:-

i) *அவரின் தந்தை,*

ii) *அவரின் தாய்,*

iii) *அவரின் விதவை, அவள் மறுமணம் செய்து கொள்ளாமல் இருக்கும் வரை,*

iv) *அவரின் மகன், முன்னால் இறந்துவிட்டவரது மகனின் மகன், முன்னால் இறந்துவிட்ட மகனின் முன்னால் இறந்து விட்ட மகன், அவன் உரிய வயது வராத நிலையில், ஜீவனாம்சம் பெறமுடியாத நிலையில், பேரனைப் பொறுத்து தன்னுடைய அப்பாவின் சொத்திலிருந்து, பேரனின் பேரனைப் பொறுத்து, அவருடைய தந்தையின் சொத்திலிருந்து அல்லது தந்தையின் தந்தையின் சொத்திலிருந்து;*

v) *அவரின் திருமணமாகாத மகள், அவள் திருமணமாகாமல் இருக்கும் வரை;*

vi) *அவரின் திருமணமான மகள்; அவள் தன் கணவனிட மிருந்து ஜீவனாம்சம் பெற முடியாத நிலையில் இருந்தால், அல்லது மகன் இருந்தால் மகனிடமிருந்து அல்லது அவ னுடைய சொத்திலிருந்து ஜீவனாம்சம் பெற முடியாத நிலையில் இருந்தால்;*

vii) *அவருடைய விதவை மகள்;*

கீழ்க்கண்டவர்களிடமிருந்து அவள் ஜீவனாம்சம் பெற முடியாத நிலையில் இருத்தல்:

அ) தன்னுடைய கணவனுடைய சொத்திலிருந்து அல்லது

ஆ) மகன் இருந்தால் மகனிடமிருந்து அல்லது அவன் சொத்தி லிருந்து அல்லது

இ) அவளுடைய மாமனாரிடமிருந்து அல்லது அவளுடைய தந் தையிடமிருந்து அல்லது அவர்கள் இருவருடைய சொத்திலிருந்து,

viii) *அவருடைய மகனின் விதவை அல்லது முன்னால் இறந்து விட்ட மகனின் விதவை, அவர்கள் மறு திருமணம் செய்யாதவரை. அவள் தன் கணவனுடைய சொத்திலிருந்து ஜீவனாம்சம் பெறமுடியாமல் இருந்து, அல்லது அவளுடைய மகன் இருந்தால் அவனிடமிருந்து அல்லது அவனுடைய சொத்திலிருந்து பேரனின் விதவையைப் பொறுத்து, மாமனாரின் சொத்திலிருந்து,*

ix) *அவனுடைய உரிய வயது வராத முறையற்ற திருமணத்தில் பிறந்த குழந்தை, அவன் உரிமை வயது வராத நிலையிலுள்ளவரை.*

x) *அவனின் திருமணமாகாத, முறையற்ற திருமணத்தில் பிறந்த மகள், அவள் திருமணமாகாமல் இருக்கும் வரை.*

(153)

131. தங்களைச் சார்ந்துள்ளவர்களைப் பாதுகாக்க வாரிசுகளின் கடமைக்குள்ள வரம்பு: சார்ந்துள்ள ஒருவர், உயில் வழியோ அல்லது உயில் வழி அல்லாத முறையிலோ இந்தத் தொகுப்பு அமுலுக்கு வந்த பின் ஓர் இந்துவின் சொத்தில் எந்த ஒரு பாகத்தையும் பெறவில்லை என்றால்,

பாகம் III-A
பிரிவு 4
பக்கம் 12

உயில்வழி முறையில் பெற்ற சொத்து இந்தப் பகுதியின் கீழ் அவருக்கோ அல்லது அவளுக்கோ அளிக்கப்பட்டிருக்கக் கூடிய ஜீவனாம்சத்தைவிட சார்ந்துள்ளவர் குறைவாகப் பெற்றால்,

அவன் அல்லது அவள் இந்தப் பகுதியில் சொல்லப்பட்டவைகளுக்குட்பட்டு சொத்தை எடுத்துக் கொண்டவர்களிடமிருந்து ஜீவனாம்சம் பெற உரிமை உண்டு.

ஒவ்வொரு வாரிசின் கடமை அவன் அல்லது அவள் பெற்ற சொத்தின் அளவிற்கு ஏற்ற முறையில் அமையும்.

தானே சார்ந்துள்ளவராக இருக்கும் எவரும், அவனோ அவளோ மற்ற யாருக்கும் தங்கள் பங்கை அளிக்க வேண்டிய அவசியமில்லை. அவனோ அவளோ மற்றவர்களுக்கு பங்களிப்பதின் காரணமாக அவர்களுடைய பங்கு குறைந்துவிட்டால், அதாவது அவர்களுக்குக் கிடைக்கும் ஜீவனாம்சம் குறைந்துவிட்டால்.

(154)

ஜீவனாம்சத் தொகை

132. ஜீவனாம்சத் தொகை: 1) மனைவி, குழந்தைகள் அல்லது வயதான பெற்றோர்களுக்கு எந்த அளவிற்கு ஜீவனாம்சத் தொகை கொடுக்க வேண்டும் என்பதை இந்தப் பகுதியின்படி முடிவு செய்வதற்கு முன் பின்கண்டவற்றைக் கவனத்தில் கொள்ள வேண்டும்:-

பாகம் III-A
பிரிவு 6
பக்கம் 13

அ) அந்த நபர்களின் வாழ்க்கைமுறை மற்றும் அந்தஸ்து;

ஆ) ஜீவனாம்சம் கேட்கும் நபர்களின் நியாயமான தேவைகள்;

இ) தந்தையிடமிருந்து பிரிந்து வந்தால், அவன் அல்லது அவள் அவ்வாறு பிரிந்து வாழ்வதற்கு தகுந்த காரணங்கள் இருக்கின்றனவா;

ஈ) ஜீவனாம்சம் கோரும் நபரின் சொத்து மதிப்பு, அதிலிருந்து வரக்கூடிய வருமானம், ஜீவனாம்சம் கோருபவரின் சொந்த வருமானம் அல்லது மற்ற துறைகளிலிருந்து கிடைக்கும் வருமானம்.

உ) இந்தப் பகுதியின்படி எத்தனை நபர் ஜீவனாம்சம் பெற தகுதியுள்ளவர்கள்.

2) இந்தப் பகுதியின்படி என்ன தொகை ஜீவனாம்சமாகக் கொடுக்கலாம் என்பதை முடிவு செய்ய கீழ்க்காண்பவற்றை கவனத்தில் கொள்ள வேண்டும்:-

அ) இறந்தவருடைய கடனைக் கொடுத்த பிறகு அவர் சொத்தின் நிகர மதிப்பு;

ஆ) சார்ந்துள்ளவர்களுக்கு இறந்தவரின் உயிலில் செய்யப் பட்டுள்ள ஏற்பாடுகள்;

இ) இறந்துவிட்டவரின் வாழ்க்கைமுறை மற்றும் அந்தஸ்து, மற்றும் சார்ந்துள்ளவரின் வாழ்க்கை முறை மற்றும் அந்தஸ்து;

ஈ) அவர்களுக்கிடையேயுள்ள தலைமுறை உறவு முறை;

உ) சார்ந்துள்ளவரின் நியாயமான தேவைகள்;

ஊ) இறந்தவர் மற்றும் சார்ந்துள்ளவரின் முற்கால உறவு முறை;

எ) அவன் அல்லது அவளின் சொத்து மதிப்பு, அதிலிருந்து வரக்கூடிய வருமானம், அவன் அல்லது அவளின் சொந்த வருமானங்கள் அல்லது மற்ற துறை வருமானங்கள்;

ஏ) இந்தப் பகுதியின் கீழ் ஜீவனாம்சம் பெற தகுதியுள்ள சார்ந்துள்ளவர்களின் எண்ணிக்கை;

ஐ) விதவையாக இருந்தால் அவளுடைய நடத்தை.

(155)

133. எவ்வளவு தொகை ஜீவனாம்சமாக அளிப்பது என்பது நீதிமன்றத்தின் விருப்புரிமையைப் பொறுத்தது: 1) பிரிவு 132-உட்பிரிவு (1) அல்லது உட்பிரிவு (2) ஆகியவற்றில் சொல்லப்பட்டுள்ளவைகளில், எது பொருந்துமோ அதைக் கருத்தில் கொண்டு, இந்தப் பாகத்தின் கீழ் ஜீவனாம்சம் ஏதாவது கொடுக்க வேண்டுமா, அப்படி கொடுக்க வேண்டும் என்றால் எவ்வளவு கொடுக்க வேண்டும் என்பதை நீதிமன்றம் முடிவு செய்ய வேண்டும்.

பகுதி III-A
பிரிவு 6 (2)
பக்கம் 13

2) திருமணமாகாதப் பெண்ணுக்கு அளிக்கப்படும் தொகை, இறந்தவர் உயில் எழுதாமல் இறந்துவிட்டால் அவளுக்கு என்ன கிடைத்திருக்குமோ அதில் பாதி அளவாக இருக்கும்.

(156)

134. சூழ்நிலை மாற்றங்களுக்கேற்ப ஜீவனாம்சத் தொகையின் அளவு மாற்றப்படலாம் : இந்தத் தொகுப்பு அமுலுக்கு வருவதற்கு முன்போ பின்போ நீதிமன்றத் தீர்ப்பால் நிர்ணயிக்கப்பட்ட ஜீவனாம்சம் அல்லது ஒப்பந்தத்தால் நிர்ணயிக்கப்பட்ட ஜீவனாம்சம் எதுவாக இருந்தாலும் மாறியுள்ள சூழ்நிலைகளுக்கேற்ப அந்த மாற்றத்தை நியாயப்படுத்துவதாக இருக்க வேண்டும்.

பகுதி III-A
பிரிவு 7 (2)
பக்கம் 14

(157)

135. கடனுக்கு முன் உரிமை: இந்த பாகத்தில் சொல்லப்பட்டுள்ளவைகளுக்குட்பட்டு எந்த வகையானக் கடனாக இருந்தாலும் சார்ந்துள்ளவர்களின் ஜீவனாம்ச கோரிக்கையைவிட அதற்கு முன்னுரிமை அளிக்க வேண்டும்.

பகுதி III-A
பிரிவு 8
பக்கம் 14

(158)

136. சார்ந்துள்ளவர்கள் ஜீவனாம்சம் கோரும் போது அதை இறந்தவரின் சொத்துக்கு முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ அதை பொருட்பிணை பொறுப்பாக்க முடியாது. ஆனால் உயில் மூலமாகவோ, நீதிமன்ற உத்திரவினாலோ அல்லது சார்ந்துள்ளவர் சொத்தின் முழு உரிமையாளர் அல்லது பகுதி உரிமையாளர் செய்துக் கொண்ட ஒப்பந்தத்தின் மூலமாகவோ அம்மாதிரி பொருட்பிணைப் பொறுப்பு ஏற்படுத்தலாம்.

பாகம் III-A
பிரிவு 9
பக்கம் 14

(159)

137. மூன்றாம் நபர் ஜீவனாம்சம் பெற தகுதியுள்ள போது சொத்தை மாற்றுவது: மூன்றாம் நபர் ஒரு சொத்திலிருந்து ஜீவனாம்சம் பெற உரியவராக இருக்கும்போது, அந்த சொத்து முழுமையாகவோ அல்லது அதன் பகுதி மாற்றப்பட்டால் மாற்றம் பெற்றவர் அம்மாதிரியான ஜீவனாம்சத்தை பற்றி தெரிந்திருந்தால் அவருக்கு எதிராக, இந்த தொகுப்பு இயற்றப்படாமலிருந்தால் எந்த அளவுக்கு அந்த சொத்திற்கு எதிராக கோர முடியுமோ அந்த அளவிற்கு கோரலாம்.

(160)

(161)

பாகம் IX - பலதரப்பட்டவைகள்

138. விதிமுறைகள் இயற்றும் அதிகாரம் : 1) இந்தத் தொகுப்பின் நோக்கத்தை நிறைவேற்ற மாநில அரசு விதிமுறைகள் இயற்றலாம்.

2) குறிப்பாக, மேலே சொல்லப்பட்டுள்ள பொதுவான அதிகாரத்திற்கு உட்பட்டு விதிமுறைகளை நிர்ணயிக்கலாம் -

i) புனித முறைத் திருமணங்களைக் குறித்து அவற்றின் என்னென்ன விவரங்கள் புனிதமுறை திருமண பதிவுப் புத்தகத்தில் குறிக்கலாம் என்பதையும், அவற்றைக் குறிக்கும் முறை மற்றும் சூழ்நிலை ஆகியவற்றை நிர்ணயிக்கலாம்;

ii) எந்த இடங்கள் மற்றும் எந்த வகைகள் புனித முறை திருமணங்களைப் பற்றிய விவரங்கள் கட்டாயமாக குறிக்கலாமென்பதையும், அவ்வாறு குறிக்கத் தவறும்போது அவற்றிற்கான தண்டனையும்;

iii) எந்த இடங்களுக்கு திருமணப் பதிவாளர்கள் நியமிக்கப்பட வேண்டும் என்பதையும், அவர்களுடைய கடமை மற்றும் பணிகள்;

iv) இந்து புனித முறை திருமணப் பதிவுப்புத்தகம் மற்றும் இந்து சிவில் திருமண அறிவிப்புப் புத்தகம் ஆகியவற்றை என்ன முறையில் வைக்க வேண்டும் என்பதையும் பிரிவு 12-ன் கீழ் திருமண அறிவிப்பு எவ்வாறு வெளியிடப்படவேண்டும் என்பதையும்;

v) பிரிவு 21-ன்படி எந்த முறை மறு அறிவிப்பு செய்ய வேண்டும் என்பதையும்;

vi) சிவில் திருமணங்களை நடத்த எவ்வளவு கட்டணம் என்பதையும், திருமணப் பதிலாளர் செய்யும் மற்றக் கடமைகளுக்கு என்ன கட்டணம் என்பதையும்;

vii) இந்து புனித முறைத் திருமணம், புத்தகம் மற்றும் இந்து சிவில் திருமணப் புத்தகம் ஆகியவற்றை பார்வை இடுவதற்கும், அதன் நகல்கள் பெறுவதற்கும் என்ன கட்டணம் என்பது பற்றியும்

viii) பிறப்பு, இறப்பு மற்றும் திருமணப் பதிவாளர் ஜெனரலுக்கு, புனித முறை திருமணப் புத்தகம், மற்றும் இந்து சிவில் திருமணப் புத்தகம் ஆகியவற்றை என்ன முறையில் எந்த இடைவெளியில் அனுப்ப வேண்டும் என்பதையும்;

xi) பிரிவு 24-A-ன் படி எந்த நபருக்கு என்ன முறையில் எந்த அதிகாரிக்கு அறிவிப்பு கொடுக்க வேண்டும் என்பது பற்றியும்;

x) தத்து எடுப்பதின் மனுவில் குறிக்க வேண்டிய தகவல்கள்;

xi) தத்து எடுப்பதைக் குறிக்க கட்டணம் எவ்வளவு;

xii) எந்த முறையில் தத்து எடுக்கும் புத்தகம் வைக்கப்பட வேண்டும்;

xiii) தத்து எடுப்பு புத்தகத்தில் உள்ள தகவல்களை எந்த முறையில் அங்கீகரிப்பது.

(161)

139. திருத்தங்களும், சட்ட நீக்கமும்: முதல் அட்டவணையில் 3-வது பத்தியில் சொல்லியுள்ள சட்டங்கள் 4-வது பத்தியில் சொல்லியுள்ள அளவிற்கு திருத்தப்படும். இரண்டாவது அட்டவணையின் 3-வது பத்தியில் சொல்லியுள்ள சட்டங்கள் அதன் 4-வது பத்தியில் சொல்லியுள்ள அளவிற்கு சட்ட நீக்கம் செய்யப்படும்.

(162)

(163)

முதலாவது அட்டவணை

(139 வது பிரிவைப் பார்க்கவும்)

திருத்தங்கள்

ஆண்டு	எண்	குறுகிய தலைப்பு	திருத்தங்கள்
1	2	3	4
1872	III	சிறப்புத் திருமணச் சட்டம், 1872.	1. முகப்புரையில் ''இந்து, பௌத்த, சீக்கிய அல்லது ஜைன மதங்களைச் சார்ந்த நபர்களுக்கு'' என்ற சொற்களை நீக்க வேண்டும். 2. 2வது பிரிவில் ''அல்லது கீழ்வரும் சமயங்களை அதாவது இந்து, பௌத்தம், சீக்கிய அல்லது ஜைன மதங்களைச் சார்ந்த நபர்களுக்கு இடையில்'' என்ற சொற்களை நீக்க வேண்டும். 3. 23, 24வது பிரிவுகளும் ★ ★ ★ ★ மற்றும் 25, 26 பிரிவுகளும் நீக்கப் படுகின்றன.

முதலாவது அட்டவணை

(139 வது பிரிவைப் பார்க்கவும்)

திருத்தங்கள்

ஆண்டு	எண்	குறுகிய தலைப்பு	திருத்தங்கள்
1	*2*	*3*	*4*
1872	III	*சிறப்புத்திருமணச் சட்டம், 1872.*	*1. முகப்புரையில் ''இந்து, பௌத்த, சீக்கிய அல்லது ஜைன மதங்களைச் சார்ந்த நபர்களுக்கு'' என்ற சொற்கள் நீக்கப்பட வேண்டும்.* *2. 2ம் பிரிவில், ''அல்லது, கீழ்வரும் சமயங்களை, அதாவது, இந்து, பௌத்த, சீக்கிய அல்லது ஜைன சமயங்களில் எதையாவது பின் பற்றும் நபர்களுக்கு இடையில்'' என்ற சொற்கள் நீக்கப்பட வேண்டும்.* *3. 23, 24வது பிரிவுகளும் - ஆளுநர் களின் மாகாணங்களில் விவசாய நிலத்திற்கு வாரிசுகளை ஏற்படுத்து கின்றதைத் தவிர, மற்றும் 25வது, 26வது பிரிவுகளும் நீக்கப்படுகின்றன.*

(164)

இரண்டாவது அட்டவணை

(139 வது பிரிவைப் பார்க்கவும்)

தள்ளுபடி செய்யப்படுபவை

ஆண்டு	எண்	குறுகிய தலைப்பு	தள்ளுபடி செய்யப்படும் அளவு
1	2	3	4
		மத்திய சட்டங்கள்	
1866	XXI	சுதேசி மதம் மாறியவர்கள் திருமணகலைப்புச்சட்டம், 1866.	இந்துக்களுக்கு இது பிரயோகிக்கப் படும் வகையில் முழுமையாக தள்ளுபடி செய்யப்படுகிறது. ஏனெனில் இது தற்போதைய சட்டத் தொகுதிக்கு முரணானதாகும்.
1923	XII	இந்து மரபுரிமை (இயலாமை அகற்றப்படுதல்) சட்டம், 1928	முழுமையாக * * * * * *
1929	II	இந்து மரபுரிமை (திருத்தச்) சட்டம், 1929	-do-
1937	XVIII	இந்து பெண்களின் சொத்து உரிமை சட்டம், 1937.	-do-
1946	XIX	இந்து திருமணமான பெண்களின் தனிவசிப்பிடம் மற்றும் பராமரிப்புச் சட்டம், 1946.	-do-
1946	XXVIII	இந்து திருமண இயலாமைகள் அகற்றும் சட்டம், 1946	-do-
		மாநிலச் சட்டங்கள்	
1933	XXI	மதராஸ் நம்பூதிரிச் சட்டம், 1932	V மற்றும் VII ம் பாகங்களில் உள்ளவை தவிர, முழுமையாக.
1933	XXII	மதராஸ் மருமக்கதாயம் சட்டம், 1932.	-do-
1949 (கொல்லம்	IX ஆண்டு)	மதராஸ் அலியசந்தானம் சட்டம், 1949.	-do-
1100	II	திருவிதாங்கூர் நாயர் சட்டம், 1100.	-do-
1100	III	திருவிதாங்கூர் ஈழவச் சட்டம், 1101.	-do-
1101	VI	நாஞ்சில்நாடு வெள்ளாளர் சட்டம், 1101.	-do-
1106	III	திருவிதாங்கூர் மலையாள பிராமணர் சட்டம், 1106.	VII ம் பாகத்தில் உள்ளவை நீங்கலாக, முழுமையாக
1108	VII	திருவிதாங்கூர் க்ஷத்திரியர் சட்டம் 1108	V மற்றும் VII ம் பாகங்களில் உள்ளவை தவிர, முழுமையாக.
1115	VII	திருவிதாங்கூர் கிருஷ்ணவாக மருமக்கத்தாயி சட்டம், 1115.	-do-
1107	VIII	கொச்சி தீயர்கள் சட்டம் 1107.	-do-
1113	XXIX	கொச்சி நாயர் சட்டம், 1113.	-do-
1113	XXXIII	கொச்சி மருமக்கதாயம் சட்டம், 1113.	-do-
1114	XVII	கொச்சி நம்பூதிரி சட்டம், 1114	பாகம் VIIல் உள்ளவை நீங்கலாக, முழுமையாக.
1115	XVII	கொச்சி மருமக்கதாயம் தீயர் சட்டம், 1115.	முழுமையாக.

இரண்டாவது அட்டவணை

(139 வது பிரிவைப் பார்க்கவும்)
தள்ளுபடி செய்யப்படுபவை

ஆண்டு	எண்	குறுகிய தலைப்பு	தள்ளுபடி செய்யப்படும் அளவு
1	2	3	4
1866	XXI	சுதேசி மதம் மாறியவர்களின் திருமணக் கலைப்புச் சட்டம், 1866.	இந்துக்களுக்கு அது பிரயோகமாகின்றவகையில் இந்தசட்டத்தொகுதியின் விதிகளுக்கு முரணானது. முழுமையாக.
1928	XII	இந்து மரபுரிமை (இயலாமையை அகற்றுதல்) சட்டம், 1928.	ஆளுநர்களின் மாகாணங்களில் விவசாய நிலத்திற்கு வாரிசுரிமையை ஏற்படுத்துகின்றதைத் தவிர, முழுமையாக.
1929	II	இந்து மரபுரிமைச் சட்டம் (திருத்தச் சட்டம், 1929.	-do-
1937	XVIII	இந்து பெண்கள் சொத்துரிமைச் சட்டம், 1937.	முழுமையாக.
1946	XIX	இந்து திருமணமான பெண்களின் தனியாக வசிப்பதற்கான உரிமை மற்றும் பராமரிப்புச் சட்டம், 1946.	-do-
1946	XXVIII	இந்து திருமண இயலாமைகள் அகற்றும் சட்டம், 1946.	-do-.

(164)

(165 - 167)

மூன்றாவது அட்டவணை

முதலாவது பிரிவு

(பகுதி 5 (அ) பார்க்கவும்)

சபிண்டா உறவு முறை

பத்தி1		பத்தி2	
1.	மகள்	1.	மகன்
2.	மகளின் மகள்	2.	மகனின் மகன்
3.	மகனின் மகள்	3.	மகளின் மகன்
4.	மகளின் மகனின் மகள்	4.	மகனின் மகனின் மகன்
5.	மகனின் மகனின் மகள்	5.	மகளின் மகனின் மகன்
6.	மகளின் மகளின் மகனின் மகள்	6.	மகனின் மகளின் மகனின் மகன்
7.	மகளின் மகனின் மகனின் மகள்	7.	மகனின் மகனின் மகனின் மகன்
8.	மகனின் மகளின் மகனின் மகள்	8.	மகளின் மகளின் மகனின் மகன்
9.	மகனின் மகனின் மகனின் மகள்	9.	மகளின் மகனின் மகனின் மகன்
10.	தாய்	10.	தகப்பனார்
11.	சகோதரி	11.	சகோதரர்
12.	சகோதரியின் மகள் (மருமகள்)	12.	சகோதரரின் மகன்
13.	சகோதரனின் மகள்	13.	சகோதரியின் மகன்
14.	சகோதரியின் மகனின் மகள்	14.	சகோதரரின் மகனின் மகன்
15.	சகோதரனின் மகனின் மகள்	15.	சகோதரியின் மகனின் மகன்
16.	சகோதரியின் மகளின் மகனின் மகள்	16.	சகோதரரின் மகளின் மகனின் மகன்
17.	சகோதரியின் மகனின் மகனின் மகள்	17.	சகோதரரின் மகனின் மகளின் மகன்
18.	சகோதரரின் மகளின் மகனின் மகள்	18.	சகோதரியின் மகளின் மகனின் மகன்
19.	சகோதரரின் மகனின் மகனின் மகள்	19.	சகோதரியின் மகனின் மகனின் மகன்
20.	தாயாரின் தாய்	20.	தகப்பனாரின் தகப்பனார்
21.	தாயாரின் சகோதரி	21.	தகப்பனாரின் சகோதரர்
22.	தாயாரின் சகோதரியின் மகள்	22.	தகப்பனாரின் சகோதரரின் மகன்
23.	தாயாரின் சகோதரனின் மகள்	23.	தகப்பனாரின் சகோதரியின் மகன்
24.	தாயாரின் சகோதரியின் மகனின் மகள்	24.	தகப்பனாரின் சகோதரரின் மகனின் மகன்
25.	தாயாரின் சகோதரனின் மகனின் மகள்	25.	தகப்பனாரின் சகோதரியின் மகனின் மகன்
26.	தாயாரின் சகோதரியின் மகளின் மகனின் மகள்	26.	தகப்பனாரின் சகோதரரின் மகளின் மகனின் மகன்
27.	தாயாரின் சகோதரியின் மகனின் மகனின் மகள்	27.	தகப்பனாரின் சகோதரரின் மகனின் மகனின் மகன்
28.	தாயாரின் சகோதரரின் மகளின் மகனின் மகள்	28.	தகப்பனாரின் சகோதரியின் மகளின் மகனின் மகன்
29.	தாயாரின் சகோதரரின் மகனின் மகனின் மகள்	29.	தகப்பனாரின் சகோதரியின் மகனின் மகளின் மகன்
30.	தகப்பனாரின் தாயார்	30.	தாயாரின் தந்தை
31.	தகப்பனாரின் சகோதரி	31.	தாயாரின் சகோதரர்
32.	தகப்பனாரின் சகோதரியின் மகள்	32.	தாயாரின் சகோதரரின் மகன்
33.	தகப்பனாரின் சகோதரரின் மகனின் மகள்	33.	தாயாரின் சகோதரியின் மகன்
34.	தகப்பனாரின் சகோதரியின் மகனின் மகள்	34.	தாயாரின் சகோதரரின் மகனின் மகன்
35.	தகப்பனாரின் சகோதரரின் மகனின் மகள்	35.	தாயாரின் சகோதரியின் மகனின் மகன்
36.	தகப்பனாரின் சகோதரியின் மகளின் மகனின் மகள்.	36.	தாயாரின் சகோதரரின் மகளின் மகனின் மகன்.

பத்தி 1	பத்தி 2
37. தகப்பனாரின் சகோதரியின் மகளின் மகனின் மகள்	37. தாயாருடைய சகோதரர் மகனின் மகனுடைய மகன்
38. தகப்பானாரின் சகோதரரின் மகளின் மகனின் மகள்	38. தாயாருடைய சகோதரி மகளின் மகனுடைய மகன்
39. தகப்பனாரின் சகோதரரின் மகளின் மகனின் மகள்	39. தாயாருடைய சகோதரி மகனுடைய மகனின் மகன்
40. தகப்பனாருடைய தாயாரின் தாயார்.	40. தகப்பனாருடைய தகப்பனாரின் தகப்பனார்.
41. தகப்பனாருடைய தாயாருடைய சகோதரி	41. தகப்பனாருடைய தகப்பனாரின் சகோதரர்
42. தகப்பனாருடைய தாயாரின் சகோதரியின் மகள்	42. தகப்பனாருடைய தகப்பனாரின் சகோதரருடைய மகன்
43. தகப்பனாருடைய தாயாரின் சகோதரரின் மகள்	43. தகப்பனாருடைய தகப்பனாரின் சகோதரியின் மகன்
44. தகப்பனாருடைய தாயாரின் சகோதரியின் மகனின் மகள்	44. தகப்பனாருடைய தகப்பனாரின் சகோதரர் மகனுடைய மகன்
45. தகப்பனாருடைய தாயாரின் சகோதரரின் மகனின் மகள்	45. தகப்பனாருடைய தகப்பனாரின் சகோதரியின் மகனுடைய மகன்
46. தகப்பனாருடைய தாயாரின் சகோதரியின் மகளுடைய மகனின் மகள்	46. தகப்பனாருடைய தகப்பனாரின் சகோதரர் மகளுடைய மகனின் மகன்
47. தகப்பனாருடைய தாயாரின் சகோதரியின் மகனுடைய மகனின், மகனின் மகள்	47. தகப்பனாருடைய தகப்பனாரின் சகோதரர் மகனுடைய மகனின் மகன்
48. தகப்பனாருடையதாயாரின்சகோதரர் மகளின் மகனின் மகள்	48. தகப்பனாருடைய தகப்பனாரின் சகோதரி மகளின் மகனுடைய மகன்
49. தகப்பனாருடையதாயாரின்சகோதரர் மகனுடைய மகனின் மகள்	49. தகப்பனாருடைய தகப்பனாரின் சகோதரி மகனுடைய மகனின் மகன்
50. தகப்பனாருடைய தகப்பனாரின் தாயார்	50. தகப்பனாருடைய தாயாரின் தகப்பனார்
51. தகப்பனாருடைய தகப்பனாரின் சகோதரி	51. தகப்பனாருடையதாயாரின்சகோதரர்
52. தகப்பனாருடைய தகப்பனாரின் சகோதரி மகனின் மகள்	52. தகப்பனாருடையதாயாரின்சகோதரர் மகன்
53. தகப்பனாருடைய தகப்பனாரின் சகோதரர் மகள்	53. தகப்பனாருடைய தாயாரின் சகோதரி மகன்
54. தகப்பனாருடைய தகப்பனாரின் சகோதரி மகனின் மகள்.	54. தகப்பனாருடையதாயாரின்சகோதரர் மகனுடைய மகன்
(166)	
55. தகப்பனாருடைய தகப்பனாரின் சகோதரரின் மகனின் மகள்.	55. தகப்பனாருடைய தாயாரின் சகோதரியின் மகனுடைய மகன்
56. தகப்பனாருடைய தகப்பனாரின் சகோதரியின் மகளின் மகனின் மகள்	56. தகப்பனாருடைய தாயாரின் சகோதரரின் மகளுடைய மகனின் மகன்
57. தகப்பனாருடையதகப்பனாரின்சகோதரியின் மகனுடைய மகனின் மகள்	57. தகப்பனாருடைய தாயாரின் சகோதரரின் மகனுடைய மகனின் மகன்

பத்தி 1	பத்தி 2
58. தகப்பனாருடைய தகப்பனாரின் சகோதரரின் மகளுடைய மகனின் மகள்	58. தகப்பனாருடைய தாயாரின் சகோதரியின் மகளுடைய மகனின் மகன்.
59. தகப்பனாருடைய தகப்பனாரின் சகோதரரின் மகனுடைய மகனின் மகள்	59. தகப்பனாருடைய தாயாரின் சகோதரியின் மகனுடைய மகனின் மகன்
60. தகப்பனாருடைய தாயாரின் தாயாருடைய தாயார்.	60. தகப்பனாருடைய தகப்பனாரின் தகப்பனாருடைய தகப்பனார்.
61. தகப்பனாருடைய தாயாரின் தாயாருடைய சகோதரி	61. தகப்பனாருடைய தகப்பனாரின் தகப்பனாரின் சகோதரர்
62. தகப்பனாருடைய தாயாரின் தாயாருடைய சகோதரியின் மகள்	62. தகப்பனாருடைய தகப்பனாரின் தகப்பனாருடைய சகோதரர் மகன்
63. தகப்பனாருடைய தாயாரின் தாயாருடைய சகோதரரின் மகள்	63. தகப்பனாருடைய தகப்பனாரின் தகப்பனாருடைய சகோதரி மகன்
64. தகப்பனாருடைய தாயாரின் தாயாருடைய சகோதரியின் மகனின் மகள்	64. தகப்பனாருடைய தகப்பனாரின் சகோதரருடைய சகோதரரின் மகனுடைய மகன்
65. தகப்பனாருடைய தாயாரின் தாயாருடைய சகோதரரின் மகனின் மகள்	65. தகப்பனாருடைய தகப்பனாரின் தகப்பனார் சகோதரியின் மகனின் மகன்
66. தகப்பனாருடைய தாயாரின் தாயாருடைய சகோதரியின் மகளுடைய மகனின் மகன்	66. தகப்பனாருடைய தகப்பனாரின் தகப்பனாருடைய சகோதரருடைய மகளுடைய மகனின் மகன்
67. தகப்பனாருடைய தாயாரின் தாயாருடைய சகோதரியின் மகனுடைய மகனின் மகள்	67. தகப்பனாருடைய தகப்பனாரின் தகப்பனாருடைய சகோதரரின் மகனுடைய மகனின் மகன்.
68. தகப்பனாருடைய தாயாரின் தாயாருடைய சகோதரரின் மகளுடைய மகனின் மகள்	68. தகப்பனாருடைய தகப்பனாரின் தகப்பனாருடைய சகோதரியின் மகளுடைய மகனின் மகன்
69. தகப்பனாருடைய தாயாரின் தாயாருடைய சகோதரரின் மகனுடைய மகனின் மகள்	69. தகப்பனாருடைய தகப்பனாரின் தகப்பனாருடைய சகோதரியின் மகனுடைய மகனின் மகன்
70. தகப்பனாருடைய தாயாரின் தகப்பனாருடைய தாயார்	70. தகப்பனாருடைய தகப்பனாரின் தாயாரின் தகப்பனார்.
71. தகப்பனாருடைய தாயாரின் தகப்பனாருடைய சகோதரி	71. தகப்பனாரின் தகப்பனாருடைய தாயாரின் சகோதரர்
72. தகப்பனாருடைய தாயாரின் தகப்பனாருடைய சகோதரியின் மகள்	72. தகப்பனாரின் தகப்பனாருடைய தாயாரின் சகோதரருடைய மகன்
73. தகப்பனாருடைய தாயாரின் தகப்பனாருடைய சகோதரரின் மகள்	73. தகப்பனாரின் தகப்பனாருடைய தாயாரின் சகோதரி மகன்
74. தகப்பனாருடைய தாயாரின் தகப்பனாருடைய சகோதரியின் மகனின் மகள்	74. தகப்பனாருடைய தகப்பனாரின் தாயாரின் சகோதரரின் மகனுடைய மகன்

பத்தி 1	பத்தி 2
75. தகப்பனாருடைய தாயாரின் தகப்பனாருடைய சகோதரரின் மகனுடைய மகள்	75. தகப்பனாருடைய தகப்பனாரின் தாயாருடைய சகோதரியின் மகனுடைய மகன்.
76. தகப்பனாருடைய தாயாரின் தகப்பனாருடைய சகோதரியின் மகளுடைய மகனின் மகள்	76. தகப்பனாருடைய தகப்பனாரின் தாயாருடைய சகோதரரின் மகளுடைய மகனின் மகன்.
77. தகப்பனாருடைய தாயாரின் தகப்பனாருடைய சகோதரியின் மகனுடைய மகனின் மகள்	77. தகப்பனாருடைய தகப்பனாரின் தாயாருடைய சகோதரரின் மகனுடைய மகனுடைய மகன்.
78. தகப்பனாருடைய தாயாரின் தகப்பனாருடைய சகோதரரின் மகனுடைய மகனின் மகள்	78. தகப்பனாருடைய தகப்பனாரின் தாயாருடைய சகோதரியின் மகளுடைய மகனின் மகன்.
79. தந்தையின் தாயாருடைய தந்தையின் சகோதரரின் மகனின் மகனுடைய மகள்.	79. தகப்பனாருடைய தகப்பனாரின் தாயாருடைய மகனின் மகன்.
80. தந்தையின் தந்தையினுடைய தாயாரின் தாயார்.	80. தகப்பனாருடைய தாயாரின் தகப்பனாரின் தகப்பனார்.
81. தந்தையின் தந்தையுடைய தாயாரின் சகோதரி.	81. தந்தையின் தாயாரின் தந்தையினுடைய சகோதரன்.
82. தந்தையின் தந்தையினுடைய தாயாரின் சகோதரியின் மகள்	82. தந்தையின் தாயாரின் தந்தையினுடைய சகோதரன் மகன்.
83. தந்தையின் தந்தையினுடைய தாயாரின் சகோதரனின் மகள்	83. தந்தையின் தாயாருடைய தந்தையின் சகோதரி மகன்
84. தந்தையின் தந்தையினுடைய தாயாரின் சகோதரி மகனின் மகள்	84. தந்தையின் தாயாருடைய தந்தையின் சகோதரரின் மகனுடைய மகன்
85. தந்தையின் தந்தையினுடைய தாயாரின் சகோதரனின் மகனுடைய மகள்	85. தந்தையின் தாயாருடைய தந்தையின் சகோதரி மகனின் மகன்.
86. தந்தையின் தந்தையினுடைய தாயாரின் சகோதரி மகனுடைய மகனின் மகள்.	86. தந்தையின் தாயாருடைய தந்தையின் சகோதரனின் மகளுடைய மகனின் மகன்.
87. தந்தையின் தந்தையினுடைய தாயாரின் சகோதரி மகனின் மகனுடைய மகள்.	87. தந்தையின் தாயாருடைய தந்தையின் சகோதரனின் மகனுடைய மகனின் மகன்.
88. தந்தையின் தந்தையினுடைய தாயாரின் சகோதரனின் மகனின் மகனுடைய மகள்.	88. தந்தையின் தாயாருடைய தந்தையின் சகோதரியின் மகளுடைய மகனின் மகன்.
89. தந்தையின் தந்தையினுடைய தாயாரின் சகோதரருடைய மகனின் மகனுடைய மகள்.	89. தந்தையின் தாயாரின் தந்தையுடைய சகோதரி மகனின் மகனுடைய மகன்.
90. தந்தையின் தந்தையினுடைய தந்தையின் தாயார்.	90. தந்தையின் தாயாருடைய தாயாரின் தந்தை.

பத்தி 1	பத்தி 2
91. தந்தையின் தந்தையினுடைய தந்தையின் சகோதரி	91. தந்தையின் தாயாருடைய தாயாரின் சகோதரர்
92. தந்தையின் தந்தையினுடைய தந்தையின் சகோதரி மகள்	92. தந்தையின் தாயாருடைய தாயாரின் சகோதரனின் மகன்
93. தந்தையின் தந்தையினுடைய தந்தையின் சகோதரரின் மகள்	93. தந்தையின் தாயாருடைய தாயாரின் சகோதரி மகன்
94. தந்தையின் தந்தையினுடைய தந்தையின் சகோதரி மகனின் மகள்	94. தந்தையின் தாயாரின் தாயாரின் சகோதரருடைய மகனின் மகன்
95. தந்தையின் தந்தையினுடைய தந்தையின் சகோதரர் மகனின் மகள்	95. தந்தையின் தாயாரின் தாயாருடைய சகோதரி மகனின் மகன்
96. தந்தையின் தந்தையினுடைய தந்தையின் சகோதரியின் மகளுடைய மகனின் மகள்	96. தந்தையின் தாயாரின் தாயாருடைய சகோதரரின் மகனின் மகனுடைய மகன்
97. தந்தையின் தந்தையினுடைய தந்தையின் சகோதரி மகனின் மகனுடைய மகள்	97. தந்தையின் தாயாருடைய தாயாரின் சகோதரருடைய மகனின் மகனுடைய மகனின் மகன்
98. தந்தையின் தந்தையினுடைய தந்தையின் சகோதரர் மகளின் மகனுடைய மகள்	98. தந்தையின் தாயாருடைய தாயாரின் சகோதரியின் மகளுடைய மகனின் மகன்
99. தந்தையின் தந்தையினுடைய தந்தையின் சகோதரர் மகனின் மகனுடைய மகள்	99. தந்தையின் தாயாருடைய தாயாரின் சகோதரி மகனுடைய மகனின் மகன்
100. கணவரின் சகோதரனுடைய விதவை	100. கணவரின் சகோதரர் மகன்
101. கணவரின் சகோதரருடைய மகனின் விதவை	101. கணவரின் தந்தையின் சகோதரரின் மகன்
102. கணவரின் சகோதரரின் மகனுடைய மகனின் விதவை.	102. கணவரின் தந்தையின் தந்தையினுடைய மகன்

* வரிசை எண் 100ம், 101ம், 102ம் டாக்டர் அம்பேத்கரால் அவருடைய சொந்தக் கையெழுத்தினாலேயே எழுதி சேர்க்கப்பட்டது. - ஆ-ர்.

168

இரண்டாவது பிரிவு

தடை செய்யப்பட்ட உறவு முறையின் படிநிலைகள்

(பகுதி 5 (பி) பார்க்கவும்)

பத்தி 1	பத்தி 2
1. தாயார்	1. தந்தை
2. தந்தையின் விதவை (மாற்றாந்தாய்)	2. தாயாரின் கணவர் (மாற்றுத் தந்தை)
3. தாயாரின் தாயார்	3. தந்தையின் தந்தை
4. தாயாரின் தகப்பனாரின் விதவை (மாற்றாந்தாய் பாட்டி)	4. தந்தையின் தாயாரின் கணவர் (மாற்றுத் தாத்தா)
5. தாயாரின் தாயாருடைய தாயார்	5. தந்தையின் தந்தையினுடைய தந்தை
6. தாயாரின் தாயாருடைய தந்தையின் விதவை (மாற்றாந்தாயின் தாயின் பாட்டி)	6. தந்தையினுடைய தந்தையின் தாயாரின் கணவர் (மாற்றுத் தாத்தாவின் தாத்தா)
7. தாயாரின் தந்தையின் தாயார்	7. தந்தையின் தாயாரின் தந்தை
8. தாயாரின் தந்தையுடைய தந்தையின் விதவை (மாற்றாந்தாயின் தாயின் பாட்டி)	8. தந்தையின் தாயாருடைய தாயாரின் கணவர் (மாற்றுத் தாத்தாவின் தாத்தா)
9. தந்தையின் தாயார்	9. தாயாரின் தந்தை
10. தந்தையினுடைய தந்தையின் விதவை (மாற்றாந்தாய் பாட்டி)	10. தாயாருடைய தாயாரின் கணவர் (மாற்றுத் தாத்தா)
11. தந்தையின் தாயாரின் தாயார்	11. தாயாருடைய தந்தையின் தந்தை
12. தந்தையின் தாயாரின் தந்தையின் விதவை (மாற்றாந்தாயின் தாயாரின் பாட்டி)	12. தாயாருடைய தந்தையின் தாயாருடைய கணவர் (மாற்றுத் தாத்தாவின் தாத்தா)
13. தந்தையினுடைய தந்தையின் தாயார்	13. தாயாருடைய தாயாரின் தந்தை
14. தந்தையின் தந்தையினுடைய தந்தையின் விதவை (மாற்றாந்தாயின் தாயாரின் பாட்டி)	14. தாயின் தாயாருடைய தாயின் கணவர் (மாற்றுத் தாத்தாவின் தாத்தா)
15. மகள்	15. மகன்
16. மகனின் விதவை	16. மகளின் கணவர்
17. மகளின் மகள்	17. மகனுடைய மகன்
18. மகளுடைய மகனின் விதவை	18. மகளுடைய மகளின் கணவர்
19. மகனுடைய மகள்	19. மகளுடைய மகன்
20. மகனுடைய மகனின் விதவை	20. மகளுடைய மகளின் கணவன்
21. மகளுடைய மகளின் மகள்	21. மகனுடைய மகனின் மகன்
22. மகளுடைய மகளின் மகனின் விதவை	22. மகனுடைய மகனின் மகளுடைய கணவர்
23. மகளுடைய மகனின் மகள்	23. மகனுடைய மகளின் மகன்
24. மகளுடைய மகனின் மகனுடைய விதவை	24. மகனுடைய மகளுடைய மகளின் கணவர்

பத்தி 1	பத்தி 2
25. மகனுடைய மகளின் மகள்	25. மகளுடைய மகனின் மகன்
26. மகனுடைய மகனின் மகனுடைய விதவை	26. மகளுடைய மகனின் மகளுடைய கணவர்
27. மகனுடைய மகனின் மகள்	27. மகளுடைய மகளின் மகன்
28. மகனுடைய மகனின் மகனுடைய விதவை	28. மகளுடைய மகளின் மகளுடைய கணவர்
29. சகோதரி	29. சகோதரன்
30. சகோதரி மகள்	30. சகோதரனின் மகன்31. சகோதரியின் மகன்
31. சகோதரனின் மகள்	
32. தாயாரின் சகோதரி	32. தாயாரின் சகோதரன்
33. தந்தையின் சகோதரி	33. தந்தையின் சகோதரர்
34. தந்தையின் சகோதரரின் மகள்	34. தந்தையின் சகோதரர் மகன்
35. தாயாரின் சகோதரி மகள்	35. தாயாரின் சகோதரி மகன்

(169)

நான்காவது அட்டவணை

(12-வது பகுதியைப் பார்க்க)

திருமணம் குறித்த அறிவிப்பு

.... இந்து தொகுப்புச் சட்டத்தின் IIம் பாகத்தின் கீழ் ....மாவட்டத்திற்கான இந்து திருமணங்களின் பதிவாளர் .... அவர்களுக்கு

எங்களுக்கு இடையில், கீழே கொடுக்கப்பட்டுள்ள தேதியிலிருந்து மூன்று மாதங்களுக்குள் இந்து தொகுப்புச் சட்டத்தின் IIம் பாகத்தின் கீழ் சிவில் திருமணம் நடைபெறவிருக்கிறது என்று இதன் மூலம் நாங்கள் அறிவிப்பு செய்கிறோம்.

பெயர்கள்	நிலை	பதவி அல்லது தொழில்	வயது	குடியிருக்கும் இடம்	அங்கு வசித்து வந்துள்ள காலம்
A B	திருமணமாகாதவர் மனைவியை இழந்தவர் மணவிலக்குப் பெற்றவர்	நில உடைமையாளர்	.....	......	.....
C D	கன்னிப் பெண் விதவை	.....	.....	......	.....

சான்று கூறுகிறோம், தேதி .... மாதம்....................... ஆண்டு

(ஒப்பம்) A B

CD

மூன்றாவது அட்டவணை

(12-வது பகுதி பார்க்கவும்)

திருமண அறிவிப்பு

இந்து தொகுப்புச் சட்டத்தின் II-ம் பாகத்தின் கீழ், ... மாவட்டத்தின் இந்து திருமணங்களின் பதிவாளர் .... அவர்களுக்கு.

இந்து தொகுப்புச் சட்டத்தின் II-ம் பாகத்தின் கீழ் எங்களுக்கு இடையில் இங்கு கொடுக்கப்பட்டுள்ள தேதியிலிருந்து மூன்று மாதங்களுக்குள் திருமணம் நடைபெற உத்தேசிக்கப்பட்டுள்ளது என்று இதன் மூலம் நாங்கள் அறிவிப்புக் கொடுக்கிறோம்.

பெயர்கள்	நிலை	தகுதி அல்லது தொழில்	வயது	குடியிருக்கும் இடம்	வசித்துவரும் காலம்
ஏபி	திருமணமாகாதவர் மனைவியை இழந்தவர் மண விலக்குப் பெற்றவர்	நில உடைமையாளர்	....	.....	.....
சிடி	கன்னி விதவை	....	....	....	.....

சாட்சிகள் தேதி............ மாதம் .... ஆண்டு

(ஒப்பம்) ஏபி
சிடி

(170)

ஐந்தாவது அட்டவணை

(17-வது பகுதி பார்க்கவும்)

மணமகன் செய்ய வேண்டிய பிரகடனம்

ஏ.பி. ஆகிய நான் கீழ்வருமாறுப் பிரகடனம் செய்கிறேன்:-

1. நான் தற்பொழுது திருமணமாகாதவன் (அல்லது மனைவியை இழந்தவன், நிலைமைக் கேற்ப).

2. நான் இந்து மதத்தைச் சேர்ந்தவன் (அல்லது புத்தமதம், சீக்கிய மதம், அல்லது ஜைன மதம், நிலைமைக்கேற்ப).

3. எனக்கு ...... வயது நிறைவெய்தியுள்ளது.

4. நான் சிடிக்கு (மணமகள்) இந்து தொகுப்புச் சட்டத்தின் II-ம் பாகத்தில் தடை செய்யப்பட்டுள்ள உறவு முறையின் படிநிலைகளுக்கு உட்பட்ட உறவுக் காரனில்லை.

(மணமகன் 21 வயதைப் பூர்த்தி செய்யாத போது) :

5. எனக்கும் சிடிக்கும் இடையில் திருமணம் நடைபெறுவதற்கு **எம்என்** அதாவது எனது தந்தையுடைய (அல்லது பாதுகாவலர், எதார்த்த நிலைமையின்படி) அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அது ரத்துசெய்யப்படவில்லை).

6. இந்தப் பிரகடனத்தில் கூறியுள்ளவை எவையாவது பொய்யாக இருக்குமேயானால், அல்லது உண்மை என்று நம்பப்பட முடியாமல் இருக்குமானால், நான் சிறை தண்டனைப் பெறுவதற்கு உரியவனாவேன், மற்றும் அபராதமும் விதிக்கப் பெறுவதற்குரியவன் என்பதை நான் அறிவேன்.

(ஒப்பம்) ஏ.பி. (மணமகன்)

மணமகள் செய்ய வேண்டிய பிரகடனம்

சிடி ஆகிய நான் கீழ்வருமாறு பிரகடனம் செய்கிறேன்:-

1. தற்பொழுது நான் திருமணமாகாதவள் (அல்லது விதவை, எதார்த்த நிலைமையின்படி).

2. நான் இந்து மதத்தைச் சேர்ந்தவள் (அல்லது புத்த மதம், சீக்கிய மதம், அல்லது ஜைனமதம், எதார்த்த நிலைமையின்படி).

3. எனக்கு........... வயது நிறைவெய்தியுள்ளது.

4. நான், இந்து தொகுப்புச் சட்டத்தின் II-ம் பாகத்தில் தடை செய்யப்பட்டுள்ள உறவுமுறைக்குள் வரும் அளவில் **ஏ.பி.க்கு** *(மணமகனுக்கு) உறவினர் அல்ல (மணமகள் 21 வயதைப் பூர்த்தி செய்யாத நிலையில், அவள் ஒரு விதவையாக இருந்தாலொழிய).*

5. எனக்கும் **ஏபிக்கும்** *இடையில் நடைபெறவுள்ள திருமணத்திற்கு எனது தந்தை* **ஓ.பி.***யினுடைய (அல்லது பாதுகாவலர், எதார்த்த நிலைமையின்படி) சம்மதம் வழங்கப்பட்டுள்ளது, அது ரத்து செய்யப் படவில்லை).*

6. இந்தப் பிரகடனத்தில் ஏதாவது கூற்று பொய்யாக இருந்தால், மற்றும் அத்தகைய கூற்றைத் தெரிவிக்கும்போது அது பொய் யென்று அறிந்திருந்தாலோ அல்லது நம்பியிருந்தாலோ, அல்லது அது உண்மையல்லவென்று தெரிந்திருந்தாலோ, நான் சிறைத் தண்டனை பெறுவதற்கும், அபராதம் விதிக்கப்படுவதற்கும் உரியவனாவேன் என்பதை அறிந்துள்ளேன்.

(ஒப்பம்) **சி.டி.** *(மணமகள்)*

(170)

ஐந்தாவது அட்டவணை

(17-வது பகுதி பார்க்கவும்)

மணமகன் செய்ய வேண்டிய பிரகடனம்

ஏ.பி. ஆகிய நான் கீழ்வருமாறுப் பிரகடனம் செய்கிறேன்:-

1. நான் தற்பொழுது திருமணமாகாதவன் (அல்லது மனைவியை இழந்தவன், நிலைமைக் கேற்ப).

2. நான் இந்து மதத்தைச் சேர்ந்தவன் (அல்லது புத்தமதம், சீக்கிய மதம், அல்லது ஜைன மதம், நிலைமைக்கேற்ப).

3. எனக்கு ...... வயது நிறைவெய்தியுள்ளது.

4. நான் சிடிக்கு (மணமகள்) இந்து தொகுப்புச் சட்டத்தின் II-ம் பாகத்தில் தடை செய்யப்பட்டுள்ள உறவு முறையின் படிநிலைகளுக்கு உட்பட்ட உறவுக் காரனில்லை.

(மணமகன் 21 வயதைப் பூர்த்தி செய்யாத போது) :

5. எனக்கும் **சிடிக்கும்** இடையில் திருமணம் நடைபெறுவதற்கு **எம்என்** அதாவது எனது தந்தையுடைய (அல்லது பாதுகாவலர், எதார்த்த நிலைமையின்படி) அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அது ரத்துசெய்யப்படவில்லை).

6. இந்தப் பிரகடனத்தில் கூறியுள்ளவை எவையாவது பொய்யாக இருக்குமேயானால், அல்லது உண்மை என்று நம்பப்பட முடியாமல் இருக்குமானால், நான் சிறை தண்டனைப் பெறுவதற்கு உரியவனாவேன், மற்றும் அபராதமும் விதிக்கப் பெறுவதற்குரியவன் என்பதை நான் அறிவேன்.

(ஒப்பம்) ஏ.பி. (மணமகன்)

மணமகள் செய்ய வேண்டிய பிரகடனம்

சிடி ஆகிய நான் கீழ்வருமாறு பிரகடனம் செய்கிறேன்:-

1. தற்பொழுது நான் திருமணமாகாதவள் (அல்லது விதவை, எதார்த்த நிலைமையின்படி).

2. நான் இந்து மதத்தைச் சேர்ந்தவள் (அல்லது புத்த மதம், சீக்கிய மதம், அல்லது ஜைனமதம், எதார்த்த நிலைமையின்படி).

3. எனக்கு........... வயது நிறைவெய்தியுள்ளது.

*4. நான், இந்து தொகுப்புச் சட்டத்தின் II-ம் பாகத்தில் தடை செய்யப்பட்டுள்ள உறவுமுறைக்குள் வரும் அளவில் **ஏ.பி.க்கு** (மணமகனுக்கு) உறவினர் அல்ல (மணமகள் 21 வயதைப் பூர்த்தி செய்யாத நிலையில், அவள் ஒரு விதவையாக இருந்தாலொழிய).*

*5. எனக்கும் **ஏபிக்கும்** இடையில் நடைபெறவுள்ள திருமணத்திற்கு எனது தந்தை **ஓ.பி.**யினுடைய (அல்லது பாதுகாவலர், எதார்த்த நிலைமையின்படி) சம்மதம் வழங்கப்பட்டுள்ளது, அது ரத்து செய்யப் படவில்லை).*

6. இந்தப் பிரகடனத்தில் ஏதாவது கூற்று பொய்யாக இருந்தால், மற்றும் அத்தகைய கூற்றைத் தெரிவிக்கும்போது அது பொய் யென்று அறிந்திருந்தாலோ அல்லது நம்பியிருந்தாலோ, அல்லது அது உண்மையல்லவென்று தெரிந்திருந்தாலோ, நான் சிறைத் தண்டனை பெறுவதற்கும், அபராதம் விதிக்கப்படுவதற்கும் உரியவனாவேன் என்பதை அறிந்துள்ளேன்.

*(ஒப்பம்) **சி.டி.** (மணமகள்)*

*மேலே குறிப்பிடப்பட்ட **ஏ.பியும் சி.டியும்** எங்கள் முன்னிலையில் கையொப்பமிட்டனர். நாங்கள் அறிந்தவரையில் இந்தத் திருமணத்திற்குச் சட்டப்படியான தடை ஏதுமில்லை.*

ஜிஎச்
ஐஜே } *(மூன்று சாட்சிகள்)*
கேஎல்

(மணமகனோ அல்லது மணமகளோ இருபத்தியோரு வயது பூர்த்தியடையாதவர்களாயிருந்தால், ஒரு விதவை சம்பந்தப்பட்ட விஷயம் நீங்லாக:

*என்னுடைய முன்னிலையிலும், என்னுடைய சம்மதத்துடனும் மேலே குறிப்பிட்ட **ஏபியும் சிடியும்** கையொப்பமிட்டனர். மேலே குறிப்பிட்ட **ஏபியின் எம்.என்.** (ஏ.பி - தந்தை (அல்லது பாதுகாவலர் (அல்லது **சி.டி** - எதார்த்த நிலைமையின்படி)*

(உறுதிக் கையொப்பம்) **இ.எஃப்**

இந்து தொகுப்புச் சட்டத்தின் II-ம் பாகத்தின் கீழ்,

.... மாவட்டத்திற்கு

இந்துத் திருமணங்களின் பதிவாளர்

தேதி .... மாதம் ....ஆண்டு.

மேலே குறிப்பிடப்பட்ட **ஏபியும் சிடியும்** எங்கள் முன்னிலையில் கையொப்பமிட்டனர். நாங்கள் அறிந்தவரையில், இந்தத் திருமணத்திற்கு சட்டப்படியான தடை ஏதுமில்லை.

ஜி.எச்.
ஐ.ஜே } (மூன்று சாட்சிகள்)
கே.எல்.

(மணமகனோ அல்லது மணமகளோ இருபத்தியோரு வயது பூர்த்தியடையாதவர்களாயிருந்தால் ஒரு விதவை சம்பந்தப்பட்ட விஷயம் நீங்கலாக:

என்னுடைய முன்னிலையிலும், என்னுடைய சம்மதத்துடனும் மேலே குறிப்பிடப்பட்ட **ஏ.பியும் சி.டியும்** கையொப்பமிட்டனர். **எம்.என். (ஓ.பி.** - மேலே குறிப்பிட்ட **ஏ.பி.**யின் தந்தை (அல்லது பாதுகாவலர் (அல்லது **சி.டி** - எதார்த்த நிலைமையின்படி)

(உறுதிக்கையொப்பம்) **இ.எஃப்.**
இந்து தொகுப்புச் சட்டத்தின் II-ம் பாகத்தின் கீழ்
.... மாவட்டத்திற்கு
இந்து திருமணங்களின் பதிவாளர்

தேதி.............. மாதம்...................... ஆண்டு.

(170)

(171)

ஆறாவது அட்டவணை

(19-வது பிரிவு பார்க்கவும்)

சிவில் திருமணத்திற்கான பதிவாளரின் சான்றிதழ்

இ.எஃப். ஆகிய நான், ... 19...... அன்று, **ஏ.பி.யும் சி.டியும்** என்முன் ஆஜரானார்கள். அவர்கள் ஒவ்வொருவரும், என் முன்னிலையிலும், கீழே கையெழுத்திட்டுள்ள மூன்று நம்பகமான சாட்சிகளின் முன்னிலையிலும், இந்து திருமணச் சட்டத்தின் II-ம் பாகத்தில் கோரியுள்ளபடி பிரகடனங்கள் செய்துள்ளனர்; மற்றும் மேலே குறிப்பிட்ட பாகத்தின்கீழ், அவர்களுக்கிடையில், என் முன்னிலையில் திருமணம் முறைப்படி நடந்தேறியது என்று சான்றளிக்கிறேன்.

(ஒப்பம்) **இ.ஏஃப்**
.... மாவட்டத்திற்கு இந்து திருமணச் சட்டத்தின் II-ம் பாகத்தின் கீழ் நடைபெறும் இந்து திருமணங்களின் பதிவாளர்.

ஒப்பம் **ஏ.பி.**
சி.டி.

ஜி.எச்.
ஐ.ஜே. (மூன்று
கே.எல். சாட்சிகள்)

தேதி .... மாதம் ....ஆண்டு.

ஐந்தாவது அட்டவணை

(19-வது பிரிவு பார்க்கவும்)

சிவில் திருமணத்தின் பதிவாளரின் சான்றிதழ்

__இ.எஃப்.__ ஆகிய நான் .... 19....... அன்று __ஏ.பி.யும் சி.டியும்__ என்முன் ஆஜரானார்கள். அவர்கள் ஒவ்வொருவரும் என் முன்னிலையிலும், கீழே கையொப்பமிட்டுள்ள நம்பகமான மூன்று சாட்சிகளின் முன்னிலையிலும், இந்து திருமண சட்டத்தின் II-ம் பாகத்தில் கோரியுள்ளபடி பிரகடனங்கள் செய்துள்ளனர்; மற்றும், மேலே குறிப்பிட்ட பாகத்தின் கீழ், அவர்களுக்கிடையில், என் முன்னிலையில் திருமணம் முறைப்படி நடந்தேறியது என்று சான்றளிக்கிறேன்.

(ஒப்பம்) **இஎஃப்**

.... மாவட்டத்திற்கு இந்து திருமணச் சட்டத்தின் IIம் பாகத்தின் கீழ் நடைபெறும் இந்து திருமணங்களின் பதிவாளர்

(ஒப்பம்) **ஏ.பி**
சி.டி

ஜி.எச்.
ஐ.ஜே. } *(மூன்று சாட்சிகள்)*
கே.எல்.

தேதி ....   மாதம் .... ஆண்டு.

(172)

ஏழாவது அட்டவணை

(பிரிவு 21 பார்க்கவும்)

தார்மிகத் திருமணத்தின் பதிவாளரின் சான்றிதழ்

ஏ.பியும் சி.டியும் இன்று எனக்கு முன்னால் ஆஜராகி, அவர்கள் ஒவ்வொருவரும் என் முன்னிலையிலும், இங்கே கீழே கையொப்ப மிட்டுள்ள நம்பகமான மூன்று சாட்சிகளின் முன்னிலையிலும், ... 19............... அன்று தங்களுக்கிடையில் இந்து முறைப்படி தார்மிகத் திருமணம் நடந்தேறியது என்று பிரகடனம் செய்தனர்; மற்றும், அந்தத் திருமணம் பதிவு செய்துகொள்ளப் படுவதற்குத் தாங்கள் விரும்புவதாகவும் தெரிவித்தனர். எனவே, அவர்களின் விருப்பத்திற்கிணங்க, அந்தத் திருமணம், இன்று, இந்துத் திருமணச் சட்டத்தின் II-ம் பாகத்தின் 21-வது பிரிவின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது என்று **இஎஃப்** ஆகிய நான் சான்றளிக்கிறேன். மேலே கூறப்பட்ட 21வது பிரிவின்கீழ் அவர்களது திருமணத்தைப் பதிவு செய்ய வேண்டுமென்று .... நாளில் விண்ணப்பம் செய்து கொள்ளப்பட்ட தேதியிலிருந்து இது அமலுக்கு வருகிறது என்று சான்றளிக்கிறேன்.

மேலே கூறப்பட்டபடி இந்து முறைப்படி அவர்கள் திருமணம் செய்துகொண்டதற்குப்பின்னர், அவர்களுக்குப் பிறந்த கீழ் வரும் குழந்தைகள் சட்டப்படியானவர்கள் என்று கருதப்பட வேண்டும், எப்போதும் அவர்கள் சட்டப்படியானவர்களே.

(இங்கு குழந்தைகளின் பெயர்கள், அவர்களின் பிறந்த நாள் வரிசைப்படி எழுதப்படுகிறது. ஒவ்வொரு குழந்தைக்கு எதிராகவும் அதனுடைய பிறந்த தேதி குறிப்பிடப்படுகிறது).

(ஒப்பம்) **இஎஃப்**
..........மாவட்டத்திற்கு இந்து திருமண சட்டத்தின்
II-ம் பாகத்தின் கீழ் நடைபெறும்
இந்துத் திருமணங்களின் பதிவாளர்

(ஒப்பம்) **ஏ.பி.**
சி.டி.

ஜி.எச்.
ஐ.ஜே. } (மூன்று சாட்சிகள்)
கே.எல்.

ஆறாவது அட்டவணை

(21-வது பிரிவு பார்க்கவும்)

புனித வினைமுறைப்படி நடக்கும் திருமணத்திற்கு
பதிவாளரின் சான்றிதழ்

ஏ.பி.யும் **சி.டி.**யும் இன்று எனக்கு முன்னால் ஆஜராகி, அவர்கள் ஒவ்வொருவரும் என் முன்னிலையிலும், கீழே கையொப்பமிட்டுள்ள நம்பகமான மூன்று சாட்சிகள் முன்னிலையிலும் தங்களுக்கு இடையில்............ 19..... அன்று, இந்து முறைப்படி புனித வினைமுறைத் திருமணம் நடந்ததாகப் பிரகடனம் செய்தனர். அந்தத் திருமணம் பதிவு செய்யப்படவேண்டுமென்ற தமது விருப்பத்தையும் தெரிவித்தனர். அவர்களுடைய விருப்பத்திற்கிணங்க, அந்தத் திருமணம் இன்று, இந்துத் திருமணச் சட்டத்தின் II-ம் பாகம், 21-வது பிரிவின்கீழ் பதிவு செய்யப்பட்டது என்று **இஎஃப்** ஆகிய நான் சான்றளிக்கிறேன். மேலே கூறப்பட்ட 21-வது பிரிவின் கீழ் அவர்கள் தமது திருமணம் பதிவு செய்யப்பட வேண்டுமென்று விண்ணப்பித்த .... 19......... தேதியிலிருந்து இது செல்லுபடியாகும்.

மேலே குறிப்பிட்ட இந்து முறைப்படியான அவர்களது திருமணம் நடைபெற்றதற்குப் பின்னர் அவர்களுக்குப் பிறந்த கீழ்வரும் குழந்தைகள் சட்டப்படியானவை என்று கருதப்படும். எப்போதும் அவ்வாறே கருதப்படும்.

(இங்கு குழந்தைகளின் பெயர்கள் அவர்களின் பிறந்த தேதி வரிசைப்படி எழுதப்பட வேண்டும், ஒவ்வொரு குழந்தைக்கு எதிரிலும் அதனுடைய பிறந்த தேதி குறிக்கப்பட வேண்டும்..)

(ஒப்பம்) **ஏ.பி.**
சி.டி.

ஜி.எச்.
ஐ.ஜே.
கே.எல். (மூன்று சாட்சிகள்)

(ஒப்பம்) **இஎஃப்**
.... மாவட்டத்திற்கு இந்து திருமண சட்டத்தின் II-ம் பாகத்தின்கீழ் இந்து திருமணங்களின் பதிவாளர்.

(173)

எட்டாவது அட்டவணை

முன்னுரிமை வாரிசுகள்

வகுப்பு I

(98-வது பிரிவு பார்க்கவும்)

மகன்; மனைவி (விதவை); *(அ) மகள்; முன்பே இறந்துபோன மகனின் மகன்; முன்பே இறந்துபோன மகனின் மனைவி (விதவை); முன்பே இறந்துபோன மகனின் முன்பே இறந்துபோன மகனின் மகன்; முன்பே இறந்துபோன மகனின் முன்பே இறந்துபோன மகனின் மனைவி (விதவை).

வகுப்பு II

(98-வது பிரிவு பார்க்கவும்)

I தந்தை; தாய் *(ஆ)

II (1) மகனின் மகள் (2) மகளின் மகன் (3) மகளின் மகள்

III (1) மகனின் மகனின் மகன் (2) மகனின் மகனின் மகள், (3) மகனின் மகளின் மகள், (4) சகோதரர், (5) சகோதரி

IV (1) மகளின் மகனின் மகன் (2) மகளின் மகனின் மகள், (3) மகளின் மகளின் மகன் (4) மகளின் மகளின் மகள்

V (1) சகோதரனின் மகன், (2) சகோதரியின் மகன், (3) சகோதரரின் மகள் மற்றும் (4) சகோதரியின் மகள்

VI தகப்பனாரின் தகப்பனார்; தகப்பனாரின் தாய்

VII தகப்பனாரின் மனைவி (விதவை); சகோதரனின் மனைவி (விதவை)

VIII தகப்பனாரின் சகோதரர்; தகப்பனாரின் சகோதரி

IX தாயாரின் தகப்பனார்; தாயாரின் தாயார்

X தாயாரின் சகோதரர்; தாயாரின் சகோதரி.

விளக்கம் :- இந்த அட்டவணையில் சகோதரன் அல்லது சகோதரி என்று குறிப்பிடுவது சொந்த (ரத்த சம்பந்தமுள்ள) சகோதரன் அல்லது சகோதரியைக் குறிப்பிடுவதல்ல.

* (அ) 'திருமணமாகாத மகள்' மற்றும் *(ஆ) 'திருமணமான மகள்' என்று டாக்டர் அம்பேத்கரால் தனது சொந்தப் பிரதியில் திருத்தப்பட்டது.

ஏழாவது அட்டவணை

முன்னுரிமை வாரிசுகள்

வகுப்பு I

(98-வது பிரிவு பார்க்கவும்)

மகன்; விதவை: மகள்; முன்பே இறந்துவிட்ட மகனின் மகன்; முன்பே இறந்துவிட்ட மகனின் மனைவி (விதவை); முன்பே இறந்துவிட்ட மகனின் முன்பே இறந்துவிட்ட மகன்; முன்பே இறந்துவிட்ட மகனின் முன்பே இறந்துவிட்ட மகனின் மனைவி (விதவை)

வகுப்பு II

(98ம் பிரிவு பார்க்கவும்)

I *தந்தை; தாய்*

II *(1) மகளின் மகள் (2) மகளின் மகன் (3) மகளின் மகள்*

III *(1) மகனின் மகளின் மகன் (2) மகனின் மகனின் மகள் (3) மகனின் மகளின் மகள் (4) மகளின் மகனின் மகன் (5) மகளின் மகனின் மகள் (6) மகளின் மகளின் மகன் (7) மகளின் மகளின் மகள்.*

IV *சகோதரன், சகோதரி*

V *(1) சகோதரனின் மகன் (2) சகோதரியின் மகன் (3) சகோதரனின் மகள், மற்றும் (4) சகோதரியின் மகள்*

VI *தகப்பனாரின் தகப்பனார்; தகப்பனாரின் தாயார்*

VII *தகப்பனாரின் (மனைவி) விதவை; சகோதரனின் மனைவி (விதவை)*

VIII *தகப்பனாரின் சகோதரர், தகப்பனாரின் சகோதரி.*

IX *தாயாரின் தகப்பனார்; தாயாரின் தாயார்*

X *தாயாரின் சகோதரர்; தாயாரின் சகோதரி*

விளக்கம் :- இந்த அட்டவணையில் சகோதரர் அல்லது சகோதரி என்று குறிப்பிடுவது இரத்தசம்பந்தமுள்ள சகோதரனையோ, சகோதரியையோ குறிப்பதாகாது.

(173)

□□□

பிரிவு III

பொறுக்குக் குழுவிலிருந்து
திருப்பி அனுப்பப்பட்டதற்குப்
பின்னர்
இந்து திருமண மசோதாவின் மீது நடைபெற்ற
விவாதம்

1949 பிப்ரவரி 11

முதல்

1950 டிசம்பர் 14 வரையில்

*இந்து திருமணங்கள் செல்லுபடி மசோதா

பண்டிட் தாகூர்தாஸ் பர்கவா (கிழக்கு பஞ்சாப் : பொது) : நான் பிரேரேபணை செய்கிறேன்:

> ''இந்துக்கள், சீக்கியர்கள், ஜைனர்கள் மற்றும் அவர்களின் வெவ்வேறு சாதியினர், உப-சாதியினர் ஆகியோரிடையிலான திருமணங்களை செல்லத் தக்கதாக்கும் மசோதா ஒரு பொறுக்குக் குழுவின் பரிசீலனைக்கு விட வேண்டும். அக் குழுவில் கியானி குர்முக் சிங் முஸாபிர், சர்தார் ஹுக்கம் சிங், திரு. எம். அனந்த சயனம் அய்யங்கார், திரு. தேசபந்து குப்தா, திருமதி ஜி. துர்க்காபாய், திருமதி ரேணுகா ரே., திரு. ராம்நாத் கோயங்கா, டாக்டர் பக்ஷி தேக் சந்த், லாலா அசிந்த் ராம், ரணவீர சிங், திரு. மகாவீர் தியாகி, மற்றும் இதைப் பிரேரணைசெய்பவர் உறுப்பினர்களாக இருப்பார்கள். குழுக் கூட்டத்தில் குறைந்தபட்சம் ஐந்து உறுப்பினர்களாவது கலந்துகொள்ள வேண்டும்.''

ஐயா, உங்களுடைய அனுமதியுடன் இந்தப் பிரேரணையை நான் முன்மொழியும்போது சட்டத்தின் இன்றைய நிலை என்ன என்பதைக் கூற விரும்புகிறேன். தற்பொழுது எல்லா விஷயங்களிலும், இந்துக்கள், சீக்கியர்கள், மற்றும் ஜைனர்கள் இந்து சட்டத்திற்குக் கட்டுப்பட்டவர்கள். திருமணம் சம்பந்தமாக, இன்று, இந்து சட்டத்தின் நிபந்தனைகளின்படி, வெவ்வேறு சாதிகளைச் சேர்ந்த ஓர் ஆணுக்கும் ஒரு பெண்ணுக்கும் இடையிலான திருமணம் பம்பாயில் தவிர வேறு எங்கும் செல்லத் தக்கதல்ல; அங்கு **அனுலோமா** திருமணங்கள் அனுமதிக்கப்படுகின்றன, ஆனால் **பிரதிலோமா** திருமணங்கள் அனுமதிக்கப்படுவதில்லை. அலகாபாத், சென்னை, மற்றும் கல்கத்தாவில் உயர்நீதிமன்றங்கள், **அனுலோமா** திருமணங்களைக்கூட செல்லத்தக்கவையல்ல என்று அறிவித்துள்ளன.

வெவ்வேறு மதங்களைச் சேர்ந்த நபர்களைப் பொறுத்த மட்டிலும், இதில்கூட நிலைமை மிகவும் நிச்சயமற்றதாக இருக்கிறது. இந்து சட்டத்தின் கறாரான கோட்பாடுகளின்படி அனுமதிக்கப்பட முடியாத எந்தத் திருமணமும் மரபு வழக்கத்தின்படி அனுமதிக்கப் படுகிறது. சாதாரணமாக, பஞ்சாபில் **கார்வாரி** மற்றும் **சந்திரதாரி** திருமணங்கள்கூட அனுமதிக்கப்படுகின்றன. கறாரான இந்து சட்டத்தின்படி வெவ்வேறு இந்து சமூகங்களைச் சேர்ந்தவர்களிடையிலான திருமணங்கள் அனுமதிக்கப்படாவிடினும் சட்ட மரபுரீதியில் பல இடங்களில் அத்தகைய திருமணங்கள் அனுமதிக்கப்படுகின்றன.

---

* அ.நி. (சட்) டி. தொகுதி I, 11 பிப்ரவரி, 1949 பக்கங்கள் 419-28.

உதாரணமாக நேப்பாளத்தில் அத்தகைய திருமணங்கள் செல்லத் தக்கவை என்று கருதப்படுகின்றன. சாதிகள் மலிந்ததாக இல்லாத பஞ்சாபில், சீக்கியர்களுக்கும் இந்துக்களுக்கும் இடையிலான திருமணங்கள் செல்லத்தக்கவை என்று பொதுவாக சமுதாயத்தினால் ஏற்றுக் கொள்ளப்படுகிறது - நீதி மன்றத்தினால் அல்ல. அவர்களின் குழந்தைகள் வாரிசுரிமைபெற அனுமதிக்கப்படுகிறார்கள்; அவர்கள், திருமணங்கள் சட்டப்படி நடந்ததாகவே கருதப்பட்டு, நடத்தப்படு கின்றன. ஜைனர்களுக்கும் இந்துக்களுக்கும் இடையில் முன்பு எந்தத் திருமணங்களும் நடைபெறும் வழக்கமில்லை. ஆனால் தற்பொழுது கடிகாரத் தொங்கட்டான் எதிர்ப்பக்கம் திரும்பிவிட்டது. ஜைனர் களுக்கும் இந்துக்களுக்குமிடையில், குறிப்பாக, இந்து அகர்வால் களுக்கும் ஜெயின் அகர்வால்களுக்கும் இடையில் திருமணங்கள் நடைபெறு கின்றன. ஆனால் ஒரு ஜெயின் அகர்வால் சட்டப்படி ஒரு சூத்திரரையோ அல்லது ஒரு பிராமணரையோ திருமணம் செய்து கொள்ள முடியாது. உப-பிரிவுகள், உப-சாதிகள் சம்பந்தமாகவும், 1946ம் வருடச் சட்டம் நிறைவேற்றப்படுவதற்கு முன்னர், இந்து சமூகத்தின் உப-பிரிவுகளுக்கிடையிலான திருமணங்கள் சில இடங் களில் சட்டபூர்வமானவை என்றும் வேறிடங்களில் சட்ட விரோத மானவை என்றும் அறிவிக்கப்பட்டன. ஆனால் அது இங்கு முக்கியமல்ல. உப-பிரிவும், உப-சாதியும் ஒன்றுதானென்றால், இங்கு ''உப-சாதி'' என்ற சொல்லை உபயோகப்படுத்தியதற்கு நான் வருந்து கிறேன். பிரதான சாதியின் உப-பிரிவுகளின் உறுப்பினர்களுக்கு இடையிலான திருமணம் ஏற்கனவே சட்டபூர்வமாக்கப்பட்டுள்ளது. மற்றவற்றைப் பொறுத்த மட்டிலும், உதாரணமாக, வெவ்வேறு மதங்களையும் வெவ்வேறு சாதிகளையும் சேர்ந்த நபர்கள் திருமணம் செய்துகொள்ள விரும்பினால், தற்போதைய சட்டத்தின்படி அத்தகைய திருமணங்கள் சட்டப்பூர்வமானவை அல்ல. தற்பொழுது, இந்தத் தடை அகல வேண்டும் என்று பொதுமக்கள் அபிப்பிராயம் தெளிவாகக் கோருகிறது. வெவ்வேறு மதங்களையும் சாதிகளையும் சேர்ந்த திருமணங்கள் சட்டப்பூர்வமானதாக்கப்பட வேண்டும். தற்பொழுது பல இளைஞர்களும் யுவதிகளும் தமது சாதிகளுக்கு அப்பாற்பட்டு திருமணம் செய்து கொள்ள விரும்புகின்றனர். பொது மக்கள் அபிப்பிராயத்தைப் பொறுத்தமட்டிலும், இந்த நடவடிக்கைக்கு உறுதி யான ஆதரவு, அடித்தளம் இருக்கிறது என்று உறுதியாக நம்புகிறேன்.

தேசியக் கண்ணோட்டத்திலிருந்து பார்க்கும்போது, பஞ்சாபில் இந்துக்களுக்கும் சீக்கியர்களுக்கும் தற்போதிருந்து வரும் உரசலைத் தீர்த்து அவர்களை ஒன்றுபட்ட மக்களாக்குவதற்கு, நூறு சீக்கிய

மற்றும் இந்துப் பெண்கள் நூறு இந்து மற்றும் சீக்கிய இளைஞர்களைத் திருமணம் செய்து கொண்டால், பிணக்கு முழுவதும் அகன்றுவிடும் என்று மிகவும் பணிவன்புடன் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். உண்மையில் இந்துக்களும் முஸ்லீம்களும் ஒருவரை ஒருவர் திருமணம் செய்து கொண்டிருந்ததால் பாகிஸ்தானே ஏற்பட்டிருக்காது என்று நம்புகிறேன். இந்தக் கலப்பு மணத்தை ஒரு மரபாக நாம் ஏற்றுக்கொண்டால், சாதிகளுக்கு இடையிலும், வெவ்வேறு மதங்களைச் சார்ந்தவர்களுக்கு இடையிலுமான அனைத்துக் கசப்புணர்ச்சியும் அகன்றுவிடும் என்று நிச்சயமாக நம்புகிறேன். இந்த நடைமுறையை நாம் ஏன் கடைப்பிடிக்கக் கூடாது என்பதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. இந்து தர்மத்தின் மெய்யான கோட்பாடுகள் இதற்குக் குறுக்கே நிற்கின்றன என்று கூறப்படக் கூடும். இதற்கு எதிரான நடவடிக்கைகளை நாம் மேற்கொள்வது சரியானதல்ல. மகாபாரதத்தின் முதலாவது **சுலோகம்** இவ்வாறு தொடங்குகிறது என்று அடக்கத்துடன் கூறிக்கொள்ள விரும்புகிறேன்: அதாவது இந்த நாட்டில் அதிக க்ஷத்திரியர்கள் இல்லாததால், சில பிராமணர்களை வரவழைத்து க்ஷத்திரியர்களைப் பிறப்பிக்கும்படிக் கூறலாம். நமது அனைத்து மதங்களும் நமது வேதகாலக் கதைகளும் இந்துக்களிடையில் இத்தகைய திருமணங்கள் அடிக்கடி நடைபெறுகின்றன என்று நமக்குக் கூறுகின்றன. உதாரணமாக, சாதி அமைப்பு வேரூன்றுவதற்கு முன்னர், சாதியைப் பொறுத்தமட்டிலும் இந்துக்களிடையில் கலப்பு மணத்திற்கு எந்தத் தடையும் இருக்கவில்லை என்பதை நாம் எண்ணிப் பார்க்கலாம். எனவே தீவிரமான கண்ணோட்டத்திலிருந்து பார்க்கும்போது, இந்த நடவடிக்கை சம்பந்தமாக எத்தகைய விசேஷ சிரமமும் இல்லை என்று கருதுகிறேன்.

ஆயினும், அதேசமயத்தில் நான் வலியுறுத்த விரும்பும் விஷயம் என்னவெனில், இது ஓர் ஊக்கமூட்டும் ஏற்பாடுதான். தனது சாதிக்கு வெளியில் திருமணம் செய்து கொள்ளும்படி இது எந்த நபரையும் நிர்ப்பந்தப்படுத்துவதில்லை. ஒரு நபர் அவ்வாறு விரும்பினால், ஓர் இளைஞனும் ஓர் யுவதியும் அவ்வாறு எண்ணங் கொண்டிருந்தால், அவர்களது பெற்றோர்களும் அவ்வாறு எண்ணங் கொண்டிருந்தால், அந்த இருவரும் திருமணம் செய்துகொள்வதற்கு உதவவேண்டும், அவர்களது குழந்தைகள் சட்டப்படியானவை என்று கருதப்பட வேண்டும் என்றுதான் நான் விரும்புகிறேன்.

தற்பொழுது ஓர் இந்து தனது சாதிக்கு வெளியில் திருமணம் செய்து கொள்ள விரும்பினால், அவர் பொய் கூறுவதன் மூலம் தனது

நோக்கத்தை நிறைவேற்றிக்கொள்ள முடியாது என்பதல்ல. ஆரிய திருமண செல்லுபடியாகும் சட்டத்தின்படி, அவர், தனது சாதிக்கு வெளியில் எந்த இந்துவையும் திருமணம் செய்துகொள்ள முடியும். ஆனால், உதாரணமாக, ஒரு நபர் ஆரிய சமாஜத்தைச் சேர்ந்தவராக இல்லாவிட்டால், அவர் தமது காரியத்தை நிறைவேற்றிக் கொள்வதற்கு எதற்காகப் பொய் கூற வேண்டும்? எனவே, சட்டம் எதைக் கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டுமென்றால், நபர்கள் சட்டப் பூர்வமான முறையில் தமது நோக்கத்தை நிறைவேற்றிக்கொள்ள வகை செய்ய வேண்டும் என்பதுதான். சிறப்புத் திருமண சட்டத்தின் (1872ம் வருட சட்டம் III) விதிகளின்படி, ஓர் இந்து அச்சட்டத்தின் திருத்தப்படாத விதிகளின்கீழ் ஒரு திருமணம் செய்துகொள்வது சாத்தியம் என்பதை நானும் அறிவேன் - ஆனால் அதே சமயத்தில் அவர் இந்துவாகத் தொடர்ந்து இருக்கும்போதே, தான் ஓர் இந்து அல்லாதவர் என்று அறிவிக்க வேண்டும். இந்து திருமணச் சட்டத்தில் 457-வது பத்தியில் எச்.எஸ். கவுர் என்பவர் ஒரு சுவையான புரியாபுதிரை வழங்கியுள்ளார். அவர் இவ்வாறு கூறுகிறார்:

> ''இவ்வாறு சிறப்புத் திருமண (திருத்தச்) சட்டம் ஒரு முரண் புதிரான நிலைமையை ஏற்படுத்தியுள்ளதைக் காணலாம். ஓர் இந்து தன்னை இந்து அல்லாதவர் என்று அறிவித்து விட்டுத் திருமணம் செய்துகொள்கிறார் என்றால், அதே சமயத்தில் இந்து சட்டத்திற்கு உட்பட்டவராகவே இருக்கிறார். அவர் அவ்வாறு பிரகடனம் செய்யா விட்டால், அவர் இந்து சட்டத்திற்குக் கட்டுப்பட்டவராக இருக்க மாட்டார். இதனால் ஒரு புதிரான நிலைமை ஏற்படுகிறது. ஓர் இந்து எப்பொழுது இந்து அல்லாதவராகிறார்? இதற்கு விடை: அவர், சிறப்புத்திருமண (திருத்தச்) சட்டத்தின்கீழ் ஒரு இந்துவாகத் திருமணம் செய்துகொள்ளும்போதுதான்.''

1923-ம் வருடச் சட்டம் நிறைவேற்றப்பட்டபோது - அந்தக் காலத்தின் விவாதங்களை நான் படித்துள்ளேன் - டாக்டர் கௌர் ஓர் இக்கட்டான நிலைக்குத் தள்ளப்பட்டதாகத் தோன்றுகிறது, அவர் சுதந்திரமாக இருந்திருந்தால் ஒருபோதும் ஏற்றுக்கொண்டிருக்காத ஒரு நிலைமையை அவர் ஏற்றுக் கொள்ள வேண்டியதாயிற்று. சிறப்புத் திருமண (திருத்தச்) சட்டத்தின்படி இந்த நிலைமை மிகவும் விநோதமாக இருக்கிறது. ஒரு நபர் தனது மதத்திற்கு வெளியில் திருமணம் செய்து கொள்ள விரும்பினால், அதாவது ஓர் இந்து, இந்து அல்லாதவரைத் திருமணம் செய்துகொள்ள விரும்பினால், அப்பொழுது இந்தத்திருத்தச் சட்டத்தின் கீழ், ''அவர்களுடைய முந்திய உரிமைகள் சாதி தகுதியின்மைகள் அகற்றல் சட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ள அளவிற்கு - பாதிக்கப்படுவதில்லை.'' ஆனால், இவ்வாறு இருந்தபோதிலும் அவர்கள் திருமணம் செய்து கொண்டு

விட்டால் என்ன ஏற்படுகிறது? இதனால் அவர்கள் அனுபவிக்கும் தகுதியின்மையை கௌரின் இந்து சட்டத்திலிருந்து நான் விவரிக்கிறேன்: ''சாதி தகுதியின்மைகள் அகற்றல் சட்டத்தில் வகை செய்துள்ள அளவிற்கு அவர்களது முந்திய உரிமைகள் பாதிக்கப்படாமல் உள்ளன. அவர்கள் இனி ஒருபோதும் தத்து எடுத்துக் கொள்ளும் உரிமையைப் பெற்றிருக்கவில்லை. அவ்வாறு திருமணம் செய்துகொள்ளும் நபர் ஒரு தத்து எடுத்துக்கொள்ளப்பட்ட மகனாக இருந்தால், அவரைத் தத்து எடுத்துக் கொண்ட தந்தை, அவர் விரும்பினால் மற்றொருவரை தத்து எடுத்துக்கொள்ளலாம்.'' இவ்வாறு திருமணம் செய்துகொள்ள விரும்பும் அப்பாவி மனிதர் தத்து எடுத்துக் கொள்ளப்பட்ட புதல்வர் என்ற வகையில் தனது உரிமைகளை இழக்கிறார், அவருடைய தகப்பனார் வேறொரு நபரை தத்து எடுத்துக் கொள்வதற்குத் தகுதி உடையவராகிறார். அந்த நிலைமையில் ''அத்தகைய திருமணம் கூட்டுக் குடும்பத்தை பிரிக்கும் விளைவைத் தோற்றுவிக்கிறது.'' இது மற்றொரு மிகப் பெரிய தகுதியின்மையாகும். ஒரு நபர் இந்து அல்லாதவரை மணக்க விரும்பினால், கூட்டுக் குடும்பம் சம்பந்தப்பட்ட மட்டிலும் அவர் இந்து அல்லாதவராக மாற வேண்டும். அந்த நிலையில், ''அவர்களின் சொத்துக்கும்'', அவர்களது குழந்தையின் சொத்துக்குமான வாரிசு இந்திய வாரிசுரிமை சட்டத்தினால் முறைப்படுத்தப்படுகிறது.'' இந்தத் தகுதியின்மைகளை நாம் ஏன் அனுபவிக்க வேண்டும் என்பதற்கு எவ்விதக் காரணமும் இல்லையெனப் பணிவன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன். ஓர் இந்து அல்லாதவரை மணக்க விரும்பும் ஒரு நபர் இவற்றால் ஏன் பாதிக்கப்பட வேண்டும்? இது, அந்த நபர் மேன்மையானதாகக் கருதும் எல்லாச் சட்டங்களையும், முந்திய தலைமுறைகளிலிருந்து அவர் பிதுரார்ஜிதமாகப் பெற்றவற்றையெல்லாம் கைவிட வேண்டும் (விட்டொழிக்க வேண்டும்) என்பதையே காட்டுகிறது. இது ஒரு தவறான விதி. இது மோசடிக்கும் வேறு பல தீமைகளுக்கும் இட்டுச் செல்கிறது. பழைய நிலைமையிலிருந்து தற்போதைய நிலைமை ஓரளவு மேம்பட்டுள்ளது என்பதில் ஐயமில்லை. ஆரிய திருமணச் செல்லுபடிச் சட்டம் வருவதற்கு முன்னால் திருமணம் செய்துகொண்ட ஆரிய சமாஜவாதிகள், பல ஆண்டுகள் கணவன், மனைவி என்று தங்களை அறிவித்துக் கொள்ளாமலேயே இருந்துள்ள எத்தனை எத்தனையோ உதாரணங்கள் எனக்குத் தெரியும். அவ்வாறு அறிவித்துக்கொள்வதற்கு அவர்கள் பயந்தனர். அவ்வாறு செய்தால் அவர்களின் குழந்தைகளின் கதி என்னாவது? தற்பொழுது இந்துச் சட்டத்தொகுப்பு மசோதா உருப்பெறும் நிலையிலிருக்கிறது, எனவே இந்தக் கட்டத்தில் இந்தத் திருத்தத்திற்கு அவசியம்

என்ன? இந்த அம்சத்தை விளக்குவதற்கு என்னை அனுமதிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

முதலாவதாக, பணிவன்புடன் நான் தெரிவித்துக் கொள்வது, இந்துச் சட்டத் தொகுப்பு மசோதா எப்போது நிறைவேற்றப்படும் என்று எனக்குத் தெரியாது. இந்த அமர்விலோ, அடுத்த அமர்விலோ, அல்லது வேறு எந்த அமர்விலோ அது நிறைவேற்றப்படுமா என்பது ஐயத்திற்குரியதாகும். இது நமக்குத் தெரியாது. இரண்டாவதாக, இந்த மசோதா ஏற்றுக்கொள்ளப்பட்டால், அதில் கொடுக்கப்பட்டுள்ள இந்து சட்டத்தின் சில விதிகளுக்கு அது பாதை செப்பனிட்டுத்தரும், அந்த சட்டத்தை நிறைவேற்றுவதற்கும் அது உதவும். இந்தச் சட்டம் இல்லாததின் விளைவாக, திருமணம் செய்து கொள்ளாமலிருக்கும் பலரின் நிலைமை என்னாவது? அல்லது, ஒரு நபர் இறந்தால், சொத்துக்கான அவரது உரிமைகள் பாதிக்கப்படாதா? அதே சமயத்தில் இந்த மசோதா, சட்டமாக்கப்படுவதற்கு அனுமதிக்கப்படா விட்டால், இந்தச் சட்டத்தின் ஆளுகைக்குள் வரக்கூடிய பல வழக்குகள் தற்போது நடைமுறையிலுள்ள சட்டத்தின் ஆளுகையின் கீழ் வரும்; இதனால் மக்கள் பாதிக்கப்படுவார்கள்; நாடு முழுமையுமே பாதிப்புக்குள்ளாகும், நாட்டை ஒற்றுமைப்படுத்தி, அதை ஒன்றுபட்ட தன்மையுடையதாகச் செய்யும் நிலைமைகளை உருவாக்குவதற்கு நம்மால் முடியாமற் போகும்.

இது துண்டுதுக்காணியான சட்டத்திற்கு உதாரணம் என்று கூறப்படலாம். இத்தகைய துண்டு துக்காணியாக செய்யப்பட்ட சட்டங்களின் பல உதாரணங்களை நாம் அனைவரும் அறிவோம். 1946ல், சாதிகளின் உப-பிரிவுகளுக்கு இடையிலான திருமணங்களைச் செல்லத்தக்கதாக்குவது சம்பந்தமான சட்டத்தை நிறைவேற்றியதை நாம் அறிவோம். பின்னர் பம்பாயில், இருதார திருமணத்தைத் தடை செய்யும் சட்டத்தை நிறைவேற்றினோம்; வேறு பல சட்டங்களும் நிறைவேற்றப்பட்டன. இந்த மசோதாவுக்கு எதிராக வேறு எந்த ஆட்சேபங்கள் எழுப்பப்படக்கூடும் என்பதை நான் அறியேன். இது ஒரு மிகவும் சிறிய மசோதா, இது ஒரே ஒரு ஷரத்தை உடைய மசோதா வாகும். முந்திய திருமணங்கள் எல்லாம் செல்லத்தக்கவை எனக் கருதப்படும் என்றும், எதிர்காலத்திலும் அத்தகைய திருமணங்கள் செல்லுபடியாகும் என்றும் மட்டுமே அது கூறுகிறது. அது வேறு எதையும் செய்ய முற்படவில்லை. உண்மையில் இது சட்டமாக்கப் பட வேண்டும் என்ற ஒரு நேரடியான பிரேரணையுடன் இந்த அவை முன்வருவதற்கு நான் துணிச்சல் கொள்ளவில்லை. ஏனெனில், இந்த

மசோதாக்கள் எல்லாம் பொறுக்குக் குழுவுக்கு போகவேண்டும் என்று இந்த அவையில் ஒரு மரபு இருப்பதை நான் அறிவேன்.

இந்த அமர்வில், இந்த மசோதாவை சட்டமாக்க வேண்டும் என்று ஆவலுடன் இருக்கிறேன். ஏனெனில் அப்பொழுதுதான் பொது மக்களைப் பொறுத்தமட்டிலும் நாம் காரியமாற்ற உறுதி கொண்டு இருக்கிறோம் என்பதிலும், ஒரு வர்க்க பேதமற்ற சமுதாயத்தை உருவாக்க நாம் விரும்புகிறோம் என்பதிலும் மக்களுக்கு நம்பிக்கை ஏற்படும். நான் சொல்லும் கருத்தைப் பலர் விரும்ப மாட்டார்கள் என்பதை நான் அறிவேன். பத்திரிகைகளில் இத்தகையக் கருத்தைத் தெரிவித்ததற்காக நான் கடிந்து கொள்ளப்பட்டேன். அதே கருத்தைத் தான் இன்று இந்த அவையில் தெரிவித்தேன். ஆனால் இந்த மிக முக்கியமான விஷயத்தில் நாம் யாருக்கும் பயப்பட வேண்டியதில்லை. நமக்கு வர்க்கபேதமற்ற சமுதாயம் தேவை என்று மகாத்மா காந்தி கூறியுள்ளார். ஒரு வர்க்க பேதமற்ற சமுதாயத்தை அடைவதற்கு இதுதான் சரியான வழியாகும். இது போன்ற ஒரு நடவடிக்கையை நாம் மேற்கொண்டால் சமூக உரிமைகள், பொருளாதார உரிமைகள், மற்றும் அரசியல் உரிமைகள் கண்ணோட்டத்தில் பரஸ்பரம் மாறுபட்டுள்ள மக்களிடையிலான எல்லா வேறுபாடுகளும் மறைந்து விடும். வர்க்கங்களற்ற ஒரே சமுதாயம் அப்பொழுது நிலவும். இந்த அமர்விலேயே, இன்று பொறுக்குக் குழுவின் பரிசீலனைக்கு அனுப்பிய பின்னர் இந்த மசோதாவை தயவு செய்து நிறைவேற்றும்படி இந்த அவையை வேண்டிக்கொள்கிறேன்.

திரு. துணை சபாநாயகர் : கீழ்வரும் பிரேரணை முன்மொழியப் படுகிறது:

> ''இந்துக்கள், சீக்கியர்கள், ஜைனர்கள் இடையிலும், மற்றும் அவர்களின் வெவ்வேறு சாதிகள், உப-சாதிகளிடையிலும் நடைபெறும் திருமணங்களை செல்லத்தக்கதாக்கும் இந்த மசோதா கீழ்வரும் உறுப்பினர்களைக் கொண்ட ஒரு பொறுக்குக் குழவின் பரிசீலனைக்கு விடப்படுகிறது. அதன் உறுப்பினர்கள் வருமாறு: கியானி குருமுக் சிங் முஸாபிர், சர்தார் ஹு¬க்கம் சிங், திரு. எம். அனந்த சயனம் அய்யங்கார், திரு. தேசபந்து குப்தா, திருமதி ஜி. துர்க்காபாய், திருமதி ரேணுகா ரே, திரு. ராம்நாத் கோயங்கா, டாக்டர் பக்ஷி தேக் சந்த், லாலா அசிந்த்ராம், ரணவீர் சிங், திரு. மகாவீர் தியாகி, மற்றும் இதை முன்மொழிபவர். குழுவின் கூட்டத்திற்கு அவசியமான கோரம் ஐந்து உறுப்பினர்கள்.''

அவைக்கு அறிக்கை சமர்ப்பிக்கப்படுவதற்கு ஒரு தேதி நிர்ணயிப்பது வழக்கமான நடைமுறையாகும். எந்தத் தேதியில் அறிக்கை சமர்ப்பிப்பது என்பதற்கு ஆலோசனை வழங்க வேண்டும்.

பண்டிட் தாகூர்தாஸ் பர்கவா : இந்த மாத இறுதியில், பிப்ரவரி 28 என்று கூறலாம்.

திரு. துணை சபாநாயகர் : 1949 பிப்ரவரி 28ம் தேதியன்று அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டுமென்று ஆலோசனை வழங்கு கிறோம்.

திரு. கே. அனுமந்தையா (மைசூர் சமஸ்தானம்): ஐயா, இந்த மசோதாவை மிகுந்த மகிழ்ச்சியுடன் வரவேற்கிறேன். பண்டிட் தாகூர்தாஸ் பர்கவா, இந்த மசோதாவுக்கு ஆதரவாக மிகவும் நல்ல காரணங்களை முன்வைத்தார். இதற்கு கூடுதலாக வேறு எதுவும் கூறத் தேவையில்லை. 1947 ஆகஸ்டுக்கு முன்னர், 'சுதந்திரம்' என்ற ஒரே ஒரு குறிக்கோள் நமக்கு முன்னே இருந்தது 'இந்தியாவை விட்டு வெளியேறு' என்ற கோஷத்தை மகாத்மா காந்தி நமக்கு அளித்தார். விடுதலை அடைந்ததற்குப் பின்னர், 'நாட்டை ஒன்று படுத்துக' என்ற கோஷத்தை சர்தார் படேல் நமக்கு அளித்தார். அவர் அதை அரசியல் அரங்கில் செயல்படுத்தி வருகிறார். அது இந்த நாடு பெருமைப்படக்கூடிய மிகப் பெரிய சாதனையாகும் (குறுக்கீடு). சமூக அரங்கிலும் நாமும் அதைச் செய்ய வேண்டும் என்று மிகவும் பணிவன்புடனும் மனப்பூர்வமாகவும் கேட்டுக்கொள்கிறேன். 'சீர்குலைவுப் போக்குகள்' இந்தியாவுக்குப் பெரும் அபாயமாகும்: இவை வகுப்புவாதப் போக்குகள் என்றும் அழைக்கப்படுகின்றன. இன்றுள்ள திருமணமுறையானது இதற்குக் கோட்டையாக அமைந் துள்ளது. தற்போதுள்ள பல்வேறு வேறுபாடுகளை இது அப்படியே கட்டிக்காத்து, நிரந்தரமாக்குகிறது. இந்த மசோதா, மிகவும் எளிய முறையில் வருகின்ற காலத்தில் இந்த வேறுபாடுகளை அகற்றுவதற் கும், இந்து சமுதாயத்தை ஒற்றுமைப்படுத்துவதற்கும் ஒரு துவக்க மாக அமைந்துள்ளது. நான் மனதார இந்த மசோதாவை வரவேற் கிறேன். அதே பொழுதில் பொறுக்குக் குழுவில் இன்னொரு உறுப் பினரை சேர்த்துக் கொள்ளலாமென்றும், அதற்குத் திருமதி அன்னீ மாஸ்கரனே எம்.ஏ.,பி.எல்லின் பெயரைப் பரிசீலிக்கலாமென்றும் இந்த மசோதாவை முன்மொழிபவரிடம் தெரிவித்துக் கொள்கிறேன்.

பண்டிட் தாகூர்தாஸ் பர்கவா: அந்தப் பெயரைச் சேர்த்துக் கொள்வதில் எனக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை.

திரு. கே.எம். முன்ஷி (பம்பாய் : பொது) : இந்த மசோதாவை நான் ஆதரிக்கிறேன். என்னுடைய மதிப்புக்குரிய நண்பர், பண்டிட்

தாகூர்தாஸ் பர்கவா இந்த மசோதாவை ஒரு சிறிய மசோதா என்று கூறினார். அவர் கூறுவதினின்றும் நான் வேறுபடுகிறேன். இது ஒரு மிகப்பெரிய, இன்னும் சொல்லப்போனால் மிகவும் முக்கியத் துவம் வாய்ந்த மசோதா ஆகும். இது இப்பொழுது அல்ல, நாற்ப தாண்டுகளுக்கு முன்பே நிறைவேற்றப்பட்டிருக்கவேண்டும். இந்தப் பிரச்சினை முதலில் நீதிமன்றங்களின் முன் எழுப்பப்பட்டபோது, நீதிமன்றங்கள் வெவ்வேறு மாநிலங்களில், வெவ்வேறு சாதிகளைச் சேர்ந்த இந்துக்களிடையிலான திருமணங்கள் ஏதாவதொரு காரணத் திற்காக செல்லத்தக்கவை அல்ல என்று அறிவித்தன. ஆனால் அந்த நாட்களில் அரசு அதிகாரிகள், இந்து சமுதாயம் இயக்காற்றல் மிக்க தாக இருப்பதற்கு அனுமதிக்கத் தயாராக இல்லை. பழைய மரபு களையே நீடித்து நிலைத்திருக்கச் செய்ய அவர்கள் விரும்பினர். அந்த மரபுகள் (வழக்கங்கள்) 700 அல்லது 800 ஆண்டுகளுக்கு முன்னால் தயாரிக்கப்பட்ட பாடப்புத்தகங்களில் பொதிந்திருந்தவையாகும். ஐயா, எனக்கு ஒரு வழக்கு நினைவுக்கு வருகிறது. சுமார் 40 ஆண்டு களுக்கு முன்னால் என்று நினைக்கிறேன். பல ஆண்டுகளுக்கு முன்னால் இறந்துபோன கணவனின் மனைவி (விதவை)யின் திருமணம் செல்லுபடியாகுமா என்ற பிரச்சினை பம்பாய் உயர்நீதி மன்றத்தில் எழுப்பப்பட்டது. அப்பொழுது, அந்தப் பெண்ணுக்கு பேரப்பிள்ளைகளும் இருக்கும் நிலையில், அது செல்லத்தக்கதே என்று நிலைநாட்டுவதற்கு நான் நான்காண்டுகள் முயன்றேன். ஆனால் கணவனைக் காட்டிலும் மனைவி உயர் சாதியைச் சேர்ந்த வராதலால், அந்தத் திருமணம் செல்லத்தக்கதல்ல என்று உயர்நீதி மன்றம் தீர்ப்புக் கூறியது. மற்றொரு முக்கியமான வழக்கையும் நான் நடத்தினேன். அதில் உயர் சாதியைச் சேர்ந்த ஓர் இந்துவிற்கும் கீழ்ச் சாதியைச் சேர்ந்த மனைவிக்குமிடையிலான திருமணம் செல்லாது என்று கூறப்பட்டது. சர் லல்லுபாய் ஷா என்ற நீதிபதி பரந்த மனப்பான்மை உடையவர்தான். அந்த வழக்கில் ஒருவேளை எனக்கு வெற்றிகூடக் கிடைத்திருக்கும். ஆயினும் இந்து மேல் சாதியைச் சேர்ந்த கணவனுக்கும் இந்து கீழ்ச்சாதியைச் சேர்ந்த மனைவிக்கும் இடையிலான திருமணம் செல்லத்தக்கதாக சில மாகாணங்களில் ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை. இவற்றை **அம்தோமா** திருமணங்கள் என்று நாங்கள் அழைக்கிறோம். இந்துக்களுக்கும் ஜைனர்களுக்கும் இடையிலும் கூட இப்பிரச்சினை நாட்டின் சில மாகாணங்களில் ஏற்பட்டுள்ளது. இந்துக்களும் ஜைனர்களும் தாராளமாகத் திருமணம் செய்து கொள்கின்றனர். ஆனால் வழக்கறிஞர்கள் முன்னே எப்போதும் இப்பிரச்சினை - ஓர் இந்துவுக்கும் ஒரு ஜைனருக்கும் இடையிலான திருமணம் செல்லுபடியாகுமா என்பது விவாதத்திலிருந்து வந்துள்ளது.

இந்த விதி உயிரோடுள்ள தரப்புகளுக்கிடையிலான திருமணங்களுக்கு மட்டும் பொருந்தும் என்று கருதுவதற்கு இடமளிக்கக் கூடும். கடந்த காலத்தில் நடைபெற்றுள்ள இந்த மாதிரியான திருமணங்களும் இதில் வாரிசுரிமைப் பிரச்சினையும் எழும் நிலைமையில் - இனிமேலும் செல்லுபடியாகும் என்று கருதப்பட வேண்டும் என்பது தெட்டத் தெளிவாக்கப்பட வேண்டும் என்று நினைக்கிறேன். பொறுக்குக் குழுவில் இது சம்பந்தமாக முறையான திருத்தம் செய்யப்படும் என்று நிச்சயமாக நம்புகிறேன். எனவே, ஐயா, நான் இந்தப் பிரேரணையை மனமார ஆதரிக்கிறேன்.

திரு. தேசபந்து குப்தா (டில்லி): அவையின் முன்னுள்ள பிரேரணையை நான் ஆதரிக்கிறேன். என்னுடைய மதிப்புக்குரிய நண்பர் திரு. முன்ஷி சுட்டிக்காட்டியது போன்று, இது மெய்யாகவே மிகவும் முக்கியமான மசோதா என்று நானும் உணருகிறேன். பல ஆண்டுகளாக, இந்து ஒருமைப்பாட்டுக்கு இடையூறாகவும் நமது தேசிய ஒருமைப்பாட்டுக்கு எதிராகவும் இருந்த ஒரு விஷயம், இந்து சமூகம் பல சாதிகளாகப் பிரிந்திருந்த விஷயம்தான். இந்த செயற்கையான தடை மதில்களைத் தகர்ப்பதற்கு முயலும் இதுபோன்ற ஒரு மசோதாவை மேற்கொண்டு எவ்விதத் தாமதமும் இன்றி நிறைவேற்ற வேண்டிய தருணம் வந்துவிட்டது என்று கருதுகிறேன். சிவில் திருமணங்களில் நம்பிக்கை இல்லாத என்னுடைய சில நெருக்கமான நண்பர்கள்கூட சிவில் திருமணங்களைக் கடைப்பிடித்த உதாரணங்களை நானறிவேன். ஏனெனில் அவர்கள், வேறு சாதியைச் சேர்ந்த மணமகளைத் தேர்ந்தெடுத்ததே இதற்குக் காரணம். ஆரியசமாஜம், 'குணா, கர்மா' என்ற அடிப்படையிலான சாதி அமைப்பில் எப்போதும் நம்பிக்கை கொண்டிருந்தார்கள் என்பதை ஐயா, நீங்கள் அறிவீர்கள். ஆரிய சமாஜத்தின் நிறுவனர், தொடக்கம் முதலாகவே அந்த சமய மரபைப் போதித்து வந்தபோதிலும், பிறப்பின் போது எந்த சாதியும் கிடையாது என்று அவர்கள் வாதிட்டு வந்தனர். இதர மக்கள் இன்று அனுபவித்து வரும் அதே ஆற்றல் குறைவை ஆரிய சமாஜவாதிகளும் அனுபவிக்க வேண்டியிருந்தது.

பல ஆண்டுப் போராட்டத்திற்குப் பின்னர், ஆரிய திருமணச் செல்லுபடிச் சட்டம் நிறைவேற்றப்பட்டது. ஆனால், ஆரிய சமாஜவாதிகள் மட்டுமன்றி இந்துக்களிடையிலான பொதுஜன அபிப்பிராயமும் போதியளவு முன்னேற்றமடைந்திருப்பதை நான் காண்கிறேன். இப்பொழுது பல இந்துக்கள் சாதி அமைப்பினால், பிறப்பை

இந்த விதி உயிரோடுள்ள தரப்புகளுக்கிடையிலான திருமணங்களுக்கு மட்டும் பொருந்தும் என்று கருதுவதற்கு இடமளிக்கக் கூடும். கடந்த காலத்தில் நடைபெற்றுள்ள இந்த மாதிரியான திருமணங்களும் இதில் வாரிசுரிமைப் பிரச்சினையும் எழும் நிலைமையில் - இனிமேலும் செல்லுபடியாகும் என்று கருதப்பட வேண்டும் என்பது தெட்டத் தெளிவாக்கப்பட வேண்டும் என்று நினைக்கிறேன். பொறுக்குக் குழுவில் இது சம்பந்தமாக முறையான திருத்தம் செய்யப்படும் என்று நிச்சயமாக நம்புகிறேன். எனவே, ஐயா, நான் இந்தப் பிரேரணையை மனமார ஆதரிக்கிறேன்.

திரு. தேசபந்து குப்தா (டில்லி): அவையின் முன்னுள்ள பிரேரணையை நான் ஆதரிக்கிறேன். என்னுடைய மதிப்புக்குரிய நண்பர் திரு. முன்ஷி சுட்டிக்காட்டியது போன்று, இது மெய்யாகவே மிகவும் முக்கியமான மசோதா என்று நானும் உணருகிறேன். பல ஆண்டுகளாக, இந்து ஒருமைப்பாட்டுக்கு இடையூறாகவும் நமது தேசிய ஒருமைப்பாட்டுக்கு எதிராகவும் இருந்த ஒரு விஷயம், இந்து சமூகம் பல சாதிகளாகப் பிரிந்திருந்த விஷயம்தான். இந்த செயற்கையான தடை மதில்களைத் தகர்ப்பதற்கு முயலும் இதுபோன்ற ஒரு மசோதாவை மேற்கொண்டு எவ்விதத் தாமதமும் இன்றி நிறைவேற்ற வேண்டிய தருணம் வந்துவிட்டது என்று கருதுகிறேன். சிவில் திருமணங்களில் நம்பிக்கை இல்லாத என்னுடைய சில நெருக்கமான நண்பர்கள்கூட சிவில் திருமணங்களைக் கடைப்பிடித்த உதாரணங்களை நானறிவேன். ஏனெனில் அவர்கள், வேறு சாதியைச் சேர்ந்த மணமகளைத் தேர்ந்தெடுத்ததே இதற்குக் காரணம். ஆரியசமாஜம், ‘குணா, கர்மா’ என்ற அடிப்படையிலான சாதி அமைப்பில் எப்போதும் நம்பிக்கை கொண்டிருந்தார்கள் என்பதை ஐயா, நீங்கள் அறிவீர்கள். ஆரிய சமாஜத்தின் நிறுவனர், தொடக்கம் முதலாகவே அந்த சமய மரபைப் போதித்து வந்தபோதிலும், பிறப்பின் போது எந்த சாதியும் கிடையாது என்று அவர்கள் வாதிட்டு வந்தனர். இதர மக்கள் இன்று அனுபவித்து வரும் அதே ஆற்றல் குறைவை ஆரிய சமாஜவாதிகளும் அனுபவிக்க வேண்டியிருந்தது.

பல ஆண்டுப் போராட்டத்திற்குப் பின்னர், ஆரிய திருமணச் செல்லுபடிச் சட்டம் நிறைவேற்றப்பட்டது. ஆனால், ஆரிய சமாஜவாதிகள் மட்டுமன்றி இந்துக்களிடையிலான பொதுஜன அபிப்பிராயமும் போதியளவு முன்னேற்றமடைந்திருப்பதை நான் காண்கிறேன். இப்பொழுது பல இந்துக்கள் சாதி அமைப்பினால், பிறப்பை

அடிப்படையாகக் கொண்ட செயற்கையான தடை மதில்கள் எழுப்பப் பட்டுள்ளதை அங்கீகரிப்பதில்லை. எனவே, அவர்கள் ஆரிய சமாஜ திருமணச் செல்லுபடிச் சட்டத்தையோ அல்லது சிவில் திருமண சட்டத்தையோ கடைப்பிடிக்க வேண்டிய நிர்ப்பந்தத்திற்காளாவ தற்கு எந்தக் காரணமும் கிடையாது. இன்று, பொதுஜன அபிப்பிராயம் முன்னேற்றமடைந்துள்ள நிலையில், இந்துக்களின் ஒருமைப்பாட் டுக்குக் குறுக்கேயும், ஒரு தேசிய உணர்வை ஏற்படுத்துவதற்குக் குறுக்கேயும் இருந்து வந்த சாதித்தடை மதில்கள் அகன்றுள்ள நிலை யில், இது போன்ற ஒரு மசோதா நிறைவேற்றப்படுவதில் தாமதம் கூடாது என்று கருதுகிறேன்.

ஆனால், இந்து சட்டம் வரப்போகிறது, எனவே எந்தத் தனித் தனியான சட்டமும் வேண்டியதில்லை என்று கூறுவதில் ஓரளவு நியாயம் இருக்கத்தான் செய்கிறது. ஆயினும், என்னுடைய பல நண்பர்களைப் போன்றே நானும், இந்து சட்டத்தில் அடங்கியுள்ள சீர்திருத்தக் கருத்துக்களை எவ்வகையிலும் எதிர்க்காத இத்தகைய ஒரு மசோதா தாமதப்படக்கூடாது என்று நானும் நம்புகிறேன். இந்த அமர்விலேயே இந்து சட்டத் தொகுப்பு மசோதா நிறைவேற்றப் பட்டுவிட வேண்டுமென்று என்னுடைய நண்பர் மாண்புமிகு டாக்டர் அம்பேத்கர் விரும்பினாலும் எங்களில் பலர் அந்தக் கருத்தை ஏற்றுக்கொள்ளவில்லை. அதற்குக் காலம் பிடிக்கும். பார்க்கப் போனால் இது மிகவும் முக்கியமான ஒரு மசோதா, அதில் சர்ச்சைக் குரிய பல ஷரத்துகள் இருக்கின்றன. எனவே, தற்போதைய மசோதாவை நாம் வரவேற்க வேண்டும், இது நிறைவேற்றப் படுவதில் தாமதம் கூடாது என்று நான் வலியுறுத்துகிறேன்.

என்னுடைய மதிப்புக்குரிய நண்பர் பண்டிட் தாகூர்தாஸ் பர்கவா பிரேரணைசெய்துள்ள மசோதாவை நான் முழுமனதாக ஆதரிக்கிறேன், டாக்டர் அம்பேத்கரும் இதை ஏற்றுக்கொள்வார் என்றும், இந்து சமுதாயத்திற்கு மகத்தான முக்கியத்துவமுடைய இந்தச் சிறிய மசோதாவை, இந்த அமர்விலேயே சபை நிறை வேற்றும் என்றும் நம்புகிறேன்.

டாக்டர் பக்ஷி தேக்சந்த் (கிழக்கு பஞ்சாப் : பொது) : இந்த மசோதாவை பொறுக்குக் குழுவின் ஆய்வுக்கு விடவேண்டுமென்ற பண்டிட் தாகூர்தாஸ் பர்கவாவின் பிரேரணையை நான் முழு மனதுடன் ஆதரிக்கிறேன். இந்த மசோதாவுக்கு இதுவரையிலும் இந்த சபையின் பல்வேறு தரப்புகளிலிருந்து ஆதரவு கிடைத்துள்ளது,

இதற்கு எதிராக யாரும் ஆட்சேபனைக் குரல் எழுப்பமாட்டார்கள் என்று நம்புகிறேன்.

இந்த மசோதா புதியது ஒன்றுமில்லை என்றும் கூறுவேன். காலஞ்சென்ற திரு. வித்தல்பாய் படேலால் பழைய சாம்ராஜ்ய லெஜிஸ்லேடிவ் கவுன்சிலில் (அப்பொழுது அது இவ்வாறுதான் அழைக்கப்பட்டது) 1919-ல் ஏறத்தாழ இது போன்ற ஒரு மசோதா பிரேரணை செய்யப்பட்டது. அந்த மசோதா கருத்துக் கணிப்புக்காக சுற்றுக்கு விடப்பட்டது. வெவ்வேறு கருத்துக்கள் வெளிப்படுத்தப் பட்டன என்பது மெய்யே. வைதீக சார்புடையவர்கள் எதிர்த்தார் கள்; அதிகாரிகள் எதிர்த்தார்கள்; ஆனால் ஏராளமான நபர்களும் சங்கங்களும் அதை ஆதரித்தனர். ஆனால் மசோதா கவுன்சிலின் முன்னால் பரிசீலனைக்கு வருவதற்கு முன்பே, மாண்டேகு - செம்ஸ் போர்ட் சீர்திருத்தங்கள் அமலாகத் தொடங்கின. கவுன்சில் கலைக்கப் பட்டது, மசோதா காலாவதியாகி விட்டது. அதற்கு பின்னர் 1923-ல் டாக்டர் கவுர், 1872-ம் வருடத்திய பழைய மசோதாவைத் திருத்தம் செய்வதற்கு முயன்றார்; ஆனால் அப்பொழுதும்கூட அதற்கு எதிர்ப்பு இருந்தது, பல விவரங்களில் அந்த மசோதா திருத்தப்பட வேண்டிய தாயிற்று. சிவில் திருமண முறையில்தான் இந்துக்களின் வெவ்வேறு சாதிகளையோ அல்லது உப-சாதிகளைச் சேர்ந்தவர்களோ திருமணம் செய்துகொள்ள முடியும். சமயச் சடங்கு சார்ந்த திருமணங்கள் அனுமதிக்கப்படவில்லை. இந்து சட்டத்தின் கீழ் சமயச் சடங்கு சார்ந்த திருமணங்களைப் பொறுத்த மட்டிலும் வெவ்வேறு மாநிலங் களில் நிலைமை வெவ்வேறாக இருக்கிறது. சில மாகாணங்கள், ஏற்கனவே சுட்டிக்காட்டியது போன்று, **அனுலோமா** திருமணங்களை அனுமதிக்கின்றன; பிற மாகாணங்கள் இவற்றை அனுமதிப்ப தில்லை. பின்னால் கூறப்பட்ட மாகாணங்களில், சில **ஸ்மிருதி களில் அனுலோமா** திருமணங்கள் அனுமதிக்கப்பட்டபோதிலும், அவை காலாவதியாகிவிட்டன, தற்பொழுது அவை அங்கீகரிக்கப் படுவதில்லை என்று நீதிமன்றங்கள் தீர்ப்புக் கூறியுள்ளன. அனேக மாக எல்லா மாகாணங்களிலும் **பிரதிலோமா** திருமணங்கள் செல்லத் தக்கவையல்ல என்று தீர்ப்பு கூறப்பட்டுள்ளது. பஞ்சாபிலும் வேறு சில மாகாணங்களிலும் - வழக்க மரபுதான் முடிவு செய்வதற்கு விதியாக உள்ள இந்த மாகாணங்களில் - சில சாதிகளுக்கு இடையிலான திருமணங்கள் அனுமதிக்கப்படுகின்றன; ஆனால் வேறு சில சாதி களுக்கு இடையில் அனுமதிக்கப்படுவதில்லை. ஒரு துணிச்சலான நடவடிக்கை மேற்கொள்ள வேண்டிய தருணம் இப்பொழுது வந்து விட்டது என்று நினைக்கிறேன். இந்த மசோதா சட்டப் புத்தகத்தில்

ஏறியாக வேண்டும். இப்பொழுது நம் முன் உள்ள இந்து சட்டத்தின்கீழ் இது சம்பந்தமான விதிகள் சேர்க்கப்பட்டுள்ளன என்பதில் ஐய மில்லைதான். ஆயினும் இந்து சட்டத் தொகுப்பு மசோதா, ஒரு சர்வாம்சமான ஆவணம், பல்வேறு விஷயங்கள் அதில் அடங்கி யுள்ளன. கூடுதல் விரிவான பகுதிகளை அது விளக்குகிறது. அத னுடைய சில பகுதிகளுக்குப் பெருமளவு எதிர்ப்பு இருக்கிறது. இந்த மசோதா நிறைவேறுவதற்கு எவ்வளவு காலம் பிடிக்கும், எந்த வடிவத்தில் அது நிறைவேற்றப்படும் அல்லது உண்மையில் அது நிறைவேற்றப்படுமா என்பதையெல்லாம் நாம் அறியோம். (**திரு. எல். கிருஷ்ணசாமி பாரதி:** "அது நிச்சயமாக நிறைவேற்றப்படும்.") நிச்சயமாக அதற்குக் காலம் பிடிக்கும். எனவே, இந்த விஷயத்தைப் பொறுத்தமட்டிலும், இந்த எளிய மசோதாவை நிறைவேற்றுவதைத் தாமதப்படுத்துவதற்கு எவ்விதக் காரணமும் இருக்க முடியாது. பெரும்பாலானோர் இதை ஒத்துக்கொள்கின்றனர் என்று நினைக் கிறேன். எனவே இந்தப் பிரேரணையை ஆதரிக்கிறேன்.

திரு. மகாவீர் தியாகி (உ.பி.: பொது) : என்னுடைய மதிப்புக் குரிய நண்பர் திரு. முன்ஷி கூறியது போன்று இந்த மகத்தான சீர்திருத்த மசோதாவுக்கு என்னுடைய ஆதரவைப் பதிவு செய்யும் பெருமையை ஈட்டுவதற்கு நானும் விரும்புகிறேன்.

வகுப்புவாத வேறுபாடுகளின் விளைவாக இந்தியா நீண்ட காலமாக பாதிப்படைந்து வந்துள்ளது. திருமணங்கள் இதன் அடிநிலைக் காரணமாகவும், தேர்தல்கள் இதன் 'ஆதாயக் காரண மாகவும்' இருந்து வருகின்றன; ஏனெனில் பிரதானமாக, திருமணத் தின்போதுதான் ஒருவர் மற்றவரின் சாதியைப் பற்றி விசாரிக்கிறார். திருமணங்கள் நடைபெறுகின்ற ஒவ்வொரு சமயத்திலும் சாதிகள் பற்றி விசாரிக்கப்படுகின்றன. ஒரு நபரின் சாதி பற்றி விசாரிக்கப்படு கின்றன மற்றொரு சந்தர்ப்பம், ஒருவர் தேர்தலுக்கு நிற்கும்போது. இப்பொழுது நாம் கூட்டுத் தொகுதிகள் வைத்துக் கொள்வதென்று முடிவு செய்துள்ளதால், வகுப்புவாதத் தீமையின் அடிப்படைக் காரணத்தைப் பெருமளவுக்கு அகற்றிவிட்டோம். இவ்வாறு அரசியல் ரீதியில் நாம் சரியான பாதையில் சென்று கொண்டிருக்கிறோம். என்னுடைய நண்பர் திரு. ஹனுமந்தையா சற்றுமுன் கூறியது போன்று, நாட்டை அரசியல் ரீதியில் ஒன்றுபடுத்தியதற்கான பெருமை மாண்புமிகு சர்தார் பட்டேலைச் சாரும். அரசியல் ரீதியில் இவ்வாறு ஒன்றுபடுத்தியதன் பின்னர், நம்முடைய அடுத்த உடனடியான தேவை சமூக ஒற்றுமையை ஏற்படுத்துவதாகும். இந்த மசோதா அந்தத்

தேவையை நிறைவேற்றும். இந்த மசோதா சட்டமாக நிறைவேற்றப் பட்ட பின்னர், திருமணங்கள் சுதந்திரமாக நடைபெறும் என்று நிச்சயமாக நம்புகிறோம். சுதந்திரமான திருமணங்களில் நான் நம்பிக்கை உடையவன். இப்பொழுது இந்தியா சுதந்திரமடைந்து விட்டதால், திருமணங்களும் சுதந்திரமாக நடைபெற வேண்டும், எத்தகைய தடைக்கட்டுப்பாடுகளும் இருக்கக்கூடாது. இந்த மசோதா நம்முடைய வாழ்க்கையில் மிகவும் கடைசிக் கட்டத்தில் வந்துள்ளது குறித்து நான் வருந்துகிறேன். ஆனால், இந்த மசோதாவை நமது வருங்கால சந்ததிகள் நடைமுறைப்படுத்துவதற்கு நாம் நிறைவேற்று வோமாக. இந்தச் சட்டத்தினால் வழங்கப்பட்டுள்ள சுதந்திரத்தை நாடு அனுபவிக்கும் என்று நம்புகிறேன். இந்தப் பிரேரணையை முழுமனதோடு ஆதரிக்கிறேன்.

திரு. உபேந்திர நாத் பர்மன் (மே. வங்கம் : பொது) : இந்த மசோதாவுக்கும் பொறுக்குக் குழுவின் பரிசீலனைக்கு அதைவிட வேண்டுமென்ற பிரேரணைக்கும் நானும் என்னுடைய முழு மனதான ஆதரவைத் தெரிவிக்கிறேன். என்னுடைய மனதில் நான் ஒரு விஷயத்தைத் தெளிவாக நம்புகிறேன். நம்முடைய தேசிய உணர்வுக்குக் குறுக்கே நிற்கும் சூழ்நிலை சாதித்தடை மதிலாகும். இது நீடித்திருக்கும் வரையில் இந்து சமூகத்தின் பல்வேறு பிரிவுகளும் மற்றும் பிற முஸ்லீமல்லாத சமூகங்களும் ஒன்றாக ஐக்கியப்படவோ, தேசிய இனம் என்ற உணர்வை - அதனுடைய உண்மையான பொருளில் - மனதில் உள்வாங்கிக் கொள்ளவோ முடியாது. ஒருவர் தன்னுடைய மகனையோ அல்லது மகளையோ தனது அண்டை வீட்டாரின் மகளுக்கோ, மகனுக்கோ திருமணம் செய்து கொடுக்க முடியாது என்று ஒருவர் உணருகின்றவரையில், அவர்கள் ஒன்று (ஒரே இனத்தைச் சேர்ந்தவர்கள்) என்ற உண்மையான உணர்வு வர முடியாது. இந்த மசோதாவை நிறைவேற்றுவதன் மூலம் அந்தத் தடை மதில் அகற்றப் படும் என்று நினைக்கிறேன். நெருக்கமான உறவு என்ற உணர்வுதான் தேசிய உணர்வின் மெய்யான அடிப்படையாகும். நான் இந்த மசோதாவை முழுமனத்துடன் ஆதரிக்கிறேன், சாத்தியமான அளவு விரைவில் இது சட்டமாக நிறைவேற்றப்படும் என்று நம்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் : (சட்ட அமைச்சர்) : இந்த மசோதா சம்பந்தமாக எனக்கும், இதைப் பிரேரணை செய்த என்னுடைய மதிப்பிற்குரிய நண்பருக்கும் இடையில் எந்தக் கருத்து வேறுபாடும் இருக்க முடியாது. ஏனெனில், இது நான் பிரேரணை செய்யவிருக்கிற இந்து சட்டத் தொகுப்பு மசோதாவின் ஒரு பகுதியே

யாகும். இந்த மசோதாவிற்கு என்னுடைய ஒரே ஆட்சேபனை என்னவென்றால், இந்து சட்டம் தொகுத்து அளிக்கப்படவேண்டும் என்ற கோட்பாட்டை சட்டப்பேரவை ஒத்துக் கொண்டதற்குப் பின்னர், இந்த சட்டத்தைத் துண்டு துண்டாக நிறைவேற்றுவதற்கு இப்பொழுது முயல்வது தவறாகும். இந்த மசோதாவின் அடிப் படையான கோட்பாடுகளுக்கு, நான் ஏற்கனவே கூறியது போன்று, எனக்கு ஆட்சேபனையில்லை. உண்மையில் அதே கோட் பாடுகள் இந்து சட்டத்தொகுப்பு மசோதாவில் அடங்கியுள்ளன. எனவே, என்னுடைய மதிப்புக்குரிய நண்பருக்கு நான் கூறும் யோசனை என்னவெனில், அவர் ஒன்று, இந்த மசோதாவை வாபஸ் பெற்றுக்கொள்ள வேண்டும், அல்லது, இதைப் பரிசீலனை செய்வதை ஒத்திப்போட வேண்டும். அதற்குள் இந்து சட்டத் தொகுப்பு மசோதாவின் நிலைமை என்னவாகும் என்பதைத் திட்ட வட்டமாக நாம் தெரிந்துகொள்ள முடியும்.

இந்து சட்டத் தொகுப்பு மசோதாவை நான் முன்மொழி கிறேன் என்ற காரணத்தினாலும் இந்த மசோதா குறித்து பொறுக்குக் குழு சமர்ப்பித்த அறிக்கை அவையின் பரிசீலனையில் இருப்பத னாலும், நான் மேற்கொண்டுள்ள கண்ணோட்டத்தைத் தவிற வேறு எந்த நிலையையும் நான் மேற்கொள்ள இயலாது என்று அஞ்சு கிறேன்.

சி.எச். ரணவீரசிங் எழுந்திருக்கிறார் -

திரு. எல். கிருஷ்ணசாமி பாரதி (சென்னை : பொது) : அவர் பேசுவதற்கு எவ்வாறு அனுமதிக்கப்பட முடியும்? விவாதத்தை முடித்து வைக்கும் பிரேரணை ஏற்கெனவே முன்மொழியப்பட்டு விட்டது.

துணை சபாநாயகர் : டாக்டர் அம்பேத்கரைப் பேசுவதற்கு நான் அனுமதித்தேன். அதை முன்மொழிந்தவர் அவர் அல்ல. கேள்வி கேட்கப்படவில்லை.

சி.எச். ரணவீரசிங் (கிழக்கு பஞ்சாப் : பொது) : (இந்தி உரை யின் ஆங்கில மொழியாக்கம்). ஐயா, திரு. துணை சபாநாயகர் அவர்களே, இந்த மசோதாவை நான் மிகுந்த மகிழ்ச்சியுடன் ஆதரிக் கிறேன். ஏனெனில், ஆரம்பத்திலிருந்தே இந்துக்களிடையில் இந்த

மசோதாவின் கோட்பாட்டில் எப்பொழுதும் நம்பிக்கைகொண்டிருந்த சமூகத்தைச் சேர்ந்தவன் நான். இந்துக்களிடையில் தனது சொந்த சமூகத்திற்கு வெளியில் உறவுகளை ஏற்படுத்திக் கொண்டிருந்த, மேலும் எவ்வித வேறுபாடுகளையும் கொண்டிராத ஒரு சமூகம் இருக்கிறதென்றால் அது ஜாட் சமூகம்தான். இது விஷயத்தில் கருத்து வேறுபாடும் சமூக ஒதுக்கலும் இருந்தன என்பது உண்மையே. ஆனால் அது மிகவும் அற்பமானதாக இருந்தது. இந்த மசோதா, நம்நாடு முழுவதிலும் பல நூற்றாண்டுகளாக நாம் நம்பிக்கை கொண்டிருந்த ஒரு கோட்பாட்டை நிலைநாட்டுவதற்குப் பெருமளவு உதவும் என்ற உண்மையே, இதற்கு ஆதரவு தெரிவப்பதற்கு எனக்கு மிகுந்த உத்வேகத்தை அளிக்கிறது.

இரண்டாவதாக, என்னுடைய மதிப்புக்குரிய நண்பர் திரு. தியாகி கூறியது போன்று, இந்த மசோதா, நம்முடைய அடிமைத் தனத்திற்குக் காரணமான நம்முடைய பரஸ்பர வேறுபாடுகளை அகற்றிவிடும். சிறிய சமஸ்தானங்களை ஒருங்கிணைத்ததன் வாயிலாக, நமது தலைவர் மாண்புமிகு சர்தார் வல்லபாய் படேல், நமது நாட்டை ஒன்றாக இணைத்துள்ளார். இந்தப் பிரச்சினை நன்கு தீர்க்கப் பட்டுள்ளது. இதேபோல் நம்முடைய சமூகப் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண்பதற்கு இந்த மசோதா ஒரு நல்ல நடவடிக்கையாகும் என்று கருதுகிறேன்.

இந்து சட்டத் தொகுப்பு மசோதாவைப் பொறுத்த மட்டிலும், அது ஒரு பெரிய விஷயமாகும். நாடோ இந்த அவையோ இதை ஏற்றுக்கொள்ளுமா என்பது இன்னும் தெரியவில்லை. அதனுடைய சில ஷரத்துகள் சம்பந்தமாக, நமது தலைவர்கள் வேறுபட்ட சில கருத்துகளைத் தெரிவித்துள்ளனர். எனவே, இந்த மசோதா, இந்து சட்டத் தொகுப்பு மசோதாவின் ஒரு பாகமாக அமைந்துள்ளது என்ற காரணத்தினாலும், இந்துச் சட்டத் தொகுப்பு மசோதா நிறை வேற்றப்பட்டு விட்டால், இந்த மசோதா இயல்பாகவே அதில் இணைக்கப்பட்டுவிடும் என்பதனாலும் இதைத் தட்டிக் கழிப்பதோ அல்லது நிராகரிப்பதோ எவ்வளவு தூரம் சரியானது என்பதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. அது நிறைவேற்றப் படாவிட்டால், குறைந்தபட்சம் இந்த மசோதாவாவது நிறைவேற்றப் படும் வாய்ப்புகள் உள்ளன.

இந்த வார்த்தைகளோடு, இதை நான் முழுமனதாக ஆதரிக் கிறேன்.

திரு. கே.எம். முன்ஷி: டாக்டர் அம்பேத்கர் கூறிய ஓர் அம்சத்தைப் பற்றி பதில் கூறுவதற்கு எனக்கு அனுமதி கிடைக்குமா?

மதிப்புக்குரிய ஓர் உறுப்பினர்: பண்டிட் பர்கவா அதைப் பற்றிப் பேச முடியும்.

பண்டிட் தாகூர்தாஸ் பர்கவா : ஐயா, இந்த அவையின் எல்லாப் பகுதியினரும் இந்த மசோதாவை ஆதரித்தது குறித்து மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். இந்த மசோதாவுக்கு எதிராக எத்தகைய ஆட்சேபனை எழுப்ப முடியும் என்று என்னால் கற்பனை கூட செய்து பார்க்க முடியவில்லை. எல்லோரும் இதை விரும்புகிறார்கள் என்பதை அறிய மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன். ஓர் ஆட்சேபனை எழுப்பப்பட்டுள்ளது. அதாவது இந்து சட்டத் தொகுப்பு மசோதா தயாராகிக்கொண்டிருப்பதால், இப்பொழுது இந்த மசோதாவை நாம் எடுத்துக் கொள்ள வேண்டியதில்லை என்பதாகும். இந்த மசோதாவின் கோட்பாடுகளும் இந்து சட்டத் தொகுப்பு மசோதா வுக்கு ஆதாரப் பொருளாக இருக்கும் கோட்பாடுகளும் ஒன்றுக் கொன்று முரணானதாக இருந்தால், நான் இந்த ஆட்சேபனையைப் புரிந்து கொள்ள முடியும். ஆனால் இந்து சட்டத் தொகுப்பு மசோதா வைப் போன்ற அதே அடிப்படையை இந்த மசோதாவும் கொண் டிருப்பதால், நாம் இதை முன்னதாகவே நிறைவேற்றினால், இது மெய்யாகவே இந்து சட்டத் தொகுப்பு மசோதாவை நிறைவேற்று வதற்குப் பாதையை செப்பனிடும். இதை நிறைவேற்றுவது இந்து சட்டத் தொகுப்பு மசோதாவை நிறைவேற்றுவதை எவ்வாறு தடுக்கும் என்பதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. உண்மையில் இது, அதை நிறைவேற்றுவதை துரிதப்படுத்தும். சர்வாம்ச இந்து சட்டத் தொகுப்பு மசோதாவைப் போன்ற ஒரு மசோதா தயாராகிக் கொண்டிருப்பதால், மற்றொரு மசோதா நிறைவேற்றப்பட முடியாது என்பதற்கு சட்டம் அல்லது விதி அல்லது மரபு எங்கே இருக்கிறது என்று கேட்கிறேன். அத்தகைய மரபு எதுவும் கிடையாது. மற்றொரு மசோதாவில் அடங்கியுள்ள அம்சங்களில் ஒன்று உள்ளடங்கியுள்ள தனால் இரண்டாவது மசோதா நிறைவேற்றப்படக் கூடாது என்பதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை.

இந்த மசோதா, 1919-ல் கொண்டுவரப்பட்ட ஒரு மசோதாவை ஆதார அடிப்படையாகக் கொண்டது என்று பக்ஷி தேக்சந்த் சுட்டிக்காட்டியுள்ளார். இந்த மசோதா நம்முடைய மதிப்புக்குரிய தலைவர் வி.ஜே. படேலின் பெயருடன் தொடர்புடையது. இப்பொழுது

காலப் பொருத்தத்தைக் கொண்டு பார்க்கும்போது, இந்து சட்டத் தொகுப்பு மசோதாவைப் பொறுத்தமட்டில், இந்த வகைப்பட்ட மசோதா மிகவும் முன்கூட்டியே கொண்டுவரப்பட்டிருந்திருக்க வேண்டும். இந்த வகைப்பட்ட விஷயத்தில் மரபுக் கூறுகள் - அவை செல்லத்தக்கவையாயிருந்தாலும் கூட - அவை குறுக்கே நிற்பதற்கு அனுமதிக்கப்படக்கூடாது. இந்த இந்து சட்டத் தொகுப்பு மசோதா நிறைவேற்றப்படாவிட்டால் ஆயிரக்கணக்கான ஆண்கள், பெண்களின் கதி என்னாவது? இந்த அமர்விலும் கூட இது ஷரத்துவாரியாக விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படப்போவதில்லை என்று நினைக்கிறேன். இது செப்டம்பர் அல்லது அக்டோபர் மாதத்திற்கும் கூட நீண்டுபோகக் கூடும், இது சர்ச்சைக்குரிய ஒரு மசோதாவாக இருப்பதால் இந்த அமர்வில்கூட இது நிறைவேற்றப்படாமல் போகக்கூடும். இன்னும் ஓராண்டு கூட ஆகலாம்; அந்தநிலையில், இந்த மசோதாவின் ஷரத்துக்களுக்கு இணங்க திருமணம் செய்து கொள்ள விரும்பும் எத்தனை எத்தனையோ இளைஞர்கள், யுவதிகளின் நிலைமை என்னவாகும்? அது போன்றே, ஒரு தேசத்தை உருவாக்குவதற்கும் வலுப்படுத்துவதற்கும் இசைவான நம்முடைய நடவடிக்கைகள் என்னாவது?

ஐயா, இது விளையாட்டான ஒரு விஷயமல்ல. நான் டாக்டர் அம்பேத்கருக்கு உதவவே விரும்புகிறேன். அவருடைய திருமணம் கூட இந்த மசோதாவினால் சட்டபூர்வமானதாக்கப்படும். இதுகுறித்து அவர் ஏன் நகைக்கவேண்டும்? இது அவருக்குப் பொருந்தக்கூடும் அல்லது பொருந்தாமல் போகக்கூடும்; இருந்தபோதிலும் தகுதியின்மைகள் ஏதாவது இருந்தால் அவை அகற்றப்படும். நூற்றுக் கணக்கான நபர்கள் இந்த மசோதாவின் கீழ் திருமணம் செய்து கொள்ள விரும்புகிறார்கள் என்பதை நானறிவேன். இந்த விதியின் கீழ் திருமணம் செய்து கொள்வது தவறா? இந்த அமர்விலேயே இந்த மசோதா நிறைவேற்றப்படுவதற்கு எதிராக யார் எந்த இடையூறு செய்தாலும் அதை நான் வெறுக்கிறேன். இந்த மசோதா இந்த அமர்வில் நிறைவேற்றப்படாவிட்டால், நம்முடைய முயற்சிகள் அனைத்தும், காந்திஜியின் முயற்சிகளும் வீணாகப் போய்விடும். எனவே, என்னுடைய வேண்டுகோள் இதுதான்: டாக்டர் அம்பேத்கரை, அவருடைய ஆட்சேபனையைத் தயவுசெய்து கைவிடும்படி வினயபூர்வமாகக் கேட்டுக்கொள்கிறேன். சாத்தியமான அளவு விரைவில் இந்த மசோதா நிறைவேற்றப்படுவதற்கு ஒத்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்; ஏனெனில், இது, இந்து சட்டத் தொகுப்பின் இது சம்பந்தப்பட்ட பகுதி நிறைவேற்றப்படுவதற்கும் அவருக்கு உதவும்.

திரு. கே. ஹனுமந்தையா : நான் தெரிவித்த திருமதி அன்னி மாஸ்கரீனின் அவர்களின் பெயரை மதிப்புக்குரிய உறுப்பினர் ஏற்றுக்கொண்டாரா?

திரு. துணை சபாநாயகர் : ஆம், காத்திருக்கும் பட்டியலில் எத்தனை நபர்கள் காத்திருக்கிறார்கள் என்பதை அறிந்து கொள்ள மாண்புமிகு சட்ட அமைச்சர் விரும்புகிறார் என்று கருதுகிறேன்.

பிரச்சினை என்னவெனில்:

''இந்துக்கள், சீக்கியர்கள், ஜைனர்கள் மற்றும் அவர்களின் பல்வேறு சாதிகள், உப-சாதிகளைச் சேர்ந்தவர்களுக்கு இடையிலான திருமணங்களை செல்லத்தக்கவையாக்குவதற்கு வகை செய்யும் இந்த மசோதா ஒரு பொறுக்குக் குழுவின் பரிசீலனைக்கு விட வேண்டும். அக்குழுவில் கீழ்வருபவர்கள் உறுப்பினர்களாக இருப்பார்கள்: கியானி குர்முக் சிங் முஸாபிர், சர்தார் ஹுக்கம்சிங், திரு. எம். அனந்தசயனம் அய்யங்கார், திரு. தேசபந்து குப்தா, திருமதி ஜி. துர்க்காபாய், திருமதி ரேணுகா ரே, திரு. ராம்நாத் கோயங்கா, டாக்டர் பக்ஷிதேக் சந்த், லாலா அசிந்த்ராம், சிஎச். ரணவீர் சிங், திரு. மகாவீர் தியாகி, திருமதி அன்னி மாஸ்கரீன், மற்றும் இந்த மசோதாவைப் பிரேரணை செய்பவர். 1949 பிப்ரவரி 28-க்குள் இக்குழு அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும். குழு கூட்டத்தின் கோரம் குறைந்த பட்சம் ஐந்து உறுப்பினர்கள்.''

இந்தப் பிரேரணை ஏற்றுக்கொள்ளப்பட்டது.

---

*இந்து சட்டத் தொகுப்பு - தொடர்ச்சி

திரு. சபாநாயகர் : மாண்புமிகு டாக்டர் பி.ஆர். அம்பேத்கர்.

பண்டிட் தாகூர்தாஸ் பர்கவா : எழுந்திருக்கிறார்.

திரு. ஜஸ்பத்ராய் கபூர் (உ.பி: பொது): திரு. சபாநாயகர் அவர்களே, ஐயா, ஓர் ஒழுங்குப் பிரச்சினையை எழுப்புகிறேன். இது ஏற்றுக்கொள்ளப்பட்டால், முந்திய அமர்வில் என்னுடைய மதிப்புக் குரிய நண்பர் திரு. நசிருத்தீன் அகமது எழுப்பிய ஒழுங்குப் பிரச்சினை மீது மேற்கொண்டு எந்த விவாதத்தையும் தடை செய்துவிடும். எனவே, என்னுடைய ஒழுங்குப் பிரச்சினையை உங்களுடைய பரிசீலனைக்குச் சமர்ப்பிப்பதற்கு எனக்கு அனுமதி வழங்குமாறுக் கேட்டுக் கொள்கிறேன்.

---

* அ.நி. (சட்டப்பேரவை) டி. தொகுதி I, பாகம் II, 1949 பிப்ரவரி 17, பக்கம் 614-21. எண். 4400-16.

திரு. சபாநாயகர்: பண்டிட் தாகூர்தாஸ் பர்கவா ஏற்கனவே எழுந்து நின்று கொண்டிருப்பதால், அவர் கூறுவதை முதலில் நான் கேட்க வேண்டும் என்று நினைக்கிறேன். அவர் என்ன சொல்லப் போகிறார் என்பதை என்னால் ஊகிக்க முடியாது. எழுப்பப்பட்ட ஒழுங்குப் பிரச்சினை மீது என்னுடைய சொந்தக் கருத்து இருக்கிறது. ஆயினும் பண்டிட் தாகூர்தாஸ் சொல்ல விரும்புவதை நான் பரிசீலனை செய்கிறேன்.

பண்டிட் தாகூர்தாஸ் பர்கவா (கிழக்கு பஞ்சாப் : பொது) : ஐயா, கடந்த சந்தர்ப்பத்தில், மாண்புமிகு டாக்டர் அம்பேத்கர், பிரேரணை சமர்ப்பித்தபோது, திரு. நசிருத்தீன் அகமது பொறுக்குக் குழுவினால் பரிசீலனை செய்யப்பட்ட மசோதா, சபையினால் அதனுடைய பரிசீலனைக்கு விடப்பட்ட மசோதா அல்ல என்ற கூற்றின்மீது ஓர் ஒழுங்குப் பிரச்சினையை எழுப்பினார். அந்த விஷயம் பரிசீலனை செய்யப்பட்டு வந்தபோது, அந்த ஒழுங்குப் பிரச்சினை ஏன் மிகுந்த ஆதாரமுள்ளது என்பதற்கான சில காரணங்களை உங்களுடைய பரிசீலனைக்கு சமர்ப்பித்தேன். நான் அதைச் செய்யும் போது நீங்கள் விவாதத்தைத் தடுத்து நிறுத்தி, விஷயத்தை முடிவுக்குக் கொண்டுவந்தீர்கள். இது 1948, ஆகஸ்டு 31ம் தேதிய, சபை நடவடிக்கைக் குறிப்பின் 778-வது பக்கத்தில் வெளியாகியிருக்கிறது. ஐயா, அந்த சமயத்தில் உங்களுடைய எண்ண ஓட்டம் பற்றி நீங்கள் தெரிவித்தீர்கள். இந்த அறிக்கையின் 779ம் பக்கத்தில் குறிப்பிட்டுள்ள இரண்டு அல்லது மூன்று பிரச்சினைகளைப் பற்றி உரிய நேரத்தில் பரிசிலிப்பதாக நீங்கள் எங்களிடம் கூறியிருந்தீர்கள். உங்களுடைய மனதை அலட்டிக் கொண்டிருந்த அந்த இரு பிரச்சினைகள், முதலாவதாக, பொறுக்குக் குழு தனது வழிக்கு அப்பால், எல்லை வரம்பை மீறிச் சென்றதா என்பதும், இரண்டாவதாக பொறுக்குக் குழு தன்னிடம் பரிசீலனைக்கு விடப்பட்டுள்ளதன் எல்லை வரம்பைத் தாண்டிச் சென்றதா என்பதுமாகும். இவைதாம் அந்த இரண்டு பிரச்சினைகள். வாதப் பிரதிவாதம் நடைபெற்றுக் கொண்டிருந்தது. இறுதியில் 780ம் பக்கத்தில் குறிப்பிட்டுள்ளபடி நீங்கள் முடிவு செய்தீர்கள். எல்லா விவரங்களையும் ஆய்வு செய்து, பின்னர் தீர்ப்புக் கூறுவதாகத் தெரிவித்தீர்கள். அது சம்பந்தமாக, திரு. நசிருத்தீன் அகமது எழுப்பிய ஒழுங்குப் பிரச்சினை மீது சில விஷயங்களை உங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவருவதற்கு விரும்புகிறேன்.

திரு. சபாநாயகர் : அந்த அறிக்கையை நான் பார்த்தபிறகு அப்பொழுது நான் இவ்வாறு கூறினேன் - எனக்கு அச்சிட்ட அறிக்கை

இன்னும் கிடைக்கவில்லை. ஆயினும் என்னிடம் அதனுடைய நகல்கள் உள்ளன. மதிப்புக்குரிய உறுப்பினர் திரு. விஸ்வநாததாஸ் ஒரு விஷயத்தை எழுப்பியபின், நான் கீழ்வருமாறு கூறினேன்:-

> ''நான் ஏற்கனவே கூறியது போன்று இந்த விஷயத்தில் நான் முடிவு கூறப்போவதில்லை. ஒழுங்குப் பிரச்சினை உள்ளிட்ட எல்லாவற்றையும் திறந்த மனதுடன் பார்க்கிறேன். ஏனெனில், இது விவரங்கள் சம்பந்தப்பட்ட பெரிய பிரச்சினைகளைத் தன்னுள் கொண்டுள்ளது என்பதைக் காணலாம். இந்த எல்லா விஷயங்களையும் நான் ஆய்வு செய்யவேண்டும். அதை நான் இன்னும் செய்யவில்லை. இந்தப் பிரச்சினையை இதோடு விட்டு விடலாமா?''

எனவே, இதை ஆய்வு செய்வதற்கு நான் எடுத்துக் கொண்டேன். அதை ஆய்வு செய்துவிட்டேன் என்று இப்பொழுது என்னால் கூற முடியும். ஒழுங்குப் பிரச்சினை சம்பந்தமாக மதிப்புக்குரிய உறுப்பினர்கள் என்ன கூறியிருந்தபோதிலும், நான் பொறுக்குக் குழுவின் அறிக்கையை ஆய்வு செய்தேன், முதலாவது மசோதாவை நான் ஆய்வு செய்தேன். பொறுக்குக் குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டதாகக் கருதப்பட்ட மற்றைய முன்வரைவையும் ஆய்வு செய்தேன் என்பதில் ஐயமில்லை. மதிப்புக்குரிய உறுப்பினர் அது சம்பந்தமாக ஏதாவது கூறுவதற்கிருந்தால், அவர் கூறலாம்.

பண்டிட் தாகூர்தாஸ் பர்கவா: அது சம்பந்தமாகத்தான் இப்பொழுது பேசுவதற்கு எண்ணியுள்ளேன். உண்மையில், இதே ஒழுங்குப் பிரச்சினையை நானும் எழுப்பினேன். ஆனால் அதிருஷ்டவசமாக உங்களுடைய கவனத்தை திரு. நஸிருத்தீன் கவர்ந்தார். எனவே, இந்த விஷயம் சம்பந்தமாக நான் சிறிதளவு சொல்ல வேண்டியுள்ளது.

திரு. மோகன்லால் கௌதம் (உ.பி: பொது): ஐயா, இந்த ஒழுங்குப்பிரச்சினை சம்பந்தமாக நான் ஓர் ஒழுங்குப் பிரச்சினையை எழுப்ப விரும்புகிறேன். ஐயா, அவையின் நடைமுறை சம்பந்தப்பட்ட விதிகளின்படி, ஓர் அறிக்கை இந்த அவையில் சமர்ப்பிக்கப்பட்ட பிறகு எந்த ஒழுங்குப் பிரச்சினையையும் எழுப்புவதற்கு எந்த விதியையும் நான் காணவில்லை. அந்த விதியை மேற்கோள் காட்டும்படி மதிப்புக்குரிய உறுப்பினரை வேண்டுகிறேன். அப்பொழுதுதான் நான் அதை ஆய்வு செய்து, மதிப்புக்குரிய உறுப்பினர் எழுப்பிய ஒழுங்குப் பிரச்சினை விதிகளுக்கு மாறானதா இல்லையா என்பதைக் கண்டறிய முடியும்.

திரு. சபாநாயகர் : இவை மிகவும் தெளிவான விஷயங்கள். இவை பற்றிய விவாதம் தேவையில்லை. விஷயத்தின் சாராம்சம் பற்றி நமக்குக் கருத்து வேற்றுமை இருந்தால், விஷயத்தின் நுட்பக் கூறுகள் பற்றி காலத்தை விரயம் செய்யாமல் அந்த சாராம்சம் பற்றி மட்டும் விவாதிக்க அவகாசம் எடுத்துக் கொள்ளலாம். உறுப்பினர்கள் இந்து சட்டத் தொகுப்பிற்கு எதிராக இருக்கிறார்கள் என்றால் அது சாராம்சம் சம்பந்தப்பட்ட விஷயமாகும். அவர்கள் அதற்கு ஆதரவாக இருக்கின்றார்கள் என்றால், அதுவும் கூட சாராம்சம் சம்பந்தப் பட்ட விஷயமாகும். ஆனால், நுட்பக் கூறுகள் சம்பந்தமாக இந்த அவையின் நேரத்தை நாம் வீணாக்க வேண்டாம்.

அடுத்து, குறிப்பிடப்பட்ட ஒழுங்குப் பிரச்சினை பொறுக்குக் குழுவின் ஆய்வுக்கு அனுப்பப்பட்ட மசோதா, உண்மையில், பொறுக்குக் குழு ஆய்வு செய்த மசோதா அல்ல, எனவே அதன் அறிக்கை வேறு ஒன்றை அடிப்படையாகக் கொண்டதாகும் என்பதே. சுருங்கக்கூறின் அதுதான் ஒழுங்குப் பிரச்சினை. அந்த ஒழுங்குப் பிரச்சினை மீது வாதங்கள் புரியப்பட்டன. மதிப்புக்குரிய உறுப் பினர் பண்டிட் பர்கவா, விவரங்களைப் பற்றிப் பேச விரும்புகிறார் என்றால், விஷயங்கள் வேறுவிதமாகக் காட்சியளிக்கும். திரு. நசிருத்தீன் அகமது கூறியதில் எல்லா விஷயங்களும் அடங்கியிருக் கின்றன என்று கருதுகிறேன். வேறு எந்த விவரங்களையாவது அவர் என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறாரா?

திரு. ஜஸ்பத்ராய் கபூர் : ஐயா, என்னுடைய ஒழுங்குப் பிரச் சினையை உங்கள் முன் சமர்ப்பிப்பதற்கு என்னை அனுமதிக்கும்படி மிகுந்த மரியாதையுடன் உங்களை வேண்டுகிறேன். அது தற்போதைய அமர்வில், இந்தப் பிரச்சினையை விவாதிப்பதற்கு இந்த அவைக்குத் தகுதியிருக்கிறதா என்பது சம்பந்தப்பட்ட விஷயமாகும். மேலும் என்னுடைய நண்பர் திரு. நசிருத்தீன் எழுப்பியுள்ள ஒழுங்குப் பிரச் சினை இந்த அமர்விலேயே விவாதிக்கப்படவேண்டுமா என்பது மாகும். ஏனெனில், என்னுடைய ஒழுங்குப் பிரச்சினை ஏற்றுக் கொள்ளப்பட்டால், தற்போதைய அமர்வில் அந்தப் பொருள் பற்றிய எல்லா விவாதத்தையும் அது தடை செய்துவிடும்.

திரு. சபாநாயகர் : படிப்படியாக செல்ல வேண்டுமென்று நான் கருதுகிறேன். முதலாவது ஒழுங்குப் பிரச்சினையை முதலில் எடுத்துக் கொள்வோம். முதலாவது ஒழுங்குப் பிரச்சினை மசோதா விற்கு ஆதரவாக இருப்பதாக ஊகித்துக் கொண்டால், மதிப்புக்குரிய

உறுப்பினர் எழுப்பியுள்ள இரண்டாவது ஒழுங்குப் பிரச்சினையும் தகுதியானதே, எனவே அதை அவர் பின்னர் எழுப்பலாம்.

திரு. ஜஸ்பத்ராய் கபூர் : திரு. நசிருத்தின் அகமது எழுப்பியுள்ள ஒழுங்குப் பிரச்சினை மீதான விவாதமும் கூட இந்த அவையால் பரிசீலிக்கப்பட வேண்டிய ஒரு விஷயமாகும்; அந்தப் பொருள் பற்றி விவாதிப்பதற்கு இந்த அவை தகுதியுடையதுதானா என்பதே பிரச்சினை.

திரு. சபாநாயகர்: அந்தப் பிரச்சினையை முதலில் எடுத்துக் கொள்ள வேண்டுமென்ற வாதத்தை நான் ஏற்றுக்கொள்ளவில்லை. பொறுக்குக் குழு தன்னிடம் ஆய்வுக்கு அனுப்பப்பட்ட மசோதாவை ஆய்வு செய்ததா, அல்லது வேறு ஒன்றைப் பரிசீலனை செய்ததா என்பதையும், எனவே அதனுடைய அறிக்கையைப் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ள வேண்டுமா, வேண்டாமா என்பதையும் அவைத் தலைவர்தான் முடிவு செய்ய வேண்டும். அது முடிவு செய்யப் பட்டதற்குப்பின்னர், தற்போதைய மசோதாவை பரிசீலனைக்கு எடுத்துக் கொள்வதற்கு இந்த அவைக்குத் தகுதியில்லை என்று கூறுவதற்கு எந்தக் குறிப்புகளையோ அல்லது எந்த சட்டத்தையோ அல்லது எந்த நடைமுறையையோ மதிப்புக்குரிய உறுப்பினர் சுட்டிக் காட்டுவதற்கு முற்றிலும் தகுதி உடையவராவார்: அதுதான் மேம்பட்ட வழியாகும். காலத்தைக் காப்போம்.

திரு. ஜஸ்பத்ராய் கபூர் : ஐயா, நான் ஒரு வார்த்தை கூறலாமா?

திரு. சபாநாயகர் : இல்லை, இல்லை, ஜஸ்பத்ராய் கபூர் அவர்களே.

பண்டிட் தாகூர் தாஸ் பர்கவா : ஐயா, சில விவரங்களையும், அந்த விவரங்களுக்குப் பொருந்துகின்ற சட்டத்தையும் மட்டும் உங்களிடம் எடுத்துக் கூற விரும்புகிறேன். உதாரணமாக, பொறுக்குக் குழுவின் முன்னே நடைபெற்றுள்ள நடைமுறைகள் இந்த அவையின் விதிகளை துஷ்பிரயோகம் செய்ததாகும் என்று விநயமுடன் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இந்த அவையின் தனி உரிமையை பொறுக்குக் குழுவும் சட்ட இலாகாவின் நடைமுறையும் மீறியுள்ளன.

இரண்டாவதாக, என்னுடைய விபரங்கள் சரியானவையென்றால் பொறுக்குக் குழு வேறு ஒரு மசோதாவை ஆய்வு செய்துள்ளது.

அவையினால் அனுப்பி வைக்கப்பட்ட மசோதாவை அல்ல. எனவே, இப்பொழுது எழும் பிரச்சினை ஒரு சட்டப் பிரச்சினையாகும்; அத்தகைய நடைமுறை சரியானதுதானா, மற்றும், பொறுக்குக் குழு விற்கு அனுப்பப்பட்ட மசோதாவின் மீதான அறிக்கையென்று இந்த அறிக்கையை சபை பரிசீலனை செய்ய வேண்டுமா, அல்லது, இது சட்டப்படி செல்லத்தக்கதல்லாதன, எனவே சட்டபூர்வமல்லாத ஓர் ஆவணமா? எனவே மிகவும் சம்பந்தப்பட்ட இரு வகைப்பட்ட பிரச்சினைகளை மட்டும் நான் எடுத்துக் கொள்கிறேன். சாராம்சம் சம்பந்தமாகக் கூட, உங்களுடைய அனுமதியுடன், இந்தப் பிரச் சினையும் சம்பந்தமுடையதுதான் என்று நீங்கள் தீர்ப்பளித்தால், பின்னர் மேலும் சிலவற்றை நான் கூறுவேன்.

இந்தப் பிரச்சினை இரு பாகங்களாகப் பிரிந்துள்ளது என்பது என்னுடைய தாழ்மையான கருத்தாகும். முதலாவதாக, இந்த அவையின் முன் சமர்ப்பிக்கப்பட்டுள்ள அறிக்கை, நடைமுறை சம்பந்தப்பட்ட கண்ணோட்டத்திலிருந்து ஒரு நல்ல அறிக்கைதானா? இரண்டாவதாக, அறிக்கை, மசோதாவின் எல்லை வரம்புக்கு அப்பால் செல்கிறதா? இரண்டாவது பிரச்சினைபற்றிப் பின்னர் அவையின் முன்னால் நான் பேச விரும்புகிறேன்.

முதலாவதாக, உங்களுடைய அனுமதியுடன் அவையின் முன்னே சில விவரங்களைச் சமர்ப்பிப்பதற்கு முன்னால், முதலாவது பிரச்சினை பற்றிப் பேசுவதற்கு விரும்புகிறேன். என்னுடைய தாழ்மையான விண்ணப்பம் என்னவெனில், பொறுக்குக் குழுவின் அறிக்கையிலிருந்து நமக்குக் கிடைத்துள்ளவை, மற்றும் நமக்கு வினியோகிக்கப்பட்டுள்ள ஆவணங்கள், நூலகத்திலிருந்து கிடைத் துள்ளவை ஆகியவற்றின்படி, இந்த மசோதா பொறுக்குக் குழுவின் ஆய்வுக்கு அனுப்பப்பட்டதற்குப் பின்னர், சட்ட இலாகா இந்த மசோதாவுக்கு பதிலாக வேறு ஒரு மசோதாவைத் தயாரித்து அனுப்பியுள்ளது, இந்த மசோதாவை பொறுக்குக் குழு ஆய்வு செய் துள்ளது என்ற முடிவுக்கு நான் வந்துள்ளேன். இந்த விவரங் களெல்லாம் முற்றிலும் சரியானவையா என்று நானறியேன். ஆனால் பொறுக்குக் குழுவிலுள்ள சில உறுப்பினர்களுடன் நான் ஆலோ சனை கலந்தேன். அவர்கள் இதுபற்றி என்னிடம் கூறினார்கள், மற்றும் அதே சமயத்தில் பொறுக்குக் குழுவின் அறிக்கையிலிருந்தும் கூட, உண்மையில் தோன்றுகிறது......

திரு. சபாநாயகர்: மதிப்புக்குரிய உறுப்பினர், ஏற்கனவே மதிப் புக்குரிய உறுப்பினர் திரு. நசிருத்தீன் அகமது கூறியுள்ளவற்றையே

அனேகமாக அப்படியே திரும்பக்கூறுகிறார் என்று அஞ்சுகிறேன். அதே விஷயம்தான் இது. எழுப்பப்பட்ட குறிப்புகளை மனதிற் கொண்டு, நானே அந்த அறிக்கை முழுவதையும் படித்தேன். திரு. நசிருத்தீன் அகமதுவின் உரையில் இல்லாத வேறு எந்த விவரங் களையும் இங்கு சமர்ப்பிப்பதற்கு மதிப்புக்குரிய உறுப்பினருக்கு முழு உரிமை அளிக்க விரும்பும் அதே பொழுதில், அதையே திரும்பக் கூறுவது வேண்டாம் என்று நினைக்கிறேன்.

பண்டிட் தாகூர்தாஸ் பர்கவா : கூறியதையே மீண்டும் கூற நான் விரும்பவில்லை. இந்த விவரங்கள் சரியானவையாக எடுத்துக் கொள்ளப்படுகின்றனவா என்பதை மட்டுமே நான் அறிந்து கொள்ள விரும்புகிறேன். இறுதியில் மற்றொரு மதிப்புக்குரிய உறுப்பினர் எழுந்து, இந்த விவரங்களெல்லாம் தவறு என்று கூறினால், அப்பொழுது இந்த வாதம் முழுவதும் அடிப்பட்டுப் போகும். எனவே, இந்த விவரங்களெல்லாம் சரியானவை என்ற முடிவுக்கு நான் எப்படி வந்தேன் என்பதை உங்களுக்கு முன்னால் வைக்க விரும்பு கிறேன். அவை சரியானவை என்று நீங்கள் எடுத்துக் கொண்டால், இந்த அவைக்கும் உங்களுக்கும் நான் தொந்திரவு கொடுக்க விரும்ப வில்லை. உண்மையில், பொறுக்குக் குழுவின் அறிக்கையிலிருந்தே, பதிலுக்கு அனுப்பப்பட்ட மசோதா மட்டுமே பரிசீலிக்கப்பட்டிருக் கிறது என்று நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். ஏனெனில், பெரும்பான்மைக் குழுவின் அறிக்கையிலிருந்தும், அது போன்றே ஆட்சேபனையாளரின் அறிக்கையிலிருந்தும், வேறு எந்த மசோதா வும் பரிசீலிக்கப்படவில்லை என்று தோன்றுகிறது; குழுவுக்கு அனுப்பப்பட்ட மசோதா பரிசீலிக்கப்படவேயில்லை.

ஐயா, இப்பொழுது, டாக்டர் அம்பேத்கர் நம் முன்னால் ஓர் ஒப்பீட்டு அறிக்கையை வைத்திருக்கிறார். இந்த அட்டவணைகளை நீங்கள் தயை கூர்ந்து பார்வையிட்டால், இரண்டு பாகங்கள் இருப் பதைக் காண்பீர்கள் - ஒன்று, அசல் மசோதா இந்த மசோதாவி லிருந்து எவ்வாறு வேறுபட்டுள்ளது என்பதைக் காட்டுகிறது. அவர் கொடுத்துள்ள மற்றொரு அட்டவணையில் வரைவு மசோதாவுக் கும் பொறுக்குக் குழுவின் அறிக்கைக்கும் உள்ள வேறுபாடு காணப் படுகிறது. மறுவரைவு செய்யப்பட்ட மசோதாதான் பரிசீலிக்கப் பட்டுள்ளது, மூலமசோதா அல்ல என்பதை இதுவும் காட்டுகிறது. எப்படியிருந்த போதிலும், இதுதான் சரியானது என்று எடுத்துக் கொண்டு, மறுவரைவு செய்யப்பட்ட மசோதா மட்டுமே பரிசீலிக்கப் பட்டது என்பது ஏற்றுக்கொள்ளப்பட்டால், மறு-வரைவு செய்யப் பட்ட மசோதா பொறுக்குக் குழுவினால் பரிசீலிக்கப்பட முடியுமா,

அல்லவா என்ற கேள்வி உங்களுக்கு முன்னால் எழுகிறது. மற்றும் அவர்களின் இந்தச் செயல் இந்த அவையின் உரிமை மீறலுக்கு ஒப் பாகாதா என்பதும், பொறுக்குக் குழுவுக்கு இந்த அவை வழங்கி யுள்ள அதிகாரங்கள் துஷ்பிரயோகம் செய்யப்படவில்லையா என்பதும் உங்கள் முன் தோன்றியுள்ள கேள்வியாகும். ஐயா, இப் பொழுது இதற்குப் பின்னால் தவறான உள்நோக்கம் இருப்பதாக நான் கூறுவதாகக் கொள்ளக்கூடாது; இது தெரிந்தோ, தெரியாமலோ செய்யப்பட்டிருக்கக் கூடும். இது நல்ல நோக்கத்துடன் அல்லது கெட்ட எண்ணத்துடன் செய்யப்பட்டிருக்கக் கூடும். அதுபற்றி நான் கவலைப்படவில்லை. பொறுக்குக் குழுவுக்கு அனுப்பப்பட்ட அசல் மசோதா பொறுக்குக் குழுவால் பரிசீலிக்கப்படவேயில்லை என்ற மிக முக்கியமான உண்மையைப் பற்றித்தான் நான் கவலை கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கே. சந்தானம் (ரயில்வே மற்றும் போக்கு வரத்துத் துறை இணை அமைச்சர்) : ஓர் ஒழுங்குப்பிரச்சினை - ஒரு பொறுக்குக் குழு ஒரு மசோதாவைப் பரிசீலனை செய்த முறையைப் பற்றி இந்த அவை விவாதிக்கலாமா என்பதை தெரிந்து கொள்ள விரும்புகிறேன். அப்படியெனில், அந்தப் பொறுக்குக் குழுவின் எல்லா விவாதங்களையும் பற்றிய - சொல்லுக்குச் சொல்லான - முழு அறிக்கைகள் தேவைப்படும். அந்த அறிக்கையை நாம் நிராகரிக் கலாம், அல்லது ஏற்றுக்கொள்ளலாம். அல்லது அந்த அறிக்கை சம்பந்தமாக நாம் என்ன வேண்டுமானாலும் செய்யலாம்; ஆனால் பொறுக்குக் குழு அதை எவ்வாறு ஆய்வு செய்தது என்பது இங்கு பொருத்தமற்ற விஷயம், அது பற்றி விவாதிப்பதும்கூட இந்த அவையின் வழக்கமல்ல. இல்லாவிட்டால், ஒவ்வொரு வருங்காலப் பொறுக்குக் குழுவும் அதனுடைய நேர்மையை நாம் மதிப்பிடுவ தற்காக அதனுடைய விவாதங்களைப் பற்றிய சொல்லுக்குச் சொல்லான பதிவேட்டை நமக்குக் கொடுக்க வேண்டியிருக்கும்....

திரு. சபாநாயகர்: பல்வேறு ஒழுங்குப் பிரச்சினைகள் எழுப்பப்படுகின்றன என்று அஞ்சுகிறேன்; மிகவும் விரிவாகவும் அவை எழுப்பப்படுகின்றன. தற்போதைய பிரச்சினையைப் பொறுத்த மட்டிலும், இந்த அவையினால் அனுப்பப்பட்ட மசோதாவை பொறுக்குக் குழுவினால் பரிசீலனை செய்யப்படவேயில்லை என்பதுதான் நிலைமையானால், பொறுக்குக் குழு அதைப் பரி சீலனை செய்ததா இல்லையா என்ற பிரச்சினையை விவாதிப்பது முற்றிலும் தகுதி உடையதேயாகும் என்று நினைக்கிறேன். அப்படி

யெனில், பொறுக்குக் குழுவின் நடவடிக்கைகளை விவாதிப்பது எந்த அளவுக்கு அனுமதிக்கப்படக்கூடியது என்ற பிரச்சினை எழும்; இது சம்பந்தமாக என்னுடைய தற்போதைய கருத்து என்னவெனில், இந்த அவையோ அல்லது நானோ, ஒரு விவரம் - அறியும் குழுவாக அல்லது நீதிமன்றமாக அமர முடியாது; ஆனால், பொறுக்குக் குழு தனது அறிக்கையில் கூறியுள்ளதை நாம் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளலாம் - அவ்வாறு செய்வதற்கு நமக்கு உரிமை (தகுதி) உண்டு - எனவே விஷயம் ஏறத்தாழ ஊகத்திற்கு உரிய ஒன்றாகும். ஊகத்தின் அடிப்படையில், பொறுக்குக் குழு என்ன செய்தது என்பது பற்றி நாம் ஒரு முடிவுக்கு வரலாம். இது, பொறுக்குக் குழுவிலுள்ள ஒவ்வொரு உறுப்பினரின் சாட்சியத்தையும், கூடுதலான சாட்சியத்தையும் பதிவு செய்வதன் மூலமல்ல, என்னுடைய நண்பர் பண்டிட் பர்கவாவுக்கு அவர் சொல்லியது அனைத்தும் ஒருபுறமிருந்த போதிலும், வாதம் மேற்கொண்டு எவ்வகையிலும் முன்னுக்கு எடுத்துச் செல்லப்படவில்லை என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இதை, இந்த அவையின் உரிமைகள் மீறப்பட்டன, அல்லது நடைமுறை துஷ்பிரயோகம் செய்யப்பட்டது என்று கூறினாலும், சுருங்கக்கூறின் - பொறுக்குக் குழு ஒரு மாற்று மசோதாவைப் பரிசீலனை செய்தது, இந்த அவை அனுப்பிய மூல மசோதாவை அது பரிசீலனை செய்யவில்லை என்பதே வாதமாகும்; பொறுக்குக் குழுவின் அறிக்கையிலுள்ள - பெரும்பான்மை மற்றும் சிறுபான்மை அறிக்கை - சில கூற்றுக்கள் அல்லது கருத்துக்களை இது அடிப்படையாகக் கொண்டது. எனவே, இந்த ஆவணங்களிலிருந்து பார்க்கும் போது, மூலமசோதா, ஒருபோதும் பரிசீலனை செய்யப்படவில்லை. என்று அவர் ஊகிக்கிறார். சுருங்கக்கூறின், ஒழுங்குப் பிரச்சினை இதுவேயாகும். உரிமை மீறப்பட்டது அல்லது நடைமுறை துஷ்பிரயோகம் செய்யப்பட்டது என்ற பிரச்சினை எழும். அவர் ஊகிப்பது போல் பொறுக்குக் குழு செய்துள்ளது என்ற முடிவுக்கு நாம் வந்தால், அதேசமயத்தில் அவர் ஊகிக்கும் விதத்தில் பொறுக்குக் குழு குற்றம் செய்யவில்லை என்ற முடிவுக்கும் நாம் வந்தால், உரிமை மீறல், அல்லது நடைமுறை துஷ்பிரயோகம் செய்யப்பட்டது என்ற பிரச்சினை எழவே செய்யாது. பொறுக்குக் குழுவின் அறிக்கையிலிருந்து மதிப்புக்குரிய உறுப்பினர் வாசிக்கப்போகும் ஒவ்வொரு அம்சத்தையும் ஒரு வேளை அதைவிடக் கூடுதலாகவும் நான் கவனமாகப் படித்தேன் என்பதை மதிப்புக்குரிய உறுப்பினர்களுக்கு உறுதி கூற விரும்புகிறேன். அது குறித்து என் சொந்த முடிவுகள் இருக்கின்றன. இந்த அவையின் நேரத்தை வீணாக்குவதற்குப்

பதிலாக அந்த மசோதாவைப் பற்றி நான் என்ன அபிப்பிராயப் படுகிறேன் என்று கூறி, இதுபற்றி என் முடிவைத் தெரிவித்து, இத்துடன் முடித்துக்கொள்ள விரும்புகிறேன். இவ்விஷயத்தில் அதுதான் என் உணர்வு. (சில மதிப்புக்குரிய உறுப்பினர்கள்: ''மிகவும் சரி, ஐயா''). எது எப்படியிருந்த போதிலும் இந்த மசோதாவை இன்றைக்கு நாம் முடிக்கப் போவதில்லை. நாம் நிலைமையைத் தெளிவாக்கி, மேற்கொண்டு வாதங்களுக்குள் போகாமல், நான் ஒரு வேளை.....

பண்டிட் தாகூர்தாஸ் பர்கவா : விஷயங்கள் எவ்வாறு நடைபெற்றுள்ளன என்று உங்களிடமிருந்து கேட்டதற்குப் பின்னர், வாதங்களினுள் மேற்கொண்டு போவதற்கு நான் விரும்பவில்லை. ஆனால், எனக்குக் கிடைத்துள்ள சில தீர்ப்புகளை உங்களுக்கு முன்னால் வைக்க விரும்புகிறேன். பொறுக்குக் குழுவிடமிருந்து வந்துள்ள இந்த மசோதா முற்றிலும் தேவையற்றது, சட்டவிரோத மானது, குழுவின் அறிக்கை முழுவதையும் மாசுபடுத்துகிறது என்பதைக் காட்டுகிறது. மற்றும் அவையின் முன்னால் எந்த அறிக்கையும் இல்லை. இதுதான் என்னுடைய விண்ணப்பம். நீங்கள் அனுமதித்தால், சில தீர்ப்புகளை உங்களுக்கு முன் சமர்ப்பிக்கிறேன்.

திரு. சபாநாயகர்: ஆயினும், தீர்ப்புகள் சில விவரங்களுக்குப் பின்னால் வருகின்றன. இந்த விஷயத்தில், சொல்லப்போனால், பொறுக்குக் குழு மூலமசோதாவைப் பரிசீலிக்கத் தவறியுள்ளது என்று குற்றம் சாட்டப்பட்டுள்ளது. அது நிலைநாட்டப்பட்டால், பின்னர் அந்தத் தீர்ப்புகளைப் பரிசீலனை செய்வதற்கு நமக்குப் போதிய அவகாசம் இருக்கும்.

பண்டிட் தாகூர்தாஸ் பர்கவா : இந்த உண்மையை யாரும் மறுக்கவில்லை.

திரு. சபாநாயகர் : இதுதான் விஷயம் என்பதை மதிப்புக் குரிய உறுப்பினர் பார்க்கவேண்டும். நான் ஒரு தீர்ப்புக் கொடுக்கும் போது, எல்லா ஆவணங்களையும் படித்த பின்னர், அதை கவன மாகத் தயாரிக்கிறேன். நான் கூறியுள்ள விவரங்கள் ஏற்றுக் கொள்ளப் பட்டபின்னர், வேறு பிரச்சினைகள் ஏதாவது எழுந்தால், அப்பொழுது அந்த ஒழுங்குப் பிரச்சினைகளைப் பரிசீலிக்கலாம்.

திரு. எம். திருமலராவ் (சென்னை : பொது) : நீங்கள் உங்க ளுடைய தீர்ப்பை வழங்குவதற்கு முன்னால் அனுமானத்தின் பேரில்

அல்லாமல் உண்மையை அறிந்து கொள்வதற்கு வேறு எந்த வழி முறையும் இல்லையா?

மாண்புமிகு டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் : (சட்டத்துறை அமைச்சர்) : இந்த அவையினால் பொறுக்குக் குழுவுக்கு அனுப்பப் பட்ட அசல் மசோதா பொறுக்குக் குழுவின் முன்னால் ஒருபோதும் இருக்கவில்லை என்ற ஓர் அபிப்பிராயத்தை இந்த அவையில் ஏற்படுத்துவதற்கு என்னுடைய நண்பர் பண்டிட் பர்கவா முயன்றுள் ளார். இந்த அபிப்பிராயத்தைத் திருத்துவதற்கு, உங்களுடைய அனுமதியுடன் நான் ஒரு நிமிடம் குறுக்கிடலாமா? இது ஒரு கொச்சையான தப்பபிப்பிராயமாகும் என்று கருதுகிறேன். என் னுடைய மதிப்புக்குரிய நண்பர்........

திரு. சபாநாயகர் : நிலைமையை நானே மிகவும் விவரமாக ஆராய்ந்தேன். என்னுடைய முடிவைப் படித்துக் காட்டுவதன் மூலம் நான் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

பண்டிட் முகுத் பிஹாரிலால் பர்கவா? (ஆஜ்மீர்-மீர்வாரா) : என்னிடத்தில் கூடுதல் விவரங்கள் உள்ளன.

திரு. சபாநாயகர் : அமைதி, அமைதி!

பண்டிட் முகுத் பிஹாரிலால் பர்கவா : தலைவரின் கவனத் திற்கு வராத ஒரு கூடுதல் விவரம் இருக்கிறது. மறு - வரைவு செய்யப் பட்ட மசோதா ஏதாவது அச்சிடப்பட்டுள்ளதா என்று கண்டறி வதற்காக நான் சட்ட இலாகாவிற்கு ஒரு கடிதம் எழுதினேன். ஒரு சில பிரதிகளே அச்சடிக்கப்பட்டன. அவை சபையின் நூலகத்தில் கிடைக்கும் என்ற தகவல் எனக்குக் கொடுக்கப்பட்டது. நான் அந்த மசோதாவைப்பார்த்தேன். பொறுக்குக் குழு கூடுவதற்கு முன்னதாக, 1948 ஜூலையில் மறு-வரைவு செய்யப்பட்ட ஒரு மசோதா அச்சிடப் பட்டது என்பது உண்மை. அந்த மசோதா பொறுக்குக் குழுவினால் ஷரத்து வாரியாகப் பரிசீலனை செய்யப்பட்ட பின்னர், அந்த மசோதாவும் அதனுடைய அறிக்கையும்தான் வெளிவந்திருக்கிறது. அந்த அறிக்கை இதைக் கூறுகிறது. எனவே, என்னுடைய விண்ணப்பம் என்னவெனில், தன்னிடம் அனுப்பப்பட்ட மசோதாவின்பால் பொறுக்குக் குழு தனது மனதை செலுத்தியதா, அல்லது, மூல மசோதாவைப் பரிசீலனை செய்ததற்குப் பின்னர், முற்றிலும் வேறு வடிவத்தில் டாக்டர் அம்பேத்கரின் கையெழுத்தின் கீழ், மறு-வரைவு

செய்யப்பட்ட வேறு மசோதா அச்சடிக்கப்பட்டதா என்பதைக் கண்டறிய, மறு - வரைவு செய்யப்பட்ட மசோதாவை நாம் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். இது ஒரு மிகவும் முக்கியமான ஆவணமும், கூடுதல் விவரமுமாகும். தீர்ப்புக் கூறவதற்கு முன்னால், இதை நான் சபாநாயகரின் கவனத்திற்குக் கொண்டு வருவதற்கு விரும்புகிறேன்.

பண்டிட் தாகூர்தாஸ் பர்கவா : அந்த மசோதாவின் ஒரு பிரதி என்னிடத்தில் இருக்கிறது.

திரு. சபாநாயகர் : மதிப்புக்குரிய உறுப்பினர்களிடம் இல்லாத சில விவரங்கள் என்னிடத்தில் உள்ளன.

இந்து சட்டத் தொகுப்பின் மீதான பொறுக்குக் குழுவின் அறிக்கையை விவாதத்திற்கு எடுத்துக் கொள்ள வேண்டும் என்ற சட்ட அமைச்சரின் பிரேரணை தகுதியற்றது என, 1948 ஆகஸ்டு 31-ல் மதிப்புக்குரிய உறுப்பினர் நசிருத்தீன் எழுப்பி, வேறுசில உறுப்பினர்கள் ஆதரவு அளித்த ஒழுங்குப் பிரச்சினை ஒரு குறுகிய வட்டத்திற்குட்பட்ட விவரங்களை அடிப்படையாகக் கொண்டதாகும். எழுப்பப்பட்ட ஆட்சேபனை ஒரு நியாயச் சங்கிலி போன்று பின்வரும் வடிவத்தில் முன்வைக்கப்பட்டது:

> ''பொறுக்குக் குழு பரிசீலனை செய்ததானது, அசல் மசோதாவின் ஒரு 'பதிலி' - 'ஒரு திருத்தப்பட்ட வரைவு'' வடிவத்தில் முன்வைக்கப்பட்டதாகும். எனவே பொறுக்குக் குழு அதற்கு அனுப்பப்பட்ட மசோதாவைப் பரிசீலனை செய்யவில்லை, மாறாக, 'ஒரு புதிய ஆவணத்தை' ஆய்வு செய்தது. எனவே, பொறுக்குக் குழவின் தற்போதைய அறிக்கை, ஒரு புதிய ஆவணத்தின் மீதான ஒரு அறிக்கையாக இருப்பதால், மூல மசோதாவின் மீதான பொறுக்குக் குழுவின் அறிக்கை ஏதுமில்லை. எனவே, பொறுக்குக் குழுவிடமிருந்து வெளிவந்துள்ள மசோதாவைப் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ள வேண்டுமென்ற மாண்புமிகு சட்ட அமைச்சரின் பிரேரணை தகுதியற்றதாகும்.'' இதுதான் ஒழுங்குப் பிரச்சினையின் சாராம்சமாகும். (திரு. மகாவீர் தியாகி : ''அதுதான் உங்களுடைய தீர்ப்பா?''). விஷயத்தை சரியாக எடுத்துச் சொல்லியிருக்கிறேன் என்று நம்புகிறேன்.

ஒழுங்குப் பிரச்சினையை எழுப்பிய அல்லது ஆதரித்த திரு. நசிருத்தீன் அகமது பண்டிட் தாகூர்தாஸ் பர்கவா, மற்றும் திரு. விஸ்வநாத தாஸ் ஆகிய உறுப்பினர்களில் யாரும் பொறுக்குக்குழுவின் உறுப்பினர்கள் அல்ல, எனவே இயற்கையாகவே, பொறுக்குக் குழு கூட்டங்களில் எது பரிசீலனை செய்யப்பட்டது என்பது குறித்து அவர்களுக்கு நேரடியாகத் தெரியாது. எனவே, அவர்கள், பொறுக்குக் குழுவின் அறிக்கையிலுள்ள சில கூற்றுக்களை ஆதாரமாகக் கொண்டு, பொறுக்குக் குழுவுக்கு அனுப்பப்பட்ட மூலமசோதா, அவர்களால் பரிசீலிக்கப்படவில்லை என்று கருதினர்.

இவ்வாறு, எழுப்பப்பட்ட பிரச்சினையானது முற்றிலும் விவரங்கள் சம்பந்தப்பட்ட ஒன்றேயாகும். அதாவது பொறுக்குக் குழுவுக்கு அனுப்பப்பட்ட மசோதா, அதாவது அதிலுள்ள பல்வேறு சாராம்சமான ஷரத்துகள் - அவை அமைக்கப்பட்டுள்ள வடிவம் அல்லது வரிசைக் கிரமத்திற்கு அப்பாற்பட்ட முறையில் - பொறுக்குக் குழுவினால் பரிசீலிக்கப்பட்டனவா, அல்லவா; அவர்களுக்கு அனுப்பப்பட்ட மசோதாவின் சாராம்சமான ஷரத்துக்களின்பால் பொறுக்குக் குழுவினர் தங்கள் மனதை செலுத்தினார்களா, இல்லையா என்பதே எழுப்பப்பட்ட கேள்வியாகும்.

தங்களுக்கு அனுப்பப்பட்ட மசோதாவின் ஷரத்துக்களுக்குச் சேர்ப்பு செய்யவோ, சில ஷரத்துகளை அகற்றவோ, அல்லது அவற்றை மேம்படுத்தவோ பொறுக்குக் குழுவுக்கு உரிமை இருப்பதை யாரும் மறுக்கவில்லை; ஆனால் பொறுக்குக் குழுவினால் அவ்வாறு செய்யப்படும் சேர்ப்புகள், அகற்றல்கள் அல்லது மேம்பாடுகள் முதலியன அந்த மசோதாவின் எல்லை வரம்புக்கு உட்பட்டதாக இருக்கவேண்டும். எனவே, இந்த அம்சம் பற்றி நான் ஏதும் கூற வேண்டியதில்லை. ஏனெனில், மசோதாவின் வரம்புக்கு அப்பால் பொறுக்குக் குழு சென்றுவிட்டதாக எந்தப் பிரச்சினையும் எழுப்பப் படவில்லை.

எனவே, எனக்கு முன்னால் உள்ள எழுத்து மூலமான, மற்றும் வாய்மொழியான சாட்சியத்தின் வெளிச்சத்தில், ஒழுங்குப் பிரச்சினையை எழுப்பியுள்ள மதிப்புக்குரிய உறுப்பினர்களினால் வரையறுத்துக் கூறப்பட்டுள்ள, விபர அறிக்கையை இப்பொழுது நான் பரிசீலனை செய்ய முடியும்.

பிரேரணை செய்யப்பட்டுள்ள மசோதா எவ்வாறு வகுக்கப் பட்டது என்பது சம்பந்தமான விவரங்களை நான் சுருக்கமாகக் கூறு கிறேன். நோக்கங்கள் மற்றும் காரணங்கள் பற்றிய அறிக்கையில் கூறப்பட்டுள்ளபடி, மத்திய அரசு, 1944, ஜனவரி 20ம் தேதிய அவர் களின் தீர்மானத்தின்படி, இந்து சட்டம் பற்றிய ஒரு தொகுப்பை வரையறுக்கும் நோக்கத்திற்காக ஓர் இந்து சட்டத் தொகுப்புக் குழுவை நியமித்தது. சாத்தியமான வரை இது முழுமை பெற்றதாக இருக்க வேண்டும் என்றும் அது கூறியது. எல்லா மாகாணங்களுக் கும் இந்து சமுதாயத்தின் எல்லாப் பகுதிகளுக்குமான இந்து சட் டத்தின் வெவ்வேறு அம்சங்களையும் உள்ளடக்கிய ஓர் ஒன்று பட்ட மற்றும் ஒருசீரான சட்டத் தொகுப்புக்கு ஆதரவாக நாட்டில் பொதுஜன அபிப்பிராயம் வளர்ந்து வருவதை முன்னிட்டு, இது செய்யப்பட்டது. மேலும் இந்து சமூகத்தில் இன்றுள்ள நிலைமைகள் மற்றும் போக்ககுகளை முன்னிட்டும், இந்து சமுதாயம் வேகமாகத் தன்னை புதிய பணிக்கு ஏற்பத் தகவமைத்துக் கொள்ளுவதாகத் தோன்றுகிறது. இதற்குப் பொருத்தமான வகையில் சட்டத்தை மாற்று வதற்குப் பெரும் தேவை ஏற்பட்டுள்ளது என்றும் உணரப்பட்டது.

மசோதாவை பொறுக்குக் குழுவுக்கு அனுப்ப வேண்டும் என்ற பிரேரணை 1948 ஏப்ரல் 9ஆம் தேதி நிறைவேற்றப்பட்டபோது, மசோதாவின் சாராம்சம், அதனுடைய வடிவம், மற்றும் மசோதா வின் முன்வரைவைத் தயாரிப்பது ஆகியவை சம்பந்தமாக மதிப்புக் குரிய உறுப்பினர்கள் தங்கள் கருத்தை எடுத்துச் சொல்வதற்கு அவகாசமிருக்கவில்லை. இந்து சட்டக் குழு தயாரித்த மசோதாவின் முன் வரைவு, ஒரு சட்டத்தொகுப்பின் லட்சணங்களுக்கு ஏற்றதாக இருக்கவில்லை என்று சட்ட அமைச்சகம் உணர்ந்ததால், குறைபாடு களைப் போக்குவதற்காக மசோதாவின் முன்வரைவைத் திருத்தி வரைவதென்றும், சட்டத்தொகுப்பின் ஷரத்துக்கள் பற்றி ஒரு முழு மற்றும் பூரணமான சித்திரம் தரும்படிச் செய்வதென்றும் முடிவு செய்தது. எனவே அவர்கள், மூல மசோதாவின் பாகங்களையும் பிரிவுகளையும், தொடர்ச்சியான பிரிவுகளாகவும், தர்க்கரீதியான வரிசைக்கிரமமாகவும் மறு சீரமைக்கும் பணியை மேற்கொண்டனர். மேலும் பொறுக்குக் குழுவினால் பரிசீலனை செய்வதற்கு முறையாக இருக்கும் என்று அவர்கள் மேலும் சில யோசனைகளையும் கூறி யிருந்தனர். பொறுக்குக் குழுவினால் அவர்களது கூட்டங்களில் உருவாக்கப்படும் வகையில், அல்லது மாற்றங்களை அமைத்து வரையும்படி வரைவோருக்கு ஆணை பிறப்பிப்பதற்கு வகை செய்யும் ரீதியில் சட்ட அமைச்சகம் பொறுக்குக் குழுவின் முன்னால் ஒரு முறையான வடிவத்தை சமர்ப்பித்தது.

திருத்தப்பட்ட வடிவத்தில் சட்டத் தொகுப்பைச் சுற்றுக்கு விட்டபோது சட்ட அமைச்சகம் பொறுக்குக் குழு உறுப்பினர்களுக்கு உதவியாக ஓர் அட்டவணையையும், இந்து சட்டக் குழுவினால் தயாரிக்கப்பட்ட மூலமசோதாவில் உள்ள ஒரு பிரிவு திருத்தப்பட்ட தொகுப்பில் எங்கு அமைய வேண்டும் என்பதையும் வழங்கியிருந்தனர். இவ்வாறு பொறுக்குக் குழுவின் உறுப்பினர்களுக்கு முன்னால் எல்லா சமயங்களிலும் ஒவ்வொரு கட்டத்திலும் மூல மசோதாவில் அடங்கியிருந்த தொகுப்பின் ஷரத்துகளும் இருந்தன. மேலும் திருத்தப்பட்ட முன்வரைவில் சாராம்சம் சம்பந்தமாக யோசனை கூறப்பட்ட மாற்றங்களையும் பொறுக்குக் குழுவின் உறுப்பினர்கள் கவனிக்க வேண்டும் என்று சட்ட அமைச்சகம் தெரிவித்தது. எனவே, மசோதாவின் திருத்தப்பட்ட மற்றும் மூல வடிவத்தின் ஷரத்துகள் அனைத்தும் விவாதத்தின் எல்லாக் கட்டங்களிலும் பொறுக்குக் குழுவின் முன்னால் இருந்தன என்பது தெளிவு. மேலும் பொறுக்குக் குழுவின் விவாதங்களில் மூல ஷரத்துகளும், சட்ட அமைச்சகத்தினால் யோசனை கூறப்பட்ட திருத்த மசோதாவின் ஷரத்துகளும் ஒப்பீடு செய்யப்பட்டன.

மேலே கூறப்பட்ட விவரங்கள் சம்பந்தமான சான்று சம்பந்தப்பட்ட பிரச்சினையைப் பொறுத்த மட்டிலும், ஒழுங்குப் பிரச்சினை சம்பந்தமாகப் பேசிய பொறுக்குக் குழுவின் ஒரே உறுப்பினர் பண்டிட் பாலகிருஷ்ண சர்மா மட்டுமே. பண்டிட் பாலகிருஷ்ண சர்மா, சபையில், ''நாங்கள் பரிசீலனை செய்ய வேண்டுமென்று அவை எங்களைக் கேட்டுக்கொண்ட மசோதா எப்போதும் எங்கள் முன்னால் இருந்தது'' என்று கூறினார். பிரதான அறிக்கையும், அது போன்றே கருத்து வேறுபடும் குறிப்பு ஆகியவை அடங்கியுள்ள, பதிவாகியுள்ள சான்றும் அறிக்கைக்குப் போதிய அளவு ஆதரவாக உள்ளன. இந்த ஆட்சேபனையை எழுப்பிய மதிப்புக்குரிய உறுப்பினர்கள் பொறுக்குக் குழுவின் அறிக்கையின் சில பகுதிகளை அல்லது கருத்துவேறுபாட்டுக் குறிப்பை ஆதாரமாகக் கொண்டவர்கள் சில பகுதிகளை சந்தர்ப்ப சூழ்நிலைக்கு மாறாக எடுத்துக் கொண்டு விட்டதாகத் தோன்றுகிறது. பிரதான அறிக்கை இவ்வாறு கூறுகிறது:

> ''கீழே கையொப்பமிட்டுள்ள நாங்கள், மசோதாவை - திருத்தப்பட்ட நகலில் அல்ல - பரிசீலனை செய்ததற்குப் பின்னர், இப்பொழுது இவ்வாறு சமர்ப்பிக்கிறோம்'' இத்தியாதி என்று கூறுகிறது. இவ்வாறுதான் அவர்கள் தமது அறிக்கையைத் தொடங்குகின்றனர்.''

மசோதாவை - திருத்தப்பட்ட நகலை அல்ல - பரிசீலனை

செய்ததாக அவர்கள் கூறுகின்றனர். ஆனால் மேலும் அவர்கள் இவ்வாறு குறிப்பிடுகின்றனர்:

> ''சட்டப் பேரவையில் அறிமுகம் செய்துவைக்கப்பட்ட இந்து சட்டத்தின் முன்வரைவு அது அறிமுகம் செய்து வைக்கப்படுவதற்கு முன்னால், இலாகா பூர்வமான தணிக்கை எதுவும் செய்யப்படவில்லை. சட்ட அமைச்சகம் தற்பொழுது ஒரு திருத்தப்பட்ட நகலை சமர்ப்பித்துள்ளது. இது, எங்களுடைய கருத்துப்படி, பல அம்சங்களில் கூடுதல் திருப்தி அளிக்கக் கூடியதாக இருக்கிறது. இந்தத் திருத்தப்பட்ட நகல், அசல் மசோதாவில் எத்தகைய சாராம்சமான மாற்றங்களையும் செய்யவில்லை; ஆனால் மூல மசோதாவின் கட்டமைப்பினுள்ள மசோதாக்கள் வழக்கமாக சட்டப் பேரவையில் அறிமுகம் செய்துவைக்கப்படும் வடிவத்தில் இருக்கும்படி மாற்றி அமைத்துள்ளது.''

எனவே, பொறுக்குக் குழு மூல மசோதாவின்பால் தனது மனதைச் செலுத்தி, அது திருத்தி அமைக்கப்பட்டுள்ளது - சாராம்சத்தில் அல்ல - வடிவத்தில் மட்டுமே என்ற முடிவுக்கு வந்துள்ளது என்பது தெளிவு. மூலமசோதாவைக் காட்டிலும் திருத்தப்பட்ட நகல் மேம்பட்டது என்று தாங்கள் ஏன் கருதுகிறோம் என்பதற்கான காரணங்களையும் அவர்கள் கூறுகின்றனர். பின்னர் அவர்கள் இவ்வாறு கூறுகின்றனர்:

> ''இதைத் தொடர்ந்து நமது விவாதங்களை மசோதாவின் திருத்தப்பட்ட நகல்மீது மட்டும் நடத்துவது என்று நாங்கள் முடிவு செய்தோம்.''

''இதைத் தொடர்ந்து'' என்ற சொற்கள் முக்கியமானவை. மூலமசோதாவின் மற்றும் திருத்தப்பட்ட நகலின் சாராம்சமான ஷரத்துகளைப் பார்த்த பின்னர், திருத்தப்பட்ட நகலின் மீது விவாதம் செய்வதுதான் இயல்பானதும் கூடுதல் பொருத்தமானதுமாகும். இது மூல மசோதாவின் சாராம்சத்தை அபிவிருத்தி செய்யப்பட்ட வடிவமேயன்றி வேறல்ல. பொறுக்குக் குழு மேலும் இவ்வாறு கூறியது:

> ''ஒவ்வொரு பிரிவுக்கும் பக்கவாட்டில் மூலமசோதாவின் இதையொத்த பிரிவைச் சுட்டிக்காட்டும் குறிப்புகள் கொடுக்கப்பட்டுள்ளன.''

தமது முடிவுகளை இறுதியாக்குவதற்கு, அவர்களது விவாதங்கள் திருத்தப்பட்ட நகலையே அடிப்படையாகக் கொண்ட போதிலும், தங்களது பார்வையில் மூலமசோதாவின் ஒவ்வொரு ஷரத்தையும் வைத்துக்கொண்டிருந்தனர் என்பதற்கு இது மேலும் ஒரு தெளிவான சான்று ஆகும். ஷரத்துகள் பற்றிய குறிப்புகளில் இது

மேலும் மிகவும் தெளிவாக்கப்பட்டுள்ளது. அதில் அவர்கள் மசோதாவின் பல்வேறு பாகங்களையும் ஷரத்துகளையும் ஆய்வுசெய்து, ஒவ்வொரு பாகம் அல்லது ஷரத்து சம்பந்தமாகவும் மூலமசோதாவின் இணையொத்த பாகத்தை அல்லது ஷரத்தைக் குறிப்பிடுகின்றனர்.

டாக்டர் பக்ஷி தேக் சந்த், மற்றும் பண்டிட் பாலகிருஷ்ண சர்மாவின் மாறுபட்டக் கருத்துக் குறிப்பு, ஓரிடத்தில், பொறுக்குக் குழு பரிசீலனை செய்ததானது திருத்தப்பட்ட நகலே அன்றி, மூல மசோதா அல்ல என்று கூறுகிறது. மேலே கூறப்பட்டதன் வெளிச்சத்தில் இதற்கு விளக்கம் கூறப்படவேண்டும். திருத்தப்பட்ட நகல் பரிசீலனை செய்யப்படுவதாக அவர்கள் குறிப்பிட்ட இடம், அவர்களது ஆட்சேபனை அம்சம் என்னவெனில், திருத்தப்பட்ட நகல் யோசனை கூறியுள்ள மாற்றங்கள், வடிவத்திலான மாற்றங்கள் மட்டுமல்ல, சாராம்சம் சம்பந்தப்பட்ட விஷயங்களிலும்கூடத்தான். அவர்களது விரிவான மற்றும் திறமையான குறிப்பில், மூலமசோதா பொறுக்குக் குழுவினால் பரிசீலனை செய்யப்படவில்லை என்று எந்த ஒரு குறிப்பையும் அவர்கள் கூறவில்லை என்பது நினைவு கூரத்தக்கது. திருத்தப்பட்ட நகல் யோசனை கூறியுள்ள மாற்றங்கள் நல்லவையா, அல்லவா என்பது பற்றித்தான் அவர்கள் தமது மாறுபட்ட குறிப்பில் கூறியுள்ளனர். எனவே, விவரங்களைப் பொறுத்த மட்டிலும், ஆவணங்களில் வெளியாகின்றபடி, பொறுக்குக் குழு அவர்களுக்கு அனுப்பப்பட்ட மசோதாவின் சாராம்ச பூர்வமான ஷரத்துக்களைப் பூரணமாகவும் உரிய முறையிலும் பரிசீலனை செய்துள்ளனர் என்பது எனக்குத் தெளிவாகத் தெரிகிறது. எனவே, மாண்புமிகு சட்டத்துறை அமைச்சரின் தற்போதைய பிரேரணை தகுதி யுள்ளதும், முறையானதுமாகும்.

இப்பொழுது, விவரங்கள் பற்றிய முடிவு இதுவாக இருக்கும்போது, திரு. கபூரின் ஒழுங்குப் பிரச்சினை என்ன?

மதிப்புக்குரிய ஓர் உறுப்பினர்: இப்பொழுது நாம் அவையை ஒத்திப்போடலாம். இப்பொழுது நேரம் ஐந்து மணிக்கு மேலாகிறது.

திரு. சபாநாயகர் : இப்பொழுது அவை ஒத்திவைக்கப்படுகிறது.

(பின்னர், 1949, பிப்ரவரி 18, வெள்ளிக்கிழமை காலை 10.45 மணி வரையிலும் பேரவை ஒத்திவைக்கப்பட்டது)

(காலை 11.45 மணி)

*இந்து சட்டத் தொகுப்பு - தொடர்ச்சி.

திரு. துணை சபாநாயகர் : இந்து சட்டம் பற்றிய விவாதத்தை இப்பொழுது நாம் மீண்டும் தொடருவோம்.

திரு. ஐஸ்பத்ராய் கபூர் (உ.பி. பொது) : நான் ஓர் ஒழுங்குப் பிரச்சினையை எழுப்பலாமா?

மாண்புமிகு டாக்டர் அம்பேத்கர் : எழுந்திருக்கிறார்.....

திரு. துணை சபாநாயகர் : திரு. கபூரால் ஓர் ஒழுங்குப் பிரச் சினை எழுப்பப்படுகிறது.

மாண்புமிகு டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் (சட்ட அமைச்சர்): அதைப்பற்றித்தான் கூறுவதற்கு நான் முன்வந்தேன். ஐயா, நிகழ்ச்சி நிரல் குறிப்பில் 16 வெவ்வேறு பிரேரணைகள் இருக்கின்றன. அவற்றில் சில, ஒழுங்குப் பிரச்சினைகளை எழுப்புகின்றன; வேறு சில, சாராம்சபூர்வமான பிரேரணைகள். என்னுடைய பிரேரணை யின் மீது நான் பேசுவதற்கு முன்னதாக, அவற்றின் மீது நான் என் கருத்துக்களை வெளிப்படுத்தவிருக்கிறேன். ஆயினும் என்னுடைய நண்பர் ஏதாவது சொல்ல விரும்பினால், அவர் தாராளமாகக் கூறலாம்.

திரு. துணை சபாநாயகர் : அவருடைய ஒழுங்குப் பிரச் சினையை நாம் கேட்போம்.

திரு. ஐஸ்பத்ராய் கபூர் : ஐயா, முந்திய சந்தர்ப்பத்தில், பிரேரணை விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது, ஓர் ஒழுங்குப் பிரச்சினையை எழுப்புவதற்கு நான் எழுந்து நின்றேன். அப்பொழுது, என்னுடைய நண்பர் திரு. நசிருத்தீன் அகமது எழுப்பி யுள்ள ஒழுங்குப் பிரச்சினை பைசலாக்கப்படும் வரையில் பொறுத் திருக்கும்படி மாண்புமிகு சபாநாயகர் எனக்கு ஆணையிட்டார். அந்த ஒழுங்குப் பிரச்சினை அன்றைய தினம் மாலை சரியாக ஐந்து மணிக்கப் பைசல் செய்யப்பட்டது, அதற்குப் பின்னர் சபையின்

---

* அ.நி. (சட்டம்) டி. தொகுதி II, பாகம் II 1949 பிப்ரவரி 24, பக். 821-52.

அமர்வு அன்றைய தினம் முடிவுக்கு வந்தது. எனவே அந்த ஒழுங்குப் பிரச்சினையை இப்பொழுது எழுப்புவதற்கு, நீங்கள் தயை கூர்ந்து எனக்கு அனுமதியளிப்பீர்கள் என்று நம்புகிறேன். நான் அதை எழுப்புவதற்கு முன்னால், என்னுடைய நோக்கம்..... சபைக்கு நான் உறுதி கூற விரும்புகிறேன்.

திரு. துணை சபாநாயகர் : மதிப்புக்குரிய உறுப்பினர் தயவு செய்து தனது ஒழுங்குப்பிரச்சினையைக் கூறட்டும். எந்தவிதமான மன்னிப்புக் கோருவதற்கோ, வாதத்திற்கோ அவசியமில்லை. அந்த ஒழுங்குப் பிரச்சினையை நான் கேட்பதற்கு விரும்புகிறேன்.

திரு. ஜஸ்வத்ராய் கபூர் : என்னுடைய ஒழுங்குப் பிரச்சினை முதலாவதாக, இந்த அவையின் உறுப்பினர்களது உரிமைகளையும் தனிச் சலுகைகளையும் சம்பந்தப்பட்டதாகும்; இரண்டாவதாக, தற்போதைய அமர்வில், இந்து சட்டத் தொகுப்பு மசோதா போன்ற ஒரு முக்கியமான மற்றும் கருத்து வேறுபாட்டுக்குரிய நடவடிக்கையை விவாதிப்பதற்கு இந்த அவைக்குத் தகுதியாயிருக்கிறதா என்பதாகும்; அதுவும் இந்த அவையின் அதிக எண்ணிக்கையிலான உறுப்பினர்கள் சபையில் கலந்து கொள்ளவில்லை; கலந்துகொள்ள முடியாது, இது சொந்தக் காரணங்களுக்காக அல்ல, அல்லது கட்சிக் காரணங்களுக்காகவும் அல்ல, மாறாக நாட்டின் காரணங்களால் மற்றும் நாடு முழுமையின் நலனுக்காக; அவர்கள் பட்ஜெட் அமர்வுகளுக்காகத் தத்தமது மாநில சட்டப்பேரவைகளில் சுறுசுறுப்பாக ஈடுபட்டுள்ளனர். இந்த அவையில் கலந்துகொண்டு, இந்து சமுதாயம் முழுவதையும் பாதிக்கின்ற இந்தப் பிரேரணையின் விவாதத்தில் பங்கெடுத்துக் கொள்வதற்கு மிகவும் ஆவலாகவும், ஆர்வத்துடனும் இருந்தபோதிலும் அவர்களால் முடியவில்லை.

மதிப்புக்குரிய உறுப்பினர்கள்: இது ஓர் ஒழுங்குப் பிரச்சினையே அல்ல.

திரு. துணை சபாநாயகர் : இது ஓர் ஒழுங்குப் பிரச்சினையா, இல்லையா என்று முடிவு செய்வதற்கு நான் இங்கு இருக்கிறேன். நீங்கள் தயவு செய்து பொறுமையாக இருங்கள். அவர் தன்னுடைய வாக்கியத்தை விரைவில் முடித்துக் கொள்வார் என்று எதிர்பார்க்கிறேன்.

திரு. ஜஸ்பத்ராய் கபூர் : இந்த மசோதா பற்றிய விவாதம் தொடர வேண்டும் என்பது சம்பந்தமாக, இங்கு என்னுடைய நண்பர்

களில் பலர் மிகவும் பொறுமையிழந்துள்ளனர் என்பதை நான் அறிவேன். எனவே, ஐயா என்னுடைய நோக்கம், இந்த மசோதாவை சீர்குலைப்பதல்ல என்று முதலிலேயே இந்த அவைக்கு உறுதிகூற விரும்பினேன். அதனுடைய பல ஷரத்துக்கள் எனக்கு உடன்பாடான வையே. என்னுடைய நோக்கம் விஷயங்கள் சட்டபூர்வமாக நடை பெற வேண்டும் என்பதுதான். சரியான விஷயம் சரியான நேரத் தில், சரியான முறையில் நடத்தப்பெற வேண்டும். உங்களுக்குத் தெரியும்......

திரு. துணை சபாநாயகர் : ஒழுங்குப் பிரச்சினையை நான் அறிந்து கொண்டேன். இந்த மசோதாவை விவாதிப்பதற்கு இந்த அவை தகுதியுடையதல்ல என்று மதிப்புக்குரிய உறுப்பினர் கருது கிறார். இது முதலாவது விஷயம். இரண்டாவது விஷயம், இந்த அவையில் இருக்க வேண்டுமென்று அவர் விரும்புகிற சில உறுப் பினர்கள் இங்கு இல்லை. இந்த இரண்டில் எதுவும், இந்த மசோதா பற்றிய விவாதம் தொடர்ந்து நடைபெறுவதற்கு எதிரான ஓர் ஒழுங்குப் பிரச்சினை அல்ல. இது இறையாண்மை படைத்த ஒரு சட்டப் பேரவை. அது விரும்பும் எந்த மசோதாவையும் நிறைவேற்று வதற்குத் தகுதியுடையது. ஒழுங்குப் பிரச்சினையை நான் கேட்டறிந் தேன். அதற்கு ஆதரவாக மேற்கொண்டு எந்த வாதங்களையும் கேட்பதற்கு நான் விரும்பவில்லை. சில உறுப்பினர்கள் இங்கு இல்லாததைப் பொறுத்தமட்டிலும், மாகாணங்களிலிருந்தும், சுதேச சமஸ்தானங்களிலிருந்தும் பல உறுப்பினர்கள் இங்கு பிரசன்னமாகி யிருக்க முடியவில்லை என்பது மெய்யே. ஆனால் அவர்கள் எப் பொழுது வேண்டுமானாலும் இங்கு வந்து, கலந்து கொள்வதற்கு அவர்களுக்கு உரிமை இருக்கிறது.

பாபு ராம்நாராயண் சிங் (பீஹார் பொது) : ஐயா, நான் பேச விரும்புவதெல்லாம்......

திரு. துணை சபாநாயகர் : இந்த அவைத்தலைவர் மற்றும் இந்த அவையைப் பொறுத்தமட்டிலும், அத்தகைய எந்த ஆணை யும் விடுக்கப்படவில்லை, எனவே அவை தனது அலுவல்களைத் தொடர்ந்து நடத்துவதற்குத் தகுதியுடையதாகும். மதிப்புக்குரிய உறுப்பினர்கள் எந்த சமயத்திலும் இங்கு வந்து விவாதத்தில் பங்கெடுத்துக் கொள்ளலாம். இந்த ஒழுங்குப் பிரச்சினையை நான் நிராகரிக்கிறேன்.

பாபு ராம்நாராயண்சிங் : உங்களுக்கு எல்லா மரியாதையும் அளித்து.......

மதிப்புக்குரிய உறுப்பினர்கள் : அமைதி, அமைதி.

திரு. துணைத் தலைவர் : மேற்கொண்டு எதையும் நான் கேட்கமாட்டேன்.

பாபு ராம்நாராயண்சிங் : உங்களுடைய...... அளித்த முந்திய தீர்ப்பு...

திரு. துணை சபாநாயகர் : முந்திய தீர்ப்புகள் அனைத்தையும் நான் பரிசீலனை செய்தேன். அவை இப்பொழுது இங்கே என்னிட மிருக்கின்றன.

திரு. வி.எஸ். சர்வாத்தே (மத்திய பாரத்) : நானும் ஓர் ஒழுங்குப் பிரச்சினையை எழுப்புவதற்கு விரும்புகிறேன்.

திரு. துணை சபாநாயகர் : அது ஓர் ஒழுங்குப் பிரச்சினையா?

திரு. பி.எஸ். சர்வாத்தே : ஆம்.

திரு. துணை சபாநாயகர் : மதிப்புக்குரிய உறுப்பினர் தயவு செய்து ஒழுங்குப் பிரச்சினையை சுருக்கமாகக் கூறுவீர்களா?

திரு. வி.எஸ். சர்வாத்தே : நான் மிகவும் சுருக்கமாக எடுத்துக் கூறுகிறேன். என்னுடைய ஒழுங்குப் பிரச்சினை இதுதான் : இந்த மசோதாவின் நோக்கங்களுக்கு வெளியீடு சம்பந்தமான ஷரத்துக்கள் திருப்திகரமாக இல்லை. அந்த ஷரத்துக்கள் கடைப்பிடிக்கும்படி யாகத் தலைவர்தான் பார்த்துக் கொள்ள வேண்டும். விதி எண். 20ஐப் பற்றி நான் குறிப்பிடுகிறேன். அது இவ்வாறு கூறுகிறது: ''ஒரு மசோதா அறிமுகம் செய்து வைக்கப்பட்ட பின்னர், கூடிய விரைவில், அது ஏற்கனவே பிரசுரம் செய்யப்படாமலிருந்தால், உடனே கெஜட்டில் வெளியிடப்பட வேண்டும்.'' ஒரு பொறுக்குக் குழுவின் அறிக்கை திருத்தப்பட்ட மசோதாவுடன் சேர்த்து வெளியிடப்பட வேண்டும் என்ற ஒரு ஷரத்தும் இருக்கிறது. இது சம்பந்தமாக என்னுடைய விண்ணப்பம் இதுதான்: அந்த மசோதா முதலில் 1947 ஏப்ரலில் - சுதந்திர தினத்திற்கு முன்னால் வெளியிடப்பட்டது.

அதற்குப் பின்னர் இந்தியாவின் அரசியல் கட்டமைப்பு மாற்ற மடைந்தது; மேம்பட்ட முறையில் மாற்றமடைந்தது. நான் உங்க ளுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்பும் விஷயம் இதுதான் : அப்போதைய பிரிட்டிஷ்-இந்தியாவின் ஒரு பகுதியாக இல்லாத இந்திய சமஸ்தானங்கள் இந்த மசோதாவினால் பாதிக்கப்பட வில்லை. அதற்குப் பின்னர் சில சமஸ்தானங்கள் இணைந்தன. சில சமஸ்தானங்கள் 1948 ஆகஸ்டில் எல்லா விஷயங்களிலும் இந்திய யூனியனுடன் இணைந்தன. இது மசோதா வெளியிடப்பட்டதற்குப் பின்னர் நடந்தது. இந்த சமஸ்தானங்களின் ஓர் உடன்பாடு 1948 ஆகஸ்டில் ஏற்பட்டது என்பதைத் தலைவர் அறிவார்.

அந்த உடன்பாட்டின் பயனாக, இப்பொழுது சமஸ்தானங்கள், மத்திய அரசு, தனது தனி அதிகார வரம்புக்குள் அல்லது கூட்டு அதிகார வரம்புக்குள் நிறைவேற்றுகின்ற எந்த சட்டத்திற்கும் தாமாகவே கட்டுப்பட்டவையாகும். எனவே, எந்த மசோதாவி னாலும் பாதிக்கப்படும் சம்பந்தப்பட்ட சமஸ்தானங்களது மக்களின் உரிமைகளைப் பாதுகாப்பதும், காபந்து செய்வதும் தலைவரது கடமை என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இதனுடைய நோக்கம் இரண்டு வகைப்பட்டது. வெளியிடப்படுவதைக் கடமை யாக்குகிற இத்தகைய ஷரத்து எந்த மசோதாவினாலும் பாதிக்கப் படும் வாக்காளர்கள் அல்லது மக்கள் அது குறித்து தமது பிரதி பலிப்புகளை, அபிப்பிராயங்களை மற்றும் தமது உணர்வுகளை வெளிப்படுத்துவதற்கு வகை செய்கிறது. இது ஜனநாயகத்தின் ஓர் அடிப்படையான கோட்பாடு ஆகும் - அதாவது, பாதிக்கப்படக் கூடிய மக்களுக்கு அது சம்பந்தமான தமது கருத்தை வெளிப்படுத்து வதற்கு ஒரு வாய்ப்பைக் கொடுத்தாலன்றி, எந்த ஒரு மசோதாவும் நிறைவேற்றப்படக்கூடாது. இரண்டாவதாக, இவ்வாறு வெளி யிடுவதன் நோக்கம், இது குறித்துத் தமது தொகுதிகளின் வாக்காளர் கள் என்ன கருதுகிறார்கள் என்பதை இந்தப் பேரவையின் உறுப் பினர்கள் தெரிந்து கொள்வதற்கு ஒரு வாய்ப்பை ஏற்படுத்துவ தாகும். இங்குள்ள உறுப்பினர்கள் தமது தனிப்பட்ட கருத்துக்களை எடுத்துக் கூற வேண்டியது அவர்களது கடமையாகும் என்பதை நான் எடுத்துக் கூறவேண்டிய அவசியமில்லை. முக்கியமான விஷ யங்கள் விவாதத்திற்கு வரும்போது, அது சம்பந்தமாகத் தமது தொகுதி வாக்காளர்களின் கருத்துக்களை அவர்கள் பிரதிபலிக்க வேண்டும். விவரங்கள் அல்லது சிறிய பிரச்சினைகளைப் பொறுத்த மட்டிலும் தமது கருத்துக்களை எடுத்துக்கூறுவதற்கு உசிதம் போல் செய்ய அவர்களுக்குத் தன் விருப்புரிமை உண்டு. ஆனால் ஒரு

மசோதா வாழ்க்கை முழுவதையும், சமுதாயக் கட்டமைப்பு முழுவதையும் பாதிக்கும்போது, அத்தகைய விஷயங்களில், அத்தகைய ஜீவாதாரமான விஷயங்களில், தமது தொகுதி வாக்காளர்களின் கருத்துக்களைக் கண்டறிந்து, இங்கு அவற்றை சரியாகப் பிரதிபலிக்க வேண்டியது உறுப்பினர்களின் கடமையாகும். தாங்கள் என்ன கருதுகிறார்கள் என்று அவர்கள் கூறக்கூடாது. தமது தொகுதி வாக்காளர்கள் என்ன கருதுகிறார்கள் என்பதையே அவர்கள் கூற வேண்டும். இந்த நோக்கத்திற்காக, இந்த மசோதா வெளியிடப்பட வேண்டியது அவசியமாகும். கெஜட்டில் (அரசிதழில்) இந்த மசோதா வெளியிடப்பட்டது மெய்யே. ஆனால், இந்திய யூனியனுடன் சேர்ந்து கொள்ளுகின்ற சமஸ்தானங்களின் மற்றும் இணைந்து கொள்ளும் சமஸ்தானங்களின் மக்கள் ஆழமாக ஆய்வு செய்கின்ற நிலையிலுள்ள சமயத்தில் இது வெளியிடப்படவில்லை. இந்த மசோதாவுக்கு அது தேவையாகும். எனவே, அந்த மக்கள் சம்பந்தப்பட்ட வரையிலும் அது சரியாக வெளியிடப்பட்டதாகக் கருத முடியாது என்று தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இப்பொழுது, அவர்களின் நலன்களை அவைத் தலைவர் பாதுகாக்கவிருப்பதால், மசோதா விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படுவதற்கு முன்னதாக அது வெளியிடப்படுவதற்கு அவைத்தலைவர் ஆணையிட வேண்டுமென்று நான் வேண்டிக்கொள்கிறேன்.

மண்புமிகு டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் : என்னுடைய மதிப்புக்குரிய நண்பர் எழுப்பியுள்ள ஒழுங்குப் பிரச்சினைக்கு என்னுடைய பதில் இரு அம்சங்களைக் கொண்டது. முதலாவதாக, அவையில் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படுவதற்கு முன்னதாக, எந்த மசோதாவும் சுற்றுக்கு விடப்படுவதற்காக வெளியிடப்படுவதற்கு இந்த அவைக்கு ஒருபோதும் கட்டாயம் (கடப்பாடு) ஏற்பட்டதில்லை. விசேஷ சந்தர்ப்பங்களில் மட்டுமே, அவையில் ஒரு தீர்மானத்தின் வாயிலாகவோ, அல்லது அரசு ஒரு நிர்வாக உத்தரவின் மூலமோ, மசோதா மிகவும் முக்கியமானதாகையால், பொது மக்களின் கருத்து கேட்கப்பட வேண்டும் என்று விரும்பினால், பொதுமக்களின் கருத்து வரவேற்கப்படுகிறது. அத்தகைய உரிமையோ, சட்டப்பேரவை அல்லது அரசுக்கு அத்தகைய கடப்பாடோ ஏதுமில்லை; எனவே, அந்தக் கருத்து நிலையிலிருந்து பார்க்கும்போது, எழுப்பப்பட்ட ஒழுங்குப் பிரச்சினை, ஒழுங்குப் பிரச்சினையே அல்ல.

ஒழுங்குப் பிரச்சினை சம்பந்தமாக என்னுடைய இரண்டாவது விண்ணப்பம் என்னவெனில், இந்த மசோதாவின் செயல்பாட்டை

இந்தியாவின் மாகாணங்களுக்கு மட்டுமே என்று திட்டமிட்டு நாம் வரையறுத்துள்ளோம். மேலும், இந்த மாகாணங்களைப் பொறுத்த மட்டிலும், மூன்று தடவைகள் அபிப்பிராயம் கேட்டுப் பெறப் பட்டுள்ளது. எனவே நான்காவது தடவையாக, பொதுஜன அபிப் பிராயத்தைக் கோரிப் பெறுவதில் மேற்கொண்டு எந்தப் பயனும் ஏற்படப்போவதில்லை என்று கருதுகிறேன். இந்த மசோதாவை இந்திய சமஸ்தானங்களுக்கு விஸ்தரிக்கும் சந்தர்ப்பம் வரும்போது இந்த சட்டப்பேரவை - அதன் முன்பு அல்லது அன்றைய அரசின் முன்பு ஒரு முறையான பிரேரணை வைக்கப்பட்டால், இந்திய யூனியனுடன் இணைந்துள்ள சமஸ்தானங்களின் விருப்பங்களை யும் எண்ணங்களையும் கலந்தாலோசிப்பதற்கு கவனம் எடுத்துக் கொள்ளப்படும் என்பதில் ஐயமில்லை.

திரு. துணை சபாநாயகர் : மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கூறியதுடன் நான் உடன்படுகிறேன். அதாவது, இந்த மசோதாவின் வீச்சு, முதலாவதாக, இந்தியாவின் மாகாணங்களுக்கு மட்டுமே உரியதாகும்; இந்தியாவுடன் இணையும் சமஸ்தானங்களுக்கு இது விஸ்தரிக்கப்படுமா என்பது மிகவும் பிரச்சினைக்கு உரிய ஒரு விஷயமாகும். அப்படி விஸ்தரிக்கப்பட்டால் இந்தியாவுடன் இணை வதற்கான எந்த நிபந்தனைகள், நிலைமைகளின் அடிப்படையில் இது நடைபெறுகிறது என்பதைப் பார்க்க வேண்டும். அவை இந்திய யூனியனுக்குள் வருகின்றனவா, இல்லையா என்பதை அவை முடிவு செய்யவேண்டிய தருணம் வந்துவிட்டது. மற்றொரு விஷ யத்தைப் பொறுத்தமட்டிலும், இந்த அவையினால் ஒரு பிரேரணை ஏற்றுக்கொள்ளப்பட்டாலொழிய, மசோதாவை சுற்றுக்கு விட வேண்டிய கட்டாயம் எதுவுமில்லை. பொறுக்குக்குழு இந்த விஷ யத்தைப் பரிசீலனை செய்தபின், அரசின் கெஜெட்டில் மீண்டும் வெளியிடப்படுவதை அவசியமாக்கும் வகையில் மசோதாவில் சாராம்சமான மாற்றங்கள் ஏதும் செய்யப்படவில்லை என்ற முடிவுக்கு வந்தது. இந்தக் காரணங்களினால், ஒழுங்குப் பிரச்சினையை நிராகரிக்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் : ஐயா, என்னுடைய பிரேரணையின்மீது நான் பேசத் தொடங்கும் முன்பு......... விரும்பத் தக்கது என்று நான் கருதுகிறேன்.

திரு. பி. தாஸ் (ஒரிஸ்ஸா : பொது) : எல்லாத் தரப்பிலிருந்தும் இடையூறு ஏற்படுகிறது. ஒவ்வொருவரும் ஒவ்வொரு ஒழுங்குப்

பிரச்சினையை எழுப்புகிறார்கள். திரு. நசிருத்தீன் அகமது ஆறு மாதங்களுக்கு முன்னர் ஓர் ஒழுங்குப் பிரச்சினையை எழுப்பினார்.

திரு. நசிருத்தீன் அகமது (மேற்கு வங்கம் : முஸ்லீம்) : அது ஒரு வேறுபட்ட ஒழுங்குப் பிரச்சினை. என்னுடைய மதிப்புக்குரிய நண்பர்களுக்குச் சிறிது பொறுமை வேண்டும்.

திரு. துணை சபாநாயகர் : மதிப்புக்குரிய உறுப்பினர்கள் ஓர் ஒழுங்குப் பிரச்சினையை எழுப்புவதற்கு முன்னால் தயவு செய்து நன்கு சிந்திக்க வேண்டும் என்று மட்டுமே நான் கூற முடியும். அது ஒரு தாமதப்படுத்தும் பிரேரணையாக மாறினால், அவையின் விமர்சனத்தை அவர்கள் எதிர்கொள்ள நேரிடும் என்பதை அவர்கள் சிந்திப்பார்கள் என்றும் எதிர்பார்க்கிறேன்.

திரு. நசிருத்தீன் அகமது : என்னுடைய ஒழுங்குப் பிரச்சினை தாமதப்படுத்தும் தன்மையுடையதல்ல.

திரு. துணை சபாநாயகர் : ஓர் ஒழுங்கு பிரச்சினையை எழுப்புவதற்கு எந்த மதிப்புக்குரிய உறுப்பினருக்கும் உரிமை உண்டு. ஒரு மதிப்புக்குரிய உறுப்பினர், நியாயமானதாகவும் முறையாகவுமுள்ள எத்தனை ஒழுங்குப் பிரச்சினைகளை வேண்டுமானாலும் எழுப்பலாம்.

திரு. நசிருத்தீன் அகமது : ஒழுங்குப் பிரச்சினைக்கு ஆட்சேபம் செய்வதுதான் தாமதப்படுத்தும் நோக்கமுடையதாகும். என்னுடைய ஒழுங்குப் பிரச்சினை இதுதான்: மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் இந்தப் பிரேரணை குறித்து ஏற்கனவே பேசிவிட்டார். பிரேரணையின் முதற் பாகத்தை அவர் பூர்த்தி செய்துவிட்டார். பின்னர் அடுத்த கட்டங்கள் தொடங்கின. விவாதத்தின் முடிவில் பதில் சொல்வதற்கு அவருக்கு உரிமையுண்டு. இந்த மசோதா பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படவேண்டுமென்று பிரேரணை செய்யப்பட்டு, 1948 ஆகஸ்டு 31ம் தேதியன்று அது சம்பந்தமான உரையும் நிகழ்த்தப்பட்டது. நிகழ்ச்சி நிரலில் திருத்தங்களின் ஒரு பட்டியலும் வழங்கப்பட்டுள்ளது. நாம் நேராக நிகழ்ச்சி நிரலை எடுத்துக் கொள்ள வேண்டும், பின்னர் ஒரு பிரேரணை செய்யப்படும்போது, மாண்புமிகு அமைச்சருக்கு, பதில் சொல்லும் உரிமையும் நிச்சயமாக உண்டு. முடிவில், பதில் சொல்வதற்கான ஒரு பொதுவான உரிமையும்

உண்டு. இந்தக் கட்டத்தில், பிரேரணை சம்பந்தமாக மாண்புமிகு அமைச்சர் ஓர் இரண்டாவது உரை நிகழ்த்த முடியாது.

திரு. துணை சபாநாயகர் : 1948 ஆகஸ்டு 31ம் தேதிய நடவடிக்கைகளிலிருந்து கீழ்வருவனவற்றை நான் காண்கிறேன்:

> *''மாண்புமிகு டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் (சட்டத்துறை அமைச்சர்) : ஐயா, நான் பிரேரணை செய்கிறேன்:'' இந்து சட்டத்தின் சில பிரிவுகளைத் திருத்துவதற்கும், தொகுத்தமைப்பதற்குமான மசோதா - பொறுக்குக் குழுவினால் அறிக்கை செய்தபடி விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்.''*
>
> *திரு. நசிருத்தீன் அகமது (மே.வங்கம் : முஸ்லீம்) : ஐயா, ஓர் ஒழுங்குப் பிரச்சினை.*
>
> *திரு. சபாநாயகர்: மாண்புமிகு அமைச்சரின் உரையை முதலில் நான் கேட்கிறேன். பின்னர் ஒழுங்குப் பிரச்சினையை எடுத்துக் கொள்கிறேன்.*
>
> *மாண்புமிகு டாக்டர் பி.ஆர். அம்பேத்கர்: ஐயா, நிகழ்ச்சி நிரலிலுள்ள இதர அரசுப் பணிகளின் அவசரத் தன்மையை முன்னிட்டும், அதற்கு முன்னுரிமை அளிக்கவேண்டுமென்று அரசு கருதுவதாலும், என்னுடைய பிரேரணைக்கு ஆதரவாக நான் உரை நிகழ்த்த விரும்பவில்லை; ஏனெனில், என்னுடைய பிரேரணைக்கு ஆதரவாக நான் ஓர் உரை நிகழ்த்தினேன் என்றால், அது நிச்சயமாக ஒரு விவாதத்திற்கு இட்டுச் செல்லும் என்பது தெளிவு, அது, அரசின் பெருமளவு நேரத்தை எடுத்துக்கொள்வதில் போய் முடியும். அவை முடிவடைவதற்கு ஏற்கனவே, ஒரு சில நாட்களே எஞ்சியுள்ளன. எனவே, இந்தப் பிரேரணை நிறுத்தி வைக்கப்பட்டு, பேரவையின் அடுத்த அமர்வில் மேற்கொண்டு பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படுவதற்கு அனுமதிக்குமாறு உங்களை வேண்டுகிறேன்.''*

இதை முன்னிட்டு, மாண்புமிகு டாக்டர் அம்பேத்கர் மேற்கொண்டு பேசுவதற்கு உரிமையுடையவராகிறார். இந்த ஒழுங்குப் பிரச்சினை எழுப்பப்பட்டதற்காக நான் மிக மிக வருந்துகிறேன். இது ஒரு தாமதப்படுத்தும் பிரேரணையாகும்.

மண்புமிகு டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் : நான் சமர்ப்பித்துள்ள பிரேரணைக்கு எதிராக சமர்ப்பிக்கப்பட்டுள்ள 16 பிரேரணைகள் சம்பந்தமாக நீங்கள் என்ன நடைமுறையைக் கடைப்பிடிக்கப் போகிறீர்கள் என்பது எனக்குத் தெரிந்தால் அது என்னுடைய பணிக்குப் பெருமளவு உதவிகரமாக இருக்கும். இதைத் தொடர்ந்த காலகட்டத்தில் அவற்றைப் பற்றி நான் பேசவிருக்கிறேன். இந்தப் 16 பிரேரணைகள் மூன்று வெவ்வேறு இனங்களில் அமைகின்றன.

பொதுஜனக் கருத்தைத் தெரிந்து கொள்வதற்காக இந்த மசோதா மேற்கொண்டும் சுற்றுக்கு விடவேண்டும் என்று சில பிரேரணைகள் கூறுகின்றன. சில பிரேரணைகள், இந்த மசோதாவை, இந்த மசோதா பற்றி ஏற்கனவே அறிக்கை சமர்ப்பித்த பொறுக்குக் குழு அல்லாத வேறு பொறுக்குக் குழுவின் பரிசீலனைக்கு அனுப்ப வேண்டும் என்று கூறுகின்றன. ஏற்கெனவே அறிக்கை சமர்ப்பித்த அதே பொறுக்குக் குழுவிடம் மறு ஆய்வுக்காக இந்த மசோதா மீண்டும் அனுப்பப்பட வேண்டுமென்று சில பிரேரணைகள் கூறுகின்றன.

மேற்கொண்டு இரண்டு இதர பிரேரணைகள் ஒன்று - என்னுடைய மதிப்புக்குரிய நண்பர் திரு. பிரபு தயாள் ஹிம்மத் சிங்கா பெயரிலும், மற்றொன்று, என்னுடைய மதிப்புக்குரிய நண்பர் திரு. விஸ்வநாத தாஸ் பெயரிலும் வந்துள்ளன. இந்த மசோதா பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படுவதற்கு முன்னால், இந்தியாவுடன் இணைய முன்வந்திருக்கும் சமஸ்தானங்களில் வாழும் மக்களிடையில் அது சுற்றுக்கு விட வேண்டும் என்று இந்தப் பிரேரணைகள் கூறுகின்றன. இந்த இரண்டு பிரேரணைகள் சம்பந்தமாக, அண்மையில் என்னுடைய மதிப்புக்குரிய நண்பர், திரு. வி.எஸ். சர்வாத்தே, ஓர் ஒழுங்குப் பிரச்சினையை எழுப்பியிருந்தார். அதை நீங்கள் பைசல் செய்து விட்டீர்கள். எனவே, பிரேரணைகள் எண் 7 மற்றும் எண் 8 இன்றைய நிகழ்ச்சி நிரலிலிருந்து நீக்கப்பட்டு விட்டதாகக் கருதப்பட வேண்டும். இதர பிரேரணைகள் அப்படியே இருக்கின்றன. இந்தப் பிரேரணைகளை என்னுடைய பிரேரணையுடன் வைத்து ஏககாலத்தில் விவாதிக்கப்பட வேண்டுமென்று நீங்கள் விரும்புகிறீர்களா என்று நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். அப்படியெனில், இறுதியில் ஒவ்வொரு பிரேரணையும் அவையின் முன்னே தனித்தனியாக வைக்கப்படலாம் அல்லது என்னுடைய பிரேரணைக்கு முன்னதாக இவற்றை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று நீங்கள் கருதுகிறீர்களா; அதன் மூலம், அவற்றைப் பைசல் செய்து விட்டு, நான் சமர்ப்பித்துள்ள பிரேரணை மீதான என்னுடைய உரைக்கு இடமளிக்கலாம் என்று நீங்கள் கருதுகிறீர்களா? என்று நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

சமர்ப்பிக்கப்பட்டுள்ள பிரேரணைகள் சம்பந்தமாக நான் ஒன்றிரண்டு குறிப்புகளைக் கூறமுடியும். சில பிரேரணைகளை முன்மொழிந்துள்ளவர்கள், தாங்களாகவே அவற்றைப் பிரேரிப்பதில்லை என்று விருப்பம் தெரிவித்தாலொழிய அவற்றை நீங்கள் சபையின் முன் நிச்சயமாக வைப்பீர்கள் என்பதை நான் ஒப்புக்

கொள்கிறேன். சில பிரேரணைகள் உங்களுடைய உசிதத்தின் கீழ் இருக்கின்றன; அவை தாமதப்படுத்துவதற்கான பிரேரணைகள் அல்ல, அவை சில சாராம்சமான குறிப்புகளைக் கொண்டுள்ளன என்று நீங்கள் திருப்தியடைந்தாலொழிய, இந்தப் பிரச்சினைகளை ஆய்வு செய்த முந்திய சபாநாயகர்கள் கொடுத்துள்ள தீர்ப்புகளுக்கு ஏற்ப, இவற்றை சபையின் முன்வைக்கவேண்டிய அவசியமில்லை. ஏனெனில், அந்தப் பிரேரணைகளுக்கு சாராம்சமான ஆதாரங்கள் உள்ளன, அவை தாமதப்படுத்தும் பிரேரணைகள் அல்ல என்று சபாநாயகர் திருப்தியடைய வேண்டும். உதாரணமாக, அந்த மசோதா இப்பொழுது பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படக்கூடாது, ஒரு பிந்திய கட்டத்தில் அதைப் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளலாம் என்பது அந்தப் பிரேரணைகளில் ஒன்று ஆகும். இதுவரையிலும் சபாநாயகரின் தீர்ப்புகளின்படி, எது உங்களுடைய உசிதத்தின் கீழ் வரும்; என்னுடைய மதிப்புமிக்க நண்பர்கள் முன்வைத்த காரணங்கள் சாராம்சமான காரணங்கள் என்று நீங்கள் திருப்தியடைந்தால், நீங்கள் அந்தப் பிரேரணையை சபைக்கு முன் வைக்கலாம். உதாரணமாக, பொறுக்குக் குழுவின் மறு ஆயுவுக்கு விடப்பட வேண்டுமென்று ஒரு பிரேரணை அத்தகையவற்றில் ஒன்றாகும். தீர்ப்புகளின் இந்த இரண்டு தொகுதிகளை நீங்கள் தயவுசெய்து திருப்பிப் பார்த்தால் - நிச்சயமாக நீங்கள்..........

திரு. துணை சபாநாயகர் : நான் செய்ய எண்ணியுள்ளது இதுதான்.

மாண்புமிகு டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் : இந்த விஷயத்தில் உங்களுடைய வழிகாட்டுதலைப் பெற விரும்புகிறேன்.

திரு. துணை சபாநாயகர் : இந்த விஷயத்தைப் பற்றியும் சமர்ப்பிக்கப்பட்டுள்ள பல பிரேரணைகள் பற்றியும் நான் ஆலோசித்தேன். பிரேரணைகள் எண் 1 எண் 2ஐப் பொறுத்தமட்டிலும் - பொறுக்குக் குழுவினால் திருத்தப்பட்ட மசோதா வாபஸ்பெறப்பட வேண்டும் என்று பிரேரணை எண் 1 கூறுகிறது.

பண்டிட் தாகூர்தாஸ் பர்கவா (கிழக்குப் பஞ்சாப் : பொது) : நான் இந்தக் கட்டத்தில் பிரேரேபிக்க விரும்பவில்லை; பிரேரேபிக்க எனக்கு உரிமையில்லை என்று அல்ல.

திரு. துணை சபாநாயகர் : அப்படியெனில் அது முறையானதா அல்லது முறையற்றதா என்ற பிரச்சினையைப் பரிசீலிக்க

வேண்டிய அவசியமில்லை. இரண்டாவது பிரேரணை என்ன வெனில்.....

பண்டிட் தாகூர்தாஸ் பர்கவா : இந்தக் கட்டத்தில் அதை நான் பிரேரேபிக்கவில்லை.

திரு. துணை சபாநாயகர் : 1951-ஆம் ஆண்டு பட்ஜெட் அமர்வு வரை மசோதாவைப் பரிசீலனை செய்வதை ஒத்திப்போட வேண்டும் என்ற மாஸ்டர் நந்தலாலின் திருத்தம் உள்ளது.

மாஸ்டர் நந்தலால் (கிழக்கு பஞ்சாப் : பொது) : நான் அதைப் பிரேரேபிக்கவில்லை.

திரு. துணை சபாநாயகர் : இந்த மூன்று வாபஸ் பெறல்கள் நிலைமையைத் தெளிவாக்கியுள்ளன. அவை எந்தப் பெயரால் அழைக்கப்பட்ட போதிலும், இந்த மூன்று பிரேரணைகளும் சாராம் சத்தில், விவாதத்தை ஒத்திப்போட வேண்டும் என்பதேயாகும். மாண்புமிகு சட்ட அமைச்சர் இந்த மசோதாவின் பிரேரணையாளர், தமது உரையைத் தொடங்குவதற்கு முன்னதாக இந்தப் பிரேரணை களின் பிரேரேணையாளர்கள் எழுந்து நின்று, இந்தப் பிரேரணை களை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று வற்புறுத்துவார்கள் என்று நினைத்தேன்; ஏனெனில், அவர்களது பிரேரணைகள் பைசல் செய்யப் படுவதற்கு முன்னால், மதிப்பிற்குரிய (மசோதாவின்) பிரேரணை யாளர் பேசுவதற்கு அனுமதிக்கப்பட முடியாது. எனவே, அவை பிரேரணை செய்யப்படாததால், நான் பேசாமல் இருந்துவிட்டேன். அவை வாபஸ்பெற்றுக் கொள்ளப்பட்டு விட்டன என்பது இப் பொழுது தெளிவாகி விட்டது. பிற பிரேரணைகள், அதாவது மீண்டும் சுற்றுக்கு விடப்பட வேண்டும், அல்லது பொறுக்குக் குழுவுக்கு மீண்டும் அனுப்ப வேண்டும் என்ற பிரேரணைகள் - அவற்றின் தன்மை எப்படியிருந்தபோதிலும் - விதிகளின்படி, எந்த நபரும் அதைப் பிரேரணை செய்வதற்குத் தகுதியுடையவராகிறார். அதுபற்றி அவைதான் முடிவு செய்ய வேண்டும்.

பொறுக்குக் குழுவின் பிரேரணைகளைப் பொறுத்தமட்டிலும் முதல் முதலாக, அவற்றின் தேவை பற்றி நான் திருப்தியடைய வேண்டும். அது தவிர, மீண்டும் சுற்றுக்கு விடுவதைப் பற்றிய ஒரு பிரேரணை இருக்கிறது. அது சம்பந்தமாக சில தேவைகள், நான் அறிந்தவரையில் எந்த விதியிலும் அல்லது தீர்ப்புகளிலும் வரையறுத்துக்

கூறப்படவில்லை. எனவே, இந்தக்கட்டத்தில், மசோதாவை முன் மொழிபவரைத் தம் உரையை நிகழ்த்தும்படி அனுமதிக்க நான் விரும்புகிறேன். அவர் தமது உரையை முடித்த பின்னர், பொறுக்குக் குழு மற்றும் சுற்றுக்கு விடுதல் சம்பந்தமான பிரேரணைகளை பிரசங்கம் இல்லாமல் அனுமதிக்கிறேன். பின்னர், எல்லாப் பிரே ரணைகள் மீதும் விவாதம் தொடர்ந்து நடைபெறும். அவற்றை ஒன்றுக்குப்பின் மற்றொன்றாக இந்த அவையின் முன் நான் வைக்கிறேன்.

*மாண்புமிகு டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் : ஐயா, உங்க ளுடைய வழிகாட்டுதலுக்கு நான் கடமைப்பட்டுள்ளேன். வழக்கம் போல், பொறுக்குக் குழுவினால் அறிக்கை செய்யப்பட்டபடி, ஒரு மசோதாவைப் பரிசீலனை செய்வதற்கான ஒரு பிரேரணையை முன்வைக்கும்போது, முதலாவதாக, பொறுக்குக் குழுவுக்கு அனுப்பப் பட்ட மூல மசோதாவில் பொறுக்குக் குழுவினால் செய்யப்பட்ட மாற்றங்களை அவையின் கவனத்திற்குக் கொண்டுவர வேண்டியது பொறுக்குக் குழுவின் தலைவருடைய கடமையாகும். முதலாவதாக, அந்த நடைமுறையைக் கடைப்பிடிப்பதற்கு நான் உத்தேசித்துள்ளேன்.

ஐயா, மசோதாவின் முதல் பகுதி திருமணம் மற்றும் விவாக ரத்து பற்றியதாகும். மசோதாவின் இந்தப் பகுதியைப் பொறுத்த மட்டிலும் மணவாழ்க்கைக்குரிய உரிமைகளை மீட்டளிப்பது மற்றும் நீதிமன்றத் தீர்ப்பின்படி கணவன் - மனைவி பிரிந்து வாழ்வது சம்பந்தமான இரு ஷரத்துக்களை பொறுக்குக் குழு சேர்த்துள்ளது. இந்த ஷரத்துக்கள் குறிப்பாக, மூல மசோதாவில் இருக்கவில்லை. 1869ம் வருடத்திய இந்திய விவாகரத்து சட்டத்தைக் குறிப்பிடுவ தோடு மூலமசோதாவைத் தயாரித்தவர்கள் திருப்திதயடைந்து விட் டார்கள். அந்தச் சட்டம் மணவாழ்க்கைக்குரிய உரிமைகளை மீட்டளிப்பது மற்றும் நீதிமன்றத் தீர்ப்பின்படி கணவன் - மனைவி பிரிந்து வாழ்வது சம்பந்தமான ஷரத்துக்களைக் கொண்டிருந்தது. இந்த மசோதாவில் இந்திய விவாகரத்து சட்டத்தைப் பற்றிக் குறிப்பிட்டாலே போதுமானதென்றும், அந்த சட்டத்திலுள்ள இந்த இரண்டு ஷரத்துகளை செயல்படச் செய்வதற்கு அதைப் பற்றிக் குறிப்பிட்டாலே போதுமென்றும் இந்த மசோதாவின் மூல நகலைத் தயாரித்தவர்கள் கருதினர்; எனவே அதன் விளைவாக இந்த ரண்டு விஷயங்களை இந்தச் சட்டத்தில் வெளிப்படையாகக் குறிப்பிட

---

* அ.நி. (சட்டப்பேரவை) டி. தொகுதி II, பாகம் II, 1949 பிப்ரவரி 24, பக்கம் 826-43.

வேண்டிய அவசியமில்லை என்றும் அவர்கள் கருதினர். பொறுக்குக் குழு இதற்கு மாறாக நினைத்தது. இது இந்து சட்டத்தின் ஒரு முழு தொகுப்பாக இருக்கப் போவதால், இதை சட்டத்தைப் பூர்த்தி யடையா வண்ணம் விட்டு வைப்பது தவறென்றும், எனவே சட்டத் தில் அதை வெளிப்படையாகக் குறிப்பிட வேண்டும் என்றும் கருதினர். எனவே, இந்த விஷயத்தை இந்திய விவாகரத்து சட்டத்தை குறிப் பிடுவதன் மூலம் அதை அமல்படுத்தச் செயவதற்கு விட்டு விடுவ தற்கு பதிலாக, இந்து சட்டத்திலேயே, இந்த விஷயங்கள் சம்பந்த மாக இந்திய விவாகரத்துச் சட்டத்தில் அடங்கியுள்ள ஷரத்துக்களை இந்த மசோதாவிலேயே சேர்த்துக் கொள்வது விரும்பத்தக்கது என்று அவர்கள் நினைத்து, இந்த இரு விஷயங்கள் சம்பந்தமான ஷரத் துக்களை சேர்த்து, திருமணம் மற்றும் விவாகரத்து சம்பந்தப்பட்ட பகுதியை பொறுக்குக் குழு விரிவுபடுத்தியது. மூலமசோதாவுக்கும், பொறுக்குக் குழுவினால் வரையப்பட்ட மசோதாவுக்கும் இடை யில் உண்மையில் மாற்றமில்லை என்பதை காணமுடியும். இந்திய விவாகரத்து சட்டத்தைக் குறிப்பிடுவதன் மூலம் செய்யப்பட்ட விஷயம், சட்டத்தில், இந்த விஷயங்கள் சம்பந்தமாகக் குறிப்பான பகுதிகளை சேர்த்ததன் மூலம் வெளிப்படையாகவும் ஆக்கபூர்வ மான முறையிலும் செய்யப்பட்டுள்ளது.

சுவீகாரம் எடுத்துக் கொள்வது சம்பந்தமாக, பொறுக்குக் குழு ஒரு சில புதிய மாற்றங்களைப் புகுத்தியுள்ளது. அவர்கள் செய்துள்ள முதலாவது மாற்றம், ஒரு தகப்பனார், தன்னுடைய மதத்தை மாற்றிக் கொண்டு இந்து அல்லாதவராக மாறிவிட்டதன் காரணமாக அவர் தகுதியிழந்தவராகிவிட்டால் ஒரு பையனை சுவீகாரம் கொடுப்பதற் குள்ள உரிமை தாயிக்குக் கொடுக்கப்பட்டுள்ளது. வேறு சொற்களில் கூறுவதெனில், தகப்பனார் இந்து மதத்திலிருந்து வேறு மதத்திற்கு மாறிச் சென்றுவிட்டால், அவர் தனது மகனை சுவீகாரம் கொடுப் பதற்கான உரிமை விஷயத்தில் தகுதியிழந்தவராகிறார் என்பது சட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. இதன் விளைவாக இந்த சூழ்நிலைமை களில், ஒரு பையனை சுவீகாரம் கொடுக்கும் அதிகாரம் தாயிக்குக் கொடுக்கப்படுகிறது. இது போன்றே, பையனின் தகப்பனார் உயி ருடன் இல்லாத நிலையில், அந்த விதவைத் தாயினால் தன் மகனை நிச்சயமாக சுவீகாரம் கொடுக்க முடியும். மீண்டும், விதவைத்தாய் இந்துவல்லாதவராக மாறிவிட்டால், மகனை சுவீகாரம் கொடுக்கும் தனது உரிமையை அவர் இழந்துவிடுகிறார் என்ற ஓர் இயலாமை யும் சேர்க்கப்பட்டுள்ளது.

பொறுக்குக் குழுவினால் செய்யப்பட்ட மற்றொரு மாற்றம், ஒரு பையனை சுவீகாரம் எடுத்துக் கொள்வதன் வெவ்வேறு முறைகள் சம்பந்தப்பட்டதாகும். இதுவரையிலும், சுவீகாரம் எடுத்துக்கொள்வதன் பல்வேறு முறைகள் இருந்துவருவதை அவை அறியும். ஸ்மிருதிகளால் அங்கீகரிக்கப்பட்டுள்ள பிரதான சுவீகார வடிவமானது, தாட்டகா முறையிலான சுவீகாரமாகும். தாட்டகா முறையிலான சுவீகாரத்தோடுகூட, இந்தியாவின் பல்வேறு பாகங்களில் கோதா சுவீகாரம், கிரித்திரிமா முறையிலான சுவீகாரம் துவையர்நுஷ்யாயான சுவீகாரம் போன்ற வழக்கமான சுவீகார முறைகள் உள்ளன. சட்டத் தொகுப்பைத் தயாரித்துக் கொண்டிருக்கும்போது, மரபான பழக்கங்கள் வளர்வதற்கு இடமளிக்காதிருப்பது விரும்பத்தக்கது என்று பொறுக்குக் குழு கருதியது; ஏனெனில் மரபான பழக்கங்களை அனுமதிப்பதன் விளைவு சட்டத்தொகுப்பையே அரிப்பதற்கு இட்டுச் சென்று, சில காலத்திற்குப் பிறகு சட்டத் தொகுப்பையே செல்லாத தாக்கிவிடும். எனவே இந்த சட்டத்தின் கீழ் யாராவது சுவீகாரம் எடுத்துக் கொள்ள விரும்பினால், இந்த சட்டத் தொகுப்பின் ஷரத்துகளுக்கு இசைவான முறையில்தான் சுவீகாரம் எடுத்துக்கொள்ள முடியும், அதற்கு தாட்டகா முறையான சுவீகாரம் மட்டுமே ஒரே வடிவமாகும், வேறு முறைகளில் சுவீகாரம் அனுமதிக்கப்பட முடியாது என்று பொறுக்குக் குழு முடிவு செய்தது.

பின்னர், ஐயா, சுவீகாரம் எடுத்துக்கொள்வதற்கு முன்னதாக, யார் பெயரில் சொத்துக்கள் முதலீடு செய்யப்பட்டிருந்தனவோ, அந்த நபர்களை அந்த சொத்தின் உரிமையிலிருந்து விலக்குவதற்கு, சுவீகாரம் எடுத்துக்கொள்ளப்பட்ட பையனுக்கு உள்ள உரிமைப் பிரச்சினைக்கு நாம் வருகிறோம். தற்போதுள்ள இந்து சட்டத்தின்படி, சுவீகாரம் எடுத்துக்கொள்ளப்பட்ட பையன் - எந்தக் கட்டத்தில் அந்த சவீகாரம் நடைபெற்றிருந்தாலும் சரி - தகப்பனார் இறந்ததற்கு 40 ஆண்டுகளுக்குப் பிறகு கூட அவர் சவீகாரம் எடுத்துக்கொள்ளப் பட்டிருக்கக்கூடும் - அவனுடைய உரிமைகளில் காலம் எந்த மாற்றத்தையும் செய்வதில்லை - அவரை சுவீகாரம் எடுத்துக் கொண்ட விதவை, செய்திருந்த எந்த சொத்து மாற்றத்தையும் தள்ளுபடி செய்ய வழக்குப் பதிவு செய்வதற்கு அவருக்கு உரிமையுண்டு. இந்தக் குறிப்பிட்ட அம்சம் சம்பந்தமாக நிறைய வழக்குகள் நடைபெறுகின்றன. உண்மையில் இந்து சட்டத்தின் பல்வேறு அம்சங்களின் மீது, இந்துக்களிடையில் நடைபெறும் மொத்த வழக்குகளை ஒருவர் ஆய்வு செய்தால் சுவீகாரம் எடுத்துக்கொள்ளப்பட்ட பையன் சொத்துக்களை மீட்டு எடுக்கும் பிரச்சினை மீதுதான் மிக அதிகமான

வழக்குகள் நடைபெற்று வருவதைக் காண முடியும் என்று நிச்சய மாகக் கருதுகிறேன். எனவே, இந்தப் பிரச்சினைக்கு நிரந்தரமானத் தீர்வுகாணப்பட வேண்டியது விரும்பத்தக்கதாகும். ராவ் குழு, சுவீகாரத்தை இரண்டு வகையாகப் பிரிக்கும் நடைமுறையைக் கைக்கொண்டது - தகப்பனார் மரணமடைவதற்கு மூன்றாண்டுகளுக்கு முன்னாலும், சட்டம் அமலுக்கு வருவதற்கு முன்னாலும் செய்யப் பட்ட சுவீகாரம்; மற்றும் சட்டம் இயற்றப்பட்டதற்குப் பின்னர் எடுத்துக் கொள்ளப்பட்ட சுவீகாரம், சுவீகாரம் எடுத்துக் கொள்ளும் தகப்பனார், இறப்பதற்கு மூன்றாண்டுகளுக்கு முன்னால் சுவீகாரம் எடுத்துக் கொள்ளப்பட்டிருந்தால், இந்து சட்டத்தின் கீழ் சுவீகாரம் எடுத்துக் கொள்ளப்பட்ட மகனுக்கு உள்ள மூல உரிமைகளுக்கு அந்தப் பையன் தகுதியுடையவனாகிறான் என்று அக்குழு வரை யறுத்தது. ஆனால், (தகப்பனார் மரணமடைந்ததற்கு) மூன்றாண்டு களுக்குப் பின்னர் சுவீகாரம் எடுத்துக்கொள்ளப்பட்டிருந்தால், ஏற்கனவே செய்யப்பட்டிருந்த சொத்து மாற்றத்தைத் தள்ளுபடி செய்வதற்கு அவனுக்கு உரிமையில்லை.

இந்து சட்டத்தின்படி சுவீகாரம் செய்து கொண்டதன் விளைவாக ஏற்பட்ட இரண்டாவது விஷயம் என்னவெனில், அந்தப் பையன், விதவைத்தாயின் பெயரிலிருந்த சொத்து முழுவதையும் மீட்டு எடுத்துக் கொள்ள முடிந்தது. இதன் விளைவாக, அந்த சொத்தி லிருந்து வரும் வட்டி முழுவதும் சுவீகாரம் எடுத்துக் கொள்ளப்பட்ட பையனுக்கு வந்து சேர்ந்தது; அவன் ஓர் அர்த்தத்தில் ஓர் அந்நியனே யாவான்; அவன் சுவீகாரம் எடுத்துக்கொள்ளப்பட்ட தந்தையின் குடும்பத்தினுள் வந்துவிட்ட கருத்து ரீதியான மாற்றத்தையும் பொருட் படுத்தாது, அவன் நடைமுறையில், இயல்பான குடும்ப உறுப்பினர் களுடனான தனது பந்தங்களை நீடித்துக் கொண்டிருந்தான். இதன் விளைவு என்னவெனில் சுவீகாரம் நடைபெற்றதற்குப் பின்னர், சுவீகாரம் எடுத்துக் கொண்ட தாய்க்கு, ஓர் இயல்பான மகனிட மிருந்து ஓர் இயல்பான தாய்க்குக் கிடைக்க வேண்டிய எந்த வகையான பாதுகாப்பும் பெறுவதற்குப் பதிலாக, புதிதாக சுவீகாரம் எடுத்துக் கொள்ளப்பட்ட இந்தப் பையன் சொத்த முழுவதையும் எடுத்துக் கொண்டு ஓடிவிட்டான், அந்தத் தாய்க்கு ஜீவனாம்ச உரிமை தவிர வேறு எதுவும் கிடைக்கவில்லை. பெண்களுக்குப் பாதுகாப்பு அளிக்கும் கண்ணோட்டத்திலிருந்து பார்க்கும்போது அது விரும்பத் தக்க நிலைமையல்ல என்று நாங்கள் நினைத்தோம். எனவே சில மாற்றங்கள் செய்யப்பட்டன. ராவ் குழுவில் முன்பு ஏற்றுக் கொள்ளப் பட்ட மூல வேறுபாடு (தனித்தன்மை) நீக்கப்பட்டு, வேறு ஒரு ஷரத்து

சேர்க்கப்பட்டது. அதன்படி, சுவீகாரம் எடுத்துக் கொள்ளப்பட்ட மகனின் உரிமைகள், சுவீகாரம் எடுத்துக்கொண்ட தகப்பனாரின் மரணத்தேதியிலிருந்து அவனுக்குக் கிடைக்கும் என்பதற்குப் பதிலாக, சுவீகாரம் எடுத்துக் கொள்ளப்பட்ட தேதியிலிருந்து கிடைக்கப் பெறும் என்று மாற்றப்பட்டது. எனவே, அவன் சுவீகாரம் எடுத்துக் கொள்ளப்படுவதற்கு முன்னதாக, செய்யப்பட்டுள்ள எந்தச் சொத்து மாற்றமும் அவனுடைய உரிமைக்கு அப்பாற்பட்டதாக்கப்பட்டது. அவனால் அதற்காக வழக்காட முடியாது.

நாங்கள் செய்த இரண்டாவது ஷரத்து என்னவெனில், சுவீகாரம் எடுத்துக்கொள்ளப்பட்ட மகன், சுவீகாரத்தின் பயனாக, சுவீகாரம் எடுத்துக்கொள்ளும் தாய்க்கு சொத்தின் மீதுள்ள உரிமையைப் பூரணமாகப் பறிக்க முடியாது. மாற்றப்பட்ட வடிவத்தில் இது குறித்து மசோதா, கணவனை இழந்த மனைவியின் சொத்தில் ஒரு பாதி மட்டுமே, சுவீகாரம் எடுத்துக்கொள்ளப்பட்ட மகனுக்குப் போய்ச் சேரும் என்று குறிப்பிடுகிறது. மற்றைய பாதி சொத்து, கணவனை இழந்ததாய், ஒரு மகனை சுவீகாரம் எடுத்துக்கொண்ட போதிலும், அந்தத்தாயின் வசத்திலேயே இருக்கும், அவர் அதைத் தொடர்ந்து அனுபவித்து வருவார். இதன் விளைவாக, சுவீகாரம் எடுத்துக்கொள்வதைக் குழு அனுமதித்தது, ஏனெனில் குடும்ப வாரிசுகள் தொடர்ந்து நீடித்து இருப்பதற்காக சுவீகாரம் எடுத்துக் கொள்வது அவசியம் என்று இந்து சமுதாயம் கருதுகிறது. அதே சமயத்தில், சுவீகாரத்தின் விளைவாக அந்தத் தாய் முற்றாகப் பிச்சைக் காரியாக மாறாமல் இருப்பதற்கு நாங்கள் கவனம் எடுத்துக் கொண்டோம்.

திரு. துணை சபாநாயகர் : தேஷ்முக் சட்டத்தின் விளைவும் அதுதானே?

மாண்புமிகு டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் : இல்லை, அந்தச் சட்டத்தின்படி அவருக்கு ஜீவனாம்சம் மட்டுமே கிடைக்கும்.

திரு. துணை சபாநாயகர் : அவருக்கு சொத்தில் பாதிப் பங்கு கிடைக்கிறது

மாண்புமிகு டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் : சுவீகாரம் எடுத்துக் கொள்ளப்பட்டவுடனே, சொத்து முழுவதும் மகனுக்குப் போய்ச் சேருகிறது.

திரு. எல். கிருஷ்ணசாமி பாரதி (சென்னை : பொது) : மகன் பின்னர்தான் வருகிறான்.

மாண்புமிகு டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் : அது அவ்வாறு இருக்கக்கூடும். மகன் மைனராக இருப்பது மற்றும் பாதுகாவலரின் பொறுப்பு சம்பந்தமாக இப்பொழுது கூறுகிறேன். இது சம்பந்த மாக, மசோதாவின் இந்தப் பகுதியில் பொறுக்குக் குழு இரண்டு மாற்றங்களை மட்டுமே செய்தது. முதலாவது மாற்றம் தனது மைனர் மகனின் இயற்கையான பாதுகாவலர் என்ற வகையிலான இந்து தகப்பனாரின் அதிகாரம், அவர் லௌகிக வாழ்வைத் துறந்து சந்நியாசி யாகிவிட்டாலோ, அல்லது ஓர் இந்துவாக இல்லாமல் போய் விட்டாலோ அவரிடமிருந்து எடுத்துக்கொள்ளப்பட்டு வருகிறது. மூல (ஒரிஜினல்) சட்டப்படி, தகப்பனார்தான் இயல்பான பாது காவலர்; அவருடைய மதத்தின் காரணமாகவோ, அல்லது வேறு எந்த வழியிலாவது அவரது நிலைமையில் என்ன மாற்றங்கள் ஏற்பட்ட போதிலும், அவர் தமது மைனர் மகனுக்கு தொடர்ந்து பாதுகாவலராக இருக்கிறார். இந்த சட்டத் தொகுப்பு இந்து சமுதா யத்தையும் அவர்களின் சட்டங்களையும் ஒன்றுபடுத்துவதை நோக்க மாகக் கொண்டதால், இந்த நிபந்தனையை, அதாவது தகப்பனார் ஒரு இந்துவாகத் தொடர்ந்து இருக்கும் வரையிலும் அவர் இயல் பான பாதுகாவலராகத் தொடர்ந்து இருக்க வேண்டுமென்று குழு கருதியது. சட்டத் தொகுப்பு அதனுடைய மாற்றப்பட்ட வடிவத்திலும் மற்றொரு மாற்றத்தைப் புகுத்தியது. அதாவது, ஓர் இந்து விதவைக்கு தனது கணவன் இறப்பதற்கு முன்னால் பாதுகாவலராக ஒருவரை நியமிக்காம லிருந்திருந்தால், அத்தகைய பாதுகாவலரை நியமிப் பதற்கு அதிகாரம் வழங்கியது. அவருக்கு அத்தகைய அதிகாரம் ஏதுமிருக்கவில்லை, இந்த அதிகாரத்தை பொறுக்குக் குழு அவளுக்கு வழங்கியது.

ஐயா, இப்பொழுது, வாரிசுரிமை பற்றிய மசோதாவை விளக்கும் பகுதிக்கு வருகிறேன். முதலில் ஆண்களுக்கு வாரிசுரிமை வழங்கப்படுவதில் செய்யப்பட்டுள்ள மாற்றங்களைப் பற்றிக் குறிப் பிடுகிறேன். முதலாவதாக இந்து சட்டத்தின் கீழ் ஒப்பந்தப்படியான வாரிசுகளின் வரிசை என்றழைக்கப்படுவதைப் பொறுத்தமட்டிலும், - ராவ் குழு இதை 1-வது வகையினத்தில் வைத்தது - பொறுக்குக் குழு எத்தகைய மாற்றத்தையும் செய்யவில்லை. ஒப்பந்தப்படியான வாரிசுகளின் வரிசையிலும் வாரிசுகளின் மரபிலும் அப்படியே வைக்கப்பட்டுள்ள அந்த விஷயம் மாற்றப்படவேயில்லை. ஆனால் ராவ் குழுவின் 1லிருந்து 4 வரையிலான ஷரத்துகளில் சேர்க்கப்

பட்டுள்ள நபர்களைப் பொறுத்தவரையில் வாரிசு வரிசை சம்பந்தமாகவும், வாரிசு முன்னுரிமையிலும் சில மாற்றங்கள் செய்யப் பட்டுள்ளன. குழு இரு கோட்பாடுகளையும், அதாவது நெருங்கிய உறவு மற்றும் இயல்பான அன்பு, விருப்பம் ஆகியவற்றைக் கடைப் பிடித்துள்ளது. அந்த அடிப்படையில்தான் பொறுக்குக் குழு மூல மசோதாவின் 1லிருந்து 4 வரையிலான ஷரத்துகளில் வகுத்தளிக்கப் பட்டுள்ள வாரிசுகளில் சில மாறுதல்களைச் செய்துள்ளது. பொறுக்குக் குழு மேலும் ஒரு விஷயத்தைச் செய்துள்ளது: அதாவது மரணமடைந் தவரின் வாரிசுகளாகக்கூடிய ஆண் வழி உறவினர் மற்றும் பிற தொடர்புள்ளவர்களின் எண்ணிக்கை அளவையும் குறைத்துள்ளது. மற்றும் பிற வாரிசுரிமைகளையும், உதாரணமாக, உறவினர்களல் லாத வாரிசுகள், சாம் பிரம்மச்சாரி குரு போன்றவர்களை அது நீக்கிவிட்டது. மூல மசோதாவில் வகை செய்துள்ளபடியான வாரிசு களின் எண்ணிக்கையையும் பொறுக்குக் குழு குறைந்துள்ளதற்கான காரணம் இதுதான். இந்தச் சட்டத் தொகுப்பின் கீழ் ஒவ்வொரு இந்துவுக்கும் ஓர் உயில் தயாரிப்பதற்கான உரிமையை நாம் கொடுத் துள்ளோம். ஒரு முக்கியமான சஞ்சிகையாகிய ஒப்பீட்டு சட்டங்கள் சஞ்சிகையில் ஒரு வகை விமர்சனம் செய்யப்பட்டுள்ளது. அதில் மிகவும் பிரபலமான வழக்குரைஞர் ஓர் உயில் தயாரிக்கும் உரிமையை நீங்கள் கொடுத்தால், மரணமடைந்தவருக்குப் பின்னால், பதினான்காவது படித்தர அளவு வரைக்கும் நீளும் நீண்ட வாரிசுகள் பட்டியலை வழங்குவது அவசியமற்றது என்று அவர் கூறியுள்ளார். மரணமடைந்த ஒருவர், பதினான்காவது படித்தரத்தில் உள்ள, தனக்கு உறவினரான ஒருவர் மேல் அக்கறை கொண்டிருந்தால், அவருடைய மரணத்தின்போது அவர் உயிருடனிருந்தால், அது சம்பந்தமாக அவர் ஓர் உயில் தயாரித்து, தான் அக்கறை கொண்டுள்ள அந்தக் குறிப்பிட்ட நபருக்கு தனது சொத்தில் ஒரு பகுதியைக் கொடுப்பது அவருடைய விருப்பத்தைப் பொறுத்த விஷயமாகும்.

மரணமடைந்தவர், தான் உயிருடனிருக்கும்போது, 14-வது படித்தரத்தில் உள்ள தனக்கு உறவுள்ள ஒரு நபரை நினைவு கொள்ள முடியாவிட்டால், உயில் எழுதாமல் இறந்து விட்டதனால் சொத்தில் ஒரு பங்கை அவருக்குக் கொடுக்க வேண்டுமென்பதற்கு எந்தக் குறிப் பிட்ட காரணமும் கிடையாது. பொறுக்குக் குழு இந்த ஷரத்தை சேர்த்ததற்கு இதுவும் ஒரு காரணமாகும்.

கணவனை இழந்தவர்கள் (விதவைகள்) சம்பந்தமாக, அவர் மறுமணம் செய்து கொண்டால், அவர் தனது வாரிசுரிமையை

இழக்கிறார் என்ற ஒரு தகுதியின்மையையும் பொறுக்குக் குழு ஏற்படுத்தியுள்ளது என்ற விவரத்தையும் நான் அவையின் கவனத் திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

மகளுடைய பங்கைப் பொறுத்தமட்டிலும் - மூலமசோதா விலேயே இது அமைந்துள்ளது என்பது மெய்யே - ஓரளவு ஒரு முக்கிய மாற்றத்தை பொறுக்குக் குழு செய்துள்ளது.

மகள், மகனுக்குக் கிடைக்கும் பங்கில் பாதி அளவுக்கு உரிமை உடையவள் என்று மூலமசோதா கூறியுள்ளது, மேலும் பெண்ணின் சீதனச் சொத்துக்கு வாரிசுரிமை வரிசையை நிர்ணயிக்கும்போது பங்கை நியாயமானதாக இருக்கச் செய்வதற்காக, அந்த நிலையில் மகள் எடுத்துக் கொள்ளும் சொத்தில் ஒரு பாதியை மகன் எடுத்துக் கொள்வான் என்றும் மூல மசோதா கூறியது. அதன்படி தகப்ப னாரின் சொத்தில் மகள் ஒரு பாதியையும் தாயாரின் சொத்தில் ஒரு பாதியையும் பெறுவதற்கும் வகை செய்தனர். அது ஒரு நேர்மையற்ற ஏற்பாடு என்று நான் கூறமுடியாது. ஆனால் எப்படியோ பொறுக்குக்குழு, அவர்களுடைய உற்சாகத்தில், தகப்ப னாரின் சொத்தில் மகளின் பாகத்தை ஒரு பாதியிலிருந்து ஒரு முழுப் பங்குக்கு, அதாவது மகனின் பங்குக்கு சமமாக உயர்த்திவிட்டனர்; அவர்களது தீர்ப்பின் சிறந்த (பெரும் பகுதி) பகுதிக்கு எதிராக அவர்கள் இவ்வாறு செய்தனர் என்று நான் கருதுகிறேன். (ஒரு மதிப் புக்குரிய உறுப்பினர் : (''மகனுக்கும் வழங்கப்பட்டுள்ளது''.) நான் அதை அறிவேன். பெண்களுக்கு வாரிசுரிமை கொடுப்பது சம்பந்த மாக, பொறுக்குக்குழு இரு மாற்றங்களை மட்டுமே செய்துள்ளது. தற்போதிருந்து வரும் விதியின்படி, ஒரு பெண்ணின் கணவர் - பெண்களுக்கு வாரிசுரிமை கொடுக்கும்போது - இந்து சட்டத்தின்கீழ் மிகவும் பின்னாலேயே வருகிறார். அந்த ஷரத்து பழைய ராவ் குழு வினால் சேர்த்துக் கொள்ளப்பட்டிருந்தது, அது அநீதியானது என்று பொறுக்குக் குழு கருதியது, ஏனெனில், அதனால் சீதனச் சொத்து அல்லது, ஒரு பெண்ணின் கைக்கு வருகின்ற சொத்து ஒருவேளை, பெருமளவுக்குக் கணவனிடமிருந்துவருவதாக இருக்கக்கூடும், மேலும் பெண்ணின் கைக்கு வரும் சொத்தக்குக் கணவன்தான் சொத்தின் பிரதான மூலாதாரமாக இருக்கும்போது, பெண் பிற வாரிசுகளுக்கு அது மாற்றிக் கொடுக்க வேண்டுமென்பது முறையாக இருக்காது. எனவே பொறுக்குக்குழு அந்த ஷரத்தில் மாற்றம் செய்து, சீதன சொத்தின் வாரிசுகளின் வரிசையில் கணவனையும் சேர்த்தது, எனவே இதன்படி, கணவன் இப்பொழுது, ஒரு பெண்ணின் வாரிசுகளோடு

சேர்ந்து சீதனச் சொத்தில் பங்கு பெறுகிறார். நான் ஏற்கனவே கூறியது போன்று, அதனால், தகப்பனாரின் சொத்தில் மகளின் பங்கை அதிகரித்ததால், அவர்கள், அதேசமயத்தில் தாயாரின் சீதனச் சொத்தில் மகனின் பங்கையும் மகளின் பங்குக்கு சமமானதாக்கினர்.

திரு. துணை சபாநாயகர் : அவர்கள் மகனையும் மகளையும் சமப்படுத்தினர்.

மாண்புமிகு டாக்டர் பி.ஆர். அம்பேத்கர்: இந்த அவைக்கு சொல்லக்கூடிய அளவிற்கு ஜீவனாம்சம் சம்பந்தமாக சட்டத்தில் எந்த மாற்றமும் செய்யப்படவில்லை.

இனி, கூட்டுக் குடும்பப் பிரச்சினைக்கு வருகிறேன். பொறுக்குக் குழுவிடமிருந்து வந்த அளவில், இந்த மசோதாவில் அடங்கியுள்ள ஷரத்துகளில், கூட்டுக் குடும்பம் சம்பந்தமான ஷரத்துகள் முற்றிலும் புதியவை என்று கூறப்பட்டது. அந்தக் கூற்றை இந்தச் சந்தர்ப்பத்தில் மறுத்துக் கூற நான் விரும்புகிறேன். பொறுக்குக் குழுவினால் எந்த மாற்றமும் செய்யப்படவில்லை. மிதாக்ஷரா கூட்டுக் குடும்பத்தின் ஷரத்துகள், ராவ் குழுவினால் வரையப்பட்ட மசோதாவில் ஆரம்பத்தில் இருந்தன. அது ஆகஸ்ட் 9ம் நாளன்று இந்த அவையில் சமர்ப்பிக்கப்பட்டது. அதை அவை ஏற்றுக்கொண்டு பொறுக்குக் குழுவுக்கு அனுப்பியது (மதிப்புக்குரிய உறுப்பினர் கள் : ஏப்ரல் 9). எனவே என்னுடைய முதலாவது வேண்டுகோள் என்னவெனில், இந்தப் பொறுக்குக் குழுவினால் எந்தப் புதிய மாற்றமும் செய்யப்படவில்லை. பொறுக்குக்குழு செய்ததெல்லாம், இரண்டு புதிய ஷரத்துகளைச் சேர்த்தது மட்டுமே - ஷரத்து எண் 88-ம் ஷரத்து எண். 89-ம். 88வது ஷரத்து புனிதமான கடப்பாடுகள் என்னும் கோட்பாடு பற்றிக் கூறுகிறது. 89வது ஷரத்து, கூட்டுக் குடும்பத்தின் கடன்களை கூட்டுக் குடும்பம் செலுத்த வேண்டிய கடமைப் பொறுப்பைப் பற்றிக் கூறுகிறது. இந்த ஷரத்துகளைச் சேர்த்தது அவசியமில்லைதான். ஏனெனில், கூட்டுடைமையின் மரபுரிமையில் இணை உரிமை பெற்ற சொத்தை நீங்கள் பிரிக்கும் போது, புனிதமான கடப்பாடுக் கோட்பாடு சம்பந்தமாக எந்த வெளிப் படையான ஷரத்தும் தேவையில்லை. ஏனெனில், எச்சவுரிமை (கூட்டுடைமையில் மறுபங்காளிக்குப்பின் எஞ்சியிருப்பவர்க்குரிய முழு உடைமை உரிமை) சொத்து இருக்கும் நிலையில்தான் புனித மான கடப்பாடு தேவையாகும்; ஏனெனில் எஞ்சுநர் உரிமையின் மூலம் 'பி'யின் சொத்தை 'எ' எடுத்துக் கொள்ளும் போது, 'பி'யின்

சொத்து கடன்களுடன் கூடிய வில்லங்கம் இருந்தால், 'பி'யின் மீது ஒரு கடமையைச் சுமத்துவதற்குத் தனி கோட்பாடு எதுவும் தேவையில்லை; ஏனெனில் வாரிசுரிமையாக ஒரு நபர் ஓர் உடைமையைப் பெறும்போது, அவர் லாபம், (கடன்) சுமை இரண்டையும்தான் பெறுகிறார். ஆனால் மிதாக்ஷரா கோட்பாட்டின்படி, கூட்டுடைமையின் மரபுரிமையில் இணையுரிமை பெற்ற ஒவ்வொருவரும், மரணமடைந்தவருக்கு சொந்தமாயில்லாத சொத்தை, எஞ்சிவாழ்கிறவர் என்ற வகையில் பெறுகிறார். மிதாக்ஷரா கூட்டுக் குடும்பக் கோட்பாட்டில் உள்ளார்ந்து அமைந்துள்ள இந்த இரு விஷயங்களையும் சட்டத் தொகுப்பில் வெளிப்படையாகக் கூறியாக வேண்டும் என்றும், அப்பொழுதுதான், நீதித்துறை சார்ந்த வியாக்கியானம் என்னும் கேள்வி எழும்போது, எந்த வகையான தகராறுக்கோ, ஐயப்பாட்டுக்கோ, அல்லது கருத்து வேறுபாட்டுக்கோ, இடமில்லாமல் போகும் என்று பாட்னா உயர்நீதிமன்றமும், பம்பாய் உயர்நீதிமன்ற வழக்கறிஞர் குழுவும் நம்மை மிகவும் வலுவாக வற்புறுத்தியுள்ளன. சட்டத்தை வழக்கறிஞர்களுக்கு மட்டுமன்றி, சாதாரணக் குடிமக்களுக்கும் தெளிவாக்க வேண்டும் என்பது சட்டத் தொகுப்பின் குறிக்கோள்களில் ஒன்றாக இருப்பதினாலும், பாட்னா உயர்நீதிமன்றம் பம்பாய் உயர்நீதிமன்ற வழக்குரைஞர் குழு போன்ற செல்வாக்கு மிக்க அதிகாரம் படைத்தவர்களிடமிருந்து வந்த ஆலோசனை என்பதாலும், இந்த இரண்டு விஷயங்களை, அதாவது, புனிதமான கடப்பாடு என்ற மூலக்காரணத்தினால், கடன்களுக்குப் பணம் செலுத்தும் கடப்பாடு இல்லை, மற்றும் குடும்பத்தைச் சார்ந்த முதன்மையான கடன்களைச் செலுத்த வேண்டிய பொறுப்பு ஆகியவற்றை சேர்ப்பது விரும்பத்தக்கது என்று கருதினோம். இதைத் தவிர, வேறு மாற்றம் எதுவும் செய்யப்படவேயில்லை. மிதாக்ஷரா கூட்டுக் குடும்பம் சம்பந்தமாக, நாங்கள் அடிப்படையான மாற்றங்களைச் செய்துள்ளதாக என்னுடைய நண்பர்களுக்கு இன்னும் ஏதாவது ஐயப்பாடு இருக்குமானால், 86வது பகுதியை (பாகம் 5: கூட்டுக் குடும்பச் சொத்து) அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வரவிரும்புகிறேன். பொறுக்குக் குழுவிடமிருந்து வந்துள்ள புதிய மசோதாவின் 86வது பகுதி, சொல்லுக்குச் சொல் அதுவேயாகும். சில சாதாரண சொல் மாற்றங்கள் மட்டுமே செய்யப்பட்டுள்ளது. ராவ் குழுவினால் தயாரிக்கப்பட்ட மூலமசோதாவின் பக்கம் 12ல் பாகம் 3, ஏ பிரிவில் இதைக் காணலாம். அது போன்றே, கூட்டுச் சொத்து சம்பந்தமான 87வது பிரிவும், பக்கம் 12, 3ம் பாகம் ஏ, 2ம் பிரிவில் சொல்லுக்குச் சொல் அப்படியே உள்ளது. இரண்டையும் ஒப்பிட்டுப் பார்க்கும் யாரும், இது பொறுக்குக்குழு புதிதாகக் கண்டுபிடித்ததல்ல,

மாறாக, அவை ராவ் குழுவினால் வரையப்பட்ட மூல மசோதாவின் இணை பிரியாத பாகமேயாகும் என்று இந்த அவையில் நான் எடுத்துக் கூறியதை நிச்சயமாக ஏற்றுக் கொள்வார்கள். ராவ் குழுவின் அறிக்கையை (பக்கம் 13) சுட்டிக் காட்டுவதன் மூலம், இந்த அம்சம் சம்பந்தமாக இருக்கக்கூடிய மேற்கொண்டு எந்த ஐயப்பாட்டையும் அகற்றுவதற்கு விரும்புகிறேன். ராவ் குழு இவ்வாறு கூறுகிறது (பாரா 51) :

> ''சட்டத்தொகுப்பின் நகலின் உள்ளடக்கத்தை இப்பொழுது பார்க்கும்போது, பல்வேறு அளவில் வெளிப்பட்டுள்ள பிரதான பிரேரணைகள் சம்பந்தமான கருத்து வேறுபாடுகள்'' பின்வருவனவையே:
>
> (1) மிதாக்ஷரா மாகாணங்களில் பிறப்பின் காரணமான உரிமையும் எஞ்சியிருப்பவர் சொத்துரிமை பெறுவது என்னும் கோட்பாடும் ரத்து செய்யப்பட்டு, மிதாக்ஷராவுக்கு பதிலாக தாயபாகம் என்பது கடைப்பிடிக்கப் படுவது;
>
> (2) மகளுக்குப் பாதிப்பங்கை அளிப்பது;
>
> (3) இந்துப் பெண்ணின் வரையறைக்குட்பட்ட சொத்தை முழு உரிமை படைத்த சொத்தாக மாற்றுவது;
>
> (4) ஏகபத்தினி முறையை சட்டத்தின்படியான விதியாக 'அமலாக் குவது;
>
> (5) விவாகரத்துக்கான சில ஷரத்துகளைச் சேர்ப்பது.''

ராவ் குழு, தனது பணியை ஆற்றும்போது, தாங்கள் தயாரித்த சட்டத் தொகுப்பும், பின்னர் அவர்களால் உருவம் கொடுக்கப் பட்டதுமாகிய அது திட்டவட்டமான ஷரத்தைக் கொண்டிருந்தது. இந்த அவையினால் நியமிக்கப்பட்ட கூட்டுப் பொறுக்குக் குழுவும், ராவ் குழுவும் ஒரு நிர்வாக உத்தரவின் மூலம் இந்த அரசும் முன்பு சேகரித்த சாட்சியம் அடங்கியுள்ள தொகுதிகளைப் படித்த எவரும் சட்டத் தொகுப்பின் இந்தப் பகுதியின் மீது கவனம் செலுத்திய இந்த அவையிலோ அல்லது வெளியிலோ உள்ள எந்த நபரும், இந்தக் கூட்டுடைமையின் மரபுரிமையில் இணையுரிமை ரத்து செய்யப்படக்கூடாது என்று ராவ் குழு முடிவு செய்ததாகவோ அல்லது பிரேரணை வைத்துள்ளதாகவோ எத்தகைய தவறான மனப் பதிவையும் கொண்டிருக்கவில்லை என்பதைக் காண்பார் என்பது குறித்து எனக்கு எத்தகைய ஐயமுமில்லை. எனவே, இது பொறுக்குக் குழுவின் புதிய கண்டுபிடிப்பு அல்லவே அல்ல. இந்துச் சட்டத் தொகுப்பை பிரயோகம் செய்வது சம்பந்தமாக பொறுக்குக் குழு சில மாற்றங்களைச் செய்தது. மருமக்கதாயம் மற்றும் அலியசந்தானம் சட்டங்கள் பிரயோகமாகிற பிரதேசங்களுக்கு இந்த மசோதா விரிவு படுத்தப்படக் கூடாது என்று ராவ் குழுவின் மசோதா ஒரு ஷரத்தைக்

கொண்டிருந்தது எவ்வாறோ, பொறுக்குக் குழு தனது உற்சாகத்தில், நியாயத் தன்மையின் எல்லைகளை மீறி - இவ்வாறு கூறுவதில் நான் எத்தகைய மரியாதைக் குறைவையும் காட்டவில்லை - இந்த சட்டத்தொகுப்பு செயல்படுவதனின்றும் எந்தப் பிரதேசத்திற்கும் விதிவிலக்கு இருக்கக்கூடாது என்ற முடிவுக்கு வந்து பின்னர் அவர்கள் அந்த ஷரத்தை நீக்கிவிட்டார்கள்.

திரு. துணை சபாநாயகர் : ஒரு சீரான தன்மையின் பொருட்டு.

மாண்புமிகு டாக்டர் பி.ஆர். அம்பேத்கர்: அது சரியாக அவ்வாறு செய்யப்பட்டதா, அல்லது தவறாக அவ்வாறு செய்யப் பட்டதா என்று எனக்குத் தெரியாது; ஒரு பிந்திய கட்டத்தில் இதை அவை பரிசீலனை செய்ய வேண்டும்.

பண்டிட் முகுத் பீஹாரிலால் பர்கவா (ஆஜ்மீர் - மீர்வாரா) : அந்தக் கருத்திலிருந்து மாண்புமிகு பேச்சாளர் வேறுபடுகிறாரா?

மாண்புமிகு டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் : ஒரு வேளை, பின் கட்டத்தில் நான் வேறுபடுவேன். நான் கருத்து எதுவும் இல்லாதவ னல்ல, ஆயினும் இன்னும் நான் திறந்த மனதுடன் இருக்கிறேன்.

திரு. எச்.வி. காமத் (மத்திய மாகாணங்கள் மற்றும் பேரார் பொது) : ஒன்றும் இல்லாத மனதல்ல!

பண்டிட் தாகூர்தாஸ் பர்கவா : ஒவ்வொரு பிரச்சினையிலும் என்று நம்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் : ஐயா, சாதாரண மான நிலைமையில், நான் ஆற்றியது போன்ற ஓர் உரை, குறிப் பிட்ட சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமானது மட்டுமன்றி, போதுமானது மாகும் என்று பொதுவாகக் கருதப்படுகிறது. ஆனால், ஒரு பகுதி - பெரிய பகுதியாக இல்லாவிட்டாலும் இந்த அவையில் ஒரு பகுதி, மசோதாவின் சில பகுதிகள் சம்பந்தமாக ஓரளவு மன உறுத்தல் கொண்டுள்ளது என்ற உண்மையை மறைப்பது பயனற்றதாகும். இந்த அவைக்கு வெளியில் பலர் இந்த மசோதாவில் அக்கறை கொண்டுள்ளார்கள் என்பது மட்டுமன்றி இது குறித்து ஆழமாகக் கவலையும் கொண்டுள்ளனர் என்ற உண்மையையும் மறைக்க முடியாது. எனவே, இந்த மசோதா கொண்டுவரப்பட்டதிலிருந்து

நான் பார்த்தவரையில், பல பத்திரிகைகளில் வெளியாகியுள்ள கருத்து வேறுபாட்டு அம்சங்கள் சம்பந்தமாக, ஒரு சில பொதுவான விஷயங்களைக் கூறுவது சரியானது என்று நினைக்கிறேன். நீங்கள் அனுமதித்தால் கூறுகிறேன். இந்த விஷயத்தை பாகம் பாகமாகவும் பகுதி பகுதியாகவும் எடுத்துக் கொள்கிறேன். சர்ச்சைக்குரிய அம்சங்கள் என்று கருதப்பட்டுள்ளதாக நான் அறிகின்றவற்றை மட்டும் இங்கு எடுத்துக் கொள்கிறேன். திருமணம் மற்றும் விவாகரத்தை எடுத்துக் கொள்கிறேன். இங்கு சர்ச்சைக்குரிய மூன்று விஷயங்கள் இருப்பதைக் காண்கிறேன். சர்ச்சைக்குரிய முதலாவது விஷயம் என்னவெனில், ஒரு செல்லுபடியாகும் திருமணத்திற்கு சாதிகளை ஒழிப்பது ஓர் அவசியமான தேவை என்பதாகும். இரண்டாவது சர்ச்சைக்குரிய விஷயம், ஒருதார மணத்தைப் பரிந்துரைப்பது; சர்ச்சைக்குரிய மூன்றாவது விஷயம் விவாகரத்துக்கான அனுமதி.

சாதித் தடைக்கட்டுகளை ரத்து செய்வது என்ற முதலாவது சர்ச்சைக்குரிய விஷயத்தை எடுத்துக் கொள்கிறேன். இந்த மசோதாவைப் பொறுத்த மட்டிலும், புதியதற்கும் பழையதற்கும் இடையில் ஒரு வகையான சமரசத்திற்கு வருவதற்கு அது முயல்கிறது. இந்து சமூகத்தைச் சேர்ந்த ஒரு நபர், வைதீக முறையைப் பின்பற்றுவதற்கு விரும்பினால் - மணப்பெண்ணும் மணமகனும் ஒரே வர்ணத்தை, ஒரே சாதியை, அல்லது ஒரே உப-சாதியைச் சேர்ந்தவர்களாக இருந்தால் ஒழிய, அந்தத் திருமணம் செல்லாது என்று கூறுகிறது - அவருடைய விருப்பங்களை அமல் நடத்துவதை, அல்லது தனது தர்மம் என்று அவர் கருதுவதை அமல் நடத்துவதைத் தடுப்பதற்கு இந்தச் சட்டத்தொகுப்பில் எதுவும் இல்லை என்று இந்த மசோதா கூறுகிறது. அதே முறையில், சீர்திருத்தவாதியாக இருக்கின்ற, வர்ணம், சாதி அல்லது உப-சாதியில் நம்பிக்கையில்லாத ஓர் இந்து, தனது வர்ணத்திற்கு வெளியில், தனது சாதிக்கு வெளியில், தனது உப-சாதிக்கு வெளியில் ஒரு பெண்ணைத் திருமணம் செய்து கொள்வதற்குத் தேர்ந்தெடுத்தால், அந்தத் திருமணமும் செல்லுபடியாகும் என்று சட்டம் கருதுகிறது. எனவே, திருமணம் சம்பந்தப்பட்ட சட்டத்தைப் பொறுத்தவரையிலும் எத்தகைய நிர்ப்பந்தமும் சுமத்தப்படுவதில்லை. வழிவழியாக வருகின்ற மதக் கோட்பாடுகளில் நம்பிக்கை உடைய வைதிகர்களைப் பொறுத்தமட்டிலும், அவர்களுடைய தர்மத்தின்படி எது சரியென்று அவர்கள் நினைக்கிறார்களோ, அதைச் செய்வதற்கு அவர்கள் அனுமதிக்கப்படுகிறார்கள். தர்மத்தைப் பின்பற்றாத சீர்திருத்தவாதிகள், ஆனால் பகுத்தறிவைப் பின்பற்றுகிற, மனச்சாட்சியைப் பின்பற்றுகிறவர்களும்

தமது பகுத்தறிவையும் தமது மனச்சாட்சியையும் பின்பற்றுவதற்கு அனுமதிக்கப்படுகிறார்கள்.

திரு. மகாவீர் தியாகி (உ.பி: பொது): அவர்களது மனசாட்சி அவர்களை செலுத்தும் முறையில், தமது மதத்திற்கு வெளியிலும் திருமணம் செய்வதற்கு அவர்கள் அனுமதிக்கப்படுகிறார்களா?

மாண்புமிகு டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் : நல்லது, அதற்கு நமக்கு மற்றொரு மசோதா தேவைப்படும். என்னுடைய மதிப்புக்குரிய நண்பர் திரு. தியாகி, திருமணமில்லாதவரா என்பது எனக்குத் தெரியாது. அவர் அவ்வாறிருந்தால், நான் அந்த மசோதாவை துரிதமாகக் கொண்டு வருகிறேன்.

திரு. மகாவீர் தியாகி : மற்றவர்களுக்கு வழிவிடுவதற்கு நான் விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் : எனவே, திருமணச் சட்டத்தைப் பொறுத்தவரையிலும், பழையதற்கும் புதியதற்கும் இடையில் ஒரு போட்டியிருந்தால் இந்து சமுதாயத்தில் என்ன ஏற்படும்? புதிய பாதையைப் பின்பற்றுகிறவர்கள் இறுதியாக வெற்றியடைவார்கள் என்று நம்புகிறோம். ஆனால், நான் கூறுவது போன்று, அவர்கள் அதை ஏற்றுக் கொள்ளாவிட்டால், இரு இணையான திருமண முறைகள் இந்த நாட்டில் செயல்படுவதற்கு அனுமதிப்பதற்கு நாங்கள் மிகவும் திருப்தியடைகிறோம். எவரும் இந்தத் திருமண முறைகளில் எதையும் விருப்பப்படி தேர்வு செய்து கொள்ளலாம். இதில் எந்த சாஸ்திரமும் மீறப்படவில்லை; எந்த ஸ்மிருதியும் சிறிதும் மீறப்படவில்லை.

ஒருதார மணத்தைப் பொறுத்தமட்டிலும், இது ஒரு புதிய கண்டுபிடிப்பாக இருக்கலாம். ஆனால் நம்முடைய மரபான சட்டம், அல்லது நமது சாஸ்திரங்களைப் பொறுத்தமட்டிலும், ஓர் இந்துக் கணவன் எல்லாக்காலங்களிலும், பலதாரமணத்திற்குத் தடைக்கட்டு ஏதுமற்ற, தங்குதடையற்ற உரிமை பெற்றிருந்தான் என்பதை இந்த அவையில் எந்த உறுப்பினரும் சுட்டிக்காட்ட முடியும் என்று கருதுகிறேன். ஆனால் எதார்த்தம் அதுவல்ல. இன்றும்கூட, தென் இந்தியாவின் சில பகுதிகளில், இதைக் கடைப்பிடிக்கும் மக்கள் இருக்கின்றனர். நாட்டுக் கோட்டை செட்டியார்களின் ஒரு பிரிவினர் - இந்த விஷயம் பிரிவி கவுன்சில் அறிக்கைகளிலேயே கூறப்பட்டுள்ளது.

வெறும் பராபரியான சாட்சியத்தை மட்டும் நான் சார்ந்திருக்க வில்லை. நாட்டுக்கோட்டை செட்டியார்களிடையில் - தனது மனைவியின் சம்மதத்தைப் பெறாமல் ஒரு கணவன் இரண்டாவது மனைவியைத் திருமணம் செய்துகொள்ள முடியாது. இரண்டாவதாக, அவ்வாறு சம்மதம் பெற்றுவிட்டால், அவர், அவளுக்கு (முதல் மனைவிக்கு) ஓரளவு சொத்தை ஒதுக்கவேண்டும். தமிழ் மொழியில் இது மாப்பு என்று அழைக்கப்படுகிறது என்று நினைக்கிறேன். அந்தச் சொத்து அவளுடைய முழு உடைமையான சொத்து ஆகும். அவளுடைய சம்மதத்தின்பேரில், கணவன் திருமணம் செய்து கொண்டு, அவளை மோசமாக நடத்தினால், ஒரு சுதந்திரமான வாழ்க்கையை நடத்துவதற்கு அவள் ஓரளவு பொருளாதாரத் தகுதியைத் தன் கைகளில் கொண்டிருக்கிறாள். பலதார மணத்திற்குத் தங்கு தடையற்ற உரிமை இல்லை என்பதைக் காட்டுவதற்காகவே இதை ஓர் உதாரணமாகக் கூறினேன்.

நான் கொடுக்க விரும்புகிற இரண்டாவது உதாரணம் கௌடில்யரின் அர்த்தசாஸ்திரத்திலிருந்து, இந்த அவையின் எத்தனை உறுப்பினர்கள் அந்தப் புத்தகத்தைப் படித்திருப்பார்களென்று எனக்குத் தெரியாது, பலர் படித்திருப்பார்கள் என்று நம்புகிறேன். அவர்கள் அதைப்படித்திருந்தால், ஓர் இரண்டாவது மனைவியைத் திருமணம் செய்யும் உரிமையை கௌடில்யர் பெருமளவு வரையறைக்குட்படுத்தியிருந்தார் என்பதை உணர்வார்கள். முதலாவதாக, எந்த நபரும் முதல் பத்து அல்லது பனிரெண்டு ஆண்டுகளுக்கு (இரண்டாவது மனைவியை) திருமணம் செய்துகொள்ள முடியாது; ஏனெனில், முதல் மனைவியினால் குழந்தைகளைப் பெற முடியாது என்பது குறித்து அவன் திருப்தியடைய வேண்டும். அது ஒரு எல்லை வரம்பு. இரண்டாவது திருமணம் செய்துகொள்ளும் உரிமை மீது கௌடில்யர் விதித்த இரண்டாவது வரையறை, திருமணத்தின்போது அவள் பெற்ற சீதனச் சொத்து முழுவதையும் கணவன் அந்தப் பெண்ணுக்குத் திருப்பிக் கொடுத்தாக வேண்டும். இந்த இரண்டு நிபந்தனைகளின் கீழ்மட்டுமே, கௌடில்யரின் அர்த்தசாஸ்திரம், ஓர் இந்துக் கணவனை இரண்டாவது தடவை திருமணம் செய்து கொள்ள அனுமதித்தது.

மூன்றாவதாக, நமது நாட்டிலேயே, பல்வேறு மாகாணங்களில் நிறைவேற்றப்பட்ட சட்டத்தில், ஒருதார மணம் விதிக்கப்பட்டுள்ளது. உதாரணமாக, மருமக்கதாயத்திலும், அலியசந்தானம் சட்டத்திலும், ஒருதார மணத்தை, மணவாழ்க்கையின் ஒரு விதியாக

விதிக்கப்பட்டுள்ளது. இதுபோன்றே, பம்பாயில் அல்லது சென்னையில், மற்றும் பரோடாவில் அண்மையில் நிறைவேற்றப்பட்ட சட்டங்களில் ஒருதார மணம்தான் சட்டமாகியுள்ளது.

நான் கொடுத்துள்ள உதாரணங்களிலிருந்து எந்த ஒரு மிகவும் தீவிரமான அல்லது புரட்சிகரமான மாற்றத்தையும் நாங்கள் செய்யவில்லை என்பதை அவை காணும் என்று நம்புகிறேன். நாம் மேற்கொண்ட நடவடிக்கைகளுக்கு முன்னுதாரணம் இருக்கிறது; இந்தியாவில் பல்வேறு சமஸ்தானங்களில் நிறைவேற்றப்பட்டுள்ள சட்டங்களிலும், கௌடில்யரின் அர்த்தசாஸ்திரம் போன்ற பண்டைய சாஸ்திரங்களிலும் இதைக் காண முடியும். நான் இன்னும் ஒருபடி மேலே சென்று, உலகம் முழுமையின் முன்னுதாரணம் நமக்கு இருக்கிறது என்று கூறுவேன். மணவாழ்க்கை உறவுகளைப் பொறுத்த மட்டிலும் ஒருதார மணத்தைத்தான் மிகவும் பாராட்டத்தக்க கோட்பாடாக உலகம் அங்கீகரித்துள்ளது.

திரு. தேசபந்து குப்தா (டில்லி): முகம்மதிய சட்டம் என்ன கூறுகிறது?

மாண்புமிகு டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் : முகம்மதிய சட்டத்தைப் பற்றி நாம் விவாதிக்கும்போது, அது பற்றிக் கூறுகிறேன்.

விவாகரத்துப் பிரச்சினைக்கு வருவோமானால், இது எவ்வகையிலும் ஒரு புதிய கண்டுபிடிப்பு அல்ல என்று அவைக்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். சூத்திரர்கள் என்று அழைக்கப்படும் சமூகங்கள் விவாகரத்து வழக்கத்தைக் கொண்டுள்ளன என்பதை இந்த அவையில் அனைவரும் அறிவர். சூத்திரர்கள் என்று நாம் அழைப்பவர்களின் முழு மொத்தம் எவ்வளவு? இந்து சமுதாயத்தில் ஓர் அங்கமாக உள்ள சூத்திரர்களின் மொத்த எண்ணிக்கை எவ்வளவு என்று யாரும் எப்பொழுதும் கணக்கெடுக்கவில்லை என்று கூறலாம். ஆனால் சூத்திரர்கள் இந்துக்களின் மொத்த மக்கட்தொகையில் நடைமுறையில் 90 சதவீதமாக இருப்பார்கள் என்பதில் எனக்குச் சிறிதும் ஐயமில்லை. 'மறு மலர்ச்சி' பெற்ற வர்க்கங்கள் என்று அழைக்கப்படுபவர்கள், இந்த நாட்டின் மொத்த மக்கட்தொகையில் அனேகமாக பத்து சதவீதத்திற்கும் அதிகமாக இருக்க மாட்டார்கள். மதிப்புக்குரிய உறுப்பினர்களைப் பார்த்து நான் கேட்கும் கேள்வி இதுதான்: 90 சதவீத மக்களின் சட்டத்தை இந்த நாட்டின் பொதுவான சட்டமாக நீங்கள் கொள்ளப் போகிறீர்களா,

அல்லது மக்களில் 10 சதவீதத்தினரின் சட்டத்தை 90 சதவீத மக்களின் மீது சுமத்தப் போகிறீர்களா? இது ஒரு எளிய கேள்விதான், ஒவ்வொரு உறுப்பினரும் இதற்கு பதில் சொல்லியாக வேண்டும், பதில் சொல்ல முடியும்.

'மறுமலர்ச்சி' அடைந்த வர்க்கங்களைப் பொறுத்தமட்டிலும், ஒரு காலத்தில், உதாரணமாக, நாரத ஸ்மிருதி அல்லது பராசர ஸ்மிருதி எழுதப்பட்ட காலத்தில், கணவன் தன்னைக் கைவிட்ட போது, மனைவி தனது கணவனை விவாகரத்து செய்ய முடியும் என்று ஸ்மிருதிகள் அங்கீகரித்தபோது, அவன் இறந்தபோது, அவன் **பரிவ்ரிஜா** எடுத்துக்கொண்டபோது, அவள் ஓர் இரண்டாவது கணவனைப் பெறுவதற்கு உரிமையுள்ளவளாயிருந்தாள். எனவே, இதைக் காட்டு வதற்கு பிற்கட்டத்தில், உங்களுடைய சாஸ்திரங்களிலிருந்து சில பகுதிகளை உங்களுக்கு வாசித்துக்காட்டுகிறேன். (ஓர் மதிப்புக்குரிய உறுப்பினர் : ''உங்களுடைய சாஸ்திரங்களா?'') ஆம், ஏனெனில் நான் வேறு சாதியைச் சேர்ந்தவன். இந்த நாட்டில் என்ன ஏற்பட்ட தென்றால், எப்படியோ, துரதிருஷ்டவசமாக, யாருக்கும் தெரியாமல், தன்னுணர்வற்ற வகையில், சாஸ்திரங்களின் வாசகத்தை வழக்கம் (மரபு) காலின்கீழ் போட்டு மிதிப்பதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளது என்பதைக் காட்டுவதற்கு சில பகுதிகளை நான் வாசித்துக் காட்டு கிறேன். எல்லா சாஸ்திரங்களும் சரியான வகைப்பட்ட மண வாழ்க்கை உறவுகளுக்கு ஆதரவாக இருந்துள்ளன. எனவே இந்த அவையில் நான் விண்ணப்பித்துக் கொள்வது என்னவெனில், திருமணச் சட்டம் அல்லது விவாகரத்தில் எந்தப் புதிய கோட்பாடு களும் அறிமுகம் செய்துவைக்கப்பட்டதைப் பொறுத்தமட்டிலும், செய்யப்பட்டது எல்லாம் நேர்மையானதும் அறிவுபூர்வமானது மாகும்; அவை முன்னுதாரணத்தின் - நமது சாஸ்திரங்களின் முன்னுதாரணம் மட்டுமல்ல, உலகம் முழுமையின் அனுபவத்தின் - ஆதரவைப் பெற்றுள்ளன.

சுவீகாரம் (தத்து எடுத்துக்கொள்வதை) பொறுத்தமட்டிலும், இதிலும் சர்ச்சைக்குரிய மூன்று அம்சங்கள் உள்ளன. சுவீகாரம் சம்பந்தமாக, சர்ச்சைக்குரிய ஓர் அம்சம் என்னவெனில், பழைய இந்து சட்டத்தைப்போன்று ஒரு செல்லுபடியாகும் சுவீகாரத்திற்கு, சாதியை இனங்கண்டு கூறுவதை நாம் ஒரு முன்தேவையாக்குவ தில்லை. திருமணம் சம்பந்தமாக நாம் பின்பற்றிய அதே விதியைத் தான் இது சம்பந்தமாகவும் நாம் பின்பற்றி வந்துள்ளோம். மீண்டும், இங்கும், ஒரு **பிராமணர்** ஒரு பிராமணப் பையனை சுவீகாரம் எடுத்துக்

கொள்ள விரும்பினால், அவர் தாராளமாக அதைச் செய்து கொள்ளலாம். ஒரு காயஸ்தர் ஒரு காயஸ்தப் பையனை சுவீகாரம் எடுத்துக் கொள்ளவிரும்பினால், அவ்வாறு செய்வதற்கு அவருக்கு எல்லா உரிமையும் உண்டு. ஆனால், அறிவொளி (பரந்த மனப்பான்மை) பெற்ற ஒரு பிராமணர், தன்னுடைய சொந்த சமூகத்திலல்லாது, ஒரு சூத்திரனை சுவீகாரம் எடுத்துக் கொண்டாலும் அதைச் செய்வதற்கு அவர் அனுமதிக்கப்படுகிறார். எனவே இதில் எத்தகைய திணிப்பும் கிடையாது.

சேத் கோவிந்த தாஸ் *(மத்திய மாகாணங்கள் மற்றும் பேரார்: பொது) : அத்தகைய ஒரு பிராமணரை அறிவொளி பெற்றவர் என்று ஏன் நீங்கள் கருதுகிறீர்கள்?*

மாண்புமிகு டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் : சரி, அதுபற்றி எனக்குத் தெரியாது, என்னுடைய கண்ணோட்டத்தில், அவர் நிச்சயமாக அறிவொளி பெற்றவர்தான். உங்களுடைய கண்ணோட்டத்தில் அவர் மிகவும் மோசமானவராக இருக்கலாம். ஆனால் அது ஒரு கருத்து வேறுபாடேயாகும்.

சுவீகாரம் எடுத்துக் கொள்வதற்கு முன்னால், கணவனை இழந்த மனைவி, செய்த எல்லா சொத்து மாற்றங்களையும் எதிர்ப்பதற்கு சுவீகாரம் எடுத்துக் கொள்ளப்பட்ட மகனுக்கு உள்ள உரிமையைக் கட்டுப்படுத்தும் உரிமை சம்பந்தமாக, இதில் எத்தகைய சர்ச்சைக்கும் இடமிருக்கமுடியும் என்று நான் கருதவில்லை. ஒரு பையன், சுவீகாரம் எடுத்துக் கொள்ளப்பட்டவுடன், சுவீகாரம் எடுத்துக் கொண்ட தந்தை மரணமடைந்த சமயத்திலிருந்தே அந்தத் தந்தையின் மகனாகிறார் என்ற கருத்தை நாம் தொடர்ந்து கொண்டிருக்கவேண்டும் என்பதற்கு எந்தக் காரணமும் இல்லை. இது முற்றிலும் ஒரு கற்பனையேயாகும். இதற்கு எவ்வித மதிப்பும் இல்லை. இது ஒரு கற்பனை என்பது மட்டுமன்றி, இது பெருமளவு வழக்குகளையும், பெருமளவு சிரமங்களையும் ஏற்படுத்தும். எனவே, சொத்தை மாற்றிக் கொடுப்பதும் சுவீகாரமும் ஏக காலத்தில் நிகழ வேண்டும். இந்தக் கட்டத்தில் இது நாம் ஏற்றுக்கொள்ளக்கூடிய பிரேரணை அல்ல என்று எந்த உறுப்பினராவது கருதுவார் என்று நான் நினைக்கவில்லை. (திரு. பி. தாஸ் : ''நாங்கள் அனைவரும் ஏற்றுக்கொள்கிறோம்'').

இவ்வாறே, நான் கூறியது போன்று சுவீகாரம் எடுத்துக் கொள்ளப்பட்ட பையன், தாயைப் பூரணமாக சொத்துக்கு உரிமை

யில்லாதவளாக்கி, அவளை, சுவீகாரம் எடுத்துக்கொள்ளப்பட்ட மகன் விரும்பித் தரக்கூடிய பராமரிப்புத்தொகைக்காகக் காத்திருக்கச் செய்வதற்கும், அவனை முற்றிலும் சார்ந்திருக்கச் செய்வதற்கும் மகனுக்குள்ள உரிமைக்கு ஒரு வரையறை உண்டு. அத்தகைய நிலைமையை எந்தக் காரணத்தைக் கொண்டும் நியாயப்படுத்த முடியும் என்று இந்த அவையின் எந்த உறுப்பினரும் கருதுவார் என்று நான் நினைக்கவில்லை. வைதீக சமூகம் மிகவும் போற்றிப் பேணுகின்ற, சுவீகாரம் எடுத்துக் கொள்ளும் உரிமையை நாம் பாதுகாப்பது சரியானதே என்று கருதுகிறேன். ஆனால், ஐயா, சுவீகாரம் ஏன் இருக்க வேண்டும் என்பதை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. சுவீகாரம் எடுத்துக்கொள்ளும் நம்மில் பெரும் பாலானவர்களின் பெயர்கள் வரலாற்றில் பதிவு செய்யப்படுவ தில்லை. தனிப்பட்ட முறையில் நான் கூட, வரலாற்றில் என் பெயர் பதிவாவதை நிச்சயமாக விரும்பவில்லை, ஏனெனில் என்னுடைய சாதனை ஒன்றுமில்லை. நான் இந்து சமூகத்தின் ஒரு அசாதாரண மான உறுப்பினன். ஆனால் பலருக்கும் வரலாற்றில் இடம் பெறுவ தற்கு சாதனைகள் ஒன்றும் இல்லை. எனவே, ஒரு மகனை சுவீகாரம் எடுத்துக்கொள்ளும் பணியில் அவர்கள் ஏன் இறங்க வேண்டும் என்பதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை - அந்த மகன் ஒரு முட்டாள் பையனாக கல்வி அறிவில்லாதவனாக, எந்தப் பண்பாடும் இல்லாதவனாக இருக்கக்கூடும் - அவனுடைய சாத்தியப் பாடுகள் பற்றித் தெரியாமல், ஓர் அப்பாவிப் பெண்ணுக்கு அவனை வழங்கி, வளர்த்து, ஆளாக்குவதில் என்ன பயன்? அந்தப்பெண் கொண்டுள்ள எல்லா சொத்தையும் அவன் பறித்துக் கொண்டு போகக் கூடும். எனவே என்னுடைய வேண்டுகோள் என்னவெனில், சுவீகாரம் சம்பந்தமாக நீங்கள் உங்களுடைய பழமையான கருத்துக் களைப் போற்றிப் பேணுவதற்கு நிச்சயமாக விரும்பினால், தத்து எடுத்துக் கொள்ளப்பட்ட மகன், தாயின் வாழ்க்கைக்கு ஆதாரமாக உள்ள சொத்தை முற்றாக அவளிடமிருந்து பறித்துக் கொள்ளாம லிருப்பதற்கான ஷரத்தை இதில் சேர்க்க வேண்டும். அந்த எல்லை வரம்பு சர்ச்சைக்குரிய ஒரு விஷயமாக இருக்கும் என்று நான் கருத வில்லை.

வழக்கமான (மரபான) சுவீகாரத்தை ரத்து செய்யும் பிரச்சினை சம்பந்தமாக இரண்டு விஷயங்களை நான் கூறுவதற்கு விரும்பு கிறேன். இந்த அவை ஏற்றுக் கொள்ளக்கூடிய ஒரு பொதுவான வாதம் இருக்கிறது. அது இதுதான்: ஒரு சட்டத் தொகுப்பானது மரபான சட்டத்துடன் முரண்பாடானதாகும். அது ஓர் அடிப்படையான

நிலைபாடு ஆகும். ஒரு சட்டத் தொகுப்பு இருப்பதற்கு நீங்கள் அனுமதித்து, அதேசமயத்தில் வழக்கத்தையும் வளர்வதற்கு அனுமதித்து, வழக்கம் சட்டத் தொகுப்பிற்கு எதிராக வாதாடுவதற்கு அனுமதித்தால் ஒரு சட்டத் தொகுப்பு இருப்பதால் எந்தப் பயனும் இல்லை. ஏனெனில் ஒரு மரபு எப்போதும் சட்டத் தொகுப்பை அரித்துவிடும், சட்டத் தொகுப்பை செல்லுபடியாகாததாக்கிவிடும். **கிரித்திரிம்** சுவீகாரம் **கோதா** சுவீகாரம், **துவைமுஷாயன்** சுவீகாரம் போன்ற மரபான சுவீகாரம் என்ற இந்தக் குறிப்பான பிரச்சினை சம்பந்தமாக என்னுடைய விண்ணப்பம் என்னவெனில், இவை மெய்யாக, சுவீகாரம் அல்லவே அல்ல. பிரிவி கவுன்சில், தனது ஒரு தீர்ப்பில், சுவீகாரம் என்பது ஒரு மதச்சார்பான விஷயம் மட்டுமே என்று திட்டவட்டமாகக் கூறியுள்ளது. சுவீகாரம் எடுத்துக் கொள்ளப் பட்ட மகன் சொத்தைப் பெறுவது ஒரு இரண்டாந்தரமான விஷயமே யாகும். அவன் சொத்தைப் பெறலாம், பெறாமலிருக்கலாம். அவன் சொத்தைப் பெறாவிட்டாலும், அவனுடைய சுவீகாரம், ஒரு மதக் கண்ணோட்டத்திலிருந்து பார்க்கும்போது, செல்லத்தக்கதாகும். எனவே, என்னுடைய விண்ணப்பம் இதுதான்: இந்த மரபான சுவீகாரங்கள் எல்லாம், இந்த விவகாரத்தில் ஈடுபடும் இரண்டு குடும்பங்களுக்குள் சொத்தை வைத்துக் கொள்வதற்கான ஏற்பாடு களேத் தவிர வேறல்ல. என்னுடைய மதிப்பீட்டின்படி, நாம் அரசியல் சாசனத்தை ஏற்கனவே நிறைவேற்றியுள்ளதாலும், வழி காட்டும் கோட்பாடுகளில் சொத்துக்கள் ஒரு சிலரிடத்தில் குவிந்து போவதைத் தடுப்பதற்கு அரசு நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும் என்ற ஒரு விதியை அதில் சேர்த்திருப்பதாலும் **துவை முஷாயன்** போன்ற ஏற்பாடுகளின் மூலம் இருதரப்பினர், சொத்தைப் பகிர்ந்து கொள்வதற்கு ஒப்புக்கொண்டு, அதைத் தங்களிடமே வைத்துக் கொள்ளக் கூடாது. மேலும், உண்மையான சுவீகாரத்தை செய்ய விரும்பும் தரப்புகள், சட்டத்தினால் அனுமதிக்கப்பட்டுள்ள தாத்தகா சுவீகாரம் சம்பந்தமான விதிமுறைகளுக்கு உட்படாம லிருப்பதற்கு எவ்வித நியாயமுமில்லை.

திரு. துணை சபாநாயகர் : இப்பொழுது ஒரு மணி ஆகியுள் ளது. மாண்புமிகு அமைச்சர் மதிய உணவிற்குப் பிறகு தம்முடைய உரையைத் தொடரலாம்.

(அதன் பின்னர் பிற்பகல் 2.30 மணி வரையில் மதிய உண விற்காகப் பேரவை ஒத்திவைக்கப்பட்டது.)

மதிய உணவிற்குப் பிறகு பிற்பகல் 2.30 மணிக்க பேரவை மீண்டும் கூடியது. திரு. துணை சபாநாயகர், (திரு. எம். அனந்தசயனம் அய்யங்கார்) தலைமை தாங்கினார்.

மாண்புமிகு டாக்டர் பி.ஆர். அம்பேத்கர்: கூட்டுடைமை சட்டம் சம்பந்தமான சர்ச்சைக்குரிய அம்சங்களை எடுத்துக்கொள்ள நான் விரும்பவில்லை. கூட்டுடைமையின் மரபுரிமையில் இணையுரிமை பெறுவதை ரத்து செய்வதற்கு இந்த மசோதா ஏன் விரும்புகிறது? **மிதாக்ஷரா** சட்டத்தினால் அது வழங்கப்பட்டுள்ளது. இப்பொழுது, ஐயா, நான் நன்கு சிந்தித்தபின், இந்த விஷயங்களை முறையாக விளக்குவதற்கு என்னால் முடியும். இந்தப் பிரச்சினையை மூன்று வெவ்வேறு நிலைகளிலிருந்து பரிசீலனை செய்யப்பட வேண்டிய அவசியமுள்ளது என்று கருதுகிறேன். ஒன்று சொத்தின் எவ்வளவு பாகம் 'கூட்டுடைமை, சொத்து' என்று அழைக்கப்படுவதன் எல்லை வரம்புக்குள் உட்படுத்தப்படுகிறது. கூட்டுடைமைச் சொத்து என்று அழைக்கப்படுவதில் அடங்கியுள்ள சொத்தின் அளவு, இந்தக் காலத்தில் ஒரு மனிதன் கொண்டிருக்கும் சொத்தின் ஒரு மிகப் பெரிய பாகமாக இருந்தால், இந்தப் பிரச்சினை சம்பந்தமாக ஆழ்ந்த கவனம் செலுத்த வேண்டுமென்பதில் சிறிதும் ஐயமில்லை. எனவே நாம் பரிசீலனை செய்யவேண்டிய பிரச்சினையின் முதல் அம்சம் இதுவே.

'கூட்டுடைமைச் சொத்து' என்றழைக்கப்படுவதை அப்படியே நீடித்துவைக்க வேண்டும் என்பது சம்பந்தமாக நாம் பரிசீலனை செய்ய வேண்டிய இரண்டாவது அம்சம் என்னவெனில், 'கூட்டுடைமைச்' சொத்தில் உரிமை உள்ள எவரும் சொத்தை மாற்றிக் கொடுப்பதற்கான உரிமையைத் தனிப்பட்ட முறையில் பெற்றிருக்கிறாரா என்பதாகும். மூன்றாவதாக, கூட்டுடைமைச் சொத்தைப் பிரிப்பதற்கு எந்தக் 'கூட்டுடைமையாளராவது' உரிமை பெற்றிருக்கிறாரா என்பதாகும். 'கூட்டுடைமைச்' சொத்து என்றழைக்கப்படும் பிரிவில் அடங்கியுள்ள சொத்து, சொத்தின் ஒரு சிறிய பாகமாக இருந்தால், வேறு விதமான பிரச்சினைகள் எழும் என்பது வெளிப்படை. இதுபோன்றே, எந்த ஒரு 'கூட்டுரிமையாள'ராவது தற்போதிருந்துவரும் இந்து சட்டத்தின்கீழ் சொத்தில் தனது பங்கை மாற்றிக் கொடுக்கும் உரிமையை ஏற்கனவே பெற்றிருந்தால், இந்தச் சட்டம் அல்லது இந்த மசோதா 'கூட்டுடைமைச்' சொத்தை ரத்து செய்கிறதா என்ற அடிப்படையான பிரச்சினையும் எழும் என்பது தெளிவு.

இதுபோன்றே, தற்போதுள்ள இந்து சட்டத்தின்படி, ஒரு 'கூட்டுரிமையாளர்' சொத்தைச் சிதைப்பதற்கு உள்ளார்ந்த உரிமை பெற்றிருந்தால், இது சம்பந்தமாக என்னுடைய விண்ணப்பம் என்னவெனில், 'கூட்டுடைமையை' இந்த மசோதா உடைக்கிறது என்ற பிரச்சினை, இந்த அவையின் பெரும்பாலான உறுப்பினர்களும் வெளியிலுள்ள மக்களும் கருதியதற்கு மாறாக மிகவும் குறைவான முக்கியத்துவமுடையதாகிறது.

எனவே, முதலாவது பிரச்சினையை இப்பொழுது எடுத்துக் கொள்கிறேன்; ஒரு 'கூட்டுரிமையாளர்' - 'கூட்டுடைமையில்' அவரும் ஓர் உறுப்பினர் என்று இருந்தபோதிலும் கூட்டுடைமை அல்லாத சொத்தில் எந்த அளவுக்கு வைத்துக் கொள்ளலாம். இந்தப் பிரச்சினையில் கவனம் செலுத்தி, இந்து சட்டத்தின் கீழ் நிலைமை என்ன என்பதை அறிந்துள்ள என்னுடைய நண்பர்கள் ஒரு 'கூட்டுரிமையாளராகத்' தொடரும்போதே, ஒருவர் தனிச் சொத்தைக் கொண்டிருப்பதில் எத்தகைய தகுதி இழப்பும் இல்லை என்பதை அறிவார்கள். ஒரு 'கூட்டுரிமையாளர்' இருவகைப்பட்ட சொத்துக்களைக் கொண்டிருப்பதற்கு - கூட்டுரிமையாளருக்குச் சொந்தமான சொத்துக்கள் மற்றும் கூட்டுரிமையாளருக்குச் சொந்தமில்லாத, ஆனால் தனக்குச் சொந்தமான, அதாவது, கூட்டுடைமையில் மறு பங்காளிக்குப்பின் எஞ்சியிருப்பவர்க்குரிய முழு உடைமை உரிமையில் கிடைக்கும் சொத்து அல்லாததையும் கொண்டிருக்கும் ஆற்றல் உடையவராக இருக்கக்கூடும்.

ஒரு 'கூட்டுரிமையாளர்' அவர் ஒரு கூட்டுரிமையாளராக இருந்தபோதும் சொத்தின் அளவு மற்றும் தன்மை குறித்து அவைக்கு ஒரு கருத்தை நான் கொடுக்க விரும்புகிறேன். இந்து சட்டம் சம்பந்தமாகத் தற்போது இருந்து வரும் புத்தகங்களிலிருந்து, ஒரு கூட்டுரிமையாளர் அவர் ஒரு 'கூட்டுரிமையாளராக' இருப்பதையும் பொருட்படுத்தாது, கீழ்வரும் வகைப்பட்ட சொத்துக்களைக் கொண்டிருக்க முடியும்: முதலாவதாக, ஓர் இந்து தனது தகப்பனார், பாட்டனார், மற்றும் கொள்ளுப் பாட்டனார் அல்லாத ஒரு நபரிடமிருந்து வாரிசாகப் பெறும் சொத்து. தனது தகப்பனாரல்லாத, பாட்டனார் அல்லது கொள்ளுப்பாட்டனார் அல்லாத ஒரு நபரிடமிருந்து ஓர் இந்து சொத்தைப்பெற்றால், அவர் கையிலுள்ள அந்த சொத்து, தனிச் சொத்தாகும், அது 'கூட்டுரிமையாளரு'க்குச் சொந்தமானதல்ல. இரண்டாவதாக, தனது தாய்வழிப் பாட்டனாரிடமிருந்து வாரிசாகப் பெற்ற சொத்து; மூன்றாவதாக, தனது தகப்பனாரால்

தனக்குப் பரிசாக வழங்கப்பட்ட முன்னோர்களின் அசையும் சொத்துக் கள். நான்காவதாக, 'கூட்டுரிமை'யின் உறுப்பினராகிய ஒரு நபருக்கு அரசினால் வழங்கப்பட்ட சொத்து; அது அவருடைய தனிப்பட்ட சொத்தாகும், கூட்டுரிமைச் சொத்து அல்ல. ஐந்தாவதாக, குடும்பத் தினால் இழக்கப்பட்ட முன்னோர்களின் சொத்து, குடும்பச் சொத்தின் துணையின்றி மீட்டெடுக்கப்பட்ட சொத்து. அதுவும், முதலில் கூட் டுரிமைச் சொத்தாக இருந்தபோதிலும், பிறகு அவருடைய தனிச் சொத்து ஆகிறது. ஆறாவதாக, தனிச் சொத்திலிருந்து கிடைக்கும் வருமானம், அத்தகைய சொத்தின் வருமானத்திலிருந்து வாங்கப் பட்ட பொருள்கள். அவையும் தனிப்பட்ட சொத்தாகும். ஏழாவதாக, பாகப்பிரிவினையின் மூலம் ஒரு கூட்டுரிமையாளருக்குக் கிடைக்கும் பங்கு (அவருக்கு ஆண் குழந்தை இல்லாத போது). எட்டாவதாக, சுவீகாரம் எடுத்துக் கொள்ளக்கூடிய அதிகாரத்துடன் கூடிய விதவை இல்லாத போது, எஞ்சியுள்ள ஒரே 'கூட்டுரிமையாளர்' கொண்டுள்ள சொத்து. ஒன்பதாவதாக, ஒரு கூட்டுக் குடும்ப கூட்டுரிமையில் ஓர் உறுப்பினரின் தனிப்பட்ட வருமானம், மற்றும் பத்தாவதாக, கல்வியின் மூலமான ஆதாயங்கள். இந்தப் பத்து இனங்களில் உட்படுத்தப் பட்டுள்ள இவ்வளவு பெரும் அளவான சொத்து, இன்று, மிதாக்ஷரா சட்டத்தின் கீழ், ஒரு 'கூட்டுரிமையாளரின்' தனிச் சொத்தாகும். அது கூட்டுரிமையாளரின் சொத்து ஆவதில்லை.

ஒரு தெளிவான உதாரணத்தின் மூலம் இதை விளக்குகிறேன். நமது செயலகத்தில் நூற்றுக் கணக்கான எழுத்தாளர்கள் இருக்கிறார் கள்; சிலர் குறைவான சம்பளம் வாங்குகிறார்கள். சிலர், கேபினட் அமைச்சர்களின் சம்பளங்களைக் காட்டிலும் கூடுதலாக, பெருமளவு சம்பளம் - ரூ. 4000 வாங்குகிறார்கள். (மதிப்புக்குரிய உறுப்பினர்கள்: ''எழுத்தர்கள்?'' அவர்கள் எழுத்தர்களா?'') நான் அதிகாரிகளை அர்த்தப்படுத்துகிறேன். ஓர் அர்த்தத்தில், அவர்கள் மேல்தட்டு எழுத்தர் களாவார்.

இந்த அவையின் முன் நான் சமர்ப்பிக்க விரும்புகிற விஷயம் இதுதான்: கல்வி கற்றதன் மூலமான ஆதாயங்கள் என்ற வகை யிலான இவ்வளவு பெரிய வருமானம் சில தனி நபர்கள் விஷயத் தில் ரூ. 4000ற்கு வருகிறது. ஒரு கூட்டுக் குடும்பம், அந்த சொல்லின் உண்மையான பொருளில் அவ்வாறிருந்தால், அந்தத் தொகை அந்தக் குடும்பத்தின் கூட்டுப்பராமரிப்புக்காக, அந்தக் கூட்டுக்குடும்பத் திற்கு உரியதாக வேண்டும். ஆனால் என்ன ஏற்படுகிறது? ஒரு சில ஆண்டுகளுக்கு முன்னர்தான் நிறைவேற்றப்பட்ட, கல்வியின்

பயனாகப் பெற்ற ஆதாயங்கள் சட்டத்தின் கீழ், இதே பேரவையே, உறுப்பினர்களை நான் குறிப்பிடவில்லை - கல்வியின் பயனாகப் பெற்ற ஆதாயங்கள் - இவை ஒரு கூட்டுக்குடும்பத்தின் வருமானத்தின் பிரதான பாகமாக அமைகிறது, மற்றும் குடும்பத்தின் வருமானத்திலிருந்துதான் அவருக்குக் கொடுக்கப்பட்ட அந்தக் கல்வியின் பயனாக அந்த உறுப்பினர் பெற்ற அந்த வருமானம், அவருடைய சொந்த மற்றும் தனிப்பட்ட வருமானம் என்று கூறியது, எனவே இந்த அவையின் முன்னே நான் தெரிவித்துக் கொள்வது இதுதான்: நான் குறிப்பிட்டதுபோன்று அவ்வளவு பெரிய வருமானம் - இந்த பத்து வெவ்வேறு இனங்களில் உட்படுத்தப்பட்டது - **மிதாக்ஷரா** மூல சட்டங்களைத் திருத்தப்பட்டதன் மூலம் தனிப்பட்ட சொத்தாக்கப் பட்டதற்குப்பின், 'கூட்டுரிமை'ச் சொத்தாக அமைவதற்கு மீதி சொத்து எவ்வளவு பாக்கியிருக்கும்? என்னுடைய விண்ணப்பம் என்னவெனில், 'கூட்டுரிமை'க்குள் அமைவதற்கு, மெய்யாகவே, மிக, மிகச் சொற்பமான அளவு சொத்தே மீதமிருக்கிறது. மற்றையப் பிரச்சினையை எடுத்துக் கொண்டு பார்க்கலாம். 'கூட்டுரிமை' யானது, மிகவும் குறுகியது, வரையறைக்குட்பட்டது. அது ஒரு கூட்டுக் குடும்பம் போன்றதல்ல, அது முற்றிலும் வேறு விஷயம் என்பதை உறுப்பினர்கள் புரிந்து கொள்வார்கள் என்று நம்புகிறேன் - அந்த முறையானது, இந்துக்கள், சொத்தைப் பாதுகாத்துக் கொள்வதற்கு, நீடித்துவைத்துக் கொள்வதற்கு வகை செய்கிறது. அதைப் பிரிக்க முடியாது, குடும்பத்தின் எந்த உறுப்பினரும் பணத்தை வீண்விரயம் செய்ய முடியாது, இந்த அவைக்கு முன்னால் நான் வைக்க விரும்புகிற கேள்வி இதுதான்: தற்போதுள்ள **மிதாக்ஷரா** சட்டத்தின்கீழ், இந்த சொத்தை மாற்றிக் கொடுக்கப்பட முடியாது, வீண் விரயம் செய்ய முடியாது என்பது உண்மையா? இதற்கான விடை முற்றிலும் எதிர்மறையானதே. உங்களுக்கு இரண்டொரு உதாரணங்களைக் கொடுக்க விரும்புகிறேன். தகப்பனார் விஷயத்தை எடுத்துக் கொள் கிறேன். தகப்பனார், கூட்டுச் சொத்தை, முந்திய கடனுக்காக மாற்றிக் கொடுக்க முடியும். தகப்பனார் செய்ய வேண்டியதெல்லாம், முதலாவதாக, ஒரு கடனை உருவாக்கவேண்டும். உதாரணமாக ஒரு சொந்த பிராமிசரி பத்திரத்தின்பேரில், ஓர் ஆயிரம் அல்லது இரண் டாயிரம் ரூபாய்க்கான கடனை ஏற்படுத்த வேண்டும். அதைத் தொடர்ந்து, ஆறு மாதங்களுக்குப் பிறகு, 'கூட்டுரிமை'ச் சொத்து முழுவதையும் விற்பதற்கு அவர் உரிமை பெறுகிறார். முந்திய கடனைச் செலுத்துவதற்கு அது அவசியமானால், அவர் அந்த உரிமை பெறுகிறார். இப்பொழுது இந்த அவைக்கு நான் செய்து கொள்ளும் விண்ணப்பம் இதுதான்: முற்றிலும் முந்திய மற்றும்

சொந்த (தனிப்பட்ட) கடன்களை செலுத்துவதற்காகச் சொத்தை விற்பதற்கு ஒரு தகப்பனாருக்கு இவ்வளவு அதிகமான அதிகாரத்தை வழங்குவதா? சொத்தை மாற்றிக் கொடுப்பதைப் பொறுத்தமட்டிலும் தகப்பானருக்கும் சொத்தை நிர்வகிப்பவருக்கும் (மேலாளர்) இடையில் மிதாக்ஷரா சட்டம் வேறுபாட்டைச் செய்கிறது என்பதை இந்த அவை கவனத்தில் கொள்ள வேண்டும் என்று நான் விரும்புகிறேன். ஒரு மேலாளர், சொத்தை மாற்றிக் கொடுப்பதற்கு ஒரு குடும்ப அவசியம் இருக்கிறது என்று நிரூபணம் செய்யப்பட்டாலொழிய அவ்வாறு நிரூபணம் செய்கின்ற வரையிலும், 'கூட்டுரிமைக்குச்' சொந்தமான ஒரு சொத்தை மாற்றிக் கொடுக்க முடியாது என்பது மெய்யே. ஆனால் ஒரு தகப்பனாரைப் பொறுத்தமட்டிலும், அத்தகைய கடப்பாடு ஒன்றும் கிடையாது. ஒரு தகப்பனார், தனக்கு தனிப்பட்ட முறையில் ஒரு கடனை உருவாக்கிக்கொண்டால், அவர் குடும்பத்தின் விவகாரங்களுக்கு ஏற்பட்டதல்லாத, முற்றிலும் சொந்த (தனிப்பட்ட) கடனுக்காக, அந்த சொத்தை மாற்றிக் கொடுப்பதற்கு அவர் உரிமை பெறுகிறார். மிதாக்ஷரா சட்டத்தின் கீழ், தகப்பனார் சொத்தை மாற்றிக் கொடுப்பதற்கு கொண்டுள்ள உரிமையின் மீது சுமத்தப்படும் ஒரே வரம்பு, அந்தக் கடன் கீழ்த்தரமானதாக, இழிவான நோக்கத்துடன் கூடியதாக இருக்கக்கூடாது. அது ஓர் ஒழுக்கமற்ற காரியத்திற்காக அல்லவென்றால், தகப்பானர் அந்த 'கூட்டுரிமை'ச் சொத்து முழுவதையும் மாற்றிக் கொடுக்க (விற்பதற்கு) முடியும். இதற்கு வரம்பே இல்லை.

இதுபோன்றே, மகனின் பிரச்சினையை எடுத்துக் கொள்வோம். இதுவும் மிதாக்ஷரா சட்டத்தின் கீழ் வருகிறது. அவன், தான் விரும்பும் எந்த சமயத்திலும் குடும்பச் சொத்தைப் பிரித்துக் கொடுக்கும்படிக் கேட்பதற்கு அவனுக்கு உரிமையுண்டு. சொத்தை மாற்றிக் கொடுப்பதற்கு எந்தக் 'கூட்டுரிமையாளரு'க்கும் உரிமையில்லை, சொத்து தொடர்ந்து 'கூட்டுரிமைச்' சொத்தாக இருக்க வேண்டும் என்று இந்து சட்டத்தின் விதி இருக்குமானால், கூட்டுரிமைச் சொத்தை அப்படியே கட்டிக்காக்க வேண்டும் என்ற வாதத்தை நான் நன்கு புரிந்து கொண்டிருக்க முடியும். ஆனால் நிலைமை அதுவல்ல. சொத்தைப் பிரிப்பது என்பதனுடைய வேர், கூட்டுரிமைச் சொத்தைக் கலைக்க வேண்டும் என்பதனுடைய வேர். கூட்டுரிமைக் கோட்பாட்டிலேயே உள்ளது, ஏனெனில் கூட்டுரிமைச் சட்டம்தான் ஆதிக்க உரிமையை, சொத்தைப் பிரிக்க வேண்டுமென்று கோருவதற்கும் சமுதாயம் முழுவதையும் சீர்குலைப்பதற்குமான உரிமையை பிறப்பிலிருந்தே வழங்குகிறது.

மூன்றாவதாக, ஒரு மகன் தனது சொத்தை மாற்றிக் கொடுக்காவிட்டாலும், அவன் தன் சொந்த நோக்கங்களுக்காக, அந்த சொத்தின் மீது ஒரு கடனை உருவாக்கமுடியும். மேலும், மிதாக்ஷரா சட்டத்தின் கீழ், முன்பணமாகக் கடன் கொடுத்தவர் அந்தக் கடனைத் திரும்பப் பெறுவதற்காக, 'கூட்டுரிமை'ச் சொத்தை பாகப்பிரிவினை செய்ய வேண்டுமென்று வழக்குத் தொடுப்பதற்கு அவருக்கு முழு உரிமையுண்டு. எனவே, ஓர் அந்நியர், மிதாக்ஷரா சட்டத்தின் கீழ் 'கூட்டுரிமை'ச் சொத்தைப் பிரிப்பதற்கு உரிமையுள்ளவராகிறார். இந்த விஷயத்தைப்பற்றி கவலையடையும் என்னுடைய மதிப்புக்குரிய நண்பர்களை நான் இவ்வாறு கேட்க விரும்புகிறேன்: நில புலன்களின், சொத்துக்களின் ஒரு பெரும்பகுதி, 'கூட்டுரிமை' சொத்துக்கு வெளியில் இருக்கும் நிலைமையில், மற்றும் கூட்டுரிமைச் சொத்தைப் பொறுத்த மட்டிலும், எத்தகைய வரம்புமின்றி தகப்பனார் - ஒழுக்க மற்ற கடன் மட்டும் விதிவிலக்காக இருக்கும் - அதை மாற்றிக் கொடுப்பதற்கு உரிமையுடையவர் : மகன், தான் விரும்பும் எந்த சமயத்திலும் சொத்தைப் பிரிப்பதற்கு உரிமையுள்ளவன், அந்த சொத்தின் மீது ஒரு கடனை உருவாக்குவதற்கு மகனுக்கு உரிமை உண்டு, இது சொத்தை பாகப்பிரிவினை செய்வதற்கு வழக்குப் போடுவதற்குக் கடன் கொடுத்தவருக்கு வகை செய்கிறது - இது ஓர் உறுதியான அமைப்பு என்று, ஓட்டை உடைசல் இல்லாதது, நேர்மையானது என்று கூற முடியுமா? என்னுடைய விண்ணப்பம் இதுதான்: தற்போதிருக்கும் நிலைமையில் 'கூட்டுரிமைச்' சொத்து சம்பந்தமான சட்டம், அதனுள் சீர்குலைவுக் கூறுகளைக் கொண்டுள்ளது. எனவே, பங்கு தனியாக வைக்கப்படவேண்டுமென்று சொல்வதன் மூலம் மசோதா மிகவும் தீவிரமானது எதையும் செய்யவில்லை. இன்றுள்ள நிலைமையில் ஒவ்வொருவரும் தனியாக வாழ்வதற்கு விரும்புவதை நாம் அனைவரும் அறிவோம். ஒரு தகப்பனார் இறந்தவுடனே, இன்றுள்ளபடி நிலவரங்கள் சட்டப்படி அங்கீகரிக்கப்பட வேண்டும் என்று மகன்கள் (உரிமை) கோருகிறார்கள். மசோதாவின் இந்தப் பாகத்தில் தீவிரமானது எதுவும் இல்லை.

ஆனால், ஒரு விஷயத்தை நான் கூறவேண்டும் - இது பொதுவாக உணரப்படுவதில்லை என்று நினைக்கிறேன். 'கூட்டுரிமை'க்கும் கூட்டுக் குடும்பத்திற்கும் இடையில் ஒரு வேறுபாட்டைக் காண வேண்டும் என்று கூறி நான் தொடங்கினேன். இந்த மசோதா 'கூட்டுரிமையை' அகற்றும் அதேபொழுதில் கூட்டுக் குடும்பத்தை நிலைநிறுத்துகிறது. கூட்டுக் குடும்பம் பராமரிக்கப்படுவதை அது தடுப்பதில்லை. ஒரே ஒரு விஷயம் என்னவெனில், மிதாக்ஷரா

சட்டத்தில் கூட்டுக் குடும்பமானது, தாயபாகா சட்டத்தின்கீழ் கூட்டுக் குடும்பம் எவ்வாறு கருதப்படுகிறதோ, அதே அடிப்படையிலும், அதே தன்மையிலுமே கருதப்படுகிறது. மிதாக்ஷரா சட்டம் வங்காளத்தில் அமலில் இல்லாததால், அங்கு கூட்டுக் குடும்பம் இல்லையென்ற முடிவுக்கு வந்து விடக்கூடாது. கூட்டுக் குடும்பம் இருக்கவே செய்கிறது. ஒரே ஒரு வேறுபாடு என்னவெனில், கூட்டுக் குடும்பத்தின் உறுப்பினர்கள், கூட்டு நிலச் சொத்துரிமையாளர்கள் என்ற முறையில் தமது உரிமைகளைக் கொண்டிருப்பதற்கு பதிலாக, அவற்றை பொது நிலையிலான உரிமையாளர்களாக இருப்பார்கள். மிதாக்ஷராவில் தற்போதுள்ள சட்டத்திற்கும் மிதாக்ஷராவில் வருங்கால சட்டத்திற்கும் இடையிலுள்ள ஒரே வேறுபாடு இது மட்டுமேயாகும்.

இனி, பெண்களின் சொத்துரிமைப் பிரச்சினைக்கு வருகிறேன். இந்த விஷயத்தின் நுட்பங்களை (சிக்கல்களை) இந்த அவையின் எத்தனை உறுப்பினர்கள் அறிந்துள்ளனர் என்பது எனக்குத் தெரியாது. இந்த விஷயத்தை என்னால் ஆய்வு செய்ய முடிந்தவரையில், பெண்களின் சொத்துரிமைப் பிரச்சினையைப் போன்று இவ்வளவு சிக்கலான, இவ்வளவு திருக்குமறுக்கான (மறைபுதிரான) பிரச்சினை வேறு எதுவும் இந்து சட்டத்தில் இருப்பதாக நானறியேன் (ஒரு மதிப்புக்குரிய உறுப்பினர்: ''பெண்ணைப் போன்றே'') : பெண்ணைப் போன்றே **சீதனம்** என்றால் என்ன என்ற கேள்வியை நீங்கள் கேட்டால், அந்தக் கேள்விக்கு பதிலளிக்குமுன், நீங்கள் வேறொரு கேள்வியைக் கேட்டு, அதற்கு விடை காண வேண்டும். 'அவர் ஒரு கன்னிப்பெண்ணா' அல்லது 'அவர் திருமணமான பெண்ணா' என்று நீங்கள் முதலில் கேட்க வேண்டும். ஏனெனில், எந்தச் சொத்து **சீதனம்**, எந்தச் சொத்து **சீதனமல்ல** என்பது பெண்ணின் தகுதியைப் பொறுத்துள்ளது. அவள் ஒரு கன்னிப் பெண்ணாக இருக்கும்பொழுது பெற்றிருந்தால் அது சீதனச் சொத்து ஆகும். தனது திருமணத்திற்குப் பிறகு அவள் அதைப் பெற்றிருந்தால், அது **சீதனச்** சொத்து ஆகாது. எனவே, இதைத் தொடர்ந்து, **சீதனம்** பெறுவதற்கான வாரிசுரிமை என்ன என்ற கேள்வியை நீங்கள் கேட்டால், **சீதனம்** ஒரு கன்னிப் பெண்ணுக்குச் சேர்ந்ததா அல்லது திருமணமான பெண்ணுக்குச் சேர்ந்ததா என்ற கேள்வியை மீண்டும் நீங்கள் கேட்க வேண்டும். திருமணமான பெண்ணின் சொத்துக்கு வாரிசுரிமைப் பிரச்சினைக்கு நீங்கள் வரும்போது, அவள் வங்காளப் பிரிவைச் சேர்ந்தவளா, அல்லது மிதாக்ஷரா பிரிவைச் சேர்ந்தவளா என்று மீண்டும் நீங்கள் கேட்க வேண்டும். அவள் மிதாக்ஷரா பிரிவைச் சேர்ந்தவளா என்ற கேள்வியை

நீங்கள் கேட்டால், ஒரு திட்டவட்டமான பதிலை நீங்கள் ஒருபோதும் பெற முடியாது. இதற்கு நீங்கள், மேலும் ஆய்வுசெய்து, அந்தப் பெண் மிதிலா பிரிவைச் சேர்ந்தவளா, பனாரஸ் (காசி) பிரிவைச் சேர்ந்தவளா, அல்லது வேறு ஏதாவது பிரிவைச் சேர்ந்தவளா என்று நீங்கள் மேலும் கேட்கவேண்டும், இது மிக மிகச் சிக்கலான விஷயம் ஆகும். அதே சமயத்தில், மதிப்புக்குரிய உறுப்பினர்கள் இரண்டு விஷயங்களை மனதில் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஒரு விஷயம்: பெண்களின் சொத்துடைமையைப் பொறுத்த மட்டிலும், பொதுவாகப் பார்க்கும் போது, அது இரண்டு வகையானதாகும்: ஒரு வகை, அவளுடைய **சீதனம்** என்றழைக்கப் படுகிறது; மற்றது கணவனை இழந்தவரின் (விதவையின்) சொத்து ஆகும். பிந்திய சொத்தானது, தனது குடும்பத்தின் ஓர் ஆண் உறுப் பினரிடமிருந்து அவள் வாரிசுரிமையாகப் பெறுவதாகும்; தற்போ திருந்து வரும் சட்டத்தின்படி, தன் வாழ்நாளின்போது மட்டும் அவள் சொந்தமாகக் கொண்டுள்ள சொத்து. அதன் பின்னர், ஆண் வாரிசுக்கு (உரிமை மீள்வரவாளருக்கு) சொந்தமானதாகிறது. இதுதான் நிலைமை.

எனவே, பெண்களின் சொத்துடைமையைப் பொறுத்தமட் டிலும், இரண்டு வெவ்வேறு வகைப்பட்ட வாரிசுரிமையும் இரண்டு வெவ்வேறு வகைப்பட்ட சொத்துக்களும் நம்மிடையே உள்ளன - சீதனச் சொத்து, விதவையின் சொத்து. சீதனச் சொத்தின் வாரிசு களும், ஓர் ஆண் உறுப்பினரிடமிருந்து அவள் வாரிசுரிமையாகப் பெறும் சொத்தின் வாரிசுகளும் வெவ்வேறானவர்கள். எனவே, இந்து சட்டத்தின் இந்தக் குறிப்பிட்ட பிரிவை சட்டத் தொகுப்பில் சேர்க்கும்போது, நாம் கவனிக்க வேண்டிய விஷயம் இதுதான்: தற்போதிருந்து வருவதைப் போல், சீதனச் சொத்து, விதவையின் சொத்து என்ற இரு பிரதான பிரிவுகளை நாம் அப்படியே பரா மரிக்கப் போகிறோமா? இரண்டாவதாக, இரண்டு வகைப்பட்ட வாரிசுரிமையை நாம் தொடர்ந்து பராமரிக்கப் போகிறோமா? சீதனச் சொத்துக்கு ஒருவகைப்பட்ட வாரிசுரிமை, விதவையின் சொத்துக்கு மற்றொரு வகைப்பட்ட வாரிசுரிமை? இந்த சட்டத்தை சட்டத்தொகுப்பில் சேர்ப்பதற்குத் தொடங்கும்போது, எழக்கூடிய இரு பிரதான கேள்விகள் இவைதான். சட்டத் தொகுப்பில் சேர்ப் பதைப் பொறுத்தமட்டிலும், தற்போதுள்ள குழப்பம் நீடிப்பதற்கு நாம் அனுமதித்தால், இதனுடைய நோக்கம் தோல்வியடையும் என்ற முடிவுக்குக் குழு வந்தது. ஒன்று முழுஉரிமையுடன் கூடிய சொத்தைக் கொண்டிருப்பதற்கு ஒரு பெண் தகுதியுடையவளல்ல

என்று நாம் முடிவு செய்யவேண்டும்; அல்லது ஒரு பெண் முழு உரிமை பெற்ற சொத்தைக் கொண்டிருக்க வேண்டும் என்று முடிவு செய்யவேண்டும். ஒரு பெண்ணுக்கு வாரிசுரிமை எப்படி என்பதையும் நாம் முடிவு செய்ய வேண்டும். அவை ஒரே சீராக இருக்க வேண்டுமா அல்லது வெவ்வேறாக இருக்க வேண்டுமா? சொத்துக்கான உரிமையைப் பொறுத்தமட்டிலும், அது ஒரே சீரானதாக இருக்க வேண்டும், அந்த ஒரே சீரான தன்மை பெண்ணுக்கு முழுச் சொத்துரிமை உண்டு என்பதை அங்கீகரிக்க வேண்டும் என்று குழு முடிவு செய்தது.

பெண்கள் முழு (தனி) உரிமையுடன் கூடிய சொத்தைப் பெறுவதற்கு எதிராக எப்போதும் கூறப்படும் வாதத்தை நான் பெருமளவு அறிவேன். பெண்கள் பிறவியிலேயே கூர்மதியற்றவர்கள் என்று கூறப்படுகிறது; அவர்கள் எப்போதும் பலவகைப்பட்ட மக்களின் செல்வாக்குக்கு ஆட்படுகிறவர்கள், எனவே, உலகில் பெண்களை பலவகைப்பட்ட தந்திரமான மனிதர்களின் (ஆண்களின்) செல்வாக்குகளுக்கு இரையாகும்படிவிடுவது மிகவும் அபாயகரமானதாகும்; அவர்கள், சொத்தைப் பைசல் செய்வதற்கு ஏதாவது ஒரு வழியில் பெண்களை ஆட்படச் செய்யக்கூடும்; இது அவர்களுக்கும், அவர்கள் எந்தக் குடும்பத்திலிருந்து வாரிசுரிமையாக சொத்தைப் பெற்றார்களோ அந்தக் குடும்பத்திற்கும் கேடு விளைவிப்பதாயிருக்கும் என்றும் கூறப்படுகிறது. இது சம்பந்தமாகக் குழுவினுடைய பார்வை (அல்லது கருத்து) மிகவும் எளிமையான ஒன்றேயாகும். சில விஷயங்களில் அல்லது சீதனச் சொத்து என்றழைக்கப்படும் சிலவகைப்பட்ட சொத்துக்கள் விஷயத்தில், பெண்களுக்கு முழு உரிமை வழங்குவதற்கு ஸ்மிருதிகள் தயாராக உள்ளன. தனது சீதனச் சொத்தின் மீது பெண்ணுக்கு முழு உரிமை உண்டு என்பதைப் பற்றி எத்தகைய ஐயப்பாடும் இல்லை. தான் விரும்பும் எந்த முறையிலும் அந்தச் சொத்தை அவள் செலவழிக்கலாம். அவைக்கு என்னுடைய விண்ணப்பம் இதுதான்: தன்னுடைய சீதனச் சொத்தைச் தான் விரும்புகிற சிறந்த முறையில் செலவிடுவதற்கு ஒரு பெண்ணை நம்புகிறோமென்றால் - மிதாக்ஷராவின் இந்த விதியை அகற்றுவதற்கு யாரும் ஒருபோதும் எந்த வாதத்தையும் எழுப்பவில்லை. சொத்தின் மற்றைய பாகத்தை, அதாவது, விதவையின் சொத்தை (அவள் வாரிசுரிமையாகப் பெற்றதை) அவளுடைய தனி முதல் சொத்தாக்கக் கூடாது என்று கூறுபவர்கள், தங்களுடைய வாதத்தை மெய்ப்படுத்துவதற்கான சான்றை அளித்தாக வேண்டும். பெண்கள், தாங்கள் கொண்டுள்ள சொத்தின் ஒரு குறிப்பிட்ட பாகத்தை (தம்

விருப்பப்படி) செலவழிப்பதற்குத் தகுதியுடையவர்களாக இருக்கும் அதே சமயத்தில், குறிப்பிட்ட வேறொரு பகுதியை செலவழிப்ப தற்கு அவர்களுக்குத் தகுதியில்லை என்று எதிர்ப்பாளர்கள் நிரூபணம் செய்தாக வேண்டும். இவ்விஷயத்தை மிகவும் கவனமாக ஆய்வு செய்தபின், குழு இந்த சங்கடத்திற்கு ஒரு திருப்திகரமான தீர்வு காண்பதற்குத் தவறியது. சில விஷயங்களில் பெண்கள், தங்கள் சொத்தை விற்பதற்கும் செலவழிப்பதற்கும் தகுதி உடையவர்களாக வும், கூர்மதி உடையவர்களாகவும் இருக்கிறார்களென்றால், மற்றைய சொத்தையும் பைசல் செய்வதற்கு அவர்கள் தகுதியுடையவர்கள் தான் என்றே கொள்ளவேண்டும் என்று குழு மிகவும் சரியான முடிவுக்கே வந்தது என்று கருதுகிறேன். இந்தக் காரணத்தினால்தான் பெண்கள் முழுச் சொத்துரிமையை இப்பொழுது பெற்றிருக்க வேண்டும் என்ற விதியைக் குழு இயற்றியது.

இந்தப் பிரச்சினையில் எழுகின்ற மற்றையக் கேள்வி, அதாவது, பெண்களின் சொத்து மகளின் பங்கு ஆகும் என்பது. இது ஒரு கூருணர்வுடைய பிரச்சினை என்று கூறுவது மிகவும் எளிமைப் படுத்திக் கூறுவதாகும். இது மிகவும் ஆர்வமூட்டும் பிரச்சினை யாகும். இன்று இந்த உலகிலும், இந்தியாவிலும் வைதீகமான, வைதீகமற்ற பலருக்குப் பெண் குழந்தைகள் பிறக்கவே செய்கின் றனர். பெண் குழந்தைகள் பிறக்காமல் போனால், இந்த உலகிற்கு என்ன ஏற்படும் என்பது எனக்குத் தெரியாது. அதேசமயத்தில் ஆண்குழந்தைக்கும் பெண்குழந்தைக்கும் பெற்றோர் ஒரேமாதிரியான நேசத்தையும் அன்பையும் நிச்சயம் செலுத்தவேண்டிய நிலையில், மகனுக்கும் மகளுக்கும் ஒரேமாதிரியான அன்பு செலுத்துவதற்கு அவர்கள் விரும்புவதில்லை. ஆனால் பொறுக்குக் குழுவினால் வகுத்தளிக்கப்பட்டுள்ள ஆலோசனைக்கு ஆதரவாக, அதே உயர்மட்ட வாதத்தை நான் உபயோகப்படுத்தப்போவதில்லை. நான் மிகவும் தாழ்ந்த தொனியிலேயே பேசப்போகிறேன். இந்த சபையில் நான் எடுத்துக் கூறப்போகும் முதலாவது விஷயம் இதுவே. வாரிசுகளில் மகளை சேர்த்தது இந்தக் குழுவினால் செய்யப்பட்ட ஒரு புதுமை அல்ல. மிதாக்ஷராவின் கீழும் தாயபாகாவின் கீழும் இருந்துவரும் வாரிசுரிமை சட்டத்தைத் தெரிந்துள்ள மதிப்பிற்குரிய உறுப்பினர்கள், அந்த இரண்டிலும் 'கச்சிதமான வரிசை' என்றழைக்கப்படுவதின் கீழ் மகள் சேர்த்துக் கொள்ளப்பட்டிருக்கிறாள் என்பதை ஒத்துக் கொள்வார்கள் என்று நம்புகிறேன். இந்து வாரிசுகள் பலவகைகளாகப் பிரிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை உறுப்பினர்கள் அறிவார்கள். முதல்வகையினர் கச்சிதமான வரிசை என்று அழைக்கப்படுகிறார்கள்.

அதற்குப் பின்னர் பலவகையான வாரிசுகள் - **சாபிந்தர்கள், சமனோடாக்ஸ், பந்துக்கள்.** பந்துக்கள் மூன்று வகையாகப் பிரிக்கப்பட்டுள்ளார்கள்: **ஆத்மபந்துக்கள், பித்ருபந்துக்கள், மாத்ருபந்துக்கள்,** கச்சிதமான வரிசையினர் மெய்யாகவே ஒரு தனிவகைப்பட்ட வாரிசுகளாவர். இவர்கள் **கோத்ரஜா, சமனோதாக்கர்கள்** மற்றும் **பந்துக்கள்** ஆகியவர்களைச் சுற்றியுள்ள வாரிசுரிமையின் அடிப்படைக் கோட்பாடுகளுக்குக் கறாராக உட்பட்டவர்கள் அல்ல. ஏனெனில் இவர்கள் கலப்பின வகையைச் சேர்ந்தவர்கள். அது ஒரு கலப்பு வகையினம். இது இரட்டை அஸ்திவாரத்தை அடிப்படையாகக் கொண்டது. இது உறவை அடிப்படையாகக் கொண்டது. சமய நற்றிறத்தையும் இது அடிப்படையாகக் கொண்டது. **சபிந்தர்கள்,** சமனோதாக்கர்கள், பந்துக்கள் என்ற வகைகளை நிர்ணயிப்பதற்கு வகுத்தளிக்கப்பட்டுள்ள எந்த அளவுகோல்களுக்குள்ளும் அவர்கள் அடங்குவதில்லை.

மாலை 3 மணி

மிதாக்ஷரா, தாயபாகா ஆகிய இரு சட்டங்களையும் நீங்கள் எடுத்துக் கொண்டு பார்த்தால், கச்சிதமான வரிசை என்று அறியப் பட்டுள்ள வகையில் மகள் சேர்க்கப்பட்டுள்ளதை நீங்கள் காண்பீர்கள். **மிதாக்ஷராவுக்கும் தாயபாகாவிற்கும்** இடையில் உள்ள ஒரே வேறுபாடு இதுதான்: தாயபாகாவின்படி, நைவேத்தியம் செய்யும் திறமை வாரிசுரிமைக்குத் தேவையான கூறு ஆகும். இதன் விளைவாக, திருமணமாகாத மகளுக்கும் திருமணமாகி, திருமணமாகி, ஒரு மகனைக் கொண்டுள்ள மகளுக்கும், விதவையாக உள்ள மகளுக்கும் இடையே ஒரு விதியை உருவாக்குகிறது. திருமணமாகாத மகளுக்கும் திருமணமாகி, ஒரு மகனைக் கொண்டுள்ள மகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படுகிறது. அதை அடுத்து, திருமணமாகியுள்ள மகளுக்கு அடுத்த உரிமை. திருமணமாகாத மகளுக்கு மூன்றாவது இடம். ஆனால் அது அந்த வகையினத்திற்குள்ளேயே அடங்கியிருக்கிறது; இதன் காரணம், திருமணமாகி, ஒரு மகனையும் கொண்டுள்ள மகள். நைவேத்தியம் செய்வதற்கு அங்கிருக்கிறாள். ஏனெனில், அவளுடைய மகன் நைவேத்தியம் செய்ய முடியும். திருமணமாகாத, மகன் இல்லாத மகள், நைவேத்தியம் செய்யும் சாத்தியப்பாடு பிரச்சினையே எழவில்லை. அதனால் தான் அவள் கீழ்நிலையில் வைக்கப்பட்டிருக்கிறாள். ஆனால் நான் வலியுறுத்த விரும்பும் விஷயமும், இந்த அவை கவனத்தில் கொள்ள வேண்டும் என்று நான் விரும்பும் விஷயமும் இதுதான். கச்சிதமான வரிசை வகையில் மகளைச் சேர்த்தது புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட ஒன்றல்ல. **மிதாக்ஷரா, தாயபாகா** ஆகிய இரண்டன்படியும் அவள்

எப்போதும் இருக்கிறாள். இந்த மசோதா செய்ய முயல்கின்ற ஒரே புதுமை, மகளின் அந்தஸ்தை உயர்த்துவதுதான். இந்த மசோதாவின் கீழ் அவள், மகன், விதவை, இறந்துபோன மகனின் மனைவி (விதவை), இறந்துபோன மகளின் மகனுடைய இறந்துபோன மகன், இறந்துபோன மகனின் இறந்துபோன மகனின் மனைவி (விதவை) ஆகியோருடன் அதே சமயத்தில் வாரிசு ஆகிறாள்.

விஷயம் என்னவெனில், ஆரம்பத்தில், குறிப்பாக, **மிதாக்ஷரா** சட்டத்தின் கீழ் எந்தப் பெண்ணுக்கும் எத்தகைய பங்கையும் பெறுவதற்கு உரிமையில்லை. 1937ல் இந்த சட்டம் மாற்றப்பட்டது. அதன்படி, மரணமடைந்தவரின் மனைவி (விதவை), முன்பே இறந்து போன மகனின், அவனுடைய பேரனின், கொள்ளுப்பேரனின் மனைவி (விதவை) ஆகிய அனைவரும் மகனுடன் கூடவே வாரிசுகளாக்கப்பட்டனர். விட்டுவிடப்பட்ட ஒருவர் மகள். முன்பே இறந்துபோன மகனுடைய, மற்றும் முன்பே இறந்துபோன மகனுடைய மகனுடைய மனைவிகள் (விதவைகள்) ஆகியோருடன் அதே மட்டத்தில் மகளை வைத்து ஆதரவு கொடுப்பதற்கு அப்பொழுதிருந்த அரசு தயாராக இல்லை. எனவே, இந்த ஒரே புதுமையை (மாற்றத்தை) தான் இந்த மசோதா செய்கிறது. இது வாரிசுகளின் வரிசைக்கு மகளையும் உயர்த்துகிறது. முதல் தடவையாக அவள் வாரிசு ஆக்கப்படுகிறாள் என்பதல்ல.

இனி அவளுடைய பங்கு பற்றிய பிரச்சினைக்கு வருகிறேன். ராவ் குழு சுட்டிக்காட்டியது போன்றும் சாஸ்திரங்களை அறிந்த பல சாட்சிகள் சுட்டிக்காட்டியது போன்றும், ஸ்மிருதிகளின்படி, மகள், மகனுடன் கூடவே ஏககாலத்தில் வாரிசு ஆவாள். மற்றும் அவள் தனது தகப்பனாரின் சொத்தில் நாலில் ஒரு பங்குக்கு உரிமை உடையவள். அது, யாக்ஞவல்கியவரிடமிருந்தும், மனுவிடமிருந்துமான ஒரு போதனை என்று ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. ஒரு சமயம் நான் 137 ஸ்மிருதிகளை எண்ணினேன்; நமது பண்டைக்கால பிராமணர்கள் ஸ்மிருதிகளை வரைவதில் ஏன் நேரத்தை செலவிட்டார்கள். வேறு ஏதாவது செய்வதற்கு ஏன் நேரத்தை செலவழிக்கவில்லை என்பதைக் கூறுவது சாத்தியமல்ல. அந்தப் பணி ஒரு தலையாய பணியாக அன்று இருந்துள்ளது என்றுதான் கருத வேண்டும். நான் குறிப்பிட்ட ஸ்மிருதிகளை எழுதிய இரு ஆசான்கள் - யாக்ஞவல்கியரும் மனுவும் - ஸ்மிருதிகளை வரைவதில் ஈடுபட்ட 137 பேர்களில் மிக உயர்ந்த நிலையில் இருப்பவர்கள் என்பதில் ஐயமில்லை. அவ்விருவரும் மகளுக்கு சொத்தில் நான்கில் ஒரு பங்குக்கு உரிமையுண்டு

என்று கூறியுள்ளனர். ஆனால் எப்படியோ, ஏதோ காரணத்தினால் தொன்றுதொட்டு வரும் பழக்கமானது அந்த போதனையின் பயன் திறத்தை அழித்து விட்டது; அவ்வாறில்லாமலிருந்திருந்தால், நமது ஸ்மிருதிகளின் அடிப்படையிலேயே மகள் நாலில் ஒரு பங்கைப் பெறுவதற்குத் தகுதி உடையவளாக இருந்திருப்பாள். பிரிவி கவுன்சில் கொடுத்த தீர்ப்புக்காக நான் வருந்துகிறேன். நமது சட்டம் மேம்பாடு அடைவதற்கான பாதையை அது மூடிவிட்டது. ஒரு முந்தைய வழக்கில், தொன்றுதொட்டுவரும் பழக்கம் சட்டத்தைப் புறந்தள்ளி விடும் என்று பிரிவிகவுன்சில் கூறியது; இதன் விளைவாக, நமது பண்டைய சட்டங்களைப் பரிசீலனை செய்வதும், நமது ரிஷிகளும் நமது ஸ்மிருதிகளை வரைந்தவர்களும் என்ன சட்டங்களை வகுத் தளித்துள்ளனர் என்று கண்டுபிடிப்பதும் நமது நீதித்துறைக்கு மிகவும் சாத்தியமற்றதாகியது. பிரிவி கவுன்சில், தொன்றுதொட்டு வரும் பழக்கம் போதனையைப் புறந்தள்ளிவிடும் என்று அந்த முடிவை வழங்காமலிருந்திருந்தால் ஏதோ ஒரு வழக்கறிஞர், ஏதோ ஒரு நீதிபதி, யாக்ஞவல்கியரின் இந்த போதனையையும், மனு ஸ்மிருதியையும் - தோண்டியெடுப்பது சாத்தியமாயிருந்திருக்கும் என்பதில் எனக்குச் சிறிதும் ஐயமில்லை; இன்றைய தினம் பெண்கள், அவர்களது சொத்தில் குறைந்தபட்சம் நான்கில் ஒரு பங்கை - அதைக் காட்டிலும் அதிகமில்லாவிட்டாலும் கூட - அனுபவித்து வந்திருப் பார்கள்.

அசல் மசோதா மகளின்பங்கை ஒரு பாதியாக உயர்த்தி யிருந்தது. என்னுடைய பொறுக்குக் குழு மேலும் ஒரு படி முன்சென்று, அவளுடைய பங்கை முழுமையாக்கியது; மகனுடைய பங்குக்கு சமமானதாக்கியது.

பொறுக்குக் குழுவில் என்ன நடைபெற்றது என்பதையும், எந்த ஷரத்து எவ்வாறு முடிவு செய்யப்பட்டது என்பதையும் வெளிப் படுத்துவதற்கு எனக்கு உரிமையில்லை.

நான் திட்டவட்டமாக......

திருமதி ரேணுகா ரே (மே. வங்கம் : பொது) : ஒருமனதாக!

திரு. துணை சபாநாயகர் : இது மகனின் பங்கைப் போல் இருமடங்கு என்று கோரியதிற்கும், மசோதாவில் வகை செய்யப் பட்டுள்ள பங்கில் பாதியளவு என்பதற்கும் இடையிலான ஒரு சமரசமா?

மாண்புமிகு டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் : இது ஒரு சமரச மல்ல. என்னுடைய பகைவர்கள், என்னுடைய உற்சாகமான ஆதர வாளர்களுடன் ஒன்று சேர்ந்து கொண்டனர். மசோதாவை - அது இருந்து வருவதைக்காட்டிலும் மோசமானதாகத் தோன்றச் செய் வதன் மூலம் அந்த மசோதாவை அவர்கள் இழிவுபடுத்த முடியும் என்று என்னுடைய விரோதிகள் நினைத்தனர்.

திரு. எச்.வி. காமத்: உங்களுக்கு விரோதிகள் இருக்கிறார் களா?

மாண்புமிகு டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் : ஆயினும் இதுதான் நிலைமை; அதாவது, மகளின் பங்கைப் பொறுத்தமட்டிலும், நாம் செய்யும் ஒரே புதுமை என்னவென்றால், அவளுடைய பங்கு அதிகரிக்கப்படுகிறது, மற்றும் அவளை மகன் அல்லது தாயின் (விதவை) வரிசையில் கொண்டுவருகிறோம். அதுவும் இவ்வாறு செய்வதில் நீங்கள் அனைவரும் மதிக்கின்ற ஸ்மிருதிகளின் போதனைக்கு நாம் திரும்பிச் செல்வது மட்டுமே என்ற என்னுடைய கருத்தை நீங்கள் ஏற்றுக் கொண்டால், ஒரு புதுமையாக இருக்காது.

மகளின் பங்கு பற்றிய இந்தப் பிரச்சினையை விவாதிப் பதில், நானும், சட்ட இலாகாவின் உறுப்பினர்களும் வாரிசு சம்பந்தப் பட்ட ஒவ்வொருமுறையையும் பரிசீலனை செய்தோம். முஸ்லீம் வாரிசுரிமை முறையை நாங்கள் ஆய்வு செய்தோம்; பார்ஸி வாரிசு உரிமையை நாங்கள் ஆய்வு செய்தோம். இந்திய வாரிசுச் சட்டத் தையும் வகுத்தளிக்கப்பட்ட வாரிசுரிமை வரிசையையும் நாங்கள் ஆய்வு செய்தோம். பிரிட்டிஷ் முறைப்படியான வாரிசுரிமையை யும் நாங்கள் ஆய்வு செய்தோம்; சொத்தில் மகளுக்கு ஒரு பங்கு கொடுக்கப்படுவதிலிருந்து விலக்கப்படுவதை எதிலும் நாங்கள் காணவில்லை. உலகில் மகள் விலக்கப்படும் எந்த முறையும் எங்கும் இல்லை.

இப்பொழுது, ஐயா, ஒரு பிரச்சினை இடைவிடாது முன் வைக்கப்படுகிறது - மகளுக்கப் பங்கு கொடுப்பதானது, குடும்பத்தை சீர்குலைப்பதாகும் என்று கூறப்படுகிறது. இந்த வாதத்தின் வலுவை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை என்பதை நான் வெளிப் படையாக ஒப்புக் கொள்கிறேன். ஒரு மனிதனுக்கு பன்னிரெண்டு

மகன்களும் ஒரு மகளும் இருக்கும் நிலைமையில், தகப்பனார் மரண மடைந்த நாளன்று பன்னிரெண்டு மகன்களும் சொத்தைப் பிரித்துக் கொள்வதென்று முடிவுசெய்து, தகப்பனாரின் மொத்த சொத்தில் பன்னிரெண்டில் ஒரு பங்கை ஒவ்வொருவரும் பெறும்பொழுது, பதின்மூன்றாவது குழந்தையான மகளும் தனக்கு ஒரு பங்கு வேண்டுமென்று கோரினால் பாகப்பிரிவினை மிகவும் மோசமாகப் போய்விடுமல்லவா?

பன்னிரண்டு பங்குகள் அல்லது 12 துண்டுகள் 13 துண்டு களைக் காட்டிலும் மேம்பட்ட நிலைமை அல்ல. சொத்து துண்டு துண்டாவதைத் தடுக்க வேண்டுமென்று விரும்பினால் நாம் வேறு ஏதாவது செய்ய வேண்டும், வாரிசுரிமை சட்டத்தின் மூலமாக அல்ல, மாறாக வேறு சட்டத்தின் மூலம்; அதன் வாயிலாக, ஒரு தேசியக் கண்ணோட்டத்திலிருந்து, தேசிய உற்பத்தியின் நிமித்தம் பயனற்றுப் போகாமலிருப்பதற்காக சொத்து துண்டு துண்டாகாமல் தடுக்கப் படும்.

திரு. டி.ஏ. இராமலிங்கம் செட்டியார் (சென்னை : பொது) : இந்து சட்டத் தொகுப்பு விவசாய நிலத்திற்குப் பொருந்துமா?

மாண்புமிகு டாக்டர் பி.ஆர் அம்பேத்கர் : அது பொருந்தாது. நான் பொதுவாகக் கூறுகிறேன்.

இந்த அவையின் உறுப்பினர்களும் வெளியில் பொதுமக்களும் எழுப்பிய சர்ச்சைக்குரிய பல்வேறு அம்சங்கள் பற்றி நான் சொல்ல வேண்டியதை எனக்குத் தெரிந்த வரையில் சொல்லி முடித்து விட்டேன். பல்வேறு பிரச்சினைகளைப் பற்றி நான் கொடுத்துள்ள விளக்கங்கள், இந்த மசோதாவின்பால் நல்ல அபிப்பிராயம் இல்லாத உறுப்பினர்களின் அச்சங்களைப் போக்கும் என்று நம்புகிறேன். இது எந்த வகையிலும் ஒரு புரட்சிகரமான மசோதா அல்ல என்று அவர்கள் உணருவார்கள். இது ஒரு தீவிரமான மசோதாகூட அல்ல என்று நான் கூறுவேன். ஒரு முக்கியமான விவரம் சம்பந்தமாக, அதாவது ராவ் குழுவை அமைப்பது மற்றும் அதன் இயைபு சம்பந்தமாக இந்த அவையின் உறுப்பினர்களின் கவனத்தை ஈர்க்க விரும்புகிறேன். அந்தக் குழுவில் நான்கு உறுப்பினர்கள் இருந்தார்கள்; அறிக்கை யில் கையெழுத்திட்டவர்களில் இருவர், இந்து சமுதாயத்தின் தீவிர

உறுப்பினர்களே அல்ல. பல ஆண்டுகளாக நான் அறிந்துள்ள எனது நண்பர் திரு. கார்புரே, நான் அறிந்த மிகவும் பழமைவாத உறுப்பினர் களில் ஒருவராவார்.

திரு. எச்.வி காமத் : அரசியல் ரீதியாகவா, அல்லது சமூக ரீதியாகவா?

மாண்புமிகு டாக்டர் பி.ஆர். அம்பேத்கர்: அரசியல் ரீதியாக வும் சமூக ரீதியாகவும் கூடத்தான், உண்மையில், சில சந்தர்ப்பங் களில் அவர் தொலைவிலிருந்து ஒரு குச்சியால் கூட என்னைத் தொடுவதற்கு மிகவும் கூச்சப்படுவார் என்று கூறுவதற்கு எனக்கு சிறிதும் தயக்கமில்லை. அவர் அவ்வளவு பழைமைவாதியாக இருக் கிறார். என்னுடைய நண்பர் திரு. டி.ஆர். வெங்கட் ராமசாஸ்திரி, தாராளமனப்பான்மை உடையவர்தான் என்பதில் ஐயமில்லை. ஆனால், நானறிந்தவரையில் அவர் நிச்சயமாக தீவிர மனப்பான்மை உடையவரல்ல, பழமைவாதக் கண்ணோட்டமுடைய இந்தப் பிரமுகர்கள் இந்த அறிக்கையில் கையெழுத்திட்டிருக்கிறார்களென் றால், அவர்கள் கையெழுத்திட்டுள்ள இந்த அறிக்கை புரட்சிகர மானதாக இருக்க முடியாது என்று நாம் நிச்சயமாகக் கருதலாம். மற்றும், இந்து சமுதாயத்தின் அடிப்படைகளுக்கு நிச்சயமாக அழிவு கரமாயிருக்காது. என்னைப் பொறுத்தவரையில் நான் மிகவும் பழமைவாதிதான்: சிலர் இந்த உண்மையை ஒப்புக்கொள்ளா விட்டா லும், உண்மையில் நான் மிகவும் பழமைவாதிதான். நான் சொல்வ தெல்லாம், நான் ஒரு முற்போக்கான பழமைவாதி. ஒரு முக்கியமான உண்மையை இந்த சபைக்குச் சொல்ல விரும்புகிறேன், நம்மில் ஒவ்வொருவரும், குறிப்பாக, இந்த அவையின் பழமைவாத உறுப் பினர்கள், இதை அவசியம் மனதிற் கொள்ள வேண்டும். எட்மண்ட் பர்க் என்ற மாபெரும் அரசியல் தத்துவஞானி, பிரெஞ்சுப் புரட்சிக்கு எதிராக ஒரு பெரிய புத்தகத்தை எழுதினார். அதனுடைய தீவிரத் தன்மையும் புரட்சித்தன்மையும் அவருக்குப் பிடிக்காததே இதற்குக் காரணம். அதே சமயத்தில் அவர், மிகவும் பழமைவாதிகளான தனது சொந்த நாட்டு மக்களுக்கு ஒரு மிக முக்கியமான உண்மை யைச் சொல்ல மறக்கவில்லை. இருப்பதைப் பாதுகாக்க விரும்பு பவர்கள், அதைப் பழுதுபார்த்து சரிசெய்வதற்குத் தயாராயிருக்க வேண்டும் என்று கூறினார். நான் இந்த அவையைக் கேட்டுக் கொள்வதெல்லாம் இதுதான்: இந்து அமைப்பு, இந்து கலாசாரம், இந்து சமுதாயம் ஆகியவற்றை நிலை நிறுத்துவதற்கு நீங்கள் விரும்பி னால், பழுது பார்ப்பது எங்கு அவசியமோ, அங்கு பழுது பார்ப்பதற்கு

நீங்கள் தயங்கக்கூடாது. இந்து அமைப்பில் அனேகமாக சிதிலமாகி விட்ட பாகங்களை பழுதுபார்ப்பதைத் தவிர அதிகமாக வேறு எதையும் இந்த மசோதா கோரவில்லை.

திரு. எச்.வி. காமத்: ஐயா, ஒரு விஷயத்தை நினைவுப்படுத்த விரும்புகிறேன். மாண்புமிகு டாக்டர் அம்பேத்கர், ஸ்மிருதிகளிலிருந்து சில வாசகங்களைக் கூறுவதாக வாக்குறுதி அளித்திருந்தார். அவர் அந்த வாக்குறுதியை நிறைவேற்றுவாரா?

மாண்புமிகு டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் : இறுதியில் நான் அதைச் செய்வேன், அதிருஷ்டவசமாக, திரு. துவாரக நாத் மித்தர் எழுதிய ''இந்துப் பெண்களின் உரிமைகள்'' என்கிற புத்தகத்தின் ஒரு பிரதி எனக்குக் கிடைத்துள்ளது. அதிலிருந்து சில வாசகங்களை உங்களுக்கு எடுத்துக்கூற விரும்புகிறேன். பெண்களுக்கு வேதங்கள் கொடுத்த உரிமைகளை ஸ்மிருதிகள் எடுத்துக் கொண்டு விட்டன என்றும், வேறு சில ஸ்மிருதிகள் அந்த உரிமைகளை மீண்டும் வழங்க முயற்சித்தன என்றும் அவை காட்டுகின்றன. என்னுடைய உரையின் போக்கில், அவற்றை எடுத்துக் கூறுகிறேன்.

திரு. தேசபந்து குப்தா : பொறுக்குக் குழுவின் முன் வைக்கப்பட்ட சான்றுகளை (சாட்சியத்தை) மாண்புமிகு அமைச்சர் இந்த அவையின் முன்வைத்து தெளிவுபடுத்துவாரா?

மாண்புமிகு டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் : இரண்டு அமைப்புகள் சாட்சியமளிப்பதற்காக எங்களிடம் வந்ததை மதிப்புக்குரிய உறுப்பினர்கள் அறிவார்கள். அவர்களுடைய சாட்சியத்தை எடுத்துக் கொள்வதென்று குழு முடிவு செய்தது. ஓர்அமைப்பு எங்கள் முன்வந்தது. மற்றொரு அமைப்பு எடுத்து மூலமாகத் தங்களுடைய சாட்சியத்தை அனுப்பியிருந்தது. தர்ம நிர்ணய மண்டல் என்பது அந்த அமைப்பின் பெயர். பொதுவாக, அவர்கள், இந்த மசோதாவில் உள்ள ஷரத்துகளுடன் முழு உடன்பாடு தெரிவித்துள்ளனர். எங்களிடம் வந்த மற்றொரு நபர் உடன்பாடு தெரிவிக்கவில்லை.

திரு. துணை சபாநாயகர்: பிரேரணையை முன் மொழிகிறேன்:

> ''பொறுக்குக் குழு அறிக்கை செய்தபடி, இந்து சட்டத்தின் சில பிரிவுகளைத் திருத்துவதற்கும், சட்டமாக்குவதற்குமான இந்த மசோதா பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்.''

இரு திருத்தங்கள் வற்புறுத்தப்படவில்லை. அடுத்த திருத்தம் பற்றி என்ன?

பண்டிட் தாகூர்தாஸ் பார்கவா : ஐயா, என்னுடைய திருத்தங்கள்எதையும் முன்மொழியும் நிலைமையில் இப்பொழுது நான் இல்லை.

திரு. துணை சபாநாயகர் : இந்த மசோதாவை முன்மொழிந்தவர் கூறிய யோசனைக்கு என்னுடைய பதிலில் ஏற்கனவே நான் கூறியது போன்று பிரேரணையை முன்மொழியும் சமயத்தில் பிரசங்கங்கள் ஏதுமின்றி அந்தப் பிரேரணைகளை முன்மொழிவதற்கு அனுமதிக்கிறேன். அனைத்துத் திருத்தங்களும் முன்மொழியப்பட்ட பிறகு, எவையெல்லாம் பொருத்தமாக உள்ளனவோ அவை அனுமதிக்கப்பட்டு அசல் பிரேரணையின் மீது போன்றே, அத்திருத்தங்கள் மீதும் விவாதம் நடைபெறும்.

திரு. தேசபந்து குப்தா : ஓர் ஒழுங்குப் பிரச்சினை. ஐயா, மதிப்புக்குரிய ஓர் உறுப்பினர், தம்முடைய திருத்தங்களை முன்மொழியும் நிலைமையில் தாம் இல்லை என்று கூறுவது அனுமதிக்கப்படுகிறதா?

திரு. துணை சபாநாயகர் : ஆம்.

திரு. நசிருத்தீன் அகமது: ஐயா, நான் ஆணையிடப்பட்டுள்ளேன்......

மதிப்புக்குரிய ஓர் உறுப்பினர் : யாரால்?

திரு. நசிருத்தீன் அகமது : முதலாவதாக, பிரசங்கம் செய்யாமல் என்னுடைய திருத்தத்தைப் பிரேரணை செய்யுமாறு நான் ஆணையிடப்பட்டுள்ளேன் (மதிப்புக்குரிய ஓர் உறுப்பனர் : ''உங்களுக்கு யார் ஆணையிட்டுள்ளார்கள்?''). மாண்புமிகு துணை சபாநாயகர் எனக்கு ஆணையிட்டுள்ளார். மதிப்புக்குரிய உறுப்பினர்கள் மிக மிகப் பொறுமையிழந்தவர்களாகக் காணப்படுகிறார்கள்.

திரு. ஆர்.கே. சித்வா : (மத்திய மாகாணங்கள் மற்றும் பீரார்: பொது): இல்லை, நமக்கு அவ்வாறு ஆணையிடப்படவில்லை. நீங்கள் பேசலாம்.

திரு. நசிருத்தீன் அகமது : பிரசங்கம் செய்யாமல் என்னுடைய திருத்தத்தை முன்மொழியுமாறு எனக்கு ஆணையிடப்பட்டுள்ளது என்று நான் மீண்டும் கூறுகிறேன். என்னுடைய மாண்புமிகு நண்பர் சட்ட அமைச்சரின் ஆற்றல் மிக்க உரையின் காரணமாக ஏற்கனவே நான் பேசுவதற்கு ஒன்றுமில்லாமல் அடங்கிவிட்டேன்....

திரு. எல். கிருஷ்ணசாமி பாரதி : நீங்கள் ஏற்கனவே உங்களுக்கு இடப்பட்ட ஆணையை மீறி வருகிறீர்கள்.

திரு. நசிருத்தீன் அகமது : அறிவுக் கூர்மைமிக்க பெண்களும் என்மீது ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளனர். நான் எழுந்து நிற்பதற்கு முன்னால், மிகவும் சக்தி வாய்ந்த உறுப்பினர் பண்டிட் தாகூர்தாஸ் பர்கவா, தமது திருத்தங்களை முன்மொழியும் நிலையில் தாம் இல்லை என்று கூறினார்.

திரு. துணை சபாநாயகர்: தம்முடைய திருத்தத்தை முன்மொழிவதற்கு இத்தகைய முன்னுரை தேவையா?

திரு. நசிருத்தீன் அகமது : ஏற்கனவே நான் உரை நிகழ்த்த முடியாதபடி செய்யப்பட்டுவிட்டேன், அதனால்தான், நான் உரை நிகழ்த்தக்கூடாது என்று கேட்டுக்கொள்ளப்பட்டதற்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்தேன்.

திரு. துணை சபாநாயகர் : மதிப்புக்குரிய உறுப்பினர் பின்னர் பேசுவார்.

திரு. நசிருத்தீன் அகமது : ஐயா, பெருமளவு பதற்றத்துடன் முன்மொழிகிறேன்:

> ''1949 இறுதிக்குள் மேற்கொண்டு கருத்துக்களைப் பெறும் நோக்கத்திற்காக இந்த மசோதா சுற்றுக்கு விடப்பட வேண்டும்.''

திரு. துணை சபாநாயகர்: கீழ்வரும் திருத்தம் முன்மொழியப்பட்டுள்ளது:

> ''1949 இறுதிக்குள் மேற்கொண்டு கருத்துக்களைப் பெறும் நோக்கத்துடன் இந்த மசோதா சுற்றுக்கு விடப்படுகிறது.''

திரு. பி. தாஸ் : ஐயா, இது ஒரு தாமதப்படுத்தும் முயற்சியாக இருப்பதால், இது ஒழுங்கற்றது என்று நிராகரிக்கும்படிக் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. மகாவீர் தியாகி: ஐயா, ஓர் ஒழுங்குப் பிரச்சினை : தாமதப் படுத்தும் முயற்சிகள் சம்பந்தமாகக் காலையில் கூட ஒரு தீர்ப்புக் கூறப்பட்டது. ஐயா, அவை உறுப்பினரின் உரிமையாகும் என்று நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இந்த மசோதா சம்பந்த மாக பல அம்சங்களில் நான் டாக்டர் அம்பேத்கருக்கு ஆதரவாக நிற்கின்றபோதிலும், தாமதப்படுத்தும் முயற்சிகள் அதிகாரத்தில் இல்லாத உறுப்பினர்களின் - தனிப்பட்ட உறுப்பினர்கள் மற்றும் கட்சிகளின் - தனி உரிமையாகும் என்று தெரிவித்துக் கொள்வதற்கு விரும்புகிறேன். இதைத் தடை செய்ய வேண்டாம். உறுப்பினர்கள் விரும்பினால் அலுவலைத் தாமதப்படுத்துவது அவர்களது ஜனநாயக உரிமையாகும். எனவே, ஒரு பிரேரணை, தாமதப்படுத்தும் முயற்சி என்று கருதப்படுவதன் நிமித்தம் அதற்கு அனுமதி மறுக்கக்கூடாது. தாமதப்படுத்தும் பிரேரணைகள் ஜனநாயக அவையின் சிறப்பு உரிமையாகும்.

திரு. துணை சபாநாயகர் : திரு. தியாகி கூறியதில் எந்த ஒழுங்குப் பிரச்சினையையும் நான் காணவில்லை. இதன்மீது முழு விவாதம் அனுமதிக்கப்பட வேண்டும் என்று அவர் விரும்புகிறார். திரு. பி. தாஸ் எழுப்பியுள்ள பிரச்சினையைப் பொறுத்தமட்டிலும், அதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. எந்த விதியின் கீழும் அத்தகைய ஒரு பிரேரணை அனுமதிக்கப்படத்தக்கதல்ல என்று அவர் அர்த்தப்படுத்துகிறாரா? அப்படியெனில், அறிக்கை சமர்ப்பிக்கப் பட்ட பின்னர், நடைமுறை இதுதான். (மதிப்புக்குரிய ஓர் உறுப் பினர்: ''அவை என்ன விதிகள்?'') கடந்த கூட்டத்தொடரில் நாம் ஏற்றுக்கொண்ட விதிகள்.

அந்த விதி இவ்வாறு கூறுகிறது:

> ''அதற்குப் பொறுப்பாயுள்ள உறுப்பினர் மசோதா பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படலாம் என்று பிரேரணை செய்தால், எந்த உறுப்பினரும், அந்த மசோதா மறு சமர்ப்பணம் செய்யப்பட வேண்டும், அல்லது சுற்றுக்கு விடப்படவேண்டும், அல்லது கருத்தை பெறவோ, அல்லது மேற்கொண்டு கருத்தைப் பெறவோ, மறு சுற்றுக்கு விடப்படவேண்டும் என்று ஒரு திருத்தத்தைப் பிரேரணை செய்யலாம்.''

எனவே விதிகளின்படி இத்தகைய பிரேரணை அனுமதிக்கப் படக்கூடியதே. இந்தப் பிரேரணைக்கு எவ்வாறு அனுமதி மறுக்கப்பட வேண்டும் என்பதை நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

திரு. பி. தாஸ் : அந்த விதியை நான் அறிவேன். ஆனால், தாமதப்படுத்தும் பிரேரணைகள் எதுவும் அனுமதிக்கப்பட மாட்டாது என்று இன்று காலை வழங்கப்பட்ட ஒரு தீர்ப்பையே நான் வழிகாட்டியாகக் கொள்கிறேன். எனவேதான் நான் ஒழுங்குப் பிரச்சினையை எழுப்பினேன்.

மாண்புமிகு டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் : நான் ஒரு கருத்தைக் கூறுவதற்கு எனக்கு அனுமதி வழங்கப்படுமா? எனது நண்பர் திரு. பி. தாஸ் எழுப்பிய ஒழுங்குப் பிரச்சினை முற்றிலும் ஒரு சரியான ஒழுங்குப் பிரச்சினையேயாகும். ஏனெனில்.........

மதிப்புக்குரிய உறுப்பினர்கள் : இல்லை.

பண்டிட் தாகூர்தாஸ் பர்கவா: துணை சபாநாயகர் ஒரு தீர்ப்பைக் கூறிவிட்டால், அதைக் கேள்வி கேட்க முடியாது.

திரு. துணை சபாநாயகர் : மதிப்புக்குரிய உறுப்பினர்கள் எல்லோரும் ஒரே சமயத்தில் பேசமுடியாது. அவர்கள் எழுந்து நின்று, ஒவ்வொருவராகத்தான் பேசவேண்டும். மாண்புமிகு சட்ட அமைச்சர் பேசுவதை முதலில் கேட்போம். இந்த விஷயம் பற்றி ஒவ்வொரு உறுப்பினரும் பேசுவதற்கு அனுமதிக்கிறேன். ஆனால் ஒரு நிபந்தனை: இந்த விவாதத்திற்கு அவர் ஒரு முறையான பங்களிப்புச் செய்ய வேண்டும். யாரும் பொறுமையிழக்க வேண்டிய தில்லை.

மாண்புமிகு டாக்டர் பி.ஆர். அம்பேத்கர்: ஐயா, அலுவல் விதிகளின் கீழ் அனுமதிக்கத்தக்க பிரேரணைகள் இரு வகைப் படும் என்பதை நீங்கள் நினைவு கூறுவீர்கள் : ஒரு வகைப்பட்ட பிரேரணைகள் - சபாநாயகர் அவற்றை அவைக்கு சமர்ப்பிப்பது; மற்றைய வகைப்பட்ட பிரேரணைகள், அவற்றை சபையின் முன் சமர்ப்பிக்கப்படுவதற்கு முன்னர், அவை முறைப்படியான பிரே ரணைகள்தானா என்று முதலில் சபாநாயகர் திருப்தியடைய வேண்டும். உதாரணமாக அவையை ஒத்திவைப்பதற்கான ஒரு பிரேரணையைக் குறிப்பிடுவதன் வாயிலாக நான் இதை விளக்கு கிறேன். விதிகளின்படி மதிப்புக்குரிய ஒவ்வொரு உறுப்பினரும் ஓர் ஒத்திவைப்புப் பிரேரணையை முன்மொழிவதற்கு உரிமை உண்டு. ஆனால், ஒரு குறிப்பிட்ட உறுப்பினர் ஓர் ஒத்திவைப்புப் பிரேரணைக்கு அறிவிப்புக் கொடுத்ததினால் மாத்திரமே

(அதனாலேயே) அதை அவைக்கு முன்னால் வைப்பதற்கு சபாநாயகர் அதிகாரம் பெற்றவராகி விடுவதில்லை; ஏனெனில், அந்தப் பிரேரணை அனுமதிக்கப்படத்தக்கது என்று சபாநாயகர் கருதினால் ஒழிய அந்தப் பிரேரணை சபையின் முன் வைக்கப்பட மாட்டாது. இதுபற்றி வேறு பல உதாரணங்களையும் நான் கூறமுடியும். இதுபோன்ற ஒரு பிரேரணையைப் பொறுத்தமட்டிலும், அதாவது, மசோதாவைப் பற்றி விவாதிப்பதை ஒத்திவைத்து, மேற்கொண்டு கருத்துக்களைப் பெறுவதற்காக சுற்றுக்கு விடப்பட வேண்டும் என்பதைப் பொறுத்த மட்டிலும் என்னுடைய வேண்டுகோள் என்னவெனில், இத்தகைய ஒரு பிரேரணை, சபாநாயகர் அதை அவையின் முன் வைப்பதற்கு முன்னால் அவர் அது குறித்து திருப்தியடைய வேண்டும் என்ற வகைப்பட்ட பிரேரணைகளில் அது அடங்கும். பொறுக்குக் குழு தனது அறிக்கையை சமர்ப்பித்ததற்குப் பின்னர், மசோதாவை விவாதிப்பது ஒத்திப்போடவேண்டும், அல்லது சுற்றுக்கு விடப்பட வேண்டுமென்பது, முதற் பார்வையிலேயே தாமதப்படுத்தும் முயற்சி யாகும். இந்தப் பிரேரணையை முன் வைக்கும் உறுப்பினர், அதற்கான சாராம்சமான காரணங்களை முன்வைத்து, முன்வைக்கப்பட்ட காரணங்கள் சாராம்சமானவை என்று சபாநாயகர் திருப்தியடைந்தால் ஒழிய, அத்தகைய பிரேரணை அனுமதிக்கப்பட மாட்டாது. இந்தப் புத்தகங்களில் பல தீர்ப்புகள் உள்ளன. ஆனால் புத்தகம் எண் 1ல் உள்ள தீர்ப்பு எண் 1ஐ கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். இந்தப் பிரேரணை சம்பந்தமாக எந்த சாராம்சமான காரணங்களும் கூறப்படவில்லை.

மதிப்புக்குரிய ஓர் உறுப்பினர்: ஆனால் அவர் பேசவே இல்லையே.

திரு. துணை சபாநாயகர் : மாண்புமிகு சட்ட அமைச்சர் பேசி முடிக்கட்டும்.

மாண்புமிகு டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் : இந்தப் புத்தகத்திலுள்ள ஒரு தீர்ப்பையே (எண். 1) உங்கள் கவனத்திற்குக் கொண்டு வந்தேன். வேறு பல தீர்ப்புகளும் உள்ளன. அது கூறுவதாவது:

> "பருத்தி கலால்வரி ரத்து தீர்மானத்தின் மீதான விவாதத்தின்போது, தீர்மானத்தின் மீதான விவாதங்களை ஒத்திவைப்பதற்காக ஒரு பிரேரணை முன்மொழியப்பட்டது (நடைமுறையில் இதன் பொருள் இதை சுற்றுக்கு விடுவது அல்லது கைவிட்டு விடுவது என்பதேயாகும்.)

''சபாநாயகர், இந்தக் குறிப்பிட்ட சந்தர்ப்பத்தில், ஒரு முன்னுதாரணத்தை ஏற்படுத்தாமல், பிரேரணையை ஏற்றுக் கொள்ளும்போது பின்வருமாறு கூறினார்:

''அலுவலின் மற்றொரு பகுதியை முன்னுக்குக் கொண்டு வரப்படுவதற்கு வகை செய்வதற்காகவென்று மட்டும், முன்மொழியப்படவிருக்கிற ஒரு பிரேரணையைப் பரிசீலனை செய்வதை ஒத்திப்போடுவதற்கான ஒரு பிரேரணையை சபாநாயகர் அனுமதிக்க முடியாது''

பண்டிட் தாகூர்தாஸ் பர்கவா : இது ஒரு முன்னுதாரணம் அல்ல என்று தீர்ப்புக் கூறுகிறது. ஆனால் நீங்கள் அதை ஒரு முன்னுதாரணம் ஆக்குவதற்கு விரும்புகிறீர்கள்.

மாண்புமிகு டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் : 'நான் தீர்ப்பு அளிக்கிறேன், ஆனால் நான் ஒரு முன்னுதாரணத்தை உருவாக்கவில்லை' என்று சபாநாயகர் கூறுகிறார்.

பண்டிட் தாகூர்தாஸ் பர்கவா : இந்த விஷயத்தில் 'சபாநாயகரின் முடிவுகள்' என்ற பிரசுரத்தின் 81-வது பக்கத்தை உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்; அதில், தாமதப்படுத்தும் தன்மை வாய்ந்தவை என்று கூறப்படக்கூடிய சில பிரேரணைகள் உள்ளன என்று கூறப்பட்டுள்ளது. சுற்றுக்கு விடுவது என்பது நிச்சயமாக அத்தகைய ஒன்று அல்ல. எனினும், தாமதப்படுத்தும் தன்மை வாய்ந்த பிரேரணைகள் இருக்கவே செய்கின்றன; ஆனால் அவற்றை அனுமதிப்பதா அனுமதிக்கக்கூடாதா என்பது சபாநாயகரின் உசிதப்படி செய்யும் உரிமைக்கும் அதிகாரத்திற்கும் உட்பட்டதாகும். இந்தப் புத்தகத்தின் 81வது பக்கத்தில் பிரேரணைகளை மீண்டும் சமர்ப்பிப்பது சம்பந்தமாக, ஆரம்பத்தில் தாமதப்படுத்தும் ஒரு பிரேரணை என்று அது கருதப்பட்டாலும், அதற்கப்பால் பொறுக்குக் குழுவில் ஏதாவது ஏற்பட்டிருந்தாலோ, அல்லது சில நிகழ்ச்சிகள் ஏற்பட்டிருந்தாலோ, அது தாமதப்படுத்தும் ஒரு நிகழ்ச்சியல்ல என்று கூறுவதற்கு சபாநாயகருக்கு முழு அதிகாரம் உண்டு. இப்பொழுது மதிப்புக்குரிய உறுப்பினரால் என்ன காரணங்கள் என்று கேட்கப்படவில்லை, அதற்கு முன்னதாக, என்னுடைய மதிப்புக்குரிய உறுப்பினர் எழுந்து நின்று இது ஒரு தாமதப்படுத்தும் பிரேரணை என்று கூறுகிறார். எடுத்த எடுப்பிலேயே, அது ஒரு தாமதப்படுத்தும் பிரேரணை என்று அவர் கூறுவது முற்றிலும் தவறாகும். சுற்றுக்கு விடும் பிரேரணை ஒரு தாமதப்படுத்தும் பிரேரணை அல்ல. பொறுக்குக் குழுவில் எதுவும் ஏற்படவில்லை அல்லது அந்தப் பிரேரணையைத் தாமதப்படுத்துவதை நியாயப்படுத்துவதற்கு

மேற்கொண்டு எந்த சம்பவங்களும் ஏற்படவில்லை என்ற முடிவுக்கு சபாநாயகர் வந்தாலொழிய, அந்தப் பிரேரணைகளில் எதுவும் தாமதப்படுத்துபவை என்று கூறுவதற்கு சபாநாயகருக்கு உரிமையில்லை என்று கருதுகிறேன். விதிகளுக்கு உட்பட்ட சாதாரணப் பிரேரணைகளைத் தாமதப்படுத்தும் பிரேரணைகள் என்று கருதப் பட முடியாது.

திரு. நசிருத்தீன் அகமது : ஐயா, இப்பிரச்சினையை ஒரு நிமிடத்தில் முடித்துவிடலாம். மாண்புமிகு சட்ட அமைச்சர் சார்ந்து நின்ற முன்னுதாரணம், இந்த நிலைமைக்கு சிறிதும் பொருந்தக் கூடியது அல்ல. ''விவாதத்தை ஒத்திவைத்தல்'' என்பதே அதன் தலைப்பு...

மாண்புமிகு டாக்டர் பி.ஆர். அம்பேத்கர்: இந்தப் பிரேரணை நிறைவேற்றப்பட்டால் இது விவாதத்தை ஒத்திப்போடுவதாகும்.

திரு. நசிருத்தீன் அகமது : இல்லை, இது முற்றிலும் வேறானது என்று என்னால் எடுத்துக்காட்டமுடியும். ''பிரேரணை முன்மொழிய அனுமதிக்கப்பட்டால் விவாதம் ஒத்திவைக்கப்படும்.'' இந்த விவாதத்தை ஒத்திவைப்பதற்கு நான் முன்மொழியவில்லை, அதைத் திருத்தம் 2ன் கீழ் நிச்சயமாகச் செய்ய முடியும். அதாவது :

> ''பொறுக்குக் குழுவினால் அறிக்கை செய்தபடியான இந்த மசோதாவைப் பரிசீலனை செய்வது ஒத்திப்போடப்படுகிறது.''

விவாதத்தைத் தொடருவதும், பிரேரணையைப் பரிசீலனை செய்வதுமே என்னுடைய நோக்கம், என்னுடைய பிரேரணையுடன் கூடவே இதைப் பரிசீலனை செய்வதும் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று விரும்புகிறேன். டாக்டர் அம்பேத்கர் சார்ந்து நின்ற தீர்ப்பை மேற்கொண்டு ஒரு தடவை வாசிப்பதானது இதை முற்றிலும் தெளிவாக்கும்;

> ''பருத்தி கலால் வரி ரத்து செய்யப்படும் தீர்மானத்தின் மீதான விவாதத்தின்போது அத்தீர்மானத்தின் மீதான விவாதத்தை ஒத்திவைப்பதற்கான ஒரு பிரேரணை முன்மொழியப்பட்டது.
>
> ''இந்தக் குறிப்பிட்ட சந்தர்ப்பத்தில் சபாநாயகர் பிரேரணையை ஏற்றுக் கொள்ளும்போது ஒரு முன்னுதராணத்தை ஏற்படுத்தாமல் இவ்வாறு கூறினார்: அலுவலின் மற்றொரு அயிட்டம் முன்னிடம் பெறச் செய்வதற்காக மட்டுமே ஒரு பிரேரணையைப் பரிசீலனை செய்வதை ஒத்திப்போடுவதற்கான ஒரு

பிரேரணையை சபாநாயகர் அனுமதிக்க முடியாது. அதற்காதரவாக சாராம்ச மான காரணங்கள் கூறப்பட வேண்டும்.''

நான் புரிந்துகொண்டபடி, அந்த சமயத்தில் அவையின் முன்னால் ஒரு பிரேரணை இருந்தது, அதேபொழுதில் முன்ன தாகவே, மற்றொரு பிரேரணை, ஒரு வேளை கூடுதல் ஆர்வமூட்டும் அல்லது கூடுதல் முக்கியமான பிரேரணையும் இருந்தது. பரிசீலனை யிலுள்ள ஒரு தீர்மானத்தின் விவாதத்தை ஒத்திப்போட வேண்டு மென்றும், அதனால் கூடுதல் ஆர்வமுள்ள பிரேரணையை எடுத்துக் கொள்ளலாமென்றும் ஓர் உறுப்பினர் முன்மொழிந்தார். ஏற்றுக் கொள்ளத்தக்கதல்ல என்று கருதப்பட்ட முதலாவது பிரேரணையை ஒத்திவைப்பதற்கான ஒரு முயற்சி அது. இங்கு விவாதத்தை ஒத்திப் போடுவதற்கு நான் முன்மொழியவில்லை.

மாண்புமிகு டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் : இதுவெல்லாம் அதற்குத்தான் இட்டுச் செல்கிறது.

திரு. நசிருத்தீன் அகமது: இங்கு நாம் 52வது விதியின் விளக்கம் (வியாக்கியானம்) பற்றி அக்கறை கொண்டுள்ளோம். இந்த விதியின் வெளிப்படையான பொருள். இந்தப் பிரேரணை ஒழுங்கு முறையானது என்பதைக் காட்டும். அந்த விதியை நீக்காமல், இது ஒழுங்குமுறையானது அல்ல என்று கூற முடியாது.

பண்டிட் ஹிருதயநாத் குன்ஸ்ரு (உ.பி.: பொது) : இந்த மசோதா பெருமளவு உணர்ச்சியைக் கிளப்பிவிட்டுள்ளது என்பது உண்மை. எந்தவகையிலாவது விவாதத்தைக் கட்டுப்படுத்துவதன் மூலம் அந்த உணர்ச்சியை மேலும் பெருக்குவது சிறிதும் விரும்பத் தக்கதல்ல. இந்த அவையின் ஒவ்வொரு பகுதியும், இது பற்றித் தமது கருத்தை வெளிப்படுத்துவதற்கு முழு வாய்ப்பு தமக்குக் கொடுக்கப்படுகிறது என்பதை உணரச் செய்வதற்கான ஒரே வழி விவாதத்தைத் தொடர அனுமதிப்பதேயாகும். நமக்கு முன்னால் உள்ள மசோதாவின் தகுதிகள் குறித்து தனிப்பட்ட கருத்துக்கள் எதுவாக இருந்தபோதிலும், என்னுடைய மதிப்புக்குரிய நண்பர் திரு. நசிருத்தீன் அகமதுவின் பிரேரணையை எதிர்ப்பதற்கு அது காரண மாக இருக்கக் கூடாது.

தற்போது பரிசீலனையில் உள்ள ஒரு விஷயத்துடன் சிறிதும் சம்பந்தமில்லாத ஒரு விஷயம் குறித்து சபாநாயகரின் ஒரு தீர்ப்பைப்

பற்றி டாக்டர் அம்பேத்கர் மேற்கோள் காட்டினார். முதலாவதாக, அந்தத் தீர்ப்பு ஒரு தீர்மானம் சம்பந்தமாகக் கொடுக்கப்பட்டதாகும், ஒரு மசோதா சம்பந்தமாக அல்ல. இரண்டாவதாக, ஒரு மசோதா வைப் பொறுத்தமட்டிலும், அந்த மசோதா சுற்றுக்கு விடப்பட வேண்டும் என்பது மட்டுமின்றி, அது மறு சுற்றுக்கு விடவேண்டும், மற்றும் அது ஒரு பொறுக்குக் குழுவின் பரிசீலனைக்கு விட வேண்டும் என்பதுமட்டுமின்றி, அது அதனிடம் மறுபரிசீலனைக்கு விடவேண்டும் என்றும் ஒரு பிரேரணை முன்மொழியப்படலாம் என்று விதிகள் தெளிவாகக் கூறுகின்றன. எனவே அதனுடைய வாசகம் முற்றிலும் தெளிவாக உள்ளது. எப்பொழுதெல்லாம் ஒரு மசோதா மறு பிரேரணைக்கு அல்லது மறு சுற்றுக்கு விடப்பட வேண்டுமென்று ஒரு பிரேரணை முன்மொழியப்பட்டாலும், அது தாமதப்படுத்தும் பிரேரணை என்ற காரணத்தின் பேரில் அது எதிர்க்கப்பட்டாலும், அது, விதிகளின்படி மிகவும் தெட்டத் தெளிவாக உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ள உரிமைகள் முற்றிலும் செல்லாததாகிவிடும். திரு. நசிருத்தீன் அமகதுவின் பிரேரணை யைப் போன்ற ஒரு பிரேரணை நிராகரிக்கபடக்கூடும் என்று நாம் பொறுமையிழக்கலாம். அதை நிராகரிப்பதற்கு நாம் தயாராயிருக் கலாம், ஆனால் அது முன்மொழியப்படுவதற்கு அனுமதி மறுப் பதற்கு அது காரணமாயிருக்க முடியாது. இது மிகவும் ஒழுங்குமுறை யானதுதான் என்பது என்னுடைய தாழ்மையான கருத்து; மேலும் நாம் அனைவரும் மிகுந்த அக்கறை கொண்டுள்ள ஒரு சட்டத்தை நிறைவேற்றுவதற்காக, உறுப்பினர்களின் உரிமைகளை நாம் மட்டுப் படுத்தி விதிகளை, எந்த ஒரு குறிப்பிட்ட சமயத்திலும், பெரும் பான்மையாக இருப்பவர்களுக்கு சௌகரியமான முறையில் வியாக்கி யானம் செய்ய முயன்றால், நாம் பெரும் அநீதி இழைத்தவர்கள் ஆவோம்.

திரு. எல். கிருஷ்ணசாமி பாரதி : ஐயா, ஒரே ஒரு விஷயம் என்னவெனில், விதி 52(2)ன் கீழ், ஒவ்வொரு உறுப்பினருக்கும் உரிமையிருக்கிறது என்பதில் எவ்வித ஐயமுமில்லை. ஆனால் முக்கியமான விஷயமென்னவெனில், அது அனுமதிக்கப்படத் தக்கதா என்பதற்கு உட்பட்டதாகும், இது சபாநாயகரின் உசிதத் தன்மையைப் பொறுத்ததாகும். டாக்டர் அம்பேத்கர் கூறியதெல் லாம், கேள்விகளைக் கேட்பதற்கு நமக்கு உரிமையுண்டு என்பதில் ஐயமில்லை. ஆனால், அதனால் எல்லாக் கேள்விகளையும் நிகழ்ச்சி நிரல் தாளில் அச்சடிக்க வேண்டும் என்று நிச்சயமாக அர்த்த

மாகாது என்பதுதான். அது ஏற்றுக்கொள்ளப்படத்தக்கதா என்பதைப் பொறுத்துள்ளது. சபாநாயகரின் உசிதத்தன்மை உள்ள நிலையில், நாம் இப்பொழுது முடிவு செய்ய வேண்டியதெல்லாம், அது தாமதப்படுத்தும் தன்மையுள்ளதா என்பதை மாத்திரமேயாகும். திரு. நசிருத்தீன் அகமதை, அவருடைய காரணங்களைக் கூறும்படி நாம் கேட்கலாம். தமது பிரேரணையை முன்மொழிவதற்கு அவருக்கு நியாயமான காரணங்கள் இருப்பதாக நீங்கள் திருப்தியடைந்தால், அவரை அதை முன்மொழியும்படி அனுமதிப்பதற்கு உங்களுக்கு விருப்பத்தேர்வு அதிகாரம் உண்டு. எனவே, ஐயா, இப்பொழுது அவரை அதுபற்றிக் கேட்பதும் திருப்தியடைவதும் உங்கள் கையில் உள்ளது. அவருக்கு நியாயமான காரணங்கள் இருப்பதாக நீங்கள் திருப்தியடைந்தால், நிச்சயமாக அவர் அதை முன்மொழியலாம். டாக்டர் அம்பேத்கர் எழுப்பிய விஷயம் அதுதான். ஒவ்வொரு உறுப்பினருக்கும் பேசுவதற்கு உரிமையுண்டு, அவர் தமது வாய்ப்பைப் பெறலாம். நீங்கள் அக்கறை கொள்ள வேண்டியதெல்லாம் நடைமுறையைப் பற்றித்தான். அந்த நடைமுறையானது, ஒரு பிரேரணை அனுமதிக்கப்படத்தக்கதா என்பதேயாகும். அது உங்களுடைய விருப்பத்தேர்வுக்கு உட்பட்டதாகும். அவருடைய காரணங்களைக் கூறுமாறு நீங்கள் திரு. நசிருத்தீனைக் கேட்கலாம் என்று யோசனை கூறுகிறேன். அது ஒரு தாமதப்படுத்தும் தன்மை வாய்ந்த பிரேரணையா என்பதை இறுதியாக நீங்கள்தான் முடிவு செய்ய வேண்டும்; அது அவ்வாறு இருந்தால், நீங்கள் அதை ஒழுங்கற்றது என்று நிராகரித்து விடலாம். ஆனால் காரணங்களைப் பற்றி நீங்கள் திருப்தியடைந்தால், அப்பொழுது அதை முன்மொழிவதற்கு அனுமதிக்கலாம்.

திரு. தாஜாமுல் உசேன்: எழுந்தார் -

பாபு ராம்நாராயண் சிங்: ஐயா, எனக்கு ஒரு முக்கியமான விஷயம் பற்றிச் சொல்ல வேண்டியுள்ளது.

திரு. துணை சபாநாயகர்: ஒழுங்குப் பிரச்சினையைப் பற்றியா?

பாபு ராம்நாராயண் சிங்: ஆம், ஐயா.

திரு. துணை சபாநாயகர்: சரி, சொல்லுங்கள்.

திரு. தாஜாமுல் உசேன் (பீஹார் முஸ்லீம்) : ஐயா, நான்தான் முதலில் உங்கள் கவனத்தை ஈர்த்தேன். எனக்கும் ஓர் ஒழுங்குப் பிரச்சினை இருக்கிறது.

திரு. துணை சபாநாயகர் : இந்த ஒழுங்குப் பிரச்சினையைப் பைசல் செய்தபின், திரு. தாஜாமுல் உசேனின் ஒழுங்குப் பிரச்சினை கவனிக்கப்படும்.

பாபு ராம்நாராயண்சிங் : ஐயா, நீங்கள் ஏற்கனவே விதியை மேற்கோள் காட்டிவிட்டீர்கள். ஒரு விதிக்கு எதிராக எந்த சபாநாயகரும் நிச்சயமாகத் தீர்ப்புக் கொடுக்க முடியாது. விஷயம் இதுதான். சபையில் விவாதத்திலுள்ள ஒரு பொருளின்மீது கருத்துக்கள் வேறுபடலாம். இது மிகவும் இயல்பானதே. மக்களின் ஒரு பகுதியினர் அதை ஒரு வரப்பிரசாதமாகக் கருதலாம். மற்றைய பகுதியினர் அந்த விஷயத்தை ஓர் அபாயம் என்று, ஒரு பிளேக் நோய் என்று, ஒரு சாபக்கேடு என்று கருதக்கூடும். அதை ஒரு சாபக்கேடு என்று கருதும் பகுதிக்கு, பிரேரணையைத் தாமதம் செய்வதற்கு உரிமை இருக்கிறது என்பது மட்டுமன்றி, அதை ஒழித்துக் கட்டுவதற்கும் அதற்கு உரிமை இருக்கிறது. இங்கும்கூட, இந்தப் பகுதிக்கு பிரேரணையை முன்மொழிவதற்கு உரிமை இருக்கிறது என்று நான் நினைக்கிறேன். மற்றும் அவர்களுக்கு எல்லா சலுகைகளும் உரிமைகளும் இருக்க வேண்டும் என்று நீதி கோருகிறது.

திரு. தாஜாமுல் உசேன் : எழுந்தார் -

திரு. துணை சபாநாயகர் : மதிப்புக்குரிய உறுப்பினர் மற்றொரு ஒழுங்குப்பிரச்சினையை எழுப்புகிறார், அடுத்து அதற்கு நான் வருகிறேன்.

மதிப்பிற்குரிய உறுப்பினர் திரு. நசிருத்தீனே இந்த எல்லா ஒழுங்குப் பிரச்சினைகளையும் எழுப்பியிருக்கிறார், இன்று காலை அவர் ஒன்றைத் தொடங்கினார். நுட்ப விஷயங்கள் ஒரு புறமிருக்க, தனது பிரேரணையை சுற்றுக்கு விடவேண்டுமென்று கோருவதில் அவருடைய நோக்கம் என்ன, எத்தகைய முக்கிய பிரச்சினைகளை அவர் பார்வையில் கொண்டிருக்கிறார் என்று திரு. நசிருத்தீனை நாம் கேட்கலாம்.

திரு. நசிருத்தீன் அகமது : நான் நினைக்கிறேன். இந்தப் பிரச்சினை....

பண்டிட் ஹிருதய நாத் குன்ஸ்ரூ: திரு. நசிருத்தீன் அகமது பதில் சொல்வதற்கு முன்பாக, மசோதாவை மீண்டும் சுற்றுக்கு விட வேண்டுமென்று முன்மொழிவதற்கு உள்ள உரிமை சபாநாய கரின் விருப்பத் தேர்வு அதிகாரத்திற்கு உட்பட்டது என்ற முடிவுக்கு நீங்கள் வந்துவிட்டீர்களா என்று நான் உங்களைக் கேட்கலாமா?

மதிப்புக்குரிய உறுப்பினர்: எழுந்தார் -

திரு. துணை சபாநாயகர் : அமைதி, அமைதி, உறுப்பினர்கள் அவைத்தலைவரை மதிக்கவேண்டும். நான் எழுந்து நிற்கும்போது, அவர்கள் தயவுசெய்து அமரவேண்டும். நான் போதுமான அளவு உறுப்பினர்களின் கருத்துக்களைக் கேட்டுவிட்டேன் என்று கருது கிறேன். காரணங்களைக் கேட்பது அவைத் தலைவரின் விருப்பத் தின் பாற்பட்டதல்லவா? இப்படியோ, அல்லது அப்படியோ நான் ஒரு முடிவுக்கு வந்து விட்டேன் என்று இதற்குப் பொருளல்ல. நான் ஒரு முடிவுக்கு வருவதற்கு முயன்று கொண்டிருக்கிறேன். திரு. பாரதியின் கருத்தை நான் அறிந்தேன். விதிகளின்படி, ஒரு பிரே ரணையை அனுமதிப்பதற்கும் அல்லது நிராகரிப்பதற்கும் அவைத் தலைவருக்கு உரிமை இருக்கிறதா என்ற பிரச்சினை ஒரு புறமிருக்க, இந்தப் பிரேரணை எந்தக் காரணங்களின் பேரில் - அவ்வாறு ஏதாவது இருந்தால் - அனுமதிக்கப்பட வேண்டும் என்பதை நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். அதைக் கேட்டதற்குப் பின்னர், என் னுடைய தீர்ப்பை அளிக்கிறேன்.

திரு. நசிருத்தீன் அகமது : அதற்கு என்னுடைய பதில் இரு பகுதிகளைக் கொண்டது. முதலாவது, சட்டப்படி, அந்தப் பிரேரணை ஏற்றுக்கொள்ளத்தக்கதா என்பது; இரண்டாவதாக, அந்தப் பிரே ரணைக்கான காரணங்கள். அவை தகுதி பற்றிய விஷயங்களாகும். தற்போது, பிரசங்கம் செய்யவேண்டாம் என்று அவைத்தலைவர் என்னைக் கேட்டுக் கொண்டிருக்கிறார். மேலும் இந்தப் பிரேரணை ஏன் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும் என்பதற்கு, தகுதிகள் மீதான வாதங்களைக் கூறுவதற்கு நான் முற்றிலும் தடுக்கப்பட்டுள்ளேன். பிரேரணையின் சட்டபூர்வத் தன்மை மற்றும் ஏற்றுக்கொள்ளப் படும் தன்மை ஆகியவற்றுக்கும், சபையினால் அது ஏற்றுக்கொள்ளப் படுவதற்கு அடிப்படையான காரணங்களுக்கும் இடையில் ஒரு வேறுபாட்டைப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன், இந்தக் கட்டத்தில், நான் சமர்ப்பித்துள்ள பிரேரணையை அனுமதிப் பதற்கு, ஐயா, நான் எதும் கூற வேண்டாம் என்று நினைக்கிறேன்.

திரு. துணை சபாநாயகர்: இந்த விஷயம் சம்பந்தமாக நான் போதுமான அளவு கேட்டுவிட்டேன். இந்தப் பிரேரணை தாமதப் படுத்தும் தன்மை வாய்ந்தது என்கிற திரு. தாஸின் கருத்தைப் பொறுத்தமட்டிலும் இந்தப் பிரேரணை, மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் குறிப்பிட்ட பிரேரணையிலிருந்து பொருள் ரீதியில் வேறுபட்டது என்று கருதுகிறேன். அவர் அவைத்தலைவரின் தீர்ப்பு களை மேற்கோள்காட்டி, விவாதத்தை ஒத்திவைப்பது அல்லது தள்ளிவைப்பது சம்பந்தமான தீர்ப்பு எண். 1ஐ உதாரணமாகக் கூறினார். குறிப்பான நடைமுறை விதிகள் இல்லாத தள்ளிவைப்பதற்கான பிரேரணைகள் முன்மொழியப்படும்போது, அவற்றைத் தாமதப் படுத்தும் பிரேரணைகள் என்று கருதுவதும் என்ன சாராம்சமான காரணங்களின் பேரில் விவாதத்தை ஒத்தி வைப்பது அவசியமாகிறது என்று திருப்தியடைவதும் அவைத் தலைவரின் உசிதத்தைப் பொறுத்தது. சுற்றுக்கு விடவேண்டும் என்பதற்கு தற்போதைய பிரேரணையைப் பொறுத்தமட்டிலும், இதற்கு விதி 52(2)ல் வகை செய்யப்பட்டுள்ளது. ஒத்திவைப்புத் தீர்மானங்களின் ஒப்புமையை மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் குறிப்பிட்டார். ஆனால், ஒத்தி வைப்புத் தீர்மானங்கள் சம்பந்தமாக இங்கு திட்டவட்டமான விதிகள் வகுத்தளிக்கப்பட்டுள்ளன. அவை, ஒரு பிரேரணை, அடிப்படை யில் முறைப்படி இருக்கிறதா, இல்லையா என்ற ஒரு முடிவுக்கு வருவதற்கு சபாநாயகருக்கு அதிகாரம் வழங்குகின்றன. விதி 36ஐ நான் குறிப்பிடுகிறேன். கேள்விகளின் விஷயத்தில் போன்றே, ஒத்தி வைப்புப் பிரேரணைகளை முன்மொழிவதற்கான உரிமையும் சில நிபந்தனைகளைச் சார்ந்துள்ளது. ஒரு கேள்வியானது, விதிகளின் கீழ் வகைசெய்யப்பட்டுள்ள ஏதாவது ஓர் இனத்தின் கீழ் வந்தா லொழிய அதற்கு அனுமதி மறுப்பதற்கு சபாநாயகருக்கு உரிமை உண்டு. இதுபோன்றே ஒத்திவைப்புப் பிரேரணைகள் சம்பந்த மாகவும் ஆறு நிபந்தனைகள் இருக்கின்றன, இதுபற்றி சபாநாயகர் திருப்தியடைய வேண்டும். அனுமதி வழங்கப்பட வேண்டுமென்று கேட்பதற்கும் வகை செய்யப்பட்டுள்ளது. முதலாவதாக, இது அவைத்தலைவரின் விருப்பத் தேர்வைப் பொறுத்தது. ஒரு பிரேரணை பொது நலனுக்கு உகந்தது அல்ல, இது மிகவும் பழையது, இத்தியாதி என்று அவர் கருதலாம். இரண்டாவதாக, அதை அனுமதிப்பதற்கு அவர் முடிவு செய்தாலும் அந்தப் பிரேரணைக்கு, அவையின் குறைந்த பட்சம் இருபத்தைந்து உறுப்பினர்களின் ஆதரவு இருக்கிறதா என்று அவர் கேட்க வேண்டும், அதன் பிறகு அது முன்மொழியப்படு வதற்கு அனுமதி வழங்கப்படுகிறது. இத்தகைய நிலைமைகளுக்கு சிறந்த விதிமுறைகள் வகுத்தளிக்கப்பட்டுள்ளன. சுற்றுக்கு விட

வேண்டுமென்பதற்கான தற்போதைய பிரேரணை, மற்றவற்றைப் போன்ற அதே வகையினத்தில் வரவில்லை.

81-ம் பக்கத்தில் உள்ள 120-வது எண் தீர்ப்பைப் பொறுத்த மட்டிலும், அது பொறுக்குக் குழுவின் பிரேரணைகளைக் குறிப்பிடுகிறது. மறு சுற்றுக்கு விடப்பட வேண்டும் என்ற பிரேரணையானது ஒரு தாமதப்படுத்தும் பிரேரணையாகும் என்று கூறும் அவைத் தலைவரின் தீர்ப்பு எதையும் ''அவைத் தலைவரின் முடிவுகள்'' என்ற இவ்விரு புத்தகங்களிலும், என்னால் காண முடியவில்லை. இந்த நிலைமைகளில் அவையின் அதிகாரங்களைக் கட்டுப் படுத்துவதற்கு நான் விரும்பவில்லை. இதனால், நான் பிரேரணையை அனுமதித்தால், அவை அதை ஏற்றுக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளது என்று இதற்கு அர்த்தமாகாது. அது முன்மொழியப்பட்டாலும்கூட, அவை, விவாதத்திற்குப் பிறகு திருப்தியடையாவிட்டால் அதை நிராகரிக்கலாம், இந்த சூழ்நிலைமைகளில், இந்த அம்சம் சம்பந்தமாக முந்தையத் தீர்ப்புகள் தெளிவாக இல்லாததால், இந்தப் பிரேரணையை நிராகரிக்க நான் விரும்பவில்லை. மதிப்பிற்குரிய உறுப்பினர் முன்மொழியலாம். மதிப்பிற்குரிய உறுப்பினர்கள், அவர்களவது பெயர்களில் உள்ள பிரேரணைகள் சம்பந்தமாகவும் மொத்தமாக விவாதம் நடைபெறும் என்று ஏற்கெனவே கூறியிருக் கிறேன். அடுத்த திருத்தம் பண்டிட் முகுத் பீஹாரிலால் பர்கவா மற்றும் ஜுன் ஜுன் வாலா பெயரில் உள்ளது.

பண்டிட் முகுத் பீஹாரிலால் பர்கவா: என்னுடைய மதிப்புக்குரிய நண்பர் திரு. நசிருத்தீன் அகமதுவினால் முன்மொழியப்பட்ட பிரேரணை சாராம்சத்தில் அதேதான். எனவே, நான் அவருடைய பிரேரணையை ஆதரிக்க விரும்புகிறேன்.

திரு. துணை சபாநாயகர் : முன்மொழியாதிருப்பதற்கு அவர் காரணங்களைக் கூற வேண்டியதில்லை. திரு. ஜுன்ஜுன்வாலா என்ன சொல்லுகிறார்?

திரு. பி.பி. ஜுன் ஜுன்வாலா (பீஹார் பொது) : என்னுடைய நண்பர் திரு. பர்கவாவுடன் நான் சேர்ந்து கொள்கிறேன்.

திரு. துணை சபாநாயகர்: எனவே அவர் தமது பிரேரணையை வற்புறுத்தவில்லை. எண் 7, மற்றும் 8வது பிரேரணைகள் முறையற்றவை என்று ஏற்கனவே கூறியுள்ளேன். மசோதாவின்

எல்லைவரம்பு மாகாணங்கள் சம்பந்தமானது மட்டுமே. இந்தியா வுடன் இணையும் சுதேச சமஸ்தானங்கள் இந்த வரம்புக்குள் இல்லை.

திரு. நசிருத்தீன் அகமது: இந்திய டொமினியனுக்குள் தம்மை முழுமையாக ஐக்கியப்படுத்திக் கொண்ட சுதேச சமஸ்தானங் களைப் பொறுத்தமட்டிலும், அவை வேறு நிலையில் உள்ளன. கிழைய சமஸ்தானங்கள் ஒரிஸா மாகாணத்துடன் இணைந்து கொண்டன. அவை இப்பொழுது இந்தியாவின் ஒரு பகுதியே. இந்த மசோதா அவற்றுக்கும் பொருந்தும்.

திரு. துணை சபாநாயகர் : அதை நான் இவ்வாறுதான் புரிந்து கொள்ள முடியும் - அவை ஒரு மாகாணத்தின் பகுதியாகி விட் டனவா, இல்லையா? அவை ஒரு மாகாணத்தின் பகுதிகள் என்றால், மசோதா அவற்றுக்கும் பொருந்தும். கெஜட்டின் (அரசிதழின்) பிரதி களை ஒவ்வொரு கிராமத்திற்கும், நாட்டின் ஒவ்வொரு மூலைமுடுக் குக்கும் அனுப்பப்பட வேண்டிய அவசியமில்லை. ஒரு சமஸ்தானம், ஒரு மாகாணத்தின் ஒரு பகுதியாயிருந்தால் அது, மாகாணத்தின் அனைத்து உரிமைகளையும் பொறுப்புகளையும் எடுத்துக் கொள் கிறது. இந்த மசோதா மீண்டும் சுற்றுக்கு விடவேண்டும் என்பதற்கு எந்தக் காரணத்தையும் நான் காணவில்லை. எனவே, 7வது எண் திருத்தம் முறையற்றது என்று நிராகரிக்கிறேன். எண் 8 திருத்தமும் முறையற்றது. 9வது எண் திருத்தத்தைத் திரு. பர்கவா முன்மொழி கிறாரா?

பண்டிட் தாகூர்தாஸ் பர்கவா: நான் அதை முன்மொழியப் போவதில்லை என்று ஏற்கனவே கூறியுள்ளேன்.

திரு. துணை சபாநாயகர் : அடுத்து, திரு. நசிருத்தீன் அகமது வின் திருத்தம்.

திரு. நசிருத்தீன் அகமது: ஐயா, நான் ஏற்கனவே முன்மொழிந் துள்ளதற்கு ஒரு மாற்றுத் திருத்தமாகப் பின்வருவதை முன்மொழி கிறேன்:

> "முன்பு அனுப்பப்பட்ட அதே பொறுக்குக் குழுவுக்கு இந்த மசோதா மீண்டும் அனுப்பப்பட வேண்டும்; 1948 ஏப்ரல் 9 அன்று அதனிடம் அனுப்பப்பட்ட அசல் மசோதா சம்பந்தமாக, மேற்கொண்டு ஒரு கூடுதல் அறிக்கையை அது அனுப்ப வேண்டும்."

திரு. துணை சபாநாயகர் : திருத்தம் முன்மொழிப்படுகிறது:

> *''முன்பு அனுப்பப்பட்ட அதே பொறுக்குக் குழுவுக்கு இந்த மசோதா மீண்டும் அனுப்பப்பட வேண்டும்; 1948 ஏப்ரல் 9ம் தேதியன்று அதனிடம் அனுப்பப்பட்ட அசல் மசோதா சம்பந்தமாக, மேற்கொண்டு ஒரு கூடுதல் அறிக்கையை அது அனுப்பவேண்டும்.''*

திருமதி ரேணுகா ரே: சபாநாயகரின் தீர்ப்பைக் கொண்டு பார்க்கும்போது இது முறையற்றது என்பது தெளிவு : இது சபாநாய கரின் தீர்ப்புக்கு எதிராகச் செல்கிறது.

திரு. துணை சபாநாயகர் : மறு - சுற்றுக்கு விடும் பிரேரணை அவையின் முன்னால் இருக்கிறது, பார்க்கப் போனால், இந்த பிரே ரணையையும் சபை ஏன் பரிசீலனை செய்யக்கூடாது?

திருமதி ரேணுகா ரே: இது இதற்கு முந்தின நாள் சபாநாயகர் அளித்த தீர்ப்புக்கு எதிராகச் செல்கிறது.

திரு. துணை சபாநாயகர் : இது சபாநாயகரின் தீர்ப்புக்கு எவ்வாறு எதிராகச் செல்கின்றது என்பதை அம்மையார் விளக்கு வாரா?

திருமதி ரேணுகா ரே : பொறுக்குக் குழுவுக்கு அனுப்பப்பட்ட அதே மசோதாதான் இது என்று சபாநாயகர் தீர்ப்பு வழங்கியுள்ளார். எனவே, பொறுக்குக் குழுவுக்கு அது மீண்டும் அனுப்பப்பட வேண்டுமென்ற பிரேரணை சரியானதல்ல. இந்த மசோதாவில் சாராம்சமான மாற்றம் ஏதுமில்லை.

திரு. நசிருத்தீன் அகமது : இதில் பல சாராம்சமான மாற்றங் கள் இருக்கின்றன என்பதை என்னால் சுட்டிக்காட்ட முடியும்.

திரு. துணை சபாநாயகர் : தயவு செய்து அவையில் இனி இது பற்றி யாரும் உரை நிகழ்த்த வேண்டாம். அம்மையார் உறுப் பினர் முன்வைக்கப்பட்ட வாதங்களைப் பொறுத்தமட்டிலும், நான் கருதுவது இதுதான்: பொறுக்குக் குழுவினால் பரிசீலனை செய்யப் பட்ட மசோதா, அதற்கு அனுப்பப்பட்ட மசோதாவினின்றும் வேறானதல்ல என்று சபாநாயகர் கூறினார் என்பது மெய்யே. ஆனால் மீண்டும் அனுப்பப்படுவது பல்வேறு இதர காரணங்களுக் காக, இருக்கலாம். எனவே, பிற காரணங்கள் சம்பந்தமாக ஏதாவது ஆட்சேபம் தெரிவிக்கப்பட்டால் ஒழிய ....

திருமதி ரேணுகா ரே : "அசல் மசோதா" என்ற சொற்கள் அங்கே இடம்பெற்றுள்ளன:

திரு. துணை சபாநாயகர்: அசல் மசோதா மற்றைய மசோதா வைப் போன்றதே. எனவே "அசல் மசோதா" என்று அவர் கூறி யுள்ளார். "அசல்" என்ற சொல்லை நாம் நீக்கிவிடலாம்."

திருமதி ரேணுகா ரே: "அசல்" என்ற சொல் அங்கே இருக்கிறது என்பதைத் தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கிறேன். எனவே, இப்பொழுது நாம் அந்த சொல்லை பிரேரணையிலிருந்து நீக்க முடியாது.

திரு. துணை சபாநாயகர் : பொறுக்குக் குழுவிலிருந்து வெளி வந்த மசோதா அசல் மசோதா என்று சபநாயகர் தீர்ப்பளித்தார். எனவே, "அசல்" என்ற சொல்லைப் பயன்படுத்துவதில் தவறில்லை. அசல் மசோதா பொறுக்குக் குழுவினால் பரிசீலிக்கப்படவில்லை என்று ஆட்சேபம் எழுப்பப்பட்டது. பொறுக்குக் குழுவினால் பரிசீலிக் கப்பட்டது அசல் மசோதாதான் என்று மாண்புமிகு சபாநாயகர் தீர்ப்பளித்தார். எனவே மதிப்புக்குரிய உறுப்பினர் தமது திருத்தத் தில், அசல் மசோதா பொறுக்குக் குழுவுக்கு மீண்டும் அனுப்பப்பட வேண்டும் என்று குறிப்பிட்டிருந்தார். அம்மையார் முன்வைத்த வாதம் அவருடைய ஆட்சேபத்திற்கே எதிராக இருக்கிறது. இந்தப் பிரேரணையில் தவறானது எதையும் நான் காணவில்லை.

திரு. ஆர்.கே. சித்வா : பிரேரணை செய்தவரின் நோக்கம் மிகவும் வேறானது. அவர் இந்த மசோதாவை அசல் மசோதா என்று கருதவில்லை. எனவேதான் அவர், இதை மீண்டும் அதே பொறுக்குக் குழுவுக்கு அனுப்ப வேண்டும் என்று விரும்புகிறார்.

திரு. எச்.வி. காமத்: முன்மொழிந்தவரின் எண்ணம் தெளிவாக இருந்தபோதிலும், என்னுடைய மதிப்புக்குரிய நண்பர் திரு. நசிருத்தீன் அகமது, திருத்தத்தை வரையும்போது ஓரளவு எல்லை மீறிச் சென்று விட்டார் என்று நினைக்கிறேன். இந்த விஷயம் முழுவதையும் அவர் மறுபரிசீலனை செய்து, சில காலம் பொறுத்து இதை மீண்டும் கொண்டுவரும்படி அவருக்கு யோசனை கூறுகிறேன்.

திரு. துணை சபாநாயகர் : "அசல்" என்ற சொல்லை உபயோகப் படுத்தியிருப்பது நிலைமையை எந்த விதத்திலும் பாதிக்கவில்லை

என்று கருதுகிறேன். அதற்கு மாறாக, அசல் மசோதாதான் பொறுக்குக் குழுவுக்கு அனுப்பப்பட்டது என்பது சபாநாயகரின் தீர்ப்பு. அதே மசோதாதான் திருத்தியமைக்கப்பட்ட வடிவத்தில் திரும்ப நமக்கு வந்து சேர்ந்தது. இதை ஓர் ஆட்சேபனையாக நான் ஏற்றுக்கொள்ள முடியாது. இந்த விஷயத்தின் மீது மேற்கொண்டு நேரத்தை செலவிடுவது சரியல்ல.

திருத்தம் எண். 13ஐ இனி முன்மொழியலாம்.

பண்டிட் முகுத் பீஹாரிலால் பர்கவா: என்னுடைய திருத்தம் சாராம்சத்தில் திரு. நசிருத்தீன் அகமது முன்மொழிந்ததைப் போன்றதே. நான் அதற்கு ஆதரவு தெரிவிக்கிறேன். என்னுடையதை முன்மொழியவில்லை.

திரு. துணை சபாநாயகர் : அப்படியெனில், பிற திருத்தங்களை முன்மொழிந்தவர்கள் பேசியதற்குப் பிறகு மதிப்பிற்குரிய உறுப்பினரின் முறை வரும்போது பேசவேண்டும்.

திருத்தம் எண். 14 முன்மொழியப்படவில்லை.

திரு. நசிருத்தீன் அகமது : என்னுடைய திருத்தம் எண். 10 நிறைவேற்றப்பட்டால், பின்னர் என்னுடைய அடுத்த திருத்தத்தை முன்மொழிவதற்கு நான் எண்ணியுள்ளேன்.

திருமதி ரேணுகா ரே : ஓர் ஒழுங்குப் பிரச்சினையை எழுப்புகிறேன். திருத்தம் எண். 15 சபாநாயகரின் தீர்ப்புக்கு எதிராக உள்ளது.

திரு. துணை சபாநாயகர்: சபாநாயகரின் தீர்ப்பு இந்த அம்சத்தை உட்கொண்டிருக்கவில்லை. பொறுக்குக் குழு செய்த மறு-ஏற்பாடு குறித்து இந்த அவை திருப்தியடையாமலிருக்கக் கூடும். எனவே இது பொறுக்குக் குழுவுக்கு அனுப்பப்படவேண்டும் என்ற மூலப் பிரேரணை எடுத்துக் கொள்ளப்படலாம் இந்த விஷயம் சம்பந்தப்பட்ட மட்டிலும் ஒழுங்குப் பிரச்சினை எதுவும் இல்லை.

திரு. நசிருத்தீன் அகமது : ஐயா, அப்படியானால் நான் பின் வருவதை முன்மொழிகிறேன்:

"பொறுக்குக் குழுவுக்கு இந்த மசோதா மீண்டும் அனுப்பி வைக்கப்படும். அதோடு, சபையில் சமர்ப்பிக்கப்பட்ட அசல் மசோதா மீது அறிக்கை

அனுப்ப வேண்டும் என்று அது கேட்டுக்கொள்ளப்பட வேண்டும். தனித் தனியாக சட்டமாக்கப்படுவதற்கு, தன்னிறைவான தனித்தனி பாகங்கள், அத்தியாயங்கள் ஆகியவற்றின் மூல ஏற்பாடு நிலை நிறுத்தப்படவேண்டும்.''

திரு. துணை சபாநாயகர்: *இந்தத் திருத்தத்தை நான் அனுமதிக்க முடியாது என்று கருதுகிறேன். பாகங்கள் மற்றும் அத்தியாயங்களின் மறு - சீரமைப்புக்கு ஆட்சேபம் ஏதும் இருக்கமுடியாது என்ற நிலையில் இந்தத் திருத்தம் ஒழுங்கு முறையற்றது என்று தீர்ப்பளிக்கிறேன்.*

திரு. பி. தாஸ் : *ஐயா, அடுத்த திருத்தம் முன்மொழியப்படுவதற்கு முன்னர், ஓர் உறுப்பினர் ஐந்து திருத்தங்களை முன்மொழியலாமா என்பது குறித்து உங்களுடைய தீர்ப்பைக் கோருகிறேன்.*

திரு. துணை சபாநாயகர்: *மாற்றுத் திருத்தங்களுக்கு அறிவிப்புக் கொடுக்கப்படலாம். மதிப்பிற்குரிய உறுப்பினர் நீண்ட காலமாக இந்த அவையில் இருப்பவர் இதைத் தெரிந்திருக்க வேண்டும்.*

திரு. நசிருத்தீன் அகமதுவின் அடுத்த திருத்தத்தில் ''1949, டிசம்பர் 31'' என்ற சொற்கள் மட்டுமே கூடுதலாக உள்ளன. அவர், திருத்தம் எண். 16ஐ முன்மொழிய வேண்டிய அவசியமில்லை என்று கருதுகிறேன்.

திரு. நசிருத்தீன் அகமது: *அங்கு குறிப்பிடப்பட்டுள்ள பொறுக்குக் குழு வேறொரு பொறுக்குக் குழுவாகும்.*

திரு. துணை சபாநாயகர் : *இந்தத் திருத்தம் முன்மொழியப்படுவதை அனுமதிக்க முடியாது என்று கருதுகிறேன். இந்தப் பிரேரணைக்கு அறிவிப்புக் கொடுக்கும் சமயத்தில், மதிப்பிற்குரிய உறுப்பினர், பொறுக்குக் குழு உறுப்பினர்களின் பெயர்களைக் கொடுத்திருக்க வேண்டும்.*

திரு. நசிருத்தீன் அகமது : *நான் இதை இரு பகுதிகளாகப் பிரித்துக் கொண்டேன். முதலில் பொறுக்குக் குழுவின் கருத்து இருக்கிறது. அது ஏற்றுக் கொள்ளத்தக்கதாயின்......*

திரு. துணை சபாநாயகர் : *இந்த வகைப்பட்ட ஒரு விஷயத்தில் முதலில் தனது கருத்தைத் தெரிவிக்கும்படி அவையைக் கேட்டுக் கொள்ள முடியாது. பொறுக்குக் குழுவுக்கான உறுப்பினர்களின்*

பெயர்களை மதிப்பிற்குரிய உறுப்பினர், முன்னதாக அவைத் தலைவரிடம் கொடுக்காததால், அவருடைய திருத்தம் முறையற்றது என்று தள்ளுபடி செய்யப்படுகிறது.

பொதுப் பிரேரணை மீதான விவாதம் இப்பொழுது மீண்டும் தொடரலாம், சேத் கோவிந்த தாஸை இப்பொழுது பேசும்படி அழைக்கிறேன்.

சேத் கோவிந்ததாஸ் : அவைத் தலைவர் அவர்களே....

திரு. எல். கிருஷ்ணசாமி பாரதி: பொது விவாதத்தின்போது, திருத்தத்தை முன்மொழிந்த மதிப்புக்குரிய உறுப்பினருக்குத்தான் முதலில் பேசுவதற்கான உரிமை இருக்கிறது.

திரு. துணை சபாநாயகர் : இதை, மதிப்புக்குரிய உறுப்பினர் : அவைத் தலைவருக்கு விட்டுவிடட்டும். அவைத் தலைவருக்கு அலுவல் நடைமுறை தெரியும்.

திரு. தாஜாமுல் உசேன்: நீண்ட நேரமாக, ஓர் ஒழுங்குப் பிரச்சினையை எழுப்புவதற்கு நான் முயன்று வருகிறேன். ஐயா, நான் மிகவும் சுருக்கமாக முடித்துக் கொள்கிறேன். மதிப்புக்குரிய உறுப்பினர் திரு. நசிருத்தீன் அகமது, கால்புள்ளி, அரைப்புள்ளி, முற்றுப்புள்ளி முதலிய கால்குறியீடுகள் பற்றி மிகவும் கருத்தாயிருப்பவர், இந்த மசோதா சுற்றுக்கு விடப்பட வேண்டுமென்ற இந்தத் திருத்தத்திற்கு அறிவிப்புக் கொடுத்துள்ளார். இது முற்றிலும் முறையற்றது. மதிப்பிற்குரிய உறுப்பினர் தமது திருத்தத்தின் வாசகத்தை "இந்த மசோதா மறு சுற்றுக்கு விடப்பட வேண்டும்" என்று அமைத்திருந்திருக்கவேண்டும். அதுதான் என்னுடைய ஒழுங்குப் பிரச்சினை. இது சம்பந்தமான விதி இவ்வாறு கூறுகிறது: "பொறுக்குக் குழுவினால் அறிக்கை செய்யப்பட்டுள்ள மசோதா கருத்துப் பெறுவதற்காக அல்லது மேற்கொண்டு கருத்தைப் பெறுவதற்காக மீண்டும் அதனைப் பரிசீலனைக்கு விடவேண்டும், அல்லது மீண்டும் சுற்றுக்கு விட வேண்டும். எனவே, கால் புள்ளி மற்றும் முற்றுப் புள்ளி முதலியவை பற்றி மிகவும் அக்கறையுள்ள மதிப்பிற்குரிய உறுப்பினர், "மேற்கொண்டு கருத்தைத் தெரிந்துகொள்வதற்காக மீண்டும் சுற்றுக்கு விடப்பட வேண்டும்." என்ற சொற்களைப் பயன்படுத்தியிருக்க வேண்டும். எனவே எனது ஒழுங்குப் பிரச்சினை என்னவெனில், இந்தத் திருத்தத்தின் சொல் அமைப்பானது விதிகளின்படி

இல்லாததால், இதை முறையற்றது என்று நிராகரிக்கப்படலாம் என்பதுதான்.

திரு. துணைத் தலைவர்: இந்தப் பிரேரணையை முன்மொழிந்துள்ள மதிப்பிற்குரிய உறுப்பினர் எப்போதும் காலக்குறியீடுகளைப் பற்றி கவனமாக இருப்பவர், 'மறு' என்று சொல்லை முன்வைக்காத பிழையைச் செய்துள்ளார். இது வடிவம் சம்பந்தப்பட்ட விஷயம் என்று நான் முடிவு செய்ய முடியாது. ஆனால் சாராம்சம் சம்பந்தப்பட்ட விஷயம். சுற்றுக்கு விடுவதற்கான இந்தப் பிரேரணை, பொறுக்குக் குழுவின் அறிக்கை பெறப்பட்டதற்குப் பின் வந்துள்ளது. எனவே, இதன் பொருள், இப்பொழுதுள்ள சூழ்நிலைமையில், 'மறு-சுற்றுக்கு விடுவதாகும்.' நான் ஏற்கனவே தீர்ப்புக் கொடுத்து விட்டேன். இந்தத் தீர்ப்பு நிலையானது. சேத் கோவிந்த தாஸ் தொடர்ந்து பேசுவார்.

மாலை 4 மணி

திரு. வி.எஸ். சர்வாத்தே : திரு. துணைத் தலைவர் அவர்களே, மறு-சுற்றுக்கு விடுவதற்கான ஒரு பிரேரணையை நான் ஏற்கனவே கொடுத்துள்ளேன் என்பதை உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அது அந்த இரு பிரேரணைகளின் அடிப்படையிலானது. ஒன்றிணைந்த பட்டியலில் அது ஏன் விடுபட்டுப் போயிற்று என்பதை நானறியேன். இந்த இரு பிரேரணைகளும், 1948, ஆகஸ்டு 21ம் தேதியிட்டவை. மேற்கொண்டு அவையின் நேரத்தை எடுத்துக் கொள்வதற்கு நான் விரும்பவில்லை. நான் பிரேரணையை வாசிக்கிறேன். மேற்கொண்டு விவாதத்திற்கு அது எடுத்துக் கொள்ளப்படலாம். அந்தப் பிரேரணை இதுவே:

> ''பொறுக்குக் குழுவினால் அறிக்கை செய்தபடியான இந்த மசோதா, மேற்கொண்டு கருத்துக்களைப் பெறுவதன் நிமித்தம் மறு சுற்றுக்கு விடப்பட வேண்டும்.''

திரு. துணை சபாநாயகர் : இந்தத் திருத்தத்திற்கான அறிவிப்பு எப்பொழுது கொடுக்கப்பட்டது?

திரு. வி.எஸ். சர்வாத்தே : 1948 ஆகஸ்டு 1ல் அறிவிப்புக் கொடுக்கப்பட்டது. இந்தத் திருத்தம் துணைப்பட்டியல் 2ன் ஒரு பாகமாகும்.

திரு. துணை சபாநாயகர்: பிரேரணை ஆகஸ்டு 1ல் கொடுக்கப்பட்டது. பொறுக்குக் குழுவினது அறிக்கையின் தேதி ஆகஸ்டு 12.

அனேகமாக, ஒரு வாரத்திற்குப் பின்னர் அது சபையின் முன் வைக்கப் பட்டது.

திரு. எல். கிருஷ்ணசாமி பாரதி: ஆகஸ்டு 31ல் பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டது.

திரு. துணை சபாநாயகர் : பிரேரணை சமர்ப்பிக்கப்பட வேண்டிய அவசியமில்லை. இது அறிக்கை சம்பந்தப்பட்டதற்குப் பிறகு செய்யப்பட்டுள்ளது. கூட்ட அமர்வு முடிந்தவுடனே ஏற்கனவே கொடுத்த அறிவிப்புகள் அனைத்தும் காலாவதியாகிவிடுகின்றன. புதிய அறிவிப்புக் கொடுத்திருக்கப்பட வேண்டும். மதிப்பிற்குரிய உறுப்பினர்களுக்கு இதனுடைய பிரதிகள் கிடைத்திருக்கின்றனவா என்று எனக்குத் தெரியவில்லை.

திரு. ஜஸ்பத் ராய் கபூர் : எனக்கு இதனுடைய பிரதி ஒன்று கிடைத்திருக்கிறது. இது ஓர் ஒன்றிணைந்த பட்டியல்: திருத்தங்களின் அறிவிப்பு.... இது அலுவலகத்திலிருந்து 1948 ஆகஸ்டு 28ல் அனுப்பப் பட்டுள்ளது. பட்டியலில் இருபத்திநான்கு திருத்தங்கள் கொடுக்கப் பட்டுள்ளன. திரு. சர்வாத்தேயின் திருத்தம் இந்தப் பட்டியலில் நான்காவதாக உள்ளது.

திரு. துணை சபாநாயகர் : இந்த அறிவிப்புகள் எல்லாம் கடந்த கூட்ட அமர்வுக்குக் கொடுக்கப்பட்டவையாகும். அந்த அமர்வின் முடிவில் இந்த அறிவிப்புகள் எல்லாம் காலாவதியாகி விட்டன. ஒவ்வொரு மதிப்பிற்குரிய உறுப்பினரின் மேஜையின் மீது தற்போது வைக்கப்பட்டுள்ள பிரதிகளில் அடங்கியுள்ள திருத்தங் கள் மட்டுமே பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும். மற்றைய அறிவிப்புகள் காலாவதியாகிவிட்டன. எனவே, சேத் கோவிந்ததாஸ் மேற்கொண்டு விவாதத்தைத் தொடருவார்.

★ **சேத்கோவிந்த தாஸ்** *(இந்தி உரையின் மொழியாக்கம்)* : திரு. துணைசபாநாயகர் அவர்களே, இந்த மசோதாவின் ஆதரவாளர்களை யும், எதிர்ப்பாளர்களையும் நான்கு குழுக்களாகப் பிரிக்கலாம் என்று நினைக்கிறேன், எதிர்க்கும் குழுக்களில் ஒன்றில், சதியை (இறந்து போன கணவனின் உடலோடு சேர்ந்து தன்னையும் மனைவி எரித்துக்

★ அ.நி. (பேரவை) டி., தொகுதி II பாகம் II, 1949 பிப்ரவரி 24, பக். 861-71.

கொள்வதை அதாவது உடன்கட்டை ஏறுவதை) தடை செய்வதற்கான சட்டம் நிறைவேற்றப்பட்ட சமயத்தில் சில எதிர்ப்பாளர்கள் வெளிப் படுத்திய அதே கண்ணோட்டத்துடன் எதிர்க்கும் நபர்கள் உள்ள னர். விதவை மறுமணத்திற்காக, திரு. காலஞ்சென்ற ஈஸ்வர சந்திர வித்தியாசாகர் முயற்சியினால் நிறைவேற்றப்பட்ட இந்த சட்டமும், குழந்தைத் திருமணங்களைத் தடுப்பதற்காக திரு. சாரதா கொண்டு வந்த மசோதாவும் நிறைவேற்றப்பட்டு, சட்டமாகியுள்ளன. சாரதா மசோதாவின்போது, நான் மேலவையின் ஓர் உறுப்பினராக இருந்தேன். அப்போது இந்த மசோதாவை எதிர்த்தவர்களை நான் நேரடியாக (தனிப்பட்ட முறையில்) அறிவேன். அவர்கள், நமது வேதங்கள், சாஸ்திரங்கள், ஸ்மிருதிகள் ஆகியவற்றின் வாசகத்தில் கூறியுள்ளவற்றில் எந்த மாற்றமும் செய்யக்கூடாது என்ற கருத்தைக் கொண்டவர்கள். நான் அந்தக் குழுவைச் சேர்ந்தவனல்ல. நம்முடைய தர்மசாஸ்திரங்களின் குறிப்புகளிலிருந்தும் கூட, ஒரு ரிஷி அவ்வப் பொழுது ஒன்றைக் கூறுவதையும் மற்றொருவர் வேறொன்றைக் கூறுவதையும் காணமுடியும், இவ்வாறில்லாமலிருந்திருந்தால், நம் முடைய ரிஷிகள், நூற்றுக்கு மேற்பட்ட ஸ்மிருதிகளை எழுதியிருக்க மாட்டார்கள். இந்த ஸ்மிருதிகளை நீங்கள் படித்துப் பார்த்தால், ஒரு ஸ்மிருதியில் கூறப்பட்டுள்ள கோட்பாடுகள் மற்றொன்றில் அடங்கி யுள்ள கோட்பாடுகளிலிருந்து வேறுபடுவதை நீங்கள் காண்பீர்கள். அந்த ஸ்மிருதிகளில் ஒவ்வொன்றும் ஒரு வேறுபட்ட கோட்பாட்டை விளக்குகின்றன. நான் ஏற்கனவே கூறியபடி, இதுவரையிலும் கொண்டுவரப்பட்ட அனேகமாக அனைத்து சீர்திருத்தங்களையும் எதிர்த்தவர்களில் நான் ஒருவனல்ல.

இரண்டாவது எதிர்ப்புக்குழு, ஒருபுறத்தில், இந்த விவகாரங் களில் சீர்திருத்தங்கள் கொண்டுவருவதற்கு ஒரு தேவை இருப்பது தெளிவு என்று நம்புகிறது. ஆனால் மறு புறத்தில், இத்தகைய ஒரு சட்டம் இயற்றப்படுவதற்கு இது உகந்த சமயமல்ல என்று அது கருதுகிறது. புதிய தேர்தல்கள் நடைபெற்று, நம்முடைய புதிய பிரதி நிதிகள் தேர்ந்தெடுக்கப்பட்ட பின்னர் மட்டுமே இதைக் கொண்டு வரவேண்டும் என்றும் அது கருதுகிறது. தற்பொழுது இந்து சட்டத் தில் எந்த மாற்றத்தையும் செய்வதற்கு பதிலாக, மூன்றாண்டு களுக்குப் பிறகு இதை நாம் செய்தாலும் எந்தத் தீங்கும் ஏற்பட்டு விடாது என்று நான் கூறவிரும்புகிறேன். இந்த விஷயம் சம்பந்தமாக நாடு முழுமையும், நாம் அனைவரும் சிந்திக்க வேண்டும். இங்கு

அமர்ந்திருப்பவர்கள் அனைவரும் சிந்திக்க வேண்டும். வருங் காலத்தில் இந்த அவையில் வந்து அமரப் போகின்றவர்களும் சிந்திக்க வேண்டும். எனவே, இத்தகைய ஒரு மசோதாவைக் கொண்டு வருவதற்கு இது பொருத்தமான காலமும் அல்ல, இடமுமல்ல என்று இரண்டாவது குழு முன்வைத்துள்ள வாதங்களில் பெருமளவு வலு இருக்கின்றது என்று கருதுகிறேன். இந்தக் காரணத்திற்காகவே, இந்த அம்சத்தை நாம் பரிசீலனை செய்ய வேண்டுமென்று வற்புறுத்து கிறேன்.

நான் கூறியது போன்று, இந்த மசோதாவின் ஆதரவாளர் களையும் கூட, இரு குழுக்களாகப் பிரிக்கலாம்; ஒரு குழு நம்முடைய பழைய சம்பிரதாயங்கள் (மரபுகள்) எதையும் பார்க்க விரும்புவ தில்லை; மற்றும் இந்த நாடு, ஓர் உன்னதமான கடந்தகாலத்தை யும், புகழ்மிக்க வரலாற்றையும், உயர்வான கலாசாரத்தையும், மகத்தான பாரம்பரியங்களையும் கொண்ட பண்டைய நாடுகளில் ஒன்று என்ற உண்மையை அங்கீகரிக்க விரும்புவதில்லை. இத்தகைய வகைப்பட்ட சீர்திருத்தவாதிகள், நம்முடைய கடந்தகாலப் பாரம் பரியம் என்ன, இன்று நமது நாட்டை நாம் எவ்வாறு புனர் நிர்மாணம் செய்யப் போகிறோம் என்பது பற்றிக் கவலைப்படுவதேயில்லை. இந்த சீர்திருத்தவாதிகள் மேலையக் கல்வியின் செல்வாக்குக்குப் பெருமளவு ஆட்பட்டிருக்கிறார்கள். நமது பண்டைக்கால வரலாறு, கலாசாரம் ஆகியவற்றுக்கும், சமூக சீர்திருத்தங்கள் துறையில் பண்டைய மரபுகளுக்கும்கூட சிறிதும் மதிப்பு அளிப்பதில்லை. இந்தப் பண்டைப் புகழ்பெற்ற நாட்டில் அத்தகைய வகைப்பட்ட சீர்திருத்தங்கள், அமலாக்கப்பட்டால், இந்த பாரத வர்ஷம் (இந்தியா) இனி ஒருபோதும் பாரத வர்ஷமாக இருக்காது, அது வேறொன்றாக மாறிவிடும் என்று கூற விரும்புகிறேன். இன்னொரு வகை சீர்திருத்த வாதிகள், சீர்திருத்தங்கள் கொண்டுவரப்பட வேண்டியது அவசியம் என்று நம்புகிறார்கள்: ஆனால், நமது பண்டைய வரலாறு, கலா சாரம், மரபுகள் ஆகியவற்றுக்கு உரிய மதிப்புக் கொடுத்து, அந்தச் சீர்திருத்தங்கள் கொண்டுவரப்பட வேண்டுமென்று விரும்புகிறார் கள். நான் முதல் குழுவில் சேர்ந்தவனல்ல, இரண்டாவது குழுவில் சேர்ந்தவன். சீர்திருத்தங்கள் கொண்டுவரப்பட வேண்டியது மிகவும் அவசியமாகியுள்ளது என்பதை ஒத்துக்கொள்கிறேன்; ஆனால் இவையெல்லாம் இருந்தபோதிலும் நமது பண்டைய மரபுகள், பண்டையக் கலாசாரம், நாகரிகம் ஆகியவற்றை நம் பார்வையில் நிறுத்தி சீர்திருத்தங்களை நாம் செயலாக்க வேண்டும்.

நமது அரசியல் சாசனத்தை நாம் உருவாக்கிக் கொண்டிருக்கும் இந்த சமயத்தில், அடிப்படையான மற்றும் நீதிமன்றத்தில் முடிவு செய்யத்தக்க உரிமைகள் சம்பந்தப்பட்ட ஷரத்துகளை நாம் ஏற்கனவே நிறைவேற்றியுள்ள நிலையில், அடுத்த மே 16க்கும் ஆகஸ்டு 15க்கும் இடைப்பட்ட காலகட்டத்தில் நமது அரசியல் சாசனம் இறுதியாக ஏற்கப்பட்டுவிடும் என்று எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் நிலைமையில், புதிய அரசியல் சாசனத்தின் விதிகளுக்கு இசைவான முறையில் இந்த மசோதா கொண்டு வரப்படுவது மிகவும் பொருத்தமாக இருக்கும். நம் நாட்டை ஒரு 'மதச்சார்பற்ற அரசு' என்று நாம் அழைக்கும்போது இந்த நாட்டிலுள்ள அனைவரும் - அவர்கள் எந்த மதத்தில் நம்பிக்கையுள்ளவர்களாக இருந்த போதிலும், எந்த சமூகத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தபோதிலும் இந்து, முஸ்லீம் சீக்கியர், பார்ஸி முதலியவராக இருந்தாலும், அவர்களுக்கு சமமான குடியுரிமைகள் வழங்கப்பட வேண்டும் என்று ஒத்துக்கொள்கிறோம். எனவே, மாண்புமிகு டாக்டர் அம்பேத்கர், இந்துக்களை மட்டுமே சம்பந்தப்பட்டதல்லாத, இந்த நாட்டின் அனைத்துக் குடிமக்களுக்கும் பொருந்தக் கூடிய வகையில் ஒரு மசோதாவை இந்த அவையில் சமர்ப்பித்திருக்க வேண்டும் என்று கூறுவேன். இந்த நாடு ஒரு 'மதச் சார்பற்ற அரசு' என்று ஒத்துக் கொள்ளும் அதே சமயத்தில், ஓர் இந்து சட்டத் தொகுப்பு மசோதாவைக் கொண்டுவரும் கருத்து மிகவும் பொருத்தமற்றதாக எனக்குத் தோன்றுகிறது. பின்னர், இந்த மசோதாவை இப்பொழுது நாம் ஏற்றுக்கொண்டால், அது........ என்று நாம் ஒத்துக்கொள்ள வேண்டியிருக்கும்.

திரு. ஆர்.கே. சித்வா : மாண்புமிகு டாக்டர் அம்பேத்கர் பண்டைய சாஸ்திரங்களைப்பற்றிக் குறிப்பிட்டார். அந்த சாஸ்திரங்களில் எது, இந்து சட்டத் தொகுப்பின் விதிகளுக்கு விரோதமானது என்பதையும் நீங்கள் சுட்டிக்காட்டலாம்.

சேத் கோவிந்த தாஸ் : இந்த மசோதாவை இப்பொழுது நாம் பார்த்தால், இதிலுள்ள பல ஷரத்துக்களை ஏற்றுக்கொள்வதற்கு எத்தகைய ஆட்சேபனையும் இருக்க முடியாது. இந்த மசோதா, ஒத்திப்போடாமல், சட்டமாக நிறைவேற்றப்படுமேயானால், இந்த ஷரத்துகளை, எத்தகைய சர்ச்சையிலும் இறங்காமல், நாம் இதை நிச்சயமாக ஏற்றுக்கொள்வோம். ஆனால் இதனுடன் கூடவே, இதிலுள்ள பல ஷரத்துகள், ஏற்றுக்கொள்ளப்பட்டால், பெருமளவு தீங்கை ஏற்படுத்தவல்லது, இதிலுள்ள பல ஷரத்துகள் சர்ச்சைக்குரிய தன்மை

வாய்ந்தவை என்று மாண்புமிகு டாக்டர் அம்பேத்கர் அவர்களே இன்று ஒத்துக்கொண்டுள்ளார். இந்த சர்ச்சைக்குரிய பிரச்சினை களைப் பற்றி அவரே போதுமான அளவு விளக்கி எடுத்துக்காட்டி யுள்ளார்.

சர்ச்சைக்குரிய முதலாவது பிரச்சினை என்னவெனில், 'திருமணமும்' 'விவாகரத்தும்'. குறைந்தபட்சம் ஒரு விஷயத்தை ஏற்றுக் கொள்வதற்கு நான் தயாராயிருக்கிறேன்; சாதி முறையை ஒழித்துக்கட்டக் கூடியவகையில் நமது சட்டத்தில் ஏதாவது மாற்றம் செய்ய வேண்டும். ஏதாவது ஒரு பிராமணர் ஒரு சூத்திரரை அல்லது ஒரு சூத்திரர் ஒரு பிராமணரைத் திருமணம் செய்துகொள்ள விரும் பினால், அல்லது பிராமணர் மற்றும் சூத்திரர் என்ற பாகுபாட்டை ஒதுக்கித்தள்ளுவதென்றால், ஓர் இந்து ஒரு முஸ்லீமை அல்லது ஒரு முஸ்லீம் ஓர் இந்துவைத் திருமணம் செய்துகொள்ள விரும்பினால், அல்லது எந்த ஒரு சமூகத்தை (சாதியை) சேர்ந்த உறுப்பினர்களாவது வேறு சாதியைச் சேர்ந்தவர்களைக் கலப்புத் திருமணம் செய்து கொள்ள விரும்பினால், அத்தகைய திருமணங்களை நடத்துவதற்கு எத்தகைய தடையும் இருக்கக்கூடாது. சாதி அமைப்பு நமது நாட்டைப் பாழ்படுத்தியிருக்கிறது. இதன் விளைவாக நமது நாடும் சமுதாயமும் சிறு துண்டுகளாக, மிகச் சிறிய பகுதிகளாகக் கூடப் பிளவுபட்டுள்ளது. விளிம்பு மண்டலத்தில் இன்று இருந்துவரும் இயலாமைகளை நாம் அனைவரும் நன்கு அறிவோம். நாட்டில் ஏற்பட்டுள்ள பிளவின் காரணமாகவே இது நிலவுகிறது. மூத்த குடிமக்களும் இதை அறிவர். இன்றும் கூட அவர்கள் இத்தகைய திருமணங்களை மிகுந்த வெறுப்புடன் பார்க்கின்றனர்.

தங்களுடைய விருப்பங்களுக்கு மாறாக, தங்களுடைய மகன் களையும், மகள்களையும் திருமணம் செய்து கொடுக்கவேண்டி யுள்ளது என்று அவர்கள் கூறுகின்றனர். ஆனால், அத்தகைய சுதந் திரம் கொடுக்கப்படுவதை நான் பூரணமாக ஆதரிக்கிறேன். 'விவாக ரத்தை'க் கூட நான் ஆதரிக்கிறேன். எல்லாத் தீமைகளையும் அகற்று வதற்கான பரிகாரம் என்று கருதப்படக்கூடிய 'திருமணச் சட்டத் தொகுப்பு' இதுவரையிலும் உருவாக்கப்பட (கண்டுபிடிக்கப்பட) வில்லை என்ற எதார்த்தம் ஒரு புறமிருக்க, கணவனும் மனைவியும் ஓர் இணக்கமான வாழ்வை வாழ முடியாமற் போனால், அவர் களுக்கு விவாகரத்து உரிமையை வழங்க வேண்டும் என்பதை இன்னும் நாம் அமலாக்க வேண்டியுள்ளது. மாண்புமிகு டாக்டர் அம்பேத்கர், இந்த நாட்டில் மக்களின் 90 சதவீதம் பேர்கள்

இடையில் விவாகரத்து முறை இருந்து வருகிறது. இந்த 90 சதவீதம் பேர் சூத்திரர்கள் என்று அழைக்கப்படுகிறார்கள். என்னைப் பொறுத்த மட்டிலும் பிராமணனுக்கும் சூத்திரனுக்கும் இடையில் எந்த வேறுபாட்டையும் நான் காணவில்லை. அவர்களைச் சூத்திரர்கள் என்று அழைப்பதுகூட மிகப் பெரிய குற்றம் என்று உணருகிறேன்.

மாண்புமிகு திரு. ஜகஜீவன்ராம் (தொழிலாளர் நலத் துறை அமைச்சர்) : இது இந்து மதத்தின் அடிவேரையே வெட்டவில்லையா?

சேத் கோவிந்த தாஸ்: 90 சதவீதம் மக்களிடையில், சூத்திரர் களிடையில் விவாகரத்து இருந்து வருகிறது. இது விஷயமாகக் கூட, அவர்களின் பழக்க வழக்கங்கள், மரபுகள் ஆகியவற்றுக்கு சிறிதும் மதிப்புக்கொடுக்காமல் இந்த சட்டத்தை நாம் நிறைவேற் றினால், 90 சதவீத மக்கள்.....

திரு. ராஜ்பகதூர் (மத்சயா ஐக்கிய மாநிலம்) : ஐயா, ''தலக்'' (விவாகரத்து) என்ற சொல்லுக்கு இந்தி மொழியில் உள்ள நேர் இணைச் சொல்லைக் கூறும்படி மதிப்புக்குரிய உறுப்பினரை கேட்டுக் கொள்கிறேன்.

சேத் கோவிந்ததாஸ்: மதிப்புக்குரிய உறுப்பினர் இந்தி மொழி யில் கூறப்படுவதன் விளைவுகளைப் புரிந்து கொள்ளவில்லை என்று நினைக்கிறேன். இந்தியில் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ள சொற்கள் அனைத்தும் இந்தியைச் சேர்ந்ததுதான் - 'தலக்'காக இருந்தாலும் வேறு எதுவாக இருந்தாலும் சரி, 'தலக்'கின் நேர் இணைச் சொல்லைத் தெரிந்து கொள்ள வேண்டுமென்று அவர் இன்னும் விரும்புகிறார் என்றால், இதற்கு பதிலாக **''விவாஹ விச்செட்''** (மண வாழ்க்கை உறவுகள் சார்ந்த உரிமைகள் முறிப்பு) என்ற சொற்களைப் பயன்படுத்தலாம்.

அந்த 90 சதவீத மக்களிடையில் இருந்து வரும் மரபுகளையும் பழக்க வழக்கங்களையும் ஒதுக்கித் தள்ளிவிட்டு, இந்த சட்டம் நிறை வேற்றப்படுமானால், அவர்களது மரபான முறையில் அவர்களால் விவாகரத்து செய்துகொள்ள முடியாது என்பது இதன் பொருளாகும், இதனால் அவர்களுக்குப் பல சிரமங்கள் ஏற்படும் என்று உங்களுக்கு சொல்லிக்கொண்டிருந்தேன். எனவே, இது, ஒரு மிகப்பெரிய இடர்ப்பாட்டைத் தோற்றுவிப்பது நிச்சயம். இது, ஒவ்வொருவருக்கும் திருமணம் செய்து கொள்வதற்கும், விவாகரத்து செய்வதற்கும் முழு

உரிமை கொடுக்கப்பட வேண்டுமென்று மாண்புமிகு டாக்டர் அம்பேத்கர் வெளிப்படுத்திய விருப்பங்களுக்கே எதிராகச் செல்லும் எல்லா ஆண்களுக்கும், பெண்களுக்கும் அத்தகைய சுதந்திரம் முழுமையாகக் கொடுக்கப்படுவதை நான் ஆதரிக்கிறேன்.

நம்மிடையே உள்ள சாதி இந்துக்கள் என்று அழைக்கப்படும் 10 சதவீதம் மக்கள், அதாவது, பிராமணர்கள், க்ஷத்திரியர்கள் அல்லது வைசியர்கள், 90 சதவீதமாக உள்ள மக்கள் மீது ஒன்றைத் திணிக்க விரும்புகின்றனர். எண்ணிக்கையில் பத்து சதவீதமாக உள்ள நாம் - அறிவு ஜீவிகளாக உள்ளவர்கள் - 90 சதவீதமாக உள்ளவர்கள் மீது ஒரு சிலவற்றை சுமத்த விரும்புகிறோம். பிராமணர்களும், க்ஷத்திரியர்களும், வைசியர்களும் இந்த சுமையை வைக்கவில்லை, ஆனால் எவ்வாறோ இந்தப் பேரவைக்குள் வந்துவிட்ட நபர்கள்தான் அதைச் செய்கிறார்கள். என்னுடைய சகோதரிகள் திருமதிகள் ஜி. துர்க்கா பாய், ரேணுகா ரே, மற்றும் இந்த சபையில் அமர்ந்துள்ள இதர பெண் உறுப்பினர்கள், அல்லது பார்வையாளர் பகுதிகளில் அமர்ந்திருக்கும் சகோதரிகள் பெண்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறார்கள் என்ற கருத்தை ஏற்றுக் கொள்வதற்கு நான் தயாராக இல்லை என்றும் என்னுடைய சகோதரிகளுக்கு சொல்லிக் கொள்வதற்கு விரும்புகிறேன். இங்கு பிரசன்னமாயில்லாதவர்கள், பார்வையாளர் மாடங்களுக்கு வராதவர்கள், இங்கு அமர்ந்துள்ளவர்களைக் காட்டிலும் மேம்பட்ட முறையில் இந்த நாட்டைப் பிரதிநிதித்துவப்படுத்த முடியும் என்பதை நான் ஏற்றுக்கொள்கிறேன். சில உயர்சாதி மக்கள் தமது கருத்தைக் கீழ்சாதியினர் மீது திணிக்க விரும்புகின்றனர் என்று இன்று கூறப்படும் குற்றச்சாட்டு சரியானதல்ல என்பதை நாம் ஒத்துக் கொள்ளவேண்டும். ஆனால், பத்து சதவீத கல்வி கற்ற மக்கள், எஞ்சியுள்ள 90 சதவீத மக்களின்மீது தமது கருத்தைத் திணிப்பதற்கு விரும்புகின்றனர் என்பதே எதார்த்த நிலை. இந்த நாட்டிலுள்ள மக்களின் சித்தம் என்ன.என்பதைப்பற்றி எதுவும் அறியாதவர்கள், அவர்கள் மீது தங்களுடைய கருத்தைத் திணிக்கக்கூடாது. மக்களது விருப்பத்திற்கு மாறாக உள்ள எந்த சட்டத்தையும் இந்த அவை நிறைவேற்றுவதை நான் விரும்பவில்லை.

திருமதி ரேணுகா ரே: நாம் ஓர் அரசியல் சாசனத்தை தயாரித்து வருகிறோம் என்பதை 90 சதவீத மக்கள் அறிவார்களா?

சேத் கோவிந்த தாஸ் : மக்கள் நமக்கு ஆதரவாக இருக்கின்றனர் என்பதை நாம் அறிவோம். இது உங்களுடைய அக்கறை (கவலை)

மட்டுமே என்பதுபோல் பேசுவது சரியல்ல. அந்த அம்சத்தில் மக்க ளிடத்திலிருந்து ஒரு கட்டளையைப் பெற்று நாம் வந்துள்ளோம்.

இங்கு குறிப்பிடப்பட்ட மற்றொரு அம்சம் 'வாரிசுரிமை' சம்பந்தமானதாகும். வாரிசுரிமை சம்பந்தமான சட்டத்தில் தீவிர சீர்திருத்தங்களைச் செய்வதற்கு நாம் கடமைப்பட்டுள்ளோம் என்று கூறப்படுகிறது. வாரிசுரிமை முறையில் சீர்திருத்தங்களுக்கு நிறைய வாய்ப்பு இருக்கிறது என்பதை நான் ஒத்துக்கொள்கிறேன். வாரிசு உரிமை வழங்கப்படாமல், அதன் காரணமாக மரபாக சொத்துரிமை பெறாமல் விலக்கப்பட்டால், பெண்களுக்கு மிகப்பெரிய அநீதி இழைப்பதற்கு ஒப்பாகும் என்பதையும் ஒத்துக்கொள்கிறேன். பெண் களுக்கு நிச்சயமாக வாரிசுரிமை வழங்கப்பட வேண்டும். எந்த அளவிற்குப் பெண்களுக்கு வாரிசுரிமை வழங்கப்பட வேண்டும் என்ற கேள்வி இப்பொழுது எழுகிறது. இதற்கு ஆதரவாக, மாண்பு மிகு டாக்டர் அம்பேத்கர், மனு மற்றும் யாக்ஞவல்கியரின் ஸ்மிருதி களிலிருந்து மேற்கோள்காட்டி, சொத்தில் நான்கில் ஒரு பங்கை மரபுரிமையாகப் பெறுவதற்கான உரிமையை இந்த ஸ்மிருதிகள் பெண்களுக்கு வழங்கியுள்ளன என்று சுட்டிக்காட்டியுள்ளார். மனு வும், யாக்ஞவல்கியரும் இந்த அபிப்பிராயங்களைக் கொண்டிருந்த போதிலும் கூட, வாரிசுரிமைத் துறையில் சில அபிவிருத்திகள் செய்யப்பட வேண்டியது அவசியம் என்று கூற விரும்புகிறேன். தாய்வழி ஆட்சி முறை இந்த நாட்டிலும், அல்லது உலகிலும்கூட இருந்து வந்த காலம் ஒன்று உண்டு. ஆனால், இன்றைய சமுதாயத் தில் தாய் வழிச் சமுதாய முறை மாற்றப்பட்டு தந்தை-வழி ஆட்சி முறை அமலில் இருந்து வருகிறது. இந்த நாட்டிலும், உலகிலும் தாய்-வழி ஆட்சிமுறை இருந்த வரையிலும், திருமணத்திற்குப் பின்னால் கணவன், மணமகளின் வீட்டில் வந்து தங்கியிருப்பது வழக்கமாக இருந்தபோது, தனது தந்தையின் சொத்தில், மகளுக்கு ஒரு பங்கு இருப்பது மிகவும் பொருத்தமானதாக இருந்தது. ஆனால் என்னுடைய கருத்தின்படி தந்தை-வழிச் சமுதாயமுறை நடைமுறை யில் இருந்து வரும்போது, பெண், தன் தந்தையின் வீட்டிலிருந்து வெளியேறி, தன் மாமனார் வீட்டுக்குச் செல்லும் நிலைமையில், தந்தையின் சொத்திலிருந்து எந்தப் பங்கும் அவளுக்குக் கொடுப்பது பொருத்தமாக இருக்காது. மருமகளுக்கு மாமனாரின் சொத்திலிருந்து பங்கு பெறுவதற்கு உரிமை வழங்கப்பட வேண்டுமென்பது என் னுடைய அபிப்பிராயமாகும். திருமணம் நிறைவு பெற்றவுடனே, மருமகளுக்கு, (தந்தையின் சொத்தில்) மகனுக்குக் கொடுக்கப்படும் அளவுக்கு சமமான பங்கு வழங்கப்பட வேண்டும். இன்று மகன்

முழு உரிமையை அனுபவிக்கிறான். எந்தப் பெண்ணாவது விதவை யானால், அவளுக்கு ஜீவனாம்ச உரிமை அதாவது உணவும் உடை யும் பெறுவதற்கு மட்டுமே தகுதி உண்டு. நான் இதை முற்றாக எதிர்க்கிறேன். எனவே, சொத்தில் பங்கு பெறவதற்குப் பெண்க ளுக்கு, ஐயத்திற்கிடமின்றி, உரிமை வழங்கப்பட வேண்டும் என்று வற்புறுத்துகிறேன்; ஆனால் அது மாமனாரின் சொத்தில் பங்கு பெறுவ தோடு மட்டுமே என்றும் தனது தகப்பனாரின் சொத்தில் அல்ல என்றும் வரையறுத்துக் கொள்ளப்பட வேண்டும்.

திரு. மோகன்லால் கௌதம் *(உ.பி. பொது): மாமனார் இல்லாமற்போனால்?*

சேத் கோவிந்ததாஸ் : *அப்படியெனில், கணவனின் வீட்டில்.*

திரு. மோகன்லால் கௌதம் : *கணவர் இல்லாவிட்டால்?*

சேத் கோவிந்ததாஸ் : *அப்படியெனில், மகனுடைய வீட்டில்.*

திரு. மோகன்லால் கௌதம் : *மகனும் இல்லாவிட்டால்?*

திரு. தாஜாமுல் உசேன்: *அவள் திருமணமே செய்து கொள் ளாமலிருந்தால், பிறகு அவள் என்ன செய்வாள்?*

சேத் கோவிந்ததாஸ்: அது ஒரு தனிப்பட்ட விஷயம். அவர்கள் ஏதாவது ஓர் ஆதாரத்திலிருந்து பெறுவார்கள். இங்கு மேற்கோள் காட்டப்பட்ட உதாரணத்தில் பன்னிரண்டு மகன்களும், பதிமூன்றாவ தாக ஒரு மகளும் இருந்தால், தமது தகப்பனாரின் சொத்தைப் பகிர்ந்து கொள்வதற்கு பன்னிரண்டு மகன்களுக்கும் உரிமை இருக்கும்போது, அதே உரிமை பதிமூன்றாவது மகளுக்கு ஏன் அளிக்கப்படக்கூடாது? பன்னிரண்டு மகன்கள் எல்லோரும் தமது தந்தையின் வீட்டில் வாழ் கிறார்கள் என்று நான் கூறுவேன். பன்னிரண்டு மகன்களும் சொத்தைப் பிரித்துக் கொள்வது அதே இடத்தில்தான் நடைபெறுகிறது.

திரு. கிருஷ்ண சந்திர சர்மா *(உ.பி: பொது): மகளும் தகப்ப னாரின் வீட்டிலேயே வசிக்க விரும்பினால்?*

சேத் கோவிந்ததாஸ் : மகள் மற்றொரு வீட்டை மேற்கொள்ள விருப்பதால், அவள் விஷயத்தில் இது பொருந்தாது. சொத்துக்கு

மரபுரிமை (வாரிசுரிமை) சம்பந்தமாக சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ள மற்றொரு விஷயம் என்னவெனில், உயிலின் உள்ளடக்கத்திற்கேற்ப வாரிசுரிமை பொருந்திவராது. உயில்கள் எழுதப்படாத நிகழ்வுகளில் தகராறுகள் ஏற்படும். இது மட்டுமன்றி, வேறு வகையிலும் தகராறு கள் எழும். ஒரு புகழ்பெற்ற வழக்கறிஞராகிய மாண்புமிகு டாக்டர் அம்பேத்கர், இதுவரையிலும் அமலாக்கப்பட்ட உயில்களில் எவ்வளவு சதவீதம் நீதிமன்றங்களின் முன்கொண்டுவரப்பட்டுள்ளது, மற்றும் எவ்வளவு உயில்களின் மீது வழக்குகள் தொடுக்கப்பட்டுள்ளன என்ற உண்மையை அறிவார். உயில் அமலுக்கு வந்தால், மகன் களோ, அல்லது மகள்களோ, இந்த சட்டத்தின்படி சொத்தைப் பகிர்ந்து கொள்ள முடியாமற் போகும். இந்த சட்டம், அவர்களுக்கு வாரிசுரிமை வழங்குவதற்கு முற்படுகிறது. அந்த சொத்து முழுமை யும் வழக்கறிஞர்களால் விழுங்கப்பட்டுவிடும்.

பின்னர், மேலும் ஒரு நிகழ்வு ஏற்படும். சொத்தில் மகள் களுக்கும் வாரிசுரிமை வழங்கப்பட வேண்டுமென்று மாண்புமிகு டாக்டர் அம்பேத்கர் விரும்புகிறார். தற்சமயம் பிரிக்கப்படாததாக உள்ள நமது சமுதாயத்தில், தகப்பன்மார்கள் உயிலைத் தயாரிக்கும் போது, தமது புதல்விகளுக்கு எதையும் மரபுரிமையாக வழங்க மாட்டார்கள்; புதல்வர்களுக்கு மட்டுமே வழங்குவார்கள். இவ்வாறு, இது பெண்களுக்கு வாரிசுரிமை வழங்க வேண்டுமென்று நீங்கள் விரும்பும் நோக்கத்தையே சிதறடித்துவிடும். வாரிசுரிமை சம்பந்த மாக, டாக்டர் அம்பேத்கரே ஒத்துக்கொண்டபடி, இது ஒரு மிகவும் சிக்கலான விஷயம் என்று கூற விரும்புகிறேன். நமக்கு அது அவ்வாறுதான் காணப்படுகிறது - நாம் சோஷலிஸ்டுகளாகவோ, கம்யூனிஸ்டுகளாகவோ இல்லாமலிருக்கலாம் - ஒருபுறத்தில், இந்த நாட்டில் தொழில்கள் வளர்க்கப்பட்டு வரவில்லை என்று தொழிலதி பர்கள் குரல் எழுப்பியுள்ளனர். மறுபுறத்தில், வாரிசுரிமை புறந் தள்ளப்பட்டுள்ளது. எனவே, தனிச் சொத்துரிமை முறையை ரத்து செய்வது நல்ல ஏற்பாடாக இருக்கும். இந்தத் தனியார் உடைமை ஒழிக்கப்பட்டு, ஒரு புதிய சமுதாயம் உருவானதற்குப் பின்னர் - அந்த சமுதாயத்தின் கட்டமைப்பு சோஷலிச மற்றும் கம்யூனிசக் கோட்பாடுகளின் அடிப்படையில் அமைய வேண்டுமென்று நான் கூறவில்லை - தனிப்பட்ட உடைமைகள் ஒழிக்கப்பட்டதற்குப் பின்னர் ஒரு புதிய வகைப்பட்ட சமுதாயம் கட்டியமைக்கப்பட வேண்டும் என்ற கருத்தை நான் உருவாக்கிக் கொண்டுள்ளேன். நமது தொழில் முதலாளிகள் இதில் கவனம் செலுத்துவார்களே யானால், இந்தச் செல்வம் இனி ஒரு போதும் தங்களுக்கு நிம்மதி

அளிக்கும் ஆதாரமாக இருக்காது என்பதை அவர்கள் காண்பார்கள் என்பதில் எனக்கு ஐயமில்லை. நானும் முதலாளித்துவ வர்க்கம் என்று கூறப்படும் அந்த வர்க்கத்தைச் சேர்ந்தவன்தான். ஆனால் இந்த, சேமித்து குவித்து வைக்கப்பட்டுள்ள செல்வத்திலிருந்து யார் மெய்யான மகிழ்ச்சியை, இன்ப வாழ்க்கையைப் பெறுகிறார்கள் என்பதை நாம் பார்க்கிறோம். அரை சேர், அல்லது முக்கால் சேர் உணவுடன் ஓர் ஏழைமனிதனை தெவிட்டச் செய்யும் அதேபொழுதில் 10 அல்லது 20 சேர் உணவைக் கொண்டு தனது வயிற்றை நிரப்பி ஜீரணிக்கக்கூடிய எந்த முதலாளியையும் நான் கண்டதில்லை. அதேபோன்று ஐந்து அல்லது ஆறு கெஜம் துணியை மட்டுமே ஒரு ஏழை அணிந்துகொள்ளும் அதேபொழுதில் ஒரே சமயத்தில் சுமார் 100, 200 அல்லது 400 கெஜம் துணியை அணிந்துகொள்கிற எந்த முதலாளியையும் நான் கண்டதில்லை.

மாண்புமிகு மௌலானா அப்துல் கலாம் ஆசாத் (கல்வி அமைச்சர்) : சிலர் அவ்வாறு அணிந்து கொள்ளவும் செய்கிறார்கள்!

சேத் கோவிந்த தாஸ் : நான் மாளிகைகளில் வசித்துப் பழக்கப் பட்டவன். எந்த ஒரு முதலாளியாவது தனது மாளிகையின் பெரிய கூடங்களில் ஒன்றில் தூங்க வைக்கப்பட்டால், அவரால் நிம்மதி யாகத் தூங்க முடியாது. தூங்குவதற்கு சுமார் 12க்கு 14 அடி பரப்புள்ள ஓர் அறைபோதும். தற்காலத்தில் செல்வம் பணக்காரர்களுக்கும்கூட துன்பம் ஏற்படுத்துவதாகி விட்டது. இது இல்லாதவர்கள் அதைப் பெறுவதற்கு விரும்புகிறார்கள்; அதைப் பெற்றிருப்பவர்கள் அதன் காரணமாகவே பெரும் இன்னல்களை அனுபவிக்கிறார்கள், அவர் களால் அமைதியாக வாழ முடியவில்லை.

மாண்புமிகு மௌலானா அப்துல் கலாம் ஆசாத் : நாம் அதைக் கைவிடவும் அவர்கள் விரும்பவில்லை!

சேத் கோவிந்ததாஸ் : அவர்கள் அதைக் கைவிட விரும்ப வில்லை. ஏனெனில், அந்தச் செல்வத்தை ஒதுக்கித் தள்ளுபவர் சமூகத்தில் பெரும் மதிப்புடன் பார்க்கப்படுகிறார்.

திரு. சீதாராம் எஸ். ஜாஜு (மத்திய பாரத்) : இதைக் கைவிடு பவர், அல்லது தருமம் செய்பவரும் அதே அளவில் மதிக்கப்படு கிறார்.

சேத் கோவிந்த தாஸ் : அனைத்து முதலாளிகளும் திருடர்கள், கொள்ளைக்காரர்கள், வழிப்பறி செய்பவர்கள் என்று நமது சோஷலிஸ்டுகளும் கம்யூனிஸ்டுகளும் குற்றஞ்சாட்டுகிறார்கள். சில சோஷலிஸ்டுகளும், கம்யூனிஸ்டுகளும் இக்கருத்திலிருந்து வேறுபடக் கூடும். அவர்கள் எல்லோரும் இக்கருத்தைக் கொண்டிருப்பதாக நான் கூறமுடியாது. ஆனால் அவர்களில் பலர் இந்த செல்வத்தைப் பெற முடிந்தால், தமது சோஷலிஸ, கம்யூனிசக் கொள்கையைக் கைவிட்டு விடுவார்கள். செல்வத்தை சேமித்துக் குவித்து வைத்திருப்பவர்களை இன்றைய தினமும் கூட சமுதாயம் மதிக்கிறது. முதலாளிகளை எதார்த்தத்தில் கொள்ளைக்காரர்களாகவும் திருடர்களாகவும் பார்க்கும் வகையில் சமுதாயத்தின் கண்ணோட்டங்களையும் சீலங்களையும் நாம் சீரமைக்க வேண்டும். அப்பொழுதுதான், எந்த முதலாளியும் இந்த விலங்கைத் தனது கழுத்தைச் சுற்றி அணிய விரும்ப மாட்டார் என்று கூறுவேன். எனவே, வாரிசுரிமை என்ற இந்த சிக்கலான பிரச்சினைக்குத் தீர்வு காணும் நோக்கத்துடன், நமது மாண்புமிகு சட்ட அமைச்சர் டாக்டர் அம்பேத்கர், தனியார் உடைமை முறையை ரத்துசெய்ய முயலும் ஒரு சட்டத்தைக் கொண்டு வர வேண்டுமென்று வற்புறுத்துகிறேன். இதன் மூலம், இதற்கு இரையாகியுள்ள மக்களின் நிலைமையை மேம்படுத்த வேண்டும்.

திருமதி ஜி. துர்க்காபாய் (சென்னை : பொது) : நீங்கள் அதை எதிர்க்க மாட்டீர்களா?

சேத் கோவிந்த தாஸ் : இந்த மசோதாவில் உள்ள இந்த இரு அம்சங்கள் மட்டுமே பெருமளவு சர்ச்சைக்கு உரியவை என்று நான் கருதுகிறேன். இப்பொழுதுள்ள போக்கை மனதிற் கொண்டும், எத்தகைய சர்ச்சையிலும் ஈடுபடாமலும் புதிய சட்டப் பேரவை அமைக்கப்படுகின்றவரையிலும் இந்த மசோதாவை சட்டமாக்குவதை ஒத்திப்போட வேண்டுமென்பதே என்னுடைய அபிப்பிராயமுமாகும். இதற்கிடையில், இது சம்பந்தமாக மக்களின் கருத்தைக் கேட்டுப் பெறவேண்டும்; மக்களின் விருப்பங்களைத் தெரிந்து கொண்டபின்னர், புதிய தேர்தல்கள் நடத்தப்பட்டவுடனே இந்த மசோதாவை நாம் கொண்டுவரவேண்டும். இந்த மசோதாவை இந்து சட்டத் தொகுப்பு என்ற வடிவத்தில் நாம் முன்வைக்கக்கூடாது. நாட்டிலுள்ள ஒவ்வொரு குடிமகனுக்கும் உரிமைகளை வழங்குகிற அரசியல் சாசனத்தை நாம் நிறைவேற்றிய அதே முறையில், இதை நிறைவேற்றுவதே முறையான வழிமுறையாக இருக்கும்.

டாக்டர் மனோமோகன் தாஸ் (மேற்கு வங்கம் : பொது) : ஐயா, ஓர் ஒழுங்குப் பிரச்சினை, இத்தகைய விவாதத்தை அனுமதிப்பதற்குக் காலவரம்பு இல்லையா?

துணை சபாநாயகர் : காலவரம்பு இல்லை.

சேத் கோவிந்த தாஸ்: இந்த சொற்களுடன் நான் முடித்துக் கொள்கிறேன். நமது சமூக சட்டங்களில் சீர்திருத்தங்கள் செய்யப் படுவது மிக மிக அவசியம் என்று கருதுகிறேன். 'சதி' (உடன்கட்டை ஏறுதல்) அகற்றப்படுதல், விதவை மறுமணம், குழந்தைத் திருமணங் களைத் தடுத்தல் சம்பந்தமான சட்டங்களை நிறைவேற்றும்போது அவற்றை எதிர்த்தவர்களே, அதே முறையில் இந்த மசோதாவையும் எதிர்க்கிறார்கள் என்பதை நான் ஒத்துக்கொள்கிறேன். அவர்கள் இதை எதிர்ப்பதன் மூலம் சரியான பாதையைக் கடைப்பிடிக்க வில்லை. ஆனால் இதோடு கூடவே, இந்த மசோதா, பொருத்தமான சமயத்தில் பிரேரேபிக்கப்படவில்லை என்பதையும் ஒத்துக்கொள் கிறேன். இதைப் பரிசீலனை செய்வதை தற்போதைக்கு நாம் ஒத்தி வைக்கவேண்டும். பொதுமக்களின் அபிப்பிராயத்தைக் கேட்டுத் தெரிந்து கொண்ட பின்னரே இதை நாம் பிரேரேபிக்க வேண்டும். இந்தச் சொற்களுடன், நான் இந்த மசோதாவை ஆதரிக்கவுமில்லை, எதிர்க்கவுமில்லை.

***திருமதி சுசேதா கிரபளபானி** (உ.பி. பொது) : ஐயா, முழு அதிகாரம் படைத்த ஒரு சட்டப் பேரவை நமக்கு ஏற்பட்டதிலிருந்து, இந்த இந்து சட்டத்தொகுப்பு மசோதாவைக் காட்டிலும் வேறு எந்த ஒரு மசோதாவும் கூடுதல் பரபரப்பையும், சர்ச்சையையும் தோற்று வித்ததில்லை. இந்த சர்ச்சை அனைத்தும் நியாயத்தையும், இந்து சட்டத்தில் கொண்டுவர உத்தேசித்துள்ள மாற்றங்களின் தகுதிகளை யும் அடிப்படையாகக் கொண்டிருந்திருக்குமேயானால், அது நன்மை யானதாக இருந்திருக்கும்; ஆனால், பெரும்பாலான சர்ச்சை பொருத்தமற்ற பிரச்சினைகளால் எழுப்பப்பட்டுள்ளது. மதத்திற்கு ஆபத்து என்ற வாதம்தான் மசோதாவிற்கு எதிரான பெரும்பகுதிப் பிரச்சாரத்திற்குக் காரணமாகும். இது இந்து மதத்தின் அடித்தளத் தையே உலுக்கிவிடும் என்று வாதிக்கப்பட்டுள்ளது. இத்தகைய வாதத்தை முன்வைப்பவர்கள் தமது சொந்த மதத்திற்கே பெரும் அநீதி இழைக்கிறார்கள்.

★ அ.நி. (சட்டப்பேரவை) டி. தொகுதி II, பாகம் II, 1949, பிப்ரவரி 24, பக். 866-924.

இந்து மதமானது தனிமனிதனின் ஆன்மீக விடுதலை, சுய-விமோசனத்தை நோக்கிய அவருடைய மனமாற்றம் ஆகிய வற்றின் மீதே பிரதானமாக அக்கறை கொண்டுள்ளது. ஒரு தனி மனிதனின் சுய - நிறைவுக்கு வாய்மை, நீதி, அகிம்சை முதலிய சில தார்மீக மற்றும் ஆன்மீகக் கோட்பாடுகள் தேவைப்படுகின்றன. இவையெல்லாம் நமது வேதங்களில் பொதிந்துள்ளன. இவை மாற்றப்பட முடியாதவையும், அடிப்படையானவையுமாகும். காலங் காலமாக உருவாகி வந்துள்ள சமூக ஏற்பாடுகளும், நிறுவனங்களும், மரபுகளும், பழக்கவழக்கங்களும் மதமல்ல, இந்து சட்டத் தொகுப் பானது இந்து மதத்தை பாதிப்பதற்கு முயலவில்லை; இந்து சிவில் சட்டத்தை திருத்துவதற்கும் மாற்றியமைப்பதற்குமே முயல்கிறது. அவ்வப்பொழுது சட்டம் மாற்றமடைந்துள்ளது. அது மதத்திலிருந்து வேறானது, அது ஒருபோதும் மாற்றப்பட முடியாததோ, இறுகிப் போனதோ அல்ல. **தர்ம சாஸ்திரங்களின்** மூலாசிரியர்கள், குறிப் பிட்ட சமயத்தில் உள்ள சமுதாயத்தின் உணர்வுக்கு ஏற்ப, அவ்வப் பொழுது சட்டத்தை மாற்றியுள்ளனர். மாற்றங்களைச் செய்வதற் குள்ள உரிமையை **தர்ம சாஸ்திரம்** நன்கு அங்கீகரித்துள்ளது. பிரிட்டிஷ்காரர்கள் இந்தியாவிற்கு வந்த பிறகுதான் இந்து சட்டம் இறுகிப்போயிற்று. தேக்கமடைந்து நின்றது.

அடிப்படைகள் மாறாமல் அப்படியே நிலையாக இருந்து வந்துள்ள அதே சமயத்தில், இந்து சமூக நிறுவனங்கள், மாறிவரும் சூழ்நிலைமைகளுக்கு ஏற்ப மாற்றமடைந்து வந்துள்ளன. தொடர்ந்து, நிலைமைக்குத் தன்னைத் தகவமைத்துக் கொண்டுவந்திருப்பதே இந்துமதத்தின் வலிமையும் சாரமும் ஆகும். இந்து சமுதாயம் தேக்க மடைந்து மாண்டுபோன நிலையிலிருக்கவேண்டும் என்று எண்ணி னால் ஒழிய, மாறிவரும் சூழ்நிலைமைகளுக்குப் பொருந்துகின்ற வகையில் சட்டம் நிச்சயமாக மாற்றமடைய வேண்டும். ஸ்மிருதி களும் மாற்றமடையாமல் இருக்கவில்லை என்பதையும் நாம் அறிவோம். வாரிசுரிமை, திருமணம் பற்றியவையல்லாது சட்டத் தின் இதர பிரிவுகளும் ஸ்மிருதிகளில் அடங்கியிருந்தன. இந்திய சட்டப்பேரவை இவற்றைப் பரிசீலித்துள்ளன, அவற்றில் சில, மாற்றப்பட்டுமுள்ளன. இந்து மதம் நிலை தடுமாறி வீழ்ந்து விட வில்லை. அது அந்த அதிர்ச்சியை வென்று மீண்டுள்ளது. இந்த மாற்றங்களின் அதிர்ச்சியை இந்து மதம் தாங்கி நின்று மீண்டுள்ளது

எனில், மேற்கொண்டு ஒரு சிறிய மாற்றத்தின் அதிர்ச்சியையும் இந்து சமுதாயமும் மதமும் நிச்சயமாக சமாளித்து நிற்கும்.

மகத்தான முக்கியத்துவம் வாய்ந்த சமூக சட்டங்களையும் நாம் நிறைவேற்றியுள்ளோம். உடன்கட்டை ஏறுதலை நாம் ஒழித்துக் கட்டியுள்ளோம்; குழந்தைத் திருமணத்தைத் தடைசெய்துள்ளோம்; தீண்டாமையையும் பெருமளவுக்கு ஒழித்துள்ளோம். இந்து மதம் மிகவும் பரந்த நோக்கும் தாராளமனப்பான்மையும் உள்ள மதமாகும். எனவே, மதத்திற்கு அபாயம் என்ற வாதம் அணுவளவும் ஏற்கத்தக்கதல்ல. இந்த தாராள மனப்பான்மையும் பரந்த நோக்கும் உள்ள மதத்தின் அரவணைப்புக்குள் பல்வேறு கருத்துக்கள், மரபுகள், பழக்கவழக்கங்கள் உள்ள மக்கள் அடைக்கலம் பெற்று வாழ்ந்துள் ளனர். இன்று எத்தகைய நிலையைக் காண்கிறோம்? நமது சொந்த மதத்திலேயே நாம் ஏன் நம்பிக்கை இழந்து மதத்திற்கு ஆபத்து என்ற கூக்குரல் எழுப்புகிறோம்? நம்மை எதிர்ப்பவர்கள் அனைவரும் வைதீகமானவர்களும் பிற்போக்காளர்களும் என்று நான் கூற விரும்பு வதாக இதற்குப் பொருளல்ல. உங்களுடைய கருத்தோட்டத்தை வலியுறுத்துவதன் வாயிலாக, இந்த வாதத்தை நீங்கள் முன்வைக்கும் போது உங்களுடைய மதத்திற்கே நீங்கள் அநீதி இழைக்கிறீர்கள் என்று சுட்டிக்காட்டுவதற்கு மட்டுமே நான் விரும்புகிறேன்.

இந்த மசோதா இப்பொழுது பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப் பட்டிருக்கக்கூடாது என்பதும், மக்கள் இந்த மசோதாவின் ஷரத்து களைப் பரிச்சயம் செய்து கொள்வதற்கு நாம் போதிய அவகாசம் கொடுக்கவில்லை என்பதும் மற்றொரு வாதமாகும். நான் அறிந்த வரையில், இந்த மசோதா இந்த அவையின் முன்னும், நாட்டின் முன்னும் சுமார் கடந்த பத்தாண்டுகளாக இருந்து வந்துள்ளது. இந்த மசோதாவில் அடங்கியுள்ள சில நடவடிக்கைகள், வாரிசுரிமை மசோதா, திருமண மசோதா போன்றவை 1943ல் இந்த அவையில் அறிமுகம் செய்து வைக்கப்பட்டன என்று நினைக்கிறேன். இந்து சட்டம் சம்பந்தமானக் குழு 1944ல் அமைக்கப்பட்டது. அதனுடைய அறிக்கை 1945 அல்லது 1946ல் வெளியிடப்பட்டது என்று நினைக் கிறேன். மசோதாவின் முன்வரைவு பதிமூன்று இந்திய மொழி களில் மொழிபெயர்க்கப்பட்டது. இந்த வரைவு மசோதாவின் ஆயிரக் கணக்கான பிரதிகள் சுற்றுக்கு விடப்பட்டன.

இதற்குப் பின்னரும்கூட, இந்து சட்டத் தொகுப்பின் ஷரத்து களைப் பற்றி நமக்குத் தெரியவில்லையென்றால், அது நம்முடைய தவறே அல்லாமல் அரசின் தவறு அல்ல. தவிரவும், மசோதாவை ஒரே நாளில் நிறைவேற்றி விடமுடியாது. அதைப் பரிசீலனை செய் வதற்கு நமக்கு போதிய அவகாசம் தேவைப்படும். அதை விபரமாக ஆராய்வதற்குப் பெருமளவு காலம் தேவை. அந்த சமயத்தில் மக்க ளிடத்தில் செல்வதற்கும், மசோதாவின் ஷரத்துகளைப் பற்றி மக்கள் அறிந்துகொள்ளச் செய்வதற்கும், அவர்களது கருத்தைத் தெரிந்து கொள்வதற்கும் நமக்குப் போதிய வாய்ப்புக்கிடைக்கும். அடுத்த பொதுத் தேர்தல் வரையிலும் இந்த மசோதா ஒத்திப்போடப்பட வேண்டுமென்று ஒரு ரகசியப் பிரசாரம், ஒரு விநோதமான பிரசாரம் நடத்தப்பட்டுவருகிறது. அதை ஏன் ஒத்திப்போடவேண்டும்? நமது கட்சியின் செல்வாக்கை இது மோசமாக பாதிக்கக்கூடும் என்று காரணம் கூறப்படுகிறது. இத்தகைய வாதங்களைக் கூறுவது காங் கிரசுக்குப் பொருத்தமானதா அல்லது தகுதி உடையதா? நமது கடமைக்கு முன்னதாக நமது செல்வாக்கைப் பற்றி நாம் எப்போ தாவது கருதியிருக்கிறோமா? ஒரு மசோதா நியாயமானது என்று நாம் கருதினால், ஒரு மசோதா மக்களுக்கு நன்மை பயக்கக்கூடியது என்று நாம் கருதினால், அப்பொழுது அதை நிறைவேற்றுவதற்கு முன் செல்வது நமது கடமையாகும். அடுத்த தேர்தலில் வாக்கு களைப் பெறுவதற்காக ஒரு மசோதாவை தள்ளிப்போடுவது சரி யல்ல. இவ்வாறு செய்வது நேர்மையல்ல என்று கூட நினைக்கிறேன். மக்களின் நலனையே நாம் எப்போதும் மிகவும் உயர்வானதாகக் கருதிவந்துள்ளோம். இந்தக் கண்ணோட்டத்தை நாம் மேற்கொள்ளா விட்டால், இந்த மனோபாவத்தை நாம் மேற்கொள்ளாவிட்டால், எந்த தீவிர மாற்றத்தையும் நம்மால் கொண்டுவர முடியாது. நமது வாழ்க்கையின் எந்தத் துறையாக இருந்தாலும், ஒரு தீவிர மாற்றத்தைக் கொண்டுவருவதற்கு முயலும்போது, சில ஆதிக்க நலன்களையும் ஏதாவது நிலையான மரபையும் நிச்சயமாக நாம் எதிர்கொள்ள வேண்டியிருக்கும். இத்தகைய மாற்றங்களுக்கு நிச்சயமாக எதிர்ப்புக் குரல் இருக்கவே செய்யும். இதை முன்னிட்டு நாம் சீர்திருத்தத்தைக் கைவிட்டால் பின்னர் நம்மால் ஒருபோதும் எதையும் மாற்ற முடியாது.

ஒரு விஷயத்தை இங்கு சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இந்து சட்டத் தொகுப்பு மசோதாவுக்குப் பெருமளவு எதிர்ப்பு இருப்பதாக நிறையப் பேசப்பட்டுள்ளது. அதே சமயத்தில் இந்த மசோதாவுக்கு

அறிவார்ந்த, சிந்தனைபூர்வமான ஒரு பெருங்குழுவினர் ஆதரவு தெரிவித்துள்ளனர் என்பதையும் மிகவும் தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். அந்த அறிவார்ந்த, சிந்தனை பூர்வமான குழுவில் இருப்பது பெண்கள் மட்டுமல்ல. இந்த நடவடிக்கையில் ஏராளமான சகோதரர்களும் நம்முடன் உள்ளனர். வரலாற்றில், பிற நாடுகளில் எப்பொழுதெல்லாம் ஒரு தீவிரமான மாற்றம் அறிமுகம் செய்து வைக்கப்பட்டதோ, எப்பொழுதெல்லாம் ஒரு சீர்திருத்தம் அமலுக்குக் கொண்டு வருவதற்கு முயலப்பட்டதோ, அப்பொழு தெல்லாம் ஒரு சிறிய உணர்வு பூர்வமான சிறுபான்மையினர்தான் அந்த லட்சியத்திற்காகப் பாடுபட்டனர், பொது மக்களுக்கு போதனை அளித்தனர், பிரசாரம் செய்தனர். அதற்கு சில காலத்திற்குப் பின்னர், பொது மக்கள் அதற்கு ஆதரவாகத் திரண்டனர். எனவே, இந்து சட்டத் தொகுப்பிற்கு எதிரான அபிப்பிராயம் ஓரளவு இருந்த போதிலும், நாம் மேற்கொள்ளும் முயற்சி நியாயமானதாகவும், சரியானதாகவும் இருந்தால், பொதுமக்கள் அபிப்பிராயம் நமக்கு ஆதரவாகத் திரளும் என்பதில் எனக்கு மிகவும் நிச்சயமான நம்பிக்கை உண்டு. அவர்கள் நம்முடன் வருவார்கள் என்பது மட்டுமன்றி, நாளடைவில் அவர்கள், நாம் நிறைவேற்றிய ஒரு நல்ல சட்டத்திற் காக நமக்கு ஆசியும் கூறுவார்கள் (மதிப்பிற்குரிய ஓர் உறுப்பினர்: "அவர்கள் ஏற்கனவே நமக்கு ஆதரவாக உள்ளனர்.") பெரும்பான்மை யோர் தங்களுக்கு ஆதரவாக உள்ளனர் என்றும் அவர்கள் கூறுகிறார் கள். எனவே, இதுதான் என்னுடைய பதில்.

சூடான விவாதத்திலும், சர்ச்சையிலும் இந்த மசோதாவில் இருப்பது வாரிசுரிமை மற்றும் திருமணம் சம்பந்தமான ஷரத்துகள் மட்டுமல்ல என்பதை நாம் பல சந்தர்ப்பங்களில் மறந்து விடுகிறோம். ஒரு சீரான மற்றும் முழு சட்ட அமைப்பை உருவாக்குவதற்கு நாம் முயன்றுள்ளோம். இந்த சட்டத்தில் அல்லது சட்டத் தொகுப்பில் காணப்படும் ஏராளமான முரண்பாடுகளையும், நேர்மையின்மை களையும், அநீதிகளையும் அகற்றவதற்கு நாம் முயன்றுள்ளோம். உதாரணமாக, இன்று காலை டாக்டர் அம்பேத்கர் தமது அறிவார்ந்த உரையில், எவ்வாறு காப்பாளர் உரிமை, பராமரிப்பு, தத்து எடுத்தல் முதலியவை சம்பந்தமான ஷரத்துகள் சமுதாயத்திற்கு அனுகூலமாக இருக்கப்போகிறது என்று நம்மிடம் கூறினார். இந்த மசோதாவை முற்றாக எதிர்ப்பவர்கள், இந்த மசோதாவின் நல்ல பகுதியை, சர்ச்சைக் கிடமில்லாத பகுதியை மறந்து விட்டு, அவர்களாவது தாக்குதல் முழுவதையும் மசோதா முழுமையின் மீதும் தொடுக்கின்றனர்.

பெரும்பகுதி மக்களால் எதிர்க்கப்படுகின்ற வாரிசுரிமைப் பிரச்சினையை இனி எடுத்துக் கொள்வோம்.

திரு. தாஜாமுல் உசேன் : சுயநலக் கும்பலைச் சேர்ந்தவர்கள் தான் இதை எதிர்க்கின்றனர்.

திருமதி சுசேதா கிருபளானி: பெரும் பகுதியினர் இதை எதிர்க்கின்றனர். கூட்டுக்குடும்பம் பிரிவதற்கும், பெண்களுக்கு முழுமையான உரிமைகள் வழங்கப்படுவதற்கும் எதிராக அவர்கள் இரண்டு பிரச்சினைகளை எழுப்பியுள்ளனர். இரண்டாவது விஷயத்தை நான் முதலில் எடுத்துக் கொள்கிறேன். ஆண்களும் பெண்களும் சமத்துவமாக சரிநிகர் சமானமானவர்களாக, எல்லா சாதிகளைச் சேர்ந்த மக்களும் சமமாக இருக்கும் ஒரு சமுதாயத்தை ஏற்படுத்துவதற்கு நாம் விரும்புகிறோம். இவ்வளவு ஆண்டுகளாக நாம் கனவு கண்டுவந்த ஒரு முழுமையான ஜனநாயகத்தை ஏற்படுத்துவதற்கு முயன்று வருகிறோம். சமுதாயத்தில் பெண்களுக்கு சம அந்தஸ்து வழங்குவதற்கு நாம் உறுதி எடுத்துக் கொண்டுள்ளோம். பாலியல் பாகுபாடு அனைத்தையும் போக்குவதற்கு நாம் உறுதி பூண்டுள்ளோம். இந்த உறுதிமொழி, புதிய அரசியல் சாசனத்தை நாம் அமலுக்குக் கொண்டுவரும் சமயத்திலிருந்து தொடங்கும் என்பதில்லை. கராச்சி தீர்மானத்தில் இந்த உறுதிமொழிகளெல்லாம் அடங்கியுள்ளன என்பதை உங்களுக்கு நினைவுபடுத்த விரும்புகிறேன். அதற்குப் பின்னர், நாம் பதவியேற்றுக் கொண்டபோது, அப்பொழுதும் கூட, பாலின அடிப்படையில் எத்தகைய பாகுபாடும் இருக்கக்கூடாது என்று நாம் மீண்டும் வலியுறுத்தினோம். ஆண்களும் பெண்களும் சமமாகப் பணியாற்றவேண்டுமெனில், நாட்டின் சமமான பிரஜைகளாக அவர்கள் செயல்பட வேண்டுமெனில், நாட்டின்பால் தமது கடப்பாடுகளை அவர்கள் நிறைவேற்ற வேண்டுமெனில், பெண்களின் சொத்துரிமை விவகாரங்களில் இத்தகைய பாகுபாடான விதிகளை நாம் எவ்வாறு கொண்டிருக்க முடியும்? பெண்கள் சொத்தில் தமது முழுப் பங்கை பெற்றாலன்றி, நாட்டுக்குத் தமது கடப்பாடுகளை அவர்கள் நிறைவேற்றுவார்கள் என்று நாம் எதிர்பார்க்க முடியாது. நாம் எந்த மாற்றங்களைச் செய்யும்போதும் ஏற்கனவே நிலையாக இருந்துவரும் பழக்கவழக்கங்களும், நிலையான விதிகளும் பாதிக்கப்படுகின்றன என்பது மெய்யே. அது ஓரளவு குலைவையும், அசௌகரியத்தையும் ஏற்படுத்துகிறது என்பதும் உண்மையே. ஆனால் நாம் அதை சகித்துக்கொண்டு, அவை தவிர்க்க முடியாதவை என்று ஏற்றுக் கொள்ள வேண்டும். நமக்கு

ஏற்படும் அசௌகரியத்தின் முக்கியத்துவத்தை மிகைப்படுத்து வதற்கு நாம் முயலக்கூடாது. பெண்களின் சொத்துரிமையை ஸ்மிருதி கள் அங்கீகரிக்கின்றன என்று டாக்டர் அம்பேத்கரும் மற்றவர்களும் நமக்கு எடுத்துக் கூறியுள்ளனர். சட்டம் நமக்குக் கொடுத்ததை நடைமுறை நமக்கு மறுத்துள்ளது. நடைமுறையில் அந்த உரிமை ரத்து செய்யப்பட்டது. இன்று நாம் செய்ய முயல்வது இது மட்டுமே - இந்து மதம், அல்லது இந்து மரபு, அல்லது இந்து சட்டத்தின் அடிப்படைகளுக்கு விரோதமாக நாம் செல்லவில்லை. இந்து சட்டத் தினால் நமக்கு என்ன வழங்கப்பட்டதோ அதை தன்முனைப்பாக நமக்கு மறுக்கப்பட்ட அதை - மீண்டும் எடுத்துக் கொள்வதற்கு இப்பொழுது நாம் முயன்று வருகிறோம். நீங்கள் அதை எங்களுக்குக் கொடுக்கிறோம் என்று கூறலாம். இது சமுதாயத்தினால் இத்தனை ஆண்டுகளாக எங்களுக்கு மறுக்கப்பட்டு வந்துள்ளது. இது நீண்ட காலமாகத் தள்ளிப்போடப்பட்டு வந்துள்ளது. இதுதான் இப்பொழுது வழங்கப்படுகிறது, அவ்வளவுதான்.

தற்காலத்திற்கு நாம் வந்தால், 1937ம் வருட சட்டத்தின் படி, மனைவிக்கு, மருமகளுக்கு, பேரனின் மனைவிக்கு, இத்தியாதி - சொத்துரிமையை நீங்கள் வழங்கியிருக்கிறீர்கள். விடுபட்டுப் போன ஒரே நபர், அப்பாவி மகள்தான். இப்பொழுது இங்கு அது சேர்த்துக் கொள்ளப்பட வேண்டுமென்பது மிகவும் பொருத்தமானதே. எனவே, இதுபற்றி அதிகம் விவாதிப்பதற்கு என்ன இருக்கிறது என்பதை என்னால் பார்க்க முடியவில்லை. மற்றப் பெண்களுக்கு இந்த உரிமையை நாம் கொடுத்திருக்கிறோமென்றால், பெண்கள் கணவனின் தரப்பிலிருந்து சொத்தை வாரிசாகப் பெறுகிறார்கள் என்றால், தந்தையின் தரப்பிலிருந்தும் அவள் (மகள்) வாரிசாக சொத்தைப் பெறட்டுமே, அது மிகவும் இயற்கையானதும் சரியானது மாகும்.

மாண்புமிகு திரு. ஜகஜீவன்ராம் : பிற துறைகளிலும் அவள் வளர்ச்சியடைய வேண்டுமென்று அவர்கள் விரும்புகின்றனர்.

திருமதி சுசேதா கிருபளானி: கூட்டுக் குடும்பப் பிரச்சினை மிகுந்த உணர்ச்சியைக் கிளர்த்தியுள்ளது. ஏன் அத்தகைய உணர்ச்சி ஏற்பட்டுள்ளது என்பது எனக்குத் தெரியவில்லை. நான் சந்திக்கும் மக்களில் பெரும்பாலோர் கூட்டுக் குடும்பத்திலிருந்து வெளியே வந்து விடுவதற்கு ஆவலாக உள்ளனர். மகன்கள் தகப்பனாருடன் சேர்ந்து வாழ்வதற்கு விரும்பவில்லை. பெரும்பாலான குடும்பங்கள் நாடு முழுவதிலும் சிதறியிருப்பதை நான் காண்கிறேன். எனவே, கூட்டுக்

குடும்பம் வெகுவிரைவாக நொறுங்கிவிடும் ஓர் அமைப்பு என்று கருதுகிறேன். இன்று காலையில் டாக்டர் அம்பேத்கர் நமக்கு சுட்டிக்காட்டியது போன்று கூட்டுக் குடும்பத்தின் சட்டப்படியான நிலைமையும் கூட மிகவும் தவறானதாக இருக்கிறது. மிதாக்ஷரா முறையின் படியேகூட கூட்டுக்குடும்பத்தின் ஓர் உறுப்பினர், தனது விருப்பத்தை வெளிப்படுத்துவதன் மூலம் ஒரு பிரிவினையை ஏற்படுத்த முடியும்.

எனவே, நீங்கள் மிகவும் உரத்த குரலில் கூக்குரலிடும் கூட்டுக் குடும்பம் எங்கே இருக்கிறது?

கூட்டுக் குடும்பத்தில் பாதுகாப்பற்ற பெண்களுக்கு அளிக்கப் படும் பாதுகாப்புப் பற்றி நிறையப் பேசப்பட்டது. கடந்த காலத்தில் கூட்டுக் குடும்பத்தில் பாதுகாப்பற்ற பெண்களுக்குப் பாதுகாப்புக் கிடைத்தது என்பதை நானறிவேன். இப்பொழுதும்கூட சிலருக்குப் பாதுகாப்புக் கிடைக்கிறது. ஆனால் அதேசமயத்தில், நூற்றுக்கணக் கான பெண்கள், கூட்டுக் குடும்பத்தில் எத்தகைய பாதுகாப்பும் கிடைக்கப் பெறாதவர்களாக, சொந்தமாக எத்தகைய பொருளாதார வசதியும் இல்லாதவர்களாக இழிவும் அவமானமும் சூழ்ந்த வாழ்க்கையில் அவதிப்படுகிறார்கள் என்பதை நாம் அறிவோம். சமூகப் பணி செய்கிற எங்களில் பல பெண்கள், அத்தகைய எண்ணற்ற பெண்களை சந்திக்கின்றனர், எனவே, பெண்ணுக்கு அவளுடைய பங்கைக் கொடுப்பது சரியானது மட்டுமல்ல, நியாயமானது மட்டு மல்ல, நீங்கள் மிகவும் உரக்கப் பேசும் இந்து சமுதாயத்தை நீங்கள் பாதுகாக்க விரும்பினால், அவளுக்கு அந்தப் பங்கைக் கொடுப்பது மிக மிக அத்தியாவசியமாகும்.

மாண்புமிகு திரு. ஜகஜீவன்ராம்: அதற்கும் அதிகமாகவும் கொடுக்க வேண்டும்.

திருமதி சுசேதா கிருபளானி: அவ்வளவுக்கு நல்லதுதான். எங்களுக்கு இன்னும் கொஞ்சம் கூடுதலாகக் கொடுங்கள். கடந்த காலத்தில் எங்களுக்கு இதை நீங்கள் மறுத்திருக்கிறீர்கள். இப்பொழுது அதை சரிசெய்து விடுங்கள்.

திருமணத்தைப் பொறுத்தமட்டிலும், குழப்பத்தையும் நிச்சய மற்ற தன்மையையும் தவிர்ப்பதற்கு ஒரே சீரான நடைமுறையை அறிமுகப்படுத்துவதற்கே இந்த மசோதா முயல்கிறது. மரபான

சட்டத்தின் ஆளுகைக்கு உட்பட்ட வர்க்கங்களுக்கு இது சிறிது சிரமத்தை ஏற்படுத்தக்கூடும். ஆனால் உத்தேசிக்கப்பட்டுள்ள, சடங்கு ரீதியான மற்றும் பதிவுத் திருமணங்களை மிகவும் ஏழ்மையான மற்றும் மிகவும் பிற்பட்ட வர்க்கங்களும் கூட நடைமுறைப்படுத்த முடியும். எனவே இது, எத்தகைய பெரிய சிரமத்தையும் ஏற்படுத்தும் என்று நான் நினைக்கவில்லை. சடங்கு ரீதியான திருமணங்களைப் பதிவு செய்வதில் ஓரளவு ஆட்சேபனை இருக்கிறது. இது முற்றிலும் மனோ ரீதியானதுதான், ஏனெனில் பதிவு செய்வது அனுமதிக்கப் படத்தக்கதே. நீங்கள் பதிவு செய்வதைப் பயன்படுத்திக்கொள்ள விரும்பவில்லையென்றால், நீங்கள் அதைப் பயன்படுத்தாதிருப் பதற்கு உங்களுக்கு உரிமை உண்டு.

மதிப்பிற்குரிய ஓர் உறுப்பினர் : இது கட்டாயமாகும்.

மாண்புமிகு டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் : கட்டாயமில்லை.

திரு. தாஜாமுல் உசேன்: கட்டாயமில்லையா, எது எப்படி யானாலும் சரி.

திருமதி சுசேதா கிருபளானி : நான் கூறுவது தவறாக இருந் தால் டாக்டர் அம்பேத்கர் என்னைத் திருத்துவார். அது ஒரு பாதுகாப் பாக அங்கே வைக்கப்பட்டிருக்கிறது. அவ்வளவுதான்.

சாதிக்கு வெளியில் மற்றும் ஒரே கோத்திரத்தில் செய்து கொள்ளப்படும் திருமணங்கள் பற்றிய பிரச்சினைக்கு வருவோம். எனக்கு முன்னால் பேசிய நண்பரின் பேச்சை நான் கேட்டுக் கொண் டிருந்தேன். ஒரே கோத்தரத்தைச் சேர்ந்தவர்களின் மற்றும் சாதிக்கு வெளியில் (கலப்பு மணம்) செய்யும் திருமணங்களை நாம் எவ்வாறு ஆட்சேபிக்க முடியும்? ஏனெனில் சமுதாயத்தில் மிகப் பெரிய எண்ணிக்கையில் அத்தகையத் திருமணங்கள் நடப்பதை நான் காண்கிறேன். அத்தகைய திருமணங்கள் இல்லாமலிருந்தால் சரிதான். ஆனால் மிக அதிக எண்ணிக்கையில் அத்தகைய திருமணங் கள் நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது, ஒன்று முறையற்ற திருமணம் செய்துகொள்வதற்கு அவர்களை நாம் கட்டாயப்படுத்த வேண்டும், அல்லது இந்து மதத்திலிருந்து அவர்களை நாம் வெளி யேற்ற வேண்டும், அல்லது அவர்களை எங்காவது போகும்படி செய்ய வேண்டும், அல்லது அவர்கள் சிவில் பதிவு அலுவலகத் திற்குச் சென்று அதைச் செய்துகொள்ள வேண்டும். அது அவ்வாறு

இருக்கும்போது, அதை ஏன் ஏற்றுக்கொள்ளக்கூடாது? அது நடைமுறையாயிருக்கும்போது, அதை ஏன் அங்கீகரித்து, அதற்கு சட்டத்தன்மை கொடுக்கக்கூடாது? எனவே, இந்து சமுதாயத்தினுள் கலப்பு மணத்தையும் சகோத்தர திருமணங்களையும் அனுமதிக்கிற அளவிற்கு இந்திய சமுதாயம் மிகவும் பெருமளவிற்கு மாற்றமடைந்திருக்கும்போது, இந்தக் கட்டத்தில் அது சரியானதேயாகும்.

ஒருதார மணத்தைப் பொறுத்தமட்டிலும்கூட ஒட்டு மொத்தத்தில் சமுதாயம், ஒருதார மணத்தை ஏற்றுக் கொண்டது என்று நான் உணருகிறேன். பலதாரமணம் வெறுப்புடன் பார்க்கப்படுகிறது. சில சம்பவங்கள் ஏற்பட்ட போதிலும் கூட, பலதார மணத்திற்கு சமுதாயத்தில் ஆதரவில்லை. மேலும், இந்துக்களின் மிகப் பெரும்பான்மையோரிடையில் இருந்து வரும் தற்போதைய நடை முறையை நாம் அங்கீகரித்து, அதை சட்டபூர்வமானதாக்குகிறோம். மேலும், ஆண்களும் பெண்களும் சமமாக இருக்கின்ற ஒரு சமுதாயத்தை ஏற்படுத்துவதற்கு நாம் முயன்று வரும்போது ஆண்களுக்கும் பெண்களுக்கும் இரண்டுவிதமான ஒழுக்கமுறைகளை நாம் கொண்டிருக்க முடியாது. இதை அமலாக்குவதில் ஆண்கள் மகிழ்ச்சியடைய வேண்டும் என்று நினைக்கிறேன். ஏனெனில், ஒருதார மணத்தை அமலாக்குவதன் மூலம் ஆண்களின் ஒழுக்கத்தைப் பெண்களின் ஒழுக்கத்துடன் சமப்படுத்துகிறோம். இதற்காக ஆண்கள் நமக்கு நன்றி செலுத்த வேண்டும் என்று கருதுகிறேன்.

மதிப்பிற்குரிய ஓர் உறுப்பினர்: மிகவும் நன்றி. எளிதில் நமக்கு விவாகரத்து கிடைக்கும், நாம் மறுமணம் செய்துகொள்ளலாம்.

திருமதி சுசேதா கிருபளானி: விவாகரத்தைப் பொறுத்தமட்டிலும் வைதீகமான ஆண்கள், பெண்களின் மன உணர்ச்சிகளை நாம் மறுக்காத போதிலும், அவற்றை ஆய்வு செய்து பார்த்தால், நம்முடைய பண்டைக்கால வேத நூல்களில் விவாகரத்து இருக்கவே செய்தது என்பதை நாம் காண்கிறோம்.

விவாகரத்துக்கு நாம் அனுமதித்துள்ள காரணங்கள் மிகவும் நியாயமானவையும் நீதியின் பாற்பட்டவையுமாகும். மேலை உலகத்தின் சில பாகங்களில் இருப்பதைப் போன்று அற்பக் காரணங்களுக்காக நாம் விவாகரத்தை அனுமதிக்கவில்லை. மிகவும் கடுமையான நிலைமைகளில் மட்டுமே விவாகரத்தை கடைப்பிடிக்கும் வகையிலான ஒரு நடைமுறையை வகுப்பதற்கு நாம் கவனமெடுத்துக்

கொண்டிருக்கிறோம். விவாகரத்து அனுமதிக்கப்பட்டுள்ள பரோடா, திருவாங்கூர், கொச்சி, மலபார் ஆகியவற்றின் ஆவணங்களை நாம் பார்த்தால், மிகச் சொற்பமான நபர்களே, இந்த சட்டத்தைப் பயன் படுத்திக்கொண்டிருப்பதைக் காணலாம். மிகவும் அசாதாரணமான சூழ்நிலைமைகளில் மட்டுமே, மிகவும் சிக்கலான ஒரு நிலைமை யிலிருந்து மீள்வதற்கு, இது மக்களுக்கு உதவுகிறது. அற்பக் காரணங் களுக்காக நீதிமன்றத்திற்கு ஓடுவதோ, ஒரு மண வாழ்க்கையை முறித்துக் கொள்வதோ இந்து சமூகமரபல்ல. விவாகரத்து உரிமையை வழங்குவது இந்துக்களின் குடும்ப வாழ்க்கையை சீர்குலைப்பதற்கு ஒப்பாகும் என்று மக்கள் பயப்படுவது முற்றிலும் நியாயமற்றது.

இந்துக்களில் 90 சதவீதத்தினரிடையில் விவாகரத்து இருந்து வருகிறதென்றும், எனவே, அதை எஞ்சியுள்ள 10 சதவீதத்தினருக்கும் விரிவுபடுத்தினால் என்ன என்றும் இன்று காலையில் டாக்டர் அம்பேத்கர் கூறிய வாதத்தை எடுத்துக்கொள்கிறேன். 10 சதவீத விவாக ரத்து வழக்குகள் ஏற்படுகின்றன என்பதைப் பார்க்கும்போது, இது மிகவும் சரியானதும் நியாயமானதுமாகும். விவாகரத்து வழக்குள் ஏதும் இல்லாதிருந்தால், அப்பொழுது இதை நான் புரிந்து கொண் டிருக்க முடியும். ஆனால், நமது ஆண்களும் பெண்களும் விவாக ரத்தை விரும்பும்போதெல்லாம், அவர்கள் இந்து மதத்திலிருந்து வெளியேறி, முஸ்லீம்களாகவோ, கிறிஸ்தவர்களாகவோ, ஆகிவிடு கின்றனர்; அவ்வாறு செய்வதன் மூலம் அவர்கள் அந்த மதங்களை அவமதிக்கிறார்கள், அவர்கள் அதைத் தமது சுயநலத்திற்குப் பயன் படுத்திக் கொள்ளுகிறார்கள். எனவே, தற்போது நிலவும் சூழ்நிலை களை அங்கீகரித்து, விவாகரத்துகளை நாம் அனுமதிக்க வேண்டும்.

ஐயா, பெண்களாகிய நாங்கள், எங்களுடைய உரிமைகளை வலியுறுத்தும்போது, நல்லதை, மிகவும் நல்லதை ஒருபோதும் நாங்கள் மறக்கவில்லை என்பதை என்னுடைய சகோதரர்களுக்குச் சொல்லவிரும்புகிறேன். இந்த விஷயத்தில் நாங்கள் மிகவும் பழமை வாதிகளாக இருந்திருக்கின்றோம். எங்களுடைய அரசியல் உரிமை களைப் பொறுத்தவரையிலும் கூட தவறானவை என நாங்கள் கருது கின்றவற்றை நாங்கள் ஒருபோதும் ஊக்குவித்ததில்லை. பிரிட்டிஷ் காரர்கள் இங்கே இருந்தபோதும் கூட நாம் எப்போதும் கூட்டுத் தொகுதிகளுக்காகவே நின்று வந்துள்ளோம். புதிய அரசியல் சாசனத் தில்கூட, எங்களுக்குத் தனித் தொகுதிகள் வேண்டும் என்று நாங்கள் ஒருபோதும் வலியுறுத்தியதில்லை. அவை சமுதாயம் முழுவதன் நன்மைக்கு எதிராகப் போகும் என்று நாங்கள் நினைக்காதிருந்தால் அவற்றை நாங்கள் வலியுறுத்தியிருப்போம். இந்தப் பெண்கள்

அனுகூலமடைவதாயிருந்தால், இந்து சமுதாயமும் அனுகூலமடையும் என்று நான் நிச்சயமாக நம்புகிறேன். இது அனைவரின் நன்மைக்காகத்தான். அதனால்தான் நாங்கள் இந்த அம்சத்தை வலியுறுத்துகிறோம்.

மொத்தத்தில் நமது ஆண்கள் மிகவும் ஒத்துழைப்பாக இருந்தார்கள், எங்களுக்கு உதவிகரமாக இருந்தார்கள் என்பதையும் இங்கு நான் கூறுவதற்கு விரும்புகிறேன். அவர்கள் எங்களுடைய முன்னேற்றத்திற்கு எதிராக இருந்ததில்லை. இது மகாத்மா காந்தியின் பிறருக்கு நன்மை செய்ய விரும்பும் மனோபாவத்தின் செல்வாக்கினால் இருக்கக்கூடும். பெண்களின் உரிமைகளக்கு மிகப் பெரிய ஆதரவாளர்களில் ஒருவராக காந்திஜி இருந்தார் என்பதை நீங்கள் அனைவரும் அறிவீர்கள். அவர் ஏற்படுத்திய மரபு நமது ஆண்களால் பின்பற்றப்பட்டு வந்துள்ளது. காந்திஜியின் செல்வாக்கின் காரணமாக நமது தலைவர்களின் பரிவான கண்ணோட்டத்தின் காரணமாக, பிற நாடுகளின் பெண்கள் போராட வேண்டியிருந்ததுபோல் நாங்கள் அரசியல் உரிமைகளுக்காக ஒரு போதும் போராட வேண்டியதேற்பட்டதில்லை. அந்த நல்ல மரபுகளை நாம் பின்பற்றுவோம் என்றும், கடந்த காலத்தில் இருந்தது போன்று ஒத்துழைப்பு உணர்வை நாம் தொடர்ந்து கடைப்பிடிப்போம் என்றும், என்னுடைய சகோதர உறுப்பினர்கள் அனைவரும் இந்த மசோதாவை ஆதரிப்பார்கள் என்றும், இந்த மசோதாவைப் பெண்களுக்கு உரிமை வழங்கும் ஒரு மசோதா என்று பார்க்காமல், பெண்களுக்கு நீங்கள் நீதி வழங்கும் ஒரு நடவடிக்கை என்று கருதாமல், சமுதாயத்திற்கு நீதி வழங்கும் ஒரு மசோதா என்று கருதி ஆதரிப்பார்கள் என்றும் மிகவும் நிச்சயமாக நம்புகிறேன். இந்த நடவடிக்கையின் மூலம் இந்து சமுதாயத்தை ஆரோக்கியமானதாகவும், நலமளிக்கத்தக்கதாகவும் ஆக்குவதற்கு முயல்கிறோம். இந்து சமுதாயத்தில் நிறைய குறைபாடுகள் உள்ளன. நாம் இப்பொழுது சுதந்திரமாக இருக்கிறோம். இந்த உலகில் நாம் நம்முடைய அந்தஸ்தைப் பெற வேண்டுமெனில், நம்முடைய (வீட்டை) நாட்டை நாம் ஒழுங்குபடுத்தியாக வேண்டும். அதை நாம் செய்தாலொழிய சமுதாயத்தில் நம்முடைய இடத்தை (தகுதியை) நாம் பெற முடியாது. எனவே நாம் ஒன்றுபட்டு, வீட்டிலுள்ள குறைபாடுகளைத் திருத்துவோம். நான் உங்களுக்கு வேண்டுகோள் விடுக்கிறேன். இந்த நல்ல மசோதாவிற்கு உங்களனைவரின் ஆதரவு எங்களுக்குக் கிடைக்கும் என்று நிச்சயமாக நம்புகிறேன்.

(இதன் பின்னர் சபை, 1949, பிப்ரவரி 25, வெள்ளிக்கிழமை காலை 10-45 வரை ஒத்திவைக்கப்பட்டது).

*இந்து சட்டத் தொகுப்பு (தொடர்ச்சி)

திரு. துணை சபாநாயகர்: மாண்பமிகு டாக்டர் பி.ஆர். அம்பேத்கர், 1948 ஆகஸ்டு 31ல் முன்மொழிந்த கீழ்வரும் பிரேரணையை மேலும் பரிசீலனை செய்வதை அவை இப்பொழுது தொடங்கும். அந்தப் பிரேரணையாவது:

> "பொறுக்குக்குழு அறிக்கை செய்தபடி, இந்து சட்டத்தின் சில பிரிவுகளைத் திருத்துவதற்கும் அவற்றை சட்டத் தொகுப்பாக்குவதற்குமான மசோதா பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படவேண்டும்."
>
> பண்டிட் தாகூர்தாஸ் பர்கவா.

திரு. நசிருத்தீன் அகமது (மேற்கு வங்கம் : முஸ்லீம்) : ஐயா, நான் திருத்தங்களை முன்மொழிந்துள்ளேன். எனவே, என் வாதங்களை முன்வைப்பதும், பிறகு மற்றவர்கள் பேசுவதும் பொருத்தமாயிருக்கும் என்று நினைக்கிறேன். அதற்குப் பதிலாக, இப்பொழுது நான் அவர்கள் கூறுவதைக் கேட்டுவிட்டு, பிறகு நான் பேசுவதெனில், பதிலளிப்பதற்கு அவர்களுக்கு எப்படி வாய்ப்புக் கிடைக்கும்?

திரு. துணை சபாநாயகர்: பிரேரணைக்கு ஒரு திருத்தத்தை மொழிந்துள்ள மதிப்புக்குரிய உறுப்பினர் பிறகு பேசுவதுதான் பொருத்தமாக இருக்கும். அவ்வாறில்லாவிட்டால், பிறகு பதிலளிப்பதற்கு அவருக்கு வாய்ப்பில்லாமல் போய்விடும் என்பதை அவர் அறிவார்.

திரு. நசிருத்தீன் அகமது : நான் பதிலளிக்க விரும்பவில்லை.

திரு. துணை சபாநாயகர் : அந்தக் கண்ணோட்டத்தில் பார்க்கும்பொழுது, மதிப்பிற்குரிய உறுப்பினர், தமது பிரேரணைக்கு ஆதரவானதும் எதிரானதுமான சில உரைகளைக் கேட்க வேண்டியது அவசியம், அப்பொழுதுதான் அவரால் அவற்றுக்கு பதில் சொல்ல முடியும். அவர் அந்த ஒரு தடவை (கடைசியாக) பேசினால் போதும். நான் பண்டிட் தாகூர்தாஸ் பர்கவாவைப் பேசுமாறு அழைத்தேன் (குறுக்கீடு). பேச்சாளர்களின் வரிசையை முறைப்படுத்துவது அவைத் தலைவரின் கடமையாகும். பண்டிட் தாகூர்தாஸ் பர்கவாவைப் பேச அழைத்தது சரியானதுதான் என்று கருதுகிறேன்.

★ அ.நி. (சட்டப் பேரவை) டி. தொகுதி II, பாகம் II, பிப்ரவரி 25, 1949, பக். 877-78.

*__பண்டிட் தாகூர்தாஸ் பர்கவா__ (கிழக்கு பஞ்சாப் : பொது): (இந்தி உரைகளின் ஆங்கில மொழியாக்கம்) ஐயா, திரு. துணை சபாநாயகர் அவர்களே, இந்து சட்டத் தொகுப்பு மசோதா, இந்தியா முழுவதிலும்....

திரு. துணை சபாநாயகர் : தயவுசெய்து ஆங்கிலத்தில் பேசுங்கள்:

பண்டிட் தாகூர்தாஸ் பர்கவா : இந்த விஷயம் ஜீவாதார முக்கியத்துவம் உடையதாகையால், இந்தக் காரணத்திற்காகவே நான் இந்தியில் பேசுவதற்கு விரும்புகிறேன்.

டாக்டர் மனோ மோகன்தாஸ் (மேற்கு வங்கம் : பொது) : மாண்புமிகு கல்வி அமைச்சர் இந்துஸ்தானியில் பேசுவதை நாம் புரிந்து கொள்ள முடிகிறது. சேத்கோவிந்த தாஸோ அல்லது பண்டிட் தாகூர்தாஸ் பர்கவாவோ இந்தியிலோ அல்லது இந்துஸ்தானியிலோ பேசுவதிலிருந்து அது முற்றிலும் வேறுபட்டதாகும். 'கற்றுக்குட்டிகளாகிய எங்களால் எது இந்துஸ்தானி என்பதை அறிய முடியவில்லை.

திரு. துணை சபாநாயகர் : எந்த நிர்ணயிக்கப்பட்ட தரமும் இங்கு பின்பற்றப்படவில்லை. எவ்வாறு பேசினாலும் அது இந்துஸ்தானிதான்.

பண்டிட் தாகூர்தாஸ் பர்கவா : நான் என்னுடைய உரையைத் தொடங்குவதற்கு முன்னதாக, **(மதிப்பிற்குரிய உறுப்பினர்கள்):** ''தயவு செய்து ஆங்கிலத்தில் பேசுங்கள்) மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் நான் ஆங்கிலத்தில் பேச வேண்டுமென்று விரும்புவதால், அவர்களுடைய விருப்பங்களுக்கு மதிப்புக் கொடுப்பதற்கு எனக்கு சிறிதும் தயக்கமில்லை. ஆனால், மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் அனைவரும், ஒருவர் ஆங்கிலத்தில் பேசுவதைக் காட்டிலும் தமது சொந்தத் தாய்மொழியில் பேசினால் தமது கருத்துக்களை வெளிப்படுத்துவது எளிதாக இருக்கும் என்பதை அறிவார்கள். எனவே,

---

★ அ.நி. (சட்டப்பேரவை) டி. தொகுதி II, பாகம் II, பிப்ரவரி 25, 1949, பக். 898-936.

அவர்கள் அனுமதித்தால், நான் இந்தியில் பேசுவதற்கு விரும்புகிறேன். ஆனால் நான் ஆங்கிலத்தில்தான் பேச வேண்டுமென்று அவர்கள் வலியுறுத்தினால், என்னுடைய உரையை ஆங்கிலத்தில் தொடங்குவதற்கு எனக்கு சிறிதும் ஆட்சேபனை இல்லை. (மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் : "இந்தி, இந்தி"). மதிப்பிற்குரிய உறுப்பினர்களில் பெரும்பாலோர் நான் ஆங்கி லத்தில் பேச வேண்டுமென்று வலியுறுத்தாததால், நான் இந்தியிலேயே பேசுவதற்கு விரும்புகிறேன்.

திருமதி ஜி. துர்க்காபாய் : (சென்னை : பொது) : தயவு செய்து எளிய இந்தியில் பேசுங்கள். அப்பொழுதுதான் எங்களாலும் புரிந்து கொள்ள முடியும்.

பண்டிட் தாகூர்தாஸ் பர்கவா: மிகவும் எளிய இந்தியில் பேசுவதற்கு முயல்கிறேன்: இந்து சட்டத்தொகுப்பு மசோதா குறித்து இந்த அவையில் பேசுவதற்கு நான் எழுந்து நிற்கும்போது, முரண்பட்ட பல சிந்தனைகள் என் மனதில் ஒன்றுடன் ஒன்று மோதுகின்றன. இந்த இந்து சட்டத் தொகுப்பு மசோதா இந்து கலாசாரத்திற்கும், இந்து நாகரிகத்திற்கும் சாவுமணியடித்துவிடும் என்று பிரகடனம் செய்பவர்களில் நான் ஒருவனல்ல என்று ஆரம்பத்திலேயே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இந்து கலாசாரமும், இந்து சமுதாயமும், இந்து நாகரிகமும் என்றென்றும் (முடிவில்லாமல்), இந்த உலகின் முடிவுவரையிலும் நிலைத்து நிற்கும் என்று உறுதியாக நம்புகிறேன். இதற்கு எந்த விதத்திலும் நான் எதிரியல்ல. இந்த மசோதாவோ அல்லது வேறு எந்த மசோதாவோ, இந்து கலாசாரத்திற்கோ அல்லது நாகரிகத்திற்கோ எத்தகைய தீங்கையும் ஏற்படுத்தும் என்று நான் சிறிதும் அச்சமடையவில்லை. நீண்ட காலமாக இந்து சமுதாயத்தினுள் நுழைந்துள்ள தீமைகள், இந்த அவையில் தனது உரையின் இறுதிப் பகுதியில் டாக்டர் அம்பேத்கரின் வேண்டுகோளில் அடங்கியிருந்த அந்தத் தீமைகள் அகற்றப்படும் என்றும், அந்த வேண்டுகோள் நிதான மனப்போக்குடன், மிகவும் சிந்தனை பூர்வமாகப் பரிசீலிக்கப்படும் என்றும் நம்புகிறேன். ஆனால், உண்மையில், இந்து சமுதாயம் பாதுகாக்கப்பட வேண்டுமெனில், சமுதாயத்தை சீர் செய்வதற்கான தேவை உணரப்படுமேயானால், அப்பொழுது இந்து சமுதாயம் பழுதுபார்க்கப்பட்டாக வேண்டும் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

பகல் 12 மணி

இந்த மசோதா இந்து கலாசாரத்திற்கு சமாதி கட்டிவிடும் என்று கருதும் நபர்களை நான் பலமாக கண்டிக்கிறேன். பண்டைக் காலத்திய ஸ்மிருதிகளை எழுதியவர்களைப் போன்று அதே திறமையைக் கொண்ட, இந்தப் பேரவைக்கு அல்லது இந்த அவையின் மதிப்பிற்குரிய உறுப்பினர் களுக்கு நமது சாஸ்திரங்களிலோ அல்லது சட்டங்களிலோ எந்த மாற்றங்களும் செய்வதற்கு உரிமையில்லை என்று கூறப்படுவதை ஒரு வினாடி கூட ஏற்றுக்கொள்ளுவதற்கு நான் தயாராக இல்லை. காலத்தின் தேவைகளுக்கு ஏற்ப, சட்டங்களை உருவாக்குவதற்கு ஒவ்வொரு சமூகத்தின் உறுப்பினர்களுக்கும் பூரண உரிமை உண்டு என்று கருதுகிறேன். இது பழைய மரபாக இருப்பதால், அதன்படி தான் நாம் நடக்க வேண்டும் என்று இன்று யாராவது வேண்டுகோள் விடுத்தால், இந்தியா பரிசோதனை செய்து பார்க்காத எந்தப் பழக்க வழக்கமும் இல்லை என்று நான் கூறுவேன். இந்தியாவில் வாரிசு உரிமை முறை பிற பாகங்களில் உள்ளதற்கு மிகவும் வேறுபட்ட முறையில் இருந்து வருகின்ற சில இடங்கள் உண்டு. காசி பழங்குடி யினரிடையிலும், தெற்கு பஞ்சாபின் சில பாகங்களிலும் மரபுரிமை முறை முழுமையும் சொத்து முழுவதும் மகன்களைச் சார்ந்தது அல்ல, மாறாக மகள்களையே சார்ந்தது என்ற எதார்த்தத்தின் மீது சார்ந்துள்ளதை நாம் அறியமாட்டோமா? இந்தியாவின் சில பாகங் களில், பெண் தனது மாமனார் வீட்டுக்குச் செல்வதற்கு பதிலாக, கணவன், மனைவியின் குடும்பத்திற்குள் வந்து சேர்ந்து கொள்ளும் நடைமுறை இருந்து வருகிறது. வெவ்வேறு வகைப்பட்ட பழக்க வழக்கங்களும் சட்டங்களும் இருந்து வருகிற நாடாக இந்தியா இருந்து வருகிறது. நாம் முயன்று பார்க்காத எந்த சமூக முறையாவது இருக் கிறதா? நேற்றுதான், டாக்டர் அம்பேத்கர் சில ஸ்மிருதிகளில் மகன் களோடு மகள்களும் ஒரேமாதிரி வாரிசுகளாக அறிவிக்கப்பட வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது என்று கூறினார். எனவே, இந்த விதி நீண்டகாலமாக இருந்து வந்துள்ளது. இதைத் தவிர, ஒரு புதிய சட்டம் என்று அழைக்கப்படக்கூடிய வேறு எந்த சட்டமும் இருப்பதாக நானறியேன். பல இடங்களில் இன்றும் கூட விவாகரத்து வழக்கம் இருந்து வருகிறது. பழைய ஸ்மிருதிகளை வாசித்துப் பார்க்கும்போது, அங்கும் கூட விவாகரத்து கூறப்பட்டுள்ளதைக் காண்கிறோம். பழைய ஸ்மிருதிகளில் கூறப்பட்டுள்ளது என்ற ஒரே காரணத்திற்காக பழைய லட்சியங்களுக்கு நாம் திரும்பிச் செல்ல வேண்டுமென்பதை ஏற்றுக் கொள்வதற்கு நான் தயாராக இல்லை. அந்த லட்சியங்கள் நமது தற்கால சமுதாயத்திற்குப் பொருத்த மாக இல்லையென்று நாம் நினைத்தால், அந்த லட்சியங்களை ஏன்

அப்படியே வைத்துக் கொண்டிருக்க வேண்டும்? இந்தியாவில் ஒரு காலத்தில் திருமணம் என்ற ஏற்பாடே நடைமுறையில் இருந்த தில்லை என்பதையும், மக்களுக்குத் திருமணங்களைப் பற்றி ஒன்றுமே தெரியாது என்பதையும் நான் அறிவேன். பண்டைய நாட்களில் நியோக் என்ற முறை இந்தியாவில் நீண்ட காலமாக இருந்து வந்துள்ளது. இந்து சட்டம் எட்டு வகையான திருமணங்களைப் பற்றிக் கூறுகிறது. அவ்வகைப்பட்ட சில திருமணங்களைத் திருமணம் என்றே அழைக்கப்பட முடியாது. அந்த லட்சியங்கள் தற்காலத்தில் மீண்டும் புகுத்தப்படவேண்டும் என்று யாராவது இன்று அறுதி யிட்டுக் கூறமுடியுமா? அவ்வாறு யாரும் கூறமாட்டார்கள் என்று நினைக்கிறேன். எனவே, பண்டைய நாட்களில் நடைமுறையில் என்ன இருந்து வந்தது, நமது முன்னோர்கள் தமது சொந்த சட்டங் களை இயற்றி எவ்வாறு சமுதாயத்தை முறைப்படுத்தி வந்துள் ளார்கள் என்ற பார்வையில் நமக்கு முன்னால் உள்ள பிரச்சினையைப் பரிசீலனை செய்ய நான் விரும்பவில்லை. தற்காலத்தில், நமது தேவைகள், நமது சட்டக் கருத்தமைப்புகள், நமது அவசியங்கள் ஆகியவற்றைப் பூரணமாகக் கணக்கில் எடுத்துக்கொண்ட பின்னர், நமக்கு என்ன தேவைப்படுகிறது என்பதுதான் இப்பொழுது எனக்கு முன்னால் உள்ள பிரச்சினையாகும். இந்த சட்டத்தொகுப்பு நாடு முழுமையிலும் பெருமளவு வெறுப்புணர்ச்சியையும், அமைதியின்மை யையும் கவலையையும் ஏற்படுத்தியுள்ளது. தங்களுக்கு ஆண்களைப் போன்ற சம உரிமைகள் உண்டு என்று சில பெண்கள் பிரகடனப் படுத்தியுள்ளனர். இந்த சட்டத் தொகுப்பு பெண்களுக்கு ஆதரவாக இருக்கிறது. பெண்களுக்கு உரிமைகள் இல்லை என்று சிலர் அறிவிக்கிறார்கள். இந்த மசோதா இங்கு பரிசீலனையில் இருக்கின்ற வரையில் பல்வேறு கோஷங்களுக்கோ அல்லது இந்த மசோதா பெண்களுக்கு ஆதரவாக இருக்கிறது அல்லது இது ஆண்களுக்கு ஆதரவாக இருக்கிறது என்ற குற்றச்சாட்டுகள் போன்றவற்றுக்கோ நாம் ஒருபோதும் முக்கியத்துவம் அளிக்கக்கூடாது என்று மிகத் தாழ்மையுடன் இந்த அவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த மசோதா பொருத்தமானதா அல்லவா என்பது பற்றி நாம் நிதான மாக சிந்திக்க வேண்டும். தான் ஒரு பெண்ணுக்குப் பிறக்கவில்லை என்று எந்த ஆண் கூறமுடியும்? தான் ஓர் ஆணின் மகள் இல்லை யென்று எந்தப் பெண் கூற முடியும்? எனவே இது போன்ற ஒரு விஷயத்தில் நமது சகோதரிகளையும், நமது புதல்விகளையும், நமது அன்னைமார்களையும் அன்புடன் நடத்தமாட்டோமா? நம் முடைய அன்னைமார்களும், சகோதரிகளும், புதல்விகளும் தமது கணவன்மார்களுடனும், தமது சகோதரர்களுடனும், மகன்களுடனும்

முறையாக நடந்து கொள்ள மாட்டோம் என்று கோருகிறார்களா? எனவே இந்த விஷயத்தில் எந்தக் கசப்பான சர்ச்சையையும் ஏற்படுத்து வதற்கு அவசியமில்லை. இது ஒரு மிகவும் நுட்பமான பிரச்சினை என்பதை நான் அறிவேன். இதை நாம் சரியான முறையிலும், நிதான மான மனப்பாங்குடனும் பரிசீலனை செய்ய வேண்டும்.

இந்த அம்சத்தை மேற்கொண்டு நான் விவாதிப்பதற்கு முன்னால், ஒரு பிரச்சினையைப்பற்றி ஒரு சில விஷயங்களைக் கூறு வதற்கு விரும்புகிறேன். அப்பொழுதுதான், இந்த அவையின் மதிப் புக்குரிய உறுப்பினர்களும் குறிப்பாக என்னுடைய மதிப்புக்குரிய சகோதரிகளும், ஏதோ சில குறிப்பிட்ட கருத்துக்களுடன், நான் இந்த மசோதாவை எதிர்ப்பதாகவோ அல்லது ஆதரிப்பதாகவோ கருதாமல் இருக்கக்கூடும். ஆரம்பத்திலேயே ஒன்றைக் கூற விரும்பு கிறேன். அசையா சொத்துக்கள் மற்றும் அசையும் சொத்துக்கள் ஆகிய இரண்டிலும் பெண்களுக்கு உரிய உரிமைகள் கொடுக்கப் படாத வரையிலும், அவர்களது ஆளுமை முழு வளர்ச்சியைப் பெறாது என்று நம்புகின்ற சிந்தனைப் பிரிவினரைச் சேர்ந்தவன் நான் என்று தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். பெண்கள் பொரு ளாதாரத்தில் பிறரை சார்ந்திருக்கும் நிலைமையை நான் மிகவும் பலமாக எதிர்க்கிறேன். இது சம்பந்தமாக சீதாஜி கூறியுள்ள சுலோ கத்தை நான் ஏற்றுக்கொள்ளவில்லை.

मितं ददाति हि पिता मितं भ्राता मितं सुत :
अमितस्यतु दातारं भर्तारन् का न पुजयेत ॥

நான் இராமாயணத்தை மிகவும் உயர்வாக மதிப்பவன். ஆனால், பெண்களை எப்பொழுதும் சார்பு நிலையிலேயே வைத் திருக்க வேண்டும் என்ற கோட்பாட்டை ஒரு கணமும்கூட ஏற்றுக் கொள்வதற்கு நான் தயாராயில்லை. ஒரு பெண் திருமணமாகின்ற வரையிலும் தனது தகப்பனாரின் கட்டுப்பாட்டில் இருக்க வேண்டும், திருமணத்திற்குப் பிறகு தனது கணவனின் கட்டுப்பாட்டில் இருக்க வேண்டும், அவர் ஒரு விதவையாகிவிட்டால் தனது மகனின் கட்டுப்பாட்டில் இருக்க வேண்டும் என்று ஒரு சில ஸ்மிருதிகள் தீர்ப்பு அளித்திருப்பதை ஒரு கணமும்கூட ஏற்றுக்கொள்வதற்கு நான் தயாராயில்லை, ஸ்மிருதிகளின் இந்தத் தீர்ப்பை எதிர்க்கிறேன். இதற்குக் காரணம் இது பெண்களுக்கு வேதனையளிக்கிறது என்பத னால் அல்ல, இந்தியப் பெண்கள் ஒரு வலிமையான ஆளுமையைப் பெறுகின்ற வரையில், பொருளாதார ரீதியில் தமது நிலைமையை

மேம்படுத்திக் கொள்ளாத வரையில், சகலத்துறை வளர்ச்சியை அவர்கள் பெறாத வரையில் நம்முடைய வம்சாவளி மேம்பாடு அடையாது. ஆண்களைப் போலவே பெண்களுக்கும் அவர்களுடைய வளர்ச்சிக்கு அனைத்து வகைப்பட்ட வாய்ப்புக்களும் வழங்கப்பட வேண்டும். இந்தப் பிரச்சினையை ஒரு குறுகிய கோணத்தில் பார்ப்பது முற்றிலும் நியாயமற்றது என்று கருதுகிறேன். மிகவும் விவேகமான முறையில் நம்முடைய தேசம் முழுவதன் நன்மையையும் மற்றும் நாட்டின் நல்வாழ்வையும் முன்னேற்றத்தையும் கவனத்தில் கொண்டு இந்தப் பிரச்சினையை நாம் முடிவு செய்ய வேண்டும்.

ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக, நடைமுறையில் இருந்து வரும் சில பழக்கங்களிலும் சடங்குகளிலும் நாம் நம்பிக்கைவைத்து, அவற்றைப் பாதுகாத்தும் வந்திருக்கிறோம். ஆனால், இதனுடன் கூடவே, ''ஆண்களைப் போன்று சமஉரிமைகள் பெண்களுக்கு வேண்டும்'' என்பது போன்று தற்கால உலகில் எழுப்பப்பட்டு வரும் கோஷங்கள் சம்பந்தமாக நாம் எவ்வாறு செயல்பட வேண்டும் என்பது சம்பந்தமான நமது செயல்வழியையும் நாம் முடிவு செய்ய வேண்டும். இந்தக் கோட்பாட்டை நாம் முழுமையாக ஏற்றுக் கொள்ளாதவர்களாக இருக்கலாம். ஆனால் அவர்களுடைய வளர்ச்சிக்கு ஆண்களைப் போன்ற சம வாய்ப்பையும் வசதிகளையும் அளிப்பதற்குக் குறைந்தபட்சம் நாம் கடப்பாடு கொள்ள வேண்டும். இந்தக் கோட்பாட்டை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். எனவே, அசையும் சொத்துக்களிலும் அசையா சொத்துக்களிலும் பெண்கள் தங்களுடைய சட்டபூர்வமான உரிமைகளைப் பெற வேண்டும் என்று எவ்வித தயக்கமுமின்றி கூற விரும்புகிறேன். இதைப் பலமாக ஆதரிக்கிறேன். இந்த மசோதாவில், திருமணம் சம்பந்தமாக சாதி ஒழிப்பு மற்றும் தத்து (சுவீகாரம்) எடுத்துக் கொள்ளும் கோட்பாட்டையும் ஏற்றுக் கொண்டதற்காக டாக்டர் அம்பேத்கரை நான் பாராட்டவும் செய்கிறேன். இந்தப் பிரச்சினை எவ்வளவு முக்கியமானது என்பதை உங்களுக்கு எடுத்துக் கூறுவதற்கு என்னிடம் போதிய ஆற்றல் இல்லை. இந்தப் பிரச்சினையை, நாட்டைக் கட்டியமைக்கும் ஒரு பிரச்சினையாகக் காண்கிறேன். இது நம்முடைய வாழ்வா, சாவா என்ற ஒரு பிரச்சினையாகும். இது அடிப்படைக் கோட்பாடுகள் சம்பந்தப்பட்டதாகும். எந்த விஷயமாவது இந்தியாவைப் பாழ்ப்படுத்தியிருந்தால், அதனுடைய முன்னேற்றத்தைத் தடைப்படுத்தி, பாகிஸ்தானைத் தோற்றுவிப்பதில் ஒரு கருவியாகியதெனில், அது இந்த சாதி அமைப்புதான். நமது சமுதாயத்தினுள் நுழைந்து,

அதனுடைய ஜீவனை அரித்துக் கொண்டிருப்பது ஏதாவது இருக்கிற தெனில்: அது பிராமணர்களை மற்றவர்களுடைய விரோதியாக்கி யுள்ளது, ஜாட் இனத்தவரை, ஜாட் இனமல்லாதவர்களுடைய விரோதியாக்கியுள்ளது, க்ஷத்திரியர்களை இதர அனைத்து சமூகங் களுடையவும் விரோதியாக்கியுள்ளது - அது இந்த சாதி அமைப்பு மட்டுமேயாகும். ஒரு வர்க்கபேதமற்ற சமுதாயத்தை உருவாக்கும் பாதையை, நாட்டின் தந்தையாகிய மகாத்மா காந்தியினால் இந்த நாட்டுக்கு சுட்டிக்காட்டப்பட்டுள்ள பாதையைப் பின்பற்றுவதற்கு நாம் எவ்வாறு மறுக்க முடியும் என்று எனக்குத் தெரியவில்லை. இந்த நாட்டின் மக்களை ஐக்கியப்படுத்துவதற்குக் கருவியாக உள்ள இரண்டு விஷயங்கள் - சமபந்திபோஜனமும் கலப்புத் திருமணங் களுமாகும். கலப்புத் திருமணங்களைப் பொறுத்தமட்டிலும், இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படாத வரையில் இந்தியாவில் தேச நிர்மாணம் சம்பந்தப்பட்ட பிரச்சினைக்குத் தீர்வு காணமுடியாது. எனவே, இந்தப் பிரச்சினையைப் பொறுத்தமட்டிலும், நான் பலமாக இதை ஆதரிக்கிறேன்.

ஒருதார மணம் என்ற பிரச்சினையைப் பொறுத்தமட்டிலும், எந்த ஒரு உறுப்பினரும் அதை எதிர்க்க மாட்டார். ஒருதார மணத் தின் விளைவுகளைப் பொறுத்தமட்டிலும், இது நிறைவேற்றப் படுவதானது, என்னுடைய பிரதேசத்தை மோசமாக பாதிக்கும் என்பது எனக்குத் தெரியும். ஏனென்றால், இன்றைய தினமும்கூட, சூழ்நிலைமைகளுக்கு ஏற்ப ஒருவர் இறந்துபட்டு, அவர் மனைவி விதவையாகும்போது, அவரை இறந்துபோனவரின் இளைய சகோ தரர் மறுமணம் செய்துகொள்கிறார். வருகின்ற காலத்தில், இந்தக் காலாவதியாகிப்போன வழக்கங்களை நாம் தொடரக் கூடாது என்பதை அறிவேன். இந்த வழக்கொழிந்த வழக்கத்தின் பாதிப்பு கள், அதனால் பாதிக்கப்படுவோருக்கு எடுத்துச் சொல்லி விளக்கப் பட்டால், அவர்கள், அதைக் கைவிடுவதற்கு உடனே ஒப்புக் கொள்வார்கள் என்று நினைக்கிறேன்.

ஒருதார மணம் என்கிற பிரச்சினையையும், நான் யாரைப் பற்றிப் பேசுகிறேனோ, அந்த நபர்களையும் பொறுத்தமட்டிலும், இந்த நபர்கள், அவர்களின் தேவைகள், மற்றும் அறிவுக்கேற்ப, இந்தியாவில் விதவை மறுமணம் நடைமுறையில் இல்லாதபோது, அந்தக் காலத்தில் சிந்தித்து இந்தக் கோட்பாட்டை ஏற்றுக்கொண் டார்கள். ஒருதார மணம், சாதி அமைப்பை ஒழித்துக் கட்டுவது என்கிற பிரச்சினைகளையும் பெண்களுக்கு முழு உரிமைகளை வழங்கு வதையும் பொறுத்தமட்டிலும், நான் முழுமையாக அவற்றுக்கு

ஆதரவு அளிக்கிறேன் என்று எவ்விதத் தயக்கமும் இன்றித் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

விவாகரத்து பிரச்சினையைப் பொறுத்தமட்டிலும் இந்தியாவின் பெரும்பகுதியில் விவாகரத்து முறை அமலில் இருந்துவருகிறது. இந்நாட்களில் சிலருக்கு இந்த விவாகரத்து முறை மோசமானதாகத் தோன்றுகிறது. உண்மையில், நம்முடையதைப் போன்ற ஒரு நாட்டில், நமது வழக்கங்களுக்கு ஏற்ப பெண்கள் உடன்கட்டை ஏறுவது ஒரு பழக்கமாக இருந்த நாட்டில், விவாகரத்து முறைக்கு எதிர்ப்பு இருப்பது வியப்புக்குரியதல்ல. நம்முடைய நம்பிக்கைகளின்படி, திருமணமானது முறிக்கப்பட முடியாத ஓர் உறவுமுறையாகும்; எனவே இந்தக் கண்ணோட்டத்திலிருந்து, விவாகரத்து உரிமை வழங்கப்படக்கூடாது என்று கூறப்படுகிறது. ஆனால், விவாகரத்து முறை எப்பொழுதும் நம்முடைய நாட்டில் இருந்து வந்துள்ளது, இன்று வரையிலும் கூட இருந்து வருகிறது. ஆனால், சிலர் தங்கள் கண்களை மூடிக்கொண்டு நடக்க விரும்பினால், தங்களைச் சுற்றி உலகில் என்ன நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்பதைக் காண்பதற்கு அவர்கள் விரும்பாவிட்டால், அது அவர்கள் சொந்த விஷயம். இந்த முறை இந்த நாட்டின் 90 சதவீத மக்களிடையே இருந்து வருகிறது என்று டாக்டர் அம்பேத்கர் நம்மிடம் கூறினார். இந்தப்புள்ளிவிவரங்கள் குறைவாக மதிப்பிட்டுக் கூறப்பட்டிருக்கிறதேயன்றி மிகை மதிப்பீடு அல்ல. விவாகரத்துப் பிரச்சினை மற்றும் அது இந்தியாவில் நடைமுறையில் உள்ளதைப் பொறுத்தமட்டிலும், அதை நான் முழுமையாக ஆதரிக்கிறேன்; அது இன்றைய சமுதாயத்தில் பழக்கத்தில் இருந்து வருகிறது என்ற காரணத்தினால் அல்ல, மாறாக, அது நம்முடைய வழக்கங்களில் ஒன்றாகும் என்ற உண்மையினால்தான். எனவே, நான் விவாகரத்துக்கு ஆதரவு தெரிவிக்கிறேன்.

பொறுக்குக் குழுவிலிருந்து வந்துள்ள வடிவத்தில் இந்த இந்து சட்டத் தொகுப்பு மசோதாவில், அதனுடைய பிரதானக் குறைபாடு, அது போதிய அளவுக்கு முன் செல்லவில்லை என்பதுதான். இதுவே இப்பொழுதுள்ள பிரச்சினையாகும்; உண்மையில், நமது நாட்டில் இருந்துவரும் பழக்கவழக்கங்களை முன்னிட்டு, பொறுக்குக் குழு யோசனை கூறியுள்ள சீர்திருத்தங்கள் மிக மிகக் குறைவானதாக உள்ளன; பஞ்சாபிலுள்ள மக்கள் அவ்வளவு பின்தங்கியவர்கள் அல்ல. சமூக சீர்திருத்தங்களைப் பொறுத்தமட்டிலும் பஞ்சாபிய மக்கள் இந்தியாவின் இதர பகுதி மக்களைக் காட்டிலும்

மிகவும் முன்னேற்றமடைந்தவர்கள், இந்தத் தொகுப்புச் சட்டம் அந்த அளவிற்குக் கூடச் செல்வதில்லை. அவர்களுக்கு இந்த சட்டத் தொகுப்பு சமூக சீர்திருத்தம் வகைப்பட்டதல்ல, அதற்குப் பதிலாக இது அவர்களைப் பின்னுக்கு இழுக்கிறது. இந்தச் சட்டத் தொகுப்பைப் பஞ்சாபின் கிராமப்புறப் பிரதேசத்தின் எந்த ஒரு இந்துவுக்கோ அல்லது சீக்கியருக்கோ காட்டினால், அவர் "ஓ, ஐயா, நீங்கள் என்ன செய்கிறீர்கள்? எங்களைப் பெரிய அளவுக்கு நீங்கள் பின்னே தள்ளுகிறீர்கள். இவையெல்லாவற்றைவிடவும் நாங்கள் வெகுதூரம் முன்னேறியுள்ளோம். எங்களை நீங்கள் இன்னும் பின்னுக்கு இழுத்துச் செல்ல விரும்புகிறீர்களா" என்று அவர் கூறுவார். இந்தச் சட்டத் தொகுப்பினால் பஞ்சாப் மக்களுக்கு எவ்வித அனுகூலமும் கிடைக்கப் போவதில்லை. தற்போதைய சட்டத் தொகுப்பு பொறுக்குக் குழுவிடமிருந்து வந்துள்ள வடிவத்தில், பஞ்சாப் மக்களின் தேவைகள் மிகவும் பின்னுக்குத் தள்ளப்பட்டு நிற்கின்றன, அவர்களின் தேவைகள் பின்தங்கி நிற்கின்றன என்பது மட்டுமன்றி, இந்த மசோதாவில் சில விஷயங்கள் தற்போதைய வடிவத்திலேயே அது இருக்குமானால், இதைத் தோற்கடிக்க வேண்டிய கட்டாயத்தை ஏற்படுத்தும். நமது நிறுவனங்களை நாம் பாதுகாக்க விரும்பினால், மசோதாவின் இன்றைய வடிவத்தில் அவற்றைப் பாதுகாக்க முடியாது, அந்த வகையில் இந்த மசோதா தொல்லை கொடுப்பதாகிறது.

திரு. மோகன்லால் கௌதம் *(உ.பி: பொது)*: இது சம்பந்தமாக ஏதேனும் உதாரணத்தைக் கூறுங்கள்.

பண்டிட் தாகூர்தாஸ் பர்கவா: நான் ஒரே ஒரு உதாரணத்தைக் கூறுகிறேன். இந்த முன்னுரைக்குப் பின், ஐயா உங்களுடைய அனுமதியின்பேரில், இந்த மசோதாவிற்கு எதிரான என்னுடைய ஆட்சேபனைகளை எழுப்ப விரும்புகிறேன், அதோடு, எந்த அளவிற்கு இதை நான் ஆதரிக்கிறேன் என்பதையும் கூறுகிறேன். இந்த மசோதாவிலுள்ள பல ஷரத்துக்கள் விஷயத்தில் யாருக்கும் எந்த ஆட்சேபனையும் இருக்க முடியாது, இந்த மசோதாவின் எல்லா ஷரத்துகளையும் எதிர்ப்பதாக ஒரு சிலர் மட்டுமே கூறுவார்கள். ஆனால், ஐயா, நீங்கள் இந்த மசோதாவைப் படித்துப் பார்ப்பீர்களேயானால், பொறுக்குக் குழுவின் 17 உறுப்பினர்களில் 11 பேரிடமிருந்து ஆட்சேபனைக் குறிப்புகள் வந்திருப்பதை நீங்கள் காண்பீர்கள். அவர்கள் யார்? அவர்களில் திருமதி அம்மு சுவாமிநாதனும், திருமதி ரேணுகா ரேயும் உள்ளனர். அவ்விருவரின் ஆட்சேபனைக் குறிப்புகளும் இங்கு உள்ளன.

திருமதி ரேணுகா ரே (மேற்கு வங்கம் : பொது) : இந்தக் குறிப்புகள் அடிப்படைக் கோட்பாடுகள் மீது அல்ல.

பண்டிட் தாகூர்தாஸ் பர்கவா: நான் அதற்கு வருகிறேன். உண்மையைக் கூறுவதெனில், கருத்து மாறுபாட்டுக் குறிப்புகள் எழுதியுள்ள இந்தப் பதினோரு உறுப்பினர்களும், தேர்வுக் குழுவிலிருந்து வந்துள்ள வடிவத்திலான இந்த மசோதாவை எதிர்க்கவே செய்துள்ளனர். கருத்து மாறுபாட்டுக் குறிப்புகளை எழுதியவர்கள் யார் யாரென்ற பட்டியலை நான் தெரிவிக்கிறேன். கருத்து மாறுபாட்டுக் குறிப்புகளில் ஒன்று பக்ஷி தேக் சந்தினுடையது. அவர் தன் வாழ்நாள் முழுவதும் சமூக முன்னேற்றத்திற்காகப் பாடுபட்டு வந்துள்ளவர். சமூக சீர்திருத்தங்களுக்காக எந்த அளவுக்குச் செல்வதற்கும் தயாராயிருப்பவர். அவரும் ஒரு கருத்துமாறுபாட்டுக் குறிப்பு எழுதியிருக்கிறார் என்றால், நாம் எங்கு செல்கிறோம் என்று சிந்திக்க வேண்டும். இந்தக் கருத்துமாறுபாட்டுக் குறிப்புகளை நாம் கவனமாகப் படித்துப் பார்த்தால், 17 உறுப்பினர்களில் குறைந்தபட்சம் 11 பேர் பொறுக்குக் குழுவிலிருந்து வெளிவந்துள்ள வடிவத்திலான இந்த மசோதாவை பலமாக எதிர்க்கிறார்கள் என்பது தெளிவாகத் தெரியும். இந்த முன்னுரைக்குப் பின் இந்த மசோதாவுக்கு எதிராக தாமதப் படுத்துபவை என்று பொதுவாகக் கருதப்படுகிற, பிரேரணைகளை நான் முன்மொழிவதற்கு ஏன் தயாராயிருக்கிறேன் என்பதைத் தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

திரு. தாஜாமுல் உசேன் (பீஹார்: முஸ்லீம்) ஐயா, நான் ஒரு தகவல் பிரச்சினையை எழுப்ப விரும்புகிறேன். தேர்வுக் குழுவின் 17 உறுப்பினர்களில் 11 பேர் கருத்து மாறுபாட்டுக் குறிப்புகள் எழுதியிருப்பதாக மதிப்புக்குரிய உறுப்பினர் குறிப்பிட்டார். அவர்கள் இந்த மசோதாவை எதிர்க்கிறார்கள் என்றால், நாம் இதை நிறைவேற்றுவதற்காகப் பொறுக்குக் குழு எவ்வாறு இந்த மசோதாவைப் பரிந்துரை செய்தது என்பதை மதிப்புமிகு உறுப்பினர்களிடம் கேட்டுத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

பண்டிட் தாகூர்தாஸ் பர்கவா : ஐயா, திரு. துணை சபாநாயகர் அவர்களே, என்னுடைய கருத்தின்படி இது ஒரு தகவல் தெரிந்து கொள்ளும் பிரச்சினையுமல்ல, ஓர் ஒழுங்குப் பிரச்சினையும் கூட அல்ல. ஐயா, நீங்களே இந்த மசோதாவைப் படித்துப் பார்க்கலாம். திரு. பாரதியும் கருத்து மாறுபட்டுக் குறிப்பு ஒன்றை எழுதியுள்ளார்.

திரு. எல். கிருஷ்ணசாமி பாரதி (சென்னை : பொது) : என்னுடையது இந்த மசோதாவுக்கும் ஒரு சிறிது முன்னே செல்லு கிறது. இந்த மசோதாவின் எல்லையை விரிவுபடுத்துவதற்கு நான் விரும்புகிறேன். அதுதான் என்னுடைய கருத்து மாறுபாட்டுக் குறிப்பு.

திரு. துணை சபாநாயகர்: மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் ஒவ்வொரு கூற்றையும், ஒவ்வொரு சொற்றொடரையும் தொடர்ந்து விளக்கிக் கொண்டே போவதா? இது தேவையில்லை.

திரு. எல். கிருஷ்ணசாமி பாரதி : இல்லை ஐயா, நான்....

திரு. துணை சபாநாயகர் : மதிப்பிற்குரிய உறுப்பினரின் கருத்து வேறுபாட்டுக்குறிப்பு அச்சாகி உள்ளது. அவர் ஏதாவது விளக்கம் கூற விரும்பினால், அவருடைய முறை வரும். ஒருவர் பேசும்போது தொடர்ந்து, குறுக்கிடுவதும், மதிப்பிற்குரிய பிற உறுப்பினர்களும் ஒரே சமயத்தில் எழுந்து நிற்பதும் நல்லதல்ல.

திரு. எல். கிருஷ்ணசாமி பாரதி : ஐயா, நான் கூறலாமா....?

திரு. துணை சபாநாயகர் : அமைதி, அமைதி.

பண்டிட் தாகூர்தாஸ் பர்கவா: ஐயா, தனது கருத்தை சபை யின் முன் விளக்க வேண்டிய தொந்தரவை திரு. பாரதிக்கு நான் கொடுக்க மாட்டேன். நானே அவருடைய கருத்தை இங்கு எடுத்துக் கூறுகிறேன். தான் இந்த மசோதாவின் அடிப்படையான கோட்பாடு களுக்கு எந்தவகையிலும் எதிராளி அல்ல என்பதே திரு. பாரதியின் குறிப்பு ஆகும். இதன் தர்க்கரீதியான விளைவாக, வரையறைக்குட் பட்ட சொத்துக்களை சொந்தமாகக் கொண்டுள்ள எல்லாப் பெண் களுக்கும் உரிமை கொடுக்கப்பட வேண்டும். அவர்களை உடனே அவற்றின் முழுமுதல் சொந்தக்காரர்களாக்கிவிட வேண்டும் என்று அவர் விரும்புகிறார். நான் சரியாகச் சொல்கிறேன் என்று நினைக் கிறேன்.

திரு. எல். கிருஷ்ணசாமி பாரதி: நான் பதிலளிப்பதற்கு அனுமதிக்கப்படவில்லை.

திரு. துணை சபாநாயகர் : மதிப்பிற்குரிய உறுப்பினர் பண்டிட் பர்கவா தொடர்ந்து பேசலாம்.

பண்டிட் தாகூர்தாஸ் பர்கவா : ஐயா, இந்தக் காரணத்திற்காகவே, தேர்வுக் குழுவின் பல உறுப்பினர்கள், தேர்வுக் குழுவிலிருந்து வெளிவந்துள்ள வகையிலான மசோதாவின் வடிவம் சம்பந்தமாகத் தமது கருத்துவேறுபாட்டுக் குறிப்புகளை எழுதியுள்ளனர் என்று கூறிக்கொண்டிருந்தேன். இந்தக் கருத்து வேறுபாட்டுக் குறிப்புகள் எந்த நோக்கத்துடன் எழுதப்பட்டன என்பது குறித்து நான் பின்னர் கூறுகிறேன்; ஆனால் என்னுடைய உரையின் நடுவில் யாரும் குறுக்கிட வேண்டாம் என்று விரும்புகிறேன்.

ஐயா, சமூக சீர்திருத்தங்கள் சம்பந்தமாக இந்த மசோதா ஓரளவுக்குத்தான் செல்கின்றது என்ற போதிலும், அதற்கப்பாலும் செல்வதற்கு நான் தயாராகயிருக்கிறேன் என்று கூறிக் கொண்டிருந்தேன். இருந்தபோதிலும், இந்த மசோதாவைப் பூரணமாக ஆதரிக்கும் நிலையில் இன்னும் நான் இல்லை. இது இயல்பானதே. டாக்டர் அம்பேத்கரும் கூட - அவருடைய நல்லெண்ணத்தினால்தான் இந்த மசோதா இந்த வடிவத்தைப் பெற்றுள்ளது, மேலும் அவர் நிகழ்த்திய உரை குறித்து ஒவ்வொரு இந்தியனும், குறிப்பாக, ஒவ்வொரு இந்துவும் பெருமைப்பட்டுக் கொள்ளலாம். அவரும் கூட இந்த மசோதாவின் எல்லா ஷரத்துக்களையும் ஆதரிக்கவில்லை. எனவே, சில இடங்களில் பொறுக்குக் குழு நியாய-விரோதமாக நடந்து கொண்டுள்ளது என்று அவரே கூறியுள்ளார். இதைக் காட்டிலும் கூடுதல் கடுமையான சொற்களைக் கூறுவதற்கு நான் விரும்பவில்லை. ஆனால் அவரும் இந்த மசோதாவுக்கு எதிராக இருக்கிறார் என்று நான் கூறுகிறேன். இவ்வாறு, 12 கருத்து வேறுபாட்டுக் குறிப்புகள் உள்ளன. எனவே 17 உறுப்பினர்களில் 12 பேர் இந்த மசோதாவிற்கு எதிராக இருக்கிறார்களென்றால், இத்தகைய நிலைமையில், திரு. நசிருத்தீன் அகமது முன்மொழிந்துள்ள திருத்தத்திற்கு ஆதரவு கொடுப்பதற்கு நான் விரும்புகிறேனென்றால், இந்த அவை வியப்படையக்கூடாது. இதற்கான காரணம் மிகவும் தெளிவானது. நீங்கள் யாரும் என்னைத் தவறாகப் புரிந்து கொள்ளக்கூடாது என்று விரும்புகிறேன். இந்த மசோதாவின் பல பிரிவுகளை நிறைவேற்றுவதில் ஒரு நிமிஷம் கூடத் தாமதிக்கக் கூடாது என்று கருதுகிறேன். இந்தப் பிரேரணை தாமதப்படுத்தும் எண்ணம் கொண்டதாக இருக்குமேயானால், அவருக்கு நான் ஆதரவளித்திருந்திருக்க மாட்டேன். என்னுடைய பல பிரேரணைகளும் கூட தாமதப்படுத்தும் நோக்கம் கொண்டவை அல்ல. இந்தப் பேரவையில், அதாவது பேரவையின் இந்த அமர்வில் இந்த மசோதா நிறைவேற்றப் போவதில்லை என்பதை நான் அறிவேன். இந்த

மசோதாவை நிறைவேற்றுவதற்கு பேரவையின் ஒரு சிறப்புக் கூட்டம் கூட்டப்பட வேண்டியிருக்கும். அடுத்த கூட்டம் சுமார் 6 மாதங்களுக்குப் பின்னர் வரும். இந்த 6 மாத காலத்தில் நான் எழுப்பும் ஆட்சேபனை குறித்து வெகு எளிதில் முடிவு செய்து விடலாம். ஐயா, உங்களுடைய அனுமதியுடன், இந்த மசோதா மீண்டும் தேர்வுக் குழுவிற்குத் திருப்பி அனுப்பப்படுவதை நான் விரும்பவில்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன். இத்தகைய பிரேரணைக்கு என்னுடைய காரணங்கள் வேறுபட்டவை. இந்த மசோதா எப்படியாவது ஒரு முடிவுக்கு வந்துவிடும் என்று நான் விரும்புவதாக, ஒரு வேளை சில மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் நினைத்துக் கொண்டிருக்கக் கூடும். இந்த மசோதாவை முடக்கு வதற்கு நான் விரும்பவில்லை. இது நிறைவேற்றப்பட வேண்டும் என்றுதான் விரும்புகிறேன். இந்த மசோதாவின் எல்லா நல்ல அம்சங்களும் ஏற்றுக் கொள்ளப்படவேண்டும் என்று விழைகிறேன். எனவே இந்த மசோதாவை நிதானமான மனதுடன் பார்க்க வேண்டியது அவசியமாகும். சூடான வாதங்களில் ஈடுபட வேண்டிய அவசியமில்லை. எனவே, நான் கூற வேண்டியிருப்பவற்றையெல் லாம் நீங்கள் பொறுமையாகக் கேட்க வேண்டும் என்று விரும்பு கிறேன். இதை டாக்டர் தவறாக எடுத்துக் கொள்ள மாட்டார் என்று கருதுகிறேன். இதையெல்லாம் மிகவும் பணிவாகத் தெரிவித்துக் கொள்வதற்கு விரும்புகிறேன், எதிர்ப்பு உணர்வுடன் அல்ல. ஆனால் நான் கூற விரும்புகின்றவற்றைக் கூறுவதற்கு எனக்குத் துணிவு வேண்டும். மற்றவர்கள் இதை, தாராள மனதுடன் இல்லாவிட் டாலும் குறைந்தபட்சம் நியாயமான முறையில் வியாக்கியானம் செய்யவேண்டும் என்று விரும்புகிறேன். இவை யாவற்றையும் மிகவும் மரியாதையுடன் தெரிவித்துக் கொள்கிறேன், இதை மிகவும் முக்கியமானதாகவும் கருதுகிறேன். புதிய தேர்தல்கள் நடத்தப்பட வேண்டியுள்ளது என்பதை மதிப்பிற்குரிய ஒவ்வொரு உறுப்பினரும் அறிவார்கள் என்பதை தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். தற்போ துள்ள உறுப்பினர்கள் அனைவரும் மறைமுகத் தேர்தல் மூலமாகவே இங்கு வந்துள்ளனர். நமக்குப் பிறகு இங்கு வரவிருக்கும் உறுப் பினர்கள் நேரடித்தேர்தல் மூலமும், வயது வந்தோர் வாக்குரிமை மூலமும் வருவார்கள். அரசியல் நிர்ணய சபையில் நிறைவேற்றப் பட்டுள்ள தீர்மானத்தின்படி, தேர்தல்கள் 1950ல் நடைபெறும். அப்பொழுதுதான், நான் அதை, ஐயா, நீங்களே கூறியபடி, முழு இறையாண்மை படைத்த அவை என்று கூறுவேன். இருந்தபோதிலும், **பண்புடைமைக்** கோட்பாட்டிற்கேற்ப, 30 கோடி மக்களின் அன்றாட வாழ்க்கை சம்பந்தப்பட்ட ஒரு விஷயத்தை நாம் முடிவு செய்வதற்குப் பதிலாக, நேரடித் தேர்தல் வாயிலாகவும், வயது வந்தோர் வாக்குரிமை

மூலமும் வரப்போகின்றவர்கள் இந்தப் பிரச்சினை குறித்து முடிவு செய்ய வேண்டும் என்று தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இதுதான் சரியான வழிமுறையாக இருக்கும் என்று நினைக்கிறேன். **பண்புடைமை என்ற கோட்பாட்டின் அடிப்படையில் இதைத் தெரிவித்துக் கொள்வதற்கு விரும்புகிறேன்.** இந்தப் பேரவை அரசியல் சாசனத்தைமட்டுமே உருவாக்க முடியும் என்று சிலர் கருதுகின்றனர். நேற்றைய தினம் முன்வைக்கப்பட்ட அதே வாதம்தான் இது. ஒரு சொத்தை 12 மகன்களுக்கு இடையில் பிரித்துக் கொள்ளும்போது துண்டு துக்காணியாக அது சிதறாதபோது, ஒரு மகளையும் அந்த சொத்துப் பிரிவினையில் சேர்த்துக் கொள்ளும் போதும் அது அவ்வாறு சிதறாது என்று கூறப்பட்டது. ஆனால் ''ஒரு தவறு மற்றொன்றை நியாயப்படுத்த முடியாது'' என்று கூறுகிறேன்.

அரசியல் சாசனத்தை உருவாக்குவதற்குக் கூட, இந்தப் பேரவை தகுதியுடையதல்ல என்று திரு. மோகன்லால் கௌதம் கூறினார். அவருடைய கருத்துக்களை நான் ஏற்றுக்கொள்ளவில்லை. ஆனால் நீங்கள் அதை ஏற்றுக் கொள்கிறீர்கள் என்றால், அந்தத் தவறை மீண்டும் ஏன் செய்கிறீர்கள்? இது மிகவும் தவறானது. நீங்கள் இந்தக் கருத்தைக் கொண்டிருக்கவில்லையென்றால், அது வேறு விஷயமாகும். அரசியல் சாசனத்தை உருவாக்கும் இந்தப் பேரவை இறையாண்மை படைத்த ஒரு அவையாகும். இது முற்றிலும் சட்டப்பூர்வமானதே. இதே முறையில், இந்த அவை அது விரும்பும் எந்த சட்டங்களையும் இன்று நிறைவேற்றுவதற்கு முழு அதிகாரம் படைத்ததாகும்.

இருந்தபோதிலும், இந்த விஷயத்தில் நாம் அவசரப்படக் கூடாது என்று பண்புடைமை உணர்வும் தகவுப் பொருத்த உணர்வும் நம்மைக் கோருகின்றன. ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக நாம் இந்தக் கோட்பாடுகளைக் கடைப்பிடித்து வந்துள்ளோம்; எனவே, அடுத்த 6 மாதங்களில் வானம் உடைந்து நம் தலைமீது விழுந்து விடாது, எனவே அவசரக் கோலத்தில் உடனே இந்த மசோதாவை நாம் நிறைவேற்ற வேண்டிய அவசியமில்லை என்று தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். எனவே, ஐயா, உங்களுடைய கருத்து வேறுபாட்டுக் குறிப்பில் நீங்கள் எழுதியிருந்தது போன்று: இந்த 12 பேர்களில், இராசி வட்டத்திலுள்ள 12 ராசிகள் - அவற்றில் நீங்களும் ஒருவர் என்பதை மிகவும் பணிவுடன் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்; உங்களோடு கூட பாபுராம் நாராயண் சிங்கும் 11ம் பக்கத்தில் கீழ்வருமாறு கூறியுள்ளார்:

''உறுப்பினர்கள் மறைமுகமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள். வாக்காளர்களிடமிருந்து அவர்களுக்கு அதிகாரம் வழங்கப்படவில்லை. பெருமளவிலான அபிப்பிராயமும், பெரும்பான்மையோரும் மசோதாவின் பெரும்பாலான ஷரத்துக்களுக்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர். இந்த மசோதா இந்து சமுதாயத்தின் அடிப்படையான கட்டுமானத்தை மாற்று வதற்கு முயல்கிறது.''

நேரடித் தேர்தல் மூலமாக, இந்தப் பேரவைக்குத் தேர்ந் தெடுக்கப்படும் பிரதிநிதிகள், இங்கு வந்த பின்னர், இந்த விஷயத் தில் முடிவு செய்வதற்கு அவர்களுக்கு வாய்ப்புக் கொடுக்கப்பட வேண்டும் என்று நீதி கோருகிறது என்று மிகவும் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன். நமது மிகவும் மதிப்பிற்குரிய, மற்றும் நாட்டின் ஒரு மெய்யான தலைவருமாகிய டாக்டர் இராஜேந்திரப் பிரசாத்தும் இந்தக் கோட்பாட்டை ஒத்துக் கொண்டு, இந்த மசோதா முழுமையாக, எதிர்வரும் பிரதிநிதித்துவப் பேரவையின் முன்னால் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்று ஒரு கடிதமும் எழுதியுள்ளார்.

திரு. தாஜாமுல் உசேன்: கவர்னர் - ஜெனரல் என்ன எழுதி யிருக்கிறார்?

பண்டிட் தாகூர்தாஸ் பர்கவா : ஐயா, கவர்னர் - ஜெனரலைப் பற்றி நீங்கள் கூறுவதெல்லாம் இங்கு குறிப்பிடப்பட்டுள்ளது. மூத்தோர்களின் கருத்தை நான் மிகவும் உயர்வாகக் கௌரவிக்கிறேன், மதிக்கிறேன் என்பதை மிகவும் மரியாதையுடன் இங்கு தெரிவித்துக் கொள்வதற்கு விரும்புகிறேன். இந்த விஷயம் இன்று எனக்கு அக்கறையுள்ளதாகும். எங்கோ தொலைதூரக் கிராமத்தில் வாழும் ஒவ்வொரு பெண்ணுக்கும் அக்கறையுள்ளதாகும். இதனால் ஒவ் வொருவரும் பாதிக்கப்படுவார்கள். எனவே ஒவ்வொருவருக்கும் தன்னுடைய கருத்தைச் சொல்வதற்கு உரிமை உண்டு. நான் ஏற்றுக் கொள்ளாதது என்னவெனில், நேற்றைய தினம் என்னுடைய மதிப்புக் குரிய சகோதரி திருமதி சுசேதா கிருபளானி, இந்த முறையில் நூற் றாண்டுகள் கடந்து போகும் என்று கூறியிருந்தார்கள். இந்த மசோதா கடந்த பத்தாண்டுகளாக நிலுவையிலிருந்து வந்துள்ளது. இது 1941ல் தயாரிக்கப்பட்டது. இந்த வாதம் என்னைக் கவரவில்லை. இந்த நாட்டில் எழுத்தறிவு எந்த அளவில் இருக்கிறது என்று கேட்க விரும்புகிறேன். இந்த நாட்டின் பெண்கள் எவ்வளவு பேர் எழுத் தறிவு பெற்றவர்களாக உள்ளனர்? இந்த அவையின் உறுப்பினர் களாகவுள்ள என்னுடைய மதிப்பிற்குரிய சகோதரிகளுக்கு எடுத்துக் கூற விரும்புகிறேன்: அவர்களுடைய கருத்தை நான் உயர்வாக

மதிக்கிறேன்; ஆனால், கிராமங்களிலும் நகரங்களிலும் வாழ்கின்ற அவர்களின் ஆயிரக்கணக்கான சகோதரிகள் இந்த விஷயத்தில் தங்களுடைய அபிப்பிராயத்தைக் கூறுவதற்கு உரிமை பெற்றிருக் கிறார்களா! இந்தக் காரணத்திற்காகவே இங்குள்ள என்னுடைய மதிப்பிற்குரிய சகோதரிகள் இந்த விஷயத்தில் பொறுமையையும் ஓரளவு அடக்கத்தையும் கடைப்பிடிக்க வேண்டுமென்று வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறேன். தங்களுடைய அபிப்பிராயத்தை எடுத்துக் கூறுவதற்கு அவர்களுக்கு முழு உரிமையுண்டு. அவர்களின் கருத் துக்களும் சேர்த்துக்கொள்ளப்பட வேண்டுமென்று நான் கூறினால், அதைக் குற்றமாகக் கருதமுடியாது. நகரங்களிலும் கிராமங்களிலும் வாழும் மக்களுக்கு இந்த மசோதா எதைப்பற்றியது. அதன் ஷரத் துக்கள் யாவை என்பதெல்லாம் தெரியாது என்று மிகவும் மரியாதை யுடன் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். மதிப்பிற்குரிய சில உறுப்பினர்கள் ''கேளுங்கள்'' ''கேளுங்கள்'' என்றனர்: இந்த மசோதா வின் ஷரத்துக்களை ஆராயாதவர்கள் நிறைய பேர் இருக்கிறார்கள். இந்த அவையின் பல உறுப்பினர்கள் இதனுடைய முக்கியத்துவம் என்ன என்பதை இன்னும் உணரவில்லை.

திருமதி ஜி. துர்க்காபாய் : இந்த நாட்டின் பெண்கள், சீர்திருத் தத்திற்கான உங்களுடைய இதர மசோதாக்களின் ஷரத்துக்களைப் புரிந்து கொள்வதற்குத் தகுதியுடையவர்களாக இருக்கின்றார்கள் என்று நீங்கள் கருதும்போது இந்த மசோதாவின் ஷரத்துக்களை அவர்களால் புரிந்துகொள்ள முடியும் என்று நீங்கள் நினைக்க வில்லையா?

பண்டிட் தாகூர்தாஸ் பர்கவா : இந்தக் குறுக்கீட்டை நான் வரவேற்கிறேன், ஏனெனில், இது மெய்யான விஷயத்தை விளக்கு வதற்கு எனக்கு ஒரு வாய்ப்பைக் கொடுத்துள்ளது. ஐயா, முன்பு ஒரு காலத்தில், 'சதி' (உடன்கட்டை ஏறுவது தடுப்பு) மசோதா, விதவை மறுமண மசோதா, சாரதா சட்டம் முதலியன நிறைவேற்றப் பட்டன. இன்று இந்த அவையின் முன்னால் உள்ள இந்த மசோதா வும் அதே வகைப்பட்டதே. இது சாதாரண மக்களின் அபிப்பிரா யத்தை கவனத்தில் எடுத்துக் கொண்டு நிறைவேற்றப்படக்கூடிய வற்றினின்றும் உயர்ந்த மட்டத்தில் உள்ள ஒன்றாகும் என்று திருமதி துர்க்காபாய் கருதுகிறார்.

திரு. தாஜாமுல் உசேன்: ஐயா, ஓர் ஒழுங்குப் பிரச்சினையை எழுப்புவதற்கு எனக்கு அனுமதி தருவீர்களா?

திரு. துணை சபாநாயகர் : தயவு செய்து அந்த ஒழுங்குப் பிரச்சினை என்னவென்று கூறுங்கள்.

திரு. தாஜாமுல் உசேன்: ஐயா, என்னுடைய ஒழுங்குப் பிரச்சினை இதுதான்: மதிப்பிற்குரிய என்னுடைய நண்பர், இந்த வகையில் அவை முழுவதையும் அவமதித்துள்ளார்; அவர் பேசியதை நீங்கள் கேட்டீர்கள். இந்து தொகுப்புச் சட்ட மசோதாவைப் புரிந்து கொள்ளாத உறுப்பினர்களும் இந்த அவையில் இருக்கிறார்கள் என்று அவர் கூறுகிறார். இது இந்த அவையை அவமதித்திற்கு ஒப் பாகும். இதுகுறித்து சபாநாயகரின் தீர்ப்பு வேண்டும்.

திரு. துணை சபாநாயகர்: இந்த ஒழுங்குப் பிரச்சினையில் விஷயம் ஏதும் இருப்பதாகத் தெரியவில்லை. மதிப்பிற்குரிய உறுப் பினர் அர்த்தப்படுத்துவதெல்லாம், இந்த மசோதாவின் முழு விளைவுகளையும் மக்களின் வெவ்வேறு பகுதியினர் வெவ்வேறு விதமாகப் புரிந்து கொள்ளக்கூடும் என்பதுதான். மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் புரிந்து கொள்ள வேண்டுமென்று அவர் விரும்பும் முறையில் அவை புரிந்து கொள்ளப்படவில்லை என்று அவர் கருது கிறார்.

பண்டிட் தாகூர்தாஸ் பர்கவா: ஐயா, இதைத் தவிர, இந்த அவையின் பிற மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் புரிந்து கொண்டிருப் பதைக் காட்டிலும் கூடுதலாக, இந்த மசோதாவின் ஷரத்துக்களை நான் புரிந்து கொண்டிருப்பதாகக் கூறுவதற்கு நான் தயாராயில்லை. நான் அவ்வாறு உரிமை கொண்டாடவில்லை. என்னைப் பொறுத்த மட்டிலும், இந்த மசோதாவின் அனைத்து ஷரத்துக்களையும், அனைத்து விதிகளையும், அனைத்து விளைவுகளையும் நான் பூரண மாகப் புரிந்துகொள்ளவில்லையென்று கூறுவதற்கு நான் தயாரா யிருக்கிறேன் இதை அனைத்து மதிப்பிற்குரிய உறுப்பினர்களைப் பற்றியும், குறிப்பாக என்னைப் பற்றியும் நான் கூற முடியும். இங்குள்ள மதிப்பிற்குரிய உறுப்பினர்கள், வழக்கறிஞர்களாக இல்லாத வர்கள், தாங்கள் இந்த மசோதாவைப் பூரணமாகப் புரிந்து கொண் டுள்ளதாகக் கூறமுடியும். ஆனால் இங்குள்ள வழக்கறிஞர்கள், பொறுக்குக் குழுவிலிருந்து வந்துள்ளபடியான மசோதாவின் அனைத்து ஷரத்துகளையும் தாங்கள் புரிந்துகொண்டுள்ளதாக நம்பிக்கையுடன் கூற முடியாது. **இந்த அவையில் எனக்கு அனுமதி யில்லை,** ஆனால் நான் அனுமதிக்கப்பட்டால், திரு. தாஜாமுல் உசேனிடம் இரண்டு அல்லது மூன்று கேள்விகள் கேட்க விரும்புவேன்;

அவர் புரிந்து கொள்கிறாரா இல்லையா என்று அவர் பதிலளிக்க வேண்டும். அவையை அவமதிக்க வேண்டும் என்பது சிறிதும், என்னுடைய எண்ணமல்ல. அது என்னுடைய நோக்கம் அல்லவே அல்ல என்று மிகவும் மரியாதையுடன் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்...

திரு. துணைத் தலைவர் : ஒவ்வொரு பிரஜையும் சட்டத்தைத் தெரிந்திருப்பார் என்று அநுமானிக்கப்படுகிறது. மதிப்பிற்குரிய ஒவ்வொரு உறுப்பினரும் இந்த மசோதாவைப் படித்திருப்பார் என்று அநுமானிக்கப்படுகிறது. மதிப்பிற்குரிய உறுப்பினர் தொடர்ந்து பேசலாம்.

பண்டிட் தாகூர்தாஸ் பர்கவா: இந்த முன்னுரைக்குப் பின்னர், ஐயா, திரு. நசிருத்தீன் அகமதின் திருத்தத்தை நான் ஏன் ஆதரிக்கிறேன் என்பதை உங்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விழைந்தேன். ஐயா, உங்களுடைய கனிவான பார்வைக்கு சில விபரங்களை சமர்ப்பித்திருந்தேன். இந்த அவை அவ்வளவு பிரதிநிதித்துவம் வாய்ந்ததல்ல. ஒரு சில மாதங்களில் ஒரு புதிய அவை ஏற்படப் போகிறது. எனவே, இந்த மசோதா பற்றிய விவாதத்தைப் புதிய அவை ஏற்படுகின்ற வரையில் ஒத்திப்போடுவது முறையாக இருக்கும்.

என்னுடைய வேண்டுகோளுக்கு ஆதரவாக இன்னும் வலுவான ஒரு வாதம் என்னவெனில், ஐயா, இன்று சொத்து என்பதில் இரு வேறுவகைகள் அடங்கியுள்ளன என்பதை நீங்கள் நன்கு அறிவீர்கள். ஒன்று நிலங்கள், மற்றயது வீடுகள். நிலவுடைமையைப் பொறுத்த மட்டிலும், இந்த மசோதா அதை பாதிப்பதில்லை. பிரதானமாக ஒரு விவசாய நாடாகவும் 90 சதவீத மக்கள் கிராமங்களில் வசிக்கும் நிலைமையுடைய இந்தியா போன்ற ஒரு நாட்டில், வாரிசுரிமையின் மீது இதனுடைய பாதிப்பு எவ்வாறிருக்கும்? ஒரு நபரின் மரணத்திற்குப்பின்னர், அவருடைய நிலங்கள் ஒரு சட்டத்தின் ஆளுகைக்கு உட்பட்டதாக இருக்கும்; கிராமத்திலுள்ள அவருடைய வீடு மற்றொரு சட்டத்தின் ஆளுகைக்கு உட்பட்டதாக இருக்கும். எனக்கு என்ன ஏற்படும்? எனக்கு டில்லியில் ஏதாவது சொத்து இருந்தால், இந்த சொத்து ஒரு சட்டத்தின் ஆளுகைக்கு உட்பட்டதாக இருக்கும்; பகதூர்கரிலுள்ள என்னுடைய நிலவுடைமைகள் மற்றொரு சட்டத்தின் ஆளுகைக்கு உட்பட்டதாக இருக்கும். பகதூர்கரில் என்னுடைய வயலில் கட்டப்பட்டுள்ள என்னுடைய வீடு ஒரு சட்டத்தின் ஆளுகைக்கு உட்பட்டதாக இருக்கும். டில்லியிலுள்ள என்னுடைய

வீடு மற்றொரு சட்டத்தின் ஆளுகைக்குட்பட்டதாக இருக்கும். இது ஒரு சீரானதா? இத்தகைய விஷயம் நீடித்து நிலைத்திருக்குமானால், இதன் விளைவு என்னவாக இருக்கும்? பகதூர்கரில் ஒரு வாரிசு நியமிக்கப்படுவார். அவரை இந்து சட்டம் அங்கீகரிக்காது. பின்னர், வாரிசாக நியமிக்கப்படும் அந்த சிறுவன் பகதூர்கரில் உள்ள நில வுடைமையை வாரிசாகப் பெறுவார். ஆனால் மரணமடைந்தவரின் குடியிருப்பு வீட்டுக்கு வேறொருவர் உரிமை பாராட்டுவார். பைய னுக்கு நிலவுடைமைச் சொத்து கிடைக்கும், ஆனால் வீட்டின் மீது அவனுக்கு உரிமை கிடைக்காது. அப்படியெனில் அந்த சிறுவன் எங்கே போவான்? இந்த மசோதாவின் விளைவு, நிலவுடைமைச் சொத்தின் மீது இது பிரயோகமாகாது. பொருளாதார உடைமை களை உருவாக்குகின்ற, மற்றும் சராசரி மனிதனின் நிலவுடைமைச் சொத்து பங்குபோடப்படுவதற்கு இடமளிக்காத ஒரு மசோதாவை டாக்டர் அம்பேத்கர் நிறைவேற்ற விரும்புகிறார் என்று நினைக் கிறேன். ஆனால் இந்தச் சட்டம் எப்பொழுது அமலுக்கு வரும், ஜமீந்தாரி முறை எப்பொழுது ஒழிக்கப்படும் என்பதை நான் அறியேன்.

திருமதி ரேணுகா ரே: அத்தகைய ஒரு மசோதாவை நீங்கள் உடனேயே பிரேரணை செய்யலாம்.

பண்டிட் தாகூர்தாஸ் பர்கவா: என்னுடைய மதிப்பிற்குரிய சகோதரி நினைப்பதைப் போன்று, எண்ணங்கள் அவ்வளவு எளிதாக இந்த உலகில் நிறைவேற்றப்படுவதில்லை. ஒரு மசோதாவைப் பிரேரணை செய்வதன் மூலமாக மட்டுமே இந்த எண்ணம் நிறை வேற்றப்பட்டு விடுவதில்லை. இந்த மசோதா நாட்டின் நன்மைக் கானதாகும். ஆனால் எத்தனைத் தடங்கல்களை இந்த மசோதா சமாளிக்கவேண்டியுள்ளது? நில மசோதாவுக்கு எவ்வளவு நேரம் தேவைப்படும்? அது எப்போது நிறைவேற்றப்படும்? அந்த மசோதா வின் மூலம் ஒவ்வொருவருடைய உரிமைகளும் பறிக்கப்படும். இது மாகாண அரசின் அதிகாரத்திற்குட்பட்டது. நிலங்கள் பிரச்சினை சம்பந்தப்பட்ட மட்டிலும், அரசியல் சாசனத்தின் கீழ் இதுவும் மத்திய அரசின் அதிகாரத்தின் கீழ் வரக்கூடும். இதற்கு வழிசெய்யும் வகையில் நமது அரசியல் சாசனத்தில் மாற்றங்கள் செய்யப்பட வேண்டுமென்று நான் விரும்புகிறேன். இந்த மசோதா நிறைவேற்றப் பட்டால், இது வீடு (குடியிருப்பு) சம்பந்தமான சொத்தை பாதிக்கும்

அதே சமயத்தில், நிலவுடைமைச் சொத்து இதன்கீழ் வருவதில்லை என்ற குறைபாடு இதிலிருப்பதை நான் காண்கிறேன். ஒரு பெருங்குழப்பமான விஷயமாகும். அசல் மசோதாவில் இப்பொழுது ஒரு மாற்றம் செய்யப்பட்டுள்ளது; அதன்படி இப்பொழுது இந்த மசோதா மத்திய அரசின் நிர்வாகத்தின் கீழ் உள்ள பகுதியில் உள்ள நிலங்களுக்கும் பொருந்தும். அதாவது ஆஜ்மீர் - மீர்வாரா மற்றும் டில்லியில் உள்ள குடியிருப்பு மற்றும் நிலவுடைமைச் சொத்துக் களுக்கும் இது பொருந்தும். இதர மாகாணங்களில் இந்த மசோதா நிலங்களுக்குப் பொருந்தாது. டில்லியிலும் ஆஜ்மீர் - மீர்வாரா விலும் இது கிராமப்புறச் சொத்துக்களுக்கும், நகர்ப்புறச் சொத்துக் களுக்கும் பொருந்தும். இது இந்த மசோதாவின் ஒரு பெரிய குறை பாடாகும். இது மசோதாவின் அடிப்படையையே தகர்க்கிறது.

இந்த மசோதா தங்களை எவ்வாறு பாதிக்கும் என்பதை மக்கள் இன்னும் உணரவில்லை. இந்தக் காரணத்தினால்தான், இந்த மசோதாவுக்கு முழு விளம்பரம் கொடுக்கப்படவில்லை என்று நான் தெரிவித்திருந்தேன். இந்த மசோதாவின் மூலமாகத் தமது வாரிசுரிமைச் சட்டத்தில் மிக முக்கியமான அடிப்படையான மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன, இந்த மாற்றங்கள் இந்தியா விலுள்ள ஒவ்வொரு குடும்பத்திடமும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதை இன்று மக்கள் தெரிந்திருப்பார்களேயானால், இந்த மசோதா சட்டமாக்கப்படக் கூடாது என்று வலியுறுத்தி ஏராளமான மக்கள் டில்லிக்கு சாரிசாரியாக வந்து மனுக்கள் தருவார்கள் என்பதில் ஐயமில்லை. இந்த உண்மையைப் பலர் அறிய மாட்டார் கள். இதனை இந்த அவையின் உறுப்பினர்கள் அறிவார்கள். வழக்கறிஞர்கள் சங்கங்களும் பத்திரிகைகள் படிக்கும் சிலரும் அறிவார்கள். இத்தகையவர்கள் எண்ணிக்கை எவ்வளவு சொற்ப மானது என்பதை நீங்கள் புரிந்துகொள்ள முடியும். இந்து சமுதாயம் முழுவதையும் பாதிக்கக்கூடிய இத்தகைய மசோதா போதிய அளவு சுற்றுக்கு விடப்படவில்லை; மக்களின் அபிப்பிராயமும் அறியப்பட வில்லை. ஒரு குழு அமைக்கப்பட்டது. அது சில இடங்களுக்குச் சென்று கருத்துகளைக் கேட்டறிந்தது. அந்தக் குழுவின் அறிக்கை என்னிடம் உள்ளது. இந்தக் குழுவின் உறுப்பினர்கள் எங்கெல்லாம் சென்றார்கள், அவர்கள் எவர்களுடைய கருத்துக்களைச் சேகரித்துப் பதிவு செய்தார்கள் என்பதை நீங்கள் பார்ப்பீர்களேயானால் அவர்கள் மேல்மட்டத்திலுள்ள, கல்வி கற்ற சிலரது அபிப்பிராயங்களை

மட்டுமே கேட்டறிந்தார்கள் என்பதையும் நாட்டின் மிகப் பெரும் பான்மையினரது கருத்தை அவர்கள் கேட்டறியவில்லை என்பதையும் காண்பீர்கள்.

இதில் கல்வி கற்றவர்கள் என்ற பிரச்சினையே இல்லை. இந்த மசோதாவிற்கு, தமது பொறுப்புக்களைப் பூரணமாக உணர்ந் துள்ள ஒவ்வொரு தாயும் தகப்பனும் தங்களுடைய அபிப்பிராயங் களைக் கூறலாம். இதனால் ஒவ்வொருவரும் பாதிக்கப்படு கிறார்கள், எனவே ஒவ்வொரு நபரும் தனது அபிப்பிராயத்தைக் கூறுவதற்குத் தகுதி யுடையவர்தான். தவிரவும், மூல மசோதாவில் பொறுக்குக் குழு செய்துள்ள மாற்றங்களைப்பற்றி யாருக்கும் எதுவும் தெரியாது என்று தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். பேரவை உறுப்பினர்களுக்கு மட்டுமே இந்த மாற்றங்களைப் பற்றிய தகவல் தெரியும். இதர மக்களுக்கு, பொறுக்குக் குழு என்ன மாற்றங்களைச் செய்துள்ளது என்பது தெரியாது. பொறுக்குக் குழு இந்த மசோதாவில் மாற்றங்களைச் செய்துள்ளதால் இது சுற்றுக்கு விடப்பட வேண்டியது மிகவும் அவசியம் என்ற பிரச்சினை எழுகிறது. மக்களின் பழக்க வழக்கங்களில் - பாதிக்கப்படும் மக்களின் பெரும்பான்மையோரின் அபிப்பிராயத்தைத் தெரிந்து கொள்ளாத வரையில், எந்தச் சட்டமும் தீவிர மாற்றங்களைச் செய்யக்கூடாது என்ற பழைய பிரச்சினையை ஒருபக்கம் ஒதுக்கிவையுங்கள். இன்று அறிமுகம் செய்து வைக்கப்படும் மசோதாவில் பொறுக்குக் குழு ஜீவாதார முக்கியத்துவமுடைய மாற்றங்களைச் செய்துள்ளது, அதுகுறித்து எல்லோருக்கும் முழுத் தகவல்கள் கிடைக்க வேண்டும். இந்தக் காரணத்திற்காக மட்டும்தான், இது சுற்றுக்கு விடப்பட வேண்டியது கூடுதல் அவசியமாகிறது.

இந்த மாற்றங்களைப் பற்றி நான் எதுவும் கூறுவதற்கு முன்னால், ஒரு விஷயத்தை அவையின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். சட்டத்தின் உருவகமாக இருக்கும் சட்ட இலாகாவே, - அதனுடைய பெயரே கூட சட்ட இலாகா என்றிருக்கிறது - இவர் களே சட்டத்தை மதிப்பதில்லை என்று கூறுவதற்கு நான் வருந்து கிறேன். இந்த நபர்களே இத்தகைய ஒரு நடைமுறையை ஏற்படுத் தும்போது - இதை அவர்கள் ஏற்படுத்தியிருக்கவே கூடாது - நான் இவ்வாறுதான் கூற வேண்டும்.

گر کفر از کعبه فیزد کجا بود مسلمانے

உங்களுக்கு முன்பாக இந்தப் பொறுப்பில் இருந்தவரால் முடிவு செய்யப்பட்ட பிரச்சினையை நான் தொடர விரும்பவில்லை. அந்தப் பிரச்சினை முடிவு செய்யப்பட்டு விட்டது. அந்தத் தீர்ப்பு எனக்கு இறுதியானது. அதை நான் ஆட்சேபிக்கவில்லை. என்னுடைய கருத்துப்படி அந்தத் தீர்ப்பு சரியானதல்ல என்பதை நான் அறிவேன் என்றபோதிலும், அந்தத் தீர்ப்பை நான் உயர்வாக மதிக்கிறேன். அதுகுறித்து எத்தகைய ஐயப்பாடும் எழுப்ப நான் விரும்பவில்லை.

திரு. தாஜாமுல் உசேன்: சபாநாயகரின் தீர்ப்பு தவறானது என்று அவையினுள் யாரும் கூற முடியாது.

திரு. துணை சபாநாயகர்: மதிப்பிற்குரிய உறுப்பினர் திரு. பர்கவாவைப் புரிந்து கொள்ளவேயில்லை என்பதற்காக நான் வருந்துகிறேன். அந்தத் தீர்ப்பை அவர் ஒத்துக்கொள்ளவில்லை என்றுதான் கூறுகிறார். ஆனால் இங்கு அவர் அதைக் கேள்வி கேட்க முடியாது. எந்த உறுப்பினரும் தன்னளவில் சிந்திப்பதற்கும், தமது அபிப்பிராயப்படி, தாம் அதை ஏற்றுக்கொள்ளவில்லை என்று கூறுவதற்கும் உரிமையுண்டு. ஆனால், அந்தத் தீர்ப்பு அவரையும் கட்டுப் படுத்தும். இதில் தவறு ஒன்றும் இல்லை என்று கருதுகிறேன்.

பண்டிட் தாகூர்தாஸ் பர்கவா: என்னுடைய மதிப்பிற்குரிய நண்பர் திரு. தாஜாமுல் உசேன், ஏதாவது ஒழுங்குப் பிரச்சினையை எழுப்பும்போதெல்லாம் ஒரு நிமிஷமும் கூட அது நிலைத்து நிற்பதில்லை என்பதற்காக மிகவும் வருந்துகிறேன். நானும் கூட பதிலளிப்பதற்கு வகை செய்யக்கூடிய அத்தகைய ஒழுங்குப் பிரச்சினையை எழுப்புமாறு நான் விழைகிறேன். இந்த மசோதா, நிலங்களுக்குப் பொருந்துமா அல்லவா என்று இந்த சமயத்தில் அவர் மற்றொரு மதிப்பிற்குரிய உறுப்பினரிடம் விவாதித்துக் கொண்டிருப்பதாக நான் அறிவேன்; ஆனால் அவர் பாசாங்கு செய்து, இந்தத் தொகுப்பு மசோதாவைத் தான் புரிந்து கொண்டுள்ளதாகக் கூறுகிறார். அவைத்

தலைவரின் தீர்ப்பின் மீது நான் வேறு கருத்துக் கொண்டிருக்கிறேன் என்று கூறினால், நான் பூரணமாக என்னுடைய உரிமைகளுக்கு உட்பட்டே இவ்வாறு கூறுகிறேன், என்று தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். மாண்புமிகு அவைத் தலைவரின் தீர்ப்பில் தொடப் படாத ஒருசில பிற அடிப்படையான விஷயங்களை எடுத்துக் கூற விரும்புகிறேன். குறிப்பாக, அரசியல் சாசனத்தை உருவாக்கும் அவையாகிய இந்த அவை நம்முடைய விஷயங்கள் எதையும் நாட்டில் எந்த நீதிமன்றத்தின் முன்னும் வைக்க முடியாது. ஒரு குறிப்பிட்ட சட்டத்தை நிறைவேற்றுவதற்காக இந்த அவை தனது கோட்பாடுகளைக் கைவிடுமேயானால், நாம் நமது பொறுப்புக் களைக் கைவிடும் தவறு செய்தவர்களாவோம். பொறுக்குக் குழு இந்த மறு வரைவு செய்யப்பட்ட மசோதாவில், நாம் புரிந்துள்ள தவறுகள் மூன்று வகைப்பட்டவையாகும் என்று தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். முதலாவதாக, ஒரு மசோதா அவையின் முன்னால் விவாதத்திற்கு வரும்போது, அவையின் உடைமையாகும் போது, அவையில் முன்மொழியப்படும்போது, அதற்குப் பிறகு, எந்த உறுப்பினராவது, அவர் எவ்வளவு பெரிய மனிதராக இருந்த போதிலும், அவர் எவ்வளவு நல்லவராக இருந்தபோதிலும், அவை யின் ஒப்புதல் இன்றி, அதில் ஒரு காற் புள்ளியைக் கூட அவர் மாற்றமுடியாது. அதில் ஏதாவது அச்சுப்பிழைகள் இருந்தால் அது வேறு விஷயம். அதுவும்கூட ஒரு சாராம்சமான தவறாக இருந்தால், அது மீண்டும் அச்சடிக்கப்பட்டு மறு விநியோகம் செய்யப்பட வேண்டும்; மீண்டும் சுற்றுக்கு விடப்பட வேண்டும்; பின்னர், அது திரும்பவும் அவையில் அறிமுகப்படுத்தப்பட்டதற்குப் பின்னர், எந்தக் குழுவின் ஆய்வுக்கும் விடப்பட முடியும். ஐயா, மிகவும் மரியாதை யுடன் நான் தெரிவித்துக் கொள்ளவிரும்புவது என்னவெனில், இரண்டு அல்லது மூன்று சட்ட நுணுக்க அம்சங்களை உங்களுடைய கனிவான பரிசீலனைக்கு முன்வைக்க விரும்புகிறேன். இந்த அம்சங் களைப் பற்றி மற்றைய மதிப்பிற்குரிய உறுப்பினருக்கு மிகவும் தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்ள விரும்புவதென்னவெனில், இந்த சட்ட நுணுக்கங்களைக் கைவிடுவதன் மூலம் எவ்வளவு அநீதி விளைவிக்க முடியும் என்பதைத்தான். டாக்டர் அம்பேத்கருக்கு இது பற்றி நான் கூற வேண்டியதில்லை, ஏனெனில் அவர் இதை அறிவார். எனவே, இந்தச் சட்ட நுணுக்கவாதிகளைக் கை கழுவுவதன் வாயிலாக அநீதியும், சட்டத்திற்குப் புறம்பான விஷயங்களும் ஏற் படுவதைத் தவிர, அனுகூலமான விஷயங்கள் எதுவும் ஏற்படாது

என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். திரு. ஆஸ்லோ என்பவர் பிரிட்டிஷ் காமன்ஸ் சபையில் மிகவும் புகழ்பெற்ற ஒரு பேச்சாளராக இருந்தார். சட்ட நுணுக்க விதிகளுக்குப் புறம்பாக எந்தப் பணியும் புரியக்கூடாது என்று அவர் கூறியிருந்தார். சிறுபான்மையோரின் பாதுகாப்புக்காக, அவை முழுமையின் பாதுகாப்புக்காகச் சட்ட நுணுக்க விதிகள் இருக்கின்றன. இந்த விதிகள் அடிப்படையான தன்மை வாய்ந்தவையாகும்; அவற்றின் வரம்புகள் மீறப்படும் போது தவறுகளைத் தவிர வேறெதையும் நாம் சாதிக்க முடியாது. 'மே'யினுடைய நாடாளுமன்ற நடைமுறையில் இந்தக் கோட்பாடு வரையறுத்துக் கூறப்பட்டுள்ளது. அது நாடாளுமன்றங்களின் தாய் அமைப்பின் மரபு ஆகும். மசோதா அறிமுகப்படுத்தப்பட்டவுடனே, அது, அதை முன் மொழிந்த உறுப்பினரின் கைகளை விட்டுப் போய் விடுகிறது, அவையின் அதிகாரத்திற்குள் வந்து விடுகிறது என்பது மரபாகும். 'மே'யின் நாடாளுமன்ற நடைமுறையின் சொற்களை நான் மொழிபெயர்த்துக் கொண்டிருக்கிறேன். விரைவில் அதை உங்களுக்கு வாசித்துக் காட்டுகிறேன்.

திரு. துணைத் தலைவர் : எந்த மதிப்பிற்குரிய உறுப்பின ராவது, அவர் தான் முன்மொழிபவராக இருந்தபோதிலும், மசோதா அவையில் முன்வைக்கப்பட்டவுடனே, அதை மாற்றுவதற்கு அவருக்கு உரிமையில்லை என்பதை இந்த அவையில் யாரும் சந்தேகிக்க வில்லை என்று கருதுகிறேன். அதே மசோதா பொறுக்குக் குழுவில் பரிசீலனை செய்யப்பட்டது என்பதுதான் மாண்புமிகு சபாநாய்கரின் தீர்ப்பு என்று புரிந்துகொண்டிருக்கிறேன். எனவே அந்த நிலைக்கு ஆதரவாகப் பேச வேண்டிய அவசியமில்லை என்று கருதுகிறேன். மற்றொரு மசோதா - அசல் மசோதாவுடன்.கூட, பொறுக்குக் குழுவின் முன்னே அவர் வைத்த வேறு முன்வரைவு பரிசீலனை செய்யப் பட்ட போதிலும் - பொறுக்குக் குழுவில் பரிசீலனை செய்யப் பட்டதாக மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கூறவில்லை. மதிப்பிற்குரிய எந்த உறுப்பினரும் அவ்வப்பொழுது திருத்தங் களை அனுப்புவதற்கு பதிலாக, பொறுக்குக் குழுவின் முன்னால் திருத்தங்களை முன்வைப்பதற்கு உரிமையுள்ளவராதலால், அவ ருடைய கூற்றுப்படி, அவர் தமது திருத்தங்கள் அனைத்தையும் அச்சடித்து குழுவின் முன்னால் அவற்றை வைத்தார். அதுதான் மாண்புமிகு சபாநாயகரின் தீர்ப்பு ஆகும். அதைத் தவிர்த்து, மதிப் பிற்குரிய உறுப்பினர் மேற்கொண்டு தொடர்ந்து பேசலாம். ஓர் உறுப்பினர், அவரே அந்த மசோதாவைப் பிரேரணை செய்தவராக

இருந்தபோதிலும், அவை அதை விவாதத்திற்கு ஏற்றுக் கொண்ட பின்னர், அந்த மசோதாவை மாற்றுவதற்கு அந்த உறுப்பினருக்கு உரிமையில்லை என்ற 'மே'யின் நாடாளுமன்ற நடைமுறையின் நிலையை யாரும் சந்தேகிப்பதற்கில்லை. இது செய்யப்படவில்லை என்று, மாண்புமிகு சபாநாயகர் கூறியுள்ளார். நாம் அதற்குக் கட்டுப் பட்டவர்கள்; இல்லாவிட்டால் மதிப்பிற்குரிய உறுப்பினர், தொடர்ந்து பேசலாம்.

பண்டிட் தாகூர்தாஸ் பர்கவா : உங்களுடைய அபிப்பிராயத்தைக் கேட்டதற்குப் பின்னர், என்னுடைய நம்பிக்கையில் நான் மேலும் உறுதியடைந்துள்ளேன். இந்த சர்ச்சை சம்பந்தமாக, உண்மையில் எந்தத் திருத்தங்களும் பொறுக்குக் குழுவின் முன்னால் வரவில்லை என்பது எவ்வாறாகவாவது நிரூபிக்கப்பட்டால், மறுவரைவு செய்யப்பட்ட மசோதா பரிசீலிக்கப்பட்டிருக்க வேண்டியதில்லை என்பது ஏற்றுக்கொள்ளப்படவேண்டும் என்று நீங்கள் முடிவு செய்துவிட்டீர்கள். இந்தக் காரணத்திற்காக, அந்தத் தீர்ப்பை மீண்டும் உங்களுக்கு முன்னால் மேற்கோள் காட்ட வேண்டிய அவசியமில்லை என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ஐயா, 1873ம் வருடத்திய ஹன்சார்ட் தொகுதி 215ல் ஒரு தீர்ப்பை நான் கண்டு பிடித்துள்ளேன். அதில் 302ம் பக்கத்தில் ஓர் உறுப்பினர் ஒரு மசோதாவைப் பிரேரணை செய்வதாக அறிவிப்புக்கொடுத்திருந்து, அந்த மசோதாவும் அச்சடிக்கப்பட்டிருந்தால், இரண்டாவது வாசிப்புக்கு முன்னதாக அந்த மசோதாவில் அந்த உறுப்பினர் எந்த மாற்றங்களையும் செய்ய முடியாது என்று வரையறுத்துக் கூறப்பட்டுள்ளது. அவர் ஏதாவது மாற்றங்கள் செய்தால், அப்பொழுது, மாண்புமிகு சபாநாயகர், அந்த மசோதா வாபஸ் பெறப்பட்டுவிடும் என்று தீர்ப்புக் கூறினார். மேற்கொண்டு அந்த மசோதா விவாதிக்கப் பட முடியாது.

திரு. துணை சபாநாயகர்: சட்டத்தின் நிலை ஏற்றுக்கொள்ளப் பட்டுள்ளது. இதற்கு ஆதரவு திரட்ட வேண்டிய அவசியமில்லை; மாற்றங்கள் செய்வதற்கு அவருக்கு உரிமையில்லை என்ற சட்டத்தின் நிலையை மாண்புமிகு சட்ட அமைச்சர் மறுப்பார் என்று நான் நினைக்கவில்லை....

மாண்புமிகு டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் : (சட்ட அமைச்சர்) : இல்லை.

திரு. துணை சபாநாயகர் : .... பொறுக்குக் குழுவினால் ஏற்றுக் கொள்ளப்பட்டதைத் தவிர வேறு எந்தக் கால் புள்ளியோ, அல்லது அரைப் புள்ளியோ.... ஆனால் பொறுக்குக் குழுவின் முன்னால் விஷயங்களை முன்வைப்பதற்கு அவருக்கு உரிமையுண்டு. அதுதான் சபாநாயகரின் தீர்ப்பு என்று நினைக்கிறேன். மதிப்பிற்குரிய உறுப் பினர் தொடர்ந்து பேசலாம்.

பண்டிட் தாகூர்தாஸ் பர்கவா: ஐயா, மற்றைய அசல் மசோதா அவையின் முன் வைக்கப்பட்டால், அப்பொழுது எனக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை என்பதை மிகவும் மரியாதையுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த மசோதா இந்த முறையில் அவை யில் பரிசீலனை செய்யப்பட்டிருந்தால், யாருக்கும் எந்த ஆட்சேபனை களும் இருந்திருக்க முடியாது. இந்த முறையில் அறிமுகம் செய்து வைக்கப்பட்டதற்குப் பின்னர், இந்த மசோதா ஒவ்வொரு ஷரத் தாக, ஒவ்வொரு சொல்லாகப் பரிசீலனை செய்யப்பட்டிருக்க வேண்டும். இந்த நடைமுறை கடைப்பிடிக்கப்படாமல், மசோதா பொறுக்குக் குழுவுக்கு அனுப்பப்பட்டதென்றால், மேலும் பொறுக்குக் குழுவில் அது ஷரத்து வாரியாக, ஒவ்வொரு சொல்லாகப் பரிசீலனை செய்யப்படாத நிலையில், முதலாவது மசோதா மதிப் பிற்குரிய உறுப்பினரின் முன்னால் இருந்ததா, அல்லது அது அவரது சட்டைப் பையில் இருந்ததா, அல்லது அவர் அதைத் தனது வீட்டில் வாசித்துவிட்டு இங்கு வந்திருக்கிறாரா என்று கேட்க விரும்பு கிறேன். ஐயா, நாடாளுமன்ற நடைமுறையை உங்களுடைய கவனத் திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். பொறுக்குக் குழுவின் எந்த ஒரு உறுப்பினரும் இதற்கு எதிராக எந்த உரிமையும் பாராட்ட முடியாது. வலுவான காரணங்கள் எனக்கு இருக்கின்றன, ஐயா, அவற்றின்பால் உங்களுடைய கவனத்தை ஈர்ப்பதற்கு விரும்புகிறேன். முதலாவதாக, ஒருவேளை, பெரும்பான்மை அறிக்கையில் அது வரையப்பட்டிருக்கக்கூடும்:

> ''நமது விவாதத்தை இந்த மறு வரைவு செய்யப்பட்ட மசோதாவின் மீது மட்டும் என கட்டுப்படுத்திக் கொண்டோம்.''

திரு. எல். கிருஷ்ணசாமி பாரதி: நான் குறுக்கிடலாமா? இது சரியல்ல.

பண்டிட் தாகூர்தாஸ் பர்கவா: மூல மசோதா ஷரத்துவாரி யாகவும், சொல்லுக்குச் சொல்லும் பரிசீலிக்கப்படவில்லை. மாண்பு மிகு சபாநாயகர் முன்பு கூறியதுபோன்று, ஜனரஞ்சக உணர்விலும், திரு. பாலகிருஷ்ண சர்மா அவையில் சமர்ப்பித்த உணர்விலும், இந்த

மசோதா நமக்கு முன்னால் இருந்தது அப்படியெனில் எனக்கு இந்த மசோதாவுக்கு எதிராக எந்த ஆட்சேபனையும் இல்லை. திரு. பாலகிருஷ்ண சர்மாவும் மாண்புமிகு சபாநாயகரும் கூறியவற்றை யெல்லாம் நான் ஏற்றுக்கொள்கிறேன்.

(இந்தி உரைகளின் ஆங்கில மொழிபெயர்ப்பு முடிந்தது)

திருமதி ஜி. துர்க்காபாய்: ஓர் ஒழுங்குப் பிரச்சினை. அவர் சபாநாயகரின் தீர்ப்பையே எதிர்க்கிறார்.

திரு. துணை சபாநாயகர் : மதிப்பிற்குரிய உறுப்பினர் கூறிய ஒவ்வொரு வார்த்தையையும் நான் புரிந்து கொள்ள முடியவில்லை யாயினும், அவரை நான் புரிந்துகொள்கிறேன். சபாநாயகரின் தீர்ப்பைப் பாதுகாப்பதற்கு நான் கடமைப்பட்டுள்ளேன். நான் இன்று கூறுவதை, என்னைத் தொடர்ந்து வருகிற அவைத்தலைவர் மாற்றக்கூடும் என்பது பற்றி நான் கவலைப்படவில்லை. சபாநாய கரின் தீர்ப்பு இருக்கவே செய்கிறது. மதிப்பிற்குரிய உறுப்பினர் ஓரிரு விஷயங்கள் பற்றி வலுவாகப் பேசியபோதிலும், இந்த மசோதா வைப் பரிசீலிப்பதற்கு நாட்டுக்கு ஒரு வாய்ப்பு வழங்கப்படுவதற்கு அவை ஒத்துக் கொள்ளச் செய்ய வேண்டுமென்று அவர் விரும்பு கிறார் என்பதை நான் புரிந்துகொள்கிறேன். அவர் பொருள்படுத்துவது அதுமட்டுமே. (மதிப்பிற்குரிய உறுப்பினர் ''இல்லை, இல்லை.'' சபாநாயகரின் தீர்ப்புக்கு எதிராகப் போவதற்கு நான் எண்ணங் கொள்ளவில்லை என்று நான் உடனடியாகக் கூற முடியும்.) இந்த அவையால் பரிசீலிக்கப்படுவதற்காக முன்வைக்கப்படும் எந்த வாதங்களும் வரவேற்புக்குரியவையே. ஆனால் சபாநாயகரின் தீர்ப்பைக் கேள்வி கேட்கும் உணர்வில் அல்ல.

டாக்டர் மனோ மோகன்தாஸ்: ஒரு தகவல் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்; மதிப்பிற்குரிய உறுப்பினர் அடுத்த பத்து நிமிடங்களும் பேசுவாரா என்று தெரிவியுங்கள். ஏனெனில், இந்துஸ் தானியைப் புரிந்துகொள்ள முடியாத நாங்கள் எங்கள் ஓட்டல் களுக்குத் திரும்பிப் போகலாம்.

பண்டிட் தாகூர்தாஸ் பர்கவா : நான் பேசுவது உங்களுக்குப் புரியவில்லை என்று நீங்கள் கூறிவிட்டதாலும் நான் கூறும் ஒவ்வொரு சொல்லும் உங்களாலும் அவையினாலும் புரிந்துகொள்ளப்பட வேண்டும் என்று நான் விரும்புவதாலும், என்னுடைய அரைகுறை ஆங்கிலத்தில் பேசுகிறேன்.

திரு. டி.ஏ. ராமலிங்கம் செட்டியார் : (சென்னை: பொது): இந்தி தெரியாதவர்களைப் பற்றி இதுவரையிலும் நீங்கள் பரிவு காட்டவில்லை. அவர்கள் பெரிய எண்ணிக்கையில் இங்கு இருக்கிறார்கள். நீங்கள் அவர்களைப்பற்றிக் கவலைப்படாவிட்டால் அவர்கள் காதுகொடுத்துக் கேட்க நீங்கள் விரும்பவில்லையென்றால், அது உங்கள்பாடு.

பண்டிட் தாகூர்தாஸ் பர்கவா: ஆங்கிலத்தில் பேசுவதென்று நான் ஏற்கனவே முடிவு செய்துவிட்டேன். என்னுடைய நண்பரின் உத்தரவுகள் அதற்குத் துணையானவையே. ஆனால், நீங்கள் இப்பொழுது கூறியவற்றுக்குப் பின்னால், நான் தொடர்ந்து ஆங்கிலத்திலேயே பேசுகிறேன்.

திரு. துணை சபாநாயகர் : கேட்கப்பட்டதெல்லாம் இந்துஸ்தானியில்தான் கேட்கப்பட்டுள்ளது.

பண்டிட் தாகூர்தாஸ் பர்கவா : நான் கூறியவை எல்லாவற்றையும் திரும்பக் கூறப்போவதில்லை. ஏனெனில், அது சாத்தியமல்ல. எதிர்காலத்தில், நான் சொல்ல வேண்டியிருப்பதை முதலில் எழுத்து மூலம் கொடுத்துவிடுகிறேன். எனவே எதையும் திரித்துக் கூற முயற்சி செய்வதாக என் மீது குற்றம் சாட்டப்பட முடியாது.

திரு. தாஜாமுல் உசேன் : கூறியதையே மீண்டும் கூறக்கூடாது.

பண்டிட் தாகூர்தாஸ் பர்கவா : தாஜாமுல் உசேன் எனக்கு உத்திரவிட வேண்டாம். அவர்......... விரும்பவில்லை என்றால்.....

திரு. தாஜாமுல் உசேன் : நான் சபாநாயகரைப் பார்த்துப் பேசுகிறேன்.

பண்டிட் தாகூர்தாஸ் பர்கவா : திரு. தாஜாமுல் உசேன், விவேகமற்ற குறுக்கீடுகளைச் செய்வதை நான் விரும்பவில்லை.

திரு. துணை சபாநாயகர் : திரு. தாஜாமுல் உசேன் மீண்டும் மீண்டும் குறுக்கிடுவது குறித்து வருந்துகிறேன். அவையைப் பாதுகாப்பதற்கு இங்கு நான் இருக்கிறேன். எனவே கூறியதையே திரும்பக் கூறவேண்டாம். இந்த முறையில் நாம் அதிக நேரத்தை செலவழிப்பது துரதிருஷ்டமாகும்.

பண்டிட் தாகூர்தாஸ் பர்கவா : நான் கூறியதையே மீண்டும் கூற விரும்பவில்லை. மாண்புமிகு சபாநாயகர் அவருடைய தீர்ப்பைக் கூறிய விதமானது - ஐயா, அந்தத் தீர்ப்பு இறுதியான சொல் அல்ல என்று நான் கருதியபோதிலும் நான் அதை மதிக்கிறேன். அதற்கு எதிராக நான் ஒரு வார்த்தைகூடப் பேசமாட்டேன்.

திரு. தாஜாமுல் உசேன் : இந்த சபையில் அதுதான் கடைசி வார்த்தை.

பண்டிட் தாகூர்தாஸ் பர்கவா: இவற்றால் நான் இகழ்ச்சியடைய மாட்டேன். அவை தனது சொந்த ஆணையையே திருத்தியமைக்க முடியும் என்று கருதுகிறேன். 'சபாநாயகரின் தீர்ப்புகள்' என்ற நூலிலிருந்து, இது சம்பந்தமாக ஒரு தீர்ப்பை மேற்கோள் காட்ட விரும்புகிறேன். அதே சமயத்தில், இந்தக் கட்டத்தில், அந்த உத்தரவை (தீர்ப்பை) மறு ஆய்வு செய்யுமாறு துணை சபாநாயகரைக் கேட்பதாக இந்த அவை நினைக்க வேண்டாம். நான் அவ்வாறு செய்யவில்லை. அவை பொறுமையிழக்க வேண்டாம். ஆனால், ஒரு தடவை வழங்கப்பட்ட தீர்ப்பு மீண்டும் திருத்தப்படக் கூடாது என்று எங்கே விதி இருக்கிறது என்று கேட்க விரும்புகிறேன். அத்தகைய விதி எதுவும் கிடையாது. கொடுக்கப்பட்ட தீர்ப்பைத் திருத்த வேண்டுமென்று நான் முயற்சி செய்யாததால், இந்தப் பிரச்சினை எழவில்லை. நான் கூறிக்கொண்டிருந்தது என்னவெனில், இந்த மறு வரைவு செய்யப்பட்ட மசோதாவோடு இந்த மசோதா பரிசீலனை செய்யப்பட்டதானது உண்மையான அர்த்தத்திலோ அல்லது ''பரிசீலனை செய்யப்பட்டது'' என்று நாம் புரிந்து கொள்கிற தொழில்நுட்ப அர்த்தத்திலோ அல்ல என்று சபாநாயகர் தீர்ப்புக் கூறியிருந்தார் என்பதைத்தான் ''பரிசீலனை செய்யப்பட்டது'' என்ற சொல்லை நாம் பயன்படுத்தும் தொழில்நுட்ப அர்த்தத்தில் இந்த மசோதா ஒருபோதும் பரிசீலனை செய்யப்படவில்லை என்பதை உங்களுக்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

திரு. மோகன்லால் கௌதம்: இது அவர் இந்துஸ்தானியில் பேசியதையே மீண்டும் கூறியுள்ளார் என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. துணை சபாநாயகர்: முழு விளைவையும் புரிந்து கொள்வதற்கு இது எனக்கு உதவுகிறது.

பண்டிட் தாகூர்தாஸ் பர்கவா : இந்தப் பூர்வாங்கக் குறிப்பு கள் இல்லாமல், என்னை நீங்கள் புரிந்து கொள்ளும்படி என்னால், செய்ய முடியாது, என்னைத் தெரிந்தவர்கள், இதைக்காட்டிலும் அதிகமாக என்னால் செய்ய முடிந்திருக்காது என்பதை உணரு வார்கள்.

உண்மையில், மறு வரைவு செய்யப்பட்ட மசோதாதான் மெய்யாகப் பரிசீலனை செய்யப்பட்டது - தொழில்நுட்ப ரீதியில் இவ்வாறு கூறப்படுகிறது - என்று உங்களை ஏற்றுக்கொள்ளச் செய் வதற்காகக் கூறினேன். சிலவாதங்களை முன்வைப்பதற்கு விரும்பு கிறேன் என்று கூறினேன்: முதலாவதாக, ''மறு வரைவு செய்யப்பட்ட மசோதாவோடு எங்களுடைய விவாதங்களைக் கட்டுப்படுத்திக் கொண்டோம்,'' என்று அறிக்கை கூறுகிறது. ஐயா, இரண்டாவ தாக, பக்ஷி தேக்சந்த், மற்றும் பாலகிருஷ்ண சர்மா ஆகியோரின் கருத்து மாறுபாடு குறிப்பு அதே விஷயத்தைத்தான் கூறுகிறது. மேற்கொண்டு அதை வாசிப்பதற்கு நான் விரும்பவில்லை, ஏனெனில் உறுப்பினர்கள் அதை வாசித்துள்ளனர். அதை மீண்டும் வாசிப்பது காலவிரயமாகும். திரு. பாலகிருஷ்ண சர்மா பேசியபோது, மாண்பு மிகு சபாநாயகர் கனிவுடன் அதை ஏற்றுக்கொண்டார். அவர் மீண்டும் தனது உரையில், ''மறு வரைவு செய்யப்பட்ட மசோதா மீது மட்டுமே நாம் கவனம் செலுத்தினோம்'' என்று அவர் கூறினார்; நீங்கள் அறிக்கையைப் பார்த்தால், அறிக்கையிலேயே சில குறியீடு கள், உதாரணமாக, 99-வது ஷரத்தில், மறுவரைவு செய்யப்பட்ட மசோதா மட்டுமே பரிசீலனை செய்யப்பட்டதாகக் கூறப்பட் டுள்ளது.

திரு. துணை சபாநாயகர்: இதைப் பொறுத்தமட்டிலும் மதிப் பிற்குரிய உறுப்பினர் எதை வலியுறுத்துகிறார் என்பதை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை.

பண்டிட் தாகூர்தாஸ் பர்கவா : திரு. கே.சி. சர்மா என்ன கூறினார் என்பதை நான் கேட்கவில்லை, என்பதற்காக வருந்து கிறேன்.

மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் : அமைதி, அமைதி.

திரு. தாஜாமுல் உசேன் : உட்காருங்கள்!

திரு. துணை சபாநாயகர்: நீங்கள் அனுமதித்தால், நான் விளக்கம் கூற முற்படுகிறேன். இரண்டு பிரச்சினைகள் நம்முன் இருக்கின்றன. இந்த மசோதாவின் மீது நாம் விவாதத்தைத் தொடரக் கூடாது என்பதுதான் பிரச்சினை எனில், அந்தப் பிரச்சினை முடிவு செய்யப்பட்டுவிட்டது. மசோதா பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப் பட்டுள்ளது. இந்த மசோதாவும் சமர்ப்பிக்கப்பட்ட பிற திருத்தங் களும் பொறுக்குக் குழுவுக்கு முன்னால் இருந்தன என்றும், சபாநாயகர் கூறியுள்ளார். எனவே இப்பிரச்சினையைப் பொறுத்த மட்டிலும், சபாநாயகரின் தீர்ப்புக்கு அப்பால் செல்லும் நிலைமை யில் நான் இல்லை என்று என்னால் உடனடியாகக் கூறமுடியும். உரிமை வழக்கு விசாரணை முறைச் சட்டத்தில் இதுபோன்ற ஒரு சம்பவம் சம்பந்தப்பட்ட பிரச்சினையைத் தவிர, ஒரு தீர்ப்பு வழங்கப் பட்டுள்ளது. அதே சம்பவத்தில், அதற்கு அப்பால் செல்லுவது விரும்பத்தக்கதல்ல. வேறு சிலவற்றுக்கு அது ஒரு முன்னுதாரண மாக இருக்காது: வேறு எதன் தொடர்பாகவும் அது வரும்போது, முந்திய தீர்ப்புக்குப் புறம்பாகச் செல்வதற்கு சபாநாயகருக்கோ அல்லது இந்த அவையின் உறுப்பினர்களுக்கோ, உரிமையுண்டு அல்லது தற்சமயத்திற்கு அவையின் தலைவராக யார் பொறுப்பு வகித்தாலும், முந்திய தீர்ப்புக்கு அப்பால், செல்வதற்கு உரிமை யுண்டு. இந்தக் கட்டத்தில், அதே பிரச்சினையின் பரிசீலனையில், அதற்கு அப்பால் செல்வதற்கு நான் தயாராயில்லை. இந்த சூழ்நிலை யில், எந்த நோக்கத்திற்காக இந்த வாதங்கள் எழுப்பப்படுகின்றன என்பதை மதிப்பிற்குரிய உறுப்பினரைக் கேட்க விரும்புகிறேன். சில காலத்திற்கு முன்னர் நான் புரிந்துகொண்ட இரு மசோதாக்களும் அவையின் முன் இருந்தபோதிலும் மூல மசோதாவைப் பரிசீலனை செய்யவில்லை. மற்றையதைத்தான் பரிசீலனை செய்தது என்ற நிலைமையில், மசோதாவை சுற்றுக்கு விடவேண்டும் என்ற பிரே ரணையை ஏற்றுக்கொள்ளும்படி அவையை ஒத்துக் கொள்ளச் செய் வதற்கே இந்த வாதங்களெல்லாம் எழுப்பப்பட்டன. எனவே, இது ஓர் ஒழுங்குப் பிரச்சினை என்பதாக அல்ல, மாறாக அவையை ஏற்றுக்கொள்ளச் செய்யும் நோக்கத்திற்காகவே, என்று நான் புரிந்து கொள்ள முடியும். அந்தக் காரணத்திற்காகவே, 'மே'யின் நாடாளு மன்ற நடைமுறையிலும் பிற தீர்ப்புகளும் மேற்கோள் காட்டப்பட வேண்டிய அவசியமில்லை. சட்டம் சம்பந்தமான விஷயத்தைப் பொறுத்தமட்டிலும், போதிய அளவு ஏற்கனவே கூறப்பட்டுள்ளது. மதிப்பிற்குரிய உறுப்பினரை, சாத்தியப்பட்டால், அவருடைய வாதத்தின் இந்தப் பகுதியை முடித்துக்கொண்டு, வேறு விஷயங்கள் பற்றிப் பேசுமாறு வேண்டிக்கொள்கிறேன்.

திரு. ஆர்.கே. சித்வா (மா.பி. மற்றும் பேரார் : பொது) : ஐயா, முந்திய பேச்சாளர் பண்டிட் த்தாகூர் தாஸ் பர்கவா சபாநாயகரின் தீர்ப்பு இறுதியானதல்ல என்று கூறினார். ஐயா, இதை உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

திரு. துணை சபாநாயகர் : இது சம்பந்தமாக மேற்கொண்டு அவைக்குத் திரும்ப அனுப்பி வைக்கப்பட வேண்டும், நான் ஏற்கனவே கூறியது போன்று, இது தாமதப்படுத்தும் உத்தி அல்ல. நான் விரும்புவதெல்லாம், சட்டத்திற்கு உகந்ததாகவும், அடிப்படையாகவே சரியானதுமான ஒரு நடைமுறையை அவை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பது மட்டுமே ஆகும். நான் இந்த அவையின் ஓர் உறுப்பினர் என்ற வகையில், பொறுக்குக் குழுவுக்கு அனுப்பப்படும் மசோதா, சட்டத்தின் தேவைக்கு ஏற்ப அது அங்கு பரிசீலிக்கப் படுமாறு செய்வதற்கு எனக்கு உரிமை உண்டு. இதிலிருந்து தப்பித்துச் செல்ல முடியாது. எனவே, அதே பொறுக்குக் குழுவுக்கு அது மீண்டும் அனுப்பி வைக்கப்படுவதனின்றும் தப்பிக்க முடியாது. இந்தக் காரணத்தைத்தான் உங்களிடம் எடுத்துக்கூற விரும்புகிறேன். பார்க்கப்போனால், வரி செலுத்துவோர், இந்த அவையின் நடவடிக்கைகளின் ஒவ்வொரு நிமிடத்திற்கும் பணம் செலுத்த வேண்டியுள்ளது. எனவே, தாமதப்படுத்தும் அல்லது இடையூறு செய்யும் கண்ணோட்டத்தை நான் வெறுக்கிறேன். அதே பொழுதில்....

திரு. தாஜாமுல் உசேன் : இருந்தபோதிலும் நீங்கள் அவ்வாறு தான் செய்கிறீர்கள்.

மதிப்பிற்குரிய ஓர் உறுப்பினர் : அவர் மீண்டும் சபாநாயகரின் தீர்ப்பையே குறிவைத்துக் கொண்டிருக்கிறார்.

பண்டிட் தாகூர்தாஸ் பர்கவா: மேலும் ஒரு சிறிது நேரம் அவை பொறுமையுடன் எனது பேச்சைக் கேட்கும் என்று நம்புகிறேன்.

திரு. துணை சபாநாயகர் : மதிப்பிற்குரிய உறுப்பினர், மேலும் சற்று நேரம் எடுத்துக் கொள்ளப் போகிறாரா?

பண்டிட் தாகூர்தாஸ் பர்கவா : ஆம், ஐயா.

(அவை மதிய உணவுக்குக் கலைந்தது)

(மதிய உணவுக்குப் பின் அவை இரண்டரை மணிக்கு மீண்டும் கூடியது)

திரு. துணை சபாநாயகர் (திரு. எம். அனந்தசயனம் அய்யங்கார்) தலைமைப் பீடத்தில் அமர்ந்திருந்தார்.

பண்டிட் தாகூர்தாஸ் பர்கவா : ஐயா, அவை மதிய உணவுக்குக் கலைந்தபோது ஒரு பொறுக்குக் குழுவின் செயல்பாடுகள் - மசோதா வின் வாசகத்தை ஷரத்து வாரியாக, தேவைப்பட்டால் சொல்லுக்குச் சொல் பரிசீலனை செய்ய வேண்டும், என்று உங்களுடைய கவனத் திற்கு நான் சமர்ப்பித்துக் கொண்டிருந்தேன். மே'யின் நாடாளுமன்ற நடைமுறையை இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.

திரு. துணை சபாநாயகர்: வேறு விஷயத்தைப் பற்றிப் பேசும்படி மதிப்பிற்குரிய உறுப்பினரை வேண்டிக்கொள்கிறேன். ஏனெனில் நான் ஏற்கனவே ஒரு தீர்ப்பை வழங்கிவிட்டேன்.

பண்டிட் தாகூர்தாஸ் பர்கவா: நான் உங்களுடைய தீர்ப்பை மதிக்கிறேன். அவைத்தலைவர் கொடுத்த தீர்ப்பை மாற்றப் போவ தில்லையென்று ஏற்கனவே நீங்கள் கூறிவிட்டீர்கள். அதை மாற்ற வேண்டுமென்று நானும் விரும்பவில்லை. உண்மையில், துரதிருஷ்ட வசமாக, என்னைப் பூரணமாகப் புரிந்துகொள்ளச் செய்வதற்கு என்னால் முடியவில்லை. முன்வரைவு பரிசீலிக்கப்பட்டபோது, இந்த மசோதா பொறுக்குக் குழுவிடம் இருந்தது என்று அவைத் தலைவரின் தீர்ப்பு கூறுகிறது. நான் அதைக் கேள்வி கேட்கவே யில்லை. என்னுடைய கேள்வி எல்லாம், பொறுக்குக் குழுவின் பணி அவர்கள் மூல மசோதாவை ஷரத்துவாரியாகவும், சொல் லுக்குச் சொல்லும் பரிசீலனை செய்திருக்கவேண்டும் என்பதுதான். அதுமட்டுமல்ல. சபை எவ்வாறு கடப்பாடு உடையதோ, அது போன்றே பொறுக்குக் குழுவும் மசோதாவை ஷரத்து வாரியாக வும், சொல்லுக்குச் சொல்லும் பரிசீலனை செய்திருக்கவேண்டும் என்பதுதான்.

திரு. துணை சபாநாயகர் : சபாநாயகரின் தீர்ப்பின் படி, மூல மசோதாவும், திருத்தப்பட்ட முன்வரைவும் அங்கிருந்தன. பொறுக்குக் குழு அதை ஷரத்து வாரியாகப் பரிசீலனை செய்தது என்று நாம் கருதிக்கொள்வோம். அடுத்து என்ன? இதனுள் நாம் போக வேண்டிய

தில்லை, அவ்வாறு செய்வது தகுதி உடையதல்ல என்பதுதான் கேள்வியா? அவ்வாறுதான் எனில், அதுபற்றி ஏற்கனவே தீர்ப்புக் கூறப்பட்டு விட்டது. ஒரு தடவை தீர்ப்புக் கூறப்பட்டு விட்டால், மீண்டும் அதனுள் செல்வதற்கு எங்கே உரிமையிருக்கிறது?

பண்டிட் தாகூர்தாஸ் பர்கவா: விவரம் சம்பந்தமான ஒரு பிரச்சினை. இரு மசோதாக்களும் எடுத்துக் கொள்ளப்பட்டு, ஒன்றாகப் பரிசீலனை செய்யப்பட்டதா என்பது குறித்து பொறுக்குக் குழுவின் உறுப்பினர்கள் தயவுசெய்து தெளிவுபடுத்தும்படி மீண்டும் கேட்டுக் கொள்கிறேன். இது சரியென்று வைத்துக் கொண்டால், மூல மசோதாவின் ஒவ்வொரு ஷரத்தும், பரிசீலனை செய்யப்படாத வரையில், சட்டத்தின் தேவைக்கும் நடைமுறைக்கும் இசைவாக நடந்து கொள்ளப்பட்டதாகக் கருத முடியாது.

திரு. எச்.வி. காமத்: *(மத்திய மாகாணங்கள் மற்றும் பேரார் பொது): பொறுக்குக் குழுவின் தகுதி பற்றிய பிரச்சினைக்கு அவைத் தலைவர் இறுதியாக முடிவு கூறிவிட்டாரா?*

திரு. துணை சபாநாயகர் : *அந்தப் பிரச்சினைக்கு நானே முடிவு காண முயல்கிறேன். எப்பொழுதெல்லாம் சிரமமாக இருப்பதாக நான் உணருகின்றேனோ அப்பொழுதெல்லாம் மதிப்பிற்குரிய உறுப்பினர் திரு. காமத்தை நான் உதவிக்கு அழைக்கிறேன்.*

மேற்கொண்டு என்ன நடைபெறப் போகிறது என்பதை அறிய ஆவலாக இருக்கிறேன் என்று ஏற்கனவே கூறியுள்ளேன். இரண்டு மசோதாக்களும் அங்கிருந்தன என்றும் மற்றைய முன்வரைவு மசோதா ஷரத்துவாரியாகப் பரிசீலிக்கப்பட்டது என்றும் இப்போதைக்கு நான் கருதிக் கொள்கிறேன். அடுத்தது என்ன? சட்டப்படியான ஆட்சேபனை என்ன?

பண்டிட் தாகூர்தாஸ் பர்கவா: என்னுடைய நிலையை விளக்குவதற்கு எனக்கு இரண்டு அல்லது மூன்று நிமிடங்கள் வழங்குமாறு உங்களைக் கேட்டுக்கொள்கிறேன் பிரச்சினையின் மற்றொரு அம்சமும் உள்ளது. மூலமசோதா ஷரத்துவாரியாகவும், சொல்லுக்குச் சொல்லும் பரிசீலனை செய்யப்பட வேண்டும் என்பது ஓர் அடிப்படையான விதி என்பதோடல்லாமல் மசோதா முழுமையும் இப்படித்தான் பரிசீலனை செய்யப்பட வேண்டும் - மூல மசோதாவின் ஒவ்வொரு ஷரத்தும் பரிசீலனை செய்யப்பட வேண்டும்; பின்னர்

புதிய ஷரத்து, பின்னர் அட்டவணை, பின்னர் புதிய அட்டவணை பரிசீலனை செய்யப்பட வேண்டும். நாடாளுமன்ற நடைமுறை இதைக் கூறுகிறது. அடுத்த கேள்வி, இதன் விளைவு என்ன? இதைத் தொடர்ந்து என்ன ஏற்படும்? இதுதான் உங்கள் முன்னால் உள்ள பிரச்சினை. இது தொடர்பாக, நடைமுறை மற்றும் சட்டத்தின் பொதுவான கோட்பாடுகளையும், இதில் சம்பந்தப்பட்டுள்ள குறிப் பான அம்சத்தையும் உங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். பொதுவான நடைமுறையைப் பொறுத்தமட்டிலும், சட்டத்தின் விதி மிகவும் தெளிவாக உள்ளது. ஒரு குறிப்பிட்ட நடைமுறை கடைப்பிடிக்கப்பட வேண்டும் என்று எந்த ஒரு சட்டமும் அல்லது எந்த நடைமுறையும் அல்லது பொதுவான கோட்பாடும் தேவைப்படுத்தும்போது, அந்த நடைமுறை கடைப்பிடிக்கப்பட்டா லொழிய, அதுவரையிலும், அது செல்லத்தக்கதாக செய்யப்பட்ட தாகக் கருதப்பட முடியாது. இந்தக் கோட்பாட்டுக்காக, பிரிவி கவுன்சிலின் மற்றொரு ஆணையை நான் மேற்கோள் காட்டுகிறேன். அது பிரிவி கவுன்சிலின் 1936ம் வருடத்திய ஆணை, பக்கம் 253.

திரு. துணை சபாநாயகர் : அடுத்த நடவடிக்கையையும் நான் கருதிக் கொள்கிறேன். மதிப்பிற்குரிய உறுப்பினரின் வாதத்தைத் தான் நான் படிப்படியாக எடுத்துக்கொள்கிறேன். பொறுக்குக் குழு இதைப் பரிசீலனை செய்யவில்லை, அல்லது வேறு மசோதாவைப் பரிசீலனை செய்தது என்றே வைத்துக் கொள்வோம். ஆனால் இந்த விஷயத்தை ஆய்வு செய்வதற்கு எனக்கு அதிகார வரம்பு இல்லை என்று மதிப்பிற்குரிய உறுப்பினர் கூற விரும்புகிறார் என்பது தெளிவு. இது குறித்து சபாநாயகர் ஏற்கனவே தீர்ப்புக் கொடுத்து விட்டார் என்று நான் கூறவிரும்புகிறேன். சபாநாயகர் தீர்ப்பு அவர் கூறியுள்ள விஷயத்தை உட்படுத்தவில்லை என்று மதிப்பிற்குரிய உறுப்பினர் என்னைத் திருப்திப்படுத்த முடிந்தால், நான் அவர் கூறுவதைக் கேட்கிறேன். என்னைப் பொறுத்தமட்டிலும், நான் அதை கவனமாகப் பரிசீலனை செய்தேன், அது சபாநாயகரின் தீர்ப்புக்கு உட்பட்ட விஷயமாகத்தான் இருக்கிறது என்று நம்புகிறேன். எனவே, மேற்கொண்டு காலவிரயம் செய்யாமல் மேற்கொண்டு பேசுமாறு மதிப்பிற்குரிய உறுப்பினரைக் கேட்டுக் கொள்கிறேன். இதுபற்றி ஏற்கனவே அதிக காலம் கடந்துவிட்டது. பேசுவதற்கு வேறு பேச்சாளர் களும் காத்துக் கொண்டிருக்கிறார்கள். மதிப்பிற்குரிய உறுப்பினர் இந்தப் பிரச்சினையை சாத்தியமான அளவு விரைவில் முடித்துக் கொண்டு, அவர் விரும்பினால் வேறு பிரச்சினையைப் பற்றிக் கூறும் படி, கேட்டுக்கொள்கிறேன்.

பண்டிட் தாகூர்தாஸ் பர்கவா: சபாநாயகரின் முந்திய தீர்ப்பு இந்தப் பிரச்சினையை உட்படுத்தவில்லை என்று நான் தாழ்மையாகத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். மறுவரைவுதான் பரிசீலிக்கப்பட்டதால், பிரேரணை முன்வைக்கப்பட அனுமதிக்கப்பட முடியாது என்ற ஒரு விஷயத்தை மட்டுமே நசிருதீன் அகமது எழுப்பினார். அதுதான் விஷயம். ஷரத்துவாரியாக விவாதிக்க வேண்டும் என்பது சம்பந்தமாக நான் வற்புறுத்தி வரும் விஷயம் விவாதிக்கப்படக்கூட இல்லை. இதன் விளைவு இப்படித்தான் இருக்கும். அதாவது, ஒரு மசோதா பொறுக்குக் குழுவுக்கு அனுப்பப்படும். நீங்கள் இந்த அடிப்படையான விதியைக் கடைப்பிடிக்கவில்லையென்றால், வேறு எந்த அமைச்சராவது, இந்த மசோதாவுக்குப் பிறகு, ஒரு மறுவரைவை முன்வைத்து, அதைப் பரிசீலனை செய்யப்படச் செய்யமுடியும்; மசோதா ஷரத்துவாரியாகப் பரிசீலனை செய்யப்படவேண்டும் என்ற இந்த அடிப்படையான விதியின் மெய்யான நோக்கம் தோற்கடிக்கப்பட்டுவிடும். மசோதாவில் எந்த மாற்றமும் செய்வதற்கு எந்த நபருக்கும் உரிமையில்லை என்பதற்கு இது போதுமான காரணமாகும். இதற்கு, ஐயா, நான், காமன்ஸ் சபையில் சபாநாயகரின் தீர்ப்பை (ஹன்சார்ட், தொகுதி 215, பக்கம் 301) உங்களுக்கு சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இது சம்பந்தமாக நீங்கள் என்னுடன் உடன்படுவதானால், மற்றும் குழுவில் இது ஷரத்து வாரியாகப் பரிசீலக்கப்பட வேண்டும் என்பதையும் ஒத்துக் கொள்வதாயிருந்தால் இந்த மசோதா அதே தேர்வுக் கமிட்டியிடம் மீண்டும் அனுப்பப்பட வேண்டும் என்பது முற்றிலும் தெளிவாகும். பொறுக்குக் குழு இரண்டு மணி நேரம் எடுத்துக் கொள்ளட்டும் - அந்த அறிக்கை இந்த அமர்வில் வரக்கூடாது என்பதை நான் விரும்பவில்லை - அவர்கள் இரண்டு மணிநேரம் இதற்காக செலவழிக்க வேண்டும். மூலமசோதாவை ஷரத்து வாரியாக பரிசீலிக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன். பின்னர் நாம் அதை விவாதிப்போம். இந்த அம்சத்தை சபாநாயகர் கவனத்தில் எடுத்துக்கொள்ளவேயில்லை என்று நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த அம்சத்தை நீங்கள் தயவு செய்து கவனிக்குமாறு உங்களை மன்றாடிக் கேட்டுக் கொள்கிறேன்.

இது சம்பந்தமாக மேற்கொண்டு காலவிரயம் செய்ய வேண்டாம் என்று நீங்கள் என்னைக் கேட்டுக் கொண்டிருப்பதால், இதை ஒதுக்கிவிட்டு, பிற அம்சங்களை எடுத்துக்கொள்கிறேன். இப்பொழுது பிரச்சினை என்னவெனில், இதனுடைய விளைவு என்னவாகும்? நான் ஏற்கனவே கூறியது போன்று ஒரு விஷயம் என்னவெனில், நாம்

விதிகளைக் கடைப்பிடிக்க வேண்டும். இது போன்ற ஒரு விஷயத்தில் விதிகள் அடிப்படையான விதிகளாகும். அவற்றை மீற முடியாது. அப்படியெனில், அதனுடைய மெய்யான விளைவு என்ன? அதை நான் உங்களுக்கு எடுத்துக்கூறுவதற்கு விரும்புகிறேன். இப்பொழுது மூல மசோதாவின் ஷரத்துக்களுக்கும் பொறுக்குக் குழுவிலிருந்து வெளிவந்துள்ள மசோதாவிற்கும் இடையிலுள்ள வேறுபாடுகள் அல்லது முரண்பாடுகள் நடைமுறை சம்பந்தப்பட்டவை மட்டு மல்ல, மிகவும் சாராம்சமான விஷயங்கள் சம்பந்தப்பட்டவையு மாகும். பக்ஷி தேக் சந்தும், பண்டிட் பாலகிருஷ்ண சர்மாவும் கொடுத் துள்ள கருத்து மாறுபாட்டுக் குறிப்பில், உண்மையில், மறுவரைவு செய்யப்பட்ட மசோதாவில் மிகவும் தீவிரமான மாற்றங்கள் செய்யப் பட்டுள்ளனவென்று கூறி, அந்த மாற்றங்களின் உதாரணங்களும் கொடுக்கப்பட்டுள்ளன என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அனைத்து சாராம்சமான மாற்றங்கள் குறித்தும் அவர்கள் தங்கள் குறிப்பில் கூறிவிட்டதாக நான் திருப்தியடையவில்லை. அந்த அம்சத்தை யும் தாங்கள் கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று உங்களை கேட்டுக்கொள்கிறேன். நான் என்னுடைய உரையைத் தொடங்கிய போது, பொறுக்குக் குழுவிலிருந்து வெளிவந்த நிலையில் மறுவரைவு செய்யப்பட்ட மசோதா பரிசீலிக்கப்பட்ட பிறகு பல மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. அவை (பஞ்சாபில் இல்லாத) நிறுவனங்களுக்கு நிச்சயமாக அழிவுகரமானவை என்பதை உங்களுடைய கவனத் திற்கு கொண்டுவந்தேன். ஒரு வாரிசை நியமிக்கும் நிறுவனத்தைப் பற்றி முதன் முதலில் உங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். ஒரு வாரிசை நியமிப்பது சம்பந்தமாக, மாண்புமிகு டாக்டர் அம்பேத்கரின் கருத்துக்களை நாம் அறிவோம். வாரிசுகளை சுவீகரிப்பது ஒரு செயற்கையான விவகாரம் என்றுதான் நினைத் ததாக அவரே கூறினார். நானும் அவ்வாறுதான் நினைக்கிறேன். மசோதா பொறுக்குக் குழுவுக்கு அனுப்பப்பட்டபோது, திருமதி ஹன்ஸா மேத்தா நிகழ்த்திய உரை நமக்கு நினைவிருக்கிறது. அவர்களும் சில விமர்சனங்களைக் கூறினார்கள். தற்போதைய மசோதாவின்படி, 'டிபேட்' வடிவத்திலல்லாது வேறு எந்த வடிவத்திலும் எந்த நபரும் ஒரு வாரிசை சுவீகரித்துக் கொள்ள முடியாது. ஆனால் மூல மசோதா வின்படி, கிரித்ரிம் மற்றும் கோடா வடிவங்களிலான சுவீகார முறை களும் அனுமதிக்கப்படத்தக்கவை. சுவீகாரத்தைப் பொறுத்தமட்டில், ஒரு மகனை சுவீகாரம் எடுத்துக்கொள்வதென்பது வெறும் கட்டுக் கதையே. அத்தகைய ஒரு மகன் எவ்வாறு ஒரு மெய்யான மகனாக முடியும்? ஆனால் இந்து சட்டம் அதற்கு வகை செய்கிறது, அதில் நம்பிக்கை உள்ளவர்களுடன் எனக்கு எவ்விதத் தகராறும் இல்லை.

ஆனால் சொத்துக்கு வாரிசுகளை நியமிப்பது சம்பந்தமாக, நோமினிஸ் ஹெறிரிடிஷியோ என்ற வகையில் ரோமானியர்கள் செய்தது போன்று, பஞ்சாபிலுள்ள மக்களுக்கு அதுபோன்ற பழக்கவழக்கங்கள் இருந் தால், அவற்றின் மீது கை வைப்பதற்கு யாருக்கும் உரிமையில்லை. நம்முடைய நிறுவனங்களின்படி, ஒரு வாரிசை நியமிப்பதில், அத னுடைய விளைவைப் பொறுத்தமட்டிலும், அது சுவீகாரத்தைப் போன்றதே என்ற போதிலும், அதில் மதரீதியான பயனுடைமை எதுவும் இல்லை; குறிப்பான சடங்குகள் எதுவும் இல்லை. வயது சம்பந்தப்பட்ட பிரச்சினையும் இல்லை. அந்த மகன், சுவீகாரம் எடுத்துக்கொண்ட குடும்பத்தில் ஒன்றிணைந்து கொள்வதில்லை, அவர் தொடர்ந்து தன்னுடைய குடும்பத்திலேயே இருந்து வருகிறார். இது சம்பந்தமாகப் பல்வேறு விதிகள் உள்ளன. இந்த அம்சம் சம்பந்தமாகப் பஞ்சாப் உயர்நீதிமன்றம் நூற்றுக் கணக்கான தீர்ப்பு களைக் கொடுத்துள்ளது. அந்த அமைப்பு பொதுமக்களின் மனதில் மிகவும் பலமாகப் பதிந்துள்ளது. இந்த சட்டத் தொகுப்பில் நீங்கள் அதை அனுமதிக்காவிட்டால், குறைந்தபட்சம் ஒரு கோடி மக்களின் பழக்கவழக்கத்தை நீங்கள் தலையிட்டு மாற்றுவதாகிவிடும். இந்து சட்டத் தொகுப்பின்படி, வேறு எந்த வகைப்பட்ட சுவீகாரமும் அனுமதிக்கப்பட மாட்டாது. தற்போதைய மசோதாவில் அதற்குத்தான் வகை செய்யப்பட்டுள்ளது. அது போதிய அளவு முன் செல்வதில்லை. பழக்க வழக்கத்தைப் பொறுத்தமட்டிலும், அங்கீகரிக்கப்பட்டுள்ள அளவைத் தவிர, அதற்கு மேல் பழக்க வழக்கம் நிராகரிக்கப்பட் டுள்ளது.

டாக்டர் அம்பேத்கர் இந்த மசோதா பொறுக்குக் குழுவுக்கு அனுப்பப்படும் சமயத்தில் நிகழ்த்திய உரையைப் படித்தபோது, அவருடைய கண்ணோட்டம் மிகவும் நியாயமானது என்று எனக்குப் பட்டது, மேலும், பழக்கவழக்கம் பற்றி அவர் கூறிய சில கருத்துக்கள், இந்த மசோதாவிலுள்ள ஷரத்துக்களுக்கு மிகவும் எதிரானதாக இருந்ததையும் கண்டேன். ஐயா, இந்த சட்ட இலாக்கா குழுவில் நமது சட்ட அமைச்சரும் உறுப்பினராக இருந்தாரா என்பதே எனக்கு மிகவும் ஐயப்பாடாக இருக்கிறது. மசோதாவில் மாற்றங்கள் செய்த நபர்கள் யார் என்பது எனக்குத் தெரியாது; அதே சமயத்தில், டாக்டர் அம்பேத்கர் - எனக்குத் தெரியாவிட்டாலும் - அங்கிருந்திருக்க மாட்டார் என்று நான் பெரிதும் ஐயுறுகிறேன்; ஏனென்றால் 90 சதவீத மக்களின் பழக்க வழக்கங்கள் பாதிக்கப்படக்கூடாது என்பதில் அவர் - நான் ஆர்வத்துடன் இருப்பது போன்றே மிகவும் ஆர்வத் துடன் இருந்தார் அவருக்குத் தெரியாமல் போயிருந்திருக்கலாம் -

அதை அவர் பாராட்டியிருந்திருக்கமாட்டார்; அல்லது பொறுக்குக் குழுவின் உறுப்பினர்களல்லாத வேறு சில நபர்கள் அங்கு இருந் திருக்கக் கூடும். அவர்கள் மசோதாவின் முகத்தையே முற்றாக மாற்றி விட்டார்கள். அவ்வாறு செய்வதற்கு அவர்களுக்கு உரிமையில்லை; மற்றைய மசோதாதான் பரிசீலனை செய்யப்பட்டுள்ளது - மூல மசோதா அங்கிருந்ததென்றும், அது பரிசீலனை செய்யப்பட்டதென்றும் கூறுவது கட்டுக்கதையாகும். ஐயா, 1948 ஏப்ரல் 9ம் தேதி நடவடிக் கைகளின் 3652ம் பக்கத்தை பார்க்கும்படி உங்களைக் கேட்டுக் கொள் கிறேன். அதில் டாக்டர் அம்பேத்கர் இவ்வாறு கூறியிருந்தார்.

> ''மரபான சட்டத்தை இந்த மசோதா கவனத்தில் எடுத்துக் கொள்ளவில்லை என்பது அவருடைய இரண்டாவது விமர்சனமாகும். பிரிவி கவுன்சிலின் சில தீர்ப்புகளை அவர் சுட்டிக்காட்டினார். இன்றைய தினம் இந்த சமயத் தில் பிரிவி கவுன்சிலின் அதிகாரத்தை சுட்டிக்காட்டுவஆ அவசியமற்றதாகும் என்று நான் நினைத்திருக்கவேண்டும். ஏனெனில், நீண்ட வரிசையான முடிவுகளால் அது நன்கு நிலைநாட்டப்பட்டுள்ளது; அதாவது இந்துக்களைப் பொறுத்தமட்டிலும் 'ஸ்மிருதி'யின் வாசகத்தைக்காட்டிலும் பழக்கவழக்கம் தான் மேலோங்கிநிற்கும். நாம் அனைவரும் இதை அறிவோம். ஆனால் நாம் என்ன செய்துகொண்டிருக்கிறோம்? நாம் செய்துகொண்டிருப்பது இதுதான். புதிய பழக்கவழக்கத்தின் வளர்ச்சியை நாம் தடுத்து வருகிறோம். இப்போதிருந்து வரும் பழக்க வழக்கங்களை நாம் அழித்து வரவில்லை. இருந்து வரும் பழக்க வழக்கங்களை நாம் அங்கீகரிக்கிறோம். ஏனெனில், இந்து சமூகத்தில் இருந்து வரும் விதிகளும் சட்டமும் பழக்கவழக்கங்களின் விளைவேயாகும். பழக்கவழக்கங்களிலிருந்தே அவை தோன்றியுள்ளன; அவை இப்பொழுது மிகவும் உறுதியாக நிலைபெற்று விட்டதால், ஒரு சட்டத்தை நிறைவேற்றுவதன் மூலம் அவற்றுக்கு உண்மையில் அரசியலில் உருவமும் உயிரும் கொடுக்க முடியும் என்று நாம் கருதுகிறோம்.

டாக்டர் பி.ஆர். அம்பேத்கர், ஸ்ரீஜத் ரோஹிணி குமார் சௌதுரியின் உரையை சுட்டிக்காட்டினார். அவர் மேலும் இவ்வாறு கூறினார்:

> பழங்குடி மக்களின் பிரச்சினையை நாம் கவனத்தில் எடுத்துக் கொள்ள வில்லை. அவர்களின் வாழ்க்கை பெருமளவிற்கு மரபான சட்டத்தின்படி நடந்து வருகிறது என்பதில் ஐயமில்லை. இந்தச் சட்டத் தொகுப்பில் இந்து என்பது யார், இந்து அல்லாதவர் யார், யாருக்கு இந்தச் சட்டம் பொருந்தும், என்பது சம்பந்தமான வரையறையை எனது நண்பர் படித்திருந்தால், அதில் வரும் ஒரு ஷரத்தை அவர் கவனித்திருப்பார். அது, முஸ்லீம்கள், பார்சிகள் அல்லது கிறிஸ்தவர் அல்லாதவர்கள் இந்துக்களாகக் கருதப்படவேண்டும் என்று மட்டுமே கூறுகிறது. அவர்கள் இந்துக்கள் என்பதல்ல. இதன் விளைவு என்னவெனில், ஒரு பழங்குடி நபர், தான் ஒரு இந்து அல்ல என்ற கூறு வதற்கு விரும்பினால், தன்னுடைய கூற்றுக்கு ஆதரவாக, தான் இந்து அல்ல என்று சான்று வழங்குவதற்கு இந்த சட்டத்தொகுப்பின் கீழ் அவருக்கு முழு உரிமையுண்டு, நீதிமன்றம் அந்த சான்றை ஏற்றுக்கொண்டால், இந்த மசோதாவில் அடங்கியுள்ள எதுவும் நிச்சயமாக அவரைக் கட்டுப்படுத்தாது.

நிலைமை இதுதான்: என்னுடைய பழக்கவழக்க மரபுகள் நல்லவை என்று நான் ஏற்றுக்கொண்டால், என்னைக் கட்டுப் படுத்துகிற பழக்க வழக்கத்திற்கு ஏற்ப, என்னுடைய வாரிசுகளை நான் நியமித்தால், அப்பொழுது, டாக்டர் அம்பேத்கரின் கருத்துப்படி, நான் ஓர் இந்து அல்ல. அது தான் எனக்கு சிரமமானது. ஒன்று, நீங்கள் இந்த ஒரு கோடி மக்களுக்கு வசதி செய்து கொடுத்து, அவர்களுடைய பழக்க வழக்கங்களை ஏற்றுக்கொள்ள வேண்டும், அல்லது...

மாண்புமிகு டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் (சட்ட அமைச்சர்) : எனது நண்பரை இடைமறிப்பதற்கு எனக்கு விருப்பமில்லை. ஆனால் என்னுடைய உரையின் அந்தப் பகுதியைப் பற்றி அவர் கொடுக்கும் வியாக்கியானத்தை நான் ஏற்றுக்கொள்ளவில்லை என்று சொல்லி யாகவேண்டும். அது முற்றிலும் வேறு ஒரு விஷயத்தைக் குறிப்ப தாகும்.

பண்டிட் தாகூர்தாஸ் பர்கவா : நான் தவறாகக் குறிப்பிட் டேன் என்பதையறிந்து மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். ஒரு கோடி மக்கள் இந்து சட்டத்தின் செல்வாக்கின் கீழிருந்து வெளியே செல்வதை டாக்டர் அம்பேத்கர் விரும்பவில்லை என்பதை அறிந்து திருப்தி அடைகிறேன். ஆனால் அதே சமயத்தில் நான் சமர்ப்பிக்கும் வாதம் இதுதான். இந்த மரபு நல்லது என்றால் - இது நல்லது என்று நான் உரிமை கொண்டாடுகிறேன், ஏனென்றால், இந்த சட்டத் தொகுப் பிலேயே கொடுக்கப்பட்டுள்ள வரையறுப்பின்படியே, இந்தப் பழக்க வழக்கம் பண்டைக் காலத்தியதும், நியாயமானதுமாகும்; பொதுக் கொள்கை அல்லது ஒழுக்கத்திற்கு எதிரானதல்ல - இந்த மரபு சட்டத் தொகுப்பினால் அங்கீகரிக்கப்பட்டிருக்க வேண்டுமென்று நான் அறுதியிட்டுக் கூறுகிறேன். ஆனால் இந்த மரபு அங்கீகரிக்கப்பட வில்லை. மூலமசோதாவினால் ஓரளவுக்கு கிரித்திரிமா வடிவம் ஒரு சிறந்த முறை என்று ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. ஆனால், இத்தகைய சுவீகாரத்தைத் தவிர, வேறு எந்த சுவீகார வடிவமும் அங்கீகரிக்கப்பட மாட்டாது என்று தற்போதைய மசோதா கூறுகிறது. இது சில விதிகளின் ஆளுகைக்கு உட்பட்டது என்று டாக்டர் அம்பேத்கர் கூறுகிறார். அந்த விதிகள் யாவை? ஒரு நபர் 15 வயதுக்கு மேல் ஆகியிருக்கக்கூடாது. அவர் சுவீகாரம் எடுத்துக்கொள்ளப் படுவதற்கு வேறு ஒருவரால் அளிக்கப்பட்டிருக்க வேண்டும். அவர் திருமணம் செய்து கொண்டவராக இருக்கக்கூடாது. தற்போதுள்ள சுவீகாரச் சட்டத்தின்படியே கூட, இந்த விதிகள் அங்கே இல்லை. உதாரணமாக ஓர் இந்துவின் மகளும், மருமகனும் இறந்துபோனால்,

மகளுடைய மகன் சுவீகாரம் எடுத்துக்கொள்ளப்பட முடியாது. பெற்றோர்கள் இல்லையானால் மருமகனும் (ஒன்றுவிட்ட மகனும்) கூட சுவீகாரம் எடுத்தக் கொள்ளப்பட முடியாது என்ற விதி நடை முறையில் இல்லை; மேலும் அமலிலுள்ள சட்டத்தின்படி ஒரு நபர் சுவீகாரம் எடுத்துக்கொள்ளப்படுவதற்கு முன்னால் திருமணமான வராக இருக்க வேண்டுமென்ற அவசியம் இல்லை என்பதும் எல்லோரும் அறிந்ததே. இது போன்றே வயதைப் பற்றியும் எனவே, இந்த முறை களெல்லாம் அவை தற்போதைய நிலைமைகளுடன் பொருந்திவராத வகையில் மாற்றப்பட்டுள்ளன; அல்லது அவை, நமக்கு உபயோகமாயிரா, அல்லது நம்மைக் கட்டுப்படுத்தாது என்ற வகையில் மாற்றப்பட்டுள்ளன.

நமக்கு ஒரு சிவில் சட்டத் தொகுப்பு வேண்டும் என்று அரசியல் நிர்ணய சபையில் நாம் தீர்மானம் நிறைவேற்றினோம். இது இந்து சட்டத்தொகுப்பாக இல்லாவிட்டாலும், ஒரு சிவில் சட்டத் தொகுப்பை உருவாக்கும் பொறுப்பு டாக்டர் அம்பேத்கரிடம் கொடுக்கப்பட்டிருந்த போதிலும் (அரசியல் சாசனம் நிறைவேற்றப் பட்ட பிறகு அவருக்கு அத்தகையப் பொறுப்புக் கொடுக்கப்படும் என்று நான் கருதுகிறேன்) இந்த சிவில் ஏற்பாட்டை - அதாவது ஒரு வாரிசை நியமிப்பதை - சிவில் சட்டத் தொகுப்பிலும் அவர் நிச்சயமாக சேர்த்துக் கொள்வார். ஒரு நபர், அவரைத் தமது வாரிசாக நியமிப்பவர்களுக்கு - அவர்களின் வயதான காலத்தில் உதவக்கூடும், நான் சமர்ப்பிப்பது என்னவெனில், உண்மையில், மூல சட்டத் தொகுப்பைக் காட்டிலும் மறுவரைவு மிகவும் மோசமானது என்பதற்கு, இந்த அம்சமே போதுமானதாகும். மேலும், மூல மசோதாவின்பால் முழு கவனம் செலுத்தப்படவில்லை. முழு கவனம் செலுத்தப்பட்டிருந்தால், இந்த அம்சம் பரிசீலிக்கப்பட்டிருந் திருக்கும். இது ஷரத்து வாரியாகப் பரிசீலிக்கப்பட்டிருந்தால் இந்த நிலைக்கு நாம் வந்திருக்க மாட்டோம்.

மாண்புமிகு டாக்டர் பி.ஆர். அம்பேத்கர்: மசோதாவின் இந்தப் பகுதி, மிகவும் பரிசீலிக்கப்பட்டது என்று கூறுவேன்.

பண்டிட் தாகூர்தாஸ் பர்கவா: ஐயா, மூலமசோதா பரிசீலிக்கப் பட்டது என்பது குறித்து மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன். இனி ஒரே ஒரு சட்ட நுணுக்க அம்சம் எஞ்சியிருக்கிறது. அது என்னவெனில், அது ஷரத்து வாரியாகப் பரிசீலிக்கப்படவில்லை, என்பதுதான். அது அவ்வாறு செய்யப்படவில்லை என்பதற்கு உள்ளார்ந்த சான்று

உள்ளது. இதன் விளைவு என்ன? உதாரணமாக, சில ஷரத்துகள் விடுபட்டுப் போயிருந்தால் என்னாவது? அந்த ஷரத்துகள் எவ்வாறு பரிசீலிக்கப்பட்டன? கவனம் முழுவதும் மற்றைய மசோதாவின் முன்வரைவின் மீது இருந்தபோது, அந்த ஷரத்துகள் பரிசீலிக்கப்பட்டிருக்க முடியாது. இது ஒரு சட்ட நுணுக்க விஷயம் அல்ல....

திரு. துணை சபாநாயகர் : பொறுக்குக் குழு என்ன செய்திருந்த போதிலும், அது இந்த அவையைக் கட்டுப்படுத்தாது, என்பதை மதிப்பிற்குரிய உறுப்பினர் அறிவார். பொறுக்குக் குழு ஒரு பரிந்துரையை அனுப்பியுள்ளது: அதை ஏற்றுக் கொள்வதோ அல்லது ஏற்றுக் கொள்ளாமல் நிராகரிப்பதோ மதிப்பிற்குரிய உறுப்பினரின் உரிமை அவர் அதை ஏற்றுக்கொள்ளவில்லையென்றால் அதை ஏற்றுக்கொள்ள வேண்டாமென்று அவர் அவையைக் கேட்டுக் கொள்ளலாம். அது குறித்து நாம் மீண்டும் விவாதிக்கவேண்டியதில்லை. பார்க்கப்போனால் சில உறுப்பினர்கள் அங்கு இருந்தனர். அவர்கள் எதைப் பரிசீலித்தார்கள். எதைப் பரிசீலிக்கவில்லை என்பதைப் பற்றி விவாதிப்பது சரியல்ல. ஒரு ஷரத்தை நாம் ஏன் ஏற்றுக் கொள்ளக் கூடாது அல்லது ஏன் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பது குறித்து மதிப்பிற்குரிய உறுப்பினர் அவையில் பேசுவது நல்லது.

பண்டிட் தாகூர்தாஸ் பர்கவா : ஐயா, உங்களுடைய ஆலோசனையை நான் ஏற்றுக் கொள்கிறேன். பொறுக்குக் குழுவின் முன்னால் என்ன நடந்தது என்பது குறித்து இனிமேல் நான் பேச மாட்டேன்: உங்களுடைய அனுமதியுடன் இந்த ஒரு விஷயத்தைப் பற்றி மட்டும் கூறுகிறேன். மூலமசோதா பரிசீலனை செய்யப்பட மாட்டாது, பதிலி மசோதா தான் பரிசீலிக்கப்பட வேண்டும் என்ற மோசடியில் பொறுக்குக் குழு உடந்தையாயிருந்தபோதிலும் நம்மை அது கட்டுப் படுத்தாது. குற்றம் சாட்டப்பட்டுள்ள ஒருவர் ஒரு குற்றவியல் நீதிமன்றத்தின் முன்னால் சட்டத்திற்குப் புறம்பான ஒரு குறிப்பிட்ட நடைமுறையில் ஈடுபட்டால், அப்பொழுது அது அவரைக் கட்டுப் படுத்தாது. இது சம்பந்தமாக நான் சில தீர்ப்புகளை மேற்கோள் காட்டட்டுமா? குற்றம் சாட்டப்பட்டுள்ள ஒருவரை, குற்றவியல் தண்டனை சட்டத்தின் 107வது பிரிவின் கீழ் கட்டுப்படுத்துவதற்கு நல்ல சான்று அல்லது பிரிவு இருக்கிறதா என்று தெரிந்து கொள்வதற்கு அந்தப் பிரச்சினையை நீதிமன்றம் ஆராய வேண்டியது அவசியமாகும். ''அந்த சாட்சியத்துடன் கட்டுப்படுத்திக் கொள்வதற்கு நான் உடன்படுகிறேன்'' என்று குற்றம் சாட்டப்பட்டுள்ளவர் கூறுகிறார். ''நீ கட்டுப்படுகிறாய்'' என்று நீதிமன்றம் கூறுகிறது.

ஆயினும் சரியான நடைமுறை கடைப்பிடிக்கப்படவில்லை என்றும் ஒரு தவறான நடைமுறையுடன், குற்றம் சாட்டப்பட்டவர் ஒத்துப் போவது உத்தரவை சட்டபூர்வமாக்காது என்றும் மேல்முறையீடு நீதிமன்றம் தீர்ப்பு அளிக்கிறது.

திரு. துணை சபாநாயகர் : பொறுக்குக் குழுவின் அறிக்கையைத் துண்டு துண்டாகக் கிழிப்பதோடு மதிப்பிற்குரிய உறுப்பினர் திருப்தியடையவில்லையா? அவர்கள் ''குற்றவாளிகள்'' என்று அவரும் கூறவேண்டுமா?

பண்டிட் தாகூர்தாஸ் பர்கவா : ஒரு பொறுக்குக் குழுவைக் கட்டுப்படுத்துகிற நடைமுறை சம்பந்தமான அடிப்படையான விதிகளைப் புறக்கணித்த குற்றம் புரிந்தவர்கள் இன்று இந்த அவையின் முன்னால் குற்றம் சாட்டப்பட்டு நிற்கின்றனர். என்னுடைய சில நண்பர்களுக்கு மகிழ்ச்சியளிக்காத சில விஷயங்களைக் கூற வேண்டியிருப்பதற்கு நான் வருந்துகிறேன். ஆயினும், மிகுந்த தன்னடக்கத்துடனும், இந்த அவையின் உரிமைகளையும் மதிப்பையும் பாதுகாக்கும் நோக்கத்துடன் அதை நான் செய்யவேண்டியுள்ளது. இத்துடன் இந்த அம்சத்தை விட்டுவிட்டு, இரண்டாவது அம்சத்திற்கு வருகிறேன்.

திருமணம், மற்றும் விவாகரத்து ஆகிய மிகவும் முக்கியமான பிரச்சினைகளைப் பற்றி இந்தச் சட்டத்தொகுப்பு என்ன கூறுகிறது? தற்போது இது சம்பந்தமான நிலவரம் என்ன? பஞ்சாபில் திருமணத்திற்குக் குறிப்பான சடங்குகள் எதுவும் கிடையாது. அவை கரேவா, சதர், மற்றும் அந்தாஸி திருமணங்கள் என்று அழைக்கப்படுகின்றன. இத்திருமணங்களில் மாப்பிளை வழங்கும் வளையல்களை மணப்பெண் அணிந்து கொள்கிறாள், அல்லது மாப்பிள்ளை, மணப் பெண்ணுக்கு சதரை அணிவிக்கிறார்; இத்துடன் திருமணச் சடங்கு முடிந்துவிடுகிறது (திரு. மகாவீர் தியாகி: ''அருமையான திருமணம்.'') அத்தகைய ஒரு நடைமுறையைக் கைக்கொள்வது திரு. தியாகிக்கு மிகவும் எளிதானதாக இருக்கலாம். இது ஒரு சமயச் சடங்கு சார்ந்த அல்லது சிவில் திருமணம் கூட அல்ல. மேலும், மூல சட்டத் தொகுப்பில், தப்பித்துக் கொள்ளும் ஒரு வழி இருந்தது. அத்தகைய நபர்கள் நீதிமன்றத்திற்கு வந்து தங்களைப் பதிவு செய்து கொள்ளலாம். மாற்றப்பட்டுள்ள விதிகளின்படி திருமணம் சமயச் சடங்கு ரீதியாகச் செய்யப்பட்டிருந்தாலொழிய அதைப் பதிவு செய்ய முடியாது. உங்களுக்கு முன்னால் எடுத்துக் கூறவேண்டிய வேறு

விஷயங்களும் இருக்கின்றன. ஆனால் பலருக்கு என்ன ஏற்படுகிறது என்பது சம்பந்தமாகவும், சாதாரண மனிதனின் கண்ணோட்டத் திலிருந்து எது பரிசீலிக்கப்படவில்லை என்பது சம்பந்தமாகவும் நான் சில பொதுவான கருத்துக்களைக் கூறுவதற்கு விரும்புகிறேன்.

கிராமப்புறப் பகுதிகளில் மக்கள் எழுத்தறிவில்லாதவர்களாக இருக்கிறார்கள். அவர்கள் ஏழையாக இருக்கிறார்கள். சட்டநுணுக் கங்கள் அவர்களுக்குத் தெரியாது. விவாகரத்து பிரச்சினையைப் பற்றி மக்களின் 90 சதவீதத்தினருக்காகத் தாம் பேசுவதாக டாக்டர் அம்பேத்கர் கூறியபோது, அவர் பேசுவது உண்மையைத் தவிர வேறொன்றும் அல்ல என்பதை நான் அறிவேன். இந்தத் தொண்ணூறு சதவிகிதம் சம்பந்தமாக - இன்று விவாகரத்து எவ்வாறு ஏற்படு கிறது? அவர்கள் மனு எழுதும் ஒருவரிடம் சென்று தங்களை விடுவித்துக் கொள்ளும் ஒரு கடிதத்தைப் பெறுகின்றனர். மற்றொரு வழி என்ன வெனில் அவர்கள் ஒன்றாகக் கூடி, பெண்ணுக்கு எதிராக ஒரு குற்றப்பத்திரிகையை வெளியிடுகின்றனர்.

மாண்பமிகு டாக்டர் பி.ஆர். அம்பேத்கர்: கூடியிருப்பவர் களுக்கு நிறைய மதுபானம் வழங்குவார்கள்!

பண்டிட் தாகர்தாஸ் பர்கவா: அது அவ்வாறிருக்கலாம், ஆனால் அது சடங்கின் ஒரு பாகமல்ல, ஐயா, தற்போதைய சட்டமென்ன? நமது தலைவர்கள் உங்களுக்கு என்ன செய்திருக் கிறார்கள்? நான் ஏழை மக்களின் ஒரு பிரதிநிதி. நானும் அவர் களில் ஒருவன். ஆனால் டாக்டர் அம்பேத்கர், தானும் அவர்களில் ஒருவர் என்று தன்னுடைய விரலால் சுட்டிக்காட்டினால், நான் அதை ஒத்துக்கொள்ளாவிட்டால், அவர் என்னை மன்னிப்பீராக! டாக்டர் அம்பேத்கர் இங்கே ஒரு சுவர்க்கத்தில் வாழ்கிறார்.

மாண்புமிகு டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் : பல ஆண்டுகள் நான் அபிவிருத்தி அறக்கட்டளைக் குடிசைகளில் வசித்துள்ளேன். அவர்கள் வாடகையாக மூன்று ரூபாய் விதித்திருந்தனர்.

பண்டிட் தாகூர்தாஸ் பர்கவா : உங்களுடைய காலின் கீழ் போட்டு அவர்களை நீங்கள் மிதித்து விடலாம். உங்களுடைய கட்டை விரலின் கீழ் அவர்களை நீங்கள் நசுக்கிவிடலாம். ஆனால் ஐயா, நாளொன்றுக்கு ரூ. 1, அல்லது ரூ. 1.50 பெறும் எந்த ஏழை கிராமவாசி யும் ஒரு வழக்குரைஞரின் உதவியில்லாமல் ஒரு மாவட்ட நீதிபதி

யிடம் போக முடியும் என்று நீங்கள் நினைக்கிறீர்களா? டாக்டர் அம்பேத்கர் ஒரு வழக்குரைஞர். இந்த உலகம் என்னைப்போன்ற வழக்கறிஞர்கள் நிறைந்ததாக இருக்கலாம் - வேறு யாரும் இருக்க வேண்டியதில்லை - என்று அவர் விரும்புகிறார். இந்த மக்களுக்கு எல்லாம் அப்பொழுது என்ன ஏற்படும்? ஒரு திருமணத்தைக் கலைக் கவோ, அல்லது விவாகரத்து பெறவோ அவர்கள் ஒரு மாவட்ட நீதிபதியிடம் போவார்களா? (மதிப்பிற்குரிய ஓர் உறுப்பினர் : ''அசாத்தியம்''). இது போதுமானதல்ல. அவர் ஓர் உத்தரவை (தீர்ப்பைப்) பெற்றாலும்கூட, அது ஓர் உயர்நீதிமன்றத்தினால் ஊர்ஜிதம் செய்யப்பட வேண்டும். இது பஞ்சாபைப் பொறுத்தமட் டிலும், சிம்லாவிலுள்ள உயர்நீதிமன்றத்திற்குப் போகவேண்டும். இப்பொழுது இந்த நடைமுறை மக்களுக்குத் தெரியாது. அந்த மக்கள் மீது இது ஒரு மாபெரும் கொடுமையாகும். பம்பாயில் 'மரைன் டிரைவில்' வசிக்கும் அல்லது கல்கத்தாவிலும், டில்லியிலும் மாளிகை களில் வாழ்பவர்களுக்காக நீங்கள் சட்டமியற்றுகிறீர்கள். உங்க ளுடைய இதயத்தில் ஒரு மென்மையான இடத்தில் நீங்கள் வைத்துள்ள அந்த ஏழை மக்களுக்காக அல்ல.

திரு. எல். கிருஷ்ணசாமி பாரதி: விவாகரத்தை சிரமமாக்கு வதற்கு அவர் விரும்புகிறார். நீங்கள் அதை எளிதாக்குவதற்கு விரும்பு கிறீர்களா?

பண்டிட் தாகூர்தாஸ் பார்கவா: அதை அவர்கள் சிரமமான தாக்குவதற்கு விரும்புகிறார்கள் என்பது மற்றொரு பதிலாகும். விவாக ரத்தை எளிதாக்குவதற்கு நான் விரும்பவில்லை. திட்டவட்டமாக இல்லை. ஒரே ஒரு நிபந்தனை பேரில் மட்டுமே நான் விவாகரத் துக்கு ஆதரவு தெரிவிக்கிறேன். விவாகரத்து ஏற்படக்கூடிய நிலைமை கள் உருவாவதைத் தடுக்கக் கூடிய வகையில் நீங்கள் சட்டங்களை இயற்ற வேண்டும். கற்பும், குடும்ப வாழ்க்கையின் தொடர்ச்சியும் நமது பண்பாட்டின் அச்சாணியாகும். ஆனால் விவாகரத்துக்கு நான் உடன்படுகிறேனென்றால் அதற்குக் காரணம் கணவனால் கைவிடப் பட்டு மிகுந்த தொல்லைப்படும் பல பெண்களை நான் பார்க்கிறேன். அதன் காரணமாகத்தான், விவாகரத்துக்கு நான் ஒத்துக்கொள்கிறேன். முற்றிலும் எழுத்தறிவில்லாத ஓர் ஏழை மனிதன் எவ்வாறு ஒரு வழக் குரைஞரை ஏற்பாடு செய்து கொண்டு ஒரு மாவட்ட நீதிமன்றத்திற்கு அல்லது உயர்நீதிமன்றத்திற்குச் செல்ல முடியும்? இதை ஏற்றுக் கொள்வது சாத்தியமேயில்லை. 1869ம் வருடத்தய இந்தப் பழைய

சட்டம், பஞ்சாபின் அல்லது இந்தியாவின் வேறு எந்தப் பகுதியின் ஏழைமக்களுக்காக இயற்றப்படவில்லை. அப்போதைய ஆட்சியாளர்களைப்போன்ற அதே சமயத்தினரான கிறிஸ்தவர்களுக்காக இது சட்டமாக்கப்பட்டது. அவர்களுக்கும் இந்த மக்களுக்கும் இடையில் நிறைய வேறுபாடு உள்ளது மசோதாவின் 38லிருந்து 50 வரையிலான ஷரத்துக்களை நீங்கள் பரிசீலனை செய்தால், மிகவும் சிக்கலான மற்றும் இடர்மிக்க நடைமுறை வகுத்தளிக்கப்பட்டுள்ளது. அதைக்கடைப்பிடிப்பது மிகவும் சிரமானது என்ற முடிவிற்கு நீங்கள் வருவீர்கள். நீங்கள் ஆழமாக சிந்தித்தால், அந்த ஷரத்துக்களை நிறைவேற்றினால், இந்து சமுதாயம் முழுமையும் உங்களுக்கு எதிராகக் கலகக்கொடி தூக்குவதை நீங்கள் காண்பீர்கள். உங்களுடைய சட்டத்தின்படி, ஒரு நபர் தனது அத்தையின் (தகப்பனாரின் சகோதரி) மகளைத் திருமணம் செய்துகொண்டால், அந்தத் திருமணம் நல்ல திருமணமாகக் கருதப்படும்; ஆனால், அவர் தனது தாய்மாமனின் மகளைத் திருமணம் செய்தகொண்டால், (பம்பாயின் சில பகுதிகளில் இது நடைமுறையில் உள்ளது என்று நான் அறிகிறேன்). (மதிப்பிற்குரிய ஓர் உறுப்பினர்: ''சென்னையிலும்'') ஆனால் நம்மைப் பொறுத்தமட்டிலும், இது மிகவும் முறை தவறிய உடல்உறவு சார்ந்த குற்றமாகக் கருதப்படுகிறது. இரண்டுக்கும் இடையில் பெரிய வேறுபாடு இருக்கிறது. (திரு. மகாவீர்தியாகி : ''அந்த நபர் கொல்லப்பட்டுவிடக்கூடும்''). திரு. தியாகி ஒன்றும் தவறாகக் கூறிவிடவில்லை. கிழக்கு பஞ்சாபின் அனைத்து கிராமங்களிலும் இது உண்மையிலேயே நடைபெறுகிறது. நான் மிகவும் உணர்ச்சிவசப்பட்டுப் பேசுகிறேன். ஏனெனில் இதற்குக் காரணம், நான் அழுத்தமாகப் பேசுவதற்கு விரும்புகிறேன் என்பதினால் அல்ல; மாறாக, இதை உண்மை என்று நான் கருதுகிறேன். இது செய்யப்படுவதற்கு நீங்கள் அனுமதித்தால், அந்த நபர் கொல்லப்பட வேண்டும், யாரும் அவருடன் தொடர்புகொள்ளமாட்டார். (திரு. தாஜாமுல் உசேன்: ''ஏதாவது கட்டாயம் இருக்கிறதா?'') ஒரு நபர் தனது சகோதரியையோ அல்லது தாயாரையோ மணந்தால், அதில் ஏதாவது கட்டாயம் இருக்கிறதா? இது, ஒரு உதவும் மசோதாவா? இது சமுதாயத்தின் மிகவும் ஜீவாதாரமான அம்சங்களுக்குள் செல்கிறது. இது சகிக்கத்தக்கதல்ல. சில மக்கள் சம்பந்தமாக இந்தப் பழக்கவழக்கம் இருக்கிறது என்ற காரணத்தினால், இந்த நிலைமையுடன் ஒத்துப் போவது என்பது நமக்கு சாத்தியமற்ற விஷயமாகும். அந்த மக்கள் பாதுகாக்கப்படக்கூடாது என்று நான் சொல்லவில்லை. அவர்களுக்குத் தனியாக ஏற்பாடு செய்யலாம்.

திரு. எல். கிருஷ்ணசாமி பாரதி : திட்டவட்டமாக அதற்கு வகைசெய்யப்பட்டிருக்கிறது. ஷரத்து 7(5)ஐப் பார்த்தால் அது தெரியும். தரப்புகள் ஒருவருக்கொருவர் பகைமை பாராட்டிக் கொண்டிருக்கக் கூடாது.

பண்டிட் தாகூர்தாஸ் பர்கவா : ஒரு நபர், தனது அத்தையின் மகளைத் திருமணம் செய்து கொள்ள முடியுமா என்று நான் பணிவுடன் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். நான் விதிகளைப் பார்த்துள்ளேன். இந்த விஷயங்களில், சட்டம் மாற்றப்பட்டுள்ளது என்பதை உங்களுடைய கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறேன்; நமது நிலைமைகளுக்குப் பொருந்துகின்ற வகையில் சட்டம் மாற்றப்பட்டாலொழிய, இந்த மசோதாவை ஆதரிப்பது எங்களுக்கு சிரமமான விஷயமாகும். அது செய்யப்பட முடியும். பொறுக்குக் குழுவில் திருத்தங்களைப் பிரேரேபிக்கலாம். மசோதாவின் குரல்வளையை நெரிக்கவோ அல்லது அது ஒழித்துக் கட்டப்படவோ நான் விரும்பவில்லை.

மாண்புமிகு டாக்டர் பி.ஆர். அம்பேத்கர்: இந்த அவையில் ஒரு திருத்தத்தின் வாயிலாகவும் அதைச் செய்யலாம்.

மதிப்பிற்குரிய ஓர் உறுப்பினர்: நீங்கள் அதை ஏற்றுக் கொள்வீர்கள் என்று நான் நம்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் : எந்த நியாயமான திருத்தத்தையும் ஏற்றுக் கொள்வதற்கு நான் தயாராயிருக்கிறேன்.

பண்டிட் தாகூர்தாஸ் பர்கவா : நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். இந்த அளவிற்கு இந்த மசோதாவை ஆதரிப்பதற்கு நான் உடன்படுகிறேன்.

திரு. தாஜாமுல் உசேன் : மதிப்பிற்குரிய உறுப்பினர், இன்றே முடித்துக் கொள்வதற்கு எண்ணியுள்ளாரா?

திரு. துணை சபாநாயகர் : இந்த மசோதாவால் பாதிக்கப்படும் மற்ற நபர்களைக் காட்டிலும், மதிப்பிற்குரிய உறுப்பினர் இதில் அக்கறையுள்ளவராகத் தோன்றுகிறது. நான் இதை கவனித்து வந்திருக்கிறேன். மதிப்புக்குரிய உறுப்பினர் எப்பொழுது முடிப்பார் என்று நான் அவரைக் கேட்க முடியாது. கூறியதையே மீண்டும்

கூறாமல், ஒரு நியாயமான நேரத்தை எடுத்துக்கொள்வது அவரைப் பொறுத்த விஷயமாகும்.

பண்டிட் தாகூர்தாஸ் பர்கவா : தேவைக்கு அதிகமாக ஒரு நிமிஷத்தையும் கூட எடுத்துக் கொள்வது என்னுடைய நோக்க மல்ல. நான் சொன்னதையே திருப்பிக் கூறினால், உடனே நிறுத்திக் கொள்ளும் படி எனக்கு உத்தரவிடலாம். முப்பது கோடி மக்களின் வாழ்க்கைகளை பாதிக்கின்ற ஒரு மசோதா விவாதத்தில் இருக்கும் போது பல நாட்கள் அதைப் பரிசீலிப்பது அதிகமானதல்ல.

மாலை 3 மணி

பொறுக்குக் குழுவினால் வகுத்துத் தரப்பட்டுள்ள ஷரத்துக்களுக்கும் இது சம்பந்தமாக மிகவும் கேந்திர மான விஷயங்களுக்கும் இப்பொழுது நான் வருகிறேன். வாரிசுரிமை மற்றும் பராமரிப்பு சம்பந்தமாக இருந்தாலும் சரி, அவை சம்பந்தமாக நமது கண்ணோட்டம் எதுவாக இருக்க வேண்டும். இது குறித்து நான் ஆழமாக உணர்கிறேன். நான் ஏற்கனவே கூறியது போன்று, இந்தியப் பெண்களுக்கு அசையா சொத்துக்கள் மற்றும் அசையும் சொத்துக்களின் மீது உரிமைகள் வழங்கப்படுவதை நான் ஆதரிக்கிறேன், அப்பொழுதுதான் அவர்கள் பொருளாதார ரீதியில் சுதந்திரமாய் இருக்க முடியும். ஆனால், அதே சமயத்தில், தகப்பனாரின் சொத்தில் மகளுக்கு ஒரு பங்கு கொடுப்பதை எதிர்க்கிறேன். ஒரு திருமணமாகாத மகளைப் பொறுத்தமட்டிலும் அதை நான் விரும்புகிறேன். அவள் திருமணம் செய்து கொள்ளாத வரையிலும், மகனைப் போன்றே மகளுக்கும் சொத்தில் முழுப் பங்கு உண்டு.

ஆனால் அவள் திருமணம் செய்து கொண்டவுடனே நிலைமை வேறாகிவிடுகிறது. நமது சட்டத்தில் ஒரு வெற்றிடம் இருப்பதைப் பார்க்கிறேன். ஆனால், ஒரு பெண் ஓர் ஆணைத் திருமணம் செய்து கொள்ளும்போது, அவர்கள் காதலால் ஒன்றிணையும்போது, சொத்தி லும் அவர்கள் ஒன்றிணையலாம் என்று சட்டமாக்குவதன்மூலம் அந்த வெற்றிடத்தை இட்டு நிரப்பலாம். இறுதியாக அந்த ஆணும் பெண்ணும் கூட்டு உடைமையாளர்களாகிறார்கள். பின்னர் கணவனின் தந்தை மரணமடையும்போது, அவர்களிருவரும் சம அளவில் அந்த சொத்தைப் பெறலாம். மேலும், சொத்துக்கள் மாற்றி ஒப்படைக்கப் படுவது ஒரு குறிப்பிட்ட வழியில் நடைபெறலாம். அதன்படி ஒரு வேளை, சம பங்குக்கான கோரிக்கை முழுமையாகத் திருப்தி செய்யப்படாமல் போகக்கூடும். ஆனால் இது போன்ற ஒரு விஷயத்தில்

ஒவ்வொரு பிரச்சினையையும் சீர்தூக்கிப் பார்ப்பதில், நமது சகோதரிகளுக்கு சமநிலையான சரியான ஆலோசனை கிடைப்பதாக கருத முடியாது. அவர்கள் கையாளும் அளவுகோல் சரியானதல்ல.

பராமரிப்பு சம்பந்தமாக அவர்களுக்கு உள்ள சட்டங்களுக்கும் ஷரத்துகளுக்கும் சமமானவற்றை வேறு எங்கும் காணமுடியாது என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ஐயா, வாரிசுரிமைப் பிரச்சினையையும், பராமரிப்புப் (ஜீவனாம்சம்) பிரச்சினையையும் ஒன்றாகக் கருத வேண்டும். அவற்றை ஒன்றாகக் கருதாவிட்டால், அந்த ஷரத்துகளின் முழுத் தன்மைகளையும் எய்த முடியாது. பராமரிப்பைப் பொறுத்தமட்டிலும் ஒரு கணவரின் அல்லது ஓர் ஆணின் கடமைகள், பெண்களுக்கு வரையறுக்கப்பட்ட கடமைகளினின்றும் மிகவும் வேறானவையாகும். பாரமரிப்பு சம்பந்தமான அத்தியாயத்தின்படி, கணவனால் பராமரிக்கப்படுவதற்கு மனைவிக்கு உரிமையுண்டு. ஆனால் மனைவியால் பராமரிக்கப்படுவதற்கான உரிமை கணவனுக்கு உண்டா? உரிமைகள் சமமானவை அல்ல என்று மட்டுமே நான் கூறுகிறேன். உரிமைகள் சமமானதாக இருக்க முடியாது என்று நான் உறுதியாகக் கூறுகிறேன். அவை பன்முகப்பட்டவை. பெண்களும் ஆண்களும் வாழ்க்கையில் வெவ்வேறு பணிகளைச் செய்யவேண்டியுள்ளது. இந்த அடிப்படையில், பெண் தனது முழு உரிமையைப் பெறும்படியாகச் செய்ய வேண்டும்; முற்றிலும் சம உரிமை அல்ல.

மீண்டும், ஐயா, வயது வராத ஒரு மகனைப் பராமரிப்பதற்குத் தந்தைக்கு உரிமை உண்டு; ஆனால் மகளைப் பொறுத்தமட்டிலும், ஐயா, ஒரு மகளின் உரிமைகள் என்ன? மகள் விதவையானால், அல்லது திருமணம் செய்துகொண்டுவிட்டால், அல்லது திருமணம் செய்துகொள்ளாமலிருந்தால், ஒவ்வொரு நிலையிலும், மகளின் வயது என்னவாக இருந்தபோதிலும், அவளைப் பராமரிக்க வேண்டியது முற்றிலும் கடப்பாடு ஆகும். உண்மையில் பராமரிப்புக்கான விதிகளைப் பொறுத்தமட்டிலும் ஒவ்வொரு வழியிலும் பெண்கள் பாதுகாக்கப்பட வேண்டுமென்றும், அவர்களுக்கு எல்லா வசதிகளும் செய்து கொடுக்கப்பட வேண்டுமென்றும் பிரேரணையை முன் வைத்ததற்காக நான் டாக்டர் அம்பேத்கரைப் பாராட்டுவதற்கு நிச்சயமாக விரும்புகிறேன். ஆனால் இந்தப் பயனுள்ள ஷரத்து இருக்கும்போது, தந்தையின் சொத்தில் பெண்களும் ஒரு பங்கைப் பெறவேண்டும் என்ற மற்றைய விஷயமும் இருக்கிறது.

பழைய காலத்தில், ஒரே சமயத்தில் சொத்து பிரித்துக் கொடுக்கப் பட்டதென்றும், மகளுக்கு நான்கில் ஒரு பங்கு கிடைத்ததென்றும் நாரதர் கூறியுள்ளார். அந்தக் காலத்தில் சமூக வாழ்வின் அடிப்படை என்ன என்பதும், இன்றுள்ளதைப் போன்ற குடும்ப அமைப்பு இருந்ததா என்பதும் எனக்குத் தெரியாது. இந்து சட்டத்தின் சில வாசகங்களில் இந்த அம்சம் பற்றிக் கூறப்பட்டுள்ளதா என்பதும் எனக்குத் தெரியாது. அது ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு நிலைபாடு அல்ல. ஏககாலத்தில் ஆண், பெண் வாரிசுரிமை என்பது திருமண மாகாத பெண்ணை மட்டுமே குறிப்பதாகும் என்று சிலர் கூறுகின் றனர். ஆனால் அது ஒருபுறமிருக்க, இந்தக் காலத்தில், இது சரியான தென்று கருதப்பட்டால், முக்கிய கேள்வி என்னவெனில், இன்று, ஆயிரமாண்டுகளுக்கும், அதற்கு மேலாகவும், தந்தைவழி தத்து வத்தைக் கடைப்பிடித்துக்கொண்டுவந்துள்ள நிலையில், மகளுக்கும் ஒரு பங்கு கொடுக்கப்படவேண்டும் என்ற நிலையை நாம் ஏற்றுக் கொள்வது நியாயமானதா? குடும்பத்தில் என்ன ஏற்படும்? தந்தை உயிருடன் இருக்கிறவரையில் புதல்வர்கள் வியாபாரத்திலோ, அல்லது வயலிலோ, அவருடன் சேர்ந்து பணியாற்றுகின்றனர். அவர்கள் ஒன்றுபட்டு செல்வத்தைத் தோற்றுவிக்கின்றனர். முதிய வயதில் தந்தை இறந்து போகும்போது, தகப்பனார் பெயரிலுள்ள அந்த சொத்து, மகன்கள் மற்றும் தகப்பானரின் கூட்டு முயற்சிகளின் பயனாக உருவாக்கப்பட்டதாகும். இப்பொழுது, அத்தகைய சொத்தில், அதை உருவாக்கியதில், மகளுக்குப் பங்கில்லை என்ற நிலையில் - ஒருவேளை அவள் வேறு இடத்தில் குழந்தைகளைப் பெற்றெடுத்துக் கொண்டிருந் திருப்பாள் - மகளும் ஒரு பங்கைப் பெறவேண்டும் என்று கூறுவது நியாயமல்ல.

நான் கூறுவதைத்தவறாகப் புரிந்துகொள்ள வேண்டாம் - மகளுக்கு முழு உரிமைகள் கொடுக்கப்படக்கூடாது என்பது என் நோக்கமல்ல. அவற்றை அவள் அடையட்டும். ஆனால், மிகவும் அடிப்படையான தன்மையை உடைய இந்தப் புதுமை - நம் நாட்டில் ஒவ்வொரு இல்லத்தையும் பாதிக்கக் கூடியதை நாம் செய்ய வேண்டுமா? என்னுடைய மக்களை நான் நன்கு அறிவேன். ஒரு ஜாட் இனத்தைச் சேர்ந்த சௌதுரி ரணவீர சிங், அவருடைய மருமகன், குடும்பத்தில் எவ்வாறு வரவேற்கப்படுவார் என்பதை அறிவார். நான் நாற்பதாண்டுகளாக வழக்குரைஞராக இருந்து வருகிறேன். சுயமாக சம்பாதித்த சொத்தைப் பொறுத்தமட்டிலும், மகன்கள் இல்லாத நிலையில், அந்த சொத்தில் மகள் ஒரு பங்கைப் பெறுகிறாள் என்பதை நானறிவேன். இந்தப் புதுமை கிராமங்களில் புகுத்தப்பட்டால், சொத்து

சம்பந்தமாக, முடிவற்ற தகராறு இருந்துவரும். ஒவ்வொரு இல்லத்திலும், மருமகனும், தந்தையும், மருமகனின் தாயாரும் அத்தையின் மகனுடனும், அவருடைய குடும்பத்துடனும் வசிப்பதற்கு அனுமதிக்கப்பட்டால், ஓர் அசாத்தியமான நிலைமையை அது உருவாக்கும். இது ஏற்படுவது நாம் நம்முடைய புதல்விகளை நேசிப்பதில்லை என்பதனால் அல்ல. அவர்களுக்காக நாம் எல்லாம் செய்கிறோம். எங்களுடைய பகுதியில் ஒரு புதல்வி, தனது பெற்றோர்களைக் காணப் பிறந்தகத்திற்கு வருகிறாள் என்றால், மகளின் பேரில் உள்ள அன்பின் காரணமாக, எப்போதும் அவளுக்கு ஏதாவது வழங்கப்படும்.

திருமதி ரேணுகா ரே : இந்த நாட்டில் மகள்களே பிறக்கக் கூடாது.

பண்டிட் தாகூர்தாஸ் பர்கவா : இதற்கு டாக்டர் அம்பேத்கர் என்ன கூறுவார் என்பதை நான் அறிவேன். 'மகனுக்கு பதிலாக மகள்கள் தான் பிறக்க வேண்டும்.' என்று அவர் கூறுவார். பல ராஜபுத்ரர்களிடையில் - மகள்கள் - பெண் குழந்தைகள் கொல்லப்பட்டதை நாம் அறிய மாட்டோமா? அது ஏற்படுவதை நான் விரும்பவில்லை. அது அநாவசியமான, தவறான காரியமாகும். நூற்றுக்கணக்கான ஆண்டுகளாக நாம் அத்தகைய சமுதாயத்தில் வாழ்ந்து வந்துள்ளோம் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மகனைக் குடும்பத்தின் அச்சாணியாக நாம் கருதி வந்துள்ளோம். மகன் இல்லாமல், குடும்பத்தில் மகள் ஒரு பொருட்டாகக் கருதப்படுவதில்லை. மகன்தான், ஒரு மனிதனை நரகத்திற்குச் செல்லாமல் காப்பாற்றுகிறான். நாம் முஸ்லீம்களைப் போலிருந்தால் நிச்சயமாக அதை ஏற்றுக்கொள்வோம். ஆனால் அது மிகவும் சிரமமானதாகும். திருமதி ரேணுகா ரே குறுக்கிட்டதானது, என்னுடைய வாதத்திற்கு வலு சேர்க்கவே செய்கிறது - அதாவது மக்களின் கண்ணோட்டங்களையும் அவர்களது மனப்பாங்கையும் பொறுத்த மட்டிலும், இத்தகைய ஒரு புத்தமைவானது அழிவையே ஏற்படுத்தும். இது என்னுடைய தாழ்மையான கருத்தாகும். இதில் ரேணுகா ரே, என்னை ஆதரிக்கவே செய்கிறார்.

திரு. கிருஷ்ணசாமி பாரதி: அவர் நாட்டின் எந்தப் பகுதியிலிருந்து வருகிறார் என்பது எனக்குத் தெரியாது ஆனால் பஞ்சாபில் உள்ள வழக்கம் அவருக்குத் தெரியாது என்று தோன்றுகிறது. வேறு

எந்த மாகாணத்திலும் நிலைமைகள் இது போன்று இல்லை, எதனால் இந்த நிலைமைகள் ஏற்பட்டுள்ளன? ஆயிரக்கணக்கான ஆண்டு களாக, குடும்பம் பற்றிய நமது கொள்கையும், நமது தத்துவமும், நமது கண்ணோட்டமும் திட்டவட்டமாக பஞ்சாபில் உள்ளதைப் போன்று இருந்துவந்துள்ளதே இதற்குக் காரணமாகும். மருமகன்கள் முற்றும் மோசமானவர்கள் அல்ல மகன்களும் அதேபோன்று மோச மானவர்கள் அல்ல.

திரு. மஹாவீர் தியாகி (உ.பி.: பொது) : மைத்துனர்தான் முக்கிய மானவர்.

பண்டிட் தாகூர்தாஸ் பர்கவா : ஒரு பழமொழி பின்வருமாறு இருக்கிறது:

(உருது பழமொழியின் மொழிபெயர்ப்பு).

(பூசலின் காரணங்கள் பின்வருமாறு:

1) கிராமத்தின் கழிவுகள் கொட்டப்படுவதற்குள்ள இடத்தில் வீடுகட்டுதல்; (2) கிராமத்திற்குப் பொதுவாக உள்ள இடத்திற்கு அருகில் ஒரு வயல்; மற்றும் (3) கிராமத்தில் மருமகன் வசிப்பிடம்)

மற்றொரு பழமொழி :

(உருது பழமொழியின் மொழிபெயர்ப்பு)

(எமன், மருமகன், தாய்வழி மருமகன், சௌக்கிதார் மற்றும் பொற்கொல்லர் ஆகியவர்களை நம்ப முடியாது. நீங்கள் விரும்பினால் முயன்று பாருங்கள்).

இதுதான் உண்மை. எந்த நபரையாவது பஞ்சாபுக்குப் போகச் சொல்ல, அங்கு சீக்கியர்களையும், ஜாட்களையும் கண்டறியச் சொல் லுங்கள்.

இந்த மசோதாவைப் பொறுத்தமட்டிலும், இது அறிமுகம் செய்து வைக்கப்பட்டபோது, அதனுடைய நோக்கங்கள் மற்றும் காரணங்கள் பகுதியில் கீழ்வரும் வாசகம் இருந்தது எனக்கு நினை விருக்கிறது:

> "இந்த மசோதா, இந்து சட்டத்தின் எல்லாப் பிரிவுகளிலும், எல்லா மாகாணங்களுக்கும், எல்லாப் பகுதிகளுக்கும் ஒரு சீரான தன்மையை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இந்து சட்டத்தின் பழைய சிக்கலான, இடரான, மற்றும் வெவ்வேறான ஷரத்துகளும் எளிதாக்கப்பட்டிருக்கின்றன. இந்த மசோதாவின் பெரும்பாலான ஷரத்துகள் அனுசரித்துப் போகிற அல்லது உதவுகின்ற தன்மையுடையவை; சமுதாயத்தின் வைதீகமான பகுதியின்மீது எத்தகைய கட்டாயத்தையும் அல்லது கடப்பாட்டையும் திணிப்பதில்லை. அதனுடைய ஒரே பயன், இந்துக்களின் ஆண்களும் பெண்களும் அவர்கள் விரும்பும், வாழ்க்கையை வாழ்வதற்கான சுதந்திரம் பழைய வழிகளைக் கடைப்பிடிக்க விரும்புபவர்களின் இதுபோன்ற சுதந்திரத்திற்கு எவ்வகையிலும் பாதிப்பு ஏற்படாமல் வழங்கப்படும்."

ஐயா இப்பொழுது, இந்த உணர்வில்தான் டாக்டர் அம்பேத்கர் நேற்றுப் பேசினார். இரு பகுதிகளும் - அறிவொளி பெற்றவர்களையும், அறிவொளி பெறாதவர்களையும் அனுசரித்துப் போகவேண்டும் என்று நாம் விரும்புகிறோம். அவரிடம் நான் தாழ்மையாக சமர்ப்பித்துக்கொள்வது என்னவென்றால், அதைப் பொறுத்த மட்டிலும் அவர் கூறுவது சரியானதே; ஆனால் சமூக வாழ்க்கைப் பாதையில் அறிவொளி பெற்றவர்களாகவோ, அல்லது அறிவொளி பெறாதவர்களாகவோ இருந்தாலும் சரி - அத்தகைய எளிய மக்களுக்கு இந்த மசோதாவில் நீங்கள் சரியான ஷரத்துகளை வழங்கவில்லை. 'இந்த பூமியில் அவர்களும் வாழ்வதற்கு தயவுசெய்து அனுமதியுங்கள்' என்று பணிவன்புடன் டாக்டர் அம்பேத்கரை வேண்டிக் கொள்கிறேன்.

ஐயா, தற்பொழுது, இந்த மசோதாவை சட்டப் புத்தகத்தில் ஏற்றுவதன் நோக்கமே, முற்போக்கானவற்றுக்கு இடமளிப்பதற்கு உதவும் சில அம்சங்கள் அதில் இருப்பதால்தான். மேலும், அது பழக்க வழக்கங்களை அங்கீகரிக்கிறது. நிலையாக இருந்துவரும் உரிமைகளும் சட்டத்தின் ஷரத்துகளும் ஈவிரக்கமற்ற முறையில் மாற்றப்பட வேண்டுமென்று ஒருபோதும் கருதப்படவில்லை. அவ்வாறு செய்தால், சமுதாயம் முழுவதிலும் அது பகை உணர்வை ஏற்படுத்திவிடும். நமது அனைத்துப் பழக்கவழக்கங்களும் நமது அனைத்துப் பேணி வளர்க்கப்பட்ட அமைப்புகளும் இந்த மசோதாவினால் நசுக்கப்பட்டு வருகின்றன.

பிற ஷரத்துக்களைப் பற்றிப் பேசும்பொழுது, வாரிசுரிமையைப் பொறுத்தமட்டிலும், நிலைமை இன்னும் கூடுதல் வியப்பேற்படுத்தக் கூடியதாக இருக்கும்.

ஐயா, இப்பொழுது, மிதாக்ஷராவைப் பொறுத்தமட்டிலும், இரத்த உறவுதான் அடிப்படை என்பதை நாம் அறிவோம். தயாபாக்ய சட்டத்தைப் பொறுத்தமட்டிலும், மத சம்பிரதாயம் தான் வாரிசுரிமைக்கு அடிப்படையாகும். வாரிசுரிமைக்கு மற்றொரு அடிப்படையை டாக்டர் அம்பேத்கர், தயை கூர்ந்து நமக்கு அளித் திருக்கிறார். அவர் செய்வது தவறென்று கூறமாட்டேன். அவர் சரியான காரியத்தையே செய்கிறார். இயற்கையான அன்பையும் நேசத்தையும் எடைபோடும் அளவுமானி என்ன என்று எனக்குத் தெரியவில்லை, அன்பையும் நேசத்தையும் கூட ஒருவேளை புரிந்து கொள்ள முடியும். இயற்கையான அன்பு என்ன என்பது எனக்குத் தெரியாது. எங்களுடைய (நம்முடைய) கருத்தமைப்புகளின்படி, சகோதரர் நமக்கு மிகவும் நேசத்திற்குரியவர் நம்முடைய புனித மான ராமாயணத்தில் லட்சுமணனிடம் சகோதரத்துவம் ஆழமாகப் பொதிந்துள்ளது. 'தந்தையுடன் பிறந்த சகோதரர்கள், பெற்றோர் களைப் போன்றே நமக்கு மிகவும் நேசத்திற்குரியவர்கள். ஆனால் இந்து சட்டத்தொகுப்பில் சகோதரர்கள் மற்றும் தந்தையின் சகோ தரர்களின் நிலை என்ன? அந்த நிலை எவ்வாறு பாதிக்கப்பட்டுள் ளது, அவர்கள் எப்படி ஒதுக்கப்பட்டிருக்கிறார்கள், வாரிசுகளின் பட்டியலில் அவர்கள் எந்த நிலையில் வைக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை உங்களுக்கு நான் சொல்லுவதெனில், நீங்கள் வியப்பில் ஆழ்ந்து போவீர்கள். மரபுரிமை சம்பந்தமாக ஓர் இந்துவுக்குப் பொருந்தச் செய்யப்பட்டுள்ள ஏழாவது அட்டவணையை நீங்கள் தயவுசெய்து பார்த்தால், முதல் ஷரத்தில் ஏழுவகைப்பட்ட மக்கள் அடங்கியிருப்பதை நீங்கள் காண்பீர்கள்.

ஐயா, இயற்கையான அன்பும் நேசமும் என்ற இந்தப் புதிய கோட்பாடு, இந்த ஷரத்தினால் எவ்வாறு பாதிக்கப்படுகிறது என்பதை நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். முதலாவதாக, மகன்; விதவைத் தாய்; மகள்; இதை நான் நன்கு புரிந்துகொள்ள முடியும். பின்னர், 'முன்பே இறந்துபோன மகனின் மகன்'; இதைக்கூட நான் அனுமதிக்கிறேன். பின்பு வருவது, 'முன்பே இறந்து போன மகனின் மனைவி (விதவை). ஐயா, இயல்பான அன்பு மற்றும் நேசம் சம்பந்தப்பட்ட சட்டத்தின்கீழ் மகள், மகன் அல்லது தந்தையின் சகோதரருக்கு பதிலாக அவருக்கு (விதவைக்கு) முன்னுரிமை கொடுக்கப்படுகிறது என்பதை என்னால் புரிந்துகொள்ள முடிய வில்லை. இயல்பான அன்பு என்ற பிரச்சினையைப் பொறுத்த மட்டிலும், முன்பே இறந்து போன மகனின் விதவை. அல்லது

முன்பே இறந்துபோன ஒரு மகனின், முன்பே இறந்துபோன மகளின் மகன் ஏற்றுக்கொள்ளப்பட முடியும் என்று நான் கருதவில்லை. அவர்களுக்கு வகை செய்தால் இந்த மசோதா ஒரு தவறான கருத்து நிலையை அடிப்படையாகக் கொண்டுள்ளது என்பது என்னுடைய அபிப்பிராயம். பெண்களுக்கு வேறு எங்கும் வகை செய்யப்படா விட்டால், அவர்களுக்கு வகை செய்வதற்குத்தான் இந்த மசோதா என்றால், என்னால் புரிந்துகொள்ள முடியும். அவர்கள் விரும்பியது ஒரு விதவையை அல்ல, மாறாக, முன்பே இறந்துபோன ஒரு மகனின் மனைவி, அல்லது மகனின் மனைவி என்றால், நான் அதைப் புரிந்துகொள்ள முடியும்.

மாண்புமிகு டாக்டர் பி.ஆர். அம்பேத்கர்: இது சட்டத்தின் படியேயாகும். என்னுடைய மதிப்புக்குரிய நண்பர், 1937ம் வரு டத்திய பெண்கள் சொத்துரிமைச் சட்டத்தைப் படித்தால், இந்த நபர்கள் ஏககாலத்தில் அந்தப் பிரிவில் வைக்கப்பட்டுள்ளார்கள் என்பதை அவர் புரிந்து கொள்வார்.

பண்டிட் தாகூர்தாஸ் பர்கவா : டாக்டர் அம்பேத்கரின் நண்பர் இதை மிகவும் நன்றாகவே அறிவார். ஆனால் 1937ம் வருட சட்டத்தில் அந்த ஷரத்து சேர்க்கப்பட்டபோது, அதில் 'மகள்' சேர்க்கப் படவில்லை.

மாண்புமிகு டாக்டர் பி.ஆர். அம்பேத்கர்: ஆம், நான் அவ்வாறுதான் கூறினேன்.

பண்டிட் தாகூர்தாஸ் பர்கவா : மகள் தகப்பனாருக்கும், மாமனாருக்கும் கூட வாரிசாக வருவதற்கு வகை செய்வதற்கு நீங்கள் இதை சேர்க்கவிரும்புகிறீர்கள். இது முற்றிலும் நியாயமற்றதாகும். ஒரு புதிய சட்டத்தொகுப்பை நீங்கள் உருவாக்கும்போது, இதற்கு நீங்கள் ஏன் வகை செய்யவில்லை என்பதை என்னால் அறிய முடியவில்லை. நீங்கள் உருவாக்கும் சட்டங்களில் எல்லா உரிமைக் கோரிக்கைகளும் திருப்திகரமாகப் பூர்த்தி செய்யப்பட்டிருக்க வேண்டும். 1937ம் வருட சட்டம் இருந்துவந்தபோது, இந்த ஷரத்து களை நீங்கள் எவ்வாறு உருவாக்கினீர்கள்? இந்தக் குழு இதைச் செய்தது நியாயமானதென்று நான் கருதவில்லை. ஒவ்வொரு உரிமைக் கோரிக்கையையும் திருப்தி செய்யும்வகையில் அவர்கள் ஒரு முழு சட்டத் தொகுப்பை வழங்கியிருக்க வேண்டும். அவ்வாறு இல்லாததை நீங்கள் நியாயப்படுத்த முடியாது. எனவே அந்த

சட்டத்தின் கீழ் நீங்கள் பாதுகாப்பைத் தேடிக்கொண்டீர்கள். ஐயா, அதுதான் நிலை.

மூல மசோதாவின் 2வது ஷரத்தைப் பார்க்கும்போது, 'தாய்' மேம்பட்ட வாரிசாகக் கருதப்பட்டார், ஏனெனில் 'தாய்' ஒரு தனி ரகமானவர், தாய் மட்டுமே வாரிசானார். இங்கு இயல்பான அன்பை நான் புரிந்து கொள்ள முடியும். இப்பொழுது தந்தையும் தாயுடன் சேர்த்துவைக்கப்பட்டுள்ளதால், அவர்கள் ஒன்றாக வருகிறார்கள். ஆனால் நீங்கள் மேற்கொண்டு முன் சென்றால், நான் வலியுறுத்து வதை நீங்கள் நன்கு புரிந்துகொள்வீர்கள். இரண்டாவது அம்சத் திற்கு வரும்போது, மகனின் மகளையும் மகளின் மகளையும் பார்க் கிறீர்கள். **மிதாக்ஷரா** சட்டத்தில் மகனின் மகளுக்கு சிறப்பிடம் உண்டு. **மிதாக்ஷரா**வின்படி, அவர் விருப்பமான வாரிசுகளில் ஒருவ ராவார். ஐயா, இப்பொழுது என்ன ஏற்படுகிறதெனில், மூலமசோதா வில், முதலாவது பிரிவில், மகளின் மகன் தாய்க்கும் தந்தைக்கும் முன்னதாக வைக்கப்பட்டார். இப்பொழுது, மகளின் மகன் அடி மட்டத்திற்குத் தள்ளப்பட்டு விட்டார். நீங்கள் மேற்கொண்டு முன் சென்றால், ஐயா, 4வது பிரிவில் சகோதரனும் சகோதரியும் வருகிறார் கள். ஐந்தாவது பிரிவில் சகோதரரனின் மகன், சகோதரியின் மகன், சகோதரரின் மகள் - எல்லோரும் வருகிறார்கள். சகோதரரின் மகன், சகோதரியின் மகனுக்கும் சகோதரியின் மகளுக்கும் சமமாக்கப்பட் டிருக்கிறார்கள் என்றுதான் கூறமுடியும். இந்த, சமத்துவம் பைத்தியக் காரத்தனமாக முன்னெடுத்துச் செல்லப்பட்டிருக்கிறது என்றுதான் கூறவேண்டும். நம்முடைய குடும்பங்களில் ஒரு சகோதரர் யார், சகோதரரின் மகன் யார் என்பதை நாம் அறிவோம். இது ஓர் அமைப் பின், அல்லது குடும்பம் என்ற நிறுவனத்தின் விளைவு ஆகும். இதை நாம் கடந்த 1000 ஆண்டுகளாகப் பார்த்துவருகிறோம். இந்தத் தீவிரமான மோதலில் இருந்து நாம் விலகிச் செல்ல முடியாது. ஒவ்வொரு நபரும் உங்களுக்கு எதிராகக் கலகத்தில் இறங்கச் செய்யும் வகையில் இந்த மசோதாவில் நீங்கள் ஷரத்துகளை ஏற்படுத்தியிருக் கிறீர்கள். ஏனெனில் இந்தப் புதுமைகளை நடைமுறையில் உத்தரவு போட்டு அமலுக்குக் கொண்டுவர முடியாது. இந்த மசோதாவின் ஷரத்துகளின்படி ஒவ்வொரு இந்துவும் - ஆணும் பெண்ணும், ஓர் உயில் எழுதுவதற்கு முழு உரிமை பெற்றவர்கள், வருங்காலத்தில் ஒவ்வொரு ஆணும் பெண்ணும் இந்த மரபுரிமையின் முழு எஜமானர் களாவர். நீங்கள் என்னுடைய கையில் பெண்களுக்கு பாதகமான ஓர் அதிகாரத்தைக் கொடுத்திருக்கிறீர்கள். அது பெண்களின் நலனுக்கு பாதகமான முறையில் உபயோகப்படுத்துவதை நான் விரும்பவில்லை.

பார்க்கப்போனால், ஒரு தந்தை, மரணமடையும்போது மகன்களின் அதிகாரத்தின்கீழ் இருப்பார்கள். மேலும், உயிலின் மூலம் தந்தை மகள்களுக்கு மரபுரிமை அளிக்காமலிருக்க மகன்கள் பார்த்துக் கொள் வார்கள். நான் இதைக் கூறும்போது, எனக்கு ஒரு மகள் இருக்கிறாள் என்பதையும், என்னுடைய மகன்களுக்கு நான் சொத்தில் பங்குக்கு வகை செய்யும்போதே மகளுக்கும் வகை செய்திருக்கிறேன் என்பதை யும் தெரிவித்துக் கொள்வதற்கு விரும்புகிறேன். என்னுடைய மகன் களுடன் நான் வசித்துவரும் வீட்டிலும், என்னுடைய மகன்களின் மனைவிமார்கள் வசித்துவரும் வீட்டிலும் மகளும் அவளுடைய கணவரும், அவளுடைய மாமனாரும், மாமியாரும், அவளுடைய மூத்த மைத்துனரும் வந்து, சில அறைகளில் தங்கிக்கொள்வதை நான் விரும்பவில்லை. அது ஒரு அசாத்தியமான நிலைமையாகும்.

திரு. துணை சபாநாயகர் : இந்த மசோதாவின் கீழ் மாமனாரும் மாமியாரும் பாதுகாக்கப்படுவதற்கு அதிக வாய்ப்பில்லை.

பண்டிட் தாகூர்தாஸ் பர்கவா : அவர்கள் மருமகனுடன் சேர்ந்து வரமுடியும். இதுபோன்ற ஒரு விஷயம் நடைபெறுவதற்கு நிறைய வாய்ப்பு இருக்கிறது என்பதைக் காட்டுகிறேன். மகளின் வீட்டில் தண்ணீரைக் கூடத் தொடுவதற்கு விரும்பாத தகப்பனார் மகளினுடைய, மற்றும் அவளுடைய கணவனுடைய சொத்தைப் பெறுவார். அது குறித்து பின்னர் கூறுகிறேன்.

இந்த முறையில் பெண்கள் தமது உரிமைகளை இழக்கின்ற பெரும் அபாயம் இருக்கிறது என்று மட்டுமே கூறிக்கொள்ள விரும்பு கிறேன். தகப்பனார் மரபுரிமையாக வரும் மகளின் உரிமையைப் பறிக்கிறார். பிரிவு I-ன் படி அவள் வாரிசு அல்ல. அவள், மகனுடைய மனைவி என்ற வகையில் மாமனாரின் சொத்துக்கு வாரிசு ஆவ தில்லை; ஆனால், அவள் ஒரு விதவை என்ற வகையில் மட்டுமே வாரிசு ஆகிறாள். அப்பொழுது அவளுடைய நிலை என்ன? என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. அவளுக்கு ஒரு பெரிய இழப்பு ஏற்படும். ஐயா, பெண்களுக்கு அவர்களுடைய முழு உரிமைகள் கிடைக்கவேண்டுமென்று விரும்புகிறேன். நான் முன்வைக்கும் கொள்கையை - அது குறித்து நான் அதிக சிந்தனை செலுத்தவில்லை - அதை அவை முழுமையின், மற்றும் டாக்டர் அம்பேத்கரின் ஆலோ சனைக்கு சமர்ப்பிக்கிறேன். இது மற்றவர்களின் நலன்களை எவ்வாறு பாதிக்கும் என்று எனக்குத் தெரியவில்லை - இதில் குறைபாடுகள்

இருக்கக்கூடும், அதைப் பற்றி நான் உத்தரவாதம் கூறமுடியாது - அதே சமயத்தில், தற்போதுள்ள ஏற்பாட்டை விட அது ஒரு மேம்பட்ட ஏற்பாடாக இருக்கும் என்று கருதுகிறேன். திருமணமாகாத மகள், மகனுடன் கூடவே, ஏக காலத்தில் சம அளவில் வாரிசாகிறாள் என்பதுதான் கோட்பாடு ஆகும். பெண், திருமணத்திற்குப் பின்னால், கணவனின் சொத்தில் கூட்டு உடைமையாளராகிறார், அவளுடைய சொத்தில் கணவன் கூட்டு உடைமையாளராவதைப் போன்றே அப்பொழுது இருவரும் கணவனின் குடும்பத்தில் வாரிசுகளாகின் றனர்.

ஐயா, அப்பொழுது, சகோதரனின் மகனின் நிலை என்ன வாகும்? சகோதரியின் மகனுடைய நிலை என்னவாகும்? அவர்கள் இருவரும் ஒரே அந்தஸ்தில் உள்ளனர். சகோதரனின் மகன் ஒருவேளை, அதே வீட்டில், அல்லது அடுத்த வீட்டில் வசிப்பவராக இருந்து அன்றாடம் சேவை புரிந்து வருவார்; சகோதரியின் மகள் அலகாபாத் தில் அல்லது சென்னையில், அல்லது வேறு எங்காவது வசிப்பவராக இருக்கக்கூடும். அவர்கள் எவ்வாறு சம அந்தஸ்தில் உள்ளவர்களாக இருக்க முடியும்? பிற ஷரத்துகளைப் பற்றியும் கருத்துக் கூற வேண்டு மென்று அவை விரும்பினால், நான் முற்றிலும் தயாராக இருக் கிறேன். மாற்றங்களைப் பற்றியும், அவை எவ்வாறு நம்மை பாதிக் கின்றன என்பது பற்றியும் என்னிடம் முழுமையான குறிப்புகள் இருக்கின்றன. ஆனால் அவற்றைப் பற்றி பேச முற்பட்டால், இதர உறுப்பினர்கள் பேசுவதற்கான வாய்ப்பைப் பறிக்கும் முறையில் இந்த அவையின் நேரத்தை எடுத்துக் கொண்டு விடுவேன்.

மதிப்புக்குரிய உறுப்பினர்கள் : நீங்கள் தொடர்ந்து பேசலாம்.

பண்டிட் தாகூர்தாஸ் பர்கவா: பிரிவு (2)ல் இந்த ஷரத்து, இரத்த உறவு கண்ணோட்டத்திலிருந்தோ அல்லது மத சம்பிரதாய அடிப்படையிலிருந்தோ, அல்லது, இயல்பான நேசம் மற்றும் அன்புக் கண்ணோட்டத்திலிருந்தோ கூட, நன்கு ஆதாரப்பட்டதல்ல என்பதைக் காட்டும் பல கருத்தோட்டங்கள் இருக்கின்றன.

அடுத்து, பெண்ணின் வாரிசுரிமைப் பிரச்சினைக்கு வருகிறேன். இந்து சட்டத்தொகுப்பு அமலுக்கு வந்ததற்குப் பின்னர், பெண், தகப்பனாரின் சொத்துக்கும் கணவனின் சொத்துக்கும் வாரிசு ஆகிறார். உதாரணத்திற்கு, அந்தப் பெண் கணவனையும் குழந்தைகளை யும் விட்டுவிட்டு மரணமடைகிறார் என்று வைத்துக்கொள்வோம்.

அப்பொழுது கணவனுக்கு உரிமை வழங்கப்படுகிறது. பின்னர் குழந்தைகளும் வாரிசாகிறார்கள். அதுவரையிலும் நல்லதுதான். பின்னர், கணவனும் குழந்தைகளும் இல்லாதபோது, யார் வாரிசு ஆகிறார்கள்? அந்தப் பெண்ணின் தந்தையும் தாயும்தான். இவர்கள் - இவர்களைப் போன்று லட்சக்கணக்கானவர்கள் இருக்கிறார்கள் - மகளின் வீட்டிலிருந்து தண்ணீரைக் கூடத் தொடுவதற்கு விரும்பாத வர்கள் - இவர்கள்தான் அந்த சொத்தைப் பெறுவார்கள். (**திரு. எல். கிஷர்ணசாமி பாரதி:** "ஏன்?") இதை உங்களால் புரிந்துகொள்ள முடியாது. இதுதான் எனக்குச் சிரமமானது. இதை உங்களால் உணர முடியாது. ஐயா, தந்தை, மகளை மருமகனிடம் ஒப்படைத்தவுடனே, தந்தை, அதற்கப்புறம் ஒருபோதும் மகளின் வீட்டுக்குப் போக மாட்டார். அவளுடைய வீட்டில் உணவருந்த மாட்டார், அவளுடைய வீட்டில் தண்ணீர்கூடக் குடிக்கமாட்டார், இவ்வாறு, தூய்மை பரா மரிக்கப்படுகிறது, அதாவது எந்தப் பெண்ணும், எந்தப் பொரு ளாயத ஆதாயத்திற்காகவும் திருமணம் செய்துகொடுக்கப்படுவ தில்லை என்ற நோக்கம் நிலைநிறுத்தப்படுகிறது. அதுதான் அடிப் படை. மகள் திருமணம் செய்து கொடுக்கப்பட்டுள்ள கிராமத்திற்குக் கூட பலர் போகமாட்டார்கள். உண்மைகளை உள்ளவாறே நாம் அங்கீகரிக்கவேண்டும். அவர்களுக்கு அது தெரியாது என்று கூறுவது பயனற்றது. அவர்களுக்கு அது தெரியாமலிருப்பது சாத்தியமே. பெண் ணினால் வைத்துவிட்டுப்போன சொத்து மாமனாருக்குப் போய்ச் சேருவது ஏற்படவே செய்யும். அது ஒரு சகித்துக்கொள்ள முடியாத நிலைமையேயாகும். ஒரு பெண் கணவனோ, குழந்தைகளோ இல்லாமல், தந்தையும் தாயும் கூட இல்லாமல் இறந்து போனால், என்ன ஏற்படும்? இது ஒரு முக்கியமான அம்சமாகும். அந்தப் பெண் தன் தகப்பனாரிடமிருந்து சொத்தை வாரிசுரிமையாகப் பெறுகிறார். கணவன், குழந்தைகள், தகப்பனார், அல்லது தாயார் இல்லாத நிலை யில் அந்தச் சொத்து அவளுடைய தந்தையின் மகனுக்குப் போய்ச் சேராது. நிலைமையைத் தெளிவாக விளக்குகிறேன். சொத்து 'ஏ'வின் குடும்பத்துக்குச் சேர்ந்ததாகும். அந்தச் சொத்து 'ஏ'வின் குடும்பத் திற்கு, பெண்ணின் சகோதரனுக்கு, ரத்த உறவுடைய சொந்த சகோ தரனுக்கு போய்ச் சேராது; ஆனால், அந்த சொத்து, இங்கு நீங்கள் கொடுத்துள்ள பட்டியலிலுள்ள கணவனின் குடும்பத்தைச் சேர்ந்த நூற்றுக்கணக்கானவர்களுக்குப் போய்ச்சேரும். அந்தப் பெண் மரண மடைந்து விட்டதாலும், கணவன், குழந்தைகள், தகப்பனார், தாயார் யாருமே இல்லாத நிலையில் அந்தச் சொத்து அவளுடைய சகோதரர் அல்லது சகோதரனின் மகன், அல்லது மற்றவர்களுக்குப் போய்ச் சேராது, மாறாக, அது கணவனின் குடும்பத்திற்குப் போய்ச் சேரும்.

அது ஏன் அவ்வாறு சேர வேண்டும்? ஏனெனில், உங்களுடைய பொறுக்குக் குழு, நீண்டகாலமாக சமூகம் முழுவதன் மீதும் செல்வாக்குச் செலுத்திவரும் நோக்கங்களிலிருந்து தங்களை விடுவித்துக்கொள்ள இயலவில்லை. (**திரு. எல். கிருஷ்ணசாமி பாரதி:** ''இப்பொழுதுள்ள நிலைமை என்ன?'') அது பற்றி நமக்கு கவலையில்லை. தற்போதைய நிலை உங்களுக்கே நன்றாகத் தெரியும். அது சீதனம்; மகளால் அது வாரிசுரிமையாகப் பெறப்படுவதில்லை. நிலைமை வேறுபட்டது. ஒரு குடும்பத்தின் சொத்து, அந்தப் பெண்ணின் சகோதரனுக்கு வாரிசுரிமையாகக் கிடைப்பதில்லை, மாறாக, அது வேறு நபர்களுக்குப் போய்ச் சேருகிறது. இந்த நிலைமையை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. ஆனால் இதுதான் நிலைமை என்பதை நீங்கள் உணரவேண்டும். இதற்கு நீங்கள் நிவாரணம் காணலாம், இதற்கு நிவாரணம் காண வேண்டுமென்று உங்களை இறைஞ்சிக் கேட்டுக்கொள்கிறேன். இந்தப் பிரச்சினையை நீங்கள் மறுபரிசீலனை செய்ய வேண்டியது அவசியமாகும். இது உங்களுடைய பரிசீலனைக்கு நான் முன்வைக்கும் பிரச்சினைகளில் ஒன்று ஆகும். வாரிசுரிமைப் பிரச்சினை பற்றி இத்துடன் நிறுத்திக் கொள்கிறேன். உங்களுக்கு முன்னால் வைக்கப்படவேண்டிய வேறு பல ஆலோசனைகளும் உள்ளன.

இனி, பைசல் செய்யும் அதிகாரம் சம்பந்தமாக பேச வருகிறேன். பெண்களில் சொத்து சம்பந்தமாக, எல்லைக்குட்பட்ட உரிமைகள் இருக்கும் நிலைமையில் மிகுந்த இடர்ப்பாடுகள் இருப்பதை நான் புரிந்துகொள்கிறேன். கூட்டுக் குடும்பத்தைப் பொறுத்த மட்டிலும், அது இந்த மசோதாவின் கீழ் நசுக்கப்படுவதற்கு முயற்சி செய்யப்படுகிறது. கூட்டுக் குடும்பம் சிதைந்து வருகிறது. அது நொறுங்கி வருகிறது. நீண்ட காலத்திற்கு முன்பிருந்தே, சில சூழ்நிலைகள் இந்து கூட்டுக் குடும்பத்தின் விதியை நிர்ணயித்து, அது நீடித்திருக்க முடியாமல் செய்துள்ளன. ஐயா, அது மறைந்துவருவது குறித்து நான் கண்ணீர் சிந்துவதற்கு விரும்பவில்லை. இந்த இந்து கூட்டுக் குடும்பத்தைக் கொல்வதில் வருமான வரிச் சட்டம்தான் மிகப்பெரிய எமனாக வந்துள்ளது. இந்து கூட்டுக் குடும்பம் நீண்ட காலம் இருக்க முடியாது என்பதை நான் அறிவேன். ஆனால் இந்த மசோதாவைப் பொறுத்தமட்டிலும், வருங்காலத்தில் அவர்கள் பொதுவாக வாடகைக்கு குடியிருப்பவர்களாக இருப்பார்கள் என்று அது கூறினால், எனக்கு எந்தவிதமான ஆட்சேபனையுமில்லை. மற்றைய மசோதாவில் இது கொடுக்கப்பட்டிருந்தது, இந்த மசோதாவிலும் இது கொடுக்கப்பட்டுள்ளது. நான் ஓர் எதார்த்தவாதி. எனவே,

என்னுடைய புனிதமான, பண்டையக் கூட்டு இந்துக் குடும்பம் மறைந்து போகிறதே என்று ஓலமிட மாட்டேன். அந்தக் காலத்தில் கூட்டுக் குடும்பம் மிகவும் பயனுள்ளதாக இருந்தது. இப்பொழுது நாம் கூட்டுறவு விவசாயம், சொத்துக்களை கூட்டுறவு முறையில் உடைமையாகக் கொள்வது முதலியவற்றுக்குத் திரும்பி வந்து கொண்டிருக்கிறோம். அதே சமயத்தில், நாம் சமூக இன்ஷூரன்ஸ் முதலியவற்றையும் வழங்கி வருகிறோம். பழைய இந்துக் கூட்டுக் குடும்பம்செயல்பட்டு வந்த கோட்பாடுகளுக்கே நாம் திரும்பிச் செல்லும் வகையில் இவற்றையெல்லாம் நாம் செய்துவருகிறோம், அது இன்றைய விவாதத்திற்கு அப்பாற்பட்ட விஷயமாகும். சட்டத்தைப் பொறுத்த மட்டிலும், நாட்டின் பொதுவான சூழ் நிலைமைகளைப் பொறுத்தமட்டிலும், கூட்டுக் குடும்பத்தையும் பொறுத்தமட்டிலும்........ இவ்வாறு கூறமுடியும் என்று நான் நினைக்க வில்லை.

மாண்புமிகு திரு. ஜகஜீவன்ராம் (தொழிலாளர் நலத்துறை அமைச்சர்): அது ஓர் இழக்கப்பட்ட இலட்சியமாகும்.

பண்டிட் தாகூர்தாஸ் பர்கவா: ஐயா, நீங்கள் என்ன கூறிய போதிலும், இங்கு இலட்சியம் என்ற பேச்சுக்கே இடமில்லை. சட்டம் இந்து கூட்டுக் குடும்பத்தைக் கொல்ல வேண்டும் என்ற கருத்தை நான் விரும்பவில்லை.

திருமணத்தைப் பொறுத்தமட்டிலும், ஐயா, நான் மேலும் சில கருத்துக்களைக் கூறியாக வேண்டும். இது மிகவும் சிரமமான விஷயம்.

மதிப்புக்குரிய ஓர் உறுப்பினர்: அது முன்பு விவாதிக்கப் பட்டுள்ளது.

பண்டிட் தாகூர்தாஸ் பர்கவா: நான் முன்பு சில ஆலோ சனைகளை வைத்திருக்கிறேன்.

மதிப்புக்குரிய ஓர் உறுப்பினர்: இது இரண்டாவது திருமணம்.

பண்டிட் தாகூர்தாஸ் பர்கவா : ..... எனக்கு நல்ல ஆதரவாளர் கள் இருப்பதைப் பார்க்கிறேன்.

மாண்புமிகு திரு. ஜகஜீவன்ராம்: நீங்கள் சட்ட அமைச்சருடன் கூடவே இருக்கிறீர்கள்.

பண்டிட் தாகூர்தாஸ் பர்கவா : திருமதி அம்மு சுவாமிநாதன். திரு. சிவராவ் மற்றும் திருமதி ரேணுகா ரே பின்வருமாறு எழுதி னார்கள்:

"இந்து திருமண வடிவங்கள் பற்றிய சட்டத்தொகுப்பின் IIம் பாகத்தின் 6வது ஷரத்து சம்பந்தமாக நாங்கள் இதைச் சுட்டிக்காட்ட வேண்டியுள்ளது: அதாவது, நாட்டின் சில பாகங்களில் நீண்ட காலமாக இருந்துவரும் மரபுகள் அல்லது வழக்கங்கள் செல்லத்தக்க திருமணங்கள் என்று அங்கீகரிக்கின்றன. அவை இந்த பாகத்தின் ஷரத்துகளின் கீழ் மதசடங்கு ரீதியான அல்லது சிவில் திருமணங்கள் என்ற இனத்தின் கீழ் வரமாட்டாது எனவே அத்தகைய திருமணங்களை செல்லத்தக்கதாக்குவதற்கு 6-வது பிரிவின் முடிவில் ஒரு ஷரத்தை ஒரு காப்பு வாசகத்தைச் சேர்க்க வேண்டுமென்று ஆலோசனை கூறுகிறோம்."

இது என்ன? திரு. பாரதி இந்தியாவின் எந்த பாகத்திலிருந்து வருகிறாரோ அங்கு இதே மாதிரி சிக்கல் இருக்கிறது என்று நான் புரிந்து கொள்கிறேன்.

திரு. எல். கிருஷ்ணசாமி பாரதி : அதிருஷ்டவசமாக நான் அந்தப் பகுதியிலிருந்து வரவில்லை நான் தமிழ்நாட்டிலிருந்து வரு கிறேன். அவர்கள் மலபாரிலிருந்து வருகின்றனர்.

பண்டிட் தாகூர்தாஸ் பர்கவா : சுவீகாரம் என்ற பிரச்சினை யைப் பொறுத்தமட்டிலும், இந்த ஆட்சேபனை குறிப்பிலும் அது போன்ற ஒரு விஷயத்தைப் பார்க்கிறேன். எனவே இது பஞ்சாபில் மட்டுமல்ல. திருமணம், விவாகரத்து, சுவீகாரம் சம்பந்தப்பட்ட விதிகள் வைதீக விதிகளிலிருந்து வேறுபட்ட விதிகள் உள்ள பிற பாகங்களிலும் அவ்வாறு இருக்கிறது. அவை அனைத்தும் பாதுகாக்கப் படவேண்டும்; ஆட்சேபனைக் குறிப்புகள் எழுதியுள்ள உறுப்பினர் கள் இந்தக் கருத்துக்களைக் கூறியதில் தங்களுடைய தொகுதிகளை மிகவும் நன்றாகவே பிரதிநிதித்துவப்படுத்தியுள்ளனர் என்பதை அறிய மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன்.

மதச் சடங்கு ரீதியான திருமணங்களைப் பற்றி நான் கூறிக் கொண்டிருந்தேன். மதச் சடங்கு ரீதியில்லாத திருமணத்தைப் பொறுத்த மட்டிலும், அது குறித்து ஒரு வார்த்தை கூட நான் கூற வில்லை. அது பாதுகாக்கப்பட வேண்டுமென்று விரும்புகிறேன். மதச் சடங்குரீதியான திருமணங்கள் சம்பந்தமாக, குழு செய்துள்ள குளறுபடி விளக்க இயலாத ஒன்றாகும். சிவில் திருமணத்தை எவ்வாறு இந்த அத்தியாயத்தில் சேர்ப்பது என்பதை என்னால் புரிந்துகொள்ள

முடியவில்லை. அது ஒரு சிவில் திருமணம் என்றால், அது சிவில் சட்டத்திற்குரிய ஒரு விஷயமாகும். 1872ம் ஆண்டு சட்டம் நம்மிடம் உள்ளது. அது மிகவும் குறைபாடு உள்ள ஒரு சட்டமாகும். அதைச் சரிசெய்வதற்கு ஒரு மசோதாவைச் சமர்ப்பித்திருக்கிறேன். மற்ற எல்லா முறைகளிலான திருமணங்களைச் செல்லுபடியாக்குவதற்கான மசோதாவை ஒரு சில தினங்களுக்கு முன்னால் இந்த அவையில் நான் சமர்ப்பித்தேன்; இந்தச் சிவில் சட்டத்தை சேர்த்துக் கொள்வதைக் காட்டிலும் மிகவும் அதிகமாக அது நம்மைப் பாதுகாக்கும். இந்தியா முழுவதற்குமான ஒரு சிவில் சட்டத்தை நான் ஆதரிக்கிறேன். எல்லா வற்றிற்கும் விதிகள் ஒரேமாதிரியாக இருக்க வேண்டும் என்று விரும்புகிறேன். அதைச் செய்வது நமது கடமையாகும். ஆனால் சிவில் திருமணத்தை இதில் ஏன் நாம் சேர்க்கவேண்டும்? அந்தச் சட்டத்தின் தீய விளைவுகளை அகற்றுவதற்கென்றால், அப்பொழுது மற்றையப் பாதை நமக்கு முன் இருக்கிறது. இந்த சிவில் சட்டத்தில் மற்றும் புதிய வகைப்பட்ட திருமணத்தில் என்ன ஏற்படுகிறது? இது மதச் சடங்கு ரீதியிலான திருமணமோ அல்லது சிவில் திருமணமோ அல்ல, மாறாக பதிவு செய்யப்படும் மதரீதியிலான திருமண மாகும்; இதில் மதச் சடங்கு அடிப்படையில் திருமணம் நடைபெற்ற போதிலும், ஆரம்பத்தில் இது, நெருங்கிய உறவினர்களுக்கு இடை யிலான, தடை செய்யப்பட்ட திருமணமாக இருந்தால், நீங்கள், பதிவு செய்யும் ஓர் அதிகாரியிடம் சென்று, அதை செல்லத் தக்கதாக்குவதா?

திருமதி ஜி. துர்க்காபாய் : அது விருப்பத்தின்பால் பட்டது தான்!

பண்டிட் தாகூர்தாஸ் பர்கவா : நான் பதில் கூறிவிட்டேன். அது விருப்பத்தின் பாற்பட்டதாக இருக்கக்கூடும், ஆனால் விஷயம் அத்துடன் முடிந்து விடுகிறதா? திருமணம் நடக்கும் போது ஐந்து நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்படவேண்டுமென்று இந்துச் சட்டத் தொகுப்பு கூறுகிறது, இல்லாவிட்டால் திருமணம் அனுமதிக்கப்பட மாட்டாது. ''மதச் சடங்கு ரீதியிலான திருமணம் சம்பந்தப்பட்ட நிபந்தனைகள்'' என்பதே அந்தச் சொற்களாகும். இதன் பொருள், அடிப்படையான விஷயங்களில், ஒரு ஷரத்து மீறப்பட்டவுடனே, அந்தத் தவறின் விளைவுகளிலிருந்து மீள்வதற்கு, அந்த சட்டம் உங்க ளுக்குப் பாதுகாப்புத் தருவதற்கு அனுமதிக்கிறீர்கள். நெருங்கிய உறவினர்களுக்கு இடையிலான திருமணம் தடைசெய்யப்பட்டிருப் பதைப் பொறுத்தமட்டிலும் இந்தியாவைப் போன்ற ஒரு நாட்டில், நாம் எதிர்பார்க்கிற ஒரு சீரான சட்டத்தை உருவாக்குவது மிகவும் சிரமமானது என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அத்தகைய ஒரே சீரான தன்மையை ஏற்படுத்துவது ஓர் அதிசய மாகும் என்று கூறப்பட்டுள்ளது அந்த அதிசயத்தை ஏற்படுத்திய தற்காக டாக்டர் அம்பேத்கரைப் பாராட்டுகிறேன். டாக்டர் அம்பேத்கர் அந்த அதிசயத்தை நடத்திக் காண்பித்து வருகிறார். இந்த அதிசயம் நடைமுறைப்படுத்தப்படுவதற்கு ஆதரவாக நான் நிற்கிறேன். ஸ்தல விஷயங்களில் சட்டச் சிக்கல்கள் இருக்குமே யானால், அதில், தற்காலத்திலுள்ள நிலைமைக்கும், நாம் ஏற்படுத்த விருக்கும் நிலைமைக்கும் இடையில் உள்ள மோதல், மிகவும் அதிக மானதும், மிகவும் தீவிரமானதுமாகும். இந்த முரண்பாடு தவிர்க்கப் படும் வகையில் விஷயங்களை ஒழுங்குபடுத்தும்படி இந்த அவை யைக் கேட்டுக்கொள்கிறேன்.

ஐயா, பஞ்சாபில் எனது ஊருக்கு அருகில் ஒரே கோத்தி ரத்தைக் கொண்டுள்ள பல கிராமங்கள் இருக்கின்றன, அவர்கள் ஒரு பொதுவான மூதாதையரிலிருந்து வந்ததாக நம்புகின்றனர். அந்த மக்களைப் பொறுத்தவரையில் மரபு வழியை மூன்று அல்லது ஐந்துடன் கட்டுப்படுத்தும் நெருங்கிய உறவினர்களிடையிலான திருமண உறவு முறை போதுமானதல்ல. இது மேலும் விரிவுபடுத்த வேண்டுமென்று கூறுவதற்கு விரும்பவில்லை. அதே சமயத்தில் இது ஏற்றுக் கொள்ளத்தக்கதல்ல, இந்தத் திருமண முறையை அனுமதிக்கும்படி நீங்கள் எங்களைக் கேட்டால் இதனுடன் நாம் ஒரு போதும் ஒத்துப்போக முடியாது. எங்களைப் பொறுத்தமட்டிலும் இது ஒரு அசாத்தியமான நிலைமையாகும். இதை நீங்கள் அனுமதித் தால், பஞ்சாபில் நீண்ட காலமாக இருந்து வந்துள்ள எங்களுடைய சமூக அமைப்பின் ஆளுவோரையே நீங்கள் வெட்டுவதற்கு ஒப்பாகும். இந்தியா முழுமைக்கும் கூட இதுதான் என்னுடைய கருத்தாகும். இந்தியாவின் இதர பகுதிகளுக்காக நான் பேச முடியாதுதான், ஏனெனில் சில கனவான்கள் அது குறித்து கேள்வி மேல் கேள்வி கேட்பார்கள். இந்தியா முழுமையிலும் இதே நிலைமைதான் என்று நான் கருதுகிறேன். எப்படியிருந்தபோதிலும், இது குறித்து நான் வறட்டுப் பிடிவாதமாக இருக்கவில்லை. ஆனால், நாம் சட்டமாக்கப் போவது மிகவும் தவறான ஒரு விதியாகும். அதாவது திருமணம் செய்து கொள்ளும் தம்பதிகள் நெருங்கிய உறவினர்களாக இருக்கக் கூடாது என்ற 7வது விதியின் நிபந்தனைகள், பதிவு செய்யப்படும், மதசடங்கு ரீதியிலான திருமணங்கள் சம்பந்தமாக விலக்களிக்கப் பட வேண்டும். சாரதா சட்டத்தைப் பொறுத்தமட்டிலும், இந்து சட்டத்தின் படியும், நமது கோட்பாடுகளின்படியும் ஒரு திருமணம் நடைபெற்றுவிட்டதற்குப் பின்னர், எப்போதுமே கலைக்கப்பட

முடியாததாகும். இந்த விதியிலிருந்து நாம் ஒரு மாற்றம் செய்கிறோம். சட்டங்கள் மற்றும் மரபுகளின் படியான திருமணத்தைக் குலைப்பதற்கு நாம் வழிவகை செய்து கொண்டிருக்கிறோம். ஏனெனில், விதி 3 நீக்கப்பட்டிருக்கும் நிலைமையில், நீங்கள் ஒரு நபர் மீது குற்றம் சாட்டி, தண்டனை கொடுத்து சிறைக்கு அனுப்பலாம். ஒரு நபர் சரியான வயதை எட்டுவதற்கு முன்னரே திருமணம் செய்து கொண்டால், அபராதம் விதிப்பதற்கு பதிலாக, அவர் சிறைக்கு அனுப்பப்பட வேண்டும் என்று ஒரு மசோதாவை இந்த அவையில் சமர்ப்பித்திருக்கிறேன். அவர் சுதந்திரமாக விடுபடுவதற்கு அனுமதிக்கப்படும் வகையில் தன் விருப்பு அதிகாரம் வழங்கப்படக்கூடாது. நாடு முழுவதும் சாரதா சட்டத்தை எதிர்த்து விதி 3 கடைப்பிடிக்கப்படுமேயானால், திருமணம் தவிர்க்கப்படக் கூடியதாகும் என்று தற்போதைய ஷரத்து காட்டுகிறது. இது கடந்த 20 ஆண்டுகளுக்கு மேலாகவே நாம் ஏற்றுக் கொள்ளாத கோட்பாடுகளுக்கு எதிராகச் செல்வதாகும்.

இந்து சட்டத் தொகுப்பின் பிரதான ஷரத்துகளைப் பொறுத்த மட்டிலும், இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டுவருவதற்காக நான் அவற்றை சுருக்கமாக எடுத்துக் கூறினேன். ஏனெனில், மேலும், இந்த மசோதா முறியடிக்கப்பட மாட்டாது என்றும் கருதினேன். ஷரத்து வாரியான விவாதம் நடைபெறும்போது அதுபற்றி விளக்குகிறேன்.

தொகுத்துக் கூறுவதெனில், இந்த அவையைப் பொருத்தமட்டிலும், இந்த மசோதாவை சுற்றுக்கு விடுவது பொருத்தமாக இருக்கும்; ஏனெனில் அதனால் நாம் எதுவும் இழக்கப் போவதில்லை, உண்மையில் அதனால் நமக்கு நற்பயனே கிடைக்கும். இதனால் பொதுமக்கள் அபிப்பிராயத்தைக் கலந்து ஆலோசித்ததாகவும் இருக்கும். தாங்கள் புறக்கணிக்கப்படவில்லை என்று மக்களும் உணருவார்கள். உண்மையில் பொறுக்குக் குழுவிடமிருந்து வந்த பிறகும் கூட பல திருத்தங்கள் முன்மொழியப்பட்டன. பொறுக்குக் குழுவுக்கு சமர்ப்பிக்கப்படுவதற்கு முன்பும்கூட, சாதாரண மக்களுக்கு இது குறித்து எதுவும் தெரியாது. என்ன சொல்லப்பட்டிருந்தபோதிலும், மக்கள் அதை அறிவார்கள் என்று நிச்சயமாக நம்புகிறேன். இந்த அறிக்கையைத் தயாரித்த இரு நபர்களைப்பற்றி டாக்டர் அம்பேத்கர் நம்மிடம் கூறியிருந்தார். அவர்கள் மிகவும் நல்லவர்கள் என்றும் கூறியிருந்தார். அவர்கள் மிகவும் முன்னேற்றகரமான கருத்துக்களைக் கொண்டவர்கள் என்று கருத முடியாது. உயர்நீதிமன்ற நீதிபதிகளின் மிகப்

பல கருத்துக்கள் என்னிடம் உள்ளன. அன்றாடம் மேலும் மேலும் அபிப்பிராயங்கள் வந்து கொண்டிருக்கின்றன. இவர்கள் அனைவரும் அதற்கு எதிராக உள்ளனர். இந்து சட்டக் குழுவின் அறிக்கையில் அச்சிடப்பட்டுள்ள சான்றுகளிலிருந்து அவற்றை இங்கு வாசித்துக் காட்ட விரும்பவில்லை. உங்களுடைய அனுமதியோடு, இந்த அறிக்கையின் 13-வது பக்கத்தைக் குறிப்பிடவிரும்புகிறேன். அதில் பெண்களுக்கான ஃபதேசந்த் கல்லூரி முதல்வர் குமாரி சுப்ருல்லின் சாட்சியம் அடங்கியுள்ளது. அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

> "திருமணமாகாத மகள், திருமணத்திற்குப் பக்குவமடையாதவள், அல்லது திருமணம் செய்துகொள்ளப் போவதில்லை என்று உறுதிபூண்டிருப்பவள் ஆகியோரும் மகனைப் போன்று அதே பங்கைப் பெற வேண்டும், மற்றும் மகனைப் போன்ற அதே கடப்பாடுகளுக்கு அவளும் உட்படுத்தப்பட வேண்டும். திருமணம் செய்துகொண்ட மகளுக்கு சொத்தில் எந்தப் பங்கும் இருக்கக்கூடாது. திருமணமாகாத மகள் திருமணம் செய்து கொண்டு விட்டால், அவளுடைய பங்கு அவளுடைய சகோதரர்களுக்குப் போய்ச் சேர வேண்டும்."

சாட்சியங்களைப் பதிவு செய்வதற்குக் குழு லாகூரிலிருந்த போது, அறக்கையில் இவ்வாறு கூறப்பட்டது:

> "உண்மையில், பஞ்சாபில் இந்தக் குழுவின் கூட்டத்திற்கு நான் தலைமை வகித்துக் கொண்டிருந்தபோது லாகூரில் இந்தக் கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்த கமர்ஷியல் மியூசியம் ஹாலுக்குள் சுமார் 500 பெண்கள் கூப்பிய கரங்களுடன் பிரவேசித்து "மருமகனை குடும்பத்திற்குள் கொண்டு வந்து எங்களுடைய பிழைப்பை பாழாக்கிவிடாதீர்கள்" என்று கூறினார்.

தொழிலைப் பொறுத்தமட்டிலும், தொழில் செய்வோர் மீது இது எத்தகைய விளைவை ஏற்படுத்தும் என்று தயவு செய்து சிந்தித்துப் பாருங்கள். நீங்கள் தூற்றப்படுவீர்கள். ஒரு தந்தையும் அவருடைய மகன்களும் ஒரு சுபிட்சமான தொழிலை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். தந்தை இறந்து விடுகிறார். அந்தத் தொழில் அனைவரின் கூட்டு முயற்சிகளால் நடத்தப்பட்டு வருகிறது; பின்னர் மருமகன் உள்ளே நுழைகிறார். அப்போது அந்தத் தொழிலுக்கு என்ன நேரும்? அது சின்னாபின்னமாகிவிடும். அறிக்கையின் 139வது பக்கத்தை அவைக்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். எல்லாப் பெண்களும் இதற்கு ஆதரவாக இருக்கிறார்கள் என்று கூறுவது தவறாகும். ஆயிரக்கணக்கான அறிவார்ந்த பெண்கள் இதை ஆதரிக்க வில்லை. ஏனெனில், மகளுக்கு எந்த உரிமைகளும் கொடுப்பதற்கு அவர்கள் விரும்பவில்லை என்பதினால் அல்ல. என்னைப் பொறுத்த

மட்டிலும், அது போன்றே என்னைப் போல் சிந்திப்பவர்களைப் பொறுத்தமட்டிலும் மகளுக்கு முழு உரிமையும் கொடுக்கப்படக் கூடாது என்று நாங்கள் கூறவில்லை. பெண்களும் ஆண்களைப் போல் அதே அந்தஸ்துக்கு உயரவேண்டுமென்றும், அதே உரிமை களை அடைய வேண்டுமென்றும்தான் நாங்கள் விரும்புகிறோம். இவ்விஷயத்தில் டாக்டர் அம்பேத்கருடன் நான் ஒன்றுபட்டு நிற் கிறேன். அவரைப் போன்றே நான் ஒரு முற்போக்குப் பழமைவாதி. அந்த சொற் பிரயோகத்தை நான் மிகவும் விரும்புகிறேன். நான் முன்னேற்றமான சிந்தனை உடையவர்களின் வரிசையைச் சேர்ந்தவ னல்ல. டாக்டர் அம்பேத்கர் கூறியது போன்று இந்த மசோதா புரட்சிகரமானதோ அல்லது தீவிரமானதோ அல்ல. இந்த மசோதா சில விஷயங்களை அலசுகிறது. ஆனால் இது அபிவிருத்தி செய்யப் பட வேண்டும். இன்று இந்து சமுதாயத்தில் ஒருவகையான ஆத்ம சோதனை நடைபெற்று வருகிறது. சீரழிவு ஏற்பட்டுள்ளது என்பதை அதனால் பார்க்க முடிகிறது. டாக்டர் அம்பேத்கர் கூறியபடி அந்தச் சீரழிவை சரி செய்ய வேண்டியது நமது கடமையாகும். எனவே, இந்தக் கண்ணோட்டத்திலிருந்து, நமது சகோதரிகளுக்கும் புதல்விகளுக்கும் நீதி வழங்குவதற்கு நாங்கள் விரும்பவில்லை என்று யாரும் நினைத்துவிடவேண்டாம். இதுபோன்ற ஒரு மனப் பதிவை நமது சகோதரிகளும் புதல்விகளும் ஏற்படுத்திக் கொள்வார் களேயானால், அது முற்றிலும் தவறாகும். ஐயா, உங்களுடைய நல்லெண்ணத்தை நான் நன்கு அறிவேன். அவர்களுடைய உரிமை கள் பாதுகாக்கப்பட வேண்டும் என்றுதான் நீங்களும் விரும்பு கிறீர்கள். எனவே இந்தக் கண்ணோட்டத்திலிருந்து இதைப் பார்க்கக் கூடாது என்று தெரிவத்துக் கொள்கிறேன். இந்த மசோதா சுற்றுக்கு விடப்பட வேண்டும் என்று விரும்புகிறேன். அடுத்த தேர்தலுக்குப் பிறகு இதை எடுத்துக் கொள்ளலாம், அப்பொழுது இந்த அவை கூடுதல் பிரதிநிதித்துவம் வாய்ந்ததாக இருக்கும். இந்த அவை இன்று பூரணமாகத் தகுதி வாய்ந்ததில்லையென்றோ, அரசுரிமை படைத்த தில்லையென்றோ, நான் கருதவில்லை. இந்த மசோதாவை விவா திப்பதைத் தொடர்ந்து நடத்த வேண்டும் என்று இந்த அவை வற்புறுத்தினால், அதில் தவறு ஏதுமில்லை. ஆனால் இந்த மசோதா விவாதிக்கப்பட்டு, சம்பந்தப்பட்ட ஒவ்வொரு பகுதியினருக்கும் நியாயம் வழங்கப்பட வேண்டும் என்று விரும்புகிறேன். அதே சமயத்தில், ஒரு வழக்குரைஞர் என்ற முறையிலும் இந்த அவையின் ஓர் உறுப்பினர் என்ற முறையிலும் நான் விரும்புவது என்னவெனில், இந்த மசோதா பொறுக்குக் குழுவினால் மீண்டும் ஆய்வு செய்யப்பட

வேண்டுமென்று விரும்புகிறேன். அது இரண்டு மணி நேரம் நடை பெற்றாலும் பரவாயில்லை. அப்பொழுதுதான் இந்தக் குறைபாடு களெல்லாம் களையப்பெற்று, அசல் மசோதா ஷரத்து வாரியாகப் பரிசீலனை செய்வது சட்டபூர்வமாக்கப்படுவதற்கு வழி செய்யும். அப்பொழுது, பொறுக்குக் குழு விரும்பினால் இந்த மசோதாவே அகற்றப்பட்டுவிடலாம். ஒவ்வொரு பொறுக்குக் குழுவிலும் செய்யப் படுவதுபோல் மூல மசோதா, சட்டத்தின் தேவைக்கேற்ப ஆய்வு செய்யப்பட்டதாகவோ, அல்லது திருத்தங்கள் முன்மொழியப்பட்ட தாகவோ, ஒவ்வொரு பொறுக்குக் குழுவிலும் செய்யப்படுவது போல் வழக்கமான முறையில் ஏற்றுக் கொள்ளப்பட்டதாகவோ கூறுவது முற்றிலும் தவறாகும் என்று வலியுறுத்துகிறேன். இது செய்யப்படவில்லை. அடிப்படையிலேயே தவறான முறையில் இந்த விஷயம் கையாளப்படுவதை அனுமதிக்காதிருக்க நாம் மிகவும் உஷாராக இருக்க வேண்டும். என்னுடைய ஆட்சேபனை சரியானதென்று டாக்டர் அம்பேத்கர் திருப்தியடைந்தால், இந்தப் பிரச்சினையைப் பரிசீலனை செய்யும்படி அவரை வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன். ஏழை பஞ்சாப் மக்களின் கருத்தையும் தயவுசெய்து கவனத்தில் எடுத்துக்கொள்ளும்படி அவரை வணங்கிக் கேட்டுக் கொள்கிறேன். அவர்களுக்கு இந்து சட்டக்குழுவில் பிரதிநிதித் துவம் இல்லை.

மதிப்புக்குரிய உறுப்பினர்கள்: டாக்டர் பக்ஷி தேக் சந்த அக்குழுவில் இருக்கிறாரே!

பண்டிட் தாகூர்தாஸ் பர்கவா : இந்த பொறுக்குக் குழுவில் உறுப்பினராக இருந்த டாக்டர் தேக் சந்ததைப்பற்றி நீங்கள் கூறுகின் றீர்களென்றால், அவருக்கு உரிய மரியாதையை நீங்கள் அளிக்கிறீர் களென்றால் நான் மிகவும் மகிழ்ச்சி அடைவேன். இந்த ஆட் சேபனைக் குறிப்பை அவர் எழுதாமல் இருந்திருந்தால் நீங்கள் எங்கே இருந்திருப்பீர்கள்? நீங்கள் அவரை ஒரு மனிதர் என்று ஏற்றுக் கொண்டு, அவருடைய கருத்துக்களுக்கு மதிப்பு அளிக்க வேண்டும் என்று ஏற்றுக்கொண்டால், அவருடைய கருத்துக்களைக் கடைப் பிடியுங்கள். இது என்னுடைய வேண்டுகோள். நான் டாக்டர் பக்ஷி தேக் சந்த் எழுதியவற்றின் ஓர் ஊது குழல் அல்லது ஒலிபெருக்கி மட்டுமேயாகும். அவர், தனது குறிப்பில் ஒரு வாரிசை நியமிப் பதற்கு நீங்கள் அனுமதிக்க வேண்டும் என்றும், இன்று ஏற்பட்டு வருவது போல், அதே முறையில் விவாகரத்தை நீங்கள் அனுமதிக்க

வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டுள்ளார். மதச் சடங்கு ரீதியில் அல்லாத திருமணங்களைப் பற்றியும் அவர் குறிப்பிட்டுள்ளார். இந்த எல்லா அம்சங்களிலும் அவருடைய பெயரே நீங்கள் குறிப் பிடும்போது, தனது ஆட்சேபனைக் குறிப்பில் அவர் கறியுள்ளவற்றை நீங்கள் தயவுசெய்து கடைப்பிடிக்க வேண்டுமென்று உங்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. துணைத் தலைவர் : திருமதி ரேணுகா ரே.

திரு. நசிருத்தீன் அகமது: ஐயா, என்னுடைய கோரிக்கை கவனிக்கப்படவேயில்லை!

திரு. துணை சபாநாயகர்: மதிப்புக்குரிய உறுப்பினரின் கோரிக்கை கவனிக்கப்படாமல் போகாது.

திரு. நசிருத்தீன் அகமது : நான் சொல்ல வேண்டிய சில விஷயங்கள் இருக்கின்றன. அவற்றுக்கு பதில்கள் கிடைக்கப் பெற வேண்டும்.

திரு. துணை சபாநாயகர் : மதிப்புக்குரிய உறுப்பினர் தமது கருத்துக்களைத் தாராளமாகக் கூறலாம். அதை யாரும் ஆட்சேபிக்க மாட்டார்கள்.

திரு. நசிருத்தீன் அகமது : ஐயா, நான் அதை விரும்பவில்லை.

திரு. துணை சபாநாயகர் : மதிப்புக்குரிய உறுப்பினரின் முறை இப்பொழுது இல்லை என்று ஏற்கனவே தீர்ப்புக் கூறியுள்ளேன். திருமதி ரேணுகா ரேயை இப்பொழுது பேச அழைக்கிறேன்.

***திருமதி ரேணுகா ரே :** இப்பொழுது இந்த அவையின் பரி சீலனையிலுள்ள மசோதா, அல்லது, அதில் அடங்கியுள்ள கோட் பாடுகள், 1943லிருந்து இந்த சட்டப் பேரவையின் முன்னால் இருந்து வருகின்றன; மேலும் இந்த மசோதாவில் அடங்கியுள்ள இந்த மாற்றங்களுக்கான இடைவிடாத கோரிக்கைகள், இந்த நாட்டுக்கு முன்னால், அதைக்காட்டிலும் நீண்ட காலமாகவே இருந்து வரு

★ அ.நி. (சட்டப்பேரவை) டி. தொகுதி II, பாகம் II, பிப்ரவரி 25, 1949, பக். 925-929.

கின்றன. 100 ஆண்டுகளுக்கு முன்னதாகவே ராஜாராம் மோகன் ராய், ''பெண்களின் சொத்துரிமை மற்றும் அவர்களின் திருமண உரிமைகள்'' பற்றி ஓர் ஆய்வுக் கட்டுரையை எழுதினார். அதன் மூலம் இந்தப் பிரச்சினை முதன் முதலாகப் பொதுமக்களின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது. 1931, 1932லிருந்து பெண்களின் சட்டப்படியான இயலாமைகளை அகற்ற வேண்டியதன் அவசியமும் ஒரே சீரான மற்றும் சர்வாம்சச் சட்டத்தொகுப்பின் அவசியமும் அப்படிக் காட்டப்பட்டது. இந்த விஷயம் சம்பந்தமாக பல மசோதாக்கள் சட்டப் பேரவை முன் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததாலும், தனித்தனியான சட்டங்கள் சட்டத்தில் பல முரண்பாடுகளை ஏற்படுத்துவதாலும், மற்றும் இதுபற்றி இடைவிடாத கோரிக்கை இருந்து வந்ததனாலும், அன்றைய இந்திய அரசு, இந்து சட்டக் குழுவை நியமிக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது, இது இந்து சட்டம் பற்றிய ராவ் குழு என்று பரவலாக அறியப்பட்டிருந்தது. இந்தக் குழுவின் அறிக்கையின் பயனாகத்தான் எழுதப்படாமல் இறந்து போன நிலைமையிலான வாரிசுரிமை மற்றும் திருமணம் சம்பந்தமான இரு மசோதாக்கள் 1943ல் முன்மொழியப்பட்டன. அந்த சமயத்திலும், இப்பொழுது தலைதூக்கியுள்ள எதிர்ப்பு முன்னணிக்கு வந்தது. அந்த எதிர்ப்பின் சாராம்சம் இப்பொழுது இருப்பதைப் போன்றதேயாகும். ஆனால் அணுகுமுறை மிகவும் வேறுபட்டதாக இருந்தது. அணுகுமுறை, இயற்கையாகவே வேறுபட்டதாக இருந்தது. ஏனெனில், அது ஓர் அன்னிய அரசிடம் சமர்ப்பிக்கப்பட்டதாகும். அவர்கள் அந்நிய அரசின் ஆர்வமான ஆதரவாளர்களாக இருந்தார்கள் என்ற கருத்தின் பேரில் அந்த அணுகுமுறை கையாளப்பட்டது. அப்பொழுது காங்கிரஸ்தான் இதற்காகக் கிளர்ச்சி செய்துவந்தது. இந்தியப் பெண்கள் கொண்டுவந்த கோரிக்கைக்கு ஆதரவு தெரிவித்தது. எனவே இதற்கு அரசு எந்த முக்கியத்துவமும் தரவேண்டியதில்லை என்று அரசு விசுவாசிகள் கூறி வந்தனர். நான் ஆதாரமில்லாமல் இந்தக் கூற்றுக்களைக் கூறவில்லை. இந்த நாட்டின் தேசியப் பத்திரிகைகள் அந்த எதிர்ப்புக்கு அதிக வாய்ப்புத் தரவில்லை என்பது மெய்யே. இருந்தபோதிலும் எதிர்ப்பாளர்கள் பல பிரசுரங்களை வெளிக் கொண்டு வந்து, நமது தேசியத் தலைவர்களை வரைமுறையற்றுத் திட்டித் தீர்த்தார்கள். நமது பேரன்புக்குரிய தலைவர் மகாத்மா காந்தியைக் கூட அவர்கள் விட்டு வைக்கவில்லை. 'இந்து' என்ற ஒரு வார இதழ் வெளிவந்து கொண்டிருந்தது. அதில் இந்த மசோதாக்களைத் தாக்கி எழுதப்பட்டது. இந்த நாட்டின் தேசத் தலைவர்கள் இவற்றுக்கு ஆதரவாக உள்ளனர்

என்ற காரணத்தினாலும், அவர்களின் ஆலோசனையின்படியும் செல்வாக்கின் கீழும் இவை கொண்டு வரப்படுகின்றன என்ற காரணத் தினாலும் இந்த மசோதாக்கள் எதிர்க்கப்பட்டன. இந்த அம்சத்தோடு கூடவே, இந்த நாட்டின் பெண்கள், அவர்களை மேலும் பிளவுபடுத்தி, அவர்களிடையே பிணக்கை ஏற்படுத்த நடைபெற்ற சூழ்ச்சிகளுக்கு இரையாக தயாராயில்லை என்பதை அரசு கண்டவுடனே, பெண்கள் தனித் தொகுதிகளை எதிர்க்கின்றனர், மற்றும் இந்த நாட்டின் விடுதலை இயக்கத்தின் முன்னணியில் இருந்தவர்களுக்கு ஆதரவாக உள்ளனர் என்பதையும் உணர்ந்தபோது அன்னிய அரசு அதிகாரத்தில் உள்ள நிலையில், பெண்களின் நிலையை அபிவிருத்தி செய்து, அவர் களின் உரிமைகளை வழங்குகின்ற இந்த வகைப்பட்ட சட்டம் நிறைவேற்றப்படும் என்பதற்கு அதிக நம்பிக்கை இருக்கவில்லை. அப்பொழுதுதான் ஒரு தேசிய அரசு ஏற்படுகின்ற வரையில் காத்திருக்க வேண்டியது அவசியம் என்பதை நாங்கள் உணர்ந்தோம். அதற்குப் பின்னர், அரசு இந்து சட்டக் குழுவை நியமித்தது மசோதாக்கள் மீண்டும் சுற்றுக்கு விடப்பட்டன. இந்தக் குழு நாட்டில் சுற்றுப் பயணம் செய்து, 1946ல், இடைக்கால அரசு பதவிக்கு வந்த பின்னர், ஆயிரக்கணக்கான தனி நபர்கள் மற்றும் அமைப்புகளின் கருத்துக் களைக் கேட்டறிந்து 1947ல் தற்போதைய சட்டப் பேரவையில் இந்த மசோதா, மீண்டும் அறிமுகம் செய்துவைக்கப்பட்ட போது அதைத் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளை இங்கு மீண்டும் எடுத்துக் கூறப்போவதில்லை, ஏனெனில் அவற்றையெல் லாம் இந்த அவையின் உறுப்பினர்கள் நன்கு அறிவார்கள். ஆனால், அவற்றுக்கு எதிர்ப்பு சாராம்சத்தில் பழையதே, குணாம்சத்திலும் அதுவே - ஒரு புதிய அணுகுமுறையைக் கொண்டிருந்தது என்பதை மட்டுமே சுட்டிக்காட்டுவதற்கு விரும்புகிறேன். அந்த நாட்களில் காங்கிரசுக்கு எதிராக இருந்தவர்கள் யார் என்பதை நான் தெரிந்து கொள்வதற்கு விரும்புகிறேன். இன்று அவர்கள், 'இந்து சட்டத் தொகுப்பு மசோதா, நிறைவேற்றப்படுமேயானால், தேர்தலில் நீங்கள் தோற்றுப்போவீர்கள் என்று கூறினார்கள். அவர்களை நான் ஒன்று கேட்க விரும்புகிறேன். அவர்கள் திட்டமிட்டு விடுதலை இயக்கத் திற்கு எதிராகச் செயல்பட்டபோது, அவர்கள் அதை ஆதரிக்கவு மில்லை, அதற்குப் பரிவுகாட்டக் காட்டவுமில்லை - அவர்களையும் பொருட்படுத்தாது, காங்கிரஸ், தேர்தலில் வாகை சூடியது, நாட்டின் விடுதலையை அடைந்தது. இந்த நிலையில், அவர்கள் தேர்தலில் வெற்றிபெற மாட்டார்கள் என்று இன்று காங்கிரசுக்குக் கூறுவதற்கு இவர்கள் யார்? அவர்களில் யாராவது இன்று நாட்டின் சட்டப்

பேரவைகளுக்குள் வருவார்களேயானால், அது காங்கிரசின் தயவி னால்தான் நடக்கும், நாளையும் அவ்வாறுதான் நடக்கும்.

இப்பொழுது தலைதூக்கியுள்ள எதிர்ப்பு, முன்பு போன்ற அதே குணாம்சத்தைக் கொண்ட இந்த எதிர்ப்பு, பல உபாயங்களைக் கையாண்டுள்ளது. அது பல்வேறு வகைப்பட்ட தந்திரங்களைக் கையாண்டுள்ளது. கவர்னர் ஜெனரலின் பெயர் உபயோகப்படுத்தப் பட்டதை இந்த சபை அறியும். அது ஒரு மோசடி என்று கண்டறியப் பட்டுள்ளது. இரண்டு அல்லது மூன்று நாட்களுக்கு முன்னால், கல்கத்தாவில் ஒரு செய்தித் தாளில், இரண்டு அல்லது மூன்று நன்கு அறியப்பட்ட எதிர்ப்பாளர்களின் பெயர்களுக்குப் பின்னர், சியாமப் பிரசாத் முகர்ஜியின் பெயரை நான் பார்த்தேன். சிறிய அடைப்புக் குறிகளுக்குள் ''(உத்தரப்பாராவைச் சேர்ந்தவர்)'' என்ற சொற்களைப் பார்க்கின்றவரையில் நான் ஓரளவு வியப்படைந் தேன். ஐயா, அது தவறான வழிகாட்டும் நோக்கம் கொண்டவை என்பது தெளிவு. அதைப்பற்றிக் கேள்வி கேட்டிருந்தால், அவர்கள் ''உத்தரப்பாராவைச் சேர்ந்தவர்'' என்பதைச் சுட்டிக்காட்டியிருந் திருப்பார்கள். எதிர்ப்பாளிகள் உபயோகப்படுத்தும் உபாயங்களும், தந்திரங்களும் இவையே. உண்மையான கருத்து வேறுபாடுகள் உள்ளவர்களை நாம் கேள்வி கேட்பதில்லை என்பது உங்களுக்குத் தெரியும். ஆனால், இன்று பயன்படுத்தப்படும் இந்த வகைப்பட்ட தந்திரங்கள்.....

திரு. நசிருத்தீன் அகமது : ஒரு தகவல் தேவை, அது டாக்டர் சியாமப் பிரசாத் முகர்ஜி அல்லவா?

திருமதி ரேணுகா ரே: இல்லை, அவர் மத்திய அரசின் கேபினட் அமைச்சர் அல்ல. அவர் எந்த சியாமப்பிரசாத் முகர்ஜி என்பது எனக்குத் தெரியாது.

திரு. நசிருதீன் அகமது: அவர் ''இந்துமகா சபையின் தலைவர் டாக்டர் சியாமப் பிரசாத் முகர்ஜி என்று நினைத்தேன்.

திருமதி ரேணுகா ரே : அது அவ்வாறு அல்ல. அவர் ''உத்தரப் பாராவைச் சேர்ந்தவர்'' அவர்கள் இத்தகைய தந்திரங்களைக் கையாளுகிறார்கள், திரு. நசீருத்தீன் அகமது கூட ஏமார்ந்து விட்டார். வைதீக எதிர்ப்பாளர்கள், மகளின் வாரிசு உரிமைகளை அங்கீகரிக்

கின்ற ஒரு சமூகத்தின் உறுப்பினர்களிடையிலிருந்து தமது மிகப் பெரிய ஆதரவாளனைப் பெற்றார்கள். மதிப்புக்குரிய திரு. நசீருதீன் அகமது. தமது சொந்தப் பெண்கள் அனுபவித்துவரும் உரிமை களைத் தமது இந்து சகோதரிகளுக்கு மறுப்பது மிகமிக வியப்புக் குரியதாகும்.

''எதிர்த் தரப்பினர் எல்லா இடங்களிலும் - குறைந்தபட்சம், டில்லியில் - தந்திகளையும், சுற்றறிக்கைகளையும், சுவரொட்டி களையும் கொண்டு எப்படி விளம்பரப்படுத்துகிறார்கள்? அரசியல் நிர்ணய சபையின் உறுப்பினர்களுக்குத் தந்திகள் வந்து குவிவது எப்படி? அதேபொழுதில் இந்த மசோதாவின் ஆதரவாளர்கள் அவ்வாறு ஏதும் செய்வதில்லையே?'' என்று சிலர் கேட்கிறார்கள். ஐயா, இந்த மசோதாவை ஆதரிப்பவர்கள், சமூக நல்வாழ்வு அமைப்பு களின் பிரதிநிதிகளுமாவர்; அவர்கள் நாட்டின் நன்மைக்காகப் பாடுபடுபவர்களுமாவர். இன்று அவர்கள் வசமுள்ள எந்த நிதிகள் சம்பந்தமாகவும் ஒரு தேசிய அவசர நிலைமை இருக்கும்போது, தந்திகளையும், கடிதங்களையும் அனுப்புவதற்கு அத்தகைய நிதிகளை அவர்கள் பயன்படுத்திக் கொள்வது சரியா, முறையானதுதானா என்று அவர்கள் பரிசீலனை செய்வதில்லை. அந்த நிதிகளை அகதி களின் புனர் வாழ்வுக்காகப் பயன்படுத்த முடியும். இந்த அவையில் அரசியல் நிர்ணய சபையின் ஓர் உறுப்பினருக்கு ஒரு தந்தி அனுப்பு வதற்கு ரூ. 165 செலவாகிறது. அந்தப் பணத்தைக் கொண்டு ஓர் அகதிப் பெண்ணுக்கு மூன்று மாதங்களுக்கு, புனர் வாழ்வுக்காகத் தொழிற் பயிற்சி அளிக்க முடியும். அந்தத் தந்திகள் உங்களுக்கு அனுப்பப்பட வேண்டுமென்று நீங்கள் விரும்புகிறீர்களா? இந்த நடைமுறை முற்றிலும் தவறானதென்று கருதுகிறேன். நாம் சுவரொட்டி களையும், சுற்றறிக்கைகளையும், தந்திகளையும் அனுப்பாமலிருந் திருந்தால், மாற்றங்களுக்கான கோரிக்கை தொடர்ந்து இருந்து வரவில்லையென்று பொருள் படாது.

மசோதாவின் ஷரத்துகளைப் பற்றிய மாண்புமிகு சட்ட அமைச் சரின் உன்னதமான, தெளிவான பகுப்பாய்வுக்குப் பின்னர், அதுபற்றி மிகவும் விரிவாக நான் பேசப்போவதில்லை. அது சிறிதும் அவசிய மற்றதாகும். இந்த நாட்டில் ஒற்றுமை மிகவும் விரும்பத்தக்கதாகும். மற்றும் இந்துக்களுக்கு ஒரே சீரான, மற்றும் சர்வாம்சமான சட்டத் தொகுப்பும் அவசியமாகும். இந்த நாட்டில் பெரும்பான்மையாக உள்ள அவர்களுக்கு இது நிச்சயமாக ஓர் அவசியமாகும்.

ஒரு தார மணம் சம்பந்தமாக நான் கேட்க விரும்புகிறேன். இந்த அவையில் அல்லது இந்த நாட்டில் ஒருவர் தமது சொந்த, சகோதரி அல்லது மகள் மீண்டும் திருமணம் செய்துகொண்ட ஒரு மனிதனின் முதல் மனைவியாக இருக்கும் கதிக்கு மனப்பூர்வமாக விரும்புவாரா? பலதார மணம் மிகவும் வழக்கமான ஒன்றாக இல்லை என்பது மெய்யே. மொத்தத்தில் நாட்டில் அது அரிதாகவே உள்ளது. ஆனால் அண்மை ஆண்டுகளில் பலதாரமணம் அடிக்கடி நடைபெறுவதை நாம் கண்டுள்ளோம், இது இந்தியப் பெண் இனத் திற்கு நிரந்தரமான அவமானத்திற்குரியதாகும். அத்தகைய ஆண் களுக்கு இரண்டாவது மனைவிகளாக இருப்பதற்கு சில பெண்கள், அதைத் தெரிந்தும், விருப்பத்துடன் உடன்படுகிறார்கள். அத்தகைய ஆண்களின் முதல் மனைவிகளாக இருக்கும் பெண்களின் குறைகளை யும் பரிதாபமான நிலைமையையும் சீர்செய்வதற்கு சட்டம் முன்வர வேண்டும் என்ற விஷயத்தை விவரிக்க வேண்டிய அவசியமில்லை என்று நினைக்கிறேன்.

கலப்பு மணம் மற்றும் ஒரே கோத்திரத்தில் நடைபெறும் திருமணம் ஆகியவற்றைப் பற்றிக் கூறுவதெனில், நமது அரசியல் சாசனத்தின் அடிப்படை உரிமைகளில், சாதி, பாலினம் மற்றும் பிற வற்றின் காரணமான அனைத்துப் பாகுபாடுகளும் போகவேண்டும் என்று நாம் கூறும்போது, அனுமதிக்கப்படக்கூடிய ஒன்றாகிய கலப்பு மணம், அதை நோக்கிய ஒரு முதல் நடவடிக்கையேயாகும் என்பது நிச்சயம்.

திரு. துணைத் தலைவர்: சாதி போக முடியும், பாலினம் எவ்வாறு போக முடியும்?

திருமதி ரேணுகா ரே: 'சாதி மற்றும் பாலினம் சம்பந்தமான பாகுபாடு' என்றுதான் நான் கூறினேன்.

திரு. துணை சபாநாயகர் : மதிப்புக்குரிய உறுப்பினர் தொடர்ந்து பேசலாம்.

திருமதி ரேணுகா ரே : இந்த சட்டத் தொகுப்பில் உள்ள விவாக ரத்து ஷரத்தைப் பொறுத்தமட்டிலும், இதிலுள்ள நிபந்தனைகள் குறிப்பிட்ட வரம்புக்குட்பட்டவையாகும் என்பதை ஒத்துக் கொள் கிறேன். இல்லம் தான் சமுதாயத்தின் மையக்கருவாகும். மேலும் திருமணத்தின் பிரதான (அடிப்படையான) காரணம், அது குழந்தை

களின் பாதுகாப்பிற்காகத்தான் என்று நம்புகிறேன்; எனவே அற்பக் காரணங்களுக்காக விவாகரத்துகள் அனுமதிக்கப்படக்கூடாது. ஆனால், மிகுந்த சிரமங்களைத் தோற்றுவிக்கும் மெய்யான காரணங்களின் பொருட்டு விவாதத்துக்கு அனுமதிக்கலாம். 1943லிருந்து, திருமணச் சட்டம் முதல்முதலில் அறிமுகம் செய்து வைக்கப்பட்ட போது, எனக்கு ஏராளமான கடிதங்கள் வந்தன; பலர் தங்களுடைய புதல்விகளுடன் என்னிடம் வந்தனர்; பெண்கள் எவ்வளவு மோசமான, பயங்கரமான கஷ்டங்களை அனுபவிக்கின்றனர் என்பதை எனக்குக் காட்டினர். ஆண்களுக்கும் பெண்களுக்கும் அத்தகைய ஒரு ஷரத்து இல்லாவிட்டால், அது உண்மையான தேவைகளைத் திருப்திப்படுத்தாது. ஐயா, இந்த அம்சத்தைப் பற்றிப் பேசும்போது நான் சிறிது விபரமாகக் கூறுகிறேன்; நான் கூறிய எதிர்ப்பாளர்கள், சட்டத்தையோ, அல்லது சட்டத் தொகுப்பின் ஷரத்துகளையோ, புரிந்துகொள்ள முடியாத பல பெண்களிடம் சென்று அவர்களுடைய புதல்விகளே தாங்கள் விவாகரத்து செய்யப்படக்கூடிய வகையில் சட்டங்களைக் கொண்டுவர முயல்கிறார்கள் என்று சொல்லி வருகின்றனர். இது ஒரு அனுமதி தருகிற நடவடிக்கை மட்டுமேயாகும் என்பதை அவர்கள் உணருவதில்லை; பாதிக்கப்பட்ட நபர் மட்டுமே விவாகரத்தைக் கோரமுடியும். அவருக்குத்தான் ஜீவனாம்சத்திற்கும் வகை செய்யப்பட்டுள்ளது. இவைகளெல்லாம் கூறப்படவில்லை. நூற்றுக்கணக்கான பொதுக் கூட்டங்களில் இந்த விஷயங்கள் என்னுடைய கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன; நான் இந்த விஷயத்தை விளக்க வேண்டியதேற்பட்டது. இந்தப் பேரவையின் பெண் உறுப்பினர்களும் அதே விஷயத்தைக் கூறுவார்களென்று கருதுகிறேன். மிதாக்ஷரா கூட்டுக் குடும்பத்தைப் பொறுத்தமட்டிலும், மாண்புமிகு சட்ட அமைச்சர் கூறியதற்கு மேல் மேற்கொண்டு ஒரு வார்த்தை கூடுதலாகச் சொல்வதற்கு எந்தத் தேவையுமில்லை என்று கருதுகிறேன் அவர் அதை முழுமையாக விவரித்துக் கூறியுள்ளார்.

மகளின் வாரிசுரிமைப் பிரச்சினையைப் பொறுத்தமட்டிலும், எதிர்த்தரப்பினர், அதைத்தான் மையப்படுத்துகின்றனர். இது இயல்பானதுதான். ஏனெனில், இது அவ்வளவு குருட்டுப் பிடிவாதமல்ல என்பதையும், அவ்வளவு கண்மூடித்தனமான துவேஷம் அல்ல என்பதையும் நிரூபணம் செய்கிறது, மாறாக, ஆதிக்கவாதிகள்தான் எதிர்க்கின்றனர். மாண்புமிகு சட்ட அமைச்சர் ஏற்கனவே இந்த அம்சம் பற்றிப் பேசியிருக்கிறார். ஆயினும் நான் மேலும் ஒன்றிரண்டு விஷயங்கள் கூறுவதற்கு விரும்புகிறேன். மகளின் வாரிசுரிமையை அங்கீகரிப்பதன் மூலமே, ஒரு பெண்ணின் பொருளாதார அந்தஸ்தை

மாலை 4 மணி

நிர்ணயிக்க முடியும். என்னுடைய மதிப்புக்குரிய நண்பர் சேத் கோவிந்த தாஸ் நேற்று இந்த விஷயத்தைப் பற்றிப் பேசும்போது ''நமக்கு எதற்கு வாரிசுரிமை வேண்டும்?'' என்று கேட்டார். எவ்வளவு தூரம் இதனை நம்புகிறார் என்று எனக்குத் தெரியாது. எல்லோருக்கும் சம வாய்ப்பு என்பதை நாம் விரும்பினால், அதில் நம்பிக்கை இருந்தால், செல்வத்தில் ஏற்றத்தாழ்வுகள் போக வேண்டுமென்று நாம் விரும்பினால், வாரிசுரிமையாகப் பெற்ற சொத்தும் போவதற்கான நேரம் வரும். நிச்சயம் வரவேண்டும் என்று நானும் ஒத்துக்கொள்கிறேன். ஆனால் அந்த நேரம் வரும் வரையில், ஆனால் அதுவரையிலும், மகளுக்கும் மகனுக்கும் வேறுபாடு இருந்தால், அந்த வேறுபாடானது அந்தஸ்தில் உள்ள வேறுபாடு என்றுதான் பொருள். மகளின் அந்தஸ்தை அங்கீகரிக்க வேண்டும். அவள் ஒரு மகள், ஒரு பெண் என்ற வகையில் ஓர் இயல்பான வாரிசு ஆவார். நான் இதைக் கூறுவது, ஒரு தத்துவார்த்தக் கண்ணோட்டத்திலிருந்து மட்டுமல்ல, உயில் எழுதாமல் இறந்து போகின்றவரின் வாரிசுகளைப் பற்றியும் நாம் விவாதித்துக் கொண்டிருக்கிறோம். என்னுடைய மதிப்புக்குரிய நண்பர் பண்டிட் பர்கவா என்ன கூறியிருந்தபோதிலும், ஒரு மாமனார் செய்வதைப் போலல்லாது, ஒரு தகப்பனார் தனது மகளை தனக்கு வாரிசல்ல என்று கூறமாட்டார் என்பது மிகவும் இயல்பானதாகும். ஒரு கூட்டுக் குடும்பத்தில், ஒரு பெண்ணின் உரிமைகள், கடந்துபோன ஆண்டுகளில் மிகவும் பயனுள்ள நோக்கத்திற்கு சேவை புரிந்திருக்கக்கூடும். ஆனால், தற்போதுள்ள நிலைமைகளில், அண்மை ஆண்டுகளில் அதைப் பற்றி அவ்வளவு நிச்சயமாகக் கூறமுடியாது. என்னுடைய மதிப்புக்குரிய நண்பர், சுசேதா கிருபளானி நேற்றைய தினம் கூறிய ஒரு விஷயத்தை ஆமோதிக்க விரும்புகிறேன். சமூக ஊழியர்களாக இருக்கும் ஆண்களும் பெண்களும் இந்த நாட்டில் காப்பகங்களில் உள்ளவர்களைப் பற்றிய ஒரு பகுப்பாய்வு மேற் கொண்டால் இந்தப் பெண்களில் எவ்வளவு பேர் கூட்டுக் குடும்பத்திலிருந்து வெளியேற்றப் பட்டவர்கள் என்பதை அறிவார்கள். தங்களுடைய வீடுகளிலிருந்து வெளியேற்றப்பட்டு தங்களுடைய சொந்தப் பிழைப்புக்கு சம்பாதிப்பதற்கு பயிற்சி இல்லாத இந்தப் பெண்கள், அவமானகரமான ஒரு வாழ்க்கை வாழும்படியான நிர்ப்பந்தத்திற்குள்ளாகிறார்கள். இது இந்து சமுதாயம் எதிரிட வேண்டிய ஒரு பிரச்சினையாகும். இந்து சட்டங்களை உருவாக்கியவர்கள் இத்தகைய ஒரு நிலைமை ஏற்படும் என்று எண்ணியிருக்க மாட்டார்கள் என்று நிச்சயமாகக் கூறுவேன்.

பெண்கள்தான் எந்த ஓர் இனத்தினருக்கும் தாய்மார்கள்; அதனுடைய பெண்கள் பொறுப்புள்ள தாய்மார்களாகவும் உணர்வு பூர்வமான பிரஜைகளாகவும் ஆகின்றவரையில் எந்த இனமும் முன்னேற முடியாது. கல்வி கற்ற பெண்கள் சம்பந்தமாக பெருமளவு பிரச்சாரம் நடத்தப்பட்டு வந்துள்ளது. விரல் விட்டு எண்ணத்தக்க கல்வி கற்ற பெண்கள்தான் இந்த இந்து சட்டத் தொகுப்பை விரும்புகின்றனர்; மிகவும் தயக்கமுடன் மென்மையான இந்த சீர்திருத்த மசோதாவை விரும்புகின்றனர் என்று கூறப்படுகிறது. ஐயா, பெண்களைப் பொறுத்தமட்டிலும், அது விரல்விட்டு எண்ணத்தக்கவர்களே, ஏனெனில் பார்க்கப்போனால், இந்த நாட்டில் கல்வி கற்றவர்கள் 15 சதவீதம் பேர்களே, கல்வி கற்ற பெண்கள் இப்பொழுதும் கூட 3 அல்லது 4 சதவீதமானவர்களே. எனவே, பெண்களைப் பொறுத்தமட்டிலும், அவர்கள் விரல்விட்டு எண்ணத்தக்கவர்களே. ஆனால், அவர்களுக்குப் பின்னால் - இன்றுமட்டுமல்ல, கடந்த பல பத்தாண்டு காலத்திலிருந்தே, பெருமளவான அறிவொளி பெற்ற, முற்போக்கான ஆண்கள் இருந்து வருகிறார்கள். பெண்களுக்கு வாக்குரிமை கோரும் இயக்கமோ, பெண்ணிய இயக்கமோ இந்த நாட்டில் இல்லையென்றால், அதற்கு இந்த நாட்டின் பெண்கள் மட்டும் பொறுப்பல்ல - இதற்குக் காரணம் கடந்த பல பத்தாண்டுகளாக, அவர்களுக்காகப் பாடுபடுபவர்கள் அறிவொளி பெற்ற ஆண்களாகத்தான் இருந்து வந்துள்ளனர். இன்னும் அதே நிலைமை நீடிக்கிறது, இந்த அவையிலுள்ள பெரும்பான்மையோரும் எங்களுக்கு ஆதரவாக உள்ளனர் என்று நிச்சயமாக நம்புகிறேன். இந்தக் கோரிக்கை இந்த நாட்டின் கல்வி கற்ற பெண்களிடமிருந்து வரவில்லை; மாறாக, இந்தியா முன்னேற வேண்டும் என்று விரும்பகிற அனைவரிடமிருந்தும் வந்துள்ள கோரிக்கையாகும் இது ஏனெனில், பெண்கள் உணர்வு பூர்வமான பிரஜைகளாகாமல், சமுதாயத்தில் அவர்களுக்கு உரிய இடத்தை எடுத்தக் கொள்ளாமல், நாம் முன்னேறிச் செல்வது சாத்தியமல்ல.

ஐயா, அடிமைகள், அவர்களது அடிமைத் தளைகள் அகற்றப்பட்டபோது எதிர்த்தார்கள் என்பது நன்கு தெரிந்ததே. பண்ணையடிமைகள் விடுதலையை எதிர்த்தார்கள் என்பதும் உண்மையே. இன்னும் என்னவெனில், நம்முடைய நாட்டிலேயே, கேடுகெட்ட காங்கிரஸ் கிளர்ச்சிக்காரர்கள்தான் சுதந்திரத்தை விரும்புகிறார்கள் என்றும், சாதாரணப் பொது மக்கள் அடிமைத்தளத்திலேயே திருப்தியுடன் இருப்பதற்கு மிகவும் விருப்பமாக இருக்கிறார்கள் என்றும்

பிரிட்டிஷ்காரர்கள் கூறினார்கள். இன்று பெண்களிடையில் பரிதாபத்துக்குரிய திருப்தி இருப்பதைப் பற்றி நீங்கள் கூறினால் அது மெய்யே. பல பெண்கள் இன்னும் உணர்வு பெறவில்லை என்பது முற்றிலும் உண்மையே. ஆனால் நீங்கள் அவர்களை விழிப்படையச் செய்யாததற்கு, அவர்கள் உணர்வு பெறும்படி நீங்கள் செய்யமாட்டீர்கள் என்பதும், சுதந்திரச் சூழ்நிலையில் ஒரு புதிய இந்தியாவைக் கட்டியமைப்பதற்கு இன்று நம்முன் உள்ள கூட்டுப் பணியில் ஆண்களுடன் அவர்கள் சமநிலை வகிக்கக் கூடாது என்று நீங்கள் கருதுவதும்தான் அதற்குக் காரணமா? இந்த நாட்டின் பெண்கள் இல்லாமல் முன்னோக்கி ச் செல்வது சாத்தியம் என்று உணருகிறவர் யாராவது இருக்கிறார்களா என்று கேட்கிறேன்.

நான் முடிப்பதற்கு முன்னதாக, என்னுடைய மதிப்புக்குரிய நண்பர் பண்டிட் தாகூர்தாஸ் பர்கவா கூறியதைப் பற்றி ஒன்றிரண்டு வார்த்தைகள் கூறுவதற்கு விரும்புகிறேன். அவர் கூறியுள்ளதை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை என்று நான் கூறியாக வேண்டும். இன்று காலையில் அவர், இந்த சட்டப் பேரவையின் தகுதியைப் பற்றி ஐயப்பாடு தெரிவித்தார். பிற்பகலில், அவர் பேசி முடிப்பதற்கு சற்று முன்னால் அவர் கூறினார்....

பண்டிட் தாகூர்தாஸ் பர்கவா: இந்த சட்டப் பேரவையின் தகுதியை குறித்து நான் ஒருபோதும் ஐயம் எழுப்பியதில்லை.

திருமதி ரேணுகா ரே : எனவே, அவர் கடைசியாகக் கூறியதுதான் சரியானது என்று ஏற்றுக்கொள்கிறேன். 11 பேர்களுடைய ஆட்சேபக் குறிப்புகளைப் பற்றி அவர் நிறையப் பேசினார். ஆனால் இந்த ஆட்சேபக்குறிப்புகள் பலவும் சிறு பிரச்சினைகளைப் பற்றியவை என்பதையும், வழக்கமாக எல்லா மசோதாக்களுடனும் இத்தகைய ஆட்சேபனைக் குறிப்புகள் சேர்க்கப்பட்டிருக்கும் என்பதையும், எனவே அதனால் அந்த மசோதாக்கள் மறு சுற்றுக்கு விட வேண்டுமென்று அர்த்தமல்லவென்பதையும் அவர் அறிவார். இந்த அவையும் அறியும். இந்த அரசியல் நிர்ணயசபை இந்தியாவின் அரசியல் சாசனத்தை வரைவதற்குத் தகுதியுடையதல்ல என்று அவர் கூறியபோது இரண்டு தவறுகள் ஒரு சரியானதாகாது என்று பண்டிட் பர்கவா இன்று காலையில் கூறினார். இது அவ்வளவு தவறானதெனில், அந்தத் தவறான பேரவையில் அவர் எவ்வாறு தொடர்ந்து இருக்கிறார் என்பது எனக்கு வியப்பாக இருக்கிறது. அவரை நான் மறுத்துப் பேசப் போவதில்லை. மேலும் இன்று

பிற்பகலில் அவர் பேசிய அனைத்தைப் பற்றியும் நான் மீண்டும் பேசப் போவதில்லை. ஏனெனில், அவர் பேசுவதற்கு முன்பாகவே, மாண்புமிகு சட்ட அமைச்சர் மிகவும் திறமையாக பதில் கூறியுள்ளார், அவற்றில் சிலவற்றை பண்டிட் பர்கவாவே மறுத்துள்ளார்.

கடைசியாக ஒரு விஷயத்தைக் கூற விரும்புகிறேன். இந்த மென்மையான, தயக்கத்துடன் கூடிய சீர்திருத்த மசோதாவால் இந்து சமுதாயத்திற்கே ஆபத்து ஏற்பட்டுள்ளது என்று ஒரு கூக்குரல் எழுந்துள்ளது. இந்து சமுதாயத்திற்கு ஆபத்து ஏற்பட்டுள்ளது என்று நானும் கூட நினைக்கிறேன், அதற்கு மிகக் கடுமையான ஆபத்து ஏற்பட்டுள்ளது - அதைக் கட்டுப்படுத்தித் தளையிடுவோரால் அந்த ஆபத்து ஏற்பட்டுள்ளது. காலங்கடந்து போன பழக்க வழக்கங்களை மாற்றுவதற்கு அனுமதிக்காதவர்களிடமிருந்து ஆபத்து வருகிறது மாறாக, அவர்கள் நமது சமுதாயத்தின் உயிர் நாடியான ரத்த ஓட்டத்தை உறைய அனுமதிக்கிறார்கள். இந்து சமுதாயத்தைப் பற்றி இன்று மிகவும் கவலைப்படுவதாகத் தோன்றுகிறவர்கள் சிறிது சிந்தித்துப் பார்ப்பார்களேயானால், மாண்புமிகு சட்ட அமைச்சர் கூறியுள்ளதை அவர்கள் ஒத்துக் கொள்வார்கள். அதாவது, நீங்கள் உயிர் பிழைக்க விரும்பினால் இந்து சமுதாயத்தைப் பழுதுபார்த்து சரி செய்யவேண்டும். இந்து சமுதாயத்தின் காவலர்கள் என்று தங்களை மார்தட்டிக் கொள்வதற்கு அவர்களுக்கு யார் அதிகாரம் தந்தார்கள்? நூற்றாண்டு நூற்றாண்டாக மாறிவரும் காலத்துடன் இணைந்து தானும் மாறி வரும் இந்து சட்டத்தைக் கட்டுப்படுத்தி தளையிடுவதற்கு விரும்புகிறவர்களை இந்து சமுதாயத்தை மற்றும் இந்து சட்டத்தை விளக்கிக் கூறும் ஆர்வலர்கள் என்று நான் கருதவில்லை. அதை மேம்படுத்தி, நமது முன்னோர்களின் பண்பாட்டுக்கும் பராம்பரியத்திற்கும் இசைவாக மீண்டும் அதைக் கொண்டு வர விரும்புகிறவர்களை, அதற்கு எதிராக இருப்பவர்களாக நான் கருதவில்லை. அதைக் கட்டுப்படுத்தித் தளையிடுபவர்கள் இந்து சமுதாயத்தின் நண்பர்களல்ல, மாறாக விரோதிகள் என்று கருதுகிறேன். கடந்த பல ஆண்டுகளின்போது இந்துக்கள் அடிமைகளாயிருந்து சீரழிந்த பல நூற்றாண்டுகளின்போது இந்து சமுதாயம் தான் இழந்தவற்றையெல்லாம் திரும்பப் பெறவேண்டுமென்றால், இந்த நாட்டில் இன்று நிலவுகின்ற சுதந்திரச் சூழலுக்கு இசைவாக இது தன்னை சரி செய்து கொள்ள வேண்டும். ஆண்களும் பெண்களும் நாட்டுக்கு சம அளவில் பங்காற்றுவதற்கு முன்வரவேண்டும். இந்த நாட்டின் சமூக சட்டங்களில் சமத்துவம் இல்லாவிட்டால், சமுதாயத்தில் சமத்துவம் இருக்க முடியாது. எனவே, இன்று இந்த சட்டத் தொகுப்பை எதிர்ப்பவர்கள், இதுபற்றிச் சிறிது கூடுதலாகச் சிந்திக்க

வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அவர்கள் அவ்வாறு செய்யாவிட்டால், இந்து சமுதாயமும், இந்து சட்டமும் பின்தங்கிப் போய் விடக்கூடும், ஏனெனில் முன்னேற்ற பவனி தொடர்ந்து நடைபெற வேண்டும். இந்தியா அடிமைத்தனத்திற்கோ அல்லது பிறருடைய ஆதிக்கத்தின் கீழோ பின்னோக்கிப் போகப் போவதில்லை.

*திரு. பி.எஸ். சர்வாத்தே (மத்திய பாரத்) : இந்த மசோதாவைப் பற்றி அறிவு சார்ந்த முறையிலும் தெளிவாகவும் விளக்கமளித்ததற்காக, டாக்டர் அம்பேத்கருக்கு என்னுடைய பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்வதற்கு விரும்புகிறேன். ஒரு பேராசிரியர் என்ற வகையிலும் வழக்கறிஞர் என்ற வகையிலும் அவர் சிறப்பாகப் பேசினார். மசோதாவின் பல ஷரத்துகளைப் பொறுத்தமட்டிலும், ஒருவர் சிலவற்றை ஒத்துக்கொள்ளலாம், சிலவற்றுடன் கருத்து மாறுபடலாம், உடன்படும் அம்சங்களைப் பற்றியோ, அல்லது வேறுபடும் அம்சங்களைப் பற்றியோ அதிகம் பேசவேண்டிய தருணம் இதுவல்ல. பொதுவான விவாதத்தில் சில பொதுவான கோட்பாடுகளைப்பற்றி மட்டும் கூறுவதற்கு விரும்புகிறேன். இந்தக் கோட்பாடுகளில் இந்த மசோதா, இதுவரையிலும் இந்து சட்டத்திற்கு பின்னால் அடங்கியிருந்த கண்ணோட்டங்களுக்கு அடிப்படையாகவே எதிர் திசையில் செல்கிறது என்பது என்னுடைய தாழ்மையான கருத்தாகும்.

இந்து சமுதாயத்தின் ஒரு கணிசமான பகுதி இந்த மசோதாவிற்கு எதிராக இருந்து வந்துள்ளது. அதை மறுக்க முடியாது. அதை மறைக்கவும் முடியாது. இது, ''மதத்திற்கு ஆபத்து'' என்ற கூக்குரலாகும் என்று சிலர் கூறக்கூடும்; இது மன உணர்ச்சி அடிப்படையிலானதாகும்; இது அர்த்தமற்றது என்று கூறக்கூடும். அதே சமயத்தில், 20 கோடிக்கு மேற்பட்டவர்களின் ஒரு சமுதாயத்தை ஜீவாதாரமான முறையில் பாதிக்கின்ற ஒரு சட்டத்தை இயற்றுவதற்குக் கங்கணம் கட்டிக்கொண்டிருப்பவர்கள், நின்று நிதானித்து, இதனுடைய சாராம்சத்தைப்பற்றி யோசிப்பது அவசியமாகும். இவ்வளவு அதிகமானபேர் - அறிவார்ந்த, கல்விஞானமுடையவர்கள் - இதை எதிர்ப்பதற்கு அந்த மசோதாவில் என்ன இருக்கிறது என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

(இந்தக் கட்டத்தில், திரு. துணை சபாநாயகர், தலைமைப் பீடத்திலிருந்து எழுந்து சென்றார், பின்னர், திரு. எஸ்.வி. கிருஷ்ண மூர்த்தி ராவ் (தலைவர் பட்டியலில் உள்ளவர்களில் ஒருவர்) அவைத் தலைவராக அமர்ந்தார்).

★ அ.நி. (சட்டப்பேரவை) : டி. தொகுதி II, பாகம் II, பிப்ரவரி 25, 1949; பக். 929-34.

இதற்கு இரண்டு காரணங்கள் உள்ளன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். நான் குறிப்பிடும் முதல் அம்சம் கூட்டுச் சொத்தின் தன்மையில் ஏற்பட்டுள்ள மாற்றமாகும். கூட்டுச் சொத்தின் இணை வாரிசு உரிமை அம்சம், அதற்குப் பின்னால் சில மிகவும் உன்னத மான கருத்துக்களைக் கொண்டிருக்கிறது என்று நான் தெரிவித்துக் கொள்வதற்கு விரும்புகிறேன். இணை வாரிசு உரிமை என்றால், ஒரு சமுதாய அக்கறை இருக்கிறது. இணை வாரிசுரிமை என்றால், இணை நலன் என்பதை இந்த அவையின் ஒவ்வொரு உறுப்பினரும் அறிவார். ஒவ்வொரு நபருக்கும் அனுபவிப்பதற்கு முழுமையான உரிமை இருக்கிறது என்று பொருளாகும். அதேபொழுதில் அந்த நபருக்குத் தனிப்பங்கு கிடையாது, சொத்தை யாருக்கும் மாற்றிக் கொடுப்பதற்கு உரிமையில்லை என்பதும் இதன் பொருளாகும். நவீனகால சமுதாயத்தின் முழுப் போக்கும், சமுதாயத்தின் சிந்தனைப் போக்கும் இந்தத் திசைவழியில்தான் இருக்கிறது. கம்யூனிஸ்டுகளை நாம் கண்டனம் செய்யக்கூடும், ஆனால், கம்யூனிசம் அதனுடைய தூய்மையான வடிவத்தில், சில விஷயங்கள் களையப்பட்ட வடிவில் நிச்சயம் ஏற்படும், ஏற்படத்தான் செய்யும். இந்த அம்சத்தில் கம்யூனிசம் என்றால் என்ன? நான் புரிந்துகொண்டுள்ளபடி, அதன் பொருள் "ஒவ்வொரு மனிதனும் அவனது சக்திக்கு ஏற்றபடி உழைக்க வேண்டும், ஒவ்வொருவரும் அவரது தேவைக்கேற்பப் பெற வேண்டும்." வேறு சொற்களில் கூறுவதெனில், ஒரு மனிதன் தனது கையிலுள்ள செல்வத்தைக் குறைந்தபட்சமாக அனுபவிக்க வேண்டும், அவன் தனது தனித்தன்மையைக் களையவேண்டும். சொத்தில் தனக்குத் தனியுரிமை இருப்பதாக அவன் ஒருபோதும் கருதக்கூடாது. இதுதான் அடிப்படையான கண்ணோட்டமாயிருந் தால், முற்போக்கான சிந்தனை உலகம் இந்தத் திசையில் நகர்ந்து கொண்டிருக்கிறதென்றால், எதிர்திசையில் செல்வது தவறாகும் என்பது ஒப்புக்கொள்ளப்படும் என்று நம்புகிறேன். அத்தகைய ஒரு கருத்தை வளர்ப்பதற்கும், இந்தக் கருத்தைப் பேணி வளர்க்கும் அமைப்புகளை ஊக்குவிப்பதற்கும் எல்லா முயற்சியும் செய்யப்பட வேண்டும். டாக்டர் அம்பேத்கர் தமது உரையில், இந்த கூட்டு வாரிசுரிமைக் கருத்தைக் குலைப்பதற்கு ஸ்மிருதிகாரர்களும் மற்றவர் களும் இதுவரையிலும் செய்த முயற்சிகளை விபரமாக எடுத்துக் கூறினார். இது இவ்வாறுதான் இருக்கிறது என்று கருதிக்கொண்டால், இப்பொழுது எதிர் திசையில் முயற்சி செய்யப்பட வேண்டும் - குலைக்கும் நிகழ்ச்சிப் போக்கைப் பூர்த்தி செய்வதற்கல்ல, மாறாகக் கூட்டுவாரிசுரிமை சொத்தைக் காப்பாற்றுவதற்காக.

திரு. எல். கிருஷ்ணசாமி பாரதி : இது சாத்தியமேயல்ல.

திரு. வி.எஸ். சர்வாதே : சாத்தியமில்லையா? ஆம், முயற்சி செய்யப்படாததெல்லாம் "அசாத்தியம்" என்று கூறி தவிர்க்கப்படு கிறது.

நீங்கள் முயற்சி செய்தால், இந்த உலகில் எதுவுமே சாத்திய மற்றதல்ல. எனவே இப்பொழுது கூட்டுவாரிசு சொத்துரிமை அமைப்பு ஒத்துக்கொள்ளப்படுகிறது என்று தெரிவித்துக் கொள் கிறேன். கூட்டு சொத்து வாரிசின் ஒவ்வொரு தனிப்பட்ட நபரும் அவருக்கு அதில் தனிப்பட்ட பிரத்தியேக நலன் இல்லாவிட்டாலும், அவர் அதிலுள்ள தனது தனிப்பட்ட நலனை யாருக்கும் மாற்றிக் கொடுக்க முடியாவிட்டாலும் - பொதுச் சொத்தைப் பூரணமாக அவர் அனுபவிக்கலாம். எனவே இதைப்பற்றி விவாதிக்க முயலும்போது, இந்தக் கூட்டு வாரிசுரிமைக் கருத்தை முழுமையாக எடுத்துக் கொள்ள வேண்டும். மிதாக்ஷராவினால் உருவாக்கப்பட்ட இந்தக் கூட்டுச் சொத்துரிமைக் கருத்து இதுதான் என்று தோன்றுகிறது: அதாவது உயிருடன் இருப்பவருக்கு உரிமை இருக்கிறது, ஒவ்வொரு குடும் பமும் ஒரு யூனிட், ஒரு தனிநபரல்ல. இதன் பொருள், குடும்பம், அதைச் சேர்ந்த தனிநபர்கள் இறந்துபட்டபோதிலும் தொடருகிறது என்பதுமாகும். ஒருவர் ஆணாக இருந்தாலும், பெண்ணாக இருந் தாலும் சம அளவில் சொத்தை அனுபவிப்பதற்கு அவருக்கு உரிமை உண்டு. இந்த அர்த்தத்தில் பாலின சமத்துவம் இருக்கிறது. எனவே, குடும்பத்தின் சொத்து (எதுவாக) எவ்வளவாக இருந்தபோதிலும் குடும்ப உறுப்பினர்களாக உள்ள நபர்களுக்கு அது போய்ச்சேரும் என்று ஏற்படுகிறது. எனவே ஒரு மகள், மற்றொரு குடும்பத்தின் உறுப்பினராக இருந்தால், அவர் முந்தையக் குடும்பத்தின் உறுப் பினராக இருக்க முடியாது, எனவே, அவசியமாகவே, அவர் அந்தக் குடும்பத்தில் எந்த உரிமையையும் அனுபவிக்க முடியாது. இது ஒரு மகளின்பால் புறக்கணிப்போ, அநீதியோ அல்லது அன்பு இல்லாமையோ ஆகாது. கூட்டுக் குடும்பம் என்பதன் கருத்தே இதுதான்: அதில் யார் உறுப்பினராக இருந்தாலும், விதவையாக இருந்தாலும் ஆணாகவோ, பெண்ணாகவோ இருந்தாலும், அவர் அக்குடும்பத்தின் உறுப்பினராக தொடர்ந்து இருக்கும் வரையிலும் அவர் குடும்பத்தின் சொத்தை அனுபவிக்கிறார், அதை மாற்றிக் கொடுப்பதற்கு யாருக்கும் உரிமை இல்லை. கூட்டுக் குடும்பத்தின் சொத்தைப் பிரிவினை செய்க்கூடாது, மற்றும் கூட்டுக் குடும்பத்தின் எந்த நபரோ அல்லது தனி நபரோ, குடும்பத்தின் சொத்தை யாருக்கும் மாற்றிக் கொடுப்பதற்கு எந்த உரிமையும் கிடையாது என்ற ஷரத்து சேர்க்கப்பட்டிருந்தால் நான் வரவேற்றிருப்பேன். அது, சரியான திசை வழியில் மிகவும் வரவேற்கத்தக்கதாக இருந்திருக்கும். அது கூட்டுக் குடும்ப அமைப்புக்கு அடிப்படையாக உள்ள கருத்துக்கு ஏற்றதாக இருந்திருக்கும்.

குடும்பம்தான் சமுதாயத்தின் ஓர் யூனிட்டாக எடுத்துக் கொள்ளப்படுகிறதேயன்றி, ஒரு தனி நபரையல்ல. இந்தக் கண்ணோட்டத்திலிருந்துதான், என்னுடைய எந்த சகோதரியும், தான் மோசமாக நடத்தப்பட்டதாகக் கருதவேண்டிய அவசியமில்லை; ஏனெனில் அவரும் அவருடைய சகோதரரும் அந்த அம்சத்தில் சம உரிமைகளைக் கொண்டிருக்கின்றனர். எனவே, இந்தியா போன்ற ஒரு பரந்த நாட்டில் சமூக யூனிட்டுகள் மீது தனித்தனிப் பரிசோதனைகள் இருந்தால் எதுவும் இழக்கப்பட்டுவிடாது என்று மாண்புமிகு டாக்டர் அம்பேத்கருக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ஒரு தனி நபர் ஒரு யூனிட்டாக இருக்க வேண்டுமென்று விருப்பப்பட்டால் அந்தப் பரிசோதனை எங்காவது முயற்சி செய்து பார்க்கப்படலாம். கூட்டுக் குடும்பம்தான் சமுதாயத்தின் ஒரு யூனிட்டாக இருக்க வேண்டுமென்றால் அந்தப் பரிசோதனையும் சில இடங்களில் தொடர்ந்து நடத்தப்படலாம். சமுதாயத்தில் பல்வேறு பரிசோதனைகள் நடத்தப்பட வேண்டிய அளவுக்கு நம் நாடு போதுமான அளவு ஒரு பெரிய நாடாகும். இரண்டும் தொடரட்டும், மக்கள் தாங்கள் பின்பற்றுவதற்கு விரும்புகிற சட்டத்தை அல்லது அமைப்பைத் தெரிந்தெடுத்துக் கொள்ளட்டும். இந்தியாவின் 20 கோடி மக்களுக்கு ஒரேசீரான சட்டத்திற்கு பதிலாக, இந்த நாட்டில் ஒன்றுக்கு மேற்பட்ட அமைப்புகள் இருந்தால் அதனால் நமக்கு எந்த இழப்பும் ஏற்பட்டு விடப்போவதில்லை.

இது தொடர்பாக, அம்பேத்கர் கூறிய ஒரு விஷயத்தைப் பற்றி நான் குறிப்பிட விரும்புகிறேன். அவருடைய அறிவாற்றலுக்காக அவரைப் பாராட்டுகிறேன். மதிப்புடன் அவருடைய உரையைக் கேட்டேன். ஏனெனில் அவருடைய வாதங்களின் நலனுக்காக, யார் மீதும் அவர் ஒருபோதும் சாடியதில்லை. அவருடைய தாக்குதல்கள் கனமானவை, ஆனால் அவை நேர்மையாகவும் நிதானமாகவும் இருந்தன. ஆனால் அன்றைய தினம் அவருடைய தெளிவான உரையின்போது பழங்காலத்திய பிராமணர்கள் 137 ஸ்மிருதிகளை உள்ளடக்குவதில் ஏன் ஈடுபட்டிருந்தனர் என்று தனக்குத் தெரியவில்லை என்று கூறி, அவர்களுக்கு வேறு நல்ல வேலையிருக்கவில்லையா என்ற வினவினார். மாண்புமிகு அமைச்சர் இதைக் கூறும்போது, அவருடைய வரலாற்று ரீதியான பார்வை ஒரு நிமிடம் அவரை விட்டு அகன்றுவிட்டிருந்தது. இந்த 137 ஸ்மிருதிகள் ஒரே சமயத்தில் எழுதப்பட்டவை அல்ல என்று அவருக்கு நினைவுபடுத்த விரும்புகிறேன். குறைந்தபட்சம் 250 ஆண்டுகளை உள்ளடக்கிய காலகட்டத்தில் அவை எழுதப்பட்டவையாகும். இவ்வாறு சராசரியாக,

ஒவ்வொரு ஸ்மிருதியையும் எழுதுவதற்கு சுமார் 20 ஆண்டுகள் பிடித்திருக்கும். ஒவ்வொரு தலைமுறைக்கும் ஒன்று என்பது இதன் பொருளாகும். ஆனால் இங்கு என்ன ஏற்படுகிறதென்றால், ஓராண்டு காலத்தில் மாண்புமிகு டாக்டர் ஒன்றுக்கு அதிகமான ஸ்மிருதி களை உருவாக்குகிறார். எனவே அந்த அவமதிப்பான சொற்களை அவர் கூறியிருக்க வேண்டியதில்லை. அவருடைய வாதத்தை விளக்கு வதற்கு அது சிறிதும் அவசியமற்றதாகும்.

ஐயா, நான் கூட்டுக் குடும்பச் சொத்தைப் பற்றிக் கூறிக் கொண்டிருந்தேன். கூட்டுக் குடும்பத்தின் சொத்தின் அடிப்படை யான கோட்பாடு என்னவெனில் அது கட்டுப்படுத்தப்பட்ட முறை யில் அதை அனுபவிப்பதற்கு அனுமதிக்கிறது என்பதுதான் என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

ஐயா, இந்து பண்பாடு என்றால் என்ன, இந்து சமயம் என்பது என்ன என்று அடிக்கடி கேட்கப்படுகிறது, பேரறிஞர்களே இதைப்பற்றி விளக்குவதற்கு அச்சப்படும்போது, என்னைப் போன்ற பிறருக்கு இதுபற்றி அவசரப்பட்டுக் கூறுவது சிரமமானதாகும். இருந்தபோதிலும், ஒருவர் சில சமயங்களில் தற்காலிக முயற்சிகள் செய்ய வேண்டியுள்ளது. அந்த முயற்சியை இப்பொழுது மேற் கொள்கிறேன். தற்போது விவாதத்திலுள்ள பொருளைப் பொறுத்த மட்டிலும், இந்துக்கள் தங்களுக்கு முன்னால் வைத்துக் கொண் டிருக்கிற அடிப்படையான அம்சங்கள், அனுபவிப்பதன் மீது நெடு கிலும் கட்டுப்பாடு இருக்கவேண்டும் என்பதாகும் என்று கருது கிறேன். அதாவது, அனுபவிப்பதை ஊக்குவிப்பது அல்ல, மாறாக அனுபவிப்பதன் மீது கட்டுப்பாடு இருக்க வேண்டும் என்பது அவர் களின் விதியாகும்; அவர்களது கருத்தின்படி சமூகத்தின் நலனுக்காகத் தனி நபர் தன்னை இழக்க வேண்டும் என்பதாகும்.

இனி, கட்டுப்பாடு என்ற கோட்பாட்டைப் பிரயோகிக்கும் போது, திருமணம் சம்பந்தமான அத்தியாயம் முழுவதையும் மாற்றி யமைக்க வேண்டும் என்று விண்ணப்பித்துக் கொள்கிறேன். இந்த அம்சத்தில், தொண்ணூறு சதவீத மக்கள், மரபாக, விவாகரத்து உரிமை பெற்றிருப்பதால், நீங்கள் என்ன செய்யப்போகிறீர்கள் என்று கேட்கப்பட்டுள்ளது. 90 சதவீதத்தினரின் வழக்கத்தை எஞ்சியுள்ள பத்து சதவீதத்தினர் மீது சுமத்தப்போகிறீர்களா என்று கேட்கப்படு கிறது. இந்த வகைப்பட்ட ஒரு வாதம் திறமையான ஒரு வார்த்தை ஜாலமே தவிர வேறல்ல, ஆனால் தர்க்கரீதியானதல்ல, நாம்

பரிசீலனை செய்ய வேண்டியதும், மாண்புமிகு டாக்டர் பரிசீலனை செய்யவேண்டியதும் என்னவெனில், மரபு என்ன என்பதையல்ல, மாறாக, எது நன்மையானது, எது அனுகூலமானது என்பதைத்தான். அங்கு என்ன இருக்க வேண்டும் என்பதைத்தான் நாம் பரிசீலனை செய்யவேண்டும். அதுதான் தொடர்ந்து அளவு கோலாக இருந்து வந்துள்ளது. அதுதான் தொடர்ந்தும் அளவுகோலாக இருக்க வேண்டும். இல்லாவிட்டால் முரண்பாடுதான் ஏற்படும். உதாரண மாக, 90 சதவீத மக்களிடையில் குடிக்கும் பழக்கம் இருக்கிறது. நாம் நிச்சயமாக மது விலக்கைத் தடுப்பதற்காக நிற்கவில்லை. குடிக்கும் பழக்கம் இருக்கிறது என்பதை மறுக்க முடியாது.

மாண்புமிகு டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் : அது ஒரு மரபு அல்ல.

திரு. வி.எஸ். சர்வாதே: சரிதான், நீங்கள் அவ்வாறு நினைக் கலாம். அந்த வகையில் என்னுடைய சிந்தனையை வெளிப்படுத்து வதற்கு எனக்கு சுதந்திரம் இருக்கிறது. (ஒரு மதிப்புக்குரிய உறுப் பினர் : ''90 சதவீத்தினர் குடிகாரர்களாக இல்லை.'') அதை சமூகத் தில் ஒரு பழக்கம் என்று கூறுவது ஒரு விஷயம், அவர்களைக் குடி காரர்கள் என்று கூறுவது வேறு விஷயம். அதுதான் வேறுபாடு. ஒரு பழக்கம் இருந்து வருகிறது, எனவே அதைச் சட்டத்தின் வாயிலாகத் தொடரச் செய்யவேண்டும் என்பது சரியான வாதமாகாது, அது நன்மையானதா, அல்லவா என்று வாதிக்க வேண்டும். இந்தக் கண்ணோட்டத்திலிருந்து நாம் பரிசீலனை செய்தால், திருமணம் முறிக்கப்பட வொண்ணாதது என்று இந்து சமூகத்தின் ஒரு குறிப் பிட்ட பகுதி கூறுகிறதெனில், தரப்புகள் விரும்பும்பொழுது, அவர் களை ஏன் நிர்ப்பந்தித்து, திருமணம் முறிக்கப்பட வேண்டும் என்று ஏன் சொல்ல வேண்டும்? இந்த மசோதாவில் அது அவசியமாகக் கூறப்படவில்லை. கட்டாயம் ஏதும் இல்லை. விருப்பத் தேர்வு தான் இருக்கிறது என்று வாதிக்கலாம். விருப்பத்தேர்வு எப்போதும் இருக்கிறது. மது அருந்தும் கடைக்கு போவதும், போகாமலிருப் பதற்கும் ஒரு குடிகாரனுக்கு விருப்பத் தேர்வு உண்டு. விருப்பத் தேர்வு எப்பொழுதும் உண்டு, இருந்தபோதிலும் அந்த நபர், மது அருந்தும் ஒரு கடை இருக்கும்போது, அங்கு போகவே செய்கிறார், எனவே சட்டத்தின் மூலம் மதுக்கடை மூடப்படவேண்டும். அது சமுதாயத்தின் ஒரு குறிப்பிட்ட பகுதிக்குப் பிரயோகப்படுத்துவது எனில், அதை நான் வரவேற்றிருப்பேன். திருமணம் சம்பந்தமான சட்டத்தில் ஒருதார மணம் இருக்க வேண்டும். நான் அதை ஒப்புக்

கொள்கிறேன். நான் அதற்கு மேலும் சென்று கட்டுப்பாடு கண்ணோட்டத்திலிருந்து, பார்த்தால், பெண்களோ, ஆண்களோ இரண்டாவது திருமணம் செய்து கொள்ளக்கூடாது என்று நான் கூறுவேன். அது ஒரு வரவேற்கத்தக்க ஷரத்தாக இருக்கும். ஆனால் அதற்கு மாறாக, நாம் கடைக்கோடி எதிர் நிலைக்குச் சென்று, ஒவ்வொரு திருமணமும், விருப்பப்பட்டால் கலைக்கப்படக் கூடும் என்ற நிலையை எடுத்துள்ளோம். இது விரும்பத்தக்கதல்ல என்று கருதுகிறேன். ஒரு குறிப்பிட்ட காலத்தில் விவாகரத்தைப் பண்டைக் கால இந்துக்கள் அனுமதித்தார்கள், என்பதில் ஐயமில்லை. முதலில் வரலாற்று நிலைமை எதுவாக இருந்தபோதிலும், பின்னர் அது தடை செய்யப்பட்டது. குடும்பத்தின் ஒற்றுமை கட்டிக் காப்பாற்றப் பட வேண்டும் என்பது இதற்குக் காரணமாக இருந்திருக்கக்கூடும் என்று நினைக்கிறேன். ஒரு தடவை திருமணம் நடந்துவிட்டால், அது கலைக்கப்படக் கூடாது என்று அவர்கள் விரும்பினர், அப்பொழுதுதான் வேறு ஒரு பெண் அந்தக் குடும்பத்திற்குள் வராமல் செய்யமுடியும்; மற்றும் குடும்பத்திலுள்ள பெண் வெளியில் போக முடியாமலும் செய்ய முடியும். சாத்தியமானவரையில் அந்த தற்செயல் நிலைமை தவிர்க்கப்பட வேண்டும். ஒரு திருமணம் கலைக்கப்படுவதற்கு ஏன் அனுமதிக்கப்படவில்லை என்பதற்கான காரணங்களில் இதுவும் ஒன்றாக இருந்திருக்கக்கூடும். எனவே, என்னுடைய யோசனை இதுதான். திருமணம் என்ற பகுதியில் இரண்டு பாகங்கள் இருக்கட்டும்: தங்களுடைய திருமணங்கள் கலைக் கப்படவேண்டும் என்று விரும்புபவர்கள், சிவில் திருமணச் சட்டத் தின்படி அவர்கள் திருமணம் செய்துகொள்ளட்டும், இங்கு நீங்கள் உருவாக்கும் ஷரத்தின்படி, அவர்கள் விருப்பத்தின் பேரில் சுதந்திர மாக திருமணத்தைக் கலைத்துக்கொள்ளட்டும். மற்றைய பாகத்தில் மதச் சடங்குகளின்படி திருமணம் செய்துகொள்ளட்டும்; அதில் திருமணத்தைக் கலைத்துக் கொள்வதற்கு இடமில்லை. இது, இரு தரப்பினரையும் திருப்திப்படுத்தும் என்று நினைக்கிறேன். என் னுடைய பணிவான யோசனை இதுதான். திருமணம் கலைக்கப் படுவதை ஏன் கட்டாயப்படுத்த வேண்டும்.

திரு. மகாவீர் தியாகி : அப்படியெனில், திருமணம் செய்து கொள்வதற்கு முன்பாகவே, பிரிந்து போவது பற்றி அவர்கள் முடிவு செய்ய வேண்டும்.

திரு. வி.எஸ். சர்வாத்தே : மதிப்புக்குரிய என்னுடைய நண்பர் என்னைப் பூரணமாகத் தவறாகப் புரிந்து கொள்ளுகிறார் என்று

கருதுகிறேன். நான் கூறுவதென்னவெனில், தங்களுடைய திருமணங்கள் கலைக்கப்படக்கூடாது என்று விரும்புபவர்கள், மதச் சடங்குகளின் படியான உரிமைகளின் படித்திருமணம் செய்துகொள்ள வேண்டும்; வருங்காலத்தில் தங்களுடைய திருமணங்கள் கலைக்கப் படுவதை விரும்புபவர்கள், சிவில் திருமணச் சட்டத்தின்படி திருமணம் செய்து கொள்ளட்டும்.

திரு. தாஜாமுல் உசேன் : திருமணத்திற்கு முன்பே விவாக ரத்து வேண்டும் என்று என்னுடைய மதிப்புக்குரிய நண்பர் அர்த்தப் படுத்துகிறாரா?

திரு. வி.எஸ். சர்வாத்தே : சிவில் (பதிவுத்) திருமணம் என்றால் விவாகரத்து செய்து கொள்ளலாம் என்று பொருளல்ல பிரிந்து போவதோ, விவாகரத்தோ இதன் பொருளல்ல, சிவில் திருமணம் என்று நான் கூறும்போது அது திருமணம்தான், அது விவாகரத்து என்று பொருள்பட முடியாது.

திரு. மகாவீர் தியாகி: அது திருமணம் என்றுங் கூட பொருள் படாது.

திரு. தலைவர் : அமைதி, அமைதி, மதிப்புக்குரிய உறுப்பினர் தமது உரையைத் தொடரட்டும்.

திரு. வி.எஸ். சர்வாத்தே : ஐயா, என்னுடைய விண்ணப்பம் இதுதான். மக்களின் சில பகுதியினர் விரும்பாத சில விஷயங்களைத் திணிக்கப் போகிறோமா என்பது குறித்து நாம் தெளிவாக இருக்க வேண்டும். அதற்கும் அப்பால் சென்று, மதச் சடங்கு ரீதியான திருமணங்கள் மதச் சடங்கு ரீதியானவை என்று நீங்கள் ஒப்புக் கொண்டால், அத்தகைய திருமணத்திற்கான நிலைமைகளை ஏற்படுத்துவதற்கு மதம் ஒரு சோதனையாக இருக்கட்டும் என்று நான் கூறுவேன். குழந்தைத் திருமணங்களையும், வயதுக்கு வராதவர் களின் திருமணங்களையும் மதம் அனுமதிக்கிறதென்றால், அவை அனுமதிக்கப்படட்டும். அது ஒரு முரண்பாடாகும்; முதலாவதாக, திருமணம் மதத்தின்படி நடைபெற வேண்டும் என்று கூறிவிட்டு, பின்னர் அது மதத்தின்படியும் இருக்கவேண்டும், இந்த மசோதா வில் கூறியுள்ளபடியும் நடைபெற வேண்டும் என்று கூறுவது முரண் பாடாகும். எனவே, ஒன்று மதச் சடங்குகளின்படி திருமணம் நடை பெறுவதை அனுமதிக்க வேண்டும், அல்லது, நீங்கள் விரும்பா

விட்டால், மதச் சடங்கு ரீதியான திருமணங்களை அனுமதிக்க வேண்டாம். அப்படியெனில், எல்லாத் திருமணங்களும் சிவில் (பதிவுத்) திருமணங்களாக இருக்க வேண்டும் என்று கூறுங்கள். மதச் சடங்கு ரீதியான திருமணங்கள் அனுமதிக்கப்படும் என்று நீங்கள் கூறினால், மதச் சடங்குகள்படி திருமணங்கள் நடத்தப்பட வேண்டும். இது என்னுடைய தாழ்மையான கருத்தாகும்; மேலும் மசோதாவின் 7-வது பிரிவின் ஷரத்துகளைப் பொறுத்தமட்டிலும், அவை மதச் சடங்கு ரீதியானவை அல்ல. மதச் சடங்குகளோடு, வேறு சில விஷயங்களும் சேர்க்கப்பட்டுள்ளன. எனவே, மதம் அனுமதிக்கப் படுகிறதெனில் கறாராக மதத்தின்படி இருக்கவேண்டும். நான் உங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவருகிற இரண்டாவது விஷய மாகும் இது. இதை எளிதாகச் செய்து விடலாம். இது திருப்தி ஏற்படுத்தும், மற்றும் தற்போதிருந்து வரும் அதிருப்திக்கான காரணங் களைப் பெருமளவுக்கு அகற்றிவிடும். கோட்பாடுகளின் ரீதியில் மட்டுமே பார்க்கும்போது, என்னுடைய எளிய யோசனை இதுதான். இந்த சட்டத்திலேயே, சமுதாயத்திலும் கூட்டுக் குடும்பத்திலும் கூட்டுவாரிசுரிமை தொடர்வதை அனுமதிக்கவேண்டும். இதனால் எந்த இழப்புமே ஏற்பட்டுவிடாது, இந்த நாட்டில் முஸ்லீம்கள், கிறிஸ்தவர்கள், பார்சிகள் ஆகியோர் இருக்கிறார்கள் - பார்சிகள் ஒரு சிறு சமூகத்தினரே. ஆயினும் அவர்கள், தமது சொந்த வாரிசுரிமை சட்டத்தைக் கொண்டிருப்பதற்கு அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்றால், ஒரு பெரிய பகுதி கூட்டு வாரிசுரிமையைப் பெற்றிருப் பதை அவர்கள் விரும்பினால் என் அனுமதிக்கக்கூடாது? இந்தக் கோட்பாடு ஏற்றுக்கொள்ளப்படுமேயானால், மசோதாவின் முன் வரைவு முழுவதிலும் அதற்கேற்ப மாற்றங்களைச் செய்ய முடியும்.

என்னுடைய மற்றொரு விண்ணப்பம் என்னவெனில் கருத் தறிவதற்காக மசோதா மீண்டும் சுற்றுக்கு விடப்பட வேண்டும் என்ப தாகும். இங்கு, அவைத் தலைவர் ஏற்கனவே கொடுத்துள்ள தீர்ப்பைப் பற்றி நான் குறிப்பிட விரும்பவில்லை. அப்பொழுது ஏற்பட்ட பிரச்சினை, மசோதா பற்றிய விதிகள் வெளியிடப்பட்டது போது மானதா, என்பதேயாகும். அது போதுமானது என்று தீர்ப்பு வழங்கப் பட்டது. ஆயினும் இதனால் மசோதா மீண்டும் சுற்றுக்கு விடப் படுவது, விரும்பத்தக்கதுதானா என்ற பிரச்சினையை எழுப்புவதி னின்றும் என்னைத் தடுப்பதில்லை. அது பார்க்காமல் விட்டுவிடப் பட்டுள்ளது என்று நான் கருதுகிறேன். அந்த மசோதா நிறைவேற்றப் படுமேயானால், டாக்டர் அம்பேத்கர் அதற்கு மாறாக என்ன கூறிய போதிலும், தானாகவே அது சமஸ்தானங்களுக்கும் பொருந்துவதாகி

விடும். மாகாணங்களுடன் இணைந்துவிட்ட சமஸ்தானங்களின் எல்லாப் பிரதேசங்களுக்கும் மற்றும், தங்களுக்காக சட்டமியற்று வதற்கு மத்திய அரசுக்கு அதிகாரம் இருக்கவேண்டுமென்று ஒத்துக் கொண்டுள்ள எல்லாப் பிரதேசங்களுக்கும் கூட அது பொருந்துவ தாகும்.

திரு. சீதாராம் எஸ். ஜாஜு (மத்தியபாரத்): இந்திய சமஸ் தானங்களுக்கும் அது பொருந்துவதற்கு என்ன ஆட்சேபம்?

திரு. வி.எஸ். சர்வாத்தே : அது பொருந்த வேண்டும் என்று தான் நான் கூறுகிறேன். நான் அதை ஆதரிக்கிறேன். மதிப்புமிக்க உறுப்பினர்கள் என்னைப் பேச அனுமதிக்காமல், நான் கருதுவதாக அவர்களே நினைத்துக்கொண்டு ஏன் குறை கூறுகிறார்கள் என்பதை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. இந்த மசோதா இந்திய சமஸ்தானங்களுக்கும் பொருந்த வேண்டும் என்றுதான் நான் கூறிக் கொண்டிருந்தேன். அது அவ்வாறு பொருந்துவதானால், - அது பொருந்த வேண்டுமென்றுதான் நான் மிகவும் விரும்புகிறேன் - அங்கே ஓர் அடிப்படையான உரிமை தோன்றுகிறது, உங்களுடைய மசோதா பொருந்துகின்ற ஒவ்வொரு பெரிய பிரதேசத்திற்கும், அதனுடைய கருத்தைத் தெரிவிப்பதற்கு அனுமதிக்க வேண்டும், அதுதான் நீதியாகும். இந்தப் பெரிய பிரதேசங்களில் இந்த மசோதா வெளியிடப்படவில்லை. எனவே அந்தப் பிரதேசங்களிலுள்ள மக்கள் இந்த மசோதாவை ஆழமாகப் பரிசீலிப்பதற்கு அவர்களுக்கு சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. அவ்வாறு சந்தர்ப்பம் கிடைத்திருந் தால், அவர்கள் மசோதாவை ஆழமாகப் பரிசீலித்திருப்பார்கள். இப்பொழுது, தங்களுக்கும் இந்த மசோதா பொருந்தும் என்பதை அவர்கள் அறியும்போது, மசோதாவும் அங்கு வெளியிடப்பட்டால், அவர்கள் தங்கள் கருத்தை வெளிப்படுத்தும் நிலைமையிலிருப் பார்கள். தங்களை பாதிக்கின்ற எந்தச் சட்டம் சம்பந்தமாகவும் தமது கருத்தை வெளிப்படுத்துவதற்கு அவர்களுக்கு ஒரு வாய்ப்புக் கொடுக்கப்பட வேண்டியது ஒவ்வொரு நபருடைய அடிப்படை யான உரிமையாகும். மேலும், அவர்களுடைய ஒவ்வொரு பிரதி நிதியும், இங்கு வாக்களிப்பதற்கு முன்னால், அந்த மக்களுடைய கருத்தை அறிய வேண்டியது கடமையாகும். எனவே சமஸ்தானங் களின் பிரதிநிதிகளின் கண்ணோட்டத்திலிருந்தும், சமஸ்தானங் களின் மக்களின் கண்ணோட்டத்திலிருந்தும் பார்க்கும்போது, தமது அபிப்பிராயத்தைத் தெரிவிபபதற்கு அவர்களுக்கு சிறிது அவகாசம் கொடுக்கவேண்டும் என்பது நியாயமானதேயாகும். எனவே நான்,

ஒரு இடைப்பட்ட யோசனையைக் கூறுகிறேன். அதாவது இந்தக் கூட்டத்தொடரில் இந்த மசோதா முடிவுக்கு வராவிட்டால், அத்தகைய நிலைமையில் - அவ்வாறு ஏற்படலாம் என்று நான் நினைக்கிறேன் - பின்னர் ஒரு சிறப்புக் கூட்டத்தொடரில் இதை விவாதத்திற்கு எடுத்துக் கொள்வது விரும்புத்தக்கதாக இருக்காதா என்பதை இந்த மசோதாவை முன்மொழிந்த மதிப்புமிக்க உறுப்பினர் யோசிக்கும்படிக் கேட்டுக்கொள்கிறேன்; இதற்கு இடைப்பட்ட காலம் அதாவது இரண்டு, அல்லது மூன்று அல்லது நான்கு மாத காலம் அந்த மக்களின் கருத்தை அறிவதற்குப் போதுமானதாக இருக்கும் என்று கருதுகிறேன். இது நியாயமானதாக இருக்குமென்றும், மசோதாவை வெளியிடுவதுதான் ஷரத்துக்களின் உணர்வுக்கு ஏற்றதாக இருக்குமென்றும் கருதுகிறேன். நீதிக்கு இது தேவைப்படவில்லையா என்பதை உணரும்படி நான் இந்த அவைக்கு வேண்டுகோள் விடுகிறேன். இந்த சட்டத் தொகுப்பைப் பற்றி எல்லாம் கூறப்பட்டு விட்டதாகக் கருதிக்கொள்ளக்கூடாது. மிகவும் தாழ்ந்த நிலையிலுள்ளவரும் கூட சில நல்ல யோசனைகளை முன் வைக்கக்கூடும். அவை நன்கு கற்றறிந்த டாக்டருக்குப் பயனுள்ளதாக இருக்கக் கூடும். இவ்வாறு வாய்ப்புக் கொடுக்கப்பட்டால், அது நீதியின் தேவைகளையும் பூர்த்தி செய்யும், பயனுள்ளதாகவும் இருக்கக் கூடும்.

இந்த வேண்டுகோளுடன் நான் முடித்துக் கொள்கிறேன், ஐயா.

திரு. கே.வி. காமத் : திரு . தலைவர் அவர்களே....

திரு. பி. தாஸ் (ஒரிசா : பொது): ஐயா, ஓர் ஒழுங்குப் பிரச்சினை, ஐயா, ஒரு பிரம்மச்சாரி, திருமணம் செய்து கொள்ளாதவர், ஒரு மகனைக் கூடப்பெறாதவர், தன்னுடைய முன்னோர்களுக்குத் தர்ப்பணம் செய்ய முடியுமா, இந்த மசோதாவின் மீது உரை நிகழ்த்தி, விவாதத்திற்குப் பங்களிக்க முடியுமா?

திரு. தலைவர் : இதில் ஒழுங்குப் பிரச்சினைக்கு ஏதுமில்லை. அவர் ஓர் இந்துவாக இருக்கிறவரையிலும் அவர் பேசலாம்.

***திரு. எச்.வி. காமத் :** ஐயா, ஒழுங்குப் பிரச்சினைக்கு நானும் பதிலளிக்கறேன். இரண்டு வழக்கறிஞர் நண்பர்களும், ஒரு பெண் நண்பரும் பேசியதற்குப்பின்னர், நான் ஒரு இடர்ப்பாடுடன் பேச வேண்டியுள்ளது. என்னுடைய மதிப்புமிக்க நண்பர்கள் பண்டிட்

★ அ.நி. (சட்டப்பேரவை) டி. தொகுதி II, பாகம் II, பிப்ரவரி 25, 1949, பக். 934-36.

தாகூர்தாஸ் பர்கவா மற்றும் திரு. சர்வாதேயின் சட்ட ரீதியான வாதங்களோ, அல்லது என்னுடைய மதிப்புமிக்க நண்பர் திருமதி ரேணுகாரேயின் இனிமையான நியாய வாதமோ, என்னிடத்தில் இல்லை. வழக்கறிஞர்களைப் பொறுத்தமட்டிலும், என்னுடைய மாண்புமிக நண்பர் சட்ட அமைச்சரே கவனித்துக் கொள்வார், இன்று, அவர்களுடைய உரைகளின்போது எழுப்பப்பட்ட வாதங் களுக்கு அவர் பதிலளிப்பார். திருமதி ரேணுகா ரேயைப் பொறுத்த மட்டிலும், நான் பொதுவாக அவருடன் உடன்படுகிறேன், எனவே அவருடைய வாதங்கள் எதையும் எடுத்துக்கொண்டு, அவற்றுக்கு எதிர்வாதம் புரிய வேண்டிய அவசியமில்லை.

என்னுடைய மதிப்புக்குரிய நண்பர் திரு. பி. தாஸ், நான் எழுந்து நின்றபொழுது, ஓர் ஒழுங்குப் பிரச்சினையை எழுப்பினார். அந்த ஒழுங்குப் பிரச்சினையே எனக்கு ஆதரவாக இருக்கிறது என்று கருதுகிறேன். இந்த மசோதாவின் மீது இந்த அவையில் பேசுவதற்கு எனக்கு உள்ள ஒரே ஆதார உரிமை, எனக்கு மனைவியோ, குழந்தையோ, அல்லது பெயரிட்டுச் சொல்லும் அளவிற்கு சொத்துக் களோ எனக்கு இல்லை. எனவே இந்தப் பிரச்சினை சம்பந்தமாக நான், மன உணர்ச்சிகளினால் பாதிக்கப்படாமல் பாரபட்சமில்லாத மனப்பாங்குடன் பேசமுடியும். இந்த மசோதாவின் பெரும்பாலான ஷரத்துகள் திருமணம், சொத்து, தத்து எடுத்துக்கொள்ளுதல், வாரி சுரிமை ஆகியவை சம்பந்தப்பட்டவையேயாகும். இந்த ஷரத்துகள், நம்முடைய பெரும்பாலான தத்துவஞானிகளின் இரண்டு சொற்கள் **காமினி, காஞ்சன்** என்பவை சம்பந்தப்பட்டவையே என்று தொகுத்துக் கூறிவிடலாம். இந்த இரண்டில் இதுவரையிலும் எதனாலும் பாதிக்கப் படாத நான், இந்த மசோதா மீது சொந்த நலன் சம்பந்தமில்லாத முறையில் அக்கறையில்லாத முறையிலல்ல - ஒரு சில கருத்துக்கள் கூறுவதற்கு உங்களின், அவையின் அனுமதியைக் கோருகிறேன். இந்த நூற்றாண்டு, கிறிஸ்துவுக்குப் பிந்திய இருபதாம் நூற்றாண்டு; ஆசியாவிலும், ஐரோப்பாவிலும், அமெரிக்காவிலும் பெண்கள் வரலாற்று மேடையில் எழுச்சியுற்றதைக் கண்டது. இந்தியாவும் நமது இந்து சமுதாயமும் இந்த உலக ரீதியான நிகழ்வுப் போக்குக்கு விதிவிலக்கல்ல. ஆண்களுக்கும் பெண்களுக்கும் இடையிலான உறவுகள் - அனைத்துப் புரட்சிகர எழுச்சிகளுடனும் விதிவசமாக ஒன்றிணைந்திருந்தன. இவை நமது காலத்தில் பத்தொன்பதாம் நூற்றாண்டு மற்றும் அதனுடைய நீண்ட கடந்த காலத்திலிருந்து பிதிரார்ஜிதமாகப் பெற்ற பழைய சமுதாயங்களை கிழித்துத் திறந்து

வருகின்றன மற்றும் அவற்றை மாற்றி வருகின்றன. நமது யுகம் பெண்களின் இயக்காற்றலினால் புகழ் பெற்றுள்ளது; அவர்கள் ஆண்களுடன் கூட உலகத்தில் தலைகீழ் மாற்றங்களை ஏற்படுத்தி வருகின்றன. (ஒரு மதிப்புக்குரிய உறுப்பினர்: ''ஆனால் நீங்கள் இதற்கு ஓர் விதிவிலக்கு'') உலக மறு நிர்மாணத்திற்கான திட்டங்களை வகுப்பதற்கும் உதவியுள்ளனர். பெண்களின் - ஏழை, விஷய ஞானமற்ற, எழுத்தறிவற்ற பெண்களின் குறிப்பிடத்தக்க, வீரம் செறிந்த சாதனைகளை - சத்தியாகிரஹம் என்னும் அகிம்சைப் போராட்டத்திலும், நெருப்பு ஜுவாலை வீசும், ரத்தம் சிந்தும் போராட்டத்திலும் கூட அவர்களின் சாதனைகளைப் பெருமையுடனும் மன நிறைவுடனும் நினைவு கூராதவர்கள் ஆத்மா மரணமடைந்தவர்களேயாவர். தொட்டில் ஆட்டும் கை ஆயுதத்தை ஏந்தவும் வலிமை படைத்ததென்பதையும், தேவைப்படும்போது ஆக்கிரமிப்பாளருக்கு எதிராக மென்மையான முறையில் ஆசிகூறும் வகையில் உயர்ந்து நிற்பதற்கும் வல்லவள் என்பதையும் எடுத்துக் காட்டியுள்ளது. பிற நாடுகளையும், பிற சூழ்நிலைகளையும் ஒரு பக்கம் தள்ளிவைத்துவிட்டு, நமது சொந்த நாட்டில், இந்தியாவில் பெண்கள், எவ்வாறு, ஆண்களோடுகூட, நவீனப் போர்முறைகளைப் பற்றி ஏதும் அறியாதிருந்தபோதும், லத்தி, துப்பாக்கிரவை, சிறைவாசம் ஆகியவை பரிச்சயமில்லாத நிலைமையிலும், ஆயிரக்கணக்கில் அவர்கள் எவ்வாறு மகாத்மா காந்தி மற்றும் நேதாஜி சுபாஷ் சந்திர போஸின் பதாகையின்கீழ் திரண்டார்கள் என்பதை நாமனைவரும் அறிவோம். இந்த வரலாற்றைப் பற்றி விவரமாகக் கூறுவதற்கு நான் அறிவேன். வேகமாக வளர்ச்சியடைந்துவரும் சமூக, பொருளாதார மாற்றத்தின் இந்தப் பின்னணியில்தான், இந்த அவையின் முன்னே கொண்டுவரப்பட்டுள்ள மசோதாவை நாம் பார்க்க வேண்டும். ஏனெனில் எந்தச் சட்டமும் சூனியத்தில் செயல்படவோ, அல்லது உருவாக்கப்படவோ முடியாது; மற்றும் எந்தச் சட்டமும் அது பிறப்பெடுத்த சமூகச் சூழ்நிலையிலிருந்து தனிமைப்பட்டு இருக்க முடியாது. அல்லது அதை, அதனின்றும் தனிமைப்படுத்திப் பார்க்கவும் முடியாது. சுருங்கக்கூறின் ஒரு குறும்புக்காரரின் கேலியான கூற்றைக் கொண்டு இந்தக் காலத்தைத் தொகுத்துக் கூறலாம். இன்று பெண்கள் நாடாளுமன்றத்தில் உட்காருகிறார்கள், பேருந்துகளில் நிற்கிறார்கள் என்று அவர் கூறினார். ரத்தினச்சுருக்கமாகக் கூறுவதெனில், தற்காலத்தில் ஏற்பட்டுள்ள புரட்சிகரமான மாற்றம் இதுதான். ஐயா, நான் ஏறத்தாழ ஓர் அரசியல் பிரசாரகர் என்று உணர்கிறேன். இந்த மசோதா குறித்து ஒரு சில கருத்துக்களை முன்வைக்கிறேன்.

இந்த அவையிலுள்ள என்னுடைய மதிப்புக்குரிய உறுப்பினர்கள் - இந்த மசோதாவினால் உடனடியாக பாதிக்கப்படாதவர்கள், இந்த மசோதாவில் இவ்வளவு அதிகமான அக்கறை எடுத்துக் கொண்டுள்ளது குறித்து மகிழ்ச்சி அடைகிறேன். ஐயா, என்னுடைய மதிப்புமிக்க நண்பர், வலிமைமிக்க பண்டிட் நசிருத்தீனுக்கு, இந்த அடைமொழி முற்றிலும் பொருத்தமற்றதல்ல என்று நான் நினைக்கிறேன். ஐயா, மவுண்ட் பேட்டனை 1947 ஆகஸ்டு 15ல் ''பண்டிட்'' என்று அழைக்கப்பட முடியுமென்றால், திரு. நசிருத்தீனை ஒரு ''பண்டிட்'' என்று அழைப்பதற்கு பர்மாவின் லார்டு மவுண்ட் பேட்டனைக் காட்டிலும் கூடுதல் உரிமை உண்டு. பல நண்பர்கள் இந்த மசோதாவில் அக்கறை செலுத்தி வருகிறார்கள், இதைக் காலத்தின் ஒரு மகிழ்ச்சிகரமான அடையாளம் என்றும் வருங்காலத்திற்கு ஒரு நல்ல நற்குறியென்றும் நான் வரவேற்கிறேன். ஏனெனில், இன்று நாம் ஓர் ஒன்றுபட்ட சமுதாயமாக சரியான வழியில் சென்று கொண்டிருக்கிறோம்; விரைவில் நமது நாடு முழுமைக்கும் ஒரு சீரான சிவில் சட்டத்தை நாம் கொண்டிருப்போம்.

இந்த சபையிலும் வெளியிலும் உள்ள உறுப்பினர்கள், முழுமையாக இந்த மசோதாவுக்கு ஆதரவாக இல்லாதவர்கள், இது சம்பந்தமாக முழு மூச்சாக செல்வதற்கு விரும்பாதவர்கள், குறைந்தபட்சம் அவர்களில் சிலராவது ஸ்மிருதிகள், சாஸ்திரங்கள், மற்றும் நமது தர்மம் சம்பந்தமாக ஒரு நிலையை மேற்கொள்ளுகின்றனர். நல்லது, ஐயா, தர்மம் என்றால் என்ன? இந்தப் பிரச்சினையை நாம் முடிவு செய்யாவிட்டால், இந்த மசோதா சம்பந்தமாக இந்த நாட்டில் சிலர் மேற்கொள்ளும் நிலையை நாம் புரிந்துகொள்ளவோ அல்லது நிராகரிக்கவோ முடியாது. தர்மம்! இது ஒரு வெறும் சடங்கு, வெளிப் பூச்சு அல்லது சடங்காச்சாரங்களின் தொகுப்பு மட்டுமா? அல்லது அதைக் காட்டிலும் ஆழமான, ஆன்மா, இதயம், மனம் மற்றும் உணர்வு சம்பந்தப்பட்ட ஒன்றா? தர்மம்! சமஸ்கிருதத்தில் இந்தச் சொல்லின் பிறப்பியல் தர்மம் என்பது உலகம் ஆதாரப்பட்டு நிற்கும் ஒன்றாகும். **எனிதம் தார்யதே ஜகத்** உலகம் - ஜகத் - ஆதாரப்பட்டு நிற்பதுதான் தர்மம்.

ஒரு சில சடங்குகளை, சடங்காச்சாரங்களை, பெயரளவிலான சம்பிரதாயங்களை கடைப்பிடிப்பதானது தர்மத்தில் அடங்கியுள்ளதா, அல்லது, அது அதைக் காட்டிலும் ஆழமான ஒன்றா என்று நாம் கேட்க வேண்டாமா?

தர்மத்துடன் இடைத்தொடர்புள்ள, அல்லது பிணைந்துள்ள **ஸ்மிருதிகளைப்** பொறுத்தமட்டிலும், என்னுடைய மாண்புமிகு நண்பர் டாக்டர் அம்பேத்கர், ஒரு வேளை 137 **ஸ்மிருதிகள்** இருக்கக் கூடும் என்று அன்றைய தினம் கூறினார். நான் கூறுவது தவறா யிருந்தால் அவர் என்னைத் திருத்தட்டும். அவற்றை அவர் எண்ணி யுள்ளார் என்று நான் நம்புகிறேன். **உபநிடதங்களைப்** பொறுத்த மட்டிலும், அவை 108 இருப்பதாகவும், இன்னும் அந்த அளவுக்கு இதுவரையிலும் கண்டறியாத தோண்டியெடுக்கப்படாத உபநிட தங்கள் இருப்பதாகவும் கூறப்படுகிறது. **ஸ்மிருதிகளைப்** பொறுத்த மட்டிலும் டாக்டர் அம்பேத்கருக்குத் தெரிந்தவை 137. இப்பொழுது 138வது **ஸ்மிருதியும்** நமக்குக் கிடைத்துள்ளது. அவர் என்னை மன்னிப் பாராக, நான் இதை வேடிக்கையாகக் கூறவில்லை. ஏனெனில், இந்த மசோதாவும், புரட்சிகரமானதாக இல்லாவிட்டாலும், நமது இந்து சமூக உறவுகளில் மாற்றங்களைப் புகுத்தியுள்ளது. எனவே, நமக்காக ஏற்கனவே எழுதப்பட்ட பிற இந்து சமூகத் தொகுப்பு களுக்கும், சமூக வாசகங்களுக்கும் பிரயோகிக்கப்பட்ட அதே சொல்லை நான் பிரயோகிக்க முடியும். இதை நாம் 138வது ஸ்மிருதி என்று அழைக்கலாம். இதை பீமஸ்மிருதி என்று நான் அழைக் கிறேன். இதை **பீமஸ்மிருதி** என்று அழைப்பதற்காக டாக்டர் அம்பேத்கர் என்னை மன்னிப்பார் என்று நம்புகிறேன். இந்த மசோதாவைத் தயாரித்து, அதை அவையில் சமர்ப்பிப்பதில் முடி வடைந்துள்ள இந்த இயக்கத்தின் மற்றொரு ஆதரவாளரின் பெயரை நான் சேர்த்துக் கொள்வதெனில், நான் இதை **நரசிம்மா** என்று அழைப்பேன். ராவ் குழுதான் இந்த மசோதா தோற்றுவிக்கப் பட்டிருப்பதற்குக் காரணமாகும். இறுதியாக நான் இதை பீம ஸ்மிருதி என்று அழைக்கமாட்டேன். மாறாக, பீம நரசிம்ம ஸ்மிருதி என்று அழைக்கிறேன்.

நமக்கு முன் உள்ள மசோதாவிற்கு வருவோம். ஸ்மிருதிகள் நன்கு அறியப்பட்டவைகளாக இருந்தபோதிலும், அவை அவற்றுக் கிடையிலேயே வேறுபடுகின்றன. அதே ஸ்மிருதிகாரம், சில சமயங் களில், வெவ்வேறு வாசகங்களில் வேறுபடுகின்றன. ஒரு கவிஞரும் கூட தனது கவிதைகளில் முரணில்லாமல் இல்லை. ஷேக்ஸ்பியர் ஒரு நாடகத்தில், பெண்களைப்பற்றி, ''நொய்மையே, உன் பெயர் தான் பெண்'' என்று குறிப்பிட்டார், மற்றொரு நாடகத்தில், ஒரு பெண்ணை தன்னுடைய தொடையிலேயே காயங்களை ஏற்படுத்திக் கொள்ளும் அளவிற்கு வலுவானவள் என்று குறிப்பிடுகிறார். புரூட் டஸின் போர்ஷியாவை நான் குறிப்பிடுகிறேன்! நம்மடைய சொந்த

நாட்டையே எடுத்துக்கொண்டால், புகழ்பெற்ற கவிஞரும் தத்துவ ஞானியுமான துளசிதாசர் இவ்வாறு கூறினார்: ஒரு பட்டிக்காட்டான், ஒரு தற்குறி, ஒரு விலங்கு, ஒரு சூத்திரன், மற்றும் ஒரு பெண் - இவர்கள் அனைவரும் அடிக்கப்பட வேண்டியவர்கள்.

திரு. ராஜ்பகதூர் : (மத்திய ஐக்கிய தேசங்கள்) : இந்த நன்கு அறிமுகமாகியுள்ள கவிதைவரிகளுக்கு திரு. காமத் கொடுத்துள்ள வியாக்கியானம் முற்றிலும் தவறானதாகும் என்று இந்த அவைக்குத் தெரிவித்துக் கொள்வதற்கு விரும்புகிறேன்.

திரு. காமத் : என்னுடைய நண்பர் பேசுவதற்கு வாய்ப்புப் பெறும்போது இது குறித்து அவருடைய வியாக்கியானத்தை வழங்குவார் என்று நம்புகிறேன்.

திரு. ராஜ் பகதூர் : இதன் பொருள் அறிவாழமற்ற, நாகரிகமற்ற ஒரு சூத்திரனும் ஒரு விலங்கைப் போலுள்ள பெண்ணும் கண்டிக்கப்பட வேண்டியவர்கள் என்பதுதான். இதன் பொருள் அறிவாழமற்ற சூத்திரனும் மிருகத்தனமான பெண்ணும் கண்டனத்திற்குரியவர்கள் என்பதுதான்.

திரு. காமத்: ஆனால், நமக்கு சட்டத்தை வழங்கிய மனு, பெண்கள் மதிக்கப்படும்பொழுது கடவுளர்கள் மகிழ்ச்சியடைவார்கள் என்று கூறுகிறார்.

பல்வேறு ஸ்மிருதிகளும் சாஸ்திரங்களும் ஒரு பக்கமிருக்க, நமது சொந்த சாஸ்திரம் - இந்துவுக்கு மிகவும் மகத்தான சாஸ்திரம் - என்ன கூறுகிறது? பகவத் கீதை ஸ்ரீ கிருஷ்ணனால் அர்ஜுனனுக்கு உபதேசம் செய்யப்பட்ட பொழுது, இந்துக்களிடையில் இருந்த பல்வேறு பழக்க வழக்கங்கள் மக்களின் சில பகுதிகளை இழிவுபடுத்துவதாயிருந்தன. அது சம்பந்தமாக ஸ்ரீகிருஷ்ணா, நன்கு அறிமுகமாகியுள்ள வாசகங்களில் ஒன்றில், எந்த ஒரு மனிதனுடைய மிக உயர்ந்த இலட்சியம் பற்றி, அர்ஜுனனிடம் இவ்வாறு திட்டவட்டமாகக் கூறினார்:

திரு. தலைவர் : மதிப்புக்குரிய உறுப்பினர் திங்களன்று தனது உரையைத் தொடரலாம்.

(பின்னர் அவை ஒத்திவைக்கப்பட்டு, மீண்டும் 1949 பிப்ரவரி 28, திங்களன்று காலை 10-45 மணிக்குக் கூடும் என்று அறிவிக்கப்பட்டது).

---

*இந்து திருமணங்களை செல்லத்தக்கதாக்கும் மசோதா

பொறுக்குக் குழுவின் அறிக்கை சமர்ப்பிக்கப்படுவதற்கான கால அவகாசம் நீட்டிக்கப்படுதல்

பண்டிட் தாகூர்தாஸ் பர்கவா (கிழக்குப் பஞ்சாப் - பொது) : நான் கீழ்வருவதைப் பிரேரணை செய்கிறேன்.

> "இந்துக்கள், சீக்கியர்கள், ஜைனர்கள் மற்றும் அவர்களின் வெவ்வேறு சாதிகள், உப-சாதிகள் இடையிலான திருமணங்களை செல்லுபடியாக்கும் இந்த மசோதா சம்பந்தமான பொறுக்குக் குழுவின் அறிக்கையை சமர்ப்பிப்பதற்காக நிர்ணயிக்கப்பட்டுள்ள கால அவகாசம் 1949, மார்ச் 25 வரையில் நீட்டிக்கப்படுகிறது."

நிகழ்ச்சி நிரல் அறிவிப்பில் இங்கு கொடுக்கப்பட்டுள்ள தேதி மார்ச் 11. ஆனால் உங்களுடைய அனுமதியுடன் அதை மார்ச் 25 என்று திருத்துவதற்கு விரும்புகிறேன். ஏனெனில், மாண்புமிகு சட்ட அமைச்சர் அப்பொழுது டில்லிக்கு வெளியே போகிறார், இது சம்பந்தமாக அவரால் அதிக நேரம் ஒதுக்க முடியாது. எனவே இந்தத் திருத்தத்துடன் நான் இந்தப் பிரேரணையை முன்மொழிகிறேன்.

இந்த மசோதா இந்த அமர்விலேயே இந்த அவையில் சமர்ப்பிக்கப்படவேண்டுமென்று நான் மிகவும் ஆவலாக இருக்கிறேன். எனவே, மார்ச் 25க்குள் தேர்வுக்கமிட்டி தனது அறிக்கையை சமர்ப்பிக்கும்படி செய்ய வேண்டுமென்று மாண்புமிகு சட்ட அமைச்சரையும், இந்த மசோதாவுக்குப் பொறுப்பாக உள்ள அதிகாரிகளையும் கேட்டுக்கொள்கிறேன். அரசக்கு என்னுடைய வேண்டுகோளுக்கு ஆதரவு அளிக்கும்படியும் இந்த அவையை விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன். ஏனெனில் இந்த மசோதா மிகவும் முக்கியமான ஒன்றாகும். இந்த அமர்விலேயே இது நிறைவேற்றப்படலாம்.

திரு. ஆர்.கே. சித்வா (மத்திய மாகாணங்கள் மற்றும் பீரார் : பொது): இந்த விஷயம் நிச்சயமாகப் பொறுக்குக் குழுவின் கைகளில் தான் உள்ளது. இதில் இந்த அவை என்ன செய்ய முடியும்? அறிக்கையை வழங்குவதை விரைவுபடுத்துமாறு என்னுடைய மதிப்புக்குரிய நண்பர் பொறுக்குக் குழுவை வேண்டிக் கொள்ளட்டும். அவர்கள் அதை மகிழ்ச்சியுடன் செய்வார்கள் என்று கருதுகிறேன்.

★ அ.நி. (சட்டப் பேரவை) டி. தொகுதி II, பாகம் II, 1949 பிப்ரவரி 28, பக். 940.

பண்டிட் தாகூர்தாஸ் பர்கவா: அந்தத் தேதியை நீட்டிக்க வேண்டுமென்று நான் விரும்புகிறேன். அறிக்கை உரிய காலத்தில் கிடைக்குமாறு சட்ட அமைச்சர் பார்த்துக் கொள்ள வேண்டுமென்று ஆவலாக உள்ளேன். இதில் இந்த அவை எனக்கு ஆதரவளிக்க வேண்டும்.

திரு. தலைவர் : பிரச்சினை என்னவெனில்:

இந்துக்கள், சீக்கியர்கள், ஜைனர்கள் மற்றும் அவர்களது பல்வேறு சாதிகள், உப-சாதிகள் இடையிலான திருமணங்களை செல்லுபடியாக்குவதற்கான மசோதா சம்பந்தமான பொறுக்குக் குழுவின் அறிக்கை சமர்ப்பிக்கப்படுவதற்கான கால அவகாசம் 1949 மார்ச் 25 வரையில் நீடிக்கப்படுகிறது'' இந்த பிரேரணை ஏற்றுக்கொள்ளப்பட்டது.

இந்து சட்டத் தொகுப்பு - விவாதம் தொடர்ச்சி.

திரு. தலைவர் : இந்து சட்டத் தொகுப்பு மசோதா பற்றிய விவாதத்தை அவை இப்பொழுது தொடர்ந்து நடத்தும்.

*திரு. எச்.வி. காமத் (மத்திய மாகாணங்கள் மற்றும் பேரார் பொது) : திரு. தலைவர் அவர்களே, வெள்ளிக்கிழமையன்று பிற்பகலில் இந்த அவை ஒத்திவைக்கப்பட்டபோது ஸ்ரீகிருஷ்ணனைப் பற்றி நான் கூறிக்கொண்டிருந்தேன். மானிட வாழ்வின் மிக உயர்ந்த குறிக்கோளைப் பொறுத்த மட்டிலும் கூட, கீதையில் ஸ்ரீகிருஷ்ணன் ஆணையும் பெண்ணையும் முற்றிலும் சமத்துவத் தரத்தில் வைத்திருந்தார். இந்துக்களுக்கு கீதைதான் புனிதமான ஸ்மிருதியாகும். ஆக உயர் சாஸ்திரமாகும். எல்லாத் தத்துவ ஞானத்தின், எல்லா மதங்களின் சாராம்சமாகும். அந்த நன்கு பிரபலமான பாடலில் ஸ்ரீகிருஷ்ணன் இவ்வாறு கூறுகிறார்.

''ஸ்திரியோ வைசேயஸ்தத சூத்ரஸ்தெம யாந்தி பரம்காதிம்''

அதாவது ''பெண்கள், வைசியர்கள், மற்றும் சூத்திரர்கள் - அந்தக் காலத்தின் அடித்தட்டிலுள்ள மற்றும் ஒடுக்கப்பட்டுள்ளவர்கள் அல்லது சாதிகள் - அவர்களும் கூட பிராமணர்களுடனும் மற்றும் இதரர்களுடனும் சமத்துவமாக, சமநிலையில் உள்ளவர்களே.''

★ அ.நி. (சட்டப் பேரவை) டி. தொகுதி II, பாகம் II, 1949 பிப்ரவரி 28, பக். 940-56.

திரு. எல். கிருஷ்ணசாமி பாரதி (சென்னை : பொது) : திரு. காமத் அவர்களே, நீங்கள் கூறுவது மிகவும் சரி.

திரு. எச்.வி. காமத் : மோட்சமும் பரகதியும் பொறுத்தமட்டிலும், அதைப் பெண்களும் அடைவதற்கு எவ்விதத்திலும் தடை இல்லை. இன்றைய தினம் சில ஆண்களும் சில சாமியார்களும் கூட - மதத்தலைவர்கள், ஆன்மீகத் தலைவர்கள் என்று அழைக்கப்படுகின்றவர்கள் - ஆண்களும் பெண்களும் சமத்துவமற்ற நிலையில்தான் வைக்கப்பட வேண்டும் என்று கருதுகின்றனர். எல்லா அம்சங்களிலும் அவர்கள் ஒன்றுபோல் இல்லை என்பதை நான் ஒத்துக்கொள்கிறேன்...

மௌலானா ஹஸரத் மோகனி (உ.பி. பொது) : அவர்கள் எவ்வாறு சமமாக இருக்கிறார்கள்?

திரு. எச்.வி. காமத் : அவர்கள் சமமற்றவர்கள் என்று கூறுவதும், அந்த வாதத்திற்கு முட்டுக்கொடுப்பதற்காகக் கற்பனைக் கெட்டாத காரணங்களைக் கூறுவதும் எனக்கு அதிர்ச்சி ஏற்படுத்துகிறது. அன்று ஒரு சாமியார் பேசுவதைக் கேட்கும் துரதிருஷ்டம் எனக்கு ஏற்பட்டது. ஆணும் பெண்ணும் சமத்துவமற்றவர்கள் என்று அவர் குறிப்பிட்டார். அவ்வாறு கூறுவதற்கு என்ன காரணங்கள்? அவர் கூறியது விசித்திரமாயிருந்தது - நான் சொல்வதை அவை ஏற்றுக்கொள்ளும் - ஓர் ஆண் மீசையை வளர்க்கிறார், பெண்ணுக்கு அது இல்லை, என்று கூறினார். நான் தமாஷாக இதைக்கூறவில்லை. ஐயா, அந்த சுவாமிஜி பேசிய கூட்டத்தில் என்னுடைய நண்பர்கள் பலரும் இருந்தனர். அவர் மிகவும் ஆழ்ந்த உணர்வுடன் இதைக் கூறினார். ஆண் மீசையை வளர்க்கிறார், பெண்ணால் அது முடியாது. ஒரு பெண்ணால், அதிகபட்சமாகப் போனால், மூன்று நான்கு அல்லது ஐந்து குழந்தைகளை ஓராண்டில் பெற முடியும் என்று அவர் கூறினார்.

மதிப்புக்குரிய ஓர் உறுப்பினர் : ஓராண்டிலா?

திரு. எச்.வி. காமத் : அவள் ஒரு சமயத்தில் மூன்று பிள்ளைகளை நான்கு குழந்தைகளை அல்லது ஐந்து குழந்தைகளைப் பெறுகிறாளா என்பதைப் பொறுத்து இருக்கிறது, ஐயா, ஆயினும் ஆண், ஒரு நூறு அல்லது அதற்கு மேலும் அதிகமான குழந்தைகளுக்குத் தகப்பனாவதற்கு வல்ல உள்ளாற்றல் உள்ளவன் என்று அவர் தொடர்ந்து பேசினார். ஐயா, இது ஒரு விசித்திரமான வாதம் என்று எனக்குப் படுகிறது.

ஆண் - பெண்ணின் சமத்துவம் பற்றி நாம் பேசும் பொழுது, அதை நாம் ஓர் ஆன்மீக அடிப்படையில் கருதுகிறோம். அதை ஸ்ரீகிருஷ்ணர் கீதையில் இவ்வாறு கூறுகிறார்:

"ஸர்வபூதஸ்தம் ஆத்மானம் ஸர்வபூதானி சாத்மனி"

அதுதான் அடிப்படை, அதுதான் அளவுகோல், மனிதர்களின் அல்லது, ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையிலான சமத்துவத்திற்கு அதுதான் அளவுகோலாகும்.

மனிதர்களின் சமத்துவத்திற்கு - அவர்கள் உயர்வானவர்களோ தாழ்ந்தவர்களோ, ஏழையோ, பணக்காரனோ, ஆணோ, பெண்ணோ இதுதான் சோதனை, இதுதான் அளவுகோல், இதுதான் தரம், இதுதான் அளவுகோல்.

யோ மாம் பஸ்யதி ஸர்வத்ர
சர்வம் ச மயி பஸ்யதி

உயர்ந்தவர்களோ தாழ்ந்தவர்களோ, செல்வந்தர்களோ ஏழையோ, ஆணோ, பெண்ணோ மனிதர்களிடையேயான சமத்துவத்திற்கு இதுதான் பிரமாண சூத்திரம், படித்தரம் அளவுகோல்.

ஐயா, சுவாமிஜி விளக்கிய அசமத்துவம் என்ற கருத்தை நான் ஏற்றுக்கொள்ளவில்லை. அதே சமயத்தில் பெண் - இன்று அவர்களில் சிலர் செய்வதைப்போல், புகைபிடிப்பது மது அருந்துவது ஆகியவற்றின் மூலம் சமத்துவத்தை அடைவது என்பதையும் நான் ஏற்றுக் கொள்ளவில்லை. ஐயா, அதன் மூலம் அவர்கள் ஆணுடன் சமத்துவம் தேடுகிறார்கள் என்றால், அதுவும் வெறுக்கப்பட வேண்டிய ஒன்றேயாகும். அதுபோன்றே, பெண்கள் பற்றிய முற்போக்கான - மேற்கத்திய அர்த்தத்தில் முற்போக்கான கருத்தமைப்பையும் நான் ஆதரிக்கவில்லை - அவர்கள் மேலைய கருத்தமைப்பை ஒருவேளை, அதேபோன்று பின்பற்றும் முயற்சியில், முற்போக்காக இருப்பதாகக் கருதிக்கொண்டு நடன அரங்கு நடனம் மற்றும் பிற மேலையப் பழக்க வழக்கங்களைப் பின்பற்றக்கூடும். ஐயா, இதுவும் ஆண்களுடன் சமத்துவத்தைப் பெறுவதற்கான வழியல்ல என்று கருதுகிறேன்.

திருமதி பூர்ணிமா பானர்ஜி (உ.பி.: பொது) : இது இந்து சட்டத் தொகுப்பில் சேர்க்கப்படவில்லை அவள், ஒரு பங்காளியில்லாமல் தனியாகவா நடனமாடுகிறாள்?

திரு. எச்.வி. காமத் : அதை நான் அறிவேன். ஆனால் இங்கு நாம் ஆண்-பெண் சமத்துவத்தைப் பற்றிப் பேசிக் கொண்டிருக் கிறோம். ஐயா, இங்கு நம்முடைய மகத்தான அறிஞரும் தத்துவ ஞானியும் இந்து தர்மம் பற்றியும், இந்து வாழ்க்கை முறைப் பற்றி யும் நன்கு கற்றுணர்ந்து தகுதி பெற்றவருமான டாக்டர் சர்வபள்ளி ராதாகிருஷ்ணன் இவ்வாறு கூறுகிறார்:

> ''நவீன காலப்பெண், நான் அவ்வாறு கூறலாமென்றால், தனது சுய மரி யாதையை இழந்து வருகிறாள். அவள் தனது சொந்த தனித்தன்மையை யும், தனிச்சிறப்பையும் மதிப்பதில்லை, மாறாக, அவள் ஆண்களைப் பார்த்து அதேபோன்று நடக்க முயன்று, தன்னையறியாமலேயே அவனுக்குப் புகழ்மாலை சூட்டுகிறாள். அவள் வேகமாக ஆண்தன்மை அடைந்து கொண்டும், யாந்திரீகமாகவும் ஆகிவருகிறாள்.

திரு. ஆர்.கே. சித்வா (மத்தியப்பிரதேசம் மற்றும் பேரார் : பொது) : நவீன கால மனிதனை (ஆணைப்) பற்றி என்ன?

திரு. எச்.வி. காமத்: ஐயா, நமது பெண்கள் இதை மனதில் ஏற்றிக்கொண்டு, ஆண்களுடன் சமத்துவத்தைப் பெறுவதற்கு அத்தகைய முயற்சிகளில் இறங்க மாட்டார்கள் என்று நம்புகிறேன்.

திருமதி அன்னிமாஸ்கரீன் (திருவாங்கூர் சமஸ்தானம்) : நவீனகால ஆண் அதைக் காட்டிலும் எந்த வகையிலும் மேம்பட்ட வனாக இருக்கிறானா என்ற கேள்வியை நான் கேட்கலாமா?

திரு. எச்.வி. காமத்: இந்தக் கேள்விக்குப் பெண்கள்தான் பதில் சொல்ல வேண்டும்.

ஐயா, எனவே ஆண்களுக்கும் பெண்களுக்கும் இடையிலான சமத்துவத்தைப்பற்றி நான் பேசும்போது எனக்குமுன்னால் சீதா, சாவித்திரி, தமயந்தி, கார்கி, மைத்ரேயி, உபயபாரதி ஆகியோரின் உதாரணங்கள் உள்ளன. இந்தப் பெண்களைப் பற்றிய பண்டைய வரலாற்றையும், நம்முடைய பண்டைய வேதகாலத்திலும், அதற்குப் பின்னரும்கூட இந்தப் பெண்கள் வகித்த ஸ்தானங்களைப்பற்றியும் நமது சொந்தப் பண்டைய வரலாற்றிலிருந்து படிப்பதற்கு எனக்கு அனுமதி அளிப்பீர்களா? இன்று இந்து சட்டத் தொகுப்பை எதிர்க்கும் பலரும் அதனைத்தான் சார்ந்துள்ளனர். வேதகாலத்திலும் உபநிடத காலத்திலும், சமுதாயத்தில் பெண்கள் மிகவும் உயர்ந்த இடத்தை வகித்துவந்தனர் என்று கூறப்படுகிறது. உபநிடத காலத்தின் மிகவும் அசாதாரணமான திறமை வாய்ந்த பெண்களில் மைத்ரேயியின் பெயர்

பிரதானமாகக் காட்சியளிக்கிறது. அவருடைய ஆன்மீக மனத்தின் ஒளி இன்றும்கூட உலகத்தைப் பிரகாசிக்கச் செய்கிறது. தங்களுடைய அறிவுக்கூர்மைக்காக இரண்டு பெண்கள் தனிச் சிறப்புடன் பிரகாசிக்கின்றனர். வரலாற்றுக்கு முந்திய காலத்தில், ஓர் அகில இந்திய சமய மாநாடு நடைபெற்றது; மற்றொரு மாநாடு புத்தர் காலத்திற்குப் பின்னால் நடைபெற்றது. இந்த நாட்டில் அனைத்து வகைப்பட்ட மாநாடுகள் நடத்தப் பெறுவது ஒரு மரபாக இருந்து வந்துள்ளது, எனவே இதற்கு விதிவிலக்கல்ல. அம்மாநாடுகள் கூட்டப்பெற்றது வெறும் தத்துவார்த்த விவாதத்திற்காக அல்ல; மாறாக, நாட்டின் ஆன்மீக வாழ்வுக்கு அடிப்படையாக இருக்கவேண்டிய கோட்பாடுகளை நிறுவுவதற்கேயாகும். முதலாவது மாநாட்டில் யாக்ஞவல்கிய முனிவர் - நமது சட்டங்களை உருவாக்கியவரைப் போன்றவர் அறிவுரை பகன்றார்; இரண்டாவது மாநாட்டில் மகத்தான சங்கராச்சாரியர் அறவுரை போதித்தார். முதலாவது மாநாடு, அதாவது யாக்ஞவல்கியர் மாநாடு, ஜனகமகாராஜனால், மாபெரும் ஜனகரால், கர்மயோகியால் கூட்டப்பெற்றது. அதில் இந்தியா முழுவதிலுமிருந்து காஷ்மீரிலிருந்து கன்னியாகுமரி வரையிலுள்ள கைபர் கணவாயிலிருந்து சொர்ரபுஞ்சி வரையிலுமுள்ள முனிவர்கள் கலந்துகொண்டனர். அப்பொழுது பெண்களின் சார்பில், சிறுமைப்படுத்தப்பட்டவர்களின் கோரிக்கைகளை முன்வைத்துப் பேசுவதற்கு கார்கி துணிச்சலாக எழுந்து நின்றபோது, அந்த முனிவர்கள் வாயடைத்துப் போயினர். ஐயா, அந்த லட்சியத்தை நோக்கி நமது பெண்கள் முன்னேறிக்கொண்டிருக்க வேண்டும். அவர்கள் நிச்சயம் முன்னேறுவார்கள் என்று நான் நம்புகிறேன். ஆனால் சிறிது காலத்தில் கார்கி தோற்கடிக்கப்பட்டாள், ஆனால், உறுதியான போராட்டத்திற்குப் பிறகே அவள் தோல்வியடைந்தாள்.

இரண்டாவது மாநாட்டில், சங்கராச்சாரியாரின் மாநாட்டில், இந்த முக்கியத்துவம் வாய்ந்த கூட்டத்தில் தலைமை தாங்கும் பொறுப்பு மந்தன மிஷ்ராவின் மனைவி, உபயபாரதிக்கு ஏற்பட்டது. இப்பொழுது, இது மிகவும் முக்கியமானதாகும் - என்னுடைய பெண் நண்பர்கள் இதை கவனிக்க வேண்டும் - உலகத்தின் வரலாற்றில், ஒரு முக்கியமான கூட்டத்திற்கு ஒரு நீதிபதியாக ஒரு பெண் தேர்வு செய்யப்பட்ட தனியொரு உதாரணம் கூட அதுவரையில் கிடையாது அந்தப் பெண் தனது சிறப்பான அறிவாற்றலையும் தகுதியையும் வெளிப்படுத்தினார், அவர் உபயபாரதி - சங்கராச்சாரியாருக்கு ஆதரவாகத் தீர்ப்புக் கூறினாள். (மதிப்புக்குரிய உறுப்பினர்கள் : கேளுங்கள், கேளுங்கள்!) இதன் விளைவாக, அவளுடைய

கணவர் ஒரு சந்நியாசியானார் தனது எதிராளியின் சிஷ்யரானார். அவருடைய கருத்து, அதற்கப்புறம், நாட்டின் தலையாய சமயமாக அங்கீகரிக்கப்பட்டது. "உண்மையில், (ராமகிருஷ்ண மடத்தினால் வெளியிடப்பட்ட "இந்தியாவின் கலாசாரப் பாரம்பரியம்" என்ற நூலிலிருந்து நான் வாசிக்கிறேன்). விடுதலை பெற்ற மனதுடன் கூடிய, படைப்புச் சிந்தனையாளர்களான மூல நூலாசிரியர்கள் அல்ல, மாறாக, யாந்திரீக எண்ணங்கொண்ட விமர்சகர்கள் - திக்ககரர்கள் - ஸ்மிருதிகளை எழுதியவர்கள் அல்ல - திகாஸ்களை எழுதியவர்கள்தான், பெண்களின் உரிமைகளை ஒடுக்குவதற்கு முனைந்தனர். அவர்களை (பெண்களை) அறிவில்லாதவர்களுடனும் பிரமைகளுடனும் கூட்டுச் சேர்ந்தவர்களாக அவர்கள் கருதினர், என்று அந்த நூலாசிரியர் எழுதினார்.

ஐயா, இப்பொழுது, இந்த மசோதாவை எதிர்க்கும் நமது நண்பர்களில் பலர் - இந்த சபையிலுள்ளவர்களை நான் குறிப்பிட வில்லை, வெளியிலுள்ளவர்களைக் குறிப்பிடுகிறேன் - தர்மத்தின் பேரால் தங்கள் நிலையை எடுக்கின்றனர். அன்று நான் இந்தக் கேள்வியை முன்வைத்தேன்: "தர்மம் என்றால் என்ன?" இந்து சட்டத் தொகுப்பு - எதிர்ப்புக் கமிட்டி வெளியிட்டுள்ள பிரசுரங் களில் ஒன்று, நமக்கு சில புத்திமதிகள் கூறத் துணிகிறது. அது என்ன? அவர்கள் பழைய சுலோகத்தை மேற்கோள் காட்டுகின்றனர். அது திட்டவட்டமாக எதில் கூறப்பட்டுள்ளது என்று எனக்கு நினைவில்லை - ஆனால் பஞ்சதந்திரத்தில் அது மேற்கோள் காட்டப் படுகிறது:

*"நசாசபா யாத்ரா நா சாந்தி விருத்தஹ
விருத்தநாடயே நா வதந்தி தர்மம்"*

"அது விருத்தஹர்கள் இல்லாத சபாவோ அல்லது பேரவையோ அல்ல"

மதிப்புக்குரிய ஓர் உறுப்பினர் : ஆனால் அத்தகைய பலர் இங்கே இருக்கிறார்கள்!

திரு. எச்.வி. காமத் : தர்மத்தைப்பற்றிப் பேசாத மனிதர் விருத்தா அல்ல. ஐயா, இந்த இந்து சட்டத்தொகுப்பு - எதிர்ப்புக் கமிட்டியைச் சேர்ந்த நமது நண்பர்கள் "விருத்தா" என்பதன் பொருளை சரியாகப் புரிந்து கொள்ளவில்லை என்பதற்காக நான்

வருத்தப்படுகிறேன் - யார் விருத்தா, யார் விருத்தா அல்ல என்பதை அவர்கள் புரிந்து கொள்ளவில்லை. மகாபாரதத்தில் ஒரு கதை இருக்கிறது: 12 வயதான சரஸ்வத முனி என்ற ஒரு சிறுவன், நாட்டில் பஞ்சம் ஏற்பட்டிருந்தபோது, வயதான ரிஷிகள் அனைவரும் சரஸ்வதி நதிக்கரையில் உண்ணாவிரதம் மேற்கொண்டு, தவம் செய்து வந்தவர்கள் - தங்களுடைய உயிர்க்களைக் காப்பாற்றிக் கொள்ள விரும்பி அங்கிருந்து வேறிடங்களுக்குப் பெயர்ந்து சென்றனர் - அப்பொழுது இந்த சிறுவன் அங்கிருந்து ஓடிப்போகாமல் தனது தாய் சரஸ்வதியுடன் அங்கேயே உறுதியாகத் தங்கி வந்தான். அதனால்தான் சரஸ்வதி அவனுக்குக் காலையிலும் பகலிலும், இரவிலும் மீன் உணவு அளித்து போஷித்தாள். அதனால்தான் சரஸ்வத் பிராமணர்கள் இன்றும் கூட மீன் சாப்பிட்டு வருகின்றனர். இந்த பிராமணச் சிறுவன் பஞ்சத்தைப் பொருட்படுத்தாது. அங்கேயே வைராக்கியத்துடன் இருந்தான். அந்தப் பிரதேசத்தில் பல ஆண்டுகள் பன்னிரெண்டு ஆண்டுகள் பஞ்சம் நிலவியதாகவும், ஆனால் இளம் சிறுவன் சரஸ்வத் முனி உலகில் எல்லா சரஸ்வத் பிராமணர்களின் தோற்றுவாயான அந்த சிறுவன் தொடர்ந்து அங்கேயே இருந்து வந்தான் என்று அந்தக் கதை தொடர்கிறது. பஞ்சம் முடிந்த பிறகு, தங்கள் உயிரைக் காப்பாற்றிக் கொள்வதற்காக ஓடிப்போன ரிஷிகள், ஒருவருக்குப் பின் ஒருவராக, கொஞ்சங் கொஞ்சமாக, சரஸ்வதி நதியின் கரைகளுக்கு, பஞ்சத்தினால் தடைப்பட்டு போன தங்கள் தவத்தை மீண்டும் தொடர்வதற்குத் திரும்பி வந்தனர். அங்கு அந்த 24 வயது இளைஞன்மீது ஆதிக்கம் செலுத்த அவர்கள் முயன்றனர். பஞ்சம் தொடங்கியபோது அவன் 12 வயது சிறுவனாக இருந்தான், பஞ்சம் முடிந்தபோது அவன் 24 வயது வாலிபனாகியிருந்தான். அவர்கள் அவன்மீது ஆதிக்கம் செலுத்தத்தொடங்கினர். ''நீ எங்கள் காலடியில் உட்கார வேண்டும்; எங்கள் உத்தரவுகளின்படி நடக்க வேண்டும்; எங்களிடமிருந்து கற்றுக் கொள்ள வேண்டும்; எங்களுடைய சீடனாக வேண்டும்'' என்று அவர்கள் கூறினர். ''கேவலம், உங்களுக்கு அவமானமாக இல்லை, முனிவர்கள், ரிஷிகள், தவ சிரேஷ்டர்கள் போல் நீங்கள் பாசாங்கு செய்கின்றீர்கள், உயிருக்கு பயந்து ஓடினீர்கள், மரணத்தைக் கண்டு அஞ்சி ஓடினீர்கள். நீங்கள் தான் என் காலடியில் உட்கார்ந்து கற்றுக்கொள்ள வேண்டும்''. இவ்வாறு 24 வயதான அந்த இளைஞன் 70, 80 வயதான அந்த முதியவர்களிடம் கூறினான். மகாபாரதம் மேலும் இவ்வாறு கூறுகிறது:

> *''நா தெனா விருதோ பவதி யெனஸ்ய பலிதம் ஷிராஹ்*
> *யோ வை யுவபியாத்யா நஸ்தம் தேவா ஸ்தவிரம் விதூஹ்''*

(ஒரு மனிதன் தனது நரைமுடியின் காரணமாக மட்டுமே ஒரு விருத்தன் அல்ல ஓர் இளைஞன்கூட, நன்கு கற்றறிந்தவன், கடவுள்களால் விவேகி என்று அழைக்கப்படுகிறான்).

விருத்தி அடைந்தவனே விருத்தன். உண்மையில் ''விருத்தா'' என்ற சொல் முதியவன் என்று தவறாக மொழிபெயர்க்கப் பட்டுள்ளது. இதன்பொருள், விருத்தியை எய்தினவனே, அதை விவேகம், வளர்ச்சி, அபிவிருத்தி என்று நீங்கள் கூறலாம் - அதுதான் விருத்தி..... இங்கு நமது நண்பர்கள் இவ்வாறு கூறுகிறார்கள்.

''நா சா சபா யாத்ரா நா சாந்தி விருத்தா -
விருத்தா நா தே யே நா வதந்தி தர்மம்''

''விருத்தி'' அல்லது விவேகம் என்ற அந்தப் பொருளிலும் இங்கு என்னுடைய நண்பர்களில் பலர், அந்தத் தகுதிக்கு ஏற்றவர்களாக இருப்பார்கள். ஆனால் என்னுடைய நண்பர்கள் அந்த சுலோகம் முழுவதையும் மேற்கோள் காட்டாமல் நின்று விட்டார்கள். அவர்கள்.

''நா சா சபா யாத்ரா, நா சாந்தி விருத்தாஹ்,
விருத்தா நா தேயே நா வதந்தி தர்மம்''

என்று கூறுவதுடன் தொடங்குகிறார்கள். ஆனால் தர்மம் என்றால் என்ன? அந்த சுலோகம் பின்னர், தர்மம் என்பது என்ன என்று கூறுகிறது. அவர்கள் சுலோகத்தின் பின்வரும் பகுதியை சௌகரியமாக விட்டுவிடுகிறார்கள். அந்த சுலோகம், மேலும் பின்வருமாறு கூறுகிறது.

''தர்மா சா நா யாத்ரா நா சத்யமாஸ்டி'',

சத்தியம் இல்லாத இடத்தில் தர்மம் இல்லை. எனவே, தர்மம் சம்பந்தமாகத் தங்களுடைய நிலையை மேற்கொள்ளுகின்றவர்கள் சம்பந்தமாக என்னுடைய தாவா என்னவென்றால், இந்து தர்மம் என்பது என்ன என்பதை அவர்கள் சரியாகப் புரிந்து கொள்ளவில்லையென்பதுதான்.

நம்முடைய மாபெரும் அறிஞரும் தத்துவ ஞானியுமான டாக்டர் சர்வபள்ளி ராதாகிருஷ்ணன், இந்த விஷயம் சம்பந்தமாக, குறிப்பாக இந்து தர்மம் சம்பந்தமாக என்ன சொல்கிறார் என்பதை

இந்த அவைக்கு எடுத்துக் கூறுவதற்கு மீண்டும் உங்களுடைய அனுமதியைக் கோருகிறேன் அவர் நமக்கு இவ்வாறு கூறுகிறார்:

> ''ஒரு சீரான, நிலையான, மாற்றப்பட முடியாத இந்து மதம் என்று ஒன்று மில்லை. நம்பிக்கை அம்சத்திலோ அல்லது நடைமுறையிலோ ஆனாலும் சரி அத்தகையது எதுவுமில்லை. இந்துமதம் ஓர் இயக்கம்; ஒரு நிலை அல்ல; ஒரு நிகழ்வுப் போக்கு, ஒரு விளைபயன் அல்ல; ஒரு வளரும் பாரம்பரியம் (மரபு), ஒரு நிலையான ஞானோதயமல்ல. வருங்காலத்தில் சிந்தனைக் களத்திலோ அல்லது வரலாற்றுக் களத்திலோ ஏற்படும் எந்த அவசர நிலையையும் அது சமாளிக்கும் என்று நம்புவதற்கு அதனுடைய கடந்தகால வரலாறு நமக்கு ஊக்கமூட்டுகிறது.....

இந்த முன்னறிவிப்பு இன்று மெய்யாகிவருவது குறித்து நாம் மகிழ்ச்சியடைகிறோம். ஐம்பதாண்டுகளுக்கு முன்னால் சுவாமி விவேகானந்தர்தான், வேதாந்தம் மனித சமுதாயத்தின் மதமாகு மென்று கூறினார் - நம்முடைய மகான்களால், ரிஷிகளால், முனிவர் களால் உலகத்திற்கு வழங்கப்பட்ட வேதாந்தம் அது. ராதாகிருஷ்ணன் மேலும் இவ்வாறு கூறுகிறார்:

> ''நமது பண்டைய சமயத்தைப் புதிய கண்களுடன் பார்ப்பதற்கு நாம் தொடங்கியுள்ளோம். நமது சமுதாயம் ஒரு ஸ்திரமற்ற சமநிலையில் இருப்பதாக நாம் உணர்கிறோம். நிறைய விஷயங்கள் காலாவதியாகிப் போய், நோயுற்றுள்ளன. அவற்றை அகற்றியாக வேண்டும்.

ஐயா, இங்கு நமது பெரும்பாலான நண்பர்கள் அவர்களது சொந்த வழியில் இந்து சிந்தனை மற்றும் நடைமுறையின் தலைவர் களாக இருக்கிறார்கள், அது குறித்து நான் நிச்சயமாக இருக்கிறேன் -

> ''இந்து சிந்தனை மற்றும் நடைமுறையின் தலைவர்கள், இந்து மதத்தின் அடிப்படையான கோட்பாடுகளை சரண் செய்வதல்ல, மாறாக, ஒரு கூடுதல் சிக்கலான மற்றும் நோயுண்ட சமூக அமைப்பின் தேவைகளுக்கு ஏற்ப, அவற்றை மீண்டும் வலியுறுத்த வேண்டும், இதுவே காலத்தின் தேவை என்று உணர்ந்தனர்.

அவர் மேலும் கூறுகிறார்:

> ''இத்தகைய ஒரு முயற்சி, இந்து சமயத்தின் வரலாற்றில் பல தடவை நிகழ்ந்த ஒரு நிகழ்வுப் போக்கு மீண்டும் ஏற்படுவதேயாகும். இசைவாக்கிக் கொள்ளும் பணி நடைபெற்று வருகிறது. வேர்கள் ஆழமாக உள்ளபோது, வளர்ச்சி மெதுவாக உள்ளது. ஆயினும் இருளில் ஒரு சிறிய மெழுகுவர்த்தியை ஏற்றுபவர்கள் வானம் முழுவதும் சுடர்விட்டுப் பிரகாசிக்க உதவுவார்கள்.''

இந்து தர்மம் பற்றிய இந்த விளக்கவுரையை இந்த மசோதாவை எதிர்க்கின்ற, தர்மத்தின்பேரால் இந்த மசோதாவைப் பரிசீலனை

செய்வதைக் கூட எதிர்க்கின்ற என்னுடைய நண்பர்கள் படிக்க வேண்டுமென்று நான் பரிந்துரை செய்கிறேன். 'தர்மத்திற்கு ஆபத்து' அல்லது 'சமுதாயத்திற்கு ஆபத்து' என்ற இந்தக் கூக்குரலானது, கடந்த காலத்தில் சமுதாயத்தை சீர்திருத்துவதற்காக செய்யப்பட்ட ஒவ்வொரு முயற்சியையும் தடைசெய்ய விரும்பியவர்களால் எழுப்பப்பட்டது யாருக்குத் தெரியாது, யார் நினைவுகூராமல் இருக்கிறார்கள்? இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னால், தீண்டாமைக்கு எதிராக இயக்கம் தொடங்கப்பட்டபோது நம்மவர்கள் சிலர், உயர்வர்க்க, பழமைவாத இந்துக்களும்கூட, இந்து மதத்திற்கு ஆபத்து, சமூகமுறைமைக்கு ஆபத்து சமுதாயம் கட்டுக்குலையப் போகிறது என்று கூறவில்லையா? இருந்தபோதிலும் நாம் மிகவும் தேவைப் பட்ட அந்த சீர்திருத்தத்தை உறுதியாகக் கடைப்பிடிக்கவில்லையா? இந்து சமுதாயம் எல்லோரும் சமம் என்ற அடிப்படையில் பரிணாம வளர்ச்சி அடைவதை விரைவுபடுத்துவதற்கு நாம் உதவவில்லையா? இந்த முயற்சிகளின் உச்ச நிலையாக, நகல் அரசியல் சாஸனத்தில், தீண்டாமையைத் தடைசெய்தும், எந்த உருவத்திலும் அல்லது வடிவத்திலும் அதை சட்டவிரோதமாக்கியும் ஒரு விதியை நாம் ஏற்றுக்கொள்ளவில்லையா? வைதீகப் பண்டிதர்கள் எது இந்து தர்மம் என்று உரிமை கொண்டாடி வந்தபோதிலும் அதைப் பொருட் படுத்தாது நம்மால் அதைச் செய்ய முடிந்ததென்றால், சட்டமியற்றுவதற்கோ, அல்லது சமூக உறவுகளையும் தனிநபர் சட்டத்தையும் முறைப்படுத்துவதற்கும் நாம் ஏன் முன் செல்லக் கூடாதென்பதற்கு எந்தக் காரணத்தையும் என்னால் காண முடியவில்லை.

ஐயா, மீண்டும், குழந்தைத் திருமணத்தைத் தடை செய்த சாரதா சட்டத்திற்கு எதிராக, இந்து தர்மத்திற்கு ஆபத்து, இந்து மதத்திற்கும் இந்து சமுதாயத்திற்கும் ஆபத்து என்ற காரணங்கூறி, எதிர்ப்புத் தொடங்கப்பட்டது மதிப்புக்குரிய உறுப்பினர்களுக்கு நினைவிருக்கும் என்று நம்புகிறேன். கடந்த நூற்றாண்டில், இறந்து போன கணவனின் உடலுடன் மனைவி (விதவை)யையும் சேர்த்து எரியூட்டும் 'சதி' வழக்கம் ஒழிக்கப்படுவதற்கு முயற்சி செய்யப் பட்டபோது முன்னேற்றத்தின் பாதையில் தடைக்கல்லை வைக்கும் இதே பிற்போக்காளர்கள்தான், இந்து தர்மம் உடன்கட்டை ஏறுவதை (சதி) இந்து தர்மம் அனுமதிக்கிறது என்று அதைக் கண்டனம் செய்து, அது பெண்ணுக்கு உயர்ந்த விமோசனத்தை அளிக்கிறது என்றும், எனவே நீடித்துத் தொடரவேண்டும் என்றும் கூறினர். அவர்களின் கிளர்ச்சியையும் தடங்கலையும் பொருட்படுத்தாது அது போன்ற மிகவும் தேவைப்பட்ட சீர்திருத்தங்கள் அமலுக்குக் கொண்டு வரப்பட்டன.

இந்த மசோதா கிராமப்புற மக்களுக்கு எட்டவில்லையென்றும், அப்பாவியான கிராமப்புற மக்கள் இதைக் காணவில்லை, அல்லது படிக்கவில்லை அல்லது பரிசீலனை செய்யவில்லை என்றும் அன்று பண்டிட் தாகூர்தாஸ் பர்கவா கூறினார். இந்த சபையில், இதுபற்றி விவாதம் செய்வதற்கு முன்னால் இந்த மசோதா குறித்து அவர்களது பிரதிபலிப்புகளைத் தெரிந்து கொள்வதற்கு அவர் ஆர்வம் காட்டினார். அவர் அவ்வாறு கூறியபோது அவரே இந்த சபையில் முன்மொழிந்த சில மசோதாக்களை அவருடைய சொந்த ஹிஸ்ஸார் தொகுதி விவசாயிகளே பார்க்கவில்லை, என்ற உண்மையை அவர் மறந்து விட்டார். அவருடைய ஆலோசனையின் பேரில் நமது மசோதாக்களின் பிரதிகளை நம் நாட்டின் ஒவ்வொரு கிராமத்திற்கும், குக்கிராமத்திற்கும் குடும்பத்திற்கும் சுற்றுக்கு விடப் போகிறோமா என்று நான் வியப்படைகிறேன்.

திரு. மகாவீர் தியாகி (உ.பி. : பொது): இந்த நாட்களில் விவசாயிகள் எல்லாம் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படுவதில்லை.

திரு. எச்.வி. காமத் : இப்பொழுதெல்லாம் விவசாயிகள் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படுவதில்லை என்று திரு. தியாகி கூறுவதைக் கேட்க நான் வியப்படைந்தேன். அவர்கள் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படுவதில்லையென்றால், கணக்கில் எடுத்துக் கொள்ளப்படவேண்டியவர்கள் வேறு யார்?

மதிப்புக்குரிய உறுப்பினர்கள் : நீங்கள்தான்.

திரு. எச்.வி. காமத் : இந்தப் பாராட்டுக்காக உண்மையில் நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன் ஐயா, அண்மை வருங்காலத்தில், நான் மட்டுமன்றி, இந்த அவையிலுள்ள என்னுடைய அனைத்து நண்பர்களும் என்னைப் போன்றே சம அளவில் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படவேண்டியவர்களாக இருப்பார்கள் என்று நான் நம்புகிறேன்.

ஐயா, பண்டிட் தாகூர்தாஸ் பர்கவா கூறியுள்ள சில கருத்துக்களுக்கு நான் ஆதரவு தெரிவிக்கும் அதே சமயத்தில் பாதிக்கப்பட்ட மக்களிடையில் சுற்றுக்கு விடப்படவில்லை. அல்லது முறையாக வெளியிடப்படவில்லை என்ற காரணத்தின் பேரில், இந்து சட்டத் தொகுப்பு மசோதாவை அவர் எதிர்ப்பது பொருத்தமற்றதல்ல என்று நான் கருதுகிறேன். அந்த வாதம் முற்றிலும் ஏற்றுக்கொள்ளப்பட

முடியாததாகும். அப்படிப் பார்த்தால், கோடிக்கணக்கான மக்களின் வாழ்க்கையை பாதிக்கின்ற, இங்கு நிறைவேற்றப்படுவதற்கு முயற்சி செய்யப்படும் ஒவ்வொரு மசோதாவும், அவர்களுக்கு, அவர்கள் தங்களுடைய அங்கீகாரத்தையோ அல்லது எதிர்ப்பையோ, பதிவு செய்வதற்காக அவர்களுக்கு அனுப்பப்பட்டாக வேண்டும். ஐயா, இப்பொழுது, சமத்துவம் என்ற இந்த எரிச்சலூட்டும் பிரச்சினைக்குத் திருப்திகரமான முறையில் நான் தீர்வு கண்டுவிட்டேன் என்று நம்புகிறேன். ஐயா, ஆண்களும் பெண்களும் ஆன்மீக மட்டத்தில் சமமானவர்கள். கீதை, ஸ்மிருதிகள் - மற்றும் ஸ்ரீகிருஷ்ணனே இந்த சமத்துவக் கோட்பாட்டை போதித்துள்ளார்.

ஐயா, சொத்து சம்பந்தமான பிரச்சினையை எடுத்துக் கொண்டால், பெரும்பாலான தத்துவஞானிகள், அரசியல், சமூக, அல்லது வேறுவகைப்பட்டவர்களின் கூற்றுப்படி, உலகில் அனேகமாக, அனைத்துத் தீமைகளுக்கும் அடிப்படையான காரணமாக இருந்து வந்துள்ளது. இது சம்பந்தமாக சேத் கோவிந்ததாஸ் முன்வைத்த கருத்தை நான் ஏற்றுக்கொள்கிறேன் - இப்பொழுது அவர் இந்த அவையில் இல்லை - தனிச் சொத்துரிமை ஒழிக்கப்பட்டால், அது சிறந்ததாக இருக்கும். இது செய்யப்பட்டால் வழக்குகள் கூட பெருமளவு குறைந்துவிடும். பண்டைய காலத்தில் நமக்கு சட்டங்களை வழங்கிய மற்றும் ராஜியத் தலைவர்களில் மகத்தானவர்களில் ஒருவர் - மனுவோ, யாக்ஞவல்கியரோ அல்ல - ஆனால் ஒரு படைத் தளபதி மற்றும் அரசியல்மேதை - பீஷ்ம பிதாமகர் தனது கோட்பாட்டை மகாபாரதத்தின் இரண்டு பர்வங்களில் - அதாவது சாந்தி பர்வம் மற்றும் **அனுசாஸனிக** பர்வத்தில் விளக்கியுள்ளார். அதில் அவர் யுதிஷ்டிரருக்கு சொத்துக்களைப் பற்றி இவ்வாறு கூறுகிறார்:

அகின்சசனிகா சுத்தஸ்யா ந துலியமிகியா
லக்ஷ்யாயே அகின்சன்யாம்சா ராஜ்யம்சா துலாயா
சமதோலயம் அத்யரிசியத தரித்ரியம் ராஜ்யதாபி
குரதிகம் நித்யதிவிகோனோஹி தாமவன்
மிருத்யே ரஸ்யகதோ யாத.

தனது ராஜ்யத்தையும் விருப்பபூர்வமாக தான் ஏற்றுக் கொண்ட வறுமையையும் துலாக்கோலில் எடை போட்டுப் பார்த்ததாகவும், இந்த விருப்பபூர்வமான வறுமையே, ராஜ்யத்தை விட அதிக எடையுள்ளதாக இருந்ததாகவும் கூறுகிறார். ஏனெனில், ''மணி முடியைத் தாங்கிக் கொண்டிருப்பவர் எப்பொழுதும் சங்கடப் பட்டுக் கொண்டிருக்க வேண்டும்.'' ஒரு மனிதன் சொத்துடையவனாக இருந்தால், அவன் மரணத்தைக் கண்டு பயப்படுகிறான்.

மனைவியும் கணவனும் அன்பினால் ஒன்றுபட வேண்டும் என்பது மட்டுமன்றி, சொத்திலும் ஒன்றுபட வேண்டும். சில சமயங்களில் அன்பு (காதல்) மட்டுமே அவர்களின் ஒரே சொத்தாக ஏற்பட்டு விடுகிறது. கணவனுக்கும் மனைவிக்கும் எந்த சொத்தும் இல்லாமலும் போகக்கூடும். அவர்களின் பரஸ்பர அன்பே அவர்களின் ஒரே சொத்தாக இருக்கக்கூடும். ஆனால், ஐயா, வாழ்க்கையின் கடும் எதார்த்தத்தை இன்று நாம் எதிரிட வேண்டும். ஆயினும், இது சம்பந்தமாக பண்டிட் பர்கவாவின் சொந்த அனுபவத்தைக் கேட்க புத்துணர்ச்சி ஏற்படுகிறது. ஆண்களும், பெண்களும் கணவன்மார்களும் மனைவிமார்களும் பண்டிட் தாகூர்தாஸ் பர்கவாவும் அவருடைய மனைவியையும் போன்றே அதே மகிழ்ச்சியான நிலையிலிருந்தால் இந்த உலகம் வாழ்வதற்கு ஒரு மகிழ்ச்சிகரமான இடமாக இருக்கும். ஆயினும், இன்று, நூற்றுக்கணக்கான உதாரணங்களில் மனைவிக்கும் கணவனுக்கும் இடையிலான உறவுகள், அவை இருக்கவேண்டிய அல்லது நாம் விரும்புவதுபோல் மகிழ்ச்சிகரமாக இல்லை. (குறுக்கீடு). ஐயா, என்னுடைய மதிப்புக்குரிய நண்பர் திரு. பி. தாஸைப் போன்ற நண்பர்கள் என்னிடத்தில் கூறிய விவரங்களிலிருந்தே நான் பேசுகிறேன். இந்தத் துறையில் அனுபவமுள்ள என்னுடைய மதிப்புக்குரிய நண்பர்கள் என்னிடம் கூறியவற்றிலிருந்தே இந்த விவரங்கள் எனக்குக் கிடைத்தன.

நமது இந்து சட்டத்தொகுப்பு மசோதா இந்த அம்சத்தில், ஒரு பெண்ணுக்குத் தனது சொத்தில் முழு உரிமை பெற்றிருப்பதற்குத் தகுதி உண்டு என்று வகை செய்கிறது. தர்மம் மற்றும் இந்து சட்டத்தொகுப்பு மசோதாவை எதிர்க்கின்றவர்கள் தங்கள் நிலைக்கு வேதகாலம் மற்றும் பண்டையக் காலத்தை அடிப்படையாகக் கொள்கிறார்கள். மத்திய காலத்தில்தான் இந்து மதம் வீழ்ச்சியடைந்து வந்தபோது தான் பெண்களின் சொத்துரிமைக்குக் கட்டுப்பாடு ஏற்பட்டது. வேதகாலத்தில் பெண்களின் சமூக அந்தஸ்து பொதுவாக உயர்வாக இருந்தது.

திரு. தலைவர் : பலர் பேசுவதற்கு விரும்புகிறார்கள். மதிப்புக்குரிய உறுப்பினரை சாத்தியமான அளவு சுருக்கமாகப் பேசும்படிக் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. எச்.வி. காமத்: நான் சுருக்கமாக முடித்துக் கொள்வதற்கு முயற்சி செய்கிறேன். ஆனால் இது மிகவும் பெரிய விஷயமாக இருப்பதால், சுருக்கமாகக் கூறுவது சிரமமானது.

மாண்புமிகு பி.ஆர். அம்பேத்கர் (சட்ட அமைச்சர்) : திரு. காமத் பேசுவதற்கு நிறைய சந்தர்ப்பங்கள் இருக்கின்றன. குறைந்த பட்சம் 130 பிரிவுகள் இருக்கின்றன.

திரு. எச்.பி. காமத் : இன்று சில விஷயங்களை சொல்லாமலிருப்பதற்கு நான் விரும்பவில்லை. வேதகாலத்தில், பெண்களின் சமூகநிலை உயர்வாக இருந்தது என்று நான் கூறிக்கொண்டிருந்தேன். ஒரு திருமணமாகாத மகளுக்கு அவளுடைய தகப்பனாரின் சொத்தில் ஒரு பங்கு வழங்கப்பட்டது, திருமணமான மகளுக்கு அதில் ஏதும் கொடுக்கப்படவில்லை, ஆனால், அவளுடைய திருமணத்தின் போது போதுமான வரதட்சிணை கொடுக்கப்பட்டது. எனவே இந்த அம்சத்தில் என்னுடைய மதிப்புக்குரிய நண்பர் பண்டிட் தாகூர்தாஸ் பர்கவா முன்வைத்த வாதத்தை இந்த அவையும் மாண்புமிகு அமைச்சரும் பரிவுடன் பரிசீலனை செய்யவேண்டும் என்று நான் நினைக்கிறேன்; ஏனெனில் அடிப்படையாகவே நானே சொத்தை எதிர்ப்பதால், சொத்து நிலைமையை இன்றுள்ளதைக் காட்டிலும் மோசமாக்குவதன் மூலம் எந்தப் பயனும் ஏற்படப்போவதில்லை என்று நான் நினைக்கிறேன். 12 மகன்களும் ஒரு மகளும் கொண்ட ஒரு இந்து குடும்பத்தின் சொத்து சம்பந்தமான ஒரு உதாரணத்தை டாக்டர் அம்பேத்கர் குறிப்பிட்டார். அவர் அந்த உதாரணத்தைக் குறிப்பிடலாம், ஆனால் 12 மகள்களும் ஒரு மகனும் கொண்ட மற்றைய உதாரணத்தை நான் மேற்கோள் காட்டுகிறேன். இந்தக் குடும்பம் சம்பந்தமாக, இந்து சட்டத் தொகுப்பு மசோதா பிரயோகிக்கப்பட்டால் என்ன ஏற்படும்? குடும்பச் சொத்து அனைத்து மகள்கள் மற்றும் ஒரு மகன் இடையில் பிரித்துக் கொள்ளப்பட வேண்டும். மகன், வீட்டின் ஒரு மூலையில் ஒதுக்கப்படுவான். மகள்கள் திருமணமானபின், தங்கள் கணவன்மார்களையும் அந்த வீட்டுக்குள் கொண்டுவருவதற்கு உரிமையுண்டு. வீட்டின் ஒரு பகுதியை ஓர் அந்நியருக்கு விற்பதற்கும் அவர்களுக்கு உரிமையுண்டு. எனவே அந்த சிறிய மகன் ஒரு சுண்டெலியைப் போன்று அங்கும் இங்கும் சுற்றித் திரிய வேண்டும். அவன் வசிப்பதற்கு சௌகரியமான ஒரு மூலையும் கூடக் கிடைக்காது.

ஐயா, எனவே, சொத்து என்னும் இந்தப் பிரச்சினை ஒரு மிகவும் தொல்லையான பிரச்சினையாகும்; ஒரு மகள், தானே சொத்தைப் பெறுவதற்கு பதிலாக, சொத்தின் பங்குக்கு ஈடாக, ரொக்கமாகவோ, நகைகளாகவோ பெற்றுக் கொள்வதற்கு அனுமதிக்கப்படுவாளா, அல்லது அவள் எதை அடைய விரும்புகிறாளோ

அதைப் பெற்றுக் கொள்வதற்கு - பண்டைக் காலத்திலும் வேத காலத்திலும் செய்ததைப் போன்று அனுமதிக்கப்படுவது குறித்தும் நாம் பரிசீலனை செய்ய வேண்டும். திருமணம் நடைபெறும் சமயத்தில் சொத்தில் பங்கு பெறுவது இல்லை, மாறாக, சொத்தில் பங்கு கொடுப்பதற்கு பதிலாக, அவளுக்குப் போதுமான அளவு வரதட்சிணை கொடுக்கப்பட்டது.

(பின்னர் சபை, மதிய உணவுக்காக இரண்டரை மணி வரை ஒத்திவைக்கப்பட்டது).

(மதிய உணவிற்குப் பிறகு பேரவை இரண்டரை மணிக்கு மீண்டும் கூடியது.)

திரு. எஸ்.வி. கிருஷ்ண மூர்த்தி ராவ் சபாநாயகராக அமர்ந்திருந்தார்.

திரு. தலைவர் : விவாதத்தை நாம் தொடருவதற்கு முன்னால் நான் ஓர் ஆலோசனை கூறுவதற்கு விரும்புகிறேன். பட்டியலில் சுமார் 25 பெயர்கள் இருக்கின்றன. இது ஒரு முக்கியமான மசோதாவாகும். இந்த சட்டத்தின் மீது அதிகப்படியான உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களைக் கூறுவதற்கு விரும்புவார்கள். எனவே, மதிப்புக்குரிய உறுப்பினர்கள் சாத்தியமான அளவு சுருக்கமாகவும் மசோதாவிற்கு ஆதரவாகவோ, அல்லது எதிராகவோ பொருத்தமான விஷயங்களைப் பற்றி மட்டும் பேசும்படி கேட்டுக் கொள்கிறேன்.

பாபுராம் நாராயண் சிங் (பீஹார் : பொது) : ஐயா, என்னுடைய பெயரையும் பட்டியலில் சேர்த்துக் கொள்ளலாம்.

திரு. பி. தாஸ் (ஒரிசா: பொது) : என்னுடைய பெயரை அனுப்ப வேண்டுமென்று எனக்குத் தெரியவில்லை. சபாநாயகரின் பார்வை என் மீது விழும் என்று நினைத்தேன்.

திரு. தலைவர்: அதனால்தான் சாத்தியமான வரையில் சுருக்கமாகப் பேசும்படியும், மசோதாவிற்கு ஆதரவாகவோ அல்லது எதிராகவோ முக்கியமான அம்சங்களை மட்டுமே குறிப்பிடும் படியும் நான் மதிப்புக்குரிய உறுப்பினர்களுக்குக் கூறி வருகிறேன்.

பேசுவதற்கு விரும்புகின்ற உறுப்பினர்கள் தயவு செய்து சீட்டு எழுதி அனுப்புங்கள்.

திரு. தாஜாமுல் உசேன் (பீஹார்: முஸ்லிம்) : ஐயா, என்னுடைய பெயர் பட்டியலில் இருக்கிறதா என்று நான் தெரிந்து கொள்ளலாமா? துணை சபாநாயகரிடம் நேற்று, கடந்த வெள்ளிக் கிழமையன்று நான் பேசினேன்.

திரு. தலைவர்: பரவாயில்லை, ஒரு புதுச் சீட்டு எழுதி அனுப்புங்கள்.

திரு. எச்.வி. காமத் : என்னுடைய சிற்றுரையின் தொடர்ச்சியை, விட்ட இடத்திலிருந்து நான் மீண்டும் தொடங்குவதற்கு முன்னால், என்னுடைய மதிப்புக்குரிய நண்பர் பண்டிட் தாகூர் தாஸ் பர்கவாவை விட மிகவும் குறைவான நேரத்தையே எடுத்துக் கொள்வேன், என்று உங்களுக்கு உறுதி கூற விரும்புகிறேன்.

திரு. தலைவர் : நீங்கள் ஏற்கனவே ஒரு மணி நேரம் பேசி விட்டீர்கள்.

திரு. எச்.வி. காமத் : என்னுடைய மதிப்புக்குரிய நண்பர் பண்டிட் தாகூர்தாஸ் பர்கவாவை விடக் குறைந்த நேரம் என்று தான் நான் கூறினேன்.

நான் சொத்து பற்றிப் பேசிக்கொண்டிருந்தேன். சொத்தை ஒதுக்கீடு செய்வதற்கான அடிப்படை, சகுந்தலாவிற்கு விடையளித்த பின் கண்வர் எடுத்துக்கூறிய கோட்பாடுதான். கண்வர் இவ்வாறு கூறினார்.

"ஆர்த்தோ ஹி கன்யா பரக்கியா ஈவா தமாதியா சம்பிரஷ்யா
பரிகிரஹிது ஜாடோ
மமயாம் விஷதா பிரகமம் பிரத்யார்பிதார்யாசா இவான்தராத்மோ"

முதலாவது வரி "ஆர்தோஹிகன்யா" என்றால், சொல்லுக்குச் சொல் மொழிபெயர்த்தது போல், ஒரு பெண் மற்றொருவருடைய சொத்து என்று பொருள் அல்ல. ஒரு பெண், திருமணமானவுடன், தந்தையின் வீட்டிலிருந்து பிரிந்து சென்றுவிடுகிறாள் என்பது இதன் பொருள் இந்த அடிப்படையில்தான் அவள் மற்றொரு வீட்டினுள்

புகுகிறாள், பண்டைக் காலத்தில், அதாவது வேத காலத்திலும், அதற்குப் பின்னரும், மகளுக்கு சொத்தில் எந்தப் பங்கும் தரப் படவில்லை, ஆனால் போதிய அளவு வரதட்சிணை வழங்கப் பட்டது. மீண்டும், வேதகாலத்திலும், ஸ்மிருதிகாலத்திலும் தகப்ப னாருக்கு மகன் இல்லாதபோது மட்டுமே அவர் தனது மகளைப் புத்திரிகா என்று நியமிக்கிறார், அத்தகைய ஒரு மகள் மகனுக்கு சமமாவாள். இந்தக் கோட்பாட்டை நமது புதிய சட்டத்தை உரு வாக்குகிறவர்களும் பரிசீலனை செய்வது அவசியம். இந்தக் கோட் பாட்டின் சாராம்சத்தை அவர்கள் இந்த சட்டத்தில் இணைப்பதற்கு முயற்சி செய்யலாம்.

விவசாய சொத்தைப் பூரணமாக இதிலிருந்து விலக்க வேண்டு மென்று நான் விரும்புகிறேன். ஆளுநர்களின் மாநிலங்களைப் பொறுத்தவரையில், இது ஏற்கனவே விலக்கப்பட்டுள்ளது. அத்தி யாயம் 1-ன், 7ம் பாகம், 94வது பிரிவு இவ்வாறு கூறுகிறது. ''இந்த பாகம் ஆளுநர்களின் மாகாணங்களில் உள்ள விவசாயநிலத்திற்குப் பொருந்தாது;'' நிலத்தைத் துண்டுபோடுவதற்கு எதிராக ஏற்கனவே ஒரு கூக்குரல் இருந்து வருகிறது. இது சம்பந்தமாக நாம் மெதுவாகத் தான் செல்ல வேண்டும், அப்பொழுதுதான் இந்தத் தீமை மேற் கொண்டு உக்ரமாகாமல் தடுக்க முடியும். உண்மையில் நிலம் முழுவதும் தேசவுடைமையாக்கப்பட்டால், அப்பொழுது எந்த சிரமமும் ஏற்படாது, இந்தப் பிரச்சினை இறுதியாகத் தீர்வு காணப் படாமல் நிலுவையில் இருக்கின்ற வரையில், விவசாய நிலத்தை, ஆளுநர்களின் மாகாணங்களில் மட்டுமன்றி, மத்திய அரசினால் நிர்வாகம் செய்யப்படும் பிரதேசங்களிலிருந்தும், சட்டத்தின் இந்த பாகம் செயல்படுவதனின்றும் நாம் விலக்க வேண்டும்.

இப்பொழுது, மனித சமுதாயத்தை ஆரம்ப காலத்திலிருந்து பதற்றமடையச் செய்து வந்த மாபெரும் பிரச்சினைக்கு - திருமணம் மற்றும் விவாகரத்து என்ற பிரச்சினைக்கு வருகிறேன். இந்தப் பிரச் சினையில், நாம் கடைப்பிடிக்கவேண்டிய கோட்பாடு - இந்தப் பிரச்சினையில் சட்டமியற்றும்போது இது ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும்- ''திருமணம் இலகுவாக இருக்க வேண்டும், ஆனால் விவாகரத்து சிரமமானதாக இருக்க வேண்டும்'' - என்பதாக இருக்க வேண்டும் என்று நான் கருதுகிறேன். இந்த ஆரோக்கியமான விதி சட்டமியற்றுவதில் ஏற்றுக்கொள்ளப்பட்டால், நமது பல சங்கடங் களை இது தீர்த்து விடும்.

சர்தார் பூபேந்தர் சிங் மான் (கிழக்குப் பஞ்சாப் : சீக்கியர் தொகுதி): உங்களுடைய விஷயத்தில் விவாகரத்தை விடவும் திருமணம்தான் கூடுதல் சிரமமானதாகும்.

திரு. எச்.வி. காமத் : ஒரு விதிக்கு எப்பொழுதும் விலக்குகள் உண்டு. நான் அவற்றில் ஒன்று என்று நினைக்கிறேன்.

ஒரு சமீபத்திய வரலாற்று உதாரணத்தை மேற்கோள் காட்டுவதற்கு நான் அனுமதிக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஜெர்மனியில் ஹிட்லர், 1932ல் தேர்தலில் போட்டியிட்ட போது, அவருடைய தேர்தல் கோஷங்களில் ஒன்று, ''ஒவ்வொரு ஜெர்மன் குடிமகனுக்கும் ஒரு வேலை, ஒவ்வொரு ஜெர்மன் பெண்ணுக்கும் ஒரு கணவன்.'' இந்த கோஷம், அதாவது ஒவ்வொரு ஜெர்மன் பெண்ணுக்கும் ஒரு கணவனை வாக்குறுதி அளித்ததானது அவருக்கு லட்சக்கணக்கான பெண்களின் ஓட்டுகளைக் குவியச் செய்தது என்று எனக்கு ஞாபகம். இது, திருமணம் இலகுவாக இருக்கவேண்டும், விவாகரத்து கடினமானதாக இருக்கவேண்டும் என்று நான் உங்களுக்கு முன்னால் வைக்க முயன்ற கோட்பாட்டை முழுமையாக நிரூபணம் செய்கிறது. என்னுடைய மதிப்புக்குரிய நண்பர் பண்டிட் தாகூர்தாஸ் பர்கவா, அன்றைய தினம், இந்தப் பொருளைப்பற்றிப் பேசும்போது, இதைக் குறிப்பிட்டு, நாட்டின் பல்வேறு பாகங்களில் வெவ்வேறு பழக்க வழக்கங்கள் இருக்கின்றன. அவற்றுக்கேற்ப விவாகரத்து செய்யப்படலாம் என்று கூறினார். மேலும் ஒரு எளிமையான வழக்கம் இருப்பதைப் பற்றி எனக்குக் கூறப்பட்டது, அதன்படி, 'தலக்' என்று கணவன் மூன்று தடவை சொல்லிவிட்டால் மனைவியை விவாகரத்து செய்து கொள்ளலாமாம். அது போன்று ஒரு வழக்கம் இருக்கலாம், எனக்குத் தெரியாது. அதனால்தான் விவாகரத்து இலகுவாக இருக்கக்கூடாது என்று நான் கூறினேன், எனக்குச் சொல்லப்பட்டது, தனிப்பட்ட முறையில் நானும் அவ்வாறுதான் நினைக்கிறேன். நவீனகால நாடுகளில் ஒன்றாகிய, சோவியத் யூனியன், இந்த நூற்றாண்டின் இருபதாம் ஆண்டுகளின் துவக்கத்தில் திருமணம், விவாகரத்து ஆகிய இரண்டையும் சம அளவில் இலகுவாக்கியது. ஆனால், அனுபவத்தின் அடிப்படையில் ஒரு சமூக யூனிட் என்ற வகையில் குடும்பம் ஒரு கம்யூனிஸ்ட் நாட்டிலும் கூட பாதுகாக்கப்பட வேண்டும், பலப்படுத்தப்பட வேண்டும் என்று அவர்கள் கற்றுக்கொண்டனர். எனவே, இப்பொழுது, திருமணம் இலகுவாக இருந்தபோதிலும், விவாகரத்து மிகவும் அசாத்தியமானதாகும். எனவே, சில பழக்க வழக்கங்கள்

பிரபல்யப்படுத்தப்பட வேண்டும், நிலைநிறுத்தப்பட வேண்டும் என்று பண்டிட் தாகூர்தாஸ் பர்கவா கூறியதை ஏற்றுக்கொள்வதற்கு நான் எவ்வளவுதான் இசைவாக இருந்தபோதிலும், விவாகரத்து சம்பந்தமாக, இது பற்றிய நடைமுறை மிகவும் கடினமானதாக இருக்க வேண்டும் என்று நான் நினைக்கிறேன், அப்பொழுதுதான் ஒரு சமூக யூனிட் (அங்கம்) என்ற வகையில் பலப்படுத்தப்படும், பாதுகாக்கப்படும்.

இந்தப் பொருள் சம்பந்தமாக, மேலும் ஒரு கருத்தை நான் தெரிவிக்க விரும்புகிறேன்: ஐயா, சில காரணங்களால் ஒரு திரு மணத்தை முறிப்பது அவ்வளவு விரும்பத்தக்கதாக இருக்காது. மேலும் தம்பதிகளில் ஒருவர், கணவரோ அல்லது மனைவியோ அதற்கு ஒத்துக்கொள்ளாமலுங்கூட இருக்கக்கூடும். இதற்கு உதாரணங்கள் உண்டு. அத்தகைய சம்பவங்களில், கணவன் வேறு மனைவியைத் திருமணம் செய்துகொள்வதற்கு மனைவி ஒத்துக்கொள்ளும்போது, - மனைவி அதே வீட்டில் அல்லது வேறு வீட்டில் குடியிருக்கும் நிலைமையில், இங்கே குறிப்பிடப்பட்ட காரணங்களைப் பொருட் படுத்தாது, மற்றையத்தரப்பு சம்மதம் தெரிவிக்கும்போது, முதல் திருமணத்தை முறிக்காமலேயே, தம்பதிகளில் ஒருவர் வேறு திருமணம் செய்துகொள்வதை அனுமதிக்காமலிருப்பதற்கு எந்தக் காரணத்தையும் என்னால் பார்க்க முடியவில்லை. டில்லியில், ஒரு பிரமுகர் ஒரே சமயத்தில் - ஒரு வேளை வெவ்வேறு வீடுகளில் இருக்கக்கூடும் - பல மனைவிகளுடன் வசித்து வருவதை நாம் அறிவோம்.

மதிப்புக்குரிய ஓர் உறுப்பினர் : யார் அது?

திரு. எச்.வி. காமத்: தயவுசெய்து இங்கு பெயர்கள் வேண்டாம்.

திரு. தாஜாமுல் உசேன் : என்னால் புரிந்துகொள்ள முடிய வில்லை; மதிப்புக்குரிய என்னுடைய நண்பர் பலதார மணத்தை ஒத்துக்கொள்கிறாரா?

திரு. எச்.வி. காமத் : நான் இது மட்டுமே கூற முடியும்.

திரு. தாஜாமுல் உசேன்: திருமணமாகாத ஒரு நபர்தான் அவ்வாறு கூறமுடியும்.

திரு. எச்.வி. காமத் : சில சமயங்களில், திருமணம் நடைபெற்று நீண்ட காலமாகியுள்ள ஒரு தம்பதியர் - திருமணத்தின் நோக்கம் பயனற்றுப் போய்விட்டபோதிலும்கூட, தன் மனைவியுடன் திருமண பந்தத்தை முறித்துக் கொள்வதை இந்து மனம் ஏற்றுக்கொள்ள முடிவதில்லை. எனவே அன்பு மற்றும் மனித நேயம் என்ற கண்ணோட்டத்திலிருந்து, புதிய சட்டம், கணவன் மற்றொரு பெண்ணைத் திருமணம் செய்துகொள்வதற்கு வகை செய்ய வேண்டும். இதற்கு முதல்மனைவியிடமிருந்து அனுமதி வாங்கலாம். அவள் சம்மதித்தால், நீதிமன்றம் குறுக்கே நிற்கக்கூடாது. ஆனால் பண்டிட் தாகூர் தாஸ் பர்கவா கூறியது போன்று, திருமணத்தின் லட்சியமானது சொத்திலும் அன்பிலும் ஒன்றாக இருக்க வேண்டும். நான் அதற்கு மேலும் சென்று, அவர்கள் இரண்டு மனங்களைக் கொண்டிருந்த போதிலும், சிந்தனை ஒன்றாக இருக்க வேண்டும், அவர்களின் இரு இதயங்களும் ஓர் இதயம் போல் துடிக்க வேண்டும் என்று கூறுவேன்.

திருமதி ஹன்ஸா மேத்தா (பம்பாய் : பொது) : பலதார மணத்தில் இரண்டுக்கும் மேற்பட்ட இதயங்கள் இருக்கும்.

திரு. எச்.வி. காமத் : கணவனுக்கு ஆட்சேபமில்லையானால், பல கணவர் மணத்திற்கு நான் எதிரியல்ல.

திருமதி பூர்ணிமா பானர்ஜி : மிகவும் தாராளம்தான்!

திரு. எச்.வி. காமத் : என்னுடைய நிலை சமத்துவம் என்ற கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டது ஆண், பெண் இருவருக்குமே கடைக்காடி எல்லை வரையில் நான் செல்கிறேன். ஆரியர்களின் துவக்க காலத்தில் - அதாவது வேதகாலம், உபநிடத மற்றும் ஸ்மிருதிகாலத்தில் பெண்கள் என்னென்ன உரிமைகளை அனுபவித்தார்களோ, இந்த உரிமைகளெல்லாம் பிந்திய மத்திய காலத்தில் பயன்படுத்தாமற் போயின. மற்றும் அமலாக்கப்படவில்லையென்பது நமது வரலாற்றில் - நமது நீண்ட கால மற்றும் பண்டைய இந்து வரலாற்றில் ஒரு வருந்தத்தக்க சம்பவம் அல்லது நிகழ்ச்சியாகும். இந்த சட்டத் தொகுப்பு நன்கு செயல்படுமென்றும் - இருளார்ந்த மத்திய காலத்தில் இழக்கப்பட்ட சுவர்க்கத்தை, நவீன காலத்தில் பெண்கள் மீண்டும் பெறுவார்கள் என்று நான் நம்புகிறேன்.

வெளியிலுள்ள ஒரு நண்பரிடமிருந்து ஒரு சிறிய எச்சரிக்கை எனக்கு வந்துள்ளது. அவர் கடவுளின் பெயராலும், தேசப்பிதா

மகாத்மா காந்தியின் பெயராலும், நேதாஜி சுபாஷ் சந்திர போஸின் பெயராலும் தயவுசெய்து இந்த மசோதாவிற்கு ஆதரவாக ஓட்டளிக்க வேண்டாம் என்று என்னைக் கேட்டுக் கொண்டுள்ளார். அதே வாதம், இந்த மசோதாவிற்கு ஆதரவாக வாக்களிப்பதற்கும் நன்கு பொருந்தும் என்று நான் நினைக்கிறேன். நான் கூற முடியும்...

திரு. பி.எல். சோந்தி *(கிழக்கு பஞ்சாப் : பொது) : அந்த நண்பர் ஆணா, பெண்ணா?*

திரு. எச்.வி. காமத்: நான் கூறுகிறேன், நான் துணிவுடன் கூறுகிறேன்: ஆணையும் பெண்ணையும் தோற்றுவித்த கடவுளின் பெயரால், ஆண் - பெண் சமத்துவத்திற்காக நின்ற தேசப்பிதா மகாத்மா காந்தியின் பெயரால், ஆண்கள்/பெண்களின் பூரண விடுதலைக்காகப் பாடுபட்ட, மற்றும் அதை சாதித்த, தேவைப்படும் போது பெண்களைப் போர்க்களத்தில் இறக்கவும் செய்த நேத்தாஜி சுபாஷ் சந்திரபோஸின் பெயரால்; கடவுளின் பெயராலும், காந்திஜியின் பெயராலும், சபாஷ் சந்திரபோஸின் பெயராலும், இந்த மசோதா ஒரு முன்னேற்றகரமான மசோதா என்று நான் நினைக்கிறேன். இந்த சட்டத்தினால் இந்து சமுதாயம் மேலும் புகழ்பெறும்.

மேலும் ஒரே ஒரு கருத்து மட்டும் நான் கூற வேண்டியுள்ளது. என்னுடைய மாண்புமிகு நண்பர், டாக்டர் அம்பேத்கர், அன்று தனது பேருரையில், உரிய காலத்தில் சீரடைய வேண்டும், இல்லாவிட்டால் அழிந்து போகும் என்று குறிப்பிட்டார்: நாம் சீர் செய்ய வேண்டும். உண்மையில் நாம் சீர்செய்து கொண்டிருக்கிறோம். நாம் சீரமைக்க வேண்டிய காலம் வந்துவிட்டது இல்லாவிட்டால், சமுதாயம் இரண்டாகப் பிளவுபட்டுப் போகும். உரிய காலத்தில் போடப்படும் ஒரு தையல், எப்போதும் ஒன்பது கிழிசல்கள் ஏற்படாமல் பாதுகாக்கும்: இல்லாவிட்டால் பாகுபாடு மேலும் மேலும் அதிகரித்து, இறுதியில் சமுதாயம் இரண்டாகப் பிளந்து போய்விடும்.

ஐயா, வெள்ளிக்கிழமையன்று, மகா சிவராத்திரிக்கு முந்தின நாள் நான் பேசத் தொடங்கினேன். என்னுடைய சுருக்கமான உரையை மகா சிவராத்திரிக்கு மறு நாள் முடிக்கிறேன். இந்த நாள் நமது காலத்தின் மகத்தான பெண்களில் ஒருவரின் மகாசதி அன்னை கஸ்தூரிபாயின் புனிதமான நினைவு நாளாகும். மற்றொரு மகத்தான மனிதர் சுவாமி தயானந்த சரஸ்வதியின் புனிதமான நினைவு நாளுமாகும். அவர்களின் ஆன்மாக்கள் - அன்னை கஸ்தூரிபாய் மற்றும்

சுவாமி தயானந்த சரஸ்வதியின் ஆன்மாக்கள் நமது பணியில் நமக்கு உத்வேகமூட்டி, நம்முடைய கடினமான பணியில் நமக்கு உதவும் என்று நான் நம்புகிறேன். ஆணும் பெண்ணும் வாழ்க்கையின் புனிதப் பயணிகளாக ஒன்றாகப் பயணம் செய்வார்கள், அர்த்த மற்றும் காமத்தை எய்துவதற்குத் தமது வாழ்க்கைகளை அர்ப்பணித்தும், புனிதமாக்கிக் கொள்வார்கள் என்றும் நான் நம்புகிறேன். கடவுளைப் பிரார்த்திக்கிறேன். அர்த்தமும் காமமும் தர்மத்தில் வேர் கொண்டுள்ளன; இவை மோட்சம் என்னும் இலட்சியத்திற்கு - அடிமைத் தளையிலிருந்து விமோசனத்திற்கு - உயிர் வாழும் கடவுளின் இலட்சியத்திற்கு இட்டுச் செல்கின்றன. இதில்தான் நாம் வாழ்கிறோம், நடமாடுகிறோம், உயிருடன் ஜீவிக்கிறோம். இதில் அனைத்து ஆண்களும், அனைத்துப் பெண்களும், அனைத்துப் படைப்பும் சமம், சுதந்திரமானவை, புனிதமானவை.

हरिओऽम् तत्सत् । ब्रह्मार्पणमस्तु

திரு. நசிருத்தீன் அகமது (மேற்கு வங்கம்: முஸ்லிம்) : நான் மேலும் மேலும் காலப்பொருத்தமற்றவனாகி வருகிறேன் என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன். மூல மசோதாவை எதிர்க்கும் பணியை நான் மேற்கொண்டேன். ஆனால் இதுவரையில் நான் பேசவில்லை. உரிய நேரத்தில் நான் வெளியே தள்ளப்பட்டுவிடக்கூடும். நிறையப் பேச்சாளர்கள் இருக்கிறார்கள். நாளைய தினம் 4 மணிக்கு விவாதத்தை முடிவுக்குக் கொண்டுவரும் பிரேரணை முன்மொழியப் படலாம் என்று எனக்குத் தெரியவருகிறது.

திரு. தலைவர்: திரு. நசிருத்தீன் அகமதுவைப் பேசுவதற்கு வாய்ப்பு அளிக்காமல் தள்ளுவது அசாத்தியம். மதிப்புக்குரிய உறுப்பினருக்கு ஒரு வாய்ப்புக் கிடைக்கும். திரு. ஜுன்ஜுன்வாலாவை இப்பொழுது பேச அழைக்கிறேன்.

திரு. பி.பி. ஜுன்ஜுன்வாலா (பீஹார் : பொது) : நான் மற்றொரு சமயம் பேசுவதற்கு விரும்புகிறேன்.

திரு. எல். கிருஷ்ணசாமி பாரதி : அவர் ஒன்றோ இப்பொழுது பேசவேண்டும், அல்லது அவர் பிறகு பேச முடியாது. விதிகளின்படி, ஓர் உறுப்பினர் பேசுவதற்கு அழைக்கப்பட்டால், அவர் பேசியாக வேண்டும். இல்லாவிட்டால், அந்தப் பொருளைப் பற்றிப் பேசுவதற்கு அவர் வாய்ப்பை இழந்துவிடுவார்.

திரு. தலைவர் : பாபுராம் நாராயண் சிங்

பாபுராம் நாராயண் சிங் : இந்த அவையின் முன் விவாதத்திற்கு வந்துள்ள தீங்கு விளைவிக்கும் மசோதாவை எதிர்ப்பதற்கு என்னுடைய பங்கையாற்ற நீங்கள் மிகவும் கனிவுடன் இன்று எனக்கு வாய்ப்புக் கொடுத்ததற்காக, திரு. தலைவர் அவர்களே, உங்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஐயா, நான் ஒரு வைதீக நபர் அல்ல என்பதை ஆரம்பத்திலேயே சொல்லிவிடுகிறேன்.

மாண்புமிகு டாக்டர் பி.ஆர். அம்பேத்கர்: நீங்கள் பழைமை வாதியல்ல, நீங்கள் அவ்வாறு அல்ல என்பதை நானறிவேன்!

***பாபுராம் நாராயண் சிங் :** பழமை அனைத்தையும் தாமதமின்றி உடைத்தெறிய வேண்டுமென்று விரும்புகிறவர்களில் நானும் ஒருவன். ஆனால் யாவும் விவேகத்துடன் செய்யப்பட வேண்டும். ஒரு காரியம் செய்யப்பட வேண்டியிருக்கும்போது, அது எப்பொழுது செய்யப்பட வேண்டும், அது எவ்வாறு செய்யப்பட வேண்டும் என்று நாம் மதிப்பீடு செய்வது அவசியமாகும் என்று விவேகம் கோருகிறது. அவரை வியந்து பாராட்டுகிறவர்களில் நானும் ஒருவன் என்று என்னுடைய மாண்புமிகு நண்பர் டாக்டர் அம்பேத்கருக்கு சொல்லிக் கொள்கிறேன். அவர் நம்முடைய நாட்டில் பெருமைக் குரியவர் என்று உணர்கிறேன்; அவர் என்னுடைய பெருமைக்குரியவரும்கூட. ஆனால், இத்தகைய அறிவாற்றல் மிக்க ஒரு மனிதர், இத்தகைய ஒரு பயனற்ற, தீயப் பணியில் ஏன் ஈடுபட்டிருக்கிறார் என்பதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. ஐயா, இது ஓர் அரசு மசோதா. சட்டத்தை அவர்கள் எவ்வாறு புரிந்து கொண்டிருக்கிறார்கள் என்பது எனக்குத் தெரியாது. சட்டம் என்பது மக்களின் சித்தம் சட்ட அடிப்படையில் வெளிப்படுத்தப்பட்டிருப்பது தவிர வேறல்ல. சட்டம் என்றால் என்ன என்பதை அரசு புரிந்து கொள்ளாதது குறித்து நான் வருத்தப்படுகிறேன். இந்த மசோதா இந்த அவையின் முன்னால் வந்திருக்கவே கூடாது என்று இந்த நாட்டின் பெரும்பான்மையான மக்கள் கருதுகின்றனர் என்று கூறுகிறேன்.....

மதிப்புக்குரிய ஓர் உறுப்பினர் : இல்லை, இல்லை.

பாபுராம் நாராயண் சிங் : ஒரு பொதுக் கருத்துக் கணிப்பு நடத்தினால் நீங்கள் இதைக் காண்பீர்கள்.

★ அ.நி. (சட்டப்பேரவை) டி. தொகுதி II, பாகம் II, பிப்ரவரி 28, 1949, பக். 950-53.

திரு. எல். கிருஷ்ணசாமி பாரதி: நாம் இங்கு அவர்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறோம்.

பாபுராம் நாராயண்சிங் : வெளித் தோற்றத்தில் இந்துத் தொகுப்புச் சட்ட மசோதா என்ற ஒரு மசோதா இருப்பதாகவும் அது பற்றி இந்த அவையில் ஒரு விவாதம் நடைபெற்றுக் கொண்டிருப்பதாகவும் தோன்றுகிறது. ஆனால் உண்மையில் இந்து சமுதாயத்தை சீர்குலைப்பதற்கு ஒரு சதி நடைபெற்று வருகிறது என்றே சொல்லவேண்டும். இது இந்து சமுதாயத்தின் மீது படையெடுப்பதற்கு ஒரு தயாரிப்பைப் போன்றதாக உணருகிறேன். இந்த இந்து சமுதாயம் இந்த உலகில் எவ்வளவு காலமாக இருந்து வருகிறது, பொலிவுற்று வந்துள்ளது என்று யாரும் சொல்ல முடியாது. இந்த உலகம் படைக்கப்பட்ட காலத்திலிருந்தே, சூரியனும், சந்திரனும் தோற்றுவிக்கப்பட்ட காலத்திலிருந்தே, மனித இனம் தோற்றுவிக்கப்பட்ட காலத்திலிருந்தே இந்து சமுதாயம் வாழ்ந்து, பொலிவுற்று வந்துள்ளது என்று என்னால் கூற முடியும். இந்தக் காலகட்டங்களின் போதெல்லாம், இந்த இந்து சமுதாயத்திற்கெதிராக எண்ணற்ற படையெடுப்புகள் நடைபெற்றுள்ளன. முதலில் புத்தர் வந்தார். ஒரு சமயம், இனி இந்து சமுதாயம் இல்லாமல் போய் விடுமோ என்றுகூடத் தோன்றியது, ஆனால் உலக மகா குரு சங்கராச்சாரியார் தோன்றி, புத்தமதத்தை இந்த நாட்டிலிருந்து ஏற்றுமதி செய்து, இந்து சமுதாயத்தைத் திரும்பவும் நிலைநிறுத்தினார். பின்னர் இஸ்லாம் வந்தது, அதுவும் புத்த மதத்தைப் போன்று ஒரு படையெடுப்பே. ஆனால் அது ஒரு ராணுவப் படையெடுப்பாகவும் இருந்தது. ஆனால் இஸ்லாமும் இந்த நாட்டில் தோற்றுவிட்டது என்று கூறுவேன்.....

டாக்டர் மனோ மோகன்தாஸ் (மே.. வங்கம்) : இஸ்லாம் நம்மைக் காப்பாற்றியது, நீங்கள் இஸ்லாமின் பாதுகாப்பைப் பெற்றீர்கள்.

பாபு ராம்நாராயண்சிங் : இஸ்லாம் பாதுகாப்பாளனாக மாற முடியவில்லை; ஆனால் இஸ்லாம் கூட இந்த நாட்டில் தோற்றுவிட்டது. இஸ்லாமின் கோட்பாட்டின்படி குரானில் சாதி அமைப்பு இல்லை, ஆனால் இஸ்லாமைப் பின்பற்றியவர்களிடையே பல வகைப்பட்ட சாதி அமைப்பு உருவாகியது.

அவ்வாறே, ஜைனமதம், சீக்கிய மதம் ஆகியவையும் வந்தன; ஆரம்பத்தில் அவை யாவும் இந்து சமயத்திற்கு எதிரான படையெடுப்பு

களேயாகும், ஆனால் காலப் போக்கில், அவை சகிப்புத்தன்மை உடையவையாகி, இந்து சமுதாயம் மற்றும் சமயத்துடன் வளர்ச்சி யடையவும், மலர்ச்சியுறவும் முயன்றன. இந்த சமயத்தில் இதுவும் ஒரு வகைப்பட்ட படையெடுப்பேயாகும். ஆனால் இந்தப் படை யெடுப்பு இதற்குப் பின் உள்ள சக்தி சர்வாதிகார சக்தியாக இருந்த போதிலும் இது ஒரு ஜனநாயகப் படையெடுப்பாகும்.

என்னுடைய சில நண்பர்கள், இந்த மசோதாவை சட்ட மாக்குவதற்கு இந்த அவைக்கு உள்ள அதிகாரத்தைப்பற்றி ஒரு விவாதம் நடந்ததாக ஏற்கனவே கூறினார்கள். இந்த வகைப்பட்ட ஒரு மசோதாவை சட்டமாக்குவதற்கு இந்த அவைக்கு அதிகார மில்லை என்பது உண்மை. இது குறித்து எனக்கு நம்பிக்கை இருக் கிறது. இது ஓர் அரசியல் நிர்ணய சபையும் அல்ல.....

மதிப்பிற்குரிய ஓர் உறுப்பினர் : அப்படியென்றால் இது என்ன?

பாபுராம் நாராயண் சிங் : இது அரசியல் நிர்ணயசபையின் ஒரு பகுதி. இந்த அவையின் பெரும் எண்ணிக்கையிலான உறுப் பினர்கள் உத்தரவின்படியோ அல்லது சம்பிரதாயத்தின்படியோ இந்தப் பேரவையில் கலந்து கொள்ளக்கூடாதென்று கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார்கள்....

திரு. எல். கிருஷ்ணசாமி பாரதி : அதனுடன் இந்த அவை நேரடியாக சம்பந்தப்பட்டதல்ல. அது இந்த அவை சம்பந்தப்பட்ட விஷயமுமல்ல என்று அவைத் தலைவர் ஏற்கனவே கூறியிருக்கிறார்.

பாபுராம் நாராயண் சிங்: அவைத் தலைவரின் தீர்ப்பு எப்படி யிருந்தபோதிலும் நான் அதற்கு எதிராகப் பேசவில்லை, அவைத் தலைவரின் தீர்ப்புக்கு நான் தலைவணங்குகிறேன். ஆனால் இந்த மசோதாவை சட்டமாக்குவதற்கு இந்த அவைக்குத் தகுதியிருக் கிறதா, அதிகாரமிருக்கிறதா என்பதைப்பற்றி உலகிற்கு எடுத்துக் கூறுவதற்கு நான் கடமைப்பட்டிருக்கிறேன். நாட்டின் அரசியல் சட்டத்தை உருவாக்கும்படிதான் அரசியல் நிர்ணயசபைக்கு நாடு ஆணையிட்டுள்ளது. ஆனால் அந்த அரசியல் சாசனம் நிறைவு அடை யாதவரையில், அல்லது அமலுக்கு வராத வரையில், அரசு தொடர்ந்து பணியாற்ற வேண்டும். அந்நிய ஆட்சியாளர்களுடன் ஒரு தாறு மாறான உடன்பாட்டின் வாயிலாக, பட்ஜெட்டையும், நாட்டை

நிர்வகிப்பதற்குத் தேவையான வேறு எந்த முக்கிய சட்டத்தையும் நிறைவேற்றுவதற்காக இந்த ஏற்பாடு செய்து கொள்ளப்பட்டுள்ளது. ஆனால் இது போன்ற ஒரு மசோதா, விவாதத்திற்கோ அல்லது சட்டமாக்குவதற்கோ, இந்த அவையின் முன் வந்திருக்கவே கூடாது. இதற்கு எதிராக நாடு முழுவதிலும் பெருமளவு கூக்குரல் எழுந் துள்ளது.

ஆணுடன் பெண்ணுக்கு சமத்துவம் என்ற கூட்டுக் குரலை இந்த அவையிலும், வெளியிலும் நான் கேட்கும்போது அதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை....

திரு. தாஜாமுல் உசேன் : இந்த அவையை அமைப்பதையே (அவர்) எதிர்க்கும்போது, அதனுடைய குழுவில் உறுப்பினராக இருப்பதற்கு மதிப்பிற்குரிய உறுப்பினர் ஏன் ஒப்புக் கொண்டார் என்று அவரைக் கேட்கலாமா?

பாபு ராம்நாராயண் சிங் : பலர் குழப்பமடைந்துள்ளார்கள். இந்த மசோதா பொறுக்குக் குழுவுக்கு அனுப்பப்பட்டது. இதன் பொருள், இந்த மசோதாவின் கோட்பாட்டை அவை ஏற்றுக் கொண்டது என்பதாகும். ஆனால், இதனால் ஒவ்வொரு உறுப்பினரும் இந்த மசோதாவை ஏற்றுக் கொண்டாரென்றோ, அல்லது இந்த மசோதாவின் கோட்பாட்டை ஏற்றுக் கொண்டார் என்றோ அர்த்த மல்ல. இந்த மசோதாவில் பல கோட்பாடுகள் அடங்கியுள்ளன; இந்த அவையைப் பொறுத்தமட்டிலும், அது ஏதேனும் ஒன்றையோ அல்லது எல்லாவற்றையுமோ ஏற்றுக் கொண்டதாக யாரும் கூற முடியாது...

திரு. எல். கிருஷ்ணசாமி பாரதி: இது பொறுக்குக் குழுவுக்கு அனுப்பப்பட்டிருக்கிறதென்றால், அது கோட்பாட்டை ஏற்றுக் கொள் கிறது என்று பொருள்.

பாபு ராம்நாராயண் சிங்: ஆண் - பெண் சமத்துவம் பற்றி நான் பேசிக்கொண்டிருந்தேன். நமது சாஸ்திரங்களின்படி ஆண் பூரணமானவன் அல்ல; அது போன்றே பெண்ணும் பூரணமானவள் அல்ல. நமது சாஸ்திரங்களின்படி பெண் அர்தங்கி என்று அழைக்கப் படுகிறாள், அதேபோல் ஆணும் பூரணமானவன் அல்ல....

மதிப்பிற்குரிய ஓர் உறுப்பினர் : ஆண் எவ்வாறு அழைக்கப் படுகிறார்?

பாபு ராம்நாராயண் சிங்: ஆணும் பாதியே. நான் உங்களுக்குக் கூறுவேன்.....

பண்டிட் லட்சுமிகாந்த மைத்ரா (மே. வங்கம், பொது): *ஐயா, மதிப்பிற்குரிய ஓர் உறுப்பினர் இது போன்ற ஒரு முக்கியமான மசோதா குறித்துப் பேசிக்கொண்டிருக்கும் சமயத்தில், அவையில் பேசுவது விசித்திரமாக இருக்கிறது; ஏராளமான விமர்சனங்களும், ஒருவர் பேசும்போதே மற்றொருவர் அதே சமயத்தில் தொடர் விமர்சனங்கள் செய்வதும், சிரிப்பலைகளும் ஏககாலத்தில் நிகழ்கின்றன. இது இந்த அவையின் கௌரவத்திற்கு உகந்ததல்ல. ஒருவருடைய பேச்சை விரும்பாத உறுப்பினர்கள், குறைந்தபட்சம் அமைதியாக இருக்க வேண்டும், அப்பொழுதுதான் அவருடைய பேச்சைக் கேட்க விரும்புபவர்கள், குறைந்தபட்சம் செவிமடுத்துக் கேட்கவாவது முடியும்.*

திரு. அவைத் தலைவர் : பேச்சாளர் தொடர்ந்து பேசுவதற்கு மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் தயவு செய்து அனுமதிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பாபுராம் நாராயண் சிங் : *ஐயா, என்னுடைய மதிப்பிற்குரிய நண்பர் பண்டிட் மைத்ரா எனக்குக் கொடுத்துள்ள ஊக்கத்திற்காக அவருக்கு நன்றி செலுத்துகிறேன். சமத்துவம் பற்றி நான் பேசிக் கொண்டிருந்தேன். உலகின் நோக்கங்களைப் பொறுத்த மட்டிலும், மற்றும் மனித இனம் தொடர்ந்து இருந்து வருவதைப் பொறுத்தமட்டிலும் ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையில் சமத்துவம் அல்லது அசமத்துவம் என்ற பேச்சுக்கே இடமில்லை. யாரும் கையை பாதத்துடன் ஒப்பிட முடியாது. கை அதிகப்பயனுள்ளதா அல்லது பாதம் அதிகப் பயனுள்ளதா, இந்தக் கண் அதிகப்பயனுள்ளதா, அல்லது அந்தக் கண் அதிகப் பயனுள்ளதா? ஆணும் பெண்ணும் ஒருவரே. ஒன்றுக்கு மேற்பட்டதல்ல. சட்டத்தைப் பொறுத்தமட்டிலும், சட்டம் அவர்களுக்கு உதவி செய்யாது என்று நாடு முழுவதிலுமுள்ள என்னுடைய சகோதரிகளுக்கு கூறிக் கொள்கிறேன். எல்லோருக்கும், பெண்களுக்கும் எது உதவ முடியும் என்றால் அன்புதான், அன்பைத் தவிர வேறில்லை. தம்பதிகளுக்கிடையில் அன்புதான், அவர்களை மகிழ்ச்சியுடன் வைத்திருக்கும் ஒரே அம்சமாகும். அவர்கள் விவாக ரத்துக்கான உரிமையைப் பெற்றுக் கொள்ளலாம். ஒரு பெண் இன்று விவாகரத்து செய்யப்பட்டுவிடலாம். இதர பெண்கள் அடுத்த நாள்*

பிற்பகல் 3 மணி

திருமணம் செய்துகொள்வதற்காக வரக்கூடும். ஒரு தாரம் என்பது பலதாரமாகலாம், ஓர் ஆண் இரண்டாவது மனைவியைத் திருமணம் செய்வதற்கு நீங்கள் அனுமதிக்க மாட்டீர்கள். முதல் மனைவி விவாகரத்து செய்யப்படுவாள், இரண்டாவது நாள் அவன் திருமணம் செய்து கொள்கிறான். மூன்றாவது நாள் அந்த மனைவியையும் விவாக ரத்து செய்துவிடுவான். நான்காவது நாள் அவன் மீண்டும் திருமணம் செய்து கொள்வான். இந்த நிகழ்வுப்போக்கு தொடரும். தூய்மையான அன்பைப் பொறுத்த மட்டிலும், மக்களின் குணநலன் மிகவும் முக்கியமானதாகும். இந்த நாட்டில், மக்கள் முதலில் குணநலனை இழந்துவிட்டார்கள். இதன் பின்னர் மற்ற எல்லாவற்றை யும் இழந்துவிட்டார்கள். எனவே, இந்த விஷயத்தில் நாம் செய்வ தெல்லாம், நமது குண நலனைத் திரும்பப் பெறுவதாகும். கையின் முக்கியத்துவத்தை பாதத்தின் முக்கியத்துவத்துடன் ஒப்பிடக்கூடாது. எனவே, ஆணின் முக்கியத்துவத்தை பெண்ணின் முக்கியத்துவத் துடன் ஒப்பிட முடியாது. நான் ஒரு விஷயத்தைச் சொல்ல முடியும். நம்முடைய சாஸ்திரத்தின்படி, அவர்கள் (பெண்கள்) பெண் தெய்வங் கள் லக்ஷ்மி - நமது சமுதாயத்தில் பெண்கள் லட்சுமி, சரஸ்வதி, கிருஹலட்சுமி என்றழைக்கப்படுகிறார்கள். அவர்கள்தான் எல்லாம். பெண்ணுடன் ஆணை நான் ஒப்பிடுவதென்றால், உலகில் ஆணைக் காட்டிலும் பெண் கூடுதல் முக்கியத்துவமுடையவள் என்று என்னால் கூற முடியும்.

நான் இதை மேலும் விளக்க முடியும். உலகிலிருந்து எல்லா ஆண்களையும் அகற்றினாலும் அல்லது கொன்றாலும், அப்பொழுதும் உலகம் தொடர்ந்து இயங்கிக் கொண்டிருக்கும். (மதிப்பிற்குரிய ஓர் உறுப்பினர் : 'ஒரு நபரைத் தவிர') ஓர் ஆண் கூட இல்லை. உலகில் எல்லா ஆண்களும் கொல்லப்பட்டால் கூட, அப்பொழுதும் உலகம் தொடர்ந்து செயல்பட்டு வரும், மனித இனம் தொடர்ந்து இருந்து வரும் (மதிப்பிற்குரிய உறுப்பினர்கள்: 'கேள்வி'). நான் இதை விளக்க முடியும். என்னுடைய கூற்றைக் கேள்வி கேட்கும் நண்பர்கள் இருக்கிறார்கள். சரி, ஐயா, இன்று நீங்கள் எல்லா ஆண்களையும் கொன்றுவிட்டாலும், லட்சக்கணக்கான ஆண்கள் பெண்களின் கருப்பையில் இருப்பார்கள். எனவே உலகத்தைப் பொறுத்தமட் டிலும், பெண்கள் நிச்சயமாகக் கூடுதல் முக்கியமானவர்களாவர். ஆனால் ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையில் சமத்துவத்தைப் பேசு கின்றவர்கள் உண்மையில் பெண்ணை ஆணிடமிருந்து பிரிப் பதற்கு விரும்புகின்றனர். தம்பதிகளை மகிழ்ச்சிகரமாக இருப்பதற்கு உதவி செய்வதற்கு பதிலாக, அவர்கள் உண்மையில் அழிவுகரமான

பாதையில் செல்கின்றனர். அவர்களின் முக்கியத்துவம் இருக்கவே செய்கிறது என்று நான் கூறுகிறேன். அவர்கள் லட்சுமியாவர். அதே சமயத்தில், ஆணைப் பெண்ணுடன் ஒப்பிடுவது மிகவும் சிரமமான தாகும். இயற்கை ஆணையும் பெண்ணையும் சிருஷ்டித்துள்ளது. அவர்களின் பணிகள் வெவ்வேறானவை, அவர்களது கடமைகள் வெவ்வேறானவை. அவர்களது செயல்பாடுகள் வெவ்வேறானவை. எனவே அவர்கள் இருவரையும் ஒப்பிடுவதில் என்ன பயன்? இந்த விஷயத்தில் எந்தவித ஒப்பீடும் மெய்யாக நிற்க முடியாது.

இந்த மசோதாவின் ஷரத்துகளைப் பற்றி எனது நண்பர்கள் பேசினார்கள். தந்தையின் சொத்தில் மகளின் பங்கு சம்பந்தமாக ஒன்றிரண்டு அம்சங்களை மட்டும் நான் குறிப்பிட விரும்புகிறேன். முதன் முதலில் நான் ஒரு மகன், பின்னர் ஒரு சகோதரன், பின்னர் ஒரு கணவன், பின்னர் ஒரு தந்தை, இத்தியாதி விதிவிலக்கு இல்லாம லில்லை. என்னால் சொல்ல முடியாது. ஆனால், அனேகமாக ஒவ்வொரு இந்து தந்தையும் - நானும் ஒரு இந்து தந்தைதான் என் னுடைய மகள்களையும் இங்கேயும் அங்கேயும் திருமணம் செய்து கொடுத்துவிட்டேன். ஒவ்வொரு இந்து தந்தையும், தனது சொந்தக் குடும்பத்தைக்காட்டிலும் அந்தஸ்திலும், செல்வத்திலும் இதர பல விஷயங்களிலும் உயர்ந்ததாக உள்ள ஒரு குடும்பத்தில் தனது மகளைத் திருமணம் செய்து கொடுப்பதற்கு ஆவலாக இருக்கிறார். தற்பொழுது, தந்தையின் சொத்தில் மகளின் பங்கு பற்றிப் பேசுகிறார் கள். இது சம்பந்தமான நகைச்சுவையும் இருக்கிறது. மகள் ஒவ்வொரு விதத்திலும் மதிக்கப்படுகிறாள். வரதட்சிணை வாயிலாக தந்தை யின் சொத்தில் ஒரு பங்கும் அதை நீங்கள் ஒரு பங்கு என்று அழைக் கலாம் - கொடுக்கப்படுகிறாள், இத்தியாதி. பங்கு என்ற பிரச்சினை வரும்போது, இவ்வாறு தான் ஏற்படும்: என்னுடைய இடத்திற்கு (வீட்டிற்கு) சாதாரணமாக, ஒரு விருந்தாளியாக நீங்கள் வந்தால், என்னுடைய நண்பர் என்ற முறையில் என்னுடைய விருந்து உபசாரத்தை நீங்கள் பெறக்கூடும். ஆனால் உரிமை என்ற வகையில் நீங்கள் வந்தால், நீங்கள் எந்த விருந்துபசாரத்தையும் என்னிட மிருந்து பெறமாட்டீர்கள் என்று நினைக்கிறேன். சட்டம் யாருக்கும் உதவி செய்யாது என்று என்னுடைய நண்பர்களுக்கு நான் கூறு கிறேன். தந்தையின் சொத்தில் மகளுக்கான உரிமை உருவாக்கப் பட்டவுடனே, அன்பு என்ற அம்சம் முழுவதும் போய்விடும் என்று நினைக்கிறேன். எனது நண்பர் காமத் - அவர் யோசனை கூறிய பல விஷயங்களை நான் ஒத்துக்கொள்ள முடியாவிட்டாலும் - ஒரு விஷயத்தை அவர் கூறினார். ஒரு குடும்பத்தில் ஒரு மனிதனுக்கு ஒரு

மகளும், இரண்டு அல்லது மூன்று மகள்களும் இருக்கிறார்கள். மகள் தொலை தூரத்தில் (பல மைல்களுக்கு அப்பால்) திருமணம் செய்து கொடுக்கப்படுகிறாள். சொத்து சொற்பமானதாக இருக்கக் கூடும். திருமணத்திற்குப் பின்னால், மருமகன், தனது மாமனாரின் வீட்டுக்கு, சொத்தில் பங்கு கேட்க, அல்லது ஒரு பங்குதாரராக வருகிறார். அப்பொழுது அவர் மதிக்கப்பட மாட்டார். எல்லாமே ஒரு முறையான வழியில் இயற்கையான முறையில் உருவாக வேண்டும். இந்த மசோதா சட்டமாக்கப்பட்டால், ஏராளமான சிக்கல் களும், சட்ட வழக்குகளும் ஏற்படக்கூடும். தூய்மையான அன்பு என்பது நமது சமுதாயத்தில் கொல்லப்பட்டுவிடும்.

எனவே, இந்த விஷயத்தை அமைதியாக, நிதானமான முறை யில் பரிசீலனை செய்யுமாறு இந்த அவையின் ஒவ்வொரு உறுப் பினருக்கும் வேண்டுகோள் விடுகிறேன். இந்த அவையில் பலதரப் பிலிருந்தும் யோசனை கூறப்பட்டிருப்பதைப் போன்று, நானும் முன் கூறியது போன்று, இந்த மசோதாவை சட்டமாக்குவதற்கு இந்த அவை தகுதியுடையதல்ல. இந்த மசோதா இன்றைய தினமே நிறை வேற்றப்பட்டுவிடும் என்று அவர்கள் எவ்வாறு இவ்வளவு ஆர்வ மாக இருக்கிறார்கள். ஓராண்டு அல்லது இரண்டு ஆண்டுகள் காத்திருப்பதற்கு உங்களுக்கு ஏன் துணிவில்லை? புதிய தேர்தல் களைக் கண்டு அவர்கள் அஞ்சுகிறார்கள் என்று நான் கூறலாமா?

திரு. எல். கிருஷ்ணசாமி பாரதி : இல்லை, அப்படியில்லவே இல்லை.

பாபு ராம்நாராயண் சிங் : இவ்வளவு நீண்ட காலமாக இந்து சமுதாயம் அதே பழக்க வழக்கங்கள், எல்லாம் அதே மாதிரியாக, வாழ்ந்து, மலர்ச்சியடைந்து வந்துள்ளது. எனவே, அப்படியிருக்கும் போது, என்னுடைய நண்பர் திரு. நசிருத்தீன் கூறியது போன்று, மசோதாவை நாம் சுற்றுக்கு விடுவதால் வானம் இடிந்து விழுந்து விடப் போவதில்லை. இந்த மசோதவை நிதானமான முறையில் பரிசீலனை செய்யுமாறு இந்த அவையின் ஒவ்வொரு உறுப்பினரை யும் கேட்டுக் கொள்கிறேன். அடுத்த தேர்தலைப் பற்றி நண்பர்கள் பயப்படக்கூடும். காங்கிரஸ்காரர்களாகிய நமக்கு வாக்குகள் கிடைக் காமற் போகக்கூடும். அந்தக் கேள்வி இப்பொழுது எழவில்லை. நாம் நமக்கும், நம்மை இங்கு அனுப்பிய தொகுதிக்கும் மக்களுக்கும் உண்மையானவர்களாக நடந்துகொள்ள வேண்டும்.

எனவே, இந்த மசோதாவை என்னுடைய முழு பலத்துடனும் எதிர்க்கிறேன். இந்த மசோதா பொது மக்களின் கருத்தைத் தெரிந்து கொள்வதற்காக சுற்றுக்கு விடப்படவேண்டுமென்ற என்னுடைய நண்பர் 'பண்டிட்' நசிருத்தீன் அகமதுவின் பிரேரணையை உச்சரிக்கிறேன்.

***திரு. எச். சித்தவீரப்பா** *(மைசூர் சமஸ்தானம்) :* இந்தப் பிரேரணையை முன்மொழியும்போது, மிகவும் தெளிவான உரை நிகழ்த்தியதற்காக மாண்புமிகு சட்ட அமைச்சரை பாராட்டுகிறேன். இந்த மசோதா மிகவும் முக்கியமான வகையில் இந்து சமுதாயத்தை பாதிக்கிறது என்று நிறையப் பேசப்பட்டுள்ளது. இந்த நாட்டின் ஒரு பகுதியிலிருந்து, அதாவது மைசூரிலிருந்து வருகிறேன். இந்த மசோதா அமலாக்க விரும்புகிற சில அடிப்படையான விஷயங்கள் அங்கு ஏற்கனவே அமலிலிருந்து வருகின்றன. உதாரணமாக, சுவீகாரம் எடுத்துக் கொள்வது சம்பந்தமான சட்டம், மகளின் பங்கு பற்றிய சட்டம், மற்றும் வேறு பல விஷயங்களும் இருந்து வருகின்றன. தற்போதைய மசோதாவுடன் எல்லா விஷயங்களிலும் ஒத்ததாக இல்லாமலிருக்கலாம். ஆயினும் இந்தக் கோட்பாடு அங்கே இருக்கிறது. நாங்கள் ஏற்கனவே 1934-லேயே இந்து பெண் உரிமைகள் முறைப்படுத்தல் மசோதாவை இயற்றியுள்ளோம். கடந்த 14 ஆண்டுகளாக அந்த சட்டம் மைசூரில் அமலில் இருந்து வருகிறது. ஆனால் அங்கு எந்தப் பொதுவான கொந்தளிப்பும் ஏற்படவில்லை. இதுசம்பந்தமாக சட்ட வழக்குகள் ஏதும் அதிகம் ஏற்படவில்லை. அது போன்றே இங்கு சில மதிப்புக்குரிய உறுப்பினர்கள் பயப்படுவதுபோன்று, இந்து சமுதாயத்தில் எத்தகைய சீர்குலைவும் அங்கு ஏற்படவில்லை. உண்மையில் தற்பொழுது அங்கு அமலிலுள்ள மசோதா தேவைப்படும் அளவுக்கு உரியதாக இல்லை என்று எங்களுடைய அனுபவத்திலிருந்து நாங்கள் புரிந்து கொண்டுள்ளோம். எனவே தற்போதிருந்து வரும் சட்டத்தில் மேற்கொண்டு அபிவிருத்தி செய்வதைக் கண்டறிவதற்காக மற்றொரு குழு அமைக்கப்பட்டுள்ளது.

அவைக்கு முன்னால் உள்ள மசோதா இந்து சமுதாயத்தின் சாதி அமைப்பை அல்லது வேறு சில அடிப்படையான நம்பிக்கைகளை அல்லது கோட்பாடுகளை பாதிக்கிறது என்று கூறப்பட்டது. சரி, ஐயா, சில இந்து இலக்கியங்களைப் படித்ததிலிருந்து எனக்குத்

★ அ.நி. (சட்டப்பேரவை) டி., தொகுதி II, பாகம் II, பிப்ரவரி 28, 1949, பக். 953-56.

தெரிந்தது என்னவெனில், நாம் வேத காலத்தை - அதாவது கி.மு. 2000-1400 - ஆராய்ந்து அப்பொழுது இருந்த இந்து சமுதாயத்தையும் ஆராய்ந்தால், அப்பொழுது இந்த நான்கு சாதிகளில் எதுவும் இருந்ததாக நாம் பார்க்க முடியாது. பிறந்த ஒவ்வொரு மனிதனும் தனது குணம் அல்லது காமத்திற்கு ஏற்ப தனது வாழ்நாளில் அனைத்து வர்ணங்கள் அல்லது ஆசிரமங்கள் வழியாகச் செல்லவேண்டும். ஒரு சிறுவன், இருபது வயதை அடையும் வரையில், வீட்டு வேலைகளைச் செய்து, தனது குருவுக்குக் கீழ்ப்படிந்து நடந்து, அவனுக்கு ஆணையிடப்படும் பிற வேலைகள் அனைத்தையும் செய்ய வேண்டும். அவன் சூத்திரன் என்று அழைக்கப்பட்டான். இருபது வயதுக்குப் பிறகு, அவன் திருமணம் செய்து கொள்வதற்கு அனுமதிக்கப்பட்டான். குடும்பத்தைப் பராமரிப்பது அவனுடைய பொறுப்பாக்கப்பட்டது; பின்னர், அவன் மீது சுமத்தப்படும் கடமைக்கு ஏற்ப, அவன் வைசியன் என்று அழைக்கப்பட்டான். சில காலத்திற்கு அவன் வாழ்க்கையை அனுபவித்து 40 வயதை அடைந்ததற்குப் பின்னர், ஒவ்வொரு மனிதனும் நாட்டைப் பாதுகாக்க வேண்டிய அவசியம் ஏற்படும்போது, அவன் ஒரு க்ஷத்திரியனின் கடமையைச் செய்ய வேண்டியேற்படுகிறது. ஒரு குறிப்பிட்ட வயதை, அதாவது 60 வயதை எட்டிய பிறகு, பெருமளவு வாழ்க்கையை அனுபவித்த பிறகு, அவனுடைய அனுபவத்தின் மற்றும் கல்வியின் பயனாக, அவன் சீடர்களுக்கு போதிக்கும் பணியையும், விவேகத்தின் (அறிவின்) பிற கடமைகளையும் மேற்கொள்ளும்போது அவன் ஒரு பிராமணன் என்று பிராமணனின் குணத்தைப் பெற்றவன் என அழைக்கப்பட்டான்.

எனவே, இந்த நாட்டில், இந்த சாதி அமைப்பு ஒரு வேறுபட்ட முறையில் தோன்றியது, ஒரு வேறுபட்ட முறையில் வளர்ச்சியடைந்தது. ஆனால் இன்று, சுமார் 13,000 சாதிகளும், இன்னும் கூடுதல் எண்ணிக்கையிலான உப-சாதிகளும் இருக்கின்றன, இவை வெவ்வேறு மரபுகளையும், வெவ்வேறு பழக்க வழக்கங்களையும் இன்னும் என்னவெல்லாமோ கொண்டுள்ளன.

இன்று அரசியல் ஒற்றுமையைப் பொறுத்தவரையிலும் நாம் ஒன்றாக இருக்கிறோம். எந்த ஒரு சீரான விதிமுறைகளையோ அல்லது எந்த ஒரு சீரான நமது சட்டங்களோ இருக்க வேண்டுமென்று, நாம் விரும்பினால், ஒரு குறிப்பிட்ட தரத்தை வழங்கக் கூடிய ஏதாவது சட்டத் தொகுப்பு மிகவும் அத்தியாவசியமாகும். நம்மால்

கொண்டுவரப்படும் சட்டத்தில், எந்த ஷரத்துகள் அவசியமானவை, எவை அவசியமற்றவை என்று நாம் பரிசீலனை செய்யலாம். ஆனால் அத்தகைய ஒரு சட்டத் தொகுப்பு அவசியமே இல்லையென்று நாம் கூறினால், நாம் ஓரளவு பகுத்தறிவைப் பிரயோகப்படுத்தினால், நாம் யாரும் அந்த நிலையை ஏற்றுக் கொள்ள முடியாது. இந்த நாட்டில் வெவ்வேறு மத நம்பிக்கைகளைக் கொண்டுள்ளவர்களை - துவைதம், அத்வைதம் - நாம் பார்க்கிறோம். ஏக பத்தினி விரதத்தையும், பலதாரங்களையும் கொண்டுள்ளவர்களும் இந்த நாட்டில் இருக்கிறார்கள். சில இடங்களில் ஒரு மனைவி பல கணவர்களையும் கொண்டிருக்கிறாள். இத்தகைய சூழ்நிலைகளில் வாரிசுரிமை, திருமணம் மற்றும் வேறு பலவற்றுக்கும் ஒரு சீரான சட்டத் தொகுப்பு நமக்கு அவசியமில்லையா? பிரிட்டிஷ்காரர்களின் ஆட்சிக் காலத்தில் சமய நடுநிலைமை அல்லது தலையிடாமை என்ற போர்வையின் கீழ், இந்து சமுதாயத்தில் உள்ள எந்தத் தீமைகளையும் அகற்றுவதற்கு அவர்கள் ஒருபோதும் கவலைப்பட்டதில்லை; அந்தத் திசை வழியில் எந்த சீர்திருத்தத்தையும் அவர்கள் ஒருபோதும் முயற்சி செய்ததில்லை. உண்மையில் வாரன் ஹேஸ்டிங்ஸ் மீது பர்க் குற்றம் சாட்டி குற்றவாளிக் கூண்டில் ஏற்றிய போது, அவருக்கு எதிராக சாட்டப்பட்ட குற்றங்களில் ஒன்று, தன்னுடைய சொந்த ஆதாயத்திற்காக அவர் சாதிச் சட்டங்களைப் பயன்படுத்திக் கொண்டார் என்பதாகும். சாதி அமைப்பு தமது சொந்த நன்மைக்கு மிகவும் பொருத்தமானது என்று பிரிட்டிஷ்காரர்கள் கண்டனர். எனவே, அவர்கள் சமுதாயத்தில் தேவைப்பட்ட சீர்திருத்தங்கள் எதையும் கொண்டு வருவதற்கு ஒரு போதும் முனையவில்லை. ஆனால், நாம் சுதந்திரமடைந்துள்ள போது; மிகவும் தேவைப்படும் சீர்திருத்தத்தைக் கொண்டு வருவதற்கு முயலக் கூடாது என்பதற்கு அது காரணமாகாது. நாம் மேற்கொண்டு முன்னே செல்வதாக சிலர் கூறினர். இது போன்ற ஒரு மசோதாவை இவ்வளவு சீக்கிரமாக நாம் ஏன் எடுத்துக் கொள்ள வேண்டுமென்றும், இன்னும் கொஞ்ச காலத்திற்கு நாம் ஏன் காத்திருக்கக் கூடாதென்றும் அவர்கள் கேட்டனர். என்னுடைய கருத்து என்னவெனில்; இந்த சீர்திருத்தம் ஏற்கனவே நீண்ட காலம் தாமதமாகியுள்ளது. இன்னும் மிகவும் முன்னதாகவே இது கொண்டுவரப்பட்டிருக்க வேண்டும்; ஆனால் நாம் ஓர் அடிமை நாடாக இருந்தோம், நம்முடைய விதியை நிர்ணயிப்பவர்களாக நாம் இருக்கவில்லை. இப்பொழுது இது ஏற்கனவே மிகவும் காலதாமதமாகியுள்ள ஒரு விஷயமாகும், என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த அவை தகுதியுடையதா என்றெல்லாம் வேறு பல ஆட்சேபணைகளும் எழுப்பப்பட்டன. உண்மையில், இந்தப் பிரேரணையை முன்மொழிந்த மாண்புமிகு, கற்றறிந்தவர், இந்த விரும்பத்தக்க மாற்றத்தைக் கொண்டுவருவதற்கு நாம் எவ்வாறு தகுதியுடையவர்கள் என்று தெளிவாக விளக்கியுள்ளார். எனவே, குறிப்பாக வேறு பல பேச்சாளர்களும் இருப்பதால், இந்த அவையின் நேரத்தை நான் எடுத்துக் கொள்ள விரும்பவில்லை.

விவாகரத்துக் கோட்பாட்டைப் பொறுத்த மட்டிலும், அது மிகவும் விவாதிக்கப்பட்ட ஒரு விஷயம் என்று கருதுகிறேன். இந்து சமுதாயத்தில் அதிக எண்ணிக்கையுள்ள மக்களை மெய்யாகவே கிளர்ச்சி அடையச் செய்கின்ற ஒரு விஷயமாகும் இது. சமயச் சடங்கு ரீதியான திருமணமாக இருந்தாலும் அல்லது வேறு எந்த வகைப் பட்ட திருமணமாக இருந்தபோதிலும், எந்த சூழ்நிலையிலும் அது ரத்து செய்யப்பட முடியாத திருமண பந்தமாக இருக்கக் கூடாது என்பது எனது விருப்பமாகும். மக்களுக்குக் கட்டுப்பாடற்ற சுய விருப்பத்தைக் கொடுப்பதற்கு பதிலாக, இதை முன் மொழிந்த மாண்புமிகு அமைச்சரை, இந்த அம்சத்தை கவனத்தில் எடுத்துக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன், அதாவது, ஒரு காலவரம்பு நிர்ணயிக்கப்படலாம் - உதாரணமாக ஐந்தாண்டுகள் அல்லது மூன்றாண்டுகள் - இந்த அவை எதை அங்கீகரிக்கிறதோ அதன்படி - அந்தக் காலகெடுவுக்குள் திருமணம் செய்துகொண்டுள்ள மக்கள் தமது முரண்பாடுகளைப் போக்கிக்கொள்வதற்கு வல்லதாக இருக்க வேண்டும். ஒருவரை மற்றொருவர் புரிந்து கொள்வதற்குப் போதிய அவகாசம் இருக்கும். இவ்வளவுக்குப் பின்னரும், அவர்களால் இணக்கமாகப் போக முடியாவிட்டால், திருமண பந்தத்தை முறித்துக் கொள்வது அவசியப்படலாம்.

பண்டிட் லட்சுமி காந்த மைத்ரா : சோதனை அடிப்படையிலான திருமணம் என்று நீங்கள் கூறுகிறீர்களா?

திரு. எச். சித்தவீரப்பா: சோதனை அடிப்படையிலான திருமணமல்ல, ஆனால், யாரும் விவாகரத்தின் அனுகூலம் அல்லது சாதகத்தைப் பெறுவதற்கு முன்னால், ஒரு குறிப்பிட்ட காலகட்டம் நிர்ணயிக்கப்பட வேண்டும். அந்தக் காலகட்டத்திற்கு முன்னால், திருமணமான எந்தத் தம்பதிகளும் விவாகரத்துக்கு அனுமதிக்கப் படக்கூடாது.

திரு. எல். கிருஷ்ணசாமி பாரதி : அது ஆங்கிலேயர் சட்டம் அங்கு அவர்கள் மூன்றாண்டுகள் என்று நிர்ணயித்திருக்கிறார்கள்.

திரு. எச். சித்த வீரப்பா : மேலை நாடுகளின் அனுபவத்தை நாம் பார்ப்போம். உதாரணமாக, அமெரிக்காவை எடுத்துக் கொள் வோம். லிண்ட்சே என்ற ஒரு புகழ்பெற்ற விவாகரத்து நீதிமன்ற நீதிபதியின் அனுபவம் நமக்கு முன்னால் இருக்கிறது. எப்பொழு தாவது, யாராவது அவர் முன்னால் விவாகரத்து கோரிப் போனால், அவர் இவ்வாறு கூறுவது வழக்கம். "நீங்கள் ஒரு மாதம் அல்லது இரண்டு மாதங்களுக்கு ஒன்றாகச் சேர்ந்து வாழ்ந்துவிட்டு, பிறகு மீண்டும் என்னிடம் வாருங்கள். அதற்குப் பின்னரும், நீங்கள் விவாக ரத்து செய்துதான் தீரவேண்டுமென்று நீங்கள் உணர்ந்தால், பிறகு நீங்கள் அதற்காக விண்ணப்பிக்கலாம்." ஒரு நீதிபதியின் அனுபவம் என்னவெனில் மக்கள் தாங்கள் பரஸ்பரம் பிரிவதற்கு முயலும் போதெல்லாம், அவர்கள் ஒருவரையொருவர் புரிந்து கொள்வதற்கு முயற்சி செய்யவில்லை என்று கூறுகிறார். ஒருவர் மற்றொருவரை மதிப்பீடு செய்வதற்கு சந்தர்ப்பம் ஏற்பட்டால், அவர்கள் பிரிந்து போவதற்கான இந்த தீவிர முறையைக் கையாளாமல் போகக்கூடும். எனவே, விவாகரத்து சம்பந்தமாக அத்தகைய ஏதாவது ஒரு கால கட்டத்தை நிர்ணயிக்க வேண்டும் என்று கருதுகிறேன்.

சொத்துக்களைத் துண்டாக்கும் கொள்கையைப் பொறுத்த மட்டிலும், விவசாய நிலம் இந்த மசோதாவால் பாதிக்கப்படவே யில்லை. அந்த அளவுக்கு அது நல்லதே.

சி.எச். ரணவீர சிங் : (கிழக்கு பஞ்சாப் : பொது) : மைய அரசின் நிர்வாகத்தின் கீழ் உள்ள பிரதேசங்களில் அது பாதிக்கப்பட்டுள்ளது.

திரு. எச். சித்த வீரப்பா : இல்லை. அது அவ்வாறு இல்லை. மைய அரசின் நிர்வாகத்தின் கீழ் உள்ள நிலம் மட்டுமே பாதிக்கப் பட்டுள்ளது. அது ஒரு மிகவும் சிறிய நிலப்பரப்பாகும். இந்த விவசாய நிலத்தைப் பொறுத்த மட்டிலும், நமது சொந்த விவசாயத் தின் நலனுக்காகவும், உணவைப் பொறுத்த மட்டிலும் நமது சொந்த வாழ்வுக்காகவும் நாம் விவசாய சீர்திருத்தத்தை மேற்கொள்ள வேண்டிய திருமணம் வந்துவிட்டது. அது மட்டுமின்றி, வாரிசுரிமை சம்பந்தமாகவும், குடும்பத்தின் முதல் மகனுக்கு உள்ள சொத்துரிமை சட்டம் போன்ற ஒரு சட்டம் உருவாக்கப்படவேண்டிய நேரமும்

வந்துவிட்டது. இந்த நாட்டின் 90 சதவீத மக்கள் கிராமங்களில் வாழ்கின்றவர்கள், அவர்களின் சொத்து பெரும்பாலும் விவசாயம் சம்பந்தப்பட்டது என்பதாலும், 90 சதவீத மக்களின் சொந்த சொத்து, இந்த சட்டத்தின் செயல்பாட்டிலிருந்து விலக்கப்படுவதாலும் நிலம் துண்டு துண்டாக்கப்படும் கொள்கை தர்க்கரீதியானதோ அல்லது பகுத்தறிவுக்கு உகந்ததோ அல்ல என்று கருதுகிறேன்.

பழக்க வழக்கம் சம்பந்தமாக, என்னுடைய சில நண்பர்கள், பழக்க வழக்கம்தான் எப்போதும் சட்டத்தை செலுத்துகிறது என்றும் எனவே சட்ட சம்மதம் உள்ள எந்தப் பழக்க வழக்கமும் ஏற்றுக் கொள்ளப்படவேண்டும் என்றும் கூறினார்கள். வழக்குரைஞர்களாக அனுபவம் உள்ள நம்மில் பலர், எந்த நன்மை செய்யும் சட்டத்தின் பலனையும் கலைப்பதற்கு பழக்க வழக்கம் எவ்வாறு சௌகரிய மாகப் பயன்படுகிறது என்பதைச் சுட்டிக்காட்டியுள்ளார்கள். இந்தத் தீமைக்கு முடிவு கட்ட முடியும் என்று நினைக்கிறேன். இதற்கு என்னால் ஓர் உதாரணத்தைக் கொடுக்க முடியும். இந்திய தண்டனைச் சட்டத்தில் உள்ள ஒரு ஷரத்தின்படி, எந்த ஒரு பெண்ணாவது ஒழுக்கக் கேடான நோக்கத்திற்காகத் தன்னை அர்ப்பணித்துக் கொண்டால் அது ஒரு குற்றமாகும். அவ்வாறு அர்ப்பணித்துக் கொள்வதன் அடையாளங்கள், அந்தப் பெண்ணின் கழுத்தில் சில மணிகளைக் கட்டுவதாகும். இப்பொழுது வழக்கறிஞரின் புத்திக்கூர்மை, மணி களைக் கட்டும் பழக்கவழக்கத்தைக் கண்டுபிடிக்க முடிந்துள்ளது. தார்மீக நோக்கங்களுக்காகத் தங்களை அர்ப்பணித்துக் கொள்ளும் சம்பவங்களுக்குக் கூட அந்தப் பழக்க வழக்கத்தை இப்போது பிரயோ கிக்கிறார்கள். இது தவிர, பழக்கவழக்கத்தை முன்னிட்டு நீதிமன்றத் தில் வழக்குகள் தொடுக்கப்படுவதையும் நாம் அறிவோம். இதற்காக எவ்வளவு பெருந்தொகைகள் செலவழிக்கப்படுகின்றன, குறைந்த பட்சம் முந்திய ஆட்சிக் காலத்தின் போதாவது அவ்வாறு செய்யப் பட்டது. ஒரு குறிப்பிட்ட விஷயத்தில் ஒரு தீர்ப்பை பெறுவதற்காக மக்கள் ஏராளமான தொகைகளை செலவழிப்பது வழக்கம். இருவேறு தீர்ப்புகளைப் பிரித்துக் காட்டுவதற்காக நீதிபதிகளுக்காகப் பணத்தை விரயம் செய்கின்றனர். இன்று இந்த மசோதா மிகவும் எளிமை யானது மிகவும் தெளிவாக இருக்கிறது. எந்த வழக்கறிஞரிடமும் போகாமலேயே, எந்த நபரும் சுமார் நான்கு அணா செலவழித்தும் சட்டம் சம்பந்தமாகத் தனது நிலைமை என்ன என்பதைத் தெரிந்து கொள்ள முடியும்.

பண்டிட் லட்சுமிகாந்த மைத்ரா : ஒருவர் நான்கு அணாவில் எல்லாவற்றையும் சமாளிக்க முடியும் என்று கூறுகிறீர்களா?

திரு. எச். சித்த வீரப்பா: அது மிகவும் சாத்தியமே. அதற்கு ஒரு நாள் வரும். அதற்காகவும் நாம் முயற்சி செய்ய வேண்டும். உண்மையில், இந்த நீதிமன்றத் தீர்ப்புகள் சில சொத்து உரிமைகளையும், பிறவற்றையும் எவ்வாறு பாதிக்கின்றன என்பதை நாம் பார்த்து வருகிறோம். ஒரு நீதிபதி ஒரு முடிவுக்கு வருகிறார். அது சில காலத்திற்கு சட்டமாக இருக்கும். நாளைய தினம் அவர்கள் ஏதாவது ஒரு ஆவணத்தை வாசகத்தை அல்லது ஸ்மிருதியை, அல்லது அத்தகைய ஏதாவது ஒரு பழைய ஆவணத்தைக் கண்டு பிடிப்பார்கள். அப்போது இந்த சட்டம் ரத்து செய்யப்படுகிறது என்று நமக்குக் கூறுவார்கள். இதன் விளைவு இந்து சட்டத்தில் எதுவும் நிலையானதல்ல. உண்மையில் பிரிட்டிஷ் ஆட்சியின் கீழ் கடந்த 150 ஆண்டுகளில் ஒன்றன்பின் ஒன்றாகப் பல தீர்ப்புகள் வந்துள்ளன. இருந்தபோதிலும், இந்து சட்டத்தில் எதுவும் நிலையாக இல்லை என்று அவர்கள் கூறுகிறார்கள். எப்பொழுது நமக்கு ஒரு நிலையான வடிவத்தில் சட்டம் வகுக்கப்படுகிறதோ அப்பொழுது தான் அதனை சாதாரண மனிதன் புரிந்து கொண்டு, தன்னுடைய நிலை திட்டவட்டமாக என்ன என்பதை அவன் புரிந்து கொள்ள முடியும். உண்மையில் பணம் வைத்துக் கொண்டிருக்கும் ஒருவர் கொஞ்சம் பணத்தைக் கொடுக்க விரும்பும்போது, தனது வாரிசுகள் யார், யாருக்குப் பங்குகள் இருக்கின்றன என்பதை அவர் திருப்திப்படுத்திக் கொள்ள வேண்டும். இதன் விளைவாக அவர் ஒரு விவசாய நிலத்தின்மீது ரூ. 1000 கடன் கொடுக்கக் கூடியவர், ரூ. 500 மட்டுமே கொடுக்கிறார். எனவே, எந்தக் கோணத்திலிருந்து பார்த்தாலும், இந்த மசோதா ஓர் ஆரோக்கியமான மசோதா என்று நான் நம்புகிறேன். எனவே இதற்கு என்னுடைய முழுமனதான ஆதரவை வழங்குகிறேன்.

திரு. தலைவர் : நாளைய தினம் கேள்வி நேரத்திற்குப் பின்னர் விவாதம் தொடரும்.

*இந்து சட்டத் தொகுப்பு (தொடர்ச்சி)

+**திருமதி ஜி. துர்க்காபாய்** (சென்னை : பொது) : மாண்புமிகு சட்ட அமைச்சர் முன்மொழிந்த பிரேரணையை நான் மிகுந்த மகிழ்ச்சியுடன் ஆதரிப்பதற்காக எழுந்து நிற்கிறேன். பொறுக்குக் குழுவிலுள்ள சர். பி.என். ராவுக்கும் அவருடைய சகாக்களுக்கும் என்னுடைய ஆழ்ந்த நன்றியைத் தெரிவிக்க வேண்டும் என்றும் உணருகிறேன். இந்த மசோதாவுக்கு அடிப்படையாக உள்ள அறிக்கையைத் தயாரிப்பதற்கு அவர்கள் பெருமளவு பாடுபட்டுள்ளனர்.

இந்து சட்டத்தை நிர்ணயித்துக் கூறுவதற்கான இந்த மசோதா சட்டப்புத்தகத்தில் ஏறும்போது அது இந்த நாட்டின் சமூக வரலாற்றில் ஒரு மாபெரும் மைல்கல்லாக இருக்கும். இந்த மசோதாவின் முக்கிய ஷரத்துகளை விரிவாக விவாதிப்பதற்கு முன்னால், ஒரு விஷயத்தை வலியுறுத்துவதற்கு விரும்புகிறேன்: இந்த மசோதாவின் ஷரத்துகள் அனுமதியளிக்கிற அல்லது உதவுகின்ற தன்மை வாய்ந்தவை என்ற உண்மையை உறுப்பினர்கள் அறிவார்கள். இந்துக்களின் வைதீகப் பகுதியினர் மீது அவை எத்தகைய கடப்பாட்டையோ அல்லது நிர்ப்பந்தத்தையோ சுமத்தவில்லை. அவற்றின் ஒரே விளைவு இந்துக்களின் வளர்ந்துவரும், மற்றும் உரிமை கோரும் ஆண்கள், பெண்களுக்கு, பழைய வழிகளைக் கடைப்பிடிப்பதற்கு அவர்களது சுதந்திரத்தை எவ்வகையிலும் பாதிக்காமலும் அல்லது குறைவுபடுத்தாமலும் அவர்கள் வாழ்வதற்கு விரும்புகின்ற வாழ்க்கையை வாழ்வதற்கு சுதந்திரத்தை வழங்குவதாகும்.

இந்த மசோதாவுக்கு எதிராக எழுப்பப்பட்டுள்ள ஒன்றிரண்டு பிரதான ஆட்சேபனைகள் சம்பந்தமாக மட்டும் என்னுடைய கருத்தைக் கூறவிரும்புகிறேன். முதலாவது ஆட்சேபனை விதிகளை ஒழுங்குபடுத்தி தொகுப்பதற்கான முயற்சியையே எதிர்ப்பதாகும். இந்து சட்டத்தின் பல கோட்பாடுகள் இப்பொழுது நன்கு

★ அ.நி. (சட்டப்பேரவை) டி, தொகுதி II, பாகம் II **1949**, மார்ச், பக். **991-1030**

\+ அதே தொகுதி, பக். **991-95**.

நிலையாக உள்ளனவென்றும், எனவே இந்த நிலையான சட்டத்தை நிலையற்றதாக்கும் ஒரு சட்டத் தொகுப்பு சிறிதும் தேவையில்லை யென்றும் வாதிக்கப்படுகிறது. மற்றைய ஆட்சேபனை என்ன வெனில், தலைமுறை தலைமுறையாகக் கைமாற்றிக் கொடுக்கப் பட்டு வந்துள்ள இந்து சட்டத்தின் கோட்பாடுகளைப் பாதுகாப்பதற்கு மாறாக, சட்ட விதிகளை ஒழுங்குபடுத்தும், தொகுப்பாக்கும் முயற்சி யானது இந்து சமுதாயத்திற்கு மிகவும் அந்நியமான கோட்பாடு களைப் புகுத்துவதில் போய் முடியும் என்பதாகும். ஸ்மிருதிகள், ஸ்ருதிகள் மற்றும் மகத்தான புகழ்வாய்ந்த முனிவர்களின் சட்டத்தை மாற்றுவதற்கு சட்டப் பேரவைக்கு உரிமையில்லை என்று கூறப் பட்டது. இந்து சட்டத் தொகுப்புக்கு எதிரான மற்றொரு குற்றச் சாட்டு என்னவெனில், அது புரட்சிகரமான தன்மையுடைய மாற்றங் களைப் புகுத்துவதற்கு முயல்கிறது என்றும் எனவே, அது ஸ்மிருதி களும் தர்மமும் வகுத்தளித்துள்ள சட்டத்தை ஒழித்துக் கட்டி விடும் என்பதுமாகும். இந்த ஆட்சேபனைகளுக்கெல்லாம் என்னுடைய பதில் என்னவெனில், இந்து சட்டத்தின் பல கோட்பாடுகள் இப் பொழுது நன்கு நிலைத்திருப்பதால், இந்தக் கோட்பாடுகளையெல் லாம் ஒரு முறைப்படியான, எளிதில் புரிந்து கொள்ளத்தக்க சட்டத் தொகுப்பை உருவாக்குவது அவசியமாகும். இன்றுள்ளபடி இந்து சட்டம் நெளிவுசுழிவற்றதாக இல்லாமல் இறுகிப்போனதாக இருக் கிறது. அதேபொழுதில் திட்டவட்டமாகவும் இல்லை. பல நீதித் துறைத் தீர்ப்புகளும், முன் உதாரணங்களும் அவற்றின் பயன் தன்மையை இழந்துவிட்டன. ஓர் ஆங்கிலேய நூலாசிரியர் கூறுவது போன்று, இந்த விஷயம் சம்பந்தமான வழக்குச் சட்டம் ஓர் அடர்ந்த காடு மாதிரி உள்ளது. அதில் மரம் எங்கே வனம் எங்கே என்று பார்ப்பது சாத்தியமல்ல. அவ்வப்போது பல்வேறு உயர்நீதி மன்றங்கள் அடுத்தடுத்து அளித்த முரணான தீர்ப்புகள் உள்ளன. மிகச் சிக்கலான சில சட்டப் பிரச்சினைகள் மீது பிரிவு கவுன்சில் எடுத்த முடிவுகள் கூட புராதன ஆணையுரிமைக்கும் நவீன உணர்வுக்கும் ஏற்புடையனவாக இல்லை என்று பரவலாகக் கருதப் படுகிறது. ஒரு சீரான, ஒருங்கிணைக்கப்பட்ட சட்டம் இந்து சமுதா யத்துக்கு ஒரு வரப்பிரசாதமாக இருக்கும்; ஏனென்றால் சட்டத்துறை மாணவர்களுக்கும் வழக்கறிஞர்களுக்கும் கணிசமான நேரத்தை அது மிச்சப்படுத்தும்; இல்லையெனில், சட்டத்தை முற்றிலுமாக கிரகித்துக் கொள்வதற்கு அவர்கள் பல ஆண்டுகள் எடுத்துக்கொள்ள

வேண்டியிருக்கும். ஒரு சாதாரணக் குடிமகன்கூட சட்டத் தொகுப்பை படித்துப் பின்வருமாறு தனக்குள் கூறிக்கொள்ள முடியும்: ''எனது உரிமைகள், சலுகைகள், கடமைகள் ஆகியவற்றின் மொத்த அடிப்படையே இந்தத் தொகுப்பிற்குள் இருக்கிறது.'' ஒரு சட்டத் தொகுப்பு நீதிபதிகளின் நேரத்தையும் உழைப்பையும் இயன்ற மட்டும் குறைக்கும்; நீதி வழங்குவதை துரிதப்படுத்துவதையும் அது ஊக்குவிக்கும். ஒரு சட்டத் தொகுப்பு இல்லையெனில், நீதி இல்லை என்பது என் கருத்து.

மிகவும் புரட்சிகரத் தன்மையுடைய மாற்றங்களை இது கொண்டுவந்துள்ளது என்ற ஆட்சேபனையை பிரதானமாக மாற்றத்தை விரும்பாத சில சுயநலக் கும்பல்கள் எழுப்புகின்றன. நாட்டின் எதிர்கால நலன்களை அடைவதற்காக இன்றைய சில நலன்களைத் தியாகம் செய்வது எப்பொழுதும் வரவேற்கத் தக்கதாகும் என்று இவர்கள் வாதிடுகின்றனர். உண்மை என்னவெனில் இந்தப் பாதையில் இந்தச் சட்டத் தொகுப்பு உண்மையில் தேவையான அளவு போகவில்லை: இது என் கருத்து.

விவசாயச் சொத்தின் பெரும் பகுதி இந்தச் சட்டத் தொகுப்பின் பார்வையிலிருந்து விலக்கி வைக்கப்படுகிறது. எனவே, ஒரு சீரான சட்டம் வேண்டுமென்ற உங்களுடைய நோக்கம் முறியடிக்கப்படுகிறது என்று வலியுறுத்தப்படுகிறது. இந்த நோக்கம் தோற்கடிக்கப்படும்போது, ஒரு சட்டத்தொகுப்பை ஏன் கொண்டுவர வேண்டும்? இந்த ஆட்சேபத்திற்கு என் பதில் இதுதான்: இந்தச் சட்டத் தொகுப்பின் நோக்கம் எல்லா இந்துக்களுக்கும் ஒரு சீரான சட்டத்தை வழங்குவதே அன்றி, எல்லாவிதமான சொத்துக்களுக்கும் ஒரு சீரான சட்டத்தை வழங்குவது அல்ல. வேறு எதற்காக இல்லாவிடினும், விவசாயத்தின் நலனுக்காக உரிய சட்டப்பேரவைகளால் தனிச் சட்டங்களும், சிறப்புச் சட்டங்களும் இயற்றப்படும்; அவற்றில் வாரிசு உரிமை பற்றிய விசேஷச் சட்டம் உட்படலாம். சொத்தின் மற்ற வகைகளுக்கு பொருந்தும் வாரிசுரிமைச் சட்டத்திலிருந்து இது வேறுபட்டதாக இருக்கலாம்.

இப்பொழுது, மகளுக்குப் பங்கு கொடுக்கும் பிரச்சினைக்கு வருகிறேன். பல காரணங்களால் இது எதிர்க்கப்படுகிறது; அதாவது சொத்து சிதையுறுவதற்கும், துண்டு துண்டாக ஆவதற்கும் இது

இட்டுச் செல்லும்; மேலும் ஒரு வெளி நபரை மருமகன் என்ற உருவில் உள்ளே புகுத்தும். ஆட்சேபனைக்கு மற்றொரு காரணம்: ஒரே சமயத்தில் ஒரு மகளுக்கும் ஒரு மகனுடன் வாரிசு உரிமை அளிப்பது இந்து சமுதாயத்தை சீரழித்து விடும் என்பதாகும். ஒரு மகள் ஒரு பங்கை எடுத்துச் சென்றால், அவளது சகோதரர்களின் அன்பு இழக்கப்படுகிறது என்றும் கூறப்படுகிறது. திருமணச் செலவு மற்றும் மகளுக்குப் பங்கு என்ற இரட்டைப் பளுவால் பல குடும் பங்களின் மகன்கள் வீழ்ச்சியடைவர், சீரழிவர் என்றும் கூறப்படு கிறது. தங்கள் சொந்த நலனில் சற்று அதிக சிரமம் ஏற்படுவதை ஏற்றுக் கொள்ளாவிடில் பின்னர் சகோதரர்களின் பாசம் எத்தகையது என்று நான் கேட்கலாமா? மகளுக்கு பங்கு எதுவும் கொடுக்காவிடில் மகன்களின் பாசம் அதிகமாக இருக்குமா என்று நான் கேட்கலாமா?

சொத்து சிறு சிறு பாகங்களாகப் பிரிந்துவிடும் என்பதைப் பொறுத்தவரை, இக்கேள்வி எவ்வாறு எழுப்பப்படுகிறது என்பதை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை; ஏனெனில், இந்த மசோதா வின் வரம்பிலிருந்து ஏற்கனவே விவசாயச் சொத்துக்கள் விலக்கி வைக்கப்பட்டுள்ளன. இந்த அவையின் மதிப்பிற்குரிய உறுப்பினர் களில் ஒருவர் இந்தப் பிரச்சினையை எழுப்பினார்; விவசாயச் சொத்தின் பெரும் பகுதி இந்தச் சட்டத் தொகுப்பின் செயல்பாட்டி லிருந்து நீக்கி வைக்கப்பட்டிருக்கிறது என்பதை நாம் எல்லோரும் அறிவோம். நகர்ப்புற சொத்துக்கும் அசையக்கூடிய சொத்துக்கும்தான் இது பொருந்தும். துண்டு துண்டாகி விழும் என்று கூறுவது மகளுக்கும் ஒரு பங்கு கொடுக்கப்பட்டால் இவர்களின் பங்கு குறையும் என்று நினைக்கிறார்கள் என்று கருதுகிறேன். அதே சதையையும் ரத்தத்தை யும் கொண்ட மகளுக்கு பங்கு கொடுப்பது பற்றிப் பெரும் கூச்சல் கிளப்ப வேண்டுமா என்று கேட்கிறேன்.

குடும்பத்தில் ஒரு அன்னியரை நுழைப்பது பற்றி எனது பதில் : தனது தந்தையிடமிருந்து மகள் பெறும் சொத்து, தேவைப்படின் ஒரு சட்டம் மூலம் அவளது சொந்தச் சொத்தின் பாகமாக ஆக்கப்படலாம். இந்தச் சட்டத்திலிருந்து விளையும் நன்மை அல்லது தீமை அந்தக் குறிப்பிட்ட நபரை, அதாவது மருமகனையும் பொறுத்தது. இதுபற்றி அதிகம் சொல்ல நான் விரும்பவில்லை.

பங்கு கோரும் மகள், மகன்களைப் போலவே, தந்தையின் மரணத்திற்கு பிறகே அதை அடைவது சாத்தியமாகும் என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும்; தந்தை உயிருடன் இருக்கும்போது சொத்துப் பிரிவினையை அவள் கோருவது என்பது நிச்சயம் கிடையாது. எனவே மதிப்பிற்குரிய உறுப்பினர்களில் சிலர் இதற்கு ஏன் ஆட்சேபம் செய்ய வேண்டும் என்பதை என்னால் கண்டுகொள்ள முடியவில்லை. சட்ட அமைச்சர் ஏற்கனவே இந்த விஷயம் பற்றி எடுத்து விளக்கியதுபோல், தனது தந்தையின் சொத்திலிருந்து மகள் பங்கு பெறுவதை ஸ்மிர்திகளே அங்கீகரித்துள்ளன; எனவே, இதில் புரட்சிகரமானது எதுவும் இல்லை. தனது தந்தையின் அல்லது அவளது முன்னோர்களின் ஆன்மீக நலன்களுக்கு அவள் பங்கு ஏதும் இல்லை என்ற காரணத்தைக் கொண்டு மகளை விலக்குவது நியாயமற்றது, நீதிக்குப் புறம்பானது என்று கூறுவேன்.

இது சம்பந்தமாக ஒரு வாதம் முன்வைக்கப்படுகிறது. மகள் தனது தந்தையின் சொத்தில் பங்கிற்கு வராமல் தனது கணவனுடைய சொத்தில் ஏன் ஒரு பங்கு எடுத்துக் கொள்ளக் கூடாது என்பதே அந்த வாதம். இது ஒரு சமரச சூத்திரமாகத் தோன்றுகிறது. இந்த சமரச சூத்திரத்தை பெண்களால் ஏற்றுக் கொள்ள முடியாது; ஏற்றுக் கொள்ளக் கூடாது என்பதைப் பட்டவர்த்தனமாகவே நான் கூற முடியும். எதுவும் சமத்துவ அடிப்படையில் அங்கீகரிக்கப்பட வேண்டும் என்று நாங்கள் கூறுகிறோம். பால் அடிப்படையில் நிலவும் பாகுபாட்டை நீக்குவதைக் குறிக்கோளாகக் கொண்டுள்ளது இந்தச் சட்டத் தொகுப்பு; இந்தப் பாகுபாடு அகற்றப்பட வேண்டும். மகள் ஒரு வாரிசாக அங்கீகரிக்கப்பட வேண்டும்; தந்தையின் ஒரு மகளாகவும் அவரது ஒரு வாரிசாகவும் முழு உரிமையோடு தந்தையின் சொத்தை அவள் அனுபவிக்க வேண்டும். சொத்து சிதைந்து போகும் என்ற பிரச்சினை பற்றி நான் ஏற்கனவே விளக்கியுள்ளேன். தீங்கை பல்வேறு வழிகளில் சமாளிக்கலாம். சொத்து சிதறிப் போகாமல் தடுத்து அதனை ஒன்று படுத்துவதற்கு விசேடச் சட்டங்கள் இயற்றி அவற்றின் மூலம் இதனைச் சாதிக்கலாம். சொத்து ஒரு குறிப்பிட்ட அளவுக்குக் கீழே போய் விட்டால், அதை விற்று தரப்பினர் தங்களுக்குள் பங்குபோட்டுக் கொள்ளலாம். பிரச்சினையைச் சமாளிக்க பல்வேறு வழிகள் உள்ளன. மகள் ஒரு பங்கைப் பெறக் கூடாது என்ற அடிப்படையில் வாதங்களை முன்வைக்க முடியாது. சமத்துவம் என்ற கோட்பாட்டின் அடிப்படையில், அதாவது மகனோடு மகளுக்கும் சம பங்கு அளிக்கப்பட

வேண்டும் என்ற அடிப்படையில் பொறுக்குக் குழு பரிந்துரை செய்துள்ளது. இந்த விஷயம் பற்றி அநேகமாக ஏகமனதாக பொறுக்குக் குழு செய்துள்ள பரிந்துரையை ஆதரிக்கும்படி மதிப்பிற்குரிய அவை உறுப்பினர்களை வேண்டிக்கொள்கிறேன்....

திரு. எச்.வி. காமத் (மத்திய மாகாணம் - பேரார்) : இது பற்றி டாக்டர் அம்பேத்கர் அனுதாபம் காட்டவில்லை.

திருமதி ஜி. துர்க்காபாய்: எனவே, மகள் தந்தையிடமிருந்து மட்டுமல்லாமல் கணவனிடமிருந்தும் பங்கு பெறுகிறாள் என்று கூறும்போது, கணவன் எதையும் எடுத்துக் கொள்ளவில்லை என்றால் அது எப்படி? மனைவி கணவனது சொத்தில் உரிமை பெறும்போது, அதேபோல் ஆண் மகனும் மனைவியின் சொத்தில் உரிமை பெறலாம் என்றும், தனது தந்தையின் சொத்தில் மகள் ஒரு பங்கு கோருவது போல் தாயின் சொத்தில் மகளுக்குச் சமமான பங்கை மகனும் பெறுவான் என்றும், பொறுக்குக் குழு சிபாரிசு செய்துள்ளது. எனவே இதுபற்றியும் எந்தக் கஷ்டமும் இருக்கக்கூடாது. ஏனெனில் இந்த காரணங்களுக்காக இந்த மசோதாவை எதிர்ப்பவர்களுக்கு ஒரு பதில் அளிக்கப்பட்டுள்ளது. நான் மேற்கோள் காட்ட விரும்பவில்லை; ஏனெனில் நேரம் குறைவாக உள்ளது, மேலும் மற்ற உறுப்பினர்கள் பேச ஆவலுடன் இருக்கிறார்கள். (**மதிப்பிற்குரிய உறுப்பினர்கள்:** தொடருங்கள். உங்கள் நேரத்தை எடுத்துக் கொள்ளலாம்.) மத அடிப்படையில் இந்த சட்டமியற்றுதலை எதிர்ப்பவர்கள் மனு காலத்திலிருந்து இந்துச் சட்டம் மாறாமல் நிலையாக இருந்து வந்துள்ளது என்ற தவறான அனுமானத்தில் மனத்தை அலட்சிக் கொள்கிறார்கள் எனத் திரு. பி.வி. சீனிவாச ஐய்யங்கார் சுட்டிக்காட்டினார்.

இது என்னை வேறொரு விஷயத்திற்கு இட்டுச் செல்கிறது. அது என்னவெனில், சொத்து உரிமையை வாழ்க்கைக்கு மட்டுமல்லாமல் முழுமையாக வைத்திருக்க பெண்கள் அனுமதிக்கப்படாதது பற்றி பெண்ணின் சொத்தின் மீது திணிக்கப்பட்டுள்ள இந்தத் தகுதியின்மையை இந்த மசோதா நீக்க விழைகிறது. வாழ்க்கைக்கு மட்டும் இல்லாமல், சொத்தை முழுமையாக வைத்துக் கொள்ளும் உரிமையை இது அவளுக்கு அளிக்கிறது. பெண்கள் விஷயமாக சொத்தைக் கட்டுப்படுத்துவதற்குச் சாதகமாகச் சொல்லப்படும் பிரதான வாதம் நிர்வகிக்க அவர்கள் திறமையற்றவர்கள்

என்பதேயாகும். மேலும் அவர்கள் ஏமாற்றப்படலாம்; அல்லது சுரண்டப்படலாம்; அவர்கள் கல்வியறிவு இல்லாதவர்கள். மேலும் பின்வருமாறு கூறப்படுகிறது: நிர்வகிக்கும் கோட்பாடுகளை அவர்கள் அறிந்திருக்கவில்லை; அதனால், அவளது உரிமையை எடுத்துக் கொள்வதற்கு கெட்ட நோக்குடன் திட்டமிடும் ஆண் உறவினர்களுக்கு ஒரு பலமான தூண்டுதலாக இருக்கலாம். இதற்கெல்லாம் என் பதில் இதுதான்: பம்பாயில் மகளுக்கு முற்றிலும் உரிமையுள்ள சொத்து உள்ளதை அவை அறியும். எனவே அந்த அடிப்படையில் அவர்கள் எந்த அபாயத்திற்கும் உள்ளாவார்கள் என்று நான் நினைக்கவில்லை. மேலும் பெண்கள் ஆண்களைவிட நல்ல நிர்வாகிகள் என்பதை நிரூபிக்கும் பல எடுத்துக்காட்டுகளும் நம்மிடம் உள்ளன. இன்னொரு வாதமும் உள்ளது: அதாவது பெண்கள் கல்வியறிவு பெறாதவர்கள், எழுதப் படிக்கத் தெரியாதவர்கள் என்பதை சந்தேகமின்றி நான் ஒப்புக் கொள்கிறேன். ஆனால் எத்தனை ஆண்கள் எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள் என்று நான் கேட்கலாமா? நான்கு ஆண்களில் மூன்று பேர் எழுதப்படிக்கத் தெரியாதவர்களாக இன்று உள்ளனர் (**மதிப்பிற்குரிய ஓர் உறுப்பினர் :** 'பத்தில் ஒன்பது'). எனவே மக்களில் நான்கில் ஒரு பங்கினரே சாதகமான நிலைமையை அனுபவிக்கின்றனர். (**மதிப்பிற்குரிய ஓர் உறுப்பினர் :** ''அவர்கள் அவர்களுடைய தாய்மார்களின் குழந்தைகள்''). பெண்களில் எழுதப்படிக்கத் தெரிந்தவர்களின் சதவிகிதம் ஆண்களைவிட அதிவேகமாக உயர்ந்து வருகிறது என்பதை ஞாபகத்தில் கொள்ள வேண்டும் (**திரு. எச்.வி. காமத்** கேள்வி') சொத்தில் பெண்களுக்குள்ள பங்கின் அளவைப் பொறுத்தவரை, பொறுக்குக் குழுவின் நிலையை நான் ஏற்கனவே எடுத்துக் கூறியுள்ளேன். மகளுக்கு சம பங்கை நாங்கள் சிபாரிசு செய்துள்ளோம். உங்கள் பங்கிற்கு, பொறுக்குக் குழு செய்துள்ள சிபாரிசை எந்தத் தயக்கமுமின்றி தாராள மனதுடன் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று வேண்டுகிறேன். இப்பொழுது நான் மற்றொரு விஷயத்தை அதாவது ஒருதார மணம் பற்றி எடுத்துக் கொள்கிறேன். இந்த விஷயம் பற்றி எவ்வளவு பேச நான் விரும்பினாலும், எனக்கு குறைந்த நேரமே இருப்பதால் நான் அவ்வாறு செய்யப்போவதில்லை. அது மட்டுமல்ல மாண்புமிகு சட்ட அமைச்சரும் மற்றும் பல பேச்சாளர்களும் இதை விளக்கிக் கூறியிருக்கிறார்கள். பொருளாதார, சமூக மற்றும் பிற அடிப்படையில் பல வாதங்கள் முன்வைக்கப்பட்டன: தங்கள் வாதங்களுக்கு ஆதரவாக மதமும் ஆன்மீகவும் கொண்டு வரப்பட்டன. மேலும் வரட்டுத்தனமான வாதங்கள் முன்வைக்கப் பட்டன: ஒரு மனிதன் உடல் ஆரோக்கியத்துடனும் பண வசதியுடனும் இருந்தால், மீண்டும் மீண்டும் ஏன் திருமணம் செய்து

கொள்ளக் கூடாது? ஒருதார மண விதி அமுல்படுத்தப்பட்டால், பலதார மணத்தின் பயனை அடைய பல இந்துக்கள் முகமதியர்களாக மாறுவர்: இந்தக் கேள்விக்கு நான் பதில் சொல்ல வேண்டிய தேவை இல்லை. ஏனெனில் ஒரு பெண் பார்வையாளர் இந்த விஷயத்தை மிகத் திறமையாக, பயனளிக்கும் முறையில் பதிலளித்ததை நான் கண்டேன். ஒருதார மணமுறை அமுல் நடத்தப்படாவிடில், ஒரு தார மணத்தின் நலனைப் பெற பெண்கள் கிருஸ்தவர்களாக மாறலாம் என்று அவர் கூறினார்.

திரு. பி. தாஸ் (ஒரிஸ்ஸா: பொது) : ஒரு கிருஸ்தவ பெண் ஓர் இந்துப் பெண்ணைவிட அதிகம் சந்தோஷமாக இருக்கிறாளா?

திருமதி ஜி. துர்க்காபாய் : மாண்புமிகு சட்ட அமைச்சர் ஏற்கனவே கூறியபடி, உலக அபிப்பிராயமும் உலகம் முழுவதிலும் நிலவும் நடைமுறைகளும் ஒருதாரமணத்திற்குச் சாதகமாகவே உள்ளன. இந்த விஷயம் பற்றி மேலும் அதிகம் நான் கூறத் தேவை இல்லை.

மசோதாவின் மற்ற அம்சங்களை எடுத்துக் கொள்ள எனக்கு நேரமும் இல்லை; அது விரும்பத் தக்கதும் அல்ல; ஏனெனில், திருமணம் மற்றும் விவாகரத்து பற்றிய பிரச்சினைகள் பற்றிப் பேச மற்ற உறுப்பினர்கள் இருக்கிறார்கள். கூட்டுடைமையில் இணை உரிமை பற்றி மட்டும் சிறிது கூற விரும்புகிறேன். **மிதாக்ஷராவு**க்கும் தாயபாகாவுக்கும் இடையேயுள்ள பாகுபாடு விமர்சகர்களும் கருத்து விளக்கம் அளிப்பவர்களும் பல்வேறுபட்ட கருத்து விளக்கங்களை முன்வைத்ததன் விளைவேயாகும். அடிப்படையில் கூட்டுக் குடும்பத்தின் மூலக் கொள்கை இரண்டிற்கும் பொதுவானதே. பிறப்பினால் வரும் உரிமையும் எஞ்சுநர் உரிமையும் **மிதாக்ஷரா**வின் ஒரு சிறப்பான அம்சமாகும். தாயபாகா முறைமை நடைமுறை அனுபவத்தில் மிகவும் திருப்திகரமானது என்று நிரூபணமாகி உள்ளது; எனவே தான் **மிதாக்ஷரா** அமைப்பு முறையிலான மரபு உரிமையை **தாயபாகா** முறைக்கு மாற்ற முயல்கிறது மசோதா. வங்காள மக்களின் சிறந்த வாழ்க்கை வளத்திற்கும் அவர்களின் பெருகிவரும் வணிக நிறுவனங்களுக்கும் பெருமளவு **தாயபாகா** அமைப்பே காரணம் என்று கூறப்படுகிறது. சென்னையில் நாட்டுக் கோட்டைச் செட்டியார்களின் வணிக முயற்சி பெரும்பாலும் அவர்களது குடும்ப உறுப்பினர்களது சட்ட உறவுகளின் அடிப்படையில் அமைந்துள்ளது என்று எனக்குக் கூறப்படுகிறது; பிராமணக் கூட்டுக் குடும்பங்களைவிட, கூட்டாண்மை முறையை இது அதிகம் ஒத்திருக்கிறது.

இந்தப் பொருள் பற்றி அதிகம் கூறப்பட்டது; எனவே இதுபற்றி அதிகம் கூற நான் விரும்பவில்லை. அதிக எதிர்ப்பு காட்டப்படுவதற்கு புராதன அமைப்பு முறை மீது அவர்களுக்குள்ள பாசத்தினால் என்று உணர்கிறேன்; இதை எதிர்ப்பவர்கள் இந்துச் சட்டமும் தர்மமும் இவ்விஷயங்களில் நிலையானவை என்பதையும் மாற்றங்கள் எவையும் செய்யப்படவில்லை என்பதையும் அவர்கள் மறந்துவிட்டதால்தான் இதனை எதிர்க்கிறார்கள் என்று கருதுகிறேன். இந்த அமைப்பில், அவ்வப்போது பல்வேறு நீதிமன்றத் தீர்ப்புகள் மாற்றங்களைச் செய்துள்ளன. இந்த அமைப்பு முறையின் சிறப்புப் பண்புகள் துண்டித்தெறியப்பட்டுள்ளன. எஸ். ஸ்ரீனிவாச அய்யங்கார் போன்ற சிறந்த வழக்கறிஞரால் இந்த விஷயம் பற்றி மிகத் திறமையாகப் பதிலளிக்கப்பட்டுள்ளது; அவர் கூறினார்: பிரிவுக் கவுன்சில் அதிகாரபூர்வமாக விளக்கிக் கூறியபடி, குடும்பத்திலிருந்து பிரிந்து போகும் தமது நோக்கத்தை ஒருதலைப்பட்சமாக ஓர் உறுப்பினர் எந்த நேரத்தில் அறிவிக்கிறாரோ அப்பொழுதே குடும்ப ஒற்றுமை உடைந்து போகிறது. கூட்டுரிமை உடைக்கப்பட்டது அல்லது **மிதாக்ஷராவிற்குப்** பதில் **தாயபாகா** கொண்டுவரப்பட்டது என்ற குற்றச்சாட்டிற்கு இது போதுமான பதிலாகும்.

இந்த அவையின் அதிக நேரத்தை நான் எடுத்துக் கொள்ள விரும்பவில்லை. சுதந்திரம் அடைந்தபின் பல விஷயங்கள் நடந்துள்ளன; சர்வதேச மாநாடுகளில் இந்தியா கலந்து கொண்டு மனித உரிமைகளுக்காகவும் அன்னிய நாடுகளில் இந்தியர்கள் சமமாக நடத்தப்பட வேண்டும் என்பதற்காகவும் வாதாடி வந்துள்ளது. இந்த சந்தர்ப்பத்தில் நமது எல்லைகளுக்குள் ஓர் இந்து சட்டத் தொகுப்பை சட்டமாக இயற்ற நாம் தவறினால் அது மிகவும் துரதிர்ஷ்டவசமானதாகும்; நமது எல்லைகளுக்குள் எந்தப் பாரபட்சமும் இருக்காது; இங்கு நடமாட, முன்னேற, நமது இந்தியாவை புனரமைப்பதில் பங்குபெற ஆண்களுக்கும் பெண்களுக்கும் சம உரிமை இருக்கும். நமது அரசியல் சாசனம் உருவாக்கப்பட்டு வருகிறது; அடிப்படை உரிமைகள் பற்றிய அத்தியாயத்தை நாம் ஏற்கனவே நிறைவேற்றியுள்ளோம்; சட்டத்தின் முன் ஒவ்வொருவரும் சமம் என்ற கோட்பாட்டை அங்கீகரித்துள்ளோம். ஒரே சீரான உரிமை இயல் சட்டத் தொகுப்பை உருவாக்குவதைச் சாத்தியமாக்கும் ஷரத்தையும் நிறைவேற்றியுள்ளோம். எனவே உங்களிடம் பின்வரும் வேண்டுகோளை முன் வைக்கிறேன்: நான் ஏற்கனவே எடுத்துக் கூறியதுபோல் நமது சொந்த சமுதாயத்திற்கு ஒரு சிறந்த வரப்பிரசாதமாகத் திகழக்கூடிய,

ஓர் இந்துச் சட்டத் தொகுப்பை பெறுவதில் நாம் விருப்பமின்மை யையோ தயக்கத்தையோ காட்டாமல் இருப்போமாக.

*__பண்டிட் லட்சுமி காந்த மைத்ரா__ (மேற்கு வங்காளம் - பொது) : ஐயா, இந்து சட்டத் தொகுப்பை பரிசீலிப்பது சம்பந்தமாக இந்த அவையின் முன் உள்ள தீர்மானத்தின் மீது, சில வார்த்தைகள் கூற எனக்குச் சந்தர்ப்பம் அளித்துள்ளதற்கு மிகவும் நன்றி செலுத்து கிறேன். இந்தத் தீர்மானம் முதல் இரண்டு நாட்கள் விவாதிக்கப்பட்ட போது நான் வெளியூர் சென்றிருந்தேன். இதனால் பெருமளவு சாதக மற்ற நிலையில் இருக்கிறேன் என்பதை அறிவேன். எனது அலுவல் களுக்கிடையே பத்திரிகைச் செய்திகளை படிக்க சில நிமிஷங்கள் கிடைத்தன. இந்தத் தீர்மானத்துக்கு ஆதரவாக மதிப்பிற்குரிய என் னுடைய நண்பர் சட்ட அமைச்சர் டாக்டர் அம்பேத்கர் ஒரு நேர்த்தி யான உரையை ஆற்றினார். ஒப்புநோக்குதல் எதையும் நான் செய்ய வில்லை; பத்திரிகை செய்திகளைத்தான் நான் ஆதாரமாகக் கொள் கிறேன் - பத்திரிகை நிருபர்களிடையே கருத்து வேறுபாடுகள் இருந்த போதிலும் - மறு பக்கத்தில் பண்டிட் தாகூர் தாஸ் பர்கவா அதேபோல் சக்திவாய்ந்த உரையை ஆற்றியுள்ளார்.

தீர்மானத்துக்குச் சாதகமாக ஆற்றப்பட்ட நான்கு உரைகளை யும் அதற்கு எதிராக நிகழ்த்தப்பட்ட ஓர் உரையையும் போதுமான கவனத்துடன் கேட்டேன். அவையின் மனோ நிலையை என்னால் உணர முடிந்தது - சில சமயங்களில் உற்சாகம் கரைபுரண்டோடிற்று. ஆனால் இந்த மசோதாவின் பிரதான ஷரத்துகள் சம்பந்தமாக தனது கருத்து வேறுபாட்டை ஓர் உறுப்பினர் தெரிவிக்க முயன்ற போது பலவிதமான பரிகாசங்களையும் ஏளனங்களையும் அவர் பெற்றார். (மதிப்பிற்குரிய உறுப்பினர்கள்: இல்லை, இல்லை') அது அவ்வாறு இல்லை என்றால் நான் சந்தோஷப்படுகிறேன். அது எனக்கு கொஞ்சம் தைரியம் கொடுக்கும் என நம்புகிறேன்; ஏனெனில், நான் எவ்வாறு பேசுவேன் என்று மிகப் பெரும்பான்மையான உறுப் பினர்கள் அறிவார்கள். இம்மாதிரியான கெட்ட பெயரை எவ்வாறு நான் அடைந்தேன் என்பதை நான் அறியேன் - அதை புகழ் என்று நான் சொல்லிக் கொள்ள முடியாது - மசோதாவின் ஷரத்துக்களை நான் ஆதரிக்கவில்லை. அதை நான் இரகசியமாக வைத்துக் கொள்ளப் போவதில்லை (**மதிப்பிற்குரிய ஓர் உறுப்பினர்** : ஏன் நீங்கள்

★ அ.நி.ச.வி. (சட்டப்பேரவை ராவாதத் தொகுப்பு II, பாகம் 1949 மார்ச் 1, பக்கங்கள் 995 - 1015.

அவ்வாறு வைத்துக் கொள்ள வேணடும்?); ஏனெனில் உள்ளத்தில் ஊறிய எண்ணங்கள் எவற்றையும் மறைக்காமல் உள்ளது உள்ளபடியே பேசுவேன். இந்த அவை எந்த மனப்பாங்கில் உள்ளது என்பதைக் கண்ட நான் இந்த அவையில் உரையாற்றுவது எனக்கு எவ்வளவு சிக்கலான விஷயம் என்பதை அறிவேன். நான் நினைப்பதைச் சொல்ல துணிவோடு முன்வந்துள்ளேன். இந்த அசட்டுத் துணிச் சலுக்காக ஒருவேளை நான் வருந்த வேண்டியிருக்கலாம். இந்த அவையில் உரையாற்றும் முன்பு மரியாதைக்குரிய சகோதரி திருமதி துர்க்காபாயின் உரையை கேட்கும் வாய்ப்பு கிடைத்தது எனக்கு உதவிகரமாக உள்ளது; இந்த மசோதாவக்கு ஆதரவாக மிகவும் பொருத்தமான உரையை அவர் ஆற்றினார்.

அநேகமாக எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டதாக அவர் மிக நம்பிக்கையுடன் உள்ள அவருடைய கருத்துக்களை ஒப்புக் கொள்ள இயலாமைக்காக என் சகோதரிக்கு நான் மன்னிப்பு தெரி விக்க வேண்டும். சட்டத்தின் முன் எல்லோருக்கும் சமத்துவம் அளிக்கும் வரைவு அரசியல் சாசனத்திலுள்ள கோட்பாட்டை நடை முறைப்படுத்தும்படி அவைக்கு வேண்டுகோள் விடுத்து அவர் தமது உரையை முடித்தார். ஆம், நாம் அவ்வாறு செய்துள்ளோம். அரசியல் சாசனத்தின் நெறிமுறைக் கோட்பாடுகளில் ஒன்றாக நாடு முழு வதற்கும் ஒரு சீரான உரிமை இயல் சட்டம் இருக்க வேண்டுமென்று நாம் நிறைவேற்றியதை அவர் ஞாபகப்படுத்தினார். எனது உரைக்கான ஆரம்பத்தை அவர் எடுத்துக் கொடுத்ததற்கு மகிழ்ச்சியடைகிறேன். இந்த விஷயம் வேறு ஓர் இடத்தில் விவாதிக்கப்பட்ட சமயத்திலும் அதே போன்று பிறிதோரிடத்தில் விரிவாக விவாதிக்கப்பட்ட சமயத் திலும் இந்த ஷரத்திற்கு எதிராக எனது கடுமையான கண்டனத்தைத் தெரிவித்துள்ளேன்; ஏனெனில், இந்து மதம் சீக்கிய மதம், ஜைன மதம், புத்தமதம், கிறிஸ்தவ மதம், கடைசியாக ஆனால் குறைந்த தல்லாத இஸ்லாம் மதம் முதலான எல்லாவித மத நம்பிக்கை களையும் கொண்டுள்ள 32 கோடி முதல் 34 கோடி மக்கள் வாழும் ஒரு நாட்டிற்கு ஒரே சீரான உரிமை இயல் சட்டத் தொகுப்பு என்பதை ஒரு போலிக் கோட்பாடாகவே, கோஷமாகவே நான் கருதுகிறேன். இன முறை சட்டம் பாதுகாக்கப்பட வேண்டும் என்று பல திருத்தங் களை முன் வைத்தேன். இன முறைச் சட்டத்தில் அரசு தலையிடுவது ஓர் அத்து மீறலாகும். இவ்வாறு செய்ய அரசுக்கு உரிமை எதுவும் இல்லை.

மௌலான ஹஸரத் மோகனி (ஐ.மா. முஸ்லீம்) : சபாஷ், சபாஷ்.

திருமதி ரேணுகா ரே: இந்து சட்டத் தொகுப்பை நீங்கள் ஏன் ஆதரிக்க வேண்டும் என்பதற்கு இதுதான் காரணம்.

பண்டிட் லட்சுமி காந்த மைத்ரா : இந்துச் சட்டத் தொகுப்பை நான் ஆதரிக்க வேண்டும் என்பதற்கு இதுதான் காரணமென்று என் முன்னால் அமர்ந்திருக்கும் மதிப்பிற்குரிய சகோதரி கூறுகிறார். இந்த இந்துச் சட்டத் தொகுப்பை நான் ஏன் எதிர்க்கிறேன் என்பதற்கு இதுவே காரணம் - பிரதான காரணங்களில் ஒன்று - நான் கூறலாமா? நீங்கள் தர்க்கரீதியாக இருக்கவேண்டும், எனது சகோதரிகளின் உணர்வுகளை நான் புரிந்துகொள்ள முடியும். நான் பெண்களை வெறுப்பவன் என்று நினைக்காதீர்கள்; அல்லது பெண்கள் மீது உணர்வில்லாதவனல்ல (**மதிப்பிற்குரிய ஓர் உறுப்பினர்:** 'அவர் ஒரு திருமணமான மனிதர்') ஆம், இந்து சாஸ்திரச் சடங்குகளின்படி நான் திருமணமான மனிதன், எனக்கு அக்கமான மனைவி இருக்கிறாள். அவள் எளிமையானவள். கள்ளங்கபடமற்றவள், ஆடம்பர ஆர்ப்பாட்டம் இல்லாதவள்; நமது இந்து இல்லங்களின் லட்சியங்களின்படி வளர்க்கப்பட்டவள். (**மாண்புமிகு டாக்டர் பி.ஆர். அம்பேத்கர்:** ''என்ன பரிதாபம்'). அது பரிதாபமாக இருக்கலாம். மலர் மணங்கள், உதட்டுச் சாயம், பகட்டொப்பனைக் கைப்பை ஆகியவை கொண்ட பெண்டிர் மீது எனக்கு அதிகம் பாசம் கிடையாது. எளிமைக்கு எளிமை சேர்க்கும் என் அன்பு மனைவியோடு நான் மகிழ்ச்சியாக இருக்கிறேன்; ஒவ்வொரு நூறு இந்துக்குடும்பங்களிலும் 98 குடும்பங்களில் இம்மாதிரியான மனைவிமார்கள் உள்ளனர்; அவர்கள் மகிழ்ச்சியாக இருக்கிறார்கள். (**மதிப்பிற்குரிய ஓர் உறுப்பினர்:** ஏன் 98 சத விகிதம்? 99.9 சதவிகிதம் என்று சொல்லுங்கள்.) எனது ஒரு நண்பர் 99.9 சத விகிதம் என்று கூறுவதைக் கேட்க எனக்கு மகிழ்ச்சியாக உள்ளது. அது எனது வாதத்தைப் பலப்படுத்துகிறது. இந்த மசோதாவில் அவர் அறிமுகப்படுத்த விழையும் கடுமையான மாற்றங்கள் அவசியம் என்று எனக்குத் தோன்றவில்லை என எனது நண்பர் மாண்புமிகு டாக்டர் அம்பேத்கருக்கு நான் கூறமுடியும்: (**மாண்புமிகு டாக்டர் அம்பேத்கர் :** 'அம்மாதிரி நானும் நினைக்கவில்லை') மிகத் தீவிரமான இந்த மாற்றங்களுக்குத் தேவையில்லை என அவர் உண்மையிலேயே கருதினால், இப்போது நம் முன்னிருக்கும் இந்த இந்து சட்டத் தொகுப்பு மசோதா அவருடைய தற்பெருமைக்கு அடையாளம் என்று நான் எடுத்துக் கொள்ளலாமா? என்னுடைய நண்பர் மாண்புமிகு டாக்டர் அம்பேத்கரை மிகவும் வியந்து பாராட்டுகிறேன்; இந்த அவையில் முன்பு பல ஆண்டுகள் அவருடன் பணியாற்றிய பெருமை எனக்குண்டு; அவரை மதிக்கிறேன். அரசியல் சாசனம்

சம்பந்தமாக அவர் நாள்தோறும் ஆற்றி வரும் செயற்கரிய செயலை நான் அறிவேன். (**மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் :** 'சபாஷ், சபாஷ்') அவரை உயர்வாக மதிக்கிறேன். அவரை வியந்து பாராட்டுகிறேன். ஆனால் இந்த சமூக சட்டமியற்றல் சம்பந்தமாக அவர் செய்து வருவதை ஒருபோதும் நான் பாராட்ட மாட்டேன். புரட்சிகரமான மாற்றங்களால் இது இந்து சமுதாயத்தைச் சீர்குலைக்கும்; எங்களில் சிலரே இதை உணர முடிகிறது.

(மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் : 'புரட்சி இல்லை, இல்லை, இல்லை'). ஆம். இல்லையெனில் நான் மகிழ்ச்சியடைகிறேன், இந்த மசோதா சட்டமாக நிறைவேற்றப்பட்டால்....

பாபு ராம்நாராயண் சிங் (பீஹார்: பொது): இல்லை.

பண்டிட் லட்சுமிகாந்த மைத்ரா : என்ன இல்லை?

பாபு ராம்நாராயண் சிங் : அது சட்டமாக நிறைவேற்றப் பட மாட்டாது.

பண்டிட் லட்சுமிகாந்த மைத்ரா : அப்படியா? இப்பொழுது உள்ளதுபோல இந்த மசோதா சட்டமாக நிறைவேற்றப்பட்டால், நல்ல தீர்க்கதரிசி யார் நானா, அல்லது, இல்லை, இல்லை என்று கூறுபவரா. இதைப் பார்க்கத்தான் போகிறேன்.

திரு. எல். கிருஷ்ண சாமி பாரதி (சென்னை : பொது) : தாங்கள் பொறுத்திருந்து பார்க்கவும்.

பண்டிட் லட்சுமிகாந்த மைத்ரா : நல்லது. பொறுத்திருந்து பாருங்கள். வருங்காலச் சந்ததி தீர்ப்பளிக்கும்; வருங்காலச் சந்ததி வரை தாங்கள் காத்திருக்க வேண்டுமென நான் நினைக்கவில்லை. தங்களைப் பற்றியும் தங்களின் பணி பற்றியும் நாடு என்ன சொல்லவிருக்கிறது என்பதை அடுத்த பொது தேர்தல்கள் வரை தாங்கள் காத்திருக்க வேண்டும்.

மௌலானா ஹஸரத் மோகனி : சபாஷ், சபாஷ், நன்கு சொன்னீர்கள்.

பண்டிட் லட்சுமிகாந்த மைத்ரா : எனது சகோதரி திருமதி துர்க்காபாய் எழுப்பிய முதல் விஷயம் நெறியுறுத்துக் கோட்பாட்டை நிறைவேற்றியபின் நீங்கள் இந்துச் சட்டத் தொகுப்பை நீங்கள்

ஆட்சேபிக்கக் கூடாது என்பதாகும். நெறிமுறைக் கோட்பாட்டை அவை ஏற்றுக் கொண்டபோது, பாம்பு - அதாவது இந்துச் சட்டத் தொகுப்பு - கொல்லப்பட்டது என்று நினைத்தேன்; நான் இப்பொழுது காண்பது, அந்த பாம்பு காயப்படுத்தப்பட்டது மட்டுமே என்று; அது தன் தலையை மீண்டும் தூக்குகிறது; தனது நச்சுப் பற்களை விரைவிலேயே காட்டும். உங்களுடைய நெறிமுறைக் கோட்பாடுகளுக்கு நீங்கள் உண்மையாக இருந்தால் அவற்றின் அடிப்படையில் நீங்கள் செயல்பட்டால், இந்துச் சட்டத்தொகுப்பை ஏன் கொண்டு வருகிறீர்கள்? எல்லோருக்கும் பொருந்துகிற - இந்துக்கள் முதல் கிருஸ்தவர்கள் வரை, பார்ஸிகளுக்கு, சீக்கியர்களுக்கு, புத்தர்களுக்கு, முகமதியர்களுக்குப் பொருந்துகிற - சர்வாம்ச உரிமை இயல் சட்டத் தொகுப்பைக் கொண்டு வாருங்கள். (*திரு. கிருஷ்ணசாமி பாரதி : ''தாங்கள் அதை ஆதரிப்பீர்களா?''*) : முஸ்லீம்களைத் தொடுவதற்கு நீங்கள் துணிய மாட்டீர்கள்; ஆனால் இந்து சமுதாயம் இன்று ஒரு மோசமான நிலையில் இருப்பதால், அதை என்ன வேண்டுமானாலும் செய்யலாம் என்று துணிந்து செயல்படுகிறீர்கள். ஒரு சில நவ நவீன ஆசாமிகள்தான் கூக்குரலிடுகிறார்கள்; ஆனால் இந்தச் சட்டத் தொகுப்புக்கு நாட்டில் உண்மையான ஆதரவு எதுவும் இல்லை (குறுக்கீடுகள்).

துணைத் தலைவர் : அவர் தமது பேச்சைத் தொடரட்டும்.

பண்டிட் லட்சுமி காந்த மைத்ரா : லட்சோப லட்சம் மக்கள் ஊமைகளாய் அறியாமையில் மூழ்கியவர்களாய் இருக்கிறார்கள். கல்லூரிக் கல்வி இல்லாததால் அல்லது சட்டப் பேரவைகள் உறுப்பினராக இல்லாததால் போதிய புத்திக் கூர்மையோ விவேகமோ இல்லாதவர்களாக இருக்கின்றனர். அப்படிப்பட்டவர்களின் இனமுறைச் சட்டத்தில் இத்தகைய தீவிரமாற்றங்கள் தேவைப்படவில்லை என்று அவர்கள் கருதுகிறார்கள். அவர்களைப் புறக்கணிக்கக்கூடாது.

திருமதி ரேணுகா ரே : அப்படியாயின் அரசியல் சாசனத்தை உருவாக்காதீர்கள்.

பண்டிட் லட்சுமி காந்த மைத்ரா : எனவே நாடு முழுவதற்கும் ஒரு சீரான உரிமை இயல் சட்டம் என்ற கோட்பாட்டை ஏற்றுக் கொண்டதில் நான் நேர்மையைக் காணவில்லை. ஏனெனில் இரு மாதங்களுக்குள், இந்துக்கள், சீக்கியர்கள், ஜெயினர்கள், புத்த மதத்தினருக்கு மட்டும் பொருந்துகிற இந்துச் சட்டத் தொகுப்பைத் தாங்கள் எப்படிக் கொண்டு வந்திருக்க முடியும்?

திருமதி ரேணுகா ரே: இந்தச் சட்டத் தொகுப்பு முன்பே வந்தது.

பண்டிட் லட்சுமி காந்த மைத்ரா: கிருஸ்தவர்கள், முஸ்லீம்கள், பார்சிகளை தாங்கள் விட்டு விட்டீர்களே.

மௌலானா ஹஸரத் மோகனி: தங்களது இனமுறைச் சட்டத்தில் எந்தத் தலையீட்டையும் முஸ்லீம்கள் ஒருபோதும் ஏற்றுக் கொள்ளமாட்டார்கள்.

பண்டிட் லட்சுமிகாந்த மைத்ரா : நீங்கள் எனக்கு ஞாபகப் படுத்தத் தேவை இல்லை. அது எனக்குத் தெரியும், அதை நான் அறிவேன். எனது மதிப்பிற்குரிய நண்பர் மௌலானா ஹஸரத் மோகனியின் ஆலோசனையை முற்றிலுமாக மதிக்கிறேன். ஆனால், அப்படியாயினும், அரசியல் சாசனத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட கோட்பாடுகளிலிருந்து இது ஒரு அடிப்படை விலகுதலாகும் எனக் கருதுகிறேன்.

மதிப்பிற்குரிய எனது நண்பர் திருமதி துர்க்காபாய், சட்டத் தொகுப்பு நியாயமானது என்று கூறியபொழுது, சட்டத் தொகுப்புக்கு ஆதரவாக மறுக்கமுடியாத நியாயம் உள்ளது என அவர் நிரூபிக்க முயன்றார். எனது சகோதரி திருமதி துர்க்காபாய் மீது எனக்கு அதிகம் மரியாதை இருந்தபோதிலும், என்னால் அவரது கூற்றை ஏற்றுக் கொள்ள முடியாது என்பதை பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன். சட்டம் ஒரு நிலையில் இல்லாமல் தொடர்ந்து மாறிக் கொண்டிருக்கும் நிலைமை இருந்தால் அல்லது கருத்துவேறுபாடுகள் அதிகம் இருந்தால், அல்லது அது குறித்து தெளிவற்ற, நிச்சயமற்ற தன்மை அதிகம் இருந்தால், சட்டத் தொகுப்பின் அவசியத்தை நான் புரிந்து கொள்ள முடியும். அத்தகைய நிலை இருந்தால் நாட்டில் உள்ள தலைசிறந்த வழக்கறிஞர்கள் ஒன்றாக அமர்ந்து சட்டத் தொகுப்பை தயாரிக்கலாம்; கிட்டத்தட்டக் குழப்பமான, நிச்சயமற்ற நிலையில் உள்ள பல்வேறு சட்டக் கோட்பாடுகளுக்கு வடிவம் கொடுக்க வேண்டும். இந்த நாட்டில் உள்ள இந்துச் சட்டம் இம்மாதிரியானதா?

திரு. கிருஷ்ண சந்திர சர்மா (ஐ.மா - பொது): அதுதான் நிலை.

பண்டிட் லட்சுமி காந்த மைத்ரா : உங்கள் கூற்றை நான் ஏற்றுக்கொள்கிறேன்; ஆனால் தாங்கள் வெளிப்படுத்திய மாபெரும் அறியாமைக்காக மிகவும் வருந்துகிறேன். மதிப்பிற்குரிய எனது நண்பர்

ஒரு வழக்கறிஞர்; ஆனால் இந்துச் சட்ட வழக்குகளை அவர் நடத்திய தில்லை. இந்த நட்புப் பூர்வமான பதிலடிக்காக தயவு செய்து அவர் என்னை மன்னிக்கட்டும். தடங்கல்களை நான் சமாளிக்க முடியும். எனது பேச்சில் நீங்கள் குறுக்கிட்டால், எனது உரைக்கு உத்வேகத்தைத் தான் அளிப்பீர்கள். இந்த நாட்டில் பிரிட்டீஷார் வந்த பின்பு, இந்துச் சட்டம் படிப்படியாக உறுதி பெற்றுள்ளது. நாட்டு மக்களின் தனி நபர் சட்டத்தைத் தொட அவர்கள் துணியவில்லை.

திரு. பாபு ராம்நாராயண சிங்: கட்டுப்படுத்தப்பட்ட சொத்துரிமையை அவர்கள் பெண்களுக்குக் கொண்டு வந்தார்கள்.

பண்டிட் லட்சுமி காந்த மைத்ரா: அந்த விஷயத்துக்கு இப்போது வருகிறேன்: இந்த விஷயத்திற்கு பதிலளிக்க நான் மறந்தால், தயவு செய்து எனக்கு அதனை ஞாபகப்படுத்துங்கள். இந்துச் சட்டம் ஒரு மிகவும் பரந்த விஷயம். தலைவர் அனுமதித்தால், அதுபற்றி பல மணி நேரம் என்னால் பேச முடியும். அதை நான் செய்யப் போவதில்லை என்று தங்களுக்கு உறுதியளிக்கிறேன், ஐயா.

முதலாவதாக, இந்த மசோதா இந்த அவைக்குள் திருட்டுத் தனமாகக் கொண்டு வரப்பட்டிருப்பதற்கு எதிராகக் கண்டனம் தெரிவிக்கிறேன். அது ஒரு அசாதாரணமான நடைமுறை, திரு. துணை சபாநாயகர் அவர்களே.

திருமதி ரேணுகா ரே: திரு. துணை அவைத் தலைவரே. அவைக்கு அளிக்கப்பட்ட இந்த அவமதிப்பை ஆட்சேபிக்கிறேன்.

பண்டிட் லட்சுமி காந்த மைத்ரா : இது ஒரு ஒழுங்குப் பிரச்சினை அல்ல.

திருமதி ரேணுகா ரே: ஐயா, இது ஓர் ஒழுங்குப் பிரச்சினை. அவைக்கு எதிராகச் சொல்லப்பட்ட கூற்றை ஆட்சேபிக்கிறேன்.

பண்டிட் லட்சுமி காந்த மைத்ரா : 'திருட்டுத்தனமாகக் கொண்டுவருவது' என்ற சொல் நாடாளுமன்ற சம்பிரதாயத்திற்கு முரணானது என்று நான் ஒருபோதும் புரிந்துகொண்டதில்லை. மதிப்பிற்குரிய உறுப்பினர் இத்தகைய சொல்லைப் பயன்படுத்தியது தவறு என்று கருதினால், அதற்குப் பதிலாக வேறொரு சொல்லை உபயோகிப்பேன். அவையில் இந்த மசோதாவை மிக வேகமாக நிறைவேற்ற முயற்சித்தது அசாதாரணமானது, இவ்வாறு கூறுவதும்

நாடாளுமன்ற நடைமுறைக்கு புறம்பானதா? அப்படியாயின் நாடாளு மன்ற நடைமுறைக்குகந்த பதத்தை அளியுங்கள். இதற்கு மாறான பதத்தை உங்களால் கண்டுபிடிக்க முடியாது. (**மதிப்பிற்குரிய ஓர் உறுப்பினர்:** 'என்ன அற்புத வேகம்'). இந்த அவையில் மிக அசாதாரணமான நடைமுறை கையாளப்பட்டுள்ளது. நாடாளுமன்ற நடவடிக்கைகளில் எனக்குக் கொஞ்சம் அனுபவம் உண்டு. இத்தகைய முக்கியத்துவமும் பரிமாணமும் வாய்ந்த ஒரு மசோதாவை தற்போது போல் நிறைவேற்ற முயன்ற ஒரு நிகழ்வை நான் ஒருபோதும் கண்ட தில்லை.

திரு. பிரஜேஷ்வர் பிரசாத் (பீஹார் : பொது): இது ஒரு போதும் நிறைவேறாது. (குறுக்கீடு).

பண்டிட் லட்சுமி காந்த மைத்ரா : குறுக்கிடுகளை நான் விரும்புகிறேன்; ஆனால் அவர் என்ன சொன்னார் என்பதை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. இடைவிடாது என்னைக் குறுக்கீடு செய்வதன் மூலம் என் உரையின் தாக்கத்தைப் பாழ்ப்படுத்த முடியும் என்று நினைத்தால், அவர்கள் தவறு செய்கிறார்கள்.

சென்ற வரவு செலவுக் கணக்குக் கூட்டத் தொடரின் கடைசி நாளன்று இந்த மசோதா அறிமுகப்படுத்தப்பட்டது.

திரு. பாபு ராம் நாராயண் சிங் : கடைசி நேரத்தில்.

பண்டிட் லட்சுமி காந்த மைத்ரா : இத்தகைய முக்கியத் துவமும் பரிமாணமும் வாய்ந்த ஒரு மசோதாவை, இந்து சமூகத்தின் வாழ்வையும் திசை வழியையும் முறைப்படுத்தும் ஒரு மசோதாவை சென்றக் கூட்டத் தொடரின் கடைசி நாளன்று அறுமுகப் படுத்தப் பட்டது என்பதைத் தாங்கள் நன்கு அறிவீர்கள். எவ்வாறு அன்றைய வேலைகளின் கடைசியில் 5 மணிக்கு பின்பும் நாம் அமர்ந்திருந்தோம் என்பதையும் நீங்கள் அறிவீர்கள்; பொறுக்குக் குழுவிற்கு அதை அனுப்ப மாண்புமிகு சட்ட அமைச்சர் ஓர் உரையாற்ற அனுமதிக்கப் பட்டார்; மிகக் குறைந்த கால அவகாசத்துக்குள் மூன்று அல்லது நான்கு பேர்கள் மட்டுமே பேச அனுமதிக்கப்பட்டனர்; குறைந்த காலக் கட்டத்திற்குப்பின் 7 மணிக்கு தீர்மானம் நிறைவேற்றப் பட்டது. அதற்குப்பின்பு என்ன நடந்தது? அது பொறுக்குக் குழு விற்குச் சென்றது. பொறுக்குக் குழு அதன் மீது அறிக்கை சமர்ப் பித்தது; அந்த அறிக்கையைப் பரிசீலிப்பதற்கான தீர்மானத்தின் மீது உரிமைப் பிரச்சினைகள் எழுப்பப்பட்டன. அந்த உரிமைப்

பிரச்சினைகளின் தகுதிகள் பற்றி நான் எதுவும் பேசப் போவதில்லை. அவை பைசல் செய்யப்பட்டன. சென்ற கூட்டத் தொடரில் பொறுமை யின்மை அவ்வளவு அதிகமாக இருந்தது; இந்த மசோதா உடனடியாகப் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டுமென்று மாண்புமிகு சட்ட அமைச்சர் விரும்பினார்; உரை எதுவும் ஆற்றப்படவில்லை. எப்படியோ அது நிகழ்ச்சி நிரலில் இடம் பெற்றது, ஒழுங்குப் பிரச்சினைகள் நிராகரிக்கப்பட்டன. இந்த மசோதாவை பொறுக்குக் குழுவுக்குச் சமர்ப்பித்தபடிப் பரிசீலிக்க இந்த அவைக்கு தகுதி உள்ளதாகக் காணப்பட்டது. இது இப்பொழுது எந்த முறையில் கையாளப்படுகிறது என்பதைப் பாருங்கள். ரயில்வே வரவு செலவுத் திட்டத்திற்கும் பொது வரவு செலவுத் திட்டத்திற்கும் இடையே உள்ள குறுகிய காலத்தில் இதை நிறைவேற்ற முயற்சிக்கப்படுகிறது. இது பற்றி போதிய அக்கறை எடுத்துக் கொள்ளப்படவில்லை. இதன் முக்கியத்துவத்தை யாரும் உணர்வதில்லை. இத்தகைய மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்த இந்த சட்டமியற்றல் எம்முறையில் கையாளப்படுகிறது என்பது நாடு முழுவதையுமே கலக்கியுள்ளது. இதற்கு உண்மையான முக்கியத்துவம் அளிக்க நீங்கள் விரும்பினால், இது குறித்த பணியை முறையாகச் செய்ய நீங்கள் விரும்பினால், இன்று நிலவும் சட்டத்தை மாற்றி அமைப்பதற்காக ஏதாவது செய்ய வேண்டுமென்று நீங்கள் விரும்பினால், அதை செய்வதற்கு இது சரியான வழியல்ல. ஒரு சிறப்புக் கூட்டத் தொடரைக் கூட்டி இந்த மசோதாவை அதன் முன் சமர்ப்பியுங்கள். சிறிய வங்கி மசோதாக் களுக்கு நாள் கணக்கில் நீங்கள் நேரம் ஒதுக்குகிறீர்கள். நிலைமை இவ்வாறு இருக்க, இந்து சமுதாயத்தின் வாழ்வையும், கதிப்போக்கை யும், பண்புகளையும் முறைப்படுத்த விழையும் ஒரு மசோதாவை ஒழுங்கு முறையில்லாதமுறையில் கையாள நீங்கள் நினைக்கிறீர் களா? இத்தகைய முக்கியத்துவம் வாய்ந்த சட்டம் பரிசீலிக்கப்படும் முறைக்கு எதிராக எனது கடும் கண்டனத்தை தெரிவித்துக் கொள் கிறேன். நேற்று மாலை 3 மணிக்கு ரயில்வேக்களுக்கான துணை மானியக் கோரிக்கை முன்வைக்கப்பட்டது. பின்பு பொது வரவு - செலவுத் திட்டம் எடுத்துக் கொள்ளப்பட்டது. திரு. துணை அவைத் தலைவர் அவர்களே, இத்தகைய மசோதாக்கள் சம்பந்தமான நிகழ்ச்சி முறைகள் எனக்குப் பழக்கமில்லை. இதற்கு ஒரு முன்மாதிரியை ஞாபகப்படுத்த முடியுமா என்று சட்டப் பேரவையின் பழைய உறுப் பினர்களைக் கேட்கிறேன்.

திரு. பாபு நாராயண் சிங் : எதுவும் இல்லை.

பண்டிட் லட்சுமி காந்த மைத்ரா : ஐயா, பிரச்சினை என்ன வெனில், சட்டத் தொகுப்பிற்கு உண்மையிலேயே அவசியம் எதுவும்

உள்ளதா? நிச்சயமாக எதையும் நான் காணவில்லை. ஏனெனில் கற்றறிந்த என்து நண்பர் திருமதி துர்க்காபாய் கூறியதுபோல் இந்துச் சட்டம் நன்றாக ஸ்தாபிக்கப்பட்டுள்ளது; அது சுமார் நூறு ஆண்டுகள் நிலவி வருகிறது. பிரிட்டிஷ்காரர்கள் இங்கு வந்தபோது, புராதன இந்துச் சட்டத்துக்கு இந்தியப் பண்டிதர்களால் பொருள் விளக்கம் தரப்பட்டது. அவர்கள் நீதிமான் பண்டிதர்கள் என்று அழைக்கப் பட்டனர்; அவர்கள் எல்லா **ஸ்மிருதிகளையும் தர்ம சாஸ்திரங்களை** யும் துருவித் துருவி ஆராய்ந்து இந்த சட்டத்துக்கு வியாக்யானம் செய்தனர். ஏராளமான **ஸ்மிருதி**களிலிருந்தும் நிபந்தங்களிலிருந் தும், வழக்காற்றலிலிருந்தும் இந்து சட்டத்திற்கான அடிப்படைக் கோட்பாடுகளை அவர்கள் வெற்றிகரமாக வகுத்தனர். அவை இன்றும் நிலை நிற்கின்றன. ஐயா, உலகம் அறிந்த மரபுவழி சட்ட இயல்களில் இந்துச் சட்டம் மிகப் பழைமையானது என்பது நன்கு தெரிந்த ஒன்றே.

டாக்டர் மனோ மோகன் தாஸ் (மேற்கு வங்காளம் - பொது) : இந்து சட்டம் நேர்மையற்றது!

பண்டிட் லட்சுமி காந்த மைத்ரா: ஆம். இந்துச் சட்டம் நேர்மையற்றது! இந்து சமுதாயம் நேர்மையற்றது! இந்துக்கள் நேர்மை யற்றவர்கள்! இந்துச் சட்டம் நேர்மையற்றது என்ற குற்றச் சாட்டுக்குப் பதிலளிப்பது யாருக்கும் சாத்தியமல்ல. அந்தக் குற்றச்சாட்டு மூன்று சொற்களை மட்டுமே கொண்டுள்ளது. 'அது நேர்மை அற்றது' என்ற மூன்று சொற்களில் சொல்லப்பட்ட ஒரு மிகக் கடுமையான குற்றச் சாட்டிற்கு பதிலளிக்க எனக்கு சக்தி இருக்கிறதா என்பதை நான் அறியேன். ஓர் அமைப்பு முறை நல்லதா அல்லது கெட்டதா என்பதை சமுதாயம்தான் தீர்மானிக்க வேண்டும்; அதைத் தீர்மானிக்க வேண் டியது ஏமாற்றமடைந்த அல்லது அதிருப்தி அடைந்துள்ள நபர்கள் அல்ல. அதன் ஸ்திரத் தன்மைக்கு ஒரு நிச்சயமான ருசு நூற்றாண்டு களின் சோதனையை அது சமாளித்து நிற்க முடிந்தது என்ற உண்மையில் தான் அடங்கியுள்ளது. இயல்பாகவே மோசமான, ஆரோக்கியமற்ற, அல்லது நேர்மையற்ற எந்த அமைப்பு முறையும் நீண்ட காலத்திற்கு தாக்குப் பிடித்து நிற்க முடியாது. ஆண்டாண்டுக் காலமாக நாட்டை உலுக்கிய அதிர்ச்சிகளையும் புரட்சிகளையும் வெற்றிகரமாகச் சமாளித்து நிற்க முடிந்தது இந்துச் சட்டமும் அதற்கு ஆதார அடிப் படையாக உள்ள அமைப்பு முறையும். வரலாற்றுப் பிரளயங்கள் புராதன நாடுகளான கிரீஸ், ரோம், அஸ்ஸிரியா, பாபிலோனியா போன்ற வற்றின் நாகரிகங்களைச் சீர்குலைத்தன. அந்நாகரிகங்கள் சிதறுண்டு

போயின; ஆனால், தான் தோன்றிய காலத்தைக் கூற முடியாத இந்துக் கலாசாரமும், சமுதாயமும் இன்னமும் சக்தியுடனும் உயிர் துடிப் புடனும் செயல்பட்டு வருகின்றன. இந்நிலைமையில் முரட்டுத் துணிச்ச லான, அக்கறையற்ற வழிகளில் சட்டமியற்றுவதன் மூலம் அதன் அடிப்படைகளையே தகர்க்க நாம் முயலாத வரை, அதை செயல்பட இறைவன் அனுமதிப்பார் என்று உறுதியாக நம்புகிறேன். இந்து மத அஸ்திவாரங்களில் முக்கிய பலஹீனம் எதுவும் இருந்திருந்தால், இன்ப துன்பங்கள் நிறைந்த அதன் நீண்ட வரலாறு முழுவதிலும் அதைத் திணறடித்த பயங்கரமான பேரெழிச்சிகளையும் சமாளித்து நிலைத்து நின்று இருப்பது சாத்தியமில்லை. ஓர் ஆயிரம் ஆண்டு களுக்கு மேலாக நம் நாடு அன்னியர் ஆட்சிக்கு உட்படுத்தப்பட்டு வந்தது. மாறும் நிலைமைகளுக்கேற்ப அதிசயமான முறையில் தன்னை மாற்றிக்கொள்ளும் திறமையை இந்து மதம் பெற்றிருப்பதை வரலாறு உங்களுக்கு எடுத்துரைக்கும், சிந்தித்துப் பார்த்தால் வளைந்து கொடுக்கும் நிலைமைக்கேற்ப தன்னைத் தகவமைத்துக் கொள்ளும் கருக்களை இந்து சட்டம் தன்னுள் கொண்டிருந்ததை உங்களுக்கு புலப்படுத்தும்; எல்லாக் காலங்களிலும் மாறிவரும் தேவைகளையும் சவால்களையும் எதிர்கொள்ளவும் இவை சாத்தியமாக்கின.

திருமதி துர்க்கா பாய் : சபாஷ், சபாஷ்.

திருமதி ரேணுகா ரே: இப்பொழுது ஒரு மாற்றம் ஏற்பட்டு இருக்கிறது (குறுக்கீடு)

பண்டிட் லட்சுமிகாந்த மைத்ரா: நான் பேசும்போது ஏராளமான குறுக்கீடுகள் நேருவது குறித்து மகிழ்ச்சியடைகிறேன்; அவை எனக்கு சிந்திக்க அவகாசம் அளிக்கின்றன. தயவு செய்து அதைத் தனித்தனியாகச் செய்யுங்கள். துணை அவைத் தலைவர் அவர் களே, நான் கூறுவதை பலர் அப்படியே ஒப்புக்கொள்வர் என்று நம்பக் கூடிய அவ்வளவு பெரிய முட்டாளல்ல நான்; ஆனால், நம்மில் சில ராவது நான் கூறுவது பற்றிச் சற்றுச் சிந்திப்பார்கள் என நம்புகிறேன். இந்து மதம், இந்துச் சட்டம், இந்துப் பண்பாடு மிகப் பழைமையான பாரம்பரியத்தைக் கொண்டவை, ஒரு வரியில் சட்டம் இயற்றி அவற்றை அகற்ற நினைப்பது விவேகமற்றது என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன். வலது புறமும் இடது புறமும் இருக்கும் எனது நண்பர் களுக்கு இந்த வேண்டுகோளை விடுக்கிறேன். இப்பொழுது நம் முன் உள்ள இந்துச் சட்டத் தொகுப்பு நமக்கு என்ன சாதிக்கப் போகிறது

என்று நான் கவலைப்படுகிறேன். ஐயா! இதில் இந்து என்று எதையும் நான் காணவில்லை. இந்து அல்லாத அல்லது இந்து-எதிர்ப்பு சட்டத் தொகுப்பு என்று இதனைக் கூறுவது சரியாக இருக்கும் என்று கருதுகிறேன்.

திரு. நசிருத்தீன் அகமது (மேற்கு வங்கம்: முஸ்லீம்) : முஸ்லீம் சட்டத் தொகுப்பு.

பண்டிட் லட்சுமி காந்த மைத்ரா: அது வேறு எதுவாகவும் இருக்கலாம். ஆனால் அது இந்து சட்டத் தொகுப்பு அல்ல. இந்து மதத்தின் ஆன்மாவை அது சுவாசிக்கவில்லை. அது இந்து அல்லாத உணர்வையே வெளிப்படுத்துகிறது. மசோதா முழுவதிலும் ஆரம்பத்திலிருந்து முடிவு வரை இந்து என்று கூறும் எதற்கும் மிக மோசமான அவமதிப்பைக் கொண்டுள்ளது.

திரு. எச்.வி. காமத் : இந்து ஆன்மா என்றால் என்ன?

பண்டிட் லட்சுமி காந்த மைத்ரா: ஐயா, அதை இந்து மதம் என்று சொல்கிறார்களா? திருமணம் மற்றும் பிதுரார்ஜித சொத்தைப் பெறுதல் பற்றிய உங்கள் அமைப்பு முறை பற்றி தயவு செய்து சிந்தியுங்கள். அவைதான் இந்து அமைப்பின், அல்லது இந்து சமுதாயத்தின் ஆதார அடிப்படைகள்; நீங்கள் செய்யப் போகும் வழிமுறையில் அதைச் சிதைக்கப் போகிறீர்களா? இங்குள்ள நமக்கு மட்டுமல்ல, வெளியில் உள்ள நமது நாட்டு மக்களுக்கும் எதிர்காலச் சந்ததியருக்கும் நீங்கள் பதிலளிக்க வேண்டிய கேள்வியாகும் இது.

ஐயா, இப்பொழுது செய்ய முயற்சிக்கப்படுவது போல் இந்துச் சட்டத்தைத் தொகுத்தால் அறிவாளிகளின் வெறும் பொழுது போக்காக சட்டத் தொகுப்பை செய்வதற்காகவே செய்வதாக நான் எண்ணுகிறேன். அவ்வாறு செய்வது விவேகமற்றது என்று எனது மதிப்பிற்குரிய நண்பர்களிடம் மன்றாடிக் கூறிக் கொள்கிறேன். அது அவசியமற்றது. அது அவசியமானது என்று யாரும் உணரவில்லை. பல்வேறு உயர் நீதிமன்றங்களின், மாவட்ட நீதிமன்றங்களின் நீதிபதிகளது கருத்துக்களைப் பாருங்கள். இவர்கள்தான் இந்துச் சட்டத்தை நடைமுறைப்படுத்தப் போகிறவர்கள். இந்துச் சட்டம் தொகுக்கப் படுதல் தேவைப்படுகிறதென்றும், அதுவும் இப்பொழுது செய்ய

முயற்சிக்கப்படும் ரீதியில் செய்ய வேண்டுமென்று நீதித்துறை வலியுறுத்தும் கோரிக்கைகளை உள்ளடக்கும் பெரிய கருத்துத் தொகுப்பை அரசு வைத்திருக்கிறதா? இல்லை. தாங்களே தங்களை வழிகாட்டிக் கொள்ள வேண்டிய, இந்தச் சட்ட ஷரத்துகள்படி தங்களின் வாழ்க்கையையும் ஒழுக்கத்தையும் வழிநடத்த வேண்டிய மக்களிடமிருந்து அத்தகைய ஒரு பொதுக் கோரிக்கை இருக்கிறதா? அவர்கள் கோரியுள்ளார்களா? அம்மாதிரியான கோரிக்கை வந்துள்ளதா? வலது பக்கத்திலுள்ள மதிப்பிற்குரிய எனது நண்பர் இல்லை என்கிறார், அது முற்றிலும் சரி.

திரு. எல். கிருஷ்ணசாமி பாரதி: அவர் தங்களை ஆதரிக்கிறார்.

பண்டிட் லட்சுமி காந்த மைத்ரா : மதிப்பிற்குரிய எனது நண்பர் கூறுகிறார் அவர் என்னை ஆதரிக்கிறார் என்று. அவர் உண்மையைத் தான் ஆதரிக்கிறார். நாம் செய்துகொண்டிருப்பதைப் பற்றி நாடு ஆச்சரியப்படும், ஒரு விவேகமான காரியத்தை நாம் செய்கிறோம் என்று நமது ஆன்மாக்களுக்கு போலி புகழ்ச்சியான அபிடேகத்தை நாம் செய்ய வேண்டாம். நீங்கள் செய்துவரும் முறை பற்றி என்னை நானே ஏமாற்றிக் கொள்ள முடியாது என்பதை நான் அறிவேன். அது விவேகமாக இருந்திருந்தாலும் நான் கூறிய காரணங்களால் அந்தச் சட்டத் தொகுப்புக்கு முயலுவது அவசியம் என்று நான் சிந்தித்திருக்க மாட்டேன். அதற்கு ஒரு சீரான தன்மையை உங்களால் அளிக்க முடியாது. இந்து மதம் என்பது வேறுபாடுகளுக்கு மத்தியில் அடிப்படை ஒற்றுமையைக் குறிக்கிறது. இந்து மதத்தின், இந்து சட்டத்தின், இந்துக் கலாசாரத்தின் சாராம்சமாக அந்த ஒற்றுமை திகழ்கிறது. இதுபோன்ற ஒரு பரந்த நாட்டில் இயற்கையான வேறுபாடுகளைப் புறக்கணித்து, ஒரு சீரான அளவுகோல் கொண்ட ஒரு வாழ்க்கையை நீங்கள் எதிர்பார்க்க முடியாது. அவ்வாறு நீங்கள் எதிர்பார்த்தால் தோல்வியைத்தான் தழுவுவீர்கள்; இது ஆச்சரியமல்ல. இப்பொழுது அதை உணரமாட்டீர்கள்; காலம் வரும்போது புரிந்து கொள்வீர்கள். இந்தச் சட்டத் தொகுப்பு உருவானதும் உங்கள் நோக்கம் நிறைவேறப் போகிறதா? நான் கூறுகிறேன் இல்லை நிறைவேறாது. மைசூரிலிருந்து வந்துள்ள மதிப்பிற்குரிய உறுப்பினர் நேற்று ஓர் உரையாற்றினார். இப்பொழுது இந்து சட்டத் தொகுப்பு மிக எளிதாக ஆக்கப்பட்டுள்ளதால், நான்கு அணா அல்லது ஆறு அணா மதிப்புள்ள பிரசுரத்தை வாங்கி அதன்மூலம், இந்துச் சட்டம் அவ்வாறு நிலவுகிறது என்பதை நீங்கள் திட்டவட்டமாகத் தெரிந்து கொள்ளலாம் என்று அவர் கூறினார். பல நண்பர்கள் 'மிகவும் சரி', '

'மிகவும் சரி' என்று கூச்சலிட்டனர். ஆனால், இந்த மசோதாவைப் பிரரேபித்தவரே தாம் இந்துக்களின் மொத்தச் சட்டத்தையும் தொகுக்கப் போவதாகப் பாசாங்கு செய்யவில்லை. இந்துச் சட்டத் தொகுப்பின் ஆர்வலர்கள் இதை உணர்கிறார்களா? முகப்புரையில் அவர் பகுத்தறிவுக்கு ஒவ்வாத கோரிக்கையை முன் வைக்காமல் மிக எளிமையான கோரிக்கையை முன்வைக்கிறார்; அவர் கூறுகிறார்:

> ''இந்திய மாகாணங்களில் இப்பொழுது அமுலிலிருக்கும் இந்துச் சட்டத்தின் சில குறிப்பிட்ட பிரிவுகளைத் திருத்தித் தொகுப்பது உசிதம் என்று கருதப்படுகிறது.''

எனவே, தொகுக்க உத்தேசித்துள்ளது சில குறிப்பிட்ட பிரிவுகளேயாகும்; அதாவது திருமணச் சட்டம், மரபுச் சொத்துரிமைச் சட்டம், சுவீகாரச் சட்டம் பொதுவாக சொல்வதானால் இவைதான் முக்கியமானவை.

திரு. எல். கிருஷ்ணசுவாமி பாரதி: விடப்பட்ட பிரிவு எது?

பண்டிட் லட்சுமி காந்த மைத்ரா: இந்தச் சட்டத்தில் எது விடப்பட்டுள்ளது என்று மதிப்பிற்குரிய என் நண்பர் கேட்கிறார். இந்துச் சட்டத்தில் இவைதான் உள்ளனவா? இந்து வாழ்க்கையின், தேச நடவடிக்கையின் முழு களத்தையும் இந்த மூன்று பிரிவுகளும்தான் பூர்த்தி செய்கின்றனவா? அவரது அறியாமையைப் பற்றி நான் அனுதாபப்பட மட்டுமே முடியும். கூட்டுக் குடும்பச் சொத்து, பாகப் பிரிவினை, கூட்டுக் குடும்ப வியாபாரம், மதம் மற்றும் தர்ம அறக் கட்டளைகள், கொடைகள் முதலிய மற்ற விஷயங்கள் பற்றி, என்ன செயால்லுகிறீர்கள்? இந்தப் பட்டியலில் இடம் பெறாத இன்னும் எத்தனை எத்தனையோ விஷயங்கள் உள்ளன.

திரு. எல். கிருஷ்ணசாமி பாரதி: உயில்களையும் இவ்வகையில் குறிப்பிடலாம்.

பண்டிட் லட்சுமி காந்த மைத்ரா: உயில்கள் பற்றி வெறுமனே குறிப்பிடுவதால் மட்டும் அவை நம் முழுக் கவனத்தையும் ஈர்த்ததாகாது. எப்படியாயினும் நான் டாக்டர் அம்பேத்கருக்கு நன்றியுடையவனாக இருக்கிறேன். அவர் மிகவும் தன்னடக்கமுள்ளவர். ஒரு சர்வ வியாபகமான தொகுப்பை முன்வைத்துள்ளதாக அவர் ஒருபொழுதும் உரிமை கொண்டாடவில்லை. இதுதான் இந்து

மதத் தொகுப்பு முழுவதுமே என்று மதிப்பிற்குரிய நண்பர்கள் நினைத்தால் அம்பேத்கரிய விஷயத்தில் அம்பேத்கரையே அவர்கள் மிஞ்சுகிறார்கள் என்றுதான் கூறவேண்டும். நம்முன்னால் கொண்டு வரப்பட்டுள்ள வடிவத்தில் இந்த இந்துத் தொகுப்புச் சட்டம் நிறைவேற்றப்பட்டாலும், மற்றொரு காரணத்தாலும் அதன் நோக்கத்திலிருந்து அது தடம்புரள்கிறது. எனது மதிப்பிற்குரிய சகோதரி துர்க்காபாயும் மைசூரைச் சார்ந்த எனது மதிப்பிற்குரிய நண்பரும் 'நல்லது இதைப் பற்றி நீங்கள் ஏன் கவலைப்படுகிறீர்கள்' என்று நேற்றுக் கேட்டனர். விவசாயச் சொத்து துண்டு துண்டாக்கப் பிரிக்கப் படுவதற்கு இது இட்டுச் செல்லாது. இந்த மசோதாவை நிராகரிப்பதற்கு மிக வலுவான ஒரு வாதத்தை அவர்கள் அளிக்கிறார்கள் என்பதை அவர்கள் உணர்ந்தார்களா என்பதை நான் அறியேன். தாங்கள் உணராமலேயே, எனது சகோதரியும் சகோதரரும் இந்த மசோதாவை முற்றிலுமாக நிராகரிப்பதற்கு மிக வலுவான வாதங்களில் ஒன்றை அளித்துள்ளார்கள். சொத்தைப் பிரித்துக் கொடுப்பதை முறைப்படுத்தப் போகிறீர்கள். இப்பொழுது பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது என்னவெனில், இந்நாட்டில் அசையாச் சொத்தில் 90 சதவிகிதம் கிராமங்களில், மாகாணங்களில் உள்ளன இந்திய அரசின் நேரடி நிர்வாகத்திலுள்ள பரப்புகள் நீங்கலாக எல்லா மாகாணங்களிலுமுள்ள இந்துக்களுக்கு இந்தச் சட்டத் தொகுப்பு பொருந்தும் என்ற கோரிக்கையை இது எவ்வாறு நிறைவேற்றும்? இந்த மசோதாவை தூக்கியெறிய வேண்டும் என்பதற்கு ஒரு பலமான காரணம் அதனுடைய நோக்கத்தில் அது தவறுகிறது என்பதேயாகும். மூன்று கிளைகளைத் தவிர, நான் குறிப்பிட்டபடி உட்படுத்தாத பல விஷயங்கள் உள்ளன. அரசியல் சட்டப் படி மாகாண விவசாயச் சொத்து முற்றிலும் மாகாண சம்பந்தமான விஷயம் என்று வாதிக்கப் படுகிறது; அவ்வாறே அறக்கட்டளை சொத்துக்கள், கூட்டுக் குடும்பச் சொத்து, பாகப்பிரிவினை, சுயமாகச் சம்பாதித்தது முதலானவையும் இவற்றில் அடங்கும். இந்தப் பரந்த களம் இவற்றை உட்படுத்தப் படாமல் உள்ளது. இந்த அவையை அக்கறையுடன் கேட்கிறேன்: இது ஒரு சர்வ வியாபகமான சட்டத் தொகுப்பு அல்லது எல்லாவற்றையும் தன்னுட் கொண்ட சட்டத் தொகுப்பு, மேலும் இந்து சமுதாயம் மரபுவழி பெற்று வந்த எல்லா சமூக, பொருளாதார சீர்கேடுகளுக்கும் இது சமய சஞ்சீவியாக விளங்கும் என்று நினைப்பவர்களின் உரிமை கொண்டாடுதலைப் பற்றி அவர்கள் எல்லோரும் திருப்தி கொண்டிருக்கிறார்களா? 139 பிரிவுகளும் வைட்டமின் மாத்திரைகளாக இந்து சமுதாயம் முழுவதற்கும் வீரியமூட்டும் என்று அவர்கள் உண்மையிலேயே நம்புகிறார்களா? நீங்கள் அந்தக் கருத்தைக் கொண்டிருக்கலாம்.

இந்த அவையும் அந்தக் கருத்தைக் கொண்டிருக்கலாம். ஆனால் நான் அந்தக் கருத்தைக் கொண்டிருக்கவில்லை. மாறாக இது அவசர கோலமானது, இந்துச் சட்டத் தொகுப்பு நிறைவேற்றப்பட்டாலும், தங்கள் சொந்த மாகாணங்களில் விவசாய நிலத்தின் உடைமை மாற்றத்திற்கான இதுபோன்ற சட்டத்தை மாகாண அரசுகள் நிறை வேற்றும் வரை இது அமுலுக்கு வரமுடியாது. எல்லா மாகாணங் களிலும் இந்தச் சட்டம் அமுலுக்கு வரும்முன் ஒவ்வொரு மாகாணமும் அதைச் செய்தாக வேண்டும். சமஸ்தானங்களைப் பற்றி நான் பேச வில்லை. நான் மாகாணங்களைப் பற்றித்தான் பேசுகிறேன். மேலும் மாகாணங்கள் வேறுபட்ட முறைகளை எடுக்கலாம் என்பதும் புரிந்து கொள்ள முடியாததல்ல. ஒரு குறிப்பிட்டப் படியான மரபுரிமைச் சட்டத்தை, விவசாயச் சொத்தின் உடைமை மாற்றம் ஒரு குறிப்பிட்ட முறையில் இருக்கவேண்டுமென்றோ மாகாண அரசுகளை மத்திய அரசு நிர்பந்திக்க முடியாது. அப்பொழுது மாகாண சுயாட்சி பாதிக்கப் படும். தங்களது கருத்துக்கு மாறாக மத்திய அரசின் கட்டளை அமைந் திருந்தால் மாகாண அமைச்சரவைகள் அதை ஏறெடுத்துக்கூடப் பார்க்கமாட்டா என்பது நிச்சயம். இது எனது உறுதியான கருத்து.

திரு. துணை அவைத் தலைவர் : அவையின் தகவலுக்காக நான் கூற விரும்புவது இதுதான்: பல உறுப்பினர்களிடமிருந்து சீட்டு களும் கடிதங்களும் வந்துள்ளன. அவர்களில் மிகப் பெரும்பான்மை யோர் - எல்லோரும் இல்லாவிடினும் - இந்த மசோதா பற்றித் தங்கள் கருத்துக்களைத் தெரிவிக்க அக்கறையுடன் உள்ளனர். மதிப்பிற்குரிய உறுப்பினரின் உரை எவ்வளவு ருசிகரமாக இருந்தபோதிலும், இந்த மசோதாவுக்கு ஆதரவாக ஒரு தரப்பினர் எழுப்பும் வாதங்களுக்கு மற்றவர்கள் தயவு செய்து பதிலளிக்கட்டும் என்று ஆலோசனை கூறுகிறேன். இவ்வாறு எல்லா விஷயங்களும் அலசி ஆராயப்படும்; விவாதத்தைச் செழுமைப்படுத்த இது உரிய பங்கு ஆற்றும். இந்தச் சட்டத் தொகுப்பைப்பற்றி டாக்டர் அம்பேத்கர் பகுப்பாய்வு செய் துள்ளார். அந்த விஷயங்கள் எவ்வாறு தவறு என்றும் மறுபக்கத்தில் உள்ளவர்கள் இதற்கு எவ்வாறு பதிலளிக்கிறார்கள் என்றும் அறிய அவை விரும்பும்; எனவே இது விஷயத்தில் அதிகக் கவனம் செலுத்தப் பட வேண்டும். பட்டியலில் உள்ள காத்திருக்கும் பேச்சாளர்களின் எண்ணிக்கையையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

திரு. எச்.வி. காமத் : ஐயா! இந்த மசோதா மிகவும் ஜீவாதார முக்கியத்துவம் வாய்ந்தது; இது குறித்து விவாதிக்க இரண்டு அல்லது

மூன்று நாட்கள் போதுமானதாக இருக்காது. எனவே, பொது விவாதத்திற்கு குறைந்தபட்சம் இரண்டு அல்லது மூன்று வாரங்கள் ஒதுக்கும்படி தங்களை நான் கேட்டுக் கொள்ளலாமா?

பண்டிட் லட்சுமி காந்த மைத்ரா : ஐயா, தாங்கள் தெரிவித்த கருத்துக்களுக்கு நான் மிகவும் மரியாதை அளிக்கிறேன். சட்டமியற்றுதலைத் தாமதப்படுத்த நான் நீண்ட உரையை ஆற்றுகிறேன் என்ற எண்ணத்தை நான் ஏற்படுத்தியிருந்தால் அதற்காக வருந்துகிறேன். ஐயா, இந்த மசோதா மிக அதி முக்கியத்துவம் வாய்ந்தது; எனவே பொது விவாதத்தை வெகு விரைவில் முடித்துக் கொள்ளும்படி எங்களைக் கேட்பது அவைக்கு நியாயம் செய்வதாகாது. ஏனெனில், முதல் கட்டத்தில் உரை ஆற்ற எங்களுக்கு கிஞ்சித்தும் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. மசோதாவின் கோட்பாட்டிற்கு எங்களை உட்பட செய்தபின், வரம்புக்குட்படுத்தப்பட்ட இந்தக் கட்டத்தில் நம் நாட்டிற்கு எவ்வாறு சிறப்பாக சேவை செய்யமுடியும் என்பதை தாங்கள்எண்ணிப் பார்க்க வேண்டும். 36 பேர் உரையாற்ற முன் வந்திருப்பது இந்த மசோதா இப்பொழுது எவ்வளவு அக்கறையுடன் கூடிய கவனத்தை ஈர்த்துள்ளது என்பதற்கு எடுத்துக்காட்டு; அவர்கள் தங்கள் கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகின்றனர். எனவே இம் மாதிரியான விவாதத்திற்கு இவ்வளவு நேரம்தான் ஒதுக்க வேண்டும் என்ற கெடுபிடி கூடாது.

இன்று விவாதத்தை நாம் முடிக்கவில்லையெனில், இதுபற்றி விவாதிக்க அதிக நாட்கள் கண்டுபிடிக்கப்பட வேண்டும். மாண்புமிகு சட்ட அமைச்சர் இதுபற்றி மிக அக்கறை கொண்டுள்ளார். இதற்காக அதிகப்படியான ஒரு கூட்டத் தொடரை அவர் ஏற்பாடு செய்ய முடியும்; அவ்வாறு இல்லையெனில், இந்தக் கூட்டத் தொடரிலேயே, மேலும் நான்கு அல்லது ஐந்து நாட்கள் ஒதுக்க வழி வகை செய்ய வேண்டும். விஷயம் முழுமையாக விவாதிக்கப்பட வேண்டும். விவாதத்தை முடித்துக் கொள்வதை அவை ஏற்றுக் கொள்ளாது என்று நம்புகிறேன். முடித்துக் கொள்ள வேண்டுமென்ற தீர்மானத்தை பிரதம மந்திரி முன் மொழிய மாட்டார் என்று எண்ணுகிறேன். முழுமையானதும் போதுமானதுமான விவாதத்தை உத்திரவாதம் செய்யாமல் ஆணை இடுவதன் மூலம் இம்மாதிரியான தீர்மானத்தை முடித்துக் கொள்ள முடியாது.

திரு. எச்.வி. காமத் : மற்றொரு விஷயம். ஐயா, இங்கு இல்லாத மாகாணச் சட்டப் பேரவை உறுப்பினர்களை இந்த விவாதத்தில் கலந்துகொள்ளும்படி அழைக்கலாமா?

துணை அவைத்தலைவர்: நாம் இப்பொழுது அவையை ஒத்திவைப்போம்....

பண்டிட் லட்சுமி காந்த மைத்ரா: ஐயா! நான் இன்னமும் முடிக்கவில்லை. மதிய உணவுக்குப் பின் என் உரையை நான் தொடரலாம் என்று நினைக்கிறேன்.

துணை அவைத் தலைவர்: ஆம். இப்பொழுது மதிய உணவுக்காக ஒத்திவைப்போம்.

பிற்பகல் இரண்டரை மணி வரை மதிய உணவிற்காக அவை ஒத்திவைக்கப்பட்டது.

அவை மதிய உணவுக்குப் பின் பிற்பகல் 2-30 மணிக்கு மீண்டும் கூடியது . திரு. எஸ்.வி. கிருஷ்ணமூர்த்தி தலைமை தாங்கினார் . (தலைமை தாங்குவர்கள் பட்டியலில் ஒருவர் அவர்.)

பண்டிட் லட்சுமி காந்த மைத்ரா : இடை வேளைக்கு அவை ஒத்திவைக்கப்பட்ட போது, முக்கிய அம்சங்களில், அதன் நோக்கத்தில் எவ்வாறு இந்த இந்துமதத் தொகுப்பு தோல்வியடையப் போகிறது என்று விளக்கிக் கூற நான் முயன்றேன். இந்தச் சட்டத் தொகுப்புக்கு எந்த அவசியமும் இல்லை என விளக்கினேன்; ஏனெனில், இந்துச் சட்டம் அதன் எல்லா அம்சங்களிலும் நன்கு நிலை நிறுத்தப்பட்டுள்ளது மட்டுமல்லாமல், மக்கள் அதை நன்கு புரிந்து கொள்கிறார்கள் என்று எடுத்துரைத்தேன். இந்தச் சட்டத்தை அமுல் நடத்தும் நாட்டின் நீதிபதிகள் நீதி நிர்வகம் - உயர் மட்டம் உட்பட - சட்டம் தொகுக்கப்பட வேண்டுமென ஒரு பொழுதும் கோரியதில்லை என்பதையும் விளக்கினேன்; இந்த மசோதா ஒரு குறுகிய வரம்பைக் கொண்டது என்றும், மேலும் திருமணம், தத்து எடுத்தல், மரபுச் சொத்துரிமை ஆகியவற்றைத் தவிர, அது விட்டுவிட்ட விஷயங்கள் ஏராளமாக உள்ளன என்றும் விளக்கினேன். விவசாய நிலத்தைப் பொறுத்தவரை, நாட்டின் நீதிமன்றங்களின் பல்வேறு முடிவுகளின்படி, நிலம் என்ற பிரச்சினை மிகப் பல்வேறுபட்ட நலன்களையும் நபர்களையும் - நிலச்சுவான்தாரரிலிருந்து கலப்பை ஏந்தி நிலத்தை உழுது பயிடுபவன் வரை - உட்படுத்தித் தழுவி நிற்கிறது என்று அவைக்கு சுட்டிக்காட்ட விரும்புகிறேன். மத்திய சட்டம் குறிப்பிட்டுள்ளதற்கு மாறான வழிகளில் பல்வேறு மாகாண அரசுகள் அவற்றின் சொத்தின் வினியோகத்தை முறைப்படுத்தினால் விபரீதமான விளைவுகளும் குழப்பமும் ஏற்படவே செய்யும்.

ஐயா, அடுத்து, இந்தச் சட்டத் தொகுப்பு தற்போதுள்ள இந்து சட்டத்தை அதனுடைய குறுகிய வரம்பிற்குள் ஜீரணிக்க முயல்வது மட்டுமல்லாமல், இவ்வாறு வரிசைப் படுத்தி ஜீரணிக்கும் செயல் பாட்டினிடையே, பல விஷயங்கள் புகுத்தப்பட்டுள்ளன என்று குறிப் பிட விரும்புகிறேன். பலவிஷயங்கள் குறிப்பாக திருமணம், வாரிசு உரிமை ஆகியவற்றில் அறிமுகப்படுத்துகின்றன; ஒப்புக்கொள்ளப் பட்ட, நடைமுறையில் உள்ள இந்து கருத்துக்களுக்கு நேர் எதிராக உள்ளன இவை. எனவே, வெறுமனே மனதில் ஈர்த்துக் கொண்டு வரிசைப் படுத்துவது என்பது மட்டுமல்ல; மேலும் திருத்தம் செய்வது மட்டு மல்ல - ஏனெனில் திருத்தம் என்பது ஒரு மிதமான வெளிப்பாடு - அது அதைவிட அதிகம் செய்கிறது. திருமணச் சட்டத்தில் மட்டுமல் லாமல் வாரிசு உரிமைச் சட்டத்திலும் புதுமை செய்கிறது, மிக வியாபகமான மாற்றங்களை அது கொண்டுவருகிறது. இந்த மாற்றங் களின் முழு விளைவுகளையும் அவைக்கு விளக்கிக் கூறமுடியும் என நினைக்கிறேன். ஆனால் அதற்கு ஈடு கொடுக்கும் உடல் வலு எனக்கில்லை. இந்த மாற்றங்களை நான் எவ்வாறு காண்கிறேன் என்பதை வேகமாக விளக்க முற்படுவேன்.

என் கருத்திலும், என் நட்டு மக்களின் மிகப் பெரும்பான்மை யினரின் கருத்திலும், இரு வகை மாற்றங்கள் அதிக தீவிரம் வாய்ந் தவையாகவும் அதிவேகம் கொண்டவையாகவும் உள்ளன; அவை திருமணம், வாரிசு உரிமை பற்றியவையாகும். எனது மாண்புமிகு நண்பர் சமயச் சடங்கு ரீதியான திருமணத்திற்கு சந்தேகமின்றி சட்டத் தொகுப்பில் இடமளித்திருக்கிறார். இந்த மசோதா வரையப்பட்டு, அதற்கு உருவம் அளிக்கப்பட்ட நேரம் வரை திருமணங்கள் எம்முறை யில் ஒப்பந்தம் செய்யப்பட வேண்டுமென்று நிர்ணயிக்க மக்கள் இந்நாட்டின் அரசைக் கோரினார்களா? இந்த மசோதா அறிமுகப் படுத்தப்படும் வரை, மக்கள் திருமணம் செய்துகொள்ளவில்லை என்றோ, நாம் திருமணம் செய்து கொள்வதில் பெருமளவு கஷ்டம் இருந்தது என்றோ யாரும் கூறவில்லை என நினைக்கிறேன். திருமணங் கள் எவ்வாறு செழுமைப்படுத்தப்படலாம் என்பது எனக்குத் தெரிய வில்லை. இந்தத் திருமணங்களுக்கு எனது அடிப்படையான ஆட் சேபனை என்னவெனில் ஒரு திருமணத்தை புனிதத்தன்மை வாய்ந்தது என்று ஒருபக்கம் அது வருணிக்கும் அதே சமயத்தில், இந்த புனிதத் தன்மை எனும் முகமூடியில், புனிதத் தன்மை வாய்ந்த அல்லது புனித சடங்குடன் கூடிய திருமணம் என்று கருதமுடியாத பல விஷயங்களை அது அறிமுகப்படுத்துகிறது. தடை செய்யப்பட்ட இரத்த உறவுத் திருமணத்தைப் பாருங்கள்; சம்பந்தப்பட்டவர்களின் மரபுக் கூறுகளைப்

பாருங்கள். அது சாதி விட்டு சாதி செய்துகொள்ளும் கலப்புத் திருமணமாக இருக்கலாம். சாதிக்கு வெளியிலான திருமணமாக இருக்கலாம் அல்லது ஒரே கோத்திரத்தில் *(சகோத்திரம்)* செய்யும் திருமணமாக இருக்கலாம். அதே சமயம் அது புனித சடங்கு ரீதியான திருமணமாக இருக்கும். புனித சடங்கு ரீதியான திருமணமுறை என்று சொல்லிக் கொண்டே அதே சமயம் சிவில் திருமணமும் (சடங்குகளின்றி) அதிகாரிகளால் நடத்திவைக்கப்படுகிறது. இது விசித்திரமாக உள்ளது. இந்துச் சட்டத் தொகுப்பிலேயே இது எவ்வாறு இடம் பெறுகிறது என்று எனக்குத் தெரியவில்லை. முற்றிலும் மாறுபாடான விஷயத்திற்கு இடம் அளித்துள்ளார்கள். புனித ஆசாரத் திருமண முறையில் ஒரு குறிப்பிட்ட வகையான ரத்தக் கலப்புத் திருமணம் தடை செய்யப்படுகிறது; சிவில் திருமணத்தில் முற்றிலும் வேறான வகை உள்ளது. தடுக்கப்படும் ரத்த உறவுத் திருமணங்களின் எல்லை குறுக்கப்படுகிறது. இதனால் பல சமயங்களில் இத்திருமணங்கள் நெருங்கிய உறவினர்களிடையே உடலுறவு வைத்துக்கொள்ளும் திருமணங்களாகி விடுகின்றன. எல்லா விதமான ஒழுக்க நெறி தளர்த்தலுக்கும் சட்ட மீறலுக்கும் நேரடியான உற்சாகமளிக்க நாம் விரும்பினாலன்றி இந்த மசோதாவிற்கு என்ன அவசியம் வந்தது ஐயா, துரதிர்ஷ்ட வசமாக, இந்தப் போக்கு இந்த நாட்டின் இளைஞர்களை ஆட்டிப்படைத்து வருகிறது. இதற்குச் சட்ட பூர்வமான உரிமையை நாம் வழங்கப் போகிறோமா? கேலிப் பேச்சுக்கும் அக்கறையின்மை உணர்வுகளுக்கும் இடம் கொடுக்காமல் ஒரு கடினமான சமூகப் பிரச்சனையை ஆழ்ந்து பரிசீலனைக்கு உட்படுத்தி இந்தக் கேள்விக்கு பதிலளிக்கும்படி மாண்புமிகு எனது நண்பரைக் கேட்டுக்கொள்கிறேன்.

விவாகரத்து விஷயத்தை புகுத்தியதன் மூலம் இந்து விவாகம் என்ற அடிப்படை கருத்து எவ்வளவு முடியுமோ அவ்வளவு மிகக் கடுமையான அதிர்ச்சியை பெற்றுள்ளது; இந்து திருமணம் என்ற சிந்தனைகளுக்கு இது மிகவும் ஆட்சேபகரமானது; அருவருக்கத் தக்கது. என்னைப் போன்று தம்மை ஓர் இந்து என்று கூறிக்கொள்ளும் ஒவ்வொருவருக்கும், தம்மை ஓர் இந்து என்று அழைத்துக் கொள்வதில் பெருமை கொள்ளும் ஒவ்வொருவருக்கும் புனிதமானது இந்து திருமணமே அன்றி சிவில் திருமணமல்ல என்பது நன்கு தெரிந்திருக்கும். எனவே, விவாகரத்து என்பது அதன் கண்ணோட்டத்திற்கு முற்றிலும் அன்னியமானது என்பதை ஒப்புக் கொள்வது அவருக்குக் கஷ்டமாக இருக்காது. இந்து சாஸ்திரங்களின்படி, திருமணத்தால் ஒன்றுபடுவது புனிதமானது, மேலும், நிச்சயமாக ரத்து செய்ய முடியாதது. (குறுக்கீடு) என்னுடைய உரையைச் சுருக்கிக் கொள்ள

வேண்டுமென நீங்கள் விரும்பினால், தயவு செய்து முக்கியமான விஷயங்களில் மட்டுமே குறுக்கீடு செய்யுங்கள். குறுக்கீடுகளைப் பற்றி நான் அஞ்சவில்லை; அவற்றிற்கு எவ்வாறு பதிலளிப்பது என்பதை நான் அறிவேன். என் சொந்த வழியிலேயே அவற்றிற்கு என்னால் பதிலளிக்க முடியும். ஆனால் நீங்கள் குறுக்கீடு செய்து கொண்டே இருந்தால், எனது உரை தேவையில்லாமல் நீண்டுபோகும்; மேலும், நான் அளிக்கும் பதில்கள் உங்களுக்கு மகிழ்ச்சியாகவும் இருக்காது.

திரு. பாபு ராம்நாராயண் சிங்: அது அப்படித்தான் இருக்க வேண்டும்.

பண்டிட் லட்சுமி காந்த மைத்ரா: இந்த நாட்டிலோ அல்லது வேறு எந்த நாட்டிலோ, விவாக ரத்து என்ற முறை எந்த சமுதாயத்தின் நலனுக்காக இருப்பதாகக் கூறப்படுகிறதோ அந்த சமுதாயத்தின் நலனை அது வளர்ப்பதாகத் தெரியவில்லை. மனித சமுதாய இயலின் ஒரு தன்னடக்கமுள்ள மாணவன் என்ற முறையில், திருமண நீதிமன்றங்கள் பற்றிய செய்திகளைப் படிக்கும் சந்தர்ப்பங்கள் எனக்குக் கிடைத்தன. மதிப்பிற்குரிய ஓர் உறுப்பினர், நீதிபதி **லிண்ட்சே** பற்றிக் குறிப்பிட்டார். அவர் அந்தப் புகழ்பெற்ற நீதிபதி பற்றிக் குறிப்பிட்ட போது, இம்மாதிரி திருமண முறைகளை எதிர்ப்பதற்கு மிகப் பலமான வாதங்களில் ஒன்றை அவரை அறியாமலே அளித்தார் என்பதை எனது நண்பர் இந்த இந்துமதத் தொகுப்பு வகை செய்திருப்பது போல் அறிவாரா என்பது எனக்குத் தெரியாது. (நமது) குடும்ப வட்டத்திற்குள் ஒரு நபருக்கும் அவரது தாயாரின் சகோதரர் மகளுக்கும் அல்லது அவரது அப்பாவின் சகோதரியின் மகளுக்கும் இடையே கல்யாண உறவுகள் ஏற்படுவதை நாம் அனுமதிக்க வேண்டுமா என்று மதிப்பிற்குரிய உறுப்பினர் கவனமாகப் பரிசீலிக்க வேண்டுமென விரும்புகிறேன்.

திரு. எச்.வி. காமத் : அது சகஜம்.

பண்டிட் லட்சுமி காந்த மைத்ரா: தென் இந்தியாவில் அது சகஜமாக இருக்கலாம்; ஆனால், தென் இந்தயா என்பது இந்தியா முழுவதையும் குறிக்கவில்லை. என்னுடைய முழு வாதம் என்னவெனில், நாட்டின் ஒரு குறிப்பிட்ட பகுதியில் ஒரு குறிப்பிட்ட முறை நடைமுறையில் இருக்கிறதென்றால், அதை நாடு முழுவதற்கும் பொருந்த செய்யத் தேவையில்லாமல் முயலக்கூடாது.

தென்னிந்தியாவில் இல்லாத ஒரு மாகாணத்திலிருந்து நான் வந்திருக்கிறேன். அது பின்தங்கிய - கல்வியிலும் பண்பாட்டிலும் பின்தங்கிய - அதை எப்படி வேண்டுமானாலும் வைத்துக் கொள்ளுங்கள் இருளில் மூழ்கிக் கிடக்கும் வங்காள மாகாணம், அங்கு வாழும் குடும்பங்களின் நிலைமைகளை நான் அறிவேன். வங்காளத்திலுள்ள எந்த வீட்டிற்கும் செல்லுங்கள்; அங்கு மகன்கள், மகள்கள், இயல்பான வாரிசுகள், எல்லாவிதமான உறவினர்களும் - சகோதரிகளின் மகன்கள், உடப் பிறந்தார் மகன்கள், உடன் பிறந்தார்கள் மகள்கள், தாய் மாமன் மகன்கள், மாமாவின் மகள்கள் - எல்லோரும் வலைப்பின்னல்போல் ஒன்றாக ஒரு கூட்டுக் குடும்பத்தில் காப்பாற்றப் படுவதைக் காண்பீர்கள். நல்லொழுக்கம் மற்றும் மதச் செல்வாக்கில் அவர்கள் முறையாகக் கட்டுப்படுத்தப்படுகின்றனர். அநேகமாக எல்லா வீடுகளிலும் இதை நீங்கள் காணலாம்.

மாண்புமிகு டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் : கஷ்டம் என்ன?

பண்டிட் லட்சுமி காந்த மைத்ரா: கஷ்டம் எங்கு உள்ளது என்று உங்களுக்குச் சொல்கிறேன். தங்களுக்குச் சொந்தக் குடும்பம் எதுவும் இல்லாதவர்களுக்கு எந்தக் கஷ்டமும் இல்லை. கஷ்டம் இம்முறையில் ஏற்படுகிறது. சிரமத்தை இங்கு பகிர்ந்து கொள்வதற்காக என்னையே எடுத்துக் கொள்ளுங்கள். என் குடும்பத்தில், என் மகன்கள், மகள்கள், அப்பாவின் சகோதரியின் மகள்களும் மகன்களும், அம்மாவின் மகள்களின் மகன்களும் மகள்களும் மற்றும் சகோதரியின் மகள்களும் எல்லோரும் ஒன்றாக வாழ்கிறார்கள்; எனது மகன்களில் ஒருவன் அவன் மைனராகவோ, வளர் இளம் பருவத்தினனாக இருக்கும் போது அவனது அத்தை மகளுடன் நெருக்கமாகப் பழகுகிறான் எனில் - இன்று மனித இயல்பு எவ்வாறு உள்ளது என்பது தெரிந்ததே - இந்த நெருக்கம் வளர்ந்து கலியாணத்தில் முடிவதன் சாத்தியப்பாட்டை தாங்கள் அகற்றுவீர்களா? அவ்வாறு நீங்கள் செய்தால், உங்களை மோசமான வரலாற்று மாணவர், சமூக இயலின் மோசமான மாணவர், மன இயலின் மோசமான மாணவர் என்றுதான் சொல்லவேண்டும். மனிதச் சதையின் அழைப்பு இருக்கவே இருக்கிறது. எந்தச் சட்டமும், எவ்வளவு சர்வவல்லமை பொருந்தியதாயினும், மனித இனத்தின் இந்த இயற்கையான, பலம் வாய்ந்த மனக்கிளர்ச்சியை அழிக்க முடியாது. இரத்த உறவு உள்ளவர்களுக்கிடையே, வீட்டில் உள்ள மிக நெருக்கமான உறவினர்களிடையே, திருமணத்திற்கு நீங்கள் அங்கீகாரம் அளித்தால், சமுதாயத்திற்கு என்ன நேரும் என்று நினைக்கவே நான் பயத்தால் நடுங்குகிறேன்.

மாண்புமிகு டாக்டர் பி.ஆர். அம்பேத்கர்: ஒன்றும் நேர்ந்து விடாது.

பண்டிட் லட்சுமி காந்த மைத்ரா: சமுதாயத்தைப் பற்றி நீங்கள் அக்கறை கொள்ளாவிடில் எதுவுமில்லை. இங்கும் அங்கும் தேனை உறிஞ்சி மகிழ்ச்சியடையும் சமூக வண்ணத்துப் பூச்சிகள் மட்டுமே உள்ள ஒரு சமுதாயத்தில் நீங்கள் நம்பிக்கை வைத்தால் நிச்சயம் எதுவும் சாதிக்க முடியாது. இந்தியா தனக்குரிய நிலையை, உலகம் பூராவும் போற்றுகிற நிலையை இந்தியாவிற்குப் பெற்று தந்த அல்லது பெற்றுத் தரப்போகிற ஒரு சமுதாயத்தையே நான் ஆதரிக்கிறேன். இவற்றை எல்லாம் நீங்கள் தூக்கியெறிந்துவிட்டால், இம் மாதிரியான ஒரு கையேட்டை, ஓர் இந்துச் சட்டத் தொகுப்பை முன் வைத்தால், இப்போது சிற்றப்பன் பெரியப்பன் மகள்களைத் திருமணம் செய்துகொள்ளுதல், ஒத்த-உறவுகளுக்கிடையே அங்கீகரிக்கப்படும் திருமணங்கள் முதலான எல்லாவிதமான திருமணங்களும் நடைபெறுவதை நீங்கள் காண்பீர்கள்; தகா புணர்ச்சி சார்ந்த முறையற்ற திருமணங்களைச் சட்டப்படியாக்கினால் ஒழுக்கச் சீர்கேட்டில்தான் சமுதாயம் மூழ்கும்.

திரு. எல். கிருஷ்ணசாமி பாரதி : 'தகாப்புணர்ச்சி சார்ந்த' என்ற பதத்தை உபயோகித்ததற்காகக் கண்டிக்கிறேன். நாட்டின் பரந்த பாகங்களில் நடைமுறையிலுள்ள ஒரு பழக்கத்தை மொத்தமாகக் கண்டிப்பது மிகவும் தவறானது. மாகாணம் முழுவதையும் அது அவமதிப்பதாகும்.

திரு. அவைத் தலைவர்: அமைதி, அமைதி.

பண்டிட் லட்சுமி காந்த மைத்ரா : ஆனால் இத்தகைய அமைப்பு முறைக்கு எதிராக என்னால் கண்டனக் குரல் எழுப்பாமல் இருக்க முடியாது. ஏனெனில் பெரியப்பன் சின்னப்பன் பிள்ளைகளுக்கிடையேயான திருமணம் உயிர் இயல் மற்றும் உடலியல் கண்ணோட்டத்தில் சமுதாய நலனுக்கு உகந்ததல்ல; இந்துச் சட்ட கருத்துக்களுக்கும் எதிரானது.

திரு. எல். கிருஷ்ணசாமி பாரதி : இல்லை. இல்லை.

பண்டிட் லட்சுமி காந்த மைத்ரா: இவ்வாறாக, சமுதாயத்தின் நலன் கண்ணோட்டத்திலிருந்து மட்டும் அல்லாமல் குடும்ப

வாழ்க்கையின் அமைதி மற்றும் புனிதம் எனும் நோக்கிலிருந்தும் இது கண்டிக்கப்பட வேண்டுமென்று விரும்புகிறேன். இது நெறி கெட்டதும், அவமானகரமானதுமாகும்.

ஐயா, எனது மரியாதைக்குரிய சகோதரி துர்க்காபாய், ஒருதார மணத்தை எதிர்க்கக் கூடாது என்று முற்றிலும் சரியாகக் கூறினார். ஒருதார மணத்தை உண்மையில் விரும்பாத மதிப்பிற்குரிய உறுப்பினர் யாராவது இந்த அவையில் இருக்கிறாரா? நம்மில் ஒவ்வொருவரும் ஒருதார மணத்தை விரும்புகிறாம்; நமது விருப்பத்திற்காக மட்டும் அல்ல; இந்த ஒருதார மணத்தை ஏற்றுக்கொள்ளும்படி சூழ்நிலைகள் நம்மை நிர்ப்பந்தித்துள்ளன. இந்த நாட்டின் மேல்தட்டு வர்க்கங்களிடையே பலதார மணம் முற்றிலுமாக மறைந்துவிட்டது - ஆனால் சட்டத்தினாலல்ல. என்னுடைய பிரதான வாதம் அதுதான். ஒரு சமூகத் தீங்கை வேரோடு ஒழிக்க நீங்கள் விரும்பினால், உள்ளிருந்தே நீங்கள் பணியாற்ற வேண்டும்; மேலிருந்து செய்யக்கூடாது. இந்த நாட்டின் வரலாற்றை மதிப்பிற்குரிய எனது சக உறுப்பினர்கள் பார்ப்பார்களேயாயின் எனது நிலை நிரூபிக்கப்படுவதை அவர்கள் காண்பார்கள். இந்து விதவைகளின் துன்ப துயரங்களை நாம் எல்லோரும் அறிவோம். குழந்தை மற்றும் இளம் விதவைகள் பற்றி நாம் அறிவோம்; இவை நமது இதயத்தை உடைக்கின்றன; எப்படியும் அவை நமது இதயங்களைக் கிழித்தெறிந்திருக்க வேண்டும். உண்மையில், சென்ற தலைமுறையில், நம் நினைவில் நிற்கும் பெருமகனார் காலஞ்சென்ற பண்டிட் வித்யாசாகர் இது பற்றி மனமுருகி, **இந்து விதவா மறுவிவாகச் சட்டம்** இயற்றப்படுவதற்குப் பாடுபட்டார். ஆனால் நாடு அதற்குத் தயாராக இருக்கவில்லை; விளைவு என்ன? சட்டம் உண்மையில் இதுவரை நடைமுறைப்படுத்தப்படாத சட்டமாகவே இருந்து வந்துள்ளது. சமுதாயத்தின் உள்ளிருந்தே தோன்றாத எல்லாச் சமூகச் சட்டங்களின் கதி இப்படித்தான் இருக்கும். பல்வேறு காரணங்களினால், மண வாழ்க்கையில் வளர்ந்துவரும் பொறுப்புணர்ச்சி போன்றவற்றில், நாட்டிலிருந்து உண்மையில் பலதார மணம் மறைந்துவிட்டது என்று குறிப்பிட்டேன். பெண்மையிடம் வளர்ந்து வரும் விழிப்புணர்வு, எல்லாவற்றிற்கும் மேலாக, பல்வேறு விதமான சக்திகளின் பரஸ்பரச் செயல்பாடுகள் இவற்றில் அதி மிக முக்கியமானது பொருளாதாரம் போன்றவை ஒரே நேரத்தில் பல மனைவிமார்களை வைத்துச் சுகம் அனுபவிக்கும் ஆடம்பர வாழ்க்கையில் திளைப்பதைச் சாத்தியமற்றதாக்கி விட்டன. எனவே இதற்காக எந்தச் சட்டத்திற்கும் அவசியமில்லை என்று கூற விரும்புகிறேன். அது தானாகவே செத்தொழிந்து வருகிறது; அந்த பழக்கம் இப்போது

நடைமுறைப்படுத்தப்படுவதில்லை. சமுதாயத்தில் சில வட்டாரங்களில் அது இன்றும் நிலவுகிறது என்று வாதிக்கப்படலாம். இங்கு ஓர் எச்சரிக்கை விடுக்க விரும்புகிறேன். பலத்தைப் பயன்படுத்தி அல்லது கட்டாயத்தின் பேரில் அதை உங்களால் ஒழித்துவிட முடியாது. பொது மக்களின் கருத்தை உருவாக்க வேண்டும்; அப்பொழுது இந்தத் தீய வழக்கத்தின் தீங்குகளை இந்த துரதிர்ஷ்டச் சகோதரர்கள் உணர்ந்து அதைக் கைவிட்டுவிடுவார்கள். மாறாக, அவர்களின் தரத்தை உயர்த்தாமல், கல்வி மூலமும் பொது மக்களின் கருத்து மூலமும் விழிப்புணர்வை ஏற்படுத்தாமல், உங்களின் சட்டத்தை அவர்கள் மீது திணிக்கிறீர்கள் என்றால், அவர்கள் மீது அது எத்தகைய பாதிப்பையும் ஏற்படுத்தாது என்பதை உணரும்படி உங்களைக் கேட்டுக் கொள்கிறேன். எனது மதிப்பிற்குரிய சகோதரி கூறியதுபோல், இன்னொரு மனைவியை வைத்துக் கொள்ளலாகாது எனக் கட்டளையிடும் உருக்குச் சட்டத்தைக் கொண்டது உங்கள் சமுதாயம் என்ற சிலர் கூறுவார்கள். இதற்கு நெற்றியடி போல் பின்கண்ட பதில் வரும்: அப்படியானால் இதை அனுமதிக்கும் வேறு ஒரு மதத்தை நாங்கள் தழுவுவோம். எந்த சமூக இயல் வாதியும், சமூக சீர்திருத்த அக்கறையுள்ள எவரும் இதனைக் கவனத்தில் கொள்ள வேண்டும். பயம் முற்றிலும் ஆதாரமற்ற ஒன்றல்ல. எப்படியும், இந்துச் சட்டத்தைத் தொகுக்க நீங்கள் விரும்பினால், நீங்கள் செய்து முடித்திருக்க வேண்டியதெல்லாம், திருமணத்திற்கு அத்தியாவசியமானவற்றை அதாவது திருமணம் செய்து கொள்ள அதாவது திருமணம் செய்து கொள்ள விரும்பும் தம்பதியரிடையே தேவைப்படும் அவர்களது வயது, அவர்களது மன, உடல் நிலை, தடுக்கப்பட்டுள்ள ரத்த உறவு திருமணங்கள் போன்றவை வரையறுக்கப்பட வேண்டும். சமூகச் சடங்குகள், நிகழ்ச்சிகளில் நம்பிக்கை உள்ளவர்கள் சம்பிரதாய முறையான திருமணத்தைச் செய்து கொள்ளலாம். ஆனால் சிவில் திருமணத்திற்கும் புனித சடங்குமுறைத் திருமணத்திற்குமிடையே திருமணத்தின் அத்தியாவசியங்கள் மாறுபட அனுமதிக்கக் கூடாது. நாட்டில் கலப்புத் திருமணங்கள் அதிகரிக்க வேண்டுமென்ற ஒரு கோரிக்கை எழுந்தால் அதற்கு நான் குறுக்கே நிற்க மாட்டேன். தங்கள் சொந்தச் சாதிகளுக்கு வெளியே திருமணம் செய்து கொள்ள விரும்புகிறவர்கள், 1874-ம் ஆண்டு சிவில் திருமணச் சட்டத்தின் ஷரத்துகளைப் பயன்படுத்திக் கொள்ளலாம். தங்கள் சாதிகளுக்கு வெளியே திருமணம் செய்து கொள்ள அக்கறையுள்ளவர்களுக்கு குறுக்கே இப்பொழுது எதுவும் இல்லை. வேறுபட்ட சாதிகளைச் சார்ந்த இளைஞர்களுக்கும் இளம் பெண்களுக்குமிடையே உண்மையான பற்றுதல் இருந்தால், அவர்கள் திருமணம் செய்து கொள்வதை நிறுத்தவோ தடுக்கவோ நாங்கள் விரும்பவில்லை. இன்றைய சட்டத்தின் படியும் நான் முன்பு குறிப்பிட்ட சட்டத்தின்படியும் அவர்களுக்கு கதவுகள் திறந்திருக்கின்றன. அந்தச் சட்டத்தை நீங்கள்

மாற்றலாம். சில ஷரத்துக்களை நீக்கலாம் அல்லது திருத்தலாம். அதன் மூலம் அந்தச் சட்டத்தின்படி திருமணம் செய்து கொள்பவர் களின் குழந்தைகள் இன்று இருப்பது போல இந்திய மரபுரிமைச் சட்டத்திற்குப் பதிலாக இந்துச் சட்டத்தின் செயல்பாட்டிற்குட்படுவர். அதற்கு எனக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை; ஆனால், ஒரு இந்துச் சட்டத் தொகுப்பில், புனித சமயச் சடங்கு திருமணத்தை அடுத்து சிவில் திருமணத்தை ஏன் அனுமதிக்கிறீர்கள் என்பதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. அத்துடன் எந்த சம்பந்தமுமில்லாத இதைச்சட்டத் தொகுப்பிலிருந்து எடுத்துவிட வேண்டும். எல்லோருக்கும் ஒரு தனிச் சிவில் திருமணச் சட்டம் இருக்கலாம்.

ஐயா, எனது சொந்தக் கருத்து என்னவெனில், விவாகரத்து விஷயத்தையும் இதில் வைத்துக்கொள்ள வேண்டுமென்று நீங்கள் வலியுறுத்தினால், நாட்டில் எங்கும் இதற்கு எதிர்ப்பு எழுவதை நீங்கள் எதிர்நோக்க வேண்டிவரும். நம்மில் பொது வாழ்வில் உள்ள மனிதர் களில் மிகப் பெரும்பான்மையினர் போல் நாம் நமது காதுகளில் பஞ்சை வைத்து அடைத்துக் கொண்டால், அதற்காகக் கடுமையான விலையை நாம் கொடுக்க வேண்டியிருக்கும். எப்படியும் ஒரு இந்து என்ற முறையில், நடைமுறைக்கு முரணான விவாகரத்து என்ற கருத்தை இந்து திருமண அமைப்பிற்குள் கொண்டுவருவதை வன்மையாகக் கண்டிக்கிறேன்.

இப்பொழுது வாரிசுரிமைச் சொத்து விஷயத்திற்கு வருவோம். இதிலும் புதுமை புகுத்தப்பட்டு உள்ளது; இது விஷயத்தை நான் மிக விரிவாக எடுத்துக் கொள்ளப்போவதில்லை. ஆனால் அங்கும், பண்டைய இந்துச் சட்ட மூலவர்களின் தீர்ப்பில் நாங்கள் முழு நம்பிக்கை உள்ளவர்கள் என்று எனது மதிப்பிற்குரிய சகோதரி திருமதி துர்க்காபாய்க்குத் தெரிவிக்க விரும்புகிறேன். ஆண் - பெண் சமத்துவத்தில் நாங்கள் உறுதியான நம்பிக்கையுள்ளவர்கள்; ஆனால், சகோதரி துர்க்காபாயோ அல்லது அவரது நண்பர்களோ பேசும் அர்த்தத்தில் சமத்துவம் என்பது, வாய்ப்பு அளிப்பதில் சமத்துவம் என்று பொருள் கொள்ள வேண்டும். உடல் ரீதியில் ஆணையும் பெண்ணையும் ஒன்றாகக் கருத முடியாது. எனவே, சமத்துவம் என்பதற்கு வேறு ஒரு அர்த்தம் இருக்கவேண்டும். பெண்கள் தாழ்ந்தவர்கள் என்ற மனப்பான்மை எதுவும் இல்லை. மக்களின் கல்வி பற்றியும் அவர்கள் திருமணம் பற்றியும் பாகுபாடு எதுவும் இல்லை. நமது சாஸ்திரங்கள் பின்வருமாறு கூறுகின்றன:

"கன்யாப்யேவாம் பலானியா, ஷிக்ஷானியதிகதாந்த் தேயா போராயா விதுரஷா, தானா ரத்னா சமன்விதா."

இதன் பொருள், புதல்வர்களைப் போலவே புதல்விகளுக்கும் கல்வி அளிக்கப்பட வேண்டும்; உரிய வயது வந்ததும் விலையுயர்ந்த நகைகள் உள்ளிட்ட வரதட்சணையுடன் சரியான மணமகனுக்குத் திருமணம் செய்து வைக்கப்பட வேண்டும் என்று சமுதாயத்தில், இந்து சமுதாயத்தில் இவ்வாறுதான் ஆணை இடப்பட்டுள்ளது.

''யாத்ரா நர்யாஸ்து பூஜ்யாந்தே, ரமான்ந்தே தாத்ரா தேவதா.''

பெண்களுக்கு மரியாதை தரப்படும் இல்லங்களை கடவுள் ஆசிர்வதிக்கிறார் என்பது இதன் பொருள். இந்து சமுதாயத்தில் பெண்களுக்கு மிக உயர்வான, மதிப்புமிக்க இடம் அளிக்கப்பட்டுள்ளது. சில கடுமையான சட்ட திட்டங்களும் இருக்கலாம் என்பதை நான் மறுக்கவில்லை. எம்முறையில் பெண்கள் நடத்தப்பட வேண்டுமோ அம்முறையில் நடத்தப்படாத கடுமையான நிகழ்வுகளும் உள்ளன. உங்களுடைய முனிவர்களும், ஞானிகளும், சட்ட வல்லுநர்களும், உங்களுக்கு வகுத்துத் தந்த இலட்சியங்களை நிறைவேற்றத் தவறி விட்டால், அவர்களை நீங்கள் குறை கூற முடியாது; ஏனெனில் அவர்கள் உங்களை கைவிட்டுவிடவில்லை. குறை உங்களிடம்தான் உள்ளது. நடைமுறையில் மகாத்மா காந்தியின் லட்சியங்களுக்கு ஒப்ப நடந்து கொள்ள பல சந்தர்ப்பங்களில் தவறிவிடுகிறோம். ஆனால் அதே சமயம் எல்லாக் காலத்திலும் அவற்றை போதனை செய்கிறோம்; எல்லாவற்றிலும் அவர் பெயரைப் பயன்படுத்தகிறோம்; எனினும் அவரது அடிச்சுவடுகளை பின்பற்றத் தவறிவிடுகிறோம். இங்கு தவறு மகாத்மாஜியுடையதல்ல, தவறு நம்முடையது. அவ்வாறே, உங்களுடைய சாஸ்திரங்களையும் சட்டத்தை வகுத்தளித்தவர்களையும் நீங்கள் குறைகூற முடியாது. அவர்கள் மிக உயர்வான பிரமாணங்களை நிறுவியுள்ளனர். அவற்றிற்கேற்ப நீங்கள்தான் நடந்துகொள்ள வேண்டும். நமது தீவிர முயற்சிகள் இருந்தபோதிலும், எல்லா அநீதிகளையும் அல்லது கொடுமையையும் நாம் போக்கிவிட முடியாது. ஏனெனில் மனித நிறுவனங்கள் குறைவற்றவையாக இல்லை. எத்தகைய மனித விவேகமும் எந்த நடைமுறையையும் வகுக்க முடியாது; எந்தச் செயல்முறையின் மூலமும் அல்லது ஸ்தாபனத்தின் மூலமும் சமூக நீதியின் சாத்தியப்பாடுகளை முற்றிலுமாக அகற்றிவிட முடியாது. இந்த விஷயத்தை ஒளிவு மறைவின்றி அணுகுவோம்; அதை உணர்ந்து கொள்வோம்.

எனது மதிப்பிற்குரிய நண்பர் சொத்தை நிர்வகிப்பது குறித்து கூறினார். சொத்தை மிக நன்றாக நிர்வகிக்கும் பெண்களை தாம் அறிந்துள்ளதாகத் தெரிவித்தார்.

மாண்புமிகு திரு. என்.வி. காட்கில் *(பணிகள், சுரங்கங்கள் மற்றும் மின்சக்தி அமைச்சர்) : ஆண்களும் கூட.*

பண்டிட் லட்சுமி காந்த மைத்ரா : *அதேதான். ஆண்களும் கூட. திருமணமான ஓர் ஆண்கூட இந்த அவையில் இந்த கூற்றுக்கு மறுப்புத் தெரிவிப்பார் என்று நான் நினைக்கவில்லை. வீட்டில் அவள் தான் ஆட்சி செலுத்துகிறாள். அவள்தான் எல்லாமுமே. நம்மில் மிக அதிகம் உயர்வானவள். சட்ட அமைச்சரோ அல்லது அவரது சகாவோ இங்கு எவ்வளவுதான் கர்ஜனை செய்தாலும் - அங்கு பெண்மணிமுன் பணியவேண்டும். அங்கு நீங்கள் ஓர் இரும்புக் கம்பியால் ஆளப்பட வில்லை; ஆனால் ஒரு விசித்திரமான சாட்டையால், மிருதுவான இனிமையான அன்பு இழைகளால் பின்னப்பட்டு கயிற்றால் ஆளப்படுகிறீர்கள்; அது எல்லாக் கடுமையையும் முரட்டுத்தனத்தை யும் அகற்றிவிடுகிறது. ஆண்கள் உற்சாகத்துடன் அவளின் ஆட்சிக்கு கட்டுப்படுகிறார்கள். வீட்டின் ராணி அவள். திருமணமான பலர், ஏன் திருமணமான மிகப் பெரும்பான்மையோர், இதை தயக்கமின்றி ஒப்புக்கொள்வர் என நினைக்கிறேன்.*

திரு. எல். கிருஷ்ணசாமி பாரதி: *இவ்வாறுதான் நாம் அவர்களை ஏமாற்றியுள்ளோம்.*

பண்டிட் லட்சுமி காந்த மைத்ரா : *இந்தச் சட்டத் தொகுப் பின் மூலம் இப்பொழுது நாம் அவர்களை ஏமாற்றப்போகிறோம். சொத்தின் மீது அவர்களுக்கு உரிமை அளிப்பதன் மூலம் மட்டுமே அவர்களுக்கு மிகச் சிறந்த நீதி அளிக்கப்படும் என்று நீங்கள் கருதுகிறீர்களா? திரு. தலைவரே, இந்து கருத்துக்களின்படி, ஒரு பெண் ஒரு சிறப்பான நிலையை, ஆணுடையதிலிருந்து முற்றிலும் மாறுபட்டதொரு நிலையைப் பெறுகிறாள். சமஸ்கிருத நூல்களைப் படித்த அல்லது அதைப் பற்றி அறிந்துள்ள மதிப்பிற்குரிய உறுப் பினர் எவராவது இந்த உண்மையை மறுக்க முடியுமா?*

மதிப்பிற்குரிய ஓர் உறுப்பினர் : *சட்ட அமைச்சர் அதை அறிவார்.*

பண்டிட் லட்சுமிகாந்த மைத்ரா: *அவர் அதை அறிந் திருக்கலாம்; அவர் ஒரு கற்றறிவாளர். நல்லது. இறவாப் புகழ்பெற்ற நமது கவிஞர் காளிதாசரின் சகுந்தலையை எடுத்துக் கொள்ளுங்கள். அந்தக் காவியத்தில் சகுந்தலையின் திருமணத்திற்குப் பின், தனது*

கணவரின் ஊருக்கு அவள் கிளம்புகிறாள்; அங்கு ஒரு சுலோகம் வருகிறது; அந்த சுலோகம் பண்டைப் பெருமை உடையது; இந்து சட்டத்தை அளித்த மூலவர்களும் இந்து சமுதாயமும் தமது பெண்ணியத்தை எவ்வாறு கண்டனர் என்பதை அது உங்களுக்கு அளிக்கிறது. சகுந்தலை தனது கணவர் இடத்திற்கு ஆசிரமத்தை விட்டுச் சென்றதும் கன்வ முனிவர் கூறினார்: ''நான் இன்று பெரும் பொறுப்பிலிருந்து விடுபட்டதாக உணர்கிறேன்''.

''ஆர்த்தோ ஹி கான்யா பராக்கியா ஏவ டாம் ஆத்ய சாம்ப்ரஷ்ய ப்ரதிக்ராஹிதா. ஜதி மமயாங் பிஷாதா ப்ராகாமம் ப்ரத்யார்பித் நியாசா இவன்தாராட்மா.''

''இந்த எனது இதயம், எனது உள்ள உணர்வு ஒரு பெரும் சுமையிலிருந்து விடுபட்டுள்ளது; அந்த சுமை இறங்கியதன் மகிழ்ச்சியைப் பெறுகிறேன்.'' அந்த சுமை எது? குடும்பத்தில் ஒரு மகள் மற்றொருவருடைய பணத்தை நம்பிக்கையுடன் சேமிப்புத் தொகையாக வைத்திருப்பது போன்றவள்; அந்த நம்பிக்கைத் தொகை அல்லது சேமிப்பு அதன் உரிமையுள்ள சொந்தக்காரரிடம் சேர்க்கப்பட்டதும், பெரும் சுமையிலிருந்து விடுபட்ட உணர்வை ஒருவர் பெறுகிறார். இதே போன்றுதான் சகுந்தலையை அவளது கணவரிடம் சேர்ப்பித்த உணர்வை இன்று நான் பெறுகிறேன் (குறுக்கீடு). காலவரையறைச் சட்டம் அமலில் உள்ள இன்றைய நாட்களைப்பற்றி நான் பேசவில்லை, அத்தகைய சட்டம் நடைமுறையில் இல்லாத நாட்களைப் பற்றியே பேசிக்கொண்டிருக்கிறேன். ''நியாஸா'' என்றால் ஒரு வைப்புத் தொகை அல்லது அடைக்கலப் பொருள் என்று பொருள். மதிப்பிற்குரிய என் நண்பர் டாக்டர் காமத் மேலும் விவரங்களை அறிய விரும்பினால், அதை அவைக்கு வெளியே அவருக்குத் தெரிவித்து முற்றிலுமாகச் சம்மதிக்கிறேன்.

திரு. எச்.வி. காமத் : ஆனால் நான் ஒரு மருத்துவரல்லவே?

பண்டிட் லட்சுமி காந்த மைத்ரா: ஒரு மருத்துவரை விட மேலானவர்; நீங்கள் மருத்துவர், தத்துவ மேதை, வழக்கறிஞர் மற்றும் சட்டமன்ற உறுப்பினர். உங்கள் பால் எனக்கு உயர்ந்த மதிப்புண்டு. தாங்கள் இனிமையானவர்: எல்லாவற்றுக்கும் மேலாக ஒரு சிறந்த தேசபக்தர்.

ஐயா, இளம் பெண்களைப் பற்றிய கண்ணோட்டம் அது. இந்து மதச் சட்டத்தை உருவாக்கியவர்கள் குடும்பத்தில் மகனுக்கு சமமான சொத்து உரிமையை அவர்களுக்கு கொடுக்கவில்லை எனில், அது வெறுப்பினாலல்ல, பிடிக்காததாலும் அல்ல; இளம் பெண் அவளுடைய கணவனுடைய குடும்பத்திற்கு உரியவள்; அவள்தான் பிறந்த

குடும்பத்தின் ஓர் அங்கமாக இனி இருக்கப் போவதில்லை. இதுதான் நிலைமை, எனவே, இது அநீதியோ அல்லது சமத்துவமின்மையோ அல்ல. (நமது) நாட்டின் எந்த ஒரு பாகத்திலும் தந்தையின் சொத்திலிருந்து ஒரு மகள் மகனுக்கு இணையாக பங்கு பெறுவதற்கு வகை செய்யும் இந்துச் சட்ட முறை நிலவுகிறதா என்பதை நான் அறிந்திருக்கவில்லை.

திரு. பி.ஐ. சோந்தி : (கிழக்கு பஞ்சாப் : பொது) : அப்படியானால் விமானத்தில் செல்லுங்கள்.

பண்டிட் லட்சுமிகாந்த மைத்ரா : விமானத்தில் போக துவங்கிவிட்டேன். அது முற்றிலும் உண்மை. ஆனால் அங்கும் நிலைமை உகந்ததாக இல்லை. நான் வேடிக்கையாகப் பேசவில்லை. நாடு நம்மைப் பற்றி அதிருப்தி கொண்டுள்ளதாக உணர்கிறேன்; நம்மைபற்றி ஏமாற்றம் அடைந்துள்ளது; சாமானிய மனிதனுக்கு உண்மையில் நாம் எதுவும் செய்ய தவறியதுதான் இதற்குக் காரணம். இதுவரை காஷ்மீர் பிரச்சினை இருந்துவந்தது. அத்தியாவசியப் பொருட்களின் விலைப் பிரச்சினை உள்ளது. துரதிர்ஷ்வசமாக தபால் கார்டு மற்றும் துணியின் விலையை உயர்த்தி நேற்று நாம் ஒரு 'புத்திசாலித்தனமான' காரியத்தை செய்தோம்.

திரு. தலைவர் : மதிப்பிற்குரிய உறுப்பினர் மசோதா பற்றிப் பேசுவதோடு நிறுத்திக் கொள்ளட்டும்.

பண்டிட் லட்சுமிகாந்த மைத்ரா: பொருட்களின் விலை உயர்வு, தொழிலாளர் வேலை நிறுத்தங்கள், கம்யூனிஸ்டு அபாயம், அகதிகள் பிரச்சினை முதலியவை நமது அரசாங்கத்தால் சமாளிக்க முடியாத அளவு உள்ளன என்றுதான் கூறுவேன். சமூக சீர்திருத்தச் சட்டத்தைப் படாடோபமாக விவாதிப்பதற்கு, அதுவும் மிக அதிகம் கருத்து வேறுபாடு கொண்ட மசோதாவைக் கொண்டுவருவதற்கு இதுதான் சமயமா? கடுமையான மனக் கசப்பை இது நிச்சயம் தோற்றுவிக்கும். இது ஏற்கனவே அதிகமான கசப்புணர்ச்சியுடன் கூடிய வாக்குவாதத்தை ஏற்படுத்தியுள்ளது. மதிப்பிற்குரிய உறுப்பினர்களுக்கு கடிதங்கள் வந்து குவிகின்றன என நம்புகிறேன் (குறுக்கீடு); இந்து எதிர்ப்புக் குழு கல்கத்தா மற்றும் இம்மாதிரியான இதர பல அமைப்புகளிலிருந்தும் கடிதங்கள் வந்துள்ளன. புனாவிலுள்ள பெண்கள் அமைப்பிலிருந்து கண்டனங்கள் எனக்கு வந்துள்ளன. வங்காளத்திலுள்ள பெண்கள் அமைப்பிலிருந்தும் கண்டனங்கள் வந்துள்ளன;

அதன் உறுப்பினர்கள் நாட்டின் மிக உயர் நிலையிலுள்ள மேற்குடியைச் சேர்ந்தவர்கள்: இதற்கு எதிராக ஆட்சேபம் தெரிவிக்காத வழக்கறிஞர் சங்கங்களை நான் அறியேன். இந்த மசோதா சம்பந்தமாக இதுவரை வினியோகிக்கப்பட்ட விவரணங்கள் என்னிடம் உள்ளன. அவற்றை நான் வகைப்படுத்தியுள்ளேன். இந்த சட்டத் தொகுப்புக்கு எதிரான கருத்துக்கள் மிக அதிகம் உள்ளன. நமது பிரதம மந்திரியின் வேண்டுகோளின்படி நாம் ஒன்றுபட வேண்டும் என்ற நிலையில் நாட்டின் பிரச்சினைகளைத் தீர்க்க நமது சிந்தனைகளை ஒருமுகப்படுத்தி, நல்லிணக்கமும் உடன்பாடும் ஏற்படுத்த நமது நேரத்தையும் சக்தியையும் செலவிட வேண்டிய நிலையில், சீர்குலைவுக்கும் ஒற்றுமை இன்மைக்கும், மன வருத்தத்துக்கும், அதிருப்திக்கும் வழிவகுப்பதற்கு நாம் இடம் தரலாகாது. இப்போதைக்கு இந்த மசோதாவை அமல் நடத்துவதைத் தள்ளிப்போட்டால் எதையும் நாம் இழக்கப்போவதில்லை எனக் கருதுகிறேன். இவ்வாறு செய்யவில்லை என்றால் இந்த மசோதாவை ஒவ்வொரு கட்டத்திலும் நான் வன்மையாக எதிர்ப்பேன். இதை ஏன் எதிர்க்கிறேனெனில், இது முற்றிலுமாக தேவையற்ற நடவடிக்கை என்று கருதுகிறேன். மேலும் இம்மாதிரியான சட்டம் கொண்டுவர வேண்டும் என்று நாட்டில் கோரிக்கை எதுவுமில்லை. எல்லாச் சமூகச் சட்டங்கள் விஷயத்திலும் நாம் அவசரம் காட்டாது நிதானமாக நடந்து கொள்ள வேண்டும்; மேலும் சட்டமியற்றுவதன் மூலம் மட்டுமே பெரிய அளவிலான சமூக சீர்திருத்தத்தை நாம் கொண்டுவரமுடியாது. சமுதாயத்திற்குள்ளே ஏற்படுத்தப்படும் பொதுமக்களின் கருத்து பலத்திலிருந்துதான் சீர்திருத்தங்கள் வரவேண்டும். மூன்றாவதாக, இந்த மசோதா மிகவும் ஒழுங்கற்ற முறையில் இந்த அவையில் நிறைவேற்றப்படுவதை நான் விரும்பவில்லை. காரணம் இந்த சட்டப் பேரவை அமைக்கப்பட்டுள்ளபடி, இந்த மசோதாவை இங்கு விவாதித்து நிறைவேற்ற தார்மீக ரீதியில் நான் தகுதி பெற்றிருக்கவில்லை என்று கருதுகிறேன். இந்த மசோதாவை நான் எதிர்ப்பதற்கு மற்றுமொரு காரணம் திருமணம் பற்றிய கருத்தில் மரபுரிமை, வழிவழிச் சொத்து உள்ளிட்ட இந்துச் சட்ட அமைப்பு முறையில் தீவிரமான மாற்றங்களை அது புகுத்துகிறது. தவிரவும், சிவில் திருமணப் பதிவுப் புத்தகம், புனிதச் சடங்குத் திருமணப் பதிவுப் புத்தகம், திருமண அறிவிப்புப் பதிவுப் புத்தகம், திருமணங்களின் தலைமை இயக்குநர், திருமணங்களின் பிரதமப் பதிவாளர், திருமணங்களுக்கான அமைச்சரகம் போன்ற முடிவற்ற, தேவையற்ற சிக்கல்களை இது ஏற்படுத்தும். நான் எதிர்ப்பதற்கு மற்றுமொரு காரணம் நமது குடும்பங்களில் கசப்புணர்வையும், ஒற்றுமையின்மையையும், தகராறுகளையும் தோற்றுவிக்கும்; இவை

சமுதாயத்தின் சிதைவுக்கு இட்டுச் செல்லும். இதை நான் எதிர்ப்பதற்கு மேலுமொரு காரணம்,இது ஜனநாயகத் தன்மையற்றது; ஏனெனில், நாட்டில் மிகப் பெரும்பான்மைக் கருத்து இதற்கு எதிராக உள்ளது. இவற்றின் காரணமாக, எனது முழு பலத்தையும் கொண்டு இந்த மசோதாவை எதிர்ப்பது எனது தார்மீகக் கடமை என்று கருதுகிறேன்.

இந்த சில வார்த்தைகளோடு - ஆம், இந்த சட்டத்தின் பூதாகாரத் தன்மையோடு ஒப்பிடும்போது இவை ஒரு சில வார்த்தைகளே; - இன்னும் சொல்லப்போனால் இதிலடங்கியுள்ள பிரச்சினைகளின் ஆழமான தன்மையுடனும், அது எழுப்பியுள்ள எதிர்ப்புடனும், சமுதாயத்தில் அது எத்தகைய விபரீத விளைவுகளை ஏற்படுத்தும் என்பதுடனும் ஒப்பிடும்போது இவை ஒரு சில வார்த்தைகளே - என் பேச்சை முடித்துக் கொள்ளலாம் என்று நினைக்கிறேன். இந்த சட்டமியற்றலால் ஏற்படும் அபாயத்திலிருந்து சமுதாயத்தை உண்மையில் பாதுகாக்க விரும்பும் எவரும் தங்கள் குரலை எழுப்பாமலும் ஆழமாக விவாதிக்காமலும் இருக்க முடியாது, விஷயம் முழுவதுமாக, நடுநிலை உணர்வுடன் பரிசீலிக்க அவர் நேரத்தை ஒதுக்க வேண்டும். சட்டமன்ற உறுப்பினர்கள் நம்மை தவறான வழியில் இட்டு செல்லாதிருக்கவும் சமுதாயம் சரிவுப் பாதையில், நாசத்தை நோக்கிப் போகாமல் இருக்கவும் அவர்களுக்கு அவர் எச்சரிக்கை செய்ய வேண்டும்.

***மாண்புமிகு திரு. என்.வி. காட்கில்:** இந்த மசோதா மீதான விவாதத்தில் பங்கு கொள்ளுமாறு நான் ஒரு வகையில் தூண்டி விடப்பட்டுள்ளேன் என்றுதான் சொல்ல வேண்டும். இந்த மசோதா சந்தேகமின்றி புரட்சிகரமானதுதான். இந்த அவையில் பத்து ஆண்டுகளுக்கும் மேலாக எவருடன் சேர்ந்து பணியாற்றும் கௌரவம் பெற்றுள்ளேனோ அந்த மதிப்பிற்குரிய என் நண்பரின் உரையை மிக அதிக மரியாதையுடன் செவிமடுத்துக் கேட்டேன். அவரை ஏதேனும் பெரிதும் வேறுபடுத்திக் காட்டுகிறதென்றால், அது அவருடைய மெய்யார்வம்தான்; அதற்கு இணையானது அவரது மிகச் சிறந்த சொல் வன்மை. சமூக சீர்திருத்த விஷயங்களில் ஒருவர் நிதானத்துடன் செல்ல வேண்டுமென்பதில் நான் அவருடன் முற்றிலுமாக உடன்படுகிறேன். அது பற்றி எனக்குக் கிஞ்சித்தும் ஐயமில்லை. ஆனால் இந்த மசோதா மெதுவாக நகர்கிறது. இதனால், இது மிக முன்பாகவே

★ அ.நி.வி (சட்டப்பேரவை விவாதங்கள், தொகுதி II, பாகம் II, 1949 மார்ச் 1, பக்கங்கள் 1015 - 20.

நிறைவேற்றப்படவில்லையே என்று எங்களில் சிலர் புகார் செய்தோம். எனக்குத் தெரிந்தவரை, இந்த மசோதாவின் பிரதான ஷரத்துக்கள் இந்த அவையின் முன்னால் அல்லது இதற்கு முந்திய அவையின் முன்னால், வழக்கறிஞர்கள் சங்க உறுப்பினர்கள் உட்பட நாட்டின் முன்னால் எட்டு ஆண்டுகளுக்கும் மேலாக இருந்து வந்திருக்கின்றன. எனவே, இந்த மசோதா இந்த அவையின் அல்லது நாட்டின் முன்னால் திடீரென்று கொண்டுவரப்பட்டிருப்பதாகக் கற்பனை செய்துகூடப் பார்க்க முடியாது.

1945-ல் என்று நினைக்கிறேன்; பொதுத் தேர்தல்களின் போது, சில பிரிவினர் என்னைக் கடுமையாக எதிர்த்தனர்; காரணம் சமூக சீர்திருத்தத்தை நான் பலமாக ஆதரித்தேன்; இந்துச் சட்டம் தொகுக்கப் பட வேண்டும் என்ற நிலையை மேற்கொண்டேன். அந்தத் தேர்தலில் நான் தேர்ந்தெடுக்கப்பட்டேன் என்பதும், நான் உங்கள் முன்னால் தற்போது நிற்கிறேன் என்பதும் நான் எனது தொகுதியின் கருத்துக் களைப் பிரதிபலிக்கிறேன் என்பதற்கு எடுத்துக்காட்டாகும்.

இத்தன்மைவாய்ந்த ஒரு சட்ட மசோதாவை நிறைவேற்ற இந்த அவை தகுதி வாய்ந்ததல்ல என்று எனது மதிப்பிற்குரிய நண்பர் பண்டிட் மைத்ரா ஒரு வாதத்தை முன்வைத்தார். கடந்த பதினைந்து ஆண்டுகளாக இந்த ஆட்சேபத்தை நான் அடிக்கடி கேட்டிருக்கிறேன் என்று நினைக்கிறேன். ஒரு சமூக சீர்திருத்த மசோதா அவை முன் கொண்டுவரப்படும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் இதே ஆட்சேபனை கிளப்பப்பட்டு வந்திருக்கிறது. முடிவு என்ன என்பது எல்லோரும் அறிந்ததே. சுதந்திர இந்தியாவுக்கு அரசியல் சாசனத்தை இயற்ற இந்த அவை தகுதி பெற்றது என்றால், இந்த மசோதாவை நிறைவேற்ற இது எவ்விதம் தகுதிவாய்ந்ததல்ல என்பதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. ஒரு தனிப்பட்ட வேண்டுகோளுடன் தனது வாதத்தைப் பலப்படுத்த, மதிப்பிற்குரிய எனது நண்பர் பண்டிட் மைத்ரா, மாண்புமிகு டாக்டர் ராஜேந்திரப் பிரசாத்தின் கருத்துகளை மேற்கோள் காட்டினார். நான் மட்டுமல்ல இந்த அவையில் உள்ள ஒவ்வொருவரும் எல்லா வித மரியாதையையும் மாண்புமிகு டாக்டர் ராஜேந்திரப் பிரசாத்திடம் வைத்துள்ளோம். எனினும் இந்த அவையின் ஒவ்வொரு உறுப்பினரும் தமது மனச் சாட்சிக்கும், தமது தொகுதிக் கும் எல்லாவற்றிற்கும் மேலாக, இந்த மகத்தான நாட்டிற்கும் கடமைப் பட்டிருக்கிறார்; அது அவர் சட்டப்பேரவை உறுப்பினர் என்பதில் மட்டுமல்ல, இந்து சமுதாயத்தின் புனரமைப்பை நம் கண்முன் நிறுத்து பவர் என்ற முறையிலும், அவர் கடமைப்பட்டிருக்கிறார் என்பதை

மறந்துவிடக் கூடாது. அத்தகையவர் மற்றொருவரின் தனிப்பட்ட கருத்துக்களை பரிசீலனைக்கு எடுத்துக் கொள்வாராயின் அவர் தமது கடமையிலிருந்து தவறுபவராகிறார். இதை நான் கூறும்போது, எந்த மரியாதைக் குறைவான உணர்வோடும் கூறவில்லை. ஏனெனில் எந்த ஒரு தனி நபர் மீதுள்ள மரியாதையையும்விட எனது கடமை உயர்ந்தது என நான் எண்ணுகிறேன்.

முக்கிய விஷயம் என்னவெனில், இந்துச் சட்டத்தை தொகுப்ப தற்கு நேரம் வரவில்லையா? திருமணம், தத்து எடுத்தல், மரபு உரிமை மற்றும் இந்து சட்டம் என்று பொதுவாக அறிந்தவற்றோடு சேர்ந்த எல்லா மற்ற விஷயங்களின் அமைப்பு முறையில் மாற்றங்கள் கொண்டுவருவதற்கு நேரம் வரவில்லையா? இந்துச் சட்டத்தின் தோற்றுவாய்கள் பற்பல. இதுபற்றி விரிவாக கூற நான் விரும்ப' வில்லை; மேலும் இந்த அவையின் நேரத்தை அதிகம் எடுத்துக் கொள்ள நான் விரும்பவில்லை. சட்டத்தை வியாக்கியானம் செய் வதில் ஒரு சீரான தன்மை, சில வரையறைகள் இருக்க வேண்டும் என்பது தெளிவு. சட்டம் தெளிவாக இல்லையெனில், சட்டம் ஒரு சீரான தன்மை கொண்டிருக்கவில்லையெனில் சமுதாயத்தின் ஸ்திரத்தன்மை பாதிக்கப்படும். ஒரு குறிப்பிட்ட வாசகத்துக்கு அரை டஜன் உயர்நீதிமன்றங்களின் மாறுபட்ட விளக்கங்கள் நம்மிடம் இருந்தால், இதற்கெல்லாம் முடிவு கட்டுவதற்கு நேரம் வந்துவிட்டது என்று நினைக்கிறேன்.

மேலும், இந்து சமுதாயத்தை ஒழித்துக்கட்ட நாங்கள் முயன்று கொண்டிருக்கிறோம் என்று மதிப்பிற்குரிய எனது நண்பர் குறிப் பிட்டார். எனது உணர்வு என்னவெனில், இந்து சமுதாயத்தோடு நெருக்கமான தொடர்பு உடைய 290 நபர்கள் இங்கு இருக்கிறோம். இங்கு நாம் ஒன்றாகச் சேர்ந்து, நமது கருத்துக்களை வெளியிட்டு, சிறிதளவேனும் உடன்பாட்டிற்கும் இசைவுக்கும் வந்து, இந்து சமுதாயம் மேற்கொண்டு முன்னேறும் வகையில் ஒரு சட்டத்தை இயற்றலாம். மனு, பராசரர், யாக்ஞவல்கியர் ஆகியோர் **ஸ்மிருதி** களை எழுதியபோது, அவர்களுக்கு இந்த அனுகூலம், அதாவது எந்தச் சட்டப் பேரவையும் இருக்கவில்லை. அவர்கள் சிறந்த மனிதர்கள் என்பதில் ஐயமில்லை. சிறந்த மனிதர்களின் இனம் அவர்களுடன் முடிந்துவிடவில்லை. எனக்கு இடது பக்கத்தில் மிகுந்த சிறப்பும் புலமையும் பண்பும் நிறைந்தவரைக் காண்கிறேன்; சில பழைய ரிஷிகளோடு சட்ட மூலவர்களோடு அவரை நான் ஒப்பிடுவது தவறாக இருக்காது. இன்று, அவருடைய சொந்த ஞானம் மற்றும் கல்வி அறிவுடன்

கூட, 290 நபர்களின் ஒத்துழைப்பை அவர் கோருவாராயின், அவர் கரங்கள் பலப்படுத்தப்படும் என்றும், அவரது வேண்டுகோள் நமக்கு ஏற்புடையதாக இருக்கும் என்றும் நினைக்கிறேன்.

அப்படி என்னதான் இருக்கிறது இந்தச் சட்டத் தொகுப்பில்? மரபுரிமைப் பிரச்சினையைத் தவிர நாம் அடிக்கடி கேள்விப்படாத, சாராம்சத்தில் நாம் ஏற்றுக்கொள்ளாத எதுவும் இதில் இல்லை. என் பார்வையில், கருத்து மாறுபாடு கொண்ட இரு முக்கிய விஷயங்கள் இருக்கின்றன. ஒன்று திருமணம்; மற்றது கூட்டு உரிமையை இந்து சட்டத்திலிருந்து எடுத்துவிடுவது. திருமணத்தைப் பொறுத்தவரை இதில் புரட்சிகரமானது எதுவுமில்லை. ஒவ்வொன்றும் மேலும் மேலும் அரசுக் கட்டுப்பாட்டை நோக்கிச் சென்றுகொண்டிருக்கும் இந்தக் காலத்தில், தேசிய மயமாக்குதல் பற்றி நாம் பேசிக் கொண்டிருக்கும்போது, தனி நபர் அதிகார எல்லைக்குட்பட்ட ஒன்றே ஒன்று திருமணம்.

***திரு. நாசிருத்தீன் அகமது:** அதுவும் தேசியமயமாக்கப்படும்.*

***மாண்புமிகு திரு. என்.வி. காட்கில்:** இப்போது இந்த மசோதாவில் ஒரு நடுநிலையான பாதை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேற்கு நாடுகளிலிருந்து வரும் ஒரு நாகரிக மனிதன் நமது பிற்பட்ட நிலையைக் கண்டு எள்ளி நகையாடும் வகையில் இந்த அரங்கில் நுழைவதும் வெளியேறுவதும் கட்டுப்பாட்டிற்கு உட்படுத்தப்படுகின்றன. திருமணம் என்பது தம்பதியர் இருவருக்கும் மிக உயர்வான இன்பம் பெற்றுத் தருவதற்கான விஷயம் என்றால் விவாகரத்திற்கான காரணங்களில் ஒன்று உளப்பாங்கின் ஒத்திசையாமையாக இருக்க வேண்டும். இந்த விஷயத்தை நீங்கள் கவனத்தில் எடுத்துக் கொண்டிருக்கிறீர்களா? மசோதாவில் உள்ள விவாகரத்திற்கான காரணங்கள் மிகக் குறுகலானவை. உண்மையில் நான் கூறுகிறேன்: இது மிக மிதமான நடவடிக்கை. ஒரு பைத்தியத்துடனோ, ஒரு தொழு நோயாளியோடோ, ஒரு மனைவி வாழ வேண்டுமென்று நீங்கள் எதிர் பார்க்க மாட்டீர்கள்; **ஸ்மிருதி**களில் உள்ள வகையுரைகளுக்கு மாறாக உள்ள எதுவும் இந்த மசோதாவில் இல்லை. இந்து சமுதாயம் மற்றும் பண்பாட்டின் மேன்மைக்கு பொருந்தாத எதுவும் இதில் இல்லை. நம்மில் மிகப் பெரும்பாலோர் **ஸ்மிருதி**யை அறிவோம். அந்த **ஸ்மிருதி** கூறுகிறது:*

नष्टे मृते प्रव्रजित, क्लीबेच पतिते पतो। पतिः अन्यत् तु नारीणाम् विधीयते।

*இந்த **ஸ்மிருதி**யின் மூல வாசகத்திலுள்ள காரணங்கள் இவை. அதற்கு உகந்தாற்போலுள்ள ஏதாவது இன்று இந்து சமுதாயத்தில்*

இல்லை எனில், நாம் தேங்கி நின்றுவிட்டதும் முன்னேற்றத்திற்கான இயக்க ஆற்றல் கொண்ட எல்லாத் தூண்டுதல்களுக்கும் செயல்படாமல் நின்றுவிட்டதுமே இதற்குக் காரணம். இந்து சமுதாயத்தில் யார், எந்த அளவுக்குப் பாதிக்கப்படப் போகிறார்கள்? எனது மாகாணத்தைப் பற்றி பேசுவதானால், 95 சதவிகிதத்தினர் ஏதாவது ஒரு விவாகரத்து முறையைக் கொண்டுள்ளனர் - அது சட்ட ரீதியான விஷயமாக இல்லாமல், வழக்கம் சம்பந்தமானதாக உள்ளது. மக்கள் தொகையில் இரண்டு அல்லது மூன்று சதவிகிதத்தினரே, மேல் வர்க்கங்களைச் சேர்ந்தவர்களே, இதை எதிர்க்கிறார்கள். நியாயமான பார்வையில் நோக்கினால், கல்வி கற்ற பகுதி முற்றிலுமாக இதற்கு ஆதரவாக உள்ளது.

ஒரு புறத்தில், விவாகரத்து மிக மலிவானதாக ஆக்கப்படக் கூடாது என்பதை ஒப்புக்கொள்கிறேன். உளப்பாங்கின் ஒத்திசையாமை ஒரு காரணமாக இருக்கக்கூடாது. நடைமுறையில் அவ்வாறு வருமானால், திருமணத்தை ஓர் ஆயுள் தண்டனையாகக் கருதக் கூடாது. எப்படியாயினும் திருமணம் ஒரு தனித்தன்மை பெற்றிருந்தாலும், அதற்கு ஒரு சமூக அம்சமும் உள்ளது. தம்பதியர் இருவரும் உடன்பாடு கொள்ளவில்லையெனில், பின்பு சச்சரவும், கசப்புணர்வும், ஒத்திசைவின்மையும் குடும்ப வட்டத்திற்குள் மட்டும் இருப்பதில்லை. அதற்கு பரந்த பயன்பாடும் பாதிப்பும் இருக்கும்; சமுதாயமும் சுற்றியுள்ள சுற்றச்சார்பும் பாதிக்கப்படுகின்றன. தாம் நிறைவேற்ற விரும்பும் எந்தச் சட்டமும் அது கருதுகிற பலன்களை பெற்றுத்தரும் திறமை பெற்றிருக்க வேண்டுமென்பது எந்தச் சட்ட மூலவரின் விருப்பம் எனில், இதுகாறும் இருந்த சட்டம் நாம் எதிர்பார்த்த பலன்களை உண்மையில் அளித்தள்ளதா என்பதை நாம் முடிவு செய்ய வேண்டும்.இது நம்மை நாமே உள் சோதனை செய்துகொள்வதாகும். மணவாழ்வில் உண்மையில் மகிழ்ச்சியாக இல்லாதவர்களை அதிலிருந்து வெளிவர ஒரு வழியை நாம் இப்பொழுது ஏற்படுத்துகிறோமெனில், நாம் நமது சமுதாயக் கடமையையே ஆற்றுகிறோம் என்று நினைக்கிறேன்.

திருமணத்தைப் பொறுத்தவரை, வேறுபட்ட சாதிகளைச் சேர்ந்த நபர்களிடையேயான திருமணங்களை நாம் எப்படி ஆட்சேபிக்க முடியும் என்பதை என்னால் சிந்திக்க முடியவில்லை. 1949-ம் ஆண்டில் இங்கு ஒரு நபர் எழுந்து நின்று, வேறுபட்ட சாதிகளைச் சேர்ந்த நபர்களிடையேயான திருமணங்களைச் சட்டரீதியாக ஆக்கக் கூடாது என்று கூறுவார் எனில், அது நமது முற்போக்குக் கண்ணோட்

டத்துக்கு விளைவிக்கும் களங்கமாகும். சுதந்திர இந்தியாவில், ஒரே ஒரு சாதிதான் அதாவது சுதந்திர மனிதர்களின் சாதிதான் உள்ளது என நினைக்கிறேன்; ஒரே ஒரு மதம், மனித நேய மதம்தான் இருக்கிறது. (திரு. **எச்.வி. காமத்** : 'மற்றும் சுதந்திரமான பெண்கள்'). இந்த சீர்திருத்தம் இந்த நாட்டின் முன் நீண்ட காலமாக உள்ளது; இதன் பொருள் இந்து சமுதாயத்தின் சிதைவு என்று கருதுகிறவர்கள் முன்னேற்றத்தின் எதிரிகளேயாவர். என் அபிப்பிராயத்தில், அத்தகைய ஓர் இந்து சமுதாயம் கலைக்கப்பட வேண்டிய சமுதாயமேயாகும். ஒரு மனிதன் ஒரு குறிப்பிட்ட சாதியில் பிறந்தால் அவனைத் தீண்டத்தகாதவன் என்று எப்படி அழைக்க முடியும்? ஒரு துடைப்பத்துடன் பிறந்த ஒரு பையனை நான் ஒருபோதும் கண்டதில்லை. ஒரு பிராமண குடும்பத்தில் ஒரு **யக்னோபவிதாவுடன்** பிறந்த ஒரு பையனை நான் என்றும் கண்டதில்லை; அல்லது ஒரு மார்வாரி குடும்பத்தில் **தரஜா** வுடன் பிறந்த ஒரு பையனை நான் எக்காலத்திலும் கண்டதில்லை.

जन्मना जायते शूद्रः। संस्कारात द्विजोच्चते विद्यया याति विप्रत्वं त्रोभिः श्रीतयोच्चतो चवे।

எல்லோரும் சூத்திரர்களாகத்தான் பிறக்கிறோம். பின், ஒரு மனிதன், கல்விகற்கும் மற்றும் இதர பல சாதனைகள் புரியும் பல்வேறு கட்டங்களையும் கடந்து உயர்ந்த நிலையை அடைகிறான்; அவன் **ஸ்ரேஷ்ட்ரியா** ஆகிறான். இந்து மதத்தின் உண்மையான ஆன்மா இங்குதான் உள்ளது; இங்கும் வெளியிலும் உள்ள நமது பழைய சனாதனிகள் நிரூபிக்க விரும்பும் ஆன்மா அல்ல. இந்த மகத்தான நாட்டின் லட்சியம், அடிக்கடி கூறப்படுவதுபோல, வர்க்கபேதமற்ற சமுதாயத்தை அமைப்பது என்றால், ஒரு சரியான அமைப்பை, சமூக - அரசியல் ரீதியான அமைப்பை உருவாக்கி விரிவுபடுத்த நாம் பாடுபட வேண்டும். எனவே, திருமணம் சம்பந்தமாக இந்தச் சட்டத் தொகுப்பில் அளிக்கப்பட்டுள்ள பரிந்துரைகள் மிகமிக அவசியமென்று கருதுகிறேன்; ஆனால் அவை போதுமானவை அல்ல. ஆனால் சமுதாயவிஷயங்களில் நாம் நிதானமாகவே இருக்க வேண்டும் என்பதில் என் மதிப்பிற்குரிய நண்பர் பண்டிட் மைத்ராவுடன் நான் உடன்படுவதால், இப்போதைக்கு இந்த நிலையை ஏற்றுக்கொள்ளத் தயாராக உள்ளேன்.

ஒட்டுமொத்தத்தில், அதிகக் கருத்து வேறுபாட்டிற்கு உட்பட்ட பகுதி இந்து சமுதாயத்திலிருந்து கூட்டு உரிமையை அகற்றுவதுதான். இது சம்பந்தமாக மக்களின் கருத்து பற்றி ஏதோ சொல்லப்பட்டது. பத்திரிகைகள் பற்றியும், வழக்கறிஞர் சங்கம் பற்றியும் கூறப்பட்டது. என்னுடைய சொந்த மாகாணத்திலேயே 'தர்ம நிர்ணய மண்டல்'

என்று அழைக்கப்படும் சங்கம் உள்ளது. இந்த மண்டலில், உயர்வான கல்வி கற்ற புலமை மிக்க மனிதர்களை, மகா மகோத்தியாயா தர்க்க தீர்க்க வித்யாவாசஸ்பதிகளைக் காணலாம். அவர்கள் மிக அண்மையில் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றினார்கள்; மேலும், உத்தேசிக்கப்பட்டுள்ள இந்துச் சட்டத் தொகுப்பைப்பற்றிக் கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள்:-

''இப்பொழுது நடைபெற்றுக் கொண்டிருக்கும் சட்டப்பேரவைக் கூட்டத் தொடரில், இந்துச் சட்டத் தொகுப்பை நிறைவேற்றுவது பரிசீலனையில் இருக்கும் இந்தச் சந்தர்ப்பத்தில் தற்போதைய சட்டத்தொகுப்பின் வரைவுச் சட்டத்தில் தாராளமயமாக்கல் போக்குக் கடைப்பிடிக்கப்பட்டிருப்பதற்காகத் தர்ம நிர்ணய மண்டல் தனது பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்கிறது. இந்தத் தாராளமயமாக்கலின் செல்வாக்கை கீழ்க்கண்டவற்றை அகற்றுவதில் மண்டல் தெளிவாகக் காண்கிறது:

அ) பூர்வீகக் கூட்டுச் சொத்துக்கும் சொந்தமாகத் தேடிக்கொள்ளும் சொத்துக்குமிடையே உள்ள பாகுபாடு;

ஆ) மகன்களையும் மகள்களையும் மாறுபாடாக நடத்துவது;

இ) பெண்களின் சொத்துரிமையை விளக்குவதில் சட்ட சம்பந்தமான கஷ்டங்கள்;

ஈ) மரபுரிமை விதிகளின் மிதாக்ஷராவுக்கும் தாயபாகாவுக்கும் இடையேயான பாகுபாடுகள்.

இந்த இந்துச் சட்டத்தொகுப்பு இந்தியா முழுவதற்கும் அமுல் நடத்தப்படப்போவதன் மூலம் மேலே சொல்லப்பட்ட சீர்திருத்தங்கள் நீதிமன்ற வழக்குகளை பெருமளவுக்குக் குறைக்கவும், தேசிய உணர்வை வளர்க்கவும், ஒற்றுமை உணர்வை ஏற்படுத்தவும் பெரிதும் உதவும் என மண்டல் நம்புகிறது. வரலாற்றில் இந்தத் திசை வழியில் முதல் முதலாக மேற்கொள்ளப்பட்ட முயற்சி இது என்று மண்டல் நம்புகிறது.

முக்கியத்துவமில்லாத சிற்சில விஷயங்களில் கருத்து வேறுபாடுகள் இருந்தபோதிலும் இந்த சட்டமியற்றும் முயற்சிக்கு மண்டல் உளபூர்வமான ஆதரவு அளிப்பதற்கு காரணம் இதுதான்.''

திரு. பாபு ராம்நாராயண் சிங்: அவர்கள் எந்த மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறார்கள்?

மாண்புமிகு டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் : அவர்கள் மிகச் சிறந்த கல்வி அறிவாளர்கள், வைதீகர்கள்.

மாண்புமிகு திரு. என்.வி. காட்கில் : ஆனால் அறிவொளி வாய்ந்த வைதீகர்கள்.

இப்பொழுது, இந்துக் கூட்டுக் குடும்பப் பிரச்சினையை
மாலை 4 மணி எடுத்துக் கொள்கிறேன். கால மாற்றங்களோடு ஒரு முற்போக்கான சமுதாயம் மாறவேண்டியது அவசியம் என்றும்,

சொத்துக்கும் சட்டத்திற்கும் பொருத்தமான அமைப்புகளை அது உருவாக்க வேண்டுமென்றும் இந்த அவை ஐயமின்றி என்னுடன் உடன்படும் என்று நம்புகிறேன். குடும்ப மகிழ்ச்சியை அளிக்கும் அமைப்பு முறை சொத்து அமைப்பு முறை என்ற ரீதியில் கூட்டுக் குடும்ப முறையின் நல்ல அம்சங்களை உணர்ச்சிவசப்படாமல் மதிப்பீடு செய்ய வேண்டிய காலம் வந்துவிட்டது. இன்றும்கூட, இந்துக் கூட்டுக் குடும்பத்தின் நன்மைகளைப்பற்றி ஒப்புக் கொள்ளத் தக்க வாதங்களை ஒருவர் அளிப்பாரானால், அவர் கூறுவதற்கு செவி சாய்க்க நான் தயார்; ஏனெனில் நான் வரட்டுத்தனம் வாய்ந்தவனல்ல; உண்மைதான் கற்பனையற்றது, ஒருவரின் சொந்தக் கருத்துகளுக்கான தன்மானம் அல்ல.

இப்பொழுது, முதலாவது விஷயத்தை எடுத்துக் கொண்டால், கூட்டுக் குடும்ப ஒழுங்குமுறை குடும்பத்தின் தனிப்பட்ட உறுப்பினர்களுக்கு மகிழ்ச்சியைத் தேடித் தருகிறதா, ஒரு பெரிய குடும்பத்தில் அவர்கள் ஒன்றாக வாழும்போது மருமகள்கள் என்ன நினைக்கிறார்கள் என்பது பற்றி நான் பேசவில்லை. நான் பார்த்தது, கேட்டதிலிருந்து, மகிழ்ச்சியையும் இணக்கத்தையும் பொறுத்தவரை, இந்த அமைப்பு பயனும் மதிப்பும் இல்லாததாகிவிட்டது என்பது தெளிவாகத் தெரிகிறது. எப்படியாயினும், இதில் புதியது எதுவும் இல்லை. 32 கோடி இந்துக்களில் ஏற்கனவே 5 கோடிப்பேர் **தாயபாகா** நடைமுறைக்கு உட்பட்டிருக்கிறார்கள்; அந்த ஒழுங்குமுறை நன்றாகச் செயல்படுகிறது என்றால், அது மிக மோசமானது என்று ஒருவரால்கூட சொல்ல முடியவில்லையென்றால், அது பற்றி நாம் அவசியம் சிந்திக்க வேண்டும். (**மதிப்பிற்குரிய ஓர் உறுப்பினர்:** அது முற்றிலும் புதியது). அது புதியது என்பதில் சந்தேகம் இல்லை. ஆனால் எதிர்காலத்திற்காக நாம் காண்கிற சமுதாயம் எது? குடும்பத் தலைவரின் அதிகாரத்திற்குட்பட்ட மாதிரியானதா அது? நீங்கள் புனரமைக்க விரும்புகிற சமுதாயத்தின் திட்டவட்டமான தன்மை என்ன? நான் புரிந்துகொண்டபடி, அந்தஸ்தில் சமத்துவமும், சந்தர்ப்பங்களில் சமவாய்ப்பும் நிலவும் ஒரு சமுதாயமாக அது இருக்கும்; ஏனெனில் இந்த இரு சொற் தொடர்களை வரைவு அரசியல் சாசனத்தின் முகப்புரையில் இணைத்துள்ளோம். முகப்புரைக்கு கூட்டுக் குடும்பச் சொத்து அமைப்பு முறை முரணானது என நினைக்கிறேன்.

எனக்குத் தோன்றும் உண்மையான கஷ்டம் - பல்வேறு உறுப்பினர்களின் உரைகளைக் கேட்ட பின் - மகள்களுக்கு என்ன கொடுக்கப்

பட வேண்டும் என்பதேயாகும். சொத்து உடைமையை அடிப்படையாகக் கொண்ட கூட்டுக் குடும்ப முறை போக வேண்டும்; ஏனெனில் அது செல்வத்தைக் குவிக்கிறது. மக்கள் என்னிடம் பின்வருமாறு கேட்கலாம்: ''நல்லது. அது ஏதாவது நல்லது செய்திருக்கிறதா, இல்லையா?'' அது ஓரளவு நன்மை செய்திருக்கிறது என்பதை ஒப்புக் கொள்கிறேன்; ஆனால் சொத்து அம்சம் சம்பந்தப்பட்டவரை, சமூக நலம் சம்பந்தப்பட்ட வரை மற்ற மாற்று வகைகள் தோன்றி விட்டன - கூட்டுறவுச் சங்கங்கள், கூட்டுப்பங்கு கம்பெனிகள் முதலியன; அவை அதிக நல்ல பலன்களை அளித்துள்ளன என்பதை அனுபவத்தில் நாம் கண்டுள்ளோம். எனவே அதனிடத்தில் ஏதேனும் ஒன்றை இடம் பெறச் செய்யாமல், நாம் அதை அழிக்கவில்லை; முன்பு இருந்தது போல, நாம் சமுதாயம் முழுவதையும் ஒருமாதிரியான வெற்றிடத்தில் விட்டுவிடவில்லை. பயனுள்ள தன்மையை எது இழந்துவிட்டதோ அதை நீக்கிவிடுகிறோம்; அதனால் புதிய இந்தியா அதிவேகத்தில் முன் சென்று, மிகச் சிறந்த முன்னேற்றத்தை அடையும்.

நான் ஏற்கெனவே கூறியதுபோல, உண்மையான கஷ்டம் மக்களுக்கு கொஞ்சம் பங்கு அளிப்பது பற்றியது; அது பாதியாக இருக்கவேண்டுமா அல்லது அதற்குக் குறைவாக இருக்க வேண்டுமா என்பது போன்ற விவரங்களைப் பின்பு விவாதித்துக் கொள்ளலாம். ஆனால் ஒரு விஷயம் நிச்சயம்: மகள் நிச்சயம் ஏதாவது பங்கைப் பெற வேண்டும். சுதந்திர இந்தியாவில் -

यत्र नार्यस्तु पूज्यन्ते रमन्ते तत्र देवता

என்று மட்டுமே நீங்கள் கூறப்போகிறீர்களெனில், அப்பொழுது அவள் ஒன்று நீதிமன்றத்திற்குச் செல்ல வேண்டும், இல்லையெனில் ஜீவனாம்சம் கோர வேண்டும்; இது நியாயமல்ல என்று கூறுகிறேன்.

எனது கருத்து என்னவெனில், ஆரம்பத்தில் சில கஷ்டங்கள் எழலாம்: புதிய அமைப்பு வரும்போது, புதிய சிந்தனைகள் உருவாகும் போது தன்னைச் சரிசெய்து கொள்வதற்கு சமுதாயம் கொஞ்சம் காலத்தை எடுத்துக் கொள்கிறது. இந்தக் கஷ்டங்கள் பெரியவையா அல்லது சிறியவையா என்பதல்ல கேள்வி: பொருத்தமான கேள்வி என்னவெனில், உத்தேசித்துள்ள புதிய ஏற்பாடு நல்லதா, கெட்டதா என்பதேயாகும். அது நல்லது என்று தாங்கள் திருப்தியடைந்தால், சரி செய்து கொள்வதில் இயல்பாகவே சிறிது கஷ்டம் இருக்கும் இந்தக் கஷ்டம் பற்றி நாம் கவலையே படக்கூடாது.

திருமணம் முடிந்து உடனேயே, மணமகன் தொல்லை கொடுக்க ஆரம்பித்துவிடுவான் அதாவது தனது மனைவி தன்னுடைய பெற்றோர் களிடமிருந்து பெற்ற பாகத்திற்காக வழக்கு தொடுக்க முற்பட்டு விடுவான் என்று கூறப்பட்டது. இது வழக்கறிஞர்களுக்கு மகிழ்ச்சி கரமாக இருக்கும். நல்லது, எந்த அளவு சாத்தியமோ அந்த அளவுக்கு தேசியமயமாக்க நாம் முயன்று கொண்டிருக்கும்போது, அதில் விடுபட்டுப்போன சிறிய பகுதி பெரிய சமுதாய பாதிப்பை ஏற்படுத்தாது - ஒருசிறு பங்கிற்காக மக்கள் நீதிமன்றத்திற்கு செல்லக்கூடும். காலம் செல்ல, பையனுக்கும் பெண்ணுக்கும் விடப்பட்டுள்ளது சிறிதளவு தான் இருக்கும். அது வழக்குகளுக்கு இட்டுச் சென்றாலும் கூட, நாம் நீதியை வழங்க வேண்டாமா? ஒரு நல்ல விஷயம் ஒரு சிலரால் தவறாகப் பயன்படுத்தப்படலாம் என்பதால், எல்லோருக்கும் அதை மறுத்துவிட வேண்டுமென்பதாகுமா? இதை அவை முடிவு செய்ய வேண்டும். பாலினச் சமத்துவம் என்று பொதுவாகப் பேசுவதுடன் நிற்காமல் சொத்து உரிமையில் சமத்துவம் தொடர்ந்து நிலைநாட்டப் படவேண்டும். அதை நாம் செய்யாவிடில், கபட நாடகம் ஆடுகிறோம் என்ற குற்றச்சாட்டை நாம் எதிர்நோக்க வேண்டிவரும்.

மகத்தான இந்து சமுதாயத்திற்கு எல்லாவிதக் கஷ்டங்களும் நேருமென்று மதிப்பிற்குரிய எனது என் நண்பர் பண்டிட் லட்சுமி காந்த மைத்ரா தீர்க்கதரிசனமாகக் கூறினார். ஆனால் சென்ற காலத்தில் எப்பொழுதும் இத்தகைய தீர்க்கதரிசிகள் இருந்துள்ளனர் என்பதும் அவர்கள் கூறியது எப்பொழுதும் பொய்த்துப்போயுள்ளது என்பதும் நிரூபிக்கப்பட்டுள்ளது. பல்வேறு கலாசாரங்களைக் கிரகித்துக் கொள்ளும் இணக்கமான தன்மையை இந்து சமுதாயம் பெற்றிருக்கிறது என்பதில் எனக்குக் கிஞ்சித்தும் ஐயமில்லை; காலம் காலமாக அது வெற்றிகர மாக ஜீவித்து வந்திருக்கிறது எனில், சமுதாய விஷயங்களில் வழிநடத்து பவர்கள் அந்தந்தக் காலங்களுக்கு ஏற்ப பொருத்தமான மாற்றங் களுக்கான ஆலோசனைகளைக் கூறி வந்திருப்பதுதான் அதற்குக் காரணம். இந்து சமுதாயம் இதுவரை ஜீவித்திருப்பதன் இரகசியம் இதுவேயாகும். பொதுமக்களின் கருத்துக்கேற்ப சட்டத்தைக் கொண்டு வர செய்யப்படும் முயற்சி இது. சட்டம் இயற்றுவது பொது மக்கள் கருத்தை வலுப்படுத்தி ஒன்றாக்குகிறது; பொது மக்கள் கருத்து அதன் இயல்பில் ஆற்றல் மிக்கதாதலால், இப்பொழுதும் பின்பும் அது முன்னேறிச் செல்கிறது. அது அடிவானம் போன்றது; ஒருவர் அதற்கு அருகில் சென்றால், அது பின்நோக்கி நகர்கிறது. நவீன சமுதாயம், அதன் தன்மையாலேயே வெகுவேகமாக முன்னேறிச் செல்கிறது. எனவே, பொதுமக்கள் கருத்தையும் நாட்டின் சட்டத்தையும் நாம்

ஒரே சீராக்க வேண்டும். அதைச் செய்வதற்கு மற்ற வழிகளும் உள்ளன; ஆனால் அதைச் செய்ய மிக நல்ல, நேர்மையான வழி சட்டமியற்று தலே ஆகும், அந்த திசை வழியை நோக்கிச் செய்யப்படும் முயற்சி இது என நினைக்கிறேன். இது புரட்சிகரமானது என்றாலும் அது திட்ட மிடப்பட்ட புரட்சி; எனவே அது வெற்றியடைவது திண்ணம்.

***திரு. நசிருத்தீன் அகமது :** எனக்குக் குறுகிய நேரமே உள்ளது (டாக்டர் பி.ஆர். அம்பேத்கர்: ஏன்? உங்களுக்கு உரிய நேரம் உள்ளது). நான் கையாளவுள்ள விஷயம் முக்கியமானது. அதனுடன் ஒப்புநோக்கும்போது இது குறைவான நேரம் என்ற பொருளில்தான் கூறினேன். இந்த விஷயத்திற்கு நான் அளித்த சிந்தனையையும் கவனத் தையும் போல் இந்த அவையும் இதற்கு அளிக்கும் என நம்புகிறேன். (**மதிப்பிற்குரிய ஓர் உறுப்பினர்:** இந்த விஷயத்தோடு உங்களுக்கு என்ன சம்பந்தம் உள்ளது). இதில் எனக்கு என்ன சம்பந்தம் உள்ளது என்று என்னிடம் கேட்கப்படுகிறது. நான் கூறுகிறேன், அத்துடன் எனக்கு எல்லா விஷயத்திலும் சம்பந்தம் உள்ளது. நாட்டில் இரு மிக முக்கிய மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன. ஒன்று, நமது வகுப்புவாதத் தன்மையை கைவிடுவது என்று நாம் முடிவு செய்துள்ளோம்; மற்றொன்று, கூட்டு வாக்காளர் தொகுதிகளின் பயன்களை நம் மீது திணித்துக்கொள்வது என்று தீர்மானித்து இந்துக்களில் ஒரு பெரும் பகுதியினர் சிந்திக்கிற அதே வழியில் சிந்திக்க ஒரு முஸ்லீமுக்குள்ள உரிமையை இந்த அவையின் மதிப்பிற்குரிய எந்த கனவானாவது மறுக்க முடியுமா? எப்படியும் இந்துக்களோடு நாங்கள் வாழ்ந்தாக வேண்டும். மேற்கு வங்காளத்தில் அவர்கள் 80 சதவிகிதத்தினர்; அவர் களுடன் நாங்கள் வாழவேண்டும், அவர்களுடன் சிந்திக்க வேண்டும். என்னுடன் நீங்கள் மேற்கு வங்காளத்திற்கு வாருங்கள். வங்காளத்தில் இந்த மசோதாவுக்குள்ள எதிர்ப்பை நீங்கள் கண்கூடாகப் பார்க்கலாம். இந்த மசோதாவுக்கு அங்கு கடுமையான எதிர்ப்பு இருப்பதை பண்டிட் மைத்ரா மென்னயத்தோடு கூறினார்.

திருமதி ரேணுகா ரே: எதிர்ப்புக்குச் சமமாகவும் இன்னும் சொல்லப்போனால் அதைவிட அதிகமாகவும் தீவிர ஆதரவும் உள்ளது.

திரு. நசிருத்தீன் அகமது : என்னுடன் மேற்கு வங்கத்திற்கு வாருங்கள். வைதீகப் பிரிவினர் சார்பில் நான் பேசவில்லை. இந்த

★ அ.நி. (சட்டப்பேரவை) விவாதம், தொகுதி II, பாகம் II, 1949 மார்ச் 1, பக்கங்கள் 1020 - 30.

மசோதாவின் அந்த அம்சம் பற்றி எனக்கு எந்தச் சம்பந்தமும் இல்லை. இந்த அவையில் எழுப்ப என்னிடம் கடுமையான கேள்விகள் உள்ளன; அவை இதுவரை எழுப்பப்படவில்லை. வங்காளத்தில் உள்ள ஆட்சேபம் கடுமையானது; பொது மக்களின் கருத்தை அறிய அங்கு ஒருவர் பயணத்தை மேற்கொள்வாராயின் - (குறுக்கீடு) புத்திசாலித் தனமான மிகவும் அறிவாற்றல் உள்ள பகுதியினர் பற்றி நான் கூறு கிறேன் - அங்க யாரொருவர் சொன்னாலும், மேற்கு வங்காளத்தில் நகரம் நகரமாக, ஊர் ஊராக எவரொருவர் பயணம் மேற்கொண் டாலும் மிக புத்திசாலித்தனமான பகுதியிடமிருந்து, அறிவாளர்களின் பகுதியிடமிருந்து அவர் எதிர்ப்பை எதிர்நோக்குவார். (**மதிப்பிற் குரிய ஓர் உறுப்பினர்:** இதை மதிப்பிற்குரிய உறுப்பினர் செய்ய வில்லை). இந்தக் குறுக்கீடு விஷயத்தை முற்றிலுமாக பரிசீலனை செய்ததன் அடிப்படையில் எழுந்ததல்ல என்று நம்புகிறேன். வழக்கறிஞர் சங்க உறுப்பினர்கள் பிற்போக்கு சிந்தனை வாய்ந்தவர்கள் அல்ல என்பது ஒப்புக்கொள்ளப்படும் என்று பணிவுடன் கூறிக்கொள்கிறேன்...

திரு. எல். கிருஷ்ணசாமி பாரதி: அவர்களில் மிகப் பெரும் பாலோர் வைதீக, பழமை எண்ண வாதிகளாக உள்ளனர்.

திரு. நசிருத்தீன் அகமது : அவர்கள் வைதீகப் பிரிவினர் அல்ல....

திருமதி ரேணுகா ரே: திரு. அட்குல் குப்தாவின் கருத்து பற்றி என்ன சொல்கிறீர்கள்? மிகப் புகழ் பெற்ற வழக்கறிஞர்களில் ஒருவர் அவர்; நாட்டின் பிரிவினைக் குழுவுக்கு காங்கிரஸால் தேர்ந் தெடுக்கப்பட்டவர்.

திரு. கிருஷ்ணச் சந்திர சர்மா: வழக்கறிஞர்கள் கருத்து முன் மாதிரிகள்.

திரு. நசிருத்தீன் அகமது: குறுக்கீடுகள் இருந்தபோதிலும், அவர்கள் வைதீகப் பிரிவினர்கள் அல்ல. எந்த வழக்கறிஞர் சங்க நூலகத்திற்கும் சென்று பாருங்கள். இந்த மசோதா முழு மூச்சுடன் எதிர்க்கப்படுவதை அங்கு நீங்கள் காண்பீர்கள்....

திரு. எல். கிருஷ்ணசாமி பாரதி : ஏனெனில், அவர்களது தொழில் போய்விடும்.

திரு. நசிருத்தீன் அகமது: இந்த மசோதா மூலம் வழக்கறிஞர்களின் தொழிலை அகற்றி விடுகிறீர்கள் என்பதை நான் ஒப்புக் கொள்ளவில்லை. உங்களால் நினைக்க முடியாத சிக்கல்களை நீங்கள் புகுத்துகிறீர்கள். மாறாக, வழக்கறிஞர்கள் ஒரு மாறுபட்ட பரிமாணத்தில், ஒரு தொழில் பரிமாணத்தில், கருத்து வேறுபாடுடைய இந்த மசோதாவை அறிமுகப்படுத்தியதற்காக, அவைக்கு நன்றி செலுத்துவர். கல்கத்தா உயர்நீதிமன்றத்தின் நான்கு நீதிபதிகள் - நான்கு அனுபவம் வாய்ந்த இந்து நீதிபதிகள் - அவர்களில் ஒருவர் திரு. பி.கே. முகர்ஜி சமஷ்டி நீதிமன்றத்தை அலங்கரிக்கிறார்; சட்டம் ஏற்கனவே நன்கு நிலைநிறுத்தப்பட்டுள்ளது, சட்டம் நன்றாக அறியப்பட்டுள்ளது என்று அவர் கூறினார். இங்கும் அங்கும் சட்டம் வேறுபட்டிருக்கலாம்; அது பல்வேறுபட்ட காரணங்களால் இருக்கலாம். இதுபற்றி நான் எடுத்துக் கூறத் தேவையில்லை. சட்டம் நன்றாக அறியப்பட்டுள்ளது.

திரு. ஏ. கருணாகர மேனன் : சட்டம் அவ்வாறு நிலை நிறுத்தப்பட்டிருந்தால், சட்டம் பற்றிய அறிக்கைகள் ஏன் ஒவ்வொரு வாரமும் வெளியிடப்படுகின்றன?

திரு. நசிருத்தீன் அகமது : ஏனெனில் மதிப்பிற்குரிய எனது நண்பர் சட்டத்திற்கு அடிப்படையாக உள்ள நுட்பங்களை உணர்ந்து கொள்ளவில்லை என நான் எண்ணுகிறேன். உண்மையில் முன்மாதிரிகள் தேவைப்படுகின்றன. எல்லா சாத்தியப்பாடான வழக்குகளையும் சட்டத்தால் எதிர்பார்க்க முடியாது. எனவே முன் மாதிரிகள் தேவைப்படுகின்றன. அவை கஷ்டங்களை வெளிச்சம் போட்டுக் காட்டுகின்றன; எதிர்காலத்தில் வழக்குகளை முடிவு செய்ய அவை உதவிகரமாக உள்ளன. முன்மாதிரிகளை மனித சமுதாயம் கைவிட்டதும், குறிப்பாக சட்ட அரங்கில் கைவிட்டதும், அவை புத்திசாலித்தனமான பிராணிகளாக இல்லாமல் போகும். எனவேதான், வைதீகர்களாக இல்லாத வழக்கறிஞர்கள் இந்த மசோதாவை எதிர்க்கின்றனர் என்று கூறுகிறேன்; அவர்களுக்கு உணவு கிடைக்காமல் போகும் என்பதற்காக அல்ல.

திருமதி ரேணுகா ரே : வங்காளத்தில் பெண்களுக்கான வரையறுக்கப்பட்ட சொத்து வழக்குகளினால் போய்விட்டால் என்ன நேரும்?

திரு. நசிருத்தீன் அகமது : எனது மதிப்பிற்குரிய சகோதரி திருமதி ரேணுகா ரே வங்காளத்தின் பெண்களைப் பிரதிநிதித்துவப்

படுத்துகிறார் என்று நம்புகிறேன். (**மதிப்பிற்குரிய ஓர் உறுப்பினர்;** ஆமாம் அவர் வங்காளத்தின் பெண்களைப் பிரதிநிதித்துவப்படுத்து கிறார்). மேற்கு வங்காளம் முழுவதிலும் அவர் ஒரே ஒரு நட்சத்திரம் தான். எதிர்ப்பதில் குறைந்தது அரை டஜன் நட்சத்திரங்களை மேற்கோள் காட்டலாம் நான்; திருமதி ரேணுகா ரேக்கு சமமாகவே அவர்கள் நன்கு பிரபலமானவர்கள். இந்துக்களின் வாதத்தை முன்வைத்து வழிகாட்டும் ஒரே ஒரு நட்சத்திரம் அவர்.....

திரு. ஆர்.கே. சித்வா : ஒரே ஒரு நட்சத்திரம்.

திருமதி ரேணுகா ரே: நௌகாளிக்கும் மற்ற இடங்களுக் கும் சென்ற நூற்றுக்கணக்கான பெண்கள் உள்ளனர். வங்காளத்தில் பல வழிகாட்டு நட்சத்திரங்கள் உள்ளனர்; இந்த சமூகப் பெண் ஊழியர் கள் எல்லோரும் வழிகாட்டு நட்சத்திரங்கள். அவர்கள் எல்லோரும் இந்துச் சட்டத் தொகுப்பை ஆதரிக்கிறார்கள்.

திரு. நசிருத்தீன் அகமது: எனது மதிப்பிற்குரிய சகோதரிக்கு வழக்குகள் பற்றிய அனுபவம் இல்லை என்று கூறுகிறேன். அவர் சட்டத்தில் வாழவில்லை. அவர் அதில் வாழ்ந்திருந்தால் ஏராளமான சாத்தியப்பாடுகளை கண்டிருப்பார்.

மதிப்பிற்குரிய உறுப்பினர்கள்: அவரை ஆண் என்று சொல்லாமல் பெண்மணி என்று கூறுங்கள்.

திரு. நசிருத்தீன் அகமது : செழிப்படைந்து வருகிற தொழி லுக்கும் .... அவருக்கும் அவளுக்கும் வித்தியாசம் எதுவும் இல்லை. மிக சமீபத்திய அளவுகோல்களின்படி 'அவர்' என்றால் அவளும் உட்படுகிறாள். பெண்மணிகள் இனி 'அவள்' என்று அழைக்கப்படக் கூடாது; அவர் என்றே அழைக்கப்பட வேண்டும்.

வழக்கறிஞர்கள் இந்தச் சட்ட மசோதாவுக்கு எதிராக இருக் கிறார்கள். அவர்களின் குடும்ப அமைதி வெகுவாக பாதிக்கப்படும். அவர்கள் வெகுவாக அதிருப்தி கொண்டுள்ளனர். **மதிப்பிற்குரிய ஓர் உறுப்பினர் :** "தங்களின் தொழிலைப் பற்றிப் பயப்படுகிறார்களா?". இல்லை, அவர்களுக்கு அதிக வழக்குகள் கிடைக்கும். வழக்கறிஞர்கள் சார்பாக - அந்தத் தொழிலை சார்ந்தவன் என்ற பெருமை எனக்கு உண்டு - அவர்களின் சொந்த நலன்களுக்காக அவர்கள் இதை வரவேற்க வேண்டும் என்று இந்த அவைக்கு உறுதிகூறுகிறேன்.

***(திரு. எல். கிருஷ்ண சாமி பாரதி** : 'தாங்கள் தவறாகக் கூறுகிறீர்கள்').* நான் தவறாகக் கூறவில்லை. மதிப்பிற்குரிய எனது நண்பரை விட நான் அதிக காலம் சட்டத் துறையில் இருந்திருக்கிறேன். வழக்குகளில் பங்கெடுத்துள்ளேன். விவாகரத்து ஷரத்து எல்லையற்ற வழக்காடு தலில் கொண்டுவிடும் பல குடும்பங்களில் முடிவற்ற சிக்கல்களுக்கும் முடிவற்ற கஷ்டங்களுக்கும் இட்டுச் செல்லும்; பெண்களுக்கும் ஆண் களுக்கும் அதிக துயரங்களை அளிக்கும்.

மிக முக்கியமான ஒரு விஷயத்திற்கு நேரடியாக வருகிறேன். இந்த மசோதா பற்றி மிகக் கடுமையான ஒரு படப்பிடிப்பை அவை முன் நான் சமர்ப்பிக்க வேண்டும். சட்டப்பேரவையில் இந்த மசோதா ஏப்ரல் 9-ஆம் தேதி வேகமாக அறிமுகப்படுத்தப்பட்டது. மதிப்பிற் குரிய சகோதரிகள் அந்தக் கட்டத்தில் அதை எதிர்க்க வேண்டா மென்று நம்மிடம் கேட்டுக் கொண்டனர். அது மிக முக்கியமானது என்று கருதப்பட்டதால், அது குறித்து அதிக சர்ச்சை தேவை இல்லை, அது நிறைவேற்றப்பட வேண்டும் என்றனர். எனவே அந்த நாளின் கடைசி நேரத்தில் அது பரிசீலிக்கப்படுவதை அனுமதிக்க நாம் சம்மதித்தோம். இந்துக் கண்ணோட்டத்திலிருந்து நான் எனது ஆட்சேபத்தைக் கிளப்பினேன். முஸ்லீம் கண்ணோட்டத்திலிருந்து நான் எந்த ஆட்சேபத்தையும் கிளப்புகிறேனா? நிச்சயமாக இல்லை. எனது ஆட்சேபம் இந்துக் கண்ணோட்டத்திலிருந்து என்று நான் அறிவித்தது ஆச்சரியத்தையோ சிரிப்பையோ எழுப்ப வேண்டியதில்லை. இந்துப் பார்வையிலிருந்துதான் நான் பேசிக்கொண்டிருக்கிறேன். கற்றறிந்த எனது சகோதரி அன்று கேட்டார்: ''உங்கள் சொந்த சகோதரிகளுக்கு நீங்கள் அளிக்கும் உரிமையை உங்கள் இந்து சகோதரிகளுக்கு ஏன் மறுக்கிறீர்கள்.'' அது மிக அடிப்படையான கேள்வி. நான் பதிலளிக் கட்டுமா? எனது பதில் இதுதான்: வெவ்வேறுபட்ட வகைகளைச் சார்ந்த நபர்களுக்கு ஒரே மாதிரியான உணவைத் தாங்கள் அளிக்க முடியாது. இந்துச் சட்டத்தின் அடிப்படையில் தான் ஓர் இந்துப் பெண் மணியின் நிலையை மதிப்பீடு செய்ய முடியும். அதே போல் முஸ்லீம் சட்டத்தின் அடிப்படையில்தான் ஒரு முஸ்லீம் பெண்மணியின் நிலையை மதிப்பீடு செய்ய முடியும். இந்த அமைப்பு அல்லது அந்த அமைப்பின் விவேகம் பற்றி விவாதிப்பதற்காக நாம் இங்கு இல்லை. இங்கு இரண்டு வகையான உறுப்பினர்களை நான் காண்கிறேன்: சிலர் சைவ உணவு அருந்துகிறவர்கள்; சிலர் அசைவு உணவு அருந்துகிற வர்கள். சைவச் சாப்பாட்டுக்காரருக்கு மாமிச உணவை நீங்கள் அளிப்பீர்களா? சைவ உணவு அருந்துபவருக்கு காய்கறி உணவு அளித்தால், அவருக்குச் சலுகை காட்டுவதாக நீங்கள் குற்றம் சாட்டு

வீர்களா? (**மதிப்பிற்குரிய ஓர் உறுப்பினர்** : 'இது என்ன தருக்க ரீதியான வாதமா? விசித்திரமான வாதம்?) எனது சகோதரி திருமதி ரேணுகா ரே என்னிடம் கேட்ட கேள்வி எப்படி தருக்கரீதியாக இருந்ததோ அதேபோல்தான் இதுவும் உள்ளது. இருவேறு வகையான நபர்களுக்கு ஒரே வகையான உணவை தாங்கள் கொடுக்க முடியாது; உண்மையில் அவர்கள் பிறந்து வளர்ந்த சூழ்நிலையே வெவ்வேறானது. ஏப்ரல் 9ம் தேதி அவையில் மசோதா வேகமாக அறிமுகப்படுத்தப் பட்டது. மாண்புமிகு சட்ட அமைச்சர் பொறுக்குக்குழு அறிக்கையின் ஒரு வாசகத்தை நமக்கு வெளிப்படுத்தினார். பொறுக்குக் குழுவிடம் மசோதா சமர்ப்பிக்கப்படும் முன் அதன் நல்ல அம்சங்கள் எந்தவிதப் பரிசீலனையையும் பெறவில்லை என்ற அப்பட்டமான உண்மையை அவர் அம்பலப்படுத்தினார். அது ஒரு விசித்திரமான அறிவிப்பு. முதலில் மசோதா நன்கு வரையப்பட்டதாகக் கருதப்பட்டது; நல்ல மசோதா என்றும் கூறப்பட்டது. அது ஏப்ரல் 9-ம் தேதி அவசரமாக அமைக்கப்பட்ட ஒரு பொறுக்குக் குழுவுக்கு எடுத்துச் செல்லப்பட்டது; அது சட்ட நுட்ப அல்லது சட்ட அமைச்சகப் பரிசீலனையைப் பெற வில்லை என்று உணரப்படுகிறது. அது ஏன்? நான் கேட்கிறேன்: சட்ட நுட்பம் சம்பந்தமான அல்லது சட்ட அமைச்சரகப் பரிசீலனை பெறாதபோது ஏன் அந்தக் கட்டத்தில் மசோதா அவசரமாக அறிமுகப் படுத்தப்பட்டது? (**மதிப்பிற்குரிய ஓர் உறுப்பினர்** : அப்போது நாம் ஏப்ரல் 1ஆம் தேதியை நெருங்கிக்கொண்டு இருந்தோம்.) அப்படி இருக்கலாம். ஏப்ரல் 1 ஆம் தேதி நெருங்கிக் கொண்டிருந்ததால் வேகமாகக் கையாளப்பட்டதற்கு அது காரணமாக ஒருவேளை இருக்கலாம். அது மிகுந்த அக்கறைக்குரிய ஒரு பணியாக எண்ணப் படவில்லை. நமது அழகான சகோதரிகளை திருப்திப்படுத்துவதற்காக உணர்ச்சிமயமான ஆவணம் நிறைவேற்றப்பட வேண்டும். மசோதா ''பெண் இனத்தின் மீதுள்ள பரிவால்'' அதிகமாக முடுக்கிவிடப் பட்டதே ஒழிய, விஷயத்தின் தேவைகள் பற்றிய பரிசீலனையினால் அல்ல. முன் என்றுமில்லாதபடியான ஒரு பணியை இலாகா மேற் கொண்டது. மசோதா நன்றாக வரையப்படவில்லை என்றும் அதில் பல குறைகள் உள்ளன என்றும் அது மாற்றி எழுதப்பட வேண்டு மென்றும் அவர்கள் முடிவுக்கு வந்தனர். மசோதா பல்வேறு தனித் தனி அத்தியாயங்களையும், தனி எண்களையும், தனி வரையறைகளை யும் - ஒன்று மற்றொன்றிலிருந்து முற்றிலும் வேறுபட்டது - கொண் டிருந்தது. அது குறைபாடுகளைக் கொண்டுள்ளது என்றும் தொடர்ச்சி யான எண்கள் கொடுக்கப்பட்டு முழு மொத்தமாக எல்லாம் இணைக்கப்பட்டு மசோதா மறு வடிவமைப்புச் செய்யப்பட வேண்டும் என்றும் சட்டப் பேரவை இலாகா கருதியது.

இம்மாதிரியான முடிவுக்குச் சட்டப் பேரவை இலாகா வந்தவுடன், நியாயமாக என்ன செய்திருக்க வேண்டும்? இந்த மசோதாவை வாபஸ் பெற்றிருக்க வேண்டும். அமைச்சரவை ஏற்றுக்கொள்கிற முறையில் ஒரு புதிய மசோதா வரையப்பட்டு, புது மசோதாவாக அறிமுகப்படுத்தப்பட்டிருக்க வேண்டும். அதற்குப் பதிலாக, நான் பழக்கப்படாத சட்டங்கள் இயற்றும் முறையில் வரைவு செய்யும் செயல்முறை நடைபெற்றது. இந்தியாவின் மற்றும் உலக நாடுகளின் அரசியல் சட்ட வரலாற்றில், ஒரு மசோதா அறிமுகப்படுத்தப்பட்டு, பொறுக்குக் குழுவுக்கு அனுப்பப்பட்ட பின், ஒரு மசோதா தயாரிக்கப்படும் உதாரணத்தை நாம் எங்கும் கண்டதில்லை. முற்றிலும் ஒரு புதிய மசோதாவைத் தயாரிக்க வரைவுக் குழுவுக்கு என்ன அதிகாரம் உள்ளது என்று திரு. ராம்நாராயண் சிங் நேற்று வினவினார். (**மதிப்பிற்குரிய ஓர் உறுப்பினர்:** 'அது ஒரு புதிய மசோதா அல்ல'): மிகக் கணிசமான மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன என்று காண்பிக்கக் கூடிய துரதிர்ஷ்ட நிலையில் நான் இருக்கிறேன். மாண்புமிகு சட்ட அமைச்சர் நேற்று இந்தக் கேள்விக்கு பதிலளிப்பதை தவிர்த்த போதிலும், இறுதியில், தாம் எந்த மாற்றங்களையும் செய்யவில்லை என்றும், மாற்றங்களைச் செய்தது பொறுக்குக் குழுவினர்தான் என்றும் அவர் ஒப்புக்கொள்ள வேண்டி வந்தது. மாற்றங்கள் கணிசமற்ற மாற்றங்கள் அல்ல, மாறாக அவை மிக முக்கியமானவை, மிகத் தீவிரமானவை என்பதை அவை முன் எடுத்துக் காட்டும் நிலையில் உள்ளேன்.

திரு. எல். கிருஷ்ணசாமி பாரதி: ஐயா, ஓர் ஒழுங்குப் பிரச்னை. பொறுக்குக் குழு பரிசீலித்தது வேறொரு மசோதா, அதற்கு அனுப்பப்பட்ட மசோதா அல்ல என்பதால் மசோதாவை பொறுக்குக் குழுவிற்கு அனுப்ப வேண்டும் என்பதை அடிப்படையாகக் கொண்டு மதிப்பிற்குரிய உறுப்பினர் வாதித்தால், அந்த விஷயம் ஏற்கெனவே அவைத் தலைவரால் தீர்ப்பு அளித்து தீர்க்கப்பட்டது; அந்த விஷயத்தை அவர் வலியுறுத்தத் தேவையில்லை; அவரிடம் வேறு காரணங்கள் இருந்தால், அதை அவர் எடுத்துச் சொல்லலாம்; பொறுக்குக் குழுவிற்கு மசோதா திருப்பி அனுப்பப்பட வேண்டும் என்ற அவரது திருத்தத்தின்மீது அவர் பேசிக் கொண்டிருக்கிறார். ஆனால், அவர் இந்த வாதத்தை வலியுறுத்தினால், அதாவது பொறுக்குக் குழு பரிசீலித்த மசோதா, அவை அதற்கு அனுப்பிவைத்த மசோதா அல்ல என்று வாதித்தால், அதே மசோதாதான் என்று அவைத் தலைவர் அளித்த தீர்ப்பில் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

திரு. டி.டி. கிருஷ்ணமாச்சாரி (மதராஸ் : பொது): பரிசீலனையை நிராகரிப்பதற்கான ஒரு வாதமாக இது இருக்கலாம்.

திரு. எல். கிருஷ்ண சாமி பாரதி : இது அப்படியாயின், விஷயம் இவ்வளவு அதிகமாக விரிவாக விவாதிக்கப்பட்டுள்ள நிலையில் அதற்கு எதிராக அவர் வாதித்தால், அவையின் நேரத்தை அவர் எடுத்துக் கொள்வதாகவே இருக்கும். இந்த அம்சம் நன்றாக விவாதிக்கப் பட்டது; வாதங்கள் முன் வைக்கப்பட்டன. அப்படியிருக்கும்போது அவர் சொன்னதையே திரும்பத் திரும்பச் சொல்லிக்கொண்டிருக் கிறார். எந்தப் புதிய வாதத்தையும் நாம் கேட்கலாம்; ஆனால் அதே வாதங்கள் அவரால் திரும்பக் கூறப்படுவதை நாங்கள் கேட்கத் தயாராக இல்லையென்பதைப் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

பண்டிட் லட்சுமிகாந்த மைத்ரா : எனது நண்பர் திரு. பாரதி எழுப்பிய ஒழுங்குப் பிரச்சினை சம்பந்தமாக சில வார்த்தைகளை நான் முன் வைக்கலாமா? அவர் கூறினார்: பொறுக்குக் குழுவிற்கு திருப்பி அனுப்பவேண்டுமென்ற தனது திருத்தத்திற்கு மதிப்பிற்குரிய உறுப் பினர் நசிருத்தீன் எழுப்பிய வாதங்களை அவைத் தலைவரின் தீர்ப்பு உள்ளடக்கியுள்ளது என்று. அவைத் தலைவரின் தீர்ப்பிற்கு அவ மரியாதை இல்லாமலே, பொறுக்குக் குழுவிற்கு திரும்ப அனுப்ப தன்னை இட்டு சென்ற காரணங்களை அளிக்க மதிப்பிற்குரிய ஒவ்வொரு உறுப்பினரும் உரிமை பெற்றுள்ளார் என்று உறுதியாகக் கூறுகிறேன். ஒழுங்குப் பிரச்சினை எதுவும் இதில் இல்லை. பொறுக்குக் குழு விற்கு மீண்டும் அனுப்ப சிபார்சு செய்யும் தீர்மானத்தை முன் வைக்க தமது வாதங்கள் எல்லாவற்றையும் எடுத்துக் கூறுவது ஓர் உறுப்பின ருக்குள்ள நியாயமான உரிமை.

அவைத் தலைவர்: இதில் எந்த ஒழுங்கு பிரச்னையும் இல்லையென நினைக்கிறேன், ஏனெனில் இந்த மசோதா குறித்து மேலும் கருத்துகளைப் பெறும் நோக்கத்தோடு இதனை மீண்டும் சுற்றுக்கு விட வேண்டுமென்ற தமது திருத்தத்திற்கு ஆதரவாக அவர் பேசுகிறார்; இந்த மசோதா எவ்வாறு மாறியுள்ளது, மூல மசோதா எவ்வாறு பொறுக்குக் குழுவில் திருத்தி அமைக்கப்பட்டது என்ற விவரங்களை அவர் முன்வைக்கிறார்.

திரு. நசிருத்தீன் அகமது : மதிப்பிற்குரிய எனது நண்பரின் உண்மையான கஷ்டம் இதில் இல்லை. நல்ல அறிவாளியான திரு. பாரதி உண்மையான கஷ்டங்களை நன்கு அறிவார் என நம்புகிறேன். எனவேதான், மிகவும் புத்திசாலித்தனமாக அவைத் தலைவரின் தீர்ப்பினால் என்னைத் தடுக்கவிரும்புகிறார் என்று பணிவுடன் கூறிக்

கொள்கிறேன். இந்த அவையில் ஏனைய எல்லோரையும் விட அவைத் தலைவரின் தீர்ப்பு குறித்து மிக உயர்வான மதிப்பை நான் கொண்டிருக்கிறேன். இதனை இங்கே இப்பொழுது நான் தெரியப் படுத்த வேண்டும்.

பண்டிட் லட்சுமிகாந்த மைத்ரா: இந்த விஷயத்துக்கு ஏன் செல்கிறீர்கள்?

திரு. நசிருத்தீன் அகமது: அவை தலைவரின் முடிவை நான் ஏற்றுக் கொள்கிறேன் என்று மட்டுமே சொல்கிறேன். அதனை ஆராய்வதில் நான் இறங்கவில்லை.

பண்டிட் தாகூர் தாஸ் பர்கவா (பஞ்சாப் : பொது): நீங்கள் அதனை ஆராய்வதிலும் இறங்க வேண்டும்; ஏன் கூடாது?

திரு. நசிருத்தீன் அகமது : அவை தலைவரின் தீர்ப்பு என்ன? மசோதாவை பரிசீலிப்பது ஒழுங்குமுறையற்றதல்ல என்பதுதான். உண்மையில் அவரது தீர்ப்பு என்னவெனில், பொறுக்குக் குழு உறுப் பினர்களின் முன்னால் பழைய மசோதாவும் இலாகா மசோதாவும் இருந்தன என்றும், அவர்கள் விஷயம் முழுவதையும் பரிசீலனைக்கு எடுத்துக் கொண்டிருக்க வேண்டும் என்பதுமாகும்; அந்த அடிப் படையில் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது இலாகா மசோதாவே தவிர மூல மசோதா அல்ல என்ற எனது சட்ட ரீதியான ஆட்சேபத்திற்கு சரியான அடிப்படை உள்ளது. தீர்வின் விளைவு அதுதான். அதுதான் தீர்வு. எனது இப்போதைய நோக்கம் என்ன வெனில், பொறுக்குக் குழு உறுப்பினர்கள் முன் மூல மசோதா இருந்தபோதிலும், அவர்கள் முன் இலாகா மசோதா இருந்தபோதிலும் அவர்களிடம் இவ் இரண்டுமே இருந்தபோதிலும், இரண்டையும் ஒப்பு நோக்கி இலாகா மசோதாவில் என்ன வெளிப்படையான இடைச் செருகல்கள் செய்யப்பட்டன என்பதைக் காணும் சந்தர்ப்பம் அவர்களுக்கு இருந்த போதிலும், அவர்கள் அவ்வாறு செய்யவில்லை என்பதைச் சுட்டிக்காட்டுவதுதான். விஷயத்தின் முக்கியத்துவத்தை பரிசீலிப்பதைப் பொறுத்தவரை, அவர்கள் தங்கள் கடமையை அவசரமான முறையில், முறையற்ற முறையில், அக்கறையற்ற முறை யில் செய்துள்ளனர். இதனைத்தான் இங்கு வலியுறுத்திக் கொண் டிருந்தேன்.

மதிப்பிற்குரிய ஓர் உறுப்பினர்: சட்ட அமைச்சரை நீங்கள் வன்முறைக்குத் தூண்டுகிறீர்கள்.

மாண்புமிகு டாக்டர் பி.ஆர். அம்பேத்கர்: அதுமாதிரி எதையும் நான் செய்ய மாட்டேன். ஏனெனில், திரு. அகமதுக்கு பதிலளிக்க ஏராளமான வாதங்கள் என்னிடம் உள்ளன.

திரு. நசிருத்தீன் அகமது : மாண்புமிகு சட்ட அமைச்சர் நிலைமையை நன்கு உணர்ந்துள்ளார் என்று நம்புகிறேன். இலாகா மசோதாவில் என்ன முக்கிய மாற்றங்கள் செய்யப்பட்டன என்பதை இதற்குள் நிச்சயமாக அவர் அறிந்திருப்பார் என்பதில் எனக்குச் சந்தேகமில்லை.

மாண்புமிகு டாக்டர் பி.ஆர். அம்பேத்கர்: எனக்குத் தெரியாது; உறுப்பினர்களின் உரைகளைக் கேட்கவே நான் காத்திருக்கிறேன்.

திரு. நசிருத்தீன் அகமது : மாண்புமிகு சட்ட அமைச்சர் பின்வருமாறு கூறினார்: ''சில முக்கிய மாற்றங்கள் செய்யப்பட்டன. ஆனால் நான் எதுவும் செய்யவில்லை. பொறுக்குக் குழுதான் அவ்வாறு செய்தது.'' நேற்று ஒரு குறிப்பிட்ட கேள்வியை எழுப்பினேன். அன்புடன் அவர் அதற்கு பதிலளித்தார்; அதாவது, அமைக்கப் பட்ட இலாகா குழுவுக்கு எத்தகைய முக்கிய மாற்றங்களைச் செய்ய வேண்டாம் என்று ஆணையிடப்பட்டது? அதற்கு காரணம், தேர்வுக் குழுவின் பெரும்பான்மை உறுப்பினர்கள் கீழ்க்கண்ட திட்டவட்ட மான அறிவிப்பைச் செய்துள்ளார்கள்: 'மாற்றி அமைக்கப்பட்ட வரைவு, மூல மசோதாவின் அடிப்படை அம்சத்தில் தீவிரமான மாற்றங்கள் எதையும் செய்யவில்லை''. இத்தகைய அறிவிப்பு அவரால் பொறுக்குக் குழுவிற்கு அளிக்கப்பட்டது என்று அறிகிறேன்; இந்த அடிப்படையில்தான், மூல மசோதா அவர்கள் முன் இருந்த போதிலும், அதில் நிகர மாற்றங்கள் எதுவும் செய்யப்பட்டுள்ளதா என்று அவர்கள் மிகுந்த அக்கறையுடன் கவனித்து அவற்றை ஒப்பு நோக்கிப் பார்க்கவில்லை.

திருமதி ரேணுகா ரே: திரு. அவைத் தலைவரே, ஓர் ஒழுங்குப் பிரச்னை. தேர்வுக் குழுவில் நிகழ்ந்த விஷயங்களை, இம் முறையில் வெளிக் கொண்டு வருவதை அனுமதிக்கலாமா?

திரு. நசிருத்தீன் அகமது: இந்த ஒழுங்குப் பிரச்னை பற்றி, நான் ஏற்கனவே கூறியுள்ளேன்...

திருமதி ரேணுகா ரே: ஐயா, இது ஓர் ஒழுங்குப் பிரச்சினை. இதுபற்றி தாங்கள்தான் தீர்வு செய்ய வேண்டும்.

திரு. அவைத் தலைவர் : ஒழுங்குப் பிரச்சினை எதுவும் இல்லை எனக் கருதுகிறேன். பொறுக்குக் குழு இவ்வாறு நடந்து கொண்டதா இல்லையா என்பது திரு. நசிருத்தீன் அகமதுவின் ஊகம் மட்டுமே. பொறுக்குக் குழு மீதோ அல்லது பொறுக்குக் குழுவின் உறுப்பினர்கள் மீதோ மதிப்பிற்குரிய உறுப்பினர் அவதூறு எதுவும் கூற மாட்டார் எனக் கருதுகிறேன். அவர் அவ ு வாதங்களை முன்வைக்கலாம்.

பண்டிட் தாகூர்தாஸ் பர்கவா: பொறுக்குக் குழு நடந்து கொண்ட முறை அவையின் விமர்சனத்திற்கு நிச்சயம் உட்படும்.

திரு. நசிருத்தீன் அகமது : நான் கூறுகிறேன்....

பண்டிட் லட்சுமி காந்த மைத்ரா: திரு. அவைத் தலைவரே, தாங்கள் கூறியது சரியே. அவதூறுகள் எதுவும் கூறாமல், அவர் வாதங் களை முன்வைக்கலாம்.

திருமதி ரேணுகா ரே: அவர் அவதூறு செய்கிறார்.

திரு. அவைத் தலைவர் : அதிகபட்சம் கூறவேண்டுமெனில், அவை ஊகங்களே.

திரு. நசிருத்தீன் அகமது : ஐயா, எனது ஊகம் என்ன வெனில், மாண்புமிகு அமைச்சர் பொறுக்குக் குழு உறுப்பினர்களுக்கு நிச்சயமாக உறுதியளித்தார்....

திருமதி ரேணுகா ரே: ஐயா, இதை நான் ஆட்சேபிக் கிறேன். இது அவதூறு செய்வதாகும். இந்த ஊகங்கள் அவதூறுகளைக் கூறுவதாகும்.

திரு. அவைத் தலைவர்: மதிப்பிற்குரிய ஒவ்வொரு உறுப்பினரும் தமது சொந்த ஊகம் செய்து கொள்ள உரிமை பெற்றுள்ளார்.

திரு. நசிருத்தீன் அகமது : ஐயா, பொறுக்குக் குழுவின் எந்த உறுப்பினரும் இதை உடனே மறுத்துக் கூறலாம்.

திரு. எல். கிருஷ்ணசாமி பாரதி: இல்லை; நிச்சயமாக நாங்கள் மறுத்துக் கூற முடியாது. ஆனால், மறுப்பை நீங்கள் விரும்புவதால், பொறுக்குக் குழுவின் உறுப்பினர் என்ற முறையில் மறுக்கிறேன். விஷயம் முழுவதையும் பரிசீலித்தோம்; மேலும் நாங்கள் திருப்தியடைந்தோம்......

திரு. நசிருத்தீன் அகமது: தாங்கள் ஓர் அறிக்கை வெளியிடுகிறீர்கள்.

திரு. எல். கிருஷ்ணசாமி பாரதி: ஒரு மறுப்பை நீங்கள் விரும்பினீர்கள். நான் மறுக்கிறேன்.

திருமதி ரேணுகா ரே: திரு. அவைத் தலைவரே! ஊகங்கள் செய்யப்படுகின்றன; அவதூறுகள் கூறப்படுகின்றன; இதனால் பொறுக்குக் குழுவின் உறுப்பினர்கள் மிக இடர்ப்பாடான நிலையில் வைக்கப்படுகின்றனர்; பொறுக்குக் குழுவில் நடந்த எல்லாவற்றையும் நாங்கள் வெளிக் கொண்டுவர வேண்டியிருக்கும்; இங்கு அவ்வாறு நாங்கள் செய்யக்கூடாது என்று கூறப்படுகிறது.

திரு. அவைத் தலைவர் : அமைதி, அமைதி; பொறுக்குக் குழு உறுப்பினர்களுக்கு எதிராக எந்த அவதூறும் கூறவேண்டாம் என மதிப்பிற்குரிய உறுப்பினரை வேண்டிக்கொள்கிறேன்; மசோதா எவ்வாறு மாற்றப்பட்டது என்பது பற்றி வாதங்களை அவர் முன் வைக்கட்டும்.

திரு. நசிருத்தீன் அகமது: ஒரு விஷயத்தை விளக்க தேவைப்பட்டாலன்றி மதிப்பிற்குரிய எந்த உறுப்பினர் மீதும் எந்த அவதூறும் கூறமாட்டேன். 30 கோடி மக்களின் விதியைப் பாதிக்கும் வகையில் ஏதாவது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டால், பொறுக்குக்

குழுவின் உறுப்பினர்கள் ஏதேனும் தவறு செய்தால் அப்பொழுது கண்ணியமான முறையில், கபடமற்ற முறையில் விமர்சனம் செய்வேன். அவையின் எந்த ஓர் உறுப்பினருக்கும் இந்த அளவு உரிமை வழங்கப்பட வேண்டும். நான் செய்வது தவறு என்றால் அதைத் திருத்திக்கொள்வேன். அவதூறு செய்வதற்கென்றே அவதூறு செய்ய மாட்டேன். மசோதாவின் நல்ல அம்சங்களைப் பாதிக்கும் சில தீவிர மாற்றங்களையும் தவறான நடைமுறைகளையும் எடுத்துக் காட்டுவதோடு நிறுத்திக் கொள்வேன். அதை விவாதிக்கும்போது தவிர்க்க முடியாதபடி பொறுக்குக் குழு உறுப்பினர்களை விமர்சிக்க வேண்டிவரும். பொறுக்குக் குழுவின் உறுப்பினர்கள் ஒரு விவா தத்தைக் கண்டு ஏன் பயப்பட வேண்டும்?

திருமதி ரேணுகா ரே: விவாதத்திற்கு நாங்கள் பயப்பட வில்லை. பொறுக்குக் குழுவில் என்ன நடந்தது என்பதை எடுத்துச் சொல்ல எங்களுக்கு உரிமை அளிக்கப்பட வேண்டும்.

திரு. நசிருத்தீன் அகமது: இது விஷயத்தில் பொறுக்குக் குழுவின் புனிதம் பல சமயங்களில் உடைக்கப்பட்டுள்ளது.

திரு. மகாவீர் தியாகி (ஐ.மா. : பொது) : இதில் புனிதம் எதுவும் இல்லை. இதை நாம் விவாதிக்கலாம்.

திரு. எல். கிருஷ்ணசாமி பாரதி: இது குறித்து விவாதிக்க நாங்கள் தயாராக இருக்கிறோம்.

திரு. மிகிர்லால் சட்டோபாத்யாயா (மே. வ. பொது) : இம்மாதிரி உரையாடல்கள் நடத்த உறுப்பினர்கள் அனுமதிக்கப்பட வேண்டுமா, ஐயா?

அவைத் தலைவர்: அமைதி, அமைதி, எல்லாவற்றையும் நான் பார்த்துக் கொண்டிருக்கிறேன். உரையாற்றுபவர் அவரது வாதத்தை தொடர்ந்த முன்வைக்க தயவு செய்து மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் அனுமதிப்பார்கள் என நம்புகிறேன்.

திரு. நசிருத்தீன் அகமது: குறிப்பிட்ட சில விஷயங்கள் ஏன் நடைபெற்றன என்பதை விளக்கிக் கூறும்படி திரு. துணைத் தலைவர் டாக்டர் அம்பேத்கரை நேற்று கேட்டுக் கொண்டார். அது, தமது

எதிரிகள் தமது நண்பர்களையும் பயன்படுத்தி ஒன்றுசேர்ந்து செய்த தனால் என்று டாக்டர் அம்பேத்கர் கூறினார். இது பொறுக்குக் குழுவின் இரகசியங்கள் என்று அழைக்கப்படுவதை வெளியிடுவ தாகாதா?

மாண்புமிகு டாக்டர் அம்பேத்கர்: மதிப்பிற்குரிய உறுப் பினரைக் குறுக்கீடு செய்ய நான் விரும்பியதே இல்லை. ஆனால் மசோதாவில் சில மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளதால் அது மறுபடியும் சுற்றுக்கு அனுப்ப வேண்டும் என்பது அவரது தீர்மானம் என்பதை தங்கள் கவனத்திற்கும் அவைத் தலைவர் கவனத்திற்கும் கொண்டு வருவது எனது கடமை என்று இப்பொழுது நினைக்கிறேன். அந்தத் தீர்மானத்தின் சாராம்சம் என்னவெனில், என்ன மாற்றங்கள் செய்யப் பட்டுள்ளன என்பதை எந்தவிதமான முன் விவாதமும் இல்லாமல், நேரடியாக எடுத்துக்காட்ட முற்படுவதுதான் எனக் கருதுகிறேன். இதை அவரிடமிருந்து தெரிந்துகொள்ளக் காத்துக் கொண்டிருந்தேன்.

திரு. நசிருத்தீன் அகமது: சம்பந்தப்படாத விஷயங்கள் எழுப்பப்பட்டவுடன் நான் செய்யவிருந்தது இதுவே.

பண்டிட் தாகூர்தாஸ் பர்கவா: ஓர் ஒழுங்குப் பிரச்சினை; இந்த கேள்வி இந்த அவை உறுப்பினர்களின் உரிமைகளைப் பாதிப்ப தாகும் என்று தாழ்மையுடன் கூறிக்கொள்கிறேன். நம்முன் உள்ள கேள்வி இதுதான்: நடைமுறை சம்பந்தமாக, பொறுக்குக் குழு உறுப் பினர்களின் தவறான நடத்தை, செயல்பாடு பற்றி விமர்சனம் செய்ய அவையின் உறுப்பினர்களுக்கு உரிமையில்லையா? ஒரு மசோதா பொறுக்குக் குழுவின் முன் வைக்கப்படுகிறது என்றும், குழு பரிசீலித்த அந்த மசோதா அதற்கு அனுப்பப்பட்டதல்ல என்றும் மற்றொரு மசோதா மாற்றீடு செய்யப்பட்டுள்ளது என்றும் வைத்துக் கொள் வோம். இது பற்றிக் கூற அவையின் உறுப்பினர்கள் உரிமை பெற்றி ருக்கவில்லையா? பொறுக்குக் குழுவின் இந்தச் செயலை அவையின் உறுப்பினர்கள் விமர்சனம் செய்ய முடியாதா? இது பற்றித் தங்களது தீர்ப்பை வழங்கலாம். பொறுக்குக் குழுவில் என்ன நடந்திருந்தாலும் அதை வெளிப்படுத்துவதை அனுமதிக்காமல் இருக்கலாம். ஆனால் நடவடிக்கைகள் எம்முறையில் நடத்தப்பட்டன என்பது விமர்சனத் திற்கு உட்பட வேண்டியதாகும், இல்லையெனில், ஒரு மசோதா மீது அவையின் உறுப்பினர்களுக்கு எவ்விதமான கட்டுப்பாடும் இல்லாமல் போகும். ஒரு மசோதா அவையில் அறிமுகப்படுத்தப்பட்டதும், அது

அவையின் சொத்தாகிவிடுகிறது; பொறுக்குக் குழுவின் முறையற்ற செயல்களைச் சுட்டிக்காட்ட ஒவ்வொரு உறுப்பினருக்கும் உரிமை உண்டு.

அவைத் தலைவர்: இது ஒழுங்குப் பிரச்னை அல்ல. பேசுபவர் தொடரட்டும்.

மாண்புமிகு திரு. கே சந்தானம் (ரயில்வே, போக்குவரத்து இணை அமைச்சர்) : பொறுக்குக் குழுவை விமர்சிக்கவோ அல்லது கண்டிக்கவோ கூட அவைக்கு உரிமை இருக்கிறது. ஆனால், அதன் முன்னால் உள்ள மசோதா, அதன் பரிசீலனைக்கு அனுப்பப்பட்ட மசோதா அல்ல என்று கூற அவைக்கு உரிமை கிடையாது என்று நான் கூறலாமா? பொறுக்குக் குழுவிற்கு அனுப்பப்பட்ட மசோதா இது அல்ல என்று அவை கூற முடியாது. தனது கடமையை பொறுக்குக் குழு செய்யவில்லை என்று அதை அவை கண்டிக்கலாம். நம் முன்னால் அறிமுகப்படுத்தப்பட்டு பரிசீலனையில் இருக்கும் மசோதாவை அதற்கு அறிமுகப்படுத்தப்பட்ட மசோதா அல்ல என்று நம்மால் கூற முடியாது.

திரு. நசிருத்தீன் அகமது : பொறுக்குக் குழுவைக் கண்டிப்பதே என் நோக்கம் : இதற்கு மேல் எதுவும் இல்லை என்று பணிவுடன் கூறிக்கொள்கிறேன்.

அவைத் தலைவர்: பொறுக்குக் குழுவிலிருந்து வெளிவந்த மசோதாவை மதிப்பிற்குரிய உறுப்பினர் விமர்சனம் செய்வதற்கும், அதில் செய்யப்பட்டுள்ள மாற்றங்களைச் சுட்டிக் காட்டுவதற்கும் அவருக்கு முழு உரிமை உண்டு. ஆனால் மசோதாவில் செய்யப்பட்டுள்ள மாற்றங்கள் பற்றிய தமது கருத்துக்களை வெளியிடுவதோடு நிறுத்திக் கொள்ள வேண்டும்.

திரு. நசிருத்தீன் அகமது: சில மாற்றங்கள் குறிப்பாக சில முக்கிய மாற்றங்கள் செய்யப்பட்டதை அவைக்கு சமர்ப்பிக்கப் போகிறேன்.

மாண்புமிகு டாக்டர் பி.ஆர். அம்பேத்கர்: அவற்றைச் சுட்டிக்காண்பியுங்கள். செய்யப்பட்ட மாற்றங்கள் பற்றி தெரிந்து கொள்ள காத்திருக்கிறேன். மதிப்பிற்குரிய உறுப்பினர் தமக்குத்

தேவையான நேரத்தை எடுத்துக் கொள்ளலாம். மாற்றங்கள் எவை என்பதை அவர் நமக்குச் சொல்லட்டும்.

திரு. நசிருத்தீன் அகமது: எனக்கே உரிய முறையில் தொடர்வேன்.

மாண்புமிகு டாக்டர் பி.ஆர். அம்பேத்கர்: அவர் அம் மாதிரி செய்ய முடியாது.

திரு. நசிருத்தீன் அகமது : மூல மசோதா திரு. ஜோகேந்திர நாத் மண்டலால் அறிமுகப்படுத்தப்பட்டது. அச்சிட்ட தேதி 1946 ஆகஸ்டு 1-ம் தேதி என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. பொறுக்குக் குழுவிற்கு அனுப்பப்பட்ட மசோதா இதுவே. 1948 ஆகஸ்டு 16-ஆம் தேதி அச்சிடப்பட்ட மசோதா பொறுக்குக் குழுவிலிருந்து அறிக்கையுடன் வெளிவந்தது.

மாண்புமிகு டாக்டர் பி.ஆர். அம்பேத்கர்: சரி, இதில் விஷயம் என்ன?

திரு. நசிருத்தீன் அகமது : அதற்கு நான் வருகிறேன். இரண்டு மசோதாக்களுக்குமிடையே தீவிரமான முரண்பாடுகள் உள்ளன.

மாண்புமிகு டாக்டர் பி.ஆர். அம்பேத்கர்: அதைத் தெரிந்து கொள்ளத்தான் நாங்கள் காத்திருக்கிறோம்.

திரு. நசிருத்தீன் அகமது: மிகவும் நன்றி. சரி இனி விஷயத்துக்கு வருகிறேன். மூல மசோதாவுக்கும் பொறுக்குக் குழுவின் அறிக்கையுடன் இணைக்கப்பட்ட மசோதாவுக்கும் இடையே முக்கியமான முரண்பாடுகள் உள்ளன. (குறுக்கீடுகள்). என்னுடைய உரையை விரைவிலேயே முடித்துக்கொள்ளச் செய்யும் வழியல்ல இது. இந்த இரு மசோதாக்களுக்கும் இடையே பெரிதும் பயனுள்ள ஓர் ஆவணம் வெளிவந்தது. அது இலாகாவின் வரைவு; அது 1948 ஜூலை 17-ல் அச்சிடப்பட்டது. இரண்டுக்கும் இடையே வந்தது இந்த வரைவு மசோதா. இந்த அவையில் எழுப்பப்பட்ட எல்லா ஒழுங்குப் பிரச்னைகளும் விவாதிக்கப்பட்டது இந்த இலாகாவின் வரைவு பற்றியதே. இப்பொழுது நடைபெறும் விவாதத்திலும், மாண்புமிகு சட்ட அமைச்சரை நான் சரியாகப் புரிந்து கொண்டிருந்தேனாகில், இந்த இலாகா மசோதாவைப் பற்றி அவர் எதுவும் குறிப்பிடவில்லை,

ஆனால் எல்லா மாற்றங்களும் பொறுக்குக் குழுவால் செய்யப்பட்டவையே அன்றி தம்மால் அல்ல என்று கூறினார். நான் 1948 ஜூலை 17 தேதியிட்ட மசோதாவைக் குறிப்பிடுகிறேன்.

திரு. மகாவீர் தியாகி : பொறுக்குக் குழுவின் கூட்டத்திற்கு முந்திய தேதியாகும் அது.

திரு. நசிருத்தீன் அகமது : அச்சிடப்பட்ட தேதி அதாவது ஜூலை 1948, பொறுக்குக் குழு முதல் முறை கூடுவதற்கு அழைக்கப் பட்ட தேதிக்கு முன்னால் இந்த மசோதா.....

மாண்புமிகு டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் : அது அவ்வாறு தான் இருக்க முடியும் என்று கூறி மதிப்பிற்குரிய எனது நண்பரின் வாதத்தைச் சுருக்க விரும்புகிறேன். மறுவரைவு பொறுக்குக் குழுக் கூட்டத்திற்கு ஒரு மாதத்திற்கு முன்பு அனுப்பப்பட்டது.

திரு. நசிருத்தீன் அகமது : நான் குறிப்பிட்டுக் கொண்டிருந்த விஷயமும் அதுதான். இதனை ஒப்புக்கொண்டதற்காக நன்றி கூறக் கடமைப்பட்டு இருக்கிறேன். பொறுக்குக் குழு கூடுவதற்கு முன் இந்த வரைவு பூர்த்தியாக்கப்பட்டிருந்தது. அந்தக் கட்டத்தில் இது பற்றி அவைக்கு தெரிவிக்கப்படவில்லை என்று கூற விரும்புகிறேன். மூல மசோதாவை முழுமையாக மாற்ற சபையின் அங்கீகாரம் பெறப் படவில்லை.

திரு. மகாவீர் தியாகி: நடுவில் இருப்பது அறிக்கையோடு இணைக்கப்பட்டதுடன் ஒத்ததாக இருந்ததா?

திரு. நசிருத்தீன் அகமது: சில மாற்றங்கள் இருந்தன. பொறுக்குக் குழு ஒரு சில மாற்றங்களையே செய்தது; ஆனால் முக்கிய மான மாற்றங்கள் இலாகாவால் செய்யப்பட்டது; பொறுக்குக் குழு அதை ஒருபோதும் அறிந்திருக்கவில்லை.

திருமதி ஜி. துர்க்காபாய் : மாற்றங்களைக் கொண்டுவந்தது பொறுக்குக் குழு, இலாகா அல்ல.

திரு. நசிருத்தீன் அகமது : மிக முக்கியமான விஷயம் என்ன வெனில், இலாகாவின் வரைவை அவர்கள் ஒருபோதும் விரிவாக

பரிசிலனை செய்யவில்லை. மாறாக பொறுக்குக் குழுவிற்கு அனுப்பப் பட்ட ஒரு மசோதா முற்றிலும் மாற்றி வரையப்பட்ட மற்றொன்றால் ஈடு செய்யப்பட்டு அதனுடன் சேர்த்து வைக்கப்பட்டது. இதுதான் நடந்த உண்மை. இந்தியாவின் அல்லது இதர நாடுகளின் சட்ட மியற்றும் வரலாற்றில் இதுபோன்று நடந்திருப்பதற்கான ஒரே ஓர் உதாரணத்தையாவது மாண்புமிகு என் நண்பர் திரு. சந்தானம் காட்ட முடியுமா?

மாண்புமிகு திரு. கே. சந்தானம் : பல பொறுக்குக் குழுக் களில் நான் இருந்திருக்கிறேன். பல சந்தர்ப்பங்களில், மூல மசோதா பொறுக்குக் குழுவால் முற்றிலுமாக மறு வரைவு செய்யப்பட்டிருக் கிறது.

திரு. நசிருத்தீன் அகமது : அது வேறு விஷயம்.

அவைத் தலைவர் : மாண்புமிகு சட்ட அமைச்சர் அளித்த வரைவையும் சேர்த்து பொறுக்குக் குழுவால் மூலமசோதா பரிசீலிக்கப் பட்டது என்று அவைத்தலைவர் தீர்ப்பு அளித்துள்ளார் என்பதை மதிப்பிற்குரிய உறுப்பினருக்கு நான் சுட்டிக்காட்டலாமா? அந்த முடிவின் காரணத்தால், பொறுக்குக் குழுவில் மூல மசோதா எவ்வாறு மாற்றம் அடைந்துள்ளது என்ற விஷயத்தோடு அவரது வாதத்தைக் கட்டுப்படுத்திக் கொள்ள வேண்டும். பொறுக்குக் குழுவில் என்ன நடந்தது என்பன போன்ற மற்ற விஷயங்கள் உறுப்பினரின் உரிமை எல் லைக்கு அப்பாற்பட்டவை.

திரு. நசிருத்தீன் அகமது : பொறுக்குக் குழு மூல மசோதாவை யும் இலாகா வரைவையும் பரிசீலித்து, இந்த முடிவுக்கு வந்துள்ளது என எடுத்துக் கொண்டாலும், மிகவும் கவனமற்ற முறையிலும் மோசமான முறையிலும் இவ்வாறு செய்யப்பட்டுள்ளது என்பதுதான் எனது வாதம். மூல மசோதாவையும் இலாகா வரைவையும் பரிசீலித்து இந்த முடிவுக்கு வந்ததாகக் கூறப்பட்டாலும் இந்த முடிவு பெரிதும் கவனமற்ற முறையிலும் அவசர கோலத்தில் அறைகுறையாகவும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இலாகா மசோதாவில் அறிமுகப்படுத்தப் பட்டுள்ள தீவிர மாற்றங்கள் அவர்களைப் பெரிதும் கவர்ந்திருக்கும் என்று நினைக்கிறேன்; அவர்கள் முன்வைக்கப்பட்ட மாற்றியமைக்கப் பட்ட வரைவின், சௌகரியமாக தயாராக வைக்கப்பட்ட வரைவின் மயக்கும் செல்வாக்கின் கீழ் முழுமையாக அவர்கள் இருந்திருக்க

வேண்டும். பொறுக்குக் குழு உறுப்பினர்கள்பால் உள இயல்பான தாக்கத்தை அது ஏற்படுத்தியிருக்க வேண்டும்; அதனால் பொறுக்குக் குழு, அவர்களுக்கு உரிமை இருந்த போதிலும், பெருமளவில் இலாகா வரைவை சார்ந்திருந்தார்கள்; இது இறுதி மசோதாவின் நல்ல அம்சங் களைப் பாதிக்கிறது - சட்ட ரீதியாக இல்லாவிட்டாலும்.

நான் கூறுவது என்னவெனில், ஏராளமான மாற்றங்களைச் செய்ய பொறுக்குக் குழுவிற்கு உரிமை இருக்கிறது; ஆனால், முற்றிலும் மாற்றப்பட்ட ஒரு புது மசோதா பொறுக்குக் குழுவின் கரங்களில் வைக்கப்படுகிறது; பிறகு அந்த புது மசோதாவைப் பரிசீலிப்பார்கள்; இம்மாதிரி ஒருபோதும் நிகழ்ந்ததில்லை. சம்பிரதாயப்படி அவர் களிடம் மூல மசோதா இருந்தாலும், புது மசோதாவை பிரிவு பிரிவாக அவர்கள் பரிசீலித்தனர். அது தகுதியைப் பொறுத்த விஷயம். இலாகா வின் மசோதா புகுத்தப்பட்டது, மசோதாவை நியாயமாகவும் பாரபட்சமற்ற முறையிலும் பரிசீலிப்பதில் ஒருதலைச் சார்பை ஏற்படுத்தியது. மூல மசோதா, பிரிவு, பிரிவாகப் பரிசீலிக்கப்பட்டு, மாற்றங்கள் படிப்படியாக மூல மசோதா வாசகங்களில் கொண்டு வந்திருக்கப்பட வேண்டும். அதற்குப் பதிலாக, இலாகாவின் மசோதா அவசியமாக எடுத்துக் கொள்ளப்பட்டது - ஓரத்தில் மூல மசோதாவின் பிரிவுகள்பற்றி குறிப்புகள் அளிக்கப்பட்டிருந்த போதிலும் பொறுக்குக் குழுவின் உறுப்பினர்களுக்கு எந்த அவ மரியாதையும் இல்லாமல், இலாகாவின் மசோதாவில் எவ்வளவு ஏராளமான மாற்றங்கள் செய்யப்பட்டன என்பதை ஓர் உறுப்பினரால் சரியாகப் பார்க்க முடியாது என கூறுகிறேன் நான்; இது இறுதி மசோதாவின் தகுதிகளைப் பாதித்துள்ளது என்று நான் கூற விரும்பு கிறேன். பொறுக்குக் குழு உறுப்பினர்களுக்கு எந்த மாற்றங்களைச் செய்யவோ அல்லது இலாகா மசோதாவை ஏற்றுக் கொள்ளவோ அல்லது மூல மசோதாவை பரிசீலனை செய்யவோ உரிமை இல்லை என்று நான் ஒருபோதும் கூறவில்லை. மரியாதையுடன் மீண்டும் கூறுகிறேன், மேலெழுந்த வாரியாக பணி செய்யப்பட்டது என்று கூறுகிறேன்; பொறுக்குக் குழுவின் பணி இலாகா வரைவுடன் சார்ந்து இருந்திருக்க வேண்டும். இலாகாவின் வரைவு பரிசீலிக்கப்பட்டு, இப்போதைய மசோதாவின் தகுதிகளை பரிசீலிக்க வேண்டும்.

திரு. எல். கிருஷ்ணசாமி பாரதி : வேறுபடும் எல்லா விஷ யங்களையும் நாம் பார்க்கலாம்.

திரு. நசிருத்தீன் அகமது : சட்டமியற்றுதல் முழுவதுமே பிழையுடன் துவங்கியது என்று பணிவுடன் கூறுகிறேன். பிழையிலிருந்து பிழைக்கு, மிகப் பெரிய பிழைக்கு நாம் செல்லுகிறோம். தவறு முதலில் 1937-ல் ஏற்பட்டது. பின்னர் ஒரு தவறு மற்றொரு தவறுக்கு இட்டுச் சென்றது; அந்தத் தவறு மற்ற தவறுகளுக்கு இட்டுச் சென்றது; இந்தத் தவறுகள் வழியில் பொறுக்குக் குழு சென்றது; இறுதியாக.... (குறுக்கீடு). நான் பேசும்போது இவ்வாறு குறுக்கீடு செய்யப்பட வேண்டுமா என்று திரு. கிருஷ்ணசுவாமி பாரதியை மிக அக்கறையுடன் கேட்கிறேன்.

திரு. அவைத் தலைவர் : அவைத் தலைவரை நோக்கி மதிப்பிற்குரிய உறுப்பினர் பேசினால், குறுக்கீடு மிகக் குறைவாக இருக்குமென நினைக்கிறேன்.

திரு. நசிருத்தீன் அகமது: 1937-ம் ஆண்டில் ஒரு மசோதா சட்டமாக நிறைவேற்றப்பட்டது. அது திருமணமான இந்து மகளிருக்கு சொத்தில் உரிமை வழங்கும் சட்டம், 1937 என்பதாகும் என்பதையும் தாங்கள் பரிசீலிக்கும்படி கேட்டுக் கொள்கிறேன். அது அவசரப்பட்டு இயற்றப்பட்ட சட்டம் எனக் கூறுகிறேன். அது நன்கு ஜீரணிக்கப்படாத, சரியாகப் புரிந்து கொள்ளப்படாத சட்டத்தை தன்னுள் உட்கொண்டிருந்தது; அதுதான் இந்தத் துன்பத்திற்கெல்லாம் இட்டுச் சென்றது. உண்மையில் இந்த மசோதாவைத் தயாரித்தவர் டாக்டர் தேஷ்முக். டாக்டர் தேஷ்முக் - நமது இப்போதைய டாக்டர் தேஷ்முக் அல்ல என்பதை அறிய மகிழ்ச்சியடைகிறேன் - இந்து சமுதாயத்திற்கு நல்லது செய்வதாக நினைத்துக் கொண்டு இந்த மசோதாவை அறிமுகப்படுத்தினார். இந்த மசோதாவின் விளைவு என்னவெனில், மரபுரிமைச் சட்டத்தில் சில மாற்றங்களைக் கொண்டு வர வேண்டியிருந்தது. இந்துச் சட்டத்தின்படி நான் அதைப் புரிந்து கொண்டபடி - ஒரு மனிதன் இறந்தால், அவருடைய வாரிசுகள் மகன், பேரன், கொள்ளுப்பேரன் ஆவர். மகன் இருக்கும்போது ஒரு மறைந்த மகனின் மகன் சொத்துரிமை பெறுகிறான்; தனது மறைந்த தந்தையை பேரன் பிரதிநிதித்துவப்படுத்தி தன் தந்தையின் பங்கை எடுத்துக் கொள்கிறான். எனவே இம்மாதிரியாக, மகன், பேரன், கொள்ளுப் பேரன் ஆக மூன்று தலைமுறையினர் சொத்தை வாரிசு உரிமையாகப் பெறுகின்றனர். விதவைக்கு திட்டவட்டமான அந்தஸ்தையும், திட்டவட்டமான உரிமையையும் அளிக்க வேண்டும் என்ற கருத்தால் டாக்டர் தேஷ்முக் உந்தப்பட்டார். எனவே அவர் மரபுவழி முன்னவரின்

விதவையை ஒரு பங்கு பெறுபவராக்கினார்; மரபுவழி முன்னவரின் விதவை மட்டுமின்றி, இறந்துபோன மகளின் விதவை, இறந்துபோன பேரனின் விதவை, இறந்துபோன கொள்ளுப்பேரனின் விதவை ஆகியோரையும் பங்கு பெறுபவர் ஆக்கினார். பங்குதாரர்கள் வட்டத் திற்குள் கூட அவர்களும் உட்படுத்தப்பட்டனர். அந்த மசோதாவின் கர்த்தா மிக உயர்ந்த தேசபக்த உணர்வும் சமுதாய நல உணர்வும் கொண்டிருந்தாலும், அது சரியாகப் பரிசீலிக்கப்படாதது என்று கூறு கிறேன். மேலும் ....

மாண்புமிகு திரு. கே. சந்தானம்: மிகச் சிறந்த இந்துச் சட்ட நிபுணரான அமரர் சர் என்.என். சர்க்காரால் இந்த மசோதா ஏற்றுக் கொள்ளப்பட்டது என்பதைத் தெரிவிக்க மதிப்பிற்குரிய எனது நண்பர் விரும்புவாரா?

திரு. நசிருத்தீன் அகமது: நான் எடுத்துக் காட்ட விரும்பு கிறேன்: அவர் மட்டுமல்ல நானும் ஏற்றுக் கொண்ட காலம் இருந்தது (குறுக்கீடு). அவையின் கட்டுப்பாட்டில் நான் இருக்கிறேன்.

அவைத் தலைவர் : இந்துச் சட்டத்தின் திருத்தங்களின் வரலாறு பற்றி மதிப்பிற்குரிய உறுப்பினர் எடுத்துக் கூறுகிறார்.

திரு. நசிருத்தீன் அகமது: இந்து திருமணமான மகளிர் சொத்துரிமைச் சட்டம் முதல் தவறு எனக் கூறுகிறேன், அதற்குள் மற்ற தவறுகளின் விதைகள் இருந்தன என்றும் இந்த மசோதாவில் அவை வந்து முடிந்துள்ளன என்றும் கூறுகிறேன்.

திருமதி ஜி. துர்க்காபாய்: அன்று நிலவிய சட்டப்பேரவையை இழிவுபடுத்துவதாகும் இது.

திரு. நசிருத்தீன் அகமது: சட்டப்பேரவையே தவறை ஒத்துக் கொண்டது. அது ஒரு தவறு என்று சட்டப் பேரவையே ஏற்றுக் கொண்டது. அது தவறு என்று ஒப்புக்கொண்ட சட்டப்பேரவையின் வாசகங்களை மேற்கோளாக என்னால் காண்பிக்க முடியும். (குறுக்கீடு).

அவைத் தலைவர் : அமைதி, அமைதி.

திரு. நசிருத்தீன் அகமது : தவறு எவ்வாறு ஏற்பட்டதென்று

எடுத்துக் கூற விரும்புகிறேன். கொள்ளுப்பேரன்.... மறைந்த மகனின், பேரன், விதவைக்கும் பங்கு அளித்தது மகளின் நிலை முற்றிலும் நிச்சயமற்றதாகிவிட்டது. அந்த சமயத்தில், இந்தச் சட்டத்தின்படி மகளின் நிலை என்ன என்பதை யாரும் தெரிந்திருக்கவில்லை.

மாண்புமிகு டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் : மகள் என்ற பதத்தை எடுத்துவிட ஒப்புக் கொண்டால்தான் அரசாங்கம் சட்டம் இயற்றும் நடவடிக்கையை ஆதரிக்கும் என்று கூறி எனது நண்பர் டாக்டர் தேஷ்முக்கிடமிருந்து திரு. என்.என். சர்க்கார் வாக்குறுதி பெற்றார். அதன்படி 'மகள்' என்ற வார்த்தையை எடுத்துவிட அவர் (டாக்டர்தேஷ்முக்) ஒப்புக்கொண்டார்.

திரு. நசிருத்தீன் அகமது : மாண்புமிகு டாக்டர் அம்பேத்கருக்குத் தெரிந்த அளவு அந்தச் சட்டத்தின் வரலாறு பற்றி நான் அறிவேன்.

திரு. அவைத் தலைவர் : மதிப்பிற்குரிய உறுப்பினர் அதிக நேரம் எடுத்துக்கொள்ளப் போகிறாரா?

திரு. நசிருத்தீன் அகமது : ஆம், ஐயா!

திரு. அவைத் தலைவர் : அப்படியாயின், அவர் தமது உரையைப் பின்பு தொடரலாம். இப்பொழுது நாம் ஒத்திவைப்போம்.

(சட்டப் பேரவை, 1945 மார்ச் 3-ம் தேதி செவ்வாய்க் கிழமை பத்தே முக்கால் மணிக்கு ஒத்திவைக்கப்பட்டது.)

*இந்துச் சட்டத் தொகுப்பு - தொடர்கிறது.

திரு. துணை அவைத் தலைவர்: கீழ்க்கண்ட குழுக்களுக்கு வேட்பு மனுக்கள் பெறுவதற்கும், தேவைப்பட்டால் தேர்தல் நடத்துவதற்கும் பின்வரும் தேதிகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன என்று மதிப்பிற்குரிய உறுப்பினர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்:

	வேட்பு மனுக்கான தேதி	தேர்தலுக்கான தேதி
1. தொழில் நுட்பக் கல்விக்கான அகில இந்தியக் கவுன்சில் 2. ரயில்வே கன்வென்சன் வேலை செய்வது பற்றி திறன் ஆய்வுக்கான குழு	2-4-49	5-4-49

இதற்காக குறிப்பிடப்பட்டுள்ள தேதியில் மதியம் 12 மணி வரை விளம்பர அலுவலகத்தில் வேட்பு மனுக்கள் பெறப்படும். ஒற்றை மாற்று வாக்கு சீட்டு முறைப்படி தேர்தல்கள் கவுன்சில் மாளிகையின் துணைச் செயலாளர் அறையில் (எண். 21) காலை 10-30 மணி முதல் பிற்பகல் 1 மணி வரை நடைபெறும்.

இந்துச் சட்டத் தொகுப்பு - தொடர்கிறது

திரு. துணை அவைத் தலைவர் : 1948 ஆகஸ்டு 31-ல் மாண்புமிகு டாக்டர் பி.ஆர். அம்பேத்கரால் முன் மொழியப்பட்ட கீழ்க்கண்ட தீர்மானத்தை மேற்கொண்டும் பரிசீலிக்க அவை இப்பொழுது தொடர்கிறது :-

> "இந்துச் சட்டத்தின் சில கிளைகளை திருத்தவும், தொகுக்கவும் செய்யும் மசோதாவை பொறுக்குக் குழு அறிவித்துள்ளபடி பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்."

பண்டிட் லட்சுமி காந்த மைத்ரா : (மேற்கு வங்காளம் - பொது) : ஐயா, மதிப்பிற்குரிய எனது நண்பர் திரு. நசிருத்தீன் அகமதுவை அவரது உரையை தொடரும்படி நீங்கள் அழைப்பதற்கு முன்,

---

★ அ.நி.ச. (சட்டப் பேரவை) விவாதங்கள், தொகுதி III, பாகம் II, 1949 ஏப்ரல் 1, பக். 2211-43.

வழக்கமற்ற முறையில் இந்தத் தீர்மானம் அவ்வப்போது அவை முன் கொண்டுவரப்படுவதை தங்கள் கவனத்திற்கு மீண்டும் கொண்டு வர வேண்டுமென்ற கட்டாயத்திற்கு ஆளாகியிருக்கிறேன். நேற்று வரை இந்த மசோதா மீண்டும் பரிசீலனைக்கு வருகிறது என்பதை நம்மில் மிகச் சிலரே அறிந்திருந்தனர் என நினைக்கிறேன். உண்மை என்னவெனில், அவசரமான அரசாங்க அலுவல்கள் அதிகமாக இருந்ததால் அதற்காக எந்த நாளையும் நிர்ணயிக்க முடியவில்லை என்று அவை கருதியது: இந்த விஷயம் மீதான விவாதத்தில் கலந்து கொள்வதற்காக இங்கு வந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள், இந்தக் கூட்டத் தொடரில் இந்த விஷயம் எடுத்துக் கொள்ளப்படப் போவ தில்லை என்ற கருத்து நிலவியதால், பல உறுப்பினர்கள் திரும்பிச் சென்றனர். அவையில் அதிக நேரம் பேச விரும்பிய, பண்டிட் கோவிந்த மாளவியா இந்த விஷயம் வரப்போவதில்லை என்று அவருக்குக் கூறப்பட்டபோது....

மதிப்பிற்குரிய பல உறுப்பினர்கள்: யாரால் அவ்வாறு கூறப்பட்டது?

பண்டிட் லட்சுமி காந்த மைத்ரா: இதைப் பெரும்பாலான வர்கள் அறிவர். இது இந்த அவையின் ஒரு சாதாரண அலுவலல்ல. அரசாங்கத்தின் எந்த ஓர் உறுப்பினரும் எழுந்து, "இது விவாதிக்கப் படும் என்று நான் உறுதியளிக்கிறேன்." என்று கூறுவதில்லை. கட்சிப் பேச்சுக்களிலும் மற்ற இடத்திலும் ஒவ்வொருவரும் தெரிந்து கொண்டது இந்தக் கூட்டத் தொடரில் இது வரப்போவதில்லை என்பதேயாகும். அப்படி இருக்கும்போது, அது இப்பொழுது எடுத்துக் கொள்ளப்பட்டால் அவைக்கு மரியாதை கொடுத்ததாகாது. இந்த மசோதா அத்தகைய கருத்து வேறுபாடுகள் கொண்ட தன்மையது என எண்ணுகிறேன்; இப்பொழுது செய்யப்படுவதுபோல - பல்வேறு கட்டங்களில் திரும்பத்திரும்பச் செய்யப்பட்டது போல் - இது தொடரப் படுவதை நீங்கள் அனுமதிக்கக்கூடாது. அவையின் முன் நான் வைக்கும் கருத்தை ஐயா, பரிசீலிக்க வேண்டியது தாங்களே. அவையில் உறுப்பினர் எண்ணிக்கை குறைவாக உள்ளது; வரவு செலவு அறிக்கை யின் மீதான விவாதம் முழுவதும் முடிந்துவிட்டது; மிகப் பெரும் பான்மையான உறுப்பினர்கள் இத்தகைய கருத்து கொண்டு இருப்பது நியாயமே. மாற்றம் பற்றிய எண்ணம் எதுவும் அவர்களுக்கு இல்லாத போது இந்தக் கடைசிக் கட்டத்தில் திடீரென மாற்றம் கொண்டுவந்து ஆச்சரியப்படுத்துவது நியாயமாகாது எனக் கருதுகிறேன்.

மதிப்பிற்குரிய ஓர் உறுப்பினர் : ஐயா, இதில் தங்கள் முடிவை நாங்கள் எதிர்பார்க்கிறோம்.

துணை அவைத் தலைவர்: ஆனால், இதில் ஒழுங்குப் பிரச்சினை எதுவுமில்லை.

திரு. மகாவீர் தியாகி (ஐ.மா.: பொது) : அப்படியானால், எவ்வளவு நேரத்திற்கு விவாதங்கள் நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது என்ற தகவலை அறிய விரும்புகிறேன். இந்து சட்டத் தொகுப்பு மசோதா பரிசீலனைக்கு எப்பொழுது வருகிறது என்று தெரிவிக்கும்படி என் மாகாணத்திலுள்ள எனது நண்பர்கள் என்னைக் கேட்டுக் கொண்டனர். இன்றா, நாளையா அல்லது வேறு ஒரு நாளா அல்லது கூட்டுத் தொடர் முடியும்போதா எப்போது மசோதா பரிசீலிக்கப்படும் என்று எனக்குத் தெரியாததால், அவர்களுக்கு நான் தகவல் கொடுக்க முடியவில்லை. எனவே, ஐயா, இந்த மசோதாவை எவ்வளவு நேரம் நாம் விவாதிக்கப்போகிறோம் என்று அவைக்குச் சொல்ல தங்களால் முடியுமா; நேரம் இருந்தால், நான் அவர்களுக்குத் தெரிவிக்க முயலலாம்.

திரு. துணை அவைத் தலைவர் : பண்டிட் மைத்ரா என்ன சொன்னாரோ அதில் எனக்கு முழு உடன்பாடு உண்டு; ஆனால் இதற்கு எந்த வழியையும் என்னால் காண முடியவில்லை. எனக்குத் தெரிந்தவரை - இந்தச் சட்டப் பேரவையில் பல ஆண்டுகள் இருந்திருக்கிறேன் - பல நபர்கள் அக்கறை கொண்டுள்ள இத்தகைய முக்கியத்துவம் வாய்ந்த எந்த விஷயமும் எடுத்துக் கொள்ளப்படும்போது, அடுத்த வாரத்திற்கான நிகழ்ச்சி நிரல் முந்திய வெள்ளியன்றாவது, படிக்கப்படும். அத்தகைய நடைமுறைக்குத்தான் நான் பழக்கப்பட்டிருக்கிறேன். இந்த மசோதாவுக்கு நேரம் இருக்கும் என்று எதிர்பார்க்கவில்லை என்பது தெளிவு; ஆனால், ஒரு நாள் நீட்டிக்கப்பட்ட பொழுது இன்றைக்கும் நாளைக்கும் நேரம் இருப்பது தெரிய வந்து நிகழ்ச்சி நிரலில் சேர்க்கப்பட்டுள்ளது. அதனால்தான் முன் அறிவிப்பு கொடுக்க முடியவில்லை. மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் தந்திகள் முதலியவற்றின் மூலம் இதர உறுப்பினர்களை வரவழைப்பதற்கு இந்த வாய்ப்பினைப் பயன்படுத்திக்கொள்வார்கள் என நம்புகிறேன். எனவே திரு. தியாகியைப் பொறுத்தவரை, வெளியில் இருக்கும் மற்ற உறுப்பினர்கள் அவை நடவடிக்கைகளில் அக்கறை கொண்டிருக்கிறார்கள் என்று அவர் நினைத்தால், அவை நடைவடிக்கைகள் வானொலியில் இன்று மாலையோ அல்லது நாளைக்காலையோ ஒலிபரப்பப்படும்; அப்பொழுது அதுபற்றி அவர்கள் அறிந்துகொள்வார்கள்.

மதிப்பிற்குரிய ஓர் உறுப்பினர் : அவர்கள் நாளைக் காலை எப்படி வரமுடியும்?

திரு. துணை அவைத் தலைவர் : அவர்கள் விமானத்தில் வர முடியலாம். அவர்கள் எவ்வாறு வரமுடியும் என்பது பற்றி திரு. அவைத் தலைவர் முடிவு செய்ய முடியாது. என்னால் கூற முடிவது எல்லாம் இத்தன்மை வாய்ந்த ஒரு முக்கியமான விஷயத்தில், அரசாங்கம் முறையான அறிவிப்புக் கொடுத்திருக்க வேண்டும். ஏனென்றால் பொது மக்கள் இதில் மிகுந்த அக்கறை கொண்டுள்ளனர். மாகாணங் களிலிருந்தும் சமஸ்தானங்களிலிருந்தும் பெரும் எண்ணிக்கையில் உறுப்பினர்கள் இங்கு இல்லை. அவ்வாறு அவர்கள் இருந்திருந் தாலும் திடீர் அறிவிப்பில் எல்லா நூல்களையும் அவர்கள் ஒவ்வொரு வரும் படிப்பார்ளென்றோ, பயன்படுத்த எல்லா தகவல்களையும் வைத்திருப்பார்களென்றோ எதிர் பார்க்க முடியாது. இவை பாதகமான அம்சங்கள்; ஆனால் மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் சந்தர்ப்பத்தை அதிகப்பட்சம் பயன்படுத்துவர் என உறுதியாக நம்புகிறேன். விவாதம் எவ்வளவு நேரம் நடக்குமென்று - இன்று மாலையே முடிவுறலாம் அல்லது நாளை வரை நடைபெறலாம் - யாரும் உத்திரவாதம் அளிக்க முடியாது.

திரு. டி.ஏ. ராமலிங்கம் செட்டியார் (சென்னை : பொது) : இந்த மசோதாவுக்கு நிகழ்ச்சி நிரல் யாது?

திரு. துணை அவைத்தலைவர் : அது முற்றிலுமாக அவை யின் பொறுப்பு, நாம் நிகழ்ச்சி நிரலை வைத்துக் கொள்ள முடியுமென நான் நினைக்கவில்லை. விவாதத்தைத் தொடர்வது அவசியமா என்பதை பார்த்துக் கொள்ள வேண்டியது அவைதான்; போதுமான விவாதம் நடந்தால் எவ்வளவு சீக்கிரம் முடியுமோ அவ்வளவு சீக்கிரம் முடிக்கலாம்.

திரு. மகாவீர் தியாகி : ஐயா, கேள்வியை வேறு முறையில் முன் வைக்கிறேன். அரசாங்கத்திற்கு வேறு எந்த மசோதாவும் இந்த கூட்டத் தொடரில் பரிசீலனைக்கு இருக்கிறதா அல்லது நம் முன் உள்ள ஒரே பணி இந்த மசோதா மட்டுமா என்பதை நான் அறிந்து கொள்ளலாமா? அப்போது இந்த மசோதா விவாதம் எத்தனை நாட்கள் நடைபெறும் என்று என்னால் முடிவு செய்ய முடியும்.

துணை அவைத் தலைவர்: இது சம்பந்தமான நிகழ்ச்சி நிரலை உறுப்பினர் பார்பாரேயாகில், அலுவல்கள் மிக அதிகம் இருப்பதைத் தெரிந்து கொள்வார். இன்றைக்கு முதல் மசோதா இது என்பதில் சந்தேகமில்லை, ஆனால், பட்டியலில் உள்ள மற்ற மசோதாக்கள் எடுத்துக்கொள்ளப்படும். இந்த விஷயத்தில் நாம் மேலும் அதிக நேரம் செலவழிக்க வேண்டிய அவசியமில்லை.

திரு. நசிருத்தீன் அகமது.

திரு. பி. தாஸ் (ஒரிஸ்ஸா : பொது): உரைகளுக்கு நேர வரம்பைத் தாங்கள் தீர்மானிப்பீர்களா?

திரு. துணை அவைத் தலைவர்: இத்தகைய கருத்து வேறுபாடு கொண்ட விஷயத்தில் எந்த நேர வரம்பையும் நான் நிர்ணயிக்க முடியாது. தலைவர் நாற்காலியில் நான் அமர்ந்திருக்கும் வரை - அவைத் தலைவர் மேலும் நன்றாகச் செய்வார் - திரும்பத் திரும்பக் கூறுவதை தவிர்க்க முயல்வேன். நான் செய்யக் கூடியது அதுதான். இந்த விஷயத்தில் சம்பந்தமில்லாதவற்றைக் கொண்டுவருவதைத் தவிர்க்க பெரும் முயற்சி எடுத்துக் கொள்வேன். எவ்வளவு அதிகம் சுதந்திரம் கொடுக்க முடியுமோ அதைக் கொடுக்க விரும்புகிறேன்.

***திரு. நசிருத்தீன் அகமது** (மேற்குவங்கம் முஸ்லீம்) : திரு. அவைத் துணைத்தலைவர் அவர்களே! விதியின் கேலிக்கூத்தைப் பாருங்கள்! இந்த மசோதா மீது விவாதங்கள் விட்டு விட்டு செய்யப் பட்டிருக்கின்றன; எவ்வளவோ இடைவெளிக்குப் பின் முட்டாள்கள் தினத்தில் விவாதம் மீண்டும் துவங்க வேண்டுமென அரசாங்கம் முடிவு செய்துள்ளதை வேறு எப்படிச் சொல்வது? மிக அவசரத்தில் மசோதா பொறுக்குக் குழுவுக்கு சென்ற ஏப்ரல் 9-ம் தேதி அனுப்பப் பட்டதாக நான் சுட்டிக்காட்டிக் கூறியபோது, ஏப்ரல் 9ஏப்ரல் 1க்குப் பக்கத்தில் இருப்பதாக மதிப்பிற்குரிய சில உறுப்பினர்கள் ஞாபகப் படுத்தினர். எப்படியாகிலும், இந்த மசோதா ஏப்ரல் 1 உடன் சம்பந்தப்படுத்தப்பட்டுள்ளது. காலம் காலமாக இந்த நாளில் ஒவ்வொருவரும் மற்றவரை கேலி செய்கிறோம்; போலியான அழைப்புகளை அனுப்புகிறோம்; போலியான திருமணங்கள் அறிவிக்கப்படுகின்றன; மற்ற பல்வேறு போலி விஷயங்கள் செய்யப் படுகின்றன!

★ அ.நி.ச. (சட்டப்பேரவை) விவாதங்கள் தொகுப்பு III, பாகம் II, 1949 ஏப்ரல் 1, ப. 2213-43.

திருமதி அம்மு சுவாமி நாதன் : (சென்னை : பொது) ; ஐயா, இந்துச் சட்டத் தொகுப்புடன் இது ஏதாவது சம்பந்தப்பட்டுள்ளதா? சம்பந்தமில்லாத எந்த விஷயமும் அனுமதிக்கப்பட மாட்டாது என்று இப்பொழுது நீங்கள் கூறினீர்கள். முட்டாள்கள் தினம், இந்து சட்டத் தொகுப்புடன் ஏதாவது சம்பந்தப்பட்டிருக்கிறதா?

திரு. துணை அவைத் தலைவர் : அது பொருத்தமுள்ளதா அல்லது பொருத்தமற்றதா என்று முடிவுக்கு வர உறுப்பினர் கூறியதை நான் போதுமான அளவு கேட்கவில்லை.

திரு. நசிருத்தீன் அகமது : ஐயா, அவ்வப்போது திருப்தியற்ற முறையில் இந்த மசோதா கொண்டு வரப்படுவதை வலியுறுத்திக் கொண்டுதான் இருந்தேன். இத்தகைய முக்கியத்துவமும் மகத்துவமும் வாய்ந்த ஒரு மசோதாவுக்குத் தேவைப்படுவது, மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் தொடர்ந்து அமர்ந்து இருக்க வேண்டும் என்பதே ஆகும்.

திரு. பண்டிட் லட்சுமி காந்த மைத்ரா: இதுகுறித்து சச்சர விட்டுக் கொண்டிருக்க வேண்டுமா?

திரு. நசிருத்தீன் அகமது: இதற்காக சச்சரவிட்டுக் கொண்டிருக்க வேண்டுமா' என்று மைத்ரா கேட்கிறார். நான் கூறியது அந்த பொருளில் அல்ல. ஐயா, இத்தகைய மகத்துவம் வாய்ந்த மசோதா மீது நீண்ட நேரம் தொடர்ந்து அமர்ந்து விவாதிக்க வேண்டிய தேவை உள்ளது. நீண்ட இடைவேளைகளில் இந்த விஷயத்தை விவாதிப்பதில் பிரதிகூலம் என்னவெனில், விவாதத்தின் கோர்வையை உறுப்பினர்கள் விட்டுவிடுகிறார்கள்: ஏற்கனவே கூறப்பட்டதே திரும்பத் திரும்பக் கூறப்படுவதுடன், அவற்றை ஒன்று இணைத்துப் புரிந்து கொள்வது அவர்களுக்குக் கஷ்டம். எனவே இது இந்த மசோதாவையோ, இந்த அவையையோ அக்கறையுடன் நடத்தும் முறை ஆகாது.

சென்ற தடவை, இந்த முக்கியமான சட்டத்தின் வரலாற்றைப் பற்றிக் குறிப்பிடும்போது, திருமணமான இந்துப் பெண்களின் 1937 ஆம் வருடச் சொத்துரிமைச் சட்டம் நிறைவேற்றப்பட்டது முதலாவது தவறு என்று சுட்டிக்காட்டினேன்.

தவறு என்னவெனில், போதுமான பரிசீலனை செய்யப்படாமல் மிகவும் சிக்கலான ஒரு மசோதாவை அவசர அவசரமாக சட்டப் பேரவையில் நிறைவேற்றியதாகும். உண்மையில், அந்த சமயத்தில்

இது விஷயத்தை போதுமான அளவு பரிசீலிக்காமல் திரு. தேஷ்முக் அவைக்கு இந்த மசோதாவைக் கொண்டுவந்தார்; அவையும் தாராள மனோபாவத்துடன் அந்த மசோதாவை நிறைவேற்றியது. அந்தச் சட்டத்தின்படி, சில குறிப்பிட்ட வகைப் பெண்களுக்கு மகன்களோடும், பேரன்களோடும், கொள்ளுப் பேரன்களோடும் நேரடி மரபுச் சொத்துரிமை அளிக்கப்பட்டது. அவர்களுக்கு சுதந்திரமான உரிமை அளிக்கப்பட்டது. அவை வெறுமனே இந்துப் பெண்களின் உரிமைகள் மட்டுமல்ல; மாறாக அவை சொத்துரிமையை முழுமையாக மாற்றி அமைக்கக் கூடிய மரபு ரீதியான உரிமைகள். அதற்கு அடுத்து, இந்துச் சட்டம் சம்பந்தமாக எழக்கூடிய சில கஷ்டங்கள் பற்றி வங்காளத்தைச் சேர்ந்த திரு. ரிஷிந்திர நாத் சர்க்கார் கவனத்திற்குக் கொண்டுவந்தார். திரு. ரிஷிந்திர நாத் சர்க்கார் ஒரு புகழ்பெற்ற வழக்கறிஞர்; மேலும் திருமணமான இந்துப் பெண்களின் சொத்துரிமைச் சட்டம் பற்றியும் அது சம்பந்தப்பட்ட மற்ற சட்டங்கள் பற்றியும் ஏராளமான நூல்கள் இயற்றியுள்ள ஆசிரியரும் ஆவார். இந்த மசோதா சம்பந்தமாக உள்ளார்ந்த சில கஷ்டங்களை அவர் சுட்டிக்காட்டினார்: 1938-ல் 1938 சட்டம் XVI-ன் படி 1937 சட்டம் திருத்தப்பட வேண்டியதாயிற்று. எனினும், சிரமம் அத்துடன் நின்றுவிடவில்லை; 1938-ல் திருத்தப்பட்ட சட்டத்தால் மேலும் பல கஷ்டங்கள் எழுந்தன. அந்தத் திருத்தப்பட்ட சட்டத்தின்படி, மரணமடைந்தவரின் விதவை, மகனின் விதவை, பேரனின் விதவை, கொள்ளுப் பேரனின் விதவை ஆகியோருக்கு உரிமை வழங்கப்பட்டது; மகளின் நிலை பற்றி கணிசமான கஷ்டங்கள் எழுந்தன. உண்மையில் அதிக அளவிலான கருத்து வேறுபாடு இருந்தது; மகளைப் பொறுத்தவரை, உள்ள கஷ்டங்களை திரு. சர்க்கார் சுட்டிக்காட்டினார். நாடு முழுவதும் இந்தப் பிரச்சினை மீது கிளர்ச்சி ஏற்பட்டது; மகள் நிலை பற்றி கூறுவதற்கும் மகன், பேரன் மற்றும் பல்வேறு பட்டவர்களின் விதவைகளுக்கு உரிமை வழங்குவது பற்றி தெளிவாக்குவதற்கும் சட்டப் பேரவைக்கு அரை டஜன் மசோதாக்கள் சமர்ப்பிக்கப்பட்டதாக அறிகிறோம். அம் மசோதாக்கள் சட்டப் பேரவைக்கு அறிமுகப்படுத்தி வைக்கப்பட்டு நிகழ்ச்சி நிரலில் சேர்க்கப்பட்டன. என்றுமில்லாதவாறு அதிக எண்ணிக்கையிலான மசோதாக்களை - ஆறு மசோதாக்களை அரசாங்கம் எதிர்கொண்ட நிலைமை பற்றி பண்டிட் லட்சுமி காந்த மைத்ரா போன்ற அனுபவம் வாய்ந்த உறுப்பினர்கள் எடுத்துக் கூற முடியும் என நம்புகிறேன். ஐயா, அந்த சமயத்தில், போதுமான பரிசீலனை செய்யாமல் சமூக விஷயங்கள் பற்றி அவசரம் அவசரமாக சட்டங்களை இயற்றுவது மோசமானது என்று உள்துறை உறுப்பினர் சர் ரெஜினால்ட் மாக்ஸ் வெல் சுட்டிக்காட்டினார். மேன்மேலும் அதிக

எண்ணிக்கையில் சட்ட மசோதாக்கள் கொண்டுவரப்பட , கஷ்டங்கள் பெரிதும் அதிகரித்தன. இதனால் உறுப்பினர்கள் நிலைபற்றி அவர் அனுதாபம் கொண்டார்; எந்தச் சட்டமும் இயற்ற நடவடிக்கை எடுக்கும் முன், பல்வேறு கண்ணோட்டங்களிலிருந்து விஷயத்தை முறையாகப் பரிசீலிக்க அவர் ஒப்புக் கொண்டார். இது ராவ் குழுவின் தோற்றத்திற்கு இட்டுச் சென்றது. குழு ஒரு மசோதாவை தயாரித்தது; கருத்தறிவதற்காக பல்வேறு நபர்களுக்கு அனுப்பி, பதில்களைப் பரிசீலித்து வேறொரு மசோதாவையும் தயாரித்தது. அவர்கள் தங்கள் பணியை மேலும் தொடர்வதற்கு முன், ஒரு துவக்க கஷ்டத்தை எதிர் நோக்கினர். 1937, 1938 சட்டங்கள் சம்பந்தமாக வேறு ஒரு குறைபாடு உள்ளதை அவர்கள் கண்டுபிடித்தனர். 1938 சட்டத்தால் திருத்தப்பட்ட 1937-ம் ஆண்டுச் சட்டம் விவசாய நிலங்களுக்குப் பொருந்தாது என்று அவர்கள் கருதினர். மத்திய அரசு சட்டரீதியாக கையாளக்கூடிய விஷயமாக விவசாய நிலம் இல்லாதபோது 1937-ல் முதல் சட்டம் நிறைவேற்றப்பட்டதால் கஷ்டம் எழுந்தது.

துணை அவைத் தலைவர்: பிற்பகல் 2-30 மணிக்கு அவை ஒத்திவைக்கப்படுகிறது.

இதன்படி பகல் உணவிற்காக பிற்பகல் 2.30 வரை அவை ஒத்திவைக்கப்பட்டது.

மதிய உணவிற்குப்பின் பிற்பகல் 2.30 மணிக்கு அவை மீண்டும் கூடிற்று. திரு. அவைத் தலைவர் (மாண்புமிகு திரு. ஜி.வி. மாவலங்கர்) தலைமை தாங்கினார்.

சிமாட்டி அன்னி மாஸ்கரேன்: (திருவிதாங்கூர் சமஸ்தானம்): ஓர் ஒழுங்குப் பிரச்சினையை எழுப்ப விரும்புகிறேன். சட்டப் பேரவையின் கூட்டத் தொடர் முழுவதும் ஒருவர் அதில் கலந்து கொள்வது இந்த அவை உறுப்பினர் ஒருவரின் கடமையா என்பதை நான் தெரிந்து கொள்ளலாமா?

அவைத் தலைவர்: இது ஓர் ஒழுங்குப் பிரச்சினையே அல்ல. ஓர் உறுப்பினர் எந்த விவாதத்திலும் கலந்துகொள்ள விரும்பவில்லையெனில் அவர் அவைக்கு வருகை தர வேண்டியதில்லை. ஆனால் இங்கு ஒரு கருத்தை தெரிவிக்க விரும்புகிறேன். ஒரு மசோதாவை

ஆதரித்தோ அல்லது எதிர்த்தோ ஓர் உறுப்பினர் உரையாற்றினால், அதற்கான பதிலைக் கேட்பதற்கு அவையில் இருக்க வேண்டியது அவரது கடமையாகும்.

சீமாட்டி அன்னி மாஸ்கரேன்: மதிப்பிற்குரிய ஓர் உறுப்பினர் சில நாட்கள் வராமல் இருந்து பின்பு அவைக்கு வந்து அவையின் நிகழ்ச்சி நிரல் பற்றி தமக்குத் தெரியவில்லை என்று புகார் செய்தால், அவரை மன்னித்து விடலாமா ஐயா!

அவைத் தலைவர் : அவைமுன் அவர் வைக்கும் அறிக்கையின் அடிப்படையில் அது பற்றி முடிவு செய்யப்படும்.

திரு. நசிருத்தீன் அகமது : பகல் உணவிற்கு செல்லும் முன், இந்த சட்டமியற்றல் வரலாற்றின் முதல் பாகத்தை பற்றிக் கூறி கொண்டிருந்தேன். 1937ம் ஆண்டுச் சட்டமும் 1938ம் ஆண்டுத் திருத்தச் சட்டமும் மகள் விஷயத்தில் பல கஷ்டங்களைத் தோற்றுவித்தன. அவளது நிலையைத் தெளிவுபடுத்த பல மசோதாக்கள் கொண்டுவரப் பட்டன. அந்தக் கட்டத்தில், இந்த விஷயத்தை அரசு ஒப்புக் கொண்டு, ராவ் குழுவை நியமித்தது. விவசாய நிலம் சம்பந்தப்பட்டவரை, சட்டங்கள் இயற்ற சட்டப்பேரவைக்கு அதிகாரம் எதுவும் கிடையாது என்று ராவ் குழு விரைவில் கண்டுகொண்டது. முந்திய அரசியல் சாசனத்தின்படி மத்திய அரசாங்கத்தின் சட்டமியற்றும் உரிமைப் பட்டியலில் விவசாய நிலம் இருந்தது. அந்த பழைய அரசியல் சாசனத்தின் கீழ் இயங்கிய கீழவையில் 1937 மார்ச் மாதத்தில் மசோதா நிறைவேற்றப்பட்டது. 1935ம் ஆண்டு அரசியல் சாசனம் அமுலுக்கு வந்த பின் ஏப்ரல் மாதத்தில் மேலவை அதை நிறைவேற்றியது. எனவே, மேலவையால் அந்த மசோதா நிறைவேற்றப்பட்டபோது, விவசாய நிலம் பற்றிச் சட்டம் இயற்ற அதற்கு அதிகாரம் இல்லை. கீழவை, மேலவை இரண்டிற்கும் சட்ட அதிகாரம் இல்லாமல் இருந்த போது 1938-ம் ஆண்டு திருத்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டது. அன்றையச் சட்டப்பேரவை செய்த பெரும் பிழைகளாகும் இவை. ராவ் குழு விஷயத்தை சமஷ்டி நீதிமன்றத்திற்கு கருத்தறிய அனுப்பியது. சமஷ்டி நீதிமன்றம் அளித்த தீர்ப்பு அவை.....

மாண்புமிகு டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் (சட்டத் துறை அமைச்சர்) : நீங்கள் கூறுவது முற்றிலும் தவறு.

திரு. எல். கிருஷ்ணசாமி பாரதி (மதராஸ் : பொது) : சமஷ்டி நீதிமன்றத்திற்கு கருத்தறிய ராவ் குழு எப்படி அனுப்ப முடியும்?

திரு. நசிருத்தீன் அகமது : அது முற்றிலும் தவறா?

மாண்புமிகு டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் : ஆம். முற்றிலும் தவறு.

திரு. நசிருத்தீன் அகமது : எவ்வகையில்?

மாண்புமிகு டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் : எனது பதிலில் அதை எடுத்துரைப்பேன்.

பண்டிட் லட்சுமி காந்த மைத்ரா : அவர் கூறியது சாராம்சத்தில் சரியே.

திரு. நசிருத்தீன் அகமது : ராவ் குழு அரசாங்கத்திற்கு அறிக்கை கொடுத்தது; இது சம்பந்தமாக கருத்தறிய சமஷ்டி நீதிமன்றத்திற்கு கவர்னர் - ஜெனரல் அனுப்பி வைத்தார். ஒரு சிறு சட்ட நுணுக்க விஷயத்தில்தான் நான் தவறு செய்துள்ளேன். மீண்டும் கூறுகிறேன்: ராவ் குழு முறையான வழி மூலம் - அதாவது கவர்னர் ஜெனரல் மூலம் - விஷயத்தை சமஷ்டி நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்தது. அது தவறா? நான் கூறியது முற்றிலும் சரி; எவ்வகையிலும் தவறல்ல. (குறுக்கீடு)

அவைத் தலைவர் : மதிப்பிற்குரிய உறுப்பினர் தொடர்ந்து பேசலாம்.

திரு. நசிருத்தீன் அகமது: சமஷ்டி நீதிமன்றத்திற்கு விஷயத்தை ராவ் குழு பரிசீலனைக்கு அனுப்பியது; விவசாய நிலம் சம்பந்தப்பட்ட வரை, இந்த விஷயம் சட்டப் பேரவையின் அதிகாரத்திற்கு அப்பாற்பட்டது என்று அவர்கள் தீர்ப்பு வழங்கினார்கள். அந்த சமயத்தில் தெரியவந்த மிகப்பெரும் தவறாகும் இது. சமஷ்டி நீதிமன்றத் தீர்ப்பு வெளிவந்ததும் நான் அரங்கத்திற்கு வந்தேன். இந்துச் சட்டத் தொகுப்போடு எனது தொடர்பு தற்செயலானதோ அல்லது சமீபத்தில் ஆனதோ அல்ல. நீண்ட காலத்திற்கு முன்பே 1941-லேயே, இந்தச் சட்டம் பற்றி சட்ட பூர்வமான நடவடிக்கைகளை நான் எடுத்தேன் என்பதை இந்த அவைக்குச் சுட்டிக்காட்டும் நிலையில் இருக்கிறேன். அப்பொழுது வங்காளச் சட்டப்பேரவையின் ஓர் உறுப்பினனாக இருந்தேன். ராவ் குழுவின் முதல் அறிக்கை வெளிவருவதற்கு முன்பேயே நான் ஒரு மசோதாவைச் சமர்ப்பித்தேன்.

சமஷ்டி நீதிமன்றத்தின் தீர்ப்புத் தெரிந்ததும், விவசாய நிலம் சம்பந்தப் பட்ட வரை சட்டத்தை வங்காளத்திற்கு நீட்டிக்க வங்காள சட்டப் பேரவையில் ஒரு மசோதாவை நான் அறிமுகப்படுத்தினேன். இது விஷயத்தில் இந்தியாவில் அப்பொழுது சட்டமியற்றச் செய்யப்பட்ட முதல் முயற்சியாகும் அது.

திரு. தாஜாமுல் உசேன் (பீஹார் : முஸ்லீம்) : மதிப்பிற்குரிய எனது நண்பர் அப்பொழுது இந்துச் சட்டத் தொகுப்பிற்கு சாதகமான நிலை எடுத்தாரா என்பதை அவரிடமிருந்து நான் தெரிந்து கொள்ள லாமா? எந்தச் சமயத்தில் அவர் தமது மனதை மாற்றிக் கொண்டார்?

திரு. நசிருத்தீன் அகமது: இந்துச் சட்டத் தொகுப்பு அப்பொழுது தோன்றக்கூட இல்லை. இந்த விஷயம் பற்றி அப் பொழுது பல பிரபலமானவர்களைப் போல் நான் தவறானப் போக்கைக் கடைப்பிடித்ததாகப் பிற்பாடு எனக்குத் தோன்றியது. உண்மையில் வங்காளத்தில் உள்ள விவசாய நிலத்திற்கு சட்டத்தை விரிவுபடுத்த நான் விரும்பினேன். வங்காளச் சட்டப்பேரவையில் நான் அறிமுகப்படுத்திய மசோதாவின் நோக்கம் அதுவே. அந்த மசோதா பற்றிய கருத்துக்களை அறிவதற்காக வங்காளம் முழுவதிலும் அது சுற்றுக்கு அனுப்பப்பட்டது; பெரும் அளவிலான பொது ஜனக் கருத்து மசோதாவிற்குச் சாதகமாக இருந்தது. என்னைப் போல, ஒவ்வொருவரும் மசோதா சரியானது என்று நினைத்தனர்.

திரு. தாஜாமுல் உசேன் : மதிப்பிற்குரிய உறுப்பினர் தமது மனதை ஏன் மாற்றிக் கொண்டார் என்பதற்கான காரணங்களைத் தெரிவிக்கவில்லை.

அவைத் தலைவர்: அது இப்போதைய விஷயத்திற்கு சம்பந்தப்பட்டது அல்ல. எத்தனை தடவைகள் வேண்டுமானாலும் அவர் தமது மனதை மாற்றிக் கொள்ளலாம்.

திரு. நசிருத்தீன் அகமது: மதிப்பிற்குரிய உறுப்பினர் பொறுத்திருக்க முயல வேண்டும். 1941 ஜூலை 14-ம் தேதி மசோதா என்னால் சமர்ப்பிக்கப்பட்டது என்பதை அவை தயவு செய்து குறித்துக் கொள்ள வேண்டும். வங்காளத்தில் இருந்த மக்கள் கருத்து அப்பொழுது அதற்குச் சாதகமாக இருந்தது. பின்பு, ஒரு பொறுக்குக் குழுவின் நிகழ்ச்சி நிரலில் இந்த மசோதா சேர்க்கப்பட்டது. 1942 செப்டம்பர் 25-ம் தேதிய நிகழ்ச்சி நிரலின் ஒரு பிரதி என்னிடம்

உள்ளது. இந்து-முஸ்லீம் கூட்டணி கட்சிப் பெரும்பான்மை கொண்ட வங்காள சட்டப்பேரவையில் அதனை நிறைவேற்றக் கூடிய நிலையில் நான் இருந்தேன். கட்சியின் பெரும்பான்மை மசோதாவுக்கு சாதகமாக முடிவு எடுத்தது. அது ஒரு பொறுக்குக் குழுவிற்கு அனுப்பப் படவிருந்தது. எனினும், இதற்குள் மசோதாவுக்கு எதிராக இந்துக்கள் கருத்து போதுமான அளவு உருபெற்றது. மசோதா நிறைவேற்றப்பட்டால் மோசமான விளைவுகள் ஏற்படும் என்று என்னிடம் கூறப்பட்டது. நான் உள்ளிட்டு பலர் இந்த மசோதா நிறைவேற்றப் பட்டால் புதல்விகளதும் மற்றவர்களதும் நிலை குழப்பத்திற்கு உள்ளாகும் என உணர்ந்தோம். இதற்குள், ராவ் குழுவின் அறிக்கை பிரசுரிக்கப்பட்டது: அவர்களால் மறு வரைவு செய்யப்பட்ட மசோதா நாட்டின் முன் இருந்தது. 1941-லும் 1942-லும் இதுபற்றி பெரும் அளவிலான கூட்டங்கள் நடைபெற்றன. எனது சொந்த ஊரான பர்த்துவானில் ஒரு கூட்டம் நடந்தது; பிரதான மசோதாவைக் கண்டித்து வங்காளம் முழுவதிலும் இம்மாதிரியான கூட்டங்கள் நடைபெற்றன. மசோதாவுக்கு தேவையான பெரும்பான்மை என்னிடம் இருந்த போதிலும், நான் மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கவில்லை. ஏனெனில், இது இந்து சமூகத்தை மட்டும் பாதிக்கும் விஷயம்; மேலும் அது அவர்களால் எதிர்க்கப்பட்டது. இந்த மசோதாவை, அதனால் பாதிக்கப்படாத, வெறும் பெரும்பான்மை நபர்களால் நிறைவேற்றுவது நல்லதல்ல என்று கருதினேன். எனது சொந்த மசோதாவுக்கு ஒரு குறிப்பிட்ட காலத்தில் நான் சாதகமாக இருந்த போதிலும், இந்துச் சட்டத் தொகுப்பிற்கு ஒருபோதும் நான் சாதகமாக இருந்தில்லை. மதிப்பிற்குரிய எனது நண்பர் திரு. தாஜாமுல் உசேனை இது திருப்திப்படுத்தும் என நான் நம்புகிறேன். நான் என்ன செய்ய வேண்டுமென எனது இந்து உறுப்பினர்களைக் கேட்டேன்; அவர்கள் எனது இந்த மசோதாவுக்கு எதிராக இருந்தனர்; எனவே மசோதா கைவிடப்பட்டது. இந்த ஒப்புதலை அளிக்க நான் கிஞ்சித்தும் அஞ்சவில்லை. எனது மசோதாவுக்கு முன்னால் 1937 சட்டத்தை விவசாய நிலத்திற்கு விரிவு படுத்த எல்லா ஸ்தல சட்ட சபைகளிலும் ஒரு மசோதா அறிமுகப்படுத்தப்பட வேண்டும் என ஒவ்வொருவரும், ஏன் ராவ் குழுவும் நினைத்தனர். நானும் அதே நிலையை மேற்கொண்டேன்: ஆனால், பின்பு எனது மசோதாவிற்கு எதிராக இந்துக்களின் கருத்து கணிசமாக இருப்பதைக் கண்டேன். விவசாய நிலத்திற்கு 1937ம் ஆண்டுச் சட்டத்தை எந்த மாகாணமும் ஒரு பொழுதும் அமுல் நடத்தவில்லை. ஐயா, அதைத் தொடர்ந்து, வங்காளத்தில் பெரும் எண்ணிக்கையில் கூட்டங்கள் நடைபெற்றன. ராவ் குழுவின் மசோதா எங்கிலும் கண்டனத்திற்கு உள்ளானது.

இப்பொழுது, ராவ் குழுவின் இந்த அறிக்கையைப் பொறுத்த வரை, அவர்கள் ஒரு மசோதாவைத் தயாரித்தார்கள். அது "இந்துச் சட்டத் தொகுப்பு - பாகம் I உயில் இல்லாமல் நிலத்தில் மரபுரிமை" என்பது ஆகும். அது மத்தியச் சட்டப் பேரவையில் அறிமுகப்படுத்தப் பட்டது; அது சட்டப் பேரவையின் இரு அவைகளதும் ஒரு வலுவான கூட்டுப் பொறுக்குக் குழுவிற்கு அனுப்பப்பட்டது. அந்தப் பொறுக்குக் குழுவின் அறிக்கையின் ஒரு பிரதி என்னிடம் உள்ளது. ஒரு பகுதியினர் அதைப் பலமாக ஆதரித்தனர்; அதே அளவு பலமாக மற்ற பகுதியினர் எதிர்த்தனர். பொறுக்குக் குழுவின் அறிக்கையுடன் அந்த மசோதா மீண்டும் சட்டப் பேரவைக்கு வந்தது. இந்தச் சட்டத் தொகுப்பு பகுதி பகுதியாக எடுத்துக் கொள்ளப்பட வேண்டுமென்று 1941-ல் ராவ் குழு கூறியிருந்தது. அது மிக முக்கியமான யோசனையாகும். இந்து சட்டத் தொகுப்பு பகுதி பகுதியாக - மரபுரிமை, திருமணம், பாதுகாப்பாளர் பதவி முதலியன - எடுத்துக் கொள்ளப்பட வேண்டுமென்று உண்மையில் ராவ் குழு கூறியுள்ளதை உங்களது விசேடக் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். 1941-ம் ஆண்டு அவர்களது அறிக்கையின் 23 ஆவது பக்கத்தில் பின்வருமாறு கூறியுள்ளார்கள்:

> "மிகவும் அழுத்தம் தி ருத்தமாக நாங்கள் வலியுறுத்திக் கூற விரும்புவது என்னவெனில், ஒரு முழுமையான இந்துச் சட்டத் தொகுப்பை படிப்படியான கட்டங்களில் வழங்க வேண்டும். நாங்கள் கூறியுள்ளபடி மரபுரிமையை சட்டத்திலிருந்து தொடங்கி, அதைத் தொடர்ந்து திருமணம், பின் உரிய சமயத்தில் இந்துச் சட்டத்தின் மற்ற விஷயங்கள் இடம் பெறவேண்டும். இந்த பெரிய தொகுதிகள் கூட ஓரளவுக்கு ஒன்றோடொன்று இணைப்புடையவையாக இருப்பது அவசியம்; வரைவு செய்பவருக்கு மரபுரிமைச் சட்ட முழுமையை கையாள்வது, விதவைகளுக்கு சொத்துரிமை பற்றிய தனித் தனி விதிகளைக் கையாள்வதைவிட இலகுவாக இருக்கும். சச்சரவுள்ள விஷயங்களின்மீது ஒன்றுபட்ட தீர்வுக்கு இந்தத் திட்டம் நல்ல சந்தர்ப்பத்தையும் அளிக்கலாம்; ஏனெனில், அரங்கம் பெரிதானால், சமரசத்திற்கு அதிக இடம் இருக்கும். எந்த அளவு சாத்தியமோ அந்த அளவுக்கு ஒப்புக் கொள்ளத்தக்க தீர்வுகளை அடைவதும், சிக்கலான கருத்து வேறுபாடுகளைக் கிளப்புகிற எதையும் தவிர்ப்பதும் நோக்கமாக இருக்க வேண்டும். இப்படிக் கூறுவதால், சீர்திருத்தத்தின் வேகத்தைக் குறைப்பது என்று பொருள் கொள்ள வேண்டியதில்லை; ஏனெனில், நிர்பந்திப்பதைவிட இணக்கம் ஏற்படுத்துவதன் மூலமே உண்மையான சீர்திருத்தம் முன்செல்கிறது."

பக்கம் 11-ல் அவர்கள் கூறுகிறார்கள்:

> "சட்டத்தின் எல்லாப் பாகங்களும் உடனே எடுத்துக் கொள்ளப்பட வேண்டும் என்று நாங்கள் ஆலோசனை கூறவில்லை. மரபுரிமைச் சட்டம்..... முதலில் எடுத்துக் கொள்ளப்படலாம், அடுத்துத் திருமணச் சட்டம், இவ்வாறாக ஒவ்வொரு பாகம் பற்றிய சட்டம், சட்டப்படி தேவைப்படுகிற உருவத்திற்கு

சுருக்கப்பட்டவுடன், பல்வேறு சட்டங்கள் ஒரே தொகுப்பாக இணைக்கப்படலாம்.''

இதுதான் அறிக்கை, அவர்கள் சமர்ப்பித்த அறிக்கைக்கு ஏற்ப, இந்துச் சட்டத் தொகுப்பு பாகம் I, உயில் இல்லாத சொத்தில் மரபுரிமை பற்றிய அவர்களது மசோதாவை கூட்டுப் பொறுக்குக் குழு முடிவு செய்தபடி சமர்ப்பித்தனர். மரபுரிமை பற்றிய மசோதா சட்டப் பேரவைக்கு வருவதற்கு முன்பே, கூட்டுப் பொறுக்குக் குழு பின்வருமாறு சிபார்சு செய்தது: இந்த பாகத்தை மட்டும் நிறைவேற்றுவதால் பயன் எதுவுமில்லை; இப்பொழுது உள்ள இந்துச் சட்டத் தொகுப்பு பற்றிய உண்மையான படப்பிடிப்பு அவர்களுக்குக் கிடைக்க வேண்டும்; பல்வேறு பாகங்கள் ஒன்றோடொன்று சார்ந்து இருப்பதால், இந்த மசோதா நிறைவேற்றப்படக்கூடாது; இந்துச் சட்டம் பற்றிய பரந்த பார்வை கொள்ளப்படவேண்டும். தங்களது அறிக்கையில், பொறுக்குக் குழு பின்வருமாறு கூறுகிறது:

''இந்துச் சட்டக் குழுவை உயிர்ப்பிக்கவும், இடைவேளையில் சட்டத் தொகுப்பின் இதர பாகங்களை வடிவமைத்து சட்டமாக்கப்படுவதை ஊக்குவிக்கவும் நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென நாங்கள் கருதுகிறோம். இப்போதைய மசோதா நிறைவேற்றப்பட்டு நடைமுறைக்கு வரும்போது இந்த இடைவேளை கடந்துபோகும். இந்த மசோதா அமுலுக்கு வரும்முன் இந்துச் சட்டத்தின் மற்ற கிளைகள் பற்றி முடிவுகள் எடுக்கப்பட்ட வெளிச்சத்தில் ஒழுங்கு செய்யப்பட்டு திருத்தப்பட வேண்டும் என்பதை நன்கு காணலாம்.''

எனவே, அவையும், நாடும் மிகவும் முழுமையான ஒரு சித்திரத்தைப் பெற வேண்டுமென அவர்கள் சிபாரிசு செய்தார்கள். இந்துச் சட்டக் குழு புதுப்பிக்கப்பட்டது; இந்து சட்டத்தின் மற்ற கிளைகள் பற்றிய முழுச் சித்திரத்தை நமக்கு அளிக்கும்படி அவர்கள் கோரப்பட்டனர். அவர்கள் செய்த முதல் காரியம், இந்து ''சட்டத் தொகுப்பு பாகம் II திருமணம்'' என்ற மற்றொரு மசோதாவை உருவாக்கினர். இரண்டாவது மசோதா அவர்களால் தயாரிக்கப்பட்டது; பின்பு மற்ற பாகங்களையும் அவர்கள் தயார் செய்தனர். நான் வலியுறுத்த விரும்பும் விஷயம் என்னவெனில், இவை தனித்தனியான தன் முழுமையுடைய மசோதாக்கள். பிதுர் ராஜ்ய சொத்துரிமைச் சட்டம் முற்றிலுமாக தனியானது; தனியாகவே சட்டமாக்கப்படக்கூடிய தன்மை வாய்ந்தது. திருமணச் சட்டமும் தனியாகச் சட்டமாக்கப்படலாம். ஒரே தொகுதியாக அச்சிடப்பட்டு சுற்றுக்கு அனுப்பப்பட்ட போதிலும், மற்ற மூன்று பாகங்கள் தனித்தனி பாகங்களாக உள்ளன. பின்பு கருத்துக்கள் பெறப்பட்ட பின், பின் சேர்க்கையாக சில மாற்றங்

களையும் கூட அவர்கள் அறிமுகப்படுத்துகிறார்கள். எனவே முற்றிலும் தனித் தனியான மசோதாக்கள் தனித்தனியான முழுமையுடைய விஷயங்களாகத் தனித்தனி எண்கள் கொடுக்கப்பட்டு ஒரே புத்தகத்தில் அச்சிடப்பட்டிருப்பதன் உண்மையான பொருளையும் நோக்கத்தையும் அவை தயவு செய்து கவனிக்கவேண்டும். எனினும் தனித்தனி பாகங்களைத் தனித் தனியாக எண்கள் கொடுக்கப்பட்டதன் நோக்கத்தை சட்ட அமைச்சரகம் தவறாகப் புரிந்து கொண்டதாகத் தோன்றுகிறது. உண்மையில், இந்த மசோதா பற்றிய பொறுக்குக் குழுவின் அறிக்கையில், பெரும்பான்மை உறுப்பினர்கள் தனியாக எண்கள் கொடுக்கப்படுவதும், தனித்தனி பாகங்களும் கேள்விப்படாத ஒன்று என்றும், நோக்கமற்றது என்றும் கூறுகிறார்கள்; எனவே தனிப் பாகங்களை முழுமையானதாக இணைத்து அவற்றுக்கு தொடர் எண்கள் கொடுக்கப்பட வேண்டுமென்று அவர்கள் விரும்பினார்கள். தன் முழுமை கொண்டதென்றும், தர்க்க ரீதியில் அமைந்தது என்றும் அவர்கள் கருதிய இந்து சட்டத் தொகுப்பை அவர்கள் உருவாக்கியதன் காரணம் இதுதான். தனித்தனியாக சட்டமாக்கப்பட்டு, பின்பு ஒன்றிணைக்கப்பட வேண்டும் என்ற ராவ் குழுவின் நோக்கம் அறவே கைவிடப்பட்டது.

இது சம்பந்தமாக முதலாவதாக நான் சுட்டிக்காட்ட விரும்புவது என்னவெனில், சட்டத்துறை அமைச்சகம் அமைத்த இலாகாக் குழு செய்த மாற்றங்கள் மூல மசோதா அல்லது வேறான மசோதாக்களின் நோக்கத்திற்கு அப்பால் சென்றன என்பதேயாகும். உண்மையில், மூல மசோதாதான் வெவ்வேறு பாகங்களை ஒன்றாக இணைத்து ஏராளமான சிரமங்களை ஏற்படுத்தியது; குழப்பத்தை மேலும் தீவிரமாக்கியது. ராவ் குழு ஆலோசனை அளித்தபடி, தனியான பாகங்களைத் தனியாக சட்டமாக்கி நிறைவேற்றியிருந்தால் நல்லதாக இருந்திருக்கும்; இதனால், ஆட்சேபனைகள் பெருமளவுக்குக் குறைந்திருக்கும்; மேலும், அவையின் கவனம், நாட்டின் கவனம் தனி விஷயங்கள்பால் குவித்திருக்கும் - இந்துச் சட்டம் பற்றிய பரந்த அளவிலான முழுச் சித்திரம் அவர்களுக்குக் கிடைத்திருக்கும். வெவ்வேறு பாகங்கள் அல்லது மசோதாக்கள் ஒன்றாக இணைக்கப்பட்டு தொடர்ந்த எண்கள் அளிக்கப்பட்டது நம்மை இந்த அவையில் கஷ்டமான நிலையில் வைத்துள்ளது. பொறுக்குக் குழுவிடமிருந்து வந்த ஒன்றிணைக்கப்பட்ட மசோதாவிற்கு முழு ஆதரவளிக்கும் எந்த உறுப்பினரும் இருப்பதாகத் தெரியவில்லை. விவாக ஷரத்துகளை சிலர் ஆதரிக்கிறார்கள்: பிதுர்ராஜிதச் சொத்துரிமைக்கு மற்றவர்கள் ஆதரவாக இருக்கிறார்கள்; ஆட்சேபம் மிகக் குறைவே. மூல திட்டத்தில் இருந்த

தனி மசோதாக்கள் விஷயங்களை எளிதாக்கியிருக்கும்; சிரமங்களைக் குறைத்திருக்கும்.

பண்டிட் லட்சுமிகாந்த மைத்ரா: மிகச் சிறந்தது ஜீவனாம்சம் பற்றிய பாகம். மற்றவையெல்லாம் குப்பை.

திரு. நசிருத்தீன் அகமது : பண்டிட் மைத்ரா சுட்டிக் காட்டியிருப்பதுபோல் மிகக் குறைந்த ஆட்சேபத்தைப் பெற்றது ஜீவனாம்ச பாகம். பாகங்கள் தனித்தனியா வைக்கப்பட்டிருந்தால், தனித்தனியான விஷயங்களை சுலபமாக கையாளும் நிலையில் அவை இருந்திருக்கும். ஜீவனாம்சம் என்ற விஷயம் கருத்து வேறுபாட்டிற்கு உட்பட்டதல்ல. சமுதாயத்தின் மத அமைப்பை அது பாதிப்பதில்லை. இந்துக்களின் மத உணர்வுகளையும், காலம் காலமாக உள்ள நம்பிக்கைகளையும்அது புண்படுத்துவதில்லை. அதை உடனேயே நிறைவேற்றியிருக்க முடியும். தனித்தனியாக பரிசீலிப்பதற்கான காரணம் இதுவே. ஆனால், தனித் தனியாக கையாள்வதன் நோக்கத்தை இலாகாக் குழு பார்க்க தவறிவிட்டது; எல்லாவற்றையும் ஒன்றாக கலந்து குழப்பியுள்ளது.

ஐயா, ராவ் குழுவின் இரண்டாவது அறிக்கையிலும்கூட, மசோதா பல்வேறு பிரிவுகளாகத் தயாரிக்கப்பட்டது; அது தனித் தனியாக எடுத்துக் கொள்ளப்பட வேண்டும் என்ற அவர்களது ஆலோசனையை மீண்டும் கூறினர். மசோதா தனித்தனிப் பாகங்களாக எடுத்துக் கொள்ளப்பட்டு தனித்தனியாகக் கையாளப்பட வேண்டும் என்பதே மசோதாவின் உத்தேசமாக இருந்தது.

திரு. தாஜாமுல் உசேன் : இந்த நோக்கத்தோடு தாங்கள் திருத் தங்களை ஏன் கொண்டுவரக் கூடாது?

திரு. நசிருத்தீன் அகமது : மதிப்பிற்குரிய எனது நண்பர் தமது குறுக்கீடு மூலம் சொல்ல விரும்புவது: ''எல்லா விஷயங்களையும் நான் விரும்புகிறபடி கலந்து விடுவேன். அவற்றை தனிமைப் படுத்திப் பொருத்தமான திருத்தங்களைக் கொண்டுவருவது உங்கள் வேலை.'' அது சாத்தியமல்ல. மாமிசம், மீன் மற்றும் காய்கறிகளை ஒன்றாக நீங்கள் சமைத்து, ஒரு சைவ உணவு உண்பவரைப் பார்த்து, ஒரு திருத்தம் மூலம் அவற்றைப் பிரித்து காய்கறிகளை மட்டும் தனியாக எடுக்கும்படி கூறுகிறீர்களெனில், அது குதிரைக்கு முன் வண்டியை வைப்பது போன்றதாகும். சட்டத்தின் தனித் தன்மை வாய்ந்த தனி

வகைகளைச் சேர்ந்தவைகளை ஒரு முழுமையான ஒன்றாக மசோதா கலந்து விட்டது.

திரு. எல். கிருஷ்ணசாமி பாரதி : இல்லை. இல்லை தனித் தனி அத்தியாயங்கள் உள்ளன.

அவைத் தலைவர்: மதிப்பிற்குரிய உறுப்பினர் தமது சொந்தக் கருத்துக்களை வெளிப்படுத்துகிறார். அதேபோல் தங்கள் சொந்தக் கருத்துக்களை எடுத்துரைக்க மற்ற உறுப்பினர்களுக்கும் சந்தர்ப்பம் கிடைக்கும். குறுக்கீடு செய்வதால் என்ன நன்மை? அது அவரது உரையை நீடிக்கவே செய்யும்.

திரு. நசிருத்தீன் அகமது : ஒரு பாகத்தின் பகுதிகள் அதிலிருந்து எடுக்கப்பட்டு மற்றொரு பாகத்தில் வைக்கப்பட்டுள்ளன.

திரு. எல்.கிருஷ்ணசாமி பாரதி: ஐயா, ஓர் ஒழுங்குப் பிரச்சினை. பல்வேறு அத்தியாயங்களை அது இணைத்து குழப்பம் உண்டுபண்ணிவிட்டது என்ற அவரது அறிவிப்பை, திருத்த எனக்கு உரிமை இல்லையா?

அவைத் தலைவர் : இதனைத் திருத்துவதற்கு அவர் உரிமை பெறுவார். குறுக்கீடுகள் இருக்கக்கூடாது. நாம் அவசியமில்லாமல் பொறுமையிழக்கிறோம் என்று நினைக்கிறேன். இந்த மசோதா பற்றிய நமது கருத்துக்கள் அதற்கு ஆதரவாக அல்லது எதிர்ப்பாக இருந்தாலும், எதிர் தரப்பினர்க் கூறுவதைப் பொறுமையாகக் கேட்டு அவரது கருத்துக்களுக்கு பதில் அளிக்க வேண்டும். ஒவ்வொருவருக்கும் முழு சந்தர்ப்பம் அளிக்கப்போகிறேன். எனவே குறுக்கீடுகள் இல்லாமல் இருக்கட்டும்.

திரு. நசிருத்தீன் அகமது : இந்தக் கட்டளைக்காக நான் மிகவும் நன்றியுடையவனாக இருக்கிறேன். விஷயம் என்னவெனில், ஒவ்வொரு பாகத்திலும் விளக்கங்களும், விதிகளும் முற்றிலும் தனியானவை. பொறுமையுள்ள எவரும், அவைக்கு திரு. ஜோகேந்திர நாத் மண்டல் சமர்ப்பித்த மூல மசோதாவை மாற்றியமைக்கப்பட்ட மசோதாவுடன் ஒப்பிட்டுப் பார்த்தால், வித்தியாசத்தைக் காண முடியும்.

மதிப்பிற்குரிய ஓர் உறுப்பினர் : ஜோகேந்திர நாத் மண்டல் யார்?

திரு. நசிருத்தீன் அகமது : அவர் முந்திய சட்டத்துறை அமைச்சர். அவர் சமர்ப்பித்த பழைய மசோதாவையும் இப்போதைய மசோதாவையும் ஒருவர் ஒப்பிட்டுப் பார்த்தால், வெவ்வேறான பாகங்களிலிருந்து பகுதிகள் மற்ற பாகங்களுக்கு இடம் பெயர்த்து வைக்கப்பட்டுள்ளதைக் காண்பார். இந்த செயல் நிச்சயமாக நல்லெண்ணத்தில் செய்யப்பட்டதே; ஆனால், விஷயங்களைத் தனியாக கையாள வேண்டியதன் நோக்கத்தை முழுமையாக புரிந்து கொண்ட அடிப்படையில் இது செய்யப்பட்டதல்ல. உண்மையில் சட்ட அமைச்சகம் மறு வரைவு செய்த ஒரு மசோதா பொறுக்குக் குழு முன் வைக்கப்பட்டது. பொறுக்குக் குழுவை முற்றிலும் தவறாக வழி நடத்தக்கூடியது அந்த மசோதா என நான் சமர்ப்பிக்கிறேன். இந்த ஆவணம்தான் 1948 ஜூலை 17-ல் அச்சிடப்பட்டது. பொறுக்குக் குழு கூடுவதற்கு முன்பே அது குழு லகுவாக கையாளுவதற்கு ஏற்ற முறையில் தயாரிக்கப்பட்டது இந்த ஆவணம்; பொறுக்குக் குழுவுக்கு அறிமுகப்படுத்தப்பட்டது இந்த இலாகா மசோதாதான். நான் ஏற்கனவே எடுத்துக் காட்டியதுபோன்று இடையில் வந்த இதர இலாகா மசோதாவில் ஒரு முக்கிய மாற்றம் செய்யப்பட்டது; அதாவது, வெவ்வேறு பாகங்கள் ஒரு முழுமையானதாக கலந்துள்ளன; தனிப் பாகங்களை அவற்றின் முதலிலிருந்த உருவத்தில் மறுபடியும் வைப்பதை சாத்தியமற்றதாக்கும் முறையில் இது செய்யப்பட்டது. இது ஓர் ஆய்வு மாணவனால் செய்ய முடியலாம்; அத்தகைய மனப்பாங்கோ விருப்பமோ இல்லாத உறுப்பினர்களால் முடியாது. எனவே, முற்றிலும் தனியான விஷயங்களை கவலையாக்கியதன் மூலம் இலாகாக்குழு முதல் தவறைச் செய்தது. முன்பு கண்டிராத, ஒரு முக்கிய அரசியல் சட்ட முறைமையை இது அறிமுகப்படுத்துகிறது.

பிறகு ஐயா, இலாகாக் குழு தங்கள் இலாகா மசோதாவில் முக்கிய மாற்றங்களைப் புகுத்தியுள்ளது. பொறுக்குக் குழுவின் நடவடிக்கைகளில் இலாகா மசோதா ஏற்படுத்திய தாக்கத்தையும் விளைவையும் நாம் பரிசீலிக்கும்போது அது மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கும். நான் சுட்டிக்காட்ட முயற்சி செய்வதுபோல, இலாகா மசோதா மிக முக்கிய மாற்றங்களை அறிமுகப்படுத்தியது. மாண்புமிகு சட்டத்துறை அமைச்சரோ, பொறுக்குக் குழு உறுப்பினர்களோ, இந்த அவையின் உறுப்பினர்களோ இந்த மாற்றங்களின் முக்கியத்துவத்தைப்பற்றித் தெரிந்து கொண்டிருக்கிறார்கள் என்று தோன்றவில்லை என்பதை நான் அவசியம் சுட்டிக்காட்டியாக வேண்டும். உண்மையில், சென்ற முறை தீர்மானம் பரிசீலிக்கப்படுவதற்கு ஆதரவாக பேசியபோது சட்டத்துறை அமைச்சர், மசோதாவில்

செய்யப்பட்டுள்ள கணிசமான மாற்றங்களைச் சுட்டிக்காட்டினார். ஆனால் எல்லா மாற்றங்களும் பொறுக்குக் குழுவால் செய்யப் பட்டன என்று வலியுறுத்துவதில் அக்கறை காட்டினார். அவரது உரையை நான் கவனத்துடன் குறிப்பு எடுத்துக்கொண்டேன். அதிகார பூர்வ தஸ்தாவேஜுகளிலிருந்து இதைச் சரிபார்த்துக் கொள்ளலாம். ஜோகேந்திர நாத் மண்டலின் மூல மசோதாவிலிருந்து இறுதி மசோதா எவ்விதம் பெருமளவுக்கு விலகிச் செல்லுகிறது என்பதை அவர் சுட்டிக் காட்டினார். பொறுக்குக் குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்ட மசோதா என்று அழைக்கப்பட்டதில் அவரது இலாகா செய்த தீவிரமான மாற்றங் கள் பற்றி மாண்புமிகு அமைச்சர் முற்றிலுமாக அறிந்திருக்கவில்லை என்பதை அது காண்பிக்கிறது. குறுகிய கால அறிவிப்புக் கேள்வி என்ற முறையில் அமைச்சரைப் பின்வருமாறு கேட்டேன்: மூல மசோதாவில் கணிசமான மாற்றங்களைச் செய்ய குழுவிற்கு இலாகாவால் அதிகாரம் அளிக்கப்பட்டதா? அவர்களுக்கு அத்தகைய அதிகாரம் எதுவும் இருக்கவில்லை என்று பதில் வந்தது. மறுபுறத்தில், மாற்றங்கள் எதுவும் இருந்தால், சட்டத்துறை அமைச்சர்தான் அவற் றிற்கு பொறுப்பு என்றார்; திரு. ராம்நாத் சிங்கின் துணைக் கேள்விக்கு சட்டத் துறை அமைச்சர் பின்வருமாற பதிலளித்தார்: ''நான் எந்த மாற்றங்களையும் செய்யவில்லை.''

உண்மையில், விஷயம் என்னவெனில், கலாசார மசோதா கணிசமான மாற்றங்களைச் செய்ததா என்பதே; தாம் அத்தகைய மாற்றம் எதையும் செய்யவில்லை என்றும் பொறுக்குக் குழு மட்டுமே மாற்றங்களைச் செய்தது என்றும் அவர் மிகத் தெளிவாகக் கூறினார். பொறுக்குக் குழு மாற்றங்களைச் செய்தது என்றும் இலாகாக்குழு எந்த கணிசமான மாற்றங்களையும் செய்யவில்லை என்றும் அவை முழுவதும் கருதுவதாகத் தோன்றுகிறது. சென்ற தடவை நான் பேச எழுந்தபோது, இலாகாக்குழு கணிசமான மாற்றங்கள் செய்தது என்பது பற்றி குறிப்பிட்டுச் சொல்லும்படி பலமுறை நான் கோரப் பட்டேன். இந்த விஷயத்தை இங்கு நான் குறிப்பிடுவது மிக முக்கிய மானது; ஏனெனில், பொறுக்குக் குழு உறுப்பினர்களோ, அவையோ அல்லது சட்டத்துறை அமைச்சரோ கூட மசோதாவில் கணிசமான மாற்றங்கள் உண்மையில் பட்டுள்ளன என்பதை அறிந்திருக்க வில்லை என்பதை இது எடுத்துக் காட்டுகிறது; எனவே நான் பணி வுடன் கூறுகிறேன்: இலாகாக் குழுவால்தான் உண்மையில் கணிசமான மாற்றங்கள் செய்யப்பட்டன, அதே சமயம் பொறுக்குக் குழுவால் அரிதாகவே மாற்றங்கள் செய்யப்பட்டன என்று நான் காண்பிக்க முடிந்தால், முக்கியமான பரிசீலனைகளை அவைமுன் அது எழுப்பும்.

முன்னதாகவே தயாராக வைக்கப்பட்டிருந்த புது மசோதா பொறுக்குக் குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டது. பொறுக்குக் குழுவின் அறிக்கையில் இருந்த உறுதிமொழி என்னவெனில், அது கணிசமான மாற்றங்கள் எதையும் கொண்டிருக்கவில்லை என்பதாகும்; மேலும், விதிகளை மாற்றி அமைத்தது, அவற்றின் எண்கள் மாற்றி அமைத்தது. மற்றும் வரைவுத் தன்மை வாய்ந்த சில ஒழுங்குபடுத்தும் மாற்றங்கள் மட்டுமே செய்யப்பட்டன என்று பொறுக்குக் குழுவின் அறிக்கையில் நாம் பெறும் உறுதிமொழி இதுதான். எனவே, இலாகாக் குழுவில்தான் அந்தக் கணிசமான மாற்றங்கள் செய்யப்பட்டன என நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். மாற்றங்களைத் தேடிக் கண்டுபிடிப்பது சுலபமானதல்ல; அவற்றைக் கவனிக்கத் தவறியதற்காக மதிப்பிற் குரிய உறுப்பினர்களை நான் குறை கூற முடியாது. ஓர் ஒப்பு நோக்கு விளக்க அட்டவணையை எண்கள் மட்டுமல்லாமல், மூன்று மசோதாக் களின் விதிகள், துணைவிதிகளை பக்கம் பக்கத்தில் எடுத்துக்காட்டும் விளக்க அட்டவணையை தயாரிக்க வேண்டி வந்தது. இலாகா மசோதா வின் ஒரு நகல் வேண்டுமெனக் கேட்டேன்; ஆனால், அது எனக்கு அளிக்கப்படவில்லை. ஐயா, அந்த இலாகாவின் மசோதா மிக முக்கிய மான ஆவணம்; உறுப்பினர்களுக்கு அது கொடுக்கப்பட வேண்டும் எனக் கூறுகிறேன். பொறுக்குக் குழு முன் அளித்த வாக்குமூலம் பற்றிய அறிக்கை நமக்கு அளிக்கப்பட்டது. ஆனால் இறுதியான மசோதாவை உருவாக்குவதில் பெரும் பங்கு வகித்த அதிமுக்கியமான ஆவணம் அளிக்கப்படவில்லை. மிக மிகச் சிரமத்துடனேயும் நான் ஒரு பிரதியை பெற்றேன்; அதுவும் இலாகாவிடமிருந்து பெறவில்லை. மதிப்பிற்குரிய ஓர் உறுப்பினரின் தயவால்தான் அது கிடைத்தது. ஐயா, பின்பு இணையான கட்டங்களில் மூல மசோதாவின் பொருத்தமான ஷரத்துக்களையும் அதற்கு ஒத்திருக்கும் இலாகா மசோதா, இறுதி மசோதாவின் ஷரத்துக்களையும் கொண்ட ஒப்பு நோக்கு அறிக்கை யைத் தயாரித்தேன்; ஒப்பு நோக்கும் விளக்க அட்டவணையை குறிப் பிட்டுக் காட்டினாலன்றி, மாற்றங்களின் உண்மையான முக்கியத் துவத்தை விளக்கிக் கூறுவது மிகவும் கடினமானது என்பதை நான் காண்கிறேன்.

இணையான பத்திகளில் மசோதாக்களை அச்சிட முயற்சி செய்து கொண்டிருக்கிறேன். அது பூர்த்தி செய்ய முடியாமல் போனதற்கு, உறுப்பினர்களின் வசதிக்காக அவர்களின் கரங்களில் அதை வைக்க முடியாமல் போனதற்கு வருந்துகிறேன். ஆனால், செய்யப்பட்ட கணிசமான மாற்றங்களை ஒவ்வொன்றாகக் குறிப்பிட்டுக் கூறுகிறேன். அவ்வாறு செய்யும்போது இலாகாக்குழு செய்த மிக முக்கிய மாற்றங்

களைக் குறிப்பிட்டுக் கூறுவேன். இலாகாக்குழுவால் செய்யப்பட்ட மாற்றங்கள் பற்றிய பரிசீலனையின் பேரிலே இந்த விஷயம் முடிவு செய்யப்படும். இலாகாக் குழு செய்த மாற்றங்களை - அதிகாரபூர்வமாக இலாகாவால் மறுக்கப்பட்ட, அவையின் உறுப்பினர்கள் அறியாத மாற்றங்களை - நான் எடுத்துக் கூறுவேன். மூல மசோதாவின் குறிப்பிட்ட சில விதிகளை தயவு செய்து அவை பரிசீலிக்கட்டும்.

பாகம் I-ல், விதி 2, துணை விதி (3) (4). இந்த விதிக்கு ஒத்ததான இலாகா மசோதாவின் விதி 2, துணை-விதி(2). மூலமசோதா கூறுகிறது:

> ''மாறாக நிரூபிக்கப்பட்டாலன்றி, மதத்தால் முஸ்லீம், கிருஸ்துவர், பார்ஸி அல்லது யூதர் அல்லாத ஒவ்வொரு நபருக்கும் இந்தத் தொகுப்பு முழுதும் பொருந்தும் என்று ஊகிக்கப்படும்.''

மூல மசோதாவில், அது வெறும் தற்கால ஏற்பு நியமம்தான். ஆனால் இலாகா மசோதாவில் அது நிச்சயமான சட்டவிதி. மூல மசோதாவில், ஒரு மனிதன் முஸ்லீம், கிருஸ்தவர், பார்ஸி அல்லது யூதனாக இல்லாமலிருந்தால், அவர் இந்து என்று தற்காலிகமாக அங்கீகரிக்கப்படுவார். அது சட்டத்தின் ஒரு விதியாகாது, ஆனால் ஊக விதியாகும். இலாகா மசோதாவில், பின் கண்டவாறு இது மாற்றப்பட்டது:

> ''மதத்தால் ஒரு முஸ்லீம், கிருஸ்தவர், பார்ஸி அல்லது யூதர் அல்லாத மற்ற எந்த நபருக்கும் இந்தசட்டத் தொகுப்பு பொருந்தும்.''

இரண்டிற்கும் வித்தியாசம் என்னவெனில், மூல மசோதாவின் படி முஸ்லீம், கிருஸ்தவர், பார்ஸி அல்லது யூதராக அல்லாத எந்த மனிதரும் இந்து என்று ஊகிக்கப்படுவார்; இந்துச் சட்டத்திற்கு உட்படுத்தப்படுவார்: இலாகா மசோதாவில் அது பின்வருமாறு கூறப்பட்டுள்ளது.

> ''மதத்தால் முஸ்லீம், கிருஸ்தவர், பார்ஸி அல்லது யூதர் அல்லாத எந்த ஒருவருக்கும் இந்தச் சட்டத் தொகுப்பு பொருந்தும்.''

ஐயா, இது ஒரு கணிசமான மாற்றத்தைக் கொண்டுவருவதாகும். மூல மசோதாவில் உத்தேச விதியாக இருந்தது இப்பொழுது ஒரு நிச்சயமான விதியாகி முஸ்லீம்கள், கிருஸ்தவர்கள், பார்ஸிகள், யூதர்கள் அல்லாத எந்த ஒருவருக்கும் இந்துச் சட்டம் பொருந்தும் என்று வரையறுத்துக் கூறுகிறது.

அந்த ஷரத்தில், பின்வருமாறு கூறப்படுகிறது:-

''எவர் ஒருவருக்கு இந்துச் சட்டம் பொருந்தாது என்று நிரூபிக்கப்பட்டால், அவருக்கு இந்துச் சட்டம் பொருந்தாது.''

விஷயங்களை சொல்லும் முறை திருப்திகரமாக இல்லை என்று நினைக்கிறேன். இறுதி மசோதா அவர்களுக்கு பொருந்தும்; ஆனால் இந்த ஷரத்து இச்சட்டத்தையே மாற்றுகிறது.

ஐயா, இது ஒரு தீவிரமான மாற்றத்தைக் கொண்டுவந்துள்ளது என்று கூறுகிறேன். சட்டத்தின் கொள்கை மீது நான் அக்கறை கொள்ள வில்லை. ஆனால் இலாகா மசோதாவில் உள்ள மாற்றங்கள் பற்றி கவலை கொள்கிறேன்; இதுபற்றி பொறுக்குக் குழு அறிந்திருக்க வில்லை என்று தோன்றுகிறது.

அடுத்து, ஐயா, மசோதாவின் மற்றொரு பகுதிக்கு வருகிறேன்....

திரு. தாஜாமுல் உசேன் : ஓர் ஒழுங்குப் பிரச்னையைக் கிளப்ப தங்கள் அனுமதியைப் பெறலாமா?

திரு. அவைத் தலைவர் : ஓ, தாராளமாக.

திரு. தாஜாமுல் உசேன்: எனது கற்றறிந்த நண்பர் திரு. நசிருத்தீன் அகமது, பொறுக்குக் குழு இலாகா மசோதாவை பரிசீலித் ததே தவிர மூல மசோதாவை அல்ல என்பதை நிலைநாட்ட முயன்று கொண்டிருக்கிறார். பொறுக்குக் குழுவால் மூல மசோதா பரிசீலிக்கப் பட்டது என்று தாங்கள் அளித்த தீர்ப்புக்குப் பின் அவர் இவ்வாறு சொல் கிறார். இப்பொழுது தங்கள் தீர்ப்பு பற்றி தெரிந்துகொள்ள விரும்பு கிறேன்.

திரு. அவைத் தலைவர்: அவரது வாதத்தை கேட்டுக் கொண் டிருக்கிறேன்; மசோதா சுற்றுக்கு அனுப்பப்பட வேண்டும் என்ற அவரது திருத்தத்திற்கும் அதைப் பொறுக்குக் குழுவுக்கு மீண்டும் அனுப்ப வேண்டுமென்ற மற்றொரு திருத்தத்திற்கும் ஆதரவாக அவர் பேசிக் கொண்டிருக்கிறார் என்று உணர்கிறேன். எனவே, எனது தீர்ப்பு அமுலில் இருக்கிறது என்றாலும் அவர் ஒரு வாதத்தை எடுத்துக் கூற முயலுகிறார் என நினைக்கிறேன். அதாவது திட்டத்திலும் உள் ளடக்கத்திலும் திரு. ஜோகேந்திரநாத் மண்டல் அறிமுகப்படுத்திய மூல மசோதாவிலிருந்து கணிசமான மாற்றம் செய்யப்பட்டுள்ளதால்,

இப்பொழுது மறுபடியும் சுற்றுக்கு அனுப்பப்படுவது அல்லது அதே பொறுக்குக் குழுவிற்கு மீண்டும் அனுப்பப்படுவது அவசியம் என்று கூறுகிறார். இதுவரை நான் புரிந்துகொண்டபடி, அவர் கூறுவது என்ன வெனில், முதல் மசோதாவில் ராவ் குழுவின் மூலத் திட்டப்படி, சட்டத்தின் பல்வேறு பகுதிகள் பல்வேறு உட்பிரிவுகளாக எடுத்துக் கொள்ளப்பட வேண்டும் என்பதாகும். ஒன்றை மற்றொன்றிலிருந்து பிரிப்பது சாத்தியமே. ஆனால் இப்போதையத் திட்டப்படி, எல்லாம் ஒன்றிணைந்த ஒன்றாக ஆக்கப்பட்டுள்ளது; அவரவர்கள் ஏற்றுக் கொள்கிற சில பாகங்களை எடுத்துக் கொள்வதும் அவர்கள் ஒப்புக் கொள்ளாததை விட்டுவிடுவதும் இப்பொழுது கஷ்டம், அவர் கூறுவது எந்த அவிற்குச் சரி என்பது வேறுவிஷயம்; எனவே மசோதாவை கருத்தறிய மீண்டும் சுற்றுக்கு அனுப்புவது அவசியம் என்று அவர் கூறுகிறார். விஷயத்தை இதுவரை நான் அறிந்து கொண்டது இவ்வாறு தான்; அவர் எனது தீர்ப்பை எதிர்த்துக் கூறுகிறார் என்று நான் நினைக்க வில்லை.

திரு. நசிருத்தீன் அகமது: கிஞ்சித்தும் இல்லை ஐயா, தங்களின் தீர்ப்பு குறித்துச் சந்தேகப்படுவதுகூட சரியல்ல. தீர்ப்பு ஒரு சட்ட விஷயம்; அது மிகச் சட்ட நுணுக்கத்தன்மை வாய்ந்தது. எனது ஒழுங்குப் பிரச்னை சில ஊகங்களை அடிப்படையாகக் கொண்டது; அவற்றைத் தெளிவாக நிரூபிக்க முடியவில்லை.

திரு. அவைத் தலைவர் : மதிப்பிற்குரிய உறுப்பினர் தமது வாதத்தைத் தொடரலாம்.

திரு. நசிருத்தீன் அகமது : எனது கருத்து அதுதான் என்பதை சாராம்சத்தில் ஒப்புக் கொள்கிறேன். ஆனால் இது அதற்கு மேலும் செல்லுகிறது. உண்மையில், மாண்புமிகு சட்டத் துறை அமைச்சரும் - அவர்தான் இலாகா மசோதாவுக்குப் பொறுப்பு - பொறுக்குக் குழு உறுப்பினர்களும் இலாகா மசோதாவில் செய்யப்பட்ட கணிசமான மாற்றங்களைப்பற்றி சரி நுட்பமாக அறிந்திருக்கவில்லை எனில், சட்ட ரீதியாகவும் யதார்த்தமாகவும் அவர்கள் இரண்டையும் கணிச மாகப் பரிசீலித்தார்கள் என்று எப்படிக் கூறமுடியும்? எனது நோக்கம் இதை எடுத்துக் காட்டுவதே. சட்ட ரீதியில் அவர்கள் இரண்டையும் பரிசீலித்தவர்கள்; ஆனால் உண்மையில் அவர்கள் போதுமான அளவு பரிசீலித்தார்களா என்பதுதான் கேள்வி. அவர்களின் தீர்ப்பு காரண மாக, சட்ட சம்பந்தமாக எத்தகைய பிரச்சினையும் எழவில்லை; அதன் நியாயத்தை நான் மரியாதையுடன் ஏற்றுக் கொள்கிறேன். ஆனால்

நான் வலியுறுத்தும் விஷயம் என்னவெனில், அவர்கள் இரண்டையும் பரிசீலித்தபோதிலும், ஒரு முக்கிய கஷ்டத்தை அவர்கள் எதிர் நோக்கினர்; அதாவது, அவர்களுக்கு சமர்ப்பிக்கப்பட்ட மசோதா மூல மசோதாவின் மறு வரைவு என்றும், விதிகள் மாற்றி அமைக்கப் பட்டன என்றும், எந்தக் கணிசமான மாற்றங்களும் செய்யப்பட வில்லை என்றும் தெளிவான உறுதிமொழி அளிக்கப்பட்டது; என்றாலும், உண்மையில் கணிசமான மாற்றங்கள் செய்யப்பட்டிருந்தன. நான் கூறும் விஷயம் என்னவெனில், சட்ட நுட்பரீதியில் பொறுக்குக் குழு மூல மசோதாவையும் இலாகா மசோதாவையும் பரிசீலித்த போதிலும், இந்த வெளிப்படுத்தப்படாத மாற்றங்கள் பற்றி தேவைப் படும் போதுமான பரிசீலனை மேற்கொள்ளப்படவில்லை, மேற் கொண்டிருக்கவும் முடியாது. இதுதான் முக்கியமான விஷயம். எனது நோக்கம் என்னவெனில், மசோதாவை மீண்டும் பொறுக்குக் குழு விற்கு அனுப்ப வேண்டும் அல்லது கருத்துக்கணிப்புக்காக சுற்றுக்கு அனுப்பவேண்டும் என்ற நிலையை தெளிவுபடுத்தத்தான்.

இலாகாக் குழு கணிசமான அளவு மேற்கொண்ட அடுத்த மாற்றம் விதி 2, துணை - விதி (4)-ல் காணப்படுகிறது. இங்கு புகுத்தப்பட்ட மாற்றம் இலாகாக் குழு செய்தது. மாற்றம் முற்றிலுமாக புதிது, அது மூல மசோதாவில் இல்லை; இது ஒரு முக்கியமான மாற்றம். இந்த மாற்றம் இலாகாக் குழுவால் மசோதாவில் அறிமுகப்படுத்தப்பட்டதே தவிர, பொறுக்குக் குழுவால் அல்ல. இது அதி முக்கியமான விஷயம். இலாகா மசோதா பின்வருமாறு வழி வகை செய்கிறது:

> "2(4) விசேஷத் திருமணச் சட்டம் 1872-ல் எது எப்படிக் கூறப்பட்டிருந்த போதிலும் (1872 சட்டம் III) அந்த சட்ட ஷரத்துப்படி இந்த சட்டத் தொகுப்பு அமுலுக்கு வரும் முன் திருமணம் செய்து கொண்ட எல்லா இந்துக்களுக்கும் இந்த சட்டத் தொகுப்பு பொருந்தும்."

இம்மாதிரி எதுவும் மூல மசோதாவில் இல்லை; விசேஷ திருமணச் சட்டம் 1872-ன் கீழ் திருமணம் செய்துகொண்டவர்கள் அந்தச் சட்ட எல்லைக்கு உட்படுவர் என்று குறிப்பிடுவதோடு மூல மசோதா நின்றுகொண்டுள்ளது. அதாவது விவாகரத்து, ஜீவனாம்சம் மற்ற ஷரத்துகள் பொறுத்தவரை அந்தச் சட்டத்தின் கீழ் திருமணம் செய்து கொண்டவர்கள் 1872 விசேஷ திருமணச் சட்ட ஷரத்துகளால் ஒழுங்கு படுத்தப்படுவர்; இவை முற்றிலும் மாறானது. இன்றைய சட்டத் தொகுப்பிலிருந்து இது எவ்வளவு மாறுபட்டது என்பது மிக முக்கிய மல்ல. எனினும் இப்போதைய துணை விதியின்படி சட்டத் தொகுப்பு அமுலுக்கு வருமுன் 1872ம் ஆண்டு விசேஷத் திருமணச் சட்டத்தின்கீழ்

செய்யப்பட்ட திருமணங்கள் விசேஷத் திருமணச் சட்டத்தின் கீழ் அல்லாமல் இந்தச் சட்டத் தொகுப்பின் எல்லைக்கு உட்படும். இது இலாகா மசோதாவில் கொண்டுவரப்பட்ட ஒரு முக்கிய விலகல் அல்லது மாற்றம், பொறுக்குக் குழு இதனை அப்படியே ஏற்றுக் கொண்டது. இது ஒரு முக்கிய மாற்றம்; அது நல்லதா, கெட்டதா, அது நல்லெண்ணத்தில் செய்யப்பட்டதா இல்லையா என்பதல்ல பிரச்சினை; ஆனால் ஒரு முக்கிய மாற்றம் இலாகாக் குழுவால் செய்யப் பட்டது; செய்யப்பட்ட மாற்றம் பற்றிப் பொறுக்குக் குழுவிற்கு குறிப்பாகத் தெரிவிக்கப்படவில்லை. மூல மசோதாவின் விதிகள் பற்றிய குறிப்புகள் ஓரத்தில் கொடுக்கப்பட்டிருந்தாலும், அந்தத் துணை விதி முற்றிலும் புதிது; ஆனால் இது ஒரு மாற்றம் என்பது சுட்டிக் காட்டப்படவில்லை. துணை விதியில் உள்ள மாற்றங்களும் சுட்டிக் காட்டப்படவில்லை. உண்மையில் சாதாரண மசோதாக்கள், பொறுக்குக் குழுவிலிருந்து வெளிவரும்போது, பொறுக்குக் குழு செய்த மாற்றங்கள் கோடிட்டுக் காட்டப்பட்டிருக்கும். இந்த நடைமறை அவசியமில்லை என்று பொறுக்குக் குழு கூறுகிறது; காரணம் ஓரத்தில் குறிப்புகள் கொடுக் கப்பட்டுள்ளன என்பதால் ஓர இடக்குறிப்பு விதிகளுக்கு மட்டுமே; ஆனால் இந்த துணைவிதி (4) முற்றிலும் புதிது என்று கூறுகிறேன். இந்தத் துணை விதி பற்றிய குறிப்பு பாகம் I, பகுதி 6, பக்கம் 2-ம் மற்றும் விவர அட்டவணை I, பக்கம் 30 ஆகும். செய்யப்பட்ட மாற்றம் இங்கு குறிப்பாகவோ அல்லது கோடிட்டுக் காட்டியோ எடுத்துக் கூறப்படவில்லை. குறைந்தது அது ஒரு முக்கியத் தன்மை வாய்ந்த மாற்றம்; பொறுக்குக் குழுவின் விசேஷ கவனத்தை ஈர்க்கும் முறையில் செய்யப்படவில்லை; மாற்றத்தின் தன்மையும் சுட்டிக் காட்டப்படவில்லை. இது மாற்றம் 2. முக்கிய மாற்றங்களைப் பற்றியே இங்கு எடுத்துக் கூறுகிறேன். இத்தகைய மாற்றங்கள் பல உள்ளன. இலாகாவால் அறிமுகப்படுத்தப்பட்ட உண்மையான மாற்றங்கள் பற்றியும், பொறுக்குக் குழுவால் உண்மையில் அறிமுகப்படுத்தப்பட்ட மாற்றங்கள் பற்றியும் உறுப்பினர்களும் பொது மக்களுக்கும் தெரிந்து கொள்ள ஒரு பிரசுரம் எதிர்காலத்தில் கிடைக்க ஏற்பாடு செய்யப்படு மென நான் நம்புகிறேன். நான் மீண்டும் வலியுறுத்துகிறேன்: பொறுக்குக் குழு சில மாற்றங்களையே செய்தது; மிகக் கணிசமான மாற்றங்கள் இலாகாக் குழுவால் செய்யப்பட்டது.

மசோதாவின் மற்றொரு பாகத்திற்கு நான் வருகிறேன். முந்திய பழக்க வழக்கங்கள், நடப்பு ஆகியவை சம்பந்தமாக சட்டத் தொகுப்பு செயல்படுவது பற்றி எடுத்துரைக்க மூல மசோதாவின் பாகம் I, விதி 3-ல் வழிவகை செய்யப்பட்டுள்ளது:

> ''இந்த சட்டத் தொகுப்பில் கையாளப்படும் எந்த விஷயங்கள் பற்றியும் இங்கு தெளிவாகக் குறிப்பிடப்படாத எந்த பழக்கவழக்கங்களையும் அல்லது செயல்பாடுகளையும் அதன் ஷரத்துக்கள் விலக்கி வைக்கும்.''

மூல மசோதா ''பழக்க வழக்கங்களையும் செயல்பாடுகளையும்'' மட்டுமே விலக்கி வைக்கும்; மூல மசோதாவில் குறிப்பாக அங்கீகரிக்கப்படாத வேறு எல்லாப் பழக்க வழக்கங்களும் விலக்கி வைக்கப்படும். இலாகா மசோதாவில் இதற்கு ஒத்ததான ஷரத்துக்களைப் பார்ப்போம்; பொறுக்குக் குழு கேள்வி கேட்காமல் ஏற்றுக் கொள்ளப்பட்டவை இவை. மாற்றம் இலாகா குழுவால் செய்யப்பட்டது, பொறுக்குக் குழுவால் அல்ல. இலாகா மசோதாவில் விதி 4, இறுதி மசோதாவின் விதி 4 உடன் ஒத்ததாக உள்ளது. ஓரக் குறிப்பு ' 'சட்டத் தொகுப்பின் ஒதுக்கித் தள்ளும் விளைவு' ஆகும்; இது அதிகம் மாறுபட்டது; அது மசோதாவின் பாகமாக இல்லாததால் இந்தக் குறிப்பைப் பற்றி நான் வலியுறுத்தவில்லை; இலாகா மசோதா பின்வருமாறு கூறுகிறது:

> ''இந்தச் சட்டத் தொகுப்பில் மற்றபடி தெளிவாக வழிவகை செய்யப் படாத இந்தச் சட்டத்தின் எந்த வாசகம் அல்லது சூத்திரம் அல்லது விளக்க உரை அல்லது பழக்க வழக்கம் அல்லது செயல்பாடு அல்லது இந்தச் சட்டம் அமுலுக்கு வருவதற்குமுன் நடைமுறையில் இருந்த மற்ற எந்த சட்டமும் இந்த தொகுப்பு கையாளும் எந்த விஷயங்கள் மீதும் எந்த சட்டரீதியான விளைவையும் ஏற்படுத்தாது.''

வார்த்தை மாற்றங்கள் முக்கியமானவையல்ல; ஆனால், பல முக்கிய புதிய விஷயங்கள் இலாகா குழுவால் அறிமுகப்படுத்தப் பட்டுள்ளன. ''இந்து சட்டத்தின் எந்த வாசகம், சூத்திரம் அல்லது விளக்கு உரை'' மற்றும் அடுத்து இந்தத் தொகுப்பு அமுலுக்கு வருவதற்குமுன்பு நடைமுறையில் இருந்த மற்ற எந்த சட்டமும்'' - இவை முற்றிலும் புதிது. இந்த அவை ஒரு நிமிடம் யோசித்து மாற்றத்தின் தீவிரத் தன்மையைப் பரிசீலிக்கட்டும். மூல மசோதாவில் குறிப்பாக அங்கீகரிக்கப்படாத எல்லாப் பழக்கவழக்கமும் செயல்பாடுகளும் நிச்சயமாகப் போய்விடும். ஆனால், பல வாசகங்களிலும், சூத்திரங்களிலும், விளக்க உரைகளிலும் இந்த மசோதா குறும்பு செய்துள்ளது. இதனால் நீதிமன்றம், பிரிவி கவுன்சில் ஆகியவற்றின் தீர்ப்புகளும் மூல சமஸ்கிருத வாசகங்கள் அல்லது மிக உயர்ந்த நீதிமன்ற சட்டரீதியான விளக்கங்களும் அழிந்துவிடும்; அதுபோலவே இந்த சட்டத் தொகுப்பு அமுலுக்கு வருவதற்கு முன்பிருந்த எல்லாச் சட்டங்களும் புனித மூல வாக்கியங்கள் மற்றும் ஒன்றரை நூற்றாண்டுக்

காலமாக உள்ள செழுமையான சட்டமும் ஒரு கையெழுத்தால் ஒழிக்கப் படும். ''இந்துச் சட்டத்தின் எந்த வாசகமும், சூத்திரமும் அல்லது விளக்க உரையும்'' என்பது எல்லாவற்றையும் உட்படுத்தும்போலும். ''இந்த சட்டத் தொகுப்பு அமுலுக்கு வருவதற்கு முன்பு நடைமுறை யில் இருந்த எந்தச் சட்டமும்'' என்பது இதில் உட்படுத்தப்படலாம் போலும்; நான் இவ்வாறு கூற அனுமதிக்கப்பட்டால், மசோதாவால், குறிப்பாக அங்கீகரிக்கப்படாத இந்துச் சட்டத்தின் எல்லா மூல வாக்கி யங்களும், விளக்க உரையும், சூத்திரமும் பயனற்றுப் போய்விடும். இது ஒரு கணிசமான மாற்றம்.

திருமதி ஜி. துர்க்காபாய் (மதராஸ் : பொது) : ஓர் ஒழுங்குப் பிரச்சினை. தங்கள் தீர்ப்பின் தகுதி குறித்து ஐயம் எழுப்புவது மதிப் பிற்குரிய உறுப்பினரின் உரிமைக்கு உட்பட்டதா? மசோதாவை 'இலாகா மசோதா' என்று கூறுவதன் மூலம் அவர் பொறுக்குக் குழு உறுப்பினர்களை அவமதிக்கிறார் என்றுதான் சொல்ல வேண்டும். பொறுக்குக் குழுவின் உறுப்பினர்கள் மசோதாவை முற்றிலுமாகப் பரிசீலித்தனர்; எல்லா மாற்றங்களையும் கவனத்தில் கொண்டனர். அதை இலாகா மசோதா என்று அவர் குறிப்பிடுவதால் இனி அது குறித்து அவர் வாதிக்க முடியாது. இவ்வாறிருக்கும்போது அவர் கூறுவது முறையா என்று தங்களின் தீர்ப்பை அறிய நாங்கள் விரும்பு கிறோம்.

அவைத் தலைவர் : இது ஓர் ஒழுங்கு பிரச்சனை அல்ல என்று அஞ்சுகிறேன். இவை அவாவரது சொந்தக் கருத்துகள்; இவை சில உறுப்பினர்களைக் கோபமூட்டுவதைப் புரிந்து கொள்கிறேன். மதிப்பிற்குரிய உறுப்பினர் இலாகா மசோதா என்ற சொற்றொடரை உபயோகிக்கும்போது, விஷயங்களை பொறுக்குக் குழு உறுப்பினர்கள் பரிசீலிக்கவில்லை என்று அவர் கூறுகிறார் என்று நான் நினைக்க வில்லை. ஒவ்வொரு தடவையும் ''பொறுக்குக் குழு உறுப்பினர்களின் சௌகர்யத்திற்காக இலாகாவில் வரைவு செய்யப்பட்ட மசோதா'' என்று சொல்வதற்குப் பதிலாக சுருக்கமாக 'இலாகா மசோதா' என்று சொற்றொடரை அவர் உபயோகித்து வருகிறார் என்பதை நான் கவனித்து வருகிறேன். இதற்குமேலும் இதில் எதுவும் இருப்பதாக நான் கருதவில்லை. இதனை வேறு எந்த வகையிலும் நாம் அர்த்தம் செய்து கொள்ள வேண்டாம். இலாகா மசோதா என்பது அதற்கான ஒரு சுருக்கமான சொற்றொடர். முன்பு மதிப்பிற்குரிய மற்றொரு உறுப் பினர் இந்த விஷயத்தைக் குறிப்பிட்டபோது ஒன்றைக் குறிப் பிட்டேன். அப்போது மதிப்பிற்குரிய இந்த உறுப்பினர் அன்று

அவையில் இருந்தாரா என்று எனக்குத் தெரியாது; பொறுக்குக் குழு செய்த மாற்றங்கள் கணிசமானவை; மாற்றங்கள் கணிசமானவை என்கிறபோது இந்த மசோதா பொறுக்குக் குழுவிற்கு திரும்ப அனுப்பப்பட வேண்டும் என்றோ அல்லது மறுபடி சுற்றுக்கு விடப்பட வேண்டும் என்றோ அவர் கூறுவது அவரது உரிமைக்குட்பட்டதே. விஷயம் அதுதான் என தோன்றினாலும், அவர் பாணியிலேயே அவர் பேசுகிறார்; மிக விரிவான முறையில் சொல்கிறார்; இதையே அவர் சுருக்கமாகக் கூறியிருக்க முடியும்.

திருமதி ஜி. துர்க்காபாய்: நான் கூறுவது என்னவெனில், பொறுக்குக் குழு உறுப்பினர்கள் அறியாமையில் இருந்ததாக அவர் குறை கூறுகிறார்.

திரு. நசிருத்தீன் அகமது : கிஞ்சித்தும் அப்படி இல்லை. ''அறியாமை'' என்று நான் குற்றம் சாட்டவில்லை; இலாகா மசோதாவைத் தொடர்ந்த இயல்பான கவனமின்மையால் மாற்றங் களுக்கான எந்தத் தடயங்களையும் இந்த மசோதா அளிக்கவில்லை (குறுக்கீடுகள்).

அவைத் தலைவர் : அமைதி, அமைதி.

திரு. நசிருத்தீன் அகமது : ''அறியாமை'' என்ற சொல்லை நான் வாபஸ் பெறுகிறேன். ஆனால், இலாகா மசோதாவின்பால் கொண்டுள்ள தவறான நம்பிக்கையால் அவர்கள் அதன் செல்வாக் கிற்குட்பட்டனர். (குறுக்கீடுகள்). இன்னமும் இது அவருக்குத் தெளி வாகவில்லையெனில், அவருக்காக வருந்துகிறேன்; மதிப்பிற்குரிய உறுப்பினர் இன்னமும் அதே சிந்தனையால் பாதிக்கப்பட்டிருக்கிறார்.

அவைத் தலைவர் : மதிப்பிற்குரிய உறுப்பினர் வேறு ஒரு முறையில் தொடரட்டும். இந்த விஷயத்திற்கு அவர்கள் அதிக கவனம் அளித்திருக்க வேண்டுமென்று அவர் சொல்லட்டும்.

நசிருத்தீன் அகமது : நான் கூறுவதன் பொருள் அதுதான். உண்மையில், எனது வாதத்திற்கு எந்தக் கடுமையான பதப்பிரயோ கமும் எனக்கு தேவை இல்லை. பதப்பிரயோகத்தைவிட காரணத்தை நான் அதிகமாக நம்புகிறேன். அந்தக் கடினமான பதப்பிரயோகத் தையும் நான் பயன்படுத்தியிருந்தால், அது நாடாளுமன்ற மரபு தவறிய தாக இல்லாவிடினும், நான் அதை வாபஸ் பெறுகிறேன். மீண்டும் என் பேச்சைத் துவக்குகிறேன்.

அவைத் தலைவர்: அவர் அதை திரும்பக் கூறத் தேவையில்லை; அவர் தொடர்ந்து பேசலாம்.

திரு. நசிருத்தீன் அகமது : மற்ற விஷயம் என்னவெனில், கணிசமான மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன என்பது மட்டுமல்ல, அந்த மாற்றங்கள் குறித்த தெளிவான அறிவிப்பு எதுவும் பொறுக்குக் குழுவிற்கு அளிக்கப்படாமல் அந்த மாற்றங்கள் செய்யப்பட்டன....

திரு. எல். கிருஷ்ணசாமி பாரதி: இதைத்தான் நாங்கள் ஆட்சேபிக்கிறோம். அவர் இவ்வாறு கூறமுடியாது. முழுவதையும் நாங்கள் நன்றாக அறிந்திருந்தோம்.

திரு. நசிருத்தீன் அகமது: மாண்புமிகு சட்ட அமைச்சர் மாற்றத்தை அறிந்திருக்கவில்லையெனில், கணிசமான மாற்றங்களைச் சுட்டிக்காட்டும்படி மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் திரும்பத் திரும்ப என்னைக் கேட்டார்கள் என்றால், அவற்றைப் பற்றி அவர்கள், தெரியாமல் இருந்தார்கள் என்பதை அது காண்பிக்கிறது; மாற்றங்களை அறிந்துகொள்ளாமலே நல்லெண்ணத்தில் அவர்கள் அவற்றை ஏற்றுக் கொண்டனர் என்பதையே அது காட்டுகிறது. மசோதாவை அபிவிருத்தி செய்வதாக நினைத்து ஒரு புத்திசாலியால் நல்லெண்ணத்தில் சில மாற்றங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன என்று நினைக்கிறேன்; இதன் மூலம் முற்றிலும் ஒரு புது மசோதாவை நாம் தயாரிப்பதை அவர் உணரவில்லை; யாரும் இதைக் கண்டு கொள்ளவுமில்லை.

மாண்புமிகு டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் : உண்மையில் நான் இதை எதிர்த்து கண்டனம் செய்ய வேண்டும். இது வரைவு செய்பவர் மீது தொடுக்கப்படும் ஒரு கடும் கண்டனமாகும். பொறுக்குக் குழு எல்லாவற்றையும் பரிசீலித்தபின், மசோதாவில் மாற்றங்கள் செய்ய வேண்டுமென ஒரு வரைவாளர் மூளையில் உதித்தது என்று அனேகமாக கருத்துத் தெரிவிக்கிறார் என் நணபர். இதை எதிர்த்து என் கடுமையான கண்டனத்தைத் தெரிவிக்கிறேன்.

திரு. எல். கிருஷ்ணசாமி பாரதி : பொறுக்குக் குழு உறுப்பினர்களுக்கு எதிராக அவர் குற்றம் சாட்டும் முறையை எதிர்த்து நாங்கள் கண்டனம் தெரிவிக்கிறோம்.

அவைத் தலைவர் : பொறுக்குக் குழு அறிக்கைக்குப் பின் மாற்றங்கள் செய்யப்பட்டனவா?

மாண்புமிகு டாக்டர் பி.ஆர். அம்பேத்கர்: அதைத்தான் அவர் குறிப்பாய் தெரிவிக்கிறார்.

அவைத் தலைவர் : "முன்பு" என்று கூறுகிறார்.

திரு. நசிருத்தீன் அகமது: ஆம் ஐயா, பொறுக்குக் குழு கூடுவதற்குமுன் மாற்றங்கள் செய்யப்பட்டன என்று நான் கூறினேன் என்பது முற்றிலும் உண்மை.

திரு. அவைத் தலைவர்: கொஞ்சம் தவறாகப் புரிந்து கொண்டதாகத் தோன்றுகிறது.

மாண்புமிகு டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் : எனக்கு கருத்து எதுவும் இல்லை. எனது நண்பரின் உரையை நான் புரிந்து கொண்டிருக்கிறேனாகில், அதன் பொருள், எது பற்றியும் கவனிக்காமல் பொறுக்குக் குழு கண்ணை மூடிக்கொண்டு கையெழுத்திட்டது என்பதாகும். இல்லையெனில், பொறுக்கக் குழு தன் பணியை முடித்த பின்பு, வரைவாளர் தமது மூளையில் உதயமானபடி சில மாற்றங்களை அறிமுகப்படுத்தினார் என்பதாகும். வேறு எந்தப் பொருளும் இதற்கு இருக்க முடியாது.

திரு. நசிருத்தீன் அகமது : மாற்றங்கள் நல்லெண்ணத்தில் செய்யப்பட்டனவா, நல்லெண்ணமற்ற முறையில் செய்யப்பட்டனவா என்பது நாம் பரிசீலிக்க வேண்டிய விஷயம் அல்ல.

மாண்புமிகு டாக்டர் பி.ஆர். அம்பேத்கர்: எந்த நண்பரும், பொறுக்குக் குழு செய்த மாற்றங்கள் என்று கருதுபவற்றை வரிசைப் படுத்திக் கூறினால் நான் கேட்கத் தயாராக இருக்கிறேன். பொறுக்குக் குழு சில மாற்றங்களைச் செய்தது என்று வைத்துக்கொண்டாலும், அது மட்டுமே கருத்தறிய மீண்டும் சுற்றுக்கு அனுப்புவதற்கு போதுமான காரணமாகுமா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. நசிருத்தீன் அகமது : இல்லை, இல்லை. அந்த மாற்றங்கள் பொறுக்குக் குழுவில் செய்யப்பட்டன என்று ஒருபோதும் நான் கூறவில்லை.

அவைத் தலைவர் : மதிப்பிற்குரிய உறுப்பினருக்கு நான் கூறும் ஆலோசனை என்னவெனில், அவர் கருத்துப்படி கணிசமான மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன என்று வைத்துக் கொண்டாலும், அவர் கோரிக்கை போதுமான அளவு பலமானது; மாற்றங்கள் அறியாமையால் செய்யப்பட்டனவா, நல்லெண்ணமற்றதாகச் செய்யப்பட்டனவா என்பதை அவர் கூறத் தேவையில்லை. பொறுக்குக்

குழு, திறந்த மனதுடன் எல்லா விஷயங்களையும் பரிசீலித்து மாற்றங்களைச் செய்திருக்கலாம். இன்னமும், கணிசமானத் தன்மை கொண்ட மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளதால் மசோதா கருத்துக்காக மறுசுற்றுக்கு அனுப்பப்படவேண்டும் என்று அவர் நினைக்கிறார்; மாற்றங்கள் முக்கியமானவை என்று அவர் நம்பினாலும், மற்றவர்கள் அதை ஏற்றுக் கொள்ளத் தேவையில்லை. கருத்துக்கள் வேறுபடலாம்.

திரு. நசிருத்தீன் அகமது : பொறுக்குக் குழுவால் செய்யப்பட்ட மாற்றங்கள் என்ன என்பதை எடுத்துரைக்க வேண்டியது என் பொறுப்பு என்று மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கூறினார். பொறுக்குக் குழுவால் செய்யப்பட்ட மாற்றங்கள் பற்றி அவையின் கவனத்தை நான் ஈர்க்கவேயில்லை என்று திரும்பத் திரும்பக் கூறுகிறேன். மாண்புமிகு சட்டத்துறை அமைச்சரின் மனதை அரித்துக் கொண்டிருக்கும் தவறு அதுதான் என்று நம்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் : அது மாதிரி எதுவும் இல்லை.

திரு. நசிருத்தீன் அகமது : மாற்றங்கள் பொறுக்குக் குழுவால் செய்யப்பட்டன என்பதை அவர் வலியுறுத்திக் கூறுகிறார். இது வரையில், நான்குறிப்பிட்டு வந்த மாற்றங்கள் பொறுக்குக் குழுவால் செய்யப்பட்டவையல்ல; மாறாக அவை இலாகாக் குழுவால் செய்யப்பட்டவை.

அவைத் தலைவர் : அமைதி, அமைதி, இங்குதான் பிரச்சினை வருகிறது. யார் மாற்றங்களைச் செய்திருந்தாலும், பொறுக்குக் குழு அவற்றை ஏற்றுக் கொள்ளும்போது அவை பொறுக்குக் குழுவால் செய்யப்பட்ட மாற்றங்களாகவே கருத வேண்டும்; பொறுக்குக் குழுவுக்குத் தெரியாமல் மற்றவர்கள் செய்த மாற்றங்களாகக் கருதப்படலாகாது. எனவே, மதிப்பிற்குரிய உறுப்பினர் இம்மாதிரியான குற்றச்சாட்டை சுமத்த வேண்டிய அவசியமில்லை. அவை யாரால் செய்யப்பட்டிருந்தாலும் - ஒரு தனி உறுப்பினர், அல்லது சட்ட அமைச்சர், வரைவுக் குழு அல்லது வேறு எவரது விருப்பப்படி செய்யப்பட்டிருந்தாலும், இந்த மாற்றங்கள் பொறுக்குக் குழுவால் செய்யப்பட்டன என்று நினைத்துக் கொண்டு பேச்சைத் தொடரவேண்டும். அவை கணிசமான மாற்றங்கள் என்று காண்பிக்க அவர் பேச்சை தொடர வேண்டும்.

திரு. நசிருத்தீன் அகமது : எனது சிரமம் என்னவெனில் நான் இதோடு நிறுத்திக்கொள்ள முடியாது. மாற்றங்கள் பொறுக்குக் குழுவால் புகுத்தப்பட்டன, வரைவுக் குழுவால் அல்ல என்று மாண்பு மிகு சட்டத்துறை அமைச்சர் வலியுறுத்திக் கூறுகிறார். பொறுக்குக் குழு விசுவாசத்துடனும் நல்லெண்ணத்துடனும் வரைவுக்குழு புகுத்திய மாற்றங்களை ஏற்றுக் கொண்டது. இது தெள்ளத் தெளிவானது. பொறுக்குக் குழு அதை ஏற்றுக்கொண்டபோது, அது மாற்றம் என்று தெரிந்து தனது சிந்தனையைச் செலுத்தவில்லை. மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் தெரிந்து கொள்ளாமல் இருப்பதுபோல, பொறுக்குக் குழுவும் தெரிந்து கொள்ளாமல் இருந்திருந்தால், இலாகாக் குழு புகுத்திய இந்த மாற்றங்களை யாந்தரீகமாக அவர்கள் ஏற்றுக் கொண் டனரே தவிர, இந்த மாற்றங்கள் எல்லாவற்றையும் முழுமையாகப் புரிந்து கொண்டு அவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை என்று கருதலாம். இந்த விஷயம்தான் எனது நிலையை பலமாக்குகிறது. இவை பொறுக்குக் குழு விரும்பியே செய்த மாற்றங்கள் என்பது மட்டுமல்ல; அவர்கள் செய்த மாற்றங்கள் கணிசமானவை; இதை புரிந்து கொள்ளாமலே அவர்கள் மாற்றங்களை ஏற்றுக்கொண்டனர். இது எனது நிலையை மேலும் வலுவாக்குகிறது. உண்மையில், இலாகா மசோதா, எந்த கணிசமான மாற்றமும் இல்லாத மறு வரைவு மட்டுமே என்று கருதி அவர்கள் ஏற்றுக்கொண்டனர் என்பது தெளிவு. பொறுக்குக் குழுவால் செய்யப்பட்ட மாற்றங்களை நான் சுட்டிக்காட்டுகிறேன் எனச் சட்டத் துறை அமைச்சர் கூட கருதுகிறார் என்பது இதை ஊர்ஜிதப்படுத்து கிறது. எனவே மாற்றங்களின்பால் பொறுக்குக் குழுவின் கவனம் ஈர்க்கப்படவில்லை என்று வாதிக்கும் கட்டாயத்திற்கு நான் உட்படு கிறேன். அதற்கு மாறாக, எந்தக் கணிசமான மாற்றமும் இல்லாமல், மூலமசோதாவின் மறுபதிப்பே இலாகா மசோதா என்று அவர்கள் எடுத்துக் கொண்டனர். அதை எந்த வித குற்றச்சாட்டும் இல்லாமல் நான் சொல்ல முடியும்; எந்தத் தவறுகளையும் நாம் எப்பொழுதும் விவாதிக்க முடியும். விஷயத்தை இதைவிட சவிஸ்தார மாக முன்வைக்கத் தேவை இல்லை என்று கருதுகிறேன்.

ஐயா, பொறுக்குக் குழு உறுப்பினர்கள் அல்லது சட்டத் துறை அமைச்சர் இதுபற்றி அதிகம் உணர்ச்சிவசப்படத் தேவையில்லை. அது பதிவு செய்யப்பட்ட விஷயம். உண்மையில், தாம் எந்த மாற்றத்தையும் கொண்டுவரவில்லையென சட்டத் துறை அமைச்சர் கூட ஒத்துக் கொண்டார்; பொறுக்குக் குழு செய்த மாற்றங்களை நான் சுட்டிக் காட்டிக் கொண்டிருப்பதாக அவர் எடுத்துக் கொள்கிறார். அவை ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும்; இந்த மாற்றங்களை அவர்களை ஒப்புக்

கொண்டிருக்க வேண்டும். ஆனால் நான் சுட்டிக்காட்டும் விஷயம் என்னவெனில் இவை உணர்வுபூர்வமாக, சட்டப்படியான சிந்தனையோடு அணுகப்படவில்லை என்பதேயாகும்; ஏனெனில் அவர்கள் அதுபற்றி அறிந்திருக்கவில்லை. இலாகாக் குழுவால் எந்தக் கணிசமான மாற்றங்களும் செய்யப்படவில்லை என ஒரு கேள்விக்கு மாண்புமிகு அமைச்சர் வலியுறுத்திக் கூறினார். ஆனால் கணிசமான மாற்றங்கள் செய்யப்பட்டு இருப்பதைப் பார்க்கிறோம்; அவை இலாகா மசோதாவில் சுட்டிக்காட்டப்படவில்லை. எனவே, வேண்டுமென்றே குற்றம் சாட்டப்படுகிறது என்ற கேள்விக்கே இங்கு இடமில்லை.

திரு. அவைத் தலைவர் : அந்த விஷயம் பற்றி இனி நாம் மீண்டும் குறிப்பிட வேண்டாம்.

திரு. நசிருத்தீன் அகமது : இது ஒரு தீவிரமான, அடிப்படையான மாற்றம். ஒரு பலமான அடித்தளத்தின் மீது நான் செல்வதாக நினைத்தேன். பட்டவர்த்தனமான விஷயங்களை சுட்டிக்காட்டுவது பொறுக்குக் குழு உறுப்பினர்களைப் புண்படுத்துவது என்று கருதப் பட்டால், அதற்காக என் வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எல். கிருஷ்ணசாமி பாரதி: உறுப்பினர்களுக்கு எதிராக நீங்கள் குற்றம் சாட்டக் கூடாது.

திரு. நசிருத்தீன் அகமது : என்ன குற்றச்சாட்டு? அவர்கள் தவறு செய்தார்கள் என்பதா? தவறு செய்வது மனித இயல்பு. பொறுக்குக் குழு உறுப்பினர்களும் மனிதர்களே என்பதைத்தான் குறிப்பிட்டேன்.

திரு. பி. தாஸ் : ஐயா, ஓர் ஒழுங்குப் பிரச்சினை. மதிப்பிற்குரிய உறுப்பினர் கடந்த மூன்று மாதங்களாக பொறுக்குக் குழு உறுப்பினர்களின் குறைபாடுகளை சுட்டிக்காட்டிக் கொண்டிருக்கலாமா? விஷயம் எழுப்பப்பட்டு தீர்த்து வைக்கப்பட்டுள்ளது. அவரது சொற்களை நான் ஏற்றுக் கொள்கிறேனா இல்லையா என்பது வேறு விஷயம். சட்ட நிறைவேற்றலை தடுப்பதற்கான கண்ணோட்டத்தில் மதிப்பிற்குரிய உறுப்பினர் பேசிக்கொண்டே போகக்கூடாது; சில ஆண்டுகளுக்கு முன் குழந்தைத் திருமணச் சட்டத்தை திருத்தி அதற்கான எனது மசோதா விஷயத்தில் எனது நண்பர் திரு. பைஜ்நாத் இவ்வாறுதான் செய்தார். சாஸ்திரங்களிலிருந்து மேற்கோள் காட்டினார்; மற்றும் மகாபாரதத்திலிருந்தும் மற்ற நூல்களிலிருந்தும் வாசித்துக்

காட்டினார். இங்கு பாவம் பொறுக்குக் குழு உறுப்பினர்கள் எனது நண்பர் திரு. நசிருத்தீன் அகமதால் மூன்று மாதங்களாக தாக்கப்பட்டு வருகிறார்கள். இது நீதிமன்றமல்ல. ஐயா, இந்த இந்து சட்டத் தொகுப்பு மசோதா ஏன் நிறைவேற்றப்படக்கூடாது என்பதற்கான அவரது வாதத்தை முன்வைக்கும்படி, நீங்கள் அவரைக் கேட்க வேண்டும். பொறுக்குக் குழுவிற்கு எதிராக நாம் இடைவிடாமல் ஏன் பேசிக் கொண்டே இருக்க வேண்டும்? இந்த அவையின் நீண்ட கால உறுப்பினர் என்ற முறையில், இதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை.

அவைத் தலைவர்: மதிப்பிற்குரிய உறுப்பினர், தீவிர மன மாற்றங்கள் பற்றி மட்டுமே குறிப்பிடலாம்.

திரு. நசிருத்தீன் அகமது: சரி, ஐயா, சட்டம் இயற்றலை தடுப்பதற்காக வேண்டுமென்றே நான் நீண்ட நேரம் பேசுகிறேன் என்ற குற்றச்சாட்டை ஆட்சேபிக்கிறேன். மதிப்பிற்குரிய உறுப்பினர் கொஞ்சம் அதிகமாகவே செல்கிறார் என்று நினைக்கிறேன். அவர் தமது மனதை முழுவதுமாக மூடிவைத்துக் கொண்டார் என்றே தோன்றுகிறது; கேட்கும் மனோநிலையில் அவர் இல்லை.

ஐயா, இதை பரிசீலிக்கும்படி நான் தங்களைக் கேட்டுக் கொள்ளலாமா? நான் பேசுவது கிஞ்சித்தும் பொருத்தமில்லாமலும் தவறாகவும் உள்ளதா என்று பாருங்கள். இந்துச் சட்டத்தின் தெளிவான மூலவாசகங்களையும், இந்த சட்டம் பற்றிய நீதிமன்றங்களின் கருத்து விளக்கங்களையும் அது தள்ளிவிடுகிறது என்பது தெளிவு. மூலமசோதாவில் இம்மாதிரியான எதுவும் இல்லை; மாற்றம் இலாகாக் குழுவால் அறிமுகப்படுத்தப்பட்டது. நியாயமாகப் பார்த்தால், அது ஒரு தீவிர மாற்றம் அல்லவா? சட்ட விஷயங்களை திரு. தாஸ் காது கொடுத்துக் கேட்க முடியாது. நிதி விஷயங்களில் அவர் திறமைசாலி. அவரது இரண்டாவது குழந்தைப் பிராயத்தை அவர் வேகமாக அணுகிக் கொண்டிருக்கிறார்.

திரு. பி. தாஸ்: இங்கு நாம் சட்டம் இயற்ற இருக்கிறோம். வழக்கறிஞர்கள் அல்லது உயர்நீதிமன்ற நீதிபதிகளின் வியாக்யான விளக்கங்களைக் கேட்க நாம் இங்கு வரவில்லை. (குறுக்கீடு)

திரு. நசிருத்தீன் அகமது: ஐயா, எல்லாம் கணிசமான மாற்றங்களைப் பொறுத்திருக்கிறது. இவை இலாகாக் குழுவால் புகுத்தப்பட்டவை அல்லவா? இந்த விஷயத்தைப் பொறுத்துள்ளது

மொத்தப் பிரச்சினையும். அது இலாகாக் குழுவால் புகுத்தப்பட்டிருந்தால், அது ஒரு கணிசமான மாற்றம் என்றால், பொறுக்குக் குழுவிற்கு அது பற்றி தெரிவிக்கப்படவில்லை. பொறுக்குக் குழு பரிசீலித்தது இலாகா மசோதாதான் என்றும், மூல மசோதாவை அல்ல என்றும் திரும்பத்திரும்பத் தெளிவாக்கப் பட்டுள்ளது. இது மறைமுகக் குற்றச்சாட்டு எனில், நான் வருந்துகிறேன். எனது கடமையை விசுவாசத்துடனும் ஆனால் கிஞ்சித்தும் பயமின்றியும், மிக மரியாதையுடனும் நான் ஆற்ற வேண்டியுள்ளது; இலாகா மசோதா, சாராம்சத்தில் மூல மசோதாவின் மறுபதிப்பே என்று நம்பும்படி பொறுக்குக் குழு செய்யப்பட்டது என்று பணிவுடன் கூறிக்கொள்கிறேன். மாற்றம் எதுவுமில்லை என்று மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கூட நம்ப வைக்கப்பட்டார். இது மறைமுகக் குற்றச்சாட்டல்ல. இது யதார்த்தம். மாற்றங்களைச் செய்தது யார்? அது சட்டத்துறை அமைச்சராக இருந்திருந்தால், அப்போது அவர் அது பற்றி தெரிந்து கொண்டிருப்பார். வேறு யாராவதா? மாற்றம் மற்றொருவரால் செய்யப்பட்டது என்று நான் சுட்டிக்காட்டுவது முறையற்றதா? அதைத் தவறாக அல்லது நல்லெண்ணத்தில் அவர் செய்திருக்கிறார் என்று நான் கூறுகிறேன். இந்த மாற்றங்கள் நேர்மையற்ற முறையில் செய்யப்பட்டன என்று நான் கூறுவது முறையாகுமா? அம்மாதிரி எதையும் நான் கூறவில்லை. நான் ஊகிக்கக் கூடியது என்னவெனில், இந்த மாற்றங்கள் நல்லெண்ணத்தில் பேனாவின் நர்த்தனத்துடன் - அபிவிருத்தி செய்யப்பட்டன என்பதுதான். ''மரபுச் சட்டத்தை மட்டும் ஏன் ஒதுக்கித் தள்ள வேண்டும்? பிரிவி கவுன்சில் தீர்ப்புகளையே நாம் ரத்து செய்து விடலாமல்லவா?''

ஐயா, எனது விமர்சனம் முறையானது. நான் உபயோகித்த எந்தச் சொல்லும் முறையற்றது எனில், அதைத் திரும்பப் பெற்றுக் கொள்கிறேன். ஆனால் விமர்சனம் விமர்சனம்தான்.

திரு. எல். கிருஷ்ணசுவாமி பாரதி : பிற மாற்றங்களையும் நாம் கேட்கலாம்.

திரு. நசிருத்தீன் அகமது: ஏன் கவலைப்பட வேண்டும்? இதற்குக் காது கொடுக்கக் கூடாதா?

அவைத் தலைவர் : அமைதி, அமைதி. மசோதா மீதான விவாதத்தை இம்முறையில் நாம் நடத்திக் கொண்டிருக்க முடியாது. இந்த மசோதாவை ஆதரிப்பவர்கள் இருக்கிறார்கள்; அதை எதிர்ப்

பவர்களும் இருக்கிறார்கள். ஒவ்வொருவரும், எம்முறையில் விரும்பு கிறாரோ, அம் முறையில் அவரது கருத்தைக் கூறட்டும் - புண்படும் படியோ நாடாளுமன்ற முறைக்கு ஒவ்வாத முறையிலோ பேசுவது கூடாது. அதுதான் ஒரே நிபந்தனை. இல்லையெனில், ஒவ்வொரு கட்டத்திலும் குறுக்கீடு இருக்கும்; முடிவில், மசோதாவை ஆதரிக்க விரும்புபவர்களே பாதிப்புக்குள்ளாவர்; இம்மாதிரியான விவாதத்தை அவசியமற்ற முறையில் மேற்கொள்வதில் நேரம்தான் வீண் விரய மாகும். மதிப்பிற்குரிய உறுப்பினர் தமது கருத்தைக் கூறுவார்; குழு இதில் அல்லது அதில் கவனம் செலுத்தவில்லை என்றோ அல்லது இந்த விஷயங்கள் பொறுக்குக் குழுவால் பரிசீலிக்கப்படவில்லை என்றோ அவர் கூறினால், அதில் அவமரியாதை என்று எடுத்துக் கொள்வதற்கு என்ன இருக்கிறது? அவ்வாறு கூறுவதற்கு அவருக்கு முழு உரிமை உண்டு. ஆனால் அவர் வேறு ஏதாவது கூறி மறைமுகமாக குற்றச்சாட்டைக் கூறக்கூடாது; இதில் நான் மிகவும் கவனமாக இருக் கிறேன். ஆனால் தமது கருத்துக்களை வெளியிட அவர் உரிமை பெற்றி ருக்கிறார் என நம்புகிறேன். மதிப்பிற்குரிய உறுப்பினரின் கவனத்திற்கு நான் கொண்டுவர விரும்பும் மற்றொரு விஷயம் இருக்கிறது. இந்த முக்கியமான மாற்றம் தமக்குத் தெரியாது என்று சட்டத்துறை அமைச்சர் கூறுவதால் இந்த மாற்றத்தைச் செய்தது வேறு ஒருவர் என்று உறுப்பினர் கூறுகிறார். அதற்கு மற்றொரு அம்சமும் உள்ளது. கணிசமான மாற்றம் என்று கருதப்படுவதை சட்டத்துறை அமைச்சர் கணிசமான மாற்றம் அல்ல என்று கருதினால், எந்தக் கணிசமான மாற்றம் பற்றியும் தாம் அறிந்திருக்கவில்லை எனக் கூற அவர் முழு உரிமை பெற்றுள்ளார். எனவே, ஏதோ மற்றவர் அறியாமையாலோ, அமைச்சருக்குத் தெரியாமலோ பொறுக்குக் குழுவில் புகுத்தினார் என்று பொருள் கொள்ள வேண்டிய அவசியமில்லை. விஷயங்கள் உருப்படியாக இருக்கட்டும். விஷயங்கள் உருப்படியானவையா, அல்லவா என்ற பிரச்சினையோடு கருத்துவேறுபாடு கட்டுப் பட்டிருக்கட்டும். இப்பிரச்சினையிலுள்ள பிரதான விஷயம் இதுதான் என நம்புகிறேன்.

திரு. நசிருத்தீன் அகமது: தவறு எனறால் திருத்திக் கொள் கிறேன். இது ஓர் உருப்படியான மாற்றம் என்று உணராமலோ அல்லது நம்பாமலோ சட்டத்துறை அமைச்சரால் அது செய்யப்பட்டிருக் கலாம். ஆனால் விஷயம் எங்கு இருந்ததோ அதே இடத்தில் இருக் கிறது. இவையெல்லாம் சாராம்சமான விஷயங்கள் - சட்டத்துறை அமைச்சரால் உணர்ந்தோ அல்லது மற்றொருவரால் உணரப்படா மலோ - எவ்விதத்தில் செய்யப்பட்டிருந்தாலும் அதுபற்றி விவாதிப்பது

நமக்கு முறையானதல்ல. ஆனால், இந்துச் சட்டத்தின் எல்லா மூல வாசகங்களும் விதிகள், விளக்கங்கள் எல்லாம் ஒரேவரியில் எளிதாக நீக்கப்படுகின்றன. இதன் விளைவு என்னவெனில், பிரிவி கவுன்சில், சமஷ்டி நீதிமன்றம் மற்றும் உயர்நீதிமன்றங்களின் கற்றறிந்த தீர்ப்பு யாவும் ஒரே வரியில் போய்விட்டன. உண்மையில், மூல மசோதா மீது இது தீவிரமாகத் தலையிடுவதே ஆகும்; இல்லையென்றால் அது என்ன என்று எனக்குத் தெரியவில்லை. கருத்து வேறுபாடுகள் இருக்கலாம். இந்த விஷயத்தை முற்றிலும் பாரபட்சமின்றியும், திறந்த மனதுடனும் அணுகும் ஒருவர், இது மூல மசோதா மீது மிகக் கடுமையாகத் தலையிடுவது என்று ஒப்புக் கொள்வதில் எந்தக் கஷ்டமும் இருக்காது.

திருமதி ஜி. துர்க்காபாய்: மற்ற உருப்படியான மாற்றங்கள் பற்றி தயவு செய்து பேசுங்கள்.

நசிருத்தீன் அகமது: மிக முக்கியமான விஷயத்தை மிக இலகுவாக கையாள்வது இது. ஆனால் நான் கூறுகிறேன் இவை மிகத் தீவிரமான மாற்றங்கள் :- இடைச் செருகல்கள் என்ற விளிம்பிற்குள் வருகின்றன - நல்லெண்ணத்திலா அல்லது தீய எண்ணத்திலா என்பது விஷயமல்ல.

ஐயா, இலாகாக் குழு உருவாக்கிய அடுத்த கூண்டு பாகம் I, பிரிவு 5 துணைப் பிரிவு (a)-ல் 'சாதி' பற்றிய விளக்கத்தை நீக்கியதாகும்; அதில் சாதி பற்றிய விளக்கம் இருந்தது. அது முற்றிலுமாக நீக்கப் பட்டது.

அவைத் தலைவர் : எந்தப் பிரிவை மதிப்பிற்குரிய உறுப்பினர் குறிப்பிடுகிறார்?

நசிருத்தீன் அகமது : பாகம் I, பிரிவு 5, துணைப் பிரிவு (b)ஐக் குறிப்பிடுகிறேன்; அதில் 'சாதி' பற்றி விளக்கம் இருந்தது.

அவைத் தலைவர் : மூல மசோதாவை அவர் குறிப்பிடுகிறாரா?

திரு. நசிருத்தீன் அகமது : ஆம். அந்த விளக்கம் இலாகா மசோதாவில் முற்றிலுமாக விடப்பட்டிருக்கிறது; அவ்விதம் விடப் பட்டிருப்பது பற்றி எதுவும் குறிப்பிடப்படவில்லை. மூலப் பிரிவுக்கு

பக்க ஓரத்தில் ஏனோ தானோ என்ற ரீதியில் குறிப்பிடப்பட்டிருக்கிறது; இந்தத் துணைப் பிரிவு விடப்பட்டிருக்கிறது; அது பற்றி எந்தக் குறிப்பையும் காண முடியவில்லை. இம்மாதிரி விட்டுவிடப்பட்டது பற்றிக் குறிப்பாக பொறுக்குக் குழுவின் கவனத்திற்குக் கொண்டு வரப் படவில்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன். ஐயா; இவை முக்கிய மான விஷயங்களா அல்லது இல்லையா என்பது பற்றி கருத்து வேறுபாடு அதிகம் இருக்க முடியாது. எப்படியாயினும், இந்த மாற்றங்கள் செய்யப்பட்டன என்பது பற்றி அறிவிக்கப்படுவதற்கு பொறுக்குக் குழு உரிமை பெற்றுள்ளது; இவை கணிசமான மாற்றங் களா அல்லது இல்லையா என்பது பற்றி ஒருவருக்கு ஒருவர் வேறுபட லாம். ஆனால், இந்த மாற்றம் செய்யப்பட்டனவா என்பதைத் தெரிந்து கொள்ளப் பொறுக்குக் குழுவிற்கு உரிமையுண்டு. ஆனால் அவர் களுக்குக் கூறப்படவில்லை.

அடுத்து, அதே பிரிவின் துணைப் பிரிவு (f)க்கு வருவோம்; இங்கு கோத்ரம் மற்றும் பிரவாரா பற்றிய வரையறைகள் விடப்பட்டு விட்டன. பின்பு, துணைப் பிரிவு (f)ல், ஸ்ரீதானம் என்பதன் விளக்கமும் விட்டுவிடப்பட்டது. எனவே சாதி பற்றிய வரையறை, கோத்ரம் பற்றிய வரையறை, பிரவாரா பற்றிய வரையறை, ஸ்ரீதானம் பற்றிய வரையறை ஆகியவை முற்றிலுமாக விடப்பட்டுள்ளன. மசோதா மீது இது எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதை அவையில் சுருக்கமாக விளக்கிக் கூறமுடியாது.

திரு. ஏ. தாணுப்பிள்ளை (திருவிதாங்கூர் சமஸ்தானம்): சட்டத்தில் தேவைப்படாத கலைச் சொல்லின் வரையறை என்றாலும் அது வரையறுத்துக் கூறப்பட வேண்டுமா என மதிப்பிற்குரிய உறுப்பினரிடமிருந்து நான் தெரிந்து கொள்ளலாமா?

திரு. நசிருத்தீன் அகமது: எவ்வளவு ஜாக்கிரதையாக இருக்க வேண்டுமோ அவ்வளவு ஜாக்கிரதையாக மதிப்பிற்குரிய உறுப்பினர் செயல்படவில்லை எனக் கருதுகிறேன். உண்மையில், இங்கு எழும் கேள்வி ஒரு விளக்கம் தேவைப்படுகிறதா இல்லையா என்பதல்ல. மசோதாவிலிருந்த ஒரு விளக்கம் யாரோ ஒருவரால் எந்த அதிகாரமும் இல்லாமல் நீக்கப்பட்டது. இலாகாக் குழு அதை நீக்கியது; அதை நீக்கு வதற்குத் தகுதி பெற்ற பொறுக்குக் குழுவின் கவனத்திற்கு அது கொண்டு வரப்படவில்லை.

திருமதி ஜி. துர்க்கா பாய்: பொறுக்குக் குழு அதற்காக முழுப் பொறுப்பையும் எடுத்துக் கொள்கிறது.

திரு. நசிருத்தீன் அகமது: இது பொறுக்குக் குழுவால் பரிசீலிக்கப்படவில்லை.

திரு. எம். திருமலராவ் (மதராஸ் : பொது) : அச்சுக் கோப்பவர் அதை விட்டுவிடவில்லை என்பது பற்றி தாங்கள் உறுதியாக இருக்கிறீர்களா?

அவைத் தலைவர் : குறுக்கீடு செய்பவர்களை இடஞ்சல் செய்பவர்கள் என்றும் அழைக்கலாம். குறுக்கீடு செய்தால், அதுபற்றி அவர் அதிக நேரம் எடுத்துக் கொள்வார்.

திரு. எல். கிருஷ்ணசாமி பாரதி: இந்த எல்லா விஷயங்களும் உண்மையில் பொறுக்குக் குழுவின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டன என்று கூறி மேற்கொண்டும் வாதங்களை நான் சுருக்கலாம். இந்த விஷயம் பொறுக்குக் குழுவின் கவனத்திற்குக் கொண்டு வரப்படவில்லை என்று மதிப்பிற்குரிய உறுப்பினர் தேவையில்லாமல் திரும்பத் திரும்பக் கூறி கொண்டிருக்கிறார். பொறுக்குக் குழுவின் உறுப்பினர் என்ற முறையில் இந்த எல்லா விஷயங்களும் முழுமையாகப் பரிசீலிக்கப்பட்டன. சகல அம்சங்களும் பொறுக்குக் குழுவால் பரிசீலிக்கப்பட்டன. எனவே மதிப்பிற்குரிய உறுப்பினர் அரைத்த மாவையே அரைப்பதுபோல் இந்த விஷயம் பற்றி மீண்டும் மீண்டும் பேச வேண்டிய அவசியம் இல்லை.

அவைத் தலைவர் : விஷயம் முழுமையாகப் பரிசீலிக்கப்பட்டிருந்தாலும், தமது கருத்துக்களை எடுத்துரைப்பது மதிப்பிற்குரிய உறுப்பினரின் உரிமைக்கு உட்பட்டதே என நான் கூறுவேன். இந்த மசோதா மீண்டும் பொறுக்குக் குழுவிற்கு அனுப்பப்பட வேண்டும் என்ற தமது நிலையை விளக்க அவர் தமது வாதங்களை முன்வைக்கிறார் என்பதை மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் காண முடியும். முழுமையான, போதுமான, முறையான, நியாயமான கவனத்தைப் பொறுக்குக் குழு மேற்கொண்டிருக்கலாம்; ஆனால் அவர் கருத்துப்படி அது போதாது. எனவே, கவனம் செலுத்தியது வேண்டிய அளவு இல்லை என்பதால் மசோதா பொறுக்குக் குழுவின் பரிசீலனைக்கு மீண்டும் அனுப்பப்படவேண்டுமென அவர் வலியுறுத்துகிறார். அவர் பின்பற்றும் வாதப்போக்கு அது; அத்தகைய

வாதப் போக்கை அவர் பின்பற்றினால் அவரது நிலையை அவர் நீடிக்க வேண்டும். தேவையான கவனம் அளிக்கப்பட்டது பற்றி, முறையான போதுமான கவனம் அளிக்கப்பட்டதா என்பது பற்றி பொறுக்குக் குழு உறுப்பினர்கள் முழுமையான தீர்ப்பளிப்பவர்களாக எவ்வாறு இருக்க முடியாதோ அவ்வாறே அவருடைய தீர்ப்பும் இறுதியானதல்ல. அவர் தமது கருத்தை முன்வைக்கிறார். அந்த அடிப்படையில் நாம் தொடர்வோம். இல்லையெனில், இந்த விவாதத்திற்கு முடிவே இருக்காது.

திரு. எல். கிருஷ்ணசாமி பாரதி: யதார்த்த நிகழ்வு பற்றிய விஷயத்தை மட்டுமே நான் குறிப்பிட்டேன்.

அவைத் தலைவர் : அது கருத்து பற்றிய விஷயமாகும். மதிப்பிற்குரிய உறுப்பினர் யதார்த்த நிகழ்வு என்று எதைக் கருதுகிறாரோ, அது உண்மையில் கருத்து என்ற ஒரு விஷயம்தான். கவனம் போது மானது அல்லது இல்லை என்பது கருத்து என்ற விஷயம் அல்ல; யதார்த்த நிகழ்வு என்ற கேள்வி மட்டுமே.

திரு. நசிருத்தீன் அகமது : கவனத்தின் போதுமான தன்மை தான் பிரச்னை.

(இந்தக் கட்டத்தில் அவைத்தலைவர் அவையிலிருந்து வெளியில் செல்ல, தலைமைப் பொறுப்பை துணை அவைத் தலைவர் (திரு. அனந்தசயனம் அய்யங்கார்) ஏற்றார்.

திரு. நசிருத்தீன் அகமது : ஐயா, மற்றைய நாளில் அநேக மாகத் தொடர்ந்து எனக்குக் குறுக்கீடு ஏற்பட்டது; இன்றும் மறுபடியும் பல குறுக்கீடுகள் செய்யப்படுகின்றன.

திரு. பண்டிட் லட்சுமி காந்த மைத்ரா : தங்களுக்கு நான் தொடர்ந்து ஆதரவு அளித்து வருகிறேன்.

திரு. நசிருத்தீன் அகமது : எனது நண்பர் திரு. பாரதி இருக்கிறார். பொறுக்குக் குழுவில் என்ன நிகழ்ந்தது என்று அவர் அவைக்குக்கூறுவது சரியா? அப்படியாயின் பொறுக்குக் குழுவின் உறுப்பினர்களிடமிருந்தே இதற்கு மாறான கருத்தை கூறுவதற்கு எனக்கு பலமான ஆதாரம் உள்ளது. ஓர் உறுப்பினரின் கூற்றை மற்றொரு உறுப்பினரின் கூற்றோடு ஒப்பிடுவது மிக தவறானதாக

இருக்கும்; பொறுக்குக் குழு எல்லாவற்றையும் பரிசீலித்தது என்று மதிப்பிற்குரிய உறுப்பினர் உறுதியளிப்பதற்கு அவசியமில்லை. அவர் அவ்வளவு உறுதியாக இருப்பாராயின், பல காரணங்களால், தேவையான பரிசீலனை அளிக்கப்படவில்லை என்பது பற்றி நானும் அதே அளவு உறுதியாக இருக்கிறேன்.

திரு. எல். கிருஷ்ணசுவாமி பாரதி: நான் என்னைப் பற்றி மட்டுமே பேசிக் கொண்டிருந்தேன்.

பண்டிட் லட்சுமிகாந்த மைத்ரா: விஷயங்களை உங்களால் புரிந்து கொண்டிருக்க முடியாது.

திரு. நசிருத்தீன் அகமது: உண்மையில், இது ஒரு தனி மனிதர் சம்பந்தப்பட்ட விஷயமல்ல. இது முழுவதும், ஒரு தனி மனிதர் விவகாரமல்ல, ஒருவர் புரிந்து கொண்டாரெனில், எல்லோரும் அதைப் பரிந்து கொண்டனர் என்று பொருளல்ல.

பண்டிட் லட்சுமி காந்த மைத்ரா: ஒரு மரம் தோப்பாகாது.

திரு. நசிருத்தீன் அகமது: உண்மையே. "ஒரு மரம் தோப்பாகாது" தான், மாற்றம் எதுவும் செய்யப்படவில்லை என்று பொறுக்குக் குழுவில் உள்ள ஒருவர் நம்பினாலும் பொறுக்குக் குழுவிற்கு மீண்டும் மசோதாவை அனுப்பி வைக்க சிபாரிசு செய்ய வேண்டுமென்ற நிலையை எடுக்க அது போதுமானதாகும். இவை மிக முக்கியமான மாற்றங்கள் என்று மீண்டும் நான் பணிவுடன் கூறுகிறேன். அடுத்து எத்தனை மாற்றங்கள் அதில் உள்ளன என்று என் நண்பர்கள் அதிசயிக்கின்றனர்; அவர்களிடம் அத்தகைய பல பல மாற்றங்களை நான் காண்பிக்க முடியும். உதாரணமாக....

திருமதி ஜி. துர்க்காபாய் : இதற்கிடையில், எனக்கு ஒரு விஷயம் தெரிய வேண்டும். பொறுக்குக் குழு செய்த மாற்றங்கள் அவையை முழுமையாகக் கட்டுப்படுத்துமா? அம்மாற்றங்களை அவை ஏற்றுக் கொள்ளலாம் அல்லது அவற்றை நிராகரிக்கலாமல்லவா?

திரு. நசிருத்தீன் அகமது : பொறுக்குக் குழுவின் மாற்றங்களை அவை ஏற்றுக் கொள்ள வேண்டுமா அல்லது நிராகரிக்க வேண்டுமா என்பது பொருத்தமற்ற விஷயம் என்பதை மிகவும்

மரியாதையுடன் தெரிவித்துக் கொள்கிறேன். பொறுக்குக் குழு எந்த மாற்றத்தையும் செய்யலாம்; மேலும் அவையும் மேற்கொண்டு மாற்றங்களைச் செய்ய முடியும். மாற்றங்களை அவை செய்ய முடியுமா? அதைப்பற்றிச் சந்தேகம் எதுவும் கிடையாது. ஆனால் விஷயம் என்னவெனில், சில காரணங்களால் பொறுக்குக் குழு தனது கடமைகளை முழுமையாகச் செய்யவில்லை அல்லது செய்ய முடிய வில்லை அல்லது செய்யத் தவறிவிட்டது அல்லது செய்யாமல் விட்டு விட்டது. இது இவ்வாறாயின், இந்த விஷயம் பற்றி முழுவதும் பரிசீலனை செய்யும் உரிமை அவைக்கு உள்ளது; எனவே, பொறுக்குக் குழுவிலிருந்து அவைக்கு நான் வேண்டுகோள் விடுக்கிறேன். அதையும்விட பெரிய அவை உள்ளது. இந்தியாவின் மொத்த வாக்காளர்கள்தான் அந்த அவை. மூல மசோதா பிரிவு 7க்கு இப்பொழுது நான் வருகிறேன். சில உறுப்பினர்கள் நிதானம் தவறிவிட்டார்கள் என்று நினைக்கிறேன்.

திரு. தாஜாமுல் உசேன் : உறுப்பினர்கள் நிதானம் இழந்து விட்டனர் என்ற கூற்றை வன்மையாகக் கண்டிக்கிறேன். இது சம்பந்தமாக ஓர் உரிமைப் பிரச்சினையை எழுப்புகிறேன். நிபந்தனையின்றி அதை அவர் வாபஸ் பெற வேண்டும்.

திரு. துணை அவைத் தலைவர் : மதிப்பிற்குரிய உறுப்பினர் இதையெல்லாம் கூறத் தேவையில்லை என நினைக்கிறேன்.

திரு. தாஜாமுல் உசேன்: அவர் அதை வாபஸ் பெற வேண்டும். அவரது இந்தக் கூற்று முறையானதா? மதிப்பிற்குரிய உறுப்பினர்களுக்கு எதிராக உக்கிரமான சைகைகளை நெடுகிலும் அவர் காண்பித்து வருகிறார்.

திரு. துணை அவைத்தலைவர் : உறுப்பினர்கள் நிதானத்தை இழந்துவிட்டனர் என்று மதிப்பிற்குரிய உறுப்பினர் கூறுவது முறையானது என்று நான் நினைக்கவில்லை. அவையின் கண்ணியத்திற்கு அது இழுக்கு ஏற்படுத்துகிறது. அதேசமயத்தில் நான் இதைக் கூற வேண்டும்: ஓர் உறுப்பினர் யாரைக் குறித்து பேசுகிறாரோ அவருக்கு இவர் உபயோகிக்கும் பாஷை பிடிக்காமல் போகலாம். கொஞ்சம் பொறுமை காண்பிக்கப்பட வேண்டும். வார்த்தையாலோ சைகை யாலோ குறுக்கீடுகள் இருக்கக்கூடாது. எனவே, உறுப்பினர் கோப்புக் புத்தகங்களைப் புரட்டிக் கொண்டிருக்கும்போது, குறுக்கீடு செய்தால் அவற்றை அவர் தவற விட்டுவிடக்கூடும்; இத்தகைய குறுக்கீடுகள் அவரை ஆத்திரமடையவே செய்யும்.

திரு. நசிருத்தீன் அகமது: நான் நிதானம் இழந்துவிட்டேன் என்று நேருக்கு நேராகவே என்னிடம் கூறப்பட்டது.

திரு. துணை அவைத் தலைவர் : மதிப்பிற்குரிய உறுப்பினர் தமது வாதத்திலிருந்து விலகிச் செல்லுகிறார்.

திரு. தாஜாமுல் உசேன் : அவர் திசை தவறிச் செல்லுகிறாரா என்பதை நான் தெரிந்து கொள்ளலாமா?

திரு. நசிருத்தீன் அகமது: ஐயா, நான் எனது வாதத்தைத் தொடர்கிறேன். மூலமசோதாவில் பிரிவு 2 'மகன்' என்பதை வரையறை செய்யும்போது ஒரு **தராத்தகா கிரிட்ரிமா** அல்லது கோதா மகன் முதலியவற்றைக் குறிக்கிறது. ஆனால் **தாசி புத்திரர்** போன்றவர்களை அது குறிக்கவில்லை. இலாகா மசோதாவில் இது முற்றிலுமாக விடப்பட்டிருக்கிறது.

திரு. எல். கிருஷ்ணசாமி பாரதி : மதிப்பிற்குரிய உறுப்பினர் எதையாவது படிக்கும்போது, அதைச் சரியாக செய்ய வேண்டாமா?

திரு. நசிருத்தீன் அகமது: இது விட்டுவிடப்பட்டதாக நான் காண்கிறேன். எங்காவது வரையறை - மசோதாவின் வேறு எந்த பாகத் -திலாவது இருந்தால், எனது கவனத்திற்கு அதைக் கொண்டு வரலாம்.

திரு. துணை அவைத் தலைவர் : உரையாற்றியவரை இப்பொழுது குறுக்கீடு செய்த மதிப்பிற்குரிய உறுப்பினர் மீண்டும் மீண்டும் யோசனைகளைத் தெரிவித்துக் கொண்டிருக்கிறார். தாம் சொல்ல விரும்புவதைக் குறித்துச் சொல்வதில் திரு. நசிருத்தீன் அகமது கொஞ்சம் வேகக் குறைவாக இருக்கலாம். அவரை குறுக்கீடு செய்வது தேவையில்லை.

திரு. நசிருத்தீன் அகமது : 'மகன்' பற்றிய வரையறை விடப் பட்டுள்ளது எனக் கூறுகிறேன். நான் கூறுவது தவறு என்றால் தவறை எனக்குச் சுட்டிக் காட்டலாம்.

டாக்டர் பி.எஸ். தேஷ்முக் (மத்திய மாகாணம் : பொது) : மதிப்பிற்குரிய உறுப்பினர் கூறியது தவறு என்று நினைக்கிறேன்.

திரு. துணை அவைத் தலைவர் : மதிப்பிற்குரிய உறுப்பினர் கள் இம்மாதிரிக் குறுக்கீடு செய்து கொண்டிருந்தால் அவையின்

அலுவலை ஒழுங்கான முறையில் நடத்துவது சாத்தியமில்லாது போகும். மதிப்பிற்குரிய உறுப்பினர்களிடம் கேள்விகள் கேட்காமலே திரு. நசிருத்தீன் அகமது தொடர்ந்து பேசலாம்.

திரு. நசிருத்தீன் அகமது : நான் கூறியது போல, மகன் பற்றிய பொருள் வரையறை விடப்பட்டிரக்கிறது; அத்துடன் பாகம் II பிரிவு 2, துணைப்பிரிவு (3ல்) சொத்து மீதான மரபுரிமை பற்றிய விளக்கங்களும் விடப்பட்டுள்ளன. 4 விளக்கங்கள் விடப்பட்டுள்ன. இவை கணிசமான மாற்றங்கள் செய்யப்பட்ட மாற்றங்கள் பற்றிய தன்மை பற்றி அவையின் கவனத்தை ஈர்க்கவே முயன்று கொண்டிருக்கிறேன். என் கருத்துப்படி இந்தவிடுபாடுகள் முக்கியத்தன்மை வாய்ந்தவை. வரைவு தன்மை கொண்ட விடுபாடுகள் அல்ல இவை. மசோதாவை செழுமைப்படுத்தவோ அல்லது இந்த விடுபாடுகளைச் செய்யவோ பொறுக்குக் குழுவிற்கு உள்ள உரிமையை நான் மறுக்கவில்லை. என்றாலும், இந்த மாற்றங்கள் பொறுக்குக் குழுவால் செய்யப்படவில்லை, வரைவுக் குழுவால் செய்யப்பட்டவை; இந்த விடுபாடுகள் பற்றிக் குறிப்பாக பொறுக்குக் குழுவின் கவனத்திற்குக் கொண்டு வரப்படவில்லை.

அடுத்து, வரைவுக் குழு புகுத்திய மிக உருப்படியான மாற்றங்களை எடுத்துக் காட்ட, மசோதாவின் மற்றொரு பாகத்தை எடுத்துக் கொள்கிறேன். மூல மசோதாவின் பாகம் II, பிரிவு 4-ல் வாரிசுதாரர்களின் பட்டியல் கொடுக்கப்பட்டுள்ளது. உயில் எழுதாமல் இறந்து விட்ட ஓர் ஆணின் மரபுரிமைச் சொத்து இந்த பாகத்தில் வகுக்கப் பட்ட விதிகளின்படி, (அ) உட்பிரிவு 5-ல் எண்ணிக்கையிடப்பட்ட வாரிசுகள் இருந்தால் அவர்களுக்கோ (ஆ) எண்ணிக்கையிடப்பட்ட வாரிசு யாரும் இல்லையெனில், அவரது பங்காளிகள் யாரும் இருந்தால் அவர்களுக்கோ, பங்காளிகள் யாரும் இல்லையெனில், இரத்த உறவு உடைய உறவினர்களுக்கோ, இரத்த உறவு உறவினர் இல்லையெனில், உட்பிரிவு 10ல் குறிப்பிடப்பட்ட வாரிசுகள் யாராவது இருந்தால் அவர்களுக்கோ உரிமையாக்கப்படும்.

திரு. துணை அவைத் தலைவர்: இந்துச் சட்டத் தொகுப்பின் ஒப்புநோக்கு அட்டவணைகளின் பிரதி மதிப்பிற்குரிய உறுப்பினரிடம் இருக்கிறதா என்பது எனக்கு தெரியாது. மதிப்பிற்குரிய எல்லா உறுப்பினர்களுக்கும் அது அனுப்பப்பட்டது. ராவ் குழுவால், வரைவு செய்யப்பட்ட மூல இந்துச் சட்டத் தொகுப்பு சட்டத்துறை அமைச்சகத்தால் திருத்தங்கள் செய்து சீராக்கப்பட்டது; செய்யப்பட்ட

மாலை 4 மணி

மாற்றங்கள் அதில் குறிப்பிட்டுக் காட்டப்பட்டுள்ளன. எனவே மதிப்பிற்குரிய உறுப்பினர் இந்த விஷயம் பற்றி சிரமப்பட வேண்டாம். முதல் விஷயம் பற்றி அவர் போதுமான நேரத்தைச் செலவழித்திருக்கிறார் என்று நினைக்கிறேன். விஷயம் போதுமான அளவு தெளிவாக இருக்கிறது என்பது என் சொந்த அபிப்பிராயம். உதாரணங்கள் எப்பொழுதும் அதிகப்படுத்தப்படலாம். இங்கு, ஏதேனும் விஷயம் இருந்தால், அதை அவை பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளும். எடுத்துக் கூறப்பட்ட சில விஷயங்கள் போதுமான எண்ணிக்கையில் உள்ளன. அவை மேலும் தெளிவுபடுத்தப்படலாம் என்பதை ஒப்புக் கொள்கிறேன்; ஆனால் அட்டவணையில் செய்யப்பட்ட மாற்றங்கள் போதுமானவை.

திரு. நசிருத்தீன் அகமது : ஐயா, பட்டியல் முழுமையானதுமல்ல, திட்பநுட்பமானதுமல்ல; மற்றும் செய்யப்பட்ட மாற்றங்கள் சுட்டிக்காட்டப்படவில்லை. மூல மசோதாவின் மூலப்பிரிவுகளுக்கு மாற்றான மாற்றங்கள் பற்றிய குறிப்புகள் மிகக் குறைவு. இப்பொழுது மிக முக்கியமான ஒரு மாற்றத்திற்கு வருகிறேன். அது மரபுரிமை பற்றியது. புதிய மசோதாவோடு அல்லது இலாகா வரைவோடு கண்டு கொள்ள முடியாத அளவுக்கு அது மாற்றப்பட்டுள்ளது. மூல மசோதாவுக்கு ஒரு மாற்றானதாகவும் அது இல்லை. மரபுரிமையைப் பொறுத்த வரை, பெரும் எண்ணிக்கையில் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன.

மசோதாவின் பாகம் II(a) பிரிவு 4ல் வரிசைப்படுத்தப்பட்ட வாரிசுகள் பற்றி முதலில் கூறுகிறேன். ஒவ்வொன்றாக வரிசைப் படுத்தப்பட்டுள்ள பட்டியலில் முக்கியமான மாற்றங்கள் செய்யப் பட்டதைக் காண்பிக்கும் நிலையில் இருக்கிறேன். மூலமசோதாவில் இருந்தது ஒன்று; இலாகாக் குழு மாற்றி வரைவு செய்ததில் அது முற்றிலுமாக வேறாக உள்ளது. முதலில் செய்துள்ள ஏற்பாடு தலைகீழாக மாற்றப்பட்டுள்ளது. அடுத்து, வரிசைப்படி கொடுக்கப்பட்டுள்ள வாரிசுகள் இல்லையெனில் சொத்து பங்காளிகளுக்குச் சேர்கிறது. பங்காளிகள் என்பதற்கான வரையறை மூலமசோதாவில் நன்கு தரப்பட்டிருந்தது; ஆனால் இலாகாக் குழுவால் மாற்றியமைக்கப்பட்ட மசோதாவில் 'பங்காளி' என்ற சொல் மிகவும் குறுகிய அர்த்தத்தில் பயன்படுத்தப் பட்டுள்ளது. இந்துச் சட்டப்படியும் முஸ்லீம் சட்டப்படியும் வேறு எந்தச் சட்டப்படியும், வரிசைப்படுத்தப்பட்ட வாரிசுகள் இல்லையெனில் தூரத்து வாரிசுகளும் உரிமை பெறுகின்றனர்; மூல மசோதாவின்படி இதுதான் நிலை. இலாகாக் குழு திருத்தியமைத்த மசோதாவில், பங்காளி என்னும் சொல் ஒரு குறிப்பிட்ட வட்டத்திற்குள் வைக்கும்

வகையில் பெரிதும் மாறுபாடு செய்யப்பட்டுள்ளது; இந்த வட்டத்திற்கு அப்பால் உள்ள பங்காளிகள் மூல மசோதாவின்படி மரபுரிமை பெற்றிருப்பர். ஆனால் இலாகாவின் மசோதாவின்படி அவர்களுக்கு இந்த மரபுரிமை மறுக்கப்படுகிறது. இம்மாதிரியே ரத்த உறவினர்களும் இலாகா மசோதாவில் பாதிக்கப்படுகின்றனர். இது ஒரு கணிசமான மாற்றம்; ஏனெனில், தூரத்துப் பங்காளிகளையும் தூரத்து ரத்த உறவினர்களையும் அது நீக்கி விடுகிறது. அடுத்து ஐயா, பிரிவு 4-ன் (a)ல் மற்றவர்களும் நீக்கப்படுகின்றனர். மூலமசோதா பாகம் II பிரிவு 4ல் பிதிர் ரார்ஜித சொத்துரிமை பற்றிய ஏற்பாடு ஒவ்வொரு கட்டத்திலும் மாற்றப்பட்டுள்ளது; மிக முக்கிய மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன; வரிசைப்படுத்தப்பட்ட வாரிசுகளும் மாற்றப்பட்டுள்ளனர்; தாயாதிகள் ஒரு எல்லைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்; மற்ற ரத்த உறவினர்களும் குறுக்கப்பட்டுள்ளனர்; மற்ற பிரிவுகள் முற்றிலுமாக நீக்கப்பட்டுள்ளன. இந்த மாற்றங்கள் பொறுக்குக் குழுவின் முழுப் பரிசீலனைக்குப் பின் சட்டப்படி செய்யப்பட்டிருக்கலாம் என்பதை என்னால் புரிந்துகொள்ள முடியும். ஆனால் இந்த மாற்றங்கள் பொறுக்குக் குழுவால் செய்யப்படவில்லை. இலாகாக் குழுவால் செய்யப்பட்டன; உறுப்பினர்கள் கேட்கின்றனர்: செய்யப்பட்ட மாற்றங்கள் எவை என்று கூறுங்கள்.

திரு. துணை அவைத்தலைவர்: எல்லாப் பொறுக்குக் குழு உறுப்பினர்களும் எழுந்து நின்று, இவை பற்றி கவனம் செலுத்தினார்கள். பொறுக்குக் குழுவில் செய்யப்பட்டனவை பற்றி மதிப்பிற்குரிய உறுப்பினர் முழுமையாகத் திருப்தியடைவார் என்று நான் புரிந்து கொள்ளலாமா?

திரு. நசிருத்தீன் அகமது : விஷயம் என்னவெனில் மாற்றங்கள் பற்றி பொறுக்குக் குழு உறுப்பினர்கள் தெரிந்து கொள்ளும்படி செய்யப்படவில்லை.

திரு. துணை அவைத் தலைவர் : இதனால் எந்த நோக்கமும் நிறைவேறப்போவதில்லை. பொறுக்குக் குழுவின் பணி மீது அவைக்கு அதிகாரம் இருக்கிறதா என்ற சட்டப்பிரச்சினை அல்ல இது. பொறுக்குக் குழு ஒரு முடிவுக்கு வர ஒவ்வொரு பிரிவையும் பரிசீலித்திருக்கிறது என்பதைக் காண்பிக்க போதுமான அளவு விவாதிக்கப்பட்டது. ஆனால் அடிப்படையான விஷயங்கள் பற்றி பழைய சட்டம் விரிவாக மாற்றப்பட்டுள்ளது. அதில் ஒரு சாரம் உள்ளது. அவைக்கு மதிப்பிற்குரிய உறுப்பினர் எடுத்துக் கூற வேண்டிய விஷ

யங்கள் இவைதான். கூறப்பட்டுள்ளது எல்லாம் பொருத்தமற்றது என்று நான் கூறவில்லை; ஆனால் போதுமான அளவு சொல்லப் பட்டுள்ளது.

திரு. நசிருத்தீன் அகமது : மதிப்பிற்குரிய பல உறுப்பினர் களுக்குப் போதுமான அளவு கூறப்படவில்லை. இவையெல்லாம் உருப்படியான மாற்றங்கள் அல்ல என்று கூறப்பட்டது; அவற்றைச் சுட்டிக்காட்ட நான் கவனம் எடுத்துக் கொள்வேன். கஷ்டம் என்ன வெனில் மாற்றங்கள் பெரும் எண்ணிக்கையில் உள்ளதால் அவற்றை அவையின் கவனத்துக்குக் கொண்டுவருவது சிரமம். உண்மையில் மாற்றங்கள் முக்கியமானவை, பல்வேறு வகைப்பட்டவை, மிகவும் உருப்படியானவை; நான் கூறுவது என்னவெனில், அவை பொறுக்குக் குழுவால் அறிமுகப்படுத்தப்படவில்லை. அவர்கள் அவற்றை ஏற்றுக் கொண்டார்களா இல்லையா என்பது வேறு விஷயம். எனது வாதம் என்னவெனில் தயாராக வைக்கப்பட்டிருந்த மசோதா எவ்வித உருப் படியான மாற்றங்களும் செய்யப்படவில்லை என்ற உறுதிமொழி யுடன் அவர்களுக்கு அளிக்கப்பட்டது என்பதே. எனவே பொறுக்குக் குழுவின் கவனம் அந்த விஷயத்தின்பால் போதுமான அளவு ஈர்க்கப் படவில்லை. வாரிசுரிமைச் சொத்துப் பட்டியலில் உண்மையில் செய்யப்பட்ட மாற்றங்கள் பற்றி நாம் இப்பொழுது பரிசீலிப்போம். உண்மையில் மூல மசோதாவில் வாரிசுரிமைச் சொத்துப் பட்டியலை மசோதாவின் முக்கிய பாகம், பக்கங்கள் 4, 5, 6ல் காணலாம். இலாகா மசோதாவில் இது அப்படியே அங்கிருந்து முழுவதுமாக எடுக்கப் பட்டு ஏழாவது அட்டவணைக்கு மாற்றப்பட்டது. மற்ற பாகங்கள் பிரதான பாகத்தில் இருக்கும்போது, விசித்திரமாக விளக்க முடியாத காரணங்களுக்காக வாரிசுரிமைச் சொத்துப் பட்டியல் அகற்றப்பட்டது. ஏழாவது அட்டவணையில் உள்ள புதிய பட்டியலை மூலப் பட்டிய லோடு ஒப்பிட்டுப் பார்ப்பது மிக சுலபமானதல்ல; அதில் முக்கியமான, கணிசமான மாற்றங்கள் உள்ளன. செய்யப்பட்ட மாற்றங்கள் என்ன என்று தெரிந்துகொள்ள விரும்பினார் மாண்புமிகு அமைச்சர்.

மாண்புமிகு டாக்டர் பி.ஆர். அம்பேத்கர்: அவற்றைப் பற்றி நான் நன்கு அறிவேன். என்னைப் பொறுத்தவரை, எனக்குத் தெளிவு படுத்த தங்களின் நேரத்தைச் செலவிட வேண்டியது அவசியமில்லை.

திரு. நசிருத்தீன் அகமது : இவை திட்டமிட்டு செய்யப்பட்ட மாற்றங்களாயின், அப்புறம் வரைவுக் குழுவால் மாற்றங்கள் எதுவும்

செய்யப்படவில்லை என்றும், எல்லா மாற்றங்களும் பொறுக்குக் குழுவால்தான் செய்யப்பட்டன என்றும் கூறுவதன் பொருள் என்ன? மேலும் ''எங்கள் கவனத்தை இலாகா மசோதாவோடு மட்டுப்படுத்திக் கொண்டோம்'' என்று பொறுக்குக் குழு கூறட்டும். எனவே, இதன் மீது அவர்களின் கவனம் ஈர்க்கப்படவில்லை. இது ஒரு எளிதான வாத முடிவாகும்.

மாண்புமிகு டாக்டர் பி.ஆர். அம்பேத்கர்: உங்கள் சொந்த வழியிலேயே வாதியுங்கள்.

திரு. நசிருத்தீன் அகமது : ஓர் இக்கட்டான நிலையில் தாம் இருப்பதை மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் உணர்கிறார் என்று எனக்குத் தோன்றுகிது; எப்படியோ தவறு ஒப்புக் கொள்ளப்பட்ட போதிலும், அது தெளிவாகச் செய்யப்படவில்லை. மிகவும் சாராம்சத் தன்மை வாய்ந்த மாற்றங்கள் உண்மையில் செய்யப்பட்டுள்ளன. கடைசி நாளன்று மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் என்னைக் கேட்டார்: ''வரைவுக் குழுவால் செய்யப்பட்ட மாற்றங்கள் என்ன என்று நாம் தெரிந்துகொள்வோமா?'' இப்பொழுது, ''எல்லாவற்றை யும் நான் அறிவேன்'' என்று கூறுகிறார். பின்பு அவற்றை அவர் பரிசீலித்திருக்கலாம்; ஆனால் இந்த மாற்றங்கள் முக்கியத்துவத் தன்மை வாய்ந்தவை. அவை பொறுக்குக் குழுவால் அறிமுகப்படுத்தப்பட வில்லை. இலாகாக்குழுவால் அறிமுகப்படுத்தப்பட்டன; கேள்வி என்னவெனில் எந்த அளவு பொறுக்குக் குழு உண்மையில் அவற்றைப் பரிசீலித்தது என்பதுதான். சிறுபான்மைக் கருத்து வேறுபாட்டைத் தெரிவிக்கும் தமது குறிப்பில் டாக்டர் பக்ஷி தேச் சந்து கூறுகிறார் : ''எங்கள் கவனத்தை இலாகாக் குழுவின் மசோதாவோடு நிறுத்திக் கொண்டோம். மூல மசோதா மீதல்ல.'' ஏனெனில் இலாகா மசோதா வில் எந்த கணிசமான மாற்றங்களையும் அறிமுகப்படுத்தவில்லை என்று அவர்களுக்கு உறுதிமொழி அளிக்கப்பட்டது. இதைக் கணக்கில் கொண்டால், எத்தகைய முடிவுக்கு வருவது என்று எனக்குத் தெரிய வில்லை. உண்மையில் இது ஒரு கடுமையான, முறையற்ற செயல், அவை கவனம் செலுத்த வேண்டிய செயல் இல்லையென்றால் இது வேறு என்ன என்று எனக்குத் தெரியவில்லை. சரியான முடிவு எடுப் பதில் இலாகா தவறு செய்துள்ள பட்சத்தில் ''இவற்றை எல்லாம் நான் அறிவேன். மாற்றம் எதுவும் செய்யப்படவில்லை, ஒவ்வொரு மாற்றமும் பொறுக்குக் குழுவால்தான் செய்யப்பட்டது'' என்று கூறுவதற்கு பதில் தவறை ஒப்புக் கொள்வதே உசிதமானதாகவும் சரியாகவும் இருக்கும். பொறுக்குக் குழு மாற்றங்களைச் செய்ய

வில்லை, இலாகாக்குழுவால்தான் அவை செய்யப்பட்டன என்று நான் கூறியபோது அதை நான் அறிவேன்'' என்று கூறப்பட்டது. அப்படி யானால் இலாகாவின் நிலைதான் என்ன என்பதை நாம் தெரிந்தாக வேண்டும். இலாகா ஒரு மாற்றத்தைச் செய்கிறது எனில்....

திரு. பி. தாஸ் : அடுக்கடுக்காக வாதம் செய்வதற்கு இது ஒரு நீதிமன்றமல்ல. மதிப்பிற்குரிய உறுப்பினர் ஓர் உரையை ஆற்றிவிட்டு அமரவேண்டும்.

திரு. துணை அவைத் தலைவர்: அவைத் தலைவர் தலைமை தாங்கி நடத்தியபோதும் மதிப்பிற்குரிய உறுப்பினர் திரு. தாஸ் இந்த அறிவிப்பைச் செய்தார். ஒரு வகையில் இது ஒரு நீதிமன்றம் என்பதில் ஐயமில்லை. ஆனால் ஒரு நீதிமன்றத்தில் ஒரு வழக்கை வாதிப்பதுபோல் அவர் வாதிடலாகாது. எது எப்படியிருப்பினும் நாம் அவரது உரையில் குறுக்கிடக்கூடாது; சாத்தியமான அளவு இம்மாதிரியான பேச்சு தவிர்க்கப்பட வேண்டும்.

திரு. பி. தாஸ்: நாம் நமக்கிடையேதான் பேசிக்கொள் கிறோம்.

திரு. துணை அவைத் தலைவர் : மதிப்பிற்குரிய மற்றோர் உறுப்பினர் பேசிக்கொண்டிருக்கும்போது பேசுவதற்கு மதிப்பிற் குரிய உறுப்பினருக்கு உரிமை எதுவும் கிடையாது. அவர் குறுக்கிடக் கூடாது.

திரு. பி. தாஸ் : அவர் எங்களைச் சாடிப் பேசிக் கொண்டிருக் கிறார்.

திரு. துணைத் அவைத் தலைவர் : தாங்கள் பேசியிருக்கக் கூடாது. மதிப்பிற்குரிய மற்றொரு உறுப்பினர் பேசிக் கொண்டிருக் கும்போது மதிப்பிற்ருகிய வேறு உறுப்பினருக்கும் பேச உரிமை கிடையாது. அவர் பேசுவதைக் கேட்கவேண்டும்; அவையில் சப்தம் போடக்கூடாது.

திரு. பி. தாஸ்: எரிச்சலூட்டுதலை நான் புரிந்து கொள்கிறேன். நான் வெளியே போகத் தயாராக இருக்கிறேன்; ஆனால் இந்த அவை யின் உறுப்பினர்களை மதிப்பிர்குரிய உறுப்பினரின் உரை எரிச்ச லூட்டக் கூடாது.

திரு. துணை அவைத் தலைவர்: இது தவறு. எந்த உறுப்பினரின் உரையையும், அவர் இழிவான சொற்களை அல்லது நாடாளுமன்ற மரபுக்கு முரணான சொற்களை உபயோகித்தாலன்றி, எரிச்சலூட்டுவதாகக் கூறக் கூடாது. அவரது பேச்சு நமக்கு உடன்பாடானதாக இருக்கலாம் அல்லது உடன்பாடற்றதாக இருக்கலாம், ஆனால் மதிப்பிற்குரிய உறுப்பினர் தமது நிலைமையை அவை முன் எடுத்துக் கூறிக் கொண்டிருக்கிறார். மதிப்பிற்குரிய எந்த ஓர் உறுப்பினரின் உரையையும் எரிச்சலூட்டுவதாகக் கூற யாருக்கும் உரிமை கிடையாது.

திரு. பி. தாஸ் : உங்கள் தீர்ப்பை நான் ஏற்றுக் கொள்கிறேன்; சட்டத்துறை அமைச்சர் பற்றி ''மோசடி'' போன்ற பதங்களை அவர் உபயோகித்தார்.

திரு. துணை அவைத் தலைவர் : தம்மைப் பாதுகாத்துக் கொள்ள போதுமான பலம் பெற்றிருக்கிறார் மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

திரு. நசிருத்தீன் அகமது : மூலப் பிரிவை மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டுமெனக் கேட்டுக் கொள் கிறேன்.

திரு. துணை அவைத்தலைவர்: அவை தனது நிலையை மாற்றிக்கொள்ளத் தூண்டக்கூடிய வலுவான விஷயங்கள் எதுவும் மதிப்பிற்குரிய உறுப்பினரிடம் உள்ளனவா?

திரு. நசிருத்தீன் அகமது: இவை கணிசமான மாற்றங்கள். இவற்றை நான் சுட்டிக்காட்ட வேண்டும். உண்மையில் நான் மேன் மேலும் பேசிக் கொண்டே போகலாம். ஆனால் தவறை ஒப்புக் கொள்வது அல்லது பொறுமையோடு கேட்பதுதான் சாலச்சிறந்தது. எவ்வளவோ விஷயங்களை நான் எடுத்துச் சொல்ல வேண்டும்; எனது வாதத்தை நான் திரும்பத் திரும்பச் சொன்னாலோ அல்லது நான் கூறுவது பொருத்தமில்லை என்றாலோ, என்னை நீங்கள் திருத்தலாம். பாகம் IIல், பிரிவு 5ல், வகுப்பு I இருக்கிறது. மகன்கள், விதவைகள், மகள்கள் மற்றும் பலர் இவற்றில் இடம் பெற்றுள்ளனர்; இலாகாக் குழுவால் இதில் ஒரு மாற்றம் செய்யப்பட்டுள்ளது. முன் மரணமடைந்த மகளின் முன் மரணமடைந்த மகனின் மகன் இலாகா மசோதாவில் 7-வது அட்டவணையில் ஒத்திருக்கிற வகுப்பு 1ல் புதிதாகப் புகுத்தப்பட்டுள்ளது. உண்மையில் மூல மசோதாவில்,

அதன் இடத்திலிருந்து இந்த அட்டவணை அகற்றப்பட்டு அதிக இடம் தாண்டி வைக்கப்பட்டுள்ளது; இந்த இரு வகுப்புகளும் அடுத்தடுத்து வைக்கப்படாவிடில், மாற்றத்தைக் கண்டுகொள்வது எளிதல்ல. முன் இறந்த மகனின் முன் இறந்த மகனின் மகன் மூல மசோதாவில் இடம் பெற்றிருக்கவில்லை; ஆனால், இலாகாக் குழுவால் மாற்றி எழுதப்பட்ட மசோதாவின் 7-வது அட்டவணையில் இது புகுத்தப்பட்டுள்ளது.

இனி, மற்ற பட்டியல்களுக்கு வருவோம். மூல மசோதாவில் உள்ள பட்டியலில் முதலில் உள்ள வரிசைப்படுத்தப்பட்ட வாரிசுகளுக்குப்பின், இரண்டாவது இனத்தில் இருப்பது மகளின் மகன், இலாகா மசோதாவில் மகளின் மகன் மேற்கொண்டும் கீழே கொண்டு வரப்படுகிறான். மூல மசோதாவின் படி, மரபுரிமை பெற தந்தையை விட தாய் முன்னுரிமை பெறுகிறாள். இலாகா மசோதாவில், தந்தையும் தாயும் ஒரே வரிசையில் வைக்கப்படுகின்றனர்; அவர்களின் வரிசை மாற்றப்பட்டுள்ளது; இலாகா மசோதாவின்படி, அவர்கள் மரபுரிமை பெறும்போது, மூல மசோதாவின்படி, தந்தை விலக்கப்பட்டு தாய் மரபுரிமை பெறுகிறார். தாய் இல்லையெனில், தந்தை மரபுரிமை பெறுவார். இலாகா மசோதாவில் மகளின் மகன் மேற்கொண்டும் கீழே கொண்டுவரப்பட்டிருக்கிறான் என்பது ஏற்கனவே சுட்டிக் காட்டப்பட்டிருக்கிறது. இந்த விஷயத்தைப் பரிசீலிக்கும் எவருக்கும் இம்மாற்றங்கள் கணிமானவை என்பது தெளிவாகியிருக்க வேண்டும்.

அடுத்து, மூல மசோதாவின் வகுப்பு III-க்கு வருவோம். மூல மசோதாவின் வகுப்பு IIIன் பட்டியலில், சகோதரரின் மகளின் மகன் முதல் இடத்தில் இருந்தும், இலாகா மசோதாவில் அது முற்றிலும் காணப்படவில்லை. இது திட்டமிட்டு வேண்டுமென்றே செய்யப்பட்டிருந்தால், பொறுக்குக் குழுவின் அறிக்கையில் அல்லது உரைகளில் அது பற்றி குறிப்பு எதுவும் இருந்திருக்க வேண்டும். இது ஒரு கணிசமான மாற்றமா என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன். சகோதரரின் மகளின் மகனாக இல்லாத ஒருவருக்கு இது ஒரு கணிசமான மாற்றமாக இல்லாமலிருக்கலாம்; ஆனால் சகோதரரின் மகனின் மகனுக்கு அது ஒரு கணிசமான மாற்றமாகும்; ஏனெனில், மற்ற வாரிசுகள் இல்லாவிடில், சொத்துக்கு அவன் உரிமை பெற்றிருப்பான்.

பட்டியலில் அடுத்து வருவது சகோதரி, இலாகா மசோதாவில் சகோதரனும் சகோதரியும் ஒன்றாக மரபுரிமை பெறுவதை நாம் இப்பொழுது காண்கிறோம். மூல மசோதாவில் மேல் வரிசையில்

இருந்த சகோதரர் வகுப்பு IIIல், கீழ் வரிசைக்கு மாற்றப்பட்டு, சகோதரியோடு ஒருசேர மரபுரிமை பெறுகிறார். (குறுக்கீடு)

என் வாதத்தை நான் நிறுத்திக் கொள்ள வேண்டுமா?

திரு. தாஜாமுல் உசேன் : மதிப்பிற்குரிய உறுப்பினர் மதிப்பிற்குரிய மற்றொரு உறுப்பினருடன் பேச உரிமை கிடையாது. ஐயா, இதை நான் பலமாக ஆட்சேபிக்கிறேன்.

திரு. லட்சுமி நாராயணன் சாகு (ஒரிஸ்ஸா பொது): அவையில் குறைந்த பட்ச உறுப்பினர்கள் இல்லை.

திரு. துணை அவைத் தலைவர் : குறைந்தபட்ச உறுப்பினர்கள் இருக்கிறார்கள்.

திரு. நசிருத்தீன் அகமது : ஒரு சகோதரரையும் ஒரு சகோதரியையும் விட்டு விட்டு ஒரு மனிதர் இறக்கிறார் என்று வைத்துக் கொள்வோம். மூல மசோதாவின்படி சகோதரர் மரபுரிமை பெற்றிருப்பார்; சகோதரி தள்ளிவைக்கப்பட்டிருப்பாள்; ஆனால் இலாகா மசோதாவின்படி சகோதரரும் சகோதரியும் சமமாக மரபுரிமை பெறுகின்றனர். பட்டியலில் 11 நபர்களை தள்ளிவைத்து சகோதரியின் உரிமைக்கு ஒப்பாகச் சகோதரர் இப்பொழுது கீழே இறக்கப்படுகிறார். இது மிகவும் கணிசமான மாற்றம் என்று பணிவுடன் கூறுகிறேன்.

அடுத்து நாம் சகோதரரின் மகனுக்கு வருகிறோம். வகுப்பு I-ல் உயர் மட்டத்தில் அவர் இருந்தார். இலாகா மசோதாவில் மூன்றாவது வகுப்பிற்கு சகோதரியின் மகன் வரிசைக்கு அவர் கீழே கொண்டு வரப்படுகிறார். ஒரு சகோதரரின் மகனையும் ஒரு சகோதரியின் மகனையும் விட்டுவிட்டு ஒரு மனிதர் இறந்துவிட்டால் மூல மசோதாவின்படி சகோதரரின் மகன் மரபுரிமை பெற்றிருப்பார்; ஆனால் இலாகா மசோதாவின்படி சகோதரரின் மகனும் சகோதரியின் மகனும் ஒருசேர மரபுரிமை பெறுவர். இவற்றை மிகவும் கணிசமான மாற்றங்கள் என்று கூறுகிறேன்.

அடுத்து, மூல மசோதாவின் வகுப்பு IVக்கு வருகிறேன். மூல மசோதாவின் வகுப்பு IVல் ஒரு அப்பாவின் அம்மாவையும், அப்பாவின் அப்பாவையும் விட்டுவிட்டு ஒருவர் மரணமடைந்தால் எழும் பிரச்சினையை மூல மசோதாவும் இலாகா மசோதாவும் வெவ்வேறு

விதமாகக் கையாளுகின்றன. மூல மசோதாவில், வாரிசுகளான அப்பாவின் அம்மாவுக்கும் அப்பாவின் அப்பாவுக்கும் இடையே அப்பாவின் அம்மா முதன்மை பெறுகிறார். அப்பாவின் அப்பா தள்ளிவைக்கப் படுகிறார். ஆனால், இலாகா மசோதாவின்படி அவர்கள் இருவரும் ஒருசேர வைக்கப்பட்டு, ஒருசேர மரபுரிமை பெறுகின்றனர். இது ஒரு கணிசமான மாற்றமில்லையா எனக் கேட்கிறேன்.

அடுத்து ஐயா, வகுப்பு IV, இனங்கள் (1A). (1 B), (1 C), (1 D)ல் சில வகை வாரிசுகள் இருக்கிறார்கள். ராவ் குழுவின் மூல அறிக்கையில் ஒரு திருத்தம் மூலம் இவை அறிமுகப்படுத்தப்பட்டன. மூல மசோதாவில் ஓர் அப்பாவின் விதவையும் ஒரு சகோதரரின் விதவையும் இருந்தால், அப்பாவின் விதவை, சகோதரரின் விதவையைவிட முன்னுரிமை பெறுவார். இலாகா மசோதாவில், அப்பாவின் விதவையும் சகோதரரின் விதவையும் ஒருசேர மரபுரிமை பெறுகின்றனர். இது ஒரு முக்கியமான மாற்றம் என்று கூறுகிறேன்; இந்த மாற்றம் நல்லதா அல்லது கெட்டதா என்பதல்ல இங்கு பிரச்சினை. அடுத்து, ராவ் குழு அறிக்கையில் ஒரு திருத்தம் மூலம் கொண்டுவரப்பட்ட துணைப் பட்டியலில் உள்ள இரண்டு வாரிசுகளை எடுத்துக் கொண்டால், சகோதரரின் மகனின் விதவையையும், சகோதரரின் மகனின் மகனின் விதவையையும் முற்றிலுமாக இலாகா மசோதா நீக்கியுள்ளது. மூல மசோதாவில், அவர்கள் ஒருவரை அடுத்து ஒருவர் மரபுரிமை பெற்றிருப்பர். இலாகா மசோதாவில் அவர்கள் நீக்கப்பட்டுள்ளனர். இதற்கு ஒத்த எதுவும் இலாகா மசோதாவில் இல்லை.

அடுத்து, வகுப்பு IV, இனம் 2க்கு வந்தால், அப்பாவின் அப்பா மூல மசோதாவில் மிகவும் கீழே இருக்கிறார். ஆனால் இலாகாக் குழு தயாரித்த பட்டியலில், அவர் ஓர் உயர்ந்த இடத்தில் வைக்கப்படுகிறார்.

அடுத்து ஐயா, அப்பாவின் சகோதரருக்கும் அப்பாவின் சகோதரிக்கும் வருகிறோம். பட்டியலில் அப்பாவின் சகோதரர் மூன்றாவது இடத்தில் இருக்கிறார். அப்பாவின் சகோதரி பட்டியலில் ஆறாவது இடத்தில் இருக்கிறார். மூல மசோதாவில் இவ்வாறு உள்ளது; அப்பாவின் அப்பாவும் மற்றவர்களும் இருந்தால், அப்பாவின் அப்பா முன் வைக்கப்படுகிறார். அடுத்து வருகிறார்கள் அப்பாவின் சகோதரர், அப்பாவின் சகோதரர் மகன், அப்பாவின் சகோதரரின் மகனின் மகன், அப்புறம் அப்பாவின் சகோதரி. இலாகா மசோதாவில், அப்பாவின் அப்பாவும் அப்பாவின் சகோதரியும் ஒருசேர வைக்கப்படுகின்றனர் - அப்பாவின் சகோதரி மேலே கொண்டு வரப்பட்டுள்ளார்.

அடுத்தபடியாக, வாரிசுகளின் ஒரு நீளமான பட்டியல் முற்றிலுமாக விடப்பட்டுள்ளது. எண்கள் (4), (5), (7), (8), மூல மசோதாவில் உள்ள வாரிசுகள். இலாகா மசோதாவில் அவர்கள் எங்கும் இடம் பெறவில்லை. அவர்கள் முற்றிலுமாக நீக்கப்பட்டுள்ளனர்.

ஐயா, இதைக் குறிப்பிட்டுக் கூறுவது ஒரு தொல்லை பிடித்த வேலை. ஆனால் எனது கடமையை ஆற்றுகிறேன். ஒப்பு நோக்கிப் பார்க்கும் அறிக்கையின் பிரதியை ஒவ்வொரு உறுப்பினருக்கும் வழங்குவதாக நான் பொறுப்பேற்றேன்; அது தயாரிப்பில் உள்ளது. ஒவ்வொரு மாற்றத்தையும் சரிபார்க்கும்படி உறுப்பினர்களைக் கேட்டுக் கொள்கிறேன்; நான் கூறுவது தவறு என்று நிரூபிக்கப்பட்டால், மிகுந்த மகிழ்ச்சியடைவேன்.

மாண்புமிகு டாக்டர் பி.ஆர். அம்பேத்கர்: உங்கள் அறிக்கை இலவசமாக வழங்கப்படும் என நம்புகிறேன்.

திரு. நசிருத்தீன் அகமது: நான் ஒரு தர்ம ஸ்தாபனம் என்று அரசாங்கம் கருதினால் அந்த நம்பிக்கையை நிறைவேற்றுவதில் மகிழ்ச்சியடைவேன்.

திரு. துணை அவைத் தலைவர்: இது முன்னமேயே வழங்கப் பட்டிருந்தால், இந்த நேரம் முழுவதையும் நாம் இழந்திருக்க மாட்டோம்.

திரு. நசிருத்தீன் அகமது : இதில் பரிதாபம் என்னவெனில் எனது அச்சகம், அரசாங்க அச்சகத்தை விட மிகவும் மோசமானது.

திரு. துணை அவைத் தலைவர்: இந்த விஷயத்தை மாண்புமிகு சட்டத்துறை அமைச்சரின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டிருந்தால், அதை அச்சடித்து வழங்க ஏற்பாடு செய்திருப்பார்.

மாண்புமிகு டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் : நிச்சயமாக அதை அச்சடிக்க ஏற்பாடு செய்திருப்பேன்.

திரு. நசிருத்தீன் அகமது: கைப்பிரதி என்னிடம் தயாராக உள்ளது. அதை மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் பிரசுரிப்பாராயின் நான் மகிழ்ச்சியடைவேன்.

மாண்புமிகு டாக்டர் பி.ஆர். அம்பேத்கர்: இப்பொழுது அது பலனளிக்காது; ஏனெனில், இதே விஷயத்தை நீங்கள் அவையில் விவரமாகக் கூறியிருக்கிறீர்கள்.

திரு. நசிருத்தீன் அகமது : இப்பொழுது மூல மசோதாவின் V வகுப்புக்கு வருவோம். அதில் உள்ள எல்லாமே இலாகா மசோதாவில் நீக்கப்பட்டுள்ளது. அதில் ஒன்பது வகைப்பட்ட வாரிசுகளும் நான்கு மற்ற துணை வாரிசுகளும் உள்ளனர். மூல மசோதாவின் வகுப்பு V-ல் இருந்து 13 வாரிசுகள் விடப்பட்டுள்ளன. ஒரு வேளை இது தவறுதலாக நடந்திருக்கலாம்.

மாண்புமிகு டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் : இல்லை, வேண்டுமென்றேதான் நீக்கியிருக்கிறோம்.

திரு. நசிருத்தீன் அகமது: பின் ஏன் பொறுக்குக் குழு அறிக்கை எந்த கணிசமான மாற்றங்களும் செய்யப்படவில்லை என்று கூறுகிறது? நன்கு சிந்தித்தே அவை விடப்பட்டிருந்தால், இவை கணிசமான மாற்றங்களே ஆகும். ஆனால் அப்படியிருக்கும்போது எந்த விதமான கணிசமான மாற்றங்களும் செய்யப்படவில்லை என்று மாண்புமிகு சட்டத்துறை அமைச்சரால் அவைக்கு உறுதியளிக்கப் பட்டது. இவை வேண்டுமென்றே செய்யப்பட்டன என்று இப்பொழுது ஒப்புக் கொள்ளப்படுகிறது, எனவே இங்கு எழும் கேள்வி இவை கணிசமான மாற்றங்களா என்பதே. கணிசமான மாற்றங்கள் எதுவும் செய்யப்படவில்லை என்று நமக்கு உறுதியளிக்கப்பட்டது.

மாண்புமிகு டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் : இது அவரவரது கருத்து பற்றிய விஷயம்.

திரு. நசிருத்தீன் அகமது : அப்படியாயின் இவை கணிசமான மாற்றங்களா என்ற கேள்வி எழுகிறது. சட்டம் இயற்றுபவர் பார்வையில் அது முக்கியமற்றதாக இருக்கலாம்; ஆனால் வாரிசுக்கு அது முக்கியமானதாக இருக்கக் கூடும். வாரிசு உரிமையின் வரிசைக் கிரமத்தை நீங்கள் மிக சிறிய அளவு குலைத்தாலும் அது ஒரு கணிசமான மாற்றமாகிவிடும். மாற்றங்கள் வரைவுத் தன்மை வாய்ந்தது மட்டுமே என்று இதுவரை நாம் உறுதியளிக்கப்பட்டோம். இலாகா எந்தக் கணிசமான மாற்றங்களையும் செய்யவில்லை என்பது பொறுக்குக் குழுவின் அறிக்கை. இது விஷயத்தில் அறிக்கை மிகத் தெளிவாகவும் திட்டவட்டமாகவும் உள்ளது; கணிசமான மாற்றங்கள்

எதுவும் செய்யப்படவில்லை என்றும், எண்கள் மாற்றியமைக்கப் பட்டு சில சொல் வடிய மாற்றங்கள் மட்டுமே செய்யப்பட்டன என்றும், மாற்றங்களை ஓரத்தில் கோடிட்டு காட்டுவது அல்லது அடி வரியிட்டுக் காட்டுவது போன்ற வழக்கமான முறை இலாகா மசோதா வில் அல்லது இறுதி மசோதாவில் கையாளப்படவில்லை என்றும் அறிக்கை வலியுறுத்திக் கூறியுள்ளது.

இப்பொழுது, கடைசியில் கேள்விகளுக்கெல்லாம் கேள்வி யாக ஒரு கேள்வி எழுந்துள்ளது: இவை கணிசமான மாற்றங்களா? இதனை நிர்ணயிக்கும் உரைகல் எது? வாரிசுகளின் பட்டியல்களை நிலைகுலையச் செய்வது ஒரு கணிசமான மாற்றம் அல்லவா? அது கணிசமான மாற்றம்தான் என்று நான் அறுதியிட்டு உறுதியாகக் கூறு கிறேன். நான் அளவுக்கு அதிகமாக வாதிக்கிறேன் என்றும், ஒரு நீதிமன்றத்தில் போல் வாதிக்கிறேன் என்றும் மதிப்பிற்குரிய உறுப் பினர் எவரும் நினைத்தால், மாற்றங்களின் முக்கியத்துவத்தை முழு வதுமாக அவர்கள் புரிந்துகொள்ளவில்லை என்றுதான் தோன்று கிறது.

திரு. தாஜாமுல் உசேன் : தங்களைத் தவிர.

திரு. நசிருத்தீன் அகமது : இது ஒருவரால் மட்டுமே புரிந்து கொள்ளப்படுகிறது என்பது மிகவும் துரதிர்ஷ்ட வசமானது! நிச்சய மாக உயர்ந்த சம்பளம் அளிக்கப்படும் இலாகா இருக்கிறது; மிகச் சிறிய வேறுபாடுகளையும் புரிந்து கொள்ளும் திறமை வாய்ந்த உயர் கல்வி பெற்ற சட்ட அமைச்சர் இருக்கிறார்; அப்படியிருக்கும்போது இவற்றை எல்லாம் கண்டுபிடித்து விளக்கிக் கூற நான் எல்லாக் கஷ்டங்களையும் நேரத்தையும் பணத்தையும் செலவழிக்க வேண்டி யுள்ளது என்பதை மிகவும் வருத்தத்துடன் கூறுகிறேன். இது ஒரு எளிதான விஷயமாக இருக்கவில்லை; இந்த மாற்றங்களைப் புகுத்திய இலாகா நகல் மசோதாவின் ஒரு பிரதியை எனக்குக் கிடைக்கச் செய்யாத தால் கஷ்டம் மேலும் அதிகரித்தது. மிகவும் சிரமப்பட்டுத் தேடி ஒரு பிரதியைப் பெற முடிந்தது. இவ்வாறு தேடுதல் நீடித்தது; பரிசீலனை யும் நீடித்தது; அது எனக்கு மிக மிகச் சிரமமான விஷயமாக இருந்தது. இவற்றை எல்லாம் புரிந்து கொள்ளும் திறமை ஏனைய உறுப்பினர் களுக்கு இல்லை என்று நான் கூறுவதாக இதற்குப் பொருளாகாது. ஆனால் இவற்றை நுணுக்கமாக ஆய்வு செய்யும் ஆர்வமும் விருப் பமும் சிலருக்கே உள்ளன. அவர்கள் ஏன் அவ்வாறு செய்ய வேண்டும்? சட்டத் துறை அமைச்சகத்தை நம்புவது, சாரமுள்ள மாற்றங்கள் எதுவும்

செய்யப்படவில்லை என்று பொறுக்குக் குழு அறிக்கையில் உள்ள வெளிப்படையான உத்திரவாதத்தை நம்புவது ஒவ்வொரு உறுப்பினரின் கடமையும் உரிமையும் அல்லவா? இதை என்னைத் தவிர வேறு எவரும் தெரிந்து வைத்திருக்கவில்லை என்று மதிப்பிற்குரிய ஓர் உறுப்பினர் கூறியது அவர்களது கருத்தை முற்றிலும் நியாயப் படுத்துகிறது; அவரை நான் குறை கூற முடியாது; குறை இலாகாவில் தான் உள்ளது. இந்த மாற்றங்கள் இத்துடன் முடிந்து விடுமா? அவ்விதம் எவ்வகையிலும் சொல்ல முடியாது.

இனி வகுப்பு 5 (அ)க்கு வருவோம். அவர்களது முந்திய மசோதாவில் ஒரு திருத்தம் மூலம் ராவ் குழுவால் அது அறிமுகப்படுத்தப்பட்டது. வகுப்பு 5க்கு பின்னால் 5(அ) என்று அறிமுகப்படுத்த வேண்டும் என அவர்கள் குறித்திருந்தார்கள். 5(அ) முற்றிலுமாக விடப்பட்டுள்ளது. இந்த விடுதல் கவனக் குறைவால் ஏற்பட்டது என்று கூறுகிறது; ஆனால் கவனக்குறைவாலோ அல்லது வேண்டுமென்றோ செய்யப் பட்டதானாலும் இது இந்த மசோதாவின் நேர்மையை முற்றிலும் பாதித்துள்ளது.

அடுத்து வகுப்பு 6க்கு வருகிறோம்.

(குறுக்கீடு)

திரு. துணை அவைத் தலைவர் : மதிப்பிற்குரிய உறுப்பினர் தொடரலாம்.

திரு. நசிருத்தீன் அகமது : அடுத்து வகுப்பு 6, இனம் (1), (2)க்கு - அதாவது அம்மாவின் அம்மா மற்றும் அம்மாவின் அப்பாவுக்கும் வருகிறோம். மூல மசோதாவில் தாயின் அம்மாவுக்கு தாயின் அப்பாவை விட முதன்மை அளிக்கப்படும். ஆனால் இலாகா மசோதாவில் அவர்கள் ஒருசேர வைக்கப்படுகின்றனர். எனவே இப்பொழுது அவர்கள் சமமாக, கூட்டாக மரபுரிமை பெறுகின்றனர். வகுப்பு 6, இனம் (3)ல் அம்மாவின் சகோதரரும் அம்மாவின் சகோதரியும் உரிமை பெறுகிறார்கள், மூல மசோதாவில் முந்தியவருக்கு அடுத்து பிந்தியவர்; ஆனால், இலாகா மசோதாவில் அவர்கள் ஒருவரோடு ஒருவர் கலந்து மரபுரிமை பெறுகின்றனர். இனம் (4) மற்றும் (5)ன் கீழ், சகோதரன் மகன் இலாகா மசோதாவில் முற்றிலுமாக விட்டுவிடப் படுகிறார். இனம் (7), (8) மற்றும் (9) - தாயின் சகோதரியின் மகன், தாயின் சகோதரரின் மகள், தாயின் சகோதரியின் மகள் முற்றிலுமாக விடப்பட்டுள்ளனர்.

அடுத்து வகுப்பு 6, இனம் (3)ம் முழுவதுமாகப் புறக்கணிக்கப்படுகிறது. 20க்குக் குறையாத மாற்றங்கள், கூட்டல்கள், கழித்தல்களுடன் விடப்பட்ட மரபுரிமைப் பட்டியல் முடிகிறது. வாரிசுகள் விரும்பியோ அல்லது வேண்டுமென்றோ நீக்கப்பட்டுள்ளனர்; இதை பொறுக்குக் குழு அறிக்கையிலிருந்து காணமுடியாது. வேறுபாடுகள் எங்கே உள்ளன என்று சுட்டிக்காட்டும்படி மதிப்பிற்குரிய பொறுக்குக் குழு உறுப்பினர்கள் திரும்பத் திரும்ப என்னை கேட்டார்கள். இவற்றை கவனிக்காததற்காக மதிப்பிற்குரிய எந்த உறுப்பினரையும் குறை கூற நான் விரும்பவில்லை. முதலில் இருந்த இடத்திலிருந்து மாற்றி அமைத்தது அல்லது நீக்கப்பட்டது ஆகியவை காரணமாக மாற்றங்கள் தெளிவாகத் தெரிந்திருக்கமாட்டா. கணிசமான மாற்றம் எதுவும் இல்லையென்று பொறுக்குக் குழு அறிக்கையில் உறுதிமொழி இருக்கிறது. இலாகா மசோதாவின் மூலம் கொண்டுவரப்பட்ட மாற்றங்கள் இவை; பொறுக்குக் குழுவின் கவனத்திலிருந்து அவை தப்பியிருக்கலாம். இலாகா மசோதாவிலும் இது அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவரப்படவில்லை. மிகவும் மரியாதைக்குரிய திறமையான உறுப்பினர் டாக்டர் பக்ஷி தேக் சந்த இருக்கிறார்; பொறுக்குக் குழு தனது கவனத்தை இலாகா மசோதாவில் செலுத்துவதோடு நின்று கொண்டது என்று அவர் கூறுகிறார். ஏனெனில், எந்தக் கணிசமான மாற்றங்களும் செய்யப்படவில்லை என்று அவர்களுக்கு உறுதியளிக்கப்பட்டிருந்தது. இலாகாவில் அல்லது டாக்டர் அம்பேத்கரால் அவரது கவனம் இந்த விஷயங்கள் மீது திருப்பப்பட்டதா என்று டாக்டர் பக்ஷி தேக் சந்தைக் கேட்கிறேன். கடினமாக உழைக்கும் ஒரு வழக்கறிஞர் போல் இரண்டையும் ஒப்புநோக்கும் கடினமான பணியை எந்த ஓர் உறுப்பினரும் செய்யாவிடில், ஏராளமான எண்ணிக்கையில் விடப்பட்டவற்றையும் இடம் மாற்றி அமைக்கப்பட்டவற்றையும் அவரால் கவனித்திருக்க முடியாது.

டாக்டர் பக்ஷி தேக் சந்த் (கிழக்குப் பஞ்சாப் பொது) : எனது கருத்து வேறுபாட்டுக் குறிப்பு அச்சடிக்கப்பட்டுள்ள அறிக்கையின் பக்கம் 92 கொடுக்கப்பட்டுள்ளது என்பதை மதிப்பிற்குரிய உறுப்பினர் கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறேன். எனது கருத்து வேறுபாட்டுக் குறிப்பில், கணிசமான மாற்றங்கள் சிலவற்றை குறைந்த பட்சம் கணிசமான மாற்றங்கள் என்று நான் கருதியவற்றை கொடுத்துள்ளேன். இதன் காரணமாகவே மசோதா பொது மக்கள் கருத்துகளை தெரிந்துகொவதற்காக மீண்டும் சுற்றுக்கு விடப்பட வேண்டும் அல்லது எப்படியும் பொறுக்குக் குழுவிற்கு மீண்டும் அனுப்பப்பட வேண்டுமென்று ஆலோசனை கூறியுள்ளேன். மறுவரைவு செய்யப்

பட்ட மசோதாவில் கொண்டுவரப்பட்ட மாற்றங்கள் பற்றி மதிப்பிற்குரிய உறுப்பினர் இன்று தமது உரையில் மிக விரிவாக எடுத்துக் கூறிக் கொண்டிருப்பதுபோல் இல்லாவிடினும், பக்கம் 9ல் பல விஷயங்கள் கூறப்பட்டுள்ளன. பொறுக்குக் குழு உறுப்பினரில் எந்த உறுப்பினரும் இவற்றைக் கவனிக்கவில்லை என்று கூறுவது தவறு; மதிப்பிற்குரிய உறுப்பினர்போல் எவரும் கடும் உழைப்பையும் பொறுமையையும் கொண்டிருக்கவில்லை; ஆயினும் விஷயம் அவர்களது கவனத்திலிருந்து தப்பவில்லை. எனது பெயரை அவர் குறிப்பிட்டதால், இதை அவையின் கவனத்திற்குக் கொண்டுவர வேண்டியது எனது கடமை என்று உணர்கிறேன். என்னைப் பொறுத்த வரையில் வேறுபாட்டுக் குறிப்பில் கணிசமானவை என்று நான் கருதிய மரபுரிமை வரிசையில் செய்யப்பட்ட மாற்றங்கள் பற்றி நான் குறிப்பிட்டுள்ளேன்; இது விஷயத்தைப் பொறுத்தவரை, மதிப்பிற்குரிய உறுப்பினரோடு நான் முற்றிலுமாக உடன்படுகிறேன்.

திரு. நசிருத்தீன் அகமது : இதனைத் தெளிவுபடுத்தியமைக்காக நான் மிகவும் நன்றியுடையவனாக இருக்கிறேன். மரியாதைக்குரிய, மிக உயர்வான சட்ட அனுபவம் உள்ள ஓர் உறுப்பினர், இவை கணிசமான மாற்றங்கள் என்று கருதுகிறார்; அந்த மாற்றங்கள் அவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தவை என்பதால் மசோதா மறு சுற்றுக்கு அனுப்பப்பட வேண்டுமென்று கருதுகிறார். நான் கேட்கும் விஷயமும் அதுதான். மாற்றங்கள் கணிசமானவை என்று கருதும் பொறுக்குக் குழு உறுப்பினர் ஒருவர் மட்டுமாவது இருக்கிறார்; அவற்றை அவர் கவனித்தார்; ஆனால் அவை அவரது கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டதா?

பண்டிட் தாகூர்தாஸ் பர்கவா (பஞ்சாப் : பொது) : திரு. பாலகிருஷ்ண சர்மா கூட அதில் கையெழுத்திட்டிருக்கிறார்.

மதிப்பிற்குரிய ஓர் உறுப்பினர் : சட்ட ரீதியான அனுபவம் எதுவும் அவருக்குக் கிடையாது.

பண்டிட் லக்ஷ்மி காந்த மைத்ரா: அவருக்குச் சமூக அனுபவம் இருக்கிறது.

திரு. நசிருத்தீன் அகமது: பண்டிட் பாலகிருஷ்ண சர்மாவும் அதே கருத்தைக் கொண்டிருக்கிறார். டாக்டர் தேக்சந்தின் பெயரும் மேற்கோள் காட்டினால் போதுமானது. மற்ற எந்தப் பெயர்களையும்

சேர்ப்பதால் டாக்டர் தேக்சந்தின் செயல்பாடும், நிலையும் பெருமளவு உயர்ந்துவிடாது. இவை கணிசமான மாற்றங்கள் என்று இந்த மதிப்பிற் குரிய உறுப்பினர்கள் நினைத்தனர். அதனால், மசோதா மீண்டும் சுற்றுக்கு அனுப்பப்படவேண்டுமென்று கருதினர். மசோதாவின் பிறபாகங்களிலும் மாற்றங்கள் உள்ளன. அவற்றைக் கண்டுபிடிக்க மிகவும் கடுமையான உழைப்பு தேவைப்படும்.

இலாகாக் குழுவினர் இத்தகைய மாற்றங்கள் செய்திருப்ப தாலும், இவை மிகக் கணிசமான மாற்றங்கள் என்று டாக்டர் தேக்சந்த் ஆழமான கருத்து கொண்டிருப்பதாலும் இந்த மாற்றங்களை மறு பரிசீலனை செய்வதற்கு பொறுக்குக் குழுவுக்கு அனுப்ப வேண்டும், அல்லது மறு சுற்றுக்கு அனுப்ப வேண்டும் என்பதில் எந்த சந்தேகத்தை யும் ஏற்றுக் கொள்ளக்கூடாது.

மதிப்பிற்குரிய ஓர் உறுப்பினர்: அதே பொறுக்குக் குழு விற்கு அனுப்ப வேண்டும்.

திரு. நசிருத்தீன் அகமது : அதே பொறுக்குக் குழுவிற்கு அனுப்புவதில் எனக்கு ஆட்சேபம் எதுவும் இல்லை. முற்றிலும் நல்ல, உண்மையான மனிதர்களை, நீதி மற்றும் சட்ட அனுபவம் பெற்ற மனிதர்களைக் கொண்டது அந்தப் பொறுக்குக் குழு. அவர்கள் அந்தச் சட்டத்துறைகளில் நிபுணர்கள்: உண்மையில், எல்லாவித திறமை களும் அந்தப் பொறுக்குக் குழுவில் பிரதிநிதித்துவம் பெற்றுள்ளன. பொறுக்குக் குழுவின்பால் முழுமையான நம்பிக்கை எனக்குள்ளது. அதன்மீது எனது நம்பிக்கையை நான் இழந்து விடவில்லை. நான் கூறுவது என்னவெனில், இந்த விஷயல்கள் கவனமாகப் பரிசீலிக்கப் பட வேண்டும்; ஒவ்வொரு மாற்றமும் கவனமாக ஆராயப்பட்டு, விவாதிக்கப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும்; கணிசமான மாற்றங்கள் சந்தடியின்றி, வேண்டுமென்றே புகுத்தப்பட்டுள்ளன. எந்தக் கணிசமான மாற்றங்களும் செய்யப்படவில்லையென்று சட்ட அமைச்சராலும்; மீண்டும் பொறுக்குக் குழுவாலும் உறுதி யளிக்கப்படுகிறோம்.

இவை கணிசமான மாற்றங்கள் என்று ஒரு புறம் மிக உயர்ந்த சட்டத் திறமை வாய்ந்தவரின் கருத்து உள்ளது; மற்றொரு புறத்தில், தாம் சிந்தித்து வேண்டுமென்றே இந்த மாற்றங்களைச் செய்ததாகவும் அதே சமயம் தாம் கணிசமான மாற்றங்கள் எதையும் செய்யவில்லை என்றும் கூறும் சட்டமேதை டாக்டர் அம்பேத்கரின் கையொப்பமிட்ட

உத்திரவாதம் உள்ளது. எனவே குழுவே பிளவு பட்டுள்ளது. இம் மாதிரியான பரந்த விஷயத்தில் இரு மேதைகள் கருத்து வேறுபாடு கொண்டிருப்பதால் விஷயம் குழுவால் இது பரிசீலனை செய்யப் படுவது அவசியம் என நினைக்கிறேன். நான் கோருவதும் அதுதான். இவை கணிசமான மாற்றங்கள் அல்ல என்று சட்டத்துறை அமைச்சர் நினைத்த போதிலும் விவரம் தெரியாத ஓர் அவைதான் அவர் கூறுவதை நம்பும். மரபுரிமை பெறும் உரிமை ஒரு முக்கியமான உரிமை. அதில் கணிசமான மாற்றங்கள் செய்யப்படவில்லை என்று கூறுவது தவறாகும். எனவே இந்த மாற்றங்கள் கணிசமானவையாக இருப்பதாலும், கணிசமான மாற்றங்கள் எதுவும் செய்யப்படவில்லை என்று உறுதி மொழி இருப்பதாலும், இந்த அடிப்படையிலேயே மசோதா பொறுக்குக் குழவிற்குத் திருப்பி அனுப்பப்பட வேண்டும் அல்லது சுற்றுக்கு அனுப்பப்படவேண்டும்; இந்த மாற்றங்களை உறுப்பினர்கள் உணர்வு பூர்வமாக, விருப்பு வெறுப்பின்றி ஏற்றுக்கொள்ள வேண்டும்; அல்லது நிராகரிக்கப்பட வேண்டும். ஆக்கபூர்வமான ஆணையுடன் அனுப்ப வேண்டும். இவையன்றி வேறு சில கணிசமான மாற்றங்களும் உள்ளன.

திரு. பி.என். முனவல்லி : (மும்பாய் சமஸ்தானங்கள்) : பழைய வாதங்களையே அவர் திரும்பத் திரும்பக் கூறிக் கொண்டிருக்கிறார்.

திரு. துணை அவைத் தலைவர்: அவர் தாம் கூற வந்த விஷயத்தைக் கூறி முடித்துவிட்டார் என்று நினைத்தேன். அவருக்கு வேறு விஷயம் எதுவும் இல்லையெனில் அவர் உட்காரலாம்.

திரு. நசிருத்தீன் அகமது : மற்ற மிக முக்கிய மாற்றங்களும் உள்ளன. கணிசமான மாற்றங்கள் எதுவும் இல்லை என்று மாண்பு மிகு அமைச்சர் எவ்வளவு நேரம் திரும்பத்திரும்ப கூறிக் கொண்டிருப்பார்.

மாண்புமிகு குர்ஷித் லால்: (தகவல் போக்குவரத்துத் துறைத் துணை அமைச்சர்) : தாங்கள் முடிக்கும் வரை.

திரு. துணை அவைத் தலைவர் : ஒரு மசோதாவை முன் மொழிந்தவர் தாம் செய்தது தவறு என்று ஒப்புக் கொள்வார் என்று வழக்கறிஞரான மதிப்பிற்குரிய உறுப்பினர் எதிர்பார்க்கிறாரா?

திரு. நசிருத்தீன் அகமது : ஐயா, தங்களின் இந்த உயர்வான கருத்துக்கு தலை வணங்குகிறேன். ஆனால் நாம் கட்சிக்காரர்களின்

நிலையெடுக்க இது ஒரு நீதிமன்றம் அல்ல. கட்சிக்காரர்களாக நாம் நிலையெடுக்காத ஒரு சட்டப்பேரவை இது. நமது கருத்துக்களை நேர்மையாக நாம் வெளிப்படுத்தலாம்; ஆனால், ஊதியத்திற்காக இந்த அல்லது அந்தப் பக்கம் நாம் சேருவதில்லை; ஒரு பக்கம் அல்லது மறு பக்கத்திற்கு நம்மை கட்டுப்படுத்திக் கொள்வதில்லை. சட்டப் பேரவைக்குப் பொறுப்புக் கூறக் கடமைப்பட்டுள்ள சட்டத் துறை அமைச்சர் தாம் தவறு செய்தால் அதை ஒப்புக் கொள்ள வேண்டும். எனவே தாம் கணிசமாக மாற்றங்களைச் செய்துள்ளதாக ஒப்புக் கொள்ள சட்டத்துறை அமைச்சரை இது தூண்டும் என்றும், அதனால் என் வாதத்தை மேலும் வளர்த்திக் கொண்டு போவதை முற்றிலுமாக அவசியமற்றதாக்கும் என்றும் எனக்கு ஓரளவு நம்பிக்கை உள்ளது. ஒரு நல்ல போர் வீரரைப் போல் மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் - தமது வாழ்நாள் முழுவதிலும் இருந்திருக்கிறார்; மனோபலத்திற்கும் நேர்மைப் பண்பிற்கும் அவர் புகழ்பெற்றவர். இத்தகையவரை இறுதியில் ஒப்புக் கொள்ளும்படி செய்யமுடியும் என்ற ஓரளவு நம்பிக்கை யுடன் மேலும் மேலும் மாற்றங்களை அவர் முன் நான் சமர்ப்பிக்க வேண்டியுள்ளது.

திரு. குர்ஷேத்லால் : இந்த சந்தர்ப்பத்தில் குறுக்கிட நான் விரும்பவில்லை. ஆனால், தாம் ஒரு தவறு செய்துள்ளதாக சட்டத் துறை அமைச்சரை ஒப்புக்கொள்ள வைக்கும்வரை இம்மாதிரியே தொடருவதுதான் மதிப்பிற்குரிய உறுப்பினரது நோக்கமா?

திரு. துணை அவைத்தலைவர்: ஏன் சட்டத்துறை அமைச்சர் மட்டும்? மற்ற உறுப்பினர்களும் ஒருவேளை ஒப்புக் கொள்ளலாம்; ஏனெனில் அவையை அவர் தமக்கு ஆதரவாகக் கொண்டு வந்திருக்கிறார்.

திரு. பி. தாஸ் : இவ்வாறு எப்படிக் கூறுகிறீர்கள் ஐயா? நாங்கள் கூச்சல் போட்டு அவரை உட்கார வைக்க முடியும்.

திரு. நசிருத்தீன் அகமது : அது அவ்வளவு எளிதானதல்ல. ஐயா, கூச்சல் போட்டு உட்கார வைக்கப்போவதாக நான் பயமுறுத்தப் படுகிறேன். இங்கு கூச்சல் போட்டு என்னை உட்கார வைக்கக்கூடிய ஓர் உறுப்பினரை நான் இதுவரை பார்த்ததில்லை; அவரை இனி தான் பார்க்க வேண்டும். என்னைக் கூச்சல் போட்டு உட்கார வைக்க எந்த ஒருவரையும் நான் மரியாதையுடன் அழைக்கிறேன். கூச்சல் களுக்கு இடையிலேயும் நான் பேசுவதை அவையைக் கேட்க வைப்ப தற்கு ஒலிபெருக்கிக் கூட எனக்குத் தேவையில்லை.

திரு. துணை அவைத் தலைவர்: அவையில் எந்தச் சவாலை யும் ஏற்றுக் கொள்ளத் தேவையில்லை எனக் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. நசிருத்தீன் அகமது: அவைக்கு வெளியில் எனக்கு சவால் விடுவது அவருக்கு பாதுகாப்பாக இருக்காது.

திரு. தாஜாமுல் உசேன்: நாங்கள் குறுக்கிடுவதைத் தாங்கள் விரும்பவில்லை. எனவே ஒரு தகவலைத் தெரிந்துகொள்ளத் தங்களின் அனுமதியை வேண்டுகிறேன். எனது மதிப்பிற்குரிய நண்பரிடமிருந்து நான் தெரிந்து கொள்ள விரும்பும் விஷயம் என்னவெனில், இன்று ஏப்ரல் 1-ம் தேதி, இந்த மசோதா மீது நாள் முழுவதையும் அவர் எடுத்துக் கொள்வதற்கு இதுதான் காரணமா?

திரு. நசிருத்தீன் அகமது: முட்டாள்கள் தினத்தன்று தீர் மானத்தை விவாதத்திற்கு கொண்டுவந்தற்காக மாண்புமிகுச் சட்டத் துறை அமைச்சரிடம் இக்கேள்வி கேட்கப்பட்டிருக்க வேணடும்.

திரு. துணை அவைத் தலைவர்: அது யாருக்கு பொருந் தினாலும் பொருந்தா விட்டாலும், மதிப்பிற்குரிய உறுப்பினர் தமது உரையைத் தொடரட்டும்.

திரு. நசிருத்தீன் அகமது: அடுத்து, மூல மசோதாவின் பாகம் 2-ன் பிரிவுக்கு வருகிறோம்.

டாக்டர் மனோ மோகன் தாஸ் (மே. வங்காளம் - பொது) : ஐயா, மதிப்பிற்குரிய உறுப்பினர் இதற்குத் தயாராக இல்லை போல் தோன்றுகிறது.

திரு. நசிருத்தீன் அகமது: மதிப்பிற்குரிய டாக்டர் கூறியதை நான் கவனிக்கவில்லை.

திரு. துணை அவைத் தலைவர் : அவர் தொடரலாம்; இன்றாவது அவர் தமது உரையை முடித்துக் கொள்வார் என்று நம்புகிறேன்.

திரு. நசிருத்தீன் அகமது : எனக்குத் தெரியாது.

திரு. துணை அவைத் தலைவர் : இந்த விஷயம் பற்றி அதாவது கணிசமான மாற்றங்கள் பற்றி, இதுவரை போதுமான அளவு

சொல்லப்பட்டுள்ளது என்று மட்டும் நான் கூறமுடியும். எப்படியாயினும், மசோதாவுக்கு பொறுப்பாக உள்ள மாண்புமிகு அமைச்சர் திருப்தியடைந்தால் போதுமானது என்பதல்ல. தமது கருத்தை அவர் கொண்டுள்ளார்.

மாண்புமிகு டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் : அவை முடிவு செய்யும்.

திரு. துணை அவைத் தலைவர் : முடிவாக அவை முடிவு செய்யும். ஒரு தனி உறுப்பினருக்கு, அவர் எவ்வளவு முக்கியமானவராயினும், அவரைப் புரியவைப்பதற்காக மதிப்பிற்குரிய உறுப்பினர் மேலும் நேரத்தை எடுத்துக் கொள்ளவேண்டியதில்லை. அவையை தமது ஆதரவாகக் கொள்ள அவர் முயற்சி செய்யலாம். நான் ஏற்கனவே கூறியபடி, கணிசமான மாற்றங்கள் பற்றிய விஷயம் சம்பந்தமாக போதுமானது கூறப்பட்டுள்ளது. மற்ற முக்கிய விஷயங்கள் பற்றி, திருமணம், விவாகரத்து, தத்து எடுத்தல் ஆகியவை பற்றி அவர் குறிப்பிடப் போகிறார் என்று நினைத்தேன். மாண்புமிகு அமைச்சர் பிடிவாதமாக இருக்கமாட்டார் என்று நினைக்கிறேன்; இது பற்றி அவருக்கு ஆழமான கருத்துகள் இருந்தபோதிலும், மறுபுறம் வாதங்கள் எவ்வளவு தூரம் உள்ளன என்று பொறுத்திருந்து பார்ப்பார் என்றும், அவரை நம்பும்படி செய்ய முடியும் என்றும் நான் உறுதியாக நினைக்கிறேன். கணிசமான விஷயங்களுக்கு மதிப்பிற்குரிய உறுப்பினர் வருவாரென்று நினைத்தேன். இந்த விஷயம் பற்றி நீண்ட நேரம் செலவழிக்கப்பட்டுள்ளது.

திரு. நசிருத்தீன் அகமது : என் பேச்சைப் பொறுமையுடன் கேட்டுக் கொண்டிருப்பதற்காக எனது நன்றியை சட்டத்துறை அமைச்சருக்கு மனம் திறந்து தெரிவித்துக் கொள்கிறேன். மாற்றங்கள் பற்றிய மற்ற விஷயங்கள் என்னிடம் உள்ளன; அவற்றைச் சுருக்கமாக எடுத்துக் கூறுகிறேன்.

திரு. துணை அவைத் தலைவர் : மாற்றங்களை அப்படியே விட்டுவிடுங்கள். மாற்றங்கள் உள்ளன. இதை பின்வருமாறு முன் வைக்கிறேன். நான் எந்த ரகசியத்தையும் இங்கு வெளியிடவில்லை; நான் புரிந்துகொண்டபடி அவைக்கு தெரியக்கூடாத ரகசியம் எதுவும் இல்லை. பொறுக்குக் குழுவுக்கு அனுப்பிவைக்கப்பட்ட பின் ஒரு விஷயம் அவைக்குமுன் வரும்போது, பொறுக்குக் குழு தவறு செய்திருக்கலாம்; அதைத் தவறு என்று சொல்ல உறுப்பினர்களுக்கு

உரிமையுண்டு; தவறு திருத்தப்பட வேண்டும். ஒன்று இரண்டு விஷயங்களைத் தவிர, உதாரணமாக பொறுக்குக் குழுவில் ஒவ்வொரு உறுப்பினரும் சொன்னதை அவையின் முன் வைக்க வேண்டியதில்லை; காரணம் விஷயங்கள் ஸ்திரமற்ற நிலையில் உள்ளன; அது குழப்பத்தையும் வெறுப்பையும் விளைவிக்கலாம். இதை என்னால் கூற முடியும்.பொறுக்குக் குழுவைப் பொறுத்தவரை, எந்த வரைவையும் பரிசீலனை செய்யலாம். இங்கு முன் வைக்கப்பட்டுள்ள வரைவு அமைச்சகத்தின் வரைவாகும். பொறுக்குக் குழுவின் அறைக்கையின் துவக்கத்திலேயே பத்தி 2ல் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது:

> ''சட்டப்பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட இந்து சட்டத் தொகுப்பின் வரைவு, அறிமுகப்படுத்தப்படும் முன்பு எந்த இலாகாவின் ஆய்வுக்கும் உட்படுத்தப்படவில்லை. சட்டப் பேரவையின் சென்ற கூட்டத்தொடரின் முடிவுக்கும் இந்தக் கூட்டத்தொடரின் முடிவுக்கும் இந்தக் கூட்டத்தொடரின் துவக்கத்திற்கும் இடைப்பட்ட காலத்தில் மசோதாவைப் பரிசீலிக்க வாய்ப்புப் பெற்ற சட்டத்துறை அமைச்சகம் (அதன் தலைவராக, உள்ள சட்டத்துறை அமைச்சரையும் நிச்சயமாக அது உட்படுத்துகிறது) இப்பொழுது மாற்றி அமைக்கப்பட்ட வரைவை தயாரித்துள்ளது....''

வரைவு பொறுக்குக் குழுவின் முன் வைக்கப்பட்டது. அவைத் தலைவரின் தீர்ப்பு என்னவெனில், மூல மசோதா அதன் வரைவுடன் அனுப்பப்பட்டது - சட்டத்துறை அமைச்சர் அறிமுகப்படுத்த விரும்பிய எல்லா திருத்தங்களையும் கொண்ட முழுமையான பட்டியல் என்று இதை நாம் எடுத்துக்கொள்வோம் - இவையாவும் பொறுக்குக் குழுவால் பரிசீலிக்கப்பட்டன. மசோதாவும் அதன் அனைத்துப் பிரிவுகளும் தவறு என்றும் இவை சமுதாயத்தைத் தொல்லைக்குள்ளாக்கும் என்றும், மூல மசோதாவில் பொறுக்குக் குழு கொண்டு வந்த மாற்றங்கள் பற்றி போதுமான கவனம் செலுத்தப்படவில்லை என்றும் மதிப்பிற்குரிய உறுப்பினர் கூறுவதற்கு உரிமையுண்டு. மசோதா முழுவதும் அல்லது அதில் உள்ள தனிப்பிரிவுகள் அடிப்படை முக்கியத்துவம் வாய்ந்தவையா என்பது பற்றி ஒரு முடிவுக்கு அவை வருவதற்கு இது உதவும் என்று நினைக்கிறேன். இந்த விஷயம் பற்றி ஏற்கனவே நாம் மிக அதிக நேரத்தைச் செலவிட்டுள்ளோம். இந்த விஷயம் பற்றி தெளிவுபடுத்துவது அவசியமாக இருக்கலாம். எந்தக் குறிப்பிட்ட விஷயத்திலும் யாரும் வரட்டுத்தனமாக இருக்க விரும்புவார்கள் என்று நான் நினைக்கவில்லை.

மாண்புமிகு டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் : நான் காலியான மனத்தைக் கொண்டிருக்கவில்லை. திறந்த மனத்தையே கொண்டிருக்கிறேன் என்று பகிரங்கமாகக் கூறுகிறேன்.

திரு. துணை அவைத் தலைவர் : அதைத்தான் நாங்கள் எதிர் பார்க்கிறோம்.

திரு. நசிருத்தீன் அகமது : அவருக்கு நான் மிகவும் நன்றி யுடையவனாக உள்ளேன். மசோதாவின் மற்றொரு பிரிவுக்கு வரு கிறேன். ஐயா இலாகா மசோதாவின் 102 பிரிவை அவையின் கவனத் திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். அது முடிவான மசோதாவின் 101 பிரிவுக்கு ஒத்தது. இலாகா மசோதாவில் இது முதல் தடவையாக அறிமுகப்படுத்தப்பட்டது. பொறுக்குக் குழு சில மாற்றங்களைச் செய்தது; ஆனால் இலாகாக் குழு ஒரு தீவிர மாற்றத்தைச் செய்தது. அதாவது ஒரே மரபு வரிசையில் ஓர் ஆணும் ஒரு பெண்ணும் இருந் தால், பெண்ணைவிட ஆண் இருமடங்கு பெறுவார் என்று இலாகா மசோதா வழி வகுத்திருந்தது. இறுதி மசோதாவில் அவர்களின் பங்கு கள் சமமாக ஆக்கப்பட்டன. இறுதி மசோதாவின் நியாயம் பற்றிய வரை, அது இங்கு முக்கியமன்று. இது ஒரு புது விலகல் என்று கூறு கிறேன்.

திரு. துணை அவைத்தலைவர் : 100 விலகல்கள் இருந்த போதிலும் அவை எல்லாவற்றையும் பற்றி விரிவாகப் பேச வேண்டியது அவசியமா? சுமார் பத்து அல்லது பதினைந்து விலகல் களை - இவையும் கூட அதிகம் - எடுத்துக்காட்டாக கூறினால் போதும், சில விலகல்களை அவர் எடுத்து கொண்டு, அவை பொறுக்குக் குழு விற்கு மீண்டும் அனுப்பப்பட வேண்டும் அல்லது பொதுமக்கள் கருத்தைத் தெரிந்து கொள்வதற்காக சுற்றுக்கு அனுப்பப்பட வேண்டும் என்று அவர் கூறலாம். பல்வேறு விலகல் வகைகளைப் பற்றிக் குறிப் பிட்டு அந்தப் பகுதியை மதிப்பிற்குரிய உறுப்பினர் முடித்துவிட்டார் என்று நான் நினைத்தேன். விலகல்கள் நிச்சயம் உள்ளன; சுற்றுக்கு அனுப்பப்பட்ட 13 பக்கம் கொண்ட பட்டியலில் அவை அடங்கி யுள்ளன. இந்த விலகல்கள் எவ்வாறு செய்யப்பட்டன என்று கூறப் படவில்லை.

திரு. நசிருத்தீன் அகமது : விலகல்கள் இன்னவை என்று குறிப்பிடப்படவில்லை.

திரு. துணை அவைத் தலைவர் : மாற்றங்கள் செய்யப் பட்ட முறை குறிப்பிடப்படவில்லை என்பது உண்மை; விலகல்களும் ஒப்புக்கொள்ளப்பட்டன; ஆனால் சில முக்கிய விலகல்கள் மட்டும் எடுத்துக்கொள்ளப்படலாம்; இந்த விலகல்கள் காரணமாக இந்த மசோதா

இப்போதைய பொறுக்குக் குழுவிற்கு அல்லது மற்றொரு பொறுக்குக் குழுவிற்கு அல்லது கருத்து அறிவதற்காக நாட்டில் சுற்றுக்கு அனுப்பப் படவேண்டும் என்பதை வலியுறுத்துவதற்காக இது விஷயத்தில் மிக அதிக நேரத்தை நாம் எடுத்துக் கொள்கிறோம் என நினைக்கிறேன்.

திரு.பி. தாஸ்: ஐயா, இதைத்தான் நான் நெடுகிலும் சொல்லி வந்துள்ளேன்.

திரு. நசிருத்தீன் அகமது : ஒன்று அல்லது இரண்டு உறுப் பினர்களின் எரிச்சலை நான் நன்கு புரிந்துகொள்ள முடியும்.

திரு.பி.தாஸ் : ஐயா, அவர் அதே பதத்தை மீண்டும் உபயோகிக் கிறார்!

திரு. நசிருத்தீன் அகமது : இலாகா மசோதாவின் 103வது பிரிவின்பால் அவையின் கவனத்தை ஈர்க்கிறேன். அது 102 பிரிவுடன் ஒத்திருக்கிறது.

திரு. துணை அவைத்தலைவர் : இது பற்றி நான் ஏற்கனவே சுட்டிக்காட்டியுள்ளேன்.

திரு. நசிருத்தீன் அகமது : இது ஒரு முக்கியமான விஷயம்.

திரு. துணை அவைத்தலைவர் : மதிப்பிற்குரிய உறுப்பின ருக்கு நான் ஆலோசனைதான் கூற முடியும். அவரோடு நான் வாதிக்க முடியாது. எடுத்துக்காட்டுகளைப் பெருக்கிக் கொண்டே போக வேண்டியது அவசியமில்லை என்று நான் சொல்ல மட்டுமே முடியும். அவர் கூற்றுப்படி, எடுத்துக்காட்டுகள் போதுமான எண்ணிக்கை யில் உள்ளன; மற்றவற்றைவிட மிக முக்கியமான ஒரு விஷயத்தை அவர் மறந்துவிட்டதாக அவர் நினைத்தால், அதை அவர் சுட்டிக் காட்டலாம்.

திரு. நசிருத்தீன் அகமது : முடிவான மசோதாவின் பிரிவு 102க்கு ஒத்திருக்கும் இலாகா மசோதாவின் 103 பிரிவு பங்காளிகளை ஐந்து படி நிலைக்கு உயர்த்துகிறது. வாரிசுகளை ஐந்து படி நிலைக்குத் தாழ்த்துகிறது. இந்த மாற்றம் வரிசைப்படுத்தப்பட்ட வாரிசுகள் விஷ யத்தில் முன்பு இந்து சட்டப்படி, சொத்து ஆண் வழி பங்காளி உறவினர் களுக்கு போகும். ஆனால் வரையறையில் பங்காளி என்பது மிக

அதிகம் கட்டுப்படுத்துப்பட்டு ஐந்து படி நிலைக்குக் குறுக்கப்பட்டுள்ளது. அடுத்தப் பிரிவில், முடிவான மசோதாவின் 103வது பிரிவுக்கு ஒத்ததான இலாகா மசோதாவின் 104வது பிரிவில் ரத்த உறவு உள்ளவர்களையும் அம்மாதிரி ஐந்து படி நிலைக்குக் கட்டுப்படுத்துகிறது. இந்து சட்டக் கண்ணோட்டத்திலும் மூல மசோதா கண்ணோட்டத்திலிருந்தும் இது முக்கியமான விலகலாகும். முன்னுரிமை பெறும் வாரிசு இல்லாவிடில், எந்தப் பங்காளி உறவினரும், அவர் எவ்வளவு தூரத்து உறவினராக இருந்தாலும், அவர் வாரிசு ஆவார். இரத்த உறவினர் விஷயத்திலும் கூட, தந்தைவழி உறவினர் இல்லையெனில், எந்த இரத்த உறவினர்கள் அவர்கள் எவ்வளவு தூரத்து உறவினராக இருந்தாலும், வாரிசுகள் ஆவர். இரத்த உறவினர் சம்பந்தப்பட்டவரை மாற்றம் முற்றிலும் புதிது. பங்காளி உறவினர் பொறுத்தவரை மூல மசோதாவின் பிரிவுகளிலிருந்து பெரிதும் விலகிச் செல்லுகிறது. வரிசைப்படுத்தப்பட்ட வாரிசுகள் இல்லையெனில், தந்தை வழி உறவினர்களுக்குப் போகிறது; தந்தை வழி உறவினர்கள் இல்லையெனில் ரத்த உறவினர்களுக்குப் போகிறது என்று மட்டுமே விவரிக்கப்படுகிறது.

மாண்புமிகு டாக்டர் பி.ஆர். அம்பேத்கர்: ரத்த உறவினர்களா அல்லது தந்தைவழி உறவினர்களா?

திரு. நசிருத்தீன் அகமது: ரத்த உறவினர்கள். இவையெல்லாம் பெருமளவிலான மாற்றங்கள். டாக்டர் அம்பேத்கரின் கூற்றின் படி இவை பெருமளவிலான மாற்றங்களல்ல; ஏனெனில் அந்த மாற்றங்களைச் செய்தவர் அவர்தான்.

திருமதி ஜி. துர்க்காபாய்: கடுமையான, முக்கியமான மாற்றங்கள்.

திரு. நசிருத்தீன் அகமது : தங்கள் கருத்துப்படி கணிசமான மாற்றங்கள் அவை கணிசமான மாற்றங்கள் மட்டுமல்ல, கடுமையான மாற்றங்களுமாகும். கடுமையான என்பது மேலும் ஒரு படி மேலே செல்கிறது. உண்மையில் சிலரின் வாரிசு உரிமையை அது கட்டுப்படுத்துகிறது.

திரு. துணை அவைத் தலைவர் : 5 மணிக்கு மதிப்பிற்குரிய உறுப்பினர் உரையை முடிக்கப் போவதில்லையா? இது விஷயம் பற்றி போதுமான அளவு கூறப்பட்டுள்ளது.

திரு. நசிருத்தீன் அகமது : இல்லை ஐயா, சில உறுப்பினர்களை ஒப்புக் கொள்ள வைக்க இது போதுமானதல்ல. அவர்களை முற்றிலுமாகத் திருப்திப்படுத்த விரும்புகிறேன்.

திரு. குர்ஷெத் லால்: அப்படியாயின் தாங்கள் என்றென்றைக்கும் வாதித்துக் கொண்டிருக்க வேண்டும்.

திரு. துணை அவைத் தலைவர் : இப்பொழுது ஐந்து மணி ஆகிறது. இந்த நேரத்திற்குள் உறுப்பினர்களைத் திருப்திப்படுத்த அவரால் முடியவில்லையெனில், மேலும் ஐந்து மணி நேர முடிவிலும் அவரால் அவர்ளைத் திருப்திப்படுத்த முடியாது.

திரு. நசிருத்தீன் அகமது : மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் காலியான மனத்தை வைத்திருக்கவில்லை. ஒரு திறந்த மனதை வைத்திருக்கிறார். போகப் போக அவரை என் வழிக்குத் திருப்ப முடியும்.

மதிப்பிற்குரிய ஓர் உறுப்பினர்: இன்று இரவு உங்கள் உரையைப் பற்றிச் சிந்திப்பார்.

திரு. நசிருத்தீன் அகமது : மூல மசோதாவின் 10வது பிரிவு, இலாகா மசோதாவில் முற்றிலுமாக விலக்கப்பட்டுள்ளது-அதுவே மறக்கப்பட்டுள்ளது. உண்மையில் இந்துச் சட்டத்தில், முஸ்லீம் சட்டத்தில் உள்ளது போல, பட்டியலிடப்பட்ட வாரிசுகள் இல்லாதபோது, இரத்த உறவினரல்லாத வாரிசுகள், வாரிசுரிமை பெறுகிறார்கள். அவர்கள் **போதகர்கள், ஆச்சாரியாக்கள், சிஷ்யர்கள், சகப் பிரமச்சாரிகள்,** அதே ஆசிரியரிடம் பயிலும் மாணவர்கள் - இவர்கள் வாரிசுகள் ஆவர். இலாகா மசோதாவின் படி **ஆச்சாரியர்களுக்கு** மரியாதை சக **பிரமச்சாரிகளுக்கு** மரியாதை ஆகியவை தூக்கி எறியப்படுகின்றன. இதுவும் ஒரு முக்கியமாற்றம். இந்த முக்கிய மாற்றங்களின் மற்றும் இதர பல மாற்றங்களின் தாக்கம் சட்டத்துறை அமைச்சரை என்பக்கம் ஈர்ப்பதில் வெற்றி பெறும் என நம்புகிறேன்.

அடுத்து இலாகா மசோதாவின் 109 வது பிரிவுக்கும் முடிவான மசோதாவின் 108வது பிரிவுக்கும் நாம் வருகிறோம். இந்த ஷரத்து முற்றிலும் புதிது. இந்தப் பிரிவில் மூல மசோதாவில் இல்லாத சில புதிய வாரிசுகள் கொண்டு வரப்படுகின்றனர்.

சீதனச் சொத்துக்கான மரபுரிமையில் சில மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. அடுத்து பாகம் 2ல், பிரிவு 14, இதில் வாரிசுகள் ஒன்றாக இணைக்கப்பட்டு இருக்கின்றனர்.

திரு. துணை அவைத் தலைவர் : மதிப்பிற்குரிய உறுப்பினர் விரைவில் முடிப்பார் என்றால் நாம் மேலும் சில நிமிடங்கள் அவையில் இருப்போம்.

திரு. நசிருத்தீன் அகமது : இல்லை ஐயா.

திருமதி.ஜி. துர்க்காபாய் : மதிப்பிற்குரிய உறுப்பினர் முடித்துக் கொள்வாராயின் அதிகம் ஐந்து நிமிடங்கள் நாம் இருப்போம்.

திரு. துணை அவைத் தலைவர் : அவைத் தலைவருக்கு நான் இதை விட்டுவிடுகிறேன்.

இப்பொழுது அவை நாளைக் காலை 10.45 வரை ஒத்தி வைக்கப் படுகிறது.

அவை, சனி, 1949 ஏப்ரல் 2ம் தேதி காலை பத்தேமுக்கால் மணி வரை ஒத்தி வைக்கப்படுகிறது.

*இந்துச் சட்டத் தொகுப்பு - தொடர்ச்சி

திரு. அவைத் தலைவர் : இந்து சட்டத்தின் சில பிரிவுகளைத் திருத்தி தொகுப்பிற்கான மசோதாவை, பொறுக்குக் குழு அறிக்கையின் படி மேலும் பரிசீலிப்பதற்கான தீர்மானத்தின் மீது அவை விவாதத்தைத் தொடரலாம்.

திரு. மகாவீர் தியாகி (ஐ.மா. : பொது) : இந்த மசோதாவை எவ்வளவு நேரம் வரை நாம் விவாதிக்கப் போகிறோம். ஏனெனில், சில அரசாங்க அலுவல்கள் இருக்கின்றன. எனவே, இந்த மசோதாவின் பரிசீலனை எவ்வளவு நேரம் ஆகும் என்று உறுதி செய்து கொள்ள நாங்கள் விரும்புகிறோம். இந்தக் கட்டத்தில் மசோதா நிறைவேறுவதைத் தடுக்க நீண்ட உரைகள் ஆற்றப்படுகின்றன. எல்லா உறுப்பினர்களும் பேச அக்கறையுடன் உள்ளனர். இரண்டு அல்லது மூன்று நாட்களுக்கு பேசுவதற்கு அவர்களுக்கு அவகாசம் கிடைக்காமல் போகலாம். இப்போதைக்கு இந்த மசோதாவை எவ்வளவு நேரம் விவாதிக்கப் போகிறோம், ஐயா?

திரு. அவைத் தலைவர்: எவ்வளவு நேரத்திற்கு ஒரு மசோதா மீது விவாதம் நடைபெறப் போகிறது என்று கூறுவது எனக்குக் கஷ்டம். அது உறுப்பினர்களையே பெரிதும் பொறுத்துள்ளது. ஒரு நாள் தவிர, அதாவது 4ம் தேதி தவிர, அடுத்த வாரம் முழுவதும் அரசாங்க அலுவலுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது என்று நினைக்கிறேன். எந்த மசோதாக்களை அவர்கள் கொண்டுவர விரும்புகிறார்கள், எவற்றைக் கொண்டுவர அவர்கள் விரும்பவில்லை என்பது அரசாங்கம் கூற வேண்டிய விஷயம். பல்வேறு மசோதாக்களை அவர்கள் எவ்வாறு வரிசைப்படுத்தி முன் வைப்பார்கள் என்பதும் அரசாங்கத்தை பொறுத்த விஷயம்.

திரு. மகாவீர் தியாகி : அவசரமான அலுவலை முதலில் எடுத்துக் கொண்டு, இந்த மசோதாவை முதலில் பரிசீலிக்க அனுமதிக்கும்படி அரசாங்கத்தை தங்கள் மூலம் கேட்டுக் கொள்கிறேன். ஐயா, எந்த மசோதாக்கள் முதலில் எடுத்துக்கொள்ளப்படும் என்பதை திட்டவட்டமாக நாங்கள் தெரிந்து கொள்ள முடிந்தால், அடுத்த மசோதாக்களுக்கு நாங்கள் தயாராக வரமுடியும். மற்ற மசோதாக்களின் விவாதங்களிலும் பங்குபெற நாங்கள் அக்கறை கொண்டுள்ளோம்.

★ அ.நி.ச (சட்டப்பேரவை) ஈ, III, பாகம் II 1949 ஏப்ரல் 2, பக்கம் 2246 - 89.

பண்டிட் லட்சுமி காந்த மைத்ரா (மே.வ : பொது) : ஐயா, மதிப்பிற்குரிய எனது நண்பர் திரு. தியாகி எழுப்பியுள்ள பிரச்சினை உண்மையில் ஓரளவு முக்கியத்துவம் வாய்ந்தது. மசோதா மீது எவ் வளவு நேரம் விவாதம் நடைபெற வேண்டுமென்பது கணிசமான பேச்சாளர்களின் எண்ணிக்கையையும் அவர்களது பேச்சின் தன்மையை யும் பொறுத்து அவை முடிவு செய்ய வேண்டிய விஷயம் என்று தாங்கள் கூறினீர்கள். இக்கருத்தை நான் பாராட்டுகிறேன். தங்களின் கூற்றின் பொருளை புரிந்து கொண்டேன். எத்தனை நாட்கள் ஒதுக்கப் படும் என்று கூறுவது அவைத் தலைவர் கைகளில் இல்லை என்பதை நன்கு காண்கிறேன். அதே சமயம் உண்மையில் இந்த மசோதா மீது பேச விரும்பும், முழுமையாக அதை விவாதிக்க விரும்பும் உறுப்பினர் களுக்குள்ள சிரமத்தையும் அவைத் தலைவர் புரிந்து கொள்வார் என நம்புகிறேன். இந்தக் கூட்டத்தொடரில் எத்தனை மசோதாக்கள் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்பதையாவது அவர்கள் தெரிந்து கொள்ள வேண்டும். நேற்று இந்தத் தீர்மானம் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்டவுடன் துவக்கத்திலேயே, இந்த மசோதா மீண்டும் இந்தக் கூட்டத் தொடரில் எடுத்துக் கொள்ளப்படப் போவ தில்லை என்ற எண்ணத்தை மிகப் பெரும்பான்மையான உறுப்பினர் கள் கொண்டிருக்கிறார்களெனக் கூறினேன். உண்மையில் முக்கியத் துவமும் சிறப்பும் வாய்ந்த இந்த மசோதா பரிசீலனைக்காகக் கொண்டு வரப்படும்போது உரியகாலத்தில் போதுமான அறிவிப்பு உறுப்பினர் களுக்குக் கொடுக்கப்படும் என்று நாங்கள் எதிர்பார்த்தோம். ஆனால் அவ்வாறு செய்யப்படவில்லை. நான் கூறுவதன் முக்கியத்துவம் இம் முறையில் எழுகிறது. இந்த மசோதா மீதான விவாதம் இன்று வரை மட்டுமே தொடரும் என்று அறிவித்திருந்தால் அதை நாங்கள் புரிந்து கொள்ள முடியும். ஆனால் மறுபுறம் இக்கூட்டத் தொடரிலேயே மேற்கொண்டு நாட்கள் விவாதத்திற்கு ஒதுக்கப்படும் என்று கூறப் பட்டது. இதனால் ஒரே குழப்பம். எனவே மசோதாவுக்கு ஆதர வாகவோ அல்லது அதற்கு எதிராகவோ பேச விரும்பும் உறுப்பினர் கள் வந்து விவாதத்தில் கலந்து கொள்ள முடியாது போயிற்று. நேற்று நாம் துவங்கினோம். மதிப்பிற்குரிய பல உறுப்பினர்கள் ஏற்கனவே கிளம்பிச் சென்றுவிட்டனர்; உதாரணத்திற்கு, திரு. கே.எம். முன்ஷி இந்த மசோதா பற்றிப் பேச வந்தார். அவர் திரும்பிச் சென்றுவிட்டார். இந்த முக்கிய மசோதாவுக்கு ஆதரவாகவோ, எதிராகவோ பேச விரும்பிய உறுப்பினர்கள் பலர் இருந்தனர், இதற்கு மேலும் சில நாட்கள் ஒதுக்கப்படும் என்று அவை தங்கள் மூலம் அறிந்து கொள்ள முடிந்தால் - இது பற்றி தாங்கள்தான் சொல்ல முடியும் - அவ்வாறு செய்வது தங்களுக்குச் சாத்தியம் - அது உதவிகரமாக இருந்திருக்கும்.

தற்போது இந்த முக்கியமான மசோதாபற்றி நாம் எங்கு இருக்கிறோம் என்பது நமக்குத் தெரியவில்லை.

திரு. அவைத் தலைவர் : *மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் இந்த விஷயம் பற்றி எங்களுக்குத் தெளிவுபடுத்த முடியுமா என்பதை தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.*

மாண்புமிகு டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் : *(சட்டத்துறை அமைச்சர்):* நான் கூறக் கூடியது ஒன்றே ஒன்றுதான்; அதாவது இந்த மசோதா நிச்சயம் விவாதிக்கப்படும். அடுத்த சட்டம் எதுவாக இருக்கும் என்பதை என்னால் சொல்ல இயலாது. ஏனென்றால் அரசாங்கத்தின் அலுவலை நிர்ணயம் செய்யும் பொறுப்பு ஓர் அரசாங்கக் குழு விடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது 'முன்னுரிமைக் குழு' என்று அது அழைக்கப்படுகிறது. இந்த நாட்களை இம் மசோதாவிற்கு அக்குழு தான் ஒதுக்கியுள்ளது. இந்தக் குழு பிற்பகலில் கூடி அதன் சொந்த முடிவுகளை எடுக்கும். இதற்கு மேல் எதுவும் சொல்ல இயலாதவனாக இருக்கிறேன்.

திரு. லட்சுமி காந்த மைத்ரா : இந்தத் தீர்மானம் மீண்டும் விவாதத்திற்கு வரும் போது, போதுமான அளவு முன்கூட்டியே அறிவிப்புச் செய்ய வேண்டும். போதிய அறிவிப்பு இல்லாமல் தீர்மானத்தைக் கொண்டுவரும் நடைமுறை கையாளப்படாமல் இருக்க அவைத் தலைவருக்கு போதுமான உள்ளார்ந்த அதிகாரம் உள்ளது என்று மரியாதையுடன் தெரிவித்துக் கொள்கிறேன். ''இந்தத் தீர்மானம் வருவதை நான் அனுமதிக்கப் போவதில்லை; ஏனெனில், இந்த முக்கிய விவாதத்தில் மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் கலந்து கொள்வதை அது பாதிக்கிறது'' என்று கூற தங்களுக்கு நிச்சயம் உரிமை உண்டு. மாண்புமிகு அமைச்சர் ஒரு முடிவுக்கு வரமுடியாமல் உள்ளார். இந்தக் கூட்டத்தொடரில் இந்த மசோதா அவ்வப்போது பரிசீலிக்கப்படும் முறைபற்றி ஆரம்பத்திலிருந்தே நான் ஆட்சேபம் தெரிவித்து வந்திருக் கிறேன். என்னுடையதும் ஏனைய உறுப்பினர்களது பாதகமான விமர்சனத்திற்கான விஷயம் இதுவாகவே இருந்து வந்துள்ளது. இந்த முக்கியமான மசோதாவுக்கு மேலும் ஏதாவது ஒரு நாள் ஒதுக்கப் படப் போகிறதா, இல்லையா என்று கூறும் நிலையில் இன்று கூட மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் இல்லை. அப்படியாயின், இந்த வாரக் கடைசியில், இந்த மசோதாவைப் பரிசீலிக்கும் தீர்மானம் மிகக் குறுகிய கால அறிவிப்பில் கொண்டு வரப்பட்டால், அதை உறுதியுடன் தாங்கள் எதிர்ப்பீர்கள் என்று நம்புகிறேன்.

திரு. அவைத் தலைவர் : அந்தத் தீர்மானம் எப்பொழுது என்பது நிச்சயமில்லாதிருக்கிறது. இன்று மசோதா மீது விவாதத்தைத் தொடர்வோம்.

திரு. பண்டிட் முகுத் பிகாரிலால் பர்கவா (ஆஜ்மீர் - மேர்வரா) : இன்று கூட ஒரு நிலையை எடுக்க அரசாங்கத்தால் இயல வில்லை என்பது மிகவும் நியாயமில்லாதது. மார்ச் 30ம் தேதி நிலை என்ன என்று அவையில் அரசாங்கத் தலைவரிடம் தாங்கள் கேட்டீர்கள். இந்துச் சட்டத்தொகுப்பு மசோதா எடுத்துக் கொள்ளப்பட போகிறதா, இல்லையா என்று திரு. மைத்ராவால் ஒரு குறிப்பான கேள்வி கேட்கப் பட்டது. அரசாங்கத்தரப்பிலிருந்து இந்தக் கேள்விக்கு பதில் எதுவும் அளிக்கப்படவில்லை; விளைவு என்னவெனில், 31ம் தேதி முதல் தடவையாக, மசோதா எடுத்துக் கொள்ளப்படும் என்று நாங்கள் அறிந்தோம். விவாதத்தில் கலந்து கொள்ள விரும்பிய திரு. சௌத்துரி, அவையின் முன் இந்த மசோதா வராது என்று ஊகித்து, அஸ்ஸா முக்குக் கிளம்பிச் சென்றார். எனவே, இம்முறையில் இது கொண்டு வரப்படுவது நியாயமற்றது என்பது தெளிவு. உறுப்பினர்களின் உரிமைகளைப் பாதுகாக்க அவைத் தலைவருக்கு போதுமான அதிகாரம் உள்ளது.

திரு. சேத் கோவிந்த தாஸ் (மத்திய மாகாணம் - பீஹார் : பொது) : அந்தத் தேதியில், நாம் அவையை அநேகமாக ஏப்ரல் 7ம் தேதி ஒத்திவைப்போம் என்று அவையில் அரசாங்கப் பிரதிநிதி அறிவித் தார் என்பதை தாங்கள் நினைவில் வைத்திருப்பீர்கள். ஐயா, இந்தக் கூட்டத் தொடரில் இந்தச் சட்டத்தொகுப்பு பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படுமா என்ற கேள்வியை நான் எழுப்பினேன். அந்த விஷயம் பற்றி எதுவும் கூறுவது தங்கள் பணி அல்லவென்றும், அவையில் தங்கள் அலுவலை நிர்ணயித்துக் கொள்வது அரசின் பொறுப்பு என்றும் தாங்கள் கூறுனீர்கள். இப்பொழுது இந்தக் கூட்டத் தொடரின் இறுதிக் கட்டத்தில், பல உறுப்பினர்கள் இங்கு இல்லாதபோது, கருத்து வேறுபாடுகள் உள்ள இந்த மசோதாவை தொடர்ந்து பரிசீலிப்பது முறையானதல்ல. இப்பொழுது பேசிய மற்ற உறுப்பினர்களுடன் சேர்ந்து கொண்டு, உறுப்பினர்களின் உரிமைகளையும் சலுகைகளை யும் பாதுகாப்பது தங்கள் பொறுப்பு என்றும் அந்த உரிமை தங்களுக்கு உள்ளது என்றும் பணிவுடன் கூறிக் கொள்கிறோம். எனவே, இந்தக் கூட்டத் தொடரின் இறுதிக் கட்டத்தில் உறுப்பினர்களுக்கு போதுமான முன்னறிவிப்புக் கொடுக்காமல் இந்த மசோதா மீதான விவாதத்தைத் தொடர்வது முறையல்ல என்று அரசாங்கத்திடம் கூறும்படி தங்களைக்

கேட்டுக் கொள்கிறேன். இந்த மசோதாவை இன்று மாலை பரிசீலனை செய்யும் கட்டத்தில், விவாதத்தை ஒத்தி வைக்கும்படி தங்களை வேண்டிக் கொள்கிறேன். அப்பொழுது, வசந்த காலத்தில் நாம் பேரவையின் அடுத்த கூட்டத்தில் சந்திக்கும் போது இந்த அலுவல் எடுத்துக் கொள்ளப்படலாம்.

திரு. அவைத்தலைவர் : இப்போதைக்கு இது நிச்சயமற்ற ஒன்று; ஏனெனில், விவாதத்தை தொடரப் போவதாகச் சட்டத்துறை அமைச்சர் கூறவில்லை. தீர்மானம் இப்போது பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டால் அது எப்பொழுது மீண்டும் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும் என்பது (குறுக்கீடு), அவர் கூறியது போல, முன்னுரிமைக் குழுவின் முடிவைப் பொறுத்துள்ளது. விவாதத்தின் போது உறுப்பினர்கள் முன் வைக்கும் நியாயமான கோரிக்கைகளை இந்த அவையில் எனக்குள்ள அதிகாரங்களுக்கு ஏற்ப வழங்க என்னால் முடிந்தளவு முயற்சி செய்வேன். அரசாங்க அலுவலை நிர்ணயிப்பது பற்றிய விஷயத்தைப் பொறுத்தவரை, அதில் தலையிடுமாறு என்னைக் கேட்பது முறையல்ல என்று நினைக்கிறேன். அவர்களின் அலுவல்களில் எதற்கு முன்னுரிமை அளிப்பது என்பதை முடிவு செய்யும் அதிகாரம் படைத்தது அரசாங்கமே. இந்தக் குறிப்பிட்ட மசோதாவைப் பொறுத்த வரை அவர்களிடமிருந்து மேற்கொண்டு தெரிந்து கொள்ள வேண்டியது எதுவும் இல்லை. உறுப்பினர்களின் உணர்வுகளுக்கு அவர்கள் செவி சாய்ப்பார்கள் என நம்புகிறேன். இந்த விஷயத்தில் மேலும் எதுவும் கூற வேண்டிய அவசியம் இல்லை. நம் முன் இருக்கும் தீர்மானத்தை பரிசீலிப்பதை நாம் தொடரலாம்.

திரு. எச்.வி. காமத் (ம.மா மற்றும் பீஹார்) : இங்கு அலுவல் நடவடிக்கைகளை இறுதியாக முடிவு செய்வது யார் என்று நான் தெரிந்து கொள்ளலாமா, ஐயா?

திரு. அவைத் தலைவர்: அரசாங்க அலுவல்களைப் பொறுத்தவரை, அரசாங்கம்தான். எதற்கு முன்னுரிமை அளிக்க வேண்டும் என்பதைத் தீர்மானிப்பதில் எனக்கு எந்த சம்பந்தமும் இல்லை.

திரு. சேத் கோவிந்த் தாஸ் : இறுதியான அதிகாரம் தங்களுக்கே உள்ளது. அவை முன்பு கொண்டுவர விரும்பும் எந்த அலுவலையும் அவர்கள் கொண்டு வரலாம். ஆனால், அது குறித்து முடிவான அதிகாரம் படைத்தவர் தாங்களே.

திரு. அவைத் தலைவர் : இப்பொழுது அதிகாரத்தை என்னிடத்தில் அளிப்பது மதிப்பிற்குரிய உறுப்பினர்களுக்கு உகந்ததாக இருக்கிறது; அந்தப் பொறுப்பு எனக்கு மிக அதிகம் என்று நான் நினைக்கிறேன். அரசாங்க நிர்வாகத்தின் எல்லா விவரங்களையும் தேவைகளையும் பற்றி எனக்கு அதிகப் பரிச்சயமில்லை. இம்மாதிரி விஷயங்களில் அவரவர்கள் உசிதம் போல் நடந்து கொள்ளலாம். இதில் நான் தலையிட முடியுமென நினைக்கவில்லை. சிறந்த வழி என்னவெனில் மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் தங்களின் கருத்துக்களின் நியாயத்தை அரசாங்கம் உணரும்படி செய்வதுதான். அப்பொழுது விஷயங்கள் சரிசெய்து கொள்ளப்படும். நான் செய்யக் கூடியது எல்லாம் ஒரு நியாயமான விவாதம் நடக்கும்படி பார்த்துக் கொள்வதுதான். இந்தக் கண்ணோட்டத்திலிருந்து நான் செய்யக் கூடியதை நிச்சயமாக செய்வேன்.

திரு. சேத் கோவிந்ததாஸ் : தங்கள் மூலமாக நாங்கள் அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்கிறோம்.

திரு. அவைத் தலைவர் : இவ்வாறு செய்ய உறுப்பினர்களுக்கு எத்தனையோ இதர வழிகள் உள்ளன.

திரு. அருண் சந்திர குமார் (மேற்கு வங்காளம் : பொது) : அவை எப்பொழுது ஒத்திவைக்கப்படும் என்பது இப்பொழுது எங்களுக்குத் தெரிவிக்கப்பட வேண்டும். இது செய்யப்படாவிடில் எங்கள் அலுவலுக்கான ஏற்பாடுகளைச் செய்வது எங்களுக்குக் கஷ்டமாக இருக்கும்.

காலை 11 மணி

திரு. அவைத் தலைவர் : இதைப் பொறுத்தவரை, நிலைமை என்னால் நேற்று தெளிவாக்கப்பட்டது. தகவலை அளிக்கும்படி மாண்புமிகு பிரதம மந்திரியைக் கேட்டுக் கொண்டேன்; ஒன்று அல்லது இரண்டு நாட்கள் இது நடக்கலாம் என்று அவர் கூறினார். திட்டவட்டமாகச் சொல்வது அவருக்கு சாத்தியமில்லை; ஏனெனில், விவாதத்தை அனுமதித்து அவையில் நிறைவேற்ற அவர்கள் விரும்பும் அவசர சட்டங்கள் இருக்கலாம். எனவே விஷயம் உறுப்பினர்களையும் சார்ந்திருக்கிறது. ஏப்ரல் 9க்குப் பின் நாம் அவையில் உட்காரப் போவதில்லை.

திரு. அருண் சந்திர குகா: அப்படியாயின், அவசரமான விஷயங்கள் முதலில் எடுத்துக் கொள்ளப்படலாம்.

திரு. அவைத்தலைவர் : அவசரம் என்பது அவரவது கருத்து பற்றிய விஷயம்.

திரு. மௌலான ஹசரத் மோகனி : டாக்டர் அம்பேத்கரின் இந்தக் கஷ்டத்தைப் போக்க நான் ஓர் ஆலோசனை கூறுகிறேன். சமூக சீர்திருத்தம் சம்பந்தமான எந்தச் சட்டமும் அரசு அலுவலின் ஒரு பகுதி யாக ஆக்கப்படக் கூடாது. சமூக சீர்த்திருத்தம் சம்பந்தப்பட்ட இத்தகைய ஒரு மசோதா திருமதி துர்க்காபாய் அல்லது திருமதி ரேணுகாரேயால் அறிமுகப்படுத்தப்படுவதை நான் புரிந்து கொள்ள முடியும். விருப்ப மில்லாத பொது மக்கள் மீது இத்தகைய ஓர் அதிகாரபூர்வமான மசோதாவைத் திணிப்பது முற்றிலும் நியாயமற்றது. எனவே, விவேகம் வீரத்திலும் சிறந்தது என்பதை உணர்ந்து துணிச்சலோடு இந்த மசோதாவின் பரிசீலனையை ஒத்திவைத்து, அதிகார பூர்வமான மசோதாவை வாபஸ் பெற்றுக் கொள்ளும்படி எனது மதிப்பிற்குரிய நண்பரை அழைக்கிறேன்; பொது மக்கள் கருத்தைக் கலந்து, பின்பு ஒரு தேதியில் எவரேனும் ஓர் உறுப்பினர் சமூக சீர்திருத்தத்தை உட் படுத்தும் இம்மாதிரியான மசோதாவை முன்மொழியும்படி விட்டு விடலாம்.

திரு. அவைத் தலைவர் : மதிப்பிற்குரிய உறுப்பினர் இதை மேலும் விவாதிக்கத் தேவையில்லை. அவரது ஆலோசனையைக் கூறியது போதும்.

திரு. முகமது இஸ்மாயில் கான் : (ஐ.மா:முஸ்லீம்) : இந்த மசோதாவின் முன்னுரிமை அமைச்சரவைக் குழுவில் தீர்மானிக்கப் பட வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவைக்கு கூறியதால், இந்த மசோதாவுக்கு முன்னுரிமையை அவர் வற்புறுத்தப் போகிறாரா அல்லது இல்லையா என்பதை அவரிடமிருந்து தெரிந்து கொள்ள நாங்கள் உரிமை பெற்றுள்ளோம்.

மாண்புமிகு டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் : மேற்கொண்டு எதையும் கூற நான் விரும்பவில்லை. நான் சொல்ல விரும்புவது எல்லாம், திடீர் வாக்கெடுப்பால் இந்த மசோதாவை நிறைவேற்றும் எண்ணம் எதுவும் அரசாங்கத்திற்கு இல்லை என்பது தான்.

திரு. அவைத் தலைவர் : இப்பொழுது திரு. நசிருத்தீன் தமது உரையை முடித்துக் கொள்வார். உரைகள் மீது நேரக் கட்டுப்பாட்டைத் திணிக்க நான் விரும்பவில்லை. அவர் நேற்று முழுவதும் பேசியிருக்

கிறார்; முந்தின சந்தர்ப்பத்திலும் 48 நிமிடங்கள் பேசியுள்ளார். மொத்தத்தில் அவர் எடுத்துக் கொண்ட நேரம் 3மணி 28 நிமிடம். சரியாகச் சொல்ல வேண்டுமெனில் அவர் எடுத்துக்கொண்ட நேரத்தைக் கொண்டு அவரது உரையை நான் அளவிடவில்லை. அவரது கவனத்துக் கொண்டுவர நான் விரும்புவதெல்லாம் மசோதாவைப் பரிசீலனைக்கு எடுத்துக் கொண்டுவர வேண்டும் என்ற தீர்மானம் தான் இப்போது கொண்டுவரப்பட்டுள்ளது என்பது தான். எனவே மசோதாவின் ஒவ்வொரு பிரிவின் விவரங்களுக்கும் போவது முறையானதோ சரியானதோ அல்ல. நேற்று நான் புரிந்து கொண்டபடி, மதிப்பிற்குரிய உறுப்பினரின் வாதம் என்னவெனில், மசோதாவில் கணிசமான மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன என்பதால், இந்த மசோதா புதிதாகப் பரிசீலிக்கப்பட வேண்டும் அல்லது இந்த விஷயம் பற்றிப் பொது மக்களின் கருத்தைக் கண்டறிய வேண்டும் என்பதாகும். ஆதலால் மசோதாவின் ஒவ்வொரு பிரிவையும் அவர் பரிசீலிக்க வேண்டிய அவசியம் இல்லை. எடுத்துக்காட்டாக உண்மையிலேயே கணிசமான சில மாற்றங்களை அவர் சுட்டிக்காட்டினால் போதுமானது. இந்தக் கட்டத்தில் அவரது வாதத்தின் நோக்கத்திற்குப் போதுமானது என்று நினைக்கிறேன். பிரிவு பிரிவாக விவாதத்திற்கு மசோதா வரும்போது அவர் விரும்பும் எந்தத் திருத்தத்தையும் முன்மொழிய அவருக்கு முழு உரிமை உண்டு.

*திரு. நசிருத்தீன் அகமது (மே.வங்கம் : முஸ்லீம்) : ஐயா, இந்த யோசனைக்குத் தங்களுக்கு நன்றியுடையவனாக இருக்கிறேன். நேற்று நான் கணிசமான மாற்றங்கள் பற்றி எடுத்துரைத்தேன். இன்று மேலும் சில கணிசமான மாற்றங்கள் பற்றிக் கூறுவதோடு நிறுத்திக் கொள்கிறேன். (குறுக்கீடு)

திரு. அவைத் தலைவர் : குறுக்கீடுகள் பற்றி நான் உணரும் கஷ்டம் ஒன்று உள்ளது. அவை முதலில் கூறிய விஷயத்திலிருந்து கவனத்தைத் திசை திருப்புகின்றன. பேச்சாளரைக் கட்டுப்படுத்தவும் விவாதத்திற்குப் பொருத்தமான விஷயத்திற்கு அவரைக் கொண்டு வரவும் என்னால் முடியவில்லை. எனவே குறுக்கீடுகள் இல்லையெனில், விவாதத்திற்கான நேரத்தைக் குறைக்க முடியும்.

மதிப்பிற்குரிய ஓர் உறுப்பினர் : ஆனால் குறுக்கீடுகள் இல்லையெனில் விவாதம் சுவாரசியமற்றதாகி விடுகிறது.

★ அ.நி.ச (சட்டப்பேரவை) விவாதங்கள் தொகுதி III, பாகம் II, 1949 ஏப்ரல்2, பக்கம் 2249 - 76.

திரு. அவைத் தலைவர் : சுவாரசியமற்ற நிலையிலிருந்து அது மாற்றம் அளிப்பது உண்மையே. ஆனால் குறுக்கீடு அதிகமாவது அவைக்கு அபாயகரமானது. எனவே குறுக்கீடுகள் அல்லது பக்கக் கூற்றுக்கள் இல்லாமல் இருக்கட்டும்; ஏனெனில், அவை விஷயத்தைத் திசைதிருப்புகின்றன.

திரு. நசிருத்தீன் அகமது : இலாகா வரைவில் புகுத்தப்பட்ட மேலும் சில கணிசமான மாற்றங்களை எடுத்துக்காட்டுவதோடு என்னைக் கட்டுப்படுத்திக் கொள்வேன் ஐயா.

மூல மசோதாவின் 3ம் பாகத்திற்கு வருகிறேன்; இலாகா மசோதாவின் 126 பிரிவின் துணைப் பிரிவு (2)ன்பால் அவையின் கவனத்தை ஈர்க்கிறேன்; அது முடிவான மசோதாவின் 124 பிரிவின் துணைப்பிரிவு (2)க்கு ஒத்திருக்கிறது. ஒரு புதிய கோட்பாட்டை முன் வைக்கும் ஒரு புதிய துணைப்பிரிவு அது; அந்தக் கோட்பாடு என்ன? எந்த சொத்து மாற்றமும் பராமரிப்புக்கான உரிமையைத் தோற் கடிக்காது என்பதே அந்தக் கோட்பாடு. உண்மையில், பராமரிப்பு என்பது சொத்தின் மீது ஒரு சட்டரீதியான பொறுப்பாக ஆக்கப் பட்டுள்ளது. இது சரியோ தவறோ இந்தப் புதிய விஷயம் பொறுக்குக் குழுவால் அறிமுகப்படுத்தப்படவில்லை. இலாகா குழுவால்தான் அறிமுகப்படுத்தப்பட்டது.

அடுத்து, மூல மசோதாவின் பாகம் 3(அ) ஐ எடுத்துக் கொள் வோம். மரபுரிமையை கையாளும் பிரிவுகள் 1ம் 2ம் இதில் அடங்கி யுள்ளன. மிக முக்கியமான இந்த ஷரத்து இலாகா மசோதாவில் முற்றிலுமாக விடப்பட்டுள்ளது. அதே போல் முடிவான மசோதா விலும் விடப்பட்டுள்ளது. இது பற்றி நான் விரிவாகப் பேசப் போவ தில்லை; மாண்புமிகு அமைச்சரின் பரிசீலனைக்கு அவற்றை விட்டு விடுகிறேன்.

அடுத்து, இலாகா மசோதாவின் பிரிவு 131 (முடிவான மசோதா வின் பிரிவு 130), துணைப் பிரிவு (1)க்கு வருவோம். இது பராமரிப்பு பற்றிய ஒரு புதிய விஷயம். இது கணிசமான மாற்றத்தை புகுத்து கிறது. இலாகா மசோதாவின் 133வது பிரிவு (முடிவான மசோதாவின் 132ம் பிரிவு) சில சோதனைகளைத் தெரிவிக்கிறது. மிகுந்த முக்கியத் துவம் வாய்ந்த ஒரு புது மாறுதலை இவை புகுத்துகின்றன. இந்தப் பிரிவின் துணைப்பிரிவு (2)ன் பாகம் (ஆ) ஒரு புது மாறுதலாகும், மூல மசோதாவின் பிரிவு 6(1) பாகம் 3(அ) ஒத்ததாக உள்ளது.

மூல மசோதாவில் துணைப் பிரிவு (1) ன், பாகம் 3(அ)ல் பகுதி (எ), (ஏ) ஆகியவை முக்கியமான ஷரத்துக்கள். இலாகா மசோதாவில் அவை முற்றிலுமாக விடப்பட்டுள்ளன - முடிவான மசோதாவிலும் விடப்பட்டுள்ளன. மீண்டும் இலாகா மசோதாவின் பிரிவு 133(2)ன் பகுதி (எ) மற்றும் (ஏ),(ஐ) மிக முககியமானவை; அவை முற்றிலும் புதியவை. மூல மசோதாவில் பிரிவு (6), துணைப் பிரிவு (1), பாகம் 3(அ)ல், உள்ள காப்பு வாசகம் இலாகா மசோதாவில் எந்த விளக்கமுமின்றி விடப்பட்டுள்ளது. இந்த விடுபடல் ஒரு முக்கியமான விஷயமாகும்.

இலாகா மசோதாவின் 134வது பிரிவு, துணைப்பிரிவு (2) (முடிவான மசோதாவின் பிரிவு 133), திருமணமாகாத மகளின் திருமணச் செலவு பற்றிக் குறிப்பிடுகிறது. மூல மசோதாவில் இல்லாத ஒரு புதிய ஷரத்து இது.

குடும்ப இல்லத்திற்கு வெளியே வசிக்கம் ஒரு விதவையின் ஜீவனாம்சம் பற்றிக் கூறும் மூல மசோதாவின் பாகம் 3(அ)ன் பிரிவு 7க்கு வருகிறேன். இது இலாகா மசோதாவிலும் முடிவான மசோதாவிலும் விடப்பட்டுள்ளது.

மூல மசோதாவின் பாகம் 3(அ)ல், முக்கிய விடுபடல்களும் குறைபாடுகளும் உள்ளன. நான் தனித்தனி மாற்றங்களில் கவனம் செலுத்துவதோடு நில்லாமல் இந்த மாற்றங்களின் ஒட்டு மொத்த விளைவுகளிலும் கவனம் செலுத்துகிறேன் என்பதைச் சுட்டிக் காட்டவேதான் இவற்றை எல்லாம் குறிப்பிடுகிறேன்.

அடுத்து, திருமணம் மற்றும் விவாகரத்து பற்றிய மூல மசோதாவின் பாகம் 4க்கு முடிவான மசோதாவின் பாகம் 2க்கு ஒத்திருக்கிறது. முக்கிய விஷயங்கள் பற்றி மட்டுமே நான் எடுத்துக் கொள்வேன். திருமணம் பற்றிய ஷரத்துக்கள் முற்றிலுமாக, தீவிரமாக மாற்றப்பட்டுள்ளன. அவை மீது விரிவான பரிசீலனை தேவை. சமயச் சடங்குகள் அடிப்படையிலான திருமணத்தைப் பொறுத்தவரை, இந்து சமுதாயத்தில் பரவலாக உள்ள இத்திருமண முறை நன்கு தெரிந்ததே. இத்தகைய திருமணங்கள் பழக்கவழக்கங்கள் மற்றும் சமுதாய நடைமுறைக்கேற்ப இருக்கும் என மூல மசோதா விட்டுவிட்டது. சமயச் சடங்குகள் அடிப்படையிலான திருமணங்களைச் சட்டரீதியாக்க பதிவு செய்து கொள்ள வேண்டும் என்பது ஒரு நிபந்தனையாக மூல மசோதாவில் எந்த ஷரத்தும் இல்லை. இலாகா மசோதா இத்தகைய மாற்றங்களைச் செய்துள்ளது என்பதை எடுத்துக்காட்ட முயல்வேன்.

இவை தன்னுணர்வில்லாமல் செய்யப்பட்டவையாக இருக்கலாம். ஆனால் எனக்குத் தோன்றும் மாற்றம் என்னவெனில், பதிவு செய்யப் படாவிடில் எந்தத் திருமணமும் சட்டப்படி செல்லாது என்பதாகும். முஸ்லீம்கள் விஷயத்தில் போல, பதிவு செய்து கொள்வது விருப்ப படியானது என்று ஆக்கப்படவில்லை. ஆனால் இலாகா மசோதாவில், விருப்பப்படியான தன்மை கொண்ட பழைய விதிமுறைகளில் தலையீடு உள்ளது. சட்டப்படி செல்லத்தக்கது என்பது பதிவு செய்யப் படுவதைப் பொறுத்ததாக அது ஆக்கப்படுகிறது; இல்லையெனில், திருமணம் சட்டப்படியானதல்ல என்று ஆகும் என்பதைக் காண்பிக்க முயலுவேன்.

மூல மசோதாவின் 4வது பாகம் இந்தப் பொருள் பற்றிக் கையாள் கிறது. பிரிவு 2ல் இந்துத் திருமணங்கள் இரு வழிமுறைகள் கொண் டிருக்கும் என வகுத்துக் கூறுகிறது. அதாவது சடங்குகள் அடிப்படை யிலான திருமணமும் சிவில் திருமணமும் ஆகும். சிவில் திருமணத்தை விட்டுவிடுவோம்; அதைப் பற்றி இப்பொழுது நான் கவலைப்பட வில்லை. ''இருமுறையிலான இந்துத் திருமணங்கள் இருக்கும் - சடங்குப்படியான திருமணமும் சிவில் திருமணமும்.'' மூல மசோதாவில் கொடுக்கப்பட்டிருந்தது இதுதான். இதன் வடிவங் கள் எப்படி இருக்க வேண்டுமென்பது நடைமுறையிலுள்ள பழக்க வழக்கங்கள், தேவைகள் முதலியவற்றால் நிர்ணயிக்கப்படுவதற்கு விடப்பட்டது; பதிவு செய்வதற்கான ஷரத்து எதுவும் இதில் இல்லை. இலாகா மசோதாவில் இடம் பெற்றுள்ள இதற்கு ஒத்த ஷரத்துக் களை அவை தயவு செய்து பரிசீலிக்கட்டும். மதச் சடங்கின்படியான திருமணமுறை திருமணமுறைகளில் ஒன்றாக இருக்கும் என்று மட்டுமே மூல மசோதா கூறியது. இது குறித்த விவரங்கள் சம்பந்தப் பட்டவர்களின் உசிதத்திற்கு விடப்பட்டன.

முடிவான மசோதாவின் பிரிவு 6க்கு ஒத்ததாக உள்ள இலாகா மசோதாவின் 6வது பிரிவில் கீழ்க்கண்ட ஷரத்து உள்ளது:

> ''வேறு வகையில் தெள்ளத் தெளிவாகக் கூறப்பட்டிருந்தாலொழிய எந்த ஒரு திருமணமும் மதச் சடங்குடன் கூடிய திருமணமாகவோ, அல்லது சிவில் திருமணமாகவோ, இந்த பாகத்தின் ஷரத்துப்படி முறையாக நடத்தப்பட்டாலன்றி இந்துக்களுக்கிடையிலான திருமணம் அங்கீகரிக்கப்படமாட்டது.''

மதச் சடங்கு முறைப்படியான திருமணம் இந்து சமுதாயம் நன்கு அறிந்த மத முறைப்படி நடத்தப்படலாம் என்று மூல ஷரத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது. இந்த பாகத்தில் கூறப்பட்டபடி நடத்தப் படாத எந்தத் திருமணமும் சட்டப்படி செல்லாது என்று இலாகா மசோதாவில் கூறப்பட்டுள்ளது.

இந்தப் பாகத்தின் ஷரத்துக்களை நாம் பரிசீலிப்போம். நாம் உடனே மசோதாவின் அடுத்த பாகத்திற்கு வருகிறோம். மூல மசோதா வின் 4வது பாகம் பிரிவு 6தான் அது. இலாகா மசோதா மற்றும் முடிவான மசோதாவின் 9வது பிரிவுக்கு இது ஒத்தது. (மதிப்பிற்குரிய ஓர் உறுப்பினர் : ''டாக்டர் அம்பேத்கர் வெளியில் சென்றிருக்கிறார் என்பதை தயவு செய்து கவனத்தில் கொள்ளவும்.) மதச் சடங்கின் படியான திருமணத்தைப் பதிவு செய்வது பற்றி பிரிவு 9 குறிப்பிடுகிறது. மூல மசோதாவில் பின்வருமாறு கூறப்பட்டது: ''மதச் சடங்கின்படி நடக்கும் திருமணத்திற்கு அறுதிச் சான்று பெறுவதை எளிதாக்க இந்தச் சட்டப் பிரிவு பகுதி 6ன் கீழ் வைக்கப்பட்டுள்ள இந்து சிவில் திருமணச் சான்றிதழ் புத்தகம் வகுத்துள்ள முறையில் அத்தகைய திருமணம் சம்பந்தமான விவரங்களை பதிவு செய்ய விதிகள் வகுக்கப் படலாம்.''

திரு. பாபு ராம்நாராயண் சிங் (பீஹார் : பொது) : தகவல் சம்பந்தப்பட்ட ஒரு விஷயம். விவாதத்தை அரசாங்கத்தின் சார்பாக யார் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் தெரிந்து கொள்ள லமா?

திரு. அவைத் தலைவர்: யாராவது ஒருவர் நிச்சயம் இருப்பார்.

திரு. எல். கிருஷ்ண சுவாமி பாரதி (சென்னை : பொது) : அவருக்காக நான் குறிப்புகள் எடுத்துக் கொண்டிருக்கிறேன்.

திரு. நசிருத்தீன் அகமது : மரியாதைக்காகவாவது அமைச்சர் அவசியம் இங்கு இருக்க வேண்டும்.

திரு. பி.எல். சோந்தி (கிழக்கு பஞ்சாப் : பொது) : சட்டத்துறை அமைச்சர் இப்பொழுது வந்து கொண்டிருக்கிறார்.

திரு. நசிருத்தீன் அகமது : சான்று பெறுவதை எளிதாக்கும் நோக்கத்தோடு ஒரு பதிவேட்டில் விவரங்களை பதிவு செய்வதற்கான அரசாங்க விதிகளை வகுப்பதற்காக இந்த மூலப் பிரிவு வகை செய்தது. திருமணத்தின் சட்ட பூர்வமான தன்மையை அது முழுவதுமாக உறுதிப் படுத்தியது. சான்று விஷயத்தில், இந்து சிவில் திருமணச் சான்றிதழ் புத்தகத்தில் (பதிவேட்டில்) திருமணம் பற்றிய விவரங்களைப் பதிவு செய்யும் அதிகப்படியான வசதியை அது அளித்தது; விதிகள் மூலம் இதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது. சான்று பெறுவதை எளிதாக்குவதே

இதன் நோக்கம். ஆனால் இது ஒரு கட்டாய நிபந்தனையாக இருக்க வில்லை; மேலும் இது திருமணத்தின் சட்டபூர்வத்தன்மையைப் பாதிக்கும் நிபந்தனையாகவும் இருக்கவில்லை. செய்யப்பட்டது எல் லாம் ஒரு வழக்கமான விதி; அதுவும் சட்டப்படி தேவையான விதி; அதாவது விவரங்கள் ஒரு பதிவேட்டில் பதியப்படும்; அது விதிகளில் வரையறுக்கப்படலாம். சான்றை எளிதாக்கும் நோக்கத்துக்கு மட்டுமே. திருமணத்தின் சட்டப்படியான தன்மையை அது பாதிக்கவே செய்யாது. விவரங்களை இந்தப் பதிவேட்டில் பதிவு செய்யாத ஒரு திருமணம் சட்டபடி முற்றிலும் செல்லுபடியாகும்; ஆனால் பதிவு செய்வது திருமணம் பற்றிய சான்றைப் பெற உதவும் அல்லது திருமணம் பற்றிய சான்றை தயாராக வைத்திருக்கும் முறையை அளிக்கும். பதிவின் அத்தாட்சி பெற்ற பிரதி நீதிமன்றத்தால் சட்டப்படி ஏற்றுக் கொள்ளப் படும். இதனால் அதிக சான்று தேவைப்படாது. ஆனால் இலாகா மசோதாவில் இதற்கு ஒத்த பிரிவில், பின்வருமாறு உள்ளது:

> ''மதச் சடங்குப்படி நடைபெறும் எந்தத் திருமணத்திற்கும் சான்றை எளி தாக்க, மாகாண அரசாங்கம் விதிகள் மூலம் வகை செய்யலாம். (இங்குதான் கொடுக்கில் விஷம் இருக்கிறது.)
>
> (அ) அத்தகைய திருமணங்கள் சம்பந்தப்பட்ட விவரங்கள் இந்துத் திருமண சான்று பதிவேட்டில் பதிவு செய்யப்படும்....''

உண்மையில் கட்டாயப்படுத்துதல் இன்னமும் முழுமையாக வில்லை; ஆனால் அது இங்கு துவங்குகிறது:

அடுத்து, ஐயா, இலாகா மசோதாவின் பிரிவு (ஆ)க்கு வருவோம். மூல மசோதாவில் பிரிவு(6)ன் துணைப் பிரிவு (3) பின்வருமாறு கூறுகிறது:

> ''அத்தகைய பதிவு செய்வது கட்டாயமாக்கப்பட மாட்டாது.''

ஐயா, இலாகா மசோதாவில் இதற்கு ஒத்த வாசகத்தை பரிசீலிக் கும்படி தங்களைக் கேட்டுக்கொள்கிறேன். மூல மசோதாவை தங்கள் அனுமதியோடு மீண்டும் வாசிக்கிறேன்:

> ''அத்தகைய பதிவு செய்வது கட்டாயமாக்கப்பட மாட்டாது.''

திரு. மகாவீர் தியாகி : அப்படியாயின், திருமணம் செய்து கொண்டவர்கள் பதிவாளர் அலுவலகத்திற்குச் செல்ல வேண்டுமா?

திரு. நசிருத்தீன் அகமது : மூல மசோதாவின்படி, அத்தகைய பதிவுகள் செய்வது கட்டாயமல்ல. அது மிகத் தெளிவாக உள்ளது. இலாகா மசோதாவில் அதற்கு ஒத்த ஷரத்தை நாம் பரிசீலிக்கலாம்:

> "அத்தகைய பதிவுகள் செய்ய வேண்டியது கட்டாயமாகும்."

திரு. ஜஸ்பாத் ராய் கபூர் (ஐ.மா : பொது) : எந்த இடத்தில்?

திரு. நசிருத்தீன் அகமது : அதற்கு நான் பின்னால் வருகிறேன். 'எந்த இடம்' என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. அவை மிகவும் அசௌகரியமான இடங்கள்!

எனவே மூலச் சட்டம், விதிப்படி சான்றை எளிதாக்கும் நோக்கத்திற்காக திருமணங்கள் பற்றிய விவரங்கள் பதிவேட்டில் பதிவு செய்யலாம்; "ஆனால் பதிவு கட்டாயமல்ல." எனினும் இலாகா மசோதாவிலுள்ள திருத்தப்பட்ட பிரிவில் விவரங்கள் பதிவு செய்யப் படலாம்; அந்த விஷயங்களைப் பதிவுகள் செய்வது கட்டாயம் ஆகும்.

அடுத்து, அதற்கு மேல், இலாகா மசோதாவில், பிரிவு 9ன் துணைப் பிரிவு (2) பின்வருமாறு கூறுகிறது :

> "துணைப்பிரிவு 1ன் கீழ் விதிகளை வருக்கும் போது, ஒரு மீறலுக்கு ரூ. 100 வரைக்கும் அபாரதம் விதிப்பதற்கு அரசாங்கம் வழிவகை செய்யலாம்."

கட்டாயமாகப் பதிவு செய்வது அதிகாரியின் பொறுப்பா அல்லது திருமணத் தம்பதியரின் பொறுப்பா என்பது சற்றும் தெளிவில்லாமல் உள்ளது. ஆனால் இது பற்றி மேலும் பின்னர் பேசுகிறேன்.

திரு. மகாவீர் தியாகி: எந்தப் பிரிவைப் பற்றித் தாங்கள் குறிப்பிடுகிறீர்கள்?

திரு. நசிருத்தீன் அகமது : இலாகா மசோதாவின் பிரிவு 9(2); அதேபோல் முடிவான மசோதாவின் பிரிவு 9(2). பதிவு செய்யா விட்டால் அபராதம் விதிக்க மாகாண அரசாங்கத்திற்கு அது அதிகாரம் வழங்குகிறது. பதிவு செய்யத் தவறியவர்கள் அல்லது பதிவு செய்தாலும், இந்த ஷரத்தின் தொந்தரவுக்கு உட்படவும் செய்யலாம். ஆனால் விஷயம் சந்தேகத்திற்கு விடப்படவில்லை; பின்பு அது தெளிவாகிறது.

திரு. அவைத் தலைவர்: திருமணத்தின் செல்லத்தக்க தன்மை என்பது பாதிக்கப்படவில்லை; அப்படியாயின் கணிசமான மாற்றம் எங்கிருக்கிறது? இது விவரங்கள் பற்றிய விஷயம் மட்டுமே; மசோதா பிரிவு, பிரிவாகப் பரிசீலிக்கப்படும் போது, மதிப்பிற்குரிய உறுப்பினர் பேசலாமே.

திரு. மகாவீர் தியாகி: அது ஒரு முக்கியமான விஷயம் ஐயா. இவ்வகையில் இதனை ஒரு முக்கிய மாற்றம் எனலாம். மாமனார் வீட்டுக்குப் போவதற்குப் பதில் தம்பதியர் பதிவாளர் அலுவலகத் திற்குப் போகும்படி ஆணையிடப்படுவர்.

திரு. அவைத் தலைவர் : இப்போதைய விவாதத்தின் வீச்சு, ராவ் குழு முன்வைத்து பொறுக்குக் குழு ஏற்றுக் கொண்ட அடிப்படைச் சட்டத்தில் மாற்றங்கள் பற்றியது. பதிவு செய்வது கட்டாயம் என்பது ஒரு சிறிய விவரம். திருமணத்தின் சட்டபூர்வத் தன்மையைப் பொறுத்தவரை, அது பாதிக்கப்படவே இல்லை. அது பற்றி எந்த விவாதத்தையும் நான் விரும்பவில்லை. மாற்றம் விரும்பத்தக்கதா அல்லது இல்லையா என்பது பற்றி எதுவும் நான் கூறவில்லை. ஆனால், இப்போதைய நோக்கங்களின் வீச்சுக்கு விவாதம் அப்பாற்பட்டது.

திரு. நசிருத்தீன் அகமது : இது சம்பந்தமாகவும் முடிவான மசோதா குறித்தும் ஒன்றிரண்டு வார்த்தைகள் பேச விரும்புகிறேன். பிரிவு 138-விதிகளை வகுக்க அதிகாரம் - (2) துணைப்பிரிவு (ii) பின்வருமாறு கூறுகிறது :

> ''மதச் சடங்குப்படியான திருமணங்கள் பற்றிய விவரங்கள் கட்டாயமாகப் பதிவு செய்யப்பட வேண்டும் என்ற எந்த மீறலுக்கும் தண்டனை வழங்க வேண்டுமென்ற வழக்குகளில்''.

கட்டாயப் பதிவிற்கு இது வகை செய்கிறது. அது திருமணத்தை எவ்வாறு பாதிக்கிறது என்ற கேள்விக்கு நான் வருகிறேன். (**மதிப்பிற்குரிய ஓர் உறுப்பினர் :** 'அது மாகாண அரசாங்கத்தின் உசிதத்தைப் பொறுத்தது') மாகாண அரசாங்கத்தின் உசிதத்தைப் பொறுத்தது என்பதில் ஐயமில்லை. ஆனால், அரசாங்கத்திற்கு ஒரு புதிய அதிகாரம் அளிக்கப்படுகிறது; அதை அது அமுல்படுத்தலாம்.

இலாகா மசோதாவின் பிரிவு 6க்கு மீண்டும் வருகிறேன். முடிவான மசோதாவின் பிரிவு 6க்கு ஒத்தது அது.

"இந்தப் பாகத்தின் ஷரத்துக்களுக்கு இணங்க மதச் சடங்குப்படி செய்யப் பட்ட திருமணமாக அல்லது சிவில் திருமணமாக இல்லாமல் இந்துக் களிடையே நடைபெறும் எந்தத் திருமணமும் சட்ட ரீதியானது என்று அங்கீ கரிக்கப்பட மாட்டாது".

மூல மசோதாவின் பிரிவின்படி இந்த சம்பிரதாயமான நடை முறைகள் தேவைப்படுவதில்லை. இலாகா மசோதாவில் "இந்தப் பாகத்தின் ஷரத்துக்கள்" திருமணம் கட்டாயப் பதிவு செய்யப்படு வதைக் கோருகின்றன. உண்மையில், மதச் சடங்குப்படியான திருமண மும் சிவில் திருமணமும் ஒன்றோடொன்று சமநிலையில் வைக்கப்படு கின்றன. நிச்சயமாக சிவில் திருமணம் பதிவு செய்யப்படுவது கட்டாய மாகும். இலாகா மசோதாவின் பிரிவு 6ல் பதப்பிரயோகத்தின் மாற் றமும், பதிவு செய்வது கட்டாயமாக்கப்படுவதும் பதிவு செய்யப் படாத ஒரு திருமணம் - அதன் விவரங்களை பதிவு செய்வதை இந்தப் பிரிவு கட்டாயமாக்குகிறது - சட்டரீதியாக அங்கீகரிக்கப்படாத திருமணம் ஆகிவிடும் என்று தோன்றுகிறது. இந்தப் பாகத்தில் குறிப் பிட்டுள்ளபடி செய்யப்படாத எந்தத் திருமணமும் சட்ட ரீதியான தாக இருக்காது.

திரு. எல். கிருஷ்ணசுவாமி பாரதி : *அது எங்கிருக்கிறது?*

திரு. நசிருத்தீன் அகமது: அவையின் பரிசீலனைக்காக நான் சமர்ப்பிக்கும் வியாக்யானமாகும் இது. உண்மையில் இதன் விளைவு மாண்புமிகு சட்டத்துறை அமைச்சரின் சிந்தனைக்கு மிகவும் அப்பாற்பட்டதாக இருக்கலாம். திருமணம் சம்பந்தப்பட்ட ஷரத் துக்கள் கட்டாயமானதல்ல, உண்மையில் விருப்பத்தைப் பொறுத்தது என்று தமது உரையில் அவர் மிகவும் தெளிவாக்கியுள்ளார். விளைவு நோக்கம் எதுவும் கொண்டதாக இல்லாமல் இருக்கலாம். ஆனால் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் விளைவு அதுதான். இந்தப் பாகத்தின்படி நடைபெறாத எந்தத் திருமணமும் சட்டரீதியாக இருக்காது. எந்த விடுபடலும் அபாரத்துக்கு உள்ளாகும். அவை எவ்வளவு தயக்கம் கொண்டிருந்தாலும், இந்த வியாக்கியானத்தை ஏற்க இந்த மசோதாவை ஆக்கியவர் எவ்வளவு தயக்கம் காட்டி னாலும், அது ஒரு கருத்து விளக்கமே தவிர உணர்ச்சி வசப்படும். விஷயமல்ல. இந்தப் பொருள் விளக்கம் சரியானதா என்பதுதான் கேள்வி; சரியானதெனின் அது ஒரு மிக முக்கிய மாற்றத்தைக் கொண்டு வருகிறது. ஒரு திருமணம் பதிவு செய்யப்படாததால் சட்டரீதியான தாகக் கருதப்படாதிருக்க நேரடியாக இல்லாவிட்டாலும் வழிவகை

செய்வது ஓர் ஆபத்தான கருத்தாகும். ஏராளமான சட்ட மீறல்களுக்கு அது இட்டு செல்லும். எளிதில் அணுகமுடியாத வட்டாரங்களில் வசிக்கும் திருமணம் செய்பவர்களுக்கு பல மைல்களுக்கு அப்பால் பதிவு செய்யும் அதிகாரி வாழலாம். நமது நாட்டின் நாகரிகத்தின் இந்தக் கட்டத்தில் குறிப்பாகப் பின்தங்கியுள்ள மக்களுக்கு, இந்த ஷரத்து மிகவும் கொடுமையானது அர்த்தமற்றது.

திரு.எல் கிருஷ்ணசாமி பாரதி : ஐயா, என்னை நீங்கள் பேச அனுமதித்தால்.....

திரு. அவைத் தலைவர் : வாதத்தின் தராதரம் பற்றி எந்த சர்ச்சையும் வேண்டாம்.

திரு.எல் கிருஷ்ணசாமி பாரதி: சில விளக்கங்கள் பெறுவதற்காகவே நான் எழுந்தேன்.

திரு. அவைத் தலைவர் : விளக்கத்திற்கும் மேலும் விவாதத்திற்கும் நாம் சென்றால், அது ஒரு முடிவில்லாத உரையாகத்தான் இருக்கும். விஷயம் என்னவெனில் மதிப்பிற்குரிய உறுப்பினர் தமது விளக்கத்தை முன்வைக்கிறார். திருமணத்தில் சட்டரீதியான தன்மையை அது பாதிக்கவில்லை என்ற விஷயத்தை அவரது கவனத்திற்குக் கொண்டுவந்தேன். அப்படியும் அவர் தமது வாதப்போக்கில் விடாப்பிடியாக இருக்கிறார் என்றால், அவர் அவ்வாறே செய்யட்டும். அது உரையின் நேரத்தைக் குறைக்கும்.

திரு.எல். கிருஷ்ணசாமி பாரதி : ஐயா, தாங்கள் என்னை அனுமதித்தால், அவர் தெளிவுபடுத்த வேண்டிய ஒரே விஷயம்தான் இருக்கிறது. அந்த சட்டப் பிரிவு பின்கண்ட பதங்களில் தொடர்கிறது; ''மதச் சடங்கின்படியான எந்தத் திருமணத்திற்கும் சான்றை எளிதாக்கும் நோக்கத்திற்காக....''

திரு. அவைத் தலைவர் : என் மனதிற்கு அந்த விஷயம் மிகத் தெளிவாக இருக்கிறது. அதை நான் எடுத்துக் கூறினேன். திருமணத்தின் சட்டரீதியான தன்மையை இது பாதிக்கவே செய்யாது என்று நான் அவருக்குச் சுட்டிக்காட்டினேன். இல்லை, இல்லை அது பாதிக்கவே செய்கிறது என்று அவர் நினைக்கிறார். அவரை நாம் எவ்வாறு திருப்திப் படுத்த முடியும்? இப்பொழுது அவர் தொடரட்டும். நம் முன் அவர் தமது வாதத்தை வைப்பதற்கு சுருக்கமான வழியாக அது இருக்கும்,

இல்லையெனில், ஒவ்வொரு ஷரத்துப் பற்றியும் நாம் அவரோடு விவாதிக்க வேண்டிவரும். அதன் மீது அவர் தமது ஊகங்களை அளிப்பார். மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் அவரது உரையை அமைதியாகக் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்றால், அவரது பொருள் விளக்கத்தை அவர்கள் ஏற்றுக்கொள்கிறார்கள் என்று பொருள் ஆகாது. அடுத்த விஷயத்திற்கு அவர் செல்லலாம்.

திரு. நசிருத்தீன் அகமது : இலாகா மசோதாவின் பிரிவு 8க்கு வருகிறேன்.

திரு. அவைத் தலைவர் : அவையின் முன் உள்ள முடிவான மசோதாவை பற்றி மதிப்பிற்குரிய உறுப்பினர் குறிப்பிட்டு மாற்றத்தைச் சுட்டிக் காட்டினால் உசிதமாக இருக்கும். இல்லையெனில், என்னால் புரிந்து கொள்ள முடியாது. அவர் மூன்று அல்லது நான்கு மசோதாக்களைக் குறிப்பிடுகிறார்.

திரு. நசிருத்தீன் அகமது : மூல மசோதாவிலிருந்து நான் தொடங்குகிறேன். முடிவான மசோதாவிலும் அது பிரிவு 8 ஆகும். மூல மசோதாவில் பாகம் 4ன், பிரிவு 4ல், பின்வருமாறு கூறப்பட்டுள்ளது:

> ''மதச் சடங்கின்படியான ஒரு திருமணம் தம்பதிகள் எவர் ஒருவரின் வழக்கமான வழிபாட்டு முறைகள், சடங்குகள் ஆகியவற்றிற்கேற்ப முறையாகச் செய்யப்படலாம்''

மாற்றியமைக்கப்பட்ட வரைவின் பிரிவு 8ன் துணைப்பிரிவு (1) பின்வருமாறு கூறுகிறது:

> ''மதச் சடங்கின் படியான ஒரு திருமணம், அத்தகைய திருமணத்திற்கு அத்தியாவசியமான இருவரில் ஒருவரின் சடங்குகள் மற்றும் வழிபாட்டு முறைகளின்படி நடத்தப்பட்டாலன்றி அது முழுமையானதாகாது, மற்றும் சம்பந்தப்பட்ட இருவரையும் அது கட்டுப்படுத்தாது.''

ஐயா, இது வாதிக்க வேண்டிய ஒரு விஷயம் என்று நான் நினைக்கவில்லை. தவறால் ஏற்பட்டது இது. ஆனால் நான் எடுத்துக் கூற விரும்பும் விஷயம் என்னவெனில், ஓர் அவசியமான, தர்க்க ரீதியான விளைவாக இந்தப் பொருள் விளக்கத்தை நான் வற்புறுத்தவில்லை. ஆனால் சிந்தனையில்லாமலே அது அறிமுகப்படுத்தப்பட்டது என்று நம்புகிறேன். திருமணங்களின் சட்டரீதியான தன்மை பற்றி ஓரளவு சந்தேகம் ஏற்படுகிறது. ஒவ்வொரு வழக்கறிஞர், நீதிபதி, ராஜியவாதி முதலியோரின் உணர்வு பதிவு செய்ய வேண்டிய

காரணத்தால் அது சட்டரீதியானதல்ல என்ற கருதுவதற்கு எதிராக இருக்கும் என்பதை நான் அறிவேன். ஆனால் இது அரசியல் தன்மையானது, அணுகுமுறை முற்றிலுமாக சட்டரீதியாகவும் அரசியல் சாசன ரீதியாகவும் இருக்க வேண்டும். இதன் பொருள் என்ன? இந்தப் புதிய ஷரத்துக்களின் படி நீங்கள் உங்கள் திருமணத்தை நடத்தாவிடில் திருமணம் சட்டப்படி செல்லாது. எனவே, இதிலிருந்து எழுவது, இந்த ஷரத்தின் நியாயத் தன்மையை நாம் ஒப்புக் கொள்கிறோமா அல்லது இல்லையா என்பதுதான். எனது மனத்திற்கு தோன்றுவது என்னவெனில், திருமணம் பற்றிய விவரங்கள் பதிவேட்டில் பதிவு செய்யப்படாவில், திருமணமே சட்டப்படி செல்லாது. அவையின் பரிசீலனைக்கு அதைச் சமர்ப்பிக்கிறேன்.

விவரங்களை பதிவு செய்வது சம்பந்தமான ஷரத்துகள் பற்றி - விவரங்களைப் பதிவு செய்வது கட்டாயமாகும் - நான் ஏற்கனவே குறிப்பிட்டுள்ளேன்.

திரு. அவைத் தலைவர் : அவர் ஏற்கனவே கூறிவிட்டார். அதைத் திரும்பவும் கூற வேண்டிய அவசியம் இல்லை.

திரு. நசிருத்தீன் அகமது: கட்டாயம் என்பது தம்பதிகளுக்கா அல்லது பதிவு செய்யும் அதிகாரிக்கா?

திரு. அவைத் தலைவர் : இது விவரங்கள் பற்றிய விஷயம்; இப்பொழுது அதை பற்றி நாம் எடுத்துக் கொள்ள வேண்டாம்.

திரு. நசிருத்தீன் அகமது : நல்லது ஐயா.(குறுக்கீடு).

திரு. அவைத் தலைவர்: தனியாகப் பேசிக் கொள்ள வேண்டாம்.

திரு. நசிருத்தீன் அகமது : ஆனால், ஐயா எனக்கு கூர்மையான காது; நல்ல விவாதத்திற்கு இது உகந்ததல்ல. அனுபவம் வாய்ந்த சட்டமன்ற இயல் அறிஞரான எனது கற்றறிந்த நண்பர் உரைகளை உற்சாகமிழக்கச் செய்யக்கூடாது. பிரிட்டிஷார் இங்கு இருந்தபோது பழைய கவுன்சிலில் உரையாற்றிக் கொண்டிருந்ததை அவர் மறந்தாக வேண்டும். இப்பொழுது ஆட்சி செய்து கொண்டிருக்கும் கட்சியை அவர் சார்ந்துள்ளார் என்பதை அவர் நினைவில் கொள்ள வேண்டும்; நான் எந்தக் கட்சியையுமே சார்ந்தவனல்ல. எதிர்ப்புத் தெரிவிக்கும் ஒரு தனி நபர் நான்.

திரு. அவைத் தலைவர் : இந்த விவாதத்தை நாம் தொடர வேண்டாம்.

திரு. பி.தாஸ் (ஒரிஸ்ஸா : பொது) : நாங்கள் எங்கள் வாயை மூடிக் கொண்டிருக்க வேண்டும் என்று தாங்கள் விரும்புகிறீர்களா?

திரு. அவைத் தலைவர் : திரு. தாஸ் அவர்களே, இதற்குப் பரிகாரம் உள்ளது. இத்தகைய சமயங்களில் காதைச் செவிடாக நாம் வைத்துக் கொண்டு மேலே செல்ல வேண்டும். விவாதம் நடந்து கொண்டிருக்கும் போது பல குசுகுசுப்புகளை நானும் கேட்கிறேன். அவற்றை நான் பொருட்படுத்துவதில்லை.

திரு. நசிருத்தீன் அகமது : ஐயா, தங்களை அதிர்ஷ்டசாலிகள் என்றுதான் சொல்ல வேண்டும்.

திரு. அவைத் தலைவர்: இப்பொழுது நாம் தொடரலாம். அடுத்த முக்கியமான விஷயம் என்ன?

திரு. நசிருத்தீன் அகமது : இப்பொழுது மற்றொரு பாகத்திற்கு வருகிறேன் - சிறுபான்மையினர் மற்றும் பாதுகாவலர் சம்பந்தப்பட்ட மூல மசோதாவின் பாகம் 5 அது. அதிலுள்ள பிரிவு 3 முடிவான மசோதாவிலும் இலாகா மசோதாவிலும் முற்றிலுமாக விடப்பட்டுள்ளது. அந்தப் பிரிவின் விவரங்களை இங்கு நான் கூற வேண்டிய அவசியம் இல்லை. ஆனால் இது ஒரு முக்கியமான பிரிவு. இது நீக்கப்பட்டுள்ளது. இது ஒரு முக்கிய மாற்றத்தைப் புகுத்துவதாகும். வேறு பல முக்கியமில்லாத மாற்றங்கள் உள்ளன. அவை பற்றி நான் எடுத்துக் கொள்ளப் போவதில்லை.

இப்பொழுது தத்து எடுப்பது சம்பந்தமான பாகத்திற்கு வருகிறேன். அது மூல மசோதாவின் பாகம்6. அதிலுள்ள பிரிவுகள் 1ம் 2ம் விடப்பட்டுள்ளன. இலாகா மசோதாவின் பிரிவு 55- முடிவான மசோதாவின் பிரிவு 55(1)ம் ஆகும் - ஒரு துணைப் பிரிவு(3) உள்ளது. இது புதிது. மறுபடியும் மூல மசோதாவின் பாகம் 6ல் துணைப்பிரிவு (1) விடப்பட்டுள்ளது. முற்றிலும் வேறுபட்ட நிபந்தனைகளுடன் ஒரு **புதுப் பிரிவு** கொண்டு வரப்பட்டுள்ளது. இலாகா மசோதாவில், பிரிவு 68 -முடிவான மசோதாவில் இதற்கு ஒத்த பிரிவு 68 -துணைப்பிரிவு (1) புதியது. இரு மசோதாக்களின் இந்தத் துணைப் பிரிவுக்கான காப்பு வாசகமும் புதிது. மீண்டும் மூல மசோதாவின் பிரிவு 19ன் இரு

நிபந்தனையுடன் கூடிய துணைப்பிரிவு (3) முற்றிலுமாக முடிவான மசோதாவில் விடப்பட்டுள்ளது. இந்த பிரிவின் துணைப்பிரிவு 5 விடப்பட்டுள்ளது. மூல மசோதாவின் பிரிவு 21ம் பாகம் 4- விடப் பட்டுளளது. மூல மசோதாவின் பாகம் 6ன் பிரிவு 25, இரு துணைப் பிரிவுகளுடன் மற்றும் மற்ற இரு பாகங்களும் முற்றிலுமாக புறக்கணிக் கப்பட்டுள்ளன.

இலாகா மசோதாவில் செய்யப்பட்ட மிக முக்கியமான மாற்றங்கள் இவை என்று கூற விரும்புகிறேன். பொறுக்குக் குழுவின் சில உறுப்பினர்கள் இவை கணிசமான மாற்றங்கள் என்று உணர்கிறார்கள் என்ற போதிலும் கணிசமான மாற்றங்கள் எவையும் செய்யப்பட வில்லை என்ற உறுதிமொழி அளித்ததன் காரணமாக, அது பிந்தி வந்த உணர்வாக இருக்கலாம். இது பற்றி குறிப்பாக அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வரப்படவில்லை என்பது உண்மையே; அவர்களால் இந்த விவரங்கள் எல்லாம் முழுவதும் பரிசீலிக்கப்படாத ஓர் அபாயம் உள்ளது. மூல மசோதாவில் அவர்களின் கவனத்தைச் செலுத்தி பிரிவு, பிரிவாக பரிசீலிக்கத் துவங்கியிருந்தால் அல்லது அவர்கள் முதலில் கூடி இலாகாவிற்கு தயாரிக்க உத்திரவிட்டிருந்தால், இவ்வாறு நடந்திருக்காது.

திரு. அவைத் தலைவர்: மதிப்பிற்குரிய உறுப்பினர் ஏற் கனவே பேசியதையே மீண்டும் பேசுகிறார். இதை நேற்றே அவர் பேசி முடித்துவிட்டார்.

திரு. நசிருத்தீன் அகமது: ஐயா, என் வாதத்துக்கான ஆதாரங் களைத் திரும்பச் சொல்ல நான் விரும்பவில்லை. இந்த சூழ்நிலைமை களில், நான் சுட்டிக்காட்ட விரும்புவதெல்லாம் இது ஒரு மிக முக்கிய மான விஷயம் என்பதுதான். ஆனால் பொறுக்குக் குழு மசோதாவை நேர்மையாகவும் முழுமையாகவும் பரிசீலிக்கத் தவறிவிட்டது.

பொறுக்குக் குழு உறுப்பினர்கள் மீது பழி எதுவும் சுமத்த நான் விரும்பவில்லை. பிரிவை ஒப்பு நோக்கிப் பார்க்காமல், எல்லா மாற்றங் களையும் தெரிந்து கொள்வது பொறுக்குக் குழு உறுப்பினர்களுக்கு மிகவும் கஷ்டமாக இருக்கும்.

இந்த மசோதாவோடு சம்பந்தப்பட்ட மற்ற விஷயங்களுக்கு அடுத்து வருவோம். வாரிசு உரிமை பிரச்சினை நீண்டகாலமாக நாட்டின் மனதைக் கலக்கி வருகிறது. மசோதாவில் நான் காணும்

மிகவும் சர்ச்சைக்குரிய ஷரத்து மகளின் நிலைமை பற்றியதாகும். எனது முஸ்லீம் சகோதரிகளுக்கு நான் அளித்துள்ளதை இந்து சகோதரிகளுக்கு அளிக்க நான் ஏன் மறுக்கிறேன் என்று என்னிடம் கேட்கப் பட்டது. பதில் மிக எளிதானது. முஸ்லீம் சட்டத்தின் கீழ் மகளுக்கு ஒரு பங்கு அளிக்கப்படுகிறது. அந்தச் சட்டத்தின் விவேகத்தைப் பற்றி எத்தகைய ஐயப்பாடும் எழுப்ப நாங்கள் அனுமதிக்கப்படவில்லை. அதை நியாயப்படுத்தும் பல்வேறு வரலாற்று சமூக சூழ்நிலைமைகளின் பகைப்புலனிலில் அந்தச் சட்டம் எடுத்துக் கொள்ளப்பட வேண்டும். ஒரு வகையான நீதி அதில் உள்ளது. 1350 வருடங்களாக முஸ்லீம் சமுதாயத்தால் அது சகித்துக் கொள்ளப்பட்டும் ஏற்றுக் கொள்ளப் பட்டும் வந்துள்ளது. ஆனால் முற்றிலும் வேறுபட்டதொரு அமைப்பு முறையின்கீழ் சுமார் மூன்றுஆயிரம் அல்லது நான்காயிரம் ஆண்டுகளாக தங்கள் விதிப் பயனை இந்து சகோதரிகள் சகித்துக் கொண்டு வந்துள்ளனர். மகளின் நிலையைப் பொறுத்தவரை, இரு அமைப்பு முறைகளையும் ஒப்பு நோக்கி பார்ப்பது உசிதமாகாது. உண்மையில், இரு சட்ட அமைப்பு முறைகளும் விஷயத்தை இரு வேறுபட்ட கண்ணோட்டங்களில் அணுகுகின்றன. மேலும் அவை வேறுபட்ட வரலாற்று நிகழ்வு போக்குகளைப் பொறுத்துள்ளன. முஸ்லீம் சட்டத்தின் கீழ் வாரிசுரிமை பழைய அரபியப் பழக்க வழக்கங்களிலிருந்து எடுக்கப்பட்டது. புரிந்து கொள்ளக்கூடிய தவிர்க்க முடியாத சூழ்நிலைமைகளில் அது உருவாயிற்று. அரேபியாவில், அசையாச் சொத்துக்கள் எவையும் இருந்ததில்லை, எல்லாமே பாலைவனமாக இருந்தது. சொத்துக்கள் அசையும் சொத்துகளாகவே இருந்தன. ஒரு மனிதன் இறக்கும் போது.....

திரு. தாஜ்முல் உசேன் *(பீஹார் : முஸ்லீம்)* : இங்கு நான் ஒரு கேள்வி கேட்கலாமா? அரேபியாவில் அசையாச் சொத்துக்கள் எவையும் இருக்கவில்லை என்று மதிப்பிற்குரிய உறுப்பினர் கூறுகிறார். வீடுகள் பற்றி அவர் என்ன சொல்கிறார்?

திரு. நசிருத்தீன் அகமது : இந்தக் கேள்வி தேவையற்றது. வான் கிரீமரின் அரிய நூலைப் படிக்கும்படி மதிப்பிற்குரிய உறுப்பினரைக் கேட்டுக் கொள்கிறேன். ''கலிபாக்களின் ஆட்சியில் கீழ்த் திசை நாடுகள்'' என்பதே அந்த நூல். அந்த ஆசிரியர் சிறந்த ஜெர்மானிய நிபுணர். நாம் விரும்பும் தகவலை அந்த நூல் அளிக்கிறது. காலம் சென்ற திரு. குடா பக்ஷ் இந்த நூலை மொழி பெயர்த்துள்ளார். இதுதான் இந்தப் பொருள் பற்றிய ஒரே நூல். இந்த நூல் முழுவதும் ஒரு நிபுணரின் கண்ணோட்டத்தில் எழுதப்பட்டுள்ளது. இந்த நூலைப்

படிக்கும்படி எனது மதிப்பிற்குரிய நண்பரை வினயத்துடன் கேட்டுக் கொள்கிறேன். இது பற்றி அவையில் முழு விவரங்களையும் அளிப்பது என் பணியல்ல. ஏனெனில் இது உசிதமாக இருக்காது.

அங்கு அசையாச் சொத்துகள் இருக்கவில்லையா என்ற எனது கற்றறிந்த நண்பரின் கேள்வி உண்மையில் எழவில்லை. ஏனெனில் அரேபியா நிச்சயமாக அசையாச் சொத்துக்களையும் கொண்டிருந்தது. ஆனால் மிகப் பெரும்பான்மை மக்களிடம் அசையாச் சொத்துக்கள் இருக்கவில்லை (குறுக்கீடு). மேலும் குறுக்கீடு வேண்டாம். குறுக்கீடு கள் பற்றி பொருட்படுத்த வேண்டாமென மாண்புமிகு அவைத் தலைவர் என்னிடம் கூறினார். ஆனால் என்ன நிகழ்ந்து கொண்டிருக் கிறது என்பது பற்றி ஒருவரின் காதுகளைப் பொத்திக் கொள்வது கஷ்டமாக உள்ளது.

மதிப்பிற்குரிய ஓர் உறுப்பினர் : உங்கள் வாயை மூடிக் கொள்ளுங்கள்.

திரு. நசிருத்தீன் அகமது: எனது கடமையை ஆற்றி விட்டேன் என்று நான் திருப்தியடையும் போது, பெரும்பான்மை யினர் நான் கூறுவதைக் கேட்க விரும்பவில்லை என்று நான் உணரும் போது என் வாயை மூடிக் கொள்வேன், அதை நிச்சயமாக செய்வேன்.

ஐயா, அந்த நூலில் வரலாறு முழுவதும் கொடுக்கப்பட்டுள் ளது. ஒரு மனிதன் இறந்த போது, ஒரு கட்டில் அல்லது கொஞ்சம் துணிமணி அல்லது ஒரு குதிரை அல்லது ஒட்டகம் மற்றும் இது போன்ற வற்றை விட்டுச் சென்றான்; பழைய அரேபியப் பழக்க வழக்கங் களின்படி நெருக்கமான உறவினர்களிடையே அவை பிரித்துக் கொடுக்கப்பட்டன. சிக்கல் எதுவும் எழவில்லை. ஒவ்வொரு தனி நபருக்கும் எந்தக் குறிப்பிட்ட பங்கையும் குரான் அளிக்க வில்லை. பழைய அரேபியப் பழக்க வழக்கத்தின் தொடர்ச்சியே இன்றைய வாரிசு உரிமை முறை. முஸ்லீம் இறைமைத் துறை அறிஞர்களால், குறிப்பாக சிறந்த முஸ்லீம் சட்ட வல்லுநர்களால் அபு ஹனிபா போன்ற பிரபல முஸ்லீம் சட்ட நிபுணர்களால் அது திருத்தப்பட்டு, மாற்றப்பட்டது. அது பற்றி நான் கூறவேண்டிய தேவையில்லை. நான் கூற விரும்புவது எல்லாம் முஸ்லீமின் கண்ணோட்டம் வரலாறு சம்பந்தப்பட்ட விஷயம் என்பதுதான்அது நல்லதா, கெட்டதா என்பதல்ல இங்கு பிரச்சினை. இந்து மகளுக்கு பங்களிப்பதை நான் எதிர்ப்பது, எனது முஸ்லீம் சகோதரிகளுக்கு நான் கொடுக்கக்கூடியதை எனது இந்து சகோதரிகளுக்கு கொடுக்க விருப்பமில்லதால் அல்ல.ஒரு முஸ்லீமுக்கு எது நல்லது என்பது

புராண பழக்க வழக்கங்களையும் உணர்வுகளையும் பொறுத்தது. ஓர் இந்துவுக்கு நல்லது எது என்பது இந்துக்களின் புராதன பழக்க வழக்கங்களையும் உணர்வுகளையும் பொறுத்தது. மத்தியதரக் கடலை சுற்றியுள்ள இடங்களை அரேபியர்கள் வென்று பிடித்த போது, சிரமங்கள் எழுந்தன; ஏனெனில் அவர்கள் அசையாச் சொத்துக்களை அடைந்தனர். ஏராளமான பங்குதாரர்கள் சொத்திற்கு வாரிசு உரிமை பெற்ற போது கஷ்டத்தை அவர்கள் உணர்ந்ததும், இவ்வாறு சீர்குலைவுக்கு இட்டுச் சென்றதும் வரலாறு சம்பந்தப்பட்ட விஷயம். அப்பொழுது **வாக்ப்** என்று இன்று நாம் காணும் அமைப்பு முறை சிந்திக்கப் பட்டது. புனித நூலின் சில வாசகங்கள் முஸ்லீம் ஞானிகளால் வளர்க்கப் பட்டன. மேலும் **வாக்ப்** சட்டத்தையும் அபிவிருத்தி செய்ய அவர்கள் முயன்றனர். அப்பொழுதுதான் பிரிவினையின் தீங்கான விளைவுகளை மட்டுப்படுத்த அவர்கள் விரும்பினர். இந்தியாவில் **வாக்ப்** சட்டம் இந்திய நீதி மன்றங்களால், குறிப்பாக பிரிவிக் கவுன்சிலால் மேலும் வளர்ச்சி பெற்றது; **வாக்ப்** சட்டத்தை வீட்டுக் காரியங்களுக்காக பயன்படுத்துவதை பெரும் அளவுக்கு இது தடை செய்தது. திரு. ஜின்னா 1913ல் அவையில் ஒரு மசோதாவைக் கொண்டு வந்து, அதைச் சட்டமாக, **வாக்ப்** சட்டமாக நிறைவேற்றினார் என்பது நன்கு அறிந்த ஒன்றாகும்; முஸ்லீம்களிடையே முறையாக நடைமுறைப் படுத்தப்பட்ட சில **வாக்ப்**களைச் சட்டரீதியானவை என அது அங்கீகரித்தது. சொத்து துண்டு துக்காணியான முறையில் பங்கு போடப் படுவதன் பாதக விளைவை மட்டுப்படுத்தும் ஒரு முயற்சி இது. சொத்துப் பிரிவினை பற்றிய முஸ்லீம் அணுகுமுறை முற்றிலும் வேறு. ஒரு முஸ்லீமின் கண்ணோட்டம் தனிப்பட்ட விருப்பாற்றலைப் பொறுத்தது. துண்டு துண்டாகச் சொத்தைப் பிரிவினை செய்வது, பிரிவினைப் போக்குகளைத் தூண்டி விடுகிறது. கூட்டுக் குடும்பத்தில் சகோதரர்கள் நீண்டகாலம் வாழ்வதில்லை. விரைவில் அவர்கள் பிரிந்து செல்லுகின்றனர். அண்மைக்கால இந்திய வரலாற்றில் பிரிவினைப் போக்கு பெருமளவு வளர்ந்துள்ளதைக் காண்கிறோம். எனவே, ஒரு முஸ்லீமின் அணுகுமுறை தனிமனிதத் தன்மை கொண்டதாக இருக்கும் போது, இந்துவின் அணுகுமுறை குடும்பக் கண்ணோட்டம் கொண்டதாக உள்ளது. இந்து ஒரு குடும்பத்தில் வாழ்கிறார். அங்கு குடும்பம் தான் அடிப்படைக் கூறு. எனவே குடும்பக் கண்ணோட்டத்தோடேயே மகளிரின் உரிமைகளை அவர்கள் அணுகுகிறார்கள். முஸ்லீமின் அணுகுமுறை வேறானது. உண்மையில், ஓர் இந்துக் குடும்பத்தில் பெண் ஆணைவிட சமத்துவமற்ற நிலையில் இல்லை. சிலரால் சுட்டிக்காட்டப்பட்ட சமத்துவமின்மை என்ற கேள்வியே உண்மையில் இங்கு எழவில்லை, எல்லாவழியிலும் அவர்கள் ஆண்களுக்குச்

சமமாக உள்ளனர். இந்துக் குடும்பத்தின் பொருளாதாரத்தில், ஒவ்வொருவருக்கும் ஒரு அங்கீகரிக்கப்பட்ட பங்கு உள்ளது. பிரச்சினையை அணுக வேண்டிய முறை அது. எந்த விஷயத்திலும் சட்டமியற்ற இந்த அவைக்கு அதிகாரம் உள்ளது என்பதில் ஐயமில்லை. ஆனால், இந்து நாகரிகம் வாழ்ந்து வந்துள்ள அமைப்புமுறை பற்றி விவாதிக்காமல், விவரங்களுக்குள் செல்லாமல் சட்டமியற்றுதலில் அவை இறங்குவதற்குள்ள தகுதியைப் பற்றித்தான் எனக்கு ஐயம் உள்ளது. இந்தக் கோணத்திலிருந்துதான் ஓர் இந்து விதவையின் நிலையைப் பரிசீலிக்க வேண்டும். அந்த அமைப்புமுறை அழுகிப் போய் விட்டது என்று போதுமான பரிசீலனைக்குப் பிறகு தோன்றி னால், அதை மாற்ற வேண்டியது இந்து சமுதாயமே தவிர அந்தப் பணி என்னுடையதல்ல. இந்தச் சட்டப் பேரவையின் ஓர் உறுப் பினன் என்ற முறையில் என் மனத்தில் பட்ட விஷயங்களைச் சுட்டிக் காட்டுவது மட்டுமே என்னுடைய பணி. என்னுடைய வாக்கு இதனை முடிவு செய்யாது. பெரும்பான்மை வாக்குகள்தான் முடிவு செய்யும். என் மனதுக்குத் தோன்றுகிற சிலவற்றை சமர்பிப்பது எனது கடமை. எனவே இந்துச் சட்டம் பெண்களுக்கு அநீதியானதல்ல என்று கூறு கிறேன். குடும்ப அமைப்பின் ஒரு பிரிக்க முடியாத பகுதி என்று பெண்ணைக் கருதி, பெண்ணுக்கு முழு நியாயம் வழங்கியுள்ளது அது; அதில் பெண் ஒரு பங்கை ஆற்ற வேண்டும். உண்மையில், இந்தச் சட்டப் பேரவையில், நாம் வகிக்க வேண்டிய வெவ்வேறு பாத்திரங் கள் உள்ளன. சமத்துவமின்மை அல்லது பாரபட்சம் என்ற பிரச்சினை எதுவும் இதில் இல்லை. நாம் ஆற்ற வேண்டிய பாத்திரங்கள் பல உள்ளன. இச்சூழ்நிலைகளில் இந்தக் கண்ணோட்டத்திலிருந்து இந்துப் பெண்ணின் நிலையைப் பரிசீலிக்க வேண்டுமென பணிவுடன் கூறிக் கொள்கிறேன். முஸ்லீம்களிடையே பாகப் பிரிவினை வெகு தூரம் சென்றுள்ளது. மகளுக்குப் பங்கு என்பது எவ்வாறு குடும்பத்தின் சீர்குலைவுக்கு இட்டுச் செல்லுகிறது என்பது பரிசீலிக்கப்பட வேண்டிய ஓர் அம்சமாகும். மகன்களையும் மகள்களையும் விட்டு விட்டு ஒரு மனிதன் இறக்கும்போது, உடனே மகள்கள் தங்கள் பங்கிற்கு மரபுரிமை பெறுகின்றனர். அவர்கள் திருமணம் செய்து வைக்கப்படுகிறார்கள்; பெரும்பான்மையான நிகழ்வுகளில் வேறு குடும்பங்களுக்கு அவர்கள் அனுப்பி வைக்கப்படுகிறார்கள். உண்மையில், முஸ்லீம் சட்டத்தில், கலப்பு மணம், பாகப் பிரி வினையை சிறிதளவு கட்டுப்படுத்தும் ஒரு சாதனமாக இருக்கிறது. பாகம் உள்ள ஒருவர் சொத்தை ஒரு வெளி நபருக்கு மாற்றுகிறார் எனில், மூல கூட்டு உரிமையாளர், விலைகொடுத்து அந்தப் பாகத்தை மறுபடியும் வாங்கும் உரிமை அளிக்கப்படுகிறார். ஆனால், முன்பின்

ஆராயாது மேற்கொள்ளப்படும் இந்த செயல் பல சட்டரீதியான சிக்கல்களுக்கு இட்டுச் செல்வதோடு, அபூர்மாகவே அது வெற்றி பெறுகிறது என்பதை ஒவ்வொரு வழக்கறிஞரும் அறிவார். இந்தப் போக்கை மட்டுப்படுத்தும் மற்றொரு முயற்சியே வாக்ப். முஸ்லீம் மகளுக்குத் தரப்படும் பங்கு குடும்பச் சொத்தை சிதறிப் போகாமல் பாதுகாப்பதற்கு உகந்ததாக இருப்பதில்லை.

திரு. தாஜாமுல் உசேன் : உண்மையில் இந்த சந்தர்ப்பத்தில் குறுக்கிட நான் விரும்பவில்லை; ஆனால் இது முஸ்லீம் சட்ட விஷயமாதலால், அது பற்றி நான் அக்கறை கொண்டிருக்கிறேன். முஸ்லீம் சட்டத்தில் வகுக்கப்பட்டுள்ள மரபுரிமையை மதிப்பிற்குரிய உறுப்பினர் ஏற்றுக்கொள்ளவில்லையா என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

திரு. நசிருத்தீன் அகமது: இந்தப் பிரச்சினை இங்கு எழவில்லை என்று பணிவுடன் கூறிக் கொள்கிறேன்.

திரு. தாஜாமுல் உசேன் : அது எழுகிறதா இல்லையா என்று கூற வேண்டியது அவைத் தலைவரின் பொறுப்பு.

திரு.நசிருத்தீன் அகமது : அப்படியாயின் இந்த வாக்கு வாதத்தில் நான் பங்கு கொள்ள மாட்டேன். முஸ்லீம் குடும்பம் எவ்வாறு படிப்படியாக மோசமாகி சிதைவுறுகிறது என்பது நமது நீண்ட அனுபவத்தில் கண்ட விஷயம்; தங்களைப் போன்ற பல வழக்கறிஞர்களுக்கும் அனுபவம் அதுவாகவே இருக்குமென நம்புகிறேன். ஒரு மகள் திருமணம் செய்விக்கப்பட்டதும், சிறிது காலத்திற்குக் குடும்பத்தில் நல்லிணக்கம் நிலவுகிறது; ஆனால், மகள் தனது தந்தையின் வீட்டிற்கு வரும் சந்தர்ப்பம் வருகிறது; மகளுக்கும் சகோதரனின் மனைவிக்கும் இடையே மனஸ்தாபம் தோன்றுகிறது. மிக அற்ப விஷயங்களில்கூட ஆண்களைவிடப் பெண்கள் கருத்து வேறுபாடு கொள்கின்றனர். அவர்கள் அதிகம் உணர்ச்சிவசப்படுவதால் நிலைமை மோசமாகிறது.

திரு. மகாவீர் தியாகி : பெண்கள் மீது தாங்கள் அவதூறு கூறுகிறீர்கள்.

திரு. நசிருத்தீன் அகமது : அது அவதூறு கூறுவதாகாது. அவர்களின் குணப்பன்பைதான் விவரிக்கிறேன். பெண்களின் உணர்ச்சிபூர்வமான தன்மை அவர்களை அதிகம் கவர்ச்சிகரமானவர்களாக,

அதிகம் அக்கறையுள்ளவர்களாக, அன்புடையவர்களாக ஆக்குகிறது. நம்மைப் போல் பெண்கள் கடின உள்ளம் படைத்தவர்களாக, பலம் வாய்ந்தவர்களாக, முரட்டுத் தனமானவர்களாக இருந்தால், வாழ்க்கை சாத்தியமாகியிருக்காது. உண்மையில் பெண்மைத் தன்மையின் அழகால்தான் அவர்கள் ஆண்களிடமிருந்து அவ்வளவு வேறுபடுகிறார்கள். இவ்விரண்டு வேறுபாடுகளின் ஐக்கியம்தான் வாழ்க்கையை சகித்துக் கொள்ளத்தக்கதாகவும் மகிழ்ச்சிகரமானதாகவும் ஆக்குகிறது. எனவே, பெண்களைப் பற்றி நான் கூறியது எவ்வகையிலும் அவர்களை இழிவுபடுத்தும் தன்மை கொண்டதல்ல. மகள் தனது சகோதரரின் மனைவியால் புண்படுத்தப்படும்போது, அவள் தனது கணவர் வீட்டுக்குச் சென்று கூறுகிறாள் : ''என் பங்கு எனக்கு வேண்டும்''. பிறகு இதனைத் தொடர்ந்து கடுமையான சிக்கல் துவங்குகிறது. இது ஒவ்வொரு வீட்டிலும் நடக்கிறது. சகோதரியின் கணவர் தனது மைத்துனர் வீட்டிற்கு வருகிறார்; ஒரு பங்கைக் கோருகிறார்; அது மறுக்கப்பட்டால், தனது பங்கை சகோதரருக்கு விற்க விரும்புகிறார்; சகோதரர் நிச்சயம் ஒப்புக் கொள்ளமாட்டார்; அல்லது கோரும் விலை முழுவதையும் கொடுக்க முடியாமல் இருக்கலாம். எனவே இந்த மனிதர் கிராமத்தில் மற்றொருவரிடம் சென்று ஒரு சிறு தொகையை வாங்கிக் கொண்டு சொத்தை விற்கிறார்; சிக்கல் தீர்ந்ததும் 'அதிகம் கொடுப்பதாக வாக்குறுதி அளிக்கிறார். புதிய உரிமைக்காக அடிதடிகள் துவங்குகின்றன. குற்றவியல் அல்லது சிவில் வழக்கு போடப்படுகிறது. சாதாரண காயத்திலிருந்து கொலை வரை நடைபெறுகிறது. பதிவு செய்யும் நடவடிக்கையைத் தொடர்ந்து பாகப்பிரிவினை நடவடிக்கைகள் நடைபெறுகின்றன. எனவே, இந்நிலைமையில் இந்த மசோதா நிறைவேற்றப்பட்டால் வழக்கறிஞர்கள் நன்றி செலுத்துவர். ஏனெனில் அவர்களுக்கு கணிசமான தொழில் கிடைக்கும். வழக்கு துவங்குகிறது. ஐந்து அல்லது பத்து அல்லது இருபது ஆண்டுகளுக்கும் அதிகமாக வழக்கு நடைபெறுகிறது. வழக்குகள் மாற்றி வழக்குகள் பயங்கரமாகத் தொடர்கின்றன. கிராமம் முழுமையுமே கட்சிப் பூசல்களில் சிக்குகிறது. சில சகோதரர்கள் மட்டுமே இருந்தால், அவர்கள் ஒன்றாக வாழ்ந்து சொத்துக்களைப் பராமரிப்பார்கள். சகோதரர்கள் அநேகமாக சண்டைபோட்டுக் கொள்வதில்லை. இவ்வாறாக, இந்து கூட்டுக் குடும்ப அமைப்புத் தொடர்கிறது. இதைத் தவிர, ஒரு முஸ்லீம் குடும்பத்துக்கும் ஓர் இந்து குடும்பத்துக்கு இடையே உள்ளார்ந்த வேறுபாடு எதுவும் இல்லை. பாகப் பிரிவினைக்கும் தனி மனித வாழ்க்கைப் போக்குக்கும் முஸ்லீம்கள் பழக்கப்படுத்திக் கொண்டிருக்கின்றனர். கூட்டுக் குடும்ப

நண்பகல் 12 மணி

வாழ்க்கைக்கு இந்து பழக்கப்பட்டிருக்கிறார். மகளின் பங்கினால் எழக் கூடிய உண்மையான கஷ்டத்தை மதிப்புக்குரிய எனது இந்து நண்பர் கள் சிலரே சிந்தித்துப் பார்க்க முடியும் போலும். உண்மையில் அது ஒருபோதும் மகளுக்கு லாபமல்ல. இந்த லாபத்துக்கு இணையான நஷ்டமும் உள்ளது. வழக்காலும் ஒரு பங்காலும் மகள் அந்த அளவு லாப மடைகிறாள் என்று வைத்துக் கொள்வோம். அவள் தனது சகோதர னிடமிருந்து பெறுவதை எடுத்துக் கொண்டு கணவனது வீட்டிற்குப் போகிறாள்; அவளுக்குச் சொந்த மகன்களும் மகள்களும் இருக் கிறார்கள். தனது சகோதரனிடமிருந்து அவள் பெறுவதையெல்லாம் அவளது மகன்களிடமிருந்து அவளது மகள் எடுத்துக் கொள்வாள். பெண்களைத் தனித்தனியாகவும் வெவ்வேறாகவும் பரிசீலிப்பதற்குப் பதிலாக, குடும்ப வாழ்க்கையின் ஒரு பகுதியாக அவளைக் கருதினால், நஷ்டத்தைவிட லாபமே அதிகமாக இருக்கும். குடும்ப சொத்தில் மகளுக்குப் பங்கு தருவது முடிவுற்ற சிக்கல்களையும் தாவாக்களை யும் தப்பெண்ணங்களையும் பிறவற்றையும் ஏற்படுத்தும். எந்த வசதியான முஸ்லீம் குடும்பமும் மூன்று தலைமுறைகளுக்கு நீடித்ததில்லை என்பது எனது மனம் கசந்த அனுபவம். இதுவும் மற்ற விஷயங்களும் அவர்களை ஒட்டாண்டிகளாக ஆக்குகின்றன. இந்த அமைப்பு முறை நல்லதா, கெட்டதா என்பதல்ல இங்கு பிரச்சினை. முஸ்லீம்கள் அதைத் தங்கள் மதத்தின் ஒரு பகுதியாக ஏற்றுக் கொண்டுள்ளனர்; அது கெட்டது என்று பெரும்பான்மையினர் நினைக்காதவரை, அதை அவர்கள் ஏற்றுக் கொள்வார்கள். இந்துக்களைப் பொறுத்தவரை அவர்கள் தங்களின் அமைப்பு முறையை ஏற்றுக் கொண்டுள்ளனர். அவர்கள் தாங்கள் கடைப்பிடித்து வந்த, பிரதானமாக ஆக்கப்பட்ட அமைப்பை வெளி நாட்டு படையெடுப்புகளால் ஏற்பட்ட அழிவை எல்லாம் சமாளித்து நீடித்த அமைப்பை அவர்கள் ஏற்றுக் கொண்டுள்ளனர். அது கெட்டது என்று பெரும்பான்மையினர் கருதினாலொழிய அதில் அவர்கள் தலையிடமாட்டார்கள். நான் கூறும் விஷயம் என்னவெனில், இந்து சகோ தரியையும் முஸ்லீம் சகோதரியையும் ஒப்பிட்டுப் பார்ப்பது மிகவும் ஆபத் தானது, அவர்களது நிலைகள் ஒத்திசைவானவை அல்ல. உண்மையில் வேறுபடுத்தும் அம்சங்களை அவை கொண்டுள்ளன. அவை வேறு பட்ட வரலாறுகள், பரிசீலனைகள், சூழ்நிலைமைகள் ஆகியவற்றி லிருந்து எழுகின்றன. எனவே, இந்து சகோதரிக்கும் முஸ்லீம் சகோதரிக் கும் இடையே எளிமையான ஒத்ததன்மை எதுவும் இல்லை. சொத்தில் ஒரு மகளுக்கு பங்கு அளிப்பதன் விளைவை விருப்பு வெறுப்பின்றி சிந்தித்துப் பார்க்க வேண்டும். அதன் எல்லா அம்சங்களையும் பரிசீலிக்க வேண்டும். அதில் மகளுக்கு எந்த நிகரலாபமும் இல்லை. மாறாக சொத்து துண்டு துண்டாக்கப்படுவதற்கு அது இட்டுச் செல்கிறது.

ஏப்ரல் 9-ல் பொறுக்குக் குழுவிற்கு மசோதா அனுப்பப்பட்டபோது, இந்த விஷயம் பற்றி விரிவாக குறிப்பிட்டேன். சொத்தில் மகளுக்கு பங்கு அளிப்பது ஓயாது வழக்குகள் நடைபெறுவதற்கும் சொத்து துண்டு துண்டாக்கப்படுவதற்கும் இட்டுச் செல்லும் என்று நான் கூறியதைக் கேட்டு திருமதி ஹன்சா மேத்தா ஆச்சரியத்தை வெளிப் படுத்தினார். நாங்கள் அனுபவிக்கும் தொல்லைகளை அதிர்ஷ்ட வசமாக இந்து சமுதாயம் அனுபவிக்காதது இதற்குக் காரணமாக இருக்கலாம். இக்காரணத்தால் தப்பபிப்ராயம் ஏற்படும் சாத்தியப் பாட்டிற்கு இடமிருந்தது. அதனால்தான் இந்த விஷயம் பற்றி நான் குறிப்பிட்டேன். இந்துக் கருத்துக்கள் இந்துக் குடும்பங்கள் என்ற பகைப்புலனில் மகளின் நிலைபற்றி பரிசீலிக்கப்பட வேண்டு மென்று கூறுகிறேன் ஐயா. எல்லோரும் அவளிடம் அன்பு கொண்டிருக் கிறார்கள். அவள் நன்கு திருமணம் செய்து வைக்கப்படுகிறாள்; திருமணத்தின் போது பல வெகுமதிகள் அளிக்கப்படுகின்றன; வரதட்சணையும் உள்ளது; இதற்கு மேலும் சில சமயங்களில் ஏராளமான சொத்துக்களும் அளிக்கப்படுகின்றன. அவளது தகப்பனார் இல்லத்தில் வரவேற்கப்படும் ஒரு விருந்தினராக அவள் திகழ்கிறாள். ஆனால் அவளுக்கு நீங்கள் ஒரு பாகத்தை அளித்தால், சகோதரர்களுக்கும் சகோதரிகளுக்கும் இடையேயான உறவு பாசமிக்க உறவாக இருக்காது; மாறாக அது ஒரு வியாபாரமாக, பரஸ்பரம் விரோதம் கொண்டு ஒருவருக்கொருவர் மோதிக் கொள்ளும் அவலமாக அது மாறும். உண்மையில், இந்து சமுதாயத்தில் மகள்களுக்கு சொத்தில் பங்கு தரும் முறையை அனுமதித்தால் பாசம் மறைந்துவிடும். ஐயா, இவை விருப்பு, வெறுப்பின்றிப் பரிசீலிக்கப்பட வேண்டிய விஷயம் என்று நம்புகிறேன்.

திரு. மகாவீர் தியாகி : தங்கள் அனுபவம் என்ன?

திரு. அவைத் தலைவர் : ஒழுங்கு, ஒழுங்கு.

திரு. நசிருத்தீன் அகமது : எனது அனுபவம், நாங்கள் ஏழ்மை யாக்கப்பட்டோம். ஏழ்மையாக்கப்பட்டது ஒரு நல்ல விஷயம் என்று இந்து சமுதாயம் நினைத்தால், இந்த அமைப்பு முறையை அவர்கள் தாராளமாக ஏற்றுக் கொள்ளலாம். முற்றிலும் சமத்துவம் கொண்ட வர்க்க பேதமற்ற சமுதாயத்தை ஏற்படுத்தப் போவதாக கூறப்படுவதை நாம் கேட்கிறோம். வறுமை மற்றும் ஏழ்மையின் சமத்துவமாகவே அது இருக்கும். ஆனால் எங்கள் அமைப்பு முறை பற்றி நான் புகார் கூறவில்லை. எப்படியாயினும், அதைப் பற்றி விவாதிக்கும் இடமல்ல இது. சகோதரனுக்கும் சகோதரிக்குமிடையேயான சமத்துவம் என்ற

கண்ணோட்டத்தில் மட்டுமே பார்க்காமல், விஷயம் முழுவதும் இந்து சமுதாயத்தால் ஆழமாக பரிசீலிக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்து கிறேன். ஒரு கோஷத்தைவிட இது அதிகமானது. இந்த அவையில் ஈடுபாட்டுடன் செயல்படும் சட்டப் பேரவை உறுப்பினர்களாகிய நாம் கோஷங்களை கண்டு ஏமாறக் கூடாது. பிரச்சினைகளில் சிலவற்றை ஓரளவு சூசகமாக எடுத்துக்காட்ட மட்டுமே செய்துள்ளேன். இன்னும் எத்தனையோ மற்ற விஷயங்களும் இருக்கின்றன. எல்லா அம்சங் களையும் இங்கு எடுத்துக் கூறுவது என்பது எனக்குச் சாத்தியமல்ல. சில முக்கியமற்ற அம்சங்களை நான் மிகைப்படுத்திக் கூறியிருக்கலாம். மற்றவற்றை விட்டுவிட்டுமிருக்கலாம். ஆனால் இவையெல்லாம் என் மனத்தில் ஊற்றெடுத்துள்ள சில கருத்துக்கள் மட்டுமே; மகள்கள் விஷயத்தைப் பொறுத்தவரை இக்கருத்துக்கள் மக்களைச் சிந்திக்க வைக்கும்; அவர்கள் விஷயத்தில் அவசரப்படாமலிருக்கச் செய்யலாம்.

இப்பொழுது, சமத்துவம் என்ற விஷயத்திற்கு வருகிறேன். சில அம்சங்களில், சில சமயங்களில் பெண்கள் ஆண்களைவிட உயர்வான நிலையில் இருக்கவில்லையா? பல துறைகளில் அவள் உயர் நிலையில் இருக்கிறாள் என்று நம்புகிறேன். வீட்டில் அவள்தான் எஜமானி; அவனது சொத்து அவனது விருப்பங்கள் அவனது சித்தங் கள் ஆகியவற்றின் எஜமானி அவள்; எல்லா விஷயங்களும் அவள் கட்டுப்பாட்டில் உள்ளன. எனவே சொத்தில் பங்கு அளிக்கப்பட வில்லை என்பதாலேயே, தாங்கள் புறக்கணிக்கப்படுவதாக பெண்கள் கருதக்கூடாது என்று கேட்டுக் கொள்கிறேன். உண்மையில், அவளது நிலை அசைக்க முடியாதது. குடும்பத்தில் மதிக்கப்படாத, நேசிக்கப் படாத எந்தப் பெண் இருக்கிறாள்? தனிப்பட்ட முறையில் அவளுக்கு எதுவும் தேவைப்படுகிறதா? தனது கணவன் நலன் அல்லாமல் அவளது குழந்தைகள், அவளது சகோதரர்களின் குழந்தைகள் நலன் அல்லாமல் வேறு எதுவும் அவளுக்குத் தேவைப்படுகிறதா? இதுதான் இந்து அமைப்பு முறை. அது நல்லதா, கெட்டதா என்பது நான் விவாதிக்க வேண்டிய விஷயமல்ல.

மதிப்பிற்குரிய ஓர் உறுப்பினர் : நீங்கள் கூறுவது மிகவும் சரி.

திரு. நசிருத்தீன் அகமது: இந்து சமுதாயம் சொல்ல வேண்டியது அது. நான்கு ஆயிரம் ஆண்டுகள் நிலைத்து நின்ற அமைப்பு முறை ......

திரு. பாபு ராம் நாராயண்சிங் : அதைவிட அதிகம்.

திரு. நசிருத்தீன் முகமது: அது உண்மையில் இந்து சமுதாயம் அழுகிப் போய்விட்டதா, சரிந்து கொண்டிருக்கிறதா என்பதை அவர்கள்

தான் கூறவேண்டும். டாக்டர் அம்பேத்கர் கூறியது போல், பழுதுபார்க்க வேண்டியது அதற்குத் தேவைப்படுகிறதா, உடைத்து மாற்றி அமைக்கப் படுவது தேவையா என்ற பிரச்சினை உண்மையில் நிவாரணமும் மறுசீரமைப்பும் இந்து சமூகத்திற்கு அவசியமா என்பதற்கு ஒப்பானது. அந்த மாதிரி எதுவும் இல்லை என உணர்கிறேன். இங்கு பிரச்சினை அறிவாற்றல் சார்ந்த எழுச்சி மட்டுமேயாகும். சட்டக் கோட்பாட்டின் ஒரு பொழிப்புறை மட்டுமே அது. இந்தக் கருத்து வேறுபாடுகளுக்கும். விவாதங்களுக்கும், விரோதத்திற்கும், பிரிவினைக்கும் சமத்துவம் எனும் சித்தாந்தமே பிணி தீர்க்கும் மருந்து. இது ஒன்றும் சிக்கலான தல்ல, எளிமையானதே. உங்கள் குடும்ப அமைப்பு முறை பற்றி நீங்கள் திருப்தியடைகிறீர்களா? ஆண்டாண்டுக் காலமாக அழிவுகளி லிருந்தும் இந்த அமைப்பு முறை உங்களைக் காப்பாற்றவில்லையா?

டாக்டர் மோனோ மோகன் தாஸ் (மேற்கு வங்காளம் : பொது): நாட்டில் முஸ்லீம்களின் எண்ணிக்கையை மேலும் அது அதிகரித் துள்ளது.

திரு. அவைத் தலைவர் : ஒழுங்கு, ஒழுங்கு.

நம்முன் உள்ள பொருள் சமுதாயத்தின் கட்டமைப்பு பற்றிய தல்ல. இந்துச் சட்டத்தொகுப்பின் சில ஷரத்துகள் பற்றியே நாம் விவாதித்துக் கொண்டிருக்கிறோம். எனவே மிக அதிக விவரங்கள் பற்றி அல்லது ஏனைய விஷயங்கள் பற்றி நாம் விவாதித்துக் கொண் டிருக்க வேண்டாம். இல்லையெனில், உரையை நிறுத்தும்படி மதிப் பிற்குரிய உறுப்பினரை நான் கேட்க வேண்டியிருக்கும்.

திரு. நசிருத்தீன் அகமது: பாகத்தை மகளுக்கு நீங்கள் அனுமதித்தால், பெரும் அளவிலான சூழ்ச்சிகள் நிகழும்; உயில்கள் சம்பந்தமாக ஏராளமான வழக்குகள் வரும். தகப்பனார் இறக்கும் போது, பல உயில்கள் இருக்கும். ஏராளமான நீதிமன்ற வழக்குகளுக்கு இது இட்டுச் செல்லும். தங்கள் ஆதிக்கத்தில் சொத்துக்களை வைத்துக் கொள்ள மகன்கள் முயற்சிப்பர். மரணமடையும் தறுவாயிலுள்ள தகப்பனார் நிர்ப்பந்தத்துக்கு உள்ளாகி உயில் எழுத வைக்கப்பட் டிருக்கலாம். அல்லது உயில்கள் தயாரிக்கப்படலாம். இம்மாதிரி விஷயங்கள் நிகழ்கின்றன. உண்மையில் பரிசீலிக்க வேண்டிய முக்கிய மான விஷயங்கள் இவை.

ஐயா, அடுத்து வாரிசுரிமைப் பிரச்சினை இருக்கிறது. உண்மை யில், இந்த விஷயம் மிகவும் கவனமாகப் பரிசீலிக்கப்பட வேண்டிய ஒன்றாகும்.

அடுத்து, மசோதாவின் மற்றொரு பாகத்தை அதாவது திருமணம் விஷயத்தை எடுத்துக் கொள்வோம். முக்கியமாக ஒரு தார மணத்தை, (ஒரு வாழ்க்கைத் துணைவர் கோட்பாடு) பொறுத்தவரை, அது தத்துவரீதியாகவும் நடைமுறையிலும் நல்லது என்று பணிவுடன் கூறுகிறேன். ஏராளமானவர்கள் இரு மனைவிமார்களை பெற்றிருக்க மாட்டார்கள் என்றும் நம்புகிறேன். இதனால் ஒன்று அதிகம் செலவாகிறது; மேலும் சிக்கல்களும் அதிகரிக்கின்றன. உண்மையில் இரு மனைவியரைக் கொண்டிருப்பது பொது வழக்கமாக இருப்பதை நான் காணவில்லை. அது மிகவும் அபூர்வம். மிக விதிவிலக்கானதாக மட்டுமே அது உள்ளது. அரசியல் அல்லது பொருளாதார நெருக்கடி நிலைமைகள் காரணமாக எவரும் இரு மனைவியரை மணந்து கொள்வதைச் சாத்தியமற்றதாக்குகின்றன. ஆனால் சட்டமியற்றல் மூலமோ அல்லது பொதுஜனக் கருத்து மூலமோ நாம் ஒருதார மணக் கோட்பாட்டை நடைமுறைக்குக் கொண்டுவர முயற்சி செய்ய வேண்டும் என்பதுதான் இங்கு பிரச்சினை. இரு மனைவியரைத் திருமணம் செய்து கொள்ளும் போக்கு சில மனிதர்களிடம் இருக்கலாம். பாலின நப்பாசையைவிட தனக்குப் புத்திரப் பேறு வேண்டும் என்ற ஆசை இதற்கு காரணமாக இருக்கக் கூடும். இந்துக்கள் கருத்துப் படி, **புத்** என்ற **நரகத்திலிருந்து** தகப்பனாரைக் காப்பாற்ற ஒரு மகன் தேவைப்படுகிறான். இந்தப் **புத்திலிருந்து** உங்களைக் காப்பாற்றுபவனே புத்திரன் என்று அழைக்கப்படுகிறான். இல்லாவிடில் **புத்** என்ற நரகத்திற்கு மனிதன் போகிறான். இந்துக்களின் தத்துவப்படி, மகனைப் பெற்றிருப்பது மதரீதியான தேவை; ஒரு மகனைப் பெற்றுத் தர முடியாதபடி மனைவி மலடாக இருந்தால், மற்றொருவளை மணந்து கொள்ள அவன் முயலுகிறான். என்னுடைய அனுபவத்தில் இவ்வாறு நிகழ்ந்துள்ளது. மற்ற பலரின் அனுபவத்திலும் நிகழ்ந்திருக்கலாம். அதாவது, மனைவி மலடாக இருப்பதால், கணவனது இரண்டாவது திருமணம் நடைபெறுகிறது. குழந்தை இல்லாத மூத்த மனைவி இரண்டாவது மனைவியைத் திருமணம் செய்து கொள்ளும்படி கணவரை உண்மையில் தூண்டி அல்லது நிர்ப்பந்தித்த மகிழ்ச்சிகரமான குடும்பங்களையும் நான் பார்த்திருக்கிறேன்; மூத்த மனைவி குடும்பத்துடன் தான் மகிழ்ச்சியாக இருப்பதாகக் கருதுகிறாள். ஒரு மகனைப் பெற்றிருப்பது விரும்பத்தக்கது என்ற இம்மாதிரியான நம்பிக்கை வங்காளத்தில் இந்திய முஸ்லீம்களிடையே பரவலாக இருக்கிறது.

திரு. தாஜாமுல் உசேன் : என் சார்பிலும் மதிப்பிற்குரிய மற்ற உறுப்பினர்கள் சார்பிலும் ஒரு கேள்வியை முன்வைக்க விரும்புகிறேன். ஓர் இந்துத் தந்தை ஒரு மகனை தனது சொந்த விமோசனத்

திற்காக அடைந்திருக்க வேண்டும் என்பதை நான் புரிந்து கொள்கிறேன். அதே போல் ஓர் இந்துத் தாய்க்கும் தனது விமோசனத்திற்காக ஒரு மகன் தேவைப்படுகிறானா? அப்படி அவளுக்கு தேவையெனில் ஒன்றுக்கு மேற்பட்ட கணவனை மணக்கும் உரிமை அவசியம் அவளுக்கு இருக்க வேண்டுமல்லவா?

திரு. அவைத் தலைவர் : அவைக்கு வெளியே நாம் ஏராளமான தகவலைப் பெறலாம். அவையில் இந்துச் சட்டத் தொகுப்பை தொடர்ந்து விவாதிப்போம்.

திரு. நசிருத்தீன் அகமது : எனவே, தர்க்கரீதியிலும் சட்டரீதியிலும் பார்த்தால் பலதார மணம் என்பது பலர் நினைப்பது போல், அவ்வளவு ஆபத்தானதல்ல என்று தெரிவித்துக் கொள்கிறேன். ஒரு குறிப்பிட்ட சூழலில் அதைப் பரிசீலிக்க வேண்டும். குழந்தை வேண்டுமென ஓர் இந்துக் கணவன் மீண்டும் திருமணம் செய்ய விரும்பினால், முதலாவது மனைவி இருக்கும் வரை அவனால் அதைச் செய்ய முடியாதெனில், அது விவாகரத்து நடவடிக்கைகளுக்கு இட்டுச் செல்லும். ஒரு தார மண ஷரத்து முதலாவது மனைவியின் வாழ்நாளில், அல்லது முதல் மனைவியோடான திருமணம் அமுலில் இருக்கும் போது இரண்டாவது திருமணத்திற்கு தடைவிதிக்கப்பட்டால், அது விவாகரத்துக்களுக்கு இட்டுச் செல்லும். அதை விளையாட்டாக நாம் கருதக்கூடாது. நமது வரலாற்றுக் காலத்தில் உண்மையில் இது மேற்கு ஐரோப்பிய நாடுகளிலும் நிகழ்ந்தது. நெப்போலியன் போனபார்ட் காதலித்து மணந்து கொண்டார். அவருக்கு குழந்தைகள் இல்லை. அபூர்வமான தமது சொந்தத் திறமையால் கட்டி வளர்த்த பரந்த சாம்ராஜ்யத்தின் சிம்மாசனத்திற்கு ஒரு வாரிசை அவர் விரும்பினார். அவர் என்ன செய்தார்? தமது முதல் மனைவி மீது அவருக்கிருந்த காதல் ஆழமானதாக இருந்தது என்பது உண்மையே. எனினும் குடும்ப சந்ததியைப் பாதுகாக்க ஒரு மகன் வேண்டுமென்ற அவர் விருப்பம் அந்தக் காதலையும் மீறிச் சென்றது. ஒரு ராஜகுமாரியை அவர் திருமணம் செய்து கொண்டார். ஆஸ்திரிய ராஜகுமாரியுடனான ராஜ குடும்ப உறவு அவரது அதிகாரத்தைக் காலகாலத்திற்கும் நிலைப்படுத்தும் என்றும், இரு மனைவிகளுடனும் தாம் சந்தோஷமாக இருக்கலாம் என்றும் அவர் எண்ணினார். இது வரலாற்று ரீதியான ஓர் எடுத்துக்காட்டு.

மாண்புமிகு டாக்டர் பி.ஆர். அம்பேத்கர்: நெப்போலியனுக்கு என்ன நிகழ்கிறது?

திரு. நசிருத்தீன் அகமது : செயின்ட் ஹெலினாவில் மரண மடைந்தார் - மகிழ்ச்சியற்ற மனிதராக.

மாண்புமிகு டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் : ஒரு சாம்ராஜ் யத்தை நிறுவ வேண்டுமென்ற பேரவா அவருக்கு இல்லாதிருந்தால் அவர் வேறுவிதமாக வாழ்ந்திருப்பார்.

திரு. நசிருத்தீன் அகமது : ஐயா, வரலாற்றிலிருந்து இது ஒரு எடுத்துக்காட்டு. ஒரு மகனை அடையும் நோக்கத்திற்காக திருமணம் செய்வதிலிருந்து ஓர் இந்து தடுக்கப்பட்டால், மகன் அவசியம் என்று அவர் நினைத்தால், தனது மனைவி தனக்கு ஒரு மகனை அளிக்க மாட்டாள் என்று அவர் நம்பினால் அவர் தாழ்ந்த நிலையில் உள்ள ஒரு பெண்ணைக்கூட மணக்கலாம். அவளுக்கு பிறக்கும் குழந்தைகள் சட்டப்படியானவர்களாக கருதப்பட்டாலும் அவர்களுக்கு தகப்ப னாரின் சொத்தில் உரிமை கிடையாது; அல்லது சட்ட நுணுக்கப்படி குற்றம் என்று கருதப்படுவதை - தன் சொந்த உணர்வின் படி நியாய மானதும் சரியானதும் என்று முழு மத நம்பிக்கையில் - அவர் செய்ய லாம். இத்தகையவர்கள் மீது நடவடிக்கை எடுப்பது மத சிந்தனை யில் ஆழமாக ஊறிப்போனவர்களின் உணர்வில் தலையிடுவதாகும். எனவே இந்த விதிவிலக்கான விஷயங்களை சட்டமியற்றுவதன் மூலம் கையாளக்கூடாது; பொது மக்கள் கருத்தின் மூலம் செய்ய வேண்டும். பலதார மணம் இயல்பாகவே குறைந்து வருகிறது. அந்தப் போக்கைத் துரிதப்படுத்த செயற்கையான முறையில் நடவடிக்கை மேற்கொண்டால் அதனால் ஏமாற்றம்தான் மிஞ்சும். பலதார மணத்தை முற்றிலும் தடை செய்வது உகந்ததல்ல ஒரு மனிதனுக்கு இரண்டாவது மனைவி தேவையெனில், நமது எல்லையைத் தாண்டி அவன் பாகிஸ் தானுக்குச் செல்வதை எது தடுக்க முடியும்? (**திரு. மகாவீர் தியாகி :** இரண்டாவது கணவர் பற்றி என்ன?) இரண்டாவது கணவரும் சில இடங்களில் பரவலாக உள்ளது. திரு. தியாகி இதை நன்கு அறிவார். பலதார மணம் இந்தியாவில் தடை செய்யப்படும்; அதை அங்கீ கரிக்க நீங்கள் மறுப்பீர்கள்; ஆனால், மனிதனுக்கு மகன் அவசியம் வேண்டும்; திருமணம் செய்து கொண்ட மனைவியை - பாகிஸ்தானில் திருமணம் செய்து கொண்ட இரண்டாவது மனைவியை - கொண்டு வருவதை எது தடுக்கமுடியும்? மேலும், முதல் மனைவியும் இதற்கு ஒத்துக் கொள்ளலாம். இந்துக்களில் ஆழமாக வேரூன்றியுள்ள உணர்வுகளுக்கும் நம்பிக்கைகளுக்கும் எதிரான ஒரு சட்டத்தை அப்பொழுது இயற்றுவீர்களா? இவ்வாறு பரிசீலிக்கப்பட வேண்டிய முக்கிய விஷயங்கள் உள்ளன. இந்துக்களின் கோட்பாடுகளுக்கும் அடிப்படைக் கருத்துக்களுக்கும் எதிராக கடினமான இத்தகைய பொருத்த

மானதல்ல. இம்மாதிரியான தீவிர சட்டமியற்றுவதற்கு இறங்கும் முன் பிரச்சினையை மிக ஜாக்கிரதையாக பரிசீலிக்க வேண்டும். இரண்டாவது திருமணம் செய்து கொள்வோருக்கு எதிரான வழக்கில் அபாரத்திற்கும் தண்டனைக்கும் வழிவகை செய்யப்பட்டுள்ளது. பொது மக்களின் ஆதரவைப் பெற முடியாத ஒரு சட்டத்தை நாம் இயற்றக்கூடாது; இது தவிர்க்க முடியாத சட்டமீறல்களுக்கும் ஏய்ப்பு களுக்கும் இட்டு செல்லும். சாரதா சட்டத்திற்கு ஏற்பட்ட கதியை நாம் அறிவோம். சாரதா சட்டத்தின் முதல் விளைவு என்ன? அந்தச் சட்டம் அமுலுக்கு வரும் முன்பு பல லட்சக்கணக்கான குழந்தைத் திருமணங்கள் நடத்தப்பட்டன. எந்தத் தீங்கைத் தடுப்பது அந்தச் சட்டத்தின் நோக்கமோ, அதே தீங்கைத்தான் அது கொண்டுவந்தது; இன்று கதை என்ன? திருமணம் செய்துவைக்கத்தக்க மகள்-சாரதா சட்டம் நிர்ணயிக்கும் வயது அளவுக்கு இல்லாவிடினும் - இருக்கிறாள் என்று வைத்துக் கொள்வோம். ஒரு பொருத்தமான மணமகன் கிடைப் பதாக வைத்துக் கொள்வோம். உரிய வயதுவராத ஒரு மைனர் மகளுக்கு அந்தத் தகப்பனோ அல்லது காப்பாளனோ திருமணம் நடத்தி வைத்தால், தார்மீகரீதியில் அந்த தகப்பன் மீது குற்றம் கூறமுடியுமா? ஒரு மனிதனின் தத்துவ ரீதியான அல்லது அரசியல் ரீதியான உணர்வை அது புண்படுத்துகிறது என்பதனாலேயே அந்தச் செயலை நியாயப் படுத்த முடியாதா? தற்கால நடைமுறைகளைத் திடீரென சட்டத்தால் சாத்தியமற்ற தாக்கக் கூடாது. மக்களின் நம்பிக்கை, மற்றும் விருப்பங் களுக்கு உகந்தவையாக உள்ளன பழைய நடைமுறைகள். இதனா லேயே சாரதாச் சட்டம் பெருமளவு தோல்வியுற்றது. இது பற்றி வெகுஜன கருத்து அவ்வளவு பலமாக இருப்பதால் இன்று சாரதாச் சட்டத்தை மீறியதாக் கூறப்படும் குற்றங்களுக்கு எதிரான வழக்கு அநேகமாக எதுவும் இல்லை. உண்மையில், திருத்தம் மூலம் சட்டம் திணிக்கப்பட்டது. புகார் செய்யும் ஒருவரின் வழியில் சில கஷ்டங்கள் உள்ளன. முதலாவது கஷ்டம், செலவு தொகையை (முதலில்) கட்ட வேண்டும்; வழக்கில் அவர் தோற்றால் அந்தத் தொகையை அவர் இழந்து விடுகிறார்; இதே போன்று இதர பல சிரமங்களையும் அவர் சந்திக்க வேண்டியுள்ளது. சாரதா சட்டம் இயற்றிய பிறகு என்ன நிகழ்ந்தது? குழந்தைத் திருமணங்கள் இன்னமும் பரவலாக உள்ளன. குழந்தை திருமணங்களை எவரும் ஆதரிப்பதில்லை. ஆனால் குற்ற வியல் வழக்குகள் மூலமோ, பலத்தைக் கொண்டோ, வெகுஜன உணர்வின் பின்பலம் இல்லாமல் அதை நிறுத்திவிட முடியது. படித்த மேல்தட்டு வர்க்கங்களிடையே, குழந்தைத் திருமணம் நடைமுறையில் சாத்தியப்படாது. ஆனால் ஏழை மக்களைப் பாருங்கள். ஏழை வர்க் கங்களைச் சேர்ந்த திருமணமாகாத பெண்கள் - திருமண வயதை

அடையாதவர்கள் - கணவன்மார்களின் கவனிப்பும் பாதுகாப்பும் இல்லாமல் விடப்பட்டால், அவர்களது நிலை பாதுகாப்பானதாக இருக்காது. கணவன்மார்களின் பாதுகாப்பு இல்லாமல் அந்தப் பெண்கள் விடப்பட்டால் அவமானங்களும் கஷ்டங்களும்தான் அவர்களுக்கு ஏற்படும். விளைவு என்னவாக இருக்குமென்றால், சட்டப்படியான கல்யாண வயது வரும் வரை காத்திருக்க அவள் நிர்ப்பந்திக்கப்பட்டால், ஒரு கணவன் சுலபமாகக் கிடைக்க மாட்டான்; அவளைச் சுலபமாக கல்யாணம் செய்து வைக்க முடியாது. எல்லா விதமான பழிக்கும் ஆளாவாள். ஐயா, சாரதாச் சட்டத்திற்கு ஏற்பட்ட கதியை நினைவில் கொண்டு எல்லா சூழ்நிலைகளிலும் கடுமையான முறையில் விதிவிலக்குகள் இல்லாமல் சட்டம் கொண்டு வரும் கருத்தை நாம் பரிசீலிக்க வேண்டும். ஐயா, இது ஆழமான, நடைமுறை ரீதியான பரிசீலனை தேவைப்படும் விஷயமாகும். தத்துவங்களும் கோஷங்களும் கொண்ட விஷயமல்ல இது. இப்பொழுது விவாகரத்து விஷயத்து வருகிறேன். எல்லாக் குடும்பத் துயரங்களுக்கும் விவாகரத்து சஞ்சீவி மருந்து அல்ல. தனது மனைவி யுடன் அபிப்பிராயபேதம் கொள்ளாத மனவருத்தம் கொள்ளாத ஒரு மனிதன் இருக்க முடியாது. இவ்வகையில் பார்க்கும்போது சிரமத் திற்குள்ளாகாத ஒரு குடும்பம் அநேகமாக இருக்காது. கணவனுக் கும் மனைவிக்கும் இடையே வாழ்க்கை எல்லாம் இன்பமயமாக இருந்தால் அது சகிக்க முடியாததாகிவிடும். அத்தகைய மகிழ்ச்சி மகிழ்ச்சியே அல்ல. மகிழ்ச்சி என்பது மன வருத்தங்களோடு, சச்சரவு களோடு இணைந்து இல்லாவிடில் அது மகிழ்ச்சியாக இருக்காது. உண்மையில், இந்த மன வருத்தங்களைத் தொடர்ந்துதான் அவர்கள் மீண்டும் இணைவது வருகிறது. மன வருத்தங்கள் சில சமயங்களில் அவசியமாகின்றன. அனுபவம் வாய்ந்த எல்லா மனிதர்களுக்கும் இதைக் கூறுகிறேன். ஒரு பைத்தியம்தான் அவன் வாழ்நாள் முழு வதிலும் மகிழ்ச்சியாக இருப்பான். ஒருவன் புத்திசாலியாக இருந்து, ஆளுமையும் கொண்டிருந்தால் அங்கு கருத்து வேறுபாடுகள் இருக்கும். ஆனால் காலப்போக்கில் மனைவிதான் வெற்றி பெறுவாள். எனவே தம்பதியர் ஒன்றாக வாழ வழிவகை செய்தால் வசந்தகால மேகங்கள் போல் மன வருத்தங்கள் சிதறிப்போகும். எனவே அவசரப்பட்டு விவாக ரத்துக்கு வழிவகை செய்யக் கூடாது எனக் கேட்டுக் கொள்கிறேன்.

இப்பொழுது, முஸ்லீம் பழக்க வழக்கங்களுடன் இவற்றை எல்லாம் ஒப்பிட்டுப் பார்ப்போம். "ஒரு முஸ்லீம் தனது மனைவியை விவாக ரத்து செய்யலாம். அப்படியிருக்கும் போது ஏன் ஓர் இந்து அதே உரிமையை பெற்றிருக்கக் கூடாது? ஒரு கிருஸ்தவர் தனது மனைவியை விவாக ரத்து செய்யலாம்; இந்து ஏன் அவ்வாறு

செய்யக் கூடாது?'' மூன்று அமைப்பு முறைகளும் முற்றிலும் வேறு பாடானவை; இந்த விஷயங்களில் அவை அடிப்படையில் வேறுபடு கின்றன. நடைமுறைக் காரணங்களால், ஒரு முஸ்லீம் விவாக ரத்து செய்ய முடியது. விவாகரத்துச் செய்ய தங்கு தடையற்ற உரிமை அவனுக்கு இருக்கிறது. ஆனால் வழக்கமாக மணக்கொடை பணத்திற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். பொதுவாக அவனது வசதிக்கு அப்பால் இருக்கும் அது. ஏனெனில் அதன் மதிப்பு ரூ.10,000 என்றிருந்தாலும், அவன் கொடுக்க வேண்டிய மணக்கொடை ரூ. 50,000 அல்லது 1 லட்சமாக இருக்கும். முஸ்லீம் சட்டத்தில் இதற்குத் தெளிவாக வழிவகை செய்யப்பட்டுள்ளது. விவாகரத்திற்கு கணவனுக்குள்ள கட்டுப்பாடற்ற உரிமைக்கு இது ஒரு தடங்கல். ஒரு முஸ்லீம் கணவன் தனது மனைவி மீது அதிருப்தியடைந்துள்ள போதிலும் அவளை விவாகரத்து செய்வதற்கு நடைமுறை தடங்கல் இருக்கிறது. ஒரு விவாகரத்துக்கு முயற்சி செய்யம் பல துணிச்சலான முஸ்லீம் கணவர்களுக்கு அதைப் போதுமான அளவு தடைசெய்யக் கூடிய ஒரு நிபந்தனையாக அது உண்மையில் கருதப்படுகிறது. ஓர் இந்துக் கணவன் தன் மனைவி மீது அதிருப்தி கொண்டிருந்தால், அந்த அதிருப்தி மறைந்து போவதற்கு சிறிது காலத்தை நாம் அனுமதிக்க வேண்டும். நீங்கள் கதவை விரிவாகத் திறந்து வைத்து விவாகரத்தைச் சுலபமாக்கினால், வாதி பிரதிவாதிகள் நீதிமன்றங்களுக்கு விரைந்து செல்வர்; இதனால் இந்த அவையின் ஒரு பகுதியினரின் வெறுப்புள்ளாகியிருக்கும் வழக்கறிஞர்களே பயனடைவர். நீதிமன்றத்தில் விவாகரத்து நடவடிக்கைகள் பற்றி அனுபவம் உள்ளவர்கள் எத்தகைய இழிவான விஷயங்கள் அங்கு எடுத்துக் கூறப்படுகின்றன என்பதை அறிவர். ஒரு கண்ணியமான மனிதன் கேட்கக் கூடாதவையாக அவை இருக்கின்றன. கூடா ஒழுக்கத்தை- கணவன் மனைவிக்கோ அல்லது மனைவி கணவனுக்குத் துரோகம் செய்வது - முற்றிலும் சரியாக நிரூபிக்க வேண்டும். இல்லையெனில் விவாகரத்து அனுமதிக்கப்பட மாட்டாது. விவாகரத்தான குடும்பங்களின் துன்பம் அளிப்பரியது. குடும்ப மகிழ்ச்சியின்மைக்கு சஞ்சீவி மருந்து விவாகரத்தல்ல. இந்த மனைவி அல்லது கணவன் நீதிமன்றத்துக்கு விரைந்து செல்வதற்கு உரிமை வழங்கப்பட்டால், விளைவு என்னவாக இருக்குமெனில், காலத்தில் தீரவேண்டிய தப்பெண்ணங்கள் வாழ்நாள் முழுவதுக்குமான நீண்ட மகிழ்ச்சியின்மையை ஏற்படுத்தும். தற்போது நிலவும் பிரச்சினை களுக்குத் தீர்வு காண முயன்று புதுப்புதுப் பிரச்சினைகளுக்குத்தான் வித்திடுவீர்கள்.

(இந்தக் கட்டத்தில் திரு அவைத்தலைவர் தமது இருக்கையிலி ருந்து எழுந்தார்; அவை தலைமையை துணை அவைத் தலைவர் (திரு. எம். அனந்தசயனம் ஐயங்கார் ஏற்றார்.)

நீதிமன்றத்திற்குச் செல்வதற்கு வழிவகை செய்தால், என்ன நடக்கும் தெரியுமா? பெண்ணைவிட ஆணுக்குத்தான் அது அனுகூலமாக அமையும்; விவாகரத்து நடவடிக்கையால் பாதிக்கப்பட்ட பெண் நிவாரணம் பெறுவாள் என்று வாதிப்பது சுத்த முட்டாள்தனம். அவளே பலிகடாவாக அநேகமாக ஆகலாம். மசோதாவில் குறிப்பிடப்பட்டுள்ள படி பல்வேறு தவறுகளை மனைவி செய்ததாகக் குற்றம் சாட்டி கணவன் அடிக்கடி நீதிமன்றத்திற்கு செல்வான்; ஒரு பக்கச் சார்பான விவாகரத்தை அவனால் பெற முடியும். நமது சமுதாயத்தை அறிந்தவர்கள், தன் மீது சுமத்தப்பட்ட குற்றச் சாட்டுகள் உண்மையல்ல என்று நிரூபிக்க ஒரு பெண்ணுக்கு எத்தகைய சாத்தியக்கூறு இருக்கிறது என்பதைக் கற்பனை செய்து கொள்ளலாம். கணவனால் ஒதுக்கப்படும் ஒரு பெண்ணின் வழக்கை யார் வாதிடுவர்? அடிக்கடி நீதிமன்றத்திற்கு விரையக்கூடியவன் கணவன்தான். மேலும் மனைவி மலடியாக இருந்து, மற்றொரு திருமணத்தின் மூலம் ஒரு மகனை அடையும் விருப்பமும் இருந்தால் அவன் நீதிமன்றத்துக்கு விரையும் போக்குத் தீவிரமடையும். இப்பொழுது தன் மனைவிக்கு எதிராக ஒரு மனிதன் விவாகரத்துப் பெறுகிறான் என்று வைத்துக்கொள்வோம்; அந்தப் பெண்ணிற்கு என்ன நிகழும்? அவள் எங்கு செல்வாள்? விவாகரத்துச் செய்யப்பட்டபின், அவளுக்கு ஒரு கணவன் இருக்கமாட்டான்; தார்மீக ரீதியில் அல்லது உழைப்பு மூலம் வாழ வகையில்லாமல் இருப்பாள்? அந்தப் பெண்ணுக்கு யார் உதவ முன்வருவர்? இந்த மசோதாவின் மூலகர்த்தாக்களா? அவர்கள் முன்வருவார்கள் என நான் நினைக்கவில்லை. அவள் தன் சகோதரனிடம் செல்வாளா? இல்லை. இப்பொழுது தன்னை ஒதுக்கித்தள்ளிய தனது அதே கணவன் நலனுக்காகக் குடும்பச் சொத்தில் ஒரு பாகத்தை எடுத்துக் கொண்டதால், தனது சகோதரனை அவள் விரோதித்துக் கொண்டிருப்பாள் இல்லையா? விளைவு என்னவாக விருக்கும்? அவளது துயரங்கள் பற்றி அவளது தகப்பனாரின் உறவினர்கள் முற்றிலுமாக அக்கறை காட்ட மாட்டார்கள். பிறகு அவள் தன்னை எவ்வாறு பாதுகாத்துக் கொள்வாள்?

மாண்புமிகு டாக்டர் பி.ஆர். அம்பேத்கர்: நசிருத்தீன் அகமதை அவள் திருமணம் செய்து கொள்வாள்.

திரு. நசிருத்தீன் அகமது : ஐயா, நான் அவ்வாறு நினைக்கவில்லை. எந்த நய நட்பு உணர்வுடைய விவாகரத்துச் செய்யப்பட்ட எந்தப் புத்திசாலியானப் பெண்ணும் என்னைத் தேர்ந்தெடுப்பாள் என்று நான் நினைக்கவில்லை. மாண்புமிகு அமைச்சர் என்னைவிட நல்ல தேர்வாக இருப்பார் என்று நினைக்கிறேன்.

திரு. துணை அவைத்தலைவர் : அவ்வாறு எதுவும் நிகழாமல் கடவுள் காப்பாற்றட்டும். தனிப்பட்டவர் பற்றி நாம் குறிப்பிடாமல் இருப்பது நலம்.

திரு. நசிருத்தீன் அகமது : அவைத் தலைவர் அக்கறையுடன் கேட்க வேண்டும் என்று அது கூறப்படவில்லை.

திரு. துணை அவைத் தலைவர்: நான் இதனை விளையாட்டாக அல்லாமல் பொறுப்புணர்ச்சியோடு எடுத்துக் கொள்கிறேன். 'அந்தப் பெண் எங்கு செல்வது?' என்று மதிப்பிற்குரிய உறுப்பினர் வினவியதன் விளைவாகத்தான் மாண்புமிகு அமைச்சர் அப்படிக் கூறினார்.

மாண்புமிகு டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் : அவர் அவ்வளவு பரிவிரக்கத்தை வெளிப்படுத்தியதால் அவரது ஆத்ம திருப்திக்காக இவ்வாறு நான் ஆலோசனை கூறினேன்.

திரு. நசிருத்தீன் அகமது : அதை நான் தவறாக எடுத்துக் கொள்ளவில்லை. தமாஷை முற்றிலுமாக ரசித்தேன். தமாஷ் ஒருபுறம் இருக்கட்டும். நான் மீண்டும் மிகவும் வினயத்தோடு அதே கேள்வியைக் கேட்கிறேன்: அவள் எங்கு செல்வது? விவாகரத்துச் செய்யப்பட்ட ஓர் ஐரோப்பியப் பெண் விஷயத்தை எடுத்துக் கொள்ளுங்கள். அவளுக்கு வசதிகள் உள்ளன. அவள் கல்வி அறிவு பெற்றிருக்கிறாள். அவள் ஏதேனும் வேலையைப் பெற முடியும். சுருக்கெழுத்து தட்டச்சு பணியாளராக அவள் இருக்க முடியும். நமது தூதரகங்கள் ஒன்றில் ஒரு வேலையை அவள் பெற முடியும். விமானத்தில் இனாமாக பயணம் செய்ய முடியும். சம்பளமும் படியும் பெற முடியும். இத்தகைய பெண்கள் முற்றிலும் சுதந்திரமாக இருக்கிறார்கள். முன் அறிமுகமில்லாத அன்னியர்களைக்கூட அவர்கள் நண்பர்களாக ஆக்கிக் கொள்ள முடியும். தங்களைத் தாங்களே சார்ந்து இருக்கும்படி அவர்கள் பயிற்சி பெற்றிருக்கின்றனர்; பழக்கப்பட்டுள்ளனர்.

எனவே, நாகரிகமடைந்த ஐராப்பியப் பெண் இவ்விதம் தன் சொந்தக் கால்களிலேயே நிற்க முடியும். நம் பெண்களைவிட அவள் நிலை மாறுபட்டது. முன்னேறிய நவநாகரிக நடையுடை பாவனைகள் கொண்டவர்களை இங்கு நான் குறிப்பிடவில்லை. கணவனாலும் தகப்பனாரின் உறவினர்களாலும் புறக்கணிக்கப்பட்ட ஓர் அபலையான ஏழைப் பெண்ணைத் தான் இங்கு குறிப்பிடுகிறேன். சட்டத் துறை அமைச்சர் தமாஷாகக் குறிப்பிட்டது போல், விவாகரத்துச்

செய்யப்பட்ட பெண் மீண்டும் ஒரு கணவனைப் பெறுவது சுலபமான தல்ல. அவள் விருப்பப்பட்டாலும், பொருத்தமான ஒரு கணவன் அவளுக்குக் கிடைப்பது இல்லை. எனவே, அவளது நிலை மிக மிக மோசமானது; இத்தகைய பெண்கள் விவாகரத்து முறைக்குப் பலி கடாக்களாகி சொல்லொண்ணா துன்பதுயரத்திற்குட்படுகின்றனர். இத்தகைய வழக்குகளில் நீதிமன்றத்தில் செய்யப்படும் குற்றச்சாட்டு கள் எண்ணிப்பார்க்க முடியாத அளவுக்கு மிக மோசமாக இருக்கும். இத்தகைய வழக்குகளின் நீதிமன்ற நடவடிக்கைகள் மிகவும் இழி வானவையாக இருக்கும். நமது சமுதாயம் இன்றுள்ள நிலையில் கணவனையும் மனைவியையும் நீதிமன்றத்திற்கு விரைய அனு மதிப்பது நமக்குச் சாத்தியமற்றதாகும்.

மேலும், இதில் மற்றோர் அம்சமும் உள்ளது. மலைவாழ் மக்கள் போன்றோரிடையே ஒரு வகையான விவாகரத்து முறை நடைமுறை யில் இருந்து வருகிறது. இது சம்பந்தப்பட்ட சம்பிரதாயங்கள் மிக எளிமையானவை. அவர்கள் மிகச் சிக்கனமாகவும் அதிவிரைவாக வும் விவாகரத்துப் பெறுகின்றனர்; ஆனால் நீதிமன்றத்திற்கு போக அவர்கள் கட்டாயப்படுத்தப்பட்டால், பணச்செலவு போன்ற கார ணங்களால் அவர்கள் விவாகரத்து பெற முடியாது; அவர்களின் சொந்த பழக்க வழக்கப்படி அவர்கள் சுலபமாகப் பெறக் கூடிய விவாக ரத்து அவர்களுக்கு மறுக்கப்படுகிறது. விவாகரத்து முறை ஒரே சீராக இருக்க வேண்டும் என்று நீங்கள் விரும்பும் போது விஷயங்களைப் பெரிதும் சிக்கலாக்குகிறீர்கள். தத்துவார்த்தப்படி சட்டம் ஒரு சீராக இருக்கலாம். ஆனால் மிக ஏழ்மையில் உள்ள மக்களுக்கு எதிராக அது கடுமையாக செயல்படும். காலப்போக்கில் முரண்பாட்டை நீக்கி இணக்கத்தை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு வழி இருக்கும் போது சுலபமான விவாகரத்து என்ற பேரில், மக்கள் நீதிமன்றத்திற்கு விரைவர். அப்போது குடும்ப மகிழ்ச்சி சிதைந்து போகும். வழக்கில் ஈடுபட்டவர்களும் சமுதாயமும் கால காலத்திற்கும் வருந்த நேரும். எளிமையான முறையில் வாழ்ந்துவரும் இந்த ஏழை மக்கள் மீது செயற்கைத் தன்மை வாய்ந்த சட்டத்தைத் திணிப்பது மிகவும் கொடுமையாகும். அவர்களுக்கு அதிகச் செலவைதான் ஏற்படுத்தும். ஒவ்வொரு வழக்கிலும் நீதிபதியின் தீர்ப்பும் உயர்நீதிமன்றத் தீர்ப்பால் உறுதிசெய்யப்பட வேண்டும். அது அதிக செலவாகக் கூடிய விஷயம். அதற்குப் பதிலாக சம்பந்தப்பட்டவர்களுக்கே அதை விட்டு விட வேண்டுமென பணிவுடன் கூறிக் கொள்கிறேன். விவாகரத்தை இவ்வகையில் அறிமுகப்படுத்துவது, அதுவும் நாகரிகத்தின் பல்வேறு கட்டங்களில்உள்ள பல்வேறு வர்க்கங்களைச் சார்ந்த மக்கள்

எல்லோருக்கும் ஒரே மாதிரியாகப் பொருந்துவதாக்குவது மிகவும் விஷமத்தனமானதாகும். தங்கள் வாதங்களை ஆதரிக்க அல்லது பலப்படுத்த சமஸ்கிருத சுலோகங்களை மேற்கோள்காட்டுவது மக்களுக்கு வழக்கமாக உள்ளது. நானும் ஒரு முயற்சி செய்கிறேன்.

''அஜா ஜிடே, கிருஷின் ஸ்ரத்தே, பிரபாட்டே மேகரம்பரா
தம்பதி கலகஷ்வைபா, பாபாரம்பே லகுகினயா

இரண்டு வெள்ளாடுகள் சண்டையிடும்போது, அவை தங்களின் பின் கால்களின் மீது நிற்கின்றன. கொம்புகளின் கடுமையான மோதல் உடனே நிகழப்போகின்றது என்று எதிர்பார்க்கிறோம். ஆனால் உண்மையான மோதல் மிகக் குறைவாகவே உள்ளது. 10 லட்சம் ரிஷிகள் சிரார்த்தத்திற்காக, மாபெரும் சடங்கில் கூடும்போது ஒரு கைப்பிடி அளவு தானியத்தை அவர்கள் எடுத்ததும் காலை மேகங்கள் திரண்டு ஊழிப் பிரளயத்தை உண்டு பண்ணுவது போல் பயமுறுத்து கின்றன. ஆனால் மழை பெய்வதில்லை. இதே போல் தம்பதியரிடையே சச்சரவுகள் பயங்கரமாகத் துவக்கப்பட்டாலும், முடிவு கடுமையான தாக இருப்பதில்லை.

குடும்பச் சண்டைகளில் இணக்கத்தைக் கொண்டு வருவதற்காக சமூக சக்திகள் செயல்பட அனுமதிக்கப்பட வேண்டும்.

விவாகரத்துக்குப் பதில், அவர்களுக்கு அவகாசம் கொடுக்க வேண்டும். விவாகரத்து ஒரு வழிப்பாதையல்ல. எல்லாவித கண்ணோட்டங்களிலும் இது பரிசீலிக்கப்பட வேண்டும். மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் ஒரு விசித்திரமான வாதத்தை முன்வைத்தார். அதாவது 90 சதவிகித மக்கள் சூத்திரர்கள்; இந்த 90 சதவிகித மக்கள் விவாகரத்தை நடைமுறைப்படுத்துகின்றனர், இவ்வாறு பெரும்பான்மை மக்களுக்கு பொருந்தும் ஒரு சட்டத்தை எஞ்சியுள்ள 10 சதவிகிதத்திற்கும் அமுல் படுத்தப்பட வேண்டும் எனக் கூறினார். இது சட்டரீதியான வாதமுறை அல்ல. இது ஏற்றுகொள்ளப்படத் தக்கதல்ல. இந்தியாவில் பூதக் கண்ணாடியில் பார்க்கக் கூடியதான சிறுபான்மையினர் முஸ்லீம்கள். எல்லா முஸ்லீம்களையும் இந்துக் களாக மாற்றுவதற்கும் அல்லது இந்து சட்டத்தை அவர்கள் மீது திணித்து இந்துச்சட்டப்படி இறந்தபின் அவர்களது உடலை எரிப் பதற்கும் இது காரணமாக இருந்த முடியுமா? அல்லது வேறு ஒரு உதாரணத்தை எடுத்துக் கொள்ளுங்கள். பாகிஸ்தானில் இந்துக்கள் சிறுபான்மையினர். முஸ்லீம் சட்டம் அவர்கள் மீது திணிக்கப்பட்டு பெரும்பான்மையினரின் வழக்கப்படி, அவர்களில் இறந்தவர்களை புதைக்கும்படி வற்புறுத்துவது நியாயமானது என்று இந்துக்கள் கூறுவார்களா? எனவே பெரும்பான்மையினர் என்ற வாதம் கவைக்கு உதவாதது.

90 சதவிகிதம் மக்கள் விவாகரத்து முறையைக் கொண்டிருக்கிறார்கள் என்ற கூற்றைப் பொறுத்தவரை, சென்னை ''ஹிந்து'' பத்திரிக்கை தனது தலையங்கத்தில் இது ''சுத்தப் பொய்'', சென்னையில் ஷெட்யூல்டு வகுப்பினர் அல்லது சூத்திரர்களுக்கு இது முற்றிலுமாக பொருத்தாது என்று எழுதிற்று.

வங்காளத்தில் எனது அனுபவம் பற்றி இப்பொழுது கூறலாமா? பிரபலமான உறுப்பினர்கள் பலர் உள்ளனர் - குறிப்பாக பண்டிட் மைத்ரா. நான் கூறுவது தவறு என்றால் அவர் என்னைத் திருத்தலாம். வங்காளத்தில் 90 சதவிகிதம் **சூத்திரர்களிடையே** இதுதான் பழக்கமா?...

பண்டிட் லட்சுமிகாந்த மைத்ரா: அது சுத்த அபத்தம்!

மதிப்பிற்குரிய ஓர் உறுப்பினர்: அவர் சூத்திரர் அல்ல.

மாண்புமிகு டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் : மைத்ரா, ஒரு சூத்திரரா?

திரு. நசிருத்தீன் அகமது: நாம் அவர்களிடையே வாழ்கிறோம். விவாகரத்திற்குப் போவது சூத்திரர்களில் பெரும்பான்மையினரிடையே உள்ள வழக்கமா?

திரு. பாபு ராம்நாராயணன் சிங் : சிலரிடம் உள்ளன.

திரு. நசிருத்தீன் அகமது: நிச்சயமாக சூத்திரர்களில் ஒரு சதவிகிதத்தினரின் பழக்கமாக இது ஆகிவிடாது. அது அப்படித்தான் என்று சில அஸ்ஸாம் உறுப்பினர்கள் பின்னால் இருந்து குசுகுசுக்கிறார்கள். தேயிலையையும் விவாகரத்தையும் அஸ்ஸாம் வளர்க்கிறது என நான் நம்புகிறேன். ஆனால் விவாகரத்து இல்லாமலே வங்காளம் தேயிலையை வளர்க்கிறது. பெரும்பான்மை என்ற வாதம் தவறான கருத்தைக் கொண்டது ஐயா, என்று நான் கூறுகிறேன். இந்த வாதங்கள் உண்மையல்ல. பம்பாயில் ஒரு வேளை இது மிகவும் பரவலாக இருக்கலாம். இந்தத் தத்துவத்தை இந்தியாவின் மற்ற பகுதிகளுக்கு விஸ்தரிக்க மாண்புமிகு சட்டத்துறை அமைச்சரை ஊக்குவித்ததற்கு பம்பாய் நிலவரம் காரணமாக இருக்கக்கூடம். எனவே மக்களில் 90 சதவிகிதம் பேர் விவாகரத்தை ஏற்றுக் கொள்ளுகின்றனர் என்று அறுதியிட்டுக் கூறுவது உண்மையை அடிப்படையாகக் கொண்டதல்ல. அது உண்மையாக இருந்தாலும், அந்த அமைப்பு முறையை அனுசரிக்

காதவர்கள் மீது அதைத் திணிக்கக் கூடாது. அந்த வாதம் தோல்வியுறும்; இதன் விளைவை முட்டுத் தாங்க அதை உபயோகிக்கக் கூடாது. நேரடியான விவாகரத்து அல்லது ஒரு சீரான விவாகரத்து எளிதான விவாகரத்து முறை வழக்கமாக பரவலாக உள்ள நிகழ்வுகளில் கஷ்டத்தை ஏற்படுத்தும். விவாக ரத்து பரவலாக இல்லாத குடும்பங்களில் துன்பத்தையும் சீர்குலைவையும் ஏற்படுத்தும். சட்டமன்றங்களை சுலபமாக அணுகக்கூடிய இந்த நாட்களில் அனுகூலங்கள் என்பவற்றை ஏழைவர்க்கத்தினரைவிட செல்வம் படைத்த வர்க்கங்களே பெறும். எனவே விவாகரத்திற்கு வழிவகை செய்தால் அது மக்களின் சம்மதத்தோடு மட்டும்தான் செய்ய வேண்டும். அப்படியும், விசேஷ சூழ்நிலைகளில், முதல் மனைவின் அனுமதியோடு இரண்டாவது திருமணம் அனுமதிக்கப்படலாம். பலதார மணம் வேகமாக மறைந்து கொண்டிருக்கிறது; சட்டமியற்றுவதன் மூலம் அதைத் துரிதப்படுத்தக் கூடாது. இது விவாகரத்து நடவடிக்கைகளுக்கு இட்டுச் செல்லும் அல்லது ஒருவன் பாகிஸ்தானிக்கோ, பர்மாவிற்கோ, மலேசியாவுக்கோ அல்லது வேறு இடங்களுக்கோ சென்று இரண்டாவது மனைவியை மணம் செய்து கொண்டு திரும்பி வரலாம். போதுமான அளவு முன்னேற்றம் அடையாமல், கல்வி அறிவு பெறாமல் ஒரு தாரமணம் மற்றும் விவாகரத்தின் தேவையை போதுமான அளவு உணராவிடில், அவர்களால் இத்தன்மை வாய்ந்த ஷரத்து ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. பல சந்தர்பங்களில் தட்டிக் கழிப்பதற்கே இட்டுச் செல்லும். ஆதலால் நீதி மன்ற நடவடிக்கைகளுக்கு ஊக்கமளிக்கக் கூடாது. மேலும் விவாகரத்து நடவடிக்கைகள் அடிக்கடி நடந்தால், கணிசமாக துன்பத்தை ஏற்படுத்தும்.

மாண்புமிகு திரு. குர்ஷெத் லால் (போக்குவரத்துத் துறை துணை அமைச்சர்) : ,விவாகரத்து அவ்வளவு மோசம் என்றால், முஸ்லீம் சட்டத்தில் விவாகரத்தை நீக்குவதற்கு மதிப்பிற்குரிய உறுப்பினர் ஆதரவு தருவாரா?

திரு. நசிருத்தீன் அகமது : பொறுக்குக் குழுவில் ஒரு உறுப்பினராக இருந்தும் இந்த விஷயம் முன்பு விவாதிக்கப்பட்ட போது மதிப்பிற்குரிய உறுப்பினர் அவையில் இருக்கவில்லை. அரைகுறையாக விவாதத்தில் பங்கெடுப்பதற்குப் பதில் அஞ்சல் அட்டையின் விலையை மேலும் உயர்த்துவதில் மதிப்பிற்குரிய உறுப்பினர் அக்கறை கொள்ள வேண்டுமென நினைக்கிறேன். மதிப்பிற்குரிய உறுப்பினர் அவையில் இல்லாத போது இந்த விஷயம் விவரமாக ஏற்கனவே விவாதிக்கப்பட்டது.

திரு. குர்ஷெத் லால் : ''அஞ்சல் அட்டைகள்'' விஷயம் இதில் சம்பந்தப்பட்டுள்ளதா?

திரு. துணை அவைத் தலைவர் : அஞ்சல் அட்டை விஷயத்திலிருந்து நம்மைக் கத்தரித்து கொள்வது நல்லது.

திரு. ராமநாத் கோயங்கா (சென்னை : பொது) ஷரியத் சட்டத்தை மாற்ற தாங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

திரு. துணை அவைத் தலைவர் : தனிப்பட்டவர்களைக் குறிப்பிட்டுப் பேச வேண்டாம். அம்மாதிரியான ஒரு கூற்று எப்பொழுதும் மற்றொன்றிற்கு இட்டுச் செல்கிறது.

திரு. நசிருத்தீன் அகமது: ஷரியத் சட்டத்தை நீக்குவதென்பது நடைமுறையில் உள்ள சட்டத்தில் தலையிடுவதாகிறது. இந்துக்கள் மத்தியில் ஒரு தார மணமும் விவாகரத்தும் கொண்டு வருவது இன்று நிலவும் சட்டத்தில் குறுக்கிடுவதாகும். இரண்டிற்கும் இடையே உள்ள வேறுபாடு இதுவே. உண்மையில் ஏற்றுக் கொள்ளப்பட்ட சட்டத்தில் நீங்கள் தலையிடக் கூடாது. எனவே இது முஸ்லீம் சட்டத்துடன் ஒத்த தன்மை கொண்டது என்ற வாதம் பொருந்தாது.

திரு.எச்.வி.காமத் : எல்லாம் இருக்கிறது என்று அவர் ஏற்றுக் கொள்கிறாரா? அல்லது எதிலாவது ஒரு மாற்றத்தை அவர் விரும்புகிறாரா?

திரு. துணை அவைத்தலைவர் : மசோதாவில் மட்டுமின்றி மற்றவற்றில் மாற்றங்களை பற்றி அவை அக்கறை கொண்டிருக்கவில்லை.

திரு. நசிருத்தீன் அகமது : மாற்றம் என்பது கோட்பாட்டிலளவிலான பிரச்சினை. சட்டத்தை மாற்றும் விஷயம் வரலாறு போலவே பழைமையானது. உண்மையில் மாற்றம் என்பதற்காகவே மாற்றங்களை விரும்பும் உளப்பாங்குடையோர் உள்ளனர். மாற்றம் வேண்டும் என்ற காரணத்திற்காக மட்டுமே அவர்கள் ஒரு மாற்றத்தைச் செய்வர். எந்த மாற்றத்தையும் ஒருபொழுதும் ஏற்றுக் கொள்ளாதவர்களும் இருக்கிறார்கள். ஏனெனில், எந்த மாற்றமும் ஒரு புதுமை. மக்காலேயின் ஒரு சிறந்த இலக்கிய வாசகத்தில் இது விவாதிக்கப்

படுகிறது; சிறந்த மூளைகள் இரு தீவிரங்களுக்கும் இடையேயான எல்லைக் கோட்டில் உள்ளன. எனவே மாற்றம் வேண்டும் என்பதற் காகவே, சட்டத்தில் ஒரு மாற்றத்தை ஏற்றுக் கொள்ளக் கூடாது. மேலும் எல்லாப் பரிசீலனைகளும் இருந்த போதிலும், பழைய சட்டத்தை அப்படியே கறாராகப் பின்பற்றுவதும் அதே போல் மோசமானது. காலத்தையொட்டி நடைபோட வேண்டும் என்பது கோட்பாடு. மறு பரிசீலனை செய்ய வேண்டியது அவசியமெனில், நீங்கள் உங்களுடன் மக்களை அழைத்துச் செல்ல வேண்டும். தார்மிக உரிமை பற்றியே இங்கு குறிப்பிடுகிறேன். சட்டப்படியான உரிமை நமக்கு உள்ளது. எந்தச் சட்டத்தையும் மாற்ற நமக்குப் போதுமான சட்டரீதியான உரிமை உள்ளது. அதே போல் நாம் விரும்பும் எந்தச் சட்டத்தை ஆக்கவும் நமக்கு உரிமை உள்ளது. இது ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒரு கோட்பாடாகும். நான் ஐயம் ஏதும் எழுப்பவில்லை. ஒரு மாற்றத்தை ஏற்படுத்த உங்களுக்கு எந்த தார்மிக உரிமையும் உள்ளது. .....

திரு. பாபு ராம்நாராயண் சிங் : இல்லை.

திரு. நசிருத்தீன் அகமது : ஒரு கோடி மக்களைப் பாதிக்கும் ஒரு மாற்றத்தை அவர்கள் சம்மதமின்றி மேற்கொள்ள முடியுமா? எல்லா மாற்றங்களையும் எதிர்க்க இங்கு நான் வரவில்லை. பொது மக்கள் கருத்தால் அங்கீகரிக்கப்படாத எந்த மாற்றத்தையும் எதிர்க்கவே நான் இங்கு உள்ளேன். அவர்களின் ஒப்புதல் இல்லாமல் தீவிரமான மாற்றங்களைக் கொண்டு வர உங்களுக்கு எந்தத் தார்மிக உரிமை உள்ளது?

திரு. எல். கிருஷ்ணசுவாமி பாரதி: அவர்கள் சம்மதம் நமக்கு உள்ளது. நாம் அவர்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறோம்.

திரு. நசிருத்தீன் அகமது : அப்படியாயின் ஒரு மிக முக்கிய மான அரசியல் சாசனப் பிரச்சினையை நீங்கள் எழுப்புகிறீர்கள். அரசியல் சாசனத்தை தயாரிக்கும் நோக்கத்துடன்தான் இந்த அவை தேர்ந்தெடுக்கப்பட்டது.

திரு. அவைத் துணைத் தலைவர்: அரசியல் சாசன விஷ யத்தைப் பொறுத்தவரை, அவைத் தலைவரின் தீர்ப்பு ஏற்கனவே உள்ளது என்று நினைக்கிறேன். இறையாண்மை கொண்ட அமைப்பு இது; எது பற்றியும் இது சட்டமியற்றலாம். மதிப்பிற்குரிய உறுப்பின ருக்கு வேறு விஷயங்கள் இருந்தால் அவர் மேலும் பேசலாம்.

திரு. நசிருத்தீன் அகமது: இந்த அவையின் அதிகாரத்தை நான் மறுக்கவில்லை; இந்து சமுதாயத்தை அல்லது முகமதிய சமுதாயத்தை சிதைக்கவோ, மதம் சம்பந்தப்படாத ஏதாவது ஒன்றாக அவற்றை உருவாக்கவோ நமக்கு உரிமை உண்டு. அந்த உரிமை ஒரு வினாடி கூட மறுக்க முடியாத ஒன்று. கேள்வி என்னவெனில், மக்கள் இந்தச் சட்டத்திற்கு பின்னால் உள்ளனரா என்பதே.

மதிப்பிற்குரிய சில உறுப்பினர்கள்: இல்லை, இல்லை.

மதிப்பிற்குரிய வேறு சில உறுப்பினர்கள்: ஆம், ஆம்.

திரு. நசிருத்தீன் அகமது: அவர்கள் இந்தச் சட்டத்திற்கு ஆதரவாக இல்லை என்று நம்புகிறேன். அவர்கள் அதற்கு எதிராக உள்ளனர். (**மதிப்பிற்குரிய ஓர் உறுப்பினர்:** 'அவர்கள் அதற்கு ஆதரவாக உள்ளனர்') அவர்கள் அதற்கு ஆதரவாக உள்ளனர் என்பது உங்களுக்கு எப்படித் தெரியும்? முக்கியத்துவம் வாய்ந்த இந்த விஷயம் வாக்காளர்கள் முன் வைக்கப்பட வேண்டும். அதுதான் அரசியல் சட்ட நடைமுறை. விஷயங்கள் குறிப்பாக வாக்காளர்களின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டு அவர்களின் அனுமதி அளிக்கப்பட்டாலொழிய, அவற்றை சேர்ப்பதை தாம் ஒத்துக் கொள்ள முடியாது என்று நேற்று முன்தினம் திரு. ஓஸ்போர்ன் எங்களிடம் கூறினார். உண்மையில் அவர்கள் அத்தகைய எதையும் செய்யமுடியாது. வாக்காளர்களின் சம்மதமின்றி, அரசியல் சாசன ரீதியிலான நடவடிக்கைகளில் இறங்க தாங்கள் தகுதி பெற்றவர்கள் அல்ல என்று அவர்கள் கருதுகின்றனர். ஆனால் நாம் வாக்காளர்களின் கருத்தை அலட்சியப்படுத்தலாம் என்னும் அளவுக்கு முன்னேறியுள்ளோம்; எனவே, ஒரு சமயம், தாமதப்படுத்தும் முறை கையாளப்பட்டது. நோக்கத்தையே தோற்கடிப்பதே அதன் குறிக்கோள் என்று வாதிக்கப்பட்டது. ஏதாவது தேர்தல் நடந்தால், வாதிக்கப்பட்டது. ஏதாவது தேர்தல் நடந்தால், இந்துச் சட்டத் தொகுப்பு நிறைவேற்றப்பட மாட்டாது. இந்தக் கூட்டத் தொடரில் விவாதம் தலைகீழாக இருந்தது. வாக்காளர்கள் எங்கள் பக்கம் இருக்கிறார்கள், அவர்களின் சம்மதத்துடனேயே நாங்கள் இந்த மசோதாவைக் கொண்டு வந்தோம் என்று அவர்கள் கூறுகிறார்கள். ஆனால் உண்மையில் அவர்களது ஒப்புதலுடனோ அல்லது அவர்களின் சம்மதத்துடனோ இந்த சட்ட மசோதா கொண்டு வரப்படவில்லை.

இந்தச் சட்டம் எப்படித் துவங்கியது? அன்னிய அரசாங்க அதிகாரத்தின் கீழ் அது வரையப்பட்டது; அப்பொழுது அது தனது உயிருக்காக போராடிக் கொண்டிருந்தது. ஆங்கில ஆட்சி முற்றிலுமாக அஸ்மித்துவிடும் அபாயம் இருந்தது. பிரிட்டிஷ்காரர்களுக்கு அது வாழ்வா, சாவா என்ற மிக நெருக்கடியான கட்டம். ஐயா, இத்தகைய சமயத்தில்தான் ராவ் குழுவை ரெஜினால்ட் மாக்ஸ்வெல் நியமித்தார். உலக யுத்த நிர்ப்பந்தத்தினால் இங்கிலாந்தின் வாழ்வே ஆபத்திலிருந்தபோது இது கருத்தரித்தது. மசோதா தயாரிக்கப்பட்ட சமயம் இடைக்கால அரசாங்கத்தின் சட்டத்துறை அமைச்சராக இருந்த ஜோகேந்திர நாத் மண்டலால் இது அறிமுகப்படுத்தப் பட்டது. அந்த சமயம் அழிவை உண்டாக்கும் போராட்டங்களால் நாடு சீர்குலைந்து கொண்டிருந்தது, ஏராளமான உயிர் நஷ்டமும் சமாதானத் திற்குப் பங்கமும் முன்என்றும் கண்டிராத அளவு ஏற்பட்டுக் கொண்டிருந்தன. தாம் அமைச்சராக இருப்பது தற்காலிகத் தன்மை கொண்டது என்பதை அவர் அறிவார். அப்பொழுது அவரது சிந்தனைகள் பாகிஸ்தான் மீதுதான் குவிந்திருந்தன. அந்த மசோதா மீது அக்கறை கொண்டிருக்கவில்லை. இத்தகைய சூழ்நிலைமைகளில் தான், அவையில் மசோதா முன்மொழியப்பட்டது. அச்சமயம் கருத்தளவிலிருந்த பாகிஸ்தான் ஏற்கனவே ஒரு யாதார்த்தமாகி விட்டது. அப்போதுதான் மசோதா சட்டப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்டது.

திரு. துணை அவைத் தலைவர்: உரை நிகழ்த்த காத்திருப்போர் பட்டியலில் பல பேர் இருப்பதை காண்கிறேன். மதிப்பிற்குரிய உறுப் பினர் ஏற்கனவே 1 1/2 நாட்கள் எடுத்துக் கொண்டுள்ளார். அவர் முடிக்கப் போவது எப்பொழுது? அது பற்றி அவருக்கு கருத்து ஏதாவது இருக்கிறதா?

மதிப்பிற்குரிய ஓர் உறுப்பினர்: இந்த அவையில் யாருக்கும் எந்தக் கருத்தும் இல்லை.

திரு. நசிருத்தீன் அகமது: சட்டத்துறை அமைச்சருக்குக்கூட கருத்து எதுவும் இல்லை. குறுக்கீட்டின் காரணமாக இந்தக் கூற்று எழுந்தது. இனி நான் கொஞ்ச நேரம் மட்டுமே எடுத்துக் கொள்வேன்.

திரு. எல். கிருஷ்ணசாமி பாரதி: எவ்வளவு நேரம்? இது பற்றி அவை அக்கறை கொண்டுள்ளது.

திரு. நசிருத்தீன் அகமது : இந்த மசோதாவைப் பரிசீலிக்க எவ்வளவு அவகாசம் ஆகும் என்று தெரிந்து கொள்ள அவைக்கு உரிமை யுள்ளது;. பதில் எதுவும் இல்லை. எனவே நான் மிகவும் இக்கட்டான நிலையில் இருக்கிறேன்.

பிற்பகல் 2.30 மணி வரை அவை ஒத்திவைக்கப்பட்டது.

சட்டப்பேரவை மதிய உணவு இடைவேளைக்குபின் பிற்பகல் 2.30 மணிக்கு மீண்டும் கூடியது. (அவைத் தலைவர் மாண்புமிகு திரு. ஜி.வி.மாவலங்கர்) தலைமை தாங்கினார்.

திரு.எச்.வி.காமத் : அவையில் "கோரம்" இல்லையென்று தோன்றுகிறது.

திரு. அவைத்தலைவர்: "கோரம்" இருக்கிறது என்று நினைக்கிறேன்.

திரு. நசிருத்தீன் அகமது : ஐயா, மதிய உணவுக்கு நாம் கலையும் முன், இந்த மசோதாவை நிறைவேற்றுவது இந்த அவைக்கு முறையாகும் என்பது பற்றி நான் கூறிக் கொண்டிருந்தேன். இந்த அவையின் அரசியல் சாசன ரீதியான அதிகாரத்தைப் பொறுத்தவரை, இந்த மாதிரியானச் சட்டத்தை நிறைவேற்ற அரசியல் சாசன ரீதியான தகுதி நமக்கு உள்ளது என்பதில் எனக்கு ஐயமில்லை. ஆனால், உண்மையில், நமக்குத் தார்மிக உரிமை உண்டா என்பதும், இந்தச் சட்டத்தை நிறைவேற்றுவது தார்மிக ரீதியாக முறையாக இருக்குமா என்பதும் தான் இங்கு கேள்வி. எது எவ்வாறிருப்பினும் இந்தச் சட்டத்தை ஒப்புக் கொள்வதற்கு நமது தொகுதிகள் நேரடியாகவோ மறைமுகமாகவோ இந்த அவைக்கு அதிகாரம் அளித்துள்ளனவா? இந்த மசோதாவுக்கு மக்கள் ஆதரவு இருப்பதாக மதிப்பிற்குரிய சில உறுப்பினர்கள் சொல்கிறார்கள். எனது உணர்வு என்னவெனில், மக்கள் இந்த மசோதாவுக்கு ஆதரவாக இல்லை என்பதே. ஏற்கனவே பதிவாகியுள்ள ஆட்சேபங்களின் எண்ணிக்கை அதிகம். சட்டப் பேரவை இலாகாவில் ஆட்சேபங்கள் வந்து குவிந்து கொண்டிருக்கின்றன என நம்புகிறேன். அவற்றின் எண்ணிக்கை இவ்வளவு அதிகமாக இருப்பதால், அவற்றை வகைப்படுத்துவதோ, பதிவுப்பட்டியலில் பதிவு செய்வதோ, எந்த முறைப் படியான வகையிலும் கையாள்வதோ இயலாது. எதிர்ப்புகள் அபரிமிதமான அளவில் குவிந்து வருகின்றன. பொது மக்களின் உணர்வின் தீவிரத்தை அது எடுத்துக்காட்டுகிறது. கேள்வி என்னவெனில், ஒரு ஜனநாயக சமுதாயத்தில் உள்ள நாம், ஜனநாயக அடிப்படையில் நிறுவப்பட்ட ஒரு சட்டப் பேரவையில், பொது மக்களின் கருத்தை தெரிந்து கொள்ளாமல் இந்த சட்டத்தை நிறைவேற்ற வேண்டுமா

என்பதுதான். நான் ஏற்கெனவே எடுத்துக்காட்டியது போல் அதன் உருவாக்கம் அன்னிய அரசாங்கத்தால் செய்யப்பட்டது. அது அப்பொழுது தன்னைப் பாதுகாத்துக் கொள்ளப் போராடிக் கொண்டிருந்தது; அதன் கவனம் மிகுதியும் வேறுபக்கம் இருந்தது. இடைக்கால அரசாங்கத்தின் அமைச்சராக இருந்தவரால் இது அவையில் சமர்பிக்கப் பட்டது. அந்த அமைச்சர் அப்பொழுது பாகிஸ்தானிக்கு போய்விடத் திட்டமிட்டுக் கொண்டிருந்தார். இந்த மசோதா மீது எத்தகைய அக்கறையும் அவர் கொண்டிருக்கவில்லை.

திரு.எச்.வி. காமத் : அவர் காலையில் கூறுயதையே திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டிருக்கிறார்.

திரு. நசிருத்தீன் அகமது : இந்தியா ஏராளமான முக்கிய பிரச்சினைகளைச் சமாளிப்பதில் பெரிதும் ஈடுபட்டிருக்கும்போது, இப்போதைய மசோதா மாண்புமிகு டாக்டர் அம்பேத்கரால் கொண்டு வரப்பட்டிருக்கிறது. அவரே ஒப்புக்கொண்டபடி இப்போதைய மசோதா போதுமான சிந்தனையின்றி சமர்ப்பிக்கப்பட்டிருப்பதாகவே தோன்றுகிறது. அது பொறுக்குக் குழுவிற்கு அனுப்பப்பட்ட பொழுதுதான், அது முறையாக வரையப்படவில்லை யென்பதும் அதற்குத் திருத்தங்கள் தேவையென்பதும் தெரியவந்தது. இந்த மசோதா முக்கியமானதா இல்லையா என்பது வேறு விஷயம். நெடுகிலும் அதற்குப் பல திருத்தங்கள் தேவைப்படுகின்றன என்பது சட்டத்துறை அமைச்சருக்குத் தோன்றியிருக்கிறது. எனவே இந்த மசோதாவை மறு வரைவு செய்யும் பணியில் அவரே இறங்கினார். அந்த குழு தயாரித்தது ''இந்துச் சட்டத் தொகுப்பு'' என்ற புத்தகம். மாற்றி அமைக்கப்பட்ட இன்றைய மசோதா அநேகமாக அதனை அப்படியே ஒத்திருக்கிறது. டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் தயாரித்த ''இந்துச் சட்டத்தின் சில கிளைகளைத் திருத்தித் தொகுக்கும் மசோதா'' என்று இது பெயரிடப் பட்டுள்ளது.

திரு. ஜோகேந்திர நாத் மண்டலால் சமர்ப்பிக்கப்பட்ட மசோதா டாக்டர் அம்பேத்கரால் ஏனோதானோவென்று மாற்றி அமைக்கப் பட்டது. நான் வலியுறுத்திக் கூறும் விஷயம் என்னவெனில் இந்த மசோதா ஒரு பொழுதும் எந்தப் பரிசீலனையும் பெறவில்லை. இந்த மசோதாவை முன்மொழியும் முன் அரசாங்கம் எந்த ஆலோசனையையும் பெறவில்லை. இந்த மசோதா முறையாக வரையப்பட வில்லை என்றும், அதை மொத்தமாக மாற்றி எழுத வேண்டிய தேவை உள்ளது என்றும், பெரும் அளவிலான விவரங்கள் மாற்றப்படும்

அவசியம் உள்ளது என்றும் தெளிவான உடனே மசோதாவை வாபஸ் பெற்றிருக்க வேண்டும். ஆனால் அதை வாபஸ் பெறுவதற்குப் பதிலாக, சட்டத்துறை அமைச்சர் ஏராளமான மாற்றங்களைச் செய்து புதிய மசோதாவை அறிமுகப்படுத்தினார். மசோதா ஒரு போதும் விரிவாகப் பரிசீலிக்கப்படவில்லை என்பதையே இது காண்பிக்கிறது. மசோதாவின் பிரதான பகுதியில் முக்கிய மாற்றங்கள் செய்வது அவசியம் என்று அரசாங்கம் நியாயமாகவே முடிவு செய்திருக்க வேண்டும். உண்மையில் ஏராளமான வசதிகளையும் ஆதாரங்களையும் கொண்டுள்ள அரசாங்கம் அதை ஏற்றுக் கொள்ளத் தயாராக இல்லை. அவ்வாறே நாடும் ஏற்றுக் கொள்ளத் தயாராக இல்லை.

இப்பொழுது ஐயா, தற்போதைய அரசியல் நிர்ணயசபை ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டது.

திரு. தாஜாமுல் உசேன் : மதிப்பிற்குரிய உறுப்பினர் அதே விஷயத்தை திருப்பித் திருப்பி கூறுகிறார்.

திரு.அவைத் தலைவர்: அவர் அதைச் சொன்னாரா என்பது எனக்குத் தெரியாது.

திரு. நசிருத்தீன் அகமது: அதை நான் துவக்கக் கூட இல்லை. இந்தச் சட்டத்தை நிறைவேற்றும் நோக்கத்திற்காக இந்த அவை தேர்ந்தெடுக்கப்படவில்லை.

திரு. தாஜாமுல் உசேன்: ஐயா, இதையேதான் அவர் சொன்னார் தாங்கள் அவையில் இல்லாத பொழுது.

திரு. நசிருத்தீன் அகமது : என் கருத்தைக் கூற அனுமதியுங்கள். இந்த வழியில் போக நாம் அதிகாரம் பெற்றுள்ளோமா என்பதே இங்குள்ள பிரச்சினை. இந்த அவையின் அதிகாரம் மறைமுகத் தேர்தலை அடிப்படையாகக் கொண்டது. நேரடித் தேர்தலால் அல்ல.

திரு.எச்.வி. காமத் : இந்த விஷயத்தைத்தான் அவர் முன்பு சொன்னார். துணை அவைத் தலைவர் இந்த விஷயம் குறித்துத் தீர்ப்பும் அளித்தார்.

திரு. அவைத் தலைவர் : அவர் சொன்னரா என்பது எனக்குத் தெரியாது; இதை மதிப்பிற்குரிய உறுப்பினருக்கே விட்டு விடுகிறேன்.

திரு. நசிருத்தீன் அகமது: ஐயா, அதை விளக்கிக்கூற விரும்புகிறேன்.

திரு. அவைத் தலைவர்: விளக்கம் எதுவும் தேவையில்லை. அவர் அடுத்த விஷயத்திற்குச் செல்லலாம்.

திரு. நசிருத்தீன் அகமது : மதிய உணவுக்காக நாம் அப்பொழுது கலைந்தோம்.

திரு. அவைத் தலைவர் : விஷயம் தெள்ளத்தெளிவு என்று தோன்றுகிறது. அதை விவரிக்க வேண்டிய தேவை இல்லை. நேரடித் தேர்தல் மூலம் இந்த அவை தேர்ந்தெடுக்கப்படவில்லை, தேர்தல் நேரடியாக இல்லை, அது ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்காக அதாவது அரசியல் சாசனத்தை அமைப்பதற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டது. இந்த அவை இம்மாதிரியான சட்டத்தை இந்தக் கட்டத்தில் பரிசீலிக்கக் கூடாது.இதுதான் விஷயம். நீண்ட நேரம் பேச அவர் எண்ணம் கொண்டிருந்தால், அவரை ஆதரிப்பதற்கு என்னால் இயலாது.

திரு.நசிருத்தீன் அகமது: விஷயம் என்னவெனில், நான் துவங்கியவுடனே திரு. கிருஷ்ணசுவாமி பாரதி என் பேச்சில் குறுக்கிட்டார்....

திரு.எல். கிருஷ்ணசுவாமி பாரதி : தனிப்பட்ட முறையில் விளக்கம். ஐயா, அந்த சமயம் நான் வாய் திறக்கவே இல்லை.

திரு. அவைத் தலைவர் : ஒரு குறிப்பிட்ட உறுப்பினர் ஒரு குறிப்பிட்ட விஷயத்தை உறுதிப்படுத்துகிறார் அல்லது மறுக்கிறார் என்பது உண்மையை எவ்வகையிலும் பாதிக்காது. அவருக்கு அதிகாரம் உள்ளதா எனில் உள்ளது. அல்லது அவருக்கு இல்லையா. ஓர் உறுப்பினர் இப்படி அப்படிப் பேசுவது எந்த வித்தியாசத்தையும் ஏற்படுத்தாது. விவரங்களுக்குச் செல்லாமல் அவர் கருத்தை அவர் சொல்லட்டும்.

திரு. நசிருத்தீன் அகமது: விஷயம் என்னவெனில் அது அவ்வளவு தெளிவானதல்ல.

திரு. அவைத் தலைவர் : அது தெளிவாக உள்ளது.

திரு. நசிருத்தீன் அகமது : இல்லை ஐயா, திரு. பாரதிக்கு அது அவ்வளவு தெளிவாக இல்லை.

திரு. அவைத் தலைவர் : ஒப்புக்கொள்ள மறுப்பவரை ஒப்புக் கொள்ள வைக்க மதிப்பிற்குரிய உறுப்பினர் கவலைப்பட வேண்டிய தில்லை. இந்த அவை முழுவதுக்கும் அவர் பேசுகிறார். ஓரளவு புரிந்து கொள்ளும் திறமைகொண்ட நிலையில் உள்ள உறுப்பினர்களைக் கொண்டது இந்த அவை என்பதை அவர் தெரிந்து கொள்ளவேண்டும்.

திரு. நசிருத்தீன் அகமது: புரிந்து கொள்வதை நான் மறுக்க வில்லை. மனதை மூடிக்கொள்வது என்பது வேறு விஷயம். அதுதான் கஷ்டம். வாதத்தை ஏற்றுக் கொள்வதற்கு சிலர் விருப்பம் கொள்ளாமல் இருக்கின்றனர்.

திரு. அவைத் தலைவர் : ஏற்றுக் கொள்ளும்படி அவர் களைச் செய்ய முடியாது. அவர்களை ஏற்றுக் கொள்ளும்படி செய்ய நமது நேரத்தை நாம் எடுத்துக் கொள்ள வேண்டாம். மதிப்பிற்குரிய உறுப்பினர் அடுத்த விஷயத்தை எடுத்துக் கொள்ளட்டும்.

திரு. நசிருத்தீன் அகமது : எனவே, இந்தச் சட்டத்தை நிறை வேற்ற நமக்கு தார்மிக அதிகாரம் இல்லை என்பதை தாங்கள் தயவு செய்து பரிசீலியுங்கள். அரசாங்கம் ஒரு மசோதாவை வரைந்து பின்பு அதைக் கருத்துக்காக சுற்றுக்கு அனுப்பியது. இந்தச் சட்டக் குழு அறிக்கையின் இணைப்பு II பக்கம் 41ஐக் குறிப்பிடுகிறேன். ''ராவ் குழு உருவாக்கிய மசோதா சுற்றுக்கு அனுப்பப்பட்டது. ஏராள மான பொதுமக்கள் அமைப்புகளுக்கும் சக்திவாய்ந்த மற்றும் செல்வாக்குள்ள தனி நபர்களுக்கும் அனுப்பப்பட்டு அவர்களின் கருத்துக்கள் கோரப்பட்டன.'' 1944 ஆகஸ்ட் 5ம் தேதியிட்ட அறிவிப் பில் கோரப்பட்டுள்ள பொதுமக்கள் எழுத்து மூமாகவோ நேரடி யாகவோ அளிக்கும் கருத்துக்களின் வெளிச்சத்தில் வரைவை மாற்றி யமைக்க சட்டக்குழு விரும்புகிறது என்பது மிகத் தெளிவாக கூறப் பட்டது. இத மிக முக்கியமானது. இன்றைய விஷயத்தை வெளிக் கொண்டுவர இது ஒரு கருவியாகும். பொது மக்களின் கருத்துக்களை அறிய மசோதா சமர்பிக்கப்பட்டது. பொதுமக்களின் கருத்திற்கேற்ப மசோதா மாற்றி எழுதப்படும் என்று தெளிவாகக் கூறப்பட்டது. பொது மக்களின் கருத்து யாது? பொது மக்கள் கருத்து ''இந்த சட்டக் குழு விற்கு சமர்ப்பிக்கப்பட்ட எழுத்துமூலமான அறிக்கை - தொகுப்பு I மற்றும் IIல்'' கொடுக்கப்பட்டிருந்தது. அவையின் உறுப்பினர்களால் அல்லது பல உறுப்பினர்களால் பொதுமக்களின் இந்தக் கருத்து ஒருபோதும் போதுமான அளவு பரிசீலிக்கப்படவில்லை என்று நான் கருதினேன். கருத்துக்கள் பெறப்பட்டதும் அவை பகுத்துப் பார்க்கப்

பட்டன; அடுத்து வாய்மூலமான சாட்சியங்களும் வரவேற்கப் பட்டன; பெரும் எண்ணிக்கையில் சாட்சிகள் விசாரிக்கப்பட்டனர். ''1945ல் இந்து சட்டக் குழுவுக்கு அளிக்கப்பட்ட வாக்குமூலங்கள்'' என்பதில் அதைக் காணலாம். படித்துப் பார்த்தால் கோரப்பட்ட பொதுமக்களின் கருத்து பெரும்பான்மையாக இந்துச் சட்டத் தொகுப் பிற்கு எதிராக உள்ளதைக் காணலாம். அப்படியிருக்கும்போது என்ன நடந்துள்ளது? இந்துச் சட்டக் குழு பொது மக்களின் கருத்துக்கு ஏற்ப அல்லாமல் தனது சொந்தக் கருத்துக்கேற்ப மசோதாவை இங்கும் அங்கும் மாற்றி அமைத்துள்ளது.

இந்த சாட்சியத்தின் தாக்கம் பற்றி பொறுக்குக் குழு உறுப் பினரும் கல்கத்தா உயர் நீதிமன்றத்தின் முன்னாள் நீதிபதியுமான திரு. டி.என். மிட்டர் கவனமாகப் பகுப்பாய்வு செய்து தமது மாற்றுக் கருத்தை விரிவாக வெளியிட்டுள்ளார். இந்த விஷயம் பற்றி நான் பேச விரும்பவில்லை; ஆனால் பல்வேறு தலைப்புகளில் அவர் பகுத்தாய்வு செய்துள்ளார்; அதாவது இத்தகைய ஒரு சட்டத் தொகுப்பு நமக்கு வேண்டுமா, வேண்டா, திருமணச் சட்டம் மாற்றப்பட வேண்டுமா, விவாகரத்து இருக்க வேண்டுமா முதலான கருத்துக் களையும் சாட்சியங்களையும் சாதகமானவை மற்றும் எதிர்ப்பானவை என்று ஒவ்வொரு தலைப்பிலும் அவர் பகுத்தாய்வு செய்துள்ளார். அவரது அறிக்கை அவையின் கவனமான பரிசீலினக்குத் தகுதி வாய்ந்தது. பொருள்களுக்கு ஏற்பவும் மாகாணங்கள் வாரியாகவும் கருத்துக்கள் வகைப்படுத்தப்பட்டுள்ளன. டாக்டர் டி.என். மிட்டரின் கூற்றுப்படி, சாட்சியங்களின் விளைவு ஒவ்வொரு விஷயத்திலும் சட்டத் தொகுப்பு, விவாகரத்து நடவடிக்கைகள் மற்றவை பற்றிய பெரும்பாலோரின் கருத்து எதிர்ப்பாக இருந்தது. சாட்சியங்களும் பெரும்பான்மையாக மசோதாவின் கோட்பாடுகளுக்கு எதிராக இருந்தன. இந்தச்சட்ட குழுவின் அறிக்கை ஒரு பெரும்பான்மைக் கருத்தின் அறிக்கையே. அதை டாக்டர் டி.என். மிட்டர் நிச்சயமாக எதிர்த்தார். மற்றவர்கள் மூல மசோதாவிற்கு ஆதரவாக நின்று, இங்கும் அங்கும், பொது மக்கள் கருத்துக்கு ஏற்ப அல்லாமல் தங்கள் கருத்துப்படி திருத்தங்கள் செய்தனர். எனவே, இந்த மசோதா பொது மக்களின் கருத்தையும் மீறி உருவாக்கப்பட்டது என்று குற்றம் சாற்றுகிறேன். எனது வாதம் இதை அடிப்படையாகக் கொண்டது. பொது மக்களின் கருத்து இந்த மசோதாவுக்கு ஆதரவாக உள்ளது என்று திரு. கிருஷ்ணசுவாமி பாரதி கூறிய போதிலும், பொதுமக்கள் கருத்து அதற்கு எதிராகத்தான் உள்ளது எனத் துணிந்து கூறுகிறேன்.

மதிப்பிற்குரிய உறுப்பினர் : கேள்வி.

திரு. தாஜாமுல் உசேன்: இல்லை. இல்லவே இல்லை. அது மசோதாவுக்கு ஆதரவாக.

திரு. நசருத்தீன் அகமது: எழுத்து மூலமான கருத்தைப் பொறுத்தவரை, அது நிச்சயமாக மசோதாவுக்கு எதிராக உள்ளது. எனவே ஒரு ஜனநாயக அரசாங்கம் செய்திருக்க வேண்டியது போல், பொது மக்களின் கருத்து முறையாக கலந்தாலோசிக்கப்படவில்லை எனக் கூறுகிறேன். உண்மையில் இந்த மசோதா ஜனநாயகத்திற்கு ஒரு மறுப்பாகும்; இன்று நிலவாத சூழ்நிலைகளில் இது எண்ணப் பட்டது. ஒரு முழுமையான ஜனநாயகம் இன்று செயல்படுகிறது. சட்டமியற்றும் யோசனைகளை நடைமுறைப்படுத்தும்போது, பொதுமக்களின் கருத்து கணக்கில் எடுத்துக்கொள்ளப்பட வேண்டும். எனவே, எழுத்துப்பூர்வமான கருத்தைப் பொறுத்தவரை, அது மசோதா வுக்கு எதிராக உள்ளது எனக் கூறுகிறேன்; எழுத்து மூலம் அளிக்கப் படாத கருத்து என்ன? உங்கள் அலுவலகத்திலேயே பெரும்பாலான எண்ணிக்கையில் கண்டனம் தெரிவிக்கப்பட்டதை நாம் பார்க்கிறோம். பெரும் எண்ணிக்கையில் கூட்டங்கள் நடப்பதுபற்றிக் கேள்விப் படுகிறோம். உண்மையில் நகரத்தின் மையப் பகுதியிலேயே நாங்கள் கூட்டங்கள் நடத்தினோம். அவற்றில் ஏராளமானவர்கள் கலந்து கொண்டனர். மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் பலரும் மாண்புமிகு சட்டத்துறை அமைச்சரும் அழைக்கப்பட்டனர். சில உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். ஆனால் அமைச்சர் கலந்து கொள்ளவில்லை.

திரு. பாபு ராம்நாராயண் சிங்: கலந்து கொள்ள அவருக்குத் துணிச்சல் இல்லை.

திரு. நசிருத்தீன் அகமது: கலந்து கொள்வது அவசியம் என அவர் நினைக்கவில்லை. ஏனெனில் இந்த மசோதாவைப் பொறுத்த வரை, மக்கள் கருத்து அவருக்கு ஓர் அளவுகோலாகவோ, அல்லது வழிகாட்டியாகவோ இல்லை என்று தோன்றுகிறது. உண்மையில் மக்களின் கருத்து பற்றி ஒரு தெளிவான பகுத்தாய்வை அளித்திருந்தார். டாக்டர் டி.என். மிட்டர் அவர் கூறியதை மறுத்துக் கூற அவர் முன்பு கூறியதைத் தாம் மேற்கோள் காட்டுவதாக மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கூறினார்.

மாண்புமிகு டாக்டர் பி.ஆர். அம்பேத்கர்: மதிப்பிற்குரிய உறுப்பினர் என்ன சொன்னார்? நான் புரிந்து கொள்ளவில்லை.

திரு. நசிருத்தீன் அகமது: டாக்டர் டி.என். மிட்டரின் இன்றைய அறிக்கையை மறுதலிக்க அவரது முந்திய எழுத்துக்களி லிருந்து மேற்கோள்காட்டலாம் என அவர் கூறினார். அவர் முன்னர் எழுதியதையும் இப்போது எழுதியதையும் நான் பரிசீலனை செய் துள்ளேன்.

மாண்புமிகு டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் : அவர் பிந்தி எழுதியதை நான் பார்க்கவில்லை. அது என்ன?

திரு. நசிருத்தீன் அகமது : அவர் பிந்தி எழுதியது அறிக்கை யில் உள்ளது.

மாண்புமிகு டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் : அதைத் தாங்கள் பிந்தி எழுதியதாகக் கூறுகிறீர்களா? இதற்குப் பிந்திய ஒன்று என்று நினைத்தேன்.

திரு. நசிருத்தீன் அகமது: பிரச்சினை என்னவென்றால் அவர் முந்தி எழுதியது என்ன, இப்பொழுது எழுதியது என்ன, அதில் மாற்றம் ஏதும் உள்ளதா, அப்படியாயின் அந்த மாற்றம் யாது? கொஞ்ச காலத்திற்கு முன்பு அவர் ஒரு பிரசுரத்தை எழுதியிருந்தார்.

மாண்புமிகு டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் : ஒரு பிரசுரமா?

திரு. நசிருத்தீன் அகமது : ஒரு நூல்.

மாண்புமிகு டாக்டர் பி.ஆர். அம்பேத்கர்: சிறிது முன்பு ஒரு பிரசுரம் என்று தாங்கள் கூறினீர்கள் என்று நினைத்தேன்.

திரு. நசிருத்தீன் அகமது : என்ன பெயர் வேண்டுமானாலும் கொடுத்துக் கொள்ளுங்கள். பெயர் பற்றி நான் சர்ச்சை செய்யவில்லை.

மாண்புமிகு டாக்டர் பி.ஆர். அம்பேத்கர்: அந்த நூல் எவ்வளவு பெரியது, அதுபற்றி ஏதாவது தங்களுக்குக் கருத்து உள்ளதா?

திரு. நசிருத்தீன் அகமது: நான் குறுக்கு விசாரணைச் செய்யப்பட வேண்டுமெனில் என்னை சாட்சிக் கூண்டில் வைக்க வேண்டும். அப்பொழுது நான் பதில் கூறுவேன்.

மாண்புமிகு டாக்டர் பி.ஆர். அம்பேத்கர்: அவற்றைப் பற்றிக் குறிப்பிடும் போது உண்மைகளை எனது நண்பர் கண்டறிந்தாரா என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன். அது ஒரு பிரசுரம் என்றால் நான் மிகவும் ஆச்சரியப்படுவேன். அந்த நூல் சுமார் 700 பக்கங்கள் கொண்ட ஒரு நூலாகும்.

திரு. நசிருத்தீன் அகமது : நூலின் பக்கங்கள் முக்கியமல்ல, அதில் கூறப்பட்டுள்ள கருத்துதான் முக்கியமானது.

மாண்புமிகு டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் : ஆம். அந்தக் கருத்து என்ன?

திரு. நசிருத்தீன் அகமது: அதில் கூறப்பட்ட கருத்து என்னவெனில் இந்து பெண்களின் உரிமைகள் மேலும் நன்கு பாதுகாக்கப்பட வேண்டும். அவர்களுக்கு மேலும் அதிக உரிமைகள் அளிக்கப்பட வேண்டும். மாண்புமிகு அமைச்சருக்கு எல்லாவற்றையும் நான் திருப்பிக் கூற முடியாது. ஏனெனில் அவைக்குச் சிரமமளிக்க நான் விரும்பவில்லை. மேலும் நான் இப்பொழுது செய்வதைவிட அதிகம் உரத்த குரலில் பேச விரும்பவில்லை. இன்றைய நிலையில் அவர் மசோதவை எதிர்க்கிறார். அவரது முந்திய நூலை மாண்புமிகு அமைச்சர் கவனத்தில் கொண்டிருந்தார் என்பதும், பெரும்பாலான உறுப்பினர்கள் அதைச் சாதகமாக எடுத்துக் கொண்டனர் என்பதும் தெளிவு. கருத்து மாற்றத்திற்கான காரணத்தையும் டாக்டர் டி.என். மிட்டரே அளித்துள்ளார் என்பதைக் கூறிக் கொள்கிறேன். காரணத்தோடு கூடிய கருத்து மாற்றம் என்பது குற்றமானால், தவறு என்று நிரூபிக்கப்பட்டக் கருத்தைக் குருட்டுத்தனமாகப் பின்பற்றுவது அதைவிட மோசமான குற்றமாகும். பெண்களுக்கு அதிக உரிமைகள் வழங்கப்பட வேண்டும் என்பதற்கு ஆதரவான ஒரு கருத்தை டாக்டர் மிட்டர் தெளிவாக வெளிப்படுத்தினார். இணைப்பு II ல் உள்ள வாசகத்தை நான் படித்தேன். பொது மக்கள் கருத்திற்கேற்ப மசோதா மாற்றி அமைக்கப்படும் என்ற வாக்குறுதி அளிக்கப்பட்டுள்ளது அதில். அதுதான் டாக்டர் மிட்டரின் சிரமம். அவரது சொந்தக் கருத்து இந்திய நாட்டு பொதுமக்கள் கருத்திற்கு நிச்சயமாக எதிராக இருந்தது. தமது கருத்து மக்கள் கருத்துக்கு மேலும் முன்னால் உள்ளது என அவர் கண்டார்.

எனவே, பொதுமக்கள் கருத்திற்கேற்ப சட்டம் மாற்றியமைக்கப்படும் என்ற அரசாங்கத்தின் உத்தேசத்தை வெளியிடும் அறிவிப்பின்

இந்த வாசகத்தைக் குறிப்பாகப் பார்த்தார். மசோதாவிற்கு எதிராகப் பெரும் அளவில் அபிப்பிராயம் உருவாக்கியிருப்பதைக் கண்டு தமது கருத்தை மாற்றிக் கொண்டார். இந்தச் சட்டமியற்றல் நாடு முற்றிலும் யும் பாதிக்ககூடியது. இக்காரணம்தான் மசோதாவிற்கு எதிரான நிலையை எடுக்க அவரைத் தூண்டியது. ஏனெனில் இது பொதுமக்கள் கருத்து. பொது மக்கள் கருத்துக்கு மதிப்பளித்து ஒருவர் தமது சொந்தக் கருத்தைக் கைவிடுவது தர்க்கரீதியற்றதல்ல. மாண்புமிகு அமைச்சரும் மற்ற அமைச்சர்களும் கூட தங்கள் சொந்தக் கருத்துக்களைக் கொண்டிருக்கிறார்கள் என நம்புகிறேன். பொது நன்மைக்காக அவற்றை அவர்கள் கீழ்ப்படுத்தியாக வேண்டும். தங்கள் சொந்த அபிப்பிராயத்திற்கு எதிராக அமைச்சர்கள் பேசுவதை நாம் அடிக்கடி கேட்டிருக்கிறோம். அது முறையற்றது அல்லது தவறு ஆகாது. இது முழுவதும் இயல்பானது. பொதுமக்கள் கருத்தை தெரிந்து கொண்டு அதற்கு உகந்தாற்போல் மசோதாவை மாற்ற அல்லது திருப்பி எழுத வேண்டுமென்ற மாபெரும் பொது நலப் பொறுப்பை இங்கு டி.என். மிட்டர் ஏற்றுக் கொண்டார். நான் கேட்கிறேன்: டி.என். மிட்டர் தமது கருத்தை மாற்றிக் கொண்டதில் முறையற்றது ஏதாவது உள்ளதா? ஒரு முக்கியமானப் பணியை அவர் ஏற்றுக் கொண்டார். அது என்ன? பொது மக்களின் கருத்தைக் கண்டறிவதே அந்தப் பணி. பொதுமக்கள் கருத்து மசோதாவுககு எதிராக இருந்தது. சாட்சியம் எடுக்கப்பட்டபோது அவரே அங்கு இருந்தார். வாய் மூலம் அளிக்கப்பட்ட சாட்சியத்தின் ஒரு வாசகம் மிக முக்கியத்துவம் வாய்ந்தது. அது சிறப்பாகக் குறிப்பிடப்பட்டிருந்தது. லாகூரில் குழு சாட்சியங்களை எடுத்துக் கொண்டிருந்த போது.....

மாண்புமிகு டாக்டர் பி.ஆர். அம்பேத்கர்: கருப்புக் கொடிகளால் அவர்கள் வரவேற்கப்பட்டார்களா?

திரு. நசிருத்தீன் அகமது : அதற்கும் மேலே. பெரும் எண்ணிக்கையில் மாதர்கள் - ஆயிரக்கணக்கில் - சரியான எண்ணிக்கை எனக்கு நினைவில் இல்லை - கறாரான எண்ணிக்கை பற்றி அவைக்குத் தொந்தரவு அளிக்க நான் விரும்பவில்லை.

திரு. அவைத் தலைவர்: எந்த ஆண்டில்?

திரு. நசிருத்தீன் அகமது : விசாரணை சம்பந்தமாக 1945ல் அவர்கள் லாகூர் சென்றனர். சாட்சியம் பெறப்படுவதை ஏராளமான மகளிர் முற்றிலுமாகத் தடுத்தனர். அவர்கள் கூறினார்கள்: ''நாங்கள்

இதை விரும்பவில்லை. அது எங்கள் நன்மைக்கு உதவாது. எங்கள் கருத்துக்கு எதிரானது அது.''

திரு. பாபு ராம்நாராயண் சிங் : சபாஷ், சபாஷ்!

திரு. நசிருத்தீன் அகமது : உண்மையில் நிலைமை மிக மோசமாக இருந்தது. ஆயிரக்கணக்கான மகளிர் மசோதாவை எதிர்க்கும் காட்சியை அவர் எதிர் கொண்டார். அவர்களையும் அவர்களின் உணர்வுகளையும் அடக்குவது கஷ்டம் என்பதால், மேற்கொண்டு பணியை தொடர முடியவில்லை. சாட்சியம் முற்றிலுமாக நிறுத்தப்பட்டது. இதுதான் அவர் குறிப்பிட்டிருந்தது. அவர் முரணான நிலையை எடுத்ததாகக் குற்றம் சாட்டப்பட்டால், ஓரளவாவது நேர்மையாக இருந்தார் என்று அவரைப் பாராட்டலாம்.

திரு. பாபுராம் நாராயண் சிங் : சபாஷ்! சபாஷ்!

திரு. நசிருத்தீன் அகமது : ஒரு கருத்து தவறு என்று நிரூபிக்கப்பட்ட பின்பும் அந்த கருத்தையே விடாப்பிடியாகக் கொண்டிருப்பது முரணற்றதா? இது முரணானது; இது விடாப்பிடியானது. இது நல்லதுமல்ல, நியாயமானதுமல்ல. ஆண்கள் கருத்து மட்டுமல்லாமல் பெண்கள் கருத்தும் முற்றிலும் தனக்கு எதிராக இருப்பதைக் கண்ட இந்த கனவான். தாமும் அதை எதிர்ப்பதாகக் கூறினார். எப்பொழுதோ கூறப்பட்ட ஒருவருடைய சொந்தக் கருத்தை மேற்கோள் காட்டுவது நியாயமானதாக, அல்லது முறையானதாக இருக்குமா? அப்படியாயின், மாண்புமிகு அமைச்சரின் உரைகளிலிருந்தும் எழுத்துக்களிலிருந்தும் அவருக்கு எதிராக மேற்கோள் காட்ட முடியும். அது நியாயமாகாது. என்ன எழுதப்பட்டாலும் அல்லது பேசப்பட்டாலும் அது சூழ்நிலைக்கேற்ப எடுத்துக் கொள்ளவேண்டும். பொதுமக்கள் நன்மைக்காக நாம் பல சமயங்களில் செயல்பட வேண்டிவரும். அந்த நோக்கத்திற்காக நாம் சொந்தக் கருத்தை விட்டுவிட வேண்டும். எனவே மக்களின் கருத்திற்கு உகந்ததாக டாக்டர் மிட்டர், தம் சொந்தக் கருத்தை விட்டுவிட்டதன் மூலம் தேசபக்த உணர்வோடும் துணிச்சலாகவும் நடந்து கொண்டார். இதில் டாக்டர் மிட்டர் தமது தேசபக்தக் கடமையை ஆற்றினார். இது குறித்து எந்தப் பழியையும் அவர்மீது சுமத்தக்கூடாது.

இதே சமயம் மரியாதைக்குரிய மற்ற உறுப்பினர்கள் என்ன செய்தார்கள்? அவர்களைக் கடுமையாக சாட நான் விரும்பவில்லை.

ஆனால், பொதுமக்கள் கருத்தின் வெளிச்சத்தில் மசோதா பரிசீலிக்கப் படும் என்று அவர்கள் வாக்குறுதி அளித்துவிட்டு, தங்கள் சொந்த கருத்திலேயே நின்றனர். உண்மையில் தமது கருத்தை மாற்றிக் கொண்டதற்காக டாக்டர் மிட்டரைக் கேலி செய்தனர். ஐயா, நமது கருத்துக்களை ஒருபொழுதும் மாற்றிக் கொள்ளக் கூடாதா? அப்படியாயின் மனித சமுதாயம் விவேகமான பாதையிலிருந்த விலகிப்போய்விடும். நாம் நமது கருத்துகளை மாற்றிக் கொள்ள வேண்டும்.

பிற்பகல் 3 மணி

திரு. அவைத் தலைவர் : அமைதி, அமைதி மதிப்பிற்குரிய உறுப்பினர் பொது கோட்பாடுகள் போன்ற விஷயங்களை அவசிய மின்றி பேச வேண்டியதில்லை என நான் அவருக்குக் கூறலாமா? தான் கூற வந்த விஷயத்தின்பால் அவையின் கவனத்தை ஈர்த்து அடுத்த விஷயத்திற்கு அவர் செல்லவேண்டும். இவ்வாறு அவர் தொடர்ந்து உரையாற்றிக் கொண்டிருந்தால் - அவர் இப்பொழுது இரண்டு நாட்களாகப் பேசியுள்ளார் - விவாதத்திற்கு முடிவே இருக்காது. இம்மாதிரியே அவரை தொடர்ந்து அனுமதிக்க நான் விருப்பப்படவில்லை. ஒரு நியாயமான நேரத்திற்குள் அவர் தமது உரையை ஒரு முடிவுக்குக் கொண்டுவர வேண்டும். மேலும் 15 நிமிஷங்கள் போதுமானது என்று நினைக்கிறேன்.

திரு. நசிருத்தீன் அகமது: தங்கள் முடிவுக்கு நான் தலை வணங்குகிறேன். ஐயா, இந்த 15 நிமிஷங்களும் முற்றிலுமாக என் னுடையதாக இருக்கும் என்று நம்புகிறேன்.

திரு. அவைத் தலைவர் : ஆம் 3-15 மணிக்கு அவர் முடிக்கலாம்.

திரு. நசிருத்தீன் அகமது : அடுத்து, நாம் ஒரு ஜனநாயக அமைப்பு என்ற உண்மையை வலியுறுத்திக் கூற விரும்புகிறேன். ஒரு ஜனநாயக அமைப்பாக நாம் செயல்பட்டு வருகிறோம். நமது சமுதாயத்திற்கு ஜனநாயகம் பொருத்தமற்றது என்று நாம் கூற முடியாது. ஜனநாயகம்தான் நம்மை இந்த நிலைக்கு உருவாக்கியது. பிரிட்டிஷ் அரசாங்கத்திலிருந்து அதிகாரத்தை பெற ஜனநாயகம் நமக்கு உதவிற்று. நமது அரசியல் சாசனத்தை உருவாக்க ஜனநாயகம் நமக்கு அதிகாரம் வழங்கிற்று. இதே போல் இந்துச் சட்ட விஷயத்திலும் ஜனநாயகம் தனது நலன்களைப் புரிந்து கொள்வதில் போதிய அறிவாற்றலும் திறமையும் பெற்றிருக்கும் என்பதில் ஐயமில்லை. எனவே பொதுமக்கள் கருத்தை அலட்சியப்படுத்துவதோ, தவிர்ப்பதோ,

மீறுவதோஇருக்கக்கூடாது. பொது மக்கள் கருத்தை அறிந்து கொள்வதில் தீங்கு என்ன இருக்கிறது? உண்மையில், மசோதா சிதைக்கப்பட்டுள்ளது என்று கூறுகிறேன். அதில் இடைச்செருகல் செய்யப்பட்டுள்ளது. நேர்மையற்ற இடைச் செருகல்கள் இருக்கின்றன என்று இதற்குப் பொருள் அல்ல. ஆனால், நேர்மையான இடைச் செருகல்களின் எண்ணிக்கை குறைந்தது அல்ல. பைபிளிலும் இடைச் செருகல்கள் - நேர்மையான இடைச் செருகல்கள்- இருந்துள்ளன. இதே போல் மசோதாவிலும் இடைச் செருகல்கள் இருந்தன என்று கூறுகிறேன். என்றாலும், கணிசமான மாற்றங்கள் எதுவும் இருக்காது என்ற உத்திரவாதத்துடன், பொறுக்குக் குழுவுக்கு மசோதா அனுப்பப்பட்டது. அதில் மேற்கொள்ளப்பட்ட மாற்றங்கள் உறுப் பினர்களின் பார்வைக்கு வந்தது. என்றாலும், ஐயா, எவர் உதவியும் இல்லாமல் எல்லா மாற்றங்களையும் கவனிப்பது எவர் ஒருவருக்கும் சாத்தியமானதா? நடைமுறைக்கு உட்பட்டதா? உண்மையில் எல்லா மாற்றங்களையும் கவனத்தில் கொள்வது சாத்தியமானதல்ல. இலாகா மசோதா மூலமசோதாவின் மறுபதிப்பு மட்டுமே என்றும், அதில் எந்த கணிசமான மாற்றமும் செய்யப்படவில்லை என்றும் பொறுக்குக் குழுவிற்குக் கூறப்பட்டது. அதை அப்படியே பரிசீல னைக்கு எடுத்துக் கொள்ளும்படி கோரப்பட்டது. எனவே, மாற்றங் களைத் தங்கள் கவனத்தில் கொண்டுவரவும் அவற்றை பரிசீலிக்கவும் அவர்கள் தவறிவிட்டனர். அது அவர்களின் தவறு அல்ல. இத்தகைய சூழ்நிலைகளில், பொறுக்குக் குழு உறுப்பினர்கள், அவர்களால் சாத்தியமான அளவு முயன்றும், உணர்வு பூர்வமாக இல்லாமலே உத்திரவாதத்தின் காரணமாக பல முக்கிய மாற்றங்களை கவனிக்கத் தவறிவிட்டனர். பின்பு, ஐயா, இது எப்படியாயினும், இவ்வளவு அதிகம் மாற்றங்கள் இருந்தால் இந்த மாற்றங்கள் கணிசமானவையாக இருந்தால், மீண்டும் பிரசுரிக்கத் தேவைப்படும் அளவுக்கு மாற்றம் செய்யப்படவில்லை என்று அளிக்கப்பட்டுள்ள உத்திரவாதம் வழக்கமான உத்திரவாதம் மட்டுமே. நிலையாணை 41(5) ன் கீழ் மறுபடியும் பிரசுரிக்க தேவைப்படும் அளவுக்கு மசோதா மாற்றப்படவில்லையென்றும், பொறுக்குக் குழு திருத்தம் செய்தபடி மசோதா நிறைவேற்றப்படலாம் என்றும் அவர்கள் கூறினர். இது வழக்கமாக அளிக்கப்படும் சான்றிதழ். எல்லாவித அக்கறையுடன் நான் கேட்கிறேன். செய்யப்பட்ட மாற்றங்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ள நிலையில், மசோதா கணிசமானஅளவு மாற்றப்படவில்லை என்று கூறப்படுகிறதா? மூலமசோதா மீது பொது மக்களின் கருத்தை நாம் பெற்றோம். பொது மக்கள் கருத்து பெறப்பட்டபோது அந்தக் கருத்து அதற்கு எதிராக இருந்தது. எனவே, பொது மக்கள் கருத்தை நாம் கண்டறிய வேண்டும்.

மேலும் பல்வேறு மாகாண அரசாங்கங்களுக்கு அவற்றின் கருத்தறிய அனுப்பப்பட்டது. பல்வேறு மாகாண அரசாங்களின் கருத்து அவையில் குறிப்பிடப்படக் கூடவில்லை. அவை தொகுக்கப்பட்டு உறுப்பினர் களுக்கு அனுப்பப்பட்டன. எனினும் வங்காள அரசாங்கத்தின் கருத்தோடு மட்டும் என்னைக் கட்டுப்படுத்திக் கொள்கிறேன். வங்காளத்தில் எதிர்ப்பு மிக அதிகம் என்று எத்தகைய பயமுமின்றி அடித்துக் கூறுகிறேன். **மிதாக்ஷரா** வாரிசுரிமை முறைமையை நீக்கிவிட்டு குடும்ப வாழ்க்கை என்ற அவர்களின் தத்துவத்தை ஏற்றுக் கொண்டு, வங்காளத் திற்கு மரியாதை செய்யத் தாங்கள் உத்தேசித்திருக்கிறீர்கள். இதற்கு வங்காளத்தில் மிக அதிக எதிர்ப்பை நீங்கள் சந்திப்பீர்கள்.

மதிப்பிற்குரிய ஓர் உறுப்பினர்: ஆட்சேபம் எல்லா இடத் திலிருந்தும்தான் வருகிறது.

திரு. நசிருத்தீன் அகமது: நிச்சயமாக, ஒவ்வொரு இடத் திலிருந்தும் ஆட்சேபம் வருகிறது. ஆனால் மிக அதிக ஆட்சேபம் வங்காளத்திலிருந்துதான் கிளம்புகிறது. அது மிக விடாப்பிடியானது, ஆதார அடிப்படையிலானது. கல்விகற்ற மற்றும் பண்பாடுடைய பெண்கள் உட்பட, வங்காளம் முழுவதிலும் இந்த மசோதா விரும்பப் படவில்லை என்பது தெள்ளத் தெளிவு. உண்மையில், அமரர் அசுடோஷ் முகர்ஜியின் துணைவியார், டாக்டர் முகர்ஜியின் தாயார் லேடி ராணி முகர்ஜி போன்ற ஏராளமான இதர பெண்மணிகள் இந்த முயற்சியை எதிர்க்கின்றனர்.

டாக்டர் மனோ மோகன் தாஸ் : மற்றப் பெண்மணிகள் யார்? அவர்களின் பெயர்களைக் கூற முடியுமா?

திரு. நசிருத்தீன் அகமது: விரைவில் முடிக்க வேண்டுமென்று அவைத் தலைவரின் வேண்டுகோளை நான் மதிக்க வேண்டும். மதிப்பிற் குரிய என நண்பருக்கு அவைத் தலைவரின் வேண்டுகோளுக்கு மேலாக முன்னுரிமை நான் கொடுக்க முடியாது. ஐயா, அறிக்கையில் பெயர்கள் உள்ளன. அவர்களின் பெயர்களைக் குறிப்பிடும்படி கோரும் எனது மதிப்பிற்குரிய நண்பரின் வேண்டுகோளைப் பார்த்தால் அதை அவர் படிக்கவில்லை என்பதையே காட்டுகிறது. இந்தக் கருத்துத் தொகுப்பு படிக்கப்படவில்லை என்பது அனுதாபப்பட வேண்டிய விஷயம். அறிக்கை எல்லோருக்கும் (உறுப்பினர்களுக்கும்) வழங்கப் படவில்லை என்பது வருந்தத்தக்கது. தகவலை சேகரித்து அதை அவைக்கு அளிக்க தனி நபர்கள் உழைப்பையும் பணத்தையும் செலவழிக்க

வேண்டியுள்ளது வருந்தத்தக்கது. ஆனால் பெயர்கள் ஆவணத்தில் உள்ளன. ஆவணத்தில் உள்ள விவரங்கள் பற்றி எந்த ஓர் உறுப்பினரும் கேள்விகேட்பது பயனற்றது. இந்த விஷயம் பற்றி நான் குறிப்பிட வேண்டியிருப்பது வருந்தத்தக்கது.

நல்லது, ஐயா, வங்காளத்தில் பெருமளவில் எதிர்ப்பு உள்ளது. கல்கத்தா உயர்நீதிமன்றத்தில் ஐந்து உயர்நீதிமன்ற நீதிபதிகள் உள்ளனர். அவர்களில் ஒருவர் பெடரல் நீதிமன்றத்தை அலங்கரிக்கிறார். அவர்கள் கருத்தையும் அறிக்கையில் காணலாம். அது டாக்டர் மிட்டரின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் கல்கத்தா உயர்நீதி மன்றத்தின் முன்னாளைய நீதிபதிகள் உள்ளனர். அவர்களில் ஒருவர் திரு.என்.சி. சட்டர்ஜி. அவர் உயர்நீதிமன்றத்தில் நீதிபதியாக இருக்கிறார். அதற்கு எதிராக உள்ளார் அவர்.அப்பொழுது இந்து மகாசபை டாக்டர் சியாமபிரசாத் முகர்ஜியின் தலைமையில் இருந்தது. தலைவர் டாக்டர் முகர்ஜியின் சம்மத்துடன்தான் ஒரு முக்கிய விஷயம் பற்றிய இந்த மசோதாவை இந்து மகாசபை எதிர்த்து என்பது தெளிவு. அடுத்து, இந்தியத்துணைக் கண்டமெங்கிலும் புகழ்பெற்ற சட்ட நிபுணரான டாக்டர் ஆர்.பி.பால் இதை எதிர்க்கிறார். அவர்களின் கருத்துக்கள் நம் முன்னால் உள்ளன. வங்காளத்தில் உள்ள இந்தக் கருத்தை கண்டும் வங்காளத்திலிருந்த வந்துள்ள ஓர் உறுப்பினர் பெயர்களைக் கேட்டிருப்பது கண்டு நான் அதிசயப் படுகிறேன்.

எனவே, ஐயா, பொது மக்களின் கருத்தைப் பெறுவதற்காக இந்த மசோதா பொது மக்களுக்கு அனுப்பப்பட வேண்டும் என பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன். இந்துக்களின் கருத்து அதற்கு எதிராக இருந்தால், அவர்கள் விரும்பாத ஒரு சட்டத்தை நீங்கள் ஏன் அவர்கள் மீது திணிக்க வேண்டும்?

மதிப்பிற்குரிய ஓர் உறுப்பினர் : அது சர்வாதிகாரம்.

திரு. நசிருத்தீன் அகமது: ஆம். அது சுத்த சர்வாதிகாரம், தேர்தல்களுக்கு முன் இது பொது மக்களுக்கு அனுப்பப்பட்டால், அது ஒருவேளை சிக்கல்களுக்கு இட்டுச் செல்லும் என்ற பயம் உள்ளது. ஆனால் தேர்தல்களுக்கு முன்பு இதை நீங்கள் நிறைவேற்றிவிட்டால் என்ன சிக்கல்கள் எழும் என்பதைத் தாங்கள் அறிவீர்களா? படிப் பறியாத மக்கள் சீற்றமும் ஆத்திரமடைவர். இந்த மசோதா அவர் களின் வாழ்க்கையைக் குலைக்கும். சர்வாதிகாரியின் ஆணையின்படி

உடனேயே தங்களது வாழ்க்கையை மாற்றிக் கொள்வது அவர்களுக்கு எளிதல்ல. பொதுமக்கள் கருத்தை முற்றிலுமாக அலட்சியப்படுத்தி நாம் இங்கு சென்று கொண்டிருப்பது போல, ரஷ்யாவில் கூட லெனின் இவ்வளவு விரைவாகவும் மனச்சாட்சி உறுத்தல் இல்லாமலும் போகவில்லை. பொதுமக்கள் கருத்தை மதிக்கும் ஒரு விருப்பமும் மற்றும் ஒரு பாவனையும் ரஷ்யாவில் இருக்கிறது. ஆனால் அம்மாதிரி விஷயங்கள் எதுவும் இங்கு இல்லை. மசோதா பொது மக்களிடம் போனால் அது நிராகரிக்கப்படும் என்ற பயத்தில் தோன்றிய அப்பட்டமான சர்வாதிகாரமே இது. பொதுமக்கள் இதற்கு சாதகமாக இருப்பதாக அறுதியிட்டுக் கூறப்படுவதை நான் பார்க்கிறேன். அப்படியாயின் இந்தச் சட்டத்தை நிறைவேற்ற பொது மக்கள் ஏன் உங்களுக்கு அதிகாரமளிக்கவில்லை? ஐயா, இது இந்துக்களுக்கு பொதுவாக தீங்கிழைக்கக் கூடியது; மாதர்களின் பரந்த நலன்களுக்கு தீங்கிழைக்கிறது; பெருமளவில் பொதுமக்களுக்குத் தீங்கானது. விருப்பமில்லாத பொது மக்கள் மீது உங்கள் கருத்தை கட்டாயமாகத் திணிப்பதில் பயன் எதுவும் இல்லை. மக்களின் சொந்த நலன் சம்பந்தப்பட்ட ஒரு விஷயமாக இது இருப்பதால் தமது கருத்தை வலியுறுத்த அவர்களுக்கு உரிமைஉண்டு. ஒரு ஜனநாயக அரசாங்கத்தில் சட்டத்துறை அமைச்சராக இங்கு வந்து, பொதுமக்களின் கருத்தை தங்கள் அதிகாரத்திற்கு ஆதாரமாக அவர்கள் கொண்டிருக்கும்போது, அந்தப் பொது மக்களின் கருத்தை அவமதிப்பதும் அல்லது தவிர்ப்பது அல்லது ஏமாற்றுவதுஅலட்சியப்படுத்துவது அவர்களுக்கு நியாயமாக அல்லது முறையாக இருக்குமா? இது ஒரு தவறான முறை, ஒரு சுற்றி வளைக்கும் போக்கு, எந்த ஜனநாயக அரசாங்க முறைக்கும் தேவைப்படாதது. மக்களால் இந்தச் சட்டம் ஆதரிக்கப்பட்டால் அவர்களிடம் நீங்கள் ஏன் போகக்கூடாது? தங்களுக்கு எது நல்லது அல்லது கெட்டது என்று தீர்மானிக்கமுடியாதபடி மக்கள் தங்கள் கருத்துக்களில் அவ்வளவு பின்தங்கியவர்களாக இருக்கிறார்களா? கேள்வி என்னவெனில் பொதுப்படையாக எது நல்லது என்பதல்ல; சூழ்நிலைமைகளில் எது நல்லது என்பதுதான். அது ஸ்தல நிலைமைகளை பொறுத்துள்ளது. நல்லவை என்று கருதப்படும் சில நடைமுறைகள் உள்ளன; நல்லதல்லாத மற்ற சிலவும் உள்ளன. எல்லோரையும் ஒரு சீராக்குகிறீர்கள்; எல்லா மக்களையும் ஒரு சீராக ஆக்க நீங்கள் முயலுகிறீர்கள்.தம்மைப் போலவே ஒவ்வொருவரையும் அறிவாற்றல் கொண்டவராகவும் ஆற்றல் நிறைந்தவராகவும் ஆக்க மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் முயற்சிக்க வேண்டும். சமத்துவமின்மையோடு ஏன் நீங்கள் நிறுத்திக் கொள்ள வேண்டும்; சமநிலையின்மை மோசமானதல்ல. சமத்துவமின்மையும்

வேறுபாடுகளும் நிலவுவது இயல்பு, இந்தியா ஒரு கண்டம் போன்ற பெரிய நாடு. அது தன்னுடைய சொந்த இயல்பாய் அமைந்த தனித்திறமைக்கேற்ப வளர்ச்சியடைந்துள்ளது. ஒவ்வொரு மாகாணமும் தனித்தன்மை வாய்ந்த சொந்த கலாசாரத்தைக் கொண்டுள்ளது. இவையெல்லாவற்றையும் ஒரே நொடியில் என் நீக்கி சட்டத்தை ஒன்றாக ஆக்குகிறீர்கள்? உண்மையில் இந்துச் சட்டத்தை வகுத்தவர்கள், அவர்கள் மிக அதிகமாக .....

மாண்புமிகு டாக்டர் பி.ஆர். அம்பேத்கர்: நீங்கள் செய்வது வார்த்தை ஜாலமே தவிர வாதமல்ல.

திரு. நசிருத்தீன் அகமது: அவர்கள் சகிப்பு தன்மை கொண்டிருந்தனர்; பலத்தைக் கொண்டு தங்கள் சட்டத்தை அமுல் நடத்தவில்லை. மனுஸ்மிருதியை படித்துப்பார்த்தால் மனு தமது சட்டத்தை ஏற்றுக் கொள்ள எவரையும் கட்டாயப்படுத்தவில்லை என்பதைக் காணலாம். ஸ்தலத்திலுள்ள பழக்க வழக்கங்களுக்கு ஏற்ப சட்டம் அமுல் செய்யப்படவேண்டுமென அவர் கூறினார். அதைப் படித்தவர் எவரும் இந்த உண்மையை அதில் காண முடியும்; எனவே இந்துச் சட்டத்தை வழங்கியவர்கள் அது ஒத்ததன்மை கொண்டதாக இருப்பதை விரும்பவில்லை. அவர்களது சட்டம் பற்றிய அவர்களது பிரசார முறையும் அவர்களது நாகரிகமும் நிர்பந்தத்தைக் கொண்டவையல்ல. பதிலாக இணக்குவித்தல் மூலம் சுதந்திரமான செயல் உரிமையை அனுமதித்தனர். எல்லாவற்றையும் நான் படித்துள்ளேன், எனவே, ஆதாரபூர்வமாகப் பேசுகிறேன்; தங்கள் சட்டங்கள் அவற்றின் சொந்த தகுதிக்கேற்பப் பரவ அவர்கள் அனுமதித்தனர்; அவர்களின் நிர்ப்பந்தத்தின் மூலமல்ல. இப்பொழுது ஸ்தல பழக்கவழக்கம் ஒரு முக்கிய பங்கை ஆற்றுவது மட்டுமல்ல, மனுவின் காலத்திலும் அவை ஒரு முக்கிய பங்கை ஆற்றின. இன்று சட்டம் வேறாக உள்ளதற்கு அதுதான் காரணம். ஸ்தல சூழ்நிலைகளுக்கு ஏற்ப அது ஒரு உள்ளார்ந்த முறை; அது கருத்து வேறுபாட்டிற்கு இட்டுச் செல்கிறது. உண்மையில் கருத்து வேறுபாடுகள் மோசமானவை அல்ல. பல்வகைத் தன்மையில் ஏற்றத் தாழ்வுகள் இருப்பது இயல்பானதே. இந்தியா ஒரு சிறிய நாடல்ல. அது ஒரு பெரிய தேசம் - ஒரு கண்டத்தின் தன்மைகளைக் கொண்டது. உண்மையில் இந்தப் பல்வகைத் தன்மையை தகுந்த காரணமின்றி நமது சிந்தனையிலிருந்து அகற்றக் கூடாது.

ஐயா, இந்த மசோவை ஒரு புது ஸ்மிருதி என்று அதாவது டாக்டர் அம்பேத்கருடைய 138வது ஸ்மிருதி என்று திரு. காமத் ஒப்

பிட்டார். இது ஒரு ஸ்மிருதியே அல்ல என்று கருதுகிறேன். ஸ்மிருதி, ஸ்ருதியிலிருந்து துவங்குகிறது. இந்த ஸ்ருதியின் கோட்பாடுகளோடு உடன்படுவதாக ஒரு பாவனை உள்ளது. இந்த மசோதா ஒரு ஸ்மிருதி அல்ல. ஆனால் ஒரு புதிய வேதம் (பண்டிட் லட்சுமி காந்த மைத்ரா : 'இது ஒரு விஸ்மிருதி') அது விஸ்மிருதி அதாவது சென்ற காலத்தை மறப்பது, எல்லாப் புனிதமான சட்டங்கள், வழக்கங்கள், விதிகள், சட்டங்கள், முடிவுகள், பிரிவு கவுன்சிலின் கோட்பாடுகள் எல்லாம் ராவ் குழுவின் அறிக்கையையும் மீறி, அம்பேத்காராலேயே ஒதுக்கித் தள்ளப்படுகின்றன. எல்லாம் போய்விட்டது. பண்டிட் மைத்ரா நல்ல நகைச்சுவையுடன் கூறியதுபோல் அது விஸ்மிருதி. அது விஸ்மிருதி அதாவது முற்றிலும் மறக்கும் இயல்புடையது. அது ஒரு புதிய வேதம். நான்கு வேதங்கள் உள்ளன. சாமவேதம் ரிக்வேதம், யஜுர் வேதம் மற்றும் அதர்வண வேதம்; புதியவேதம், டாக்டர் அம்பவேதம் என்று அழைக்கப்பட வேண்டும். இது ஐந்தாவது வேதம் - எல்லா நான்கு வேதங்களையும் அலட்சியப்படுத்தும் வேதம். இந்த வேதம் மற்ற வேதங்களை அகற்றி அவற்றின் இடத்தில் அமர்கிறது ஐயா. நான் தங்களுக்கு நன்றி செலுத்துகிறேன்.

***பண்டிட் முகுத் பீஹாரி லால் பர்கவா:** ஐயா, அவைத் தலைவர் அவர்களே, நேற்றிலிருந்து இந்துச் சட்டத் தொகுப்பைப் பற்றி விவாதித்துக் கொண்டிருக்கிறோம். பிப்ரவரியிலும் அதை நாம் விவாதித்தோம். மிகவும் கருத்து வேறுபாட்டுத் தன்மை கொண்ட இந்து சமுதாயத்தின் கட்டமைப்பையே முற்றிலுமாகத் தகர்க்கும் தன்மை கொண்ட இந்த சட்டமியற்றல் நடவடிக்கையின் சிறப்பு அம்சங்களைப் பற்றி நான் விவாதிக்க முனையும் முன், ஜீவாதார முக்கியத்துவம் வாய்ந்த சட்டமன்றச் செயல் முறை சம்பந்தமாக இந்து சமுதாயத்திற்கு வாழ்வா, சாவா என்ற விஷயத்தைக் கையாள அரசாங்கம் மேற்கொண்டுள்ள முறை சம்பந்தமாக எனது உறுதியான கண்டனத்தைத் தெரிவிக்க விரும்புகிறேன். அநேகமாக கடைசி நாளன்று அதாவது 1948 ஏப்ரல் 9ம் தேதி, இந்த மசோதா சட்டப் பேரவையில் அவசரம் அவசரமாக விவாதிக்கப்பட்டது என்பது நன்கு அறிந்த ஒன்றே. இந்த அவையில் மிக மிகச் சாதாரணமாக சட்டமியற்றுவதற்கான மசோதா வழக்கமாக எந்த அளவுக்கு விவாதிக்கப்படுமோ, அந்த அளவுக்குக் கூட அது விவாதிக்கப்படவில்லை. மேலும் இந்தக் கூட்டத்தொடரில் இந்த விஷயத்தை முரண்பாடில்லாத முறையில் பரிசீலனை செய்ய வகை செய்வதற்குப்

★ அ.நி.ச (சட்டப்பேரவை) விவாதங்கள், தொகுதி 3, பாகம் 2, 1949 ஏப்ரல் 2ம் தேதி, பக்கங்கள் 2276-89.

பதிலாக, வரவு செலவு பற்றிய விவாதம் காரணமாக நேரம் இல்லை என்று சாக்குபோக்குக் கூறி இந்த அவையில் விரைவாக இச் சட்டத்தை நிறைவேற்ற அரசாங்கம் விரும்புகிறது. இத்தகைய அதி முக்கியத்துவம் வாய்ந்த ஒரு மசோதாவை - சட்டப் பேரவை வரலாற்றில் இவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்த ஒரு மசோதா பரிசீலிக்கப்பட்ட தில்லை - இவ்வளவு விரைவாக நிறைவேற்ற முயல்வது இந்த அவைக்கு நியாயமாகுமா என்பதைப் பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன். இந்த அவையின் பணி அதன் துவக்க காலத்திலிருந்து ஒரு போதும் இம்மாதிரி நடந்ததில்லை. எனினும் இதில் முடிவு செய்ய வேண்டியது அரசாங்கமே. மிக முக்கியமான அவசர சட்டங்கள் இருக்கும்போது, இந்த விஷயத்திற்கு இவ்வளவு அவசரம் ஏன், இதற்கு முன்னுரிமை ஏன் என்று சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று அரசாங்கத்தை எச்சரிக்கை செய்வது எனது கடமை என்று நினைக்கிறேன். நூற்றாண்டுகளாக அன்னிய ஆக்கிரமிப்பின், அன்னியர் ஆட்சியின் தாக்குதலை சமாளித்து தொடர்ந்து வாழ முடிந்திருக்கும் இந்துச் சமுதாயத்திற்கு என்ன ஏற்பட்டுவிடும் எனக் கேட்கிறேன். இந்தச் சட்டத்தை சட்டத் தொகுப்பு ஏட்டில் கொண்டு வராவிடில் அது மடிந்துவிடுமா? எனது கற்றறிந்த நண்பர் திரு. நசிருத்தீன் அகமது சூசகமாக எடுத்துக்காட்டியதுபோல, இந்த மசோதாவுக்கு ஆதரவாக பொது ஜனக் கருத்து உள்ளது என்று சட்டத்துறை அமைச்சர்கருதுவதுதான் வழக்கத்திற்கு மாறான இந்த அவசரத்திற்கும், வேகத்திற்கும் காரணம் என்று கூறிக்கொள்கிறேன் ஐயா. பொதுமக்களின் கருத்து இந்த மசோதாவுக்கு எதிராக உள்ளது என்று துணிந்து கூறுகிறேன். இந்த மசோதாவுக்கு சாதகமாகப் பொதுமக்களின் கருத்துஉள்ளதை நிர்ணயிக்கும் அளவுகோல் எது? இது விஷயத்தில் கையாளக் கூடிய சாத்தியமான அளவுகோல் எது? பொதுமக்களின் கருத்துதான் இந்த அளவு கோலாகும். ராவ் குழுவால் கண்டறியபட்ட கருத்து இந்த மசோதாவின் ஒவ்வொரு பிரிவுக்கும் பெருமளவு எதிராக இருந்தது என மிகத் தன்னடக்கத்துடன் சுட்டிக்காட்டு கிறேன். எனவே, ஐயா, பொதுமக்களின கருத்தை எந்தப் புது கண்டறிதலுமில்லாமல், இந்தச் சட்மியற்றுலுக்கு நாட்டில் பொது மக்களின் ஆதரவு உள்ளது என்று சட்டத்துறை அமைச்சர் உட்பட எவரும் உரிமை கொண்டாடுவது தகாதத் துணிச்சலேயாகும். இந்து சட்டம் தொகுக்கப்படுவதற்கு அவசியம் எங்குள்ளது? அதன் பயன் பாடு எவ்வாறு இருக்க வேண்டும் என்ற கேள்வி எழுகிறது. இந்துச் சட்டம் தொகுக்கப்படுவதைக் கோரியது யார்? இந்து சட்டம் தொகுப்பது இரு நிலைகளில்தான் அத்தியாவசியமாகும் என்பதை நாம் அறிவோம். ஒரு குறிப்பிட்ட விஷயத்தில், நீதிமன்றக் கருத்தில்

ஒரு முக்கிய முரண்பாடு இருந்தால், சட்டப்பேரவை தலையிட்டு தெளிவுபடுத்துவது அத்தியாவசியமாகிறது. மற்றொரு நிபந்தனை என்னவெனில், சட்டத்தில் மாற்றம் செய்யப்படுவதை பொது மக்களின் கருத்து விரும்புவதாகும். இந்துச் சட்டத்தொகுப்பை நியாயப்படுத்தக் கூடியது இந்த இருநிலைகள் தான். இந்த குறிப்பிட்ட விவகாரத்தில் இந்த இரு நிலைகளில் எதுவும் நிலவவில்லை எனக் கூறுகிறேன். இந்துச் சட்டத்தின் பிரதானக் கோட்பாடுகள் சம்பந்தப் பட்டவரை, அவை நன்றாகப் புரிந்துகொள்ளப்படுகின்றன, மற்றும் நன்றாக நிலைப்படுத்தப் பட்டுள்ளன என்று கூற விரும்புகிறேன். இந்துச் சட்டம் குறித்த பல பாட நூல்கள், அதன் கோட்பாடுகள் **ஸ்மிருதி**களிலிருந்தும் நிபந்தாக்களிலிருந்தும் ஊகித்து உணரக் கூடியவை; வாய்மூலம் வியாக்யானம் செய்யப்பட்டு, இந்தியாவின் நீதி மன்றங்களால் விளக்கப்பட்டு அவை பிரசுரிக்கப்பட்டுள்ளன. இந்துச்சட்டத்தின் ஒவ்வொருச் சிக்கலான விஷயத்தையும் பற்றியும் தெள்ளத் தெளிவான கருத்து விளக்கங்கள் செய்யப்பட்டுள்ளன. இந்த மசோதாவைப் பரிசீலனைக்காக முன்மொழியும் போது, தமது உரையில், இந்துச் சட்டத்தில் ஆதியில் உருப்பெற்ற இந்து சமுதாயம் அல்லதுக் கூட்டுக் குடும்பங்களின் சிறப்புப் பண்புகள் நீதிமன்ற கருத்துக்களால் சிதறடிக்கப்பட்டன என்று சட்டத்துறை அமைச்சரல் சுட்டிக்காட்டப்பட்டது. ஆனால் அது இந்தச்சட்டத் தொகுப்பை நியாயப் படுத்துகிறதா? பிரிவுகவுன்சில் மற்றும் உயர்நீதிமன்றகளின் சட்டவிளக்கங்கள் இந்த சட்டக் கோட்பாடுகளை சந்தேகத்திற்கும் இடமில்லாமல் வகுத்துக் கூறியுள்ளன. அப்பாவாக இல்லாத ஒருவர் ஓர் இந்துக் கூட்டுக் குடும்பத்தின் கர்த்தர் அல்லது நிர்வாகி யாக இருக்கும் போது அவரது அதிகாரங்களாகட்டும் தகப்பனராக ஒரு கூட்டுக் குடும்பத்தின் நிர்வாகியாக அவரது செயல்பாடுகள், உரிமைகளாகட்டும், இந்துச் சட்டத்தில் நன்றாக வகுக்கப்பட்டுள்ளன. சர்ச்சைக்குரியவையாக இருந்த ஆன்மீகக் கடமைகள் பற்றிய கோட்பாடு சில காலத்திற்கு பல்வேறு உயர்நீதிமன்றங்கள் மற்றும் பிரிவு கவுன்சிலுக்கிடையே கடுமையான கருத்து வேறுபாட்டு விஷய மாக இருந்தது;அதுவும் தீர்த்து வைக்கப்பட்டது. மகனின் கடமைகள் என்ன என்பதை நாம் அறிவோம்; அவனது தகப்பனாரின் கடன்களில் எந்த அளவுக்கு அவனுக்கு பொறுப்பு உள்ளது என்பதை நாம் அறிவோம். அது போலவே, திருமணம் முதலான விஷயங்கள் பற்றியும் இந்துச் சட்டம் திட்டவட்டமாக உள்ளது. இவ்வாறெல்லாம் இருக்கும் போது இங்கு ஒரு கேள்விஎழுகிறது; இந்துச் சட்டம் தொகுக்கப்பட வேண்டும் என்று அரசாங்கத்தைக் கோரும் அபரிமிதமான மக்கள் கருத்து எதுவும்உள்ளதா? அம்மாதிரி எதுவும் இல்லை என்பதே என் பணிவான கருத்து. இந்துச் சட்டத்தைத் தொகுக்கும் முயற்சிக்கு எந்த நியாயமும் இல்லை.

தொகுப்பின் வரலாற்றைப் பொறுத்தவரை, இவ்வாறு முயற்சி செய்வது இதுதான் முதல் தடவையல்ல. பிரிட்டிஷ் ஆட்சியின் போது, இந்துச் சட்டத்தை தொகுப்பதற்கு பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டதை அவையின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அப்படிப் பட்ட ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் நியாயமான, ஆழமான காரணங் களால் விஷயம் ஒத்தி வைக்கப்பட்டு வந்தது என்பனக் கூறிக் கொள் கிறேன். 1833ம் ஆண்டிலேயே, அரசர் ஆணையுடன் ஒரு கமிஷன் அமைக்கப்பட்டது. 1853ம் ஆண்டு ஒரு சட்டக் கமிஷன் நியமிக்கப் பட்டது. 1856ம் ஆண்டு பிரசுரிக்கப்பட்ட இந்தக் கமிஷன்களின் அறிக்கைகள், இந்தச் சட்டத் தொகுப்பு முயற்சி பயனற்றதாகும் என்று கூறின இந்து சட்ட வளர்ச்சியை இது பாதிக்கும் என்ற காரணத் தால் இந்த யோசனை நிராகரிக்கப்பட்டது. மீண்டும், இதே போல், 1861ம் ஆண்டிலும் 1921ம் ஆண்டிலும், முந்திய விஷயத்தில் இந்திய விவகார அமைச்சரும், பிந்தியதில் இந்திய விவகார அமைச்சரின் அனுமதியுடன் இந்தியாவின் கவர்னர் - ஜெனரலும் சட்டக் கமிஷன் களை நியமித்தனர். சட்டத் தொகுப்பு விஷயம் பற்றிய அவற்றின் முடிவு சட்டக் கமிஷன்களின் முடிவுக்கு ஒத்ததாக இருந்தது. 1921 மார்ச் 23ம் தேதி, இந்த அவையின் புகழ்பெற்ற உறுப்பினர், இந்துச் சட்டத்தை தொகுக்கும் நோக்கத்திற்காக ஒரு கமிஷன் நியமிக்கக் கோரும் அரசு சார்பற்ற ஒரு தீர்மானத்தை அவையின் முன் வைத்தார். அந்தத் தீர்மானம் அவையில் விவாதிக்கப்பட்ட போது, இந்துச் சட்டத்தில் புகழ்பெற்ற சட்ட நிபுணரும், நீதித்துறை வல்லுனருமான டாக்டர் தேஜ் பகதூர் சாப்ருவின் பொறுப்பில் இருந்தது சட்ட இலாகா. இந்து சட்டத்தைத் தொகுப்பது அத்தியாவசியமா இல்லையா, அவசியமா அல்லது இல்லையா, இந்து சமுதாயத்திற்கு நல்லதா அல்லது இல்லையா என்று காரசாரமாக வாதிக்கப்பட்டது. மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் சர்.டி.பி.சாப்ரு - அவரே இந்து சட்டநிபுணர் - அரசாங்கத்தின் சார்பாக அளித்த பதிலை அவையின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். சமுதாயத்தின் தனி மனிதர் சம்பந்தப்பட்ட சட்டங்களைத் தொகுப்பது எளிதான காரியமல்ல; ஒரு பிரமாண்டமான பணியாகும் அது; அதற்கு பல நூற்றாண்டு காலத்திற்கு முந்திய சட்ட வல்லுநர்களின் சட்டத் திறமைகளும் சக்திகளும் தேவைப்படும் என்று அவர் சுட்டிக் காட்டினார். 1834முதல் 1896வரை 50 ஆண்டுகள் உழைப்புக்குப் பிறகு குறைந்தது மூன்று கமிஷன்களால் வரையப்பட்ட ஜெர்மன் சட்டத் தொகுப்பு பற்றி அவையின் கவனத்திற்குக்கொண்டுவந்தார். இது தொகுக்கப்படுவதற்கு ஆதரவாகவும் எதிராகவும் பிரபல நிபுணர்களின் இரு பிரிவுகளுக்கிடையே தொடர்ந்த கடினமான போராட்டத்திற்குப் பிறகு ஒரு பிரிவு சவோக்ரியால் பிரதிநிதித்துவப்படுத்தப்பட்டது.

மற்றது தீபாட்டால் பிரதிநிதித்துப் படுத்தப்பட்டது. இந்த போராட்டம் அப்பொழுது 4 ஆண்டுகளை எடுத்துக் கொண்டது - 1896ல்தான் ஜெர்மன் சட்டத் தொகுப்பு இறுதி வடிவம் பெற்று எழுத்து உருவம் பெற்றது. 50 ஆண்டுக்கால தொடர்ந்த உழைப்பிற்குப்பின் 1900ல் தொகுப்பு வரையப் பெற்று ஜெர்மன் பேரரசின் சர்க்காருடைய ஒப்புதல் பெற்றது. ஐயா, ஐரோப்பாக் கண்டத்தில் சுவிட்சர்லாந்து நாட்டு சட்டத்தொகுப்பும் இதரச் சட்டத் தொகுப்புகளும் அந்தந்த நாட்டின் மிகச்சிறந்த சட்ட நிபுணர்களின் முயற்சியின் விளைவாக வரையப்பட்டன. இந்த நாடுகளின் நிலைமையை இந்தியாவின் நிலைமைகளோடு ஒப்பிட்டுப் பாருங்கள்; இந்தியாவின் புராதன வரலாறு, புராதன காலத்திலிருந்து இன்று வரை இந்துச் சட்டத்தின் வளர்ச்சியில் தொடர்ந்து பங்காற்றி வந்தன. இந்துக்களின் தனி மனிதச் சட்டங்களைத் தொகுப்பது வீணானதாகும். இந்த சட்டத்தின் தோற்றுவாய் எது என்று பணிவுடன் கேட்கிறேன். அது மனிதத் தன்மை கொண்டதல்ல; எந்தப் பொருளில் எனில், இந்துச் சட்டத்தைப் பிரகடனப்படுத்த எந்த மனித சக்தியும் ஒரு போதும் முயன்றதில்லை. சட்டத்தின் அங்கீகாரத்திற்குப் பின்னால் உள்ளது இறையாண்மை அதிகாரம் அல்ல. ஆனால் கற்றறிதலின் பிரமாணமும் ரிஷிகளின் தபமுமாகும். அவற்றின் தோற்றுவாயைக் கண்டறிவது கடினம். **ஸ்மிருதி**க்காரர்கள் 138 பேர்கள் என்று கூறப்படுகிறது. சட்டங்களின் மூலக்கருத்துக்களை உண்டாகக்க அவர்கள் முயலவில்லை. அவர்கள் தங்கள் **ஸ்மிருதி**களுக்கு வேதங்களை ஆதாரமாகக் கொண்டனர். **ரிக் வேதம்** உலகத்தின் அதிமிக புராதன நூல் என்று நாம் அறிவோம். இந்தியாவில் பிரபலமடைந்து இருந்த ஆய்வு நூல்களை ஆக்கிய அறிஞர்களான **விக்னேஸ்வரர்** மற்றும் **ஜிமித வாகனா**வும் கூட இந்துச் சட்டத்தைத் தொகுக்க முயற்சி செய்யவில்லை; அதேபோல் சமுதாயத்திற்காக புதிய சட்டத்தை சிருஷ்டிக்கவுமில்லை. **ஸ்மிருதிகள்** மீது ஆதாரமாகக் கொண்டவை அவர்களின் கருத்துரைகள். நீண்ட ஆண்டுகள் நிலவிய பிரிட்டிஷ் மற்றும் முஸ்லீம் ஆட்சியின் போது, செய்யப்பட்டது என்னவெனில், இந்துச் சட்ட கோட்பாடுகள் பற்றிய ஒரு எளிய வியாக்யானமே. இந்துச் சட்டத்தின் தொகுப்பு இப்பொழுது ஏன் வேண்டும்? ஜெர்மனியும் சுவிட்சர்லாந்தும் இந்தியாவோடு ஒப்பிடத்தக்க முக்கியத்துவம் வாய்ந்தவை. அந்த நாடுகள் தங்கள் உறவுகளை கட்டுக்குள் வைக்க திருப்திகரமான சட்டத்தொகுப்பை உருவாக்க 50 அல்லது 60 ஆண்டுகள் எடுத்துக் கொண்டன என்றால், இந்தியாவில், அதுவும் இந்து சட்டத்தின் மூலமும் தோற்றுவாயும் புதிராக இருக்கும் போது, சட்டத்தைத் தொகுக்க நாம் ஏன் முயல வேண்டும்? வேறுபாடுகள் கொண்ட இந்த நாட்டில் ஒருமைப்

பாட்டைப் புகுத்த முயலுவதாக நமக்குக் கூறப்படுகிறது. மேலும் ஆண்டாண்டுக் காலமாக ஆண்களின் கொடுங்கோன்மையால் இந்து சமுதாயத்தில் பெண்கள் நசுக்கப்பட்டு வருகிறார்கள் என்றும் அதிலிருந்து அவர்கள் விடுவிக்கப்பட வேண்டும் என்றும் சொல்லப்படுகிறது. ஒருமைப்பாட்டைப் பொறுத்தவரை, சட்டமியற்றும் இப்போதைய முயற்சியிலும் அது சாதிக்கப்படவில்லை, சாதிக்கவே முடியாது என்று பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

(இந்தக் கட்டத்தில் திரு. அவைத் தலைவர் தமது இருக்கையிலிருந்து எழுந்து சென்றார். அதில் திரு. துணை சபா நாயகர் திரு .அனந்த சயனம் ஐயங்கார் அமர்ந்தார்)

வாரிசுரிமைச் சட்டத்தைப் பொறுத்தவரை கூட, வழக்கத்தால் முந்து பிறப்புரிமை விதி நிலவும் வழக்குகளில் அல்லது மானியம் அல்லது இனாம் பற்றிய வழக்குகளில் இந்தச் சட்டமியற்றலில் வகுக்கப்பட்ட வாரிசுரிமை பொருந்தாது என்று அவர்கள் கூறியுள்ளார்கள். அதுபோலவே, பிரிவால், சபிண்டா அதாவது ஆண்வழி முறை உறவுகளுக்கிடையே திருமணம் தடைசெய்யப்பட்டிருந்தாலும், அது ஸ்தல வழக்கத்திற்கு உட்பட்டு இருக்கும். அந்த வழக்கம் நிலவும் இடத்தில் திருமணம் செய்து கொள்ள அனுமதிக்கப்படும். ஒரு சீரான தன்மை என்பது இந்த சட்டமியற்றுதலை வரைந்தவரை ஆவியாக இன்னமும் சுற்றிக் கொண்டிருக்கிறது. மேலும் அடிமைத்தனத்திலிருந்து பெண்கள் விடுதலை என்று சொல்லப்படுவது எதிலும் முடிவதில்லை. இந்துச் சட்டம் பற்றியும் சமுதாயத்தில் பெண்களின் இடத்தைப் பற்றியும் ஆராய விரும்புகிறவர்கள் அந்த விஷயத்தை மேற்கத்திய கண்ணாடி மூலம் பார்க்காமல் நமது சொந்த நாகரிகம் என்ற கண்ணாடி மூலம் பார்க்க வேண்டும் என்று கூறுகிறேன். நமது சொந்த சட்ட மூலவர்கள் இந்த மிகக் கஷ்டமான, சிக்கலான விஷயங்களை எவ்வாறு அணுகினார்கள் என்று நாம் அவசியம் தெரிந்துகொள்ள வேண்டும். இந்தப் பிரச்சினைகள் பற்றி கீழை மற்றும் மேலைய நாடுகளில் நிலவும் கருத்துக்கள் நேர்மாறானவை. நமது வாழ்க்கை சென்ற காலத்தோடு தொடர்புள்ளது என்றும், நமது எதிர்கால வாழ்க்கையோடு தொடர்புள்ளதாக இருக்கும் என்றும் நாம் நம்புகிறோம். எனவே, நமது சட்டவிதிகள் ஒரு விசேஷ அடிப்படையில் நிலவும், அதனால் தான், இந்த விஷயங்களை இந்து சமுதாயம் முழுவதன் நலன் என்ற கண்ணோட்டத்திலிருந்து நமது முனிவர்கள், ஞானிகள் அணுகினார்கள். நமது சட்டத்தை ஒரு குறிப்பிட்ட முறையில் வகுப்பதற்கு ஊக்குவிக்க லட்சியங்களை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். இதை நலம் செய்யாவிடில், அதன் மதிப்பை நாம் மதிப்பீடு செய்ய முடியாது.

ஐயா, இந்தச் சட்டமியற்றல் தனது சொந்தச் சிறப்புத் தகுதிகளை அடிப்படையாகக் கொண்டிருக்கிறது என்றும் இன்றைய இந்து சமுதாயம் குறித்த அவரது கருத்துக்களின் அடிப்படையில் உருவாக்கப்பட்டது என்றும் சட்டத்துறை அமைச்சர் அறிவித்திருந்தாராயின் நான் கவலைப்பட்டிருக்க மாட்டேன். ஆனால் எனக்கு வேதனையளித்தது எதுவெனில், சட்டத்தின் அங்கீகரிக்கப்பட்ட கோட்பாடுகளுக்கு உகந்ததாக அதன் ஷரத்துகள் உள்ளன என்று அவர் கூறியதுதான். சாத்தான் பைபிளை மேற்கோள் காட்ட முடியும் என்பது நன்கு தெரிந்ததே. இந்தச் சட்டமியற்றலின் ஒவ்வொரு ஷரத்தும் - அது திருமணம் சம்பந்தமானதாக இருந்தாலும் அல்லது விவாகரத்து, தத்தெடுப்பு அல்லது வாரிசுரிமை சம்பந்தமானதாக இருந்தாலும் - இந்துச் சட்டத்தின் அடிப்படைக் கோட்பாடுகளுக்கு எதிராக உள்ளது. இதில் நான் எதிர்நோக்கும் விளைவு மகிழ்ச்சிகரமான ஒன்றாக இருக்காது. உண்மையில், இந்து சமுதாயத்தின் ஒவ்வொரு இல்லமும் ஒரு நரகமாக மாற்றப்படும், அதில் சகோதரனுக்கும் மனைவிக்கும் இடையே, குழந்தைகளுக்கும் அவர்கள் தந்தைக்கும் இடையே சச்சரவு ஏற்படும், இந்து சமுதாயத்தின் அடிப்படைக் கோட்பாடுகளையே இந்தச் சட்டத்தைக் கொண்டு தகர்த்தெறிய முயற்சிக்கப்படுகிறது. இது மிக முக்கியமான ஒரு விஷயம். இது குறித்து அவசியம் ஒரு வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும். அல்லது இந்தச் சட்டமியற்றலுக்கு பொதுமக்கள் கருத்து சாதகமாக உள்ளதா, அதற்கு எதிராக உள்ளதா என்று கண்டறிய ஒரு கருத்துக் கணிப்பு மேற்கொள்ளப்பட வேண்டும்.

இந்துச் சட்டம் தொகுக்கப்படுவதற்கு அவசியம் எதுவுமில்லை என்பதை நான் பணிவுடன் கூறிக் கொண்டிருந்தேன். இந்த மசோதா சட்டமாக ஆக்கப்படுவதன் மூலம் ஏற்படுத்த விரும்பும் ஒரேசீரான தன்மையை நிர்ப்பந்தத்தால் சாதிக்க முடியுமா என்ற கேள்வி எழுகிறது. கட்டாயமாக்கப்படும் சட்டத்தின் அனுபவம் என்ன? 1923ம் ஆண்டில் இந்திய அரசாங்கம் சிவில் நீதிக் குழுவை நியமித்தது. பல்வேறு சட்டங்களை ஆய்ந்து பார்த்தபின் அது ஒரு சிபாரிசு செய்தது. சொத்து மாற்றுச் சட்டம், ஒப்பந்தச் சட்டம் மற்றும் சான்றுச் சட்டம் ஆகியவற்றில் மாற்றங்கள் செய்யப்பட வேண்டும் என்பதும், விரைவிலேயே அந்த மாற்றங்களை சட்டப்பேரவை பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ள வேண்டும் என்பதுமே அந்த சிபாரிசு. அதற்குச் சட்டப் பேரவைக்கு நேரம் கிடைத்ததா? விளைவு என்ன? அச்சட்டம் கொண்டு வரப்பட்டதற்கான பயன்பாடு தீர்ந்துவிட்டது என்பது அதிகாரபூர்வமான கருத்தாக இருந்தும், சட்டம் அதன் ஷரத்துகளுக்கு ஏற்ப நடைமுறைப்படுத்தப்பட்டு வந்தது. இந்துச் சட்டத்தொகுப்பு சட்டத்தொகுப்பு ஏட்டில் கொண்டுவரப்பட்டு, மக்களின் உரிமைகளைப் பொறுத்து அது கண்டிப்பானதாக ஆக்கப்பட்டால், நிலைமை அதுவாகத்தான்

இருக்கும். இந்து சட்டம் அதன் ஆற்றலை, நெளிவுசுளுவானத் தன்மையை நிலவும் சூழ்நிலைக்களுக்கேற்ப தகவமைத்துக் கொள்வதை இழந்துவிடும்; கடுமையானதாக மாற்றிவிடும். இந்தச் சட்டத்தை தொகுப்பதன் மூலம் முரண்பாடுகளை குறைத்துவிட முடியுமா? கருத்து வேறுபாடுகளுக்கு முடிவு காணும் குறிக்கோளை சாதிக்க முடியுமா? அது சாதிக்காது என்று துணிச்சலுடன் கூறுகிறேன். பல்வேறு சட்டங்கள் பற்றிய நமது அனுபவம் எனது முடிவுக்கு ஆதரவாக இட்டுச் செல்கிறது.

உதாரணத்திற்கு இந்து மறுவிவாகச் சட்டத்தை எடுத்துக் கொள்வோம். அது 1871-ல் சட்டமாக இயற்றப்பட்டது. அது ஒரு எளிமையான சட்டம். அந்தச் சட்டத்தின் பல்வேறு ஷரத்துக்களின் வாசக அமைப்பு பற்றி ஒரு ஏகோபித்த கருத்து இருந்துள்ளதா?

திருமதி ஜி. துர்க்காபாய் (சென்னை : பொது): விதவைத் திருமணச் சட்டத்தையும் தாங்கள் எதிர்க்கிறீர்களா?

பண்டிட் முகுத் பீஹாரி லால் பர்கவா: நான் கூறுவதை எனது நண்பர் பொறுமையாக செவி மடுத்துக் கேட்பார் என நம்புகிறேன். எதிர் கருத்துகள் பால் சகிப்புத் தன்மையும் பொறுமையும் காட்ட நாம் கற்றுக் கொள்ள வேண்டும். நான் கூறுவது என்னவெனில், ஒரு சட்டத்தை இயற்றுவதால் மட்டுமே அது ஒரு சீரான தன்மைக்கும் கருத்து முரண்பாடுகளைக் தீர்ப்பதற்கும் இட்டுச் சென்றுவிடாது. 1872ம் ஆண்டு இந்து விதவை மறுமணச் சட்டத்தின் ஷரத்துகளது வாசக அமைப்பிலும் பொருள் விளக்கத்திலும் பகுதி 2ன் அமைப்பு குறித்து பல்வேறு உயர் நீதிமன்றங்களுக்கிடையே கடுமையான கருத்து வேறுபாடு உள்ளன. வழக்கத்திலுள்ள சட்டப்படி மறுவிவாகம் செய்து கொள்ளும் ஒரு பெண் அவளது கணவரின் சொத்தின் மீதுள்ள தனது உரிமையை இழக்கிறாளா என்ற கேள்வி எழுகிறது. இது தான் விஷயம். அவள் வழக்கப்படியான சட்டப்படி மறுமணம் செய்துகொள்வதாலேயே அவளது முந்திய கணவரின் சொத்தில் அவளுக்குள்ள உரிமையை இழந்து விடுவதில்லை என்று அலகபாத் உயர்நீதிமன்றம் மற்றும் அயோத்தி பிரதான நீதிமன்றங்களின் கருத்து நம்முன் உள்ளது. மற்ற உயர்நீதிமன்றம் மாற்றுக் கருத்தை எடுத்துள்ளது. அது போலவே, இந்தச் சட்டத்தில் வரும் ''சகோதரி'' எனும் சொல் குறித்த வியாக்யானம் பற்றியும் கடுமையான கருத்து வேறுபாடு உள்ளது. ''சகோதரி'' என்ற சொல் ''அரைசகோதரி'' ஐ உட்படுத்தாது என்று சில உயர்நீதி மன்றங்கள் கூறுகின்றன. அதே

சமயம், அந்தச் சொல் பற்றிய விரிவான பரிசீலனைக்குபின், அது உட்படுத்துகிறது என்ற முடிவுக்கு நாக்பூர் உயர் நீதிமன்றம் வந்தது. நான் சமர்பிப்பது என்னவெனில், மேற்கூறியுள்ளபடி, இந்துச் சட்டத்தை கட்டமைத்ததில் உள்ள கஷ்டம் இந்துச் சட்டத்தொகுப்பு உள்ளதால் முடிவுக்கு வந்து விடாது.

திரு.எல். கிருஷ்ணசுவாமி பாரதி : முரண்பாடு தொடர அனுமதிக்கப்பட வேண்டுமென்று தாங்கள் கூறுகிறீர்களா?

திரு. பண்டிட் முகுத்பீஹாரி லால் பர்கவா : இந்த மசோதா சட்டமாக ஆனாலும், முரண்பாடு இருக்குமென கூறுகிறேன். அதனுடைய பல்வேறு ஷரத்துக்களுக்கு ஒரு மாறுபட்ட முறையில் பொருள் விளக்கம் கூறும் பொறுப்பு உயர் நீதி மன்றத்திடம் உள்ளது. இந்துச் சட்டத்தைப் பொறுத்து, மாறுபட்ட கருத்துகளையும் பல்வேறு விஷயங்களையும் தீர்த்து வைக்க முடியாது. எந்தக் குறிப்பிட்ட ஒரு ஷரத்து பற்றி தங்கள் வியாக்யானத்தை அளிப்பது உயர்நீதிமன்றங்களிடமும் உச்ச நீதிமன்றத்திடமும் உள்ளது. முந்திய சட்டமியற்றல் பற்றிய நமது அனுபவம் காண்பிப்பது போல் முரண்பாடு எழவே செய்யும். எனது பணிவான முறையீடு என்னவெனில், இந்துச் சட்டத்தை தொகுப்பது ஒரு வீணான பயனற்ற முயற்சியாகும். அந்தத் திசையில் செய்யப்படும் எந்த முயற்சியும் இந்துச் சட்டம் தனது இயங்கும் தன்மை, நெளிவுசுளிவு மற்றும் அதன் ஆற்றலையும் இழக்கும், இன்றைய சூழ்நிலைமைகளில், எந்தக் கற்பனையிலும் விரும்பத்தக்கதல்ல.

எனது அடுத்த விஷயம் மிக முக்கியமான ஒன்றாகும். இந்த மசோதாவின் தோற்றமும், எந்த சூழ்நிலைமைகளில் அது தோன்றியதும், அதை மேலும் எடுத்துச் செல்வதை எவ்வாறு நியாயப் படுத்துகிறது? பின்கண்ட விஷயத்தை தங்கள் கவனத்திற்கு பணிவுடன் கொண்டுவர விரும்புகிறேன். அதாவது 1941ம் ஆண்டு இந்துச் சட்டக்குழு நியமிக்கப்பட்டது; இந்துச் சட்டத்தைத் தொகுக்கும் விஷயத்தை அது பல பகுதிகளாகப் பரிசீலித்தது; இரு மசோதாக்கள் தயாரிக்கப்பட்டன அந்தக் குழுவால். ஒரு மசோதா உயில் இல்லாமல் இந்துச் சொத்துக்கு வாரிசுரிமை சம்பந்தப்பட்டது. மற்றது விவாகம் சம்பந்தப்பட்டது. இரு சட்டமன்றங்களின் (அந்தக் காலத்தில் சட்டப் பேரவை ஒரு இரு - அவைத் தன்மையைக் கொண்டிருந்தது) கூட்டுக் கூட்டத்தில் இந்த இரு மசோதாக்களும் வந்தபோது, பகுதி பகுதியாக அல்லாமல் முழுமையானதாக இந்து சட்டம் சட்டமாக்கப்படுவது நன்றாக இருக்குமென்றும் முடிவு செய்யப்பட்டது. இந்த நோக்கத்தைக் கொண்டுதான், இன்றைய ராவ் குழு தோன்றியது.

இப்பொழுது, ஐயா, ஒரு பெண் உறுப்பினர் அவையில் உரையாற்றிய போது-நிச்சயமாக இந்த மசோதாவுக்கு சாதகமாக உள்ள தீவிர உற்சாகம் கொண்டவர் அவர் - இந்த மசோதா நாட்டிற்கு முன் பல ஆண்டுகளாக, அதாவது 10 ஆண்டுகளாக இருக்கிறது என்று கூறினார். குழு உறுப்பினர்கள் ஆயிரக்கணக்கானவர்களின் சாட்சியங்களைப் பரிசீலனை செய்தனர். மேலும் நாடு முழுவதும் ஒரு விரிவான சுற்றுப் பிரயாணத்தை குழு மேற்கொண்டது. அந்தப் பெண்மணியின் அறிவிப்பில் உண்மை மிகக் குறைவே எனக் கூறுகிறேன். ஏனெனில் குழுவினால் பரிசீலிக்கப்பட்ட சாட்சியத்தின் அளவு என்ன? அந்த சிறிய அளவிலான சாட்சியத்தின் பலம் என்ன? 1944 ஜனவரி 20ம் தேதி ராவ் குழு அமைந்தது; அது வரைந்த மசோதா புகழ்பெற்ற வழக்கறிஞர்களிடம் கருத்துக்காக அனுப்பப்பட்டது. அவர்களது கருத்து கிடைத்தபின், தாங்கள் தயாரித்த வரைவு நாடு முழுவதன் கருத்துத் தெரிந்து கொள்ள அனுப்பப்பட வேண்டுமென முடிவு செய்தது. மசோதா எல்லா இந்திய மொழிகளிலும் மொழிபெயர்க்கப்பட்டது. சுமார் 6000 பிரதிகள் வினியோகிக்கப்பட்டன. 1944 ஆகஸ்டு 5ஆம் தேதியன்று கருத்துக்கள் வரவேற்கப்பட்டன. கருத்துக்கள் 1944 டிசம்பர் 31ம் தேதிக்குள் சமர்பிக்கப்பட வேண்டுமென கோரப்பட்டது. கருத்துக்கள் பெறப்பட்டதும், குழு நாட்டில் சுற்றுப்பிரயாணம் செய்தது. இந்த குழு மேற்கொண்ட சுற்றுப்பயணத்தின் விரிவான தன்மையை அவை கவனத்தில் கொள்ள வேண்டுமென விரும்புகிறேன். மாகாணங்களின் முக்கிய பட்டணங்களுக்கும் நகரங்களுக்கும் அது விஜயம் செய்தது. அது ஒரு டஜனுக்கு மேலாக இருக்காது - அலஹாபாத், பம்பாய், கல்கத்தா, புனா, பாட்னா, லாகூர் மற்றும் மற்றவை. இதுதான் அந்த குழு மேற்கொண்ட விரிவான சுற்றுப் பிரயாணம். நாட்டின் மொத்த மக்கட் தொகையோடு ஒப்பிட்டால், இந்த பட்டணங்கள், நகரங்களின் மக்கள் தொகை எவ்வளவு? இந்த நகரங்களில் சாட்சிகளை விசாரணை செய்ய மேற்கொண்ட சுற்றுப்பயணம் இந்த மசோதா குறித்த உண்மையான உணர்வை எடுத்துக்காட்டுமா?

பதிவு செய்யப்பட்ட சாட்சியங்கள் எந்த அளவுக்கு இருந்தது? நாம்பார்க்கலாம். மொத்தத்தில் 121 சாட்சிகள் மற்றும் 201 அமைப்புகளின் சார்பில் 257 பேர்கள் சாட்சியம் அளித்தனர். இதுதான் எடுக்கப்பட்ட மொத்த சாட்சியம். ஒரு பொருத்தமான கேள்வியை இங்கு நான் கேட்கலாமா? விரிந்து பரந்த இந்தியா, இந்து இந்தியா நகரில் வசிக்கவில்லை, கிராமங்களில்தான் அது வசிக்கிறது என்ற உண்மையைக் கணக்கில் எடுத்துக் கொண்டால், எவ்வகையிலும் இது போதுமான சாட்சியம் ஆகுமா? அதிலும் கிராமங்களில் வசிப்பவர்களில் 90 சதவிதத்தினர் விவசாயிகள், இந்தக் குழுவால் பெறப்பட்ட சாட்சியம்

மிகப்பரந்த அளவிலான நாட்டையும் பல்வேறு மாகாணங்களில் பெருமளவு நிலவும் கருத்து வேறுபாடுகளையும் கணக்கில் கொண்டால் குழுவிசாரித்த சாட்சியம் எவ்விதத்திலும் பொருத்தமாகுமா? நான் பணிவுடன் கூறிக் கொள்கிறேன் அது இல்லை என்று.

சாட்சியத்தின் பலனை நாம் மேலும் ஆராயலாம். இப்போதைய சட்டத் தொகுப்புக்கு அடிப்படையாக விளங்கும் ஒவ்வொரு விஷயத்திலும் எந்த மாற்றத்திற்கும் எதிராக பெருமளவில் கருத்து நிலவுகிறது. இந்தச் சட்ட இயற்றலின் நான்கு எல்லைக்குள் தெளிவாக்கப்பட்ட ஓர் அடிப்படைச் சித்தாந்தத்தை உதாரணமாகப் பார்க்கலாம் - ஒரே நேரத்திலேயே மகன்களுக்கும், மகள்களுக்கும், விதவைகளுக்கும் மற்றவர்களுக்கும் வாரிசுரிமையை அறிமுகப் படுத்துவதுதான் அது.

திரு. துணை அவைத் தலைவர் : இன்று அமுலிலிருக்கும் சட்டத்தின் கீழ், ஏக காலத்தில் ஒரு விதவை வாரிசாக ஆகிறார்.

திரு.எஸ். கிருஷ்ணசாமி பாரதி : அதையும் கூட அவர் இப்பொழுது எதிர்க்கிறார். ஒரு வேளை அதை ரத்து செய்ய வேண்டு மென அவர் விரும்புகிறார் போலிருக்கிறது.

பண்டிட் முகுத் பீஹாரி லால் பர்கவா : ஒரே சமயத்தில் மகனுடன் மகள் வாரிசுரிமை பெறுவதை அறிமுகப்படுத்துவதற்கு சாட்சிகள் 78 பேர்களே,எதிராக 215பேர். பெண் வாரிசாக விதவைக்குள்ள ஒரு எல்லைக்குள் உள்ள சொத்தை முற்றிலுமானதாக மாற்றுவதற்கு ஆதரவாக 49, எதிராக 107. விவாகரத்துக்கான உரிமைக்கு ஆதரவாக 112, எதிராக 119. சுவிகார விஷயத்திலும் கொண்டுவரப்பட்டுள்ள மாற்றத்திற்கு ஆதரவாக 36, எதிராக 38. மற்ற மாற்றங்களுக்கு ஆதரவை விட எதிர்ப்பு பெருமளவில் இருந்தது. இந்த சட்டமியற்றலை முன் கொண்டு செல்வதற்கு நியாயம் எங்கே இருக்கிறது என்று கேட்கிறேன்.

மதிப்பிற்குரிய சில உறுப்பினர்கள் : நியாயம் எதுவுமில்லை.

பண்டிட் முகுத் பீஹாரி லால் பர்கவா : பொது மக்கள் கருத்து இந்தச் சட்டமியற்றுவதற்கு மிகப் பெருமளவு சாதகமாக உள்ளது என்று இந்த அவையின் பல உறுப்பினர்களால் உரிமை கோரப்பட்டது.

திருமதி ஜி. துர்க்காபாய்: ஒரு தார மணம் பற்றி என்ன?

திரு. பண்டிட் முகுத் பீஹாரிலால் பர்கவா: சரியான சமயத்தில் அதற்கும் நான் வருவேன். நான் வினயமாக கூறுவது

என்னவெனில் இந்தச் சட்டப் பேரவை ஜனநாயகச் சட்டப் பேரவையாயின், நாட்டில் உள்ள பொது மக்கள் கருத்துக்கு இணங்க சட்டம் இயற்றுவதாக இந்தச் சட்டப் பேரவை உரிமை கொண்டாடி னால், அதற்குள்ள ஒரேவழி, இந்த மசோதாவைத் தூக்கி எறிவது தான். நாட்டில் எத்தகைய பொதுமக்கள் கருத்து இருந்தாலும், அது இதற்கு எதிராகவே உள்ளது. சட்ட அமைச்சரின் கருத்தை வெளி யிட்ட ஒரு குறிப்பிட்ட செய்தித்தாள் என்னிடம் இல்லை என்பதற்காக வருந்துகிறேன். இந்த சட்டமியற்றும் முயற்சியை பிப்ரவரியில் நாம் பரிசீலிக்கத் துவங்குவதற்கு ஒரு சில நாட்களுக்கு முன்பு அது வெளி வந்தது. சாட்சியம் அவருக்கு சாதகமாக இருந்த அடிப்படையில் அவர் முடிவெடுக்கவில்லை அல்லது பொதுமக்கள் கருத்து அவருக்கு சாதகமாக இருந்த அடிப்படையில் அவர் முடிவு எடுக்கவில்லை. பொது மக்களின் கருத்தின் பலம், எண்ணிக்கையைப் பொறுத்தவரை அவருக்கு எதிராக இருந்தது என்பதை வேறு யாராலும் அல்லாமல், சட்டத்துறை அமைச்சராலேயே பகிரங்கமாக ஒப்புக்கொள்ளப்பட்டது. சில தனி நபர்கள் அவர்கள் எவ்வளவு பிரபலமானவர்களாக இருந்த போதிலும், அவர்கள் இந்தச் சட்டத்தை நாட்டின் மீது திணிக்க விரும்பு கிறார்களெனில், அதை ஏற்றுக் கொள்ள முடியாது. பொதுமக்கள் கருத்துக்கு ஒரே அளவுகோல் ராவ் குழுவால் பெறப்பட்ட பொது மக்கள் கருத்தே. பொது மக்கள் கருத்து இந்த சட்டமியற்றல் முயற்சிக்கு ஆதரவாக உள்ளது. அதற்கு எதிராக அல்ல என்று இந்த அவையின் எந்த உறுப்பினரும் கூறுவதற்கு வேறு எந்த அளவுகோலும் நிச்சய மாக இல்லை. இம்மாதிரி, பல்வேறு அமைப்புகளிடமிருந்து பல எதிர்ப்புகளை நாம் பெற்றுக் கொண்டிருக்கிறோம்.

திரு. பாபு ராம் நாராயணன் சிங் : தினசரி.

பண்டிட் முகுத் பிஹாரி லால் பர்கவா: புகழ்பெற்ற பல்வேறு உயர்நீதிமன்றங்கள், சிவில் நீதிபதிகள் நாட்டின் பல்வேறு பாகங் களிலுள்ள வழக்கறிஞர்களின் சங்கங்கள் போன்றவற்றின் கருத்தை நான் பார்த்த அளவில், இந்த மசோதாவுக்கு வெகு சில நபர்களே சாதகமாக இருக்கின்றனர். பெருமளவில் பொது மக்கள் கருத்து இதற்கு எதிராக உள்ளது.

அடுத்த விஷயம், இதுவரை பொது மக்கள் கருத்து தீர்மான மான தன்மை கொண்டிருக்கவில்லை என்று எடுத்துக் கொண்டா லும், இந்த மசோதாவை இன்றுள்ள சட்டப் பேரவையில் சட்டமாக்க அவசியம் எங்குள்ளது? ஏற்கனவே சுட்டிக்காட்டியபடி, வாதத்தை நான் திரும்பக் கூறமாட்டேன். ஆனால் நான் பணிவுடன் கூறிக்

கொள்வது இந்தச் சட்டப்பேரவை அரசியல் சாசனத்தை உருவாக்கவும். முற்றிலும் அத்தியாவசியமான அவசர விஷயங்கள் குறித்து சட்டமியற்றவுமே உள்ளது. நாட்டில் பொதுமக்களின் எதிர்ப்பை புறக்கணித்து இந்து சட்டத் தொகுப்பு என்ற இந்த மசோதாவை நிறைவேற்ற அரசாங்கம் முயலக்கூடாது.

பிற்பகல் 4 மணி

இப்பொழுது, இந்த மசோதாவில் இடம் பெற்றுள்ள பலவேறு ஷரத்துகள் பற்றி ஆராயத் துவங்குகிறேன். நான் குறிப்பிட்டது போல், இந்தச் சட்டத்தில் இடம் பெற்றுள்ள ஷரத்துக்களின் அடிப்படைகள் நமது ஞானிகள் சிந்தனை செய்த இந்து சமுதாயம் நிலை நிறுத்தப்படுவதற்கே அபாயமாக உள்ளன என்று எண்ணுகிறேன். உண்மையாகவே இவ்வாறு எண்ணுகிறேன். எனவே இந்த மசோதாவில் உள்ள ஒவ்வொரு ஷரத்தையும் எதிர்ப்பது என கடமையாக கருதுகிறேன். இந்த மசோதா மூலம் இந்து சமுதாயத்தில் எத்தகைய அடிப்படை மாற்றங்கள் கொண்டுவர முயற்சிக்கப் படுகிறது என்ற கேள்வி எழுகிறது. இந்து சமுதாயத்தின் தத்துவம், லட்சியங்களுக்கு உகந்ததாக உத்தேசிக்கப்பட்ட மாற்றங்கள் உள்ளனவா? இது விஷயத்தில் என் பணிவான கருத்து ஓர் இந்து சட்டத் தொகுப்பு என்பதற்குப் பதில் இஸ்லாமியச் சட்டத்தொகுப்பு என்று அழைக்கப் படலாம்.

திரு. ஏ.கருணாகர மேனன் (சென்னை : பொது) : எனது நண்பர் திரு.நசிருத்தீன் அகமது இதை எதிர்ப்பதற்கு இதுதான் காரணம்.

பண்டிட் முகுத் பிஹாரி லால் பர்கவா: நிச்சயமாக இந்தக் கூற்று எனக்குப் பொருந்தாது. கற்றறிந்த நண்பர் போல் நானும் உறுதியாக நினைக்கிறேன். இப்பொழுது ஐயா, பிரதான விஷயம் என்னவெனில், திருமணம் மற்றும் விவாகரத்துத் தலைப்பின் கீழ் பிரிவு 5 முதல் 51வரை உட்படுத்தப்பட்டுள்ள இந்த மசோதாவின் இரண்டாவது பாகமேயாகும். இந்த மசோதாவின் இந்த ஷரத்துக்களில் குறிப்பிடப்பட்டுள்ள திருமண முறை எந்த அளவு திருமணம் பற்றிய இந்துக் கண்ணோட்டத்திற்கு ஒப்பாக உள்ளது என்பதைப் பார்ப்போம். இந்த மசோதாவின் பிரிவு 7ல் வழிவகை செய்யப்பட்ட சடங்கு ரீதியான திருமணம் இந்து திருமணம் பற்றிய கண்ணோட்டத்திலிருந்து முற்றிலும் மாறுபட்ட தன்மை கொண்டதாக உள்ளது. திருமணத்தின் உண்மையான இயல்பை மறைப்பதற்கான ஓர் ஏமாற்று வித்தையே இது. இல்லையெனில் பிரிவுகள் 10லும் 21லும் இணைக்கப்பட்டுள்ள ஷரத்து அங்கு இருந்திருக்காது. இந்துக்களுக்கு - இந்த விஷயம் பற்றி

எந்தத் தாவாவும் இருக்க முடியாது என நினைக்கிறேன் - இது பற்றி இரு கருத்துக்கள் இல்லை. இந்து லட்சியங்களையும் தத்துவங்களையும் எதிர்க்க நாம் துணிந்தால், அவற்றிற்கு விடைகொடுத்து அனுப்ப நாம் கருதினால், நிச்சயமாக அது மற்றொரு விஷயம். இந்துக்களுக்கு திருமணம் என்பது புனிதமானது. எனவே கலைக்க முடியாதது. தம்பதியருக்கிடையே ஒரு மத ரீதியான பிணைப்பு அது. எந்த நேரமும் முடிவுக்கு கொண்டுவரக் கூடிய இணைப்பு அல்ல அது. ஓர் ஒப்பந்த அடிப்படையிலான உறவும் அல்லது அது. ஆன்மீக இணைப்பு கொண்ட உறவு அது. எவரது நப்பாசைக்கும் சபலத்திற்கும் ஏற்ப அதை முடிவுக்கு கொண்டுவர முடியும் என்று கற்பனையிலும் கூட நினைக்க முடியாது. இந்துத் திருமணத்தின் கண்ணோட்டம் அது. இந்துத் திருமறையைப் பொறுத்தவரை சடங்கு முறையிலான இந்தப் புனிதத் திருமணத்தைப் போல் வேறு எந்த வகையான திருமணத்தைப் பற்றியும் எடுத்துக்கூறும் எந்த **ஸ்மிருதி**யையாவது அல்லது திருமறையையாவது குறிப்பிட்டுக் கூற முடியுமா என்று சவால் விடுகிறேன். எனவே, திருமணம் மற்றும் விவாக ரத்து பற்றிய இந்த அத்தியாயத்தில், சிவில் திருமணத்திற்கும் விவாகரத்திற்கும் பிரிவு 10ல் இணைக்கப் பட்ட ஷரத்தைப் பொறுத்தவரை, அது இந்துச் சட்டத்திற்கு முற்றிலும் அன்னியமானது என்பது எனது பணிவான கருத்து; அதில் இடம் பெறக்கூடாதது இது. 1872ம் ஆண்டின் சட்டம் 3 (III) 1872ல் அமுலுக்கு வந்ததிலிருந்து இந்த நாட்டில் சிவில் திருமணம் நடைமுறையில் இருந்து வருகிறது. 1929ல் அது மேலும் திருத்தப்பட்டது. அந்தச் சட்டத்தில் கருதப்பட்ட சிவில் திருமணம் அவசியம் தொடர வேண்டும். ஆனால் எவ்வகையிலும் அது இந்துச் சட்டத் தொகுப்பில் இடம் பெறக்கூடாது. இந்துச் சட்டத் தொகுப்பில் சிவில் திருமணம் ஓர் இடத்தைப் பெறுவது ஏன் என்று கேட்கிறேன். எந்த **ஸ்மிருதி**க்கும் உகந்ததாக அது உள்ளதா? இந்தக் கேள்வியை நான் எழுப்பக் காரணம், இந்த மசோதாவில் புரட்சிகரமானது எதுவுமில்லை, தீவிரமானது எதுவுமில்லை, மேலும் உண்மையில் ஒவ்வொன்றும் இந்து கண்ணோட்டம், தத்துவம், லட்சியங்களுக்கு ஏற்ப உள்ளது என்று நீங்கள் உரிமை கொண்டாடுகிறீர்கள்.இது அபத்தமானது. இந்த வாதத்தை நான் நிராகரிக்கிறேன் இந்த மசோதாவின் பிரிவு 10ல் இணைக்கப்பட்டுள்ள மாதிரியான ஷரத்துகுறிப்பிடும் சிவில் திருமணமுறை இந்து லட்சியங்கள் முற்றிலுமாக அறியாதது, அவற்றிற்கு அன்னியமானது என்று கூறுகிறேன். முன்பு, இந்த மாதிரியான புனிதத் திருமண முறை இதர வகையான திருமண முறையின் ஒரு ஏமாற்று வடிவமே என்று ஏற்கெனவே உறுதிபடக் கூறினேன்; பிரிவுகள் 7,10,21ல் இந்த ஷரத்துகள் பற்றி குறிப்பிட்டிருப்பது தெளிவு.

பிரிவு 7ஐப் பொறுத்தவரை, சடங்கு முறையிலான திருமணங்களுக்கு அது நிபந்தனைகள் விதிக்கிறது. பிரிவு 6ஐ அவையின் கவனத்துக்குப் பணிவுடன் கொண்டு வருகிறேன். தரப்பினர் சபிண்டாக்களாக அதாவது ஆண்வழிமுறை உறவினர்களாக இருந்தால் அவர்கள் எந்தத் திருமணத்தையும் ஒப்பந்தம் செய்து கொள்ள கூடாது என்று அது கூறுகிறது. பிரவு 10க்கு நாம் சென்றால், அது ஒரு சட்டரீதியான சிவில் திருமணத்திற்கு தேவையான நிபந்தனைகளை வகுத்தளிக்கிறது; அதிலுள்ள பிரிவு 7ன் துணைப்பிரிவு 6ல் இருந்த ஷரத்தை அது விட்டுவிடுகிறது; பிரிவு 7 மற்ற ஐந்து துணைப் பிரிவுகளாடு நிறுத்திக் கொள்கிறது. இதன் மூலம், சபிண்டாக்களுக்கிடையேயான திருமணம், அது பிரிவு 10ன் கீழ் சிவில் திருமணமாக இருந்தால் அது முற்றிலும் சட்டப்படியாகும். மதச்சடங்கின்படியான திருமணத்தின் சட்டபூர்வ தன்மைக்கும் சிவில் திருமணத்தின் சட்டபூர்வத் தன்மைக்கும் இடையே உள்ள வித்தியாசம் அல்லது இடைவெளி இதுதான். பிரிவு 21 எந்த நிபந்தனையை விதிக்கிறது? பிரிவு 7ல் கருதப்பட்ட மதச் சடங்குப்படியான திருமணம் செய்து கொண்ட தம்பதியர், பின்பு பதிவாளரிடம் சென்று அதை ஒரு சிவில் திருமணமாகப் பதிவு செய்ய அவரைக் கோரலாம். அப்பாவி பதிவாளருக்கு வேறு விருப்பத்திற்கு இடம் எதுவும் கிடையாது. இந்த மூன்று ஷரத்துக்களையும் ஒன்றாக வாசித்தால், சட்டரீதியான விளைவு என்ன? மத சடங்கின்படி செய்யப்பட்ட திருமணத்திற்கு எவ்விதப்புனிதத் தன்மை இருந்ததோ அது அகற்றப்பட்டது. மதச்சடங்குபடியான திருமணத்தின் சட்டபூர்வமான தன்மைக்கு நிபந்தனை என்னவெனில், சபிண்டாக்களுக்கு இடையே திருமணம் எதுவும் இருக்கக் கூடாது என்பதுதான். இந்த நிபந்தனை பிரிவு 10ல் இல்லை. இதன் காரணமாக, மதச்சடங்கின் படியான திருமணம் செல்லுபடியாகாத திருமணமாகிறது. அப்பாவிப் பதிவாளர் அதைச் சிவில் திருமணம் என்று பதிவு செய்ய வேண்டும். எனவே இது சுத்த ஏமாற்றுவித்தையாகும். மதச்சடங்கின் படியான திருமணத் திரை விலக்கப்படுகிறது. அது சபிண்டாக்களிடையேயான திருமணமானதால் அதன் செல்லாத்தன்மை இந்த தந்திரத்தால் சமாளிக்கப்படுகிறது. திருமணம் பற்றிய இந்து தத்துவங்களுக்கு உகந்ததாக இது உள்ளதா என்று கேட்கிறேன். எல்லோரும், அவர்கள் எங்கு தேர்ந்தெடுத்தாலும் **சபிண்டாக்**களிடையே ஒரு திருமணத்தைக் கொண்டாட விருப்பம் கொள்ள மாட்டார்களா? அதை மதச் சடங்கின்படியான திருமணமாகச் செய்துகொண்டு அதன் பின் அதன் செல்லாத் தன்மையை ஒரு சிவில் திருமணம் செய்து கொள்வதன் மூலம் போக்கிக் கொள்ள முடியும்.

அடுத்து, பிரிவு 9ன் ஷரத்துக்களுக்கு வருகிறோம். மதச் சடங்கு படியான திருமணமும் கூட ஒரு திருமணச் சான்றிதழ் ஏட்டில் அவசியம் பதிவு செய்யப்படவேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. அவ்வாறு பதிவு செய்யப்படாவிடில், பதிவு செய்யத் தவறியவர் சட்டப்படி தண்டிக்கப் படுவார். அது செல்லும்படியாவதைப் பொறுத்தவரை, அது செல்லுபடி யாகுமா அல்லது இல்லையா என்பது மிகவும் சந்தேகத்திற்குரிய தாகிறது. நிச்சயமாக, ராவின் மசோதா இந்த அளவிற்குச் செல்ல வில்லை. ஏட்டில் பதிவு செய்ய வேண்டுமா அல்லது இல்லயா என்பதை தம்பதியரின் விருப்பத்திற்கு ராவின் மசோதா விட்டிருந்தது. ராவின் மசோதாவில் அத்தகைய ஷரத்து இணைக்கப்பட்டது திருமணத்திற்கான ருசுவை இலகுவாக்குவதற்காகவே. ஆனால், இந்த மசோதாவில் இந்த நோக்கம் கைவிடப்பட்டுள்ளது. இங்கு கூறப்பட் டுள்ளது என்னவெனில், மதச் சடங்குப்படியான திருமணத்தை பதிவு செய்வதை கட்டாயமாக்குவதை மாகாண சர்க்கார்களுக்கு விட்டு விட்டது. பிரிவு 6ன் ஷரத்து பின்வருமாறு கூறுகிறது: ஒரு திருமணம் செல்லுபடியாவதற்கு இந்த மசோதாவின் ஷரத்துக்கேற்ப இருக்க வேண்டும். அப்படி இல்லையெனில் அது செல்லுபடியாகக் கூடிய திருமணமாகாது. பிரிவுகள் 6,7,10,21 ஐ படித்துப் பார்ப்பதிலிருந்து நாம் பெறும் முடிவு என்னவெனில், திருமணத் தம்பதியர்களால் சான்று பதிவேட்டில் பதிவு செய்யப்படாத எந்தத் திருமணமும் செல்லுபடியாகாது என்பதே. இம்மாதிரியான ஷரத்திலிருந்து எழும் சட்டரீதியான விளைவுகள் என்ன என்று தெரிந்து கொள்ள விரும்பு கிறேன். இது இந்து சமுதாயத்தின் லட்சியத்திற்குப் புறம்பானது என்றும், புனிதத்தன்மையுடன் செய்யப்பட்ட திருமணம் உடைக்க முடியாத பிணைப்பு கொண்டது என்றும் அதை முடிவுக்கு கொண்டுவர முடியாது என்றும் வகுத்துள்ள சாஸ்திரங்களின் கட்டளைகளுக்கு வெறுப்பூட்டுவதாக இல்லையா? இங்கு திருமணமான தம்பதியர் பதிவேட்டில், அதுபற்றி பதிவு செய்யாமல் விவேகமற்ற முறையில் நடந்து கொண்டால், அவர்கள் திருமணம் செல்லுபடியாகாது.

இந்த மசோதாவின் அடுத்த முக்கிய ஷரத்துக்கு, அதாவது விவாகரத்து பற்றிய ஷரத்துக்கு வருவோம். சென்றகால நடைமுறை பற்றிய கேள்வி இங்கு எழுகிறது. இந்து சமுதாயத்தில் விவாகரத்து இருந்தது என்பதை நிரூபிக்க, நாரதரின் மற்றும் பராசரரின் ஸ்மிருதி யிலிருந்து மாண்புமிகு சட்டத்துறை அமைச்சரால் நமக்கு மேற்கோள் காட்டப்பட்டது. ராவ் குழுவின் மாற்றுக் கருத்தைத் தெரிவித்த உறுப் பினர் திரு. துவாரகநாத் மிட்டரால் சுட்டிக்காட்டப்பட்டதை நான் பணிவுடன் தெரிவிக்கிறேன். அவர் முன்பு இதே திருமறைகள் வைக்கப்

பட்டன. அவர் சமஸ்கிருதம் பற்றிய தமது சொந்த ஞானத்தின்படி மட்டுமல்லாமல் கற்றறிந்த பண்டிதர்களின் ஞானத்தின் மீதும் சார்ந்து அவை பற்றி வியாக்கியானம் அளித்தார். நாரதர் மற்று பராசரரின் **ஸ்மிருதிகள்** பற்றிய நியாயமான வியாக்யானம் என்னவெனில், நிச்சயதார்த்த கட்டம் வரை மட்டுமே உறவுகளை முறித்துக் கொள்ள லாம், உண்மையில் திருமணம் நடந்த பின்பு அல்ல என்று அவர் கூறு கிறார். எனவே விவாகரத்து நடைமுறையில் இருந்தது என்று நிரூபிக்க ஸ்மிருதிகளை நம்பியிருப்பதில் எந்தப் பயனும் இல்லை.

மாண்புமிகு சட்டத்துறை அமைச்சரால் முன்வைக்கப்பட்டு பண்டிட் தாகூர் தாஸ் பர்கவாவால் மறுபடியும் கூறப்பட்ட வாதங் களில் ஒன்று எதுவெனில், இந்து சமுதாயத்தின் 90 சதவிகிதத்தின ரிடையே விவாகரத்து ஏற்கனவே நிலவியது என்பதாகும். பண்டிட் தாகூர் தாஸ் பர்காவாவின் கூற்றுப்படி, இந்து சமுதாயத்தில் 90 சத விகிதத்தினரிடம் மட்டுமின்றி, 95 சதவிகிதத்தினிரிடம் கூட விவாகரத்து நிலவியது. மரியாதையுடன் நான் கேட்கிறேன்: தாங்கள் கூறுவது உண்மையெனில் விவாகரத்துப் பற்றி இத்தகைய ஒரு சட்டத்தை நிறைவேற்றுவதற்கான அவசியம் எங்கே உள்ளது? பெரும்பான்மை யினருக்காக, உபயோகமற்ற சிறுபான்மையினருக்காக அல்ல, சட்ட மியற்றும்படி தாங்கள் எதிர்பார்க்கப்படுகிறீர்கள். இந்த மசோதாவில் தாங்கள் புகுத்தியுள்ள விவாகரத்து முறை இந்து சமுதாயத்தின் 90 அல்லது 95 சதவிகிதத்தினரின் வாழ்க்கையைத் துன்பத்தில் ஆழ்த்தும் - இவர்களிடையேதான் விவாகரத்து ஏற்கனவே நிலவியதாகத் தாங்கள் கூறுகிறீர்கள்; ஏனெனில் இப்போதைய மசோதாவின் ஷரத்துக்களின் படி, திருமணம் செய்து கொள்ளும் ஒவ்வொருவரும், விவாகரத் துக்கு முயற்சி செய்வதற்கு முன்பு, விவாகத்தை ரத்து செய்வதற்காக முறையான அதிகாரம் பெற்ற நீதிமன்றத்தின் முன் செல்ல வேண்டும் என்பது கட்டாயமாகும். பொறுக்குக்குழுவின் அறிக்கையில் மாற்றுக் கருத்தை எழுதிய ஒரு கனவான் சுட்டிக் காட்டியது போல, நாட்டின் மிகப்பெரும்பான்மையான பகுதிகளில், கிராமப் பஞ்சாயத்தின் முன் னிலையில், பத்திரத்தில் கையெழுத்திடல் மூலமோ அல்லது வேறு எந்த முறையிலோ, விவசாயிகள் மத்தியில் மிக எளிமையான முறை யில் விவாகரத்து நிறைவேற்றப்படுகிறது. உங்கள் மக்கள் தொகையில் 90 சதவிகிதத்தினராக உள்ள விவசாயிகள் மீது தங்களின் சட்டம் எத்தகைய விளைவை ஏற்படுத்தும் என்பதை தாங்கள் பரிசீலனை செய்ய வேண்டும். சட்டப் பதிவேட்டில் பிரிவு 34 கொண்டு வரப்பட்டால் விளைவு என்னவாக இருக்கும்? ஒவ்வொரு தம்பதி யரும், ஒவ்வொரு உறுப்பினரும், திருமணத்தில் சம்பந்தப்பட்ட

ஒவ்வொருவரும் நீதிமன்றக் கதவைத் தட்டக் கட்டாயப்படுத்தப் படுவர். மாவட்ட நீதிமன்றத்திற்குச் செல்லவும் மேல் முறையீட்டுக்கு செல்லவும் நேரிடும். அது நிகழும் வரை எந்த விவாகரத்தும் அமுலுக்கு வராது. எவர்கள் மத்தியில் விவாகரத்துச் செய்து கொள்ளும் வழக்கம் நடைமுறையில் உள்ளதாக தாங்கள் கூறிகிறீர்களோ அந்த மிகப்பெரும்பான்மையான மக்களுக்கு இது சாதகமாக இருக்கப் போவதில்லை என்றும், மாறாகப் பெரிது பாதகமாகவே இருக்கும் என்றும் கூறிக் கொள்கிறேன். எனவே, இந்த ஷரத்துக்களை சட்டமியற்றல் மூலம் நம்பிக்கையற்றிருக்கும் 5 சதவிகிதத்தினருக்கு தாங்கள் உதவவில்லை. ஆனால், பெரும்பான்மை 90 சதவீதத்தினரைப் பாதகமான நிலையில் வைக்கிறீர்கள். எனவே, தங்களது ஷரத்துக்கள் தீவிரமாக மாற்றப்பட்டு திருத்தப்பட்டாலொழிய சட்டப் பதிவேட்டில் அவற்றை கட்டாயம் கொண்டுவரக் கூடாது. இப்பொழுது நான் சுவீகாரம் பற்றிய விஷயத்துக்கு வருகிறேன். இங்கும் இந்த மசோதாவை ஆக்கியவரும் அதை வரைந்தவர்களும் இந்துச் சட்டத்தில் சுவீகாரத்திற்கு ஆதாரமாக உள்ள அடிப்படைக் கண்ணோட்டத்தைப் புறக்கணித்து விட்டனர். எனது சிற்றறிவுக்கு ஏற்ப, எந்த மற்ற சட்டமும் சுவீகாரத்தை அங்கீகரிக்க வில்லை. முஸ்லீம் சட்டத்தில் அது நடைமுறையில் இருந்தது; ஆனால் அதுவும் சட்டம் மூலம் ஒரு முடிவுக்குக் கொண்டவரப்பட்டது. இந்துக் கருத்தின்படி, ஓர் இந்துவின் வாழ்க்கை அவனது மதரீதியான கருத்து மற்றும் மதத்துடன் வெகுவாக இணைந்து, பிணைந்து உள்ளதால், இரண்டையும் பிரிப்பது சாத்தியமற்றது.

திரு.எச்.வி.காமத் : மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் ஓய்வெடுத்துக் கொண்டிருக்கிறாரா? அல்லது சிந்தனையில் மூழ்கிப் போய் இருக்கிறாரா?

மாண்புமிகு டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் : மதிப்பிற்குரிய உறுப்பினரின் உரையைக் கேட்டுக் கொண்டிருக்கிறேன்.

திரு. பண்டிட் முகுத் பீஹாரி லால் பர்கவா : இந்துச் சட்டத்தில தத்தெடுத்தல் மத நம்பிக்கையை ஆதாரமாகக் கொண்டுள்ளது என்று நான் கூறிக் கொண்டிருந்தேன். காலமான ஒரு மனிதனின் ஆத்மா விமோசனம் பெற அவருக்கு ஒரு மகன் இருப்பது அவசியம் என்று அந்த நம்பிக்கை கூறுகிறது; அந்த மனிதன் மோட்சம் எய்துவதற்கு மகன் அவருக்கு திருப்படையல் அளிக்க வேண்டும். எனவே, தத்து எடுத்தல் பற்றி சட்டமியற்றப் போகிறீர்களெனில், இந்த விஷயங்களை

எல்லாம் தாங்கள் கவனத்தில் கொள்ள வேண்டும். இல்லையெனில் அதை நீக்கிவிடுங்கள். அதை நீங்கள் வைத்திருந்தால், தத்து எடுக்கும் சித்தாந்தத்திற்கு அடிப்படையாக உள்ள அதன் மெய்ப்பொருளை வைத்துக் கொள்ளுங்கள்.

மதிப்பிற்குரிய ஓர் உறுப்பினர்: 'அந்த மெய்ப்பொருள் எது'?

தத்து எடுத்தல் செல்லுபடியாவதற்கு மசோதாவில் எந்த அளவுகோல்களை நீங்கள் நிர்ணயித்திருக்கிறீர்கள்? மூத்த ஒரே மகனை தத்து எடுக்க முடியாது என்று இந்துச் சட்டம் கூறுகிறது. இந்தச் சிறப்பான கோட்பாட்டை இருத்திக் கொள்ளாமல் அதை மாற்றத் தாங்கள் விரும்புகிறீர்கள். மூத்த ஒரே மகன் கூட தத்து எடுத்துக் கொள்ளப்படலாம் என்று தாங்கள் கூறுகிறீர்கள்.

மதிப்பிற்குரிய ஓர் உறுப்பினர் : அது நியாயமல்ல.

திரு. பாபு ராம்நாராயண் சிங் : அது அறியாமையால் நிகழ்ந்தது.

திரு. பண்டிட் முகுத் பிஹாரிலால் பர்கவா: தத்து எடுத்தல் என்னும் கோட்பாட்டின் வேரையே அது வெட்டிச் சாய்க்கிறது. ஏனெனில், இந்துச் சட்டத்தின்படி, மறைந்த தனது தந்தையின் ஆத்மா சாந்தியடைய திருப்படையல் சாத்தும் சடங்கைச் செய்ய மூத்த அல்லது ஒரே மகன் அவசியம் இருக்க வேண்டும்.

அதேபோல, ஒரு பையனைத் தத்து எடுத்துக் கொள்வதற்கு தாங்கள் நிர்ணயித்துள்ள தகுதிகள் என்ன? இவ்வகையில் பின்வரும் மூன்று தகுதிகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன: அவனது வயது 15க்குக் குறைவாக இருக்க வேண்டும்; அவனுக்கு திருமணமாகியிருக்கக்கூடாது: அவன் ஓர் இந்துவாக இருக்க வேண்டும். நான் மரியாதையுடன் கூறிக் கொள்கிறேன்:இம்மாதிரி ஒரு ஷரத்தை ஏற்படுத்துவதன் மூலம் இந்துக்களை மாபெரும் கஷ்டத்திற்குள்ளாக்குகிறீர்கள். ஏனெனில், தத்து எடுப்பது சம்பந்தமாக, இந்து சமுதாயத்தின் நன்கு அறியப்பட்ட கருத்துப்படியும் வழக்கப்படியும் திருமணம் ஒரு தகுதியின்மையாகாது அல்லது வயது ஒரு தகுதியின்மையாகாது. இந்தக் கட்டுப்பாடுகளை ஏன் திணிக்கிறீர்கள் எனக் கேட்கிறேன். சென்ற காலத்தில் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் உள்ள தங்கள் அனுபவம், இந்தக் கட்டுப்பாடுகள் அவசியம் எனத் தங்களை ஏற்க வைத்ததா?

சட்டம் பற்றி எனக்குள்ள குறைவான அறிவுப்படி, எந்தக் கஷ்டமும் எங்கும் வந்ததாக எந்த வழக்கும் இல்லை. உண்மையில், ஒரு திருமணமான பையனைத் தத்து எடுப்பது செல்லும் என நடைமுறையிலுள்ள சட்டம் அங்கீகரித்துள்ளது. அது போலவே, அவனது வயது என்னவாய் இருந்தாலும், தத்து எடுப்பது செல்லுபடியாகும். அமுலில் இருக்கும் சட்டத்தை மாற்றுவதை அவசியமாக்கிய கஷ்டங்கள் யாவை? எந்த ஒரு மாற்றத்தைச் செய்யும்போதும் அதற்கான நம்பத்தக்கக் காரணங்கள் உங்களிடம் இருக்க வேண்டும் என்பதை மறுக்க முடியாது; அல்லது இப்பொழுது நிலவும் சட்டத்தை தாங்கள் அங்கீகரிக்க வேண்டும்.

தத்து எடுப்பது சம்பந்தமாக சட்டத்தில் தாங்கள் செய்திருக்கும் மாற்றத்தின் விளைவு என்ன? நன்கு நிலைநிறுத்தப்பட்ட இந்துச் சட்டத்தின் வழக்கத்துக்கு நீங்கள் விடைகொடுத்து வழியனுப்பி வைத்து விட்டீர்கள், தத்து எடுக்கப்பட்டதன் பலனாக வழங்கப்படும் சொத்துரிமையை தத்து எடுத்த மூன்று ஆண்டுகளுக்குள் அடையலாம் என்று ராவ் குழு ஆலோசனை கூறியது. இந்த மசோதா அதற்கு மேலும் செல்கிறது. தத்து எடுப்பது நிகழ்ந்த உடனேயே சொத்து உரிமையை எடுத்துக்கொள்ளும் பிரச்சினை எதுவும் இருக்காது என்று அது கூறுகிறது. அந்த தேதியிலிருந்து பாதிச் சொத்து விதவைக்கோ அல்லது அந்த மனிதனுக்கோ போகும்; மற்றப்பாதி பையனுக்குக் கிடைக்கும். எனது பணிவான வேண்டுகோள் : முன்பு அறிந்திராத, வியப்பளிக்கும் தத்து எடுக்கும் தத்துவத்தை கொண்டுவர தாங்கள் ஏன் விரும்புகிறீர்கள்? அதற்கான காரணம் எங்குள்ளது? சென்ற காலத்தில் இது சம்பந்தமாக கஷ்டம் எதுவும் ஏற்பட்டதா?

அடுத்தது கூட்டு இந்துக் குடும்பத்தின் சீர்குலைவுப் பிரச்சினை. இது விஷயத்தில் மிகவும் ஜீவாதாரமான அடிப்படையான மாற்றத்தைக் கொண்டுவர முயற்சிக்கப்படுவதாக எனக்குத் தோன்றுகிறது. காலம் காலமாக மதிக்கப்பட்டு வந்த கூட்டுக் குடும்பம் என்ற அமைப்பு தங்களது கண்களை ஏன் உறுத்த வேண்டும்? ஆரம்பத்தில் எண்ணப்பட்ட இந்துக் கூட்டுக் குடும்ப முறை மரபுச்சட்ட குவியலால் அதனுடைய உண்மையான சிறப்பு அம்சங்கள் சிதறடிக்கப்பட்டன என்று கூறப்படுகிறது. இதை நான் ஒப்புக் கொள்கிறேன். ஆனால் இந்தக் கூட்டுக் குடும்பம் என்ற அமைப்பு முறை மதிக்கப்படத் தகுதி பெற்றது எனில், அன்னிய ஆட்சியால் அது இடிபாடுகுட்பட்டு பாழான நிலையில் உள்ளது என்பதால், தங்கள் கடமை அதை முடிவுக்குக் கொண்டு வருவதல்ல; மாறாக, இந்துக் கூட்டுக் குடும்ப அமைப்பில் ஏற்பட்ட கஷ்டங்களையும் குறைபாடுகளையும் அகற்றச் சட்டமியற்றி அதை

முந்திய நிலைக்குக் கொண்டு வர வேண்டியதுதான் கடமை. அதனை அதன் முந்திய சக்தி வாய்ந்த நிலைக்கு நாம் கொண்டு வந்திருக்க வேண்டும். அது செய்யப்படவில்லை. கூட்டுக்குடும்ப அமைப்பின் கடுமையான குறைபாடுகளில் எதையும் மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் சுட்டிக்காட்டியதை நான் கேட்டதில்லை. அவரது ஒரே வாதம் என்னவெனில், வாரிசுரிமை சட்டத் தீர்ப்புக்களால் அதன் உண்மையான சிறப்பு அம்சங்கள் சிதறடிக்கப்பட்டதால் அந்த அமைப்பு முறை முடிவுக்குக் கொண்டு வரப்பட வேண்டும் என்பது தான். நான் கூறுகிறேன்: அது மனக்கிலேசம் வாய்ந்த ஆலோசனை யாகும். குறைந்தபட்சம் என்னைப் பொறுத்தவரை, நான் ஆதரவு அளிக்க முடியாது. என்னைப் பொறுத்தவரை கூட்டுக் குடும்ப அமைப்பு உலகில் உள்ள எந்த தேசமும் பெருமைப்படக் கூடிய ஓர் அமைப் பாகும். நம் காலத்திற்கு, நூற்றாண்டுகளுக்கு முன்பே, சோசலிச அல்லது கம்யூனிச அமைப்பு வடிவத்தை எதிர்நோக்கிய அமைப் பாகும் அது. ஐயா, பலமுள்ள அல்லது பலஹீனமான குடும்ப உறுப் பினர்கள் குடும்ப சேமிப்பு நிதியில் சமத்துவ உரிமை பெறுவர். அந்த அமைப்பு.....

திரு. சிர்ஜிட் குலாதர் சாலிகா (அஸ்ஸாம் பொது) : வங்காளத் தில் அது பிரபலமாக இல்லை.

திரு. பண்டிட் முகுத் பீஹாரி லால் பர்கவா : எனக்குத் தெரிந்தவரை வங்கத்தில் ஒரு பகுதி **மிதாக்ஷரா** அமைப்பாகவும், மிகுதி **தாயபாகா** அமைப்பாகவும் அமைந்துள்ளது..

மதிப்பிற்குரிய ஓர் உறுப்பினர் : இல்லை எல்லாம் தாயபாகா அமைப்பாகத்தான் உள்ளது.

திரு. பண்டிட் முகுத் பீஹாரி லால் பர்கவா : எனவே, ஐயா, நமது மூதாதையர்கள் காலத்தில் அத்தகைய உறுதியான, பலமான அடிப்படையில் அது அமைக்கப்படாமல் இருந்தால், கற்றறிந்த சட்டத்துறை அமைச்சர் சட்டமியற்றல் என்ற கோடலியை அவர் பயன்படுத்தியிருக்கக் கூடாது. அதைப் பாதுகாக்க சட்டமியற்றலைக் கையாண்டிருக்க வேண்டும். பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் அன்னிய ஆட்சிக்கு உட்பட்டிருந்ததன் காரணமாக, காலம் காலமாகப் போற்றப் பட்டு வந்த அமைப்புகளைப் பாதுகாப்பதில் அவர்கள் அக்கறை எதுவும் கொண்டிருக்கவில்லை. உண்மையில் அவை மீது அவர்கள் அவமதிப்பே கொண்டிருந்தனர். நமது சொந்த தேசிய அரசாங்கம் அதிகாரத்திற்கு வந்ததும், காலம் காலமாகப் போற்றப்பட்டு வந்த

அமைப்பை அழிப்பதற்கு மாறாக அதை புதுப்பித்து அதன் முந்திய புகழ்பெற்ற நிலைக்கு கொண்டுவந்திருக்க வேண்டும் என்று எதிர்ப் பார்ப்பது தவறா? ஐயா, இந்துக் கூட்டுக் குடும்பம் இந்த மசோதா வால் சிதைக்கப்படுகிறது என்று கூறுகிறேன். ராவ் குழு முன் வைத்த ஷரத்துக்கள் இந்த மசோதாவின் ஷரத்துகள் போன்று அத்தனை ஆபத்தானவையல்ல. இப்போதைய மசோதாவின் பிரிவுகள் 86, மற்றும் 87ஐ நான் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். ராவ் குழு, பாகம் III-அ ன் பிரிவு 1,2ல் வகுத்தது என்னவெனில் குடும்பத்தில் கூட்டுரிமையாளரின் மறைவுக்குப்பின், சொத்துரிமை எச்ச உரிமை யாளருக்கு மாற்றம் செய்யப்படாது; மாறாக வாரிசுரிமையாள ருக்குத்தான் மாற்றித் தரப்பட வேண்டும் என்பதேயாகும். ஒரு தலைமுறைக்காவது கூட்டு உரிமையாளரின் உரிமை பழுதுபடாமல் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதுதான் இதன் நோக்கம். இதைக்கூட சட்டத்துறை அமைச்சர் உட்பட இப்போதைய பொறுக்குக் குழு உறுப்பினர்கள் சிலரால் சகித்துக் கொள்ள முடியவில்லை அல்லது விரும்பவில்லை. இதன் விளைவு என்ன? பிரிவுகள் 86 மற்றும் 87 வழி வகுத்துள்ளதுபடி இந்தச் சட்ட அமுலாக்கத்துடன் சேர்ந்தே இந்தியாவில் உள்ள ஒவ்வொரு கூட்டுக் குடும்பத்திலும் தானாகவே சீர்குலைவு ஏற்படும்.

திரு. எல். கிருஷ்ணசுவாமி பாரதி: கூட்டுக் குடும்பத்திற்கும் கூட்டுச் சொத்திற்கும் வேறுபாடு உள்ளது.

திரு. பண்டிட் முகுத் பீஹாரி லால் பர்கவா: அந்த விஷயத் திற்கு வருகிறேன்.

திரு. லட்சுமி காந்த மைத்ரா: தங்களைத் திசைதிருப்ப அவர்கள் முயற்சிக்கிறார்கள். தயவு செய்து நீங்கள் தொடர்ந்து பேசுங்கள்.

திரு. பண்டிட் முகுத் பீஹாரி லால் பர்கவா : பிறப்பு அடிப் படையில் உரிமை கோருதல் எதையும் நீதிமன்றம் கவனத்தில் எடுத்துக் கொள்ளாது என்று பிரிவுகள் 86, 87ல் மசோதா வழி வகை செய்கிறது. இந்த மசோதா அமுலுக்கு வரும் நாளில் அதற்குப் பின்பும் ஒவ்வொரு கூட்டுக் குடும்பமும் சீர்குலைக்கப்பட்டதாக எடுத்துக் கொள்ளலாம். இதனால், கூட்டு அனுபவ உரிமை, இந்த சட்டமியற்றப்படும் அதே சமயம் பொது அனுபவ உரிமையாக்கப்படும். ஆனால் இதைத் தாங்கள் ஏன் விரும்புகிறீர்கள் எனக் கேட்கிறேன். இன்றைய சட்டத்தில், இன்று நிலவும் இந்துக் கூட்டுக்குடும்பச் சட்டத்தில்

நிச்சயமற்றது எதுவும் உள்ளதா? எதுவும் இல்லை என்று நான் பணிவுடன் கூறுகிறேன். கூட்டுடைமையில் பங்குரிமை என்றால் என்ன என்பதையும், அத்தகைய சொத்தில் நிகழ்வுகள் எவை என்பதையும் எல்லோரும் அறிவர். அது பிரிவினை செய்யப்படுவதை தாங்கள் ஏன் விரும்புகிறீர்கள்? ராவ் குழு வகை செய்ததுக்கும் எதிராக இது உள்ளது என்பது என் பணிவான கருத்து. பொது மக்கள் கருத்து இன்றைய உருவில் உள்ள இந்த மசோதா குறித்து சேகரிக்கப்படவில்லை. ராவ் குழு வரைந்த மசோதா குறித்தே சேகரிக்கப்பட்டுள்ளது. எனவே இன்று கொண்டு வரப்பட்டுள்ள மசோதாவின் கட்டுமானத்தில் இத்தகைய ஜீவாதாரமான மாற்றம் செய்யப்பட்டது ஏன் என்பதற்கு தகவல் எதுவும் இல்லை.

இப்பொழுது ஓர் இந்து கூட்டுக் குடும்பத்தின் சாதகங்கள் யாவை? கூட்டுரிமை சொத்து வைத்துக் கொள்ளுவதன் சாதகங்கள் என்ன? நான் கூறுகிறேன்...

திரு.பி.என். முனவல்லி (பம்பாய் : மாகாணம்) : இதில் பாதகங்கள் எவையும் இல்லையா?

திரு. பண்டிட் முகுத் பீஹாரி லால் பர்கவா: ஒவ்வொருவரும் உறவினர்கள் பற்றி எந்த அக்கறையும் இல்லாமல் சுயநலத்துடன் வாழ்ந்து கொண்டு இருக்க வேண்டுமென விரும்பினால், பாதகங்கள் நிச்சயமாக உள்ளன. ஆனால் **ஸ்மிருதிகள்** எவ்வாறு நாம் இருக்க வேண்டுமென்று விரும்புகின்றனவோ அவ்வாறு சமுதாயத்தை நீங்கள் பார்த்தால், மற்றவர்களுக்காகவும், மற்ற உறுப்பினர்களுக்காகவும் சிலவற்றை நாம் துறக்க வேண்டும். குடும்பத்திற்காக, கூட்டுக் குடும்பத்திற்காக சிலவற்றைத் தியாகம் செய்ய வேண்டும். இதனால் எந்தப் பாதகமும் இல்லை. ஒவ்வொரு இந்துக் குடும்பமும் இதை ஏற்றுக் கொள்வது சாத்தியமில்லாமலிருக்கலாம் எனக் கூறுகிறேன்.

வங்காளத்திலும் அஸ்ஸாமிலும் **மிதாக்ஷரா** அமுலில் இல்லை என்று எனது நண்பர்களில் ஒருவர் எனக்கு ஞாபகப்படுத்தினார். ஆனால், ஐயா, நாடு முழுவதையும் தங்கள் முன்பு வைத்துக் கொள்ள வேண்டும்; மேலும் ......

திரு. பண்டிட் லட்சுமி காந்த மைத்ரா : ஆனால் அங்கு கூட்டுக் குடும்பமும் உள்ளது.

திரு. பண்டிட் முகுத் பீஹாரி லால் பர்கவா: 30 கோடி மக்கள் தொகையை தாங்கள் சமாளித்துக் கொள்ள வேண்டும் - அந்த மக்கள் தொகை காஷ்மீர் முதல் கன்னியாகுமரி வரை, குஜராத் முதல் நாட்டின் தூரக் கிழக்கு வரை பரந்துள்ளது. கூட்டுக் குடும்ப அமைப்பின் அந்தஸ்தைச் சீர்குலைக்கத் தாங்கள் விரும்புகிறீர்கள். அது ஏராளமான மக்களின் பெரும்பான்மையை பாதிக்கும். இந்தச் சட்டமியற்றலில், குடும்பத்தைச் சீர்குலைக்க தாங்கள் விரும்புகிறீர்கள். அது தளர்வுற்றிருந்தால், அது சிதைந்திருந்தால், ஓர் உறுப்பினர் கூறியது போல, அத்தகைய ஒரு நிலையில் உள்ளதற்காக நாம் கண்ணீர்விடக்கூட வேண்டிய தேவையில்லை; அது இயற்கையாகவே மரணமடையட்டும். நாசகரமான கோடாலியை ஏன் உபயோகித்து அதை முடிவுக்குக் கொண்டு வரவேண்டும்?

ஐயா, அடுத்து வாரிசுரிமை விஷயத்தை எடுத்துக் கொள்கிறேன். இது விஷயத்தில்தான் எனக்கு மிக அதிகமான மனக் குறை உள்ளது. எனது நண்பர் திரு. நசிருத்தீன் அகமது கூறியது போல, ராவ் குழு மசோதாவிற்கு பதிலாக இலாகா மசோதா வந்தது; இந்த இலாகா மசோதாவில் புதுமைகள் புகுத்தப்பட்டன. இந்த மசோதாவில் வரையறுக்கப்பட்ட வாரிசுரிமைக்கான விதிகள் சொத்து விஷயத்தில் சேர்த்துக் கொள்ளப்படமாட்டாது. விவசாயச் சொத்தின் ஒவ்வொரு பகுதியும் அங்கு வரையறை செய்யப்பட்ட வாரிசுரிமை விதிகளுக்கு உட்படாது என்று ராவ் மூல மசோதாவில் இருந்தது; ஏனெனில் இந்திய அரசாங்க சட்டத்தின் கீழ் மத்திய அரசாங்கத்தின் அதிகார எல்லைக்கும் கட்டுப்பாட்டிற்கும் இது உட்படாது. இந்திய அரசாங்கத்தின் நேரடிக் கட்டுப்பாட்டிற்கும் மேற்பார்வைக்கும் கீழ் உள்ள மத்திய நிர்வாகப் பிரதேசங்கள் விஷயத்தில் எந்த விதிவிலக்கும் இருக்குமென ராவ் மசோதா சொல்லவில்லை.

இப்பொழுது ஐயா, இலாகா மசோதாவில், ''ஆளுநர்களின் மாகாணம்'' என்ற சொற்கள் நுழைக்கப்பட்டுள்ளன. இதன் விளைவாக மத்திய நிர்வாகப் பிரதேசங்களான எனது மாகாணம் ஆஜ்மீர் - மேர்வாரா, டில்லி மற்றும் கூர்க்கில் உள்ள விவசாயச் சொத்தும் இங்கு வாரிசுரிமை விதிகளுக்கு உட்படும். இந்தச் சட்டமியற்றலில் முறையற்ற தன்மையை நிரந்தரமாக திணிக்கப்படுவதைப் பாருங்கள். ஆளுநர்களின் மாகாணங்களில் சொத்துக்களின் பெரும் அளவை பராமரிக்கும் சட்டம் மத்திய நிர்வாகத்தால் ஆளப்படும் பிரதேசங்களைப் பொறுத்தவரையான சட்டம் முற்றிலும் மாறுப்பட்டதாகும். இந்தச் சட்டமியற்றல் ஒரு சீரான தன்மையை ஏற்படுத்தும் நோக்கத்தைக் கொண்டதா? ஒரு சீரான தன்மைக் கோட்பாட்டிற்கு இது உகந்ததாக இருக்குமா அல்லது அதற்கு எதிராக இருக்குமா? மசோதாவின் ஷரத்துக்களில் தாங்கள் வரையறை செய்துள்ள வாரிசுரிமை

விதிகள் எல்லாம் எனது மாகாணத்தின் விவசாயச் சொத்திற்கு நடைமுறைப்படுத்தப்பட்டால் - எனது மாகாணம் பற்றியும் அதல் வாழும் மக்கள் பற்றியும் நான் தெரிந்து கொண்ட அளவு என்னால் பேச முடியும் - சட்டம் ஏற்றுக் கொள்ளப்படுவதை விட அதிகம் மீறப்படும் எனக் கூறுகிறேன். ஏனெனில் வாரிசுரிமை பற்றித் தாங்கள் வரையறை செய்துள்ள விதிகள் வழக்கமாக நடைமுறையிலுள்ள மக்களின் பழக்கத்திற்கு மாறாக இருக்கும்; தங்களது உயிர்களை பணயம் வைத்துக்கூட தங்களைச் சட்டப்படி கட்டுப்படுத்தும் விதியாக அவர்களால் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. பாகம் 7 அத்தியாயம் 2 அட்டவணை 7ல் தாங்கள் உட்படுத்தியுள்ள மரபுரிமை விதிகள் எவை? அங்கீகரிக்கப்பட்ட இந்து கோட்பாடுகளுக்கு **மிதாக்ஷராவால்** அல்லது **தாயபாகா**வால் முன்மொழியப்பட்ட கோட்பாடுகளுக்கு ஏற்புடையதாக அவை உள்ளதா? அதற்கான அறிகுறி எங்கே உள்ளது? வாரிசுரிமைக்கு தாங்கள் எடுத்துக் கொண்ட அடிப்டை எது? அது 'இயல்பான அன்பு அல்லது பாசம்' என்று தாங்கள் கூறுகிறீர்கள். வாரிசுரிமை விஷயத்தில் ரத்த உறவு மற்றும் வழித்தோன்றல் பொறுத்த வரை இந்துச் சட்டத்தின் ஓர் அடிப்படையான கோட்பாடு மீறப் படுகிறது. இந்துச் சட்டத்தில் வாரிசுரிமை அடிப்படைக் கோட்பாடு களில் ஒன்று என்னவெனில், வழித் தோன்றல்கள் தங்கள் பெற்றோர் களுக்கு சிரார்த்தம் செய்யும் தகுதியையும் கடமையையும் பொறுத்தது. இதை வாரிசுரிமை பற்றிய எந்தச் சட்டமும் கணக்கில் கொள்ள வேண்டும். இந்துச் சட்டம் பற்றி நாம் கவலைப்படப் போவதில்லை என்ற கருத்து இருந்தால் நிச்சயமாக அது வேறு ஒரு விஷயமாகும். அப்பொழுது 'இந்து' என்ற சொல்லை அங்கிருந்து எடுத்துவிடுங்கள். எனக்கு ஆட்சேபனை எதுவும் இல்லை. ஆனால் இந்துச் சட்டத்தின் அடிப்டைக் கோட்பாடுகளைத் தாங்கள் இணைக்கிறீர்கள் என்றால், வாரிசுரிமைக் கோட்பாடுகளில் தாங்கள் கவனத்தில் கொள்ள வேண்டிய முதல் விஷயம் தங்கள் மூதாதையர்களுக்கு **சிரார்த்தம்** செய்ய வழித் தோன்றல்களுக்கு உள்ள தகுதியும் கடமையுமாகும். **தாயபாகா**வின் அடிப்படை இதுதான்.

மாண்புமிகு டாக்டர் பி.ஆர். அம்பேத்கர்: அவர்கள் எல்லோரும் தங்களுக்குச் சிரார்த்தம் செய்து சொத்தைப் பெற முடியும். அப்படித்தானே?

திரு. பண்டிட் முகுத் பீஹாரி லால் பர்கவா : இத்தகைய புதுமையான வாரிசுரிமை விதியைப் பிரகடனப்படுத்தக் காரணம் என்ன? சகோதரரும் சகோதரர் மகனும் மிக மிகக் கீழான நிலைக்குத் தள்ளப் பட்டுள்ளனர். சகோதரரும், சகோதரரின் மகனும் மகளின் மகள், மகளின் மகன், மகனின் மகள் ஆகியவர்களுக்குப் பின்னால் வரு

கிறார்கள். இது ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ள இந்துச் சட்டக் கோட்பாடு களுக்கு ஏற்றதாக உள்ளதா? (பல குரல்கள் : 'இல்லை, இல்லை') இது குடும்பத்தைச் சீர்குலைக்காதா? குடும்ப உறுப்பினர்களிடையே நீங்காத குழப்பத்தையும் சச்சரவுகளையும் இது ஏற்படுத்தாதா? இது எண்ணிப்பார்க்க முடியாதது. இந்து சமுதாயம் நூற்றாண்டுக்காலமாக பல்வேறு அட்டூழியங்களுக்கு உட்படுத்தப்பட்ட போதிலும், இன்னும் சகோதரருக்கும் சகோதரருக்குமிடையே அன்பும் பாசமும் உள்ளன. சிலவற்றை நான் குறிப்பிடும்போது, விவசாய மக்களை கவனத்தில் வைத்திருக்கிறேன். தாங்கள் எந்தக் கிராமத்திற்கு போனாலும், 10 குடும்பங்களில் 9 குடும்பங்கள் கூட்டாக வாழ்வதைக் காண்பீர்கள். சகோதரர், சகோதரருடன் வாழ்ந்து கொண்டிருக்கிறார். அவர் தனியாக இல்லை. சகோதரர், சகோதரர் மகன் ஆகியோரைவிட மகளின் மகனுக் கும் மகளின் மகனுக்கும் வாரிசுரிமையில் முன்னுரிமையை நீங்கள் அளிக்கும் பொழுது, எனது பணிவான கருத்து என்னவெனில் சமுதாயம் இதைச்சகிக்காது; அல்லது அது சகித்துக் கொண்டாலும், தற்போது நிலவிவரும் சமாதானமும் நிதானமும் விரைவில் மறைந்துவிடும். எனவே ஏற்றுக்கொள்ளப்பட்ட இந்துச் சட்டக்கோட்பாடுகளுக்கு முற்றிலும் வேறுபட்ட, வெறுப்பூட்டுகிற எந்தப் புதுமையான விதிகளையும் வகுக்கும்முன் நீங்கள் அதிகம் விவேகத்துடன் நடந்து கொள்ள வேண்டும்.

இப்பொழுது ஐயா, மகனுடன் அதே சமயத்தில் மகளையும் வாரிசாகக் கொண்டு வரப்படும் விஷயத்தை இப்போது எடுத்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் பி.ஆர். அம்பேத்கர்: இதுபற்றி அவர் ஏற்கனவே சில விஷயங்களைக் கூறியுள்ளார் என்று நினைக் கிறேன். இதற்கு மேல் விளக்கம் எதுவும் தேவையில்லை.

திரு. பண்டிட் முகுத் பீஹாரி லால் பர்கவா : இப்பொழுது ஐயா, திருமறை நூல்களின்படி அவளது தகப்பனாரிடமிருந்து பெறும் வாரிசுரிமையில் மகளுக்கு ஒரு குறிப்பிட்ட பங்கு இருப்பதாக வாதிக்கப் பட்டது. மனுவும் யாக்னவல்கியரும் இதற்கு ஆதாரமாகக் கொள்ளப் பட்டனர். இந்த இந்துச் சட்ட மூல வாசகங்கள் பற்றிய எனது மேம் போக்கான ஞானத்தின் படி, எந்த பாகம் ஒதுக்கப்பட்டாலும் அது திருமணமாகாத மகளின் விஷயத்தில்தான் பொருந்தும்; அதுபற்றி எங்களுக்கு ஆட்சேபம் எதுவுமே இல்லை. இன்று கூட ஒரு திருமண மாகாத மகளுக்கு பாகம் ஒதுக்கப்படுகிறது. இன்றும் எழும் கேள்வி: இது சம்பந்தமான நிலை என்ன? இதை யாரும் மறுக்கமுடியுமா? ஆயிரத்தில் ஒரு மகள் கூட திருமணமாகாமல் இருப்பதில்லை. குடும்பத்

தின் அந்தஸ்துக்கு ஏற்ப, மகளுக்கு சிறந்த கல்வி அளிக்கப்படுகிறது. பையன்களுக்கு சமமான அளவில் அவள் நடத்தப்படுகிறாள். அவளது திருமணம் நடைபெறும் போது, குடும்பத் தகுதிக்கேற்ப அவளுக்கு வர தட்சிணை அளிக்கப்படுகிறது. திருமணமானதும் சகோதரர்களுடனான அவள் உறவு துண்டிக்கப்படுவதில்லை. எனது அனுபவத்தின்படி, குடும்பத்தின் எல்லா நிகழ்ச்சிகளுக்கும் அவள் அழைக்கப்படுகிறாள். அவளது பெற்றோர் குடும்பத்தில் திருமண நிகழ்வுகளின் போது வழக்கப்படி அவளுக்கு ஒரு 'கோட்டா' ஒதுக்கப்படுகிறது. நீதிமன்றத் திற்கு செல்வதால் குடும்பத்தில் சமாதானமும் அமைதியும் நிலவும் என்று யாராவது கூறமுடியுமா? இத்தகைய ஒரு நடவடிக்கை நிலை மையை மோசமாக்கவே செய்யும். நீதிமன்றத்தை அணுகுவதற்கான மசோதாவின் ஷரத்துக்கள் முற்றிலும் வெட்கக்கேடானவை. நமது மகள்களும் சகோதரிகளும் நீதிமன்றத்திற்கு போயாக வேண்டுமென் பதை நாம் விரும்பவில்லை. அவர்கள் சட்டத்தின் உதவியை நாட வேண்டிவரும் என்று நமது ஞானிகள் ஒரு போதும் சிந்தித்துப் பார்த்த தில்லை. குடும்பத்தில் நமது மகள்கள் பெற்றுள்ள நிலை தன்னிகரில் லாத தன்மை கொண்டது. அதற்கு இணையானதை எங்காவது காண்பது கஷ்டம். நான் ஏற்கனவே கூறிக் கொண்டிருந்தபடி, திருமணத்திற்குப் பின் பும்கூட, விழாக்காலங்களில் குடும்பச் செலவில் மகளுக்கு ஒரு திட்ட வட்டமான பங்கு உள்ளது. இங்கு ஒரு கேள்வி கேட்கப்படுகிறது: தனது உரிமைகளை நிலை நாட்ட அவள் நீதிமன்றத்திற்கு போகலாமா? ஐயா, ஒரு குடும்பத்தில் ஒரு பெண்ணின் தந்தை அல்லது சகோதரர் அவள்பால் தனக்குள்ள கடமைகள் பற்றி கவலைப்படவில்லை யெனில், சமூகம் அவரை ஏளனமாப் பார்க்கும். நன்கு நிலைநிறுத்தப்பட்ட வழக்கத்தின்படி, குடும்பத்தின் ஒவ்வொரு மகளும் அவளது சகோ தரனின் திருமணத்தின்போது அவசியம் ஆஜராகியிருக்க வேணடும். மணமகனும், மணமகளும் வீட்டிற்குள் நுழையும் முன், சகோதரி யாலும் அவளது கணவனாலும் நிகழ்த்தப்படவேண்டிய ஒர பிரத்தி யேக சடங்கு உள்ளது என்று மதிப்பிற்குரிய உறுப்பினர்களுக்கு நான் கூறிக் கொள்கிறேன். இவை காலம் காலமாகப் பின்பற்றப்பட்டு வரும் வழக்கம். மகள்களுக்கு ஒரு திட்டவட்டமான நிலையை நாம் வழங்குகிறோம். குடும்பச் சொத்தில் ஒரு பாகத்தை அவளுக்கு அளிப் பதன் மூலம் நீங்கள் பெறும் லாபம் என்ன? ஒரு மகனுக்கும் ஒரு மகளுக்கும் இடையே முற்றிலுமான சமத்துவம் இருக்க வேண்டும் என்பது இந்தச் சீர்திருத்தத்தை நியாயப்படுத்தும் அம்சங்களில் ஒன்று. உண்மையில் மகளுக்கு தாங்கள் அளிப்பது ஒரு போலித்தனமான சமத்துவமல்லவா? நிலைமைகள் முற்றிலும் மாறுபட்டவை. ஒரு குறிப்பிட்ட காலத்தில் மகள் வேறொரு குடும்பத்திற்கு சென்றாக வேண்டும். மகன் அவ்வாறு போக வேண்டியதில்லை. சூழலின்

உள்ளார்ந்த நிலைமைகள் இவை. எனவே தாங்கள் செய்யும் சட்டம் நிலைமைகளுக்கு உகந்ததாக இருக்க வேண்டும். இவற்றை மீறுவதாக இருக்கக்கூடாது. இவற்றை எல்லாம் மீறி நீங்கள் சட்டத்தை இயற்றினால், சமுதாயம் சிதறிப்போகும்.

இப்பொழுது, இன்று இந்து சமுதாயத்தில் சொத்து உடைமையாளர்களின் சதவிகிதம் என்ன? இந்தப் பிரச்சினைக்கு இது மிகவும் தொடர்புடையது; ஏனெனில், இன்று நிலவும் வழக்கப்படி, தமது மகளின் திருமணத்திற்கு ஏற்பாடு செய்யும் தார்மீக கடமை தகப்பனாருக்கு மட்டுமல்ல சகோதரருக்கும் உண்டு. பிதிரார்ஜித சொத்து தமக்குக் கிடைக்கிறதோ இல்லையோ, தனது தகப்பனார் இல்லாத போது, தனது சகோதரியின் திருமணத்திற்கு ஏற்பாடு செய்ய வேண்டியது தனது தார்மீகக் கடமை என்று அவர் கருதுகிறார்.

திருமதி ஜி. துர்க்காபாய் : தனது சகோதரிக்கு ஒரு பங்கை அனுமதித்தால், அவர் தனது தார்மீகக் கடமையை நிறைவேற்ற மாட்டார் என்று தாங்கள் கருதுகிறீர்களா?

பண்டிட் முகுத் பீஹாரி லால் பர்கவா : ஒரு பங்கைப் பற்றி மதிப்பிற்குரிய உறுப்பினர் பேசிக் கொண்டிருக்கிறார். நானோ சொத்து இல்லாத ஒரு குடும்பத்தைப் பற்றிப் பேசிக் கொண்டிருக்கிறேன். அத்தகைய ஒரு குடும்பத்தில் சகோதரியின் நிலை என்ன ஆகும்? எந்தக் கிராமத்திற்கோ பட்டணத்திற்கோ போய் பாருங்கள். தகப்பனார் இறந்து போய், திருமணமாகாத சகோதரி தனது சகோதரருடன் வாழ்ந்து கொண்டிருக்கும் பல நிகழ்வுகளை தாங்கள் பார்க்கலாம். தனது சகோதரிக்கு திருமணத்திற்கு ஏற்பாடு செய்ய வேண்டியது தனது தார்மீகக் கடமை என்று இந்தச் சகோதரன் நினைக்கிறான். மேலும் இதற்காக கடனாகப் பணமும் வாங்குகிறான். அந்தப் புனிதமான நம்பிக்கையை நிறைவேற்றி முடிக்கும்வரை அவன் தன்னைப் பற்றியே சிந்திப்பதில்லை.

திரு. துணை அவைத் தலைவர் : மதிப்பிற்குரிய உறுப்பினர் விரைவில் தமது உரையை முடித்துக் கொள்ள முடியுமா?

பண்டிட் முகுத் பீஹாரி லால் பர்கவா : ஐயா, எனக்கு மேலும் ஒரு மணி நேரம் தேவைப்படும்.

திரு. துணை அவைத் தலைவர் : அப்படியாயின் அவை ஒத்திவைக்கப்படுகிறது.

1949 ஏப்ரல் 4, திங்கள் கிழமை முற்பகல் 10 3/4 மணிவரை அவை ஒத்திவைக்கப்பட்டது.

*இந்துச் சட்டத் தொகுப்பு - விவாதம் தொடர்கிறது.

திரு. துணை அவைத் தலைவர் : *இந்துச் சட்டத்தின் சில கிளைகளைத் திருத்தித் தொகுப்பதற்கான மசோதாவை பொறுக்குக் குழு அறிக்கையின்படி பரிசீலிக்கும் பணியில் இப்பொழுது முன் செல்வோம். திரு. முகுத் பீஹாரி லால் பர்கவா தமது உரையைத் தொடர்வார்.*

திரு. ஆர்.கே. சித்வா *(மத்திய மாகாணம் மற்றும் பீரார் : பொது) : இந்த மசோதாவை மேற் கொண்டு பரிசீலனை செல்வதற்கு நாம் முன் செல்லும் முன்பு, இதுபற்றிய நிகழ்ச்சி நிரல் என்னவாக இருக்கப் போகிறது என்பதை தெரிந்து கொள்ள நாங்கள் விரும்புகிறோம். முடிவில்லாமல் அது போயக் கொண்டிருக்குமா? உறுப்பினர்களின் உரைகளுக்கு பொது ஒப்புதல் மூலம் ஒரு கால வரையறை நிர்ணயிக் கலாம் என யோசனை தெரிவிக்கிறேன். அதன் மூலம் இந்த விவா தத்தில் எவ்வளவு அதிகம் முடியுமோ அவ்வளவு அதிக உறுப்பினர்கள் கலந்து கொள்வது சாத்தியமாகக்கூடும்.*

திரு. துணை அவைத் தலைவர் : *இது ஓர் அதிகார பூர்வமான மசோதா என்பதை அவைக்கு தெரிவிக்கிறேன். அவர்கள் இரு நாட்கள் ஒதுக்கியிருக்கிறார்கள். இதில் அவைத் தலைவருக்கு எந்த சம்பந்தமு மில்லை.*

பண்டிட் முகுத் பீஹாரி லால் பர்கவா *(ஆஜ்மீர் - மேர்வாரா): ஐயா, இந்துச் சட்டத் தொகுப்பு பற்றிய முடிக்கப் பெறாத எனது உரையை நான் தொடர வேண்டும். ஆனால் ஐயா அதை நான் செய் வதற்கு முன்பு, இந்தச் சிறப்புமாக்க அவையின் தொடரை துவங்கி வைத்த நாளில், மாண்புமிகு பிரதம மந்திரி செய்த அறிவிப்பை தங்கள் கவனத்திற்கு மரியாதையுடன் நான் கொண்டுவர வேண்டியுள்ளது.*

ஐயா, இந்தச் சட்டமியற்றல் எளிமையானதும் அத்தியவசிய மானதுமாகும் என்று மாண்புமிகு பிரதம மந்திரி மனமுவந்து வருணித் தார். இந்த அவை முன் பரிசீலனையில் உள்ள இந்த மசோதா எளிமை யான ஒன்று அல்ல என்று மரியாதையுடன் ஆட்சேபிக்கிறேன். இந்த மசோதாவை எதிர்ப்பவர்களில் சிலர் தாமதப்படுத்தும் தந்திரத்தைக் கையாளுவதாக மாண்புமிகு பிரதம மந்திரியால் குற்றம் சாட்டப் பட்டனர் என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இந்த மசோதா

போதுமான அளவு விவாதிக்கப்படவில்லை என்பதை இந்தச் சட்டப் பேரவை பற்றியும் இங்கு நடைபெற்று வரும் நடவடிக்கைகள் பற்றியும் நன்கு அறிந்தவர்கள் தயக்கமின்றி ஒப்புக்கொள்வர். இந்தச் சட்ட மியற்றுதல் இந்து சமுதாயத்தின் வாழ்வையும் சாவையும் பாதிக்கும் ஜீவாதாரமான நடவடிக்கை என்று கூறுகிறேன். ஒரு குறுகிய காலத் திற்கே இது சட்டப்பேரவையின் ஆய்வுக்கு உட்பட்டிருக்கிறது. சாரதாச் சட்டம் சொத்தின் மீது பெண்களுக்குள்ள உரிமை சட்டம் ஆகியவை இந்தச் சட்டப்பேரவைக்கு முன் கொண்டுவரப்பட்ட சந்தர்ப்பங்களை தாங்கள் நினைவுகூர்ந்தால், அவை எந்த அளவு வாதப் பிரதிவாதங்களைக் கிளப்பின என்பதைத் தாங்கள் காண முடியும். அந்த மசோதாக்களோடு இந்த மசோதாவை ஒப்பிட்டால், இந்த மசோதா பெருமளவு மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்தது. இந்த சமுதாயத்தின் கட்டுமானம் முழுவதையுமே இது பாதிக்கிறது. ஐயா, இந்த மசோதா சட்ட ஏட்டில்வைக்கப்பட்டால் - இதில் என்னுடன் கருத்து வேறுபாடு கொள்பவர்கள் இருக்கலாம்; பிரதம மந்திரி என்னுடன் உடன்படாமல் இருக்கலாம் - இந்து சமுதாயத்தின் முழு அழிவில் என்று எண்ணுகிறேன். 30 கோடி இந்துக்களும் அழிந்து விடுவார்கள் என்ற பொருளில் கூறவில்லை. இந்து சமுதாயத்தின் சீரும் சிறப்பும் பண்புகளும் நிலைபெறாமல் முடிவுக்கு வரும்.

இது ஒரு எளிமையான சட்டமியற்றல் அல்ல. ஆனால் உண்மை என்னவெனில், இந்து சமுதாயத்தின் கட்டமைப்பையும் கலாசாரப் பண்பையும் முற்றிலுமாக இடித்தழிப்பதை நோக்கமாகக் கொண்டது இந்த மசோதா. திருமணச் சட்டத்தை, விவாகரத்துச் சட்டத்தை, சுவீகாரச் சட்டத்தை, சிறுபான்மையினர் மற்றும் காப்பாளர் சட்டத்தை, இந்துக் கூட்டுக் குடும்பச் சட்டத்தை, வாரிசுரிமைச் சட்டத்தை, இந்து சமுதாயத்தின் சிறந்த பண்புகளாக விளங்கும் எல்லாவற்றையும் மாற்றுவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது. இந்து சமுயத்தைத் தாங்கி நிற்கும் அடித்தளத்தையே - அதைத் தாங்கி நிற்கும் ஒரு தூண் மட்டுமின்றி எல்லாத் தூண்களையும் - இது ஆட்டங்காணச் செய்கிறது. எனவே, மக்களின் நலன்களைக் காப்பவர்களான, சட்டப் பேரவை யின் உறுப்பினர்களான நாம் நமது கமையை எவ்வளவு சிறப்பாகச் செய்ய வேண்டுமோ அவ்வளவு சிறப்பாகச் செய்வதும் இந்த நாட்டின் பொதுமக்கள் கருத்து நாம் பரிசீலிக்கும் இந்த மசோதாவை எந்த அளவுக்கு விரும்புகிறது என்பதைக் கண்டறிவதும் சரியானதும் நேர்மையானதுமாகும். ஐயா, இந்தச் சட்டமியற்றலை எளிமை யானது என்று வர்ணிப்பது நியாயமற்றது என்று பணிவுடன் கூறிக் கொள்கிறேன்.

நான் மேலும் சமர்ப்பித்துக் கொள்வது என்னவெனில், இதை ஒரு எளிமையான சட்டமியற்றல் என்று வர்ணிப்பது பொருத்தமற்றது என்று கூறும் அதே சமயத்தில் அத்தியவசியமானது என்று வர்ணிப்பதும் உகந்ததல்ல. இந்த மசோதாவுக்கு தேவை என்ன என்று பணிவுடன் கேட்கிறேன். புதிய சட்டமன்றம், சுதந்திர இந்தியாவின் வயது வந்தோர் வாக்குரிமையின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படும் இறையாண்மை கொண்ட நாடாளுமன்றம் தேர்ந்தெடுக்கப்படும் வரை இந்த மசோதா சட்ட ஏட்டில் ஏறாமல் இருந்தால் என்ன நிகழும்? உயிர் பெற்றிருக்க முடியாத அளவுக்கு இந்து சமுதாயம் ஒரு நோக்காட்டிற்கு உட்பட்டுள்ளதா? இந்த மசோதாவை நிறைவேற்றிச் சட்டத் தொகுப்பு ஏட்டில் இல்லாமல் சில மாதங்களானால் சமுதாயம், முழுவதும் இடிந்த சரிந்துவிடுமா? எவ்வகையில் பார்த்தாலும் இது அத்தியவசியமானதல்ல என்று வலியுறுத்திக் கூறுகிறேன். இன்னமும் ஓரிரு ஆண்டுகளுக்கு நாம் பொறுத்துக் கொள்ள முடியும். நூற்றாண்டுகளின் சோதனையை, பல நாகரீகங்களுக்கிடையே ஏற்பட்ட மோதுதலை, அந்நிய ஆக்கிரமைப்பு மோதுதலை, நூற்றாண்டு காலமாக அரசியல் ரீதியில் அடிமைபடுத்தப்பட்டதை வெற்றிகரமாகச் சமாளிக்க முடிந்த இந்து சமுதாயம் இந்த மசோதா இல்லாமலே ஒன்று அல்லது இரண்டு ஆண்டுகளுக்கு சமாளித்து நிற்க முடியும்.

ஐயா, நாம் காத்திருந்தால் ......

திரு.எஸ் நாகப்பா (சென்னை : பொது): ஐயா, ஓர் ஒழுங்குப் பிரச்சினை. இந்த விஷயத்தை கையாள இந்த அவை தகுதிவாய்ந்த தல்ல; புதிய அவை தேர்ந்தெடுக்கும் வரை காத்திருக்கலாம் என மதிப்பிற்குரிய உறுப்பினர் கூறி அவை மீது பழிசுமத்துகிறார்.

திரு. துணை அவைத் தலைவர் : திரு. நாகப்பா கூறியதில் ஒழுங்குப் பிரச்சினை எதுவும் இல்லை.

பண்டிட் முகுத் பீஹாரி லால் பர்கவா : ஐயா, மதிப்பிற்குரிய என்னுடைய நண்பரின் குறிக்கீடு இருந்தபோதிலும் இப்போது அமைக்கப்பட்டுள்ள இந்த அவை, ஜீவாதாரத் தன்மைக் கொண்ட இந்த சட்டமியற்றலை கையாள முற்றிலுமாகத் தகுதியற்றது என்று மீண்டும் உறுதியுடன் கூறுகிறேன். கேள்வி என்னவெனில் ......

திரு. தாஜாமுல் உசேன் (பீஹார் : முஸ்லீம்) : ஐயா, ஓர் ஒழுங்குப் பிரச்சினை. இந்த மசோதாவைப் பரிசீலிக்க இந்த அவை

தகுதி பெற்றது என்று அவைத் தலைவரால் முடிவு செய்யப்பட்டுள்ளது. அந்தத்தீர்ப்பிற்குப்பின், இந்த அவைக்கு தகுதியுள்ளதா இல்லையா என்று மதிப்பிற்குரிய உறுப்பினர் கேட்கலாமா?

திரு. துணை அவைத் தலைவர் : இதில் தீங்கு எதுவும் இல்லை. இந்த மசோதாவைப் பரிசீலிக்க இந்த அவை தகுதி பெற்றுள்ளது என்பது அவை தலைவரின் தீர்ப்பு, அதன்படிதான் மசோதா பரிசீலிக்கப்படுகிறது. வேறு கேள்விகளை எழுப்ப, அல்லது பிற காரணங்களை எழுப்ப மதிப்பிற்குரிய உறுப்பினர் விரும்பினால் சட்ட நுணுக்கங்களை தவிர - அவர் செய்து கொள்ளலாம். முன்னர் பேசிய பேச்சாளர்களில் அநேகமாக எல்லோரும் இந்த விஷயத்தை எழுப்பியுள்ளதால், மீண்டும் அதைப் பற்றியே பேசுவது சலிப்பூட்டுவதாக உள்ளது என்பதை மதிப்பிற்குரிய உறுப்பினரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

பண்டிட் முகுத் பீஹாரி லால் பர்கவா : ஐயா, இங்கு எனது நண்பரின் குறிக்கீடுதான் இந்த கூற்றைக் கூறும்படி என்னைத் தூண்டியது. இந்த ஜீவதாரமான சட்டமியற்றலை நிறைவேற்றுவதற்கு இந்த சட்டப்பேரவைக்குள்ள அரசியல் சட்ட தகுதி பற்றி நான் ஐயம் எழுப்பவில்லை. இங்கு ஒரு முக்கிய பிரச்சினை எழுகிறது. முழு அதிகாரம் படைத்த சட்டப் பேரவையின் செயல்பாடுகளை நீங்கள் பறித்துக் கொளளலாமா? இந்தியாவின் அரசியல் சாசனத்தை வரையும் ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்காக விசேஷமாய் உருவாக்கப்பட்ட இந்த அவை அதைச் செய்ய முடியுமா? எனவே, பிரச்சினையின் அரசியல் சாசன அம்சத்தின் சார்பின்றி, சட்டப் பேரவையின் சட்ட ரீதியான அதிகாரத்தின் சார்பின்றி, அது ஒரு தகைமை பிரச்சினையாகும். தகைமை அபரிமாதமான முக்கியத்துவம் வாய்ந்தது. கற்றறிந்த எனது நண்பரின் தலையீடு ஏற்பட்ட போதிலும், இத்தகைய ஜீவாதார முக்கியத்துவம் வாய்ந்த சட்டமன்ற செயலை கையாளும் முன் இந்த அவை மூன்று தடவை சிந்திக்க வேண்டும் என்று அறுதியிட்டுக் கூற எனக்கு உரிமையுண்டு என்று நினைக்கிறேன். எனது சமர்ப்பணம் என்னவெனில், இந்த சட்டமியற்றல் அத்தியாவசியமில்லை என்பதாகும். மேலும் இந்த விஷயத்தை அவை முன்பு நம்பிக்கை பிரச்சினை என்பதான தன்மை கொண்ட பிரகடனமாக அரசாங்கம் கருதத் தேவையில்லை. இந்தப் பிரச்சினை நிதான மனதுடன் கையாளப்பட வேண்டும். மேலும், இந்தச் சட்டமியற்றல் இந்து சமுதாயத்தின் மொத்த கட்டமைப்பின் மீதும், கலாசாரப் பண்பாட்டின் மீதும் ஏற்படுத்தும் நாசகார விளைவையும் நாம் பரிசீலனையில் எடுத்துக்கொள்ள வேண்டும்.

இப்பொழுது, எனது உரையை விட்ட இடத்திற்கு வந்தால், இந்த சட்டமியற்றலில் புதுமை புகுத்தப்பட்டிருக்கும் பிரச்சினைக்கு வந்தால் அதாவது மகளை மகன் வரிசையில் வைத்து ஒரே சமயத்தில் அவளுக்கு வாரிசுரிமை அளிப்பது பற்றிப் பேசிக் கொண்டிருந்தேன். நான் பணிவாக கூறிக் கொள்வது இந்தப் புதுமை முற்றிலும் தேவையற்றது என்பது; இந்தப் புதுமை இந்து சமுதாயத்தின் கட்டமைப்பையே இடித்துத்தள்ளும். இது எவ்வாறு சாத்தியம் என்று கேட்கிறேன். இந்து சமுதாயத்தின் உண்மை நிலை என்ன? ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையிலான வித்தியாசம், மகனுக்கும் மகளுக்கும் இடையிலான வித்தியாசம், இயல்பாகவே உள்ளார்ந்த அம்சமாகும். மகன் எந்த குடும்பத்தில் அவன் பிறந்தானோ அத்துடன் அவன் வாழ்நாள் முழுவதும் அவனது தோற்றத்திலிருந்து மரணம் வரை இருந்தாக வேண்டும். மகள் ஒரு அன்னியரின் குடும்பத்திற்குச் செல்ல வேண்டும். இந்த உள்ளார்ந்த நிலைமையிலிருந்து எழும் விளைவுகள் எவை? இந்துச் சட்டத்தை வழங்கியவர்கள், திருமறையை நமக்கு அளித்தவர்கள், பெண்பாலர்களுக்கு எதிராக இழிநிலையை மேற்கொண்டவர்களா? சமத்துவமின்மையை அல்லது அநீதியைப் பெண்களுக்கு எதிராக சுமத்தினார்களா? திருமறைகளையும் இந்துச் சட்டத்தையும் தவறாகப் புரிந்து கொண்டதன் விளைவு இது என்று பணிவுடன் கூறிக் கொள்கிறேன். உண்மையில், தந்தை வழிச் சொத்தின் மீது மகளுக்கு வாரிசுரிமை அளித்தால், அதன் விளைவுகளைப் பற்றி நினைக்க நடுநடுங்கிறேன். சட்டத்துறை அமைச்சர் மாண்புமிகு டாக்டர் அம்பேத்கர் தமது உரையில், பின்வருமாறு குறிப்பிட்டார்: ஓர் இந்துவுக்கு பன்னிரண்டு மகன்களும் ஒரு மகளும் இருந்தால், அவரது மரணத்திற்குப்பின் அவரது சொத்து பன்னிரண்டு பங்காகப் பிரிக்க முடியுமெனில், அதை பதிமூன்று பங்காகப் பிரித்தால் என்ன? அதனால் வானமே இடத்து விழுந்துவிடுமா? இதற்கு எதிராக ஓர் இந்துவுக்கு ஒரு மகனும் பன்னிரண்டு மகள்களும் இருந்தால் என்னவாகும் என்பதைப் பரிசீலித்துப் பார்க்கும்படி மாண்புமிகு சட்டத்துறை அமைச்சரை பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன். இந்த விஷயத்தில் என்ன நிகழும்?

மாண்புமிகு திரு. ஜெகஜீவன்ராம் (தொழில் துறை அமைச்சர்): சொத்து பதின்மூன்று பாகங்களாகும்.

பண்டிட் முகுத் பீஹாரி லால் பர்கவா : குடும்ப வீடு பதின்மூன்று பாகங்களாகப் பிரிக்கப்பட வேண்டுமா? ஐயா, கிராமப்புற

இந்தியாவை நினைத்துப்பாருங்கள் - அரண்மனைகளில் வாழும் நகர்ப்புற இந்தியாவைப் பற்றி நினைத்து பார்க்காதீர்கள். ஒரு மிகச் சிறிய வீட்டை உடைய கிராமப்புறக் குடும்பத்தைப் பற்றி நினைத்துப் பாருங்கள். தந்தையின் மரணத்திற்குப் பின், அந்த வீடு பதின் மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்பட்டால், பன்னிரண்டு மருமகன்களும் அந்த வீட்டில் தங்கவைக்கப்பட வேண்டும் எனில் என்ன நிகழும் ஐயா, உத்தேசிக்கப்பட்டுள்ள சட்டத்தின் கீழ், தான் விரும்பும் எந்த நபரையும் மகள் திருமணம் செய்து கொள்ள முடியும். இந்துவல்லாத ஓர் கணவருடன் திருமண ஒப்பந்தம் செய்து கொள்ளும் துணிச்சல் அவளுக்கு இருந்தாலும் அதற்கு தடையில்லை. வாரிசுரிமை பெறுவதற்கு அது தகுதியின்மை ஆகாது. விளைவு என்னவாகும்? ஒவ்வொரு வீடும், ஒவ்வொரு குடும்பமும் பூசல் நிறைந்த குடும்பமாகும். அதில் சர்ச்சைகள், ஏன் அதைவிட மோசமாக கொலைகளும் கூட நிகழும். எனவே, ஒரு சட்டத்தை இயற்றும்போது மாண்புமிகு சட்டத்துறை அமைச்சரால் இந்த அவையின் கவனத்தை ஈர்த்த ஒரு வழக்கின் உதாரணத்தை மட்டும் கவனத்தில் எடுத்துக் கொள்ளக் கூடாது. ஆனால் கற்பனை செய்யக்கூடிய ஒவ்வொரு வகையான வழக்கு பற்றியும் பரிசீலனை செய்ய வேண்டும் என்று பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன். அந்த அடிப்படையில்தான் தாங்கள் சட்டத்தை வகுக்க வேண்டும்.

நண்பகல் 12 மணி

இந்து சமூகத்தில் மகளுக்கு உள்ள அந்தஸ்து பற்றி ஏன் இந்தத் தாழ்வு மனப்பான்மை? உண்மையில் இந்து சமூகத்தில் மகள் மிக மேன்மை வாய்ந்த உயர் நிலை பெற்றிருக்கிறாள். பழக்கமில்லாத ஒரு அன்னியர் குடும்பத்தில் நடைபெறும் அவளது திருமணம் தகப்பனார் குடும்பத்துடன் உள்ள அவளது இயல்பான தொடர்பை அறுத்துவிடுவதில்லை. ஒவ்வொரு நிகழ்வின் போதும், பிறப்புகள், இறப்புகள், திருமணங்கள், மற்ற விசேஷங்கள் ஒவ்வொன்றின் போதும் அவள் வந்து சில அத்தியாவசியச் சடங்குகளை நிறைவேற்ற வேண்டியுள்ளது. அச்சமயங்களின் போது இந்துக் குடும்பம் மகளுக்கு அன்பளிப்புகள் வழங்க வேண்டும். அவளுடைய இயல்பான குடும்பத் தொடர்புகள் நெடுகத் தொடர்கின்றன. அவள் ஒரு குழந்தையைப் பெற்றால் அவளுடயை சகோதரர்கள் அவளுக்கு பரிசுகள் வழங்கியாக வேண்டும். ஐயா, மேலும் கூறமுடியுமானால், சகோதரி குடும்பத்தில் நடக்கும் ஒவ்வொரு திருமணத்தின் போதும், ஆண் அல்லது பெண் குழந்தையின் திருமணத்தின் போதும், சகோதரர்கள் அன்பளிப்புகள் வழங்க வேண்டும். ஒவ்வொரு நிகழ்வின் போதும் அன்பளிப்புகள் அத்தியாவசியமானவை. அது இவ்வாறு இருக்க, ஐயா,

சொத்திலிருந்து மகள் எதுவும் பெறவில்லை என்று எவ்வாறு கூற முடியும்? இந்து நாகரீகம், இந்து லட்சியங்கள், இந்துக் கருத்துகள் ஆகியவற்றின் நெறி முறை கண்ணோட்டத்திலிருந்து பரிசீலித்தால் இந்த விஷயம் அணுகப்பட்ட முறை, மனக் கண்ணோட்டம் முற்றிலும் நேரெதிரான தன்மை கொண்ட தவறே என்பது தெளிவு. நாம் கடைப் பிடிக்கும் நெறிமுறை நமது நாட்டை சார்ந்ததாக இல்லையெனில், அது இந்துவாக, இந்தியனாக இல்லையெனில் இந்து எதிர்ப்பு, இந்திய - எதிர்ப்பாக இருந்தால், நிச்சயமாக நீங்கள் எதிரான நிலையைத்தான் மேற்கொள்ள வேண்டும்.

இப்பொழுது, தந்தைவழிச் சொத்தில் மகளுக்கு ஒரு பங்கு கொடுப்பதன் விளைவு என்னவாக இருக்கும் என்பதை நாம் பரிசீலிக்க லாம். முஸ்லீம் குடும்பத்தை எடுத்துக் கொள்ளுங்கள். தந்தைவழிச் சொத்தில் ஒரு பங்கு அளிப்பதன் தவிர்க்க முடியாத விளைவு, தந்தை அல்லது தாயுடன் பிறந்தவர்களின் மகன் அல்லது மகளிடையே நடை பெறும் திருமணம் முற்றிலும் சாதாரணமாகிவிடும். விரைவில் சிறிது காலம் சென்று, தடை செய்யப்பட்ட திருமணங்கள் கூட நீங்கள் விரும்பி னாலும் இல்லாவிட்டாலும் நடைபெறும். தவிர்க்க முடியாத விளை வாக இது இருக்கும். தந்தைவழிச் சொத்தில் மகளுக்கு பங்கு என்பதன் வரலாற்றைத் தேடிப்பார்த்தால், பல நாடுகளில் எகிப்தில், கிரீஸில், ரோமில், அல்லது இஸ்லாமியச் சட்டத்தின் கீழ் நீங்கள் ஒரு முடிவுக்கு வருவீர்கள். ஒரே முடிவு என்னவெனில் : ஒரு பங்கு அளித்தால் தந்தை அல்லது தாயுடன் பிறந்தவர்களின் மகன் அல்லது மகளிடையே திருமணப்பந்தம் ஏற்படுத்திக் கொள்ளும் உரிமையை அவசியம் நீங்கள் விரிவுபடுத்தியாக வேண்டும். இந்தக் கண்ணோட்டத்தைப் பொறுத்தவரை, அது பேரிடராகும். இதை எந்த இந்துவும் சகித்துக் கொள்ள முடியாது.

நான் இப்பொழுது அடுத்த விஷயத்தை எடுத்துக் கொள்கிறேன். மகனோடு, மகளுக்கும் சமபங்கு உண்டு என்று இந்தச்சட்டத்தில் வழிவகை செய்தால், நீங்கள் செய்ய நினைப்பதை நிறைவேற்றி விடுவீர்களென நினைக்கிறீர்களா? அதாவது மகளுக்கு சொத்தின் மீது உரிமை வழங்குவதாக நீங்கள் கருதுகிறீர்களா? ஐயா, அது அவ்வாறு இல்லை என்று பணிவுடன் கூறிக் கொள்கிறேன். அதற்கு மாறாக பல தீங்குகளுக்கு இதன் மூலம் பாதை திறந்துவிடுகிறீர்கள் என்றுதான் சொல்ல வேண்டும். இந்து சட்டத்தொகுப்பில் உட்படுத்தப் பட்டுள்ள சட்டத்தின் கீழ் எந்த தந்தையும் தனது மகன்களில் ஒருவ னுக்கு சாதகமாக நல்லெண்ணக் கொடையாக சொத்தை வழங்கலாம்.

அல்லது முழுசொத்தையும் ஓர் உயில் மூலம் ஒழுங்குபடுத்தலாம். இதற்கு ஏதாவது தடை உள்ளதா எனக் கேட்கிறேன். தடை இல்லையெனில், மகளுக்கு ஒரு சமபங்கை அளிப்பதற்கு சமூகம் தயாராகும் வரை, இந்தச் சட்டமியற்றலின் ஒரே விளைவு உயில் ஆவணம் மூலம் சொத்தை தீர்வுசெய்வதேயாகும் அல்லது தந்தையால் மகன்களுக்கு சொத்து முழுவதையும் நல்லெண்ணக் கொடையாக வழங்குவதாகும். ஒரு வழக்கறிஞர் என்ற முறையில் நீதி மன்றங்கள் பற்றி எனக்கு ஓரளவு அனுபவம் உள்ளது - நீதிமன்றங்கள் பற்றி முழுமையான அனுபவம் உள்ள மற்ற நண்பர்களும் இங்கு இருக்கிறார்கள். உயில் அல்லது உயில் அனுபந்தம் சம்பந்தப்பட்ட வழக்குகளில் பத்துக்கு ஒன்பது வழக்குகள் நீதிமன்றத்திற்கு போகின்றன என்பதும் இது நீண்டகால வழக்காடுதலுக்கு இட்டுச் செல்கிறது என்பதும் உண்மையல்லவா? சொத்தை தீர்வு செய்வதற்கான திறமை பற்றிய கேள்விகள் மட்டுமல்லாமல், உயில் அல்லது உயில் அனுபந்தம் நிறைவேற்றுபவர் சுதந்திர ஏஜெண்டாக இருந்தாரா என்பது பற்றிய கேள்விகளும் எழுப்பப்படுகின்றன. உயில்போன்ற சிக்கலான ஆவணத்தின் வெவ்வேறு பிரிவுகளின் வாசக அமைப்பும் வியாக்யானமும் பற்றிய சிக்கலான கேள்விகள் எழுப்பப்படுகின்றன. வழக்கு ஒரு நீதிமன்றத்தில் மட்டுமல்ல, உச்சநீதிமன்றமான பிரிவு கவுன்சிலுக்கும் எடுத்துச் செல்லப்படுகிறது. இதுதான் சூழ்நிலை எனில், மகளின் நலன்களைத் தாங்கள் எவ்வாறு பாதுகாக்கப் போகிறீர்களென நான் கேட்கலாமா? இந்த நாசகரமான சட்டத்தை இயற்றுவதன் மூலம் மகளின் நலனை நீங்கள் பாதுகாக்க மாட்டீர்களென பணிவுடன் கூறுகிறேன். அவளுக்குத் திட்டவட்டமான தீங்கைத்தான் நீங்கள் இழைக்கிறீர்கள். அதைச் சரிசெய்வதற்கு உங்களுக்கு கஷ்டமாக இருக்கும். இந்துக் குடும்பத்தின் உளரீதியான கண்ணோட்டமே மாறும். தந்தை வழிச் சொத்தில் ஒரு மகளுக்கு ஒரு பங்கு உண்டு என்று சட்டத்தில் வழிவகை செய்யப்பட்ட உடனே, தனது சகோதரிக்குப் பாதுகாப்பளித்து அவளது திருமணச் செலவிற்கு ஏற்பாடு செய்ய வேண்டிய தனது கடமையிலிருந்து தான் முற்றிலும் விடுபட்டு விட்டதாக சகோதரன் நினைப்பான். இந்துக் குடும்பங்களின் இன்றைய நிலை என்ன? அசையாச் சொத்துக்கள் வைத்திருக்கும் குடும்பங்களின் சதவிகிதம் என்ன? அது நாற்பது சதவிகித்திற்கு மேல் இருக்காது என்பது எனது கருத்து. மீதி 60 சதவிகிதக் குடும்பங்களின் நிலைமை என்ன? இதை சிந்திக்கவே நடுநடுங்குகிறேன். **மிதாக்ஷரா** சட்டத்தின் கீழ் வரும் சொத்து எதுவுமில்லாத 60 சதவிகிதக் குடும்பங்கள் நிலை என்னவாகும்? ஏனெனில் சட்டப்படி சகோதரி, சகோதரனுக்கு சமமாக ஆக்கப்படுகிறாள். சகோதரியை அவள் திருமணச்

சமயம் வரை வளர்க்கும் கடமையும் வரதட்சணை கொடுப்பது, அவளுக்கு எல்லாவற்றையும் கொடுக்க வேண்டுமெனக் கருதும் அக்கறையுள்ள சகோதரன், தனது பொறுப்பிலிருந்து விடுபட்டதாகக் கருதுவான். இந்த ஷரத்தின் விளைவு இதுவாகத்தான் இருக்கும்; அதை ஈடுகட்டும்படியாகப் பயன்தரத் தக்கது எதுவும் மகளுக்கு இல்லாமல் போகும். எனவே, எனது பணிவான வேண்டுகோள் மகள், மகனுக்கு சமத்துவமானவள் அல்ல என்ற அடிப்படையில்லாமல், மகளிருக்கு எதிராக எந்தவித தப்பெண்ணமும் இல்லாமல்; மகளின் நலனுக்காக, இந்த ஷரத்து நிறைவேற்றப்படக் கூடாது. தனது நலன் களைப் பாதுகாக்க மகளுக்கு மற்ற வழிகள் நிச்சயமாக உள்ளன. தங்களின் கணவரின் சொத்தில் தங்கள் மாமனாரின் சொத்தில் மதிக்கத்தக்க உரிமைகளை அவர்கள் பெறமுடியும்.

திரு.எல். கிருஷ்ணசுவாமி பாரதி (சென்னை : பொது) அதை நாங்கள் ஏற்கனவே அளித்துள்ளோம்.

பண்டிட் முகுத் பீஹாரி லால் பர்கவா: அது ஏற்கனவே அளிக்கப்பட்டிருந்தால், தந்தைவழிச் சொத்தில் அவளுக்கு ஒரு பங்கு கொடுப்பதற்கு முற்றிலுமாக எந்த அவசியமும் இல்லை. சட்டத்தை நான் புரிந்துகொண்டபடி ஒரு குறுகிய அளவிலான ஓர் உரிமை கொடுக்கப்பட்டுள்ளது. அதை நீங்கள் நிச்சயமாக விரிவுபடுத்தலாம். அவளது மாமனார் சொத்தில் அவளது கணவனுக்கு சமமான உரிமையை மகளுக்கு அளிக்கலாம். அது மிக நல்ல ஆலோசனை; அதை நாம் பரிசீலிக்கலாம்.

இப்பொழுது, ஐயா, இந்தப் புரட்சிகரமான சட்டமியற்றலில் உள்ள மற்ற முக்கியமாகன மாற்றத்திற்கு வருகிறேன். அதாவது கூட்டுக் குடும்ப அந்தஸ்தின் சீர்குலைவு பற்றியது. இதில் ஒரு முக்கிய மான அம்சம் என்னவெனில், இந்த மசோதாவின் 86வது பிரிவின் கீழ், பிறப்பினால் ஏற்படும் உரிமையை சட்டரீதியாக இனி எந்த நீதி மன்றமும் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளாது. இந்த ஷரத்தின் விளைவாக எழும் தீங்கான விளைவுகளை நினைக்க நடுக்கமுறு கிறேன். வங்காளமும் அஸ்ஸாமும் ஏற்கனவே **தாயபாகா** சட்ட அமைப்பிற்கு உட்பட்டுள்ளன என்று கூறப்படுகிறது. கூட்டுக் குடும்ப அந்தஸ்தை அது அங்கீகரிப்பதில்லை. அதன் கீழ், ஒவ்வொரு குடும்ப உறுப்பினரும் சமத்துவ நிலை பெறுகிறார். அதன் பொருள், இந்த அமைப்பு முறை இந்தியா முழுவதற்கும் விரிவாக்கப்பட வேண்டுமா? ஐந்து கோடி மக்களை இந்த அமைப்பு முறை கட்டுப்படுத்துகிறது

என்றால், மற்ற அமைப்பு முறை இருபது கோடி மக்களைக் கட்டுப் படுத்துகிறது. ஐந்து கோடியின் சட்டம் மற்ற இருபது கோடிக்கும் விரிவுபடுத்த வேண்டுமா? இது முற்றிலும் தவறு என்று கூறுகிறேன். பிறப்பால் அடைகிற உரிமை ஓர் இந்து மகனின் மிகவும் மதிக்கத்தக்க உரிமையாகும். தகப்பனாரின் ஊதாரித்தனம் மற்றும் வீண் செலவு செய்யும் இயல்புக்கு எதிராக வழிவகை செய்யும் உரிமை இது. பல்லாயிரக்கணக்கான இந்துக் குடும்பங்களின் சொத்துக்களை பாதுகாத்தது இந்த மதிப்புமிக்க உரிமை. கேடு விளைவிக்கும் இந்த சட்டமியற்றல் அதன் 86வது பிரிவில் இந்த உரிமையை எடுத்து விடுகிறது. அது மட்டுமல்ல, இந்த தன்னிகரில்லா சட்டமியற்றலின் 87வது பிரிவு அது அமுலுக்கு வரும்போது ஒவ்வொரு கூட்டுக் குடும்பமும் சீர்குலைவதற்கு வழிவகை செய்கிறது. ஒரு கட்டாயப் பாகப்பிரிவினை ஏன் அவசியம் இருக்க வேண்டும்? இந்த ஷரத் துக்கள் எளிமையான தன்மை கொண்டவையல்ல, அவை ஒரு புரட்சிகர மற்றும் தீவிரத் தன்மை கொண்டவை. இந்த அபரிமிதமான தன்மைகொண்ட மாற்றங்களைக் கொண்டு வருவதற்கு நிச்சயமாக காரணம் எதுவும் இல்லை.

அடுத்து, மசோதாவில் உட்படுத்தப்பட்டுள்ள மிக முக்கியமான ஷரத்திற்கு வருகிறேன். திருமண உறவு முறிதல் என்று அந்தப் பிரிவு அழைக்கப்படுகிறது. இது பற்றி கையாளும் பிரிவு 30. திருமண உறவு முறிவு ஏற்படுவதற்கான காரணங்களை அது வகுத்துரைக்கிறது. இதோடு பொருத்தமான மற்றொரு பிரிவு 33. இது திருமணத் தம்பதி யரில் ஒருவர் நீதிமன்ற ஆணை மூலம் பிரிந்திருப்பதற்குக் கோரு வதற்கான காரணங்களை வகுத்துரைக்கிறது. ஒரு திருமணத்தை செல்லாது அல்லது செல்லதக்கதாகாது என்று பிரகடனப்படுத்து வதற்கும் ஷரத்துகள் அதில் உள்ளன. இந்து சட்டம் மற்றும் இந்து சமுதாயத்தைப் பொறுத்தவரை, இவை முற்றிலும் அசாதாரண மானவை ஆகும். உண்மையில், இந்தச் சட்ட ஷரத்துக்களும் மற்றும் இந்த மசோதாவில் இணைக்கப்பட்டுள்ள மற்ற ஷரத்துக்களும் வழக் கறிஞர்களுக்கு ஒரு சுவர்க்கத்தையே உருவாக்கியுள்ளன. ஒரு திருமணம் செல்லாது என்று அறிவிக்க தம்பதியர் ஒரு நீதிமன்றத்திற்குச் செல்லலாம். திருமணத்தை ரத்து செய்வதற்கு தம்பதிகள், ஒரு நீதி மன்றத்திற்குச் செல்லலாம். நீதிமன்ற ஆணை மூலம் பிரிந்து வாழ் வதற்கு அவர்கள் ஒரு நீதிமன்றத்திற்குப் போகலாம். பல ஐரோப்பிய நாடுகளில் மண உறவு முறிவு வழக்குகளிலிருந்து கற்றுக்கொண்ட பாடங்கள் எவை? ஒவ்வொரு ஆறு திருமணங்களில் ஒன்று முறிவு பெறுகிற மேற்கத்திய நாடுகளின் மற்றும் அமெரிக்கா, இங்கிலாந்து நாடுகளின் அனுபவம் நமதுக்கு எந்தப் பாடத்தையும் போதிக்கவில்லை என்பது ஆச்சரியமானதாகவும் திகைப்பூட்டுவதாகவும் உள்ளது. நமது

சமுதாயத்தில், நமது சமுதாயத்தின் எந்தக் கட்டத்திலும் நமக்கு இந்த நிலை இருந்ததில்லை. நீதி மன்றத்திற்குச் செல்வதை நாம் கட்டாய மாக ஏன் புகுத்த வேண்டும்? ஒவ்வொரு திருமண முறிவும் மாவட்ட நீதிமன்றங்கள் மூலமே இருக்க முடியும் என பிரிவு 34 வகை செய்கிறது. ஒவ்வொரு முறிவும் தானாகவே பிரிவு 44ன் கீழ் ஊர்ஜிதத்துக்காக உயர் நீதிமன்றத்திற்குப் போக இந்தப் பிரிவு வகை செய்கிறது. இது வழக்கறிஞர்களின் செல்வச் செழிப்புக்காக கதவைத் திறந்து விடுவ தாகாதா என்று கேட்கத் தோன்றுகிறது. சமுதாயம் நீதிமன்றத்தில் அதிகம் வழக்காடுவதை இந்த சட்டமியற்றல் துவக்கி வைக்கிற தல்லவா? எனவே நீதிமன்ற ஆணை மூலம் பிரிந்து வாழ்வதற்கும் மண உறவு முறிவிற்கும் இணைக்கப்பட்டுள்ள பிரிவுகள் 30ம் 33 ஆகும். இப்பிரிவுகள் இந்து சமுதாய லட்சியங்களுக்கு எதிரானவை மட்டு மல்ல, நமது நாகரீகத்திற்கும் கலாசாரத்திற்கும் நேர்மாறானவை என்று பணிவுடன் கூறிக் கொள்கிறேன். புனித சமயச் சடங்குகள் முறை யிலான புனித திருமணத்திற்கு இவை நேர் முரண்பட்டவை. ஏனெனில் தம்பதிகள் சலனப்புத்தியோடும் மனம்போன போக்குப்படியும் முடிவுக்கு வரக்கூடிய ஒப்பந்த உறவு அல்ல அது. ஆனால் அது புனிதமான பிணைப்பு. அதனுடைய மூலவேர் சென்ற காலத்தில் உள்ளது. எதிர்காலத் திலும் அதன் தாக்கம் இருக்கும். இந்து திருமணத்தின் கருத்தாகும் அது. நீதிமன்ற ஆணைப்படி பிரிந்து வாழ்வது மற்றும் திருமண முறிவு ஆகியவற்றிற்கான ஷரத்துக்கள் நேர் எதிரானவை. இம்மாதிரியான திருமண உறவுகளுக்கு பழக்கப்பட்டுப் போன - விவாகரத்து போன் றவை எல்லாம் - மேற்கத்திய நாடுகளில் அவர்கள் இவை பற்றிச் சலிப் படைந்து வரும் போது அவர்களில் சிந்தனையாளர்கள், நிதானஸ் தர்கள் இந்த அமைப்பு முறை சமுதாயத்திற்கு நாசகரமானது என்று சிந்தித்து வரும்போது, அதை ஒரு முன்மாதிரியாக பின்பற்ற நாம் முயன்று வருவது நிச்சயமாக விசித்திரமானது. எனது வேண்டுகோள் என்ன வெனில், நீங்கள் அவசியம் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். நீதி மன்ற ஆணை சார்ந்து பிரிந்து வாழ்வதற்கு காரணங்கள் யாவை? கணவன் மனைவிக்கோ, மனைவி கணவனுக்கோ துரோகம் இழைத்தல் சம்பந்தமான வழக்கு திருமண உறவுகள் நீதிமன்ற ஆணைப்படி பிரிந்து வாழ்வதன் மூலமோ அல்லது மண உறவு முறிவு மூலமோ முடிவுக் குக் கொண்டுவரப்படலாம் என்று சட்டம் கூறுகிறது. ஜீவ அணுக்கள் தம்பதிகள் முன்னால் இருக்கின்றன. அவையின் கவனத்திற்கு அவற்றைப் பணிவுடன் கொண்டுவர விரும்புகிறேன். ஒரு சண்டை இருந்தால் - குடும்பங்களில் பல சந்தர்பங்களின் சச்சரவு ஏற்படுவது இயல்பே. இந்த மசோதாவில் இந்த ஷரத்துக்கள் இருந்தால், சண்டை

அல்லது குடும்ப கைகலப்பு கூட நிகழும், எந்த சமயத்திலும் நீதிமன்றத்தின் தீர்வைத்தேட தம்பதிகளுக்கு ஊக்கமளிக்கும்; ஐயா, இது மிக மலிவாகிவிடும். ஏனெனில், துரோகக் குற்றச்சாட்டை பெண் தனது கணவனுக்கு எதிராகவோ அல்லது கணவன் மனைவிக்கு எதிராகவோ எளிதாகக் கொண்டுவர முடியும். குடும்பங்களை சீர்குலைப்பதில் அக்கறைகொண்டவர்கள் எல்லா இடங்கிலும் இருக்கிறார்கள். விளைவு என்னவெனில் அற்பமான காரணங்களுக்காக, விவாகரத்து வழக்குகள் வரும். எனவே அது இந்து சமுதாயத்திற்கு நாசகர விளைவை ஏற்படுத்தும். பல நூற்றாண்டுகளாக நமது சமுதாயம் பலவித தாக்குதல்களைச் சமாளித்து நிலை நின்றுள்ளது. தாக்குதல்கள் இருந்த போதிலும் உள்ளார்ந்த **பதிவிரதா பக்தி** அமைப்பு முறையின் காரணமாக அது பின்பற்றத்தக்க ஒரு குறிக்கோளாக உலகில் வெற்றிகரமாக நிலைத்து நின்றுள்ளது. விவாகரத்தை வழக்கமாக கையாண்டு வரும் சமூகங்களுக்கும் கூட இந்த ஷரத்துக்கள் உதவவில்லை. அவை ஒரு பெரும் தடையை எழுப்பி நீதிமன்றத்திற்கு செல்லும்படி அவர்களை நிர்பந்திக்கிறது. நமது கலாசாரத்திற்கும் நாகரீகத்திற்கும், ஏற்றுக் கொள்ளப்பட்ட குறிக்கோளுக்கும் திருமண வாழ்க்கை என்ற உயர்வான கருத்துக்கும் அது எதிராக உள்ளது. ஒரு வாதம் அடிக்கடி திரும்பத்திரும்பக் கூறப்படுகிறது. இந்த சட்டமியற்றலில் தீவிரமான அல்லது புரட்சிகரமானது எதுவும் இல்லை என்றும் திருமணம், விவாகரத்து சம்பந்தமான ஷரத்துக்கள் கட்டாய வற்புறுத்தல் இல்லாத தன்மை வாய்ந்தவை என்றும் சொல்லப்படுகிறது. அது அப்படி எனின், பிரிவு 5 முதல் 51 வரையிலான ஷரத்துக்களை எல்லாம் நீக்கிவிட்டு, மசோதாவில் ஒரே பிரிவு மட்டுமே, அதாவது ஒவ்வொரு இந்துவும் அவர் விரும்பும் எந்த நபரையும் திருமணம் செய்துகொள்ளத் தகுதி பெறுவார் என்பதை மட்டும் விதி ஆக்கலாமே. ஏனெனில் அது மட்டுமே செயல்படுவதற்கு உரிமை அளிக்கும் ஷரத்து ஆகும். அவர் தனது சொந்தத் துணிச்சலில் தனது சகோதரியையே கூடத் திருமணம் செய்து கொள்ளலாம். இவ்வளவு பல பிரிவுகள் கொண்ட வியாகபகமான மசோதாவை அளிப்பதில் பயன் எதுவும் இல்லை. எல்லாவற்றையும் நீக்கிவிட்டு ஒரு பொதுவான பகுதியையே ஏன் வைத்துக் கொள்ளக் கூடாது? அது எளிமைக்கு முன் மாதிரியாக இருக்கும். மேலும் நாம் கடந்து கொண்டிருக்கும். கலாசாரத்திற்கும் கட்டத்திற்கும் முன்மாதிரியாகத் திகழும் . எனது பணிவான கருத்து என்னவெனில், ஓர் இந்து மற்றும் கீழைய நாடுகளின் கண்ணோட்டத்திலிருந்து பார்த்தால், இந்த ஷரத்துக்கள் வெறுக்கத் தக்கவை. இத்தன்மை வாய்ந்த மசோதாவில் அவை இணைக்கப்பட முடியாதவை, சகித்துக்கொள்ளப்பட முடியாதவை.

நான் அடுத்த விஷயத்திற்கு வருகிறேன். இந்த மசோதாவின் ஷரத்துக்களின்கீழ் பிரிவு 31 தொடர்புடைய பிரிவு தந்தையிடமிருந்தோ அல்லது மாமனாரிடமிருந்தோ அல்லது வேறு நபரிடமிருந்தோ வாரிசுரிமையாக ஒரு பெண்மணிக்கு வரும் ஒவ்வொரு சொத்தும் அவளுக்கு முழுமையான சொந்தச் சொத்து ஆகும். பெண்ணின் சொத்து உரிமையை மாற்றிக் கொடுக்கும் விதிகள் பிரிவு 106 முதல் 109ல் அளிக்கப்பட்டுள்ளன. குடும்ப வாழ்வில் அமைதியை அடைவதற்கு உகந்ததாக இல்லை இந்த ஷரத்துக்கள். நாசகரமான தன்மை கொண்டவை இவை. இந்துக் கருத்து பற்றிய கண்ணோட்டத்திற்கு எதிராக ஒவ்வொரு ஷரத்தும் உள்ளது. ஒரு பெண் உரிமை பெறும் சொத்து, பிரிவு 91 படி பெண்ணின் முழு உரிமை பெற்றச் சொத்தாகும் என்பதை காண்பீர்கள். அது எந்த வரிசைப்படி சென்றடையும் என்பது 106முதல் 109 பிரிவுகளின் கீழ் வரையறுக்கப்பட்டுள்ளது. முதல் உரிமை பெறுபவர்கள் கணவனும் பிள்ளைகளும்; கணவனோ குழந்தைகளோ இல்லையெனில், அப்பொழுது மசோதாவின் கீழ் சொத்தில் உரிமை பெறுபவர்கள் தாயார், தகப்பனார் மற்றும் கணவரின் உறவினர்கள். மதிப்பிற்குரிய ஒவ்வொரு உறுப்பினரையும் பணிவுடன் கேட்டுக்கொள்வது, இந்துக்களின் நாட்டில் தனது மகளிடமிருந்து சொத்தை பெறுவதில் ஆர்வம் காட்டும் எந்தத் தகப்பனோ அல்லது தாயாரோ இருக்கிறார்களா?

திரு.எல். கிருஷ்ணசாமி பாரதி: ஏன் இல்லை? அதில் தீங்கு என்ன?

பண்டிட் முகுத் பீஹாரி லால் பர்கவா : ஒரு வேளை எனது மதிப்பிற்குரிய நண்பர் இந்தியாவிலிருந்து வரவில்லை. எங்கோ ஒரு வெளிநாட்டிலிருந்து வந்திருப்பார்பால் தோன்றுகிறது.

திரு.எல். கிருஷ்ணசுவாமி பாரதி : நான் தென்னிந்தியாவிலிருந்து வருகிறேன்.

பண்டிட் முகுத் பீஹாரிலால் பர்கவா : இந்தியாவில் எந்த தந்தையும் அல்ல தாயும் மகளிடமிருந்து எதையும் பெற்றுக்கொள்ள ஒருபோதும் நினைக்கமாட்டார்கள்.

திரு. எல். கிருஷ்ணசுவாமி பாரதி: பஞ்சாபில் அவ்வாறு இருக்கலாம்.

பண்டிட் முகுத் பீஹாரி லால் பர்கவா : வட இந்தியா முழுவதிலும் அவ்வாறு அல்ல. தென்னிந்தியாவைப் பற்றி ஆதார அடிப்படையில் என்னால் கூறமுடியாது. வட இந்தியாவைப் பொறுத்த வரை அந்த எண்ணம வெறுப்பூட்டுகிறது. எல்லாவற்றிற்கும் மேலாக பணத்தையும் சொத்தையும் பற்றி எண்ணுகிறவர்கள் நிச்சயமாக இந்த விதிக்கு விலக்காகும். அவர்களுக்கு தர்மம் என்பது அவர்கள் அக்கறை கொள்ள வேண்டிய விஷயமல்ல. விதிவிலக்குள் பற்றி நான் பேசிக் கொண்டிருக்கவில்லை. வட இந்தியாவின் சாதாரண தகப்பனார் அல்லது தாயாரைப் பற்றிப் பேசிக் கொண்டிருக்கிறேன். தங்களின் மகளிடயிருந்து எதையும் ஏற்றுக் கொள்ளும் எண்ணத்தையே அவர்களது ஆத்மாக்கள் வெறுக்கும். **கன்யாதானத்தில்** ஒரு தகப்பனாரும் மற்ற தரப்பாரும் ஒன்றாக அமர்ந்து மணமகனுக்கு தங்கள் மகளை அளிக்கிறார்கள். மேலும் வரதட்சணையும் நகைகளையும் அளிக் கிறார்கள். அதற்குப் பின்பு தாயாரோ அல்லது தகப்பனாரோ மகளின் வீட்டில் தண்ணீர்கூட அருந்த மாட்டார்கள்.

திரு.எல். கிருஷ்ணசுவாமி பாரதி : நாட்டின் எங்கள் பாகத் தில் அது இவ்வளவு மோசமாக இல்லை.

பண்டிட் முகத் பீஹாரி லால் பர்கவா : நாட்டின் உங்கள் பகுதியில் இது ஒரு பழக்கமாக அல்லது நடைமுறையாக இருக்கலாம். மிகப்பெரும்பான்மையோர் இந்தக் கருத்திற்கு எதிராக இருப்பர். மகளிடமிருந்து எந்த சொத்தையும் பெற்றுக்கொள்வது என்பதை அவர்கள் கற்பனை செய்துகூட பார்க்க முடியாது. சொத்துடைமை கைமாறுதல் அமைப்பு முழுவதன் விதிகள் இந்து கருத்திற்கு எதி ரானதை இருப்பர். மகளிடமிருந்து எந்த சொத்தையும் பெற்றுக் கொள்வது என்பதை அவர்கள் கற்பனை செய்து கூடப் பார்க்க முடியாது. சொத்துடைமை கைமாறுதல் அமைப்பு முழுவதின் விதிகள் இந்து கருத்திற்கு எதிரானதை அடிப்படையாகக் கொண்டவை. நாட்டின் எனது பக்கத்தின் கிராம பகுதிகளுக்கு செல்லும் சிரமத்தை திரு. பாரதி மேற்கொள்வாரேயாகின், தகப்பனார் அல்லது தாயார் இருக் கட்டும், ஒரு கிராமத்தில் வாழும் மக்கள் அவர்களின் கிராமத்தைச் சேர்ந்த மகள் திருமணம் செய்து கொடுக்கப்பட்ட மற்றொரு கிரா மத்தில் தண்ணீர்கூட அருந்த மாட்டார்கள் என்பதை காண்பார்.

திரு.எல். கிருஷ்ணசுவாமி பாரதி : அத்தகைய கிராமத்தின் வழியாகக்கூட அவர்கள் செல்ல மாட்டார்கள் என நான் கேள்விப் படுகிறேன்.

பண்டிட் முகுத் பீஹாரிலால் பர்கவா: உரிமை கைமாறுதல் பற்றிய விதிகளின் கீழ் தகப்பனாருக்கும் தாயாருக்கும் அடுத்து ஒரு பெண்ணின் சொத்தின் மீது உரிமை பெறுபவர்கள் யார்? கணவரின் உறவினர்களுக்கு அது போவதற்கு வழிவகை செய்யப்பட்டால் அது வெறுக்கத்தக்கதாகும். மேலும் அது குடும்பப்பூசல்களைக் கிளப்பும். சொத்து தகப்பனிடமிருந்து மகளுக்கு வந்தது என்றால், அது ஏன் கணவரின் உறவினர்களுக்குப் போக வேண்டும்? அதனால்தான் நமது சட்ட மூலவர்கள் பல்வேறு வகைப்பட்ட சீதனத்தை கொடுத்துள்ளார்கள். அது பல்வேறு வகைப்பட்டவர்களுக்குச் சிறுகச் சிறுகச் சென்று சேரும். நமது சட்ட மூலவர்களின் உயர்வான நோக்கங்களைப் புரிந்து கொள்ள நீங்கள்தகுதி வாய்ந்தவர்களல்ல. அவர்கள் முக்கியமாகன வழிவகைகளைஆக்கியிருக்கிறார்கள. அவர்களின் லட்சியங்களை எளிமை என்ற பலிபீடத்தில் தியாகம் செய்யப் பார்க்கிறீர்கள். சீதனம் பற்றிய ஏற்றுக் கொண்ட நமது எண்ணங்களின் படி, சொத்து தகப்பனார் பக்கத்திலிருந்து வந்தால், அதற்கு உரிமை பெற்றவர்கள் தகப்பனாரின் உறவினர்களே. இம்மாதிரி தன்மை கொண்ட ஒரு ஷரத்தை பிரிவுகள் 106 முதல் 109ல் ஏன் இணைக்கக் கூடாது? இந்து தத்துவதற்கு அதிகம் ஏற்புடையதாக இருக்கும் அது.

இப்பொழுது நான் மசோதாவின் மற்ற ஷரத்துக்களுக்கு வருகிறேன். (சட்டத்) தொகுப்பு அமுலுக்கு வரும் நாளில் கூட்டு - குடியிருப்பு உரிமை பொதுக் குடியிருப்பு உரிமை என்று மாற்றப்பட்டதாகக் கருதப்படும். 115 பிரிவில் உள்ள மசோதாவின் ஷரத்துப்படி, குடும்பச் சொத்தை பிரிக்கும்படி கோரி ஒவ்வொரு வாரிசும் நீதிமன்றத்திற்குச் செல்லமுடியும். குடும்பத்தில் சுமூகமான நிலையைப் பாதுகாக்க இந்த ஷரத்து உகந்ததாக உள்ளதா? தகப்பனாரின் மரணத்திற்குப் பின் மகள், மகன் மற்றும் மறைந்த மகனின் விதவை மற்றவர்களும் நீதிமன்றத்திற்கு விரைந்து சென்று 115வது பிரிவின்படி பிரிவினைக்கு உரிமை கோரலாம். இது இஸ்லாம் சட்டம் போன்றிருக்கும். இந்துத் தத்துவதற்கு முற்றிலும் ஒவ்வாததாக இருக்கும். மசோதாவில் இம்மாதிரியான ஷரத்தை அனுமதிக்க முடியாது.

இந்தத் தொகுப்பு கருத்து மோதுதல்களைத் தீர்த்து வைக்கும் என்றும், இந்து தருமத்திலுள்ள எல்லாக் கோளாறுகளுக்கும் பரிகாரம் காணும் பரந்த தன்மை கொண்டது என்றும் கூறப்படுகிறது. விடுபட்டுப்போனவை எதுவும் இல்லையா இந்த மசோதாவில்? அவை நிரப்பப்பட்டாலன்றி அது இந்து சமுதாயத்தை சிதறடித்து விடாதா?

பிரிவுகள் 88 மற்றும் 89ன் கீழ் புனிதமான கடமைகள் என்ற சித்தாந்தத்தை நீங்கள் வழக்கொழியச் செய்கிறீர்கள். கூட்டுக் குடும்பத்தில் இன்று நிலவும் இறைமுறைக் கடன்களை செலுத்த குடும்ப உறுப்பினர்கள் கடமைப்பட்டிருப்பதாக 89 வது பிரிவு கூறுகிறது. தந்தை இறந்ததும் செய்ய வேண்டியவை பற்றி என்ன வழி வகை செய்திருக்கிறீர்கள்? சவ அடக்கச் செலவை ஏற்றுக் கொள்வது யார்? சிரார்த்தம் மற்றும் அம்மாதிரியான சமய சடங்குகள் சம்பந்தப்பட்ட தர்ம காரியங்களுக்கு யார் பொறுப்பு ஏற்பது? சட்டத் தொகுப்பு ஏட்டில் இந்த மசோதா சட்டமாகக் கொண்டு வரப்பட்டால், பல்வேறு பட்ட வாரிசுகளிடையே சண்டை, சச்சரவுகள் எழாதா? ஒரு தந்தை இறந்ததும் ஒவ்வொரு மகனும் மகளும் தந்தையின் சொத்தை தன் வயப்படுத்துவதில் ஈடுப்பட்டிருப்பர். சுயகௌரத்தை மதிக்கும் எந்த ஒரு குடும்பத்திற்கும் அத்தியாவசியமான சிரார்த்தத்தை நடத்த வேண்டிய அவர்களது கடமையை மறந்து விடுவர். இது பற்றி இந்த மசோதாவில் எவ்வித ஏற்பாடும் இல்லை.

சட்டத்தொகுப்பு இந்துக் கூட்டுக் குடும்பத்திற்கு வகை செய்கிறதா? இந்துச் சட்டத்தில் இணை உரிமைச் சொத்திற்கும் கூட்டுக் குடும்பச் சொத்திற்கும் இடையே வேறுபாடு உள்ளது. தொழில் நடத்தும் குடும்பங்களின் எண்ணிக்கை இந்தியாவில் எவ்வளவு? அதற்கு மசோதாவில் ஏதாவது ஒரு ஷரத்து உள்ளதா? கூட்டுக் குடும்பத்தின் தொழிலில் வாரிசுரிமை எவ்வாறு செயல்படும்?

இந்த மசோதா சர்வவியாபகத் தன்மை கொண்டது என்று நீங்கள் உரிமை கொண்டாடுகிறீர்கள். தத்தெடுக்கப்பட்ட மகனுக்கு ஏதாவது வழிவகை செய்திருக்கிறீர்களா? பிரிவு 52 மற்றும் 54ன் கீழ், பதினெட்டு வயதை அடைந்த எந்த ஆணும் தனது மனைவியின் சம்மதத்துடன் மகனைத் தத்தெடுக்க உரிமை பெறுகிறார். தத்து எடுத்தபின், தந்தை தன் சொந்த மகனை பெற்றால், தந்தை வழிச் சொத்தில் மகனின் உரிமைகள் யாவை? தங்களின் இந்தச் சட்டத் தொகுப்பு இந்தப் பிரச்சினைக்கு ஏதாவது தீர்வு தருகிறதா? நமது இந்து சட்ட மூலவர்கள் அல்லது **ஸ்மிருதிக்காரர்கள்** நாட்டின் பல்வேறு பாகங்களுக்கும் ஏற்ப போதுமான வழிவகை செய்துள்ளனர். தந்தையால் ஒரு மகன் தத்து எடுக்கப்பட்டபின் பிறக்கும் மகனின் நிலை என்ன?

தாயபாகாவில் அவன் ஒன்றில் பாதியைப் பெறுகிறான்; **மிதாக்ஷராவின்** கீழ் அவன் மூன்றில் ஒரு பங்கைப் பெறுகிறான். பம்பாய் மாகாணத்தில் நான்கில் ஒரு பங்கை அவன் பெறுகிறான்.

இதற்காக ஷரத்து எதையும் ஏற்படுத்தியிருக்கிறீர்களா? அவ்வாறு செய்யாவிடில், அது குழப்பத்தை, அதுவும் மோசமான குழப்பத்தை ஏற்படுத்தாதா? கூட்டுக் குடும்பச் சொத்தை பாகப் பிரிவினை செய்வதற்கு ஷரத்து கொண்டு வந்திருக்கிறீர்களா? இது போலவே இன்னும் எவ்வளவோ அத்தியாவசியமான விஷயங்கள். அவை இந்துச் சட்டத்தின் சிக்கலான கிளைகள். எனவே நான் பணிவுடன் கூறிக் கொள்வது என்னவெனில் பதில் அளிக்க மிகவும் கஷ்டமான பிரச்சினைகளை இது தோற்றுவிக்கும்.

அடுத்து எழும் கேள்வி, கூட்டுக் குடும்பச் சொத்தில் எந்த பங்கும் இல்லாத ஒரு மகனின் உரிமைகளும் கடமைகளும் யாவை என்பதாகும். இன்றைய சூழ்நிலைமைகளில் பிறப்பு காரணமாக மகன் சொத்தில் உரிமைகள் பெற்றிருக்கிறான். அவனது வாழ்க்கை ஆதாரத்திற்கும் கல்விக்கும் மற்றவற்றிற்கும் அவை அவனுக்கு கவசமாக இருக்கும். பிரிவு 126மற்று 128 உள்ள ஷரத்துக்களை நீங்கள் எனக்குச் சுட்டிக்காட்டலாம். ஒவ்வொரு கணவனின் கடமை அவனது மனைவியின் வாழ்க்கைக்கு பொறுப்பேற்க வேண்டும் என்பதற்கும் தொழு நோய் முதலிய உடல்நலமின்மை அடிப்படையில் தனியாக வாழப் பாதுகாப்புத் தொகையை மனைவி கோரலாம் என்பதற்கும் அவை வழிவகை செய்கின்றன. இங்கும் இது மீண்டும் நீதிமன்ற வழக்குகளுக்கு கதவைத் திறந்துவிடுகிறது. வழக்கறிஞர்களுக்கு ஒரு சுவர்க்கத்தைத் தோற்றுவிக்கிறது. குழந்தைகள் மற்றும் வயதான பெற்றோர்களின் பாதுகாப்பிற்கு பிரிவு 128ல் வகை செய்யப்பட்டுள்ளதாக நீங்கள் கூறுவீர்கள். பிரிவுகள் 126 மற்றும் 128ன் கீழ் வாழ்க்கைப் பாதுகாப்பிற்கு வகை செய்வதன் மூலம் அவர்களின் உரிமைகளை பயனுள்ள வகையில் பாதுகாக்கிறீர்களா? நீங்கள் பாதுகாக்கவில்லை என்று பணிவுடன் கூறிக் கொள்கிறேன். இன்றைய இந்துச் சட்டத்தின் கீழ் அவர்கள் பெற்றுள்ள நிலையைவிட மோசமான நிலையில் அவர்களை வைக்கிறீர்கள். இன்றைய இந்துச் சட்டத்தின் கீழ், குடும்பச் சொத்திலிருந்து பராமரிப்பப் பெற ஒரு மகனுக்கு உள்ளார்ந்த உரிமை இருக்கிறது. தகப்பனார் அல்லது குடும்பத்தின் நிர்வாகி அல்லது **கர்த்தா,** அவனது நலன்களை கவனித்துக் கொள்ளும் கடமையை ஆற்றவில்லையெனில், நீதிமன்றத்தின் மூலம் அவன் பரிகாரம் பெறலாம். பாகப்பிரிவினையைக்கூட அவன் கோரலாம். இந்துச் சட்டத்தில் பாசப்பிரிவினை கோர ஒரு மைனருக்கு வரையறைப் படுத்தப்பட்ட உரிமை இருந்தபோதிலும், ஒரு மைனருக்கு, பாதகமான தீங்கு விளைவிக்கும் வகையில் தகப்பனார் அல்லது குடும்ப நிர்வாகி அல்லது கர்த்தா தமது அதிகாரத்தைத் தவறாகப் பயன்படுத்தினால்,

பாகப் பிரிவினைக்குள்ள தனது உரிமையை நிலை நாட்ட அந்த மைனருக்கு சட்டரீதியான பரிகாரம் உண்டென்பதையும் அந்த உரிமையை செயலாக்க நீதிமன்றத்தில் வழக்குத் தொடுக்கலாம் என்பதையும் இந்து சட்டத்தின் ஒவ்வொரு மாணவரும் அறிவார். அது மதிப்புள்ள உரிமை; மதிப்புள்ள அந்த உரிமையை நீங்கள் எடுத்து விடுகிறீர்கள்.

அதுபோலவே, 126வது பிரிவு மனைவியின் பராமரிப்புக்கு வகை செய்துள்ளது, மற்றும் 128வது பிரிவு குழந்தைகள் மற்றும் வயதான பெற்றோர்களின் பராமரிப்பிற்கு வகை செய்துள்ளது என்று நீங்கள் கூறுகிறீர்கள். ஒரு கணவர் பணவசதி இல்லாதவராக இருந்தால், அவர் சம்பாதிக்க முடியாமலிருந்தால் தம்மை பாதுகாக்கவே எந்த ஆதாரமும் இல்லாமல் அவர் இருந்தால், அவர் தமது மனைவியை எவ்வாறு பராமரிக்க முடியும்? எனவே மனைவிக்கு வழங்கப்பட்டுள்ள இந்தப் பொய்யான உரிமை ஒரு போலித்தன மான, காகிதத்தில் மட்டும் இருக்கிற உரிமை என்று கூறுகிறேன். இன்றைய இந்துச் சட்டத்தில் ஒவ்வொரு பெண்மணியும் தங்குவதற்கு இடம் பெறவும் பராமரிக்கப்படவும் உரிமை பெற்றுள்ளாள். நிர்வாகியோ அல்லது **கர்த்தாவோ** உரிமையைத் தவறாகப் பயன் படுத்தினால், ஒரு நீதிமன்றத்தின் மூலம் உரிமையை அவள் நிலை நிறுத்த முடியும்.

திரு.எல். கிருஷ்ணசாமி பாரதி : அவளது கணவர் பணம் எதுவும் இல்லாதவராக இருந்தாலுமா?

திரு. பண்டிட் முகுத் பீஹாரி லால் பர்கவா : கூட்டுக் குடும்பச் சொத்து பற்றி நான் கூறிக் கொண்டிருக்கிறேன். ஒரு சட்டத் தின் மூலம் ஒவ்வொரு நிலச்சொத்தும் மறைந்துவிடும் எல்லாச் சொத்தும் சோஷலிசமயமாக, தேசியமயமாக ஆக்கப்படும் என்று நீங்கள் முடிவு கட்டினால் அது வேறு விஷயம். கூட்டுக் குடும்பம் என்ற அமைப்பை அப்படியே வைத்துக் கொள்வதால் இப்போதைய இந்து சட்டத்தின் கீழ் விதவைகள் மற்றும் பெண்கள் ஆகியோர் பெற்றுள்ள அவர்களது உயர்வான உரிமைகளை இழக்கச் செய்கிறீர் கள். போலித்தனமான, காகிதத்தில் மட்டும் இருக்கிற சமத்துவம் என்ற பெயரால், ஒரு தவறை செய்யும் குற்றத்திற்குள்ளாகிறீர்கள். இதற்குப் பரிகாரம் கண்டுபிடிப்பது மிகவும் கஷ்டமானதாகிவிடும். எனவே எனது பணிவான கருத்து என்னவெனில், எந்த ஒரு கண்ணோட் டத்திலிருந்து பரிசீலித்தாலும் இந்த சட்டமியற்றுவதற்கான மசோதா இந்துச் சட்டக் கோட்பாடுகளுக்கு எதிரானது மட்டுமல்ல இந்து

சமுதாயத்தில் சமாளிக்க முடியாத அல்லது பரிகாரம் காணமுடியாத குழப்பத்தையும் ஏற்படுத்தும்.

ஐயா, உரையை நான் முடிக்கும் முன்பு ஏப்ரல் 2ம் தேதியும் இன்றும் நான் கூறியதைப் பொதுமைப்படுத்திக் கூற வேண்டியுள்ளது. இந்துச் சட்டத்தை தொகுப்பதற்கான அவசியம் எதுவும் இல்லை, விரும்பத்தக்கதுமல்ல. நாட்டில் **சட்டப்படியான** கருத்து இதை விரும்பவில்லை. சட்டப் பேரவை தலையிட வேண்டிய அளவுக்கு கடுமையான தன்மை வாய்ந்த சட்டரீதியான முரண்பாடு எதுவும் இல்லை. ஏப்ரல் 2ம் தேதி எனது உரையில், ராவ் குழு ஆதாரமாகக் கொண்ட சாட்சியங்களின் இயல்பைப் பற்றி நான் ஆராய்ந்தேன். ராவ் குழு பதிவு செய்த சாட்சியங்களின் மிகப் பெரும்பான்மையான கருத்து, ஒவ்வொரு புதுமாதிரியான மாற்றத்திற்கு எதிராக இருந்தது என்பதை நான் சுட்டிக் காட்டினேன். ராவ் குழுவின் மசோதாவுடன் இணைக்கப்பட்ட ஆய்வுக் குழுவிலிருந்துவெளிவந்த இப்போதைய இந்துச் சட்டத் தொகுப்பு மசோதாவில் அவை மேலும் மோசமாக்கப் பட்டுள்ளன. ஒவ்வொரு விஷயத்திலும், விவாகரத்துப் பிரச்சினையில் மதச் சடங்கு ரீதியான சிவில் திருமணப் பிரச்சினையில் பிரிவு 21ன் கீழ் ஒருவர்இஷ்டம் போல் மதச்சடங்குப் படியான திருமணத்தை சிவில் திருமணமாக மாற்றக் கூடிய விஷயத்தில் எதிர்ப்பு உள்ளது. எல்லாப் பக்கமும் இருந்து எதிர்ப்பு உள்ளது. கூட்டுக் குடும்ப அந்தஸ்தை முடிவுக்கு கொண்டு வருவதற்கு எதிரான கருத்து எல்லாப் பக்கத்திலும் அபரிமிதமாக இருந்தது. எனவே ஒவ்வொரு ஜீவாதார விஷயத்திலும் ராவ் குழுவின் மசோதாவுக்கு அபரிமிதமான எதிர்ப்பு இருந்தது. இப்பொழுதுகூட, நாட்டின் எல்லாப் பக்கங்களிலிருந்தும்நீதித் துறை சார்ந்த வழக்கறிஞர்கள் அமைப்புகளிலிருந்தும், மற்றும் பொது மக்களிடமிருந்தும் வந்து குவியும் கருத்து நிலைகுலைக்கும் தன்மை வாய்ந்த இந்தச் சட்டமியற்றல் தேவையில்லை என்பதைப் பிரதி பலிக்கிறது. எனவே நான் சமர்பித்தப்படி, மீண்டும் திரும்பவும் கூறுகிறேன் இந்துச் சட்டத் தொகுப்பு விரும்பத்தக்கதுமல்ல, அவசியமானதுமல்ல.

மசோதாவில் இடம் பெற்றுள்ள திருமண ஷரத்துக்கள் திருமணத் திற்கு ஒரு தவறான அர்த்தத்தைத் தருகிறது. உண்மையில் மதச் சடங்கின்படியான திருமணம் என்ற போர்வையில் இஸ்லாமிய, கிருஸ்தவ கோட்பாடுகள் திணிக்கப்படுகின்றன. அது போலித்தன மானது. இத்தன்மை வாய்ந்த திருமணத்தை செய்து கொள்வது - ஒருவர் இஷ்டபடி சிவில் திருமணமாக மாற்றிக் கொள்ளக் கூடியது - எந்த இந்துவிற்கும் அவமானகரமானது. இதை அனுமதிக்க முடியாது.

திரு.எஸ். நாகப்பா : மதச் சடங்கு முறையிலான திருமணங்களை இந்த மசோதா தடை செய்யவில்லை.

திரு. பண்டிட் முகுத் பீஹாரி லால் பர்கவா : தங்களின் இந்த வாதத்திற்கு ஏற்கனவே நான் பதிலளித்துள்ளேன். இந்த வாதம் அவைக்குள்ளும் வெளியிலும் அடிக்கடி திரும்பத்திரும்பக் கூறப்படுவதாகும். இது அதிகாரம் தருகிற நடவடிக்கையாகும். இசைவு தருகிற நடவடிக்கையாகும. அது அவ்வாறாயின், எல்லாவற்றையும் நீக்கிவிடுங்கள். பல வழிகளில் பயன்படுகிற ஒரு பிரிவை மசோதாவில் வைத்துக் கொள்ளுங்கள். ஒவ்வொருவரும் யாரையும் திருமணம் செய்து கொள்ள உரிமை தாருங்கள். மதச் சடங்கு முறையிலான திருமணத்திற்கு நீங்கள் ஏன் அதிக மரியாதை கொடுக்கிறீர்கள்? மசோதாவில் மதச்சடங்கு முறையிலான திருமணத்திற்கு தாங்கள் அளித்துள்ள அந்தஸ்து கேலிக்கூத்தானது தவிர வேறல்ல. காலம் காலமாக மதிக்கப்பட்ட மதச்சடங்கு முறையிலான திருமணத்திற்கு இது ஓர் இழிவாகும். மக்களை ஏமாற்றுவதற்காக, நிலைபேற்றிலுள்ள நடைமுறையிலிருந்து மாறுபாடு ஏதும் இல்லை என்று அவர்களை நம்பவைக்கிற தவறான சொல் பிரயோகம் இது. இந்து சமுதாயத்தின் மீது இழிவை ஏற்படுத்தும் போலித்தனமான செயலாகும். இம்மாதிரி நிகழ்வுகளை சுயமரியாதையுள்ள எந்த இந்துவும் சகித்துக் கொள்வது சாத்தியமல்ல.

பிரிவுகள் 5 முதல் 52வகையான இந்த ஷரத்துக்களை நீக்கிவிடுவது நல்லது. இந்து தத்துவத்திற்கு, இந்துக் கலாசாரத்திற்கு, இந்து நாகரீகத்திற்கு இவை முற்றிலுமாக எதிரானவை. திருமணம் சம்பந்தமான ஷரத்துக்கள் பற்றிய தாழ்மையான எனது கருத்து இது. விவாகரத்து பற்றி நான் எனது கருத்தை ஏற்கனவே கூறியுள்ளேன். சுவீகாரத்தைப் பொறுத்தவரை நான் ஏற்கனவே கூறியதை மீண்டும் கூறுகிறேன். அதாவது சுவீகாரம் என்ற கண்ணோட்டமே இந்துச் சட்டத்தின் ஒரு சிருஷ்டியேயாகும். இந்த நவீன காலத்தில் முன்னோடியான கருத்துக்கள் என்று நீங்கள் கூறிக் கொள்வதன் காரணமாக சுவீகாரம் என்ற தத்துவத்தை ஏற்றுக் கொள்ள உங்களால் முடியவில்லையெனில், சுவீகாரம் என்பதையே முற்றிலுமாக நீக்கிவிடுங்கள். நீங்கள் மசோதாவில் குறிப்பிட்டுள்ளபடி ஒரு குழப்பமான சுவீகாரத்திற்கு வழிவகை செய்யாதீர்கள். மசோதாவின் ஷரத்துக்களின்படி, ஒவ்வொருவரும், ஒவ்வொரு இந்துவும் ஒருவரை மகனாக சுவீகாரம் எடுத்துக் கொள்ளலாம். கோத்திரம் என்ற கட்டுப்பாடு எதுவும் இல்லை. அந்தஸ்து என்ற கட்டுப்பாடு எதுவும் இல்லை. சம்பந்தப்பட்ட நபர்

எந்த நபரையும் சுவீகாரம் எடுத்துக் கொள்ளலாம். குடும்பத்தில் ஒரு அன்னியரை சுவீகாரம் எடுப்பது எவ்வாறு நீதிமன்ற வழக்குகளுக்கு தோற்றுவாயாகும் என்பது இந்த சட்ட ஒழுங்குமுறை பற்றி நன்கு அறிந்தவர்களுக்குத் தெரியும். நன்கு நிலை நிறுத்தப்பட்ட வழக்கங் களும் நடைமுறைகளும் உள்ளன. அவற்றிற்கு ஆதரவான புனிதத் தன்மையும் நீதிமன்ற அறிவிப்புகளின் சட்டரீதியான உரிமைகளும் உள்ளன. அவற்றின்படி, அதே கோத்திரத்தைச் சேர்ந்த ஒரு குடும் பத்தின் ஓர் உறுப்பினரைத் தான் சுவீகாரம் எடுத்துக் கொள்ள முடியும். இந்த எல்லா நடைமுறைகளும் நன்கு நிலைநிறுத்தப்பட்ட வழக் கங்களும் சுலபமாகத் தூக்கி எறியப்படுகின்றன. இந்தச் செயலின் நாசகரமான விளைவுகளைப் பற்றி சிந்திக்கக்கூட இல்லாமல் அது மேற்கொள்ளப்படுகிறது. இத்தன்மை வாய்ந்த ஷரத்திலிருந்து தோன்றும் பயங்கரமான விளைவுகளைப் பற்றி சிந்திக்க நான் நடுக்க முறுகிறேன். இம்மாதிரியான தன்மை வாய்ந்த சுவீகாரத்திற்கு வழிவகைசெய்வதைவிட, சுவீகாரம் என்ற ஏற்பாட்டையே கைவிட்டு விடுவது மேலானது. உண்மையில் - நான் கூறப் போவதை அனுமதிக்க வேண்டும் - முழுப்பொறுப்பையும் நான் ஏற்றுக் கொள்கிறேன். அதாவது இந்த மசோதாவின் தயாரிப்புக்கு பின்னால் உள்ளவர்கள் இந்துக் கலாசாரம் சம்பந்தப்பட்ட ஒவ்வொன்றிற்கும் எதிராக உள் ளார்ந்த வெறுப்பை கொண்டிருக்கிறார்கள். எனவேதான், சுவீகாரத் திற்கு வகை செய்த இந்துச் சட்ட மூலவர்களின் நோக்கங்கள் எவை என்பதன் மதிப்பை உணராமல் அல்லது அறிந்து கொள்ளாமல் இத்தன்மையான ஷரத்துக்கள் புகுத்தப்பட்டிருப்பதை நாம் காண் கிறோம். இந்துச் சட்டத்தின் கீழ் ஏற்றுக்கொள்ளப்பட்ட சுவீகாரத்தின் ஒரே நோக்கம் ஒரு மனிதரின் ஆன்மீகத் தேவைகளை நிறைவேற்ற, அவரது மரணத்திற்கு பின் திருப்படையல் போன்றவை அளிக்க அவருக்கு ஒரு மகன் இருக்கலாம் என்பதுதான். சுவீகாரம் என்ற எண்ணத்தின் ஒரே நோக்கம் இதுதான்; எந்த சுவீகாரம் எடுத்துக் கொள்ளலாம் என்ற ஷரத்தை கொண்டுவருவதன் மூலம் அந்தச் சிந்தனையின் வேரையே நீங்கள் வெட்டிவிடுகிறீர்கள். எனவே, அத்தகைய ஒரு வழிவகை செய்யாதீர்கள். சுவீகாரத்தையே விட்டு விடுங்கள். பல சமுதாயங்களில் அது நிலவவில்லை. உங்களுக்கு அதன் மீது விருப்பமின்மை இருந்தால், அதை இழிவுபடுத்துவதற்கு அவசியம் எங்குள்ளது? சுவீகாரம் என்ற சிந்தனையை ஒரு கேலிக் கூத்தாக ஆக்காதீர்கள்.

ஐயா, இந்த மசோதாவின் ஒவ்வொரு ஷரத்தும் ஒரு கலங் கத்தைக் கொண்டுள்ளது. அது இந்து - எதிர்ப்புத் தன்மையது; எனவே

எந்த இந்துவும் ஏற்றுக் கொள்ள முடியாதது. என்னைப் பொறுத்த வரை, இந்துக்களை அவர்களின் இந்திய நங்கூரங்களிலிருந்து அகற்றி அரேபியா மற்றும் ஜெரூசலேம் கடல்களில் மிதக்க விடும் வஞ்சக நோக்கம் கொண்டதே இந்த மசோதாவை தயாரித்தவர்களின் முயற்சி என்று கருதுகிறேன். இந்து சட்டத் தொகுப்பிற்கு அவசியம் என்ன? 1925ம் ஆண்டின் இந்திய மரபுரிமைச் சட்டத்தின் ஷரத்துக் களை இந்து சமுதாயம் முழுமைக்குமாக ஏன் நீங்கள் விரிவு படுத்தக் கூடாது? இந்த மிக சௌகரியமான, - எளிதான சட்டத்தால் நாம் அதிகம் வசீகரிக்கப்படுவோம் - இந்து சமுதாயம் முழுவதற்கு மாக வழிவகை செய்தால் அது மிகவும் சுலபமாக இருக்கும்.

உரையை நான் முடிக்கும் முன், ஒரு எச்சரிக்கையை விடுப்பது எனது கடமை. இதனை ஒரு நேர்மையான கடமையென்று நான் நினைக்கிறேன். இந்துச் சட்டம் வெளியிலிருந்து வழிகாட்டப்பட்ட தல்ல என்பதை நீங்கள் எல்லோரும் நன்கு அறிவீர்கள். மேலிருந்து திணிக்கப்பட்ட ஒன்றல்ல அது. ஒரு மேலாண்மை அதிகாரம் சிருஷ் டித்ததல்ல அது. எந்த ராஜாவின் அல்லது எந்தச் சட்டப் பேரவை யின் மேலிட உத்தரவல்ல அது. அதன் மிக மேலான சிறப்பம்சம் இதுவே. பல நூற்றாண்டுக் கால யதேச்சையான வளர்ச்சி அது. **ஸ்மிருதி கள்** மற்றும் **நிபந்தாக்களின்** மூலவாசகங்கள் சட்டங்களைப் படைக்க வில்லை. இந்துச் சட்டத்தின் ஏற்றுக் கொள்ளப்பட்ட கோட்பாடுகளை விளக்கி மேற்கோள்களுடன் எடுத்துரைக்க மட்டுமே அவை செய்தன. ஆனால் கற்றறிந்த மூல வாசகங்களின் கோட்பாடுகள் இந்து சமுதாயத்தின் ஆளுமை சக்தியாக ஒரு போதும் இருந்ததில்லை. சமுதாயத்தின் பல்வேறு பிரிவுகளை நெறிப்படுத்தும் நடைமுறைகள் மற்றும் வழக்கங்களை முரணற்று வளர்ப்பதே இந்து சமுதாயத்தின் ஆளுமை சக்தியாக இருந்து வந்துள்ளது. வளர்ச்சி யதேச்சையானது. உண்மையில், யதார்த்தக் கண்ணோட்டத்திலிருந்து பார்த்தால், தொடர்ந்து செயல்படும் சட்டப்பேரவையே இந்து சமுதாயமாகும். ஆனால் அது இந்த அவையைப் போல், தேர்ந்தெடுக்கப்பட்ட சில நபர்களை கொண்டதல்ல. மாறாக அது சமுதாயம் முழுவதன் சட்டப் பேரவையாகும். அது அதன் தேவைகளுக்கு ஏற்ப அதன் சட்டத்தை மாற்றம் செய்து வார்த்து எடுக்கிறது. இந்துச் சட்டத்தின் உன்னத மான அழகே அதுதான். அதன் ஆற்றல் தன்மை, மீள் சக்தித் தன்மை. எளிதாக இயங்கும் தன்மை, தானாகச் செயல்படும் தன்மை, சமுதாயத் தின் மாறிக் கொண்டே இருக்கும் சூழ்நிலைமைகளுக்கு ஏற்ப மாற்றிக் கொள்ளும் தன்மை - ஆகிவற்றை அதனிடமிருந்து எடுத்துவிட்டு அதை

நீங்கள் இந்த சட்டமியற்றல் மூலம் திருத்திக் கூறுகிறீர்கள்; உருச் சிதைவு செய்கிறீர்கள். இந்து சட்டத்தில் மாற்றம் செய்வதற்கு முன் நீங்கள் மிகவும் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும் என்று கூறும் கடமை இந்த அவையின் பணிவான உறுப்பினர் என்ற முறையில் எனக்குள்ளது. நூற்றாண்டுக்காலமான வளர்ச்சியின் விளைவாக வந்துள்ளது. இந்துச் சட்டம் காலம் காலமாக மதிக்கப்பட்ட அமைப்புகள், பழக்க வழக்கங்கள், நடைமுறைகள் ஆகியவற்றில் தலையிட்டு அவற்றை மாற்றும் முன் ஒரு விஷயத்தை உங்கள் மனதில் வைத்துக் கொள்ள வேண்டும். நமது உண்மையான இந்தியா அலகாபாத், டெல்லி போன்ற நகரங்களில் வாழவில்லை. உண்மையான இந்தியா ஐந்து லட்சம் கிராமங்களில் வாழ்கிறது. கிராமவாசிகளின் வாழ்க்கை அவர்களின் சமுதாயத்தின் இழை நயத்தோடு பின்னிப் பிணைந்துள்ளது.

இந்தச் சட்டத்தின் மூலம் எத்தகைய மாற்றங்களையும் நீங்கள் செய்தால், மக்கள் நூற்றாண்டுகள் நூற்றாண்டுகளாக, காலம் காலமாக மதிக்கப்பட்ட எந்த நடைமுறைகள், பழக்க வழக்கங்களுக்கு இயல்பாகவே தங்களை உட்படுத்தி கொண்டிருக்கிறார்களோ அவற்றை அவர்களிடமிருந்து நீங்கள் எடுக்கும் முன்பு தங்களுக்குள்ள முழுபலத்தையும் கொண்டு அவர்கள் எதிர்ப்பார்கள். இந்து சமுதாயத் திற்கு எந்த அனுகூலமும் செய்யாமல் இந்தப் புதுமை வாய்ந்த சட்டத்தை தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்த விரும்பம் ஒரு சில அதிருப்தியாளர்களுக்கு நீங்கள் கதவைத் திறந்துவிடுகிறீர்கள்.

டாக்டர் மனோ மோகன்தாஸ் : (மேற்கு வங்காளம்) : இந்த அவையின் உறுப்பினர் சிலர் மீது அவர் அவதூறு பொழிகிறார். அதே விஷயத்தை பல தடவை திரும்பத் திரும்பச் சொல்லிவருகிறார்.

பண்டிட் முகுத் பீஹாரி லால் பார்கவா : இந்த அவையின் எந்த உறுப்பினரையும் பற்றி நான் குறிப்பிடவில்லை. எதிர் கருத்துக் களைக் கேட்க மதிப்பிற்குரிய எனது நண்பர் பொறுமையும் சகிப்புத் தன்மையும் கொண்டிருக்க வேண்டும். இந்துச் சட்டத்தின் இயல்பான முன்னேற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் இந்த சட்டத்தின் மூலம் ஒரு தடையை நீங்கள் போட முடியாது என்பது எனது கருத்து. இந்த மசோதாவை நீங்கள் நிறைவேற்றினால் இந்துச் சட்டத்தின் அழகுக்கு மேலும் அழகு சேர்ப்பதற்குப் பதிலாக அதை பாழ்ப்படுத்தி விடுவீர்கள். இந்தச் சட்டத்தின் இயல்பு அவ்வளவு கீழ்த்தரமானது; நாசகர மானது. எனவே இது குறித்து ஓர் ஆக்க பூர்வமான அணுகுமுறையைக்

கையாளலாம் என்று கற்பனை செய்வது கடினம். சனாதன கண்ணோட்டமுடையவர்களும் சனாதனக் கண்ணோட்டம் இல்லாதவர்களும் ஒப்புக்கொள்ளக்கூடிய ஒரு சமரசத்தை எய்துவற்காக சம்பிரதாயபூர்வ அல்லது சம்பிரதாய பூர்வமில்லாத குழுவில் நாம் சந்திக்க வேண்டும் என்று மாண்புமிகு பிரதமரும் அவைத் தலைவரும் அன்று ஆலோசனை கூறினார்கள். அவரது ஆலோசனையை நான் எதிர்க்கிறேன். ஆனால் இந்து தத்துவதற்கு முற்றிலும் முரணானதும் ஏற்றுக் கொள்ள முடியாததுமான கண்ணோட்டத்திலும் உளப்பாங்கிலும் இந்த மசோதா உருவாகியிருக்கிறது என எண்ணுகிறேன். எனவே இந்த சட்டமியற்றல் பற்றி ஒரு ஆக்கபூர்வமான அணுகுமுறையை எய்த வேண்டும் என்று தீவிரமுயற்சி நாம் மேற்கொண்டாலும் அதை அடைவது மிகக் கஷ்டம்.அரசாங்கம் கடைப்பிடிக்க வேண்டிய மிகப் பாதுகாப்பான வழி என்னவெனில், இந்த மசோதாவை நிறுத்தி வைத்து, மிகப் பொருத்தமான நேரத்திற்கு காத்திருப்பதுதான் அதாவது இந்து சமுதாயத்தின் அமைப்பு முறை முழுவதையும் மாற்றுவதற்கு அதிகாரம் அளிக்கும், வயது வந்தவர்களால் தேர்ந்தெடுக்கப்படும் ஒரு சட்டப் பேரவைக்காகக் காத்திருப்பது தான். மக்களின் அத்தகைய அதிகாரத்தைப் பெறும்வரையிலும், இந்து சமுதாயத்திற்கு ஜீவாதார முக்கியத்துவம் வாய்ந்த ஒரு சட்டமியற்றலை பரிசீலிக்க இந்தச் சட்டப் பேரவைக்கு தகுதியில்லை என்று வலியுறுத்திக் கூறுகிறேன்.

இந்த வார்த்தைகளோடு, ஐயா என் இருக்கையில் அமர்கிறேன்.

திரு.லோகநாத் மிஸ்ரா : ஓர் உரிமைப் பிரச்சினை. இந்த மசோதாவைப் பரிசீலிப்பதை எதிர்க்க வேண்டும் என்று நான் விரும்பாவிடினும், நாம் அண்மையில் நிறைவேற்றிய அரசியல் சாசனமே அதன் பரிசீலனையை முற்றிலுமாக தடுத்து கதவை மூடியுள்ளது என்று நினைக்கிறேன். அரசியல் சாசனம் இன்னமும் அமுலுக்கு வரவில்லை என்று வாதிக்கப்படும் என்பது நிச்சயம். ஆனால் இந்தத் தடவை இந்த மசோதாவை நிறைவேற்றப் போவதில்லை என்று நாம் நிச்சயமாக இருக்கிறோம். இந்த மசோதா நிறைவேற்றப்படும் சமயத்தில் அரசியல் சாசனம் அமுலும் அவசியம் வந்துவிடும். என்னை தாங்கள் அனுமதித்தால், இந்த மசோதா அரசியல் சாசனத்திற்கு எதிரானது என்று கூறுவதற்கான எனது காரணங்களை நான் விரிவாகக் கூறுவேன்.

திரு. துணை அவைத் தலைவர் : உரிமைப் பிரச்சினையை நான் போதுமான அளவு பரிசீலனை செய்தேன். புதிய அரசியல் சாசனம் இன்னும் நடைமுறைப் படுத்தப்படவில்லை. அது அமுலுக்கு வரவில்லை. அது அமுலுக்கு வந்தால் இந்த மசோதா சட்டமாக நிறை வேற்றப்படுவதற்கு தடங்கலாக இருக்குமா என்ற கேள்விக்கு எந்தப் பதிலும் அளிக்கும் உத்தேசம் எனக்கில்லை. இன்று அமுலில் இருக்கும் அரசியல் சாசனத்தின் கீழ், இந்த மசோதாவை பரிசீலிப்பதற்கு இந்த அவை முற்றிலும் தகுதி பெற்றிருக்கிறது.

திரு.டி.டி. கிருஷ்ணமாச்சாரி (சென்னை : பொது) இந்த சட்டமியற்றலின் முக்கியத்தின் காரணமாகவும், பேச விரும்புவர்களின் எண்ணிக்கை அதிகமாக இருப்பதாலும் பேசும் நேரத்தை வரையறைப்படுத்துவதை அவைத் தலைவர் பரிசீலிப்பாரா?

மதிப்பிற்குரிய சில உறுப்பினர்கள் : இல்லை, இல்லை.

மதிப்பிற்குரிய வேறு சில உறுப்பினர்கள் : ஆம், ஆம்.

திரு. துணை அவைத் தலைவர் : அமைதி, அமைதி.

திரு.எம்.திருமல் ராவ் (சென்னை : பொது) : இந்த விஷயம் திரு. சித்வாவால் எழுப்பப்பட்டு தங்களால் பைசல் செய்யப்பட்டது.

திரு. துணை அவைத்தலைவர் : திரு. சித்வா வேறு விஷயத்தை எழுப்பினார். இந்த அவை இவ்விவாதத்தை நாளைத் தொடருமா, இதற்கு எவ்வளவு நேரம் ஒதுக்கப்படும் என்று அவர் தெரிந்து கொள்ள விரும்பினார். இது அதிகாரபூர்வமான மசோதா, எத்தனை நாட்கள் என்று நேரம் ஒதுக்குவது அரசாங்கம்தான் என்று பதிலளித்தேன். ஒரு குறிப்பிட்ட மசோதாவின் மீது நடந்த விவாதம் போதுமானதா அல்லது இல்லையா என்று கூறுவது மட்டுமே அவைத் தலைவருக்குள்ள அதிகாரம். இந்த மசோதாவைப் பொறுத்தவரை, எந்த நேர எல்லையும் திணிக்க முடியாது என்பதை மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் நன்கு அறிவார்கள்.

மதிப்பிற்குரிய உறுப்பினர் தயவு செய்து பொறுத்திருந்து பார்க்கட்டும். இந்த மசோதா மீதான பொது விவாதம் 1949 பிப்ரவரி 24ம் தேதியே துவங்கியது. 25, 26, 28 மற்றும் மார்ச்1லும், ஏப்ரல் 1,2லும் அது தொடர்ந்தது. மதிப்பிற்குரிய ஓர் உறுப்பினர் 6 மணி எட்டு நிமிடங்

கள் எடுத்துக் கொண்டார். எல்லாமாக 6 நாட்கள் 9 மணி 20 நிமிடம் நாம் செலவழித்துள்ளோம். அதேசமயம் இது வரை மதிப்பிற்குரிய 14 உறுப்பினர்களே பேசியுள்ளார்கள். இப்பொழுது பண்டிட் முகுத் பீஹாரி லால் பர்கவா 2-4-'49ம் தேதி பிற்பகல் 3-15க்கு துவக்கினார். அன்று 5 வரை தொடர்ந்தார். 13/4 மணி நேரம். இன்று 11-50 முதல் 12-57 வரை தொடர்ந்தார். இந்த ரீதியில் போனால் எல்லா உறுப்பினர்களுக்கும் பேசச் சந்தர்ப்பம் அளிக்க சுமார் ஓர் ஆண்டுக் காலம் நாம் உட்கார வேண்டும். உரைகளில் கூறப்பட்ட பல விஷயங்கள் மிகவும் தெளிவூட்டின. உரைகளுக்கு எதிராக நான் எதுவும் கூறவில்லை. பேசுவதற்குச் சந்தர்ப்பங்கள் கோரி பெரும் எண்ணிக்கையான உறுப்பினர்களிடமிருந்து எனக்கு வேண்டு கோள்கள் வந்துள்ளன.

பண்டிட் லட்சுமி காந்த மைத்ரா (மே. வங்காளம் : பொது) : நாம் எல்லோரும் பெருமளவு இருளில் இருக்கிறோம். எல்லாப் பக்கத் திலிருந்தும் வெளிச்சத்தை நாம் விரும்புகிறோம்.

திரு. துணை அவைத் தலைவர் : வெளிச்சம் ஒவ்வொரு பக்கத்திலிருந்தும் வந்து கொண்டிருக்கிறது. ஆனால் நாம் இந்த வேகத்தில் சென்றால் பல பக்கங்களிலிருந்து வெளிச்சம் வராது. எனவே தங்கள் உரைகளை சாத்தியமான அளவு 1/2 மணி நேரத்திற்குள் கட்டுப் படுத்திக் கொள்ளும்படி மதிப்பிற்குரிய உறுப்பினர்களைக் கேட்டுக் கொள்கிறேன். எல்லாத் தீர்மானங்கள் மீதும் பேச மதிப்பிற்குரிய உறுப்பின்களுக்கு 15 நிமிடம் அளிக்கப்படுகிறது. தங்களின் கருத்துக் களை முழு நிறைவாக அந்த நேரத்திற்குள் அவர்களால் முன்வைக்க முடியும். இரண்டு மடங்கு நேரத்தை நான் அளித்துள்ளேன். ஆனால் அது பற்றிக் கட்டாயப்படுத்தவில்லை. இது அவைக்கு எனது ஆலோ சனை மட்டுமே. மற்றப்படி, விவாதத்தை நாளை முடிக்க வேண்டு மெனில், அதற்குள் பல உறுப்பினர் உரையாற்றியிருக்கலாம். சில சமயங்களில், திட்டமிட்டோ அல்லது திட்டமிடாமலே, விவாதத்தை முடிவுக்கு கொண்டு வருவதற்குச் சாதகமாக அவை இருந்தால், அதை ஏற்றுக் கொண்டாக வேண்டும். முன் கூட்டியே ஒரு எச்சரிக்கையை நான் கொடுக்கிறேன்.

மாண்புமிகு திரு.கே. சந்தானம் (போக்குவரத்துத்துறை மற்றும் ரயில்வேத் துறை ராஜாங்க மந்திரி) : தங்களால் நிர்ணயிக்கப் பட்ட கால அவகாசத்திற்குள் எனது உரையை முடித்துக் கொள்வேன் என்று உறுதி கூறுகிறேன்.

திரு. துணை அவைத் தலைவர்: அதை முன் கூட்டியே சொல்ல வேண்டியதில்லை. முடிவு செய்ய மதிப்பிற்குரிய உறுப்பினர்களுக்கு விட்டுவிடுகிறேன். அதனால் எல்லா உறுப்பினர்களுக்கும் சம நேர அவகாசம் கிடைக்கும். அவை ஏற்றுக் கொண்டால் ஒவ்வொரு உறுப்பினரும் பேசுவதற்கு அரைமணி நேரம் ஒதுக்குகிறேன்.

மதிப்பிற்குரிய சில உறுப்பினர்கள் : ஏற்றுக் கொள்ளப் பட்டது.

மதிப்பிற்குரிய வேறு சில உறுப்பினர்கள்: இல்லை, இல்லை.

திரு. துணை அவைத் தலைவர் :அமைதி, அமைதி. திரு. சாகு ஏதோ கூற விரும்புகிறார்.

திரு. லட்சுமி நாராயண் சாகு : (ஒரிஸ்ஸா: பொது) ஐயா, ஐந்து, ஏழு, பத்து நிமிடங்களுக்குள் தங்கள் உரையை கட்டுப்படுத்திக் கொள்ள விருப்பமுள்ள உறுப்பினர்களுக்கு பேச முன்னுரிமை அளிக்கப்படுமா என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

திரு. துணை அவைத் தலைவர் : இந்த யோசனையை நான் ஏற்றுக் கொள்ள வேண்டுமெனில், தாங்கள் எத்தனை நிமிடங்கள் எடுத்துக் கொள்ளக்கூடும் என்பதை மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் தங்கள் கடிதங்களில் குறிப்பிடுவார்கள் என நம்புகிறேன். அந்த நேரம் முடிந்தவுடன் நான் மணியை அடிப்பேன்.

திரு. பண்டிட் லட்சுமி காந்த மைத்ரா : நீங்கள் (அவையை) ஒத்திவைக்கும் முன், ஒரு விஷயம் மட்டும் நான் கூற விரும்புகிறேன். விவாதத்தை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான தீர்மானத்தை முன்மொழிய உறுப்பினர்களுக்கு உரிமை உள்ளது என்று இப்பொழுது நீங்கள் சொன்னீர்கள். ஆனால் நாடாளுமன்ற நடைமுறைப்படி, போதுமான அளவு விவாதம் நடந்துள்ளதா, இல்லையா என்பதை அல்லது முடிவுக்கு கொண்டு வருவது நியாயமானதா அல்லது இல்லையா என்பதை தீர்மானிக்கும் உரிமை அவைத் தலைவருக்கு உண்டு. அது நன்கு நிலை நிறுத்தப்பட்ட நடைமுறை, அந்த நடைமுறையை தாங்கள் பின்பற்றுவதாகவும் தாங்கள் வற்புறுத்திக் கூறினீர்கள். அந்தக் கூற்றின்படி, நாளை விவாதத்தை முடிவுக்கு கொண்டு வருவதை முன் கூட்டியே, இன்றே கூட தாங்கள் ஏற்றுக் கொண்டாக வேண்டுமா?

திரு. துணை அவைத் தலைவர்: முன் கூட்டியே முடிவு செய்வதற்கு அவைத் தலைவருக்கு அதிகாரம் எதுவும் கிடையாது. இப்பொழுது பிற்பகல் 1மணி. அவை 2-30 மணிவரை ஒத்திவைக்கப் படுகிறது.

2 மணி 30நிமிடங்கள் வரை சட்டப் பேரவை ஒத்திவைக்கப் பட்டது.

அவை (பிற்பகல்) 2 மணி 30 நிமிடத்திற்கு மீண்டும் கூடியது. திரு. துணை அவைத் தலைவர் (திரு.எம். அனந்த சயனம் ஐய்யங்கார்) தலைமை தாங்கினார்.

இந்துச் சட்டத் தொகுப்பு - தொடர்கிறது.

மாண்புமிகு திரு.கே. சந்தானம் : பொறுக்குக் குழுவால் பரிசீலித்து அனுப்பப்பட்ட இந்துச் சட்டத்தொகுப்பிற்கு எனது முழு மனதான ஆதரவை அளிக்க நான் எழுந்து நிற்கிறேன். ஐயா, இந்த சட்டம் ஆக்கலின் முன்னேற்றத்தை அதன் ஆரம்ப நிலையிலிருந்து நான் கவனித்துக் கொண்டிருக்கிறேன். ராவ் குழுவின் முன் சாட்சியம் அளிக்கும் சலுகையும் எனக்கு இருந்தது. அந்த குழுவிடமிருந்து வந்த பின் அது பல மாற்றங்களுக்கு உட்பட்டுள்ளது; எனது கருத்தில் அது உறுதியான முன்னேற்றம் கண்டுள்ளது.

ஐயா, அரசியல் சாசனத்தை உருவாக்கும் அமைப்பு என்ற நமது தகுதியின்படி நாம் அன்று முடிவு செய்த மகத்தான அரசியல் சாசனத்தின் ஒரு தொடர்ச்சி மட்டுமே இந்த இந்துச் சட்டத் தொகுப்பு என்று நான் எண்ணுகிறேன். ஐயா, அரசியல் சாசனத்தின் அடிப்படை அம்சங்கள் யாவை? ஓர் அரசியல் அமைப்பாக ஐக்கியப்படுத்துதல், முழுமைப்படுத்துதல், பலப்படுத்துதல் ஆகியவற்றை அது அடிப்படையாகக் கொண்டுள்ளது. அது போலவே, இந்து சமுதாயத்தை ஐக்கியப்படுத்துதல், ஒருமைப்படுத்துதல், பலப்படுத்துதல் ஆகிய கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்டுள்ளது இந்த மசோதா. ஐயா, இந்து சமுதாயம் ஐக்கியப்படுத்தப்பட்டு, முழுமைப்படுத்தப்பட்டு, பலப்படுத்தப்பட்டாலன்றி நாம் ஆக்கிய மகத்தான அரசியல் சாசனத்தை எவ்வாறு வெற்றிகரமாக நடைமுறைப்படுத்த முடியும் என்பதை நான் அறியேன்.

பண்டிட் லட்சுமி காந்த மைத்ரா: விவாகரத்து மூலம் ஐக்கியப்படுத்துவதா?

மாண்புமிகு திரு.கே. சந்தானம் : அரசியல் ரீதியாக நீங்கள் நன்கு முன்னேற்றம் அடையலாம். பொருளாதாரத் துறையில் சோச லிசத்தை நீங்கள் போதிக்கலாம். ஆனால், சமுதாய தேக்க நிலையில் நம்பிக்கை உள்ளவராக இருப்பது யதார்த்தமற்றது. இந்தியா எல்லாத் துறைகளிலும் முன் செல்ல வேண்டும்; அரசியல் மற்றும் பொருளாதாரத துறைகளில் நமது முன்னேற்றம் எவ்வாறு அத்தியாவசியமோ அவ்வாறே சமூகத் துறையிலும் மாற்றமும் சீர்திருத்தமும் அத்தியாவசியமாகும் என நினைக்கிறேன்.

பண்டிட் லட்சுமி காந்த மைத்ரா: திருமணத்திலும் ஜனநாயகமா?

மாண்புமிகு திரு.கே. சந்தானம் : இந்து சமுதாயத்திற்கு மட்டும் ஓர் ஒருங்கிணைக்கப்பட்ட தொகுப்பை தயாரிப்பதைவிட நாம் ஏன் நாடுமுழுவதற்கும் ஒரு தொகுப்பை தயாரிக்கக் கூடாது என்று மதிப்பிற்குரிய நண்பர்கள் கேட்கலாம். நல்லது ஐயா, அரசியல் சாசனத்தை நாம் உருவாக்கிக் கொண்டிருந்த பொழுது, மாகாணங்களை ஏன் தொடர்ந்து வைத்திருக்க வேண்டும் இந்திய அரசாங்க சட்டத்தின் மீது ஏன் கட்டமைப்பை உண்டாக்க வேண்டும், ராஜப் பிரமுகர்களை ஏன் நாம் தொடர்ந்து வைத்துக் கொண்டிருக்கிறோம் என்று கேட்டுக் கொண்டிருந்தவர்கள் பலர் இருந்தனர். ஐயா, பதிலுக்கு எங்களது வாதம் எதுவாக இருந்ததெனில், மாற்றமும் சீர்த்திருத்தமும் நாம் விரும்பிய அதே சமயம், எவ்வளவு சாத்தியமோ அந்த அளவுக்கு நிலவும் அஸ்திவாரத்தின் மீது அந்த மாற்றத்தை கட்ட விரும்பினோம். நிலவும் சக்திகளையும் மாற்றம் மற்றும் சீர்திருத்தம் விளைக்கிற சக்திகளாயும் (புத்திசாலித்தனமாக) கூர்மதியுடன் பழுதில்லாமல் பாதுகாக்க விரும்பினோம். அதே கோட்பாட்டை அடிப்டையாகக் கொண்டதுதான் இந்த மசோதா. இந்துச் சட்டத்தில் நவீன தேவைகள், கருத்துக்களுக்கு முரணில்லாதவற்றில் எவ்வளவு அதிகம் பேணிப் பாதுகாக்க முடியுமோ அவற்றைப் பாதுகாக்க இந்த மசோதா முயல்கிறது. எங்கெல்லாம் மாற்றங்கள் அவசியமோ அங்கு மாற்றங்களைக் கொண்டு வர முயலுகிறது. இந்த ஒரே வழியில்தான் நாடு முழுவதும், இந்து சமுதாயமும் எந்தவித உள்நாட்டுச் சீர்குலைவும், பலாத்காரப் புரட்சிகள் இல்லாமலும் முன்னேற முடியும் என நான் கருதுகிறேன். ஐயா, சமாதானபூர்வமானதும் தன்னார்வபூர்வமானதுமான மாற்றமே

எங்கள் கொள்கை. சமூகத்துறையில் சமாதானபூர்வமான மாற்றத்துக்கு வழி கோலும் முயற்சியே இந்த மசோதா.

ஐயா, மசோதாவின் பிரிவுகளைப் பற்றி நான் பேச விரும்ப வில்லை. அதற்கான நேரம் இன்னும் வரவில்லை. பிரிவு பிரிவாக நாம் எடுத்துக் கொள்ளும்போது, குறிப்பிட்ட ஷரத்துக்களை பரிசீலிப் பதற்கான நேரம் அதுவேயாகும்.

பண்டிட் லட்சுமி காந்த மைத்ரா: அந்தக் கட்டம் வராது.

மாண்புமிகு திரு. கே. சந்தானம் : நல்லது. நாம் பார்க்கலாம்.

பண்டிட் லட்சுமி காந்த மைத்ரா: விரிவான அளவில் வெளியில் லத்தித் தாக்குதல் நடக்கும் வரையில் இல்லை.

மாண்புமிகு திரு.கே. சந்தானம்: அரசியல் சாசனம் ஒரு போதும் நிறைவேற்றப்படமாட்டாது என்று ஜோதிடம் கூறியவர் களும் இருந்தனர். ஆனால் நாம் அதை நிறைவேற்றி விட்டோம். அதே போல், சட்டப் பதிவேட்டில் இந்த மசோதாவையும் சேர்க்கப் போகிறோம்.

ஐயா, குறிப்பிட்ட பிரிவுக்கும் பாகங்களும் சில பல மாற்றங் களுக்கு உட்படாதவை என்று நான் கூறவில்லை.

திரு. பண்டிட் லட்சுமி காந்த மைத்ரா : சில.

மாண்புமிகு திரு.கே. சந்தானம் : இந்த மசோதாவில் உள்ள பரந்த கோட்பாடுகளை மட்டும் நான் எடுத்துக் கொள்கிறேன். எதிர்காலத்தில் ஒரு சந்தர்ப்பத்திற்கு இதர விவரங்களை விட்டுவிடுகிறேன்.

ஐயா, இந்த மசோதா நான்கு அம்சங்களைக் கொண்டுள்ளது - அதாவது தொகுப்பது - ஒன்றிணைப்பது, அறிவுக்குப் பொருத்தமாக இருப்பது மற்றும் சீர்திருத்துவது ஆகியவையே அந்த நான்கு அம்சங்கள்.

திருமதி ரோகிணி குமார் சௌதுரி (அஸ்ஸாம் : பொது): மோசடியும் கூட.

மாண்புமிகு திரு.கே. சந்தானம்: நல்லது. அந்தப் பாகத்தைத் தங்களுக்கு விட்டுவிடுகிறேன். சுவீகாரம், சிறுபான்மையினர். காப்பாளர்

மற்றும் ஜீவனாம்சம் பற்றிய பாகங்களைப் பொறுத்தவரை, அவை இப்பொழுது நிலவும் இந்துச் சட்டத்தின் தொகுப்பே. **(மதிப்பிற்குரிய ஓர் உறுப்பினர்)** : கேள்வி? நீங்கள் கேள்வி கேட்கலாம். ஆனால் மதிப் பிற்குரிய உறுப்பினரைவிட அதிக திறமை வாய்ந்தவர் சட்ட வல்லுநர் திரு.பி.என். ராவ் என்று நினைக்கிறேன்.

திரு. பண்டிட் லட்சுமி காந்த மைத்ரா : அது நிச்சயமாகச் சரியான வாதமல்ல. அவர் இருக்கலாம், அல்லது இல்லாமல் இருக்க லாம். ஒரு வாதத்தை நான் புரிந்து கொள்ள முடியும் - ஆனால் இம் மாதிரிப் பேச்சை நான் சகித்துக் கொள்ள முடியாது.

திரு. துணை அவைத் தலைவர் : அமைதி, அமைதி.

பண்டிட் லட்சுமி காந்த மைத்ரா : இங்குள்ள எவரையும் விட ஒரு மனிதர் மிக உயர்வானவர் என்று வாதிப்பதன் பொருள் என்ன?

திரு.துணை அவைத் தலைவர் : மதிப்பிற்குரிய எல்லா உறுப்பினர்களும் ஒரே நேரத்தில் பேசுவதில் அர்த்தமில்லை. மதிப்பிற்குரிய உறுப்பினருக்கு அவரது நேரம் வரும்; இந்த அவை விரும்புகிறவரை நான் உட்கார்ந்திருக்கத் தயார்.

சர்.பி.என். ராவ் பற்றி மதிப்பிற்குரிய உறுப்பினர் குறிப்பிட் டதைப் பொறுத்தவரை, அவர் கல்கத்தா உயர்நீதிமன்றத்தில் ஒரு நீதிபதியாக இருந்தார் என்பதை ஒரு வேளை குறிப்பிட்டிருக்கலாம். ஒரு குறிப்பிட்ட நபரின் கருத்து மிக உயர்வானது என்று கூறுவது நாடாளுமன்ற முறையை மீறியதல்ல. ஒரு தனி நபர் என்ற முறையில், அவையின் மற்ற உறுப்பினரைவிட அவரைத் தாம் அதிகம் தெரிந் திருப்பதாக ஒருவேளை பொருள்படுத்தியிருக்கலாம்.

மாண்புமிகு திரு.கே.சந்தானம்: ஐயா, கேள்வி கேட் டவரைவிட சர் பி.என். ராவ் சிறந்த சட்ட நிபுணர் என்று மட்டுமே நான் கூறினேன்.

திருமதி ரோகிணி குமார் சௌதுரி : ஐயா, ஓர் ஒழுங்குப் பிரச்சினை. இந்து சட்டம் முற்றிலுமாகவும் மிக நெருக்கமாகவும் இந்து மதத்தோடு சம்பந்தப்பட்டது. இந்த சட்டக் கோட்பாடுகள் பற்றிய நிபுணராக ஓர் இந்து அல்லாதவர் இருப்பதை எவரும் சகித்துக் கொள்ள முடியுமா?

திரு. துணை அவைத் தலைவர் : மதிப்பிற்குரிய உறுப்பினர்களிடையே கருத்துவேறுபாடுகள் இருப்பதை நான் நன்கு புரிந்து கொள்ள முடியும். கூச்சலிடுவதற்கும், உணர்ச்சி வசப்படுவதற்கும் இடமே இல்லை. முதலில் பொறுமை வேண்டும். எல்லா உறுப்பினர்களும் சுமுகமான சூழ்நிலையில் விவாதித்து நிச்சயமாக தங்கள் பங்கை ஆற்றுவார்கள் என்று நம்புகிறேன்.

திரு.எல். கிருஷ்ண சுவாமி பாரதி: இப்பொழுது குறுக்கிட்டுப் பேசிய மதிப்பிற்குரிய உறுப்பினர், திரு. பி.என்.ராவ் ஓர் இந்துவல்ல என்று கூறுவதாகத் தோன்றுகிறது. இது அவமானப் படுத்துவதாகும். இதை அனுமதிக்க முடியாது. திரு.பி.என்.ராவ் இங்கு இல்லை. ஐயா, அவரைப் பாதுகாக்க வேண்டியது தங்களது கடமை.

திரு. துணை அவைத்தலைவர் : ஒரு குறிப்பிட்ட நபர் எந்த மதத்தைச் சார்ந்தவர் என்று கூறும் நிலையில் நான் இல்லை. தனிப்பட்ட முறையில் எனக்கு அது தெரியாது. ஆனால் உறுப்பினர்கள் ஓர் எல்லைக்குள் தங்களை வைத்துக் கொள்ள வேண்டும். அவர்களுக்கு சில உரிமைகள் இருப்பதன் காரணமாக மற்றவர்களை இழிவுபடுத்தக் கூடாது. மதிப்பிற்குரிய எந்த ஓர் உறுப்பினரும் அவதூறாகப் பேசுவது தவறாகும்.

மாண்புமிகு திரு. கே. சந்தானம்: ஐயா, குறுக்கீடுகளை நான் பொருட்படுத்தவில்லை. ஆனால் இந்த மசோதாவிற்கு எதிர்ப்பாக இருப்பவர்கள் இம்மாதிரி தந்திரோபாயங்களில் தங்களுக்கு ஏகபோகம் இருப்பதாக நினைத்தால், அவர்கள் தவறு செய்கிறார்கள். நான் எல்லா வித அழுத்தத்துடன் திரு.பி.என். ராவ் இந்த அவையில் உள்ள எவரையும் போல் ஒரு நல்ல இந்து என்று அறுதியிட்டுக் கூறுகிறேன். என்னைப் பொறுத்தவரை எனது முன்னோர்கள் மிகவும் சனாதன இந்துக்களிலிருந்து வந்தவர்கள். இந்த நேரம் வரை, ஒரு சிறிய மீன் துண்டு கூட நான் உண்டதில்லை. நான் அதிகம் சமயக் கோட்பாடு கொண்டவன் என்று உரிமைகோர முடியும்.

திரு.எச்.வி.காமத் : மீன் சாப்பிடுவது அல்லது சாப்பிடாதது சமய மரபு மாறாததற்கு ஒரு பரிசோதனையா?

மாண்புமிகு திரு. கே. சந்தானம்: நாட்டின் எனது பாகத்தில் மீன் அருந்துவது அதிகமாக புறக்கோட்பாடாகக் கருதப்படுகிறது.

பண்டிட் லட்சுமி காந்த மைத்ரா: நாட்டின் என் பாகத்தில் இட்லியும் ரசமும் சாப்பிடுவது மிகவும் ஆட்சேபகரமானவை.

திரு. துணை அவைத் தலைவர் : இட்லிகளையும் மீனையும் விட அதிகம் நீடித்திருக்கும் விஷயங்களான திருமணம், விவாகரத்து ஆகிய விஷயங்களுக்கு மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் வரலாம்.

மாண்புமிகு திரு. கே. சந்தானம்: நான் மீண்டும் கூறுகிறேன். அதாவது, தத்தெடுப்பது பாதுகாப்பாளர், சிறுபான்மையினர் முதலியவற்றைப் பொறுத்தவரை, அவையாவும் நிலவும் சட்டத்தின் ஒழுங்குபடுத்தல்தான்; பிரிட்டிஷ் நீதிமன்றங்களின் தீர்ப்புகளிலிருந்து இதனைக் கண்டு கொள்ளலாம். மனு எழுதியுள்ளது எதுவாகயிருப்பினும், யாக்ஞவல்கியர் எழுதியுள்ளது எதுவாயிருப்பினும், இன்றுள்ள இந்து சட்டம் கடந்த நூற்று ஐம்பது வருங்களாக பிரிட்டிஷ் நீதிமன்றங்களில் வியாக்யானம் செய்யப்பட்டவைதான். இந்த வியாக்யானங்களுக்கு எதிராக வாதிட மனுவும் யாக்ஞவல்கியரும் முற்றிலும் சக்தியற்றவர்கள். எனவே இப்பொழுது இந்துச் சட்டம் இந்த நாட்டில் பிரிட்டிஷ் நீதிபதிகளால் விளக்கி வகைப்படுத்தப் பட்டதுதான்.

மதிப்பிற்குரிய ஓர் உறுப்பினர் : பிரிட்டிஷ் நீதிபதிகளா?

மாண்புமிகு திரு. கே. சந்தானம்: பிரிட்டிஷ் அல்லது பிரிட்டிஷ் மயமாக்கப்பட்ட நீதிபதிகள். ஐயா, புராதனச் சட்டத்தை இன்றைய இந்துச் சட்டமாக பிரிட்டிஷ் நீதிபதிகள் மாற்றியது போல அந்த சட்டத்தை மாற்ற குறைந்த பட்சம் அவர்கள் போல் நாமும் தகுதி பெற்றிருக்கிறோம்.

ஐயா, இந்து சட்டத் தொகுப்பின் அடுத்த அம்சத்திற்கு - ஒன்றிணைக்கப்படும் பகுதிக்கு - இப்பொழுது வருகிறேன். சட்டத்தைப் பொறுத்தவரை, ஒன்றிணைக்கப்படுவது எதுவும் தேவையில்லை என்றும், நாட்டின் ஒவ்வொரு பாகமும் வட்டாரச் சட்டத்தை வைத்துக் கொள்ளலாம் என்றும், எதிர்காலத்தை நோக்கும் எந்த இந்துவும் கூற முடியும் என்பது பற்றி நான் ஆச்சரியப்படுகிறேன். வங்காளத்தில் நமக்கு **தாயபாகாச்** சட்டம் உள்ளது. மலபாரில் அவர்கள் **மருமக்க தாயச்** சட்டத்தை வைத்துக் கொள்ளலாம். இதன் பொருள் என்ன? அதாவது புராதன நாட்களில் இருந்தது போல ஒவ்வொரு விஷயமும் இருக்க வேண்டும். அரசியலிலும் பொருளாதாரத்திலும் நாம் கி.பி. 1950ல்

இருப்போம். ஆனால் சட்டத்தைப் பொறுத்தவரை நாம் கி.மு. 1950ல் இருப்போம் என்று கூறும் மனிதர்களை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. இவ்வாறு கூறுவது முற்றிலும் ஒரு சீர்குலைக்கும், நாசகரமான கூற்றேயாகும். இந்துக்கள் ஒரு சமுதாயமாக இருக்க வேண்டுமெனில், அவர்களுக்கு ஆற்றல் இருக்க வேண்டுமெனில், அவர்கள் எல்லோரும் ஒரு சட்டத்தின் கீழ் - அது **தாயபாகா** அல்லது **மிதாக்ஷரா** - அவசியம் வந்தாக வேண்டும். சிலர் ''நாம் **மிதாக்ஷரா**வை வைத்துக் கொள்வோம்'' அல்லது ''வங்காளம் **மிதாக்ஷரா**வின் கீழ் வரட்டும்'' என்று கூறுவதை நான் புரிந்து கொள்ள முடியும். எல்லோரும் **தாயபாகா**வின் கீழ் வரட்டும் என்று மற்றவர்கள் சொல்வதை நான் புரிந்து கொள்ள முடியும். பல்வேறு பட்ட பிராந்திய குழுக்களாக ஒவ்வொன்றும் தனது சட்டத்தை வைத்துக் கொண்டு துண்டு துண்டாக சிதறி போக வேண்டும் என்று கூறுவது - அப்படியாயின் ஒரு வங்காளி மலபாருக்குச் சென்றால் மூன்றுவிதமான இந்து சட்டங்களுக்கு நீதிமன்றங்கள் வியாக்யானம் செய்ய வேண்டும் - இந்து சமுதாயத்தின் அழிவைப் பிரகடனப்படுத்துவதாகும் என்று நான் கருதுகிறேன். ஐயா, இந்து சமுதாயத்தின் எதிரிகளுக்கு இதைவிட நல்லது - அதாவது இந்துக்கள் ஒரு டஜன் வட்டாரச் சட்டங்களால் ஆட்சி செய்யப்பட வேண்டும் என்பது - இருக்க முடியாது. ஐயா, இந்த மசோதாவால் இப்பொழுதாவது இந்து சமுதாயத்தை ஓர் ஒன்றிணைக்கப்பட்டச்சட்டத்தின் கீழ் கொண்டுவருவோம். எந்தச் சட்டமாகவும் இருக்கட்டும், ஆனால் இந்து சமுதாயம் முழுமைக்கும் ஓர் ஒன்றிணைந்த சட்டமாக அது இருக்க வேண்டும். ஐயா, இந்த மசோதா......

திரு. ரோகிணி குமார் சௌதுரி : ஐயா, ஓர் ஒழுங்குப் பிரச்சினை. மதிப்பிற்குரிய உறுப்பினர் அவையில் வகுப்புவாதம் பேசுகிறார். எல்லா இந்துக்களையும் ஒன்றிணைப்பது பற்றி - ஒரு வேளை முஸ்லீம்களுக்கும் மற்றவர்களுக்கும் - எதிராக - அவர் பேசுகிறார். இந்துக்களுக்கு ஒரு சட்டத்தை அவர் விரும்புகிறார். எனவே அவர் வகுப்புவாதத்தை போதிக்கிறார்.

திரு. துணை அவைத்தலைவர் : இந்த ஒழுங்குப் பிரச்சினை விவாதத்திற்கு உயிர்த்துடிப்பூட்டவே செய்கிறது. ஆனால் அது உண்மையில் எந்த ஒழுங்கு பிரச்சினையுமல்ல.

மாண்புமிகு திரு. கே. சந்தானம்: ஐயா, இந்து மசோதா சட்டப் பதிவேட்டில் வைக்கப்படும் நாளில் நாடு ஒன்றுபட்டு இணையும்

முழு நடைமுறை துவங்குகிறது. இந்த நாட்டில் உள்ள மற்ற இந்தியர்களும் இந்தச் சட்டத்திற்கு ஒத்துவர அதிக காலம் ஆகாது. அவசியமாயின் அவர்களுக்காக சில சிறிய மாற்றங்களைச் செய்யலாம். அதனால், நாடு முழுவதும் ஒரு சிவில் சட்டத் தொகுப்பின் கீழ் வரும். இந்தப் படிப்படியான வளர்ச்சி துண்டு துண்டாகப் போகும் போக்கல்ல; மாறாக ஓர் ஒன்றிணைக்கும் வளர்ச்சிப்போக்கு. இந்த வளர்ச்சிப்போக்கு தொடரட்டும்.

பண்டிட் லட்சுமி காந்த மைத்ரா : அது வெளியில் போய் கொண்டிருக்கிறது.

திருமதி ஜி.துர்க்காபாய் : இல்லை, இல்லை. அது உள்ளே வந்து கொண்டிருக்கிறது.

பண்டிட் லட்சுமி காந்த மைத்ரா : உங்களால் ஊக்குவிக்கப் பட்டு.

மாண்புமிகு திரு.கே. சந்தானம் : இந்த அவையில் அதிக காலம் இருந்திருக்கிறேன். இந்த குறுக்கீடுகளைப் பற்றி நான் கவலைப் படவில்லை.

இப்பொழுது கேள்வி என்னவெனில், **தாயபாகா** சட்டத்திற்கு நாம் முதன்மை அளிக்க வேண்டுமா அல்லது **மிதாக்ஷ**ராவுக்கா? எனது நண்பர் பண்டிட் முகுத் பீஹாரிலால் கூறினார் **மிதாக்ஷ**ராவை இருபது கோடி மக்கள் பின்பற்றுகிறார்கள், **தாயபாகா**வை ஐந்து கோடி பேர்தான் பின்பற்றுகிறார்கள் என்று. இருபது கோடி மக்களின் சட்டத்தை விட்டுவிட்டு ஐந்து கோடி பேர்களின் சட்டத்தை நாம் ஏன் தேர்ந்தெடுக்கவேண்டும்? ஒப்பு நோக்கில் **மிதாக்ஷ**ராச் சட்டம் புராதன கிராம சமூகங்களின் தேவைகளுக்கு பயன்படுத்துவதற்காக உத்தேசிக்கப்பட்டது. அந்த சமூகங்களின் பிரதான சொத்து விவசாய நிலமாக இருந்தது. அந்த அடிப்படையில்தான் பிறப்புரிமையும் மற்றும் எந்த ஓர் உரிமையும் வகுக்கப்பட்டன. நாகரீக முதிர்ச்சியற்ற அந்த சமுதாயத்திலிருந்து நவீன காலத்திற்கு நாம் வேகமாக முன்னேறிக் கொண்டிருக்கிறோம். இதில் சொத்து அசையா சொத்திலிருந்து அசையும் சொத்தாகப் போய்க் கொண்டிருக்கிறது. அசையாச் சொத்துக்கள் குறைந்து கொண்டும் அசையும் சொத்துக்கள் அதிகரித்தும் வருகின்றன. அசையாச் சொத்துக்கள் கூட அசையும் சொத்தாக, பங்குகளாக, சேமிக்கும் வைப்புக் தொகைகளாக, பிணை

வைப்புத் தொகைகளாக மாற்றப்பட்டு வருகின்றனர். எனவே, உணரத்தக்க அசையாச் சொத்திலிருந்து உணர முடியாத மற்றும் நினைவியலான சொத்துக்குச் செல்லும் இந்த மாற்றங்களுக்கு ஏற்ப நமது அமைப்பை நாம் மாற்றிக் கொள்ள வேண்டும். சொத்து உணரமுடியாததாக உள்ளதால், பிறப்பு உரிமை என்பது உண்மையில் நடைமுறை சாத்தியமானதல்ல. அதை உங்களால் வலியுறுத்தி நடைமுறைப்படுத்த முடியாது. உறுதியீட்டு ஆவணங்களையோ அல்லது பங்குகளையோ அல்லது அசையும் சொத்தையோ விற்பனை செய்ய தந்தைக்கு எப்பொழுதும் சாத்தியமே. பங்குகளின் வாரிசுரிமை பெற ஒரு மகனுக்குச் சாத்தியமல்ல. விவசாயத் சொத்தில் ஒரு பங்கை வாரிசுரிமையாகப் பெறுவது மகனுக்குச் சாத்தியமே. பண உறுதியீட்டு ஆவணங்களில் அல்லது அசையும் சொத்துக்களில் வாரிசுரிமை பெறுவது அவனுக்குச் சாத்தியமல்ல. எனவேதான், **மிதாக்ஷரா** அமைப்புச் சட்டத்தைவிட **தாயபாகா** அமைப்புச் சட்டத்திற்கு இந்த மசோதா முன்னுரிமை அளித்துள்ளது. **மிதாக்ஷரா** சட்டத்தின்படி இருபது கோடி மக்களை அவமதிப்பதாலல்ல; அல்லது **தாயபாகா** அமைப்புச் சட்டத்திற்கு எந்த விசேஷ முன்னுரிமையும் உள்ளதால் அல்ல. இப்பொழுது, பிறப்பினால் வாரிசுரிமை பெறுவது எஞ்சுநர் உரிமை பெறுவது ஆகியவை எல்லாம் பழைமையானவையாக, நடைமுறை சாத்தியமற்ற ஏற்பாடுகளாக ஆகிவிட்டன.

பண்டிட் லட்சுமி காந்த மைத்ரா : பழைமையானது.

மாண்புமிகு திரு.கே. சந்தானம் : ஒன்று சட்டத்தின் மூலம் அவற்றை கைவிட்டு விடுகிறோம் அல்லது முறையற்ற, குழப்பமான முறையில் அவை முடிவுக்குக் கொண்டுவரப்படும்.

பண்டிட் லட்சுமி காந்த மைத்ரா : மற்ற எல்லாவற்றிலும் வங்காளத்தைப் பின்பற்றுங்கள்.

மதிப்பிற்குரிய சில உறுப்பினர்கள் : அமைதி, அமைதி.

திரு. ரோகிணி குமார் சௌதுரி : ஓர் உரிமைப் பிரச்சினை. ஐயா, 'அமைதி, அமைதி' என்று கூற ஓர் உறுப்பினருக்கு என்ன உரிமை உள்ளது.

திருமதி ரேணுகா ரே : (மேற்கு வங்காளம் : பொது) இது ஓர் உரிமைப் பிரச்சினையா?

திரு. துணை அவைத் தலைவர் : அவைத் தலைவரின் உரிமையை மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் என்னுடன் பகிர்ந்து கொள்வது குறித்து மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன்.

திரு. ரோகிணி குமார் சௌதுரி : (எழுந்திருக்கிறார்).

மாண்புமிகு திரு.கே. சந்தானம் : மதிப்பிற்குரிய எனது நண்பருக்கு வழிவிடுவது எனக்குச் சாத்தியமல்ல என்று அஞ்சுகிறேன்.

திரு. ரோகிணி குமார் சௌதுரி : நல்லது, நான் வாய் மூடியிருக்கிறேன். பெண்களின் கொடுங்கோன்மையில் துன்புறத் தாங்கள் விரும்பினால், அப்படியே தாராளமாக செய்யுங்கள்.

திரு. துணை அவைத் தலைவர் : அமைதி, அமைதி.

மாண்புமிகு திரு.கே. சந்தானம் : ஐயா, புனிதமானது என்று போற்றப்படும். கூட்டுக் குடும்ப அமைப்பு பற்றி அதிகம் கூறப்பட்டது. இடை நிலைக் காலத்திலும் மற்றும் புராதானக் காலங்களிலும் கூட்டுக் குடும்ப முறை மிக பயனுள்ள நோக்கத்திற்குப் பயன் பட்டிருக்கக்கூடும். அதை நான் மறுக்கவில்லை. ஆனால் இன்று கூட்டுக் குடும்ப முறை கருத்து வேறுபாடுகளில் மட்டுமே நிலவுகிறது. விவசாயிகளை நான் அறிவேன். உங்களில் பலரைவிட மிக அதிகமாக கிராமப் புறங்களில் நான் இருந்திருக்கிறேன். கிராமப் புறங்களில் தொடர்ந்து பத்துவருடங்கள் நான் பணியாற்றியுள்ளேன். ஐயா, ஒரு விவசாயியின் மகன் திருமணம் செய்து கொண்டால், விவசாயி செய்யும் முதல் காரியம் பூர்வீக நிலத்தில் மகனுக்கு அவனது பங்கை அளிப்பதுதான் என்பது எனக்குத் தெரியும். அது ஒரு ஏக்கர் அல்லது அரை ஏக்கர் அல்லது கால் ஏக்கராகக்கூட இருக்கலாம். மகன் தனிக்குடும்பம் நடத்த தந்தை ஏற்பாடு செய்கிறான். இவ்வாறு செய்யாவிடில் தனது குடும்பம் சீர்குலைவுக்கு உட்படும் என்பதை விவசாயி அறிவான். சில மிகப் பணக்காரர்கள் விஷயத்தில் வேண்டுமெனில் கூட்டுக் குடும்பமுறை தொடரலாம். வருமான வரியை ஏய்ப்பதற்கும் மற்ற நோக்கங்களுக்காகவும் இரட்டை கணக்கு வைப்பதற்கு இவ்வாறு செய்யப்படுகிறது. சாதாரணமாக, இன்று கூட மத்தியதர வர்க்கக் குடும்பங்களில் என்ன நிகழ்கிறது? ஒரு மகன் கிராமத்தில் வசிக்கிறான்; மற்றொரு மகன் டில்லியில் அரசுப் பணியில் இருக்கிறான்; பிறிதொரு மகன் சென்னையில் ஏதோ பணியில் இருக்கிறான்.

இந்நிலையில் கூட்டுக் குடும்பத்தையும் பூர்வீகச் சொத்தையும் பாது காப்பது என்பதன் பொருள் என்ன? இத்தகைய பகைப்புலனில் பாகப்பிரிவினை செய்து கொள்ள அவர்களை அனுமதிப்பது நல்லது. பின்பு, சுய விருப்பப்படி திரும்பி வந்து கூட்டாக வாழ அவர்கள் விரும்பினால் அவர்கள்ஒரு கூட்டுறவு அமைப்பாக செயல்படட்டும். நவீன நிலைமைகளுக்கு ஏற்ப அவர்கள் எந்தவிதமான சட்ட ரீதியான நிலையையும் மேற்கொள்ளட்டும். மூதாதையர் வழி பாட்டுக்காக கூட்டுக்குடும்பத்தை இன்றைய சூழ்நிலையில் தொடர்வது மாறுதலை விரும்பாத வெறித் தனமான, அப்பட்டமான மிதவாத போக்கு என்றுதான் கருதுகிறேன்.

திரு. ராஜேஸ்வர் பிரசாத் (பீஹார் : பொது): ஒரு டேனியல் கடைசி நாள் தீர்ப்புக்கு வந்திருக்கிறார் போலிருக்கிறது!

மாண்புமிகு திரு.கே. சந்தானம் : பீஹாரைச் சேர்ந்த மதிப் பிற்குரிய நண்பர் டேனியலின் மறு அவதாரம் என்று நினைக்கிறேன். அரசியல் சாசனம் உருவாக்குவதில் அவர் அதை நிரூபித்தார். இங்கும் அவர் நிரூபிப்பார் என்று உறுதியாக நம்புகிறேன்.

திரு. ராஜேஸ்வர் பிரசாத் : நீங்களும் கூடத்தான்.

மாண்புமிகு திரு.கே. சந்தானம்: நான் பின்வாங்கப் போவதில்லை.

திரு. துணை அவைத் தலைவர் : அவையில் நீங்களே ஒருவ ருக்கொருவர் பேசிக் கொண்டிருக்க வேண்டாம். அதற்காகப் பெரிதும் வருந்துகிறேன். நான் சற்றுச் சகிப்புத் தன்மையுடன் நடந்து கொண்டேன். கசப்புணர்வுடன் கூடிய வாக்குவாதம் நடைபெற்றுக் கொண்டிருக் கிறது. நல்ல நகைச்சுவை உணர்ச்சி இருக்கும்வரை தீங்கு எதுவும் இல்லை. எவ்வாறாயினும், மதிப்பிற்குரிய உறுப்பினர் தொடர்ந்து பேச அனுமதிக்கப்பட வேண்டும். அவரது சிந்தனையோட்டத்தை இழக்கும்படிச் செய்யக்கூடாது. மேலும் தொந்தரவு விளைவிப்பது அசௌகரியத்தை ஏற்படுத்தும்.

திரு. ரோகிணி குமார் சௌதுரி : மாண்புமிகு திரு. சந்தானம் நல்ல மனநிலையில்தான் இருக்கிறார்.

மாண்புமிகு திரு.கே. சந்தானம் : ஏனெனில் நான் எடுத்துக் கொண்ட விஷயம் எளிமையானதும் குழப்பமற்றதும் நேரடியானது மாகும். எந்தப் பூச்சாண்டிகளாலும் நான் நிதானத்தை இழக்க மாட்டேன்.

இப்பொழுது நான் அடுத்த அம்சத்திற்கு அதாவது அறிவார்ந்த விளக்கத்துக்கு வருகிறேன். மிகக் கடுமையான எதிர்ப்பைக் கிளப்பிய ஒரு விஷயம் எது எனில், தகப்பனாரின் சொத்தில் மகளுக்குப் பங்களிப்பது சம்பந்தமானதாகும். பழைய சொத்து அப்படியே இருக்கும் போது, சொத்து விவசாய நிலங்களாக மட்டுமே இருக்கும்போது ஒரு வெளி நபரை குடும்பத்திற்குள் கொண்டு வருவது மிகவும் அசௌகரியத்தை ஏற்படுத்தும் என்று கூறுபவர்கள் மீது நான் அனுதாபப்படுகிறேன். சொத்து, அசையா சொத்திலிருந்து அசையும் சொத்தாக மாறிக் கொண்டிருக்கிறது என்று ஏற்கனவே குறிப்பிட்டிருக்கிறேன்.

டாக்டர் பி.எஸ். தேஷ்முக் : மத்திய மாகாணம் மற்றும் பீஹார் : பொது) அது எப்படி முடியும்? எல்லா நிலச் சொத்தையும் கலைத்துவிட முடியாது. இந்துச் சட்டத் தொகுப்பு மசோதா நிலங்களை ஆவியாக மாற்றிவிடாது.

மாண்புமிகு திரு.கே. சந்தானம் : விவசாய சமூகத்தை பொறுத்தவரை, திருமணத்துடன் அவர்கள் தாங்களாகவே பிரிவினை செய்கிறார்கள். கிராமத்திற்கு வந்து வசிக்க மருமகன் விருப்பமாக இருந்தால் அவரை ஏன் அனுமதிக்கக்கூடாது என்பதை என்னால் எண்ணிப் பார்க்க முடியவில்லை.

டாக்டர் பி.எஸ். தேஷ்முக் : இனிமேல் பிரித்து ஆளுங்கள் என்பது சட்டமாக இருக்கும்.

மாண்புமிகு திரு.கே. சந்தானம் : மகன்கள் பிரிவினை செய்து கொள்ள முடியுமெனில், மகளும் பிரிவினை செய்து கொள்ளலாம். எதிர்காலத்தில் சொத்து பண உறுதியீட்டு ஆவணங்களாகவும் ஏனையவையாகவும் இருக்கும். எனவே, மகன் போலவே மகளும் அதே உரிமையை ஏன் பெற்றிருக்கக் கூடாது என்பதற்குக் காரணம் எதுவுமில்லை. முறைப்படுத்துதல் சம்பந்தமாக ஓரிரு கருத்துக்களை எடுத்துரைக்க தயாராக இருக்கிறேன். ஒரு குடும்பத்தில் திருமணமான மகள்களின் சொத்தைக் கணிப்பதில் அவர்களின் திருமணத்திற்காக செலவழிக்கப்பட்டிருக்கும் எந்தத் தொகையையும் கணக்கில் எடுத்துக் கொள்வது அநியாயமாகாது. பல மத்தியதர வகுப்புக் குடும்பங்களில் திருமணத்திற்காகச் செலவழிக்கப்பட்ட தொகை பல சந்தர்ப்பங்களில் மகள் பெறக்கூடிய பங்கை விட அதிகமாக இல்லாவிடினும்

அதற்குச் சமமாக இருக்கும். அது ஒரு நியாயமான ஈடு என நினைக்கிறேன். அது போலவே, ஒரு வசிக்கும் வீடு மட்டும் இருந்தால், விவசாய நிலம் சிறிய அளவில் மட்டுமே இருந்தால், மகளின் பங்கைப் பொறுத்த வரை வீட்டை அல்லது அசையாச் சொத்தை பிரிவினை செய்ய வேண்டுமென்று வற்புறுத்தாமல் பணமாகவோ அல்லது மற்ற அசையும் சொத்தையோ எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கூறுவது நியாய மானது என்றே நினைக்கிறேன்.

திரு. ரன்பீர்சிங் (கிழக்கு பஞ்சாப் : பொது): பணத்தை எங்கிருந்து கொண்டு வருவது?

மாண்புமிகு திரு.கே. சந்தானம் : உங்களுக்குக் கடன் கொடுப்பவர் ஒருவர் இருந்தால் அவரிடமிருந்து தானே கடன் வாங்குவீர்கள்? அது சாத்தியமல்லவா? ஆண்டுதோறும் எளிதாக குறிப்பிட்ட காலம் வரை கொடுக்கும் முறையில் அல்லது அம்மாதிரி வேறு ஏதேனும் முறையில் கடனைத் திருப்பிக் கொடுக்கலாம் அல்லவா? ஒரு சுமூகமான குடும்பத்தில் சரி செய்து கொள்வது எளிது; சுமூக சூழ்நிலை இல்லாத ஒரு குடும்பத்தில் யாருக்கும் அநியாயம் இல்லாத முறையில் நீதிமன்றங்கள் மூலம் பிரச்சினைக்கு தீர்வுகாணும் வழிகளைக் காணலாம். இம்மாதிரி சரி செய்து கொள்வதற்கு உட்பட்டு, மகனைப் போன்று அதே அடிப்படையில் மகள் நடத்தப்படக் கூடாது என்பதற்கு எந்த முகாந்தரமும் இருப்பதாக நான் பார்க்கவில்லை. இதில் எந்த விதமான கஷ்டமும் இருக்கும் என்று நான் நினைக்கவில்லை. எல்லா விதமான பூச்சாண்டிகளும் கிளப்பப்பட்டன. எப்படியாயினும், மகள் ஒரு மருமகளாகிறாள். மகள் ஒரு பங்கைப் பெறுகிறாள் எனில், அதே போல் இன்னொரு வீட்டுக்குச் சென்றிருக்கும் மகளும் ஒரு பங்கு பெறுகிறாள். எனவே நாளாவட்டத்தில், ஆணுக்கும் பெண்ணுக்கு இடையே சம மதிப்பும் மற்றும் சமூக சமத்துவமும் சட்ட ரீதியான உரிமைகள் சரி செய்து கொள்ளப் படுவதைத் தவிர, சொத்தை ஏற்பாடு செய்து கொள்வதும் அது போலவே இருக்கும். ஏனெனில், இப்பொழுது, அப்பாவின் வீட்டிலிருந்து மகள் அதிகம் எடுத்துக் கொள்வதில்லை. அவள் தனது மாமனார் வீட்டில் அதிகம் பெறுகிறாள்.இனி இந்த மசோதாவின் கீழ், தகப்பனார் வீட்டிலிருந்து மகள் சிறிது எடுத்துக்

கொள்வாள். மாமனார் வீட்டிலிருந்து அதற்கும் குறைவாக எடுத்துக் கொள்வாள். நாளாவட்டத்தில் சொத்தை விநியோகிப்பதில் அதிக வித்தியாசம் இருக்காது. இதில் பின்பற்றப்படும் நடைமுறை சம்பந்தப் பட்ட எல்லோருக்கும் திருப்தியளிப்பதாகவும் சுயமரியாதை மிக்கதாகவும் இருக்கும். சகோதரனும் தானும் ஒன்றுதான் என்று மகள் எண்ணுவாள். இந்த நாட்டில் நாம் உற்சாகப்படுத்தி வளர்க்க வேண்டிய உணர்வு இது என்று நான் நினைக்கிறேன். கொள்கை அளவில் நாம் எல்லா சமூக ஏற்றத்தாழ்வுகளையும் அகற்றி விட்டோம். ஆண்களைப் போலவே பெண்களுக்கும் சமத்துவ வாக் குரிமையை அளித்துள்ளோம். அப்படியிருக்கும் போது வாரிசுரிமை மற்றும் மரபுரிமை விஷயத்தில் மட்டும் பாலின அடிப்படையில் நாம் ஏன் பாகுபாடு காட்ட வேண்டும்? இந்தப் பாரபட்சப் போக்கை நாமே முன் வந்து எவ்வளவு விரைவில் அகற்றுகிறோமோ அந்த அளவுக்கு நமது நாட்டின் வலு அதிகரிக்கும். இல்லையெனில், வயது வந்தவர் அனைவருக்கும் வாக்குரிமை அளிக்கப்பட்டிருப்பதன் காரணமாக மாற்றத்தைச் செய்யும்படி நம்மை நிர்ப்பந்தம்படுத்தும் அளவுக்கு என்றாவது ஒரு நாள் நாடு முழுவதும் பெண்களிடையே பெருமளவில் விழிப்புணர்ச்சி ஏற்படும். அப்பொழுது இந்தியாவின் ஆண்களுக்கு அது ஒரு அவமானமாக இருக்கும். வயது வந்தோர் அனைவருக்கும் வாக்குரிமை அமுலுக்கு வருவதற்கு முன்பே நாம் இதைச் செய்வது நல்லது; அதன் மூலம் ஒரு வேளை வாக்காளர்களாக ஆகப்போகும் ஐந்து அல்லது ஆறு கோடி பெண்கள் முன்னால் சென்று நாம் இவ்வாறு கூற முடியும்: ''பாருங்கள், நீங்கள் விரும்புவதற்கு முன்பே நாங்கள் சரியான காரியத்தைச் செய்துள்ளோம். உங்களுக்கு நாங்கள் வாக்குரிமை அளித்துள்ளோம். உங்களுக்கு நாங்கள் சொத்துரிமை அளித்துள்ளோம். நீங்கள் ஆண்களுக்குச் சமம்; ஆண் - பெண் என்ற பால் அடிப்படையிலான மோதல்கள் இனி இருக்காது''.

பிற்பகல் 3 மணி

நான் பரிசீலிக்க வேண்டிய கடைசி விஷயம் சீர்த்திருத்தம் பற்றியாகும். திருமணத்துறையில் சீர்த்திருத்தத்திற்கு உண்மையான முயற்சி செய்யப்படு கிறது. இந்த முயற்சி ஓரளவு சுய விருப்பமானது, ஓரளவு கட்டாயமானது. கட்டாயமானது ஒரு தார மணம். எனது எல்லா நண்பர்களும் மற்றும் இந்த அவையின் உறுப்பினர்களும் இந்த

சீர்திருத்தத்தை ஏற்றுக் கொள்கிறார்களா அல்லது இல்லையா என்று கூற வேண்டுமென்று விரும்புகிறேன். அவர்கள் மூன்று மணி நேரம் உரையாற்றிய போதிலும் அவர்கள் இந்த விஷயம் பற்றி சாதுரியமாக பேசாமல் இருக்கிறார்கள். ஏன் இந்த விஷயத்தைத் தவிர்க்கிறார்கள் என்பதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. ஒரு தார மணத்தை நிலைநாட்ட அவர்கள் விரும்புகிறார்களா அல்லது இல்லையா?

பண்டிட் லட்சுமி காந்த மைத்ரா: ஒரு தார மணம் ஏற்கனவே நிலை நிறுத்தப்பட்டுள்ளது.

மாண்புமிகு திரு.கே. சந்தானம் : சிலர் உண்மையிலேயே இரண்டு அல்லது மூன்று மனைவியரோடு ஆடம்பர வாழ்க்கை வாழ்கிறார்கள். மற்றவர்கள் அதிக மனைவியரை பெறும் சாத்தியப்பாடு பற்றி இன்பக் கனவு கண்டு வருகிறார்கள்.

திரு.எச்.வி. காமத்: ஒன்றுக்கு மேற்பட்ட கணவர்களை மணப்பது பற்றி என்ன?

மாண்புமிகு திரு.கே. சந்தானம்: பழைய ஆரியப் பாரம் பரியம் செய்த மாபெரும் தவறு இது எனக் கூறுகிறேன். சிறந்த ஆரியர்களின் புகழ்பெற்ற வழித் தோன்றல்கள் என்று கருதிக் கொள்ளும் நாம் இப்பொழுது அது தவறு என்று ஒப்புக்கொண்டு நாமாகவே ஏகோபித்து திருத்திக் கொள்ளும் காலம் வந்துவிட்டது. பல தார மணம் அவசியம் போயாக வேண்டும். ஆனால் கடினமான வழக்கு களில் விவாகரத்துக்கு நியாயமான வசதிகளை நீங்கள் செய்து கொடுக்காவிடில் ஒருதார மணமும் ஒரு சட்டரீதியான கற்பனைக் கதையாகிவிடும். அத்தகைய ஒரு வழிவகை செய்யாவிடில் அது தீங்கை விளைவிக்கும்.

திரு. ரோகிணி குமார் சௌதுரி: கணவனுக்குத் துரோகம் செய்யும் பெண்கள் மீது குற்ற வழக்குகள் தொடரப்பட வேண்டுமென்பதைத் தாங்கள் ஒப்புக் கொள்கிறீர்களா?

மாண்புமிகு திரு.கே. சந்தானம் : இதே குற்றங்களுக்காக இதே தண்டனைகளுக்கு பெண்கள் உட்படுத்தப்பட வேண்டுமென் பதை நான் ஒப்புக் கொள்கிறேன். ஆனால் அஸ்ஸாமிலிருந்து வரும் எனது நண்பர் இது பற்றி இளகிய மனம் கொண்டிருக்கலாம். ஒரு தார மணம் மற்றும் விவாகரத்து பற்றிய ஷரத்துக்கள் ஒரே தொடராக உள்ளன. ஒன்றிணைக்கப்பட்ட சட்டமாக அவை எடுத்துக் கொள்ளப் படவேண்டும். இது விஷயத்தில் இந்த மசோதா ஒரு சீர்த்திருத்தத்தை முன் வைக்கிறது. இது சாஸ்திரங்களால் அங்கீகரிக்கப்பட்டதல்ல; ஆனால் இது ஒரு சீர்திருத்தம்.

பண்டிட் கோவிந்த மாளவியா : விவாகரத்து அங்கீகரிக்கப் படாவிடில் மாண்புமிகு உறுப்பினர் ஒரு தார மணத்தை எதிர்ப்பார் என்று நான் புரிந்து கொள்ளலாமா?

மாண்புமிகு திரு.கே. சந்தானம்: எப்படியாயினும் ஒரு தார மணத்தை நான் ஆதரிப்பேன். ஆனால் அதை பகுத்தறிவு பூர்வமான உருவில் ஆதரிப்பேன். பகுத்தறிவற்ற முறையில் அல்ல. எனது நண்பர் ஒரு தார மணத்தை விரும்பி, அதே சமயம் ஒரு கணவர் ஆண்மையற்றவராக அல்லது குற்றவாளியாக இருந்தால் விவாகரத்து இருக்கக்கூடாது என்று வாதித்தால் பகுத்தறிவுக்கு ஒவ்வாத முறையில் ஒரு தார மணத்தை அவர் விரும்புகிறார் என்றே நான் பொருள் கொள்வேன். ஒரு தார மணத்தை அறிவுபூர்வமான முறையில்தான் நான் விரும்புகிறேன். அது தான் நமக்கிடையே உள்ள வித்தியாசம்.

மற்றொரு அம்சத்துக்கு இப்போது வருகிறேன். இந்த மசோதா வின் மற்றொரு சிறப்பு எதுவெனில், சாதி அமைப்பு முறையிலிருந்து எல்லா சட்டரீதியான தடையையும் அது நீக்கி வருகிறது. அரசியல் சாசனத்தில் தீண்டாமையை நாம் நீக்கிவிட்டோம். இப்பொழுது சமூக சீர்திருத்தத்தை மேலும் முன் கொண்டு சென்று சாதி சம்பந்தப் பட்ட எல்லாச் சட்டபூர்வத் தடையையும் அகற்றிவிடுகிறோம். இங்கு இந்த மசோதாவில் திருமணத்திற்காக என்றாலும், வேறு ஒரு நோக்கத்திற்கென்றாலும், எல்லா இந்துக்களும் தீண்டாதவர்கள் என்று கூறப்படுபவர்களிலிருந்து ஆச்சாரிய பிராமணர்கள் என்று கூறப்படுபவர்கள்வரை அவர்கள் எல்லோரும் ஒன்றே.

மதிப்பிற்குரிய சில உறுப்பினர்கள்: சாதி இல்லாத இந்து யார்?

மாண்புமிகு திரு.கே. சந்தானம்: எனது நண்பர் கேட்கிறார் ''சாதி இல்லாமல் ஓர் இந்து யார்?'' என்று. என்னை பொறுத்தவரை சாதியுடன் கூடிய ஓர் இந்து ஒரு வேதாளமாவார் எனக் கருதுகிறேன். (சபாஷ், சபாஷ்) இந்த நாட்டில் சாதியற்ற ஓர் இந்து சமுதாயத்தை நிறுவ நாங்கள் விரும்புகிறோம். ஒன்று முற்றிலுமாக இந்துக்கள் அல்லாதவர்களாக ஆகிவிட வேண்டும் அல்லது சாதி இல்லாத இந்து மதத்தை நிறுவ வேண்டும். நமக்கு மாற்று எதுவும் இல்லை.

திரு. லட்சுமி நாராயண் சாகு : முகமதியர்களையும் இந்துக்கள் என்று அழைக்கலாமா?

மாண்புமிகு திரு.கே. சந்தானம் : எப்பொழுது முஸ்லீம்கள் கீதையையும் வேதாந்தத்தையும் ஏற்றுக் கொள்கிறார்களோ அப்பொழுது அவர்களை இந்துக்களாக ஏற்றுக் கொண்டு அவர்களைக் கட்டித் தழுவ நான் தயாராக இருக்கிறேன்.

திரு.எம். திருமலராவ் : கீதைகூட சாதி பற்றிக் குறிப்பிடுகிறது.

திரு. துணை அவைத் தலைவர் : குறுகிடுவது குறைவாக இருக்கட்டும். அம்பேத்கர் தொடர்ந்து பேசலாம். ஒவ்வொருவரும் மற்றவரை தம் பக்கம் இழுக்க முயன்று கொண்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு திரு.கே. சந்தானம் : குறுக்கீடுகள் இருந்தாலும், எனது நண்பர் சிலைரை நான் கூறுவதை ஒப்புக் கொள்ளச் செய்ய முயற்சி செய்யப்போகிறேன். எனது நண்பர் திரு. திருமல்ராவ், நான் கீதை மீது பிரமாணம் எடுத்துக் கொள்கிறேன் என்று குறிப்பிட்டார். நான் கூறுவது என்னவெனில் எல்லா இந்துக்களுக்கும் குறைந்தபட்ச சமயக் கோட்பாடுகளாக அவை அமைகின்றன. எனவே, இந்த மசோதா நிறைவேறிய பின்பு, இந்துக்கள், முஸ்லீம்கள் மற்றும் கிருஸ்தவர்களுக்கிடையே பாகுபாடுகள் இல்லையெனில் அது நாடு

முழுமைக்கும் நல்லது. அர்த்தமற்ற அல்லது அறிவுபூர்வமற்ற பாகுபாடுகளை நீடித்து வைத்திருப்பதில் நாம் பெருமையடைய வில்லை. அறிவுபூர்வமற்ற அத்தகைய பாகுபாடுகளை முஸ்லீம்களும் அகற்றிவிட்டால், அறிவுபூர்வமற்ற எல்லாப் பாகுபாடுகளையும் கிருஸ்தவர்கள் அகற்றிவிட்டால், விரைவில் - நம்மை நாம் எப்படி அழைத்துக் கொண்டாலும் - ஒரே மேடையில் நாம் சந்திப்போம். அரசியல் சாசனத்திலும் இந்த மசோதாவிலும் நமது நோக்கம் என்ன வெனில் இந்த நாட்டின் பெரும்பான்மை சமூகத்தை பல பிரிவு களாகப் பிளவுபடுத்திய தவறான எண்ணங்களையும் நடைமுறை களையும் களைந்து அது பலம் வாய்ந்ததாக, ஐக்கியப்பட்டதாக ஆவதையும், எதிர்கால இந்தியாவின் புகழும் பலமும் நிலைநாட்டப் படுவதற்கு வெல்ல முடியாத அடிப்படையாக ஆவதையும் பார்ப்பது தான். இந்த மசோதா இல்லாவிடில், இந்த மசோதா முன்வைக்கும் மாற்றங்கள் இல்லாவிடில், இந்து சமூகம் ஒரு பலவீனமான, சிதறிய, முற்போக்கற்ற சமுதாயமாக இருக்கும். பெரும்பான்மையான மக்கள் அதே நிலையில் நீடித்தால், அரசியல் சாசனமும் கடவுளும் நமக்கு அளித்துள்ள அரசியல், பொருளாதார சந்தர்ப்பங்களை நன்கு பயன் படுத்த முடியாது போய்விடும். எனவே இந்த மசோதா நாம் நிறை வேற்றியுள்ள அரசியல் சாசனத்தை ஆக்கிய அதே அமைப்பே இந்த இந்துச் சட்டத்தொகுப்பை சட்டமாக நிறைவேற்றப்போவது சாலப் பொருத்தமானதாகும். இந்து சட்டத்தை ஏட்டில் ஏற்றினார்கள் என்றும் இந்த அவையோர் அரசியல் சாசனத்தை ஆக்கியதோடு இந்துச் சட்டத்தையும் சீர்திருத்தம் செய்தார்கள் என்றும் நம்புகிறேன்.

பண்டிட் லட்சுமி காந்த மைத்ரா : அரசியல் சாசனத்தை நாசம் செய்தார்கள் என்று கூறுவார்கள்!

மாண்புமிகு திரு.கே. சந்தானம்: நமது மூதாதையர் நம்மைக் கவனமாகப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள், நமது சாதனைக்காக நம்மை ஆசிர்வதித்துக் கொண்டிருக்கிறார்கள் என்று நம்புகிறேன்.

திரு. லோகநாத் மிஸ்ரா : தகவலுக்காக. இப்பொழுதான் எனது நண்பர் வேதாந்தம் மற்றும் பகவத்கீதை மீது பிரமாணம் எடுத்துக்

கொண்டார். இவற்றின் கோட்பாடுகளுக்கு எதிராக போகும் ஷரத்துக் களை நிராகரிக்க அவர் தயாராக உள்ளாரா?

மாண்புமிகு திரு.கே. சந்தானம் : தவறான ஆதாரக் கூறு களை அவை அடிப்படையாகக் கொண்டிருந்தால், நான் அவற்றை நிராகரிக்கக் கடமைப்பட்டவன்.

திரு. துணை அவைத் தலைவர் : இனியும் இந்த வாதத்தைத் தொடர்வது அவசியமற்றதாகும்.

மாண்புமிகு திரு.கே. சந்தானம் : ஐயா, அவையை களைப்பு றச் செய்ய நான் விரும்பவில்லை. எனது மனதில் தோன்றிய பிரதான விஷயங்களையே எடுத்துக்கூறியுள்ளேன். புராதனத் தப்பெண்ணத் தால், இந்த மசோதாவை எதிர்ப்பது தங்கள் கடமையென்று எண்ணுகிற வர்கள் தங்கள் கண்ணோட்டத்தை மறு பரிசிலனை செய்ய வேண்டும் என்று விரும்புகிறேன். ஒரு புதிய காட்சியை சாதியற்ற, பாகுபாடுகள் அற்ற எல்லோரும் ஒரு மனிதனாக இணைந்த ஓர் இந்து சமுதாயக் காட்சியை காண நாம் எல்லோரும் பாடுபட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். சீர்குலைந்திருக்கும் பலஹீனமான, ஆயிரம் ஆண்டு களாக அடிமைத் தனத்தில் உழன்ற இந்து சமுதாயத்தை ஒரு பலமான, ஆரோக்கியமான, மகத்தான சமூகமாக நாம் மாற்ற முடிந்தால், நமது புதல்வர்களும் பேரன்களும் பெருமைபடத் தக்க ஒரு பணியை நாம் செய்தவர்களாவோம்.

திரு.எச்.வி. பதாஸ்கர் (பம்பாய் : பொது) ஐயா, இந்து சமுதாயத்தின் கட்டமைப்பையே புரட்சிகரமாக்கக் கூடிய ஒரு மசோதாவை நாம் பரிசீலித்துக் கொண்டிருக்கிறோம். இப்பொழுது இந்த சமுதாயம் 25 கோடி மக்களைக் கொண்டதாக உள்ளது. எனவே சாமானிய மக்கள் கூட என்ன நடந்து கொண்டிருக்கிறது என்பதில் அக்கறை காட்டத் துவங்கியிருப்பது இயல்பானதே. எல்லாப் பகுதி யினரின் நலன்களுக்குச் சிறந்ததைக் கணக்கில் கொண்டு இந்து சமுதாயத்தின் மொத்தக் கட்டமைப்பையே நாம் புரட்சிகரமான தாக்கிக் கொண்டிருக்கும்போது, இந்த மசோதாவில் உட்படுத்தப் பட்ட ஷரத்துகள் பற்றி பொது மக்களிடம் எழுந்துள்ள உணர்வுகளைப் புறக்கணிப்பது விரும்பத்தக்கதல்ல.

பொது மக்கள் இப்பொழுது கல்வியறிவு பெற்றிருக்கவில்லை. தமக்கும் தம்மைச் சார்ந்திருப்பவர்களுக்கும் உணவுக்கு வகை செய்ய வேண்டிய பிரச்சினையில் ஆழ்ந்து போயிருக்கிறார்கள். வேறு எதற்கு இல்லாவிடினும் பணம் இல்லாததால் உடை நெருக்கடியை அவர் எதிர் கொண்டிருக்கிறார்கள். பொதுவாக வாழ்க்கை மிகவும் கஷ்டமாக இருப்பதைக் காண்கிறார்கள். அப்படி இருந்தும் இந்தச் சட்டம் இயற்றல் பற்றி அவர்கள் அக்கறை காட்டத் துவங்கியுள்ளார்கள். ஏனெனில் சென்ற பல நூற்றாண்டுக் கால வளர்ச்சியின் விளைவான இந்து சமுதாயத்தின் கட்டமைப்பையே இந்த மசோதா பாதிக்கப் போகிறது என்று கருதுகிறார்கள். எனவே, அவர்கள் சார்ந்துள்ள சமுதாயத்தின் மொத்தக் கட்டமைப்பை மாற்றும் முக்கிய கடமையை நாம் மேற்கொள்ளும் முன்பு நாம் அவர்களை இது பற்றி புரிய வைக்க வேண்டியது அவசியம். மசோதாவின் பல ஷரத்துக்களை நான் எதிர்க்கவில்லை என முதலாவதாகத் தெளிவுப்படுத்திக் கொள்கிறேன். ஆனால் இந்த நோக்கத்திற்காகத் தேர்ந்து எடுத்த சமயம் மிகவும் அனுகூலமற்றதுஎன்று என் மனதுக்குத் தோன்றுகிறது. 20 நிமிடங்கள் மட்டுமே எடுத்துக்கொள்ள விழைகிறேன். குறுக்கீடுகள் இல்லாமல் எனது கருத்துக்களைக் கூற நான் அனுமதிக்கப்பட்டால், அந்த அவகாசத்திற்குள் நான் முடித்துக் கொள்ள முடியும். ஏனெனில் இந்த அவையில் இந்த பக்கம் அல்லது அந்தப் பக்கம் அக்கறை கொண்டுள்ள, விவாதத்தில் பங்கு பெற விரும்புகிற பல உறுப்பினர்கள் உள்ளார்கள் என்பதை நான் அறிவேன்.

இந்த மசோதா பற்றி பொது ஜனத்தின் பிரதிபலிப்புகளை நான் புரிந்து கொண்டவரை, அரசாங்கம் முக்கிய கவனம் செலுத்த வேண்டியவை அவரைப் பாதிக்கும் பிரச்சினைகளான அவரது உணவு, உடை, பணவீக்கம், மற்றும் பல விஷயங்கள் பற்றி அவர் என்ன நினைக்கிறார், அவரது அன்றாடத் தேவைகள் பற்றி அவர் கவலைப் பட்டுக் கொண்டிருக்கும் போது அவருக்கு வேண்டுவது உணவு மற்றும் ஆதாரத் தேவைகளாக இருக்கும் போது, அவரது திருமணம் எம்மாதிரி முறையில் இருக்க வேண்டும், ஒரு மனைவியையே வாழவைக்க வசதியில்லாத போது அவர் ஒன்று அல்லது ஒன்றுக்கு அதிகமான மனைவியரை பெற்றிருக்க வேண்டுமா என்பது பற்றி ஏன் அரசாங்கம் அக்கறை கொண்டுள்ளது என்று இயல்பாகவே அவர் கேட்கிறார்.

இந்த விஷயங்களெல்லாம் அவசியப்படலாம். மேலும் நான் சீர்திருத்த திற்கு எதிரல்ல. மிக நெருக்கடியான நேரங்களை நாம் கடந்து கொண் டிருக்கிறோம் என்று நமது தலைவர்கள் சொல்லிக் கொண்டிருப்பது ஒப்புக் கொள்ளப்படுகிறது. மக்களின் கஷ்டங்களை நாம் அறிவோம். உணவு, உடை மற்றும் வாழ்க்கையின் பிற அத்தியாவசியத் தேவை களில் பற்றாக்குறை இருக்கிறது. பொது ஜனத்தோடு ஒப்பிட்டால், நாம் இங்கு வசதியான வாழ்க்கையை வாழ்ந்து கொண்டிருக்கிறோம். தலைவர்கள் அதிக கூர்மையான கவனத்தைச் செலுத்த வேண்டியது, திருமணம் மரபுரிமை முதலியன சம்பந்தப்பட்ட பிரச்சினைகளை விட தமது அன்றாடப் பிரச்சினைகளின் தீர்வுக்கு என்று அவர் இயல்பாக நினைக்கிறார். இந்த விஷயங்கள் கடந்த பல நூற்றாண்டு களாக இருந்து வந்துள்ளன. இன்னமும் பல மாதங்கள் அல்லது வரு டங்கள்கூட அவை அதே முறையில் சென்றாலும் பாதகமில்லை.

இந்த மசோதா பற்றி உற்சாகத்தை காண்பிக்கும் நமது சகோ தரிகள் அல்லது இந்து சட்டத்திருத்தமும் சட்டத்தொகுப்பும் உடனடி யாக அமல்படுத்தப்பட வேண்டுமென்று ஆரவாரம் செய்து கொண் டிருப்பவர்கள் கிராமப்புறத்தில் உள்ள பொது ஜனத்தை அணுகி னால், அவர் மற்ற பல விஷயங்கள் பற்றி அதிகம் கவலைப்படுவதை, இந்த அவையில் இம்மாதிரியான சட்டமியற்றலுக்கு நீங்கள் ஏன் அவசரப்பட வேண்டுமென்று அவர் ஆச்சரியப்படுவதை அவர்கள் காணமுடியும். இது இப்போதைக்கு நிறுத்திவைக்கப்பட வேண்டு மென்று இயல்பாகவே அவர் கருதுகிறார். நாட்டில் ஏராளமான அதிருப்தி நிலவுகிறது. நாட்டின் பிரிவினைக் காரணமாக, அகதிகள் பிரச்சினை உள்ளது; அவர்களை நிரந்தரமாக குடியேற வைத்து பாதுகாக்க வேண்டும். நமது திருமணங்கள் எம்முறையில் இருக்க வேண்டும் என்பதைவிட இப்பொழுது மேற் சொன்ன விஷயத்தில் ஆழமான அக்கறை கொள்ள வேண்டியது அவசியம். இந்த மசோதாவை அவசரப்படுத்தி நிறை வேற்றுவதற்கு காலம் மிகவும் பொருத்தமற்றது. கஷ்டங்களைத் தீர்ப்பதற்குப் பதிலாக கஷ்டங்கள் அதிகரிக்கும்.

இந்தச் சட்டத் தொகுப்பு எடுத்துக் கொள்ளும் விஷயங்கள் யாவை? திருமணம், மரபுரிமை மற்றும் தத்து எடுத்தல். திருமணத்தைப்

பொறுத்தவரை இப்பொழுது சிவில் திருமணச் சட்டம் கூட உள்ளதால், அதன் கீழ் ஏற்புடைய மதச் சடங்குத் திருமணம் செய்து கொள்ள விரும்பாதவர்கள் அச்சட்டத்தின் கீழ் செய்து கொள்ளலாம். யதார்த்தத்தில் பலர் அதைச் செய்து கொண்டிருக்கிறார்கள். எனவே இந்த சட்ட நடவடிக்கை எடுத்துக்காட்டப்பட்டது போல் அவ்வளவு அவசரமானது என்று தோன்றவில்லை.

மதிப்பிற்குரிய ஓர் உறுப்பினர் : அந்தச் சட்டத்தின் கீழ், நீங்கள் எந்த மதத்தையும் சார்ந்தவர் அல்ல என்று அறிவிக்க வேண்டும்.

திரு.எச்.வி. பதாஸ்கர்: எனது அருமை நண்பரே, அது போய்விட்டது. அது நீண்டகாலத்திற்கு முன்பே அது வழக்கொழிந்து போய்விட்டது. சிவில் திருமணச் சட்டத்தின்கீழ், எந்த சாதி அல்லது சமூகத்தைச் சேர்ந்த எந்த இரு இந்துக்களும், எந்த மதத்தையும் அவர்கள் சார்ந்திருக்கவில்லை என்று அறிவிப்பு செய்யாமலே அவர்கள் திருமணம் செய்து கொள்ளலாம். அவ்வாறு செய்வதனிற்றும் அவர்களை தடுப்பதற்கு எதுவும் இல்லை.

மரபுரிமைப் பிரச்சினை பற்றி கிளர்ச்சி அதிகம் உள்ளது. ஆண், பெண் இருபாலருடைய சமஉரிமையை நமது அரசியல் சாசனத்தில் நாம் ஒரு கோட்பாடாக வகுத்துள்ளோம். இதிலிருந்து, எவரும் பின்வாங்குவது சாத்தியமல்ல. ஆட்சேபம் எழுப்பப்பட்டது இரு பாலருக்கும் உள்ள சமத்துவம் பற்றியல்ல. ஒரு மகனும் ஒரு மகளும் உள்ள ஒரு தகப்பனார் இருவரையும் சமமாகவே நேசிக்கிறார். அதுபற்றி எந்த வேறுபாடும் இருக்க முடியாது. ஆனால் மரபுரிமையைப் பொறுத்தவரை, அது வேறு கோணத்தில் அணுகப்பட வேண்டும். அதற்கு நமது சமுதாயத்தின் இன்றையக் கட்டமைப்பின் வளர்ச்சியை நீங்கள் பார்க்க வேண்டும். கடந்த பல நூற்றாண்டுகளின் வளர்ச்சிப் போக்கின் வழியாக இந்தக் கட்டமைப்பு உருவாகியுள்ளது. கிருஸ்தவ மதம் ஒரு மதம், பார்ஸி ஒரு மதம் அல்லது இஸ்லாம் ஒரு மதம் என்ற பொருளில் இந்து மதம் ஒரு மதமல்ல.

மதிப்பிற்குரிய உறுப்பினர் : அப்படியாயின் மதம் என்றால் என்ன?

திரு.எச்.வி. பதாஸ்கர் : கிருஸ்தவ மதம் என்பது கிருஸ்துவை நம்பி பைபிளில் உள்ள அவரின் போதனையைப் பின்பற்றுபவர்கள்; பார்ஸிகள் ஸொாவிஸ்டரைப் பின்பற்றுபவர்கள். இஸ்லாம் என்பது நபிகள் நாயகத்தையும் அவர்களது புனித நூலான குரானையும் நம்புகிறவர்களின் மதம். ஆனால் இந்து மதம் என்றால் என்ன?

இந்து மதம் யாரையெல்லாம் உட்கொள்ளுகிறது? வேதங் களைப் பின்பற்றுபவர்கள் அல்லது ராமர் கிருஷ்ணர் அல்லது சிவன் அல்லது பல்வேறு உருவங்களை அல்லது வடிவங்கள் கொண்ட எண்ணற்ற கடவுள்களைப் பின்பற்றுபவர்கள் மட்டுமல்லாமல், இயற்கையை வழிபடுபவர்கள் மற்றும் எந்தக் கடவுளையும் நம்பாதவர்கள் அல்லது கடவுளின் ஒருமை தன்மையை .... நம்பாதவர்களும் கூட இந்து மதத்தில் உட்படுகிறவர்கள் வழிபாடு இடங்கள். வழிபாடுமுறைகள் மற்றும் வழிபடும் இலக்கு.

பல நூற்றாண்டுகளாக நடைமுறையிலுள்ள சமூக மற்றும் சமய நம்பிக்கைகளின் பல்வேறு போக்குகளை உட்கிரகித்து வளர்ந்தது தான் இந்து மதம், कृण्वन्तोविश्वमार्यम. என்ற உயர்ந்த கோட்பாட்டிற்கு இணங்க எல்லாவற்றையும் அணைத்துக் கொண்டுள்ள சமய நம்பிக்கை தான் அது. வாழ்க்கையின் பல்வேறு நீரோட்டங் களை தன்னில் ஒருங்கிணைக்கப் பாடுபடும் ஒரு வளர்ச்சி தான் இன்றைய இந்து மதம், தற்பொழுது ஓர் இரும்புச் சட்டத்தினுள் கட்டுப்பட்டிருப்பது போல் இந்து மதம் தோற்றமளிப்பினும், அது எல்லாக் காலங்களிலும் அப்படி இருந்ததில்லை. ஒரு குறிப்பிட்ட நூலின் அடிப்படையிலோ இயங்குவதல்ல இந்து மதம், ஆனால் அது தர்மத்தின் அடிப்படை யிலானது, மேலும் தர்மம் என்பது धारयते अनेन इति धर्मं : அல்லது धारणात् धर्मम इत्यादुह : சமுதாயத்தின் ஆதார சுருதியாக எது உள்ளதோ அதுதான் தர்மம் ஆகும். அதாவது சமுதாயத்தைக் கட்டிக் காப்பதற்கும் அதன் வளர்ச்சிக்கும் எது இன்றியமையாததாக உள்ளதோ அந்த இலட்சியத்தின் அடிப்படையில் தான் இந்து சமுதாயம் கட்டப்பட்டுள்ளது.

தற்காலத்திய இந்து சமுதாயத்தின் நிலை மகிழ்ச்சிகரமானதல்ல என்பதை நிச்சயமாக ஏற்றுக்கொள்கிறேன். எல்லாக் காலங்களிலுமே அது அவ்வாறு இருந்ததில்லை. இந்த மசோதாவிற்கு எதிர்ப்பு ஏன் உள்ளது என்பதை நீங்கள் புரிந்து கொள்ள இந்த விஷயத்தை உங்களுக்குக் கூறுகிறேன். சமுதாயம் நசித்து அழிந்துவிடாமல் இருப்பதற்கு ஆதாரம் சமயந்தான். சமுதாயம் அழியாமல் தொடர்ந்து செயல்பட்டுக் கொண்டிருப்பதுதான் நமது லட்சியம். தற்பொழுது நமது சமுதாயம் ஒரு தேக்க நிலையை அடைந்து விட்டதாகத் தோன்றலாம். ஆனால் உண்மையிலே அது அப்படியல்ல. இந்து சமயம் அதன் பரிணாம வளர்ச்சியில் பெரும் மாற்றங்களுக்குள்ளாகியிருக்கிறது. மாற்றங்களைக் கண்டு மருள்பவன் அல்ல நான். கடந்த காலத்தில் அது பல மாற்றங்களைச் சந்தித்திருக்கிறது. ஒரு காலத்தில் புத்த மதம் இந்நாட்டில் மட்டுமல்ல பாரத நாட்டின் எல்லைகளுக்கு அப்பாலும் செல்வாக்குடன் விளங்கியது. ஆனால் இன்று ஒரு சில புத்த மதத்தினரையே நாம் இங்கு காணமுடிகிறது. அவர்களுக்கு என்ன நேர்ந்தது? இந்து மதம் அவர்களை தன்னகத்தே இணைத்துக் கொண்டு விட்டது. அவர்கள் உருமாற்றம் பெற்றுவிட்டனர். அவர்களுடைய வழித் தோன்றல்கள்தான் நாம். தேங்கி நிற்கும் சமுதாயம் அல்ல நம் சமுதாயம் என்பதை இது எடுத்துக் காட்டுகிறது. சமுதாய மாற்றங்களுக்கான தேவைகளுக்கு ஏற்றபடி நாம் மாற்றமடைந்துள்ளோம். நான் மாற்றத்தை ஆதரிப்பவன். இந்து மதத்தின் உண்மை தன்மை மாற்றத்தை ஏற்காததல்ல. இந்து மதச் சட்டத்தை மாற்றக்கூடாது என்ற குழுவைச் சேர்ந்தவன் அல்ல நான். பிரிட்டிஷ் டொமினியன் ஆட்சி காலத்திலேயே நமது சட்டங்கள் மாற்றப்பட்டுள்ளன.

பரம்பரைச் சொத்துரிமை, தத்தெடுத்தல், திருமணம் ஆகியவைகள் பற்றிய பல்வேறு சட்டங்களின் மூலக் கோட்பாடுகளில், அதிக பரிச்சயமில்லாத நீதிமன்றங்களின் நீதித்துறை விளக்கங்கள் நமது சமூக பொருளாதார வாழ்க்கை ஓட்டத்தை மாற்றியதுடன் பல்வேறு முரண்பாடுகளையும் உருவாக்கியுள்ளன என்ற உண்மையை, முன்னால் பேசிய மாண்புமிகு திரு. சந்தானம் சரியான முறையில் எடுத்துரைத்தார். அந்த முரண்பாடுகள் நீக்கப்படுவது நிச்சயமாக வரவேற்கப்பட வேண்டியதுடன், மாறிவரும் நம் சமுதாயத் தேவைகளுக்கேற்ப நமது சட்டங்கள் உருவாக்கப்பட

வேண்டும். இந்த உலகம் வெகு வேகமாக மாறிவருவதால் வேறு பல இடங்களில் நடக்கும் நிகழ்ச்சிகள் நம்மைப் பாதிப்பதி லிருந்து நாம் தப்ப முடியாது. உலகின் மற்ற பகுதிகளிலிருந்து ஒதுங்கி வாழ்வதை நாம் விரும்பவில்லை, அது நம்முடைய நோக்கமுமல்ல. சட்டக் கோட்பாடுகளைத் தொகுப்பது ஒரு விஷயம், அதற்குத் திருத்தங்கள் செய்வது வேறு விஷயம், இரண்டு விஷயங்களையும் மசோதா செயல்படுத்த விரும்புகிறது. நாம் சட்டத்தை முறைப்படுத்தித் தயாரிப்பதுடன், அதிலுள்ள சட்டவிதிகளுக்கு திருத்தங்கள் செய்யவும் விரும்புகிறோம். சட்டங் களை முறைப்படுத்தித் தொகுப்ப தென்பதை அதிலுள்ள முரண் பாடுகளைக் களைவது என்று நான் புரிந்து கொண்டுள்ளேன், இந்நாட்களில் பல்வேறு சட்ட நடைமுறைகளைக் காண முடிகிறது. சில பகுதிகளில் **தாயபாகா**வும் வேறு சில பகுதிகளில் **மிதாக்ஷரா**வும் பம்பாய் நடைமுறைகள் அதற்கே உரிய தனிப்பட்ட அம்சங் களுடனும் வழக்கத்திலிருக்கின்றன. தென் இந்தியாவின் சில பகுதிகளில் மருமக்கள் தாயம் என்றழைக்கப்படும் வழக்கமும் உள்ளது. இவைகள் வழக்கத்திலிருக்கும் பகுதிகள் தெளிவாக வரையறுக்கப்பட்டுள்ளன. அதற்கு நிரந்தரத் தன்மையும் காணப் படுகிறது. எனவே நன்கு வரையறுக்கப்பட்ட இந்தப் பகுதிகளில் தற்போது நடைமுறையிலிருக்கும் சட்டத்தை தொகுத்தளிக்கத் தொடங்குவது சட்டத்தை ஒரே சீராக்குவதுடன், பிற்காலத்தில் அதில் பல திருத்தங்கள் செய்வதற்கும் வழிவகுக்கும். தற்பொழுது நடைமுறையிலுள்ள சட்டங்களை ஒழுங்குபடுத்தி முறைப்படுத்து வதில் மட்டும் நாம் ஈடுபட்டால் அது அதிக விவாதங்களைக் கிளப்பாது, ஏனெனில் அவை ஏற்கெனவே வழக்கத்திலிருக்கும் சட்டங்கள். பிரிட்டிஷ் நீதிபதிகள் பணியாற்றிய நீதிமன்றங்கள் அதில் பல மாற்றங்களைக் கொண்டு வந்திருப்பினும் அதில் ஒரு நிரந்தரத் தன்மை காணப்படுகிறது. எனவே, சட்டங்களை முறைப் படுத்தி தொகுக்கும் பணியில் மட்டுமே ஈடுபட்டால் இன்று நாம் காணும் இவ்வளவு எதிர்ப்பைச் சந்திக்க வேண்டியிருக்காது. அது மட்டுமல்ல, நாம் சட்டத் தொகுப்பில் மட்டும் ஈடுபட்டால், மக்களின் நன்னம்பிக்கையைப் பெறுவதுடன், சில காலம் கழித்து இந்தச் சட்டத்திலும் வேறு சில விஷயங்களிலும் படிப்படியாகத் திருத்தங்கள் செய்வதற்கு ஏதுவாக இருக்கும் என்று நம்புகிறேன். ஆனால் இன்று சமூகத்தில் நடைமுறையிலுள்ள சட்டங்களில்

மாற்றம் கொண்டு வர நாம் மேற்கொண்டுள்ள வழிமுறை முற்றிலும் மாறுபட்ட விஷயம். சட்டத்தை முறைப்படுத்தும் பணியும் தொகுப்பும் சட்டத் திருத்தமும் கடந்த பல ஆண்டு களாக நிறைவேற்றப்படாமல் கிடப்பில் உள்ளன. சட்டத்தை முறைப்படுத்தும் பணியை மட்டும் முதலில் எடுத்துக் கொண் டிருந்தால் பல ஆண்டுகளுக்கு முன்பே, சட்டம் தொகுக்கப் பட்டு இப்பொழுது திருத்தம் செய்வதற்கு ஏற்ற நிலைக்கு வந்திருப் போம். ராவ் குழு நியமிக்கப்பட்ட நாளிலிருந்தே சாட்சியங்கள் சேகரிக்கப்பட்டு, பல அறிக்கைகளும் மசோதாக்களும் தயாரிக்கப் பட்டன. சட்டத் தொகுப்பு மற்றும் சட்டத் திருத்தம் ஆகிய இரண்டையும் ஒரே நேரத்தில் நிறைவேற்ற இவை விரும்பின. எனவேதான், இரண்டுமே நிறைவேற்றப்படாமல் இருக்கின்றன. அவர்கள் சட்டத்தை முறைப்படுத்தி தொகுப்பதில் மட்டும் ஈடுபட் டிருந்தால், அது நீண்ட காலத்துக்கு முன்பே முடிந்திருக்கும். சட்டத் திருத்தத்துக்கான நேரம் வந்திருக்கும். இந்த விஷயத்தைப் பற்றிய என் கருத்து இதுதான்.

நான் ஏற்கெனவே கூறியபடி, இந்த மசோதா மூன்று தனிப் பட்ட விஷயங்களை அதாவது திருமணம், வாரிசுரிமை, மரபுவழி உரிமை ஆகியவைகள் சம்பந்தப்பட்டவை. நமது சமுதாயத்தின் அடிப்படை லட்சியம் என்ன என்பதைப் பார்ப்போம். புதிய சாதனை கள், புதிய கல்வி முறைகள், புதிய வாழ்க்கை முறைகள் ஆகிய வற்றின் தாக்கத்தினால், மக்களின் உள்ளத்திலே ஆண், பெண் சமத்துவத்துவம் குறித்த பிரச்சினை முக்கியமாக நாட்டின் படித்த பெண்களின் மனதை வாட்டிக் கொண்டிருக்கிறது. நம்முடைய அரசியல் சாசனத்திலும் நாம் சமத்துவத்தை ஏற்றுக் கொண்டுள் ளோம். எனவே மேலெழுந்தவாரியாகப் பார்த்தால், வாரிசுரிமை சம்பந்தமாக மகனுக்கும் மகளுக்கும் இடையே ஏன் வேறுபாடு இருக்க வேண்டும் என்ற கேள்வி ஒருவருக்குத் தோன்றக் கூடும். ஆனால் இது அவ்வளவு சாதாரணமான கேள்வி அல்ல. தன் மகன் அல்லது மகளின் நல்வாழ்வில் ஒரு தகப்பனாருக்கு உள்ள அக்கறை யில் வித்தியாசம் இருக்க முடியாது. உண்மையில் அவருடைய அன்பும் பாசமும் சமமாகத்தான் இருக்க முடியும். மகன் எல்லாம் பெற வேண்டும், மகளுக்கு ஒன்றும் கிடைக்க வேண்டாம் என்று

எந்த புத்திசாலித் தகப்பனும் நினைக்க மாட்டார். உண்மையில் அவ்வாறு நடைபெறுவதில்லை. குறைந்த எண்ணிக்கையிலுள்ள பணக்காரக் குடும்பங்களை விட்டுவிடுங்கள். மத்தியதரக் குடும்பங்களில் கூட தன் மகளின் திருமணத்திற்காக, அவள் தனக்குக் கிடைக்கும் என்று நம்பிக் கொண்டிருக்கும் தொகையை விட அதிக அளவில் செலவழிக்கப்படுகிறது. 'பல சந்தர்ப்பங்களில்' மகன்களுக்கு கல்வி அளிப்பதைக் கூடப் புறக்கணித்து விடுகிறார்கள். ''பல சந்தர்ப்பங்களில்'' என்று நான் கூறுகிறேன். நான் இந்த விஷயத்தைப் பற்றிப் புரிந்து கொண்டது இதுதான், அப்படியெனில் வாரிசுரிமை பற்றி எதிர்ப்பு ஏன் கிளம்புகிறது? சனாதனிகள் கூட தங்களுடைய மகனை நேசிப்பது போலவே மகளையும் நேசிக்கிறார்கள். இந்த எதிர்ப்பு உருவாவதற்கு ஒரு முக்கிய காரணம் உள்ளது. அதைப் பரிசீலிப்பதற்கு இந்து சமூகத்தின் முழுக் கட்டமைப்பையும் நாம் நோக்க வேண்டும்.

எனது மதிப்பிற்குரிய நண்பர் பண்டிட் முகுத் பீகாரி லால் இதைப் பற்றிக் குறிப்பிட்டார், என்னால் முடிந்த அளவு குறைந்த நேரத்தில், இந்த விஷயத்தை விளக்க விரும்புகிறேன். நமது இந்து சமுதாயத்தின் கட்டமைப்பு பல ஆண்டுகளாக படிப்படியாக பரிணாம வளர்ச்சி அடைந்து வந்துள்ளது. நமது சமுதாய அமைப்பில் குடும்பமே அடிப்படைக் கூறாகும். உண்மையிலே நமது சமுதாயத்தின் நிரந்தரத் தன்மை, குடும்பத்தின் தொடர்ச்சியையே சார்ந்திருக்கிறது. தனிப்பட்ட நபரை அது அடிப்படைக் கூறாகக் கொண்டிருக்கவில்லை, குடும்பமே சமுதாயத்தின் மொத்த கட்டமைப்பிற்கும் அடிப்படைக் கூறாக இருந்தது. அவ்வப்பொழுது நிறைவேற்றப்பட்ட சட்டங்களும், பழக்க வழக்கங்களும் குடும்பத்தின் தொடர்ச்சியைப் பேணிப் பாதுகாப்பதையே நோக்கமாகக் கொண்டிருந்தன. சமுதாயக் கட்டமைப்பின் அடிப்படைக் கூறாக இருந்த குடும்பமே எல்லாவற்றிற்கும் மையமாக இருந்தது. திருமணங்களினால் மகள்கள் இயற்கையாகவே வேறு ஒரு குடும்பத்திற்குச் செல்கிறார்கள். ஆனால் மகன்கள் அந்தக் குடும்பத்திலிருந்து கொண்டு பரம்பரையைத் தொடர்கிறார்கள், குடும்பத்தின் தொடர்ச்சியை உறுதி செய்யவும், அது உடைந்து போவதிலிருந்து தடுக்கவும் கூட்டுக் குடும்ப முறை உருவாயிற்று. இந்து சமுதாயத்தின் சிறப்பு அம்சமாக கூட்டுக் குடும்பம்

கருதப்படுவது ஏன்? ஏனெனில் இந்து சமுதாயம் குடும்பத்தின் தொடர்ச்சியை அடிப்படையாகக் கொண்டது. எனவேதான் தனிநபரின் அடிப்படையில் உள்ள இதர சட்ட நடைமுறைகளில் காணமுடியாத கூட்டுக் குடும்பமுறை இந்துச்சட்டத்தின் சிறப்பம்சமாக விளங்கு கிறது. ஒன்றிரண்டு தலைமுறைக்கு முன்புவரை இந்தக் கூட்டுக் குடும்ப முறை நன்கு செயல்பட்டுவந்தது. கடந்த பல நூற்றாண்டு களாக நமது சமுதாயக் கட்டமைப்பின் ஸ்திரத்தன்மையையும் மற்றும் தொடர்ச்சியையும் அது பாதுகாத்துவந்தது. அதனால் வாரிசுரிமையை மகள்களுக்கும் அளிக்கும் முயற்சிக்கு எதிர்ப்பு கிளம்பியுள்ளது, இந்த எதிர்ப்பு அரசியல் அல்லது சமூகக் காரணங்களினால் எழுந்தது அல்ல. ஏனெனில் மகளுக்கும் வாரிசுரிமையை விரிவுபடுத்தினால் கூட்டுக்குடும்ப அடிப்படையிலான சமுதாயக் கட்டுக்கோப்பு முழு வதும் இதன் விளைவாக நொறுங்கிப் போய் விழுந்து விடும்.

இன்றைய உலகில், தனிநபருக்கு முக்கியத்துவம் அளிக்கும் போக்கே காணப்படுகிறது. பல இடங்களில் கூட்டுக் குடும்ப முறை யில் கீறல் விழுந்துவிட்டது. நவீனச் சூழ்நிலைகளில் கூட்டு குடும்ப வாழ்க்கை முறை எல்லாக் காலங்களுக்கும் தொடர்ந்து இருக்க முடியாது என்றுகூடச் சொல்வேன். இது இவ்வாறு இருப்பதால், நமது சமுதாயத்தை தனி நபர் அடிப்படையில் படிப்படியாக மாற்றுவதா அல்லது இப்பொழுது கொண்டுவரப்படவுள்ள சட்ட நடவடிக்கைகள் மூலம் அதைச் சுக்குநூறாக உடைத்துவிடுவதா என்பதே கேள்வி. நாம் உடனடியாக இந்து சமுதாயத்தை உடைக்க விரும்பினால், அதன் மூலம் சமுதாயத்தின் ஆணிவேரையே பிடுங்கி எறிந்து விடுவோமோ என அஞ்சுகிறேன். இதன் விளைவுகள் எதிர்பாராதவை யாகவும் முன்கூட்டியே சிந்தித்துப் பார்க்க முடியாதவையாகவும் இருக்கும், மகள்களுக்கு வாரிசுரிமை அளிப்பதுதான் பெரும் ஆபத்து என்று கூறமுடியாது. ஆனால் இந்த நடவடிக்கை சமுதாயத்தின் அடிப்படையை உள்ளடக்கியது. எனவேதான் இதற்கு எதிர்ப்பு உள்ளது, பல்வேறு பொருளாதார சமூகக் காரணங்களால் கூட்டுக் குடும்ப முறை உடைய ஆரம்பமாகிவிட்டதால், படிப்படியாக அதன் மாற்றத்துக்கு உதவ முயற்சிப்பதன் மூலம் நாம் எதிர்பார்க்கும் விளைவுகளைக் காணமுடியும். எதிர்பாராத விதத்திலோ திடீரென்றோ அல்ல. தொகுப்புச் சட்டம் நடைமுறைக்கு வரும் நாளிலிருந்து கூட்டுக் குடும்பமுறை மறைந்துவிடும் என்று மசோதாவின் ஒரு விதி குறிப் பிடுகிறது. நீங்கள் அதைத் திடீரென்று நிறைவேற்ற முயற்சிக்கிறீர் கள், ஆனால் அது உண்மையிலே நமது சமுதாயத்தின் அடிப்படை யையே தகர்த்துவிடும், பல நூற்றாண்டுகளாக அதன் அடிப்படையாகக்

கூட்டுக் குடும்பமுறை இருந்து வந்துள்ளது. இந்த நிலை சந்தேகத்துக்கு இடமின்றி மாற்றப்படவேண்டும், இந்த உலகம் இன்று இருக்கும் நிலையில், அதை நீண்ட காலத்துக்கு தூக்கி நிறுத்த முடியாது என்பதில் நான் அவர்களுடன் ஒன்றுபட்டவன். என்றாலும், என் சீர்திருத்த ஆர்வமிக்க நண்பர்களை நான் கேட்டுக்கொள்வதெல்லாம் இதுதான்: இதைப் படிப்படியாக செய்வதா, மக்களையும் நம்முடன் அழைத்துச் செல்வதா, அல்லது முடிந்தவரை அவர்களையும் இழுத்துச் செல்வதா அல்லது சட்டத்தின் மூலம் ஒரே வீச்சில், பேனாவின் ஒரே கோட்டின் மூலம், இந்தக் கூட்டுக் குடும்ப முறையை ஒழித்துக் கட்டுவதா என்பதே கேள்வி. அசாதாரண சூழ்நிலைகளால் இன்றைய நாட்களில் பல பிரச்சினைகளால் மக்கள் கவலை கொண்டிருந்தாலும் இந்தக் கேள்வி அவர்களின் கவனத்தை அதிகம் கவர்ந்துள்ளது. எனவே எந்தவிதத் திடீர் நடவடிக்கையும் சீர்திருத்தவாதிகளுக்கும் அல்லது மற்றவர்களுக்கும் விரும்பத்தகாத விளைவுகளை ஏற்படுத்தும். நாம் தேக்க நிலையில் வாழ்ந்து கொண்டிருக்க முடியாது என்பதை ஏற்றுக்கொள்கிறேன். கடந்த காலத்தில், முற்றிலும் மாறுபட்ட வழிகளில் இந்து சமுதாயத்தில் பல மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன. ஆனால் படிப்படியாக நடைபெற வேண்டிய நிகழ்ச்சிகளை வலுக்கட்டாயமாக நிகழவைத்தால், அதனால் கிட்டும் விளைவு மகிழ்ச்சிகரமாக இருக்காது என்று நான் நிச்சயமாக நம்புகிறேன்.

ஐயா, ஒரு விஷயம் எனக்கு மிகுந்த ஆச்சரியத்தை அளிக்கிறது. தத்து எடுத்துக்கொள்ளும் முறையைத் தொடர்ந்து வைத்துக் கொள்ள விரும்புகிறோம். இது எதற்காக என்று எனக்குப் புரியவில்லை, தத்தெடுப்பது என்பது இந்து சட்டத்தின் ஒரு விசேஷத்தன்மை கொண்ட நடைமுறை, மற்ற சமுதாயங்களிலும், குழந்தைகள் தத்து எடுத்துக்கொள்ளப்படுகிறார்கள். குழந்தைகளை வளர்க்க வேண்டும் என்ற மனித உள்ளத்தின் இயற்கையான வேட்கையைத் திருப்திப் படுவதற்காகத்தான் அன்றி குடும்பத்தைத் தொடர வேண்டும் என்ற நோக்கத்தினாலல்ல. அமெரிக்காவிலும், இங்கிலாந்திலும் மக்கள் குழந்தைகளைத் தத்து எடுத்துக் கொள்கிறார்கள் என்று எனக்குச் சொன்னார்கள். ஆனால் அங்கு தத்தெடுப்பதின் நோக்கம் வேறு. தற்போது வழக்கத்திலிருக்கும் இந்துச் சட்டத்தில் உள்ள தத்து எடுக்கும் கொள்கை விசேஷத் தன்மை கொண்டது, ஏனெனில் இந்துக் கூட்டுக்குடும்பத்தின் கட்டமைப்பு அந்தக் குடும்பத்தின் தொடர்ச்சியை அடிப்படையாகக் கொண்டுள்ளது. இந்தச் சட்டத்தின் மூலம் நீங்கள் முயற்சி செய்யும் கூட்டுக் குடும்பங்களின் சிதைவுக்குப் பிறகு தத்தெடுக்க விதிமுறைகள் செய்ய வேண்டிய

அவசியம் என்ன? வேறு ஒரு கோணத்தில் இதைப் பார்ப்போம். தத்தெடுப்பது இந்து சமயத்தின் விசேஷத்தன்மை என்று ஏன் கருதப் படுகிறது? ஏனெனில் இந்து சமுதாயத்தின் முக்கிய அம்சம் அதன் அடிப்படையான கூட்டுக்குடும்பம். அதன் தொடர்ச்சிக்கு சுவீகாரம் அவசியமாக இருந்தது. கூட்டுக் குடும்ப அமைப்பு உடைந்து தனி நபர் கொள்கைக்கு முக்கியத்துவம் வந்த பிறகு இந்த சுவீகாரத் தத்துவத்தை மேலும் பாதுகாக்க நாம் ஏன் நேரத்தை வீணாக்க வேண்டும் என்பது எனக்குப் புரியவில்லை. சவீகாரக் கொள்கையை நான் தீர்மானமாக எதிர்க்கிறேன். இப்பொழுது தத்தெடுக்கப்படும் நிகழ்வுகளில் 100க்கு 99 சதவீதம் நீதிமன்றங்களில் வழக்குகளுக்கு உள்ளாகியிருக்கின்றன. ஏனெனில் இந்தக் கொள்கை பெரும் மாற்றத்திற்குள்ளாகியிருக்கிறது. கணவனை இழந்த பெண் ஒருத்தி சிறுவன் ஒருவனைத் தத்தெடுக்கிறாள். தனது சொத்து விவகாரங் களை இலவசமாக நிர்வாகம் செய்யக் கிடைத்த பையன் என அவள் எண்ணுகிறாள். தன்னை சுவீகாரம் எடுத்துக்கொண்டவரிடமிருந்து தனக்கு ஏதாவது கிடைக்குமாவென்று அவன் நினைக்கிறான். முற்றி லும் சுயநல நோக்குடனேயே இன்றைக்கு தத்தெடுக்கும் முறை செயல்படுகிறது, பண்டைய நாட்களில் தத்தெடுப்பதற்கு இருந்த அடிப்படை மறைந்து கொண்டிருக்கிறது. ஓரளவு அனுபவமிக்க வழக்குறைஞர் என்ற முறையில் 100க்கு 99 சுவீகாரங்கள் வழக்கு களில் முடிகின்றன என்பதை கண்டுள்ளேன். ஏனெனில் சுவீகாரத்தின் மூல நோக்கம் முற்றிலும் மாறிவிட்டது. இந்த மசோதாவின் வழிமுறைகள் நடைமுறைக்கு வரும்போது கூட்டுக்குடும்ப முறை முற்றிலுமாக மறைந்து போகும். உலகின் மற்ற பகுதிகளில் உள்ளது போல தனியார் சமுதாயம் உருவாகி வருகிறது. எனவே சுவீகாரம் சம்பந்தமாக எந்தவித சட்டவிதிகளையும் உருவாக்குவது அவசிய மில்லை. அப்படிச் செய்வது குழப்பத்தில்தான் முடியும். நாம் செய்யும் கரியங்கள் தர்க்கரீதியானதாகவும், உறுதியானதாகவும் இருந்தால், சுவீகாரத்தை முற்றிலுமாக நீக்கிவிடலாம்.

இப்பொழுது திருமணம் மற்றும் விவாகரத்தைக் குறித்துப் பேச வேண்டும். மாண்புமிகு திரு. சந்தானம் உறுப்பினர்களிடையே ஒரு கேள்வியை எழுப்பியுள்ளார். ஒருதார வழக்கத்தை ஆதரிக் கிறீர்களா அல்லது எதிர்க்கிறீர்களா என்பதே அந்தக் கேள்வி. இந் நாட்களில் ஒருதார வழக்கமே முற்றிலும் அவசியம் என்று நான் கூறுவேன். இதற்கு எதிரான கருத்துடைய எவரும் அவையில் இருக்க மாட்டார் என நம்புகிறேன். ஆனால் இந்த நோக்கத்தை நிறைவேற்ற இந்து தொகுப்புச் சட்ட மசோதா அவசியமா? பம்பாய் மாகாணத்தில்

ஒரு தார திருமண நடைமுறை உள்ளது. அதன்படி அந்த மாகாணத்தைப் பொறுத்தவரை ஒருதார வழக்கமே அமலிலுள்ளது. அதைத் தொடர்ந்து சில நேர்வுகளில் விவாகரத்தும் அனுமதிக்கப்படுகிறது. இந்த விஷயங்களில் நாம் அந்த நடவடிக்கையை விட அதிக தூரம் செல்லவில்லை. நம்முடைய நோக்கம் ஒருதார முறையை அமல் செய்வது என்றால், அதற்கு எந்த எதிர்ப்பும் இருக்காது எனக் கூறுகிறேன். கொள்கை ரீதியான காரணங்களைத் தவிர நடைமுறைக் காரணங்களும் அதற்குச் சாதகமாக உள்ளன. இந்நாட்களில் ஒரு மனைவியைவிட அதிக மனைவிகளை யாரும் விரும்புவதில்லை. இதற்கு விதி விலக்காக சில லட்சாதிபதிகளையும் கோடீஸ்வரர்களையும் தவிர இந்த ஆடம்பர வாழ்க்கையை வேறு யாரும் அனுபவிக்க முடியாது. மாண்புமிகு திரு. சந்தானம் கூறியது போல் இது மனோரீதியான ஆடம்பர வாழ்க்கை மட்டுமல்ல. ஏனெனில் ஒரு மனைவி மற்றும் குழந்தைகளுடன் வாழ்க்கையைச் சமாளிப்பதே, மிகுந்த மன உளைச்சலை கொடுக்கிறது. இந்தச் சூழ்நிலைகளில் ஒரு மனைவியுடன் மேலும் ஒரு மனைவியை மணந்து கொள்வதால் எவ்வித மனோரீதியான சுகபோகமும் கிடைக்கப் போவதில்லை. உண்மையில் அது ஒரு எளிய நடைமுறைக் கொள்கை. எனவே ஒரு தார வழக்கமே இருக்க வேண்டுமென்று இரு தரப்பினரும் ஏற்றுக்கொள்வார்கள் என்று நினைக்கிறேன்.

விவாகரத்துச் சம்பந்தமான உண்மையான பிரச்சினையைக் குறித்து நாம் குழம்பிவிடக்கூடாது. ஒரு தார வழக்கத்தின் போது தம்பதியரில் ஒருவர் தொழுநோயால் பாதிக்கப்பட்டிருந்தால், மற்றவருக்கு அந்தத் திருமணச் சுமையிலிருந்து விடுபட வகை செய்யப்பட வேண்டும். இல்லையென்றால் நீங்கள் அவருக்கு இல்லற சுகத்தை மறுப்பதாகும். சில வகைகளில் விவாகரத்து என்பது ஒரு தார நடைமுறையின் தொடர்பயனாகும். சட்டங்களின் ஆசானான மனுவும் கூட இந்த மாதிரி நேர்வுகளுக்கு வகைசெய்துள்ளார்.

नष्टे मृते प्रव्रजिते क्लीबे च पतिते पतौ पंचत्सु आपत्सु सुनारीणा पतिरन्यो विधीयते।

என்னைப் பொறுத்தவரையில் முக்கியமான விஷயம் என்னவென்றால் ஒரு தார திருமணத்தை அமல்படுத்துகிறார்களோ இல்லையோ 10000 பேரில் 9999 பேர் இந்த நியதியையே பின்பற்றப் போகிறார்கள். இந்தப் பிரச்சினையில் நாம் கலக்கமுறத் தேவையில்லை. ஐயா, இந்தக் கருத்துக்களையெல்லாம் விட கடைசியாக வேறு ஒரு விஷயம் உள்ளது. ஏற்கெனவே நாம் நிறைவேற்றியுள்ள

அரசியல் அமைப்புச் சட்டத்தின் விதி எண் 44-ன் படி ஒரு சீரான உரிமையியல் தொகுப்புச் சட்டமே நமது குறிக்கோளாக இருக்கும் என்று கூறப்பட்டுள்ளது. இந்தியா முழுவதிற்கும் ஒரே சீரான (சிவில்) உரிமையியல் தொகுப்புச் சட்டம் கொண்டுவர அரசு நடவடிக்கை எடுக்கும் என்று அரசியல் அமைப்புச் சட்டத்தில் நெறியுறுத்துக் கோட்பாடு ஒன்று சேர்க்கப்பட்டுள்ளது. இந்துக்களுக்கு மட்டுமான இந்தச் சட்டத்தை நிறைவேற்றுவதன் மூலம் அந்த லட்சியத்தை நோக்கி முன்னேறிச் செல்கிறோமா என்பதை நீங்கள் ஆழ்ந்து பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன் முன்னேறிச் செல்வதற்குப் பதிலாக பின்நோக்கிச் செல்வதாகவே எனக்குத் தோன்றுகிறது. அந்த 44-ஆம் எண் விதியை நிறைவேற்றிய பிறகு இந்துக்களை ஒன்றுபடுத்தும் நோக்கத்திலான இந்த நடவடிக்கை யின் மூலம் நாம் லட்சியத்தை நோக்கி முன்னேறிச் செல்கிறோம் என்று என் மதிப்பிற்குரிய நண்பர் திரு. சந்தானம் கருதுகிறார். அது அப்படி இருக்கலாம் அல்லது இல்லாமலும் இருக்கலாம். நமது நாட்டின் பாதுகாப்பிற்கு இந்துக்களை மட்டும் ஒன்றுபடுத்துவது போதாது. இந்நாட்டின் எல்லா மக்களையும் ஒன்றுபடுத்த வேண்டும். உலக முழுவதும் உள்ள நாடுகளில் திருமணம், வாரிசுரிமை போன் றவைகள் (சிவில்) உரிமையியல் சட்டத் தொகுப்பில் இடம்பெற் றுள்ளன. இந்தியாவிலும் அவ்வாறே செயல்படுத்தப்பட வேண்டும். இந்துக்கள், கிருஸ்தவர்கள், பார்சிகள் அல்லது முஸ்லீம்கள் ஆகிய எல்லோரும் இந்தச் சட்டத்திற்குட்பட்டவர்களாக இருக்க வேண்டும். அந்த நோக்கில் பார்த்தால் நாம் நேர்மாறான திசையில் சென்று கொண்டிருக்கிறோம். இது எவ்வாறு எனக் கூறுகிறேன். மதம் மற்றும் ஓரளவு மதசம்பந்தமான விவகாரங்களில் தலையிடாமை என்ற கோட்பாடு வெளிநாட்டு அரசினால் உருவானது. அவர்களுடைய நலனுக்காக இது நம்மீது திணிக்கப்பட்டது நம்முடைய நலனுக்காக அல்ல. இந்த விஷயங்களையெல்லாம் ஒரே சீரான (சிவில்) உரிமை யியல் தொகுப்பு சட்டத்தில் சேர்ப்பதை எது தடுக்கிறது? தற்போ தைய இந்தத் தொகுப்புச் சட்டம் மாறுபட்ட சூழ்நிலைகளில் ஒரே மாதிரியான (சிவில்) உரிமையில் தொகுப்புச் சட்டம் தேவை என்ற நோக்கம் இல்லாத காலகட்டத்தில் உருவானது. ஆனால் அந்த கால கட்டத்திற்குப் பிறகு நிலைமையில் பெரும் மாற்றங்கள் ஏற்பட் டுள்ளன. முக்கியமாக பாகிஸ்தானின் பிரிவுக்குப் பிறகு நமது நாட்டி லுள்ள பல்வேறு சக்திகளை, அது இந்துக்களாகவோ, கிருஸ்தவர் களாகவோ முஸ்லீம்களாகவோ அல்லது பார்சிகளாகவோ இருப்பினும் அவர்களை ஒன்றிணைப்பதே நமது முயற்சியாக இருக்கவேண்டும். இந்த மாதிரி விஷயங்களில் இந்துக்களுக்கு மட்டும் ஏதாவது செய்வதை

நான் விரும்பவில்லை. நமது நாட்டு மக்கள் அனைவரையும் ஒன்றாக இணைப்பதற்காக கூட்டுத் தேர்தல் முறையை நாம் ஏற்றுக் கொண் டுள்ளோம். ஒரு சீரான (சிவில்) உரிமையியல் தொகுப்புச் சட்டத்தின் மூலம் மேலும் மக்களை ஒன்றிணைக்க முடியும். அந்த நடவடிக்கை களைத்தான் நாம் தொடரவேண்டும். நம் எல்லோருடைய அக்கறை யும் கவனமும் அதன் பால் இருக்க வேண்டும். மற்ற மதங்களைச் சேர்ந்தவர்களின் சமூக விஷயங்கள் மற்றும் வாரிசுரிமை சம்பந்தப் பட்ட சட்டங்களில் தலையிடமுடியாது என்ற கொள்கையை விட்டு விட வேண்டும். அந்த எண்ணத்தை மாற்றிக் கொள்ள வேண்டும். நன்கு பின்னிப் பிணைந்த சமுதாயமாக நமது சமுதாயம் உருவாக வேண்டிய இத் தருணத்தில் நம்மைப் பிளவுபடுத்த வேண்டும் என்ற நோக்கத்துடன் உருவாக்கப்பட்ட பழைய கருத்தைப் படித்துக் கொண்டு நாம் தொங்கிக் கொண்டு நிற்க விரும்புகிறோம். நமது மக்களின் பாதுகாப்பிற்கும் நல்வாழ்விற்கும் ஒரே சீரான உரிமை யியல் (சிவில்) தொகுப்புச் சட்டம் தேவைப்படுகிறது. சில பழைமை வாத நண்பர்களின் உணர்ச்சிகளை புண்படுத்துவது பற்றிக்கூட நான் கவலைப்படாமல் திறந்த மனத்துடன் என் கருத்துக்களைக் கூறு கிறேன். நம்முடைய செயல்கள் எல்லாம் சரியான முறையில் நிறை வேற்றப்படவேண்டும். சில விஷயங்களில் பழைய கொள்கைகளில் தொங்கிக் கொண்டு புதிய கொள்கைகளைக் கொண்டு வரமுடியாது. இது சம்பந்தமாக, கோவா முழுமைக்கும் ஒரே சீரான சிவில் சட்டம் நடைமுறையில் உள்ளதை நான் குறிப்பிட வேண்டும். சட்ட அமைச் சருக்குக்கூட அது தெரிந்திருக்கக் கூடும். வாரிசுரிமை சட்டம் மற்றும் இதர சட்டங்கள் போர்ச்சுக்கீசியரின் கீழ், கிருஸ்தவர்கள், இந்துக் கள், முஸ்லீம்கள் ஆகிய அனைவருக்கும் ஒரே ரீதியில் நடைமுறைப் படுத்தப்படுகின்றன. அது அப்படியென்றால், நாம் ஏன் அஞ்ச வேண்டும்? அதாவது மதம் மற்றும் ஓரளவு மத சம்பந்தமான விஷயங்களில் தலையிடக்கூடாது என்ற கொள்கையை ஏற்றுக் கொண்டதன் விளைவுதான் அந்த அச்சம். நம்மைப் பிரித்தாள வேண்டும் என்ற எண்ணத்தில் வெள்ளையர்கள் தங்கள் நலனுக்காக இதைப் பின்பற்றினர். தேசத்தின் எல்லா மக்களையும் ஒன்றுபடுத் துவதே நமது இன்றையக் கொள்கையாக உள்ளது. இப்படிப்பட்ட மசோதாவை கொண்டு வருவதற்குப் பதிலாக, நாம் செய்ய வேண்டியது என்னவென்றால் 1950 ஜனவரி 26க்குப் பிறகு உடனடி யாக இந்தியா முழுவதற்குமான, மக்கள் அனைவருக்கும் பொதுவான உரிமையியல் (சிவில்) சட்டம் ஒன்றை, நமது சட்ட அமைச்சர் கொண்டு வரவேண்டும். நான் பேச எழுந்தவுடன், அவை உறுப் பினராக உள்ள என் உற்சாகமிக்க சகோதரிகள் நான் இந்த மசோதா

வுக்கு எதிரி என எண்ணினர். சமத்துவம் மற்றும் அதுபோன்ற விஷயங்களை முற்றிலும் ஆதரிப்பவன் நான், ஒன்றை அழித்துவிட்டு மற்றொன்றில் கஷ்டத்தை உருவாக்குவதாக நம் பாதை இருக்கக் கூடாது. ஒரே மாதிரியான உரிமையியல் (சிவில்) சட்டத்தை உருவாக்க, நமது இந்து நண்பர்களிடம் சென்று, கூட்டுக் குடும்பமுறை இனி தேவையற்றது, அதற்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும், அதுதான் நமது தேச நலனுக்குச் சிறந்தது என்று கூறலாம். ஆனால் நமது செயல்பாடுகளோ அதற்கு முற்றிலும் மாறாக உள்ளது. சற்றும் விரும்பப்படாத, முற்றிலும் எதிர்பாராத விளைவுகளுக்கு அது நம்மை இட்டுச் செல்லும் என அஞ்சுகிறேன். உதாரணம் ஒன்று கூறலாம் என நினைக்கிறேன். பம்பாய் மாகாணத்தின் அகமத் நகரைச் சார்ந்த ஓர் இளம் விதவைப் பெண் முஸ்லீம் வாலிபர் ஒருவனை மணக்க விரும்பினாள். அது ஒரு காதல் விவகாரமோ என்னவோ என்பது எனக்குத் தெரியாது. அவள் ஒரு முஸ்லீமை மணக்க விரும்பினாள். நெருக்கடியான நாட்களைக் கடந்து கொண்டிருந்த காலம் அது என்பது உங்களுக்குத் தெரியும். எங்கும் ஒரே குழப்பங்கள். கலகங்கள் நடைபெற்றதில் பல உயிர்கள் பலியாயின. எனவே இந்த முஸ்லீம் இளைஞன் தன் பாதுகாப்பைப் பற்றி கவலைப்பட்டதுடன், தன்னுடைய சமூகத்தின் பாதுகாப்பைப் பற்றியும் அச்சமடைந்திருந்தான். அவளைத் திருமணம் செய்து கொள்ளவோ, அந்த மாதிரி நினைப்போ தனக்கு இல்லை என்று அந்த முஸ்லீம் இளைஞன் கூறினான். அந்த முஸ்லீம் இளைஞனுக்கு ஏற்கெனவே மனைவியும் குழந்தைகளும் இருந்ததால், இஸ்லாம் மதத்திற்கு மாறாது அந்தப் பெண்ணால் அவனை மணம் செய்து கொள்ள முடியாது. முஸ்லீம் மதத்திற்கு மதம் மாறினால்தான் அவளால் அவனை மணம் புரிய முடியும். பம்பாய் மாகாணத்தில் இந்துக்கள் ஒரு மனைவிக்கு மேல் மணம் புரியக் கூடாதென்று சட்டம் ஒன்று இயற்றப்பட்டுள்ளது. ஆனால் முஸ்லீம்கள் அப்படி நடந்து கொள்வதை அது தடுக்கவில்லை. தற்போதைய மசோதாவின்படி ஒரு முஸ்லீம் தம் விருப்பம்போல் எத்தனை மனைவிகளை வேண்டுமானாலும் திருமணம் செய்து கொள்ள, அதாவது குறைந்தபட்சம் நான்கு மனைவிகளையாவது திருமணம் செய்துகொள்ள அனுமதிக்கப் பட்டுள்ளார். இப்பொழுது ஒருவன் பணக்காரனாக இருந்தால் ஒரு மனைவிக்கு மேல் மனைவி வேண்டும் என்று விரும்பினால், முஸ்லீம் மதத்திற்கு மாறி எவ்வளவு பெண்களை வேண்டுமானாலும் மணந்து கொள்ள முடியும். ஆக இந்தக் கருத்தோட்டங்களின்படி பார்த்தாலும் எல்லா மக்களுக்குமான ஒரே சீரான உரிமையியல் (சிவில்) தொகுப்புச் சட்டத்தை உருவாக்க இனியாவது எவ்விதத்திலும்

முயற்சிக்க வேண்டும். நாட்டின் நலனுக்கு இது மிகவும் தேவை. உலகம் முழுவதும் இதுதான் நடைபெற்று வருகிறது. நான் முன்பு சுட்டிக் காட்டியபடி இந்த மாதிரியான ஒரு தொகுப்புச் சட்டம் இந்தியாவிலுள்ள போர்ச்சுகீசிய காலனியான கோவாவில் அமலி லுள்ளது. நம்மைப் பிரித்தாள முயற்சி செய்தபோது முந்தைய ஆட்சி யாளர்களால் செயற்கையாக தயாரிக்கப்பட்ட சட்டம்தான் இந்த இந்து தொகுப்புச் சட்டம். இந்தப் படுநாசக் குழியிலிருந்து நாம் எழுந்திருக்க முயல வேண்டும். ஒரே சீரான பின்னிப் பிணைந்த சமுதாயம் ஒன்றை உருவாக்கப் பாடுபட வேண்டும். இந்து அல்லது முஸ்லீம் அல்லது வேறு எந்த மத அடிப்படையிலும் அமையாத ஓர் உண்மையான மதச் சார்பற்ற ஒரே நோக்கம் கொண்ட அரசை நிறுவ வேண்டும். எனவே இந்த மசோதாவை மேலும் விவாதிக்க வேண்டியதில்லை. அதனால் எந்தப் பயனும் கிடையாது. இந்த மசோதாவை திரும்பப் பெற்றுக் கொண்டு இந்த மசோதாவில் குறிப்பிட்டுள்ள விஷயங்களை அடிப்படையாகக் கொண்ட எல் லோருக்கும் பொதுவான, இந்துக்கள், முஸ்லீம்கள், பார்சிகள், யூதர்கள் மற்றும் ஏனையோருக்கும் பொதுவான ஒரு உரிமையியல் (சிவில்) சட்டத்தை கொண்டு வருமாறு எனது நண்பர் சட்ட அமைச் சரைக் கேட்டுக் கொள்கிறேன்.

*திரு. ராம் சகாய் (மத்திய பாரத்): *(இந்தி மொழிப் பேச்சின் ஆங்கில மொழிபெயர்ப்பு)* பொறுக்குக் குழுவின் பரிசீலனைக்கு இந்த மசோதா வந்தபோது, நமது இன்றைய கலாசாரத்திற்கும் நாகரிகத்துக்கும் வேறுபாடான சில அம்சங்கள் உள்ளதைக் கவனத் தில் எடுத்துக் கொள்ள வேண்டும் என்று பொறுக்குக் குழு உறுப்பினர் களைக் கேட்டுக் கொண்டேன். ஆனால் அவர்கள் அதைப் பற்றி குறிப்பிடத்தக்க கவனம் எதையும் செலுத்தியதாகத் தெரியவில்லை. இதற்காக மேலும் ஒரு குழு அமைக்கப்பட உள்ளதாக நேற்றுத்தான் நாம் தெரிந்து கொண்டோம். இந்தக் காரணத்திற்காக மட்டுமே, இந்த அவையின் நேரத்தை சிறிது எடுத்துக் கொள்ள உங்கள் முன் நிற்கிறேன். இந்த மசோதாவை நான் எதிர்க்கவில்லை. இந்த மசோதாவை எதிர்ப்பவர்களின் கருத்துகள் சிலவற்றிற்கு இடமளிக் கவே சில திருத்தங்களைக் கொண்டுவர விரும்புகிறேன். இந்த அவையின் சில நிமிடங்களை எடுத்துக் கொள்வதற்கான ஒரே காரணம் இதுதான்.

★ அ.கி.வி (சட்) டி., தொகுதி VI பிரிவு II, 12 டிசம்பர் 1949 பக். 496-98.

இந்த மசோதாவின் மூலம் எல்லா ஜாதி வேற்றுமைகளையும் ஒழித்துவிட்டு, ஒருமைப்பாட்டை நோக்கிச் செல்கிறோம் என்று மாண்புமிகு திரு. சந்தானம் கூறியதைத் தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த மாதிரியான கருத்தோட்டமும், இம்மாதிரியான மசோதாவும் வரவேற்கத் தகுந்தவை என்பதை ஒத்துக் கொள்கிறேன். எனவே நிச்சயமாக வரவேற்கப்படவேண்டும். ஜாதிகளுக்கிடையே திருமணங்கள், சுவீகாரங்கள், பரஸ்பர குடும்ப உறவுகள் வளர்வதற்கு வாய்ப்புகள் இருக்குமானால் அதை யாரும் ஆட்சேபிக்க வேண்டிய தில்லை என்பதே என் கருத்து. ஆனால் இதைப் பொறுத்தவரையில் எனக்குள்ள தயக்கத்தை இந்த அவை முன் வைக்க விரும்புகிறேன். இது மரபுரிமை பற்றியது. சந்தேகத்துக்கிடமின்றி பிதுரார்ஜித சொத்துக் களை மரபுரிமையாக அடையும் பழக்கம் பல இடங்களில் நடைமுறை யில் உள்ளது. இந்து சமுதாயத்தில் சில இடங்களில் இவ்வழக்கம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. அதன் பொதுவான கட்டமைப்பைப் பரிசீலிக்கையில், இறுதியில் இது ஒரு நல்ல நடைமுறையாக இருக்காது என்பதே என் கருத்தாகும். மகள்களுடைய உரிமைகளுக்குக் கட்டுப்பாடு விதிக்க வேண்டும், பெண்களுக்கு சமஉரிமை அளிக்கக் கூடாது, அவர்களை வேறு விதத்தில் நடத்த வேண்டும் என்ற விருப் பத்தின் அடிப்படையில் உருவானதல்ல என் கருத்து. இந்த மாதிரி எந்த நோக்கமும் எனக்கு இல்லை என்று வலியுறுத்திச் சொல் கிறேன். இன்று நாம் வாழ்ந்து கொண்டிருக்கும் இதுகாறும் நாம் பின்பற்றி வரும் இந்தச் சமுதாயத்தின் பொதுவான கட்டமைப்புக்கு உகந்த முறையில் நடைமுறைக்கு சாத்தியமான வகையில் இந்த விருப்பம் செயல்படுத்தப்படுமா என்பதே என் ஐயப்பாடு. உதா ரணமாக வாரிசுரிமை பற்றி ஓரிரு வார்த்தைகள் கூற விரும்புகிறேன். இப்பிரிவில் தான் மகளுக்கு சம பங்கு ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. அவர்களுக்கு அதிகப் பங்களித்தால்கூட எனக்கு ஆட்சேபம் இல்லை. எதிர்காலத்தில் இம்மாதிரிப் பிரச்சினை வரும்போது எழக்கூடிய இடர்பாடுகள் குறித்து சில விஷயங்களை இந்த அவைமுன் வைக்க விரும்புகிறேன். தற்போது இந்து சமுதாயத்தில் வேறு யாருக்கும் இல்லாத அந்தஸ்து பெண்களுக்கு உள்ளது. உணர்வுபூர்வமாகவோ அல்லது அவ்வாறின்றியோ சமூக ஒழுங்கு முறைகளை மோசமான நிலைமைக்கு மாற்றிவிட்டோம். அதற்குப் பரிகாரமாக, அதை ஈடு செய்யும் வகையில் இம்மசோதாவைக் கொண்டு வந்துள்ளோம். நிச்சயமாக இது நம் துரதிர்ஷ்டந்தான். இருப்பினும், சீர்திருத்தத் திற்கு நிறைய வாய்ப்புகள் உள்ளன என்று உறுதியாகக் கூறுவேன். இந்து மதத்தைச் சேர்ந்த எந்தத் தகப்பனாரும் தன் மகளை பாரபட்ச

மாக நடத்துவதை விரும்ப மாட்டார். மாறாக அவளுக்கு அதிகமாகக் கொடுப்பதையே அவர் விரும்புவார்.

பாபு ராம்நாராயண் சிங் (பீகார்: பொது) : பெருமளவிற்கு இது முற்றிலும் சரிதான்.

திரு. ராம் சகாய் : தன்னைவிட அதிக வசதியுள்ள வீட்டில் தான் தன் மகளை மணம் செய்து கொடுக்க தகப்பனார் விரும்பு கிறார். தகப்பனார் மட்டுமல்ல, ஓர் இந்து சகோதரன்கூட தன் சகோதரி வசதிமிக்க குடும்பத்தில் வாழ்க்கைப்பட வேண்டும் என்று நினைக்கிறான் என்பதை உறுதியாகக் கூறுகிறேன். ஆயிரத்தில் அல்லது லட்சத்தில் ஒன்று இதற்கு விதிவிலக்காக இருக்கலாம். இந்த மாதிரியான நேர்வுகள் இல்லையென்றே நான் நினைக்கிறேன். வாரிசுரிமை சம்பந்தமாக மகன்களுக்கும் மகள்களுக்குமிடையே யான சமத்துவத்தை நாம் எதிர்கொள்ள வேண்டிய அவசியம் என்ன என்பதை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. நமது மத்திய தர வகுப்பு மக்களிடையே சொத்துப் பிரிவினை சம்பந்தமாக ஏற்படும் தகராறுகளினால், நான் அவ்வாறு கூறுகிறேன். ஒரு மகள் தன் கணவர் குடும்பத்தில் தன் பங்கைப் பெறுகிறாள். தகப்பனாரின் சொத்திலும் பங்கு வேண்டும் என்று அவள் எண்ணலாமா? நிச்சயமாக இது நமது சமூகக் கட்டமைப்பைச் சீர்குலைக்கும் என்பதே என் கருத்து. இந்த அடிப்படையில்தான் இந்தக் கருத்துகளை அவைமுன் வைக்க முன்வந்துள்ளேன். சகோதரன் மற்றும் சகோதரிக்கிடையேயான பாசப்பிணைப்பு, இந்த நடவடிக்கைகளினால் ஓரளவு பாதிக்கப்படும் என்பதே என் கருத்து. சொத்துப் பிரிவினையில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த சகோதரர்களிடையே தகராறு ஏற்பட வாய்ப்புகள் உள்ள போது, வேறு குடும்பத்தில் வாழ்ந்து வரும் மகளுடன் பயங்கரத் தகராறுகள் உருவாகலாம். தங்களுக்கிடையே பாசத்துடன் வாழும் சகோதரர்களுக்கிடையே இம்மாதிரி தகராறுகள் எழக்கூடிய நிலை யில், மகள் குடிபுகுந்து வாழும் வீட்டில் சகோதர பாசத்தை வளர்க்க யாரும் இருக்க மாட்டார்கள். மாறாக சகோதரர்களுடன் தகராறு செய்ய, வழக்குத் தொடுக்கத் தூண்டி விடும் நபர்களே இருப்பார்கள். நமது சமூகக் கட்டுக் கோப்பை சீர்குலைக்கச் செய்யும் நடவடிக்கை களை நாம் ஏன் உணர்வுபூர்வமாக மேற்கொள்ள வேண்டும் என்பதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை.

அதேபோன்று இந்து கூட்டுக் குடும்பத்தைக் குறித்து சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். கூட்டுறவு சங்கங்களை நிறுவ

நாம் தீர்மானித்துள்ளோம். நாட்டில் இந்தக் கூட்டுறவுக் கொள்கையைப் பரப்ப மக்களின் ஒத்துழைப்பைக் கோருகிறோம். கூட்டுறவுக் கொள்கை அடிப்படையில் செயல்படும் கூட்டுக் குடும்ப முறையை மட்டும் ஒழிக்க நாம் ஏன் இவ்வளவு துடிதுடிப்புடன் இருக்கிறோம்? இந்த இரு விஷயங்களையும் கணக்கிலெடுத்துக் கொண்டு, இரண்டையும் திருப்தி செய்யக்கூடிய ஒரு வழிமுறையைக் காண வேண்டும். மக்களின் சில பகுதியினரிடையே காணப்படும் பதட்டத்திற்கும், இந்த மசோதாவை சர்ச்சைக்குரியதாக்கியிருப்பதற்கும் காரணமாக இருப்பது முக்கியமாக வாரிசுரிமை பற்றிய விதிமுறைதான். வாரிசுரிமை பற்றிய பிரச்சினைக்கு ஒரு முடிவுக்கு வந்தால் இந்துத் தொகுப்புச் சட்டத்தை சரியான முறையில் பரிசீலித்து ஒருமனதுடன் நிறைவேற்றலாம். அவையின் நேரத்தை மேலும் எடுத்துக்கொள்ள விரும்பவில்லை. தகப்பனாரின் சொத்தில் மகளுக்குப் பங்கு கிடைக்கக் கூடாது என்பதல்ல, அது நமது சமூக அமைப்பை எந்த விதத்திலும் சீர்கெடுத்து விடக்கூடாது என்ற கருத்தை கணக்கிலெடுத்துக் கொண்டு பொறுக்குக் குழுவுக்கு நியமிக்கப்படும் உறுப்பினர்கள் இதைப் பரிசீலிக்க வேண்டும்.

மேலும் சர்ச்சைக்குரிய ஒரு விஷயம் உள்ளதாக எனக்குத் தோன்றுகிறது. ஒருவேளை நான் கூறுவது தவறாகக்கூட இருக்கலாம். ஆனால் நான் புரிந்துகொண்டவரையில், ஒரு மகன் மற்றும் மகளின் தனிப்பட்ட நிலையைப் பார்த்தால், இந்த மசோதாவின்படி மகனுக்கு தகப்பனாரின் சொத்தில் பங்கு கிடைக்கிறது. ஆனால் ஒரு மகள் தனது மாமனாரின் சொத்திலும்கூட பங்கு பெறுகிறாள். இந்த முரண்பாட்டிற்கான காரணம் என்னவென்று எனக்குப் புரியவில்லை. இந்த விதிமுறை ஏன் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது என்பதை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. இந்த விவாதத்திற்குப் பதிலளிக்கையில் மாண்புமிகு சட்ட அமைச்சர் இந்த விதிமுறை ஏன் அறிமுகப் படுத்தப்பட்டுள்ளது என்பதை விளக்குவார் என்று நம்புகிறேன்.

இந்த அவையின் நேரத்தை மேலும் எடுத்துக் கொள்ளாமல், நான் பணிவுடன் கூறவேண்டியது இவ்வளவுதான்.

திரு. கிருஷ்ண சந்திர சர்மா (உ.பி: பொது) : ஐயா, விவாதத்தை மிகவும் கவனமாகச் செவிமடுத்தேன். பெரியவர்கள் பண்டிட் தாகூர் தாஸ் பர்கவா மற்றும் பண்டிட் லட்சுமி காந்த மைத்ரா கூறிய

★ அ.நி.வி. (சட்டமன்ற) டி., தொகுதி VI, பிரிவு II 12 டிசம்பர் 1949 பக். 499 - 502.

கருத்துகளைப் பெரிதும் மதிக்கிறேன். நமது கலாசாரத்தின் மற்றும் நாகரீகத்தின் செயல்பாடுகளில் இந்து தொகுப்புச் சட்டம் குறுக்கிடு கிறது என்றும், இது சட்டமாக நிறைவேற்றப்பட்டால் நமது மத அமைப்புகளுக்கு மற்றும் கலாசாரப் பின்னணிக்கு தேவையற்ற, முறையற்ற குறுக்கீடு ஏற்படும் என்பதுடன் சமுதாய கட்டமைப்பு சீர்குலைந்துவிடும் என்ற அவர்களது குற்றச்சாட்டிற்கு ஆதாரம் தேடினேன். துரதிர்ஷ்டவசமாக எந்தவித ஆதாரமும் கிட்டவில்லை. எந்த விதத்திலும், எந்த விஷயத்திலும், நம்மடைய மத நடவடிக்கை களில் குறுக்கிடும் எதுவும் இந்தச் சட்டத்தொகுப்பில் இல்லை. இந்தச் சட்டத்தொகுப்பு சரியானதா, இல்லையா என்பது வேறு விஷயம். கொண்டுவரப்பட்டுள்ள மசோதாவுக்கும் இந்து மதத்திற்கும் எந்தச் சம்பந்தமுமில்லை. எனவே அது நிறைவேற்றப்பட்டால் அது இல்லாமல், இந்து மதம் எவ்வளவு நன்றாக அல்லது மோசமாக இருந்ததோ அப்படியேதான் தொடர்ந்து இருக்கும்.

கலாசாரந்தான் இரண்டாவது பிரச்சினை. ஒரு வீடு ஏ அல்லது பி-க்கு சொந்தமா என்பதே கேள்வி. அது ராம்குமாருக்கோ அல்லது கிருஷ்ணகுமாருக்கோ சொந்தமாக இருக்கலாம். அத்துடன் விமல் குமாரியின் பெயரையும் இணைத்துக் கொள்வ தால் இந்துக் கலாசாரத்திற்கு எந்த பாதிப்பும் ஏற்படாது. என்னைக் குறுக்கீடு செய்வதற்கு முன்பு கலாசாரத்தின் அடிப்படை என்ன என்பதை நண்பர்கள் புரிந்து கொள்ளவேண்டும். சமுதாயத் தின் முன்னேற்றத்திற்கும், பரிணாம வளர்ச்சிக்கும் உறுதுணையாகச் செயல்படாத கலாசாரம் கலாசாரமல்ல. கலாசாரம் தேக்க நிலையி லிருந்தால் அது நீண்டகாலம் தொடர முடியாது. இந்து கலாசாரம் தேக்க நிலையிலிருந்தால், இவ்வளவு நீண்டகாலம் நிலைத்து நிற்க முடியாது. பரிணாம வளர்ச்சி தொடர்பான செயல்பாடுகளில் கலாசாரத்துக்கு தொடர்பு இருக்க வேண்டும். பரிணாம வளர்ச்சி யடைந்துவரும் சமுதாயத்துடன் ஏதாவது ஒரு வகையில் தொடர்பு இருக்க வேண்டும். கலாசாரத்திற்கு ஆபத்து என்று கூக்குரலிடு வதற்கு முன்பு இதைப் புரிந்து கொள்ள வேண்டும். கலாசாரம், மதம், மற்றும் இன்றைய இந்து சமுதாயம் அல்லது இந்துச் சட்டம், ஏன் இந்து மதம் கூட வேத காலத்தில் இருந்தது போன்று இன்றில்லை. கிரேக்கர்கள் இங்கு வந்தார்கள்; ரோமானியர்கள் வந்தார்கள். இந்த ஊடுறுவல்களுக்குப் பிறகும் நாம் எந்தவித மாற்றமுமின்றி இருக் கிறோம் என்பதை நம்ப வேண்டும் என்று நீங்கள் விரும்புகிறீர் களா? நமக்கு இதயமில்லையா, மனமில்லையா, கிரகித்துணரும் சக்தியில்லையா? பிறவற்றை ஏற்றுக் கொள்ளும் சக்தியும், பரிணாம

மாலை 4 மணி

வளர்ச்சிக்கான சாத்தியமும் இருந்ததால்தான் நமது பெருமை நிலைத்து நிற்கிறது. பிறவற்றை ஏற்றுக் கொள்ளும் சக்தியில்லை யென்றால் இவ்வளவு காலம் நாம் நிலைத்து நின்றிருக்க முடியாது. இதுவே என் பதில். எனவே பகுத்தறிவு பூர்வமான பாதையைத் தேர்ந் தெடுப்போம். விஷயங்களை அறிவு பூர்வமாக, அறிவியல் பூர்வமாக நோக்குவோம். ஸ்மிருதியில் கொடுக்கப்பட்டுள்ள இந்துச் சட்டம், ஸ்மிருதியை உருவாக்கியவர்களின் காலத்திற்கு முன்பு வழக்கத்தி லிருந்த பழக்கவழக்கங்கள் மற்றும் நியதிகளின் தொகுப்புதான். பல வகையிலான ஸ்மிருதிகள் உள்ளன. பல விஷயங்களில் மாறுபட்ட கருத்துகளை கொண்டிருப்பதுடன், ஒரே விஷயத்தைக் குறித்து அதை எழுதியவர்கள் மாறுபட்ட கருத்துகளைத் தெரிவித்துள்ளனர். அவர்கள் ஒருவருக்கொருவர் மாறுபட்ட கருத்துகளைக் கொடுத்தாலும் அந்த விளக்கங்கள் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும் என்று பிரிவி கவுன்சில் கூறியுள்ளது. ஏனெனில் ஸ்மிருதியில் அவை கொடுக்கப் பட்டதனால் அல்ல, அது உண்மையினை அடிப்படையில் இருப் பதனால் அல்ல, அது வேதத்திலிருந்து பெறப்பட்டதால் அல்ல, அது ஸ்மிருதியில் பதிவு செய்யப்பட்டுள்ளதால், அந்த காலகட்டத்திற்கு முன்பு நிலவி வந்த பழக்க வழக்கங்களாகத்தான் அவை இருந் திருக்க முடியும் என்பதால்தான். இந்துச் சட்டத்தின் கண்ணோட் டத்தின்படி எழுதப்பட்ட சட்டத்தை, வாசகத்தை நடைமுறை வழக்கம் ரத்து செய்துவிடுகிறது. இது ஒரு மத சம்பந்தமான பிரச்சினையா, கலாசார சம்பந்தமான பிரச்சினையா, ராம்குமார் மற்றும் கிருஷ்ண குமாருடன் விமலா என்ற பெயரையும் கொள்வதால் இந்து சமுதாயம் கீழே விழுந்து நொறுங்கிவிடுமா என்று இந்தக் கண்ணோட்டத் தில் பாருங்கள். எனவே இந்தப் பிரச்சினையில் மதத்தை இழுக் காதீர்கள். கலாசாரத்தையும் இழுக்காதீர்கள். வேறு விஷயங்களையும் இழுத்துக்கொண்டு இந்து சமுதாயம் சிதறிவிடும் என்று கூறாதீர் கள். இந்தச் சட்டத்தையோ அல்லது அந்தச் சட்டத்தையோ நிறை வேற்றுவதன் மூலம் இந்து சமுதாயம் விழுந்துவிடும் அளவுக்கு அவ்வளவு பலவீனமாக இருந்ததில்லை; இந்து கலாசாரமும் அவ்வளவு பலவீனமாக இருந்ததில்லை. இதையும் மீறிய பலம் அவற்றுக்குள்ளது.

மேலும், கடவுளிடமிருந்து வந்தவர்கள் நாம் என்று நாம் மட்டும் கூறிக் கொள்ளவில்லை. புகழ் பெற்ற ஆறு நாகரிகங்கள் உள்ளன. ஒவ்வொரு நாகரிகமும் கடவுளிடமிருந்து வந்ததாக கூறு கிறது. முஸ்லீம்கள் அவ்வாறு கூறுகிறார்கள்; கிருஸ்தவர்களும் அவ்வாறே கூறுகிறார்கள்; 'நான் கடவுளின் புதல்வன்' என்று

ஜப்பானியர் கூறுகிறார்கள். 1559ல் மூன்றாம் ஜார்ஜுக்கு சீனச் சக்கரவர்த்தி எழுதிய கடிதத்தில் சீனக் குடியரசு கடவுளிடமிருந்து பெறப்பட்டது, ஆங்கில வர்த்தகத்திற்கும் குடியரசுக்கும் எவ்வித சம்பந்தமுமில்லை, வெளிநாட்டினர்களால் அது கறைபட்டு விடக் கூடாது'' என்று எழுதியிருந்தார். நாற்பத்தொன்பது வருடங்களுக்குப் பிறகு ஆங்கிலேயர்கள் சீனாவுடன் போர்தொடுத்தார்கள். கஞ்சா வியாபாரி ஏற்றுக் கொள்ளப்பட்டார். அப்பொழுது கடவுளின் புதல்வரின் நாடு எங்கே போயிற்று? ஆங்கிலேயர்களின் பீரங்கி வாயிலின் முன் கடவுளின் புதல்வர் எங்கே போய்விட்டார்! ஆங்கிலேயர்கள் கூட இப்படித்தான் கூறிக்கொள்கிறார்கள். இந்தியா மற்றும் ஆப்ரிக்காவுக்குச் சென்று அங்குள்ள மக்களை நாகரிகப்படுத்த வேண்டிய சுமை வெள்ளையர்களுக்குள்ளது; அது அவனுடைய விதியாக உள்ளது என்கிறார்கள். இந்த மாதிரியான கூற்றுகள் எல்லாம் பொய்யானவை. நாங்கள் கூறுவது மட்டுமே உண்மையானது என்று கூறுவது எவ்வளவு பொய்யானதோ, அது போன்றதுதான் இந்தக் கூற்றுகளும். நான் ஓர் இந்து, நான் ஒரு பிராமணன். ஓர் இந்துவாக, பிராமணனாக இருப்பதில் பெருமை கொள்கிறேன். ஆனால் உண்மை என்பது என் ஏகபோக உரிமை என்றோ என்னுடைய மூதாதையர்கள் மட்டுமே உண்மையின் பாதுகாவலர்கள், மற்றவர் எவரும் அல்ல என்றோ கூற நான் விரும்பவில்லை. எனது மூதாதையர்களுக்கு மட்டும் உண்மையை அளித்துவிட்டு கடவுள் மற்றவர்களுக்கு அதை அளிக்கவில்லையென்றால் அது நியாயமற்றது. இந்த உலகில் மற்ற மனிதர்களைப் படைத்தது முட்டாள்தனமும் ஆகும். ஓர் இந்து சிறுவன் பெரியவர்களிடம் கேட்டுக் கொள்வது போல், நான் மிகப் பணிவன்புடன் கேட்டுக் கொள்வதெல்லாம், சமயத்தைக் கொண்டு வராதீர்கள், கலாசாரத்தை எடுத்துக் கொள்ளாதீர்கள். இந்து சமுதாயம் சீரழிந்துவிடும் என்று சொல்லாதீர்கள் ஓர் அறிவு பூர்வமான, அறிவியல் பூர்வமான கண்ணோட்டத்தில், பொது அறிவின் அடிப்படையில் நவீன உலகில் அமலிலுள்ள சட்டத்தின் அடிப்படையில் அதை ஏற்றுக் கொள்ளுங்கள். ஒரு நாட்டின் பொருளாதார மற்றும் சமூக நிலைமைகளின் விளைவுகள் மற்றும் அந்த நிலைமைகளுக்கு தீர்வு காணும் அறிவாற்றலின் வெளிப்பாடுதான் அந்நாட்டின் சட்டம் என்பது.

இப்பொழுது நான் அடுத்த விஷயத்துக்கு வருகிறேன். உலகத்திலிருந்து நீண்டகாலமாக தனிமைப்பட்டு இருந்துவிட்டோம். நான் ஆறு நாகரீக சமுதாயங்களைப் பற்றிக் கூறினேன். சீன அரசு, ஜப்பானின் சக்கரவர்த்தி, ஆங்கில அரசர், ரஷ்யாவின் ஜார், இந்தியாவின்

பாபர் ஆகிய அனைவரும் கடவுளிடமிருந்து வந்தவர்கள் என்று கூறிக்கொண்டனர், ஏனெனில்..........

பண்டிட் லட்சுமி காந்த மைத்ரா: இந்து தொகுப்பு சட்டத்தின் எந்தப் பிரிவை மதிப்பிற்குரிய நண்பர் குறிப்பிடுகிறார்?

திரு. கிருஷ்ண சந்திர சர்மா: உங்கள் கேள்விக்கு வருகிறேன். சரி, அவர்கள் எல்லோரும் தாங்களே மிக உயர்ந்தவர்கள் என்றும், மிகவும் சக்தி வாய்ந்தவர்கள் என்றும் கூறிக் கொண்டிருந்தார்கள் என்பதைக் குறிப்பிட்டேன். ஏனெனில் அவர்கள் மற்றவர்களைப் பற்றி புரியாமலிருந்தார்கள்; ஏனையோர்களைப் பற்றித் தெரியாமல் இருந்தார்கள். எனவே அவர்கள் தங்கள் மதத்தை மிகச் சிறந்த மதம் என்றனர். ஆனால் இப்பொழுது ஆகாய விமானங்கள், கப்பல் கள், இலக்கியங்கள், அச்சகங்கள், வெளியீடுகள் மூலம் இந்த உலகின் எல்லா மக்களுடனுமான தொடர்பு பெருகி விட்டது. இதர மக்களை அறிந்து கொள்வதுடன் புரிந்து கொள்ளவும் செய்கிறீர்கள். உங்கள் மீது அவர்களின் தாக்கம் ஏற்படுகிறது. உங்கள் குழந்தையின் மேசை யைப் பார்த்தால் அங்கே பெர்னார்ட்ஷா மற்றும் ஷேக்ஸ்பியரின் நூல்களைக் காண்கிறீர்கள். அங்கே கங்காலெஹ்ரியைக் காண முடியாது, அவனுடைய மேசையில் பெர்னார்ட்ஷா, ஷேக்ஸ்பியர் மற்றும் பியர்ல் பக் இருப்பதால், அந்தக் குழந்தை இந்துவல்ல என நீங்கள் முடிவு செய்வதில்லை. எல்லாச் சிந்தனை ஓட்டங்களும், நடவடிக்கைகளும் உலகின் எல்லா நாடுகளையும் பாதிக்கவும், தாக்கத்தை ஏற்படுத்தவும் செய்கின்றன. மற்றவர்களின் சிந்தனை களால் பாதிக்கப்படாத எந்தவிதச் சட்டத்தையும் நீங்கள் பார்க்க முடியாது. அது சக்திமிக்கதாக, வலுவானதாக இருக்கும்போது மக்களின் நல்ல எதிர்காலத்திற்கு அது துணை நிற்கும். பிற உலகுடன் சம்பந்தப்படாது தனிமைப்பட்டிருந்தால் அது வலிவிழந்திருக்கும். அறிவியல் அடிப்படையில் நமக்குச் சட்டங்கள் அவசியம். ஒரு காலத் தில் தவறான கண்ணோட்டங்கள், பல்வேறு பழக்கவழக்கங்கள் வேறு பல விஷயங்கள் இருந்திருக்கலாம். ஆனால் இன்று மதம் என்பது ஓர் அறிவியல் பூர்வமான அறிவாகும். நீங்கள் நம்புவதை யெல்லாம் மதம் என்று கூறிவிட முடியாது. அதை யாரும் ஏற்றுக் கொள்ளப் போவதில்லை. மானுட நிலையிலிருந்து, பரந்த இந்த மானுட நிலையிலிருந்து தெய்வீக நிலைக்கு, மானுட நிலையிலிருந்து இறைநிலைக்கு எது மானுட வர்க்கத்தை இட்டுச் செல்லுகிறதோ அதுதான் மதமாகும். நீங்கள் தப்பித்துக் கொள்ள முடியாத ஏற்றுக் கொள்ளப்பட்ட சில கோட்பாடுகள் உள்ளன. எனவே இந்த இருபதாம்

நூற்றாண்டில் எல்லாமே மதமாகி விடவோ, கலாசாரமாகிவிடவோ, அல்லது சமுதாயத்தின் அடித்தளமாகவோ ஆகிவிட முடியாது. சமுதாயத்தின் அடித்தளமாக, கலாசாரத்தின் அடிப்படையாக, மதத்தின் அடிப்படையாக உலகின் பல மகான்களால் மத போதகர்களால், சட்ட நிபுணர்களால், உலகம் முழுவதும் ஏற்றுக் கொள்ளப்பட்ட சில கோட்பாடுகள் உள்ளன. நீங்கள் பேசுவது மற்றும் நம்புவது எல்லாம் மதமோ அல்லது கலாசாரமோ அல்லது சமுதாயத்தின் அடித்தளமோ ஆகாது.

நான் எதைக் குறிப்பிடுகிறேன் என என் நண்பர் கேட்டார். முல்லாவின் இந்துச் சட்டத்தில் முதல் பக்கத்தில் ஜாதியைப் பற்றி விளக்கப்பட்டுள்ளது. இந்து சமுதாயத்தில் நான்கு ஜாதிகள் இருப்பதாக அது கூறுகிறது. காயஸ்தர்கள் சூத்திரர்களா என்பதை இரண்டாவது பத்தி விளக்குகிறது. மராத்தியர்கள் சூத்திரர்களா அல்லது ராஜபுத்திரர்களா என்பதை மூன்றாவது பத்தி விளக்குகிறது. நான் மிகவும் பணிவன்புடன் கேட்கிறேன், இதில் ஏதாவது பண்பாடோ, மதமோ இருக்கிறதா? உலகு தழுவிய அன்பிலிருந்து தெய்வீகம் பேரானந்தத்திற்கு இட்டு செல்வதுதான் மதம். ஒளியையும் இனிமையையும் தருவதுதான் கலாசாரமாகும். மக்களை ஜாதிகளாகப் பிரித்து வைப்பது பண்பாடல்ல. மதத்திற்கும் அதற்கும் எந்த சம்பந்தமும் கிடையாது.

மதிப்பிற்குரிய ஓர் உறுப்பினர் : விவசாயம் மட்டுமே.

திரு. கிருஷ்ண சந்திர சர்மா: விவசாயத்தினால் நீங்கள் உணவு பெறுகிறீர்கள். உங்கள் கருத்தோட்டம் உங்களைச் சீர்குலைத்து விடும்.

இப்பொழுது, இந்து சட்டத்தின் தோற்றுவாயை உங்களுக்கு விளக்குகிறேன். எனது மதிப்பிற்குரிய நண்பர் ஒரு வழக்குரைஞர். எனவே இதை அவர் பாராட்டுவார் என நினைக்கிறேன். ஸ்ருதிகள், ஸ்மிருதிகள், மற்றும் சட்டத்தின் வலிமைபெற்ற நடைமுறைகள், விளக்க உரைகள், பிரிவி கவுன்சில் மற்றும் உயர்நீதிமன்றத்தின் தீர்ப்புகளே இந்து சட்டத்தின் ஆதாரங்கள் ஆகும்.

ஸ்மிருதிகளைப் பொறுத்தவரையில் அவைகளைப் பற்றி ஒன்றும் தெரியவில்லை. பண்டைக் கால அரசியலில் மிகப்பெரும் வல்லுநரான ஜெயஸ்வால் கூறியதை உங்களுக்கு எடுத்துக்கூற விரும்பு

கிறேன். ஸ்மிருதிகள் எழுதப்படுவதற்கு முன்பு நிலவிவந்த பழக்க வழக்கங்களை ஒழுங்கு படுத்தி தொகுத்து வழங்கப்பட்டவைகளே ஸ்மிருதிகள் ஆகும் என்பதே அவர் கருத்து. ஸ்மிருதிகள் ஒரே விஷயத்தில் மாறுபட்ட கருத்துகளைத் தெரிவிக்கின்றன. இவைகளுக்கு விளக்க உரை எழுதியவர்கள் ஏற்றுக் கொள்ளப்படுகிறார்கள். சட்டம் என்ன என்பதை அவர்கள் எடுத்துரைத்ததாலல்ல, அக்காலத்தில் வழக்கத்திலிருந்த சில விஷயங்களை எடுத்துரைத்ததாலேயே அவர்கள் வல்லுனர்களாகக் கருதப்படுகிறார்கள். இந்துச் சட்டத்தைப் பொறுத்தவரையில் எழுதப்பட்ட சட்டத்தை நடைமுறை பழக்க வழக்கங்கள் ரத்து செய்து விடுகின்றன. பழக்க வழக்கங்களே ஏற்றுக் கொள்ளப்படுகின்றன. பிரிவி கவுன்சில் மற்றும் உயர்நீதிமன்றங்களின் தீர்ப்புவழி சட்டங்களைக் குறிப்பிட வேண்டும். தீர்ப்பு வழி சட்டங்கள் எவ்வாறு இயற்றப்பட்டன? 1868-ஆம் ஆண்டுவரை நிலைமை இதுதான். இந்து பண்டிட்களின் உதவியுடன் ஆங்கில நீதிபதிகள் இந்து சட்டத்தை நிர்வகித்து வந்தார்கள். பண்டிட்கள் நீதிமன்றங்களில் அதிகாரபூர்வ மத்தியஸ்தர்களாக செயல்படுவது 1868-ஆம் ஆண்டு நிறுத்தப்பட்டது. பண்டிட்களின் உதவியுடன் ஆங்கிலேயர்கள் அளித்த தீர்ப்புகள்தான் இந்தத் தீர்ப்பு வழிச் சட்டங்களாகும். ஆக்கிரமிப்பாளர் ஒருவர், படையெடுத்தவர் ஒருவர் நாட்டை ஆளும்போது எந்தத் தன்மானமுள்ள மனிதனும் அதுவும் படித்தவர் எவரும் அவனுடன் அமர்ந்து பணிபுரியமாட்டான். எனவே இந்த பண்டிட்கள் யாராக இருந்தாலும் அவர்கள் பண்பற்ற பிறவிகள் அவர்கள் இந்துக்களின் பிரதிநிதிகள் அல்ல. இந்துச் சட்டம் ஏதோ புனிதமானது என்பதால், அதை மாற்றி எழுத நீங்கள் விரும்பவில்லையா? அந்த இந்துச் சட்டந்தான் என்ன? நெறி பிறழ்ந்த பிறவிகளின் உதவியுடன் ஆங்கிலேயர்களின் முடிவுகள்தான் அவை. இதுதான் உங்கள் இந்துச் சட்டம். இதற்கு என்ன புனிதத் தன்மை உள்ளது? இதுதான் என் வாதம். தற்போதைய சட்டத்தை அதன் சாதக பாதகங்களை வைத்து முடிவு செய்யுங்கள். சட்டவியல் கோட்பாடுகளின் அடிப்படையில் இந்தத் தொகுப்புச் சட்டத்தைப் பற்றி முடிவு செய்யுங்கள். ஒரு சட்டம் தேவையானதா, சிறந்ததா என்பதை தீர்மானிக்கும் கொள்கைகளின் அடிப்படையில் இதை பரிசீலியுங்கள்.

இந்தத் தொகுப்புச் சட்டத்தைப் பொறுத்தவரை முதலாவதாக அது திருமணம் மற்றும் விவாகரத்தைப் பற்றி எடுத்துரைக்கிறது. கடந்த இரண்டு மூன்றாண்டுகளாக நிறைவேற்றப்பட்ட பல்வேறு சிறுசிறு சட்டங்களின் தொகுப்புத்தான் இது. சமயச் சடங்கு

களின் அடிப்படையில் நடைபெறும் திருமணம் மற்றும் பதிவுத் திருமணம் ஆகியவை உள்ளன. பல்வேறு ஜாதிகளில் மணம் செய்து கொள்ளும் இந்துக்களைப் பார்க்கிறோம். இந்து மதத்திற்கு அப்பால் செல்பவர்களும் உள்ளனர். அவர்கள் இந்துக்களாகவே இருக்கின் றனர். ஜாதியைவிட்டு விலக்கப்படவில்லை. எனவே எது நடைமுறை யிலுள்ளதோ, எது ஏற்கெனவே உண்மையாக உள்ளதோ அதையே சட்டமாக எடுத்துக் கொள்கிறோம். நீங்கள் எதையும் மாற்றுவதாக எனக்குத் தோன்றவில்லை. தீர்ப்புவழி பிரிந்துறைதல் மற்றும் மண உறவின் கலைப்பின் அடிப்படைகள் என்ன? தரப்புகளில் ஒன்று பாலினத் தன்மையற்றிருத்தல்; கணவன் ஒரு பெண்ணையோ ஆசை நாயகியையோ வைத்திருத்தல், மறுதரப்பு இந்து மதத்திலிருந்து விலகிவிடுதல், ஏதாவது ஒரு தரப்பு மனநிலை சரியாக இல்லா திருத்தல், ஒருதரப்பு குணப்படுத்த முடியாத தொழுநோயால் பாதிக்கப் பட்டிருத்தல் ஆகியவைகளாகும். இப்பொழுது நான் ஒரு எளிய கேள்வியைக் கேட்க விரும்புகிறேன். இந்த நிபந்தனைகளை **ஸ்ருதிகள்** மற்றும் **ஸ்மிருதி**களிலுள்ள எந்தச் சட்ட வாசகமாவது தடை செய்துள்ளதா? நான் மனு **ஸ்மிருதி**யைப் பார்த்துள்ளேன். இதற்கு மாறுபட்ட எதையும் அதில் காணோம். எனது மதிப்பிற்குரிய நண்பர் எதையாவது கண்டுபிடித்தால் திருத்தம் எதையாவது அவர்கள் கொண்டுவரலாம். நான் **ஸ்மிருதி**களுக்கு எதிரானவன் அல்ல. அதைக் குறித்து நான் பெருமை கொள்கிறேன். அதன் வாசகங்களை நான் படித்துள்ளேன். இதற்கு முரண்பாடாக அதில் எதுவும் இல்லை. நடப்பிலுள்ள சமூக நீதியின் கருத்துகளுக்கு இந்த நிபந்தனைகள் ஒத்திருக்குமானால், இதை ஏற்றுக் கொள்ள மறுப்பதற்கு காரணம் ஏதும் இல்லை. நீங்கள் பெண்களின் விரோதியா? உங்கள் தாயாருக்கும் மகளுக்கும் நீங்கள் எதிரியா? நம் தாயார் மதிப்பிற்குரியவர், மகளோ நமது வாழ்க்கையின் ஒரு பகுதி, நம் இரத்தம். அப்படித்தானே? இந்தச் சட்டம் இந்துஸ்தானையே குட்டிச் சுவராக்கிவிடும், இந்து சமுதாயத்தையே சுக்கல் சுக்கலாக நொறுக்கிவிடும் என்று ஏன் கூச்சல் போடுகிறீர்கள்? இந்த நிபந்தனைகளுக்கு எதிராகவோ முரண் பாடாகவோ மதத்திலோ, கலாசாரத்திலோ, இந்து சமுதாயத்தின் அடிப்படைகளிலோ எதுவும் கிடையாது.

தத்தெடுக்கும் விஷயத்தைப் பார்ப்போம்: நமது சமுதாயத்தின் இன்றைய பரிணாம வளர்ச்சியில் அதற்கு எந்த அவசியமுமில்லை என்பதுடன் அது அர்த்தமற்றது என்பதே என் சொந்தக் கருத்து. தத்தெடுத்தலுக்கு அடிப்படையாக மனுவின் வாசகம் ஒன்றுள்ளது.

அதாவது மகனில்லாத தகப்பனுக்கு சுவர்க்கத்தில் இடமில்லை என்பதாகும் அது. இந்த வாசகத்தின் அடிப்படை இதுதான்: அக்கால கட்டத்தில் ஆரியர்கள் பூர்வீகக் குடிகளுடனோ அல்லது ஆரியரல்லாதவர்களுடனோ மோத வேண்டியிருந்தது. எனவே, இயற்கையிலே தங்கள் எண்ணிக்கையை அதிகரிக்க அவர்கள் விரும்பினார்கள். அதை இப்படி வகுத்துக் கொண்டார்கள்: ஓர் இந்துவுக்கு மூன்று **ரீனாக்கள்** உள்ளன. கடவுளுக்கான **ரீன,** ரிஷிகளுக்கான **ரீன,** பிதிர்களுக்கான ரீன, அதாவது இனத்திற்கான **ரீன,** அதாவது அந்த இனத்தின் பரம்பரை அறுந்துவிடாமல் பாதுகாப்பது. மனு, ஸ்மிருதி எழுதிக் கொண்டிருந்தபோது இனத்தைப் பெருக்குவது அவசியமாக இருந்தது. ஆனால் இன்று அது அவசியமில்லை. இன்று குழந்தைகள் இல்லை என்பதல்ல பிரச்சினை. மாறாக உணவும் உடையும் இல்லை என்பதுதான் நம் பிரச்சினை. எண்ணிக்கையில் நாம் குறைவாக இருந்தால், பொருள்கள் நமக்கு அதிகமாகக் கிடைக்கும். எனவே இந்த நிலையில், தத்தெடுப்பதற்கான காரணம் எதுவும் எனக்குத் தெரியவில்லை. சுவர்க்கத்துக்கு செல்வதைப் பொறுத்தவரையில், தானங்கள் மற்றும் இதர விஷயங்கள் தரும சிந்தனையை சமூகத்தில் வளர்க்க வேண்டும் என்ற நோக்கத்துடன் ஏற்பட்டதுதான். இந்த உலகில் சமூக சேவைக்கும், தாராள மனப்பான்மைக்கும், தான தர்மத்திற்கும் வாய்ப்புகள் போதுமான அளவு இருக்குமளவுக்கு சமுதாயம் நன்கு வளர்ச்சி பெற்று ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது. இந்த உலகைவிட்டு அப்பால் சென்றுள்ள நமது மூதாதையர்களுக்கு ஏதாவது கொடுப்பது அவசியமற்றதாகிவிட்டது. இந்தப் பரந்த உலகில் பணி செய்து கிடப்பதே சிறந்தது. முன்பிருந்த அமைப்பிற்கு எந்த அர்த்தமும் இல்லை. தற்காலத்திய சமூகத்தில் அதற்கு பயன் ஏதும் இல்லை. மதச் சம்பந்தமற்ற நோக்கத்துடன் பார்த்தாலும், ஒரு பையனைத் தத்தெடுத்தால் அவன் ஒரு முதியவரையும் மூதாட்டியையும் காப்பாற்றுவான். அது பயனற்றது என்றே நினைக்கிறேன். இன்று நோயுற்றவர்களுக்கான இல்லங்களும், மருத்துவ நிலையங்களும் வேறு பல இல்லங்களும் செயல்பட்டு வருகின்றன. உங்களுக்குச் சொத்து எதுவும் இல்லையென்றால், ஒரு குழந்தையை தத்தெடுத்துக் கொள்வது பயனற்றது. நீங்கள் தத்தெடுத்து கொள்வதால் மட்டுமே யாரும் உங்களைக் கவனிக்கப் போவதில்லை. உங்களுக்குச் சொத்து இருந்தால், முதுமைப் பருவத்தில் உங்களைக் கவனித்துக் கொள்ள ஏராளமான அமைப்புகள் உள்ளன. சமுதாயம் இன்றிருக்கும் நிலையில் தத்தெடுத்தல் என்ற நடைமுறை அர்த்தமற்றது என்பதே என் வாதம்.

உரிய வயதை எட்டாதவர்கள் மற்றும் காப்பாளர்களைப் பொறுத்த வரையில் இந்துச் சட்டத்தில் உள்ளதிலிருந்து எந்த வேறுபாடும் இல்லை. வாரிசுரிமை சட்டத்தைப் பொறுத்தவரையில் அதைப்பற்றி அதிகம் கூறப்படவில்லை என்று வருத்தத்துடன் கூறிக் கொள்கிறேன். தற்போதைய வாரிசுரிமை சரியா தவறா என்பதை என்னால் உறுதியாகக் கூற முடியவில்லை. ஒரு விஷயத்தை நான் சொல்ல முடியும், மகனுடன் மகளையும் இணை வாரிசுதாரராக்குவது கொள்கைரீதியாகத் தவறானதல்ல. ஏனெனில் 1937-ஆம் ஆண்டு பெண்கள் சொத்துச் சட்டம் பிரிவு 3-ன் படி மகனுடன் தாயாரும் பங்கு பெறுகிறாள். அவ்வாறிருக்கும்போது சகோதரனுடன் சகோதரியும் பங்கு பெறுவதில் என்ன ஆட்சேபனை இருக்க முடியும்? மகனுடன் தாயார் வாரிசுரிமை பெற முடியுமானால், சகோதரனுடன் சகோதரியும் வாரிசுரிமைப் பெறக்கூடாது என்று கூறக் காரணம் ஏதும் இருப்பதாகத் தெரியவில்லை. மருமகன்கள் வந்து வீட்டில் தகராறுகளைக் கிளப்புவார்கள் என்று பண்டிட் பர்கவா ஆட்சேபனை எழுப்பினார். இரண்டு சகோதரர்கள் தகராறுகளைக் கிளப்ப முடியாதென்றால் மருமகன்கள் மட்டும் தகராறுகளை ஏன் கிளப்ப வேண்டும்? கானாட் பிளேசுக்கு சென்று பாருங்கள் மனைவிக்குப் பின்னே செல்லும் கணவன், அவளது மேலங்கியைச் சுமந்து செல்கிறான். பில்லுக்குரிய பணத்தைக் கட்டுவதுதான் அவனது தலையெழுத்தாக உள்ளது. எனவே மனைவி விரும்பாதபோது கணவன் என்ன தகராறைக் கிளப்ப முடியும்?

மதிப்பிற்குரிய ஓர் உறுப்பினர் : அது வட இந்தியாவில்தான்.

திரு. கிருஷ்ண சந்திர சர்மா: அதுதான் மனிதனின் பரிணாம வளர்ச்சி. மனித குலத்தின் பரிணாம வளர்ச்சி இவ்வாறுதான் உள்ளது. உங்களுடைய மீசை எங்கே போய்விட்டது? பெண் அணுக்கள் வளர்ச்சி பெற்று, பிறகு பிரிந்து சென்று, பெண்ணாக பரிணாம வளர்ச்சி பெற்றது என்பது சாதாரண உயிரியல் கொள்கையாகும். அவள் மிகவும் அழகாக, நளினமாக கவர்ச்சிகரமாக இருக்கிறாள். அதுதான் முன்னேற்றத்தின் பாதை, மேலும் சிறப்பான, அழகான வாழ்க்கைக்கு செல்வது, நீங்கள் வேறு விதமாக எண்ணினால், மனிதத்தன்மை குறைந்தவர்கள் நீங்கள் என்று நினைக்கிறேன்.

அடுத்து இந்து கூட்டுக் குடும்பத்திற்கு வருவோம். இதைக் குறித்து பல வல்லுநர்களின் கருத்துகளைப் பார்த்தேன். சமுதாயம் மேய்ச்சல் நிலையில் இருந்தபோது இந்த இந்துப் பழக்கம் வழக்கத்

திற்கு வந்ததாக எல்லா வல்லுநர்களும் கூறுகின்றனர். தற்போது இந்து கூட்டுக் குடும்ப நடைமுறையை மாற்றம் செய்ய பல சட்டங்கள் இயற்றப்பட்டுள்ளன. அதிக வர்த்தகமும், வியாபாரமும் இல்லாத காலகட்டத்தில் இது தோன்றியது. ஒரு விவசாயி ஒரு பசுவை 100/- ரூபாய் மதிப்புள்ள பொருளாக மதிக்க மாட்டான். வாழ்க்கையில் அவனோடு சம்பந்தப்பட்ட ஓர் உயிருள்ள பொருளாக, புனிதமான ஒன்றாக அவன் எண்ணுவான். எனவே ஒரு பசுவை அவன் பசுவாகவே எண்ணினான். அவன் மகன் வீட்டைவிட்டுப் பிரிந்து சென்றால் மகனிடமிருந்து பணம் வசூலிப்பதில்லை. ஏனெனில் பசு புனிதமானது. இவ்வாறுதான் பசுவைத் தாய் பசுவாகக் கருதுகிறோம்.

பண்டிட் லட்சுமி காந்த மைத்ரா: ஏதாவது தகப்பன் பசு உள்ளதா?

திரு. கிருஷ்ண சந்திர சர்மா: இப்பொழுது காலம் மாறி விட்டது. இந்து கூட்டு குடும்ப முறை காலத்திற்கு ஒவ்வாதது. ஆரிய சமுதாயம் இந்தியாவில் நிறுவப்பட்டபோது இந்தப் பழக்கங்கள் நடைமுறைக்கு வந்தன. அவை இப்பொழுது புனிதமானதென்றோ தவிர்க்க முடியாததென்றோ கருத வேண்டியதில்லை.

இரண்டாவது கருத்து என்னவென்றால் இது விவசாய நிலங்களுக்குப் பொருந்தாது. விவசாய நிலங்களைப் பொறுத்தவரையில், புதிய சட்டங்கள் அமலுக்கு வந்துள்ளன வாரிசுரிமை அந்தச் சட்டங்களின் அடிப்படையில் ஏற்படும்.

இந்த வார்த்தைகளுடன் இந்த மசோதாவை ஏற்றுக் கொள்ளும் படி அவையைக் கேட்டுக் கொள்கிறேன்.

***திரு. பி.எம். குப்தே** (பம்பாய் : பொது) : ஐயா, அவையின் முன் வைக்கப்பட்டுள்ள மசோதாவிற்கு நிபந்தனையுடன் கூடிய என் ஆதரவைத் தெரிவித்துக் கொள்கிறேன். இங்கு முன் வைக்கப் பட்டுள்ள பல்வேறு சீர்திருத்தங்களுக்கு நான் எதிரி என்பதல்ல அதன் பொருள். மாறாக சில மாற்றங்கள் மற்றும் திருத்தங்கள் செய்யப் படின் அவை சரியான திசையில் செல்கின்றன என்று கூறத் தயாராக உள்ளேன். சில மாற்றங்கள் அவசியமாக உள்ளன. ஓர் உதாரணத்தை எடுத்துக் காட்டுகிறேன். வழக்கத்திலுள்ள விவாகரத்து

★ அ.நி.வி. (சட்) பி , தொகுப்பு VI, பிரிவு II 12 டிசம்பர் 1949 பக்கம் 502-504.

நடைமுறைக்கு முற்றுப்புள்ளி வைத்திருப்பது பம்பாய் மாகாணத்தின் கிராமப்புற மக்களுக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தும். ஏனெனில் அங்குள்ள மக்களிடையே விவாகரத்து பரவலாக உள்ளது. பம்பாய் மாகாண விவாகரத்துச் சட்டம் கூட வழக்கமான விவாகரத்துக்கு விலக்களித்துள்ளது. எனவேதான் சில திருத்தங்கள் தேவை எனக் கூறுகிறேன். விவாகரத்து, திருமணம் பராமரிப்பு, மைனர்கள் குறித்த விதிகளை பரிசீலித்து சட்டமாக ஏற்றுக்கொள்ளலாம். அவை குறித்து எனக்கு எவ்வித கருத்து வேறுபாடும் இல்லை. ஆனால் பிரிவு 5, 6 மற்றும் 7ல் உள்ள விதிமுறைகளுக்கு நான் ஆதரவளிக்க முடியாது. அவை அடிப்படையான மாற்றங்களை ஏற்படுத்துகின்றன. உண்மையில் இந்து சமுதாயத்தின் வாரிசுரிமை சட்டம் முழுவதையும் மாற்றிவிடுகின்றன. இந்தப் பொதுவான மாற்றங்களுக்கு இது பொருத்தமான தருணமா என்ற கேள்வி எழுகிறது. கலவரம் குழப்பம், துயரம், பிரிவினை போன்ற அரசியல் மற்றும் பொருளாதாரச் சூழ்நிலையில் இருக்கும்போது நாட்டின் சமூக அமைப்பு முழு வதையும் பாதிக்கக்கூடிய புரட்சிகரமான மாற்றங்களை அறிமுகப் படுத்துவதன் மூலம் நிலைமையை மேலும் சிக்கலாக்க வேண்டுமா என்பதே கேள்வி. இந்த நெருக்கடியான காலகட்டத்தில் முதலில் செயல்படுத்த வேண்டிய விஷயங்களை முதலில் செயல்படுத்தப்பட வேண்டும் பிளவை ஏற்படுத்தும் விஷயங்களுக்கு இது தருணமா என்று நமது பிரதம மந்திரி நியாயமாக அடிக்கடி வலியுறுத்திக் கூறுவார்.

இதே அளவுகோலுடன் இந்த நடவடிக்கையையும் பார்த்தால் அதன் முடிவு என்ன? இவை அவ்வளவு அவசரமானவையா என்று கேட்கிறேன். ஏற்கெனவே மிகவும் கஷ்டமான நிலைமையை மேலும் அதிகச் சிக்கலாக்கும் ஆபத்தைச் சந்திக்க வேண்டுமா? பதில் தெளிவானதுதான். பல ஆண்டுகளாக இந்துச் சட்டம் வழக்கத்தில் இருந்து வருகிறது. அதை மறு பரிசீலனை செய்ய வேண்டுமென்றால் அல்லது அதை ஒழுங்குபடுத்தி தொகுக்க வேண்டுமென்றால் இந்தக் காலகட்டத்தில் அதற்கு அவ்வளவு அவசரமில்லை. ஏற்கெனவே நடைமுறையிலுள்ள சட்டத்தை முற்றிலுமாக மாற்றம் செய்வதற்கு இது பொருத்தமான சமயமல்ல. பொது மக்கள் கருத்திற்கு அப்பாற் பட்ட சமுதாயச் சட்டங்கள் தாமாகவே தோற்றுவிடுவதை நாம் அனுபவத்தில் கண்டுள்ளோம். இந்தப் பொது மக்கள் கருத்து என்பதில் எப்பொழுதும் குரல் எழுப்பும் நகர்ப்புற மக்களுடன் கிராமங்களி லுள்ள லட்சக்கணக்கான மக்களையும் சேர்த்துக் கூறுகிறேன். இந்தச்

சட்டம் காலத்திற்கு முந்தியதா என்பதையும் கவனிக்க வேண்டும். சாரதா சட்டம் இதில் நமக்கு நல்ல அனுபவம் எனலாம். கண்டிப்பான விதிமுறைகள் அதில் இருந்தும்கூட சட்டம் செயலிழந்து இருந்தது. இந்தச் சட்டத்தைப் பொறுத்தமட்டில் அது அமுலாக்கப்படாத சட்டமாக மட்டும் இருக்காது. V, VI, மற்றும் VIIம் பகுதிகளில் உள்ள விதிமுறைகள் விஷமத்தனமான விளைவுகளை ஏற்படுத்தும்.

சட்ட நுணுக்கங்களை நன்கு அறிந்துள்ள கிராமத்திலுள்ள குண்டர்கள் கிராமவாசிகளின் அறியாமையை தவறாகப் பயன் படுத்திக் கொண்டு அவர்களை ஏமாற்றி பல வழக்குகளில் இழுத்தடிக் கிறார்கள். ஏற்கெனவே இந்தத் தீமை பரவலாக உள்ளது. நீண்ட காலமாக வழக்கத்திலிருப்பதால் வாரிசுரிமைச் சட்டத்தை கிராம மக்கள் நன்கு தெரிந்து வைத்திருக்கின்றனர். கிராம மக்களின் அறியாமையைத் தவறாகப் பயன்படுத்திக் கொள்ள கிராமக் குண்டர் களுக்கு இப்பொழுது மேலும் ஓர் ஆதாரம் கிடைத்ததுதான் இதன் பலன். சீர்திருத்தங்களை நான் எதிர்க்காவிட்டாலும் இந்த மாதிரியான ஒரு நடவடிக்கை எடுக்க இது சரியான தருணமல்ல என்பதைக் கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

மக்களின் கல்வி அறிவு இன்றிருக்கும் நிலையில், இங்கு அல்லது மாகாணத் தலைநகர்களில் எந்த முடிவுகளை எடுத்தாலும், இம்மாதிரியான சட்டங்களைக் கிராமங்களுக்குக் கொண்டு செல்வது மிகக் கடினம். உணவை பெருக்கும் திட்டத்தின் அனுபவம் ஏற் கெனவே நமக்குள்ளது. ஏராளமான சலுகைகளையும் உதவிகளை யும் அளிக்க எங்கள் மாகாண அரசு முன் வந்துள்ளது. விவசாயி களுக்கு அதைப்பற்றி ஒன்றுமே தெரியாது. இந்தச் சட்டத்தின் முடிவு என்னவாக இருக்கும்? இந்த விஷயத்தில் கிராமக் குண்டர்கள் விவசாயிகளின் அறியாமையை தங்கள் சுய நலத்துக்கு பயன்படுத்திக் கொள்வர்.

ஒரு விஷயத்தைப் பொறுத்த வரையில் நகர்புற மக்களின் நிலைமையைவிட கிராமப்புற மக்களின் நிலைமை படுமோசமாக இருக்கும், இன்றைய அரசியல் அமைப்புச் சட்டத்தின்படி விவசாய நிலங்களை இந்தச் சட்டம் பாதிக்காது. இறந்துபோன விவசாயி ஒருவரின் சொத்துக்கு இரு வகை வாரிசுதாரர்கள் இருப்பார்கள் என்பதுதான் இதன் பொருளாகிறது. அவருடைய விவசாய நிலங்கள் ஒருவகை வாரிசுதாரர்களுக்குக் கிடைக்கும். அவருடைய சொத்தின் எஞ்சிய பகுதி மற்றொரு பிரிவு வாரிசுதாரர்களுக்குக் கிடைக்கும். இது

பயங்கர குழப்பத்தை ஏற்படுத்தும். ஒரே சீராக்க வேண்டும் என்ற நோக்குடன், இந்தச் சட்டத்தைக் கொண்டு வருகிறோம். ஆனால் சீரான தன்மை மற்றும் எளிமைக்கும் பதிலாக இந்தச் சட்டத்தால் சிக்கலையும் குழப்பத்தையுந்தான் சந்திக்க வேண்டியிருக்கும் இம் மாதிரியான குழப்பங்களைத் தவிர்க்க, புதிய அரசியல் அமைப்புச் சட்டம் அறிமுகம் ஆகும் வரையில் நாம் காத்திருக்கலாம். நாம் அவசரப்படத் தேவையில்லை. ஒன்றிரண்டு பொதுத் தேர்தல்கள் நடந்து முடிந்த பிறகு, இந்த மசோதாவை அறிமுகப்படுத்திப் பரிசீலிக்கலாம் என்பதே என் தனிப்பட்ட கருத்து. இந்தப் பொதுத் தேர்தல்கள் கிராமவாசிகளின் அரசியல் உணர்வை துரிதப்படுத்தும். சட்டமன்றப் பணிகளுடன் அவர்களுக்கு அதிகத் தொடர்பு ஏற்படும். தமக்கு அக்கறையுள்ள விஷயங்கள் சம்பந்தமான சட்டங்களை உருவாக்குவதில் அவர்கள் சிறப்பாக பங்கு கொள்ள முடியும். எனவே அந்த நேரம் வரும் வரையில், மக்களிடையே அரசியல் உணர்வு பெருகும் வரையில், இந்தச் சட்டத்தை மக்கள் மீது திணிக்காமல் இருக்க வேண்டும்.

இறுதியாக, நமது அதிகப்படியான உற்சாகம் நமது நோக்கத்தையே தோற்கடித்து விடக்கூடாது என்று இந்த மசோதாவின் பெரும் ஆதரவாளர்களான, உற்சாகமிகுந்த என் நண்பர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

***திரு. ஏ. கருணாகரமேனன்** (மெட்ராஸ்: பொது): ஐயா, இந்த மசோதாவை, அது இருக்கும் நிலையில் மனப்பூர்வமாக ஆதரிக்கிறேன். இந்து சமுதாயத்தை ஒன்றுபடுத்த இந்த மசோதா மிகவும் உதவும் என்பதில் சந்தேகமில்லை. பல்வேறு சட்ட வழிமுறைகளின் கதம்பமாக இன்றைய இந்துச் சட்டம் உள்ளது. இந்தியப் பிராந்தியம் முழுவதற்கும் பொதுவான உரிமை இயல் (சிவில் தொகுப்புச் சட்டத்தை உருவாக்குவதே நமது நோக்கம் என்று நமது அரசியல் அமைப்புச் சட்டத்தில் அறிவித்துள்ளோம். ஒரே சீரான, உரிமை இயல் சட்டத்தை உருவாக்குவதற்கு இந்த இந்து தொகுப்புச் சட்டம் பேருதவியாக இருக்கும். முகமதிய சட்டத்தையும் ஒழுங்குபடுத்தி தொகுக்க, முஸ்லீம் நண்பர்கள் ஒரு சட்டத்தைக் கொண்டு வருமாறு அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். கிருஸ்தவர்கள் ஒரு சட்டத்தை தொகுத்து வைத்துள்ளார்கள். இந்த மூன்று தொகுப்புச் சட்டங்களும் நடைமுறைக்கு வந்தபிறகு இந்த மூன்றிலுமுள்ள

★ அ.நி.வி. (சட்) பி, தொகுப்பு VI, பிரிவு II 12 டிசம்பர் 1949 பக்கம் 504-506.

ஒரேமாதிரியான விதிமுறைகளை ஒருங்கிணைத்து நமது அரசியல் அமைப்புச் சட்டத்தின் குறிக்கோளை நிறைவேற்றுவோம். பெண்களின் உரிமைகளை அதிகரிப்பதாலும், இந்த மசோதா வரவேற்கத் தக்கதாக உள்ளது.

ஆனால், சில குற்றச்சாட்டுகளைக் கூற வேண்டியுள்ளது. மக்கள் விரும்பும் அளவுக்கு இந்த மசோதா முற்போக்கானதாக இருக்கவில்லை. நாட்டின், என் பகுதியில் வழக்கத்திலிருந்து வரும் மருமக்கத்தாயச் சட்டத்தைவிட இது பல அம்சங்களில் பின்தங்கியுள்ளது. இப்பொழுதுள்ள நிலையிலிருந்து எங்களைக் கீழே இழுத்துச் சென்றுவிடக்கூடாது. இந்த மசோதாவுக்கு சில திருத்தங்கள் செய்ய முடியுமானால், இந்த மசோதாவை நாங்களும் உபயோகப்படுத்த முடியுமானால், எங்களைவிட மகிழ்ச்சியுள்ளவர்கள் வேறு யாரும் இருக்க முடியாது.

மசோதாவின் தற்போதுள்ள விதிகள் தந்தைவழிச் சமுதாயப் பார்வையில் உருவாக்கப்பட்டுள்ளது. தாய்வழி சமுதாயச் சட்ட விதிகளில் முற்போக்கானவைகளை, இந்த மசோதாவில் எங்கு சாத்தியமோ அங்கு சேர்த்துக் கொள்ளலாம். இந்தக் கருத்து கணக்கிலெடுத்துக் கொள்ளப்படவில்லை. 1947ல் தயாரிக்கப்பட்ட மூல மசோதாவில் மருமக்கள்தாயம் மற்றும் அலியா சந்தானம் ஆகியவைகளுக்கு விலக்களிக்கப்பட்டிருந்தன என்பதைக் குறிப்பிட்டாக வேண்டும். இந்த மசோதா ஏன் அவ்வளவு முற்போக்காக இருக்கவில்லை, அதை ஏன் முற்போக்கானதாக மாற்றவேண்டும் என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

மருமக்கதாயச் சட்டத்தின் அடிப்படையில் திருமணம் முற்றிலும் உலக வாழ்க்கைச் சம்பந்தப்பட்ட விஷயம். இதில் எந்தவித மத சம்பந்தமும் இல்லை. இதில் எந்த புனிதத் தன்மையோ சபிண்டா முறையோ கிடையாது. இந்துச் சட்ட மசோதா இரு வகை திருமணங்களையே அங்கீகரிக்கிறது. அதாவது சமயச் சடங்கு அடிப்படையிலான திருமணம்; மற்றும் சட்டப்படியான பதிவுத் திருமணம். பதிவுத் திருமணம் சர்வசாதாரணமாக நடைபெறுகிறது. அதற்கு எந்தவித ஆட்சேபணையும் இல்லை. அதன் விதிகளுக்குக் கட்டுப்பட தயாராக உள்ளோம்.

மருமக்கதாய திருமணங்கள் சமயச் சடங்குகள் அடிப்படையிலான திருமணங்கள் என்று இந்த மசோதாவைத் தயாரித்தவர்

கள் தவறாகக் கருதியுள்ளனர். மலபார் திருமணங்கள் மத அடிப் படையிலான திருமணங்கள் என்று மசோதாவின் 51-ஆவது பிரிவில் குறிப்பிட்டுள்ளதை படித்தாலே இது தெளிவாகத் தெரிகிறது. அந்த அடிப்படையில்தான் இந்தப் பிரிவு தயாரிக்கப்பட்டுள்ளது. மலபார் திருமணங்கள் மதத்துடன் எவ்வித சம்பந்தமுமற்றது. 51-ஆவது பிரிவு இவ்வாறு கூறுகிறது:

"இந்தத் தொகுப்புச் சட்டம் அமுலுக்கு வருவதற்கு முன்போ அல்லது பிறகோ சமயச் சட்டங்கள் அடிப்படையில் நடைபெற்ற திருமணத்திலிருந்து, 1932-ஆம் ஆண்டு மெட்ராஸ் மருமக்கதாயம் சட்டப்படி (மெட்ராஸ் சட்டம் XXII 1932) விவாகரத்துப் பெறும் உரிமையை, இந்தப் பிரிவிலுள்ள எதுவும் பாதிக்காது.''

எங்களைப் பொறுத்தவரையில், வேறு ஒரு வகையிலும், இந்த மசோதாவுக்குத் திருத்தம் கொண்டுவர விரும்புகிறோம். எங்கள் தகப்பனாரின் மருமக்களையோ அல்லது எங்கள் தாய்வழி மாமனின் மகளையோ மணந்து கொள்ள எங்கள் சட்டம் அனுமதிக்கிறது. உண்மையில், மாமன் மகளை அல்லது அப்பாவின் மருமகளை மணந்து கொள்வதை சிறப்புரிமையாக எங்களில் பலர் நினைக் கிறார்கள். ஆனால் தடுக்கப்பட்ட உறவுமுறைகள், சபிண்டாமுறை சம்பந்தமான விதிகள் மூலம் இது தடுக்கப்படுகிறது. எங்கள் உரிமையை இவ்வாறு பறிப்பதை எங்கள் பகுதி மக்கள் ஆதரிக்க மாட்டார்கள்.

சட்ட வழிப் பிரிவு அல்லது மணவாழ்வுரிமை மீட்டளிப்பு சம்பந்தப்பட்ட விதிகள் எங்கள் சட்டத்தில் கிடையாது. ஒரு திருமணம் நடப்பிலிருக்கிறது அல்லது விவாகரத்து மூலம் அது முடிவு பெற்று விடுகிறது. இடைப்பட்ட பாதை ஒன்றும் கிடையாது. விவாகரத்துக் கான விதி மிகவும் எளிமையானது. பாதிக்கப்பட்ட தரப்பு அருகி லுள்ள உரிமையியல் நீதிமன்றத்திற்குச் சென்று பன்னிரெண்டு அணா முத்திரை ஒட்டிய விண்ணப்பத்தைக் கொடுக்கிறார். ''இந்தக் காரணங்களுக்காக நாங்கள் சேர்ந்து வாழ முடியவில்லை. எனவே விவாகரத்து வழங்கப்படவேண்டும்'' என்று அதில் கேட்டுக் கொள் கிறார். ஆறு மாத காலத்திற்கு, அந்த விண்ணப்பம் கிடப்பில் போடப் படுகிறது. இந்த ஆறுமாத காலத்தில் சமரசத்திற்கான வாய்ப்பு ஏற்படலாம் என்று சட்டத்தைத் தயாரித்தவர்கள் விரும்பியிருக்க லாம். இந்த ஆறுமாதக் காலக்கெடு முடிந்த பிறகு, எதுவும் நடைபெற வில்லை என்றால், விவாகரத்து தானாகவே அளிக்கப்படுகிறது.

இது ஓர் எளிமையான விதி. மசோதாவைத் தயாரித்தவர்களின் கவனத்தை இது கவர்ந்துள்ளது என்பது 51-ஆவது பிரிவிலிருந்து தெரிகிறது. இந்த விதி மசோதாவில் உள்ளது. மற்ற இந்துக்களுக்கும் இந்த விதியின் பலன் ஏன் அளிக்கப்படவில்லை என்பது எனக்குப் புரியவில்லை.

திருமணக் கலைப்பு சம்பந்தமான விதிகள் இந்த அவையின் பல உறுப்பினர்களைக் கோபத்திற்குள்ளாகியுள்ளது. 1942லிருந்து விவாகரத்துக்கான வழிமுறைகள் மலபாரில் நடைமுறையிலிருந் தாலும், யதார்த்தத்தில் ஒரு டஜன் விவாகரத்துக்கு மேல் நடைபெற் றிருக்காது என நம்புகிறேன். பெட்ரண்ட் ரஸ்ஸல் என்ற பேரறிஞர் கூறியதை இது நிரூபிக்கிறது எனலாம். ''விவாகரத்துக்கான விதிகள் எளிய முறையில் இருப்பதால் அதிக எண்ணிக்கையிலான விவாக ரத்துகள் ஏற்படும் என்று அர்த்தமல்ல.'' விவாகரத்துக்கு வாய்ப் புள்ள இடங்களில், விபசாரம் குறைவாக இருப்பதுடன் ஒழுக்க நெறிகளும் சிறப்பாக உள்ளன.

தத்தெடுத்தலைப் பொறுத்தவரை, நாட்டின் எங்கள் பகுதி யில் நிலவிவரும் நடைமுறைகளை ஒப்பிடுகையில் மசோதாவின் விதிகள் திருப்திகரமாக இல்லையென்றே கூறவேண்டும்.

மசோதாவைப் பொறுத்தவரையில், தத்தெடுத்தல் மத சம்பந்த மான விஷயமாகவுள்ளது. மருமக்கள்தாயம் வழக்கத்திலுள்ள மக்க ளிடையே உலக வாழ்க்கைக்குரிய விஷயமாகும் இது. இந்துத் தொகுப்புச் சட்டத்தின்படி ஓர் ஆணோ அல்லது விதவையோதான் தத்தெடுத்துக்கொள்ள முடியும். ஆனால் எங்கள் சட்டப்படி ஆணோ பெண்ணோ யார் வேண்டுமென்றாலும் தத்தெடுத்துக் கொள்ள முடியும். இந்துச் சட்டப்படி ஓர் ஆணைத்தான் தத்தெடுக்கமுடியும். எங்கள் சட்டப்படி ஆணையோ, பெண்ணையோ தத்தெடுத்துக் கொள்ளலாம். இந்துச் சட்டப்படி ஒரே ஒருவனைத்தான் தத்தெடுத்துக் கொள்ள முடியும். ஆனால் ஒன்றோ, இரண்டோ ஏன் ஒரு குடும் பத்தையே கூட எங்கள் சொத்துக்கு வாரிசாக தத்தெடுக்க முடியும். எனவே இதைப் பொறுத்தவரையில் எங்கள் சட்டத்திற்கும் இந்து சட்டத்திற்கும் நிறைய வேறபாடுகள் உள்ளன. இந்த மசோதாவைத் தயாரிக்கும்போது இந்த விஷயங்களெல்லாம் ஏன் கணக்கி லெடுத்துக் கொள்ளப்படவில்லையென்றால் தந்தைவழி சமுதாய நோக்கின் அடிப்படையில் மசோதா தயாரிக்கப்பட்டுள்ளதால்தான்

என்று எனக்குத் தோன்றுகிறது; தாய்வழி சமுதாயக் கண்ணோட்டத்திலல்ல. அந்தக் கருத்தோட்டத்தையும் அவர்கள் கணக்கிலெடுத்துக் கொண்டிருந்தால் இந்த வேறுபாடுகள் குறைந்திருக்கவோ அல்லது தீர்க்கப்பட்டிருக்கவோ கூடும்.

கூட்டுக் குடும்பச் சொத்தைப் பொறுத்த வரையில், கூட்டு நிலச் சொத்துரிமைக்குப் பதிலாக பொது நிலச் சொத்துரிமை மசோதாவில் அளிக்கப்பட்டிருப்பதைக் குறிப்பிட வேண்டும். நான் இந்த விதியை வரவேற்கிறேன். சட்டத்தின் இந்தப் பகுதியும்கூட தந்தை வழி சமுதாய நோக்கில்தான் தயாரிக்கப்பட்டுள்ளது. பகுதி V-ல் எந்தப் பிரிவை வேண்டுமென்றாலும் படித்துப்பாருங்கள். நான் அவைக்குச் சங்கடத்தைக் கொடுக்க விரும்பவில்லை. மாண்புமிகு சட்ட அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவர மட்டுமே விரும்புகிறேன். இந்து தொகுப்புச் சட்டம் எல்லா மக்களுக்கும் பொதுவானதாக இருந்தாலும் கூட பகுதி V-ல் உள்ள எந்தப் பிரிவும் மருமக்கள் தாயமுறையைப் பின்பற்றுபவர்களுக்குப் பொருந்தாமலிருப்பதைக் காண்பீர்கள்.

மலபாரிலுள்ள கூட்டுக் குடும்பங்களில் அறிமுகப்படுத்தப் பட்டுள்ள பொதுநலச் சொத்துரிமைக்கு பிரிவு 86, 87, 88 எதுவும் பொருந்தாது.

வாரிசுரிமையைப் பொறுத்தவரையில், மகன் மற்றும் மகளுடன் தாயாரையும் ஏன் ஒரு வாரிசாகச் சேர்த்துக் கொள்ளக் கூடாது. ஒருவர் இறந்துவிட்டார் என வைத்துக் கொள்வோம் - நானே இறந்து விடுவதாக வைத்துக் கொள்வோம். என்னை வளர்த்து ஆளாக்கி, வாழ்நாள் முழுவதும் எனக்காகப் பாடுபட்ட எனது தாயாரும் ஒரு வாரிசாக இருக்க என் இயற்கையான அன்பும் பாசமும் விரும்புகிறது. ஆனால் இங்கே நாம் காண்பது, பிரிவு I-ல் தாயாரின் பெயர் சேர்க்கப்படவில்லை.

முன்னமேயே இறந்து போன மகனின் மகன் அல்லது முன்னமேயே இறந்து போன மகனின் மகனின் மகன் முதல் பிரிவில் ஏன் சேர்க்கப்படவேண்டும் என்பதே என் இரண்டாவது குற்றச் சாட்டு. அவர் பிரிவு II-ல் தான் சேர்க்கப்படவேண்டும். பிரிவு I-ல் அவர்களை முன்னுரிமை வாரிசுதாரர்களாகச் சேர்த்திருப்பதை எங்களால் ஜீரணிக்க முடியவில்லை. மலபார் வாசிகள் எவரிடமும், அவருடைய சொத்துக்கள் இறந்துபோன மகனின் மகனின் மகனுக்கு,

மகனின் மகனுக்கு அல்லது சகோதரிக்கு அல்லது சகோதரியின் குழந்தைகளுக்குச் செல்ல வேண்டுமா எனக் கேட்டால் தன் சகோ தரனுக்கு செல்வதைவிட சகோதரிக்கும் சகோதரி குழந்தைகளுக்குமே செல்ல வேண்டுமென்று நிச்சயமாகக் கூறுவார். VII அட்டவணை பிரிவு II-ல் சகோதரிக்கும் சகோதரியின் குழந்தைகளுக்கும் தரப் பட்டுள்ள அந்தஸ்தை உயர்த்தி அவர்களுக்கு அதிக முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும் என்று கூறுகிறேன். சகோதரியும் சகோதரி குழந்தைகளும் வரிசைப்பட்டியலில் கீழே மட்டத்தில் உள்ளனர்; VII பட்டியலில் மகனின் மகனின் மகன், மகனின் மகனின் மகள், மகனின் மகளின் மகள் ஆகியவர்களுக்குப் பிறகே இவர்கள் வருகிறார் கள். இந்த நபர்கள் எல்லோருக்கும் பிறகுதான் சகோதரனும் சகோதரி யும் வாரிசுதாரர்கள் பட்டியலில் வருகிறார்கள். ஒரே வயிற்றில் பிறந்த சகோதரனுக்கும் சகோதரிக்கும் வாரிசு வரிசையில் முன் னுரிமை ஏன் அளிக்கக் கூடாது என்பது எனக்குப் புரியவில்லை. வாரிசுரிமை சம்பந்தமான விதிகளைப் பொறுத்தவரையில் இயற்கை யான அன்பும் மற்றும் பாசத்தின் அடிப்படையில் நோக்கினால் சகோதரனுக்கும் சகோதரிக்கும் அதிக முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும்.

(இந்தக் கட்டத்தில் துணை சபாநாயகர் நாற்காலியை காலி செய்கிறார். திருமதி ஜி. துர்க்காபாய் (அவைக்குத் தலைமை தாங்கும் குழுவில் ஒருவர்) நாற்காலியில் அமர்கிறார்.)

இப்படிப்பட்ட பல்வேறு அம்சங்களிலிருந்து பார்க்கும்போது பெரும்பான்மை மக்கள் பின்பற்றும் மலபாரைத் தவிர்த்து நாட்டின் பிறபகுதிகளிலுள்ள சட்டங்களைத்தான் மசோதா கணக்கிலெடுத்துக் கொண்டுள்ளது. மசோதாவை உருவாக்குவதில் தாய் வழிச் சமுதாயச் சட்டங்கள் கணக்கிலெடுத்துக் கொள்ளப்படவில்லை. நாம் பெண் களுக்கு அதிக உரிமைகள் அளிக்க விரும்புகிறோம். பெண்களின் உரிமைகளைப் பொறுத்தவரையிலோ, அல்லது பொதுவான கண்ணோட்டத்தின் அடிப்படையிலோ, மசோதா போதுமான அளவு முற்போக்கானதாக இருக்கவில்லை என்று எனக்குத் தோன்றுகிறது.

இந்த மசோதாவின் நோக்கெல்லைக்குள் வர நாங்கள் மிகவும் ஆவலாக உள்ளோம். ஒரு சீரான சட்டம் வேண்டுமென்பதுதான் எங்கள் விருப்பம். இந்தியாவிலுள்ள எல்லா இந்துக்களுக்கும் ஒரே மாதிரியான சட்டம் இருக்கவேண்டுமென்றே நானும் என் பகுதி மக்களும் விரும்புகிறோம். அதே நேரத்தில், எங்கள் மக்கள் பின்பற்ற

முடியாததாகவோ, வெறுக்கத்தக்கதாகவோ அது இருக்கக்கூடாது. ஆர்வத்துடன் பின்பற்றக் கூடியதாக அது இருக்க வேண்டும். சட்டத்தைத் தயாரிக்கையில் தாய்வழி சமுதாயச் சட்டத்தையும் கணக்கி லெடுத்துக் கொள்ளவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். தேவை யான திருத்தங்கள் செய்வதன் மூலம் நாங்களும் இந்த மசோதாவின் கீழ் வரமுடியும். ஏதாவது காரணத்தினால் திருத்தங்கள் எதுவும் கொண்டு வரமுடியாத அளவிற்கு நமது இரு முறைகளும் வேறுபட் டிருப்பின், எங்களைத் தனியே விட்டுவிடும்படி அவையைக் கேட்டுக் கொள்கிறேன். இப்பொழுது அறிமுகப்படுத்தப்பட்டுள்ள இந்து தொகுப்புச் சட்டத்தை விட, அன்பு பாசம் போன்றவைகளில் உயர் மட்டத்தில் இருக்கும் எங்கள் சட்டத்தையே பின் பற்ற எங்களுக்கு அனுமதி கொடுங்கள், என்னைப் பொறுத்தவரையில் இந்து தொகுப்புச் சட்டம் மதச் சார்பற்றது என்று கூறமுடியவில்லை அது ஒரு பகுத்தறிவு நடவடிக்கையல்ல. இன்னும் சமயத்தின் மணம் அதில் வீசுகிறது. மசோதா முற்றிலும் ஒரு பகுத்தறிவு நடவடிக்கை யாக இருக்க வேண்டும். மத சம்பந்தமற்ற, இயற்கையான கண்ணோட் டத்தில் மசோதா தயாரிக்கப்பட்டிருந்தால் எனக்கு எந்தவித ஆட் சேபனையும் இருக்க முடியாது. அந்த மாதிரியான ஒரு மசோதா அறிமுகப்படுத்தப்பட்டால் எங்கள் மக்கள் அதை மனதார வரவேற் பார்கள். இப்பொழுது தயாரிக்கப்பட்டிருக்கும் மசோதா பெருமள விற்கு மதச் சார்புடையதாக இருக்கிறது என்பதைக் காண்கிறோம். அதன் கடுமை ஓரளவிற்குக் குறைக்கப்பட்டிருந்தாலும், அது இன்னும் போதுமான அளவிற்கு மதச்சார்பற்றதாக இல்லை. திருமணம், தத்தெடுப்பு, வாரிசுரிமை போன்றவைகளில் மதம் ஏன் குறுக்கிட வேண்டும். எங்கள் பகுதியிலுள்ளது போல அது ஏன் அதிக அளவில் மதச்சார்பில்லாமல் இருக்கக்கூடாது. இம்மாதிரி உலக விஷயங் களில் மதக்கலப்பு இல்லாத முறையைப் பின்பற்றும் எங்கள் வாழ்க்கையில், மதச் சார்புடைய இந்த மசோதாவை ஏன் திணிக்க வேண்டும்.

***திரு. தலைவர் :** இன்னும் பத்து நிமிடங்களே உள்ளன. உறுப்பினர் யாராவது பத்து நிமிடத்தில் தங்கள் பேச்சை முடித்துக் கொள்வாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

சில மதிப்பிற்குரிய உறுப்பினர்கள்: எழுந்து நிற்கின்றனர்.

★ அ.நி.வி. (சட்) பி, தொகுப்பு VI, பிரிவு II 12 டிசம்பர் 1949 பக்கம் 506-508.

திரு. சீதாராம் எஸ். ஜாஜு (மத்திய பாரத்): பத்து நிமிடத்தில் என் பேச்சை முடித்துக் கொள்கிறேன்.

இந்த இந்து தொகுப்புச் சட்டத்தை முழு மனதுடன் ஆதரிக்கிறேன் என்பதை முதலில் நான் தெளிவுபடுத்தியாக வேண்டும். பழைய தலைமுறையைச் சேர்ந்த அனேகமாக எல்லா உறுப்பினர்களும் மசோதாவுக்கு எதிராகப் பேசியிருக்கையில், நான் தயக்கத்துடன் உங்கள் முன் நிற்கிறேன். அவர்களுடைய இருதயத்திற்கு நான் சவால் விடவில்லை, ஆனால் இந்துத் தொகுப்புச் சட்டத்தைப் பொறுத்தவரை அவர்களுடைய இதயங்கள்தான் கிழடுதட்டி பழமையாகிவிட்டன.

திரு. எம். திருமல ராவ் : பழைய தலைமுறையைச் சேர்ந்த மகளிர்கூட உங்களை ஆதரிக்கிறார்கள் என்று எடுத்துரைக்கலாமா?

திரு. சீதாராம் எஸ். ஜாஜு : ஆம். ஏனென்றால் அவர்கள் முற்போக்காளர்கள். அவர்கள் முன்னுக்குச் செல்ல விரும்புகிறார்கள். என் நண்பர் திரு. கிருஷ்ண சந்திர சர்மாவின் சொற்களில் கூறுவதென்றால் ஆண்கள் பின்னோக்கிப் போய்கொண்டிருக்கும் வேளையில் அவர்கள் முன்னுக்குச் செல்வதுடன் மிகவும் முற்போக்காளர்களாகவும் உள்ளனர். எப்படியிருப்பினும், இந்து தொகுப்புச் சட்டம் தற்போது இருக்கும் நிலை குறித்து கவலை கொண்டுள்ளேன்.

அம்மையார் அவர்களே, இங்குள்ள இளைய தலைமுறையினரின் கருத்துகளை பிரதிநிதித்துவப்படுத்த முடியும் என்ற காரணத்தினாலேதான் இங்கு பேசுகிறேன். இந்நாட்டின் இளைய தலைமுறையினர் இந்து தொகுப்புச் சட்டத்தை ஆதரிக்கிறார்கள் என்று நான் உறுதியாகக் கூறமுடியும். இந்திய சமஸ்தானங்களிலுள்ள மக்களின் கருத்துகளை அறிந்துகொள்ள அங்கு இந்த மசோதா சுற்றுக்கு விடப்படவில்லை என்ற பெரும் கூச்சல் கிளம்பியது. இந்த அவையில் நிறைவேற்றப்பட்ட பல மசோதாக்கள் இந்திய சமஸ்தானங்களின் மக்கள் கருத்தை அறிந்துகொள்ள சுற்றுக்கு விடப்படவில்லை என்று யாரும் குரல் எழுப்பவில்லை.

மதிப்பிற்குரிய உறுப்பினர்களில் சிலர்: ஆனால் இது பெரிதும் விவாதத்திற்குரிய ஒரு மசோதாவாக உள்ளது.

திரு. சீதாராம் எஸ். ஜாஜு : எத்தனையோ விவாதத்திற்குரிய மசோதாக்களைச் சந்தித்திருக்கிறோம். சிரோகிப் பிரச்சினை மிகவும் சிக்கலான ஒன்று. அதைக்குறித்து சமஸ்தானங்களைக் கலந்தாலோ சிக்கவில்லை.

திரு. கோகுல்பாய் தவுலத்ராம் பட் (பம்பாய் மாகாணங்கள்) : அம்மையார் அவர்களே, சிரோகி சம்பந்தமாக எந்த மசோதாவும் கிடையாது.

திரு. தலைவர் : மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் குறுக்கிடாமல் பேச்சாளரைப் பேச அனுமதிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

சர்தார் ஹுக்கம் சிங் : இளைய தலைமுறையினர் பாதை தவறிச் செல்லும்போது அவர்களைத் திருத்தி வழி நடத்திச் செல்வது பெரியவர்கள் கடமையல்லவா?

திரு. சீதாராம் எஸ். ஜஜு: இளைய தலைமுறையினரைக் கட்டுப்படுத்தி வழிநடத்திச் செல்ல அவர்களுக்கு உரிமை நிச்சயம் உண்டு. ஆனால் முன்னேற்றத்திற்காக அது இருக்கவேண்டும், பின்னோக்கிச் செல்லும் போக்காக அது இருக்கக்கூடாது.

மதிப்பிற்குரிய உறுப்பினர் ஒருவர் : நாங்கள் 80 ஆண்டுகளுக்கு மேலான அனுபவம் உள்ளவர்கள்.

திரு. சீதாராம் எஸ். ஜாஜு: 80 ஆண்டு அனுபவம் இருக்கலாம். தேசப்பிதா மகாத்மா காந்தியின் அனுபவத்தையும் பார்க்க வேண்டும். இந்துப் பெண்களின் வளர்ச்சியை ஆதரித்து பல நேரங்களில் அவர் எழுதியுள்ள கட்டுரைகள் பல தொகுதிகளாக வெளிவந்துள்ளன. இந்து தொகுப்புச் சட்டத்தைப் பொறுத்தவரையில், இதைக் கடுமையாக எதிர்ப்பவர்கள்கூட வாரிசுரிமை மற்றும் மகள்களுடனும் சகோதரிகளுடனும் சொத்தைப் பங்கிட்டுக் கொள்ளும் விதிகளைத் தவிர்த்து இந்து தொகுப்புச் சட்டம் முழுவதையும் நிறைவேற்ற ஒப்புக் கொள்கிறார்கள், நான் சேர்ந்துள்ள சமுதாயமான மார்வாரி சமுதாயத்தைச் சேர்ந்தவர்களே பெரும்பாலும் இதை எதிர்க்கிறார்கள். ஆனால் மார்வாரி இளைஞர்கள் இந்து தொகுப்புச் சட்டத்தை ஆதரிக்கிறார்கள். அனுபவம் மிக்க வயது முதிர்ந்தவர்கள் இருக்கிறார்கள் என நாம் கூறினாலும், இந்து சமுதாயத்தில் ஒரு மனைவியின் நிலை பரிதாபமானது என்று மகாத்மா காந்தி தமது சுய சரிதையில் கூறியுள்ளார்.

பண்டிட் முகுத் பீகாரி லால் பார்கவா : மகாத்மா காந்தியின் பெயரை உங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொள்ளக் கூடாது.

திரு. சீதாராம் எஸ். ஜாஜு : என்னை விட ஒரு வேளை நீங்கள் மகாத்மா காந்தியின் பெயரை உங்களுக்குச் சாதகமாக உபயோகித்திருக்கக்கூடும். நான் என் வாழ்க்கையை இப்பொழுதுதான் தொடங்கியிருக்கிறேன். மகாத்மா காந்தியின் பெயரில் ஆணையிட்டு கூற எனக்கு எந்த சந்தர்ப்பமும் கிடையாது. ஆனால் இங்கு வயது நிரம்பிய பலர் நரைத்த தலையுடன் கூடியவர்கள் அவர் பெயரைத் தங்களுக்குச் சாதகமாக நூற்றுக்கணக்கான தடவைகள் பயன்படுத்தியிருக்கக்கூடும்.

அம்மையார் அவர்களே, இந்து மனைவிமார்களின் நிலைமையைப் பொறுத்தவரையில் அது மிகவும் பரிதாபகரமானது என்று மகாத்மா காந்தி எழுதியுள்ளார். எஜமானர் ஒருவர் வேலைக்காரனிடம் கோபம் கொண்டால் வேலைக்காரன் எஜமானரைவிட்டு சென்றுவிடலாம். ஒரு தகப்பனாரிடம் மகனுக்குக் கோபம் என்றால் அவன் அவரிடம் பாகப்பிரிவினை கேட்கமுடியாமல் போகலாம். ஒரு தகப்பனாருக்கு மகனிடம் கோபம் என்றால் அவனை வெளியே போ என்று அவர் கூறலாம். ஆனால் இந்து மனைவிமார்களைப் பொறுத்தவரையில் அவர்கள் எங்கேயும் போகமுடியாது. மகாத்மா காந்தியிடம் கஸ்தூரிபாயின் நிலையே இவ்வாறு என்றால் சாதாரண நம்மைப் போன்ற மனிதப் பிறவிகளின் கைகளில் இந்தப் பெண்களின் நிலை எவ்வாறு இருக்கும்?

அரசு அமைப்புச் சட்டத்தைப் பொறுத்தவரை, ஆண் பெண் சம உரிமையை நாம் ஏற்றுக் கொண்டுள்ளோம். ஆனால் இங்கு நமது மகளிருக்கும் சகோதரிகளுக்கும் மகள்களுக்கும் அதே சம உரிமையை அளிக்க அஞ்சுகிறோம். உங்களுடைய கோத்திரத்தைச் சேர்ந்தவனாகவோ அல்லது குடும்பப் பெயரைக் கொண்டவனாகவோ உள்ள ஒரு பையனை நீங்கள் சுவீகாரம் எடுத்துக் கொள்ளலாம். ஆனால் உங்களுடைய மகளையோ அல்லது சொந்த சகோதரியையோ நீங்கள் பொறுத்துக்கொள்ளத் தயாரில்லை, ஏனென்றால் அவர்கள் பெண்கள், இதுதான் நிலைமை.

இந்து மதத்திற்கு இது ஓர் அவமானம் என்று இந்த மசோதாவிற்கு எதிராகப் பெரும் கூக்குரல் கிளம்பியுள்ளது. என்னுடைய நண்பர்கள் முன் இந்தக் கேள்வியை வைக்க விரும்புகிறேன். இந்து

மதம் மாற்றங்களை ஏற்றுக் கொள்ளாத வறட்டுத்தனமான மத மல்ல. வெகு நீண்ட காலமாக மாறக்கூடிய சூழ்நிலைகளுக்கேற்ப அது மாற்றங்களை ஏற்றுக் கொண்டுள்ளது. 137 அல்லது 138 ஸ்மிருதி கள் இருப்பதே இதற்கு நல்ல எடுத்துக்காட்டாகும். மாற்ற முடியாத விதிமுறைகளுடன், எந்த வித மாற்றங்களும் இந்து மதத்தில் எதிர் பார்க்கப்படாமல் இருந்தால் 138 ஸ்மிருதிகளுக்கு அவசியம் என்ன? ஏன் மேலும் ஒரு ஸ்மிருதியை நாம் ஏற்றுக் கொள்ளக்கூடாது? ஒரு புதிய இந்து சட்டத் தொகுப்பை ஏன் ஏற்றுக் கொள்ளக் கூடாது? அந்த ஸ்மிருதிகளில் உள்ள சிறந்தவை யாவற்றையும் நவீனகால அறிவியல் வளர்ச்சி பெற்ற சமுதாய வளர்ச்சிக்குத் தேவையானவை களையும் அதில் சேர்த்துக் கொள்ளலாம். இதையெல்லாம் ஒன்றாக இணைத்து ஒரு தொகுப்பாகத் தயாரித்தால் என்ன பாதகம் விளையும்? நினைவிலிருந்து எழுதப்பட்டவைகளை ஸ்மிருதி என்ற சொல் குறிக் கிறது, கேட்டவைகளிலிருந்து எழுதப்பட்டவைகளை ஸ்ருதி என்ற சொல் குறிக்கிறது. ஒரு குறிப்பிட்ட முனிவராலோ, ஒரு குறிப்பிட்ட ரிஷியினாலோ அவை எழுதப்பட்டதாக எந்த இடத்திலும் குறிப் பிடப்படவில்லை. இந்தத் தொகுப்புச் சட்டத்தை நிறைவேற்று வதில், உருவாக்குவதில் எந்தத் தயக்கமும் வேண்டியதில்லை. மேலும் இந்த இந்துத் தொகுப்புச் சட்டம் நிறைவேற்றப்படுவதால் எவருடைய மனச்சாட்சியும் சிதைந்துவிடாது என்று நான் நினைக் கிறேன். அரசியல் மேடையிலிருந்து எப்பொழுதும் சுதந்திரத்தைப் பற்றி பேசிக் கொண்டிருக்கிறோம். அரசியல் சுதந்திரத்தைப் பெற்று விட்டோம். நாம் சுதந்திரம் அடைந்துவிட்டாலும், நாட்டில் சமூக மாற்றங்களும் நடைபெற நாம் அக்கறை கொள்ளவேண்டும். சமூக அமைப்பு மாற வேண்டுமென்று நாம் விரும்பினால் அதற்குச் சரியான தருணம் இதுதான். சீர்திருத்தங்களைப் பொறுத்த வரையில் மறைந்த ராஜாராம் மோகன் ராய் கூட எதிர்ப்பைச் சந்திக்க வேண்டிவந்தது என்பதை கூறிக் கொள்கிறேன். மற்ற பல சீர்திருத்த வாதிகளும் எதிர்ப்பைச் சமாளிக்க வேண்டியிருந்தது. யாருக்கு அவர்கள் உதவ விரும்பினார்களோ, யாருடைய வாழ்க்கை மேம்பட அவர்கள் பாடுபட்டார்களோ, யாருடைய விடுதலைக்காக போராடி னார்களோ அவர்களின் கைகளால் சீர்திருத்தவாதிகள் பலர் எதிர் பாராத விதமாக மரணத்தைத் தழுவினர். நம்முடன் இணைந்து செயல்படும் நமது தலைவர்கள் இங்குள்ளனர். சாத்தியப்படு மானால் அதிக அளவிலான பொது உடன்பாடு ஒன்றையே தாம் விரும்புவதாகக் கூட்டத் தொடரின் துவக்க நாளன்று நிகழ்த்திய உரையில் பிரதமர் கூறினார். இதைக் கேட்டபிறகு எந்த விவாதத் திற்கோ அல்லது இந்தப் பிரச்சினையின் மீது எந்தப் போராட்டத்

திற்கோ அவசியமில்லை என நான் நினைக்கிறேன். விட்டுக்கொடுத்து மற்றவர்களுடன் நாம் சமரச இணக்கத்துக்கு தயாராகிவிட்டால் அப்பொழுது இது ஒரு முற்போக்கு நடவடிக்கையாக இருக்காது என நினைக்கிறேன். அது வலுவிழந்துவிடும். ஆனால் நான் நமது பிரதம மந்திரியின் மதிநுட்பத்தில் நம்பிக்கை கொண்டுள்ளேன். என்னை விடவும் அல்லது எனது இளம் நண்பர்களைவிடவும் அவர் அறிவாற்றல் பெற்றவர் என்பதை உணர்வேன். எனக்கு அவரிடம் நம்பிக்கை உள்ளது. அவர் சமரசம் செய்து கொள்ள விரும்பினால் அல்லது அரசு சமரசத்தை விரும்பினால் சமரசம் செய்து கொள்ளட்டும். ஆனால் இளைஞர்களைப் பொறுத்தமட்டிலும் சமரசத்தை நாங்கள் விரும்பவில்லை. ஆனால் நாங்கள் எங்கள் தலைவர்களிடம் முழுமையான நம்பிக்கை கொண்டுள்ளோம், அவர்கள் ஆணைகளுக்கு அடிபணிவோம்.

பண்டிட் லட்சுமி காந்த மைத்ரா : ஆனால் அவர்கள் யாரும் இங்கு இல்லையே.

திரு.சீதாராம் எஸ். ஜாஜு : அவர்கள் இங்கு இல்லையென்றாலும், மாண்புமிகு டாக்டர் அம்பேத்கர் இங்குள்ளார்கள். அவர்தான் இந்த மசோதாவை முன்மொழிந்தவர். அரசின் சார்பாக அவர் இந்தப் பணியில் ஈடுபட்டுள்ளார். இந்த அரசின் மீது வசை பாடுவதில் எந்தப் பயனும் இல்லை. இந்த மசோதாவின் தோற்றத்தை ஆராய்ந்தோமானால் இது முந்தைய அரசினால் கொண்டுவரப் பட்டது என்பதை நாம் காணலாம். (குறுக்கீடு)

அம்மையார் அவர்களே, குறுக்கீடுகள் இருந்ததால் மேலும் ஒரு பத்து நிமிட நேரம் பேச விரும்புகிறேன். நீங்கள் விரும்பினால் நாளைக்குத் தொடர்கிறேன். நான் பத்து நிமிடங்களுக்கு மேல் எடுத்துக் கொள்ள மாட்டேன்.

திரு. அவைத் தலைவர்: மதிப்பிற்குரிய உறுப்பினர் பத்து நிமிடமே எடுத்துக் கொள்வதாக உறுதி அளித்துள்ளதால் அவர் தமது உரையை முடித்துக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

திரு. சீதாராம் எஸ். ஜாஜு: ஆனால் நீங்கள் என் இடர்ப்பாட்டைப் புரிந்துகொள்ள வேண்டும். அம்மையார் அவர்களே, என் பேச்சை அதிகம் இடைமறித்து விட்டார்கள். உங்களுக்கு ஆட்சேபம் இல்லையென்றால் நாளை பத்து நிமிடம் பேச விரும்புகிறேன்.

திரு. அவைத் தலைவர் : மதிப்பிற்குரிய உறுப்பினர் அவர் உரையை மூன்று நிமிடத்தில் முடித்து விடுவாரா என்பதை தெரிந்து கொள்ள விரும்புகிறேன். இப்பொழுது அவருக்கு மூன்று நிமிடம் அனுமதிக் கிறேன்.

திரு. சீதாராம் எஸ். ஜாஜு: அம்மையார் அவர்களே, அது எனக்குத் தெரியும். நீங்கள் விரும்பினால் நான் அமர்ந்து விடு கிறேன். மூன்று நிமிடங்கள் அதிகமாக ஒதுக்கியதற்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. அம்பேத்கர் இங்குள்ளார்கள் என்று கூறிக் கொண்டிருந் தேன். நமது கருத்துகளை அவர் எடுத்துரைப்பார். இந்த மசோதா வுக்கு பொறுப்பு அவர்தான். இன்றைய அரசை வசைபாடுவதிலும் குற்றம் சாட்டுவதிலும் பயன் ஏதும் இல்லை. இந்த மசோதாவின் சரித்திரத்தைப் பார்த்தால், இதற்கு முந்திய அரசான ஓர் அன்னிய நாட்டு அரசு இந்த மசோதாவைக் கொண்டுவந்தது. அந்த நேரத்தில் இந்த மசோதாவை எதிர்க்க நமக்கு தைரியம் இல்லை. சமூகம் சம்பந்த மான நடவடிக்கைகளை அன்னிய அரசு எடுக்கும்போது........

மதிப்பிற்குரிய ஓர் உறுப்பினர்: வரலாற்றைப் பற்றிக் கவலைப்படாதீர்கள்.

திரு. சீதாராம் எஸ். ஜாஜு : நிச்சயமாக நான் வரலாற்றைப் பார்க்கத்தான் வேண்டும். ஆனால் இப்பொழுது என் உரையைத் தொடர் கிறேன். இந்துச் சட்டத்தைப் பாதிக்கக்கூடிய சில நடவடிக்கைகளை பிரிட்டிஷ் அரசாங்கம் எடுத்தபோது நாம் அவற்றை ஏற்றுக் கொண் டோம். ஏனெனில் அது முதலாளிகளை, பணமுள்ளவர்களைப் பாதிக்கவில்லை. இது பொருளாதார ரீதியாக பாதிப்பதால் நமக்கு வலிக்கிறது. இந்த அவையில் ஆண் உறுப்பினர்கள் பெரும்பான்மை யாக உள்ளனர். அவையில் சிறுபான்மையினராக இருக்கும் பெண் உறுப்பினர்கள் மீது பெரும்பான்மையினரின் ஆதிக்கம் இருக்கக் கூடாது என்று நான் விரும்புகிறேன். பொதுவாக நாட்டில் உள்ள பெரும்பான்மையான பெண்கள் படிப்பு அறிவில்லாதவர்கள். ஆகையால் அவர்களைச் சுரண்டக்கூடாது. இந்த மசோதா ஒரே ஒரு விஷயத்தைக் குறிக்கோளாகக் கொண்டுள்ளது. அதாவது விவாக ரத்தை மட்டுமே என்று மசோதாவைக் குறித்து பயங்கரப் பிரசாரம் நடைபெற்று வருகிறது. இந்துத் தொகுப்புச் சட்டம் நிறைவேற்றப் பட்டபின்பு அவர்கள் கணவன்மார்கள் அவர்களை விவாகரத்து

செய்துவிடுவார்கள் என்று எல்லாப் பெண்களிடமும் பலவகைகளில் போதிக்கப்பட்டு வருகிறது. இந்து தொகுப்புச் சட்டத்தின் விதிகளை இவ்விதமாக தவறுதலாக விளக்கிக் கூறும் செயல் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இவர்கள் எல்லோருக்கும் ஒன்றே ஒன்றைக் கூறிக்கொள்கிறேன். தேவையில்லாமல் விவாக ரத்து செய்து கொள்பவர்கள் ஒருவர் கூட இருக்கமாட்டார், அதே போன்று இந்து மகளிரும் அவசியமற்று விவாகரத்து நடவடிக்கைக்கு செல்லமாட்டார்கள். நமது நீதிமன்றங்களும் நியாயபூர்வமாகவும் அறிவுபூர்வமாகவும் செயல்படுவதுடன் ஒவ்வொரு வழக்கும் முழுமையாக விசாரணைக்குட்படுத்தப்பட்டு நீதி வழங்கப்படும். நான் கூற விரும்பியது இவ்வளவுதான்.

சட்டமன்றம் 1949 டிசம்பர் 13 தேதி செவ்வாய்க் கிழமை 10.45 வரை ஒத்திப்போடப்பட்டது.

இந்து தொகுப்புச் சட்டம் - தொடர்ச்சி

[1]**திரு. துணை சபாநாயகர் :** இந்து சட்டத்தின் சில பிரிவுகளை முறைப்படுத்துவதற்கும் திருத்துவதற்குமான மசோதாவை மேலும் பரிசீலிப்பதற்கான நடவடிக்கைகளை அவை இப்பொழுது எடுத்துக் கொள்ளும்.

திரு. அல்லாடி கிருஷ்ணசாமி அய்யர் : (மதராஸ், பொது) பொறுக்குக் குழுவிலிருந்து வந்துள்ள மசோதாவின் பல்வேறு அம்சங்களைப் பற்றிப் பேசுமுன்பு சில பொதுவான கருத்துகளை உங்கள் அனுமதியுடன் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இந்துச் சட்டங்கள் சம்பந்தமான விஷயங்களில் மாற்றங்கள் கொண்டு வருவதையோ, சட்டத் தலையீடுகளையோ எதிர்க்கும் பிரிவைச் சார்ந்து நான் இல்லை என்பதை இங்கு முதலில் தெரிவித்துக் கொள்ள வேண்டும். சட்டத்தின் உள்ளார்ந்த இயல்பு மாறாத ஒன்றாக இருக்க முடியாது. சமுதாய முன்னேற்றத்திற்கு துணைபுரியும் சாதனமாகவும், அளவுகோலாகவும் அது செயல்பட வேண்டுமென்றால் ஒவ்வொரு காலத்தின் முற்போக்கு சிந்தனைகளுக்கேற்ப அதன்

★ அ.நி.வி. (சட்) பி, தொகுப்பு VI, பிரிவு II 13 டிசம்பர் 1949, பக்கம் 510-519.

வேகமும் இருக்க வேண்டும். சமுதாயத்தில் சட்டத்தின் இந்தச் செயல்பாட்டைக் குறித்து நமது முன்னோர்கள் நன்கு உணர்ந் திருந்தார்கள். சமுதாயத்தில் சட்டத்தின் இந்தச் செயல்பாட்டைக் குறித்தும், அவ்வப்போது அதில் மாற்றங்கள் அவசியம் என்பதை யும் ஸ்மிருதிகளும் மற்றும் அது குறித்த சிறப்பான வியாக்கியானங் களும் அழகாக எடுத்துக் காட்டுகின்றன. நாட்டின் பல பாகங் களிலும் சட்டத்தின் அதிகாரபூர்வ விளக்கங்களாக ஏற்றுக் கொள்ளப் பட்ட இந்த விளக்க உரைகள் ஒரு குறிப்பிட்ட காலத்தில் உள்ள சமுதாய நிகழ்வுப் போக்குகளை குறிப்பிடும் வெளிப்பாடாக மட்டுமே இருந்தன. ஆனால் முறையான சட்ட நடைமுறைகள் உருவாக்கப் பட்டுள்ள இந்த நவீன உலகில் எந்த வழக்குரைஞரும் சட்ட விளக்க நடவடிக்கையின் மூலம் சட்டத்தில் மாற்றம் கொண்டுவர முடியாது. நீதிமன்றங்கள், இந்தியாவின் உயர்மட்ட தீர்ப்பாயங்கள், பிரிவி கவுன்சிலின் நீதிக்குழு ஆகியவைகள் கடந்த சில நூற்றாண்டு களாக இந்தப் பணிகளை ஓரளவுக்கு நிறைவேற்றிவருகிறார்கள். எனினும், சட்டத்தில் மாற்றம் கொண்டு வருவது அதன் வழக்கமான பணி அல்ல. அது சட்டத்திற்கு விளக்கம் அளிக்கிறது. சட்டத்தை அலசி ஆய்ந்து விளக்கம் செய்யும் முந்தைய முடிவுகளின் கொள்கையை மேம்படுத்தவும் அல்லது அதிலிருந்து எடுக்கப்பட்ட சில கோட்பாடுகளின் மூலமும் அல்லது இந்துச்சட்ட வாசகங் களிலிருந்து எடுக்கப்பட்ட கொள்கைகளின் அடிப்படையில் சில நுணுக்கமான மாற்றங்களை உருவாக்கலாம்.

ஆனால், அதன் உள்ளார்ந்த, இயல்பின்படி சட்ட நடவடிக்கை கள் கட்டுப்பாட்டிற்குள் அடங்கியிருக்கின்றன. சட்ட வல்லுநரின் பாத்திரத்தை ஒரு நீதிபதி உணர்வுபூர்வமாகவோ அல்லது அவ்வா றின்றியோ எடுத்துக் கொள்ளும் அபாயம் உள்ளதை மறுப்பதற் கில்லை. ஒரு கேள்வியை பரிசீலனை செய்கையில் ஒரு குறிப்பிட்ட நீதிபதி அல்லது பெஞ்ச் வைதீக அல்லது பழமைவாத அடிப்படை யில் அணுகலாம். வேறொரு நீதிபதி தமக்குப் பிடித்தமான சமூக சீர்திருத்த கருத்தோட்டங்களை தமது நீதி வழங்கும் பணியில் பயன் படுத்தலாம். இந்தியாவுடனான நீண்டகால தொடர்புகளின்போது இந்நாட்டின் உயர் மட்ட தீர்ப்பாயங்களும் மற்றும் பிரிவி கவுன் சிலின் நீதிக் குழுவும் வழங்கிய தீர்ப்புகள் மேலே குறிப்பிட்ட கூற்றுக்கு சாட்சியங்களாக உள்ளன. அதே நேரத்தில், நீதிமன்றங் களின் தீர்ப்புகள் சட்டமன்றக் குறுக்கீட்டிற்கு பெருமளவில் வழி வகுத்துள்ளது என்பதையும் மறுப்பதற்கில்லை. மாற்றம் தவிர்க்க முடியாதது என்பதுடன் சமுதாய வளர்ச்சி நியதியின் பகுதியாகவும்

அது இருக்கிறது. ஆனால் மாற்றங்கள் என்பது சமுதாயத்தின் அடிப் படையையே தகர்த்து நொறுக்குவதல்ல.

சட்ட திருத்தத்தின் இந்த அம்சங்களையெல்லாம் கவனத்தில் எடுத்துக்கொண்டு இந்த மசோதாவை அவை பரிசீலிக்க வேண்டு மென்று விரும்புகிறேன். இந்த அவையில் விவாதத்தில் இருக்கும் மசோதாவைவிட வேறு எந்தப் பொருளிலும் இந்நாட்டின் எந்த ஓர் ஆணும் பெண்ணும் அக்கறை கொண்டிருக்கவில்லை. எனவேதான் நம் பொறுப்பு மேலும் அதிகமாகிறது. எவ்வளவு உயர்ந்த நிலையி லிருந்தாலும் அல்லது தாழ்ந்த நிலையிலிருந்தாலும் மாறுபட்ட கருத்துக்களை ஏற்றுக் கொள்வதுடன் இந்நாட்டு மக்களின் நலன் கருதி சார்பற்ற ஒரு நல்ல தீர்ப்பை அளிக்க வேண்டும். இக்கருத்தில் அந்த அளவிற்கு அதை ஒரு முற்றிலும் ஒரு கட்சி நடவடிக்கை யாகவோ, ஓர் இரகசிய நடவடிக்கையாகவோ எடுத்துக் கொள்ளக் கூடாது.

முதலில், உங்கள் அனுமதியுடன், திருமணம் மற்றும் விவாக ரத்து சம்பந்தமான பிரிவை எடுத்துக் கொள்கிறேன். இந்தப் பிரிவை எடுத்துக்கொள்கையில் ஏற்கெனவே இந்திய சட்டமன்றத்தின் பல சட்டங்களால் திருமணச் சட்டத்தில் மாற்றங்கள் பல செய்யப்பட் டுள்ளதை நாம் நன்கு ஞாபகத்தில் வைத்துக் கொள்ளவேண்டும். இந்தச் சட்டங்களில் கடைசியாக நிறைவேற்றப்பட்டது 1946 இந்து திருமணச் சட்டம் (குறைபாடுகள் நீக்கம்) (1946-ஆம் ஆண்டு XXIII சட்டம்) ஆகும். மணமக்கள் ஒரே கோத்திரத்தை அல்லது பிரவா கத்தைச் சேர்ந்தவர்கள் என்பதாலோ அல்லது வெவ்வேறு சாதி களை அல்லது சாதிகளின் உட்பிரிவுகளைச் சேர்ந்தவர்கள் என்ப தாலோ ஒரு திருமணம் செல்லாது என்பதை இந்தச் சட்டம் ரத்து செய்கிறது. ஒரு தார மணவாழ்க்கையை மதராஸ் சட்டமன்றம் கட்டாயமாக்கியுள்ளது. சில மாகாண சட்டமன்றங்கள் விவாகரத்து சம்பந்தமான சில சட்டங்களைக் கொண்டுவந்துள்ளன. திருமணத் துக்கு இணக்கம் தெரிவிக்கும் வயது சம்பந்தமான சட்டங்களிலும் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. இந்தக் கண்ணோட்டத்தில் இந்த மசோதாவை பரிசீலனை செய்தால் இந்த மசோதாவில் செய்யப்பட் டுள்ள மாற்றங்கள் முதலில் காணப்பட்டதுபோல் அவ்வளவு புரட்சி கரமானதாக இல்லை எனலாம். மணவாழ்க்கை உரிமைகளை மீட்டளித்தல், தீர்ப்பு வழிப் பிரிவு, வாழ்க்கைப்படி, குழந்தைகள் பராமரிப்பு, நீதிமன்றங்களின் நடைமுறைகள் மற்றும் சட்ட வரம்பு களைக் குறித்துச் சேர்க்கப்பட்டுள்ள சில விதிகளே மூல மசோதாவில்

செய்யப்பட்டுள்ள முக்கியமான மாற்றங்கள் என்று பொறுக்குக் குழு உறுப்பினர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

மசோதாவின் விதிகளைப் பொறுத்தவரையில் ஒரு முக்கியமான கருத்தைச் சொல்ல விரும்புகிறேன். சமய சடங்குகளின் அடிப்படையிலான திருமணங்களுக்கும் பதிவுத் திருமணங்களுக்கும் இடையேயான வேறுபாடுகள் வெளிப்படையாகக் காணப்படுகின்றனவே தவிர உண்மையானதாகத் தெரியவில்லை. இந்த விஷயத்தைப் பொறுத்தவரை மசோதாவை சரியாகப் புரிந்துகொள்ள முடியவில்லை. ஏனெனில் விவாகரத்து, மணவாழ்க்கை உரிமைகளை மீட்டளித்தல், திருமணக் கடமைகள் மற்றும் ஜீவனாம்சம் சம்பந்தமான விதிகள் பதிவுத் திருமணத்திற்கும் சமயச் சடங்குகள் அடிப்படையிலான திருமணங்களுக்கும் முற்றிலும் ஒரே மாதிரியாகவே உள்ளன. சமயச் சடங்குகளின் அடிப்படையில் நடைபெறும் திருமணங்கள் சம்பந்தமாக ''விலக்கப்பட்ட படிநிலைகளுக்கும்'' இதரத் தடைகளுக்கும் இடையேயான வேறுபாடுகளை இந்த மசோதா எடுத்துக்காட்டியுள்ளது. சமயச் சடங்குகளின் அடிப்படையில் நடைபெறும் திருமணங்களில் மசோதாவில் குறிப்பிடப்பட்டுள்ள சபிண்டா உறவு முறைகள் திருமணத்தடைக்கு அடிப்படையாக இருக்கும் என்ற விதி சேர்க்கப்பட்டுள்ளது. ஆனால் பதிவுத் திருமணங்களில் விலக்கப்பட்ட படி நிலைகளே திருமணத் தடைக்கு அடிப்படையாக உள்ளன. ஆனால் அதே நேரத்தில் சமயச் சடங்குகளின் அடிப்படையில் திருமணம் செய்து கொள்பவர்கள், அதைப் பதிவுத் திருமணமாக மாற்றும் வாய்ப்பு மசோதாவில் அளிக்கப்பட்டுள்ளது ஏன் என்று எனக்குப் புரியவில்லை. இறுதியாக இந்த மசோதா நிறைவேறும் முன்பு இந்த வேறுபாடுகள் எதாவது பயன் அளிக்கிறதா என்பதை மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் பரிசீலிக்க வேண்டும்.

குழந்தைகளின் உரிமை, வாரிசு உரிமை, தம்பதியர்களுக்கிடையேயான கடமைகள் போன்ற எல்லா விஷயங்களிலும் எந்த வேறுபாடும் இல்லை. பதிவுத் திருமணங்கள் மற்றும் சமயச் சடங்குகள் அடிப்படையிலான திருமணங்கள் ஆகியவைகளின் நிலைப்பாடுகள் முற்றிலும் ஒன்றாகவே உள்ளன. எனவே சமயச் சடங்குகளின் அடிப்படையில் நடைபெறும் திருமணங்களுக்கு சில விதிகள் சேர்க்கப்பட்டுள்ளன. சில தரப்புகளின் உணர்வுகளைத் திருப்திப்படுத்துவதற்கான முயற்சியாக இது இருக்கலாம். அதுவே உண்மையான நோக்கமாக இருந்தால் சமயச் சடங்கு முறை திருமணங்களி

லிருந்து பதிவுத் திருமணங்களாக எளிதாக மாற்ற உதவும் விதிமுறை களைப் பிற்பகுதியில் இணைத்திருக்கத் தேவையில்லை. ஏதாவது ஒன்றையோ அல்லது மற்றொன்றையோ தேர்ந்தெடுங்கள். உதாரண மாக சமயச் சடங்குகள் அடிப்படையிலான திருமணங்களுக்குச் சில சடங்குகள் தவிர்க்க முடியாது. பதிவுத் திருமணங்களில் சில சடங்குகள் நடைபெற வேண்டிய அவசியமில்லை. ஒரு வழக்கறிஞர் என்ற கண்ணோட்டத்தில் இந்த மசோதாவின் விதியின்படி பதிவு திருமணத்திற்கும், சமயச் சடங்குகள் அடிப்படையிலான திருமணத் திற்குமிடையே உண்மையான வேறுபாடு ஒன்றும் எனக்குத் தெரிய வில்லை. மசோதாவின் அடிப்படையான கோட்பாடுகள் எதையும் நான் தொடவில்லை. ஆனால் மாண்புமிகு சட்ட அமைச்சரின் பரிசீலனைக்கு அதை வைக்கிறேன்.

மேலும் விலக்கப்பட்ட உறவினர்கள் சம்பந்தப்பட்டவரை எதிர்கால சந்ததிகளைப்பற்றி ஆய்வுசெய்யும் அறிவியல் அறிஞர்கள் உறவினர்களுக்கிடையேயான திருமணத்தை எதிர்க்கிறார்கள். எப்படி யிருப்பினும் இந்தக்கோட்பாட்டிற்கு பெரும் ஆதரவுள்ளது. இந்தச் சூழ்நிலையில் இந்த விதியைப் பொறுத்தமட்டில் நாம் முன்னோக்கிச் செல்கிறோமா அல்லது பின்னோக்கிச் செல்கிறோமா? இந்தப் பிரிவைப் பொறுத்தமட்டில், சிலர் திருமணம் செய்து கொள்வதை தடைசெய்யும் தற்கால சிந்தனைகளை நமது முன்னோர்கள் எதிர் பார்த்திருக்கலாம் எனக் கருதுகிறேன். முற்போக்கு மற்றும் முற்போக்குச் சிந்தனைகள், நாகரிகம் என்பதன் அடிப்படையில் ஏன் பின்னோக்கிச் செல்லவேண்டும் என்று கேட்கிறேன். தூரத்து சபிண்டர உறவு அல்லது அதே பிரவாரா அல்லது அதே கோத்தி ரத்திலுள்ளவர்களிடையே எந்த வித தடையும் அவசியமில்லை என்று நிச்சயமாக உணர்கிறேன். அது முற்றிலும் வேறு அடிப்படையில் உள்ளது. நெருக்கமான உறவு முறை இருக்குமிடத்தில் விதியை ஏன் தளர்த்த வேண்டும்? அண்மையில் நெருங்கிய உறவினர்களுக் கிடையேயான திருமணங்களின் தகுதிகளைக் குறித்து நீண்ட விவா தங்கள் நடைபெறுவதை பத்திரிகைகளிலும் சஞ்சிகைகளிலும் நான் படித்து வருகிறேன். அறிவியல் மற்றும் வரலாற்று மாணவரான மாண்புமிகு சட்ட அமைச்சர் இந்த அம்சத்தை நிச்சயமாகப் பரிசீலனை செய்வார் என்பது எனக்குத் தெரியும். மக்களின் மத உணர்ச்சி களுக்கு இது எதிரானது. அறிவியல் கோட்பாடுகள் மத மற்றும் மக்களின் உணர்வுகளை கணக்கிலெடுத்துக் கொண்டால் விதியைத் தளர்த்துவதற்கு முகாந்திரம் எதுவும் இல்லை. சமுதாயத்தின் நலனுக்கு அது நிச்சயமாக ஏற்றதல்ல (பொறுத்தமானதல்ல). வருங்கால

நண்பகல் 12 மணி

தலைமுறையின் நலனுக்காக, நமது இனத்தின் முன்னேற்றத்திற்காக நெருங்கிய உறவினர்களிடையே திருமணம் அவசியமானால் எல்லாவிதத்திலும் அதை நீங்கள் ஊக்கப்படுத்துங்கள். நாம் ஒரு தெளிவான நிலையை எடுப்போம். இந்த விஷயத்தை குறித்து தீர்மானமான நிலையை எடுப்போம். அடிப்படையான கோட்பாடாகக் கருதப்படும் இந்த விஷயங்களில் வழவழ என்று இருப்பதை நான் விரும்பவில்லை. பழைய கோட்பாடுகளை பின்பற்றுங்கள் அல்லது உங்கள் கருத்துக்கேற்ப அதிக சீர்திருத்தமான, நவீன கருத்துக்களை பின்பற்றுங்கள். தனிப்பட்ட முறையில் பழைய விதிகளை விடாமலிருப்பதையே நான் மிகவும் விரும்புவேன். தெளிவாகக் கூறுகிறேன்: உதாரணமாக சில சமூகங்களைப்பொறுத்தமட்டில், இந்தியாவின் சில பகுதிகளில் சில வழக்கங்கள் பழக்கத்தில் இருக்கலாம், வேறு ஒரு பிரிவில் அதற்கு வகை செய்துள்ளீர்கள். சபிண்டா உறவினர்களுக்கிடையே திருமணம் நடைபெறுவதற்கு தடை இருக்க வேண்டுமென்பதே பொதுவான விதியாக இருக்க வேண்டும், இதைப் பொறுத்தவரையில் சரியான நோக்கில் செயல்கள் நடைபெறவில்லை.

விவாகரத்துச் சட்டத்தைப் பொறுத்தவரையில் அதை ஒரே சீராகக்கொண்டு வரவேண்டுமென்ற முயற்சியில், சர் தேக் சந்த் தமது குறிப்பில் குறிப்பிட்டுள்ளபடி, தற்போது கட்டுப்பாடுகள் இல்லாத சமூகங்களிலும், வகுப்புகளிலும் விசேஷக் கட்டுப்பாடுகளைத் திணிப்பது அர்த்தமற்றதாகும். தென் இந்தியாவில் சில பகுதிகளில் கிராமத்தலைவர் அல்லது பஞ்சாயத்துத் தலைவர் முன்னிலையில் பரஸ்பர சம்மதத்துடன் இன்றும் விவாகரத்துப் பெறுவது வழக்கத்திலுள்ளதை நான் அறிவேன். வட இந்தியாவிலும் இது வழக்கத்திலுள்ளது. சில பிரிவினரின் கருத்துப்படி திருமணச் சட்டத்தின் சாராம்சமே விவாகரத்துதான் என்று தோன்றுகிறது. ஆனால், திருமணத்தைப் பற்றி சிந்திக்கு முன் விவாகரத்தைப் பற்றித்தான் சிந்திக்க வேண்டுமா? அதுதான் உங்கள் சிந்தனைப்போக்கு என்றால், நீங்கள் அதை ஊக்கப்படுத்த விரும்பினால் அல்லது எளிய விவாக ரத்துக்கு வழி வகை செய்ய வேண்டுமென்றால், உண்ண உணவுக்கே வழியின்றி வாடிக்கொண்டிருக்கும் சமூகங்கள் அல்லல்பட்டுக் கொண்டிருக்கும்போது எதற்காக இந்த நீதிமன்றங்கள், விவாகரத்து நீதிமன்றங்கள், மூன்று நீதிபதிகளைக்கொண்ட மேல்முறையீட்டு நீதிமன்றங்கள் எல்லாம்? இது சரியான பாதையில் செல்லும் போக்கு இல்லை என்றுதான் நினைக்க வேண்டும். குறிப்பிட்ட சாதிகளில், சில சமூகங்களில் விவாக ரத்துக்கு அனுமதியளிக்கும் வழக்கம் இருக்கும் அளவுக்கு அது தொடர

வேண்டும். விவாகரத்தை ஒரே சீராக அமைக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் அதை அதிகச் செலவுள்ளதாகச் செய்துவிடக்கூடாது. நிச்சயமாக எனது வழக்குரைஞர் தொழிலுக்கு அது அதிக வருமானத்தை அளிக்கும். எனவே நான் அதற்கு எதிர்ப்பல்ல. எனது நண்பர் மாண்புமிகு டாக்டர் அம்பேத்கரை நன்கு அறிவேன். இந்தக் குறிப்பிட்ட பிரச்சினையில் ஒரு முடிவுக்கு வருவதற்கு முன்பு பிரச்சினையின் இந்த அம்சங்களையெல்லாம் அவர் பரிசீலிப்பார் என்பதில் எனக்கு சந்தேகமில்லை.

சட்டத் தீர்ப்பின்படி பிரிந்து வாழ்வதைப் பற்றி சில ஆண்டுகளுக்கு முன்பு பிரபுக்கள் சபையில் நடந்த ஒரு சுவையான விவாதம் எனக்கு ஞாபகத்திற்கு வருகிறது. அதில் பிர்கன்கெட் பிரபு பங்கு கொண்டார். மிகப் பிரபல வழக்குரைஞர்கள் மற்றும் சட்ட வல்லுநர்களில் சிலரும் இதில் பங்கு கொண்டனர். தீர்ப்பின்படி பிரிந்து வாழ்வது என்பது ஆசை நாயகியை வைத்துக்கொள்ளும் வழக்கத்தை சட்டமுறையாக்குவது போலாகும் என்ற கடுமையான கருத்தை ஒரு பிரிவினர் கொண்டிருந்தனர். இந்தத் தீர்ப்புவழிப் பிரிவு தொடருவதைவிட ஒரு தெளிவான விவாகரத்தையே நான் விரும்புகிறேன். ஜீவனாம்சம் சம்பந்தமானாலும் சரி மனைவி வறுமையில் வாடாமல் பொறுப்புகளை நிறைவேற்றுவது சம்பந்தமான பிரச்சினையானாலும் சரி, கணவனும் மனைவியுமாக இருக்கும்போதே தாம்பத்யப் பொறுப்பை நிறைவேற்றவில்லை என்றாலும் சரி அதற்கான விதிகள் மசோதாவில் உள்ளன.

வாழ்க்கைப்படி, சட்டத் தீர்ப்பின்படியான பிரிவினை, விவாகரத்து, மணவாழ்க்கை உரிமைகளை மீட்பது சம்பந்தமான ஆங்கிலச் சட்டத்தின் சிக்கலான விதிமுறைகள் நமக்கு எதற்கு? இவ்வளவு பெரும் சிக்கலான விதிமுறைகள் தேவைதானா என்பது முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டிய விஷயம்.

பண்டிட் லட்சுமிகாந்த மைத்ரா (மேற்கு வங்காளம் பொது) : நாட்டின் முன்னேற்றத்தின் நலனைக் கருதி அவை அவசியமாகின்றன.

திரு. அல்லாடி கிருஷ்ணசாமி அய்யர்: அது குறித்து நான் கருத்தேதும் தெரிவிக்க விரும்பவில்லை. அந்த விஷயத்தை குறித்து உங்களுக்கு முடிவான கருத்துக்கள் இருக்கலாம். ஆனால் இந்த விஷயம் குறித்து எனக்கு முடிவான கருத்து ஏதும் இல்லை.

எனவே, இங்கிலாந்தில் வழக்கத்திலிருந்த பழைய சிந்தனைப் போக்குகளை மட்டும் சார்ந்திருக்காமல், நவீன சிந்தனைப் போக்கு களையும் பரிசீலனையில் எடுத்துக் கொள்ளவேண்டும். அண்மை ஆண்டுகளில் இங்கிலாந்தில் இயற்றப்பட்ட சட்டங்களில், திருமணம் சம்பந்தமான எல்லா அம்சங்களைக் குறித்தும் விதிகள் இருப்பினும், புதிய கருத்துக்களும் தோன்றியுள்ளன. எனவே ஆங்கிலச் சட்டத்தை அப்படியே பகர்ப்பு செய்வதற்குப் பதிலாக, ஏதாவது மாற்றங்கள் செய்ய முடியுமா என்பதைப் பார்ப்போம்.

அதன் பொதுவான கோட்பாடுகளைப் பொறுத்தவரையில் விவாகரத்து அல்லது மற்ற விஷயங்களில் மசோதா மிகவும் தீவிர மாக உள்ளது என்று நான் கருதவில்லை. இரண்டு மாறுபட்ட கருத் தோட்டங்களைச் சமரசம் செய்யும் உண்மையான முயற்சிதான் எழுந்துள்ள சிக்கல்களுக்கும் கஷ்டங்களுக்கும் காரணமாகும். திருமணங்கள் எளிய முறையில் முறிந்துவிடக் கூடாது என்ற பழைமைக் கருத்தும், அதே நேரத்தில் சில சூழ்நிலைகளில் விவாக ரத்துத் தேவை என்ற நவீன கருத்தும் ஆகும் அவை. இந்த எதிரும் புதிருமான கண்ணோட்டங்களுக்கிடையே எப்படி இணக்கமான முடிவைக் கொண்டு வருவது என்பதே பிரச்சினை. ஓரளவு அமைதி யான முறையில் ஒருவர் கருத்தை மற்றொருவர் புரிந்து கொண்டு இப்பிரச்சினையை பரிசீலிக்க வேண்டும். நம் கண்ணோட்டம் எப்படி யிருப்பினும், கால வெள்ளத்தை தடுத்து நிறுத்திவிட முடியாது. நான் ஒரு பழைமைவாத, ஆசாரமான குடும்பத்தைச் சேர்ந்தவன். சிரார்த்தங்களில் இன்றும் நம்பிக்கை உள்ளவன். என்னுடைய குடும்பத்திற்கு இல்லத்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுப்பதுடன் வாழ்க்கையைப் பற்றி பழைய கருத்தோட்டங்களிலும் ஓரளவு நம்பிக்கை கொண்டவன், ஆனால் அதே நேரத்தில் தற்காலப் போக்கு களையும் புறக்கணிக்க முடியாது. என் மகன்கள் என்னைப் போல் இருக்க மாட்டார்கள். என் பேரக் குழந்தைகள் என்னைவிட மிகவும் வேறுபட்டு இருப்பார்கள். இந்தச் சூழ்நிலைகளில், கடந்த காலத் தில் என் வாழ்க்கை மிக ஆழமாக வேர் விட்டிருந்தாலும் நவீன போக்குகளைப் பெருமளவில் புரிந்து கொள்ளும் நிலையில் உள்ளேன். எனவே, இந்த அம்சங்களெல்லாம் கருத்தில் கொள்ளப் பட்டு, இந்த நடவடிக்கையைப் பரிசீலிப்பதாக நம் அணுகுமுறை இருக்க வேண்டும். உண்மையிலேயே நீங்கள் சமயச் சடங்குத் திருமணங்களில் நம்பிக்கை வைத்திருந்தால் அதை இவ்வளவு எளிதாக பதிவுத் திருமணமாக மாற்றும் முறை ஏனோ எனக்கு இசைவாக இல்லை. அது என் கருத்து. சமயச் சடங்கு திருமணத்தை

ஏற்றுக் கொள்ளுங்கள் அல்லது அதை விலக்கிவிடுங்கள். சமயச் சடங்குத் திருமணத்திற்கான விவாகரத்துக்குக் குறிப்பிட்ட அடிப் படைக் காரணங்களை நிர்ணயம் செய்து கொள்ளுங்கள். பதிவுத் திருமணங்களின் விவாகரத்துக்குக் குறிப்பிட்ட காரணங்களை தீர்மானம் செய்துகொள்ளுங்கள். இந்த இரண்டையும் கலப்பதை என்னால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை.

இப்பொழுது தத்து எடுத்துக்கொள்வது சம்பந்தமான அத்தியாயத்தை எடுத்துக் கொள்கிறேன். தத்து எடுப்பது சம்பந்தமான அத்தியாயத்தைக் குறித்து விரிவான விவாதம் தேவை இல்லை என நினைக்கிறேன். நீதிமன்றத் தீர்மானங்கள் வகுத்துள்ள தத்து எடுத்துக்கொள்ளும் சட்டத்தின் அடிப்படை கோட்பாடுகள் கருத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டிருப்பதுடன், பல்வேறு ஜாதியினரிடையே நடைபெறும் திருமணம் சம்பந்தமான சட்டங்களில் ஏற்பட்டுள்ள மாற்றங்களின் விளைவாகத் தேவைப்படும் திருத்தங்களும் செய்யப் பட்டுள்ளன. சில குறிப்பிட்ட ஜாதிகளிலும் சூழ்நிலைகளிலும், ஒரு பையனைத் தத்தெடுப்பதற்கு முன்நிபந்தனையாக, திருமணச் சட்டத்தை அடிப்படையாகக் கொண்டுள்ள பண்டைய விதிகளைக் கைவிடாது, இந்தத் திருமணங்களில் பிறக்கும் குழந்தைகளுக்கு வாரிசுரிமையை ஒத்துக்கொள்வது அர்த்தமற்றது. தத்தெடுப்பதை செல்லதக்கதாகச் செய்யும் எளிய விதியான கொடுக்கலும் எடுத் தலும் மசோதாவில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. தத்தெடுத்த தாயாருக்கும் தத்தெடுக்கப்படும் பையனுக்கும் இடையில் எழும் சட்டத் தகராறுகளை தவிர்க்க சொத்துரிமை விதிகள் ஒழுங்குப் படுத்தப்பட்டுள்ளன. முடிவில்லாத சட்டத் தகராறுகளுக்கு முடிவு கட்ட, சொத்துக்களை பராதீனப்படுத்துவதைத் தடுக்க விதிமுறை கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. பூபன் மோயி வழக்கிலிருந்து தத்து எடுப்பது சம்பந்தமான சட்டத்தின்படி தொடர்ந்து நடந்து கொண்டிருக்கும் ஓயாத வழக்குகளை முடிவுக்குக் கொண்டுவரும் பராதீனப்படுத்துவது சம்பந்தமான விதி ஒன்று சேர்க்கப்பட்டுள்ளது. மயூகா சட்டத்தின் முக்கிய கோட்பாட்டின்படி தத்து எடுப்பதைச் செல்லுபடியாகச் செய்வதற்காக ஓர் அதிகார அமைப்பின் தேவையை உணர்ந்து சட்டம் எளிமையாக்கப்பட்டுள்ளது. மொத்தத்தில் இந்த அவை சாதகமாக பரிசீலிப்பதற்கான எல்லாமே தத்து எடுப்பது சம்பந்தமான அதிகாரத்தில் உள்ளன என்று கூறமுடியும். தத்தெடுப்பின் செல்லும் தன்மைக்கான கணவனின் வெளிப்படையான அதிகாரத் தின் அவசியம், கணவன் அளிக்கும் அந்த அதிகாரத்தின் வீச்சு மற்றும் வரையறைகள், தத்தெடுப்பது குறித்துக் கேள்வி கேட்க

அக்கறையுள்ள நெருக்கமான சபிண்டா உறவினர்களின் சுதந்திரமான சம்மதம், மற்றும் கணவனின் அதிகாரத்தின் பிதிநிதியான மூத்த, இளைய, விதவைகளின் கோரிக்கைகள், தத்தெடுப்பதற்கான அதிகார வரையறைகளை நிர்ணயிப்பது சம்பந்தமான விஷயங்கள் ஆகியவை பிரிட்டீஷ் இந்திய நீதிமன்ற வழக்குகளின் பயனுள்ள ஆதாரங் களாகும். தத்தெடுத்தல் மற்றும் தத்தெடுத்த பையனின் உரிமைகள் பற்றிய சட்டங்கள் எளிமையாக்கப்பட்டுள்ளன என்பதில் சந்தேக மில்லை. மொத்தத்தில் பல்வேறு சமூகங்களுக்கிடையே திருமணங் கள் நடைபெறும் என்று நம்புகிறேன். தத்தெடுப்பது சம்பந்தமான அத்தியாயத்தின் பகுதியாக அது அமைந்துள்ளது, ஏனெனில் பல்வேறு சமூகங்களுக்கிடையே திருமண உறவுகள் சாத்தியம் என்று நீங்கள் சம்மதிக்கும்போது அது சட்டத்தின் பகுதியாக மாறுகிறது. எனவே ஒரு பையன் தத்தெடுப்பதற்குத் தகுதியானவனா என்பதைக் குறித்த இப்பொழுதுள்ள தடைகள் நிச்சயமாக நீங்கிவிடும். கோத்ரம் முறை மறையும் போது தத்தெடுப்பதற்கு சகோத்ரம் ஒரு தகுதி என்ற நிலை எப்படி இருக்க முடியும்? எனவே எளிய மற்றும் தர்க்க ரீதியான நடைமுறைக்கு கொடுப்பது மற்றும் பெறுவது மட்டுமே அவசியம் என்பதைக் காண வேண்டும். இந்த நிலைமைக்கு நாம் உடன்பட்டாக வேண்டும். முதல் அடி எடுத்து வைத்த பிறகு இரண் டாவது அடியை நிறுத்திவிட முடியாது. சட்டமன்றம் ஏற்கெனவே முதல் அடி எடுத்து வைத்துவிட்டது. எனவே அடுத்த அடி வைப்ப தற்குத் தயங்குவதில் அர்த்தமில்லை இந்தச் சூழ்நிலைகளில் தத்து எடுப்பது சம்பந்தமான அதிகாரத்தை அவை சாதகமாகப் பரிசீலிக்க வேண்டுமென்று சிபாரிசு செய்கிறேன்.

மசோதாவின் பிற பிரிவுகளை இப்பொழுது பார்க்கலாம். இதில் பொறுக்குக் குழு உறுப்பினர்களிடமிருந்து மாறுபட்டக் கருத் துக்களைக் கொண்டுள்ளேன். கூட்டுக் குடும்பம் என்ற அமைப்பு சம்பந்தமாக நடவடிக்கைகள் எடுக்கையில் இந்திய விவசாயத் துறையின் பிரச்சினைகள், அதன் எதிர்காலம், வணிகம் அல்லது வர்த்தகத்தைத் தங்கள் முக்கியப் பணியாகக் கொண்டுள்ள சமூகங் களின் பல்வேறு வணிக அமைப்புகள் இதில் முக்கியக் காரணக் கூறுகளாக உள்ளன என்பதைக் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும். சில குறிப்பிட்ட குடும்பங்கள் சில குறிப்பிட்ட நிலங் களை பரம்பரை பரம்பரையாக நீண்டகாலமாக சொந்தமாகக் கொண்டிருப்பதை இந்தியாவின் கிராமப்புற வாழ்க்கை நிலைமை களுடன் அதிகம் தொடர்பு கொண்டுள்ளவர்கள் அறிவர். நீண்ட காலமாக இந்த நிலங்களில் விவசாயம் செய்ய குத்தகை உரிமை

அளிக்கும் முக்கியமான காரணமாக இது அமைகிறது. எனது மதிப் பிற்குரிய நண்பர் திரு. சந்தானம் கிராமப்புற வாழ்க்கையைப் பற்றிக் கூறியதிலிருந்து நான் முற்றிலும் மாறுபடுகிறேன். கூட்டுக் குடும்பம் உடைந்து கொண்டிருக்கிறது என்று கூறுவது சரியல்ல. இந்தியக் கிராமப்புற வாழ்க்கையுடன் எனக்கும் தொடர்புள்ளதை தெரிவித்துக் கொள்கிறேன். சென்னையில், சுமார் 40 ஆண்டுகள் வாழ்ந்திருந் தாலும் நான் ஒரு கிராமவாசிதான். இந்த ஆண்டுகளில் வருடத்திற்கு ஒரு முறை ஒரு மாதமாவது கிராமத்தில் தங்கியிருக்காத ஆண்டு களே இல்லை எனலாம். கிருஸ்துமஸ் நாள்களிலும் கோடை விடுமுறையிலும் கிராமங்களுக்குச் சென்று, கிராம மக்களுடன் கழிக்கிறேன். எனவே இந்தியாவின் கிராமப்புற வாழ்க்கை நிலைமை எனக்குத் தெரியும் என்று கூறுகிறேன். சென்னை மாகாண கிராமங் களின் வாழ்க்கை நிலைமை எனக்குத் தெரியும். புத்தகங்கள் மற்றும் கிராமக் குறிப்பேடுகள் வாயிலாக அல்லாது வேறுவகையில் இந்தியாவின் பிற பகுதியிலுள்ள கிராமப்புற வாழ்க்கை முறை பற்றி எனக்கு சிறிதளவே தெரியும். இந்தியாவின் கிராமப்புற வாழ்க்கை முறையைப் பொறுத்தவரையில் கூட்டுக் குடும்பமுறை உடைந்து வருகிறது என்ற கூற்றை ஏற்றுக் கொள்ள முற்றிலும் மறுக்கிறேன். அதே நேரத்தில் அதாவது ஒரு வம்சத்தில் பிறந்து வேறு கிளை களைச் சேர்ந்தவர்களைப் பொறுத்தமட்டில் முதல் தலைமுறைக்குப் பிறகு கூட்டுக் குடும்பங்கள் உடையும் போக்கு காணப்படுகிறது என்று என் நண்பர் திரு. சந்தானம் கூறுவதை நான் ஏற்றுக்கொள் கிறேன். முதல் தலைமுறையில் சிதையும் போக்குக் கணிக்கப்பட வில்லை. நிச்சயமாகத் தகப்பனார் உயிருடன் வாழும் வரை இது நிகழ்வதில்லை. தகப்பனார் இறந்து குழந்தைகளின் குழந்தைகள் தங்கள் கால்களில் நிற்க ஆரம்பித்தவுடன் கூட்டுக் குடும்பம் சிதைய ஆரம்பிக்கிறது. கொள்கை அடிப்படையில் செயல்படாமல், இன்றைய யதார்த்த நிலைமைகளைக் கணக்கிலெடுத்துக் கொள்ள வேண்டும். அண்மைக்காலம் வரை நானே ஒரு கூட்டுக் குடும்பத் தின் உறுப்பினராக இருந்தேன். கூட்டுக் குடும்ப லட்சியங்களில் எனக்கு இன்றும் நம்பிக்கை உள்ளது. கல்வி போன்ற வாழ்க்கையின் சில அம்சங்களில் கூட்டுக் குடும்ப முறை நல்ல பலனளித்துள்ளது என நிச்சயமாகக் கருதுகிறேன். தங்கள் சகோதரர்கள் கல்வி கற்பதற் காக ஏழை சகோதரர்கள் பலர் பட்டினியால் வாடி இருக்கின்றனர். தங்கள் மருமகன்களின் கல்விக்காக மாமன்மார்கள் பலர் பட்டினி யால் அவதிப்பட்டுள்ளனர். கூட்டுக் குடும்பத்தில் ஒரு விதமான வரையறைக்குட்பட்ட சோஷலிசம் நிலவி வந்தது. அதே நேரத்தில் எந்த அமைப்பும் நீண்ட காலம் நிலை நிற்க முடியாது. சமூக

முன்னேற்றத்திற்கு குறுக்கே நிற்க எந்த அமைப்பையும் நாம் அனுமதிக்கக்கூடாது. இந்தப் பிரச்சினையை எழுப்ப வேண்டிய தருணம் வந்து விட்டதா என்பதே இப்பொழுதுள்ள கேள்வி. கிராமங் களைப் பொறுத்தமட்டில் கூட்டுக் குடும்பம் உடைந்து வருகிறது என்ற கருத்தை நான் ஏற்றுக் கொள்ளவில்லை. இந்தியா, கிராமங் களைக்கொண்ட நாடு என்பதை நாம் ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். கிராமப்புற மக்கள் இன்னும் பெருமளவில் கூட்டுக் குடும்ப முறையையே பின்பற்றுகிறார்கள். கைம்பெண்களுக்கும் மருமகள்களுக்கும் உரிமை அளிப்பதன் மூலம் கூட்டுக் குடும்ப முறைக்கு ஏற்பட்ட தாக்குதல், நிலைமையில் எவ்விதப் பாதிப்பை யும் ஏற்படுத்தவில்லை. விவசாயம் சம்பந்தமில்லாத தொழில் துறைகளில் கூட வாணிபத்தைத் தங்களது முக்கியத் தொழிலாகக் கொண்ட சமூகங்கள் தங்களது குடும்பத் தொழிலாக வாணிபத்தையே தொடர்ந்து நடத்தி வருகிறார்கள். நாட்டின் என் பகுதியில் இவ்வாறு தான் நடைபெற்று வருகிறது. கடந்த நாற்பது ஆண்டுகளாக நாட்டுக்கோட்டை செட்டியார்களிடம் எனக்கு நெருங்கிய தொடர்பு இருந்து வருகிறது. கடந்த ஐந்து பத்தாண்டுகளாகத்தான் அவர்கள் கம்பெனிகளை நிறுவி வருகிறார்கள். வருமான வரி விதிகளி லிருந்து விடுபடுவதற்காகத்தான் வைசியர்களிடையேயோ, நாட்டுக் கோட்டை செட்டியார்களிடையேயோ அல்லது மார்வாரிகளிடை யேயோ கூட்டுக்குடும்ப வாழ்க்கை முறை உடைகிறது என்று சொல்வது சரியல்ல, இந்தச் சட்டமன்றம், அல்லது நாடாளுமன்றத் தில் அமர்ந்துகொண்டு இந்தியாவின் மூலை முடுக்குகளில் உள்ள விஷயங்கள் பூராவும் நாம் அறிந்துள்ளோம் என்று எண்ணிக் கொண்டு அதன் அடிப்படையில் சட்டமியற்றுவதில் எந்தப் பயனும் இல்லை. நாம் பரிசீலிக்க வேண்டியதெல்லாம் நவீன நிலைமை களுக்கு இது ஒத்திருக்கிறதா, மேலும் முன்னேற்றம் அடைவதற்கு இது தடையாக இருக்குமா என்பதுதான். கூட்டுக் குடும்பச் சட்டத் தில் ஏற்படுத்தப்பட்டுள்ள சில மாறுதல்களையும் நீங்கள் கணக்கி லெடுத்துக் கொள்ள வேண்டும். அண்மை ஆண்டுகளில் இறுக்கமான கூட்டு குடும்பச் சட்ட விதிகள் மிகவும் தளர்த்தப்பட்டுள்ளன. கூட்டுக்குடும்ப உறுப்பினர் ஒருவர் தன்னிச்சையான அறிவிப்பின் மூலம் கூட்டுக் குடும்பத்தில் இருந்து பிரிந்து செல்வது ஏற்கெனவே வழக்கத்திலுள்ள சட்டமாகிவிட்டது. இதற்காக எந்த நீதிமன்றத் திற்கும் செல்ல வேண்டிய அவசியமில்லை. கூட்டுக்குடும்பத்தி லிருந்து விலகுவதற்கான விருப்பத்தைக் கூட்டுக் குடும்ப உறுப் பினர் ஒருவர் வெளிப்படுத்தினாலேயே கூட்டுக் குடும்பத்திலிருந்து பிரிவதற்கு அது போதுமானது. எனினும் பலர் கூட்டுக் குடும்ப

உறுப்பினர்களாக இருப்பதற்கு அவர்கள் இந்தக் குடும்ப முறையில் கொண்ட பற்றே காரணம். கூட்டுக் குடும்ப உறுப்பினர் குடும்ப சொத்தில் தன் பங்கை பராதீனப்படுத்த முடியும். தகப்பனார் மற்றும் மகனைப் பொறுத்தவரையில் தகப்பனாரின் கடனுக்கு முழுச் சொத்தும் பொறுப்பாகும். தகப்பனாரின் கடனுக்கு மகன் பொறுப்பாவான். தவறுதலான காரணங்களுக்காக தகப்பனார் கடன் பெற்றார் என்று மகன் தன் பொறுப்பைத் தட்டிக்கழிக்க முடியாது. இந்த மாதிரியான வழக்குகள் வெகு வேகமாகக் குறைந்து வருகின்றன. தவறுதலான காரணங்களுக்காகத் தகப்பனார் கடன் வாங்கினார் என்று கூறி இப்பொழுது தப்பிக்க முடியாது. மேலும் சுய சம்பாத்தியம் சம்பந்தமான சட்டமும் மிகவும் எளிதாக்கப்பட்டுள்ளது. சுயமாக ஒருவன் சொத்துச் சேர்த்தால் அதை அவனே அனுபவித்துக் கொள்ளலாம் என்று பிரிவி கவுன்சில் தீர்மானம் தெளிவாக்கியுள்ளது. எனவே எனது நண்பருக்கு, மாண்புமிகு சட்ட அமைச்சருக்கு நான் கூறிக்கொள்வதெல்லாம் இந்தக் கூட்டுக் குடும்ப முறை இன்றும் செயல்பாட்டிலிருக்கிறது. அடுத்த பதினைந்து, முப்பது, ஐம்பது ஆண்டுகளில் அது உடைந்து போகக்கூடும். திருமணம் மற்றும் இதர விஷயங்கள் சம்பந்தப்பட்ட சட்டத்தில் மாற்றம் ஏற்படுவதன் காரணமாக அது உடையக் கூடும். மக்களின் விருப்பமின்றி அவர்களின் ஒப்புதல் இன்றி மக்களின் பொதுவான உணர்வை கணக்கிலெடுத்துக் கொள்ளாமல் இந்தச் சட்டத்தை ஏன் எடுத்துக்கொள்ள வேண்டும்? இரு விஷயங்களைப் புரிந்து கொள்ளாத ஏதோ ஒரு பழங்காலப் பிறவி என்று என்னை நீங்கள் கருதலாம். காலத்தோடு இந்த நாடும் ஒழுகவேண்டும் என்றுதான் நானும் விரும்புகிறேன். என்னுடைய வேண்டுகோள் எல்லாம், மக்களின் விருப்பத்தை நீங்கள் அறிந்து கொள்ள வேண்டுமென்பதுதான். ''சரி விவசாயச் சொத்துக்கள் சம்பந்தப்பட்டவரை அதில் கைவைக்க மாட்டோம். விவசாயம் சாராத சொத்துக்களில் மாற்றங்கள் செய்வோம்'' என்று வாதிக்கக் கூடும். இந்த மாதிரியான விஷயங்களில் இது ஒரு விதமான சொத்து, அது வேறுவிதமான சொத்து என்று வேறுபாடுகாணுவது எளிதான காரியமல்ல. விவசாயம் சாராத சொத்துக்கள் சம்பந்தப்பட்ட சட்டத்தில் மாற்றம் செய்தவுடன், விவசாயம் சம்பந்தமான சட்டத்திலும் மாற்றங்கள் அவசியமாகத் தொடரத்தான் செய்யும். யூனியனுக்கும் மாகாண அரசுகளுக்கும் அளிக்கப்பட்டுள்ள சட்டமியற்றும் அதிகாரங்கள் விவசாய நிலங்களுக்கும் விவசாயம் சம்பந்தமற்ற நிலங்களுக்கும் வேறுபடுத்திக் காட்டப்பட்டுள்ளன. சில அதிகாரங்கள் மத்திய அரசுக்கும் சில அதிகாரங்கள் மாகாணங்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது தற்செயலான நிகழ்வே. ஆனால் இந்து

வாரிசுரிமைச் சட்டம் இந்தியா முழுமைக்கும் ஒன்றானது என்பதை மறுக்கமுடியாது. வாரிசுரிமை என்பது வெட்டிக் குறைக்கக்கூடிய விஷயமல்ல. வாரிசுரிமையை கூறு போட்டுப் பிரிக்க முடியாது. எனவேதான் இந்தக் கேள்வியை பரிசீலிக்கும்போது விவசாய சொத்துக்கள் மற்றும் விவசாயம் சாராச் சொத்துக்கள் சம்மந்தமான இந்த எல்லா அம்சங்களையும் கணக்கிலெடுத்துக் கொள்ள வேண்டும். சமூகத்தின் பொதுவான நலன்களைக் கருதி கூட்டுக் குடும்ப அமைப்பு முறையில் புரட்சிகரமான மாறுதல் கொண்டு வரத் தருணம் வந்து விட்டதா என்ற கேள்வியை நீங்கள் பரிசீலிக்க வேண்டும். இந்த மசோதாவின் சில அத்தியாயங்களை ஏன் ஒத்தி வைக்கக்கூடாது என்பதைப் பரிசீலிக்கும்படி எனது மாண்புமிகு நண்பர் சட்ட அமைச்சரைக் கேட்டுக்கொள்கிறேன்.

ஐயா, இந்தக் கேள்வியின் வேறொரு அம்சமான மகன்கள் மற்றும் மகள்களின் பிதுரார்ஜித சொத்துரிமை சம்மந்தமாகப் பேச விரும்புகிறேன். நேரடியான சொத்துரிமை சம்மந்தமானது அது. எனக்கு மகன்களும் மகள்களும் இருப்பதால் அதைப் பற்றிப் பேச எனக்கு விசேஷமான உரிமையுள்ளது. விசேஷ உரிமையுள்ளது என்பதை மீண்டும் கூறுகிறேன். உண்மையில் பெரும்பான்மை யினர் பெண்கள்தான், நான்கு மகள்களும் மூன்று பையன்களும் உள்ளனர். எனவே இந்த விஷயம் குறித்து எனக்குப் பேச விசேஷ உரிமை உள்ளது. வழக்குரைஞர் என்ற முறையில் நான் கொஞ்சம் அறிந்தது போக மகன்கள் மற்றும் மகள்களைப் பெற்ற தகப்பனார் என்ற முறையில் எனக்குப் பேச விசேஷ உரிமை உள்ளது. (ஆரவாரம்) இந்தப் பிரச்சினை குறித்துப்பேசும் போது இந்து குடும்பத்தின் பொதுவான கட்டமைப்பைப் பார்க்கும்படி உங்களைக் கேட்டுக் கொள்கிறேன். மூன்று மகன்கள் சொத்தை ஒன்றாக வைத்துக் கொண்டு கூடி வாழ்வது கடினமென்று நீங்கள் கருதினால் வெவ்வேறு சாதிகளை, ஏன், சமூகங்களைச் சேர்ந்தவர்களை மணம் செய்து கொண்ட மகள்கள் ஒன்றாக கிராமத்தில் கூட்டு விவசாயம் செய்ய முடியும் என்று எதிர்பார்க்கிறீர்களா? இந்தச் சூழ்நிலைகளில் தகப்ப னாருடைய சொத்தும் மகன்களது சொத்தும் எந்தவித வேறுபாடு மின்றி மகன்களுக்கும் மகள்களுக்கும் சமமாகப் பிரித்து அளிப்பது தேசத்தின் பொதுவான நலனுக்கு நல்லதா? கேள்வி நீதி சம்பந்தப் பட்டது என்றால், சமத்துவம் சம்பந்தப்பட்டது என்றால், கொள்கை ரீதியான சமத்துவம் சம்பந்தப்பட்டது என்றால் அதற்கு எதிராக நான் ஒன்றும் கூறப் போவதில்லை. ஆனால் சட்டம் எப்பொழுதும் தர்க்கரீதியானதல்ல. அது எப்பொழுதும் முரண்பாடானது என்று

அதற்கு அர்த்தம் அல்ல. ஆனால் அது சமுதாயத்தின் சமூகத்தரம், சமுதாயத்தின் உணர்வுகள், குடும்ப வாழ்க்கை மற்றும் இதர விஷயங்களின் மீதான அதன் தாக்கத்தையும் அது கணக்கிலெடுத்துக் கொள்ள வேண்டியிருக்கிறது. நீங்கள் எழுதுவதற்கு உங்களிடம் இருப்பது எதுவும் எழுதப்படாத சுத்தமான கரும்பலகை அல்ல. எனவே ஓர் இந்து குடும்பத்தில் என்ன நடக்கிறதென்று பார்ப்போம். திரு. சந்தானம் டில்லியிலிருந்து விருப்பு வெறுப்பின்றி பார்வையிட்டுக் கொண்டிருக்கிறார். ஒரு சகோதரன் வீட்டில் திருமண நிகழ்ச்சி ஏதாவது நிகழ்ந்தால் அதில் சகோதரியும் மகளும் முக்கியப் பங்கு வகிக்கிறார்கள். அது தகப்பனாரின் வீடாகக் கருதப்படுகிறது. குடும்ப வீட்டை தனது வீடாக மகன் கருதுகிறான். குடும்பத்தில் (வீட்டு நிர்வாகத்தில்) சகோதரியும் மகளும் எவ்வளவு முக்கியமான பங்கு வகிக்கிறார்கள் என்பதை நாம் எல்லோரும் அறிவோம். தகப்பனாரும் தாயாரும் அமர்ந்திருக்கும்போது ஆரத்தி கொண்டு வருபவர்கள் மகளாகவும் சகோதரியாகவுந்தான் இருப்பார்கள். மகள்களுக்கும் சகோதரிகளுக்கும் அந்த நேரத்தில் நாம் பரிசளிக்கிறோம். எப்படி இருப்பினும் நாமெல்லோரும் இந்துக்கள். நீங்கள் அதை மறந்துவிட முடியாது. குடும்பத்தில் சகோதரியோ அல்லது மகளோ தான் பரிசு பெறும் முதலாவது நபராக இருப்பார்கள். இரண்டாவது விஷயம் என்னவென்றால் மகள்களுக்கும் சகோதரிகளுக்கும் பரிசுப் பொருள்கள் ஏற்பாடு செய்யாத எந்தத் திருமணமும் இந்துக் குடும்பங்களில் நடைபெறாது. மேலும் குழந்தை பெறுவதில் அக்கறை இல்லாதவர்கள் இதை ரசிக்காவிட்டாலும் சீமந்தம் போன்ற ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும் அல்லது முதல் தடவையாக இரண்டாவது தடவையாக கருவுற்றிருக்கும்போதும் குடும்பத்திலுள்ள மகள்கள் அரவணைக்கப்படுகிறார்கள். பொதுவாக பெண் தன் தகப்பனார் வீட்டிற்கோ சகோதரனின் விட்டிற்கோ பிரசவத்திற்கு செல்கிறாள். இரண்டு மூன்று குழந்தைகள் பிறந்த பின்பே அவள் தகப்பனார் வீட்டிற்கோ, சகோதரன் வீட்டிற்கோ பிரசவத்திற்குச் செல்வதில்லை. இதுதான் இன்றைய இந்து குடும்பத்தின் வாழ்க்கை முறையாக உள்ளது. டில்லியில் உள்ள வாழ்க்கை முறையோ, கல்கத்தாவின் வாழ்க்கை முறையோ, மெட்ராஸிலுள்ள வாழ்க்கை முறையோ இந்த மாதிரி விஷயங்களில் வழிகாட்டும் நெறியாக இருக்க முடியாது. இந்தியா முழுவதிலுமுள்ள கிராமங்கள் ஒவ்வொன்றிலும் உள்ள சாதாரண வாழ்க்கை முறைதான் அது. (ஆரவாரம்) துணை சபாநாயகரை நோக்கிப் பேசினாலும் இந்த விஷயங்களைக் கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும் என்று இந்த அவையின் உறுப்பினர்கள் ஒவ்வொருவரையும் மிகவும் பணிவுடன்

கேட்டுக்கொள்கிறேன். தகப்பனாருக்கு எதிராக தகப்பனாரையும் மகனுக்கு எதிராக மகனையும் சகோதரனுக்கு எதிராகச் சகோதரனையும் எதிர்க்கச் செய்வேன்'' என்பது போன்று பைபிளில் வருகிறது. ஒரு குடும்பத்தின் உறுப்பினர்களிடையே கொடிய பகைமையை நம் சட்டம் உருவாக்கிவிடலாகாது. இது தேவையற்ற ஒரு கலகத்தைக் கிளப்பிவிடும். சொத்துரிமை இருக்கும் வரையில் கொஞ்சம் தகராறுகள், பகைமை இருக்கத்தான் செய்யும்.

நம் நாட்டில் போட்டி பூசல்களுக்குக் காரணம் சொத்துதான் என்று ஆதிசங்கரரே எடுத்துரைத்துள்ளார். அது தவிர்க்க முடியாதது. சகோதரனுக்கு எதிராகச் சகோதரனையும், சகோதரனுக்கு எதிராகச் சகோதரியையும், சகோதரிக்கு எதிராகச் சகோதரனையும் கிளப்பி விட்டு இந்த வகையில்தான் இன்றைய இந்தியாவின் குடும்ப வாழ்வை உருவாக்குவோம் என்று குடும்பத் தகராறுகளுக்கு உரம் போடக்கூடாது. வயது வந்த பிறகு தங்கள் திருமணங்களைப் பெண்கள் தாங்களே ஏற்பாடு செய்யும் காலம் வரலாம். இப்பொழுது பல சகோதரிகள் தங்கள் திருமணத்திற்கு சகோதரர்களையே சார்ந்திருக்கிறார்கள். ஏதாவது திருமணத்திற்கு உதவி கேட்டு ஒரு தகப்பனாரோ சகோதரனோ என்னைச் சந்திக்காத வாரம் ஒன்றுகூடக் கழிவதில்லை. இந்த மாதிரியான வேண்டுகோள்களை அனுதாபத்துடன் கவனிக்கும் நான் ஒரு பழமைவாதியாக இருக்கலாம். ஆனால் இதுதான் இந்துக்களின் வாழ்க்கை முறை. நான் ஆங்கில வாழ்க்கை முறைப்படி கல்வி கற்றவனாகக் கருதப்படுபவன். அப்படியிருக்கையில் என்னைப் போல் படிக்காதவர்களைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்? நீங்கள் அதிகம் முன்னேறியவர்களாக இருக்கலாம். நான் குறைந்த அளவு முன்னேற்றம் அடைந்தவனாக இருக்கலாம். ஆனால் நான் இந்திய மண்ணில் பிறந்தவன் என்றும் என்னுடைய சிந்தனைகள் யாவும் இந்திய மண்ணில் வேர்விட்டுள்ளன என்றும் கூறிக் கொள்கிறேன். இந்திய வாழ்க்கையின் சிறப்பியல்புகளான இந்த சிறந்த நன்னெறிகளைக் காப்பாற்றவேண்டுமென்று உங்களை இறைஞ்சுகிறேன். (ஆரவாரம்) நவீன சிந்தனை ஓட்டங்களுக்கு எதிராகவோ, அல்லது முற்போக்கு எண்ணங்களுக்கு எதிராகவோ நான் செல்ல விரும்பவில்லை. தேசிய வாழ்க்கை மற்றும் இன்றைக்கு செயல்படும் சமூக நீரோட்டங்களில் நாம் அக்கறை கொண்டிருப்பது நமது கடமையானாலும், அதே நேரத்தில் இந்தியா முழுவதையும் நாமே பிரதிநிதித்துவப் படுத்துகிறோம் என்று கற்பனை செய்து கொள்வது பயனற்றது எனலாம். படித்த பெண்களிடையே கூட எல்லோரும் ஒரே விதமாகச் சிந்திப்பதில்லை என்று நான் கூற

முடியும். நமது சட்டமன்றத்திலுள்ள பெண்கள் கூட மரியாதைக்குரிய வேறு பல படித்த குடும்பப் பெண்களிலிருந்து மாறுபட்டு சிந்திக் கிறார்கள். சில விஷயங்களில் அவர்களின் சிந்தனை மாறுபடுகிறது.

திருமதி ரேணுகா ரே: (மேற்கு வங்காளம், பொது) : நமது குடும்பங்கள் பெருமைக்குரியவைகள் இல்லையா?

திரு. அல்லாடி கிருஷ்ணசாமி அய்யர்: அவை மிகவும் பெருமைப்படத்தக்கவை. நீங்கள் குறுக்கீடு செய்ததில் எனக்கு மகிழ்ச்சிதான். இதற்குப் பழக்கப்பட்டவன் நான். அவைகளும் அதே போன்று பெருமைக்குரியவைகள்தான். ஆனால் சில மதிப்பிற்குரிய மனிதர்கள் சில விஷயங்களில் மிக முன்னேற்றக் கருத்துகளை கொண்டிருப்பதுடன் பழைமை வாதிகளாகவும் இருப்பதுபோல் அவையும் உள்ளன. நான் என் கருத்துகளைத் தெரிவித்துவிட்டேன். நான் மதிப்பிற்குரியவன் என்பதை நிச்சயமாக நம்புகிறேன். மற்ற வர்கள் எந்த அளவுக்கு மதிப்புமிக்கவர்களோ அந்த அளவுக்கு நானும் மதிப்புக்குரியவன்தான். ஆனால் என் வாழ்க்கை முறை, என் சிந்தனையோட்டம், இந்தப் பிரச்சினைகள் குறித்த என் கண் ணோட்டங்கள் எனக்குச் சமமாக மதிப்பிற்குரியவர்களிடமிருந்து மாறுபட்டுள்ளன. ஏனெனில் நான் வேறுவிதமாக வளர்க்கப்பட் டவன். உதாரணமாக, நமது பிரதமரிடம் அதிக மரியாதை வைத் திருப்பவன், சில விஷயங்களில் அவருக்கு விட்டுக் கொடுக் கிறேன். அதே நேரத்தில் எனது பெருமதிப்பிற்குரிய நண்பர், நமது பிரதமரை அப்படி அழைக்கலாமென்றால் எனது பெருமதிப்பிற் குரிய நண்பரின் நோக்கில் சில பிரச்சினைகளை என்னால் பார்க்க முடியாது. அது வெறும் அணுகுமுறைதான்.

மாண்புமிகு திரு. கே. சந்தானம் (போக்குவரத்து மற்றும் ரயில்வே துறை அரசாங்க அமைச்சர்) : உங்களுடைய உண்மையான தீர்மானந்தான் என்ன?

பண்டிட் லட்சுமி காந்த மைத்ரா : அவர் தம் கருத்துகளை அழகாக எடுத்துரைத்துக் கொண்டிருக்கிறார்.

திரு. அல்லாடி கிருஷ்ணசாமி அய்யர்: அதைக் குறித்து நான் வெட்கப்படவில்லை. மணமாகாத மகள்களைப் பற்றியதுதான் என் கேள்வி. அவர்கள் திருமணத்திற்காக விசேஷ விதி ஏதாவது

கொண்டு வருவதா அல்லது பெண்களின் திருமணத்திற்காக விசேஷ பங்கு ஏதாவது ஒதுக்குவதா என்பதுதான் என் கேள்வி. மகள்கள் தாயாரின் சொத்துக்களையும் மகன்கள் தகப்பனார்களின் சொத்துக் களையும் வாரிசுரிமையாகப் பெறச் சட்டம் வழி வகுக்கலாம். மகள் களைப் பொறுத்தமட்டில், திருமணம் ஆகாதவர்களுக்கு விசேஷ விதி ஒன்று கட்டாயமாக இயற்றப்பட வேண்டுமென்பதை ஏற்றுக் கொள்வதுடன் அதில் மிகவும் ஆர்வமாகவும் உள்ளேன்.

மதிப்பிற்குரிய ஓர் உறுப்பினர்: தாயாரிடமிருந்து வரும் பணத்தைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

திரு. அல்லாடி கிருஷ்ணசாமி அய்யர்: அதைப் பற்றிப் பேசு வதில் பயனில்லை. இந்த நாட்டில் வருமானவரி கட்டும் நபர்களின் எண்ணிக்கையைக் கணக்கெடுத்துப் பாருங்கள்? அதிகம் பேர் இருக்க மாட்டார்கள். இது ஒரு பஞ்சத்தால் வாடும் நாடு. எனவே தாயாருக்கு எந்தச் சொத்தும் இல்லை என்று கூறுவது பயனில்லை. பலர் ஏழை களாகவே உள்ளனர். அவர்களுக்குச் சொத்து இல்லாவிட்டாலும், சமூகப் பொறுப்புகளிலிருந்து அவர்கள் தப்ப முடியாது. சொத்து உள்ளவர்கள் அதைப் பிரித்துக் கொடுக்கலாம், சமூக மற்றும் குடும்பப் பொறுப்புகளை நிறைவேற்றுவதில் உணர்ச்சிபூர்வமிக்க, சொத்தில்லாதவர்கள் அல்லது குறைந்த சொத்துள்ளவர்கள் மீது இது பெரும் பாதிப்பை ஏற்படுத்தக்கூடும். எனவே, நீங்கள் எடுக்கும் எந்த நடவடிக்கையிலும், சமூகப் பொறுப்புகளில் பின்னடைவு ஏற்படாது கவனித்துக் கொள்ள வேண்டும். இதைப் பொறுத்த வரையில் நான் உங்களிடம் மிகவும் கேட்டுக்கொள்வது இதுதான்: என் மதிப்பிற்குரிய நண்பர் டாக்டர் அம்பேத்கரிடமிருந்து நான் மாறுபட்ட கருத்துடையவன். மிக அரிதாகவே நான் அவருடன் கருத்துவேறுபாடு கொள்கிறேன். அவருடைய தாக்கம் எனக்கு அடிக்கடி ஏற்படுவதுண்டு. சில சமயங்களில் என்னுடைய பாதிப்பும் அவருக்குண்டு. நான் தெரிவித்துள்ள சில விமர்சனங்களை அவர் அக்கறையுடன் கவனிப்பார் என்பதில் எனக்கு எந்த சந்தேகமும் இல்லை. அவர் பிடிவாதக்காரர் போல் தோற்றமளிப்பார். ஆனால் நியாயத்திற்குக் கட்டுப்படுவதில் அவர் போல் யாருமில்லை. அவரை நான் நன்கு அறிவேன். இந்த மூன்றாண்டுகளாக அவருடன் நெருங்கிப் பழகியதைப் பெரும் பேறாகக் கருதுகிறேன். கூட்டுக் குடும்ப முறை, மகன்களுக்கும் மகள்களுக்கும் சமமான வாரிசுரிமை சம்பந்தமான என் கருத்துகள் இவையே.

அடுத்த அம்சமான சீதனச் சொத்துகளைப் பார்ப்போம். அதைப் பொறுத்தவரையில் பராதீனப்படுத்துவதற்கான எல்லாக் கட்டுப்பாடுகளையும் நீங்கள் நீக்குவதாக இருந்தால் இந்த அவையுடன் இந்த அவையிலுள்ள எல்லா உறுப்பினர்களும் கொண்டுள்ள கருத்தை ஏற்றுக்கொள்கிறேன். விதவை ஒருவர் செய்த பராதீனம் செல்லாது என்று அறிவிப்பதற்காக பின்னடைவு வழக்குகள், ஒவ்வொரு நீதிமன்றமாக அலைந்துதிரிதல், பல்வேறு சாட்சிகளையும் தயார் செய்தல், தேவையற்ற வழக்குகள் ஆகியவைதான் இதன் பலன்கள். அநாவசியமான வழக்குகளைத் தவிர்ப்பதற்காகவாவது ஒரு விதவை தன் வாழ்நாளில் தன் சொத்துகளை பராதீனம் செய்ய அதிகாரம் அளிக்கப்பட வேண்டும் என்பதே என் கருத்து. ஆனால் எல்லாவித சீதனச் சொத்துக்களையும் இவ்வாறுதான் பராதீனம் செய்யவேண்டுமென்று எடுத்துக் கொள்ளக் கூடாது. அதை சீதனச் சொத்து என்கிறீர்கள்; அத்துடன் வாரிசுரிமையைப் பொறுத்தவரையில் சில நிபந்தனைகளை விதித்துள்ளீர்கள். முழு உரிமைச் சொத்து என்று ஆக்கிய பிறகு அது ஏன் வாரிசுகளைச் சென்றடையக்கூடாது? அதுதான் இப்பொழுதுள்ள கேள்வி. நான் சந்திக்கும் தொண்ணூற்றொன்பது சத இந்துக்களிடம் இந்தக் கேள்வியைக் கேட்கத் தயாராக இருக்கிறேன். விதவை ஒருவர் தமது கணவரிடமிருந்து இறங்குரிமையாகப் பெற்ற சொத்து இது. அது ஒரு முழுஉரிமை பெற்ற சொத்து. அந்த விதவை இறந்த பிறகு அந்தச் சொத்தை அளித்த கணவனின் தாயார் மற்றும் தகப்பனாருக்கு அந்தச் சொத்து செல்வதைவிட அவளுடைய தகப்பனாருக்கும் தாயாருக்கும் அது ஏன் சேரக் கூடாது? இது என் கேள்வி. இந்த நாட்டில் எந்தப் பகுதியில் வேண்டுமென்றாலும் இது சம்பந்தமாகக் கருத்துக் கணிப்பு நடத்தினால் அதன் முடிவு எப்படியிருக்கும் என்பது எனக்குத் தெளிவாகத் தெரிகிறது. என் கருத்துக்கு மாறாக இந்தக் கருத்துக் கணிப்பின் விடை இருக்குமா என்று இந்த அவைக்கு சவால் விடுகிறேன். எனவே ஒருவித சொத்து ஒரு வகை வாரிசுகளுக்கும் இன்னொரு சொத்து இன்னொரு வகை வாரிசுகளுக்கும் சேரக்கூடிய முழு உரிமை பெற்ற இரண்டு வகைச் சொத்துகள் இருக்க முடியுமா என்ற கேள்வியை வழக்குரைஞர் என்ற முறையில் என்னிடம் கேட்டால் ஒரு சீரான நிலைமையை உருவாக்க இருவகை சொத்துக்களுக்கும் ஒரேவித வாரிசுரிமையை ஏன் கொடுக்கக்கூடாது? சமூக உணர்வுகளை தர்க்கரீதியானதென்ற பலிபீடத்தில் பலியிட்டு விடாதீர்கள். சட்டம் எப்பொழுதும் தர்க்கரீதியானதாக இருக்க வேண்டியதில்லை, சட்டம் தர்க்கரீதியானதாக இருக்க வேண்டிய அவசியமுமில்லை. சட்டத்தின் சாரம் தர்க்கமல்ல.

மாண்புமிகு திரு. கே. சந்தானம்: பொதுவாக சட்டம் தர்க்க ரீதியானதாக இருக்க முடியாதா?

திரு. அல்லாடி கிருஷ்ணசாமி அய்யர்: சட்டம் தர்க்கரீதி யானதாக இருக்க வேண்டியது அவசியமில்லை என்பதே என் நண்பர் சந்தானத்துக்கு நான் அளிக்கும் பதில். அது ஏனெனில், சட்டம் என்பது சமுதாயப் பரிணாம வளர்ச்சி மற்றும் சமூக நேரமைவு களின் விளைவுதான். எனவே அது எப்படி தர்க்க ரீதியானதாக இருக்க முடியும்? ஒரு குறிப்பிட்ட திட்டம் அல்லது நியமத்தின்படி சமுதாயம் இயங்குவதில்லை. துரதிர்ஷ்டவசமாக கம்யூனிஸ்டு சமுதாயங் களைத் தவிர மற்ற சமுதாயங்கள் இந்தப் பாதையில் செல்வதில்லை. எனவே, இந்தச் சூழ்நிலைகளில் ஒரு சராசரி இந்துவின் உணர்வு களைக் கணக்கில் எடுத்துக் கொள்ளுங்கள். ஒரு வகையான சீதனச் சொத்திற்கும் மற்றொரு வகைக்கும் வேறுபடுத்திக் காட்டுவது தர்க்கரீதியானது அல்லஎன்று கூறுவது பயனில்லை. ஏன் அந்த சீதனச் சொத்து திரும்பவும் கணவனின் உறவினர்களிடமே சேர வேண்டும்? ஏன் அவளுடைய வாரிசுகளுக்குப் போகக்கூடாது? மசோதாவில் கூட இந்த வழிமுறைதானே செய்யப்பட்டுள்ளது. எனவே பெண்களின் சொத்துகளைப் பொறுத்தவரையில் மாண்பு மிகு சட்ட அமைச்சர், மசோதா சட்டம் ஆவதற்கு முன், மக்களின் பொதுவான உணர்வுகளுக்கும், எதிர்பார்ப்புகளுக்கும் ஏற்ப இந்த விஷயத்தைப் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்வார் என்று நினைக் கிறேன். அண்மைக் காலம் வரை பராதீனம் செய்யும் அதிகாரம் விதவைகளுக்கு இருக்கவில்லை. ஒவ்வொருவரும் ஒரு சொத்தை மரபுரிமையாகப் பெறும்போது அவன் அல்லது அவள் தம் வாரிசு களின் பரம்பரையை ஏற்படுத்துகிறார் என்ற கோட்பாட்டின் அடிப் படையில், மரபுரிமையாகப் பெறப்படும் எல்லா சொத்துக்களும் ஒரேவிதமாகக் கையாளப்பட வேண்டாமா என்பதே கேள்வி. பெண்கள் சொத்தைப் பொறுத்தவரையில் இதுதான் என் வேண்டு கோள். தர்க்கரீதியானவை என்ற ஆதாரத்தை இதுகாறும் தவிர்த்து வந்துள்ளேன்.

ஐயா, கடைசியாக இன்னும் சில வார்த்தைகள் கூறலாமென் றால், தூரத்து வாரிசுகளைப் பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன். முந்தைய மசோதாவைவிட இப்பொழுது அளிக்கப்பட்டுள்ள விதிகள் அதிக முன்னேற்றகரமானவைகள் எனக் கருதுகிறேன். தாயபாக முறையிலிருந்தும் வேறு சில நடைமுறைகளிலிருந்தும் சில விதி களை மசோதா எடுத்துக் கொண்டுள்ளது. தூரத்து வாரிசுகளைப்

பொறுத்தமட்டில் மூல மசோதாவை விட இன்றைய நிலையிலுள்ள மசோதா மிகுந்த முற்போக்கானதாக எனக்குத் தோன்றுகிறது. இங்கும் அங்கும் ஏதாவது குறைபாடுகள் இருந்தால் அதை வெகு எளிதில் சரிசெய்து கொள்ள முடியும்.

காப்பாளர், வாழ்க்கைப் பொருளுதவி பற்றிய அத்தியாயங்களும், இதர அத்தியாயங்களும் பரந்த நோக்குடனும், முற்போக்கு உணர்வுடனும் உருவாக்கப்பட்டுள்ளன. இந்த அவையில் முழு மனதுடனான ஆதரவு அதற்கு அளிக்கப்பட வேண்டும். இங்குமங்குமாக சில மாற்றங்கள் தேவைப்பட்டாலும், இந்த நடவடிக்கைகளின் பிற்பகுதியில் அதை எளிதாக நிறைவேற்றிக்கொள்ள முடியும். மாண்புமிகு சட்ட அமைச்சர் மற்றும் பிரதமரும் இக்காலத்தின் முற்போக்கு சிந்தனை ஓட்டங்களைக் கணக்கிலெடுத்துக் கொண்டு பொது மக்களின் கருத்துகளுக்குச் செவிமடுப்பார்கள் என்ற முழு நம்பிக்கையுடன் மாண்புமிகு டாக்டர் அம்பேத்கர் கொண்டுவந்துள்ள தீர்மானத்தை ஆதரிப்பதுடன் இந்த மசோதாவை இரண்டாவது வாசிப்புக்கு சமர்ப்பிக்கிறேன்.

*டாக்டர் பி.கே. சென் (பீகார், பொது) : ஐயா அவையின் அலுவல் நேரம் மிகக் குறைவாக இருப்பதால் நான் சுருக்கமாகப் பேச வேண்டுமென்பதை நன்கு உணர்ந்துள்ளேன். அதே நேரத்தில் எனக்கு முன்பு பேசிய எனதருமை நண்பர் திரு. அல்லாடி கிருஷ்ண சாமி அய்யர் எழுப்பிய சில கருத்துகளுக்க பதிலுரைக்க வேண்டியுள்ளது. மசோதாவில் கொடுத்துள்ள வரிசைப்படி அவர் விஷயங்களை எடுத்துரைத்தார். முதலில் அவர் திருமணச் சட்டத்தை எடுத்துக் கொண்டார். அதற்கு ஆதரவாகப் பேசினாரா அல்லது எதிர்த்துப் பேசினாரா என்பதை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை என்பதை நான் ஒத்துக் கொள்ளத்தான் வேண்டும். அந்தப் பிரிவைப் பற்றிப் பேசுகையில் தம் பேச்சின் ஒரு பகுதியில் அந்த விஷயத்தைப் பற்றி தமக்கு ஒரு தீர்மானமான கருத்தெதுவும் இல்லை என்று கூறினார். திருமணம் மற்றும் விவாகரத்து சம்பந்தமான சட்டத்தைப் பொறுத்தமட்டில் ஒவ்வொருவரும் ஒரு தீர்மானமான கருத்தைப் பெற்றிருக்க வேண்டும். வேறு எந்தச் சட்டத்தையும் விட திருமணச் சட்டத்தைக் குறித்துத் தான் ஒரு தீர்மானமான கருத்து இருக்க வேண்டும். ஏனெனில் திருமணத்தை நடத்துபவர்களை மட்டும் அது பாதிக்கவில்லை.

★ அ.நி.வி. (சட்ட) டி., தொகுதி IV, பாகம் II, 13 டிசம்பர் 1949 பக்கம் 519-527.

திரு. அல்லாடி கிருஷ்ணசாமி அய்யர் : ஐயா, நீங்கள் புரிந்து கொள்ளும்படி நான் பேசினேனா என்று எனக்குத் தெரியவில்லை. நமக்கு எழுதுவதற்கு சுத்தமான கரும்பலகை ஒன்று இருந்தால் நாம் வேறுவிதமாகச் செயல்பட்டிருப்போம் என்றுதான் நான் கூறினேன். ஏற்கெனவே இந்த அவை எடுத்துள்ள நடவடிக்கைகளை யும் இயற்றப்பட்ட சட்டங்களையும் கணக்கிலெடுத்துக் கொண்டால், திருமணம் சம்பந்தமான பகுதிகளைப் பொறுத்தவரையில் எந்தவித முக்கியமான ஆட்சேபனைகளும் இருக்க முடியாது. திருத்தங்கள் செய்ய வேண்டிய ஒன்றிரண்டு விஷயங்களை என் உரையில் குறிப் பிட்டுள்ளேன்.

டாக்டர் பி.கே. சென் : சமயச் சடங்குகளின் அடிப்படை யிலான திருமணங்களைத் தவிர்த்து என்று நினைக்கிறேன்.

திருமணச் சட்டம் எல்லா அம்சங்களிலும் முற்றிலும் திட்ட வட்டமானதாகவும் வெளிப்படையானதாகவும் இருப்பதுடன் எந்த வித ஐயப்பாட்டிற்கும் இடமளிக்காததாகவும் இருக்க வேண்டும் என்ற காரணத்தினால், சமயச் சடங்குகளின் அடிப்படையில் நடக்கும் திருமணங்களைக் குறித்துச் சில ஆட்சேபனைகள் எழக்கூடும் என்பதை இந்த மசோதா கணக்கிலெடுத்துக் கொண்டுள்ளது என்று நினைக்கிறேன். சில முறைகேடுகள், சில விடுதல்கள், ஏதாவது ஒரு குறிப்பிட்ட சடங்கு நிறைவேற்றப்படாமலிருத்தல் போன்றவை வலியுறுத்தப்படலாம். உதாரணத்திற்கு சப்தபதி சடங்கை எடுத்துக் கொள்ளுங்கள். அது ஒரு முக்கிய அங்கம் என்பது எல்லோருக்கும் தெரியும். ஏழு காலடிகள் எடுத்து வைத்த பிறகே திருமணம் செல்லுபடி யானதாகக் கருதப்படும். உண்மையில் எல்லாவித முறைகேடு களும் திருமணத்திற்கு எதிரான ஆட்சேபமாக வலியுறுத்தப்படும். இக்காரணத்திற்காகத்தான் ஏதாவது சமயச் சடங்குகளின் அடிப் படையில் திருமணம் நடைபெறும் சந்தர்ப்பங்களில் கூட அத் திருமணத்தை ஒரு தரப்பினர் பதிவு செய்ய மசோதாவில் வழிவகை செய்யப்பட்டுள்ளது. ஏனெனில் பின்னால் திருமணத்தின் செல்லுந் தன்மை குறித்து கேள்வி எழக்கூடாது என்பதற்காகத்தான். இது மிகவும் அவசியம் என்று நான் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன். ஏனெனில் அது மணம் செய்து கொண்ட இரு தரப்பினரை மட்டும் பாதிப்பதில்லை, அடுத்த தலைமுறையையும், பிறக்காத தலைமுறை யையும் அது பாதிக்கிறது. அதன் சட்டத் தன்மை இதைப் பொறுத்துத் தான் உள்ளது. எந்தவித முறைகேடுகள் நடந்திருந்தாலும் குழந்தைகள் பிறப்பின் சட்டத்தன்மை மற்றும், அவர்களின் வாரிசுரிமையைக்

காப்பாற்றவும் சில வழிமுறைகள் வேண்டும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அது குழப்பத்தில் போய் முடிந்துவிடக்கூடாது. இதில் எந்தவித கஷ்டமும் இருக்க முடியாது. சமயச் சடங்குகள் அடிப்படை யிலான ஒரு திருமணத்தைச் செல்லுபடியானதாகக் கருதுவதற்கு எந்தச் சடங்குகள் அவசியமானவை என்பதை தெரிந்துகொள்ள வழிகள் உள்ளன. இதுகூட மசோதாவில் கொடுக்கப்பட்டுள்ளது. அதாவது ஒரு குறிப்பிட்ட பகுதியில் திருமணத்திற்கு சில குறிப்பிட்ட சடங்கு கள் அவசியம் என்றால் அதுவும் குறிப்பிடப்பட்டுள்ளது. இத்தகைய சந்தர்ப்பங்களில் அந்தச் சடங்குகளே அந்தத் திருமணத்தின் செல்லுபடி யாகும் தன்மையை நிரூபிக்கிறது. இருப்பினும் இந்தச் சடங்குகளில் சில நிறைவேற்றப்பட்டிருக்கலாம், குறிப்பிட்ட முறையில் அந்த சடங்குகள் நிறைவேற்றப்படாமல் இருக்கலாம். இந்நேரத்தில் என்ன நிகழக்கூடும்? சட்டத்தின் முன் முறைகேடான குழந்தைகளைப் பெற்றவர் என்ற நிலையில் திருமணமான தம்பதிகள் தள்ளப்பட வேண்டுமா? இந்தக் காரணத்திற்காக மட்டுமே திருமணத்தை சட்டத் தன்மையுள்ளதாகச் செய்ய, அதைப் பதிவு செய்ய தரப்புகளுக்கு வாய்ப்பளிக்கப்பட்டுள்ளது.

அடுத்தபடியாக பொதுமக்கள் கருத்து என்ற கேள்விக்கு வருவோம். பெரும்பான்மையான பொதுமக்கள் இந்த மசோதாவைப் பற்றிப் போதிய அளவு தெரிந்து கொள்ளாதிருப்பதைக் குறித்துப் பேசுகிறேன். ஏன் இந்த அவசரம், ஏன் ஓராண்டு, இரண்டு அல்லது மூன்று ஆண்டுகள் காத்திருக்கக்கூடாதா என்ற கேள்வி அடிக்கடி இங்கு எழுப்பப்பட்டுள்ளது. நாம் ஏற்கெனவே போதுமான அளவு காத்திருந்தாகிவிட்டது. ஏன் இன்னும் சிறிது காலம் நாம் காத்திருக்கக் கூடாது? இந்து தொகுப்பு சட்டத்தைத் தயாரிக்கத் தேவைப்பட்டது பதினோரு ஆண்டுகள், அதன் பிறகு கடந்து சென்ற இரண்டு ஆண்டுகள் என்பதல்ல பிரச்சினை. கடந்த நூற்றாண்டிலிருந்தே இது துவங்கிவிட்டது.

1872-ஆம் வருடத்திய III-ஆவது சட்டத்தை அவையின் நினைவுக்குக் கொண்டு வருகிறேன். 1868-ல் வங்காளத்தின் புகழ் பெற்ற சமூகச் சீர்திருத்தவாதி கேஷப் சந்தர் சென்னின் முன்முயற்சி யில் சர் ஹென்றி மெய்ன் சட்டமன்றத்தில் முதன் முதலாக சிறப்புத் திருமணச் சட்டத்தைக் கொண்டுவந்தார். உண்மையில் மீண்டும் பின்னோக்கிச் சென்றால் கடந்த நூற்றாண்டின் ஐம்பதுகளில் விதவை மறுமண மசோதா சட்டமன்றத்தில் விவாதத்தில் இருந்தது.

மாமனிதர் ஈஸ்வர சந்திர வித்யாசாகர் இந்து விதவைகள் மறுமணச் சட்டத்திற்கு பொது மக்களின் ஆதரவைப் பெற பெரும்பாடு பட்டார். அந்த நேரத்தில்தான் நாநூறு பிரமுகர்கள் கையெழுத் திட்ட முக்கியமான விண்ணப்பம் ஒன்று சட்டமன்றத்துக்கு அனுப்பப் பட்டது. தாங்கள் வைதீக இந்துக்கள் என்றாலும் ஒரு குறிப்பிட்ட ஜாதியில் தங்களைச் சிறைப்படுத்திக் கொள்ள விரும்பவில்லை யென்றும் ஜாதிகளுக்கிடையேயான திருமணங்களை ஆதரிப்பதாக வும், ஒருதார திருமணத்தில் நம்பிக்கையுள்ளவர்கள் என்றும், ஒரு தூய்மையான இந்து மதத்திற்கு சில சடங்குகள் மிகவும் அவசியம் என்றும், இதர சடங்குகளை விட்டு விடலாம் என்றும் விண்ணப் பத்தில் குறிப்பிட்டிருந்தனர். எனவே இந்து விதவை மருமணச் சட்டத்தின் விரிவான இந்து திருமணச் சட்டம் ஒன்று நிறைவேற்றப் படவேண்டுமென்றும் சட்டமன்றத்தைக் கேட்டுக்கொண்டது. இந்தத் திருமணச் சட்டத்தில் ஜாதிகளுக்கிடையேயான திருமணங்களுக்கு வகை செய்ய வேண்டுமென அது வலியுறுத்தியது. இது 1856-ஆம் ஆண்டை ஒட்டி நடைபெற்றது. சரியான பிரதிநிதித்துவம் பெற்ற அமைப்பால் இது அனுப்பப்பட்டது. பியரி சந்த் மிட்டர், ராதா நரத் சிக்தர், அபய் சரண் மல்லிக், ராசிக் கிருஷ்ண மல்லிக் போன்ற பிரபல பிரமுகர்கள் இந்த விண்ணப்பத்தில் கையொப்பமிட்டிருந் தனர். இவர்களுக்கும் பிரம்ம சமாஜத்திற்கும் எந்தவித சம்பந்தமும் கிடையாது. இவர்கள் வைதீக இந்துக்கள், இவர்களின் நடவடிக்கை களுடன் பிரம்ம சமாஜத்தின் நடவடிக்கைகளும் தொடர்ந்து கொண் டிருந்தன. பிரம்ம சமாஜத்தினர் ஜாதிகளுக்கிடையேயான திரு மணத்தை அங்கீகரித்திருந்தனர். நியாயம் என்பது நியாயமே. விளைவுகளை எதிர்பாராது நியாயத்தைப் பின்பற்றுவதே அறிவுடைமை என்று அவர்கள் நம்பினர். சட்ட அனுமதி பெறுவதில் கஷ்டம் இருப்பினும் ஜாதிகளை உடைத்தெறிவோம் என்று அவர்கள் கூறினர். பிறகு இந்த நிலைமை எதிர்கால சந்ததிகளின் குழந்தைகளின் நலனுக்காக மாற்றப்பட வேண்டும் என்று அவர்கள் நினைத்தனர். எனவேதான் சர் ஹென்றி மெய்ன் ஒரு மசோதாவை கொண்டு வந்தார். இறுதியில் அதுவே 1872-ஆம் ஆண்டு சிறப்பு திருமணச் சட்டமாக மலர்ந்தது. இந்தச் சட்டம் பிரம்ம சமாஜத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்ததுடன் வேறு பல பகுதியினராலும் வரவேற்கப்பட்டது. இந்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டபின் வேறு பல பிரிவு மக்களுக்கும் இந்தச் சட்டம் விரிவுபடுத்தப்பட வேண்டும் என்ற நோக்கிலும், குறிப்பிட்ட சில பகுதிகளுக்கு எதிரான ஆட் சேபனைகளைத் தவிர்ப்பதற்காகவும் பல திருத்தங்கள் நிறைவேற்றப் பட்டது இதை நிரூபிக்கிறது, இதை நிறைவேற்றியதில் வெவ்வேறு

சமயங்களில் இம்மக்கள் சமுதாயத்தின் மனச்சாட்சிகளாக இருந்தனர். சிறுபான்மை மனச்சாட்சியாக என்றுகூடக் கூறலாம். ஆனால் சிறுபான்மையினருக்கும் மனச்சாட்சி உள்ளது. அந்த சிறுபான்மையினரின் சமூக மனச்சாட்சியும் மதிக்கப்படவேண்டும். ஒவ்வொரு நாட்டிலும் சட்டத்திற்கு, அதன் கண்ணோட்டத்தை நிரூபிப்பதற்கு உதவியாக எப்பொழுதும் சிறுபான்மையினரின் மனச்சாட்சியே முன்னுக்கு வந்துள்ளது. நன்று, ஐயா, இப்பொழுது எந்தப்பிரிவு சிறுபான்மையிலும் எந்தப் பிரிவு பெரும்பான்மையிலும் உள்ளது என்பதை நாம் அறியோம். ஒரு ஜனநாயக அரசியலமைப்பில் எல்லாப் பிரிவு மக்களின் மனச்சாட்சிகளின் நியாயங்களும் மெய்ப்பிக்கப்பட வேண்டும் என்பதைச் சொல்லத் தேவையில்லை. அவர்களின் வாழ்க்கை முறைகளும் சிந்தனைகளும் அடிப்படை விஷயங்களைப் பொறுத்தவரையாவது மதிக்கப்பட வேண்டும். அந்தக் கண்ணோட்டத்தின் அடிப்படையில் நாம் விடை காணப்பட வேண்டிய கேள்வி இதுதான். இந்த மசோதா எந்தக் குறிப்பிட்ட வகையிலாவது எந்தக்குறிப்பிட்ட பிரிவின் மனச்சாட்சியின் மீது திணிக்கப்படுகிறதா? (பாபு ராம் நாராயண் சிங் : ஆமாம்) இதன் மூலம் சிறப்பாக உள்ளதா இல்லையா என்பது பரீட்சிக்கப்படும்.

இப்பொழுது, மசோதாவின் முதல் பகுதியை நாம் பார்ப்போமானால் திருமணம், விவாகரத்து, சட்டப்படியான பிரிவு, காப்பாளர், ஜீவனாம்சம், குழந்தைகளின் பராமரிப்பு ஆகியவைகளை பொறுத்தவரையில், அவை யார் மீதும் திணிக்கப்படுவதாக கருதப்பட முடியாது என்று நான் புரிந்துகொண்டவரையில் என்னால் கூற முடியும். விவாகரத்து தவிர்க்க முடியாது என்ற சந்தர்ப்பங்களில் மட்டுமே இந்தக் குறிப்பிட்ட விதிகளை உபயோகப்படுத்த முடியும். இப்படிப்பட்ட சில வழக்குகள் உள்ளன என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. திருமண உறவு தொடர்வது இரண்டு தரப்புகளுக்கும் பெரும் துயரை அளிக்கும், குடும்பத்தின் சிதைவுக்கு வழி வகுக்கும் என்ற நிலையிலுள்ள வழக்குகள் உள்ள இந்த நிகழ்வுகளில்தான் விவாகரத்து கோரிக்கை எழுகிறது.

ரோகிணி குமார் சௌதுரி (அசாம் பொது) : அதன் பிறகு நடைபெறும் திருமணங்கள் மகிழ்ச்சிகரமாக உள்ளனவா? தெரிந்து கொள்ள விரும்புகிறேன். அவை மோசமாக உள்ளன.

திரு. எல். கிருஷ்ணசாமி பாரதி (சென்னை பொது) : மணம் புரிந்து கொள்ளும் பெண்ணைப் பொறுத்தது அது.

டாக்டர் பி.கே. சென்: இந்தப் பிரச்சினைக்குள் புக நான் விரும்பவில்லை. ஏனெனில், அது ஒரு புள்ளிவிவரப் பிரச்சினை, எவ்வளவு பேர் உண்மையிலேயே மகிழ்ச்சியாக உள்ளனர், எவ்வளவு பேர் உண்மையிலேயே துன்பத்தில் இருக்கிறார்கள் என்பதைக் கணக்கிட வேண்டும். அது ஒரு சரியான அளவுகோலல்ல. தவிர்க்க முடியாத தன்மையே அதற்கான அளவுகோல். கணவன் மனைவி பிரிவு எந்தச் சூழ்நிலையிலும் ஏற்பட முடியாது என்று யாராவது கூற முடியுமா? கற்பனையில்தான் பிரிவு ஏற்படாத சூழ்நிலையைக் காணமுடியும். நாம் நல்லெண்ணத்துடன் அமர்ந்து ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டு இந்த விஷயங்களையெல்லாம் விவாதிக்க வேண்டும். எத்தரப்பின் மீதும் இது கட்டாயமாக இருக்குமா என்பதைப் பார்க்க வேண்டும். இங்கு எந்தவிதக் கட்டாயமும் இல்லை. இது விருப்பத்தை பொறுத்தது. மேற்கொண்டு உங்களால் இணைந்து வழ்வது சாத்தியமில்லை என்று உணர்ந்தால் நீங்கள் நீதிமன்றத்திற்குச் செல்லலாம். நீதிமன்றம் அதை விசாரணை செய்யும். விவாகரத்துக்கு வேண்டிய அல்லது திருமணக் கலைப்புக்கு வேண்டிய எல்லாத் தகுதிகளும் உள்ளன என்று கருதினால் அது பின்னுறுதித் தீர்ப்பாணையை (டிகிரி நிசி) அளிக்கிறது. ஆனால் நாள்தோறும் விவாகரத்து பன்மடங்காக பெருகிக் கொண்டிருக்க வேண்டும் என்ற அவசியமில்லை. அது முற்றிலும் மக்களின் மனப் பண்புகளைப் பொறுத்தே உள்ளது. அமெரிக்காவில் அல்லது இங்கிலாந்தில் அல்லது வேறு சில வெளிநாடுகளில் ஒரு குறிப்பிட்ட போக்கு காணப்படுகிறது என்பதால் அதே போன்ற நிலைமை இந்தியாவிலும் தோன்றும் என்று கூறுவது சாத்தியமில்லாத முடிவாகும் என்பதைக் கூறித்தான் ஆகவேண்டும். (பண்டிட் லட்சுமி காந்த் மைத்ரா. அதே சட்ட நடைமுறைதானே). அதே விளைவுகள் இந்தியாவிலும் தொடரும் என்று நான் நம்பவில்லை.

பண்டிட் லட்சுமி காந்த மைத்ரா: அதைவிட மோசமாகும்.

மதிப்பிற்குரிய ஓர் உறுப்பினர் : மதிய உணவுக்குச் செல்ல நேரமாகவில்லையா?

திரு. துணை சபாநாயகர்: மதிப்பிற்குரிய உறுப்பினர் விரைவில் முடித்துவிடுவார் என நினைக்கிறேன்.

டாக்டர் பி.கே. சென்: விரைவில் முடிக்க நான் முயற்சிக் கிறேன், ஆனால் இப்பொழுதுதான் ஆரம்பித்துள்ளேன்.

மதிய உணவிற்காக இரண்டரை மணிவரை அவை ஒத்தி போடப்பட்டது.

மதிய உணவிற்கு பிறகு அவை மீண்டும் இரண்டரை மணிக்குக் கூடியது. திரு. துணை சபாநாயகர் (திரு. எம். அனந்தசயனம் அய்யங்கார் தலைமை தாங்கினார்.)

டாக்டர் பி.கே. சென் : ஐயா, மதிய இடைவேளைக்காக இந்த அவை கலைந்த போது விவாகரத்து மற்றும் இதர விஷயங்கள் சம்பந்தமான விதிமுறைகள் வெவ்வேறு விருப்பத்தைப் பொறுத்தே செயல்படுத்தப்படும் என்பதை விளக்கிக் கொண்டிருந்தேன். இந்த விவாதத்தின்போது ஏன் வெளிநாடுகளில் விவாகரத்துக்கள் இவ்வளவு அதிகமாக உள்ளன என்ற கேள்வி என்னிடம் கேட்கப்பட்டது.

திரு. மகாவீர் தியாகி (உ.பி. பொது) : ஓர் ஒழுங்குப் பிரச்சினை, ரயில்வே மற்றும் போக்குவரத்துத்துறை ராசாங்க அமைச்சர் மட்டும் அரசு தரப்பில் அமர்ந்திருக்கிறார். விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட மசோதா ரயில்வே அல்லது போக்குவரத்துத் துறை சம்பந்தமானது அல்ல. ஐயா சட்ட அமைச்சரை தயவுசெய்து அழைக்கிறீர்களா?

திரு. துணை சபாநாயகர்: விரைவில் சட்ட அமைச்சர் வந்து விடுவார் என உறுதியாக நம்புகிறேன். அது வரை அவையில் உள்ள மற்ற அமைச்சர் குறிப்பு எடுத்துக்கொள்வார்.

திரு. அஜித் பிரசாத் ஜெயின் (உ.பி. பொது): இது அவையை அவமதிப்பதாகும் என்றே கொள்ளலாம்.

திரு. துணை சபாநாயகர் : இது வரை 36 உறுப்பினர்கள் எனக்கு சீட்டு அனுப்பியுள்ளார்கள்.

திரு. எம். திருமலராவ் (சென்னை பொது) : எங்களது பெயர்கள் அனுப்பப்படவில்லை. எங்களது சீட்டுகள் இங்கே கிடக்கின்றன.

திரு. மகாவீர் தியாகி : மேலும் பலர் உங்கள் பார்வைக்காகக் காத்திருக்கிறார்கள். அவர்கள் சீட்டுகள் அனுப்பவில்லை.

திரு. துணை சபாநாயகர் : எனவே நிலைமை என்னவென்றால் 36 சீட்டுகளைக் கொடுத்தவர்களைத் தவிர வேறு பலரும் என் பார்வைக்காகக் காத்திருக்கிறார்கள். இப்பொழுது இருக்கும் நிலையில் இந்த மசோதாவுக்கு நேற்றும் இன்றும் மட்டுமே அரசாங்கத்தால் ஒதுக்கப்பட்டுள்ளது. நான் அரசின் வேலை நிலைமைகளை அறியேன். விவாதத்தின் குறள்வளையை நெறிக்க நான் விரும்பவில்லை. ஆனால் இந்த வேகத்தில் நாம் செல்ல முடியாது என நினைக்கிறேன். எனவே மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் தங்கள் பேச்சுக்களை முடிந்த அளவு பதினைந்து நிமிடங்களாகக் குறைத்துக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மதிப்பிற்குரிய ஓர் உறுப்பினர் : சாத்தியமில்லை. நேரத்தை அதிகமாக்க அரசுக்கு சிபாரிசு செய்யுங்கள்.

திரு. ஆர்.கே. சித்வா (ம.மா. மற்றும் பேரார் பொது) **:** தங்களுடைய பேச்சைப் பத்து பதினைந்து நிமிடங்களில் முடித்து கொள்வதில் நம்பிக்கையுள்ள உறுப்பினர்களுக்கு முன்னுரிமை தரப்படும். இப்படிப்பட்ட உறுப்பினர்கள் நிறைய உள்ளனர் என்பதை அறிவேன்.

திரு. எல். கிருஷ்ணசாமி பாரதி : ஆனால் அவர்கள் தங்கள் சொன்ன சொல்லை காப்பாற்றுவார்களா? அதுதான் பிரச்சினை.

திரு. ஆர்.கே. சித்வா: நான் தீர்மானமாக உறுதி மொழி அளிக்கிறேன்.

திரு. விஸ்வநாத தாஸ் (ஒரிஸா பொது) **:** இந்தத் தீர்மானத்தின் விவாதத்திற்கு அவைக்கு முழுவாய்ப்பு அளிக்கப்படும் என்று மாண்புமிகு சபாநாயகர் உறுதி அளித்ததை உங்கள் கவனத்திற்குக் கொண்டு வரலாமா? ஓர் உறுப்பினருக்கு பத்து பதினைந்து நிமிடம் மட்டுமே நீங்கள் அனுமதிப்பது துரதிர்ஷ்டவசமே. சாதாரண மசோதாவை விட இது முற்றிலும் மாறுபட்ட ஒன்றாகும். இது கோடிக்கணக்கான மக்களின் பொருளாதார மற்றும் சமூக வாழ்வு சம்பந்தமானது. இந்தச் சூழ்நிலைகளில் மாண்புமிகு அவைத் தலைவரால் அளித்த வாக்கை உறுதியாகப் பின்பற்றுங்கள் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. எல். கிருஷ்ணசாமி பாரதி: இப்பொழுது இவர்தான் அவைத்தலைவர். அவர் தீர்மானிக்க முடியும்.

திரு. துணை சபாநாயகர் : அவைத்தலைவர் தற்பொழுது இருக்கையில் இல்லாதது துரதிர்ஷ்டவசமானதுதான். விவாதத்தை நான் கட்டுப்படுத்த விரும்பவில்லை. இந்த விவாதத்தில் பங்கு கொள்ள விரும்பும் உறுப்பினர்கள் ஒவ்வொருவருக்கும் வாய்ப் பளிக்க ஒரு குறிப்பிட்ட காலக் கெடுவுக்குள் பேசி முடிக்குமாறு ஆலோசனை கூறுகிறேன். அதை மதிப்பிற்குரிய உறுப்பினர்களின் மேலான முடிவுக்கே விட்டு விடுகிறேன். பதினைந்து நிமிடங் கள் என்பது மீறக்கூடாத எல்லையல்ல. ஒரு நிமிடம் கூடவோ குறையவோ ஆனால் பாதகமில்லை. அதற்கு அதிகமானால் - அரசு அனுமதித்தால் கூட அவர்கள் அனுமதிப்பார்களா இல்லையா என்பதை அறியேன் - விவாதத்தை ஒரு நாள் அதிகரித்தால்கூட பேச வேண்டிய உறுப்பினர்களின் எண்ணிக்கையை கணக்கிலெடுத்துக் கொண்டால் எல்லோருக்கும் சந்தர்ப்பம் அளிக்க சாத்தியமிருக்காது என அஞ்சுகிறேன்.

பண்டிட் பாலகிருஷ்ண சர்மா (உ.பி. பொது) : அடுத்த கூட்டத் தொடருக்கு அதை வைத்துக் கொள்ளுங்கள்.

திரு. துணை சபாநாயகர் : அது என் கைகளில் இல்லை.

திரு. எஸ். நாகப்பா (மெட்ராஸ் பொது) : ஒன்றிரண்டு மணி நேரம் அதிகமாக அமரக்கூடாதா?

திரு. துணை சபாநாயகர்: இப்பொழுது பதினைந்து நிமிடங் களுக்குள் தங்கள் பேச்சை முடிக்கக் கூடியவர்கள் அப்படியே செய்யட்டும். அதிக நேரம் வேண்டும் என்று நினைக்கும் உறுப்பினர் கள் அதிக நேரத்தை எடுத்துக்கொள்ளட்டும்.

திரு. எம். திருமலை ராவ் : பேச்சின் தன்மையை கவனித்து வாதங்கள் திரும்பத் திரும்பக் கூறப்படும் போது அந்த வாதங்களைத் திரும்பக் கூறவேண்டாம் என்று பேச்சாளரிடம் கூறலாம்.

திரு. துணை சபாநாயகர் : மிக நன்று, டாக்டர் சென்.

திரு. எச்.ஜி. காண்டேகர் (ம.மா. மற்றும் பேரார்: பொது) : இன்னும் 21/2 மணி நேரந்தான் உள்ளது. ஒவ்வொருவரும் பதினைந்து நிமிடம் பேசினாலும் பத்து பேச்சாளர்கள் மட்டுமே பேச முடியும். மசோதாவைக் குறித்துப் பேச விருப்பம் தெரிவித்த மற்றவர்களின்

நிலை என்ன? ஒன்றிரண்டு தினங்கள் விவாதத்தை தொடர நீங்கள் அரசிடம் அனுமதி கேளுங்கள். நாடு முழுவதுமே ஆழ்ந்து கவனித்துக் கொண்டிருக்கும் முக்கிய நடவடிக்கை இது. இதுகுறித்து முழு விவாதம் நடைபெற வேண்டும். அதற்குப் பிறகே ஏற்றுக்கொண்ட வடிவில் இந்த மசோதா நிறைவேற்றப்பட வேண்டும்.

திரு. துணை சபாநாயகர் : இந்த அவையின் நடவடிக்கைகளும் மதிப்பிற்குரிய உறுப்பினர்களின் ஆலோசனைகளும் அரசுக்குத் தெரிவிக்கப்பட்டு, அரசு அதைத் தன் கவனத்தில் எடுத்துக்கொள்ளும். டாக்டர் சென் பேச்சைத் தொடரலாம்.

டாக்டர் பி.கே. சென் : ஐயா சுருக்கமாக பேசுவதே விவேகமான செயல் என்பதை நன்கு உணர்வேன். ஆனால் சில நேரங்களில் சுருக்கமான உரை புத்திசாலித்தனமாகாது. ஏனெனில் விஷயத்தைத் தெளிவாகக் கூறமுடியாது. எனவே தெளிவற்றதும் முடிவற்றதுமான பேச்சைக் கேட்பதால் அவையிலுள்ள எவருக்கும் அதனால் பயனில்லை. எனவே விவரங்களுக்குள் செல்லாமல் அடிப்படை விஷயங்களை மட்டும் குறிப்பிடப் போகிறேன்.

விவாகரத்துக்கு அனுமதி அளிப்பதன் மூலம் மற்ற நாடுகளைப் போல இந்நாட்டிலும் அதிக எண்ணிக்கையிலான விவாகரத்துக்கள் நிகழ்ந்து விடாதா என்ற கேள்வியைக் குறித்துதான் அவையில் பேசுகையில் குறிப்பிட்டேன். ஒரு நாட்டின் அறநெறிகளின் தரத்தைப் பொறுத்துத்தான் விவாகரத்துக்களின் எண்ணிக்கை இருக்கும் என்பதே என் பதிலாக இருந்தது, இருக்கிறது. முற்றிலும் தவிர்க்க முடியாத அவசியமான நேர்வுகளில் மட்டுமே தரப்புகள் விவாகரத்துக் கோரவும், அவசியம் இல்லாத நேர்வுகளிலும் விவாகரத்துக்கு காரணம் இருப்பதாக ஜோடிக்கப்பட்டுள்ள விவாகரத்தைக் கோருவதைக் குறித்து உள்ளார்ந்த வெறுப்பும், விருப்பமின்மையும், இகழ்ச்சியும் கொண்ட ஒரு சமூகம் உருவாக்கப்பட்டிருக்கலாம். இந்நாட்டில் பல ஆண்டுகளாக விவாகரத்து வழக்கத்திலிருக்கும் பரோடாவிலும் தென் இந்தியாவின் சில பகுதிகளிலும் இந்த அனுபவம் பரீட்சித்து பார்க்கப்பட்டுள்ளது. பரோடாவில் இதுவரை மூன்று வழக்குகளே நடந்துள்ளன. அதுவும் கடந்த இருபது ஆண்டுகளில் என்று என்னிடம் கூறப்பட்டுள்ளது. அந்தக் குறிப்பிட்ட சமுதாயத்தில் நிலவிலுள்ள அறநெறி கோட்பாடுகள் மற்றும் சமூகச் சூழ்நிலைகள்தான் விவாகரத்து வழக்குகளின் எண்ணிக்கையைத்

தீர்மானிக்கிறது என்பதை மீண்டும் தெரிவித்துக் கொள்கிறேன். எனவே, சமுதாயத்தை சட்டம் உருவாக்குவதில்லை. விவாகரத்துக்கு அவசியமான வழக்குகளுக்கு அனுமதியளிக்க வேண்டிய நேர்வுகளில் சட்டம் அதற்கு அனமதி அளிக்கிறது. மசோதாவில் திருமணச் சட்டங்கள் எடுத்துரைக்கப்பட்ட பகுதியில் நான்கு அம்சங்கள் உள்ளன. முதலாவது ஜாதிகளுக்கிடையேயான திருமணங்கள் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. இரண்டாவதாக, விவாகரத்துக்கான வழி முறைகள், மூன்றாவதாக ஒருதார வழக்கம் வலியுறுத்தப்பட்டுள்ளது. இவைகளெல்லாம் 1872-ஆம் ஆண்டு III-ஆவது சட்டத்தில் இடம் பெற்றுள்ளவைதான். எனவே இந்த விஷயங்களை முதன் முறையாக அறிமுகப்படுத்தியது இந்து தொகுப்புச் சட்டம் அல்ல. கடந்த நூற்றாண்டின் ஐம்பதுகளில் நான் ஏற்கெனவே கூறியபடி கிளர்ச்சிகள் எழுந்தன, அதிலிருந்து கிளர்ச்சிகள் தொடர்ந்து கொண்டிருக்கின்றன. கேஷப் சந்தர் சென் தலைமையில் பிரம்ம சமாஜமே ஜாதிகளுக்கு எதிரான புனிதப் போராட்டத்தை துவக்கியது. அந்த நேரத்தில் பிரம்ம சமாஜத்தினர் எல்லா வகையிலுமான கொடுமைகளுக்கும், அவமானங்களுக்கும், சமூகத்திலிருந்து தள்ளி வைத்தல் போன்ற துன்புறுத்தல்களுக்கும் ஆளாக வேண்டியிருந்தது. ஜாதி ஒழிக்கப்பட வேண்டும் என்பதை இன்று நாம் எல்லோரும் ஏற்றுக் கொண்டுள்ளோம், எனவே இந்த மசோதாவில் ஜாதிகளுக்கிடையேயான திருமணம் சம்பந்தமாகக் கொடுக்கப்பட்டுள்ள விதிமுறைகள் குறித்து எந்தவித எதிர்ப்பையும் எழுப்பத் தேவையில்லை. ஜாதியை ஒழிக்க வேண்டுமென்பதற்கு ஆதரவாக பெரும்பான்மையினர் என்று கூற முடியாததெனினும், அதிக அளவிலான பொதுமக்களின் கருத்து உள்ளது என்பதில் எந்தவித ஐயப்பாடும் இல்லை. இல்லையென்றால் இந்த அரசியல் சாசனத்தில் சேர்த்துள்ள விதிகளின் பயன்தான் என்ன? ஜாதிகளுக்கு இனி இடமில்லை. இந்த நிலையை நாம் மேற்கொண்டால் அப்பொழுது ஜாதிகளுக்கிடையேயான திருமணம் பற்றிய விதிகளைப் பொறுத்த வரையில் எந்தவித ஆட்சேபனையும் இருக்க முடியாது.

ஒருதார திருமண முறைப் பற்றியும் இதே கண்ணோட்டம் தான் வேண்டும். இருதார மற்றும் பலதார திருமணங்களுக்கு மக்கள் ஆதரவு ஏதாவது இருக்கிறதா என்பதைப் பற்றி எனக்குத் தெரியாது. தனிப்பட்ட சில நிலைமைகளில் அவை நிகழ்ந்திருக்கலாம். அது முற்றிலும் மாறுபட்டது. மக்கள் கருத்து முழுவதும் ஒருதார மணத்துக்கே ஆதரவாக உள்ளது என்று எந்தவிதத் தயக்கமும் இன்றி

தெரிவித்துக் கொள்கிறேன். நான் ஏற்கெனவே கூறியபடி இந்த மசோதாவில் அது பற்றிக் குறிப்பிட்டுள்ளதைப் பொறுத்தவரை எந்தவித ஆட்சேபனையும் இல்லை. விவாகரத்துக்கான அனுமதி எந்தவித ஆட்சேபனையையும் ஏற்படுத்த முடியாது. ஏனெனில் விவாகரத்துத் தேவைப்படும் துரதிர்ஷ்டமான நேர்வுகளில் அதைத் தேர்ந்தெடுக்க அனுமதி அளிக்கும் விதி மிகவும் அவசியமானது.

ஐயா, சட்டத்தில் மாற்றம் ஏதும் இருக்கக் கூடாதா என்ற விஷயத்துக்கு வருவோம். (இதைப் பற்றி நான் பேசியபோது) சாஸ்திரத்தின் அடிப்படையிலான சட்டங்களைக் கண்டிப்பான முறையில் பின்பற்றப்பட வேண்டும் என்று சொல்லப்பட்டது. அதிலிருந்து எந்தவித மாற்றங்களும் இருக்கக்கூடாது என்று கூறப்படுகிறது. அது குறித்து இந்த அவையில் பல மணி நேரங்கள் விவாதங்கள் நடைபெற்றன. சாஸ்திரச் சட்டங்கள் முற்றிலும் இறுதியானவை, மாற்றப்படமுடியாதவை, மீறப்பட முடியாதவை என வலியுறுத்திக் கூறப்பட்டது. உங்களால் அதை மாற்ற முடியாது என்ற கூறப்பட்டது. ஐயா, சாஸ்திரச் சட்டம் என்றால் என்ன என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். உண்மையாகப் பார்த்தால் நமது சாஸ்திரங்களில் மாற்றங்களுக்கு வழிமுறைகள் உள்ளன. எப்பொழுதும் மாற்றங்களும் நிகழ்ந்துள்ளன. இல்லையென்றால் இவ்வளவு எண்ணிக்கையிலான ஸ்மிருதிகளின் அவசியந்தான் என்ன? மனிதனின் செயல்பாடுகளுக்கான நான்கு ஆதாரங்களை நான்கு விதிமுறைகளை மனுவின் பிரபல கட்டளையில் காணலாம்.

श्रतिः स्मृतिः सदाचारः स्वस्य च प्रियमात्मन।
एतश्चतुर्विध प्राहः सक्षाद्धमस्य लक्षणं॥

இதை மொழி பெயர்த்தால் இவ்வாறு பொருள்படும் **ஸ்ருதி, ஸ்மிருதி,** நேர்மையான மனிதர்களால் உருவாக்கப்பட்ட நடைமுறை வழக்கங்கள் ஒருவனின் **அந்தராத்மா**வுக்குத் திருப்தியானவைகள். இவைதான் மனித நடவடிக்கைகளுக்கான நான்கு வகை விதி முறைகள்; அல்லது ஏற்றுக்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் என்று பொருள்படுகிறது. இந்த நான்கு விதி முறைகளில் ஆத்மதிருப்தியும் உள்ளடங்கியிருக்கிறது. இங்கு மனச்சாட்சியின் திருப்தி என்பது ஒரு தனிப்பட்ட நபரின் மனச்சாட்சி மட்டுமின்றி சமூக மனச்சாட்சியையும் உள்ளடக்கியுள்ளது எனக் கருதுகிறேன். நாம் வாழ்கின்ற கால சமுதாயத்தின் மனச்சாட்சியும் மதிக்கப்பட வேண்டும். அந்த அளவுகோலின் மூலம்தான் நமது நடவடிக்கைகளும் தர்மமும்

அளவிடப்பட வேண்டும். சட்டங்கள் இயற்றப்படும் அடிப்படைகளில் இதுவும் ஒன்றாகும். இந்த கோட்பாட்டின் அடிப்படையில் தான் சாஸ்திரியச் சட்டம் இதுகாறும் பல மாற்றங்களை அடைந்துள்ளது. **பராசர ஸ்மிருதி** அல்லது **நாரத ஸ்மிருதி**யில் விதவைகளின் மறுமணத்திற்கும் வேறு பல புரட்சிகரமான விஷயங்களுக்கு வழிவகை செய்யப்பட்டுள்ளதாக தமது துவக்க உரையில் எனது மதிப்பிற்குரிய நண்பர் சட்டத்துறை அமைச்சர் எடுத்துரைத்தார். எப்படித்தான் அவர்கள் இந்நிலைக்கு வந்தனர்? எப்படி அவர்கள் தடைகளை கடந்து அவற்றை உடைத்து புரட்சிகரமானவற்றை ஆரம்பித்தனர்? மிக உயர்ந்த கட்டளைகளின்படி **ஸ்ருதி, ஸ்மிருதிகள்** தவிர வேறு பல ஆதாரங்களும் சட்டத்திற்கு இருந்தன, ஆத்ம போதத்திற்கு இட்டுச் செல்லும் வாழ்க்கை முறைகளை நன்குணர்ந்த சாதுக்கள் மற்றும் மகான்களின் வாழ்க்கை நெறி முறைகளையும் எடுத்துக்கொள்ள வேண்டும். இவர்கள்தான் நம் வாழ்க்கை நெறிமுறைகளுக்கு வழிகாட்டிகளாக விளங்கியவர்கள். இந்த நெறி முறைகளை நாம் பின்பற்ற வேண்டும். அவை சாஸ்திரியமானதல்ல. அவை எந்த ஒரு குறிப்பிட்ட ஸ்ருதி அல்லது ஸ்மிருதியை சேர்ந்திருக்க வேண்டிய அவசியமில்லை. தனிப்பட்ட மற்றும் சமூக வாழ்க்கை நெறிமுறைகளை ஒழுங்குபடுத்துவதற்காக உறுதியுடன் உருவாக்கப்பட்டவை அவை. அது அவ்வாறுள்ளதால், சட்டம் உருவாக வேண்டிய முறை அதுவென்றால், பொதுமக்களின் கருத்து பலமாக இருப்பதாக நம் உணரும்போது, சமூகத்தின் மனச்சாட்சி அல்லது ஒரு குறிப்பிட்ட அதன் பகுதியின் மனச்சாட்சி - சிறுபான்மை பிரிவாக இருக்கலாம் என்று வைத்துக் கொள்வோம். ஒரு குறிப்பிட்ட வாழ்க்கை நெறி முறையை பின்பற்ற சட்ட அனுமதி தேவை என ஆணையிடும்போது சட்டம் அவர்களின் உதவிக்கு முன்வந்து அது அப்படி இருக்க வேண்டும் எனப் பணிக்கிறது. அதுவே நம் அடிப்படையாக இருப்பின் சட்டத்தில் எந்த வித மாற்றமும் இருக்க முடியாது என்று கூறுவது இத்தருணத்தில் முடியுமா? நம் சாஸ்திரீய சட்டங்கள் மாற்ற முடியாதவை என்று கூற முடியுமா? அவை மாற்ற முடியாதவையும், திருத்த முடியாதவையும் மீற முடியாதவையும் என்றிருந்தால் இந்த முன்னேற்றமே நிகழ்ந்திருக்க முடியாது. சட்டம் மாற்றத்திற்குட்படாமல் தேங்கிக்கிடந்தது என்று கூறுவது நமது சட்டங்களை உருவாக்கியவர்களுக்கு நாம் அளிக்கும் மோசமான பட்டமாகும். மாறாகச் சிறுபான்மையினராக இருந்தாலும் சரி அல்லது பெரும்பான்மையினராக இருந்தாலும் சரி அந்தப் பகுதியினர் கொண்டிருக்கும் கருத்துகளை மிதித்துத் துவைத்து விடக்கூடாது என்று கூறும் தைரியத்தை நாம் பெறவேண்டும். ஒரு

குறிப்பிட்ட விஷயத்தைப் பற்றிப் பலமான கருத்து இருக்கும் பட்சத்தில் அதை அனுமதிக்கச் சட்டம் முன்வர வேண்டும்.

ஐயா, அடுத்ததாக மற்ற அடிப்படையான விஷயங்களுக்கு வருகிறேன். இந்த மசோதா சம்பந்தமாக வேறு என்ன முக்கியமான ஆட்சேபனைகள் எழுந்துள்ளன? மிதாக்ஷ்ரா மற்றும் தாயபாக சொத்துச் சம்பந்தமாகத்தான் அவை உள்ளன. இம்மாதிரியான கேள்விகளை இத்தருணத்தில் எழுப்புவது சரிதானா என்பதை நாமே கேட்டுக்கொள்வோம்? கூட்டுக் குடும்ப முறைக்கு சில சிறப்பம்சங்கள் இருந்தன. கடந்த காலத்தில் அதன் புகழ் ஓங்கி இருந்தது. அதை யாரும் மறுக்க முடியாது. அண்மை காலங்களில் கூட்டுக் குடும்ப முறையின் கொடுமை பெரும்பாலான மக்களுக்கு சகிக்க முடியாததாக இருப்பதாக எனக்குத் தோன்றுகிறது. குடும்பத்தில் பொருளீட்டும் நபர்களை, சோம்பேறிகள் உறிஞ்சிப் பிழிகிறார்கள் என்று அவர்கள் உணர்கிறார்கள். நமக்கு ஆதரவாகக் குடும்பம் இருப்பதால் நாம் ஏன் உழைத்துச் சம்பாதிக்க வேண்டும் என்று பலர் நினைக்கின்றனர். நமக்கு ஆதரவாகக் குடும்பம் இருக்கும் போது நாம் சம்பாதித்துக் கஷ்டப்படுவதில் என்ன பயன்? தங்களுடைய வேர்வையை சிந்தி குடும்பத்தில் சிலர் பொருளீட்டுவதை சோம்பேறிகளான குடும்ப உறுப்பினர்கள் சிலர் நன்கு அனுபவிக்கின்றனர். அவர்கள் தாராளமாகச் செலவு செய்பவர்களாகவும் உள்ளனர்.

டாக்டர் பி.எஸ். தேஷ்முக் (ம.மா. பேரார் பொது) : அவர்கள் எப்பொழுதாவது குறை ஏதாவது கூறியுள்ளார்களா?

திரு. எல். கிருஷ்ணசாமி பாரதி: ஆம் அவர்கள் கூறியுள்ளார்கள். இந்தச் சூழ்நிலையில் அது இயற்கூறாக உள்ளது.

டாக்டர் பி.கே. சென்: அவர்கள் புகார்கள் செவிமடுக்கப்பட்டால் நிச்சயமாக அது வேறு விஷயமாக இருந்திருக்கும். ஆனால் அவர்கள் குடும்ப உறுப்பினர்களாக இருந்தால் புகார் செய்ய எந்த விதச் சந்தர்ப்பமும் இருக்காது. அவர்கள் குறைகூற வாய்ப்பளிக்கும் வழி ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. அதாவது தாங்கள் குடும்பத்திலிருந்து பிரிந்து செல்வதை வெளிப்படுத்துவதுதான் அந்த வழி. இப்பொழுது உண்மை நிலைமை என்ன? குடும்ப ஒற்றுமை எவ்வளவு பலமாக இருந்தாலும், தனிப்பட்ட உறுப்பினர் எவரும் முன்வந்து தாம் பிரிந்து செல்ல விரும்புவதைத் தெரிவிக்கலாம்.

சட்டத்தின் கண்முன் பிரிந்து செல்லும் அந்த விருப்பம் உடனடியாக பிரிவை ஏற்படுத்தும். அப்பொழுது குடும்பத்தின் முழுமைத்தன்மை எங்கே இருக்கிறது? மிதாக்ஷரா குடும்ப அமைப்பு என்ன ஆகிறது? தற்போதைய நீதிமன்ற முடிவுகளின்படி பிரிந்து செல்ல வேண்டு மென்ற சிறிய விருப்பத்தை தெரிவித்தால் அந்த விருப்பம் பிரிவை ஏற்படுத்தும் என்று கூறும் அளவுக்கு வந்துவிட்டது. இந்த நிலையில் கூட்டுக்குடும்ப முறை பலமான அடித்தளத்தில் இருக்கும் பேரமைப்பு என்று கூறுவது காலங்களைக் கடந்த கூற்றாக உள்ளது என்பதைப் பணிவன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன். அது உடைந்து வருகிறது. மனித முயற்சியால் இனியும் அதைக் காப்பாற்ற முடியாது என்பதில் எந்த வித ஐயப்பாடும் இருக்க முடியாது. இப்பொழுது தனிநபர் சுதந்திரத்தை மக்கள் கோருகிறார்கள். சம்பாதிப்பவர்கள் ஒவ்வொருவரும் சம்பாதிக்க விரும்புவதுடன் அதை தங்கள் விருப்பப்படி செலவு செய்ய விரும்புகிறார்கள். குடும்பத்தின் மற்ற உறுப்பினர்கள் தங்களைக் கட்டுப்படுத்துவதை அவர்கள் விரும்ப வில்லை. தனிநபர் சுதந்திரமே இப்பொழுது அவர்கள் குறிக்கோள் மற்றும் இலட்சியமாக உள்ளது. ஆரம்ப நாட்களிலிருந்தே இந்தக் குரல் எழுந்துள்ளது. ''தனிநபர் சுதந்திரம் குறைந்து போய் அரசு அதிக பலம் பெற்றுவருகிறது''. அண்மைக் காலங்களில் இந்தக் குற்றச்சாட்டைக் கேட்கிறோம். இன்று பெரும்பான்மையினரின் அதிகாரம், சமுதாயத்தின் கட்டுப்பாடு ஆகியவை ஆதிக்கம் செலுத்து வதை நமது சமுதாயத்தில் காண்கிறோம். இந்த ஆதிக்கத்தை இப்பொழுது யாரும் விரும்பவில்லை. தனிநபர் ஒவ்வொருவரும் முந்தைய நிலையிலிருந்து விலகிச் செல்ல விரும்புகின்றனர். குடும் பத்தின் பிடிக்குள் சிக்கி வாழ விரும்பவில்லை என்று கூறுகின்றனர். நான் சுதந்திரம் பெற்று என் பாதையில் செல்ல விரும்புகிறேன் என்கிறான். இன்றைய காலகட்டத்தின் உணர்வு இதுவன்றோ என்று அவையில் ஒவ்வொரு உறுப்பினரையும் தங்களைக் கேட்டுக் கொள்ளுமாறு வேண்டிக்கொள்கிறேன். இக்காலத்தின் மனப்பாங்கு இதுவென்றால் நாம் எங்கே நிற்கிறோம்? உடைந்து விழுந்து கொண்டிருக்கும் நிலையிலுள்ள கட்டடத்தை எவ்வளவு நாள்தான் நம்மால் தூக்கி நிறுத்த முடியும்? மிதாக்ஷரா மற்றும் தாயபாகா முறைகளுக்கு இடையேயான பெரும் வேறுபாடுகள் நடைமுறை யில் இல்லாமலாகிவிட்டன. இணக்கமான முறையில் பரஸ்பர நல்லெண்ணத்துடன் நாம் அமர்ந்து, ஒருவரையொருவர் நன்கு புரிந்து கொண்டு நமது வேற்றுமைகளுக்குத் தீர்வு காணமுடியும். எந்த ஒரு குறிப்பிட்ட பிரிவினரையும் புண்படுத்தாமல் நாம் ஒரு திருப்திகரமான

முடிவுக்கு வரமுடியும். அது அப்படித்தான் இருக்கமுடியும் என்று நம்புகிறேன். நான் விவரங்களுக்குள் செல்ல விரும்பவில்லை. எதிர்காலத்தில் நம்முடைய விவாதம் இந்த முறையில்தான் தொடரும் என்பதைச் சுட்டிக்காட்ட மட்டுமே விரும்புகிறேன்.

ஐயா, இப்பொழுது மற்ற விவரங்களைப் பார்ப்போம். வாரிசுரிமை அல்லது மரபுரிமை விஷயத்தைப் பொறுத்தவரை மகளுக்கு அளிக்கும் பங்கைத்தவிர வேறு எந்த விஷயத்திலும் எவ்வித கருத்து வேறுபாடுகள் இல்லை எனலாம். மற்ற விஷயங்களெல்லாம் கடந்தகால விஷயங்களாகி விட்டன. சட்டங்கள் நிறைவேற்றப் பட்டுள்ளன. நீதிமன்றங்கள் முடிவுகள் எடுத்துள்ளன. அதன் மூலம் குடும்பத்தில் கோரிக்கை வைத்த மற்ற உறுப்பினர்கள் எல்லோ ருக்கும் உரிமைகள் அளிக்கப்பட்டுள்ளன. மகளின் பங்கைக் குறித்து மட்டும் இப்பொழுது கருத்து வேறுபாடுகள் எழுந்துள்ளன. மகன்கள் பெறும் பங்கில் பாதி, மகன்கள் பெறும் பங்கில் சமமான பங்கு, அல்லது எல்லோரும் தீர்மானிக்கும் அளவிலான பங்காக அது இருக்கும். நல்லெண்ணத்துடன் ஒருவருக்கொருவர் புரிந்துகொண்டு இந்தப் பிரச்சினைக்கு முடிவு செய்தால் ஒரு திருப்திகரமான முடிவை பெற முடியும் என்பதில் எனக்கு முற்றிலும் நம்பிக்கை உள்ளது. பொறுக்குக் குழுவின் முடிவை அதன் ஒவ்வொரு தனிப்பட்ட உறுப் பினரும் ஏற்றுக் கொள்ளவேண்டுமென்பது அவசியமில்லை. எனக்கு சில விஷயங்கள் பிடிக்கவில்லை என்பதை, வெளிப்படையாகவே ஒத்துக் கொள்கிறேன். மசோதாவின் சில அம்சங்களைத் தாங்கள் ஏற்றுக்கொள்ளவில்லை என்று கூறும் சில உறுப்பினர்கள் இருப் பார்கள். இந்தக் கருத்து வேறுபாடுகள் பரஸ்பர விவாதத்தின் மூலம் ஓரளவு தீர்க்கப்பட வேண்டும். அடிப்படையான கேள்வி என்ன வென்றால் மகளுக்கு பங்கு அளிக்கப்பட வேண்டுமா என்பதுதான். மகளுக்கு பங்கு எதுவுமே வழங்கக்கூடாது என்று கூறுவது குடும் பத்தில் உள்ள பெண் உறுப்பினர்கள் மீது காலம்காலமாக நாம் கொண்டுள்ள பாரபட்சக் கண்ணோட்டத்தின் வெளிப்பாடே என்ற என் கருத்தை வெளிப்படையாகக் கூறுவதில் எனக்கு எவ்விதத் தயக்கமும் இல்லை.

திரு. எல். கிருஷ்ணசாமி பாரதி: முற்றிலும் சரி அதுதான் உண்மையான விஷயம்.

டாக்டர் பி.கே. சென் : நமது குடும்பப் பெண்களை உயர் வாக நாம் மதிக்கலாம். ஒவ்வொரு குடும்பத்திலுள்ள பெண்களும்

நளின தேவதைகள் எனவும், பணிவிடை செய்யும் தேவதைகள் எனவும் அடிக்கடி அழைக்கப்படுகிறார்கள் என்பதில் சந்தேகமில்லை. அது முற்றிலும் உண்மைதான். அவர்களுக்குத் தேவையானவற்றையெல்லாம், அவசியமானவற்றையெல்லாம் நாம் நிறைவேற்றுகிறோமா? நம் குடும்பங்களில் பெண்களுக்கு ஆண்களால் நிறைவேற்றப்பட வேண்டிய விஷயங்களை நிறைவேற்றுகிறோமா? இந்த விஷயங்கள் குறித்து நாம் முற்றிலும் தெளிவாகவும் நேர்மையாகவும் இருக்க வேண்டும். நமது மகளிருக்கு நாம் செய்ய வேண்டிய கடமைகள் பல உள்ளன. சமுதாயத்தில் தங்களுக்கும் ஓர் இடம் வேண்டும் என்று அவர்கள் கோருகிறார்கள். குடும்பத்தில் தங்கள் பணிகளை ஆற்றிக்கொண்டு, குடும்பத்தின் நிர்வாக தேவதையாகவும் இருந்து கொண்டு, அவர்கள் ஆற்ற வேண்டிய வேறு சில பணிகளும் உள்ளன. சமூக அமைப்புகளின் பணியில் அவர்கள் ஆர்வத்துடன் ஈடுபட வேண்டியுள்ளது. இன்றைக்கு தோன்றியுள்ள பல அமைப்புகளில் அவர்கள் பங்கு கொள்வது மிக அவசியமாக உள்ளது. பெண்கள் பங்குகொள்ளாத சமூக கட்டமைப்பை இப்பொழுது நாம் உருவாக்க முடியாது. ஆண்களின் பணிவிடைத் தேவதைகளாக அவர்கள் எப்பொழுதும் இருப்பார்கள். அதாவது அவர்களின் உடற் தேவைகளையும் நலனையும் கவனித்துக் கொள்வார்கள். ஆனால் தங்களின் உயர்ந்த லட்சியங்களையும் மற்றும் அபிலாஷைகளையும் அடைவதில் எதுவும் செய்ய மாட்டார்கள். ஆனால் அவர்களுக்கு சமுதாயத்தில் நிறைவேற்றப்பட வேண்டிய கடமை உள்ளது. சுதந்திர இந்தியாவில் அமைப்புகள் ஒவ்வொன்றிலும், இயக்கங்களிலும் பெண்கள் அதிக அளவில் இணைந்து பணியாற்ற வேண்டியுள்ளது. இப்படி இருப்பதால் அவர்களுக்கு விடுதலை அளிக்கப்பட வேண்டும். பொருளாதார சுதந்திரத்தைவிட வேறு எதுவும் அவ்வளவு முக்கியமானதல்ல (ஆரவாரம்). தங்கள் வாழ்க்கைக்கே தங்கள் குடும்பத்தின் ஏதாவதொரு ஆண் உறுப்பினரைச் சார்ந்திருக்க வேண்டியுள்ளதால் பலரின் வாழ்க்கை சிதைந்துபோன நேர்வுகள் பல உள்ளன. எனவே இன்றைக்கு எடுக்கப்படும் நடவடிக்கைகளில் அவர்களுடைய பொருளாதார சுதந்திரம் முக்கியத்துவம் பெறுகிறது.

மாலை 3 மணி

இந்த உண்மையை நாம் முற்றிலும் மறந்துவிடாமல் இருக்க வேண்டும். அவளுக்குப் பொருளாதார சுதந்திரம் அளிக்க விரும்பினால், ''ஏ, மகளே, உனக்கு எந்தப் பங்கும் சொத்தில் கிடையாது. எப்பொழுதும் குடும்பத்துக்கு பணிவிடை செய்யும் தேவதையாக இருப்பாய்'' என்று கூறுவதற்கு

எந்தவிதமான காரணமும் இல்லை. இதன் பொருள் என்னவெனில் அவள் எப்பொழுதும் யாரையாவது சார்ந்துதான் இருப்பாள். அவள் ஒரு விதவை என்றால் மற்றவர்களுக்கு பணிவிடை செய்வதில் மட்டும் அவள் ஈடுபடுவாள். நாட்டிற்கோ, சமூகத்திற்கோ, குடும்பத் திற்கோ வேறு எந்த சேவையையும் செய்ய அவளால் முடியாது. ஐயா, நேரம் அதிகம் தேவைப்படுமாகையால், மேலும் இது குறித்து நான் பேச விரும்பவில்லை. மேலும், மற்றவர்களின் நேரத்தையும் அபகரிக்க வேண்டிவரும் என்பதையும் அறிவேன். அடிப்படை விஷயங்கள் குறித்து அதிகம் பேசப்பட்டுவிட்டது, விரிவான விவா தங்கள் நடந்துவிட்டன. நடைபெற்ற இந்த விவாதங்களையெல் லாம் சிந்தித்துப் பார்க்கையில், இந்த விவாதத்திற்குப் பிறகு, முழு நல்லெண்ணத்துடனும் விவேகத்துடனும் எல்லா விவரங்களையும் அமைதியாக அமர்ந்து பரிசீலித்தோமானால் ஒரு நல்ல முடிவுக்கு வரமுடியும். நமக்குச் சஞ்சலம் அளிக்கும் பல சிறு விஷயங்கள் உள்ளன. அது எப்படி இருப்பினும், அதற்குத் தீர்வு காண்பது கடின மல்ல. அடிப்படை விஷயங்களில் நாம் அதிகக் கவனம் செலுத்த வேண்டும். நாம் அவ்வாறு செயல்பட்டால் நமது பாதை தெளிவாகி விடும் என்று கருதுகிறேன்.

***திருமதி கமலா சௌதுரி** (உ.பி. பொது) : (இந்தி உரையின் ஆங்கில மொழி பெயர்ப்பு) ஐயா, இந்துத் தொகுப்புச் சட்டத்தைக் குறித்துச் சில வார்த்தைகள் பேச முற்படுவதற்கு முன், இந்த மசோதாவைக் கொண்டுவந்ததற்காக டாக்டர் அம்பேத்கருக்கு என் பாராட்டுகளைத் தெரிவித்தாக வேண்டும். காலத்தின் உணர்வுக் கேற்ப இந்த மசோதா அவையில் கொண்டுவரப்பட்டுள்ளது என்பதே என் சொந்தக் கருத்து. இன்றைய காலகட்டத்தின் தேவைக்கும், காலப்போக்கிற்கும் இசைவான சட்டம் இது. சமயம், கலாசாரம், மற்றும் பல்வேறு விஷயங்களின் அடிப்படையில் இந்த மசோதா எதிர்க்கப்பட்டாலும், இதற்கெதிராக பல குறைகள் கூறப்பட்டாலும், நமது மகளிர் குலத்திற்கும் இந்திய சமூகத்தின் முன்னேற்றத்திற்கும் இந்த மசோதா சமய சஞ்சீவி போன்றதாகும். இன்றைக்கு மிகத் தாழ்ந்த மட்டத்திலுள்ள நமது பெண்களுக்கு இது மிகவும் பலனளிக் கக்கூடியதாக இருக்கும். இந்த மசோதா இந்த அவையில் நிறை வேற்றப்பட்டால் நமது எதிர்காலப் பெண்குலம் மாண்புமிகு அமைச்சருக்கு கடமைப்பட்டவர்களாக இருக்கும்.

★ அ.நி.வி. (சட்) டி., தொகுதி VI, பிரிவு II, 13 டிசம்பர் 1949, பக்கம் 535-540

இந்த மசோதா நமது சமயம் மற்றும் கலாசாரத்திற்குப் பெரும் தீங்கிழைக்கும் என்று மசோதாவை எதிர்த்தவர்கள் கருத்துத் தெரிவித்தனர். இந்த வாதம் சரியானதாக எனக்குத் தோன்றவில்லை. மதத்தின் பெயரால் கூறப்படும் எந்த விஷயமும் மக்களின் உணர்வுகளை கவர்ந்திழுக்கின்ற வகையில் நம் மக்களின் மூளையும் இதயமும் உருவாக்கப்பட்டுள்ளன. இந்த சமய பலிபீடத்தில்தான் நமது மத உணர்ச்சிகளை எவ்வாறு கிளப்பி விடுகிறோம்? இந்த மதத்தின் பெயரில்தான் தேசத் தந்தை மகாத்மா காந்தி கொலையுண்டதைக் கண்டோம்.

எனவே, இவ்வாறு, மதம் மற்றும் கலாசாரத்தின் அடிப்படையில் இந்த மசோதாவிற்கு எதிராக பெரும் கூச்சல் கிளம்பியுள்ளது. சட்டம் என்றால் என்ன என்றுகூட அறியாத, இந்தச் சட்டமன்றம் எவ்வாறு உருவாக்கப்பட்டது, நமது அரசியல் அமைப்புச் சட்டப்படி அவர்களுக்கு வாக்குரிமை எப்படி வழங்கப்பட்டது என்பதைக் கூடப் புரிந்துகொள்ள முடியாத நம் சகோதரிகளின் சார்பிலும் எதிர்ப்பு பறைசாற்றப்படுகிறது. இந்நாட்டிலுள்ள பெண்களில் பெரும்பான்மை யினர் இந்த மசோதாவை எதிர்ப்பதாக அறிவிக்கப்படுகிறது. நமது மதத்திற்கும், கலாசாரத்திற்கும் எதிராக இந்த மசோதாவில் எதுவும் இல்லை என்றே என் சிற்றறிவுக்குத் தோன்றுகிறது.

மத நம்பிக்கை உள்ள இந்துக்கள் இப்பொழுது அனுபவித்து வரும் பலதார மணத்திற்கு எதிராக மசோதாவின் ஒரு பிரிவில் விதிகள் வகுக்கப்பட்டுள்ளன. பலதார மணத்தை அனுமதியாது, அதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது. தங்கள் மனைவிமார்கள் உயிருடன் இருக்கும் வரையில் வேறு திருமணம் செய்து கொள்வதற்கு அனுமதியில்லாததால் நமது சகோதரர்களில் பெரும்பான்மையோர் இந்த மசோதாவை எதிர்க்கக்கூடும் என அஞ்சுகிறேன். மதத்திற்கு விரோதமாக இதில் எதையும் நான் காணவில்லை. ஏனெனில், நமது வேத சாஸ்திரங்களையும், பண்டைய இலக்கியங்களையும் படித்துப் பார்த்தால், எந்தக் காலத்திலும், ஏன் மிகப் பண்டைய நாட்களில்கூட பலதார திருமணங்கள் வரவேற்கப்படவில்லை என்பதைக் காண்கிறோம். பண்டைய இலக்கியங்களை அலசி ஆராய்ந்ததில் ஒரு மனைவிக்கு மேல் இளவரசர்கள் மணந்துகொள்ள அனுமதிக்கப்பட்ட சில நேர்வுகளையும் காணமுடிகிறது. நமது சமுதாயக் கட்டுக்கோப்பின் அடிப்படைகளான சிறந்த லட்சியங்களையும், மரபுகளையும், பழக்கவழக்கங்களையும் அரசர்கள் மதியாது

நடந்துகொண்டதை நாம் கண்டுள்ளோம். நம்முன் லட்சிய புருஷ ராகத் திகழும், கடவுளின் அவதாரம் என்று கருதப்படும் ஒருவரின் உதாரணத்தை உங்களுக்கு எடுத்துக் காட்ட விரும்புகிறேன். நமது இந்தியக் கலாசாரத்தைப் பாதுகாத்து, பல நூற்றாண்டுகளாக அதை அழியாது காப்பாற்றிவரும், வால்மீகியால் படைக்கப்பட்ட பெரும் இதிகாசமான இராமாயணத்தை படிக்கையில் ஒரு விஷயத்தைத் தெரிந்து கொள்கிறோம். அஸ்வமேத யாகத்தை அரசர் ராமச்சந்திரர் நடத்த முற்பட்டபோது, மனைவியின்றி அந்த யாகத்தை செய்ய முடியாது என்று புரோகிதர்களும் பெரியவர்களும் எடுத்துரைத்த போது, அந்த நேரத்திலும், அவர் இரண்டாவது மனைவியைத் தேடிச் செல்லாது சீதாப்பிராட்டியின் தங்கச் சிலையைச் செய்து யாகத்தை நடத்தியதாக அறிகிறோம். நம் முன்னே நமது மகத்தான லட்சியம் தெரிகிறது. நமது இதிகாச இலக்கியங்களைத் தேடினால் ஒவ்வொரு இடத்திலும் இதுபோன்ற நிகழ்ச்சிகளைக் காணமுடியும். ராமர் காட்டிற்குச் சென்றபோது சூர்ப்பணகை அவரை மணமுடிக்கக் கெஞ்சியபோது, ராமர் அயோத்தியாவின் இளவரசர் என்றும், அவர் அரசராகக் கூடும் என்றும், அவர் மணம் செய்து கொள்ளலாம், ஆயினும் ஏற்கெனவே மணமாகி விட்டதால் இரண்டாவது மணம் செய்யமாட்டார் என்றும் லட்சுமணன் கூறுகிறார். அந்தக் காலத் திலேயே ராமபிரான் மூலம் நமக்கு தெரிவிக்கும் லட்சியம் எல்லாம் பலதாரத் திருமணம் ஆதரிக்கப்படவில்லை என்பதாகும். எனவே இந்த மசோதாவில் அறிவிக்கப்பட்டுள்ள பலதார மணத்தடை எப்படி மதத்திற்கு எதிரானதாக இருக்க முடியும். அதற்கு மாறாக, இம்மாதிரியான பழக்கங்கள் ஊக்கப்படுத்தப்பட்டால், இந்தியக் கலாசாரத்திற்கும் சமுதாயத்தின் உயர்ந்த லட்சியத்திற்கும் பெரும் அழிவையேத் தேடித்தரும் என நினைக்கிறேன். இந்தியப் பண்பாட்டை ஆதரிப்பவர்களுக்கும், இந்து மதத்தைப் பின்பற்று வதாகக் கூறிக்கொள்ளும் ஒவ்வொருவருக்கும் இதுவே சிறந்த லட்சியமாக இருக்கமுடியும் என நம்புகிறேன். சட்டப்படி மணந்த மனைவி உயிருடன் இருக்கும்போதே, ஒன்று இரண்டு மூன்று ஏன் நான்கு தடவைகூட கணவன் மணந்து கொள்ள அனுமதிப்பது பெண்களுக்கு இழைக்கப்படும் பெரும் அநீதியாகும். இந்தப் பழக்கம் பெண்களுக்கு தாங்க முடியாத வேதனையை அளிக்கிறது. அவள் மீது எல்லையற்ற அனுதாபம் ஏற்படுகிறது. பல நூற்றாண்டுகளாக நம் பெண்கள் பல தீவிரக் கட்டுப்பாட்டுக்குள் வாழ வேண்டி யிருந்தது என்பது வேறு விஷயம். இந்நாட்டின் பெண்கள் அனேக மாக நான்கு சுவர்களுக்குள்ளே அடைபட்டு கிடந்தனர். அவர்களின் சமூக, மனோரீதியான, பொருளாதார உரிமைகள் குறைக்கப்பட்

டிருந்தன. அவர்களின் கண்ணீர் கண்களிலேயே உலர்ந்து போயின; கன்னத்தில் வழிய அனுமதிக்கப்படவில்லை. பெண்கள் அனுபவித்து வந்த இந்தப் பெரும் இன்னல்களையும் சோதனைகளையும் நமது கவிஞர்களும், எழுத்தாளர்களும், ஆசிரியர்களும் மிகவும் தத்ரூப மாக விவரித்துள்ளனர். கணவன் தனக்கு ஓர் இணை மனைவியை வைத்துக் கொள்வதை அனுமதிப்பதை விட வேறு எந்தக் கொடுமை யும் ஒரு பெண்ணிற்கு இருக்க முடியாது.

இப்பொழுது, மறுமலர்ச்சியும் பிறந்த பிறகு நம் நாட்டின் பெரிய மனிதர்கள் பெண்களில் அவல நிலையை உணர ஆரம்பித் தனர். அவர்களுடைய தீவிர முயற்சியால், பெண்கள் நிலை பற்றி அக்கறையுடன் பரிசீலிக்கப்பட்டது. எனவே இம்மாதிரியான புரட்சி கரமான மசோதாக்கள் அவ்வப்போது இந்த அவையில் கொண்டு வரப்படுகின்றன. அன்று நம் நாடு கொந்தளித்துக் கொண்டிருந்த போது நமது சமூக வாழ்வில் மகாத்மா காந்தி நுழைந்தார். பெண்கள் தங்கள் சொந்தக் கால்களில் நிற்குமளவுக்கு அவர்களது நிலையை உயர்த்தினார். இன்றைக்கு தனக்குரிய உரிமையைப் பெற அவளது இதயத்தில் ஓர் உத்வேகம் பிறந்துள்ளது. இதுகாறும் கொடுமை களையும் அடக்குமுறைகளையும் பொறுத்துக் கிடந்தது போன்று, எதிர்கால மங்கையர் சகித்துக் கொண்டிருக்க மாட்டார்கள். ஒருபோதும் இம்மாதிரி அவமானத்தையும் அலட்சியப் போக்கை யும் அவள் ஏற்றுக்கொள்ள மாட்டாள். எனவே காலம் கடந்து விட்டது என்றே நினைக்கிறேன். நம் முன்னே உள்ள இந்த மசோதா இவ்வவையில் உரத்த கரவொலியுடன் நிறைவேற்றப்பட வேண்டும்.

பல்வேறு அடிப்படைகளில் இம்மசோதா எதிர்க்கப்படு கிறது. இங்கே அவைகளைக் கேட்க எனக்கு வாய்ப்புகள் இருந்தன. பெண் குலத்திற்கு எதிராக வசைமொழிகளும், அசிங்கமான விஷயங் களும் கூறப்பட்டன. அவர்கள் அவமானப்படுத்தப்படுகின்றனர். பெண்களுக்கு எதிராக அவதூறுகளும் களங்களும் கற்பிக்கப்பட்டு பிரசாரம் செய்யப்படுகின்றன. மசோதாவில் அளிக்கப்பட்டுள்ள விவாகரத்து உரிமை நம் சமுதாயத்தின் கட்டமைப்பை சீரழித்து விடும் என்று இங்குள்ள மக்கள் நம்புகிறார்கள். நமது கலாசாரம் நாசமாகிவிடும் என்று கருதுகிறார்கள். இம்மாதிரியான அச்சத்தை மக்கள் எப்படி அடைகிறார்கள், இம்மாதிரியான பேச்சுகளில் ஏன் ஈடுபடுகிறார்கள் என்பதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. ஆனால் மசோதாவை நான் படித்த வரையில், விவாகரத்தைப் பொறுத்தமட்டில் புதுமையாக எதுவும் கொண்டு வரப்படவில்லை.

என்பதுடன், நமது வேதங்கள் மற்றும் அறநூல்களில் அனுமதித்ததை விட அதிகமாக எதையும் நான் காணவில்லை. விவாகங்களை ரத்து செய்வதற்கு என்னென்ன நிபந்தனைகள் விதிக்கப்பட்டிருந்தனவோ, அல்லது எந்த முறையில் விவாக ரத்துக்கள் நடைபெற வேண்டு மென்று கூறப்பட்டுள்ளதோ, எந்தக் காலங்களில் அதற்கு அனுமதி அளிக்கலாம் என்று விதிக்கப்பட்டிருந்ததோ அவைகளெல்லாம் நம் சாஸ்திரத்திலேயே கொடுக்கப்பட்டுள்ளன. இந்து மதத்திலும் அதன் பண்பாட்டிலும் நான் நம்பிக்கை கொண்டுள்ளேன். நான் ஓர் இந்துப் பெண்மணி. பெண்களின் பெருமையும் முக்கியத் துவமும் எதிர் காணப்படுகிறது என்பதையும் அறிவேன். பல நூற் றாண்டுகளாக நமது முனிவர்களும், தீர்க்கதரிசிகளும், கவிஞர் களும், எழுத்தாளர்களும், இந்தியப் பெண்களின் சிறப்புகளைப் பற்றி பாடல்கள் எழுதியுள்ளனர்; மிகவும் பாராட்டிப் புகழ்ந்துள் ளனர். அவளுடைய புற அழகை மட்டும் புகழ்ந்து பாடவில்லை. அவளுடைய தன்னலமற்ற தியாக உணர்வை போற்றிப் புகழ்ந்துள் ளனர். இந்த உன்னத லட்சியங்கள் நமக்கு மிகவும் சிறப்பானது தான். இன்று நேற்றல்ல, ஆண்டாண்டுக் காலமாக இந்தியப் பெண்கள் இந்த உன்னத லட்சியங்களைப் போற்றிப் பாதுகாத்து வருகின்றனர். அவளுடைய தன்னலமற்ற தியாகமும், உன்னத லட்சியங்களும் இந்தியக் கலாசார வரலாற்றிலும், மனிதகுல வரலாற் றிலும் பொன்னெழுத்தில் பொறிக்கப்படும்.

ஆயினும் ஒவ்வொரு சமுதாயத்திலும் தனிநபர் ஒவ்வொரு வரும் ஆணானாலும் அல்லது பெண்ணானாலும் சரி, உயர்ந்த லட்சி யங்களின்படி வாழ்வது சாத்தியமில்லை என்பது தெரிய வந்துள்ளது. மகாத்மா காந்தி ஒரு அதீத மனிதர் என்று உலக முழுவதும் போற்றப் படுகிறார். தம் லட்சியங்களை அவர் நம்முன் வைத்துள்ளார். அவரைப் பின்பற்றுபவர்களாக நாம் இருப்பினும், அந்தக் கொள்கை வழி நம்மால் நடக்கமுடிவதில்லை. சமுதாயம் மற்றும் உலகின் நிலையும் இதுவேதான். இந்த உன்னத லட்சியங்களை இந்திய சமுதாயமும் உலகமுழுமையும் பின்பற்றி நடக்குமானால் இவ் வுலகமே ஒரு சுவர்க்கலோகமாக மாறிவிடும் என்று நினைக்கிறேன்.

ஓர் உயர்ந்த லட்சியத்தை மக்கள் முன் வைக்கும்போது, அதற்கு ஒரு சாதகமான சூழ்நிலையை உருவாக்க பல்வேறு விஷயங்கள் நிறைவேற்றப்பட வேண்டியுள்ளன. இந்துத் திருமணச் சடங்கை எடுத்துக் கொள்ளுங்கள். திருமணம் நடைபெறும்போது, அடுத்த பல பிறவிகளுக்கும் இந்த உறவு தொடர்ந்து இருக்கும், அழியாதது என்று புரோகிதர்கள் வர்ணிக்கிறார்கள். என்னால் இதை நம்ப முடியவில்லை. ஒருபுறத்தில் இந்துமதக் கோட்பாட்டின்படி இந்து ஆண் ஒருவருக்கும் இந்து பெண் ஒருவருக்கும் இடையே உரு வாகும் உறவே இந்தத் திருமண உறவு என்று நமக்குக் கூறப்படு கிறது. மற்றொருபுறத்தில், கர்மா தத்துவத்தின்படி இந்த உறவு காலம்காலமாக தொடர்ந்து வருவதாக இருக்கவேண்டும் என்று நமக்குக் கூறப்படுகிறது. அதாவது நமது முந்தையப் பிறவிகளில் கணவன் ஒரு மனிதனாகவோ, ராட்சசனாகவோ, மிருகமாகவோ கூட இருந்திருக்கலாம். இந்த விஷயங்களிலெல்லாம் எனக்கு நம்பிக்கை இல்லை. வாழும் காலத்திற்கான சமரச உடன்பாடு மட்டுமே திருமணம் என்பதே என் நம்பிக்கை. விவாகரத்து பற்றிய வாய்ப்புகளை மட்டுமே நமது திருமண ஜோடிகள் சிந்தித்துக் கொண்டிருந்தால், நம் வாழ்க்கை பயனற்றதாகிவிடும் என அஞ்சு கிறேன். இம்மாதிரியான நிலைமைகளின் விளைவுகளினால் ஒரு நல்ல மகிழ்ச்சிகரமான குடும்பத்தை உருவாக்க முடியாத நிலை தோன்றும். இம்மாதிரியான நிலைமை எங்கேயாவது தோன்று மானால், அந்நிலைமையில் நமது மதத்தின் பரிணாம வளர்ச்சியோ, நாட்டின் கலாசார வளர்ச்சியோ இருக்க முடியாது. எந்தச் சூழ்நிலை யிலாவது பிரிவு வேண்டும் என்று கருதப்பட்டால் அந்தச் சட்ட உரிமை பெண்ணிடந்தான் இருக்க வேண்டும். நமது தற்கால சமுதாயத்தில் பல கோளாறுகள் காணப்படுகின்றன. இந்த மாதிரி யான விஷயங்கள் எனக்கு மட்டுமே தெரியும் என்று கூறமுடியாது. இங்கு அமர்ந்துள்ள எல்லோருக்கும் தெரிந்திருக்கும் மனைவிக்கு வயது குறைவாக இருந்தாலும் கணவன் இரண்டாம் தாரத்தை மணக்க முடியும். ஆனால் அதே வேளையில் 16, 17 அல்லது 18 வயதான பெண் மறுமணம் செய்துகொள்ள முடியாது. தன்னுடைய விவாகத்தை ரத்து செய்து கொள்ளும் அதிகாரம் அவளக்கு இல்லை. இம்மாதிரியான நிலைமைகளில் விளைவு என்ன? விவரத்திற்குள் செல்ல நான் விரும்பவில்லை. இவை பெரும் அழிவில் முடிகின்றன என்பதை மட்டும் பணிவன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன். சட்டப் படியான அவளுடைய கணவனுடன் அவளுக்கு எந்த உறவும் இல்லை. சமுதாயத்தின் அடித்தளத்தில் உழன்று துன்பத்தில் வாடி வதங்கிக் கொண்டிருப்பாள். கௌரவமான முறையில் மறுமணம்

செய்து கொண்டு தன்னுடைய குழந்தைகளை அன்புடன் வளர்த்து ஒரு குடும்பமாக தனது எஞ்சிய வாழ்நாளை நிம்மதியாகக் கழிப்ப தற்கு சமூகம் அவளுக்கு அனுமதி அளிப்பதில்லை. இம்மாதிரியான சூழ்நிலைகளில் பெண்களுக்கு உரிமைகள் இருக்க வேண்டுமென்று ஆசைப்படுகிறேன். தாராளமாக உபயோகப்படுத்தும் அளவுக்கு இந்த உரிமைகள் இருக்க வேண்டுமென்பது என் விருப்பமல்ல. நினைத்த மாத்திரத்தில் உறவுகளைத் துண்டிக்க வேண்டும் என்று ஒவ்வொரு ஆணும் பெண்ணும் நினைத்தால் பழிவாங்கும் படலம் தொடரக்கூடும். மக்கள் கூறுமளவிற்கு மசோதா வாய்ப்பளிக்க வில்லை என்றுதான் எனக்குத் தோன்றுகிறது. நமது சமுதாயத்தின் 80 சதவிகிதத்தினர் ஒரு பஞ்சாயத்தைக் கூட்டி ஒரு நிமிட நேரத்தில் விவாகத்தை ரத்து செய்து விடுவதாகக் குறிப்பிட்டிருப்பதுதான் இந்த மசோதாவில் என்னை மிகவும் கவர்ந்த அம்சமாகும். சில பகுதிகளில் மற்றும் சில சமூகங்களில் முடிவெடுப்பதற்கு பஞ்சா யத்தைக்கூட கூட்டுவது கிடையாது. ஆண்களும் பெண்களும் மிக சுதந்திரமாக பிரிந்துசென்று, அவர்களுக்குப் பிரியமானவர்களை மறுமணம் செய்து கொள்கிறார்கள். அவர்களுக்கு அந்த சமூகம் அளிக்கும் மிகப் பெரும் தண்டனை அவர்களை கண்டிப்பதுடன் சமூகத்தைவிட்டு விலக்கி வைக்கிறார்கள். சமூகத்திற்குக் கூட்டு விருந்தளித்த பிறகு அவர்கள் மீண்டும் அரவணைத்துக் கொள்ளப் படுகிறார்கள். பிரிந்து வாழ்வதும் விவாகரத்தும் மிகச் சாதாரண விஷயங்களாகக் கருதும் சமூகங்களுக்கு இந்த மசோதா அதிகப் பலனளிக்கும். இந்த மசோதா அவர்களுக்கு சில கட்டுப்பாடுகளை விதிக்கிறது. கலாசாரப் பின்னணி இல்லாத சில பிற்படுத்தப்பட்ட சமூகங்கள் கலாசார மேம்பாடு அடைவதுடன் அவர்களது ஒழுக்க நெறிகளும் உயர்வடையும் என்பதே இந்த மசோதாவினால் அடையப்படும் பெரும் பலன் என்று கூறலாம். இதுவே இந்த மசோதாவில் நான் கண்ட தனிச் சிறப்பு வாய்ந்த அம்சமாகும்.

இந்த மசோதாவுக்கு எதிராக எழுந்த பலத்த கண்டனம் சொத்து சம்பந்தமானதுதான் என்று நான் நினைக்கிறேன். ஏனெனில், தகப்பனாரின் சொத்தில் மகனுக்கு அளிக்கப்படும் பங்குக்குச் சமமான பங்கை மகளுக்கும் அளிக்கவேண்டும் என்று இந்த இந்து தொகுப்புச் சட்டம் வழிவகை செய்கிறது. இந்த ஆலோசனையைக் குறித்து பலவிதமான மாறுபட்ட கருத்துகள் எழுந்துள்ளன. சகோதரன் மற்றும் சகோதரிகளுக்கிடையேயான இயல்பான பாசப்பிணைப்பு கள் இந்த விதிமுறையை நிறைவேற்றுவதால் மறைந்து போய்விடும் என்ற கருத்து மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் சிலரிடையே காணப்

படுகிறது. நமது மரபு வழி மற்றும் குடும்பக் கட்டுக்கோப்பு, முறை முழுவதும் சீரழிந்து விடுமென்று இவர்கள் கருதுகின்றனர். இதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. ஏனெனில் ஒருவருக்கு இரண்டு அல்லது நான்கு பையன்கள் இருந்தால் அவர்கள் கண்டிப்பாக ஒருவருக்கொருவர் தகராறு செய்ய வேண்டியதோ அல்லது பூசலிட வேண்டியதோ அவசியமில்லை என்பதை இன்று நாம் கண்கூடாகக் காண்கிறோம். ஆனால் அதே சமயத்தில் இந்தத் தகராறுகள் முற்றி அவர்கள் ஜன்ம விரோதிகளாக ஆகிவிடும் பல நிகழ்வுகளை நாம் காண்பதுடன் இந்த மாதிரி பல சம்பநங்களைப் பற்றிக் கேள்வியும் படுகிறோம். சொத்துக்களை வாரிசுரிமையாகப் பெற்றுக் கொண்ட பிறகு சகோதரனும் சகோதரியும் அதே போன்று வழக்கில் ஈடுபடு வார்கள் என்று கூறப்படுமானால், ஏற்கெனவே சகோதரர்களுக் கிடையே வழக்குகள் ஏற்படுவது சகஜமாகையால், இதைப் பொருட் படுத்த வேண்டியதில்லை. மேலும் அதே நேரத்தில் சொத்து வாரிசுரிமையினால் சகோதரர்களுக்கிடையே சண்டையும் பூசலும் எழுவதால், அதை ஒழித்திட வேண்டுமென்று கலாசாரம் சீரழிந்து விடும் என்று கூச்சல் போடுபவர்கள் அறிவிப்பார்களா? இந்தச் சொத்துச் சண்டைகளெல்லாம் நமது கலாசாரத்தின் உள்ளடக்கமா? இயற்கையான பாசம், ஒருவருக்கொருவர் அன்பு, மற்றவர்களுடன் அன்புடன் நடந்து கொள்வதே நமது மதத்தின் உன்னத லட்சியங்கள். நமது மதத்தின்படி இதுவே நமது பண்பாடாகும். ஒரே சகோதரியாக இருப்பவர் தம் சகோதரனிடம் காட்டும் அன்புதான் எவ்வளவு ஆழமானது என்பதை பல இடங்களில் நான் கண்டிருக்கிறேன். அன்பு செலுத்துவது என்பது பல தரங்களில் காணப்படுகிறது. ஒரு சகோதரன் பால் சகோதரி கொண்டுள்ள அன்பு படாடோபமற்றது, உள்ளார்ந்தது, மாசற்றது, வேறு எந்த அன்பும் அதற்கிணையாகாது. இப்படிப்பட்ட இணையற்ற பாசத்தை அவள் சகோதரன்பால் கொண் டுள்ளாள். ஒரு பெண்ணின் தாயாரிடம் உள்ள சொத்தான சீதனத் தையும், அவளது நகைகளையும், மகள் வாரிசுரிமையாகப் பெறு வதற்கு நமது தற்போதையச் சட்டம் வழி வகை செய்கிறது. இந்த நகைகளை சகோதரனுடன் சகோதரி பகிர்ந்து கொள்வதை நாம் எங்கும் காண்கிறோம். இந்த நகைகளைப் பிரிப்பதில் அவர்கள் சண்டையிடுவதை நாம் காண்பதில்லை. நமது பெண்குலத்தின் உயர்ந்த லட்சியங்கள் உண்மையானது என்றால் தன் சகோதரனுக்காக ஒரு சகோதரி எந்தத் தியாகமும் செய்யத் தயாராக இருப்பாள். இந்த மாதிரியான தகராறுகள் வெகு அரிதாகவே காணப்படுகின்றன. எப்பொழுதாவது இந்த மாதிரியான நிகழ்ச்சிகள் எதிர்காலத்தில் தோன்றக்கூடும் என்றாலும், இது மிகவும் அநீதி என்றுதான் நான்

கூறுவேன். எங்கள் பெரும் தாலூக்தாரர்கள் வாழ்ந்த வாழ்க்கை எனக்கு ஞாபகத்திற்கு வருகிறது. தகப்பனார் விட்டுச் சென்ற சொத்தில் சகோதரர்கள் மிக ஆடம்பரமாக வாழ்ந்துவந்தனர். திஜ் மற்றும் இதர விழாக்களின்போது அவர்கள் தங்களுக்காக செலவு செய்த தொகை சகோதரியின் வாழ்நாள் பூராவுக்குமான செலவுக்குப் போதுமானதாக இருக்கும். ஒரு விதவை சகோதரி அந்த வீட்டில் வந்து வாழ நேர்ந்தால், அவள் சமையலறையில் முடங்கி கிடக்கும் ஒரு சமையல்காரியாகத்தான் வாழ வேண்டியிருக்கும். தகப்பனாரின் சொத்திலும் செல்வத்திலும் சகோதரர்கள் வாழ்க்கையை ஆனந்தமாக கழித்துக் கொண்டிருக்கும் அதே வேளையில், அந்த வீட்டிலேயே ஒரு சகோதரி தன் சிறு குழந்தைகளுக்கு பால்கூட வாங்க அவதிப்படும் நிலையை என் கண்களாலேயே கண்டிருக்கிறேன். தனது சகோதரனின் குழந்தைகளைப் போல தன் குழந்தைகளும் நல்ல உணவு அருந்தவேண்டும் என்றும், அழகிய ஆடைகளை அணியவேண்டும், சிறந்து கல்வி பெறவேண்டும் என்றும் அவளுக்கும் ஆசை இருக்கத்தான் செய்கிறது. ஆனால் சட்டம் அவள் வாயை அடைத்திருக்கிறது. அவள் தன் நாக்கை அடக்கிக் கொண்டு தனது உணர்ச்சிகளை கட்டுப்படுத்திக் கொள்கிறாள். இந்து சட்டத்தின்படி இது சரியானதுதானா என்று இந்தச் சட்டத்தை எதிர்ப்பவர்களை மிகவும் பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன். பெண்களுக்கு இழைக்கப்படும் அநீதியை இந்து மதத்தின் எந்தத தத்துவப் போக்கு அனுமதிக்கிறது? எனவே தகப்பனாரின் சொத்தில் மகளுக்கும் பங்கு உண்டு என்று கூறும் விதிமுறைகள் காலத்திற்கு இசைந்தது என்பதுடன் நமது கலாசாரத்திற்கும் நம்பிக்கைக்கும் ஏற்றது. எனவே இது பரந்த அளவில் பரிசீலிக்கப்படும் என்று நினைக்கிறேன்.

இந்திய இலக்கியங்களைப் படிக்காதவர்கள், வெளிநாட்டுக் கலாசாரத்தின் மீது மோகம் கொண்டுள்ளவர்களின் இதயத்தில் தான், தகப்பனாரின் சொத்தில் பெண்களுக்கும் பங்கு அளிக்கப்பட வேண்டும் என்ற கருத்துத் தோன்றியுள்ளது என இந்த விதிமுறையை எதிர்த்துப் பேசிய பல உறுப்பினர்கள் வலியுறுத்திக் கூறியுள்ளனர். நான் உங்கள் நேரத்தை அதிகம் எடுத்துக் கொள்ளப் போவதில்லை. கடந்த பல நூற்றாண்டுகளாக வழக்கில் இருந்து வரும் நமது நாடோடிப் பாடல்களில் இந்த உணர்வுகள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன என்பதைச் சுருக்கமாகத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இந்த உணர்வுகள் நமது தாய் தந்தையர்கள் காலத்திய நாடோடிப் பாடல்களில் வெளிப்படுத்தப்பட்டவையல்ல. வெளிநாட்டுக் கலாசாரமே நம் நாட்டில் காலடி எடுத்து வைக்காத நமது

பாட்டிகளின் பாட்டிகள் காலத்திலேயே இவை நாடோடிப் பாடல்களில் எதிரொலித்தன, அப்பொழுது நமது கலாசாரத்திற்கு எந்த முத்திரையும் குத்தப்படவில்லை. எங்கள் மாகாணத்தில் மண விழாக்களின்போது பாடப்படும் பாடல்களில் இந்த உணர்வுகள் வெளிப்படுவதைக் காணலாம். எல்லா மாகாணங்களிலும் இவ்வகைப் பாடல்கள் பாடப்படுகின்றன என நினைக்கிறேன். அந்தப் பாடல்களின் வரிகளை நான் இங்கு எடுத்துரைக்க விரும்பவில்லை. சுருக்கமாகக் கூற விரும்புவது என்னவென்றால், மணவிழாவின் போது, எது எப்படியாகினும் எனக்கு மிகவும் பழக்கமான என் மாகாணத்தில் இத்தகைய பாடல்கள் பாடப்படுகின்றன. வேறு சில மாகாணங்களின் நாடோடிப்பாடல்களிலும் இச்சிந்தனை ஓட்டத்தை நான் கண்டிருக்கிறேன். தகப்பனாரின் "ஆட்சியின்" சரிபாதி பங்கு தனக்கு வேண்டுமென்ற ஆசையை பெண் வெளிப்படுத்துகிறாள். பல்வேறு கவர்ச்சியூட்டும் பரிசுப் பொருள்களை அளிப்பதாகச் சகோதரன் கூறுகிறான். ஒரு தட்டு நிறைய ஆபரணங்கள், குதிரைகள், யானைகள், மேலும் சீதனமாக அவன் அளிக்கவிருக்கும் பொருள்களின் பட்டியலை விவரிக்கிறாள். தன் மாமனாரின், கணவனின் வீட்டுக்குச் செல்லும்போது இந்தச் செல்வம் எல்லாம் அவளுக்குக் கிடைக்கும். ஆனால் இந்த வீட்டிலேயே பிறந்து வளர்ந்ததால் தோட்டத்திலும், குளத்திலும் பங்கு வேண்டுமென்று அவள் கூறுகிறாள். எனவே இந்த உணர்வுகள் ஏதோ வெளிநாட்டுக் கல்வியால், வெளிநாட்டு இலக்கியத்தால், வெளிநாட்டுக் கலாசாரத்தால் அல்லது வெளிநாட்டில் கல்வி கற்றவர்களின் மூளையில் உதயமானது என்ற கூற்றிற்கு எந்த அடிப்படையும் இல்லை. இந்தக் கருத்து நமது பண்டைய இலக்கியங்களில் நிரம்பி வழிவதுடன் நமது நாடோடிப் பாடல்களில் இந்தச் சிந்தனையோட்டம் எதிரொலிப்பதைப் பல இடங்களில் காணலாம்.

பெற்றோர்களின் பார்வையில் ஒரு பெண்ணும் ஆணும் சமமாகவே தோன்றும்படி இயற்கையால் படைக்கப்பட்டுள்ளனர். அவ்வாறெனில் ஒரு பையன் மட்டும் தகப்பனாரின் சொத்தில் பங்கு பெறும்போது பெண்ணுக்கு மட்டும் ஏன் ஒன்றும் அளிக்கப்படுவதில்லை? இது ஒரு வகை அநீதி என்றே எனக்குத் தோன்றுகிறது. இன்றைய சமூக அமைப்பின்படி இந்த மசோதாவை நடைமுறைப் படுத்துவதிலுள்ள கஷ்டத்தைக் குறித்துச் சிலர் சந்தேகம் கொண்டுள்ளனர். ஏனெனில் நமது சமுதாயத்தில் "மருமகன்" வகிக்கும் இடம் கொஞ்சம் விசித்தரமானது. இது முற்றிலும் வேறு விஷயம். வாழ்க்கை முழுவதும் அவரை ஜமாய் பாபு அல்லது பஹுனா

(விருந்தாளி) என்று அழைப்பதுடன் குடும்பத்தின் ஓர் உறுப்பினராக அவர் ஒருபொழுதும் ஆவதில்லை. இந்த சொத்துரிமை மகளுக்கு அளிக்கப்பட்டால், மற்றொரு குடும்பத்தின் மகன் மருமகன் என்ற முறையில் வருவதுடன் மகளின் குடும்ப உறுப்பினர் என்ற முறையில் இரண்டு மகன்கள் உள்ள தகப்பனாருக்கு மூன்றாவது மகனாக ஆகி விடுவார். இதன் மூலம் பரஸ்பர அன்பும் பாசமும் வளரும் எனலாம். சகோதரர்களுக்கும் சகோதரிகளுக்கும் இடையேயான உறவுகள் சீர்கெட்டுவிடும், நிரந்தரமாக உறவு முறிந்துவிடும் என்ற வாதம் எனக்கு ஏற்புடையதாக இல்லை. இந்தச் சட்டம் நிறைவேற்றப் பட்டால் நமது சகல சமூக, கலாசார, சமய பாரம்பரியத்திற்கு அழிவு ஏற்படும் என்று நான் நினைக்கவில்லை. அந்த வாதத்தை என்னால் ஆதரிக்கமுடியவில்லை. நமது அரசியல் சாசனத்தை நிறைவேற்றி யவர்கள், நமது சமூக, அரசியல் அமைப்பில் தீவிர மாற்றம் கொண்டு வர முயற்சிப்பவர்கள், அரசியல் சாசனத்தில் பெண்களுக்கு சம உரிமையை ஏற்றுக்கொண்டவர்கள்; அவர்கள் பெண்களின் இன்றைய நிலைமையை ஆழ்ந்த அனுதாபத்துடன் கவனிப்பார்கள் என்ற நம்பிக்கையைத் தெரிவித்துக் கொள்கிறேன். காலத்தின் கோரிக்கைக்கு அவர்கள் செவிசாய்க்கட்டும். இந்த உரிமைகளை நாம் உடனடி யாக அளிக்க வேண்டும். முன்னேற்றப் பாதையில் செல்லும் ஒரு சமுதாயம், உடனடியாகச் செய்யப்பட வேண்டிய எல்லா மாற்றங் களையும் நிறைவேற்றாவிடில் அந்தத் துறையில் அவர்கள் பல நூற்றாண்டுகள் பின்தங்கியிருக்க நேரிடும் என்று அறிஞர்கள், படித் தவர்கள், வரலாற்று ஆசிரியர்கள் எடுத்துக் கூறியுள்ளனர். மாறாக, காலத்தின் தேவைகளையும் அவசியத்தையும் நல்ல முறையில் புரிந்து கொண்டு, உடனடியாகத் தேவைப்படும் மாற்றங்களைச் செயல்படுத்தும் சமுதாயம் வேகமாக முன்னேற்றப் பாதையில் செல்லும், மகாத்மா காந்தியைப் பின்பற்றுபவர்கள் இந்த சட்ட மன்றத்தில் அதிக எண்ணிக்கையில் இருப்பதால் இச்சட்டமன்றத் தினால் இம்மசோதா நிறைவேற்றப்படும் என்று நம்புகிறேன். இந்தியப் பெண்களை எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகளை மற்றும் அவர்களுக்குள்ள இடையூறுகளை நன்கு உணர்ந்திருந்த பெரிய மகான் மகாத்மா காந்தி. அரசியல் புரட்சியுடன் நமது பழைய சமூக சிந்தனைகளுக்கு எதிராக தீவிர புரட்சியை ஆரம்பித்ததுடன் அவைகளை வேரோடு களையவும் செய்தார். மகாத்மா காந்தியின் ஆதரவாளர்கள் இந்த மசோதாவை முறையாகப் பரிசீலிப்பதுடன், நமது நம்பிக்கை மற்றும் கலாசாரத்தின் பின்னணியில் அதை அனுதாபத்துடனும் பெருந்தன்மையுடனும் பரிசீலித்து நிறைவேற்று வார்கள் என்று நினைக்கிறேன். இறுதியில், இந்த மசோதாவை நன்கு

புரிந்துகொண்டுள்ள அனைத்துப் பெண்களும் இதை மனப்பூர்வமாக வரவேற்பார்கள் என்பதை மாண்புமிகு அமைச்சருக்கு இந்திய மகளிர் சார்பாக உறுதியாகக் கூறுகிறேன். எதிர்காலத் தலைமுறையைச் சேர்ந்த பெண்களும் இந்த மசோதாவை நிறைவேற்றியமைக்காக அவருக்கு நன்றி செலுத்துவார்கள்.

*திரு. காமேஷ்வர் சிங் தர்பங்கா (பீகார் -பொது) : ஐயா, இந்தக் கூட்டத் தொடரின் துவக்க நாளன்று நம்முன் வைக்கப்பட்டுள்ள மசோதாவைக் குறித்து நமது பிரதமர் இந்த அவையில் ஆற்றிய உரைக்குப் பிறகு, அரசின் சார்பாக கொண்டுவரப்பட்டுள்ள இந்தத் தீர்மானத்தை எதிர்க்கும் நம்மில் பலருக்கு இந்த விவாதத்தில் கலந்து கொள்வது கஷ்டமாக உள்ளது. அவர் உரையாற்றுகையில், இந்த அவையில் நான் இருக்கவில்லை. ஆனால் பத்திரிகைச் செய்திகள் உண்மையானால், இந்த மசோதா நிறைவேற்றப்படுவது அவரது அமைச்சரவையின் மீது கொண்டுள்ள நம்பிக்கைப் பிரச்சினையாக அவர் கருதுவதாகத் தெரிகிறது. (குறுக்கீடு).

திரு. துணை சபாநாயகர் : அமைதி, அமைதி. இந்த மாதிரி குறுக்கீடு செய்தால் ஒன்றும் நடைபெறமுடியாது. இந்தக் குறுக்கீடுகளினால் உறுப்பினர்கள் எடுத்துக் கொள்ளும் நேரந்தான் அதிகமாகும்.

பண்டிட் லட்சுமி காந்த மைத்ரா: மதிப்பிற்குரிய உறுப்பினர் மிகச் சிறந்த உரை நிகழ்த்துவதாகத் தெளிவாகத் தெரிகிறது.

திரு. காமேஷ்வர் சிங் தர்பங்கா (பீகார் - பொது) : நமது நாட்டின் இன்றைய நிலைமையில் நமது பிரதமரின் அரசே மிகச் சிறந்த அரசாக இருக்க முடியும் என்ற கருத்தில் நான் உறுதியாக இறுக்கிறேன். அது எவ்வளவு குறைபாடுள்ளதாக இருப்பினும் தற்போதைய அரசைவிட சிறந்த அரசு ஒன்று அமையப் போவதில்லை. எந்த அரசியல் கட்சிகளிலும் சேராத பெரும்பான்மையினரின் கருத்து அதுதான் என்று நினைக்கிறேன். எனவே நமது பிரதமர் எடுத்துள்ள நிலை ஒரு வகையில் என் போன்ற சிந்தனையாளர்களுக்கு எதிரான ''நிர்ப்பந்தம்'' என்று சொல்ல முடியாவிடினும் எங்கள் மீது தேவையற்ற ''செல்வாக்கைப்'' பயன்

★ அ.நி.வி. (சட்) டி., தொகுதி VI, பிரிவு II, 13 டிசம்பர் 1949, பக்கம் 541-43.

படுத்துவதாகக் கூறலாம். இந்த மசோதாவைப் பரிசீலிக்கையில் தமது அரசின் மீதான நம்பிக்கைப் பிரச்சினை இது என்ற கருத்தை விட்டுவிட்டு இந்த விஷயத்தை மறு பரிசீலனை செய்யும்படி பிரதமரை மிகவும் மனப்பூர்வமாகக் கேட்டுக் கொள்கிறேன்.

மக்களின் விருப்பத்தைத் தெரிந்து கொள்ளும் வரையில் இந்த மசோதா பற்றி மேற்கொண்டு பரிசீலனை செய்வதை ஒத்தி வைக்கும்படி அரசையும் அவையையும் கேட்டுக் கொள்ள விரும்பு கிறேன். மாண்புமிகு டாக்டர் ராஜேந்திரப் பிரசாத், இந்திய தேசியக் காங்கிரசின் தலைவர் என்ற முறையில் அதற்குரிய காரணங்களை நமது பிரதமருக்குக் கடந்த ஆண்டு அனுப்பிய குறிப்பில் தெரிவித் துள்ளார்.

புரட்சிகரமான நடவடிக்கை என்றுகூட கருதப்படத்தக்க இந்த முக்கியமான நடவடிக்கை குறித்து, மாறுபட்ட கருத்துகள் இருப்பதை இந்த அவையின் உறுப்பினர்கள் நன்கு உணர்ந்திருப் பார்கள். பெரும்பான்மை மக்களின் தனிப்பட்ட சட்டங்களை இது பாதிக்கிறது. அவர்களின் சமூக மற்றும் பொருளாதார வாழ்க்கை யைப் பாதிப்பதுடன், பல நூற்றாண்டுகளாக உருவாகியுள்ள பல்வேறு இந்து சமய பழக்க வழக்கங்களையும் நடைறைகளையும் பாதித் துள்ளது. ஒரே சீராக்குதல், தொகுத்தல் என்ற பெயரில் முஸ்லீம்கள், கிருஸ்தவர்கள், பார்சிகள், யூதர்கள் தவிர இந்து சமுதாயத்தைச் சேர்ந்த அனைவரின் சமூக, பொருளாதாரக் கட்டமைப்பை பலவந்த மாகத் தகர்க்கிறது. இந்த மசோதா குறித்த பொறுக்குக் குழுவின் அறிக்கைக்கு தாங்களும் மற்றும் திரு. ராம் நாராயண் சிங்கும் அளித்துள்ள மாறுபட்ட கருத்துக் குறிப்பில் தெரிவித்துள்ளதை நான் முற்றிலும் ஏற்றுக் கொள்கிறேன். இந்த மசோதாவில் கொடுக்கப் பட்டுள்ள முக்கியமான விஷயங்கள் குறித்து முடிவு செய்வதற்குக் கூட இந்தச் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வாக்காளர்களிடமிருந்து எந்த அதிகாரமும் கொடுக்கப்படவில்லை. சொல்லப் போனால் அடுத்த தேர்தல் வெகு தூரத்தில் இல்லை. எனவே அதுவரை இதைத் தள்ளிவைப்பதால் இழப்பொன்றும் ஏற்படப் போவதில்லை.

இம்மாதிரியான அடிப்படை மாற்றங்களை இந்த மசோதா வில் கொடுக்கப்பட்டுள்ள முறையில், செய்திருக்கக்கூடாது என்பதே என் திட்டவட்டமான கருத்து. இந்து சட்டக் கமிஷன் முன் கூறப் பட்டுள்ள கருத்துகளைத் தெரிந்துகொள்ள ஒருவருக்கு அக்கறை இருக்குமானால், இந்த மசோதாவுக்கு எதிராகப் பலமான எதிர்ப்பு

உள்ளதைப் புரிந்துகொள்ளத் தவறமாட்டார். ஸ்மிருதி மற்றும் அது குறித்த வியாக்கியானங்களை புனிதமாகக் கருதுபவர்களின் பிரிவைச் சேர்ந்தவன் நான். நான் சேர்ந்திருக்கும் இந்தப் பிரிவுதான் இந்த நாட்டின் மக்கள் தொகையில் பெரும்பாலாக உள்ளது. திருமணம், வாரிசுரிமை போன்றவைகளை நமது சமயக் கடமையாக, கட்டளை களாகக் கருதுகிறோம். எங்களுக்கு இவையெல்லாம் சமயச்சார்பற்ற சமூக நிகழ்வுகள் என்பதைவிட அதிக முக்கியத்துவம் வாய்ந்தவை களாகும்.

சூழ்நிலைப் பளுவினால் சமூகக் கட்டமைப்பு படிப்படியாக மாற்றம் அடைந்துவருவது உண்மைதான். ஆனால் இந்த மாற்றங்கள் பரிணாம வளர்ச்சிகளினால் ஏற்படுபவை, மேலிருந்து திணிக்கப் படுபவை அல்ல. மேலும் பல்வேறு இந்து சமூகங்களை நிர்வகிக்கும் சட்டங்களின் அடிப்படைக் கோட்பாடுகளை இந்த மாற்றங்கள் பொதுவாகப் பாதிப்பதில்லை. இந்த மசோதாவில் கொண்டுவரப் பட்டுள்ள மாற்றங்கள் ஏற்கெனவே மக்களால் ஏற்றுக் கொள்ளப் பட்டு சட்ட அனுமதிமட்டும் தேவைப்படும் மாற்றங்களா என்பதே இப்போதைய கேள்வி. ''இல்லை'' என்று அழுத்தம் திருத்தமாகக் கூறுவேன். ஸ்மிருதிகளை உருவாக்கியவர்கள் அதற்கு விளக்கம் அளித்தவர்கள் அடிக்கடி பல மாற்றங்கள் செய்துள்ளனர் என்பதில் ஐயப்பாடு ஏதுமில்லை. மக்களின் பெரும்பான்மை ஆதரவுடன் அவைகளை நிறைவேற்ற வாய்ப்புள்ள வேளைகளில் அவர்கள் அதைச் செய்தனர். தங்களுடைய மேதைமையில், எதிர்நோக்குப் பார்வையில், நோக்கத்தின் மாசற்ற தன்மையில், முக்கியமாக தங்கள் செயல்பாடுகளில் அவர்களுக்கு அசைக்க முடியாத நம்பிக்கை இருந்தது. இப்பொழுது கொண்டுவரப்பட்டுள்ள இருபதாம் நூற் றாண்டு ஸ்மிருதியின் ஆசிரியர்களுக்கு இந்தவிதப் பின்னணி எதுவும் கிடையாது. இன்றுகூட பெரும்பான்மை மக்களுக்கு வழிகாட்டியாக உள்ள கட்டளைகளை அளித்துள்ள ஸ்மிருதிகளைப் படைத்தவர் களின் மீது மக்கள் கொண்டுள்ள மதிப்பும் மரியாதையும் இவர் களுக்குக் கிடையாது. இந்து மக்களின் தனிப்பட்ட சட்டத்திற்கான அனுமதி பெரும்பான்மை மக்களின் ஆதரவினால் பெறப்பட்டதே தவிர எந்தவித மைய அரசியல் நிர்வாகமும் மேலிருந்து திணித்த தால் பெறப்பட்டதல்ல என்பதை நாட்டின் பல்வேறு பாகங்களிலும் காணப்படும் பன்முகத் தன்மை உறுதிப்படுத்துகிறது. இந்து சமய வாழ்க்கை முறையின் முக்கிய அம்சமே வேற்றுமையில் ஒற்றுமை என்பதுதான். வெளித் தோற்றத்தில் காணப்படும் வேறுபாடுகளை உடனடியாக ஒழிக்கப்பட வேண்டிய தீமையாக எண்ணிவிடக்கூடாது.

பண்டைக் காலத்தில் சட்டத்தை உருவாக்கியவர்களின் கண்ணோட்டத்திற்கும் இன்றைக்குச் சட்டத்தை அளிப்பவர்களின் கண்ணோட்டத்திற்கும் உள்ள அடிப்படையான வேற்றுமை என்னவெனில், முன்னவர்கள் ஆன்மிக அடிப்படையில் செயல்பட்ட போது பின்னவர்கள் முற்றிலும் லோகாயுத அடிப்படையில் செயல் படுகின்றனர். இதை ஒத்துக் கொள்வது என்பது, நமது பாரம்பரியத்தின் தொடர்ச்சிக்கும், நமது கலாசாரத்தின் அடிப்படைக்கும் மற்றும் நமது வாழ்க்கைத் தத்துவத்திற்கும் விடை கொடுப்பதாகும். இதற்குத் தயாரில்லாத ஒருவன் நான்.

இதைத் தவிர, இந்த மசோதாவில் கொடுத்துள்ள விதிமுறைகளை செயல்படுத்துவதில் சில நடைமுறைக் கஷ்டங்களும் தோன்றும் என்று அஞ்சுகிறேன். தங்களுடைய திருமணங்களைப் பதிவு செய்ய நீதிமன்றத்துக்குச் செல்ல வேண்டும் என்பதை மக்களுக்குக் கற்றுக் கொடுக்க எவ்வளவு காலம் பிடிக்கும் என்பதைச் சிந்தித்துப் பாருங்கள். செல்லாத மற்றும் செல்லத்தகாத திருமணங்கள் சம்பந்தமான விதிமுறைகளால் எவ்வளவு குழப்பங்களும் சிக்கல்களும் உருவாகும் என்பதைச் சிந்தித்துப் பாருங்கள். திருமணக் கலைப்பு மற்றும் விவாகரத்துக்கள் சம்பந்தமான விதிமுறைகள் குடும்ப வாழ்க்கையில் எவ்வளவு பேரழிவுகளை ஏற்படுத்தும் என்பதைச் சிந்தித்துப் பாருங்கள். இதுவரை இந்த விதிமுறைகளுக்கு அடிப் படையான கருத்துகளுக்கு மாறுபட்ட கருத்துகளைக் கொண்டுள்ளவர்கள் அவர்கள். சிக்கலான வழக்குகள் மட்டுமே விசாரணைக்கு வரும் என்ற கருத்துடன் எனக்கு உடன்பாடில்லை. தங்கள் சுயநலனுக்காக தங்கள் அண்டைவீட்டார்கள், உறவினர்கள் மற்றும் இதரர்களின் குடும்ப வாழ்க்கையை சீர்குலைக்க பலர் முன்னுக்கு வருவார்கள் என்ற அச்சம் எனக்குள்ளது. அதே போன்று, வாரிசுரிமை பற்றிய விதிமுறைகளும் சொத்துக்களை நிர்வகிப்பதைக் கடினமாக்குவதுடன், பல சதிகாரரர்கள் சமுதாயத்தில் பல சதித் திட்டங்களை உருவாக்கக் களமாக அமையும். சட்ட வல்லுநர்களும் நீதிமன்றங்களும் செழித்தோங்கக்கூடும், ஆனால் குடும்பங்கள் சிதைந்து போவதுடன் குடும்ப அமைதியும் குலைந்து போகும்.

இந்து சட்டக் குழுவின் உறுப்பினர்களில் ஒருவரான டாக்டர் துவாரகா நாத்தின் அறிக்கை இந்துக்களில் பெரும்பான்மையோரின் கருத்தை எதிரொலிக்கிறது. அவரது முடிவுகளுக்கு அடிப்படையாக

உள்ள உண்மைகள் மறுக்க முடியாதவை. குழுவின் மற்ற உறுப்பினர்களின் அறிக்கை டாக்டர் மிட்டர் தமது கருத்துக்கு ஆதரவாகக் கொடுத்துள்ள மறுக்கமுடியாத உண்மைகளின் வலிமையைக் குறைக்க எடுத்துள்ள முயற்சி என்றுதான் கூறவேண்டும். குழுவின் பெரும்பான்மை உறுப்பினர்கள் முக்கியமான விஷயங்களில், பல்வேறு வகைகளில் தங்களுக்கு முன்வைக்கப்பட்டுள்ள பொது மக்களின் கருத்துகளைக் கவனத்தில் எடுத்துக் கெள்ளாது, தங்கள் முடிவுகளை ஏற்கெனவே எடுத்துள்ளதாகத் தெரிகிறது. பொது மக்கள் கருத்துக்கு அஞ்சி நடுங்கும் இந்திய அரசு இந்த மாதிரியான ஒரு மசோதாவை இந்த அவையில் கொண்டுவர எவ்வாறு தீர்மானித்தது என்பது எனக்கு ஆச்சரியமாக உள்ளது. இந்து சமுதாயத்தில் முற்போக்காளர்கள் என்று கூறிக்கொள்ளும் சிலரின் உணர்வுகளைத் திருப்தி செய்வதற்காக இந்துக்களில் மிகப் பெரும்பான்மையினரால் எதிர்க்கப்படும் ஒரு மசோதாவைக் கொண்டுவர அது முன்வந்திருக்கக் கூடாது. இந்த மசோதாவை ஏற்றுக் கொள்ளவேண்டும் என்று குரல் கொடுப்பவர்கள், கிராமம் கிராமமாகச் சென்று இந்த மசோதாவிலுள்ள விதிகளைப் பற்றிய கருத்துகளை கேட்டுத் தெரிந்து கொள்வார்கள் எனின், திருப்திகரமான ஆதரவு இல்லை என்பதை கண்டு கொள்வார்கள் என்பது நிச்சயம். குறைந்தபட்சம், என் மாகாண மக்களின் கருத்து இந்த மசோதாவுக்கு எதிரானதே.

***டாக்டர் பி. பட்டாபி சீதாராமையா** (சென்னை - பொது) : ஐயா, நான் எழுந்தவுடன், நண்பர்களிடமிருந்து சில குரல்கள் கேட்கின்றன. ''ஆதரியுங்கள்'' என்று சிலரும் ''ஆதரிக்காதீர்கள்'' என்று சிலரும் குரல் எழுப்புகின்றனர்.

திரு. பி.எல் சோந்தி (கிழக்குப் பஞ்சாப்): நீங்கள் இரண்டு விதமாகவும் நடந்து கொள்வீர்கள்.

டாக்டர் பி. பட்டாபி சீதாராமையா: ஒருவேளை இரண்டு வகையிலும் செயல்படுவேன். ஏனெனில் இந்த மாதிரி விஷயங்களில் வறட்டுப் பிடிவாதம் காட்டுவது நமது கடமையல்ல. பெரிய மனிதர்கள் மற்றும், முட்டாள்கள் மட்டுமே பிடிவாதமான கொள்கையுடன் நடந்து கொள்வார்கள். நான் இரண்டையும் சேர்ந்தவன் அல்ல. நமது சிந்தனைகளை மற்றவர்களின் சிந்தனைகளுடன்

★ அ.நி.வி. (சட்ட) டி., தொகுதி VI, பாகம் II, 13, டிசம்பர் 1949, பக்கங்கள் 543-52.

இணைத்துக் கொண்டு பள்ளி நாட்களில் நாம் கற்றுக் கொண்ட அதிக பட்சத்திலான பொதுவான எண்ணை (G.C.M.) கண்டுபிடிப்போம். அதாவது சமுதாயத்தின் செயல்பாடுகள் மற்றும் கட்டுக்கோப்பு சம்பந்தமான முக்கியப் பிரச்சினைகளில் அதிகபட்ச அளவிலான ஒருமைப்பாடு அவசியம். பதிவாளரிடம் மூன்று ரூபாய் கொடுத்து தினந்தோறும் மாற்றம் செய்துக் கொள்ளத்தக்க மெமோராண்டம் ஆர்டிக்கில் போன்ற தஸ்தாவேஜிகளின் அடிப்படையில் செயல்படும் ஓர் உயிரற்று கூட்டுப் பங்கு நிறுவனம் அல்ல சமுதாயம். அது உயிருடன் இயங்கிக் கொண்டிருக்கிறது, நாம் வழிவழியாகக் கண்டு கொண்டிருக்கும் இந்த சமுதாயம், எதன் உறுப்பினர்களாக இருப் பதில் பெருமை கொள்கிறோமோ, அந்த சமுதாயம் பல ஆயிரக் கணக்கான ஆண்டுகளாக செயல்பட்டுக் கொண்டிருக்கிறது.

பாபு ராம் நாராயண் சிங்: (பீகார் - பொது) படைக்கப்பட்ட நாளிலிருந்தே.

டாக்டர் பி. பட்டாபி சீதாராமையா: என்று அது தொடங் கியது என்பது யாருக்கும் தெரியாது. கௌடில்யரின் அர்த்தசாஸ்தி ரத்தின் கொடுக்கப்பட்டுள்ள சான்றுகளின் அடிப்படையில் 2300 ஆண்டுகளுக்கு முன்பே இது ஒரு முதிர்ச்சியை அடைந்துள்ளது என்று கூறமுடியும். திருமணப் பிரச்சினைகள், குற்றங்கள், தண்டனைகள், மனோதத்துவக் குழப்பங்கள், அரசியல் புதிர்கள் போன்ற பல பிரச் சினைகள் குறித்து கௌடில்யர் அர்த்த சாஸ்திரத்தில் விளக்கியுள்ளது போன்றே எவ்வித வேறுபாடுமின்றி இன்றும் அவை நம் முன் உள்ளன. அந்த நூலைப் படிக்காத என் நண்பர்களை அதைப் படிக்கும்படி கேட்டுக் கொள்கிறேன். சுக்ர நிதி சாரம் என்ற நூலையும் படியுங்கள், நமது பண்டைய இந்துச் சட்டத்தின் மற்ற அரசியல் படைப்புகளைப் படித்துப் பாருங்கள்.

திரு. எல். கிருஷ்ணசாமி பாரதி: துரதிர்ஷ்டவசமாக கௌடில் யரின் அர்த்தசாஸ்திரம் கிடைப்பதில்லை.

டாக்டர் பட்டாபி சீதாராமையா: அதைப் பெற வேண்டு மென்ற எண்ணம் இருப்பவர்களுக்கு அது எளிதாகக் கிடைக்கிறது.

திரு. எல். கிருஷ்ணசாமி பாரதி: என்னால் முடிந்த அளவுக்கு நான் முயற்சி செய்துவிட்டேன்.

டாக்டர் பி. பட்டாபி சீதாராமையா : எனவே இந்து சமுதாயத்தில் ஏற்பட்டுள்ள மாற்றங்களின் குணவியல்பினை காட்டும் முந்தைய வரலாறுகள் மற்றும் முன்னேற்றத்திற்கான பரிணாம வளர்ச்சிக்கான நிலைமைகளை கவனித்து நோக்க வேண்டும். இந்து சமுதாயம் மற்றும் இந்து கலாசாரத்தின் மீது நாம் பெருமை கொள்ள வேண்டுமென்று கூறவில்லை, எப்படி இருப்பினும் இந்தியக் கலாசாரம் என்பது பெரும்பாலும் இந்துக் கலாசாரந்தான். இந்திய சமுதாயம் என்று அழைக்கப்படுவதும் இந்து சமுதாயந்தான். வேறுபல மக்கள், ஜாட் இனத்தினர், மொகலாயர்கள், துருக்கியர்கள், ஆங்கிலேயர்கள் நம்மை வந்தடைந்து நம்முடன் கலந்தாலும் நம்மிடம் உள்ள பல நல்ல விஷயங்களை அவர்கள் ஒருவேளை தன்மயமாக்கிக் கொண்டிருப்பார்கள். அவர்களிடம் உள்ள பல நல்ல விஷயங்களை நாம் ஏற்றுக் கொள்ள அவர்கள் உதவியுள்ளனர். ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக நடைபெற்றுவரும் இந்த கலாசாரங்களின் சங்கமம், நமது தேசிய கலாசார நீரோட்டத்தை அதன் உள்ளடக்கத்திலும் பரந்த தன்மையிலும் மிகவும் செழுமைப் படுத்தியுள்ளது. இந்தப் பரம்பரை செல்வத்திற்கு நாம் வாரிசுதாரர்கள். அதை நாம் எப்படிக் கையாளப் போகிறோம்? அதற்குப் பின் ஏதாவது தத்துவம் இருக்கிறதா அல்லது எந்தத் தொடர்பின்றியும் நிகழும் வளர்ச்சியா? சூழ்நிலைகளினால் ஏற்பட்ட வளர்ச்சியா, நேர் எதிரான சக்திகள் தாறுமாறாக ஒன்றுக்கொன்று இணைப்பில்லாமல் குழும்பிக் கிடக்கும் கலவையா, அல்லது பல்வேறு காரணக் கூறுகள் தன்வய மாக்கப்பட்டு தகுதியானவைகள் கரைந்து தகுதியற்றவைகள் வெளித்தள்ளப்பட்ட திரவமா? இதுவே நாம் கவனிக்க வேண்டிய விஷயங்கள். இந்த முக்கிய சீர்திருத்தத்தை கொண்டு வருவதற்கு முன்பு இந்த விஷயங்களைக் கவனமாக ஆய்வு செய்தோமா? இந்தச் சீர்திருத்தத்தை யார் ஆரம்பித்தார்கள்? இது எப்பொழுது ஆரம்பிக்கப்பட்டது? யார் காலத்தில் இது துவக்கப்பட்டது? தேசிய அரசு பதவிக்கு வந்த பிறகு இது ஆரம்பிக்கப்பட்டதா அல்லது இது பழைய அரசின் செயலாளர் அலுவலகத்திலிருந்து எடுத்துக் கொள்ளப்பட்ட பூர்வீக சொத்தா? இதில் நாம் முன்கை எடுத்துள்ளோமா? அது சம்பந்தமாக நம் பங்கு என்ன? நான் கூறியபடி சமூகம் ஒரு உயிருள்ள அமைப்பு ஆகும். அதன் பின்னே சில தத்துவக் கொள்கைகள் உள்ளன. அதன் முன்னே சில பொருளாதாரத் திட்டங்கள் உள்ளன. இந்து சமுதாயத்தை எடுத்துக் கொள்ளுங்கள். வேறு எந்த சமூகமாவது இந்து சமூகத்தைப் போன்று சோஷலிசக் கருத்துகளை இயல்பாக உள்ளடக்கியுள்ளதா?

எனக்கு 50 ஏக்கர் நிலங்கள் உள்ளன. எனக்கு இரண்டு மகன்கள் உள்ளனர். எனது இரண்டு மகன்கள் ஒவ்வொருவரும் தலா இருபத்தைந்து ஏக்கருக்கு வாரிசுதாரர்களாக இருப்பார்கள். எனது மூத்த மகனுக்கு நான்கு மகன்கள். ஒவ்வொரு மகனுக்கும் ஆறு ஏக்கர் மட்டும் கிடைக்கும். நம்முடைய வாரிசுரிமைப்படி சொத்தைக் குவிப்பதற்கு வாய்ப்புள்ளதா? சிறிதுமில்லை. அது மிகச் சிறந்த முறையிலான சோஷலிச அமைப்பு. இந்த சோஷலிச முறையை அழித்துவிட்டு அதற்கு மாறாக ஒவ்வொரு தனிநபரும் பிறப்பினால் வாரிசுரிமை பெறாமல் எஞ்சுநர் உரிமை அடிப்படையில் சொத்துரிமை பெறும் தனிநபர் நாகரீகத்தைக் கொண்டுவர விரும்புகிறீர்களா? ஒரு வேளை சாதாரண மக்களின் வம்ச விருத்திக்கான சட்ட மசோதா ஒன்றைக் கொண்டு வருவதே டாக்டர் அம்பேத்கரின் அடுத்த நடவடிக்கையாக இருக்கும் என நினைக்கிறேன். பிறகு நீங்கள் பிரபுக்கள் கூட்டத்தை உருவாக்கி அதைப் பேணிப் பாதுகாப்பீர்கள். வர்க்கங்கள் அற்ற சமுதாயத்துக்கு பதிலாக வர்க்கங்களைக் கொண்டுள்ள சமுதாயத்தை நிலை நாட்டுவீர்கள். அறிவும் சொத்தும், புலமையும், செல்வமும் சமநிலையிலிருக்கும் ஒரு வர்க்கமற்ற சமுதாயத்திற்குப் பதிலாக பணமே ஆதிக்கம் செலுத்தும் ஒரு சமுதாயத்தை உருவாக்கப் போகிறீர்கள். அதுதான் மேலை நாடுகளில் நடந்து கொண்டிருக்கிறது. கீழை நாடுகளில் நடக்க முடியாதது அதுவேதான். இங்கே சமூக அமைப்புகளின் மூலம் செல்வத்தையும் கலாசாரத்தையும் சமநிலைப் படுத்தியுள்ளோம். அந்த நிலை ்ய உருவாக்கிய பிறகு செல்வத்தைவிட கலாசாரத்துக்கு அதிக மதிப்புக் கொடுத்துள்ளோம். செல்வம் அதற்குத் தாழ்ந்த நிலையையே பெற்றுள்ளது. இப்பொழுது நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள்? பத்து லட்சம் ரூபாய் குவிக்குமளவுக்கு ஒரு வழக்குரைஞருக்கு வாய்ப்பளிக்கப்படுகிறது. அவர் ஒரு மிகப் பெரிய நபராகிவிடுகிறார். அவருடைய சகோதரர்களால் கொடுக்க முடிந்த தொகையில் அவர் இங்கிலாந்து சென்று பாரிஸ்டருக்குப் படித்திருப்பார். பிரிட்டிஷார்களின் லட்சியத்தின் அடிப்படையில் கொண்டு வரப்பட்ட சட்டத்தின்படி அவர் கற்றதனாலாய பயன் அவருக்கு மட்டுமே உரிய சொத்தாகி விடுகிறது. ஆனால் அதேநேரத்தில் விவசாயிகள் மற்றும் வியாபாரிகளான மற்ற சகோதரர்கள் அவரைப் போன்ற நியாயமாக உழைத்திருந்தும் சொத்தை பாரிஸ்டரான சகோதரனுடன் பங்கிட்டுக் கொள்ள வேண்டியுள்ளது. பாரிஸ்டர் தன் சொத்துக்களை மற்ற சகோதரர்களுடன் பங்கிட்டுக் கொள்ள வேண்டிய அவசியமில்லை. இது நியாயமா? நமது சமுதாயத்தில் ஏற்றுக்

கொள்ளப்பட்ட உன்னதமான மதிப்புகளுடன் ஒப்பிட்டால் இது சகிக்க முடியாத முட்டாள்தனம்.

இப்பொழுது ஒரு நிமிடம் கேள்வி ஒன்றைக் கவனிப்போம். இந்த சமுதாயத்தின் செயல்பாடுகள் மற்றும் கட்டமைப்பின் மீதான சமூக, அரசியல், பொருளாதார மற்றும் செறிமுறைகளின் தாக்கத்தை குறித்து நீங்கள் ஒரு விசாரணைக் குழுவை அமைத்திருக்கிறர்களா? ஒரு ஐயாயிரம் ஆண்டுகளாக சூழ்நிலைகள் மற்றும் காலத்தின் தாக்குதல்களினால் அழிந்துவிடாமல் நிலைத்து நிற்கும் இந்த கட்டமைப்பின் பின் உள்ள மனோதத்துவத்தை ஆய்வுசெய்து தயாரிக்கப் பட்டுள்ள அறிக்கை ஏதாவது உங்களிடம் உள்ளதா? ஏன் அது ஐந் தாயிரம் ஆண்டுகளாகவோ, நிச்சயமாக பதிமூன்றாயிரம் ஆண்டு களாகவோ, ஒரு வேளை முப்பதாயிரம் ஆண்டுகளாகவோகூட இருக்கலாம். ஏனெனில் நமது சமுதாயம் மற்றும் பண்டைய நாகரிகம், மகாபாரதம் வேதங்கள் ஆகியவைகளின் காலத்தைக் குறித்து மூன்றுவிதக் கருத்துக்கள் உள்ளன. ஏன் நீங்கள் அவ்வாறு செயல்பட வில்லை? ஆன்ட்வெர்ப்பிலிருந்து இறக்குமதி செய்யப்படும் சிறிதளவு இரும்புக்கு சுங்கவரிச் சலுகைக் கொடுக்க வேண்டுமென் றால் 3000 ரூபாய் மாத ஊதியத்தில் மூன்று அதிகாரிகளைக் கொண்ட சுங்க வரி போர்டை நியமிக்கிறீர்கள். இந்த நாட்டிலுள்ள எல்லா முதலாளிகளிடமிருந்தும் பெறப்பட்ட சாட்சியங்களிலிருந்து அறிக்கை ஒன்றை பெறுகிறீர்கள். அதை நிதி இலாகாவில் பரிசீலனை செய்து விட்டு சட்டமன்றத்துக்குக் கொண்டு செல்கிறீர்கள். பிறகு வரிச் சலுகை கொடுக்கிறீர்கள். நமது சமூகத்தைப் பொறுத்தவரை நீங்கள் எப்படி நடந்து கொண்டிருக்கிறீர்கள்? இந்தப் புராதன சமுதாயம் பண்டைய காட்டுமிராண்டித்தனத்தின் நினைவுச் சின்னம், கிழடுத் தட்டிப்போன விஷயங்களின் அறிகுறிகள் என்று கையைச் சொடக்கு கிறீர்கள். இல்லை, நாமெல்லாம் முற்றிலுமாக மறைந்து விடுவோம் என்று கூறுகிறீர்கள்.

லண்டனில் உள்ளதைப் போல் நமது பல்கலைக் கழகங்களை உருவாக்கியிருக்கிறோம். லண்டனில் உள்ள உயர் நீதிமன்றங்களில் நடைபெறுவது போன்ற சட்ட வழிமுறைகளை நாம் ஏற்றுக் கொண் டுள்ளோம். மேலை நாட்டுப் பாராளுமன்றத்தைப் போன்று நமது சட்டமன்றங்களையும் மேலவைகளையும் உருவாக்கியுள்ளோம். மேலை நாட்டு குடியுரிமைச் சட்டங்களையும், சமூக அமைப்புகளை யும் மேலை நாட்டு நடத்தை முறைகளையும் சமூகத்தையும் பகர்ப்பு செய்ய வேண்டியதுதான் எஞ்சியுள்ளது. தயவுசெய்து என்னைத்

தவறாகப் புரிந்து கொள்ளாதீர்கள். நீண்டகாலமாக விவாகரத்தை அனுதாபத்துடனேயே நோக்கினேன். என்னுடைய மனைவியை விவாகரத்து செய்ய நினைத்துக் கொண்டிருக்கிறேன். அவளும் அதற்கு மதிப்புக் கொடுத்து அதையே அவளும் திரும்பிச் செய்ய நினைக்கிறாள். அதுவல்ல விஷயம், இந்த மசோதாவின் பல அம்சங் களை ஆதரிக்கிறேன் என்பதைக் கூறிக்கொள்கிறேன். ஆனால் இந்தியா சுதந்திரம் அடைந்த பிறகு இந்திய மரபுகளை, அமைப்பு களைப் பற்றிய உங்கள் கண்ணோட்டம் மற்றும் அணுகுமுறையும் எப்படியுள்ளது என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். இந்தப் பிரச்சினையை அவசர கோலத்தில் முற்றிலும் ஆய்வு செய்யாமல் கையாளும் முறை என்னுடைய கற்பனைக்கு எட்டாதது மட்டு மின்றி எனது கொள்கைகளுக்கும் மாறானது. சட்டமன்றத்தை விட்டு காங்கிரஸ் வெளியேறிய காலத்திலிருந்தே இந்த மசோதா கிடப்பில் உள்ளது என்று நீங்கள் கூறுவீர்கள் என்பது எனக்குத் தெரியும். அது கிடப்பில் உள்ளது என்பது எனக்குத் தெரிந்ததுதான். 1938 ஜூலை மாதத்தில் இந்தியாவின் எல்லையாகக் கருதப்பட்ட எகிப்து மற்றும் சிங்கப்பூருக்கு ராணுவம் அனுப்பப்பட்டதால் சட்டமன்றத் திலிருந்து வெளிநடப்புச் செய்யவேண்டுமென்று காங்கிரஸ் கட்சி நிறைவேற்றிய தீர்மானம் உங்களுக்கு ஞாபகத்தில் இருக்கும் என்று நினைக்கிறேன். எனவே, அந்த நடவடிக்கைக்கு எதிராக, சட்ட மன்றத்தின் திட்டவட்டமான அனுமதியின்றி வெளிநாடுகளுக்கு படைகளை அனுப்பமாட்டோம் என்று அரசு அளித்த வாக்குறுதியை மீறியதற்காக நாம் வெளிநடப்புச் செய்தோம். அதிலிருந்து 1946 வரை உள்ளே செல்லவில்லை. இந்த நேரத்தில், தேசப்பற்றில் நாட்டம் இல்லாதவர்கள், மேலைநாடுகளது நாகரிகத்தின் பாதுகாவ லர்கள், தங்கள் வாழ்வின் பெரும்பகுதியை இங்கிலாந்திலோ வெளிநாடுகளிலோ கழித்தவர்கள் ஒரு சிலர் ஒரு குழுவாக அமைக்கப்பட்டு, அக்குழுவால் இந்தச் சட்டம் நமக்கு அளிக்கப்பட் டுள்ளது. 1944 அக்டோபரில் நான் அகமத்நகர் ஜெயிலில் இருந்த போது இந்து சட்ட சீர்திருத்தக் குழுவின் முதல் அறிக்கை எனக்குக் கிடைத்தது. இந்தச் சட்டத்தின் முக்கிய காரணகர்த்தா, புதிய அரசியல் சட்டத்தில் நாம் பெற்றுள்ள சாதனைப் பெருமைகளை நமக்கு அளித்துள்ள திரு. பி.என். ராவ் அவர்கள்தான். நமக்காக பெரும் பணியாற்றியுள்ளவர் அரசியல் சட்டம், தீர்ப்புவழிச் சட்டம், தொகுப்புச் சட்டம், நடைமுறைச் சட்டம் ஆகியவைகளில் அவர் கொண்டிருந்த திறமைக்காக பெரும் புகழ் பெற்றவர். தாயபாகா முறை நடைமுறையிலுள்ள வங்காளத்தின் கல்கத்தா உயர்நீதிமன்றத்தில் நீதிபதியாக இருந்தவர். மெட்ராஸ் மற்றும் இரு மாகாணங்களில்

மிதாக்ஷரா முறையும் பம்பாயில் மயூகா முறையும் நடைமுறையிலுள்ளதை நீங்கள் அறிவீர்கள். மிதாக்ஷர நடைமுறையில் எந்த அனுபவமும் இல்லாத இவர் கல்கத்தா உயர்நீதி மன்றத்தின் நீதிபதியாக இருந்தார். ஈடு இணையற்ற சட்ட அறிவு உள்ள இவர்தான் இந்தச் சட்டத்திற்கு அடிகோலிட்டவர், பிறகு, வெகுஜனக் கட்சியான காங்கிரசுக் கட்சிக்கு இதைக் குறித்து மத்தியச் சட்டமன்றத்தில் விவாதிக்க வாய்ப்பில்லாமல் போய்விட்டது. திரு. அசோக ராய் சட்டமன்ற உறுப்பினராக வந்தபோது தோணிக் கழியால்கூட இந்த மசோதாவைத் தொடமாட்டேன் என்று கூறினார். (திரு. மகாவீர் தியாகி : தோணிக் கழி என்றால் என்ன?) தோணியைத் தண்ணீரில் செலுத்துவதற்கான கழிதான் அது. இருப்பினும் இந்தச் சட்டம் வந்தாகிவிட்டது. நமது தேர்தல் அறிக்கையில் அதைப் பற்றி ஒரு வார்த்தைகூட குறிப்பிடாமல், அதற்காக வெகு ஆவலாகக் காத்திருந்தது போல் நாம் அதை எடுத்துக் கொண்டுள்ளோம். சீனாவிலிருந்து பெருவரை உள்ள நாடுகளின் பிரச்சினைகளை விவரித்துவிட்டு, முக்கியமான தொழில்களைத் தேசியமயமாக்க வேண்டுமென்று ஆர்வத்துடன் அறைகூவல்விட்டு, ஜமீந்தாரி முறை மற்றும் குடி முதலியவைகளை ஒழிக்க வேண்டுமென்று அறிவிப்புகளை அள்ளி வீசிவிட்டு இந்தியாவுக்கு மிகவும் அடிப்படைக் கூறாக விளங்கும் சமூகசீர்திருத்தங்களைக் குறித்து மௌனம் சாதிக்கும் விவரமான தேர்தல் அறிக்கைகளை வெளியிடும் கட்சி எதையாவது, எங்காவது சந்தித்திருக்கிறீர்களா?

அது ஒரு சாதாரண சிறு சமூகச் சீர்திருத்தம் மட்டுமல்ல. இந்தியாவில், சமயம் சமுதாயத்துடன் பின்னிப் பிணைந்து கலந்துள்ளது. எந்த நடவடிக்கைக்கும் பின்னே சமய அங்கீகாரம் உள்ளது. இப்பொழுது நான் மிகவும் மத நம்பிக்கையில்லாதவன். ஆனால் அடுத்தவர்களது உணர்வுகளுக்கு அதிகம் மதிப்புக் கொடுப்பவன். இல்லையென்றால் நான் ஒரு பண்பற்ற காட்டுமிராண்டிதான். மற்றவர்களின் அசைக்க முடியாத நம்பிக்கைகளின் மீது என் மாற்றுக் கருத்துகளை செயல்படுத்த விரும்பினால் நான் உண்ணும் உணவுக்கு அருகதையற்றவன் ஆவேன். பிறகு சமயம் மட்டுமல்ல, பொருளாதாரக் கூறுகள், சமுதாயக் கூறுகள் மற்றும் இதர விஷயங்களும் பின்னிப் பிணைந்துள்ளன. இந்தக் கூட்டுக் குடும்ப முறை காலம் காலமாக உருவாக்கப்பட்ட ஒன்று. கூட்டுக் குடும்ப முறை என்றால் என்ன? அது ஒரு காப்பீட்டு நிறுவனம் போன்றதாகும். அது ஒரு கூட்டுறவு சங்கம். அது ஒரு உழைப்பாளர் சமூகம்.

மாலை 5 மணி

அதில் ஏழை சகோதரர்கள் எல்லோரும் சேர்ந்து உழைக்கின்றனர். எல்லா சகோதரர்களும் ஒருவருக்காக எல்லோரும் எல்லோருக்குமாக ஒருவரும் சேர்ந்து வாழும் கூட்டுறவு அமைப்பாகும். இறந்த சகோதரனின் மனைவியை உயிருடன் வாழும் எஞ்சிய சகோதரர்கள் பேணிப் பாதுகாக்கும் காப்பீட்டுக் கழகம் அது. காப்பீட்டுத் திட்டத்தை மகாத்மா எதிர்த்தபோது இப்படித்தான் கூறினார் எல்லோரும் மகாத்மாஜியாக ஆக முடியாது என்பது எனக்குத் தெரியும். இந்துக் கூட்டு குடும்ப அமைப்பு சமயப் பின்னணியின் அடிப்படையில் சமூகப் பிணைப்பினால் ஒன்றாக இணைந்து இந்த மூன்று அம்சங் களையும் கொண்டுள்ள ஒரு புனிமான கூட்டமைப்பாகும். உங்கள் உழைப்பு முழுவதாலும், உங்கள் சட்டங்கள் எல்லாவற்றாலும் இங்கிலாந்தின் ஹாலிஸ்பரியின் சட்டங்களின் மூலம் இதற்கு சமமான ஒன்றை உங்களால் உருவாக்க முடியுமா? தேசப்பிதா மீண்டும் கண்டுணர்த்திய கைராட்டுப் பொருளாதாரத்திற்கு இணை யாக எதையும் உருவாக்க முடியாதோ அது போன்று தான் இதுவும். வழக்கமான என் கௌரவமற்றத் தன்மையுடன் இதை எடுத்துரைப் பதற்கு என்னை அனுமதியுங்கள். 1938-ல் ''இந்து இல்லம் மீண்டும் கண்டுபடிக்கப்பட்டது'' என்ற நூலை எழுதினேன். நான் மத நம்பிக்கையற்றவனாக வாழ்க்கையில் நுழைந்த போது, கிருஸ்தவ பாரம்பரிய ரீதியில் மேலைநாட்டு மாறுபட்ட கருத்துகளின் அடிப் படையிலும் வளர்க்கப்பட்டபோது, இந்த சமூகத்தின் ஒவ்வொரு விழாவிலும், சடங்குகளிலும், ஒவ்வொரு சமயப் பழக்கவழக்கங் களிலும், ஆழ்ந்த சமய, வாழ்க்கையை மேம்படுத்தும், உயிர்ப்பூட்டும், மேம்பாட்டுக்கு வழிவகுக்கும் ஏதோ ஒன்றைக் கண்டேன். நான் என் சகோதர சகோதரிகளுடன் வசித்தபோது இந்த இல்லத்தை நான் திரும்பவும் கண்டுபிடித்தேன். அதற்குப்பிறகு இந்தச் சிறிய நூலை எழுதத் துணிந்தேன். இந்த விஷயங்களை அதில் உயர்வாகச் சித்தரித்துள்ளேன். ஆனால் இந்த உயர்ந்த லட்சியங்கள் வாழ்க்கை யில் இன்றைக்கு உள்ளதா என்பதை நான் கூறமாட்டேன். ஓர் அமைப்பை விமர்சிக்கும்போது அதன் தூய்மையான தன்மையில் அதை விமர்சிக்க வேண்டும். அதன் சீர்கெட்ட போலியை அல்ல. ஏதாவது கருத்தை ஒப்பற்றதாகச் செய்ய வேண்டுமென்றால், ஏதாவது அமைப்பை உயிரூட்டிப் பிரபலப்படுத்த விரும்பினால், அது உருவான விதத்தை தேசத்திற்கு முன்பு வைத்து அதன் ஆதரவைப் பெறுங்கள். இந்த மசோதாவின் ஒவ்வொரு விதியின் சாதக பாதகங் களை நான் செல்லுமிடங்களிலெல்லாம் எடுத்துரைக்கிறேன். பார்ச னின் முட்டைகளைப் போல் சில பகுதிகளில் இது நன்றாகவும் சில

பகுதிகளில் மோசமாகவும் இருக்கலாம். பெண்கள் தங்கள் கால்களில் நிற்கும் நிலைக்கு வந்துவிட்டார்கள். எனவே அவர்களுக்கு இவை செய்யப்பட வேண்டும் என்று நீங்கள் கூறினால் அதை எவ்விதத்திலும் நிறைவேற்றுங்கள். ஆனால் அதற்கு ஏன் இந்த அவசரம்? அவர்கள் தங்கள் கால்களிலே நிற்க வேண்டுமென்றுதான் நான் விரும்புகிறேன். அவர்கள் பிறர் உதவியின்றி வாழும் நிலைக்கு வந்து விட்டார்கள். அடுத்த சட்டமன்றத்தில் இந்த அவையின் பாதி இடங்களை அவர்கள் பிடித்துவிடுவார்கள் என்று நான் உறுதியாக நம்புகிறேன். அவர்கள் மட்டும் நினைத்தால் இருநூற்றி ஐம்பது பெண்கள் தாராளமாக வந்துவிடுவார்கள்.

திரு. எல். கிருஷ்ணசாமி பாரதி: அவர்களை அனுமதிப்பீர்களா?

டாக்டர் பி. பட்டாபி சீதாராமையா: மாகாண மாதிரி அரசியலமைப்புக் குழுவின் முன்பு திருமதி ராஜகுமாரி பெண்களுக்கு ஒதுக்கீடு தேவையில்லை என்று கூறியதை நான் பாராட்டுகிறேன். அது ஒரு துடுக்குத்தனமான கருத்து என்று எண்ணினேன். அப்படிக் கூறுவதற்கு மிகுந்த பொறுப்பு வேண்டும். ஆனால் பெண்கள் தங்களைத் தாங்களே கவனித்துக் கொள்ளும் நிலைக்கு வந்து விட்டதை இப்பொழுது உணர்கிறேன். ஓர் அரை டஜன் பெண் உறுப்பினர்கள் இந்த மசோதாவை நிறைவேற்ற நம்மை கரகரவென்று இழுத்துச் செல்கையில் இங்கு இருநூற்றைம்பது உறுப்பினர்கள் இருந்தால் நம் நிலை என்னவாகும் என்பதை எண்ணிப் பாருங்கள். நான் தமாஷ் செய்யவில்லை. தேர்வின் போது எனக்கு சந்தர்ப்பம் அளிக்கப்படுமானால் திரு. ரோகிணி குமார் சௌத்ரி குறுக்கிடினும் நான் அதை நிறைவேற்றுவேன்.

(இந்த நேரத்தில் துணை சபாநாயகர் நாற்காலியை விட்டு சென்றபோது திரு. எஸ்.வி. கிருஷ்ணமூர்த்தி ராவ் (தலைவர் குழுவில் ஒருவர்) நாற்காலியில் அமர்ந்தார்.)

இது சம்பந்தமாக 1949 மார்ச் 12-ஆம் தேதி ''பிச்சர் போஸ்டு'' என்ற சஞ்சிகையில் வெளிவந்துள்ள பின்வரும் தகவலை உங்களுக்குப் படித்துக் காட்ட ஆசைப்படுகிறேன்.

''சமத்துவத்துக்கான கோரிக்கை பெண்களிடமிருந்து இடைவிடாது வந்து கொண்டிருக்கிறது. சமத்துவம் என்று அவர்கள்

குறிப்பிடுவது எது? நுகர் பொருள்களைப் பார்த்தால், பெரும்பங்கு அவர்களிடமே இருக்கிறது. விளம்பரங்களில் 90 சதவீதம் அவர்களுக்காகவே வெளியிடப்படுகிறது. கதைப் புத்தகங்கள் வெளியிடுபவர்களும் பெண்களையே இலக்காகக் கொண்டுள்ளனர். துணிகளைப் பொறுத்தவரையில் நியாயமான விலையில், அவர்களுக்குத்தான் எத்தனை வகைப்பட்ட ஆடைகள் உள்ளன. ஆனால் அசிங்கமான, நைந்துபோன ஆடைகளை அணிந்துள்ள ஆண்கள், ஒளிமங்கியக் கண்ணாடிக் கூண்டுகளில் உள்ள ஆடைகளைப் பெருமூச்சு விட்டுக்கொண்டு, என்ன விலையோ என்று ஏங்கிப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். நம்முடைய தீர்க்கதரிசனக் கண்களைக் கொண்டு எதிர்காலத்தை நோக்குவோம். பெண்கள் சமத்துவத்துடன் நின்றுவிடாது அதைவிட அதிக உரிமை பெற்றுள்ளனர். கன்னிகையரின் செல்ல நாயாக, பெண்கள் ஒதுக்கித் தள்ளும் குப்பைகளில் ஜீவிப்பவனாகிவிட்டான் ஆண் மகன்.''

பொறுமையைக் கடைப்பிடிப்பதன் மூலம் அவர்கள் எதையும் இழக்கப்போவதில்லை என்று நமது சகோதரிகளுக்கு உறுதியாகக் கூறிக் கொள்கிறேன். காசியைச் சேர்ந்த சுவாமிஜி ஒருவருடன் சமயக் கூட்டமொன்றில் கலந்து கொண்டதற்காக என்னைக் கேள்வி கேட்டனர். சிறந்த பெண் தொண்டரான பிரபாவதி ராஜே, பழைய ஜோன் ஆப் ஆர்க்கைப் போல் கூட்டத்தினரைக் கவர்ந்திழுப்பதைக் கண்டு, மத நடவடிக்கைகளில் அதிகம் ஈடுபாடு உள்ளவர்களை அனுமதிப்பதால் உள்ள ஆபத்தை உணர்ந்தேன். அழைப்பின் பேரில் அங்கு சென்ற நான் ஒரு மணி நேரம் உரை நிகழ்த்தினேன். எதிர்தரப்பினரின் மேடையில் ஏன் கலந்துகொண்டீர்கள் என்று என் மீது குற்றம் சாட்டினார்கள். ''ஏற்கெனவே நமது கொள்கைக்கு மாற்றம் அடைந்தவர்களிடம் பேசுவதால் என்ன பயன்? இன்னும் மாற்றம் அடையாமல் இருப்பவர்களை மாற்றுவதுதானே என் கடமை'', என்று கூறினேன். இந்தப் புதிய இந்துச் சட்டத் தொகுப்பை மக்களுக்கு எடுத்துணர்த்துவதில் எனக்கு நம்பிக்கை இருக்கிறது. விஷயத்தைத் துரிதப்படுத்தி, பெரும்பான்மை பலத்தின் மூலம் முடிவுக்கு வந்துவிடக்கூடாது. எப்பொழுது வேண்டுமானாலும் அது நிறைவேறட்டும். மக்களை அறிவுப்பூர்வமாக உணரச் செய்ய வேண்டும். அறிவூட்டும் பிரசாரத்தின் மூலம் நாம் பலனை அடையவேண்டும். முக்கியத் தொழில்களை நாம் தேசிய மயமாக்கவில்லை. இந்த உறுதிமொழி எங்கே போயிற்று? நம்மிடம் பணம் இல்லாததால் முதலாளி கொடுத்த பதிலடியில் நமது அறிவிப்புகளை வாபஸ் பெற்றுக்கொண்டோம். நான் பொறுமையைக் கடைப்பிடிப்பதை

நம்புகிறவன். இன்னும் சில நாட்களில் எல்லாம் சரியாகிவிடும். தற்போதைக்குத் தேசிய மயமாக்குவதைக் கண்டு அஞ்சுகிறோம். ஜமீன்களை ஒழிப்பதில் தயக்கம் காட்டுகிறோம். நதிநீர்த் திட்டங் களைத் தொடர்வதில் தயக்கம் காட்டுகிறோம். குடிசைத் தொழில் களின் வளர்ச்சியில் தயக்கம் காட்டுகிறோம். ஏனெனில் பணவீக்கம் நம்மைப் பயமுறுத்துகிறது. தேவைப்படும் இந்த வளர்ச்சிப் பணி களை நம்மால் செய்ய முடியவில்லை. நம்மைச் சுற்றிக் குழப்பங் களையும், முரண்பாடுகளையும் சந்திக்கிறோம். ரயில்வேப் பயணம் போன்று, வாழ்க்கைச் சுகமான பாதையில் செல்வதில்லை. கரடு முரடான பாதையில், நெரிசல் மிகுந்த போக்குவரத்தில், காரில் பயணம் செய்வது போன்றது அந்தப் பயணம். தங்கள் எஜமானர் களுக்கு அறிவூட்டும் பயனுள்ள நடவடிக்கைகளில் ஈடுபடுவது இந்த மரியாதைக்குரிய அவை உறுப்பினர்களின் கடமையல்லவா? நமது எஜமானர்களை அறிவுடையவர்களாக்குவோம் என்று வாக் குரிமை விரிவுபடுத்தப்பட்ட பிறகு ராபர்ட் லோ கூறியவுடன் 1878-ல் நடந்தது என்ன என்பது உங்களுக்குத் தெரியும். நமது எஜமானர்கள் வெளியே இருக்கிறார்கள். நாம் எஜமானர்கள் இல்லை. அமைச்சர் களும், நமது எஜமானர்கள் இல்லை. நம் விருப்பப்படி அவர்களுடன் நாம் நடந்து கொள்ளமுடியும். நமக்கு விருப்பமில்லையென்றால், நாளைக்கே அவர்களை நீக்கிவிட முடியும். அது நமது உரிமை. நமக்களிக்கப்பட்டுள்ள சலுகை அது. அதுதான் நம் பாதுகாப்பும்கூட. எனவே இந்த விஷயத்தில் நாம் மெதுவாகச் செல்ல வேண்டும் என்று கூறுகிறேன். சமூகச் சீர்திருத்தங்களைப் பொறுத்தவரையில் நான் யாருக்கும் சளைத்தவனல்ல. இந்த அவைக்கு வருகை தந்துள்ளவர் களில் பாதிப்பேர் பிறப்பதற்கு முன்பே, 51 ஆண்டுகளுக்கு முன்பே, 1898-ல் பி.ஏ. வகுப்பில் படிக்கும்போதே சமூகச் சீர்திருத்தப் பணியில் ஈடுபட்டிருந்தேன். அதிலிருந்து சமூகச் சேவையிலுள்ள ஆர்வம் எனக்குக் குன்றவில்லை. பிரம்ம சமாஜ சீர்திருத்தவாதி களால் சிறுவயதினிலேயே கவரப்பட்டேன். நான்காவது படிவத் திலிருந்து பி.ஏ. வகுப்புவரை நான் கல்வி கற்ற கிருஸ்தவப் பாதிரி களின் சேவை உணர்வுகள் என்னில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தின.

எனவே, இந்த விஷயத்தைப் பொறுத்தமட்டில் இப்பொழுது நாம் என்ன செய்யப் போகிறோம் என்பது முக்கியமல்ல, அதை நாம் எப்படிச் செய்யப் போகிறோம் என்பதே முக்கியமானது. நாளைக்கே நீங்கள் வாக்காளர் முன்பு நிற்க வேண்டியுள்ளது. நேற்று எவ்வளவு மோசமான நிலைமைக்கு நாம் ஆளாகியிருந்தோம். நேற்று நான் இங்கில்லை. இல்லையெனில், அந்தக் காட்சிகளை என் கண்

களினாலேயே கண்டிருப்பேன். ஆள்வாருக்குச் சென்றிருந்த நான், நேற்றிரவு பதினோரு மணிக்குத்தான் திரும்பி வந்தேன். தடியடிப் பிரயோகம் நடைபெற்றதாகவும் சிலர் படுகாயமுற்றதாகவும் என் மனைவி நான் திரும்பி வந்தவுடனேயே தெரிவித்து விட்டாள். சாதாரணமாக, இம்மாதிரிச் செய்திகள் ஒரு நபரிடமிருந்து மற்றொரு நபருக்குப் பரவும்போது, கைகால் முளைத்துப் பெரிதாகிவிடும். இன்றைக்கு நான் என் முன்னே காணும் காட்சி மிகவும் வருந்தத் தக்கதாகத்தான் இருக்கிறது. பொதுவாக நான் உத்வேகத்துடனோ அல்லது ஆர்வத்துடனோதான் பேசுவேன். காலரியில் அமர்ந்திருக் கும் மூன்று பெண் காவலர்களின் காட்சியினால் தோன்றிய எரிச்சலில் இப்பொழுது பேசிக்கொண்டிருக்கிறேன். இந்தப் பெண் காவலர்களின் தடிகள் இன்றி இந்த அவையை நடத்திச் செல்ல முடியாதா? காலரியிலும் அதற்குக் கீழேயும் அமர்ந்துள்ள பெண்களை, பெண் காவலர்களின் துணையின்றி நம்பமுடியாதா? நமது சகோதரி களை, இந்தப் பெண்காவலர்கள் குற்றவாளிகளாக்குவதில் நீங்கள் உண்மையிலேயே பெருமை கொள்கிறீர்களா? ஏராளமான காவலர் களைச் சந்தித்துவிட்டோம். இந்த மசோதாவின் சோகமான விளைவு இதுதான். காவலர்கள் பாதுகாவலின்றி இந்த அவையினுள் நீங்கள் நுழைய முடியாதென்றால், ஆண்களுக்கு ஆண்காவலர்களும், பெண்களுக்குப் பெண் காவலர்களும் தவிர்க்கமுடியாதெனின், இந்த முன்னேற்றம், நமது சட்டங்கள், சட்டமன்றங்கள் எல்லாவற்றிற்குமே ஆபத்து என்பதை டாக்டர் அவர்கள் கவனிக்க வேண்டும். இது எனக்கு மிகவும் வருத்தமாக இருக்கிறது. எனது பொதுவான விமரிசனங் களை இத்துடன் நிறுத்திவிட்டு, நான் மிகவும் அக்கறை கொண்டுள்ள ஒன்றிரண்டு விஷயங்களைக் குறித்துப் பேச விரும்புகிறேன். அதற்கு முன், இச்சட்டத்தின் முன்னோடிகளைக் குறித்து ஓரிரு வார்த்தைகள் கூற விரும்புகிறேன். இந்த மசோதாவை நிறைவேற்றும் பொறுப்பு டாக்டர் அம்பேத்கரின் தலையில் விழுந்ததை நினைத்து மிகவும் வருந்துகிறேன்.

மாண்புமிகு டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் (சட்டத் துறை அமைச்சர்) : அதில் எனக்குச் சிறிதும் வருத்தமில்லை.

டாக்டர் பட்டாபி சீதாராமையா: எனக்குத் தெரியும். இல்லை யென்றால், இவ்வளவு பெருமிதத்துடன் உங்கள் இருக்கையில் அமர்ந்து கொண்டிருக்க மாட்டீர்கள். தம்மைப் பற்றிக் கூறியதை டாக்டர் புரிந்து கொண்டிருப்பார் என நினைக்கிறேன். நல்லதற்கோ, கெட்டதற்கோ எதற்கெனினும் சரி, சலிப்படையாத, எதிர்க்க முடியாத, வெற்றி கொள்ளமுடியாத அவருடைய ஆர்வத்தைத்

தான் குறிப்பிடுகிறேன். இந்த அபரிமிதமான உற்சாகமிருப்பதால், நாம் அவரைப் பாராட்டுகிறோம். ஆனால், அதே நேரத்தில் சமுதாயத்தின் உணர்விற்கு ஒவ்வாதவராகிவிட்டார் அவர்.

திரு. எல். கிருஷ்ணசாமி பாரதி: முற்றிலும் அவர் பொருந்துபவராகவே இருக்கிறார்.

டாக்டர் பி. பட்டாபி சீதராமையா: நான் அவரை ஜன விரோதி என்று அழைக்கமாட்டேன். ஆனால் அவர் ஒரு சாதாரண மனிதர் அல்ல என்பதை மட்டும் கூறுவேன். பயிற்சி, சூழ்நிலை, சுற்றுப்புறம், கலாசாரம் ஆகியவைகளெல்லாம் அவரை தேசத்தின் உணர்வுகளிலிருந்து பிரித்துவிட்டன. நம்மிடையே உள்ள அறிவு ஜீவிகளில் அவர் மிகச் சிறந்தவர் என்பதைப் பற்றி எந்த சந்தேகமும் இருக்கமுடியாது. அவர் நல்ல உடல் நலத்துடனும், வளமுடனும் நீண்டநாட்கள் வாழ வேண்டுமென்று விரும்புகிறேன். ஆனால் இதற்காக அவருடைய கருத்துகளை நாம் ஏற்க வேண்டிய அவசியமில்லை. பொதுச் சிவில் சட்டத்தை நாம் நிறைவேற்றியபோதே இந்தப் பூசல் கிளம்பியது. நம்முடைய பலத்தையெல்லாம் உபயோகித்து அதைத் தடுக்க முயன்றோம். பயனில்லை. இந்த மசோதா இந்த அவையில், கொண்டுவரப்பட்ட முதல் நாளன்று, நான் கூறியதை உங்கள் நினைவுக்கு மீண்டும் கொண்டு வருகிறேன். பலர் அதை மறந்திருக்கலாம். நான் அதைத் திரும்பவும் எடுத்துக் கூறுவதற்காக அவர்கள் என்னைக் குறை கூற வேண்டாம். முக்கியமான விஷயத்தை நானே மறந்து விட்டேன். அந்த விஷயம் இதுவாகத்தான் இருக்கும் என்று நினைக்கிறேன். ஆலோசனை வழங்குதல் பரிந்துரைத்தல், அல்லது நாம் அமைக்கவுள்ள சமூகக் குழுக்களின் தாக்கத்தின் மூலம் இந்நாட்டில் சமூகச் சீர்திருத்தங்கள் நடைபெற வேண்டும். பிறகு, நான் இங்கிலாந்தின் மாதாகோவில் குழுவின் உதாரணத்தை எடுத்துரைத்தேன். மாதாகோவிலின் முக்கியஸ்தர்களே அதன் பலமாக இருந்தனர். வாழ்க்கையிலும், சட்டத்திலும் அவர்கள் கொண்டுவரும் எந்த மாற்றங்களையும், காமன்ஸ் சபை எவ்வித மாற்றமுமின்றி ஏற்றுக் கொண்டது. மதம் மற்றும் சமூக விஷயங்களில் இவ்வாறுதான் நடைபெற வேண்டும். நாமும் இதைப் பின்பற்றலாம். நிபுணர்களின் ஆலோசனைகள் தேவைப்படும் பொருளாதார விஷயங்களைக் கவனிக்க ஜெர்மனியில் பொருளாதாரக் குழு ஒன்று செயல்பட்டு வந்தது. இந்தக் குழுவின் பரிந்துகைளை ரீஷ்டாக் ஏற்றுக் கொள்வது வழக்கமாக இருந்தது. நாம் மெதுவாகச் செல்வோம். அப்பொழுதுதான் நாம் எங்கு நிற்கிறோம் என்பது நமக்குத் தெரியும்.

மசோதாவின் சில விஷயங்களை இப்பொழுது பார்ப்போம். நான் உங்கள் பொறுமையை நீண்ட நேரம் சோதிக்கப் போவதில்லை. மசோதாவில் சில நல்ல விஷயங்கள் உள்ளன. சமயச் சடங்குகள் அடிப்படையிலான திருமணத்தை விடப் பதிவுத் திருமணத்தையே நான் அதிகம் விரும்புகிறேன். இரண்டு தரப்புகளுக்கிடையேயான ஒரு நடவடிக்கையை ஆவணத்தில் எழுதிப் பதிவு செய்வதுதான் பதிவுத் திருமணம் எனப்படுகிறது. அது ஓர் ஒப்பந்தமாகும். ஓர் ஆவணம் தயாரானவுடன் சச்சரவுகளும் ஆரம்பமாகின்றன. ஒப்பந் தத்தின் நோக்கம் நியாயமானதுதானா, ஒப்பந்தத்துக்கு அதிக விலை அளிக்கப்பட்டுவிட்டதா, சட்டத்தின் முன் நியாயமான ஒப்பந்தமா என்ற பல கேள்விகள் எழுகின்றன. ஆனால் சமயச் சடங்குகளின் அடிப்படையிலான திருமணத்தில் அதற்கெதிராக எந்தவித மேல் முறையீடும் கிடையாது. திருமணத்தின் நம்பகத்தன்மை மற்றும் அது சரியாக நடைபெற்றதா என்பதைக் குறித்து, எந்த ஒரு புரோகிதரும் தம் வாழ்நாளில் நீதிமன்றம் சென்று சாட்சி கூறப்போவதில்லை. திருமணம் முடிந்துவிட்டபிறகு யாரும் அதைக்குறித்துக் கேள்வி கேட்பதில்லை. அது வாய்ச் சொற்களைப் போன்று நேர்மையானது. வாய் சொற்களின் நேர்மை பிரிட்டிஷார் நீதிமன்றங்களில் பலியாகி விட்டது. மீண்டும் அந்நற்பண்பினைப் பெற்றுவருகிறோம். தமது மகளும் வரப்போகும் மருமகனும் ஒரே கோத்திரத்தைச் சேர்ந்தவர் கள் என்பது திருமண மண்டபத்தில் என் நண்பர் கண்டுகொண்டதைப் போன்று பல சூழ்நிலைகள் உள்ளன. சமயக் காரணங்களுக்காக இல்லாவிடினும் பொருளாதாரக் காரணங்களுக்காகவாவது அத் திருமணத்தை நிறுத்தமுடியாத நிலை ஏற்படுகிறது. உடனடியாகச் சடங்குகளை முடித்துக் கொண்டு, திருமணப் பதிவாளர்கள் அலுவல கத்திற்குச் சென்று, அதை அவர்கள் பதிவு செய்தனர். நமது திருமணங் களைப் பதிவு செய்துகொள்ளக்கிடைத்திருக்கும் வாய்ப்பு பெரும் சலுகை என்றுதான் கூறவேண்டும். பெண்களின் சொத்தில் உள்ள பங்கைக் குறித்தும் இறுதியான ஒரு முடிவுக்கு வர வேண்டுமென்று விரும்புகிறேன். மகன்களைப் போன்றே மகள்களும் தகப்பனாரின் சொத்தில் சமமான பங்கை அடையவேண்டுமென்று நீண்டகாலமாக நினைத்து வந்தேன். எனது நண்பர் ஒருவருக்கு ஆறு மகள்களும் ஒரு மகனும் இருக்கிறார்கள். ஒவ்வொரு பெண்ணையும் தனித்தனியாக கூப்பிட்டுத் தகப்பனாரின் சொத்தில் அவர்களுக்கும் பங்கு வேண்டுமா என்று கேட்டேன். வேண்டாம் என்று அவர்கள் பதிலளித்தார்கள். ''இது சகோதரனுடன் தகராறுக்கு வழிவகுக்கும். நாங்கள் இதை விரும்பவில்லை. கணவனுடைய சொத்து எங்களுக்கிருக்கிறது. அது எப்பொழுதும் எங்களுக்குள்ளது.'' சீதனம் அவர்களுக்குக் கிடைப்பது

போல் சொத்தில் அவர்களுக்குப் பங்கு கிடைப்பதில்லை. சீதனம் அளிப்பது என்பது மிக அற்புதமான ஒரு விஷயம். சீதனம் அளிக்கும் வழக்கத்திற்கு இணையான ஒன்று உலகில் வேறெங்காவது உள்ளதா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். திருமணத்தின்போது பெண்ணுக்கு அளிக்கப்படும் சீதனம் பெண்ணின் முழு உரிமை பெற்ற சொத்தாகிவிடுகிறது. அவளது கணவனோ, தகப்பனாரோ, வேறு எந்த நபருமோ அதைத் தொட முடியாது. அது குடும்பத்தின் சேம நிதியாக உள்ளது. தனது கணவன் நோய்வாய்ப்படும்போது மருத்துவச் செலவுக்கு அணிகலன்கள் விற்கப்படுகின்றன. கணவன் நலமுடன் இருந்தால் சரி; இல்லையேல் அவர் மரணமடைந்தால் அவர் இறுதிச் சடங்கிற்கு இந்த நிதி பயன்படுகிறது. இம்மாதிரி ஒரு சேமநிதி உருவாக்கப்பட்டு விட்டது. பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பு சட்டமான திரு. டி.வி.சேஷகிரி அய்யரின் மசோதாவின்படி, கணவரின் சொத்தில் மனைவிக்குப் பங்கு உண்டு என்பது ஏற்றுக் கொள்ளப்பட்டு விட்டது. மகன்களின் பங்குக்கு ஈடாக கணவனின் மறைவுக்குப் பிறகு வாழ்க்கைச் செலவுக்காக மட்டும் இது அளிக்கப்படுகிறது. தங்கள் அரசியல் ஸ்திரத்தன்மை ஆட்டம் கண்டுவிடும் என்ற அச்சத்தில் இந்திய சமயக் கட்டமைப்புகளில் குறுக்கீடு செய்ய ஆங்கிலேயர்கள் விரும்பவில்லையென்றாலும் முன்னால் பேசிய உறுப்பினர் ஒருவர் குறிப்பிட்டபடி, போதுமான மாற்றங்கள் ஏற்படாவிடினும், சிறிதளவு மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. அரசியல் காரணங்களுக்காக, இந் நாட்டின் பழக்கவழக்கங்களில், ஆங்கிலேயர்கள் தலையிட விரும் பாதது வருந்தத்தக்க விஷயந்தான். எனவே, சட்டம் இறுகிப் பாறை யாகிவிட்டது. ஒவ்வொரு நாட்டிலும் பழக்க வழக்கங்கள் மாறிக் கொண்டே இருக்கின்றன. சமூகப் பழக்க வழக்கங்களில் அரசர் மாற்றங்களைக் கொண்டு வரும்போது அது உடனடியாகச் சட்ட மாவதுடன், சமூகம் முழுமைக்குமான வழிகாட்டியாகி விடுகிறது. ஆனால் துரதிர்ஷ்டவசமாக, ஆயிரமாண்டுகளாக இங்கு உள்ளூர் அரசர்களின் ஆட்சி நடைபெறவில்லை. ஆங்கிலேயர்கள் வந்த பிறகு, இந்தச் சமூகக் கட்டமைப்பில், மாற்றங்கள் செய்யும் ஆசைக்கு அவர்கள் இடமளிக்கவில்லை. எனவே அந்தப் பழக்க வழக்கங்கள் பாறை போல் இறுகிப் போய்விட்டன. அந்த இறுக்கமடைந்த பழக்க வழக்கங்களை நெகிழச் செய்து, அவை விரிவுபடுத்தப்பட வேண்டும். பிறவற்றை ஏற்றுக் கொள்ளக்கூடியதாக, மாற்றமடையக் கூடியதாக ஆக்கப்பட வேண்டும். அவ்வாறு செயல்படுவதற்குப் பதிலாக, திடீரென்று சட்டம் என்ற கல்லை, பாறையாக உறைந் திருக்கும் பழக்கவழக்கங்களின் மீது வீசி எறிந்தால் இரண்டுமே உடைந்து சுக்கல் சக்கலாகிவிடும். மாற்றங்களுக்கான வழி இதுவல்ல.

வழக்காற்றுச் சட்டங்களில் மாற்றங்கள் கொண்டுவருவதன் மூலம் சமூக மாற்றங்கள் துவங்க வழிவகுக்க வேண்டும்.

இப்பொழுது பெண்களுக்கு பங்கு அளிக்கும் வழக்கத்தைப் பொறுத்த வரையில், அவர்களுக்குப் பங்கு அளிக்க வேண்டும் என்பதை நான் முற்றிலும் ஏற்றுக் கொள்கிறேன். ஆனால் ஒரு சிறிது மாறுதல் செய்ய விரும்புகிறேன். அதாவது திருமணமானவுடன், கணவனின் சொத்தில் அவள் பங்குதாரர் ஆகிவிடவேண்டும். சில சமயங்களில் கணவன் துரதிர்ஷ்டவசமாக, தவறுதலாக நடந்து கொள்வதற்கான வாய்ப்பை இது தடுத்துவிடும் என்று நினைக் கிறேன். இப்பொழுது விவாகரத்துப் பிரச்சினையை எடுத்துக் கொள்வோம். பல பெண்களிடம் நான் பேசியிருக்கிறேன். இன்று காலையில் நான்கு பெண்கள் என்னைக் காணவந்தார்கள். அவர்கள் நல்லவர்கள், மிகவும் நாகரிகமானவர்கள். அவர்களில் ஒருவர் கணவனால் கைவிடப்பட்டவர் என்று எனக்கு அறிமுகப்படுத்தப் பட்டார். இந்த மசோதாவை எதிர்ப்பவர்கள், மகிழ்ச்சிகரமாக வாழ்ந்து கொண்டிருப்பவர்கள் மட்டுமல்ல, ஆண்களின் கோபத் திற்கும், கொடுமைக்கும் பலியாகி துன்பத்தில் உழலும் பெண்களும் கூட இதில் அடங்குவர். அதுவல்ல விஷயம். அவர்களிடம் நான் எடுத்துக் கூறினேன். இதுதான் விஷயம். நமது திருமணங்களில் 90 சதவீதம் மிகச் சிறப்பாகவே உள்ளன. ஆனால் மீதமுள்ள பத்து சதவீதத்தின் நிலைமை என்ன? அவர்களுக்கு பரிகாரம் வேண்டும். இந்தியாவில், நாம் மணம் புரிந்த பிறகு காதலிக்க ஆரம்பிக் கிறோம். ஆங்கிலேயர்கள், காதலுக்குப் பிறகு திருமணம் செய்து கொள்கிறார்கள். பிறகு தங்கள் காதலைக் கைவிட்டு விடுகிறார்கள். ஏனெனில் இளம் பருவத்தில் உண்டாகும் காதல் வெறும் கற்பனை மாளிகையாகவே இருக்கிறது. காதல் என்னவென்றே தெரியாது. திருமணத்தைப் பற்றிச் சட்டம் அல்லது விதிமுறைகள் இந்துக் களிடையே உள்ளது. ஸ்ரீ, குணம், ரூபம், பந்து,ஷ்ரேண, மற்றும் சம்பிரதாயம் - இவைகளெல்லாம் திருமணத்திற்கு முன்பு கணக்கி லெடுத்துக் கொள்ளப்பட வேண்டும். ஸ்ரீ என்றால் சம்பத்து அல்லது செல்வச் செழிப்பு, பிறகு குலம் அல்லது ஜாதி மற்றும் அந்தஸ்து, பிறகு ரூபம் அதாவது தோற்றம், சௌந்தர்யம் அல்லது அழகு, மற்றும் அதற்குப் பிறகு பந்து ஷ்ரேணி அதாவது பந்துக்கள் கூட்டம், பிறகு சம்பிரதாயம் அதாவது குடும்பத்தின் பரம்பரை ஆகிய இந்த ஐந்து விஷயங்களும் நன்கு கவனிக்கப்பட வேண்டும். திருமணத் திற்குத் தயாராக உள்ள பதினெட்டு வயதுப் பெண் ஒருத்தியால் இந்த விஷயங்களையெல்லாம் சீர்தூக்கி தேர்வு செய்ய முடியுமா? இந்த

விஷயங்களில் ஒன்றுக்கொன்று வேறுபடுத்தி அவளால் பார்க்க முடியுமா? முடியாது. அன்றொருநாள் என் மனைவியின் சகோதரி யின் கணவனின் சகோதரனிடம் கேட்டேன். அது ஒரு தூரத்து உறவு என்று கூறமுடியாது. என்னுடைய மனைவியின் சகோதரியின் கணவன் என்பவர் மைத்துனியின் கணவர்தான். அவருடைய சகோதரிக்குத் திருமணம் ஆகியிருந்தது. திருமணத்திற்கு முன்பு அவள் தன் தகப்ப னாரிடம் ஏதோ கூறியிருப்பதைத் தெரிந்து கொண்டேன். நான் அவளுடைய கணவரின் வீட்டிற்குச் சென்றேன். அவளுடைய கணவ னுடன் சேர்ந்து வீட்டிற்குள் சென்று அவரிடம் கூறினேன்: ''இந்தப் பெண் உங்களை ஒருபொழுதும் திருமணம் செய்து கொள்ளவில்லை என்பது தெரியுமா?'' அவர் திகிலடைந்தார். சிறிது கோபத்துடனும், ஆச்சரியத்துடனும் அவர் கேட்டார்: ''நீங்கள் என்ன சொல்கிறீர் கள்?'' அவள் உங்களை ஒருபொழுதும் மணக்கவில்லை, நான் இதை உணர்ந்துதான் கூறுகிறேன்.'' ''ஏன்'', இந்த வீட்டிலுள்ள மின்சாரம், மோட்டார் காரைத்தான் அவள் மணந்து கொண்டிருக் கிறாள். விஷயம் என்னவென்றால் அந்தப் பெண் தகப்பனாரிடம் இவ்வாறு கூறியிருக்கிறாள். ''யாரைத் திருமணம் செய்து கொள்ள வேண்டுமென்று நீங்கள் கூறினாலும் எனக்கு அக்கறையில்லை. ஆனால் அவர் வீட்டில் மின்சாரமும்; மோட்டர் காரும் இருக்க வேண்டும்.'' பதினாறு அல்லது பதினெட்டு வயதுப் பெண் பொருள்கள், மற்றும் இதர விஷயங்களைப் பற்றி என்ன முடிவு செய்யமுடியும்? ''இந்த வீட்டில் என் தகப்பனாரால் வளர்க்கப்பட் டேன். ஆண்டுக்கு இருபதினாயிரம் ரூபாய் அவருக்கு வருமானம் உள்ளது. வீட்டில் மின்சாரம் உள்ளது, மோட்டார் கார் உள்ளது. கப்பல் போன்ற வீடு இருக்கிறது. புகுந்த வீட்டிலும் இப்படி இருக்கவேண்டும்'', இவ்வாறு அவள் சிந்திக்கிறாள். அவ்வளவு தான். ஆனால் ஆங்கிலேயப் பெண்ணின் தாய் தன்மகள் ''வெற்றி பெறவில்லை'' என்று எப்பொழுதும் அங்கலாய்க்கிறாள். ''என் மகள் வெற்றி பெறவில்லை'' என்பதுதான் அவளது புலம்பல். அதாவது ''மகளுடன் எப்பொழுதும் நடனம் ஆட காத்திருக்கவும், அவ ளுடைய திரைப்படச் செலவுகளையும் உணவு விடுதிச் செலவு களையும் ஏற்றுக் கொள்ளும் வாலிபர்கள் கூட்டத்தை தன்னைச் சுற்றி கவர்ந்திழுக்க தன் மகளால் முடியவில்லையே'' என்பதுதான் இதன் பொருளாகும். இதற்குத்தான் அந்தத் தாயார் ஏங்குகிறாள். அம்மாதிரி உங்கள் தலையை ஆட்டாதீர்கள். நான் கூறுவது உண்மை.

பண்டிட் லட்சுமி காந்த மைத்ரா : நான் உங்களை ஆதரிக் கிறேன்.

டாக்டர் பி. பட்டாபி சீதாராமையா : நீங்களில்லை. உங்களுக்கு பின்னே இருக்கும் உங்கள் நண்பர்.

திரு. ஆர்.கே. சித்வா : நீங்கள் என்னைக் குறிப்பிடுகிறீர்களா?

டாக்டர் பி. பட்டாபி சீதாராமையா : இல்லை, உங்கள் அருகில் அமர்ந்திருப்பவரை.

இங்கிலாந்தில் என்ன நடக்கிறது? ஓர் அரை டஜன் காதலர்களையாவது தனது மகள் கவர்ந்திழுக்க வேண்டுமென்று தாய் எப்பொழுதும் விரும்புகிறாள். அதன் பிறகு அவர்களில் தகுதியான ஒருவரை மருமகனாகப் பெற்றோர்கள் தேர்ந்தெடுக்கிறார்கள். தாயாருக்கு எப்பொழுதும் வேலைக்காரப் பெண் மீது பொறாமைதான். ஏனெனில் வேலைக்காரப் பெண்ணுக்கு எப்பொழுதும் வெற்றிதான். ஆனால் மகளால் அதைச் சாதிக்க முடியவில்லை. அவல நிலைதான். மாலை எட்டு மணிக்கு வேலைக்காரப் பெண் தன் மேலாடையை மாற்றிவிட்டு அழகான சுத்தமான கவுனை அணிந்து கொண்டு வெளியே செல்கிறாள். ''நீ எங்கே போகிறாய்?'' ''வெளியே என் காதலர் காத்திருக்கிறார், நான் போகவேண்டும்.'' ''போகாதே, என் மருமகன் இபபொழுது வருகிறான்.'' நீயும் உன் மருமகனும் அருகிலுள்ள மரத்தில் தொங்குங்கள். என் காதலர் காத்திருக்கிறார். நான் போய்க் கொண்டிருக்கிறேன்.''

திருமதி சேணுகா ரே: இந்தியப் பெண்ணானாலும் சரி, வெளிநாட்டுப் பெண் ஆனாலும் சரி அவர்களைப் பற்றி மோசமான அபிப்பிராயமே உங்களுக்குள்ளது.

டாக்டர் பி. பட்டாபி சீதாராமையா : என் மனைவியைப் பற்றி உயர்வான எண்ணமே கொண்டுள்ளேன்.

இப்பொழுது அந்தத் தாயாரின் மனக்குறை இதுதான். ''அந்த வேலைக்காரப் பெண் பல வாலிபர்களைக் கவர்ந்திழுத்து வெற்றி பெறுகிறாள். ஆனால் மகளுக்கோ அது முடியவில்லை.'' எனவே அந்தத் தாய் சோகத்தில் இருக்கிறாள். அதுதான் அங்குள்ள நாகரிகம். அந்த நாட்டின் வழக்கம் அதுதான். அதுதான் காலத்தின் போக்கு. அந்த முறை அங்கு நடப்புக்கு வந்துவிட்டது. மலபாருக்குச் சென்று மருமக்கள்தாயம் முறையைப் பாருங்கள். அது முற்றிலும் மாறுபட்ட வழக்கம். மூன்றாண்டுகளாக நீங்கள் அதை ஆய்வு செய்தாலும் அதன் இரகசியத்தை உங்களால் புரிந்து கொள்ள முடியாது. அது

ஒரு சிறந்த முறைதான். அதில் எந்தவித மாற்றத்தைக் கொண்டு வருவதையும் என் நண்பர் திரு. தாணுப் பிள்ளை ஏற்றுக் கொள்ள மாட்டார்.

உங்களுக்கு முன்னால் தலைமை தாங்கியவர், எனக்கு முன்னால் பேசியவருக்கு மணி அடித்த பிறகு பத்து நிமிடம் அனுமதித்தார். நான் மேலும் இரண்டு நிமிட நேரம் மட்டுமே எடுத்துக் கொள்வேன்.

ஆனால் திருத்தம் செய்வதற்கு இன்னும் காலம் கடந்துவிட வில்லை. நாம் அதிகதூரம் சென்று விடவில்லை. இந்த விஷயத்தை ஆழமாகவும் முழுமையாகவும், அக்கறையுடனும் நாம் விவாதித் தோம். அது நல்லதுதான். இந்த விஷயத்தில் அதிக கவனம் எடுத்துக் கொண்டோம். இப்பொழுது நாம் என்ன செய்யவேண்டும்? இந்த மசோதாவை மேற்கொண்டு விவாதிக்க வேண்டுமா? இதைத் திரும்பப் பெற்றுக் கொள்ளும்படி என் நண்பர் மாண்புமிகு சட்ட அமைச்சரைக் கேட்டுக் கொள்கிறேன். வாக்காளரிடமிருந்து தேவை யான அதிகாரத்தையும், அனுமதியையும் பெற்றுக் கொண்டு அடுத்த தடவை கடுமையான மசோதாவைக் கொண்டு வாருங்கள். அப்பொழுது நம்மை யாரும் தடுக்க முடியாது. நாட்டு மக்களின் அனுமதி நம்மிடம் இருக்குமாதலால், அவர்களை ஒரே அடியில் வீழ்த்திவிடலாம். என்னிடம் தேர்தல் அறிக்கை இருக்கும். அதை நிறைவேற்றுவதற்கு உரிமை அளிக்கும் பலத்துடனும் அதிகாரத் துடனும் வருவேன். இப்பொழுது அதிகாரம் ஏதுமின்றி வந்துள் ளீர்கள். உங்களுடைய பாதுகாப்பிற்கு நான்கு பெண் காவலர்களை நம்பி இருக்கிறீர்கள். எந்த ஒரு முற்போக்கு காங்கிரஸ்காரனுக்கும் இது ஒரு வேதனையான காட்சிதான்.

மேலும், வேறு ஒரு விஷயமும் உள்ளது. எது நடந்தாலும், இந்த மசோதா மேலும் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட மாட்டாது என்று நம்புகிறேன். அதைப் பற்றிய விவாதம் மேலும் தொடருமானால், தம் விருப்பப்படி வாக்களிக்க ஒவ்வொரு உறுப் பினருக்கும் சுதந்திரம் அளிக்க வேண்டுமென்று நான் விரும்பு கிறேன். அது அளிக்கப்பட்டால் வேதனையில் பாதி குறையும். ஆனால் இது தொடர்வதற்கான வலையில் நாம் ஏற்கெனவே விழுந்துவிட்டோம். இப்பொழுது, நண்பர்களே, உங்களை எச்சரிக்க விரும்புகிறேன். வரும் தேர்தலில் இது பெரும் பாதிப்பை ஏற்படுத்தும், எப்படியாயினும்.........

திரு. மகாவீர் தியாகி : இன்னும் ஐந்தாண்டுகளுக்கு தேர்தலை ஒத்தி போடுங்கள்.

டாக்டர் பி. பட்டாபி சீதாராமையா : எப்படியிருப்பினும், மக்களின் பிரதிநிதிகளாக நாம் இங்குள்ளோம் என்பதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். 90 சதவீத மக்கள், ஒரே வகுப்பைச் சேர்ந்த, ஒரே சமூகச் சட்டம், ஒரே உரிமையியல் சட்டஅமைப்பு, தந்தைவழி சமுதாய அமைப்பு என்ற முறையில் இணைக்கப்பட்ட அவர்கள், ஒன்றிலிருந்து மற்றொன்றை வேறுபடுத்திக் காணும் அளவுக்கு அறிவு பெறாதவர்கள். அவர்களுக்கு எரிச்சல்தான் உண்டாகிறது. நேற்றைக்கு நடந்த ஆர்ப்பாட்டங்கள் இந்து சட்டத் தொகுப்பிற்கு எதிரானது அல்ல. அது காங்கிரஸ் மற்றும் காங்கிரஸ் அமைப்புகளின் மீது மக்கள் கொண்டுள்ள கோபம் மற்றும் வெறுப்பின் அடையாளம் என்றுதான் சொல்ல வேண்டும். அதை மறைப்பதில் நமக்குப் பயன் ஏதுமில்லை. நான் எங்கே சென்றாலும் கேள்விக் கணைகளால் துளைத்தெடுக்கப் படுகிறேன். என் வாக்கு சாதுரியத்தாலும், நிறுத்தாது பேசும் திறமை யாலும், சளசளவென்று பேசுவதாலும் சமாளித்துக் கொள்கிறேன். ஆனால் அதே நேரத்தில் எவ்வளவு ஆபத்தான தளத்தில் பயணம் செய்கிறேன் என்பதை உணர்கிறேன். இந்த அரசை விமர்சிப்பவன் என்ற முறையில் மட்டுமல்ல, எல்லா நேரங்களிலும் காங்கிரஸுக்கு நூற்றுக்கு நூறு ஆதரவளித்து வந்திருக்கும் ஒரு பொறுப்புள்ள காங் கிரஸ்காரன் என்று முறையில் பேசுகிறேன். வெறுமனே புகழ்ந்து பேசுபவர், அரசிடமிருந்து உண்மையை மறைப்பவர் அரசின் மீது நல்லெண்ணம் கொண்டவர் அல்ல. உங்களுக்கு அந்தக் கடைசிக் காட்சி ஞாபகத்திலிருக்கும் என நினைக்கிறேன். ஹாம்லெட் நாடகத் திலிருந்துள்ள காட்சி அல்ல அது. ஜெர்மனியில் 1918 நவம்பர் 9ல் கைசர் தம் தளபதிகளை அழைத்துப் பேசச் சொன்ன காட்சிதான் அது. யாரும் வாயைத் திறக்கவில்லை. எல்லோரும் மௌனம் சாதித்தனர். பிறகு ''உங்களைப் பேசும்படி கைசர் உத்தரவிடுகிறார்'', என்று கூறினார். பிறகு தளபதி லுடன்டிராஃப் பேச ஆரம்பித்தார். கைசர் உத்தரவுப்படி அவர் பேசாவிடின் அவர் சுடப்படுவார். விக்டோரியா மகாராணி ஆல்பெர்ட் இளவரசரைக் கதவைத் திற என்று கூறியது போல மகாராணி கூறினார்: ''அன்பே, கதவைத் திற'', ஆனால் கதவு திறக்கப்படவில்லை. பிறகு அவள் கூறுகிறாள்: ''இங்கிலாந்தின் மகாராணி உன்னைக் கதவைத் திறக்கச் சொல் கிறாள்.'' உடனே அந்த பரிதாபத்துக்குரிய மனிதன் வந்து கதவைத் திறக்கிறான். இதே போன்றுதான் கைசரிடமும் லுடன்டிராஃப் சொன்னான்: ''மாட்சிமை பொருந்திய மன்னரே, ஹாலந்துக்குத்

தப்பி ஓடுவதற்கு இன்னும் உங்களுக்க இருபத்தி நான்கு மணி நேரமே உள்ளது. அப்பொழுது கைசர் கேட்டார்: ''ஏன்'' ''ஏனா? ஏனெனில் ராணுவம் போர் செய்யாது.'' கைசர் கூறினார்: ''நானே ராணுவத்தை நடத்திச் செல்வேன்.'' ஆனால் ராணுவம் போர் செய்ய வில்லை. இந்த மனிதர் இருபத்துநான்கு மணி நேரத்தில் இட மாற்றம் செய்யப்பட்டார். கசப்பான உண்மைகள் கூறப்படும்போது தயவு செய்து அதைக் கேளுங்கள், ஏனெனில் அதில் நமது ஒன்று பட்ட நல்வாழ்விற்கும், வெற்றிக்குமான வாழ்த்துக்களைத் தவிர வேறொன்றுமில்லை. கொள்கை ரீதியாக இல்லாவிடினும், விவேகத் தின் அடிப்படையிலாவது உங்கள் நிலையைப் பரிசீலனை செய் யுங்கள். மக்களும் உங்களைப் பின்பற்றி நடக்க வழி செய்யுங்கள்.

***ஆச்சார்ய ஜே.பி. கிருபளானி** *(உ.பி. பொது)*: ஐயா அரசின் கொள்கையை எதிர்த்து நான் பேசுவேன் என்று சில வட்டாரங் களில் அச்சம் எழுந்துள்ளது. நான் இந்த அவையில் ஒரே ஒரு முறை தான் பேசியிருந்தாலும்கூட சில வட்டாரங்களில் இந்த அச்சம் உள்ளது. அந்த அச்சத்தைப் போக்க விரும்புகிறேன். இந்த மசோதா வின் பொதுவான கொள்கைகளை ஆதரிக்கவே இங்கு வந்துள்ளேன். நான் அவ்வாறு செய்வதற்குக் காரணம் என்னவென்றால், இந்த அரசு ஒரு சாதாரணப் பிரச்சினையில், ஒரு சமூகப் பிரச்சினையில் பதவி விலகிவிடக்கூடாது என்பதற்காகத்தான். அரசியல் மற்றும் பொரு ளாதாரப் பிரச்சினையில், மிகவும் முக்கியமான பிரச்சினையில் அது பதவி இழப்பதை விரும்புகிறேன். உதாரணமாக, ஜனநாயகம் அதிகம் மலர்ந்துள்ள நாட்டில் சர்க்கரை வினியோகத்தில் குழுப்படி செய்ததன் மூலம் ஏழைகளின் குழந்தைகளுக்கு சர்க்கரைக்கு வழி யின்றி, விலை அதிகம் கொடுப்பவர்களுக்கு டன் கணக்கில் சர்க்கரை கிடைக்க வழி பண்ணியதால் ஓர் அரசு பதவி இழப்பதை போன்று இந்த அரசு பதவி விலகுவதை விரும்புவேன், இம்மாதிரி பிரச்சினை களில் அது பதவி இழக்குமானால் அதில் வருத்தப்படுவதற்கு ஒன்று மில்லை. அது ஒரு சாதாரண சமூகப் பிரச்சினையில் பதவி விலகு வதை நான் விரும்பவில்லை.

மதிப்பிற்குரிய ஓர் உறுப்பினர்: இந்த மசோதாவை விட சர்க்கரை மிகவும் முக்கியமானதல்ல.

★ அ.நி.வி. (சட்) டி., தொகுதி VI, பிரிவு II, 13 டிசம்பர் 1949, பக்கம் 552-558.

***ஆச்சார்ய ஜே.பி. கிருபளானி:** ஆம் அவ்வளவு இனிப்பான தல்ல அது.

என்னால் மறுக்க முடியாத வட்டாரங்களிலிருந்து வந்த வற்புறுத்துதல்கள் இல்லையென்றால், எப்படி இருப்பினும் இந்த மசோதாவை ஆதரிக்க வந்திருக்க மாட்டேன். இந்த மசோதாவை ஆதரிக்க வேண்டுமென்று என் இல்லத்தில் கூறப்பட்டது. இந்துச் சட்டத்தைப் பொறுத்தவரை நான் ஒன்றும் தெரியாத அப்பாவி என்று கூறினேன். இந்துச் சட்டம் பல தொகுதிகளாக வெளிவந்துள்ளது. பல விளக்க உரைகளும் வெளிவந்துள்ளன. எனக்குப் புரியாத ஒன்றை ஆதரிக்கவோ எதிர்க்கவோ எப்படி முடியும்? உங்களுக்குப் புரிய வைக்கிறேன் என்று எனக்கு உடனடியாகக் கூறப்பட்டது.

மதிப்பிற்குரிய ஓர் உறுப்பினர் : உங்களுடைய ஆசிரியர் யார்?

ஆச்சாரிய ஜே. கிருபளானி: எனவே என் மனைவியின் விளக்கப் பாடங்களைக் கேட்க இணங்கினேன். இந்தச் சட்ட மன்றத்தில், உயர்ந்த அதிகாரம் படைத்த டாக்டர் அம்பேத்கர் அவர் களாலேயே போதிக்கப்பட்டவர் என் ஆசிரியர் என்று எனக்கு உறுதி அளிக்கப்பட்டது. இந்தத் திரைக்குப் பின்னே நடந்த போதனைக்குப் பிறகு, எப்படி என் பள்ளி மற்றும் கல்லூரி நாட்களில் என் ஆசிரியர் களின் போதனைகளுக்குப் பிறகு எவ்வளவு முட்டாளாக, அறிவாளி யாக இருந்தேனோ அதே நிலைதான் இப்பொழுதும். எனது ஆசிரியர்கள் என்னை விட அறிவற்றவர்களாக இருந்தார்கள் என்ற முடிவுக்கு வந்தேன்.

நான் பேராசிரியராக இருந்தபோது, மாணவர்கள் எனக்கு இதேபோன்ற பட்டத்தை அளிப்பார்கள் என எண்ணினேன். இதை உணர்ந்த நான், வகுப்பில் நுழைந்தவுடன் இவ்வாறு கூறினேன்: ''கனவான்களே, உங்கள் ஆஜர் உறுதியாகிவிட்டது. நான் வருகைப் பட்டியலில் பதிவு செய்தபிறகு நீங்கள் வெளியே செல்லலாம். நான் என் ஆசிரியர்களுக்கு கொடுத்ததைவிட நீங்கள் எனக்கு அதிகம் மதிப்புக் கொடுக்கப் போவதில்லை.''

★ அ.நி.வி. (சட்) டி., தொகுதி VI, பிரிவு II, 13 டிசம்பர் 1949, பக்கம் 552-558.

ஐயா, இந்த மசோதாவை ஆதரிப்பதாக வாக்களித்துள்ளேன். எனவே இதை ஆதரிக்கிறேன். ஏனெனில் என் மனைவி வருகை தராவிட்டாலும், அவள் திரும்ப வந்தவுடன், கணக்கு வழக்குகளைக் கேட்பதுடன் என்னுடைய அறவழி மற்றும் அறிவுபூர்வ நடத்தை களின் கணக்கையும் சோதிப்பாள்.

என்னைப் பொறுத்தவரையில், சமயத்திற்கு ஆபத்து என்ற பிரச்சினை இல்லை. என்னுடைய இல்லத்திற்கு ஆபத்து என்பதுதான் பிரச்சினை. இந்து சமயத்திற்கு ஆபத்து என்பதைக் குறித்து அதிகம் பேசப்பட்டுவிட்டது. என்னால் அவர்கள் கருத்தைப் புரிந்து கொள்ள முடியவில்லை. இந்துக்கள் திருடர்களாகவோ, மோசடிக்காரர் களாகவோ, காமாந்தகாரர்களாகவோ, கள்ளச்சந்தைக்காரர் களாகவோ, லஞ்சம் பெறுபவர்களாகவோ இருப்பதால் இந்து மதத்திற்கு எந்த ஆபத்தும் கிடையாது. இவர்கள் இந்து மதத்துக்கு எந்த ஆபத்தையும் கொடுக்கவில்லை. ஒரு குறிப்பிட்ட சட்டத்தைத் திருத்த விரும்பு பவர்களால்தான் இந்து மதத்திற்கு ஆபத்து என்கிறார்கள். ஒருவேளை அவர்கள் அதிக உற்சாகத்துடன் செயல் படலாம். லோகாயுத விஷயங்களில் லஞ்ச ஊழலுடன் செயல் படுவதைவிட லட்சியங்களில் அதிக உற்சகத்துடன் செயல்படுவது சிறந்தது. இம்மாதிரியான மனப்பாங்கால்தான் நாம் நம் தேசப் பிதாவை இழந்தோம். பகவத் கீதை மற்றும் உபநிஷத்துகளில் கூறப்பட்டுள்ள உயர்ந்த லட்சியத்தின் அடிப்படையிலும், நமது சமய நூல்களின் போதனைகளின் வெளிச்சத்திலும் தம் வாழ்வை கழித்தவரைவிட கொலைகாரன் சிறந்த இந்துவாகக் கருதப் பட்டான். தங்கள் மதத்தைப் பற்றிய இப்படிப்பட்ட தவறான கருத்துகளிலிருந்து இந்து சமுதாயம் விடுபட வேண்டும் என்று விரும்புகிறேன். நமது மதம் கொலைக்காரர்களாலும், திருடர் களாலும் உருவாக்கப்பட்டதல்ல. சாதுக்கள், சன்னியாசிகள் மற்றும் மகாத்மாக்களால் உருவாக்கப்பட்டது அது.

இருப்பினும் இந்தக் கேள்விக்கு மறுபக்கமும் இருக்கிறது. ஒரு தரப்பினர் மதத்திற்கு ஆபத்து என்று கூறுகிறார்கள் மற்றொரு பிரிவினர் நவீன முற்போக்கு மதத்திற்கு ஆபத்து என்கின்றனர். இதன் விளைவாக பெரும் குழப்பம் ஏற்பட்டுள்ளது. இந்த மசோதாவை ஆதரிக்காவிட்டால் நீங்கள் ஒரு பிற்போக்காளர்.

இந்த மசோதாவை ஆதரிக்கும்படி நான் எப்படி மாற்றப் பட்டேன் என்பதை எடுத்துக் கூறுகிறேன். ஒரு காரணத்தை ஏற் கெனவே உங்களுக்கு எடுத்துரைத்தேன். வேறொரு காரணத்தை இப்பொழுது கூறுகிறேன்.

ஒரு பெண்மணி மற்றொரு பெண்ணிடம் கூறினாள்: ''இந்த மசோதாவை கிருபளானி ஆதரிக்க மாட்டார். அவர் பிற்போக்காளர்.

திரு. பி.எல். சோந்தி : அவர்கள் இருவரும் இந்த அவையின் உறுப்பினர்களா?

திரு. ஆச்சார்ய ஜே.பி. கிருபளானி : அவர்கள் இருவரும் உறுப்பினர்களல்ல. ஆனால் கௌரவம் வாய்ந்தவர்கள். அவர்களில் ஒருவர் நம்பிக்கையுடன் என்னிடம் கூறினார்: ''நான் அதை மறுத்து, கிருபளானி முற்போக்கானவர் என்று கூறினேன்.'' எனவே என்னுடைய மரியாதை எனக்கு திரும்பவும் அளிக்கப்பட்டது. எவ்வளவு சாதுர்யமான பிரசாரம் நடைபெறுகிறது பாருங்கள். ஒரு பெண்மணி இரகசியமாக மற்றொரு பெண்ணிடம் ஏதோ கூறுகிறாள். அதை அவர் என்னிடம் கொண்டு வருகிறாள். இப்பொழுது நான் எப்படி நடந்து கொள்வது? நான் என்னை முற்போக்காளனென்றோ, பிற்போக்காளனென்றோ என்னைக் கருதிக் கொள்ளவில்லை. இந்து அல்ல என்று வேண்டுமானாலும் என்னைக் கூறலாம். ஒரு நவீன கால மனிதனுக்கு மதநம்பிக்கை இல்லாமலிருப்பதைவிட புதுமையாக இல்லாமலிருப்பது பெருங்களங்கமாகும். நான் கடவுள் நம்பிக்கை இல்லாதவனாக இருக்கலாம். ஆனால் மேலைநாட்டில் உள்ளது போன்ற முற்போக்கு என்ற கடவுளிடம் நம்பிக்கை கொள்ளாமல் இருக்க முடியுமா?

முதற் பெண்மணி என்னை பிற்போக்காளன் என்று கூறியது ஏன் என்பதை இப்பொழுது கூறுகிறேன். அது ஒரு சுவையான கதை, உங்கள் சிரிப்பால் அதில் குறுக்கிடமாட்டீர்கள் என்று வாக்களித்தால் அதைக் கூறுகிறேன். அடிப்படை உரிமைகள் குழுவின் தலைவராக நான் இருந்தேன். அந்த அடிப்படை உரிமைகள் குழுவில் பெண்கள் முகத்திரை அணியாமல் இருப்பது அவளின் அடிப்படை உரிமை என்ற தீர்மானம் கொண்டு வரப்பட்டது. முகத்திரை இல்லாமல் எல்லாப் பெண்களும் செல்ல வேண்டும் என்பதை ஆதரிப்

பவன் நான். எந்த ஆண்கள்தான் அதை ஆதரிக்க மாட்டார்கள். அதை ஆதரிக்காதவர்களைக்கண்டு நான் பாராட்டுகிறேன். ஆனால் பாராட்டப்படும் மனிதர்களில் நானும் ஒருவன் அல்ல. இந்த விதி குறித்து எனக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை. ஆனால் பழைய முகமூடிகளும் புதிய முகத்திரைகளும், ஆக எல்லா வித முகத்திரை களும் மறைந்துவிட வேண்டும், டெல்லியைச் சுற்றி வாருங்கள். ஒரு பெண்ணின் உண்மையான முகத்தைப் பார்ப்பது கடினம் எப்பொழுதுமே முகமூடி இருக்கும். (மதிப்பிற்குரிய உறுப்பினர் ஒருவர் : முகத்திற்குப் பூசும் பவுடர்) பண்டைக் காலத்து பர்தா (முகத்திரை) நீக்கப்பட வேண்டுமென்றால் தற்கால முகமூடியும் நீக்கப்படவேண்டும். ஏனெனில் இந்த நவீன கால முகமூடி பழைய பர்தாவை விட மேலும் முழுமையானது. பர்தாவை எளிதாக எடுத்து விடலாம். ஆனால் இந்த முகமூடியை வீட்டில் வைத்துத்தான் சில ரசாயனப் பொருள்களை கொண்டுதான் நீக்க முடியும்.

என்னைத் தவறாகப் புரிந்து கொள்வீர்கள் என்ற அச்சத்தால், மனிதர்களின் சமத்துவத்தில் மிகவும் நம்பிக்கை உள்ளவன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மனிதர்கள் என்று கூறுகையில் பெண் குலத்தையும் சேர்த்துக் கொள்கிறேன். இந்த மசோதா பெண்களுக்கு இணையான சமத்துவத்தை நமக்கு அளிப்பதால் அதை நிறைவேற்ற வேண்டுமென்று ஆசைப்படுகிறேன். நம்முடைய சமத்துவத்திற்கான மசோதா இது என நினைக்கிறேன். பெண்களை ஒப்பிடுகையில் நாம் மிகவும் அனுகூலமற்ற நிலையில் உள்ளோம் என்பதை எப்பொழுதுமே எண்ணி வந்திருக்கிறேன். எல்லாவற்றிற்கும் மேலாக, இயற்கை ஒரு அனுகூலமற்ற நிலையில் நம்மை உருவாக்கி விட்டது. நீங்கள் கொஞ்சம் சிந்தித்துப் பார்த்தால் ஆண் செய்யக் கூடிய எல்லாவற்றையும் ஒரு பெண்ணால் செய்ய முடியும் என்பதை ஏற்றுக்கொள்வீர்கள். ஆனால் பெண்களால் செய்யக்கூடிய சில விஷயங்களை ஆண்களால் செய்ய முடியாது. நம்முடைய கற்பனை களில்கூட, நம்முடைய கனவுகளில்கூட, நம்முடைய மனக்கிலி யின் போது கூட அவை சாத்தியமில்லை. நாம் கர்ப்பம் தரிக்க முடியாது.

மதிப்பிற்குரிய சில உறுப்பினர்கள் : இல்லை. உங்களால் முடியாது.

ஆச்சார்ய ஜே.பி. கிருபளானி : கர்ப்பத்தைப் பற்றிப் பேசியது அறிவுபூர்வமான பொருளில்தான். ஆனால் நீங்கள் நான் கூற நினைத்ததை ஏற்கெனவே புரிந்து கொண்டுள்ளதால் அதை நான் விவரிக்கத் தேவையில்லை. (மதிப்பிற்குரிய ஓர் உறுப்பினர்: ஓ இல்லை) எப்பொழுதுமே எனக்கு இது ஆச்சரியமாக இருக்கிறது. பெண்களிடம் கூட கேட்டுள்ளேன்: பிரசவத்தின் போது நீங்கள் அனுபவிக்கும் இந்தத் தாங்கமுடியாத வேதனைக்கும், எல்லையற்ற மகிழ்ச்சிக்கும் என்ன பொருள்? என்னுடைய அறியாமையைக் கண்டு அவர்கள் சிரிக்கிறார்கள். பதில் ஏதும் அளிப்பதில்லை. மார்பில் குழந்தையை அணைத்துக் கொண்டு பால் கொடுப்பதில் அவர்களுக்கு என்ன மகிழ்ச்சி என்று அவர்களை மீண்டும் கேட்டேன். அப்பொழுதும் கூட அவர்கள் என் அறியாமையைக் கண்டு புன்முறுவல் பூத்ததுடன் பதிலொன்றும் அளிக்கவில்லை. இந்த மாதிரி விஷயங்களில் நாம் ஒரு சாதகமற்ற நிலையில் இருக்கிறோம். அவர்கள் பெரிய சிருஷ்டி கர்த்தாக்கள். ஓவியர்கள் உயிரற்ற பொருள்களைத்தான் படைக்கிறார்கள். பெண்கள் கடவுளின் பிரதிபலிப்புகளை சிருஷ்டிக்கிறார்கள். அவை சிலசமயங்களில் சாத்தான்களின் பிரதிபலிப்புகளாக சீர்கேடடைகின்றன. ஆனால் பல விஷயங்களில் நாம் பெண்களுக்கு இணையான ஒரு நிலையை அடைய முடியும்.

பெண்கள் ஆண்களுக்கு இணையான சமத்துவம் அடைய வேண்டும் என்ற பிரச்சினையைப் பொறுத்தவரையில், இந்தியாவில் அவர்கள் அதை ஏற்கெனவே அடைந்துவிட்டார்கள். இந்தியா சுதந்திரம் பெற்ற உடனேயே ஒரு பெண் ஆளுநராக நியமிக்கப்பட்டார். அமெரிக்கா சுதந்திரம் பெற்று இரண்டு நூற்றாண்டுகள் கழிந்துவிட்டன, நாற்பத்தெட்டு மாகாணங்களும் அங்குள்ளன, எனக்குத் தெரிந்த வரை அங்கு ஒரு தடவை கூட ஒரு பெண் ஆளுநராக நியமிக்கப்பட்டதாகத் தெரியவில்லை. என்னுடைய வரலாற்று அறிவு பழமையானதாக இருக்கலாம், தவறு இருந்தால் திருத்திக் கொள்ளலாம் என்ற நிபந்தனையுடன் கூறுகிறேன், பெண் ஒருவர்கூட பெடரல் அமைச்சராக நியமிக்கப்படவில்லை. பெண்கள் கல்வி மிகவும் பரவலாகவுள்ள இங்கிலாந்து போன்ற நாட்டில் கூட இந்நாள் வரை பெண் யாரேனும் காபினட் அந்தஸ்து பெற்ற அமைச்சராக நியமிக்கப்பட்டதாக எனக்குத் தெரியவில்லை. நான் துணை அமைச்சர்களைப் பற்றிக் கூறவில்லை. இங்கேயும்கூட

இருக்கிறார்கள். அவர்களையும் அமைச்சர்கள் என்றுதான் அழைக்கிறார்கள். நான் கூறுவதெல்லாம் காபினெட் அந்தஸ்து பெற்றுள்ள அமைச்சர்களைப் பற்றித்தான், எனக்குத் தெரிந்த வரையில் இங்கிலாந்தில் ஒருவர் கூட கிடையாது. பெண் ராஜதந்திரிகள், தூதர்கள் இங்கிலாந்திலும் அமேரிக்காவிலும் உள்ளனரா என்பது எனக்குத் தெரியாது. ஆனால் நம்முடைய சிறப்பான தூதுவர் ஒரு பெண்மணி என்பது உங்களுக்கு ஞாபகம் இருக்கும்.

திரு. ஆர்.கே. சித்வா: நமது பெண்களைக் கண்டு நாம் பெருமையடைகிறோம்.

திரு. ஆச்சார்ய ஜே.பி. கிருபளானி: நன்று. நான் பெருமைப் படவில்லை என்று திரு. சித்வா கருதுகிறார் போலும். நான் சமத்துவத்தைப் பற்றி நினைத்துக் கொண்டிருக்கிறேன், பெருமையைப் பற்றி அல்ல. ''நாம் பெண்களுக்கு சமத்துவம் அளித்துவிட்டோம். இப்பொழுது பெண்களுக்கு இணையாக நமக்கு சமத்துவம் அளிக்கப் படுமா? என்று கேட்கிறேன். நான் ஒரு வயதான மனிதன் என்பதால் அதிகம் துன்பப்படுகிறேன். வயதானவர்களைக் கண்ணியத்துடன் நடத்த வேண்டும் என்று படித்திருக்கிறேன். வரவேற்பறைக்குள் குட்டிப் பெண் ஒருவள் நுழைந்தால் போதும் சீட்டுக் கட்டிலுள்ள ஜாக்கி போன்று திடீரென்று எழுந்திருக்க வேண்டியிருக்கிறது.

(இந்த நேரத்தில் திரு. துணை சபாநாயகர் (திரு. எம். அனந்த சயனம் அய்யங்கார்) மீண்டும் தலைமை தாங்குகிறார்)

அந்நாட்களில் இந்தமாதிரி நான் நடந்து கொள்வதில்லை. அது மட்டுமல்ல, ஐயா, நான் ஒன்று சொல்லட்டுமா, என் மனைவி வரவேற்பறைக்குள் நுழைந்தால்கூட நான் எழுந்திருக்க வேண்டியிருக்கிறது. ஏன் என்று உங்களுக்குத் தெரியுமா? ஏனெனில் ஏதாவது ஒரு முரட்டு வாலிபன் என்னுடன் அங்கே அமர்ந்திருப்பான். தற்காலத்தில் எப்படி நடந்து கொள்ள வேண்டுமென்பது அவனுக்குத் தெரிந்திருக்காது. அவன் எழுந்திருக்கமாட்டான். அவனுக்கு எடுத்துக் காட்டுவதற்காக நான் எழுந்திருக்கிறேன். சமத்துவம் இருக்க வேண்டுமென்று நான் விரும்புகிறேன். ஏனெனில் இப்பொழுது நீங்கள் அறிந்து கொண்டபடி ஒரு பெண்மணி வரும்போது ஆண் என்ற முறையில் நான் எழுந்திருக்க வேண்டிய கடமை உள்ளது. ஆனால் நமது பிரதம மந்திரியே அல்லது காங்கிரஸின் தலைவரே அறையில் நுழைந்தால் கூட இளம் பெண்கள் தங்கள் இருக்கைகளில் அமர்ந்து

கொண்டிருப்பதை நான் கண்டிருக்கிறேன். இது சாதாரண ஆணுக்கு இழைக்கப்படும் பெரும் அநீதியாகும். என்னுடைய அனுபவத்தைக் கூறுகிறேன். இரகசியச் சண்டைகளைப் பற்றி எனக்குத் தெரியாது. ஒரு கடைத்தெருவிலோ, அல்லது சந்தையிலோ, அல்லது கிளப் பிலோ ஓர் ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையே தகராறு ஏற்பட்டு அந்த ஆண் அந்தப் பெண்ணை ஒரு தட்டுத் தட்டிவிட்டால் என்ன நடக்கும் தெரியுமா? அங்கே பெரும் அமளியே தோன்றுவதுடன், அந்த மனிதனை எல்லோரும் கோழை என்று வசைப்படுவார்கள். அது சரிதான். ஆனால் ஒரு வேளை அந்த ஆண் பெண்ணால் தாக்கப் பட்டால் என்ன நடக்கும் தெரியுமா? அவன் மிகவும் பரிகாசத்துக் குரியவனாகக் காணப்படுவான். அவனுக்கு யாரும் பரிந்து பேச மாட் டார்கள் என்பதுடன் அவன் ஒரு கேலிப் பொருளாகிவிடுவான். அதுவும் சரிதான். நாம் அடித்தாலும், அல்லது நாம் அடிபட்டாலும் இரண்டு வகையிலும் இழப்பு நமக்குத்தான். ஆனால் இதில் சமநிலை கொண்டு வரப்பட வேண்டும். சாதாரண ஆணைக் காப்பாற்ற சிறிது சமத்துவம் மிகவும் அவசியம்.

மேலும் ஒரு விஷயம் இருக்கிறது. நாம் அனுகூலமற்ற நிலை யில் இருப்பது சமூகத்தில் மட்டுமல்ல சட்டம்கூட நமக்கு எதிராக உள்ளது. இதை நமது சட்ட அமைச்சர்கூட ஏற்றுக் கொள்வார். ஆண் ஒருவன் பெண் ஒருத்தியுடன் ஓடிவிடுகிறான் என்று வைத்துக் கொள்வோம். சட்டப்படி ஆண்தான் அதற்குப் பொறப்பாகிறான். பெண் ஒருத்தி ஆண் ஒருவனுடன் ஓடிவிட்டதாக வைத்துக் கொள் வோம், இங்கும் ஆண்தான் பொறுப்பேற்க வேண்டும். மிகவும் உயர்ந்த அதிகாரத்தில் உள்ளவர்கள் மற்றும் தற்கால விஷயங்களில் அதிக அனுபவம் உள்ளவர்களிடமிருந்து நான் தெரிந்து கொண்டது என்னவென்றால் விரட்டித் துரத்துபவர்கள் பெரும்பாலும் பெண்கள் தான். தாக்குதலை அவர்கள் ஆரம்பித்தாலும் சரி நாம் ஆரம்பித் தாலும் சரி, தாக்குதல் எவ்வாறாயினும், சட்டம் நம்மைத்தான் தண்டிக்கும். இரண்டு வகைகளிலும் நமக்குத்தான் பாதிப்பு. எனவே நாம் சுதந்திரமாக மூச்சு விடுவதற்கும், நம்மை உதைத்தால் நாமும் கேலிக்குள்ளாகாமல் திருப்பி உதைப்பதற்கும், சட்டம் வலிமையான தரப்புக்கு அதாவது பெண்களுக்கு உதவிக்குச் செல்லாமலிருக் கவும் கொஞ்சம் சமத்துவத்தை நமக்குக் கொண்டு வரும்படி இந்த அவையைக் கேட்டுக் கொள்கிறேன். நான் இந்த மசோதாவை ஏன் ஆதரிக்கிறேன் என்பது இப்பொழுது புரிந்திருக்கும்.

இப்பொழுது விவரத்திற்குள் செல்வோம். முதலாவதாக சொத்து சம்பந்தமான பிரச்சினை உள்ளது. தனியார் சொத்துடைமையை

ஒழிக்க எண்ணியுள்ள காங்கிரஸ்காரர்களாகிய நாம் சொத்தின் ஒரு பங்கு யாருக்குப் போகவேண்டும் என்பதைக் குறித்துச் சிந்திப்பது எப்படி என்று என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. வேறு எந்த நாட்டிலும் காணமுடியாத ஒரு விசித்திரமான நிலையை நம் நாட்டில்தான் காண்கிறேன்.

திரு. லட்சுமி நாராயண் சாகு (ஒரிசா பொது) : நான் ஒரு விஷயத்தைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். தனியார் சொத்துடைமையை ஒழிக்க காங்கிரஸ் உறுதிமொழி அளித்துள்ளதா?

திரு. துணை சபாநாயகர்: அது மதிப்பிற்குரிய உறுப்பினரின் அபிப்பிராயம்.

திரு. ஆசார்ய ஜே.பி. கிருபளானி: காங்கிரஸ் கட்சியின் தீர்மானங்களைக் கவனமாகப் படித்துப் பார்த்தால், தனியார் சொத்துடைமையை ஒழிப்பது காங்கிரஸின் நிலை என்பது தெளிவாகத் தெரியும். அதாவது குவித்து வைக்கப்பட்டுள்ள தனியார் சொத்துக்களைத்தான் உபயோகத்திலுள்ள தனியார் சொத்துக்களையல்ல. ஆனால் துணை சபாநாயகர் குறிப்பிட்டபடி இது ஒவ்வொருவரின் அபிப்பிராயத்தையும் பொறுத்தது. இருக்கும் செல்வத்தை மறு விநியோகம் செய்வதிலேயே இங்குள்ளவர்கள் அதிக அக்கறை கொண்டுள்ளதாக எனக்குத் தெரிகிறது. மேலும் செல்வத்தைப் பெருக்கவேண்டுமென்ற எந்த முயற்சியும் இந்நாட்டில் இல்லை. நம்முடைய சோஷலிச நண்பர்கள் கூட செல்வத்தை பெருக்க வேண்டுமென்ற முறையில் சிந்திப்பதாகத் தெரியவில்லை. நம்மிடம் உள்ள குறைந்த அளவு செல்வத்தையே மறு விநியோகம் செய்ய நினைக்கிறார்கள். இப்பொழுதுள்ள குறைவான செல்வம் ஓர் ஆணுக்குச் சென்றாலும் சரி அல்லது பெண்ணுக்குச் சென்றாலும் சரி அதில் எனக்கு எந்த அக்கறையும் இல்லை, நாட்டைவிட்டுப் போகாமல் இருந்தால் போதும் என்று நினைக்கிறேன். அதனால் தேசம் ஏழ்மையடைந்துவிடக் கூடாது. மக்கள் லஞ்சம் வாங்கினாலும் அல்லது கறுப்புச் சந்தையில் விற்றாலும் பரவாயில்லை என்பதை அறிய உங்களுக்கு ஆச்சரியமாக இருக்கும். எப்படியாயினும் செல்வம் இந்திய நாட்டைவிட்டு வெளியே செல்வதில்லை. இந்திய மக்களிடையே எங்கேயோ இருக்கிறது. அதன் நெறிமுறைகளைப் பற்றி மட்டுந்தான் நான் சிந்திக்கிறேன். அது நமது பொது வாழ்க்கையையும் தனிப்பட்ட நன்னெறிகளையும் அழித்துவிடுகிறது. செல்வத்தைப் பொறுத்த வரையில் அது அவ்வளவு

முக்கியமானதல்ல. இந்த லஞ்சப் பேர்வழிகள் மற்றும் கறுப்புச் சந்தைக்காரர்கள் செல்வத்தை வெளிநாட்டுக்குக் கொண்டு செல்வதில்லை. அவர் என்னுடைய மைத்துனனாக இல்லாவிட்டால் யாருடைய மைத்துனனாவது இருப்பார். ஆனால் செல்வம் இங்கேயே உள்ளது. இப்பொழுதுள்ள செல்வம் யாரிடம் செல்கிறது என்ற குறுகிய பார்வையில் ஒரு கணம்கூட நான் சிந்திப்பதில்லை. தேசம் என்ற நிலையில் நான் சிந்திக்கிறேன். இங்கிலாந்து நாடு மற்றும் இதர சுதந்திர நாடுகள் செல்வத்தைப் பெருக்குவதைப் பற்றிச் சிந்திக்கின்றன. இருக்கிற குறைந்த செல்வத்தை கூறு போடுவதையல்ல. எனவே, பரம்பரைச் சொத்தில் பெண்களுக்கும் ஒரு பங்கு அளிக்க வேண்டுமென்பதை முழுமனதுடன் ஆதரிக்கிறேன். அவர்களுக்கென்று ஒரு பங்கு இருக்குமானால் அவர்கள் தங்கள் பணத்தைக் குறித்து மிகவும் கவனமாக இருப்பார்கள். ஒரு பெண் ஆணைவிட அதிகமாக செலவு செய்கிறாள் என்பது என் அனுபவம். பெண்கள் பள்ளிக்கோ, கல்லூரிக்கோ செல்லும்போது பையன்கள் அணிந்துள்ள ஆடைகளைவிட பெண்கள் அணிந்துள்ள ஆடைகளைப் பற்றித் தாயார் அதிகக் கவனம் செலுத்துகிறாள் என்பதை நான் கண்டுள்ளேன். இளம் சிறுவர்கள் ஆடி அசைந்து கொண்டு நடந்தே பள்ளிக்குச் செல்வார்கள். ஆனால் பெண் குழந்தைகள், டோங்காவிலோ அல்லது பேருந்துக் கட்டணம் 15 ரூபாய்க்கு அதிகமாக இருந்தாலும் சரி பேருந்திலேதான் செல்ல வேண்டும். எனவே ஆடைகள், போக்குவரத்துச் செலவுகள் மற்றும் இதர விஷயங்களில் பெண்களின் கல்விக்கு அதிகம் செலவிடப்படுகிறது. இது திருமணத்திற்கு முந்தைய விஷயம். பெண்கள் திருமணம் ஆனபிறகு அவர்கள் ஆடையைப் பாருங்கள், நமது ஆடையைப் பாருங்கள். பல திருமண நிகழ்ச்சிகளில் நான் பார்த்திருக்கிறேன், மணமகன் முட்டாள் மாதிரி தோற்றம் அளிப்பான். ஆனால் மணப்பெண்கள் ராணிகளைப் போல இருப்பார்கள். நான் இதைப் பார்த்திருக்கிறேன். யாராவது நடுநிலையுடன் கவனித்தால் அது அப்படித்தான் என்று சான்றிதழ் அளிப்பார். சாலைகளில் தற்கால ஆண்களும், பெண்களும் சேர்ந்து செல்வதைப் பார்த்திருக்கிறேன். பொதுவான தற்கால இளைஞன், ஆங்கில மோஸ்தரில் ஆடை அணிகிறான். மேலைநாட்டு ஆடைகள் எல்லோருக்கும் பொருத்தமாக இருப்பதில்லை. ஒரு சில விதிவிலக்குகளைத் தவிர பெரும்பான்மையினருக்கும் அது அலங்கோலமாகத் தெரிகிறது. ஆனால் பெண்கள் வண்ண வண்ண உள்ளூர் சேலைகளில், ஆபரணங்கள் இல்லாவிடினும், தனக்குப் பின்னே வரும் ஆடவனை விட அதிக அழகாகவும் மதிக்கத் தக்கவிதத்தில் ஆடை அணிந்தவளாகவும் காணப்படுகிறாள். இந்நாட்களில் கணவன்மார்கள்

மாலை 5 மணி

சற்று பின்னேயே நடந்து செல்வதுடன், அருவருப் பாகத் தோற்றமளிக்கிறார்கள். இந்திய, மத்தியதர வகுப்பைக் குறித்து அதிகம் தெரியாதவர்கள் அல்லது வெளிநாட்டினர், ஏதோ ஒரு வேலைக்காரன் பின்னே சென்று கொண்டிருக்கிறான் என்று நினைப்பார்கள். எனவே, ஐயா, அவர்கள் சொந்தமாகச் சொத்து வைத்துக் கொள்ளட்டும் என்று கூறுகிறேன். அதைப் பற்றி நாம் கவலைப்பட வேண்டியதில்லை. அவர்கள் இஷ்டப்படி அதைச் செலவு செய்யட்டும். அவர்களுக்கு ஏதாவது வாங்க வேண்டியிருந்து அதற்கு நாம் பணம் கொடுப்பதாக இருந் தால் எவ்வளவு செலவு செய்வார்களோ அதைவிடக் குறைவாகத் தான் தங்கள் சொந்தப் பணத்தை அவர்கள் செலவு செய்வார்கள். எனவே, பெண்களுக்கு சொத்தில் பங்கு அளிக்கப்பட வேண்டும் என்பதை முற்றிலும் ஆதரிக்கிறேன்.

மேலும் ஒரு விஷயம் இருக்கிறது. அது எனக்கு மிக முக்கிய மானது. பெண் குழந்தையை தத்தெடுக்க முடியாது என்று கூறப்படு கிறது. குழந்தை இல்லாத துரதிர்ஷ்ட நிலையில் இருப்பவன் நான்.

திரு. பி.எல். சோந்தி : எவ்வளவு வருந்தத்தக்கது.

திரு. ஆச்சார்ய ஜே.பி. கிருபளானி : உண்மையில் அது மிகவும் வருந்தத்தக்க விஷயந்தான். இந்து என்ற முறையில் நான் தத்தெடுக்க முடியும் என்று எண்ணினேன். எப்பொழுதுமே பெண் குழந்தைகளுக்கு முன்னுரிமை அளிப்பவன் நான். நான் இரண்டு பெண்களை தத்தெடுத்தேன். அவர்கள் கணவன்களுடன் ஓடிவிட் டனர். இருப்பினும் ஒரு பெண்குழந்தையைத் தத்தெடுக்க விரும்பு கிறேன். ஒரு பெண் குழந்தையைத் தத்தெடுக்கக்கூடாது என்ற விதி ஏன் இங்கு உள்ளது என்பது எனக்குப் புரியவில்லை. தகப்பனாரைப் பொறுத்தவரையில், பையன்களை விட பெண்களை அவர்கள் அதிகம் நேசிக்கிறார்கள். துடுக்காகவும், தங்களை மதிக்காமலும் எவ்வளவுக்கெவ்வளவு பெண் குழந்தைகள் இருக்கிறார்களோ அவ்வளவுக்கவ்வளவு தகப்பனாரின் அன்பு அதிகரிக்கிறது. எனவே, இந்த மசோதாவில் குறைபாடு ஏதேனும் இருந்தால் அது சரி செய்யப்பட்டு பெண் குழந்தைகளையும் தத்தெடுக்க வாய்ப்பளிக்க வேண்டும்.

விவாகரத்தைக் குறித்து தனிப்பட்ட முறையில் எனக்கு அக்கறையில்லை. எனது திருமணம் சிவில் (பதிவுத்) திருமணம்,

கிரிமினல் திருமணமல்ல. நான் சரியாக நடந்து கொள்ளவில்லை என்று என் மனைவி எண்ணினால் எந்த நேரத்திலும் நிச்சயமாக என்னை விவாகரத்து செய்ய வழி உள்ளது. விவாகரத்து சம்பந்தமான விதிகளைப் பொறுத்தவரையில் இந்த மசோதா பழைய வழக்கங்களை விட மிகவும் பிற்போக்காக உள்ளது என்றுதான் எனக்குத் தெரிகிறது. திரு. அல்லாடி கிருஷ்ணசாமி அய்யர் மற்றும் ஒரு பெண் உறுப்பினர் கூற்றின்படி கிராமங்களிலுள்ள பொது ஜனங்களிடையே விவாகரத்துக்கான எளிய முறை இருப்பதாகத் தெரிகிறது. அதிகம் செலவாகிற நடைமுறைகளோ, அவதூறுகளோ, பத்திரிகைக் கட்டுரைகளோ ஒன்றும் கிடையாது. இவையெல்லாம் தவிர்க்கப்பட்டுள்ளன. விவாகரத்தைப் பொறுத்தவரையில் அதிக நியாயமான, அறிவியல் பூர்வமான, மிக நவீனமான கண்ணோட்டத்துடன் அணுக வேண்டும் என்று யோசனை கூறுவேன்.

ஐயா, நான் ஒரு ஆலோசனையை முன்வைக்கிறேன். அதன் நடைமுறை சாத்தியத்திற்கேற்றபடி சட்ட அமைச்சர் அதைப் பரிசீலனை செய்யட்டும். பணச் செலவு, வழக்காடுதல், அவதூறு, பத்திரிகைகளில் கட்டுரைகள் எதுவுமற்றது இந்த ஆலோசனை, எல்லாத் திருமணங்களும் ஐந்தாண்டுகளுக்கே. அந்த ஐந்தாண்டுகள் முடிந்த பின்பு ஒவ்வொரு திருமணமும் புதிப்பிக்கக் கூடியவை. கிராம அதிகாரியின் முன்போ அல்லது அதற்கு இணையான நகர, மாநகர அலுவலர் முன்போ செய்யப்படும் ஏதாவது பிரகடனத்தின் மூலம் புதுப்பித்தலை நிறைவேற்றலாம். ஐந்து வருடம் கழித்து நீங்கள் பிரிந்து செல்ல விரும்பவில்லை என்பதை அறிவிப்பதன் மூலம் திருமணம் தொடர்ந்து நீடிக்கிறது. இது, விவாகரத்தை எளிதாக்குவதுடன், அறிவியல் பூர்வமானதாகவும் ஆக்குகிறது. எந்தவித அவதூறக்கோ வழக்குகளுக்கோ வாய்ப்பில்லை. மிகவும் புதுமையானதாகவும் இருக்கும். இந்த ஆலோசனையை உங்கள் முன் வைக்கிறேன். அதன் உண்மையான மதிப்பை அறிந்து அதை ஏற்றுக் கொள்ளுங்கள். முற்போக்கு மற்றும் வளர்ச்சி என்ற புதிய மதத்தின் எல்லாத் தேவைகளையும் அது திருப்தி செய்கிறது என்று கூறுகிறேன்.

திரு. எல். கிருஷ்ணசாமி பாரதி : ஐயா, உங்களிடம் ஒரு வேண்டுகோள் ஐயா, பல மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் இந்த மசோதா மீது பேச விரும்புவதால் விவாதத்திற்கு மேலும் ஒரு நாள் ஒதுக்கக் கேட்டுக் கொள்கிறேன். மாண்புமிகு பிரதம மந்திரி இங்கு

அமர்ந்திருக்கிறார். நாளைய தினத்தையும் விவாதத்திற்கு ஒதுக்க அரசு தயாராக உள்ளதா என்பதை அவர் கூறமுடியும்.

மாண்புமிகு திரு. ஜவஹர்லால் நேரு (பிரதம மந்திரி) : ஐயா, இந்த அவையின் ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு மணி நேரமும் அதிக மதிப்புள்ளது. அதை விட மதிப்புள்ளது வேறொன்றுமில்லை. இந்தக் கூட்டத் தொடரில் நாம் முடிக்கவேண்டிய மிக முக்கியமான அலுவல்கள் எவ்வளவோ உள்ளன. கையிலுள்ள நாள்களும் அதிகம் இல்லை. இருப்பினும் ஆரம்ப கட்டங்களில் நான் தெளிவாக்கியது போல், இந்த விவாதம் நடப்பதற்கும், அதைக் குறித்து முடிந்த அளவு அதிக எண்ணிக்கையிலான உறுப்பினர்கள் பேசவும் முழு வாய்ப்பு அளிக்க நாங்கள் விரும்புகிறோம். ஆயினும், மற்ற பொது அலுவல்கள் நடைபெறுவதை தடைசெய்யும் வகையில் இந்த அல்லது வேறு விவாதம் முடிவின்றி நடந்து கொண்டிருக்க முடியாது, எனவே விவாதத்தை முடிவுக்கு கொண்டுவரும் நிபந்தனையின் பேரில் முடிந்த அளவு நேரம் ஒதுக்க அரசு அறிவித்தது. இரண்டு நிபந்தனைகளுக்குட்பட்டு அரசின் சார்பாக நாளைய தினத்தை விவாதத்திற்கு ஒதுக்க நான் முற்றிலும் தயாராக உள்ளேன். விவாதம் நாளைக்கு முடிவுக்கு வரவேண்டும். இரண்டாவது சனிக்கிழமை நாம் அமர்ந்து அவையின் பிற அலுவல்களைப் பரிசீலிக்கவேண்டும்.

திரு. மகாவீர் தியாகி: சனிக்கிழமை அமர்வது நமக்கு மிகக் கஷ்டம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மாண்புமிகு பிரதம மந்திரி அவர்களுக்கு நேரம் கிடைக்கும். ஏனெனில், அவருக்கு அவை யில் அதிக நேரம் செலவழிக்க வேண்டியதில்லை. ஆனால் நாங்கள் காலையிலிருந்து மாலை வரை அமர்ந்திருக்க வேண்டியுள்ளது. மாலையில் தேர்வுக் குழுவின் கூட்டத்தில் கலந்துகொள்ள வேண்டியிருப்பதுடன் எங்களுடைய மற்ற வேலைகளையும் கவனித்துக் கொள்ள வேண்டியிருக்கிறது. எங்களுக்கு வரும் பல்வேறு அறிக்கை களையும் படிக்க வேண்டியிருப்பதுடன், திருத்தங்கள் செய்து அனுப்ப வேண்டியுள்ளது. சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமை ஆகிய இரண்டு நாட்களில் மட்டுமே இதை நாங்கள் செய்ய முடியும். ஐயா, சனிக்கிழமையை எடுத்துக் கொண்டு விடாதீர்கள்.

பண்டிட் கோவிந்த மாளவியா (உ.பி.: பொது) : ஐயா, வேறு எந்த மசோதாவைக் காட்டிலும் இந்த மசோதாவின் மீதுதான் நாடு முழுவதும் ஆர்வம் கொண்டுள்ளது என்பதை நான் தாழ்மையாகத்

தெரிவித்துக் கொள்கிறேன். அதைக் குறித்து இந்த அவையின் உறுப்பினர்கள் தங்கள் கருத்துக்களைத் தெரிவித்துக் கொள்ள முழு வாய்ப்பு அளிக்கப்பட வேண்டும். உறுப்பினர் ஒரே ஒருவர் மசோதாவுக்கு ஆதராவக இருந்தாலும் சரி அல்லது எதிர்ப்பாக இருந்தாலும் சரி, மக்களின் பிரதிநிதி என்ற முறையில் தம் கருத்தைக் கூற அவருக்கு நாம் நேரம் ஒதுக்க வேண்டும். அதற்கு நாளைக்கு நேரமில்லை என்றால் இந்த மசோதாவை விவாதிப்பதற்கு அரசு அதிக நாட்கள் ஒதுக்கவேண்டும். இந்த மசோதாவைக் குறித்து எவரும் தங்கள் கருத்துகளை தெரிவிக்க அனுமதிக்கப்படவில்லை என்றால் அது இந்நாட்டு மக்களுக்கும், அவை உறுப்பினர்களுக்கும் செய்யும் அவமரியாதையாகும்.

திரு. துணை சபாநாயகர் : மேலும் ஓர் அலுவல் தினத்தை இந்த மசோதாவின் விவாதத்திற்கு ஒதுக்குவதாக ஏற்கெனவே மாண்புமிகு பிரதம மந்திரி கூறியுள்ளார். பொறுக்குக் குழுவின் ஆய்வுக்காக பல மசோதாக்கள் அனுப்பப்பட்டுள்ளன. மற்ற சில மசோதாக்கள் குறித்து பொறுக்குக் குழுவின் அறிக்கைகள் அவைக்கு அளிக்கப்பட்டுள்ளன. முடிக்க வேண்டிய அலுவல்களைக் கணக்கில் எடுத்துக்கொண்டு, இந்து சட்டத் தொகுப்புக்கு ஒரு நாளைக்கு மேல் ஒதுக்கமுடியாது என்று மாண்புமிகு பிரதம மந்திரி நினைப்பதாகத் தெரிகிறது. அந்த விஷயத்தைப் பொறுத்தமட்டில் அது ஓர் அலுவல் தினம், எனவே நான் முற்றிலும் அரசின் கைகளில்தான் உள்ளேன். அவை இதை ஏற்றுக்கொள்ளவோ, நிராகரிக்கவோ செய்யலாம். இந்த விஷயத்தில் மேலும் சொல்வதற்கு ஒன்றுமில்லை. இதுவரை இருபத்து ஏழு உறுப்பினர்கள்வரை பேசியிருக்கிறார்கள். ஏழு நாட்களும் பத்தொன்பதும் ஐந்தும் ஆக இருபத்து நான்கு மணிநேரம் எடுத்துக் கொண்டுள்ளோம்.

டாக்டர் பி. எஸ். தேஷ்முக் : பேசுவதற்கு எத்தனை பேர் காத்திருக்கிறார்கள்?

மௌலானா ஹஸரத் மோகனி (உ.பி. முஸ்லீம்) : நம்முடைய விவாதத்தை நாளைக்குள்ளேயே முடித்து விடுவோம் என்பதற்கு என்ன உத்தரவாதம் இருக்கிறது?

திரு. துணை சபாநாயகர்: இன்னும் பேச விரும்புவர்களின்

இருபத்துநான்கு பெயர்கள் என்னிடம் உள்ளன. இந்த அலுவலை நடத்துவதற்கு அலுவல் தினமாக நாளை தினம் மட்டுமே ஒதுக்கப் பட்டுள்ளது. நிலைமை இவ்வாறு உள்ளது. நாளைக்குத்தான் இதை அவை பரிசீலிக்க வேண்டும். சனிக்கிழமையைப் பொறுத்தவரை யில் நாளைக்கு இந்த விஷயத்தை எடுத்துக் கொள்வதால், அது ஓர் அலுவல் தினமாக இருக்கும். பொறுக்குக் குழுவை வேறு ஒரு தினத்தில் கூட்ட ஏற்பாடு செய்யுங்கள்.

நாளை காலை 10-45 வரை அவை ஒத்தி போடப்படுகிறது.

பிறகு 1949 டிசம்பர் 14 புதன்கிழமை காலை பத்து மணி நாற்பத்தைந்து நிமிடம் வரை அவை ஒத்திப்போடப்பட்டது.

*இந்துச் சட்டத் தொகுப்பு - தொடர்ச்சி

திரு. துணை சபாநாயகர் : நேற்று, தவறுதலாக, இருக்கையில் அமர்ந்து விட்டதாக, திரு. கிருபளானியிடமிருந்து எனக்குக் கடிதம் ஒன்று வந்தது. அவர் பேச்சை முடித்துவிட்டார் என்றுதான் நினைத்தேன். நான் எழுந்தவுடன், அவைத் தலைவருக்கு அளிக்கும் மரியாதையாக அவர் இருக்கையில் அமர்ந்து விட்டதாக அவர் கூறுகிறார். அது அப்படியென்றால், அவருடையப் பேச்சைத் தொடர்வதற்கு அவருக்கு வாய்ப்பு அளிக்க வேண்டும். ஆனால் தம் உரையை சீக்கிரமாக முடித்துவிட வேண்டும் என்று அவரைக் கேட்டுக் கொள்கிறேன்.

+**திரு. ஆச்சார்ய ஜே.பி. கிருபளானி** (உ.பி. பொது) : என்னுடைய பேச்சை முடிப்பதற்கு எனக்கு வாய்ப்பு அளித்தமைக்கு உங்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதிகக் கண்டிப்பான முறையில் பேச்சை முடிக்க நான் விரும்புகிறேன். நமது மக்களுக்கு நகைச்சுவை ரசனை குறைவாக இருப்பதாகத் தெரிகிறது. இந்த நகைச்சுவைக்குப் பின்னே உள்ள, முக்கிய நோக்கத்தை ஊடுருவிப் பார்க்க முடிவதில்லை.

நான் முழு மனதுடன் இந்த மசோதாவை ஆதரிப்பதுடன் அது ஒரு வலுவான தளத்தில் இருக்கிறது என்கிறேன். இந்தியப் பெண்குலத்தின் பரம்பரை மற்றும் நெறிமுறைகளின் அடிப்படையில் அது உள்ளது. வரலாறு முழுவதையும் நோக்கின், நம்முடைய வாழ்விலும், கலாசாரத்திலும் அவர்கள் குறிப்பிடத்தக்க பங்காற்றியுள்ளனர் பண்டைய நாட்களில் அறிவாற்றல் பெற்ற பல பெண்களின் பெயர்கள் உள்ளன. அவர்களில் பலர் எழுத்தாளர்களாகவும், தத்துவவாதிகளாகவும், கவிஞர்களாகவும் இருந்தனர். மத்திய காலங்களில் நம் நிலைமை தாழ்ந்தபோது, அலைஅலையாக வெளிநாட்டு ஆக்கிரமிப்பு தொடர்ந்தபோது, நம் பெண்கள் தங்கள் நல்லொழுக்கத்துக்கு எவ்வித பாதகமுமின்றி இல்லத்தைக் கவனித்துவந்தனர். நாம் காயம் அடைந்தபோது, ஏமாற்றமடைந்தபோது இல்லம் சென்றவுடன் நமது காயங்களை ஆற்றி, வீட்டில் அடுப்பு அணையாது அவர்கள் கவனித்துக் கொண்டனர். நம்முடைய துயர் துடைப்பவர்

★ அ.நி.வி. (சட்) டி., தொகுதி VI, பிரிவு II, 14 டிசம்பர் 1949, பக்கம் 560-621

\+ மேற்படி அதே நூல், பக். 560-62.

களாக அவர்கள் விளங்கினர். நம்முடைய மதத்தை அவர்கள் வாழவைத்ததுடன் நம்முடைய மரபுகளையும் பாதுகாத்தனர். நம் கலாசாரத்தை அழியாது பாதுகாத்தனர். இந்து இல்லங்களில் இந்துப் பெண்களிடந்தான் நம் கலாசாரம் மற்றும் மதத்தின் சிறப்பம்சங் களைக் காண்கிறோம். இன்றுங்கூட, ஆடவர்கள் தங்கள் ஆடைகளை மேலைநாட்டு ஆடைகளாக மாற்றிவிட்டனர். பெண்கள் இந்தியப் பாணி ஆடைகளையே அணிகின்றனர். இந்தியப் பெண்குலத்தின் இத்தனித்தன்மையை தேசத் தந்தை அங்கீகரித்ததுடன், அதைச் சிறந்த முறையில் பயன்படுத்திக் கொண்டார்.

நம் சுதந்திரப் போராட்டத்தில் அவர்கள் நம்முடன் தோளோடு தோள் நின்று போரிட்டனர். பல தடவைகளில், நம்மை விட அவர்கள் அதிகம் துயருற்றனர் என்பதை அறிவேன். அவர்களில் சிலர் தடியடிக்கு ஆட்படாவிட்டாலும், சிறைச்சாலைக்குச் செல்லா விடினும் அவர்கள் அனுபவித்த கொடுமைகளை நான் அறிவேன். அதை அவர்கள் மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொண்டனர். எல்லா வகை களிலும் அவர்கள் நமக்கு மிகவும் உதவியாக இருந்தனர். அவர்கள் தங்களைப் பற்றியே எண்ணிக்கொண்டிருந்தனர் என்று நினைப்பது நமக்கே இழுக்காகும். காலணி அணிந்திருப்பவருக்கு எங்கே கடிக் கிறது என்பது தெரியும். என்ன குறைபாடுகளால் கஷ்டப்படுகிறோம் என்பது அவர்களுக்குத் தெரியும். வங்காளத்திலுள்ள விதவைகளின் நிலைமைகளைத் தெரிந்து கொள்ளாது, இந்த மசோதாவை ஆர்வத் துடன் எதிர்க்கும் வங்காள உறுப்பினரைக் குறித்து வருத்தப்படு கிறேன். நான் அவர்களின் நிலைமைகளை என் கண்ணாலேயே பார்த்திருக்கிறேன்.

திரு. சுரேஷ் சந்திர மஜும்தார் (மேற்கு வங்காளம் : பொது) : எல்லா வங்காள உறுப்பினர்களுமல்ல.

திரு. ஆச்சார்ய ஜே.பி. கிருபளானி : இந்த மசோதாவை ஆர்வத்துடன் எதிர்த்துவரும் ஒரே ஒரு உறுப்பினரைப் பற்றி மட்டுமே பேசினேன். நான் குறிப்பிட்டபடி காலணி அணிந்தவருக்கு கடி எங்கே என்று தெரியும். பெண்களுக்கு தாங்கள் விரும்பியதெல்லாம் கிடைத்தாலும்கூட, இல்லத்திலும் இல்லத்திலுள்ள ஆடவர்களிடம் அவர்களுக்குள்ள பரம்பரை ஈடுபாடு குறைவதில்லை. இதை நம்பு வதற்கு எல்லாக் காரணங்களும் உள்ளன. புதுமைப் பெண்கள் என்று கருதப்படக்கூடிய பல பெண்களை நான் அறிவேன். என் னுடைய வீட்டு வாழ்க்கையை கொஞ்சம் எடுத்துக் காட்டுவதற்கு

என்னை மன்னிக்க வேண்டுகிறேன். நீங்களும் இந்த அவையினரும் திருமதி கிருபளானியை அறிவீர்கள். ஆனால் அவளுடைய பொதுநல நடவடிக்கைகளை மட்டுமே நீங்கள் அறிவீர்கள்.

ரோகிணி குமார் சௌத்திரி (அசாம் : பொது) : ஓர் ஒழுங்குப் பிரச்சினை. இந்த அவையில் திருமதி கிருபளானி இல்லாதபோது அவரைப் பற்றி விவாதிக்கலாமா?

திரு. ஆச்சார்ய ஜே.பி. கிருபளானி: நிச்சயமாக. உறுப்பினர் திருமதி கிருபளானியைக் குறித்து விவாதித்தால் நான் ஆட்சேபனை எழுப்புவேன். அவளைப் பற்றிப் பேச எனக்குக் கொஞ்சம் உரிமை இருக்கிறது என்று நினைக்கிறேன். நான் குறிப்பிட்டபடி பொதுநல நடவடிக்கைகளில் அவள் முழுப் பங்கு எடுக்கிறாள். ஆனால் அவள் வீட்டிற்குள் நுழைந்தவுடன், பழைய காலத்துப் பெண்மணிகளைப் போன்று, ஒரு சிறந்த இல்லத்தரசியாக மாறிவிடுகிறாள்.

எனக்காக பிறர் எந்த வேலை செய்வதையும் நான் விரும்புவதில்லை. நான் வேறு எங்காவது பார்த்துக் கொண்டிருக்கும்போது அவள் எனக்காக எல்லாம் செய்கிறாள் என்பதைச் சொல்லத்தான் வேண்டும். என்னுடைய காலணிகளை சுத்தம் செய்கிறாள். என் துணிகளைத் துவைத்து சுத்தம் செய்கிறாள். தற்கால மாதர்கள் என்று கருதப்படும் பெண்களின் வாழ்க்கை முறையை காணும் வாய்ப்பும் எனக்கு கிடைத்தது. அவையில் மட்டுமே சந்திக்கும் உறுப்பினர்களை அவர்கள் வீட்டில் அவர்களுடன் நன்கு பழகும் வாய்ப்பு எனக்குக் கிட்டியுள்ளது. அவர்கள் தங்கள் குழந்தைகள் சூழ தங்கள் கணவன்மார்கள் மற்றும் சகோதரர்களுடன் குடும்பப் பணிகளில் ஈடுபட்டிருப்பதைப் பார்க்கும்போது பண்டைய மாதர்களின் நன்னெறிகள் அனைத்தையும் இவர்களும் பெற்றிருப்பதைக் காண முடிந்தது. அத்துடன் பொதுநலத் தொண்டு மற்றும் பொதுநல நடவடிக்கைகள் என்ற புதிய நெறிமுறைகள் அவர்கள் வாழ்வை வளமுறச் செய்தன. ஐயா, நான் சிந்து மாகாணத்திலுள்ள ஒரு சமூகத்திலிருந்து வந்தவன். இந்த சமூகத்தில் பெரும்பாலான பெண்கள் நன்கு கல்வி கற்றவர்கள். தற்கால கொள்கைகளின்படி, அவர்களை நாகரிகமானவர்கள் என்று கூடச் சொல்லலாம். அவர்கள் இல்லங்களுக்குச் செல்லும்போது அவர்கள் தங்கள் கணவன்மார்களையும் குழந்தைகளையும் சகோதரர்களையும் எவ்வளவு பரிதாபகரமாக நேசிக்கிறார்கள் என்பதைக் குறிப்பிட வேண்டும்.

ஒரு மதிப்பிற்குரிய உறுப்பினர் : ஏன் பரிதாபகரமாக?

திரு. ஆச்சார்ய ஜே.பி. கிருபளானி: நன்கு ஆலோசித்த பிறகே இந்தச் சொல்லை உபயோகப்படுத்தினேன். இவர்களுடைய இந்த அன்பு நம்மவர்களுக்குப் பெரும் தொல்லைதான். எவ்வளவு தூரம் நாம் வீட்டு நிர்வாகத்தில் ஆதிக்கம் செலுத்த முயற்சித்தாலும், நம் விருப்பத்தை நடைமுறைப்படுத்த விரும்பினாலும் அவர்கள் அவ்வளவு ஈடுபாட்டுடனும், நம்பிக்கையுடனும், உறுதியுடனும் பொறுமையுடனும் நம்மைச் சுற்றி வந்து கவனிக்கையில் எந்தக் கணவனும் பெண்டாட்டி தாசனாக ஆகாமலிருக்க முடியாது. இந்தியாவைவிட வேறு எந்த நாட்டிலும் இவ்வளவு பெண்டாட்டி தாசர்களைப்பார்க்க முடியாது. அவர்கள் குனிவதெல்லாம் எப் பொழுதும் வெற்றி பெறுவதற்கே. இந்தத் தற்காலப் பெண்கள் பலரைப் பார்த்திருக்கிறேன். நம்மைப் போன்று அவ்வளவு உயர் கல்வி கற்றவர்கள். ஆனால் தோலுக்குக் கீழே நம்முடைய பழைய கால சகோதரிகளைப் போன்ற பண்புகளையே கொண்டிருந்தனர் என்பதை நான் கண்டுள்ளேன். பழைய ஆசாரக் குடும்பப் பெண் களை மணம் செய்து கொண்டு தங்களுடைய மனைவிமார்கள் தங்கள் மீது கொண்டுள்ள ஈடுபாட்டைக் கண்டவர்கள், தற்கால மகளிர் தங்கள் கணவன்மார்களிடம் கொண்டுள்ள விசுவாசத்தைக் கண்டால் அதில் எந்த வித்தியாசமும் இல்லாதிருப்பதைக் கண்டு ஆச்சரியப் படுவார்கள். இந்தப் பெண்கள் தங்களிடம் உள்ள சில குறைபாடுகள் நீங்க விரும்புகிறார்கள். பெண்களுக்கு வாரிசுரிமை கொடுத்தால் சகோதரனுக்கும் சகோதரிக்கும் இடையேயான அன்பு போய்விடும் என்று கூறப்பட்டது. இந்த மாதிரியான அற்ப விஷயங்களின் அடிப் படையில் நமது சகோதரிகளின் பாசம் அமைந்திருக்கவில்லை. அதன் பின்னே சில நூற்றாண்டு பரம்பரை உள்ளது. தங்களுடைய சகோதரர்கள் நன்கு கல்விகற்று சொந்தக் கால்களில் நிற்க வேண்டு மென்பதற்காக, சகோதரிகள் பலர் கடுமையாக உழைத்துள்ளதை நான் கண்டுள்ளேன். தங்கள் குடும்பத்துக்காக அவர்கள் தியாகம் செய்துள்ளனர். நான் சார்ந்துள்ள சமூகத்தில் கூட்டுக் குடும்ப முறை கிடையாது. திருமணம் முடிந்தவுடன் மகன் தன் மனைவியுடன் தனிக்குடித்தனம் செய்யச் சென்று விடுகிறான். ஆனால் அவர்கள் கூட்டுக் குடும்பத்தில் இல்லாததால் அந்தக் குடும்ப உறுப்பினர் களிடையே அதிக அன்பு காணப்படுகிறது. சிந்திகள் சிந்து மாகாணத் திலிருந்து இந்தியாவுக்கு குடிபெயர்ந்து வந்தபோது இது வெளிப் படையாகத் தெரிந்தது. ஒரு வீட்டில் நான்கைந்து சிந்திக் குடும்பங்கள் சேர்ந்து வாழ்வதைக் கண்டேன். சிந்துவுக்கு வெளியே ஒருவன்

வாழ்ந்தால் யாருக்காவது வெளியே வீடிருக்குமானால் அவன் இந்தியாவில்தான் இருப்பான். அந்த வீட்டில் மருமகன்கள், மாமன் மகன்கள், அத்தை மகன்கள், மாமனார்கள் மனைவி வழி உறவினர்கள், கணவன் வழி உறவினர்கள் எல்லோரும் சேர்ந்து வசித்தனர். இந்த நெருக்கடியை அவர்கள் மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொண்டனர். அவர்களில் பலர் அதிகமான பணம் செலவழிக்க வேண்டியிருந்தது. இந்துச் சட்டங்களில் சில மாற்றங்கள் வருவதால் பல நூற்றாண்டுகளாக இருந்துவரும் இந்தக் குடும்ப பாசம் முடிந்துவிடப் போவதில்லை.

நண்பகல் 12 மணி

திரு. அல்லாடி கிருஷ்ணசாமி அய்யர் கூறியது போன்று இந்தச் சட்டம் எப்பொழுதும் மாறிக் கொண்டே இருக்கிறது. மாறிவரும் சூழ்நிலைகளுக்கேற்ப தன்னை மாற்றிக் கொண்டுள்ளது என்பது இந்து மதத்தின் பெருமைக்குரிய விஷயம். அது பழைமைக்கு உண்மையாக இருக்கிறது. இருப்பினும் சமுதாயத்தின் ஆரோக்கிய வாழ்க்கைக்குத் தேவையான அளவு புதுமையையும் எடுத்துக் கொண்டுள்ளது. காலம் மாறி விட்டது. வெளிநாட்டு ஆட்சி இங்கு ஏற்படாமலிருந்தால் நமது சாஸ்திரங்களும் மாற்றங்கள் அடைந்திருக்கும். நமது சட்டங்களும் மாற்றம் அடைந்திருக்கும். வெளிநாட்டு ஆட்சி இந்தச் சட்டங்களை இறுக்கமானதாக ஆக்கிவிட்டது. அதில் கொஞ்சம் புது வாழ்வையும், ஒளியையும் கொண்டு வரும் காலம் வந்துவிட்டது. அதை இந்த மசோதா செய்ய முயற்சிக்கிறது. பொறுக்குக் குழுவில் இந்த மசோதா ஒரு சரியான உருவத்திற்கு கொண்டு வரப்படும். பிறகு எந்த விதப் புகார்களும் இருக்காது. நமது வீட்டு வாழ்க்கையின் அமைதி குலைந்துவிடாது என்பது நிச்சயம். நமது பெண்களின் அன்பும் விசுவாசமும் குறையப் போவதில்லை. தங்கள் குடும்ப ஆடவர்களின் மீது அவர்கள் கொண்டுள்ள ஈடுபாடு சிறிதும் குறையப் போவதில்லை. எதிர்கால இந்தியப் பெண்கள் குடும்பத்திற்கும் தேசத்திற்குள் உண்மையானவர்களாக இருப்பார்கள். ஐயா, நான் பேச்சை முடிக்கிறேன்.

திரு. கோகுல்பாய் தௌலத்ராம் பட் (பம்பாய் மாகாணங்கள்) : (இந்தி உரையின் ஆங்கில மொழி பெயர்ப்பு) : என்றைக்கு இந்து தொகுப்புச் சட்டம் அவையில் சமர்ப்பிக்கப்பட்டதோ அன்றிலிருந்து அது இந்திய மக்களின் மனதைக் கலக்கிக் கொண்டிருக்

★ அ.நி.வி. (சட்) டி., தொகுதி VI, பிரிவு II, 13 டிசம்பர் 1949, பக்கம் 576-85

கிறது. கடந்த ஐம்பது அல்லது அறுபதாண்டுகளாக அது நம்முன் உள்ளது என்று டாக்டர் சென் கூறுகிறார். ஆனால் நான் பார்த்த எந்தப் புத்தகத்திலும் இந்தத் தொகுப்பு இருந்ததாக குறிப்பு எதுவும் காணப் படவில்லை. ஓர் இந்துச் சட்டம் இருந்தது. அதில் அடிக்கடி செய்யப் பட்ட மாற்றங்கள் இந்து சமுதாயத்தின் கவனத்தை ஈர்த்தது.

1939க்குப் பிறகுதான் தற்போதைய வடிவில் இந்துச் சட்டத் தொகுப்பைப் பற்றி நாம் அறிகிறோம். அந்த நேரத்தில் சில பேச்சு கள் இருந்திருக்கலாம். 1938-ல் இந்த அவையில்தான் திருமண மசோதாவை டாக்டர் தேஷ்முக் கொண்டு வந்தார்.

டாக்டர் பி.கே. சென் (பீகார் : பொது) : நான் சிறிது விளக்கம் தரலாமா? 60 ஆண்டுகளுக்கு மேலாக அதாவது 1856 அல்லது 1855-லிருந்து அது சட்டமன்றத்தில் இருந்தது என்று கூறினேன். அது திருமணச் சட்டம் சம்பந்தமாக அன்றி வேறு எந்த அம்சத்தை யும் பற்றி அல்ல.

திரு. கோகுல்பாய் தௌலத்ராம் பட் : அதன் சில அம்சங்கள் நம்முன், இந்து சமுதாயத்தின் முன் இருந்தன என்று நானும் கூறு கிறேன். உண்மையில் இந்த மாதிரிப் பிரச்சினைகளைச் சந்திப்பது இந்துக்கள் மட்டுமல்ல, பார்சிகளும் முஸ்லீம்களும் இதேபோன்று அவற்றை எதிர்நோக்குகிறார்கள். இந்துச் சட்டத் தொகுப்பு இந்த அவை முன் கொண்டுவரப்பட்ட வரலாற்றின் சில பகுதிகளையும், ''ராவ் குழு'' என்ற குழு அமைக்கப்பட்ட சூழ்நிலைகள் குறித்தும் உங்களுக்கு எடுத்துரைக்க விரும்புகிறேன். 30 கோடி மக்கள் தொகை கொண்டுள்ள இந்து சமுதாயத்தின் சமூகக் கட்டுக்கோப்பிற்கான விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகள் வகுத்தளிக்கப்பட்ட காலக்கெடுக் குறித்தும், பிரசாரம் மற்றும் மக்கள் கருத்தை அறிந்துகொள்ளவும் அல்லது வேறு எதிர் விளைவுகளைத் தெரிந்து கொள்ள உபயோகப் படுத்த உள்ள முறைகள் குறித்தும் சில விவரங்களைக் கூறுகிறேன். இந்தச் சட்ட தொகுப்பு கொண்டு வரப்பட வேண்டுமா, வேண்டாமா, இந்து சமுதாயம் ஒருமைப்பாட்டை அடைய வேண்டுமா வேண் டாமா, இந்து சட்டம் என்று வழக்கத்திலுள்ள பல்வேறு துண்டு சட்டங்கள் ஒன்றாக இணைக்கப்பட வேண்டுமா வேண்டாமா என்பதல்ல உண்மையான பிரச்சினைகள். 1944 ஜனவரி 20-ஆம் நாள் ராவ் குழு நியமிக்கப்பட்டதை உங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

அவர்கள் இந்தப் பணியை ஆரம்பித்து ஒரு வரைவு மசோதாவை தயார் செய்தார்கள். 1944 ஆகஸ்டு 4ல் பொதுமக்கள் இந்த மசோதாவைப் பற்றித் தெரிந்து கொண்டனர். 1944 அக்டோபர் 5க்குள் பொதுமக்களிடமிருந்து கருத்துக் கோரப்பட்டது. இந்த மசோதாவின் பிரதிகள் ஆயிரம் மட்டுமே 30 கோடி மக்களுக்காக இந்திய அரசால் அச்சடிக்கப்பட்டது. அதன் பிறகு பொதுமக்கள் கேட்டுக் கொண்டதற்கு இணங்க மேலும் மூவாயிரம் பிரதிகள் அச்சடிக்கப்பட்டன.

திரு. மகாவீர் தியாகி : (உ.பி. பொது) : அது அச்சடிக்கப் பட்டது ஆங்கிலத்திலா அல்லது இந்தியிலா?

திரு. கோகுல்பாய் தௌலத்ராம பட்: நாலாயிரம் பிரதிகளும் ஆங்கில மொழியிலேயே அச்சிடப்பட்டன. அதன் பிறகு இந்த மசோதாவை மொழி பெயர்த்து அச்சிட்டு வினியோகிக்குமாறு மாகாண அரசுகளை திரு. ராவ் கேட்டுக் கொண்டார். மொழி பெயர்ப்பு செய்தும்கூட எனக்குத் தெரிந்த வரையில் 30 கோடி மக்கள் தொகைக்கு, 50 லிருந்து 60 ஆயிரம் பிரதிகளுக்கு மேல் வினியோ கிக்கப்படவில்லை.

இப்பொழுது மிகவும் முக்கியமானது என்று கருதப்படு வதும், இந்து சமுதாயத்தை ஒன்றுபடுத்துவதை லட்சியமாகக் கொண் டதும், புதிய வாழ்க்கையை அறிமுகப்படுத்துவதும், சீர்திருத்த நட வடிக்கை என்று கருதப்படுவதுமான இம் மாதிரியான மசோதாவைக் குறித்து மக்களின் கருத்துகளை சேகரிக்க, கொடுக்கப்பட்ட விளம் பரம் மற்றும் மக்களிடையே சுற்றுக்கு விடப்பட்ட விளம்பரப் பொருள்களைக் குறித்துப் பேசப் போகிறேன் இந்த நோக்கத்திற்காக, இரண்டு மாதக் காலக்கெடு நிர்ணயிக்கப்பட்டது. அதற்குப் பிறகு, குழு நாட்டின் பல இடங்களுக்குப் பயணம் மேற்கொண்டது. அவர்கள் பயணம் 38 நாட்கள் மட்டுமே நீடித்தது. அவர்கள் எல்லா மாநகரங் களுக்கும் செல்லவில்லை. கிராமங்களையும், சிறு நகரங்களையும் அவர்கள் இதில் சேர்த்துக்கொள்ளவில்லை. பயணத்தின் எந்தக் கட்டத்திலும் அவர்கள் மக்கள் மத்தியில் செல்ல அக்கறை கொள்ள வில்லை. வங்காளத்தில் நிலவிலுள்ள தாயாபாக முறைப்படி, ஒருவிதவைக்கு சொத்தில் பங்கு கிடைத்தாலும் ஏன் அவள் வறுமை யில் உழல்கிறாள் என்பதைக் குறித்து அவர்கள் எந்த விதவையையும் அணுகிக் கேட்கவில்லை. தாய்வழி சமுதாய அமைப்பின் முறைப்படி சொத்தில் பங்கு இருந்தும், மெட்ராசிலுள்ள சகோதரிகளும் மகள்

களும் ஏன் மகிழ்ச்சியற்று இருக்கிறாள் என்பதை அறிந்துகொள்ள அவர்கள் மெட்ராசுக்கு ஒரு பொழுதும் போகவில்லை. வங்காளத்திலும் மெட்ராசில் மட்டுமே விதவைகள் அவல நிலையில் இருக்கிறார்களா அல்லது அவர்கள் விதி நாடு முழுவதும் ஒரே மாதிரியாக உள்ளதா, அப்படியென்றால் அதற்கு என்ன காரணங்கள் இருக்கக் கூடும் என்பதை அவர்கள் அறிந்து கொள்ளவில்லை, சொத்தில் பங்கு இல்லாததால் அவர்களுக்கு இந்த அவல நிலை என்பதை என்னால் ஒத்துக்கொள்ள முடியாது. இதுவல்ல உண்மை. சொத்துக்கள் இல்லாதது மட்டுமே அவர்களது துயரத்திற்குக் காரணம் என்று கூறமுடியாது. இளவயதில் விதவையானவர்கள் உலக இன்பங்களைச் சுவைக்கக்கூடாது என்ற தடை இருந்தது. இத்தகைய விதவைகளுக்கு இரண்டாவது திருமணம் செய்து கொள்ள வாய்ப்பளிக்க மறுத்ததிற்கு எந்த நியாயமும் கிடையாது. இந்த நிலையை மாற்ற ஈஸ்வர் சந்திர வித்தியா சாகரும் மற்றும் மலபாரி சாகேப்பும் பாடுபட்டனர். எனக்குச் சரியாக நினைவில் இல்லாவிடினும் விதவைகள் மறுமணச்சட்டம் 1856-ல் நிறைவேற்றப்பட்டு இன்று வரை அமலில் உள்ளது. எனினும் இந்தச் சட்டத்தின் பயனை எத்தனை பேர் அடைந்தனர் அல்லது இச்சட்டம் எவ்வித மகிழ்ச்சிக்கு அல்லது வளர்ச்சிக்கு உதவியுள்ளது என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். ஒரு சட்டத்தை இயற்றுவதன் மூலமே சமுதாயத்தில் எந்த மாற்றத்தையும் கொண்டு வரமுடியாது அல்லது எதையாவது மேலிருந்து மக்களின் மீது திணிப்பதால் உருப்படியான விளைவுகள் எதையும் எதிர்பார்க்க முடியாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். உதாரணமாக பார்சி திருமணம் மற்றும் விவாகரத்துச் சட்டத்தைப் பற்றி எடுத்துரைக்க விரும்புகிறேன். இந்தச் சட்டம் முதலில் 1865-ல் வகுக்கப்பட்டது. 1936ல் இந்த அவையில் மூலச் சட்டத்தைத் திருத்துவதற்கு ஒரு மசோதாவை சீர் கௌவாஸ்ஜி ஜெகாங்கீர் கொண்டு வந்தார். இந்தத் திருத்த மசோதாவின் வரலாற்றைப் பற்றிக் கூற நான் எண்ணியுள்ளேன். நாம் இப்பொழுது நினைப்பதுபோல பார்சி சமூக அன்பர்களும் திருத்தம் அவசியம் என்று எண்ணினர். தமது இல்லத்தில் குழப்பம் ஏற்பட்டு விடக்கூடாது என்பதற்காக திரு. திருபளானிஜிக்கு இந்த மசோதாவை ஆதரிக்க வேண்டியிருந்தது. அதே போன்று நானும் என் குடும்பத்தை குழப்பத்தில் ஆழ்த்த விரும்பவில்லை. அதனால் நானும் அதை ஆதரிக்கட்டுமா?

திரு. கிருஷ்ண சந்திர சர்மா : *(உ.பி. பொது)* : இதைப் பொறுத்த வரையில் வயதானவர்கள் எல்லோரும் ஒரே மாதிரித்தான் நடந்து கொள்கிறார்கள்.

திரு. கோகுல்பாய் தௌலத்ராம் பட் : முற்றிலும் சரி. நான் சர்மாஜிக்கு இப்பொழுது பதிலளிக்க விரும்பவில்லை. அவர் தன் மனைவியின் கோட்டைச் சுமந்து கொண்டு, அவளைப் பின் தொடர்ந்து எல்லா இடங்களுக்கும் போய்க் கொண்டிருக்கட்டும்.

திரு. கிருஷ்ண சந்திர சர்மா : அவள் கோட் அணிவதில்லை.

திரு. கோகுல்பாய் தௌலத்ராம் பட் : 1865-ஆம் ஆண்டு சட்டத்தை திருத்தி மாற்றியமைக்கவேண்டுமென்று பார்சி அன்பர்கள் முடிவுசெய்தவுடன், அவர்கள் எடுத்த நடவடிக்கைகளை விளக்க வேண்டுமென்பதே என் எண்ணம். அவர்கள் என்ன செய்தார்கள்? அவர்கள் பஞ்சாயத்துகளிலிருந்து ஒரு சட்டக் குழுவை அமைத்தார்கள். அந்தக் குழு என்ன செய்தது? ஒரு திருத்த மசோதாவைத் தயாரித்து மக்கள் கருத்துக் கணிப்புக்கு இரண்டு மாதம் ஒதுக்கி விட்டு, பிறகு ஒரு முடிவை எடுக்கும் வகையில் அவர்கள் செயல் படவில்லை. நான்காண்டுகளாக அவர்களிடம் ஒரு கேள்விப் பட்டியல் இருந்தது. 1921 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கின்படி ஒரு லட்சம் அல்லது அதிக பட்சம் ஒன்றரை லட்சம் மக்களிடம் கருத்தைக் கேட்க விரும்பினார்கள். அவர்கள் பரிசீலனையில் அறிக்கை நான்கு ஆண்டுகள் இருந்தது. அதற்குப் பிறகுதான் அவர்கள் தீர்மானத்தை ஏற்றுக் கொண்டனர். மீண்டும் பார்சி சமூகத்தில் அந்த அறிக்கை சுற்றுக்கு விடப்பட்டு அதன் மீது கருத்துகள் திரட்டப்பட்டன. இந்தக் கருத்துகள் பம்பாய், அகமதாபாத் அல்லது மெட்ராஸ் மக்களிடமிருந்து மட்டும் சேகரிக்கப்படவில்லை. பாரசீகம், சீனா போன்ற பகுதிகளில் வசிக்கும் பார்சிகளின் கருத்துகளும், விருப்பங்களும் அறிந்து கொள்ளப்பட்டன. படித்தவர்கள் மற்றும் வழக்குரைஞர்கள் ஒரு விஷயத்தை உருச்சிதைத்து அளிக்கிறார்கள். விஷயத்தின் அந்தக் கோணத்தை மக்கள் ஏனோ ஏற்றுக் கொள்கிறார்கள். விவாதத் திறமையினால் தங்கள் சிந்தனைப் போக்கை மற்றவர்கள் ஏற்றுக் கொள்ளும்படி செய்கிறார்கள். ஆனால் அந்த அறிக்கை அந்த மாதிரியான திறமை எதுவும் இல்லாதவர்களிடமும் அளிக்கப்பட்டது. சிறுபான்மை, மற்றும் பெரும்பான்மை என்ற வேறுபாடின்றி பல குழுக்களிடமிருந்து கருத்துகள் கோரப்பட்டன. எல்லோரையும் இவ்வாறு கலந்தாலோசித்த பிறகு 1936-ல் மசோதா திருத்தப்பட்ட வடிவில் அனுப்பப்பட்டது. எனவே இந்த மசோதாவில் கண்டுள்ள விஷயங்கள் 1923லிருந்து 1936 வரை அவர்கள் பரிசீலனையில் இருந்த பிறகு, இறுதியாகத் திருத்தப்பட்ட வடிவில் நிறைவேற்றப்பட்டது.

எனக்குத் திரு. ராவ் மீது மிகவும் மதிப்பும் மரியாதையும் உண்டு. கடுமையாக உழைத்து, அரசியல் அமைப்புச் சட்டம் தயாரிப்பதில் அவர் பேருதவி புரிந்திருக்கிறார். ஒரு சிலரை மட்டும் கலந்தாலோசித்ததை அவர் அறிக்கையிலேயே குறிப்பிட்டுள்ளதை நான் தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதில் எந்தக் கெடுதலும் இல்லை என நினைக்கிறார். இருப்பினும் இந்தப் பிரச்சினையைப் பொறுத்தவரையில் சமூகம் பிளவுபட்டுள்ளது என்பதை அவர் ஒத்துக் கொள்கிறார். இப்பொழுது அவையில் சகோதரி ரேணுகா இல்லை. அவரைப் பற்றியும் மாறுபட்டுச் சொல்வதற்கில்லை. *1943/44*-ல் அவர் திருமணச் சட்டத்தைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தார். அந்த நேரத்தில் ஒரு கருத்துக் கணிப்பு நடந்து, அந்த வாக்குகளையெல்லாம் எண்ணிப் பார்த்தால் உற்சாகமான வாலிபர்கள் அனைவரும் (ஜோஷிலா ஜவான்கள்) மசோதாவுக்கு ஆதரவாகவே வாக்களித்திருப்பார்கள் என்று வலியுறுத்திக் கூறினார். அவர் இந்த ஜோஷிலா ஜவான்கள் என்ற சொற்களை உபயோகப்படுத்தவில்லை. அவர் உபயோகித்த இளைஞர் என்ற சொல்லை விளக்கவே அதை உபயோகித்துள்ளேன். எனது சகோதரிக்கும் மற்றும் இந்த அவையில் உள்ள ஆறு அல்லது எட்டு உறுப்பினர்களுக்கும், நான் சொல்ல விரும்புவதெல்லாம் நம் ஆச்சார்ய கிருபளானி இதில் பெண்களின் விடுதலையைக் கண்டதுபோல, பெண்களின் நலனுக்காக இந்த மசோதா அவசியம் என்று அவர்கள் நினைத்தால் அதை இந்துச் சட்டத் தொகுப்பு என்று பெயரிட்டு அழைக்காதீர்கள். சுதந்திரத்திற்குப் பிறகு இந்துப் பெண்களுக்கான குடியியல் உரிமைகள் மசோதா அல்லது அதைப் போன்ற வேறு பெயரிட்டு அழையுங்கள். அதற்குப் பிறகு அவர்களுக்கு வேண்டிய அளவு உரிமைகளை வாரி வழங்குங்கள். ஏனெனில் எப்பொழுதும் பெண்களிடம் மதிப்பும் மரியாதையும் வைத்திருக்கிறோம். கல்யாணத்துக்குப் பிறகு நம் பெண்கள் தங்கள் கணவன் வீட்டை தம் சொந்த வீடாகக் கருதுகிறார்கள். சகோதரி சுசேதா இப்படி ஒரு இல்லத்தைத்தான் அமைத்திருக்கிறார். ஒரு பெண் தன் கணவன் வீட்டிற்குச் சென்றவுடன் அந்த வீடு அவளுடைய வீடாக ஆகிவிடுகிறது. தன்னுடைய தகப்பனாரின் வீட்டை தன் வீடாக இனியும் கூறமுடியாது. அவளுடைய திருமண நாளிலிருந்து அது அவள் தகப்பனாரின் இடம் மட்டுந்தான். அவள் திருமணம் செய்தகொண்டு சென்ற வீடுதான் அவள் வீடு. மேலும் விவரத்திற்குள் செல்ல நான் விரும்பவில்லை. இந்த மசோதா தங்களுக்காக மட்டுமே என்று நம் சகோதரிகள் எண்ணினால் அது தவறாகும். பெண்களுக்கு எவ்வளவு அதில் உரிமை உள்ளதோ,

ஆண்களுக்கும் அதில் அவ்வளவு உரிமை உள்ளது. எவ்விதத்திலும் இதைப் பொறுத்தவரையில் அவர்களிடையே வேறுபாடு காண விரும்பவில்லை. சமூகத்தின் ஒரு குறிப்பிட்ட பகுதிக்காக இந்த மசோதா உருவாக்கப்பட்டுள்ளது என்று எந்த ஆணுமோ அல்லது பெண்ணுமோ எண்ணிவிடக்கூடாது. அதிக நேரம் எடுத்துக் கொண்டதற்காக என்னை மன்னிக்க வேண்டும்.

ஒரு கருத்துக் கணிப்பு நடந்திருந்தால் உற்சாகமான இளைஞர்களின் ஆதரவு இருந்திருக்கும் என்று சகோதரி ரேணுகா கூறியதைப் பற்றி நான் எடுத்துரைத்தேன். 1947ல் திரு. ராவ் தாம் சமர்ப்பித்த அறிக்கையில் பின்வருமாறு கூறியிருந்தார்: ''மக்களின் அபிப்பிராயங்கள் கடுமையாகப் பிளவு பட்டிருந்தன. சிலர் இடதுசாரிகளாகவும், சிலர் வலதுசாரிகளாகவும் இருந்தனர். மேலும் மசோதாவுக்கு ஆதரவானவர்கள் புத்திசாலிகளாகவும் அந்தஸ்துள்ளவராகவும் இருந்தனர். அதே நேரத்தில் அதற்கு எதிர்ப்பு தெரிவித்தவர்கள் முட்டாள்களாகவும், மூளை இல்லாதவர்களாகவும், வாழ்க்கையில் எந்த அந்தஸ்தும் இல்லாதவர்களாகவும், சமுதாயத்தையும் அதன் சிக்கல்களையும் புரிந்து கொள்ள முடியாதவர்களாகவும் இருந்தனர். ஆயின், சமுதாயத்தையும் அதன் பிரச்சினைகளையும் புரிந்து கொள்ளுபவர்கள் யார் என்று நான் தெரிந்துகொள்ளலாமா? திரு. ராவ் அதைப் புரிந்து கொண்டிருக்கிறாரா? திரு. துவாரகாநாத் மிட்டர் உண்மையிலேயே அதைப் புரிந்து கொள்ளவில்லையா? அந்த மனிதர்களைப் பற்றி எனக்குச் சொல்வதற்கு ஒன்றுமில்லை. நேற்று யாருடைய நூற்றாண்டு பிறந்த தினம் நம்மால் கொண்டாடப்பட்டதோ, அந்தப் பண்பாட்டில் ஈடு இணையற்ற மனிதரான திரு. மாளவியாஜியைவிட இந்தத் துறையில் அதிகம் பணி புரிந்தவர்கள் வேறுயாரும் இருக்க முடியாது அவர் ஒரு சனாதனியாக இருந்தாலும் கூட சமுதாயச் சீர்திருத்தத்திலும் மக்கள் உரிமை பெறும் விஷயங்களிலும் அவரைப் போல் முன்னணியில் இருந்தவர் வேறு யாரும் கிடையாது. அந்தப் பெருமதிப்பிற்குரிய மாளவியாஜி இந்துச் சட்டத் தொகுப்பு அறிமுகப்படுத்தப்பட்ட முறை சரியானதல்ல என்று கருதினார். நாம் அவரைக் கவனிக்காமலிருக்கலாம். சர் தேஜ்பகதூர் சப்ரூவை உங்களுக்குத் தெரிந்திருக்கும். அறிவிலும் விவேகத்திலும் அவர் யாருக்கும் சளைத்தவர் அல்லர். இந்த மசோதாவுக்கு அவர் ஆதரவு அளிப்பதாக அறிவித்துள்ளார். இந்த மாதிரியான மசோதாவை தயாரிப்பதற்கான நேரம் இதுவல்ல என்று அவர் ஒத்துக் கொண்டிருக்கிறார். மேலும் தொடர்கிறேன். சர் சிமன்லால் செதல்வாட் மற்ற எந்த மனிதருக்கும் குறைவில்லாத அந்தஸ்துடன்

வாழ்ந்துவந்தார். இந்தச் சமூகத்தை சீர்திருத்தும் பணியில் எப்பொழுதுமே தலைமைப் பாத்திரம் வகித்து வந்தார். கொள்கை அடிப்படையில் சட்டத் தொகுப்பை ஒருபொழுதும் அவர் ஏற்றுக் கொள்ளவில்லை. சட்டத் தொகுப்பு மற்றும் முறைப்படுத்தல் ஏதுமின்றி பெண்களுக்கும், விதவைகளுக்கும் சொத்தில் பங்களிப்பதை அவர் ஆதரித்தார். நீங்கள் பேசுவதைத் திரும்பச் சொல்பவர்களை எல்லாம் அறிவில் சிறந்தவர்கள் என்றும், உங்களுடைய கருத்துகளை ஏற்றுக் கொள்ளாதவர்களை வெறும் முட்டாள்கள் என்றும் பழித்துரைப்பது முற்றிலும் சரியல்ல. மசோதாவை இந்த முறையில் பரிசீலிக்கக் கூடாது என்று இந்த அவையின் மூலமும் உங்கள் மூலமும் நமது சகோதர சகோதரிகளைக் கேட்டுக் கொள்கிறேன். மேலும், நம் மாண்புமிகுத் தலைவர், பிரதம மந்திரி பண்டிட் ஜவஹர்லால் நேரு அவையில் இல்லாவிடினும், இந்து சமுதாயத்துக்கு ஒரு சீரான விதிகளை உருவாக்க வேண்டுமென்று அவர் முயற்சியிலும், சிதறிக் கிடக்கும் பல சட்டங்களைத் தொகுத்து முறைமைப்படுத்த வேண்டும் என்ற அவரது விருப்பத்திலும் நானும் இணைந்து செயல்பட்டிருப்பேன், உண்மையில் நான் அவருடன்தான் இருக்கிறேன். பொதுமக்கள் தங்கள் கருத்துகளை எடுத்துக்கூற வாய்ப்பளிக்க அனுமதிக்கப்பட்டார்களா என்று அவரிடம் கேட்க விரும்புகிறேன். அதிக எண்ணிக்கையில் இல்லாத பார்சி சமூகத்தை எடுத்துக் கொள்ளுங்கள். தங்களுடைய எல்லா ஆக்கக் கூறுகளையும் தங்களுடன் ஒன்றாக வைத்துக் கொண்டு தனித்தனியாக ஒவ்வொன்றின் அபிப்பிராயங்களையும் தெரிந்துகொண்டபிறகே மசோதா கொண்டு வரப்பட்டது. அதன் பிறகே அவர்கள் வெற்றி அடைந்தனர். இல்லையெனில் தங்கள் குறிக்கோளை அடைந்திருக்க முடியாது. சிவில் திருமணச் சட்டத்தை திருத்தம் செய்ய இப்பொழுதுள்ள குறிக்கோளைப் போன்ற குறிக்கோள்களுடன் ஒரு மசோதா 1921-ல் கொண்டுவரப்பட்டது. ஏன் ஒரு இந்து சட்டத் தொகுப்பைத் தயாரிக்கிறீர்கள்? ஏன் ஒரு இந்தியச் சட்டத் தொகுப்பை உருவாக்கக்கூடாது? எல்லா மக்களும் இந்தியா என்ற ஒரே நாட்டில்தான் வாழ்கிறார்கள். அவர்களுக்கு ஒரே மாதிரியான நடைமுறைகளும் வழக்கங்களும் இருக்க வேண்டும். நாம் ஒரே மொழியைப்பற்றி முடிவு செய்திருக்கும்போது, எல்லா மக்களுக்கும் ஒரே பொதுவான சட்டத் தொகுப்பு இருக்க வேண்டும். இது ஒற்றுமைக்கும் ஒன்றுபட்ட இந்தியாவிற்கும் இட்டுச் செல்லும். அந்தக் காலத்தைப் பற்றி உங்களுக்கு எடுத்துக்கூற விரும்புகிறேன். கிருஸ்துவர்களும் முஸ்லீம்களும் பெரும் எதிர்ப்பை தெரிவித்தனர். டாக்டர் கௌர் இதைப் பற்றிக் கூறுகிறார். ''இந்தியா முழுவதிலுமுள்ள முஸ்லீம்கள் மற்றும் பார்சி சமூகத்தினரிடமிருந்து அதிர

வைக்கும் எதிர்ப்பு கிளம்பியது. அந்த மசோதாவைக் கைவிடுவதை விட வேறுவழி எனக்கு இருக்கவில்லை. புதிய மசோதா 1923-ல் கொண்டுவரப்பட்டது.''

அவர் அந்த வழியைத் தேர்ந்தெடுத்தார். எந்தவித மதிப்பும் மரியாதையும் இந்து சமுதாயத்திற்கு அளிக்கப்படவில்லை. இவ்வளவு பெரும் எண்ணிக்கை கொண்டுள்ள ஒரு சமுதாயத்துக்கு எந்தவித முக்கியத்துவமும் கொடுக்கப்படவில்லை. திரு. பட்டாபி சாகிப், திரு. அல்லாடி திரு. லட்சுமி காந்த மைத்ரா ஆகியவர்களை விட்டு விடுங்கள். மாளவியாஜியின் ஆலோசனையே கவனிக்கப்பட வில்லை. அவர்கள் கூறுவது எதுவும் முக்கியத்துவம் வாய்ந்தது அல்ல. மற்றவர்களை விட்டுவிடுங்கள் அஜாதசத்ரு என்று பாராட் டப்படும் ராஜேந்திரப் பிரசாத்திற்கு ஏற்பட்ட நிலைமையைப் பாருங்கள். அறிவாற்றலுக்கும், விவேகத்திற்கும் உயிருள்ள அரும் பொருள் காட்சியகமாக விளங்கும் அவர் இந்தியாவின் அணிகல னாக விளங்குகிறார். காந்திஜியின் கருத்துகளை நடைமுறைப்படுத் தியவர். அந்தச் சீரிய கருத்துகளை இந்நாட்டிலுள்ள மக்கட்கு மட்டு மின்றி உலக மக்களுக்கே அவரால் விளக்கி எடுத்துரைக்க முடியும். அவர் கூறுகிறார்: ''இது தக்க தருணமல்ல. இதில் விவாதத்திற்குரிய பல விஷயங்கள் உள்ளன. அதை வடிகட்டி எடுத்து விடுங்கள். அதைத் தொடாதீர்கள். ஆனால், என்ன செய்வது? இல்லை, இது விரைவில் செயல்படுத்தப் படவேண்டும் என்று தலைவர்கள் கூறு கிறார்கள். அவ்வாறாயின், அதைத் துரிதப்படுத்தட்டும். குறைந்த பட்சம் எல்லா மக்களின் கருத்துகளையும் சம்மதத்தையுமாவது பெறட்டும். ஒரு சாதகமான நிலையை டாக்டர் அம்பேத்கர் பயன் படுத்திக் கொண்டார். அந்த சாதகமான நிலை என்ன என்பதை இப்பொழுது கூறுகிறேன். 1948-ல் இந்த மசோதா அறிமுகப்படுத்தப் பட்டபோது, நாங்களெல்லாம் அமர்ந்து தற்போதைக்கு யாரும் அதைக் குறித்து உரை நிகழ்த்தக் கூடாது என்று முடிவு செய்தோம். டாக்டர் அம்பேத்கரோ அல்லது வேறு யாருமோ, குறிப்பிட்டு எதையும் பேசவில்லை. சாதாரண முறையில் அந்த மசோதாவை அறிமுகப்படுத்தினால் நம் சகோதரிகளுக்கு மனநிறைவைக் கொடுப் பதுடன், ஒருங்கிணைப்பு மற்றும் தொகுத்து முறைப்படுத்த விரும்பும் சீர்திருத்தவாதிகளுக்கும், பகுத்தறிவாளர்களுக்கும் திருப்தி அளிக்கும் என்று அப்பொழுது கருதப்பட்டது. எனவே அந்த மனநிறைவு அவர் களுக்கு கிட்டும் என்று முடிவு செய்யப்பட்டது. இதைச் சாதக மாகப் பயன்படுத்திக் கொண்டு இந்த மசோதா பொதுவாக சரியாக உள்ளது என்றும் மக்கள் ஏற்றுக் கொண்டதாகவும் டாக்டர் அம்பேத்கர்

கருதினார். இல்லை, ஐயா இந்த மசோதாவின் சில கூறுகளையும், விதிகளையும் நாம் படிக்கவில்லை. ஆனால் நம் தலைவர்கள் கூறினார்கள்; ''நாம் சிறிது முன்னேறிச் செல்வோம்.'' நாம் கூறினோம்; ''மிகவும் நன்று அதை முன்னுக்கு எடுத்துச் செல்வோம். அதைச் சந்தைக்கு எடுத்துச் செல்வோம்.'' இப்படித்தான் அது சந்தைக்கு வந்துள்ளது. அது ஊர்வலத்தில், அணிவகுத்துக் கொண்டு வரப் பட்டது. அந்தக் காட்சியைத்தான் கண்டு கொண்டிருக்கிறோம். மசோதா பொறுக்குக் குழுவுக்கு அனுப்பப்படுவதற்கு முன்பு நம் முடைய இந்த விவாதங்கள் எல்லாம் நடைபெற்றிருக்குமானால் அது டாக்டர் அம்பேத்கருக்கும், பொறுக்குக் குழுவில் உள்ள நமது நண்பர்களுக்கும் பெரும் பயன் அளித்திருக்கும். பல்வேறு பகுதி களுக்கு, என்ன வடிவம் கொடுக்கப்பட வேண்டும் என்பதை அவர்கள் தெரிந்துகொண்டிருப்பார்கள். இப்பொழுது நாம் ஒரு கடினமான, சிக்கலான நிலைமைக்கு வந்துள்ளோம். நம்முடைய குழப்பம் என்ன வென்றால் மீண்டும் அது பொறுக்குக் குழுவுக்கு அனுப்பப்பட வேண்டுமென்று நாம் கூறினால் எப்படிப்பட்ட சிக்கலான விதிமுறை களையும் நடைமுறைகளையும் சந்திக்க வேண்டுமோ என்பதுதான். அதே நேரத்தில், தற்போதைக்கு அதை நிறுத்தி வைத்திருப்போம் என்றால், நம் தலைக்குமேல் வேறொரு வாள் தொங்கிக் கொண் டிருக்கிறது. இப்பொழுது நாம் என்ன செய்யப் போகிறோம்? நாம் ஒரு பெரும் சிக்கலில் மாட்டிக் கொண்டு விட்டோம். நமது தலைவர் களும், விதியும்தான் நம்மை இதிலிருந்து காப்பாற்ற வேண்டும்.

இந்து சமூகத்தின் கருத்துகளை இன்னும் நாம் தெரிந்து கொள் ளாததால் இந்தக் குறிப்பிட்ட காலகட்டத்தில் இந்த மசோதாவை அறிமுகம் செய்யத் தேவையில்லை என்று நான் எடுத்துரைத்தேன். நாம் கலந்தாலோசித்த இந்துக்கள் நகரத்தைச் சேர்ந்தவர்கள். எத்தனை பேர்களை நாம் கலந்தாலோசித்தோம்? எழுத்து மூலம் கருத்துகளை தெரிவித்தவர்கள் மற்றும் சாட்சியம் அளித்தவர்களின் எண்ணிக்கை 121 தனிநபர்களும், 102 அமைப்புகளுமாகும். இப் பொழுது, இதுதான் இந்து சமுதாயத்தின் அபிப்பிராயம் என்று கூறலாமா? திரு. மிட்டரின் கருத்தை நீங்கள் தெரிந்து கொள்ள விரும்பினால் அதுவும் ஒவ்வொரு பிரிவைக் குறித்தும் தனித்தனி யாக, அதைக் குறித்து உங்களிடம் பேசத் தயாராக இருக்கிறேன். மதராஸைத் தவிர எங்கும் மசோதாவுக்கு எதிர்ப்புதான். வங்காளத் திலுள்ள **தாயபாக** முறையைச் சேர்ந்தவர்கள் கண்டனத்தை தெரிவித் துள்ளனர். பம்பாயிலிருந்தும் எதிர்ப்புக் குரல்தான். இந்த மாதிரியான

கருத்து வேறுபாடு மற்றும் இதர காரணங்களினால் அது பெரும் எதிர்ப்பைச் சந்திக்க வேண்டியிருக்கிறது. இந்த எதிர்ப்புக்குப் பிறகும், சிறுபான்மையினர் கூறுவதே உண்மை, அதை நீங்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும், ''முடிவை மாற்ற முடியாது'' என்று கூறினால் அது மிகவும் கடினமானதுதான். இந்து சமுதாயத்தை ஒன்றுபடுத்த வேண்டும். நிச்சயமாக ஓர் அமைப்பு முறையின் அடிப்படையில்தான் இதைச் செய்ய முடியும். நமது சகோதரிக்கு பங்களிக்கக் கூடாது என்று நான் எப்படிச் சொல்ல முடியும்? அவர்கள் தங்கள் பங்கைப் பெற்றுக் கொண்டபிறகு, தங்கள் பெற்றோர்கள் வீட்டின் மீது ஏதாவது அன்பு எஞ்சியிருக்குமா என்பதை நமது சகோதரிகளிடமே கேட்டுப் பாருங்கள். அவர்களிடம் எவ்வளவு பற்று இருக்கும்? இன்றைய சீர்திருத்தவாதியான பெண்களில் ஒருவரிடம், அவருடைய தகப்பனார் எங்கே வசிக்கிறார், சகோதரர் எங்கே வசிக்கிறார் என்று கேட்டுப் பாருங்கள். அவர்கள் தங்கள் குடிசையிலேயே, இல்லத்திலேயே மாளிகையிலேயே முடங்கிக் கிடக்கிறார்கள். உறவினர்களைக் கண்டு கொள்வதில்லை. சீர்திருத்தவாதிகளின் இன்றைய நிலை இதுதான். எனவே சொத்தில் பங்கு என்றால் நம் நிலைமை என்னவாகும்? எனினும், இந்த ஆட்சேபனைகள் எல்லாம் இருப்பினும் நாம் சிறுபான்மையினரின் பிரச்சினையைச் சந்தித்துக் கொண்டிருக் கிறோம் என்பதைக் கூற விரும்புகிறேன். ஒவ்வொருவரின் கருத்தை யும் தெரிந்து கொள்ளா விட்டாலும், நாம் அந்தவித நெருக்கு தலுக்கு உள்ளாகி யிருக்கிறோம். நாம் அதை ஏற்றுக் கொள்ள வலுக்கட்டாயமாக வற்புறுத்தப்படுகிறோம். ஆயினும், பிற்காலத்தில் எவ்வளவு சிக்கல்கள் தோன்றப் போகின்றன என்பதை அவர்கள் காணத் தவறுகின்றனர்.

எனவே, நான் கூறுவதெல்லாம் ஓர் இடைப்பட்ட பாதையை கண்டுபிடியுங்கள். நமக்கும், சமூகத்திற்கும் திருப்தி அளிப்பதுடன் இந்த குழப்ப நிலை அடங்குவதற்கும் இடைப்பட்ட பாதையே உதவமுடியும். இன்றைக்கு படாஸ்கர்ஜி கூறியது போன்று ஏற் கெனவே பல இடர்பாடுகளுக்கிடையே உழன்று கொண்டிருக் கிறோம். இந்தக் கட்டத்தில் மேலும் ஒரு சிக்கலைக் கிளப்புவானேன்? மேலும் முட்புதர்களைப் பாதையில் போடவேண்டுமா? சில காலம் கழித்து அந்தப்பாதையைச் செப்பனிட அதிக உழைப்புத் தேவைப் படாதா? ஏன் இப்படி நடந்து கொள்கிறீர்கள்? வேறு ஏதாவது பணியில் ஈடுபடுங்கள். ஒன்றிரண்டு ஆண்டுகளுக்கு இதை ஒத்தி போடுங்கள். இந்த மசோதாவை வரவேற்கும் நமது மெய்மையான பெண் தெய்வங்களான சகோதரிகளுக்கு ஒரு வேண்டுகோள். நாட்டின்

நலன்கருதி, அவர்கள் நம் ஜவஹர்லால் நேருவிடம் சென்று இந்த நடவடிக்கையை ஒன்றிரண்டு ஆண்டுகள் நிறுத்திவைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ள வேண்டும். இது பல வழிகளில் உதவிபுரியும். இந்த மசோதா இப்பொழுது அல்லது 1950 ஆண்டுக்குள்ளாவது நிறைவேற்றப்படவில்லையென்றால் ஒருபொழுதும் நிறைவேற்றப் படப் போவதில்லை என்பதே அவர்களுடைய சிந்தனைப் போக்காக உள்ளது. ஏனெனில் இனி எதிர்காலத்தில் வருபவர்கள் அதை நிறைவேற்ற அனுமதிக்கமாட்டார்கள். நீங்கள் அதை இன்று நிறைவேற்றினாலும்கூட பிற்காலத்தில் என்ன நடக்கும் என்பதை நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டும். ''சட்டமாக்கப்பட்டுள்ள இந்துச் சட்டத் தொகுப்பைத் திருத்துவதே நமது முதற் பணி'' என்ற கருத் துள்ளவர்கள் இந்த அவையில் அமர்ந்திருப்பார்கள். எனவே தயவு செய்து, உங்களால் முடியுமானால் இதைத் தடுத்து நிறுத்துங்கள். அது உங்களால் சாத்தியமில்லையென்றால், இடதுபக்கமோ வலது பக்கமோ சாயாதீர்கள். இடைப்பட்ட பாதையை, ஒரு தங்கமயமான இடைப்பட்ட பாதையைத் தேர்ந்தெடுங்கள். இதுவே இந்து சமுதா யத்திற்கு மனநிறைவு தரும்.

இரண்டாவதாக, திரு. சர்வாத்தே எழுப்பிய ஒழுங்குப் பிரச் சினைக்கு டாக்டர் அம்பேத்கர் அளித்த பதிலைக் குறித்துப் பேச விரும்புகிறேன். துணை சபாநாயகர் அவர்களே, நீங்கள்கூட அதற்கு ஆதரவு தெரிவித்தீர்கள். அதாவது இந்த மசோதா மாகாணங்களில் மட்டுமே அமலாக்கப்படும். அது சமஸ்தானங்களிலும் அமலாக்கப் பட வேண்டுமென்றால் அவற்றுக்கும் அனுப்பப்படும். அது சுற்றுக்கு விடப்பட்ட பிறகு அதை என்ன செய்வதென்று முடிவு எடுக்கப் படும். டாக்டர் அம்பேத்கர் பின்வருமாறு கூறினார்:

> ''இந்திய சமஸ்தானங்களுக்கு இந்த மசோதாவை விரிவுபடுத்த வேண்டிய தருணம் வரும்போது, தீர்மானம் ஒன்று அதன் முன் வைக்கப்படும்போது, நிச்சயமாக இந்த சட்டமன்றம், அல்லது அன்றைய அரசு அவர்களுடைய விருப்பங்களையும் நோக்கங்களையும் கணக்கிலெடுத்துக் கொள்ளும்போது இந்திய யூனியனில் இணைக்கப்பட்டுள்ள சமஸ்தானங்களை கலந்தாலோசிக்கும்.''

இதுதான் நிலைமை என்றால், இன்றைக்கு நிறைவேற்றப் பட்டவை ஆறுமாதம் கழித்து சமஸ்தானங்களுக்கு அனுப்பப்படும். சமஸ்தானங்கள் இதை நடைமுறைக்குக் கொண்டு வரும்போது நீங்கள் மேலும் முன்னேறிச் சென்றிருப்பீர்கள். ஏற்கெனவே பின்தங்கி யுள்ள சமஸ்தான மக்கள் மேலும் பின்தங்கிய நிலையில் இருப்பார்கள்.

எனவே இந்த விஷயத்தைக் கவனத்தில் கொண்டு, என்ன செய்ய வேண்டும் என்பதை முடிவு செய்யுங்கள்.

பொதுமக்கள் கருத்தைத் தெரிந்து கொள்வதில் நாம் கையாண்ட முறை குறைபாடுள்ளது என்று கூற என்னை அனுமதிக்குமாறுக் கேட்டுக் கொள்கிறேன். அரசியல் சட்டத்தைத் தயாரிப்பதற்கு இரண்டரை ஆண்டு முதல் மூன்றாண்டு வரை எடுத்துக் கொண்டோம். மிகவும் எச்சரிக்கையுடன் அதை நாம் தயாரித்தாலும் அது சரியாக இல்லை என்று பலரும் கூறுகின்றனர். மாகாண அரசுகளுக்கு அரசியல் சட்டத்தின் நகல்கள் அனுப்பப்பட்டு, அவை சட்டமன்றங்களிலும் அமைச்சரவையிலும் விவாதிக்கப்பட்டு, அவர்களுடைய கருத்துகளும் நமக்கு அனுப்பப்பட்டன. எந்த மாகாண அரசுக்கும் ராவ் குழுவின் வரைவு அறிக்கை அனுப்பப்படவில்லை. இப்படித்தான் அது இங்கு கொண்டுவரப்பட்டுள்ளது. கருத்துகள் முழுமையாகவும், சரியான முறையிலும் கணிக்கப்படவில்லை என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். நீங்கள் கூறுவதன் அடிப்படைச் சரியாக இல்லை. அதைப்பற்றி எனக்கு ஐயப்பாடு உள்ளது. நாட்டில் பாதிக்கும் மேல் அதை ஆதரிக்கின்றனர் என்று ரேணுகா பகன் (சகோதரி) குறிப்பிட்டார். ஆனால் ராவ் குழுவோ, சமுதாயம் முழுவதும் பிளவுபட்டுக் கிடக்கிறது என்று கூறுகிறது. நான் யாரை நம்புவது? ஆய்வுக்குப் பிறகு 1947-ல் அளிக்கப்பட்ட அறிக்கையையா அல்லது 1944-ல் ரேணுகா பகன் வெளியிட்ட அறிக்கையையா?

திரு. துணை சபாநாயகர்: இன்னும் பல உறுப்பினர்கள் உரையாற்ற வேண்டியிருக்கிறது. தயவு செய்து விரைவில் முடியுங்கள்.

திரு. கோகுல்பாய் தவுலத்ராம் பட் : இன்னும் ஐந்து அல்லது ஏழு நிமிடங்களில் முடித்து விடுகிறேன். நீங்கள் அனுமதித்தால் இன்னும் சில விஷயங்களை எடுத்துக் கூறுவேன்.

திரு. துணை சபாநாயகர்: உங்கள் விருப்பப்படி செய்யுங்கள். ஏற்கெனவே முப்பது நிமிடங்கள் எடுத்துக் கொண்டு விட்டீர்கள்.

திரு. கோகுல்பாய் தவுலத்ராம் பட்: இன்னும் கொஞ்சம் பேசிவிட்டு விரைவில் முடித்துக் கொள்கிறேன். நீங்கள் என்ன அடி கொடுத்தாலும் இந்து சமுதாயம் மட்டும் அமைதியாகத் தாங்கிக் கொள்ளும் என்பதை நான் கண்டிப்பாகக் கூறவேண்டும். முஸ்லீம் சமுதாயத்தைப் பாருங்கள். அவர்களுக்கு ஒரு சட்டத் தொகுப்பு

தயாரிப்பதற்கு யாருக்காவது தைரியம் இருக்கிறதா? ஷியா மற்றும் சன்னி சிந்தனைப் போக்குகளை ஒன்றிணைக்க முடியுமா? கிருஸ்தவர்களின் சட்டத்தில் கைவைக்கத் தைரியம் உள்ளதா என்று கூறுங்கள்? அல்லது பார்சிகளை ஏதாவது செய்யமுடியுமா? பாவம், இந்து சமுதாயம் மட்டும் எல்லாவற்றையும் தாங்கிக் கொள்ள வேண்டும். ஏனெனில் அதை நீங்கள் உயிரற்ற சமூகம் என்று நினைக்கிறீர்களா? தான் சூத்திரர் பிரிவைச் சேர்ந்தவர் என்று டாக்டர் அம்பேத்கர் கூறுகிறார். நான் அவரை உயர்வாக மதிப்பவன். யாரோ ஒருவர் அவருக்கு முனிவர் என்ற பட்டத்தைக் கொடுத்தார். மற்றொருவர் ரிஷியின் நிலைக்கு உயர்த்தியுள்ளார். ஆனால் அவர் தம்மை சூத்திரர் என்றுதான் அழைத்துக் கொள்கிறார். அப்படியானால் அவர் விஸ்வாமித்திரராக இருக்கட்டும். நீங்கள் யாராக இருந்தாலும், நிச்சயமாக நீங்கள் மதிநுட்பம் மிக்கவர். ஏன் இந்த தாழ்வு மனப்பான்மையை வளர்க்க வேண்டும்? **ஸ்மிருதிகள்** தொடர்ந்து எழுதப்பட்டு வந்தன என்று அவர் கூறுகிறார். பிராமணர்கள் எழுதிக் கொண்டே இருந்தார்கள். வேறு என்னதான் அவர்கள் செய்ய முடியும்? உங்கள் துறை ஆற்றும் பணி என்ன? அதைத்தான் **ஸ்மிருதி** ஆசிரியர்களும் செய்தார்கள். சட்டங்களைத் திருத்தவும் அவ்வப்போது விதிகளை உருவாக்கிய துறைதான் அது. நீங்கள் சட்டங்களை இயற்றி திருத்தங்கள் கொண்டு வருவதைப்போன்றே அவர்களும் செய்தனர். எனினும் இந்தப் பிரச்சினைக்குள் நான் செல்ல விரும்பவில்லை. சம்பந்தமற்ற விஷயங்களுக்குள்ளும் செல்ல விரும்பவில்லை. இந்த விஷயங்கள் அடிப்படை உரிமையில் சேர்க்கப்பட வேண்டியவை என்று நமது சகோதரிகள் கூறுகிறார்கள். இதை எதிர்ப்பவர்கள் அடிப்படை உரிமைகளைப் புரிந்து கொள்ளாதவர்கள் என்கிறார்கள். ''உங்களுக்கு அடிப்படை உரிமைகளைப் புரிந்து கொள்ள முடியவில்லை'', என்று அவர்கள் கூறுகிறார்கள். அது அடிப்படை உரிமையில் அடங்கியதா அல்லது ஒரு மாகாணத்திற்கான பொதுவான சட்டமா? அது நாடு முழுவதற்குமான சட்டமா அல்லது ஒரு குறிப்பிட்ட வகுப்பினருக்கான (தனிநபர்) சட்டமா? இந்தியத் தொகுப்புச் சட்டம் ஒன்றைக் கொண்டு வந்தால் யாரும் அதை எதிர்க்க மாட்டார்கள் என்று நிச்சயமாகக் கூறுவேன். ஆனால் நீங்கள் இன்று இந்துச் சட்டத் தொகுப்பைக் கொண்டுவர, இந்துச் சட்டத்தில் மாற்றங்கள் கொண்டுவர விரும்புகிறீர்கள். குறிப்பிட்ட வகுப்பினருக்கான சட்டம் மாநில மக்கள் யாவருக்குமான சட்டமல்ல. எனவே அது பொருத்தமற்றது. கௌர் ஒரு முறை குறிப்பிட்டார், ஓர் அவதாரந்தான் ஒரு நாள் இந்த மாதிரியான தொகுப்புச் சட்டத்தைக் கொண்டுவர முடியும். திரு. கௌர் நாக்பூரில் இருந்து கொண்டு

ஓர் அவதாரம் தோன்றி, இறுதியில் இந்து தொகுப்பு மசோதாவைக் கொண்டு வந்திருப்பதை தெரிந்து கொண்டிருப்பார்.

திரு. மகாவீர் தியாகி : வெட்கங்கெட்ட மனிதர்கள்.

திரு. கோகுல்பாய் தவுலத்ராம் பட் : மேலும் சில வார்த்தைகள் கூறிவிட்டு என்னுடைய உரையை சிறிது நேரத்தில் முடித்துக் கொள்கிறேன். சகோதரர்களையும் சகோதரிகளையும் ஒரே விதத்தில் பாவிக்கவேண்டுமென்று கூறப்பட்டது. திரு. கிருபளானி அவையை விட்டுப் போய்விட்டார். மற்றவர்கள் உரையை அவர் ஏன் கேட்க வேண்டும்? சகோதரிகளுக்கு ஏன் இரட்டை உரிமை கொடுக்க வேண்டுமென்று கேட்கிறேன்? தன் தகப்பனார் வீட்டிலிருந்து சீதனத்தைப் பெற்றுக் கொள்கிறாள். தகப்பனாரிடமிருந்து வரதட்சணையைப் பெற்றுக் கொள்கிறாள், தனது பங்கை எடுத்துக் கொள்கிறாள். இதற்கும் மேல் தனது கணவன் சொத்திலும் பங்கு உள்ளது. எப்படி நம் சகோதரிகள் இவ்வளவு பேராசை பிடித்தவர்கள் ஆனார்கள்? பெண்களே செல்வத்தின் சின்னம். அப்படியிருக்கும்போது உலகச் செல்வங்களின்மீது ஏன் மேலும் அவர்களுக்கு ஆசை? செல்வமும், வளமான வாழ்வும் தானாகவே செல்வந்தர்களுக்கே சென்றடையும் என்பதில் எந்தவித ஐயப்பாடும் இல்லையென்று திருமதி கமலா சௌத்திரி எடுத்துரைத்தாள். பெண்களே ஐஸ்வர்யத்தின் அவதாரம் என்கையில், மேலும் அவர்கள் செல்வத்தைச் சேர்க்க ஏன் விரும்புகிறார்கள்? கொஞ்சம் மாயத் தோற்றத்தையும் கவர்ச்சியையும் வைத்துக் கொண்டு உலகத்தையே கீழ்ப்படியச் செய்வதுடன் அதை வெற்றி கொள்ளவும் அவர்களால் முடியும். அந்த மயக்கும் தோற்றமும் கவர்ச்சியும் அதிகமாகிவிட்டால் என்னதான் நடக்கும் என்று யாராலும் கூறமுடியாது. செல்வச் செழிப்பு (மாயை) செல்வந்தர்களுக்கே செல்லுமென்றால் இயற்கை மட்டும் உலகில் இருக்கட்டும். அதிலிருந்து ஆடவனை நீக்கிவிடு. இவ்வாறு ஆடவனை விலக்குவதால், மாயை தொடர்ந்து ஜீவித்திருக்க முடியுமானால் அவ்வாறே செய்யுங்கள்.

திருவிதாங்கூர் மற்றும் கொச்சியைச் சேர்ந்த நம் நண்பர்கள் மிகவும் முன்னேற்றம் அடைந்து விட்டனர், ஆனால் ஒரு மரம் தோப்பாகாது என்பதை அவர்கள் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். கிராமவாசிகளும் தங்களோடொப்பம் முன்னுக்கு வர வேண்டுமென்றால், அவர்களையும் தங்கள் வேகத்திற்குக் கொண்டு வருவதுடன் இந்த மசோதாவுக்கு அதிக விளம்பரம் கொடுக்கப்பட

வேண்டும். இதன் பல்வேறு விளைவுகளையும் அவர்களுக்கு விளக்கு வதால் இதன் நோக்கம் நிச்சயம் நிறைவேறும். இதைப் பொறுத்து எந்த சந்தேகமும் வேண்டாம். இந்த மசோதாவை நிறைவேற்று வதன் மூலம் தற்பொழுதுள்ள நிலையிலிருந்து பின்னோக்கி செல்ல வேண்டியிருக்கும் என்று சில இடங்களில் கூறப்படுகிறது. இந்தக் குற்றச் சாட்டு ஓரளவுக்கு சரியாகத்தான் உள்ளது. தனது இயற்கை யான போக்கில் தண்ணீர் ஒழுகட்டும். சிறுபான்மையினர் கருத் துகளை திணிப்பதன் மூலம் தற்போதைய நிலைமையை பின்னுக்கு தள்ளலாம். இன்றைக்கு இதைச் செய்ய உங்களுக்கு சாத்தியமாக லாம். ஆனால் ஒரு நாள் உங்களைப் பேச்சு மூச்சற்று திகைக்க வைக்கும் தீவிரமான மாற்றங்கள் அதில் கொண்டுவரப்படும். தவிர்க்க முடியாதது நடக்கத்தான் செய்யும். நான் விவரங்களுக்குள் செல்ல விரும்பவில்லை.

நம் ஸ்மிருதி ஆசிரியரான (சட்டம் அளிப்பவர்) யாக்ன வல்கியர் மனு **ஸ்மிருதியை** விட ஒரு படி முன்னே சென்றுவிட்டார். இந்த மனு ஸ்மிருதியின் ஆசிரியர், எந்த மனு என்று விவாதத்தில் இறங்க நான் விரும்பவில்லை. ஏனெனில் மனு என்ற பெயரில் பலர் இருந்துள்ளனர். ஆனால் யாக்னவல்கிய ஸ்மிருதி உரையாசிரி யரும் மிதாக்ஷரா விளக்க உரை எழுதியவருமான திரு. விக்யா னேஸ்வர், மற்றும் தாயபாக் மற்றும் மயூக் விளக்க உரைகளை வழங்கிய உரையாசிரியர்கள் பல்வேறு மாறுபட்டக் கருத்துகளை எடுத்துரைத்தனர். எல்லா உதாரணங்களையும் எடுத்துரைக்க விரும்பவில்லை. ஒரு பெண்ணுக்கு சீதனம் கொடுக்காவிட்டால், மகனுக்கு சமமாக சொத்தில் பங்கு அளிக்க வேண்டுமென்று அவர்கள் விதித்துள்ளனர். இது வெளிப்படையாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. நம் ஸ்மிருதிகளில் சீதனத்தைப் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளதை என்னால் முடிந்த அளவுக்கு உரத்த குரலில் எடுத்துரைக்க விரும்பு கிறேன். ஆங்கிலேயர்கள் தங்கள் சட்டத்தை இன்னும் தொகுத்து முறைப்படுத்தவில்லை. ஆங்கிலப் பிரார்த்தனைப் புத்தகத்தின்படி திருமணத்திற்கான தடை செய்யப்பட்ட உறவுகளின் படிநிலை கி.பி. 1565-ல் நிர்ணயிக்கப்பட்டது. அது கி.பி. 1915 வரை அமலில் இருந்து வந்தது. கி.பி. 1915ல் தடைசெய்யப்பட்ட உறவுகளின் படிநிலை பட்டியலில் ஒரே ஒரு மாற்றம் செய்யப்பட்டது. அதாவது இதுவரை மனைவியின் சகோதரியுடன் திருமணம் நடைபெற முடியாது. இதை ஒப்பிட்டுப் பார்க்கையில் நாம் எவ்வளவோ முன்னேறி விட்டோம் என்று கூற விரும்புகிறேன். அங்கே தடைசெய்யப்பட்ட உறவுகளின் படிநிலையில் ஒரே ஒரு மாற்றம் செய்ய இவ்வளவு

ஆண்டுகள் சென்றுள்ளன. ஆனால் இங்கு, சிவில் திருமணச் சட்டப் படி பெற்றோரின் ஒன்றுவிட்ட உடன் பிறந்தாரின் பிள்ளையுடன் கூட மண உறவுகளை ஏற்படுத்துக் கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ளது. பலர் சிவில் திருமணத்திலேயே தஞ்சம் புகுகிறார்கள். ஆனால் ஏன் அதே கட்டுப்பாட்டை மற்றவர்கள் மீது திணிக்க விரும்புகிறீர்கள்? சிவில் திருமணச்சட்டம் பெற்றோரின் ஒன்று விட்ட உடன் பிறந்தாரின் பிள்ளைகளுடனான திருமணத்திற்கு அனுமதி அளிக்கிறது. அந்த முறையை ஆதரிப்பவர்கள் அதைப் பின்பற்றட்டும். இந்த மசோதாவைத் தயாரிக்கையில் மனித இன மேம்பாட்டு அறிவியல் கொள்கைகளையும் மனதில் கொள்ள வேண்டும். நமது ஸ்மிருதி ஆசிரியர்கள் (உரையாசிரியர்கள்) தொடர்பற்று எதையும் குறிப்பிட்டுள்ளார்கள் என்று கூறிவிட முடியாது. நம் ஸ்மிருதி ஆசிரியர்கள் மனித இன மேம்பாட்டு அறிவியலில் அதிக நிபுணத்துவம் பெற்றவர்கள். அவர்களைச் சாதாரண மனிதர்கள் என்று கருதிவிட முடியாது. அவர்கள் நன்கு கற்றுத் தேர்ந்தவர்கள் என்பதுடன் நல்ல விஷயஞானம் பெற்றவர்களாகவும் இருந்தனர். அவர்கள் நிர்ணயித்த படிநிலை முற்றிலும் சரியாக இருந்தது. 6, 8, 10, அல்லது 12 மாதங்களுக்குப் பிறகு அதில் மாற்றம் செய்ய வேண்டிய அவசியம் இல்லாமல் இருந்தது. நம் **ஸ்மிருதி** ஆசிரியர்கள் மதி நுட்பம் நிறைந்தவர்களாகவும் விவேகமுடையவர்களாகவும் இருந்தனர். அவர்கள் எழுதியுள்ளதில் மாற்றத்திற்கான ஆலோசனைகளைக் கூற நூற்றுக் கணக்கான ஆண்டுகள் ஆழ்ந்து தியானம் செய்யவேண்டும். அப்போது அவற்றில் பொருத்தமான திருத்தங்களை நீங்கள் செய்யமுடியும் என்பதில் சந்தேகமில்லை. ஏனெனில் இந்த ஸ்மிருதிகளில் அவ்வப்போது மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. இந்த மாற்றங்களைக் கொண்டு வருவதால் சமுதாயத்துக்கு ஆதாயமா அல்லது இழப்பா என்பதை நாம் முழுமையாகப் பரிசீலித்துப் பார்க்க வேண்டும்.

திரு. எச்.வி. காமத் (ம.மா. மற்றும் பேரார் : பொது) : இந்த அவையின் மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் அறிவாளிகளில்லையா?

திரு. துணை சபாநாயகர் : தயவு செய்து தொடருங்கள்.

திரு. கோகுல்பாய் தவுலத்ராம் பட் : திரு காமத்தைப் போன்று நான் படித்தவனோ, அறிவாளியோ அல்ல. இந்த அவையிலுள்ள மதிப்பிற்குரிய உறுப்பினர்களுக்கு அறிவாற்றல் இல்லை என்று நான்

குறிப்பிடவில்லை. ஒவ்வொருவருக்கும் அவரவர்களுடைய அறிவுத் திறன் இருக்கிறது. எல்லோராலும் சிந்தனை செய்யமுடியும். பெரிய மனிதர்களிடம் சிறந்த கருத்துகள் இருக்கும் என்பதன் அடிப்படையில், டாக்டர் அம்பேத்கர் கூறுவதையெல்லாம் நான் கண்மூடித் தனமாக ஏற்றுக் கொள்ளமாட்டேன் என்பதைக் கூறிக் கொள்கிறேன். அதே போன்று யாராவது பண்டிட் (அறிஞர்) ஒருவர் வந்து தீண்டப் படாதவர்களின் முன்னேற்றத்துக்கு எடுக்கப்படும் நடவடிக்கைகள் எல்லாம் முற்றிலும் நியாயமற்றவை என்று கூறினால், அந்தக் கூற்றையும் அப்படியே ஏற்றுக் கொள்ளமாட்டேன். ஏனெனில் பெரிய மனிதர்களிடம் சிறந்த கருத்துகள் இருக்கும் என்ற மூதுரையில் எனக்கு நம்பிக்கையில்லை. இந்த சமுதாயத்தின் எதிர்காலத்தை முற்றிலும் கணக்கிலெடுத்துக்கொண்டு நம் ஸ்மிருதி ஆசிரியர்கள் எதையும் செய்தார்கள். சமுதாயத்தின் அன்றையத் தேவையின்படி இந்த ஸ்மிருதிகள் தொகுத்து முறைப்படுத்தப்பட்டன என்பது முற்றிலும் உண்மை. இன்றைக்கு பல ஜாதிகள், பல உபஜாதிகள், பல மதப்பிரிவுகள், பல்வேறு கொள்கைகளில் நம்பிக்கையுள்ளவர்கள், சீக்கியர்கள், ஜைனர்கள், புத்தர்கள், வேறுபல கொள்கைகளைப் பின்பற்றுபவர்கள் நம் சமுதாயத்தில் உள்ளனர். அவர்கள் பல்வேறு மதப்பிரிவுகளாக பிளவு பட்டுள்ளனர். ஒரே ஒழுங்கு முறையில் அவர்களை ஒருங்கிணைப்பது சாதாரணப் பணி என்று கூறமுடியாது.

ஐயா, இன்னும் சிறிது நேரம் மட்டும் எடுத்துக் கொள்கிறேன். நடைமுறை வழக்கங்கள் சட்டத் தொகுப்பை அரித்துவிடும். எனவே அவை வழக்கத்திலிருக்கக்கூடாது'' என்று டாக்டர் அம்பேத்கர் கூறியதை இப்பொழுது உங்களுக்கு எடுத்துரைத்தேன். அதே நேரத்தில் இல்லாமலிருக்கப் போகும் மன்னர்கள் மற்றும் ஜாகிரதர்களின் வாரிசுரிமைகள் சம்பந்தப்பட்டச் சட்டம் தொடர வேண்டும் என்கிறார். வழக்கம் மற்றும் வழக்காறு உரிமைகள் இருக்க வேண்டாம் என்கிறார்.

மரபுரிமை விஷயம், பிரச்சினையாக உள்ளது. வேறொரு பிரச்சினையான தத்தெடுத்தல் சம்பந்தமாக, வழக்கம் மற்றும் வழக்காறுகளைத் தொடர அனுமதிக்கக் கூடாது என்கிறார். இந்த இரண்டுமே ஏற்றுக்கொள்ளத் தக்கது அல்ல. அதற்கு ஒரு முடிவு கட்டுங்கள், ஒரே சீராக அமையுங்கள் அல்லது ஒரே அடியாக ஒழித்துக் கட்டுங்கள். ஐயா, அங்கங்கே குட்டி மாநாடுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்பதை மீண்டும் உங்கள் கவனத்துக்குக்

கொண்டுவர விரும்புகிறேன். அதனால் எனக்குப் பேசுவது கஷ்டமாக இருக்கிறது.

மதிப்பிற்குரிய ஓர் உறுப்பினர் : இவர் ஒரே வாதத்தைத் திரும்பத் திரும்பக் கூறிக் கொண்டிருக்கிறார்.

மாண்புமிகு டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் (சட்டத் துறை அமைச்சர்): இந்த கனவான் ஒரு மணிநேரமாகப் பேசிக் கொண்டிருக்கிறார்.

திரு. துணை சபாநாயகர் : அமைதி. பேச்சை அவர் நீட்டித்துக் கொண்டு போகாமலிருக்க சிறந்த வழி கூச்சல் போடுவது அல்ல. அவரைத் தனியே விட்டுவிட்டால் பேச்சை விரைவில் முடிக்குமாறு அவரைக் கேட்டுக் கொள்வேன். வேறுபல உறுப்பினர்கள் பேசுவதற்கு ஆவலுடன் காத்திருக்கிறார்கள் என்பது மதிப்பிற்குரிய உறுப்பினருக்குத் தெரியும். 45 நிமிடங்களுக்கு மேல் அவர் எடுத்துக் கொண்டுவிட்டார்.

திரு. கோகுல்பாய் தவுலத்ராம் பட் : ஐயா, உங்களுக்கு நான் கடமைப்பட்டுள்ளேன். ஒரு பக்கம் இந்த நடைமுறை வழக்கம் ஒரு பிரச்சினையே அல்ல, வழக்கமும், வழக்காறுகளும் தொடர வேண்டும் என்று நீங்கள் கூறுவதாகப் பேசிக் கொண்டிருந்தேன். அதேநேரத்தில் இவை அனுமதிக்கப்பட்டால் அவை இந்துச் சட்டத் தொகுப்பையே அழித்துவிடும் என்கிறீர்கள். நான் இந்த இரண்டையுமே விரும்பவில்லை. உணவு உற்பத்தியைப் பெருக்குங்கள் என்கிறீர்கள். நம் வசமுள்ள எல்லா நிலங்களிலும் பயிரிட்டோமானால், அது தோட்டமாக இருந்தாலும் சரி அல்லது அழகிய புல்வெளியாக இருந்தாலும் சரி, எல்லா நிலங்களிலும் பயிர் செய்ய வேண்டும். ஒரு பக்கம் உங்கள் புல்வெளிகள் அப்படியே இருக்க வேண்டுமென்று விரும்புகிறீர்கள் மற்றும் அதே நேரத்தில் அதிக உணவு உற்பத்தியாக வேண்டும் என்றும் விரும்புகிறீர்கள். இந்தப் போக்கை நான் ஆதரிக்கவில்லை.

வழக்கம் என்றால் என்ன என்பதை நீங்கள் அறிவீர்களா? குடும்பப் பழக்க வழக்கங்கள், கிராம வழக்கங்கள், தேசிய வழக்கங்கள் என்பவைகளை நாம் புரிந்து கொள்ள வேண்டும். ஷாஸ்தரத் ரூரி பல்ஸி'' (புனிதச் சட்டங்கள் நடைமுறை வழக்கங்களினால்

செயலிழக்கின்றன). சாஸ்திரம் என்பதின் பொருள் என்ன? மீண்டும் மீண்டும் சாஸ்திரத்தைக் குறிப்பிடுவதால் பித்துப் பிடித்தவன் போல் பிதற்றுகிறேன் என்று நீங்கள் எண்ணுவீர்கள். சாஸ்திரம் ஓர் அறிவியல், ஆய்வுப் பொருள், மற்றும் சட்டம் என்று சொல்லலாம். அதுதான் ஸ்மிருதி. இதன் பிறகு இதேபோன்ற எந்த விஷயங்களையும் நீங்கள் ஆதரிக்க மாட்டீர்கள், விவாக ரத்துப் பிரச்சினை உண்டாக்கிய வாதங்களைப் போன்ற எதிலும் அவர் சிக்கிக் கொள்ள மாட்டார். ஓர் ஆணும் பெண்ணும் பஞ்சாயத்தில் அமர்ந்து ஒருவர் மற்றொருவரை விட்டுப் பிரிந்துவிடுவதாகக் கூறுகிறார். இந்த உலகின் இன்பங்களை அனுபவித்தாகிவிட்டது. வேறு இடத்துக்குச் செல்ல வேண்டுமென்று விரும்புகிறார்கள். இதற்காக அவர்கள் ஒரு மாவட்ட நீதிமன்றத்துக்கோ, உயர்நீதி மன்றத்துக்கோ போவதில் அக்கறை உள்ளவர்களாக இருக்க மாட்டார்கள். இந்த மாதிரி அவர்கள் நடந்து கொண்டால் பின்னுக்குச் செல்கிறார்கள் என்றுதான் கூறவேண்டும்.

நான் கிராமங்களுக்குச் செல்லும்போது, இந்துச் சட்டத் தொகுப்பு இந்த முறையில் தயாரிக்கப்பட்டுள்ளது, இந்தந்த விஷயங்களுக்காக இந்தமாதிரி விதிகள் உள்ளன என்று கூறுவேன். இந்த வடிவத்தில் விரும்பவில்லை என்று அந்த மக்கள் கூறுவார்கள். தற்போதுள்ள பஞ்சாயத்துகளே மிகவும் சிறப்பாக உள்ளன, தற்போதுள்ள நடைமுறைகளையே தொடரத் தங்களை அனுமதிக்க வேண்டும் என்று கூறவார்கள். சட்டத்தின் இம்மாதிரி சிக்கல்களில் ஈடுபட விரும்பவில்லை என்று கூறுவார்கள். ஏழைகளை மேலும் ஏழைகளாகவும், வழக்குரைஞர்களைச் செல்வச் சீமான்களாகவும் ஆக்க இது உதவும் என்பார்கள். உங்கள் ஆசியினால் இந்துச் சட்டத்தில் இந்த மாதிரி ஏராளமான விஷயங்கள் உள்ளன.

ஐயா, இந்த விஷயங்களின் இறுதி விளைவுகளைக் குறித்து நான் சொல்லிக் கொண்டிருந்தேன். எனக்குப் போதிய நேரமில்லாததால் நான் பேச விரும்பிய எல்லா அம்சங்களையும் குறித்து பேச இயலாது. எனது சகோதரர்களில் பலர் இது குறித்து பேச விருப்பம் தெரிவித்துள்ளனர்.

எனவே ஐயா, இது ஒரு மிக முக்கியமான பிரச்சினை என்பதை எடுத்துரைத்தேன். இந்த மசோதா நிறைவேற்றப்பட

வேண்டுமென்று விருப்பம் தெரிவித்துள்ள இங்கு அமர்ந்திருக்கும் என் மதிப்பிற்குரிய நண்பர்களிடம் மீண்டும் ஒருமுறை இதை நன்கு பரிசீலிக்கும்படிக் கேட்டுக் கொள்கிறேன். அவசரகோல நடவடிக்கைகளுக்கு இது தருணமல்ல. இவ்விதம் செயல்படு வதற்கு மக்களுக்கு நீங்கள் பதில் கூறவேண்டியிருக்கும். நமது முன் வைக்கப்பட்டுள்ள மசோதா மிகவும் கவனத்துடன் பரிசீலிக்கப்பட வேண்டியதும், அடிப்படை முக்கியத்துவம் வாய்ந்ததும் என்பதால், பொதுமக்கள் கருத்தைத் தெரிந்து கொள்ள வேண்டியது மேலும் முக்கியத்துவம் பெற்றுள்ளது என்பதை எனது மதிப்பிற்குரிய தலைவர் மாண்புமிகு பண்டிட் ஜவஹர்லால் நேருவிடம் உரிய மரியாதையுடன் தெரிவித்துக் கொள்கிறேன். என் மதிப்பிற்குரிய சகோதரி திருமதி ரேணுகா தேவி கருத்துக் கணிப்பைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். இதன் தொடர்பாக நான் கூறுவதெல்லாம், தேர்தல்கள் வெகு விரைவில் நடைபெற உள்ளதால் அந்த நேரத்தில் இந்துச் சட்டத் தொகுப்பை மக்கள் ஆதரிக்கிறார்களா அல்லது இல்லையா என்பது குறித்து அவர்கள் கருத்தைத் தெரிந்து கொள்ள லாம். இந்த மாதிரியான இந்துச் சட்டத் தொகுப்பை தயாரித்துள் ளோம் என்று இந்த மசோதாவை மக்கள் முன்வைத்து அவர்கள் ஆதரிக்கிறார்களா, இல்லையா என்று கேட்கலாம், இந்தப் பிரச்சினை பற்றி மக்களின் ஆதரவை நீங்கள் தெரிந்து கொண்டால் மசோதாவை இந்த அவையில் நீங்கள் நிறைவேற்றுவதற்கு உங்களுக்கு முழு சுதந்திரம் உண்டு. கருத்துக் கணிப்பின் அடிப்படையாக இது ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும். பத்திரிகை அறிக்கைகளால் இங்கும் அங்கும் சாய்பவனல்ல நான். தங்களுடைய விற்பனையை அதிகரிப் பதற்காக பத்திரிகைகள் இந்த விஷயங்களைப் பற்றி மிகைப் படுத்தப்பட்ட செய்திகளைப் பிரசுரிக்கின்றன. பத்திரிகையாளர் களுக்கு எதிராக எனக்கு எந்தத் தனிப்பட்ட பகையும் கிடையாது. அவர்களிடம் ஆழ்ந்த அக்கறையும், அனுதாபமும் கொண்டுள் ளேன். கருத்துக் கணிப்பு எடுப்பதைப் பொறுத்த வரையில் இந்த அவையில் தற்போது இல்லாத திருமதி ரேணுகா ரே மற்றும் இதர சகோதரிகளுக்கு நான் கூறிக் கொள்வதெல்லாம், தேர்தல் சில மாதங் களில் நடைபெறப் போவதால் அப்பொழுது இந்தப் பிரச்சினையை மக்கள் முன் வைக்கலாம். உங்களுக்கு சாதகமாக மக்கள் இந்தப்

பிரச்சினையில் ஆதரவளித்தால், நிச்சயமாக அதை நாம் இங்கு நிறைவேற்றலாம்.

இவ்வாறு, இந்த நேரத்தில் இந்த மசோதாவை நிறைவேற்றாது, இந்த விஷயத்தை பரிசீலிக்க வேண்டுமென்று அரசைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. ஆர்.கே. சித்வா (ம.மா. மற்றும் பேரார் : பொது) : ஐயா, என் நண்பர் பார்சி திருமணச் சட்டத்தைப் பற்றிக் குறிப்பிட்டார். விளக்கம் அளிப்பதற்கு எனக்கு ஐந்து நிமிடம் ஒதுக்குவீர்களா?

திரு. துணை சபாநாயகர்: அவர் எந்த விதத்திலும் அதைக் குறை கூறவில்லை. எனவே நேரம் ஒதுக்க இயலாது. உலகில் உள்ள எல்லாப் பார்சிகளுக்கும் இந்த பார்சி திருமண மசோதா அனுப்பப் பட்டது என்று கூறினார். முப்பது கோடி மக்கள் சம்பந்தப்பட்ட இந்த மசோதாவுக்கு ஆதரவாக அந்த வாதத்தை முன்வைத்தார். எனவே அந்த அடிப்படையில் பேசுவதற்கு உரிமை கோரமுடியாது.

திரு. ஆர்.கே. சித்வா : இல்லை, ஐயா. அவர் தவறுதலான அறிக்கைகளைக் கொடுத்துள்ளார்.

திரு. துணை சபாநாயகர்: அப்படியென்றால் மதிப்பிற்குரிய உறுப்பினர் எனது கவனத்திற்குக் கொண்டு வந்திருக்க வேண்டும். ஒவ்வொரு விஷயத்தையும் நாம் விவாதித்துக் கொண்டிருக்க முடியாது.

திரு. ஆர்.கே. சித்வா: இந்த மசோதாவின் மீது எனக்குப் பேச உரிமையில்லையா?

திரு. துணை சபாநாயகர்: ஒவ்வொரு உறுப்பினருக்கும் உரிமை இருக்கிறது. எனக்கு அதில் எந்தவித சந்தேகமும் கிடையாது. ஆனால் நேரத் தட்டுப்பாடுதான் இதை அனுமதிக்கவில்லை.

*டாக்டர் பக்ஷி தேக் சந்த் (கிழக்குப் பஞ்சாப் : பொது) : மசோதாவைக் குறித்த விவாதம் பல நாட்களாக தொடர்கின்றன. பிரச்சினையின் இரு பக்கங்களும் உங்கள் முன் வைக்கப்பட்டுள்ளன. இரு தரப்பினர்களும் கூறிய வாதங்களை மீண்டும் உங்களுக்கு எடுத்துக்கூற நான் விரும்பவில்லை. என்னிடம் இரு கருத்துகள் உள்ளன. இந்த மசோதாவை ஆதரிப்பவர்கள் மற்றும் அதை எதிர்ப்பவர்கள் ஆகிய இருவரும் பரிசீலிக்க வேண்டிய கருத்துகள் அவை. அதன் பிறகு இந்த நாடும், இந்த அவையில் உள்ள அனைவரும் அல்லது பெரும் பகுதியினரும் ஏற்றுக் கொள்ளத் தகுந்த விதத்தில் இந்த மசோதாவில் மாற்றம் செய்ய ஆலோசனை ஒன்றை இந்த அவையின் பரிசீலனைக்கு வைக்க விரும்புகிறேன். எனவே என் கருத்துகளை உங்கள் முன் வைக்க சில நிமிட நேரங்கள் அனுமதிக்குமாறு அவையைக் கேட்டுக் கொள்கிறேன்.

இந்த மசோதாவை எதிர்ப்பவர்களுக்கு என்னுடைய முதல் ஆலோசனை இதுதான். இந்து சட்ட விதிகளைத் தொடுவதற்கு இந்த அவைக்கு எந்தத் தகுதியும் கிடையாது, ஏனெனில் அவை பல நூற்றாண்டுகளைக் கடந்து நம்மை வந்தடைந்துள்ளன, காலத்தால் அழியாப் புகழ் பெற்றுள்ள மதம் சம்பந்தமானது அது. பண்டிட் பரிஷத் மட்டுமே அதில் ஏதாவது மாற்றம் செய்யத் தகுதி படைத்தது என்று அவர்கள் வாதிக்கின்றனர். ஒரு நிமிடம் கூட இந்தக் கூற்றை ஒத்துக் கொள்ள முடியாது என்று மிகவும் பணிவன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன். இந்து மதம் ஒரு பொழுதும் மாற்றமின்றி இருந்ததில்லை என்று திரு. அல்லாடி கிருஷ்ணசாமி அய்யர் மற்றும் வேறு பலரும் கூறியுள்ளனர். அவ்வப்போது அதில் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. ஒவ்வொரு தடவையும் சமூகக் கட்டுக் கோப்பில் மாற்றங்கள் ஏற்படும்போதெல்லாம் ஒரு ஸ்மிருதி ஆசிரியரோ, ஒரு ஞானியோ, ரிஷியோ, முனிவரோ தோன்றி அக்காலத்துக்கோற்ற மாற்றங்களைச் செய்தார். ஆங்கில ஆட்சி வரும் வரையில் பல நூற்றாண்டுகளாக இந்த நடைமுறை தொடர்ந்தது. ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் செய்யப்பட்ட மாற்றங்கள் சட்டத்தை அமல் படுத்தும் நீதிபதிகளால் அல்லது சட்டமன்றத்தால் நிறைவேற்றப் பட்டன. மனு அல்லது யாக்னவல்கியா அல்லது விஸ்வாமித்தரர் போன்ற அதிகாரமுள்ள புதிய முனிவர்கள் யாரும் தோன்ற முடியவில்லை. ஸ்மிருதிகள் மற்றும் நிபந்தங்களில் உள்ள விதிமுறைகளுக்கு

★ அ.நி.வி. (சட்) டி., தொகுதி VI, பிரிவு II, 13 டிசம்பர் 1949, பக்கம் 585-99.

நீதிபதிகள் பொருள் விளக்கம் அளித்தனர் அல்லது சட்டமன்றம் குறுக்கீடு செய்தது. எனவே ஸ்மிருதிகளில் பாண்டித்தியம் இல்லாத பல்வேறு வகைப்பட்ட உறுப்பினர்களைக் கொண்டுள்ளதால் இந்தச் சட்டமன்றத்துக்கு தகுதி இல்லை என்று, இந்த 1949ல் கூறுவது பயனற்றது. இந்த வாதத்தை உடனடியாக உதறித் தள்ளவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். ஒரு நூற்றாண்டுக்கு மேலான சட்ட சபை நடவடிக்கைகளின் போக்கைக் கவனித்தால், இந்துச் சட்டமோ அல்லது ஏதாவது பிரிவோ குறைபாடுடையதாக இருந்தால், அதை நீக்க சட்டம் வகுக்கப்பட்டது. காலஞ்சென்ற திரு. ராம் மோகன் ராயின் வழிகாட்டுதலில் 1829 ஆம் ஆண்டு சதி ஒழிப்புச் சட்டம் நிறைவேற்றுவதிலிருந்து அது ஆரம்பமாகியது. இந்து மதத்தின் ஒரு பகுதியாக சதி வழக்கம் கருதப்பட்டது. ஆனால் உண்மையில் அது இந்து மதத்தின் பகுதி அல்ல. அது ஒரு அவமானந்தான். அது மதத்தின் கொள்கை என்பது மறுக்கப்பட்டது என்று கூறலாம் என நினைக்கிறேன். அதற்காக 1829 ஆண்டிலேயே சட்டம் கொண்டு வரப்பட்டது.

திரு. துணை சபாநாயகர்: அதிக அளவில் பேச்சு நடை பெற்றுக் கொண்டிருக்கிறது. பத்திரிகை நிருபர்கள் குறிப்பு எடுக்க முடியவில்லை. எனக்கும்கூட எதுவும் கேட்கவில்லை.

ரோகிணி குமார் சௌதுரி: சபாநாயகரின் குரலும் தெளிவாக இல்லை. அவர் முன்னே இரண்டு ஒலிபெருக்கிகள் அருகருகே உள்ளன.

திரு. துணை சபாநாயகர்: அவர் ஒலிபெருக்கி முன் பேசிக் கொண்டிருக்கிறார். ஒவ்வொரு இருக்கையும் ஒலிபெருக்கியாக மாறி யுள்ளது. நான் என்ன செய்வது?

திரு. ஏ. தாணுப்பிள்ளை : (திருவாங்கூர் மற்றும் கொச்சி) நான் ஓர் ஆலோசனைக் கூறட்டுமா? (குறுக்கீடு) என் கருத்து என்ன வென்றால்....

மதிப்பிற்குரிய சில உறுப்பினர்கள் : ஏற்கெனவே அவை ஒத்திப்போடப்பட்டு விட்டது.

திரு. துணை சபாநாயகர்: நீங்கள் தாமதித்து விட்டீர்கள். அவை ஏற்கெனவே ஒத்திப்போடப்பட்டு விட்டது.

திரு. ஏ. தாணுப்பிள்ளை: மிக்க வருத்தம், எனக்குத் தெரியாது.

பிறகு சட்டமன்றம் பகலுணவுக்காக இரண்டரை மணிவரை ஒத்திபோடப்பட்டது.

சட்டமன்றம் பகலுணவிற்குப் பிறகு இரண்டரை மணிக்கு மீண்டும் கூடியது. திரு. துணை சபாநாயகர் (திரு. எம். அனந்தசயனம் அய்யங்கார்) தலைமையேற்றார்.

டாக்டர் பக்ஷி தேக் சந்த் : அவை கலைந்தபோது திரு. ராம் மோகன் ராய் அளித்த ஊக்கத்தினால் சதி வழக்கத்தை ஒழிப்பதற்காக, 1829ல் சட்டம் நிறைவேற்றப்பட்டதைக் குறித்துப் பேசிக் கொண் டிருந்தேன். இந்து மதத்தின் ஒரு பகுதியே சதி வழக்கம் என்று வாதிடப்பட்டது என்பதை நாமெல்லோரும் அறிவோம். நமது தர்மத்தின் ஒரு முக்கியமான அம்சம் சதி வழக்கம், அதில் கைவைப்பது இந்து மதத்தின் மீதான தாக்குதல் என்று கூறப்பட்டது. சமுதாயத் தில் அறிவுநுட்பம் மேலோங்கியிருந்ததால் சட்டம் நிறைவேற்றப் பட்டு சதி ஒழிக்கப்பட்டது. நான் கூறியது போல் இது இந்துச் சட்டத்தின் ஒரு பகுதி அல்ல. இருண்ட காலம் அல்லது வரலாற்றின் மத்திய காலத்தில் நுழைக்கப்பட்ட ஒன்றுதான் இது. அதிர்ஷ்டவசமாக சட்டத்தின் மூலம் ஒழிக்கப்பட்டது.

அதற்குப் பிறகு 1850-ல் வாரிசுரிமை சம்பந்தமாக இருந்த வகுப்பு குறைபாடுகளை நீக்குவதற்கான சட்டம் நிறைவேற்றப் பட்டது. ஒரு நபர் அல்லது ஒரு வாரிசு மதமாற்றம் செய்து கொண்டால் வாரிசுரிமை பாதிக்கப்படுவதில்லை. இந்துச் சட்டத்தில் செய்யப் பட்ட இரண்டாவது முக்கியமான மாற்றம் இது. பிறகு மேலும் ஒரு பெரும் சீர்திருத்தம் 1856-ல் நடைபெற்றது. விதவைகள் மறுமணச் சட்டம் நிறைவேற்றப்பட்டது. பல நூற்றாண்டுகளாக விதவை களின் மறுமணத்தை இந்து மதம் அனுமதிக்கவில்லை என்று நம்பப் பட்டது.

திரு. மகாவீர் தியாகி: ஐயா, அவையில் ஆளுங்கட்சியினர் உள்ளனரா?

மாண்புமிகு திரு. கே.சி. நியோகி (வர்த்தக அமைச்சர்) : அரசு என்பது முழுமையானது. பிரிக்கமுடியாதது. ஓர் அமைச்சர் வருகை தந்திருந்தாலும் அரசு முழுவதையும் அவர் பிரதிநிதித்துவப்படுத்து கிறார்.

திரு. துணை சபாநாயகர் : அந்தப் பக்கத்திலுள்ள உறுப்பினர்கள் இந்தப் பக்கத்திற்கு வருவது எப்பொழுதுமே ஆரோக்கியமான போக்கு என்றுதான் நினைக்கிறேன்.

டாக்டர் பக்ஷி தேக் சந்த் : நான் எடுத்துக் கூறியது போல் விதவைகளின் மறுமணம் இந்து மதத்தின் முக்கிய அம்சம் என்று கருதப்படுகிறது. அந்தச் சட்டத்தை ரத்துச் செய்யக் கோரி ஆலோசனையும் அல்லது ஒரு விதவை மறுமணம் செய்துகொள்ள அனுமதிக்கச் சட்டத்தை இயற்றுவதையும் கடுமையாக எதிர்த்தனர். திரு. ஈஸ்வர சந்திர வித்யா சாகர் மற்றும் அந்நாளின் இதர தலைவர்களின் தலைமையில் மக்கள் ஆதரவு உறுதியாக இருந்ததால் இந்துப் பெண்களுக்கு இழைக்கப்பட்ட அநீதி மேலும் ஒரு சட்டத்தினால் நீக்கப்பட்டது. எனவே, இந்தச் சட்டத்தை நிறைவேற்றியதால் இந்து மதம் அழிந்துவிடவில்லை.

அதற்குப் பிறகு அன்றைய நாடாளுமன்றம் மற்றும் சட்டமன்றம் நிறைவேற்றிய சட்டங்களால் இந்துச் சட்டத்தில் பல மாற்றங்கள் கொண்டுவரப்பட்டன. 1890 மற்றும் 1891 ஆம் ஆண்டுகளில் ஒப்புதல் அளிக்கும் வயது சம்பந்தமான மசோதா அறிமுகப்படுத்தப்பட்டபோது ஏற்பட்ட பெரும் அமளி உங்களில் பலருக்கு நினைவில் இருக்கும். பன்னிரண்டு வயதிற்குக் குறைந்த சிறுமியான மனைவியுடன் உடலுறவு கொள்ள அனுமதிக்கும் வழக்கம் சம்பந்தமாக, இந்துக்களும், முஸ்லீம்களும், கிருஸ்தவர்களும் அரசதிகாரிகளும் ஆதிக்கம் செலுத்தும் சட்டமன்றம் இந்து மதத்தில் பெரும் குறுக்கீடு செய்வதாக அந்த நேரத்தில் பெரும் கூச்சல் எழுந்தது. அம்ரித பஜார் பத்திரிகா போன்ற முற்போக்கு பத்திரிகைகள் உட்பட பல பத்திரிகைகளில் வந்த செய்திகள் உங்களுக்கு ஞாபகம் இருக்குமானால் அந்தக் காலத்தில் இந்து சமுதாயம் எவ்வளவு அமளிதுமளிப்பட்டது என்பது தெரியும், ஆனால் மீண்டும் நமது சட்டமன்ற உறுப்பினர்களின் பிடிவாதத்தால் அந்த மசோதா நிறைவேறியது. அது இறுதியில் கடைசி அமர்வில் அவையின் ஒருமித்த ஆதரவுடன் மேலும் திருத்தப்பட்ட மசோதாவாக பண்டிட் தாகூர் தாஸ் பர்கவாவால் அறிமுகப்படுத்தப்பட்டு, அவையின் எல்லா தரப்பினராலும் ஆதரிக்கப்பட்டு ஒருமனதாக நிறைவேற்றப்பட்டதாக எனக்கு ஞாபகத்தில் இருக்கிறது. அந்த நேரத்தில் இந்து மதத்தின் முக்கிய பகுதியாகக் கருதப்பட்ட விஷயத்தைக் குறித்துச் சட்டம் இயற்றுவதற்கு இந்தச் சட்டமன்றத்திற்கு தகுதியில்லை என்று நமது நண்பர்கள் எவரும் கருத

வில்லை. மிக அண்மைக் காலத்தில் 1916ல் இந்தியச் சட்டமன்றம் சொத்துக்கள் பராதின சட்டத்தை நிறைவேற்றியது. பிரிவி கவுன்சில் நிறைவேற்றிய தாகூர் மற்றும் தாகூர் என்றழைக்கப்படும் வழக்கை இது ரத்து செய்தது, அந்த வழக்கில், ஸ்மிருதிகளிலுள்ள சில வாசகங் களின்படி, நன்கொடைகள் அளிக்கப்படும் தேதியில் நன்கொடை பெறுபவர்கள் பிறந்திருக்கவில்லையென்றால் அந்த உத்தரவோ நன்கொடையோ செல்லுபடியாகாது என்று பிரிவி கவுன்சில் உத்தர விட்டுள்ளது. ஓர் அறுபது எழுபது ஆண்டுகளுக்கு அதுதான் சட்டமாக இருந்தது. இது வாசகங்களின் தவறுதலான விளக்கம் என்று எடுத்துக் கூறப்பட்டது. எனவே விஷயம் பரிசீலிக்கப்பட்டு சில வாசகங்கள் சொல்லுக்குச் சொல் மொழி பெயர்க்கப்படும் போது பிரிவி கவுன்சில் கூறும் முடிவுக்கு சாதகமாக உள்ளதாக தெரிந்தது. இது ஒரு பெரும் தடையாகவும் அநீதியாகவும் கருதப் பட்டது. எனவே சட்டமன்றம் மீண்டும் குறுக்கிட்டு அவையின் ஒருமனதான வாக்களிப்பின் மூலம் 1916-ல் இந்த மசோதா நிறை வேற்றப்பட்டது.

அதன் பிறகு குறைபாடுகள் நீக்கும் மசோதா நிறைவேற்றப் பட்டது. சில ஸ்மிருதிகளில் விளக்கப்பட்டது போல இந்துச் சட்டத் தின் சில வாசகங்களின்படி ஒருவர் கண்பார்வை இல்லாமை, காது கேளாமை போன்ற குறைபாடுகள் இருந்தால் அவருக்கு வாரி சுரிமை கிடையாது. வாசகங்களின் பொருள் எத்தகையதாக இருந் தாலும் இவ்விதி பெரும் கொடுமை என்று பலர் கருதினர். ஐந்து மக்களில் ஒருவன் காதுகேளாமலோ, கண்பார்வையற்றோ அல்லது வேறு ஏதாவது உடல் ஊனமுற்றோ இருந்தால் தகப்பனாரின் சொத்தில் உடல் தகுதியுடன், ஊதியம் ஈட்டத் தகுதியானவர்களை விட அவனுக்குத்தான் பங்கு அளிக்க வேண்டியது அவசியம். குடும்பச் செல்வத்தை அதிகரிப்பதற்கு, எல்லோரும் கண்டிப்பாக வேலை செய்ய வேண்டியதாக சமூக அமைப்பு இருந்திருக்கும். அந்தக் காலத்தில் இந்த வாசகங்கள் சட்டப்படி சரியானதாகவும் பயன் உள்ளதாகவும் இருந்திருக்கலாம். அது வழக்கற்றுப் போய்விட்டது. இந்து சமுதாயம் அதற்கு எதிராகப் போர்க் கொடி தொடுத்தது. கிளர்ச்சி பலமாக இருந்ததால் இந்தியச் சட்டமன்றம் 1928-ல் இந்தச் சட்டத்தை நிறைவேற்றியது. இதன் பிறகு குறைபாடுள்ளவர்கள், உடல் ஊனம் ஏதுமில்லாதவர்களைப் போல வாரிசுரிமை பெற அனுமதிக்கப்பட்டனர். இது இந்துச் சட்டத்தில் ஏற்பட்ட மேலும் ஒரு பெரிய மாற்றமாகும்.

பிறகு 1929-ல் சட்டம் 11, என்கிற ஒரு முக்கியமான சட்டம் வந்தது. அதன்படி அதுவரை நீதி மன்றங்களினால் வாரிசுரிமைக்கு அனுமதிக்கப்படாத சில குறிப்பிட்ட பிரிவினருக்கு வாரிசுரிமை வழங்கப்பட வகை செய்யப்பட்டது. மிதாக்ஷரா விதிகளின்படி ஐந்து வகைப் பெண்களே வாரிசுரிமைக்குப் பாத்தியதை உடையவர்கள் என்று இந்தியாவிலுள்ள நீதிமன்றங்களும், பிரிவு கவுன்சிலும் தீர்ப்பு வழங்கின. ஏனெனில் இந்த ஐந்து வகை பிரிவினர்களே மிதாக்ஷராவில் குறிப்பிடப்பட்டுள்ளனர். இந்தப் பட்டியல் விரிவானதாக இல்லை என்றும், அது வெறும் உதாரணங்கள் மட்டுமே என்றும் பம்பாய் நடைமுறையைப் பின்பற்றுபவர்கள் கூறினர். வட இந்தியாவில் மிதாக்ஷராவிற்கு கொடுக்கப்பட்ட தவறான விளக்கத்தினால்தான் இது பழக்கத்திற்கு வந்துள்ளது என்று புகழ் பெற்ற உரையாசிரியர் நீலந்தாவும் மற்றும் அவரைப் பின்பற்றுபவர்களும் கூறினர். எனவே, மசோதா ஒன்று இந்தச் சட்டமன்றத்தில் கொண்டவரப்பட்டது, நீண்ட விவாதங்களுக்குப் பிறகு அந்த மசோதா நிறைவேற்றப்பட்டது. மகள், சகோதரி, சகோதரியின் மகன் போன்றவர்கள் வாரிசுகளின் பட்டியலில் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். இதுவும் குறிப்பாக வட இந்தியாவில் இந்துச் சட்டத்தின் கட்டுக்கோப்பில் பெரும் மாற்றத்தைக் கொண்டுவந்தது.

சாரதாச் சட்டம் பற்றி உங்கள் அனைவருக்கும் நன்கு தெரிந்திருக்கும். திரும்பவும் அதைப்பற்றி நான் கூற வேண்டியதில்லை. அந்த நேரத்தில் கூட திருமணத்திற்கு ஒரு குறைந்த வயதை நிர்ணயிப்பது இந்து மதத்தில் குறுக்கீடு செய்வதாகும் என்று இந்த அவையில் மிகவும் தீவிரமாக விவாதிக்கப்பட்டது. ஆனால் எதிர்ப்பாளர்கள் வெற்றி பெறவில்லை. சட்டமன்றம் உறுதியுடன் இருந்து, இறுதியில் அந்தச் சட்டம் நிறைவேறியது.

அதன் பிறகு, தேஷ்முக் மசோதா என்று அழைக்கப்பட்ட மசோதா வந்தது. இந்த 1937-ஆம் ஆண்டு மசோதா இந்து வாரிசுரிமைச் சட்டத்தில் மிகப்பெரும் மாற்றத்தை, தாக்கத்தை ஏற்படுத்தியது. இந்தச் சட்டம் வாரிசுரிமையில் மிதாக்ஷர வழக்கம் நடைமுறையிலுள்ள பகுதிகளில் கூட்டுக் குடும்பங்களில் இணைப் பங்குதாரர் ஒருவரின் மரணத்திற்குப் பிறகு அவருக்கு மகன் இல்லையென்றால் விதவைக்கு சொத்தில் எந்தப் பங்கும் கிடையாது. தன்னுடைய மைத்துனர்கள் அல்லது கணவனின் தகப்பனார் மற்றும் இணை வாரிசுதாரர்களின் தயவில்தான் அவள் தன் வாழ்க்கையைக் கழிக்க வேண்டியிருந்தது. உணவும் உடையும் மட்டுமே அவளுக்கு

அளிக்கப்பட்டது. வெறும் பராமரிப்பு மட்டுமே. இந்தச் சட்டத்தின் படி குழந்தைகள் அற்ற விதவைகளுக்கு அவள் கணவருக்கு அளிக்கப் படும் அளவுக்கு பங்கு ஒதுக்கப்பட்டது. அவள் விரும்பினால் அந்தப் பங்கை பிரித்து எடுத்துக் கொள்ளும் உரிமையும் அளிக்கப்பட்டது. இந்துக் கூட்டுக் குடும்பத்திலுள்ள பெண்கள், பாகத்தில் பங்கு கேட்டு, வழக்குப் போடுவது இந்துச் சட்டத்தின் அடிப்படை கோட்பாடு களுக்கு முரணானது என்று அக்காலத்தில் கருதப்பட்டது. ஆனால் காலத்தின் மாற்றங்கள், பெண்களிடையே மட்டுமின்றி இந்நாட்டின் ஆண்களிடையேயும் தங்களுடைய சகோதரிகள் மற்றும் தாயார் களுக்கு இவை அவசியம் என்று ஏற்பட்ட விழிப்புணர்வுகளின் வளர்ச்சியில் சட்டமன்றம் இந்த மாற்றங்களைச் செய்தது. அந்த நேரத்திலும் நாட்டில் பெரும் கிளர்ச்சி நடந்தது. ஆனால் இறுதியில் அந்தக் கிளர்ச்சியும் அடங்கி ஓய்ந்தது. பன்னிரண்டு ஆண்டுகள் உருண்டோடிவிட்டன. இந்து சமுதாயம் எந்த விதத்திலும் சுக்கு நூறாக உடைந்து விட்டதாகக் கூறமுடியாது. அல்லது இந்து மதம் அதன் முக்கிய அடிப்படையில் தாக்கப்பட்டு உடைந்து வருவதாகக் கூறமுடியாது.

அண்மைக் காலத்துக்கு இப்பொழுது வருவோம். 1946-ல் இந்தச் சட்டமன்றம் தேர்ந்தெடுப்பதற்கு சிறிது காலத்திற்கு முன்பு சகோத்ரத்தில் மணம் செய்துகொள்ள இந்தச் சட்ட மன்றம் ஒரு மசோதாவை நிறைவேற்றியது. தடைசெய்யப்பட்ட படிநிலையில் மசோதா எவ்வித மாற்றமும் செய்யவில்லை. நாட்டின் வெவ்வேறு பகுதிகளில் வசித்தாலும், ஒரே சாதியைச் சேர்ந்தவர்களாக இல்லா திருந்தாலும், வாசகங்களின் சட்ட நுணுக்கப் பொருளின்படி, ஒரே கோத்ரத்தைச் சேர்ந்திருந்தால் அவர்கள் திருமணம் செல்லுபடி யாகாமல் ஆகிவிடும். நாட்டின் பல்வேறு பகுதிகளில், இம்மாதிரி யான திருமணங்கள் நடைபெற்றாலும், அவை செல்லுபடியாகுமா என்ற ஐயப்பாடு இருந்து வந்தது. இது ஒரு விருப்ப நடவடிக்கை யாகும். 1946-ல் நிறைவேற்றப்பட்ட இச்சட்டத்திற்கு தீவிர எதிர்ப்பு ஒன்றும் கிளம்பவில்லை.

இந்தச் சட்டமன்றத்தின் ஏப்ரல் கூட்டத் தொடரில், நாம் மேற்கொண்ட நடவடிக்கைகளை நினைத்துப் பார்க்கும்படி மதிப்பிற் குரிய உறுப்பினர்களைக் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். எனது மதிப்பிற்குரிய உறுப்பினர் பண்டிட் தாகூர் தாஸ் பார்க்கவா ஒரே ஒரு பிரிவைக் கொண்டுள்ள சாதாரண மசோதா ஒன்றைக் கொண்டு வந்தார். ஆனால் அது பல விளைவுகளை கொடுக்கக்கூடியதும்

முக்கியத்துவம் வாய்ந்ததும் ஆகும். இந்துச் சட்டத்தின் வாசகம் எவ்வாறு இருப்பினும், சட்ட வலுவுள்ள ஏதாவது பழக்கங்கள் அல்லது நடைமுறைகள் இதற்கு எதிராக இருப்பினும், பல்வேறு ஜாதிகளைச் சேர்ந்த இந்துக்களிடையே நடைபெறும் திருமணங்கள் செல்லுபடியானதாக இந்த மசோதாவின் மூலம் மாற்ற வகை செய்யப்பட்டது. அது ஒரு பெரும் முன்னேற்றம். தன்னுடைய ஜாதியிலோ அல்லது உப ஜாதியிலோதான் திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்ற கட்டுப்பாட்டை நீக்கி, ஜாதிகளுக் கிடையேயான திருமணத்தை அது அனுமதித்தது. இந்த அவையில் ஒருமனதாக நிறைவேற்றப்பட்ட மசோதா அது. என் நினைவில் உள்ளபடி, மசோதா பரிசீலனையில் இருந்தபோது அதற்கு எதிராக ஒரே ஒரு குரல் டாக்டர் அம்பேத்கருடையதுதான். சனாதினிகளும், சனாதினிகளாக இல்லாதவர்களும், தாயபாக, மிதாக்ஷரா, மயூகா வழக்கங்களைப் பின்பற்றுபவர்களும், பழங்குடி மக்களின் வழக் கங்களைப் பின்பற்றுபவர்களும் எல்லோரும் மசோதாவை ஆதரித் தனர். டாக்டர் அம்பேத்கரும், நிச்சயமாக ஒருவரம்புக்குட்பட்டு அதை ஆதரித்தார். மசோதாவின் கொள்கைகளை அவர் முற்றிலும் ஆதரித்தார். சட்டமன்றத்தின் முன் மிகவும் விரிவான இந்துச் சட்டத் தொகுப்பு இருப்பதால், நமக்கு பல விஷயங்களை உள் ளடக்கியுள்ள சட்டம் தேவை என்று கருதினார். அவருடையது ஒரு சட்ட ரீதியான மறுப்பாக இருந்தது. மற்றபடி நாமெல்லோரும் ஒருமனதாக அந்த மசோதாவை ஆதரித்தோம். ஏப்ரல் இறுதியில் ஒரு நாளில் அது நிறைவேறியது. அது என்னவாயிற்று என்று இந்து தர்மத்திற்கு ஆபத்து என்று கூச்சலிட்ட என் சனாதன நண்பர்களைக் கேட்கிறேன். நமது அரசியல் அமைப்புச் சட்டம் பரிசீலனையில் இருந்தபோது ஒரு வர்க்கமற்ற, ஜாதியற்ற சமூகத்தை உருவாக்க வேண்டுமென்று நாம் கூறிவந்தோம். பல நூற்றாண்டுகளாக நாட்டின் பல பாகங்களிலும் நிலவிலுள்ள இந்துச் சட்டத்தின் சில வாசகங் களுக்கு அது முரணானதுதான். இருப்பினும், மசோதா சட்டமாக்கப் பட்டதுடன், இந்த நாட்டின் சட்டங்களின் பகுதியாகவும் ஆகியது. அந்த நேரத்தில், அன்றாட நிர்வாக நடவடிக்கைகளுக்காகவும், அரசியல் அமைப்புச் சட்டத்தை உருவாக்குவதற்காகவும் இந்த அவை தேர்ந்தெடுக்கப்பட்டதென்றும், அந்தச் சட்டத்தை நிறைவேற்று வதற்கு அதிகாரமற்றது என்றும் கூறி யாரும் ஆட்சேபனை எழுப்ப வில்லை என்பதைக் கூற அனுமதி அளிக்கக் கோருகிறேன். திருமணத்தைப் பொறுத்தவரையிலான ஜாதி ஒழிப்பு நிச்சயமாக

நாட்டின் அன்றாட பணிகளில் ஒன்றல்ல. காஷ்மீர் முதல் கன்னியா குமாரி வரை, வங்காளத்திலிருந்து குஜராத்வரை ஏதோ ஒரு வடிவில் நிலவில் இருக்கும் திருமணச் சட்டத்தின் ஓர் அடிப்படையான, முக்கியமான, வலுவான மாற்றமாகும் இது. நாம் திறந்த கண் களுடன்தான் அந்த மசோதாவை நிறைவேற்றினோம். அப்பொழுது இங்கிருந்த திரு. முன்ஷி அந்த மசோதா வெகு சிறியதாக இருந் தாலும் பெரும் விளைவுகளை ஏற்படுத்தக் கூடியது, அது மிகப் பெரும் முக்கியமான மாற்றங்களை அளிக்கிறது என்று கூறினார். அவ்வாறு கூறியவுடன் அவை அதைப் பெரும் ஆரவாரம் செய்து வரவேற்றது. என்னுடைய சனாதன உறுப்பினர்களை, மசோதாவின் எதிர்ப்பாளர்களைக் கேட்கிறேன்; அந்த நேரத்தில் இந்துச் சட்டம் மற்றும் இந்து தர்மத்தின் மீதான அவர்களின் மதிப்பும் உற்சாகமும் எங்கே போயிருந்தன? எனவே இந்த அவை முன் உள்ள இந்த மசோதாவால் இந்து கலாசாரம் மற்றும் இந்து சமுதாயத்தின் கட்டமைப்புச் சிதறுண்டு போகுமென்றும், இந்து மதத்தின் அஸ்தி வாரம் வலுவிழந்து விடுமென்றும் இந்து மதத்தின் மீதான தாக்குதல் என்றும் எழும் கூச்சல் அல்லது இந்த அவையில் படித்த பல பண்டிட்கள் இல்லாததால், இங்கு உறுப்பினர்களாக இருப் பவர்கள் ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்காகத் தேர்ந்தெடுக்கப்பட் டவர்கள் இல்லை என்பதால், இம்மாதிரியான மசோதாவைக் கொண்டுவர இந்த அவைக்கு தகுதியில்லை என்ற ஆட்சேபனை களில் எந்த ஆதாரமும் இல்லை என என் சனாதன உறுப்பினர் களுக்கு பணிவன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன். அவர்கள் முன் எடுத்துரைத்துள்ள பல சட்டங்களின் வரலாறுகளையும் மற்றும் அண்மைக் காலங்களில் நாமே நிறைவேற்றிய பல நடவடிக்கை களையும் கவனித்து நோக்குமாறு மிகவும் மரியாதையுடன் என் சனாதன நண்பர்களைக் கேட்டுக் கொள்கிறேன். வேறு எந்த அடிப் படைகளிலாவது இந்த மசோதாவை எதிர்ப்பதற்கு அவர்கள் சிந்தித்துப் பார்க்கட்டும். ஆனால் இந்த அவை வெறும் சட்டமன்றந் தான். இந்த மாதிரியான நடவடிக்கைகளை எடுக்கவும், சட்டம் இயற்றவும் அதைப் பரிசீலித்து நிறைவேற்றவும் மக்களின் கட்டளை எதுவும் நமக்கு இல்லை என்ற அடிப்படையில் இந்த அவைக்கு எந்த சட்டஉரிமையும் இல்லை என்ற வாதம் சரியானதல்ல. இந்த மசோதாவின் தகுதியின் அடிப்படையில் அதை விமர்சித்து ஏற்றுக் கொள்ளவோ, தூக்கி எறியவோ செய்யட்டும். இந்த மசோதா போதுமான அளவிற்குப் பரிசீலிக்கப்படவில்லை என்று கூறுவது

ஒரு விஷயம். மசோதாவில் பல விதிகள் மேலும் பரிசீலிக்கப்பட்டு ஆய்வுசெய்யப்படவேண்டும் என்று கூறுவது வேறு ஒரு விஷயம். சில விஷயங்களில் மசோதா மீண்டும் தயாரிக்கப்பட வேண்டும் என்று கூறவது ஒரு விஷயம். ஒருவேளை பகுதி பகுதியாக இந்த இந்துச் சட்டம் சீர்திருத்தம் செய்யப்படுவது விரும்பத்தக்கதாகும். இன்றுகூட நான் இந்த ஆலோசனையை எடுத்துக் கூறினேன். குழு வின் மூல அறிக்கையில் திரு. பி.என். ராவும் இதைக் கூறியுள்ளார். அதை நான் முற்றிலும் புரிந்து கொள்கிறேன். நான் இவ்வாறு கூறுவதற்காக என்னை மன்னிக்க வேண்டும். இம்மாதங்களில் ஒவ்வொரு தபாலிலும் ஏராளமான கடிதங்கள், பல நபர்கள் அளித்த பேச்சுகள், தர்ம சங்கம் மற்றும் பல சங்கங்களின் தீர்மானங்களின் மறுபதிப்புகள் வருகின்றன. எல்லாமே இந்தப் பெரிய மனிதர் அல்லது அந்தப் பெரிய மனிதரின் அபிப்பிராயங்களை எடுத்துரைக் கின்றன. அதாவது இவைகளை கையாளுவதற்கு இந்த அவைக்கு அதிகாரமில்லை என்ற கருத்தையே கூறுகின்றன. அது சரியானது மல்ல, தர்க்கரீதியானதுமல்ல, நியாயமானதுமல்ல என்பதை மிகவும் பணிவுடனும் அடக்கத்துடனும் தாழ்மையுடனும் தெரிவித்துக் கொள்கிறேன். எனவே தங்களுடைய வாதத்தை வலியுறுத்த வேண்டா மென்றும், ஆனால் நியாயமான முறையிலும், விவேகத்துடனும், சரியான கண்ணோட்டத்துடனும் மசோதாவை ஆய்வு செய்ய வேண்டு மென்றும் எனது நண்பர்களுக்கு தாழ்மையாகத் தெரிவித்துக் கொள் கிறேன்.

என்னுடைய சனாதன நண்பர்களுக்கு இதுதான் என் தாழ்மை யான வேண்டுகோள். இப்பொழுது மசோதாவை ஆதரிப்பவர் களுக்குச் சில வார்த்தைகள் கூற எனக்கு அனுமதி அளிக்கக் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. எச்.வி. காமத்: அவர்கள் சனாதினிகளா அல்லது புறக்கோட்பாடாளர்களா?

டாக்டர் பக்ஷி தேக் சந்த் : சரி, அதை அவர்களே முடிவு செய்து கொள்ளட்டும். இப்பொழுது மசோதா அறிமுகப்படுத்தப் பட்ட நிலையில் உள்ளோம். முதல் கட்டத்தில் அதைப் பற்றிச் சிறிய விவாதமே நடந்தது என்பதை அறிவோம். நாம் பொறுக்குக் குழுவில் சந்தித்தப்போது, இந்த முக்கியமான மசோதாவை பரி

சீலிக்க ஆறு நாள்களே நமக்கு ஒதுக்கப்பட்டன. மசோதாவின் சில பிரிவுகளைக் குறித்து பொறுக்குக் குழு உறுப்பினர்கள் சில ஆட்சேபனைகளை எழுப்பினர். முதல் வாசிப்பில் இந்த அவையால் ஏற்றுக் கொள்ளப்பட்ட மசோதாவின் அடிப்படைக் கொள்கைகளுக்கு இந்த ஆட்சேபனைகள் எதிராக உள்ளன என்று எங்களுக்குக் கூறப்பட்டது. பொறுக்குக் குழுவின் உறுப்பினர்களான நாங்கள், அந்தச் சில முக்கியமான விஷயங்கள் குறித்து திருத்தங்கள் கொண்டு வர விரும்பியபோது, எங்களுக்கு வாய்ப்பில்லா நிலை ஏற்பட்டு விட்டது. நாங்கள் கட்டளையை ஏற்றுக்கொண்டோம். ஜூலை மாத வெய்யிலில் மசோதாவை விவாதிப்பதற்கு எங்களுக்கு ஆறு நாட்களே இருந்தன. எங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள குறுகிய நேரத்தில், அப்பொழுது மாண்புமிகு சட்ட அமைச்சர் நிர்ணயித்திருந்த குறுகிய எல்லைக்குள், அந்த சூழ்நிலைகளில் எங்களால் முடிந்த அளவுக்கு எங்கள் பணிகளை நிறைவேற்றினோம். சட்ட அமைச்சர் மட்டுமல்லாது பொறுக்குக் குழுவின் சில உற்சாகமான உறுப்பினர்கள் இவ்வாறு சிந்தித்தனர். மசோதா இப்பொழுது வந்து விட்டது. இதுதான் சரியான நேரம், இந்தக் கூட்டத் தொடரிலேயே இதைத் தள்ளிவிட வேண்டும். அக்டோபர் அல்லது நவம்பர் மாதத்திற்குள் இது சட்டப் புத்தகத்தில் சேர்க்கப்பட்டுவிடும். பல ஆட்சேபனைகள் எழுப்பப்பட்டன. பல வாதங்கள் முன்வைக்கப்பட்டன. "நாம் சில மாதங்கள் காத்திருப்போம்." இரண்டு பேர் பெரும்பான்மையில் இறுதியாக, மசோதா சம்பந்தமான நடவடிக்கைகளைத் தொடர்வது என்று குழு முடிவு செய்தது.

பிற்பகல் 3 மணி

ஆனால் விஷயங்கள் சென்ற விதத்தில், ஒரு மாதத்திற்குள் இந்த மசோதா சட்டப் புத்தகத்தில் சேர்க்கப்படவில்லை. நம்முடைய கட்டுப்பாட்டையும், பொறுக்குக் குழுவின் பெரும்பான்மையையும் மீறி சூழ்நிலைகளால் விஷயங்கள் இழுத்தடிக்கப்பட்டன. இந்த மசோதா அரை குறை மனதுடன் தயாரிக்கப்பட்டிருப்பதுடன், என்னைக் கூற அனுமதித்தால் அது அதிகமாக வெட்டிக் குறைக்கப்பட்டுள்ளது என்பேன். இதை நான் பொறுக்குக் குழவில் எழுப்பியிருப்பதுடன், என்னுடைய மாறுபட்ட கருத்துக் குறிப்பில் அதிகமாக இதைக் குறித்து விளக்கியுள்ளேன். இதைத் திரும்ப எடுத்துக் கூறுவதற்கு அவையின் அனுமதியையும் பெற்றுள்ளேன். இந்தக் கண்ணோட்டத்தை நான் உறுதிப்படுத்துவதுடன் அதைத் திரும்பவும் எடுத்துக்

கூறுவதில் எனக்கு எந்தத் தயக்கமும் இல்லை. நமது சகோதரி களுக்கும், மகள்களுக்கும் முழு உரிமைகளை அளிக்க வேண்டிய நேரம் வந்துவிட்டது. அதாவது ஒரு பெண்ணுக்கு முழு நில உடைமை கிடையாது, இந்த மாதிரியான சொத்துகள் அல்லது அந்த மாதிரியான சொத்துகளை பெண்கள் வாரிசுரிமையாகப் பெற முடியாது போன்ற விளக்கங்களை அளித்த பழைய வாசகங்கள் அல்லது அதற்கு பிரிட்டிஷ் நீதிமன்றங்கள் அளித்த விளக்கங் களுக்குத் தொடர்ந்து அனுமதி அளிப்பதை நிறுத்த வேண்டிய காலம் வந்துவிட்டது. முதலாவதாக, இவையெல்லாம் நமது மூல இந்துச் சட்டத்திற்கு எதிரானது என்பதை நான் கூறுகிறேன். எப்பொழுதுமே கூறிவந்துள்ளேன். அதைக் கூறிவருவதுடன் அதை நிரூபிக்கவும் செய்வேன் என்று நம்புகிறேன். மாண்புமிகு துணை சபாநாயகர் இன்னும் சில நிமிடங்கள் அனுமதி அளித்தால் ஒரு பெண்ணின் மொத்த சொத்து ஒரு வரையறைக்குள் உட்பட்டது என்ற கொள்கை உருவாக்கப்பட்ட ஒன்று. பிரிட்டிஷ் இந்திய நீதிமன்றங்களினால் உருவாக்கப்பட்டது அது. **மிதாக்ஷரா** சட்டத்திலோ, **மயூகா** அல்லது **ஸ்மிருதி**களாலோ அவை ஆதரிக்கப்படவில்லை. அவையெல்லாம் நீக்கப்பட வேண்டும். ஆனால் அதைச் செய்வதற்கு நாம் என்ன செய்யவேண்டும்? மசோதாவில் சில மாற்றங்கள் செய்யலாம் என்று நான் ஆலோசனை கூறினேன். அதை நாம் வேறு ஒரு கோணத்தி லிருந்து பார்க்கவேண்டும். இந்த மசோதாவில் அளிக்கப்பட்டுள் ளதை விட அதிக அந்தஸ்து பெண்களுக்கு அது அளிக்கும். ''இல்லை மசோதா திரு. பி.என். ராவின் ஒப்புதலுடனும், டாக்டர் அம்பேத்கரின் நிபுணத்துவத்துடனும் வந்துள்ளதால் எந்தவித அடிப்படையான மாற்றமும் அதில் செய்யமுடியாது'' என்று அவர்கள் கூறினார்கள். மசோதாவை ஆதரிப்பவர்களின் அணுகுமுறை அவ்வாறு, இருந்தது. என்னை மன்னிப்பீர்களெனின் இதைச் சொல்ல விரும்புகிறேன்: பொறுக்குக் குழுவில் இருந்தபோதும், பிறகும்கூட எதிர்ப்பாளர் களைவிட அவர்கள் குறைந்த வெறியர்களாக இருக்கவில்லை. அவர்கள் கூறுகிறார்கள். நல்லது, மசோதா வந்தாகிவிட்டது. ஏற்றுக் கொள்ளுங்கள் அல்லது விட்டுவிடுங்கள். முடியுமானால் அதை நிராகரியுங்கள். சில நாட்களுக்கு முன்பு பிரதம மந்திரி வெளியிட்ட அறிவிப்பிற்கு பிறகு இது திரும்பத் திரும்பக் கூறப்படுகிறது. இந்த அறிவிப்பினால் அவையின் பெரும்பான்மை உறுப்பினர்களின் வாக்குரிமைகளும் கட்டுப்படுத்துப்பட்டுள்ளன.

மதிப்பிற்குரிய சில உறுப்பினர்கள்: இல்லை, இல்லை.

டாக்டர் பக்ஷி தேக் சந்த் : நல்லது ஒவ்வொருவரும் தம் விருப்பப்படி வாக்களிக்கலாம் என்று அனுமதித்தால்கூட அதன் விளைவுகள் இருக்கத்தான் செய்யும். இந்த மசோதாவை ஆதரிக்கும் நண்பர்களைக் கேட்கிறேன், என் சகோதரிகளைக் கேட்கிறேன், ...இந்த மசோதா உங்களுக்கு முழு நியாயம் வழங்குகிறதா? நீங்கள் விரும்புவதெல்லாம் இவ்வளவுதானா? நீங்கள் விரும்பும் உரிமை களை அது அளிக்கிறதா? இல்லை என்றுதான் நான் கூறுகிறேன். நான் மிக்க அழுத்தத்துடன்தான் அதை கூறுகிறேன். ..இல்லை, அது அளிக்கவில்லை... இது மிகவும் வெட்டிக் குறுக்கப்பட்ட அரைகுறை மனதுடன் எடுக்கப்பட்ட நடவடிக்கை. இந்து சமுதாயத் திற்கு இது அதிகமான தொல்லைகளையும், பெண் குலத்திற்கு குறைந்த அளவு நன்மையையும் கொடுக்கும்.

ஒரு மதிப்பிற்குரிய உறுப்பினர்: உங்களுடைய தீர்வுக்கு அவர்கள் சம்மதிக்கிறார்களா?

டாக்டர் பக்ஷி தேக் சந்த் : எனக்குத் தெரியாது. மசோதாவி லுள்ள சில விதிகளைக் குறித்துப் பேசுகிறேன். வாரிசுரிமை மற்றும் அது போன்றவைகள் சம்பந்தமான அதிகாரங்கள் விவசாய நிலங் களின் வாரிசுரிமைக்கு அமலாகாது என்று ஒருவிதி கூறுகிறது. ஏன்? ஏனெனில் அந்த நேரத்தில், இந்த மசோதா அறிமுகப்படுத்தப்பட்ட போது 1935ஆம் ஆண்டு இந்திய அரசாங்கச் சட்டத்தின் 7 ஆவது அட்டவணையின் 7 ஆவது பதிவின்படி நிலைமை இதுதான். இந்தச் சட்ட மன்றம், இந்தியச சட்ட மன்றம் விவசாய நிலங்கள் சம்பந்த மாக எந்தச் சட்டத்தையும் நிறைவேற்ற முடியாது ஏனெனில் அது மாகாண விஷயமாக இருந்தது. அதுதான் அன்றைய நிலைமை. 1938ல் விவசாய நிலத்தையும் சேர்த்து டாக்டர் தேஷ்முக்கின் மசோதா விரிவுபடுத்தப்பட்டது. பிறகு அந்த விஷயம் பெடரல் நீதிமன்றத் துக்குச் சென்றது. இது இந்திய சட்டமன்றத்தின் அதிகாரத்திற்கு அப்பாற்பட்டது என்று தீர்மானித்தது. அதுதான் நீதிமன்றத்தின் தீர்ப்பும், 1935ஆம் ஆண்டு இந்திய அரசாங்கச் சட்டத்தின் விதியு மாகும். எனவே இயல்பாகவே, திரு. பி.என். ராவும், குழுவும், டாக்டர் அம்பேத்கரும் அவருடைய சட்டத் துறையும் இதை நீக்கி விட்டார்கள். மாகாணச் சட்டமன்றங்கள் தீர்மானிக்க வேண்டிய விஷயம் இது என்று கூறிவிட்டார்கள். ஆனால் அதிர்ஷ்டவசமாக அந்நேரத்தில், அரசியல் நிர்ணய சபையின் வரைவுக்குழு வரைவு

அரசியல் சட்டத்தை வெளியிட்டது. ஏழாவது அட்டவணையிலுள்ள 7ஆம் பதிவு திருத்தப்பட வேண்டுமென்று அந்த வரைவு அரசியல் அமைப்புச் சட்டம் கூறியது. அந்தப் பொருளை பொதுப்பட்டியல் பொருளாக்க வேண்டும் அதாவது அசையாச் சொத்துக்கள் அல்லது சங்கம சொத்துக்கள் மற்றும் விவசாய நிலங்களின் வாரிசுரிமையை பொதுப் பட்டியலின் பொருளாக ஆக்க வேண்டும். அதுதான் விதியாக இருந்தது. பொறுக்குக் குழுவிலும் மற்றும் என் மாறுபாட்டுக் குறிப்பிலும் நான் சில மாதங்கள் காத்திருப்போம் என்று ஆலோசனைத் தெரிவித்தேன். பெண்களுக்கு இழைக்கப்பட்டுள்ள தீங்கிற்கு பரிகாரம் செய்கையில் நாம் எந்த நடவடிக்கைகள் எடுத்தாலும் தகப்பனாரின் சொத்தில் அல்லது கணவரின் சொத்தில் பங்கு அளித்தாலும் அது எல்லா சொத்துக்களுக்கும் பொருந்துவதாக இருக்க வேண்டும். சட்டம் ஒரேசீராக இருக்க வேண்டுமென்று நீங்கள் விரும்புகிறீர்கள். ஒரே சீரான தன்மைக்குப் பதிலாக வேறுபாடுகள்தான் அதிகரிக்கும், ஒற்றுமைக்குப் பதிலாக குழப்பந்தான் மிஞ்சும் என்று நான் துணிந்து சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இந்த மசோதா நிறைவேற்றப்பட்டால், நிலைமை இப்படித்தான் இருக்கும். ஒருவரின் அசையாச் சொத்து ஒரு நகரில் இருக்கையில், நகர்புறச் சொத்தும் இருக்கையில் அந்த சங்கமச் சொத்துக்கு ஒரு சட்டம், அதாவது டாக்டர் அம்பேத்கரின் நீதிமன்றத்தின் சட்டமும், ஆனால் ஒரு மூன்று மைலுக்கு அப்பால் உள்ள விவசாய நிலத்தைப் பொறுத்தவரையில், பழைய சட்டமும் தொடரும். மகள்களுக்கு எல்லா உரிமைகளும் அவர்கள் பிறந்த தருணத்திலிருந்தே இருக்கும். எஞ்சுனர் உரிமை விதியின் பயனும் அவர்களுக்குண்டு. சொத்தின் நிலைமை என்ன என்பது யாருக்கும் தெரியாது. எவ்வளவு ஓட்டைகள் விடப்படுகின்றன என்பதைப் பாருங்கள்? பெண்ணுக்குச் சொத்துக் கொடுக்க வேண்டாமென்று நீங்கள் நினைத்தால் பூனாவிலுள்ள அவள் பங்கை விற்றுவிட்டு ஐந்து மைலுக்கு வெளியே விவசாய நிலத்தை வாங்கிப் போடுங்கள். இப்பொழுது உங்கள் மகளுக்குப் பங்கு கொடுக்க வேண்டியதில்லை. மசோதாவின் விதிகளை இவ்விதமாக செயலிழக்கச் செய்யலாம். ஆனால் அதிர்ஷ்டவசமாக இப்பொழுது என்ன நடந்துள்ளது தெரியுமா? இந்த மசோதாவின் இரண்டாவது வாசிப்பின் இறுதியில் இன்று இருக்கிறோம். இன்றைய நிலைமை இதுதான். டாக்டர் அம்பேத்கர் மற்றும் வரைவுக் குழுவின் ஆலோசனைகள் அரசியல் சபையால் ஒரு மனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. கடவுள் ஆசியால், 26 ஆவது ஜனவரியில் அது அமலுக்கு வரும். அது மூன்றாவது வாசிப்புக்கு மிக முன்னதாக இருக்கும். நாலில் ஒரு பங்கு, அல்லது

அரை அல்லது முழுப் பங்கு அளிக்க அல்லது எந்த பங்கும் அளிக்காமலிருந்க்க, விவசாய நிலத்தை விலக்கம் செய்துள்ள குறிப் பிட்ட விதியை நீக்கி, மசோதாவில் இப்பொழுது மாற்றம் ஏதாவது செய்யப்போகிறாரா என்று கேட்டேன். 'இல்லை' என்று அவர் கூறினார்.

மாண்புமிகு டாக்டர் பி.ஆர். அம்பேத்கர்: ஓர் உரையாடலை வெளியிடும் உரிமை மதிப்பிற்குரிய உறுப்பினருக்கு இருப்பதாக நான் நினைக்கவில்லை. நான் சொன்னதெல்லாம் என்னுடைய தற்போதையக் கருத்து. பின்னர் நம் நிலையை நாம் மாற்றிக் கொள்ள லாம். இப்பொழுது நமக்கு அதிகாரம் உள்ளது. நம் பாதையில் உள்ள முட்டுக்கட்டை நீங்கிவிட்டது.

டாக்டர் பக்ஷி தேக் சந்த் : எனது அறிவிற் சிறந்த நண்பர் என் தவறைத் திருத்திவிட்டார். இதற்காக அவருக்கு மிகவும் நன்றி யுடையவனாக இருப்பேன். அவருடைய தற்போதைய நோக்கம் அந்த விதியை ரத்து செய்வது அல்ல, வேறுபாட்டை மாற்றாம லிருப்பதுதான். ஆனால் பின்னர்....

டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் : அதைப் போன்று எதையும் நான் கூறவே இல்லை. ஓர் உரையாடலை உபயோகப்படுத்த என் நண்பருக்கு உரிமை இருப்பதாக நான் நினைக்கவில்லை.

டாக்டர் பக்ஷி தேக் சந்த் : உரையாடலை அல்ல. நீங்கள் இந்த அவையில் இப்பொழுது கூறிதுதான் இது.

மாண்புமிகு டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் : நான் மட்டுமே முடிவெடுக்கும் விஷயங்களல்ல இவை. நான் என் சகாக்களின் ஒப்புதலையும் பெற வேண்டும்.

திரு. துணை சபாநாயகர் : மசோதா தற்பொழுதுள்ள நிலை யிலேயே, விவசாய நிலங்களுக்கு மசோதாவில் வழி செய்யப்பட வில்லை என்ற நிலையிலேயே மதிப்பிற்குரிய உறுப்பினர் தம் பேச்சைத் தொடரட்டும். தனிப்பட்ட உரையாடல்களை அவர் குறிப்பிட வேண்டாம்.

டாக்டர் பக்ஷி தேக் சந்த்: மசோதாவை அது இருப்பது போன்றே எடுத்துக் கொள்வோம். மாற்றங்கள் கொண்டுவரப் போவது இப்பொழுதா அல்லது பிறகா, அமைச்சரவை அல்லது பிற தரப்பு

களின் ஒப்புதலுடனா என்பது வேறு விஷயம். ஆனால் இப்பொழுதுள்ள நிலை என்ன? விவசாய நிலங்கள் விலக்கப்பட்டுள்ளன. நாட்டின் எந்தப் பகுதியை எடுத்துக் கொண்டாலும், இந்துக்களின் சொத்துக்களில் 80 சதவீதத்திற்கு மேல் விவசாய நிலங்கள்தான். மிகப் பெரும் பகுதி சொத்திற்கு வாரிசுரிமை பெறுவதிலிருந்து நமது சகோதரிகளும், மகள்களும், மற்ற பெண் உறவினர்களும் இந்த மசோதாவின்படி விலக்கப்படுகின்றனர். தற்போதைய வடிவத்தில் இந்த மசோதாவை மேலும் கொண்டு செல்லாது அதை மறு பரிசீலனை செய்வது அவசியம் என்பதற்கு மேலும் ஒரு காரணமாகும். உங்களிடம் எந்தச் சட்டம் இருந்தாலும் சரி, அது விவசாய, நகர்புற சங்கம அசையாச் சொத்துக்கள் போன்ற எல்லா சொத்துக்களுக்கும் பொருந்துவதாக இருக்க வேண்டும்.

பண்டிட் பாலகிருஷ்ண சர்மா (உ.பி; பொது): எனது மதிப்பிற்குரிய உறுப்பினர் ஒரு நிமிடநேரம் நிறுத்திக் கொள்வாரானால், அவரிடமிருந்து ஒன்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன். இந்தச் சட்டம் விவசாய நிலங்களுக்கும் விஸ்தரிக்கப்பட்டால் நிலங்கள் உண்மையிலேயே துண்டு தண்டாக பிளவுபட்டுவிடாதா? (குறுக்கீடு).

திரு. துணை சபாநாயகர்: குறுக்கீடும் இல்லாமலிருக்கட்டும். எந்நேரத்திலும் விவாதத்தை முடிக்க வேண்டி வரலாம். நான் அவைக்கு முன்கூட்டியே எச்சரிக்கிறேன். குறுக்கீடுகள் குறைவாக இருந்தால் அதிகப் பேச்சாளர்களுக்குப் பங்கு கொள்ள வாய்ப்புக் கிடைக்கும்.

டாக்டர் பக்ஷி தேக் சந்த் : நிலங்கள் துண்டு துண்டாகிவிடும் என்பதைப் பற்றி நான் கவலைப்படவில்லை. அதிக எண்ணிக்கையிலான வாரிசுகள் இருக்கும்போது அது ஏற்படத்தான் செய்யும். ஒருவருக்கு ஐந்து மகன்கள் இருந்தால் நிலம் சிறு சிறு துண்டுகளாகிவிடும். அவருக்கு இரண்டு மகள்களும் இருந்தால் மேலும் துண்டுகளாகிவிடும். அசையாச் சொத்துகள் அல்லது நகர்ப்புறச் சொத்துக்கள் துண்டுகளாகி விடுவதைப் பற்றி நான் கவலைப்படவில்லை. உங்களுக்கு ஒன்றோ அல்லது இரண்டோ வீடுகளிலிருந்து இரண்டு மகன்களும் ஐந்து மகள்களும் இருந்து சொத்தைப் பிரித்துக் கொள்ள அவர்கள் விரும்பினால் சொத்தில் பிளவு ஏற்படத்தான் செய்யும். எனவே இரண்டு தரப்பகளுக்கும் என் மரியாதையைத் தெரிவித்துக்

கொண்டு இந்த வாதம் பொருத்தமற்றதாகையால் அதைக் கணக்கில் எடுத்துக் கொள்ளக் கூடாது.

இந்த மசோதாவின்படி 80 சதவீதத்திற்கு மேற்பட்ட நிலங் களுக்கு விலக்கு அளிக்கப்படுகிறது. சீர்திருத்தக் கண்ணோட்டத்தின் படி அது ஒரு முக்கியமான குறைபாடுதான்.

ஆட்சேபங்களில் ஒன்று இதுதான். ஒருவருக்கு ஒரு வீடும், கொஞ்சம் நிலமும் இருக்கும். சில கிராமவாசிகள் சிறு கடையும் வைத்திருப்பார்கள். பல பங்கீடுகள் இருக்கும். மருமகனும் குடும் பத்தில் நுழைவார். அது ஒரு நியாயமான ஆட்சேபம் என்று மசோதா வின் ஆதரவாளர்கள் கூறுகிறார்கள். எனவே மூன்றாவது வாசிப்பின் போது குடும்பத்தின் வீட்டிற்கு வாரிசுரிமையிலிருந்து விதிவிலக்கு அளிக்கப்பட வேண்டும் என்ற ஒரு விதியைச் சேர்க்கவேண்டும். அதாவது மகளுக்கு சொத்துரிமை இருப்பினும், அவளுக்குக் குடி யிருப்பில் பங்கு கிடைக்காது. அது அப்படியென்றால், பங்கீட்டிற் கான நகர்புற சொத்துகள் மேலும் குறைந்துவிடும். ஒரு சில செல்வந் தர்களைவிட 30 கோடி இந்துக்களில் எத்தனை பேருக்கு குடும்பம் முழுவதும் வசிக்கும் ஒன்றுக்கு மேற்பட்ட வீடுகள் இருக்கின்றன/ சாதாரணமாக கிராமங்களில் ஒரு வீடும் கொஞ்சம் நிலமும் உள்ளன. அவர் ஒரு வியாபாரியாக இருந்தால் ஒரு சிறு பெட்டிக்கடையும் இருக்கிறது. குடியிருக்கும் வீட்டில் மகளுக்குப் பங்கு கிடையாது என்றால், வாரிசுரிமையாகக் கிடைக்கும் சொத்தில் மேலும் ஒரு பகுதி குறைந்துவிடுகிறது.

மேலும் ஒரு ஆட்சேபம் என்னவென்றால் மருமகன்களும் இதில் சேர்ந்து கொள்வதால் பெரும்பாலான நேர்வுகளில் அவர்கள் குழப்பம் ஏற்படுத்துவார்கள் என்பதுதான். வேறு ஒரு கிராமத்தில் இருக்கும் சொத்தை அவர்கள் நிர்வகிக்க முடியாது என்பதால் ஸ்தலத்திலுள்ள யாராவது ஒருவருக்கு சொத்தை விற்க ஏற்பாடு செய்யலாம். குடும்பத்தின் பிளவுக்கு இது வழிவகுக்கும். இதைச் சமாளிக்க, மகளுக்கு பங்கு அளிக்கப்படினும் அது பணமாக இருக்க வேண்டும் என்று ஆலோசனைகள் வழங்கப்பட்டன. அப்படியென் றால் நீங்கள் சகோதரர்களுக்கு கல்யாணத்திற்குப் பிறகு ஒன்றிரண்டு ஆண்டுகளில் முன்வாங்குரிமை அளிக்க வேண்டும். அப்பொழுது சகோதரிக்கோ அல்லது அவள் கணவருக்கோ பங்குத் தொகையை பணமாகக் கொடுத்துவிட்டு சொத்தைச் சகோதரர் வைத்துக்கொள்ள முடியும். அதுவும் கூட பெரும் தொல்லை அளிக்கக்கூடும். சொத்தின்

சந்தை விலையைத் தீர்மானிப்பது கடினமான பணி. இது முடிவற்ற நீதிமன்ற நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டிய கட்டாயத்தை உருவாக்கும். கடைசியில் மகளுக்கு ஒன்றும் மிஞ்சாது. விவசாய நிலங்களுக்கு விதி விலக்கு அளிக்கப்பட்டுள்ளன, குடியிருப்புகளுக்கு விதிவிலக்கு அளிக்கப்பட்டுள்ளன. மேலும் பல சொத்துக்களும் சேர்க்கப்படலாம். மொத்தப் பங்கை அளிப்பது மிக அதிகம் என்று சொல்லப்படலாம். அரைப்பங்கு அல்லது கால் பங்கு கொடுங்கள். முழுப் பங்கு அளித்தால் என்ன என்று நான் கேட்கிறேன்?

சொர்க்கத்திலிருந்து கிடைத்த ஸ்மிருதி போலல்லாது, இந்த மசோதாவை பொறுமையாகவும் அமைதியாகவும் பகுத்தாய்ந்தால் பெண் வாரிசுகளுக்கு அதனால் குறைந்தபட்ச ஆதாயம்கூட இல்லை என்பதைக் காணலாம்.

இந்து கூட்டுக் குடும்பத்தை இந்த மசோதா நிர்மூலமாக்கி விடும். அது நல்லதோ கெட்டதோ, மக்கள் அதை இன்னும் விடாப் பிடியாகப் பின்பற்றி வருகிறார்கள். மெட்ராசிலுள்ள கிராமங்களில் அவை இன்னும் பின்பற்றப்பட்டு வருகின்றன என்பதை நம் பெரு மதிப்பிற்குரிய சகோதரர் அல்லாடி கிருஷ்ணசாமி அய்யர் சுட்டிக் காட்டினார். என் நண்பர் சந்தானத்துக்கு வேறு அபிப்பிராயம் இருக்கலாம். ஆனால் அது அங்கு நடைமுறையில் இருக்கிறது. இருப்பினும் அது அங்கு உள்ளது. அதன் விகிதாசாரம் எவ்வளவாக இருந்தாலும் சில மக்களிடம் அதன் செல்வாக்குள்ளது. இந்து சட்டத்தின் மற்ற எல்லா கோட்பாடுகளையும் எஞ்சுநர் உரிமை, மரபுரிமை, மகனுக்கு ஒரு பங்கு போன்ற எல்லாவற்றையும் நீக்கிவிடுகிறீர்கள். இதற்கு அவசியம் என்ன? மகளுக்கு பங்கு கிடைக்க வேண்டுமென்பதுதான் அவசியம். எனவே, மசோதாவின் 5, 6 மற்றும் 7ஆம் பிரிவுகள் இந்து குடும்ப அமைப்பில் தீவிர மாற்றங்களைக் கொண்டு வருவதுடன் தற்போதைய வடிவில் பெண்களுக்குக் குறைந்த நன்மையையே அளிக்கிறது என்று தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

எனவே, இந்தக் கட்டத்தில், நாளைக்கோ அல்லது அடுத்த கூட்டத்தொடரிலோ இந்த மசோதாவை இறுதி வாக்களிப்புக்குக் கொண்டு செல்ல வேண்டுமா என்று மசோதாவின் ஆதரவாளர்களைக் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். இந்த விஷயத்தில் அதிகம் கவனம் செலுத்த வேண்டியது விரும்பத்தக்கதல்லவா? நாட்டின் பெரும் பகுதியில் நடைமுறையிலுள்ள வழக்கங்களில் அதிகம்

மாறுதல்கள் செய்யாமல், இந்து கூட்டுக் குடும்பத்திலுள்ள பெண் உறுப்பினர்கள், மிதாக்ஷரா அல்லது தாயபாக வழக்கங்களைப் பின்பற்றுபவர்களாக இருந்தாலும் சரி முழுப் பயனையும் அடைய வேறு ஏதாவது வழியுள்ளதா என்பதைக் காணவேண்டும்.

சனாதன மற்றும் சீர்திருத்தவாத நண்பர்களுக்கு என் கருத்துகளை தாழ்மையாகத் தெரிவித்துக் கொண்டேன். ஒரே ஒரு ஆலோசனை மட்டும் கூற வேண்டியிருக்கிறது. என் மனதில் அத்திட்டம் தயார் நிலையில் இல்லை. அதற்கு அதிகக் காலம் பிடிக்கும். அவையின் முன் அதன் பொதுவான கோட்பாடுகளை வைக்கிறேன். இது கவனத்தில் எடுத்துக் கொள்ளத் தக்க மாற்று வழியாக இருக்காதா என்று டாக்டர் அம்பேத்கரையும், மற்ற சட்ட உறுப்பினர்களையும், சீர்திருத்தவாத உறுப்பினர்களையும், சனாதன உறுப்பினர்களையும் கேட்டுக் கொள்கிறேன். உண்மையில் இன்று காலை வரை, இந்த விஷயம் குறித்துப் பேச எனக்குத் தயக்கமாக இருந்தது. அண்மையில் கூடுவதாக உள்ள பொறுக்குக் குழுவில் அதைச் சமர்ப்பிக்கலாம் என்று இருந்தேன். அந்தக் குழுவில் நான் உறுப்பினராக இருந்தால் குழுவிலேயே அளிக்கலாம் என்று கருதினேன். இன்றைக்கு இங்கே என்னைப் பேச அழைத்தபோது அதை இந்த அவை முன் வைப்பதே சரியான வழி என்று எண்ணினேன். என்னுடைய ஆலோசனை இதுதான்.

நமது குறிக்கோள் என்ன? நம் குடும்பத்தின் பெண் உறுப்பினர்களுக்கு சொத்தில் முழு உரிமை அளிக்க வேண்டுமென்பது தான். எனவே நாம் செய்யவேண்டியது இதுதான். கூட்டுக் குடும்ப முறையைக் குலைத்துவிட வேண்டாம். எஞ்சுநர் உரிமையை உதறித் தள்ளவேண்டாம். அவை முடிந்த வரை தொடர்ந்து இருக்கட்டும். ஆனால் மிதாக்ஷரா குடும்பத்தில் ஒரு பெண் திருமணம் ஆனவுடன் அந்தக் குடும்பச் சொத்தில் பங்குரிமையாளர் ஆகிவிட வேண்டும். தற்சமயம் அவள் கூட்டுக் குடும்பத்தின் உறுப்பினராக இருக்கிறாள். ஆனால் பங்குரிமையாளர்களில் ஒருவராக ஆகிவிடவில்லை. என்னுடைய கருத்துகளை அவை முன்வைக்க மதிப்பிற்குரிய உறுப்பினர்களை மூன்று நிமிட நேரம் ஒதுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். பிறகு அதைப் பரிசீலனை செய்யுங்கள். அதுகுறித்து குறுக்கீடு செய்வது எந்தப் பலனையும் தராது. அது உங்கள் பார்வைக்காக, குழுவின் பரிசீலனைக்காக சட்ட அமைச்சர் மற்றும் பிரதம மந்திரி மற்றும் இந்த விஷயத்தில் ஆர்வமுள்ளவர்களின் பரிசீலனைக்காக வைக்கப்பட்டுள்ளது. தற்பொழுது, ஒவ்வொரு பெண்ணும்

தன் திருமணத்திற்குப் பிறகு கணவனின் கோத்ரத்துக்கு மாறி விடுகிறாள். மற்றும் அவள் குறைந்த உரிமைகளுடன் கூட்டுக் குடும்பத்தின் உறுப்பினராகி விடுகிறாள். 1937 வரை, பிரிட்டிஷ இந்திய நீதிமன்றங்கள் அவளுக்குக் கொடுத்த உரிமையெல்லாம் பராமரிப்பு மட்டும்தான். சொத்தில் அவளுக்கு எந்தச் சட்ட உரிமையும் கிடையாது. அவள் அங்கு தங்கியிருந்து அதை அனுபவிக்க மட்டும் உரிமை பெற்றிருந்தாள்.

அதுதான் நிலைமை. 1937 தேஷ்முக் சட்டம் வந்தது, கணவனின் மரணத்திற்குப் பின் சொத்தில் அவளுக்கு கணவனின் பங்குக்கு இணையாக ஒரு பங்கு அளிக்கப்பட்டது, மைத்துனர்கள் அல்லது குடும்பத்தின் மற்ற உறுப்பினர்களுடன் அவளால் ஒத்து வாழமுடியவில்லை என்றால் தன்னுடைய பங்கைப் பிரித்தெடுத்துக் கொள்ளவும் உரிமை அளிக்கப்பட்டது. நான் கூறும் ஆலோசனை இதுதான். ஒன்றே ஒன்றை மட்டும் இத்துடன் சேர்த்துக் கொள்ளுங்கள். அவள் முழு பங்குரிமையாளராக வேண்டும். மிதாக்ஷராக் குடும்பத்தில் உள்ளதுபோல், ஒரு மகன் பிறந்தவுடன் தகப்பனாரின் பூர்விக சொத்தில் அவன் பிறந்த தருணத்திலிருந்து பங்குரிமையாளராகிறான். அதே போன்று ஒரு பெண்ணும், திருமணமான தருணத்திலிருந்து முழு உரிமையுடனான பங்குரிமையாளராகட்டும். அவளுடைய சொந்த மகன்களும் மற்றவர்களும் இருக்கலாம். அவர்கள் எல்லோரும் பிரிவினைக்கு அவசியமில்லாது தொடர்ந்து ஒன்றாக வாழ்வார்கள். ஆனால் அவர்களுடன் அப்படி ஒன்றாக வாழ்வது சாத்தியமில்லை என்று அவள் நினைத்தால், அவள் தன் பங்கை பிரித்தெடுத்துக் கொண்டு செல்லலாம். அதாவது தன் கணவனின் மறைவுக்குப் பிறகு 1937ஆம் ஆண்டு சட்டப்படி எவ்வாறு அவள் பிரிந்து செல்வாளோ அதே போன்றுதான். அது ஒரு மாற்றம். இதை நீங்கள் நிறைவேற்றினால் தகப்பனாரின் சொத்திலோ கூட்டுக் குடும்பத்திலோ எந்த மாற்றமும் செய்ய வேண்டியதில்லை. முடிந்தவரை கூட்டுக் குடும்பம் தொடர்ந்து இருக்கட்டும். அது உடைந்துவருகிறது என்று சிலர் சொன்னார்கள். வருமானவரி ஏய்ப்பிற்காகத்தான் அது உடைந்து வருகிறது என்று சிலர் சொன்னார்கள். எவ்வளவு பேர் வருமானவரி கட்டுகிறார்கள் என்று மற்றவர்கள் கேட்டார்கள். 99.5 சதவீத இந்துக்கள் வருமான வரி செலுத்துவது இல்லையென்றாலும் அவர்கள் கூட்டுக் குடும்ப முறையைப் பின்பற்றுகின்றனர் என்று கூறினர். இந்த வாதங்களுக்கு அர்த்தமில்லை. இந்த சூழ்நிலைகளில்தான் கூட்டுக் குடும்பம்

உடைகிறது என்று சொன்னால் அது உடைந்து நொறுங்கட்டும். ஆனால் முடிந்த காலம் வரை அது தொடர்ந்து இருக்கட்டும்.

புதிதாக எதையும் நான் ஆலோசனையாக வைக்கவில்லை, அல்லது இந்து சட்டத்தின் உணர்வுக்கு எதிரானது எதையும் கூற வில்லை. ஜைமினி மற்றும் இதரர்களும் அளித்த வேதச் சட்டங்கள் அதாவது மூலச் சட்டத்தின் உணர்வுகளுக்கு அது இசைவாக உள்ளது என்று கூறலாம் என நினைக்கிறேன். என் பேச்சை நீட்டிக்க விரும்ப வில்லை. வேத காலத்திலும் அதைத் தொடர்ந்து வந்து காலத் திலும் நிலைமை எப்படி இருந்தது என்பதை எடுத்துக்கூற விரும்பு கிறேன். 1913ல் துவரகநாத் மிட்டர் "இந்துச் சட்டத்தில் பெண் க்ளின் நிலை" குறித்து எழுதிய புத்தகத்தின் சில பகுதிகளைப் படித்துப் பாருங்கள். அலகபாத் லா ஜர்னல் தொகுதி II ல் காலஞ்சென்ற அலகபாத்தைச் சேர்ந்த டாக்டர் சதீஷ் சந்திர பானர்ஜி எழுதிய கருத் தாழமிக்கக் கட்டுரையை தயவுசெய்துப் படித்துப் பாருங்கள். இந்நாடு உருவாக்கிய நல்ல எதிர்காலமுள்ள மிகச் சிறந்த சட்ட வல்லுநர் களில் ஒருவர் அவர். ஆனால் துரதிர்ஷ்டவசமாக இளம் வயதி லேயே அவர் வாழ்வு முடிந்துவிட்டது. அது ஒரு மிகவும் விரிவான கட்டுரை. மேலும் பாட்னாவைச் சேர்ந்த டாக்டர் கே. பிஸ்வாஸின் நூலையும் படித்துப் பாருங்கள். இவைகளிலெல்லாம் மனுவுக்கு முன்பு தோன்றிய அறிஞர்கள், மற்றும் வேதங்களிலிருந்து அக்காலத் திலுள்ள பெண்களின் நிலை குறித்து மேற்கோள்கள் கொடுக்கப் பட்டிருந்தன. அக்காலத்தின் பெண்களின் நிலைமை என்னவெனில், கணவரின் சொத்தில் அவளுக்கு முழு உரிமை இருந்தது. வேத வாசகங்களைக் குறித்து மகரிஷி ஜைமினி கூறுகிறார்: "திருமணமான தருணத்திலிருந்தே மனைவிக்கு கணவனின் செல்வத்தில் உரிமை அளிக்கப்படுவதுடன் அவன் பிறகு சேர்க்கும் சொத்துக்களிலும் அவளுக்கு உரிமை உண்டு. அதாவது அவள் ஒரு முழுப் பங்குரிமை யாளர் ஆகிவிடுகிறாள். வேறு ஒரு வாசகத்தை இவ்வாறு விளக்கு கிறார். ஆணுக்குள்ள அதே சமய, உரிமையியல் உரிமைகள் பெண் களுக்கு இருப்பதுடன் அவன் ஈட்டும் செல்வம் அனைத்தையுமே, அவள் இஷ்டப்படி கையாளமுடியும். அவனே சேர்த்த சொத்துக் கள் அனைத்தின் அயலடைவைக் கட்டுப்படுத்தும் அதிகாரம் இருந்தது. நாம் கொண்டுள்ள பங்குரிமையாளர் என்ற கருத்தோட் டமும் இதுதான். மகன் ஒருவன் தன் பிறந்த தருணத்திலிருந்து பங்கொன்றைப் பெறுவதுடன், அது நியாயமான காரணத்துக்காக அல்லது குடும்பத் தேவைகளுக்காக இல்லாமலிருந்தால் தகப்ப னாரின் பராதீனத்தை கட்டுப்படுத்த முடியும். இதேபோன்று ஒரு

பெண்ணிற்கும் அவள் திருமணம் செய்து கொண்ட தருணத்திலிருந்து உரிமை வழங்கப்பட வேண்டும். சீரழிவு காலம் ஆரம்பிப்பதற்கு, பெண்களின் உரிமைகள் பறிக்கப்படுவதற்கு முந்தைய, இந்து சட்டம் மற்றும் வேத வாசகங்களுக்கு மீண்டும் செல்வோம் என்று தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன். பெண்களையும் ஒரு பங்குரிமையாளர்களாக்குவோம். என் ஆலோசனையின் ஒரு பிரிவு இதுதான்.

என்னுடைய ஆலோசனையின் மற்ற பகுதி என்னவெனில், திரு. அல்லாடி கிருஷ்ணசாமி அய்யர் நேற்றுக் குறிப்பிட்ட, பெண்ணுக்கு தன் சொத்தைப் பராதீனப்படுத்துவதற்குப் பூரண உரிமை இருக்கவேண்டும் என்பதாகும். இந்து விதவையின் பரிதாப நிலை நீக்கப்படவேண்டும். அதைப் பொறுத்தவரையில் இந்த அவை இரண்டு நிமிடம் செலவிடவேண்டும். இந்த மசோதாவை எதிர்க்கும் என் நண்பர்கள் யாவரும் கூறுகின்றனர்: "நாம் சாஸ்திரங் களுக்குச் செல்ல விரும்புகிறோம். நாட்டின் பெரும் பகுதிகளில் பின்பற்றப்பட்டு வரும், முக்கியமாக **மிதாக்ஷரா** சாஸ்திரத்துக்கு அப்பால் செல்ல நாங்கள் விரும்பவில்லை. வங்காளத்தைத் தவிர எல்லாப் பகுதிகளிலும் அதுவே பின்பற்றப்பட்டு வருகிறது." இதைப் பொறுத்த வரையில் மிதாக்ஷரா சட்டம் என்ன கூறுகிறது? யாக்னவல்கியர் பற்றிய விக்னானேஷ்வரின் விளக்க உரையில் அத்தியாயம் 11 பகுதி 11ல் சுலோகம் 2 மற்றும் 4ல் பெண்ணின் சீதனத்தைப் பற்றி என்ன கூறுகிறார்கள் என்பதைப் பாருங்கள். சில விஷயங்களை மேற்கோள் காட்டிவிட்டு, அதாவது திருமண நேரத்தில் பெண்ணுக்கு என்ன திருமணப் பரிசு அளித்தாலும் அது முக்கியமல்ல. அவர் கூறுகிறார்: "சீதனம் என்பது, அவைகளுடன், வாரிசுரிமை, பாகப் பிரிவினை, கைப்பற்றுதல் (எதிரனுபோகம்) ஆகியவைகளால் பெறப்படும் எல்லாச் சொத்துக்களும் அடங்கும். தனது கணவனின் அல்லது தகப்பனாரின் அல்லது வேறு யாரிட மிருந்தாவது பெறப்பட்ட சொத்திலிருந்து வாரிசுரிமையாகப் பெற்றது அவளுடைய முழு உரிமையாக இருக்கும், அதை வேறு யாரும் கட்டுப்படுத்த முடியாது. 11ஆம் நூற்றாண்டில் விக்னா னேஷ்வர் வகுத்த சட்டம் இதுதான். பிரிட்டிஷார் வரும் வரை இது தொடர்ந்து சட்டமாக இருந்தது. காசி நடைமுறைகளைச்

சேர்ந்த மற்றொரு உரையாசிரியர் திரு. என்.எஸ். வீரமாதித்ரா, அதை அமோதித்து எழுதியுள்ளார். பம்பாய் மாகாணத்தில், முக்கியமாக குஜராத்திலும் பம்பாய் தீவிலும் முதன்மை நிலையில் இருந்துவரும் மயூகாவின் ஆசிரியர் நீலகந்தா மீண்டும் அதையே எடுத்துக் கூறுகிறார். பிரிட்டிஷார் வரும் வரை வங்காளம் தவிர எல்லா மாகாணங்களிலும் அதுவே சட்டமாக இருந்தது. பிரிட்டிஷார் வந்தவுடன் கூறினார்கள். "நல்லது, **மிதாக்ஷராவின்** மூல வாசகங்களை ஆய்ந்து பார்ப்போம். இது **யாக்ஞவல்கியர்** குறித்த உரைநூல். **யாக்ஞவல்கியர்** சில குறிப்பிட்ட குறியீடுகளை கைய ்ண்டிருந்தார். அவர் 'அதி' என்ற சொல்லைப் பயன்படுத்தியிருந்தார். 'அதி' என்பதற்கு விக்னானேஷ்வர் இவ்வாறுதான் வியாக்கியானம் கொடுத்திருந்தார். அதுதான் நிலைமை. ஒரு பெரும் போராட்டம் தொடர்ந்தது. சில நீதிமன்றங்கள். குறிப்பாக மெட்ராஸ் நீதிமன்றம் பல ஆண்டுகள் கடும் முயற்சி எடுத்தது. இறுதியாக பிரிவி கவுன்சில் கூறியது: "நல்லது, நாம் முடிவு செய்ய வேண்டியதுதான். **ஸ்மிருதி** ஆசிரியருக்கும் உரையாசிரியருக்கும் இடையே வேறுபாடு இருக்குமானால் நாம் உரையாசிரியரின் விளக் கத்தையே பின்பற்ற வேண்டுமென்று. தான் வகுத்த விதிக்கு மாறாக பிரிவி கவுன்சில் நடந்து கொண்டது. அவர்கள் இயற்றிய விதியிலிருந்தே ஏதோ ஒரு வகையில் அவர்கள் விலகிச் சென்று விட்டனர். எனவே, ஒரு மகளின் மற்றும் ஒரு கணவனின் குடும்ப நிலையைக் குறித்த வேத நூல்களின் நிலைக்குச் சென்று பாருங்கள். **மிதாக்ஷரா** நிலைக்குச் சென்று பாருங்கள். பிற்காலத்தில் உருவாக்கப்பட்ட சட்ட இலக்கியக் குவியலைக் குப்பையில் போடுங்கள். பதினெட்டாம் நூற்றாண்டு வரை நிலவிலிருந்த சட்டத்தை நோக்கிச் செல்லுங்கள். இந்த இரண்டு விஷயங்களை மட்டும் நீங்கள் செயல்படுத்தினால் இந்த மசோதாவை ஆதரிப்பவர்களும் சீர்திருத்தம் கோரும் நண்பர்களும் அதிகம் பயன் பெறுவார்கள் என்று நண்பர்களுக்குக் கூறிக் கொள்கிறேன். ஒரு பெண், கணவனின் குடும்பத்தில் பங்குரிமையாளர்ஆனால் கூட்டுக் குடும்ப அமைப்பில் குழப்பம் ஏற்படாது, மகன்கள் தொடர்ந்து தங்கள் பங்கை அனுபவித்து வருவார்கள். கூட்டுக் குடும்ப அமைப்பில் நல்ல விஷயங்கள் இருக்கலாம்; கெட்ட விஷயங்களும் இருக்கலாம். பின்னர் அது இயற்கையான முறையில் உடைந்துச் சிதறிப் போகட்டும். கணவனின் சொத்தில்

கணவனுக்கு, மகனுக்கு இருப்பது போன்ற உரிமையை மனைவிக்கும் அளியுங்கள். அவளுடைய மறைவுக்குப் பிறகு இந்தச் சொத்துக்கள் யாருக்குச் செல்ல வேண்டும் என்பது போன்ற விஷயங்களும், மேலும் பரிசீலிக்க வேண்டிய விஷயங்களும் இருக்கலாம். இந்த விவரங்களுக்குள் எல்லாம் நான் செல்ல விரும்பவில்லை. இந்த விஷயத்தைக் குறித்து ஆழ்ந்து பரிசீலிக்குமாறும் இந்தத் திட்டம் மிகச் சிறந்ததாக இல்லையா என்பதைக் காணுமாறும் மதிப்பிற்குரிய என் உறுப் பினர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

திருமணமாகாத மகளைப் பொறுத்தவரையில் தன் தகப்பனாரின் சொத்தில் சகோதரர்களைப் போன்று ஏன் முழுப் பங்கு அளிக்கக் கூடாது என்பதற்கு எனக்கு காரணம் எதுவும் தெரியவில்லை. சீதனம் எதுவும் கொடுக்கப்படாததால் அவள் பிறரைச் சார்ந்திருக்கக் கூடாது. எனது நண்பர்களில் சிலர் சகோதரன் சகோதரி மேல் கொண்டுள்ள பாசத்தைக் குறித்து இனிமையான சித்திரத்தைத் தீட்டுகின்றனர். தங்களுடைய சகோதரிக்காக சகோதரர்கள் படும் பாட்டை விவரிக்கின்றனர். மிகவும் உண்மை தான். சிலர் அவ்வாறு நடந்து கொள்கின்றனர்; பலர் இவ்வாறு செயல்படுகின்றனர். ஆனால் இதற்கு மாறாக நடப்பவர்களைப் பற்றியும் தெரியும். சகோதரர்கள் முக்கியமாக சகோதரர்களின் மனைவிகள் முழுவதையும் சுருட்டிக் கொண்டு விடுகிறார்கள். கிராமத்தில் அதிகச் செல்வாக்கு இல்லாத குடும்பத்திற்கு, ஏழைக் குடும்பத்திற்கு, சகோதரி மணம் செய்து கொடுக்கப்பட்டால் வரதட்சிணையாகக் கொஞ்சமே கொடுக்கப்படுகிறது. எனவே நாம் அதற்கும் வகை செய்ய வேண்டும். சாஸ்திரங்களில் கூட அதற்குக் கணிசமான முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. சிலர் நான்கில் ஒரு பங்கும், சிலர் முழுப் பங்கும், சிலர் அரைப் பங்கும் அளிக்க வேண்டுமென்று கூறுகின்றனர். நான் அரைப் பங்கு என்பதை ஏற்றுக் கொள்ளவில்லை. முகமதியச் சட்டத்தைப் பின்பற்றி அவளுக்கு முழுப் பங்கு அளிக்க வேண்டும்.

திரு. பி.எல். சோந்தி (கிழக்குப் பஞ்சாப் : பொது) : திருமணமாகாத பெண் எவ்வளவு காலம் அந்தச் சொத்தை அனுபவித்துக் கொண்டிருப்பாள்?

டாக்டர் பக்ஷி தேக் சந்த்: சொத்தை ஒருதடவை அடைந்த பிறகு அதைத் திரும்பப் பெறும் கேள்விக்கே இடமில்லை. அது குடும்பத்தில் எந்த சீர்குலைவையும் ஏற்படுத்தப் போவதில்லை. நாம் சில விதிகளைச் செய்யவேண்டும். பின்னர் அதை நாம் தக்கவாறு சரிப்படுத்திக் கொள்ளலாம்.

திருமணம் மற்றும் விவாகரத்து சம்பந்தமான அத்தியாயங் களைக் குறித்து ஒரு வார்த்தை. மசோதாவின் இந்தப் பகுதியைப் பொறுத்தவரை எனது ஆட்சேபம் சாதாரணமானதுதான். முதல் அத்தியாயத்தின் முதல் பகுதி ஒருதார மணத்தைப் பற்றிக் கூறுகிறது. ஓர் இந்து ஒரே ஒரு தடவை மட்டுமே திருமணம் செய்ய வேண்டும். அதற்கு மேல் கூடாது என்ற விதியை முழு மனதுடன் ஏற்றுக்கொள்பவன் நான். பெரும்பான்மையான நம் மக்கள் இப்படித்தான் நடந்து கொள்கிறார்கள்.

திரு. எச்.வி. காமத்: ஒரு தடவை அல்லது கிடையவே கிடையாது.

டாக்டர் பக்ஷி தேக் சந்த் : மகன் பிறக்கவில்லை போன்ற வாதங்கள் எல்லாம் பயனற்றவை. ஒருவர்பின் ஒருவராக மூவரை மணம் செய்து கொண்டாலும் அவர்களில் ஒருவருக்கு மகன் பிறக்கும் என்பதற்கு உத்தரவாதம் உள்ளதா? ஏதோ தற்செயலான நேர்வுதான். எனவே இந்த வாதத்தை என்னால் சிறிதும் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. உண்மையில், நடைமுறையில் பெரும் பாலான இந்துக்களுக்கும் ஒரே ஒரு மனைவியே இருக்கிறாள். அந்த விதியை இங்கு சேர்க்காமலிருப்பதற்கான காரணம் எனக்குப் புரியவில்லை.

திரு. லட்சுமிநாராயண் சாஹு: உத்கலில் மூன்று லட்சம் பெண்களுக்கும் அதிகமாக உள்ளனர். நீங்கள் ஒருவனுக்கு ஒருத்தி என்று பேசினால், அதிகப்படியான இந்த 3 லட்சத்திற்கு என்ன வழி வைத்துள்ளீர்கள்?

டாக்டர் பக்ஷி தேச் சந்த் : இங்குங்கூட மதம் கொண்டு வரப்படுகிறது. பரோடாவில், 1931-ல் மிகவும் சமயப் பற்றுள்ள

மகாராஜாவின் தலைமையில், இந்துக்கள் 95 சதவீதம் உறுப்பினர்களாக இருந்த சட்டமன்றத்தால் ஒருதார மசோதா மற்றும் விவாகரத்து மசோதா நிறைவேற்றப்பட்டது. 19 ஆண்டுகளாக அது நடைமுறையில் உள்ளது. இந்த மசோதாவால் பரோடாவில் இந்து மதம் ஒரு முடிவுக்கு வந்து விட்டது என்று கூறமுடியுமா? பம்பாயில் திருமதி முன்ஷியின் மசோதா 1946-ல் நிறைவேற்றப்பட்டு அது அந்த பிரதேசத்தின் சட்டமாகிவிட்டது. கடந்த ஆண்டு மெட்ராசில் மெட்ராஸ் சட்ட மன்றமும் அதே போன்ற ஒரு மசோதாவை நிறைவேற்றியது. எனவே, நடைமுறையில் தென் இந்தியா முழுவதுமே ஒருதாரச் சட்டம் அமலுக்கு வந்துவிட்டது. அங்கு இந்து மதம் அழிந்துவிடவில்லை. நமது மெட்ராஸ் நண்பர்கள் அனைவரும் எப்பொழுதும் போல நல்ல ஆரோக்கியத்துடனும் உற்சாகமாகவும் இருக்கிறார்கள். எனவே, இந்த விதி வரவேற்கத்தக்க ஒன்று, அது பராமரிக்கப்பட வேண்டும்.

திரு. கோகுல்பாய் தவுலத்ராம் பட்: ஐயா, என்னை அனுமதித்தால், விவரம் தெரிந்து கொள்வதற்காக ஒன்றிரண்டு கேள்விகள் கேட்க விரும்புகிறேன்.

திரு. துணைத் தலைவர் : அவர் விட்டுக் கொடுக்க மாட்டார்.

கோகுல்பாய் தவுலத்ராம் பட்: நீங்கள் ஒருதார வழக்கத்தைப் பற்றிக் கூறியது முற்றிலும் உண்மைதான். ஆனால் நான் கேட்க விரும்புவதெல்லாம், தனது முதல் மனைவி உயிரோடிருக்கையில் அவள் ஒப்புதல் அளித்தால் இரண்டாவது மணம் செய்ய ஒருவருக்கு அனுமதி உண்டா?

டாக்டர் பக்ஷி தேக் சந்த் : நமது மதிப்பிற்குரிய சகோதரர் கோகுல்பாய்ஜி இந்தக் கேள்வியைக் கேட்டதற்கு நான் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன். ஒரு பெண்ணின் ஒப்புதலை எந்த வழியிலும் நீங்கள் பெறமுடியும் என்பதை நான் கூறமுடியும். இந்த மாதிரி நடந்த பல மோசமான சம்பவங்களைப் பார்த்திருக்கிறேன். ஒரு சமயம் ஒரு முதியவரும் மூதாட்டியும் இருந்தனர். மிகவும் படித்த பண்டிட், சோதிடர் ஒருவர் வரவழைக்கப்பட்டார். எல்லாப் பூஜைகளையும் முடித்த பிறகு அவர் அந்தக் கிழவியிடம் சொன்னார்: ''அடுத்த மூன்று மாதங்களில் உங்கள் கணவர் இறந்து போவார். இதிலிருந்து தப்புவதற்கான ஒரே வழி அவர் மறுமணம் செய்து கொள்ள வேண்டும். மீண்டும் அவர் மணம் செய்து கொண்டால்

அவருக்கு ஒரு மகன் பிறப்பான்.'' அவ்வளவுதான். அந்த வயதான பெண்மணி, தனக்கு வரும் பேராபத்தை உணர்ந்து தன்னுடைய சம்மதத்தை அளித்தாள். இப்பொழுது, பாருங்கள் அவர் வீட்டில் ஒன்றல்ல ஐந்து பெண்கள் உள்ளனர் (குறுக்கீடு).

திரு. துணை சபாநாயகர்: அமைதி, அமைதி, கடந்த அரை மணி நேரமாக நமது மதிப்பிற்குரிய உறுப்பினர் தம் பேச்சை முடிக்க வேண்டுமென்று ஆவலாயிருக்கிறார். உங்கள் குறுக்கீடுகளினால் அவர் தொடர வேண்டியிருக்கிறது.

டாக்டர் பக்ஷி தேக் சந்த் : நான் கடைசி விஷயமான விவாக ரத்துக்கு வருகிறேன். இந்த மசோதாவில் செய்த பெரும் தவறு பதிவுத் திருமணங்களை ரத்து செய்வதற்கு சமயச் சடங்குகளின் அடிப்படை யிலான திருமணத்தை ரத்து செய்வதற்கான அதே விதிகளை வைத்து இருப்பதுதான். இதைப் பொறுத்தவரையில், பொறுக்குக் குழு வினால் அளிக்கப்பட்டுள்ள இந்த மசோதா திரு. பி.என். ராவ் குழு 1944ல் தயாரித்து அளித்த மசோதாவிலிருந்து வேறுபடுகிறது. அவர் 1945ல் அதை மறு ஆய்வு செய்து வெளியிட்டார். பதிவுத் திருமணங் களைப் பொறுத்தவரையில், மசோதா கொடுக்கும் அதே உரிமை களை அளிக்கும் தற்போதைய சட்டத்தை வைத்துக்கொள்ளுங்கள். ஆனால் சமயச்சடங்குகள் அடிப்படையிலான திருமணங்களை பதிவுத் திருமணங்களாக மாற்றும் விதிமுறைகளை கொண்டுவராதீர் கள். புனிதச் சமயச் சடங்குகள் புனிதச் சமயச் சடங்குகளாகவே இருக்கட்டும். ஆரம்பத்தில் ஆலோசிக்கப்பட்டது போல நமது பண்டைய ஸ்மிருதி ஆசிரியர்கள் அனுமதித்தது போல விவாகரத்து விதிகள் முடிந்த அளவு மிகவும் குறுகிய எல்லைக்குள் இருக்க வேண்டும். இதைப் பொறுத்தவரையில் திரு. பி.என். ராவின் நிலை இதுதான்.

திருமண நாளிலிருந்து விவாகரத்து தினம் வரை தொடர்ந்து இருக்கும் பாலுணர்வற்ற தன்மை. இந்த நிபந்தனைக்கு யாரும் ஆட்சேபம் தெரிவிக்க மாட்டார்கள்.

பிறகு, அந்த நபர் முட்டாளாக இருந்து, அந்த உண்மை மறைக்கப்பட்டிருக்கலாம். இதுவும் உடல் சம்பந்தமான இரண் டாவது குறைபாடு, இதிலும் யாரும் தகராறு செய்ய முடியாது.

இந்த இரண்டு நிபந்தனைகளையும் தவிர ஒருவர் தன் மதத்தை மாற்றும்போது விவாகரத்து அளிக்கலாம். ஓர் இந்து முஸ்லீமாக

மாறி மணம் செய்து கொள்ளலாம். இந்துச் சட்டத்தின் தவறுதலான கண்ணோட்டத்தின்படி திருமணங்கள் ரத்து செய்யப்பட முடியாதவை, திருமணத்தின் புனிதத் தன்மை தொடர்வதால் மனைவி எதுவும் செய்ய முடியாத நிலையில் இருக்கிறாள். எந்தக் கொள்கையின் அடிப்படையில், ஒரு கணவன் மதம் மாறி அந்த மதத்தின் அடிப்படையில் திருமணம் செய்யும்போது திருமணம் ரத்து செய்யப்பட முடியாது என்று கூறுகிறீர்கள்?

திரு. மகாவீர் தியாகி : விவாக ரத்துத் தேவைப்படும்போது வழக்கமான சட்ட நடவடிக்கைகளுக்குட்படாமல் மக்கள் தங்கள் மதத்தை மாற்றிக் கொள்ளும் நிலை தோன்றாதா?

டாக்டர் பக்ஷி தேக் சந்த் : இல்லை. அவர்கள் மதம் மாற மாட்டார்கள். மேற்குறிப்பிட்ட நிபந்தனைகளுடன் மனைவி ஐந்து ஆண்டுகளோ, ஆறு ஆண்டுகளோ, ஏழு ஆண்டுகளோ ஒரு குறிப்பிட்ட காலத்துக்கு கைவிடப்பட்ட நிலையில் உள்ளதையும் சேர்த்துக் கொள்ளலாம். இந்த நிபந்தனைகள் ஒன்றும் புதிதல்ல. நமது பண்டைய ஸ்மிருதி ஆசிரியர்களுக்குத் தெரிந்ததுதான் இவை. இந்த நான்கு ஐந்து நேர்வுகளில் மட்டுமே விவாகரத்து என்று எல்லை வகுக்க வேண்டும். திருமணத்திற்குப் பிறகு மனைவியை கைவிட்டு ஓடிவிடும் கணவன்மார்களைப் பார்த்ததில்லையா? இந்த துரதிர்ஷ்டம் பிடித்த பெண்களுக்குத் தீர்வொன்றும் கிடையாதா? அவர்களுக்கு ஒரு தீர்வு வேண்டும். நான் மூன்று நான்கு நிபந்தனைகளுக்குள் அவை இருக்க வேண்டுமென்று நினைக்கிறேன். ஆனால் வழக்குகளைக் கொண்டு வந்துவிடாதீர்கள். அது ஒரு கூடா ஒழுக்க வழக்கு என்றால் பொய் சாட்சிகள் தயாரிக்கப்படலாம். சில வகையான மோசடி சாட்சிகள் தயாரிக்கப்பட்டு குற்றங்கள் நிரூபிக்கப்படலாம். சமயச் சடங்குகளின் அடிப்படையிலான திருமணங்களில் இதைக் கொண்டுவர நான் விரும்பவில்லை. என்னுடைய மாறுபாட்டுக் குறிப்பில் குறிப்பிட்டபடி, திருமணம் மற்றும் விவாகரத்து சம்பந்தமான அதிகாரம் மாற்றி எழுதப்படவேண்டும் என்று தாழ்மையாகத் தெரிவித்துக் கொள்கிறேன். பதிவுத் திருமணம் மற்றும் சமயச் சடங்குகளின் அடிப்படையிலான திருமணங்கள் என இரண்டு விதமான இந்துத் திருமணங்கள் உள்ளன. ஒன்றில் அது எப்படிக் கலைக்கப்படும் என்ற நிபந்தனைகள் உங்களுக்குத் தெரியும். மற்றொன்றில், உங்களுடைய புதிய நவீன ஆலோசனைகளை வைத்துக் கொள்ளலாம். அதை ஆழ்ந்து பரிசீலித்து இந்த நடவடிக்கை பெண்களின் நிலையில் முன்னேற்றம் ஏற்படுத்துமா என்று நோக்கும்படி இந்த

மசோதாவின் ஆதரவாளர்களைக் கேட்டுக் கொள்கிறேன். என்னுடைய ஆலோசனைகள் ஏற்றுக் கொள்ளப்பட்டால், இந்த மசோதா மேலும் சிறந்ததாகிவிடும். பெண்கள் தங்கள் பெண்மையில் உயர்ந்த நிலையை அடைவர். அவர்களுக்குச் சொத்தில் முழு உரிமை இருக்கும். பொருளாதாரத் தடைகளிலிருந்தும் அவர்களுக்கு விடுதலை கிடைக்கும். புதிய அரசியல் அமைப்புச் சட்டத்தின்படி வயதுவந்தோர் வாக்குரிமை அளிக்கப்படுகிறது. நிர்வாகத்தின் பல்வேறு துறைகளைப் பெண் அமைச்சர்கள் நிர்வகித்து வருகிறார்கள். நம் இல்லத்தரசிகளாக விளங்கும் பெண்களின் உரிமைகளுக்கு எல்லைக் கோடு போடமுடியாது. பராமரிப்பு மட்டுமே அவளுக்குரிய உரிமை; மற்ற உரிமைகள் அவளுக்கு இல்லை என்று கூற முடியாது. அது பெரும் அநீதியாகும். அது நமது பண்டைய சட்டங்களுக்கு முரணானதாகும். இடையில் அறிமுகப்படுத்தப்பட்டவைகள் அந்தக் குறிப்பிட்ட சூழ்நிலைகளுக்கு, அந்நாட்களின் நிலைமைகளுக்குப் பொருத்தமாக இருந்திருக்கலாம். அவையெல்லாம் வழக்கற்றுப் போய்விட்டன. இந்து மதத்தின் பகுதியல்ல அவை. அவை களையப்படவேண்டும். இந்தக் காட்டுப் புதர்களை ஒழித்துவிட்டு வேதகால சிந்தனைகளுக்குச் செல்ல வேண்டும். இதுதான் சுருக்கமாக நான் கூற விரும்புவதெல்லாம். ஒவ்வொருவரையும் இதை ஆழ்ந்து பரிசீலிக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கே. சந்தானம் (போக்குவரத்து மற்றும் ரயில்வே துறைகளுக்கான ராஜாங்க அமைச்சர்): விளக்கத்துக்காக ஒரு கேள்வி கேட்கலாமா? கணவனின் குடும்பத்தில் ஒரு பெண் பங்குரிமையாளரானால் அவள் பங்கு கணவனின் பங்கின் பகுதியாக இருக்குமா அல்லது தனியாக இருக்குமா?

டாக்டர் பக்ஷி தேக் சந்த் : அவர்கள் கூட்டாக இருக்கும் வரையில் அது குடும்பத்தின் கூட்டுடைமையாகத்தான் இருக்கும். அதாவது நீங்களும் உங்கள் மகன்களும் சொத்தில் பங்குரிமையாளர்களாக இருப்பதுபோல. ஆனால் பாகம் ஏற்படுகிற நிலையில் அவள் பங்கு தனியாகிறது. ஒரு மகனைப்போல் அது ஒரு புதிய சேர்க்கை. எந்தக் குழப்பமும் இல்லை.

மதிப்பிற்குரிய ஓர் உறுப்பினர் : ஐயா, இப்பொழுது கேள்வி கேட்கலாமா?

மதிப்பிற்குரிய சில உறுப்பினர்கள் : இல்லை, இல்லை.

மௌலானா ஹஸரத் மோகனி (உ.பி. முஸ்லீம்) : நான் ஐந்து நிமிடங்களே எடுத்துக் கொள்வேன்.

மதிப்பிற்குரிய சில உறுப்பினர்கள் : எழுகின்றனர்.

திரு. துணை சபாநாயகர் : அமைதி அமைதி. உறுப்பினர்கள் யாவரும் தயவு செய்து இருக்கையில் அமர்வீர்களா? பேசுவதற்கு அதிக எண்ணிக்கையிலான உறுப்பினர்களுக்கு ஆர்வம் இருப்பதைக் காண்கிறேன். ஆனால் நான் நேற்றுக் கூறியபடி இந்த வேகத்தில் சென்றால், நாம் ஒரு மாதம் அல்லது இரண்டு மாதங்கள் விவாதித் தால்கூட நேரம் இருக்காது. உறுப்பினர்கள் தங்கள் பேச்சை ஓர் அளவோடு நிறுத்திக்கொள்ள மறுக்கிறார்கள். இந்துச் சட்டத் தொகுப்பு இந்துக்களுக்கான சட்டம் மட்டுமல்ல. இந்து திருமணச் சட்டம் ஜைனர்களுக்கும், சீக்கியர்களுக்கும் பொருந்தக் கூடியது. அது முஸ்லீம்கள், கிருஸ்தவர்கள் மற்றும் பார்சிகளுக்குப் பொருந்துவ தில்லை. (குறுக்கீடு).

மதிப்பிற்குரிய ஓர் உறுப்பினர் : அதிலுள்ள சில விதிகள் மற்றவர்களையும் பாதிக்கிறது.

திரு. துணை சபாநாயகர் : சபாநாயகர் பேசிக் கொண்டிருக் கையில் எந்த உறுப்பினரும் எழுந்திருகக்கக் கூடாது என்பதை மதிப்பிற் குரிய உறுப்பினர்கள் நன்கு அறிவர். நான் அதை உங்களுக்கு நினைவு படுத்த வேண்டியது அவசியமில்லை. எனவே ஜெயின் சமூகத்தைச் சேர்ந்த ஒருவரையும், சீக்கிய சமுதாயத்தைச் சேர்ந்த ஒருவரையும் பிறகு மற்றவர்களையும் பேச அழைக்கத் தீர்மானித்துள்ளேன். பேரா சிரியர் கே.டி. ஷா.

திரு. எச்.ஜே. காண்டேகர் (ம.மா. மற்றும் பேரார் : பொது) : ஏன் ஹரிஜனங்களை அழைக்கக்கூடாதா?

மௌலானா ஹஜரத் மோகினி : எழுகிறார்.

திரு. துணை சபாநாயகர் : இந்த மதிப்பிற்குரிய உறுப்பினரை நான் அழைக்கப்போவதில்லை. இப்பொழுது நான் மற்றவர்களிட மிருந்து ஆரம்பிக்கிறேன்.

மாண்புமிகு திரு. சத்யநாராயண சின்கா (நாடாளுமன்ற நடவடிக்கைகளுக்கான ராஜாங்க அமைச்சர்) : நான் ஒரு யோசனைக்

கூற விரும்புகிறேன். அவை ஒத்துக் கொள்ளுமானால் இன்று இரவு 7 மணி வரையிலும் அதற்கு மேலும் கூட நாம் அமரலாம். உறுப்பினர்கள் இதை ஏற்றுக் கொள்ளாவிட்டால், இன்னும் பலர் பேச விருப்பம் தெரிவித்திருப்பதால், நாம் சனிக்கிழமையும் அமரலாம். இந்த அலுவலுக்காக அரை நாள் ஒதுக்க அரச தயாராக உள்ளது. சனிக்கிழமை கேள்வி நேரம் இருக்கப்போவதில்லை. மதிய உணவிற்கு முன்பு நமக்கு இரண்டரை மணி நேரத்திற்கும் அதிகம் கிடைக்கும். அது உங்கள் நோக்கத்திற்கு ஒத்துவருவதுடன் இந்த அவை ஏற்றுக் கொள்ளுமானால் அது எல்லாத் தடங்கல்களையும் தவிர்க்க உதவும்.

திரு. துணை சபாநாயகர் : அது ஒரு நியாயமான யோசனை என்றுதான் நினைக்கிறேன். சனிக்கிழமை அவை கூடுகிறது என்று நான் ஏற்கெனவே கூறிவிட்டேன். அதிலிருந்து நாம் பின்வாங்கப் போவதில்லை. உடனடியாகக் கவனிக்க வேண்டிய பொது அலுவல்கள் காரணமாக சனிக்கிழமை நாம் கூட வேண்டிய அவசியம் ஏற்பட்டால் அதனால் உலகம் அழிந்துவிடாது. குழுக் கூட்டங்களுக்காக நாம் சனிக்கிழமைக் கூடுகிறோம். அன்றைய தினம் பொறுக்குக் குழு கூட்டங்களை ரத்து செய்யும்படி அரசை நான் கேட்டுள்ளேன். பொறுக்குக் குழு கூட்டங்கள் சனிக்கிழமையில் கூட ஏற்பாடு செய்யாமல் பார்த்துக் கொள்கிறேன். இந்துச் சட்டத் தொகுப்புப் பற்றிய விவாதத்தில் அவர்கள் பங்கு கொள்வதற்காக மற்ற எல்லா நாடாளுமன்ற பணிகளிலிருந்தும் மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் விடுவிக்கப் படுவார்கள்.

வேறு பிற அலவல்களுக்காக சனிக்கிழமையை ஒதுக்க எண்ணியிருந்தும் இந்து சட்டத் தொகுப்பை விவாதிப்பதற்காக அதை ஒதுக்கத் தயாராக இருப்பதாக அரசின் சார்பாக நாடாளுமன்ற நடவடிக்கைகளுக்கான மாண்புமிகு அமைச்சர் ஆலோசனை கூறியுள்ளார். அதிக உறுப்பினர்கள் பேச வேண்டும் என்று ஆர்வத்துடன் இருப்பதால் சனிக்கிழமையை ஒதுக்க அவர்கள் தயாராக உள்ளனர். முற்பகல் அதிகாரபூர்வமற்ற உறுப்பினருக்காகவும் பிற்பகல் சட்ட அமைச்சரின் பதிலுக்காகவும் ஒதுக்கப்பட்டுள்ளது. அது தவிர அவையின் ஒப்புதலுக்கு அவர் மேலும் ஓர் ஆலோசனையை முன்வைத்துள்ளார். அதை ஏற்றுக் கொள்வதோ அல்லது நிராகரிப்பதோ அவர்கள் கையில்தான் உள்ளது. பல உறுப்பினர்கள் பேசுவதற்கு ஆர்வத்துடன் இருப்பதால் நாம் இன்று 7 மணிவரை அமரலாம். இன்று ஐந்து மணிக்கு அதை முடிவு செய்வோம். அப்பொழுது இந்த அவை

களைத்துவிட்டதா அல்லது சுறுசுறுப்புடன் விவாதத்தைத் தொடர லாமா என்பதைக் காண்போம். தனிப்பட்ட முறையில், தலைவரும் குழுவில் உள்ள நண்பர்களும் நானும் 7 மணிவரை அமருவதற்குத் தயாராக உள்ளோம். இந்த விஷயத்தைப் பொறுத்தவரையில் நான் முற்றிலும் அவையின் விருப்பத்திற்குக் கட்டுப் பட்டுள்ளேன்.

மாண்புமிகு திரு. சத்யநாராயண சின்கா : ஐயா, இந்த சட்டத் தொகுப்பைக் குறித்த விவாதத்திற்காக சனிக்கிழமை அரைநாள் ஒதுக்க அரசு தயாராக உள்ளதாக, அதன் சார்பாக நான் கூறினேன். இதற்காக முழு நாளும் ஒதுக்கப்படும் என்று ஏற்கெனவே நீங்கள் கூறிவிட்டீர்கள். அரசு அதை ஏற்றுக்கொள்ளும்.

திரு. துணை சபாநாயகர் : நான் கூறிய ஆலோசனையை அரசு ஏற்கும் என்று நம்புகிறேன்.

பண்டிட் கோவிந்த மாளவியா (உ.பி. பொது) **:** உங்களுடைய முடிவைப் பொறுத்தவரையில் நான் இதைத் தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கிறேன். சனிக்கிழமை அலுவல் அறற நாளாக இருக்கும் என்ற எண்ணத்தில் வேறு இடங்களில் சில முக்கிய தவிர்க்க முடியாத நிகழ்ச்சிகளுக்கு ஒத்துக் கொண்டுள்ளோம். என்னைப் பற்றிக் கூறுவேனாகில், அன்றைய தினம் எனக்கும் சில முக்கியமான தவிர்க்க முடியாத நிகழ்ச்சிகள் உள்ளன. எனவே இந்த விஷயங் களையும், நீங்கள் கவனத்தில் எடுத்துக் கொள்வீர்கள் என்று நம்பு கிறேன். சனிக்கிழமை அலுவல் தினமாக இருக்கும் என்பது தெரிந் திருந்தால் நாங்கள் அவற்றை ஏற்றுக் கொண்டிருக்க மாட்டோம். இப்பொழுது எங்கள் நிகழ்ச்சிகள் அனைத்திலும் குழப்பம் ஏற்படும். எனவே இந்த முக்கியமான நடவடிக்கையை விவாதிப்பதற்காக சனிக்கிழமைக்குப் பதிலாக வேறு ஒரு நாளை முடிவு செய்யலாம். இதை எளிதாக அரசே முடிவு செய்யலாம். சனிக்கிழமையன்று அரசு அலுவல்களை எடுத்துக் கொள்ளலாம். இந்த நடவடிக்கையை விவாதிப்பதற்காக வேறு ஒரு நாளை முடிவு செய்யலாம். எங்க ளுக்கு அதில் எந்த ஆட்சேபமும் இல்லை. இந்த விவாதத்தில் பங்கு கொள்ள விரும்பும் மற்றவர்கள், அந்த நாளில் வர முடியா விட்டால் அவர்களுக்கும் ஏதாவது வகைசெய்யப்பட வேண்டும் என்பதை அவை ஏற்றுக்கொள்ளும் என்று நம்புகிறேன்.

மாண்புமிகு திரு. சத்யநாராயண சின்கா : மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் திங்கள் அன்று கூடலாமென நினைத்தால் அரசுக்கு

எந்த ஆட்சேபமும் இருக்காது என நினைக்கிறேன். சனிக்கிழமை நாம் வேறு அரசு அலுவல்களைக் கவனிக்கலாம்.

திரு. அஜித் பிரசாத் ஜெயின் (உ.பி. பொது) : நாளையும் தொடர்ந்து இந்த மசோதாவின் விவாதத்தை முடிக்கக்கூடாதா?

மாண்புமிகு திரு. சத்தியநாராயண சின்கா : அரசு அலுவல் களைக் கவனிப்பதற்காக சனிக்கிழமை நாம் கூடுகிறோம். இந்த மசோதா சம்பந்தமான விவாதத்தை திங்கள் கிழமைக்குத் தள்ளி வைக்க அரசு தயாராக உள்ளது. ஆனால் எவ்வாறிருப்பினும், சனிக் கிழமை அலுவல் தினமாகத்தான் இருக்கும்.

மாண்புமிகு திரு. கே. சந்தானம் : சனிக்கிழமையை விட திங்கள் கிழமை குறைந்த நேரந்தான் இருக்கும். ஆனால் திங்கள் கிழமையில் விவாதத்தை முடித்துக் கொள்ளத் தயாரென்றால் ஆட் சேபனை ஏதும் இல்லை. ஆனால் இந்த ஒத்திவைப்பு இழுத்தடிக்கும் தந்திரமானால்....

திரு. துணை சபாநாயகர் : நமது நண்பர்கள் ஒத்துழைக்காம லிருப்பதைக் கண்டு நான் உண்மையிலேயே வருந்துகிறேன். பண்டிட் கோவிந்த மாளவியா மற்றும் வேறு சில மதிப்பிற்குரிய உறுப்பினர் களிடமிருந்து ஓர் ஆலோசனை வந்துள்ளது. அவர் ஒரு முக்கியமான உறுப்பினர் என்பதுடன் மசோதாவின் இந்தப் பக்கத்திலோ அல்லது அந்தப் பக்கத்திலோ அவர்கள் ஆர்வமாக செயல்படுகிறார். சனிக்கிழமை தவிர வேறு எந்த நாளிலும் விவாதத்தை எடுத்துக் கொள்ள அவர்கள் விரும்புகிறார்கள். அவர்கள் விருப்பத்தைக் கணக்கிலெடுத்துக் கொண்டு திங்கள் கிழமை அதை எடுத்துக் கொள்ளத் தயாராக உள்ளது. அரசின் பிரதிநிதி அவ்வாறுதான் தெரி வித்துள்ளார். திங்கள் கிழமை கேள்வி நேரம் இருக்கும் என்பது மதிப்பிற்குரிய உறுப்பினர்களுக்குத் தெரிந்திருக்கும். இது நன்கு தெரிந்திருந்தும் இந்த நாளை அவர்கள் ஒத்துக் கொண்டுள்ளனர்.

திரு. ரோகிணி குமார் சௌதுரி : ஐயா, சில காரணங்களுக் காக சனிக்கிழமை எங்களுக்கு விடுமுறை அளிக்கப்பட்டுள்ளதை மிகவும் வணக்கத்துடன் உங்களுக்குச் சுட்டிக் காட்ட விரும்பு கிறேன். ஏதாவது முக்கியமான காரணம் இருக்குமானால், அந்த விடுமுறையை இழக்கவும் தயாராக உள்ளேன். இப்பொழுது எவ்வளவு விரைவில் முடியுமோ அவ்வளவு விரைவில் இந்த

மசோதாவை அரசு முடிவு செய்யத் தயாராக உள்ளதா, அதில் அதற்கு நம்பிக்கை உள்ளதா? இந்த மசோதாவுக்கு ஏன் இந்த அவசரம்? அதிக முக்கியத்துவம் வாய்ந்த வேறு மசோதாக்கள் உள்ளன. உங்கள் கருத்துப்படி இந்தக் கூட்டத் தொடரிலேயே நிறைவேற்றப்பட வேண்டிய காப்பீட்டு மசோதா உள்ளது. இந்த மசோதா....

திரு. துணை சபாநாயகர் : மதிப்பிற்குரிய உறுப்பினர் தமது இருக்கையில் அமரட்டும். இந்த மசோதாவை முடிவு செய்ய எவ்வித அவசரமும் இல்லை என்று பல மதிப்பிற்குரிய உறுப்பினர்களிட மிருந்து எதிர்ப்புக் குரலைக் கேட்கிறேன். இந்த விஷயத்தைப் பொறுத்த வரையில் இந்த அவையில் கருத்தொற்றுமை இல்லை என அஞ்சுகிறேன். கருத்தொற்றுமை இருந்தால் இது போன்று நேரத்திற்காக நாம் விவாதித்துக் கொண்டிருக்க மாட்டோம். இந்த விஷயத்தைப் பொறுத்தவரையில் கருத்து வேறுபாடுகள் உள்ளன என்பது நன்கு தெரிந்ததே. மதிப்பிற்குரிய ஓர் உறுப்பினர் தெரிவித்த யோசனையின் அடிப்படையில் இந்த அவையின் கருத்தை எடுத்துக் கொள்ள விரும்பவில்லை.

சனிக்கிழமை, இந்து சட்டத் தொகுப்பைத் தவிர பிற அலுவல் களை கவனிக்கும் அதிகாரபூர்வ அலுவல் தினமாக இருக்கும் என்பது இப்பொழுது தெளிவாகிவிட்டது. மதியம் வரை அதிகாரபூர்வமற்ற உறுப்பினர்களைப் பேச அழைப்பதாக உள்ளேன். பிற்பகலில் மாண்புமிகு டாக்டர் அம்பேத்கரை பதிலளிக்க அழைப்பதாகத் தீர்மானித்துள்ளேன்.

திரு. மகாவீர் தியாகி : எங்களில் பலர் உங்கள் கவனத்தை ஈர்க்க வேண்டுமென்று காத்திருக்கின்றனர். இந்துச் சட்டத் தொகுப்பைக் குறித்து இந்துக்கள் யாரையும் இனி பேச அனுமதிக்கப் போவதில்லை என்பதே உங்கள் முடிவு என்று எடுத்துக் கொள்ள லாமா?

திரு. துணை சபாநாயகர்: நான் அப்படிக் கூறவில்லை. அப்படிக் கூறவும் மாட்டேன். மதிப்பிற்குரிய உறுப்பினர் மிகவும் கவனத்துடன் இருந்தாலும், துரதிர்ஷ்டவசமாக என்னைத் தவறாகப் புரிந்து கொண்டிருக்கிறார். நான் கூறியதெல்லாம், இந்த மசோதா சீக்கியர்களையும், ஜைனர்களையும் அதே அளவிற்கு கட்டுப்படுத்தும் என்றாலும் ஜைனர் அல்லது சீக்கிய உறுப்பினர் ஒருவர் கூடப் பேசவில்லை.

திரு. எச்.ஜே. கண்டேகர் : ஹரிஜனங்களைப் பற்றிய நிலை என்ன?

திரு. துணை சபாநாயகர் : மசோதாவை முன்மொழிந்தவரே ஹரிஜனங்களில் தலைவர். ஹரிஜனங்கள் இந்து சமூகத்தைச் சேர்ந்தவர்கள் இல்லை என்று கூறுவது சரியல்ல மற்றவர்களின் அளவுக்கு ஹரிஜனங்களும் இந்துக்களே என்று நான் நினைக்கிறேன். இந்த ஜாதி உணர்வை மேலும் தொடர வேண்டியதில்லை.

நான் கூறியதெல்லாம் மற்ற உறுப்பினர்களைவிட ஜைனர் மற்றும் சீக்கிய உறுப்பினர்களுக்கே அதிக முன்னுரிமை கொடுக்க வேண்டும் என்பதுதான். வேறு யாருக்கும் வாய்ப்பளிக்கக் கூடாது என்பதல்ல என் எண்ணம்.

மாலை 4 மணி

இப்பொழுதுள்ள நிலையில், அரசின் ஆலோசனை மிகவும் நியாயமானதாகத் தெரிகிறது. இந்த மசோதாவின் விவாதத்தில் அரசு அதிக நாட்கள் செலவழித்துள்ளது மேலும் ஒரு நாள் ஒதுக்கியுள்ளது. திங்களன்று மேலும் தொடரவேண்டுமென்று அவையின் பொதுவான விருப்பமாக இருந்தால் நான் முற்றிலும் அவையின் கருத்துப்படியே செயல்படுவேன். தலைவரைப் பொறுத்தவரையில் போதுமான அளவு விவாதங்கள் நடைபெற்றுவிட்டன என்ற திருப்திதான்.

திரு. மகாவீர் தியாகி : இதை நான் கண்டிக்கிறேன். தலைவரின் கருணைக் கண்கள், வர்க்கம், ஜாதி, சமயக் கோட்பாடுகளுக்கிடையே வேற்றுமை காணக்கூடாது. பெரும்பான்மை அல்லது சிறுபான்மை என்று வேறுபாடின்றி உங்கள் பார்வை அவையைச் சுற்றி வரவேண்டும்.

திரு. துணை சபாநாயகர் : மதிப்பிற்குரிய உறுப்பினர் என்னை முற்றிலும் தவறாகப் புரிந்துகொண்டிருக்கிறார். சில சமூகங்களைப் பாதிக்கும் மசோதா ஒன்று விவாதத்துக்கு வரும்பொழுதெல்லாம் எல்லாச் சமூகங்களின் பிரதிநிதிகளுக்கும் தங்கள் கருத்துகளை வெளிப்படுத்த ஒரு வாய்ப்பு அளிக்கவேண்டும். நமது மதிப்பிற்குரிய உறுப்பினர் இந்த மசோதாவைப் படித்துப் பார்த்தால் இந்த மசோதாவின் நோக்கம் ஜைனர்கள் மற்றும் சீக்கியர்களையும் உள்ளடக்கியுள்ளது. இந்துக்களில் பலர் ஏற்கெனவே பேசிவிட்டனர். எனவே நான் இப்பொழுது சில ஜைனர்களையும் சீக்கியர்களையும் பேச

அனுமதிக்க வேண்டும். நாம் மசோதாவின் ஒவ்வொரு கூறாக விவாதிக்கும் முன் அவர்களுடைய கருத்துகளை நாம் தெரிந்துகொள்ள வேண்டும்.

திரு. மகாவீர் தியாகி : நான் கண்டிக்கிறேன்.

திரு. துணை சபாநாயகர் : இதை என்னால் பொறுத்துக் கொள்ள முடியாது. இந்த மாதிரிப் பேசுவது கண்ணியமற்றது என்பதைத் தயவு செய்து உறுப்பினர் கவனத்தில் கொள்ள வேண்டும்.

★**பேராசிரியர் கே.டி. ஷா** (பீகார் பொது) : ஐயா, ஆரம்பத்தில் இந்த மசோதா அறிமுகப்படுத்தப்பட்டபோது இந்தத் தீர்மானம் அவை முன் வந்தபோது விவாதத்தில் பங்கெடுக்க எனக்குப் பெரும் ஆவல் இருக்கவில்லை. ஆனால் இப்பொழுது விவாதம் இந்த அளவுக்கு வந்திருக்கையில் இந்த அவைமுன் பல்வேறு கருத்துகள் வைக்கப்பட்டிருப்பதால், கட்சியின் மேலிடக் கட்டளையின்படி வாக்களிப்புக்குச் சுதந்திரம் அளித்திருப்பதால் இந்தத் தீர்மானம் மற்றும் மசோதாவைக் குறித்து சில கருத்துகளைத் தெரிவிக்க வேண்டியது அவசியம் என்று உணர்கிறேன். அவை மாண்புமிகு சட்ட அமைச்சர் மற்றும் அவரது சகாக்களாலும் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்படும் என்று நம்புகிறேன்.

ஐயா, இந்த விஷயத்தில் பேசுவதற்கு ஜைனர் என்ற முறையில் என்னை அழைத்ததாக நீங்கள் மகிழ்ச்சியுடன் கூறினீர்கள். இந்த அவையின் உறுப்பினர் என்ற நிலையில்தான் இங்கு நான் நிற்கிறேன். எந்தச் சமூகத்தின் சார்பாகவும் பேச உரிமையோ, தனிச் சலுகையோ நான் கோரமுடியாது. என்னை நான் ஓர் இந்தியக் குடிமகன் என்று தான் அழைத்துக் கொள்கிறேன். இந்த மாதிரி விவாதங்களில் பங்கு கொள்வதற்கு எந்தக் குறிப்பிட்ட சமயக் கோட்பாடுகளிலாவது நம்பிக்கை வைத்திருக்கவேண்டுமென்று நான் கருதவில்லை. இந்த அவையின் உறுப்பினர் என்ற முறையில் பேசுகிறேன்.

ஸ்ரீ ரோகிணி குமார் சௌத்திரி: ஓர் ஒழுங்குப் பிரச்சினை. ஐயா, நீங்கள் பேராசிரியர் ஷாவை ஜைனர்கள் சார்பாகப் பேச அழைத்தீர்கள். ஆனால் அவர் ஜைனர்களை பிரதிநிதித்துவப்படுத்துவதாக உரிமை கொண்டாடவில்லை என்கிறார்.

★ அ.நி.வி. (சட்) டி., தொகுதி VI, பிரிவு II, 13 டிசம்பர் 1949, பக்கம் 602-607.

திரு. துணை சபாநாயகர் : *அது ஓர் ஒழுங்குப் பிரச்சினை அல்ல.*

பேராசிரியர் கே.டி. ஷா : *இன்னும் அங்கீகரிக்கப்படாத ஓர் எதிர்ப்பு அணியை உருவாக்க நான் முயற்சி செய்திருந்தாலும், இந்த மசோதாவின் அடிப்படையான சட்டவிதிகளை நான் பொதுவாக ஆதரிக்கப் போகிறேன் என்பதை அதே நேரத்தில் எடுத்துக் கூற வேண்டும். எதிரணியில் இருப்பதாக வெளிப்படையாகத் தெரிவித்துக் கொள்ளும் உறுப்பினர் ஒருவரிடமிருந்து, அரசியல் அமைப்புச் சட்டத்தின் விதிகள் ஒவ்வொன்றையும் நிரந்தரமாக எதிர்த்து வந்துள்ளவரிடமிருந்து மற்றும் இந்த அரசு கொண்டுவர முயற்சி செய்த ஒவ்வொரு சீர்திருத்த மற்றும் சமுதாயக் கட்டுக்கோப்பு மாற்றம் சம்பந்தமான சட்டங்களை எதிர்த்துவந்துள்ள ஒருவரிடமிருந்து இது வந்துள்ளது. மசோதாவுக்கு நான் அளிக்கும் இந்த நிபந்தனையற்ற முழுமையான ஆதரவு அதற்குரிய மரியாதையுடன் ஏற்றுக் கொள்ளப் படும் என்று நம்புகிறேன். சாத்தான் கூட வேதம் ஓதும் என்ற பழமொழியின்படி என்னிடமிருந்து வரும் எந்த ஆதரவும் சந்தேகக் கண்ணுடன்தான் பார்க்க வேண்டும் என்று அரசு கருதாமலிருந்தால், என் ஆதரவு வரவேற்கப்படும். ஆனால் அதுதான் அவர்கள் கருத்து என்றால், இந்த மசோதாவுக்கு என்னைவிட வலுவான எதிர்ப்பை யாரும் அளிக்க முடியாது.*

ஐயா, இவ்வகைக் கருத்துகளைக் கொண்டிருக்கும் நான், என் ஒத்துழைப்பை அளிப்பதுடன், நகைச் சுவையற்ற மக்கள் நாம் என்ற குற்றச்சாட்டுக்கு இலக்காகும் அபாயம் இருந்தாலும்கூட, விவாதத்தின் முக்கியத்துவத்தைக் குறைக்கும் வகையிலோ, அலட்சியப் போக்கான தன்மையுடனோ, உதாரணங்களை அள்ளிவீசி நான் பேசப் போவதில்லை என்பதை இந்த அவைக்கு மிக்க மரியாதை யுடனும், பணிவன்புடனும் தெரிவித்துக் கொள்கிறேன். நம் நாடு தொடர்ந்து அழியாது நிலைத்து நிற்பதற்கே இந்த விஷயம் மிக முக்கியமானதென்று கருதுகிறேன். இந்த மசோதா மிக முக்கியமான விளைவுகளை ஏற்படுத்தும் என்று கருதுகிறேன். இவ்விஷயத்தில் நாம் போதுமான அக்கறையுடன் நடந்து கொள்ளவில்லையென்று வெளியார்கள், பார்வையாளர்கள், இவ்விஷயத்தில் மாணவராக இருப்பவர்கள் நினைக்கும்படி என் பேச்சில் எவ்வித உதாரணங் களையோ, சொற்றொடர்களையோ நான் அனுமதிக்கப் போவ தில்லை.

இக்கருத்துகளைத் தெரிவித்த பிறகு, எழுப்பப்பட்ட சில ஆட்சேபனைகளையும், இந்த மசோதாவின் அடிப்படைக் கோட்பாடு மற்றும் மசோதாவின் பொருள் சம்பந்தமாக வலியுறுத்தப்பட்ட வாதங்களையும் பரிசீலிக்கத் தொடங்குவோம். இத்தகைய விஷயங்களைக் கையாள இந்த அவைக்குத் தகுதி உள்ளதா, இந்த மசோதாவில் அடங்கியுள்ள விஷயங்களைத் தீர்மானிக்கும் தகுதியுடன் இந்த அரசு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதா, இந்தப் பிரேரணையைத் தீர்மானிக்க இந்த அரசுக்கு அனுமதியளிக்கும் அளவுக்கு அவ்வளவு அவசரமானதா இந்தப் பிரச்சினை என்ற சவால்கள் எழுந்துள்ளன. இத்தகைய விஷயங்களைத் தீர்மானிக்க அவைக்குத் தகுதியுள்ளதா என்ற· கேள்வி இருக்க முடியாது அல்லது இருக்கக்கூடாது என்று நினைப்பவன் நான். அரசியல் அமைப்புச் சட்டம் உட்பட சமுதாயக் கட்டுக்கோப்பில் மாற்றம் கொண்டு வரும் பல சட்ட நடவடிக்கைகள் இந்த அவையில் முன்மொழியப்பட்டு, நிறைவேற்றப்பட்ட பல உதாரணங்களை'எனக்கு முன் பேசிய மதிப்பிற்குரிய உறுப்பினர் எடுத்துரைத்தார். இதைவிட மிக முக்கியமான சீர்திருத்தங்களைக் கூட, இந்தச் சட்டமன்றத்துக்கு முந்தைய சட்டமன்றம், இந்த அளவிற்கு இறையாண்மை பெற்றிராவிடினும், நிறைவேற்றியுள்ளது. எனவே இத்தகைய விஷயங்களைத் தீர்மானம் செய்வதற்கான தகுதி பற்றிய கேள்வி சம்பந்தமற்றதும், தகுதியற்றதும் ஆகும் என்று எனக்குத் தோன்றுகிறது. இவ்வாறு கூறுவது இந்தச் சட்டமன்றத்துக்கு மிகவும் மரியாதைக் குறைவு என்றுகூடக் கூறுவேன். தனிப்பட்ட முறையில் இந்தப் பிரச்சினை வாக்காளர்கள் முன் வைக்கப்படவில்லை என்பது உண்மைதான். இந்த அவைக்கு நாம் எந்த அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்டோம் என்பதை நினைத்துப் பார்த்தால், சுதந்திரம் பெறுவது, அரசியல் சாசனம் ஒன்றை உருவாக்குவது என்பதைத் தவிர வேறு எந்தக் குறிப்பிட்ட பிரச்சினையின் அடிப்படையிலும் இந்த அவை தேர்ந்தெடுக்கப்படவில்லை என்பதை உணர்வீர்கள். இந்த வாதத்தை மேலும் விரிவுபடுத்தினால், இந்த அவை நிறைவேற்றியுள்ள பல சட்டங்கள் சட்ட விரோதமானவையாகவோ, அல்லது செல்லுபடியாகாதவையாகவோ ஆகிவிடும். எனவே, இந்த மாதிரியான விஷயங்களை பரிசீலித்து முடிவு செய்ய இந்த அவையின் செயல்பாட்டின் தவறின்மையையும் அதற்குள்ள அதிகாரத்தையும் தகுதியையும் குறித்து சந்தேகம் எதையாவது எழுப்புவதற்காக இத்தகைய கருத்துகள் எதையாவது முன்வைப்பதை நான் விரும்பவில்லை.

மாலை நேரம் 4 மணி

ஐயா, பொதுத் தேர்தல்களிலும் கூட, ஒவ்வொரு பிரச்சினை யையும் தனித்தனியாக அலசி ஆராய்வது நடக்கக்கூடிய காரியமல்ல. பலதரப்பட்ட பிரச்சினை களின் அடிப்படையில், தேர்தலில் எப்பொழுதுமே போட்டிகள் நடைபெறுவது, பொதுத் தேர்தல்களில் அனுபவமுள்ளவர்களுக்குத் தெரிந்திருக்கும். எனவே நாம் இப்பொழுது விவாதித்துக் கொண் டிருக்கும் பிரச்சினை போன்ற சிக்கலான பிரச்சினைக்குப் பெரும் பான்மை உள்ளதா என்பதைத் தேர்தல்களில் தெளிவாகச் சுட்டிக் காட்டப்படுவதில்லை. கருத்துக் கணிப்பு போன்ற முறைகளுக்கு அரசியல் அமைப்புச் சட்டம் வழிவகுக்கவில்லையென்றால் திரு. கோகுல்பாய் பட் கூறியது போன்று அரசியல் அமைப்புச் சட்ட வழிமுறை இல்லையென்றால் இத்தகைய பிரச்சினைகளில் மக்களின் தெளிவான முடிவுகளைத் தெரிந்துகொள்வது முற்றிலும் சாத்திய மில்லை என்று கூறாவிடினும் அது மிகக் கடினமான விஷயம் என்று கூறலாம். பொதுமக்கள் கருத்துகளைப் புரிந்து கொள்வதில் எந்தவித சரியான வழிமுறை எதுவும் இல்லை. அப்படியிருப்பினும், இந் நாட்டில் பொதுக்கல்வியின் நிலைமை, சில தனிப்பட்டவர்களின் கட்டுப்பாட்டில் பத்திரிகைகள் இருக்கும் நிலை, மேலும் இம்மாதிரி விஷயங்களில் வாக்காளர்களுக்குள்ள அனுபவமின்மை ஆகிய காரணங்களினால் மக்களின் தீர்ப்பு தகுதியானதாக இருப்பினும் சரியானதாக இருக்குமா என்று பலர் கேட்கக்கூடும். இம்மாதிரி யான விவாதம் அவையின் முடிவைப் பாதிக்கக்கூடாது என்று கூறுகிறேன். மசோதாவை விவாதிப்பதில் மட்டும் நம்மைக் கட்டுப் படுத்திக் கொள்ளவேண்டும். எல்லாத் தரப்புகளும் இவ்வாறே நடந்து கொள்வதில் நான் மகிழ்ச்சியடைகிறேன்.

இம்மசோதாவை எதிர்ப்பவர்களின் கருத்துகளுக்குத் தனிப் பட்ட முறையில் பெருமதிப்பு வைத்துள்ளேன். எனவே, இது சுயநலக் கும்பலின் எதிர்ப்பென்றோ, குறுகிய நோக்கத்துடனோ அல்லது ஆதாய நோக்கத்தில் உருவானவை என்றோ நான் கூறத் தயாரில்லை. ஐயா, பல நேர்வுகளில் அவர்கள் கொண்டுள்ள கருத்துகளுக்கு மிக முக்கியமான அடிப்படைக் காரணங்கள் உள்ளன என்பதை உணர்ந் துள்ளேன். துரதிர்ஷ்டவசமாக, அவர்களிடமிருந்து மாறுபட்ட கருத்தை நான் கொண்டிருந்தாலும், அந்தக் காரணத்திற்காக அவர் களுடைய கருத்துகள் நமது ஆழமான பரிசீலனைக்குத் தகுதி யற்றவை என்று கூறமாட்டேன். இந்த நிலையிலிருந்து கொண்டு, இந்த விஷயத்தை வேகவேகமாக முடிக்க வேண்டிய அவசியத்தைக் குறித்துக் கேள்வி எழுப்பியவர்களின் வாதங்களில் மிகப் பெரும்

வலிமை இருப்பதாக உணர்கிறேன். விவாதம் ஒத்தி போடப் பட்டாலும் இந்த விவாதத்திற்குக் கொடுக்கப்படுவதாக உள்ள நேரத்தைவிட மிக அதிக நேரம் ஒதுக்கப்படவேண்டும். இதைக் கூறுவதன் மூலம் என்னைத் தவறாகப் புரிந்துகொள்ளக் கூடாது. இந்த விஷயத்தைக் காலவரையின்றி ஒத்திவைக்க நான் விரும்பு வதாக என்னை நீங்கள் புரிந்துகொள்ளக் கூடாது. இந்த அவையின் அதிகாரவரம்பை நான் கேள்வி கேட்க முடியாது. இந்த விஷயம் குறித்து முடிவாக ஒரு தீர்மானத்தை இந்த அவை வழங்கவேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன். நாம் இதனை ஏற்றுக் கொண்டாலும் கூட அடுத்துவரும் அவை இதை ஏற்றுக் கொள்வதற்கு எந்த உத்தர வாதமும் இல்லையென மதிப்பிற்குரிய உறுப்பினர்களில் ஒருவர் கூறிய கருத்தை நான் முற்றிலும் புரிந்து கொண்டாலும், ஒரு தடவை ஒரு பாதைக் காட்டப்பட்டுவிட்டால், திசைகாட்டிக் கம்பம் நடப் பட்டால், பாதை அமைக்கப்பட்டால், என்ஜினை மறுதிசைக்குத் திருப்பிச் செலுத்தி பின்னுக்கு செல்வது கடினமான விஷயமாகும். இருப்பினும் இது அறிவின் அடிப்படையிலானது என்பதைவிட நம்பிக்கையின் அடிப்படையிலான விஷயம். அறிவுபூர்வமான நம்பிக்கையின் அடிப்படையிலானது என்பதைவிட பொதுவான நம்பிக்கையின் அடிப்படையிலான விஷயமாகும். இந்த விஷயத்தில் நான் திறந்த மனதுடன் உள்ளேன். இந்த மசோதாவிலுள்ள விதிமுறை களின் நியாயத்துக்கு எதிராக வலியுறுத்தப்பட்ட முக்கியமான கருத்து களைக் கவனத்தில் எடுத்துக் கொள்கையில், இந்த மசோதாவின் விதிமுறைகளையும், பல அத்தியாயங்களையும் பல பிரிவுகளையும் எதிர்த்து வாதாடியவர்களுக்கு ஆதரவு அளிக்க முடியாது என்று உணர்கிறேன். நான் பார்த்தவரையில் பெண்களின் நிலையைக் குறித்துதான் முக்கியமான பிரச்சினை இருப்பதாகத் தெரிகிறது. இந்த விவாதத்தைக் கொஞ்சம் நகைச்சுவையுடன் நடத்த வேண்டுமென்று எனக்குச் சிறிதளவு ஆசைகூடக் கிடையாது என்பதை ஏற்கெனவே எடுத்துக் கூறினேன். எனவே இந்த விஷயம் குறித்த விவாதத்தில் முன் வைக்கப்பட்ட சில கருத்துகள், சில வாதங்கள் என்னை உணர்ச்சி யற்றவனாக ஆக்கிவிட்டன. மதம், பால், வர்க்கம், மதக் கோட்பாடு ஆகியவைகளில் எந்தப் பிரிவைச் சேர்ந்தவர்களானாலும் சம உரிமை களைக் கொண்ட குடிமக்களின் நாட்டை நாம் உருவாக்கிக் கொண் டிருக்கிறோம். அந்தக் கோட்பாட்டின் அடிப்படையில்தான் நம் நிலைப்பாடு இருக்குமேயானால் அதுவே நமது அரசியல் அமைப்புச் சட்டத்தின் முகப்புரையென்றால், அதுவே இந்நாட்டில் உருவாக்கப் போகும் வாழ்க்கை முறையின் வழிகாட்டும் நெறிகள் என்றால், இந்த மசோதாவின் விதிமுறைகள் அரசியல் அமைப்புச் சட்டத்தின்

முகப்புரையில் விவரிக்கப்பட்டுள்ள லட்சியங்களுக்கு முற்றிலும் ஒத்திருக்கின்றன என்று நினைக்கிறேன். எனவே இப்பொழுது நம்மால் முன்மொழியப்படும் எதுவும், இந்த விதிமுறைகளுக்கு மாறுபட்டோ அல்லது அவைகளை இழிவுபடுத்துவதாகவோ இருக்குமாயின், அவை நம்மால் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. குடும்ப உறவுகள் சம்பந்தமாகவும், வாரிசுரிமை சம்பந்தமாகவும், சொத்து சம்பந்தமாகவும், திருமணம் மற்றும் விவாகரத்து சம்பந்த மாகவும் பெண்களுக்கு சமத்துவ உரிமை அளிக்க இந்த மசோதா எடுத்துள்ள முயற்சிகள் உலகிலுள்ள நிலைமைகளுக்கு ஒத்ததாக இருப்பதுடன் நமது நாட்டில் உருவாகிக் கொண்டிருக்கும் நிலைமை களுக்கும் ஏற்றவையாக உள்ளன. யதார்த்த நிலைமைகளையும், எல்லா இடங்களிலும் நிகழ்ச்சிகள் நடைபெற்றுவரும் போக்கை யும் முற்றிலும் உணர்ந்து கொண்டதன் விளைவாக ஏற்பட்ட நிலைமைகள் இவை, கடந்த பல காலங்களாக திருமணத்தைப் புனிதமாகக் கருதிவந்தோம். மசோதாவை நான் படித்துப் பார்த்த வரையில் இன்றும்கூட திருமணத்தைப் புனிதமாகக் கருத எவரை யும் தடுப்பதற்கு அதில் எதுவும் இல்லை. புனிதத் தன்மை என்பது உங்கள் இதயத்தைப் பொறுத்த விஷயம் மட்டுந்தான். அது உங்கள் இதயத்தின் படைப்பு. அது வெளியிலிருந்து திணிக்கப்படுவதல்ல என்பதைத் தைரியமாக உங்கள்முன் வைக்கிறேன். எவ்வளவோ புனிதமான விஷயங்கள் இன்னும் புனிதமாகவே கருதப்பட்டாலும், அவற்றின் புனிதத்தன்மை மிக மோசமான முறையில், அதில் சம்பந்தப் பட்ட தரப்புகளுக்கு அவமானம் அளிக்கும் வகையில் அழிக்கப்பட்டு வருகின்றன. கணவன் மனைவி உறவுகளுக்கு ஒரு குறிப்பிட்ட பண்பினைச் சட்டம் நிர்ணயம் செய்வதால் மட்டுமே புனிதத் தன்மை கெட்டுவிடாது. எவ்வாறாயினும், ஒரு திருமணத்தைப் பதிவுத் திருமணமாகவோ, சிவில் ஒப்பந்தமாகவோ சட்டம் அங்கீகரித்துப் பகிரங்கப்படுத்துகிறது. இத்தகைய திருமணங்களின் நோக்கங்களை யும், செயல்பாடுகளையும், இயல்புகளையும் குறித்து மிகவும் உயர்ந்த லட்சிய அபிப்பிராயங்களைக் கொண்டுள்ள தம்பதிகள் இந்த லட்சியக் கொள்கைகளைத் தொடர்ந்து கடைப்பிடிக்கின் றனர். இருப்பினும் அவர்களால் மேலும் தொடர்ந்து வாழமுடியாது என்ற சூழ்நிலை உருவாகும்போது, அந்த உயர்ந்த லட்சியங்களை கைவிட வேண்டிய சூழ்நிலை உருவானால் ஏதாவது சட்டவழி முறையிலாவது நியாயமான வழியிலாவது அந்த உறவை முறித்துக் கொள்வதே சிறந்தது என்று நினைக்கிறேன். குழந்தைகளுக்கோ, சம்பந்தப்பட்ட தரப்புகளுக்கோ தொடர்ந்து துயர் அளிக்கும், பரஸ்பர வெறுப்பை வளர்க்கும் இந்த உறவைத் தொடர்வதை விட ரத்து

செய்வதே சிறந்தது. ஐயா, திருமணங்கள் மிக உன்னத லட்சியங்களின் அடிப்படைகளில் நடைபெறும்போது, எந்த உணர்வுகளில் நடைபெறவேண்டுமோ அவ்வாறு நடைபெறும்போது, விவாகரத்துக்குச் சுதந்திரம் வேண்டுமென்று ஆலோசனை கூறுவது மிக மகிழ்ச்சிகரமான செயலல்ல. ஆசாபாசம் நிறைந்த உலகில், பொருளாதார நோக்கங்களுடனும் குறைபாடுகளுடனும் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். எனவே ஒரு சட்டத்தினாலோ, துப்பாக்கி ஏந்திய கரங்களாலோ, திருமணங்கள் உருவாக்கப்பட்ட லட்சிய உணர்வுகளில் அதைத் தொடர்ந்து பராமரிப்பது எதிர்பார்க்கக் கூடியதல்ல.

திருமணங்கள் தாங்க முடியாத கொடுமைக்களமாக மாறும் போது, கணவன், மனைவி மற்றும் குழந்தைகளுக்கும் துயரத்தின் ஊற்றாக அது மாறும்போது, சட்டப்படி நியாயமான ஒளிவுமறைவற்ற முறையில் அவற்றைக் கலைப்பதற்கு அனுமதி அளிப்பது என்பது என் கருத்தின்படி உண்மையில் நிலவிலுள்ள சூழ்நிலைகளை அங்கீகரிப்பது ஆகும். மேலும் ஒரு குறிப்பிட்ட நேர்வில் ஏற்பட்டுள்ள வளர்ச்சிகளை ஏற்றுக் கொள்வதும் ஆகும். எனவே இந்தக் கருத்தை ஒருவர் விரும்பாவிடினும், யதார்த்த நிலைமைகளை ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும். உண்மை நிலைமைகளை எதிர்கொள்வதுடன், தரப்பினர்களுக்குத் (கணவன் மனைவிக்கு) தொடர்ந்து துன்பமளிக்கும் இத்திருமணங்களை ரத்து செய்வதே மிகச் சிறந்தது என்பதை ஏற்றுக் கொள்ள வேண்டும்.

மணவாழ்க்கை முறை தொடர்ந்து வழக்கத்தில் இருக்கையில் இத்திருமணங்கள் ஒருதாரத் திருமணமாகத்தான் இருக்க வேண்டும். தொடர்ச்சியான மகிழ்ச்சிக்கும், இத்திருமணங்களின் தடையற்ற வெற்றிக்கும் இக்கருத்தே அடிப்படை என்பதுடன் ஆதாரத் தேவையுமாகிறது என்றே நினைக்கிறேன். இருப்பினும் சில நேரங்களில் நான் சற்றுமுன் கூறியபடி, எதிர்பாராத விதத்தில் சூழ்நிலைக் காரணங்களினால் இத்திருமணங்கள், பொறுத்துக்கொள்ள முடியாதவையாகவும், சகித்துக் கொள்ள முடியாததாகவும் ஆகிவிடும். ஆனால் இப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில் அதிக ஆரவாரமின்றி, குடும்பப் பிரச்சினைகளை ஊருக்கெல்லாம் பறை சாற்றாமலும், பரபரப்பூட்டும் செய்தியாக ஆக்கிவிடாமலும், தரப்புகளிடையே தேவையற்ற வெறுப்புணர்ச்சியை வளர்க்காமலும், எளிய முறையில் திருமணங்களை ரத்து செய்வதற்கு ஒரு வழிமுறையை நம் சட்டத்தில் உருவாக்க வேண்டும். விவாகரத்து வழங்க, பிற சட்டமுறைகளில் உள்ளதுபோல் காரணங்கள், நிபந்தனைகள் போன்றவைகளை

வலியுறுத்துவது அவசியமில்லை என்று எனக்குத் தோன்றுகிறது. நாம் லட்சிய நாடுகளாகப் பின்பற்றி வரும் சில மேலை நாடுகளில் உள்ளதைக் காட்டிலும் விவாகரத்தை எளிமையானதாகவும், சிக்க லற்றதாகவும், அதிக செலவற்றதாகவும் செய்வது மிகவும் சிறந்தது என நினைக்கிறேன். இந்த அவையில் கிளம்பிய சூடான விவாதத் திற்கு வாரிசுரிமைப் பிரச்சினை, தந்தைவழி சொத்தில் பங்கு அனுபவிக்கும் பிரச்சினை மீண்டும் ஒரு நியாயமான காரணமாக இருக்க முடியாது என்று எனக்குத் தோன்றுகிறது. தங்கள் மறைவுக்குப் பின் சொத்துக்களை விட்டுச் செல்லும், சொத்துடைமைக்காரர்கள் எத்தனைபேர், இந்நாட்டில் உள்ளனர்? ஏற்றுக் கொள்ளப்பட்ட அளவு கோலின்படி, பத்து லட்சத்திற்கும் குறைந்த எண்ணிக்கை யிலான மக்களே மாத வருமானம் 250 ரூ. உடையவர்களாக இருப் பதை நீங்கள் காண்பீர்கள். இதில் வருமானவரி செலுத்துபவர்களாகக் கருதப்படுபவர்களுடன், அதைக் காட்டாமல் சமாளிப்பவர்களும் அடங்குவர்.

30 கோடிக்கும் மேற்பட்ட மக்கள் தொகையில், வருமான வரி செலுத்துபவர் எண்ணிக்கை சுமார் பத்து லட்சம் ஆகும், அல்லது அவர்களைச் சார்ந்திருப்பவர்களைச் சேர்த்துக் கொண்டால் முப்பது, நாற்பது லட்சம்பேர் உள்ளனர். மக்கள் தொகையில் இது 1 சதவீதத் திற்கும் குறைவே. ஒரே பெற்றோர்களின் வாரிசுகளுக்கு சமத்துவ உரிமை இல்லாத, பாசப்பிணைப்பிற்குப் பாதகம் விளைவிக்கும் கொஞ்சம் சொத்துகளை, பங்கு போடுவதற்கான சொத்துகளை இவர்கள்தான் வைத்திருக்க முடியும். தந்தைவழிச் சொத்துகளைப் பாகப்பிரிவினை செய்வதில் மகன்களுக்கும் மகள்களுக்கும் சமத்துவ உரிமையை ஏற்றுக் கொள்வது சம்பந்தமாக இவ்வளவு காரசாரமான விவாதத்திற்குக் காரணம் ஏதும் இருப்பதாகத் தெரியவில்லை. எந்த விதமான சொத்துடைமையிலும் எனக்கு நம்பிக்கை இல்லை என்று தான் சொல்வேன். சொத்துடைமை முற்றிலுமாக ஒழிக்கப்படும் நாள் எவ்வளவு விரைவில் வருகிறதோ, எல்லோருக்கும் வாழும் வழிக்கு சமுதாயம் வகை செய்கிறதோ, ஒவ்வொருவருக்கும் வேலை யும், ஆணுக்கும் பெண்ணுக்கும் அவரவர் தேவையை நிறைவேற்ற வகை செய்யப்படுகிறதோ, அந்த நாள் எவ்வளவு விரைவில் வரு கிறதோ அந்த அளவுக்கு சமுதாயத்திற்கு நல்லது. தீமைகளின் மூலஸ்தானமான இதை, ஒரு படித்த வழக்குரைஞர் தகராறுகளின் தோற்றுவாய் என்று கூறியுள்ளார். இந்த சொத்துடைமையை நான் தீமைகளின் மூலஸ்தானம் என்கிறேன். இந்த சொத்துடைமை ஒழிக்கப்பட வேண்டுமெனக் கூறுகிறேன். எவ்வளவு விரைவில் இது

நிறைவேற்றப்படுகிறதோ அந்த அளவிற்கு சமுதாயத்திற்கும் இம் மாதிரிச் சட்டங்களுக்கும் நல்லது. நான் விரும்புவதைப் போல ஒரு திருத்தத்தை இக்கட்டத்தில் கொண்டுவர முடியுமென்றால், சொத் துரிமை சம்பந்தமான எல்லா விதிமுறைகளையும் நீக்கிவிடவோ ஒழித்துவிடவோ செய்யலாம் என்றுகூட யோசனை கூறுவேன். ஒரு சாதாரண விதிமுறை ஒன்றை மட்டும் சேர்த்தால் போதும். சொத்து உரிமை தொடர்ந்து வழக்கத்தில் இருக்கும் வரையில், எந்த வகை சொத்தானாலும், நிலமானாலும், தனிப்பட்ட சொத்தானாலும் அவை சமமாக பாகம் பிரிக்கப்பட வேண்டும். தற்போதைக்கு இதுவே போதுமானது. சொத்துடைமை முற்றிலுமாக ஒழிக்கப்படுவதற்கு நாம் முயற்சி செய்ய வேண்டும். எல்லோருக்கும் வேலைவாய்ப்பில் ஒரே மாதிரியான உரிமை, சொத்துரிமை உள்ளவர்கள் அனுபவிக்கும் வாழ்க்கைத்தரம் எல்லோருக்கும் அளிக்கப்பட வேண்டும்.

எனவே திருமணம் மற்றும் வாரிசுரிமை ஆகிய கடினமான இரண்டு பிரச்சினைகளில் நம்மைச் சுற்றியுள்ள நிலைமைகளின் தேவைக்கு அதிகமாக மசோதா செல்லவில்லை. நீங்கள் தனியார் சமுதாயத்தைப் பேணிப் பாதுகாக்கையில், சமுதாய அமைப்பின் அடித்தளமாக முக்கியக் கோட்பாடாகச் சொத்துரிமை இருக்கை யில் சமுதாய இயந்திரத்தின், இயங்கு சக்தியாக இலாப நோக்கமே இருக்கையில், சமத்துவமின்மை இருப்பதற்கான எந்தக் காரணத்தை யும் நான் காண முடியவில்லை. சமத்துவம் என்பது பெயரளவில் மட்டும் இருந்தால் போதாது. இந்நாட்டின் ஒவ்வொரு குடிமகனுக் கும், ஒவ்வொரு மனிதனுக்கும் பொருளாதார சுதந்திரம் உத்தர வாதம் செய்யப்படும் வரை, அரசியல் சுதந்திரம் மற்றும் வாக் குரிமைக்கு எந்த அர்த்தமும் கிடையாது. பெண்மைக்கு மிகப் பெரும் மரியாதை வழங்கப்பட்டதே, நமது சமூக அமைப்பின் மற்றும் இந்தியக் கலாசாரத்தின் சாரம் என்பதை எல்லோரும் நிறையக் கேள்விப்பட்டுள்ளனர். இதைத் தெரிந்துகொண்டதில் நான் மிக்க மகிழ்ச்சி அடைந்துள்ளேன். அது உண்மையெனில் அதைக் குறித்து எனக்கு எந்தவிதச் சந்தேகமும் இல்லை. சொத்துரிமையில் சம பங்கு வழங்குவது மட்டும் ஏன் தவிர்க்கப்பட வேண்டும் என்பதை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. பெண்மையை உண்மை யிலேயே நீங்கள் போற்றுபவராக இருந்தால், பெண்களுக்கு நீங்கள் அவ்வளவு மதிப்பும் மரியாதையும் அளிப்பவராக இருந்தால் அவர் களுக்குச் சமஉரிமை அளிப்பதில் நீங்கள் ஏன் தயக்கம் காட்ட வேண்டும். சொல்லப் போனால், இந்த உலகைப் பிரிந்து செல்லும் போது நாம் கொண்டு செல்ல முடியாத, இந்தப் பூவுலகச் சொத்துக்கள்

தானே இவை. எவ்வளவுதூரம் நாம் அவற்றின் மீது ஆசை வைத்திருந்தாலும் எவ்வளவு சொத்து வைத்திருந்தாலும், அதைச் சேர்த்தாலும் நாம் அதை எடுத்துச் செல்லமுடியாது. தற்போதைய பரிணாம வளர்ச்சியில் பெண்கள் சிறந்த முறையில் வளர்ச்சியடைந்திருப்பதுடன் ஆணைவிட அவள் ஒரு சிறந்த படைப்பு என்று நான் கருதுவதை மிகவும் மரியாதையுடனும் பணிவன்புடனும் தெரிவித்துக் கொள்கிறேன். ஆண் பெண் இரு பாலாரிலும் எவரையும் இழிவு படுத்துவதாக இதை எடுத்துக்கொள்ளக் கூடாது. நான் சொல்வதெல்லாம், பெண்ணுக்கு இயற்கை அளித்துள்ள பணிகள் இந்த சமுதாய அமைப்பில் பெண்மை சந்திக்க வேண்டிய செயல்பாடுகள், விஷயங்கள் ஆகியவற்றை எடுத்துக்கொண்டால், பெண்களுக்கு நாம் மிக அதிகம் மரியாதையோ மதிப்போ அளிக்கமுடியாது. எனவேதான் சமத்துவமின்மையின் சாயல் ஒரு சிறிதுமோ, வேற்றுமையின் தோற்றமோ, ஆணுக்கும் பெண்ணுக்கும், ஒரே பெற்றோருக்குப் பிறந்த மகளுக்கும் மகனுக்கும் இடையேயான தனிப்பட்ட வேறுபாடோ இருப்பதை நான் விரும்பவில்லை.

இருப்பினும், தத்தெடுப்பது, காப்பாண்மை போன்ற பிரச்சினைகளில், இந்த அவையில் உள்ள மதிப்பிற்குரிய சில உறுப்பினர்கள் கொண்டிருந்த அளவுக்கு ஆர்வம் எனக்கு இந்த விஷயங்களில் இருக்கவில்லை. தத்தெடுத்தல், அல்லது உயிலியற்றும் அதிகாரம் என்பது சாவுக்குப் பின் மனித ஆளுமையைச் செயற்கையாகத் தொடரச் செய்வதாகத் தோன்றுகிறது. என் கருத்துப்படி இது இயற்கைக்குப் புறம்பானது. சொத்து வைத்துக் கொள்வதும், அதன் மீது ஆதிக்கம் செலுத்துவதும் மோசமானது. நாம் உயிருடன் வாழும் போதே சொத்து வைத்துக் கொள்வதும் அதன் மீது ஆதிக்கம் செலுத்துவதும், மனதில் லாபநோக்கத்தைக் குறிக்கோளாகக் கொள்வதும் மோசமானதாகும். நம்முடைய ஆளுமையை தொடர்ந்து நாம் ஏன் நீட்டிக்கவேண்டும்? நம்முடைய சாவுக்குப் பிறகும்கூட நம்முடைய உத்தரவுக்கு கீழ்படிய வேண்டுமென வலியுறுத்த நான் ஏன் விரும்ப வேண்டும்? தத்தெடுத்தல் என்ற நடைமுறை மூலம் ஆளுமையின் செயற்கைத் தொடர்ச்சியின் அவசியம் ஏன்? இருப்பினும் அது ஒரு பண்டைய நடைமுறையாக உள்ளது என்பதுடன் அவர்களுடைய விடுதலைப்பேறுக்கு அது ஆதாரம் அல்லது ஆரம்ப நிலை என்று கருதப்படுவதைத் தெரிந்துகொண்டபின் இப்பொழுதே, இங்கேயே அதை ஒழித்துவிட வேண்டும் என்று ஆலோசனை கூற நான் தயாரில்லை. உங்கள் விடுதலைக்கு அதுவே ஆதாரம் என்று நீங்கள் கருதினால், இதன் மூலம் உங்கள் ஆளுமைக்கு அழிவே கிடையாது என்று

நீங்கள் எண்ணினால். எங்கள் நாகரிகம் மற்றும் கலாசாரம் அல்லது வாழ்வின் பணி தொடரும் என்று கருதினால், அது அவசியம் என்று கூறத் தயாராயுள்ளேன். ஆனால், இந்நிலையில் ஆண் பெண் சமத்துவ மின்மைக்கு அவசியமில்லை. ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையே வேறுபாடோ, சட்ட வரம்புகளோ தேவையில்லை. சமுதாயத்தில் உள்ள ஒவ்வொருவருக்கும் அதே உரிமை விரிவுபடுத்தப்பட வேண்டும். சமூக நீதி, பொருளாதார சமத்துவம், அரசியல் நேர்மை என்ற அடிப்படைகளில் இந்த மசோதாவை நான் ஆதரிக்கிறேன். நாம் ஏற்றுக் கொண்டுள்ள அரசியல் அமைப்புச் சட்டம் நம் முன்னே உள்ள நமது லட்சியங்கள், எதிர்காலத்தில் திட்டமிட்ட முற்போக்கு சமுதாயத்தை உருவாக்குவது குறித்த நமது நம்பிக்கைகள் ஆகியவற்றை நாம் நினைத்துப் பார்க்க வேண்டும். இவை காரணமாக, சரியான பாதையில் செல்வதற்கான ஆரம்பம் என்று இந்த மசோதாவை எடுத்துக் கொள்வதைவிடச் சிறந்தது வேறொன்று மில்லை என நினைக்கிறேன். ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையேயான ஏற்றத் தாழ்வுகளைக் களைவது சம்பந்தமாக இதில் கொடுக்கப் பட்டுள்ள விதி முறைகளை ஏற்றுக் கொள்வதைவிட நாம் சிறப்பாக ஏதும் செய்துவிடமுடியாது. வாழ்க்கை மற்றும் பணி, உடல்நலம் மற்றும் கல்வியில் சம வாய்ப்புகள், வாழ்க்கைத் தரம், உணவு, உடை, உறைவிடம் ஆகிய விஷயங்களில் குறைந்த பட்சத் தேவைகளை ஒரேசீராக நிறைவேற்றுவது ஆகியவை சம்பந்தப்பட்டது அது. இவை எல்லோருக்கும் கிடைக்க வேண்டும். அவை கிடைக்கப் பெறாவிடில் சமுதாயம் முழுவதும் ஒன்றுபட்டு பொதுவான நடவடிக்கை மூலம் கிடைக்கப் பெறச் செய்ய வேண்டும். இந்தக் கடமையைச் சமுதாயம் உணரவேண்டும். நமது அரசியலமைப்புச் சட்டத்தில் அறிவிக்கப்பட்டுள்ள வெறும் காகிதத் திட்டமல்ல அது. நம்மால் முடிந்த அளவு குறுகிய காலத்தில் நிறைவேற்றப்பட வேண்டிய புனிதமான கடமை, கடப்பாடாகும் அது. இந்நாட்டில் ஒவ்வொரு குடிமகனுக்கும் இவையாவும் கிடைக்கப்பெற வேண்டும். இந்நாடு சுதந்திரம் பெற்ற நாளிலிருந்து நாம் உருவாக்கிய நம்பிக்கைகளும், ஆசைகளும் நாம் வளர்த்து வந்துள்ள நம்பிக்கைகளும், ஆசைகளும் நிறைவேற்றப்பட வேண்டும். ஒரு நாடு பாதி அடிமையாகவும் பாதி சுதந்திரம் பெற்றதாகவும் இருக்க முடியாது என அமெரிக்காவின் பெரும் தலைவர் அதிபர் லிங்கன் கூறியுள்ளார். முற்றிலும் அடிமை என்று கூற முடியாவிடினும், இந்நாட்டு மக்களில் பாதிப் பேர் பெரும் குறைபாடுகளையும், பாகுபாட்டுடன் நடத்தப் படுவதையும் உணர்கின்றனர். தங்களுக்கு எதிரான இந்தக் கொடுமையை அவர்கள் மேலும் சகித்துக் கொண்டிருக்க விரும்ப

வில்லை. இது தொடர்பாக இந்த அவையினரால் இன்னும் உணரப் படாத சில புள்ளிவிவரங்களைத் தெரிவிக்க விரும்புகிறேன். அது இதுதான். பிறக்கும் போது பெண்களின் எண்ணிக்கை பெரும்பான்மை யாக இருந்தாலும், மொத்த மக்கள் தொகையில் அவர்கள் கணிசமான அளவு குறைந்த எண்ணிக்கையிலேயே உள்ளனர். உத்கல் போன்ற மாகாணத்தின் நிலைமை எவ்வாறு இருப்பினும், இந்தியாவில் மொத்தத்தில் திருமண வயதிலிருந்து அதாவது பதினைந்து வயதி லிருந்து பெண்கள் சிறுபான்மையினராகவே உள்ளனர். அது குறைந்துகொண்டே வந்து மொத்த மக்கள் தொகையில் அவர்கள் எண்ணிக்கை சிறுபான்மையாக எப்பொழுதுமே உள்ளது. இதன் முக்கியத்துவம் என்ன?

(இந்தக் கட்டத்தில் திரு. துணை சபாநாயகர் நாற்காலியி லிருந்து எழுந்து செல்கிறார். திரு. எஸ்.வி. கிருஷ்ணமூர்த்தி (தலைவர் குழுவில் ஓர் உறுப்பினர்) நாற்காலியில் அமர்ந்து அவைக்குத் தலைமை தாங்குகிறார்).

பெண்களை பாரபட்சமாக நடத்துவதன் விளைவே இது என்று நான் நினைக்கிறேன். பிறப்பில் பெரும்பான்மையாக உள்ள வர்கள் மொத்தத்தில் சிறுபான்மையினராகக் குறையக் காரணம் இதுவே. எனவே பாரபட்சமாக நடத்தப்படுகின்றனர் என்ற குற்றச் சாட்டை ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். அதை நீக்குவதற்கு இந்த மசோதா முயற்சி செய்கிறது. மசோதாவைக் கொள்கை அளவில் ஏற்றுக் கொண்டுள்ளவர்கள், நமது சமுதாயத்தை சீர்திருத்துவதில் மசோதா ஓரளவு உதவியாக இருக்கும் என்று கருதுபவர்கள் நமது சட்டங்களையும் சமுதாய அமைப்பையும் எளிமைப்படுத்தி ஒரு குறிப்பிட்ட லட்சியத்திற்கு இட்டுச் செல்கிறது என்று நினைப் பவர்கள் ஆகிய எல்லோருக்கும், இந்த மசோதாவிலுள்ள பல விதிமுறைகள் மனநிறைவு அளிக்கிறது என்று கூற முடியாது. நாம் இப்பொழுது விவரங்களை விவாதிக்கவில்லை. குறிப்பிட்ட விதி களை விட்டுவிடுங்கள். மசோதாவின் அடிப்படையான கொள்கை கள், மொத்தத்தில் அதன் லட்சிய ஊற்று அவையினரால் ஏற்றுக் கொள்ளப்பட்டு, இந்த மசோதாவை அவை நிறைவேற்றும் என நம்புகிறேன்.

திரு. லட்சுமி நாராயண் சாஹு (ஒரிசா, பொது) : (இந்திப் பேச்சின் ஆங்கில மொழிபெயர்ப்பு) ஐயா, உத்கலில் அதிக எண்ணிக் கையில் பெண்கள் உள்ளனர் என்று நகைச்சுவையாகக் கூறவில்லை

என்பதைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். உத்கலில் உள்ள பெண்களின் எண்ணிக்கை மூன்றிலிருந்து நான்கு லட்சம் வரை அதிகமாக உள்ளது. திருமணத்துக்கு மாப்பிள்ளை கிடைக்காதபோது அவர்கள் **சகதா மரத்தை** மணம் செய்து கொள்கின்றனர்.

பேராசிரியர் கே.டி. ஷா: நான் ஒரு குறிப்பிட்ட மாகாணத்திற்காகப் பேசவில்லை. நாடு முழுவதற்குமாகப் பேசுகிறேன். எனவே இந்தக் குறிப்பிட்ட கேள்விக்கு பதிலளிக்க வேண்டியது அவசியமில்லை. அதை அப்படியே விட்டுவிடுங்கள்.

★**சர்தார் ஹுக்கம் சிங்** (கிழக்குப் பஞ்சாப் : சீக்கியர்) : மிகச் சிறந்த அறிஞர்களும், புகழ்பெற்ற வழக்குரைஞர்களும் பங்கு கொண்டு பல நாட்களாக விவாதித்த விஷயங்கள் குறித்து புதிய வாதங்களையோ, புதிய கருத்துகளையோ முன்வைப்பது அவ்வளவு எளிதானதல்ல என்பதை உணர்கிறேன். ஒரு குறிப்பிட்ட சமுதாயத்தின் பிரதிநிதி என்ற முறையில் என்னைப் பேச அழைத்திருப்பதால் இந்தக் குறிப்பிட்ட சட்டத் தொகுப்பு குறித்த எனது சமுதாயத்தின் உணர்வுகளை பிரதிபலிக்கும் எதையாவது நான் கூறித்தான் ஆகவேண்டும். ஓர் இந்தியனாக மட்டுமே பேச விரும்புகிறேன் என்று எனது படித்த நண்பர் ஷா கூறிய கருத்துடன் எனக்கு உடன்பாடு இல்லை. இந்தச் சட்டத் தொகுப்பு இந்தியா முழுவதற்கும் எல்லோருக்கும் அமல் படுத்தப்படுமானால் நானும் அதே வாசகத்தை மகிழ்ச்சியுடன் திரும்பக் கூறியிருப்பேன். ஆனால் இப்பொழுதுள்ள நிலையில், அது ஒரு சில சமூகங்களுக்கே அமல் படுத்தப்படவுள்ளது. எனவே, என் சமூகத்தின் சார்பாக எனக்கு உரிமையும் கடமையும் இருப்பதாக நம்புகிறேன்.

இவ்வளவு அதிகமான அறிஞர்களைக் கேட்கக்கூடிய சாதகமான நிலை எனக்கு இருந்தாலும், அதே நேரத்தில் எனக்குச் சில பாதகங்களும் இருப்பதை உணர்கிறேன். ஏனெனில், அநேகமாக எல்லா விஷயங்களும் கூறப்பட்டுவிட்டன. அவற்றை மீண்டும் கூறினால் அவை பழைய விஷயங்களாக இருக்கும். எனது சமூகத்தைப் பாதிக்கக்கூடிய சில விஷயங்களைக் குறித்து மட்டும் எனது கருத்துகளை வெளிப்படுத்தவேண்டுமென்று உணர்ந்து என் பேச்சைக் கட்டுப்படுத்திக் கொள்ள முடிவு செய்துள்ளேன்.

★ அ.நி.வி. (சட்) டி., தொகுதி VI, பிரிவு II, 13 டிசம்பர் 1949, பக்கம் 607-610.

சமுதாயம் தேங்கிக் கிடப்பதை நான் விரும்பவில்லை என்பதை ஆரம்பத்திலேயே தெளிவுபடுத்த விரும்புகிறேன். சமூகச் சட்டங்கள் அப்படியே இருக்க வேண்டுமென்று கூறுபவர்களைச் சேர்ந்தவனல்ல நான். காலத்துக்கேற்ப, அவைகளும் மாற வேண்டு மென்று விரும்புகிறேன். காலத்தோடு ஒட்டி ஒழுகுவதற்கு நமக்கு உரிமையில்லை என்று சொல்லுமளவுக்கு மதவாதியல்ல நான். நேரிடையாகத் தேர்ந்தெடுக்கப்படவில்லை என்ற காரணத்தினாலோ அல்லது இந்த மசோதா சம்பந்தமாக வாக்காளர்களின் விசேஷ ஆணை இல்லை என்ற காரணத்தினாலோ, இந்த மசோதாவை நிறைவேற்றும் அதிகாரம் இந்த அவைக்கு இல்லை என்ற கருத்தும் எனக்குக் கிடையாது. எந்தச் சட்டத்தையும் நிறேவற்றுவதற்கு இந்த அவைக்குத் தகுதியுள்ளது என்று நான் கருதுகிறேன். எனவே இதுவும் அதன் அதிகார வரம்புக்குள் வருகிறது. இவையெல்லாம் இப்படியிருப்பினும், மசோதா இப்பொழுதுள்ள நிலையில் அதற்கு என் மனப்பூர்வமான ஆதரவை அளிக்க முடியாது.

ராவ் குழு சிபார்சு செய்தபடி ஆரம்பத் திட்டமே பின்பற்றப் பட்டிருந்தால் ஒருவேளை சட்டத் தொகுப்பின் சில பகுதிகள் எதிர்ப்பு ஏதுமின்றி நிறைவேற்றப்பட்டிருக்கலாம். இந்தச் சட்டத் தொகுப் பின் சில பிரிவுகள் குறித்து ஒத்த கருத்து உருவாகியிருக்கலாம். சில விஷயங்களைக் குறித்து மட்டுமே நான் பேச உள்ளேன். எனவே இந்தச் சட்டத்தின் பொதுக் கொள்கையின் எல்லா அம்சங்களையும் நான் தொடவிரும்பவில்லை.

இப்பொழுது நடைமுறையிலுள்ள, இந்துச் சட்டத்தின் சில பிரிவுகளை முறைப்படுத்துவதும், திருத்துவதுமே இம்மசோதாவின் நோக்கம் என்று முகப்புரையில் கூறப்பட்டுள்ளது. நான் மசோதாவைப் படித்துப் பார்த்தபோது, முறைப்படுத்தப்பட்ட எந்தவிதமான இந்துச் சட்டத்தையும் அதில் காணவில்லை. கிருஸ்தவ நாடுகளிலிருந்து விவாகரத்து சம்பந்தமான விஷயங்கள் எடுக்கப்பட்டுள்ளன. முஸ்லீம் சட்டத்திலிருந்து வாரிசுரிமைச் சட்டம் எடுக்கப்பட் டுள்ளது. இந்துச் சட்டங்களை முறைப்படுத்தி தொகுப்பது இதுதான் என்று கூறுவது தவறென எனக்குத் தோன்றுகிறது.

டாக்டர் மனோ மோகன் தாஸ் (மேற்கு வங்காளம் : பொது) : இந்நாட்டிலுள்ள பல்வேறு ஜாதிகளிலும், பழங்குடி மக்களிடை யேயும் விவாகரத்து வழக்கம் பரவலாக உள்ளது. அவர்கள் இந்துக் கள் இல்லையா? மதிப்பிற்குரிய உறுப்பினர் அவர்களை ஒழித்துக் கட்ட விரும்புகிறாரா?

சர்தார் ஹுக்கம் சிங் : நீங்கள் அனுமதி அளித்தால், அந்தக் கேள்விக்குப் பின்பு வருவோம். என் பேச்சைக் கேட்பதற்கு உங்களுக்குப் பொறுமை இருக்கும் என நம்புகிறேன்.

நான் ஏற்கெனவே கூறியபடி, எனது சமூகத்தைப் பாதிக்கக் கூடிய சில விஷயங்களைக் குறித்து மட்டுமே பேசப்போகிறேன். அதற்கு மேல் நான் பேசப் போவதில்லை. இந்துச் சட்டத்தை முறைப்படுத்தி திருத்தம் செய்வதே மசோதாவின் நோக்கம் என முகப்புரையில் கூறப்பட்டுள்ளது. இந்துச் சட்டத் தொகுப்பில் அதைக் காணவில்லை என்று மீண்டும் கூறுகிறேன். 80 சதவீத மக்களிடையே விவாகரத்து வழக்கத்திலுள்ளது என்று இந்த மசோதாவை முன்மொழிந்தவர் ஆரம்பத்தில் நமக்கு எடுத்துரைத்தார். அது உள்ளபடியே இருப்பதில் எனக்கு எந்த ஆட்சேபணையும் இல்லை. அதை நீங்கள் இந்துச் சட்டம் என்று கூறலாம். ஆனால் நீங்கள் இப்பொழுது சட்டத் தொகுப்பில் அறிமுகப்படுத்தவுள்ள இந்த முறையை அப்படிக் கூறமுடியாது.

கூறு 2ல் சீக்கியர்களுக்கும் இந்தச் சட்டம் பொருந்தும் என்று கூறப்பட்டுள்ளது. அது மகிழ்ச்சிகரமான விஷயந்தான். சில உரிமைகளை அளிப்பதற்கு சீக்கியர்களை இந்துக்களுடன் சேர்த்துக் கொண்டிருப்பது எங்களுக்கு மிகவும் பெருமையளிக்கும் விஷயம் என்று கூடச் சொல்லலாம். ஆனால், கூறு 2ல் எங்களைக் கட்டித் தழுவிய பின்பு, கூறு 4ல் எல்லா வழக்கங்களுக்கும் வழக்காறுகளுக்கும் பலத்த அடி கொடுக்கப்பட்டுள்ளதையே இங்கே நான் காண்கிறேன். வழக்கங்கள் மறுக்கப்பட்டுள்ளன. வழக்காறுகள் ஒழிக்கப்பட்டு விட்டன. ''வழக்கம்'' என்பது தொடர்ச்சியாக ஒரே சீராக பின்பற்றப் படுவது என்றும், அது உறுதியானதாகவும், நியாயமானதாகவும் பொதுநலக் கொள்கைகளுக்கு விரோதமில்லாமலும் இருக்க வேண்டும் என்றும் கூறு 3ல் விளக்கப்பட்டுள்ளதை பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இப்படிப்பட்ட புனிதமான நடைமுறையை ஒரேயடியாக ஒழித்துவிடும்படி ஏன் இவ்வளவு வெறுப்புடன் அதைக் கையாள வேண்டும்? நான் இதைக் கடுமையாக ஆட்சேபிக்கிறேன். எனது மாகாணமான பஞ்சாபில், நடைமுறை வழக்கமே முதல் சட்டவிதியாக உள்ளது. முக்கியமாக இந்த உண்மையின் அடிப்படையில்தான் நான் ஆட்சேபிக்கிறேன். விவாகரத்து, திருமணம், வாரிசுரிமை, இறங்குரிமை, உயில்கள் போன்ற விஷயங்களில் பஞ்சாப் சட்டம் வகுத்துள்ளபடி நடைமுறை வழக்கமே முதன்மை பெறும் சட்டவிதி ஆகும். நெடுங்காலமாக இந்த

வழக்கங்களைப் பின்பற்றுகின்றனர். தான் பின்பற்ற வேண்டிய விதி என்னவென்பதை கிராமத்திலுள்ள ஒவ்வொருவரும் அறிந்துள்ளனர். இந்த வழக்கங்களைப் பற்றி நீதித்துறைத் தீர்ப்புகள் அளிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு கிராமவாசியாலும் அவை எளிதில் புரிந்து கொள்ளப்படுகின்றன. அதைப்பற்றி எந்தத் தகராறும் கிடையாது. எனவே இந்த மாற்றங்கள் புதிய சட்ட மொழியைக் கொண்டுவரும். இதுவரை தங்கள் சட்டங்களை நன்கு புரிந்து கொண்டுவந்துள்ள சாதாரண விவசாயிகளுக்கு அதிகச் சிக்கலை உருவாக்கும்.

திருமணத்தைப் பற்றியதே எனது இரண்டாவது ஆட்சேபனை. இங்கே ஒரு கருத்தைக் கூறத்தான் வேண்டும். இவ்வளவு காலமாக இன்றுவரை சீக்கியர்கள் இந்துச் சட்டத்தைத்தான் பின்பற்றி வந்திருக்கிறார்கள் என்று கூறலாம். ஆனால் கொண்டு வரப்பட உள்ள மாற்றங்களைக் குறித்தே என் ஆட்சேபனையெல்லாம். இந்துச் சட்டம் இப்பொழுதுள்ளதுபோல் தொடர்ந்திருக்குமானால் அதில் எனக்கு எந்தவித ஆட்சேபனையும் கிடையாது. மாற்றங்கள் வெளியிலிருந்து கொண்டுவரப்பட்டுள்ளதால் சீக்கியர்களுக்கு மனக்குறை உள்ளதை உணர்கிறேன். இப்பொழுதுள்ள நடைமுறை வழக்கங்களை அங்கீகரிக்க வேண்டும். மேலும் சுற்றிக் கொண்டு செல்லும் சக்கரத்தில் அவர்களைக் கட்டிவைக்க வேண்டியது அவசியமில்லை. திருமண விஷயத்தைப் பற்றி நான் குறிப்பிட்டேன். கணவனின் விருப்பங்களுடன் ஒன்றுபட வேண்டும் என்று இந்துச் சட்டத்திலும் இந்து கலாசாரத்திலும் மனைவிக்கு ஆலோசனை கூறப்பட்டதைச் சுட்டிக் காட்டுகிறேன். அவள் தியாகத்தின் சின்னமாக இருந்து வருகிறாள். அதுதான் அவள் பெருந்தன்மையும் சிறப்பம்சமும் ஆகும். இவ்வளவு நாட்களாக தாங்கள் அடக்கிவைக்கப்பட்டிருந்ததாகவும் மிகவும் துன்புற்றதாகவும் இனிமேலும் இந்தத் துயரச் சுமையைத் தாங்கத் தயாரில்லையென்று இப்பொழுது நமது பெண்கள் கருதினால், நமது சகோதரர்களுக்கு நான் அளிக்கும் ஆலோசனையெல்லாம், அவர்கள் பெண்களின் நிலையைவிட தாழ்ந்த நிலைக்குச் சென்றுவிட வேண்டுமென்பதுதான். எல்லா விஷயங்களிலும், குடும்ப வாழ்விலும், சமத்துவத்தை வலியுறுத்துவது குடும்பத்தில் அமைதிக்கும் மகிழ்ச்சிக்கும் வழிவகுக்காது என்று உணர்கிறேன்.

மேலும் இரண்டுவகைத் திருமணங்களையே மசோதா அங்கீகரித்துள்ளது என்பது எனது குற்றச்சாட்டாகும். ஒன்று சமய சடங்குகளின் அடிப்படையிலான திருமணமும், மற்றொன்று பதிவுத்

திருமணமும் ஆகும். கடந்த பல நூற்றாண்டுகளுக்கு மேலாக சீக்கியர்கள் பின்பற்றிவரும் வேறு ஒருவகைத் திருமணமும் உள்ளது. உறுப்பினர்கள் பலரும் ஏற்கெனவே இதைத் தெரிந்திருப்பார்கள் என்று நான் நம்பினாலும் அவைக்கு இதை நான் எடுத்துரைத்தாக வேண்டும். அது 'ஆனந்த் திருமணச் சடங்கு' என்று அழைக்கப்படுகிறது. அது ஒரு எளிமையான முறை, குருகிரந்த் சாகேப் முன் தம்பதியர் கொண்டுவரப்படுகின்றனர். அவர்கள் ஒரு பிரமாணம் எடுத்துக் கொண்டு, கிரந்த் சகேபை நான்கு முறை சுற்றி வருகின்றனர். பிறகு பிரார்த்தனை செய்கின்றனர். அத்துடன் திருமணம் முடிவு பெறுகிறது. இப்பொழுது அது ஒரு சிவில் திருமணம் என்று கூற முடியாது. ஏனெனில் அதை எங்கேயும் பதிவு செய்ய வேண்டிய அவசியமில்லை. அதை ஒரு சமயச் சடங்கு அடிப்படையிலான திருமணம் என்றும் கூற முடியாது. ஏனென்றால், சபிந்தா உறவுகள் அல்லது தடைசெய்யப்பட்ட உறவுகளின் படிநிலை போன்றவைகள் கண்டிப்பான முறையில் பின்பற்றப்படுவதில்லை. எனவே நாங்கள் இவ்வளவு காலமாக பின்பற்றிவரும் இந்த முறையிலான திருமணம் செல்லாததாக ஆகிவிடுமோ என்று அஞ்சுகிறேன். இந்த நூற்றாண்டின் ஆரம்பத்தில் இது பற்றி சந்தேகங்கள் எழுந்தன. ஆனந்த் திருமணத்தை செல்லத்தக்கதாக்கும் சட்டம் 1909ல் நிறைவேற்றப்பட்டது. அதன் பிறகு இத்தகைய திருமணங்கள் எல்லாம் செல்லத்தக்கதாகிவிட்டன. ஆனால் இப்பொழுது மசோதாவைப் படித்த வரையில் இந்துச் சட்டத் தொகுப்பின்படி இந்தத் திருமணம் அங்கீகரிக்கப்படுமா என்பது குறித்து எனக்கு ஐயப்பாடு உள்ளது. எனவே இதைப் பொறுத்தவரையில், சீக்கியர்கள் மிகவும் கவலை கொண்டுள்ளனர். முக்கியமாக இந்த விஷயத்தில் அவர்கள் பெரும் பயம் கொண்டுள்ளனர். அவர்கள் விருப்பப்படி விட்டுவிட்டால் இந்த வகைத் திருமணத்தை அவர்கள் இழக்க விரும்பவில்லை என்பதை மசோதாவை முன்மொழிந்தவரின் கவனத்திற்குக் கொண்டு வருவதுடன், இதை அவர் முக்கியமாகக் கருத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும் என்று விரும்புகிறேன்.

திரு. நசிருத்தீன் அகமது (மேற்கு வங்காளம்: முஸ்லிம்) : இந்த மசோதாவின்படி இவ்வகைத் திருமணங்கள் செல்லுபடியாகாது.

சர்தார் ஹுக்கம் சிங் : இந்த மசோதாவின்படி இத்திருமணங்கள் செல்லாது என்றுதான் நானும் கருதுகிறேன். எனவேதான் நிலைமையை அவைக்கும், முக்கியமாக மசோதாவை முன்மொழிந்தவருக்கும் விளக்கியுள்ளேன்.

பிறகு விவாகரத்தைக் குறித்தும் நான் ஒரு கருத்தைக் கூற வேண்டியுள்ளது. மக்கள் தொகையில் பெரும்பகுதியினரிடையே விவாகரத்து வழக்கம் பரவலாக இருப்பதாகக் கூறப்பட்டது. என்னுடைய வேண்டுகோள் இதுதான்; நடைமுறையிலுள்ளவைகள் தொடரட்டும். சில நிபந்தனைகளை விதித்து அந்த வழக்கங்களைக் கட்டுப்படுத்துவதன் மூலம் அதிகம் செலவு செய்ய வேண்டிய நிலையை உருவாக்கி விடாதீர்கள். இந்த மாற்றங்கள் நல்லதுக்கு அல்ல, கெடுதலுக்கே என்றுதான் சாதாரண மக்கள் நினைப்பார்கள். திருமணங்களை ரத்து செய்வதற்கு எளிய முறைகள் தற்போது இருக்கையில் எதிர்காலத்தில் மிகவும் சிக்கலான அதிகச் செலவு பிடிக்கும் வழிமுறைகளை பின்பற்ற கட்டாயப்படுத்தப்பட்டால் நிச்சயமாக அதை அவர்கள் வரவேற்க மாட்டார்கள். தீமைகள் தலை தூக்குவதாக வாதிக்கப்படுகிறது. இந்த மசோதா விருப்பத்தைப் பொறுத்து, ஏற்றுக் கொள்ளக்கூடிய ஒன்று என்றும் யாரையும் அது கட்டாயப்படுத்தவில்லை என்றும் கூறப்படுகிறது. பிரச்சினையைவிட அதற்குக் கொடுக்கப்பட்ட தீர்வு மோசமாக உள்ளதா என்பதைக் குறித்து நாம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். ஒரு குறிப்பிட்ட அளவிற்கு தீமைகள் உள்ளன என்பதில் சந்தேகமில்லை. ஆனால் குடும்பப் பிணைப்பைத் தளர்த்தினோமானால், மக்கள் தொகையில் ஒரு சிறுபிரிவினர் எல்லா உறவுகளையும் முறித்துக் கொணடு தாங்களே உருவாக்கிய துன்பத்திலிருந்து விடுதலை பெற்று மகிழ்ச்சியடையக்கூடும். ஆனால் அதிகமாக உள்ள பெரும்பான்மையினரின் நிலை என்ன? அவர்களைச் சிக்கவைக்க ஒரு வலையை விரித்ததாகாதா? தவறுதல்கள் செய்வதற்கு தூண்டுவதாக ஆகாதா? அவர்கள் தங்கள் எதிர்காலத்தைப் பரீட்சிப்பதற்கு வழி வகுத்ததாக ஆகாதா? ஏனெனில் இந்தச் சோதனையை முடித்துக் கொள்ளவும் அதிலிருந்து தப்பித்துக் கொள்ளவும் வழியிருப்பதை அவர்கள் உணர்ந்திருப்பார்கள்.

இப்பொழுது எனது இரண்டாவது விஷயத்திற்கு வருகிறேன். அது தத்தெடுப்பது பற்றியது. எனது மாகாணமான, பஞ்சாபில் தத்தெடுப்பது என்பது ஒரு விசித்திரமான நடைமுறையாகும். ஒரு வாரிசின் வழக்கமான நியமனம் என்று அது அழைக்கப்படுகிறது. நடைமுறை நோக்கங்களுக்கான எளிய அறிவிப்பு அது. சமயத்துடன் அதற்கு எந்தவித சம்பந்தமும் கிடையாது. வயது அல்லது உறவு சம்பந்தமாக எந்த வரையறைகளும் கிடையாது. மகளின் மகனோ, அல்லது சகோதரியின் மகனோ தத்தெடுத்துக்கொள்ளப் படலாம் என்று இந்தச் சட்டத் தொகுப்பில் முன்மொழிந்துள்ளீர்கள்.

ஏற்கெனவே வாரிசின் வழக்கமான நியமனத்தில் மகளின் மகன் பெரும்பாலும் வாரிசாக நியமிக்கப்படுவதுடன் சகோதரியின் மகனும்கூட நியமிக்கப்படுகின்றனர் என்பதை உங்களுடன் நான் தெரிவித்துக் கொள்கிறேன். எந்தவிதமான வரையறைகளும் கிடையாது. ஓர் இளைஞன் தனது தகப்பனார் வயதுள்ள ஒருவரைத் தத்தெடுத்துக் கொள்ளலாம். பல மகன்கள் உள்ள ஒருவரை வாரிசாக நியமிக்கலாம். இங்குள்ள பலருக்கு இது விசித்திரமாகத் தோன்றலாம். ஆனால், அது உண்மைதான் என்று கூறுகிறேன். திருமணமான ஒருவரை, குழந்தைகள் உள்ள ஒருவரை வாரிசாக நியமிக்க முடியும். அது மிகவும் மதச் சார்பற்ற நடைமுறை, அதற்கும் மதத்திற்கும் சம்பந்தமே கிடையாது. இம்மாதிரியான ஒரு நடைமுறையை எப்படி அளிக்கப் போகிறீர்கள்? அதைத் தூக்கி வீசிவிடப் போகிறீர்களா? நிச்சயமாகக் காலத்தால் ஏற்பட்ட புனிதத் தன்மையும் மரியாதையும் அதற்கு உள்ளது. நாட்டின் எங்கள் பகுதியில் மிகப் பிரபலமாக உள்ள இவ்வழக்கத்தை அவ்வளவு எளிதாகத் தூக்கி எறிந்துவிட முடியாது. மக்கள் அவ்வளவு எளிதாக அதற்கு இணங்க மாட்டார்கள். சட்டத்தின் இந்தப் பகுதியைப் பொறுத்தமட்டில் எங்கள் மக்கள் மீது வலுக்கட்டாயமாகத் திணிக்கப்பட்டால், அது அங்கு செத்த சட்டமாகவே இருக்கும்.

அடுத்ததாக மரபுரிமை பிரச்சினை உள்ளது. நமது பெண்கள், சகோதரிகள், மகன்கள், சொத்தில் பங்குபெற வேண்டும் என்ற நமது நண்பர்களுடைய கருத்தை ஏற்றுக் கொள்கிறேன். அதைச் சுருக்கிக் கூறுவதென்றால், எனது படித்த நண்பர் டாக்டர் பக்ஷி தேக் சந்த் முன்பு கூறியதை நான் ஒத்துக் கொள்கிறேன். அதாவது அவர்களுக்குத் திருமணத்திற்குப் பிறகு மாமனாரின் சொத்தில் பங்கு இருக்கவேண்டுமே தவிர தகப்பனாரின் சொத்தில் அல்ல. அதற்கு என்னிடம் முக்கியமான காரணங்கள் உள்ளன. ஏனெனில், எனது மாகாணத்தின் சூழ்நிலைகள் மிகவும் அசாதாரணமானவை என்பதை நான் தெரிவித்துள்ளேன். பஞ்சாப் மாகாணத்தில் சிறு விவசாயிகளே அதிகம் உள்ளனர். சாதாரணமாக மூன்று அல்லது நான்கு ஏக்கரே அவர்களின் நில உடைமையாகும். கொஞ்சம் கடன் பெற்று, இரண்டு காளைகளை வாங்கி வைத்திருப்பார். மேலும் ஒரு ஹல், ஒரு **பஞ்சாலி** வயலுக்கு உரம் கொண்டு போகவும் வயலிலிருந்து மாட்டுத் தீனிகளை வீட்டுக்குக் கொண்டு வரவும் ஒரு கட்டா வைத்திருப்பர். இந்த நபர்களிடம் இதைவிட அதிகமாக எதையும் எதிர்பார்க்க முடியாது. சட்டத் தொகுப்பு விவசாய நிலங்களுக்கு அமலாக்கப்படாவிடினும், அசையும் சொத்துக்களின் நிலைமை

என்ன? அவருடைய காளைகளை என்ன செய்வது? ஒரு மகனும், ஒரு மகளும் உள்ள எளிய குடும்பம் ஒன்றை எடுத்துக் கொள்ளுங்கள். தகப்பனார் இறந்தவுடன், இந்த அசையாச் சொத்துக்களெல்லாம் இந்த இருவரிடையே பிரிக்கப்பட வேண்டும். (ஒரு மதிப்பிற்குரிய உறுப்பினர்: ஏன் கூடாது?) நான் அப்படிக் கூறவில்லை. அது பிரிக்கப்பட வேண்டும் என்றுதான் கூறுகிறேன். சாதாரணமாக அவர்களிடம் ஒரு பசுவும் இருக்கும். இந்தப் **பசு, ஹல்** மற்றும் **பஞ்சாலி**யை எப்படிப் பாகம் பிரிப்பது என்பதை மசோதாவை முன்மொழிந்தவர்தான் நமக்குத் தெரிவிக்க வேண்டும். ஐம்பது மைலுக்கு அப்பாலிருந்து வரும் மருமகனுக்கு தனது ஊர்ப் பகுதியில்தான் ஆர்வம் அதிகம் இருக்கும். இந்த நாலு ஏக்கர் நிலம் அவனுக்குக் கொடுக்கப் போவது ஒன்றுமில்லை. மைத்துனனுடன் அவனால் வாழமுடியாது. அவனுடைய அக்கறையெல்லாம் வேறு எங்கேயோ இருக்கிறது. பாகத்தைப் பிரித்துவிட்டு, வெளியே போக வேண்டியதுதான் அவன் நிலை. சகோதரி தன் பங்கைக் கேட்பாள். நிச்சயமாக, ஒரு காளையையும், வண்டியின் ஒரு பாதியையும், **பஞ்சாலி**யில் பாதியையும், எடுத்துக் கொண்டு இந்தச் சட்டத் தொகுப்பை உருவாக்கியவர்களுக்கு நன்றி கூறிவிட்டு, போய் விடுவாள். அவள் திரும்ப வரவே மாட்டாள். மீண்டும் வரவேற்பு நிச்சயமாக இருக்காது. (மதிப்பிற்குரிய ஓர் உறுப்பினர் : சகோதரனுடைய சொந்த மைத்துனன் அவனுக்கு நன்றி சொல்வான்). இது ஓர் எளிமையான உதாரணம். ஆனால் ஒன்றுக்கு மேற்பட்டு, இரண்டு மூன்று நான்கு சகோதரர்கள் இருக்கும்போது நிலைமை எப்படியிருக்கும் என்பது உணரப்படவில்லை. கிழக்குப் பஞ்சாபில், அவர்கள் ராணுவத்தில் சேர்கின்றனர். உலகில் தொலைவிலுள்ள நாடுகளான அர்ஜெண்டினா, பிரேஜில், தென் அமெரிக்கா போன்ற நாடுகளுக்குச் செல்கின்றனர். அவர்கள் துணிகர சாகசக்காரர்கள். அங்கிருந்து பணம் கொண்டுவந்து, அதிக நிலங்களை வாங்குகிறார்கள். பொதுவான சமையல் சாப்பாட்டை வைத்துக் கொண்டு, அவர்கள் ஒன்றாக வாழ்கிறார்கள்.

ஐயா, இந்த விதி, கஷ்டங்களை உருவாக்கும் என்று தாழ்மையோடு தெரிவித்துக் கொள்கிறேன். ஒரு மகளுக்குத் திருமணமாகாத வரையில் தகப்பனாரின் சொத்தில் பங்கும், மணமானவுடன் மாமனார் சொத்தில் சமமான பங்கும் பாகத்தைப் பிரித்து எடுத்துக் கொள்ளும் உரிமை முதலியனவும் இருக்க வேண்டுமென்று எனது படித்த நண்பர் டாக்டர் பக்ஷி தேக் சந்த் கூறியதை நான் ஏற்றுக்

கொள்கிறேன். பெண்களுக்கு பங்கு அளிப்பதை எதிர்ப்பவனல்ல நான். இந்த விஷயத்தில் என்னைத் தவறுதலாகப் புரிந்துகொள்ளக் கூடாது.

நமது படித்த பெண்களுக்கு அதிக ஓய்வு நேரம் இருப்பதாக அஞ்சுகிறேன். ஒரு சாதாரணப் பெண், கல்வி கற்ற பின்பு வீட்டு வேலைகளில் மூழ்குவதில் விருப்பப்படுவதில்லை. முழு நேரமும் ஈடுபட்டிருக்க வேண்டிய வேலை எதுவும் வீட்டில் அவளுக்கு இருப்பதில்லை.

(இந்தக் கட்டத்தில் திரு. துணை சபாநாயகர் (திரு. எம். அனந்தசயனம் அய்யங்கார்) மீண்டும் தலைமை தாங்க நாற்காலியில் அமர்கிறார்).

அவர்களுடைய ஓய்வு நேரங்களை நன்கு பயன்படுத்திக் கொள்ள அரசு வழிமுறை காணவேண்டும். பயனுள்ள உருப்படியான பணிகள் அவர்களுக்கு அளிக்கப்பட வேண்டும். நீங்கள் ஒழிக்க நினைக்கும் தீமைகளை இது போன்ற சட்டங்களோ, விவாகரத்தோ நீக்கிவிடமுடியாது. கூட்டுக் குடும்பமுறை நீக்கப்படுவதற்கு முன் வயதானவர்களுக்கு பொருளாதார உதவி, மருத்துவ உதவி போன்றவைகளுக்கு ஏற்பாடு செய்ய வேண்டும். சமுதாயம் மேலும் பிளவுபடுதல், அன்பு மற்றும் இரக்க சிந்தனை வற்றிப் போதல், விவாகரத்து மற்றும் பிரிவினை நீதிமன்றங்கள் அதிகரித்தல், பெண் சிசுக் கொலை அதிகரித்தல், குழந்தைகள் பராமரிப்பில் அலட்சியப் போக்கு இவைகளே இந்தச் சட்டத்தின் விளைவகளாக இருக்கும் என்றுதான் நினைக்கிறேன்.

திரு. வி.ஜ. முனிசாமிப்பிள்ளை : எழுந்திருக்கிறார்

திரு. பி. தாஸ் (ஒரிஸா: பொது) : ஐயா, நாம் விவாதத்தை 7 மணி வரைத் தொடரப் போகிறோமா?

திரு. துணை சபாநாயகர் : 7 மணி வரை அமர்வதில் எனக்கு எந்தவித ஆட்சேபனையும் இல்லை. அவையின் பொதுவான கருத்து என்ன?

மதிப்பிற்குரிய சில உறுப்பினர்கள் : இல்லை, இல்லை.

திரு. துணை சபாநாயகர் : போதுமான அளவு கேட்டாகி விட்டது. ஒரு குரல் பல குரல்களாப் பெருகிவிடாது. மதிப்பிற்குரிய உறுப்பினர் எவ்வளவு நேரம் எடுத்துக் கொள்ளப் போகிறார்?

திரு. வி.ஐ. முனிசாமிப் பிள்ளை (மெட்ராஸ் : பொது) : சுமார் பதினைந்து நிமிடங்கள்.

திரு. எல். கிருஷ்ணசாமி பாரதி : ஐயா, எவ்வளவு பேர் பேச வேண்டுமென்று நினைக்கிறார்களோ அவ்வளவு பேருக்கும் வாய்ப் பளிக்க வேண்டுமென்பதே என் எண்ணம். ஆனால் உறுப்பினர்கள் பேச முன் வராதது, கொஞ்சம் ஆச்சரியமாகத்தான் இருக்கிறது. உறுப்பினர்கள் பேச முன்வரும் வரை நாம் கேட்டுக் கொண்டிருப் போம். 'கோரம்' இல்லாதபோது அவை தானாகவே முடிவுக்கு வந்துவிடும்.

திருமதி பூர்ணிமா பானர்ஜி (உ.பி.: பொது) : இந்துச் சட்டத் தொகுப்பு போன்ற முக்கியமான மசோதாவைக் குறித்து பல உறுப் பினர்கள் பேச விரும்புகின்றனர் என்று மதிப்பிற்குரிய உறுப்பினர் கள் தெரிவித்துள்ளனர். தாம் விரும்புவதை பேச விரும்பும் பல உறுப்பினர்கள் இருக்கையில் அவர்களுக்கு வாய்ப்பளிக்க 7 மணி வரை அமர்வதில் என்ன ஆட்சேபனை உள்ளது?

திரு. துணை சபாநாயகர் : இதை முற்றிலும் ஒத்துக் கொள் கிறேன். பெரும்பான்மை உறுப்பினர்கள் விவாதத்தைத் தொடர விருப்பம் தெரிவித்தால் எனக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை.

மதிப்பிற்குரிய சில உறுப்பினர்கள்: சரி, நாங்கள் ஏற்றுக் கொள்கிறோம்.

திரு. துணை சபாநாயகர்: மிக்க நன்று. திரு. முனிசாமிப் பிள்ளை முடிக்கட்டும். பிறகு நாம் பார்க்கலாம்.

***திரு. வி.ஐ. முனிசாமிபிள்ளை:** பல நூற்றாண்டுகளாக இந்து சமுதாயத்தின் வெளியிலிருந்துவரும் ஒரு சமூகத்திலிருந்து வருபவன்

★ அ.நி.வி. (சட்) டி., தொகுதி VI, பிரிவு II, 14 டிசம்பர் 1949, பக்கம் 611-14.

என்கிற முறையில், சமயம் மற்றும் சமுதாயச் சீர்திருத்த மசோதா வாக விளங்கும் இதை வரவேற்கிறேன். ஜாதி இந்துக்கள், மட்டு மின்றி இந்துக்களில் எல்லாப் பிரிவினருக்கும், இந்து சமுதாயத்தில் சமவாய்ப்புப் பெற வேண்டுமென்பதற்காக இதில் புரட்சிகரமான மாற்றங்களைச் செய்த மகாத்மா காந்தியை, மக்கள் தொகையில் ஆறில் ஒரு பங்கான நாங்கள் வரவேற்கிறோம். எனக்கு முன்பு பேசிய பல உறுப்பினர்கள் மதத்திற்கு ஆபத்து என்று பேசினார்கள். எதிலிருந்து அல்லது எங்கிருந்து அவர்கள் ஆட்சேபம் கிளம்புகிறது என்பது எனக்குத் தெரியவில்லை. புத்த பகவான், சங்கரர், ராமானுஜர் போன்ற பல அவதார புருஷர்களைக் குறித்தும், ராம் மோகன் ராய் போன்ற சமூகச் சீர்திருத்தவாதிகளைக் குறித்தும், இந்த சமுதாயத் தின் ஆணி வேரையே தீண்டாமை அரித்துக் கொண்டிருக்கிறது என்று முழக்கமிட்டவரும், ஜாதிகளுக்கிடையே திருமணங்களுக்கு வழிகாட்டியாக இருந்தவருமான மகாத்மா காந்தி குறித்தும், இந்நாடு மிகவும் பெருமை கொள்கிறது. இந்தச் சீர்திருத்த நடவடிக்கைகள் எல்லாம் நாம் காலத்தோடு ஒட்டி ஒழுகுகிறோம் என்பதை நிரூபிக் கிறது. சமூகச் சீர்திருத்த நடவடிக்கைகள் எப்பொழுதெல்லாம் சட்ட மன்றங்களின் முன் வருகிறதோ, அப்பொழுதெல்லாம் அவைகள் நிறைவேறாமல் தடைபோடப்படுகின்றன. மதராஸ் சட்டமன்றத் தின் முன், ஆலயப் பிரவேசத் திட்டம் இருந்தபோது நாங்கள் எவ்வித எதிர்ப்புகளைச் சமாளிக்க வேண்டியிருந்தது என்பதை மதராஸிலிருந்து வருபவன் என்ற முறையில் உங்களுக்கு எடுத்துரைக்க விரும்புகிறேன். தீண்டப்படாதவர்கள் அனுபவித்து வந்த சமூகக் குறைபாடுகளை நீக்கும் விஷயத்தில் அமைச்சர்களின் முகங்களை நோக்கி மிளகாய்பொடிகள் தூவப்பட்டன. சமூகச் சீர்திருத்த நட வடிக்கைகளை கொண்டு வரும்போது நாட்டில் நாம் சந்திக்கும் நிலை இதுதான். இந்நாட்டிற்கு அத்வைதத்தை அருளிய சங்கரரே அவரது குரு ''நீ யாரென்று கேட்டபோது'' அவர் கூறினார்.

न मे मृत्युश्च न मे जातिभेदः।
पिता नैव मे न माता न जन्मः॥
न बंधुर्न मित्रो न गुरुर्न शिष्यः।
चिदानंदरुपः शिवोऽहं शिवोऽहंः॥

பகவான் சங்கரரால் அருளப்பட்ட வார்த்தைகள் இவை. ஆண் பெண் பாலர்களுக்கிடையே அவர் எவ்வித வேறுபாட்டையும்

பார்க்கவில்லை. ஒவ்வொருவரையும் அவர் சமமாகவே பாவித்தார். இந்த மசோதாவுக்கு ஏன் இவ்வளவு எதிர்ப்புள்ளது என்பதை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. தென்னாட்டின் மிகப் பெரும் தத்துவ மேதையான திருவள்ளுவர் ஆணும் பெண்ணும் நடந்து கொள்ள வேண்டிய முறை பற்றியும் எவ்வாறு வாழ வேண்டு மென்பது பற்றியும் அறிவுரை கூறியுள்ளார். அவைகளெல்லாம் விலை மதிப்பற்ற முத்துக்கள். மனிதகுலத்திற்கு கடவுளால் அருளப்பட்ட எல்லாச் செல்வங்களிலும் பெண்களுக்கு சமமான பங்களிப்பதில் ஏன் இவ்வளவு எதிர்ப்புள்ளது என்பதை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை.

மசோதா கொண்டு வரப்பட்ட நேரம் சரியானதல்ல என்று எனக்கு முன் பேசிய சில உறுப்பினர்கள் கூறினார்கள். 1944 ஜனவரி 20ல் மத்தியச் சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்ட நாளி லிருந்து இந்த மசோதா நாட்டின் முன் உள்ளது. இந்தியாவின் மூலை முடுக்குகளில்கூட இந்துச் சட்டத் தொகுப்பைப் பற்றித் தெரிந்திருக் கின்றனர். இம்மசோதாவின் சாரத்தை இந்நாட்டின் சாதாரண மக்கள் பொதுவாகப் புரிந்து கொண்டிருக்கின்றனர். இந்த மசோதாவை விவாதித்து முடிவு செய்யும் அதிகாரம் இந்த அவைக்கு இல்லை என்று கூறும் உறுப்பினர்கள் நாட்டிற்கான, தங்கள் பொறுப்பினை உணர்ந்து பேசுகிறார்களா என்பது புரியவில்லை. வெளிநாடுகளிலும் இந்தியாவிலும் மிகவும் பாராட்டி வரவேற்கப்பட்ட, 30 கோடி மக்களுக்கான அரசியல் அமைப்புச் சட்டத்தைத் தயாரிக்க அதிகாரம் பெற்ற இந்தச் சட்ட மன்ற உறுப்பினர்களுக்கு இந்நாட்டின் பெண்கள் முன்னேற்றத்திற்காக இந்த மசோதாவைக் கொண்டுவரத் தகுதி கிடையாதா? ''மதம், ஜாதி, பால்'' ஆகிய அடிப்படைகளில் மக்களை அரசு பாகுபாடு செய்யக்கூடாது என்று அரசியல் அமைப்புச் சட் டத்தின் அடிப்படை உரிமைகள் பகுதியில் தெளிவாகக் கூறப்பட் டுள்ளது. பெண்களுக்கும், குழந்தைகளுக்கும் அரசு சில விசேஷ விதிமுறைகளை வகுப்பதை இந்த விதியில் உள்ள எதுவும் தடை செய்யமுடியாது என விதி 15(3) கூறுகிறது. மேலும் விதி 46 இவ்வாறு கூறுகிறது: ''மக்களில் பின்தங்கிய நிலையில் உள்ளவர் களின் கல்வி, மற்றும் பொருளாதார நலன்களை விசேஷ அக்கறை யுடன் ஊக்கப்படுத்த வேண்டும். பெண்கள் இந்தப் பிரிவில் வர வில்லையா? அவர்கள் நலன்கள் பாதுகாக்கப்படவேண்டாமா? இந்தச் சட்டம் கட்டாயப்படுத்தும் சட்டம்கூட இல்லை. எல்லோரும் இதை வரவேற்க வேண்டும். திருமணம், வாரிசு தத்தெடுப்பது

போன்றவைகள் எல்லா மாகாணங்களிலும் வாழும் இந்துக்க ளிடையே ஒரே மாதிரியாக இல்லை. பல இடங்களில் அவை மாறுபட்டு உள்ளன. ஒரு பொதுவான உரிமையியல் சட்டத் தொகுப்பை உருவாக்க வேண்டுமென்று அரசியல் அமைப்புச் சட்டத் தில் நாம் கூறியுள்ளோம். அந்தச் சட்டம் வருவதற்கு முந்தைய நிலை இந்தச் சட்டம் என்பது என் கருத்து. என்னுடைய மாவட்டத்தில் ஏராளமான மலைவாழ் மக்கள் இருக்கின்றனர். அவர்கள் இந்துக் கள் என்று கூறிக் கொண்டாலும், அவர்களுடைய திருமணச் சடங்கு கள், வாரிசுரிமை நடைமுறைகள் போன்றவை இந்துக்களின் நடைமுறை களிலிருந்து மிகவும் வேறுபட்டுள்ளன. பழங்குடி மக்களான தோடர் இனத்தவரிடையே பலதார வழக்கம் இருப்பதால், அந்த இனம் சுருங்கி வருகிறது. மற்றொரு பழங்குடி மக்களான படகாஸ் இனத்தவரின் சடங்கு முறைகளும் இந்துக்களின் நடைமுறை களிலிருந்து வேறுபட் டுள்ளன. அவர்களும் இந்துக்கள் என்றே தங்களைக் கூறிக் கொள் கின்றனர். அவர்களிடையேயான ஒரு வழக்கம் என்னவென்றால், ஒரு பெண்ணை ஒருவன் மணம் புரிய விரும்பினால் அவன் அவளுக்கு வரதட்சிணை கொடுக்க வேண்டும். இதைத் 'திரைப்பணம்' என்கின்றனர். அதன் பிறகு, கணவனிட மிருந்து அந்தப் பெண் பிரிந்து செல்ல விரும்பி, வேறு ஒரு வாலிபன் அவளுக்குத் 'திரைப்பணம்' அளித்தால் அவனைக் கணவனாக ஏற்றுக் கொள்ள அவளுக்கு சுதந்திரம் உண்டு.

புகழ் பெற்ற முனிவர்களையும் துறவிகளையும் உருவாக்கிய இந்நாட்டில் இவை தொடர வேண்டுமா? பழங்குடி மக்களாக இருந்தாலும் சரி, மலைவாழ் மக்களாக இருந்தாலும் சரி, புதிய அரசியல் அமைப்புச் சட்டத்தின்படி அவர்கள் பாதுகாக்கப்பட வேண்டும்.

ஐயா, எனது மதிப்பிற்குரிய நண்பர்கள் ஏற்கெனவே குறிப் பிட்டபடி பலதாரத் திருமணம், சட்டப்படி ஒழிக்கப்பட்டுவிட்டது. நாடு முழுவதற்குமான ஒரு சட்டத்தை முறைப்படுத்தித் தொகுத் தாலன்றி, மெட்ராசை விட்டு வெளியேறி வேறு ஒரு மாகாணத் தில் திருமணத்தை முடித்துக் கொண்டு, திரும்பவும் மெட்ராசுக்கு வரலாம். நாட்டிலுள்ள எல்லா மாகாணங்களிலும் சட்டம் ஒரேசீராக இல்லையென்றால், மெட்ராஸ் மட்டும் இந்தச் சட்டத்தை அமல் படுத்துவது சாத்தியமற்றதாகும்.

திருமணம், விவாகரத்து சம்பந்தமான அத்தியாயங்களே அவை முன் உள்ள வேறுசில முக்கியமான விஷயங்கள். சமயச் சடங்குகள் அடிப்படையிலான திருமணம் மற்றும் பதிவுத்திருமணம் ஆகிய இரண்டு வகைத் திருமணங்களின் முக்கியத்துவத்தைக் குறித்து ஏற்கெனவே சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இதன்படி பட்டியல் சாதியினர் ''யோகத்தை'' முடித்துவிட்டு சாதாரணத் தாலியைக் கட்டுகிறார்கள். அதற்குப் பிறகுதான் திருமணம் உண்மையானதாக ஆகிறது. பதிவுத் திருமணம் வந்த பிறகு, இன்றும்கூட மக்கள் இந்த வழக்கத்தைப் பின்பற்றுவதைக் காண்கிறேன். எல்லா இந்துக்களும், சனாதினிகளும் மற்றவர்களும் ஏன் இந்த முறையைப் பின்பற்றக் கூடாது என்பதற்கான காரணம் எதுவும் எனக்குத் தெரியவில்லை.

கூறு 33 (எஃப்) விபசாரத்தைப் பற்றிக் குறிப்பிடுகிறது. இந்தச் சட்டத் தொகுப்பில் அந்தச் சொல்லே இருக்கக்கூடாது என்று நான் விரும்புகிறேன். நம் நாட்டில் மூன்று பெண்கள் இருக்கும்வரை, இந்தியாவில் கற்புடமை பாதுகாக்கப்படும் என்று சுவாமி விவேகானந்தர் சுட்டிக் காட்டியுள்ளார். இந்து சமுதாயத்தில் எந்தப் பிரிவிலும் இந்தக் கூடா ஒழுக்கம் பெருமளவில் காணப்படவில்லை. நிச்சயமாக சிலர் இவ்வாறு நடந்து கொள்ளக் கூடும். ஆனால் இதற்காக ஒரு சட்ட விதிமுறை அவசியமா என்பதற்கான காரணம் தெரியவில்லை

கூறு 9ன் துணைவிதி (2) மற்றும் கூறு 16ல் சட்டத்தை மீறுபவர்களுக்கு விதிக்கப்படும் அபராதங்களைக் காண்கிறேன். முக்கியமாக, ஏழை மக்களுக்கு, குறிப்பிட்ட அபராதத் தொகை மிக அதிகமாக உள்ளது. பெயரளவுக்குள்ள தொகையாக அது இருக்க வேண்டும். தீர்ப்புவழி பிரிதல் என்பதைப் பொறுத்தவரையில் வசதி படைத்தவர்களைப் பொறுத்தவரையில் அது சரிதான். அவர்கள் விவாகரத்திற்கு நீதிமன்றம் செல்லமுடியும். ஆனால் இந்தியாவின் லட்சக்கணக்கான கிராமங்களின் நிலைமை என்ன? ஒரு குறிப்பிட்ட மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சாதிப் பஞ்சாயத்துகள் இதை முடிவு செய்வார்கள். இந்த நடைமுறை சரி என்று நான் கருதவில்லை. இதற்கு ஒரு வழிமுறை காணப்படவேண்டும். மக்கள் பிரதிநிதிகளைக் கொண்ட பஞ்சாயத்து உருவாக்கப்பட்டு இவை இந்த விவாகரத்து வழக்குகளுக்கு முடிவு காணவேண்டும்.

அடுத்து, சீதனப் பிரச்சினையைப் பார்க்கலாம். ஒரு தகப்பனாராலோ, சகோதரரானாலோ இது ஒரு பெண்ணுக்குக் கொடுக்கப்

பட்டிருக்கும். கணவன் அதைச் சரியாகப் பாதுகாக்காவிடின் என்ன வாகும்? ஐயா, சீதனச் சொத்து என்றுமே பெண்ணின் உடைமை யாக சேர்க்கப்பட வேண்டுமென்று நான் நினைக்கிறேன்.

கூறு 72 தத்தெடுப்பதைக் குறித்து இவ்வாறு கூறுகிறது: ''சரியான முறையில் தத்தெடுக்கப்பட்டிருந்தால், தத்தெடுத்த தந்தையோ, தாயாரோ அல்லது வேறு எந்த நபருமோ அதை ரத்து செய்ய முடியாது. அல்லது தத்தெடுக்கப்பட்ட பையன் தன் நிலையை உதறிவிட்டு பிறந்த குடும்பத்திற்குத் திரும்ப வந்துவிட முடியாது.'' ஐயா, தத்தெடுக்கப்பட்ட மகனோ அல்லது வேறு எந்த நபருமோ தவறுதலாக நடந்து கொள்வதையும், குடும்ப சொத்தை அழிப்பதையும் தடுப்பதற்கு, ஒரு விலக்களிக்கும் விதி தேவை என நினைக் கிறேன்.

93ஆம் பிரிவு மனைவிக்காக பொறுப்பில் வைக்கப்படும் வரதட்சிணையைப் பற்றிக் குறிப்பிடுகிறது. இந்தச் சட்டத் தொகுப்பு அமலுக்க வந்தபின்பு இது நடைமுறைக்கு வரும் என்று கூறுகிறது. இந்தச் சட்டத் தொகுப்பு அமலாவதற்கு முன்பே நிலவிலுள்ள எல்லா நேர்வுகளுக்கும் இது அமல்படுத்தப்பட வேண்டும் என்று நினைக்கிறேன்.

ஐயா, ஆண்களின் கொடுமைக்கு ஆளாகியிருக்கும் பெண்கள் யாவருக்கும், நடைமுறைக்கு வரவுள்ள இந்த இந்துச் சட்டத் தொகுப்பு பெரும் பரிகாரமாக இருக்கும் என்று இறுதியாகச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். பெண்கள் சமமான வாய்ப்புகளையும், சலுகைகளையும் பெற்றுள்ளதாகப் பலர் கூறுகின்றனர். ஆனால் உண்மையில், அப்படியில்லை. சில சந்தர்ப்பங்களில் அப்படியிருக் கலாம். ஆனால் சுமார் 90 சதவீதம் பெண்கள் பல சமூகக் கொடுமை களால் வருந்திக் கொண்டிருக்கின்றனர். கிரேதா, திரேதாத் திவாபர மற்றும் கலி யுகங்களில் நாம் நான்காவது யுகத்தில் வாழ்ந்து வரு கிறோம். இது ஒரு இரும்பு யுகம். சீர்திருத்தங்கள் கொண்டுவர வேண்டிய யுகம். ஆண்களைப் போலவே பெண்களும் எல்லா வசதிகளையும் அனுபவிக்க வகை செய்ய வேண்டும். தொட்டிலை ஆட்டும் கரங்கள் உலகத்தை ஆளும் என்று சொல்லப்படுகிறது. இந்த வசதிகளை நம்மிடமிருந்து அவர்கள் பலவந்தமாக பிடுங்குவதற்கு முன்பு, நாம் அதை அமைதியான முறையில் அவர்களுக்கு அளித்து விடுவோம். எனவே இந்த அரசால் கொண்டுவரப்பட்ட இந்த இந்துச் சட்டத் தொகுப்பை ஆதரிக்கிறேன். இது நடைமுறைக்கு

வரும்போது, இதைக் கொண்டு வருவதற்கு பெரும்பாடுபட்ட எனது மாண்புமிகு நண்பர் அம்பேத்கருக்கு மேலும் இது ஒரு வெற்றிக் கனியாகும்.

***திரு. ஓ.வி. அளகேசன் :** (மெட்ராஸ் : பொது) : ஐயா, இந்த மசோதாவை நிறைவேற்றுவதற்கான பொறுப்பு தன் தலையில் விழுந்ததற்காக பெரும் மகிழ்ச்சியடைவதாக நேற்று டாக்டர் அம்பேத்கர் கூறினார். ஐயா, சுதந்திர இந்தியாவின் அரசியல் அமைப்புச் சட்டத்தின் பிறப்பிற்கு அவர் செவிலித்தாயாக இருந்து உதவியதற்கு வரலாற்றில் அவர் பெயர் பொன்னெழுத்தில் பொறிக் கப்படும். ஐயா, அவர் பேராசைக்காரர். மேலும் ஒரு வெற்றிக் கனியை அடைய அவர் விரும்புகிறார். அது நியாயமானதுதான். பழைய ரிஷிகளான மனு, யாக்னவல்கியர், மற்றும் சட்டங்களை வழங்கிய இதர பண்டைய வல்லுனர்களைவிட ஒரு படி மன்னே செல்ல வேண்டும் என்பதே அவருடைய ஆசை.

நாடு முழுவதற்குமான ஒரே சீரான சிவில் சட்டம் சம்பந்த மான புதிய அரசியலமைப்பின் 44ஆவது பிரிவைக் குறித்து, எனக்கு முன்பு பேசிய பேச்சாளர்களில் ஒருவர், திரு. படாஸ்கர் என்று நினைக்கிறேன். பேசினார். ''இந்த இந்துச் சட்டத் தொகுப்பை வாபஸ் பெற்றுக்கொண்டு சிவில் சட்டத் தொகுப்பை ஏன் கொண்டு வரக் கூடாது, என்று கேட்டார். தொல்லைதரும் நாளை ஒத்திப் போட வாதிடுவது போன்று இது தோன்றலாம். இந்தப் பிரச்சினை குறித்து, கொள்கை அறிக்கை ஒன்றை, அரசு ஏன் முன்வைக்கக் கூடாது? அந்தப் பாதைக்கான முதல் அடிதான் இதுவா? இதைத் தொடர்ந்து, அரசியல் அமைப்பின் 44ஆவது பிரிவுக்கு செயல் வடிவம் கொடுக்க மேலும் பல நடவடிக்கைகள் எடுக்கப்படுமா? அரசுக்குத் தர்ம சங்கடத்தைக் கொடுக்க நான் விரும்பவில்லை. ஆனால் அதே நேரத்தில், அரசிடமிருந்து ஒரு தெளிவான கொள்கை அறிக்கையை எதிர்பார்க்கிறேன்.

ஐயா, அன்றொருநாள், ஒரு தார மணத்திற்கு, ஆதரவாக மாண்புமிகு திரு. கே. சந்தானம் வாதிட்டது எல்லோர் மனதையும் மகிழ்வித்தது. இந்த நடைமுறையை யாராவது எதிர்க்க முடியுமா என்று அவர் சவால் விட்டார். ராமரின் பண்புகளை தனக்கே உரிய,

★ அ.நி.வி. (சட்) டி. தொகுதி VI, பாகம் II, 14 டிசம்பர் 1949, பக்கங்கள் 614-21.

யாரும் பின்பற்ற முடியாத பாணியில், போற்றுதற்குரிய முறையில் தியாகராஜ சுவாமிகள் பின்வரும் சொற்களில் எடுத்துரைத்துள்ளார்.

ஒகா மாட்டா, ஒகா பாணம், ஒகா பத்னி

ஒரு சொல், ஓர் அம்பு, ஒரு மனைவி.

இந்த லட்சியம் நம் முன் வைக்கப்பட்டது குறித்து நாமெல்லோரும் மகிழ்ச்சியடைகிறோம். ஐயா, அது இந்துக்களுக்கு மட்டுமே சிறந்த நடைமுறையா என்று கேட்கிறேன்? இந்தியாவின் எல்லாக் குடிமகன்களும், ஒரு தார மணத்தையே பின்பற்ற வேண்டுமென்ற பொதுவான மசோதாவை இந்த அரசு கொண்டுவருமா? அரசுக்குத் தர்ம சங்கடத்தை ஏற்படுத்துவதற்காக நான் இதைக் கூறவில்லை. அதை மீண்டும் சொல்கிறேன். இந்த முறையில் அந்த நடைமுறை கொண்டுவரப்பட்டிருக்கும்போது, பிரச்சினையையும் அதன் சரியான பகைப்புலனில் அளித்திருக்க வேண்டும். மதத்தின் அடிப்படையில், இதை ஆட்சேபிக்கக்கூடிய ஒரு சமூகம் இந்தியாவில் இருப்பது உங்களுக்கு ஞாபகத்தில் இருக்கும், மேலும், நாட்டின் பிரிவினைக்குப் பிறகு, தொடர்ந்த சோக நிகழ்ச்சிகளை நீங்கள் மறந்திருக்க மாட்டீர்கள். நாட்டின் மதச்சார்பற்ற நிலைக்கு அது எதிரானது என்றும், அது மதத்தில் குறுக்கீடு செய்வதாகும் என்றும், நீங்கள் கூறுவீர்கள். நமது அரசு மதச் சார்பற்றதாக இருக்கும் என்று நமது பிரதமர் அறிவித்துவிட்டார். நமது அரசின் மதச்சார்பற்ற தன்மை குறித்து நம் மக்களுக்கு அறிவு புகட்ட வேண்டும். எல்லைக்கப்பால் நடை பெறும் பல விஷயங்களின் எதிர்விளைவுகள் இந்தப் பக்கத்திலும் நிச்சயமாக ஏற்படும். அந்த அரசு மத அடிப்படையிலானது என்பது மானக்கேடான விஷயம். அந்தக் கொள்கையின் முழு விளைவுகளையும் நிறைவேற்ற அவர்கள் தீர்மானித்துள்ளனர். மறு பக்கத்தில் நடைமுறையிலுள்ள அந்தக் கொள்கையின் எதிர் விளைவுகள் இந்தப் பக்கத்தில் ஏற்படாமல் இருக்க முடியாது. எனவே, இவ்வரசின் மதச் சார்பற்ற தன்மை குறித்து மக்களிடையே சந்தேகம் தோன்ற ஆரம்பித்துள்ளது. இந்தக் கோணத்தில், அவர்கள் அதைப் பார்க்கிறார்கள். அதற்கு நியாயமான காரணமும் உள்ளது. இந்து மதம் சம்பந்தமான எதிலும் அநாவசியமாகத் தலையிடுவதே மதச் சார்பற்றது என்று உணரப்படுகிறது. இம்மாதிரி நடவடிக்கைகளை இந்நாட்டிலுள்ள பொதுமக்கள் இவ்வகையில்தான் வரவேற்கிறார்கள். இந்நாட்டில் நாம் நிறுவ விரும்பும் மதச்சார்பற்ற அரசின் நலனுக்காக, நமது மக்களையும் நம்முடன் அழைத்துச் செல்ல நாம் முயற்சிக்க வேண்டும். நாங்கள் ஒரு மதச்சார்பற்ற அரசு என்று அரசு

மட்டும் கூறிக்கொண்டிருந்தால் போதாது. நாட்டின் பொதுமக்களும் இதைச் சரியாகப் புரிந்து கொண்டு, நன்கு வரவேற்க வேண்டும். இல்லையெனில் நீண்டகாலம் மதச்சார்பற்றதாக அது தொடர முடியாது. இந்நாட்டில் நாம் நிறைவேற்ற வேண்டும் என்று கருதிய லட்சியத்தை இழப்பதுடன், அது நிறைவேறும் நாளை தள்ளிப் போட்டு விடுவோம். எனவேதான் ஐயா, தற்போது மக்கள் சரியான மன நிலையில் இல்லை என்று கூறுகிறேன். அவர்கள் கோபத்தில் மௌனமாக இருக்கிறார்கள். அவர்கள் மன வருத்தத்தில் இருக் கிறார்கள். கோபத்திலிருக்கும் குழந்தை மிக இனிப்பான பொருளைக் கூட உண்ண மறுப்பது போன்று, இந்தச் சீர்திருத்தத்தை வரவேற்கும் நிலையில் மக்கள் இல்லை. அதில் சில நல்ல பகுதிகள் கூட இருக்கலாம். மக்கள் விரும்பாத எதையும் அவர்கள் மீது திணிப்பது சிறந்த தல்ல. கடந்த தடவை டாக்டர் அம்பேத்கர் பர்க் அவர்களை மேற்கோள் காட்டினார். அரசியல் அமைப்புச் சட்டத்தின் மூன்றாவது வாசிப்பின்போது நிகழ்த்திய உரையின் இறுதியில் சோக உணர் வுடன் நமக்கு ஓர் எச்சரிக்கை விடுத்தார்.

''பாதுகாக்க வேண்டும் என்று விரும்பும் எவரும் பழுது பார்க் கவும் தயாராக இருக்க வேண்டும்.''

ஐயா, இது மிக நல்லது. நாம் பழுதுபார்க்கத் தயாராக உள்ளோம். ஆனால் இந்த மசோதா வெறும் பழுதுபார்க்கும் நட வடிக்கை மட்டுந்தானா? நாம் வாழ்ந்து கொண்டிருக்கும் வீட்டையே, அது உடைத்து நொறுக்குகிறது. ஒருபுதிய கட்டமைப்புக்கு அது திட்டமிடுகிறது. கட்டமைப்பு மாற்றங்களைச் செய்ய அது விரும்பு கிறது. இங்கும் அங்குமாகச் செய்யப்படும் பழுதுபார்த்தல் என்று அதைக் கூற முடியாது. அது கட்டமைப்பையே மாற்றுவதாகும்; பழைய கட்டமைப்பை நீக்கிவிட்டு ஒரு புதிய கட்டமைப்பை அமைப்பதுதான் அதன் நோக்கம் என்று நிச்சயமாகக் கூறுவேன்.

மாண்புமிகு டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் : பழுது பார்த்தல் யாவுமே, கட்டமைப்பைப் பழுது பார்ப்பதுதான்.

திரு. ஓ.வி. அளகேசன் : கட்டமைப்புச் செப்பனிடுவதைக் கூட நான் ஆட்சேபிக்கவில்லை. இந்தப் பழுதுபார்த்தலுக்கு முன் இந்த அவையே கட்டமைப்பைப் பழுது பார்த்தலுக்கு உள்ளாக வேண்டும். இதைக் கூறுவதன் மூலம் இந்த அவையின் இறையாண் மையையோ, பிரதிநிதித்துவ தன்மையையோ சிறிதளவு கூட குறைத்து

மதிப்பிடவில்லை. மற்ற மசோதாக்களை நாம் நிறைவேற்றியபோது, அதைக் கண்டு யாரும் ஆச்சரியப்படவில்லை. இதைக் குறித்து பேராசிரியர் ஷா நீண்டநேரம் விளக்கினார். அவை வழக்கமான விஷயங்கள். ஆனால் இது முற்றிலும் மாறுபட்ட அடிப்படையில் கையாளப்படுகிறது. சந்தேகத்துடனும், கோபத்துடனும் இது நோக்கப்படுகிறது. இந்தக் காரணத்தினால்தான், அதைச் சீர்தூக்கிப் பார்க்க வேண்டுமென்று சொல்கிறேன். கட்டமைப்பில் பழுது பார்க்கப்பட்ட இந்த அவை, அதிகத் தன்னம்பிக்கையுடனும், அந்தக் கட்டத்தில் அடையக் கூடிய அளவுக்கு வெற்றியுடனும் இந்த மசோதாவை நிறைவேற்ற அனுமதிக்கப்பட வேண்டும்.

ஐயா, இந்த மசோதா நிறைவேற்றப்படும் சூழ்நிலை வேறு ஒரு முக்கிய விஷயம். நம்முடைய சிந்தனைகளையும் நடவடிக் கைகளையும் வழிநடத்திச் சென்ற மகான் ஒருவர் நம் நாட்டில் இருந்தார். நாம் அடிமைகளாக இருந்தாலும், சுதந்திரமாகச் சிந்திப் பதற்கும், சுதந்திர மனிதர்களாகச் செயல்படுவதற்கும் நமக்கு அவர் கற்றுக் கொடுத்தார். நாம் அவரைப் பின்பற்றினோம். அந்தப் பரம் பரைக்கு அவர் வித்திட்டார். இந்த நாடு யதார்த்தமான முறையில் சுதந்திரம் அடைவதற்கு நீண்ட காலத்திற்கே முன்பே, சுதந்திரச் சிந்தனை மற்றும் செயல்பாடுகளில் அவர் ஈடுபட்டார். ஆனால், துரதிர்ஷ்டவசமாக நமக்கு வழிகாட்ட, அவர் நம்மிடையே இல்லை. நாம் பின்பற்றுவதற்கு அவருடைய உதாரணம் நம் முன் இருக்கிறது. ஆலயப் பிரவேசம், தீண்டாமை ஒழிப்பு போன்ற பல்வேறு விஷ யங்களில் கூட, சட்டத்தின் மூலம் இந்த உயர்ந்த லட்சியங்களை அடைய வேண்டாம் என்று அவர் அறிவுறுத்தினார். அவர் தன்னையே வருத்திக் கொண்டார். இவ்வகையில்தான் அவர் இந்தப் பெரும் சீர்திருத்தங்களை நிறைவேற்றினார். இம்மாதிரியான நடைமுறை களை அவர் வலியுறுத்தியதுடன், மக்கள் அதை ஏற்றுக் கொள்ளுமாறு வாதிட்டு, அறிவுறுத்தினார். இது ஒரு நிலைநாட்டப்பட்ட உண்மை யாகிவிட்டது. இந்த வழியைத்தான், நாமும் பின்பற்ற வேண்டும். விருப்பமில்லாத மக்களின் மீது, சீர்திருத்தங்களைத் திணிப்பதன் மூலம் அல்ல.

திரு. வி.ஐ. முனிசாமிப் பிள்ளை : நீங்கள்தான் அவர்களுக்கு அறிவுரை அளிக்க வேண்டும்.

திரு. ஓ.வி. அளகேசன் : நாங்கள் நாடு பூராவும் சென்று, மக்களுக்கு அறிவூட்டுவோம். விரைவில் பொதுத் தேர்தல் வருகிறது. அதுவே அதற்கு மிகச் சிறந்த நேரம் ஆகும்.

திருமதி ஜி. துர்க்காபாய் (மெட்ராஸ் : பொது) : மொத்த பயமே அதுதான்.

திரு. ஓ.வி. அளகேசன் : இந்த மசோதாவில் உள்ள பல்வேறு விதிமுறைகளைக் குறித்து மக்களுக்கு அறிவூட்ட அது மிகச் சிறந்த வாய்ப்பாக இருக்கும். நேற்று காங்கிரஸ் தலைவர் கூறியவை மிகவும் அர்த்தம் பொதிந்துள்ளவை. இங்கிலாந்திலுள்ள தொழிலாளர் அரசு எப்படி செயல்படுகிறது? வாக்காளர்களின் அனுமதிபெற்ற மசோதாவை, ஒரு முக்கியமான மசோதாவை அது ஒத்தி வைத்து விட்டது. வாக்காளர்களின் அனுமதியிருந்தும்கூட, நாட்டில் உள்ள நிலைமையைப் பார்த்தபின், பொதுத் தேர்தல் முடியும் வரை அதைத் தள்ளி வைத்தது. மக்களின் தீர்ப்பை அவர்கள் மீண்டும் பெறுவர். அதன்பிறகு அந்த மசோதா நிறைவேற்றப்படும். வாக்காளர்களின் அனுமதியும், ஒப்புதலும் உள்ள ஒரு விஷயத்திற்கே இப்படியென்றால், வாக்காளர்களுக்கு நமது நோக்கம் சிறுதுகூடத் தெரிவிக்கப்படாத நிலையில், அது மேலும் அவசியம் என்று நினைக்கிறேன். ஐயா, ஒவ்வொரு கூட்டத் தொடரிலும் இந்த மசோதா இரண்டு நாட்கள் விவாதிக்கப்படும் காட்சியைக் கண்டு வந்திருக்கிறோம். அடுத்த தீபாவளிக்கு தங்க வளையல்களைப் புதுப்பிப்பதாக வாக்களிப்பது போன்றதுதான் இது. இப்படித்தான் நாம் நடந்து கொண்டு வருகிறோம். இவ்வாறு நடந்து கொள்வதும் சரிதான். ஏனெனில், இந்த மசோதாவின் தீவிர ஆதரவாளர்களான, நமது சகோதரிகள் கூட தங்கள் மனதை மாற்றிக் கொண்டு, அதைத் தம் வழியில் மேலும் செழுமைப்படுத்த முயற்சிக்கலாம். யார் கண்டார்கள் எவரும் எப்போதும்-ஒரே கருத்துடன் இருக்கமுடியாது. அதுவும் முக்கியமாக பெண்கள்.

திருமதி ஜி. துர்க்காபாய் : தங்களுடைய கருத்துகளை அடிக்கடி மாற்றிக் கொள்ளும் சில ஆண்களும் உள்ளனர்.

திரு. ஓ.வி. அளகேசன் : நமது நாட்டின் ஆதிகவியான பெரும் கவிஞர் வால்மீகி இவ்வாறு கூறியுள்ளார்: பெண்களின் பொதுவான குண நலன்கள் மட்டுமே இங்கு குறிப்பிடப்படுகிறது. எந்த ஒரு குறிப்பிட்ட நபரையும் இது குறிப்பிடவில்லை.

சதாஹ்வதானம் லோலாத்ராம்

அதாவது,

மின்னலைப் போல் பெண்கள் மாறுகிறார்கள்.

அதே போன்று, அவர்கள் தங்கள் மனதை மாற்றிக் கொள்வதுடன், மேலும் சிறப்படைய முயற்சிக்கிறார்கள். இதுவரை காத்திருந்ததால் அவர்கள் ஆதாயம் அடைந்தார்களா இல்லையா என்பதை உங்களையும் அவையையும் கேட்க விரும்புகிறேன் ராவ் குழுவின் சிபாரிசுப்படி மகள்களுக்கு பாதிப் பங்கே கொடுக்கப்பட்டது. ஆனால், இப்பொழுது டாக்டர் அம்பேத்கரின் மசோதாவின் படி மகள்கள், மகன்களுக்கு சமமான பங்கைப் பெறுவார்கள் என்பது அவர்களுக்கு ஆதாயந்தானே.

மேலும், ஐயா, அவர்கள் காத்திருந்தால் இன்னும் அதிகம் பெறலாம். மகள்கள் இரண்டு மடங்கு பெறலாம். முதல் நாளன்று மதிப்பிற்குரிய ஏ.கே. மேனனின் உரையைக் கேட்டோம். மற்றொரு நாள், வேறொரு இடத்தில் திரு. தாணுப்பிள்ளையின் உரையைக் கேட்டோம். இதைக் குறித்து மிகக் கவலையுடன் உள்ளனர். முன்னுக்குத் தள்ளுவதற்குப் பதிலாக, பின்னுக்குத் தள்ளிவிட்டதாக அவர்கள் உணர்கின்றனர். இந்தியாவின் மற்றப் பகுதிகளை முன்னுக்கு இட்டுச் செல்லும் இந்த மசோதா தங்களைப் பின்னுக்குத் தள்ளிவிட்டதாக மலபார்காரர்கள் திடமாக நம்புகின்றனர். வேறு பகுதிகளில், தாய் வழி சமுதாய அமைப்பு முறை மறைந்து வருகையில் மருமக்கள் தாயத்தின் கீழ் இந்த நாடே வருவதற்கு அவர்கள் மற்றவர்களை தம் வயப்படுத்தலாம். நமது மலபார் உறுப்பினர்கள் இந்த அவையிலுள்ள உறுப்பினர்களை ஏற்றுக் கொள்ள வைத்து விட்டால், பிறகு எல்லாம் மருமக்கள்தாயமாகிவிடும். ஒளி மிகுந்த எதிர்காலம் இருக்கும். காத்திருப்பதால் அவர்களுக்கு எந்த நஷ்டமும் இல்லை. மற்றவர்களைத் தன் வயப்படுத்தும் சக்தி அவர்களுக்குள்ளது. அவர்கள் மற்றவர்களை இசையச் செய்வதுடன், தங்கள் பாதைக்கு வர தூண்டுவார்கள். இதையெல்லாம் அவர்களால் செய்ய முடியும்.

திரு. துணை சபாநாயகர் : மதிப்பிற்குரிய உறுப்பினர் இம்மாதிரி சொற்றொடர்களை உபயோகிக்க வேண்டாம்.

திரு. ஓ.வி. அளகேசன் : மன்னிக்க வேண்டும். நான் கூறிய சொல்லை வாபஸ் பெற்றுக் கொள்கிறேன்.

நாம் இந்த அவையில் ஓர் அற்புதமான காட்சியைக் கண்டோம். ஓர் அற்புதமான நையாண்டியாக ஆரம்பித்த உரை

சோகமான உபதேசத்தில் முடிந்தது. ஓர் இரவிலேயே நையாண்டி, உபதேசமாக மாறியது. அதைப் பார்க்கும்போது எதுதான் நடக்காது என்று தோன்றுகிறது. இந்த மசோதாவை மேலும் புரட்சிகரமான தாகச் செழுமைப்படுத்த முடியும் என்று இந்த மசோதாவின் தீவிர ஆதரவாளர்களே கருதுகின்றனர். அவர்கள் காத்திருந்தால் மேலும் சிறப்பான ஒரு மசோதாவை அவர்கள் பெற முடியும். நாட்டின் அனுமதியையும் பெற்ற திருப்தியும் அவர்களுக்குக் கிட்டும்.

ஐயா, வேறொரு கண்ணோட்டத்தில், இதைப் பார்க்க விரும்பு கிறேன். பிரச்சினையின் மீதான இந்த மசோதாவின் அணுகுமுறை என்ன? இந்து சமுதாயத்தில் ஆணுக்கும், பெண்ணுக்கும் இடையே சமத்துவமின்மை உள்ளது என்ற அணுகுமுறைதான். ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையே சமத்துவமின்மை என்ற கருத்து. பைபிளில் அளிக்கப்படும் கருத்து என்பதை மிகவும் மரியாதையுடன் தெரி வித்துக் கொள்கிறேன். ஆணும் பெண்ணும் அர்த்தநாரீஸ்வரராக சமமாகவே இருக்கிறார்கள் என்பதே இந்து மதத்தின் கருத்தாகும். இதுதான் நமது சிந்தனைப் போக்கு. ஐயா, அதை இப்படிக் கூறலாம். அது இந்து மதத்தின் அடிப்படைக் கொள்கை. ஆனால் அது முற்றி லும் நிறைவேற்றப்பட்டதாக கூறமாட்டேன். ஆனால் அதுதான் இந்து மதத்தின் அடிப்படைக் கொள்கை. மாறுபட்டிருத்தல் என்பதே நம் கருத்து. ஆண் வலிமையென்றால் பெண் பொறுமையைக் குறிக்கிறது. ஆண் நுண்ணறிவைக் குறித்தால் பெண் ஞானத்தைக் குறிக்கிறது. ஆண் இலக்கணம், என்றால், பெண் கவிதையாகிறாள். பார்வதி பரமேஸ்வரரை காளிதாசர் சொல்லும், பொருளும் என்று வர்ணிக்கிறார். இதுதான் நமது அடிப்படை அணுகுமுறை. ஆணுக் கும் பெண்ணுக்கும் சமத்துவமின்மை என்ற அடிப்படையில் இந்தப் பிரச்சினையை அணுகினால் அடிப்படைத் தவறு இழைத்தவர் களாகிறோம்.

மேலும் ஐயா, தற்போதைய சூழ்நிலை ஒரு சுதந்திரமான சூழ்நிலை அல்ல என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஏனெனில், முக்கியமாக இந்த விஷயத்தில், ஒரு சுதந்திர நாடு என்ற முறையில் நமது சட்டங்களை நாம் ஆய்வு செய்ததில்லை. இப் பொழுது அதிகம் நடைமுறையில் இருப்பது **யாக்னவல்கியரோ** அல்லது **மனுவோ** அல்ல. பிரிட்டிஷ் நீதிமன்றங்கள்தான். இந்தியச் சட்டங்களை விருப்பு வெறுப்பின்றி, திறந்த மனத்துடன் ஆய்ந்து பார்க்க நமக்கு ஒரு பொழுதும் வாய்ப்புக் கிடைக்கவில்லை. எப் பொழுதுமே மேலை நாட்டுக் கருத்தோட்டங்களும், சிந்தனைப்

போக்குகளும் நம் சிந்தனையை ஒரு பக்கமாகச் சாய்த்துவிட்டன. அரசியல் அடிமைத்தனம் நீங்கிவிட்டாலும், மேலை நாட்டு நாகரிகம் மற்றும் கொள்கைகளின் ஈர்ப்பு சக்தியிலிருந்து நாம் மீளவில்லை. எனவே காலம் சிறிது சென்றால், நமது சட்டங்களிலுள்ள நல்லது, கெட்டதுகளை சுதந்திரமான முறையில், புதிய முறையில் ஆய்வு செய்ய முடியும். அது இந்த மசோதாவைச் சீர்ப்படுத்துவதற்கும், செழுமைப்படுத்துவதற்கும் நமக்கு வாய்ப்பளிக்கும்.

ஐயா, ஆண் பெண்ணுக்குச் செய்த கொடுமையைக் களைய வேண்டும் என்ற உணர்வும் இந்த மசோதா கொண்டு வரப்பட்ட தற்கு மற்றொரு காரணமாக உள்ளது. விளையாட்டாகவும் மிகுந்த அக்கறையுடனும் முன்பு கூறப்பட்ட எல்லா விஷயங்களையும், மீண்டும் நான் திரும்பிக் கூறவிரும்பவில்லை. ஆனால் பெண்ணுக்கு எந்த அநீதியும் இழைக்கப்படவில்லை என்று நான் கூற முடியும். சாதாரண வாழ்க்கையில் ஈடுபடுவதை விட வேறு எதைச் செய்ய வும் தூண்டும், தொடர்பற்ற சூழ்நிலைகளால் முறுக்கேறிய தன்மை யின் புத்தி மாறாட்டமே இது என்றுதான் நான் கூறுவேன். இவ்வாறு தான் நான் அதைக் கருதுகிறேன். இந்த நாட்டில் பெண்களுக்குத் தீங்கிழைக்க எதுவும் செய்யப்படவில்லை. மறு தரப்பினர் எழுப்பிய வாதங்கள் சிலவற்றைப் பரிசீலிக்க விரும்புகிறேன். அரசு தரப்பின ரிடம் ஒரு போக்கு அதிகமாக வளர்ந்து வருவதைக் காண்கிறேன். ஒரு மசோதா விவாதிக்கப்படும்போது, சில உறுப்பினர்கள் அதை ஆதரிக்கிறார்கள், சிலர் அதை எதிர்க்கிறார்கள். எனவே இது இசை வின் மிகப்பெரும் பொது அளவு என்று கூறுகின்றனர். இது ஒரு எளிய முறையிலான தீர்வாகும். மசோதாவுக்குப் பொறுப்பான நமது படித்த அமைச்சர் அவ்வாறு நடந்து கொள்ள மாட்டார் என நினைக் கிறேன். எனக்கு இதில் எந்த சந்தேகமும் இல்லை. அது மிகப் பெரும் பொது அளவு அல்ல, மிகச்சிறு பொது அளவு ஆகும் என்று தான் நான் கூறுவேன்.

ஐயா, இந்த மசோதாவுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டதின் அடிப்படை, பாரபட்சமான கண்ணோட்டமும், மனோபாவமேயன்றி நியாயமான காரணங்களல்ல என்று கூறப்பட்டது. இதற்கு ஆதரவு தெரிவிக்கப்பட்டதும் அதே போன்ற குருட்டுத்தனத்தின் அடிப்படை யில்தான் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அதேபோன்ற பாரபட்சமான கண்ணோட்டமும், நியாயமற்ற காரணங்களுந்தான். ஏதோ ஆதரவு என்பது அறிவுபூர்வமானதென்றும், எதிர்ப்பு என்பது அறியாமை என்பதும் சரியல்ல.

மேலும், ஐயா, இது ஒரு இயல்விக்கும், இசைவளிக்கும் நடவடிக்கையே என மசோதாவின் ஆதரவாளர்கள் கூறுகின்றனர். **சனாதனிகள்** எந்தக் குறுக்கீடுமின்றி தங்கள் பழைய வழியில் செல்லலாமென்றும், சீர்திருத்தவாதிகளும் தங்கள் சொந்த வழியில் செல்லலாமென்றும், வேறு ஒரு இடத்தில் கூறப்பட்டுள்ளது. அதாவது, இந்த மசோதாவின் விதி முறைகளில் சாதகமான அம்சங் களை எடுத்துக் கொள்ள விரும்புபவர்களை அதற்கு அனுமதிப்ப துடன், மற்றவர்கள் தங்கள் சொந்தப் பாதையில் செல்ல, முழு சுதந்திரமும் அளிக்கப்பட்டுள்ளது. இதை டாக்டர் அம்பேத்கர் கூறியதாக நினைக்கிறேன். உரிமத்திற்கான பொதுவான சட்டம் ஒன்றை இயற்றி, இதைச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ள விரும்புபவர்கள், அவ்வாறு செய்யலாம் என்று கூறுவதைப் போல் இது உள்ளது. இது ஓர் இயல்விக்கும், இசைவளிக்கும் நடவடிக் கையே என்ற வாதம் செல்லுபடியாகாது. மேலும் சாரதா சட்டம் போன்ற சட்டங்களுக்கு கடந்த காலத்தில் எதிர்ப்பு இருந்தது என்று கூறப்பட்டது. இந்த மசோதா முற்றிலும் வேறுபட்ட அடிப்படையில் உள்ளது. அந்தச் சட்டத்திற்கும் இந்த மசோதாவிற்கும் இடையே வேறுபாடு உள்ளது.

நீண்டகாலமாக, இந்த மசோதா நாட்டின் முன் உள்ளதாக வும் எனவே இனியும் நாம் காத்திருக்கவேண்டியதில்லை எனவும் டாக்டர் தேக் சந்த் கூறினார். இந்த நாட்டின் முன் பல ஆண்டுகளாக இந்த மசோதா உள்ளது என்பது உண்மைதான். ஆனால், அப்பொழுது காங்கிரஸ் அதிகாரத்தில் இல்லை. எனவே அதில் யாரும் அக்கறை கொள்ளவில்லை. காங்கிரஸ் அதிகாரத்துக்கு வந்தவுடன், காங்கிரஸ் கட்சியின் அமைச்சராக டாக்டர் அம்பேத்கர் இந்த மசோதாவை நிறைவேற்றச் செயல்படத் துவங்கிய பின்பு, அதில் ஒவ்வொரு வரும் மிகவும் அக்கறை காட்ட ஆரம்பித்துள்ளனர். அது நடை முறைக்கு வந்துவிடும் என்பது அவர்களுக்குத் தெரியும். எனவேதான் மக்கள் இந்த மசோதாவை நன்கு பரிசீலிக்க வேண்டும் என்று கூறு கிறேன். இதுவரை அது இருந்த நிலையிலும், இப்பொழுது அதன் நிலையிலும் வேறுபாடு உள்ளது.

ஐயா, இந்த மசோதாவை எதிர்க்கும் பல பெண்கள் தங்கள் ஆடவர்களின் தூண்டுதல்களால் அப்படிச் செய்கிறார்கள் என்று கூறப்பட்டது. இது எந்தவித ஆதாரமுமற்றது. குற்றச்சாட்டு என்று நினைக்கிறேன். இந்த மசோதாவை ஆதரிக்கும் பெண்கள், தங்கள் கணவன்மார்களிடம் அதிருப்தியுள்ளவர்களா? அல்லது, இந்த

மசோதாவை ஆதரிக்கும் ஆண்கள் தங்கள் மனைவிகளின் வற்புறுத்து தலினால் அப்படிச் செய்கிறார்களா? இந்த மாதிரியான அர்ப்பத் தனமான வாதங்கள் பயனற்றவை.

திரு. பி. தாஸ் : இந்தக் கேள்விகளுக்குப் பதிலளிக்க இங்கு யாரும் இல்லை.

திருமதி ஜீ. துர்க்காபாய் : தங்கள் கணவன்மார்கள் திரும்பத் திரும்பத் திருமணம் செய்து கொள்ளும்போது அவர்கள் மகிழ்ச்சி யாக இருக்கிறார்கள் என்று நீங்கள் கூறமுடியுமா?

திரு. ஓ.வி. அளகேசன் : அம்மையார் அவர்களே, அதற்குத் தான் நான் வருகிறேன். தயவு செய்து கொஞ்சம் பொறுமையாக இருங்கள்.

திருமதி ஜீ. துர்க்காபாய் : தயவு செய்து அந்தக் கேள்விக்கு முதலில் பதில் சொல்லுங்கள்.

திரு. ஓ.வி. அளகேசன் : ஆம். உரிய நேரத்தில் உரிய வகை யில் நான் பதில் சொல்வேன்.

பண்டிட் கோவிந்த மாளவியா : இன்னும் எவ்வளவு நேரம் அமர்வதாக உத்தேசித்துள்ளோம் என்பதைத் தெரிந்து கொள்ள லாமா?

மதிப்பிற்குரிய சில உறுப்பினர்கள் : ஆறு மணி.

மதிப்பிற்குரிய சில உறுப்பினர்கள் : ஏழு மணி.

திரு. துணை சபாநாயகர் : அவை கொஞ்சம் கொஞ்சமாக மெலிந்து வருவதைக் காண்கிறேன். அது மிகவும் மெலிந்து போன வுடன் நான் எழுந்து விடுவேன்.

ரோகிணி குமார் சௌதுரி : இப்பொழுது நாம் தேனீர் அருந்தச் செல்லலாமா, ஐயா?

திரு. துணை சபாநாயகர் : இல்லை. மதிப்பிற்குரிய உறுப் பினர் விரைவில் முடித்துவிடுவார்.

திரு. ஓ.வி. அளகேசன் : ஐயா, இவ்வகையான மசோதாவை இருவகையில்தான் நியாயப்படுத்த முடியும். இந்த மாதிரியான மசோதாவுக்கு மக்களிடமிருந்து உணர்வு பூர்வமான கோரிக்கை இருக்க வேண்டும். அல்லது, சீர்திருத்தம் எதையாவது கொண்டுவர எண்ணம் கொண்டுள்ள சிலர், அந்தச் சீர்திருத்த நடவடிக்கையின் சிறப்பம்சத்தை சமுதாயம் உணராது இருப்பினும், இது சமுதாயம் முழுவதற்குமே பயன்தரக் கூடியது என்று கருதலாம். அவர்கள் மக்களிடம் சென்று தங்கள் நிலை சரியானதே என்று நிரூபித்து அவர்களுக்கு அறிவூட்ட வேண்டியது, இந்தச் சீர்திருத்த நடவடிக்கை பயனுள்ளது என்று நினைப்பவர்களின் கடமையாகும். என்னுடைய வாதமெல்லாம், இந்த மசோதாவைக் கொண்டு வந்தவர்கள், இந்த சமுதாயத்திற்கு இது பயன்தரத்தக்க நடவடிக்கை என்று நம்பு பவர்கள், மக்களிடம் சென்று அவர்களுக்கு இதை தெளிவுபடுத்த வேண்டும். மசோதாவின் தீவிர ஆதரவாளர்களிடமிருந்து இதைத் தவிர வேறெதையும் நான் விரும்பவில்லை.

திருமதி ஜி. துர்க்காபாய் : அவர்கள் அதைச் செய்துள்ளனர்.

திரு. ஓ.வி. அளகேசன் : இதை ஏற்கெனவே அவர்கள் செய்து விட்டதாக என் சகோதரி கூறுகிறார். இந்தச் சிறுபான்மையினரான சீர்திருத்தவாதிகள், இந்துக்களின் பெரும்பான்மையினரின் சார்பாக பேசும் உரிமை இருப்பதாகக் கூறுவது நம்ப முடியாதது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அவர்களுக்குப் பொறுமை வேண்டும். இந்த மசோதாவின் சிறப்புகளை மக்களுக்கு எடுத்துணர்த்த வேண்டும். ஏதோ திருப்திக்காக அதை வேக வேகமாக நிறைவேற்ற முயற்சிக்கக் கூடாது.

நான் சுட்டிக்காட்ட விரும்பும் மேலும் ஒரு முக்கியமான விஷயம் இதுதான் : அவசர கோலத்தில் இம்மசோதாவை நிறை வேற்றிச் சட்டமாக்கிவிட்டாலும், விதவை மறுமணச் சட்டம் ஒரு நூற்றாண்டுக்கு முன்பு நிறைவேற்றப்பட்டுச் செயலற்ற சட்டமாக இருப்பது போல், இதுவும் ஆகிவிடும். அது ஒரு செயலற்ற சட்ட மாகிவிடக் கூடாது என்று நீங்கள் நினைத்தால், சமுதாய மக்கள் அதன் பலனைப் பெற வேண்டுமென்று நீங்கள் விரும்பினால் அதற்காகக் காத்திருப்பதோடு அதைப் பற்றி மக்ளுக்குத் தெளிவுபடுத்த வேண்டும்.

டாக்டர் அம்பேத்கர் குறிப்பிட்ட சில விஷயங்களுக்குச் செல்ல விரும்புகிறேன். இந்த மசோதா விதி விலக்குகளுக்கான ஒரு சட்டம் என்று தோன்றுகிறது. கூட்டுரிமை முறை பத்துவித சொத்துகளுக்கு அதன் அதிகார வரம்பிலிருந்து விலக்களித்துள்ளது என்று டாக்டர் அம்பேத்கர் கூறியுள்ளார். அவை தனியார் சொத்தாகக் கருதப்படுகின்றன. இந்த மாதிரி பல விலக்குகள் அளிக்கப்பட்டுள்ளதால் அந்தக் கூட்டுரிமை முறைக்கே முடிவு கட்டலாம் என்று அவர் கூறுகிறார். இது அவர் கூறிய கருத்துகளில் ஒன்று. சீதனச் சொத்தில் பெண்களுக்கு முழு உரிமை இருப்பதால், எல்லாச் சொத்துகளுக்கும் அவ்வாறே இருக்கட்டும் என்று மேலும் அவர் கூறுகிறார். இந்தக் கூட்டுரிமை முறையில் அழிவின் விதைகள் உள்ளடங்கி இருப்பதால், கூட்டுக் குடும்ப முறைக்கே முற்றுப்புள்ளி வைக்க வேண்டியதுதான். நான் அவரிடம் ஒன்று கேட்க விரும்புகிறேன். இப்பொழுதுதான் அவர் அரசியல் அடிப்படைச் சட்டத்தை நிறைவேற்றியுள்ளார். அரசியல் அமைப்புச் சட்டத்தின் பல விதிகளுக்கும் விதிவிலக்குகளும், வரம்புரைகளும் அளிக்கப்பட்டுள்ளன. இந்தக் காரணத்திற்காக விலக்குகளையே விதிகளாக மாற்றவேண்டுமா? அவருடைய வாதங்களைப் பார்த்தால் விலக்குகளையே மூல விதிகளாக மாற்ற வேண்டுமென்பது போல தோன்றுகிறது.

ஐயா, மேலும், என் சகோதரிகளை மிகவும் கவர்ந்துள்ள இந்த மசோதாவை.....

திருமதி ஜி. துர்க்காபாய் : சகோதரர்களையும் கூட.

திரு. ஓ.வி. அளகேசன் : இந்த மசோதா அதற்கு அருகதையற்றது என்று நினைக்கிறேன். ஒருவரை மட்டுமே மணம் புரியும் பழக்கம் எல்லோராலும் போற்றிப் புகழப்படுகிறது. அது ஏதோ ஒரு புதிய நடைமுறை என்று கூறமுடியாது. பெண்கள் ஒருவரை மட்டுமே மணம் செய்து கொள்ளும் நடைமுறை வழக்கத்திலிருந்தும், விவாகரத்து உரிமை அளிக்கப்பட்டதா? ஒருவரை மட்டுமே மணக்க வேண்டுமென்ற சட்டத்திற்குள் ஆண்களும் கொண்டுவரப்பட்டவுடன் விவாகரத்துக்கான கோரிக்கை கிளம்புகிறது. பெண்கள் ஒருவரை மட்டுமே மணக்க வேண்டுமென நடைமுறையில் பெண்கள் இருந்தபோது விவாகரத்துக்கான வாய்ப்பு அளிக்கப்படவில்லை. ஆனால் ஒருவரை மட்டுமே மணந்துகொள்ளும் வழக்கத்தின் இயற்கையான தொடர்விளைவே விவாகரத்து என்று இப்பொழுது கூறப்படுகிறது. நமது சகோதரிகள் இதில் ஏன் இவ்வளவு

ஆர்வம் காட்டுகின்றனர்? இதன் பொருள்தான் என்ன? ஒருவரை மட்டுமே மணக்கும் நடைமுறையின் தொடர் விளைவு விவாகரத்து என்றால், இந்த இயற்கையான தொடர் விளைவு இதுவரை ஏன் வரவில்லை?

திரு. துணை சபாநாயகர் : இன்னும் எவ்வளவு நேரம் மதிப் பிற்குரிய உறுப்பினர் தொடரப் போகிறார்?

திரு. ஓ.வி. அளகேசன்: இன்னும் பத்து நிமிடங்கள் மட்டும். ஆனால் சுருக்கமாக முடிக்க முயற்சிக்கிறேன். எனவே விவாகரத்துக்கான உரிமை அளிப்பது மிகவும் இனிமையான விஷயமல்ல என்று கூறுகிறேன். ஆனால் பல குறிப்புகளைப் படித்துக் காட்ட நான் விரும்பவில்லை. விவாகரத்து ஆண்களைவிட பெண் களுக்கு பெரும் நாசத்தை விளைவிக்கும் என்று பல பெண்களே குறிப்பிட்டுள்ளனர்.

திரு. ஏ. தாணுப்பிள்ளை: விவாகரத்து உரிமை இல்லாத ஒருவரை மட்டுமே மணக்கும் சட்டத்தை மதிப்பிற்குரிய உறுப்பினர் ஆதரிக்கிறாரா?

திரு. ஓ.வி. அளகேசன்: விவாகரத்துக்கு வாய்ப்பில்லாத ஒருவரை மட்டுமே மணக்கும் சட்டத்தை நான் விரும்புகிறேன். விவாகரத்துக்கான விதிமுறையை நியாயப்படுத்திப் பேசிய டாக்டர் அம்பேத்கர், இந்நாட்களில் கணவனால் கைவிடப்பட்ட பெண்கள் அனுபவிக்கும் கொடுமைகளை பட்டியல் போட்டுக் காட்டினார். இந்தக் கொடுமைகளை விவாகரத்தான பெண்களும் அனுபவிக்க வேண்டியிருக்கும். கைவிடப்பட்ட பெண்களின் எதிர்காலம் எவ்வளவு இருண்டுள்ளதோ, அதே போன்றுதான் விவாகரத்து பெற்ற பெண்ணின் எதிர்காலமும் இருக்கும். விவாகரத்துப் பெற்ற ஆண் மறுமணம் செய்து கொள்வது வெகு எளிது. ஆனால் விவாகரத்து பெற்ற பெண், மறுமணம் செய்து கொள்வது அவ்வளவு எளிதல்ல.

டாக்டர் பி. சுப்பராயன் : எனவே நீங்கள் இரட்டைத் தர நிலை வேண்டும் என்கிறீர்களா?

திரு. ஓ.வி. அளகேசன் : இதை நமது சகோதரிகள் நன்கு கவனிக்க வேண்டும். இது எந்தப் படுகுழிக்கு இட்டுச் செல்கிறது என்பதைப் பாருங்கள். விவாகரத்து விதிமுறைகளை வேறு பல

அடிப்படைகளிலும்கூட கடுமையாக ஆட்சேபிக்கிறேன். மற்ற நாடுகளில் இதன் அனுபவம் என்ன? மற்ற பேச்சாளர்களும் இதைக் குறித்துப் பேசியுள்ளனர். எனவே இது குறித்து மேலும் நான் விவரிக்க விரும்பவில்லை. பாரிசில் மட்டும் அண்மையில் விவாகரத்து வழக்குகள் 600லிருந்து 1200 ஆக உயர்ந்துள்ளது என்று நமக்குக் கூறப்பட்டுள்ளது. இது 100 சதவீத அதிகரிப்பாகும்.

மதிப்பிற்குரிய ஓர் உறுப்பினர் : இந்தியாவில் பாரிஸ் இல்லை.

திரு. ஓ.வி. அளகேசன்: தற்போது இந்தியாவில் பாரிஸ் இல்லை என்பதில் நான் மகிழ்ச்சியடைகிறேன். ஆனால் இந்த மசோதா இந்தியாவில் பாரிசை உருவாக்க முயல்கிறது என அஞ்சுகிறேன்.

திரு. எல். கிருஷ்ணசாமி பாரதி : பரோடா இருக்கிறது, மலபார் இருக்கிறது.

திரு. ஓ.வி. அளகேசன் : உலகின் மிகவும் வளர்ச்சி பெற்ற நாடுகளில் ஒன்றான சோவியத் ரஷ்யாவில் குடும்பம் என்ற அமைப்பு உடைந்து வருகிறது. வெகு எளிதான விவாகரத்துக்கு வழி வகுத்ததால், குடும்ப அமைப்பைத் திரும்பவும் உயிரூட்டுவதில் சோவியத் ரஷ்யா மிகக் கஷ்டப்படுகிறது. குடும்பம் என்ற சமூக அமைப்பின் புனிதத்தன்மையை மக்களுக்கு உணர்த்த அவர்கள் இப்பொழுது விரும்புகின்றனர். கம்யூனிசப் பண்பாட்டை மக்களிடம் புகுத்த விரும்புகின்றனர். தங்கள் நாட்டில் எளிய முறையில் விவாகரத்து அளித்ததன் மூலம் நேர்ந்த இழப்பிலிருந்து, குடும்ப அமைப்பைக் காப்பாற்ற கடுமையாக முயல்கின்றனர். பதிவாளருக்கு, தன் மனைவியை விவாகரத்துச் செய்கிறேன் என்று ஓர் அஞ்சல் அட்டை அனுப்பினால் போதும், விவாகரத்து உடன் அளிக்கப்பட்டது. இப்பொழுது விவாகரத்துச் சட்டங்கள் கடுமையாக்கப்பட்டுள்ளன. நம்முன் உள்ள நல்ல உதாரணம் இது.

திரு. எல். கிருஷ்ணசாமி பாரதி : மலபாரைப் பற்றி என்ன கூறுகிறீர்கள்? ஏன் ரஷ்யாவிற்கும் பாரிசுக்கும் போக வேண்டும்?

திரு. ஓ.வி. அளகேசன்: இந்த முறையை அவர்கள் சோதனை செய்து பார்த்து, அது எவ்வளவு ஆபத்தானது என்பதை உணர்ந்துள்

ளனர். அதே நிலைமைக்கு நாமும் சென்று, பிறகு அதை மாற்ற முயற்சிப்பானேன்? நமது இந்தியக் குடும்பங்கள் இன்றைக்கு வறுமையில் வாடவும், அறியாமையில் மூழ்கியிருக்கவும், ஆரோக்கிய மற்றும் இருக்கலாம். ஆனால் அவை உடைந்து போகவில்லை என்று சொல்லலாம். மற்ற நாடுகளில் அவை பணச் செழிப்புடனும், ஆரோக்கியத்துடனும், கல்வி அறிவு பெற்றும் இருக்கலாம். ஆனால் மற்ற நாடுகளிலுள்ள குடும்பங்களில் பல சிதறுண்டு கிடக்கின்றன என்பதை வருத்தத்துடன் கூறத்தான் வேண்டியிருக்கிறது. இதற்கு முக்கியமான காரணம் விவாகரத்துக்கு அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள தாராள உரிமைதான். இதுதான் என் கருத்து.

இந்துக் கூட்டுக் குடும்ப முறையை நாம் பாதுகாத்து வைத்துக் கொள்வதுடன், குடும்பத்தில் மனைவி ஒரு கூட்டுப் பங்காளி ஆக்கப் பட வேண்டும் என்று டாக்டர் தேக் சந்த் போன்ற பிரபல அறிஞரே கூறியுள்ளார். ஒரு மகளுக்கு சொத்தில் பங்கு அளிப்பதை நான் ஆட்சேபிக்காவிட்டாலும், அதன் மூலம் பெண்களுக்கு உண்மை யான பொருளாதார சுதந்திரம் வந்துவிடாது என்பதை கூறிக்கொள்ள விரும்புகிறேன். கணவனின் சொத்தில் அவளுக்கு சம பங்கு அளிப் பதன் மூலமே அவள் பொருளாதார சுதந்திரத்தை அடைய முடியும். தகப்பனாரின் சொத்திலிருந்து ஒரு பங்கை பெறுவதன் மூலம் அல்ல. மருமகனுக்குக் கொடுக்கப்பட வேண்டிய ஒப்படைக்கப்பட்ட நபர்தான் மகளாகும். தகப்பனார் மகளை தன்னிடம் ஒப்படைக்கப் பட்ட நபராக காப்பாளர் என்ற முறையில் வளர்த்து வருகிறார். தகப்பனாரின் சொத்தில் பங்கு கேட்க அவளுக்கு உரிமை கொடுப் பதைவிட கணவனின் சொத்தில் சமமான பங்கு அளிக்கப்படவோ அல்லது கூட்டு உரிமையாளராகவோ ஆக்கப்பட வேண்டும். அவள் திருமணம் ஆகாதவளாக இருந்தால் தகப்பனாரின் சொத்தில் பங்கு கேட்க அவளுக்கு உரிமை அளிக்கப்படலாம்.

மேலும் நான் விரிவாக விளக்க விரும்பவில்லை. இந்தக் குறிப்புடன் அதை முடித்துக் கொள்கிறேன். இந்தச் சட்டத் தொகுப்பை சிந்தனை செய்து உருவாக்கிய முக்கிய மனிதர் திரு. பி.என். ராவ் அவர்களே. (நேற்று ஒரு மனிதருக்கு சிந்திப்பதே கடினமாகி விட்டது) இந்த மசோதாவின் மீது அவர் மிகவும் ஆர்வம் கொண்டுள்ளார். கூடிய விரைவில் அவருடைய எல்லா ஆலோசனைகளும், மாற்றங் களுடனாவது நடைமுறைக்கு வரவேண்டுமென்று விரும்புகிறார். இந்து சட்டக் குழுவின் சாரமாக விளங்கும் அவரது கருத்தை உங்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

திருமதி ஜி. துர்க்கபாய் : அவருடைய ஆலோசனைகளைப் பரிசீலிப்பதற்கு பொறுக்குக் குழு ஒன்றுள்ளது. அவர் மட்டுமல்ல....

திரு. ஓ.வி. அளகேசன் : இந்துச் சட்டக் குழு பின்வருமாறு கூறியுள்ளது :

> ''முடிந்தவரையில் ஒப்புக் கொள்ளப்பட்ட தீர்வுகளை அடைவதே குறிக்கோளாகும். கடுமையான சச்சரவுகளை எழுப்பும் எதையும் நாம் விலக்க வேண்டும். இதன் பொருள் சீர்திருத்த நடவடிக்கைகளைத் தாமதப்படுத்துவது ஆகாது. உண்மையான சீர்திருத்தம் நிர்ப்பந்தத்தைத் தொடர்ந்து வருவதல்ல. இசை விணக்கத்தை தொடர்ந்தே அது வரமுடியும்.''

ஐயா, என் உரையை முடித்து விட்டேன்.

(1949 டிசம்பர் 15 வியாழக்கிழமை பத்தே முக்கால் மணி வரை அவை ஒத்திபோடப்பட்டது.)

*இந்துச் சட்டத் தொகுப்பு - தொடர்ச்சி

திரு. சபாநாயகர்: அவையால் பரிசீலிக்கப்பட்டு வந்த தீர்மானம் யாதெனில்:

> "இந்துச் சட்டத்தின் சில பிரிவுகளை முறைப்படுத்தவும் திருத்தவும் செய்யவும் கொண்டுவரப்பட்டுள்ள மசோதா, பொறுக்குக் குழுவினால் அளித்துள்ளபடி பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்."

+மாண்புமிகு திரு. ஜவஹர்லால் நேரு (பிரதமர்) : ஐயா, இந்துச் சட்டத் தொகுப்புச் சம்பந்தமாக ஓர் அறிக்கை வெளியிட இந்த அவையின் ஆதரவையும், உங்கள் அனுமதியையும் மிகத் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன். என் அறிக்கை இந்த அவையின் ஒப்புதலைப் பெறும் என நம்புகிறேன்.

இந்தக் கூட்டத் தொடரின் ஆரம்பத்தில், என் உரையினிடையே இந்த இந்துச் சட்டத் தொகுப்பைப் பற்றிக் குறிப்பிட்டேன். இந்தச் சட்ட நடவடிக்கைக்கு அரசு மிக முக்கியத்துவம் கொடுப்பதையும், இந்தப் பரிசீலனைக் கட்டம் இந்தக் கூட்டத் தொடரிலேயே முடிந்துவிடும் என்று நம்புவதாகவும் கூறினேன். மசோதாவிலுள்ள பல சர்ச்சைக்குரிய விதிகள் சம்பந்தமாக ஒரு பரந்த உடன்பாட்டுக்கு வகை செய்ய, நம்பிக்கையூட்டும் ஒரு வழிமுறையைப் பின்பற்றுவோம் என்று யோசனை கூறினேன். இந்த விஷயத்தைப் பொறுத்து அரசின் கொள்கையைத் தெளிவுபடுத்த அன்று கூறியதை மேலும் விளக்கமாக எடுத்துரைக்கிறேன். இந்தக் கூட்டத் தொடரில் மட்டுமல்லாது முந்தைய கூட்டத் தொடர்களிலும்கூட, இந்த மசோதா சம்பந்தமாக கணிசமான அளவுக்கு நீண்ட விவாதம் நடைபெற்றுவிட்டது. இத்தடவை நாம் அதற்கு இரண்டு நாள்கள் ஒதுக்கியிருந்தோம். இந்த நாட்களில் இரண்டு தடவை விவாதத்தின் நேரம் நீட்டிக்கப்பட்டது அவைக்குத் தெரியும். நமக்கு நேரக்கட்டுப்பாடு கடுமையாக இருந்தாலும் கூட இந்தக் கூட்டத் தொடரில் நாம் முடிக்க வேண்டிய பல சட்ட நடவடிக்கைகள் உள்ளன - இம்மாதிரியான முக்கிய மசோதா சம்பந்தமான விவாதத்தைக் கட்டுப்படுத்த அரசுக்கு எந்தவித விருப்பமும் கிடையாது. இருதடவை விவாதத்திற்கான நேரம் நீட்டிக்கப்பட்டதுடன், இன்றும் அதற்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

★ அ.நி.வி. (சட்) டி., தொகுதி VI, பிரிவு II, 13 டிசம்பர் 1949, பக்கம் 783-85.

இந்த விவாதத்தை கட்டுப்படுத்தும் விருப்பம் எதுவும் அரசுக்கு இல்லையென்றாலும், உண்மையில் அதிக நேரம் ஒதுக் குவது அரசுக்கு மிகவும் கஷ்டமாக உள்ளது. இருப்பினும் இந்த அவையில் உள்ள சில உறுப்பினர்களின் விருப்பம், மற்றும் மசோதா வின் முக்கியத்துவத்தைக் கருத்தில் கொண்டு, மேலும் அதிக நேரம் ஒதுக்க முயற்சிக்கிறோம். இந்தப் பிரச்சினையில் மேலும் ஓர் அம்சம் இருக்கிறது. அது இதுதான். முடிந்த வரையில் சர்ச்சைக் குரிய விதிகளைப் பொறுத்தவரை ஓர் உடன்பாட்டிற்கு வர முயற்சி செய்யும் உணர்வில் இந்த விஷயத்தை நாம் பரிசீலித்தால், ஆரம்பத் திலேயே நான் குறிப்பிட்ட பாதையில் மேலே செல்வோமானால் அப்போது இந்த கட்டத்தில் இந்த விவாதத்தை நடத்துவது வரவேற்கத்தக்கதே. அது ஒரு வேளை அந்த மாதிரியான முடிவுக்கு எளிதாக இட்டுச் செல்லாத ஒரு சூழ்நிலையை உருவாக்கவோ, அல்லது ஒரு சூழ்நிலை உருவாக உதவவோ செய்யலாம். அது சிந்திக்க வேண்டிய முக்கிய விஷயமாக அரசின் கருத்தில் உள்ளது. ஆரம்பத்திலிருந்தே, அவைக்கு நான் நினைவூட்டியது போன்று அதை நாம் கருத்தில் கொண்டுள்ளோம். பெரும்பான்மை பலம் உள்ளது என்ற அடிப்படையில், இந்த மசோதாவின் எல்லா விதி களும் ஏற்றுக் கொள்ளப்பட்டதாகச் செயல்படுவது அரசின் எண்ண மல்ல. அதைக் குறித்து பலதரப்பட்ட கருத்துகள் இருக்கலாம். இந்த மசோதாவைப் பொறுத்தவரை அரசின் நிலை இதுதான். மசோதா முழுவதற்குமான பரந்த அணுகுமுறையை நாம் ஏற்றுக் கொண் டுள்ளோம். ஒவ்வொரு விதியையும் வறட்டுப் பிடிவாதமின்றி பரிசீலனை செய்ய நாம் தயாராக உள்ளோம். உண்மையில் இந்த மசோதாவில் அரசு நம்பிக்கை கொண்டுள்ளதால்தான் அதை முன் வைத்துள்ளது. ஆனால் எவ்வளவு அதிகமான ஆதரவு கிடைக்குமா அவ்வளவு ஆதரவு இந்த மசோதாவுக்குக் கிடைக்க அரசு விரும்பு கிறதோ அதற்கும், இப்பொழுது நடைபெற்றுவரும் பொதுவான பரிசீலனைக்கும் இடையே வேறுபாடுள்ளது. மசோதா மிகவும் அதிகமாக விவாதிக்கப்பட்டதாக உணர்கின்றனர். இந்த அவை யின் அதிகமான உறுப்பினர்கள் இந்த விவாதத்தில் பங்கு கொண் டனர். இந்த விவாதக் கட்டத்தின் முடிவிற்கு அவர்கள் முக்கியத் துவம் அளிக்கின்றனர். ஏனெனில் அப்பொழுதுதான் அவர்கள் விரைவில் அடுத்த கட்டமான முறை சாரப் பரிசீலனைக்குச் செல்ல முடியும். இந்த முதல் கட்டம் முடியாத வரையில் முறைசாராப் பரிசீலனைப் பயனுள்ள முறையில் நடைபெற முடியாது. இல்லை யென்றால், நாம் அந்தரத்தில்தான் தொங்க வேண்டும். நாம் அடுத்த கட்டத்திற்குச் செல்ல முடியாது. எனவே இப்பொழுது நம் முடிவு

என்னவென்றால், பரிசீலனையிலுள்ளத் தீர்மானத்தின் மீதான இந்த விவாதத்தை கூடிய விரைவில் முடித்துக் கொள்வோம். இதைத் தைரியமாக அவை முன் வைக்கலாம் என நினைக்கிறேன். மற்ற சட்ட நடவடிக்கைகளை ஒதுக்கிவிட்டு அதிக நேரத்தை இதற்கு அரசு ஒதுக்குவது பற்றி எனக்குக் கவலையில்லை. முறைசாரா விவாதத்தை வைத்துக் கொள்வோம் என்ற பொதுவான யோசனையை இந்த அவை ஏற்றுக்கொள்ளும் பட்சத்தில் அடுத்த கட்டத்திற்குச் செல்வதே சிறந்தது என்று தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இக் கட்டத்தில் மேலும் கடுமையான விவாதத்தில் இறங்கி சூழ்நிலை யைப் பாழாக்க வேண்டாம்.

முறைசாரா ஆலோசனைகள் என்று நான் பேசும்போது "முறைசாரா" என்று நான் கூறுவதின் பொருளைத் தெளிவு படுத்த விரும்புகிறேன். அதை முக்கியமாகக் கருதாததால் அப்படிக் கூறு கிறேன் என்று சொல்ல முடியாது. அந்த விவாதம் ஓரளவு நெளிவு சுளிவுடன் நடைபெற விரும்புகிறேன். இந்த மசோதாவின் சுமையைத் தாங்கிக் கொண்டிருக்கும், என்னுடைய ஆலோசனையை ஏற்றுக் கொண்டு அதை மகிழ்ச்சியுடன் செயல்படுத்துவார் என நான் நம்பும், எனது மாண்புமிகு சகாவான சட்ட அமைச்சர் பொறுக்குக் குழு உறுப்பினர்களைக் கலந்தாலோசிப்பது மட்டுமின்றி, இதில் அக்கறை யுள்ள அவையின் இதர உறுப்பினர்களையும், அவைக்கு வெளியே உள்ளவர்களையும் கூட கலந்தாலோசிக்க முடியும். ஒருவிதக் கட்டுப் பாடான நடைமுறையை அனுசரித்தோமானால், அது கடினமாகி விடும். மேலும் ஒரு முறையான, கட்டுப்பாட்டான நடைமுறையை அனுசரிக்கும் போது, ஒரு சுதந்திரமான மனந்திறந்த விவாதத்திற்குச் சாத்தியமற்றுப் போகிறது. ஆனால் நடைமுறை நெளிவுசுளிவுடனும் முறை சாராதிருக்கும் போது விட்டுக் கொடுக்கும் மனப்பான்மைக் கான சூழல் உருவாகிறது. எனவே இத்தீர்மானத்தை அவை முன் வைக்கிறேன். நாம் இதுவரை நடத்திய விவாதங்களையும், சர்ச்சை களையும் கவனித்தோமானால், அவையின் எல்லாப் பிரிவினரும் ஒப்புதல் தரும் ஒரு நியாயமான தீர்மானமாக இது உள்ளது. ஏனெனில் இந்த அவையிலும், அதிகமான ஆதரவுடன் நாட்டிலும் ஒரு விஷயத்தை எடுத்துச் செல்ல அரசின் தரப்பிலிருந்து வந்துள்ள நியாயமான முயற்சியாகும் இது. மிகவும் தீவிரமாக நாம் கருத்து வேறுபாடு கொண்டுள்ள விஷயங்களில், நமது கருத்தை நாம் விட்டுக் கொடுத்ததாகவோ, அல்லது மற்றவர்களின் தீர்ப்புக்கு நாம் அடி பணிந்து விட்டதாகவோ பொருள் கொள்ளக் கூடாது. இந்த அவை உறுப்பினர் எவரும் எதிலாவது நம்பிக்கை கொண்டிருந்தால், அவர்

அவ்வாறு நடந்து கொள்ள வேண்டுமென்று யாரும் எதிர் பார்க்க வில்லை. விவாதிப்பது, பரிசிலிப்பது, ஒருவர் தம் கருத்தை மற்றவர் ஏற்றுக் கொள்ள முயற்சி செய்வது, ஒருவர் மற்றவரைப் புரிந்து கொள்ள முயற்சிப்பது, சில சமயங்களில் அதிக ஒத்துழைப்புடன் ஒரு தீர்மானத்தை நிறைவேற்ற சில விஷயங்களை விட்டுக் கொடுப்பது, ஜனநாயக நடைமுறையின் சாரமாகும். இந்த முக்கிய மசோதாவைப் பொறுத்தும் கூட நாம் பின்பற்ற வேண்டிய நடைமுறை இதுதான் என்று தாழ்மையாக இந்த அவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த இந்துச் சட்டத் தொகுப்பை அவ்வளவு முக்கியமாக நாங்கள் நினைத்துவிடக் கூடாது. ஏனெனில் நாங்கள் அதற்கு மிகவும் முக்கியத்துவம் அளிக்கிறோம். ஒரு குறிப் பிட்ட விதிமுறை முக்கியமானதாக உள்ளதாலோ அல்லது வேறு காரணங்களுக்காகவோ அல்ல அது. பொருளாதார மற்றும் சமூக பிரச்சினைகளுடன் மிக நெருக்கமான தொடர்பு கொண்ட இந்த நாட்டின் இந்தப் பெரும் பிரச்சினையின் அடிப்படை அணுகுமுறையே அதன் காரணமாகும். இந்நாட்டில் நாம் அரசியல் சுதந்திரம் பெற்று விட்டோம். அரசியல் விடுதலை பெற்றுவிட்டோம். இது நமது பாதையில் ஒரு கட்டம். பொருளாதார, சமூக மற்றும் இதர கட்டங் களும் உள்ளன. எல்லா முறைகளிலும் நாம் முன்னேறினால்தான், சமுதாயம் முன்னேற முடியும். ஒரு முனையில் முன்னேறிவிட்டு மற்ற முனைகளில் பின் தங்கியிருந்தால், நாம் சரியாகச் செயல்பட வில்லை என்றாகிறது. மேலும் நாம் முன்னேறிச் சென்ற முனைக்கும் ஆபத்து என்பதை உணர வேண்டும். எனவே எல்லா முனைகளிலும் எப்படி முன்னேறுவது என்ற உணர்வுடன் இந்த விஷயத்தை நாம் கவனிக்க வேண்டும். மக்கள் தொகையின் பெரும்பகுதியினரின் ஒப்புதலுடனும் ஒருங்கிணைப்புடனும் இந்த முன்னேற்றம் இருக்க வேண்டும் என்பதை எப்பொழுதும் கருத்தில் கொள்ள வேண்டும். இதை நான் ஏன் கூறுகிறேன் என்றால், இந்திய மக்களுக்குப் பதிலளிக்கும் பொறுப்புள்ள ஒரு ஜனநாயகச் சட்டமன்றமாக நாம் செயல்பட்டு வருகிறோம். இந்திய மக்களையும் நம்முடன் இட்டுச் செல்ல வேண்டும். இதைக் கருத்தில் கொண்டு, வெறும் பின் பாட்டுக்காரர்களாக இருப்பது அவைக்கோ நமக்கோ நல்லதல்ல என்பதை உணர வேண்டும். நாம் வழிகாட்டிச் செல்ல வேண்டும், தலைமை தாங்கி நடத்திச் செல்ல வேண்டும். அப்படி வழிகாட்டி நடத்திச் செல்லும் போது மக்களையும் நம்முடன் இட்டுச் செல்ல வேண்டும். இந்த விஷயத்திலும், இதர விஷயங்களிலும் நாம் தலைமை தாங்கி நடத்திச் செல்ல தீர்மானித்துள்ளோம். ஆனால் எப்பொழுதும் மற்றவர்களையும் நம்முடன் இட்டுச் செல்வோம்.

எனவே இந்த நடைமுறையைத் தான் உங்களுக்கு நான் விவரமாக எடுத்துரைத்தேன். அதாவது இந்தத் தீர்மானத்தை ஏற்றுக் கொள்வதன் மூலம், தற்போதைய பரிசீலனைக் கட்டத்தை முடிவுக்குக் கொண்டு வருவோம். பிறகு பல்வேறு விதிகள் மற்றும் பிரிவுகள் குறித்த ஆலோசனைகள் சம்பந்தமாக, நான் குறிப்பிட்டுள்ள முறைசாரா நடவடிக்கைகளை எடுக்க அவை அரசுக்கு அனுமதி அளிக்கட்டும். அதை நாம் நிறைவேற்றிவிட்டால், பிறகு விஷயம் மீண்டும் விவாதத்திற்கு வரும்போது - அடுத்த கூட்டத் தொடரில் என்று நம்புகிறேன் - அதற்கு இந்த அவையிலும், வெளியிலும் மிகப்பெரும் ஆதரவு இருக்கும்.

***மாண்புமிகு திரு. சத்ய நாராயண் சின்ஹா :** *(நாடாளுமன்ற நடவடிக்கைகளின் ராஜாங்க அமைச்சர்)*

"இந்த விஷயத்தை இப்பொழுது அவை முன் வைக்கலாம்."

திரு. நசிருத்தீன் அகமது : (மேற்கு வங்காளம் : முஸ்லீம்) நான் ஒரு விளக்கம் கேட்கலாமா? அவையின் மாண்புமிகு தலைவர் தற்பொழுது அளித்துள்ள ஒளிவு மறைவற்ற அறிக்கைக்குப் பிறகு மேலும் நாம் நேரத்தை எடுத்துக் கொள்வது அவசியமில்லை என நினைக்கிறேன். விவாதத்தின் இந்தக் கட்டம் ஒன்பது முழு நாள்கள் நடைபெற்றிருப்பதுடன் இன்று பத்தாவது நாளாகத் தொடர்கிறது என்பதை நமது மதிப்பிற்குரிய உறுப்பினர்களுக்கு நினைவூட்டுகிறேன். அதில் முப்பத்தி மூன்று உறுப்பினர்கள் பங்கு கொண்டதுடன் முப்பது மணி நேரமும் இருபத்தெட்டு நிமிடங்களும் நாம் செலவழித்துள்ளோம். நாம் போதுமான நேரம் எடுத்துக் கொண்டு விட்டோம்.

மதிப்பிற்குரிய ஓர் உறுப்பினர் : நான் அறிந்து கொள்ளலாமா? திரு சபாநாயகர் விவாதத்திற்கு முடிவு கட்டலாம் என்ற கோரிக்கையை ஏற்றுக் கொள்ளும் போது, எந்தக் காரணங்களுக்காக என்பதைத் தெரிவிக்க வேண்டிய கட்டாயம் எனக்குக் கிடையாது. அதைப் பற்றி என் கருத்து என்ன என்பதை விளக்கியாக வேண்டும் என்று நினைக்கிறேன். இந்த மசோதாவின் பல்வேறு விதிகளைக் குறித்து தங்கள் கருத்துரைகளை எடுத்துரைக்க அவையிலுள்ள மற்றும் அவைக்கு வெளியிலுள்ள ஒவ்வொருவருக்கும் முழு வாய்ப்பு அளிக்கப்படும் என்பதை பிரதமர் தற்போது அளித்த அறிக்கை நன்கு தெளிவுபடுத்துகிறது. பொதுவான பரிசீலனைக் கட்டமாகத்தான்

★ அ.நி.வி. (சட்) டி., தொகுதி VII, பிரிவு II, 19 டிசம்பர் 1949, பக்கம் 785 -87.

தற்போதைய நிலை உள்ளது. எந்தக் குறிப்பிட்ட விதியின் குறிப்பிட்ட பிரிவையும் நாம் விவாதிக்கவில்லை. விவரங்கள் குறித்து கருத்து வேறுபாடுகள் இருக்கலாம். மசோதாவின் பொதுவான தன்மையைப் பொறுத்த வரையில் அதிக அளவிலான உடன்பாடு இருக்க முடியும். இந்தக் கட்டத்தில் நாம் விவாதத்தைத் தொடர்ந்தோமானால் அது ஒரு தெளிவற்ற, பொதுவான, தொடர்பற்ற விவாதமாக இருக்கும் என அஞ்சுகிறேன். மேலும் விவாதத்தில், ஏற்கெனவே கூறப்பட்டவைகளே திரும்பத் திரும்ப எடுத்துரைக்கப்படலாம். மசோதாவின் ஒவ்வொரு விதியையும் பரிசீலிக்கும் கட்டமே அதைவிட முக்கியமான கட்டமாகும். அந்தக் கட்டத்திற்குச் செல்லுமுன், எல்லாப் பிரச்சினைகள் குறித்து அரசுடனும் அவைக்கு வெளியே உள்ள பிற மக்களுடனும் விவாதிப்பதற்கும், ஆலோசனை செய்வதற்கும் மதிப்பிற்குரிய ஒவ்வொரு உறுப்பினர்களுக்கும் எல்லா வாய்ப்புகளும் அளிக்கப்படும்.

எனவே மசோதாவைப் பரிசீலனை செய்யும் இந்த விவாதத்தைத் தொடர்வது நேரத்தை வீணடிப்பதாகும் என்று கருதுகிறேன். எனவே விவாதத்தை முடிக்க வேண்டும் என்ற கோரிக்கையை ஏற்றுக் கொண்டு, பிறகு சட்ட அமைச்சரைப் பேச அழைக்கலாம் என நினைக்கிறேன்.

ரோகிணி குமார் சௌதுரி (அசாம் : பொது) : நான் சில விவரங்கள் அளிக்க விரும்புகிறேன்.

திரு. சபாநாயகர் : மதிப்பிற்குரிய உறுப்பினர் என்ன விவரங்கள் அளிக்கப் போகிறார்? அவரை நான் பேச அனுமதித்தால், ஒவ்வொருவரும் ஏதாவது கூற முன் வருவார்கள். தயவு செய்து இருக்கையில் அமருமாறு மதிப்பிற்குரிய உறுப்பினரைக் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. மகாவீர் தியாகி (உ.பி : பொது) ஐயா, உங்களிடம் ஒரு விளக்கம் கேட்க விரும்புகிறேன். இக்கட்டத்தில், இத்தீர்மானம் நிறைவேற்றப்பட்ட பிறகு இந்த மசோதாவிலுள்ள எல்லா விதிகளையும் ஏற்றுக் கொண்டதாகப் பொருள்படுமா?

திரு. துணை சபாநாயகர் : நிலைமையைத் தெளிவுபடுத்துகிறேன். தேர்வுக் குழுவுக்கு அனுப்பும் தீர்மானத்தை இந்த அவை ஏற்றுக் கொண்டபோது, அது இந்த மசோதாவின் கொள்கையை

ஏற்றுக் கொண்டதாகப் பொருள்படும். ஆனால் இம்மாதிரி மசோதாவின் கொள்கையை வரையறுப்பது மிகக் கடினமான விஷயம். ஏனெனில் ஒவ்வொரு விதியும் ஒரு கொள்கையாகக் கருதப்படலாம். இந்த நிலையை தெளிவுபடுத்துகிறேன். பரந்த அளவிலான அதன் விதிகைளப் பார்க்கும் போது, இந்துச் சட்டத்தை முறைப் படுத்தித் தொகுப்பது விரும்பத்தக்கது என்ற கொள்கை ஒன்றை மட்டும் அவை ஏற்றுக் கொண்டுள்ளது என்பது தெளிவாகும். மேலும் விதிகள் ஒவ்வொன்றும் விவாதத்திற்கும், மாற்றத்திற்கும், திருத்தத்திற்கும் உட்பட்டதாகக் கருதப்படும்.

திரு. மகாவீர் தியாகி : *அப்படியென்றால், ஐயா, எங்களுக்கு எந்த ஆட்சேபணையும் இல்லை.*

ரோகிணி குமார் சௌதுரி : இந்த மசோதா குறித்து ஆலோசனை ஒன்றை அவை முன் வைக்க விரும்புகிறேன். விவாதத்தை முடிவுக்குக் கொண்டுவர, தீர்மானம் முன்மொழியப்பட்டு ஏற்றுக் கொள்ளப்படலாம். அதைக் குறித்து எனக்கு எந்த ஆட்சேபணையும் இல்லை. இந்த விஷயம் குறித்து மேலும் விவாதிப்பதை நான் விரும்பவில்லை. உண்மையில், ஒரு சமரசச் சூழ்நிலை உருவாக வேண்டுமென்பதற்காக, மசோதாவிற்கு எதிராக நான் எதுவும் பேசவில்லை. என்னுடைய ஆலோசனை என்னவென்றால், இந்த மசோதாவை இப்பொழுது வாக்களிப்புக்கு விட வேண்டாம். மாண்புமிகு பிரதமரின் அறிவிப்பினால், ஒரு நடைமுறை வெற்றி கிடைத்துள்ளதைக் குறித்து எதிர்தரப்பினரை உணரச் செய்ய விரும்புகிறோம்.

திரு. துணை சபாநாயகர் : நடைமுறை பற்றி அவைத் தலைவரின் அறிக்கைக்குப் பிறகும், அவையை எது கட்டுப்படுத்தும் எது கட்டுப்படுத்தாது என்பதைக் குறித்த எனது விளக்கத்திற்குப் பிறகும், இந்தப் பரிசீலனைத் தீர்மானத்தை நிறைவேற்றுவதால் ஏற்படும் விளைவுகளைக் குறித்து சந்தேகம் எதுவும் இருக்காது என்று நினைக்கிறேன். உண்மையில், இதை இன்னும் முடிவுக்குக் கொண்டு வராமல் இருப்பது விரும்பத்தக்கதல்ல. இந்தப் பரிசீலனை விவாதத்தைத் தொடர்ந்தோமானால், மேலும் விவாதங்களும் பேச்சுகளும் தொடரும். எனவே மசோதாவை அவை முன் வைக்கிறேன்.

டாக்டர் பி.எஸ். தேஷ்முக் : *(ம.மா மற்றும் பேரார் : பொது) :* ஐயா, ஒரு ஒழுங்குப் பிரச்சினை. மாண்புமிகு பிரதமரின் சிறந்த ஆலோசனையை நாமெல்லோரும் கேட்டோம். அவை அதை

ஏற்றுக் கொள்ளக்கூடும் என்பதில் சந்தேகமில்லை. என் ஒழுங்குப் பிரச்சினை என்னவென்றால், பரிசீலனைக்கான தீர்மானமே அவை முன் உள்ளது என்பதே. மசோதாவைத் திரும்பவும் தேர்வுக் குழுவுக்கு அனுப்புவதே, இந்த ஆலோசனையின் நோக்கமாகத் தெரிகிறது.

மதிப்பிற்குரிய சில உறுப்பினர்கள் : இல்லை, இல்லை.

டாக்டர் பி.எஸ். தேஷ்முக் : இது நாடாளுமன்ற நடைமுறையை தவிர்ப்பதற்கான முயற்சி என்று உங்களுக்கு எடுத்துரைக்கிறேன். சரியான, நியாயமான ஒரே நடைமுறை என்னவென்றால், அதே தேர்வுக் குழுவுக்கோ அல்லது விரிவு படுத்தப்பட்டத் தேர்வுக் குழுவுக்கோ மசோதாவை அனுப்புவதுதான். தெரிவிக்கப்பட்டுள்ள ஆலோசனை, நாடாளுமன்ற நடைமுறைகளுக்கு எதிரானதால், அது ஏற்றுக் கொள்ளக் கூடியதல்ல. இந்த ஆலோசனை அவைக்கு ஏற்றுக் கொள்ளக்கூடியது என்றால் எனக்குச் சிறிது அளவும் ஆட்சேபனை இல்லை. ஆனால், நியாயமான நடைமுறை என்ன வென்றால், அதே தேர்வுக் குழுவுக்கோ அல்லது விரிவுபடுத்தப்பட்டத் தேர்வுக் குழுவுக்கோ மசோதாவை அனுப்புவது தான்.

திரு. துணை சபாநாயகர் : மதிப்பிற்குரிய உறுப்பினர் நடைமுறைக் கோணத்திலிருந்து எழுப்பிய ஆட்சேபனையின் சக்தியை நான் புரிந்து கொள்கிறேன். ஆனால், அவைத் தலைவர் மேலும் பரிசீலனைக்கான தீர்மானம் எதையும் அவை முன் வைக்கவில்லை. அவர் தம் நிலையை மட்டுமே விளக்கினார். அரசு எவ்வாறு செயல் படப்போகிறது என்பதையும், மசோதாவின் விதிகளைப் பரிசீலனை செய்வதை எவ்வாறு தொடரப் போகிறது என்பதையும் அவர் எடுத்துரைத்தார். வழக்கமாக எந்த குழுவிற்கும் இந்த மசோதாவை மேலும் ஆய்வு செய்ய அனுப்புவது குறித்து இந்த அவையின், எந்தக் குறிப்பும் அதில் இல்லை. அந்த மாதிரியான தீர்மானம் கொண்டு வரப்படுமானால், இந்த ஒழுங்குப் பிரச்சினையை மகிழ்ச்சியுடன் நான் ஏற்றுக் கொள்வேன். அவை முன் அந்த மாதிரி எந்தத் தீர் மானமும் தற்போது இல்லை. அது நாடாளுமன்ற நடைமுறை களுக்கு எதிரானதல்ல. மாறாக, சாதாரண நடைமுறைக்கு அது சிறிது மாறுபட்டிருந்தாலும் கூட ஜனநாயகம் என்பது விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை என்பதே என் கருத்து. நாம் ஒரு புதிய நடைமுறையை உருவாக்க வேண்டும். தீர்மானத்தை அவை முன் வைக்கிறேன்.

கேள்வி என்னவென்றால் :

"தீர்மானத்தை முன் வைக்கிறேன்."

தீர்மானம் தோற்கடிக்கப்பட்டது.

***மாண்புமிகு டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் :** *(சட்டத்துறை அமைச்சர்)* : ஐயா, மொத்தத்தில், அவை முன் மூன்று தீர்மானங்கள் உள்ளன. அவற்றில் இரண்டு திரு நஜிருதீன் அகமதால் கொண்டு வரப்பட்டுள்ளது. மேலும் பரிசீலனை செய்ய மசோதாவைத் தேர்வுக் குழுவுக்கு அனுப்ப வேண்டுமென்று அவற்றில் ஒன்று கூறுகிறது. மக்கள் கருத்தை மேலும் தெரிந்து கொள்வதற்காக சுற்றக்கு விடப்பட வேண்டும் என்று இரண்டாவது தீர்மானம் கூறுகிறது. இத்துடன் கூட என் தீர்மானமும் அவை முன் உள்ளது. தேர்வுக் குழுவின் அறிக்கையை பரிசீலிக்க வேண்டுமென்று அது கூறுகிறது. திரு நஜிருத்தீன் அகமது கொண்டுவந்துள்ள தீர்மானங்கள் குறித்துச் சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். ஒன்பது நாட்கள் தொடர்ந்து நடந்த விவாதத்தில், மசோதாவை எதிர்த்தவர்கள் கூட அவருடைய தீர்மானங்களை ஆதரிக்கவில்லை என்பதைக் காண முடிந்தது. விவாதத்தில் பங்கு கொண்ட முப்பத்திமூன்று பேர்களில், அதிகபட்சம் இரண்டு உறுப்பினர்கள் மட்டுமே அவருடைய தீர்மானத்திற்கு ஆதரவாக இருந்தனர். மற்றவர்கள் அவருக்கு எந்தவித ஆதரவும் அளிக்கவில்லை. இரண்டாவதாக ஏன் இந்த மசோதா திரும்பவும் தேர்வுக் குழுவின் பார்வைக்கு அனுப்பப்பட வேண்டும் அல்லது மக்களிடையே சுற்றுக்கு விடப்பட வேண்டும் என்று அவர் உரையாற்றுகையில் பலதடவைகள் கேள்விகள் எழுப்பட்டும். தமது தீர்மானத்தை ஆதரிக்கும் வகையில் சரியான காரணம் எதையும் அளிக்க அவர் தவறிவிட்டார் என்பதே என் முடிவாகும். ஆறு மணி நேரம் தொடர்ந்து அவர் ஆற்றிய உரையை நன்கு கவனித்தவர்கள் இதைத் தெளிவாக உணர்ந்திருப்பார்கள். எனவே இந்த இரு தீர்மானங்கள் சம்பந்தமாக எனது நேரத்தையும் அவையின் நேரத்தையும் வீணடிப்பது அவசியமற்றது என்று நான் நினைக்கிறேன்.

ஐயா, இப்பொழுது நான் என் தீர்மானத்திற்கு வருகிறேன். ஏற்கெனவே கூறியபடி இவ்விவாதத்தில், மொத்தத்தில் முப்பத்தி மூன்று பேர் பங்கு கொண்டனர். இந்த மசோதாவுக்கு அளிக்கப்பட்ட

★ அ.நி.வி. (சட்) டி., தொகுதி VII, பிரிவு II, 19 டிசம்பர் 1949, பக்கம் 787 -92.

ஆதரவின் அளவையும் எதிர்ப்பின் அளவையும் அவை புரிந்து கொள்ள, சில விஷயங்களை எடுத்துரைக்க விரும்புகிறேன். இந்த விவாதத்தில் பங்கு கொண்ட முப்பத்தி மூன்று பேர்களில் இருபத்தி மூன்று உறுப்பினர்கள் ஆதரவாகப் பேசினர். இந்த இருபத்தி மூன்று பேர்களில், வரையறைக்குட்பட்ட ஆதரவு அளிக்கத் தயாராக இருப்பதாக இருவர் மட்டுமே கூறினர். மூன்று பேர்கள் நடுநிலை வகித்தனர். மூன்று பேர்கள் சுற்றுக்கு விடவும், நான்கு பேர்கள் மசோதாவின் பரிசீலனையை ஒத்திப்போட வேண்டும் என்றும் கூறினர். எனவே அவை உறுப்பினர்களில் மிகப் பெரும்பான்மையினர் மசோதாவுக்கு ஆதரவாக இருப்பது மிகத் தெளிவாகத் தெரிகிறது. நான் கூறியபடி இருபத்தி மூன்று உறுப்பினர்கள்.

ரோகிணி குமார் சௌதுரி : இந்த மசோதாவிற்கு எதிர்ப்புத் தெரிவிக்க தங்கள் பெயர்களை அளித்துள்ள முப்பத்தி நான்கு உறுப்பினர்களுக்கு பேச வாய்ப்பளிக்கப்படவில்லை என்பதை அவர் அறிவாரா?

மாண்புமிகு டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் : விவாதத்தில் பேசியவர்களின் பேச்சுகளை பகுத்தாய்வு மட்டுமே செய்கிறேன் (குறுக்கீடு)

திரு. சபாநாயகர் : அமைதி. அமைதி.

மாண்புமிகு டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் : இந்த விஷயத்தை மேலும் சிறிது ஆழமாகப் பார்க்கலாம். மசோதாவின் எப்பகுதிக்கு எதிர்ப்புள்ளது என்பதைத் தெரிந்து கொள்ள, மசோதாவை எதிர்த்தவர்களின் நிலைப்பாட்டைப் பகுத்தாய்வோம். எட்டு விஷயங்கள் சம்பந்தமாக இந்துச் சட்டத்தை முறைப்படுத்தித் தொகுக்க முனைந்துள்ள இந்த மசோதாவின் ஐந்து விஷயங்கள் குறித்து எந்த வித ஆட்சேபணையும் எழுப்பப்படவில்லை.

ரோகிணி குமார் சௌதுரி : ஏனெனில் நீங்கள் எங்களைப் பேச அனுமதிக்கவில்லை.

திரு. சபாநாயகர் : அமைதி, அமைதி.

மாண்புமிகு டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் : ஐயா, எனது நண்பர் குறுக்கீடு செய்ய மாட்டார் என நம்புகிறேன்.

திரு.சபாநாயகர்: ஒரு சமரசத்திற்கான சூழ்நிலையை பாழ்படுத்த விரும்பவில்லை என்று இப்பொழுதுதான் மதிப்பிற்குரிய உறுப்பினர் வாக்குறுதி அளித்துள்ளார்.

ரோகிணி குமார் சௌதுரி: இப்பொழுது அவர் பேசாம லிருப்பதுதான் சமரசத் திட்டம்.

திரு. சபாநாயகர்: தொடர் வர்ணனை இப்பொழுது வேண்டாம்.

மாண்புமிகு டாக்டர் பி.ஆர். அம்பேத்கர்: நான் கூறியபடி, திருமணம், தத்தெடுப்பது காப்பாண்மை, கூட்டுக் குடும்பச் சொத்து, மகளிர் சொத்து, உயில் எழுதா வாரிசுரிமை, உயில் வழி வாரிசு உரிமை, ஜீவனாம்சம் ஆகிய விஷயங்கள் சம்பந்தமாக இந்துச் சட்டத்தை முறைப்படுத்தித் தொகுக்க இந்த மசோதா கொண்டு வரப்பட்டுள்ளது. தத்தெடுப்பது சம்பந்தப்பட்ட வரை, மசோதா வின் இந்தப் பகுதிக்கு எதிர்ப்பு எதையும் நான் காணவில்லை. அதே போன்று காப்பாளர்கள் குறித்தும்....

பண்டிட் தாகூர் தாஸ் பர்கவா (கிழக்கு பஞ்சாப் : பொது) : தத்தெடுப்பது சம்பந்தமான சில விதிகள் குறித்தும், வாரிசு நியமனம் சம்பந்தமாக சில விதிகள் இல்லாதது குறித்தும் எதிர்ப்புத் தெரிவித் துள்ளேன்.

மாண்புமிகு டாக்டர் பி.ஆர் அம்பேத்கர் :மகளிர் சொத்து, உயில் வழி வாரிசுரிமை, மற்றும் ஜீவனாம்சம் குறித்தும் எதிர்ப்பு இல்லை. உயில் எழுதா வாரிசுரிமை, கூட்டுக் குடும்ப சொத்து, திருமணம் சம்பந்தமான பிரிவுகள் குறித்து மட்டுமே சிறிது எதிர்ப்பு காணப்பட்டது. மசோதாவின் இந்தப் பகுதிகளைப் பொறுத்த வரையில், ஒன்றிரண்டு விஷயங்களைக் குறித்து மட்டுமே அதிக எதிர்ப்பு காணப்பட்டது.

ரோகிணி குமார் சௌதுரி: ஓர் ஒழுங்குப் பிரச்சினை நாம் திருத்தங்களுக்கு வரும்போது இந்த விஷயங்கள் விவாதிக்கப்பட லாம் என்று நீங்கள் தீர்ப்பளித்துள்ளீர்கள்.

திரு. சபாநாயகர் : மதிப்பிற்குரிய உறுப்பினர் தம் இருக்கை யில் அமர்வாரா மற்ற உறுப்பினர்கள் தங்கள் கருத்துகளைத்

தெரிவிக் கும்போது குறுக்கீடு செய்யக் கூடாது. உறுப்பினர்கள் பொறுமையைக் கடைப்பிடிக்க வேண்டும். மாண்புமிகு அமைச்சர் குறுக்கீடு செய்யப்படாமல் தம் பேச்சைத் தொடர அனுமதிக்கப்பட வேண்டும். பின்னர் இந்த மசோதா இங்கு விவாதத்திற்கு வரும்போது மதிப்பிற்குரிய உறுப்பினர்களுக்கு வாய்ப்பு அளிக்கப்படும்.

ரோகிணி குமார் சௌதுரி : ஆனால் ஐயா, நீங்கள் எங்களை அனுமதிக்காவிட்டால்.....

திரு. சபாநாயகர் : எந்தக் குறுக்கீட்டையும் நான் அனுமதிக்கப் போவதில்லை.

ரோகிணி குமார் சௌதுரி : நிலைமையை விளக்க ....

திரு. சபாநாயகர்: நிலைமையை விளக்க அனுமதித்தால் மீண்டும் ஒவ்வொரு வாக்கியத்திற்கும் பதில் தொடர ஆரம்பிக்கும். இம்மாதிரி எதையும் அனுமதிக்க நான் தயாரில்லை. (குறுக்கீடு) இப்பொழுது மதிப்பிற்குரிய உறுப்பினர் குறுக்கீடு செய்ய மாட்டார் கள் என நினைக்கிறேன். இல்லையெனில் இம்மாதிரியான குறுக் கீடுகள், ஒழுங்குப் பிரச்சினைகள், ஆலோசனைகள் குறித்து கடுமை யான எச்சரிக்கை அளிக்க வேண்டிய நிர்பந்தம் ஏற்படும். ஆனால் நான் தீர்மானத்தை....

திரு. எச்.வி. காமத் (ம.மா. மற்றும் பேரார் : பொது) மசோதா மீண்டும் விவாதத்திற்கு வரும் என்று நீங்கள் கூறினீர்களா, ஐயா?

திரு. சபாநாயகர் : அதன் விதிகள் விவாதத்திற்கு வரும்.

டாக்டர் பி. பட்டாபி சீதாராமையா (மதராஸ் : பொது) : தயவு செய்து நான் ஒரு சிறு ஆலோசனை கூறலாமா? இது விவாதிக்கப் பட்டாலும், விவாதிக்கப்படாவிட்டாலும் சரி, பரிசீலனைத் தீர்மானம் ஏற்றுக்கொள்ளப்படும். எனவே மசோதாவிற்குப் பொறுப்பான அமைச்சர் எவ்வித அறிக்கை அளித்தாலும், அதற்கு எந்தவிதச் சவாலும் இருக்க முடியாது. சவால் இல்லாதவரை, சரியான வாக்கெடுப்பிற்கு வழியிருக் முடியாது. மசோதாவை முன்மொழிந்தவர் பல மணி நேரம் அவையில் இருக்கவில்லை. அவையில் என்ன நடந்தது. என்ன நடைபெறவில்லை என்பது அவருக்குத் தெரிவிக்கப்படவில்லை. எடுத்துக்காட்டாக, தத்தெடுக்கும் பிரச்சினை சம்பந்தமாக எதிர்ப்பு

ஏதும் இல்லையென அவர் கூறுகிறார். ஆனால் இங்கு ஒரு கனவான் எழுந்திருந்து அந்த விதிகளுக்கு எதிராகப் பேசியதாகக் கூறுகிறார். எனவே மாண்பு மிகு அமைச்சர் தமது பதிலுரையை விவாதத்துக் குரியதாக ஆக்கிவிட வேண்டாம் எனக் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. சபாநாயகர் : மாண்புமிகு அமைச்சரை நான் புரிந்து கொண்ட வரையில், தமது கண்ணோட்டத்தை அவர் சுருக்கிக் கூற முயற்சிக்கிறார் என நினைக்கிறேன்.

டாக்டர் பி. பட்டாபி சீதாராமையா : இல்லை.

திரு சபாநாயகர் : அமைதி, அமைதி. மதிப்பிற்குரிய உறுப் பினர் குறுக்கீடு செய்ய வேண்டாம். தமது கருத்தை அவை முன் வைக்க அவர் முழு உரிமை பெற்றுள்ளார். அது சரியாக இருக்கலாம், தவறாகவும் இருக்கலாம். எனவே அவர் பதிலளிக்கும்போது, அவ ருடைய பதிலுரை கேட்கப்பட வேண்டும். மதிப்பிற்குரிய உறுப் பினர்கள் உடன் எழுந்து நின்று ''இந்தக் கூற்று சரியில்லை; அந்த அறிக்கை சரியில்லை'' என்று கூறக்கூடாது. ஏனெனில் அது சர்ச்சை யில் போய் முடியும். அவர் பேசுவதை நாம் கேட்போம். எதிர் தரப்பினருடன் பொறுமையைக் கடைப்பிடிப்பதே ஜனநாயகத்தின் சிறந்த பண்பு.

ரோகிணி குமார் சௌதுரி : தவறான பேச்சுகளுக்கு நாங்கள் பதிலளிக்க வேண்டாமா?

திரு. சபாநாயகர் : இப்பொழுது பதிலளிக்க வேண்டாம். விதி வாரியாக விவாதம் நடக்கும் போது எதிர் தரப்பினருக்கு வாய்ப்பு அளிக்கப்படும்.

ரோகிணி குமார் சௌதுரி : அவருக்கும் அப்பொழுது வாய்ப்புக் கிடைக்கும்.

திரு. சபாநாயகர் : இப்பொழுது மதிப்பிற்குரிய உறுப்பினர் குறுக்கீடு செய்தால் நான் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டி வரும். எந்த வித குறுக்கீடோ இடைமறித்தலோ, விமர்சனமோ இருக்கக்கூடாது. தன் சொந்த விளக்கங்களையும், விஷயங்களைப் பற்றிய தமக்குச் சரி என்று தோன்றும் சொந்தக் கருத்துகளைக் கூற மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் உரிமை பெற்றுள்ளார். நமக்கு

அதில் உடன்பாடு இல்லாமல் இருக்கலாம். (குறுக்கீடு) அமைதி, அமைதி. பதில் அல்லது விவாதம் எதுவும் இப்பொழுது வேண்டாம். குறுக்கீடு எதையும் நான் அனுமதிக்கப் போவதில்லை. மாண்புமிகு சட்ட அமைச்சர் தம் உரையைத் தொடர்வார்.

மாண்புமிகு டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் : ஐயா, மசோதாவின் ஐந்து பிரிவுகளைக் குறித்து எந்த வித எதிர்ப்பும் இல்லை என்பதை விளக்கிக் கொண்டிருந்தேன். திருமணம், கூட்டுக் குடும்ப சொத்து, உயில் எழுதா வாரிசுரிமை ஆகிய மூன்று பிரிவுகளைப் பொறுத்த வரையில், இந்த மசோதாவை எதிர்ப்பவர்களின் கண்ணோட்டத்தை, நான் கவனித்த வரையில் அந்தப் பிரிவுகள் முழுவதையும் அவர்கள் எதிர்க்கவில்லை. சில விஷயங்களைக் குறித்து மட்டுமே அவர்கள் எதிர்ப்பு இருந்தது. திருமணத்தைப் பொறுத்த வரையில் விவாகரத்தைக் குறித்துதான் அதிக எதிர்ப்பு இருந்தது, கூட்டுக் குடும்பத்தைப் பொறுத்தவரையில், எஞ்சுநர் உரிமை பற்றியே எதிர்ப்பு பலமாக இருந்தது. உயில் எழுதா வாரிசுரிமையைப் பொறுத்தவரையில் மகளின் பங்கைப் பற்றியே அதிக எதிர்ப்பு காணப்பட்டது. இந்த மசோதாவை எதிர்த்தவர்கள் முன் வைத்த வாதங்கள் மற்றும் விவாதங்களுக்கு முழுமையான பதில் அளிக்க வேண்டுமென்றால் விவாகரத்து, எஞ்சுநர் உரிமை விதிகள், மற்றும் மகளின் பங்கு ஆகிய மூன்று விஷயங்களை மட்டுமே ஆழ்ந்து கவனித்தால் போதுமானது. மசோதாவின் இந்த மூன்று பகுதிகளிலும் உள்ள விதிகளை ஆதரித்து வாதிட நான் முற்றிலும் தயாராக உள்ளேன். மாண்புமிகு பிரதமர் அளித்துள்ள அறிக்கையின் காரணமாக, இப்பொழுது எந்தவித சர்ச்சையிலும் இறங்குவது அவசியமில்லை என்று நான் நினைக்கிறேன். மாண்புமிகு பிரதமரின் ஆலோசனையை வரவேற்பதுடன், அது எவ்வளவு தூரம் வரவேற்கப் படுகிறது என்பதைப் பார்க்க விரும்புகிறேன். இதனால், இக்கட்டத்தில் இவ்விஷயங்கள் குறித்து விரிவான பதிலளிக்க நான் விரும்பவில்லை. ஐயா, உங்கள் யோசனைப்படி என்னுடைய பதிலை பின்னர் அளிக்கலாமென நினைக்கிறேன்.

நாடு இருக்கும் நிலையை அவை உணர்ந்து கொள்ள ஒரே ஒரு விஷயத்தை மட்டும் விளக்கிக் கூறுவது அவசியம் என்று நினைக்கிறேன். இந்தியா ஒருங்கிணைக்கப்பட்டு, ஒரே நாடாக குடியரசாக உருவானபின், அதன் எல்லைப் பரப்புக்குள், இந்துச் சட்டத்தின் பல்விதத் தொகுப்புகள் வந்துள்ளதை காண முடிகிறது. பரோடா சமஸ்தானத்தில் இந்தியாவின் மற்ற மாகாணங்களில் நடைமுறை

யிலுள்ள இந்துச் சட்டத்திருந்து மாறுபட்ட இந்துச் சட்டத் தொகுப்பு நடைமுறையிலுள்ளது. இந்த சமஸ்தானம் இப்பொழுது பம்பாய் மாகாணத்தின் பகுதியாகிவிட்டது. அதேபோன்று 1935 ஆம் ஆண்டு இந்திய அரசாங்கச் சட்டத்தின்படி, இந்திய இறையாண்மைக்கும், நிலப்பரப்புக்கும் வெளியே இருந்த திருவிதாங்கூர் கொச்சின், இப்பொழுது இந்தியாவின் பகுதியாகிவிட்டது. மகளின் சொத்து உரிமை சம்பந்தமாக, தனியாக இந்துச் சட்டத் தொகுப்பை மைசூர் சமஸ்தானம் கொண்டிருந்தது. பிரிட்டிஷ் மாகாணங்களில் நடைமுறை யிலுள்ள சட்டத்திலிருந்து இது பெருமளவு மாறுபட்டது. இப்பொழுது அந்த சமஸ்தானம் இந்தியாவின் பகுதியாகிவிட்டது. எனவே, 1950 ஜனவரி 26ல் இந்தியக் குடியரசு உதயமாகும்போது இந்துச் சட்டத் தின் பல்வேறு நடைமுறைகளை நாம் சந்திக்க வேண்டியிருப்ப துடன், அதை நாம் ஒருங்கிணைக்க நம்மால் முடிந்த அளவுக்கு பாடுபட வேண்டும். உதாரணமாக, இந்துச் சட்டத்தின் இரண்டு முறைகளை பம்பாய் மாகாணத்தில் அமல்படுத்துவது எப்படி சாத்தியமாகும்? பரோடா சமஸ்தானமும், இதர நிலப்பரப்புகளும் இணைந்து ஒரே மாகாணமாக, மாநிலமாக உருவான பிறகு பரோடா நிலப்பரப்பில் ஒருவகை இந்துச் சட்டத்தையும், மற்ற பகுதிகளில் வேறொரு வகை இந்துச் சட்டத்தையும் எப்படி செயல்படுத்த முடியும்? இதேபோன்ற நிலைதான் மற்ற பகுதிகளிலும் நமது ஆளுகையின்கீழ் வரும் என்று நாம் நம்பிக்கை கொண்டுள்ள போர்த்துகீசியர் மற்றும் பிரெஞ்சுக்காரர்களின் அதிகாரத்தின் கீழுள்ள பகுதிகளில் மாறுபட்ட இந்துச் சட்டம் நடைமுறையிலுள்ளது. அவர்கள் நம்முடன் இணையும்போது, இதே பிரச்சினையை நாம் சந்திக்க வேண்டியிருக்கும். கோவாவிலுள்ள இந்துக்கள் பின்பற்றி வரும் சட்டங்களின் நிலை என்னவாகும்? அவர்கள் தங்கள் சட்டங் களைத் தொடர்ந்து பின்பற்ற அனுமதிக்கப்படுவார்களா? இங்கு அமலிலுள்ள சட்டத்தை அவர்கள் மீது திணிக்கப் போகிறோமா? இரண்டு தரப்பினர்களும் ஏற்றுக் கொள்ளக்கூடிய சட்டநடை முறையை உருவாக்கப் போகிறோமா? இந்திய ஒருங்கிணைப்பின் விளைவாக, இந்துச் சட்டத்தை முறைப்படுத்தி தொகுக்க வேண்டிய பிரச்சினை மிகத் தெளிவாக நம்முன் எழுந்துள்ளது. இந்தியக் குடியரசில் வந்து இணையும் பலதரப்பட்ட மக்களிடையே ஒற்றுமை, மற்றும் ஒருமைப்பாட்டை வளர்க்க, இந்தப் பிரச்சினையைத் தவிர்ப் பதோ, ஒத்திப்போடுவதோ கூடாது என்று அவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் பி. பட்டாபி சீதாராமையா: முறைப்படுத்தித் தொகுப்பதை ஏற்றுக்கொள்கிறோம்.

மாண்புமிகு டாக்டர் பி.ஆர். அம்பேத்கர்: மேலும் மிக முக்கியமாக எனக்குத் தோன்றும் ஒரு விஷயத்தை அவையின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். இந்த அவையும், நிச்சயமாக இந்த மசோதாவை எதிர்ப்பவர்களும் இந்திய அரசியல் அமைப்பின் விதியை மறந்துவிட்டதாகத் தெரிகிறது. நாம் நிறைவேற்றியுள்ள, இந்திய அரசியல் அமைப்பின் விதி 15, அடிப்படை உரிமைகள் என்பதன் கீழ், மிகத் தெளிவாக வரையறுத்துள்ளது.

> ''இந்தியக் குடிமகன் எவரையும் சமயம், இனம், ஜாதி, பால், பிறப்பிடம் அல்லது அவற்றில் எதன் அடிப்படையிலாவது அரசு பாகுபடுத்தி நடத்தக்கூடாது.

இந்துச் சட்டத்தில் பல குறைபாடுகள் இருப்பதுடன், சவர்ணா ஜாதிகளுக்கும், சூத்திரர்களுக்கும் இடையே பாகுபாடு காட்டப்படும் கொள்கை இந்து சட்டத்தில் உள்ளதை, அதைக் கவனமாகப் படித்த எவரும் ஒத்துக் கொள்வர். ஒரு இந்து ஆணும் ஒரு இந்து பெண்ணுமே பாகுபாடுடன் நடத்தப்படுகின்றனர்.

திரு. மகாவீர் தியாகி: ஒரு இந்துவும் முஸ்லீமும் கூடத்தான்.

மாண்புமிகு டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் : எனவே, இந்திய அரசியல் அமைப்பின் சில விதிகளுடன் இந்துச் சட்டத்தின் சில பகுதிகள் முரண்பாடானதாக இருக்கும் என்பது தெளிவாகத் தெரிகிறது. வேறு ஒரு விஷயத்தையும் நாம் இங்கு கவனத்தில் கொள்ள வேண்டியுள்ளது. நாடாளுமன்றம் அல்லது மாநிலச் சட்டமன்றம் எதிர்காலத்தில் இயற்றும் சட்டங்களை மட்டுமல்ல விதி 15 கட்டுப்படுத்துகிறது. இந்திய அரசியலமைப்பு அதற்கும் மேலும் செல்கிறது. விதி 13ல் கொடுக்கப்பட்டுள்ளதை உங்களுக்குப் படித்துக்காட்ட விரும்புகிறேன்.

> ''இந்த அரசியல் அமைப்பு நடைமுறைக்கு வருவதற்கு முன், இந்திய நிலப்பரப்பில் நிலவிலுள்ள எந்தச் சட்டமும், அது எந்த அளவுக்கு இந்தப் பகுதியில் உள்ள விதிகளுக்கு முரணானதாக இருக்கிறதோ அந்த அளவுக்கு அது செல்லாதது எனக் கருதப்படும். "

ஒரு வழக்குரைஞர் என்ற முறையில் பார்க்கும்போது, இந்துச் சட்டத்தை முறைப்படுத்தித் தொகுப்பதுடன் கூறு 15ன் விதிகளுக்கொப்ப அதில் மாற்றம் செய்யாவிடின், இந்துச் சட்டத்தின் பல பகுதிகள் கூறு 13ன்படி நீதிமன்றத்தால் செல்லாதவை என்று அறிவிக்கப்படும் என்பதில் எனக்கு எவ்வித சந்தேகமுமில்லை. அரசியல் அமைப்பின் கூறு 13ன்படி இந்துச் சட்டத்தை நீதிமன்ற பரிசீலனைக்கு உட்படுத்த வேண்டுமென்று அவை விரும்புகிறதா? மேலும் நீதி மன்றத்துக்கு வரும் போது, இந்தச் சட்டத்தின் பல பகுதிகள் கொஞ்சம் கொஞ்சமாக செல்லுபடியாகாதவை என்று அறிவிக்கப்பட வேண்டுமா? அல்லது அவை இந்த விஷயத்தைத் தன் கையில் எடுத்துக் கொண்டு கூறு 15ன் விதிகளுக்கேற்ப இந்துச் சட்டத்தில் மாற்றங்கள் கொண்டு வருவதன் மூலம் கூறு 13ன் கீழ் அவை செல்லுபடியாகாதவை என்று அறிவிக்கப்படுவதைத் தவிர்க்கப் போகிறதா? நீதித்துறை கொஞ்சம் கொஞ்சமாக இந்துச் சட்டத்தை உடைக்காமல், நமது அரசியல் அமைப்புக்கு ஏற்ப, ஒருங்கிணைந்த ஒரு முறையாக அதை மாற்றுவதை அவை விரும்புகிறதெனின், இந்த விஷயத்தைப் பரிசீலிக்காது தள்ளிப் போடுவது தவறானது என்பதைத் தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஐயா, என்னுடைய முடிவின்படி இவை முக்கியமான காரணங்களாகும். எனவே இந்த விஷயத்தை பரிசீலிப்பதை ஒத்தி வைப்பதோ, தாமதப்படுத்துவதோ இந்த அவைக்கு ஏற்புடையதல்ல. எனவே எனது தீர்மானத்தை அவை ஏற்றுக் கொண்டு, மசோதாவின் பரிசீலனைக் கட்டத்தை நிறைவேற்றிவிடும் என நம்புகிறேன்.

டாக்டர் பி, பட்டாபி சீதாராமையா : ஐயா, நான் ஒரு விளக்கம் கேட்கலாமா? தாம் மேற்கோள் காட்டிய அரசியல் அமைப்பின் குறிப்பிட்ட விதிக்கு முரணான எல்லா விதிகளும் செல்லுபடியாகமல் போகும் என்று டாக்டர் அம்பேத்கர் கூறினார். ஜனவரி 26ல், அரசியல் சாசனம் நடைமுறைக்கு வரும்போது அவர் குறிப்பிட்ட விதியும் நடைமுறைக்கு வருமாகையில் இந்துச் சட்டத்தின் பல பிரிவுகள் செல்லுபடியாகமல் போய், ஒரு சூன்யம் உருவாகி விடுமா? இதைவிட நியாயமற்ற அனுமானம் இருக்க முடியுமா?

திரு. சபாநாயகர் : அமைதி, அமைதி. மதிப்பிற்குரிய உறுப்பினர் தம் சொந்தக் கருத்தை வெளியிடுகிறார்.

மாண்புமிகு டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் : ஐயா, எனது நண்பர் டாக்டர் பட்டாபி சீதா ராமையாவைப் பொறுத்துவரையில் நான் மிக அதிகமான சுயக் கட்டுப்பாடுடன் நடந்து கொண்டுள்ளேன் என்பதைத் தெரிவிக்கலாம் என நினைக்கிறேன். அதைக் குறித்து நான் சொல்ல விரும்பியதையெல்லாம் சொல்லியிருந்தால் நான் சொன்னதை அவர் கேட்டிருப்பார்.

திரு. சபாநாயகர்: தேர்வுக் குழுவால் அனுப்பட்ட, இந்துச் சட்டத்தின் சில பிரிவுகளைத் தொகுத்து, மாற்றங்கள் செய்வதற்கான மசோதாவை, பரிசீலனைக்கு எடுத்துக் கொள்வது என்ற பிரேரணைக்கு இரு திருத்தங்கள் உள்ளன. முதலில் இந்தத் திருத்தங்களை அவை முன்வைக்கிறேன். முதலாவதாக, 1949 ஆம் ஆண்டு இறுதிக்குள், மக்களிடமிருந்து மேலும் கருத்துகளைப் பெற மசோதாவைச் சுற்றுக்கு விடக் கோரும் திரு. நஜிருத்தீன் அகமதின் திருத்தம் மிகவும் கால தாமதமாகி விட்டதால் தேதியை நீட்டிக்க முடியவில்லை.

திரு. நசிருத்தீன் அகமது: நிலைமையை விளக்கட்டுமா, ஐயா?

திரு. சபாநாயகர் : வேண்டாம். விஷயம் என்னவென்றால் :

> "1949 ஆம் ஆண்டு முடிவிற்குள், மக்களிடமிருந்து மேலும் கருத்துகளைப் பெற மசோதாவைச் சுற்றுக்கு விடுவது"

தீர்மானம் தோல்வியடைந்தது.

திரு. சபாநாயகர்: பிறகு அடுத்த திருத்தம் விஷயம் என்ன வென்றால் :

> "1948 ஏப்ரல் 9ல் அனுப்பப்பட்ட மூல மசோதா சம்பந்தமாக மேலும் அறிக்கை கோரி, மசோதாவை முன்பு அனுப்பப்பட்ட அதே தேர்வுக் குழுவுக்கு அனுப்புவது."

தீர்மானம் தோல்வியடைந்தது.

திரு. நசிருத்தீன் அகமது : ஐயா, வாக்களிப்புக்கு விடக் கோருகிறேன்.

திரு. சபாநாயகர் : மிக்க நன்று. ஆம் என்பவர்கள் ஐந்தும் மற்றவர்கள் இல்லை என்றும் தெரிவித்துள்ளனர். பெரும்பான்மை

யினரால் தீர்மானம் தோற்கடிக்கப்பட்டது. நான் இப்பொழுது ஆரம்பத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

விஷயம் என்னவென்றால் :

''இந்துச் சட்டத்தின் சில பிரிவுகளை முறைப்படுத்தித் தொகுக்கவும், மாற்றங்கள் செய்யவும், தேர்வுக்குழுவால் அனுப்பப்பட்ட இந்த மசோதாவை பரிசீலினைக்கு எடுத்துக் கொள்வது''.

தீர்மானம் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

பேராசிரியர் ஷிபன் லால் சாக்சேனா (உ.பி : பொது): ஐயா, 'இல்லை' யென்பவர்களுக்கு வெற்றி.

திரு. சபாநாயகர்: அவர்கள் எண்ணிக்கை ஆறு அல்லது ஏழு தான். பெரும்பான்மை உறுப்பினர்கள் தீர்மானத்திற்கு ஆதரவாக உள்ளனர்.

□□

*இந்து திருமணங்களைச் செல்லத்தக்கதாக்கும் (திருத்த) மசோதா

(பிரிவு 2ன் திருத்தம்)

திரு. ஹிமத்சிங்கா (மேற்கு வங்காளம்) : 1949 ஆம் ஆண்டு இந்து திருமணங்களைச் செல்லத்தக்கதாக்கும் சட்டத்திற்கு (பிரிவு 2ன் திருத்தம்) மேலும் திருத்தம் செய்ய மசோதா ஒன்றை அறிமுகப் படுத்த அனுமதிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

திரு. சபாநாயகர் : விஷயம் என்னவென்றால் :

''1949 ஆம் ஆண்டு இந்து திருமணங்களைச் செல்லத் தக்கதாக்கும் சட்டத்திற்கு (பிரிவு 2ன் திருத்தம்) மேலும் திருத்தம் செய்ய மசோதா ஒன்றை அறிமுகப்படுத்த அனுமதிப்பது.

மசோதா ஏற்றுக் கொள்ளப்பட்டது.

திரு. ஹிமத்சிங்கா : மசோதாவை அறிமுகப்படுத்துகிறேன்.

**இந்து சட்டத் தொகுப்பு

திரு. சபாநாயகர் : பட்டியலின் அடுத்த பொருளான டாக்டர் அம்பேத்கரின் தீர்மானத்திற்கு வருகிறோம் : இந்துச் சட்டத்தின் சில பிரிவுகளை முறைப்படுத்தி தொகுக்கவும், மாற்றங்கள் செய்ய வும் தேர்வுக் குழுவால் அனுப்பப்பட்ட மசோதாவை மேலும் பரி சீலனைக்கு எடுத்து கொள்வது.

இப்பொழுது, இதைப் பொறுத்த வரையில், பல திருத்தங்கள் வந்துள்ளன. ஒவ்வொரு உறுப்பினராக அழைக்கிறேன்.

திரு. தியாகி (உத்திரப் பிரதேசம்) : இந்த விஷயத்தை அவை முற்றிலும் எதிர்பார்க்கவில்லை. உறுப்பினர்களுக்கு சிறிது அவகாசம் கொடுக்க வேண்டுமென நான் நினைக்கிறேன்.

திரு. சபாநாயகர் : அமைதி, அமைதி. ஒரு நேரத்தில் ஒருவரே பேச வேண்டும். மாண்புமிக சட்டத்துறை அமைச்சர் ஏதாவது கூற வேண்டியுள்ளதா?

சட்டத்துறை அமைச்சர் *(டாக்டர் அம்பேத்கர்): அதை எடுத்துக் கொள்ளலாம்.*

திரு. சபாநாயகர்: *உறுப்பினர்கள் இதை எதிர்பார்க்கவில்லை என்று கூறப்படுகிறது.*

டாக்டர் அம்பேத்கர்: *கடந்த பதினைந்து நாட்களாக பொருள்கள் பட்டியலில் மசோதா உள்ளது. எனவே அவ்வாறு கூறமுடியாது.*

திரு. ஜே.ஆர். கபூர் *(உத்தரப்பிரதேசம்) : இந்த மசோதாவில் மிகவும் ஆர்வம் உள்ளவர்களுக்கு வருத்தம் இருக்கலாம். திருமதி ரேணுகாரே இங்கில்லை. மேலும் அதில் குறிப்பாக ஆர்வமுள்ளவர்கள் பலர் இங்கில்லை.*

திரு. சபாநாயகர் : *பல்வேறு திருத்தங்கள், ஒத்திவைப்புத் தீர்மானங்களின் முடிவு எப்படியிருப்பினும், இதைக் கொண்டு வந்த உறுப்பினர்கள் தங்கள் இருக்கையில் இல்லாததைத் தான் யோசித்துக் கொண்டிருக்கிறேன். எதிர்பாராத முறையில் இந்த அலுவல் எடுக்கப்பட்டுள்ள நிலையில் அவர்களை அழைப்பது நமது தரப்பிலிருந்து சரியான நேர்மையான நடவடிக்கைதானா என்பதைச் சிந்தித்துப் பார்க்கிறேன். இந்த விஷயமே எனக்குக் கவலை அளிக்கிறது. திரு ரோகிணி குமார் சௌதுரி இருப்பதைக் காண்கிறேன். திரு. நஜிருதீன் அகமது இங்கு இருப்பதும் தெரிகிறது.*

திரு. ஆர்.கே. சௌதுரி *(அசாம்) எங்களுக்கு அரை மணி நேரம் அவகாசம் கொடுத்தால் மற்ற உறுப்பினர்களும் வந்து விடுவார்கள்.*

திரு. சபாநாயகர்: *அவையின் நடவடிக்கைகளைத் தொடர்வோம். திரு. நஜிருதீன் அகமதைப் பேச அழைக்கிறேன்.*

பண்டிட் குன்ஸ்ரு *(உத்தரப்பிரதேசம்) : இதில் அக்கறை கொண்டுள்ள பல்வேறு அமைப்புகளுடன் மாண்புமிகு சட்ட அமைச்சர் மாநாடு ஒன்று நடத்தியுள்ளார். எனவே, விவாதத்தை அவருடைய அறிக்கையிலிருந்தே ஆரம்பிக்கலாமென்று யோசனை கூறலாமா? அம்மாநாட்டில் நடந்த விவாதங்கள் குறித்து அவர் சிறு அறிக்கை ஒன்றைச் சுற்றுக்கு விட்டிருந்தார். மாநாட்டின் முழு விவரங்களையும் அவரிடம் இருந்து தெரிந்து கொள்வதில் எல்லாத் தரப்பினருக்கும் மகிழ்ச்சிகரமாக இருக்கும். அவர் கொண்டு வரவுள்ள*

திருத்தங்களின் சுருக்கத்தையும் தெரிவிக்கலாம். இதுவே சரியான வழியாக இருக்கும் என்பதுடன், உறுப்பினர்களுக்கு ஒரு வகையில் இது சிறிது அவகாசம் கொடுக்கும் என நினைக்கிறேன்.

டாக்டர் அம்பேத்கர் : இன்னும் ஏதாவது சேர்க்க வேண்டுமா என்பது எனக்குத் தெரியவில்லை. இந்தக் கூட்டத் தொடரின் ஆரம் பத்திலேயே உறுப்பினர்கள் கைகளில் கிடைக்க வேண்டுமென்ற எண்ணத்துடன், அறிக்கை ஒன்றை அளிக்க நான் முக்கிய கவனம் எடுத்துக் கொண்டேன். அப்பொழுதுதான் என்ன நடந்தது என்பதன் முழு விவரத்தையும் உறுப்பினர்கள் தெரிந்து கொள்ள முடியும். மாநாட்டின் நடவடிக்கைகளை வார்த்தைக்கு வார்த்தை பதிவு செய்ய எங்களால் முடியவில்லை என்பதற்காக வருத்தப்படுகிறேன். காரணம் என்னவென்றால் பல உறுப்பினரகள் பல்வேறு மொழிகளி உரை நிகழ்தினார்கள். சிலர் இந்தி மொழியில் பேசினர். சிலர் மராத்தி யிலும், சிலர் குஜராத்தியிலும், சிலர் சமஸ்கிருதத்திலும் கூட பேசினர். இந்த உரைகளை வார்த்தைக்கு வார்த்தை பதிவு செய்ய எங்களால் முடியவில்லை. சிலர் தமிழ் மொழியில் கூட பேசினர். எனவே வார்த்தைக்கு வார்த்தை பதிவு செய்ய சுருக்கெழுத்தாளர் யாரும் கிடைக்கவில்லை. இல்லையென்றால் முழு உரைகளையும் பதிவு செய்திருக்கலாம். எனவே தான், விவாதத்திற்காக மாநாட்டின் முன் வைக்கப்பட்ட விஷயங்கள், மற்றும் விவாதத்தின்போது பல்வேறு தரப்பிலிருந்து வந்துள்ள கருத்துகள் ஆகியவைகளை, என் நினைவில் உள்ளபடி நானே சுருக்கமாக தயார் செய்து கொண்டேன். இவை அவை முன் வைக்கப்பட்டு மாநாட்டுப் பிரதிநிதிகள் பேச அழைக்கப் பட்டனர். இதில் பங்கு கொண்ட பேச்சாளர்களிடையே எந்த விஷயங் களில் அதிக அளவில் உடன்பாடு காணப்படுகிறது என்பதைத் தெரிந்து கொண்டேன். அதன் அடிப்படையில் மசோதாவிற்கு சில திருத்தங்களைக் கொடுத்துள்ளேன்.

ஐயா, அவைக்கு உதவும் பொருட்டு, இந்துச் சட்டத் தொகுப் பின் இரண்டு வகை வாசகங்களைத் தயாரித்து அளித்துள்ளேன் என்பது உங்களுக்குத் தெரிந்திருக்கும். அவர்களுக்கு ஒரு முழுமை யான சித்திரத்தைக் கொடுப்பதற்காக, மூலப் பிரிவுகளும், நான் அதில் சேர்க்க விரும்பும் திருத்தங்களும் ஒரு வாசகத்தில் வரிசைக் கிரமத்தில் கொடுக்கப்பட்டுள்ளன. இரண்டாவது வாசகம் ஒன்றை யும் தயாரித்துள்ளேன். அதில் தேர்வுக் குழுப் பிரிவின் மூல வாசகங் கள் வலது பக்கத்திலும், புதிய தொகுப்பு மற்றும் அதன் திருத்தங்கள் இடது பக்கத்திலும் கொடுக்கப்பட்டுள்ளன. இதனால், திருத்தம்

ஒன்று கொண்டு வரப்படும்போது, பழைய விதி என்ன கூறுகிறது என்பதைத் தெரிந்து கொள்வதுடன், புதிய விதி என்ன கூறுகிறது என்பதையும் உறுப்பினர்கள் கண்டு கொள்ள முடியும். முறைசாரா குழுக்களுடனான விவாதங்களுக்குப் பிறகு, மாற்றங்கள் செய்யப் பட்ட இந்துச் சட்டத் தொகுப்பின் விதிகளை அவை சரிவரப் புரிந்து கொள்ள உதவுவதற்கு என்னால் முடிந்த அளவு பாடுபட்டுள்ளேன். மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் யாராவது கேள்விகள் கேட்க வேண்டு மென்று நினைத்தால், இந்த அறிக்கையில் கொடுத்த விவரங்கள் சம்பந்தமாக மேலும் தெளிவுபடுத்தத் தயராய் இருக்கிறேன்.

திரு. ஞானிராம்: மசோதா ஒன்றிரண்டு நாட்கள் விவாதிக்கப் பட்டு அது ஒத்திவைக்கப்படும் என்று சட்டத்துறை அமைச்சர் தெரி வித்துள்ளார்.

திரு. சபாநாயகர்: கட்சிக் கூட்டத்தில் நடைபெற்றதைக் குறித்து நாம் அக்கறை கொள்ள வேண்டியதில்லை.

திரு. ஆர்.கே. சௌதுரி : கட்சிக் கூட்டத்தில் கூறப்பட்டதைக் குறித்து மாண்புமிகு சட்ட அமைச்சர் தயவு செய்து அறிக்கை ஒன்றை வெளியிடலாம்.

திரு. சபாநாயகர்: அமைதி, அமைதி. கட்சி நடவடிக்கைகள் இங்கு அனுமதிக்கப்படுவதில்லை.

திரு. சிவன் பிள்ளை : (திருவாங்கூர் : கொச்சி): இப்பொழுது விதி வாரியாக விவாதம் நடைபெறப் போவது என்றால் மசோதாவின் கொள்கை பற்றிய பொதுவான விவாதம் முடிந்துவிட்டதா?

திரு. சபாநாயகர்: மசோதா எந்தக் கட்டத்தில் உள்ளது என்பதை மதிப்பிற்குரிய உறுப்பினர் சரியாகப் புரிந்து கொள்ள வில்லை என்று தெரிகிறது. பரிசீலனைத் தீர்மானம் நிறைவேற்றப் பட்டு விட்டது. விதிவாரியாக பரிசீலிக்க வேண்டியதுதான் அடுத்த பணியாக உள்ளது. விதி 2ஐ அவை முன் வைக்குமுன், சில திருத் தங்கள் அல்லது இந்த விவாதத்தை ஒத்தி வைக்க வேண்டுமென்று வலியுறுத்தி ஒத்தி வைப்புத் தீர்மானங்களைக் கவனிக்க வேண்டி யுள்ளது. இவை ஒத்தி வைப்புத் தீர்மானங்கள் என்ற முறையில் முன்னுரிமை பெறுகின்றன. தமது தீர்மானத்தை முன்மொழிய நஜிருதீன் அகமது விரும்பினால், அவரைப் பேச அழைக்கிறேன்.

பிரதம மந்திரி மற்றும் வெளியுறவுத் துறை அமைச்சர் *(திரு ஜவஹர்லால் நேரு): உறுப்பினர்களில் ஒருவர் என்னிடம் கேள்வி ஒன்று கேட்டார். ஐயா, அதற்குப் பதில் அளிக்க அவசியம் இல்லை என்று நீங்கள் கருதினாலும், நான் பதில் அளிப்பது, இந்த அவையின் நடைமுறைக்கு நியாயமானது என நினைக்கிறேன். நாம் விதி வாரியாக விவாதிக்கப் போகிறோம் என்றால், அதற்கு இந்த அவை அதிக நேரம் எடுத்துக் கொள்ளும் என்பது தெரிந்ததே. இருப்பினும் அதற்கு அரசு அதிக முக்கியத்துவம் அளித்துள்ளது. எனவே அதை இப்பொழுதே எடுத்துக் கொள்ளலாம் என நினைக்கிறேன். ஆனால் விஷயங்கள் இப்பொழுது இருக்கிற நிலையில் இன்றே நாம் அதை எடுத்துக் கொண்டாலும், இந்தக் கூட்டத் தொடருக்குள் அதை நாம் முடித்துவிட முடியாது. எனவே, நீங்கள் அனுமதி அளித்தால், ஆரம்ப கட்டத்தை எடுத்துக் கொள்ளலாம் என்று அரசு கருதுகிறது. சில ஆட்சேபனைகள் தெரிவிக்கப்பட்டுள்ளன. இந்த ஆட்சேபனை களுக்கெல்லாம் ஒரு வகை தீர்வை காண்போமானால், மேற்கொண்டு செல்ல வேண்டிய பாதை தெளிவாகிவிடும். இல்லையெனின், இந்தக் கூட்டத் தொடரில் அவையில் நேரம் வீணாகிவிடும்.*

திரு. சபாநாயகர்: *நிலையைச் சரியாக நான் புரிந்து கொண்டிருந்தால், ஒத்திவைப்பு திருத்தங்கள் அல்லது தீர்மானங்கள் முதலில் முடிவு செய்யப்பட வேண்டும். பின்னர் விதிவாரியான விவாதங்கள் எடுத்துக் கொள்ளப்படும்.*

நாடாளுமன்ற நடவடிக்கைகளுக்கான ஸ்டேட் அமைச்சர் *(திரு. சத்ய நாராயண் சின்ஹா) : ஆம் அப்படித்தான்.*

திரு. சபாநாயகர் : *இந்த வெளிச்சத்தில் பார்த்தால் ஒத்திவைப்பு தீர்மானம் எதையும் கொண்டு வருவது அவசியமா?*

திரு. நசிருத்தீன் அகமது : *(மேற்கு வங்காளம்) : இல்லை.*

திரு. சபாநாயகர்: *பேச்சு எதுவுமின்றி அவர் முன்மொழி யட்டும். நாம் மற்ற அலுவல்களைத் தொடர முடியும்.*

திரு. நசிருத்தீன் அகமது : *நான் முன்மொழிகிறேன்.*

இந்துச் சட்டத்தொகுப்பு மசோதா மற்றும் அது சம்பந்தமான திருத்தங்களை உறுப்பினர்கள் நன்கு பரிசீலிப்பதற்காக நாடாளுமன்ற

சிறப்புக் கூட்டத் தொடர் கூட்டப்பட்டு, அந்தக் கூட்டத் தொடருக்கு, இந்த மசோதாவின் விவாதம் ஒத்திவைக்கப்பட வேண்டும்.

மாற்றுத் தீர்மானங்களை முன்மொழிய நான் விரும்பவில்லை.

திரு. நசிருத்தீன் அகமது : நான் சில கருத்துகளை முன்வைக்க விரும்புகிறேன். விஷயத்தை முற்றிலும் அரசுக்கே விட்டு விடுகிறேன். அது, எதிர்ப்பு அல்லது ஆட்சேபனை என்ற முறையில் அல்ல.

திரு. சபாநாயகர் : தீர்மானம் எவ்வடிவில் இருக்க வேண்டுமென்பதே கேள்வி. அடுத்த கூட்டத் தொடருக்கு ஒத்திவைக்க விரும்புகிறார். சுருக்கமாகச் சொன்னால், அதுதான் விஷயம்.

திரு. நசிருத்தீன் அகமது : அப்படியென்றால், உங்கள் அனுமதியுடன் மாற்றுத் தீர்மானங்களையும் முன்மொழிகிறேன்.

> ''அடுத்த பட்ஜெட் கூட்டத் தொடர் தேதிக்கு இந்து சட்டத் தொகுப்பு மசோதா விவாதங்கள் ஒத்தி வைக்கப்பட வேண்டும்''.

மேலும்,

> ''பட்ஜெட் கூட்டத் தொடர் முடிந்த பிறகு ஒரு தேதிக்கு இந்து சட்டத் தொகுப்பு மசோதா விவாதங்கள் ஒத்தி வைக்கப்பட வேண்டும்''

தீர்மானம் எந்த வடிவில் இருக்க வேண்டும் என்பது குறித்து நான் முற்றிலும் அரசின் கட்டுப்பாட்டிற்குள் உள்ளேன். ஆட்சேபனைகள் சிலவற்றை முதலில் பரிசீலித்துவிட்டு, பின்னர் பொருத்தமான நேரத்தில் விதி வாரியான பரிசீலனையை எடுத்துக் கொள்ளலாம் என்று மாண்புமிகு பிரதம மந்திரி தெளிவு படுத்தி விட்டார். இது என் கருத்துக்கு முற்றிலும் ஏற்புடையதாக உள்ளது. அரசுதான் பொருத்தமான தேதியையும் நேரத்தையும் முடிவு செய்ய வேண்டும்.

மசோதாவின் கொள்கையை நடைமுறைப்படி ஏற்றுக் கொண்டுள்ளோம் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் இது சில நிபந்தனைகளுக்குட்பட்டது. அவை நடவடிக்கையில் சேர்க்கப்படாவிடினும், இந்துச் சட்டத்தை நன்கு அறிந்துள்ள பரந்த அளவிலான மக்களின் கருத்தைப் பெறுவதற்கும், மசோதாவுக்குத் திருத்தங்கள் அளிக்கவும் மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் உறுதி அளித்துள்ளார்.

இரண்டு தரப்பினர்களும் ஏற்றுக்கொள்ளக்கூடிய திருத்தத்திற்கான பொருத்தமான வழிமுறையை அரசு அவைக்கு அளிக்கும் என்ற அடிப்படையில்தான், மசோதா முதல் வாசிப்பில் நிறைவேற்றப் பட்டுள்ளது. மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த பல திருத்தங்களை மாண்புமிகு சட்ட அமைச்சர் அவை முன் வைத்துள்ளதை நான் காண்கிறேன். உறுப்பினர்களும் அதிக எண்ணிக்கையான திருத்தங் களை முன் வைத்துள்ளனர். நம் முன் 17 பட்டியல்கள் உள்ளன. விதிவாரி விவாதத்திற்காக ஓர் இறுதிக் கூட்டத் தொடரை அழைக்க அரசு முடிவு செய்துள்ளதாகப் பத்திரிகைச் செய்திகளிலிருந்து தெரிகிறது. அது அவ்வாறெனின் இன்னும் பல திருத்தங்கள் கொண்டு வரப்படலாம் என்பதற்கு காரணம் இருப்பதாகத் தெரிகிறது. இது ஆழ்ந்து கவனிக்கப்பட வேண்டிய விஷயம்.

நான் கூற விரும்புவதெல்லாம் இதுதான். விதிவாரிப் பரி சீலனையில் கவனிக்கப்பட வேண்டிய பல முக்கிய விஷயங்கள் உள்ளன. விவரங்களைப் பொறுத்தவரையில், உறுப்பினர்களிடையே அவை பெரும் பிளவை ஏற்படுத்தியுள்ளது. இந்தச் சூழ்நிலை களில் திருத்தங்களைப் பரிசீலிக்கவும் உடன்பாடுள்ள விஷயங்களைக் கண்டு கொள்ளவும் அரசு இந்த அவைக்குப் போதுமான நேரம் ஒதுக்குவது மிகச் சிறந்தது என தாழ்மையாகத் தெரிவித்துக் கொள் கிறேன். குடிமக்கள் பலரிடம் கலந்தாலோசித்ததாக மாண்புமிகுச் சட்டத்துறை அமைச்சர் கூறுகிறார். ஆனால், எனக்குத் தெரிந்த வரையில், மசோதாவின் கொள்கைகளை எதிர்க்கும் அவையிலுள்ள பல்வேறு பகுதியினரை அவர் சந்தித்தாகத் தெரியவில்லை. முதல் வாசிப்பின் போது எதிர்ப்புத் தெரிவித்த பல உறுப்பினர்கள் கலந் தாலோசிக்கப் படவில்லை.

திரு. தியாகி : அவர்கள் எல்லோரும் இந்துக்கள் அல்ல.

திரு. நசிருத்தீன் அகமது : குறைந்தபட்சம் ஒருவர் இந்து வல்ல. அது நான் தான். விஷயம் இதுதான். இந்த விஷயங்களை யெல்லாம், அவையில் சரியான முறையில் விவாதிக்கவோ, முடிவு செய்யவோ முடியாது. அவை மசோதாவின் அடிப்படைக் கொள்கை களாக உள்ளன. ஒவ்வொரு விதியும் முக்கியமான, புதிய விஷய மாக உள்ளது. ஒவ்வொரு விதியும் விரிவாகப் பரிசிலிக்கப்பட வேண்டியவை. எனவே, அரசு நமக்கு நேரம் ஒதுக்க வேண்டு மெனக் கேட்டுக் கொள்கிறேன். இந்தக் கருத்து வேற்றுமைகளை முடிவுக்குக் கொண்டுவர ஒரு வட்ட மேசை மாநாட்டில் அமர்ந்து

விவாதிக்க நாங்கள் தயாராக உள்ளோம். இதன் மூலம் பொதுவாக இந்த அவை ஏற்றுக் கொள்ளத்தக்கதாக மசோதா உருவாகக் கூடும். இந்த அவையினுள், நொடி நேரத்தில் முடிவு செய்யும் விஷயமாக இது இருக்கக் கூடாது.

இதற்கிடையில் பல விஷயங்கள் நடைபெற்றுள்ளன. இந்திய சமஸ்தானங்கள் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன. விவசாய நிலங்கள் இப்பொழுது இந்த மசோதாவின் வரம்புக்குள் வருகிறது என நினைக் கிறேன். இது மேலும் ஒரு புதிய நிலைமையைத் தோற்றுவித் துள்ளது. எனவே, அரசிடமிருந்து வரும் முக்கியமான திருத்தங் களையும், நிலப்பரப்பு மற்றும் மக்கள் தொகை அதிகரிப்பையும் கணக்கிலெடுத்துக் கொண்டு, உறுப்பினர்கள் மசோதாவை ஆழ்ந்து பரிசீலனை செய்ய போதுமான நேரம் ஒதுக்கப்பட வேண்டுமென்று நான் நினைக்கிறேன். இந்தக் கருத்து வேற்றுமைகளுக்குத் தீர்வுகாண ஒரு நல்ல நடைமுறை வேண்டும். அதன் மூலம், ஓரளவு இசைவான அதிக அளவில் உடன்பாடுள்ள ஒரு சூத்திரம் உருவாக்கப்பட வேண்டும். இம்மாதிரியான விவாதத்திற்குரிய மசோதாவிற்கு நமக்கு போதிய நேரம் ஒதுக்கப்பட வேண்டும். முதல் வாசிப்பின் போது நான் தெரிவித்த கருத்துக்கள் முற்றிலும் சரியென நிரூபிக்கப்பட்டு விட்டது. அந்த நேரத்தில் இந்து சமுதாயம் இதன் மீது முழு கவனம் செலுத்தவில்லை. அரசே பல திருத்தங்களைக் கொண்டு வந்ததன் மூலம் என் ஆட்சேபனைகள் நியாயமானது என்று மீண்டும் நிருபிக்கப்பட்டுவிட்டது எனது பணி முடிந்துவிட்டது. சில தவறு களைக் கவனத்திற்குக் கொண்டு வருவது எனது பொதுநலக் கடமை என்று அந்நேரத்தில் கருதினேன். இல்லையென்றால் அவை கவனத்திற்கு வராமல் தப்பிவிடும். இந்த அவைக்கும், இந்து சமுதா யத்திற்கும் எத்தகையச் சட்டங்கள் தேவை என்பது உண்மை யிலேயே இந்து சமுதாயத்தின் விஷயம் இந்தச் சட்டத் தொகுப்பு எந்த வடிவத்தில், உருவத்தில் நிறைவேற்றப்பட வேண்டுமென் பதில், குறிப்பிட்ட அக்கறை எதுவும் எனக்குக் கிடையாது. சில பயனுள்ள யோசனைகளை எடுத்துரைப்பதும், சில திருத்தங்களைப் பரிந்துரைப்பது மட்டுமே என் நிலையாக உள்ளது. இக்கருத்துகளின் அடிப்படையில் இந்த விஷயத்தை அரசு பரிசீலிக்க வேண்டும் என நினைக்கிறேன். அவர்கள் என்ன செய்ய நினைக்கிறார்கள் என்பதை நமக்குக் கூறட்டும். மசோதா நிறைவேறுவதற்கு ஆக்க பூர்வமான உதவி அளிக்க நான் தயாராக இருக்கிறேன். விவாதத்திற்குரிய விதிகள் எந்த வடிவில் அளிக்கப்படும் என்ற விஷயத்தில் தனிப்பட்ட முறையில் எனக்கு அக்கறையில்லை. ஆனால் இந்த விஷயத்தில்

எனக்குக் கவலை இல்லை என்று கூற முடியாது எங்களுக்குப் போதுமான நேரம் அரசு ஒதுக்குவதற்கும், கருத்து வேறுபாடுகளைக் களைவதற்கு ஒரு நல்ல நடைமுறையை உருவாக்குவதற்கும், பொதுவாக அவை ஏற்றுக் கொள்ளக் கூடிய ஒரு சட்டத் தொகுப்பைத் தயாரிக்கவும், இந்த விஷயங்களே தூண்டுதலாக இருக்கும் எனத் தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கிறேன். நான் கூற விரும்பிய விஷயங்கள் இவ்வளவுதான்.

திரு. சித்வா (மத்தியப்பிரதேசம்) : ஒரு தகவல் பிரச்சினை ஐயா. மதிப்பிற்குரிய உறுப்பினர் இரண்டு திருத்தங்களைக் கொண்டு வர உள்ளார். கூட்டத்தைத் தேதி குறிப்பிடாமல் ஒத்தி வைப்பது ஒன்று, மேலும்.....

திரு. சபாநாயகர்: அதை நான் அனுமதிக்கப் போவதில்லை....

தீர்மானம் சிறந்த வடிவில் இருக்க வேண்டுமென்பதைப் பற்றிச் சிந்தித்துக் கொண்டிருக்கிறேன். ஒரு தீர்மானம் சிறப்புக் கூட்டத் தொடர் சம்பந்தமானது. இரண்டாவது பட்ஜெட் கூட்டத் தொடருக்கு முன்பு என்றும், மூன்றாவது பட்ஜெட் கூட்டத் தொடர் முடிந்த பிறகு என்று கூறுகிறது. நாம் அடுத்த கூட்டத் தொடர் வரை ஒத்தி வைக்கலாமா?

திரு. நசிருத்தீன் அகமது : நான் முற்றிலும் அரசின் தயவில் உள்ளேன்.

திரு. சபாநாயகர் : அடுத்தக் கூட்டத் தொடர் வரை என்பது தான் வழக்கமான திருத்தம். ''இந்துச் சட்டத் தொகுப்புச் சம்பந்தமான விவாதம் அடுத்த பட்ஜெட் கூட்டத் தொடர் நடக்கையில் அல்லது அதற்குப் பிறகு ஒரு தேதிக்கு ஒத்தி போடப்படுகிறது'' என்று கூறட்டுமா?

பிற்பகல் 3 மணி

டாக்டர் அம்பேத்கர் : குறிக்கோள் சம்பந்தமாக எவ்விதக் கருத்து வேறுபாடும் இல்லை. இந்த மசோதாவை நன்கு ஆய்வு செய்யவும், அவர்கள் ஆழ்ந்து சிந்தித்து எடுத்த முடிவுகளை அளிக்கவும், அதிக நேரம் உறுப்பினர்களுக்கு ஒதுக்க வேண்டும் என்ற அரசின் தீர்மானத்தைப் பொறுத்த வரையில் அரசு உறுப்பினர்களுக்கும், மற்றவர்களுக்குமிடையே முழுமையான உடன்பாடு காணப்படுகிறது. பிரதமர் சற்று முன் கூறியபடி, விதிவாரியாக மசோதாவைப்

பரிசீலிக்கையில் வரிசைக் கிரமத்தில் தொடர வேண்டுமென்பது அரசின் நோக்கமல்ல. எனவே தாழ்மையுடன் நான் தெரிவித்துக் கொள்வதென்னவென்றால், அடுத்த கூட்டத் தொடரில் அவர்கள் விரும்பும் போது அதை எடுதது்க் கொள்ள அரசை விட்டுவிட வேண்டும். அவர்கள் சிறப்புக் கூட்டத் தொடர் ஒன்றை நடத்தலாம்; விரிவான பட்ஜெட் கூட்டத் தொடர் ஒன்றை நடத்தி, பகுதியை இந்துச் சட்டத் தொடர் ஒன்றை நடத்தி, பகுதியை இந்துச் சட்டத் தொகுப்பிற்கும், பகுதியை வழக்கமான பட்ஜெட் விவாதத்திற்கும் ஒதுக்கலாம்; அல்லது பட்ஜெட் கூட்டத் தொடருக்குப்பிறகு வேறு ஒரு கூட்டத் தொடரை நடத்தலாம். குறிப்பிட்ட தீர்மானம் எதன் மூலமாவது அரசின் கைகளைக் கட்ட நான் விரும்பவில்லை. நான் கூறியபடி, இந்தக் கூட்டத் தொடரிலேயே இந்த மசோதாவை நிறைவேற்ற நான் தீர்மானிக்கவில்லை. அது முற்றிலும் சாத்திய மற்றது. அது முற்றிலும் நியாயமற்றதும் கூட. எனினும் திரு. நஜிருதீன் கொண்டு வரும் தீர்மானத்தின் விளைவாக மசோதாவை பரிசீலிப்பதை ஒத்திப்போடுவதை நான் விரும்பவில்லையாகை யால், நான் அத்தீர்மானத்தை எதிர்க்கிறேன். அரசு ஓர் உறுதிமொழி அளித்துள்ளது. அதன் படி அரசு நடக்கும்.

திரு. நசிருத்தீன் அகமது: இந்தச் சுற்றி வளைத்தக் குற்றச் சாட்டிற்கு நான் ஏன் இலக்காக வேண்டும்.

திரு. சபாநாயகர் : எனவே தீர்மானம் எந்த வடிவில் இருக்க வேண்டுமென்பதில் அக்கறை கொள்ளத் தேவையில்லை.

டாக்டர் அம்பேத்கர் : எல்லாத் தீர்மானங்களையும் அவர் கொண்டு வரட்டும். எல்லாவற்றையும் நாம் தோற்கடிப்போம்.

திரு. தியாகி : அல்லது முந்திய விஷயத்தைப் பார்ப்போம். இந்த விஷயத்தை ஒத்திபோடுவோம்.

திரு. சபாநாயகர் : அது அவசியம் என்று நான் நினைக்க வில்லை. நல்லது, இந்த விஷயம் ஒத்திப் போடபட்டு விட்டது, அடுத்த அலுவலுக்குச் செல்வோம் என்று கூறட்டுமா?

டாக்டர் அம்பேத்கர் : திரு. நஜிருதீன் அகமது கொண்டு வந்த தீர்மானத்தை முடிவு செய்த பிறகு, அதைச் செய்வது சிறப்பாக இருக்கும் என்பதே என் முடிவாகும்.

திரு. நசிருத்தீன் அகமது : எனக்கு முடிவு கட்டவா:

டாக்டர் அம்பேத்கர் : அதை முடிவு செய்த பிறகு, மசோதா வின் பகுதியாக விதி 2 உள்ளது என்று மட்டும் கூறுங்கள் அதன் பிறகு, மசேதாதவை மேலும் பரிசீலிப்பது ஒத்தி போடப்படுகிறது என்று நானே முன்மொழிகிறேன். அரசின் அலுவல் பட்டியலில் இந்துச் சட்டத் தொகுப்பு மசோதாவை கடைசிப் பொருளாக மாற்றத் தயாராக உள்ளேன்.

திரு. பி.கே. சௌதுரி : நான் திருத்தம் ஒன்றை முன் வைத்துள் ளேன். இப்பொழுது என்னிடம் அதற்குரிய தாள்கள் இல்லாததால் அது என்ன வென்று சரியாக என்னால் கூறமுடியாது. நான் இந்த விஷயத்துக்குத் தயராக இருக்கவில்லை. ஆனால் நினைவுகூர்ந்து பார்த்தால், இந்துச் சட்டத் தொகுப்பை பரிசீலிக்க ஒரு விசேஷக் கூட்டத் தொடருக்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்பதே எனது தீர்மானமாகும். அலுவல் மிகுந்த இந்தக் கூட்டத் தொடரில், இம் மாதிரியான விவாதத்தைக் கொண்டு வருவதால், இந்த விஷயத்தை பரிசீலிக்கச் சரியான சந்தர்ப்பம் கிடைக்காது என்பதே வருத்தப்பட வேண்டிய விஷயம். எனவே இந்த மசோதா சிறப்புக் கூட்டத் தொடர் ஒன்றில் பரிசிலிக்கப்பட வேண்டும் என்று நான் விரும்புகிறேன்.

திரு.எம்.ஏ. ஐயங்கார் : (மெட்ராஸ்) உறுப்பினர்களுக்குப் போதுமான நேரம் ஒதுக்கப்பட வேண்டுமென்று திரு. நஜிருதீன் அகமதின் தீர்மானம் கோருகிறது. பிரதம மந்திரியும் இதற்கு இசைவு அளித்துள்ளார். எனவே, இந்தத் தீர்மானத்தை வலியுறுத்த வேண்டாம் என திரு. நஜிருதீன் அகமதைக் கேட்டுக் கொள்கிறேன். பிரதம மந்திரி யின் அறிக்கையின் காரணத்தினால், அடுத்த கூட்டத் தொடரின் ஒரு தேதிக்கு இது ஒத்தி போடப்படலாம். அடுத்தக் கூட்டத் தொடரில் ஒரு தேதியை நிர்யிப்பது அரசின் பொறுப்பாகும். அல்லது அதற்குப் பிறகு உடனடியாக விசேஷக் கூட்டத் தொடருக்கு அழைப்பு விடுக் கலாம். மசோதாவின் விதி வாரியான விவாதத்தை நாம் எடுத்துக் கொள்ளப் போவதில்லை என்பதில் நமக்குள் உடன்பாடு இருப் பதால், இருதரப்பினரும் திருப்தி அடைந்துள்ளதாக நான் கருது கிறேன். எனவே பிரதம மந்திரியின் அறிக்கையை ஏற்றுக்கொள் வோம். நஜிருதீன் அகமது அவரது தீர்மானத்தை வலியுறுத்த வேண்டாம். எனவே அடுத்த கூட்டத் தொடரில் ஒரு தேதிக்கு இது ஒத்தி வைக்கப்படும், பிரதம மந்திரியோ, அல்லது அரசோ பொருத்த மான நாள் ஒன்றை தீர்மானம் செய்யட்டும்.

டாக்டர் அம்பேத்கர்: மீண்டும் நான் குறுக்கீடு செய்யலாமா? இந்த அவையில் நடந்து கொண்டிருப்பது மீண்டும் நடைபெற நான் விரும்பவில்லை. இந்த மசோதா அவையில் வரும்பொழுதெல்லாம், மசோதாவை கிடப்பில் போட தீர்மானம் கொண்டுவர மதிப்பிற் குரிய உறுப்பினர் யாராவது முன் வருகின்றனர். இது நிறுத்தப்பட வேண்டும். விதிவாரியாக பரிசீலனை செய்ய வேண்டிய கால கட் டத்தை எட்டிவிட்டோம். விதி வாரியாக மசோதாவை பரிசீலிக்க அவை ஏற்றுக் கொண்டதன் அடையாளமாக, விதி 2ஐ அவை முன் வைக்கும்படி கேட்டுக் கொள்கிறேன். அதற்குப் பிறகு விவாதத்தை நாம் ஒத்திவைக்கலாம்.

திரு. நசிருத்தீன் அகமது : சுற்றி வளைத்து தொடுக்கப்பட்ட குற்றச்சாட்டின் இலக்கு நான்தான் என நினைக்கிறேன். நான் தாமதப் படுத்தும் தீர்மானம் எதையும் கொண்டு வரமாட்டேன் என முழு உறுதி அளிக்கிறேன்.

திரு. சபாநாயகர் : சட்ட அமைச்சர் மற்றும் திரு. நஜிருதீன் அகமதின் நிலைகள் மட்டுமின்றி, திரு சௌத்ரியின் பிரச்சினையும் உள்ளது. எனவே, நான் இப்படிச் செய்யலாம் என நினைக்கிறேன். தீர்மானங்களை நான் அவை முன் வைக்கிறேன். அவர்கள் அதன் மீது வாக்களிக்கட்டும்.

திரு. ஆர்.கே. சௌதுரி: ஆனால் ஐயா, என் தீர்மானத்தைக் குறித்து விளக்கம் அளிக்க வேண்டும்.

திரு. சபாநாயகர்: மதிப்பிற்குரிய உறுப்பினர் ஏற்கெனவே விளக்கம் அளித்தாகிவிட்டது. இதற்காக மேலும் நேரம் எடுத்துக் கொள்ள வேண்டாமென்று நினைக்கிறேன்.

திரு. எம்.ஏ. ஐயங்கார் : இந்தப் பிரச்சினையை சிறப்புக் கூட்டத் தொடர் ஒன்றுக்கு ஒத்திவைக்க வேண்டுமென்பது, அவ ருடைய தீர்மானத்தின் நோக்கமாக இருப்பதால், அது தோற்று விட்டதாகக் கருதலாம் என நினைக்கிறேன். சிறப்புக் கூட்டத் தொடரை அழைப்பது சாத்தியமில்லை என நினைக்கிறேன். எவ்வா றாயினும், விஷயத்தை அரசின் கையில் விட்டுவிடுவதே சிறந்தது என நினைக்கிறேன். பட்ஜெட் கூட்டத் தொடரில் ஒரு வசதியான தேதியில் அதை இணைத்துக் கொள்ளலாம். சிறப்புக் கூட்டத் தொட ருக்கு ஒத்துக் கொள்ள வேண்டிய அவசியமென்ன? அது அவசியம் என்று அரசு நினைத்தால், அதற்கு ஏற்பாடு செய்யலாம். சிறப்புக் கூட்டத் தொடர்தான் வேண்டுமென்று அவர்களை ஏற்றுக் கொள்ளச் செய்வதால் எந்தப் பயனும் இல்லை.

டாக்டர் பட்டாபி (மெட்ராஸ்) விஷயத்தை கொஞ்சம் நிதானமாகப் பரிசிலிக்கும் சாதகமான மாற்றம், அரசின் கண்ணோட்டத்தில் தெரிகிறது. அதற்கு நான் நீண்ட விளக்கம் எதையும் அளிக்க விரும்பவில்லை. இம்மாதிரி ஒத்தி வைப்புக் கோருவதை அனுமதிக்க முடியாது என்று ஆசிரியத் தோரணையில் சட்ட அமைச்சர் கூறுவதை ஆட்சேபிக்கிறேன். அது அனுமதிக்கப்பட வேண்டும். உண்மையான, நேர்மையான திட நம்பிக்கை எதிர் தரப்பில் இருக்கையில், எதிர்ப்பைத் தெரிவிக்க எல்லா நியாயமான முறைகளையும் பயன்படுத்துவது, இந்த அவை உறுப்பினர் ஒவ்வொருக்கும் உள்ள உரிமையாகும். திரு. பால்ஃபேர் கூறிய அளவுக்குச் செல்ல நான் விரும்பவில்லையெனினும், அவர் என்ன கூறுகிறார் என்பதைப் பார்ப்போம். முடிந்த அளவு நியாயமான வழிகளிலும், தேவைப்பட்டால் நியாயமற்ற வழிகளிலும் கூட அரசை எதிர்க்க வேண்டியது எதிர்க் கட்சிகளின் கடமை. பிரதம மந்திரி தமது அறிவு கூர்மையால், இருவிதச் சிந்தனைப் போக்குகள் இருப்பதை ஒத்துக் கொண்டதுடன், மிகவும் நியாயமாகவும் பரந்த மனதுடனும் ஒத்திவைப்பு ஆலோசனையை ஏற்றுக் கொண்டுள்ளார். இது இப்படியிருக்கையில், பேராசிரியர், போதகர் மற்றும் மதகுருமார் போன்று சட்ட அமைச்சர் நடந்து கொள்வது விரும்பத்தக்கதல்ல. இது ஏற்கெனவே உருவான ஓரளவு சுமுகமான சூழ்நிலையை கெடுபிடி நிலையாக மாற்றிவிடும்.

திரு. நசிருத்தீன் அகமது : இப்பொழுது யாருமில்லாத எதிர் தரப்பை அழைக்கிறார்கள்.

திரு. ஜவஹர்லால் நேரு : சட்டத்துறை அமைச்சர் கூறிய ஒவ்வொரு வார்த்தையையும் நான் ஏற்றுக் கொள்கிறேன் என்பதைத் தெளிவுபடுத்துகிறேன். இதுதான் நிலை. இந்தப் பிரச்சினையைப் பரிசிலிக்க அதிக நேரம் வேண்டுமென்று விதிவாரியான பரிசீலனை பின்னர் எடுத்துக் கொள்ளப்படும் என்று ஆலோசனை கூற முடிவு செய்தோம். தீர்மானத்தின் தன்மையை நாம் தெளிவாக முடிவு செய்ய வேண்டும். அது ஒரு தாமதப்படுத்தும் நோக்கத்துடனான தீர்மானம் என்றால், மதிப்பிற்குரிய உறுப்பினர் அதைப் பரிசீலிக்க விரும்பினால் இப்பொழுதே அதை முடிவு செய்வோம். அந்தத் தீர்மானத்தை நாம் ஒத்திவைக்கப் போவதில்லை. எந்தத் தீர்மானத்தையும் நான் தடுக்க விரும்பவில்லை. தாமதப்படுத்தும் நோக்கத்துடனான தீர்மானம் ஏதேனும் இருந்தால் அதை இப்பொழுதே முடிவு செய்வோம்.

பண்டிட் மாளவியா (உத்தரப்பிரதேசம்) : இந்த விஷயத்தைப் பொறுத்தவரையில் அழுத்தமான கருத்து வேற்றுமைகள் இருப்பதை நாம் அறிவோம். இந்த அவையின் பல்வேறு பிரிவினர்களுக்கிடையே கடுமையான கருத்து வேறுபாடுகள் உள்ளன. நமது பிரதமர்

யதார்த்தமான கண்ணோட்டத்துடன் உள்ளார். நாம் எப்பொழுதும் எதிர்பார்ப்பதைப் போல, இந்த விஷயத்திலும் அவர் நமக்கு வழி காட்டியாக உள்ளார். இது மிகவும் விவாதத்திற்குரிய விஷயம் என்பதுடன், விஷயங்கள் இருக்கும் நிலையில், இதற்கு அதிக நேரம் ஒதுக்க வேண்டும் என்று கூறியுள்ளார். இந்த மசோதா ஒத்தி போடப் படவுள்ளதாலும், எந்தத் தீர்மானத்தின் மீதாவது அல்லது பிரிவின் மீதாவது இந்த விவாதத்தை இன்று தொடர்வதால் எந்தப் பயனும் அடையப் போவதில்லை என்பதாலும், இந்தப் பிரச்சினை குறித்து அடிப்படையான வேறுபாடுகள் உள்ளதாலும், இப்பொழுது அதை எடுத்துக் கொள்வதால் இந்துச் சட்டத் தொகுப்பைச் சட்டமாக்கு வதில் எந்தவித முன்னேற்றமும் காணமுடியாது என்பதாலும் அதை இருக்கின்ற நிலையில் விட்டுவிடுவதால், எந்தப் பிரிவிற்கும், எந்தத் தரப்பிற்கும் எந்தவித நஷ்டமும் ஏற்படப் போவதில்லை என்பதைத் தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கிறேன். மசோதாவைப் பரிசீலனைக்கு எடுத்துக் கொண்டு, உண்மையில் அதில் ஏதாவது முன்னேற்றம் காண வேண்டுமென்பது நோக்கமென்றால், அப்பொழுது எனக்குக் கூறுவதற்கு ஒன்றுமில்லை. ஏனெனில், அப்பொழுது ஒவ்வொரு உறுப்பினருக்கும் தங்கள் கருத்தைக் கூற வாய்ப்பிருக்கும். தங்கள் கூட்டான அறிவுத்திறன் மூலம், அவை முடிவு எடுக்கும் எதுவும், சட்டப் புத்தகத்தில் சேர்க்கப்படும். ஆனால் இப்பொழுது சிபாரிசு செய்யப்பட்டுள்ள நடைமுறையின்படி எந்த உண்மையான முன்னேற்றமும் ஏற்படப் போவதில்லை. நாட்டில் இன்றுள்ள பெரும் எதிர்ப்பும், கவலையும் மேலும் அதிகரித்து விடக்கூடாது என்று கூறுகிறேன். இந்த விஷயத்தைப் பற்றி நாடு என்ன நினைத் தாலும் அதைப் பற்றிக் கவலை இல்லை என்ற ஒரு துரதிர்ஷ்ட வசமான கண்ணோட்டமும் உள்ளது என்பதை அறிவேன். பிரச் சினையின் எல்லா பகுதிகளும் கவனத்துடன் பரிசீலிக்கப்பட வேண்டும், மதிக்கப்பட வேண்டும் என்ற வேறொரு கண்ணோட் டமும் உள்ளது. இப்பொழுது விஷயத்தின் விவரத்திற்குள் செல்ல வேண்டாமென நினைக்கிறேன். எந்தவித பயனுள்ள நோக்கத்திற்கும் பயன்படாத செயல்களைச் செய்ய வேண்டாமென அரசை மிகவும் மனப்பூர்வமாகக் கேட்டுக் கொள்கிறேன். மாறாக, இதனால் நாட்டில் அதிக அதிருப்தியும் வெறியுமே உருவாகும். இந்த மசோதாவை ஒத்திவைப்பது என்றால், அதை நாம் முழுமனதுடன் நிறைவேற்ற வேண்டும். இதை நான் முற்றிலும் ஆதரிக்கிறேன். மாறாக நாம் அதை ஒத்திவைக்கப் போவதில்லை, இப்பொழுது நாங்கள் அதை எடுத்துக் கொள்ளப் போவதில்லை. இருப்பினும், நாங்கள் அதை எடுத்துக் கொள்ளப் போகிறோம், அதை நாங்கள் தொடரப் போவ தில்லை, இருப்பினும் நாங்கள் அதைத் தொடர்வோம் என்று கூறிக் கொண்டிருக்கக்கூடாது. விஷயத்தை நாம் ஒத்தி போடப் போகிறோம்

என்றால், அரசு குறிப்பிடும் ஒரு தேதிவரை உடனடியாக அவை ஒத்திபோடப்பட வேண்டும்.

பண்டிட் எம்.பி. பர்கவா *(ஆஜ்மீர்)* : சட்ட அமைச்சரின் ஆலோசனையை என்னால் முற்றிலும் புரிந்து கொள்ள முடிய வில்லை. இனி எதிர்காலத்தில் எந்தவித ஒத்திவைப்புத் தீர்மானமும் கொண்டுவரக் கூடாது என்று அவைத் தலைவர் உத்திரவு போட வேண்டுமென்று அவர் விரும்புகிறாரா? அது அவையில் எழுப்பப் பட வேண்டிய அரசியல் அமைப்புப் பிரச்சினை. அதற்கு அவைத் தலைவர் தீர்ப்பளிக்க வேண்டும். எந்த நேரத்தில் ஒத்தி வைப்புத் தீர்மானம் ஒன்றைக் கொண்டு வருவதற்கு அவையின் உறுப்பினர் ஒவ்வொருவருக்கும் முழு உரிமை உள்ளது என்று தான் நான் புரிந்து கொண்டுள்ளேன். அதை ஏற்றுக் கொள்வதோ நிராகரிப்பதோ அவைத் தலைவரின் முடிவு என்பதில் சந்தேகமில்லை. அது தாமதப் படுத்தும் நோக்கத்துடனான ஒரு தீர்மானம் என்று அவைத்தலைவர் நினைத்தால், அதற்கு அவர் அனுமதி அளிக்கமாட்டார். ஒத்திவைப்புத் தீர்மானம் ஒன்றை அவைத்தலைவரே அனுமதித்தாலும், அவை அதை விவாதித்து ஏற்றுக் கொள்ளவோ நிராகரிக்கவோ செய்யும். உறுப்பினரின் உரிமையைப் பொறுத்தவரையில், அது ஒரு நிபந்தனை யற்ற முழு உரிமை. எந்தக் கட்டத்திலும் அவர் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் கொண்டு வரலாம். நீங்கள் விதி 2ஐ முன் மொழிந்து விட்டு, இந்த மசோதாவின் விவாதித்தின் போது எந்தவித ஒத்தி வைப்பும் முடியாது என்று கூறினால், அது அரசியல் அமைப்புப் பிரச்சினையாகும்.

திரு. நசிருத்தீன் அகமது: அது சபாநாயகரின் இசைவைப் பொறுத்தது.

திரு. சபாநாயகர்: எதிர்காலத்தில் கொண்டு வரப்படும் ஓர் ஒத்திவைப்பு தீர்மானம் அனுமதிக்கப்படுமா அல்லது அனுமதிக்கப் படாதா என்பதைக் குறித்து, உடனடியாக நான் எந்தவிதக் கருத்தை யும் கூற விரும்பவில்லை. அவை முன் அந்த மாதிரியான தீர்மானம் வரும்போது உள்ள சூழ்நிலையைப் பொறுத்து அது இருக்கும். மசோதாவைத் தள்ளிப் போட வேண்டுமென்ற எண்ணத்துடன் மட்டுமே, தாமதப்படுத்த வேண்டுமென்ற நோக்கத்துடனான தீர்மானம் எதையும், கொண்டுவரக்கூடாது என்ற நிலையை, சட்டப் படியோ, அரசியல் அமைப்பின்படியோ இல்லாவிடினும், தார்மீக ரீதியில் அவை எடுத்துள்ளது என்பது மாண்புமிகு சட்டத்துறை அமைச்சரின் நோக்கம் என நினைக்கிறேன்.

டாக்டர் அம்பேத்கர்: ஆம் அவ்வளவுதான்.

திரு. சபாநாயகர் : அவருடைய நோக்கம் அது ஒன்றுதான் எனத் தெரிகிறது. உறுப்பினர்களின் அரசியல் அமைப்பு உரிமைகளுக்குத் தடைபோடும் நோக்கத்துடனல்ல என நினைக்கிறேன். எனவே 2ஆம் விதியை முன் மொழியாமலேயே அவையை நேரடியாக ஒத்திவைப்பதையே நான் பரிந்துரை செய்கிறேன். வேறு எந்தவித நோக்கமுமின்றி மசோதாவைத் தாமதப்படுத்துவதற்காகவே எந்த ஒரு தீர்மானமும் கொண்டுவரப்படக் கூடாது என்பது நமது தார்மீக நிலை என்பதும் அறிவிக்கப்பட வேண்டும்.

மதிப்பிற்குரிய சில உறுப்பினர்கள் : இல்லை, இல்லை.

திரு. சபாநாயகர் : இது ஒரு முக்கியமான விஷயம். அம்மாதிரியான கருத்தைத் தெரிவிக்கும் வகையில் அவர் பேசுகையில் அதன் வலிமையையும், நோக்கத்தையும் நான் புரிந்து கொண்டாலும், இறுதியான எனது கருத்து எதையும் நான் கூறவில்லை. நான் அவை மரபைப் பின்பற்றுபவன். ஒத்திவைப்புத் தீர்மானம் கொண்டுவர வேண்டுமென்று விரும்பும் ஒவ்வொரு அவை உறுப்பினரையும் தடுத்து நிறுத்துவது சாத்தியம் என்று யாரும் நினைக்க வேண்டியதில்லை. அது தாமதப்படுத்தும் நோக்கம் கொண்டது என்று அவைத் தலைவர் அதை ஏற்றுக் கொள்ளாமலிருக்கலாம். ஆனால் இது அந்தத் தீர்மானம் கொண்டுவரப்படும் நேரத்திலுள்ள சூழ்நிலையைப் பொறுத்திருக்கும். 2 ஆம் விதியை முன் மொழிந்துவிட்டு அவையை ஒத்திவைப்பதற்கும், அல்லது நேரடியாக அவையை ஒத்திவைப்பதற்கும் இடையே உண்மையிலேயே எந்த வேறுபடும் இல்லையென்றே நான் நினைக்கிறேன். எனவே நான் கூறியபடி, இந்த மசோதாவைப் பொறுத்தவரைத் தாமதப்படுத்தும் நோக்கத்துடனான தீர்மானம் எதுவும் கொண்டுவரப் போவதில்லை என்ற இந்த அவை உறுப்பினர்களின் தார்மீகக் கட்டுப்பாட்டை அறிவித்து விட்டு பிறகு விவாதத்தை ஒத்தி வைக்கலாமென நினைக்கிறேன். மீண்டும் அரசியல் அமைப்பின்படியான உரிமையைக் கிளப்பவும், அல்லது இம்மாதிரியான தீர்மானம் கொண்டு வரலாமா கூடாதா என்ற கேள்விக்கு இரண்டாவது தடவை உயிரூட்டவும் நான் விரும்பவில்லை அலுவல்களை ஒத்திவைக்கும் பணியைத் தொடர்கிறேன். மேலும் அரசு.....

டாக்டர் அம்பேத்கர்: இந்தத் தீர்மானங்கள் அவை முன் உள்ளனவா?

திரு. சபாநாயகர் : இந்தத் தீர்மானங்கள் தோற்றுவிடும்.

டாக்டர் அம்பேத்கர் : இந்தத் தீர்மானங்களின் நிலை என்ன?

திரு. சபாநாயகர் : உறுப்பினர்கள் தீர்மானங்களை வலியுறுத்த வில்லை. அவர்கள் வலியுறுத்தியிருந்தால், அவைமுன் வைக்க வேண்டியது என் கடமையாக இருந்திருக்கும்.

மதிப்பிற்குரிய சில உறுப்பினர்கள்: அவர்கள் அவ்வாறு கூறவில்லை.

திரு. சபாநாயகர் : அவர்களைக் கேட்டுவிட்டேன்

திரு. ஆர்.கே. சௌதுரி: ஒழுக்கப் பிரச்சினை ஒன்று எழுப்பப் பட்டுள்ளதால், என்னுடைய தீர்மானத்தை அவை முன் வைக்கவே விரும்புகிறேன். அது ஒரு தாமதப்படுத்தும் நோக்கத்துடனானதா இல்லையா என்பதை அவையே முடிவு செய்யட்டும்.

திரு. சபாநாயகர் : அப்படியென்றால் நிலைமை தெளிவாகி விட்டது. இப்பொழுது நேரடியாகவே அதை அவை முன் வைக் கிறேன். பிறகு மேலும் தொடரலாம். இப்பொழுது ஆர்.கே. சௌதுரி யின் தீர்மானத்தை அவை முன் வைக்கிறேன்.

திரு. ஆர்.கே. சௌதுரி: ஐயா, ஆழ்ந்து மேலும் சிந்தித் ததால், என்னுடைய தீர்மானத்தை முன் மொழிய வேண்டாமெனக் கேட்டுக் கொள்கிறேன்.

திரு சபாநாயகர்: எனவே விஷயத்தின் பரிசீலனை முடித்து விட்டதால், இதை ஒத்தி வைப்போம். அரசு ஒரு தேதியை நிர்ணயம் செய்யும்.

மதிப்பிற்குரிய சில உறுப்பினர்கள் : அவையின் அனுமதி யுடன் அவர் வாபஸ் பெற வேண்டும்.

திரு. சபாநாயகர்: தீர்மானம் முன்மொழியப்படாத நிலை யில், அனுமதி எதுவும் தேவையில்லை என்பதே நமது விதியாக உள்ளது.

திருமதி துர்க்காபாய் (மெட்ராஸ்): இந்த ஒத்திவைப்புத் தீர்மானம் பரிசீலனையில் உள்ளதா என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

திரு. சபாநாயகர்: எல்லாம் தோற்றுவிட்டன. அவர்கள் கொண்டுவந்த ஒத்திவைப்புத் தீர்மானம் ரத்தாகிவிட்டது. இப் பொழுது ஒன்றும் அவைமுன் இல்லை. அவர்களிடம் கேட்கப்பட்ட தற்கு அவர்கள் வலியுறுத்தவில்லை. இதே போன்ற தீர்மானங் களைக் கொண்டுவந்த மற்றவர்களைப் பொறுத்தவரையில், தீர்மானங்களை முன் மொழிய அவர்களை அழைத்த போது, அவர்கள் அவையில் இல்லை. இதுதான் நிலைமை இப்பொழுது விவாதம்

ஒத்திபோடப்படுகிறது. எல்லா நேரத்திலும், எல்லோரையும் கட்டுப் பாட்டிற்குள் வைத்திருக்க முடியாது. சூழ்நிலைகள் உருவானால், அவர்களை நாம் சந்திப்போம்.

திரு. தியாகி: தீர்மானத்தை அவை முன் வைத்துள்ள உறுப் பினர்களை மட்டும் ....

திரு. சபாநாயகர்: விவாதத்தை மதிப்பிற்குரிய உறுப்பினர் சரியான முறையில் கவனிக்கவில்லை என்று தோன்றுகிறது. நான் எந்தத் தீர்மானத்தையும் அவை முன் வைக்கவில்லை. அவை முன் தீர்மானம் ஒன்றை நான் வைக்காத வரையில் அதை வாக்களிப்புக்கு விடும் பிரச்சினையோ, வாபஸ் பெறும் பிரச்சினையோ எழுவ தில்லை.

திரு. தியாகி : அப்படியென்றால், தார்மீக கடமை ஏதுமில்லை.

திரு. சபாநாயகர் : தார்மீகக் கட்டுபாடு உள்ளது.

திரு. தியாகி: தார்மீகத்தை விட ஒழுக்கமற்றதையே நான் விரும்புகிறேன்.

திருமதி துர்க்காபாய்: இந்தத் தீர்மானங்கள், முன்மொழியப் பட்டு வலியுறுத்தப்படவில்லை.

திரு. சபாநாயகர்: இந்தத் தீர்மானங்கள் முன் மொழியப்பட வில்லை. நான் அவைகளை அவை முன் வைக்கவில்லை.

திருமதி துர்க்காபாய்: மதிப்பிற்குரிய உறுப்பினர் அதை முன் மொழிந்தார். ஆனால் வலியுறுத்தவில்லை.

திரு. சபாநாயகர்: அதில் என்ன வேறுபாடு உள்ளது. அவர் திரும்பவும் அந்தத் தீர்மானத்தை முன் மொழிந்து வாக்களிப்பின் போது அது தோற்கடிக்கப்பட்டால் இம்மாதிரித் தீர்மானத்தைக் கொண்டுவரக்கூடாது என்பது பொருளாகுமா?

திரு. தியாகி: இன்று மட்டும் நாம் தார்மீக ரீதியில் கட்டுப் பட்டுள்ளோம்.

திரு. சபாநாயகர்: எல்லாக் காலங்களுக்கும் கட்டுப்பட்டுள் ளோம். மேலும் விவாதம் தேவை இல்லை. நாம் அடுத்த விஷயத் திற்குப் போவோம்.

திருமதி ரேணுகா ரே: எழுந்திருக்கிறார்.

திரு. சபாநாயகர்: விஷயம் முடிவுக்கு வந்துவிட்டது. மேல் கொண்டு விவாதம் ஏதும் இல்லை.

□□□